# யுகங்களின் வாஞ்சை!

**எலன் ஜி. ஒயிட்**

| | |
|---|---|
| **Title** | **:The Desire of Ages** |
| **Subject** | **:Life of Jesus** |
| **Language** | **:Tamil (From English)** |
| **Author** | **:Ellen G. White** |
| **Edition** | **:First, 5000 copies** |


# This book is not for sale;
# For free distribution only.

ஆண்டவர் அருளால்

இந்தப் புத்தகம் உங்களுக்கு

இன்பளிப்பாக வழங்கப்படுகிறது.

தாங்கள் வாசித்தபின், மற்றவர்களும்

வாசிக்கும்படியாகக் கொடுத்து உதவவும்.

# யுகங்களின் வாஞ்சை!

எழுதியவர்

**எலன் ஜி. ஒயிட்**

தமிழாக்கம்

**கே. ஆர். பீட்டர் சைமன்**

மூல நூலுடன் ஒப்பு நோக்கியவர்

**திருமதி கமலா ஜெகதீசன்**

பதிப்பாசிரியர்

**பாஸ்டர் இரா. அல்பர்ட் சகரியா**

**ராகவி பதிப்பகம்**
**C - 176, கோவிந்தசாமி தெரு,**
**திருநகர், மதுரை - 625 006, தமிழ்நாடு.**
**தொலைபேசி எண் : 0452 - 2484512**

பாஸ்டர் T. ஜீவா பொன்னப்பா,
தலைவர், தென் தமிழ் பகுதி,
ஏழாம்—நாள் அட்வெந்து சபை,
மதுரை, தமிழ்நாடு. 31:05.2006

# வாழ்த்துரை

கர்த்தராகிய இயேசு கிறிஸ்துவின் வாழ்க்கை சரித்திரத்தை மையமாகக்கொண்டு **திருமதி எலன் ஜி. ஒயிட்** அம்மையாரின் **The Desire of Ages** என்று ஆங்கிலத்தில் எழுதப்பட்ட நூலை **யுகங்களின் வாஞ்சை** என்ற பெயரில், முழுப்புத்தகமும் 1168 பக்கங்களில் வெளியிடப்படுவதை அறிந்து மிகவும் மகிழ்ச்சியடைகிறேன். அதிலும் எல்லையற்ற தெய்வம் எல்லைக்குட்பட்ட மனிதனை எட்டுமளவிற்கு வந்து வாழ்ந்த அன்புச் சரிதையை விளக்கும் ரூ.100 மதிப்புள்ள இந்தப் புத்தகத்தை மக்கள் இலவசமாகப் பெற்றுக்கொள்ளுவதற்கு வழிசெய்திருப்பது என் மனதிற்கு மட்டற்ற மகிழ்ச்சியைத் தருகிறது.

தென் ஆசிய மொழிகளில் தமிழில் மட்டுமே அம்மையாரின் நூல்கள் அதிகமாக மொழியாக்கஞ்செய்யப்பட்டு புத்தகங்களாக வெளியிடப்பட்டிருக்கின்றன. இத்தகைய நூல்களை ஐயா கே. ஆர். பீட்டர் சைமன் அவர்களும் திருமதி கமலா ஜெகதீசன் அவர்களும் அருட்பணியாகச் செய்துவருகிறார்கள். மற்றும் பதிப்பாசிரியராகப் பொறுப்பேற்று இந்த நூல்களை வெளியிடும் அருட்பணியைச் செய்துவருகிற பாஸ்டர் இரா. அல்பர்ட் சகரியா போன்ற தேவபிள்ளைகளுக்கு என் அன்பான வாழ்த்துக்களைத் தெரிவித்துக்கொள்கிறேன். இவர்களின் புத்தகப்பணி தொடரவும், மேலும் அம்மையாரின் அனைத்து நூல்களும் தமிழில் வெளியிடப்படவும், ஆவிக்குரிய அநேக புத்தகங்கள் ஆண்டவர் இயேசு வரும் வரைத் தொடரவும், ஆண்டவர் இந்தத் தாசர்களை ஆசீர்வதிப்பாராக. கிறிஸ்துவுக்காகச் செய்யும் இந்தத் தியாகப்பணி தொடரட்டும்.

இந்தப் புத்தகத்தின் ஒவ்வொரு பக்கத்திலும் கிறிஸ்துவின் முகத்தைப் பார்க்கலாம். திகில் நிறைந்த இவ்வுலகில் திசைகாட்டியாகவும், வறட்சியுள்ள ஜீவியத்திற்கு ஜீவ ஊற்றாகவும் இந்த நூல் திகழ்கிறது. இந்த நூல் அனைத்து வகுப்பினருக்கும் உரிய ஒரு நூல். அழிவின் விளிம்பில் நிற்கும் இப்பரந்த பூமிக்கு ஆனந்த நம்பிக்கை இந்த நூலில் உண்டு. படித்து பயனடைய என் அன்பின் வாழ்த்துக்கள்.

பாஸ்டர் T. ஜீவா பொன்னப்பா
(ஒப்பம்)

# The Desire of Ages

## Ellen G. White

Translated by

**Elder K.R. Peter Simon**

Compared with Original by:

**Mrs. Kamala Jagatheson**

Publishing Editor

**Pastor R. Albert Zechariah**

Raakavi Publishers
C-176, Govindhasami Street,
Thirunagar, Madurai-625 006.
Tamil nadu, India.
Ph.: 0452 2484512

## நூலாசிரியரைப்பற்றி...

*அன்புள்ள சகோதர—சகோதரிகளே!*

இந்தநூலானது எலன் ஜி. ஒயிட் அம்மையாரால் ஆங்கிலத்தில் எழுதப்பட்ட, "The Desire Of Ages" என்ற நூலின் நேரடித் தமிழாக்கமாகும். இந்தநூல் 148 மொழிகளில் மொழிபெயர்க்கப்பட்டு, உலகமெங்கும் உலவிவருகிறது. வேதாகமத்தில் கூறப்பட்டுள்ளவைகளை நாம் மிகவும் நன்றாக விளங்கிக்கொள்ளத்தக்கதாக உதவிசெய்கிறது. **இந்த நூலை எழுதிய திருமதி எலன் ஜி. ஒயிட் அவர்கள் உலகப் புகழ்பெற்ற 20 பெண் எழுத்தாளர்களிலும் சிறந்தவர் என்று ஒருவர் குறிப்பிடுகிறார்.** அது உண்மைதான்; வெறும் புகழ்ச்சியல்ல. அனைத்தையும்விட இந்த நூலின் ஆசிரியர் தரிசனத்தில் எடுத்துக்கொள்ளப்பட்டபோது, பல வகைகளிலும் சோதிக்கப்பட்டு, (உண்மையாகவே அவர் தரிசனத்தில் இருக்கிறாரா என்பதைக் குறித்து) மற்றாராலும் ஏற்றுக்கொள்ளப்பட்டவர்; போற்றப்பட்டவர். இந்த நூலின் ஆசிரியர் தரிசனத்தில் எடுத்துக்கொள்ளப்பட்டபோது,

— **இயேசுவிடம் பேசியிருக்கிறார்!**
— **தூதர்களிடம் பேசியிருக்கிறார்!**
— **பரத்திற்கு எடுத்துக்கொள்ளப்பட்ட ஏனோக்கிடம் பேசியிருக்கிறார்!**
— **பிற உலக மக்களிடமும் பேசியிருக்கிறார்;** மேலும்
— **"ஆண்டவர் எனக்குக் காண்பித்தது என்னவென்றால்"**
— **"தூதன் எனக்குச் சொன்னார்"**
— **"நான் பார்த்துக்கொண்டிருக்கையில்"**
— **"நான் கண்டேன்"** என்பதாக பல நூற்றுக்கணக்கான பக்கங்களில் குறிப்பிடுகிறார். எந்த பரிசுத்தஆவியானவர் வேதாகமம் வெளிவர உதவினாரோ, அதே ஆவியானவர்தாமே, வேதாகமத்தின் உயரிய உண்மைகளை உலகிற்கு உணர்த்த, அம்மையார்மூலமாக ஏராளமான செய்திகளை அவர்தம் பல நூல்களின் வாயிலாக தந்திருக்கிறார். ஆண்டவருக்கே மகிமை உண்டாவதாக. இதுவரையில் எமது வெளியீட்டின்மூலமாக பதிப்பிக்கப்பட்ட ஏனைய தமிழ் நூல்களையும் படித்துப் பயனடையுங்கள். இந்த ஊழியம் சிறக்க ஜெபியுங்கள். உதவுங்கள்.

அம்மையார் அவர்கள் தமது ஆரம்பகால ஊழியத்தில் தமக்கு கொடுக்கப்பட்ட தரிசனங்களை எழுதி, அவற்றை சிறிய நூல்களாக 1851, 1854, 1858 ஆகிய ஆண்டுகளில் வெளியிட்டார்கள். அந்த நூல்களின் தொகுப்புதான் **"Early Writings"** என்ற பெயரில் ஒரே நூலாக பின்னர் வெளியிடப்பட்டது; ஆகையால், நீங்கள் சில தரிசனங்களை மீண்டும் மீண்டும் சில பக்கங்களில்

*வாசிக்க நேரிடும். அவ்வாறு வெளியிடப்பட்டதிலுங்கூட தேவ மகத்துவம் வல்லமையாக நமக்கு வழிகாட்டுகிறதென்பதை உணர்ந்து, அவற்றை நீக்காமல் மூலநூலில் உள்ளபடியே பதிப்பித்திருக்கிறோம். இந்த ஊழியம் சிறக்கத்தக்கதாக உங்களுடைய ஆலோசனைகளை எழுதி அனுப்புங்கள்; இந்த ஊழியம் செழிக்க ஜெபியுங்கள். படிப்போம்; பயனடைவோம்; பண்படுவோம்; பரமனருள் பெற்றிடுவோம்!* – பதிப்பாசிரியர்

*"யுகங்களின் வாஞ்சை" என்னும்*
*இவ்வரிய, மிகச் சிறந்த நூலை*
*வெளியிட அருட்கொடையளித்திட்ட*
*அன்பு உள்ளங்கள்*
*என்றும் வாழட்டும் என்று*
*நன்றிகூறி வாழ்த்துகிறோம்!*

*We Thank*
*The Loving Hearts*
*That Came Together*
*In Supporting To Publish*
*This precious, Famous Book*
*The Desire Of Ages*
*Live Forever!*

## பதிப்பாசிரியர் பக்கம்...

ஆண்டவரின் பேரருளால் எலன் ஒயிட் அம்மையாரது மற்றொரு நூல் வெளிவந்துள்ளது. சகோதரர் கே. ஆர். பீட்டர் சைமன் அவர்கள் இந்தநூலை தமிழாக்கஞ்செய்து பத்து ஆண்டுகளாகிவிட்டன. அன்னாரது அருட்பணியால் அம்மையாரது பல நூல்கள் தமிழாக்கஞ்செய்யப்பட்டிருக்கின்றன. மேலும் பல நூல்களை தமிழாக்கஞ்செய்திட ஆண்டவர் அவர்களுக்கு உடல் நலத்தைத் தந்தருளி கிருபைசெய்வாராக. ஆண்டவரது சித்தப்படி ஏற்ற காலத்தில் விசுவாசப்பிள்ளைகள் வழங்கிய அருட்கொடையால் இந்தநூலை அச்சிட முடிந்தது. மேலும் முற்பிதாக்களும் தீர்க்கதரிசிகளும் (PP) முற்பிதாக்களும் அரசர்களும் (PK) தேர்ந்தெடுக்கப்பட்ட தூதுகள் 1-3(SM) மாரநாதா (Maranatha), Christ Object Lesson, Counsels on Health ஆகிய நூல்கள் தமிழாக்கஞ்செய்யப்பட்டு, தட்டச்சுப்பணியும் முடிந்து (Type setting), அச்சிடப்படுவதற்கு ஆயத்த நிலையில் இருக்கின்றன. அவைகளும் சீக்கிரம் அச்சிடப்பட்டு வெளியிடப்பட ஜெபியுங்கள்.

இந்தநூல் சிறப்புடன் வெளியிடப்பட, சிரமங்களைப் பொருட்படுத்தாமல் என்னுடன் நூற்றுக்கணக்கான மணி நேரங்களைச் செலவிட்ட அன்புச் சகோதரிகள்: பிரிம்ரோஸ் ஆரோக்கியம், ஆலிவ் சடகோபன், சில்வியா தேவ சகாயம், தனலெட்சுமி மோகன், திருமதி சித்திரா சோமசுந்தரம், திருமதி எஸ்தர் ஜோசப் ஆகியோருக்கு எனது நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன். ஆண்டவர் தமது பேரருளால் அவர்கள் அனைவரையும் அதிகமதிகமாக ஆசீர்வதிப்பாராக.

இந்தநூலை மூலநூலுடன் (The Desire of Ages) ஒப்பிட்டுநோக்கி, சமன்செய்வதற்காக, நூற்றுக்கணக்கான மணி நேரங்களை அர்ப்பணித்த திருமதி கமலா ஜெகதீசன் அவர்களது பணியைப் பாராட்டாமலிருக்கமுடியாது. ஆண்டவர் தாமே அவர்களுக்கு உடல் நலத்தைத் தந்தருளி, மேலும் பல நூல்கள் சிறப்புடன் வெளிவர கிருபைசெய்வாராக. இந்த ஊழியம் சிறக்கவும் செழிக்கவும் ஜெபத்தின்மூலமாகத் தாங்கி, உங்களது ஆதரவை வழங்கும்படி பணிவன்புடன் கேட்டுக்கொள்கிறேன். ஆண்டவர் உங்கள் அனைவரையும் ஆசீர்வதிப்பாராக; ஆமென்.

—பதிப்பாசிரியர்

**இளம் வயதில் இறையருளைப் பெற்றதினால்**
**எண்ணில்லா தரிசனங்கள் கண்டவராம்**
**வளமில்லாக் குடும்பத்தில் வாழ்ந்திடினும்**
**வறுமையிலும் செம்மையினைக் கொண்டவராம்!**

**அருளொளியால் இவர்யாத்த நூல்களெல்லாம்**
**அவனியில் அணையாத விளக்காய் நின்று**
**மருளிருளில் மயங்கிவாழும் மக்களுக்கு**
**மகிமைமிகு ஒளியாக இலங்கிநிற்கும்!**

**"அம்மையார்" என்று தமிழ் உலகினிலே**
**அட்வெந்து மக்களாலே அழைக்கப்படும்**
**செம்மைமிகும் சிறப்புகள் உடையவராம்**
**சிறப்பான நூல்கள்பல தந்தவராம்!**

**எத்தனையோ சிறப்புக்கள் உண்டிவர்க்கு**
**எடுத்துரைத்தல் எளிதல்ல எந்தனுக்கு!**
**முத்தனைய பெயருக்கு உரியவராம்**
**மூதாட்டியாய் வாழ்ந்த எலன் ஜி. ஒயிட்!**

**—பாஸ்டர் இரா. அல்பர்ட் சகரியா**

| அதிகாரம் எண் | # பொருளடக்கம் | பக்கம் எண் |
|---|---|---|


| அதிகாரம் எண் | | பக்கம் எண் |
|---|---|---|
| 1 | தேவன் நம்மோடிருக்கிறார்! | 1 |
| 2 | தெரிந்துகொள்ளப்பட்ட மக்கள்! | 13 |
| 3 | காலம் நிறைவேறிற்று! | 21 |
| 4 | உங்களுக்கு ஓர் இரட்சகர்! | 29 |
| 5 | பிரதிஷ்டை! | 35 |
| 6 | நாங்கள் அவரது நட்சத்திரத்தைக் கண்டோம்! | 45 |
| 7 | இயேசு ஒரு குழந்தையாக...! | 55 |
| 8 | பஸ்கா பண்டிகை! | 65 |
| 9 | போராட்டத்தின் நாட்கள்! | 77 |
| 10 | வனாந்தரத்தில் கூப்பிடுகிற சத்தம்! | 89 |
| 11 | இயேசு ஞானஸ்நானம் பெற்றார்! | 107 |
| 12 | சோதனை! | 113 |
| 13 | வெற்றி! | 129 |
| 14 | நாங்கள் மேசியாவைக் கண்டோம்! | 139 |
| 15 | திருமண விருந்தில்...! | 155 |
| 16 | அவரது ஆலயத்தில்...! | 169 |
| 17 | நிக்கொதேமு! | 185 |
| 18 | அவர் பெருகவேண்டும்! | 199 |
| 19 | யாக்கோபின் கிணற்றருகில்! | 205 |
| 20 | நீங்கள் அடையாளங்களையும் அற்புதங்களையும் காணாவிட்டால்...! | 221 |

| | | |
|---|---|---|
| 21 | பெதஸ்தாவும் சனகரீமும்! | 227 |
| 22 | யோவான் ஸ்நானகனின் சிறைவாசமும்—மரணமும்! | 247 |
| 23 | தேவனுடைய இராஜ்யம் சமீபித்திருக்கிறது! | 265 |
| 24 | இவன் தச்சனுடைய குமாரனல்லவா? | 273 |
| 25 | கடலருகில் கொடுக்கப்பட்ட அழைப்பு! | 285 |
| 26 | கப்பர்நகூமில்! | 295 |
| 27 | உம்மால் என்னை சுத்தப்படுத்த முடியும்! | 309 |
| 28 | லேவி மத்தேயு! | 325 |
| 29 | ஓய்வுநாள்! | 339 |
| 30 | இயேசு தமது சீடர்களை அபிஷேகித்தார்! | 351 |
| 31 | மலைப்பிரசங்கம்! | 363 |
| 32 | நூற்றுக்கு அதிபதி! | 387 |
| 33 | யார் எனக்குச் சகோதரர்கள்? | 395 |
| 34 | அழைப்பு! | 405 |
| 35 | அமைதி உண்டாகட்டும்! | 413 |
| 36 | விசுவாசத்தின் தொடுதல்! | 427 |
| 37 | முதல் சுவிசேஷகர்கள்! | 435 |
| 38 | சற்று இளைப்பாறும்படி செல்வோம் வாருங்கள்! | 451 |
| 39 | நீங்களே அவர்களுக்கு ஆகாரங்கொடுங்கள்! | 459 |
| 40 | ஏரியில் ஓர் இரவு! | 471 |
| 41 | கலிலேயாவில் ஏற்பட்ட நெருக்கடி...! | 481 |
| 42 | பாரம்பரியம்! | 499 |
| 43 | தடைகள் தகர்க்கப்பட்டன! | 507 |
| 44 | மெய்யான அடையாளம்! | 515 |
| 45 | சிலுவையின் முன்னடையாளம்! | 525 |

| | | |
|---|---|---|
| 46 | அவர் மறுரூபமானார்! | 539 |
| 47 | ஊழியம்! | 547 |
| 48 | யார் பெரியவன்? | 555 |
| 49 | கூடாரப் பண்டிகையில்...! | 571 |
| 50 | கண்ணிகளுக்கு நடுவில்...! | 583 |
| 51 | ஜீவ ஒளி! | 595 |
| 52 | தெய்வீக மேய்ப்பன்! | 615 |
| 53 | கலிலேயாவிலிருந்து கடைசிப் பயணம்...! | 625 |
| 54 | நல்ல சமாரியன்! | 641 |
| 55 | வெளித்தோற்றத்தின்படி அல்ல! | 651 |
| 56 | பிள்ளைகளை ஆசீர்வதித்தல்! | 659 |
| 57 | உன்னிடத்தில் ஒரு குறைவு உண்டு! | 667 |
| 58 | லாசருவே வெளியே வா! | 675 |
| 59 | ஆசாரியர்களின் சதித்திட்டங்கள்...! | 693 |
| 60 | புதிய இராஜ்யத்தின் சட்டம்! | 703 |
| 61 | சகேயு! | 711 |
| 62 | சீமோன் வீட்டில் நடைபெற்ற விருந்தில்...! | 719 |
| 63 | இதோ, உன் இராஜா வருகிறார்! | 737 |
| 64 | அழிவிற்கு விடப்பட்ட ஒரு மக்கள் கூட்டம்! | 751 |
| 65 | ஆலயம் மீண்டும் சுத்திகரிக்கப்படல்...! | 761 |
| 66 | எதிர்வாதம்! | 779 |
| 67 | பரிசேயர்களுக்கு ஐயோ...! | 793 |
| 68 | வெளிப்பிராகாரத்தில்! | 811 |
| 69 | ஒலிவ மலையின்மேல்...! | 821 |
| 70 | இவர்களின் மிகவும் சிறியவர்களான என் சகோதரர்கள்...! | 837 |

| | | |
|---|---|---|
| 71 | வேலைக்காரர்களில் ஒரு வேலைக்காரராக...! | 847 |
| 72 | என்னை நினைவுகூரும்படி...! | 861 |
| 73 | உங்கள் இருதயம் கலங்காதிருப்பதாக! | 875 |
| 74 | கெத்செமனே! | 903 |
| 75 | அன்னா—காய்பாவின் விசாரணை மன்றத்திற்குமுன்! | 919 |
| 76 | யூதாஸ் | 943 |
| 77 | பிலாத்துவின் நியாயவிசாரணை மன்றத்தில்...! | 955 |
| 78 | கல்வாரி! | 983 |
| 79 | முடிந்தது! | 1007 |
| 80 | யோசேப்பின் கல்லறையில்! | 1019 |
| 81 | இயேசு உயிர்த்தெழுந்தார்! | 1035 |
| 82 | ஸ்திரீயே ஏன் அழுகிறாய்? | 1045 |
| 83 | எம்மாவூருக்கு நடைப்பயணம்! | 1055 |
| 84 | உங்களுக்குச் சமாதானம் உண்டாவதாக! | 1063 |
| 85 | மீண்டும் ஒருமுறை கடலுக்கருகில்...! | 1073 |
| 86 | சகல ஜனங்களுக்கும் உபதேசம் பண்ணுங்கள்! | 1085 |
| 87 | என் பிதாவினிடத்திற்கும் உங்கள் பிதாவினிடத்திற்கும்...! | 1103 |

# 1

# தேவன் நம்மோடிருக்கிறார்!

## (The Desire of Ages, pp. 19–26)

"அவருக்கு இம்மானுவேல் என்று பேரிடுவார்கள் ... இம்மானுவேல் என்பதற்கு தேவன் நம்மோடிருக்கிறார் என்று அர்த்தமாம்." தேவனுடைய "மகிமையின் அறிவாகிய ஒளி" இயேசு கிறிஸ்துவின் முகத்தில் காணப்படுகிறது. கர்த்தராகிய இயேசு கிறிஸ்து நித்தியகாலமாக தேவனுடன் ஒருவராக இருந்தார். அவர் தேவனுடைய ரூபமாயிருந்தார். அவரது மகா மேன்மையின், மகத்துவத்தின் ரூபமாக—அவரது "மகிமையின் பிரகாசமாக" இருந்தார். இந்த மகிமையை வெளிக்காட்டவே அவர் நமது உலகத்திற்கு வந்தார். பாவத்தினால் இருளடைந்த இந்த உலகத்திற்கு தேவ அன்பின் ஒளியை வெளிக்காட்டவே—"தேவன் நம்மோடு இருக்கவே" வந்தார். எனவேதான் "அவருக்கு இம்மானுவேல் என்று பேரிடுவார்கள்"என்று அவரைப்பற்றித் தீர்க்கதரிசனம் உரைக்கப்பட்டிருந்தது. (1)

நம்முடன் வாழும்படியாக வந்ததினால், இயேசு மனிதர்களுக்கும் தூதர்களுக்கும் தேவனை வெளிப்படுத்தவேண்டியவரானார். அவர்தான் தேவனுடைய வார்த்தை—ஒலிக்கும் தேவனுடைய சிந்தனை. தம்முடைய சீஷர்களுக்காக அவர் ஜெபித்த ஜெபத்தில்: "இரக்கமும், கிருபையும், நீடிய சாந்தமும், மகா தயையும், சத்தியமுமுள்ள தேவன்"—"நீர் என்னிடத்தில் வைத்த அன்பு அவர்களிடத்திலிருக்கும்படிக்கும், நானும் அவர்களிலிருக்கும்படிக்கும், உம்முடைய நாமத்தை அவர்களுக்குத் தெரியப்படுத்தினேன்" என்று கூறுகிறார். ஆனால் பூமியில் பிறந்த அவரது பிள்ளைகளுக்காக மாத்திரம் இந்த வெளிப்படுத்தல் கொடுக்கப்படவில்லை. நமது சிறு உலகம் பிரபஞ்சத்தின் பாடநூலாக உள்ளது. தேவனுடைய கிருபையின் ஆச்சரியமான நோக்கமும், மீட்கும் அன்பின் தேவ இரகசியமும்தான் "தேவதூதரும் உற்றுப்பார்க்க" ஆசையாயிருக்கிற ஆய்வுப்பொருளாக இருக்கிறது. அதுவே யுகங்கள் நெடுகிலும் முடிவில்லாதபடி அவர்கள் ஆராயும் பாடமாகவும் இருக்கும். மீட்கப்பட்டவர்களும், விழுந்துபோகாதவர்களும், கிறிஸ்துவின் சிலுவையில்

அவர்களுடைய அறிவியலையும் பாடலையும் காண்பார்கள். இயேசுவின் முகத்தில் ஒளிவிடும் மகிமையானது தன்னைத்தான் தியாகஞ்செய்கின்ற அன்பின் மகிமையாகக் காணப்படும். சுயத்தை மறுக்கும் அன்பின் பிரமாணந்தான் பூமிக்கும் பரலோகத்திற்குமான ஜீவனின் பிரமாணமாக உள்ளது என்பது கல்வாரியிலிருந்து புறப்படும் ஒளியிலிருந்து காணப்படும். தற்பொழிவை நாடாத அன்பு, அதன் தோற்றுவாயை தேவனுடைய இருதயத்தில் உடையதாக உள்ளது. “ஒருவரும் சேரக்கூடாத ஒளியில்” வாசஞ்செய்யும் ஒருவரின் பண்பு, தாழ்மையும் எளிமையுமிக்க ஒருவரில் வெளிக்காட்டப்பட்டுள்ளது. (2)

ஆதியில் படைப்பின் செயல்கள் அனைத்திலும் தேவன் வெளிப்படுத்தப்பட்டிருந்தார். கிறிஸ்துதான் வானத்தை விரித்து பூமிக்கு அஸ்திபாரமிட்டார். உலகங்களை அந்தரத்தில் தொங்கவைத்து, மலர்களை வடிவமைத்தவரும் அவர்தான். “உம்முடைய பலத்தினால் பர்வதங்களை உறுதிப்படுத்தி,” “சமுத்திரம் அவருடையது, அவரே அதை உண்டாக்கினார்” –சங்கீதம் 65:6; 95:5. பூமியை அழகினாலும் ஆகாயத்தைப் பாடலினாலும் நிரப்பியவர் அவரே. பூமியிலும் ஆகாயத்திலும் வானத்திலும் சகல பொருட்களின்மீதும் பிதாவின் அன்பு என்னும் தூதை அவர் எழுதினார். (3)

இப்போது தேவனுடைய பூரணமான செயலைப் பாவம் களங்கப்படுத்திவிட்டபோதும் அந்தக் கையெழுத்து நிலைத்து நிற்கிறது. படைக்கப்பட்டவைகளனைத்தும், இப்போதுங்கூட அவரது மகிமையின் மேன்மையை அறிவிக்கின்றன. சுயநலமிக்க மனித இதயம் ஒன்றைத்தவிர, தனக்கென்று வாழக்கூடியது வேறு எதுவுமில்லை. ஆகாயத்தில் பறந்துசெல்லும் எந்தப் பறவையும், நிலத்தின்மீது சஞ்சரிக்கும் எந்த மிருகமும் மற்ற உயிர்களுக்கு சேவைசெய்கின்றன. சேவைசெய்யாத எந்த வனத்தின் இலையும் புல்லின் தளிரும் இல்லை. ஒவ்வொரு மரமும் செடியும் இலையும் உயிரின் மூலக்கூறுகளை வெளிப்படுத்துகிறது. இந்த மூலக்கூறுகளின்றி, மனிதனோ அல்லது மிருகமோ இவ்வுலகில் உயிர்வாழ முடியாது. மனிதனும் மிருகமும் அதற்குக் கைமாறாக, மரங்கள், பூண்டு இலைகளின் வாழ்விற்காக சேவை செய்கின்றனர். உலகத்திற்கு வாழ்த்தும்படியாக மலர்கள் நறுமணம் பரப்பி, அவைகளின் அழகை விரித்துக்காட்டுகின்றன. ஆயிரங்களான உலகங்களை மகிழ்விக்கும்படி சூரியன் அதன் ஒளியை வீசுகிறது. அனைத்து நீரூற்றுகளுக்கும் ஓடைகளுக்கும் ஆதாரமாகிய சமுத்திரமும், கொடுப்பதற்கென்றே ஒவ்வொரு நிலத்திலுமுள்ள நீர்க்கால்களிலிருந்து நீரைப் பெற்றுக்கொள்கிறது. பூமியின் மடியிலிருந்து உயர எழும் பனித்தூறல்கள் பூமியை நனைத்து, மொட்டுகளை உண்டாக்க மழையாகப் பொழிகின்றன. (4)

விழுந்துபோனதால் பரிசுத்தமற்று இருக்கும் ஆத்துமாக்களுக்கு அன்பைக் கொடுப்பதிலும் களைப்பற்ற கவனத்தைச் செலுத்துவதிலும் மகிமையின் தூதர்கள் அவர்களுடைய மகிழ்ச்சியைக் காண்கின்றனர் பரலோகவாசிகள் மனிதர்களின் இருதயங்களைக் கவர்ந்திழுக்க முயல்கின்றனர். விண்ணிலுள்ள பேரவையிலிருந்து அவர்கள் இந்த இருண்ட உலகத்திற்கு ஒளியைக் கொண்டுவருகின்றனர். கிறிஸ்துவுடனுள்ள உறவில் தாங்கள் அறிந்திருப்பதைவிடவும் மிக நெருக்கமாக, தொலைந்துபோயுள்ள ஆத்துமாக்களைக் கொண்டுவருவதற்காக தங்களுடைய மென்மையும் பொறுமையுமிக்க ஊழியத்தினால் அவர்களின் இருதயங்களின்மீது அசைவாடுகின்றனர். (5)

ஆனால் குறைவான அனைத்து எடுத்துக்காட்டுதல்களையும் விட்டுத்திரும்பி, நாம் இயேசுவில் தேவனைக் காண்கிறோம். இயேசுவை பார்த்து, கொடுப்பதில்தான் தேவனுடைய மகிமை இருக்கிறது என்று காண்கிறோம். “நான் என் சுயமாய் ஒன்றும் செய்யாமல்”, “ஜீவனுள்ள பிதா என்னை அனுப்பினதுபோலவும், நான் பிதாவினால் பிழைத்திருக்கிறதுபோலவும்”, “நான் எனக்கு மகிமையைத் தேடுகிறதில்லை” (யோவான் 8:28; 6:57; 8:50; 7:18) என்று கிறிஸ்து தன்னுடைய மகிமையைத் தேடாமல், தன்னை அனுப்பினவருடைய மகிமையைத் தேடுவதாகக் கூறினார். பிரபஞ்சத்தின் வாழ்விற்கான பிரமாணத்தினுடைய பெரும் கொள்கைகள் இந்த வார்த்தைகளில் முன்வைக்கப்பட்டுள்ளன. எல்லாவற்றையும் கிறிஸ்து தேவனிடமிருந்து பெற்றுக்கொண்டார், ஆனால் கொடுப்பதற்கென்று பெற்றுக்கொண்டார். அப்படியே பரலோக மன்றங்களில் சிருஷ்டிகளுக்காக அவர் செய்யும் ஊழியத்திலும், நேசகுமாரனின் மூலமாக பிதாவின் ஜீவன் அனைவருக்கும் பாய்ந்துசெல்லுகிறது; குமாரனின்மூலமாக துதியும் மகிழ்ச்சியுமிக்க சேவை என்னும் அன்பின் அலை அனைத்திற்கும் பெரும் ஆதாரமாயிருப்பவரிடத்திற்கு திரும்ப வருகின்றது. இவ்வாறு, கிறிஸ்துவின் மூலமாக, கொடுப்பவரின் குணத்தை—ஜீவனின் பிரமாணத்தை சுட்டிக்காட்டி நன்மையளிக்கும் சுற்றுப்பாதை முழுமையடைகிறது. (6)

இந்தப் பிரமாணம் பரலோகத்திலேயே மீறப்பட்டுவிட்டது. சுயத்தைத் தேடுவதில் பாவம் பிறந்தது. லூசிபர் என்னும், காப்பாற்றுகிறதற்காக அபிஷேகம்பண்ணப்பட்டிருந்த கேரூப், பரலோகத்தில் முதல்வனாயிருக்க வாஞ்சித்தான். பரலோகவாசிகளைத் தனது கட்டுப்பாட்டிற்குள் கொண்டுவரவும், அவர்களுடைய சிருஷ்டிகரிடமிருந்து அவர்களைப் பிரித்து, அவர்களுடைய வணக்கத்தைத் தான் அடைந்துகொள்ளவும் அவன் வகைதேடினான். அதற்காக, “தன்னை உயர்த்த விரும்புகிறதே”

தேவனுடைய குணமென்று அவரை தவறாக எடுத்துக்காட்டினான். தன்னுடைய சொந்த தீய பண்புகளை அன்புமிக்க சிருஷ்டிகரின்மீது சுமத்த முயன்றான். இவ்வாறு அவன் தூதர்களை வஞ்சித்தான். இவ்வாறாகவே மனிதர்களையும் வஞ்சித்தான். தேவனுடைய வார்த்தையை சந்தேகிக்கவும், அவருடைய நல்ல தன்மையை நம்பாதிருக்கவும் அவன் அவர்களை நடத்தினான். தேவன் நீதியின் தேவனாகவும் பயங்கரமான மகத்துவமுள்ளவராகவும் இருப்பதினால், அவரைக் கடினமானவராகவும் மன்னிக்கும் தன்மையற்றவராகவும் பார்க்கும்படி அவன் வகைசெய்தான். இவ்வாறாக, தேவனுக்கெதிரான கலகத்தில் தன்னோடு சேர்ந்துகொள்ள மனிதர்களைத் தன்னிடம் இழுத்துக்கொண்டதினால் துன்பம் என்னும் இருள் உலகின்மீது படிந்தது. (7)

தேவனைப்பற்றி தவறான அறிவினால் உலகம் இருண்டு கிடந்தது. அந்த மங்கின நிழல்கள்மீது ஒளிவீசவேண்டுமானால், உலகத்தை தேவனிடம் திரும்பக்கொண்டுவரவேண்டுமானால், சாத்தானின் வஞ்சக வல்லமை தகர்க்கப்படவேண்டும். பலவந்தமாக இதைச் செய்யமுடியாது. பலவந்தம் செய்வது தேவ அரசாங்கத்தின் கொள்கைக்கு எதிரானது. அவர் அன்பின் சேவையை மட்டுமே விரும்புகிறார். அன்பின் மேல் அதிகாரம் செய்யமுடியாது; பலவந்தத்தினாலும் அதிகாரத்தினாலும் அதை வெல்ல முடியாது. அன்பினால் மட்டுமே அன்பை விழித்தெழச்செய்ய முடியும். தேவனை அறிவதென்பது அவரை நேசிப்பதாகும். அவரது குணம் சாத்தானின் குணத்திற்கு எதிராக வெளிக்காட்டப்பட்டாக வேண்டும். இந்தப் பணியை பிரபஞ்சம் முழுவதிலுமுள்ள ஒரே ஒருவரால் மட்டுமே செய்யமுடியும். தேவனுடைய அன்பின் உயரத்தையும் ஆழத்தையும் அறிந்த ஒருவர் மட்டுமே இதை அறியப்படுத்தமுடியும். உலகத்தினுடைய இருண்ட இருளின்மீது, "செட்டைகளின்கீழ் ஆரோக்கியத்தோடு" (மல்கியா 4:2) நீதியின் சூரியன் உதித்தாகவேண்டும். (8)

இரட்சிப்பின் திட்டம், ஆதாமின் விழுகைக்குப்பின் வரையறுக்கப்பட்ட யோசனையின் திட்டமல்ல. "ஆதிகாலமுதல் அடக்கமாயிருந்த" (ரோமர் 16:25) இரகசியத்தின் வெளிப்படுத்தலாகும். நித்தியகாலமாக தேவசிங்காசனத்தின் அஸ்திபாரமாக உள்ள கொள்கைகளின் விரிவாக்கமாக அது இருந்தது. சாத்தானின் மருளவிழுகையையும், அவனது மருளவிழுகையின் வஞ்சகத்தின் வல்லமையினால் உண்டாகவுள்ள மனிதனின் விழுகையையும் ஆதியிலேயே தேவனும் கிறிஸ்துவும் அறிந்திருந்தனர். பாவம் இருக்கவேண்டும் என்று தேவன் ஏற்படுத்தவில்லை; ஆனால் அது இருக்கும் என்பதை தேவன் முன்னறிந்து, அந்த பயங்கரமான அவசர நிலைமையைச் சந்திக்க ஏற்பாடு

செய்திருந்தார். இந்த உலகின்மீதான அவரது அன்பு பெரிதாக இருந்ததினால், "குமாரனை விசுவாசிக்கிறவன் எவனோ அவன் கெட்டுப்போகாமல் நித்தியஜீவனை அடையும்படிக்கு" (யோவான் 3:16) தமது ஒரே பேறான குமாரனைக் கொடுப்பதாக தேவன் உடன்படிக்கை செய்தார். (9)

"தேவனுடைய நட்சத்திரங்களுக்கு மேலாக என் சிங்காசனத்தை உயர்த்துவேன்; ... உன்னதமானவருக்கு ஒப்பாவேன்" (ஏசாயா 14:13,14) என்றும் லூசிபர் கூறியிருந்தான். கிறிஸ்துவோ, "தேவனுடைய ரூபமாயிருந்தும், தேவனுக்குச் சமமாயிருப்பதைக் கொள்ளையாடின பொருளாக எண்ணாமல், தம்மைத்தாமே வெறுமையாக்கி, அடிமையின் ரூபமெடுத்து, மனுஷர் சாயலானார்"—பிலிப்பியர் 2:6,7. (10)

இது வலிய செய்யப்பட்ட ஒரு தியாகம். இயேசுவால் பிதாவினருகிலேயே இருந்திருக்கமுடியும். பரலோக மகிமையையும், தூதர்களின் தொழுகையையும் தக்கவைத்துக்கொண்டிருந்திருக்கலாம்; ஆனால் இரவாகிப்போன உலகிற்கு ஒளியைக் கொண்டுவரவும், அழிந்துகொண்டிருப்பவர்களுக்கு ஜீவனைக்கொண்டுவரவும், அவர் தமது செங்கோலைப் பிதாவின் கரத்தில் திரும்பக் கொடுத்துவிட்டு, பரலோக சிங்காசனத்திலிருந்து கீழிறங்குவதைத் தெரிந்துகொண்டார். (11)

ஏறத்தாழ இரண்டாயிரம் வருடங்களுக்குமுன்: "இதோ, வருகிறேன்", "பலியையும் காணிக்கையையும் நீர் விரும்பவில்லை, ஒரு சரீரத்தை எனக்கு ஆயத்தம்பண்ணினீர்; ... உம்முடைய சித்தத்தின்படி செய்ய, இதோ, வருகிறேன், புஸ்தகச்சுருளில் என்னைக் குறித்து எழுதியிருக்கிறது"—(எபிரெயர் 10:5–7) என்று தேவசிங்காசனத்திலிருந்து பிறந்த தேவ இரகசியமான ஒரு சத்தம் பரலோகத்தில் கேட்கப்பட்டது. நித்தியகாலமாக மறைத்துவைக்கப்பட்டிருந்த நோக்கத்தின் நிறைவேறுதல் இந்த வார்த்தைகளினால் அறிவிக்கப்பட்டுள்ளன. கிறிஸ்து அவதரித்து நமது உலகத்தைச் சந்திக்கவிருந்தார். எனக்கு "ஒரு சரீரத்தை ஆயத்தம்பண்ணினீர்" என்று அவர் கூறுகிறார். உலகத்தோற்றத்திற்கு முன்னே, அவர் பிதாவுடனிருந்தபோது அவருக்கிருந்த மகிமையுடன் அவர் தோன்றியிருந்தால், அவரது பிரசன்னத்தின் ஒளியை நம்மால் தாங்கியிருந்திருக்கமுடியாது. நாம் அதைக் காணவும், கண்டு அழிந்துபோகாமலிருக்கவும், அவருடைய மகிமையின் வெளிக்காட்டல் மூடிமறைக்கப்பட்டது. அவருடைய தெய்வீகம் மனுஷீகத்தால் மூடப்பட்டது—காணக்கூடாத மகிமை காணக்கூடிய மனித உருவானது. (12)

மாபெரும் இந்த நோக்கம் மாதிரிகளாலும் அடையாளங்களினாலும் நிழலாக்கப்பட்டிருந்தது. கிறிஸ்து மோசேக்கு தரிசனமாக எரியும் முட்செடி தேவனை வெளிப்படுத்தினது. தேவத்துவத்தின் எடுத்துக்காட்டாக இருக்கும்படி

தெரிந்தெடுக்கப்பட்ட அடையாளம் பார்ப்பதற்குக் கவர்ச்சியற்ற பகட்டில்லாத ஒரு சாதாரண முட்செடியாக இருந்தது. எல்லையற்ற பரம்பொருளின் புனிதமான இடமாக அது அமைந்தது. மோசே காணவும், கண்டபின் உயிர்வாழவும்தக்கதாக, பூரண இரக்கமுள்ள தேவன் தம்முடைய மகிமையை மிகத்தாழ்மையான சாயலால் மூடினார். அதைப்போலவே, மனிதர்களுக்குத் தமது சித்தத்தை வெளிப்படுத்தி தமது கிருபையை அருளுவதற்காக, பகலில் மேகஸ்தம்பத்தின்மூலமாகவும், இரவில் அக்கினி ஸ்தம்பத்தின் மூலமாகவும் தேவன் இஸ்ரவேலர்களுடன் தொடர்புகொண்டிருந்தார். முடிவுள்ள மனிதனின் பலவீனமான பார்வை அதைக் காணும்வண்ணமாக, தேவனின் மகிமை தாழ்த்தப்பட்டு. அவரது மகத்துவம் திரையிடப்பட்டது. அப்படியே, "நம்முடைய அற்பமான சரீரத்தில்" (பிலிப்பியர் 3:21) "மனுஷர் சாயலில்" கிறிஸ்து வரவேண்டியவரானார். உலகத்தின் பார்வையில், விரும்பத்தக்க ரூபம் அவருக்கு இல்லாதிருந்தது. என்றாலும் அவர் மனித உருவிலிருந்த தேவனாக, பரலோகத்தினுடைய மற்றும் பூலோகத்தினுடைய ஒளியாக இருந்தார். துயரமிக்கவனும் சோதிக்கப்பட்டவனுமான மனிதனுக்கு அருகில் வருவதற்காக அவரது மகிமைக்குத் திரையிடப்பட்டது; அவரது மகா மேன்மையும் மகத்துவமும் மறைக்கப்பட்டது. (13)

"அவர்கள் நடுவிலே நான் வாசம்பண்ண, எனக்கு ஒரு பரிசுத்த ஸ்தலத்தை உண்டாக்குவார்களாக" (யாத்திராகமம் 25:8) என்று தேவன் மோசேக்குக் கட்டளையிட்டு, தம்முடைய ஜனத்தின் மத்தியில் ஆசரிப்புக்கூடாரத்தில் தங்கியிருந்தார். களைப்பூட்டும் அவர்களுடைய பாலைவன அலைச்சல் நெடுகிலும் அவரது பிரசன்னத்தின் அடையாளம் அவர்களுடன் இருந்தது. அப்படியே மனிதரின் பாளயத்திற்கு நடுவில் கிறிஸ்து அவருடைய கூடாரத்தை வைத்தார். அவர் நமக்கு நடுவில் வாழவும், அவரது தெய்வீகக் குணத்துடன் நாம் அறிமுகமானவர்களாக இருக்கவும் மனிதர்களின் கூடாரத்திற்கு அருகில் அவர் தமது கூடாரத்தை அமைத்தார். "அந்த வார்த்தை மாம்சமாகி, கிருபையினாலும் சத்தியத்தினாலும் நிறைந்தவராய், நமக்குள்ளே வாசம்பண்ணினார்; அவருடைய மகிமையைக் கண்டோம்; அது பிதாவுக்கு ஒரேபேறானவருடைய மகிமைக்கு ஏற்ற மகிமையாகவே இருந்தது"—யோவான் 1:14. (14)

நமக்கு மத்தியில் வாழ்வதற்கு வந்ததின்மூலமாக, இயேசு நமது சோதனைகளுடன் அறிமுகமானவராகவும், நமது துயரங்களில் நம்மேல் அனுதாபமுள்ளவராகவும் இருக்கிறார் என்பதை அறிகிறோம். நமது சிருஷ்டிகர் பாவிகளின் நண்பராக இருக்கிறார் என்பதை ஆதாமின் ஒவ்வொரு மகனும் மகளும் புரிந்துகொள்ளலாம். ஏனெனில் நமது மீட்பரின்

உலக வாழ்க்கையில் எடுத்துக்காட்டப்பட்ட கிருபையின் ஒவ்வொரு கோட்பாட்டிலும், மகிழ்ச்சியின் ஒவ்வொரு வாக்குத்தத்தத்திலும், ஒவ்வொரு தெய்வீகக் கவர்ச்சியிலும்: "தேவன் நம்மோடிருக்கிறார்" என்பதை நாம் காண்கிறோம். (15)

தேவனுடைய அன்பின் பிரமாணத்தை சுயநலத்தின் பிரமாணம் என்று சாத்தான் காட்டுகிறான். அதன் கட்டளைகளுக்குக் கீழ்ப்படிவது நம்மால் முடியாத காரியம் என்று அவன் அறிவிக்கிறான். நமது முதல் பெற்றோரின் விழுகையையும், அதனால் உண்டான துயரங்களையும் சிருஷ்டிகரின்மீது சுமத்தி, தேவனே பாவத்திற்கும், பாடு மரணத்திற்கும் காரணமானவர் என்று நோக்கும்படி அவன் மனிதர்களை நடத்துகிறான். இயேசு இந்த வஞ்சகத் திரையை நீக்கவேண்டியவராக இருந்தார். நம்மில் ஒருவரைப்போல இருந்து, கீழ்ப்படிதலிற்கு ஒரு உதாரணத்தைக் கொடுக்கவேண்டியவரானார். அதற்காக அவர் நமது தன்மையை அவர்மீது ஏற்று, நமது அனுபவங்களுக்கூடாகக் கடந்துசென்றார். "எவ்விதத்திலும் தம்முடைய சகோதரருக்கு ஒப்பாகவேண்டியதாயிருந்தது" –எபிரெயர் 2:17. இயேசு பொறுமையுடன் தாங்கிக்கொள்ளாத எதையாவது நாம் சகிக்க நேரிட்டால், அப்பொழுது, அந்த ஒரு காரியத்தில், தேவனுடைய வல்லமை நமக்குப் போதுமானதாக இல்லை என்று சாத்தானால் எடுத்துக்காட்டமுடியும். எனவேதான் இயேசு "எல்லாவிதத்திலும் நம்மைப்போல் சோதிக்கப்பட்டும்" இருக்கிறார் (எபிரெயர் 4:15). நம்மைக் கீழ்ப்படுத்தி வைத்திருக்கின்ற சோதனைகள் ஒவ்வொன்றையும் அவர் சகித்தார். நமக்கு இலவசமாகக் கொடுக்கப்படாத எந்த வல்லமையையும் அவர் தமக்காகப் பயன்படுத்தவில்லை. மனிதனாக சோதனைகளைச் சந்தித்து, தேவனால் அவருக்குக் கொடுக்கப்பட்ட பலத்தினால் அவைகளை மேற்கொண்டார். "என் தேவனே, உமக்குப் பிரியமானதைச் செய்ய விரும்புகிறேன்; உமது நியாயப்பிரமாணம் என் உள்ளத்திற்குள் இருக்கிறது" (சங்கீதம் 40:8) என்று அவர் கூறுகிறார். அவர் நன்மைசெய்கிறவராக எங்கும் சுற்றித்திரிந்து சாத்தானால் உபத்திரவப்படுத்தப்பட்ட யாவரையும் சுகப்படுத்தினபோது, தேவப்பிரமாணத்தின் தன்மையையும் அவரது ஊழியத்தின் தன்மையையும் மனிதர்களுக்குத் தெளிவாக எடுத்துக்காட்டினார். தேவப்பிரமாணத்திற்கு நம்மாலும் கீழ்ப்படியமுடியும் என்பதற்கு அவருடைய வாழ்க்கை சாட்சி பகருகிறது. (16)

கிறிஸ்து அவருடைய மனித இயல்பினால் மானுடத்தைத் தொட்டார். தமது தெய்வத் தன்மையினால் அவர் தேவ சிங்காசனத்தைப் பற்றிப் பிடித்துக்கொள்கிறார். அவர் மனுஷகுமாரனாக, கீழ்ப்படிதலுக்கு நமக்கு

ஒரு உதாரணத்தைத் தந்தார். தேவகுமாரனாக நமக்குக் கீழ்ப்படிவதற்காக வல்லமையைத் தருகிறார். “இருக்கிறவராக இருக்கிறேன் என்று மோசேயுடனே சொல்லி, இருக்கிறேன் என்பவர் என்னை உங்களிடத்துக்கு அனுப்பினார் என்று இஸ்ரவேல் புத்திரரோடே சொல்வாயாக” (யாத்திராகமம் 3:14) என்று ஓரேப் மலையின்மீது முட்செடியிலிருந்து மோசேயிடம் கூறியவர்—கிறிஸ்துதான். இஸ்ரவேலரின் விடுதலைக்கான வாக்குறுதி அதுவாக இருந்தது. இவ்வாறாக அவர் மனித சாயலில் வந்தபோது, தம்மை இருக்கிறவராக அறிவித்தார். பெத்லகேமிலிருந்த குழந்தை, தாழ்மையும் சாந்தமுமான இரட்சகர், “மாம்சத்திலே வெளிப்பட்ட” (1 தீமோத்தேயு 3:16) தேவனாக இருந்தார். நம்மிடம்: “நானே நல்ல மேய்ப்பன்;” “நானே ... ஜீவ அப்பம்;” “நானே வழியும் சத்தியமும் ஜீவனுமாயிருக்கிறேன்;” “வானத்திலும் பூமியிலும் சகல அதிகாரமும் எனக்குக் கொடுக்கப்பட்டிருக்கிறது” (யோவான் 10:11; 6:51; 14:6; மத்தேயு 28:18) என்கிறார். இருக்கிறேன் என்பவரே ஒவ்வொரு வாக்குத்தத்தத்தின் நிச்சயம். நான் தான்; பயப்படாதிருங்கள். “தேவன் நம்மோடிருக்கிறார்” என்பதுவே பாவத்திலிருந்து நம்முடைய விடுதலையின் உத்தரவாதம்; பரலோகத்தின் சட்டங்களுக்கு கீழ்ப்படிய நமக்கு இருக்கும் வல்லமையின் அத்தாட்சி. (17)

மானிடத்தன்மையைத் தன்மீது ஏற்றுக்கொள்ள அவர் கீழிறங்கினதால், சாத்தானின் குணத்திற்கு நேரெதிரான ஒரு குணத்தைக் கிறிஸ்து வெளிக்காட்டினார்; சிறுமைப்படுத்தும் பாதையில் அவர் மேலும் அதிகமாகக் கீழிறங்கினார். “அவர் மனுஷரூபமாய்க் காணப்பட்டு, மரணபரியந்தம், அதாவது சிலுவையின் மரணபரியந்தமும் கீழ்ப்படிந்தவராகி, தம்மைத்தாமே தாழ்த்தினார்”—பிலிப்பியர் 2:8. பிரதான ஆசாரியன் தனது அலங்காரமான ஆசாரிய உடையைக் கழற்றிவைத்துவிட்டு சதாரண ஆசாரியனின் உடையை அணிந்துகொண்டு ஊழியஞ்செய்ததுபோல, கிறிஸ்து ஒரு அடிமையின் ரூபமெடுத்து, அவரே ஆசாரியராகவும், அவரே பலியாடாகவுமிருந்து பலியைச் செலுத்தினார். “நம்முடைய மீறுதல்களினிமித்தம் அவர் காயப்பட்டு, நம்முடைய அக்கிரமங்களினிமித்தம் அவர் நொறுக்கப்பட்டார்; நமக்குச் சமாதானத்தை உண்டுபண்ணும் ஆக்கினை அவர்மேல் வந்தது”—ஏசாயா 53:5. (18)

கிறிஸ்துவைப்போல் நாம் நடத்தப்படவேண்டும் என்பதற்காக கிறிஸ்து—நாம் எவ்விதமாக நடத்தப்படவேண்டுமோ அவ்விதமாக நடத்தப்பட்டார். நமக்குப் பங்கில்லாத அவருடைய நீதியினால் நாம் நீதிமான்களாக்கப்படுவதற்காக, அவருக்குப் பங்கில்லாத நமது பாவங்களுக்காக அவர் ஆக்கினைக்குட்படுத்தப்பட்டார். அவருடையதாக இருந்த ஜீவனில்

நாம் பங்குபெறவேண்டும் என்பதற்காக நம்முடையதாக இருந்த மரணத்தை அவர் அனுபவித்தார். அவருடைய தழும்புகளால் நாம் குணமாகிறோம். (19)

பாவத்தினால் உண்டான அழிவிலிருந்து மீட்பதைவிடவும் அதிகமானதைக் கிறிஸ்து அவரது வாழ்க்கையினாலும் மரணத்தினாலும் சாதித்திருக்கிறார். மனிதனுக்கும் தேவனுக்குமிடையே நித்தியமான பிரிவை உண்டாக்குவது சாத்தானுடைய நோக்கமாக இருந்தது; ஆனால் நாம் ஒருபோதும் பாவத்தில் விழுந்திராததைப்போன்று கிறிஸ்துவிற்குள் தேவனோடு இன்னும் நெருக்கமாக இணைக்கப்பட்டிருக்கிறோம். நமது தன்மையை மீட்பர் எடுத்துக்கொண்டதின்மூலமாக, மானிடத்தைவிட்டு ஒருபோதும் பிரிக்கமுடியாத ஒரு பிணைப்பினை அவர் ஏற்படுத்தினார். நித்தியகாலமாக அவர் நம்முடன் இணைக்கப்பட்டிருக்கிறார். "... தேவன், அவரைத் தந்தருளி, இவ்வளவாய் உலகத்தில் அன்புகூர்ந்தார்"– யோவான் 3:16. நமது பாவங்களைச் சுமக்கவும் நமக்கான தியாகபலியாக மரிக்கவும் மட்டும் தேவன் அவரைத் தராமல், பாவத்தில் விழுந்துபோன மனித இனத்திற்கென்றே அவரைக் கொடுத்துவிட்டார். சிதைக்கமுடியாத அவரது சமாதானத்தின் ஆலோசனையை நிச்சயப்படுத்தும்படி, தேவன் தம்முடைய ஒரே பேறான குமாரனை, மனிதக் குடும்பத்தில் ஒருவராக இருக்கும்படி, என்றென்றைக்கும் மனித சாயலோடு இருக்கும்படி கொடுத்தார். தேவன் அவருடைய வார்த்தையை நிறைவேற்றுவார் என்பதற்கான வாக்குறுதி இதுதான். "நமக்கு ஒரு பாலகன் பிறந்தார்; நமக்கு ஒரு குமாரன் கொடுக்கப்பட்டார்; கர்த்தத்துவம் அவர் தோளின்மேலிருக்கும்." தேவன் தமது குமாரனின் வடிவில் மானிட இயல்பை தம்மிலே சுவீகாரம் செய்துகொண்டு, அதைப் பரலோகத்தின் உன்னதத்திற்கு எடுத்துச்சென்றார். பிரபஞ்சத்தின் சிங்காசனத்தை பகிர்ந்துகொண்டிருப்பவர் மனுஷகுமாரன். "அதிசயமானவர், ஆலோசனைக்கர்த்தா, வல்லமையுள்ள தேவன், நித்திய பிதா, சமாதானப்பிரபு" (ஏசாயா 9:6) என்று மனுஷகுமாரன் அழைக்கப்படுகிறார். இருக்கிறேன் என்பவர், தேவனுக்கும் மானிடத்துக்கும் மத்தியஸ்தராக இருந்து, இருவர்மீதும் தமது கரத்தை வைத்திருக்கிறார். நம்மைச் சகோதரர் என்று அழைப்பதற்கு வெட்கப்படாதவர், "பரிசுத்தரும், குற்றமற்றவரும், மாசில்லாதவரும், பாவிகளுக்கு விலகினவருமான" அவர், நம்மை சகோதரரென்று சொல்ல வெட்கப்படுவதில்லை (எபிரெயர் 7:26; 2:11). பூலோகக் குடும்பமும் பரலோக் குடும்பமும் கிறிஸ்துவில் ஒன்றாகச் சேர்த்துக் கட்டப்பட்டுள்ளன. மகிமைப்படுத்தப்பட்ட கிறிஸ்து நமது சகோதரர். பரலோகம் மானுடத்திற்குள் புனிதமாக ஸ்தாபிக்கப்பட்டுள்ளது; எல்லையற்ற அன்பின் மார்பில் மானுடம் மலர்ந்துள்ளது. (20)

தேவன் தமது மக்களைப்பற்றி: “அவர்கள் அவருடைய தேசத்தில் ஏற்றப்பட்ட கொடிகளின் கிரீடத்தில் பதிந்திருப்பார்கள். அவருடைய காருண்யம் எத்தனை பெரியது? அவருடைய சௌந்தரியம் எத்தனை பெரியது?” (சகரியா 9:16,17) என்று கூறுகிறார். “கிறிஸ்து இயேசுவுக்குள் அவர் நம்மிடத்தில் வைத்த தயவினாலே, தம்முடைய கிருபையின் மகா மேன்மையான ஐசுவரியத்தை வருங்காலங்களில் விளங்கச்செய்வதற்காக” “உன்னதங்களிலுள்ள துரைத்தனங்களுக்கும் அதிகாரங்களுக்கும் அவருடைய அநந்த ஞானமானது சபையின்மூலமாய் இப்பொழுது தெரியவரும் பொருட்டாக, இயேசுகிறிஸ்துவைக்கொண்டு எல்லாவற்றையும் சிருஷ்டித்த தேவனுக்குள்ளே ஆதிகாலங்கள் முதல் மறைந்திருந்த இரகசியத்தினுடைய ஐக்கியம் இன்னதென்று, எல்லாருக்கும் வெளிப்படையாகக் காண்பிக்கிறதற்கு” (எபேசியர் 2:6; 310,11) தேவனுடைய இரக்கத்தின் நித்தியகால சாட்சியாக மீட்கப்பட்டவர்களின் உயர்வு இருக்கும். (21)

கிறிஸ்துவின் மீட்கும் ஊழியத்தினால் தேவ அரசாங்கம் நியாயப்படுத்தப்பட்டிருக்கிறது. சர்வவல்லமையுள்ள ஒருவர் அன்பின் தேவன் என்று அறிவிக்கப்பட்டிருக்கிறார். சாத்தானின் குற்றச்சாட்டுகள் மறுக்கப்பட்டு, அவனது குணம் திரைநீக்கம் செய்யப்பட்டுள்ளது. கலகம் மீண்டும் ஒருபோதும் எழமுடியாது. பாவம் இனி ஒருபோதும் பிரபஞ்சத்திற்குள் நுழைய முடியாது. நித்திய காலமாக மருள விழுகையிலிருந்து அனைவரும் காக்கப்பட்டுள்ளனர். அன்பின் சுயதியாகத்தினால் பூலோகவாசிகளும் பரலோகவாசிகளும் பிரிக்கமுடியாத ஐக்கியத்திற்குள் தங்களது சிருஷ்டிகருடன் பிணைத்துக் கட்டப்பட்டுள்ளனர். (22)

மீட்பின் பணி பூரணமானதாக இருக்கும். பாவம் பெருகின இடத்தில் தேவகிருபை அதிகமாகப் பெருகினது. சாத்தான் தன்னுடையது என்று உரிமைபாராட்டும் இந்த உலகம் மீட்கப்படுவதுமட்டுமின்றி, உயர்த்தப்படவும் உள்ளது. அவரது மகிமைமிக்க படைப்பில் இருண்ட புள்ளியாக இருக்கும் நமது சிறிய உலகம், பிரபஞ்சத்தின் மற்றெல்லா உலகங்களுக்கும் மேலாக கனப்படுத்தப்படும். தேவகுமாரன் மானிடனாகத் தமது கூடாரத்தை அமைத்திருந்த இந்த இடம்—மகிமையின் அரசர் வாழ்ந்து பாடுகளை அனுபவித்து மரித்த இந்த இடம்—அவர் எல்லாவற்றையும் புதிதாக்கும்போது, தேவனுடைய வாசஸ்தலமாக இருக்கும். “அவர்களிடத்திலே அவர் வாசமாயிருப்பார்; அவர்களும் அவருடைய ஜனங்களாயிருப்பார்கள், தேவன்தாமே அவர்களோடேகூட இருந்து அவர்களுடைய தேவனாயிருப்பார்.” மீட்கப்பட்டவர்கள் நித்திய காலங்களுக்கூடாக, கர்த்தருடைய வெளிச்சத்தில்

நடக்கும்போது, சொல்லிமுடியாத அவரது ஈவிற்காக—இம்மானுவேலுக்காக அவரைப் போற்றுவார்கள் "தேவன் நம்மோடிருக்கிறார்." (23) ★

# 2

# தெரிந்துகொள்ளப்பட்ட மக்கள்!

## (The Desire of Ages, pp. 27–30)

யூத மக்கள் மீட்பரின் வருகைக்காக ஓராயிரம் வருடங்களுக்கும் மேலாகக் காத்திருந்தனர். இந்த நிகழ்ச்சியின்மீது அவர்களது ஒளிமிக்க நம்பிக்கையை அவர்கள் வைத்திருந்தனர். பாடங்களிலும் தீர்க்கதரிசனங்களிலும் ஆலயச் சடங்குகளிலும் வீட்டு ஜெபங்களிலும் அவரது பெயரை அவர்கள் புனிதமானதாக வரைந்திருந்தனர்; அப்படியிருந்தும் அவரது வருகையின்போது, அவர்கள் அவரை அறியாமலிருந்தனர். பரலோகத்தால் நேசிக்கப்பட்டிருந்த அவர், அவர்களுக்கு "வறண்ட நிலத்திலிருந்து துளிர்க்கிற வேரைப்போல இருந்தார்.... அவருக்கு அழகுமில்லை, சௌந்தரியமுமில்லை; அவரைப் பார்க்கும்போது, நாம் அவரை விரும்பத்தக்க ரூபம் அவருக்கு இல்லாதிருந்தது. அவர் தமக்குச் சொந்தமானதிலே வந்தார், அவருக்குச் சொந்தமானவர்களோ அவரை ஏற்றுக்கொள்ளவில்லை"–ஏசாயா 53:2; யோவான் 1:11. (1)

அப்படியிருந்தும், தேவன் இஸ்ரவேலைத் தெரிந்துகொண்டிருந்தார். மனிதர்களுக்கிடையில் அவரது பிரமாணத்தைப்பற்றிய அறிவையும், மீட்பரைச் சுட்டிக்காட்டியிருந்த தீர்க்கதரிசனங்களின் அடையாளங்களையும், பாதுகாத்துவைக்கும்படி அவர்களை அழைத்திருந்தார். உலகத்திற்கு இரட்சிப்பின் ஊற்றுகளாக அவர்கள் இருக்கவேண்டும் என்று அவர் விரும்பினார். ஆபிரகாம் தான் சஞ்சரித்த இடத்தில் எப்படிப்பட்டவனாக இருந்தானோ, யோசேப்பு எகிப்தில் எப்படிப்பட்டவனாக இருந்தானோ, பாபிலோனின் அரசவையில் தானியேல் எப்படிப்பட்டவனாக இருந்தானோ, அப்படிப்பட்டவர்களாக எபிரெய மக்கள் ஜனங்களுக்கு மத்தியில் இருக்கவேண்டியதிருந்தது. அவர்கள் தேவனை மனிதருக்கு வெளிப்படுத்துகிறவர்களாக இருக்கவேண்டும். (2)

"உன்னை நான் ஆசீர்வதிப்பேன்... நீ ஆசீர்வாதமாக இருப்பாய். பூமியிலுள்ள வம்சங்களெல்லாம் உனக்குள் ஆசீர்வதிக்கப்படும்" (ஆதி. 12:2,3) என்று கர்த்தர் ஆபிரகாமை அழைத்தபோது கூறியிருந்தார். இதே போதனை தீர்க்கதரிசிகளின்மூலமாக மீண்டும் சொல்லப்பட்டன. யுத்தங்களினாலும்

அடிமைத்தனத்தினாலும் இஸ்ரவேல் சீர்கெட்டுப்போனதற்குப் பின்னருங்கூட, அந்த வாக்குத்தத்தம் அவர்களுடையதாகவே இருந்தது. “யாக்கோபிலே மீதியானவர்கள் கர்த்தராலே வருகிற பனியைப்போலவும், மனுஷனுக்குக் காத்திராமலும், மனுபுத்திரருக்குத் தாமதியாமலும், பூண்டுகள்மேல் வருகிற மழைகளைப்போலவும், அநேக ஜனங்களின் நடுவிலே இருப்பார்கள்” (மீகா 5:7). “கர்த்தரைச் சேவிக்கவும், கர்த்தருடைய நாமத்தை நேசிக்கவும், அவருக்கு ஊழியக்காரராயிருக்கவும், அவரைச் சேர்ந்து, … என் உடன்படிக்கையைப் பற்றிக்கொண்டிருக்கிற அந்நியபுத்திரர் அனைவரையும், நான் என் பரிசுத்த பர்வதத்துக்குக் கொண்டுவந்து: என் ஜெபவீட்டிலே அவர்களை மகிழப்பண்ணுவேன்; அவர்களுடைய சர்வாங்கதகனங்களும், அவர்களுடைய பலிகளும், என் பலிபீடத்தின்மேல் அங்கிகரிக்கப்பட்டிருக்கும்; என்னுடைய வீடு சகல ஜனங்களுக்கும் ஜெபவீடு என்னப்படும்” (ஏசாயா 56:6,7) என்று எருசலேம் தேவாலயத்தைப்பற்றி கர்த்தர் ஏசாயாவின்மூலமாக அறிவித்திருந்தார். (3)

ஆனால், இஸ்ரவேலர்கள் உலகத்தில் மேலானவர்களாக வேண்டும் என்பதில் தங்களது நம்பிக்கையை வைத்திருந்தனர். அவர்கள் கானான் தேசத்திற்குள் நுழைந்ததிலிருந்து, தேவனுடைய பிரமாணங்களைவிட்டு விலகிச்சென்று, அஞ்ஞானிகளின் வழிகளைப் பின்பற்றினார்கள். தேவன் அவரது தீர்க்கதரிசிகளின்மூலமாக அவர்களுக்கு அனுப்பிக்கொண்டிருந்த எச்சரிப்புகள் வீணானதாக இருந்தது. அஞ்ஞானிகளினாலுண்டான ஒடுக்குதலின் தண்டனைகளை அவர்கள் வீணாகச் சகித்திருந்தனர். ஒவ்வொரு சீர்திருத்தத்தையும் மருளவிழுகை பின்தொடர்ந்தது. (4)

இஸ்ரவேல் தேவனுக்கு உண்மையுள்ளதாக இருந்திருந்தால், அவர்களது மேன்மை, உயர்வு ஆகியவைகளின்மூலமாக அவர் தமது நோக்கத்தை நிறைவேற்றியிருந்திருப்பார். அவர்கள் கீழ்ப்படிதலின் பாதையில் நடந்திருந்தால், “நான் உண்டுபண்ணின எல்லா ஜாதிகளைப்பார்க்கிலும், புகழ்ச்சியிலும் கீர்த்தியிலும் மகிமையிலும் உன்னைச் சிறந்திருக்கும்படி செய்வேன். கர்த்தருடைய நாமம் உனக்குத் தரிக்கப்பட்டது என்று பூமியின் ஜனங்களெல்லாம் கண்டு, உனக்குப் பயப்படுவார்கள். அவர்கள் இந்தக் கட்டளைகளையெல்லாம் கேட்டு, இந்தப் பெரிய ஜாதியே ஞானமும் விவேகமுமுள்ள ஜனங்கள் என்பார்கள்” (உபாகமம் 26:19; 28:10; 4:6) என்றார். ஆனால், அவர்களது உண்மையற்ற வாழ்க்கையின் காரணமாக, தொடர்ச்சியான ஆபத்துகளினாலும் சிறுமைப்படுத்துவதினாலுமே தேவனுடைய நோக்கம் செயற்பட முடிந்தது. (5)

அவர்கள் பாபிலோனுக்கு அடிமைகளாகி, அஞ்ஞானிகளின்

நாடுகளெங்கிலும் சிதறடிக்கப்பட்டனர். அநேகர் துன்பங்களுக்கு நடுவில், அவரது உடன்படிக்கையின்மீதுள்ள விசுவாசத்தைப் புதுப்பித்துக்கொண்டனர். அவர்கள் அவர்களுடைய சுரமண்டலங்களை அலறிச்செடிகளின்மீது தொங்கவிட்டு, பாழாக்கிவிடப்பட்ட அவர்களது பரிசுத்த ஆலயத்திற்காகத் துக்கங்கொண்டாடினபோது, சத்தியத்தின் ஒளி அவர்கள்மூலமாகப் பிரகாசிக்கவே, தேவனைப் பற்றிய அறிவு நாடுகளுக்கிடையில் பரவியிருந்தது. அஞ்ஞானிகளின் பலிமுறைகள், தேவன் ஏற்படுத்தியிருந்த பலிமுறைகளின் திரிபாக இருந்தன. அஞ்ஞான பலிமுறைகளை உண்மையுடன் பின்பற்றின அநேகர், தேவனால் ஏற்படுத்தப்பட்ட உண்மையான பலிமுறைகளைப்பற்றி எபிரெயர்களிடமிருந்து அறிந்து, விசுவாசத்தினால் மீட்பரைப்பற்றிய வாக்குத்தத்தத்தைப் பற்றிக்கொண்டனர். (6)

நாடுகடத்தப்பட்ட அநேகர் உபத்திரவமடைந்தனர். ஓய்வுநாளை புறக்கணிக்க மறுத்த—அஞ்ஞானப் பண்டிகைகளை ஆசரிக்க மறுத்த அநேகர் உயிரிழந்தார்கள். சத்தியத்தை நசுக்கிவிடும்படி விக்கிரக ஆராதனைக்காரர்கள் எழும்பினபோது, அவர்களது அரசர்களும் மக்களும் ஒளியைப் பெற்றுக்கொள்ளவேண்டும் என்பதற்காக, கர்த்தர் தமது ஊழியக்காரர்களை அவர்களது இராஜாக்களுக்கும் அதிபதிகளுக்கும் முன்னால், நேருக்கு நேராகக் கொண்டுவந்தார். எபிரெய அடிமைகள் தொழுதுவந்த தேவனின் மேலாண்மையை அறிவிக்கும்படி மீண்டும் மீண்டும் பெரும் மன்னர்கள் நடத்தப்பட்டனர். (7)

பாபிலோனின் அடிமைத்தனத்தினால், இஸ்ரவேலர்கள் அவர்களுக்கிடையிலிருந்த உருவ வழிபாட்டிலிருந்து விலகி, நன்முறையில் சீர்பொருந்தி வாழ்ந்தனர். அதைப் பின்தொடர்ந்த நூற்றாண்டுகளில் அவர்களது செழுமை, தேவனுடைய கட்டளைக்குக் கீழ்ப்படிவதைத்தான் சார்ந்துள்ளது என்னும் மன உணர்வு நிலையாகும்வரை, அஞ்ஞான எதிரிகளின் ஒடுக்குதல்களினால், அவர்கள் துன்பப்பட்டனர்; ஆனால், அநேக மனிதர்களிடம் கீழ்ப்படிதல் அன்பினால் உண்டாகவில்லை. அவர்களது நோக்கம் தன்னலம் சார்ந்ததாக இருந்தது. அவர்கள் தாங்கள் ஒரு பெரிய இனம் என்னும் நிலைமையை அடைவதற்கான கருவியாக, தேவனுக்கு புறத்தோற்றமான சேவையைச் செய்திருந்தனர். அவர்கள் உலகத்திற்கு ஒளியாக இருக்கவில்லை; ஆனால், உருவ வழிபாடு என்னும் சோதனையிலிருந்து தப்பித்துக்கொள்ளுவதற்காகத் தங்களைப் பிறரிடமிருந்து தூரமாக விலக்கிக்கொண்டனர். தேவன் மோசேக்குக் கொடுத்த உபதேசத்தில், உருவ வழிபாட்டினருடனுள்ள உறவின்மீது கட்டுப்பாடு விதித்திருந்தார்; ஆனால், இந்தப் போதனை தவறானவிதத்தில்

பொருள்கொள்ளப்பட்டது. அவர்கள் அஞ்ஞானிகளின் பழக்கவழக்கங்களோடு இசைந்துபோகக்கூடாது என்பதற்காக, அதைத் தடுக்கும் நோக்கத்துடன் கொடுக்கப்பட்டிருந்த இது, இஸ்ரவேலர்களுக்கும் மற்ற ஜாதியினருக்கும் இடையில் பிரிவினையாகிய ஒரு சுவரைக் கட்டுவதற்கே பயன்படுத்தப்பட்டது. யூதர்கள் எருசலேமை அவர்களது பரலோகமாக நோக்கினர். கர்த்தர் புறஜாதியினரின்மீது இரக்கங்காட்டிவிடக்கூடாது என்று அவர்கள்மீது உண்மையாகவே பொறாமையுள்ளவர்களாக இருந்தனர். (8)

பாபிலோனிலிருந்து திரும்பிவந்தபின், மதபோதனைகளின்மீது அதிகமான கவனஞ்செலுத்தப்பட்டது. நாடு முழுவதிலும் ஜெப ஆலயங்கள் ஏற்படுத்தப்பட்டு, ஆசாரியர்களாலும் வேதபாரகர்களாலும் நியாயப்பிரமாணத்திற்கு விளக்கம் கொடுக்கப்பட்டிருந்தது. கலைகளுடனும் அறிவியலுடனும் சேர்த்து, நீதிமானாக்கப்படுதலின் கொள்கைகளும் கற்றுக்கொடுக்கப்படுவதாகச் சொல்லப்பட்ட பாடசாலைகள் அமைக்கப்பட்டன; ஆனால் இந்த ஏதுகரங்கள் கறையுள்ளவைகளாயின. அடிமைத்தனத்திற்குள் இருந்த காலத்தில் அநேக மக்கள் அஞ்ஞான எண்ணங்களையும் சம்பிரதாயங்களையும் உடையவர்களாயிருந்தனர். அவை அவர்களது மத சம்பந்தமான ஆராதனைக்குள்ளும் கொண்டுவரப்பட்டன. அநேக காரியங்களில் அவர்கள் உருவ வழிபாடு செய்பவர்களின் பழக்கங்களுடன் இசைவுள்ளவர்களாக இருந்தனர். (9)

யூதர்கள் தேவனைவிட்டு விலகிச்சென்றபோது, சடங்காச்சார ஊழியங்களைப்பற்றிய போதனைகளின் சாட்சியைப் பெருமளவிற்கு இழந்திருந்தனர். அந்த ஆராதனைமுறை, கிறிஸ்துவினாலேயே ஏற்படுத்தப்பட்டிருந்தது. அதன் ஒவ்வொரு பகுதியும் அவரது அடையாளமாக இருந்தது. அது முழுமையான உயிரோட்டம் உள்ளதாகவும் ஆவிக்குரிய அழகுள்ளதாகவும் இருந்தது. யூதர்கள் அவர்களது சடங்காச்சாரங்களில் ஆவிக்குரிய வாழ்க்கையை இழந்து, அதன் உயிரற்ற அமைப்பைப்பற்றித் தெரிந்துகொண்டிருந்தனர். அந்த பலிமுறைகளும் சட்டதிட்டங்களும், எவரைச் சுட்டிக்காட்டியிருந்தனவோ, அவரைச் சார்ந்திருப்பதற்குப்பதிலாக, பலிமுறைகளின்மீதும் சட்டதிட்டங்களின்மீதும் நம்பிக்கைவைத்தனர். அவர்கள் இழந்துவிட்ட இடத்தை நிரப்புவதற்காக ஆசாரியர்களும் குருமார்களும் தங்களுடைய தேவைகளைப் பெருக்கிக்கொண்டனர். எந்த அளவிற்கு அவர்கள் கடினமானவர்களாக இருந்தனரோ, அந்த அளவிற்கு தேவனின்மீதுள்ள அவர்களது அன்பு குறைவாக வெளிக்காட்டப்பட்டது. அவர்களது இருதயங்கள் அகந்தையினாலும் மாய்மாலத்தினாலும் நிறைந்திருந்தபோது, அவர்கள் தங்களது பரிசுத்தத்தை, அவர்களது சடங்காச்சாரத்தின் திரட்சியினால் அளந்திருந்தனர். (10)

நுணுக்கமானதும் பாரமானதுமான தடைகளினால் பிரமாணத்திற்குக் கீழ்ப்படிவது என்பது இயலாததாக இருந்தது. தேவனைச் சேவிக்க விரும்பி, ரபிமார்களின் கட்டளைகளுக்குக் கீழ்ப்படிய முயன்றவர்கள் மிகுந்த பாரத்தின்கீழ் பாடுபட்டிருந்தனர். துன்பப்படும் மனச்சாட்சியின் குற்றச்சாட்டிலிருந்து அவர்களால் இளைப்பாறுதலைக் காண இயலவில்லை. இந்தவிதமாக, தேவனுடைய குணத்தைப்பற்றிய அவர்களது எண்ணங்களைக் கீழானதாக்கவும், இஸ்ரவேலின் விசுவாசத்தை அவமதிப்பிற்குள்ளாக்கவும், மக்களை அதைரியப்படுத்தவும் சாத்தான் செயலாற்றினான். அவன் பரலோகத்தில் கலகத்தை உண்டுபண்ணினபோது முன்வைத்த உரிமையை, நிலைவரப்படுத்தலாமென்று நம்பினான். அதாவது, தேவனால் கோரப்படுபவை அநீதியானவையாக, கீழ்ப்படியமுடியாதவையாக இருந்தன என்றான். இஸ்ரவேலினாலுங்கூட தேவப்பிரமாணத்திற்குக் கீழ்ப்படியமுடியவில்லையென்று அவன் அறிவித்தான். (11)

மேசியாவின் வருகையை யூதர்கள் விரும்பினபோது, அவரது ஊழியத்தைப்பற்றிய அறிவு இல்லாதவர்களாக அவர்கள் இருந்தனர். அவர்கள் பாவத்திலிருந்துள்ள மீட்பைத் தேடாமல், ரோமர்களிடமிருந்துள்ள விடுதலையைத் தேடியிருந்தனர். அவர்களை ஒடுக்கியிருந்தவர்களின் வல்லமையைத் தகர்த்து, உலகம் முழுவதற்குமான ஆட்சியை நடத்தும்படி இஸ்ரவேலை உயர்த்த மேசியா வரவேண்டுமென்று அவர்கள் எதிர்பார்த்திருந்தனர். இந்தவிதமாக, மீட்பரை புறக்கணிப்பதற்கான அவர்களது பாதை ஆயத்தஞ்செய்யப்பட்டது. (12)

கிறிஸ்துவின் பிறப்பின்போது, அந்த நாடு அதன் அயல்நாட்டு எஜமானர்களின் சினத்தினாலும் சீற்றத்தினாலும் நசுக்கப்பட்டு, உள்நாட்டுக் கலகத்தினால் நாசமாகிக்கொண்டுமிருந்தது. ஒரு தனி அரசியல் அமைப்பை செயல்படுத்த யூதர்கள் அனுமதிக்கப்பட்டிருந்தனர்; ஆனால், அவர்கள் ரோமர்களின் நுகத்தின்கீழ் இருந்தனர் என்னும் உண்மையை எதனாலும் மூடிமறைக்கவோ, அல்லது வல்லமையின்மீதிருந்த கட்டுப்பாட்டைச் சீர்பொருந்தச்செய்யவோ இயலாமலிருந்தது. பிரதான ஆசாரியனை நியமித்தல், நீக்குதல் என்னும் உரிமையின்மீது, ரோமர்கள் உரிமைபாராட்டினார்கள். அந்தப் பதவி அடிக்கடி ஏமாற்றுதலினாலும் இலஞ்சத்தினாலும் கொலையினாலுங்கூடக் கைப்பற்றப்பட்டிருந்தது. ஆசாரியத்துவம் அதிகமதிகமாகக் கறைப்பட்டதாயிருந்தது; அப்படியிருந்தும் ஆசாரியர்கள் அதிக வல்லமையுடையவர்களாக இருந்து, அதை அவர்களது சுயநல நோக்கங்களுக்காகவும் பொருளாதார மேன்மைக்கென்றும் பயன்படுத்தியிருந்தனர். அவர்களது இரக்கமற்ற கோரிக்கைகளுக்கு

மக்கள் கீழ்ப்பட்டவர்களாயிருந்தனர். அத்துடன் ரோமர்களால் பாரமாக வரிசுமத்தப்பட்டிருந்தனர். பரவலான அதிருப்திக்கு இந்த நிலைமை காரணமாக இருந்தது. அடிக்கடி மக்களின் கொந்தளிப்புகள் உண்டாயிருந்தன. அந்த நாட்டின் இருதயத்தையே பேராசை, பலாத்காரம், நம்பிக்கையின்மை, ஆவிக்குரிய மந்தம் ஆகியவைகள் அரித்துக்கொண்டிருந்தன. (13)

ரோமர்களின்மீதுள்ள வெறுப்பும் தேசிய ஆவிக்குரிய பெருமையும் யூதர்களை அவர்களது தொழுகையின் அமைப்புக்களைக் கடினமாகப் பின்பற்ற வழிநடத்தின. மத சம்பந்தமான சடங்குகளை விசுவாசத்துடன் நடத்துகிறோம் என்ற பக்திக்கான புகழ்ச்சியை நிலைநாட்ட ஆசாரியர்கள் முயன்றிருந்தனர். மக்கள் இருளிலும் ஒடுக்கப்படுதலிலுமிருந்தும், அதிபதிகள் அதிகார தாகத்திலிருந்தும், தங்களுடைய எதிரிகளை அழித்தொழித்து இராஜ்யத்தை இஸ்ரவேலிற்கு மீட்டுக்கொடுக்கக்கூடிய ஒருவரின் வருகைக்காக தவித்துக்கொண்டிருந்தனர். அவர்கள் தீர்க்க தரிசனங்களை ஆவிக்குரிய கண்ணோட்டம் இல்லாதவர்களாக வாசித்துக் கொண்டிருந்தனர். இவ்வாறு, அவர்கள் கிறிஸ்துவின் தாழ்மையான முதலாம் வருகையைப் பார்க்காமல் விட்டுவிட்டு, அவரது மகிமைமிக்க இரண்டாம் வருகையைப்பற்றிக் கூறுபவைகளைத் தவறாகப் பொருத்திப்பார்த்திருந்தனர். அகந்தை அவர்களது பார்வையை இருளாக்கியிருந்தது. சுயநலமிக்க அவர்களது விருப்பங்களுக்குத்தக்கபடி அவர்கள் தீர்க்கதரிசனங்களுக்கு விளக்கம் கொடுத்துக்கொண்டிருந்தனர். (14) ★

# 3

# காலம் நிறைவேறிற்று!

## (The Desire of Ages, pp. 31–42)

“நாம் புத்திரசுவிகாரத்தையடையும்படி நியாயப் பிரமாணத்திற்குக் கீழ்ப்பட்டவர்களை மீட்டுக்கொள்ளத் தக்கதாக, காலம் நிறைவேறினபோது, ஸ்திரீயினிடத்திற் பிறந்தவரும் நியாயப்பிரமாணத்திற்குக் கீழானவருமாகிய தம்முடைய குமாரனை தேவன் அனுப்பினார்”–கலாத்தியர் 4:4,5. (1)

இரட்சகரின் வருகை ஏதேனில் முன்னறிவிக்கப்பட்டிருந்தது. ஆதாமும் ஏவாளும் இந்த வாக்குத்தத்தத்தை முதலில் கேட்டபோது, அதன் விரைவான நிறைவேறுதலை எதிர்நோக்கினார்கள். தங்களுடைய முதல் குமாரனை இவன்தான் விடுதலை வழங்கக்கூடியவனாக இருப்பான் என்று நம்பி, மகிழ்ச்சியுடன் வரவேற்றார்கள்; ஆனால் அந்த வாக்குத்தத்தத்தின் நிறைவேறுதல் தாமதமானது. முதலாவது அந்தத் தூதைப் பெற்றவர்கள் அதைக் காணாதவர்களாக மரித்துப்போயினர். ஏனோக்கின் காலம்முதல், அவரது வருகையைப்பற்றிய நம்பிக்கை உயிருள்ளதாக்கப்படும்படி முற்பிதாக்கள் மற்றும் தீர்க்கதரிசிகள்மூலமாக அந்த வாக்குத்தத்தம் திரும்பத்திரும்பக் கூறப்பட்டது. அப்படியிருந்தும், அவர் வரவில்லை. தானியேலின் தீர்க்கதரிசனம் அவரது வருகையை வெளிப்படுத்தினது. ஆனால் அந்தத் தூதை எல்லாரும் சரியாக விளக்கவில்லை. நூற்றாண்டுகளுக்குப்பின் நூற்றாண்டுகள் கடந்துசென்றன. தீர்க்கதரிசிகளின் குரல்களும் நின்றுபோய்விட்டன. “நாட்கள் நீடிக்கும், தரிசனம் எல்லாம் அவமாகும்” (எசேக்கியேல் 12:22) என்று அநேகர் வியந்துகூற ஆயத்தமாகுமளவிற்கு, ஒடுக்குபவனின் கரம் இஸ்ரவேலின்மீது பாரமாயிருந்தது. (2)

ஆனால் விண்மீன்கள் அவைகளுக்குக் குறிக்கப்பட்ட விசாலமான பாதையில் சரியாகச் செல்வதைப்போல தேவனது நோக்கங்கள் விரைவதும் இல்லை; தாமதிப்பதும் இல்லை. காரிருள், புகைகின்ற சூளை ஆகிய அடையாளங்களின்மூலமாக, இஸ்ரவேலர்கள் எகிப்தில் பரதேசிகளாக நானூறு வருடங்கள் அடிமைகளாக இருப்பார்கள் என்பதை தேவன் ஆபிரகாமிற்கு வெளிப்படுத்தியிருந்தார். “பின்பு மிகுந்த பொருள்களுடனே

புறப்பட்டு வருவார்கள்”–ஆதியாகமம் 15:14. இந்த வார்த்தைக்கு எதிராகப் பார்வோனின் அகந்தைமிக்க பேரரசு வீணாகச் சண்டையிட்டுக்கொண்டிருந்தது. “நானூற்றுமுப்பது வருஷம் முடிந்த அன்றைத்தினமே கர்த்தருடைய சேனைகள் எல்லாம் எகிப்து தேசத்திலிருந்து புறப்பட்டது”–யாத்திராகமம் 12:41. அப்படியே கிறிஸ்துவின் வருகைக்கான நேரம் பரலோக ஆலோசனை சபையில் தீர்மானிக்கப்பட்டிருந்தது. காலத்தின் பெரும் கடிகாரம், குறிக்கப்பட்டிருந்த நேரத்தைச் சுட்டிக்காட்டினபோது. இயேசு பெத்லகேமில் பிறந்தார். காலம் நிறைவேறினபோது தேவன் தமது குமாரனை அனுப்பினார். தேசங்களின் இயக்கங்களையும் மனித உணர்ச்சிகளையும் செல்வாக்குகளையும் விடுதலை வழங்குபவரின் வருகைக்கான காலம் முதிரும்வரை தெய்வீக ஏற்பாடு இயக்கிக்கொண்டிருந்தது. நாடுகளனைத்தும் ஒரு அரசாங்கத்தின்கீழ் சேர்க்கப்பட்டிருந்தன. ஒரே மொழி பரவலாகப் பேசப்பட்டு, அதுவே இலக்கிய மொழியாக எங்கும் அங்கீகரிக்கப்பட்டிருந்தது. வருடாந்திரப்பண்டிகைக்காக அனைத்து நாடுகளிலும் பரவியிருந்த யூதர்கள் எருசலேமில் ஒன்றுகூடியிருந்தனர். பரதேசிகளாக அவர்கள் இருந்த இடங்களுக்குத் திரும்பிச்சென்றபோது, மேசியாவின் வருகையைப்பற்றிய செய்தியை உலகமெங்கும் பரப்பக்கூடியநிலையில் இருந்தனர். (3)

இந்தக் காலத்தின்போது, அஞ்ஞான முறைகள் மக்கள்மீது கொண்டிருந்த பிடியை இழந்துகொண்டிருந்தன. மனிதர்கள் நாடகங்களிலும் கட்டுக்கதைகளிலும் களைப்புற்றிருந்தனர். இருதயத்தைத் திருப்திப்படுத்தும் ஒரு மார்க்கத்திற்காக அவர்கள் ஏங்கிக்கொண்டிருந்தனர். சத்தியத்தின் அறிவு மனிதர்களைவிட்டுப் பிரிந்துசென்றுவிட்டதைப்போல தோன்றியிருந்த வேளையில், ஒளியை எதிர்நோக்கியிருந்த ஆத்துமாக்கள் இருந்தன. அவைகள் துயரத்திலும் துக்கத்திலும் மூழ்கியிருந்தன. ஜீவனுள்ள தேவனைப்பற்றின அறிவிற்காகவும், கல்லறைக்கு அப்பாலுள்ள ஒரு வாழ்வின் வாக்குறுதிக்காகவும் அவர்கள் தாகமுடையவர்களாக இருந்தனர். யூதர்கள் தேவனைவிட்டுப் பிரிந்துசென்றபோது, விசுவாசம் மங்கி, எதிர்காலத்தைப்பற்றிய நம்பிக்கை ஒளியைத் தராமல் நின்றிருந்தது. தீர்க்கதரிசிகளின் வார்த்தைகள் புரியாதவைகளாக இருந்தன. மக்களின் கூட்டத்திற்கு மரணம் என்பது பயங்கரமான இரகசியமாகவும், அதற்கப்பாலுள்ள நிலைமை நிச்சயமற்றதாகவும் சோகமானதாகவும் இருந்தது. “புலம்பலும் அழுகையும் மிகுந்த துக்கங்கொண்டாடலுமாகிய கூக்குரல் ராமாவிலே கேட்கப்பட்டது; ராகேல் தன் பிள்ளைகளுக்காக அழுது, அவைகள் இல்லாதபடியால் ஆறுதலடையாதிருக்கிறாள்” (மத்தேயு 2:17) என்பது பெத்லகேமின் தாய்மார்களின் அழுகுரலாக மட்டும் இராமல், நூற்றாண்டுகளினூடாகத் தீர்க்கதரிசிக்குக் கொடுக்கப்பட்டிருந்த மானுடத்தின்

பெரும் அழுகுரலாகவும் இருந்தது. மரண இருளின் பள்ளத்தாக்கில் மனிதர்கள் ஆறுதல்படுத்தப்படாதவர்களாக உட்கார்ந்திருந்தனர். விடுதலை செய்பவரின் வருகையையும், இருள் எப்போது நீக்கப்படும் என்னும் எதிர்காலத்தைப்பற்றிய இரகசியத்தையும் அவர்களுக்குத் தெளிவாக்கிட அவர்கள் விருப்பமுள்ள கண்களுடன் எதிர்நோக்கியிருந்தனர். (4)

ஒரு தெய்வீகப் போதனையாளரின் தோற்றத்தை முன்னறிவித்திருந்த மனிதர்கள் யூத நாட்டிற்கு வெளியிலும் இருந்திருந்தனர். இந்த மனிதர்கள் சத்தியத்தைத் தேடியிருந்தனர். அவர்களுக்கு ஆவியின் ஏவுதல் அருளப்பட்டது. இருண்ட வானத்தில் ஒன்றன்பின் ஒன்றாகக் காணப்படும் விண்மீன்களைப்போல அப்படிப்பட்ட ஆசிரியர்கள் எழும்பியிருந்தனர். புறஜாதியினரின் உலகத்திலிருந்த ஆயிரக்கணக்கான இருதயங்களில் அவர்களது தீர்க்கதரிசனங்கள் நம்பிக்கையைத் தூண்டிவிட்டிருந்தது. (5)

அக்காலத்தில் ரோமப் பேரரசெங்கிலும் பரவலாகப் பேசப்பட்டிருந்த கிரேக்க மொழியில் நூற்றுக்கணக்கான ஆண்டுகளாக வேதவாக்கியங்கள் மொழிபெயர்க்கப்பட்டிருந்தன. யூதர்கள் எங்கும் சிதறியிருந்தனர். மேசியாவின் வருகையைப்பற்றின எதிர்பார்ப்பில் ஓரளவிற்குப் புறஜாதியினரும் பங்குபெற்றிருந்தனர். யூதர்களால் புறஜாதிகள் என்று அழைக்கப்பட்டிருந்த அஞ்ஞான மக்களில் அநேகர், இஸ்ரவேலிலிருந்த போதகர்களைவிட அதிகமான அளவிற்கு மேசியாவைப்பற்றின தீர்க்கதரிசன வேதவாக்கியங்களில் மேம்பட்ட அறிவை உடையவர்களாயிருந்தனர். சிலர், பாவத்திலிருந்து விடுதலை வழங்குபவராக அவர் வருவார் என்று நம்பியிருந்தனர். (6)

எபிரெய அமைப்பின் இரகசியத்தை அறிய தத்துவ சாஸ்திரிகள் முயன்றிருந்தனர். ஆனால் யூதர்களின் மதவெறி, ஒளி பரவுவதற்கு இடையூறு செய்தது. அவர்களுக்கும் மற்ற ஜனங்களுக்கும் இடையிலிருந்த பிரிவினையைக் காக்கும் நோக்கத்துடன் அடையாளங்களாகக் கொண்டிருந்த அவர்களது ஆராதனை முறைகளைப்பற்றிய அறிவைக் கற்பிக்க அவர்கள் விருப்பமற்றவர்களாக இருந்திருந்தனர். உண்மையான விளக்கம் தருபவர் வரவேண்டும். இந்தப் பொருட்பாடங்கள் அனைத்தையும் முன் அடையாளப்படுத்தியிருந்த ஒருவர், இதன் அடையாளங்களை விளக்கவேண்டும்! (7)

இயற்கையின்மூலமாகவும், மாதிரிப்படிவங்கள் மற்றும் அடையாளங் களின்மூலமாகவும், முற்பிதாக்கள் தீர்க்கதரிசிகளின் மூலமாகவும் உலகத்தினிடம் தேவன் பேசியிருந்தார். மனித இனத்திற்குப் போதனைகள் மனிதமொழியில் கொடுக்கப்பட்டாகவேண்டும். உடன்படிக்கையின்

தூதன் பேசவேண்டும். அவரது சத்தம் அவரது சொந்த ஆலயத்தில் கேட்கப்பட்டாகவேண்டும். மிகக் குறிப்பாகவும் மிகத் தெளிவாகவும் அறிந்துகொள்ளும்வண்ணம் வார்த்தைகளைப் பேச கிறிஸ்து வந்தாகவேண்டும். எவ்வித பலனுமற்ற மனிதர்களின் பேச்சான உமியிலிருந்து சத்தியத்தின் ஆசிரியர் சத்தியத்தைப் பிரிக்கவேண்டும். தேவ அரசாங்கத்தின் கொள்கைகளும் இரட்சிப்பின் திட்டமும் தெளிவாக விளக்கப்படவேண்டும். பழைய ஏற்பாட்டுப் பாடங்கள் மனிதர்களின் முன்பாக முழுமையாக வைக்கப்படவேண்டும். (8)

தேவனைப்பற்றிய அறிவைப் பாதுகாத்திருந்த பரிசுதத்தமான வம்சாவழியில், தொடர்ந்து உறுதியாக நின்றிருந்த யூத ஆத்துமாக்கள் இருந்திருந்தார்கள். இவர்கள், இவர்களுடைய பிதாக்களுக்கு அருளப்பட்டிருந்த வாக்குத்தத்தத்தின்மீதுள்ள நம்பிக்கையை தொடர்ந்து எதிர்நோக்கியிருந்தனர். “உங்கள் தேவனாகிய கர்த்தர் என்னைப்போல ஒரு தீர்க்கதரிசியை உங்களுக்காக உங்கள் சகோதரரிலிருந்து எழும்பப்பண்ணுவார்; அவர் உங்களுக்குச் சொல்லும் எல்லாவற்றிலும் அவருக்குச் செவிகொடுப்பீர்களாக” (அப்போஸ்தலர் 3:22) என்று மோசேக்குக் கொடுக்கப்பட்டிருந்த வாக்குறுதியின்மீது அவர்கள் விசுவாசமுள்ளவர்களாக வாழ்ந்து, தங்களுடைய விசுவாசத்தைப் பலப்படுத்தியிருந்தனர். மீண்டும், “சிறுமைப்பட்டவர்களுக்குச் சுவிசேஷத்தை அறிவிக்கவும்”, “இருதயம் நொறுங்குண்டவர்களுக்குக் காயங்கட்டுதலையும், சிறைப்பட்டவர்களுக்கு விடுதலையையும், கட்டுண்டவர்களுக்குக் கட்டவிழ்த்தலையும் கூறவும், கர்த்தருடைய அநுக்கிரகவருஷத்தையும், … கூறவும்” (ஏசாயா 61:1,2) ஒருவர் எந்தவிதமாகக் கர்த்தரால் அபிஷேகம்பண்ணப்படுவார் என்றும் அவர்கள் வாசித்தனர். எந்தவிதமாக “அவர் நியாயத்தைப் பூமியிலே நிலைப்படுத்துவார்” என்றும், “அவருடைய வேதத்துக்குத் தீவுகள் காத்திருப்பது” எப்படி என்றும், புறஜாதிகள் அவருடைய வெளிச்சத்தினிடத்துக்கும், ராஜாக்கள் உதிக்கிற அவருடைய ஒளியினிடத்துக்கும் எப்படி நடந்துவருவார்கள் (ஏசாயா 42:4; 60:3) என்றும் அவர்கள் படித்திருந்தனர். “சமாதான கர்த்தர் வருமளவும் செங்கோல் யூதாவைவிட்டு நீங்குவதும் இல்லை, நியாயப்பிரமாணிக்கன் அவன் பாதங்களை விட்டு ஒழிவதும் இல்லை” (ஆதியாகமம் 49:10) என்று மரிக்குமுன் யாக்கோபு கூறிய வார்த்தைகள் அவர்களை நம்பிக்கையால் நிறைத்திருந்தது. தேய்ந்துகொண்டிருந்த இஸ்ரவேலின் வல்லமை, மேசியாவின் வருகை சமீபமாக இருக்கிறது என்பதற்குச் சாட்சிபகர்ந்துகொண்டிருந்தது. “அது … என்றென்றைக்கும் நிற்கும்” (தானியேல் 2:44) என்று கூறிய தானியேலின் தீர்க்கதரிசனம் பூமியிலுள்ள எல்லா இராஜ்யங்களையும் மேற்கொண்டு ஆட்சிசெய்யும்

அவரது மகிமைமிக்க பேரரசையும் வரைந்துகாட்டியிருந்தது. கிறிஸ்துவின் ஊழியத்தை ஒருசிலர் மட்டுமே புரிந்திருந்தபோது, பலமிக்க ஒரு இளவரசர், இஸ்ரவேலில் தமது ஆட்சியை அமைக்க ஜாதிகளிலிருந்து விடுதலையை வழங்குபவராக வருவார் என்னும் எதிர்பார்ப்பு எங்கும் பரவியிருந்தது. (9)

காலம் நிறைவேறியது, யுகங்கள் நெடுகிலுமாகச் செய்யப்பட்டிருந்த மீறுதலின் காரணமாக, கீழான நிலையிலிருந்த மனித இனம் மீட்பரை அழைப்பதாக இருந்தது. பூமிக்கும் பரலோகத்திற்கும் இடையிலிருந்த இடைவெளியைக் கடக்கக்கூடாதபடிக்கு ஆழப்படுத்துவதற்காக, சாத்தான் பணியாற்றிக்கொண்டிருந்தான். அவனது தவறான தன்மையினால் பாவஞ்செய்வதில் மனிதர்களைத் துணிகரமானவர்களாக்கியிருந்தான். தேவனுடைய பொறுமையை இழக்கச்செய்து, மனிதன்மீதுள்ள அவரது அன்பை அணைத்துப்போட்டு, அதினால் அவர் இந்த உலகத்தை சாத்தானுடைய ஆளுகையின் எல்லைக்குள் கைவிட்டுவிடும்படிச் செய்வது அவனது நோக்கமாக இருந்தது. (10)

தேவனைப்பற்றிய அறிவிலிருந்து மனிதர்களை மறைக்கவும், அவரது ஆலயத்தைப்பற்றிய கவனத்திலிருந்து அவர்களைத் திருப்பவும், தனது சொந்த இராஜ்யத்தை அமைக்கவும் சாத்தான் வகைதேடியிருந்தான். மேலாண்மைக்கான அவனது கலகம் கிட்டத்தட்ட முற்றிலுமாக வெற்றியடைந்துவிட்டதுபோல் காணப்பட்டது. ஒவ்வொரு தலைமுறையிலும் தேவன் தமது ஏதுகரங்களை வைத்திருந்தார் என்பது உண்மை. மக்களை அவர்களது பாவத்திலிருந்தும் கீழான நிலையிலிருந்தும் உயர்த்த, கிறிஸ்துவின்மூலமாக ஊழியஞ்செய்திருந்த மனிதர்கள் அஞ்ஞானிகளுக்கிடையிலும் இருந்திருந்தனர். ஆனால் இந்த மனிதர்கள் நிந்திக்கப்பட்டு வெறுக்கப்பட்டிருந்தனர். அவர்களில் அநேகர் கொடூரமான மரணத்தை அனுபவித்திருந்தனர். சாத்தான் உலகின்மீது பரப்பிய இருண்ட நிழல் மிகமிக அதிகமாயிற்று. (11)

அஞ்ஞான மார்க்கத்தின்மூலமாக, சாத்தான் மனிதர்களை காலங்கள் நெடுகிலும் தேவனைவிட்டுத் தூரமாக்கியிருந்தான். ஆனால் இஸ்ரவேலின் விசுவாசத்தை திரித்ததில்தான் அவன் பெரும் வெற்றியடைந்தான். அஞ்ஞானிகள் தங்களுடைய சுய மனத்தோற்றத்தின்படியெல்லாம் கற்பனைசெய்துகொண்டும், தொழுதுகொண்டுமிருந்து, தேவனைப்பற்றின அறிவை இழந்து, அதிகமதிகமாகக் கறைபடிந்தவர்களாக இருந்தனர். இஸ்ரவேலரும் அவ்வாறே இருந்தனர். மனிதன் தனது கிரியைகளினால் தன்னை இரட்சித்துக்கொள்ளலாம் என்னும் கொள்கை அஞ்ஞான மதத்தின் அஸ்திபாரத்தில் இருக்கிறது. இப்பொழுது அது யூத சமயத்தின்

கொள்கையாக அமைந்துவிட்டது. சாத்தான் இந்தக் கொள்கையை மக்கள் மனதிலே பதியவைத்திருந்தான். எங்கெல்லாம் இந்தக் கொள்கை நிலைநாட்டப்பட்டிருக்கிறதோ, அங்கெல்லாம் மனிதர்களுக்கு பாவத்திற்தெதிரான தடை இருக்கிறதில்லை. (12)

இரட்சிப்பின் தூது மனித ஏதுகரங்களின்மூலமாக மனிதர்களுக்குக் கொடுக்கப்பட்டுள்ளது. ஆனால் யூதர்கள் நித்திய ஜீவனாயிருக்கக்கூடிய சத்தியத்தை தங்களுக்கு மட்டுமேயுள்ளதாக வைத்துக்கொள்ள வகைதேடியிருந்தனர். ஜீவ மன்னாவை அவர்கள் சேமித்துப் பதுக்கிவைத்தனர். ஆனால் அது கெட்டுப்போய்விட்டது. அவர்களுக்கு மட்டுமென்று அவர்கள் மூடிமறைத்துக்கொள்ள முயன்ற கடவுள் கொள்கை அவர்களுக்கே ஒரு எதிர்ப்பாக மாறியது. அவர்கள் தேவனுடைய மகிமையைக் கொள்ளையடித்து, சுவிசேஷத்திற்கு ஒரு போலியை உருவாக்கி, உலகத்தை மாற்றியிருந்தனர். உலகத்தின் இரட்சிப்பிற்காக தேவனிடம் சரணடைய மறுத்து, அதன் அழிவிற்காக அவர்கள் சாத்தானின் ஏதுகரங்களாயினர். (13)

சத்தியத்தின் தூணாகவும் ஆதாரமாகவும் இருக்கும்படி தேவன் எந்த மக்களை அழைத்திருந்தாரோ, அவர்கள் சாத்தானின் பிரதிநிதிகளாகிவிட்டிருந்தனர். அவன் செய்ய விரும்பியிருந்தவைகளைச் செய்து, தேவனுடைய குணத்தைத் தவறாக எடுத்துக்காட்டும் பாதையைப்பின்பற்றி, உலகம் அவரை ஒரு கொடுங்கோலராகக் காண வகைசெய்தனர். ஆலயத்தில் ஊழியஞ்செய்திருந்த அதே ஆசாரியர்கள் அவர்கள் செய்திருந்த ஆராதனையின் பொருளைப்பற்றிய காட்சிகளை இழந்தவர்களாக இருந்தனர். அடையாளமாகக் கொடுக்கப்பட்டிருந்ததற்கு அப்பாலிருந்த மெய்ப்பொருளை அவர்கள் காணாமலிருந்துவிட்டனர். பலிகளைப் படைக்கும் செயலில் அவர்கள் ஒரு நாடகத்திலுள்ள நடிகர்களைப் போலிருந்தனர். தேவன் தாமே ஏற்படுத்தியிருந்த சட்டதிட்டங்கள் மனதைக் குருடாக்கவும் இருதயத்தைக் கடினப்படுத்தவுங்கூடிய பொருட்களாக மாற்றப்பட்டன. இந்தப் பாதைகளின் வழியாக மனிதனுக்கு இதற்கும் அதிகமாக ஒன்றும் செய்யமுடியாமலிருந்தது. இந்த முறை துடைத்து நீக்கப்பட்டாகவேண்டும். (14)

பாவத்தின் வஞ்சனை அதின் உச்சக்கட்டத்தை எட்டியிருந்தது. மனிதர்களின் ஆத்துமாவை சீர்கெடச்செய்ய சகலவிதமான ஏதுகரங்களும் செயல்படுத்தப்பட்டிருந்தன. தேவகுமாரன் உலகைப்பார்த்து அதன் பாடுகளையும் துன்பங்களையும் கண்டார். சாத்தானின் கொடுமைக்கு மனிதர்கள் எந்தவிதமாக பலியாக்கப்பட்டுவிட்டனர் என்பதை இரக்கத்துடன் அவர் நோக்கினார். கறைபட்டுக்கொண்டும் கொலைசெய்யப்பட்டுக்கொண்டும்

தொலைந்துகொண்டும் இருந்தவர்களை அவர் மன உருக்கத்துடன் நோக்கினார். தனது இரதத்துடன் அடிமைகளாகக் கட்டியிருந்த ஒரு ஆளுநரை அவர்கள் தெரிந்துகொண்டிருந்தனர். குழப்பமடைந்து வஞ்சிக்கப்பட்டவர்களாக, அழிவை நோக்கி—ஜீவனைப்பற்றின நம்பிக்கை யற்ற விடிவுவராத இரவை நோக்கி, ஒரு துயரமிக்க ஊர்வலத்தை நடத்திக்கொண்டிருந்தனர். சாத்தானின் ஏவலர்கள் மனிதர்களுடன் ஒன்றுபட்ட நிலையில் இருந்தனர். தேவன் வாசஞ்செய்யும் இடமாக இருக்கும்படி ஏற்படுத்தப்பட்டிருந்த மனித உடல்கள், பிசாசுகள் வாழுமிடங்களாக மாறியிருந்தன. மிகமிகக் கீழ்த்தரமான இச்சைகளை நடப்பிக்கும்படி உணர்ச்சியின் நரம்புகள், ஆசைகள், மனித அவயவங்கள் ஆகியவைகளின்மீது இயற்கையை மிஞ்சின வல்லமைகள் செயலாற்றின. மனிதர்களின் முகங்களின்மீது பிசாசுகளின் முத்திரை குத்தப்பட்டிருந்தன. மனித முகங்கள் ,அவைகளின்மீது தங்கியிருந்த லேகியோன்களான தீமைகளின் உணர்வுகளைப் பிரதிபலித்துக் காட்டியிருந்தன. உலகை மீட்பர் நோக்கியபோது, எதிர்கால நிலைமை அப்படிப்பட்டதாக இருந்தது. எல்லையற்ற தூயவர் பார்வைக்கு அது எப்படிப்பட்ட காட்சி! (15)

பாவம் அறிவியலாக (Science) ஆகியிருந்தது. தீய பழக்கங்கள் மதத்தின் ஒரு பகுதியாக பிரதிஷ்டை செய்யப்பட்டிருந்தன. இருதயங்களுக்குள் கலகம் ஆழமாக வேரூன்றி இருந்தது. பரலோகத்திற்கெதிரான மனிதனின் பகைமை, மிகவும் தீவிரமானதாக இருந்தது. தேவனை அல்லாமல் மனித இனத்தைத் தூக்கியெடுக்க இயலாது என்பது, பிரபஞ்சத்திற்குமுன்னர் தெளிவுபடுத்திக் காட்டப்பட்டுவிட்டது. உலகத்தைப் படைத்தவரால் அதற்கு ஜீவனின் ஒரு புதிய மூலக்கூறும் வல்லமையும் கொடுக்கப்பட்டாகவேண்டும். (16)

யேகோவா எழும்பி, பூமியின் குடிகளை முற்றிலும் அழித்தொழித்துப் போடுவதைக் காண, விழுந்துபோகாத உலகங்கள் ஆழ்ந்த ஆர்வத்துடன் கவனித்திருந்தன. தேவன் இப்படிச்செய்தால், பரலோவாசிகளைத் தன்னுடன் கூட்டுச்சேர்த்துக்கொள்ளும் முயற்சியான தனது திட்டத்தைச் செயல்படுத்த சாத்தான் ஆயத்தமாக இருந்தான். தேவ அரசாங்கத்தின் கொள்கைகள் மன்னிப்புக் கொடுப்பதை இயலாததாக்கிவிட்டது என்று அவன் அறிவித்திருந்தான். உலகம் அழிக்கப்பட்டிருந்தால், அவனது குற்றச்சாட்டுகள் உண்மையானவை என்பது மெய்ப்பிக்கப்பட்டுவிட்டது என்று அவன் உரிமைபாராட்டியிருந்திருப்பான். தேவன்மீது குற்றஞ்சுமத்தி, விண்ணிலிருந்த உலகங்கள் அனைத்திலும் தனது கலகத்தைப் பரப்ப அவன் ஆயத்தமாயிருந்தான். ஆனால் உலகத்தை அழிப்பதற்குப்பதிலாக,

அதை இரட்சிக்கும்படி தேவன் தமது குமாரனை அனுப்பினார். பிரிந்துபோய்விட்ட இந்த உலகத்தின் ஒவ்வொரு பகுதியிலும் அழிவும் கீழ்ப்படியாமையும் காணப்பட்டாலும், அதைக் குணப்படுத்தும் ஒரு பாதை ஏற்படுத்தப்பட்டிருந்தது. சாத்தான் வெற்றியடைந்துவிடுவதைப்போல் காணப்பட்ட அந்த நெருக்கடியில், தெய்வீகக் கிருபை என்னும் தூதுடன் தேவகுமாரன் வந்தார். விழுந்துபோன இந்த இனத்திற்கு நேராக, யுகங்கள் நெடுகிலும், ஒவ்வொரு யுகத்திற்கு ஊடாகவும், ஒவ்வொரு மணி நேரத்திற்கு ஊடாகவும், தேவனுடைய அன்பு செயல்படுத்தப்பட்டிருந்தது. மனிதர்களின் தாறுமாறுகளுக்கிடையிலும் இரக்கத்தின் அடையாளங்கள் தொடர்ச்சியாக வெளிப்பட்டிருந்தன. காலம் நிறைவேறவேண்டிய வேளை வந்தபோது, இரட்சிப்பின் திட்டம் நிறைவேறும்வரை ஒருபோதும் தடுக்கமுடியாதவிதத்தில் அல்லது பின்வாங்கிக்கொள்ளாதவிதத்தில் கிருபையின் நலம் தரும் அருள்மாரியை இந்த உலகத்தின்மீது ஊற்றினதால் தேவத்துவம் மகிமைப்படுத்தப்பட்டது. (17)

தேவனின் ரூபத்தலுள்ள மனித இனத்தின் தன்மையைக் கீழாக்குவதில் வெற்றியடைந்துவிட்டதாக சாத்தான் வெற்றிச்சிரிப்பு சிரித்துக்கொண்டிருந்தான். அப்போது மனிதனில் அவனைப் படைத்தவரின் சாயலைத் திரும்ப ஏற்படுத்துவதற்கு இயேசு வந்தார். மனங்களைக் கட்டுப்படுத்திக்கொண்டிருந்த பிசாசுகளை வெளியேற்ற அவர் வந்தார். தூளிலிருந்து நம்மை உயர்த்தவும், குலைந்துபோன நமது குணத்தை அவரது தெய்வீக குணத்திற்கு இசைவானவிதத்தில் மறுபடியும் உருவாக்கவும், அவரது சொந்த மகிமையினால் அதை அழகுபடுத்தவும் அவர் வந்தார். (18) ★

# 4

# உங்களுக்கு ஓர் இரட்சகர்!

### (லூக்கா 2:1–20)

### (The Desire of Ages, pp. 43–49)

மானிடத்தைத் தன்மீது எடுத்துக்கொள்ள மகிமையின் அரசர் தம்மை மிகவும் தாழ்த்திக் கீழிறங்கினார். அவரது பூலோகச் சுற்றுப்புறங்கள் முரட்டுத்தனமும் தடங்கல்கள்மிக்கவையாகவும் இருந்தன. அவரது புறத்தோற்றத்தின் மகத்துவம் கவர்ச்சிதரும் காட்சிப்பொருளாக இருக்கக்கூடாது என்பதற்காக அவரது மகிமைக்குத் திரையிடப்பட்டிருந்தது. காட்சிதரும் அனைத்தையும் அவர் தவிர்த்தார். செல்வங்கள், உலக மேன்மை, பெரிய மனிதனென்னும் மேன்மை ஆகியவைகளால் ஒரு ஆத்துமாவை ஒருபோதும் மரணத்திலிருந்து இரட்சிக்க முடியாது. பூலோகத்தின் தன்மையை உடைய எந்தவிதமான கவர்ச்சியும் அவரது பக்கத்திற்கு மனிதர்களை அழைக்கக்கூடாது என்னும் நோக்கத்தை உடையவராக அவர் இருந்தார். அவரைப் பின்பற்ற விரும்புபவர்களைப் பரலோக சத்தியத்தின் அழகு ஒன்றுமட்டுந்தான் இழுத்துக்கொள்ள வேண்டும். மேசியாவின் குணத்தைப்பற்றி அதிக நாட்களாகத் தீர்க்கதரிசனத்தில் முன்னுரைக்கப்பட்டிருந்தது. வேதவாக்கியங்களில் உள்ள சாட்சியின் மூலமாக மனிதர்கள் அவரை ஏற்றுக்கொள்ளவேண்டும் என்று அவர் விரும்பினார். (1)

மகிமைமிக்க இரட்சிப்பின் திட்டத்தைப்பற்றி தூதர்கள் வியந்தனர். மானுடம் என்னும் ஆடையை அணிந்துகொண்டுள்ள தேவனுடைய குமாரனை தேவனுடைய மக்கள் எந்தவிதமாக ஏற்றுக்கொள்வார்கள் என்பதைக் காண அவர்கள் காத்திருந்தனர். தெரிந்துகொள்ளப்பட்ட மக்களின் நாட்டிற்கு அவர்கள் வந்தனர். மற்ற நாடுகள் கட்டுக்கதைகளில் ஈடுபட்டு தவறான தெய்வங்களை வணங்கிக்கொண்டிருந்தன. எந்த நாட்டில் தேவனுடைய மகிமை வெளிப்படுத்தப்பட்டிருந்ததோ, தீர்க்கதரிசனத்தின் ஒளி வெளிச்சம் தந்திருந்ததோ, அந்த இடத்திற்கு தூதர்கள் வந்தார்கள். அவர்கள் காணப்படாதவர்களாக, பரிசுத்தமான வார்த்தைகளை (பத்துக்கட்டளைகளை) எடுத்துக்காட்டும்படியாக ஏற்படுத்தப்பட்டிருந்த எருசலேமிற்கும், தேவனுடைய

வீட்டின் ஊழியக்காரர்களிடத்திற்கும் வந்தனர். கிறிஸ்துவின் வருகை சமீபமாயிருக்கிறது என்பது பலிபீடத்திற்குமுன் ஊழியஞ்செய்துகொண்டிருந்த சகரியா என்னும் ஆசாரியனுக்கு ஏற்கனவே அறிவிக்கப்பட்டிருந்தது. முன்செல்லுபவன் ஏற்கனவே பிறந்து, அவனது ஊழியம் அற்புதத்தினாலும், தீர்க்கதரிசனத்தினாலும் சாட்சி பகரப்பட்டிருந்தது. அப்படியிருந்தும், தனது மீட்பரை வரவேற்க எருசலேம் ஆயத்தமாகிக்கொண்டிருக்கவில்லை. (2)

பரிசுத்தமிக்க சத்தியத்தின் ஒளியை உலகிற்குக் கொடுக்கும்படி தேவன் எவர்களை அழைத்திருந்தாரோ, அந்த மக்களின் அலட்சியத்தை பரலோகத் தூதர்கள் வியப்புடன் நோக்கினர். ஆபிரகாமின் வித்தாகவும் தாவீதின் வம்சத்திலும் கிறிஸ்து பிறக்கவேண்டும் என்பதற்கு சாட்சியாக இருக்கும்படி யூதநாடு பாதுகாக்கப்பட்டிருந்தது. அப்படியிருந்தும் அவரது வருகை இப்பொழுது சமீபமாக உள்ளது என்பதை அவர்கள் அறியாமல் இருந்தனர். ஆலயத்தில் காலை—மாலை பலிகள் நாள்தோறும் தேவ ஆட்டுக்குட்டியைச் சுட்டிக்காட்டியிருந்தன. அங்குங்கூட அவரை வரவேற்கும் எந்த ஆயத்தமும் இல்லை. யுகங்களின் மாபெரும் நிகழ்ச்சி நடைபெறவுள்ளது என்பதை அந்த நாட்டின் ஆசாரியர்களும் போதகர்களும் அறியாதவர்களாக இருந்தனர். மனிதர்கள் காண்பதற்கென்று அவர்களுடைய அர்த்தமற்ற ஜெபங்களைத் திரும்பத் திரும்பக் கூறிக்கொண்டும், தொழுகையின் சடங்குகளை நடத்திக்கொண்டுமிருந்து, செல்வத்திற்காகவும் உலக மேன்மைக்காகவும் நடத்தியிருந்த போராட்டங்களினால் மேசியாவின் வெளிப்படுதலுக்கு அவர்கள் ஆயத்தமற்றவர்களாக இருந்தனர். இஸ்ரவேல் நாடெங்கிலும் அதேவிதமான அலட்சியம் பரவியிருந்தது. உலகப்பிரகாரமான காரியங்களில் மூழ்கி, சுயநலத்தினால் நிறைந்திருந்த இருதயங்களால் பரலோகத்தை மகிழ்ச்சி அலைகளால் கிளர்ச்சியடையச் செய்திருந்த சம்பவங்கள் தொடப்படாததாக இருந்தது. காணமுடியாததைக் காணும்படி ஒரு சிலர் மட்டுமே ஆர்வமுடையவர்களாக இருந்தனர். இவர்களிடத்திற்குப் பரலோகத் தூதர் குழாம் அனுப்பிவைக்கப்பட்டது. (3)

யோசேப்பும் மரியாளும் அவர்களுடைய ஊரான நாசரேத்திலிருந்து தாவீதின் நகரத்தை நோக்கிப் பயணஞ்சென்றபோது, தூதர்கள் அவர்களைக் கவனிக்கின்றனர். பரந்த நாட்டிலுள்ள மக்களின் குடிமதிப்பு எழுதப்படவேண்டும் என்ற ரோமப் பேரரசின் கட்டளை, கலிலேயக் குன்றுகளில் வாழ்ந்திருந்தவர்களிடத்திற்கும் சென்றது. கர்த்தருடைய அடிமைகளாக இருந்தவர்களை விடுவிக்கும்படி முற்காலத்தில் கோரேசு மன்னன் உலகப் பேரரசின் சிங்காசனத்திற்கு அழைக்கப்பட்டதுபோல, இயேசுவின் அன்னையை பெத்லகேமிற்குக் கொண்டுவரும் தேவனுடைய நோக்கத்தை

நிறைவேற்றுவதற்கு, அகஸ்து இராயன் முகவராக ஏற்படுத்தப்பட்டிருந்தான். அவள் தாவீதின் வம்சத்தைச் சேர்ந்தவள். தாவீதின் குமாரன் தாவீதின் நகரத்தில் பிறந்தாகவேண்டும். பெத்லகேமிலிருந்து "இஸ்ரவேலை ஆளப்போகிறவர் … புறப்பட்டு … வருவார்; அவருடைய புறப்படுதல் அநாதிநாட்களாகிய பூர்வத்தினுடையது" (மீகா 5:2) என்று தீர்க்கதரிசி கூறியிருந்தார். ஆனால் அவர்களுடைய இராஜவம்சமான நகரத்தில் யோசேப்பும் மரியாளும் அறியப்படாதவர்களாகவும் மதிக்கப்படாதவர்களாகவும் இருந்தனர். களைப்படைந்தவர்களும் வீடில்லாதவர்களுமாயிருந்த அவர்கள், இரவில் தங்கி இளைப்பாறுவதற்கு ஒரு இடத்தைத் தேடி, குறுகிய அந்தத் தெருவில், நகர வாசலிலிருந்து நகரத்தின் கிழக்குக்கோடிவரை வீணாகக் கடந்துசென்றிருந்தனர். மக்கள் கூட்டம் நிறைந்திருந்த அந்தச் சத்திரத்தில் அவர்களுக்கு இடம் இல்லாமலிருந்தது. முடிவில் அவர்கள் விலங்குகள் அடைக்கப்படும் கரடுமுரடான ஒரு கட்டிடத்தில் அடைக்கலம் கண்டனர். உலக இரட்சகர் இங்குதான் பிறந்திருக்கிறார்! (4)

மனிதர் அதை அறியவில்லை; ஆனால் இந்தச் செய்தி பரலோகத்தை மகிழ்ச்சியால் நிரப்பியது. உள்ளார்ந்த மென்மையான ஆர்வத்துடன் ஒளியின் உலகத்திலிருந்து, பரிசுத்தவான்கள் பூமிக்கு ஈர்க்கப்படுகின்றனர். அவரது பிரசன்னத்தினால் உலகம் முழுவதும் ஒளிமிக்கதாகிறது. எண்ணிலடங்காத தூதர்களின் கூட்டம் பெத்லகேமின் குன்றுகளைச் சுற்றிலும் கூடியுள்ளது. உலகத்திற்குக் கொடுக்கப்படவேண்டிய மகிழ்ச்சிமிக்க செய்தியை அறிவிக்கும் சமிக்கைக்காக அவர்கள் காத்திருந்தனர். இஸ்ரவேலின் தலைவர்கள் அவர்கள்மீது வைக்கப்பட்டிருந்த நம்பிக்கைக்கு உண்மையுள்ளவர் களாக இருந்திருந்தால், இயேசுவின் பிறப்பை அறிவிக்கும் மகிழ்ச்சியில் பங்குபெற்றிருந்திருப்பார்கள். ஆனால் இப்பொழுது காரியங்கள் அவைகளைக் கடந்துசென்றன. (5)

"தாகமுள்ளவன்மேல் தண்ணீரையும், வறண்ட நிலத்தின்மேல் ஆறுகளையும் ஊற்றுவேன்; உன் சந்ததியின்மேல் என் ஆவியையும், உன் சந்தானத்தின்மேல் என் ஆசீர்வாதத்தையும் ஊற்றுவேன்" "செம்மையானவர்களுக்கு இருளிலே வெளிச்சம் உதிக்கும்; அவன் இரக்கமும் மனஉருக்கமும் நீதியுமுள்ளவன்" (ஏசாயா 44:3; சங்கீதம் 112:4) என்று தேவன் அறிவிக்கிறார். ஒளியைத் தேடி அதை மகிழ்ச்சியுடன் எவர்கள் ஏற்றுக்கொள்வார்களோ அவர்களுக்கு தேவ சிங்காசனத்திலிருந்து பிரகாசமான ஒளிக்கதிர்கள் வீசும். (6)

சிறுவனாயிருந்த தாவீது அவனது மந்தையை மேய்த்த வயல்களிலே, மேய்ப்பர்கள் அந்த நாட்களிலும் இரவில் காவல்செய்திருந்தனர். அமைதியான

நேரத்தில் அவர்கள் ஒருவருக்கொருவர் வாக்குத்தத்தஞ்செய்யப்பட்டிருந்த இரட்சகரைப்பற்றிப் பேசி, தாவீதின் சிங்காசனத்திற்கு அரசரின் வருகையை எதிர்நோக்கி ஜெபித்திருந்தார்கள். "அவ்வேளையில் கர்த்தருடைய தூதன் அவர்களிடத்தில் வந்து நின்றான், கர்த்தருடைய மகிமை அவர்களைச் சுற்றிலும் பிரகாசித்தது; அவர்கள் மிகவும் பயந்தார்கள். தேவதூதன் அவர்களை நோக்கி: பயப்படாதிருங்கள்; இதோ, எல்லா ஜனத்துக்கும் மிகுந்த சந்தோஷத்தை உண்டாக்கும் நற்செய்தியை உங்களுக்கு அறிவிக்கிறேன். இன்று கர்த்தராகிய கிறிஸ்து என்னும் இரட்சகர் உங்களுக்குத் தாவீதின் ஊரிலே பிறந்திருக்கிறார்" என்றான். (7)

இந்த வார்த்தைகள் அதைக் கவனித்துக்கொண்டிருந்த மேய்ப்பர் களின் மனங்களை மகிமையின் காட்சிகளால் நிரப்பியது. விடுதலை வழங்குபவர் இஸ்ரவேலிற்கு வந்துவிட்டார்! வல்லமையும் உயர்வும் வெற்றியும் அவரது வருகையுடன் இணைந்துள்ளன. ஆனால் அவர்களது இரட்சகரை ஏழ்மையிலும் தாழ்மையிலும் அங்கீகரிக்க அந்த தூதன் அவர்களை ஆயத்தப்படுத்தவேண்டும். "பிள்ளையைத் துணிகளில் சுற்றி, முன்னணையிலே கிடத்தியிருக்கக் காண்பீர்கள்; இதுவே உங்களுக்கு அடையாளம்" என்றான். (8)

அவர்களுடைய பயத்தைப் பரலோகத் தூதன் அமைதிப்படுத்தி யிருந்தான். இயேசுவைக் காண்பது எப்படி? என்று அவன் அவர்களுக்குக் கூறியிருந்தான். அவர்களது மானிட பலவீனத்தைக் கருத்தில் கொண்டவனாக தெய்வீக ஒளியின் பிரகாசத்துடன் அவர்கள் பழக்கப்படும்படி அவன் அவர்களுக்கு நேரம் கொடுத்தான். அதன்பின் அதற்குமேல் மகிழ்ச்சியும் மகிமையும் மறைக்கப்படத் தேவையில்லாமலானது. தேவ சேனையின் பிரகாசமிக்க ஒளியினால் அந்தச் சமவெளி முழுவதும் ஒளிமயமானது. "உன்னதத்திலிருக்கிற தேவனுக்கு மகிமையும், பூமியிலே சமாதானமும், மனுஷர்மேல் பிரியமும் உண்டாவதாக" என்னும் பாடலைக் கேட்பதற்கு பூமி அமைதியாக இருந்தது. பரலோகம் கீழிறங்கியது. (9)

ஆ! இன்று அந்தப் பாடலை மனிதக் குடும்பம் அங்கீகரிக்கக்கூடியதாக இருந்தால் எத்தனை நலமாக இருக்கும்! கொடுக்கப்பட்ட அறிவிப்பும் மீட்டப்பட்ட இசையும் காலத்தின் முடிவுவரை வியாபித்து, கடைசிவரைக்கும் திரும்ப ஒலித்திருந்திருக்கும். தமது செட்டைகளின்கீழ் ஆரோக்கியத்தை உடையவராக நீதியின் சூரியன் உதிக்கும்போது, பெருந்திரளானவரின் சத்தம்: "அல்லேலூயா, சர்வ வல்லமையுள்ள தேவனாகிய கர்த்தர் இராஜ்யபாரம் பண்ணுகிறார்" (வெளிப்படுத்தல் 19:6) என்று திரளான தண்ணீர்களின் சத்தத்தைப்போல எதிரொலித்திருக்கும். (10)

அந்தத் தூதர்கள் மறைந்தபோது, ஒளி மங்கிடவே, பெத்லகேமின் குன்றுகளின்மீது இருள் மீண்டும் கவிந்தது. மனிதக் கண்கள் ஒருபோதும் கண்டிராத, மிகுந்த ஒளிமிக்க அந்தக் காட்சியின் ஓவியம் அந்த மேய்ப்பர்களின் ஞாபகத்தில் தங்கியிருந்தது. “தூதர்கள் அவர்களைவிட்டுப் பரலோகத்திற்குப் போனபின்பு மேய்ப்பர்கள் ஒருவரை ஒருவர் நோக்கி: நாம் பெத்லகேம் ஊருக்குப் போய், நடந்ததாகக் கர்த்தரால் நமக்கு அறிவிக்கப்பட்ட இந்தக் காரியத்தைப் பார்ப்போம் வாருங்கள் என்று சொல்லி, தீவிரமாய் வந்து, மரியாளையும், யோசேப்பையும், முன்னணையிலே கிடத்தியிருக்கிற பிள்ளையையும் கண்டார்கள்.” (11)

அவர்கள் மிகுந்த மகிழ்ச்சியுடன் புறப்பட்டுச்சென்று, தாங்கள் கண்டதையும் கேட்டதையும் எங்கும் அறிவித்தார்கள். “மேய்ப்பராலே தங்களுக்குச் சொல்லப்பட்டதைக் கேட்ட யாவரும் அவைகளைக்குறித்து ஆச்சரியப்பட்டார்கள். மரியாளோ அந்தச் சங்கதிகளையெல்லாம் தன் இருதயத்திலே வைத்து, சிந்தனைபண்ணினாள். மேய்ப்பர்களும் தங்களுக்குச் சொல்லப்பட்டதின்படியே கேட்டு—கண்ட எல்லாவற்றிற்காகவும் தேவனை மகிமைப்படுத்தி, துதித்துக்கொண்டு திரும்பிப் போனார்கள்.” (12)

தூதர்கள் பாடினதை மேய்ப்பர்கள் கவனித்திருந்த அந்த காலத்தைவிட இன்று பரலோகமும் பூலோகமும் தூரமாக அகன்றிருக்கவில்லை. சாதாரணமான மனிதர்கள், திராட்சைத் தோட்டங்களிலும் வயல்வெளிகளிலும் நண்பகலிலும் சாதாரணமான பணிகளில் ஈடுபட்டிருந்தபோது பரலோகத் தூதர்களுடன் பேசிய அந்த நாட்களைப்போலவே இன்றும் மனித இனம் பரலோகத்தின் உள்ளார்ந்த அக்கறையைப் பெற்றிருக்கிறது. நமது சாதாரண வாழ்க்கைப் பாதையில் பரலோகம் நமக்கு வெகு அருகில் இருக்கலாம். தேவனுடைய கட்டளையின்படி நடக்கிறவர்களின் அடிச்சுவடுகளை உன்னதத்திலிருந்து வரும் தூதர்கள் சந்திப்பார்கள். (13)

பெத்லகேமின் கதை முடிவற்ற ஒரு ஆய்வுப்பொருளாக இருக்கும். அதற்குள் “தேவனுடைய ஐசுவரியம், ஞானம், அறிவு என்பவைகளின் ஆழம்” (ரோமர் 11:33) அடங்கியிருக்கிறது. பரலோக சிங்காசனத்தைத் தொழுவத்திற்கும், போற்றித் துதிக்கும் தூதர்களின் உறவை தொழுவத்தின் விலங்குகளுக்குமாக மாற்றிக்கொண்ட இரட்சகரின் தியாகத்தை நாம் வியப்புடன் நோக்கிப் பார்க்கிறோம். அவரது பிரசன்னத்தில் மனித அகந்தையும் மட்டற்ற தன்னம்பிக்கையும் கடிந்துகொள்ளப்பட்டு நிற்கிறது. அப்படியிருந்தபோதிலும், அது அவரது ஆச்சரியமான—தம்மையே மிகவும் தாழ்த்திக் கீழிறங்கிய செயலின் ஆரம்பமாக மட்டுமே இருந்தது. ஆதாம் குற்றமற்றவனாக ஏதேனில் நின்றிருந்த நிலையிலே மனித இயல்பை

தேவகுமாரன் எடுத்திருந்தால்கூட, அது அவருக்கு ஏறத்தாழ முடிவில்லாத தாழ்மையாக இருந்திருக்கும். ஆனால் மனித இனம் நாலாயிரம் ஆண்டுகளாக பாவத்தினால் பலவீனமடைந்திருந்தபோது, இயேசு மனித சாயலை ஏற்றுக்கொண்டார். பரம்பரை நியதியின் செயல்பாட்டின் விளைவுகளை ஆதாமின் ஒவ்வொரு பிள்ளையையும்போல அவரும் ஏற்றுக்கொண்டிருந்தார். பூமிக்குரிய அவர்களது முன்னோர்களின் வரலாற்றில் இந்த விளைவுகள் எப்படிப்பட்டவைகள் என்று காட்டப்பட்டிருந்தன. நமது துயரங்களிலும் சோதனைகளிலும் பங்குகொண்டு, பாவமற்ற ஒரு வாழ்க்கையின் உதாரணமாயிருக்க அவர் அப்படிப்பட்ட பாரம்பரியத்தில் வந்தார். (14)

தேவனுடைய ஆலோசனை சபையில் கிறிஸ்துவிற்கிருந்த அந்தஸ்தை எண்ணி, பரலோகத்தில் சாத்தான் அவர்மீது வெறுப்புகொண்டான். அவன் அங்கிருந்து தள்ளப்பட்டபோது, அவரை மிகவும் அதிகமாக வெறுத்தான். பாவிகளான இனத்தை மீட்க அவர் தம்மைத்தாமே பிணையாளியாக்கிக்கொண்டபோது, அவன் அவரை வெறுத்தான். அப்படியிருந்தபோதும், தனது ஆளுகையில் உள்ளது என்று அவன் உரிமைபாராட்டியிருந்த இடத்திற்கு, மனித இனத்தின் பலவீனங்களுக்குக் கீழ்ப்பட்ட உதவியற்ற ஒரு குழந்தையாக வர, தேவன் அவருடைய குமாரனை அனுமதித்தார். தோல்வி மற்றும் நித்திய இழப்பு என்னும் அபாயத்துடன் எந்தவிதமாகப் போராடியிருக்கவேண்டுமோ, அந்தவிதமாகப் போராடவும், ஒவ்வொரு ஆத்துமாவிற்கும் பொதுவாக உள்ள வாழ்க்கையின் அபாயங்களைச் சந்திக்கவும், தேவன் அவரை அனுமதித்தார். (15)

மனிதத் தந்தையின் இருதயம் அவனது மகனுக்காக ஏங்குகிறது. அவன் தனது சிறு குழந்தையின் முகத்தைப் பார்த்து, அதன் வாழ்வின் அபாயங்களை எண்ணி நடுங்குகிறான். சாத்தானின் வல்லமையிலிருந்து அவனை மறைத்துக்காக்க, சோதனைகளிலும் போராட்டங்களிலுமிருந்து அவனைப் பாதுகாத்துக்கொள்ள அவன் ஏக்கமுள்ளவனாக இருக்கிறான். நமது சிறுவர்களின் வாழ்க்கையின் பாதை நிச்சயமானதாக இருக்கும்படி, ஒரு கசப்பான போராட்டத்தையும் மிகவும் அதிகமான அபாயப்பொறுப்பையும் சந்திக்க, தேவன் தமது ஒரே பேறான குமாரனைத் தந்தார். “இதில் உள்ளது அன்பு.” ஆ! பரலோகங்களே, ஆச்சரியப்படுங்கள்! ஆ! பூலோகமே, வியப்படையுங்கள்! (16) ★

# 5

# பிரதிஷ்டை!

### லூக்கா 2:21–38

### (The Desire of Ages, pp. 50–58)

கிறிஸ்து பிறந்த நாற்பது நாட்களுக்குப்பின் யோசேப்பும் மரியாளும் கர்த்தருக்கு அவரை ஒப்புக்கொடுக்கவும், பலிகளைச் செலுத்தவும் எருசலேமிற்குச் சென்றனர். இது மனிதனுக்கு பதிலாளியாகவும், யூதர்களுடைய பிரமாணத்தின்படியானதாகவுமிருந்தது. கிறிஸ்து மனிதனின் பதிலாளியாக, பிரமாணத்தின் ஒவ்வொரு காரியத்திலும் இசைவுள்ளவராக இருந்தாகவேண்டும். பிரமாணத்திற்குக் கீழ்ப்படியும் வாக்குறுதியாக, அவர் ஏற்கனவே விருத்தசேதனச் சடங்கிற்குக் கீழ்ப்படுத்தப்பட்டார். (1)

குழந்தையின் அன்னைக்கான காணிக்கையாக—தகனபலியாக ஒருவயதான ஆட்டுக்குட்டியும், பாவநிவாரண பலியாக ஒரு காட்டுப்புறா அல்லது புறாக்குஞ்சும் செலுத்தப்படவேண்டும் என்பது நியாயப்பிரமாணத்தின் கோரிக்கையாக இருந்தது. ஆனால், ஒரு ஆட்டுக்குட்டியைக் கொண்டுவர முடியாத அளவிற்குப் பெற்றோர்கள் மிகுந்த ஏழைகளாக இருந்தார்களானால் அவர்கள் தகனபலியாக இரண்டு காட்டுப்புறாக்களையும் பாவநிவாரணபலியாக இரண்டு புறாக்குஞ்சுகளையும் செலுத்துவது அங்கீகரிக்கப்படலாம் என்று சடங்காச்சாரப்பிரமாணம் வகைசெய்திருந்தது. (2)

கர்த்தருக்குச் செலுத்தப்படுகின்ற பலிகள் பழுதற்றவையாக இருக்கவேண்டும். அவைகள் கிறிஸ்துவைச் சுட்டிக்காட்டியிருந்தன. இதிலிருந்து இயேசு சரீரப்பிரகாரமான எந்தவிதமான குறைபாடும் இல்லாதவராக இருந்தார் என்பது தெரிகிறது. அவர் "குற்றமில்லாத மாசற்ற ஆட்டுக்குட்டி"–1 பேதுரு 1:19. அவரது உடலமைப்பு எந்தவிதமான குறைபாட்டினாலும் களங்கப்படுத்தப்படாமலிருந்தது. அவரது உடல், பலமும் நலமும் உள்ளதாக இருந்தது. அவரது வாழ்க்கை முழுவதிலும் அவர் இயற்கையின் நியதிகளுக்கு இசைவாக வாழ்ந்திருந்தார். தேவப்பிரமாணங்களுக்குக் கீழ்ப்படிவதின்மூலமாக மனித இனம் முழுவதும் சரீரப்பிரகாரமாகவும் ஆவிக்குரியபிரகாரமாகவும் எப்படி இருக்கவேண்டும்

என்று தேவன் வடிவமைத்திருந்தார் என்பதற்கு அவர் ஒரு உதாரணமாக விளங்கினார். (3)

மூத்த மகனைப் பிரதிஷ்டை செய்தல் என்பதின் துவக்கம், ஆரம்பகாலத்திலேயே இருந்தது. பாவிகளை இரட்சிக்கும்படி பரலோகத்தின் முதற்பேறானவரைக் கொடுக்க தேவன் வாக்குத்தத்தஞ்செய்திருந்தார். ஒவ்வொரு குடும்பத்திலுமுள்ள மூத்தகுமாரனை தேவனுக்கென்று பிரதிஷ்டை செய்வதின்மூலமாக, இந்த ஈவு அறிக்கைசெய்யப்பட வேண்டியதாக இருந்தது. அவன் மனிதர்களுக்கிடையில் கிறிஸ்துவின் பிரதிநிதியாக இருக்கும்பொருட்டு, ஆசாரியத்துவத்தில் பக்தியுள்ளவனாக இருக்கவேண்டியவனாக இருந்தான். (4)

எகிப்திலிருந்து இஸ்ரவேலுக்குக் கொடுக்கப்பட்ட விடுதலையில் மூத்தமகனை பிரதிஷ்டைசெய்தல் என்னும் கட்டளை மறுபடியும் கொடுக்கப்பட்டது. “இஸ்ரவேல் என்னுடைய குமாரன், என் சேஷ்டபுத்திரன். எனக்கு ஆராதனை செய்யும்படி என் குமாரனை அனுப்பிவிடு என்று கட்டளையிடுகிறேன்; அவனை விடமாட்டேன் என்பாயாகில் நான் உன்னுடைய குமாரனை, உன் சேஷ்டபுத்திரனைச் சங்கரிப்பேன் என்று கர்த்தர் சொன்னார் என்று சொல் என்றார்” (யாத்திராகமம் 4:22,23) என்று இஸ்ரவேல் மக்கள் எகிப்தியர்களுக்கு அடிமைகளாக இருந்தபோது, எகிப்தின் அரசனான பார்வோனிடம் கூறும்படி கர்த்தர் மோசேயை அனுப்பினார். (5)

மோசே அவனது தூதைக் கொடுத்தான். ஆனால் அகந்தைமிக்க அந்த “நான் இஸ்ரவேலைப் போகவிடக் கர்த்தரின் வார்த்தையைக் கேட்கிறதற்கு அவர் யார்? நான் கர்த்தரை அறியேன்; நான் இஸ்ரவேலைப் போகவிடுவதில்லை” (யாத்திராகமம் 5:2) என்பது அந்த அரசனின் பதிலாக இருந்தது. கர்த்தர் அவரது மக்களுக்காக அடையாளங்களையும் அற்புதங்களையும் செய்து, பயங்கரமான நியாயத்தீர்ப்பைப் பார்வோன்மீது அனுப்பினார். கடைசியாக, எகிப்தியர்களுக்கு முதலில் பிறந்த குமாரர்களையும் மிருகங்களையும் கொலைசெய்யும்படி சங்காரத் தூதன் அனுப்பப்பட்டான். இஸ்ரவேலர் விட்டுவைக்கப்படும்படி அவர்கள் அவர்களுடைய கதவு நிலைகளில் அடிக்கப்பட்ட ஒரு ஆட்டுக்குட்டியின் இரத்தத்தைப் பூச வேண்டுமென்று கட்டளையிடப்பட்டனர். மரணத்தை கொடுக்க வந்த தூதன் இஸ்ரவேலர்களின் வீடுகளைக் கடந்துசெல்லும்படியாக ஒவ்வொரு வீடும் அடைளயாளப்படுத்தப்பட வேண்டியதாக இருந்தது. (6)

எகிப்தியர்களின்மீது இந்த நியாயத்தீர்ப்பைச் செய்தபின்: “முதற்பேறனைத்தையும் எனக்குப் பரிசுத்தப்படுத்து; அது என்னுடையது

என்றார்.” “நான் எகிப்துதேசத்தில் முதற்பேறான யாவையும் சங்கரித்த நாளில், இஸ்ரவேலில் மனிதர்முதல் மிருகஜீவன் மட்டுமுள்ள முதற்பேறான யாவையும் எனக்கென்று பரிசுத்தப்படுத்தினதினாலே, அவைகள் என்னுடையவைகளாயிருக்கும்; நான் கர்த்தர்” (யாத்திராகமம் 13:2; எண்ணாகமம் 3:13) என்று மோசேயைப் பார்த்துக் கர்த்தர் கூறினார். ஆசரிப்புக்கூடார ஆராதனை முறை ஏற்படுத்தப்பட்டபின், கர்த்தர் இஸ்ரவேலில் முதலில் பிறந்த அனைவருக்கும் பதிலாக, ஆசரிப்புக்கூடாரத்தில் ஊழியஞ்செய்ய லேவியின் கோத்திரத்தைத் தெரிந்துகொண்டார். ஆனால் முதற்பேறு இன்னும் கர்த்தருடையதாகவே கருதப்பட்டு, ஒரு மீட்கும் விலையினால் திரும்ப வாங்கிக்கொள்ளப்படவேண்டும். (7)

இவ்வாறாக முதற்பேறானவனைப் கொடுத்தல் என்னும் பிரமாணம் குறிப்பாக அடையாளப்படுத்தப்பட்டது. அது இஸ்ரவேல் மக்களைக் கர்த்தர் அதிசயமானவிதத்தில் விடுதலை செய்ததின் நினைவுச்சின்னமாக இருந்தபோது, அது தேவனுடைய ஒரேபேறான குமாரனால் உண்டாகவிருந்த மாபெரும் விடுதலையின் முன்னடையாளமாகவும் இருந்தது. கதவு நிலைகளில் தெளிக்கப்பட்ட இரத்தம், இஸ்ரவேலின் முதற்பேறானவர்களைக் காத்ததுபோல, கிறிஸ்துவின் இரத்தம் உலகத்தை இரட்சிக்கும் வல்லமையுள்ளதாக இருக்கிறது. (8)

அப்படியானால், கிறிஸ்துவைப் பிரதிஷ்டை செய்தபோது, அத்துடன் சம்பந்தப்பட்டிருந்த பொருள் என்னவாகவிருந்தது! ஆனால் ஆசாரியனோவெனில் திரைக்குள்ளாக ஊடுருவிப் பார்க்கவில்லை. அதற்கப்பாலிருந்த இரகசியத்தை அவன் காணவில்லை. குழந்தைகளைப் படைத்தல் என்பது சாதாரணமான காட்சியாக இருந்தது. படைக்கப்பட்டிருந்த சிறுகுழந்தைகளின் பெற்றோரில், ஐசுவரியத்தையோ அல்லது சமுதாய மேன்மையையோ காட்டுகின்ற அடையாளம் காணப்படாதவரை, பெற்றோர்களையும் சிறுபிள்ளைகளையும் சரியாகக் கவனிக்காமல், ஒவ்வொரு நாளும் அவன் தனது வழக்கமான வேலையைச் செய்துகொண்டிருந்தான். யோசேப்பும் மரியாளும் ஏழைகளாக இருந்தனர். அவர்கள் தங்களுடைய குழந்தையுடன் வந்தபோது, ஆசாரியர்கள் மிகவும் ஏழ்மையான உடையில் கலிலேயர்களைப்போல உடுத்திவந்திருந்த ஒரு புருஷனையும் ஸ்திரீயையும் மட்டும் கண்டனர். அவர்களது கவனத்தை ஈர்க்கக்கூடிய எந்தவிதமான கவர்ச்சியும் அவர்களில் இல்லாமலிருந்தது, ஏழ்மையான வகுப்பினர் செலுத்தக்கூடிய காணிக்கைகளை அவர்கள் செலுத்தினர். (9)

ஆசாரியன் முறைமையின்படி சடங்கினை செய்துகொண்டிருந்தான். அவன் அந்தக் குழந்தையை அவனது கரங்களில் எடுத்து, பலிபீடத்திற்கு

முன்னால் தாங்கிப் பிடித்தான். அதை அதன் தாயிடம் திரும்பக் கொடுத்தபின், முதற்பேறானவர்களின் பெயர்களை எழுதும் சுருளில் இயேசு என்று எழுதினான். அந்தக் குழந்தை ஆசாரியனது கரங்களில் வைக்கப்பட்டிருந்தபோது, அவர்தான் பரலோகத்தின் மகத்துவம்; மகிமையின் அரசர்; என்பதை அவன் சற்றும் நினைக்கவில்லை. "உங்கள் தேவனாகிய கர்த்தர் என்னைப்போல ஒரு தீர்க்கதரிசியை உங்களுக்காக உங்கள் சகோதரரிலிருந்து எழும்பப்பண்ணுவார்; அவர் உங்களுக்குச் சொல்லும் எல்லாவற்றிலும் அவருக்குச் செவிகொடுப்பீர்களாக" (அப்போஸ்தலர் 3:22) என்று மோசேயினால் எழுதப்பட்டிருந்தவர் இந்தக் குழந்தைதான் என்று அந்த ஆசாரியன் நினைக்கவில்லை! யாருடைய மகிமையைக் காணும்படி மோசே மன்றாடினானோ, அது இவருடையதுதான் என்பதை ஆசாரியன் இந்தக் குழந்தையில் காணவில்லை. ஆனால் மோசேயைவிடப் பெரியவரான ஒருவர் அந்த ஆசாரியனின் கரத்தில் இருந்தார். அந்தக் குழந்தையை பட்டியலில் சேர்த்தபொழுது, யூத அமைப்பு முழுவதற்கும் அஸ்திவாரமாக இருந்தவரின் பெயரை அவன் எழுதியிருந்தான். அந்தப் பெயர் அதன் மரணத்தை அறிவிக்கும் மரணச்சீட்டாக இருந்தது. ஏனெனில் பலியிடுதல், காணிக்கை செலுத்துதல் என்னும் சம்பிரதாயங்கள் பழையவையாகத் தேய்ந்துகொண்டிருந்தன. சாயல் அதின் எதிர்சாயலையும், நிழல் கிட்டத்தட்ட அதின் நிஜத்தையும் சந்திக்கும்வண்ணம் நெருங்கியிருந்தது. (10)

ஆசரிப்புக்கூடாரத்திலிருந்து ஷெகீனா (மகிமையின் பிரசன்னம்) நீங்கிச்சென்றுவிட்டது. ஆனால் தூதர்கள் பணியும் மகிமை பெத்லகேமின் குழந்தையில் திரையிடப்பட்டிருந்தது. ஏதேனின் வாசலில் இருந்த முதல் பலிபீடம் எவரைச் சுட்டிக்காட்டியிருந்ததோ அவர்தான் ஏதும் அறியாத பருவத்திலிருந்த இந்தக் குழந்தையாக, வாக்குத்தத்தம் பண்ணப்பட்டிருந்த வித்தாக இருந்தார். சமாதானத்தை அருளும் சீலோவாக அது இருந்தது. **இருக்கிறேன்** என்பவராகத் தம்மைப்பற்றி மோசேக்கு எவர் அறிவித்திருந்தாரோ அவர்—இவர்தான்! இஸ்ரவேலருக்கு வழிகாட்டியாக மேகஸ்தம்பத்திலும் அக்கினி ஸ்தம்பத்திலும் இருந்தவர்—இவரே! நீண்ட காலமாக தீர்க்கதரிசிகளால் முன்னறிவிக்கப்பட்டிருந்தவர்—இவரே! சகல ஜாதிகளின் வாஞ்சையாகவும், தாவீதின் வேரும் சந்ததியும் பிரகாசமான விடிவெள்ளி நட்சத்திரமாகவும் அவர் இருந்தார். நமது சகோதரர் என்று இஸ்ரவேலின் புத்தகச்சுருளில் பெயர் எழுதப்பட்டு அறிவிக்கப்பட்ட உதவியற்ற சிறுகுழந்தை—விழுந்துபோன மனித இனத்தின் நம்பிக்கையாக இருந்தார். மீட்பின் கிரயம் எந்த ஒரு குழந்தைக்காகக் கொடுக்கப்பட்டதோ, அதுதான் உலகத்தின் பாவங்களுக்கான மீட்பின் கிரயத்தைக் கொடுப்பதாக இருந்தது. "தேவனுடைய வீட்டின்மேல்

அதிகாரியான மகா ஆசாரியர் நமக்கு ஒருவர் இருக்கிறபடியினாலும்" "மாறிப்போகாத ஆசாரியத்துவமுள்ளவராயிருக்கிறார்." "உன்னதத்திலுள்ள மகத்துவமானவருடைய வலதுபாரிசத்திலே உட்கார்ந்தார்"—எபிரெயர் 10:21; 7:24; 1:3. (11)

ஆவிக்குரிய காரியங்கள் ஆவிக்குரியவைகளால் அறிந்து கொள்ளப்படும். தேவாலயத்தில் தேவனுடைய குமாரன் செய்யும்படியாக வந்திருந்த பணிக்கென்று பிரதிஷ்டை செய்யப்பட்டார். மற்ற எல்லாக் குழந்தைகளையும் பார்ப்பதைப்போலவே ஆசாரியன் அந்தக் குழந்தையைப் பார்த்தான். வழக்கத்திற்கெதிரான எதையும் காணாமலோ உணராமலோ இருந்திருந்தாலும், உலகத்திற்கெதிராகத் தமது குமாரனைக் கொடுக்கும் செயல் அங்கீகரிக்கப்பட்டுவிட்டது. கிறிஸ்துவைப்பற்றிய சில அங்கீகாரம் இல்லாமல் அந்தச் சந்தர்ப்பம் கடந்து செல்லவில்லை. "சிமியோன் என்னும் பேர்கொண்ட ஒரு மனுஷன் எருசலேமில் இருந்தான்; அவன் நீதியும் தேவபக்தியும் உள்ளவனாயும், இஸ்ரவேலின் ஆறுதல்வரக் காத்திருக்கிறவனாயும் இருந்தான்; அவன்மேல் பரிசுத்த ஆவி இருந்தார். கர்த்தருடைய கிறிஸ்துவை நீ காணுமுன்னே மரணமடையமாட்டாய் என்று பரிசுத்த ஆவியினாலே அவனுக்கு அறிவிக்கப்பட்டுமிருந்தது." (12)

சிமியோன் ஆலயத்திற்குள் நுழைந்தபோது, ஒரு குடும்பம் அதன் முதற்பேறான குமாரனை ஆசாரியனுக்குமுன் படைப்பதை காண்கிறான். அவர்களது தோற்றம் ஏழ்மையை எடுத்துக்காட்டுகிறது. ஆனால் ஆவியானவரின் எச்சரிப்புகளை சிமியோன் புரிந்துகொள்கிறான். கர்த்தருக்குமுன் படைக்கப்பட்டுக்கொண்டிருக்கும் அந்தக் குழந்தைதான் தான் காணவேண்டுமென்று காத்திருந்த—இஸ்ரவேலுக்கு ஆறுதலைத் தரும் ஒருவர் என்று அவன் ஆழமாக உணர்த்தப்பட்டான். ஆச்சரியமடைந்த ஆசாரியனுக்கு, சிமியோன் அளவுகடந்த ஆனந்தத்தில் இருக்கும் ஒரு மனிதனாகக் காணப்பட்டான். அந்தக் குழந்தை மரியாளிடம் திரும்பக் கொடுக்கப்பட்டபொழுது, அவன் அதைத் தன் கரங்களில் ஏந்தி, அவனது ஆத்துமாவிற்குள் இதுவரை ஒருபோதும் நுழைந்திராத ஒரு மகிழ்ச்சியுடன் அதைத் தேவனுக்குப் படைக்கிறான். குழந்தையான இரட்சகரை பரத்திற்கு நேராக அவன் உயர்த்தினபோது: "ஆண்டவரே, உமது வார்த்தையின்படி உமது அடியேனை இப்பொழுது சமாதானத்தோடே போகவிடுகிறீர்; புறஜாதிகளுக்குப் பிரகாசிக்கிற ஒளியாகவும், உம்முடைய ஜனமாகிய இஸ்ரவேலுக்கு மகிமையாகவும், தேவரீர் சகல ஜனங்களுக்கும் முன்பாக ஆயத்தம்பண்ணின உம்முடைய இரட்சணியத்தை என் கண்கள் கண்டது" என்றான். (13)

தீர்க்கதரிசன ஆவி இந்த தேவனுடைய மனிதனின்மீது தங்கியிருந்தது. அவனது வார்த்தைகளில் வியப்புற்றவர்களாக யோசேப்பும் மரியாளும் அருகில் நின்றிருந்தபோது, அவன் அவர்களை ஆசீர்வதித்து, மரியாளை நோக்கி: “இதோ, அநேகருடைய இருதய சிந்தனைகள் வெளிப்படத்தக்கதாக, இஸ்ரவேலில் அநேகர் விழுகிறதற்கும் எழுந்திருக்கிறதற்கும், விரோதமாகப் பேசப்படும் அடையாளமாவதற்கும், இவர் நியமிக்கப்பட்டிருக்கிறார். உன் ஆத்துமாவையும் ஒரு பட்டயம் உருவிப்போகும்” என்றான். (14)

தீர்க்கதரிசியாகிய அன்னாள் என்பவளும் உள்ளேவந்து, கிறிஸ்துவைப்பற்றி சிமியோன் கொடுத்த சாட்சியை உறுதிப்படுத்தினாள். சிமியோன் பேசினபோது அவளது முகம் தேவ மகிமையால் பிரகாசமடைய, கர்த்தராகிய கிறிஸ்துவைக் காணும்படி அவள் அனுமதிக்கப்பட்டதற்காக தனது இதயப்பூர்வமான நன்றியைத் தேவசமுகத்தில் ஊற்றினாள். (15)

தேவனைத் தொழுதிருந்த தாழ்மையான இவர்கள் தீர்க்கதரிசனங்களை வீணாக ஆராய்ந்திருக்கவில்லை. கருத்தோடு ஆராய்ந்திருந்தார்கள். ஆனால் இஸ்ரவேலில் அதிபதிகளாகவும் ஆசாரியர்களாகவும் பதவிகளைப் பெற்றிருந்தவர்கள், அவர்களுக்கு ஏற்கெனவே தீர்க்கதரிசனத்தின் விலைமதிப்புமிக்க வார்த்தைகள் கொடுக்கப்பட்டிருந்தபோதிலும் கர்த்தருடைய பாதையில் நடக்காமலிருந்ததினால் ஜீவனின் ஒளியைக் காணும்வண்ணம் அவர்களது கண்கள் திறக்கப்படவில்லை. (16)

இப்பொழுதும் அப்படித்தான் இருந்தது. பரலோகம் முழுவதும் ஆர்வத்துடன் கவனிக்கும் நிகழ்ச்சிகள், சமயத்தலைவர்களாலும் தேவனுடைய வீட்டில் ஆராதனை செய்பவர்களாலும் அறிந்துகொள்ளப்படாதவைகளாக, கவனிக்கப்படாதவைகளாக உள்ளன. வரலாற்றிலுள்ள கிறிஸ்துவை மனிதர் ஏற்றுக்கொள்கின்றனர். ஆனால் ஜீவனுள்ள கிறிஸ்துவிடமிருந்து பின்வாங்கிச் செல்கின்றனர். நிவாரணத்திற்காகக் கெஞ்சி மன்றாடும் ஏழைகளுக்காகவும் துன்பப்படுகிறவர்களுக்காகவும், ஏழ்மை, கடும் உழைப்பு, நிந்தனை ஆகியவைகளோடு சம்பந்தப்பட்ட நீதியான ஊழியங்களுக்காகவும் தற்தியாகம் செய்யும்படி கிறிஸ்து அழைக்கிறார். ஆயிரத்து எண்ணூறு ஆண்டுகளுக்கு முன்னர் (இந்நூல் பத்தொன்பதாம் நூற்றாண்டில் எழுதப்பட்டது) எவ்வாறு இதற்கான அழைப்புகள் ஏற்றுக்கொள்ளப்படாமல் இருந்தனவோ, அதைப்போன்ற நிலையே இன்றும் நீடித்திருக்கிறது. அகன்று வெகுதூரம் சென்று சேரக்கூடியதாக இருந்த சிமியோனின் தீர்க்கதரிசனத்தை மரியாள் சிந்தனை செய்திருந்தாள். அவளுடைய கைகளிலிருந்த பிள்ளையை அவள் பார்த்தபோதும், பெத்லகேமின் மேய்ப்பர்களால் பேசப்பட்டிருந்த வார்த்தைகளை மறுபடியும் நினைவிற்குக்கொண்டுவந்தபோதும், அவள்

நன்றிமிக்க சந்தோஷத்தாலும் பிரகாசமான நம்பிக்கையாலும் நிறைந்தாள். சிமியோனின் வார்த்தைகள் ஏசாயாவின் தீர்க்கதரிசன வார்த்தைகளை மீண்டும் அவளது நினைவிற்குக் கொண்டுவந்தது. "ஈசாயென்னும் அடிமரத்திலிருந்து ஒரு துளிர் தோன்றி, அவன் வேர்களிலிருந்து ஒரு கிளை எழும்பிச் செழிக்கும். ஞானத்தையும் உணர்வையும் அருளும் ஆவியும், ஆலோசனையையும் பெலனையும் அருளும் ஆவியும், அறிவையும் கர்த்தருக்குப் பயப்படுகிற பயத்தையும் அருளும் ஆவியுமாகிய கர்த்தருடைய ஆவியானவர் அவர்மேல் தங்கியிருப்பார். கர்த்தருக்குப் பயப்படுதல் அவருக்கு உகந்த வாசனையாயிருக்கும்; அவர் தமது கண் கண்டபடி நியாயந்தீர்க்காமலும், தமது காது கேட்டபடி தீர்ப்புச்செய்யாமலும், நீதியின்படி ஏழைகளை நியாயம் விசாரித்து, யதார்த்தத்தின்படி பூமியிலுள்ள சிறுமையானவர்களுக்குத் தீர்ப்புச்செய்து, பூமியைத் தமது வாக்கின்கோலால் அடித்து, தமது வாயின் சுவாசத்தால் துன்மார்க்கரைச் சங்கரிப்பார். நீதி அவருக்கு அரைக்கட்டும், சத்தியம் அவருக்கு இடைக்கச்சையுமாயிருக்கும்" "இருளில் நடக்கிற ஜனங்கள் பெரிய வெளிச்சத்தைக் கண்டார்கள்; மரண இருளின் தேசத்தில் குடியிருக்கிறவர்களின்மேல் வெளிச்சம் பிரகாசித்தது. அந்த ஜாதியைத் திரளாக்கி, அதற்கு மகிழ்ச்சியைப் பெருகப்பண்ணினீர்; அறுப்பில் மகிழ்கிறதுபோலவும், கொள்ளையைப் பங்கிட்டுக்கொள்ளுகையில் களிகூருகிறதுபோலவும், உமக்குமுன்பாக மகிழுகிறார்கள். மீதியானியரின் நாளில் நடந்ததுபோல, அவர்கள் சுமந்த நுகத்தடியையும், அவர்கள் தோளின்மேலிருந்த மிலாற்றையும், அவர்கள் ஆளோட்டியின் கோலையும் முறித்துப்போட்டீர். அமளியாய் யுத்தம்பண்ணுகிற வீரருடைய ஆயுதவர்க்கங்களும், இரத்தத்தில் புரண்ட உடுப்பும் அக்கினிக்கு இரையாகச் சுட்டெரிக்கப்படும். நமக்கு ஒரு பாலகன் பிறந்தார்; நமக்கு ஒரு குமாரன் கொடுக்கப்பட்டார்; கர்த்தத்துவம் அவர் தோளின்மேலிருக்கும்; அவர் நாமம் அதிசயமானவர், ஆலோசனைக்கர்த்தா, வல்லமையுள்ள தேவன், நித்திய பிதா, சமாதானப்பிரபு என்னப்படும்" ஏசாயா 11:1–5; 9:2–6. (17)

அப்படியிருந்தும் கிறிஸ்துவின் ஊழியத்தை மரியாள் புரிந்துகொள்ளவில்லை. புறஜாதிகளுக்கென்று ஏற்றப்பட்ட ஒளியாகவும் இஸ்ரவேலின் மகிமையாகவும் அவர் இருப்பார் என்று அவரைப்பற்றி சிமியோன் தீர்க்கதரிசனம் உரைத்தான். இவ்வண்ணமாக சகல மக்களுக்கும் சந்தோஷத்தை உண்டுபண்ணும் செய்தியான இரட்சகரின் பிறப்பைப்பற்றி தூதர்கள் அறிவித்திருந்தனர். மேசியாவின் பணியைப்பற்றி யூதர்களின் குறுகிய எண்ணத்தைச் சீர்படுத்த தேவன் வகைதேடியிருந்தார். இஸ்ரவேலுக்கு விடுதலை வழங்குபவராக மட்டும் அவரைப் பார்க்காமல், உலக மீட்பராகவும் மனிதர்கள் பார்க்கவேண்டுமென்று தேவன்

விரும்பினார். ஆனால் இயேசுவின் தாயாருங்கூட அவரது ஊழியத்தைப் புரிந்துகொள்ளுவதற்கு அநேக வருடங்கள் கடந்துசெல்லவேண்டியதாக இருந்தது. (18)

தாவீதின் சிங்காசனத்திலமர்ந்து மேசியா ஆட்சிசெய்வதைக் கண்டிட மரியாள் விரும்பினாள். ஆனால் பாடுகள் என்னும் ஸ்நானத்தினால் வெற்றியடையவேண்டும் என்பதை அவள் காணவில்லை. மேசியா இந்த உலகத்தினூடாகக் கடந்துசெல்லத் தடையில்லாத பாதை இருக்காது என்பது சிமியோனின்மூலமாக வெளிப்படுத்தப்பட்டிருக்கிறது. "உன் ஆத்துமாவையும் ஒரு பட்டயம் உருவிப்போகும்" என்று மரியாளுக்குச் சொல்லப்பட்ட வார்த்தையினால், இயேசுவின் நிமித்தமாக மரியாள் சகிக்கவிருக்கும் துயரம் ஏற்கனவே ஆரம்பமாகிவிட்டது என்னும் ஒரு தகவலை தமது மென்மையான இரக்கத்தினால் தேவன் இயேசுவின் அன்னைக்குக் கொடுக்கிறார். (19)

"இஸ்ரவேலில் அநேகர் விழுகிறதற்கும் எழுந்திருக்கிறதற்கும், விரோதமாகப் பேசப்படும் அடையாளமாவதற்கும், இவர் நியமிக்கப் பட்டிருக்கிறார்" என்று சிமியோன் கூறியிருந்தான். மறுபடியும் எழுந்திருக்க இருப்பவர்கள் முதலில் விழுந்தாகவேண்டும். கிறிஸ்துவின் மூலமாக நாம் உயர தூக்கப்படுவதற்குமுன், கன்மலையின்மீது விழுந்து நொறுங்கவேண்டும். ஆவிக்குரிய இராஜ்யத்தின் மகிமையை நாம் அறியவேண்டுமானால் சுயம் அரியணையின்மீதிருந்து நீக்கப்பட்டு, பெருமை தாழ்த்தப்படவேண்டும். தாழ்மையின்மூலமாக அடையும் மேன்மையை யூதர்கள் ஏற்றுக்கொள்ளமாட்டார்கள். எனவே, அவர்கள் அவர்களுடைய மீட்பரை ஏற்றுக்கொள்ளமாட்டார்கள். எதிர்த்துப் பேசப்பட்ட ஒரு அடையாளமாக அவர் இருந்தார். (20)

அநேகருடைய இருதயத்தின் சிந்தனைகள் வெளிப்படத்தக்கதாக, இரட்சகரின் வாழ்க்கையில் காணப்பட்ட ஒளியில் எல்லாருடைய இருதயங்களும்—சிருஷ்டிகரிலிருந்து அந்தகாரப்பிரபு வரையுள்ள அனைவருடைய மனதின் சிந்தனைகளும் வெளிப்படுத்தப்பட்டுள்ளன. எல்லாவற்றின்மீதும் உரிமைபாராட்டி, ஒன்றையும் கொடுக்காமல், தனது சொந்த மகிமையைத்தேடி, அதற்காக தமது படைப்புகளின் சேவையைக் கோரி, அவர்களது நன்மைக்காக எந்தவிதமான தியாகத்தையும் செய்யாத சுயநலமும் ஒடுக்குதலும் உள்ளவராக தேவனை சாத்தான் தவறாகச் சுட்டிக்காட்டியிருந்தான். கிறிஸ்து ஒரு ஈவாகக் கொடுக்கப்பட்டது, பிதாவின் இதயத்தை வெளிப்படுத்திக் காட்டியது. "நீங்கள் எதிர்பார்த்திருக்கும் முடிவை உங்களுக்குக் கொடுக்கும்படிக்கு நான் உங்கள்பேரில் நினைத்திருக்கிற நினைவுகளை அறிவேன் என்று கர்த்தர் சொல்லுகிறார்;

அவைகள் தீமைக்கல்ல, சமாதானத்துக்கேதுவான நினைவுகளே" (எரேமியா 29:11) என்பது நம்மைப்பற்றிய அவரது நினைவிற்குச் சாட்சியாக உள்ளது. பாவத்தின்மீதான தேவனுடைய வெறுப்பு மரணத்தைப்போன்று வலிமையானதாக இருக்கும்போது, பாவிகள்மேல் அவருடைய அன்பு மரணத்தைவிட வலிமையானது என்று இது அறிவிக்கிறது, நமது மீட்பின் திட்டத்தை எடுத்துக்கொண்டிருக்கிற அவர், அந்த வேலையைப் நிறைவுசெய்வதற்காக எதையும், அது எவ்வளவு அருமையானதாக இருந்தாலும் விடமாட்டார். நமது மீட்பிற்கு அவசியமான எந்த சத்தியமும் தடுத்து நிறுத்தப்படவில்லை. அற்புதங்களும் இரக்கமும் அலட்சியம் செய்யப்படவில்லை. செயலாற்றப்படாத தெய்வீக ஏதுகரம் எதுவும் இல்லை. ஆதரவின்மேல் ஆதரவும், ஈவின்மேல் ஈவும் குவித்து வைக்கப்பட்டுள்ளன. இரட்சிக்கப்பட வகைதேடுகிறவர்களுக்கென்று பரலோகக் கருவூலம் முழுவதும் திறந்துவைக்கப்பட்டிருக்கிறது. பிரபஞ்சத்தின் ஐசுவரியங்களனைத்தையும் ஒன்றுதிரட்டி, முடிவற்ற வல்லமையின் கருவூலங்களைத் திறந்துவைத்து, அவைகளனைத்தையும் கிறிஸ்துவின் கரங்களில் கொடுத்து, இவை அனைத்தும் மனிதனுக்காக என்று கூறுகிறார். பூலோகத்திலும் அல்லது பரலோகத்திலும் என்னுடைய அன்பை விடப்பெரிதானது எதுவும் இல்லை; மனிதனைத் திருப்திபடுத்த இவை அனைத்தையும் பயன்படுத்துங்கள் என்று அவர் கூறுகிறார். என்னிடம் அன்பு செலுத்துவதில்தான் அவனது பெரும் மகிழ்ச்சி காணப்படும் என்றும் அவர் கூறுகிறார். (21)

கல்வாரியின் சிலுவையில் அன்பும் சுயநலமும் முகமுகமாக நின்றன. அவைகளின் மிகமேலான வெளிக்காட்டுதல் இங்குதான் இருந்தது. தேற்றவும் ஆசீர்வதிக்கவும் கிறிஸ்து வாழ்ந்திருந்தார். அவரை மரணத்திற்குள் வைத்ததின்மூலமாக சாத்தான் தேவனுக்கு எதிரான அவனது வெறுப்பின் கொடுமையான தன்மையை வெளிக்காட்டினான். தேவனை அரியணையிலிருந்து நீக்குவதும், எவர்மூலமாக அவர் தமது அன்பை வெளிக்காட்டினாரோ, அவரை அழிப்பதும்தான் அவனது உண்மையான நோக்கம் என்பதை அவன் தெளிவுபடுத்தினான். (22)

கிறிஸ்துவின் வாழ்க்கையினாலும் மரணத்தினாலும் மனிதர்களின் சிந்தனைகளும் காட்சிக்குக் கொண்டுவரப்பட்டுள்ளன. முன்னணையில் இருந்து சிலுவைவரையிலான இயேசுவின் வாழ்க்கை, சுயத்தைச் சரணடையச்செய்து பாடுகளில் பங்காளியாவதற்கான ஒரு அழைப்பாக இருந்தது. அது மனிதர்களின் நோக்கங்களைத் திரைநீக்கம் செய்திருந்தது. பரலோக சத்தியத்துடன் இயேசு வந்தார். பரிசுத்த ஆவியானவரின் சத்தத்தைக் கவனித்திருந்த அனைவரும் அவரிடம் இழுத்துக்கொள்ளப்பட்டனர். சுயத்தை

ஆராதிப்பவர்கள் சாத்தானின் இராஜ்யத்திற்குக் கீழ்ப்பட்டவர்களாக இருந்தனர். அவர்கள் யார் பக்கத்தில் நின்றிருந்தனர் என்பதைக் கிறிஸ்துவிற்கு நேராக அவர்களிடமிருந்த மனோபாவம் காட்டும். இப்படியாக ஒவ்வொருவரும் தங்கள்மீது தாங்களே நியாயத்தீர்ப்பைக் கொடுக்கின்றனர். (23)

இறுதி நியாயத்தீர்ப்பு நாளில் இழந்துபோன ஒவ்வொரு ஆத்துமாவும், தானே சுயமாகச் சத்தியத்தை புறக்கணித்ததை அறிந்துகொள்ளும். சிலுவை காட்டப்பட்டு, மீறுதலின் காரணமாகக் குருடாகிப்போன ஒவ்வொரு மனதிலும் அதன் உண்மையான விளைவு காணப்படும். தேவ இரகசியமான துன்பத்திற்குள்ளான ஒருவருடைய கல்வாரிக் காட்சியின்முன், பாவிகள் குற்றவாளிகளாக நிற்பார்கள். பொய்யான சாக்குப்போக்கு ஒவ்வொன்றும் அடித்துச்செல்லப்படும். மானிட மருளவிழுகை வெறுக்கத்தக்க அதன் குணத்துடன் தோன்றும். மனிதர்கள் அவர்களது தெரிந்துகொள்ளுதல் எப்படிப்பட்டதாக இருந்தது என்பதைக் காண்பார்கள். நீண்டகாலமாக இருந்த போராட்டத்தில் நின்றிருந்த சத்தியம்—தவறு ஆகியவைபற்றிய ஒவ்வொரு கேள்வியும் அப்போது தெளிவுபடுத்தப்பட்டிருக்கும். பிரபஞ்சம் நடத்தும் நியாயத்தீர்ப்பில் நிலைத்திருந்து, அல்லது தொடர்ந்து நீடிக்கின்ற அந்த குற்றத்திற்கு தேவன் பொறுப்பாளியல்ல. தெய்வீகக் கட்டளைகள் பாவத்திற்கு வழிநடத்துபவை அல்ல என்பது தெளிவுபடுத்திக் காட்டப்படும். தேவ அரசாங்கத்தில் குறைபாடு இருக்கவில்லை. அதிருப்திக்கான காரணமும் இருக்கவில்லை. அனைத்து இருதயங்களின் சிந்தனைகளும் வெளிப்படுத்தப்படும்போது, “அவர்கள் தேவனுடைய ஊழியக்காரனாகிய மோசேயின் பாட்டையும் ஆட்டுக்குட்டியானவருடைய பாட்டையும் பாடி: சர்வவல்லமையுள்ள தேவனாகிய கர்த்தாவே, தேவரீருடைய கிரியைகள் மகத்துவமும் ஆச்சரியமுமானவைகள்; பரிசுத்தவான்களின் ராஜாவே, தேவரீருடைய வழிகள் நீதியும் சத்தியமுமானவைகள். கர்த்தாவே, யார் உமக்குப் பயப்படாமலும், உமது நாமத்தை மகிமைப்படுத்தாமலும் இருக்கலாம்? தேவரீர் ஒருவரே பரிசுத்தர், எல்லா ஜாதிகளும் வந்து உமக்கு முன்பாகத் தொழுதுகொள்வார்கள்; உம்முடைய நீதியான செயல்கள் வெளியரங்கமாயின” (வெளிப்படுத்த 15:3,4) என்று, திடமான பற்றுடையவர்களும் கலகக்காரர்களும் ஒன்று சேர்ந்து உறுதியாகக் கூறுவார்கள். (24) ★

# 6

# நாங்கள் அவரது நட்சத்திரத்தைக் கண்டோம்!

**மத்தேயு 2**

**(The Desire of Ages, pp. 59–67)**

ஏரோது அரசனின் நாட்களில் யூதேயா நாட்டிலுள்ள பெத்லகேம் என்னுமிடத்தில் இயேசு பிறந்தபோது, கிழக்குத் திசையிலிருந்து ஞானிகள் எருசலேமிற்கு வந்து, "யூதருக்கு ராஜாவாகப் பிறந்திருக்கிறவர் எங்கே? கிழக்கிலே அவருடைய நட்சத்திரத்தைக் கண்டு, அவரைப் பணிந்துகொள்ள வந்தோம் என்றார்கள்." (1)

கிழக்கிலிருந்து வந்த அந்த ஞானிகள் தத்துவசாஸ்திரிகளாக இருந்தனர். அவர்கள் முக்கியத்துவம்வாய்ந்த செல்வாக்குடைய மேல்வகுப்பைச் சேர்ந்தவர்களாகவும் தங்களது நாட்டின் செல்வம், கல்வி ஆகியவைகளில் மேம்பட்ட வகுப்பைச் சார்ந்தவர்களாகவும் இருந்தனர். அவர்களில் அநேகர் மக்களின் நம்பிக்கைக்குரியவர்களாக இருந்தனர். மற்றவர்கள் இயற்கையில் காணப்படும் தெய்வீக ஏற்பாட்டின் அடையாளத்தை அறிந்த நேர்மையானவர்களாகவும், அவர்களுடைய நேர்மைக்காகவும் ஞானத்திற்காகவும் மதிக்கப்பட்டவர்களாகவும் இருந்திருந்தனர். இயேசுவிடம் வந்தவர்கள் இந்தவிதமான பண்பை உடையவர்களாக இருந்திருந்தனர். (2)

அஞ்ஞான மார்க்கத்தின் இருளுக்கிடையில் தேவனுடைய ஒளி எப்பொழுதும் பிரகாசித்துக்கொண்டிருக்கிறது. இந்த அறிஞர்கள் விண்மீன்கள் நிறைந்த வானத்தை ஆராய்ந்து, ஒளிமிக்க அவைகளது பாதையின் இரகசியத்தை அறிய முயன்றபோது, சிருஷ்டிகரின் மகிமையைக் கண்டனர். தெளிவான அறிவைத்தேடி, அவர்கள் எபிரெய வேதாகமத்திற்குத் திரும்பினர். தெய்வீக ஆசிரியரின் வருகையை முன்னறிவித்த தீர்க்கதரிசன எழுத்துக்கள், அவர்களது சொந்த தேசத்தில் பாதுகாத்து வைக்கப்பட்டிருந்தன. ஒருகாலத்தில் தேவனுடைய தீர்க்கதரிசியாயிருந்த பிலேயாம், மாய

வித்தைக்காரர்களின் கூட்டத்திலுள்ளவனாயிருந்தான். பரிசுத்த ஆவியினால் அவன் இஸ்ரவேலின் செழுமையையும் மேசியாவின் வருகையையும் முன்னறிவித்திருந்தான். அவனது தீர்க்கதரிசனங்கள் பாரம்பரியத்தினால் நூற்றாண்டுகளாக ஒருவருக்குப்பின் ஒருவருக்குக் கையளிக்கப்பட்டிருந்தன. ஆனால் பழைய ஏற்பாட்டில் இரட்சகரின் வருகை மிகத் தெளிவாக வெளிப்படுத்தப்பட்டிருந்தது. அவரது வருகை மிகச் சமீபமாகிவிட்டது என்பதையும் கர்த்தரைப்பற்றின அறிவின் மகிமையால் உலகம் நிரப்பப்பட இருப்பதையும் அந்த அறிஞர்கள் மகிழ்ச்சியுடன் அறிந்தனர். (3)

தேவனுடைய மகிமை பெத்லகேமின் குன்றுகளை ஒளிவெள்ளத்தால் நிரப்பிய அந்த இரவில், அந்த அறிஞர்கள், விளங்கிக்கொள்ள முடியாத ஒரு ஒளியை வானத்தில் கண்டிருந்தனர். அந்த ஒளி மங்கியபோது, ஒளிவீசும் ஒரு விண்மீன் வானத்தில் தோன்றித் தரித்து நின்றது. அது ஒரு நிலையான விண்மீனாகவோ அல்லது கிரகமாகவே இருக்கவில்லை. அந்தக் காட்சி அவர்களது ஆர்வத்தை மிகவும் தூண்டியது. அந்த நட்சத்திரம் வெகு தொலைவிலிருந்த ஒரு கூட்ட தூதர்களால் ஆனது. ஆனால் அந்த ஞானிகள் இதைப்பற்றி அறிவற்றவர்களாக இருந்தனர். அப்படியிருந்தபோதிலும், அந்த நட்சத்திரம் மிக முக்கியமான ஒன்று என்று அவர்கள் உணர்த்தப்பட்டனர். அவர்கள் ஆசாரியர்களிடமும் தத்துவசாஸ்திரிகளிடமும் இதைப்பற்றி ஆலோசித்து, பழங்கால ஆதாரங்களாயிருந்த புத்தகச்சுருளை ஆராய்ந்தனர். “ஒரு நட்சத்திரம் யாக்கோபிலிருந்து உதிக்கும், ஒரு செங்கோல் இஸ்ரவேலிலிருந்து எழும்பும்” (எண்ணாகமம் 24:17) என்று பிலேயாமின் தீர்க்கதரிசனம் அறிவித்திருந்தது. வாக்குத்தத்தஞ்செய்யப்பட்ட ஒருவரின் வருகையின் முன்னடையாளமாக இது இருக்குமா? பரலோகம் அனுப்பியிருந்த ஒளியை அந்த அறிஞர்கள் வரவேற்றிருந்தனர். இப்பொழுது அது அவர்களின்மீது அதிகமான ஒளிக்கதிர்களை வீசியது. புதிதாகப் பிறந்திருக்கும் குழந்தையைத் தேடிச் செல்லும்படி அவர்கள் கனவுகளின்மூலமாக வழிநடத்தப்பட்டிருந்தனர். (4)

ஆபிரகாம் தான் சுதந்தரமாகப் பெறப்போகிற இடத்திற்குப் போகும்படி அழைக்கப்பட்டபோது, கீழ்ப்படிந்து, “தான் போகும் இடம் இன்னதென்று அறியாமல் புறப்பட்டுப்போனதைப்” போல (எபிரெயர் 11:8) வாக்குத்தத்தம் செய்யப்பட்ட தேசத்தை நோக்கி விசுவாசத்தினால் இஸ்ரவேலர்கள் மேகஸ்தம்பத்தின்கீழ் நடந்துசென்றதைப்போல, இந்தப் புறஜாதியினரும் வாக்குத்தத்தஞ்செய்யப்பட்ட இரட்சகரைக் காண முன்செல்லுகின்றனர். கீழ்த்திசை நாடு விலைமதிப்புமிக்க பொருட்களை ஏராளமாகக் கொண்டிருந்தது. அந்த அறிஞர்கள் வெறும் கையுடன்

புறப்படவில்லை. இளவரசர்களுக்கும் மேலான அந்தஸ்திலுள்ளவர்களுக்கும் வணக்கஞ்செய்யும் செயலின் அடையாளமாக அன்பளிப்புகள் வழங்குதல் வழக்கமாக இருந்தது. எந்த ஒருவருக்குள் உலகிலுள்ள அனைத்துக் குடும்பங்களும் ஆசீர்வதிக்கப்படவேண்டியதாக இருந்ததோ, அவருக்கு அந்த நாட்டின் மிக விலையுயர்ந்த பரிசுகள் வழங்கப்பட்டன. அந்த நட்சத்திரத்தைக் கண்டு, அதன் பாதையைப் பின்பற்றவேண்டியதிருந்ததால், இரவில் பயணஞ்செய்யவேண்டியது அவசியமாக இருந்தது. அவர்கள் தேடியிருந்த ஒருவரைப்பற்றின வழக்குச்சொற்களையும் தீர்க்கதரிசனங்களையும் குறித்து உரையாடிக்கொண்டு, அந்தப் பயணிகள் நேரத்தைக் கணக்கிட்டுச்சென்றனர். அவர்கள் ஓய்வெடுக்க அமர்ந்த ஒவ்வொரு இடைவேளையிலும், தீர்க்கதரிசனங்களை ஆராய்ந்தபோது, தாங்கள் தெய்வீகமாக நடத்தப்படுவதின் உணர்வு ஆழமாகியது. வெளிப்படையான அடையாளமாக அவர்கள்முன் அந்த நட்சத்திரம் தெரிந்திருந்தபோது, அவர்களது இருதயங்களில் பரிசுத்த ஆவியானவரால் உள்ளுணர்த்துதல் உண்டானதுடன், அது அவர்களது நம்பிக்கையைத் தூண்டியுமிருந்தது. அந்தப் பயணம் நெடியதாக இருந்தபோதிலும், அவர்களுக்கு மகிழ்ச்சி தருவதாக இருந்தது. (5)

அவர்கள் எருசலேமை அடைந்து, எருசலேம் கண்ணில்பட ஒலிவமலையிலிருந்து இறங்கியபோது, அவர்களது பாதை நெடுகிலும் அவர்களுக்கு வழிகாட்டியிருந்த அந்த நட்சத்திரம் எருசலேம் தேவாலயத்திற்கு மேலாக தங்கிநின்று, சிறிது நேரத்திற்குப்பின் அவர்களது காட்சியிலிருந்து மங்கிப்போயிற்று. ஒவ்வொரு நாவினுடைய மகிழ்ச்சிமிக்க பாரமாயிருக்கக்கூடிய மேசியாவின் பிறப்பை எதிர்நோக்கி அவர்கள் நம்பிக்கையுடனும் ஆர்வத்துடனும் முன்னேறினர். ஆனால் அவர்களது விசாரணைகள் பயனற்றதாக இருந்தன. பரிசுத்த நகருக்குள் நுழைந்து தேவாலயத்திற்குள் சென்றனர். பிறந்துள்ள அரசரைப்பற்றின அறிவு ஒருவருக்கும் இல்லாதிருந்ததைக் கண்டு அவர்கள் ஆச்சரியமடைந்தனர். அவர்களது விசாரணைகள் மகிழ்ச்சியின் உணர்வுகளை உண்டுபண்ண வில்லை. அதைவிட, அவமதிப்பும் ஆச்சரியமும் பயமும் கலந்ததாக இருந்தன. (6)

ஆசாரியர்கள் பாரம்பரிய முறைமைகளை மீண்டுமாக நடத்திக் கொண்டிருந்தனர். அவர்கள் கிரேக்கர்களையும் ரோமர்களையும் அஞ்ஞானிகளையும் மற்றவர்களைவிடப் பெரிய பாவிகள் என்று கண்டனஞ்செய்து, அதேநேரத்தில் அவர்களுடைய சொந்த மதத்தையும் பக்தியையும் மற்றவர்களுடையதைவிட உயர்த்தினர். அந்த ஞானிகள்

விக்கிரக ஆராதனைக்காரர்களாக இராமல், தேவனுடைய பார்வையில் அப்படிப்பட்டவர்களைவிட உயர்ந்தவர்களாகவும், தங்களை தேவனைத் தொழுபவர்கள் என்று கூறிக்கொள்ளுபவர்களைவிட உயர்ந்தவர்களாகவும் இருந்தனர். ஆனாலும் யூதர்களால் அவர்கள் அஞ்ஞானிகள் என்று எண்ணப்படுகின்றனர். பரிசுத்தக் கற்பனையின் பாதுகாவலர்களாக ஏற்படுத்தப்பட்டவர்களுக்கிடையிலும் அவர்களது ஆர்வமிக்க கேள்விகள் அனுதாபத்தின் தந்தியை மீட்டவில்லை. (7)

அந்த ஞானிகளின் வருகை எருசலேமெங்கிலும் விரைவாகப் பேசப்பட்டது. மாறுபட்ட நோக்குடைய அவர்களது பயணம், மக்களிடையே உணர்ச்சியை எழுப்பி, ஏரோது அரசனின் அரண்மனைக்குள்ளும் நுழைந்தது. சூழ்ச்சிக்காரனான அந்த ஏதோமியன், தனக்கு ஒரு போட்டி ஏற்படலாமென்ற அந்தச் செய்தியால் விழிப்படைந்தான். அரியணையை அடைந்த அவனது பாதை, எண்ணிலடங்காத கொலைகளினால் கறைபடிந்ததாக இருந்தது. அந்நிய வகுப்பைச் சேர்ந்தவனாக இருந்ததினால், அவன் எவர்களின்மீது ஆட்சிசெய்திருந்தானோ அவர்களால் வெறுக்கப்பட்டிருந்தான். ரோமாபுரியின் ஆதரவு ஒன்று மட்டுமே அவனது பாதுகாப்பாக இருந்தது. ஆனால் இந்தப் புதிய இளவரசர் மேலான உரிமை உடையவராக இருந்திருந்தார். அவர் அரசாள்வதற்கென்றே பிறந்தவராக இருந்தார். (8)

மக்களுக்கிடையில் குழப்பத்தைத் தூண்டிவிட்டு, அதனால் ஏரோதை சிங்காசனத்திலிருந்து நீக்கிவிட சூழ்ச்சிசெய்துகொண்டிருக்கின்றனர் என்று அந்த அந்நியர்களைப்பற்றி அவன் சந்தேகித்தான். அவன் தனது அவநம்பிக்கையை மறைத்துவைத்து, எப்படியிருந்தாலும் அவர்களது திட்டங்களைத் தனது மேலான தந்திரத்தினால் தோற்கடிக்கத் தீர்மானித்திருந்தான். முதன்மையான ஆசாரியர்களையும் வேதபாரகர்களையும் வரவழைத்து, அவர்களது புத்தகத்திலுள்ள போதனையின்படி, மேசியாவின் பிறப்பிடத்தைப்பற்றி விசாரித்தான். (9)

அரியணையை வஞ்சகமாக ஆக்கிரமித்திருந்தவனிடத்திலிருந்து உண்டான இந்த விசாரணை, அந்நியர்களால் வேண்டப்பட்டதினால் யூதர்களின் பெருமையைக் கூட்டியது. கவனமற்றவர்களாக அவர்கள் தீர்க்கதரிசனச் சுருள்களைத் திருப்பினது, பொறாமைமிக்க அந்தக் கொடுங் கோலனின் கோபத்தை அதிகப்படுத்தினது. அந்தக் காரியத்தைப்பற்றிய அறிவை அவர்கள் மறைக்க முயலுவதாக அவன் நினைத்தான். அவர்கள் கீழ்ப்படிய மறுக்கத் துணியாத ஒரு அதிகாரத்துடன் எதிர்பார்த்திருக்கும் அவர்களது அரசரின் பிறப்பிடத்தை உற்று ஆராய்ந்து அறிவிக்கும்படி கட்டளையிட்டான். யூதேயாவிலுள்ள பெத்லகேமில் அவர் பிறப்பார்.

ஏனெனில் தீர்க்கதரிசியால்: “எப்பிராத்தா என்னப்பட்ட பெத்லகேமே, நீ யூதேயாவிலுள்ள ஆயிரங்களுக்குள்ளே சிறியதாயிருந்தும், இஸ்ரவேலை ஆளப்போகிறவர் உன்னிடத்திலிருந்து புறப்பட்டு என்னிடத்தில் வருவார்; அவருடைய புறப்படுதல் அநாதிநாட்களாகிய பூர்வத்தினுடையது” (மீகா 5:2) என்று எழுதப்பட்டுள்ளது என்று அவர்கள் கூறினார்கள். (10)

இப்போது ஏரோது அந்த ஞானிகளை தனிப்பட்ட முறையிலான நேர்முகக்காணலுக்கு அழைத்தான். அவனது இருதயத்தில் பயமும் கோபமும் புயலாகக் கொந்தளித்துக்கொண்டிருந்தது. ஆனால் அவன் அமைதியான வெளித்தோற்றத்தை உடையவனாக இருந்து, அந்த அந்நியர்களை உபசரணையுடன் வரவேற்றான். எந்த நேரத்தில் அந்த விண்மீன் தோன்றியது என்று விசாரித்து, கிறிஸ்துவின் பிறப்பை மகிழ்ச்சியுடன் கொண்டாட விரும்புவதாகக் கூறிக்கொண்டான். “நீங்கள் போய், பிள்ளையைக்குறித்துத் திட்டமாய் விசாரியுங்கள்; நீங்கள் அதைக் கண்டபின்பு, நானும் வந்து அதைப் பணிந்துகொள்ளும்படி எனக்கு அறிவியுங்கள்” என்று சொல்லி அவர்களைப் பெத்லகேமிற்கு அனுப்பினான். (11)

எருசலேமிலிருந்த ஆசாரியர்களும் மூப்பர்களும் கிறிஸ்துவின் பிறப்பைப்பற்றித் தெரியாது என்று கூறியிருந்ததைப்போலவே, உண்மையில் அவர்கள் அதைப்பற்றின அறிவோடு இருக்கவில்லை. தூதர்கள் மேய்ப்பர்களைச் சந்தித்ததைப்பற்றிய அறிவிப்பு எருசலேமிற்கு எட்டியிருந்தது. ஆனால் ரபிமார்கள் அந்தச் செய்தி கவனிக்கப்படும்படி அவ்வளவு மதிப்புள்ளதல்ல என்பதுபோல நடந்துகொண்டனர். அவர்களால் கண்டிருந்திருக்க முடியும். அவர்களால் அந்த ஞானிகளை அவரது பிறப்பிடத்திற்கு நடத்த ஆயத்தமாயிருந்திருக்கவும் முடியும். ஆனால் அதற்குப் பதிலாக, அந்த ஞானிகள்: “யூதருக்கு ராஜாவாகப் பிறந்திருக்கிறவர் எங்கே? கிழக்கிலே அவருடைய நட்சத்திரத்தைக் கண்டு, அவரைப் பணிந்துகொள்ள வந்தோம்” என்று கூறி, மேசியாவின் பிறப்பைப்பற்றி அவர்களது கவனத்தை ஈர்த்தனர். (12)

இப்பொழுது அகந்தையும் பொறாமையும் ஒளிக்கு எதிராகக் கதவைச் சாத்திவிட்டது. மேய்ப்பர்களாலும் சாஸ்திரிகளாலும் கொடுக்கப்பட்ட அறிக்கைகள் மதிக்கப்பட்டிருந்தால், அது அந்த ஆசாரியர்களையும் ரபிமார்களையும் தேவனுடைய சத்தியத்திற்கு விளக்கம் கொடுப்பவர்கள் என்னும் அவர்களது உரிமையை உண்மையற்றதாக்கி, விரும்பத்தகாத ஒரு நிலைமையை உண்டுபண்ணியிருந்திருக்கும். அவர்களால் அஞ்ஞானிகள் என்று பெயரிடப்பட்டிருந்தவர்களால் போதிக்கப்பட்ட கல்விமான்களாயிருந்த இந்த மக்கள், கீழிறங்கமாட்டாதவர்களாக இருந்தனர். கல்வி அறிவில்லாத

மேய்ப்பர்களுடனும் அல்லது விருத்தசேதனமில்லாத புறஜாதியாருடனும் தொடர்புகொள்ள அவர்களைக் கடந்துசெல்ல தேவனால் முடியாது. எனவே அப்படி இருக்காது என்று அவர்கள் கூறிக்கொண்டனர். ஏரோது அரசனையும் எருசலேம் நகரையும் கிளர்ந்தெழச்செய்திருந்த அந்த அறிக்கையின்மீதான அவர்களது அவமதிப்பைக் காட்ட அவர்கள் தீர்மானித்திருந்தனர். அவைகள் உண்மைதானோ என்பதை அறிந்துகொள்ளக்கூட அவர்கள் பெத்லகேமிற்குச் செல்லமாட்டார்கள். இயேசுவைப்பற்றிய ஆர்வம் மதவெறியின் உணர்ச்சிக்கொந்தளிப்பு என்று மக்கள் கருதும்படி அவர்கள் நடந்தனர். ஆசாரியர்களும் ரபிமார்களும் கிறிஸ்துவை புறக்கணித்தது இங்கு ஆரம்பமாயிற்று. இரட்சகரின்மீதான அவர்களது அகந்தைமிக்க பிடிவாதம், இந்த இடத்திலிருந்து வெறுப்புமிக்க ஒன்றாக வளர்ச்சியடைந்தது. தேவன் புறஜாதியினருக்கு வாசலைத் திறந்துகொண்டிருந்தபோது, யூதத்தலைவர்கள் தாங்களாகவே தங்களுக்கு கதவுகளை மூடிக்கொண்டிருந்தனர். (13)

அந்த ஞானிகள் எருசலேமைவிட்டுத் தானாகப் பிரிந்துசென்றனர். அவர்கள் வாசலைக் கடந்தபோது, இரவின் நிழல் படியத்தொடங்கியிருந்தது. ஆனால் அவர்களுக்குப் பெரும் மகிழ்ச்சியை உண்டுபண்ணும் அந்த நட்சத்திரத்தை அவர்கள் மறுபடியும் கண்டனர். அதினால் பெத்லகேமுக்கு நடத்தப்பட்டனர். இயேசுவின் தாழ்மையான நிலைமையைப்பற்றி மேய்ப்பர்களுக்குக் கொடுக்கப்பட்டிருந்த தகவலைப்போன்ற ஒன்றை இவர்கள் பெற்றிருக்கவில்லை. நெடிய பயணத்திற்குப்பின் யூதத்தலைவர்களின் கவனமற்ற தன்மை அவர்களை ஏமாற்றமடையச் செய்திருந்தது. அவர்கள் எருசலேமைவிட்டுப் புறப்பட்டபோது, முன்னர் இருந்ததைவிடக் குறைவான நம்பிக்கையுடன் அந்த ஊருக்குள் நுழைந்தனர். பெத்லகேமில் புதிதாகப் பிறந்திருக்கும் அரசரைப் பாதுகாக்க எந்த இராஜாங்கக் காவலாளியும் நிறுத்தப்பட்டிருந்ததை அவர்கள் காணவில்லை. உலகப்பிரகாரமான மேன்மையை உடைய எந்த மனிதர்களும் அங்கிருக்கவில்லை. இயேசு ஒரு தொழுவத் தொட்டிலில் இருந்தார். கல்வி அறிவற்ற விவசாயிகளான அவரது பெற்றோர்கள்மட்டுமே, அவரது பாதுகாவலாளர்களாக இருந்தனர். "யாக்கோபின் கோத்திரங்களை எழுப்பவும், இஸ்ரவேலில் காக்கப்பட்டவர்களைத் திருப்பவும்" போகிறவர், "பூமியின் கடைசிபரியந்தமும்" இரட்சிப்பாயிருக்கும்படி, "ஜாதிகளுக்கு ஒளியாக" வைக்கப்பட்டவர் (ஏசாயா 49:6) என்று எவரைப்பற்றி எழுதப்பட்டிருக்கிறதோ அவர் இவர்தானோ? (14)

"அவர்கள் அந்த வீட்டுக்குள் பிரவேசித்து, பிள்ளையையும் அதின் தாயாகிய மரியாளையும் கண்டு, சாஷ்டாங்கமாய் விழுந்து அதைப் பணிந்துகொண்டு, தங்கள் பொக்கிஷங்களைத் திறந்து,

பொன்னையும் தூபவர்க்கத்தையும் வெள்ளைப்போளத்தையும் அதற்குக் காணிக்கையாக வைத்தார்கள்"–மத்தேயு 2:11. மிகுந்த தாழ்மைக்குள் போர்த்துவைக்கப்பட்டிருக்கும் இயேசுவில் அவர்கள் தெய்வீகத்தின் பிரசன்னத்தை இனங்கண்டுகொண்டார்கள். தங்களுடைய இரட்சகரென்று தங்களுடைய இருதயங்களை அவருக்குக் கொடுத்து, அதன்பின் பொன்னையும் தூபவர்க்கத்தையும் வெள்ளைப்போளத்தையும் அவர்களது காணிக்கையாக வைத்தார்கள். அவர்களது விசுவாசம் எப்படிப்பட்ட ஒன்றாக இருந்தது! கிழக்கிலிருந்து வந்த ஞானிகளைப்பற்றி பிற்காலத்தில் வந்த நூற்றுக்கதிபதியான ரோமனைப்பற்றிக் கூறியருந்ததுபோல் "இஸ்ரவேலருக்குள்ளும் நான் இப்படிப்பட்ட விசுவாசத்தைக் காணவில்லை" (மத்தேயு 8:10) என்று கூறப்பட்டிருந்திருக்கக்கூடும். (15)

இயேசுவைப்பற்றின ஏரோதின் திட்டத்தை ஞானிகள் ஆழமாக அறிந்திருக்கவில்லை. அவர்களது பயணத்தின் நோக்கம் நிறைவேறியதும் தங்களுடைய வெற்றியை ஏரோதுக்கு அறிவிக்கும் நோக்கத்துடன் எருசலேமிற்குத் திரும்ப அவர்கள் ஆயத்தமானார்கள். ஆனால் மேற்கொண்டு ஏரோதுடன் தொடர்புகொள்ளவேண்டாம் என்ற ஒரு தெய்வீகத் தூதைக் கனவில் பெற்றனர். எனவே எருசலேமிற்குச் செல்வதைத் தவிர்த்து, அவர்கள் வேறுவழியாகத் தங்களுடைய நாட்டைநோக்கிப் புறப்பட்டனர். (16)

அதைப்போலவே, பிள்ளையைத் தூக்கிக்கொண்டு மரியாளுடன் எகிப்திற்கு ஓடிப்போகும்படி யோசேப்பும் ஒரு எச்சரிக்கையைப் பெற்றான். "கர்த்தருடைய தூதன் சொப்பனத்தில் யோசேப்புக்குக் காணப்பட்டு: ஏரோது பிள்ளையைக் கொலைசெய்யத் தேடுவான்; ஆதலால் நீ எழுந்து, பிள்ளையையும் அதின் தாயையும் கூட்டிக்கொண்டு எகிப்துக்கு ஓடிப்போய், நான் உனக்குச் சொல்லும்வரைக்கும் அங்கே இரு என்றான்." யோசேப்பு எந்தவிதமான தாமதமுஞ்செய்யாமல், அதிகமான பாதுகாப்பைக் கருதி, இரவில் பயணமாகப் புறப்பட்டுச் சென்றான். (17)

அந்த ஞானிகளின்மூலமாக அவரது குமாரனின் பிறப்பைக்குறித்துக் கவனிக்கும்படி, தேவன் யூத ஜாதியினரை அழைத்திருந்தார். எருசலேமில் அவர்கள் நடத்திய விசாரணையினால் மக்களின் ஆர்வம் எழுப்பப்பட்டது. ஏரோதின் விரோதமும் மேசியாவைப்பற்றின தீர்க்கதரிசனங்களையும் அப்பொழுது நடந்திருந்த பெரும் நிகழ்ச்சியையும் கவனிக்கும்படி ஆசாரியர்கள் மற்றும் ரபிமார்களின் மனங்களை வற்புறுத்தியது. (18)

தெய்வீக ஒளியை உலகத்திலிருந்து தடுப்பதில் சாத்தான் வைராக்கியமுள்ளவனாயிருந்து, இரட்சகரை அழிக்க அவனது மிகமேலான உபாயங்களையெல்லாம் பயன்படுத்தினான். ஆனால் ஒருபோதும்

உறங்காதவரும் தூங்காதவருமானவர், தமது நேசகுமாரனை காவல் காத்துக்கொண்டிருந்தார். இஸ்ரவேலருக்காக வானத்திலிருந்து மன்னாவைப் பொழிந்திருந்தவர் எவரோ, பஞ்சகாலத்தில் எலியாவைப் போஷித்திருந்தவர் எவரோ, அவர் மரியாளுக்கும் அவளுடைய பிள்ளைக்கும் ஒரு அஞ்ஞானிகளின் நாட்டில் அடைக்கலங்கிடைக்க ஏற்பாடு செய்திருந்தார். அஞ்ஞான நாட்டிலிருந்து வந்த ஞானிகளால் கொடுக்கப்பட்ட பரிசுகளின்மூலமாக, எகிப்திற்குப் பயணஞ்செய்வதற்கும் அங்கு பரதேசிகளாக இருப்பதற்குமான பொருட்களைக் கொடுத்திருந்தார். (19)

மீட்பரை வரவேற்றவர்களுக்கு மத்தியில் அந்த ஞானிகள் முதலாவதானவர்களாக இருந்தனர். அவரது பாதங்களில் வைக்கப்பட்ட முதல் பரிசும் அவர்களுடையதாகவே இருந்தது. அந்தப் பரிசின்மூலம் அவர்களது ஊழியத்தின் சிறப்புரிமை எப்படிப்பட்டதாக இருந்தது! நேசிக்கும் இருதயத்திலிருந்து கொடுக்கப்படும் காணிக்கைக்கு, அவருக்கான சேவையின் மிகச்சிறப்பான திறமையை கொடுத்து கௌரவிக்க, தேவன் மகிழ்ச்சியுள்ளவராக இருக்கிறார். நாம் நமது இருதயங்களை இயேசுவிற்குக் கொடுத்தோமானால் நமது பரிசுகளையும் அவருக்குக் கொண்டுவருவோம். நம்மை நேசித்து, நமக்காகத் தம்மைத்தாமே கொடுத்தவருக்காக நாம் நமது பொன்னையும், வெள்ளியையும், விலைமதிப்புள்ள நமது உடைமைகளையும், நமது மேலான மனதையும், ஆவிக்குரிய இயற்கையான மனோசக்திகளையும் இலவசமாக பக்தியுடன் கொடுப்போம். (20)

அந்த ஞானிகள் திரும்பவும் வருவதற்காக எருசலேமிலிருந்த ஏரோது பொறுமையற்றவனாகக் காத்திருந்தான். காலங்கடந்து சென்றதினாலும், அந்த ஞானிகள் திரும்பவராததினாலும், ஏரோதின் சந்தேகம் கிளர்ந்தெழும்பியது. மேசியாவின் பிறப்பிடத்தைச் சுட்டிக்காட்ட ரபிமார்கள் விருப்பமற்றவர்களாக இருந்ததும், அந்த ஞானிகள் வேண்டுமென்றே அவனைத் தவிர்த்ததும், அவனது திட்டத்தை அவர்கள் அறிந்துவிட்டதின் அடையாளமாக இருந்தது.அந்தச் சிந்தனையால் அவன் வெறிபிடித்தவனானான். அவனது தந்திரம் தோற்றுப்போயிருந்தது. ஆனால் பலாத்காரமே மிஞ்சியிருந்தது. பிள்ளையாயிருந்த இந்த அரசருக்கு அவன் ஒரு பாடம் கற்பிக்க விரும்பினான். சிங்காசனத்தில் அமர்த்தும்படி அவர்கள் செய்யும் முயற்சியால், எதனை எதிர்நோக்கவேண்டியதுவரும் என்பதை அந்த அகந்தைமிக்க யூதர்கள் காணவேண்டும். (21)

இரண்டு வயதிற்குக் கீழ்ப்பட்ட பிள்ளைகள் அனைவரையும் கொலைசெய்யும்படியான உத்தரவுடன், இராணுவ வீரர்கள் பெத்லகேமிற்கு அனுப்பப்பட்டனர். “புலம்பலும் அழுகையும் மிகுந்த துக்கங்கொண்டாடலுமாகிய

கூக்குரல் ராமாவிலே கேட்கப்பட்டது; ராகேல் தன் பிள்ளைகளுக்காக அழுது, அவைகள் இல்லாதபடியால் ஆறுதலடையாதிருக்கிறாள்" என்று அறுநூறு ஆண்டுகளுக்குமுன் தீர்க்கதரிசிக்குக் காட்டப்பட்டிருந்த பயங்கரமான காட்சியை அமைதிமிக்க தாவீதின் ஊர் சாட்சியாகக் கண்டது. (22)

இந்த அழிவை யூதர்கள் அவர்களாகவே அவர்களின்மீது வரவழைத்திருந்தனர். அவர்கள் தேவனுக்குமுன்பாக விசுவாசத்துடனும் தாழ்மையுடனும் நடந்திருந்தார்களானால் ஒரு சிறப்பான அடையாளத்தினால் அந்த அரசனின் கோபத்தை அவர்களுக்குத் தீங்கில்லாததாக மாற்றியிருந்திருப்பார். ஆனால் அவர்கள் தங்களுடைய பாவங்களினால் தேவனைவிட்டுப் பிரிந்துசென்று, அவர்களது ஒரே கேடயமாயிருந்த பரிசுத்த ஆவியானவரை புறக்கணித்திருந்தனர். தேவனுடைய சித்தத்திற்கு இசைந்தவர்களாக இருக்கவேண்டும் என்ற வாஞ்சையுடன் அவர்கள் வேத வாக்கியங்களை ஆராயாதவர்களாக இருந்திருந்தனர். அவர்களை உயர்த்துவதாகப் பொருள் கொள்ளக்கூடிய தீர்க்கதரிசனங்களையும் மற்ற இனத்தவரையெல்லாம் தேவன் எந்தவிதமாகப் புறக்கணித்தார் என்பதைக் காட்டக்கூடியவைகளையும் மட்டுமே தேடுகிறவர்களாக இருந்தனர். அவருடைய எதிரிகளைக்கொன்று, அவருடைய கோபத்தில் அஞ்ஞானிகளைத் தமது காலின்கீழ் மிதிக்கும் அரசராக மேசியா வரவேண்டியவராக இருந்தார் என்பது அவர்களது அகந்தைமிக்க பெருமைகூருதலாக இருந்தது. இந்தவிதமாக அவர்கள் தங்களை ஆளுகை செய்திருந்தவர்களின் வெறுப்பை எழுப்பியிருந்தனர். கிறிஸ்துவின் ஊழியத்தை அவர்கள் தவறாக எடுத்துக்காட்டுவதின்மூலமாக, இரட்சகரின் அழிவை அவரைச் சூழவைப்பது சாத்தானின் நோக்கமாக இருந்தது. ஆனால் அதற்குப் பதிலாக அவர்களது சொந்தத் தலைகளின்மீதே அது திரும்பியது. (23)

ஏரோதின் கொடூரமான இந்தச் செயல், அவனது ஆட்சியை இருளடையச் செய்த இறுதியான ஒன்றாக இருந்தது. குற்றமற்றர்களைக் கொலைசெய்ததற்குப்பின் விரைவில் ஒருவராலும் மாற்றமுடியாத விதத்திலான அவனது வீழ்ச்சிக்குப் பணியும்படி அவன் தானாகவே வற்புறுத்தப்பட்டான். அவன் பயங்கரமான ஒரு மரணத்தினால் இறந்தான். (24)

இதுவரை எகிப்திலிருந்த யோசேப்பு, இப்பொழுது தேவனுடைய தூதனால் இஸ்ரவேல் நாட்டிற்குத் திரும்பும்படியான அழைப்பைப் பெற்றான். இயேசுவைப் பொறுத்தவரை தாவீதின் சிங்காசனத்திற்கு வாரிசாக அவர் இருக்கும்படி பெத்லகேமைத் தன் வீடாக்கிக்கொள்ள யோசேப்பு வாஞ்சித்திருந்தான். ஆனால் ஏரோதுக்குப்பதிலாக அவனது மகனான

அர்க்கியலாகு யூதேயாவில் ஆட்சிசெய்வதை அறிந்து, கிறிஸ்துவிற்கு எதிரான அவனது தகப்பனின் திட்டம் அந்த மகனால் செயல்படுத்தப்படலாம் என்று பயந்தான். ஏரோதின் மகன்கள் அனைவரிலும் அர்க்கிலாகு என்பவன் அவனது தந்தையின் குணத்தை அதிகமாக ஒத்திருந்தான். ஏரோதுக்குப்பின் அவன் அரசாங்கத்தைக் கைப்பற்றிய செயலுக்கு, எருசலேமில் ஏற்பட்ட கொந்தளிப்பும், ரோம சேவர்களால் ஆயிரங்களான யூதர்கள் கொலைசெய்யப்பட்டதும் அடையாளமாக அமைந்தது. (25)

மறுபடியும் யோசேப்பு ஒரு பாதுகாப்பான இடத்திற்கு நடத்தப்பட்டான். "நசரேயன் என்னப்படுவார் என்று, தீர்க்கதரிசிகளால் உரைக்கப்பட்டது நிறைவேறும்படி" அவன் தனது முந்தைய வீடாகிய நாசரேத்துக்குத் திரும்பிவந்தான். அங்கு ஏறத்தாழ முப்பது ஆண்டுகள் இயேசு வாழ்ந்தார். ஏரோதுடைய ஒரு மகனின் கட்டுப்பாட்டின்கீழ் கலிலேயா இருந்தது. ஆனால் யூதேயாவில் குடியிருந்தவர்களைவிட அதிகமான வெளிநாட்டினரின் கலப்பு அங்கு இருந்தது. இந்தவிதமாக, குறிப்பாக, யூதர்களைப்பற்றிய காரியங்களில் குறைவான ஆர்வமே இருந்திருந்தது. எனவே, இயேசுவைப்பற்றிய உரிமைபாராட்டல்கள் அதிகாரத்திலிருந்தவர்களின் பொறாமையை எழுப்புவது என்பது மிகக் குறைவானதாகவே இருந்தது. (26)

இரட்சகர் பூமிக்கு வந்தபோது, அவருக்குக் கொடுக்கப்பட்ட வரவேற்பு அப்படிப்பட்டதாக இருந்தது. குழந்தையாயிருந்த மீட்பருக்கு இளைப்பாறுதலையும் அல்லது பாதுகாப்பையும் தரக்கூடிய ஒரு இடமும் இல்லாமல் இருந்ததுபோலக் காணப்பட்டது. மனிதர்களின் இரட்சிப்பிற்கான பணியை முன்னேற்றத்துடன் எடுத்துச்சென்றுகொண்டிருந்தபோதும், அவரது நேச குமாரனுக்காக தேவனால் மனிதர்களை நம்ப முடியவில்லை. இயேசு அவரது ஊழியத்தை பூமியில் நிறைவேற்றித்தீருமளவும்—எவர்களை இரட்சிக்க அவர் வந்தாரோ, அவர்களது கரங்களினாலேயே மரிக்கும்வரைக்கும், அவருக்குப் பணிவிடைசெய்யவும் அவரைப் பாதுகாக்கவும் தேவன் தமது தூதர்களுக்குக் கட்டளையிட்டிருந்தார். (27) ★

# 7

# இயேசு ஒரு குழந்தையாக...!

**லூக்கா 2:39–40**

**(The Desire of Ages, pp. 68–74)**

இயேசுவின் பிள்ளைப்பருவமும் வாலிபப்பருவமும் ஒரு மலைநாட்டிலிருந்த கிராமத்தில் செலவிடப்பட்டது. அவரது பிரசன்னத்தின்மூலமாக மேன்மைப்படுத்தப்படாத ஒரு இடம்கூட உலகில் இல்லை. ஒரு விருந்தினாராக அவரை ஏற்றுக்கொள்வதின்மூலம் அரசர்களின் அரண்மனைகள் ஒரு வாய்ப்பினை அடைந்திருக்கக்கூடும். ஆனால் அவரது வீடு அறியப்படாததாகவும் பழிக்கப்பட்டதாகவுமிருந்த நாசரேத்திலுள்ள ஒன்றாக இருக்கும்படி அவர் செல்வந்தர்களின் வீடுகளையும் அரச மண்டபங்களையும் புகழ்வாய்ந்த கற்றோரின் இருப்பிடங்களையும் கடந்துசென்றார். (1)

"இயேசுவானவர் ஞானத்திலும், வளர்த்தியிலும், தேவகிருபையிலும், மனுஷர் தயவிலும் அதிகமதிகமாய் விருத்தியடைந்தார்" (லூக்கா 2:52) என்ற அவரது ஆரம்பகால வாழ்க்கையைப்பற்றின சுருக்கமான குறிப்பு மிகவும் ஆச்சரியமானது. அவரது பிதாவின் முகத்திலுள்ள சூரியஒளிபோன்ற ஒளியில், அவரது மனம் அவரது வயதுக்கு அப்பாற்பட்ட சிந்தனையும் ஞானமும் மிக்கதாகவும், செலாற்றலையும் துருவி ஆராயும் தன்மையையும் உடையதாகவும் இருந்தது. அப்படியிருந்தபோதிலும், அவரது பண்பு அதன் அழகில் சீரானதாக இருந்தது. மனம், உடல் ஆகியவைகளின் வல்லமை அவரது குழந்தைப் பருவத்தின் நியதிகளுக்கிசைவாகப் படிப்படியாக முன்னேறியது. (2)

இயேசு ஒரு பிள்ளையாக அருமையான இயல்பை உடையவராக இருந்திருந்தார். விருப்பமிக்க அவரது கரங்கள் எப்போதும் பிறருக்கு உதவ ஆயத்தமாக இருந்தன. எதுவும் சீர்குலைக்காத பொறுமையையும் நேர்மையையும், ஒருபோதும் தியாகஞ்செய்யாத மெய்த்தன்மையையும் அவர் காட்டியிருந்தார். பாறையைப்போன்ற உறுதியான கொள்கையோடு இருந்த அவரது வாழ்க்கை, சுயநலமற்ற பண்பை வெளிப்படுத்தினது. (3)

மிக ஆழ்ந்த ஆர்வத்துடன், அவரது வல்லமைகள் விரிவடைவதை அவரது தாய் கவனித்து, அவரது குணம் பூரணமானதாக இருப்பதையும் கண்டாள். எதையும் ஏற்கும் ஒளிமிக்க அவரது மனதை பெரும் மகிழ்ச்சியுடன் உற்சாகப்படுத்த அவள் வகைதேடினாள். தேவன் ஒருவரை மட்டுமே தந்தையாக உரிமைபாராட்டும் இந்தச் சிறுவனின் முன்னேற்றத்தில் பரலோக ஏதுகரங்களுடன் ஒத்துழைக்க ஆவியானவரின்மூலமாக அவள் ஞானத்தைப் பெற்றாள். (4)

ஆரம்பகாலத்திலிருந்தே இளைஞர்களுக்குக் கல்விபுகட்டுவதில் விசுவாசமிக்க இஸ்ரவேலர்கள் மிகுந்த கவனமுடையவர்களாக இருந்தனர். பிள்ளைகள் சிறுவர்களாக இருக்கும்போதே, கர்த்தருடைய சிறப்பியல்பையும் மகத்துவத்தையும், அவரது பிரமாணத்தில் வெளிப்படுத்தப்பட்டிருந்த விதத்திலும் இஸ்ரவேலின் வரலாற்றில் காணப்பட்டிருந்தவிதத்திலும் கற்பிக்கவேண்டும் என்று கர்த்தர் வழிநடத்தியிருந்தார். பாடலும் ஜெபமும் வேதபாடங்களும் திறக்கின்ற மனதிற்குப் பொருத்தமாக அமைக்கப்படவேண்டும். தேவப்பிரமாணம் அவரது பண்பின் எடுத்துக்காட்டு என்றும், அதின் கொள்கையை அவர்கள் இருதயத்தில் ஏற்றுக்கொள்ளும்போது தேவனின் சாயல் மனதிலும் ஆத்துமாவிலும் வரையப்படுமென்றும், தாய் தகப்பன்மார்கள் அவர்களது பிள்ளைகளுக்குப் போதிக்க வேண்டியவர்களாக இருந்தனர். அதிகமான போதனைகள் வாய்மொழியின்மூலமாகவே இருந்தன. எனினும் இளைஞர்கள் எபிரெய மொழியை வாசிக்கக் கற்றிருந்தனர். பழைய ஏற்பாட்டுச் சுருள்கள் அவர்கள் வாசிப்பதற்கென்று திறக்கப்பட்டிருந்தன. (5)

கிறிஸ்துவின் காலத்தில், இளைஞர்களின் சமயப்போதனைகளுக்கு ஏற்பாடு செய்யாதிருந்த ஊர்களும் நகரங்களும் தேவனது சாபத்திற்கு உட்பட்டிருந்ததாகக் கருதப்பட்டிருந்தன. அப்படியிருந்தும் அந்தப் போதனைகள் சாதாரணமாயிருந்தன. வேதவாக்கியங்களை பெருமளவிற்கு பாரம்பரியங்கள் அகற்றியிருந்தன. உண்மையான கல்வி: "தம்மை அவர்கள் தடவியாகிலும் கண்டுபிடிக்கத்தக்கதாகத் தம்மைத் தேடும்படிக்கு" (அப்போஸ்தலர் 17:27) இளைஞர்களை நடத்தியிருக்கும். ஆனால் யூத ஆசிரியர்கள் சடங்குகள்பற்றிய காரியங்களிலேயே கவனத்தைச் செலுத்தியிருந்தனர். கற்பவனுக்கு எந்தவிதமான நன்மையையும் தராத பொருட்களினாலும். உன்னதத்திலுள்ள உயர்ந்த பள்ளியால் அங்கீகரிக்கப்படாததாக இருந்தவைகளினாலும் மனம் நிறைந்திருந்தது. அந்தக் கல்விமுறையில் தேவனை நேரடியாக ஏற்றுக்கொள்ளுவதினால் உண்டாகும் அனுபவத்திற்கு இடமில்லாமலிருந்தது. புறம்பான காரியங்களில் நாள்முழுவதும் ஈடுபட்டிருந்ததினால் தேவனுடன் செலவிட மாணவர்களுக்கு

அமைதியான நேரம் இல்லாமல் இருந்தது. இருதயத்தில் பேசும் அவரது சத்தத்தை அவர்கள் கேட்கவில்லை. அறிவைத் தேடும் அவர்களது பணியில் ஞானத்தின் ஆதாரத்தைவிட்டு அவர்கள் விலகிச்சென்றிருந்தனர். தேவனுக்குச் சேவைசெய்வதில் முக்கியமானவைகள் அலட்சியப்படுத்தப்பட்டிருந்தன. பிரமாணத்தின் கொள்கைகள் இருளடைந்திருந்தன. மிக மேலான கல்வியென்று அவர்கள் கருதியிருந்தது, உண்மையான முன்னேற்றத்திற்குப் பெரும் தடையாக இருந்தது. ரபிமார்களின் பயிற்சியின்கீழ் இளைஞர்களின் வல்லமைகள் அடக்கி ஒடுக்கப்பட்டிருந்தன. அவர்களது மனங்கள் சுருங்கியும் குறுகியும் போயின. (6)

சிறுபிள்ளையாயிருந்த இயேசு, போதனைகளை ஜெபாலயப் பள்ளிகளிலிருந்து பெற்றுக்கொள்ளவில்லை. அவரது அன்னையே அவரது முதல் மானுட ஆசிரியையாக இருந்தாள். பரலோகக் காரியங்களைப்பற்றி அவர் அவளது உதடுகளிலிருந்தும் தீர்க்கதரிசிகளின் (தோல்) சுருள்களிலிருந்தும் கற்றார். இஸ்ரவேலருக்காக அவர் மோசேயிடம் பேசியிருந்த அதே வார்த்தைகள், இப்பொழுது அவரது அன்னையின் முழங்காலில் வைத்து அவருக்குக் கற்பிக்கப்பட்டன. சிறுவனாக இருந்த அவர் இளைஞனாக வளர்ந்தபோது, ரபிமார்களின் பள்ளிகளை தேடவில்லை. அப்படிப்பட்ட ஆதாரங்களிலிருந்துள்ள கல்வியைப் பெற்றுக்கொள்ளவேண்டிய அவசியம் அவருக்கு ஏற்படவில்லை. ஏனெனில் தேவன் அவரது ஆசிரியராக இருந்தார். (7)

“இவர் கல்லாதவராயிருந்தும் வேத எழுத்துக்களை எப்படி அறிந்திருக்கிறார்” (யோவான் 7:15) என்று இரட்சகரின் ஊழியத்தின்போது கேட்கப்பட்ட கேள்வி, இயேசு வாசிக்கமுடியாதவராக இருந்தார் என்று காட்டாமல், அவர் சதாரணமான ரபிமார்களின் கல்வியைப் பெறாதவராக இருந்தார் என்பதைச் சுட்டிக்காட்டுகிறது. வேத வாக்கியங்களுடனுள்ள அவரது நெருக்கமான அறிமுகம், அவரது ஆரம்பகால வருடங்கள் தேவனுடைய வார்த்தையைக் கற்பதற்கென்று எந்தவிதமாகச் செலவிடப்பட்டது என்பதையும், நாம் அறிவைப் பெற்றுக்கொள்ளுவதைப்போலவே அவரும் பெற்றுக்கொண்டார் என்பதையும் காட்டுகிறது. தேவனுடைய படைப்பின் செயல்கள் அவருக்குமுன் திறந்துவைக்கப்பட்டிருந்த மாபெரும் நூலகமாயிருந்தது. சகலத்தையும் படைத்தவராக அவரே பூமியிலும் கடலிலும் வானத்திலும் அவரது சொந்தக் கரத்தினால் எழுதப்பட்டிருந்த பாடங்களைக் கற்றார். பரிசுத்தமற்ற உலகத்தின் போக்கைப்பற்றிமட்டுமல்லாமல், அறிவியல் ரீதியான அறிவையும் அவர் இயற்கையிலிருந்து திரட்டியிருந்தார். செடிகள், விலங்குகள் ஆகியவைகளின் வாழ்க்கையைப்பற்றியும் மனிதரின்

வாழ்க்கையைப்பற்றியும் அவர் ஆராய்ந்தார். அவரது இளம் வயதிலிருந்து ஒரே நோக்கத்தைக் கொண்டிருந்தார். பிறரை ஆசீர்வதிக்க அவர் வாழ்ந்தார். அதற்கான ஆதாரங்களை அவர் இயற்கையிலிருந்து பெற்றுக்கொண்டார். தாவரங்களின் வாழ்க்கையையும் விலங்குகளின் வாழ்க்கையையும் ஆராயவே, புதிய யோசனைகளும் பாதைகளும், அவைகளுக்கான வழிவகைகளும் அவரது எண்ணத்தில் பளிச்சிட்டன. தேவனுடைய ஜீவனுள்ள கட்டளைகளை மக்கள்முன் வைப்பதற்காக, காணக்கூடியவைகளிலிருந்து உதாரணங்களை அவர் தொடர்ந்து சேகரிக்க வகைதேடிக்கொண்டிருந்தார். இயற்கையின் செல்வாக்கிற்கு அவரது ஆவி எந்தவிதமாகத் திறந்திருந்தது! அவரது அன்றாட வாழ்க்கையின் சுற்றுப்புறங்களிலிருந்து ஆவிக்குரிய பாடங்களை அவர் எந்தவிதமாகச் சேகரித்திருந்தார் என்பதை, அவரது ஊழியத்தின்போது அவர் கற்றுக்கொடுக்க விரும்பியிருந்த சத்தியத்தின் பாடங்கள் காட்டுகின்றன. இவ்வாறாக பொருட்களின் காரணங்களைப்பற்றிப் புரிந்துகொள்ள அவர் முயன்றபோது, தேவனுடைய வார்த்தையிலும் அவரது செயல்களிலும் உள்ள முக்கியத்துவம் விளக்கப்பட்டது. பரலோகவாசிகள் அவருக்குச் சேவை செய்பவர்களாக இருந்தனர். பரிசுத்தமான எண்ணங்களையும் தொடர்புகளையும் வளர்த்துக்கொள்வது அவரது பழக்கமாக இருந்தது. முதன்முதலில் நுண்ணறிவு அவரில் உதித்ததுமுதல் தொடர்ச்சியாக ஆவிக்குரிய கிருபையிலும் சத்தியத்தைப்பற்றிய அறிவிலும் அவர் வளர்ந்துகொண்டிருந்தார். (8)

இயேசு அடைந்துகொண்டதைப்போலவே, ஒவ்வொரு சிறுவனும் சிறுமியும் அறிவை அடைந்துகொள்ள இயலும். தேவனுடைய வார்த்தையின்மூலமாக நமது பரலோகத்தந்தையுடன் அறிமுகமானவர்களாக இருக்க நாம் முயலும்போது, தேவதூதர்கள் அருகில் வருவார்கள். நமது எண்ணங்கள் பலப்படுத்தப்படும். நமது பண்பு உணர்வடைந்து தூய்மையாக்கப்படும். நமது மீட்பரைப்போலவே பெருமளவிற்கு நாம் மாறிவிடுவோம். இயற்கையிலுள்ள அழகும் மதிப்பும் வாய்ந்தவைகளை நாம் நோக்கும்போது, நமது பற்றுதல் தேவனிடத்திற்குச் செல்லுகிறது. ஆவி வியப்பார்வம்கொள்ளும்போது, முடிவில்லாத தேவனின் செயல்களிலுள்ள தொடர்பின்மூலமாக ஆத்துமா வலிமையடைகிறது. ஜெபத்தின்மூலமாக தேவனுடனுள்ள தொடர்பினால், மனதின் திறனையும் ஆவிக்குரிய திறனையும் முன்னேற்றமடையச்செய்து, ஆவிக்குரிய காரியங்களில் சிந்தனையை வைக்க நாம் பழகும்போது, ஆவிக்குரிய வல்லமைகள் பெலனடைகின்றன. (9)

இயேசுவின் வாழ்க்கை தேவனுடன் இசைவுள்ள வாழ்க்கையாக இருந்தது. அவர் ஒரு சிறுபிள்ளையாக இருந்தபோது, சிறுபிள்ளையைப்போல

எண்ணி, சிறுபிள்ளையைப்போலப் பேசினார். ஆனால் அவருக்குள் இருந்த தேவசாயலை பாவத்தின் சாயல்கள் எதுவும் களங்கப்படுத்தவில்லை. அப்படியிருந்தபோதிலும் சோதனையிலிருந்து தவிர்க்கப்பட்டவராக அவர் இருக்கவில்லை. நாசரேத்தில் வாழ்ந்திருந்தவர்கள் அவர்களது தீய செயல்களுக்குப் பழமொழியாக இருந்திருந்தனர். “நாசரேத்திலிருந்து யாதொரு நன்மை உண்டாகக்கூடுமா” (யோவான் 1:46) என்ற நாத்தான்வேலின் கேள்வியிலிருந்து அவர்களிருந்த கீழான நிலையைப்பற்றின அனுமானம் பொதுவாக அறியப்படுகிறது. இயேசு அவரது பண்பு சோதிக்கப்படக்கூடிய இடத்தில் வைக்கப்பட்டார். அவரது தூய்மையைக் காத்துக்கொள்ள அவர் எப்பொழுதும் ஆயத்தமான நிலையில் இருக்கவேண்டியது அவருக்கு அவசியமாக இருந்தது. சிறு வயதிலும் இளமையிலும் மனித நிலைமையிலும் அவர் நமக்கு ஒரு உதாரணமாக இருக்கும்படியாக, நாம் சந்திக்கவேண்டிய சகல போராட்டங்களுக்கும் அவர் கீழ்ப்படுத்தப்பட்டார். (10)

நாசரேத்தின் பிள்ளையை மேற்கொள்ளும் சாத்தானின் முயற்சியில் அவன் களைப்பற்றவனாக இருந்தான். இயேசுவின் ஆரம்பகாலத்திலிருந்தே அவர் தூதர்களால் காவல்செய்யப்பட்டிருந்தார். அப்படியிருந்தபோதிலும், அவரது வாழ்க்கை அந்தகார சக்திகளுக்கெதிரான போராட்டமுடைய ஒன்றாக இருந்தது. தீமை என்னும் குறைபாடில்லாததாக ஒரு ஜீவன் பூமியில் இருப்பது அந்தகாரப் பிரபுவிற்குக் குழப்பமானதாகவும் எதிரானதாகவும் இருந்தது. இயேசுவைக் கண்ணியில் அகப்படுத்த அவன் செய்யாத முயற்சிகள் எதுவும் இருக்கவில்லை. நமது இரட்சகர் சோதனைக்கு எதிராக நடத்திய பயங்கரமான போராட்டங்களைப் போன்ற போராட்டங்களுக்கிடையில் வாழும்படி எந்த மனிதப்பிள்ளையும் ஒருபோதும் அழைக்கப்படமாட்டாது. (11)

இயேசுவின் பெற்றோர்கள் அவர்களது அன்றாட உழைப்பினைச் சார்ந்திருந்த மிகுந்த ஏழைகளாக இருந்தனர். வறுமை, தனிமை, சுயமறுப்பு ஆகியவைகளுடன் அவர் பழக்கப்பட்டவராக இருந்தார். இந்த அனுபவம் அவருக்கு ஒரு பாதுகாப்பாக இருந்தது. பணி நிறைந்த அவரது வாழ்க்கையில் சோதனைகளை வரவேற்கும் சோம்பேறித்தனமான வினாடிகள் இருக்கவில்லை. முடிந்தவரைக்கும் அவர் சோதனைகளுக்கெதிரான கதவை மூடியிருந்தார். கெடுக்கும் தோழமைகளை வரவேற்கக்கூடிய பாதையாக குறிக்கோளற்ற நேரம் இருக்கவில்லை. ஆதாயம், சந்தோஷம், கைதட்டல் அல்லது கண்டனஞ்செய்யப்படல்—இவை எதுவும் தவறான செயல்களுக்கு அவரை இணங்கவைக்கமுடியவில்லை. தீமையை அறிந்துகொள்ள அவர் ஞானமிக்கவராகவும், அதை எதிர்க்க பலமிக்கவராகவும் இருந்தார். (12)

பூமியிலிருந்தவர்களில் அவர் ஒருவர் மட்டுமே ஒருபோதும் பாவஞ்செய்யாதவராக இருந்தார். அப்படியிருந்தும் துன்மார்க்கராயிருந்த நாசரேத்து ஊர் மக்களுக்கிடையில் ஏறத்தாழ முப்பது வருடங்கள் அவர் வாழ்ந்திருந்தார். குற்றமில்லாத ஒரு வாழ்க்கையை நடத்துவதற்கு இடம், நல்ல வாய்ப்புகள் அல்லது செழுமை ஆகியவைகளைச் சார்ந்திருக்கவேண்டியதாக உள்ளது என்று நினைப்பவர்களுக்கு எதிராக, இந்த உண்மை ஒரு கடிந்துகொள்ளுதலாக உள்ளது. சோதனை, வறுமை, எதிர்ப்பு ஆகியவைகளே தூய்மையையும் உறுதியையும் வளர்க்கத் தேவையான ஒழுக்கங்களாக உள்ளன. (13)

இயேசு ஒரு குடியானவருடையக் குடும்பத்தில் வாழ்ந்து, அவரது பங்காக இருந்த குடும்பப் பாரங்களைச் சுமப்பதில் விசுவாசமும் மகிழ்ச்சியும் மிக்கவராகச் செயலாற்றினார். அவர் பலத்தின் சேனைத்தலைவராக இருந்திருந்தார். அவரது வார்த்தைகளை நிறைவேற்றுவதில் தூதர்கள் மகிழ்ச்சியுள்ளவர்களாக இருந்திருந்தனர். இப்பொழுது அவர் வேலை செய்ய விருப்பமுள்ள ஒரு வேலைக்காரராகவும், அன்பும் கீழ்ப்படிதலுமுள்ள ஒரு மகனாகவும் இருந்திருந்தார். அவர் ஒரு தொழிலைக் கற்று, யோசேப்பின் தச்சுப்பட்டறையில் அவரது சொந்தக் கரங்களால் வேலைசெய்தார். சாதாரணமான ஒரு வேலைக்காரனின் உடையில் அந்தச் சிற்றூரின் தெருக்களின் வழியாக, அவரது தாழ்மையான பணிக்கு அவர் போய்க்கொண்டும் வந்துகொண்டுமிருந்தார். அவரது பாரத்தைக் குறைப்பதற்காகவோ அல்லது வேலையை எளிதாக்கிக்கொள்வதற்காகவோ அவரது தெய்வீக வல்லமையை அவர் பயன்படுத்தவில்லை. (14)

சிறுவனாகவும் வாலிபனாகவும் இருந்தபோது உழைத்ததினால் அவரது மனமும் உடலும் முன்னேற்றமடைந்திருந்தது. அவரது சரீர வேலையை எல்லா வழிகளிலும் செய்வதற்கென்று அவைகளை ஆரோக்கியத்தோடு காத்துக்கொண்டார். கருவிகளைப் பயன்படுத்துவதில் குறைபாடுள்ளவராக இருக்க அவர் விரும்பவில்லை. அவர் தமது பண்பில் பரிபூரணராக இருந்ததைப்போலவே, ஒரு தொழிலாளி என்னும் நிலையிலும் பரிபூரணராக இருந்தார். தமது வேலைகள் மிகச் சரியானவிதத்திலும் முழுமையானவிதத்திலும் செய்யப்படவேண்டும் என்றும், அப்படிப்பட்ட வேலை மதிப்பிற்குரியதென்றும், நாம் விருப்பமுள்ள வேலைக்காரர்களாக இருப்பது நமது கடமை என்றும் அவர் தமது சொந்த உதாரணத்தினால் நமக்குக் கற்றுக்கொடுத்தார். வழ்க்கையின் பாரத்தைச் சுமக்கும் அவர்களுடைய பங்கை ஏற்கும்படி இளைஞர்களுக்குக் கொடுக்கப்படும் பயிற்சி, உடல் நலத்தைத் தந்து, ஒவ்வொரு திறனையும் முன்னேற்றமடையச்செய்யுமென்று

கரங்களின் உழைப்பு கற்றுக்கொடுக்கிறது. தங்களுக்கும் பிறருக்கும் நன்மை பயக்கக்கூடிய எதையாவது செய்ய அனைவரும் அறிந்துகொள்ளவேண்டும். தேவன் வேலையை ஒரு ஆசீர்வாதமாக ஏற்படுத்தியிருக்கிறார். ஊக்கம் தளராது உழைக்கும் வேலைக்காரர் மட்டுமே வாழ்க்கையின் உண்மையான மகிமையையும் மகிழ்ச்சியையும் காண்கிறார்கள். தந்தை தாயின் பாரங்களில் பங்குகொண்டு, வீட்டு வேலைகளில் தங்களுக்குள்ள கடமைகளில் தங்களது பங்கை மகிழ்ச்சியுடன் செய்யும் சிறுபிள்ளைகளின்மீதும் வாலிபர்களின்மீதும் தேவனுடைய அன்பின் உறுதியோடு கூடிய அங்கீகாரம் தங்கியிருக்கிறது. அப்படிப்பட்ட சிறுவர்கள் அவர்களது வீடுகளிலிருந்து சமுதாயத்திற்குப் பயனுள்ளவர்களாக வெளியே செல்லுவார்கள். (15)

இயேசுவின் பூலோக வாழ்க்கை முழுவதிலும் அவர் அக்கறையுள்ள தொடர்ச்சியான பணியாளராக இருந்தார். அவர் மிக அதிகமானதை எதிர்பார்த்ததினால் அதிகமாக முயற்சி செய்தார். “பகற்காலமிருக்குமட்டும் நான் என்னை அனுப்பினவருடைய கிரியைகளைச் செய்யவேண்டும்; ஒருவனும் கிரியை செய்யக்கூடாத இராக்காலம் வருகிறது” (யோவான் 9:4) என்று அவர் அவரது ஊழியத்திற்குள் பிரவேசித்தபின் கூறினார். அவரது பின்னடியார்களாக இருக்கிறோம் என்று சொல்லிக்கொள்பவர்களைப்போல, இயேசு கவனத்தோடும் பொறுப்போடும் இருப்பதைத் தட்டிக்கழிக்கவில்லை. அநேகர் பலவீனர்களாகவும் திறமையற்றவர்களாகவும் இருப்பதற்கு இந்தவிதமான ஒழுக்கத்தைவிட்டு விலகிச்செல்லுவதே காரணமாக உள்ளது. இப்படிப்பட்டவர்கள் மிகவும் அருமையான இனிமையான பண்புகளை உடையவர்களாக இருக்கலாம். ஆனால் துன்பங்களைச் சந்திக்க நேரிடும்போதும், தடைகள் வெற்றிபெறுவதைப்போல எழும்பும்போதும் அவர்கள் பலமற்றவர்களாக உள்ளனர். கிறிஸ்துவில் வெளிக்காட்டப்பட்டிருந்த தீர்மானமும் பலமும் திடத்தன்மையுமிக்க பண்புகளும் அதேவிதமான ஒழுக்கத்தினால் நமக்குள்ளும் முன்னேற்றமடையச் செய்யப்படவேண்டும். அவர் பெற்றுக்கொண்ட கிருபை நமக்குமுள்ளதாக இருக்கிறது. (16)

மனிதர் மத்தியில் இரட்சகர் வாழ்ந்திருந்த காலமெல்லாம் ஏழைகளின் துயரத்தில் பங்குகொண்டிருந்தார். அவர்களது துன்பங்களையும் கடுமையான சூழ்நிலைகளையும் தமது அனுபவத்தில் அறிந்திருந்ததினால் தாழ்மையான வேலைக்காரர்கள் அனைவரையும் ஆறுதல்படுத்தவும் தைரியமூட்டவும் அவரால் முடிந்தது. இயேசுவின் வாழ்க்கையிலுள்ள போதனைகளைப்பற்றிய உண்மையான கருத்தையுடையவர்கள், ஏழை—பணக்காரர் என்னும் வகுப்பினருக்கிடையில் வேற்றுமை உண்டாயிருக்கவேண்டும் என்ற உணர்ச்சியுடையவர்களாகவும் ஒருபோதும் இருக்கமாட்டார்கள். (17)

மகிழ்ச்சியும் சாமர்த்தியமும் நிறைந்தவராக தமது வேலையை நடத்திச்சென்றார். வேதாகமம் கூறும் கடவுள்கொள்கையை வீட்டிற்குள்ளும் பணிமனைக்குள்ளும் உலகியல் சார்ந்த தொழிலின் கடுமையான சிரமங்களின் மத்தியிலும் சகித்திருந்தார். இந்த நிலையிலும் தேவனுடைய மகிமையின்மீதே ஒரே நோக்கத்தோடு தமது கண்களைப் பதித்திருந்தார். ஆவிக்குரிய தன்மையும் தேவையாக உள்ளது. இந்த இடத்தில்தான் கிறிஸ்து உதவியாளராக இருந்தார். பரலோகக் காரியங்களுக்காகச் செலவிட நேரமில்லாதவராகவோ சிந்தனையற்றவராகவோ முற்றிலுமாக உலகக் கவலையில் மூழ்கினவராகவோ அவர் ஒருபோதும் இருக்கவில்லை. சங்கீதங்களையும் பரலோகப் பாடல்களையும் பாடுவதினால், அவரது இருதயத்தின் மகிழ்ச்சியை அவர் அடிக்கடி வெளிக்காட்டியிருந்தார். தேவனுக்குத் துதியையும் நன்றியையும் செலுத்துவதில் அவரது குரல் உயர்ந்து தொனிப்பதை நாசரேத்தில் வாழ்ந்திருந்த மக்கள் கேட்டனர். பாடலின்மூலமாக அவர் பரலோகத்துடன் தொடர்புடையவராக இருந்தார். அவரது தோழர்கள் தங்களது உழைப்பினால் ஏற்பட்ட களைப்பைப்பற்றி அவரிடம் குறைபட்டபோது, அவரது உதடுகளிலிருந்து புறப்பட்ட இனிமையான இசையினால் அவர்களை உற்சாகப்படுத்தினார். தீயதூதர்களை அப்புறப்படுத்துவதுபோல அவரது துதி காணப்பட்டது. அந்த இடம் தூபத்தைப்போன்ற சுகந்த வாசனையால் நிரம்பியது. அதைக் கேட்டவர்களின் மனங்கள் அவர்களது சொந்த நாட்டைவிட்டு வந்ததைப்போன்று, இந்த பூலோக வாழ்வினின்று பரலோக வீட்டிற்கு எடுத்துசெல்லப்பட்டதைப்போன்று இருந்தது. (18)

இந்த உலகத்திற்கு ஆரோக்கியம் அருளும் இரக்கத்தின் ஊற்றாக இயேசு இருந்தார். தனிமைப்படுத்தப்பட்டிருந்த அவரது நாசரேத்து வாழ்க்கை முழுவதிலும், அனுதாபம், மென்மை என்னும் மின்னோட்டமாக அவரது ஜீவன் பாய்ந்துசென்றது. முதியோர்கள், துயரமிக்கவர்கள், பாவப்பாரமிக்கவர்கள், மாசற்ற மகிழ்ச்சியுடன் விளையாடியிருந்த சிறுவர்கள், ஆகிய அனைவரும் அவரது பிரசன்னத்தில் மகிழ்ச்சியைக் கண்டிருந்தனர். மேலும் தோப்புகளில் காணப்பட்டிருந்த சிறு பிராணிகள், பாரஞ்சுமந்த பொறுமைமிக்க விலங்குகள் ஆகிய அனைத்தும் அவரது பிரசன்னத்தில் மகிழ்ச்சியோடிருந்தன. எவர் தமது வார்த்தையின் வல்லமையால் உலகங்களைத் தூக்கி நிறுத்தியிருந்தாரோ அவர், காயமடைந்த ஒரு பறவையின் துன்பத்தைத் தீர்ப்பதற்காகக் கீழிறங்குபவராகவுமிருந்தார். அவரது கவனத்திற்கு உட்படாத ஒன்றுமே இருக்கவில்லை. அவர் ஊழியஞ்செய்யக்கூடாத அளவிற்கு வெறுத்து ஒதுக்கத்தக்கதான நிலையில் எதுவும் இல்லை. (19)

இவ்வாறாக, இயேசுவானவர் ஞானத்திலும் வளர்த்தியிலும் தேவகிருபையிலும் மனுஷர் தயவிலும் அதிகமதிகமாக விருத்தியடைந்தார். அவர் அனைவரிடமும் அனுதாபம் உள்ளவராக இருந்ததினால் அனைத்து இதயங்களின் அனுதாபத்தையும் பெற்றவராக இருந்தார். அவரைச் சூழ்ந்திருந்த நம்பிக்கை, தைரியம் ஆகியவைமிக்க சூழல், அவரை வீட்டிற்கும் ஆசீர்வாதமாக்கியது. தீர்க்கதரிசிகளின் பாடத்திலிருந்து வாசிக்கும்படி அடிக்கடி ஓய்வுநாட்களில் அவர் ஜெப ஆலயத்திற்கு அழைக்கப்பட்டிருந்தார். பழக்கப்பட்டுப்போயிருந்த பரிசுத்தமான வார்த்தைகளில் இருந்து புதிய வெளிச்சம் வீசியதால் கேட்டிருந்தவர்களின் இருதயங்கள் மகிழ்ச்சியால் குளிர்ந்தன. (20)

அப்படியிருந்தபோதும் இயேசு தம்மைப் பகட்டான விதத்தில் காட்டுவதைத் தவிர்த்தார். அவர் நாசரேத்தில் தங்கியிருந்த காலம் முழுவதிலும், அற்புதமிக்க அவரது வல்லமையை அவர் வெளிக்காட்டவில்லை. அவர் எந்தவிதமான மேலான அந்தஸ்தையும் தேடாமலும் பதவிகளை விரும்பாமலும் இருந்திருந்தார். அவரது அமைதியும் எளிமையுமிக்க வாழ்க்கையும், அவரது ஆரம்ப வருடங்களைக்குறித்து அமைதிகாக்கும் வேத வாக்கியங்களும் முக்கியமான பாடத்தைக் கற்றுக்கொடுக்கின்றன. ஒரு குழந்தையின் வாழ்க்கை எவ்வளவு அதிகமான அமைதியும் எளிமையுமாக இருக்கிறதோ—செயற்கையான உள்ளக்கிளர்ச்சிகளிலிருந்து எவ்வளவு அதிகமான அளவிற்கு விடுபட்டிருக்கிறதோ—இயற்கையோடு எவ்வளவு அதிகமாக இணைந்து இருக்கிறதோ, அவ்வளவு அதிகமாக அதனுடைய சரீர, மன வளர்ச்சிக்கும், ஆவிக்குரிய பலத்துக்கும் அதற்கு அதிக அனுகூலம் கிடைக்கும். (21)

இயேசு நமது முன்மாதிரியாக இருக்கிறார். அவரது ஆரம்பகால ஊழியங்களிலுள்ள போதனைகளைக் கவனிக்காமல் விட்டுவிட்ட அநேகர், அவரது பொதுஊழியக்காலத்தின்மீது வாஞ்சையுடன் சஞ்சரிப்பவர்களாக உள்ளனர். எல்லாச் சிறுவர்களுக்கும் வாலிபருக்கும் அவரது வீட்டு வாழ்க்கையில் அவர் முன்மாதிரியாக இருக்கிறார். மிகத் தாழ்மையான வாழ்க்கையில் நம்மால் எவ்வளவு நெருக்கமாக தேவனுடன் சஞ்சரிக்க இயலும் என்பதை நமக்குப் போதிப்பதற்காக, இரட்சகர் வறுமையான நிலைக்குக் கீழிறங்கினார். வாழ்க்கையின் பொதுவான காரியங்களில் அவரது பிதாவைப் பிரியப்படுத்தி, மேன்மைப்படுத்தி, மகிமைப்படுத்த அவர் வாழ்ந்தார். தங்களது அன்றாட உணவிற்காகப் பாடுபடும் தாழ்வான நிலையிலுள்ள வேலைக்குத் தம்மை அர்ப்பணிப்பதில் அவரது பணியை அவர் தொடங்கினார். திரளானவர்களுக்காக அற்புதங்களைச் செய்ததற்குச்

சமமாக, அதே தேவனுடைய ஊழியத்தை, அவர் தச்சுப்பட்டறையில் வேலைசெய்தபோதும் செய்துகொண்டிருந்தார். அவரைப்பற்றி: “இதோ, நான் ஆதரிக்கிற என் தாசன், நான் தெரிந்துகொண்டவரும், என் ஆத்துமாவுக்குப் பிரியமானவரும் இவரே” (ஏசாயா 42:1) என்று பிதாவாகிய தேவன் பரிசுத்த ஆவியானவரின்மூலமாக கூறியிருக்கும் வார்த்தையின்மீது கிறிஸ்து அவருடைய தாழ்மையான வீட்டில் காட்டியிருந்த விசுவாசமான தன்மையையும் கீழ்ப்படிதலையும் பின்பற்றும் ஒவ்வொரு வாலிபனும் உரிமைபாராட்டலாம். (22) ★

# 8

# பஸ்கா பண்டிகை!

**லூக்கா 2:41–51**

**(The Desire of Ages, pp. 75–83)**

சிறுவன் இளைஞன் என்னும் நிலைகளை யூதர்களிடத்தில் பிரித்துக்காட்டுகின்ற பருவமாக பன்னிரண்டாம் வயது இருந்திருந்தது. இந்த வயது முடிந்தவுடன் ஒரு எபிரெயப் பையன் பிரமாணத்தின் மகன் என்றும், தேவனுடைய மகன் என்றுங்கூட அழைக்கப்பட்டிருந்தான். சமய சம்பந்தமான போதனைகளைப் பெறுவதற்கு அவனுக்குச் சிறப்பான வாய்ப்புகள் வழங்கப்பட்டு, அவன் பரிசுத்தமான பண்டிகைகளிலும், கடைப்பிடிக்க வேண்டிய ஆசரிப்புகளிலும் பங்குபெறுவது எதிர்பார்க்கப்பட்டிருந்தது. இந்த வழக்கத்தில்தான் இயேசு தாம் பையனாக இருந்த பருவத்தில் பஸ்கா பண்டிகைக்காக எருசலேமிற்குச் சென்றார். பக்தியுள்ள எல்லா இஸ்ரவேலர்களையும்போலவே, யோசேப்பும் மரியாளும் ஒவ்வொரு வருடமும் பஸ்கா பண்டிகையை ஆசரிக்கச் சென்றார்கள். அதற்கேற்ற தகுதியான வயதை அவர் அடைந்தபோது, அவர்கள் அவரையும் அழைத்துச்சென்றார்கள். (1)

பஸ்கா பண்டிகை, பெந்தெகொஸ்தே பண்டிகை, கூடாரப்பண்டிகை என்னும் மூன்று வருடாந்திரப் பண்டிகைகளில், எருசலேமில் கர்த்தருக்கு முன்பாக, இஸ்ரவேலின் ஆண்கள் அனைவரும் இருக்கவேண்டும் என்ற கட்டளை இருந்தது. இதில் பஸ்கா பண்டிகையில் பெருமளவில் மக்கள் பங்குகொண்டனர். சிதறிப்போயிருந்த அநேக யூதர்கள் சகல நாடுகளிலிருந்தும் கூடிவந்தனர். பாலஸ்தீனத்தின் ஒவ்வொரு பகுதியிலிருந்தும் தொழுபவர்கள் பெரும் எண்ணிக்கையில் வந்திருந்தனர். கலிலேயாவிலிருந்து பல நாட்கள் பயணம் செய்யவேண்டியதாக இருந்தது. பயணிகள் தோழமைக்காகவும் பாதுகாப்பிற்காகவும் ஒன்றுபட்டுத் திரள்கூட்டங்களாகச் சென்றனர். மலைப்பாங்கான, கற்களும் பள்ளங்களுமிக்கப் பாதையில், பெண்களும் முதியோர்களும் காளைகள் அல்லது கழுதைகளின்மீது சவாரி செய்தனர். பலமிக்க ஆண்களும் இளைஞர்களும் கால்நடையாகப் பயணம் செய்தனர். பஸ்கா பண்டிகையின் காலம் மார்ச் மாதத்தின் இறுதி அல்லது ஏப்ரல்

மாதத்தின் ஆரம்பத்தையொட்டி வருவது வழக்கம். அந்தச் சமயத்தில் நாடு முழுவதும் அழகிய மலர்களாலும் பறவைகளின் பாடல்களினாலும் மகிழ்ச்சிமிக்கதாக இருந்தது. பாதை நெடுகிலும் இஸ்ரவேலரின் வரலாற்றில் நினைவிலிருக்கக்கூடிய இடங்கள் இருந்தன. தந்தையர்களும் அன்னையர்களும் அவர்களது பிள்ளைகளுக்குத் தேவன் கடந்த காலங்களில் செய்திருந்த ஆச்சரியமானவைகளை எடுத்துக்கூறினர். அவர்கள் தங்களது பயணத்தைப் பாடல்களினாலும் இசையினாலும் பொழுதுபோக்கியிருந்து, இறுதியில் எருசலேமின் போபுரங்கள் காட்சிக்கு வந்தபோது:– (2)

> "எருசலேமே, உன் வாசல்களில் எங்கள் கால்கள் நிற்கலாயிற்று. எருசலேம் இசைவிணைப்பான நகரமாய்க் கட்டப்பட்டிருக்கிறது. அங்கே இஸ்ரவேலுக்குச் சாட்சியாகக் கர்த்தருடைய ஜனங்களாகிய கோத்திரங்கள் கர்த்தரின் நாமத்தை ஸ்தோத்திரிப்பதற்குப் போகும். அங்கே தாவீதின் வம்சத்தாருடைய சிங்காசனங்களாகிய நியாயாசனங்கள் வைக்கப்பட்டிருக்கிறது. எருசலேமின் சமாதானத்துக்காக வேண்டிக்கொள்ளுங்கள்; உன்னை நேசிக்கிறவர்கள் சுகித்திருப்பார்களாக. உன் அலங்கத்திற்குள்ளே சமாதானமும், உன் அரமனைகளுக்குள்ளே சுகமும் இருப்பதாக" (சங்கீதம் 122:2–7) என்னும் ஜெயகீதத்தை எழுப்பினர். (3)

எபிரெய நாட்டின் பிறப்புடன் பஸ்கா பண்டிகையைக் கடைப்பிடித்தல் ஆரம்பமானது. எகிப்திய அடிமைத்தனத்தின் இறுதி இரவில், விடுதலையின் அடையாளம் காணாமல் இருந்தபோது, உடனடியான ஒரு விடுதலைக்கு ஆயத்தமாகும்படி தேவன் அவர்களுக்குக் கட்டளையிட்டார். எகிப்தியரில் அவர் நடத்தவிருந்த இறுதி நியாயத்தீர்ப்பைப்பற்றி பார்வோனை எச்சரித்து, எபிரெயர்கள் அவர்களது குடும்பங்களை தங்களுடைய வீடுகளுக்குள் சேர்க்கும்படிக் கட்டளையிட்டிருந்தார். அடிக்கப்பட்ட ஆட்டுக்குட்டியின் இரத்தத்தைக் கதவு நிலைகளின்மீது தெளித்தபின், நெருப்பினால் சுடப்பட்ட அந்த ஆட்டுக்குட்டியை அவர்கள் புளிப்பில்லாத அப்பத்துடனும் கசப்பான கீரையுடனும் புசிக்கவேண்டியதாயிருந்தது. "அதைப் புசிக்கவேண்டிய விதமாவது, நீங்கள் உங்கள் அரைகளில் கச்சை கட்டிக்கொண்டும், உங்கள் கால்களில் பாதரட்சை தொடுத்துக்கொண்டும், உங்கள் கையில் தடி பிடித்துக்கொண்டும் அதைத் தீவிரமாய்ப் புசிக்கக்கடவீர்கள்; அது கர்த்தருடைய பஸ்கா"–யாத்திராகமம் 12:11. நடு இரவில் எகிப்தியர்களின் தலைச்சன்களெல்லாம் அடிக்கப்பட்டன. அதன்பிறகு "இராத்திரியிலே அவன் மோசேயையும் ஆரோனையும் அழைப்பித்து: நீங்களும் இஸ்ரவேல் புத்திரரும்

எழுந்து, என் ஜனங்களைவிட்டுப் புறப்பட்டுப்போய், நீங்கள் சொன்னபடியே கர்த்தருக்கு ஆராதனைசெய்யுங்கள்” (யாத்திராகமம் 12:31) என்ற செய்தியை அரசன் இஸ்ரவேலருக்குக் கொடுத்தான். ஒரு சுதந்திரமான ஜாதியாக எகிப்தைவிட்டு எபிரெயர்கள் புறப்பட்டுப்போனார்கள். பஸ்கா பண்டிகை வருடந்தோறும் ஆசரிக்கப்படவேண்டும் என்று கர்த்தர் கட்டளையிட்டிருந்தார். “அப்பொழுது உங்கள் பிள்ளைகள்: இந்த ஆராதனையின் கருத்து என்ன என்று உங்களைக் கேட்டால், இது கர்த்தருடைய பஸ்காவாகிய பலி; அவர் எகிப்தியரை அதம்பண்ணி, நம்முடைய வீடுகளைத் தப்பப்பண்ணினபோது, எகிப்திலிருந்த இஸ்ரவேல் புத்திரருடைய வீடுகளைக் கடந்துபோனார் என்று நீங்கள் சொல்லவேண்டும் என்றான். அப்பொழுது ஜனங்கள் தலைவணங்கிப் பணிந்துகொண்டார்கள்”–யாத்திராகமம் 12:26,27. இவ்வாறாக, விடுதலையின் ஆசரிப்பான இந்தக் கதை, தலைமுறை தலைமுறையாக மீண்டும் மீண்டும் கூறப்படவேண்டியதாக இருந்தது. (4)

புளிப்பில்லாத ஏழுநாள் அப்பப்பண்டிகை பஸ்கா பண்டிகையைப் பின்தொடர்ந்திருந்தது. அந்தப் பண்டிகையின் இரண்டாம் நாளில் அந்த வருடத்து அறுவடையின் முதற்பலன்களாக ஒரு வாற்கோதுமைக் கட்டு கர்த்தருக்கு முன்பாகப் படைக்கப்பட்டிருந்தது. அந்தப் பண்டிகையின் சடங்குகள் அனைத்தும் கிறிஸ்துவின் ஊழியத்தைச் சுட்டிக்காட்டும் மாதிரிப்படிவங்களாக இருந்தன. எகிப்திலிருந்து இஸ்ரவேலர் பெற்ற விடுதலை, மீட்பைப்பற்றிய ஒரு காணக்கூடிய பாடமாக இருந்தது. அதை நினைவில்வைக்கும் ஒன்றாக, பஸ்கா பண்டிகை இருந்திருந்தது. அடிக்கப்பட்ட ஆட்டுக்குட்டி, புளிப்பில்லாத அப்பம், முதற்பலனாகிய கதிர்க்கட்டு ஆகியவை இரட்சகரை எடுத்துக்காட்டியிருந்தன. (5)

கிறிஸ்துவின் காலத்திலிருந்த பெரும்பாலானவர்களுக்கு இந்தப் பண்டிகை வழக்கமான ஒரு சடங்குமுறை என்னும் அளவிற்கு சீர்கெட்டிருந்தது. ஆனால் தேவனுடைய குமாரனுக்கு அது எதை அடையாளங்காட்டுவதாக இருந்தது! (6)

அந்தச் சிறுவன் முதல் தடவையாக எருசலேம் தேவாலயத்தைக் கண்டார். வெள்ளை அங்கி தரித்த ஆசாரியர்கள் அவர்களது பக்திவிநயமான ஊழியத்தைச் செய்வதை அவர் கண்டார். பலிபீடத்தின்மீது இரத்தம் சிந்திக்கொண்டிருக்கும் பலிப்பொருளை அவர் கண்டார். தூபவர்க்கத்தினால் உண்டான மேகம் தேவனுக்குமுன்பாக எழும்பினபோது, அவர் பணிந்து ஜெபித்தார். மனதில் ஆழ்ந்து பதியத்தக்கதான பஸ்காவின் ஆராதனைச் சடங்குகளை அவர் சாட்சியாகக் கண்டார். அவைகளின் பொருளை நாளுக்கு நாள் அவர் மிகத்தெளிவாகக் கண்டார். ஒவ்வொரு செயலும் அவரது

சொந்த வாழ்க்கையுடன் பிணைக்கப்பட்டிருப்பதைப்போலக் காணப்பட்டது. அவருக்கும் புதிய துடிப்புகள் எழும்பியிருந்தன. மௌனமாகவும் ஈர்க்கப்பட்டவராகவும் ஒரு மாபெரும் பிரச்சனையை ஆராய்பவரைப்போன்று அவர் காணப்பட்டார். இரட்சகரின் ஊழியத்தின் இரகசியம் அவருக்குத் திறக்கப்பட்டுக்கொண்டிருந்தது. (7)

இந்தக் காட்சிகளின் தியானத்தில் மூழ்கியவராக, அதே இடத்தில் அவர் அவரது பெற்றோர்களுக்கருகில் நிற்கவில்லை. தனித்திருக்க வகைதேடினார். பஸ்காவின் ஆராதனைகள் முடிந்தபின்னரும் அவர் தொடர்ந்து ஆலய வளாகத்திலேயே தரித்திருந்தார். ஆராதனை செய்தவர்கள் எருசலேமிலிருந்து புறப்பட்டுச்சென்றபின்னர், அவர் தனித்துவிடப்பட்டிருந்தார். (8)

இயேசுவின் பெற்றோர்கள் இந்தத் தடவை எருசலேமிற்கு வந்தபோது, எருசலேமிலிருந்த இஸ்ரவேலின் பெரிய போதகர்களுடன் தொடர்புகொள்ளத்தக்கதாக அவரை அழைத்து வந்திருந்தனர். தேவனுடைய வார்த்தையின் ஒவ்வொரு குறிப்பிலும் அவர் கீழ்ப்படிதல் உள்ளவராக இருந்த அதே சமயத்தில், ரபிமார்களின் சடங்குகளிலும், பழக்கத்திலுள்ள மரபுகளிலும், அவர் இசைவில்லாதவராக இருந்தார். கற்றறிந்த ரபிமார்களிடம் அவர் பக்தியுள்ளவராகவும், அவர்களது கோரிக்கைகளுக்கு மிகுந்த அக்கறையுடன் செவிசாய்ப்பவராகவும் இருக்கும்படி நடத்தப்படவேண்டும் என்ற நம்பிக்கையை உடையவர்களாக யோசேப்பும் மரியாளும் இருந்தனர். ஆனால் தேவாலயத்திலிருந்த இயேசு, தேவனால் கற்பிக்கப்பட்டிருந்தார். அவர் பெற்றுக்கொண்டிருந்தவைகளை உடனே பிறருக்குக் கற்றுக்கொடுக்கத் தொடங்கினார். (9)

அந்தக் குறிப்பிட்ட நாளில் ஆலயத்துடன் சேர்ந்திருந்த ஒரு அறை, தீர்க்கதரிசிகளின் பள்ளியைப் போன்றவிதத்தில் ஒரு பரிசுத்தமான பள்ளியாகப் பிரதிஷ்டைசெய்யப்பட்டது. அங்கு தலைசிறந்த ரபிமார்களும் அவர்களது மாணவர்களும் வந்திருந்தனர். அங்கு சிறுவரான இயேசுவும் வந்தார். அங்கு முக்கியமான கல்விமான்களாயிருந்தவர்களின் பாதத் தருகில் அவரும் அமர்ந்து, அவர்களது போதனைகளைக் கவனித்தார். ஞானத்தைத் தேடும் ஒருவரைப்போல அவர் மேசியாவின் வருகையுடன் சம்பந்தப்பட்டவைகளாக அப்பொழுது நிகழ்ந்துகொண்டிருந்த நிகழ்ச்சி களையும் தீர்க்கதரிசனங்களையும்பற்றி அந்த ஆசிரியர்களிடம் வினவினார். (10)

தேவனைப்பற்றின அறிவின்மீது தாகமுடைய ஒருவராக இயேசு

தம்மை அறிமுகப்படுத்தினார். அவரது கேள்விகள் நெடு நாட்களாக இருட்டடிப்பில் வைக்கப்பட்டிருந்த ஆழமான சத்தியங்களைப்பற்றிய கருத்துள்ளவையாக இருந்தன. ஆனால் அவைகளோ ஆத்துமாக்களின் இரட்சிப்பிற்கு மிக முக்கியமானவைகளாக இருந்தன. இந்த விவேகமுள்ள மனிதர்களின் ஞானம் எந்த அளவிற்குக் குறுகியவையாகவும் மேலெழுந்தவாரியாகவும் உள்ளது என்பதைக் காட்டிய அதே நேரத்தில், அவர்கள்முன் கேட்கப்பட்ட ஒவ்வொரு கேள்வியும் ஒரு தெய்வீகப் பாடத்தை முன்வைப்பதாக இருந்ததுடன், சத்தியத்தை அதன் புதிய தோற்றத்தில்வைத்தது. மேசியாவின் வருகையினால் யூதஇனத்துக்கு உண்டாகவிருக்கும் ஆச்சரியமான உயர்வைப்பற்றி ரபிமார்கள் பேசினர். ஆனால் இயேசு தேவ ஆட்டுக்குட்டியின் பாடுகளையும் மரணத்தையும் சுட்டிக்காட்டியிருந்த ஏசாயாவின் தீர்க்கதரிசனத்தை அவர்கள்முன் வைத்து, அந்த வேதவாக்கியங்களின் பொருளைப்பற்றிக் கேட்டார். (11)

அந்த மேதைகள் அவரிடம் கேள்விகளைக் கேட்க, திரும்ப வந்த அவரது பதில்களினால் ஆச்சரியமடைந்தனர். ஒரு சிறுவனின் தாழ்மையுடன் அவர் வேதவாக்கியங்களைத் திரும்பக்கூறி, அந்த ஞானமிக்க மனிதர்கள் அடைந்திராத ஆழ்ந்த அர்த்தத்தை அவர்களுக்கு விளக்கினார். அவர் சுட்டிக்காட்டிய சத்தியத்தின் வரிகளைப் பின்பற்றியிருந்தால், அந்த நாளில் இருந்த கடவுள்கொள்கையில் அது ஒரு சீர்திருத்தத்தை உண்டுபண்ணியிருந்திருக்கும். ஆவிக்குரிய காரியங்களில் ஆழமான வாஞ்சை எழுப்பப்பட்டிருந்திருக்கும். இயேசு அவரது ஊழியத்தை ஆரம்பித்தபோது, அநேகர் அவரை ஏற்றுக்கொள்ள ஆயத்தமானவர்களாக இருந்திருப்பார்கள். (12)

இயேசு அவர்களது பள்ளிகளில் பயிலவில்லை என்பதை அந்த ரபிமார்கள் அறிந்திருந்தனர். அப்படியிருந்தும் அவர் தீர்க்கதரிசனங்களைப் புரிந்துகொண்டிருந்தது, அவர்களைக்காட்டிலும் மிக அதிகமானதாக இருந்தது. சிந்தனைமிக்க இந்தக் கலிலேயச் சிறுவனில் பெரும் வாக்குத்தத்தத்தை அவர்கள் தெளிவாகப் புரிந்துகொண்டனர். அவர் இஸ்ரவேலில் ஒரு ஆசிரியராகும்படி—அவரை ஒரு மாணவனாக ஆயத்தப்படுத்த அவர்கள் வாஞ்சித்தனர். அந்த அளவுக்கு சுயஆற்றல் மிக்க ஒரு மனம், அவர்களின் உருவாக்கப்படுதலின்கீழ் கொண்டுவரப்படவேண்டும் என்பதற்காக, அவரது கல்வியின் பொறுப்பை ஏற்க அவர்கள் விரும்பினர். (13)

மனித உதடுகளிலிருந்து உண்டான வார்த்தைகளினால் ஒருபோதும் அசைக்கப்பட்டிராதவிதத்தில் இயேசுவின் வார்த்தைகள் அவர்களது இருதயங்களை அசைத்தன. இஸ்ரவேலின் இந்தத் தலைவர்களுக்கு ஒளியைக்

கொடுக்க தேவன் வகைதேடியிருந்து, அவர்களை அணுகக்கூடிய இந்த ஒரே கருவியை அவர் பயன்படுத்தலானார். அவர்களது அகந்தையினால் வேறு ஒருவரிடமிருந்து போதனையைப் பெற்றுக்கொள்ளவேண்டும் என்பதை அங்கீகரிப்பதை பரிகசித்திருந்திருப்பார்கள். இயேசு அவர்களுக்குப் போதனை செய்ய முயன்றிருந்தால், அதைக் கவனிப்பதை அவர்கள் அலட்சியப்படுத்தி இருந்திருப்பார்கள். ஆனால் அவர்கள் அவருக்குப் போதித்துக்கொண்டிருந்தனரென்றும் குறைந்தபட்சம் அவரது வேதவாக்கிய அறிவைச் சோதித்துக்கொண்டிருந்தனர் என்றும் தங்களுக்குள் வீண் பெருமைபாராட்டிக்கொண்டிருந்தனர். அடக்கமுள்ள இளமையும் இயேசுவின் கிருபையும் அவர்களது தவறான எண்ணங்களை பாதுகாப்பற்ற நிலைக்குக் கொண்டுவந்தது. அவர்கள் உணராத நிலையில் தேவனுடைய வார்த்தைகளுக்கு அவர்களது உள்ளங்கள் திறக்கப்பட்டு, தேவ ஆவியானவர் அவர்களது இருதயங்களில் பேசினார். (14)

மேசியாவின் வருகையைப்பற்றின அவர்களுடைய எதிர்பார்ப்பு தீர்க்கதரிசனங்களால் தாங்கப்பட்டிருக்கவில்லை என்பதை அவர்களால் காணாமல் இருக்கமுடியவில்லை. ஆனால் அவர்களது பேராவல்களைப்பற்றி வீண்பெருமையோடு பேசப்பட்டிருந்த தத்துவங்களை அவர்கள் மறுக்க விருப்பமற்றவர்களாக இருந்தனர். அவர்கள் போதிக்க முற்பட்டிருந்த வேதவாக்கியங்களை தவறாகப் புரிந்துகொண்டிருந்தனர் என்பதை ஒத்துக் கொள்ளாதிருந்தனர். ஒருபோதும் கல்லாதவனாயிருந்த இந்த இளைஞனுக்கு இந்த அறிவு எப்படி உண்டாகியிருக்கிறது? என்ற அவர்களது விசாரிப்பை ஒருவருக்கொருவர் நடத்தியிருந்தனர். “அந்த ஒளி இருளிலே பிரகாசிக்கிறது; இருளானது அதைப் பற்றிக்கொள்ளவில்லை”—யோவான் 1:5. (15)

அப்போது யோசேப்பும் மரியாளும் பெரும் குழப்பத்திலும் துன்பத்திலும் இருந்தனர். அவர்கள் எருசலேமைவிட்டுப் புறப்பட்டுச்சென்றபோது, இயேசுவைக் காணாமலிருந்து, அவர் பின்தங்கிவிட்டார் என்பதை அறியாதவர்களாக இருந்திருந்தனர். அந்த நாட்டுப்புறத்தில் ஜன நெருக்கம் அதிகமாக இருந்தது. கலிலேயாவிலிருந்து சென்ற ஒட்டகக்கூட்டங்கள் அதிகமானவையாக இருந்தன. அவர்கள் அந்த நகரத்தைவிட்டுப் புறப்பட்டபோது, அங்கு குழப்பம் மிகுந்து காணப்பட்டது. அவர்கள் அந்த நகரத்தைவிட்டுச் சென்றனர். நண்பர்களுடனும் பழக்கப்பட்டவர்களுடனும் சேர்ந்து செய்திருந்த பயணத்தின் மகிழ்ச்சியில் அவர்களது கவனம் மூழ்கியிருந்ததினால், அவர் இல்லை என்பதை இரவு வரும்வரை அவர்கள் அறியாமலிருந்தனர். பின்பு அவர்கள் ஓய்விற்காகத் தங்கியபோது, தங்களுடைய பிள்ளையின் உதவும் கரங்களை இழந்திருந்தனர். அவர் அவர்களது கூட்டத்தில்

இருப்பார் என்று உத்தேசித்து, அவரைப்பற்றி கவலை இல்லாதவர்களாக இருந்திருந்தனர். அவர் இளையவராக இருந்ததினால், அவரை உறுதியான நம்பிக்கைக்கு ஏற்றவராக எண்ணி, அவர்களுக்கு தேவையான சமயத்தில் உதவிசெய்ய ஆயத்தமாக இருப்பார் என்று எதிர்பார்த்திருந்தனர். மேலும் அவர் எப்பொழுதும் தங்களுக்கு உதவியதுபோல அவர்களது தேவைகள் அவரால் சந்திக்கப்படுமென்று முன்னரே உறுதியாக எண்ணியிருந்தனர். ஆனால் இப்பொழுது அவர்களுடைய பயம் எழுப்பப்பட்டது. அவர்களது கூட்டம் முழுவதிலும் வீணாக அவரைத் தேடினர். அவரது குழந்தைப் பருவத்தில் அவரைக் கொலைசெய்ய ஏரோது எந்தவிதமாக முயன்றான் என்று எண்ணியபோது நடுங்கினர். வரவிருக்கும் அபாயத்தின் இருள் அவர்களது இருதயங்களை நிரப்பியது. அவர்கள் மிகுந்த கசப்புடன் தங்களைத் தாங்களே கடிந்துகொண்டனர். (16)

எருசலேமிற்குத் திரும்பிவந்து, தங்களது தேடுதலைத் தொடர்ந்தனர். மறுநாள் அவர்கள் ஆலயத்தில் தொழுபவர்களுடன் இருந்தபோது, பழக்கப்பட்ட ஒரு குரல் அவர்களது கவனத்தை ஈர்த்தது. அதை அவர்களால் தவறாக எண்ண முடியவில்லை. ஆழ்ந்த யோசனையுள்ளதாகவும் அக்கறையுள்ளதாகவும், ஆனால் இனிமை நிறைந்ததாகவும் உள்ள அந்த சத்தம் அவருடையதல்லாமல் பிறருடையதாக இருக்கவில்லை. (17)

ரபிமார்களின் பள்ளியில் அவர்கள் இயேசுவைக் கண்டனர். அவர்கள் மகிழ்ச்சியடைந்தாலும், அவர்களால் அவர்களது வருத்தத்தையும் கவலையையும் மறக்கமுடியவில்லை. அவர் மறுபடியும் அவர்களுடன் சேர்ந்திருந்தபோது கடிந்துகொள்ளும் பொருளையுடைய வார்த்தையினால் “மகனே! ஏன் எங்களுக்கு இப்படிச் செய்தாய்? இதோ, உன் தகப்பனும் நானும் விசாரத்தோடே உன்னைத் தேடினோமே” என்றாள். (18)

அதற்கு அவர்: “நீங்கள் ஏன் என்னைத் தேடினீர்கள்? என் பிதாவுக்கடுத்தவைகளில் நான் இருக்கவேண்டியதென்று அறியீர்களா” என்றார். அவர்களுக்கு அவர் சொன்ன வார்த்தைகளை உணர்ந்துகொள்ளாததினால் அவர் தமது கரத்தை வானத்துக்கு நேராக உயர்த்திக் காட்டினார். அவரது முகத்திலிருந்த ஒளியைக் கண்டு அவர்கள் ஆச்சரியப்பட்டனர். தெய்வத்தன்மை மானிடத்திற்கூடாக மின்னியது. அவரை அவர்கள் தேவாலயத்தில் கண்டபொழுது, அவருக்கும் ரபிமார்களுக்குமிடையில் என்ன நடந்துகொண்டிருக்கிறது என்பதைக் கவனித்து, அவரது கேள்விகளிலும் பதில்களிலும் அவர்கள் ஆச்சரியமுள்ளவர்களாக இருந்தனர். ஒருபோதும் மறக்க முடியாதவிதத்திலுள்ள சிந்தனைத்தொடராக அவரது வார்த்தைகள் இருந்தன. (19)

என் பிதாவுக்கடுத்தவைகளில் நான் இருக்கவேண்டியதென்று அறியீர்களா? என்ற அவர்களுக்கான கேள்வியில் ஒரு பாடம் இருந்தது. இந்த உலகத்தில் செய்யவேண்டிய வேலையில் ஈடுபட்டவராக இயேசு வந்திருந்தார். ஆனால் யோசேப்பும் மரியாளும் அவர்களுடைய பொறுப்பை அலட்சியப்படுத்தியிருந்தனர். தேவன் அவருடைய குமாரனை அவர்களிடம் ஒப்புவித்ததின்மூலம் அவர் அவர்கள்மீது உயர்ந்த மேன்மையைக் காட்டியிருந்தார். இயேசுவின் உயிரைக் காக்கும்படியான மார்க்கத்தைத் தூதர்கள் யோசேப்புக்குக் காட்டியிருந்தனர். ஒரு வினாடிகூட மறந்திருக்கக்கூடாதவர்களாக இருந்த அவர்கள், அவரைப்பற்றின பார்வையை ஒரு நாள்முழுவதும் மறந்திருந்தனர். அவர்களது கவலை அவர்களைவிட்டு நீங்கினபோது, அவர்கள் தங்களைப்பற்றிக் குறைப்பட்டுக்கொள்ளாமல், குற்றத்தை அவர்மீது சுமத்தினர். (20)

இயேசுவை அவர்களுடைய சொந்தப் பிள்ளையாக நோக்கியது அவரது பெற்றோர்களின் இயல்பாக இருந்தது. அவர் தினந்தோறும் அவர்களுடன் இருந்தார். அநேகக் காரியங்களில் அவரது வாழ்க்கை மற்ற பிள்ளைகளுடையதைப்போலவே இருந்தது. அவர் தேவனுடைய குமாரனாக இருந்தார் என்பதைத் தெளிவாகப் புரிந்துகொள்வது அவர்களுக்குக் கஷ்டமானதாக இருந்தது. உலக மீட்பரின் பிரசன்னத்தில் அவர்களுக்கு அருளப்பட்டிருந்த ஆசீர்வாதத்தை வரவேற்பதில் தோல்வியடையக்கூடிய அபாயத்தில் அவர்கள் இருந்திருந்தனர். அவரைவிட்டுப் பிரிந்ததினால் உண்டான சங்கடமும், அவரது வார்த்தைகளில் எடுத்துக்காட்டப்பட்ட மென்மையான கடிந்துகொள்ளுதலும், அவர்களிடத்தில் ஒப்புவிக்கப் பட்டிருந்த நம்பிக்கையின் பரிசுத்தத்தை உணர்த்துவதற்கென்றே வடிவமைக்கப்பட்டிருந்தது. (21)

இயேசு முதல்தடவையாக, தேவனுடனுள்ள அவரது உறவைப் புரிந்திருந்தார் என்பதை அவரது பதிலினால் அவரது அன்னைக்குக் காட்டினார். “அவர் பெரியவராயிருப்பார், உன்னதமானவருடைய குமாரன் என்னப்படுவார்; கர்த்தராகிய தேவன் அவருடைய பிதாவாகிய தாவீதின் சிங்காசனத்தை அவருக்குக் கொடுப்பார். அவர் யாக்கோபின் குடும்பத்தாரை என்றென்றைக்கும் அரசாளுவார்; அவருடைய ராஜ்யத்துக்கு முடிவிராது” (லூக்கா 1:32,33) என்று அவர் பிறப்பதற்குமுன் தூதன் மரியாளிடம் கூறியிருந்தான். இந்த வார்த்தைகளை மரியாள் அவளுடைய இருதயத்தில் சிந்தித்திருந்தாள். அப்படியிருந்தபோதிலும், அவளுடைய பிள்ளை இஸ்ரவேலின் மேசியாவாக இருக்கும் என்று அவள் நம்பியிருந்தும், அவருடைய ஊழியத்தைப் புரிந்துகொள்ளவில்லை. இப்பொழுதுங்கூட

அவள் அவருடைய வார்த்தைகளைப் புரிந்துகொள்ளவில்லை. ஆனால் அவர் யோசேப்புடனுள்ள அவரது சொந்தத்தை மறுத்து, மகன் என்னும் உரிமையை தேவனுடன் தாம் கொண்டிருப்பதாக அறிவித்தார் என்பதை அறிந்தாள். (22)

இயேசு அவருடைய பூமிக்குரிய பெற்றோருடன் உள்ள உறவை மறுக்கவில்லை. எருசலேமிலிருந்து அவர்களுடன் வீட்டிற்குத் திரும்பிவந்து, உழைப்புமிக்க அவர்களது வாழ்க்கையில் அவர்களுக்கு உதவிசெய்திருந்தார். அவரது ஊழியத்தைப்பற்றின இரகசியத்தை அவரது இருதயத்தில் அவர் மறைத்துவைத்து, அவரது ஊழியத்தில் பிரவேசிக்கும்படியாகக் குறிக்கப்பட்டிருந்த வேளைக்காகக் கீழ்ப்படிதலுடன் காத்திருந்தார். அவர்தாம் தேவனுடைய குமாரன் என்பதை அறிந்துகொண்டபின்னரும், பதினெட்டு ஆண்டுகள் நாசரேத்தின் வீட்டுடன் பிணைக்கப்பட்டிருந்த பிணைப்பை ஏற்றுக்கொண்டவராக மகன், சகோதரன், நண்பன், நகரவாசி என்ற நிலையில் அங்கு அவரது கடமையைச் செய்திருந்தார். (23)

இயேசுவின் ஊழியம், தேவாலயத்தில் அவருக்குமுன் திறக்கப்பட்ட போது, திரளானவர்களுடனிருந்த தொடர்பிலிருந்து அவர் பின்வாங்கினார். அவரது வாழ்க்கையின் இரகசியத்தை அறிந்திருந்தவர்களுடன் சேர்ந்து, எருசலேமைவிட்டு அமைதியுடன் அவர் திரும்ப விரும்பினார். பஸ்கா பண்டிகை ஆராதனையினால் தேவன் அவருடைய மக்களை அவர்களுடைய உலகக் கவலைகளிலிருந்து திருப்பவும், எகிப்திலிருந்துள்ள விடுதலையாகிய அவரது ஆச்சரியமான செயலைப்பற்றி நினைப்பூட்டவும், அவர்களை அழைக்கவும், வகைதேடிக்கொண்டிருந்தார். இந்த வேலையின்மூலமாக பாவத்திலிருந்து அவர்களுக்கு உண்டாகக்கூடிய விடுதலையைப்பற்றிய ஒரு வாக்குத்தத்தத்தை அவர்கள் காணவேண்டுமென்று அவர் விரும்பினார். அடிக்கப்பட்ட ஆட்டுக்குட்டியின் இரத்தம் இஸ்ரவேலர்களின் வீடுகளுக்குப் பாதுகாப்பாக இருந்ததுபோல, கிறிஸ்துவின் இரத்தம் அவர்களது ஆத்துமாக்களை இரட்சிக்கவேண்டியதாக இருந்தது. ஆனால் விசுவாசத்தினால் அவர்கள் தங்களுடைய வாழ்க்கையை இயேசுவின் வாழ்க்கையைப்போல அமைக்கும்போதுமட்டுமே, அவர்கள் இரட்சிக்கப்படமுடியும். ஆராதிப்பவர்கள் அவர்களுடைய சொந்த இரட்சகராகக் கிறிஸ்துவை ஏற்றுக்கொள்ளும்படி அதை நடத்தினபோதுமட்டுமே அடையாளமாயிருந்த ஆராதனையில் புண்ணியம் இருந்தது. கிறிஸ்துவின் ஊழியத்தைப்பற்றிய ஜெபத்திலும் தியானத்திலும் அவர்கள் நடத்தப்படவேண்டும் என்று தேவன் விரும்பினார். ஆனால் திரளானவர்கள் எருசலேமைவிட்டு நீங்கியபோது, பயணத்தின் கிளர்ச்சியும் சமூகக் கலப்பும் அவர்களது கவனத்தை அடிக்கடி கவர்ந்தபோது,

அவர்கள் கண்டிருந்த ஆராதனை மறக்கப்பட்டுவிட்டது. அவர்களது கூட்டத்தினால் இரட்சகர் கவரப்படவில்லை. (24)

இயேசுவுடன்கூட யோசேப்பும் மரியாளும் தனித்து எருசலேமிலிருந்து வீட்டிற்குத் திரும்பவேண்டியதாயிருந்தால், பாடுகளை அனுபவிக்கும் இரட்சகரைப்பற்றிய தீர்க்கதரிசனங்களுக்கு அவர்களது மனங்களைத் திருப்பலாம் என்று அவர் நம்பியிருந்தார். அவர் கல்வாரியின்மீதிருந்தபோது அவரது அன்னையின் வியாகுலத்தை இலகுவாக்க அவர் வகைதேடினார். அவரது இறுதி வேதனையை மரியாள் காணவேண்டியவளாக இருந்தாள். அவளுடைய ஆத்துமாவை ஒரு பட்டயம் உருவிப்போகும்போது, அதைத் தாங்கிக்கொள்ளும்வண்ணம் அவள் பலப்படுத்தப்படவேண்டும் என்று அவர் விரும்பினார். இயேசு அவளைவிட்டுப் பிரிந்தபோது, வருத்தத்துடன் அவள் அவரை மூன்று நாட்கள் தேடியிருந்ததுபோல, உலகத்தின பாவங்களுக்காக அவர் தம்மைப் பலியாகக் கொடுக்கவேண்டிவரும்போது, மறுபடியும் மூன்று நாட்கள் அவரை இழந்தவளாக அவள் இருக்கவேண்டும். அவர் மறுபடியும் கல்லறையைவிட்டு வெளியேவரும்போது, அவளது துயரம் மறுபடியும் மகிழ்ச்சியாக மாறும். ஆனால் அவளது சிந்தனைகளைத் திருப்பும்படி இப்பொழுது அவர் முயன்றுகொண்டிருக்கும் அந்த வேதவாக்கியங்களை அவள் புரிந்துகொண்டிருந்திருப்பாளானால் அவரது மரணத்தினால் ஏற்படவிருக்கும் கடுந்துயரை அவளால் எவ்வளவு மிகச்சிறந்த முறையில் தாங்கியிருந்திருக்கமுடியும்! (25)

தியானத்தினாலும் ஜெபத்தினாலும் யோசேப்பும் மரியாளும் அவர்களுடைய மனங்களை தேவன்மீது வைத்திருந்தால், அவர்களது நம்பிக்கையின் பரிசுத்தத்தை அவர்கள் அறிந்து, இயேசுவின்மீதுள்ள பார்வையை இழந்திருக்கமாட்டார்கள். ஒரே நாளின் அலட்சியத்தின்மூலமாக, அவர்கள் இரட்சகரை இழந்திருந்தனர். ஆனால் அவரைக் காண்பதற்காக அவர்கள் கவலையுடன் மூன்று நாட்கள் தேடுவதற்கு அது காரணமாயிற்று. நமக்கும் அப்படித்தான். வீணான பேச்சு, திறமையான பேச்சு, ஜெபத்தில் அலட்சியம் ஆகியவைகளினால் நாம் ஒருநாள் இயேசுவின் பிரசன்னத்தை இழந்துவிடலாம். அவரைக் காண்பதற்கும், நாம் இழந்துவிட்ட சமாதானத்தை மீண்டும் அடைவதற்கும், நாம் வருத்தத்துடன் அநேக நாட்கள் தேடவேண்டியதிருக்கலாம். (26)

ஒருவருடன் ஒருவருக்குள்ள நமது கூட்டுறவில் நாம் இயேசுவை மறந்துவிடாதபடி கவனமுள்ளவர்களாக இருந்து, அவர் நம்முடன் இல்லை என்பதற்காகக் கவலைப்படாதவர்களாக இருக்கக்கூடாது. நமது நித்திய ஜீவனைப்பற்றிய நம்பிக்கை எவரை மையமாகக் கொண்டிருக்கிறதோ,

அவரைப்பற்றி சிந்தனையற்றவர்களாக உலகக் காரியங்களில் நாம் மூழ்கி இருக்கும்போது, நம்மை இயேசுவிடமிருந்தும் பரலோகத் தூதர்களிடமிருந்தும் தனிப்படுத்திக்கொள்ளுகிறோம். இரட்சகரின் பிரசன்னத்தை விரும்பாத இடத்தில் இந்தப் பரிசுத்தவான்களால் இருக்கமுடியாது. அவர் அங்கு இல்லாதிருத்தல் குறித்துக்காட்டப்படாமலிருக்கிறது. இதனால்தான் கிறிஸ்துவின் பின்னடியார் களாக இருக்கிறோம் என்று கூறிக்கொள்ளுபவர்களுக்கு மத்தியில் அதைரியம் காணப்படுகிறது. (27)

அநேகர் மத ஆராதனைகளில் கலந்துகொண்டு தேவனுடைய வார்த்தையினால் புத்துணர்வையும் ஆறுதலையும் பெறுகின்றனர். ஆனால் தியானம், விழித்திருத்தல், ஜெபம் ஆகியவைகளை அலட்சியஞ்செய்வதின் மூலமாக, அவர்கள் அந்த ஆசீர்வாதங்களை இழந்து, அவைகளைப் பெற்றுக்கொள்ளுவதற்குமுன் இருந்ததைவிட அதிகமாகக் கைவிடப்பட்டவர்களாக இருப்பதைக் காண்கின்றனர். தேவன் அவர்களுடன் ஈடுபடவில்லை என அவர்கள் அடிக்கடி உணருகின்றனர். தவறு அவர்களுடையதுதான் என்பதை அவர்கள் காண்கிறதில்லை. இயேசுவிடமிருந்து அவர்கள் தங்களை பிரித்துவைத்துக்கொள்கிறதினால் அவரது பிரசன்னத்தின் ஒளியை அவர்கள் மூடித் தவிர்த்துவிட்டனர். (28)

கிறிஸ்துவின் வாழ்க்கையைப்பற்றி ஒவ்வொரு நாளும் ஒருமணிநேரமாவது தியானத்தில் செலவிடுதல் நன்மையாக இருக்கும். நமது மனோபாவனை ஒவ்வொரு காட்சியையும் பற்றிக்கொள்ளும் வண்ணம் காரியங்களை ஒன்றன்பின் ஒன்றாக, குறிப்பாகக் கடைசிக்காட்சிகளை நாம் எடுத்துக்கொள்ளவேண்டும். நமக்கான பெரும் தியாகபலியின்மீது நாம் ஈடுபாடுகொள்ளும்போது, அவர்மேலுள்ள நமது நம்பிக்கை அதிகமாகத் தொடர்ச்சியாக இருக்கும். நமது அன்பு எழுப்பப்படும். நாம் அவரது ஆவியினால் அதிகமாக நிரப்பப்பட்டிருப்போம். கடைசியாக, நாம் இரட்சிக்கப்படவேண்டுமானால், சிலுவையின் பாதத்தில் பாவத்திற்காக மனம்வருந்தி திரும்புகிற தாழ்மையின் பாடங்களைக் கற்கவேண்டும். (29)

நாம் ஒன்றுசேரும்போது, ஒருவருக்கொருவர் ஒரு ஆசீர்வாதமாக இருக்கலாம். நாம் கிறிஸ்துவினுடையவர்களாயிருந்தால், நமது இனிமைமிக்க எண்ணங்கள் அவரைப்பற்றியதாக இருக்கும். அவரைப்பற்றிப் பேசுவதை நாம் விரும்புவோம். அவரது அன்பைப்பற்றி நாம் ஒருவருக்கொருவர் பேசிக்கொள்ளும்போது, தெய்வீக செல்வாக்கினால் நமது இருதயங்கள் மென்மை அடையும். அவரது குணத்தின் அழகைக்கண்டு, “ஆவியாயிருக்கிற கர்த்தரால் அந்தச் சாயலாகத்தானே மகிமையின்மேல் மகிமையடைந்து மறுரூபப்படுகிறோம்”–2 கொரிந்தியர் 3:18. (30) ★

# 9

# போராட்டத்தின் நாட்கள்!

(The Desire of Ages, pp. 84–96)

யூதப்பிள்ளை அதன் ஆரம்ப வருடங்களிலிருந்தே ரபிமார்களால் வைக்கப்படுகின்ற கோரிக்கைகளால் சூழப்பட்டிருந்தது. வாழ்க்கையில் மிகச் சிறிய காரியங்களுக்கும், ஒவ்வொரு செயலுக்கும், கடினமான சட்டங்கள் இயற்றப்பட்டிருந்தன. பழமையான இஸ்ரவேலர்களாக அவர்கள் அனுசரிக்கும்படி எதிர்பார்க்கப்பட்டிருந்த எண்ணிலடங்காத சட்டதிட்டங்களால் ஜெப ஆலயத்தின் போதகர்களின்கீழ் இளைஞர்கள் போதிக்கப்பட்டிருந்தனர். ஆனால் இயேசு அந்தக் காரியங்களில் ஆர்வம் உள்ளவராக இருக்கவில்லை. பிள்ளைப்பருவத்திலிருந்தே அவர் ரபிமார்களின் சட்டங்களிலிருந்து சுதந்திரமுள்ளவராகச் செயலாற்றியிருந்தார். பழைய ஏற்பாட்டின் வேதவாக்கியங்கள் அவரது தொடர்ச்சியான ஆராய்ச்சியாக இருந்தன. "என்று எழுதியிருக்கிறதே" என்னும் சொற்கள் எப்பொழுதும் அவரது உதடுகளின்மேல் இருந்தன. (1)

மக்களின் நிலைமை அவரது மனதில் தோன்றத்தொடங்கியவுடன் சமுதாயத்திற்குச் செய்யப்படவேண்டிய கடமைகளும் தேவனுக்குச் செய்யவேண்டிய கடமைகளும் தொடர்ச்சியான மோதலில் இருந்ததை அவர் கண்டார். மனிதர்கள் தேவனுடைய வார்த்தையிலிருந்து விலகிச்சென்று, அவர்கள் சொந்தமாகக் கண்டுபிடித்திருந்த கோட்பாடுகளை உயர்த்துபவர்களாக இருந்திருந்தனர். எந்தவிதமான புண்ணியமும் இல்லாத பாரம்பரியமான சடங்குகளை அவர்கள் கடைப்பிடித்திருந்தனர். அவர்களது ஆராதனை சாதாரணமான சடங்குகளின் மையமாக இருந்தது. போதிக்கும்படியாக வடிவமைக்கப்பட்டிருந்த பரிசுத்தமான சத்தியங்கள் தொழுபவர்களிடமிருந்து மறைக்கப்பட்டிருந்தன. விசுவாசமற்ற அவர்களது ஆராதனைகளில் அவர்கள் சமாதானத்தைக் காணவில்லை என்பதை அவர் கண்டார். சத்தியத்தின்படி தேவனை ஆராதிப்பதினால் அவர்களுக்கு வரக்கூடிய ஆவியின் சுதந்திரத்தை அவர்கள் அறியவில்லை. தேவனை ஆராதிப்பதன் பொருள்பற்றிப் போதிக்க இயேசு வந்திருந்தார். தெய்வீகப் பிரமாணங்களுடன் மானிட கோரிக்கைகள் கலப்பதை அவரால் அனுமதிக்க

முடியவில்லை. அவர் பிரமாணங்களையோ அல்லது கற்றறிந்த ஆசிரியர்களின் பழக்கங்களையோ தாக்கவில்லை. ஆனால் அவரது சுயமான சாதாரணப் பழக்கங்கள் காண்பிக்கப்பட்டபோது, அவரது குணத்தை நியாயப்படுத்தும் தேவனுடைய வார்த்தையை முன்வைத்தார். (2)

இயேசு எவர்களுடனெல்லாம் தொடர்புகொள்ள வந்தாரோ, அவர்களையெல்லாம் மகிழ்ச்சிப்படுத்த ஒவ்வொரு மென்மையும் பணிவுமிக்க பாதையில் முயன்றார். அவர் சாதுவானவராகவும் துடுக்குத்தனம் இல்லாதவராகவும் இருந்ததினால், தங்களுடைய போதனைகளினால் அவரை எளிதில் ஆட்கொண்டுவிடலாம் என்று வேதபாரகர்களும் மூப்பர்களும் எண்ணிக்கொண்டனர். வழக்குச்சொற்களையும் பாரம்பரியங்களையும் பழங்கால ரபிமார்களிடமிருந்து கைமாற்றப்பட்டிருந்தவைகளையும் அவர் ஏற்றுக்கொள்ளவேண்டுமென்று அவர்கள் அவரை வற்புறுத்தினர். ஆனால் பரிசுத்த எழுத்தில் அவைகளுக்கிருந்த அதிகாரத்தைப்பற்றி அவர் கேட்டார். தேவனுடைய வாயிலிருந்து புறப்படும் ஒவ்வொரு வார்த்தையையும் அவர் கேட்கக்கூடியவராக இருந்தார். ஆனால் மனிதர்களின் கண்டுபிடிப்புகளுக்குக் கீழ்ப்படிய அவரால் முடியலாமலிருந்தது. வேதவசனங்களை ஆரம்பத்திலிருந்து முடிவுவரை அவர் அறிந்திருந்தவராக காணப்பட்டார். அவைகளை அவர் அவைகளின் உண்மையான முக்கியத்துவத்துடன் முன்வைத்தார். ஒரு சிறுபிள்ளையால் போதிக்கப்படுவதற்காக ரபிமார்கள் வெட்கப்பட்டிருந்தனர். வேத வாக்கியங்களை விளக்குவது என்பது அவர்களது பணி என்று அவர்கள் உரிமைபாராட்டி, அவர்களது விளக்கத்தை ஏற்றுக்கொள்ளவேண்டிய நிலை அவருடையது என்றனர். அவர்களுடைய வார்த்தைகளுக்கு எதிராக அவர் நின்றதில் அவர்கள் கோபமடைந்திருந்தனர். (3)

அவர்களது பாரம்பரியங்களுக்கான ஆதாரம் வேதவாக்கியங்களில் காணமுடியாது என்பதை அவர்கள் அறிந்திருந்தனர். ஆவிக்குரியவிதமாகப் புரிந்துகொள்ளுவதில் இயேசு அவர்களைவிட அதிகமாக முன்னேறினவராக இருந்தார் என்பதை அவர்கள் உணர்ந்திருந்தனர். அப்படியிருந்தபோதிலும், அவர்களது மேலாதிக்கத்திற்கு அவர் கீழ்ப்படியாமலிருந்ததினால் அவர்மீது அவர்கள் கோபமுடையவர்களாக இருந்தனர். அவரை இணங்கச்செய்வதில் தோல்வியடைந்த அவர்கள், யோசேப்பையும் மரியாளையும் தேடி அவர்களிடத்தில் அவரது இணங்காத்தன்மையை அறிவித்தனர். இந்தவிதமாக அவர் கடிந்துகொள்ளப்படுதலையும் கண்டனத்தையும் அனுபவித்தார். (4)

இயேசு அவரது பண்பை உருவாக்குவதில் மிகச் சிறுவயதிலிருந்தே அவருக்கென்று செயல்பட்டிருந்தார். அதனால் பெற்றோர்மீதான மரியாதையும்

அன்புங்கூட தேவனுடைய வார்த்தைக்குக் கீழ்ப்படிவதிலிருந்து அவரைத் திருப்பமுடியவில்லை. குடும்ப பழக்கங்களிலிருந்து மாறுபட்ட ஒவ்வொரு செயலிலும்: “என்று எழுதியிருக்கிறதே” என்பது அவர் காட்டும் காரணமாக இருந்தது. ஆனால் ரபிமார்களின் செல்வாக்கு அவரது வாழ்க்கையை கசப்பான ஒன்றாக்கியிருந்தது. மௌனமாக இருக்கவேண்டியதையும், பொறுமையுடன் சகித்துக்கொள்ளுவதையும் அவரது இளமைப்பருவத்திலேயே அவர் கற்றுக்கொள்ளவேண்டியதிருந்தது. (5)

யோசேப்பின் குமாரர்கள் என்று அழைக்கப்பட்டிருந்த அவரது சகோதரர்களும் ரபிமார்களின் சார்பில் இருந்தனர். பாரம்பரியங்களை தேவன் எதிர்பார்க்கிறார் என்று எண்ணப்பட்டு, பாரம்பரியங்களுக்குச் செவிசாய்க்கவேண்டும் என்று அவர்கள் வற்புறுத்தினார்கள். தேவனுடைய வார்த்தையைவிட மனிதர்களின் பிரமாணங்களை அவர்கள் உயர்ந்ததாகக் கருதியிருந்தனர். தவறுக்கும் சத்தியத்திற்கும் இடையிலிருந்த வேற்றுமையை, இயேசு மிகத்தெளிவாகப் பிரித்தறிந்திருந்தது அவர்களுக்கு அதிகமாக எரிச்சலூட்டியது. தேவனுடைய கட்டளைகளுக்கு அவர் உறுதியாகக் கீழ்ப்படிந்ததை அவரது முரட்டுத்தனமான பிடிவாதம் என்று அவர்கள் கண்டனஞ்செய்தனர். ரபிகளுக்கு அவர் கொடுத்த பதில்களில் காட்டியிருந்த அறிவையும் ஞானத்தையும்பற்றி அவர்கள் அதிசயித்திருந்தனர். ஞானவான்களிடமிருந்து அவர் போதனையைப் பெற்றுக்கொள்ளவில்லை என்பதை அவர்கள் அறிந்திருந்தனர். அப்படியிருந்தபோதிலும் அவர் அவர்களுக்குப் போதிப்பவராக இருப்பதைக் காணச் சகிக்காதவர்களாக அவர்கள் இருந்திருந்தனர். அவரது கல்வி அவர்களது கல்வியைவிட உயர்ந்த ஒன்றாக இருந்தது என்பதை அவர்கள் இனங்கண்டிருந்தனர். அவர்கள் அறியாமையுள்ளவர்களாக இருந்த ஜீவவிருட்சத்தின் மார்க்கத்தைப்பற்றி அறிவின் ஆதாரமுள்ளவராக அவர் இருந்தார் என்பதை அவர்கள் அறிந்துகொள்ளவில்லை. (6)

கிறிஸ்து பரிசேயர்களிடமிருந்து விலகியிருக்காமல், அவர்களுடைய கடுமையான சட்டங்களிலிருந்து விலகி இருந்ததால், அவர்களுக்கு முக்கியமானவிதத்தில் எதிர்ப்பைக் காட்டியிருந்தார். மதத்தின் ஆளுகை மிக உயரமான வேலியால் தடைகட்டப்பட்டு, அன்றாட வாழ்க்கையின் காரியங்களுக்கு எதிராக (நடைமுறைப்படுத்தமுடியாத) அதிகப்படியாகப் பரிசுத்தமாக்கப்பட்டிருந்ததை அவர் கண்டார். பிரிவினையாகிய இந்தச் சுவரை அவர் தகர்த்தார். மனிதர்களுடனுள்ள உறவில் உனது கோட்பாடு என்ன? நீ எந்த சபையைச் சார்ந்தவன்? என்று அவர் கேட்கவில்லை. உதவி தேவையான அனைவருக்கும் உதவும் அவரது வல்லமையை அவர்

செயலாற்றினார். ஒரு துறவியின் குடிலுக்குள் தனியாக இருப்பதை விட்டுவிட்டு, அவரது பரலோகப் பண்பைக் காட்டுவதற்காக அவர் மனித இனத்திற்காக ஆர்வத்துடன் உழைத்தார். வேதாகமம் காட்டும் சமயக்கோட்பாடு உடலை வருத்திக்கொள்ளுவதில் இல்லை என்னும் கொள்கையை அவர் போதித்தார். தூய்மையும் கறைபடாததுமான மதம் என்பது குறிப்பிட்ட நேரங்களையும் சிறப்பான சந்தர்ப்பங்களையும் மட்டும் குறிப்பிடுபவையாக இல்லை என்பதை அவர் கற்றுக்கொடுத்தார். மனிதர்களின்மீதான அன்புமிக்க வாஞ்சையை அவர் எல்லாச் சமயங்களிலும் எல்லா இடங்களிலும் வெளிக்காட்டி, அவரைச் சுற்றிலும் மகிழ்ச்சிமிக்க இரக்கத்தின் ஒளியைப் பரப்பியிருந்தார். இவை அனைத்தும் பரிசேயர்களுக்கெதிரான ஒரு கடிந்துகொள்ளுதலாக இருந்தது. மதம் என்பது சுயநலத்தில் அடங்கியது அல்ல. அவர்களது நோயுற்ற பக்தியானது உண்மையான பக்தியிலிருந்து மாறுபட்டு, சுயநலமிக்கதாக இருந்தது. அதுவே இயேசுவிற்கெதிரான அவர்களது விரோதத்தை எழுப்பியிருந்தது. எனவே அவர்கள் தங்களது ஒழுங்குகளுக்கு இசையும்படி அவரை வற்புறுத்த முயன்றனர். (7)

இயேசு தாம் கண்ணுற்ற ஒவ்வொரு துன்பத்தையும் துடைத்திடும்படி உழைத்தார். கொடுப்பதற்கென்று அவரிடம் பணம் சிறு தொகையாக மட்டுமே இருந்தது. தம்மைவிட அதிகமாகத் தேவை உள்ளவர்களுக்கு உணவைக் கொடுக்கும்படி அவர் அடிக்கடி தமது உணவை மறுத்திருந்தார். அவரது செல்வாக்கு அவரது சகோதரர்களுக்கு எதிராகச் செயலாற்றியது என்பதை அவரது சகோதரர்கள் உணர்ந்தனர். அவர்கள் ஒருவரிடமும் இல்லாத அல்லது அவர்கள் தங்களுக்கு வேண்டுமென்று விரும்பாத ஒரு திறமை அவரிடம் இருந்தது. அவர்கள் கீழானவர்களாயிருந்த ஏழைகளிடம் கடினமாகப் பேசினபோது, இயேசு அப்படிப்பட்டவர்களைத் தேடிச்சென்று, தைரியத்தை உண்டுபண்ணக்கூடிய வார்த்தைகளை பேசினார். எவர்கள் தேவையுள்ளவர்களாக இருந்தனரோ, அவர்கள்முன் ஒரு குவளைத் தண்ணீரை அமைதியாகக் கொடுத்து, அவரது சொந்த உணவை அவர்களது கரங்களில் அமைதியாக வைத்திருந்தார். அவர்களது பாடுகளுக்கு அவர் விடுதலையளித்தபோது, அவரது இரக்கத்தின் செயல்களுடன் அவர் போதித்த சத்தியங்களும் இணைந்திருந்தன. இவ்வாறாக அவைகள் அவர்களது நினைவில் பதிப்பிக்கப்பட்டன. (8)

இவைகளெல்லாம் அவரது சகோதரர்களுக்கு வெறுப்பூட்டியது. அவர்கள் இயேசுவைவிட வயதில் மூத்தவர்களாக இருந்ததினால், அவர்களது கட்டளைக்கு அவர் கட்டுப்பட்டு இருக்கவேண்டுமென்று விரும்பினார்கள். அவர் தம்மை அவர்களைவிட மேலானவர் என்று

எண்ணுவதாக அவர்மீது குற்றஞ்சாட்டி, அவர் தன்னை தங்களுடைய ஆசிரியர்களுக்கும் ஆசாரியர்களுக்கும் மக்களை ஆளுகிறவர்களுக்கும் மேலாக வைத்திருப்பதாக அவரைக் கடிந்துகொண்டனர். அவரைப் பயமுறுத்தி, பயங்கொள்ளச்செய்ய அவர்கள் அடிக்கடி முயன்றிருந்தனர். ஆனால் அவர் வேதவாக்கியங்களை அவரது வழிகாட்டியாகக்கொண்டு அவர்களைக் கடந்துசென்றார். (9)

இயேசு அவரது சகோதரர்களை நேசித்து, தவறாத அன்புடன் அவர்களை நடத்தினார். ஆனால் அவர்கள் அவர்மீது பொறாமையுள்ளவர்களாக இருந்து, அதிகத் தீர்மானமான அவநம்பிக்கையையும் அவமதிப்பையும் வெளிக்காட்டினார்கள். அவரது நடத்தையை அவர்களால் புரிந்துகொள்ள முடியவில்லை. இயேசுவைப் பொறுத்தமட்டில் தங்களுக்குள்ளே மிகப்பெரிய முரண்பாடுகளைக் கண்டார்கள். அவர் தேவனின் தெய்வீகக் குமாரனாக இருந்திருந்தார். அப்படியிருந்தபோதிலும் ஒவ்வொரு அடியிலும் வறுமை அவரது வாழ்க்கையின் அனுபவமாக அடையாளப்படுத்தப்பட்டிருந்தது. உலகப்பிரகாரமான பெருமையிலிருந்தும் மேலான மனோபாவங்களில் இருந்தும் முற்றிலுமான தனித்தன்மை வாய்ந்த கௌரவத்தையும் தனித்தன்மையையும் உடையவராக இருந்தார். உலகப்பிரகாரமான மேன்மைக்காக அவர் முயற்சிசெய்யாமல், மிகவும் கீழான நிலைமையிலுங்கூட மனநிறைவு உள்ளவராக இருந்தார். அது அவரது சகோதரர்களை கேபமடையச்செய்தது. சோதனையிலும் இழப்பிலும் அவரிலிருந்த அமைதிக்கான காரணத்தை அவர்களால் அறிந்துகொள்ள இயலவில்லை. “அவர் ஐசுவரியமுள்ளவராயிருந்தும், நீங்கள் அவருடைய தரித்திரத்தினாலே ஐசுவரியவான்களாகும்படிக்கு, உங்கள் நிமித்தம் தரித்திரரானாரே”(2 கொரிந்தியர் 8:9) என்று கூறப்பட்டிருப்பதற்கிணங்க, அவர் நமக்காக தரித்திரரானார் என்பதை அவர்கள் அறியாதிருந்தனர். யோபுவின் தாழ்த்தப்பட்ட நிலையையும் பாடுகளையும் அவனது நண்பர்கள் அறிந்திருந்ததற்கும் அதிகமாக, இயேசுவின் ஊழியத்தின் இரகசியத்தை அவர்களால் அறிந்துகொள்ள இயலவில்லை. (10)

இயேசு அவரது சகோதரர்களைப்போலல்லாமல் இருந்ததினால் அவர்கள் அவரைத் தவறாகப் புரிந்திருந்தனர். அவரது தரம் அவர்களது தரமாக இருக்கவில்லை. அவர்கள் மனிதர்களைப்பார்த்து தேவனைவிட்டுத் திரும்பியிருந்தனர். அவரது வல்லமை அவர்களது வாழ்க்கையில் இருக்கவில்லை. அவர்கள் ஆசரித்துவந்த மதக்கொள்கையின் சடங்குகள் பண்பில் மாற்றத்தை உண்டுபண்ணமுடியாதவையாக இருந்தன. அவர்கள் “நீங்கள் ஒற்தலாமிலும் வெந்தையத்திலும் சீரகத்திலும் தசமபாகம்

செலுத்தி, நியாயப்பிரமாணத்தில் கற்பித்திருக்கிற விசேஷித்தவைகளாகிய நீதியையும் இரக்கத்தையும் விசுவாசத்தையும் விட்டுவிட்டீர்கள்" (மத்தேயு 23:23) என்றபடி வாழ்ந்திருந்தனர். இயேசுவின் உதாரணம் அவர்களுக்குத் தொடர்சியான எரிச்சலை உண்டாக்குவதாக இருந்தது. அவர் உலகத்தில் ஒன்றே ஒன்றைமட்டுமே வெறுத்திருந்தார். அதுதான் பாவம். அவரால் தவறான ஒரு செயலை வேதனையின்றிக் காணமுடியாமலிருந்தது. அது மூடிமறைக்க முடியாததாக இருந்தது. பாவத்தை நேசிப்பதை மூடிமறைத்து, பரிசுத்தமான தோற்றத்தைக் கொடுத்திருந்த மரபு வழியை வலியுறுத்தும் பக்திமான்களுக்கும் தேவனுடைய மகிமையைமட்டுமே எப்போதும் மேலானதாகக் கருதும் வைராக்கியமான பண்பிற்கும் இடையில் காணப்பட்ட மாறுபாடு தெளிவாக இருந்தது. இயேசுவின் வாழ்க்கை தீமையைக் கண்டனஞ்செய்திருந்ததினால் அவர் வீட்டிற்கு உள்ளும் வெளியிலும் எதிர்க்கப்பட்டிருந்தார். அவரது சுயநலமின்மையும் நேர்மையும் இகழ்ச்சியுடன் விமர்சிக்கப்பட்டிருந்தன. அவரது சகிப்புத்தன்மையையும் அன்பையும் கோழைத்தனம் என்று கூறினர். (11)

மனித இனத்தின்மீது விழும் கசப்பில் கிறிஸ்து ருசிக்காத எந்தப் பங்கும் இல்லை. அவரது பிறப்பின் காரணமாக அவர்மீது அவமதிப்பை வைக்கமுயன்றவர்கள் இருந்திருந்தனர். அவரது பிள்ளைப்பருவத்திலுங்கூட அவர்களது பரிகாசமான இரகசியப் பார்வையையும் தீய இரகசியச் சொற்களையும் அவர் சந்திக்கவேண்டியவராக இருந்தார். பொறுமையற்ற ஒரு வார்த்தையால் அல்லது பார்வையால் அவர் பதில் கூறியிருந்தால், ஒரே ஒரு தவறான செயலினால்கூட, அவர் அவரது சகோதரர்களுக்கு இணங்கியிருந்தால், உதாரணமாக இருக்கும் காரியத்தில் தோற்றிருந்திருப்பார். இப்படியாக, நமக்கான மீட்பின் திட்டத்தைச் செயலாற்றுவதில் அவர் தோல்வியடைந்திருப்பார். பாவத்திற்கு சாக்குப்போக்கு இருக்கலாம் என்று அவர் சம்மதித்திருந்தால்கூட சாத்தான் வெற்றியடைந்து, அதினால் இந்த உலகம் இழக்கப்பட்டிருக்கும். (12)

ஆனால் ஒவ்வொரு சோதனைக்கும் "என்று எழுதியிருக்கிறதே" என்னும் ஒரு பதில் அவரிடம் இருந்தது. அவரது சகோதரர்களின் தவறான செயல்களை அவர் அபூர்வமாகவே கடிந்திருந்தார். ஆனால் அவர்களுடன் பேச தேவனிடமிருந்ததான ஒரு வார்த்தை அவரிடம் இருந்திருந்தது. தடுக்கப்பட்டிருந்த சில செயல்களில் அவர்களுடன் ஒன்றுபட மறுத்திருந்ததற்காக அவர் ஒரு கோழை என்று குற்றஞ்சாட்டப்பட்டார். ஆனால் "ஆண்டவருக்குப் பயப்படுவதே ஞானம்; பொல்லாப்பை விட்டு விலகுவதே புத்தி" (யோபு 28:28) என்று எழுதி இருக்கிறதே என்பது அவரது பதிலாக இருந்தது. (13)

அவரது பிரசன்னத்தில் சமாதானம் இருக்கிறது என்பதை உணர்ந்து, அவரது சமூகத்தைத் தேடின சிலர் இருந்தனர். ஆனால் அவரது கறையற்ற வாழ்க்கை அநேகரைக் கடிந்ததினால் அவர்கள் அவரைத் தவிர்த்திருந்தனர். வாலிபத் தோழர்கள் அவர்கள் செய்திருந்ததைப்போல அவரும் செய்யவேண்டுமென்று அவரை வற்புறுத்தினார்கள். அவர் பிரகாசமும் உற்சாகமும் உள்ளவராக இருந்தார். அவர்கள் அவரது பிரசன்னத்தில் மகிழ்ச்சியடைந்து, அவரது உடனடியான கருத்துக்களை வரவேற்றிருந்தனர். ஆனால் அவர்கள் அவரது நேர்மை உணர்வினால் தவறு செய்யாத நிலையைக்கண்டு, பொறுமையற்றவர்களாக இருந்தனர். அவரைக் குறுகிய மனப்பான்மைமிக்க கடுமையான ஒழுக்கக் கண்டிப்பு உடையவர் என்று கூறினர். “வாலிபன் தன் வழியை எதினால் சுத்தம்பண்ணுவான்? உமது வசனத்தின்படி தன்னைக் காத்துக்கொள்ளுவதினால்தானே.” “நான் உமக்கு விரோதமாய்ப் பாவஞ்செய்யாதபடிக்கு, உமது வாக்கை என்னிருதயத்தில் வைத்து வைத்தேன்” (சங்கீதம் 119:9:11) என்று எழுதியிருக்கிறதே என்று இயேசு பதில் கூறினார். (14)

எங்கள் அனைவரையும்விட மிகவும் வித்தியாசமாக, நீ தனித்தன்மையோடு இருப்பதில் ஏன் முனைப்புள்ளவனாக இருக்கிறாய்? என்று அவர்கள் அடிக்கடி கேட்டிருந்தனர். “கர்த்தருடைய வேதத்தின்படி நடக்கிற உத்தம மார்க்கத்தார் பாக்கியவான்கள். அவருடைய சாட்சிகளைக் கைக்கொண்டு, அவரை முழு இருதயத்தோடும் தேடுகிறவர்கள் பாக்கியவான்கள். அவர்கள் அநியாயம் செய்வதில்லை, அவருடைய வழிகளில் நடக்கிறார்கள்” (சங்கீதம் 119:1–3) என்று எழுதியிருக்கிறதே என்று கூறினார். (15)

நாசரேத்தின் வாலிபர்களுடன் சேர்ந்து, கீழ்த்தரமான களியாட்டங்களில் ஏன் அவர் கலந்துகொள்ளுவதில்லை என்று கேட்கப்பட்டபோது, “திரளான செல்வத்தில் களிகூருவதுபோல, நான் உமது சாட்சிகளின் வழியில் களிகூருகிறேன். உமது கட்டளைகளைத் தியானித்து, உமது வழிகளைக் கண்ணோக்குகிறேன். உமது பிரமாணங்களில் மனமகிழ்ச்சியாயிருக்கிறேன்; உமது வசனத்தை மறவேன்” (சங்கீதம் 119:14-16) என்று எழுதியிருக்கிறதே என்று அவர் கூறினர். (16)

இயேசு அவரது உரிமைகளுக்காகப் போராடவில்லை. அவர் விருப்பமுள்ளவரும் குற்றங்கூறாதவருமாக இருந்ததினால் அடிக்கடி அவரது வேலை தேவையற்றவிதத்தில் கடுமையாக்கப்பட்டிருந்தது. அப்படியிருந்தபோதிலும் அவர் தோல்வியடையவோ அதைரியப்படவோ இல்லை. தேவனுடைய முகத்திலுள்ள ஒளியில் இருப்பவரைப்போல

அவர் இந்தத் துன்பங்களுக்குமேலாக வாழ்ந்திருந்தார். முரட்டுத்தனமாக அவர் நடத்தப்பட்டபோது, பழிக்குப்பழி வாங்காமல், அவமானத்தைப் பொறுமையுடன் சகித்தார். மறுபடியும் மறுபடியும், “உன் சகோதரர்கள் உன்னை அவமதிக்கும்போது நீ ஏன் பணிந்துபோகிறாய்?” என்று கேட்கப்பட்டபோது: “என் மகனே, என் போதகத்தை மறவாதே; உன் இருதயம் என் கட்டளைகளைக் காக்கக்கடவது. அவைகள் உனக்கு நீடித்த நாட்களையும், தீர்க்காயுசையும், சமாதானத்தையும் பெருகப்பண்ணும். கிருபையும் சத்தியமும் உன்னைவிட்டு விலகாதிருப்பதாக; நீ அவைகளை உன் கழுத்திலே பூண்டு, அவைகளை உன் இருதயமாகிய பலகையில் எழுதிக்கொள். அதினால் தேவனுடைய பார்வையிலும் மனுஷருடைய பார்வையிலும் தயையும் நற்புத்தியும் பெறுவாய்” (நீதிமொழிகள் 3:1–4) என்று எழுதியிருக்கிறதே என்று கூறினார். (17)

இயேசுவை அவரது பெற்றோர்கள் ஆலயத்தில் சந்தித்த நேரத்திலிருந்து, அவரது நடத்தை அவர்களுக்கு ஒரு புதிரானதாக இருந்தது. அவர் எதிர்வாதத்தில் ஈடுபட விருப்பமற்றவராக இருந்தார். அப்படியிருந்தபோதிலும் அவரது உதாரணம் தொடர்ச்சியான ஒரு பாடமாக இருந்தது. தனித்துவைக்கப்பட்ட ஒருவரைப்போல அவர் காணப்பட்டார். இயற்கையுடனுள்ள தனிமை, தேவனுடன் இருத்தல் ஆகியவை அவரது மகிழ்ச்சியின் நேரமாகக் காணப்பட்டிருந்தது. அவருக்கு வாய்ப்பு கிடைத்தபோதெல்லாம் அவரது வேலைகளின் காட்சிகளிலிருந்து திரும்பி, தியானிப்பதற்காகவும் தேவனுடன் தொடர்புகொள்ளுவதற்காகவும் பசுமையான வயல்வெளிகளுக்கோ அல்லது காடுகளில் இருந்த மரங்களுக்கிடையிலோ சென்றிருந்தார். ஏதாவது, தனியான இடத்தில் தியானஞ்செய்தல், வேதவாக்கியங்களை ஆராய்தல் அல்லது ஜெபஞ்செய்தல் ஆகியவைகளில் அவர் இருப்பதை அடிக்கடி அதிகாலை நேரங்கள் கண்டிருந்தன. இந்த அமைதியான நேரங்களிலிருந்து மீண்டும் அவரது பணிகளில் ஈடுபட்டு, பொறுமைமிக்க உழைப்பிற்கு உதாரணமாக விளங்க, அவர் தமது வீட்டுக்குத் திரும்பக்கூடியவராக இருந்திருந்தார். கிறிஸ்துவின் வாழ்க்கை குறிப்பாக அவரது அன்னையிடம் மரியாதையும் அன்பும் உடையதாக இருந்தது. மரியாள் அவளிடத்தில் பிறந்த பரிசுத்தமான பிள்ளைதான் வெகுகாலமாக வாக்குத்தத்தஞ்செய்யப்பட்டிருந்த மேசியா என்று நம்பினாள். அப்படியிருந்தபோதிலும், அவளது விசுவாசத்தை வெளிக்காட்ட அவள் துணியவில்லை. அவளது பூலோக வாழ்க்கை நெடுகிலும், அவரது பாடுகளில் பங்குபெறுபவளாக அவள் இருந்தாள். அவரது பிள்ளைப்பருவத்திலும் வாலிபப்பருவத்திலும் அவர்மீது கொண்டுவரப்பட்டிருந்த சோதனைகளுக்கு

அவள் துயரத்துடன் சாட்சியாக இருந்தாள். அவரது தப்பு சரியானது என்பதை அவள் அறிந்திருப்பதாக நியாயப்படுத்தியதினால் அவளும் கடுமையான நிலைமைக்குக் கொண்டுவரப்பட்டாள். வீட்டிலுள்ள உறவுகளின்மீதுள்ள கவனமும், பிள்ளைகளின்மீதான அன்னையின் பராமரிப்புமே அவர்களது பண்பை உருவாக்குவதில் முக்கியமானவை என்பதை அந்த அன்னை அறிந்து கவனித்திருந்தாள். யோசேப்பின் மகன்களும் மகள்களும் இதை அறிந்திருந்து, அவளுக்குக் கவலை உண்டாகும்வண்ணம் அவர்களது தரத்திற்குத் தக்கபடி இயேசுவின் நடத்தை திருத்தப்படவேண்டும் என முயன்றனர். (18)

மரியாள் அடிக்கடி இயேசுவை வன்மையாகக் கண்டித்து, அவர் ரபிமார்களின பழக்கங்களுக்கு இசைவாக இருக்கவேண்டுமென்று வற்புறுத்தினாள். தேவனுடைய பணிகளைப்பற்றிச் சிந்திப்பதையும் மனிதர்களுக்கும் ஊமையான விலங்குகளுக்கும் துன்பங்களைக் குறைப்பதற்கான வகைதேடுவதுமாகிய அவரது வழக்கத்தைவிட்டு விலகும்படி அவர் இணங்கிப்போகக்கூடாதவராக இருந்தார். இயேசுவைக் கட்டுப்படுத்துவதற்காக மரியாளின் உதவியை ஆசாரியர்களும் ரபிமார்களும் நாடினபோது அவள் மிகவும் கஷ்டப்பட்டாள். ஆனால் பழக்கத்தை நியாயப்படுத்தும் வேத வாக்கியங்களை அவர் எடுத்துக்காட்டியபோது, அவளது இருதயத்திற்குச் சமாதானம் வந்தது. (19)

இயேசுவிற்கும் அவர் தேவனால் அனுப்பப்பட்டவர் என்பதை நம்பாத அவரது சகோதரர்களுக்கும் இடையில் மரியாள் சில சமயங்களில் தடுமாறினாள். ஆனால் அவர் ஒரு தெய்வீகப் பண்பை உடையவராக இருந்தார் என்பதற்கான சான்றுகள் ஏராளமாக இருந்தன. பிறரின் நன்மைக்காக அவர் தம்மைத் தாமே தியாகஞ்செய்வதை அவள் கண்டாள். வீட்டிற்குள் ஒரு தூய்மையான சூழ்நிலையை அவரது பிரசன்னம் கொண்டுவந்திருந்தது. புளிப்பைப்போல சமூக மூலக்கூறுகளுக்கிடையில் செயல்படுவதாக அவரது வாழ்க்கை இருந்தது. சிந்தனையற்றவர்கள், முரடர்கள், மரியாதையற்றவர்கள் ஆகியவர்களுக்கிடையிலும், நீதியற்ற ஆயக்காரர்கள், பொறுப்பற்ற ஊதாரிகள், அநீதியான சமாரியர்கள், அஞ்ஞானப் போர்வீரர்கள், முரட்டு விவசாயிகள், கலப்பினமான திரள்கூட்டமானவர்கள் ஆகியோருக்கிடையிலும் அவர் தீங்கற்றவராகவும் கறையற்றவராகவும் வாழ்ந்துவந்தார். களைப்புற்றவர்களாக இருந்தும் பாரஞ்சுமக்கும்படி வற்புறுத்தப்பட்டிருந்த மனிதர்களை அவர் அங்கும்இங்கும் கண்டபோது, அனுதாபமான வார்த்தைகளைக் கூறியிருந்தார். அவர் அவர்களது பாரங்களில் பங்குகொண்டு, இயற்கையிலிருந்து அவர்

கற்றறிந்த தேவனின் அன்பு, இரக்கம் ஆகியவைகளை மீண்டும் மீண்டும் அவர்களுக்குக் கூறினர். (20)

சரியானவித்தில் பயன்படுத்தினால், நித்திய ஐசுவரியத்தைத் தங்களுக்குத் தரக்கூடிய விலைமதிப்புமிக்க தாலந்துகள் ஒவ்வொருவரிடமும் ஒப்படைக்கப்பட்டிருக்கிறது என்பதைக் காண அனைவரும் தங்களைத் தாங்களே நோக்கவேண்டும் என்று அவர் போதித்தார். அனைத்து மாயைகளையும் வாழ்க்கையிலிருந்து நீக்கிவிட்டு, முற்றிலுமாக அவரது சொந்த உதாரணத்தின்மூலமாக நித்தியமான பலன்களைப் பெறும்படி ஒவ்வொரு வினாடியும் நிரப்பப்படவேண்டும் என்று போதித்து, பரிசுத்தமான காரியங்களுக்காகக் கருவூலம்போல அது போற்றப்படவேண்டுமென்றார். எந்த ஒரு மானிடனையும் பயனற்றவன் என்று அவர் கடந்துசெல்லாமல், ஒவ்வாரு ஆத்துமாவிற்கும் இரட்சிப்பை அருளும் பரிகாரத்தைக் கொடுக்க அவர் வகைதேடினார். அவர் எந்தக் கூட்டத்தில் காணப்பட்டிருந்தாலும் அந்த நேரத்திற்கும் சூழ்நிலைக்கும் பொருத்தமான ஒரு பாடத்தைக் கொடுத்தார். மிகுந்த முரட்டுத்தனமாயும் வளம் பெரும் நம்பிக்கையற்றவர்களாயும் இருந்தவர்களுக்கு நம்பிக்கையூட்டி உற்சாகம் அளிக்க விரும்பினார். அவர்களைத் தீங்கற்றவர்களாகவும் சாதுவானவர்களாகவும் மாற்றத் தக்கதாக தேவனுடைய பிள்ளைகளென்று தெளிவான விதத்தில் வெளிப்படும்படி அப்படிப்பட்ட பண்பை முயன்று அடையவும், இவ்வாறு அவர்களை மாற்றத்தக்கதான ஒரு நிச்சயத்தை அவர்கள்முன் வைத்தார். சாத்தானின் கட்டுப்பாட்டிற்குள் இழுத்துச்செல்லப்பட்டு, அவனது கண்ணியிலிருந்து விடுபட வல்லமையற்றவர்களாக இருந்தவர்களை அவர் அடிக்கடி சந்தித்திருந்தார். அதைரியமடைந்து, நோயால் பீடிக்கப்பட்டு, சோதிக்கப்பட்டு, விழுந்திருந்த ஒருவரைத் தொடும்படி தேவையானதாகவும் புரிந்துகொள்ளக்கூடியதாகவுமுள்ள மிக மிக மென்மையான இரக்கமான வார்த்தைகளை இயேசு பேசியிருந்தார். ஆத்துமாக்களின் எதிராளியானவனுடன் கைகலந்து போராட்டத்தில் ஈடுபட்டிருந்த மற்றவர்களையும் அவர் சந்தித்தார். அவர்கள் வெற்றியடைவார்கள் என்னும் நிச்சயத்தை அவர்களுக்கு உறுதிப்படுத்தி, முயற்சிசெய்யும்படி அவர்களுக்கு தைரியமூட்டினார். ஏனெனில் தேவனுடைய தூதர்கள் அவர்களது அணியிலிருந்து அவர்களுக்கு வெற்றியைத் தருவார்கள். இவ்வாறு எவர்களுக்கு அவர் உதவியிருந்தாரோ அவர்கள் பூரணமான நம்பிக்கையுடன், அவர்களால் நம்பக்கூடிய ஒருவர் இங்கு இருக்கிறார் என்பதில் திருப்தியடைந்திருந்தனர். அனுதாபமிக்க அவரது செவிகளில் அவர்கள் அடுத்தடுத்து சொல்லிக்கொண்டிருந்த இரகசியங்களை அவர் வெளிப்படுத்தி காட்டிக்கொடுப்பதில்லை. (21)

சரீரத்தைப்போலவே ஆத்துமாவிற்கும் இயேசு சுகமளிப்பவராக இருந்தார். அவரது கவனத்திற்கு வந்த ஒவ்வொருவிதமான பாடுகளிலும் அவர் அக்கறையுள்ளவராயிருந்து, பாடுகளை அனுபவிக்கும் ஒவ்வொருவருக்கும் நிவாரணமளித்தார். அன்பான அவரது வார்த்தைகள் சுகந்தரும் தைலமாக இருந்தது. அவர் ஒரு அற்புதஞ்செய்தாரென்று ஒருவராலும் கூறமுடியவில்லை. ஆனால் நலம் தரும் வல்லமையாகிய அந்த அன்பு அந்தப் புண்ணியம் அவரிடமிருந்து நோயாளிகளுக்கும் துயரப்பட்டவர்களுக்கும் சென்றது. இவ்வாறாக, அவர் ஒரு துடுக்குத்தனமற்ற வழியில் அவரது பிள்ளைப்பருவத்திலிருந்தே மக்களுக்காக ஊழியஞ்செய்திருந்தார். அதன் காரணமாகத்தான் அவரது பொது ஊழியம் ஆரம்பமான பின் அநேகர் அவர் கூறியதை மகிழ்ச்சியுடன் கேட்டனர். (22)

அப்படியிருந்தபோதிலும், பிள்ளைப்பருவத்திலும் வாலிபனாகவும் மனிதனாகவும் இருந்தபோது, இயேசு தனித்தியங்கினார். அவரது தூய்மையிலும் விசுவாசத்திலும் அவர் திராட்சை ஆலையைத் தனியாக மிதித்தார். அவரது பாடுகளிலும் மரணத்தின்போதும் மக்களில் எவரும் அவருடன் இருக்கவில்லை. மனிதர்களின் மீட்பு என்னும் பயங்கரமான பொறுப்பின் பாரத்தை அவர் சுமந்தார். மனித இனத்தின் கொள்கைகளிலும் நோக்கங்களிலும் தீர்மானமிக்க மாறுதல் உண்டாகாதவரை, அனைவரும் இழக்கப்படவேண்டியது என்பதை அறிந்திருந்தார். அதுவே அவரது ஆத்தும பாரமாக இருந்தது. அவர்மீது சுமத்தப்பட்டிருந்த பாரத்தை வரவேற்கக்கூடிய ஒருவரும் இருக்கவில்லை. அவர் தாமே மனிதர்களின் ஒளியாக இருக்கும்படியான வலிமைமிக்க நோக்கத்தினால் நிறைந்தவராக அவரது வாழ்க்கையின் வடிவமைப்பைச் செயலாற்றினார். (23) ★

# 10

# வனாந்தரத்தில் கூப்பிடுகிற சத்தம்!

**லூக்கா 1:5–23, 57–80; 3:1–18; மத்தேயு 3:1–12; மாற்கு 1:1–8**

**(The Desire if Ages, pp. 97–108)**

நெடுநாட்களாக மேசியாவின் வருகைக்காகக் காத்திருந்த இஸ்ரவேலின் மத்தியிலிருந்து கிறிஸ்துவிற்கு முன்னோடியானவன் எழும்பினான். வயது முதிர்ந்த ஆசாரியனாயிருந்த சகரியா, அவனது மனைவியான எலிசபெத்து ஆகிய இருவரும் தேவனுக்கு முன்பாக நீதிமான்களாக இருந்தனர். அவர்களது அமைதியும் பரிசுத்தமுமான வாழ்க்கையில், அந்தத் தீயநாட்களின் இருளின் நடுவில், விசுவாசத்தின் ஒளி ஒரு விண்மீனைப்போல் சுடர்விட்டது. “கர்த்தருக்கு வழியை ஆயத்தப்படுத்துங்கள்; அவருக்குப் பாதைகளைச் செவ்வைபண்ணுங்கள்” என்று கூறக்கூடிய மகனைக் குறித்த வாக்குத்தத்தம் தெய்வபக்தியுள்ள இந்தத் தம்பதிகளுக்குக் கொடுக்கப்பட்டது. (1)

மலைநாட்டுப்புறமான யூதேயாவில் சகரியா வாழ்ந்திருந்தான்; ஆனால், ஒவ்வொரு ஆசாரியனும் வருடத்திற்கு இரண்டு தடவை தேவாலயத்தில் ஒரு வாரம் ஊழியஞ்செய்யவேண்டும். இந்த அவசியத்தை அனுசரித்து ஒரு வாரம் தேவாலயத்தில் ஊழியஞ்செய்ய அவன் எருசலேமிற்குச் சென்றான். “அப்படியிருக்க அவன் தன் ஆசாரிய வகுப்பின் முறைமைப்படி தேவாலயத்தில் ஊழியஞ்செய்துவருகிற காலத்தில், ஆசாரிய ஊழிய முறைமையின்படி அவன் தேவாலயத்திற்குள் பிரவேசித்து, தூபங்காட்டுகிறதற்குச் சீட்டைப்பெற்றான்.” (2)

ஆசரிப்புக்கூடாரத்திலுள்ள பரிசுத்தஸ்தலத்தில் பொன் தூபபீடத்திற்குமுன் அவன் நின்றிருந்தான். தூபவர்க்கத்தினாலுண்டான புகைமேகம் இஸ்ரவேலரின் ஜெபங்களுடன் தேவனுடைய சமூகத்திற்கு உயர்ந்து சென்றது. திடீரென்று ஒரு தெய்வீகப் பிரசன்னத்தை அவன் உணர்ந்தான். அப்பொழுது கர்த்தருடைய தூதன் ஒருவன் தூப பீடத்தின் வலதுபக்கத்தில் நின்றான். அந்த தேவதூதன் நின்றிருந்த (வலது) பக்கம் அனுகூலத்தின் அடையாளமாக இருந்தது; ஆனால், சகரியா இதைக்

கவனிக்கவில்லை. அநேக வருடங்களாக அவன் மீட்பருடைய வருகைக்காக ஜெபித்துக்கொண்டிருந்தான்; இப்பொழுது அந்த ஜெபங்களுக்குப் பதில் அளிக்கப்பட இருக்கின்றது என்பதை அறிவிக்கப் பரலோகம் அதன் தூதனை அனுப்பியிருந்தது; ஆனால், தேவனுடைய இரக்கத்தை அங்கீகரிப்பது அவனுக்கு அளவிற்கதிகமாகப் பெரிதாகக் காணப்பட்டது. அவன் பயந்தவனாகவும் தன்னைத்தானே கண்டனஞ்செய்துகொள்ளுகிறவனாகவும் இருந்தான். (3)

ஆனால், “சகரியாவே, பயப்படாதே, உன் வேண்டுதல் கேட்கப்பட்டது; உன் மனைவியாகிய எலிசபெத்து உனக்கு ஒரு குமாரனைப் பெறுவாள், அவனுக்கு யோவான் என்று பேரிடுவாயாக. உனக்குச் சந்தோஷமும் மகிழ்ச்சியும் உண்டாகும், அவன் பிறப்பினிமித்தம் அநேகர் சந்தோஷப்படுவார்கள். அவன் கர்த்தருக்கு முன்பாகப் பெரியவனாயிருப்பான், திராட்சரசமும் மதுவும் குடியான், தன் தாயின் வயிற்றிலிருக்கும்போதே பரிசுத்த ஆவியினால் நிரப்பப்பட்டிருப்பான். அவன் இஸ்ரவேல் சந்ததியாரில் அநேகரை அவர்கள் தேவனாகிய கர்த்தரிடத்திற்குத் திருப்புவான். பிதாக்களுடைய இருதயங்களைப் பிள்ளைகளிடத்திற்கும், கீழ்ப்படியாதவர்களை நீதிமான்களுடைய ஞானத்திற்கும் திருப்பி, உத்தமமான ஜனத்தைக் கர்த்தருக்கு ஆயத்தப்படுத்தும்படியாக, அவன் எலியாவின் ஆவியும் பலமும் உடையவனாய் அவருக்கு முன்னே நடப்பான் என்றான். அப்பொழுது சகரியா தேவதூதனை நோக்கி: இதை நான் எதினால் அறிவேன்; நான் கிழவனாயிருக்கிறேன், என் மனைவியும் வயதுசென்றவளாயிருக்கிறாளே” (லூக்கா 1:13–18) என்றான். (4)

ஆபிரகாம் வாக்குத்தத்தஞ்செய்தவரில் நம்பிக்கை உள்ளவனாயிருந்து, வயதுசென்றவனாக இருந்தபோதிலும், ஒரு பிள்ளையைப் பெற்றான் என்பதை சகரியா நன்கு அறிந்திருந்தான்; ஆனால், வயது முதிர்ந்த அந்த ஆசாரியன் வினாடி நேரம் அவனது மானிட பலவீனத்தைப்பற்றிச் சிந்தித்தான். தேவன் வாக்குத்தத்தம் செய்ததை நிறைவேற்ற வல்லவராக இருக்கிறார் என்பதை அவன் மறக்கிறான். இந்த அவநம்பிக்கைக்கும் “இதோ நான் ஆண்டவருடைய அடிமை; உம்முடைய வார்த்தையின்படி எனக்கு ஆகக்கடவது” என்று தேவதூதனுடைய ஆச்சரியமான அறிவிப்பிற்கு நாசரேத்தின் பெண்ணாயிருந்த மரியாளின் சிறுபிள்ளையைப்போன்ற இனிய விசுவாசமிக்க பதிலுக்கும் உள்ள முரண்பாடு எப்படிப்பட்டதாக இருந்தது? (5)

ஆபிரகாமிற்கும் மரியாளிற்கும் பிள்ளைகள் பிறந்ததுபோல, சகரியாவிற்கு ஒரு பிள்ளையின் பிறப்பில் நாம் மிகவும் தாமதமாகக்

கற்றுக்கொள்ளுகின்ற—ஆனால் விரைவில் மறந்துவிடக்கூடிய, ஒரு உண்மையான ஒரு பெரும் ஆவிக்குரிய போதனை இருந்தது. நாம் நாமாக எந்த ஒரு நற்காரியத்தையும் செயலாற்ற முடியாதவர்களாக இருக்கிறோம்; ஆனால், நம்மால் எவைகளைச் செய்யமுடியாதோ அவைகள் கீழ்ப்படிதலும் நம்பிக்கையுமுள்ள ஆத்துமாவில் தேவனால் செயலாற்றப்படும். விசுவாசத்தின்மூலமாக அந்தப்பிள்ளை கொடுக்கப்பட்டிருந்தது. விசுவாசத்தின்மூலமாக அந்த ஆவிக்குரிய வாழ்க்கை பெற்றெடுக்கப்பட்டதைப்போல, நீதியின் பணிகளைச்செய்ய நாம் தகுதிப்படுத்தப்பட்டிருக்கிறோம். (6)

சகரியாவின் அந்தக் கேள்விக்கு: "நான் தேவ சந்நிதானத்திலே நிற்கிற காபிரியேல் என்பவன். உன்னுடனே பேசவும் உனக்கு இந்த நற்செய்தியை அறிவிக்கவும் அனுப்பப்பட்டு வந்தேன்" என்று பதில் கூறினான். கிறிஸ்துவின் வருகைவரைக்கும் செல்லவேண்டிய காலத்தின் அளவை ஐநூறு வருடங்களுக்குமுன், தானியேல் அறியும்படி காபிரியேல் செய்திருந்தான். இந்தக் காலத்தின் முடிவு சமீபித்துவிட்டது என்னும் அறிவிப்பு, மேசியாவின் வருகைக்காக ஜெபிக்கும்படி சகரியாவை அழைத்திருந்தது. இப்பொழுது எந்த ஒரு தூதனால் அந்தத் தீர்க்கதரிசனம் கொடுக்கப்பட்டிருந்ததோ—அவன், அதின் நிறைவேறுதலை அறிவிக்க வந்திருக்கிறான். (7)

"நான் தேவ சந்நிதானத்தில் நிற்கிற காபிரியேல் என்பவன்" என்ற தேவதூதனின் அந்த வார்த்தை, பரலோக மன்றத்தில் மேன்மைமிக்க ஒரு பதவியை உடையவனாக அவன் இருக்கிறான் என்பதைக் காட்டுகிறது. அவன் தானியேலுக்கு ஒரு தூதைக் கொண்டுவந்தபோது, "உங்கள் அதிபதியாகிய மிகாவேலைத் (கிறிஸ்து) தவிர என்னோடேகூட அவர்களுக்கு விரோதமாய்ப் பலங்கொள்ளுகிற வேறொருவரும் இல்லை" (தானியேல்10:21) என்றான். "தம்முடைய தூதனை அனுப்பி, தம்முடைய ஊழியக்காரனாகிய யோவானுக்கு வெளிப்படுத்தினார்" (வெளிப்படுத்தல் 1:1) என்று இரட்சகர் காபிரியேலைப்பற்றி யோவானிடம் வெளிப்படுத்தின் விசேஷத்தில் கூறுகிறார். "உன்னோடும் உன் சகோதரரோடும் தீர்க்கதரிசிகளோடுங்கூட நானும் ஒரு ஊழியக்காரன்" (வெளிப்படுத்தல் 22:9) என்று காபிரியேல் தன்னைப்பற்றி யோவானிடம் கூறுகிறார். தேவகுமாரனுக்கு அடுத்தபடியாக பரலோகத்தில் மேன்மையுடையவனாக நிற்கும் தேவதூதன், பாவிகளான மனிதர்களுக்கு தேவனுடைய நோக்கத்தை அறிவிப்பதற்குத் தெரிந்துகொள்ளப்பட்டிருக்கிறான் என்பது ஆச்சரியமான சிந்தனைக்குரியதாகும். (8)

தேவதூதனின் வார்த்தைகளில் தனக்குண்டான சந்தேகத்தை சகரியா வெளிக்காட்டியிருந்தான். அவை நிறைவேறுமளவும் அவன்

பேசக்கூடாதவனானான். "என் வார்த்தைகளை நீ விசுவாசியாதபடியினால், இவைகள் சம்பவிக்கும் நாள்மட்டும் நீ ஊமையாயிருப்பாய்" (லூக்கா 1:20) என்றான். வெளிப்படையான, நாட்டினுடைய பாவங்களின் மன்னிப்பிற்காகவும், மேசியாவின் வருகைக்காகவும் ஜெபிப்பது ஆசாரியனின் பணியாக இருந்தது: ஆனால் அதைச் செய்ய சகரியா முயன்றபோது, அவனால் ஒரு வார்த்தையும் பேசமுடியவில்லை. (9)

அவர்கள் (மக்கள்) அவனுக்காக அதிக நேரம் காத்திருந்து அவன் தேவனுடைய நியாயத்தீர்ப்பினால் இறந்துபோனானோ என்று பயந்திருந்தனர். அவன் வெளியேவந்தபோது, அவர்களிடத்தில் பேசமுடியாதவனாக இருந்தான். அவன் வெளியே வந்தபோது, அவனுடைய முகம் தேவனுடைய மகிமையினால் ஒளி பெற்றிருந்ததினால், அவன் தேவாலயத்தில் ஒரு தரிசனத்தைக் கண்டான் என்று அறிந்திருந்தார்கள். சகரியா தான் கண்டதையும் கேட்டதையும் சைகையினால் அவர்களுக்குத் தெரிவித்தான். "அவனுடைய ஊழியத்தின் நாட்கள் நிறைவேறினவுடனே தன் வீட்டுக்குப் போனான்." (10)

வாக்குத்தத்தஞ்செய்யப்பட்ட பிள்ளை பிறந்தபின், அதன் தகப்பனின் நாவு கட்டவிழ்க்கப்பட்டது. அவன் பேசி தேவனைத் துதித்தான். அவர்களைச் சுற்றிலுமிருந்தவர்களுக்கு பயமுண்டாயிற்று. இந்தச் சம்பவங்களனைத்தும் யூதேயாவின் மலைநாடெங்கிலும் பேசப்பட்டது. இதைக் கேட்டவர்களனைவரும் இந்தப் பிள்ளை எப்படிப்பட்டதாக இருக்குமோவென்று அவர்களுடைய இருதயங்களில் சிந்தித்திருந்தனர். இவையனைத்தும் மேசியாவின் வருகையைப்பற்றிக் கவனிக்கும்படிச் செய்தது; அதற்காக யோவான் வழியை ஆயத்தஞ்செய்யவேண்டியவனாக இருந்தான். பரிசுத்த ஆவியானவர் சகரியாவின்மீது தங்கியிருந்தார். கீழ்க்காணும் அழகிய வார்த்தைகளினால் தனது மகனின் ஊழியத்தைப் பற்றி அவன் தீர்க்கதரிசனமுரைத்தான்: (11)

"நீயோ பாலகனே, உன்னதமானவருடைய தீர்க்கதரிசி என்னப்படுவாய்; நீ கர்த்தருக்கு வழிகளை ஆயத்தம்பண்ணவும், நமது தேவனுடைய உருக்கமான இரக்கத்தினாலே அவருடைய ஜனத்துக்குப் பாவமன்னிப்பாகிய இரட்சிப்பைத் தெரியப்படுத்தவும், அவருக்கு முன்னாக நடந்துபோவாய். அந்தகாரத்திலும் மரண இருளிலும் உட்கார்ந்திருக்கிறவர்களுக்கு வெளிச்சம் தரவும், நம்முடைய கால்களைச் சமாதானத்தின் வழியிலே நடத்தவும், அவ்விரக்கத்தினாலே உன்னதத்திலிருந்து தோன்றிய அருணோதயம் நம்மைச் சந்தித்திருக்கிறது" (லூக்கா 1:76–79) என்றான். (12)

அந்தப் பிள்ளை வளர்ந்து ஆவியிலே பலங்கொண்டு இஸ்ரவேலுக்குத் தன்னைக் காண்பிக்கும்வரைக்கும் வனாந்தரங்களிலே இருந்தான். "அவன்

கர்த்தருக்கு முன்பாகப் பெரியவனாய் இருப்பான், திராட்சரசமும் மதுவும் குடியான், தன் தாயின் வயிற்றிலிருக்கும்போதே பரிசுத்த ஆவியினால் நிரப்பப்பட்டிருப்பான்" (லூக்கா 1:15) என்று அவனுடைய மகன் பிறப்பதற்குமுன் தேவதூதன் கூறியிருந்தான். ஒரு மாபெரும் பணியை—மனிதர்களிடம் இதுவரை ஒப்படைக்கப்பட்டிருந்த பணிகளுக்கெல்லாம் மேலான ஒரு பணியைச் செய்யும்படி, தேவன் சகரியாவின் மகனை அழைத்திருந்தார். இந்த ஊழியத்தை நிறைவேற்ற, கர்த்தர் அவனுடன் இருக்கும்படி அவன் நடந்துகொள்ள வேண்டும். அவன் தேவதூதனுடைய போதனைகளைக்கேட்டு நடந்தால், தேவனுடைய ஆவியானவர் அவனுடனிருப்பார். (13)

தேவனுடைய ஒளியை மனிதர்களிடம் கொண்டுவரும் யேகோவாவின் தூதனாக யோவான் முன்செல்லவேண்டியவனாக இருந்தான். அவர்களது சிந்தனைக்கு அவன் ஒரு புதிய திருப்பத்தை காட்டவேண்டும். தேவனுடைய எதிர்பார்ப்புகளின் பரிசுத்தத்தையும் அவர்களுக்குத் தேவையான பூரணமான நீதியையும் அவன் உணர்த்திக் காட்டவேண்டும். அப்படிப்பட்ட ஒரு தூதை உடையவன் பரிசுத்த முள்ளவனாக இருக்கவேண்டும். தேவனுடைய பரிசுத்த ஆவியானவர் தங்கி வாழும் ஒரு ஆலயமாக அவன் இருக்கவேண்டும். இப்படிப்பட்ட ஊழியத்தை நிறைவேற்றுவதற்கு மனநிலையிலும்—உடல்நிலையிலும்— ஆவிக்குரிய நிலையிலும் திறனுடையவனாக இருக்கவேண்டும்; எனவே, அவன் அவனது இச்சைகளையும் உணவுப்பழக்கத்தையும் கட்டுப்படுத்துவது அவசியமாக இருக்கவேண்டும். சுற்றுப்புறச் சூழ்நிலைகளினால் பாறைகளும் காடுகளிலுள்ள மரங்களும் அசையாதவைகளாக இருப்பதைப்போல, அவன் மனிதர்களுக்கிடையில் இருக்கும்படி தனது வல்லமைகள் அனைத்தையும் கட்டுப்படுத்தக்கூடியவனாக இருக்க வேண்டும். (14)

பண ஆசைகள், ஆடம்பரம், சிற்றின்ப மோகம், பகட்டு ஆரவாரம் ஆகியவை யோவான் ஸ்நானகனின் காலத்தில் எங்கும் பரவியிருந்தன. புலன்களின் இன்பங்கள், விருந்துகள், மது அருந்துதல் ஆகியவை உடலில் நோயையும் சீர்குலைவையும் கொண்டுவந்து, ஆவிக்குரிய காரியங்களைப்பற்றிய உணர்வின்மையையும் பாவத்தைப்பற்றிய உணர்வுக்குறைவையும்ஏற்படுத்தியிருந்தன.யோவான்ஒரு சீர்திருத்தவாதியாக நிற்கவேண்டியவனாக இருந்தான். தனது இச்சையடக்கமுள்ள வாழ்க்கையினாலும் சாதாரணமான உடையினாலும் அவனது காலத்தில் மிதமிஞ்சியிருந்தவைகளைக் கடிந்துகொள்ளவேண்டியவனாக இருந்தான்; எனவேதான், பரலோக சிங்காசனத்திற்கருகிலிருந்த ஒரு தேவ தூதனால், இச்சையடக்கம் பற்றிய ஒரு பாடம் யோவானின் பெற்றோருக்குப் போதனையாகக் கொடுக்கப்பட்டது. (15)

பிள்ளைப்பருவத்திலும் வாலிபப்பருவத்திலும் குணமானது மிகவும் ஆழமான பதிவுகளை ஏற்கக்கூடியதாக உள்ளது; ஆகவே, சுயத்தைக் கட்டுப்படுத்தும் வல்லமை அடைந்துகொள்ளப்பட வேண்டும். குடும்பமாக அமர்ந்து குளிர்காயும்போதும், உரையாடல்களை நிகழ்த்தும்போதும் பயன்படுத்தப்படும் செல்வாக்குகள் நித்தியத்தைப்போல நிலைப்பவையாக உள்ளன. இயற்கையான எந்த புத்திக்கும் மேலாக ஆரம்பகால வருடங்களில் அமைக்கப்படும் பழக்கவழக்கங்கள் ஒரு மனிதன் வாழ்க்கைப்போரில் வெற்றியடைவான் அல்லது கெட்டழிந்துபோவான் என்பதை முடிவுசெய்யும். வாலிபப்பருவமானது விதைக்கும் காலம். இந்த வாழ்க்கைக்கும் வரவிருக்கும் வாழ்க்கைக்குமான பண்பின் அறுவடையை அது தீர்மானிக்கிறது. (16)

“பிதாக்களுடைய இருதயங்களைப் பிள்ளைகளிடத்திற்கும் கீழ்ப்படியாதவர்களை நீதிமான்களின் ஞானத்திற்கும் திருப்பி, உத்தமமான ஜனத்தைக் கர்த்தருக்கென்று ஆயத்தப்படுத்தும்படி” யோவான் ஒரு தீர்க்கதரிசியாக இருந்தான். கிறிஸ்துவின் முதலாம் வருகைக்கென்று ஒரு ஜனத்தை ஆயத்தஞ்செய்ததின்மூலமாக, நமது கர்த்தரின் இரண்டாம் வருகைக்கென்று ஒரு ஜனத்தை ஆயத்தப்படுத்துபவர்களின் பிரதிநிதியாக யோவான் இருந்தான். தங்குதடையற்ற சிற்றின்ப நுகர்ச்சிகளில் இந்த உலகம் மூழ்கியிருக்கிறது. தவறுகளும் கட்டுக்கதைகளும் ஏராளமாக உள்ளன. ஆத்துமாக்களை அழிக்கும் சாத்தானின் கண்ணிகள் ஏராளமாகப் பெருகியுள்ளன. தேவனுக்குப் பயப்படும் பயத்தினால் பரிசுத்தமடைய வேண்டிய அனைவரும் இச்சையடக்கம், சுயக்கட்டுப்பாடு ஆகிய பாடங்களைக் கற்றுக்கொள்ளவேண்டும். உணவின்மீதுள்ள விருப்பங்களும் இச்சைகளும் மனதின் மேலான வல்லமைக்குக் கீழ்ப்படுத்தப்பட்டிருக்க வேண்டும். மனவலிமைக்கும் ஆவிக்குரிய உள்ளார்ந்த பார்வைக்கும் இந்த சுயஒழுக்கம் மிக முக்கியமானதாக இருந்து, தேவனுடைய பரிசுத்தமான உண்மைகளை நாம் புரிந்துகொள்ளவும் நடைமுறைப்படுத்தவும் நம்மைத் திருப்திப்படுத்தும். இதன் காரணமாகவே, கிறிஸ்துவின் இரண்டாம் வருகைக்கென்று ஆயத்தமாகும் பணியில் இச்சையடக்கம் அதன் இடத்தைப் பெறுகிறது. (17)

இயல்பாக உள்ள வழக்கத்தின்படி சகரியாவின் மகன் ஆசாரியத்துவத்திற்கென்று கற்பிக்கப்பட்டிருக்க வேண்டும்; ஆனால், ரபிமார்களின் பள்ளிகளில் கொடுக்கப்பட்டிருந்த பயிற்சிகள் அவனை இந்த ஊழியத்திற்குத் தகுதியற்றவனாக்கியிருந்திருக்கும். வேதவசனங்களுக்கு விளக்கங்கூறுவது எப்படி என்பதைக் கற்பிப்பதற்காக தேவன் அவனை இறையியல் ஆசிரியர்களிடம் அனுப்பவில்லை. இயற்கையையும்

இயற்கையின் தேவனையும்பற்றி அவன் கற்றுக்கொள்ள வேண்டும் என்பதற்காக அவர் அவனை வனாந்தரத்திற்கு அழைத்தார். (18)

வறண்ட குன்றுகளின் நடுவிலும், வனாந்தரத்தின் பள்ளங்களிலும் பாறைகளினாலான குகைகளுக்கு நடுவிலும் இருந்த தனிமையான இடங்களில் அவன் தன் வீட்டைக் கண்டான். வனாந்தரத்தின் கடுமைமிக்க வாழ்க்கைமுறைக்கென்று வாழ்க்கையின் மகிழ்ச்சிகளை அனுபவிப்பதையும் ஆடம்பரங்களையும்விட்டு விலகிச் செல்லுவதையும் தெரிந்தெடுத்தல் அவனுடையதாக இருந்தது. எளிமையும் சுயமறுப்பும்மிக்க பழக்கவழக்கங்களுக்கு இந்தச் சுற்றுப்புறம் அனுகூலமிக்கதாக இருந்தது. உலகத்தின் இரைச்சலினால் உண்டாகும் இடையூறு இல்லாமல் இயற்கை, வெளிப்படுத்தல், தெய்வீகப் பாதுகாப்பு ஆகியவைபற்றிய பாடங்களை அவனால் இங்கு கற்கமுடிந்தது. சகரியாவிற்குத் தேவதூதன் கூறிய வார்த்தைகள் தேவனுக்குப் பயப்படும் அவனது பெற்றோர்களால் அடிக்கடி யோவானுக்கு மீண்டும் மீண்டும் கூறப்பட்டிருந்தன. பிள்ளைப் பருவத்திலிருந்தே அவனது ஊழியம் அவன்முன் வைக்கப்பட்டிருந்தது. அவன் அந்தப் பரிசுத்தமான பொறுப்பை ஏற்றுக்கொண்டவனாக இருந்திருந்தான். சந்தேகம், நம்பிக்கையின்மை, அசுத்தம் ஆகியவைகள் எங்கும் பரவியிருந்த அந்த சமூகத்திலிருந்து தப்புகின்ற வானந்தரத் தனிமை அவனுக்கு வரவேற்புடையதாகவிருந்தது. பாவத்தின்—அதன் மிகவும் அதிகமான பாவத்தன்மையின் உணர்வை இழந்துவிடாமல், சோதனைக்கெதிராக நிற்கும்படி தனது சொந்த வல்லமையின்மீது நம்பிக்கைவைக்காமல், பாவத்தின் தொடர்பிலிருந்து தொடர்ச்சியாக அவன் பின்வாங்குபவனாக இருந்தான். (19)

பிறந்தபொழுதிலிருந்தே நசரேயனாக தேவனுக்குப் பிரதிஷ்டை செய்யப்பட்டிருந்த அவன், அவனது வாழ்க்கை முழுவதிலும் இருந்த அர்ப்பணித்தலினால் அந்த வாக்குறுதியைத் தன் சொந்தமாக்கியிருந்தான். அவனது ஆடை பழங்காலத் தீர்க்கதரிசிகளின் ஆடையைப்போல ஒட்டக மயிரினால் செய்யப்பட்டதாகவும், இடையில் வார்க்கச்சை உள்ளதாகவும் இருந்தது. அவன் வனாந்தரத்தில் காணப்பட்டிருந்த வெட்டுக்கிளி—ஒருவகை மரத்தின் காய்களையும் காட்டுத்தேனையும் உண்டு, குன்றுகளிலிருந்து வந்த சுத்தமான நீரையும் பருகியிருந்தான். (20)

ஆனால், துறவிகளின் முகவாட்டத்திலோ அல்லது சுயநலமிக்க தனிமையிலோ யோவானின் வாழ்க்கை வீணாகச் செலவிடப்படவில்லை. அவன் அவ்வப்போது மக்களுடன் கலந்து உலகத்தில் என்ன நடந்துகொண்டிருக்கிறது என்பதைக் காண்பதில் ஆர்வமிக்கவனாக

இருந்தான். அவன் இளைப்பாறியிருந்த அமைதியான இடத்திலிருந்து அவனுக்குமுன்பாக விரிவடைந்துகொண்டிருந்த சம்பங்களைக் கண்டு கொண்டிருந்தான். பரலோகத்தின் தூதுடன் மனிதர்களின் இதயங்களை எப்படி அடைவது என்பதை அவன் புரிந்துகொள்ளவேண்டும் என்பதற்காக, தெய்வீக ஆவியினால் ஒளிப்படுத்தப்பட்ட பார்வையுடன், மனிதர்களின் இயல்புகளை அவன் ஆராய்ந்திருந்தான். அவனது ஊழியத்தின் பாரம் அவனிடம் இருந்தது. தனிமையிலும் தியானஞ்செய்வதிலும் ஜெபிப்பதிலும் தனக்கு முன்னிருந்த வாழ்க்கையின் ஊழியத்திற்கென்று அவன் தனது ஆத்துமாவை வரிந்துகட்ட வகைதேடினான். (21)

அவன் வனாந்தரத்தில் இருந்தபோதிலும் சோதனையிலிருந்து விலக்கப்பட்டவனாக இருக்கவில்லை. சாத்தான் நுழையக்கூடிய ஒவ்வொரு பாதையையும் முடிந்தவரை அவன் சாத்தியிருந்தான்; அப்படியிருந்தும் அவன் சோதனைக்காரனால் தாக்கப்பட்டிருந்தான்; ஆனால், அவனது ஆவிக்குரிய உணர்த்துதல்கள் தெளிவாக இருந்தன. இவன் பலத்தையும் தீர்மானமெடுக்கும் குணத்தையும் மேம்பாடடையச் செய்திருந்தான். பரிசுத்த ஆவியானவரின் உதவியின்மூலமாக சாத்தான் சமீபிப்பதைக் கண்டுபிடிக்கக் கூடியவனாகவும், அவனது வல்லமையை எதிர்க்கக்கூடியவனாகவும் இருந்தான். (22)

யோவான் தன்னுடைய பள்ளியையும் சரணாலயத்தையும் வனாந்தரத்தில் கண்டிருந்தான். மீதியான் தேசத்து மலைகளின் நடுவில் மோசே தேவப் பிரசன்னத்திற்குள் அடைக்கப்பட்டிருந்தவனாக இருந்து, அவரது வல்லமையின் சான்றுகளால் சூழப்பட்டிருந்ததுபோல, யோவானும் இருந்தான். இஸ்ரவேலின் பெரும்தலைவன் இருந்ததுபோல, மக்களுக்கு நடுவில் தனிமையில் வாழ்வது அவனது பங்காக இருக்கவில்லை; ஆனால், அவனுக்கு முன்பாக யோர்தானுக்கு அப்பால் மலைகளை ஏற்படுத்தி, அவைகளைப் பலத்தால் வளைத்துக்கட்டியிருந்தவரைப்பற்றிக் கூறிக்கொண்டிருந்த மோவாபின் உயர்ந்த இடங்களிருந்தன. அவனது வனாந்தர வீட்டிலிருந்த—இயற்கையின் இருண்ட—பயங்கரமான தன்மை இஸ்ரவேலின் நிலைமையை தெளிவாக படம்பிடித்துக் காட்டியது. கர்த்தரின் கனிதரும் திராட்சைத் தோட்டம் ஒரு பாழ்நிலமாயிற்று; ஆனால், புயலின் கொந்தளிப்பினாலான இருளுக்கு மேலாக, உயரே வாக்குத்தத்தத்தின் வானவில் இருந்தது. அதைப்போலவே, இஸ்ரவேலின் சீரழிவிற்கு மேலாக, மேசியாவின் மகிமைமிக்கஆளுகை வாக்குத்தத்தஞ்செய்யப்பட்டிருந்தது. அவரது இரக்கத்தின் உடன்படிக்கை என்னும் வானவில்லினால் கோபத்தின் மேகங்கள் கவிந்திருந்தன. (23)

வானத்தின் நட்சத்திரங்களைப்போல, எண்ணிக்கையில் அடங்காத ஆபிரகாமின் சந்ததியைப்பற்றிய தேவனுடைய வாக்குத்தத்தத்தை அவன் மௌனமாக இரவில் வாசித்தறிந்தான். “அவர் காலையில் மந்தாரமில்லாமல் உதித்து ... சூரியனுடைய விடியற்கால வெளிச்சத்தைப்போல் இருப்பார்” (2 சாமுவேல் 23:4) என்று அவரைப்பற்றிக் கூறப்பட்டதுபோல, மோவாபின் மலையின்மீது அதிகாலையின் ஒளி வந்தது. “கர்த்தரின் மகிமை வெளியரங்கமாகும், மாம்சமான யாவும் அதை ஏகமாய்க் காணும்” (ஏசாயா 40:5) என்பதுபோல் மத்தியான வேளையில் அவரது அழகின் ஒளியின் வெளிப்படுத்தலை அவன் கண்டான். (24)

சர்ப்பத்தின் தலையை நசுக்கக்கூடிய, வாக்குத்தத்தஞ் செய்யப்பட்ட வித்து—மேசியா—அவருடைய வருகையைப்பற்றிய வெளிப்படுத்தல்களான தீர்க்கதரிசனச் சுருள்களை திகைப்புடனும் வெற்றி பெறும் ஆவியுடனும் தேடினான். சமாதானத்தை அருளுபவராகிய ஷீலோ (Shiloh), தாவீதின் சிங்காசனத்திலிருந்து ஆளுகைசெய்பவர்கள் முடிந்துபோவதற்குமுன்பே தோன்றவேண்டும். இப்பொழுது அந்த வேளை வந்துவிட்டது. சீயோன் மலையின்மீதிருந்த அரண்மனையில் ஒரு ரோம அதிபதி அமர்ந்திருந்தான். கர்த்தருடைய நிச்சயமான வார்த்தையினால் ஏற்கனவே கிறிஸ்து பிறந்திருந்தார். “ஈசாயென்னும் அடிமரத்திலிருந்து ஒரு துளிர் தோன்றி”; “யதார்த்தத்தின்படி பூமியிலுள்ள சிறுமையானவர்களுக்குத் தீர்ப்புச்செய்து” ஒரு அரசர் ஆட்சிசெய்யவேண்டியவராக இருந்தார். “அவர் காற்றுக்கு ஒதுக்காகவும் ... விடாய்த்த பூமிக்கு பெரும் கன்மலையின் நிழலாகவும் இருப்பார்.” இஸ்ரவேல் இனி ஒருபோதும் “கைவிடப்பட்டவள்” என்றும் அவளது தேசம் “பாழான தேசம்” என்றும் சொல்லப்படாமல், “எனது மகிழ்ச்சி” என்றும் அவளுடைய தேசம் “பியூலா” என்றும், கர்த்தரால் அழைக்கப்படும். (ஏசாயா 11:4; 32:2; 62:4) மேசியாவின் மகிமையைப்பற்றிய ஏசாயாவின் கவனமிக்க வர்ணனைகள் இரவும் பகலும் அவனது கல்வியாக இருந்தது. நாடுகடந்து தனிமையிலிருந்தவனின் இருதயம் அந்த மகிமையான தரிசனத்தால் நிறைந்திருந்தது. (25)

அவன் இராஜாவை அவருக்கே உரிய அழகிலேயே கண்டபோது, தன்னை மறந்தான். மகத்துவமானவரின் பரிசுத்தத்தை அவன் கண்டு, தான் திறனற்றவனும் தகுதியற்றவனுமாக இருப்பதை உணர்ந்தான். அவன் தெய்வீகத்தைக் கண்டதினால் மனிதர்களைக்கண்டு அஞ்சாதவனாக, பரலோகத்திற்காக தூதுவனாகச் செல்ல ஆயத்தமாயிருந்தான். அவன் அரசர்களுக்கெல்லாம் அரசராயிருந்தவருக்குமுன் தலைதாழ்த்தி அவரைப் பணிந்திருந்ததினால், அவன் பூமியின் அரசர்களுக்குமுன் அஞ்சாதவனாக—நிமிர்ந்து நிற்கக்கூடியவனாக இருந்தான். (26)

மேசியாவின் இராஜ்யத்தைப்பற்றி யோவான் முழுமையாகப் புரிந்திருக்கவில்லை. இஸ்ரவேல் அதன் நாட்டின் விரோதிகளிடமிருந்து விடுதலையடைவதைக் காணவேண்டுமென்றிருந்தான்; ஆனால், ஒரு அரசர் அவரது நீதியில் வருவதும், இஸ்ரவேல் ஒரு பரிசுத்தமான தேசமாக அமைக்கப்படுவதும், அவனது நம்பிக்கையின் பெரும் நோக்கமாக இருந்தது. (27)

“தம்முடைய பரிசுத்த உடன்படிக்கையை நினைந்தருளி உங்கள் சத்துருக்களின் கைகளிலிருந்து நீங்கள் விடுதலையாக்கப்பட்டு, உயிரோடிருக்கும் நாளெல்லாம் பயமில்லாமல் எனக்கு முன்பாகப் பரிசுத்தத்தோடும் நீதியோடும் ஊழியஞ்செய்யக் கட்டளையிடுவேன்” என்று அவனது பிறப்பின்பொழுது கூறப்பட்ட தீர்க்கதரிசனம் இவ்வாறாக நிறைவேறுமென்று அவன் நம்பினான். (28)

அவனது மக்கள் வஞ்சிக்கப்பட்டவர்களாகவும், சுயதிருப்தி உடையவர்களாகவும், அவர்களது பாவங்களில் உறங்கிக்கொண்டிருந்த தையும் அவன் கண்டான். ஒரு பரிசுத்தமான வாழ்க்கைக்கு அவர்களை உணர்த்தியெழுப்ப அவன் விரும்பினான். அவன் தாங்கிச் செல்லும்படி தேவன் அவனிடம் கொடுத்திருந்த தூது, அவர்களை தங்களது மந்தமான நிலையிலிருந்து திடுக்கிடச் செய்யும்படியானதாக இருந்து, அவர்களது பெரும் துன்மார்க்கத்தின் காரணமாக நடுக்கத்தை உண்டுபண்ணக்கூடியதாக இருந்தது. சுவிசேஷத்தின் விதை விதைக்கப்படுமுன், இதயத்தின் நிலம் உழப்படவேண்டும். இயேசுவினால் உண்டாகக்கூடிய ஆரோக்கியத்தை அவர்கள் தேடுமுன், தங்களது பாவத்தினாலான காயத்தின் அபாயத்தை உணரும்படி அவர்கள் எழுப்பப்படவேண்டும். (29)

பாவிகளிடம் முகஸ்துதிசெய்யும்படி தேவன் அவரது தூதர்களை அனுப்புவதில்லை. பரிசுத்தமடையாதவர்கள், அவர்களது சாவுக்குரிய ஆபத்தில் பாதுகாப்பாகத் தங்கியிருக்கும்படி, அவர் சமாதானத்தின் தூதை அனுப்புவதில்லை. தவறுசெய்பவனின் மனச்சாட்சியின்மீது பாரமான சுமையை அவர் வைத்து, குற்ற உணர்வை உண்டுபண்ணும் அம்புகளால் ஆத்துமாவைத் துளைக்கிறார். “இரட்சிக்கப்படுவதற்கு நான் என்ன செய்யவேண்டும்?” என்னும் ஆழமான தேவையைப்பற்றிய உணர்வையும் அழுகையையும் உண்டுபண்ணும்விதத்தில், தேவனுடைய பயங்கரமான நியாயத்தீர்ப்பை அவன்முன் ஊழியஞ்செய்யும் தேவதூதர்கள் வைக்கின்றனர். அதன்பின், பூமியின் தூளுக்குத் தம்மைத் தாழ்த்தின கரம் குற்றத்திற்காக வருந்துபவனை உயரத் தூக்குகிறது. பாவத்தைக் கடிந்து, அகந்தையையும் ஆசைமிக்க எண்ணங்களையும் வெட்கப்படுத்திய அந்த

சத்தம், நான் உனக்கு என்ன செய்யவேண்டுமென்று விரும்புகிறாய்? என்று மென்மையான இரக்கத்துடன் விசாரிக்கிறது. (30)

யோவானின் ஊழியம் துவங்கியிருந்தபோது, அந்த தேசம் புரட்சியின் கரையில், எழுச்சியும் அதிருப்தியும் உடையதாக இருந்தது. அர்கெலாயு நீக்கப்பட்டபின் யூதேயா ரோம நாட்டின் நேரடியான கட்டுப்பாட்டின்கீழ் கொண்டுவரப்பட்டது. ரோம ஆளுநர்களின் கொடுங்கோன்மையும், பலாத்காரமாகப் பணம்பறித்தலும், அஞ்ஞானிகளின் அடையாளங்களையும் சம்பிரதாயங்களையும் அறிமுகப்படுத்தும் திட்டமிட்ட முயற்சியும், கலகத்தீயை எழுப்பி, ஆயிரங்களான தைரியமிக்க இஸ்ரவேலர்களின் இரத்தத்தினால் அணைக்கப்பட்டிருந்தது. இவை அனைத்தும் ரோமாபுரிக்கெதிரான தேசிய வெறுப்பைத் தீவிரப்படுத்தி, அதன் வல்லமையிலிருந்து சுதந்திரமடையவேண்டும் என்ற விருப்பத்தை அதிகப்படுத்தியிருந்தது. (31)

அதிருப்திக்கும் கலகத்துக்கும் இடையில் திடுக்கிடச் செய்யும் உறுதியுள்ள—முழுமையான நம்பிக்கையுள்ள ஒரு சத்தம்: “மனந்திரும்புங்கள், பரலோக இராஜ்பம் சமீபித்திருக்கிறது” என்று வனாந்தரத்திலிருந்து கேட்கப்பட்டது. மாறுபட்ட புதிய பலத்துடன் அது மனிதர்களை அசைத்தது. கிறிஸ்துவின் வருகை வெகுதூரத்தில் உள்ளது என்று தீர்க்கதரிசிகள் அறிவித்திருந்தனர்; ஆனால், அவரது வருகை சமீபமாக இருக்கிறது என்ற ஒரு அறிவிப்பு இங்கு உள்ளது. தனித்த ஒருவனான யோவானின் தோற்றம், அவனது பேச்சைக் கேட்டவர்களின் மனங்களை பண்டைய ஞானதிருஷ்டிக்காரர்களிடத்திற்குப் பின்நோக்கி இழுத்துச் சென்றது. அவனது நடை, உடை பாவனைகளில் அவன் எலியா தீர்க்கதரிசியைப்போலிருந்தான். அவன் எலியாவின் ஆவியுடனும் வல்லமையுடனும் அந்த நாட்டில் நிலவியிருந்த ஊழல்களையும் பாவங்களையும் கண்டித்தான். அவனது வார்த்தைகள் தெளிவானதாகவும் குறிப்பானதாகவும் உணர்த்துபவையாகவும் இருந்தன. அநேகர் அவனை மரித்தோரிலிருந்தெழுந்த ஒரு தீர்க்கதரிசி என நம்பினர். அந்த நாடு முழுவதும் கலக்கப்பட்டது. திரள்கூட்டமானவர்கள் வனாந்தரத்தில் கூடினார்கள். (32)

யோவான் மேசியாவின் வருகையை அறிவித்து, மக்களை மனந்திரும்பும்படி அழைத்தான். பாவத்திலிருந்து சுத்திகரிக்கப்படுவதின் அடையாளமாக அவன் அவர்களுக்கு யோர்தான் நீரில் ஞானஸ்நானம் கொடுத்திருந்தான். இந்தவிதமான காணக்கூடிய பொருட்பாடத்தின்மூலமாக, எவர்கள் தங்களை தேவனால் தெரிந்துகொள்ளப்பட்ட மக்கள் என்று எண்ணுகிறார்களோ, அவர்கள் பாவத்தினால் அசுத்தமடைந்திருந்தனர் என்றும், இருதயத்திலும் வாழ்க்கையிலும் சுத்திகரிக்கப்படாமல் அவர்களால்

மேசியாவின் இராஜ்யத்தில் பங்குபெற இயலாது என்றும் அறிவித்தான். (33)

இளவரசர்கள், ரபிமார்கள், போர்வீரர்கள், ஆயக்காரர்கள், குடியானவர்கள் ஆகிய அனைவரும் அந்தத் தீர்க்கதரிசி கூறியதைக் கேட்கவந்தனர். தேவனிடமிருந்து வந்த பயபக்தியோடுகூடிய எச்சரிப்பானது சிறிது காலத்திற்கு அவர்களை பீதியடையச்செய்தது. அநேகர் மனந்திரும்பி ஞானஸ்நானம் பெற்றனர். அவன் அறிவித்த இராஜ்யத்தில் பங்குபெறுவதற்காக சகல நிலைகளில் இருந்தவர்களும் அந்த ஸ்நானகனின் கோரிக்கைகளுக்குக் கீழ்ப்படிந்தனர். (34)

வேதபாரகரிலும் பரிசேயரிலும் அநேகர் தங்கள் பாவங்களை அறிக்கையிட்டு, அவனிடம் ஞானஸ்நானம் கேட்டு வந்தனர். அவர்கள் தங்களை மற்றவர்களைவிட மேலானவர்களாக உயர்த்தியிருந்து, அவர்களது பக்தியைப்பற்றி உயர்ந்த கருத்துடையவர்களாக இருக்கும்படி மனிதர்களை நடத்தியிருந்தனர். இப்பொழுது அவர்களது வாழ்க்கையிலுள்ள இரகசியமான குற்றங்கள் திரைநீக்கம் செய்யப்பட்டன. இந்த மனிதர்களில் அநேகர் பாவத்தைப்பற்றிய உண்மையான உணர்வு உள்ளவர்கள் அல்ல என்று பரிசுத்த ஆவியினால் யோவான் உணர்த்தப்பட்டான். அவர்கள் தன்னல நோக்கத்தோடு அற்பமாகச் செயல்படுபவர்களாக இருந்தனர். தீர்க்கதரிசியின் நண்பர்களாக இருந்து, வரவிருக்கும் பிரபுவிடமிருந்து அனுகூலம் அடையலாம் என அவர்கள் நம்பியிருந்தனர். மக்களால் அறியப்பட்டிருந்த இந்த இளம் போதகரின் கரங்களிலிருந்து ஞானஸ்நானம் பெறுவது மக்களுடன் அவர்களுக்கிருந்த செல்வாக்கை அதிகப்படுத்தும் என அவர்கள் எண்ணியிருந்தனர். (35)

“விரியன் பாம்புக்குட்டிகளே! வருங்கோபத்துக்குத் தப்பித்துக்கொள்ள உங்களுக்கு வகைகாட்டினவன் யார்? மனந்திரும்புதலுக்கேற்ற கனிகளைக் கொடுங்கள். ஆபிரகாம் எங்களுக்குத் தகப்பன் என்று உங்ளுக்குள்ளே சொல்லிக்கொள்ள நினையாதிருங்கள்; தேவன் இந்தக் கல்லுகளினாலே ஆபிரகாமுக்குப் பிள்ளைகளை உண்டுபண்ண வல்லவராயிருக்கிறார்” என்ற சீறலுடன் யோவான் அவர்களைச் சந்தித்தான். (36)

இஸ்ரவேலிற்கான நித்தியமான ஆதரவு என்னும் தேவனுடைய வாக்குத்தத்தத்தை யூதர்கள் தவறாக எடுத்துக்காட்டியிருந்தனர். “சூரியனைப் பகல் வெளிச்சத்துக்காகவும் சந்திரநட்சத்திர நியமங்களை இராவெளிச்சத்துக்காகவும் கட்டளையிட்டவரும், அலைகள் கொந்தளிக்கத் தக்கதாகச் சமுத்திரத்தைக் குலுக்குகிறவரும், சேனைகளின் கர்த்தர் என்னும் நாமமுள்ளவருமாகிய கர்த்தர் சொல்லுகிறது என்னவென்றால்: இந்த நியமங்கள் எனக்கு முன்பாக இல்லாதபடிக்கு ஒழிந்துபோனால்,

அப்பொழுது இஸ்ரவேல் சந்ததியும் எனக்கு முன்பாக என்றைக்கும் ஒரு ஜாதியாயிராதபடிக்கு அற்றுப்போம் என்று கர்த்தர் சொல்லுகிறார். கர்த்தர் சொல்லுகிறது என்னவென்றால்: மேலே இருக்கிற வானங்கள் அளக்கப்படவும், கீழே இருக்கிற பூமியின் அஸ்திபாரங்கள் ஆராயப்படவும் கூடுமானால், நான் இஸ்ரவேல் வம்சத்தார் அனைவரையும் அவர்கள் செய்த எல்லாவற்றினிமித்தமும் வெறுத்துவிடுவேன் என்று கர்த்தர் சொல்லுகிறார்"—எரேமியா 31:35–37. யூதர்கள் தாங்கள் மரபுவழிப்படி ஆபிரகாமினின்று வந்தவர்கள் என்ற காரியமானது இந்த வாக்குத்தத்தத்தைக் கோரிப்பெறும் உரிமையை தங்களுக்கு கொடுத்தது என்று மதித்திருந்தனர். ஆனால் அவர்கள் தேவன் குறிப்பிட்டிருந்த நிபந்தனைகளைப் புறக்கணித்திருந்தனர். "அந்நாட்களுக்குப்பிற்பாடு, நான் இஸ்ரவேல் குடும்பத்தோடே பண்ணப்போகிற உடன்படிக்கையாவது; நான் என் நியாயப்பிரமாணத்தை அவர்கள் உள்ளத்திலே வைத்து, அதை அவர்கள் இருதயத்திலே எழுதி, நான் அவர்கள் தேவனாயிருப்பேன், அவர்கள் என் ஜனமாயிருப்பார்கள் என்று கர்த்தர் சொல்லுகிறார். இனி ஒருவன் தன் அயலானையும், ஒருவன் தன் சகோதரனையும் நோக்கி: கர்த்தரை அறிந்துகொள் என்று போதிப்பதில்லை; அவர்களில் சிறியவன்முதல் பெரியவன்மட்டும், எல்லாரும் என்னை அறிந்துகொள்வார்கள் என்று கர்த்தர் சொல்லுகிறார்; நான் அவர்கள் அக்கிரமத்தை மன்னித்து, அவர்கள் பாவங்களை இனி நினையாதிருப்பேன்"—எரேமியா 31:33,34. (37)

தேவனுடைய நியாயப்பிரமாணம் யாருடைய இருதயங்களில் எழுதப்பட்டிருக்கிறதோ அவர்களுக்கு தேவனுடைய ஆதரவு நிச்சயப்படுத்தப்பட்டுள்ளது. அவர்கள் அவருடன் ஒன்றாக இருக்கின்றனர்; ஆனால், யூதர்கள் தங்களை அவரிடமிருந்து பிரித்திருந்தனர். அவர்களது பாவங்களின் காரணமாக, அவர்கள் அவரது நியாயத்தீர்ப்பின்கீழ் துன்பங்களை அனுபவித்திருந்தனர். ஒரு அஞ்ஞான நாட்டிற்கு அவர்கள் அடிமையாக்கப்பட்டிருந்ததற்கு இதுவே காரணமாக இருந்தது. அவர்களது மனங்கள் மீறுதல்களினால் இருளடைந்திருந்தது; ஏனெனில், கடந்தகாலங்களில் அவர்களுக்கு தேவன் பெரும் ஆதரவைக் காட்டியிருந்ததினால், அவர்களது பாவங்களுக்கு அவர்கள் சாக்குப்போக்குக் காட்டியிருந்தனர். அவர்கள் மற்ற மனிதர்களைவிட நல்லவர்கள் என்றும், அவரது ஆசீர்வாதங்களுக்குத் தகுதியுள்ளவர்கள் என்றும் தங்களுக்குள் பெருமைபாராட்டிக்கொண்டிருந்தனர். (38)

"இவைகளெல்லாம் திருஷ்டாந்தங்களாக அவர்களுக்குச் சம்பவித்தது; உலகத்தின் முடிவுகாலத்திலுள்ள நமக்கு எச்சரிப்புண்டாக்கும்படி எழுதப்பட்டும்

இருக்கிறது”–1 கொரிந்தியர் 10:11. தேவனுடைய ஆசீர்வாதங்களை நாம் அடிக்கடி இந்த விதமாகத் தவறாகப் பொருள்கொண்டு, நமக்குள் உள்ள நல்ல தன்மைகளினால்தான் நாம் ஆதரிக்கப்பட்டிருக்கிறோம் என்று நம்மை நாமே பெருமைபாராட்டிக்கொண்டிருக்கிறோம். நமக்காக எவைகளைச் செய்யவேண்டுமென்று தேவன் விரும்புகிறாரோ அவைகளை அவரால் செய்யமுடியாது. அவரது ஈவுகள் நமது சுயநலத்திற்காகவும், நமது இருதயங்களை நம்பிக்கையின்மையினாலும் பாவங்களினாலும் கடினப்படுத்தவும் பயன்படுத்தப்படுகின்றன. (39)

இஸ்ரவேலருடைய அகந்தை, சுயநலம், கொடுமை ஆகியவை அவர்கள் விரியன்பாம்புகளைச் சேர்ந்த ஒரு சந்ததியாகவும், நீதியும் கீழ்ப்படிதலுமிக்க ஆபிரகாமின் பிள்ளைகளைவிட சாவிற்கேதுவான சாபமுடையவர்களாகவும் இருப்பதை யோவான் அவர்களுடைய போதகர்களுக்கு அறிவித்தான். அவர்கள் தேவனிடமிருந்து ஒளியைப் பெற்றிருந்த காரணத்தால், எந்த அஞ்ஞானிகளைவிடத் தாங்கள் மேலானவர்கள் என்ற உணர்வுடன் இருந்திருந்தனரோ, அவர்களைவிட மிகவும் மோசமானவர்களாக இருந்தனர். அவர்கள் செதுக்கி உருவாக்கப்படுவதற்கென்று வெட்டி எடுக்கப்பட்டிருந்த கன்மலையையும், தோண்டி எடுக்கப்பட்டிருந்த துரவின் குழியையும் மறந்திருந்தனர். தேவனுடைய நோக்கத்தை நிறைவேற்றுவதற்கு அவர் அவர்களைச் சார்ந்திருக்கவில்லை. ஒரு அஞ்ஞான மக்களின் கூட்டத்திலிருந்து தேவன் ஆபிரகாமை அழைத்திருந்ததுபோல, அவரது சேவைக்கென்று மற்றவர்களையும் அவரால் அழைக்கமுடியும். இப்பொழுது அவர்களது இருதயங்கள் வனாந்தரத்திலுள்ள கற்களைப்போல உயிரற்றவையாகக் காணப்படலாம்; ஆனால், அவரது சித்தத்தை நிறைவேற்றும்படி அவரது ஆவியால் அவைகளை எழுப்பி, அவரது வாக்குத்தத்தத்தின் நிறைவேறுதலைப் பெற்றுக்கொள்ளச் செய்யமுடியும். (40)

“இப்பொழுதே கோடரியானது மரங்களின் வேர் அருகே வைத்திருக்கிறது ... நல்ல கனிகொடாத மரமெல்லாம் வெட்டுண்டு அக்கினியிலே போடப்படும்” என்று அந்த தீர்க்கதரிசி கூறினான். ஒரு மரத்தின் மதிப்பு அதன் பெயரால் இல்லாமல், அது தரும் கனியினால் தீர்மானிக்கப்படுகிறது. அதன் கனி மதிப்பற்றதாக இருந்தால், அதன் பெயர் அதை அழிவிலிருந்து காப்பாற்றாது. அவர்கள் தேவனுக்கு முன்பாக நிற்பது அவர்களது பண்பையும் வாழ்க்கையையும் சார்ந்ததாக இருக்கும் என்று யோவான் யூதர்களுக்கு அறிவித்தான். யூதர்கள் என்று அழைத்துக்கொள்வதால் எந்த மதிப்பும் இல்லை. அவர்களது வாழ்க்கையும் பண்பும் தேவனுடைய பிரமாணத்திற்கு இசைவானதாக இல்லாமலிருந்திருந்தால், அவர்கள் தேவனுடைய மக்களல்ல. (41)

இருதயத்தை ஆராயும் அவனுடைய வார்த்தைகளின்கீழ் அவன் கூறியவைகளைக் கேட்டவர்கள் குற்ற உணர்வை அடைந்தனர்; அப்படியானால், நாங்கள் என்ன செய்யவேண்டும்? என்ற விசாரணையுடன் அவர்கள் அவனிடத்திற்கு வந்தனர். "அவர்களுக்கு அவன் பிரதியுத்தரமாக: இரண்டு அங்கிகளை உடையவன் இல்லாதவனுக்குக் கொடுக்கக்கடவன்; ஆகாரத்தை உடையவனும் அப்படியே செய்யக்கடவன்" என்றான். அநீதிசெய்வதற்கு எதிராக ஆயக்காரர்களையும், பலாத்காரஞ்செய்வதற்கு எதிராகப் போர்வீரர்களையும் அவன் எச்சரித்தான். (42)

கிறிஸ்துவின் இராஜ்யத்திற்குக் கீழ்ப்பட்டவர்களான அனைவரும் விசுவாசத்தையும் மனந்திரும்புதலையும் சான்றாகக் கொடுப்பார்கள். அன்பு, நேர்மை, உண்மைத்தன்மை ஆகியவை அவர்களது வாழ்க்கையில் காணப்படும். தேவைப்படுபவர்களுக்கு ஊழியஞ்செய்து, தேவனுக்கு அவர்களுடைய காணிக்கையைக் கொண்டுவருவார்கள். தற்காப்பற்றவர்களுக்கு அவர்கள் கேடயமாயிருந்து, புண்ணியம், மன உருக்கம் ஆகியவைகளுக்கு அவர்கள் ஒரு எடுத்துக்காட்டாக விளங்குவார்கள்; அப்படியே கிறிஸ்துவின் பின்னடியார்கள் மாறுதலை உண்டுபண்ணும் பரிசுத்த ஆவியானவரின் வல்லமைக்குச் சாட்சி கொடுப்பார்கள். நீதி, இரக்கம், தேவனின்மீதுள்ள அன்பு ஆகியவை அன்றாட வாழ்க்கையில் காணப்படும். அப்படியில்லாவிட்டால் அவர்கள் அக்கினிக்கு இரையாகும் உமியைப்போலிருப்பார்கள். (43)

"மனந்திரும்புதலுக்கென்று நான் ஜலத்தினால் உங்களுக்கு ஞானஸ்நானங் கொடுக்கிறேன்; எனக்குப்பின் வருகிறவரோ என்னிலும் வல்லவராயிருக்கிறார், அவருடைய பாதரட்சைகளைச் சுமக்கிறதற்கு நான் பாத்திரன் அல்ல; அவர் பரிசுத்த ஆவியினாலும் அக்கினியினாலும் உங்களுக்கு ஞானஸ்நானம் கொடுப்பார்" (மத்தேயு 3:11) என்று யோவான் கூறினான். கர்த்தர் அவருடைய மக்களை அவர்களுடைய அக்கிரமங்களிலிருந்து சுத்திகரிப்பார் என்று ஏசாயா தீர்க்கதரிசி கூறியிருந்தான்: "சீயோனில் மீதியாயிருந்து, எருசலேமில் தரித்திருந்து ஜீவனுக்கென்று பேரெழுதப்பட்டவனெவனும் பரிசுத்தனென்று சொல்லப்படுவான்"—ஏசாயா 4:4; "நான் என் கையை உன்னிடமாய்த் திருப்பி, உன் களிம்பு நீங்க உன்னைச் சுத்தமாய்ப் புடமிட்டு, உன் ஈயத்தையெல்லாம் நீக்குவேன்"— ஏசாயா 1:25. பாவம் எங்கு காணப்பட்டாலும் அதற்கு "நம்முடைய தேவன் பட்சிக்கிற அக்கினியாயிருக்கிறாரே"—எபிரெயர் 12:29. அவரது வல்லமைக்குக் கீழ்ப்படியும் அனைவரின் பாவத்தையும் தேவ ஆவியானவர் எரிப்பார்; ஆனால், மனிதர்கள் பாவத்தைப் பற்றிக்கொண்டிருப்பார்களானால், அவர்கள் அதனுடன் அடையாளமிடப்பட்டவர்களாக இருப்பார்கள்;

அப்பொழுது, பாவத்தை அழிக்கும் தேவனுடைய மகிமை அவர்களையும் அழித்தாகவேண்டும். யாக்கோபு இரவில் தூதனானவருடன் போராடியபின் வியப்புடன்: "நான் தேவனை முகமுகமாய்க் கண்டேன், உயிர் தப்பிப் பிழைத்தேன்" (ஆதியாகமம் 32:30) என்று கூறினான். ஏசாவுடனான நடத்தையில் யாக்கோபு ஒரு பெரும் பாவத்தைப்பற்றிய குற்ற உணர்வுடையவனாக இருந்தான்; ஆனால், அவன் மனந்திரும்பினான். அவனது மீறுதல் மன்னிக்கப்பட்டு, அவனது பாவம் சுத்திகரிக்கப்பட்டது; எனவேதான், அவனால் தேவப் பிரசன்னத்தைத் தாங்கிக்கொள்ளமுடிந்தது; ஆனால், வேண்டுமென்றே பாவத்தைப் போற்றிக்கொண்டிருந்து, தேவனுக்கு முன்னால் வந்திருந்த மனிதர்கள் அழிக்கப்பட்டிருந்தனர். கிறிஸ்துவின் இரண்டாம் வருகையின்போது, துன்மார்க்கர்கள் அவரது வாயின் சுவாசத்தினாலும் வருகையின் பிரசன்னத்தினாலும் அழிக்கப்பட்டுப்போவார்கள். நீதிமானுக்கு உயிரை வழங்குகின்ற தேவனுடைய மகிமையின் ஒளி, துன்மார்க்கனைக் கொன்றுவிடும். (44)

தேவனுடைய குணத்தை வெளிக்காட்டுபவராகக் கிறிஸ்து யோவான் ஸ்நானகனுடைய காலத்தில் தோன்றவேண்டியவராக இருந்தார். அவரது பிரசன்னமே மனிதர்களுக்கு அவர்களது பாவங்களை வெளிக்காட்டச்செய்யும். பாவத்திலிருந்து சுத்திகரிக்கப்பட அவர்கள் விரும்பியபோதுமட்டுமே, அவருடனுள்ள உறவுக்குள் அவர்களால் நுழையமுடிந்திருந்தது. இருதயத்தில் சுத்தமுள்ளவர்களால் மட்டுமே அவரது பிரசன்னத்தில் தங்கியிருக்கமுடியும். (45)

இவ்வாறாக, இஸ்ரவேலருக்கான தேவனுடைய தூதை ஸ்நானகன் கொடுத்தான். அவனுடைய உபதேசங்களுக்கு அநேகர் செவிசாய்த்தனர். கீழ்ப்படிவதற்கென்று அநேகர் எல்லாவற்றையும் தியாகம் செய்தனர். இந்தப் புதிய ஆசிரியரைப் பல்வேறு இடங்களிலிருந்தும் வந்த திரள்கூட்டமான மக்கள் பின்பற்றினர். இவர்தான் மேசியாவாக இருக்கக்கூடும் என்ற நம்பிக்கையை உடையவர்களாக இருந்தவர்கள் ஒரு சிலர் அல்ல. மக்கள் தன்னிடமாய் திரும்புவதாக யோவான் கண்டபோது, வரவேண்டியவராகிய ஒருவர்மீது (இயேசு கிறிஸ்துவின்மீது) அவர்கள் விசுவாசத்தை வைக்கத்தக்கதான ஒவ்வொரு சந்தர்ப்பத்தையும் அவன் தேடினான். (46) ★

# 11

# இயேசு ஞானஸ்நானம் பெற்றார்!

**மத்தேயு 3:13–17; மாற்கு 1:9–11; லூக்கா 3:21,21**

**(The Desire of Ages, pp. 109–113)**

வனாந்தரத்திலுள்ள தீர்க்கதரிசியையும், அவனது ஆச்சரியமான அறிவிப்பையும்பற்றிய செய்தி கலிலேயாவெங்கும் பரவியது. வெகுதொலைவிலிருந்த மலைநாட்டு விவசாயிகள், கடலில் மீன்பிடிப்பவர்கள் ஆகியோருக்கு இந்தச் செய்தி சென்றது. ஆர்வமிக்க எளிமையான இந்த இருதயங்களில் உண்மையான வரவேற்பு காணப்பட்டது. நாசரேத்திலிருந்த யோசேப்பின் தச்சுப்பட்டறையில் இது பேசப்பட்டது. அந்த அழைப்பை ஒருவர் அடையாளங் கண்டுகொண்டார். அவரது வேளை வந்திருந்தது. அவர் அவரது அன்றாட வேலைகளிலிருந்து திரும்பி, அவரது அன்னையிடம் பிரிவுபசாரம் கூறி, யோர்தானை நோக்கிக் கூட்டமாகச் சென்றுகொண்டிருந்த அவரது நாட்டுப்புற மனிதர்களின் காலடிகளைப் பின்பற்றிச் சென்றார். (1)

இயேசுவும் யோவான் ஸ்நானகனும் தங்களது பிறப்பினால் நெருக்கமாகச் சம்பந்தப்பட்ட ஒன்றுவிட்ட சகோதரர்களாக இருந்தனர். அப்படியிருந்தபோதிலும், அவர்களுக்கிடையில் நேரடியான அறிமுகம் இருக்கவில்லை. இயேசுவின் வாழ்க்கை கலிலேயாவிலுள்ள நாசரேத்தில் கழிந்திருந்தது. யோவானின் வாழ்க்கை யூதேயாவின் வனாந்தரத்தில் இருந்தது. அவர்கள் இருவரும் மாறுபட்ட சுற்றுப்புறங்களில் தனித்தனியாக வாழ்ந்து, ஒருவருக்கொருவர் தொடர்பற்றவர்களாக இருந்தனர். தெய்வீக ஏற்பாடு இதைச் செய்திருந்தது. ஒருவரின் உரிமையை அடுத்தவர் ஆதரிக்க இருவரும் சேர்ந்து சதியாலோசனை செய்திருந்தனர் என்று கூறுவதற்கான வாய்ப்புக்கொடுக்கப்பட இடமில்லாமலிருக்கவேண்டியதாக இருந்தது. (2)

இயேசுவின் பிறப்புடன் சம்பந்தப்பட்டிருந்த நிகழ்ச்சிகளுடன் யோவான் அறிமுகமானவனாக இருந்தான். அவர் சிறுவனாக இருந்தபோது, எருசலேமிற்குச் சென்றிருந்ததையும், ரபிமார்களின் பள்ளியில் என்ன நிகழ்ந்திருந்தது என்பதையும் அவன் கேட்டிருந்தான். அவன் அவரது பாவமற்ற வாழ்க்கையையும், அவர்தான் மேசியா என்பதையும் அறிந்திருந்தான்.

ஆனால் அதைப்பற்றி சரியான நிச்சயம் அவனுக்கிருக்கவில்லை. இயேசு அநேக வருடங்களாக வெளியில் காணப்படாதவராக இருந்த உண்மையும், அவரது ஊழியம்பற்றிய ஆதாரங்கள் எதுவும் கொடுக்கப்படாமல் இருந்ததும், வாக்குத்தத்தஞ்செய்யப்பட்டிருந்த ஒருவர் இவர்தானா? என்னும் சந்தேகத்திற்கு இடமளித்திருந்தது. எப்படியிருந்தாலும், தேவனுடைய சொந்தநேரத்தில் சகலமும் தெளிவுபடுத்தப்படும் என்று அந்த ஸ்நானகன் விசுவாசத்துடன் காத்திருந்தான். அவனிடத்தில் ஞானஸ்நானம் பெறும்படி அவர் வந்தபோது, அவன் இதுவரை ஒரு மனிதனிடமும் கண்டுணராதிருந்த பண்பின் ஒரு தூய்மையை அவரிடம் அறிந்தான். அவரது சமூகத்தின் பிரசன்னம் பரிசுத்தமானதாகவும் பக்திமிக்க பயத்தைத் தூண்டக்கூடியதாகவும் இருந்தது. யோர்தானில் அவனைச் சேர்ந்திருந்த திரளானவர்களுக்கிடையில் குற்றங்களின் இருண்ட கதைகளைக் கேட்டிருந்தான். எண்ணிலடங்காத பாவ பாரத்தினால் கீழே கூனிக்குறுகியிருந்த ஆத்துமாக்களையும் சந்தித்திருந்தான். ஆனால் இந்த அளவிற்கு தெய்வீக செல்வாக்கை வெளிப்படுத்தியிருந்த ஒரு மனிதனுடனும் அவன் இதுவரை ஒருபோதும் தொடர்பு கொண்டிருந்ததில்லை. மேசியாவைப்பற்றி யோவானுக்கு எந்தவிதமாக வெளிப்படுத்தப்பட்டிருந்ததுவோ அதற்கு இசைவாக இவை அனைத்தும் இருந்தன. அப்படியிருந்தபோதிலும், அவன் இயேசுவின் வேண்டுகோளுக்கு அனுமதி வழங்குவதில் பின்வாங்கினான். பாவியாக இருக்கும் ஒருவனால் பாவமற்ற ஒருவருக்கு ஞானஸ்நானம் எப்படிக் கொடுக்கமுடியும்? மனந்திரும்பவேண்டிய அவசியமற்ற அவர் கழுவப்படுவதற்கென்று குற்றத்தை அறிக்கைசெய்யும் ஒரு சடங்குக்கு ஏன் கீழ்ப்படியவேண்டும்? (3)

இயேசு ஞானஸ்நானம் கொடுக்கும்படிக் கேட்டபோது, யோவான் பின்வாங்கி: “நான் உம்மாலே ஞானஸ்நானம் பெறவேண்டியதாயிருக்க, நீர் என்னிடத்தில் வரலாமா” என்று கேட்டான். உறுதியும் மென்மையுமிக்க அதிகாரத்துடன்: “இயேசு அவனுக்குப் பிரதியுத்தரமாக: இப்பொழுது இடங்கொடு, இப்படி எல்லா நீதியையும் நிறைவேற்றுவது நமக்கு ஏற்றதாயிருக்கிறது” என்றார். அப்பொழுது யோவான் அவருக்கு இணங்கி, அவரை யோர்தான் நதி நீருக்குள் அழைத்துச்சென்று தண்ணீருக்குள் அமிழ்த்தினான். “இயேசு ஞானஸ்நானம் பெற்று, ஜலத்திலிருந்து கரையேறினவுடனே, இதோ, வானம் அவருக்குத் திறக்கப்பட்டது; தேவ ஆவி புறாவைப்போல இறங்கி, தம்மேல் வருகிறதைக் கண்டார்.” (4)

இயேசு ஞானஸ்நானம் பெறும்படி அறிக்கைசெய்வதற்கு அவரிடம் குற்றம் எதுவும் இருக்கவில்லை. நாம் நடக்கவேண்டிய வழியை அவர்

எடுத்துக்கொண்டு, நாம் செய்யவேண்டிய வேலையை அவர் செய்து, தன்னைப் பாவிகளுடன் அடையாளப்படுத்திக்கொண்டார். ஞானஸ்நானத்திற்குப்பின் இந்தப் பாடுகள் நிறைந்த வாழ்க்கையும் அவைகளைச் சகித்த அவரது பொறுமையும் நமக்கு முன்மாதிரியாக இருக்கிறது. (5)

இயேசு நீரிலிருந்து கரையேறியதும் நதிக்கரையில் முழந்தாளிட்டு ஜெபித்தார். ஒரு புதிய முக்கியமான காலக்கட்டம் அவர்முன் திறக்கப்பட்டுக்கொண்டிருந்தது. இப்பொழுது அவர் தனது வாழ்க்கைப்போரின் விசாலமான களத்தில் இருந்தார். அவர் சமாதானப் பிரபுவாக இருந்தபோதிலும், அவரது வருகை ஒரு வாளை உறையிலிருந்து வெளியில் எடுப்பதுபோல் இருந்தாகவேண்டும். அவர் ஏற்படுத்த வந்த இராஜ்யம் யூதர்களின் விருப்பத்திற்கு நேர் எதிரானதாக இருந்தது. இஸ்ரவேலின் சடங்குகளுக்கும் பொருளாதாரத்திற்கும் அஸ்திபாரமாக இருந்தவர், அதன் விரோதியாகவும் அதை அழிப்பவராகவும் நோக்கப்படுவார். சீனாய் மலையின்மீதிருந்து பிரமாணத்தை அறிவித்திருந்தவர் அக்கிரமக்காரர் என்று கண்டனஞ்செய்யப்படுவார். சாத்தானின் வல்லமைகளைத் தகர்க்கும்படி எவர் வந்திருந்தாரோ, அவர் பெயல்செபூல் என்று மறுக்கப்படுவார். பூமியின்மீதுள்ள ஒருவரும் அவரை அறிந்துகொள்ளவில்லை. ஊழியத்தின்போது மேலும் அவர் தனியாகவே நடந்தாகவேண்டும். அவரது வாழ்க்கை முழுவதிலும் அவரது அன்னையும் சகோதரர்களும் அவரது ஊழியத்தைப்பற்றி அறிந்திருக்கவில்லை. அவரது சீடர்களுங்கூட அவரைப் புரிந்துகொள்ளவில்லை. தேவனுடன் ஒருவராக அவர் நித்திய ஒளியில் வாழ்ந்திருந்தார். ஆனால் பூமியின்மீதுள்ள அவரது வாழ்க்கையை அவர் தனியாகக் கழித்தாகவேண்டும். (6)

நம்மில் ஒருவராக அவர் நமது குற்றங்கள், துயரங்கள் ஆகியவைகளின் பாரத்தைச் சுமக்கவேண்டும்; பாவமில்லாத ஒருவர் பாவத்தின் அவமதிப்பை உணரவேண்டும்; சமாதானத்தை நேசிப்பவர் கலகத்துடன் வாழவேண்டும்; சத்தியம் தவறுடன் தங்கியிருக்கவேண்டும்; மீறுதல் கொண்டுவந்திருக்கும் ஒவ்வொரு பாவமும் ஒவ்வொரு அதிருப்தியும் மாசுபடுத்தும் ஒவ்வொரு இச்சையும் அவரது ஆத்துமாவை சித்திரவதை செய்யவேண்டியதாக இருந்தது. (7)

அந்தப் பாதையில் அவர் தனியாக நடக்கவேண்டும்; அந்த பாரத்தை அவர் தனியாகச் சுமக்கவேண்டும்; தமது மகிமையைக் கீழே வைத்துவிட்டு, மானுட பலவீனத்தை ஏற்றுக்கொண்டவரின்மீது உலகத்தின் மீட்பு சார்ந்திருக்கவேண்டும்; அவர் அவைகளனைத்தையுங்கண்டு உணர்ந்தார். ஆனால் அவரது நோக்கம் உறுதியாக நின்றிருந்தது. விழுந்துபோன

இனத்தின் மீட்பு அவரது கரங்களைச் சார்ந்திருந்தது. சர்வவல்லமைமிக்க அன்பின் கரத்தைப் பற்றிக்கொள்ள அவர் தமது கரத்தை நீட்டினார். (8)

அவர் தமது ஆத்துமாவை ஜெபத்தில் ஊற்றிவிடும்போது, இரட்சகரின் பார்வை பரலோகத்தில் நுழைந்து செல்லுவதுபோல் காணப்படுகிறது. பாவம் மனிதர்களின் இருதயங்களை எந்தவிதமாகக் கடினப்படுத்திவிட்டது என்பதையும், அவரது ஊழியத்தைப்பற்றி அறிந்துகொள்ளுவதும் மீட்பின் ஈவை ஏற்றுக்கொள்ளுவதும் எவ்வளவு கடினமானது என்பதையும் அவர் நன்கு அறிந்திருந்தார். அவர்களது அவநம்பிக்கையை மேற்கொள்ளவும், சாத்தான் அவர்களைக் கட்டிவைத்திருக்கும் விலங்குகளைத் தகர்க்கவும், அவர்களின் சார்பில் அழிப்பவனின்மீது வெற்றிகொள்ளவும் வல்லமை தரும்படி அவர் பிதாவை நோக்கிக் கெஞ்சிக் கேட்கிறார். தேவன் அவரது குமாரனின் வடிவிலுள்ள மானுடத்தை ஏற்றுக்கொள்ளுகிறார் என்னும் சாட்சியை அவர் கேட்கிறார். (9)

அப்படிப்பட்ட ஒரு ஜெபத்தை தூதர்கள் இதுவரைக் கேட்டதில்லை. வாக்குறுதியையும் நிச்சயத்தையும் ஆறுதலையும் உள்ளடக்கிய ஒரு தூதை அவர்களது அன்புமிக்க சேனைத்தலைவருக்குக் கொண்டுசெல்ல அவர்கள் மிகவும் ஆவலுள்ளவர்களாக உள்ளனர். ஆனால் அப்படி அல்ல! பிதா தாமே தமது குமாரனின் விண்ணப்பத்திற்குப் பதில் அளிப்பார். மகிமையின் ஒளிக்கதிர்கள் சிங்காசனத்திலிருந்து நேராகப் புறப்பட்டுச் செல்லுகின்றன. எளிமையும் தாழ்மையுமுள்ள அவருக்குப் பொருந்தக்கூடிய அடையாளமாக வானங்கள் திறக்கப்பட்டு, தூய்மையான ஒளி புறாவின் வடிவில் மீட்பரின் சிரசின்மேல் இறங்குகிறது. (10)

யோர்தான் நதிக்கரையில் கூடியிருந்த திரளானவர்களில் யோவானைத் தவிர மற்றவர்கள் அந்தப் பரலோகக் காட்சியைக் காணவில்லை. அப்படியிருந்தபோதிலும் தெய்வீகப் பிரசன்னத்தின் பக்திவிநயம் அந்தக் கூட்டத்தினமீது தங்கிவிழுந்தது. மக்கள் மௌனமாக இயேசுவைப் பார்த்துக்கொண்டு நின்றிருந்தனர். பரலோக சிங்காசனத்தை எப்போதும் சூழ்ந்திருக்கும் ஒளி, அவரது உருவத்தைச் சூழ்ந்தது. அவர்கள் இதுவரை கண்டிராதவிதத்தில் மேல்நோக்கியிருந்த அவரது முகம் மகிமையுடையதாக இருந்தது. “இவர் என்னுடைய நேசகுமாரன், இவரில் பிரியமாயிருக்கிறேன்” என்று திறக்கப்பட்ட வானத்திலிருந்து ஒரு சத்தம் கூறுவது கேட்கப்பட்டது. (11)

அந்தக் காட்சிக்கு சாட்சிபகர்ந்தவர்களுக்கு உற்சாகமூட்டவும், மீட்பரை அவரது ஊழியத்திற்கென்று பலப்படுத்தவும் இந்த உறுதியளிக்கும் வார்த்தைகள் கொடுக்கப்பட்டன. குற்றமிக்க இந்த உலகத்தின் பாவங்களை

மட்டுமல்லாமல், விழுந்துபோன நமது தன்மையின் கேவலத்தையும் அவர் தம்மீது எடுத்துக்கொண்டார். அவர் நித்தியவாசியானவரின் குமாரன் என்பதை வானத்திலிருந்து ஒரு சத்தம் அறிவித்தது. (12)

பிதாவின் அங்கீகாரத்திற்காக அவர் பணிந்து கண்ணீருடன் மன்றாடுகிறதை யோவான் கண்டபோது, அவனது இருதயம் ஆழமாக அசைக்கப்பட்டது. தேவ மகிமை அவரைச் சூழ்ந்ததையும், வானத்திலிருந்துண்டான சத்தத்தையும் கேட்டபோது, வாக்குத்தத்தஞ் செய்யப்பட்டிருந்த அடையாளத்தை அவன் அறிந்துகொண்டான். அவன் எவருக்கு ஞானஸ்நானம் கொடுத்திருந்தானோ, அவர்தான் உலகத்தின் மீட்பர் என்பதை அவன் அறிந்துகொண்டான். பரிசுத்த ஆவியானவர் அவர்மீது தங்க, அவன் தன் கரங்களை இயேசுவிற்கு நேராக நீட்டி: "இதோ, உலகத்தின் பாவத்தைச் சுமந்துதீர்க்கிற தேவ ஆட்டுக்குட்டி" என்று சத்தமிட்டான். (13)

தேவனுடைய ஆட்டுக்குட்டி என்னும் இந்த வார்த்தைகளில் இருந்த முக்கியத்துவத்தை அதைக் கேட்டிருந்தவர்களில் ஒருவன்கூட, அதைக் கூறியவனும்கூட அறிந்திருக்கவில்லை. ஈசாக்கு: "தகப்பனே ... தகனபலிக்கு ஆட்டுக்குட்டி எங்கே என்றான். அதற்கு ஆபிரகாம்: என் மகனே, தேவன் தமக்குத் தகனபலிக்கான ஆட்டுக்குட்டியைப் பார்த்துக்கொள்வார் என்றான்" –ஆதியாகமம் 22:7,8. ஈசாக்கிற்குப் பதிலாக, தெய்வீக ஏற்பாட்டினால் காணப்பட்ட செம்மறியாட்டில் ஆபிரகாம் உலகத்தின் பாவங்களுக்காக மரிக்கவேண்டியவராக இருந்தவரின் அடையாளத்தைக் கண்டான். "அடிக்கப்படும்படி கொண்டுபோகப்படுகிற ஒரு ஆட்டுக்குட்டியைப்போலவும்" "கர்த்தரோ நம்மெல்லாருடைய அக்கிரமத்தையும் அவர்மேல் விழப்பண்ணினார்" (ஏசாயா 53:7,6) என்று பரிசுத்த ஆவியானவர் இரட்சகரைப்பற்றிய இந்த உருவகத்தை ஏசாயா தீர்க்கதரிசியின்மூலமாக சித்தரித்துக்காட்டினார். ஆனால் இஸ்ரவேல் மக்கள் அந்தப் பாடத்தைப் புரிந்துகொள்ளவில்லை. அஞ்ஞான மார்க்கத்தினர் அவர்கள் செலுத்தும் பலிகளினால் அவர்களாகவே தெய்வத்தை சமாதானஞ்செய்துவிடலாம் என்று கருதியிருந்ததுபோல, இஸ்ரவேலர்களில் அநேகர் பலியைப்பற்றிக் கருதியிருந்தனர். தேவன் அவரது சாந்தம், அன்பு என்னும் ஈவினால் அவர்களை அவருடன் ஒப்புரவாக்குகிறார் என்பதை அவர்களுக்குப் போதிக்க விரும்பினார். (14)

"இவர் என்னுடைய நேசகுமாரன், இவரில் பிரியமாயிருக்கிறேன்" என்று இயேசுவிடம் யோர்தான் நதிக்கரையில் கூறப்பட்ட வார்த்தையானது, மானுடம் முழுவதையும் தழுவுகின்றது. இயேசுவை நமது பிரதிநிதியாக வைத்து

அவரிடம் தேவன் பேசினார். நமது பாவங்களோடும் பலவீனங்களோடும் நாம் தகுதியற்றவர்கள் என்று வெளியே தள்ளிவிடப்படவில்லை. "தம்முடைய தயவுள்ள சித்தத்தின்படியே, நம்மை இயேசுகிறிஸ்துமூலமாய்த் தமக்குச் சுவிகாரபுத்திரராகும்படி முன்குறித்திருக்கிறார்"—எபேசியர் 1:6. கிறிஸ்துவின் மீது தங்கிய மகிமை நம்மீதுள்ள தேவ அன்பின் வாக்குறுதியாக உள்ளது. மனித சத்தம் எந்தவிதமாக தேவனின் செவியை அடையும் என்பதற்கும், நமது விண்ணப்பங்கள் பரலோக மன்றத்தில் ஏற்றுக்கொள்ளப்படுகின்றன என்பதற்குமான ஜெபத்தின் வல்லமையைப்பற்றி அது கூறுகிறது. பாவத்தினால் பூமி பரலோகத்திலிருந்து துண்டிக்கப்பட்டு, தேவனுடனுள்ள தொடர்பைவிட்டுப் பிரிந்தது, ஆனால் இயேசு அதை மறுபடியும் மகிமையின் சூழலுடன் இணைத்திருக்கிறார். அவரது அன்பு மனிதனைச்சூழ்ந்து, பரத்தின் உன்னதத்திற்கு எட்டியுள்ளது. திறக்கப்பட்ட பரலோக வாசலிலிருந்து நமது இரட்சகரின் சிரசின்மீது அமர்ந்த அந்த ஒளி, சோதனையைத் தடுக்க உதவும்படி நாம் ஜெபிக்கும்போது நம்மீதும் அமரும். இயேசுவிடம் பேசின அந்தச் சத்தம், நம்பிக்கையுள்ள ஒவ்வொரு ஆத்துமாவையும் நோக்கி: "இது எனது பிரியமான பிள்ளை. இதன்மேல் பிரியமாயிருக்கிறேன்" என்று கூறுகிறது. (15)

"இப்பொழுது தேவனுடைய பிள்ளைகளாயிருக்கிறோம், இனி எவ்விதமாயிருப்போமென்று இன்னும் வெளிப்படவில்லை; ஆகிலும் அவர் வெளிப்படும்போது அவர் இருக்கிறவண்ணமாகவே நாம் அவரைத் தரிசிப்பதினால், அவருக்கு ஒப்பாயிருப்போமென்று அறிந்திருக்கிறோம்"—1 யோவான் 3:2. மிக அதிகமான பாவமுள்ளவர்களும், மிகுந்த தேவை உள்ளவர்களும், ஒடுக்கப்பட்டு நிந்திக்கப்பட்டவர்களும், பிதாவிடம் சமீபிக்கும் வகையைக் காண, நமது மீட்பர் பாதையைத் திறந்திருக்கிறார். இயேசு ஆயத்தஞ்செய்யும்படியாகச் சென்றிருக்கும் மாளிகையில் நாம் அனைவரும் ஒரு வீட்டைப் பெறலாம். "பரிசுத்தமுள்ளவரும், சத்தியமுள்ளவரும், தாவீதின் திறவுகோலை உடையவரும், ஒருவரும் பூட்டக்கூடாதபடிக்குத் திறக்கிறவரும், ஒருவரும் திறக்கக்கூடாதபடிக்குப் பூட்டுகிறவருமாயிருக்கிறவர் சொல்லுகிறதாவது: உன் கிரியைகளை அறிந்திருக்கிறேன்; உனக்குக் கொஞ்சம் பெலன் இருந்தும், நீ என் நாமத்தை மறுதலியாமல், என் வசனத்தைக் கைக்கொண்டபடியினாலே, இதோ, திறந்தவாசலை உனக்கு முன்பாக வைத்திருக்கிறேன், அதை ஒருவனும் பூட்டமாட்டான்" (வெளிப்படுத்தல் 3:7,8) என்கிறார். (16) ★

# 12

# சோதனை!

**மத்தேயு 4:1–11; மாற்கு 1:12,13; லூக்கா 4:1–13**

**(The Desire of Ages, pp. 114–123)**

"உடனே ஆவியானவர் அவரை வனாந்தரத்திற்குப் போகும்படி ஏவினார்"–மாற்கு 1:12. "அவர் வனாந்தரத் திலே நாற்பதுநாள் இருந்து, சாத்தானால் சோதிக்கப்பட்டு, அங்கே காட்டுமிருகங்களின் நடுவிலே சஞ்சரித்துக்கொண்டிருந்தார். தேவதூதர்கள் அவருக்கு ஊழியஞ்செய்தார்கள்." "அந்த நாட்களில் அவர் ஒன்றும் புசியாதிருந்தார்." (1)

சோதிக்கப்படுவதற்கென்று இயேசு வனாந்தரத்திற்கு நடத்தப்பட்ட போது, அவர் ஆவியானவரால் நடத்தப்பட்டார். சோதனையை அவர் அழைக்கவில்லை. அவரது ஊழியத்தையும் பணியையும்பற்றித் தனித்திருந்து தியானஞ்செய்வதற்காக அவர் வனாந்தரத்திற்குச் சென்றார். அவர் பயணஞ்செய்யவேண்டியிருந்த இரத்தக்கறைபடிந்த பாதையில் நடந்துசெல்லுவதற்கு உபவாசத்தினாலும் ஜெபத்தினாலும் அவரைப் பக்குவப்படுத்திக்கொள்ளவேண்டியதாக இருந்தது. ஆனால் இரட்சகர் வனாந்தரத்திற்குள் சென்றிருக்கிறார் என்பதை சாத்தான் அறிந்து, அவரை நெருங்குவதற்கு இதுவே சிறந்த நேரம் என்று எண்ணினான். ஒளியின் இளவரசருக்கும் இருளின் இராஜ்யத்தின் தலைவனுக்குமிடையில் இருந்த போராட்டத்தில் உலகத்தைப்பற்றிய பலத்த பிரச்சனைகள் போராடி நிலைநாட்டவேண்டிய நிலையிலிருந்தன. பாவம்செய்யும்படி மனிதனை சோதித்தபின், இந்த பூமி தன்னுடையது என்று சாத்தான் அதன்மீது உரிமைபாராட்டி, இந்த உலகத்தின் அதிபதி என்று தன்னைப்பற்றி தானாகவே கூறிக்கொண்டான். நமது இனத்தின் தந்தையையும் அன்னையையும் அவனது குணத்திற்கு இசைவானவர்களாக இருக்கும்படிச்செய்து, அவனது பேரரசை அமைக்க எண்ணினான். மனிதர்கள் அவனைத் தங்களது மேலாண்மையாளனாகத் தெரிந்துகொண்டுள்ளனர் என்று அவன் அறிவித்தான். மனிதர்களை அவனது கட்டுப்பாட்டிற்குள் வைத்ததின்மூலமாக, இந்த உலகத்தின் ஆளுகையைப் பற்றிக்கொண்டான். சாத்தானின் உரிமை

பொய்யானது என்பதைக் காட்டும்படி கிறிஸ்து வந்திருந்தார். மனித குமாரனாகக் கிறிஸ்து தேவனுக்கு விசுவாசமுள்ளவராக நிற்கவேண்டும். இவ்வாறாக மனித இனத்தின்மீதான முழுமையான கட்டுப்பாட்டை சாத்தான் அடைந்துகொள்ள என்பதும், உலகத்தின்மீதான அவனது உரிமை தவறானது என்பதும் காட்டப்பட்டாக வேண்டும். அவனது வல்லமையிலிருந்து விடுதலைபெற விரும்பும் அனைவரும் விடுவிக்கப்படவேண்டும். பாவத்தின்மூலமாக ஆதாம் இழந்த ஆளுகை திரும்பவும் எடுத்துக்கொள்ளப்படும். (2)

“உனக்கும் ஸ்திரீக்கும், உன் வித்துக்கும் அவள் வித்துக்கும் பகை உண்டாக்குவேன்; அவர் உன் தலையை நசுக்குவார், நீ அவர் குதிங்காலை நசுக்குவாய்” (ஆதியாகமம் 3:15) என்று சர்ப்பத்தினிடம் கொடுக்கப்பட்ட அறிவிப்பிலிருந்து, உலகத்தின்மீதான பூரணமான ஆளுகையை தான் பற்றிக்கொண்டிருக்கவில்லை என்பதை சாத்தான் அறிந்திருந்தான். அவனது ஆளுகையின் வல்லமையை எதிர்த்து செயலாற்றும் ஒரு வல்லமை மனிதர்களில் காணப்பட்டது. ஆதாமினாலும் அவனது குமாரர்களாலும் செலுத்தப்பட்ட பலிகளை அவன் ஆர்வத்துடன் கவனித்தான். இந்தச் சடங்குகளில் பூலோகத்திற்கும் பரலோகத்திற்கும் இடையிலுள்ள ஒரு தொடர்பின் அடையாளத்தை அவன் அறிந்தான். இந்தத் தொடர்பிற்கு இடையூறுசெய்ய அவன் தானாகவே ஆயத்தமானான். தேவனைப்பற்றி தவறாகச் சுட்டிக்காட்டினான். இரட்சகரைச் சுட்டிக்காட்டியிருந்த சடங்குகளுக்கு தவறான பொருள் விளக்கம் கொடுத்திருந்தான். மனிதர்கள் தேவனை அவர்களது அழிவில் மகிழ்ச்சியடையும் ஒருவராகக் கண்டு பயப்படும்படி நடத்தப்பட்டிருந்தனர். அவரது அன்பை வெளிப்படுத்திக்காட்டவேண்டியதாக இருந்த பலிகள், அவரது கோபத்தைச் சமாதானப்படுத்துவதற்கென்று மட்டும் செலுத்தப்பட்டிருந்தன. சாத்தான் தனது ஆளுகையை அவர்கள்மீது பிணைத்துவைப்பதற்காக அவர்களது தீய ஆசைகளை எழுப்பிவிட்டான். தேவனால் எழுதப்பட்ட வார்த்தைகள் கொடுக்கப்பட்டபோது, இரட்சகரின் வருகையைப்பற்றின தீர்க்கதரிசனங்களை சாத்தான் ஆராய்ந்தான். கிறிஸ்துவின் வருகையின்போது, அவர்கள் அவரைப் புறக்கணிக்கும்வண்ணம் சாத்தான் அவர்களைத் தலைமுறை தலைமுறையாக இந்தத் தீர்க்கதரிசனங்களுக்குக் குருடாக்கினான். (3)

சாத்தான் தனது ஆளுகையைப்பற்றி மறுத்துரைக்க தெய்வீக ஏற்பாட்டுடன் ஒருவர் வந்துவிட்டார் என்பதை அறிந்தான். புதிதாகப் பிறந்துள்ள அரசரின் அதிகாரத்திற்குச் சான்றுபகர்ந்த தூதனின் தூதைக்கேட்டு அவன் நடுங்கினான். பிதாவாகிய தேவனின் நேசகுமாரனாகப் பரலோகத்தில் கிறிஸ்து இருந்த அவரது மாட்சிமையான நிலையை சாத்தான் நன்கு

அறிந்திருந்தான். இந்த பூமிக்கு ஒரு முழு மனிதனாக தேவகுமாரன் வந்தாகவேண்டும் என்னும் இந்தக் காரியமானது அவனை வியப்பாலும் பயத்தாலும் நிரப்பியது. இந்தத் தியாகபலியின் இரகசியத்தை அவனால் அறிந்துகொள்ளமுடியவில்லை. ஏமாற்றப்பட்டுப்போன இனத்திற்காக உள்ள அப்படிப்பட்ட அன்பை சுயநலமிக்க அவனது ஆத்துமாவால் புரிந்துகொள்ள இயலவில்லை. பரலோகத்தின் மகிமையையும் சமாதானத்தையும் தேவனுடனுள்ள உறவினால் உண்டாகும் மகிழ்ச்சியையும் மனிதர்களால் மங்கலாகத்தான் அறியமுடிந்தது. ஆனால் காப்பாற்றுகிறதற்காக அபிஷேகம் பண்ணப்பட்டிருந்த கேருபீனாக இருந்த லூசிபருக்கு அது மிக நன்றாகத் தெரிந்திருந்தது. அவன் பரலோகத்தை இழந்துபோனதால் மற்றவர்களையும் அவனது விழுகையில் பங்குகொள்ளச்செய்து, அதினால் பழிவாங்குதலைக் காண தீர்மானமுடையவனாக இருந்தான். பரலோகக் காரியங்களைப்பற்றிக் குறைவாக மதிப்பிட்டு, பூமியின் காரியங்களின்மீது இருதயத்தை வைக்கும்படிச் செய்வதின்மூலமாக அவன் இதைச் செய்ய விரும்பினான். (4)

மனிதர்களின் இருதயங்களை தேவனுடைய இராஜ்யத்திற்கென்று வெல்லுவது பரலோக சேனாதிபதிக்கு இடையூரற்றதாக இருக்கவில்லை. அவர் ஒரு சிறுகுழந்தையாக பெத்லகேமில் பிறந்தகாலமுதல், பொல்லாங்கன் ஒருவனால் தொடர்ச்சியாகத் தாக்கப்பட்டிருந்தார். கிறிஸ்துவில் தேவனின் சாயல் வெளிப்படுத்தப்பட்டிருந்தது. சாத்தானின் ஆலோசனை மன்றங்களில் அவரை மேற்கொண்டாகவேண்டும் என்று தீர்மானிக்கப்பட்டிருந்தது. உலகில் பிறந்த எந்த ஒரு மனிதனும் இந்த வஞ்சகனின் வலையிலிருந்து தப்பினதில்லை. அவரது பாதையில் அவருடன் போரில் ஈடுபடவும், முடிந்தால் அவரை மேற்கொள்ளவும் பொல்லாங்கனின் கூட்டம் ஏற்படுத்தப்பட்டிருந்தது. (5)

இரட்சகரின் ஞானஸ்நானத்தின்போது, சாட்சிகளுக்கிடையில் சாத்தானும் இருந்தான். பிதாவின் மகிமை அவரது குமாரனின்மீது நிழலிடுவதை அவன் கண்டான். இயேசுவின் தெய்வீகம்பற்றி சாட்சிகொடுக்கும் யேகோவாவின் சத்தத்தை அவன் கேட்டான். ஆதாம் பாவம்செய்த நாளிலிருந்து மனித இனம் தேவனோடு கொண்டுள்ள நேரடியான உறவினின்று முறிக்கப்பட்டிருந்தது. பரலோகத்துக்கும் பூலோகத்துக்கும் இடையிலுள்ள தொடர்பு கிறிஸ்துவின்மூலமாக அமைக்கப்பட்டது. ஆனால் இப்பொழுது: “பாவமாம்சத்தின் சாயலில்” (ரோமர் 8:3) இயேசு வந்திருந்தார். பிதாதாமே பேசினார். இதற்குமுன்பும் அவர் கிறிஸ்துவின்மூலமாக மானுடத்துடன் தொடர்புகொண்டிருந்தார். இப்பொழுது அவர் கிறிஸ்துவுக்குள் மானுடத்துடன் தொடர்புகொண்டார். தீமையின்மீதுள்ள தேவனின் வெறுப்பு, பரலோகத்திற்கும்

பூலோகத்திற்கும் இடையில் நித்திய காலமாக பிரிவினையைக் கொண்டுவரும் என்று சாத்தான் நம்பியிருந்தான். ஆனால் தேவனுக்கும் மனிதனுக்கும் இடையிலுள்ள உறவு, எடுத்துக்கட்டப்பட்டாகிவிட்டது என்பது இப்பொழுது வெளிக்காட்டப்பட்டது. (6)

வெற்றியடைந்தாகவேண்டும் அல்லது தோற்கடிக்கப்படவேண்டும் என்பதை சாத்தான் கண்டான். இந்தப் போராட்டத்தில் அடங்கியுள்ள பிரச்சனையைத் தூதர்களிடம் ஒப்படைப்பது அளவிற்கு மிஞ்சினதாக இருந்தது. இந்தப் போரை அவன் நேரடியாக நடத்தியாகவேண்டும். தேவகுமாரனுக்கெதிராக மருள விழுகையின் சக்திகளனைத்தும் அணிதிரண்டு நின்றன. நரகத்தின் ஒவ்வொரு ஆயுதமும் கிறிஸ்துவின்மீது குறிவைக்கப்பட்டிருந்தது. (7)

கிறிஸ்துவிற்கும் சாத்தானுக்குமிடையிலுள்ள இந்தப் போராட்டத் திற்குத் தங்களுடைய சொந்த வாழ்க்கையின்மீது எந்தவிதமான பாதிப்பும் இல்லாததுபோல் அநேகர் காண்கிறார்கள். அவர்களுக்கு அதில் எந்தவிதமான ஆர்வமும் இல்லை. ஆனால் ஒவ்வொரு மனிதனின் இருதயத்திலும் உள்ள ஆளுகையில் இந்தப் போராட்டம் திரும்பத்திரும்ப நடைபெறுகிறது. தேவனுடைய சேவைக்கென்று தீமையின் அணியைவிட்டு விலகும் ஒவ்வொருவரும் சாத்தானின் தாக்குதலை சந்திக்காமலிருப்பதில்லை. நம்மால் எதிர்த்து நிற்கமுடியாத அளவிற்குக் கவர்ச்சிகரமாக கெட்டவழிகளில் இழுத்துச்செல்லுதல்கள் இருந்தன. கிறிஸ்துவிற்கு மயக்கி சிக்கவைக்கக்கூடிய கவர்ச்சிகளை எதிர்த்து நிற்பது எளிதாக இருந்தது. நமக்கோ எதிர்த்து நிற்பது மிகவும் கடினமானதென்பதாக நாம் காண்கிறோம். அவருடைய குணம் நமது குணத்தைவிட எந்த அளவிற்கு மேம்பட்ட நிலையில் இருந்ததோ அதற்கேற்றபடி மேற்கூறப்பட்ட கவர்ச்சிகளும் அவர்மீது மிக அதிக அளவிற்கு தாக்குதலை ஏற்படுத்தியது. கிறிஸ்து உலகப் பாவங்களின் பயங்கரமான சுமையைத் தம்மீது ஏற்றுக்கொண்டவராக, உணவின்மீதுள்ள விருப்பம், உலகத்தின் துணிச்சலுக்கு கொண்டுச்செல்லுமளவிற்கு விளம்பரத்தின்மீது உள்ள ஆசை, ஆகிய சோதனைகளை தாங்கிநின்றார். ஆதாமையும் ஏவாளையும் மேற்கொண்ட, மற்றும் நம்மையும் மேற்கொள்ள ஆயத்த நிலையிலிருக்கின்ற சோதனைகளும் இவைகளே. (8)

தேவப்பிரமாணங்கள் நீதியானவை அல்ல, அவைகளுக்குக் கீழ்ப்படிவது இயலாத காரியம் என்பதற்கான சான்றாக ஆதாமின் பாவங்களை சாத்தான் சுட்டிக்காட்டினான். ஆதாமின் தோல்வியை மீட்கவேண்டியவராக கிறிஸ்து நமது மானிட நிலையில் இருந்தார். எனவே, சோதனைக்காரனால் ஆதாம் தாக்கப்பட்டபோது, பாவத்தின் எந்தவிதமான விளைவும் அவன்மேல்

இருக்கவில்லை. மனம், உடல் ஆகியவைகளின் முழுமையான ஆற்றலை உடையவனாக, தனது பூரண மனிதப்பருவத்தின் வல்லமையோடு அவன் நின்றிருந்தான். ஏதேனின் மகிமையால் சூழப்பட்டவனாகவும் பரலோகவாசிகளுடன் நாள்தோறும் தொடர்புடையவனாகவும் அவன் இருந்தான். சாத்தானுடன் போராடி வெற்றிபெற இயேசு வனாந்தரத்திற்குள் சென்றபோது, அதுபோன்ற நிலைமை இருக்கவில்லை. ஏனெனில் உடல் பலத்திலும் மனோ வல்லமையிலும் சன்மார்க்கத் தகுதியிலும் அந்த இனம் நாலாயிரம் ஆண்டுகளாக குறைந்துகொண்டிருந்தது. இப்படிப்பட்ட அழிவின் சீர்குலைந்த நிலையில் இருந்த மனித இனத்தின் பலவீனங்களைக் கிறிஸ்து தம்மீது ஏற்றிருந்தார். இவ்வாறாகத்தான் மனிதனை அவனது மிகக்கீழான நிலையிலிருந்து அவரால் மீட்கமுடியும். (9)

சோதனையால் மேற்கொள்ளமுடியாதவராகக் கிறிஸ்து இருந்தார் என்று அநேகர் சாதிக்கின்றனர். அப்படியானால் ஆதாமின் நிலையில் அவர் வைக்கப்பட்டிருந்திருக்கமுடியாது. ஆதாம் அடைந்துகொள்ளாமல் இழந்துபோன வெற்றியை அவரால் கண்டிருந்திருக்கமுடியாது. கிறிஸ்து சந்தித்த போராட்டத்தைவிட எந்த வகையிலாவது அதிகமாகச் சோதிக்கும் போராட்டம் நமக்கிருக்குமானால், அவர் நமக்கு உதவி அளிப்பவராக இருந்திருக்கமுடியாது. ஆனால், மானுடத்தின் சகலவிதமான பொறுப்புகளுடன் நமது இரட்சகர் அதை எடுத்துக்கொண்டார். சோதனையில் விழுந்துவிடக்கூடிய தன்மையுடையவராக அவர் நமது தன்மையை எடுத்துக்கொண்டார். அவர் தாங்கிக்கொள்ளாத எதையும் நாம் சகிக்கவேண்டியதில்லை. (10)

உலகின் முதல் இணையின் (ஆதாம், ஏவாள்) பெரும் சோதனைக்களம் உணவின்மீதுள்ள விருப்பமாக இருந்ததுபோல, அதுவே கிறிஸ்துவின் முதல் சோதனைக்களமாகவும் இருந்தது. அழிவு எங்கு ஆரம்பமாகி இருந்ததோ, அதே இடத்திலிருந்துதான் மீட்பின் பணியும் ஆரம்பமாகவேண்டும். உணவின்மீதுள்ள ஆசையினால் ஆதாம் தோற்றுப்போன அதேவிதமாக, உணவு மறுப்பினால் கிறிஸ்து வெற்றியடைந்தாகவேண்டும். “அவர் இரவும் பகலும் நாற்பதுநாள் உபவாசமாயிருந்தபின்பு, அவருக்குப் பசியுண்டாயிற்று. அப்பொழுது சோதனைக்காரன் அவரிடத்தில் வந்து: நீர் தேவனுடைய குமாரனேயானால், இந்தக் கல்லுகள் அப்பங்களாகும்படி சொல்லும் என்றான். அவர் பிரதியுத்தரமாக: மனுஷன் அப்பத்தினாலேமாத்திரமல்ல, தேவனுடைய வாயிலிருந்து புறப்படுகிற ஒவ்வொரு வார்த்தையினாலும் பிழைப்பான் என்று எழுதியிருக்கிறதே என்றார்”–மத்தேயு 4:2–4. (11)

ஆதாமின் காலத்திலிருந்து கிறிஸ்துவின் காலம்வரை சுய இச்சைகள், உணவுப்பழக்கங்கள், காமவெறிகள் ஆகியவைகள் கட்டுப்பாடற்ற

நிலைவரை அவைகளின் வல்லமையை அதிகப்படுத்தி இருந்தன. இவ்வாறாக, மனிதர்கள் கீழ்த்தரமானவர்களாகவும் நோயுற்றவர்களாகவும் ஆகிவிட, அவர்களால் அவைகளை மேற்கொள்ளுவது முடியாததாகிவிட்டது. இந்தப் பயங்கரமான சோதனையை சகித்து, மனிதனின் சார்பில் கிறிஸ்து வெற்றியடைந்தார். நமக்காக அவர் பசியையும் மரணத்தைவிடப் பலமிக்க சுயக்கட்டுப்பாட்டையும் செயற்படுத்தினார். அந்தகார சக்திகளுடனுள்ள நமது போராட்டங்களிலுள்ள இந்த முதல் வெற்றியில்தான் மற்ற பிரச்சனைகள் அடங்கியிருந்தன. (12)

இயேசு வனாந்தரத்திற்குள் நுழைந்ததும், அவர் பிதாவின் மகிமைக்குள் வைத்து வைக்கப்பட்டார். தேவனுடனுள்ள தொடர்பில் ஈர்க்கப்பட்டவராக, அவர் மனித பலவீனத்திலிருந்து உயர்த்தப்பட்டார். ஆனால் அந்த மகிமை நீங்கிவிடவே சோதனையுடன் போர்செய்யும்படி விட்டுவிடப்பட்டார். ஒவ்வொரு வினாடியும் அதுவரை அழுத்திக்கொண்டிருந்தது. அவரை எதிர்நோக்கியிருந்த போராட்டத்தினால் அவரது மனித இயல்பு சுருங்கிவிட்டது. நாற்பதுநாட்களாக அவர் உபாவாசஞ்செய்து ஜெபித்திருந்தார். பசியால் மெலிந்து, பலவீனமடைந்து, மன வேதனையினால் களைப்புற்றுத் தள்ளாடி இருந்து, “மனுஷனைப்பார்க்கிலும் அவருடைய முகப்பார்வையும், மனுபுத்திரரைப்பார்க்கிலும் அவருடைய ரூபமும், இவ்வளவு அந்தக்கேடு அடைந்தபடியினாலே” (ஏசாயா 52:14). அந்த நேரந்தான் சாத்தானின் வாய்ப்பாக இருந்தது. அப்பொழுது கிறிஸ்துவை மேற்கொண்டுவிடலாம் என்று அவன் நினைத்தான். (13)

அவரது ஜெபத்திற்கு மறுமொழி கொடுப்பதுபோல பரலோகத்திலுள்ள ஒரு தூதன் வடிவில் இரட்சகரிடம் ஒருவன் வந்தான். கிறிஸ்துவின் உபவாசம் முடிவிற்கு வந்துள்ளது என்பதை அறிவிக்க தேவனிடமிருந்து ஒரு ஊழியத்துடன் அவன் வந்துள்ளதாக உரிமைபாராட்டிக்கொண்டான். ஈசாக்கைப் பலியிடும் ஆபிரகாமின் கரத்தைத் தடைசெய்ய ஒரு தூதனைத் தேவன் அனுப்பினதைப்போல, இரத்தக்கறைபடிந்த பாதையில் நடந்து அதனுள் நுழைந்து செல்லும் கிறிஸ்துவின் விருப்பத்தில் திருப்தியடைந்தவராக, அவரை விடுவிக்க ஒரு தூதனைப் பிதா அனுப்பியிருந்தார் என்பதுதான் இயேசுவிற்குக் கொண்டுவரப்பட்ட தூதாக இருந்தது. பசியால் மயங்கியவராக இரட்சகர் இருந்தார். அவர் உணவிற்காக ஏங்கியிருந்தபொழுது, திடீரென்று சாத்தான் அவரிடம் வந்தான். அப்பங்களைப்போன்ற உருவமுடைய கற்கள் அந்த வனாந்தரத்தில் பரவிக்கிடந்தது. “நீர் தேவனுடைய குமாரனேயானால், இந்தக் கல்லுகள் அப்பங்களாகும்படி சொல்லும்” என்றான். (14)

சாத்தான் ஒரு ஒளியின் தூதனுடைய வேஷத்தைத் தரித்துக் கொண்டிருந்தாலும் இந்த முதல் வார்த்தைகள் அவனது குணத்தைக் காட்டிக்கொடுத்தன. "நீர் தேவனுடைய குமாரனேயானால்!" நம்பிக்கையின்மையை உள்ளுக்குள் கொண்டுவருதல் இங்குதான் உள்ளது. சாத்தானின் கருத்துக்களின்படிச் செய்தால், அது அந்த சந்தேகத்தை ஏற்றுக்கொள்வதாக இருக்கும். ஆரம்பத்தில் மனித இனத்தின்மீது வெற்றிகொள்ள உதவிய அதே உபாயத்தினால் கிறிஸ்துவையும் வீழ்த்தத் திட்டமிடுகிறான். ஏதேனில் ஏவாளிடம் அவன் எப்படிப்பட்ட சாமர்த்தியத்துடன் அணுகினான்! "நீங்கள் தோட்டத்திலுள்ள சகல விருட்சங்களின் கனியையும் புசிக்கவேண்டாம் என்று தேவன் சொன்னது உண்டோ" (ஆதியாகமம் 3:1) என்றான். சோதனைக்காரனின் வார்த்தைகள் அதுவரை உண்மையாக இருந்திருந்தன. ஆனால் அவன் அவைகளைக் கூறிய தோரணையில் தேவனுடைய வார்த்தைகளைப்பற்றின மறைவான ஒரு அவமதிப்பு இருந்தது. தெய்வீக உண்மையில் சந்தேகத்தை உண்டுபண்ணும் எதிர்மறையான ஒரு இரகசியச் செயல் இருந்தது. இவ்வளவு அழகிய கனியைத் தடுத்து வைத்திருப்பது என்பது மனிதனின்மீது அவருக்குள்ள அன்பிற்கும் மனஉருக்கத்திற்கும் முரணானது. எனவே, தேவன் கூறியிருப்பதைப்போல செய்யமாட்டார் என்னும் எண்ணத்தை ஏவாளின் மனதில் பதியச்செய்ய சாத்தான் வகைதேடினான். அதைப்போலவே இப்பொழுதும் சோதனைக்காரன் அவனுக்குச் சொந்தமான நுண்ணுணர்வுகளினால் கிறிஸ்துவை தூண்டிவிடுவதற்கு வகைதேடினான். "நீர் தேவனுடைய குமாரனேயானால்!" இந்த வார்த்தைகள் அவனது மனதில் மிகுந்த கசப்பையும் எரிச்சலையும் உண்டுபண்ணுகின்றன. அவனது குரலின் தன்மையில் முழுமையான நம்பிக்கையின்மையின் ஒரு உணர்த்துதல் உள்ளது. தேவன் அவரது சொந்தக்குமாரனை இந்தவிதமாக நடத்துவாரா? தேவன் அவருடைய குமாரனை வனாந்தரத்தில் காட்டு விலங்குகளுக்கு மத்தியில் உணவின்றி தோழர்களின்றி வசதிகளின்றி விட்டுவிடுவாரா? அவர் உண்மையாகவே தேவனுடைய குமாரன் என்று தேவன் கருதியிருந்தால், அவரை இப்படிப்பட்ட நிலைமையில் ஒருபோதும் வைக்கமாட்டார் என்ற எண்ணத்தைத் தூண்டுகிறான். "நீர் தேவனுடைய குமாரனேயானால்" உமது வல்லமையைப் பயன்படுத்தி இப்படி உம்மை வாட்டும் பசியிலிருந்து உம்மை நீரே விடுவித்துக்கொள்ளும். இந்தக் கல்லுகளை அப்பங்களாகும்படிக்குக் கட்டளையிடும் என்றான். (15)

"இவர் என்னுடைய நேசகுமாரன், இவரில் பிரியமாயிருக்கிறேன்" (மத்தேயு 3:17) என்று பரலோகத்திலிருந்து உண்டான வார்த்தை தொடர்ந்து சாத்தானின் செவிகளில் ஒலித்துக்கொண்டே இருந்தது. ஆனால்

இந்தச்சாட்சியின்மீது கிறிஸ்துவை அவநம்பிக்கைகொள்ளும்படிச் செய்ய அவன் தீர்மானித்திருந்தான். கிறிஸ்துவின் தெய்வீக ஊழியத்தைப்பற்றி நிச்சயமாகவே தேவனுடைய வார்த்தை இருந்திருந்தது. அவர் மனிதர்களுக்கிடையில் ஒரு மனிதனாக வாழ்வதற்காக வந்திருந்தார். பரலோகத்துடன் அவருக்கிருந்த தொடர்பை அறிவிப்பதாக இந்த வார்த்தை இருந்திருந்தது. அந்த வார்த்தையின்மீது அவரைச் சந்தேகங்கொள்ளச்செய்வதே சாத்தானின் நோக்கமாக இருந்தது. தேவனின்மீதுள்ள கிறிஸ்துவின் நம்பிக்கையை அசைக்கச்செய்துவிட்டால், இந்தப் போராட்டம் முழுவதிலும் உள்ள வெற்றி தனதாகிவிடும் என்று சாத்தான் அறிந்திருந்தான். அவனால் இயேசுவை மேற்கொள்ள இயலும். மனமடிவு, அதிகமான பசி ஆகியவைகளின் வலிமையினால் கிறிஸ்து அவரது பிதாவின்மீதுள்ள விசுவாசத்தை இழந்து தனக்காக ஒரு அற்புதத்தைச் செய்வார் என்று நம்பினான். அவர் அதைச் செய்திருந்தால், இரட்சிப்பின் திட்டம் தகர்ந்துபோயிருக்கக்கூடும். (16)

சாத்தானும் தேவகுமாரனும் போராட்டத்தில் முதலில் சந்தித்தபொழுது, கிறிஸ்து பரலோக சேனையின் அதிபதியாக இருந்தார். சாத்தான் கலகக்கூட்டத்தினரின் தலைவனாக இருந்து, பரலோகத்திலிருந்து வெளியேற்றப்பட்டான். இப்பொழுது அவர்களது நிலைமை வெளியில் காணும்வண்ணம் எதிர்மாறாக இருப்பதுபோன்று காணப்பட்டதால், சாத்தான் தனக்குக் கிடைக்கக்கூடிய மிக உத்தேசமான அனுகூலங்களை நடப்பிக்கிறான். மிக வல்லமையுள்ள தூதர்களில் ஒருவன் பரலோகத்திலிருந்து அகற்றப்பட்டிருக்கிறான் என்பதை அவன் கூறுகிறான். இயேசுவின் தோற்றமோ, அவர்தான் தேவனால் கைவிடப்பட்டு மனிதனால் விரட்டப்பட்ட விழுந்துபோன தூதனைப்போன்று தோன்றுகிறது. எனவே ஒரு அற்புதத்தைச் செய்வதினால் தெய்வீகமானவர் தமது உரிமையைத் தாங்கிநிற்க இயலும். “நீர் தேவனுடைய குமாரனேயானால், இந்தக் கல்லுகள் அப்பங்களாகும்படி சொல்லும்.” படைக்கும் வல்லமையின் அப்படிப்பட்ட செயல்தான் தெய்வத்துவத்தின் முடிவான சாட்சியாக இருக்கும் என்று சோதனைக்காரன் வற்புறுத்துகிறான். அது போராட்டத்திற்கு முடிவைக் கொண்டுவரும். (17)

ஒரு போராட்டமின்றி இயேசுவால் இந்தத் தலைமை வஞ்சகனின் பேச்சை மௌனமாகக் கவனிக்க இயலவில்லை. தேவகுமாரன் அவரது தெய்வத்துவம்பற்றி மெய்ப்பிக்கவோ அல்லது அவரது தாழ்வான நிலைமைக்கான காரணத்தை விளக்கவோ கூடாதவராக இருந்தார். கலகக்காரனின் கோரிக்கைகளுக்கு இணங்குவதின்மூலமாக, மனிதனது நன்மைக்கோ அல்லது தேவனுடைய மகிமைக்கோ எந்தவிதமான ஆதாயமும் உண்டாகாது. எதிரியின் கருத்துக்களுக்குக் கிறிஸ்து இணங்கியிருந்தால்,

“நீர்தான் தேவனுடைய குமாரன் என்று நாம் நம்பும்படி ஒரு அடையாளத்தை எனக்குக் காட்டும்” என்று சாத்தான் மேலும் கூறியிருந்திருப்பான். அவனது இருதயத்தில் இருந்த கலகத்தின் வல்லமையைத் தகர்ப்பதற்கு சாட்சி பயனற்றதாக இருந்திருக்கும். கிறிஸ்து அவரது சொந்த நன்மைக்காக அவரது தெய்வீக வல்லமையை செயல்படுத்தாதவராக இருக்கவேண்டியதிருந்தது. விசுவாசத்திற்கும் கீழ்ப்படிதலுக்கும் நமக்கு ஒரு உதாரணத்தை விட்டுவைக்கும்படி நாம் சோதனைகளைச் சகிக்கவேண்டியதுபோல சோதனையைச் சகிக்க அவர் வந்திருந்தார். இங்கோ அல்லது பிற்காலத்தில் அவரது பூமியின் வாழ்க்கையிலோ அவர் தமக்கென்று ஒரு அற்புதத்தையும் செய்யவில்லை. அவரது ஆச்சரியமான செயல்கள் அனைத்தும், பிறரது நன்மைக்கென்றே இருந்தன. ஆரம்பத்திலிருந்தே இயேசு சாத்தானை அடையாளங்கண்டிருந்தாலும், அவனுடன் போராட்டத்திற்குள் செல்லும்படி அவர் தூண்டப்படவில்லை. பரலோகத்திலிருந்துண்டான சத்தத்தின் பலத்தில் நினைவுள்ளவராக இருந்து, அவரது பிதாவின் அன்பில் இளைப்பாறியிருந்தார். அவர் சோதனையுடன் சமாதான உடன்படிக்கை செய்துகொள்ளவில்லை. (18)

இயேசு, சாத்தானை வேதவாக்கியங்களினாலேயே சந்தித்தார். “என்று எழுதியிருக்கிறதே” என்று கூறினார். ஒவ்வொரு சோதனையிலும் அவருடைய போராயுதம் தேவனுடைய வார்த்தையாக இருந்தது. அவரது தெய்வீகத்தின் அடையாளமாக சாத்தான் ஒரு அற்புதத்தைக் கோரினான். ஆனால் எல்லா அற்புதங்களையும்விடப் பெரியதாக: “கர்த்தர் சொல்லுகிறது என்னவென்றால்” என்று அவரைச் சார்ந்திருப்பதாக இருந்தது. கிறிஸ்து இந்த நிலைமையைப் பற்றிக்கொண்டிருந்தவரை சோதனைக்காரனால் அனுகூலமடையமுடியவில்லை. (19)

மிக அதிகமாகப் பலவீனமாகியிருந்த இந்த நேரத்தில்தான் மிகப் பயங்கரமான சோதனையால் கிறிஸ்து தாக்கப்பட்டார். இந்தவிதமாகக் கிறிஸ்துவை மேற்கொள்ளலாம் என சாத்தான் எண்ணினான். இந்தக் கொள்கையினால் அவன் மனிதர்களின்மீது வெற்றிடைந்திருந்தான். சரியானவைகளுக்காக வீரத்துடன் அதிககாலம் நின்றிருந்தவர்களின் பலம் தொய்ந்தபோது, மனோவலிமை பலவீனமடைந்தபோது, விசுவாசம் தேவனைச் சார்ந்திருக்கத் தவறிவிட்டபோது, அப்படிப்பட்டவர்கள் மேற்கொள்ளப்பட்டனர். நாற்பது வருடங்களாக இஸ்ரவேலர்களுடன் அலைந்து திரிந்ததினால் மோசே களைப்புற்றிருந்தபோது, எல்லையற்ற வல்லமை உள்ளவரைச் சார்ந்திருக்கும் விசுவாசத்தை விநாடி நேரத்திற்கு விட்டுவிட நேர்ந்தது. வாக்குத்தத்தம் செய்யப்பட்ட தேசத்தின் எல்லையில்

அவன் தோற்றுப்போனான். இஸ்ரவேல் ஜாதியினர் அனைவருக்கும் அவர்களுக்குத் தலைமைதாங்கியிருந்த நானூற்றைம்பது பாகாலின் தீர்க்கதரிசிகளுக்கும் ஆகாப் அரசனுக்கும் முன்பாக அசையாதவனாக நின்றிருந்த எலியாவின் காரியமும் அப்படிப்பட்டதாகவே இருந்தது. கர்மேல் பர்வதத்தின்மீதான அந்த பயங்கரமான நாளுக்குப்பின், கள்ளத் தீர்க்கதரிசிகள் கொலை செய்யப்பட்டபின், மக்கள் தங்களுக்கு தேவனுடனுள்ள பிணைப்பை அறிவித்தபின், எலியா அவனது உயிருக்குப் பயந்து விக்கிரக ஆராதனைக்காரியாயிருந்த யேசபேலின் சமூகத்தைவிட்டு ஓடிப்போனான். இவ்விதமாக, மனித இனத்தின் பலவீனத்தைச் சாத்தான் அவனுக்குச் சாதகமாக்கிக்கொண்டான். மேலும் அதேவிதமாகவே செயலாற்றுவான். ஒருவன் துன்பங்களினால் சூழப்பட்டு, சூழ்நிலைகளினால் குழப்பமடைந்திருக்கும்போது, அல்லது வறுமையினாலும் துன்பத்தினாலும் உபத்திரவப்பட்டிருக்கும்போது, சோதிக்கவும் கவலைப்படவைக்கவும் சாத்தான் சமீபத்தில் இருக்கிறான். நமது குணத்தின் பலவீனமான இடங்களை சாத்தான் தாக்குகிறான். அப்படிப்பட்ட நிலைமைகள் இருக்கும்படி விட்டுவைத்திருக்கும் தேவன்மீதுள்ள நமது நம்பிக்கையை அசைக்க அவன் வகைதேடுகிறான். தேவன்மீது அவநம்பிக்கையடைந்து அவரது அன்பைப்பற்றிக் கேள்விகேட்க நாம் சோதிக்கப்படுகிறோம். சோதனைக்காரன் கிறிஸ்துவிடம் வந்ததைப்போலவே நம்மிடமும் வந்து, நமது பலவீனங்களையும் குறைபாடுகளையும் நம்முன் வரிசைப்படுத்தி வைக்கிறான். நமது ஆத்துமாவை அதைரியப்படுத்தி, தேவனின்மீதுள்ள நமது பிடியை உடைக்கலாம் என்று நம்புகிறான். அப்பொழுது அவனது இரையைப்பற்றின நிச்சயத்தோடு இருக்கிறான். நாமும் இயேசுவைப்போல அவனைச் சந்தித்தால், அநேக தோல்விகளிலிருந்து தப்பலாம். எதிரியுடன் சமாதான ஒப்பந்தஞ்செய்வதின்மூலமாக அவனுக்கு ஒரு அனுகூலத்தை நாம் கொடுக்கிறோம். (20)

"மனுஷன் அப்பத்தினாலேமாத்திரமல்ல, தேவனுடைய வாயிலிருந்து புறப்படுகிற ஒவ்வொரு வார்த்தையினாலும் பிழைப்பான்" என்று சோதனைக்காரனிடம் கிறிஸ்து கூறியபோது, ஆயிரத்து நானூறு வருடங்களுக்குமுன் அவர் இஸ்ரவேலரிடம் கூறியிருந்த வார்த்தைகளையே திரும்பவும் கூறியிருந்தார். "உன் தேவனாகிய கர்த்தர் உன்னை ... இந்த நாற்பது வருஷமளவும் வனாந்தரத்திலே நடத்திவந்த எல்லா வழியையும் நினைப்பாயாக. அவர் உன்னைச் சிறுமைப்படுத்தி, உன்னைப் பசியினால் வருத்தி, மனுஷன் அப்பத்தினால் மாத்திரம் அல்ல; கர்த்தருடைய வாயிலிருந்து புறப்படுகிற ஒவ்வொரு வார்த்தையினாலும் பிழைப்பான்

என்பதை உனக்கு உணர்த்தும்படிக்கு, நீயும் உன் பிதாக்களும் அறியாதிருந்த மன்னாவினால் உன்னைப் போஷித்தார்"—உபாகமம் 8:2.3. உயிர்வாழ்வதற்காக ஒவ்வொன்றும் வனாந்தரத்தில் இல்லாமலானபோது தேவன் அவரது மக்களுக்கு பரலோகத்திலிருந்து மன்னாவைப் போதுமான அளவு தொடர்ந்து அனுப்பினார். அவர்கள் தேவன்மீது நம்பிக்கைவைத்து, அவரது பாதையில் நடந்தால், அவர் ஒருபோதும் அவர்களைக் கைவிடமாட்டார் என்பதை அவர்களுக்குப் போதிப்பதற்காக இந்த ஏற்பாடு இருந்தது. இப்பொழுது இரட்சகர் இஸ்ரவேலருக்குப் போதித்திருந்த பாடத்தைச் செயல்படுத்தினார். எபிரெய மக்களுக்கு தேவனுடைய வார்த்தையினால் ஒத்தாசை கொடுக்கப்பட்டது. இப்பொழுது அதே வார்த்தையினால் இயேசுவிற்கும் கொடுக்கப்படும். துயர்துடைக்கும் தேவனுடைய நேரத்திற்காக அவர் காத்திருந்தார். தேவனுடைய வார்த்தைக்குக் கீழ்ப்படிந்து வனாந்தரத்திலிருந்த அவர் சாத்தானின் கருத்துக்களைப் பின்பற்றி உணவைப் பெறமாட்டார். தேவனுடைய சித்தத்திலிருந்து எந்தவகையிலும் விலகிச்செல்லுவதைவிட எந்தவிதமான அபாயங்கள் தம்மீது விழுந்தாலும் அதைவிடக் குறைவானதாகவே இருக்கும் என்பதற்குப் பிரபஞ்சத்தின் பிரசன்னத்திற்குமுன் அவர் சாட்சிகொடுத்துக் கொண்டிருந்தார். (21)

"மனுஷன் அப்பத்தினால் மாத்திரம் அல்ல; கர்த்தருடைய வாயிலிருந்து புறப்படுகிற ஒவ்வொரு வார்த்தையினாலும் பிழைப்பான்." கிறிஸ்துவின் அடியான் உலகப்பிரகாரமான அவனது தொழிலைச் செய்யும்போது தேவனுக்குச் சேவைசெய்யமுடியாத நிலைமைக்கு அடிக்கடி கொண்டுவரப்படுகிறான். தேவன் தெளிவாக எதிர்பார்க்கும் ஏதாவதொன்றுக்குக் கீழ்ப்படிதல் ஒருவேளை அவனுக்கு ஆதாரமாக உள்ளதை முறித்துவிடும் என்பதுபோல தோன்றலாம். அவனது மனச்சாட்சியால் உண்டாகும் உணர்த்துதல்களை அவன் தியாகஞ்செய்தாக வேண்டும் என்று நம்பும்படி சாத்தான் செயலாற்றக்கூடும். ஆனால் இந்த உலகத்தில் நாம் சார்ந்திருக்கக் கூடிய ஒரேபொருள் தேவனுடைய வார்த்தையாகும். "முதலாவது தேவனுடைய ராஜ்யத்தையும் அவருடைய நீதியையும் தேடுங்கள், அப்பொழுது இவைகளெல்லாம் உங்களுக்குக்கூடக் கொடுக்கப்படும்"—மத்தேயு 6:33. இந்த வாழ்க்கையிலுங்கூட பரலோகத்திலுள்ள நமது பிதாவின் சித்தத்திலிருந்து நாம் விலகிச்செல்லுவது நமக்கு நன்மையாக இருக்காது. அவரது வார்த்தையின் வல்லமையை நாம் அறியும்போது, உணவைப் பெறுவதற்காகவோ அல்லது நமது உயிரைக் காத்துக்கொள்வதற்காகவோ நாம் சாத்தானின் ஆலோசனைகளைப் பின்பற்றமாட்டோம். தேவனின்

கட்டளை என்ன என்பது பற்றியும் அவரது வாக்குத்தத்தம் என்ன கூறுகிறது என்பதைப் பற்றியுமே நமது கேள்விகள் அமைந்திருக்கும். இதை அறிந்தவர்களாக கட்டளைகளுக்குக் கீழ்ப்படிந்து, வாக்குத்தத்தத்தை உறுதியாக நம்புவோம். (22)

சாத்தானுடனுள்ள மாபெரும் எதிர்வாதத்தின் இறுதிப்போரில் தேவனுக்கு விசுவாசமாக உள்ளவர்கள் உலகத்திற்குரிய அவர்களது ஆதரவு ஒவ்வொன்றும் நீக்கப்பட்டிருப்பதைக் காண்பார்கள். உலக வல்லமைகளுக்குக் கீழ்ப்படிந்து, தேவப்பிரமாணத்தை மீற அவர்கள் மறுப்பதினால் வாங்குவதற்கும் விற்பதற்கும் தடைசெய்யப்படுவார்கள். மரண தண்டனை கிடைக்கும் என்னும் கட்டளை இறுதியாக அறிவிக்கப்படும். (வெளிப்படுத்தல் 13:11–17–ஐ வாசியுங்கள்). “அவன் உயர்ந்த இடங்களில் வாசம்பண்ணுவான்; கன்மலைகளின் அரண்கள் அவனுடைய உயர்ந்த அடைக்கலமாகும்; அவன் அப்பம் அவனுக்குக் கொடுக்கப்படும்; அவன் தண்ணீர் அவனுக்கு நிச்சயமாய்க் கிடைக்கும்” (ஏசாயா 33:16) என்னும் வாக்குத்தத்தம் கீழ்ப்படிபவர்களுக்குக் கொடுக்கப்பட்டுள்ளது. தேவனுடைய பிள்ளைகள் இந்த வாக்குத்தத்தத்தினால் உயிர்வாழ்வார்கள். பஞ்சத்தினால் நிலம் பாழடைந்திருக்கும்போது, அவர்கள் போஷிக்கப்படுவார்கள். “அவர்கள் ஆபத்துக்காலத்திலே வெட்கப்பட்டுப்போகாதிருந்து, பஞ்ச காலத்திலே திருப்தியடைவார்கள்”–சங்கீதம் 37:19. அந்தக் குறிப்பிட்ட துன்பகாலத்தை ஆபகூக் தீர்க்கதரிசி முன்னோக்கிப் பார்த்தவராக “அத்திமரம் துளிர்விடாமற்போனாலும், திராட்சச்செடிகளில் பழம் உண்டாகாமற்போனாலும், ஒலிவமரத்தின் பலன் அற்றுப்போனாலும், வயல்கள் தானியத்தை விளைவியாமற்போனாலும், கிடையில் ஆட்டுமந்தைகள் முதலற்றுப்போனாலும், தொழுவத்திலே மாடு இல்லாமற்போனாலும், நான் கர்த்தருக்குள் மகிழ்ச்சியாயிருப்பேன், என் இரட்சிப்பின் தேவனுக்குள் களிகூருவேன்” (ஆபகூக் 3:17,18) என்று கூறினார். (23)

நமது கர்த்தருக்குண்டான முதல் மாபெரும் சோதனையினின்று நாம் கற்றுக்கொள்ளவேண்டிய அனைத்துப் பாடங்களிலும் இன்சுவையின்மீதுள்ள வேட்கைகளையும் இச்சைகளையும் கட்டுப்படுத்துவதைச் சார்ந்ததைத்தவிர வேறு எதுவும் அவ்வளவு அதிக முக்கியத்துவம் வாய்ந்ததல்ல. யுகங்கள் நெடுகிலும் சரீரப்பிரகாரமான தன்மையைக் கவரக்கூடிய சோதனைகள் மனித இனத்தைக் கறைப்படுத்துவதிலும் தாழ்த்துவதிலும் வலிமைமிக்கதாக இருந்துள்ளன. தேவன் மனிதனிடம் ஒப்படைத்திருக்கும் விலைமதிக்கமுடியாத ஈவாகிய மனவலிமை, சன்மார்க்க வல்லமை, ஆகியவைகளை இச்சையடக்கமின்மையின்மூலமாக அழிக்க சாத்தான்

செயலாற்றுகிறான். இவ்வாறாக, நித்திய மதிப்புள்ள பொருட்களை வரவேற்பது என்பது மனிதனால் இயலாததாக ஆகிவிடுகிறது. புலன்களின் தீய பழக்கங்களின்மூலமாக ஆத்துமாவிலுள்ள தேவ சாயலின் சுவடுகள் ஒவ்வொன்றையும் துடைத்து நீக்கிவிட சாத்தான் வகைதேடுகிறான். (24)

கிறிஸ்துவின் முதலாம் வருகையின் போது கட்டுப்படுத்தப்படாமலிருந்த தீய உணவுப்பழக்கங்களும், அவைகளின் விளைவான நோய்களும், கீழானதன்மைகளும், அவைகளின் அதிக வலிமையுடன் கிறிஸ்துவின் இரண்டாம் வருகைக்குமுன் மறுபடியும் வழக்கத்தில் இருக்கும். ஜலப்பிரளயத்திற்கு முன்னும், சோதோமிலும் கொமோராவிலும் இருந்த நிலைமை உலகத்தில் இருக்கும் என்று கிறிஸ்து அறிவிக்கிறார். மனிதனின் இருதயத்தின் தோற்றங்களெல்லாம் தொடர்ந்து தீமையானதாகவே இருக்கும். அப்படிப்பட்ட பயங்கரமான காலத்தின் கரையில் நாம் இப்பொழுது வாழ்ந்துகொண்டிருக்கிறோம். எனவே, நமது இரட்சகரின் உபவாசம் பற்றின பாடம் நமக்குள் வந்தாகவேண்டும். கிறிஸ்து தாங்கிக்கொண்ட சொல்லமுடியாத வேதனையினால் மட்டுமே தடைசெய்யப்படாத உணவுப்பழக்கத்தின் தீமையை நம்மால் கணக்கிடமுடியும். உணவின்மீதுள்ள நமது விருப்பங்களையும் இச்சைகளையும் தேவனுடைய சித்தத்திற்குக் கீழாக கொண்டுவருவது ஒன்றுமட்டுமே நமது நித்திய ஜீவனுக்கான நம்பிக்கையாக இருக்கிறது என்பதை அவரது உதாரணம் அறிவிக்கிறது. விழுந்துபோன நமது இயல்பின் அமளியை நமது சுயபலத்தினால் எதிர்த்து நிற்பது என்பது இயலாததாக உள்ளது. சாத்தான் நம்மீது சோதனைகளை இந்தவழியாகக் கொண்டுவருவான். நம்மிலுள்ள பரம்பரை குணமான பலவீனங்களை சாதகமாக்கிக்கொண்டு, தேவனின்மீது நம்பிக்கைவைக்காத அனைவரையும் தனது தவறான ஈர்ப்புகளின்மூலமாகக் கண்ணியில் விழவைக்க ஒவ்வொரு மனிதனிடமும் சாத்தான் வருவான் என்பதைக் கிறிஸ்து அறிந்திருந்தார். நாம் கடந்துசெல்லவேண்டிய பாதையைக் கர்த்தர் கடந்துசென்றதினால், நாம் மேற்கொள்ளும்படியான ஒரு பாதையை அவர் நமக்கு ஆயத்தஞ்செய்திருக்கிறார். சாத்தானுடனுள்ள போராட்டத்தில் நாம் அனுகூலமற்ற ஒரு நிலைமையில் வைக்கப்படவேண்டும் என்பது அவரது சித்தமல்ல. வலுசர்ப்பத்திடமிருந்து உண்டாகும் தாக்குதல்களினால் நாம் பயமடைந்தவர்களாகவும் அதைரியமடைந்தவர்களாகவும் இருக்கும்படி அவர் நம்மை விட்டுவிடமாட்டார். “என்னிடத்தில் உங்களுக்குச் சமாதானம் உண்டாயிருக்கும்பொருட்டு இவைகளை உங்களுக்குச் சொன்னேன். உலகத்தில் உங்களுக்கு உபத்திரவம் உண்டு, ஆனாலும் திடன்கொள்ளுங்கள்; நான் உலகத்தை ஜெயித்தேன்” (யோவான் 16:33) என்று அவர் கூறுகிறார். (25)

உணவின்மீதுள்ள விருப்பம் என்னும் வல்லமைக்கு எதிராகப் போராடுபவர்கள் வனாந்திரத்தில் சோதனையில் உள்ள இரட்சகரை நோக்குவார்களாக. சிலுவையின்மீது இருந்தபோது, அவருக்குண்டான வேதனையையும் "நான் தாகமாயிருக்கிறேன்" என்று அவர் கூறியதையும் பாருங்கள். நம்மால் எல்லாவற்றையும் சகித்துக்கொள்ள இயலும் என்பதைக் காட்ட அவர் எல்லாவற்றையும் சகித்தார். அவரது வெற்றி நமதாக உள்ளது. (26)

இயேசு அவரது பரலோகத் தந்தையின் ஞானத்தையும் பலத்தையும் சார்ந்திருந்தார். "கர்த்தராகிய ஆண்டவர் எனக்குத் துணைசெய்கிறார்; ஆகையால் நான் வெட்கப்படேன்; நான் வெட்கப்பட்டுப்போவதில்லையென்று அறிந்திருக்கிறேன்; ஆதலால் என் முகத்தைக் கற்பாறையைப்போலாக்கினேன். என்னை நீதிமானாக்குகிறவர் சமீபமாயிருக்கிறார்; என்னோடே வழக்காடுகிறவன் யார்? ஏகமாய் நிற்போமாக, யார் எனக்கு எதிராளி? அவன் என்னிடத்தில் வரட்டும். இதோ, கர்த்தராகிய ஆண்டவர் எனக்குத் துணைசெய்கிறார்; என்னை ஆக்கினைக்குள்ளாகத் தீர்க்கிறவன் யார்? இதோ, அவர்கள் எல்லாரும் ஒரு வஸ்திரத்தைப்போலப் பழசாவார்கள்; பொட்டுப்பூச்சி அவர்களை அரிக்கும். உங்களில் எவன் கர்த்தருக்குப் பயந்து, அவருடைய தாசனின் சொல்லைக் கேட்டு, தனக்கு வெளிச்சமில்லாததினால் இருட்டிலே நடக்கிறானோ, அவன் கர்த்தருடைய நாமத்தை நம்பி, தன் தேவனைச் சார்ந்துகொள்ளக்கடவன்" (ஏசாயா 50:7–10) என்று அவர் நமக்குக் கூறுகிறார். (27)

"இந்த உலகத்தின் அதிபதி வருகிறான், அவனுக்கு என்னிடத்தில் ஒன்றுமில்லை" (யோவான் 14:30) என்று இயேசு கூறினார். சாத்தானின் சொற்புரட்டிற்கு இணங்கி பதில் கொடுக்கக்கூடிய எதுவும் அவரிடம் இருக்கவில்லை. அவர் பாவம்செய்ய இணங்கவில்லை.ஒரு எண்ணத்தினால்கூட அவர் சோதனைக்கு இடங்கொடுக்கவில்லை. நம்முடனுள்ள காரியத்திலும் அப்படியே இருக்கலாம். கிறிஸ்துவின் மானிடத்தன்மை தெய்வத்தன்மையுடன் ஐக்கியப்பட்டதாக இருந்தது. தமக்குள் வாசஞ்செய்திருந்த பரிசுத்த ஆவியினால் அந்தப் போராட்டத்திற்கு அவர் தகுதிப்படுத்தப்பட்டிருந்தார். அந்தத் தெய்வத்தன்மையில் நம்மைப் பங்குபெறுபவர்களாக்கும்படி அவர் வந்தார். விசுவாசத்தினால் நாம் அவருடன் ஐக்கியப்பட்டிருக்கும்வரை பாவத்திற்கு நம்மீது இனி எந்தவிதமான ஆளுகையும் இல்லை. நாம் பண்பில் பூரணத்துவத்தை அடைந்துகொள்ளும்வண்ணம் கிறிஸ்துவின் தெய்வீகத்தைப் பலமாகப் பற்றிக்கொள்ளும்படி நம்மை நடத்த நமது விசுவாசக் கரத்திற்காக தேவன் நம்மை சமீபிக்கிறார். (28)

இது எப்படி நிறைவேற்றப்படுகிறது? என்பதைக் கிறிஸ்து நமக்குக் காட்டியிருக்கிறார். சாத்தானுடனுள்ள போராட்டத்தில் எந்த உபாயத்தினால் அவர் அவனை மேற்கொண்டார்? தேவனுடைய வார்த்தையினால் மட்டுமே அவரால் சோதனையை எதிர்த்துநிற்க முடிந்தது. “என்று எழுதியிருக்கிறதே” என்று அவர் கூறினார். “இச்சையினால் உலகத்திலுண்டான கேட்டுக்குத் தப்பி, திவ்விய சுபாவத்துக்குப் பங்குள்ளவர்களாகும்பொருட்டு, மகா மேன்மையும் அருமையுமான வாக்குத்தத்தங்களும் அவைகளினாலே நமக்கு அளிக்கப்பட்டிருக்கிறது” (2 பேதுரு 1:4). தேவனுடைய வார்த்தையிலுள்ள ஒவ்வொரு வாக்குத்தத்தமும் நம்முடையதாக உள்ளது. கர்த்தருடைய வாயிலிருந்து புறப்படும் ஒவ்வொரு வார்த்தையினாலும் நாம் பிழைக்கவேண்டியவர்களாக இருக்கிறோம். சோதனையினால் தாக்கப்படும்போது, சூழ்நிலைகளையும் அல்லது சுயத்தில் உள்ள உங்களது பலவீனங்களையும் பார்க்காமல், தேவனுடைய வார்த்தையில் உள்ள வல்லமையைப் பாருங்கள். அவைகளின் வலிமை முழுவதும் உங்களுடையதாக உள்ளது. “நான் உமக்கு விரோதமாய்ப் பாவஞ்செய்யாதபடிக்கு, உமது வாக்கை என்னிருதயத்தில் வைத்து வைத்தேன்.” “நான் உம்முடைய உதடுகளின் வாக்கினாலே துஷ்டனுடைய பாதைகளுக்கு விலக்கமாய் என்னைக் காத்துக்கொள்ளுகிறேன்” (சங்கீதம் 119:11; 17:4) என்று சங்கீதக்காரன் கூறுகிறான். (29) ★

# 13

# வெற்றி!

**மத்தேயு 4:5–11; மாற்கு 1:12,13; லூக்கா 4:5–13**
**(The Desire of Ages, pp. 124–131)**

“அப்பொழுது பிசாசு அவரைப் பரிசுத்த நகரத்திற்குக் கொண்டுபோய், தேவாலயத்து உப்பரிகையின்மேல் அவரை நிறுத்தி: நீர் தேவனுடைய குமாரனேயானால் தாழக்குதியும்; ஏனெனில், தம்முடைய தூதர்களுக்கு உம்மைக்குறித்துக் கட்டளையிடுவார்; உமது பாதம் கல்லில் இடறாதபடிக்கு, அவர்கள் உம்மைக் கைகளில் ஏந்திக்கொண்டு போவார்கள் என்பதாய் எழுதியிருக்கிறது” (மத்தேயு 4:5,6) என்று சொன்னான். (1)

இயேசுவை அவருக்கு உரிமையான களத்திலேயே சந்தித்துவிட்டதாக சாத்தான் தனக்குள் இப்போது எண்ணிக்கொள்கிறான். அந்தத் தந்திரமிக்க எதிரியானவன் தேவனுடைய வாயிலிருந்து புறப்பட்ட வார்த்தைகளை முன்வைக்கிறான். அவன் இப்போதும் ஒளியின் தூதனைப்போன்றே தோற்றமளிக்கிறான். தான் வேத வாக்கியங்களை நன்கு அறிந்தவன் என்றும் சான்று கொடுக்கிறான். இயேசு இதற்குமுன்னர் தமது விசுவாசத்தைக் காத்துக்கொள்ள தேவனுடைய வார்த்தையைப் பயன்படுத்தியதைப்போலவே சோதனைக்காரன் தனது வஞ்சகத்தை மூடிமறைக்க இப்போது அதை பயன்படுத்துகிறான். இயேசுவின் நேர்மையை மட்டும் சோதிப்பதாகவும், அவரது அசையாத தன்மையைப்பற்றிச் சான்றுபகருவதாகவும் உரிமைபாராட்டுகிறான். தேவனில் உள்ள நம்பிக்கையை மீட்பர் வெளிகாட்டியதும் அவரது விசுவாசத்திற்கான இன்னொரு சாட்சியைக் கொடுக்கும்படி சாத்தான் அவரை வற்புறுத்துகிறான். (2)

ஆனால் மறுபடியும் அந்த சோதனை “நீர் தேவனுடைய குமாரனேயானால்” என்று கூறப்பட்டு, தந்திரமான அவநம்பிக்கைக்கு பீடிகைபோடும் வண்ணம் அமைந்துள்ளது. “இப்படியிருக்குமானால்” என்ற கேள்விக்கு பதில்கூறும்படி கிறிஸ்து சோதிக்கப்பட்டார். ஆனால் அவர் அந்த சந்தேகத்தை சிறிதளவுகூட ஏற்றுக்கொள்ள மறுத்துவிட்டார். சாத்தானுக்கு ஆதாரம் கொடுப்பதற்காக அவர் தமது ஜீவனை இடுக்கணுக்குள் விடமாட்டார். (3)

சோதனைக்காரன் கிறிஸ்துவின் மானுட நிலையைத் தனக்குச் சாதகமாக்கி, அவரைத் துணிச்சலாகச் செயல்படும்படி வற்புறுத்த எண்ணினான். பாவம்செய்ய அழைத்தாலும், அவனால் வற்புறுத்த இயலாது. அவரை அவன் கீழே தள்ளிவிடமுடியாது என்பதை அறிந்து, கீழே குதியும் என்றான். ஏனென்றால் அவரைக் காப்பதற்காக தேவன் குறுக்கிடுவார். சாத்தானாலும் கீழே குதிக்க அவரை பலவந்தப்படுத்த இயலாது. சோதனைக்குக் கீழ்ப்படிய கிறிஸ்து இணங்காத வரையில் அவரை மேற்கொள்ளமுடியாது. பூமியின் வல்லமைகள் அனைத்தினாலும் அல்லது நரகத்தினாலும் அவரது பிதாவின் சித்தத்திலிருந்து மிகக்குறைந்த அளவிலுங்கூட அவரைப் பிரிக்க இயலாது. (4)

தீமைசெய்யும்படியாக சோதனைக்காரனால் நம்மை ஒருபோதும் வற்புறுத்த இயலாது. அவனது கட்டுப்பாட்டிற்கு மனங்களை விட்டுக்கொடுக்காதவரை, அவனால் நமது மனங்களைக் கட்டுப்படுத்த இயலாது. நமது சித்தம் இசைந்துகொடுத்து, கிறிஸ்துவின்மீது நாம் கொண்டுள்ள விசுவாசம் விட்டுவிடப்படும்போது மட்டுமே, சாத்தான் நம்மீது தனது வல்லமையை செயல்படுத்தமுடியும். ஆனால் நாம் போற்றிப் பாதுகாக்கின்ற ஒவ்வொரு பாவ ஆசையும், அவன் நிற்பதற்கு இடங்கொடுக்கிறது. தெய்வீகத்தரத்தைக் காத்துக்கொள்ளுவதில் நாம் தோல்வியடையும் ஒவ்வொரு காரியமும், அவன் நம்மைச் சோதித்து அழிக்கும்படி உள்ளே நுழையக்கூடிய திறந்த வாசலாக உள்ளது. நமது பகுதியாக உள்ள ஒவ்வொரு தவறும் தோல்வியையும் கிறிஸ்துவை நிந்திப்பதற்கு அவனுக்குச் சந்தர்ப்பத்தையும் தருகிறது. (5)

“தம்முடைய தூதர்களுக்கு உம்மைக்குறித்துக் கட்டளையிடுவார்” என்னும் வாக்குத்தத்தத்தை சாத்தான் சுட்டிக்காட்டியபோது, “உமது பாதம் கல்லில் இடறாதபடிக்கு” என்னும் வார்த்தைகளை அவன் நீக்கிவிட்டான். அதாவது தேவன் தெரிந்துகொள்ளும் அனைத்துப் பாதைகளிலும் என்பதை அவன் நீக்கிவிட்டான். கீழ்ப்படிதல் என்னும் பாதையைவிட்டு வெளியே செல்ல இயேசு மறுத்துவிட்டார். அவரது பிதாவின்மீது பூரணமான நம்பிக்கையை அவர் வெளிக்காட்டியிருந்த அதே நேரத்தில், அவரை மரணத்திலிருந்து காக்கும்படி பிதாவானவர் குறுக்கிடவேண்டிய தேவையில்லாத இடத்தில் அவர் தம்மை வைக்கமாட்டார். நம்பிக்கைக்கும் கீழ்ப்படிதலுக்கும் மனிதனுக்கு ஒரு உதாரணமாக இருப்பதிலிருந்து தவறாதபடிக்கு, தன்னைக் காப்பதற்கு தெய்வீகம் வரவேண்டும் என்று வற்புறுத்தமாட்டார். (6)

“உன் தேவனாகிய கர்த்தரைப் பரீட்சை பாராதிருப்பாயாக என்றும் எழுதியிருக்கிறதே” என்று இயேசு சாத்தானுக்கு அறிவித்தார். இஸ்ரவேல்

மக்கள் பாலைவனத்தில் தாகத்தினால் தவித்து, மோசே தங்களுக்குத் தண்ணீர் தரவேண்டுமென்று கேட்டு, "கர்த்தர் எங்கள் நடுவில் இருக்கிறாரா இல்லையா" (யாத்திராகமம் 17:7) என்றபோது, இந்த வார்த்தைகள் மோசேயினால் கூறப்பட்டிருந்தன. தேவன் அவர்களை ஆச்சரியமான விதத்தில் நடத்தியிருந்தார். அப்படியிருந்தபோதிலும் துன்பத்தில் அவர்கள் அவரைச் சந்தேகித்து, அவர்களுடன் அவர் இருக்கிறார் என்பதற்கான சான்று தேவை என்று வற்புறுத்தினார்கள். அவர்களது அவநம்பிக்கையில் அவர்கள் மோசேயை அந்தச் சோதனைக்குட்படுத்த வகைதேடினர். கிறிஸ்துவையும் அவ்வாறே செய்யும்படி சாத்தான் வற்புறுத்தினான். இயேசு தேவனுடைய குமாரன்தான் என்பதற்கான அத்தாட்சியைக் கேட்பது தேவனுடைய வார்த்தையை சோதனைக்குட்படுத்துவதாகும். அதாவது, அவரைப் பரீட்சிப்பதாகும். தேவன் வாக்குத்தத்தம் செய்யாதவைகளைக் கேட்பதும், இதைப்போன்றே அவரை பரீட்சிப்பதாகும். அது அவநம்பிக்கையின்மையை வெளிக்காட்டி, உண்மையாகவே அவரைப் பரீட்சிப்பதாகவோ அல்லது சோதிப்பதாகவோ இருக்கும். தேவன் அவரது வார்த்தைகளை நிறைவேற்றுவாரா என்பதை மெய்ப்பிக்க நாம் நமது விண்ணப்பங்களை முன்வைக்காமல், அவர் அதை நிறைவேற்றுவார் என்பதினால் அவைகளை வைக்கவேண்டும். அவர் நம்மை நேசிக்கிறார் என்பதை மெய்ப்பிப்பதற்காக அப்படிச் செய்யாமல், அவர் நம்மை நேசிக்கிறார் என்பதினால் செய்யவேண்டும். "விசுவாசமில்லாமல் தேவனுக்குப் பிரியமாயிருப்பது கூடாதகாரியம்; ஏனென்றால், தேவனிடத்தில் சேருகிறவன் அவர் உண்டென்றும், அவர் தம்மைத் தேடுகிறவர்களுக்குப் பலன் அளிக்கிறவரென்றும் விசுவாசிக்கவேண்டும்" –எபிரெயர் 11:6. (7)

ஆனால் உண்மையான விசுவாசம் உள்ளவன் மாத்திரமே துணிச்சலாகச் செயல்படுவதினின்று பாதுகாப்போடு இருக்கமுடியும். விசுவாசம் துணிச்சலாக செயல்படும் காரியத்துடன் எந்தவிதத்திலும் சம்பந்தப்பட்டதல்ல. ஏனெனில் துணிச்சலாகச் செயல்படுவதை சாத்தான் விசுவாசத்திற்கு எதிரான ஒரு போலியாக வைத்திருக்கிறான். விசுவாசம் தேவனுடைய வாக்குத்தத்தங்களின்மீது உரிமைபாராட்டி, கீழ்ப்படிதலின் கனியைக் கொண்டுவருகிறது. துணிச்சலுங்கூட வாக்குத்தத்தங்களின்மீது உரிமைபாராட்டுகிறது. ஆனால் மீறுதலை மன்னிக்கும்படி சாத்தான் பயன்படுத்தியதைபோலப் பயன்படுத்துகிறது. விசுவாசம் நமது முதல் பெற்றோரை தேவனுடைய அன்பில் நம்பிக்கைவைக்கவும் அவரது பிரமாணங்களுக்குக் கீழ்ப்படியவும் நடத்தியிருந்திருக்க வேண்டும். துணிச்சலானது அவரது பெரிய அன்பு பாவத்தின் விளைவிலிருந்து அவர்களை இரட்சிக்குமென்று நம்பச்செய்து, அவரது கட்டளைகளை மீறும்படி நடத்தினது. இரக்கம் அனுமதிக்கப்படவுள்ள நிபந்தனைகளுக்கு

இணங்காமலிருக்கும்போதே, பரலோகத்தின் ஆதரவின்மீது உரிமை பாராட்டுவது விசுவாசமல்ல. உண்மையான விசுவாசம் வேதவாக்கியங்களில் உள்ள வாக்குத்தத்தங்களையும் ஏற்பாடுகளையும் அஸ்திபாரமாக உடையதாக இருக்கிறது. (8)

அவநம்பிக்கையை அடிக்கடி நமக்குள் தூண்டிவிடுவதில் சாத்தான் தோற்கும்போது, துணிச்சலுக்குள் நம்மை நடத்துவதில் அவன் வெற்றியடைகிறான். சோதனை உண்டாகும் பாதையில் தேவையில்லாமல் நம்மை நாம் வைக்கும்படி செய்தால், வெற்றி அவனுடையது என்பதை அவன் அறிந்திருக்கிறான். கீழ்ப்படிதலின் பாதையில் நடக்கும் அனைவரையும் தேவன் பாதுகாப்பார். ஆனால் அதைவிட்டு விலகுவது என்பது சாத்தானின் களத்தில் செல்ல முயலுவதாக இருக்கும். அங்கு நாம் விழுவது மிக நிச்சயம். “நீங்கள் சோதனைக்குட்படாதபடிக்கு விழித்திருந்து ஜெபம்பண்ணுங்கள். ஆவி உற்சாகமுள்ளதுதான், மாம்சமோ பலவீனமுள்ளது” (மாற்கு 14:38) என்று இரட்சகர் உபதேசித்திருக்கிறார். தியானமும் ஜெபமும் தேவையில்லை என்னும் ஆபத்தான பாதையிலிருந்து நம்மைக் காத்து, அதினால் உண்டாகும் அநேக தோல்விகளில் இருந்து ஜெபஞ்செய்வதினால் நாம் காக்கப்படுவோம். (9)

ஆனாலும் சோதனையினால் மேற்கொள்ளப்பட்டுவிட்டால் அதற்காக நாம் தைரியத்தை இழந்துவிடக்கூடாது. நம்மைச் சோதிக்கின்ற நிலைமைக்குள் நாம் கொண்டுவரப்படும்போது, அடிக்கடி தேவனுடைய ஆவியானவர் நம்மை நடத்துகிறாரா என்று நாம் சந்தேகிக்கிறோம். ஆனால் சாத்தானால் சோதிக்கப்படுவதற்கென்று இயேசுவை வனாந்தரத்திற்குள் நடத்தினது ஆவியானவர்தான். தேவன் நம்மை சோதனைக்குள் கொண்டுவரும்போது, நமது நன்மைக்காக நிறைவேற்றக்கூடிய ஒரு நோக்கம் அவரிடம் உள்ளது. தேவைப்படாத நிலையில் சோதனைக்குள் பிரவேசித்து, தேவனுடைய வாக்குத்தத்தங்களின்மீது கிறிஸ்து துணிகரமாகச் செயலாற்றவில்லை. அவர்மீது சோதனை வந்தபோது அவர் தன்னை மனச்சோர்விற்குள் விட்டுவிடவில்லை. நாமும் அப்படி இருக்கவேண்டும். “மனுஷருக்கு நேரிடுகிற சோதனையேயல்லாமல் வேறே சோதனை உங்களுக்கு நேரிடவில்லை. தேவன் உண்மையுள்ளவராயிருக்கிறார்; உங்கள் திராணிக்கு மேலாக நீங்கள் சோதிக்கப்படுகிறதற்கு அவர் இடங்கொடாமல், சோதனையைத் தாங்கத்தக்கதாக, சோதனையோடுகூட அதற்குத் தப்பிக்கொள்ளும்படியான போக்கையும் உண்டாக்குவார்.” “நீ தேவனுக்கு ஸ்தோத்திரபலியிட்டு, உன்னதமானவருக்கு உன் பொருத்தனைகளைச் செலுத்தி, ஆபத்துக்காலத்தில் என்னை நோக்கிக்

கூப்பிடு; நான் உன்னை விடுவிப்பேன், நீ என்னை மகிமைப்படுத்துவாய்" (1 கொரிந்தியர் 10:13; சங்கீதம் 50:14,15) என்று அவர் கூறுகிறார். (10)

இயேசு அவரது இரண்டாவது சோதனையிலும் வெற்றிவீரரானார். இப்பொழுது சாத்தான் தன்னை உண்மையான குணத்தில் வெளிக்காட்டுகிறான். கூர்மையான நகங்களுடைய பாதங்களை உடையவனாகவும், வௌவாலின் சிறகுகளைப்போன்ற சிறகுகளை உடைய ஒரு மறைவான இராட்சதனாகவும் அவன் தோற்றமளிக்கிறதில்லை. விழுந்துபோனாலுங்கூட அவன் வல்லமையுள்ள ஒரு தூதன்தான். அவன் தன்னைக் கலகத்தின் தலைவனென்றும் இந்த உலகத்தின் தேவன் என்றும் ஒப்புக்கொள்கிறான். (11)

சாத்தான் இயேசுவை உயர்ந்த மலையின்மீது கொண்டுபோய் உலக இராஜ்யங்களனைத்தையும் அவைகளின் முழு மகிமையுடன் அவருக்கு முன்பாகப் பரந்த காட்சியாகக் கடந்துசெல்லச் செய்தான். ஆலயங்கள் இருக்கும் நகரங்களின்மீதும், சலவைக்கற்களாலான அரண்மனைகளின்மீதும், செழிப்பான வயல்வெளிகளின்மீதும், கனிதரும் திராட்சைத்தோட்டங்களின்மீதும் சூரிய ஒளி தங்கியிருந்தது. தீமையின் சாயல்கள் மூடிமறைக்கப்பட்டிருந்தன. சமீபத்தில் சோகத்தையும் அழிவையும் வரவேற்ற இயேசுவின் கண்கள் இப்பொழுது விஞ்சமுடியாத அளவிற்கு அழகும் செழுமையுமிக்க காட்சிகளின்மீது பதிந்தன. அப்பொழுது: "நீர் சாஷ்டாங்கமாய் விழுந்து, என்னைப் பணிந்துகொண்டால், இவைகளையெல்லாம் உமக்குத் தருவேன்" என்னும் சோதனைக்காரனின் சத்தம் கேட்டது. (12)

பாடுகளின்மூலமாகமட்டுமே கிறிஸ்துவின் ஊழியம் நிறைவேறக் கூடியதாக இருந்தது. வருத்தம், கடின நிலைமை, போராட்டம், இழிவான மரணம் ஆகியவையுள்ள ஒரு வாழ்க்கை அவர்முன் இருந்தது. உலகத்தின் பாவங்களனைத்தையும் அவர் சுமந்தாகவேண்டும். அவரது பிதாவின் அன்பிலிருந்து அவர் பிரியவேண்டும். இப்பொழுது சோதனைக்காரன் அவன் அபகரித்துக்கொண்ட வல்லமைக்குப் பணியும்படி அவரிடம் கேட்டான். பயங்கரமான எதிர்காலத்திலிருந்து தம்மைத்தாமே விடுவிப்பதற்குக் கிறிஸ்து சாத்தானின் மேலாண்மையை ஒப்புக்கொள்ளவேண்டும். ஆனால் அப்படிச்செய்வது அந்த மாபெரும் போராட்டத்தின் வெற்றியை விட்டுக்கொடுப்பதாகிவிடும். தேவகுமாரனுக்கும் மேலாகத் தன்னை உயர்த்த முயன்றதில்தான் சாத்தான் பரலோகத்தில் பாவஞ்செய்தான். இப்பொழுது அவன் மேற்கொண்டுவிட்டால், அதன்மூலம் கலகம் வெற்றியடைந்துவிட்டதாக ஆகிவிடும். (13)

இந்த இராஜ்யமும் உலகத்தின் மகிமையும் எனக்குக் கொடுக்கப்பட்டிருக்கிறது. நான் எனக்கு விருப்பமான எவருக்கும் அதைக் கொடுப்பேன் என்று சாத்தான் கிறிஸ்துவிடம் அறிவித்தபோது, அவன் கூற்றில் ஒரு பகுதிதான் உண்மையாக இருந்தது. தனது வஞ்சகமான நோக்கத்தை நிறைவேற்றிக்கொள்ள அவன் அப்படி அறிவித்தான். சாத்தானின் ஆளுகை ஆதாமிடமிருந்து பிடுங்கப்பட்டதாகும். ஆனால் ஆதாம் சிருஷ்டிகரின் பிரதிநிதியாக இருந்தான். அவனது ஆளுகை சுதந்தரமானதாக இருக்கவில்லை. இந்த உலகம் தேவனுடையது. அவர் அதை அவரது குமாரனிடம் ஒப்படைத்திருந்தார். கிறிஸ்துவிற்குக் கீழ்ப்பட்டவனாக ஆதாம் இருந்து, உலகை ஆளவேண்டியதாக இருந்தது. அவன் நம்பிக்கைத் துரோகமாக, அவனது மேலாண்மையை சாத்தானின் கரங்களில் கொடுத்துவிட்டபோதிலும், கிறிஸ்துதான் அதன் உரிமையுள்ள அரசராக இருந்தார். “உன்னதமானவர் மனுஷருடைய ராஜ்யத்தில் ஆளுகைசெய்து தமக்குச் சித்தமானவனுக்கு அதைக் கொடுக்கிறார்”(தானியேல் 4:17) என்று கர்த்தர் நேபுகாத்நேச்சார் என்னும் அரசனிடம் கூறியிருந்தார். தேவன் அனுமதிக்கும்போதுதான் சாத்தானால் அவன் அபகரித்த அதிகாரத்தைச் செயலாற்ற முடியும். (14)

இராஜ்யத்தையும் உலகத்தின் மகிமையையும் சோதனைக்காரன் கிறிஸ்துவிற்குத் தர முன்வந்தபோது, கிறிஸ்து அவருடைய உண்மையான இந்த உலகத்தின் அரச உரிமையையும் ஆளுகையையும் சாத்தானுக்குக் கீழ்ப்பட்டவராக இருப்பதற்கு ஒப்புக்கொடுத்துப் பெற்றுக்கொள்ளவேண்டும் என்ற தீர்மானத்தை முன்வைத்தான். இந்த ஆளுகையின்மீதுதான் யூதர்களுடைய நம்பிக்கை வைக்கப்பட்டிருந்தது. அவர்கள் இந்த உலக இராஜ்யத்தை விரும்பியிருந்தனர். இப்படிப்பட்ட ஒரு இராஜ்யத்தை அவர்களுக்குத் தருவதற்குக் கிறிஸ்து சம்மதித்திருந்தால், அவர்கள் அவரை மகிழ்ச்சியுடன் ஏற்றிருந்திருப்பார்கள். ஆனால் பாவத்தின் சாபம் அதன் எல்லாத் துயரங்களுடனும் உலகின்மீது தங்கியிருந்தது. “அப்பாலே போ சாத்தானே; உன் தேவனாகிய கர்த்தரைப் பணிந்துகொண்டு, அவர் ஒருவருக்கே ஆராதனை செய்வாயாக என்று எழுதியிருக்கிறதே” என்று சோதனைக்காரனிடம் கிறிஸ்து அறிவித்தார். (15)

பரத்தில் கலகஞ்செய்த ஒருவனால் இந்தப் பூவுலக இராஜ்யங்கள் தீமையின் கொள்கைகளுக்கு மரியாதையைத் தருவதன் அடிப்படையில் கிறிஸ்துவிடம் கொடுக்கப்பட்டன. ஆனால் அவரை வாங்கமுடியாது. அவர் நீதியின் அரசை ஏற்படுத்தவே வந்தார். அவர் தாம் வந்த நோக்கத்தைக் கைவிடவில்லை. அதேவிதமான சோதனையுடன்தான் சாத்தான்

மனிதர்களைச் சமீபிக்கிறான். இங்கு கிறிஸ்துவிடம் கிடைக்காத வெற்றியை அவன் மனிதர்களிடம் பெற்றுவிடுகிறான். அவனது மேலாண்மையை அங்கீகரிக்கவேண்டும் என்ற நிபந்தனையுடன் இந்த உலகத்தின் இராஜ்யங்களை மனிதனுக்குத்தர முன்வருகிறான். நேர்மையைத் தியாகஞ்செய்துவிடவேண்டும்; மனச்சாட்சியை விட்டுவிடவேண்டும்; சுயநலத்தில் திளைக்கவேண்டும்; என்று அவன் கோருகிறான். முதலாவது தேவனுடைய இராஜ்யத்தையும் அவருடைய நீதியையும் தேடும்படி அவர்களுக்குக் கிறிஸ்து கூறுகிறார். ஆனால் சாத்தான் அவர்களருகே நடந்துசென்று நித்திய ஜீவனைப்பற்றினவைகள் எப்படிப்பட்ட உண்மையான இருந்தாலும் சரி, இந்த உலகத்தில் வெற்றியடைவதற்காக நீங்கள் என்னை சேவிக்கவேண்டும் என்கிறான். உங்களது நன்மையை நான் என் கரங்களில் வைத்திருக்கிறேன். செல்வங்கள், உலக சந்தோஷங்கள், மேன்மை, மகிழ்ச்சி ஆகியவைகளை என்னால் உங்களுக்குக் கொடுக்கமுடியும். எனது ஆலோசனைகளுக்குச் செவிசாயுங்கள். நேர்மை, தன்னல மறுப்பு என்று மனதில் தோன்றும் கருத்துக்கள் உங்களை அடித்துச்செல்ல அனுமதிக்காதிர்கள். உங்களுக்கு முன்னான பாதையை நான் ஆயத்தஞ்செய்வேன் என்று கூறுகிறான். இப்படியாக திரளான மக்கள் வஞ்சிக்கப்படுகின்றனர். சுயத்திற்குச் சேவைசெய்து வாழ அவர்கள் சம்மதிக்கின்றனர். அதனால், சாத்தான் திருப்தியடைகிறான். உலகப்பிரகாரமான ஆளுகையைக்காட்டி, அவன் மனிதர்களைக் கவரும்போது, ஆத்துமாவின் ஆளுகை என்னும் ஆதாயத்தை அடைந்துகொள்கிறான். அவன் அப்படிச்செய்யும்போது, அவனுக்கு உரிமையில்லாத ஒன்றை விரைவில் அவனிடமிருந்து பிடுங்கப்பட்டுப்போகக்கூடிய ஒன்றையே அவன் தருவதாகக் கூறுகிறான். அதற்குப்பதிலாக தேவனுடைய பிள்ளைகள் என்னும் அவர்களுடைய வாழ்வுரிமையைத் தந்திரமாக வஞ்சிக்கிறான். (16)

இயேசு தேவனுடைய குமாரன்தானா என்னும் கேள்வியை சாத்தான் எழுப்பியிருந்தான். அவனது கூற்றின் சுருக்கத்தில் அவன் வெற்றியடைவானென்று சொல்லமுடியாத சான்றினை உடையவனாயிருந்தான். பாடுகளை அனுபவிக்கும் மானுடத்தின்மூலமாக தெய்வத்துவம் ஒளிவீசியது. அந்தக் கட்டளையைத் தகர்க்கும் வல்லமை சாத்தானிடம் இருக்கவில்லை. கூனிக்குறுகிய கோலத்துடனும் கோபத்துடனும் உலக மீட்பரின் பிரசன்னத்திலிருந்து பின்வாங்கும்படி அவன் வற்புறுத்தப்பட்டான். ஆதாமின் தோல்வி முழுமையாக இருந்ததைப்போன்று கிறிஸ்துவின் வெற்றி முழுமையானதாக இருந்தது. (17)

அப்படியே நாமும் சோதனையைத் தடுத்து நம்மிடமிருந்து

பிரிந்துசெல்லும்படி சாத்தானை வற்புறுத்தலாம். கீழ்ப்படிதலினாலும் தேவன்மீதுள்ள விசுவாசத்தினாலும் இயேசு வெற்றியடைந்தார். "ஆகையால், தேவனுக்குக் கீழ்ப்படிந்திருங்கள்; பிசாசுக்கு எதிர்த்து நில்லுங்கள், அப்பொழுது அவன் உங்களைவிட்டு ஓடிப்போவான். தேவனிடத்தில் சேருங்கள், அப்பொழுது அவர் உங்களிடத்தில் சேருவார். பாவிகளே, உங்கள் கைகளைச் சுத்திகரியுங்கள்; இருமனமுள்ளவர்களே, உங்கள் இருதயங்களைப் பரிசுத்தமாக்குங்கள்" (யாக்கோபு 4:7,8) என்று அவர் அப்போஸ்தலனின் மூலமாகக் கூறுகிறார். சோதனைக்காரனின் வல்லமையிலிருந்து நம்மை நம்மால் காக்க இயலாது. அவன் மனித இனத்தின்மீது வெற்றியடைந்துள்ளான். நாம் நமது சொந்தக் கால்களில் நிற்க முயலும்போது, அவனது உபாயங்களுக்கு இரையாகிவிடுவோம். ஆனால் "கர்த்தரின் நாமம் பலத்த துருகம்; நீதிமான் அதற்குள் ஓடிச் சுகமாயிருப்பான்" (நீதிமொழிகள் 18:10) என்றுள்ளது. அந்த வல்லமைமிக்க நாமத்தில் அடைக்கலம் காணும் மிகமிகப் பலவீனமான ஆத்துமாவின்முன் சாத்தான் நடுங்கி ஓடிவிடுகிறான். (18)

எதிரியாகிய அவன் போய்விட்டபின் மரணத்தின் வெளிரிய முகத்துடன் களைப்புற்றவராக அவர் தரையில் விழுந்தார். நாம் தப்பித்துக்கொள்ளும் ஒரு பாதையை ஏற்படுத்த, விவரிக்க இயலாத பாடுகளினூடாகக் கடந்துசென்ற அன்புமிக்க அவர்களது சேனைத்தலைவரைக் கண்டு, அந்தப் போராட்டத்தைப் பரலோகத்தின் தூதர்கள் நோக்கியிருந்தனர். தாங்கிக்கொள்ளும்படியாக நாம் ஒருபோதும் அழைக்கப்பட்டிராத பெரும் சோதனையை அவர் தாங்கினார். மரணமடையப்போகிறவரைப் போலக் கிடந்த ஒருவரான தேவகுமாரனுக்கு, இப்பொழுது தூதர்கள் ஊழியஞ்செய்தனர். உணவினாலும், அவரது பிதாவின் அன்பினாலும், பரலோகம் முழுவதும் வெற்றியடைந்துவிட்டது என்னும் நிச்சயத்தினாலும், அவர் பலப்படுத்தப்பட்டார். மறுபடியும் அனலடைந்து உயிர்பெற்று எழுந்த அவரது பெரும் இதயம், மனிதனைப்பற்றிய அனுதாபத்துடன், தொடங்கிய பணியை நிறைவேற்றி எதிராளியை அழிக்கும்வரை—விழுந்துபோன நமது இனம் மீட்கப்படும்வரை, இளைப்பாறுதல் அடையாது. (19)

மீட்கப்பட்டவர்கள் மீட்பருடன் சேர்ந்து தேவ சிங்காசனத்தின்முன் நிற்கும்வரை, நமது மீட்பின் கிரயத்தின் மதிப்பு உணரப்படமாட்டாது. அதன்பின் நித்திய வீட்டின் மகிமைகள் நம்முன் விரிவடையும்போது, புலன்கள் அளவுகடந்த இன்பமடையும்போது, நமக்காக இயேசு இவைகளையெல்லாம் விட்டுவிட்டு பரலோக மன்றத்திலிருந்து நாடுகடத்தப்பட்டவராக ஆனதுமட்டுமின்றி தோல்வி, நித்திய இழப்பு என்னும் அபாயமான பொறுப்புக்களையும்

எடுத்துக்கொண்டார் என்பதை நாம் நினைவுகூருவோம். அதன்பின் நாம் நமது கிரீடங்களை அவரது பாதங்களின்கீழ் வைத்து: “அடிக்கப்பட்ட ஆட்டுக்குட்டியானவர் வல்லமையையும் ஐசுவரியத்தையும் ஞானத்தையும் பெலத்தையும் கனத்தையும் மகிமையையும் ஸ்தோத்திரத்தையும் பெற்றுக்கொள்ளப் பாத்திரராயிருக்கிறார்” (வெளிப்படுத்தல் 5:12) என்னும் பாடலைப் பாடுவோம். (20) ★

# 14

# நாங்கள் மேசியாவைக் கண்டோம்!

**யோவான் 1:19–51**

**(The Desire of Ages, pp. 132–143)**

யோர்தானுக்கு அப்பாலுள்ள பெத்தாபாரா என்னும் இடத்தில் இப்பொழுது யோவான் ஸ்நானகன் பிரசங்கித்துக்கொண்டும் ஞானஸ்நானம் கொடுத்துக்கொண்டுமிருந்தான். ஓடின நதியின் தண்ணீர் இஸ்ரவேல் மக்கள் கடந்துசெல்லும்வரை, நின்றுபோயிருந்த இடம் அங்கேயிருந்து அதிக தூரத்திலில்லை. இந்த இடத்திலிருந்து சற்று தொலைவிலிருந்த எரிகோவின் பலத்த கோட்டை, பரலோக சேனைகளால் வீழ்த்தப்பட்டிருந்தது. அந்த நிகழ்ச்சிகளின் நினைவுகள் இந்தச் சமயத்தில் புதுப்பிக்கப்படவே, யோவான் ஸ்நானகனின் தூது, மயிர்க்கூச்செரியச்செய்யும் ஆர்வத்தை உண்டுபண்ணியிருந்தது. கடந்த காலத்தில் இப்படிப்பட்ட ஆச்சரியமானவைகளைச் செய்த ஒருவர் இஸ்ரவேலரின் விடுதலைக்காக மறுபடியும் அவரது வல்லமையை வெளிக்காட்டமாட்டாரா? யோர்தான் நதிக்கரையில் நாள்தோறும் கூடியிருந்த மக்களின் இப்படிப்பட்ட சிந்தனைகள் அவர்களது இருதயங்களைக் கலக்கிக்கொண்டிருந்தன. (1)

யோவானின் பிரசங்கம் சமய சம்பந்தமான அதிகாரிகளின் கவனத்தை ஈர்க்கும்வண்ணம் அந்த நாட்டு மனிதர்களைப் பற்றிக்கொள்ளுமளவிற்கு மிகுந்த ஆழமானதாக இருந்தது. உள்நாட்டுக் கலகம் உண்டாகும் அபாயம், மக்களின் ஒவ்வொரு கூட்டத்தையும் சந்தேகத்துடன் பார்க்கும்படி ரோமர்களை நடத்தியது. மக்களின் எழுச்சியை உண்டுபண்ணுவதைச் சுட்டிக்காட்டும் எந்தவிதமான காரியமும், யூத அதிபதிகளின் பயத்தை எழுப்பியிருந்தது. யோவான் அவனுடைய ஊழியத்தைச் செய்வதற்கு சனகரீம் சங்கத்தின் அனுமதியை பொருட்படுத்தாதிருந்தான். அவன் அதிபதிகளையும் மக்களையும் பரிசேயரையும் சதுசேயரையும் ஒன்றாகக் கண்டித்திருந்தான். ஆனாலும் மக்கள் ஆர்வத்துடன் அவனைப் பின்பற்றியிருந்தனர். ஊழியத்தின்மீதிருந்த அவனது ஆர்வம் நாள்தோறும் தொடர்ச்சியாக அதிகரித்துவருவதுபோலக் காணப்பட்டிருந்தது. அவன் அவர்களைக் கண்டு கொள்ளாதவனாக இருந்தபோதும், மக்களின் போதகனாக இருப்பதால்

அவன் சனகரீம் சங்கத்தின் ஆட்சியின் எல்லைக்குட்பட்டிருக்கிறான் என்று அது கணித்துக்கொண்டிருந்தது. (2)

ஆசாரியத்துவ வட்டாரத்திலிருந்து தெரிந்தெடுக்கப்பட்டவர்கள், நாட்டின் முதன்மையான அதிபதிகள், ஆசிரியர்கள் ஆகியோர்களைக்கொண்ட அமைப்பாக அது இருந்தது. பிரதான ஆசாரியன்தான் வழக்கமாக அதன் தலைவனாக இருந்தான். அதன் அங்கத்தினர்கள் அனைவரும், முதியோர்களாக இருக்காவிட்டாலும் வயதுள்ளவர்களாக இருந்து, யூத மதக்காரியங்களிலும் வரலாற்றிலும் அனுபவமுடையவர்களாகவும் கற்றவர் களாகவும், பொது அறிவுமிக்கவர்களாகவும் இருந்தனர். அவர்கள் சரீரக்குறைபாடுகள் எதுவுமில்லாதவர்களாகவும், திருமணமானவர்களாகவும், தந்தைமார்களாகவும், மற்றவர்களைவிட அதிகமான மனிதத்தன்மையும் நிதானமும் உள்ளவர்களாகவும் இருக்கவேண்டியதிருந்தது. எருசலேம் தேவாலயத்துடன் சம்பந்தப்பட்ட ஒரு பகுதியான கட்டிடத்தில் அவர்களது கூடுமிடம் இருந்தது. யூத தேசம் சுதந்திரமாக இருந்த காலத்தில், சனகரீம் சங்கம் அந்த நாட்டின் உச்சநீதிமன்றமாகவும், மதச் சார்பற்றதும், மதத்தைச்சார்ந்த அதிகாரத்தை உடையதாகவும் இருந்தது, இப்பொழுது அவர்கள் ரோம ஆளுநர்களுக்குக் கீழ்ப்பட்டிருந்தாலும், சமூக, சமயக் காரியங்களில் தொடர்ந்து அதன் பலத்த செல்வாக்கைக் கொண்டிருந்தனர். (3)

யோவானின் ஊழியத்தை அலசி ஆராய்கின்ற செயலை சனகரீம் சங்கத்தால் தாமதப்படுத்த முடியவில்லை. தேவாலயத்தில் சகரியாவிற்கு வெளிப்படுத்தப்பட்டதையும், அவன் மேசியாவிற்கு முன்செல்லுவான் என்ற அவனது தந்தையின் தீர்க்கதரிசனத்தையும் நினைவிற்குக் கொண்டுவந்த சிலர் அங்கிருந்தனர். முப்பது ஆண்டுகளாக நிகழ்ந்திருந்த அமளிகளிலும் மாறுதல்களிலும் அந்தக் காரியங்களைப்பற்றிய பார்வை பெருமளவிற்கு மறக்கப்பட்டிருந்தது. இப்பொழுதோ யோவானின் ஊழியத்தைப்பற்றி உண்டான எழுச்சி அவைகளை மனதிற்கு அழைத்தது. (4)

இஸ்ரவேலில் ஒரு தீர்க்கதரிசி இருந்து வெகுகாலமாகியிருந்தது. இப்பொழுது நடைபெறும் சீர்திருத்தம் ஒன்றினைக் கண்டு வெகுகாலமாகி யிருந்தது. பாவ அறிக்கை செய்யும் கோரிக்கை புதிதாகவும் திடுக்கிடச் செய்வதாகவும் காணப்பட்டது. யோவானின் வேண்டுகோளையும் குற்றச்சாட்டு களையும் கேட்பதற்குச் சென்றால், அவர்களது சொந்த வாழ்க்கையிலுள்ள இரகசியங்கள் வெளிப்படநேரிடும் என்று கருதி, தலைவர்களில் அநேகர் செல்லவில்லை. அப்படியிருந்தும், அவனுடைய பிரசங்கம் மேசியாவைப்பற்றிய நேரடியான அறிவிப்பாக இருந்தது. மேசியாவின் வருகையைக் குறிக்கின்ற

தானியேலின் எழுபது வாரத் தீர்க்கதரிசனம் ஏறத்தாழ முடிந்துவிட்டது என்பது நன்கு அறியப்பட்டிருந்தது. அதன்பின் எதிர்பார்க்கப்பட்டிருந்த தேசிய மகிமையில் பங்குபெற அனைவரும் மிகுந்த ஆவலுடன் இருந்தனர். யோவானுடைய ஊழியத்தை அனுமதிக்கவோ அல்லது புறக்கணிக்கவோ சனகரீம் சங்கம் வற்புறுத்தப்படும் என்பதற்கான பொதுமக்களின் உற்சாகம் அப்படிப்பட்டதாக இருந்தது. மக்கள்மீது அவர்களுக்கிருந்த வல்லமை ஏற்கனவே தேய்ந்துபோய்க்கொண்டிருந்தது. தங்களுடைய நிலைமையைத் தக்கவைத்துக்கொள்ளவது எப்படி என்பது தீவிரமான ஒரு கேள்வியாகிக்கொண்டிருந்தது. ஏதாவது ஒரு முடிவிற்கு வரலாம் என்ற நம்பிக்கையில் அவர்கள் ஆசாரியர்களையும் லேவியர்களையும் பிரதிநிதிகளாக யோர்தானுக்கருகிலிருந்த புதிய போதகரைச் சந்திக்கும்படி அனுப்பினார்கள். (5)

அந்தப் பிரதிநிதிகள் சமீபித்தபோது, ஒரு திரள்கூட்டம் அவனது பேச்சைக் கேட்க அங்கு கூடியிருந்தது. மக்கள்மீது உணர்த்துதலை உண்டு பண்ணவும், அவர்களுடைய அதிகாரத்தைக் காட்டவும், தீர்க்கதரிசியை அவர்களுடைய அதிகாரத்திற்குக் கீழ்ப்படியச்செய்யும்படி கட்டளையிடவும், அந்த அகந்தைமிக்க ரபிமார்கள் வந்தனர். பயத்துடனும் மரியாதையைக் காட்டும்வண்ணமாகவும் மக்கள் நகர்ந்து அவர்கள் கடந்துசெல்ல வழிவிட்டனர். அந்தப் பெரிய மனிதர்கள் அவர்களுடைய விலையுயர்ந்த உடைகளுடனும், பதவி, வல்லமை ஆகியவைகளினாலான அகந்தையுடனும் வனாந்திர தீர்க்கதரிசியின்முன் நின்றனர். (6)

“நீ யார்?” என்று அதிகாரத்துடன் கேட்டனர். அவர்களுடைய சிந்தனைகளில் என்ன உள்ளது என்பதை அறிந்திருந்த யோவான் … “நான் கிறிஸ்து அல்ல” என்று பதில் தந்தான். (7)

“அப்பொழுது அவர்கள்: பின்னை யார்? நீர் எலியாவா என்று கேட்டார்கள்.” (8)

“அதற்கு: நான் அவன் அல்ல என்றான்.” (9)

“நீர் தீர்க்கதரிசியானவரா என்று கேட்டார்கள்” (10)

“அதற்கும்: அல்ல என்றான்.” (11)

“நீர் யார்? எங்களை அனுப்பினவர்களுக்கு நாங்கள் உத்தரவு சொல்லும்படிக்கு, உம்மைக்குறித்து என்ன சொல்லுகிறீர் என்று கேட்டார்கள்.” (12)

"அதற்கு அவன்: கர்த்தருக்கு வழியைச் செவ்வைபண்ணுங்கள் என்று ஏசாயா தீர்க்கதரிசி சொன்னபடியே, நான் வனாந்தரத்திலே கூப்பிடுகிற வனுடைய சத்தமாயிருக்கிறேன் என்றான்." (13)

யோவான் குறிப்பிட்ட வேதவாக்கியம்: "என் ஜனத்தை ஆற்றுங்கள், தேற்றுங்கள்; எருசலேமுடன் பட்சமாய்ப்பேசி, அதின் போர் முடிந்தது என்றும், அதின் அக்கிரமம் நிவிர்த்தியாயிற்று என்றும், அது தன் சகல பாவங்களினிமித்தமும் கர்த்தரின் கையில் இரட்டிப்பாய் அடைந்து தீர்ந்தது என்றும், அதற்குக் கூறுங்கள் என்று உங்கள் தேவன் சொல்லுகிறார். கர்த்தருக்கு வழியை ஆயத்தப்படுத்துங்கள், அவாந்தரவெளியிலே நம்முடைய தேவனுக்குப் பாதையைச் செவ்வைபண்ணுங்கள் என்றும், பள்ளமெல்லாம் உயர்த்தப்பட்டு, சகல மலையும் குன்றும் தாழ்த்தப்பட்டு, கோணலானது செவ்வையாகி, கரடுமுரடானவைச் சமமாக்கப்படும் என்றும், கர்த்தரின் மகிமை வெளியரங்கமாகும், மாம்சமான யாவும் அதை ஏகமாய்க் காணும், கர்த்தரின் வாக்கு அதை உரைத்தது என்றும் வனாந்தரத்திலே கூப்பிடுகிற சத்தம் உண்டாயிற்று" (ஏசாயா 40:1–5) என்ற ஏசாயாவின் அழகிய தீர்க்கதரிசனமாக இருக்கிறது. (14)

முற்காலத்தில் அரசன் அவனது ஆளுகையில் உள்ள அதிகமாகப் பயணஞ்செய்யாத பகுதியில் பயணஞ்செய்ய நேர்ந்தபோது, அவன் பாதுகாப்பாகவும் இடையூறின்றியும் செல்லுவதற்காக, பாதையிலுள்ள மேடுகள் தாழ்த்தப்பட்டு, பள்ளங்களும் குழிகளும் நிரப்பப்பட்டுச் செவ்வைப் படுத்தப்படும்படி அவனது இரதத்திற்குமுன் ஒரு கூட்ட மனிதர்கள் அனுப்பப் பட்டனர். சுவிசேஷத்தின் பணியைச் சித்தரித்துக்காட்டுவதற்கு இந்த வழக்கம் உதாரணமாகப் பயன்படுத்தப்பட்டது. "பள்ளமெல்லாம் உயர்த்தப்பட்டு, சகல மலையும் குன்றும் தாழ்த்தப்பட்டு, கோணலானது செவ்வையாகி, கரடு முரடானவைச் சமமாக்கப்படும்." தேவனுடைய ஆவி அதன் ஆச்சரியமான விழிப்பூட்டும் வல்லமையுடன் ஆத்துமாவைத் தொடும்போது, அது மனித அகந்தையைத் தாழ்த்துகிறது. உலகத்தின் சந்தோஷங்களும் பதவிகளும் விலைமதிப்பில்லாதவைகளாகக் காணப்படுகின்றன. "தேவனை அறிகிற அறிவுக்கு விரோதமாய் எழும்புகிற எல்லா மேட்டிமையும்" (2 கொரிந்தியர் 10:5) தாழ்த்தப்படுகின்றன. "கிறிஸ்துவுக்குக் கீழ்ப்படிய" எல்லா எண்ணமும் கொண்டுவரப்படுகிறது. மிகவும் குறைவாக மதிக்கப்படும் தாழ்மையும் சுயத்தைத் தியாகஞ்செய்யும் அன்பும் மட்டுமே மதிப்புடையதென்று உயர்த்தப் படுகிறது. இதுவே, சுவிசேஷத்தின் வேலையாக உள்ளது. யோவானின் தூது இதன் ஒரு பகுதியாக இருந்தது. (15)

"நீர் கிறிஸ்துவுமல்ல, எலியாவுமல்ல, தீர்க்கதரிசியானவருமல்ல

வென்றால், ஏன் ஞானஸ்நானங் கொடுக்கிறீர்” என்ற அவர்களுடைய கேள்வியை ரபிமார்கள் தொடர்ந்தனர். அவர்கள் தீர்க்கதரிசி என்று குறிப்பிட்ட வார்த்தை மோசேயைக் குறித்தது. மோசே எழுப்பப்பட்டுப் பரலோகத்திற்குக் கொண்டுசெல்லப்படுவான் என்னும் நம்பிக்கைக்கு யூதர்கள் நடத்தப்பட்டிருந்தனர். அவன் ஏற்கனவே எழுப்பப்பட்டிருந்தான் என்பதை அவர்கள் அறியாமலிருந்தனர். ஸ்நானகன் அவனது ஊழியத்தைத் தொடங்கினபோது, அநேகர் அவன் மரித்தோரிலிருந்து எழுந்த மோசேயாக இருக்கலாம் என்று எண்ணினர். ஏனெனில் அவன் தீர்க்கதரிசனங்களையும் இஸ்ரவேலின் வரலாற்றையும்பற்றின முழுமையான அறிவுள்ளவனாக இருப்பதுபோலக் காணப்பட்டான். (16)

மேசியாவின் வருகைக்குமுன் எலியா நேரடியாகத் தோன்றியாக வேண்டும் என்றுகூட நம்பப்பட்டிருந்தது. இந்த எதிர்பார்ப்பை யோவான் அவனது மறுப்பில் காட்டினான். ஆனால் அவனது வார்த்தைகள் ஆழ்ந்த அர்த்தமுள்ளவையாக இருந்தன. “நீங்கள் ஏற்றுக்கொள்ள மனதாயிருந்தால், வருகிறவனாகிய எலியா இவன்தான்” (மத்தேயு 11:14) என்று இயேசு யோவானைக்குறித்துப் பின்பு கூறினார். எலியா செய்த பணியைப் போன்ற ஒரு பணியைச் செய்ய, யோவான் எலியாவின் ஆவியையும் வல்லமையையும் உடையவனாக வந்தான். யூதர்கள் அவனை ஏற்றுக்கொண்டிருந்தால், அவர்களுக்கானதை அது நிறைவேற்றியிருந்திருக்கும். ஆனால் அவனது தூதை அவர்கள் ஏற்றுக்கொள்ளவில்லை. அவர்களுக்கு அவன் எலியாவாக இருக்கவில்லை. அவர்களுக்காக நிறைவேற்றவந்த ஊழியத்தை அவனால் நிறைவேற்ற முடியவில்லை. (17)

இயேசுவின் ஞானஸ்நானத்தின்போது, யோர்தானில் கூடியிருந்தவர்களில் அநேகர் இருந்தனர். ஆனால் அப்பொழுது கொடுக்கப்பட்ட அடையாளம் அவர்களில் சிலருக்குமட்டுமே வெளிக்காட்டப்பட்டது. ஸ்நானகனின் ஊழியத்தில் இதற்குமுன்னான மாதங்களில் மனந்திரும்பும்படிக் கொடுக்கப்பட்ட அழைப்பிற்குச் செவிசாய்க்க அநேகர் மறுத்திருந்தனர். இப்பொழுது, அவர்கள் தங்களுடைய இருதயங்களைக் கடினப்படுத்தி, தங்களுடைய புரிந்துகொள்ளும் தன்மையை இருளடையச் செய்திருந்தனர். இயேசுவின் ஞானஸ்நானத்தின்போது, பரலோகம் அவருக்குச் சாட்சிகொடுத்தபோது, அவர்கள் அதை உணரவில்லை. காணக்கூடாதவராக இருந்த அவருக்கு நேராக, விசுவாசத்தினால் ஒருபோதும் திரும்பாமலிருந்த கண்களால் தேவ மகிமையின் வெளிப்படுத்தலைக் காணமுடியவில்லை. அவருடைய சத்தத்திற்கு ஒருபோதும் செவிசாய்த்திராத காதுகள், இந்த சாட்சியின் வார்த்தைகளைக் கேட்கவில்லை. இப்பொழுதும் அதைப்போலவே உள்ளது.

கிறிஸ்துவும் ஊழியஞ்செய்யும் தூதர்களின் பிரசன்னமும், மக்கள் கூடும் கூட்டத்தில் அடிக்கடி வெளிக்காட்டப்படுகிறது. அப்படியிருந்தும், அதை அறியாத அநேகர் இருக்கின்றனர். வழக்கத்திலில்லாத எதையும் அவர்கள் அறிந்துகொள்ளுவதில்லை. ஆனால் சிலருக்கு இரட்சகரின் பிரசன்னம் வெளிப்படுத்தப்படுகிறது. சமாதானமும் சந்தோஷமும் அவர்களுடைய இருதயங்களை உயிர்ப்பிக்கிறது. அவர்கள் ஆறுதல்செய்யப்பட்டு—தைரிய மூட்டப்பட்டு—ஆசீர்வதிக்கப்படுகின்றனர். (18)

“நீ ஏன் ஞானஸ்நானம் கொடுக்கிறாய்?” என்று எருசலேமிலிருந்து சென்ற பிரதிநிதிகள் யோவானிடம் கேட்டு, அவனது பதிலுக்குக் காத் திருந்தனர். அந்தக் கூட்ட நெரிசலில் அவனது பார்வை சென்றபோது, திடீரென்று அவனது கண்கள் ஒளிவீசின. அவனது முகம் பிரசகாசமடைந்தது. அவனது உடல் முழுவதும் உணர்ச்சிகளால் ஆழ்ந்து சிலிர்த்தது. (19)

“நான் ஜலத்தினாலே ஞானஸ்நானங்கொடுக்கிறேன்; நீங்கள் அறியாதிருக்கிற ஒருவர் உங்கள் நடுவிலே நிற்கிறார். அவர் எனக்குப் பின்வந்தும் என்னிலும் மேன்மையுள்ளவர்; அவருடைய பாதரட்சையின் வாரை அவிழ்ப்பதற்கும் நான் பாத்திரனல்ல” (யோவான் 1:26,27) என்று நீட்டிய கரங்களுடன் அவன் சத்தமிட்டான். (20)

சனகரீம் சங்கத்திற்குத் திரும்பி எடுத்துச்செல்லும்படி அந்தத் தூது தெளிவானதாகவும் ஈடு இணையற்றதாகவும் இருந்தது. நெடுங்காலமாக வாக்குத்தத்தஞ்செய்யப்பட்டிருந்த ஒருவரையன்றி வேறொருவருக்கும் யோவானின் வார்த்தை பொருந்தக்கூடியதாக இல்லை. மேசியா அவர்களுக்கு மத்தியில் இருந்தார். யோவான் எவரைப்பற்றிக் கூறியிருந்தானோ அவரைக் கண்டுபிடிக்கும் நம்பிக்கையுடனும் ஆச்சரியத்துடனும் ஆசாரியர்களும் அதிபதிகளும் அவரை நோக்கினர். ஆனால் அந்தக் கூட்டத்தில் அவர் அடையாளம் காணமுடியாதவராக இருந்தார். (21)

இயேசுவின் ஞானஸ்நானத்தின்போது, யோவான் அவரைத் தேவ னுடைய ஆட்டுக்குட்டியாகச் சுட்டிக்காண்பித்தான். அப்போது அவருடைய பணியின்மீது ஒரு புதிய ஒளி வீசியது. “அடிக்கப்படும்படி கொண்டு போகப்படுகிற ஒரு ஆட்டுக்குட்டியைப்போலவும்” (ஏசாயா 53:7) அவர் இருந்தார் என்ற ஏசாயாவின் வார்த்தைகளை நோக்கி அந்தத் தீர்க்க தரிசியின் மனம் நடத்தப்பட்டது. அதைப்பின் தொடர்ந்த வாரங்களில் புதிய ஆர்வத்துடன் பலிமுறைகளைப்பற்றின தீர்க்கதரிசனங்களையும் போதனை களையும் அவன் ஆராய்ந்தான். கிறிஸ்துவின் பணியின் இருநிலைகளைப் பற்றியும்—அதாவது பாடுகள் அனுபவிக்கும் பலி, வெற்றிபெறும் அரசன் என்பவைகளை அவன் தெளிவாகப் பிரித்தறியவில்லை. ஆனால் அவரது

வருகை ஆழமான அடையாளத்தை உடையதாக இருந்ததை ஆசாரியர் களும் மக்களும் அறிந்திருந்ததைவிட அதிகமாக அவன் கண்டான். அவன் வனாந்தரத்திலிருந்து திரும்பிவந்தபின், கூட்ட நெரிசலில் இயேசுவைக் கண்டபோது, அவரது மெய்யான குணம்பற்றிய ஒரு அடையாளத்தை மக்களுக்குக் கொடுப்பதற்காக அவரை நம்பிக்கையுடன் நோக்கினான். இரட்சகர் அவரது ஊழியம்பற்றி அறிவிப்பதைக் கேட்பதற்கு கிட்டத்தட்ட பொறுமையிழந்தவனாக அவன் காத்திருந்தான். ஆனால் ஒரு வார்த்தையும் பேசப்படவில்லை. ஒரு அடையாளமும் கொடுக்கப்படவில்லை. அவரைப் பற்றிய ஸ்நானகனின் அறிவிப்பிற்குப் பதில் கொடுக்காமல், அவர் யோவானின் சீடர்களுடன் கலந்து, அவரது சிறப்பான பணியைப்பற்றி வெளிப்படையான சாட்சியைக் கொடாமல், அவரைக் கவனிக்கும்படியான எந்த நடவடிக்கையும் எடுக்காதவராக இருந்தார். (22)

மறுநாள் இயேசு வருகிறதை யோவான் காண்கிறான். தேவ மகிமையின் ஒளி அவர்மீது தங்கியிருக்க அந்தத் தீர்க்கதரிசி தனது கரங்களை விரித்து: "இதோ, உலகத்தின் பாவத்தைச் சுமந்துதீர்க்கிற தேவ ஆட்டுக்குட்டி. எனக்குப்பின் ஒருவர் வருகிறார், அவர் எனக்கு முன்னிருந்தபடியால் என்னிலும் மேன்மையுள்ளவரென்று நான் சொன்னேனே, அவர் இவர் தான். நானும் இவரை அறியாதிருந்தேன்; இவர் இஸ்ரவேலுக்கு வெளிப்படும் பொருட்டாக, நான் ஜலத்தினாலே ஞானஸ் நானங் கொடுக்கவந்தேன் என்றான். ... ஆவியானவர் புறாவைப்போல வானத்திலிருந்திறங்கி, இவர்மேல் தங்கினதைக் கண்டேன். நானும் இவரை அறியாதிருந்தேன்; ஆனாலும் ஜலத்தினால் ஞானஸ்நானங் கொடுக்கும்படி என்னை அனுப்பினவர்: ஆவியானவர் இறங்கி யார்மேல் தங்குவதை நீ காண்பாயோ, அவரே பரிசுத்த ஆவியினால் ஞானஸ்நானங்கொடுக்கிறவர் என்று எனக்குச் சொல்லியிருந்தார். அந்தப்படியே நான் கண்டு, இவரே தேவனுடைய குமாரன் என்று சாட்சி கொடுத்துவருகிறேன்" (யோவான் 1:29–34) என்றான். (23)

இவர்தான் அந்தக் கிறிஸ்துவா? தேவனுடைய குமாரனென்று இப்பொழுது அறிவிக்கப்பட்ட ஒருவரை மக்கள் திகிலுடனும் ஆச்சரியத் துடனும் பார்த்தனர். யோவானின் வார்த்தைகளினால் அவர்கள் ஆழமாக அசைக்கப்பட்டிருந்தனர். தேவனுடைய பெயரால் அவன் அவர்களிடம் பேசியிருந்தான். நாடோறும் தங்களது பாவங்களை அவன் கடிந்துகொள்வதை அவர்கள் கவனிக்கவே, அவன் பரலோகத்தினால் அனுப்பப்பட்டவன் என்னும் உணர்த்துதல் அன்றாடம் அவர்களுக்குள் பலப்பட்டது. ஆனால் யோவான் ஸ்நானகனைவிட உயர்ந்த ஒருவரான இவர் யார்? அவரது

உடையிலும் நடத்தையிலும் அந்த அடையாளத்தைக் காட்டக்கூடிய எதுவும் இருக்கவில்லை. வெளிப்படையாக அவர் அவர்களைப்போலவே ஏழைகளின் உடையில் தாழ்மையானவராக சாதாரண நபராகக் காணப்பட்டார். (24)

கிறிஸ்துவின் ஞானஸ்நானத்தின்போது தோன்றிய தெய்வீக மகிமையைக் கண்டு, தேவனுடைய சத்தத்தைக் கேட்டிருந்த சிலர் அந்தத் திரள்கூட்டத்தின் மத்தியில் இருந்தனர். ஆனால் அந்த நேரத்திலிருந்த இரட்சகரின் தோற்றம் பெருமளவிற்கு மாறியிருந்தது. ஞானஸ்நானத்தின்போது பரலோக ஒளியினால் மறுரூபமாயிருந்த அவரது முகம், இப்பொழுது வெளிரி களைப்படைந்து மெலிந்திருப்பதை அவர்கள் கண்டனர். யோவான் தீர்க்கதரிசியினால் மட்டுமே அவர் அடையாளங்காணப்பட்டிருந்தார். (25)

ஆனால் மக்கள் அவரை நோக்கியபோது, தெய்வீகமான உருக்க மும் வல்லமையும் கலந்த ஒரு முகத்தைக் கண்டனர். அந்தக் கண்களின் ஒவ்வொரு பார்வையும், அந்த முகத்தின் ஒவ்வொரு தோற்றமும் தாழ்மை யினாலும் சொல்லமுடியாத அன்பின் உணர்த்துதலினாலும் அடையாளப் படுத்தப்பட்டிருந்தது. ஆவிக்குரிய செல்வாக்கையுடைய ஒரு சூழ்நிலையால் அவர் சூழப்பட்டிருந்ததுபோலக் காணப்பட்டார். மறைக்கப்பட்டிருந்த வல்லமையின் உணர்வுடன் அவர் மனிதர்களை உணர்த்தினார். ஆனால் அது முழுமையாக மறைக்கப்படமுடியாததாக இருந்தது. இஸ்ரவேலர்கள் இவ்வளவு நீண்டகாலமாகக் காத்திருந்தது இந்த ஒருவருக்காகவா? (26)

நமக்கு உதாரணமாகவும் நமது மீட்பராகவும் இருக்கும்வண்ணம் இயேசு ஏழ்மையிலும் தாழ்மையிலும் வந்தார். அவர் அரச ஆடம்பரத்தில் தோன்றியிருந்தால், தாழ்மையைப்பற்றி அவரால் எப்படிப் போதித்திருக்க முடியும்? அந்தவிதமான வெட்டும் சத்தியங்களை மலைப்பிரசங்கத்தில் அவரால் எந்தவிதமாக முன்வைத்திருக்கமுடியும், மனிதர்களுக்கு நடுவில் ஒரு அரசராக வாழும்படி இயேசு வந்திருந்தால், கீழ் மட்டத்திலிருந்தவர்களின் வாழ்க்கையில் நம்பிக்கை எங்கே இருந்திருக்கும்? (27)

எப்படியிருந்தாலும், யோவானால் குறிப்பிடப்பட்ட ஒருவரால், உயர்ந்த எதிர்பார்ப்புகளுடன் இருப்பவர்களுடன் இணைந்திருப்பது இயலாதது போல் ஜனங்களுக்குக் காணப்பட்டது. இந்தவிதமாக, அநேகர் ஏமாற்றமடைந்த வர்களாகவும் பெருமளவிற்குக் குழப்படைந்தவர்களாகவும் இருந்தனர். (28)

இயேசு இஸ்ரவேலின் இராஜ்யத்தைத் திரும்ப ஏற்படுத்துவார் என்று ஆசாரியர்களும் ரபிமார்களும் கேட்க விரும்பியிருந்த வார்த்தைகள் பேசப்படாமலிருந்தது. ஏனெனில் அப்படி ஒரு அரசருக்காக அவர்கள் காத்துக்கொண்டும் விழித்துக்கொண்டும் இருந்தனர். அப்படிப்பட்ட ஒரு

அரசரை வரவேற்ற அவர்கள் ஆயத்தமாயிருந்தனர். ஆனால் அவர்களுடைய இருதயங்களில் நீதியின் இராஜ்யத்தையும் சமாதானத்தையும் ஏற்படுத்த வகைதேடிய ஒருவரை அவர்கள் ஏற்கமாட்டார்கள். (29)

மறுநாள் யோவான் இரண்டு சீடர்களுடன் நின்றிருந்தபோது, மக்களுக் கிடையில் இயேசுவை மறுபடியும் கண்டான். மறுபடியும் காணக்கூடாத மகிமையினால் அந்தத் தீர்க்கதரிசியின் முகம் ஒளியடைந்தது. அவன்: "இதோ, தேவ ஆட்டுக்குட்டி" என்று சத்தமிட்டான். அந்த வார்த்தைகள் அந்த சீடர்களின் இருதயங்களை உணர்ச்சிபொங்கச் செய்தது. அவர்கள் அவைகளை முழுவதுமாகப் புரிந்துகொள்ளவில்லை. தேவ ஆட்டுக்குட்டி! என்று அவருக்கு யோவான் சூட்டிய பெயர் எதைக் குறிக்கிறது? யோவான் தானும் அதை விளக்கவில்லை. (30)

யோவானை விட்டுவிட்டு அவர்கள் இயேசுவைத் தேடிச்சென்றனர். அந்த இருவரில் ஒருவன் சீமோனின் சகோதரனான அந்திரேயாவாக இருந்தான். மற்றவன் சுவிசேஷகனான யோவானாக இருந்தான். இவர்கள் கிறிஸ்துவின் முதல் சீடர்களாக இருந்தனர். தடுக்கமுடியாத துடிப்புடனும், அவருடன் பேசும் ஆவலுடனும், ஆனால் பயத்துடனும், மௌனமாகவும், இவர்தான் அந்த மேசியாவா? என்று தங்களை மேற்கொண்ட முக்கியமான எண்ணங்களுடனும் இயேசுவைப் பின்தொடர்ந்தனர். அந்த சீடர்கள் இயேசுவைப் பின்தொடர்வதை அவர் அறிந்திருந்தார். அவர்கள் அவரது ஊழியத்தின் முதற்பலனாக இருந்தனர். அவரது கிருபைக்கு அந்த ஆத்துமாக்கள் இணங்கினதால், அந்தத் தெய்வீக ஆசரியரின் இருதயத்தில் மகிழ்ச்சியுண்டானது. அப்படியிருந்தும் அவர் திரும்பி அவர்களைப்பார்த்து: "என்ன தேடுகிறீர்கள்" என்றார். அவர்கள் திரும்பிச்செல்லவோ அல்லது அவர்களுடைய வாஞ்சையைப்பற்றிப் பேசவோ அவர்களை அவர் சுதந்திரமாக விட்டுவிட்டார். (31)

ஒரே ஒரு காரியத்தைப்பற்றிமட்டும் அவர்கள் எண்ணமுடையவர்களாக இருந்தனர். ஒரு பிரசன்னம் அவர்களது சிந்தனையில் நிறைந்திருந்தது. அவர்கள்: "ரபீ, நீர் எங்கே தங்கியிருக்கிறீர்?" என்று வியப்புடன் கேட்டார்கள். எதைப் பெற்றுக்கொள்ள ஏங்கினார்களோ, அதை வழியருகில் நிகழ்ந்த ஒரு சுருக்கமான நேர்காணலில் அவர்களால் பெறமுடியவில்லை. அவர்கள் இயேசுவுடன் தனித்திருந்து, அவரது பாதத்தில் அமர்ந்து, அவரது வார்த்தைகளைக் கேட்க விருப்பமுள்ளவர்களாக இருந்தனர். (32)

"வந்து பாருங்கள்" என்று அவர் அவர்களிடம் கூறினார். "அவர்கள் வந்து, அவர் தங்கியிருந்த இடத்தைக்கண்டு, அன்றையதினம் அவரிடத்தில் தங்கினார்கள்." (33)

ஆசாரியர்களும் அதிபதிகளும் கொண்டிருந்த நம்பிக்கையின்மையின் ஆவியை யோவானும் அந்திரேயாவும் பெற்றிருந்தார்களானால், அவரது பாதங்களின் அருகில் அமர்ந்து கற்றிருந்திருக்கமாட்டார்கள். அவர்கள் அவரது வார்த்தைகளை மதிப்பீடுசெய்யும் விமர்சகர்களாக வந்திருப் பார்கள். இப்படி அநேகர் விலைமதிப்புமிக்க வாய்ப்புகளுக்குக் கதவை சாத்திக் கொள்ளுகின்றனர். ஆனால் இந்த முதல் சீடர்கள் அப்படிச் செய்யவில்லை. யோவான் ஸ்நானகனின் போதகத்தினால் பரிசுத்த ஆவியினவரின் அழைப்பிற்கு அவர்கள் இணங்கினார்கள். இப்பொழுது அவர்கள் பரலோக ஆசிரியரின் சத்தத்தை அடையாளம் கண்டுகொண்டனர். இயேசுவின் வார்த்தைகள் அவர்களுக்கு முற்றிலும் புதிதானவையாகவும் சத்தியமாகவும் அழகாகவும் இருந்தன. பழைய ஏற்பாட்டு வேத வாக்கியங்களின்மீது ஒரு தெய்வீக வெளிச்சம் பரவியது. சத்தியத்தின் கோட்பாட்டின் பல பக்கங்கள் புதிய ஒளியில் தெளிவாக நின்றன. (34)

நொறுங்கிய உள்ளம், விசுவாசம், அன்பு ஆகியவைதான் பரத்தி லிருந்துள்ள ஞானத்தைப் பெற்றுக்கொள்ள ஆத்துமாவைத் தகுதிப் படுத்துகிறது. அன்பினால் கிரியைசெய்யும் விசுவாசமே அறிவின் திறவு கோலாக உள்ளது. அன்புசெலுத்தும் ஒவ்வொருவனும் "தேவனை அறிந்திருக்கிறான்"–1 யோவான் 4:7. (35)

சீடனாகிய யோவான் ஆர்வமும் ஆழ்ந்த அன்பும் உறுதியுமிக்க மனிதனாக இருந்ததுடன், தியானிக்கக்கூடியவனாகவும் இருந்தான். கிறிஸ்துவின் மகிமையை அவன் தெளிவாகப் புரிந்துகொள்ளத் தொடங்கி யிருந்தான். நம்பிக்கைவைக்கும்படியாகக் கற்பிக்கப்பட்டிருந்த உலகப்பிரகார மான ஆடம்பரத்தையும் வல்லமையையும் நம்பாமல், "கிருபையினாலும் சத்தியத்தினாலும் நிறைந்தவராய்" "பிதாவுக்கு ஒரேபேறானவருடைய மகிமைக்கு ஏற்ற மகிமையாகவே இருந்த" (யோவான் 1:14) அவரை நம்பினான். ஆச்சரியமான இந்தக் கருப்பொருளைத் தியானிப்பதில் அவன் மூழ்கியிருந்தான். (36)

அந்திரேயா அவனது இருதயத்தில் நிறைந்திருந்த மகிழ்ச்சியைப் பகிர்ந்துகொடுக்க வகைதேடினான். அவனது சகோதரனான சீமோனைத் தேடிச்சென்று, "நாங்கள் மேசியாவைக் கண்டோம்" என்று கூறினான். இரண்டாவது அழைப்பிற்காக சீமோன் காத்திருக்கவில்லை. அவனும் யோவான் ஸ்நானகனின் பிரசங்கத்தைக் கேட்டிருந்து, இரட்சகரை நோக்கி விரைந்தான். அவனது பண்பையும் வாழ்க்கை வரலாற்றையும் வாசித்துக் கொண்டு, இயேசுவின் கண்கள் அவன்மீது தங்கியது. அவனது உணர்ச்சி வசப்படும் தன்மை, அன்புள்ள அனுதாபமுள்ள இருதயம், அவனது

பேராவல்கள், தன்னம்பிக்கை, அவனது விழுகையின் வரலாறு, அவனது மனந்திரும்புதல், அவனது ஊழியங்கள், இரத்தசாட்சியாகும் அவனது மரணம் ஆகிய அனைத்தையும் வாசித்தறிந்த இரட்சகர்: "நீ யோனாவின் மகனாகிய சீமோன், நீ கேபா என்னப்படுவாய் என்றார்; கேபா என்பதற்குப் பேதுரு என்று அர்த்தமாம்" என்றார். (37)

"மறுநாளிலே இயேசு கலிலேயாவிற்குப் போக மனதாயிருந்து, பிலிப்புவைக் கண்டு, நீ எனக்குப் பின்சென்று வா என்றார்." பிலிப்பு அந்தக் கட்டளைக்குக் கீழ்ப்படிந்தான். நேரடியாக அவனும் கிறிஸ்துவிற்கு ஒரு ஊழியக்காரனானான். (38)

பிலிப்பு நாத்தான்வேலை அழைத்தான். ஸ்நானகன் இயேசுவை தேவ ஆட்டுக்குட்டியென்று சுட்டிக்காட்டியபோது, அந்த மக்கள் கூட்டத்தின் மத்தியில் அவனும் இருந்தான். நாத்தான்வேல் இயேசுவைக் கண்டபோது, ஏமாற்றமடைந்தான். உழைப்பவன், வறுமையில் உழல்பவன் ஆகியோரின் அடையாளங்களையுடைய இந்த மனிதர் மேசியாவாக இருக்கமுடியுமா? அப்படியிருந்தும், இயேசுவைப் புறக்கணிக்க நாத்தான்வேலால் முடியவில்லை. ஏனெனில் யோவான் தனது தூதின்மூலமாக அவனுடைய இதயத்திற்கு உணர்த்துதலைக் கொண்டுவந்திருந்தான். (39)

பிலிப்பு அவனை அழைத்த நேரத்தில் யோவானின் அறிவிப்பைப்பற்றியும் மேசியாவைப்பற்றின தீர்க்கதரிசனங்களைப்பற்றியும் தியானஞ்செய்வதற்காக நாத்தான்வேல் ஒரு அமைதியான தோப்பிற்குள் சென்றிருந்தான். யோவானால் அறிவிக்கப்பட்டிருந்தவர்தான் விடுதலை வழங்குபவரா? என்பது அவனுக்கு அறிவிக்கப்படவேண்டும் என்று அவன் ஜெபித்தான். அதை அவனுக்கு அறியச்செய்ய தேவன் அவரது மக்களை சந்தித்து ஒரு இரட்சண்யக் கொம்பை உயர்த்தியிருக்கிறார் என்னும் வாக்குறுதியுடன் பரிசுத்த ஆவியானவர் அவன்மேல் தங்கினார். நாத்தான்வேல் ஒரு அத்திமரத்தின் கீழிருந்து ஜெபித்துக்கொண்டிருந்தபோது, பிலிப்பு, அவனது நண்பன் தீர்க்க தரிசனங்களை ஆராய்ந்துகொண்டிருக்கிறான் என்பதை அறிந்து, அவன் ஒதுங்கிச்சென்ற இடத்தைக் கண்டுபிடித்தான். இலை தழைகளினால் மறைவாகவிருந்த இடத்தில் தனித்திருந்து அவர்கள் அடிக்கடி ஒன்றுசேர்ந்து ஜெபித்திருந்தனர். (40)

"நியாயப்பிரமாணத்திலே மோசேயும் தீர்க்கதரிசிகளும் எழுதியிருக் கிறவரைக் கண்டோம்" என்ற தூது நாத்தான்வேலுக்கு அவனது ஜெபத்திற்கான நேரடியான பதில்போன்று காணப்பட்டது. ஆனால் பிலிப்பு இன்னமும் தடுமாறும் விசுவாசத்தை உடையவனாகவே இருந்திருந்தான். அவன் யோசேப்பின் குமாரனும் நாசரேத் ஊரானுமாகிய இயேசுவா என்ற

சந்தேகத்துடன் தொடர்ந்தான். மறுபடியும் நாத்தான்வேலின் இருதயத்தில் தவறான எண்ணம் வந்தது. "நாசரேத்திலிருந்து யாதொரு நன்மை உண்டாகக்கூடுமா" என்று அவன் வியந்தான். (41)

பிலிப்பு எந்த எதிர்வாதத்திற்குள்ளும் பிரவேசிக்கவில்லை. "வந்து பார்" என்றான். "இயேசு நாத்தான்வேலைத் தம்மிடத்தில் வரக்கண்டு அவனைக் குறித்து: இதோ, கபடற்ற உத்தம இஸ்ரவேலன்" என்றார். நாத்தான்வேல் ஆச்சரியத்தால் "நீர் என்னை எப்படி அறிவீர்" என்று வியந்தான். இயேசு அவனை நோக்கி: "பிலிப்பு உன்னை அழைக்கிறதற்குமுன்னே, நீ அத்தி மரத்தின் கீழிருக்கும்போது உன்னைக் கண்டேன்" என்று கூறினார். (42)

அது போதுமானதாக இருந்தது. அத்திமரத்தின் கீழிருந்து தனிஜெபம் செய்திருந்த நாத்தான்வேலின் ஜெபத்திற்கு சாட்சி கொடுத்திருந்த தேவஆவி, இப்பொழுது அவனிடத்தில் இயேசுவின் வார்த்தைகளிலே பேசினார். சந்தேகமுடையவனாக ஓரளவுக்குத் தவறான எண்ணத்திற்கு இணங்கியிருந்தபோதிலும், சத்தியத்தின்மீதுள்ள கவனமிக்க வாஞ்சையுடன் இயேசுவினிடத்திற்கு வந்திருந்த நாத்தான்வேலின் வாஞ்சை இப்பொழுது திருப்தியடைந்தது. எந்த ஒருவன் அவனை இயேசுவினிடத்திற்குக் கொண்டு வந்திருந்தானோ அவனைவிட இவனுடைய விசுவாசம் அதிகமாக இருந்தது. அவன் "ரபீ, நீர் தேவனுடைய குமாரன், நீர் இஸ்ரவேலின் ராஜா" என்று பதில் கூறினான். (43)

வழிகாட்டுதலுக்காக ரபிமார்களை நம்பியிருந்தால், நாத்தான்வேல் ஒருபோதும் இயேசுவைக் கண்டிருந்திருக்கமாட்டான். அவன் தனக்கென்று கண்டு, மதிப்பீடுசெய்து ஒரு சீடனானான். அப்படியே இன்று அநேகருடைய விஷயத்திலும் தவறான எண்ணம் நன்மையிலிருந்து நிறுத்திவைக்கின்றது. அவர்கள் வந்து பார்த்திருந்தார்களானால், அதன் பலன் எப்படிப்பட்டதாக இருந்திருக்கும்! (44)

அவர்கள் வழி நடத்துதலுக்கு மானிட அதிகாரத்தை நம்பும் போது, சத்தியத்தின் இரட்சிக்கும் அறிவினிடத்திற்கு வரமாட்டார்கள். நாத்தான்வேலைப்போல நாம் நமக்கென்று தேவனுடைய வார்த்தையைப் படிப்பதும், பரிசுத்த ஆவியினால் உண்டாகும் அறிவூட்டுதலுக்காக ஜெபிக்க வேண்டியதும் அவசியமாக இருக்கின்றது. எந்த ஒருவர் நாத்தான்வேலை அத்திமரத்தின் கீழ் கண்டாரோ, அவர், நாம் ஜெபம்பண்ணும் இரகசியமான இடத்தில் நம்மையும் காண்பார். தெய்வீக நடத்துதலுக்காகத் தாழ்மையுடன் தேடுகிறவர்களுக்கு அருகில், ஒளியின் உலகத்திலிருந்துள்ள தூதர்கள் இருக்கின்றனர். (45)

யோவான், அந்திரேயா, சீமோன், பிலிப்பு, நாத்தான்வேல் ஆகியோரின் அழைப்புடன் கிறிஸ்தவ சபையின் அஸ்திபாரம் ஆரம்பமாயிற்று. யோவான் அவனுடைய சீடர்களில் இருவரைக் கிறிஸ்துவினிடத்திற்கு அனுப்பினான். அவர்களில் ஒருவனான அந்திரேயா அவனுடைய சகோதரனை இரட்சக ரிடத்திற்கு அழைத்துவந்தான். அதற்குப்பின் பிலிப்பு அழைக்கப்பட்டான். அவன் நாத்தான்வேலைத் தேடிச்சென்றான். நமது இனத்தார்கள் நண்பர்கள் அயலகத்தார்களிடத்தில் நாம் நேரடியான முயற்சிகள் செய்யவேண்டும் என்பதன் முக்கியத்துவத்தை இந்த எடுத்துக்காட்டுகள் நமக்குப் போதனை செய்யவேண்டும். தங்களைக் கிறிஸ்துவுடன் அறிமுகமானவர்கள் என்று வாழ்க்கை முழுவதிலும் கூறிக்கொண்டிருந்து, ஆயினும் ஒரு ஆத்துமாவைக் கூட இரட்சகரிடம் கொண்டுவருவதற்கு நேரடியான முயற்சிகள் செய்யாத வர்கள் இருக்கின்றனர். அவர்கள் வேலைகளனைத்தையும் ஊழியக்காரர் களிடத்தில் விட்டுவிடுகின்றனர். அவர்கள் தேவனுடைய அழைப்புக்கு நன்கு தகுதியுடையவராக இருக்கலாம். ஆனால் சபை அங்கத்தினர்கள் செய்யவேண்டும் என்று தேவன் வைத்திருப்பவைகளை அவர்களால் (ஊழியக்காரர்களால்) செய்யமுடியாது. (46)

அன்புள்ள கிறிஸ்தவ இருதயங்களின் ஊழியம் அநேகருக்கு தேவையாக இருக்கின்றது. தங்களுடைய அயலகத்தார்களாக உள்ள ஆண்களுக்கும் பெண்களுக்குமாக சொந்த முயற்சிகளைச் செய்திருந்தால், இரட்சிக்கப்பட்டிருந்திருக்கக்கூடிய அநேகர், அந்த முயற்சி இல்லாததினால் அழிவை நோக்கி கீழாகச் சென்றிருக்கின்றனர். நேரடியாக யாராவது பேசுவார்கள் என்று அநேகர் காத்துக்கொண்டிருக்கின்றனர். நாம் வாழ்ந்து கொண்டிருக்கின்ற பேரூரில், நமது அயலகத்திலுள்ள அதே குடும்பத்தில், கிறிஸ்துவின் மிஷனரிகளாக நாம் பணியாற்றக்கூடிய வேலை நமக்கு இருக்கின்றது. நாம் கிறிஸ்தவர்களாக இருப்போமானால் இந்த ஊழியம் நமது மனமகிழ்ச்சியாக இருக்கும். ஒருவர் மாற்றம் அடைந்த உடனே, தான் இயேசுவில் எப்படிப்பட்ட ஒரு நண்பரைக் கண்டிருக்கிறார் என்பதை மற்றவர்களுக்கு அறியச்செய்கின்ற ஒரு வாஞ்சை அவருக்குள் பிறந்திருக் கின்றது. இரட்சிக்கின்றதும் பரிசுத்தப்படுத்துகிறதுமான சத்தியத்தை அவருடைய இருதயத்தில் அடைத்து வைக்கமுடியாது. (47)

தேவனுக்கென்று தங்களை அர்ப்பணஞ்செய்திருக்கிற அனைவரும், ஒளியின் வாய்க்கால்களாக இருப்பார்கள். தேவன் அவர்களை, அவருடைய கிருபையின் ஐசுவரியங்களை மற்றவர்களிடத்தில் தொடர்புகொள்ளச் செய்கின்ற அவருடைய முகவர்களாக இருக்கும்படிச் செய்கின்றார். “நான் அவர்களையும் என் மேட்டின் சுற்றுப்புறங்களையும் ஆசீர்வாதமாக்கி,

ஏற்றகாலத்திலே மழையைப் பெய்யப்பண்ணுவேன்; ஆசீர்வாதமான மழை பெய்யும்" (எசேக்கியேல் 34:26). (48)

பிலிப்பு நாத்தான்வேலைப் பார்த்து: "வந்து பார்" என்றான். பிறருடைய சாட்சியை அவன் ஏற்றுக்கொள்ளவேண்டுமென்று பிலிப்பு அவனைக் கேட்காமல், அவனுக்கென்று கிறிஸ்துவைப் பார்க்கும்படிக் கேட்டான். இப்பொழுது இயேசு பரலோகத்திற்கு எழுந்தருளிச் சென்றுவிட்டதினால் மனிதர்களுக்கிடையில் அவரது சீடர்கள் அவரது பிரதிநிதிகளாக இருக்கின்றனர். அவருக்காக ஆத்தும ஆதாயஞ்செய்யும் மிகச்சிறந்த பயனுள்ள வழிகளில் ஒன்று: அன்றாட வாழ்க்கையில் அவரது குணத்தை உதாரணமாகக் காட்டுவதுதான். பிறர்மீதுள்ள நமது செல்வாக்கு, நாம் என்ன சொல்லுகிறோம் என்பதில் இல்லாமல், நாம் எப்படிப்பட்டவர்களாக இருக்கிறோம் என்பதில் உள்ளது. மனிதர்கள் எதிர்த்துப் போரிட்டு, நமது தற்கவியலுக்கு அறைகூவல் விடுக்கலாம். நமது வேண்டுகோள்களை அவர்கள் எதிர்க்கலாம். ஆனால் எதிர்பார்ப்புகளில்லாத அன்பையுடைய ஒரு வாழ்க்கை அவர்களால் மறுத்துரைக்கமுடியாத ஒரு வாதமாக உள்ளது. கிறிஸ்துவின் எளிமையைப் பண்பாகக் காட்டும் ஒரு இசைவான வாழ்க்கை, இந்த உலகில் ஒரு வல்லமையாக உள்ளது. (49)

மனதிற்குள் உண்டுபண்ணப்பட்ட உணர்த்துதலின் வெளிகாட்டலாகவும் அனுபவமாகவும் கிறிஸ்துவின் போதனை இருந்தது. அவரிடத்தில் கற்றுக் கொண்டவர்கள், தெய்வீக நெறியைப் பின்பற்றி ஆசிரியர்கள் ஆகின்றனர். தேவனுடைய வார்த்தையினால் பரிசுத்தமாக்கப்பட்ட ஒருவனால் பேசப்படும் வார்த்தைகள் அதைக் கேட்பவர்களுக்குக் கவர்ச்சியை உண்டுபண்ணும் ஜீவனைத் தரும் வல்லமையாக இருந்து, அது உயிருள்ள உண்மை என்னும் உணர்த்துதலை அவர்களில் உண்டுபண்ணுகிறது. ஒருவன் சத்தியத்தை நேசித்து, அதைப் பெற்றுக்கொள்ளும்போது, அவன் அவனது குரலின் தொனி, மற்றவர்களை இணங்கவைக்கும் தன்மை ஆகியவைகளை அதனால் வெளிக்காட்டுவான். அவன் தானாகக் கண்டதையும், கேட்டதையும், ஜீவ வார்த்தைகளைக் கையாண்டதையும் கிறிஸ்துவைப்பற்றின அறிவின்மூலமாக மற்றவர்கள் அவனுடன் ஐக்கியப் படுவதையும் அறியச்செய்கிறான். பலிபீடத்திலிருந்து எடுக்கப்பட்ட எரியும் நெருப்பினால் தொடப்பட்ட உதட்டிலிருந்து புறப்படும் அவனது சாட்சி, அதை ஏற்றுக்கொள்ளும் இதயத்திற்கு சத்தியமாக இருந்து, பண்பின்மீது பரிசுத்தமடைதலை நடப்பிக்கிறது. (50)

பிறருக்கு ஒளியைக் கொடுக்க வகைதேடுபவன் தானும் ஆசீர்வதிக்கப் படுவான். "அருள் ஏராளமாய் பெய்யும்;" "எவன் தண்ணீர் பாய்ச்சுகிறானோ

அவனுக்குத் தண்ணீர் பாய்ச்சப்படும்" (நீதிமொழிகள் 11:25). பாவிகளை இரட்சிக்கும் தேவனுடைய நோக்கத்தை நமது உதவியில்லாமலேயே அவரால் அடையமுடியும். ஆனால் நாம் கிறிஸ்துவின் பண்பைப்போன்ற பண்பினை நம்மில் வளர்த்துக்கொள்வதற்காக, அவரது ஊழியத்தில் பங்குபெறவேண்டும். அவரது சந்தோஷத்தில் பிரவேசிப்பதற்காக அவரது தியாகபலியினால் மீட்கப்பட்ட ஆத்துமாக்களைக் காணும் சந்தோஷத்தில் பிரவேசிப்பதற்காக, அவர்களது மீட்பிற்காக உள்ள உழைப்பில் நாம் பங்குபெறவேண்டும். (51)

நாத்தான்வேலின் விசுவாசத்தைப்பற்றின மிகுந்த ஆர்வமும் உண்மையுமிக்க முதல் உணர்த்துதலின் வெளிக்காட்டல், இயேசுவின் செவிகளில் இன்னிசைபோல விழுந்தது. "அத்திமரத்தின் கீழே உன்னைக் கண்டேன் என்று நான் உனக்குச் சொன்னதினாலேயா விசுவாசிக்கிறாய்; இதிலும் பெரிதானவைகளைக் காண்பாய்" என்றார். எளியவர்களுக்கு நற்செய்தியைப் பிரசங்கிப்பதிலும், உடைந்த இருதயங்களைக் கட்டுவதிலும், சாத்தானின் அடிமைகளாக இருந்தவர்களுக்கு விடுதலையை அறிவிப்பதிலும் அவர் செய்திருந்த ஊழியத்தை இரட்சகர் மகிழ்ச்சியுடன் முன்னதாகப் பார்த்தார். மனிதர்களுக்கு அவர் கொண்டுவந்த விலைமதிக்கமுடியாத ஆசீர்வாதத்தைப்பற்றின நினைப்பால்: "வானம் திறந்திருக்கிறதையும், தேவதூதர்கள் மனுஷகுமாரனிடத்திலிருந்து ஏறுகிறதையும் இறங்குகிறதையும் நீங்கள் இதுமுதல் காண்பீர்கள் என்று மெய்யாகவே மெய்யாகவே உங்களுக்குச் சொல்லுகிறேன்" என்றும் கூறினார். (52)

யோர்தானின் கரையில் வானங்கள் திறக்கப்பட்டு, ஆவியானவர் புறாவைப்போல தன்மீது இறங்கினார் என்பதை இங்கு உண்மையாகவே கிறிஸ்து கூறுகிறார். நான் தேவனுடைய குமாரனாக இருக்கிறேன் என்பதற்கான ஒரு அடையாளமாக அந்தக் காட்சி இருந்தது. நீங்கள் என்னை விசுவாசித்தால் இவ்வாறு உங்களுடைய விசுவாசம் எழுப்பப்படும். வானங்கள் திறக்கப்பட்டிருக்கிறதையும், அவை ஒருபோதும் மூடப்படக்கூடாமலிருக்கிறதையும் நீங்கள் காண்பீர்கள். நான் அவைகளை உங்களுக்குத் திறந்துவைத்திருக்கிறேன். தேவையிலுள்ள, துன்பம் அனுபவிக்கின்றவர்களது ஜெபங்களை தூதர்கள் விண்ணிலுள்ள பிதாவினிடத்திற்குச் சுமந்துசென்று, ஆசீர்வாதம், நம்பிக்கை, தைரியம், உதவி, ஜீவன் ஆகியவைகளை தமதுப் பிள்ளைகளுக்குக் கீழே கொண்டுவருகின்றனர். (53)

தேவதூதர்கள் எப்பொழுதும் பரலோகத்திலிருந்து பூமிக்கும் பூமியிலிருந்து பரலோகத்திற்கும் வந்துபோய்க்கொண்டிருக்கின்றனர். பெரும் துன்பத்தில் பாடுபடுகின்றவர்களுக்காகக் கிறிஸ்துவால் செய்யப்பட்ட

அற்புதங்கள் தேவனுடைய வல்லமையால் தூதர்களின் ஊழியத்தின் மூலமாகச் செய்யப்பட்டன. கிறிஸ்துவின்மூலமாகப் பரலோக ஊழியக்காரர் களால் இந்த ஆசீர்வாதங்கள் தேவனிடத்திலிருந்து நமக்கு வருகின்றன. மானுடத்தை தம்மீது எடுத்துக்கொண்டதின்மூலமாக, நமது இரட்சகர் அவரது விருப்பங்களை விழுந்துபோன ஆதாமின் குமாரர்களுடனும் குமாரத்திகளுடனும் இணைத்து, அதே சமயத்தில் அவரது தெய்வீகத்தின்மூலமாக தேவனுடைய சிங்காசனத்தைப் பற்றிக்கொள்ளுகிறார். இந்தவிதமாகக் கிறிஸ்து மனித னுக்கும் தேவனுக்கும், தேவனுக்கும் மனிதனுக்கும் இடையிலுள்ள தொடர்பின் ஊடகமாக இருக்கிறார். (54) ★

# 15

# திருமண விருந்தில்...!

**யோவான் 2:1–11**

**(The Desire of Ages, pp. 144–153)**

எருசலேமிலிருந்த சனகரீம் சங்கத்திற்குமுன் சில பெரிய வேலையைச் செய்துகாட்டி, இயேசு அவரது ஊழியத்தை ஆரம்பிக்கவில்லை. சிறிய கலிலேயக் கிராமத்திலிருந்த, ஒரு சிறு வீட்டில் கூடியிருந்த திருமணக்கூட்டத்தில், திருமண விருந்தின் மகிழ்ச்சியை அதிகரிக்கச்செய்யும்வண்ணம் அவரது வல்லமை வெளிப்படுத்தப்பட்டது. இவ்வண்ணமாக மனிதர்களின்பாலுள்ள அவரது அனுதாபத்தையும், அவர்களது மகிழ்ச்சிக்காக ஊழியஞ்செய்யும் அவரது விருப்பத்தையும் அவர் காட்டினார். வனாந்தர சோதனையில் அவர் தாமாகவே துன்பத்தின் பாத்திரத்தில் பானஞ்செய்திருந்தார். ஆசீர்வாதத்தின் பாத்திரத்தை மனிதர்களுக்குக் கொடுக்கவும், அவரது ஆசீர்வாதத்தினால் மனித உறவைப் பரிசுத்தப்படுத்தவும் அவர் முன்வந்தார். (1)

யோர்தானிலிருந்து இயேசு கலிலேயாவிற்குத் திரும்பினார். நாசரேத்துக்கு அருகிலிருந்த கானா என்னும் ஒரு சிற்றூரில் ஒரு திருமணம் நடைபெறவேண்டியதாக இருந்தது. அதில் சம்பந்தப்பட்டவர்கள் யோசேப்புக்கும் மரியாளுக்கும் உறவினர்களாக இருந்தனர். இந்தக் குடும்ப ஒன்றுகூடுதலை அறிந்த இயேசு, அழைக்கப்பட்டிருந்த அவரது சீடர்களுடன் சேர்ந்து கானாவிற்குச் சென்றார். (2)

சிலகாலம் பிரிந்திருந்த அவருடைய அன்னையை அவர் மறுபடியும் சந்தித்தார். யோர்தானில் அவரது ஞானஸ்நானத்தின்போது வெளிக்காட்டப்பட்டவைகளைப்பற்றி மரியாள் கேள்விப்பட்டிருந்தாள். இந்தச் செய்தி நாசரேத்துக்குக் கொண்டுசெல்லப்பட, அவளது இருதயத்தில் அநேக வருடங்களாக மறைத்துவைக்கப்பட்டிருந்த காட்சிகள் புதிதாக மனதிற்குக் கொண்டுவரப்பட்டன. மற்ற இஸ்ரவேலர்களோடு சேர்ந்து யோவான் ஸ்நானகனின் ஊழியத்தினால் மரியாள் மிகவும் ஆழமாகக் கலக்கமடைந்திருந்தாள். அவனது பிறப்பின்போது கொடுக்கப்பட்ட தீர்க்கதரிசனத்தை அவள் நன்றாக நினைவில் வைத்திருந்தாள். இப்பொழுது

இயேசுவுடனுள்ள அவளது தொடர்பு அவளது நம்பிக்கையைப் புதுப்பித்தது. ஆனால் இயேசு வனாந்தரத்திற்குக் கடந்துசென்ற இரகசியத்தின் செய்தி அவளுக்கு எட்டவே, நிகழவிருக்கும் அவலங்களைப்பற்றின எண்ணங் களினால் அவள் தாங்கவொண்ணாத துன்பமடைந்திருந்தாள். (3)

நாசரேத்திலுள்ள வீட்டில் தூதன் அறிவித்ததைக் கேட்ட நாள் முதல் இயேசுதான் மேசியா என்பதற்கான ஒவ்வொரு சான்றையும் மரியாள் தன் உள்ளத்தில் சேகரித்து வைத்திருந்தாள். தேவனால் அனுப்பப்பட்டவராக அன்றி, அவர் வேறு யாராகவும் இருக்கவில்லை என்பதை சுயநலமற்ற அவரது இனிமையான வாழ்க்கை அவளுக்கு உறுதிசெய்தது. அப்படியிருந்தும், சந்தேகங்களும் ஏமாற்றங்களும் வரவே, அவரது மகிமை வெளிப்படவேண்டும் என்று அவள் வாஞ்சித்திருந்தாள். இயேசுவின் பிறப்பின் இரகசியத்தைப்பற்றி அறிவுடையவனாயிருந்த யோசேப்பை மரணம் அவளைவிட்டுப் பிரித்திருந்தது. இப்பொழுது அவளது நம்பிக்கைகளையும் பயங்களையும்பற்றி அவள் நம்பிக்கையுடன் கூறக்கூடிய ஒருவரும் இல்லை. கடந்துபோன இரண்டு மாதங்களிலும் மிகுந்த மனத்துயருள்ளவளாக இருந்தாள். எந்த ஒருவரின் அனுதாபத்தில் அவள் ஆறுதல்கண்டிருந்தாளோ, அந்த இயேசுவிடமிருந்து அவள் பிரிந்திருந்தாள். “உன் ஆத்துமாவையும் ஒரு பட்டயம் உருவிப்போகும்” (லூக்கா 2:35) என்ற சிமியோனின் வர்த்தைகளை அவள் சிந்தித்தாள். இயேசு என்றென்றைக்குமாக இழக்கப்பட்டுப்போனார் என்னும் எண்ணத்தினால் உண்டான மூன்று நாள் மனவேதனையை அவள் மறுபடியும் ஞாபகப்படுத்திக்கொண்டு, கவலைமிக்க இருதயத்துடன் அவர் திரும்பிவருவதைக் காண்பதற்காகக் காத்திருந்தாள். (4)

அந்தத் திருமண விருந்தில் அதே மென்மையும் கடமையுமிக்க அவரை அவள் சந்திக்கிறாள். ஆனால் அவர் முன் இருந்த நிலைமையில் இல்லை. அவரது முகக்களை மாறுபட்டிருக்கிறது. வனாந்தரத்தில் அவர் நிகழ்த்திய போராட்டத்தின் சாயல்களை அது தாங்கிக்கொண்டிருக்கிறது. மேன்மையான வல்லமையின் ஒரு புதிய வெளிப்பாடு அவரது பரலோக உழியத்திற்கான சான்றினைக் கொடுக்கிறது. பயபக்தியுடன் அவரைப் பின்பற்றும் கண்களை உடையவர்களாக, அவரை “ஆண்டவரே,” என்று அழைக்கும் ஒரு சிறு கூட்டமான இளைஞர்கள் அவருடன் உள்ளனர். இந்தக் கூட்டாளிகள் மரியாளிடம், அவரது ஞானஸ்நானத்தின்போதும், வேறு எங்கேயும் கண்டவைகளையும் கேட்டவைகளையும் திரும்பவும் கூறுகின்றனர். “நியாயப்பிரமாணத்திலே மோசேயும் தீர்க்கதரிசிகளும் எழுதியிருக்கிறவரைக் கண்டோம்” (யோவான் 1:45) என்று அறிவித்து முடித்தனர். (5)

விருந்தினர்கள் ஒன்றுகூடவே, ஆர்வத்தை ஈர்க்கக்கூடிய சில விஷயங்களில் ஈடுபட்டவர்களைப்போல அநேகர் காணப்படுகின்றனர். அமர்த்தப்பட்ட உணர்ச்சிகளின் எழுப்புதல் அந்தக் கூட்டத்தில் காணப்படுகிறது. சிறு குழுக்கள் ஒன்று சேர்ந்து, ஆவலும் அடக்கமுமிக்க குரலில் உரையாடுகின்றனர். வியப்புமிக்க பார்வைகள் மரியாளின் மகனின்மீது திரும்புகின்றன. இயேசுவைப்பற்றிய சீடர்களின் சாட்சியை மரியாள் கேட்டபோது, நெடுநாட்களாக அவள் போற்றியிருந்த நம்பிக்கை வீணானவை அல்ல என்னும் நிச்சயத்தில் அவள் மகிழ்ச்சியடையப்பெற்றாள். அப்படியிருந்தும், இந்தப் பரிசுத்தமான மகிழ்ச்சியுடன் பிரியமிக்க ஒரு அன்னையிடம் காணப்படக்கூடிய இயற்கையான பெருமையின் சாயல் கலவாமல் இருந்திருந்தால், அவள் மானிடத்தன்மையையும்விட மேலான வளாக இருந்திருக்கக்கூடும். அநேகருடைய பார்வை இயேசுவின்மீது பதிந்திருப்பதை அவள் கண்டபோது, உண்மையாகவே அவர் தேவனால் மேன்மைப்படுத்தப்பட்டவர் என்பதை அந்தக் கூட்டத்தினருக்கு மெய்ப்பிக்க வேண்டுமென்று ஏங்கினாள். அவர்களுக்குமுன்பாக ஒரு அற்புதத்தை நிகழ்த்தக்கூடிய வாய்ப்பு அவருக்கு உண்டாகக்கூடும் என்று அவள் நம்பினாள். (6)

திருமணக்கொண்டாட்டங்கள் பல நாட்கள் தொடர்வது அந்தக் காலத்திய வழக்கமாக இருந்தது. இந்தச் சந்தர்ப்பத்தில் விருந்து முடியுமுன் திராட்சரசப் பரிமாறல் நின்றது காணப்பட்டது. இந்தக் கண்டுபிடிப்பு அதிகமான குழப்பத்திற்கும் வருத்தத்திற்கும் காரணமாயிற்று. விருந்து சமயங்களில் திராட்சரசம் இல்லாமல்போவது வழக்கமில்லாததாக இருந்தது. அதன் இல்லாமை விருந்தோம்பல் இன்மையைச் சுட்டிக்காட்டுவதாக காணப்பட்டது. இந்தக் கூட்டத்தினரின் உறவினள் என்ற வகையில், மரியாள் அந்த விருந்து ஏற்பாடுகளில் துணைசெய்திருந்து, "அவர்களுக்குத் திராட்சரசம் இல்லை" என்று இப்பொழுது இயேசுவிடம் கூறினாள். அவர் அந்தத் தேவையை பூர்த்திசெய்வார் என்று இந்த வார்த்தைகள் சொல்லப்பட்டன. இயேசுவோ: "ஸ்திரீயே, எனக்கும் உனக்கும் என்ன, என் வேளை இன்னும் வரவில்லை" என்றார். (7)

இந்தப் பதில் மரியாதையின்றிக் கூறப்படுவதுபோன்று தோன்றினாலும், இதில் விறைப்பும் மரியாதைக்குறைவுமிக்க எதுவும் இல்லை. இரட்சகர் அவரது அன்னையை அழைத்தவிதம் கீழ்த்திசை நாடுகளின் வழக்கத்தின்படியானதாக இருந்தது. எவர்களிடம் மரியாதை காட்டவேண்டுமென்றிருந்ததோ அப்படிப்பட்டவர்களிடம் அது பயன்படுத்தப்பட்டிருந்தது. பூமியின்மீதிருந்த கிறிஸ்துவின் செயல் ஒவ்வொன்றும் அவர் தாமாகவே கொடுத்திருந்த "உன்

தகப்பனையும் உன் தாயையும் கனம்பண்ணுவாயாக” (யாத்திராகமம் 20:12) என்ற கற்பனைக்கு இசைவாகவே இருந்திருந்தது. அவர் சிலுவையின் மீதிருந்தபோது, ஆற்றிய அவரது இறுதி அன்பின் செயலில் இயேசு மரியாளை மிகவும் நேசித்திருந்த அன்பான சீடனிடம் ஒப்படைத்தபோது, மறுபடியும் அதேவிதமாக அவளை அழைத்தார். திருமண விருந்திலும் சிலுவையில் தொங்கியபொழுதிலும் அவர் உணர்த்திய தொனி, பார்வை, அவைகளின் தன்மை ஆகியவை அவரது அன்பான வார்த்தைகளை விளக்கின. (8)

அவர் சிறுவனாயிருந்தபோது, ஆலயத்திற்குச் சென்றிருந்த சமயத்தில் அவரது ஊழியத்தின் இரகசியம் அவர்முன் திறக்கப்பட்டபோது: “என் பிதாவுக்கடுத்தவைகளில் நான் இருக்கவேண்டியதென்று அறியீர்களா” (லூக்கா 2:49) என்று கிறிஸ்து மரியாளிடம் கூறியிருந்தார். அது அவரது வாழ்க்கையையும் ஊழியத்தையும் குறிக்கும் முக்கியமான குறிப்பாக இருந்தது. இந்த உலகத்தில் அவர் நிறைவேற்றும்படியாக வந்த பெரும் மீட்பின் பணியில் ஒவ்வொன்றும் அவரது பணிக்குக் கட்டுப்பட்டவையாக வைக்கப்பட்டிருந்தது. இப்பொழுது அந்தப் பாடத்தை அவர் மீண்டும் கூறினார். இயேசுவின் ஊழியத்தை இயக்குவதில் மரியாளுக்குச் சிறப்பான உரிமையையும் ஒரளவிற்கு அருகதையையும் கொடுக்கும்வண்ணம் அவளது உறவைக் கருதுவதில் ஆபத்து இருந்திருந்தது. அவளை நேசித்து, அவளுக்குக் கீழ்ப்படியும் மகனாக இருந்த அவரது அன்பு, முப்பது வருடங்களாக மாற்றமில்லாமல் இருந்தது. ஆனால் இப்பொழுது அவர் அவரது பிதாவின் பணிக்குச் செல்லவேண்டும். உன்னதமானவருடைய குமாரன்—உலக இரட்சகர் என்னும் நிலையில், அவரது ஊழியத்திலிருந்து உலகக்கட்டுகள் எதுவும் அவரைப் பிரித்து வைக்கக்கூடாது, அல்லது அவரது நடத்தையின்மீது எதுவும் ஆதிக்கஞ்செலுத்தக்கூடாது. பிதாவின் சித்தத்தை நிறைவேற்ற அவர் சுதந்திரமுள்ளவராக நிற்கவேண்டும். இந்தப் பாடம் நமக்குள்ளதாகவும் உள்ளது. மனித உறவுகளின் கட்டுகளைவிட தேவனுடைய உரிமைகள் மிக முக்கியமானவையாக உள்ளன. நாம் நடந்துசெல்லவேண்டிய பாதையில் அவர் நம்மை அழைக்கும்போது அதிலிருந்து எந்தவிதமான உலகக் கவர்ச்சியும் நமது பாதங்களைத் திருப்பக்கூடாது. (9)

விழுந்துபோன நமது இனத்தின் ஒரே நம்பிக்கையாக கிறிஸ்து இருக்கிறார். தேவ ஆட்டுக்குட்டியின்மூலமாகத்தான் மரியாளால் இரட்சிப்பைக் காணமுடியும். அவளுக்குள்ளாக அவள் எந்தப் புண்ணியத்தையும் கொண்டிருக்கவில்லை. இயேசுவுடனுள்ள அவளது தொடர்பில் மற்றெந்த மனித ஆத்துமாவையும்விட அவள் அவருடன் எந்தவிதமான மாறுபட்ட

ஆவிக்குரிய உறவையும் பெற்றிருக்கவில்லை. அவளுடைய மகனாக மனித குமாரன் என்னும் உறவிற்கும், தேவனுடைய மகனாக தேவகுமாரன் என்ற நிலைக்கும் இடையிலுள்ள வேற்றுமையை அவர் தெளிவுபடுத்துகிறார். அவர்களுக்கிடையிலிருந்த உறவினர்கள் என்னும் பிணைப்பு, அவளை எந்தவகையிலும் அவருக்குச் சமமாக வைக்கவில்லை. (10)

"என்னுடைய வேளை இன்னும் வரவில்லை" என்ற அவரது வார்த்தைகள், கிறிஸ்து பூமியின்மீதிருந்தபோது செய்த ஒவ்வொரு செயலும் நித்திய காலமாக உண்டாயிருந்த திட்டத்தின் நிறைவேறுதலாக இருக்கிறது என்னும் உண்மையைச் சுட்டிக்காட்டுகிறது. அவர் இந்த பூமிக்கு வருமுன், அந்தத் திட்டம் அதன் எல்லாப் பகுதிகளின் விபரத்துடனும் அவர்முன் வைக்கப்பட்டிருந்தது. ஆனால் அவர் மனிதர்களுக்கிடையில் நடந்தபோது பிதாவின் சித்தத்தினால் படிப்படியாக வழிகாட்டப்பட்டிருந்தார். குறிப்பிட்டவேளையில் செயலாற்ற அவர் தயங்கவில்லை. காலம் நிறைவேறும்வரை அதே கீழ்ப்படிதலுடன் அவர் காத்திருந்தார். (11)

அவருடைய வேளை இன்னும் வரவில்லை என்று இயேசு மரியாளிடம் கூறியதில், அவளது மக்களுடன் சேர்ந்து அவள் பொதுவாகக் கொண்டிருந்த எண்ணங்களுக்கு (ஆனால் வெளியே சொல்லாத) பதிலாக இருந்தது. அவர் தம்மை மேசியாவாகக் காண்பித்து, இஸ்ரவேலின் சிங்காசனத்தை எடுத்துக்கொள்ளுவார் என அவள் நம்பினாள். ஆனால் அந்த வேளை வரவில்லை. அரசராக இல்லாமல், துக்கம் நிறைந்தவராக, துயரங்களுடன் அறிமுகமானவராக, மானிடத்தின் பங்கை இயேசு ஏற்றுக்கொண்டார். (12)

கிறிஸ்துவின் ஊழியத்தைப்பற்றிய சரியான அறிவு மரியாளுக்கு இல்லாமலிருந்தபோதும் அவரை அவள் தெளிவாக நம்பினாள். இந்த விசுவாசத்திற்கு இயேசு பதிலளித்தார். மரியாளின் நம்பிக்கையை கனப்படுத்தவும், அவரது சீடர்களின் விசுவாசத்தை பலப்படுத்தவும் முதலாம் அற்புதம் செய்யப்பட்டது. சீடர்கள் நம்பிக்கையை இழக்கும்படி ஏராளமான பெரும் சோதனைகளைச் சந்திக்கவேண்டியவர்களாக இருந்தனர். சகலவிதமான எதிர்வாதங்களுக்கும் அப்பால், இயேசுதான் மேசியா என்பதைத் தீர்க்கதரிசனங்கள் அவர்களுக்குத் தெளிவுபடுத்தியிருந்தன. அவர்கள் தங்களுடைய சொந்த நம்பிக்கையைவிட அதிகமான நம்பிக்கையுடன் மதத்தலைவர்கள் அவரை ஏற்றுக்கொள்வதை எதிர்பார்த்தனர். கிறிஸ்துவின் ஆச்சரியமான பணிகளை அவர்கள் மக்களுக்கிடையில் அறிவித்து அவரது ஊழியத்தின்மீதான சொந்த நம்பிக்கையையும் அறிவித்திருந்தனர். ஆனால் ஆசாரியர்களாலும் ரபிமார்களாலும் வெளிக்காட்டப்பட்டிருந்த அவநம்பிக்கை, ஆழமாக இருந்த தவறான எண்ணம், இயேசுவின்மீதிருந்த

பகைமை ஆகியவை அவர்களை ஆச்சரியப்படவும் மிகுந்த கசப்பான மனமடிவிற்குள்ளாக்கவுஞ்செய்தது. இரட்சகரின் ஆரம்பகால அற்புதங்கள், இந்த எதிர்ப்பிற்கு எதிராக நிற்பதற்கான பலத்தை சீடர்களுக்குக் கொடுத்திருந்தது. (13)

இயேசுவின் வார்த்தைகளினால் எந்தவிதத்திலும் சோர்ந்துபோகாத மரியாள், மேஜையில் பரிமாறிக்கொண்டிருந்தவர்களை நோக்கி, அவர் உங்களுக்கு என்ன சொல்லுகிறாரோ அப்படியே செய்யுங்கள் என்றாள். இப்படியாக, கிறிஸ்துவின் பணிக்கான பாதையை ஆயத்தப்படுத்துவதற்கு அவளால் என்ன செய்யமுடிந்திருந்ததோ அதை அவள் செய்தாள். (14)

வாசலருகில் ஆறு பெரிய கற்சாடிகள் வைக்கப்பட்டிருந்தன. அவைகளில் தண்ணீரை நிரப்பும்படி இயேசு வேலைக்காரர்களிடம் கூறினார். அவ்வாறே செய்யப்பட்டது. உடனடி உபயோகத்திற்காகத் திராட்சரசம் தேவைப்பட்டபோது, “நீங்கள் இப்பொழுது மொண்டு, பந்திவிசாரிப்புக்காரனிடத்தில் கொண்டு போங்கள்” என்றார். அந்தப் பாத்திரங்களில் நிரப்பப்பட்ட தண்ணீருக்குப்பதிலாக திராட்சரசம் நிறைந்திருந்தது. விருந்தை நடத்தினவனும், விருந்தாளிகளும், பொதுவாகத் திராட்சரசம் இல்லாமலாகிவிட்டது என்பதை அறியாமல் இருந்திருந்தனர். வேலைக்காரர்கள் கொண்டுவந்ததை ருசித்தபோது, விருந்து கொடுத்தவன், இதுவரை குடித்திருந்த திராட்சரசம் அனைத்தையும்விட இது மேலான ருசியுள்ளதாகவும் விருந்தின் ஆரம்பத்தில் பரிமாறப்பட்டதிலிருந்து மிகவும் மாறுபட்டதாகவும் அது இருந்ததைக் கண்டான். “எந்த மனுஷனும் முன்பு நல்ல திராட்சரசத்தைக் கொடுத்து, ஜனங்கள் திருப்தியடைந்தபின்பு, ருசிகுறைந்ததைக் கொடுப்பான், நீரோ நல்ல ரசத்தை இதுவரைக்கும் வைத்திருந்தீரே” என்றான். (15)

மனிதர்கள் முதலில் நல்ல திராட்சரசத்தைக் கொடுத்து பின்பு மோசமானதைக் கொடுப்பதுபோல, உலகமும் அதன் பரிசுகளைக் கொடுப்பதில் இருக்கிறது. அது தருபவைகள் கண்களை மகிழ்ச்சிப்படுத்தி, புலன்களைக் கவர்ந்துகொள்ளக்கூடும். ஆனால் அது திருப்தியைத் தராது என்பதை மெய்ப்பிக்கிறது. திராட்சரசம் கசப்பாகவும் மகிழ்ச்சி கவலையாகவும் மாறுகிறது. பாடல்களுடனும் உல்லாசங்களுடனும் ஆரம்பமானவைகள், களைப்பிலும் சலிப்பிலும் முடிவடைகின்றன. ஆனால் இயேசுவின் ஈவுகள் எப்போதும் புதிதானவையாக உள்ளன. அவர் ஆத்துமாவிற்குக் கொடுக்கும் விருந்து, திருப்தியையும் மகிழ்ச்சியையும் தர ஒருபோதும் தவறுவதில்லை. ஈவைப்பெற்றுக்கொள்ளுபவரின் தகுதியை ஒவ்வொரு ஈவும் அதிகப்படுத்துவதுடன் கர்த்தரின் ஆசீர்வாதத்தில் மகிழ்ச்சி

கொள்ளவுஞ்செய்கிறது. கிருபைக்கு அவர் கிருபையை வழங்குகிறார். அந்த வழங்குதலில் தடங்கல் இருக்கமுடியாது. நீங்கள் அவரில் நிலைத்திருந்தால் இன்று ஒரு ஐசுவரியமிக்க ஈவைப் பெற்றுக்கொள்ளுகிறீர்கள் என்ற அனுபவமானது, மறுநாள் அதைவிட அதிக ஐசுவரியமுள்ள ஈவைத் தரும் என்பதை நிச்சயப்படுத்துகிறது. இயேசுவால் நாத்தான்வேலுக்குச் சொல்லப்பட்ட வார்த்தைகள் விசுவாசப் பிள்ளைகளுடன் ஈடுபடும் தேவனின் பிரமாணத்தை உணர்த்துகிறது. அவரது அன்பைப்பற்றிய ஒவ்வொரு புதிய வெளிப்படுத்தலுடன்கூட அதைப் பெற்றுக்கொள்ளும் இருதயத்தினிடம் “இதிலும் பெரிதானவைகளைக் காண்பாய்” (யோவான் 1:50) என்று நீ விசுவாசிக்கிறாயா என்று கூறுகிறார். (16)

திருமண விருந்தில் கொடுக்கப்பட்ட கிறிஸ்துவின் ஈவு ஒரு அடையாளமாக உள்ளது. அந்தத் தண்ணீர் அவரது மரணத்தையும், அந்தத் திராட்சரசம் உலகத்தின் பாவங்களுக்காக அவர் இரத்தம் சிந்துவதையும் சுட்டிக்காட்டுகிறது. அந்த ஜாடியில் நிரப்பப்படும் தண்ணீர், மனிதக் கரங்களால் கொண்டுவரப்பட்டிருந்தது. ஆனால் கிறிஸ்துவின் வார்த்தை ஒன்றுமட்டுமே அதில் ஜீவனைக் கொண்டுவரும் புண்ணியத்தை உடையதாக இருந்தது. அதைப்போலவே, சடங்காச்சாரங்களும் இரட்சகரின் மரணத்தைச் சுட்டிக்காட்டுபவையாக உள்ளன. விசுவாசத்தினால் செயல்படுத்தப்படும் கிறிஸ்துவின் வல்லமைமட்டுமே, ஆத்துமாவைப் போஷிக்கும் திறனுடையதாக உள்ளது. (17)

கிறிஸ்துவின் வார்த்தை அந்த விருந்துக்குப் போதுமான ஏற்பாட்டைச் செய்திருந்தது. அதைப்போலவே மனிதர்களின் அக்கிரமங்களைத் துடைத்து நீக்கவும், அவர்களது ஆத்துமாவைப் புதுப்பித்துத் தாங்கவும், அவரது கிருபை அந்த அளவிற்கு எராளமாக உள்ளது. (18)

அவர் தமது சீடர்களுடன் கலந்துகொண்ட முதல் விருந்தில், அவரது இரட்சிப்பின் ஊழியத்தின் அடையாளமான பாத்திரத்தை அவர்களுக்குக் கொடுத்தார். அந்தக் கடைசி இரவு போஜனத்தில், “கர்த்தர் வருமளவும்” (1 கொரிந்தியர் 11:26) அவரது மரணத்தைக் காட்டக்கூடியதாக இருந்த பரிசுத்தமான சடங்கின் ஏற்பாட்டில், அதை அவர் மறுபடியும் கொடுத்தார். “இதுமுதல் இந்தத் திராட்சப்பழரசத்தை நவமானதாய் உங்களோடேகூட என் பிதாவின் ராஜ்யத்திலே நான் பானம்பண்ணும் நாள் வரைக்கும் இதைப் பானம் பண்ணுவதில்லையென்று உங்களுக்குச் சொல்லுகிறேன் என்றார்” –மத்தேயு 26:29. (19)

அந்தத் திருமண விருந்திற்கு ஆயத்தஞ்செய்யப்பட்டிருந்த தூய்மையான திராட்சைப்பழ இரசம் அவரது சீடர்களுக்கு வழங்கப்பட்ட

அவரது இரத்தத்திற்கு அடையாளமாயிருந்தது. "ஒரு திராட்சக்குலையில் இரசம் காணப்படும்போது: அதை அழிக்காதே, அதிலே ஆசீர்வாதம் உண்டென்று" (ஏசாயா 65:8) தீர்க்கதரிசி கூறும்போது, அவன் இதைக் குறிப்பிடுகிறான். (20)

"திராட்சரசம் பரியாசஞ்செய்யும், மதுபானம் அமளிபண்ணும்" (நீதிமொழிகள் 20:1) என்னும் எச்சரிக்கையைப் பழைய ஏற்பாட்டில் இஸ்ரவேலருக்குக் கொடுத்திருந்தவர் கிறிஸ்துதான்! அவர் தாமாகவே இப்படிப்பட்ட பானத்தை ஏற்படுத்தவில்லை. நியாயத்தை மங்கச்செய்து, ஆவிக்குரிய உணர்வுகளை மரத்துப்போகச் செய்து, மனிதர்களை உணர்வற்றவர்களாகும்படிச் செய்ய அவர்களைப் போஜனப்பிரியத்தில் ஈடுபடுத்த சாத்தான் சோதிக்கிறான். ஆனால் கீழ்த்தரமான இயல்புகளை கட்டுப்பாட்டிற்குள் கொண்டுவர கிறிஸ்து நமக்குப் போதிக்கிறார். அவரது முழு வாழ்க்கையுமே சுயமறுப்பின் ஒரு உதாரணமாக உள்ளது. உணவின் இன்சுவைக் கவர்ச்சியின்மீதுள்ள வல்லமையை முறியடிப்பதற்காக மனித இனத்தால் தாங்கிக்கொள்ள முடியாத, மிகக் கடுமையான சோதனையை நமது சார்பில் அவர் அனுபவித்தார். திராட்சரசத்தையும் மதுபானத்தையும் பருகக்கூடாது என்று யோவான் ஸ்நானகனுக்குக் கட்டளையிட்டவர் கிறிஸ்துவே! மனோவாவின் மனைவிக்கு அப்படிப்பட்ட உணவுக் கட்டுப்பாட்டை கட்டளையிட்டவரும் அவர்தான். அயலகத்தானின் உதடுகளின்மீது மதுக்கிண்ணத்தை வைப்பவனின்மீது சாபத்தை அறிவித்தவரும் அவர்தான். கிறிஸ்து அவரது சொந்த போதனையுடன் முரண்படவில்லை. திருமண விருந்தினருக்கு அவர் ஏற்படுத்தியிருந்த புளிப்பில்லாத திராட்சரசம் முழுமையானதும் புத்துணர்வை உண்டுபண்ணக்கூடியதுமான ஒரு பானமாக இருந்தது. அதன் பலன் உணவின்மீது நலமிக்க விருப்பத்தைக் கொண்டுவரும் சுவையை உடையதாக இருந்தது. (21)

விருந்தில் பங்குகொண்ட விருந்தினர்கள் அந்த திராட்சரசத்தின் உயர்ந்த தன்மையைப்பற்றிக் குறிப்பிட்டபோது, வேலைக்காரர்களிடம் நடத்தப்பட்ட விசாரணையில் அந்த அற்புதத்தைப்பற்றின விபரம் தெரியவந்தது. அப்படிப்பட்ட அற்புதத்தைச் செய்த அவரைப்பற்றிச் சிந்திப்பதில் அந்தக் கூட்டத்தினர் சற்று நேரம் வியந்திருந்தனர். இறுதியாக அவர்கள் அவரைத் தேடினபோது, அவரது சீடர்களுங்கூட கவனிக்காதவிதத்தில் அவர் அமைதியாக அங்கிருந்து சென்றிருந்ததைக் கண்டனர். (22)

இப்பொழுது அந்தக் கூட்டத்தினரின் கவனம் சீடர்களின்பால் சென்றது. முதல் முறையாக இயேசுவின்மீதுள்ள அவர்களுடைய விசுவாசத்தை அறிக்கைசெய்யும் வாய்ப்பினை அவர்கள் பெற்றனர்.

யோர்தானில் அவர்கள் கண்டதையும் கேட்டதையும் கூறவே, தேவன் தமது மக்களுக்கு ஒரு விடுதலை வழங்குபவரை எழும்பச்செய்திருக்கிறார் என்னும் நம்பிக்கை அநேகருடைய இருதயங்களில் கொழுந்துவிட்டெரியத் தொடங்கியது. அந்த அற்புதத்தைப்பற்றிய செய்தி அந்தப் பகுதி எங்கும் பரவி, எருசலேமிற்குக் கொண்டுசெல்லப்பட்டது. கிறிஸ்துவின் வருகையைச் சுட்டிக்காட்டும் தீர்க்கதரிசனங்களைப் புதிய ஆர்வத்துடன் ஆசாரியர்களும் மூப்பர்களும் ஆராய்ந்தனர். சாதாரணமான ஒரு விதத்தில் மக்களிடையே தோன்றிய இந்தப் புதிய போதகரின் ஊழியத்தைப்பற்றி அறியும் வாஞ்சை உண்டாயிற்று. (23)

கிறிஸ்துவின் ஊழியம் யூத மூப்பர்களின் ஊழியத்திலிருந்து குறிப்பிடும் வகையில் வேறுபட்டிருந்தது. அவர்களுடைய சடங்குகளும் சம்பிரதாய முறைகளும் சகலவிதமான சிந்தனைச் சுதந்திரத்தையும் அல்லது செயல்களையும் அழித்துவிட்டிருந்தது. தீட்டுப்படக்கூடாது என்னும் தொடர்ச்சியான பயத்தில் அவர்கள் வாழ்ந்திருந்தனர். தீட்டானவர்களால் தொடப்படுவதைத் தவிர்ப்பதற்காக அவர்கள் புறஜாதியினரிடமிருந்து விலகித் தனித்திருந்ததுமட்டுமின்றி, தங்களுடைய சொந்த மக்களில் பெரும்பான்மை யானவர்களிடமிருந்தும் பிரிந்திருந்து, அவர்களுக்கான நன்மையைத் தேடாமலும், அவர்களுடைய நட்பை வெல்லாமலும் இருந்திருந்தனர். இப்படிப்பட்ட காரியங்களிலேயே தொடர்ச்சியாக வாழ்ந்திருந்ததினால், அவர் களுடைய உள்ளங்களை அவர்கள் வளர்ச்சி குன்றியதாக்கி, அவர்களுடைய வாழ்க்கைவட்டத்தைக் குறுகியதாக்கியிருந்தனர். அவர்களுடைய முன்மாதிரி அனைத்து வகுப்பையும் சார்ந்த மக்கள் மத்தியில் தற்பெருமையையும் சகிப்பற்ற தன்மையையும் தூண்டிவிட்டது. (24)

மனித இனத்தின்பாலுள்ள அனுதாபத்தில் மிக நெருக்கமாக வந்து, தமது சீர்திருத்தத்தின் பணியை இயேசு தொடங்கினார். தேவப்பிரமாணங்களுக்கு அவர் மிக மேலான மதிப்பைக் கொடுத்திருந்தபோது, பரிசேயரின் போலியான பக்தியைக் கடிந்துகொண்டு, மக்களைக் கட்டிவைத்திருந்த அறிவில்லாத சட்டங்களிலிருந்து அவர்களை விடுவிக்க முயன்றார். சமுதாயத்தின் மாறுபட்ட பல்வேறுவிதமான சமூக அமைப்புகளுக்கிடையில் உண்டாகியிருந்த தடுப்புகளைத் தகர்த்து, ஒரே குடும்பத்தின் பிள்ளைகளாக மனிதர்களை ஒன்றுபடுத்த அவர் வகைதேடியிருந்தார். இதை நிறைவேற்றும் செயலின் ஒரு படிக்கட்டாக இருக்கும்படி அந்தத் திருமண விருந்தில் அவர் வருகை தந்த செயல் வடிவமைக்கப்பட்டிருந்தது. (25)

ஆசாரியர்கள் ரபிமார்கள் ஆகியோரின் செல்வாக்கிலிருந்து

கேடயமாகக் காக்கப்படும்படி தேவன் யோவான் ஸ்நானகனை வனாந்தரத்தில் வாழும்படி நடத்தி, ஒரு சிறப்பான ஊழியத்திற்காக ஆயத்தஞ்செய்திருந்தார். ஆனால் அவனது எளிமையும் தனிப்பட்டதுமான வாழ்க்கை மக்களுக்கு ஒரு உதாரணமாக இருக்கவில்லை. யோவானும் அவனது வார்த்தைகளுக்குச் செவிசாய்த்திருந்தவர்களை அவர்களுடைய முந்தைய கடமைகளைவிட்டு விலகும்படி நடத்தவில்லை. தேவன்மீதுள்ள அவர்களுடைய விசுவாசத்திற்கு அவர்கள் சான்று கொடுக்கும்வண்ணம் மனந்திரும்ப வேண்டுமென்று அவர்களை அழைத்திருந்த இடத்தில் நடத்தினான். (26)

இயேசு சுயநலமிக்க பழக்கங்களின் அமைப்புகள் யாவற்றையும் கடிந்துகொண்டிருந்தார். ஆனாலும் அவரது நடத்தையில் சமூகத்துடன் கலந்தவராக இருந்தார். சகல வகுப்பினரின் உபசாரங்களையும் அவர் ஏற்றிருந்து, ஏழை—பணக்காரன், கற்றோன்—அறியாமைமிக்கவன், ஆகிய அனைவரது வீடுகளையும் சந்தித்து, பொதுவான வாழ்க்கையைப்பற்றிய கேள்விகளிலிருந்து ஆவிக்குரியதும் நித்தியமானதுமாயிருந்தவைகளுக்கு அவர்களது எண்ணங்களை உயர்த்த வகைதேடியிருந்தார். அவர் ஒழுக்கங்கெட்ட வாழ்க்கைக்கு அனுமதிகொடாமல், உலகப்பிரகாரமான பொறுப்பற்ற தன்மையின் நிழல்கூட அவரது நடத்தையைக் களங்கப்படுத்த அனுமதிக்காமல் இருந்தபோதும், குற்றமற்ற மகிழ்ச்சியில் மகிழ்ச்சியைக் கண்டிருந்து, அவரது பிரசன்னத்தினால் சமூகக்கூட்டங்களை அனுமதித் திருந்தார். ஒரு யூதத் திருமணம் உணர்த்துதல்களை உண்டுபண்ணக்கூடிய சந்தர்ப்பமாக இருந்து, அதன் மகிழ்ச்சி மனுஷகுமாரனுக்கு மகிழ்ச்சியைக் கொடுத்தது. இந்தத் திருமணத்திற்கு வந்ததின்மூலமாக, இயேசு, திருமணத்தை தெய்வீக ஏற்பாடு என்று மேன்மைப்படுத்தினார். (27)

பழைய ஏற்பாட்டிலும், புதிய ஏற்பாட்டிலும் திருமண உறவு கிறிஸ்துவிற்கும் அவரது மக்களுக்கும் இடையிலுள்ள மென்மைமிக்க பரிசுத்தமான ஐக்கியத்தை எடுத்துக்காட்டுகிறது. அந்தத் திருமண விருந்துச் செயல்களில் இருந்த மகிழ்ச்சி, அவர் அவரது மணவாட்டியை அவரது பிதாவின் வீட்டிற்குக் கொண்டுவரும் நாளில் உண்டாகும் மகிழ்ச்சியையும், மீட்கப்பட்டவர்கள் மீட்பருடன் சேர்ந்து ஆட்டுக்குட்டியானவரின் திருமண விருந்தில் அமர இருப்பதையும் சுட்டிக்காட்டியிருந்தது. “மணவாளன் மணவாட்டியின்மேல் மகிழ்ச்சியாயிருப்பதுபோல, உன் தேவன் உன்மேல் மகிழ்ச்சியாயிருப்பார்” “அவர் உன்பேரில் சந்தோஷமாய் மகிழ்ந்து, தம்முடைய அன்பினிமித்தம் அமர்ந்திருப்பார்; அவர் உன்பேரில் கெம்பீரமாய்க் களிகூருவார்” (ஏசாயா 62:5; செப்பனியா 3:17) என்று அவர் கூறுகிறார். பரலோகக் காரியங்களைப்பற்றின தரிசனம் யோவானுக்கு அருளப்பட்டபோது,

“அப்பொழுது திரளான ஜனங்கள் இடும் ஆரவாரம்போலவும், பெருவெள்ள இரைச்சல்போலவும், பலத்த இடிமுழக்கம்போலவும், ஒரு சத்தமுண்டாகி: அல்லேலூயா, சர்வவல்லமையுள்ள தேவனாகிய கர்த்தர் ராஜ்யபாரம்பண்ணுகிறார். நாம் சந்தோஷப்பட்டுக் களிகூர்ந்து அவருக்குத் துதிசெலுத்தக்கடவோம். ஆட்டுக்குட்டியானவருடைய கலியாணம் வந்தது, அவருடைய மனைவி தன்னை ஆயத்தம்பண்ணினாள்.” “ஆட்டுக்குட்டி யானவரின் கலியாணவிருந்துக்கு அழைக்கப்பட்டவர்கள் பாக்கியவான்கள்” (வெளிப்படுத்தல் 19:6,7,9) என்று அவர் கூறினார். (28)

இயேசு ஒவ்வொரு ஆத்துமாவிலும் அவரது இராஜ்யத்திற்கு வரும்படியான அழைப்புக் கொடுக்கப்படவேண்டியதிருப்பதைக் கண்டார். மக்களிடம் அவர்களது நன்மையை விரும்புபவராக சென்று அவர்களுடைய இருதயங்களில் போய்ச் சேர்ந்தார். பொதுத்தெருக்களிலும், தனிப்பட்ட வீடுகளிலும், படகுகளிலும், ஜெப ஆலயத்திலும், கடற்கரையிலும், திருமண விருந்திலும் அவர்அவர்களைத் தேடினார். அவர்களுடைய அன்றாடத் தொழில்களில் அவர்களைச் சந்தித்து, அவர்களுடைய மதசம்பந்தமற்ற காரியங்களிலும் அவரது ஆர்வத்தை வெளிக்காட்டினார். அவர் தமது தெய்வீகப்பிரசன்னத்தின் செல்வாக்கினால் குடும்பங்களை அவர்களுடைய சொந்தவீடுகளில் சந்தித்து, அவரது போதனையைக் கொடுத்தார். அவரது வலிமைமிக்க நேரடியான அனுதாபம் இருதயங்களை வெற்றிகொள்ள உதவியது. தனிமையில் இருந்து ஜெபஞ்செய்வதற்காக அவர் அடிக்கடி மலைகளுக்குச் சென்றார். ஆனால் அது செயல்பாடுகளுள்ள மனிதர்களின் வாழ்க்கைக்கு இடையில் ஊழியஞ்செய்வதற்கான அவரது ஒரு ஆயத்தமாக இருந்தது. நோயாளிகளைக் குணப்படுத்தவும், அறியாமையுள்ளவர்களுக்குப் போதிக்கவும், சாத்தானுக்கு அடிமையாயிருந்தவர்களின் சங்கிலிகளை உடைக்கவும் இந்தக் காலக்கட்டங்களிலிருந்து அவர் முன்வந்தார். (29)

நேரடியான தொடர்பு, ஒருமித்திருத்தல் ஆகியவைகளில் இயேசு அவரது சீடர்களுக்குப் பயிற்சியளித்தார். சில சமயங்களில் மலைச்சாரல்களில் அவர்களுக்கிடையில் அவர் அமர்ந்திருந்தும், சில சமயங்களில் கடலருகிலும் அல்லது வழியில் அவர்களுடன் நடந்துகொண்டும் தேவனுடைய இராஜ்யத்தின் இரகசியங்களை அவர்களுக்கு வெளிப்படுத்தி போதித்தார். இன்றுள்ளவர்களைப்போல அன்று அவர் பிரசங்கஞ்செய்யவில்லை. தெய்வீகத் தூதைப் பெற்றுக்கொள்ள எங்கெல்லாம் இருதயங்கள் திறந்திருந்தனவோ, அங்கெல்லாம் இரட்சிப்பின் பாதையைப்பற்றின சத்தியங்களை அவர் விவரித்திருந்தார். அவரது சீடர்களை நோக்கி: “இதைச் செய்யுங்கள்” அல்லது “அதைச் செய்யுங்கள்” என்று கட்டளையிடாமல், என்னைப்

பின்பற்றுங்கள்” என்றார். நாட்டுப்புறங்களுக்கும் நகரங்களுக்கும் ஊடாக அவர் பயணம் செய்திருந்தபோது, அவர் ஜனங்களுக்கு எந்தவிதமாகப் போதித்தார் என்பதை அவர்கள் அறிந்துகொள்ளும்வண்ணம் அவர்களை அவருடன் அழைத்துச் சென்றிருந்தார். அவர்களுடைய விருப்பங்களை அவருடன் அவர் பிணைத்திருக்கவே, ஊழியத்தில் அவர்கள் அவருடன் ஐக்கியப்பட்டிருந்தனர். (30)

அவருடைய வார்த்தையைப் பிரசங்கிப்பவர்களெல்லாம் மனித இனத்தின் ஆர்வத்தை கிறிஸ்து தம்முடன் இணைத்துக்கொண்டதை உதாரணமாகக்கொண்டு, அவரது கிருபையின் சுவிசேஷத்தைப் பெற்றுக் கொண்ட அனைவரும் அதைப் பின்பற்றவேண்டும். சகத் தொடர்புகளை நாம் மறுக்கவேண்டியதில்லை. மற்றவர்களிலிருந்து நம்மை நாம் தனிப்படுத்திக்கொள்ளக்கூடாது. எல்லா வகுப்பினரையும் சந்திப்பதற்காக அவர்கள் எங்கே இருக்கின்றனரோ, அங்கே நாம் அவர்களைச் சந்தித்தாக வேண்டும். அவர்கள் தங்களுடைய சுயவிருப்பத்துடன் நம்மை அபூர்வமாகவே தேடுவார்கள். பிரசங்க மேடையிலிருந்துமட்டும் மனிதர்களுடைய இருதயங்கள் தெய்வீக சத்தியத்தினால் தொடப்படுவதில்லை. ஊழியஞ்செய்யக்கூடிய வேறொரு களம், அது தாழ்மையானதாகக் காணப்பட்டபோதிலும், வாக்குத் தத்தஞ்செய்யப்பட்டுள்ளதைப்போன்று முற்றிலும் நிறைவானதாக உள்ளது. ஏழைகளின் வீட்டிலும், பெரியவர்களின் மாளிகையிலும், உபசரிக்கும் இடத்திலும், குற்றமற்ற சமூக மகிழ்ச்சிக்காக கூடுமிடங்களிலும் அது காணப்படுகிறது. (31)

கிறிஸ்துவின் சீடர்களாகிய நாம் வெறும் சந்தோஷத்தின்மீதுள்ள ஆசையினால்மட்டும் அவர்களுடைய தவறுகளுடன் ஐக்கியப்பட உலகத்துடன் கலந்துகொள்ள வேண்டாம். அப்படிப்பட்ட கூட்டுகள் கேட்டினை விளைவிக்கும். நமது வார்த்தைகளினாலோ அல்லது செயல் களினாலோ அல்லது அனுமதியினாலோ அல்லது நமது பிரசன்னத்தி னாலோ நாம் பாவத்தை ஒருபோதும் அனுமதிக்கக்கூடாது. நாம் எங்கே சென்றாலும் இயேசுவை நம்முடன் சுமந்துசென்று, நமது இரட்சகரின் விலைமதிப்புமிக்க தன்மையை மற்றவர்களுக்கு அறிவித்தாக வேண்டும். தங்களுடைய மதத்தை நான்கு சுவர்களுக்குள் காத்துக்கொள்ள எவர்கள் முயலுகிறார்களோ, அவர்கள் நன்மை செய்யக்கூடிய விலைமதிப்புமிக்க வாய்ப்புகளை இழந்துவிடுகின்றனர். சமுதாய உறவுகளின்மூலமாக கிறிஸ்தவ மார்க்கம் உலகத்துடன் தொடர்புகொள்ள வருகிறது. தெய்வீக வெளிச்சத்தைப் பெற்றுக்கொண்ட ஒவ்வொருவரும் ஜீவபாதையின் ஒளியை அறியாதவர்களின் பாதையை ஒளிபெறச்செய்யவேண்டும். (32)

நாம் அனைவரும் இயேசுவிற்கு சாட்சிகளாக மாறிடவேண்டும். இரட்சகருக்கென்று ஆத்துமாக்களை வெல்ல, கிறிஸ்துவின் கிருபையினால் பரிசுத்தமாக்கப்பட்ட வல்லமையை முன்னேற்றமடையச்செய்ய வேண்டும். நாம் நமது சுயவிருப்பங்களின்மீது சுயநலத்துடன் ஈர்க்கப்பட்டவர்களாக இருப்பவர்கள் அல்ல என்பதை உலகம் காணட்டும். நமது மதம் அனுதாபமற்றதாகவும் கடும் பாரத்தைச் சுமத்துகிறதாகவும் இல்லை என்பதை அவர்கள் காணட்டும். கிறிஸ்துவைக் கண்டிருக்கிறோம் என்று கூறும் அனைவரும் அவர் மனிதர்களின் நன்மைக்காக ஊழியஞ்செய்ததுபோல செயல்படுவார்களாக. (33)

கிறிஸ்தவர்கள் தாங்கள் துயரந்தோய்ந்த மகிழ்ச்சியற்ற மக்கள் என்னும் தவறான உணர்த்துதலை உலகத்திற்கு ஒருபோதும் கொடுக்கக்கூடாது. நமது கண்கள் இயேசுவின்மீது பதிந்திருந்தால் நாம் மனஉருக்கமிக்க ஒரு மீட்பரைக்கண்டு, அவரது முகத்திலிருந்து வரும் ஒளியைப் பற்றிக்கொள்ளுவோம். எங்கெல்லாம் அவரது ஆவி ஆளுகை செய்கிறதோ, அங்கெல்லாம் சமாதானம் தங்கியிருக்கிறது. ஏனெனில் அமைதியும் பரிசுத்தமுமிக்க ஒரு தேவ நம்பிக்கையும் உள்ளதால் அங்கு மகிழ்ச்சியும் இருக்கும். (34)

கிறிஸ்துவின் பின்னடியார்கள் மனிதர்களாக இருந்தபோதிலுங்கூட, தெய்வத்தன்மையில் பங்குபெறுபவர்களாக உள்ளனர் என்பதை அவர்கள் காட்டும்போது, கிறிஸ்து மகிழ்ச்சியடைகிறார். அவர்கள் சிலைகளாக இல்லாமல், ஜீவனுள்ள ஆண்களும் பெண்களுமாக உள்ளனர். தேவ கிருபை என்னும் பனித்துளிகளால் புத்துணர்வடையும் அவர்களுடைய இருதயங்கள், நீதியின் சூரியனுக்காகத் திறக்கப்பட்டு விரிவடைகின்றன. அவர்கள்மீது வீசும் ஒளியை கிறிஸ்துவின் அன்பினால் ஒளிப்படுத்தப்பட்டுள்ள அவர்களுடைய ஊழியங்களினால் பிறர்மீது பிரதிபலிக்கின்றனர். (35) ★

## 16

# அவரது ஆலயத்தில்...!

### யோவான் 2:12–22

### (The Desire of Ages, pp. 154–166)

“அதன் பின்பு அவரும் அவருடைய தாயாரும் அவருடைய சகோதரரும் அவருடைய சீஷரும் கப்பர்நகூமுக்குப்போய், அங்கே சில நாள் தங்கினார்கள். பின்பு யூதருடைய பஸ்கா பண்டிகை சமீபமாயிருந்தது; அப்பொழுது இயேசு எருசலேமுக்குப் போய்”–யோவான் 2:12,13. (1)

இந்தப் பயணத்தில் தலைநகரை நோக்கிச் சென்றுகொண்டிருந்த பெரும் கூட்டங்கள் ஒன்றில் இயேசு சேர்ந்துகொண்டார். அவர் இன்னும் அவரது ஊழியத்தைப்பற்றிப் பொதுமக்கள்முன் அறிவிப்புக் கொடுக்காமல் கவனிக்கப்படாதவராகக் கூட்ட நெரிசலுக்கிடையில் இருந்தார். இந்தச் சந்தர்ப்பங்களில் யோவானின் ஊழியத்தின்மூலமாக, முக்கியத்துவமடைந்த மேசியாவின் வருகை அடிக்கடி நிகழ்ந்த உரையாடல்களின் கருப்பொருளாக இருந்தது. நாட்டின் மேன்மைபற்றிய நம்பிக்கையின்மீது உற்சாகம் தூண்டிவிடப்பட்டுத் தொடர்ந்து பேசப்பட்டிருந்தது. வேத வாக்கியங்களைப்பற்றிய தவறான விளக்கங்களின்மீது கட்டப்பட்டதாக அது இருந்ததினால், இந்த நம்பிக்கை ஏமாற்றத்தைச் சந்திக்கவேண்டும் என்பதை இயேசு அறிந்திருந்தார். மிகுந்த அக்கறையுடன் அவர் தீர்க்கதரிசனங்களை விளக்கி, தேவனுடைய வார்த்தைகளை மக்கள் நுணுக்கமாக ஆராயும்படி அவர்களை எழுப்ப முயன்றிருந்தார். (2)

தேவனை ஆராதிப்பதைப்பற்றி மக்கள் எருசலேமில்தான் கற்றுக்கொள்ளவேண்டும் என்று யூதத் தலைவர்கள் போதித்திருந்தனர். பாலஸ்தீனத்தின் சகல பகுதிகளிலிருந்தும், தூரமான நாடுகளில் இருந்துங்கூட, இங்கு பஸ்கா பண்டிகைக்கு மக்கள் பெரும் எண்ணிக்கையில் கூடியிருந்தனர். தேவாலய வளாகங்கள் ஒழுங்கற்ற நெரிசலினால் நிறைந்திருந்தது. பெரும் தியாகபலியினைச் சுட்டிக்காட்டியிருந்த பலியைச் செலுத்த, பலிப்பொருளைத் தங்களுடன் கொண்டுவர வகையற்றவர்களாக அநேகர் இருந்தனர். இவர்களது வசதிக்காக ஆலயத்தின் வெளிப்பிரகாரத்திற்கு

மிருகங்கள் கொண்டுவரப்பட்டு விற்கப்பட்டிருந்தன. இங்கு சகல வகுப்பு மக்களும் தங்களுடைய பலிப்பொருட்களை வாங்குவதற்குக் கூடியிருந்தனர். இங்கு வெளிநாட்டு நாணயங்கள் ஆலய நாணயங்களுடன் மாற்றஞ்செய்யப்பட்டிருந்தன. (3)

ஒவ்வொரு யூதனும் அவனது ஆத்துமாவை மீட்கும் பொருளாக வருடந்தோறும் அரைச்சேக்கல் வெள்ளி (யாத்திராகமம் 30:12–16) கொடுத்தாகவேண்டும். இந்தவிதமாக வசூலிக்கப்பட்ட பணம் ஆலயப்பராமரிப்பிற்காகப் பயன்படுத்தப்பட்டிருந்தது. அதுவுமல்லாமல், மனப்பூர்வமாகக் கொடுக்கப்பட்ட ஏராளமான காணிக்கைகளான பெருந்தொகைகள் கொண்டுவரப்பட்டு, ஆலயக் கருவூலத்தில் வைப்புநிதியாக வைக்கப்பட்டிருந்தது. அனைத்து வெளிநாட்டு நாணயங்களும் ஆலய நாணயமான சேக்கல் என்னும் நாணயத்துக்கு மாற்றப்பட்டு, அது ஆசரிப்புக்கூடாரப் பராமரிப்பிற்கென்று ஏற்றுக்கொள்ளப்பட்டிருந்தது. இந்த நாணய மாற்று முறை ஏமாற்றுதல்களுக்கும் நியாயமற்ற வசூலிப்பிற்கும் வழிவகுத்து, கண்ணியமற்ற வியாபாரமாக, ஆசாரியர்களுக்கு வருமானத்தைக் கொண்டுவரும் ஆதாரமாக வளர்ந்திருந்தது. (4)

வியாபாரிகள் தாங்கள் விற்றிருந்த விலங்குகளுக்கு மிக அதிகமான விலைகளைக் கோரியிருந்து, அதன் இலாபங்களை ஆசாரியர்களுடனும் அதிபதிகளுடனும் பங்கிட்டு, இந்தவிதமாக மக்களின் செலவில் தங்களைச் செல்வந்தர்களாக்கிக்கொண்டிருந்தனர். ஆராதனைசெய்ய வந்திருந்தவர்களை நோக்கி, அவர்கள் பலிசெலுத்தாவிட்டால் அவர்கள்மீதும் அவர்களுடைய பிள்ளைகளின்மீதும் அல்லது அவர்களுடைய நிலங்களின்மீதும் ஆசீர்வாதம் தங்காது என்று நம்பும்படியாகப் போதித்திருந்தனர். ஏனெனில் இவ்வளவு தூரம் வந்தபின் பக்தியைக் காட்டும் நோக்கத்திற்கு வந்திருந்த மக்கள் அந்த நியமத்தைச் செய்யாமல் தங்களுடைய இல்லங்களுக்குத் திரும்பிச்செல்லமாட்டார்கள் என்பதினால் அந்த விலங்குகளுக்கு இந்தவிதமாக அதிகப்படியான விலையைப் பெறமுடிந்திருந்தது. (5)

பஸ்கா பண்டிகையின் காலத்தில் பெரும் எண்ணிக்கையிலுள்ள பலிகள் செலுத்தப்பட்டிருந்தன. தேவாலயத்தில் நடந்திருந்த விற்பனை மிக அதிகமாக இருந்தது. இந்தக் குழப்பங்களின் விளைவால் அது பரிசுத்தமான தேவனுடைய ஆலயம் என்பதைவிட, அமளிமிக்க விலங்குச் சந்தை என்பதாக எடுத்துக்காட்டியிருந்தது. சூழ்ச்சிநுட்பமிக்க பேரங்கள், விலங்குகளின் சத்தம், ஆடுகளின் கதறல், புறாக்களின் கூவுதல்கள் ஆகியவை நாணயங்கள் விழும் சத்தத்துடனும் கோபமிக்க வாக்குவாதங்களுடனும் கலந்திருந்ததைக் கேட்கமுடிந்தது. ஆராதனை செய்திருந்தவர்களுக்கு உண்டான

இடைஞ்சலும், உன்னதமானவரை நோக்கி ஏறெடுக்கப்பட்ட வார்த்தைகளும் ஆலயத்தை ஆக்கிரமித்த அமளியில் மூழ்கும்வண்ணம், அங்குண்டான குழப்பம் அந்த அளவிற்குப் பெரிதாக இருந்தது. யூதர்கள் அவர்களுடைய பக்தியைப்பற்றி மிக அதிகமான அளவிற்கு அகந்தைமிக்கவர்களாக இருந்தனர். அவர்கள் தங்களுடைய ஆலயத்தைப்பற்றி மகிழ்ந்திருந்து, அதற்கு விரோதமாகக் கூறப்பட்ட வார்த்தைகளை தேவதூஷணம் என்று கருதியிருந்து, அதனுடன் சம்பந்தப்பட்ட சடங்குகளில் கடுமையானவர்களாக இருந்தாலுங்கூட, அவர்களுடைய பண ஆசை அவர்களது கண்ணியத்தை மேற்கொண்டிருந்தது. தேவனாலேயே ஏற்படுத்தப்பட்டிருந்த இந்த ஆராதனையின் ஆரம்ப அடிப்படையான நோக்கத்திலிருந்து, எந்த அளவிற்குத் தூரமாக அலைந்துகொண்டிருக்கின்றனர் என்பதை அவர்கள் மிகவும் குறைவாகவே அறிந்திருந்தனர். (6)

கர்த்தர் சீனாய் மலையின்மீது இறங்கினபோது, அவரது பிரசன்னத்தால் அந்த இடம் பிரதிஷ்டைபண்ணப்பட்டது. அந்த மலையைச் சுற்றிலும் எல்லையை உண்டுபண்ணி, அதன்மூலமாக அதைப் பரிசுத்தப்படுத்தும்படி மோசேக்குக் கட்டளையிட்ட கர்த்தருடைய வார்த்தை எச்சரிக்கையாகக் கேட்கப்பட்டது. “ஜனங்களுக்குச் சுற்றிலும் நீ ஒரு எல்லை குறித்து, அவர்கள் மலையில் ஏறாதபடிக்கும், அதின் அடிவாரத்தைத் தொடாதபடிக்கும் எச்சரிக்கையாய் இருங்கள் என்று அவர்களுக்குச் சொல்; மலையைத் தொடுகிறவன் எவனும் நிச்சயமாகவே கொல்லப்படுவான். ஒரு கையும் அதைத் தொடலாகாது; தொட்டால், நிச்சயமாகக் கல்லெறியுண்டு, அல்லது ஊடுருவ எய்யுண்டு சாகவேண்டும்; மிருகமானாலும்சரி, மனிதனானாலும்சரி, உயிரோடே வைக்கப்படலாகாது; எக்காளம் நெடுந்தொனியாய்த் தொனிக்கையில், அவர்கள் மலையின் அடிவாரத்தில் வரக்கடவர்கள் என்றார்”—யாத்திராகமம் 19:12,13. இவ்வாறு தேவன் தமது பிரசன்னத்தை எங்கெல்லாம் வெளிக்காட்டுகிறாரோ, அந்த இடம் பரிசுத்தமானது என்னும் பாடம் போதிக்கப்பட்டது. தேவனுடைய ஆலயத்தின் சுற்றுப்புற இடங்கள் பரிசுத்தமானவையாகக் கருதப்பட்டிருக்கவேண்டும். ஆனால் இலாபம் சம்பாதிக்கும் சண்டையில் அவைகளைப்பற்றிய பார்வைகளனைத்தும் இழக்கப்பட்டிருந்தன. (7)

ஆசாரியர்களும் அதிபதிகளும் அந்த ஜனத்தின் தேவனுடைய பிரதிநிதிகள் என அழைக்கப்பட்டிருந்தனர். ஆலய வளாகம் தவறாகப் பயன்படுத்தப்படுவதை அவர்கள் சீர்திருத்தியிருக்கவேண்டும் நேர்மை, மனஉருக்கம் ஆகியவைகளுக்கு, அவர்கள் மக்களுக்கு ஒரு உதாரணமாக இருந்திருக்கவேண்டும். சுய இலாபத்தைப்பற்றி அவர்கள்

கணக்கிடுவதற்குப்பதிலாக, ஆராதனை செய்திருந்தவர்களின் நிலைமைகளையும் தேவைகளையும் யோசித்து, அவசியமாயிருந்த பலிப் பொருட்களை வாங்க இயலாமலிருந்தவர்களுக்கு உதவிசெய்வதற்கு ஆயத்தமாயிருந்திருக்க வேண்டும். ஆனால் அவர்கள் அதைச் செய்யவில்லை. பேராசை அவர்களுடைய இருதயங்களைக் கடினப்படுத்தியிருந்தது. (8)

பாடுகளை அனுபவித்திருந்தவர்களும், தேவையிலும் துன்பத்திலும் இருந்திருந்தவர்களும் அந்தப் பண்டிகைக்கு வந்திருந்தனர். குருடர்கள், சப்பாணிகள், செவிடர்கள் ஆகியோர் அங்கிருந்தனர். சிலர் படுக்கைகளில் கொண்டுவரப்பட்டிருந்தனர். கர்த்தருக்கான மிகவும் தாழ்மையான பலிப்பொருட்களைக்கூட வாங்க முடியாத அளவிற்கு ஏழைகளாயிருந்தவர்களும், தங்களுடைய பசியை ஆற்றிக்கொள்ள உணவைக்கூட வாங்கமுடியாத அளவிற்கு ஏழைகளாயிருந்த அநேகரும் அங்கு வந்திருந்தனர். ஆசாரியர்களின் அறிக்கைகளினால் அவர்கள் மிகவும் துயரமடைந்திருந்தனர். அந்த ஆசாரியர்கள் அவர்களது பக்தியைப்பற்றிப் பெருமையடித்துக்கொண்டிருந்தனர். அவர்கள் தங்களை மக்களின் பாதுகாவலர்கள் என்று உரிமைபாராட்டியிருந்தனர். ஆனால் அனுதாபமும் மனஉருக்கமும் அற்றவர்களாக இருந்தனர். ஏழைகள், நோயாளிகள், செத்துக்கொண்டிருந்தவர்கள் ஆகியோர் அவர்களுடைய மன்றாட்டுக்களைச் செய்தும், அவர்களுடைய அன்பாதரவைப் பெற்றுக்கொள்ளவில்லை. அவர்களுடைய இருதயங்களில் அம்மக்களின் பாடுகள் இரக்கத்தை எழுப்பவில்லை. (9)

இயேசு ஆலயத்திற்குள் வந்தபோது, இந்தக் காட்சி முழுவதையும் கண்டார். நியாயமற்ற வியாபாரங்களை அவர் கண்டார். இரத்தம் சிந்துதலில்லாமல் அவர்களுடைய பாவங்களுக்கு மன்னிப்பில்லை என்று எண்ணிய ஏழைகளின் துயரத்தை அவர் கண்டார். அவரது ஆலயத்தின் வெளிப்பிரகாரம் பரிசுத்தமற்ற ஒரு வியாபார ஸ்தலமாக மாற்றப்பட்டிருந்ததை அவர் கண்டார். பரிசுத்தமான இடம் விசாலமான பண்டமாற்றம் செய்யுமிடமாக மாறியிருந்தது. (10)

ஏதாவது செய்தாகவேண்டும் என்று இயேசு கண்டார். பலவிதமான எண்ணிக்கையில் சடங்குகள் அவைகளின் முக்கியத்துவம்பற்றிய சரியான போதனையின்றி மக்கள்மேல் சுமத்தப்பட்டிருந்தன. பூரணமான ஒரு பலியின் பொருட்பாடமாக மட்டுமே அவர்களுடைய பலி இருந்தது என்பதைப் புரிந்துகொள்ளாதவர்களாக, ஆராதனை செய்திருந்தவர்கள் அவர்களுடைய பலிகளைச் செலுத்தியிருந்தனர். இந்த ஆராதனைகளனைத்தும் அடையாளமாகச் சுட்டிக்காட்டியிருந்த ஒருவர், அவர்களுக்கிடையில்

அறியப்படாதவராகவும் கனப்படுத்தப்படாதவராகவும் நின்றிருந்தார். இந்தப் பலிமுறைகளைப்பற்றிய இயக்கும் விதிகளை அவர் கொடுத்திருந்தார். அவை அடையாளமாகக் காட்டியிருந்தவைகளின் மதிப்பையும் அவைகள் திரிபுபடுத்தப்பட்டு, தவறாகப் புரிந்துகொள்ளப்பட்டிருப்பதையும் அவர் கண்டார். ஆவிக்குரிய ஆராதனை விரைவில் மறைந்துகொண்டிருந்தது. ஆசாரியர்களையும் அதிபதிகளையும் எந்தவிதமான வளையமும் தேவனுடன் பிணைத்திருக்கவில்லை. ஒட்டுமொத்தமாக ஒரு மாறுபட்ட ஆராதனை முறையை அமைப்பதுதான் கிறிஸ்துவின் பணியாக இருந்தது. (11)

ஆலய வளாகத்தின் படிக்கட்டுகளின்மீது நிற்கும்போது, அவர்முன்னிருந்த அந்தக் காட்சிகளை அவர் தமது தேடும் பார்வையால் காண்கிறார். தீர்க்கதரிசக்கண்களுடன் வருடங்களையும் நூற்றாண்டுகளையும் யுகங்களையும் மட்டுமின்றி, எதிர்காலத்திற்குள்ளாகவும் அவர் பார்க்கிறார். ஆசாரியர்களும் அதிபதிகளும் தேவையுள்ளவர்களை அவர்களுடைய உரிமையிலிருந்து திருப்பி, ஏழைகளுக்குச் சுவிசேஷம் பிரசங்கிக்கப்படவிருப்பதை எந்தவிதமாகத் தடைசெய்ய இருக்கிறார்கள் என்பதை அவர் பார்க்கிறார். தேவனுடைய அன்பை பாவிகளிடமிருந்து மறைத்து, அவரது கிருபையை எந்தவிதமாக வியாபாரம் செய்வார்கள் என்பதை அவர் பார்க்கிறார். இந்தக் காட்சிகளைக் காணும்போது, கோபம், அதிகாரம், வல்லமை ஆகியவை அவரது முகத்தில் வெளிக்காட்டப்படுகின்றன. மக்களின் கவனம் அவர்பக்கம் ஈர்க்கப்பட்டது. பரிசுத்தமற்ற வியாபாரம் செய்பவர்களின் கண்கள் அவரது முகத்தின்மீது பதிகின்றன. அவர்களது பார்வையை அவர்களால் பின்னிழுக்க இயலவில்லை. இந்த மனிதர் அவர்களது அந்தரங்க எண்ணங்களை வாசித்து, அவர்களுக்குள் மறைந்திருக்கும் நோக்கங்களைக் கண்டுபிடிக்கிறார் என்று அவர்கள் உணருகின்றனர். துருவி ஆராயும் கண்களிலிருந்து தப்பும் முயற்சியில் சிலர் தங்களுடைய தீய செயல்கள் தங்களுடைய முகங்களில் எழுதப்பட்டிருந்ததாக எண்ணி, அவர்களுடைய முகங்களை மறைக்க முயலுகின்றனர். (12)

அந்தக் குழப்பம் அமைதியடைகிறது. வியாபாரப் பேரங்களின் சத்தம் நின்றுவிட்டது. அந்த மௌனம் வேதனைமிக்கதாக மாறுகிறது. கூட்டத்தினரைத் திகிலின் உணர்வு மேற்கொள்ளுகிறது. இப்பொழுது அவர்கள் அவர்களுடைய குற்றங்களுக்கான விசாரணைக்காக தெய்வீக விசாரணை மன்றத்தின்முன் நிற்பதுபோன்று உள்ளனர். அவர்கள் கிறிஸ்துவை நோக்கி, மானிடத்தின் உடைக்குள் தெய்வீகம் பளிச்சிடுவதைக் காண்கின்றனர். அவரைச் சூழ்ந்து காணப்படவிருக்கும் மகிமையுடன் இப்பொழுது இல்லாமல், ஆனால் ஆத்துமாவை வாசித்தறியும் அதே வல்லமையுடன்

பரலோகத்தின் மகத்துவமானவர் கடைசி நாளில் நீதிபதி நிற்பதுபோல் இப்பொழுது நிற்கிறார். ஒவ்வொரு தனிநபரையும் உள்ளிட்டுக்கொண்டு, திரளானவர்களின்மீது அவரது கண்கள் பரந்துசெல்லுகின்றன. கட்டளையிடும் மேன்மையான தகுதியுடன் அவரது உருவம், அவர்களுக்குமேலாக உயர்ந்து நிற்பதுபோலக் காணப்படுகிறது. ஒரு தெய்வீக ஒளி அவரது முகத்தை பிரகாசிக்கச்செய்கிறது. ஆசாரியர்களும் அதிபதிகளும் மீறிக்கொண்டிருக்கும் அதே பிரமாணத்தை, சீனாய் மலையின்மீதிருந்து அறிவித்த அதே குரலில்—மணி ஓசைபோன்ற தெளிவான அவரது குரலில்—அவர் பேசுகிறார். “இவைகளை இவ்விடத்திலிருந்து எடுத்துக்கொண்டுபோங்கள்; என் பிதாவின் வீட்டை வியாபார வீடாக்காதிருங்கள்” என்று கூறியது ஆலயத்தின்மேல் வளைவுகளின்மூலமாக எங்கும் எதிரொலித்துக் கேட்கப்படுகிறது. (13)

கரத்தில் சவுக்குக் கயிற்றைப் பிடித்தவராக, மெதுவாகப் படிக்கட்டுகளின் கீழிறங்கி, வளாகத்திற்குள் நுழைந்து பேரம்பேசிக்கொண்டிருந்த கூட்டத்தினரை ஆலயச் சுற்றுப்புறங்களிலிருந்து வெளியேறிச்செல்லும்படிக் கட்டளையிடுகிறார். இதுவரை அவர் ஒருபோதும் வெளிக்காட்டியிராத வைராக்கியத்துடனும் கடுமையுடனும், காசுக்காரர்களின் மேஜைகளைக் கவிழ்க்கிறார். கணீரென்ற சத்தத்துடன் நாணயங்கள் சலவைக்கல் தரையின்மீது விழுகின்றன. அவரது அதிகாரத்தைக் கேள்விகேட்க ஒருவரும் துணியவில்லை. தவறான வகையில் சம்பாதித்தவைகளைச் சேகரிக்க ஒருவரும் துணியவில்லை. இயேசு அவரது கரத்திலிருந்த கயிற்றினாலான சவுக்கினால் அவர்களை அடிக்கவில்லை. ஆனால் அவரது கரத்திலிருந்த சாதாரணமான சவுக்கு பயங்கரமான ஒரு சுடரொளிப் பட்டயம்போலக் காணப்படுகிறது. ஆலய அதிகாரிகளும், கணக்கிடும் ஆசாரியர்களும், தரகர்களும், மிருக வியாபாரிகளும் அவர்களுடைய காளைகளுடனும் ஆடுகளுடனும் குற்றப்படுத்தும் அவரது பிரசன்னத்திலிருந்து தப்பவேண்டும் என்ற ஒரே எண்ணத்துடன் அந்த இடத்தைவிட்டு விரைந்தோடுகின்றனர். (14)

தெய்வீகம் அவர்மீது நிழலாடியிருப்பதை உணர்ந்த திராளானவர்களைத் திகில் அடித்துச் செல்லுகிறது. பயத்தினால் உலர்ந்துபோன நூற்றுக்கணக்கான உதடுகளிலிருந்து பயங்கரத்தின் குரல்கள் வெளிவருகின்றன. சீடர்களுங்கூட நடுங்குகின்றனர். இயேசுவின் வார்த்தைகளின் தன்மையையும் வழக்கத்திற்கெதிரான குணத்தையுங்கண்டு அவர்கள் திகைப்புற்றனர். “உம்முடைய வீட்டைக்குறித்து உண்டான பக்திவைராக்கியம் என்னைப் பட்சித்தது” (சங்கீதம் 69:9) என்று அவரைப்பற்றி எழுதியிருப்பதை அவர்கள் நினைக்கின்றனர். அமளிசெய்யும்

அந்த வியாபரிகளின் கூட்டம் கர்த்தருடைய ஆலயத்தைவிட்டு விரைவில் தூரமாக நீக்கப்படுகின்றது. பரிசுத்தமற்ற வியாபாரத்திலிருந்து அந்த வளாகம் விடுதலையடைந்து, குழப்பம் நிறைந்திருந்த காட்சி நீங்கியது. அங்கு ஒரு ஆழ்ந்த மௌனமும் பக்திவிநயமும் தங்குகிறது. முற்காலத்தில் மலையைப் பரிசுத்தப்படுத்தியிருந்த கர்த்தரின் பிரசன்னம் அவரது மேன்மைக்கென்று கட்டப்பட்ட ஆலயத்தை இப்பொழுது பரிசுத்தமாக்கியுள்ளது. (15)

ஆலய சுத்திகரிப்பாகிய அவரது பணியில் இயேசு மேசியாவாக உள்ள அவரது ஊழியத்தில் பிரவேசிப்பதை அறிவித்துக்கொண்டிருந்தார். தெய்வீகப் பிரசன்னம் தங்கியிருப்பதற்கென்று கட்டப்பட்ட அந்த ஆலயம் இஸ்ரவேலிற்கும் உலகத்திற்கும் ஒரு பொருட்பாடமாக இருக்கும்வண்ணம் வடிவமைக்கப்பட்டிருந்தது. ஒளிமிக்க பரிசுத்தமான சேராபீன்களிலிருந்து மனிதன்வரை, ஒவ்வொரு சிருஷ்டியும், சிருஷ்டிகர் உள்ளே வாசஞ்செய்யும் தேவனுடைய ஆலயமாக இருக்கவேண்டும் என்பது தேவனுடைய நித்தியகாலமான நோக்கமாக இருந்தது. மனித இனத்தின் பாவத்தினால், அது தேவனுடைய ஆலயமாக இல்லாமலாகிவிட்டது. தீமையினால் இருண்டு மாசடைந்த அது, அதன்பின் தெய்வீகமான ஒருவரின் மகிமையை வெளிப்படுத்தவில்லை. ஆனால் தேவகுமாரனின் அவதாரத்தினால் பரலோகத்தின் நோக்கம் நிறைவேறியுள்ளது. மானுடத்துள் தேவன் வாழ்கிறார். இரட்சிக்கும் கிருபையினால் மனித இருதயம் மறுபடியும் தேவனுடைய ஆலயமாகிறது. ஒவ்வொரு ஆத்துமாவிற்கும் உள்ள மேலான முடிவிற்குத் தொடர்ச்சியான சாட்சியாக, எருசலேம் தேவாலயம் இருக்கும்படி தேவன் அதை ஏற்படுத்தியிருந்தார். ஆனால் யூதர்கள் மிகவும் அதிகமான பெருமையுடன் கருதியிருந்த அந்தக் கட்டிடத்தின் முக்கியத்துவத்தை புரிந்துகொள்ளவில்லை. தெய்வீக ஆத்துமாவிற்கான பரிசுத்தமான ஆலயங்களாக இருக்கும்படி அவர்கள் தாங்களாகவே இணங்காமலிருந்தனர். பரிசுத்தமற்ற வியாபார அமளியால் நிறைந்திருந்த எருசலேம் தேவாலய வளாகம், புலன்களின் உணர்வுகளினாலும் பரிசுத்தமற்ற எண்ணங்களின் பிரசன்னத்தினாலும் மாசுபட்டிருந்த இருதயமாகிய ஆலயத்தின் மெய்யான நிலைமையை எடுத்துக்காட்டியிருந்தது. வாங்குபவர்களிடமிருந்தும் விற்பவர்களிடமிருந்தும் ஆலயத்தை சுத்தஞ்செய்த செயலால், பாவத்தின் தீட்டிலிருந்து—உலக ஆசைகள், சுயநல இச்சைகள், தீய பழக்கங்கள் என்னும் பாவங்களிலிருந்து இருதயத்தை சுத்தப்படுத்தும் அவரது ஊழியத்தை இயேசு அறிவித்தார். "நீங்கள் தேடுகிற ஆண்டவரும் நீங்கள் விரும்புகிற உடன்படிக்கையின் தூதனுமானவர் தம்முடைய ஆலயத்துக்குத் தீவிரமாய் வருவார்; இதோ, வருகிறார் என்று சேனைகளின் கர்த்தர் சொல்லுகிறார். ஆனாலும் அவர் வரும் நாளைச் சகிப்பவன் யார்? அவர் வெளிப்படுகையில் நிலைநிற்பவன்

யார்? அவர் புடமிடுகிறவனுடைய அக்கினியைப்போலவும், வண்ணாருடைய சவுக்காரத்தைப்போலவும் இருப்பார். அவர் உட்கார்ந்து வெள்ளியைப் புடமிட்டுச் சுத்திகரித்துக்கொண்டிருப்பார்; அவர் லேவியின் புத்திரரைச் சுத்திகரித்து, அவர்கள் கர்த்தருடையவர்களாயிருக்கும்படிக்கும், நீதியாய் காணிக்கையைச் செலுத்தும்படிக்கும், அவர்களைப் பொன்னைப்போலவும் வெள்ளியைப்போலவும் புடமிடுவார்"–மல்கியா 3:1–3. (16)

"நீங்கள் தேவனுடைய ஆலயமாயிருக்கிறீர்களென்றும், தேவனுடைய ஆவி உங்களில் வாசமாயிருக்கிறாரென்றும் அறியாதிருக்கிறீர்களா? ஒருவன் தேவனுடைய ஆலயத்தைக் கெடுத்தால், அவனை தேவன் கெடுப்பார்; தேவனுடைய ஆலயம் பரிசுத்தமாயிருக்கிறது; நீங்களே அந்த ஆலயம்" –1 கொரிந்தியர் 3:16,17. இருதயத்தைக் கைப்பற்றியுள்ள தீமைகளின் நெரிசலை ஒருவனாலும் தானாகவே வெளியேற்றமுடியாது. ஆத்தும ஆலயத்தைக் கிறிஸ்துவினால் மட்டுமே சுத்திகரிக்க முடியும். ஆனால் அவர் வலுக்கட்டாயமாக உள்ளே வரமாட்டார். பழைய ஆலயத்திற்குள் அவர் வந்ததுபோல வராமல், "இதோ, வாசற்படியிலே நின்று தட்டுகிறேன்; ஒருவன் என் சத்தத்தைக்கேட்டு, கதவைத் திறந்தால், அவனிடத்தில் நான் பிரவேசிப்பேன்" (வெளிப்படுத்தல் 3:20) என்று கூறுகிறார். அவர் ஒரு நாளுக்கென்று மட்டும் வரமாட்டார். "நான் அவர்களுக்குள்ளே வாசம்பண்ணி, அவர்களுக்குள்ளே உலாவி, அவர்கள் தேவனாயிருப்பேன், அவர்கள் என் ஜனங்களாயிருப்பார்கள்," "நம்முடைய அக்கிரமங்களை அடக்கி, நம்முடைய பாவங்களையெல்லாம் சமுத்திரத்தின் ஆழங்களில் போட்டுவிடுவார்." "ஆவியினாலே தேவனுடைய வாசஸ்தலமாக"–2 கொரிந்தியர் 6:16; மீகா 7:19; எபேசியர் 2:21,22. (17)

ஆசாரியர்களும் அதிபதிகளும் திகிலினால் மேற்கொள்ளப்பட்டு, அவர்களுடைய இருதயங்களை ஆராயும் பார்வையைவிட்டு, ஆலயப்பிராகாரத்திலிருந்து வெளியே ஓடிப்போனார்கள். அவர்கள் ஓடிப்போகும்போது, ஆலயத்தை நோக்கிச் சென்றிருந்தவர்களிடம் தாங்கள் கண்டவைகளையும் கேட்டவைகளையும்கூறி, திரும்பிச்செல்லும்படிக் கேட்டுக்கொண்டார்கள். ஓடிப்போய்க்கொண்டிருந்த மனிதர்களின் பயத்திற்காக, வாஞ்சைமிக்க இரக்கத்துடன், உண்மையான ஆராதனையில் என்ன அடங்கியிருக்கிறது என்பதை அறியாத அவர்களுடைய அறியாமையை எண்ணி கிறிஸ்து அவர்களை நோக்கினார். இந்தக் காட்சியிலே பிரிந்து செல்லுதலிலே யூத ஜாதி முழுவதும் அவர்களது துன்மார்க்கத்திற்காக சிதறடிக்கப்பட இருப்பதின் அடையாளத்தையும் அவர் கண்டார். (18)

ஆசாரியர் ஆலயத்தை விட்டு ஏன் ஓடினார்கள்? அவர்கள் ஏன்

அவர்களுடைய தளத்தில் உறுதியாக நிற்கவில்லை? அவர்களைச் செல்லும்படிக் கட்டளையிட்ட ஒருவர் ஒரு தச்சனின் மகனாகவும், ஒரு ஏழைக் கலிலேயனாகவும், உலகப்பிரகாரமான எந்தவிதமான பதவியும் வல்லமையும் இல்லாதவராகவும் இருந்தார். அவர்கள் ஏன் அவரை எதிர்த்து நிற்கவில்லை? மிகவும் தாழ்மையான வெளித்தோற்றத்தை உடையவராயிருந்த ஒருவரின் கட்டளைக்கு அவர்கள் தீயவழியில் ஈட்டியவைகளையெல்லாம் விட்டுவிட்டு ஏன் ஓடவேண்டும்? (19)

அரசனைப்போன்ற அவரது தோற்றம், குரலமைப்பு, அவர் பேசியிருந்த தன்மை ஆகியவை அவர்களால் தடுக்கும் வல்லமையற்றதாக இருந்தது. அவரது கட்டளையில், இதுவரை ஒருபோதும் உணர்ந்திராதவிதமாக, தாங்கள் உண்மையாகவே மாயக்காரரும் கொள்ளைக்காரருமாயிருப்பதை உணர்ந்தார்கள். மானுடத்தின் ஊடாக தெய்வீகம் மின்னியபோது, கிறிஸ்துவின் முகத்தில் கோபத்தைக் கண்டதுமட்டுமின்றி, அவரது வார்த்தைகளின் முக்கியத்துவத்தையும் அவர்கள் உணர்ந்தனர். நித்தியகாலத்திற்கென்று அவர்களுடைய தீர்ப்பு நிகழ்ந்துவிட்டதுபோலவும், நித்திய நியாயாதிபதியின் சிங்காசனத்திற்குமுன்னால் நிற்பதைப்போலவும், அவர்கள் உணர்ந்தனர். கிறிஸ்து ஒரு தீர்க்கதரிசி என்று சற்றுநேரத்திற்கு அவர்கள் மனதிருப்தி அடைந்தனர். அநேகர் அவரை மேசியா என்று நம்பினர். கிறிஸ்துவைப்பற்றிய தீர்க்கதரிசிகளின் வார்த்தைகளைப் பரிசுத்த ஆவியானவர் அவர்களுடைய உள்ளங்களில் ஒளிரச்செய்தார். இந்த உணர்த்துதலுக்கு அவர்கள் இணங்குவார்களா? (20)

அவர்கள் மனந்திரும்பமாட்டார்கள். ஏழைகளின்மீது கிறிஸ்துவின் அனுதாபம் எழுப்பப்பட்டிருந்ததை அவர்கள் அறிந்திருந்தனர். மக்களுடனுள்ள ஈடுபாடுகளில் அவர்கள் வசூல்காரர்கள் என்னும் குற்றமுடையவர்களாக இருந்ததை அறிந்திருந்தனர். கிறிஸ்து அவர்களுடைய இருதயங்களை அறிந்திருந்ததினால் அவர்கள் அவரை வெறுத்தனர். அவர்கள்மீதான அவரது பகிரங்கமான கடிந்துகொள்ளுதல், அவர்களுடைய அகந்தையை தாழ்த்துவதாக இருந்ததுடன், மக்களிடம் அவருக்கிருந்த செல்வாக்கு அதிகரித்துவந்ததைப்பற்றி அவர்கள் பொறாமையடைந்தனர். அவர் எந்த வல்லமையினால் அவர்களை விரட்டியிருந்தார் என்பதையும், அந்த வல்லமையை யார் அவருக்குக் கொடுத்தார் என்பதையும் குறித்து அவருக்கு அறைகூவல்விட அவர்கள் தீர்மானித்திருந்தனர். (21)

மெதுவாகவும் சிந்தனையுடனும் ஆனால் இருதயத்தில் வெறுப்புள்ளவர்களாகவும் அவர்கள் ஆலயத்திற்குத் திரும்பிவந்தனர். ஆனால் அவர்கள் இல்லாமலிருந்த வேளையில் எப்படிப்பட்ட மாற்றம்

உண்டானது! அவர்கள் ஓடிச்சென்றபின், ஏழைகள் தங்கியிருந்தனர். அவர்கள் இப்பொழுது அன்பையும் அனுதாபத்தையும் உணர்த்தும் இயேசுவின் முகத்தை நோக்கிக்கொண்டிருந்தார்கள். அவரைச் சுற்றிலும் நடுங்கிக்கொண்டு இருந்தவர்களிடம்: "பயப்படாதிருங்கள், நான் உங்களை விடுதலை செய்வேன். நீங்கள் என்னை மகிமைப்படுத்துவீர்கள். இதற்காகவே நான் இந்த உலகத்திற்குள் வந்தேன்" என்று அவர் கூறினார். (22)

"ஆண்டவரே என்னை ஆசீர்வதியும்" என்னும் அவசரமும் இரக்கமும் தோய்ந்த வேண்டுகோள்களுடன் கிறிஸ்துவின் பிரசன்னத்திற்குள் மக்கள் நெருங்கினர். அவரது செவி ஒவ்வொரு அழுகுரலையும் கேட்டது. ஒரு அன்னையின் இரக்கத்தைவிட அதிக மென்மையான இரக்கத்துடன் பாடுகள் அனுபவித்திருந்த சிறுபிள்ளைகளின் பக்கமாக அவர் குனிந்தார். அனைவரும் அவரது கவனத்தைப் பெற்றுக்கொண்டனர். ஒவ்வொருவரிலும் எந்தவிதமான நோய்களிருந்தனவோ அவைகள் அனைத்திலிருந்தும் அவர்கள் சுகமாக்கப்பட்டனர். ஊமைகள் துதிசெலுத்த அவர்களது உதடுகளைத் திறந்தனர். குருடர்கள் அவர்களைக் குணப்படுத்தினவரின் முகத்தைக் காண அருள்செய்யப்பட்டனர். துன்பப்பட்டிருந்தவர்களின் இருதயங்கள் மகிழ்ச்சியால் நிறைக்கப்பட்டன. (23)

இந்தப் பெரும் ஊழியத்தை ஆசாரியர்களும் அதிகாரிகளும் கண்டபோது, அவர்களது செவிகளில் விழுந்த வெளிப்படுத்தல் எப்படிப்பட்ட ஒன்றாக இருந்தது! மக்கள் அவர்கள் அனுபவித்திருந்த வேதனைகளையும், பாடுகளையும், நம்பிக்கையற்ற மனமடிவையும், வேதனைமிக்க பகல்களையும், தூக்கமற்ற இரவுகளையும்பற்றி கதைகளைக் கூறிக்கொண்டிருந்தனர். நம்பிக்கையின் இறுதி ஒளிப்பொறி செத்துவிட்டதுபோல் காணப்பட்டபோது, கிறிஸ்து அவர்களை சுகப்படுத்தியிருந்தார். அதிகமான பாரத்தையுடையவனாயிருந்த ஒருவன், நான் ஒரு உதவியாளரைக் காண்கிறேன் என்று கூறினான். அவன் தேவனுடைய கிறிஸ்துவாக இருக்கிறார். அவரது சேவைக்காக எனது வாழ்க்கையை நான் அர்ப்பணிப்பேன் என்று கூறினான். பெற்றோர்கள் பிள்ளைகளை நோக்கி: அவர் உங்களுடைய உயிரைக் காப்பாற்றியிருக்கிறார். உங்கள் சத்தத்தை உயர்த்தி அவரைத் துதியுங்கள் என்றனர். பிள்ளைகள், வாலிபர்கள், தந்தையர்கள், அன்னையர்கள், நண்பர்கள், பார்வையாளர்கள் ஆகியோரின் குரல்கள் நன்றிகூறுதலிலும் துதிப்பதிலும் ஒன்றுகலந்தன. நம்பிக்கையும் மகிழ்ச்சியும் அவர்களது இருதயங்களை நிரப்பியிருந்தன. அவர்களது உள்ளங்களுக்குச் சமாதானம் வந்தது. ஆத்துமாவிலும் சரீரத்திலும் சுகமடைந்தவர்களாக ஈடுஇணையற்ற இயேசுவின் அன்பை எங்கும் அறிவித்துக்கொண்டு, அவர்கள் தங்களுடைய வீடுகளுக்குத் திரும்பிச்சென்றனர். (24)

இவ்வாறு சுகமடைந்தவர்கள் கிறிஸ்துவின் சிலுவைப்பாட்டின்போது, "அவனைச் சிலுவையில் அறையுங்கள்", "அவனைச் சிலுவையில் அறையுங்கள்" என்ற கீழ்த்தரமான மக்களின் கூட்டத்தில் இருக்கவில்லை. அவர்களது அனுதாபங்கள் இயேசுவின்மீதிருந்தன. ஏனெனில், அவர்கள் இயேசுவின் பெரும் அனுதாபத்தையும் ஆச்சரியமான வல்லமையையும் உணர்ந்திருந்தனர். அவர் அவர்களுடைய இரட்சகராக இருக்கிறார் என்பதை அவர்கள் அறிந்திருந்தனர். ஏனெனில், அவர் அவர்களுக்குச் சரீர ஆத்தும சுகம் அளித்திருந்தார். அவர்கள் அப்போஸ்தலர்களின் பிரசங்கங்களைக் கவனிக்கவே, அவர்களுடைய இருதயங்களுக்குள் தேவனுடைய வார்த்தைகளின் நுழைவு அவர்களுக்குப் புரிந்துகொள்ளும் தன்மையைத் தந்தது. அவர்கள் தேவனின் இரக்கத்தின் முகவர்களாகவும் அவரது இரட்சிப்பின் கருவிகளாகவும் ஆயினர். (25)

ஆலயத்திலிருந்து ஓடிச்சென்ற கூட்டம் சற்று நேரத்திற்குப்பின் மெதுவாகத் திரும்பி வந்தது. அவர்களைப்பற்றியிருந்த பயத்திலிருந்து அவர்கள் பகுதியாக நலமடைந்திருந்தபோதிலும், அவர்களது முகங்கள் தீர்மானமின்மையையும் கோழைத்தன்மையையும் வெளிப்படுத்தின. அவர்கள் இயேசுவின் ஆச்சரியமான செயல்களைக்கண்டு, மேசியாவைப்பற்றிய தீர்க்கதரிசனங்கள் அவருக்குள் நிறைவேறியிருந்தன என்பதைப்பற்றி உணர்த்தப்பட்டனர். தேவலயத்தைத் தீட்டுப்படுத்திய பாவத்தின் பெரும் அளவு, ஆசாரியர்களின்மீது தங்கியிருந்தது. அவர்களுடைய ஏற்பாட்டினால்தான் ஆலய வளாகம் ஒரு சந்தைகூடும் இடமாக மாறியிருந்தது. அவர்களுடன் ஒப்பிடும்போது, மக்கள் குற்றமில்லாதவர்களாக இருந்தனர். இயேசுவின் தெய்வீக அதிகாரத்தினால் அவர்கள் உணர்த்தப்பட்டனர். ஆனால் அவர்களுடன் இருந்த ஆசாரியர்கள் அதிபதிகள் ஆகியோரின் செல்வாக்கு மிகவும் உச்சநிலையில் இருந்தது. அவர்கள் கிறிஸ்துவின் ஊழியத்தை ஒரு புதிய கண்டுபிடிப்பு என்ற கருதி, ஆலய அதிகாரிகளால் அனுமதிக்கப்பட்டிருந்த உரிமைகளின்மீது குறுக்கிடும் அவரது உரிமையைப்பற்றி கேள்விகேட்டனர். அவர்களது வியாபாரத்திற்கு இடையூறு உண்டானதால், அவர்கள் எதிர்த்து, பரிசுத்த ஆவியானவர் கொண்டுவந்த உணர்த்துதல்களை அடங்கும்படிச் செய்தனர். (26)

அவரது ஊழியத்தை விசுவாசித்திருந்த பரிசுத்த வேதவாக்கியச் சுருள்கள் அவர்களது கரங்களில் இருந்திருந்தாலும், ஆலயத்தைச் சுத்திகரிக்கும் செயலில் மனித வல்லமைக்கும் அப்பாற்பட்ட வல்லமை வெளிக்காட்டப்பட்டிருந்ததை அவர்கள் அறிந்திருந்ததினாலும் மற்ற அனைவருக்கும்மேலாக ஆசாரியர்களும் அதிபதிகளும் இயேசுவில்

கர்த்தரால் அபிஷேகம் பண்ணப்பட்ட ஒருவரைக் கண்டிருந்திருக்கவேண்டும். தேவனுடைய ஆலயத்தின் பரிசுத்தத்தை மீட்டெடுக்க தேவனால் அனுப்பப்பட்ட ஒரு தீர்க்கதரிசியாக அவர் இருக்கவேண்டும் என்ற சிந்தனையிலிருந்து இயேசுவின்மீதிருந்த வெறுப்பின் காரணமாக, அவர்களால் விடுதலைபெற முடியவில்லை. அவர்களது இந்த பயத்தினால், மற்றவர்களின் அபிப்பிராயத்திற்குக் கீழ்ப்படிந்து அவரைப்பற்றிய மரியாதையுடன் "நீர் இவைகளைச் செய்கிறீரே, இதற்கு என்ன அடையாளத்தை எங்களுக்குக் காண்பிக்கிறீர்" என்று கேட்டார்கள். (27)

இயேசு அவர்களுக்கு ஒரு அடையாளத்தைக் காட்டியிருந்தார். அவர்களது இருதயங்களில் மின்னிய ஒளியினாலும், மேசியா செய்யவேண்டியிருந்த ஊழியங்களை அவர்களுக்குமுன் செய்ததினாலும், அவரது பண்பைப்பற்றித் திருப்தியுண்டாகக்கூடிய சாட்சியை அவர் கொடுத்திருந்தார். இப்பொழுது அவர்கள் ஒரு அடையாளத்தைக் கேட்டபோது, அவர்களது இருதயத்திலிருந்த விரோதத்தையும் அது அவர்களை எவ்வளவு தூரம் நடத்தும் என்பதையும் அவர் அறிந்திருக்கிறார் என்பதைச் சுட்டிக்காட்டும் வண்ணம் ஒரு உவமையால் அவர்களுக்குப் பதில் கொடுத்தார். "இந்த ஆலயத்தை இடித்துப் போடுங்கள், மூன்று நாளைக்குள்ளே இதை எழுப்புவேன்" என்றார். (28)

இந்த வார்த்தைகளில் அவர் இரண்டு காரியங்களைக் குறிப்பிட்டார். யூதர்களுடைய ஆலயத்தின் அழிவைக்குறித்து மட்டுமல்ல, தமது சொந்த மரணத்தைப்பற்றியும்—அதாவது தமது சரீரமாகிய ஆலயத்தின் அழிவைப்பற்றியும் கூறுகிறார். அதற்காக யூதர்கள் ஏற்கனவே சதிசெய்துகொண்டிருந்தனர். ஆசாரியர்களும் அதிபதிகளும் ஆலயத்திற்குத் திரும்பியபோது, அவர்கள் இயேசுவைக் கொலைசெய்ய முன்மொழிந்து அதன்மூலமாக, உபத்திரவஞ்செய்யக்கூடியவரை அவர்களிடமிருந்து நீக்க எண்ணினர். அப்படியிருந்தும், அவர்களது நோக்கத்தையே அவர்கள்முன் அவர் வைத்தபோது, அவரைப் புரிந்துகொள்ளவில்லை. அவர்கள் அவரது வார்த்தைகளை எருசலேம் தேவாலயத்துடன்மட்டும் பொருத்தியிருந்து: "இந்த ஆலயத்தைக் கட்ட நாற்பத்தாறு வருஷம் சென்றதே, நீர் இதை மூன்று நாளைக்குள்ளே எழுப்புவீரோ" என்று கோபத்துடன் வியந்து கூறினர். இப்பொழுது இயேசு அவர்களது நம்பிக்கையின்மையை நியாயமானதாக்கிவிட்டார் என்று உணர்ந்து அவரை புறக்கணிப்பதில் உறுதியாக நின்றனர். (29)

நம்பிக்கையில்லாத யூதர்களும் அவரது சீடர்களுங்கூட இந்த நேரத்தில் அவரது வார்த்தைகளைப் புரிந்துகொள்ளவேண்டுமென்று

அவர் திட்டஞ்செய்திருக்கவில்லை. அவரது எதிரிகளால் அவை தவறாக அர்த்தஞ்செய்யப்பட்டு, அவர்கள் அவருக்கு எதிராகத் திருப்பப்படும் என்பதை அவர் அறிந்திருந்தார். அவரைப்பற்றிய விசாரணையின்போது, அது ஒரு குற்றச்சாட்டாகக் கொண்டுவரப்பட்டு, கல்வாரியில் பரிகாசமாக அவர்மீதே வீசியெறியப்படும். ஆனால் இப்பொழுது அவைகளை அவர் சீடர்களுக்கு விளக்கிச்செல்வது அவரது பாடுகளைப்பற்றிய அறிவை அவர்களுக்கு உண்டுபண்ணி, அவர்களால் தாங்கிக்கொள்ள இயலாத துயரத்தை மேலும் அவர்களுக்குக் கொண்டுவரும். ஒரு விளக்கங்கொடுப்பது யூதர்களுக்கு அவர்களது தவறான எண்ணத்தையும், நம்பிக்கையின்மையையும்பற்றிய விளைவை காலத்திற்குமுன் வெளியிடுவதாக அமைந்துவிடும். வெட்டுகிறவனிடம் ஒரு ஆட்டுக்குட்டி நடத்தப்படுவதுபோல, அவர் நடத்தப்படும்வரை நேராகச் செல்லும் பாதையில் அவர்கள் ஏற்கனவே நுழைந்து பின்தொடர்ந்திருந்தனர். (30)

கிறிஸ்துவின் இந்த வார்த்தைகள் அவர்மீது நம்பிக்கை வைக்கக்கூடியவர்களுக்கென்று அவரால் கூறப்பட்டது. அவைகள் திரும்பவும் கூறப்படும் என்பதை அவர் அறிந்திருந்தார். பஸ்கா பண்டிகையின் காலத்தில் பேசப்பட்டதால் அவை ஆயிரக்கணக்கானவர்களது செவிகளுக்கு எட்டி, உலகின் சகல பகுதிகளுக்கும் எடுத்துச்செல்லப்படும். மரித்தோரிலிருந்து அவர் உயிர்த்தெழுந்தபின் அவைகளின் பொருள் தெளிவாக்கப்படும். அநேகருக்கு அவை அவரது தெய்வீகத்தைப்பற்றிய முடிவான சாட்சியாக இருக்கும். (31)

ஆவிக்குரிய இருளின் காரணமாக இயேசுவின் சீடர்களுங்கூட அந்தப் பாடங்களை அறிந்துகொள்ளுவதில் தவறியிருந்தனர். ஆனால் பின்னர் நிகழ்ந்த அநேக நிகழ்ச்சிகளினால் அந்தப் பாடங்கள் அவர்களுக்குத் தெளிவாக்கப்பட்டன. அவர் அவர்களுடன் நடந்திராதபோது, அவரது வார்த்தைகள் அவர்களுடைய இருதயங்களுக்குத் தாங்குதலாக இருந்தது. (32)

“இந்த ஆலயத்தை இடித்துப் போடுங்கள், மூன்று நாளைக்குள்ளே இதை எழுப்புவேன்” என்று எருசலேம் தேவாலயத்தைக்குறித்து இரட்சகர் கூறிய வார்த்தைகள் அதைக் கேட்டவர்கள் உணர்ந்ததைவிட அதிக ஆழமான பொருளையுடையதாக இருந்தது. அந்த ஆலயத்தின் உயிரோட்டமும் அஸ்திபாரமுமாகக் கிறிஸ்துவே இருந்தார். அதன் ஆராதனைகள் தேவகுமாரனின் தியாகபலியின் பொருளாக இருந்தன. கிறிஸ்துவின் மத்தியஸ்த ஊழியத்தின் குணத்தை சுட்டிக்காட்டுவதாக ஆசாரியத்துவம் ஏற்படுத்தப்பட்டிருந்தது. பலிசெலுத்தும் ஆராதனை

முறையின் திட்டம் முழுவதும் இந்த உலகத்தை மீட்கும்படியான இரட்சகரின் மரணத்தைக் காட்டும் முன்னடையாளமாக இருந்தது. இந்தப் பலிகள் எந்தப் பெரும் நிகழ்ச்சியை யுகங்கள் நெடுகிலும் சுட்டிக்காட்டியிருந்ததோ, அது நிகழ்ந்தபின், இந்த பலிகளினால் பயன் எதுவும் இருக்காது. (33)

இந்தச் சடங்காச்சார ஏற்பாடுகள் அனைத்தும் கிறிஸ்துவை அடையாளமாகக் கொண்டிருந்ததினால், அவரில்லாமல் அவைகளுக்கு மதிப்பு இல்லை. கிறிஸ்துவை மரணத்திற்கு ஒப்புக்கொடுத்தின்மூலமாக, யூதர்கள் கிறிஸ்துவை மரணத்துக்கு ஒப்புக்கொடுத்ததன்மூலமாக அவரைப் புறக்கணித்ததை முத்திரையிட்டபோது, ஆலயத்துக்கும் அதன் ஆராதனைகளுக்கும் பொருள் கொடுத்திருந்த அனைத்தையும் புறக்கணித்தனர். அதன் பரிசுத்தம் நீங்கிப்போயிருந்தது. அது அழிவிற்கென்று கீழே விழுந்துவிட்டது. அந்த நாளிலிருந்து பலிகளும் காணிக்கைகளும், அவை சம்பந்தப்பட்ட ஆராதனைகளும் பொருளற்றவைகளாகிவிட்டன. காயீனுடைய காணிக்கையைப்போல, அவை அவர்களுடைய இரட்சகரின்மீது விசுவாசத்தை விளக்கவில்லை. கிறிஸ்துவைக் கொலைசெய்ததின்மூலமாக யூதர்கள் உண்மையில் அவர்களுடைய ஆலயத்தை அழித்திருந்தனர். கிறிஸ்து சிலுவையில் அறையப்பட்டபொழுது, மாபெரும் இறுதியான தியாகபலி நிறைவேற்றப்பட்டுவிட்டது. பலிசெலுத்தும் முறைகள் நிரந்தரமாக முடிவடைந்துவிட்டன என்பதை அடையாளப்படுத்திக்காட்டும் வகையில் ஆலயத்தின் உள்ளிருந்த திரைச்சீலை மேலிருந்து கீழாக இரண்டாகக் கிழிந்தது! (34)

“மூன்று நாளைக்குள்ளே இதை எழுப்புவேன்.” இரட்சகரின் மரணத்தில் அந்தகார சக்திகள் மேற்கொண்டுவிட்டதுபோல் காணப்பட்டு, அவைகள் தங்களது வெற்றியினால் எக்களித்தன. ஆனால் யோசேப்பிடமிருந்து இரவலாகப் பெற்ற கல்லறையிலிருந்து இயேசு ஒரு வெற்றிவீரராக வெளிவந்தார். “துரைத்தனங்களையும் அதிகாரங்களையும் உரிந்துகொண்டு, வெளியரங்கமான கோலமாக்கி, அவைகளின்மேல் சிலுவையிலே வெற்றிசிறந்தார்”–கொலோசெயர் 2:15. அவரது மரணம், உயிர்த்தெழுதல் ஆகியவைகளின் புண்ணியத்தினால் “பரிசுத்த ஸ்தலத்திலும், மனுஷரால் அல்ல, கர்த்தரால் ஸ்தாபிக்கப்பட்ட மெய்யான கூடாரத்திலும்” (எபிரெயர் 8:2) அவர் ஊழியஞ்செய்பவர் ஆனார். யூதர்களுடைய ஆசரிப்புக்கூடாரத்தை மனிதர்கள் அமைத்தனர். யூதர்களுடைய ஆலயத்தை மனிதர்கள் கட்டினார்கள். ஆனால் பூலோக ஆசரிப்புக்கூடாரத்தின் மெய்ப்பொருளாயிருந்த பரலோக ஆசரிப்புக்கூடாரம் எந்த மனிதக் கட்டிடக்கலை நிபுணனாலும் கட்டப்படவில்லை. “இதோ, ஒரு

புருஷன், அவருடைய நாமம் கிளை என்னப்படும்; அவர் ... கர்த்தருடைய ஆலயத்தைக் கட்டுவார். அவரே கர்த்தருடைய ஆலயத்தைக் கட்டுவார்; அவர் மகிமைபொருந்தினவராய், தம்முடைய சிங்காசனத்தின்மேல் வீற்றிருந்து ஆளுகை செய்வார்; தம்முடைய சிங்காசனத்தின்மேல் ஆசாரியராயும் இருப்பார்"—சகரியா 6:12,13. (35)

கிறிஸ்துவைச் சுட்டிக்காட்டியிருந்த பலிமுறைகளான ஆராதனை கடந்துபோய்விட்டது. ஆனால் மனிதர்களின் கண்கள் உலகத்தின் பாவங்களுக்கான மெய்யான பலியை நோக்கித் திரும்பியுள்ளன. பூலோக ஆசாரியத்துவம் இல்லாமலாகிவிட்டது. ஆனால் நாம் "ஆபேலினுடைய இரத்தம் பேசினதைப்பார்க்கிலும் நன்மையானவைகளைப் பேசுகிற இரத்தமாகிய தெளிக்கப்படும் இரத்தத்தினிடத்திற்கும்" வந்துசேர்ந்தோம். "அதினாலே, முதலாங்கூடாரம் நிற்குமளவும் பரிசுத்த ஸ்தலத்திற்குப்போகிற மார்க்கம் இன்னும் வெளிப்படவில்லையென்று பரிசுத்த ஆவியானவர் தெரியப்படுத்தியிருக்கிறார்.... கிறிஸ்துவானவர் வரப்போகிற நன்மைகளுக்குரிய பிரதான ஆசாரியராய் வெளிப்பட்டு, கையினால் செய்யப்பட்டதாகிய இந்தச் சிருஷ்டிசம்பந்தமான கூடாரத்தின் வழியாக அல்ல, பெரிதும் உத்தமமுமான கூடாரத்தின் வழியாகவும்,... தம்முடைய சொந்த இரத்தத்தினாலும் ஒரேதரம் மகா பரிசுத்த ஸ்தலத்திலே பிரவேசித்து, நித்திய மீட்பை உண்டுபண்ணினார்" —எபிரெயர் 12:24; 9:8–12. (36)

"மேலும், தமது மூலமாய்த் தேவனிடத்தில் சேருகிறவர்களுக்காக வேண்டுதல் செய்யும்படிக்கு அவர் எப்பொழுதும் உயிரோடிருக்கிறவராகையால் அவர்களை முற்றுமுடிய இரட்சிக்க வல்லவராயுமிருக்கிறார்"—எபிரெயர் 7:25. ஊழியம்பூலோகத்திலுள்ள ஆலயத்திலிருந்துபரலோகத்திலுள்ள ஆலயத்திற்கு மாற்றப்பட்டாலும், அந்த ஆசரிப்புக்கூடாரமும் நமது பிரதான ஆசாரியரும் மனிதக் கண்களுக்குப் புலப்படாமலிருந்தாலும், சீடர்கள் அதனால் இழப்பை அனுபவிக்கவேண்டியதாக இல்லாதிருந்தது. அவர்களது ஒன்றுபடுதலில் இடைவெளியையும், இரட்சகரின் பிரசன்னமின்மையினால் வல்லமையின் குறைவையும் அவர்கள் உணரமாட்டார்கள். இயேசு பரலோகத்திலுள்ள ஆசரிப்புக்கூடாரத்தில் ஊழியம் செய்துகொண்டிருக்கும்போதே, தொடர்ந்து அவரது ஆவியினால் பூமியிலுள்ள அவரது சபையின் ஊழியக்காரராகவும் இருக்கிறார். புலன்கள் என்னும் கண்களிலிருந்து அவர் பின்னிழுக்கப்பட்டிருந்தபோதிலும், "உலகத்தின் முடிவுபரியந்தம் சகல நாட்களிலும் நான் உங்களுடனேகூட இருக்கிறேன்" (மத்தேயு 28:20) என்று அவர் பிரிந்து சென்றபோது கூறியிருந்த வாக்குத்தத்தம் நிறைவேறியுள்ளது. அவர் தமது வல்லமையைக் கீழ்நிலையிலுள்ள ஊழியக்காரர்களுக்குப்

பகிர்ந்துகொடுத்திருந்தாலும், வல்லமையை அருளும் அவரது பிரசன்னம் தொடர்ச்சியாக அவரது சபையில் உள்ளது. (37)

"இயேசு என்னும் மகா பிரதான ஆசாரியர் நமக்கு இருக்கிறபடியினால், நாம் பண்ணின அறிக்கையை உறுதியாய்ப் பற்றிக்கொண்டிருக்கக்கடவோம். நம்முடைய பலவீனங்களைக்குறித்துப் பரிதபிக்கக்கூடாத பிரதான ஆசாரியர் நமக்கிராமல், எல்லாவிதத்திலும் நம்மைப்போல் சோதிக்கப்பட்டும், பாவமில்லாதவராயிருக்கிற பிரதான ஆசாரியரே நமக்கிருக்கிறார். ஆதலால், நாம் இரக்கத்தைப் பெறவும், ஏற்ற சமயத்தில் சகாயஞ்செய்யுங் கிருபையை அடையவும், தைரியமாய்க் கிருபாசனத்தண்டையிலே சேரக்கடவோம்"– எபிரெயர் 4:14–16. (38) ★

# 17

# நிக்கொதேமு!

**யோவான் 3:1–17**

**(The Desire of Ages, pp. 167–177)**

யூத சமுதாயத்தின் மேலான நம்பிக்கைக்குப் பாத்திரவானாக மிக உயர்ந்த நிலையில் நிக்கொதேமு இருந்தான். அவன் மிகுந்த கல்வியறிவை உடையவனாகவும், அபூர்வமான தாலந்துகளை உடையவனாகவும், தேசியக்குழுவின் சிறப்புமிக்க அங்கத்தினனாகவும் இருந்தான். இயேசுவின் போதனையால் மற்றவர்களுடன் சேர்ந்து அவனும் திகைத்துப்போயிருந்தான். செல்வந்தனாகவும் கல்விமானாகவும் மேன்மைப்படுத்தப்பட்டிருந்தபோதிலும், தாழ்மையான நசரேயனால் அபூர்வமானவிதத்தில் ஈர்க்கப்பட்டிருந்தான். இரட்சகரின் உதட்டிலிருந்து விழுந்த போதனைகள் அவனிடத்தில் பெருமளவில் தாக்கத்தை உருவாக்கவே, இந்த ஆச்சரியமான சத்தியங்களைப்பற்றி அதிகமாக அறிந்துகொள்ள அவன் விரும்பினான். (1)

ஆலயத்தைச் சுத்திகரிக்கும் செயலில் கிறிஸ்து காட்டிய அதிகாரம், ஆசாரியர்கள் அதிபதிகள் ஆகியோரின் தீர்மானமான வெறுப்பை எழுப்பியிருந்தது. இந்த அந்நியனின் வல்லமையைக் கண்டு அவர்கள் பயந்தார்கள். இருண்ட பகுதியைச் சேர்ந்த ஒரு கலிலேயனிடமிருந்த அப்படிப்பட்ட தைரியம் அவர்களால் சகிக்கமுடியாததாக இருந்தது. அவரது பணியை ஒரு முடிவிற்கு கொண்டுவருவதில் அவர்கள் முனைப்புள்ளவர்களாக இருந்தனர். ஆனால் இந்த நோக்கத்தில் அனைவரும் இசைவுள்ளவர்களாக இருக்கவில்லை. சாட்சியாகக் காணக்கூடியவிதத்தில் தேவ ஆவியினால் நடத்தப்பட்டிருந்த ஒருவரை எதிர்க்கப் பயப்படுபவர்களாகச் சிலர் இருந்தனர். இஸ்ரவேல் தலைவர்களின் பாவங்களைக் கடிந்துகொண்டதற்காக தீர்க்கதரிசிகள் எந்தவிதமாகக் கொலைசெய்யப்பட்டிருந்தனர் என்பதை அவர்கள் நினைத்துக்கொண்டனர். தேவனிடமிருந்துள்ள கடிந்துகொள்ளுதல்களை புறக்கணித்த அவர்களது பிடிவாதத்தன்மைதான் ஒரு அஞ்ஞான நாட்டிற்கு அடிமைகளாகும்படியான விளைவை ஏற்படுத்தியிருந்தது என்பதை அவர்கள் அறிந்திருந்தனர். இயேசுவிற்கு எதிராகச் சதிசெய்வதில் ஆசாரியர்களும் அதிபதிகளும் தங்களது முற்பிதாக்களின் அடிச்சுவடுகளைப் பின்பற்றுவது

யூத சமுதாயத்தின்மீது புதிய அபாயங்களைக் கொண்டுவரும் என்று அவர்கள் பயந்தனர். நிக்கொதேமு இந்த உணர்வுகளில் பங்குள்ளவனாக இருந்தான். சனகரீம் சங்கத்தில் இயேசுவின் விஷயத்தில் எவ்விதமாக நடந்துகொள்ளவேண்டும் என்று ஆலோசிக்கப்பட்டபோது, எச்சரிக்கையும் நிதானமும் உள்ளவர்களாக இருக்கும்படி அவன் ஆலோசனை கூறினான். தேவனுடைய அதிகாரம் இயேசுவிற்குக் கொடுக்கப்பட்டிருந்தால் அவரது எச்சரிக்கைகளை புறக்கணிப்பது அபாயமுள்ளதாக இருக்குமென்று அவன் அவர்களிடம் வற்புறுத்தினான். ஆசாரியர்கள் இந்த ஆலோசனையை அவமதிக்கத் துணியாமல், தற்காலிகமாக இரட்சகருக்கு எதிரான வெளியரங்கமாக நடவடிக்கை எடுக்காமலிருந்தனர். (2)

இயேசுவின் பிரசங்கத்தைக் கேட்டதுமுதல் நிக்கொதேமு மேசியா சம்பந்தப்பட்ட தீர்க்கதரிசனங்களை ஆராய்வதில் அக்கறையுடன் ஈடுபட்டான். அவன் எந்த அளவிற்கு அதிகமாக ஆராய்ந்தானோ, அந்த அளவிற்கு அதிகமாக வரவேண்டியவராக இருந்த மேசியா இவர்தான் என்னும் உணர்த்துதல் அவனுக்குள் உண்டாயிற்று. இஸ்ரவேலில் இருந்த மற்ற அநேகருடன் சேர்ந்து, அவனும் ஆலயம் தீட்டுப்படுத்தப்படுவதை எண்ணித் துயரப்படுபவனாக இருந்தான். வாங்குபவர்களையும் விற்பவர்களையும் இயேசு துரத்திய காட்சிக்கு அவனும் ஒரு சாட்சியாக இருந்தான். ஆச்சரியமான தெய்வீக வல்லமையின் வெளிப்படுத்துதலை அவன் கண்டான். ஏழைகளை ஏற்று, நோயுற்றிருந்தவர்களை இரட்சகர் சுகப்படுத்துவதை அவன் கண்டான். அவர்களுடைய மகிழ்ச்சிமிக்க பார்வைகளை அவன் கண்டதுடன், அவர்களுடைய துதியின் சத்தத்தையும் அவன் கேட்டான். நாசரேத் ஊரானாகிய இயேசுதான் தேவனால் அனுப்பப்பட்டவர் என்பதை அவனால் சந்தேகிக்க முடியவில்லை. (3)

இயேசுவை நேர்முகமாகச் சந்திக்கவேண்டுமென்று பெரிதும் விரும்பி, ஆனால் அவரை வெளியரங்கமாகத் தேடுவதிலிருந்து பின்வாங்கினான். இதுவரை மிகக் குறைவாக அறியப்பட்டுள்ள ஒரு ஆசிரியர்மேல் அனுதாபப்பட்டு அவரை அறிக்கைசெய்வது, யூத அதிபதிகளில் ஒருவனாக இருப்பவனுக்கு மிகவும் கேவலமான ஒரு செயலாக இருக்கும். இந்தச் சந்திப்பு சனகரீம் சங்கத்தின் கவனத்திற்கு வந்தால், அது அவன்மீது அவர்களுடைய பரியாசத்தையும் எதிர்ப்பையும் கொண்டுவரும். அவன் பகிரங்கமாகச் சென்றால், மற்றவர்களும் அவனைப்பின்பற்றி அதைப்போலவே செல்லக்கூடும் என்ற ஒரு காரணத்தைச் சாக்காக வைத்து, ஒரு இரகசியமான நேர்முக சந்திப்பை நடத்த அவன் தீர்மானித்தான். இரட்சகரின் தங்குமிடம் ஒலிவமலையிலுள்ளது என்பதைக் குறிப்பாக விசாரித்தறிந்து, அந்த நகரம்

உறக்கத்தில் அமைதியடையும்வரை காத்திருந்து, அதன்பின் அவரைத் தேடிச் சென்றான். (4)

கிறிஸ்துவின் சமுகத்தில் நிக்கொதேமு ஒரு மாறுபட்ட பயத்தை உணர்ந்து, தனது அமைதியும் பெரிய மனிதத்தன்மையுமிக்க தோற்றத்தினால் அதை மறைக்க முயன்றான். "ரபீ, நீர் தேவனிடத்திலிருந்து வந்த போதகர் என்று அறிந்திருக்கிறோம், ஏனெனில் ஒருவனும் தன்னுடனே தேவன் இராவிட்டால் நீர் செய்கிற இப்படிப்பட்ட அற்புதங்களைச் செய்யமாட்டான்" என்றான். (யோவான் 3:2). கிறிஸ்துவிடமிருந்த ஒரு ஆசிரியர் என்னும் வகையிலிருந்த அபூர்வமான ஈவாகிய அவரது வல்லமையைப்பற்றி பேசி, அதனால் அவனது நேர்முக சந்திப்பின் பாதையை அமைக்கலாமென அவன் எண்ணினான். நம்பிக்கையை உணர்த்தவும் வரவழைக்கவுங்கூடிய வகையில் அவனது வார்த்தைகள் அமைக்கப்பட்டிருந்தன. அவன் இயேசுவை மேசியா என்று அறிக்கை செய்யாமல், தேவனால் அனுப்பட்ட ஒரு ஆசிரியர் என்றே கூறினான். (5)

இந்த வணக்கத்தை அங்கீகரிப்பதற்குப்பதிலாக பேசினவனின் ஆத்துமாவை வாசித்தறிபவரைப்போல இயேசு அவன்மீது தமது கண்களைப் பதித்தார். சத்தியத்தைத் தேடும் ஒருவனை தமக்குமுன் அவர் தமது எல்லையற்ற ஞானத்தினால் கண்டார். இந்தச் சந்திப்பின் நோக்கத்தை அவர் அறிந்து, அவரது பேச்சைக் கவனிப்பவனின் மனதில் ஏற்கனவே தங்கியிருக்கும் உணர்த்துதலை ஆழப்படுத்தும் வாஞ்சையுள்ள தீர்மானத்திற்கு அவர் நேராக வந்து, பக்திவிநயத்துடன், ஆனால் அன்புடன் "ஒருவன் மறுபடியும் பிறவாவிட்டால் தேவனுடைய ராஜ்யத்தைக் காணமாட்டான் என்று மெய்யாகவே மெய்யாகவே உனக்குச் சொல்லுகிறேன்" (யோவான் 3:3) என்றார். (6)

கர்த்தருடன் விவாதஞ்செய்யலாம் என்று எண்ணிக்கொண்டு நிக்கொதேமு அவரிடத்திற்கு வந்திருந்தான். ஆனால் இயேசு சத்தியத்தின் கொள்கைகளின் அஸ்திபாரத்தை அவன்முன் திறந்து வைத்தார். ஆவிக்குரியவிதத்தில் நீ மறுபடியும் பிறப்பதைவிட கொள்கைரீதியான ஒரு அறிவு உனக்கு அவசியமில்லை என்று நிக்கொதேமுவிடம் அவர் கூறினார். அறிந்துகொள்ளவேண்டும் என்ற உனது ஆவல் திருப்திப்படுத்தப்படவேண்டிய அவசியம் இல்லை. ஆனால் ஒரு புதிய இருயத்தைப் பெறவேண்டியதுதான் அவசியமாக உள்ளது. பரலோகக் காரியங்களைப் போற்றுவதற்குத் தகுதியடையுமுன் உன்னதத்திலிருந்து ஒரு புதிய ஜீவனை நீ பெற்றுக்கொள்ளவேண்டும். எல்லாவற்றையும் புதிதாக்கக்கூடிய இந்த மாற்றம் உண்டாகும்வரை உன்னை இரட்சிக்கும் என்னுடைய அதிகாரத்தையும்

ஊழியத்தையும்பற்றி நீ என்னுடன் விவாதிப்பது இரட்சிப்பு என்ற நல்ல பலனைக் கொண்டுவராது என்று அவர் கூறினார். (7)

மனந்திரும்புதலையும் ஞானஸ்நானத்தையும்பற்றியும், பரிசுத்த ஆவியினாலே ஞானஸ்நானம் கொடுக்கக்கூடிய ஒருவரைச் சுட்டிக்காட்டியும் யோவான் ஸ்நானகன் பிரசங்கித்ததை நிக்கொதேமு கேட்டிருந்தான். யூதர்களுக்கிடையில் ஆவிக்குரிய தன்மை இருக்கவில்லையென்பதையும், இனவெறியினாலும் உலக மேன்மைகளின்மீதுள்ள ஆசையினாலும் பெருமளவிற்கு அவர்கள் கட்டுப்படுத்தப்பட்டிருந்தனர் என்பதையும் அவன் தானாகவே உணர்ந்திருந்தான். மேசியாவின் வருகையின்போது, காரியங்கள் நன்றாக அமையும் என்று அவன் நம்பியிருந்தான். அப்படியிருந்தும் இருதயத்தை ஆராயும் யோவானின் தூது, பாவத்தைப்பற்றின உணர்த்துதலை அவனுக்குள் கொண்டுவரும் பணியில் தவறியிருந்தது. அவன் ஒரு தீவிரமான பரிசேயனாயிருந்து, அவனது நற்கிரியைகளின்மீது அவனாகவே பெருமைப்படுபவனாக இருந்தான். அவனது அனுதாபத்திற்காகவும் ஆலய ஆராதனையைப் பராமரிப்பதில் காட்டியிருந்த தாராளத்திற்காகவும் பரவலாக மதிக்கப்பட்டிருந்து, தேவனுடைய ஆதரவைப் பெற்றுவிட்டிருந்த பாதுகாப்பை உணர்ந்திருந்தான். அவனுடைய இந்த நிலைமையில் அவன் காண்பதைவிட அதிகத் தூய்மையான ஒரு இராஜ்யத்தைப்பற்றின எண்ணத்தில் அவன் திடுக்கிட்டான். (8)

மறுபடியும் பிறக்கவேண்டுமென்று இயேசு பயன்படுத்திய உருவகம் நிக்கொதேமுவிற்குப் பழக்கப்பட்டதாக இருக்கவில்லை. அஞ்ஞான மார்க்கத்திலிருந்து சமீபத்தில் இஸ்ரவேல் மதத்திற்கு மாறினவர்கள் இப்பொழுதுதான் பிறந்துள்ள குழந்தைகளுடன் அடிக்கடி ஒப்பிடப்பட்டிருந்தனர். எனவே கிறிஸ்துவின் வார்த்தைகளை எழுத்தின்படியான அர்த்தத்தில் கொள்ளக்கூடாது என்று அவன் உணர்ந்திருக்கவேண்டும். ஆனால் அவன் இஸ்ரவேலனாகப் பிறந்த புண்ணியத்தினால், தேவனுடைய இராஜ்யத்தில் அவனுக்கு ஒரு இடம் உண்டு என்று அவன் தனக்குள்ளாக நிச்சயமாகக் கருதியிருந்தான். அவனுக்குள் மாற்றம் தேவையில்லை என்று அவன் நினைத்திருந்தான். ஆதலால் இரட்சகரின் வார்த்தையில் அவனுக்கு ஆச்சரியம் உண்டாயிற்று. அவைகளை அவனுடன் நெருக்கமாக ஒப்பிட்டுக்காட்டினபோது அவன் எரிச்சலுள்ளவனானான். சத்தியத்தைத் தேடுபவரின்மீதிருந்த மேன்மைமிக்க வாஞ்சைக்கு எதிராக, அந்தப் பரிசேயனின் அகந்தை போரிட்டுக்கொண்டிருந்தது. அவன் இஸ்ரவேலின் ஒரு அதிபதியாக இருக்கிறான் என்னும் பதவியை மதிக்காமல், கிறிஸ்து எப்போதும்போல அவனிடம் பேசியதில் அவன் ஆச்சரியப்பட்டான். (9)

தனது கலங்காத உள்ளத்தின் உரத்தோடு ஆச்சரியமுடையவனாக முற்றிலும் முரண்பாடான நகைச்சுவை நிறைந்த வார்த்தைகளால் “ஒரு மனுஷன் முதிர்வயதாயிருக்கையில் எப்படிப் பிறப்பான்? அவன் தன் தாயின் கர்ப்பத்தில் இராண்டாந்தரம் பிரவேசித்துப் பிறக்கக் கூடுமோ” என்று கிறிஸ்துவுக்கு பதில் கொடுத்தான். பிளக்கின்ற தன்மையுடைய சத்தியம், மனச்சாட்சிக்குள் கொண்டுவந்தபோது, மற்ற அநேகரைப்போலவே அவனும், மாம்சத்திற்குரிய மனிதன் தேவனுடைய ஆவியின் காரியங்களைப் பெற்றுக்கொள்ளுவதில்லை என்னும் உண்மையை வெளிக்காட்டினான். ஆவிக்குரிய காரியங்களுக்குப் பதில்தரும் எதுவும் அவனுக்குள் இல்லை. ஏனெனில், ஆவிக்குரிய காரியங்கள் ஆவிக்குரியவைகளால் மட்டுமே அறிந்துகொள்ளப்படும். (10)

ஆனால் இரட்சகர் வாதத்தை வாதத்தினால் சந்திக்கவில்லை. பயபக்தியான, அமைதியான மேன்மையுடன், அவர் தமது கரங்களை உயர்த்தி, அதிகமான நிச்சயத்துடன்: “ஒருவன் ஜலத்தினாலும் ஆவியினாலும் பிறாவாவிட்டால் தேவனுடைய ராஜ்யத்தில் பிரவேசிக்கமாட்டான்” என்னும் சத்தியத்தை அவனுக்குள் அழுத்தினார். கிறிஸ்து இங்கு ஜலம் என்று குறிப்பிட்டது ஞானஸ்நானம் என்றும், ஆவியினால் பிறப்பது என்பதையும் தேவ ஆவியினால் இருயம் புதுப்பிக்கப்படுவது என்பதையும் நிக்கொதேமு அறிந்திருந்தான். யோவான் ஸ்நானகன் முன்னறிவித்திருந்த ஒருவரது சமுகத்தில் அவன் இருக்கிறான் என்பதில் அவன் மனநிறைவடைந்தான். (11)

“மாமிசத்தினால் பிறப்பது மாம்சமாயிருக்கும், ஆவியினால் பிறப்பது ஆவியாயிருக்கும்” என்று இயேசு தொடர்ந்தார். இயல்பிலேயே இருதயம் தீமை உள்ளதாக இருக்கிறது எனவே, “அசுத்தமானதிலிருந்து சுத்தமானதைப் பிறப்பிக்கத்தக்கவன் உண்டோ? ஒருவனுமில்லை”–யோபு 14:4. பாவஞ்செய்யும் ஆத்துமாவிற்கு ஏற்ற பரிகாரத்தை எந்த மனிதக் கண்டுபிடிப்புகளாலும் இதுவரை கண்டறியப்படவில்லை. “இருதயத்திலிருந்து பொல்லாத சிந்தனைகளும், கொலைபாதகங்களும், விபசாரங்களும், வேசித்தனங்களும், களவுகளும், பொய்ச்சாட்சிகளும், தூஷணங்களும் புறப்பட்டுவரும்”–மத்தேயு 15:19. (12)

இருதயத்திலிருந்து புறப்படும் நீர் தூய்மை அடைவதற்குமுன்பாக இருதயத்தின் ஊற்று தூய்மை அடையவேண்டும். நியாயப்பிரமாணத்தைக் கைக்கொள்ளும தனது சொந்தக் கிரியையின்மூலமாகப் பரலோகத்தை அடையலாம் என்று முயற்சிப்பவன் முடியாத ஒன்றிற்காக முயற்சிக்கிறான். வெறும் சட்டப்பூர்வமான மதத்தையும் தேவ பக்தியின் வேஷத்தையும்

உடையவனுக்குப் பாதுகாப்பு இல்லை. கிறிஸ்தவ வாழ்க்கை என்பது பழையதிலிருந்து உண்டாக்கும் மாறுதலாகவோ, அல்லது முன்னேற்றமாகவோ இராமல், மறுரூபமடையும் இயல்பில் உள்ளது. சுயத்திற்கும் பாவத்திற்கும் ஒட்டுமொத்தமாக மரித்த ஒரு புது வாழ்க்கையாக உள்ளது. பரிசுத்த ஆவியானவரின் பயன்தரும் செயலினால் மட்டுமே இந்த மாறுதலைக் கொண்டுவர முடியும். (13)

நிக்கொதேமு தொடர்ந்து குழப்பமுள்ளவனாகவே இருந்தான். இயேசு தான் கூறவிருக்கும் பொருளை விளக்குவதற்காகக் காற்றை உதாரணமாகப் பயன்படுத்தினார். "காற்றானது தனக்கு இஷ்டமான இடத்திலே வீசுகிறது, அதின் சத்தத்தைக் கேட்கிறாய், ஆகிலும் அது இன்ன இடத்திலிருந்து வருகிறதென்றும், இன்ன இடத்துக்குப் போகிறதென்றும் உனக்குத் தெரியாது; ஆவியினால் பிறந்தவனெவனோ அவனும் அப்படியே இருக்கிறான்" (யோவான் 3:8) என்றார். (14)

காற்று மரக்கிளைகளுக்கிடையிலுள்ள இலைகளையும் மலர்களையும் அசைத்து, உரசலின் சத்தத்தைக் கொண்டு செல்லுகிறது. ஆனால் அது காணமுடியாததாகவும், எங்கிருந்து வருகிறது எங்கு செல்லுகிறது என்று ஒரு மனிதனாலும் கூற முடியாது. இருதயத்தின்மீதுள்ள பரிசுத்தஆவியானவரின் செயலும் அப்படிப்பட்டதாகவே உள்ளது. காற்றின் அசைவுகளுக்கும் அதிகமாக அதைப்பற்றி விவரிக்க முடியாது. மனந்திரும்புதல் ஏற்படும்போது, அது உண்டான சரியான இடத்தையோ நேரத்தையோ சொல்லமுடியாமலிருக்கலாம். அல்லது மனந்திரும்ப நடத்தின அனைத்து சூழ்நிலைகளையும் தொடர்ந்து கண்டறிய முடியாதிருக்கலாம். அதற்காக அவன் மனம் மாறாதவன் என்று மெய்ப்பிக்கிறதில்லை. காற்றைப்போல காணமுடியாத ஒரு ஏதுகரத்தினால் கிறிஸ்து இருதயத்தின்மீது தொடர்ந்து கிரியை செய்துகொண்டிருக்கிறார். ஆத்துமாவைக் கிறிஸ்துவிடம் நடத்தும் உணர்த்துதல்கள் கொஞ்சம் கொஞ்சமாக ஒருவேளை அதைப் பெறுபவரின் ஞாபகமற்ற நிலையிலும் உண்டாகின்றன. அவரைப்பற்றித் தியானஞ்செய்வதினாலும் வேதவாக்கியங்களை வாசிப்பதின்மூலமாகவும் அல்லது ஜீவனுள்ள பிரசங்கியிடமிருந்து வார்த்தைகளைக் கேட்பதினாலும் இவைகளைப் பெற்றுக்கொள்ளலாம். ஆவியானது திடீரென்று அதிகமான ஒரு முறையீட்டுடன் நேரடியாக வரும்போது, ஆத்துமா தானாகவே மகிழ்ச்சியுடன் இயேசுவிடம் தன்னை சரணடையச் செய்கிறது. திடீரென்று உண்டான மாற்றம் என்று இது அநேகரால் அழைக்கப்படுகிறது. ஆனால் இது நீண்டகாலமாக தேவ ஆவியானவர் அவர்பால் இழுக்கும்படிச் செய்த முயற்சியினால் பொறுமையுடனும் பிரயாசத்துடனும் இயக்கப்பட்ட ஒரு செயலால் உண்டானதாகும். (15)

காற்று காணமுடியாததாக இருக்கும்போது, அது உண்டுபண்ணும் விளைவுகளைக் காணவும் உணரவுங்கூடியதாக உள்ளது. இதைப்போலவே ஆத்துமாவின்மீதான ஆவியின் செயலும், அதன் இரட்சிக்கும் வல்லமையைப் பெற்றுக்கொண்ட ஒருவரின் ஒவ்வொரு செயலினாலும் தானாகவே வெளிப்படும். தேவனுடைய ஆவி இருதயத்தை ஆட்கொள்ளும்போது, அது வாழ்க்கையை மறுரூபப்படுத்துகிறது. பாவகரமான சிந்தனைகள் தூரமாக விலக்கப்படுகின்றன. தீயசெயல்கள் விட்டுவிடப்படுகின்றன. அன்பு தாழ்மை சமாதானம் ஆகியவை, கோபம் பொறாமை சச்சரவு ஆகியவைகள் இருந்த இடத்தை அடைகின்றன. துயரம் இருந்த இடத்தை மகிழ்ச்சி நிரப்புகிறது. முகம் பரலோக ஒளியை பிரதிபலிக்கிறது. சுமையை நீக்கும் கரத்தையோ அல்லது உன்னதப் பிரகாரத்திலிருந்து கீழே இறங்கும் ஒளியையோ எந்த ஒருவரும் காண்பதில்லை. விசுவாசத்தினால் ஆத்துமா தேவனிடம் சரணடையும்போது, இந்த ஆசீர்வாதம் வருகிறது. அப்போது எந்த மனிதக் கண்ணினாலும் காணமுடியாத அந்த வல்லமை தேவ சாயலில் ஒருவனை உருவாக்குகிறது. (16)

மீட்பின் திட்டத்தின் செயலை வரம்பிற்குட்பட்ட மனிதனால் அறிந்துகொள்ளுவது முடியாத காரியம். அதன் தேவ இரகசியம் மனித அறிவைக் கடந்ததாக உள்ளது. இருந்தபோதும், மரணத்திலிருந்து ஜீவனுக்குள் கடக்கும் ஒருவன், அது தெய்வீக உண்மை என்பதை உணருகிறான். இங்கு ஒரு நேரடியான அனுபவத்தினால் மீட்பின் ஆரம்பத்தை நாம் அறியலாம். அதன் விளைவுகள் நித்திய காலங்களினூடாக எட்டுகின்றன. (17)

இயேசு பேசிக்கொண்டிருந்தபோது, அந்த அதிபதியின் மனதிற்குள் சத்தியத்தின் சில ஒளிக்கதிர்கள் நுழைந்தன. மேன்மைப்படுத்தி நெகிழச்செய்யும் பரிசுத்த ஆவியின் செல்வாக்கு அவனது இருதயத்தை உணர்த்தியது. அப்படியிருந்தும், இரட்சகரின் வார்த்தைகளை அவன் முழுமையாகப் புரிந்துகொள்ளவில்லை. மறுபிறப்பு எவ்வாறு நிறைவேறும் என்று உணர்ந்தானேதவிர அதன் அவசியம்பற்றி உணரவில்லை. இவைகள் எப்படி ஆகும்? என்று ஆச்சரியத்துடன் அவன் வினவினான்! (18)

“நீ இஸ்ரவேலில் போதகனாயிருந்தும் இவைகளை அறியாமலிருக்கிறாயா?” என்று இயேசு கேட்டார். மக்களுக்குக் கொடுக்கப்படவேண்டிய மதபோதனை எந்த ஒருவனிடம் ஒப்படைக்கப்பட்டுள்ளதோ, அவன் இவ்வளவு முக்கியமான சத்தியங்களைக்குறித்து நிச்சயமாகவே அறியாமையுள்ளவனாக இருக்கக்கூடாது. தெளிவான சத்தியத்தினால் பொறுமையற்றவனாவதற்குப்பதிலாக, தன்னுடைய ஆவிக்குரிய அறியாமை

யினால் நிக்கொதேமு தன்னைப்பற்றி ஒரு மிகத்தாழ்மையான எண்ணத்தை பெற்றிருக்கவேண்டும் என்ற பாடத்தை அவருடைய வார்த்தைகள் கொடுத்தன. என்றாலும், கிறிஸ்து பயபக்தியான மென்மையோடு பேசினார். அவரது பார்வையும் குரலும் அவரது வாஞ்சையோடுகூடிய அன்பை வெளிப்படுத்தியது. நிக்கொதேமு தனது தாழ்வான நிலையை நன்குணர்ந்ததினால் அதைக்குறித்து வருத்தமடையவில்லை. (19)

ஆனால் பூமியில் அவரது ஊழியம் உலகப்பிரகாரமான இராஜ்யத்திற்குப்பதிலாக ஆவிக்குரிய இராஜ்யத்தை ஏற்படுத்துவதாகும் என்று இயேசு விளக்கியபோது, அவர் கூறியதைக் கேட்டிருந்தவன் கலங்கினான். இதைக்கண்ட இயேசு: "பூமிக்கடுத்த காரியங்களை நான் உங்களுக்குச் சொல்லியும் நீங்கள் விசுவாசிக்கவில்லையே, பரமகாரியங்களை உங்களுக்குச் சொல்வேனானால் எப்படி விசுவாசிப்பீர்கள்?" என்றார். இருதயத்தின்மீது நிகழவிருக்கும் கிருபையின் பணியை விவரித்த கிறிஸ்துவின் போதனையை நிக்கொதேமுவினால் ஏற்றுக்கொள்ள முடியாமல் இருக்கும்போது, அவரது மகிமைமிக்க பரலோக இராஜ்யத்தின் தன்மையை அவனால் எப்படி அறிந்துகொள்ளமுடியும்? பூமியின்மீதுள்ள கிறிஸ்துவின் ஊழியத்தை அறிந்துகொள்ளமுடியாத அவனால், அவரது பரலோக ஊழியத்தை அறிந்துகொள்ள முடியாது. (20)

இயேசு தேவாலயத்திலிருந்து விரட்டியிருந்த யூதர்கள் தங்களை ஆபிரகாமின் சந்ததியினர் என்று உரிமைபாராட்டியிருந்தனர். ஆனால் அவரில் வெளிப்படுத்தப்பட்ட தேவ மகிமையைச் சகிக்கமுடியாததினால், இரட்சகரின் பிரசன்னத்திலிருந்து ஓடிப்போனார்கள். இவ்வாறாக, தேவாலயத்தில் நடைபெற்றிருந்த பரிசுத்தமான ஆராதனைகளில் தேவனுடைய கிருபையினால் பங்கு கொள்வதற்கு தாங்கள் பொருத்தமானவர்களாக இல்லை என்பதற்கு தாங்களே சான்றுகொடுத்தனர். பரிசுத்தமான ஒரு வெளித்தோற்றத்தைக் காக்க அவர்கள் வைராக்கியமாயிருந்தனர். ஆனால் இருதயத்தின் தூய்மையை புறக்கணித்திருந்தனர். பிரமாணத்தை எழுத்தின்படி பற்றிக்கொண்டிருந்த அதே நேரத்தில், தொடர்ச்சியாக அதன் ஆவிக்குரிய தன்மையை மீறிக்கொண்டிருந்தனர். கிறிஸ்து நிக்கொதேமுவிற்கு விளக்கிக்கொண்டிருந்த ஒரு புதிய சன்மார்க்கப் பிறப்பு, பாவத்திலிருந்து சுத்திகரிக்கப்படுதல், அறிவையும் பரிசுத்த தன்மையையும் புதுப்பித்தல் ஆகிய மாறுதல்கள்தான் அவர்களது பெருந்தேவையாக இருந்தது. (21)

மறுபடியும் பிறப்பதைக்குறித்த இஸ்ரவேலர்களின் குருட்டுத் தன்மைக்கான சாக்குப்போக்கிற்கு இடமிருக்கவில்லை. ஆவியின் ஏவுதலினால் ஏசாயா: "நாங்கள் அனைவரும் தீட்டானவர்கள்போல

இருக்கிறோம்; எங்களுடைய நீதிகளெல்லாம் அழுக்கான கந்தைபோல இருக்கிறது" என்றான். "தேவனே, சுத்த இருதயத்தை என்னிலே சிருஷ்டியும், நிலைவரமான ஆவியை என் உள்ளத்திலே புதுப்பியும்" (சங்கீதம் 51:10) என்று தாவீது ஜெபம்செய்திருந்தான். "உங்களுக்கு நவமான இருதயத்தைக் கொடுத்து, உங்கள் உள்ளத்திலே புதிதான ஆவியைக் கட்டளையிட்டு, கல்லான இருதயத்தை உங்கள் மாம்சத்திலிருந்து எடுத்துப்போட்டு, சதையான இருதயத்தை உங்களுக்குக் கொடுப்பேன். உங்கள் உள்ளத்திலே என் ஆவியை வைத்து, உங்களை என் கட்டளைகளில் நடக்கவும் என் நியாயங்களைக் கைக்கொள்ளவும் அவைகளின்படி செய்யவும்பண்ணுவேன்" (எசேக்கியேல் 36:26,27) என்று எசேக்கியேலின்மூலமாக வாக்குத்தத்தம் கொடுக்கப்பட்டிருந்தது. (22)

நிக்கொதேமு குழப்பம் மிகுந்த ஒரு மனதுடன் இந்த வேதவாக்கியங்களை வாசித்திருந்தான். ஆனால் இப்பொழுது அவைகளின் பொருளை அவன் அறியத்தொடங்கினான். பிரமாணத்திலுள்ள எழுத்தின்படிமட்டுமான வெளித்தோற்றமான வாழ்க்கையுடன் செயல்படுத்தப்படும் கடுமையான கீழ்ப்படிதல் ஒருவனையும் பரலோக இராஜ்யத்திற்குள் நுழையத் தகுதிப்படுத்தாது என்பதை அவன் கண்டான். மனிதர்களின் அனுமானத்தில் அவனது வாழ்க்கை நீதியும் மேன்மையும் உள்ளதாக இருந்தது; ஆனால் கிறிஸ்துவின் சமுகத்தில் அவனது இருதயம் தீட்டுள்ளதாகவும் அவனது வாழ்க்கை தூய்மையற்றதாகவும் இருந்ததை அவன் உணர்ந்தான். (23)

நிக்கொதேமு கிறிஸ்துவிடம் ஈர்க்கப்பட்டுக்கொண்டிருந்தான். புதிதாகப் பிறத்தல் என்பதைப்பற்றி இரட்சகர் அவனுக்கு விளக்கினபோது, இந்த மாறுதல் அவனுக்குள் உண்டாகவேண்டும் என்று ஏங்கினான். எந்த ஒரு கருவியினால் இது நிறைவேற்றப்படக்கூடும்? பேசப்படாத இந்தக் கேள்விக்கு இயேசு: "சர்ப்பமானது மோசேயினால் வனாந்தரத்திலே உயர்த்தப்பட்டதுபோல மனுஷகுமாரனும், தன்னை விசுவாசிக்கிறவன் எவனோ அவன் கெட்டுப்போகாமல் நித்தியஜீவனை அடையும்படிக்கு, உயர்த்தப்படவேண்டும்" என்று விடைபகர்ந்தார். (24)

நிக்கொதேமுவிற்குப் பழக்கமாயிருந்த அடித்தளம் இங்கு இருந்தது. இரட்சகரின் ஊழியத்தை உயர்த்தப்பட்ட சர்ப்பத்தின் அந்த அடையாளம் அவனுக்குத் தெளிவாகக் காட்டியிருந்தது. கொள்ளிவாய் சர்ப்பத்தின் கடியினால் இஸ்ரவேல் மக்கள் இறந்து கொண்டிருந்தபோது, ஒரு வெண்கல சர்ப்பத்தை உண்டுபண்ணி, அதை ஜனக்கூட்டத்திற்கு நடுவில் உயரத்தில் நாட்டும்படி தேவன் மோசேக்குக் கட்டளை கொடுத்தார். அதன்பின் அந்த சர்ப்பத்தைப் பார்க்கும் அனைவரும் உயிர்பிழைப்பார்கள்

என்ற வார்த்தை பாளயமெங்கும் அறிவிக்கப்பட்டது. அவர்களுக்கு உதவிசெய்யும் வல்லமை அந்த சர்ப்பத்திற்குள் இருக்கவில்லை என்பதை மக்கள் நன்கு அறிந்திருந்தனர். அது கிறிஸ்துவின் ஒரு அடையாளமாக இருந்தது. அழித்துக்கொண்டிருந்த சர்ப்பங்களின் சாயலில் உருவாக்கப்பட்ட ஒன்று அவர்களை நலம்பெறச்செய்வதற்காக உயர்த்தப்பட்டதுபோல, "பாவ மாம்சத்தின் சாயலாக" (ரோமர் 8:3) உண்டுபண்ணப்பட்ட ஒருவர் அவர்களுடைய மீட்பராக இருக்கவேண்டும். பலிஆராதனைகள் பாவத்திலிருந்து விடுதலைவழங்கும் புண்ணியத்தை தங்களில் கொண்டிருந்ததாக அநேக இஸ்ரவேலர்கள் கருதியிருந்தனர். வெண்கலத்தாலான சர்ப்பம் என்பதைவிட அதிகமான மதிப்பு எதுவும் அதில் இல்லை என்பதை தேவன் அவர்களுக்குப் போதிக்க விரும்பினார். இரட்சகரின்மீது அவர்கள் மனதை வைக்கும்படி அது நடத்தப்படவேண்டியதாக இருந்தது. அவர்களது காயங்களைச் சுகப்படுத்துவதற்கானாலும்சரி, அல்லது அவர்களது பாவங்களின் மன்னிப்பிற்கானாலும்சரி, அவர்கள் தேவனுடைய ஈவின்மீதுள்ள அவர்களது விசுவாசத்தைக் காட்டுவதையன்றி அவர்களுக்காக அவர்களால் செய்யக்கூடியது ஒன்றுமில்லை. நோக்கிப்பார்த்து உயிர்வாழவேண்டியவர்களாக அவர்கள் இருந்தனர். (25)

கொள்ளிவாய் சர்ப்பத்தினால் காக்கப்பட்டவர்கள் தாமதித்திருந் திருக்கலாம். அந்த வெண்கல அடையாளத்தில் என்ன சக்தி இருக்கிறதென்று அவர்கள் கேட்டிருந்திருக்கலாம். விஞ்ஞான ரீதியான ஒரு விளக்கத்தை அவர்கள் கோரியிருந்திருக்கலாம். ஆனால் எந்தவிதமான விளக்கமும் கொடுக்கப்பட்டிருக்கவில்லை. மோசேயின்மூலமாக கொடுக்கப்பட்ட தேவனுடைய வாத்தையை அவர்கள் ஏற்றுக்கொள்ளவேண்டும். பார்ப்பதற்கு மறுப்பதின் விளைவு மரணமாக இருந்தது. (26)

எதிர்வாதங்களின்மூலமாகவோ அல்லது வாக்குவாதங்களின் மூலமாகவோ ஆத்துமா ஒளிப்படுத்தப்படுவதில்லை. நாம் நோக்கிப்பார்த்து அதனால் உயிர்வாழவேண்டும். நிக்கொதேமு இந்தப் போதனையைப் பெற்று, அதைத் தன்னுடன் சுமந்துசென்றான். இப்பொழுது அவன் ஒரு தத்துவத்தைப்பற்றி விவாதஞ்செய்யவேண்டும் என்பதற்கென்றில்லாமல் ஆத்துமாவிற்கான ஜீவனைப் பெற்றுக்கொள்ளுவதற்காக ஒரு புதிய விதத்தில் வேதவாக்கியங்களை ஆராய்ந்தான். அவன் ஆவியானவருடைய நடத்துதலுக்குத் தன்னைக் கீழ்ப்படுத்தினபோது, பரலோக இராஜ்யத்தைக் காணத் தொடங்கினான். (27)

உயர்த்தப்பட்ட சர்ப்பத்தினால் நிக்கொதேமுவிற்குக் கொடுக்கப்பட்ட அதே சத்தியங்களைப் போதனைகளாகக் கற்றுக்கொள்ளவேண்டிய

ஆயிரக்கணக்கானவர்கள் இன்றும் உள்ளனர். தேவனுடைய ஆதரவைப் பெறுவதற்கான பரிந்துரையாக இருக்கும்படி கற்பனைகளுக்குக் கீழ்ப்படிவதை அவர்கள் சார்ந்திருக்கின்றனர். இயேசு தமது கிருபையினால் அவர்களை முற்றிலுமாக இரட்சிக்கிறார் என்பதை நம்பி, அவரை நோக்கும்படி அழைக்கப்படும்போது, இவைகள் எப்படி சாத்தியமாகும்? என்று அவர்கள் வியந்து கூறுகின்றனர். (28)

நிக்கொதேமு தன்னைப் பிரதான பாவி என்று ஒப்புக்கொண்டு, ஜீவனுக்குள் பிரவேசித்ததைப்போல நாமும் நம்மைப் பிரதான பாவிகள் என்று ஒப்புக்கொண்டு, அந்தப் பாதைக்குள் பிரவேசிக்க விருப்பமுள்ளவர்களாக இருக்கவேண்டும். “நாம் இரட்சிக்கப்படும்படிக்கு வானத்தின் கீழெங்கும், மனுஷர்களுக்குள்ளே அவருடைய நாமமேயல்லாமல் வேறொரு நாமம் கட்டளையிடப்படவும் இல்லை”—அப்போஸ்தலர் 4:12. விசுவாசத்தினால் நாம் தேவனுடைய கிருபையைப் பெறுகிறோம். ஆனால் விசுவாசம் நமது இரட்சகரல்ல; அது எதையும் சம்பாதிப்பதில்லை. பாவத்திற்கான பரிகாரமாக உள்ள கிறிஸ்துவின் புண்ணியங்களைப் பெறும்படி கிறிஸ்துவை நாம் பற்றிக்கொள்ளும் கரமாக அது உள்ளது. பரிசுத்த ஆவியானவரின் உதவியில்லாமல் நம்மால் மனந்திரும்பக்கூட முடியாது. “இஸ்ரவேலுக்கு மனந்திரும்புதலையும் பாவமன்னிப்பையும் அருளுகிறதற்காக, அவரை அதிபதியாகவும் இரட்சகராகவும் தமது வலதுகரத்தினாலே உயர்த்தினார்” (அப்போஸ்தலர் 5:31) என்று கிறிஸ்துவைப்பற்றி வேதவாக்கியம் கூறுகிறது. பாவமன்னிப்பைப்போலவே மனந்திரும்புதலும் உண்மையாகக் கிறிஸ்துவிடமிருந்துதான் வருகிறது. (29)

அப்படியானால் நாம் எப்படி இரட்சிக்கப்படவிருக்கிறோம்? வனாந்தரத்தில் மோசே வெண்கல சர்ப்பத்தை உயர்த்தியதைப்போல சர்ப்பத்தினால் வஞ்சிக்கப்பட்டுக் கடிக்கப்பட்ட ஒவ்வொருவனும் நோக்கிப்பார்த்துப் பிழைக்கும்படி மனிதகுமாரன் உயர்த்தப்பட்டிருக்கிறார். “இதோ, உலகத்தின் பாவத்தைச் சுமந்துதீர்க்கிற தேவ ஆட்டுக்குட்டி” – யோவான் 1:29. சிலுவையிலிருந்து வீசும் ஒளி, தேவனுடைய அன்பை வெளிப்படுத்துகிறது. அவரது அன்பு நம்மை அவரிடம் இழுக்கிறது. அந்த இழுப்பை நாம் தடுக்காவிட்டால், பாவங்களுக்காக அறையப்பட்ட இரட்சகரின் சிலுவையின் பாதத்திற்கு மனந்திரும்புதலுடன் நாமும் நடத்தப்படுவோம். அப்போது தேவ ஆவியானவர் நமது ஆத்துமாவிற்குள் விசுவாசத்தின்மூலமான ஒரு புதிய ஜீவனை உண்டுபண்ணுகிறார். எண்ணங்களும் வாஞ்சைகளும் கிறிஸ்துவின் சித்தத்திற்குக் கீழ்ப்படியும்படி கொண்டுவரப்படுகின்றது. அனைத்தையும் தமக்குக் கீழ்ப்படுத்த நமக்குள்

செயலாற்றுபவரால் அவரது சாயலில் நமது இருதயமும் மனமும் புதிதாகப் படைக்கப்படுகின்றது. அப்பொழுது தேவப்பிரமாணம் நமது மனதிலும் இருதயத்திலும் எழுதப்படவே, “என் தேவனே, உமக்குப் பிரியமானதைச் செய்ய விரும்புகிறேன்; உமது நியாயப்பிரமாணம் என் உள்ளத்திற்குள் இருக்கிறது” (சங்கீதம் 40:8) என்று கிறஸ்துவுடன் சேர்ந்து நம்மால் கூறமுடியும். (30)

நிக்கொதேமுவுடனுள்ள நேர்முகச் சந்திப்பில் இரட்சிப்பின் திட்டத்தையும் இந்த உலகத்திற்கான அவரது ஊழியத்தையும் இயேசு விவரித்தார். பரலோக இராஜ்யத்தைச் சுதந்தரித்துக்கொள்ளுபவர்கள் அனைவரின் இருதயங்களிலும் அவசியமாகச் செய்யப்படவேண்டிய முக்கிமான வேலையை முற்றிலுமாகவும் தெளிவாகவும் படிப்படியாகவும் அதற்குப்பின் அவர் நிகழ்த்திய பிரசங்கங்கள் எதிலும் அவர் விளக்கவில்லை. அவரது ஊழியத்தின் ஆரம்பத்திலேயே சனகரீம் சங்க அங்கத்தினன் ஒருவனுக்கு—மிக அதிகமாகப் பெற்றுக்கொள்ளக்கூடிய மனமுள்ள ஒருவனுக்கு, அவர் சத்தியத்தைத் திறந்து காட்டினார். ஆனால் இஸ்ரவேலின் தலைவர்கள் ஒளியை வரவேற்கவில்லை. நிக்கொதேமு அந்தச் சத்தியத்தை அவனது உள்ளத்தில் மறைத்து வைத்திருந்தான். மூன்று வருடங்களாக வெளியில் காணக்கூடிய விதத்தில் அது கொஞ்சங்கூடக் கனிகொடுக்கவில்லை. (31)

ஆனால் இயேசு தாம் விதைத்த நிலத்தின் தன்மையைப்பற்றி அறிமுகமுடையவராக இருந்தார். தனிமையான மலையின்மீதிருந்து ஒரு இரவில் கவனித்திருந்த அந்த ஒருவனுக்காகக் கூறப்பட்ட வார்த்தைகள் இழக்கப்படவில்லை. சிறிது காலத்திற்கு நிக்கொதேமு கிறிஸ்துவை வெளிப்படையாக அறிக்கை செய்யாமல் இருந்தான். ஆனால் அவன் அவரது வாழ்க்கையை விழிப்போடு கவனித்திருந்து, அவரது போதனையைப்பற்றிச் சிந்தித்திருந்தான். அவரை அழிக்கும்படி ஆசாரியர்கள் சனகரீம் சங்கத்தில் தீட்டிய சதித்திட்டங்களை அவன் திரும்பத்திரும்ப முறியடித்தான். கடைசியில் இயேசு சிலுவையின்மீது உயர்த்தப்பட்டபோது: “சர்ப்பமானது மோசேயினால் வனாந்தரத்திலே உயர்த்தப்பட்டதுபோல மனுஷகுமாரனும், தன்னை விசுவாசிக்கிறவன் எவனோ அவன் கெட்டுப்போகாமல் நித்தியஜீவனை அடையும்படிக்கு, உயர்த்தப்படவேண்டும்” என்று அவர் ஒலிவமலையின்மீது கொடுத்த போதனையை நினைவுகூர்ந்தான். இரகசியமான நேர்முகச் சந்திப்பிலிருந்துண்டான ஒளி, கல்வாரியின்மீதிருந்த சிலுவையை ஒளிப்படுத்தியது. நிக்கொதேமு இயேசுவில் உலக மீட்பரைக் கண்டான். (32)

கர்த்தர் பரலோகத்திற்கு எழுந்தருளிச் சென்றபின் உபத்திரவத்தினால் சீடர்கள் சிதறிப்போனபோது, நிக்கொதேமு தைரியமாக முன்னணிக்கு வந்தான். கிறிஸ்துவின் மரணத்தால் முற்றிலும் நீக்கப்படவேண்டும் என்று யூதர்கள் எதிர்பார்த்திருந்த, சிறு குழந்தையாக இருந்த சபையைத் தாங்குவதற்கு அவன் தனது செல்வத்தைப் பயன்படுத்தினான். மிகுந்த எச்சரிக்கையும் கேள்வி கேட்கக்கூடியவனுமாயிருந்த அவன், ஆபத்துக்காலத்தில் சீடர்களின் விசுவாசத்திற்குத் தைரியமூட்டிக்கொண்டு, சுவிசேஷத்தின் பணியை முன்கொண்டு செல்லுவதில் பொருளுதவிசெய்வதிலும் ஒருபாறையைப்போல உறுதிமிக்கவனாக இருந்தான். கடந்த காலத்தில் அவனிடம் மரியாதைக்குரிய பக்தியைக் காட்டியிருந்தவர்களால் அவன் பரிகசிக்கப்பட்டு உபத்திரவப்படுத்தப்பட்டான். உலகப்பொருள்களில் அவன் தரித்திரனானான்; இருப்பினும் அந்த இரவில் இயேசுவுடன் நிகழ்ந்த சந்திப்பினால் ஆரம்பமான விசுவாசத்தில் அவன் தடுமாறாதவனாக இருந்தான். (33)

அந்த நேர்முகச் சந்திப்பைப்பற்றி நிக்கொதேமு யோவானிற்கு விவரித்தான். இலட்சக்கணக்கானவர்களுக்குப் போதனையாக இருக்கும் வண்ணம் அது யோவானின் எழுதுகோலால் எழுதப்பட்டுள்ளது. வாழ்க்கைப் பாதையைப்பற்றி அறிந்துகொள்ள அந்த யூத அதிபதி மிகவும் தாழ்மையான கலிலேய போதகரிடத்திற்குச் சென்றபோது, அன்று நிழல்படிந்த அந்த மலையின்மீது அந்த பக்திவிநயமான இரவில் போதிக்கப்பட்ட மிகவும் முக்கியமான சத்தியங்கள் அன்று இருந்ததைப்போலவே இன்றும் மிகவும் முக்கியமானவையாக உள்ளன. (34) ★

# 18

# அவர் பெருகவேண்டும்!

**யோவான் 3:22–36**

**(The Desire of Ages, pp. 178–182)**

யூத ஜாதியின்மீதான யோவான் ஸ்நானகனின் செல்வாக்கு சிறிது காலத்திற்கு அதன் அதிபதிகள், ஆசாரியர், பிரபுக்கள் ஆகியோரின் செல்வாக்கைவிட மேலோங்கி நின்றிருந்தது. அவன் தன்னை மேசியாவென அறிவித்து, ரோம அரசிற்கு எதிராக ஒரு கலகத்தை எழுப்பியிருந்தால், ஆசாரியர்களும் மக்களும் அவனது தரத்திற்குக் கூட்டாக ஒன்று சேர்ந்திருப்பார்கள். உலகின் வெற்றிவீரர்களாக ஆகவேண்டுமென்ற ஆசையை ஈர்க்கும் ஒவ்வொரு ஆலோசனையையும் யோவான் ஸ்நானகனின்மீது வற்புறுத்துவதற்கு சாத்தான் ஆயத்தமாக இருந்தான். ஆனால் அவனது வல்லமையைப்பற்றி அவனுக்குமுன்னிருந்த சான்றினால் அந்த விலைமதிப்புமிக்க இலஞ்சத்தை ஏற்பதற்கு மறுத்துவிட்டான். அவன்மீது வைக்கப்பட்ட கவனத்தை அவன் மற்றொருவரின்மீது திருப்பிவிட்டான். (1)

இப்பொழுது திரளான மக்கள் தன்னிடமிருந்து இரட்சகருக்குத் திரும்புவதை அவன் கண்டான். அவனைச் சூழ்ந்திருந்த கூட்டம் நாளுக்குநாள் குறைந்தது. இயேசு எருசலேமிலிருந்து யோர்தான் பிரதேசத்திற்கு வந்தபோது, அவரது திருவாய்மொழியைக் கேட்க மக்கள் திரண்டனர். அவரது சீடர்களின் எண்ணிக்கை நாள்தோறும் அதிகரித்தது. ஞானஸ்நானம் பெற அநேகர் வந்தபோது கிறிஸ்து ஒருவருக்கும் ஞானஸ்நானம் கொடுக்காமல், அந்தச் சடங்கைச்செய்யும் அனுமதியை தமது சீடர்களுக்கு வழங்கினார். இவ்வாறாக, அவருக்கு முன்செல்பவனாக இருந்தவனின் ஊழியத்தின்மீது அவர் தமது முத்திரையைப் பதித்தார். ஆனால் யோவானின் சீடர்கள் இயேசுவின் பெருகிவரும் மக்கள் ஆதரவைப் பொறாமையுடன் நோக்கினர். அவரது பணியை விமர்சிக்க அவர்கள் முனைப்பாக நின்றிருந்தபோது, அதிக காலம் செல்லுமுன் ஒரு சந்தர்ப்பத்தைக் கண்டனர். அவர்களுக்கும் யூதர்களுக்குமிடையில் ஞானஸ்நானம் ஆத்துமாவைப் பாவத்திலிருந்து சுத்திகரிக்கிறதா என்ற கேள்வி எழுந்தபோது, இயேசுவின் ஞானஸ்நானம் யோவானின் ஞானஸ்நானத்திலிருந்து விசேஷமான மாற்றமுடையது

என்னும் நிலையில் அவர்கள் நின்றிருந்தனர். விரைவில் அவர்கள் ஞானஸ்நானத்தின்போது பயன்படுத்தும் வார்த்தைகளின் அமைப்பு சரியானதா என்று இயேசுவின் சீடர்களுடன் தர்க்கஞ்செய்து, இறுதியில் அவர்களது ஞானஸ்நானம் கொடுக்கும் உரிமையைப்பற்றியும் கேட்கத்தொடங்கினார்கள். (2)

"ரபீ, உம்முடனேகூட யோர்தானுக்கு அக்கரையில் ஒருவர் இருந்தாரே; அவரைக் குறித்து நீரும் சாட்சிகொடுத்தீரே, இதோ, அவர் ஞானஸ்நானங்கொடுக்கிறார்., எல்லாரும் அவரிடத்தில் போகிறார்கள்" என்று கூறிக்கொண்டு, சங்கடத்துடன் யோவானிடம் அவனது சீடர்கள் வந்தனர். இந்த வார்த்தைகளின்மூலமாக சாத்தான் யோவான்மீது சோதனையைக் கொண்டுவந்தான். யோவானின் ஊழியம் முடிவடையப்போவதுபோலக் காணப்பட்டிருந்தபோதிலும், கிறிஸ்துவின் ஊழியத்திற்கு இடையூறு செய்வது அவனுக்கு இன்னும் சாத்தியமானதாகவே இருந்தது. அவன் தன்மீது தானே அனுதாபமுடையவனாக இருந்து, தான் மேற்கொள்ளப்படுவதை எண்ணி வருத்தத்தையோ அல்லது மனச்சோர்வையோ வெளிக்காட்டியிருந்தால், பிரிவினையின் விதையை விதைத்து, விரோதத்தையும் பொறாமையையும் உற்சாகப்படுத்தி, சுவிசேஷத்தின் முன்னேற்றத்திற்கு வெகுவாக இடையூறு செய்திருந்திருப்பான். (3)

மனித இனத்திடம் பொதுவாக உள்ள தவறுகளையும் பலவீனங் களையும் கொண்டிருந்திருந்த யோவானை தெய்வீக அன்பின் தொடுதல் மறுரூபப்படுத்தியிருந்தது. சுயநலம், ஆசை, பொறாமை என்னும் நோய்க்கூறுகளுக்கும்மேலாக கறைபடாத ஒரு சுற்றுக்சூழலில் அவன் வாழ்ந்திருந்தான். அவனது சீடர்களின் அதிருப்தியில் அவன் அனுதாபம் காட்டாதவனாக இருந்தான். ஆனால் தனக்கும் மேசியாவிற்கும் உள்ள உறவை அவன் எப்படித் தெளிவாக அறிந்திருக்கிறான் என்பதையும், எந்த ஒருவருக்காக அவன் வழியை ஆயத்தப்படுத்தியிருந்தானோ அவரை எந்தவிதமாக மகிழ்ச்சியுடன் வரவேற்றான் என்பதையும் காட்டினான். (4)

"பரலோகத்திலிருந்து ஒருவனுக்குக் கொடுக்கப்பட்டாலொழிய, அவன் ஒன்றையும் பெற்றுக்கொள்ளமாட்டான்." நான் கிறிஸ்துவல்ல, அவருக்கு முன்னாக அனுப்பப்பட்டவன் என்று நான் சொன்னதற்கு நீங்களே சாட்சிகள். மணவாட்டியை உடையவனே மணவாளன்; மணவாளனுடைய தோழனோ, அருகே நின்று, அவருடைய சொல்லைக் கேட்கிறவனாய் மணவாளனுடைய சத்தத்தைக்குறித்து மிகவும் சந்தோஷப்படுகிறான்." யோவான் தன்னை இரண்டு திருமண கூட்டத்திற்கு இடையே நின்று திருமணத்திற்கு வழியை ஆயத்தப்பண்ணுகிற நண்பனாகக் காண்பித்தான்.

மணவாளன் மணவாட்டியைப் பெற்றுக்கொள்ளும்போது, நண்பனுடைய ஊழியம் முடிவடைகிறது. தான் முயற்சிசெய்த இருவரின் இணைப்பின் மகிழ்ச்சியினால் அவனும் மகிழ்ந்தான். அப்படியாக மக்களை இயேசுவிடம் வழிநடத்தும்படி யோவான் அழைக்கப்பட்டிருந்தான். இரட்சகரின் ஊழியம் வெற்றியடைவதைக் காண்பது அவனுக்கு மகிழ்ச்சியாக இருந்தது. "அவர் பெருகவும் நான் சிறுகவும் வேண்டும்" என்றான். (5)

யோவான் விசுவாசத்தினால் அவனது மீட்பரைக்கண்டு, தன்னைத் தாழ்த்துவதில் உச்சகட்டத்திற்கு எழுந்தான். மனிதர்கள் தன்னிடம் ஈர்க்கப்படவேண்டுமென்று அவன் வகைதேடாமல், தேவ ஆட்டுக்குட்டியின்மீது அவை தங்கும்வரை அவர்களது எண்ணங்களை உயரமாக—மிக உயரமாக உயர்த்த அவன் வகைதேடினான். அவன்தானே வனாந்திரத்திலே கூப்பிடுகிற ஒரு சத்தமாக—ஒரு குரலாகமட்டும் இருந்தான். சகலருடைய கண்களும் ஜீவ ஒளியினிடத்திற்குத் திரும்பும்படி இப்பொழுது அவன் தனது மௌனத்தையும் மறைவையும் மகிழ்வுடன் ஏற்றுக்கொண்டான். (6)

தேவனுடைய ஊழியக்காரர்களாக இருக்கும்படி கொடுக்கப்படும் அழைப்பிற்கு உண்மையுள்ளவர்களாக இருப்பவர் எவரும், தங்களுடைய மேன்மையைத் தேடமாட்டார்கள். கிறிஸ்துவின்மீதுள்ள அன்பு சுயத்தின்மீதுள்ள அன்பை விழுங்கிவிடும். நற்செய்தியின் அருமையான பணியை எவ்விதமான போட்டி மனப்பான்மையும் களங்கப்படுத்தாது. "இதோ, உலகத்தின் பாவத்தைச் சுமந்துதீர்க்கிற தேவ ஆட்டுக்குட்டி" (யோவான் 1:29) என்று யோவான் ஸ்நானகனைப்போல அறிவிப்பது தங்களுடைய பணியாக உள்ளது என்பதை அவர்கள் இனங்கண்டுகொள்ளுவார்கள். அவர்கள் இயேசுவை உயர்த்துவார்கள். அவருடன் சேர்ந்து மானுடமும் உயர்த்தப்படும். "நித்தியவாசியும் பரிசுத்தர் என்கிற நாமமுள்ளவருமாகிய மகத்துவமும் உன்னதமுமானவர் சொல்லுகிறார்: உன்னதத்திலும் பரிசுத்த ஸ்தலத்திலும் வாசம்பண்ணுகிற நான், பணிந்தவர்களின் ஆவியை உயிர்ப்பிக்கிறதற்கும், நொறுங்கினவர்களின் இருதயத்தை உயிர்ப்பிக்கிறதற்கும், நொறுங்குண்டு பணிந்த ஆவியுள்ளவர்களிடத்திலும் வாசம்பண்ணுகிறேன்"—ஏசாயா 57:15. (7)

சுயத்தை வெறுமையாக்கிவிட்ட அந்தத் தீர்க்கதரிசியின் ஆத்துமா தெய்வீக ஒளியினால் நிரப்பப்பட்டது. இரட்சகரின் மகிமையை அவன் சாட்சியாகக் கண்டபோது, அவனது வார்த்தைகள் நிக்கொதேமுவுடன் நிகழ்ந்த நேர்முக உரையாடலின்போது கிறிஸ்து கூறிய வார்த்தைகளின் (ஏறத்தாழ) மறுபகுதியாக இருந்தது. "உன்னதத்திலிருந்து வருகிறவர் எல்லாரிலும் மேலானவர்; பூமியிலிருந்துண்டானவன் பூமியின் தன்மையுள்ளவனாயிருந்து,

பூமிக்கடுத்தவைகளைப் பேசுகிறான்; பரலோகத்திலிருந்து வருகிறவர் எல்லாரிலும் மேலானவர். ... தேவனால் அனுப்பப்பட்டவர் தேவனுடைய வார்த்தைகளைப் பேசுகிறார்; தேவன் அவருக்குத் தமது ஆவியை அளவில்லாமல் கொடுத்திருக்கிறார்" என்று அவன் சொன்னான். "எனக்குச் சித்தமானதை நான் தேடாமல், என்னை அனுப்பின பிதாவுக்குச் சித்தமானதையே நான் தேடுகிறபடியால்" (யோவான் 5:30) என்று கிறிஸ்துவால் கூறமுடிந்தது. "நீர் நீதியை விரும்பி, அக்கிரமத்தை வெறுத்திருக்கிறீர்; ஆதலால், தேவனே, உம்முடைய தேவன் உமது தோழரைப் பார்க்கிலும் உம்மை ஆனந்த தைலத்தினால் அபிஷேகம்பண்ணினார்" (எபிரெயர் 1:9) என்று அவருக்கு அறிவிக்கப்பட்டுள்ளது. பிதாவாகிய தேவன் அவருக்குத் தமது ஆவியை அளவில்லாமல் கொடுத்திருக்கிறார். (8)

கிறிஸ்துவின் பின்னடியார்களுக்கும் அப்படியே உள்ளது. நாம் சுயத்தை வெறுமையாக்க விரும்பும்போதுமட்டுமே நம்மால் பரலோக ஒளியைப் பெற்றுக்கொள்ளமுடியும். நமது எண்ணங்கள் முழுவதையும் கிறிஸ்துவிற்குக் கீழ்ப்படியும்படிக் கொண்டுவருவதற்கு நாம் இணங்காதவரை, நம்மால் தேவனுடைய குணத்தை அறிந்துகொள்ள முடியாது. நாம் இணங்கி மேற்கூறப்பட்டபடி செய்யும்போது, அனைவருக்கும் பரிசுத்த ஆவி அளவில்லாதபடி அருளப்படுகிறது. "ஏனென்றால், தேவத்துவத்தின் பரிபூரணமெல்லாம் சரீரப்பிரகாரமாக அவருக்குள் வாசமாயிருக்கிறது.... அவருக்குள் நீங்கள் பரிபூரணமுள்ளவர்களாயிருக்கிறீர்கள்"–கொலோசெயர் 2:9,10. (9)

எல்லா மனிதர்களும் கிறிஸ்துவிடம் வருகின்றனர் என்று யோவானுடைய சீடர்கள் அறிவித்தனர். ஆனால் தெளிவான ஆழ்ந்த அறிவுடன் "அவருடைய சாட்சியை ஒருவனும் ஏற்றுக்கொள்ளுகிறதில்லை" என்று யோவான் கூறினான். ஆனால் "அவருடைய சாட்சியை ஏற்றுக்கொள்ளுகிறவன் தேவன் சத்தியமுள்ளவரென்று முத்திரைபோட்டு நிச்சயப்படுத்துகிறான்"–யோவான் 3:33. "குமாரனிடத்தில் விசுவாசமாயிருக்கிறவன் நித்தியஜீவனை உடையவனாயிருக்கிறான்." கிறிஸ்துவின் ஞானஸ்நானமா? அல்லது யோவானின் ஞானஸ்நானமா? எது பாவத்திலிருந்து சுத்திகரிக்கிறது என்பதுபற்றிய வாக்குவாதம் தேவையற்றது. கிறிஸ்துவின் கிருபைதான் ஆத்துமாவிற்கு ஜீவனைக் கொடுக்கிறது. கிறிஸ்து இல்லாத ஞானஸ்நானம் மற்ற சடங்காச்சாரங்களைப்போலவே பயனற்ற வடிவமுடையதாக இருக்கிறது. "குமாரனை விசுவாசியாதவனோ ஜீவனைக் காண்பதில்லை." (10)

யோவான் ஸ்நானகன் மிகுந்த மகிழ்ச்சியுடன் ஏற்றுக்கொண்ட கிறிஸ்துவின் ஊழியத்தின் வெற்றி, எருசலேமின் அதிகாரிகளுக்கும் தெரிவிக்கப்பட்டது. மக்கள் ஆலயத்தைவிட்டு வனாந்தரத்திற்குச் சென்று கூடுகின்ற யோவானின் செல்வாக்கைப்பற்றி ஆசாரியர்களும் ரபிமார்களும் பொறாமையுள்ளவர்களாக இருந்திருந்தனர். ஆனால் அதிகமான திரளானவர்களைக் கவரக்கூடிய இன்னும் அதிக வல்லமையையுடைய ஒருவர் இங்கிருந்தார். யோவானுடன் சேர்ந்து: "அவர் பெருகவும் நான் சிறுகவும் வேண்டும்" என்று கூறுவதற்கு அந்த இஸ்ரவேல் தலைவர்கள் விருப்பமில்லாதவர்களாக இருந்தனர். மக்களை அவர்களிடமிருந்து தூரமாக விலக்கிச்சென்றுகொண்டிருந்த அந்த ஊழியத்தை ஒரு முடிவிற்குக் கொண்டுவருவதற்கு ஒரு புதிய தீர்மானத்துடன் அவர்கள் எழுந்தனர். (11)

இயேசுவின் சீடர்களுக்கும் யோவானின் சீடர்களுக்குமிடையில் ஒரு பிரிவினையை உண்டுபண்ண சகலவிதமான முயற்சிகளையும் அவர்கள் செய்யாமல் விடமாட்டார்கள் என்பதை அவர் அறிந்திருந்தார். உலகத்திற்கு இதுவரைக் கொடுக்கப்பட்டிருந்த பெரும் தீர்க்கதரிசிகளில் ஒருவனை அடித்துச்செல்லும் புயல் உருவாகிக்கொண்டிருந்ததை அவர் அறிந்திருந்தார். தவறாகப் புரிந்துகொள்ளுதல், சச்சரவுகள் ஆகியவைகளுக்கான சகல சந்தர்ப்பங்களையும் தவிர்ப்பதற்காக, அவர் தமது ஊழியத்தை அமைதியுடன் நிறுத்தி, கலிலேயாவிற்குத் திரும்பிச் சென்றார். நாமுங்கூட சத்தியத்திற்கு உண்மையாக இருக்கும் அதேநேரத்தில், அதிருப்தியையும் தவறாக எண்ணுவதற்கு நடத்தப்படக்கூடியவைகளையும் தவிர்ப்பதற்கு முயலவேண்டும். ஏனெனில் அவை எழும்பும்போதெல்லாம் ஆத்துமாக்களுக்கு இழப்பை விளைவிக்கின்றன. பிரிவினைகளுக்குக் காரணமாக இருக்கக்கூடிய சூழ்நிலைகள் உண்டாகும்போதெல்லாம் நாம் இயேசுவின் மற்றும் யோவான் ஸ்நானகனின் உதாரணத்தைப் பின்பற்றவேண்டும். (12)

ஒரு சீர்திருத்தவாதியாகத் தலைமை தாங்கும்படி யோவான் அழைக்கப்பட்டிருந்தான். அதன் காரணமாக அவனது சீடர்கள் அவனது ஊழியத்தின் வெற்றி அவனது உழைப்பைச் சார்ந்துள்ளது என்று நினைத்து, தேவன் ஏற்படுத்தியிருக்கும் ஒரு கருவியாக மட்டுமே அவன் இருக்கிறான் என்னும் உண்மையை இழந்து, அவர்களது கவனத்தை யோவானின்மீது பதிக்கும் ஆபத்தில் இருந்தனர். கிறிஸ்தவ சபையின் அஸ்திபாரத்தை இடுவதற்கு யோவானுடைய ஊழியம் போதுமானதாக இருக்கவில்லை. அவன் தனது ஊழியத்தைச் செய்துமுடித்தபோது, அவனது சாட்சியினால் நிறைவேற்றித் தீர்க்கமுடியாத மற்றொரு ஊழியம் செய்யப்படவேண்டியதாக இருந்தது. அவனது சீடர்கள் அதைப் புரிந்துகொள்ளவில்லை. அந்த

ஊழியத்தை எடுத்து நடத்த கிறிஸ்து வருவதைக் கண்டபோது, அவர்கள் பொறாமையும் அதிருப்தியும் உள்ளவர்களாக இருந்தனர். (13)

அதே அபாயம் இப்பொழுதும் உள்ளது. ஒரு குறிப்பிட்ட பணியைச் செய்யும்படி தேவன் ஒரு மனிதனை அழைக்கிறார். அவன் அதை நடத்துவதற்குத் தகுதிவாய்ந்தவனாக இருந்து செய்யும்போது, அதை மேலும் கொண்டுசெல்லும்படி கர்த்தர் வேறொருவனைக் கொண்டுவருகிறார். ஆனால் யோவானின் சீடர்களைப்போலவே ஊழியத்தின் வெற்றி முதலாம் வேலைக்காரனிடந்தான் உள்ளது என்று அநேகர் நினைக்கின்றனர். தெய்வத்துவத்தின்மீது கவனம் வைப்பதற்குப்பதிலாக மனிதன்மீது கவனம் வைக்கப்படுகிறது. பொறாமை உள்ளே வரவே, தேவனுடைய ஊழியம் கெடுகிறது. இவ்வாறாக, தகுதியற்றவிதத்தில் சிறப்பிக்கப்பட்ட ஒருவர், சுயத்தின்மீதுள்ள நம்பிக்கையைப் போற்றும்படி சோதிக்கப்படுகிறார். அவர் தேவனைச் சார்ந்திருக்க வேண்டியதை உணருவதில்லை. மனித வழிகாட்டியைச் சார்ந்திருக்கும்படி மக்கள் போதிக்கப்பட்டு, இந்தவிதமாக அவர்கள் தவறுக்குள் விழுந்து, தேவனிடமிருந்து விலகிச்செல்ல நடத்தப்படுகின்றனர். (14)

தேவனுடைய பணி, மனிதனின் ரூபமும் மேலெழுத்தும் பொறிக்கப்பட்டதாக இருக்கக்கூடாது. வெற்வேறு காலங்களில் அவரது நோக்கத்தை சிறப்பான வகையில் நிறைவேற்றக்கூடிய மாறுபட்ட ஏதுகரங்களைக் கர்த்தர் உள்ளே கொண்டுவருவார். அவர் பெருகவும் நான் சிறுகவும் வேண்டும் என்று யோவான் ஸ்நானகனுடன் சேர்ந்து கூறும்படி சுயத்தைத் தாழ்மைப்படுத்துவதற்கு எவர்கள் விரும்புகிறார்களோ, அவர்கள் மகிழ்ச்சியுள்ளவர்களாக இருப்பார்கள். (15) ★

# 19

# யாக்கோபின் கிணற்றருகில்!

**யோவான் 4:1–42**

**(The Desire of Ages, pp. 183–195)**

இயேசு கலிலேயாவிற்குச் செல்லும் வழியில் சமாரியா வழியாகக் கடந்துசென்றார். அவர் அழகிய சீகேம் பள்ளத்தாக்கை அடைந்தபோது, மத்தியான வேளையாக இருந்தது. இந்தப் பள்ளத்தாக்கின் ஆரம்பத்தில் யாக்கோபின் கிணறு இருந்தது. பயணத்தினால் களைப்படைந்த அவர் அவரது சீடர்கள் உணவு வாங்கச்சென்றபோது, அங்கு இளைப்பாறுவதற்காக அமர்ந்தார். (1)

யூதர்களும் சமாரியர்களும் கசப்பு நிறைந்த எதிரிகளாக இருந்தனர். கூடுமானவரை சகலவிதமான கொடுக்கல் வாங்கல்களையும் ஒருவருக்கொருவர் தவிர்த்திருந்தனர். தேவைப்படும்போது, சமாரியர்களுடன் செய்யும் வியாபாரம் உண்மையில் சட்ட ஒப்புதல் பெற்றது என்று ரபிமார்களால் மதிப்பீடு செய்யப்பட்டிருந்தது. ஆனால் சகலவிதமான சமுதாய உறவுகளும் கண்டனஞ்செய்யப்பட்டிருந்தன. ஒரு யூதன் சமாரியனிடமிருந்து கைமாற்றுப் பெறமாட்டான். அன்பளிப்பைப் பெறமாட்டான். ஒரு துண்டு அப்பத்தையோ அல்லது ஒரு குவளை தண்ணீரையோகூடப் பெற்றுக்கொள்ளமாட்டான். சீடர்கள் உணவு வாங்குவதில் ஈடுபட்டதில் அந்த ஜாதியினரின் வழக்கத்திற்கு இசைவாகவே செயல்பட்டிருந்தனர். ஆனால் அதற்கு அப்பால் அவர்கள் செல்லவில்லை. சமாரியனிடமிருந்து ஒரு அனுகூலத்தையோ அல்லது ஏதாவது ஒருவகையில் ஆதாயத்தையோ கேட்பது என்பது, கிறிஸ்துவின் சீடர்களின் எண்ணத்திலுங்கூட உண்டாகவில்லை. (2)

இயேசு கிணற்றருகில் உட்கார்ந்தபோது, பசியாலும் தாகத்தாலும் சோர்வடைந்தவராக இருந்தார். காலையில் துவங்கிய பயணம் நீண்ட தூரமாக இருந்தது. இப்பொழுது நண்பகல் சூரியன் அவரைத் தகித்தது. புத்துணர்வை உண்டுபண்ணும் குளிர்ந்த நீர் அவருக்கு அருகில் இருந்ததினால் அவரது தாகம் அதிகரித்தது, ஆனால் அது அவருக்கு எட்டாததாக இருந்தது. ஏனென்றால் அவரிடம் வாளியும் கயிறும் இல்லை. அந்தக் கிணறும்

ஆழமாக இருந்தது. மனிதர்களுடைய துன்பம் அவருடையதாகவுமிருந்து, தண்ணீர்மொள்ள யாராவது ஒருவர் வருவதற்காக அவர் காத்திருந்தார். (3)

ஒரு சமாரியப்பெண் வந்து, அவர் இருப்பதைக் காணாதவளைப்போல அவளது குடத்தில் தண்ணீர் நிரப்பினாள். அவள் திரும்பிச்செல்லப் புறப்பட்டபோது, குடிப்பதற்குத் தண்ணீர் தரும்படி இயேசு கேட்டார். அப்படிப்பட்ட உதவியை கீழ்த்திசையிலுள்ள ஒருவரும் மறுக்கமாட்டார்கள். கீழ்த்திசையில் தண்ணீர் தேவனுடைய ஈவு என்று கூறப்பட்டிருந்தது. தாகமிக்க பயணி ஒருவருக்குத் தண்ணீர் கொடுப்பது பரிசுத்தமான ஒரு கடமை என எண்ணி, அதனால் அரேபியப் பாலைவனத்திலுள்ளவர்கள் அதைச் செய்வதற்காக தங்களது வழக்கத்திற்கும்மாறாக வலியச்சென்று உதவுபவர்களாக இருந்தனர். யூதர்களுக்கும் சமாரியர்களுக்குமிடையில் இருந்த வெறுப்பு இயேசுவிற்கு ஒரு அன்பான செயலைச் செய்வதிலிருந்து அந்த ஸ்திரீயைத் தடுத்திருந்தது. ஆனால் இருண்டிருந்த இந்த இருதயத்தின் திறவுகோலைக் காணமுயன்று, தெய்வ அன்பினால் உண்டாயிருந்த ஞானத்துடன் கொடுக்கப்படாத ஒரு நன்மையைக் கொடுக்கும்படிக் கேட்டார். இந்த அன்பளிப்பு புறக்கணிக்கப்பட்டிருந்திருக்கலாம். ஆனால் நம்பிக்கை நம்பிக்கையை விழிப்படையச் செய்கிறது. பரலோகத்தின் அரசர், சமுதாயத்தினின்று புறம்பாக்கப்பட்டிருந்த இந்த ஆத்துமாவினிடத்திற்கு வந்து, அவளுடைய கரத்திலிருந்து ஒரு சேவையைக் கேட்டார். சமுத்திரத்தை உண்டாக்கின ஒருவர், ஆழத்தின் நீரைக் கட்டுப்படுத்தும் ஒருவர், பூமியின் நீரூற்றுகளையும் வாய்கால்களையும் திறந்த ஒருவர், களைப்பினால் யாக்கோபின் கிணற்றருகில் இளைப்பாறி குடிப்பதற்காகக் கொஞ்சம் தண்ணீராகிய ஈவுக்காக, ஒரு அந்நிய ஸ்திரீயின் அன்பின் செயலைச் சார்ந்தவராக இருந்தார். (4)

இயேசு ஒரு யூதன் என்பதை அந்தப் பெண் கண்டாள். அவளது ஆச்சரியத்தினால் அவள் அவரது வேண்டுகோளை—உதவிசெய்ய வேண்டுமென்பதை மறந்து, ஆனால் அதற்கான காரணத்தை அறிவதற்கு முயன்றாள். "நீர் யூதனாயிருக்க, சமாரியா ஸ்திரீயாகிய என்னிடத்தில், தாகத்துக்குத்தா என்று எப்படிக் கேட்கலாம்" என்றாள். (5)

"இயேசு அவளுக்குப் பிரதியுத்தரமாக: நீ தேவனுடைய ஈவையும், தாகத்துக்குத்தா என்று உன்னிடத்தில் கேட்கிறவர் இன்னார் என்பதையும் அறிந்திருந்தாயானால், நீயே அவரிடத்தில் கேட்டிருப்பாய், அவர் உனக்கு ஜீவத்தண்ணீரைக் கொடுத்திருப்பார் என்றார்." நமது கால்களுக்குக் கீழ் இருக்கும் கிணற்றிலிருந்து கொஞ்சம் தண்ணீர்கேட்ட என்னுடைய சிறிய

உதவியை நினைத்து நீ ஆச்சரியப்படுகிறாய். நீ என்னிடத்தில் கேட்டிருந்தால் நான் உனக்கு நித்திய ஜீவதண்ணீரையே கொடுத்திருப்பேன் என்பது அதன் பொருளாக இருந்தது. (6)

கிறிஸ்துவின் வார்த்தைகளை அந்தப் பெண்ணால் புரிந்துகொள்ள முடியவில்லை. ஆனால் அவைகளின் பக்திவிநயமான முக்கியத்துவத்தை அவள் உணர்ந்தாள். அவளது அக்கரையற்ற கேலியாகப் பேசும் தன்மை மாறத் தொடங்கியது. இயேசு அவர்களுக்கு முன்னிருந்த கிணற்றைப் பற்றித்தான் பேசிக்கொண்டிருக்கிறார் என்று நினைத்து, “ஆண்டவரே, மொண்டுகொள்ள உம்மிடத்தில் பாத்திரமில்லையே, கிணறும் ஆழமாயிருக்கிறதே, பின்னை எங்கேயிருந்து உமக்கு ஜீவத்தண்ணீர் உண்டாகும்” என்று அவள் கூறினாள். நடந்து களைத்த தூசிபடிந்த ஒரு பிரயாணியைமட்டுமே அவள் தன்முன் கண்டாள். அவளது மனதில் அவரை மேன்மைமிக்க முற்பிதாவான யாக்கோபுடன் ஒப்பிட்டுப் பார்த்தாள். முற்பிதாக்களால் ஏற்படுத்தப்பட்ட அந்தக் கிணற்றுக்குச் சமமான வேறு எதுவும் இருக்கமுடியாது என்னும் இயல்பான உணர்வை அவள் போற்றியிருந்தாள். முற்பிதாக்களின் நம்பிக்கையாக இருந்த மேசியா தாமே அவளது பக்கத்திலிருந்தபோது, அவள் அவரை அறியாமல், பின்னான முற்பிதாக்களையும் பின்னான மேசியாவின் வருகையையும் நோக்கிக்கொண்டிருந்தாள். தாகமுள்ள எத்தனை ஆத்துமாக்கள் இன்றும் உயிரோட்டமுள்ள நீரூற்றருகே இருந்துகொண்டு, ஜீவ ஊற்றுகளுக்காக தொலைதூரத்தை நோக்கியவண்ணமிருக்கின்றன! “கிறிஸ்துவை இறங்கிவரப்பண்ணும்படி பரலோகத்துக்கு ஏறுகிறவன் யார்? அல்லது கிறிஸ்துவை மரித்தோரிலிருந்து ஏறிவரப்பண்ணும்படி பாதாளத்துக்கு இறங்குகிறவன் யார்? என்று என் உள்ளத்திலே சொல்லாதிருப்பாயாக என்று சொல்லுகிறதுமன்றி; இந்த வார்த்தை உனக்குச் சமீபமாய் உன் வாயிலும் உன் இருதயத்திலும் இருக்கிறது என்றும் சொல்லுகிறது; என்னவென்றால், கர்த்தராகிய இயேசுவை நீ உன் வாயினாலே அறிக்கையிட்டு, தேவன் அவரை மரித்தோரிலிருந்து எழுப்பினாரென்று உன் இருதயத்திலே விசுவாசித்தால் இரட்சிக்கப்படுவாய்”–ரோமர் 10:6–9. (7)

இயேசு அவரைப்பற்றின கேள்விக்கு உடனே பதில்கூறாமல், அமைதிமிக்க வாஞ்சையுடன்: “நான் கொடுக்கும் தண்ணீரைக் குடிக்கிறவனுக்கோ ஒருக்காலும் தாகமுண்டாகாது; நான் அவனுக்குக்கொடுக்கும் தண்ணீர் அவனுக்குள்ளே நித்திய ஜீவகாலமாய் ஊறுகிற நீரூற்றாயிருக்கும்” என்றார். (8)

தாகத்தைத் தணித்துக்கொள்ளுவதற்காக இந்த உலகத்திலுள்ள நீரூற்றை எவன் தேடுகிறானோ, அவன் மறுபடியும் தாகமுண்டாவதற்கென்றே

குடித்துக்கொண்டிருப்பான். மனிதர்கள் எங்கும் திருப்தியற்றவர்களாகவே உள்ளனர். ஆத்துமாவின் தேவைக்கு ஏதாவது கிடைக்கவேண்டும் என்னும் ஏக்கமுள்ளவர்களாக அவர்கள் உள்ளனர். இந்தத் தேவையை ஒரே ஒருவரால் மட்டுமே சந்திக்க இயலும். உலகத்தின் தேவையாக சகல ஜனங்களின் வாஞ்சையாக கிறிஸ்து இருக்கிறார். ஆத்துமாவைத் தூய்மைப்படுத்தி, புத்துணர்வடையச்செய்து, புஷ்டியாக்கக்கூடியதாக அவரால் மட்டுமே தரக்கூடிய ஜீவத்தண்ணீரைப்போன்றதாக தெய்வீகக் கிருபை உள்ளது. (9)

ஜீவத்தண்ணீரை சிறு அளவு பருகுதல் மட்டுமே சாதாரணமாக அதைப் பெற்றுக்கொள்ளுகிறவர்களுக்குப் போதுமானது என்னும் பாவனையை இயேசு கொடுக்கவில்லை. கிறிஸ்துவின் அன்பை ருசித்துப்பார்க்கும் ஒருவர், வேறொன்றையும் தேடாமல், அதன் தொடர்ச்சியான தேவைக்காக ஏங்குவார். செல்வங்கள், மேன்மைகள், உலகத்தின் இன்பங்கள் ஆகிய எதுவும் அவரைக் கவருவதில்லை. அவரது இருதயத்தின் தொடர்ச்சியான கதறல் “கிறிஸ்துவே நீர்மட்டும் எனது அதிகமான தேவையாக இருக்கிறீர்” என்றிருக்கும். அந்தத் தேவையை ஆத்துமாவிற்கு வெளிப்படுத்தும் ஒருவர் அதன் பசியையும் தாகத்தையும் திருப்திப்படுத்துவதற்காகக் காத்துக்கொண்டிருக்கிறார். ஒவ்வொரு மனித ஆதாரமும் சார்பும் தவறிவிடும்.அந்த நீர்த்தொட்டிகள் வெறுமையாகும். குளங்கள் உலர்ந்துவிடும். ஆனால் நமது மீட்பர் வற்றாத ஊற்றாக இருக்கிறார். நாம் குடித்து மறுபடியும் குடித்தாலும் எப்போதும் புதிய வழங்குதலைக் காணலாம். எந்த ஒருவனுக்குள் கிறிஸ்து வாழ்கிறாரோ, அவனுக்குள் ஆசீர்வாதத்தின் ஊற்று இருக்கிறது. நித்திய ஜீவனைத் தருகின்ற நீரைச் சுரக்கின்ற ஊற்றையுடைய கிணறாக அது உள்ளது. இந்த ஆதாரத்திலிருந்து அவனது தேவைகளனைத்திற்கும் போதுமான பலத்தையும் கிருபையையும் அவன் பெற்றுக்கொள்ளலாம். (10)

ஜீவத்தண்ணீரைப்பற்றி இயேசு கூறியபோது, அந்தப் பெண் ஆச்சரியமான கவனத்துடன் அவரைக் கவனித்தாள். அவர் அவளது விருப்பத்தைத் தூண்டி, அவர் பேசியிருந்த அந்த ஈவின்மீதுள்ள வாஞ்சையை எழுப்பினார். அவர் குறிப்பிட்டது யாக்கோபின் கிணற்று நீரையல்ல என்பதை அவள் உணர்ந்துகொண்டாள். ஏனென்றால் அந்த நீரை அவள் தொடர்ச்சியாகக் குடித்துக்கொண்டும் மறுபடியும் தாகமடைந்துகொண்டும் இருந்தாள். “ஆண்டவரே, எனக்குத் தாகமுண்டாகாமலும், நான் இங்கே மொண்டுகொள்ள வராமலுமிருக்கும்படி அந்தத் தண்ணீரை எனக்குத் தரவேண்டும்” என்றாள். (11)

இயேசு இப்பொழுது அவருடைய உரையாடலைத் திருப்பினார். அவர் கொடுக்க விரும்பினதை இந்த ஆத்துமா பெற்றுக்கொள்ளுமுன், அவர் அவளது பாவத்தையும் அவளது இரட்சகரையும் அறிந்துகொள்ளவேண்டும். அவர் அவளை நோக்கி: "நீ போய், உன் புருஷனை இங்கே அழைத்துக் கொண்டுவா" என்றார். இது தொடர்பான கேள்விகளனைத்தையும் தடுக்கலாம் என்னும் நம்பிக்கையில், அவள்: "எனக்குப் புருஷன் இல்லை" என்று கூறினாள். "எனக்குப் புருஷன் இல்லையென்று நீ சொன்னது சரிதான். எப்படியெனில், ஐந்து புருஷர் உனக்கிருந்தார்கள், இப்பொழுது உனக்கிருக்கிறவன் உனக்குப் புருஷனல்ல, இதை உள்ளபடி சொன்னாய்" என்று இயேசு தொடர்ந்தார். (12)

அதைக் கேட்ட அவள் நடுங்கினாள். அவள் எப்பொழுதும் மறைக்கவேண்டும் என்று நம்பியிருந்த அவளது வாழ்க்கையின் பக்கங்களை ஒரு புதிரான கரம் காட்சிக்குத் திருப்பிக்கொண்டிருந்தது. அவளது வாழ்க்கையின் இரகசியங்களை வாசித்தறியக்கூடிய அவர் யார்? நித்தியத்தைக்குறித்த எண்ணங்களும், மறைத்துவைக்கப்பட்டிருக்கும் அனைத்தையும் வெளிப்படுத்தும் எதிர்கால நியாயத்தீர்ப்பும் அவளது சிந்தனையில் வந்தன. அதன் வெளிச்சத்தில் மனச்சாட்சி நித்திரையிலிருந்து விழிப்படைந்தது. (13)

அவளால் எதை மறுக்க முடியாமலிருந்தாலும் வரவேற்கத்தக்கதாக இல்லாத அந்தக் காரியங்களைப்பற்றி பேசுவதைத் தவிர்க்க முயன்றாள். "ஆண்டவரே, நீர் தீர்க்கதரிசி என்று காண்கிறேன்" என்று ஆழ்ந்த பக்தியுடன் கூறினாள். அந்த மன உணர்த்துதலை மௌனப்படுத்தலாம் என்று எண்ணி, காரியங்களை அவள் மதசம்பந்தமான எதிர்வாதத்திற்குத் திருப்பினாள். இவர் உண்மையாகவே தீர்க்கதரிசியாக இருந்தால், நீண்டகாலமாக வாக்குவாதஞ்செய்யப்பட்டிருந்த இந்தக் காரியங்களைப்பற்றி அவளுக்கு அவரால் போதனை கொடுக்க முடியும். (14)

அவள் இந்த உரையாடலை எங்கு கொண்டுசெல்ல விரும்பினாளோ அந்தப் பக்கம் கொண்டுசெல்ல இயேசு பொறுமையுடன் அனுமதித்தார். அதேசமயத்தில், சத்தியத்தை அவளது இருதயத்திற்குள் மறுபடியும் கொண்டுவரும் ஒரு வாய்ப்பைக் கவனித்திருந்தார். "எங்கள் பிதாக்கள் இந்த மலையிலே தொழுதுகொண்டுவந்தார்கள்; நீங்கள் எருசலேமிலிருக்கிற ஸ்தலத்திலே தொழுதுகொள்ளவேண்டும் என்கிறீர்களே" என்ற கூறினாள். கெரிசீம் மலை பார்வைக்கு எட்டும் தூரத்தில் இருந்தது. அதில் தேவாலயம் இடிக்கப்பட்டு பலிபீடம் மட்டும் மீதியாக விட்டுவைக்கப்பட்டிருந்தது. யூதருக்கும் சமாரியருக்கும் இடையில் ஆராதனை செய்யும் இடம்

சச்சரவிற்குரியதாக இருந்தது. சமாரியர்களின் முற்பிதாக்களில் சிலர், ஒரு காலத்தில் இஸ்ரலேர்களாக இருந்திருந்தனர். ஆனால் அவர்களது பாவங்களின் காரணமாக, விக்கிரக ஆராதனை செய்யும் ஜாதியினரால் அவர்கள் மேற்கொள்ளப்பட கர்த்தர் விட்டுவிட்டார். தங்களது மதக்கொள்கையைக் கொஞ்சங்கொஞ்சமாகக் கறைப்படுத்தும் விக்கிரக ஆராதனைக்காரர்களுடன் அவர்கள் அநேக தலைமுறைகளாக இணைந்து கலந்திருந்தனர். அவர்களுடைய விக்கிரகங்கள் பிரபஞ்ச அதிபதியான ஜீவனுள்ள தேவனை ஞாபகப்படுத்துவதற்காக வைக்கப்பட்டிருந்தன என்று உண்மையில் கூறப்பட்டிருந்தாலும், அந்த மக்கள் அவைகளால் வார்ப்பிக்கப்பட்ட விக்கிரகங்களுக்கு பக்திகாட்டும்படி நடத்தப்பட்டிருந்தனர். (15)

எஸ்றாவின் காலத்தில் எருசலேம் தேவாலயம் திரும்ப எடுப்பித்துக் கட்டப்பட்டபோது, அதன் நிர்மாணப் பணியில் பங்குபெற சமாரியர்கள் விரும்பியிருந்தனர். இந்தச் சலுகை அவர்களுக்கு மறுக்கப்படவே, அந்த இரண்டு மக்கள் கூட்டத்துக்கிடையில் கசப்பான விரோதம் உண்டானது. சமாரியர்கள் கெரிசீம் மலையின்மீது ஒரு போட்டி ஆலயத்தைக் கட்டினர். அவர்கள் விக்கிரக ஆராதனையை முற்றிலுமாக மறுக்காமலிருந்தபோதிலும் மோசேயின் சடங்காச்சாரங்களின்படி அங்கு ஆராதனை செய்திருந்தனர். ஆனால் இயற்கையின் அழிவுகள் அவர்களுக்கு நேரிட்டன. அவர்களது ஆலயம் அவர்களுடைய விரோதிகளால் அழிக்கப்பட்டது. அவர்கள் ஒரு சாபத்தின் கீழ் இருப்பதுபோல் காணப்பட்டனர். ஆனாலும் அவர்கள் தொடர்ந்து அவர்களுடைய பாரம்பரியங்களையும் ஆராதனை முறைகளையும் பற்றிக் கொண்டிருந்தனர். எருசலேமிலிருந்த தேவாலயத்தை அவர்கள் தேவனுடைய வீடு என்று அறிக்கைசெய்யவும் யூதர்களின் கடவுள் கொள்கை அவர்களது மதத்தைவிட மேலானது என்று ஒப்புக்கொள்ளவும் மறுத்திருந்தனர். (16)

“நான் சொல்லுகிறதை நம்பு, நீங்கள் இந்த மலையிலும் எருசலேமிலும்மாத்திரமல்ல, எங்கும் பிதாவைத் தொழுதுகொள்ளுங் காலம் வருகிறது” என்று அந்த ஸ்திரீக்கு இயேசு பதில் கூறினார். சமாரியர்களுக்கு எதிரான யூதர்களின் தவறான எண்ணத்திலிருந்து இயேசு விடுபட்டவராக இருக்கிறார் என்பதை அவர் காட்டினார். இப்பொழுது யூதர்களுக்கு எதிராக சமாரியர்களிடமுள்ள தவறான எண்ணத்தை உடைத்து வீழ்த்துவதற்கு அவர் வகைதேடினார். சமாரியர்களின் விசுவாசம் விக்கிரக ஆராதனையினால் கறைப்படுத்தப்பட்டுள்ளது என்னும் உண்மையை அவர் குறிப்பிட்ட அதே நேரத்தில், மீட்பின் பெரும் சத்தியங்கள் யூதர்களிடம் ஒப்படைக்கப்பட்டிருக்கிறது என்பதையும், அவர்களுக்கிடையிலிருந்து மேசியா தோன்றவேண்டியவராக

இருந்தார் என்பதையும் அவர் அறிவித்தார். தேவனுடைய குணம் அவரது அரசின் கொள்கைகள் ஆகியவை தெளிவாக முன்வைக்கப்பட்டிருந்த பரிசுத்த எழுத்துக்களை உடையவர்களாக அவர்கள் இருந்தனர். தேவன் இயேசுவைப்பற்றின அறிவை யுதர்களுக்குக் கொடுத்திருந்ததினால் இயேசு தம்மையும் யூத இனத்தில் சேர்த்துக்கொண்டார். (17)

அவரது பேச்சைக் கேட்டிருந்தவர்களின் எண்ணங்களை அமைப்புகள், சடங்குகள், எதிர்வாதக் கேள்விகள் ஆகியவைகளுக்கு மேலாக உயர்த்த அவர் விரும்பினார். “உண்மையாய்த் தொழுதுகொள்ளுகிறவர்கள் பிதாவை ஆவியோடும் உண்மையோடும் தொழுதுகொள்ளுங்காலம் வரும், அது இப்பொழுதே வந்திருக்கிறது; தம்மைத் தொழுதுகொள்ளுகிறவர்கள் இப்படிப்பட்டவர்களாயிருக்கும்படி பிதாவானவர் விரும்புகிறார்.” “தேவன் ஆவியாயிருக்கிறார், அவரைத் தொழுதுகொள்ளுகிறவர்கள் ஆவியோடும் உண்மையோடும் அவரைத் தொழுதுகொள்ளவேண்டும்” என்று அவர் கூறினார். (18)

“ஒருவன் மறுபடியும் பிறவாவிட்டால் தேவனுடைய ராஜ்யத்தைக் காணமாட்டான் என்று மெய்யாகவே மெய்யாகவே உனக்குச் சொல்லுகிறேன்” (யோவான் 3:3) என்று இயேசு நிக்கொதேமுவிற்கு வெளிப்படுத்தியிருந்த அந்த சத்தியம் இங்கும் அறிவிக்கப்பட்டிருக்கிறது. ஒரு பரிசுத்த பார்வதத்தையோ அல்லது பரிசுத்த ஆலயத்தையோ தேடிச்செல்வதினால் மனிதர்கள் பரலோகத்துடன் தொடர்புகொள்ளக் கொண்டுவரப்படுவதில்லை. மதம் (கடவுள் கொள்கை) என்பது புறம்பான வடிவங்களுக்குள்ளும் சடங்குகளுக்குள்ளும் அடங்கி இருக்கத் தேவையில்லை. தேவனிடமிருந்து வரும் அந்த மார்க்கம் (மட்டுந்தான்) மனிதனை தேவனிடத்திற்கு நடத்தும். அவருக்குச் சரியானவிதத்தில் சேவை செய்வதற்கு நாம் தேவ ஆவியினால் பிறந்திருக்கவேண்டும். இது நாம் தேவனை அறியவும், அவரை நேசிக்கவுங்கூடிய ஒரு புதிய தகுதியைத் தந்து, நமது இருதயத்தைத் தூய்மைப்படுத்தி, மனதைப் புதுப்பிக்கும். அவரது கோரிக்கைகள் அனைத்திற்கும் கீழ்ப்படியும் விருப்பத்தை அது நமக்குத் தரும். இதுதான் உண்மையான ஆராதனை. அது பரிசுத்த ஆவியானவரின் செயலினால் உண்டாகும் கனியாக உள்ளது. உண்மையான ஒவ்வொரு ஜெபமும் ஆவியானவரால் இயற்றப்படுகிறது. அப்படிப்பட்ட ஜெபம் தேவனால் அங்கீகரிக்கப்படக்கூடியதாக இருக்கிறது. எங்கெல்லாம் ஒரு ஆத்துமா தேவனை நோக்கிச் செல்லுகிறதோ, ஆவியின் செயல் அங்கு வெளிக்காட்டப்பட்டு, தேவன்தாமே அந்த ஆத்துமாவிற்குத் தம்மை வெளிப்படுத்துவார். ஏனெனில் அப்படிப்பட்ட ஆராதனை செய்பவர்களைத்தான்

தேவன் தேடிக்கொண்டிருக்கிறார்.அவர்களை ஏற்று தமது குமாரர்களாகவும் குமாரத்திகளாகவும் ஆக்கிட அவர் காத்துக்கொண்டிருக்கிறார். (19)

அந்தப் பெண் இயேசுவுடன் பேசியபோது, அவரது வார்த்தைகளினால் அவள் உணர்த்தப்பட்டாள். அவள் தனது சொந்த மக்களின் ஆசாரியர்களிடமிருந்தோ அல்லது யூதர்களிடமிருந்தோ அவ்விதமான நுண்ணுணர்வுகளைப்பற்றின காரியங்களை ஒருபோதும் கேட்டிருந்திருக்கவில்லை. அவளது கடந்தகால வாழ்க்கை அவள்முன் பரப்பி வைக்கப்பட்டபோது, அவளது பெரும் தேவையைப்பற்றி அறிந்துகொள்ளும்படி உணர்த்தப்பட்டாள். சீகேமின் கிணற்று நீரினால் ஒருபோதும் திருப்தியடையமுடியாத அவளது ஆத்தும தாகத்தை அவள் உணர்ந்தாள். இதுவரை அவளது தொடர்பிற்குள் வந்த எதுவும் இப்படிப்பட்ட ஒரு உயர்வான தேவையை எழுப்பியிருந்திருக்கவில்லை. அவளது வாழ்க்கையின் இரகசியங்களை இயேசு வாசித்திருந்தார் என்னும் மனத்திருப்தியை அவளுக்குள் அவர் உண்டுபண்ணியிருந்தார். அப்படியிருந்தும் அவள்மீது இரக்கமும் அன்பும் உடைய அவளது நண்பராக அவர் இருந்ததை அவள் உணர்ந்தாள். அவரது சமுகத்தின் தூய்மை அவளது பாவங்களைக் கண்டனம் செய்திருந்தபோது, கண்டனஞ்செய்யும் எந்த வார்த்தையையும் அவர் கூறாமலிருந்து, அவளது ஆத்துமாவைப் புதுப்பிக்கும் அவரது கிருபையைப்பற்றி மட்டுமே அவளுக்குக் கூறியிருந்தார். அவரது குணத்தைப்பற்றிய ஒருவகையான உணர்த்துதலை அவள் அடைந்தாள். வெகுகாலமாக எதிர்பார்த்துக்கொண்டிருந்த மேசியாவாக ஏன் இவர் இருக்கக்கூடாது? என்னும் கேள்வி அவளது உள்ளத்தில் எழுந்தது. “கிறிஸ்து என்னப்படுகிற மேசியா வருகிறார் என்று அறிவேன், அவர் வரும்போது எல்லாவற்றையும் நமக்கு அறிவிப்பார் என்றாள்.” “அதற்கு இயேசு: உன்னுடனே பேசுகிற நானே அவர்” என்றார். (20)

இந்த வார்த்தைகளைக் கேட்டதும் அந்தப் பெண்ணின் இருதயத்தில் விசுவாசம் கிளர்ந்தெழுந்தது. தெய்வீகப் போதகரின் உதட்டிலிருந்துண்டான அறிவிப்பை அவள் ஏற்றுக்கொண்டாள். (21)

அந்தப் பெண் வரவேற்கும் உள்ளப்பாங்கை உடையவளாக இருந்தாள். மேன்மைமிக்க வெளிப்படுத்தலைப் பெற்றுக்கொள்ள அவள் ஆயத்தமாக இருந்தாள். ஏனெனில் அவள் வேத வாக்கியங்களின்மீது விருப்பமுள்ளவளாக இருக்கவே அதிகமான ஒளியைப் பெற்றுக்கொள்ளும்படி பரிசுத்த ஆவியானவர் அவளை ஆயத்தப்படுத்திக்கொண்டிருந்தார். “உன் தேவனாகிய கர்த்தர் என்னைப்போல ஒரு தீர்க்கதரிசியை உனக்காக உன் நடுவே உன் சகோதரரிலிருந்து எழும்பப்பண்ணுவார்; அவருக்குச்

செவிகொடுப்பீர்களாக” (உபாகமம் 18:15) என்னும் பழைய ஏற்பாட்டு வாக்குத்தத்தத்தை அவள் படித்திருந்தாள். இந்தத் தீர்க்கதரிசனத்தை அறிந்துகொள்ள அவள் ஏக்கமுடையவளாக இருந்தாள். ஒளி ஏற்கனவே அவளது உள்ளத்தில் பளிச்சிட்டுக்கொண்டிருந்தது. தாகமுள்ள ஒவ்வொரு ஆத்துமாவிற்கும் கிறிஸ்து கொடுக்கும் ஜீவத்தண்ணீராகிய ஆவிக்குரிய ஜீவன் அவளது இருதயத்தில் பொங்கியெழத் தொடங்கியிருந்தது. கர்த்தருடைய ஆவி அவளுடன் செயலாற்றியிருந்தது. (22)

அந்தப் பெண்ணிற்குக் கிறிஸ்துவால் கொடுக்கப்பட்ட தெளிவான அறிக்கை சுயநீதிமிக்க யூதர்களுக்குக் கொடுக்கப்படக்கூடியதாக இருக்கவில்லை. அவர்களிடம் பேசியபொழுது கிறிஸ்து அதிகமான கட்டுப்பாட்டோடு இருந்தார். யூதர்களுக்குக் கொடுக்கப்படாமல் நிறுத்திவைக்கப்பட்டிருந்த ஒன்று, இரகசியமாக வைக்கும்படி சீடர்களுக்குப் பின்னர் கட்டளையிடப்பட்டிருந்த ஒன்று, அவளுக்கு வெளிப்படுத்தப்பட்டது. அவளுக்குக் கிடைத்த கிருபையைப்பற்றின அறிவை அவள் பிறருடன் பகிர்ந்துகொள்ளப் பயன்படுத்துவாள் என்பதை இயேசு கண்டார். (23)

சீடர்கள் சென்ற வேலையிலிருந்து திரும்பிவந்தபோது, அவர்களது ஆண்டவர் ஒரு பெண்ணுடன் பேசிக்கொண்டிருப்பதைக் கண்டு வியந்தனர். அவர் விரும்பிய புத்துணர்வுதரும் நீரை அவர் பருகவில்லை. அவரது சீடர்கள் கொண்டுவந்திருந்த உணவை உண்பதற்காக அவர் நிற்கவில்லை. அந்தப் பெண் சென்றபின் அவரை உணவருந்தும்படி சீடர்கள் வேண்டினர். அவர் மெய்மறந்த தியானத்தில் ஈடுபட்டு மௌனமாக இருப்பதை அவர்கள் கண்டனர். அவரது முகம் ஒளிவீசவே, பரலோகத்துடன் அவர் கொண்டிருந்த தொடர்பைத் தடுக்க அவர்கள் பயந்தனர். அவர் சோர்ந்து இருக்கிறார் என்பதை அறிந்த அவர்கள் சரீரப்பிரகாரமான அவரது தேவைகளைப்பற்றி அவருக்கு நினைப்பூட்ட வேண்டியது அவர்களது கடமை என்று எண்ணினர். அவர்களுடைய அன்புமிக்க வாஞ்சையை இயேசு அறிந்து, “நீங்கள் அறியாத ஒரு போஜனம் எனக்கு உண்டு” என்றார். (24)

அவருக்கு யார் உணவை கொண்டுவந்திருக்கக்கூடும் என்று சீடர்கள் வியந்தனர். “நான் என்னை அனுப்பினவருடைய சித்தத்தின்படி செய்து அவருடைய கிரியையை முடிப்பதே என்னுடைய போஜனமாயிருக்கிறது” (யோவான் 4:34) என்று அவர் விளக்கினார். இயேசுவின் வார்த்தைகள் அந்த ஸ்திரீயின் மனச்சாட்சியை எழுப்பியிருந்ததால் அவர் மகிழ்ச்சியடைந்தார். ஜீவத்தண்ணீரை அவள் பருகுவதை கண்டபோது, அவரது பசியும் தாகமும் திருப்தியடைந்தது. பரலோகத்தை விட்டுவந்த இரட்சகரை, அவரது இந்த ஊழியத்தின் நிறைவேறுதல் பலப்படுத்தி, மானிடத் தேவைகளில்

இருந்த அவரை உயர்த்தியது. சத்தியத்தின்மீது பசியும் தாகமும் உடைய ஒரு ஆத்துமாவிற்காக ஊழியஞ்செய்வது அவருக்கு புசிப்பதையும் குடிப்பதையும்விட நன்றியறிதல்மிக்கதாக இருந்தது. அவருக்கு அது ஒரு ஆறுதலாகவும் புத்துணர்சியைத் தருவதாகவும் இருந்தது. இரக்கத்துடன் அன்பு செய்தலே அவரது ஆத்துமாவின் ஜீவனாக இருந்தது. (25)

நமது இரட்சகர் அடையாளங்கண்டுகொள்ளப்பட வேண்டும் என்னும் தாகமுடையவராக இருக்கிறார். அவர் தமது சொந்த இரத்தத்தினால் விலைக்கு வாங்கியவர்களின் அனுதாபத்திற்காகவும் அன்புக்காவும் அவர் பசியுள்ளவராக இருக்கிறார். அவர்கள் அவரிடம் வந்து ஜீவனைப் பெற்றுக்கொள்ளவேண்டும் என்று சொல்லிமுடியாத வாஞ்சையுடன் ஏங்கிக்கொண்டிருக்கிறார். அறிவு உதயமாகியிருக்கிறது என்பதை வெளிப்படுத்தும்வண்ணம் தனது சிறு குழந்தை தன்னை அடையாளங்காணத் தொடங்கியிருக்கிறது எனக்கூறும் அதன் புன்சிரிப்பைத் தாய் கவனித்திருப்பதுபோல, கிறிஸ்துவும் ஆத்துமாவில் ஆவிக்குரிய வாழ்க்கை ஆரம்பமாகியிருக்கிறது என்பதைக் காட்டும் நன்றிமிக்க அன்பின் வெளிப்படுத்தலைக் காண்பதற்காகக் காத்திருக்கிறார். (26)

அந்தப் பெண் கிறிஸ்துவின் வார்த்தைகளைக் கவனித்தபோது, மகிழ்ச்சியால் நிரப்பப்பட்டாள். ஆச்சரியமான அந்த வெளிப்படுத்தல் ஏறத்தாழ கட்டுக்கடங்காததாக இருந்தது. தனது தண்ணீர் குடத்தை அங்கேயே விட்டுவிட்டு மற்றவர்களுக்கு அந்தத் தூதை எடுத்துச்செல்ல பட்டணத்திற்குள் திரும்பினாள். (27)

அவள் ஏன் சென்றாள் என்பதை இயேசு அறிந்திருந்தார். அவரது வார்த்தைகளின் விளைவினை அவள் விட்டுச்சென்ற தண்ணீர்குடம் தவறாமல் கூறியிருந்தது. ஜீவத்தண்ணீரைப் பெற்றுக்கொள்ள வேண்டும் என்ற அவளது ஆத்துமாவின் அக்கரையுள்ள விருப்பமாக இருந்தது. கிணற்றிற்கு தான் வந்த வேலையை மறந்துவிட்டாள். இரட்சகருக்குக் கொடுக்க விரும்பியிருந்த தண்ணீரையும், இரட்சகரின் தாகத்தையும் அவள் மறந்தாள். மகிழ்ச்சி பொங்கின இருதயத்துடன் தான் பெற்றுக்கொண்ட ஒளியை மற்றவர்களுக்குப் பகிர்ந்தளிக்க அவள் தனது பாதையில் விரைந்தாள். (28)

“நான் செய்த எல்லாவற்றையும் ஒரு மனுஷன் எனக்குச் சொன்னார்; அவரை வந்து பாருங்கள்; அவர் கிறிஸ்துதானோ” என்று அந்த ஊர் மக்களிடம் அவள் கூறினாள். அவர் கிறிஸ்துதானோ என்ற அவளது வார்த்தைகள் அவர்களது இருதயங்களைத் தொட்டன. அவளது முகத்தில்

ஒரு புதிய தோற்றத்தின் வெளிக்காட்டலும், அவளது முழுத்தோற்றத்திலும் மாறுதலும் இருந்தது. அவர்கள் இயேசுவைக் காண விருப்பமுள்ளவர்களாக இருந்தனர். "அப்பொழுது அவர்கள் ஊரிலிருந்து புறப்பட்டு அவரிடத்தில் வந்தார்கள்." (29)

இயேசு இன்னமும் அந்தக் கிணற்றினருகில் உட்கார்ந்திருந்தபோது, அவருக்கு முன்னிருந்த வயல்வெளிகளில் பயிர்கள் வளர்ந்திருப்பதையும் அவைகளின் இளம் பச்சைத் தழைகள் பொன்னிறமான சூரிய ஒளியால் தொடப்பட்டிருப்பதையும் கண்டார். இந்தக் காட்சியை சீடர்களுக்குச் சுட்டிக்காட்டி இதை ஒரு உருவகமாகப் பயன்படுத்தி "அறுப்புக்காலம் வருகிறதற்கு இன்னும் நாலுமாதம் செல்லும் என்று நீங்கள் சொல்லுகிறதில்லையா? இதோ, வயல்நிலங்கள் இப்பொழுதே அறுப்புக்கு விளைந்திருக்கிறதென்று உங்கள் கண்களை ஏறெடுத்துப்பாருங்கள்" என்று அவர்களுக்குக் கூறினார். அப்போது அந்தக் கிணற்றிற்கு வந்துகொண்டிருந்த கூட்டத்தைக் கண்டார். தானிய அறுவடைக்கு நான்கு மாத காலம் இருந்தது. ஆனால் அறுவடை செய்கிறவனுக்கு இங்கு ஒரு அறுவடை ஆயத்தமாக இருந்தது. (30)

"விதைக்கிறவனும் அறுக்கிறவனுமாகிய இருவரும் ஒருமித்துச் சந்தோஷப்படத்தக்கதாக, அறுக்கிறவன் கூலியை வாங்கி, நித்திய ஜீவனுக்காகப் பலனைச் சேர்த்துக்கொள்ளுகிறான். விதைக்கிறவன் ஒருவன் அறுக்கிறவன் ஒருவன் என்கிற மெய்யான வழக்கச்சொல் இதினாலே விளங்குகிறது" என்று அவர் கூறினார். இங்கு சுவிசேஷத்தைப் பெற்றுக்கொள்ளுகிறவர்கள் தேவனுக்கு பரிசுத்தமான வேலையைச் செய்யவேண்டியவர்களாக இருப்பதை கிறிஸ்து சுட்டிக்காட்டுகிறார். அவர்கள் அவரது உயிருள்ள ஏதுகரங்களாக இரக்கவேண்டியவர்களாக உள்ளனர். அவர் அவர்களது தனிப்பட்ட சேவையை வேண்டுகிறார். விதைத்தாலும் அறுத்தாலும் நாம் தேவனுக்கென்று வேலை செய்கிறோம். ஒருவன் விதையைத் தூவுகிறான். மற்றொருவன் அறுவடையை சேகரிக்கிறான். விதைக்கிறவனும் அறுவடை செய்கிறவனுமாகிய இருவரும் கூலியைப் பெறுகின்றனர். அவர்கள் ஒருமித்து அவர்களது உழைப்பின் பலனில் மகிழ்ச்சி அடைகின்றனர். (31)

"நீங்கள் பிரயாசப்பட்டுப் பயிரிடாததை அறுக்க நான் உங்களை அனுப்பினேன், மற்றவர்கள் பிரயாசப்பட்டார்கள், அவர்களுடைய பிரயாசத்தின் பலனை நீங்கள் பெற்றீர்கள்" என்று இயேசு சீடர்களிடம் கூறினார். பெந்தெகொஸ்தே நாளில் வந்து சேரவிருக்கும் திரள்கூட்டத்தை இயேசு இங்கு எதிர்நோக்கியிருந்தார். சீடர்கள் இதைத் தங்களது சொந்த முயற்சிகளின் பலன் என்று கருதக்கூடாது. அவர்கள் மற்ற

மனிதர்களுடைய உழைப்பிற்குள் நுழைந்துகொண்டிருந்தனர். ஆதாமின் விழுகையின் காலந்தொடங்கி மனித இருதங்களில் விதைக்கப்படும்படி அவர் தெரிந்துகொண்ட ஊழியக்காரர்களிடம் வார்த்தையாகிய விதையை விதைப்பதைக் கிறிஸ்து ஒப்புவித்திருந்தார். காண முடியாதிருந்த ஒரு ஏதுகரம்—சர்வவல்லமைமிக்க ஒன்று, அறுவடை உண்டாகும்படி மௌனமாக ஆனால் திறமையுடன் செயலாற்றி இருந்தது. சத்தியத்தின் விதையைப் புத்துணர்வடையச் செய்யவும், போஷிப்பிக்கவும், தேவ கிருபையாகிய பனியும், மழையும், சூரிய ஒளியும் கொடுக்கப்பட்டிருந்தது. கிறிஸ்து அவரது சொந்த இரத்தத்தினால் அந்த விதைக்கு நீர் பாய்ச்சவேண்டியதாக இருந்தது. தேவனுடன் சேர்ந்து உழைப்பவர்களாக இருக்கும் சலுகையை சீடர்கள் பெற்றிருந்தனர். அவர்கள் கிறிஸ்துவுடனும் பண்டைய பரிசுத்தவான்களுடனும் சேர்ந்து உடன் ஊழியக்காரர்களாக இருந்தனர். பெந்தேகொஸ்தே நாளில் பரிசுத்த ஆவி ஊற்றப்படுதலினால் ஆயிரக்கணக்கானவர்கள் ஒரே நாளில் மாறவேண்டியதாக இருந்தது. அது கிறிஸ்துவின் விதைப்பின் பலனும் அவரது வேலையின் அறுவடையுமாக இருந்தது. (32)

அந்தக் கிணற்றருகில் அந்தப் பெண்ணுடன் பேசப்பட்ட வார்த்தைகளினால் நல்ல விதைகள் விதைக்கப்பட்டு, எவ்வளவு விரைவாக அறுவடை பெறப்பட்டது! சமாரியர் வந்து இயேசு சொன்னதைக் கேட்டு அவர்மீது விசுவாசம் வைத்தனர். அந்தக் கிணற்றருகில் அவர்கள் கூட்டங்கூடி, அவரைக் கேள்விகளுடன் சூழ்ந்து, இதுவரை அவர்களுக்கு இருளாக இருந்த அநேக காரியங்களைப்பற்றின விளக்கங்களைப் பெற்றுக்கொண்டனர். அவர்கள் கவனிக்கத் தொடங்கியபோது, அவர்களது குழப்பங்கள் தெளிவாக நீங்கத்தொடங்கின. அவர்கள் அந்த நாளைக் காணும்வரை பெரும் இருளில் இருந்து, திடீரென்று ஒரு ஒளிக்கீற்றைப் கண்டுகொண்டதைப்போல இருந்தனர். ஆனால் இப்படிப்பட்ட குறுகிய கலந்துரையாடலில் அவர்கள் திருப்திப்பட்டவர்களாக இருக்கவில்லை. அதிகமாகக் கேட்கவும், இந்த ஆச்சரியமான போதகரின் போதனைகளை அவர்களது நண்பர்களுங்கூடக் கேட்கவேண்டும் என்ற அக்கறையிலும் இருந்தனர். தங்களிடத்தில் தங்கவேண்டுமென்று அவர்கள் அவரை வேண்டிக்கொண்டார்கள்; அவர் இரண்டு நாள் அங்கே தங்கினார். அப்பொழுது இன்னும் அநேகம்பேர் விசுவாசித்தார்கள். (33)

இயேசுவின் எளிமையைப் பரிசேயர்கள் அவமதித்திருந்தனர். அவர்கள் அவர் செய்த அற்புதங்களை மறுத்து, அவர் தேவனுடைய குமாரன் என்பதற்கான அடையாளத்தைக் கேட்டனர். ஆனால் சமாரியர்கள் எந்த அடையாளத்தையும் கேட்கவில்லை. இயேசுவும், கிணற்றருகிலிருந்த

அந்த ஸ்திரீக்கு அவளது வாழ்க்கையின் இரகசியங்களை அறிவித்ததைத் தவிர அவர்களுக்கிடையில் வேறு எந்த அற்புதத்தையும் செய்யவில்லை. அப்படியிருந்தும் அநேகர் அவரை ஏற்றுக்கொண்டனர். அவர்களது புதிய மகிழ்ச்சியில் அவர்கள் "அந்த ஸ்திரீயை நோக்கி: உன் சொல்லினிமித்தம் அல்ல, அவருடைய உபதேசத்தை நாங்களே, கேட்டு, அவர் மெய்யாய்க் கிறிஸ்துவாகிய உலகரட்சகர் என்று அறிந்து விசுவாசிக்கிறோம் என்றார்கள்." (34)

யூதர்களின் மீட்பராக மட்டுமல்லாமல், உலக மீட்பராகவும் வரவேண்டியவராக மேசியா இருந்தார் என்று சமாரியர்கள் நம்பியிருந்தனர். அவர் தேவனிடத்திலிருந்து அனுப்பப்பட்ட ஒரு தீர்க்கதரிசி என்று மோசேயின்மூலமாகப் பரிசுத்த ஆவியானவர் முன்னறிவித்திருந்தார். அவருக்குள் மக்கள் சேர்க்கப்படுவார்கள் என்று யாக்கோபின் மூலமாகவும், அவருக்குள் பூமியின் சந்ததிகள் யாவும் ஆசீர்வதிக்கப்பட்டிருக்கும் என்று ஆபிரகாமின்மூலமாகவும் அறிவிக்கப்பட்டிருந்தது. அந்த வேதவாக்கியங்களின் அடிப்படையில் சமாரிய மக்கள் மேசியாவின்மீது விசுவாசம் வைத்தனர். கிறிஸ்துவின் இரண்டாம் வருகையின் மகிமையை அவரது முதலாம் வருகைக்கு ஒப்பிட்டு, பின்வந்த தீர்க்கதரிசிகளை யூதர்கள் தவறாக விளங்கிக்கொண்டதினால், மோசேயின்மூலமாகக் கொடுக்கப்பட்டிருந்தவைகளைத்தவிர மற்ற பரிசுத்த எழுத்துக்கள் அனைத்தையும் தள்ளுபடி செய்யும்படி சமாரியர்கள் நடத்தப்பட்டனர். இந்தத் தவறான விளக்கங்களை இரட்சகர் துடைத்து நீக்கியபோது, பின்வந்த தீர்க்கதரிசனங்களையும் தேவனுடைய இராஜ்யத்தைக்குறித்து கிறிஸ்துவினாலே கூறப்பட்ட வார்த்தைகளையும் அநேகர் ஏற்றுக்கொண்டனர். (35)

இயேசு யூதர்களுக்கும் புறஜாதியினருக்கும் நடுவில் பிரிவினையாக நின்ற நடுச்சுவரைத் தகர்த்து, உலகத்திற்கு இரட்சிப்பைப் பிரசங்கிக்கத் தொடங்கியிருந்தார். அவர் ஒரு யூதராக இருந்தபோதிலும், அவரது மக்களின் பரிசேயச் சம்பிரதாயங்களை ஒருபுறமாக ஒதுக்கி வெறுமையாக்கி சமாரியர்களுடன் அவர் தாராளமாகப் பழகினார். அவர்களுடைய தவறான எண்ணங்களுக்குமுன் அவர் (யூதர்களால்) அவமதிக்கப்பட்டிருந்த சமாரிய மக்களின் விரும்தோம்பலை ஏற்றுக்கொண்டார். அவர் அவர்களுடைய கரங்களால் எடுத்துப் பரிமாறப்பட்டவைகளில் உண்டு, அவர்களது தெருக்களில் போதித்து, அவர்களை மிகுந்த அன்புடனும் மரியாதையுடனும் நடத்தினார். (36)

எருசலேம் தேவாலயத்தில் அந்தக் கட்டிடங்களின் பரிசுத்த பிராகாரத்திலிருந்து வெளிப்பிரகாரத்தைப் பிரிக்கும் ஒரு உயரம் குறைந்த பிரிவினைச்சுவர் இருந்தது. யூதர்களைத்தவிர வேறு ஒருவரும் இந்த எல்லையைக் கடக்கக்கூடாது என்னும் அறிவிப்புகள் பல மொழிகளில் அந்தச் சுவரின்மீது எழுதப்பட்டிருந்தது. உட்பிராகாரத்திற்குள் பிரவேசிக்க புறஜாதியான் எவனாவது துணிந்தால், அதனால் தேவாலயத்தைத் தீட்டுப்படுத்தினான் என்று குற்றஞ்சாட்டப்பட்டு, அவனது உயிரை அதற்கான தண்டனையாகக் கொடுக்கவேண்டியதிருந்தது. ஆனால் அந்த ஆலயத்தையும் அதன் ஆராதனைமுறைகளையும் உண்டுபண்ணினவரான இயேசு, யூதர்கள் இரட்சிப்பை புறக்கணித்திருந்தபோது, தமது மனித அனுதாபம் என்னும் பிணைப்பினால் புறஜாதியினரைத் தம்முடன் இழுத்துக்கொண்டார். (37)

யூத மதவெறியின் செல்வாக்கின்கீழ் இன்னும் இருந்த அவரது சீடர்களுக்கு இயேசு சமாரியாவில் தங்கியது ஒரு ஆசீர்வாதமாக அமையும்படி வடிவமைக்கப்பட்டிருந்தது. தங்களுடைய சொந்த ஜாதியின்மீது விசுவாசம் உள்ளவர்களாக இருப்பதற்கு சமாரியர்களுக்கு எதிரான விரோதத்தைப் போற்றுவது அவசியம் என அவர்கள் உணர்ந்திருந்தனர். இயேசுவின் நடத்தையைக் கண்டு அவர்கள் ஆச்சரியப்பட்டனர். இயேசுவின் உதாரணத்தைப் பின்பற்றுவதை அவர்களால் மறுக்கமுடியவில்லை. சமாரியாவிலிருந்த இரண்டு நாட்களில் அவர்மீதிருந்த விசுவாசத்தினால் அவர்களது தவறான எண்ணங்கள் கட்டுப்படுத்தப்பட்டிருந்தன. என்றாலும் இருதயத்தில் ஒப்புரவாகாதவர்களாகவே இருந்தனர். அவர்களது அவமதிப்பும் வெறுப்பும் இரக்கத்திற்கும் அனுதாபத்திற்கும் இடங்கொடுக்கவேண்டும் என்பதை அறிந்துகொள்ள அவர்கள் தாமதமானவர்களாக இருந்தனர். ஆனால் கர்த்தரின் பரமேறுதலுக்குப்பின் புதிய அர்த்தத்துடன் அவரது போதனைகள் அவர்களுக்குத் திரும்பிவந்தன. இரட்சகரின் பார்வை, அவரது வார்த்தைகள், மரியாதை, மென்மை, அவமதிக்கப்பட்டிருந்த அந்நியர்களின்மீது அவருக்கிருந்த தாங்குதல் ஆகியவைகளைப் பரிசுத்த ஆவி ஊற்றப்பட்டதற்குப்பின் அவர்கள் திரும்ப நினைத்துப் பார்த்தனர். பேதுரு பிரசங்கிக்கும்படி சமாரியாவிற்குச் சென்றபோது, அவனது ஊழியத்தில் அதே ஆவியைக் கொண்டுவந்தான். எபேசுவிற்கும் சிமிர்னாவிற்கும் யோவான் அழைக்கப்பட்டபோது அவர்கள் சந்திக்கவேண்டியதிருந்த கஷ்டங்களை எண்ணிப்பார்த்து, அதைக்குறித்து முன்னரே அறிந்து, அவரது சொந்த முன்மாதிரியினால் அவர்களுக்கு உதவிசெய்திருந்த தெய்வீகப் போதகரின்மீதுள்ள நன்றியால் நிறைந்தவனாக சீகேமின் அனுபவங்களை ஞாபகப்படுத்திக்கொண்டான். (38)

சமாரியப் பெண்ணிற்கு ஜீவத்தண்ணீரைக் கொடுத்தபோது, அவர் செய்த அதே பணியுடன் இரட்சகர் இப்போதும் முன்சென்றுகொண்டிருக்கிறார். தங்களை அவரது பின்னடியார்கள் என்று கூறிக்கொள்ளுபவர்கள் சமுதாயத்தால் புறக்கணிக்கப்பட்ட நபர்களை அவமதித்து விட்டுவிலகலாம். ஆனால் பிறப்பு, ஜாதி, வாழ்க்கையின் நிலைமை ஆகிய சூழ்நிலைகள் எதனாலும் அவரது அன்பை மனிதப்பிள்ளைகளிலிருந்து பிரிக்கமுடியாது. ஒவ்வொரு ஆத்துமாவிடமும் அது எப்படிப்பட்ட பாவமுள்ளதாக இருந்தாலும், "நீ என்னிடத்தில் கேட்டிருந்தால், நான் உனக்கு ஜீவத்தண்ணீரைத் தந்திருப்பேன்" என்று இயேசு கூறுகிறார். (39)

சுவிசேஷத்தை ஏற்றுக்கொண்டால் நம்மை கௌரவிப்பார்கள் என்று நாம் நினைக்கக்கூடிய தெரிந்தெடுக்கப்பட்ட சிலருக்கு மட்டுமே அழைப்புக் கொடுக்கவேண்டும் என்னும் குறுகிய நோக்கமுடையதாக சுவிசேஷ அழைப்பு இருக்கக்கூடாது. சத்தியத்தை ஏற்றுக்கொள்ள எங்கெல்லாம் இருதயங்கள் திறந்திருக்கின்றனவோ, அங்கெல்லாம் போதனையளிக்கக் கிறிஸ்து ஆயத்தமாக இருக்கிறார். அவர்களுக்குப் பிதாவையும், இருதயத்தை வாசித்தறிகிறவர் ஏற்றுக்கொள்ளக்கூடிய தொழுகையையும் அவர் வெளிப்படுத்துகிறார். அப்படிப்பட்டவர்களுக்கு அவர் உவமைகளை பயன்படுத்துவதில்லை. அப்படிப்பட்டவர்களுக்கு "உன்னுடனே பேசுகிற நானே அவர்" என்று கிணற்றருகிலிருந்த அந்தப் பெண்ணிடம் கூறியதைப்போல அவர் கூறுகிறார். (40)

யாக்கோபின் கிணற்றருகில் இளைப்பாறும்படி இயேசு வந்திருந்தபோது, அவரது ஊழியம் குறைவான பலனைத் தந்திருந்த யூதேயாவிலிருந்து வந்திருந்தார். ஆசாரியர்களாலும் ரபிமார்களாலும் நிராகரிக்கப்பட்டிருந்து, தங்களை அவரது சீடர்கள் என்று அறிவித்துக்கொண்டிருந்து ஆனால் அவரது தெய்வீக குணத்தை உணர்ந்துகொள்ளத் தவறிய மக்களாலும் அவர் புறக்கணிக்கப்பட்டிருந்தார். அவர் மயங்கிக் களைத்தவராக இருந்தார். அப்படியிருந்தும் இஸ்ரவேலிலிருந்து விலகிச்சென்ற, ஒரு அந்நிய பெண்ணான, பகிரங்கமான பாவத்திற்குள் வாழ்ந்துகொண்டிருந்த ஒருவரிடம் பேசுவதற்குக் கிடைத்த வாய்ப்பினை அவர் அலட்சியஞ்செய்யவில்லை. (41)

கூட்டம் திரளவேண்டும் என்று இரட்சகர் காத்திருக்கவில்லை. அடிக்கடி அவரைச் சூழ்ந்திருந்த சிலருடன் அவரது போதனைகளை அவர் ஆரம்பித்திருந்தார். ஆனால் பரலோகம் அனுப்பியிருந்த போதகரின்மூலமாக தேவனுடைய வார்த்தைகளைப் பயத்துடனும் ஆச்சரியத்துடனும் கேட்பதற்கு பாதையில் கடந்துசென்றவர்கள் ஒவ்வொருவராகச் சேர்ந்து திரள்கூட்டமாயினர்.

பெரும் சுட்டத்தினருக்காகப் பேசுகின்ற அதே ஆர்வத்துடன், கேட்பவர்கள் ஒரு சிலராக இருக்கும்போது, பேச முடியாது என்று கிறிஸ்துவின் ஊழியக்காரர்கள் எண்ணக்கூடாது. தூதைக் கேட்பதற்கு ஒரே ஒருவர் மட்டுங்கூட இருக்கலாம். ஆனால் அதன் செல்வாக்கு எவ்வளவு தூரம் செல்லக்கூடியதாக இருக்கிறது எனறு யாரால் கூறமுடியும், ஒரு சமாரிய பெண்ணிற்காக இரட்சகர் நேரத்தைச் செலவிடுவது அற்பமான காரியம்போல சீடர்களுக்குங்கூடக் காணப்பட்டது. ஆனால் அரசர்களுடனும் அரசவை அங்கத்தினர்களுடனும் அல்லது ஆசாரியர்களுடனும் பேசுவதைப்போன்ற பேச்சுத்திறனுடனும் மிகுந்த அக்கரையுடனும் அவர் பேசினார். அவர் அந்தப் பெண்ணிடம் கொடுத்த போதனை உலகின் தூரமான மூலைமுடுக்குகளிலும் மீண்டும் மீண்டும் கூறப்பட்டிருக்கின்றது. (42)

இரட்சகரைக் கண்டவுடன் அந்த சமாரியப்பெண் மற்றவர்களை அவரிடம் அழைத்துவந்தாள். அவள் அவருடைய சொந்த சீடர்களைவிட அதிகத் திறமையுள்ள ஒரு இறைப்பணியாளி என்பதை மெய்ப்பித்துக் காட்டினாள். சமாரியா ஒரு நல்ல பலனைத் தரும் நிலமாக இருக்கிறது என்று காட்டக்கூடிய எதையும் சீடர்கள் காணவில்லை. அவர்களது எண்ணங்கள் எதிர்காலத்தில் செய்யப்படவிருக்கின்ற பெரிய வேலையின்மீது பதிந்திருந்தது. சேகரிக்கப்படவேண்டிய ஒரு அறுவடை அவர்களைச் சுற்றிலுமிருந்ததை அவர்கள் காணவில்லை. ஆனால் அவர்கள் அவமதித்த அந்தப் பெண்ணின்மூலமாக ஒரு ஊர் முழுவதிலும் இருந்தவர்கள் அவரிடத்தில் கொண்டுவரப்பட்டனர். அவளது நாட்டு மக்களுக்கு ஒளியை உடனே அவள் கொண்டுசென்றாள். (43)

கிறிஸ்துவின்மீதுள்ள நடைமுறை விசுவாசத்தின் செல்பாட்டினை அந்தப் பெண் எடுத்துக் காட்டுகிறாள். உண்மையான ஒவ்வொரு சீடனும் தேவனுடைய இராஜ்யத்தில் ஒரு இறைப்பணியாளனாகப் பிறந்திருக்கிறான். ஜீவத்தண்ணீரிலிருந்து பருகுபவன் ஒரு ஜீவ ஊற்றாக மாறுகிறான். பெற்றுக்கொள்ளுபவன் கொடுப்பவனாக மாறுகிறான். ஆத்துமாவிலுள்ள கிறிஸ்துவின் கிருபை, எல்லோரது தாகத்தையும் தணிக்க விரும்புகின்ற, கெடுவதற்கு ஆயத்தமாகிக்கொண்டிருப்பவர்களுக்கு ஜீவத்தண்ணீரைக் கொடுப்பதற்கு ஆவலுள்ள பாலைவனத்திலுள்ள ஒரு ஜீவ ஊற்றைப்போல இருக்கிறது. (44) ★

# 20

# நீங்கள் அடையாளங்களையும் அற்புதங்களையும் காணாவிட்டால்...!

**யோவான் 4:43–54**

**(The Desire of Ages, pp. 196–200)**

பஸ்கா பண்டிகையிலிருந்து திரும்பின கலிலேயர்கள் இயேசுவின் ஆச்சரியமான செயல்களைப்பற்றின செய்தியைத் திரும்பக்கொண்டுவந்தனர். எருசலேமிலிருந்த மேலானவர்கள் அவரது செயல்களின்மீது கொண்டிருந்த நியாயத்தீர்ப்பு, கலிலேயாவில் அவரது பாதையைத் திறந்தது. தேவாலயம் தீட்டுப்படுத்தப்படுவதையும், ஆசாரியர்களின் பேராசையையும் அகந்தையையுங்குறித்து அநேக மக்கள் புலம்பிக்கொண்டிருந்தனர். அதிபதிகளை ஓடும்படிச் செய்த இந்த மனிதன் எதிர்பார்க்கப்பட்டிருந்த விடுதலை வழங்குபவராக இருக்கவேண்டுமென்று அவர்கள் நம்பியிருந்தனர். ஒளிமிக்க அவர்களுடைய எதிர்பார்ப்புகளை உறுதிப்படுத்துவதுபோலக் காணப்பட்ட செய்திகள் இப்பொழுது வந்திருந்தன. அந்தத் தீர்க்கதரிசி தம்மைத்தாமே மேசியா என அறிவித்ததாக சொல்லப்பட்டது. (1)

ஆனால் நாசரேத்து மக்கள் அவரை நம்பவில்லை. அதன் காரணமாக கானாவூருக்குச் செல்லும் வழியில் இயேசு நாசரேத்தைச் சந்திக்கவில்லை. தீர்க்கதரிசி ஒருவனும் தன் சொந்த ஊரில் கனமடையமாட்டான் என்று இரட்சகர் அவரது சீடர்களுக்கு அறிவித்திருந்தார். மனிதர்கள் தாங்கள் எதைப் போற்றத் தகுதியுள்ளவர்களாக உள்ளனரோ, அதைவைத்தே குணத்தை மதிப்பிடுகின்றனர். ஏழ்மையான பிறப்பு, எளிமையான உடை, நாள்தோறுமுள்ள உழைப்பு ஆகியவைகளை வைத்து, உலகப்பிரகாரமான குறுகிய மனப்பான்மை உடையவர்கள் கிறிஸ்துவை மதிப்பீடு செய்கின்றனர்.

பாவத்தின் கறை எதுவும் இல்லாதவராயிருந்த அந்த ஆவியின் தூய்மையை அவர்களால் வரவேற்கமுடியவில்லை. (2)

துன்பத்திலும் துயரத்திலும் இருந்தவர்களுக்கு நம்பிக்கையைக் கொண்டுவரும் கிறிஸ்து கானாவூருக்குத் திரும்பிவரும் செய்தி, கலிலேயா முழுவதும் பரவியது. கப்பர்நகூமில் அரசனின் சேவையிலிருந்த அதிகாரியான ஒரு மேன்மைமிக்க யூத மனிதனின் கவனத்தை அந்தச் செய்தி கவர்ந்தது. அந்த அதிகாரியின் மகன் குணப்படுத்த முடியாததுபோலிருந்த ஒருவித நோயினால் துன்பப்பட்டுக்கொண்டிருந்தான். வைத்தியர்கள் அவனைச் சாவதற்கு விட்டுவிட்டனர். ஆனால் அந்தத் தகப்பன் இயேசுவைப்பற்றிக் கேள்விப்பட்டபோது, இயேசுவிடமிருந்து உதவியைப்பெறத் தீர்மானித்தான். அவன் திரும்பிவரும்வரை உயிருடன் இருக்கமாட்டான் என்று பயப்படும் விதத்தில் மிக மோசமான நிலையில் அந்தப் பிள்ளை இருந்தான். அப்படியிருந்தும் இந்தக் காரியத்தை நேரடியாக அவரிடம் கூறவேண்டுமென்பதை அந்த மேன்மைமிக்க மனிதன் உணர்ந்தான். மாபெரும் வைத்தியரானவரின் அனுதாபத்தை அந்தத் தகப்பன் மன்றாடி விழிப்படையச்செய்யலாமென்று நம்பினானன். (3)

அவன் கானாவூருக்குச் சென்றபோது, ஒரு கூட்டமக்கள் இயேசுவைச் சூழ்ந்து நெருக்கிக்கொண்டிருந்ததை கண்டான். ஆவல்மிக்க இருதயத்துடன் அவன் கூட்டத்திற்குள்ளாக நுழைந்து இரட்சகரின் சமுகத்திற்குச் சென்றான். சாதாரண உடையணிந்து பயணத்தினால் தூசிபடிந்து களைப்படைந்த ஒரு மனிதனைக் கண்டபோது, அவனது விசுவாசம் தடுமாறியது. அவரிடமிருந்து எதைக் கேட்கலாமென்று அவன் வந்திருந்தானோ, அதைச் செய்யக்கூடியவரா இவர்? என்று சந்தேகித்தான். ஆனாலும் இயேசுவுடன் ஒரு நேர்முகச் சந்திப்பை அவன் பெற்று, வந்த நோக்கத்தைக்கூறி, தன்னுடன் அவனது வீட்டிற்கு வரும்படி அவரைக் கெஞ்சினான். ஆனால் அவனது துயரம் இயேசுவிற்கு ஏற்கனவே தெரிந்திருந்த, அந்த அதிகாரி வீட்டைவிட்டுப் புறப்படுவதற்கு முன்பே இரட்சகர் அவனது துன்பத்தைக் கண்டிருந்தார். (4)

ஆனால் அந்தத் தகப்பன் அவனது சொந்த உள்ளத்தில் இயேசுவை நம்புவதற்கான நிபந்தனைகளை வைத்திருந்தான் என்பதையுங்கூட அவர் அறிந்திருந்தார். அவனது விண்ணப்பம் அனுமதிக்கப்படாதவரை அவன் அவரை மேசியாவாக ஏற்றுக்கொள்ளமாட்டான். அந்த அதிகாரி வேதனையுடனும் சந்தேகத்துடனும் காத்து நின்றிருந்தபோது, “நீங்கள் அடையாளங்களையும் அற்புதங்களையும் காணாவிட்டால் விசுவாசிக்கமாட்டீர்கள்” என்று இயேசு கூறினார். (5)

இயேசுதான் கிறிஸ்து என்பதற்கான சகல சாட்சியங்களும் இருந்தபோதும், தனது சொந்த வேண்டுகோளுக்கு பதிலளிப்பதை அவரை நம்புவதற்காக நிபந்தனையாக வைத்திருந்தான் அந்த விண்ணப்பக்காரன். கேள்விகேட்டிருந்த இந்த அவநம்பிக்கையை, எந்தவிதமான அற்புதத்தையும் கேட்காமலிருந்த சமாரியர்களின் எளிமையான விசுவாசத்துடன் இரட்சகர் ஒப்பிட்டார். அவருடைய தெய்வீகத்திற்கு எந்நேரமுமான அத்தாட்சியான—அவருடைய வார்த்தை—அவர்களுடைய இருதயத்தைச் சென்றடைந்த அவருடைய வார்த்தை நம்பச்செய்யும் வல்லமையைக் கொண்டிருந்தது. அவருடைய சொந்த ஜனங்கள், எவர்களிடம் பரிசுத்த கற்பனைகள் ஒப்படைக்கப்பட்டிருந்ததோ, அவர்கள், தேவனுடைய குமாரன்மூலமாகப் பேசப்படும் தேவனுடைய சத்தத்தைக் கேட்பதற்குத் தவறியிருந்ததைக்கண்டபோது, கிறிஸ்து மிகவும் வேதனையடந்தார். (6)

இருந்தபோதும், அந்த இராஜாவின் மனிதனிடம் கொஞ்சம் விசுவாசம் இருந்தது. ஏனெனில் சகல ஆசீர்வாதங்களையும்விட மேலானதாக அவனுக்குக் காணப்பட்டிருந்ததைக் கேட்பதற்காக அவன் வந்திருந்தான். கொடுப்பதற்கென்று அதைவிடப் பெரிய ஆசீர்வாதத்தை இயேசு வைத்திருந்தார். அந்தச் சிறுபிள்ளையைச் சுகப்படுத்துவது மட்டுமல்லாமல், அந்த அதிகாரியையும் அவனது வீட்டாரையுங்கூட இரட்சிப்பின் ஆசீர்வாதங்களில் பங்குபெறுபவர்களாக்கி, விரைவில் அவரது பணிக்களமாக அமையவிருக்கும் கப்பர்நகூமில் ஒளியைப் பற்றவைக்க இயேசு விரும்பினார். ஆனால் கிறிஸ்துவின் கிருபையை விரும்புவதற்குமுன் அந்த மனிதன் அவனது தேவையை உணரவேண்டும். இந்த விண்ணப்பக்காரன் அவனது ஜாதியிலுள்ள அநேகரைப் சுட்டிக்காட்டியிருந்தான். அவர்கள் சுயநலமிக்க நோக்கங்களினால் இயேசுவின்மீது விருப்பமுள்ளவர்களாக இருந்தனர். அவரது வல்லமையின்மூலமாக சிறப்பான ஏதாவது நன்மையைப் பெறலாம் என்று அவர்கள் நம்பியிருந்தனர். இந்த உலகப்பிரகாரமான அனுகூலம் கிடைக்கப்பெறுவதன்மீது அவர்கள் தங்களுடைய விசுவாசத்தை வைத்திருந்தனர். ஆனால் அவர்கள் தங்களுடைய ஆவிக்குரிய நோயைப்பற்றி அறியாமையுள்ளவர்களாக இருந்து, தங்களுக்குத் தேவையான தேவ கிருபையின் அவசியத்தைக் காணாமலிருந்தனர். (7)

இரட்சகரின் வார்த்தைகள் அந்த மேன்மைமிக்க மனிதனுக்கு ஒரு மின்னலின் ஒளியைப் போலிருந்து, அவனது இருதயத்தைத் திறந்துவைத்தது. இயேசுவைத் தேடும் அவனது நோக்கங்கள் சுயநலமானது என்பதைக் கண்டான். அசைந்தாடிய அவனது விசுவாசத்தின் தன்மை, அதன் உண்மையான குணத்தில் அவனுக்குத் தோன்றினது. அவனது சந்தேகம்

அவனது மகனின் மரணத்தின் விலையாகிவிடும் என்பதை ஆழ்ந்த மனத்துயருடன் அவன் உணர்ந்தான். எண்ணங்களை வாசித்தறியக்கூடியவரும், எல்லாவற்றையும் செய்ய வல்லவருமான ஒருவரின் சமுகத்தில் அவன் இருப்பதை அறிந்தான். “ஆண்டவரே, என் பிள்ளை சாகிறதற்குமுன்னே வரவேண்டும்” என்று வேதனைமிக்க விண்ணப்பம் செய்தான். “நீர் என்னை ஆசீர்வதித்தாலொழிய உம்மைப் போகவிடேன்” (ஆதியாகமம் 32:26) என்று யாக்கோபு தூதனானவருடன் போராடினபோது கூறியதைப்போல அவனது விசுவாசம் கிறிஸ்துவைப் பற்றிக்கொண்டது. (8)

யாக்கோபைப்போல அவனும் மேற்கொண்டான். இரட்சகரைப் பற்றிக்கொண்டு அதன் பெரும் தேவைக்காக மன்றாடும் ஆத்துமாவைவிட்டு இரட்சகரால் பின்வாங்கிச்செல்ல இயலாது. “நீ போகலாம், உன் குமாரன் பிழைத்திருக்கிறான்” என்று கூறினார். அந்த மேன்மைமிக்க மனிதன் இரட்சகரின் சமுகத்தைவிட்டு அவன் இதற்குமுன் ஒருபோதும் அறிந்திராத சமாதானத்துடன் சந்தோஷத்துடனும் சென்றான். அவனது மகன் நலமடைவான் என்பதைமட்டும் அவன் நம்பினதோடல்லாமல், கிறிஸ்துவே மீட்பர் என்றும் அவர்மீது நம்பிக்கைவைத்து பலத்த விசுவாசத்துடன் சென்றான். (9)

அதே நேரத்தில் கப்பர்நகூம் வீட்டில், அந்தப் பிள்ளையின் அருகிலிருந்து அதனைக் கவனித்துக்கொண்டிருந்தவர்கள், இறந்து கொண்டிருந்த அந்தப் பிள்ளையில் திடீரென்று அற்புதமானவிதத்தில் உண்டான மாறுதலைக் கண்டார்கள். துன்பத்தை அனுபவித்துக்கொண்டிருந்த பிள்ளையின் முகத்திலிருந்து மரணத்தின் நிழல் நீங்கியது. ஜூரத்தின் தாக்கம் இருந்த இடத்தில் உடல் நலத்தின் மென்மையான பிரகாசம் திரும்பியது. மங்கியிருந்த கண்கள் நுண்ணறிவினால் ஒளிவீசின. பலவீனத்தினால் மெலிந்திருந்த உடலில் பலம் திரும்பியது. நோயின் அடையாளம் அந்தப் பிள்ளயையின்மீது காணப்படவில்லை. எரிந்துகொண்டிருந்த அவனது மாமிசம் மென்மையும் ஈரப்பதம் உள்ளதாகவும் மாற, அவன் ஒரு அமைதியான தூக்கத்தில் மூழ்கினான். பகலின் மிகவெப்பமான நேரத்தில் காய்ச்சல் அவனைவிட்டு நீங்கியது. அந்தக் குடும்பம் ஆச்சரியமடைந்தது. அதன் மகிழ்ச்சி மிக அதிகமாக இருந்தது. (10)

கானாவூர் கப்பர்நகூமிலிருந்து மிகுந்த தூரத்தில் இருக்கவில்லை. அந்த அதிகாரி இயேசுவுடனுள்ள நேர்முகச் சந்திப்பிற்குப்பின் மாலை வேளையில் வீட்டை அடைந்திருக்கவேண்டும். ஆனால் வீட்டை நோக்கிய பயணத்தில் அவன் அவசரப்படவில்லை. மறுநாள் காலைவரை கப்பர்நகூம் சென்று சேரவில்லை. அவன் வீடு நோக்கி வந்த அந்த வருகை

எப்படிப்பட்டதாக இருந்தது! இயேசுவைக் காணச்சென்றிருந்தபோது, அவனது இருதயம் பாரமாகவும் துயரமிக்கதாகவும் இருந்தது. அவனுக்கு சூரிய ஒளி கொடுமையானதாகவும், பறவைகளின் பாடல்கள் பரிகாசமானதாகவும் காணப்பட்டிருந்தது. இப்பொழுது அவனது உணர்ச்சிகள் எவ்விதமாக மாறுபட்டவையாக உள்ளன! இயற்கை முழுவதும் வேறொரு நோக்குடையதாக உள்ளது. புதிய கண்களால் அவன் பார்க்கிறான். அமைதிமிக்க அதிகாலை வேளையில் அவன் பயணஞ்செய்தபோது, இயற்கை முழுவதும் அவனுடன் சேர்ந்து தேவனைத் துதிப்பதுபோல காணப்படுகிறது. அவன் வீட்டிற்குச் சற்று தூரத்தில் வரும்போதே நிச்சயமாக உணரவேண்டிய புதிரிலிருந்து அவனை விடுவிக்கும் அக்கறையில் வேலைக்காரர்கள் அவனைச் சந்திக்க வெளியே வருகின்றனர். அவர்கள் கொண்டுவரும் செய்தியில் அவன் ஆச்சரியங்காட்டாதவனாக இருந்து, அவர்களால் அறிந்துகொள்ளமுடியாத ஒரு ஆழ்ந்த ஆர்வத்துடன் எந்த மணிநேரத்தில் அந்தப் பிள்ளை குணமடைய ஆரம்பித்தது என்று கேட்கிறான். “நேற்று ஏழாம்மணிநேரத்தில் ஜுரம் அவனை விட்டது” என்று அவர்கள் பதில் கூறினர். அந்தத் தகப்பனின் விசுவாசம் “உம்முடைய குமாரன் பிழைத்திருக்கிறான்” என்ற நிச்சயத்தைப்பற்றிக்கொண்ட அதே விநாடியில் செத்துக்கொண்டிருந்த அந்தச் சிறுவனை தெய்வீக அன்பு தொட்டது. (11)

தனது மகனை வாழ்த்தத் தகப்பன் விரைகிறான். மரணத்திலிருந்து மீட்டுக்கொள்ளப்பட்ட ஒருவனாக அவனைத் தன் மார்புடன் அணைத்து இந்த ஆச்சரியமான மீட்பிற்காக அவன் மறுபடியும் மறுபடியும் தேவனுக்கு நன்றி கூறுகிறான். (12)

கிறிஸ்துவைப்பற்றி அதிகமாக அறிந்துகொள்ள அந்த மேன்மைமிக்க மனிதன் ஏங்கினான். பின்னர் அவன் அவரது போதனையைக் கேட்டபோது, அவனும் அவனது வீட்டாரும் அவரது சீடர்களானார்கள். அவர்களது துன்பம் அவர்களது முழுக்குடும்பமும் மாற்றமடையும்படி அவர்களைப் பரிசுத்தப்படுத்தியது. அந்த அற்புதத்தைப்பற்றிய செய்தி பரவியது. எங்கு அவரது பலத்த செய்கைகள் செய்யப்பட்டனவோ, அந்தக் கப்பர்நகூமில் கிறிஸ்துவின் நேரடியான ஊழியத்திற்குப் பாதை ஆயத்தஞ்செய்யப்பட்டது. (13)

கப்பர்நகூமில் அந்த மேன்மைமிக்க மனிதனை ஆசீர்வதித்தவர் அதைப்போலவே நம்மையும் ஆசீர்வதிக்க விருப்பமுள்ளவராக இருக்கிறார். ஆனால் துன்பமடைந்த அந்தத் தகப்பனைப்போலவே நாமும் பூமிக்குரிய நன்மைக்கான வாஞ்சைகளினால் இயேசுவைத்தேடும்படி அடிக்கடி நடத்தப்படுகிறோம். நமது மன்றாட்டுகளுக்குப் பதில் கிடைக்கும்போது,

அவரது அன்பில் நமது நம்பிக்கையை வைக்கிறோம். நாம் கேட்பதைவிடப் பெரிதான ஆசீர்வாதத்தை நமக்குத் தருவதற்கு இரட்சகர் காத்திருக்கிறார். நமது இருதயங்களில் உள்ள தீமையையும், அவரால் உண்டாகும் கிருபையின் ஆழமான தேவையையும் நாம் காணும்படி நமது மன்றாட்டுகளுக்குப் பதில் தருவதில் அவர் தாமதிக்கிறார். அவரைத் தேடும்படி நம்மை நடத்தும் நமது சுயநலத்தை நாம் துறந்துவிடவேண்டும் என்று அவர் விரும்புகிறார். நமது உதவியற்ற தன்மையையும் கசப்பான நமது தேவையையும் நாம் அறிக்கைசெய்து, நம்மில் நாம் அவரது அன்பைமட்டுமே முழுமையாக நம்புபவர்களாக இருக்கவேண்டும் (14)

அந்த மேன்மைமிக்க மனிதன் அவரை நம்புவதற்குமுன் அவனது ஜெபத்தின் நிறைவேறுதலைக் காண விரும்பினான். ஆனால் அவனது வேண்டுதல் கேட்கப்பட்டு, ஆசீர்வாதம் அருளப்பட்டது என்னும் இயேசுவின் வார்த்தையை அவன் ஏற்றுக்கொள்ள வேண்டியவனாக இருந்தான். இந்தப் போதனையை நாமும் கற்றுக்கொள்ளவேண்டும். நாம் காணாமலும் உணராமலும் இருக்கும்போதே தேவன் நமக்குச் செவிகொடுக்கிறார் என்று நாம் நம்பவேண்டும். அவரது வாக்குத்தத்தங்களில் நாம் நம்பிக்கை வைக்கவேண்டியவர்களாக இருக்கிறோம். விசுவாசத்துடன் நாம் அவரிடம் வரும்போது, நமது ஒவ்வொரு விண்ணப்பமும் தேவனுடைய இருதயத்தில் நுழைகிறது. நாம் அவரது ஆசீர்வாதங்களுக்காக மன்றாடியிருக்கும்போது, அதைப் பெற்றுக்கொள்ளுகிறோம் என்று நம்பவேண்டும். அதன்பின் ஆசீர்வாதத்தைப் பெற்றுக்கொண்டதற்காக அவருக்கு நன்றி சொல்லவேண்டும். மிகவும் அவசியமான நேரத்தில் கிடைக்கும் என்று உணர்ந்திருக்கிறோம் என்ற நிச்சயத்துடன் நாம் நமது கடமைகளைச் செய்யவேண்டும். இதை நாம் செய்யக் கற்றுக்கொள்ளும்போது, நமது ஜெபங்களுக்கு பதில் கொடுக்கப்பட்டுவிட்டது என்பதை நாம் அறிவோம். “நாம் வேண்டிக்கொள்ளுகிறதற்கும் நினைக்கிறதற்கும் மிகவும் அதிகமாய்” “தமது மகிமையினுடைய ஐசுவரியத்தின்படியே,” “தமது பலத்த சத்துவத்தின் வல்லமைப்படியே” (எபேசியர் 3:20,19; 1:19) தேவன் நமக்குச் செய்வார். (15) ★

# 21

# பெதஸ்தாவும் சனகரீமும்!

**யோவான் 5**

**(The Desire of Ages, pp. 201–213)**

எபிரெய மொழியிலே பெதஸ்தா என்னப்பட்ட ஒரு குளம் எருசலேமின் ஆட்டுவாசலினருகே இருக்கிறது. அதற்கு ஐந்து மண்டபங்களுண்டு. அவைகளிலே குருடர், சப்பாணிகள், சூம்பின உறுப்புடையவர்கள் முதலான வியாதிக்காரர் அநேகர் படுத்திருந்து, தண்ணீர் எப்பொழுது கலங்கும் என்று காத்துக்கொண்டிருப்பார்கள். (1)

சில சமயங்களில் அந்தக் குளத்தில் நீர் கலக்கப்பட்டது. இயற்கைக்கும் மேற்பட்ட வல்லமையின் விளைவினால் இது நிகழ்கிறது என்று பொதுவாக நம்பப்பட்டிருந்தது. தண்ணீர் கலங்கினபின்பு எவன் அதில் முதலில் இறங்குகிறானோ அவனது நோய் எப்படிப்பட்டதாயிருந்தாலும் அதிலிருந்து சுகப்படுத்தப்படுவான். நூற்றுக்கணக்கான நோயாளிகள் அந்த இடத்திற்கு வந்திருந்தனர். தண்ணீர் கலக்கப்பட்டவுடன் ஆண்களையும் பெண்களையும் சிறுபிள்ளைகளையும்தங்களைவிடப்பலவீனமாயிருந்தவர்களையும்காலின்கீழ் மிதித்துக்கொண்டு முன்னோக்கி விரையும் கூட்டம் அவ்வளவு பெரியதாக இருந்தது. அநேகரால் அந்தக் குளத்தினருகில் செல்லமுடியவில்லை. அந்தக் குளக்கரையை அடைவதில் வெற்றியடைந்த அநேகர் அதன் கரையில் இருந்திருந்தனர். பகலின் உஷ்ணத்திலிருந்தும் இரவின் குளிரிலிருந்தும் நோயாளிகள் பாதுகாக்கப்படுவதற்காக தங்குமிடங்கள் நிறுவப்பட்டிருந்தன. சுகம் கிடைக்கும் என்ற வீணான நம்பிக்கையுடன் அந்தக் குளத்தின் கரைக்கு நகர்ந்து சென்று, அந்த மண்டபங்களில் இரவைக் கழித்திருந்த சிலர் இருந்தனர். (2)

இயேசு மறுபடியும் எருசலேமில் இருந்தார். தியானத்திலும் ஜெபத்திலும் ஈடுபட்டவராக, தனியாக அவர் அந்தக் குளத்திற்கு வந்தார். தங்களுக்குச் சுகம் கிடைப்பதற்கான ஒரே வாய்ப்பு என்று நினைத்து கவனித்திருந்த துர்பாக்கியமான நிலையிலிருந்தவர்களை அவர் கண்டார். அவரது குணமாக்கும் வல்லமையைப் பயன்படுத்தி, நோயினால் துன்புற்றிருந்த ஒவ்வொருவரையும் சுகப்படுத்தவேண்டும் என்று அவர்

ஏங்கினார். ஆனால் அது ஓய்வுநாளாக இருந்தது. திரளான மக்கள் ஆராதனைக்காக தேவாலயத்திற்குச் சென்றுகொண்டிருந்தனர். அப்படிப்பட்ட குணப்படுத்துதல் யூதர்களின் தவறான எண்ணத்தைத் தூண்டி, அவரது ஊழியத்தைக் குறைத்துவிடும் என்பதை அவர் அறிந்திருந்தார். (3)

மிகவும் துர்பாக்கியமான நிலைமையிலிருந்த ஒரு நோயாளியை இரட்சகர் கண்டார். அவன் முப்பத்தெட்டு வருடங்கள் உதவியற்ற முடவனாக இருந்த ஒரு மனிதன். அவனது நோய் பெருமளவிற்கு அவனது பாவத்தின் விளைவாக இருந்ததுடன், தேவனிடமிருந்து உண்டான தண்டனையாகவும் நோக்கப்பட்டிருந்தது. தனிமையில், நண்பரில்லாதவனாக, தான் தேவனுடைய இரக்கத்திலிருந்து தள்ளப்பட்டவன் என்று நினைத்து, அந்த நோயாளி அதிக வருடங்களைத் துன்பத்தில் கழித்திருந்தான். அந்தத் தண்ணீர் கலக்கப்படவுள்ளது என்று எதிர்பார்க்கும் நேரத்தில் அவனது உதவியற்ற நிலைமையில் இரக்கங்கொண்டவர்கள் அந்த மண்டபத்திற்கு அவனைக் கொண்டுசென்றிருந்தனர். ஆனால் அனுகூலமிக்க வேளையில் அவனை உள்ளே கொண்டுசெல்வதற்கு உதவிட ஒருவரும் இருக்கவில்லை. தண்ணீர் கலக்கப்படுவதை அவன் கண்டிருந்தான். ஆனால் அவனால் ஒருபோதும் அந்தக் கரையைத் தாண்டிச் செல்ல இயலவில்லை. அவனைவிடப் பலமுள்ளவர்கள் அவனை முந்திக்கொண்டு அந்தக் குளத்து நீரில் மூழ்கியிருந்தனர். சுயநலத்துடன் மிதித்துத் தள்ளிச் சென்றுகொண்டிருந்தவர்களுடன் அவனால் வெற்றிபெறும் விதத்தில் போட்டியிட முடியவில்லை. தனது ஒரே இலக்கை நோக்கிய விடாப்பிடியான முயற்சியினாலும், தொடர்ச்சியான கவலையினாலும் தோல்வியினாலும், அவனில் மீதமாயிருந்த பலத்தையும் துரிதமாக இழந்துகொண்டிருந்தான். (4)

தன்னுடைய பாயின்மீது படுத்திருந்த நோயாளியான அந்த மனிதன், அவ்வப்போது தலையை உயர்த்தி அந்தக் குளத்தைப் பார்த்துக்கொண்டிருந்தபோது, மென்மையும் மன உருக்கமுமுள்ள ஒரு முகத்துடன் அவனை நோக்கி: “சொஸ்தமாகவேண்டுமென்று விரும்புகிறாயா” என்று ஒருவர் கேட்டார். அவனது இருதயத்திற்குள் நம்பிக்கை வந்தது. ஏதோ ஒருவழியில் அவனுக்கு உதவி கிடைக்கும் என அவன் உணர்ந்தான். ஆனால் ஊக்கப்படுத்தும் ஒளி விரையில் மங்கியது. அவன் எவ்விதமாக அந்தக் குளத்தை அடைவதற்கு அடிக்கடி முயன்றான் என்பதை நினைத்தபோது, மறுபடியும் அந்தத் தண்ணீர் கலக்கப்படும்வரை உயிருடன் இருக்கமுடியும் என்ற நம்பிக்கை இப்பொழுது இல்லாமலிருந்தது. “ஆண்டவரே, தண்ணீர் கலக்கப்படும்போது என்னைக் குளத்தில் கொண்டுபோய் விடுகிறதற்கு

ஒருவருமில்லை, நான் போகிறதற்குள்ளே வேறொருவன் எனக்கு முந்தி இறங்கிவிடுகிறான் என்றான்.” (5)

அவர்மீது விசுவாசம் வைக்கும்படி அந்த நோயாளியிடம் அவர் கேட்கவில்லை. “எழுந்திரு, உன் படுக்கையை எடுத்துக்கொண்டு நட” என்று சாதாரணமாக கூறினார். ஆனால் அந்த மனிதனின் விசுவாசம் அந்த வார்த்தையைப் பிடித்துக்கொண்டது. புதிய ஜீவனால் ஒவ்வொரு நரம்பும் சதையும் சிலிர்க்கிறது. முடமாகியிருந்த அவனது கைகால்களில் சுகமான இயக்கங்கள் உண்டாகின்றன. அவன் தனது சித்தத்தை எந்தவிதமான கேள்வியுமின்றி கிறிஸ்துவின் கட்டளைக்குக் கீழ்ப்படுத்தவே, அவனது தசைகள் அனைத்தும் அவனது சித்தத்திற்குக் கீழ்ப்படிகின்றன. அவன் தன் கால்களால் குதித்து நின்று, தன்னை ஒரு செயலாக்கமுடைய மனிதனாகக் கண்டான். (6)

தெய்வீக உதவியைப்பற்றிய வாக்குறுதி எதையும் இயேசு அவனுக்குக் கொடுக்கவில்லை. அந்த மனிதன் சந்தேகத்துடன் குனிந்து, சுகமடையும் ஒரு வாய்ப்பினை இழந்திருக்கக்கூடும். ஆனால் அவன் கிறிஸ்துவின் வார்த்தையை நம்பி, அதன்படி செயலாற்றியபோது, பலத்தைப் பெற்றுக்கொண்டான். (7)

அதேவிதமான விசுவாசத்தின்மூலமாக நாமும் ஆவிக்குரிய ஆரோக்கியத்தைப் பெறலாம். பாவத்தினால் தேவனுடைய ஜீவனிலிருந்து நாம் துண்டிக்கப்பட்டிருக்கிறோம். முடவன் நடக்கமுடியாதிருந்ததைவிடவும் மோசமாக, பரிசுத்தமான வாழ்க்கைவாழ நாமும் நம்மில் பெலனற்றவர்களாக இருக்கிறோம். தேவனிடம் இசைவைக் கொண்டுவரக்கூடிய ஆவிக்குரிய வாழ்க்கைக்காக ஏங்கி, அவர்களது உதவியற்ற நிலைமையை உணரும் அநேகர் உள்ளனர். அதைப் பெறுவதற்கு அவர்கள் வீணாக முயன்றுகொண்டிருக்கின்றனர். நம்பிக்கை இழந்தவர்களாக: “நிர்ப்பந்தமான மனுஷன் நான்! இந்த மரணசரீரத்தினின்று யார் என்னை விடுதலையாக்குவார்?” (ரோமர் 7:24) என்று கதறுகின்றனர். மனமுடைந்து போராடிக்கொண்டிருக்கும் இப்படிப்பட்டவர்கள் மேல்நோக்கிப் பார்ப்பார்களாக. இரட்சகர் அவரது இரத்தத்தினால் கிரயத்திற்குக் கொள்ளப்பட்டவனிடம் “நீ சொஸ்தமடைய விரும்புகிறாயா?” என்று சொல்லிமுடியாத இரக்கத்துடன் குனிந்து மென்மையாகக் கேட்கிறார். சுகத்துடனும் சமாதானத்துடனும் எழும்பும்படி அவர் அழைக்கிறார். நீங்கள் நலமடைந்துவிட்டீர்கள் என்பதை உணரும்வரைக்கும் காத்திருக்கவேண்டாம். அவரது வார்த்தையை நம்புங்கள். அது நிறைவேறும். உங்களது சித்தத்தைக் கிறிஸ்துவின் பக்கத்தில் வையுங்கள். அவருக்குச் சேவைசெய்ய சித்தங்கொள்ளுங்கள்.

அவரது வார்த்தையின்மீது செயலாற்றும்போது, நீங்கள் பலம்பெறுவீர்கள். தீய பழக்கங்கள் எவைகளாக இருந்தாலும் சரி, நெடுநாள் பழக்கத்தினால் ஆத்துமாவையும் உடலையும் கட்டிவைத்திருக்கும் அவைகளிலிருந்து விடுதலையளிக்கக் கிறிஸ்து தகுதியுள்ளவராகவும் அதற்காக ஏங்குபவ ராகவும் இருக்கிறார். “மீறுதல்களினால் மரித்திருக்கும்” (எபேசியர் 2:1) ஆத்துமாவிற்கு அவர் உயிரளிப்பார். பலவீனம், இன்னல்கள், பாவத்தின் சங்கிலிகள் ஆகியவைகளால் அடிமையாக்கப்பட்டிருப்பவனை அவர் விடுதலை செய்வார். (8)

கை கால்கள் விளங்காதவனாயிருந்து சுகமடைந்த அந்த மனிதன் தனது படுக்கையாயிருந்த ஒரே கம்பளியை எடுப்பதற்காகக் குனிந்து தனக்கு விடுதலை வழங்கியவரைப் பார்ப்பதற்காக மகிழ்ச்சிமிக்க உணர்வுடன் நிமிர்ந்தான். ஆனால் அவர் கூட்டத்திற்குள் மறைந்துவிட்டார். அந்த மனிதன் அவரை மீண்டும் காண நேரிட்டால் அடையாளங்கண்டுகொள்ள முடியாதே என்று பயந்தான். அவன் உறுதியாக அடியெடுத்துவைத்து, தேவனைத் துதித்துக்கொண்டும், புதிதாகக் காணப்பட்ட அவனது பலத்தில் மகிழ்ச்சி அடைந்தவனாகவும் விரைந்தபோது, பரிசேயரில் அநேகரைச் சந்தித்து, அவன் சுகமானதைப்பற்றிக் கூறினான். அவனது கதையை அவர்கள் உற்சாகமற்றவர்களாகக் கவனித்ததில் அவன் வியந்தான். (9)

அவர்கள் தங்கள் புருவங்களை இறக்கி, நீ என் ஓய்வுநாளில் உன் படுக்கையைச் சுமந்துகொண்டுபோகிறாய்? என்று குறுக்கிட்டு அவனிடம் கேட்டனர். கர்த்தருடைய நாளில் சுமை சுமப்பது கற்பனைக்கு விரோதமானது என்று அவர்கள் அவனைக் கடுமையாக ஞாபகப்படுத்தினர். அந்த மனிதன் அவனது மகிழ்ச்சியில் அது ஓய்வுநாள் என்பதை மறந்திருந்தான். இருப்பினும் தேவனிடத்திலிருந்துள்ள அப்படிப்பட்ட வல்லமையை உடையவராயிருந்த ஒருவரின் கட்டளைக்குக் கீழ்ப்படிவதற்காக அவன் குற்றச்சாட்டை உணரவில்லை. “என்னைச் சொஸ்தமாக்கினவர், உன் படுக்கையை எடுத்துக்கொண்டு நடவென்று எனக்குச் சொன்னார்” என்று தைரியமாகக் கூறினான். இதைச் செய்தது யார்? என்று அவர்கள் கேட்டனர். ஆனால் அவனால் பதில் கூறமுடியவில்லை. ஒருவர்மட்டுமே தான் இந்த அற்புதத்தை செய்யமுடியும் என்று காட்டியிருக்கிறதை அந்த அதிபதிகள் நன்கு அறிந்திருந்தனர். ஆனால் அவர் ஓய்வுநாளை மீறினார் என்று அவரைக் குற்றப்படுத்தும்படி, இயேசுதான் அதைச் செய்தார் என்பதற்கான நேரடியான சாட்சியை அவர்கள் விரும்பியிருந்தனர். அவர்களது நியாயத்தீர்ப்பின்படி அவர் அந்த நோயுற்ற மனிதனைக் குணமாக்கினதன்மூலமாக ஓய்வுநாள் கற்பனையை மீறியதுமட்டுமின்றி, அவனைப் படுக்கையை எடுத்துக்கொண்டு

செல்லும்படியும் கூறியிருக்கிறார். இதில் ஓய்வுநாளைப் பரிசுத்தக்குலைச்சலும் ஆக்கியிருந்தார். (10)

பிரமாணம் அடிமைத்தனத்தின் நுகமாக இருக்கும்படி யூதர்கள் அதைத் தவறாகத் திரித்திருந்தனர். அர்த்தமற்ற அவர்களது எதிர்பார்ப்புகள் மற்ற மக்களுக்கிடையில் ஒரு வசைச்சொல்லாக இருந்தது. குறிப்பாக ஓய்வுநாள் எல்லாவிதமான அர்த்தமற்ற தடைகளினாலும் வேலியிடப்பட்டிருந்தது. அது அவர்களுக்கு மனமகிழ்ச்சிமிக்கதாகவும் கர்த்தருடைய பரிசுத்தமானதாகவும் மேன்மையானதாகவும் இருக்கவில்லை. வேதபாரகரும் பரிசேயரும் அதை அனுசரிப்பதைத் தாங்கமுடியாத சுமையாக்கியிருந்தனர். ஓய்வுநாளில் ஒரு நெருப்பை மூட்டவோ அல்லது விளக்கைக் கொளுத்தவோ ஒரு யூதன் அனுமதிக்கப்பட்டிருக்கவில்லை. அதன் விளைவாக, யூதர்கள் அவர்களது சட்டங்கள் தடைசெய்திருந்த அநேக சேவைகளைப் பெறுவதற்குப் புறஜாதியினரைச் சார்ந்திருந்தனர். இந்தச் செயல்கள் பாவமுள்ளவையாக இருந்தால், அதைச் செய்யும்படி பிறரை வேலைக்கு அமர்த்தினவர்கள், அந்த வேலைகளை அவர்களே செய்ததைப்போலக் குற்றமுள்ளவர்களாக இருந்தனர் என்பதை உணரவில்லை. இரட்சிப்பு யூதர்களுக்கு மட்டுமே என்று என்று நினைத்தனர். மற்ற அனைவரது நிலையும் ஏற்கனவே நம்பிக்கையற்றதாக இருந்ததினால் அதற்கும்மேல் மோசமாக்கப்படமுடியாது என்று அவர்கள் எண்ணியிருந்தனர். சகலராலும் கீழ்ப்படியமுடியாத எந்தக் கற்பனையையும் தேவன் கொடுத்திருக்கவில்லை. காரணமற்றதும் சுயநலமுள்ளதுமான எந்தக் கட்டுப்பாட்டையும் அவரது கற்பனைகள் அனுமதிக்கவில்லை. (11)

சுகப்படுத்தப்பட்ட மனிதனை இயேசு தேவாலயத்தில் சந்தித்தார். அவன் பெற்றுக்கொண்ட இரக்கத்திற்காக ஒரு பாவநிவாரண பலியையும் தோத்திர பலியையும் கொண்டுவந்திருந்தான். ஆராதனைக்கு வந்திருந்தவர் களுக்கிடையில் அவனைக்கண்டபோது: "இதோ, நீ சொஸ்தமானாய், அதிக கேடானதொன்றும் உனக்கு வராதபடி இனிப் பாவஞ்செய்யாதே" என்ற எச்சரிப்பின் வாாத்தைகளுடன் இயேசு தம்மை அவனுக்கு அறியச்செய்தார். (12)

சுகமடைந்த மனிதன் அவனுக்கு விடுதலை வழங்கியவரைச் சந்தித்ததில் அதிகமாக மகிழ்ச்சியடைந்தான். இயேசுவின்மீதிருந்த விரோதத்தை அறியாதவனாயிருந்த அவன், அவனிடம் கேள்விகேட்டிருந்த பரிசேயர்களைக் கண்டபோது, இவர்தான் சுகமளித்தவர் என்று கூறினான். "அந்த மனுஷன் போய், தன்னைச் சொஸ்தமாக்கினவர் இயேசு என்று யூதர்களுக்கு அறிவித்தான்" (13)

ஓய்வுநாளை மீறிய குற்றச்சாட்டிற்குப் பதில்கூறும்படி இயேசு சனகரீம் சங்கத்திற்குக் கொண்டுவரப்பட்டார். அந்த நேரத்தில் யூதர்கள் சுதந்திரவாளிகளாக இருந்திருப்பார்களேயானால், இப்படிப்பட்ட குற்றச்சாட்டு அவரைக் கொலைசெய்யும் அவர்களது நோக்கத்திற்கு உதவியாக இருந்திருக்கும். இதை ரோமர்களின் கீழான அவர்களது அடிமைத்தனம் தடுத்திருந்தது. சரீரப்பிரகாரமான தண்டனையைக் கொடுக்கும் அதிகாரம் யூதரிடம் இருக்கவில்லை. கிறிஸ்துவிற்கு எதிராகக் கொண்டுவரப்பட்ட குற்றச்சாட்டு ரோமர்களின் நீதிமன்றத்தில் ஏற்புடையதாக இருக்காது. எப்படியிருந்தாலும் அடைந்துகொள்ளலாம் என்று அவர்கள் எண்ணியிருந்த வேறு நோக்கங்கள் இருந்தன. அவரது ஊழியத்திற்கெதிராக அவர்களது செயல்கள் இருந்ததுமன்றி, எருசலேமிலும், அவர்களது பெரிய மனிதர்களுக்கிருந்த செல்வாக்கைவிட கிறிஸ்துவின் செல்வாக்கு அதிகரித்துக்கொண்டிருந்தது. ரபிமார்களின் அதிகார வீராவேசப் பேச்சுக்களில் விருப்பமற்றிருந்த திரளானவர்கள் இயேசுவின் போதனையால் கவரப்பட்டிருந்தனர். அவரது வார்த்தைகளை அவர்களால் புரிந்துகொள்ளமுடிந்தது. அவர்களது இருதயங்கள் அதனால் அனலடைந்து ஆறுதலடைந்தன. தேவன் பழிவாங்கும் ஒருவர் என்று அவர் தேவனைப்பற்றிக் கூறாமல், அன்புமிக்க தந்தை என்று கூறி, தாமே கண்ணாடியாக இருந்து தேவனை வெளிப்படுத்தினார். காயமடைந்த ஆவிக்கு அவரது வார்த்தைகள் பிசின்தைலம்போலிருந்தன. அவர் தமது இரக்கமுள்ள வார்த்தைகளினாலும் செயல்களினாலும் பழைய சடங்காச்சாரங்கள் மற்றும் மனிதர்களுடைய கற்பனைகளின் ஒடுக்கும் வல்லமையைத் தகர்த்து, தேவனுடைய அன்பை அதன் தீர்ந்துபோகாத நிலையில் காட்டிக்கொண்டிருந்தார். (14)

கிறிஸ்துவைப்பற்றின பழைய தீர்க்கதரிசனங்கள் ஒன்றில்: “சமாதான கர்த்தர் வருமளவும் செங்கோல் யூதாவைவிட்டு நீங்குவதும் இல்லை, நியாயப்பிரமாணிக்கன் அவன் பாதங்களை விட்டு ஒழிவதும் இல்லை; ஜனங்கள் அவரிடத்தில் சேருவார்கள்” (ஆதியாகமம் 49:10) என்று கூறப்பட்டுள்ளது. மக்கள் கிறிஸ்துவைச் சுற்றிலும் திரண்டுகொண்டிருந்தனர். அனுதாபம் தேவையாயிருந்த திரளானவர்களின் இருதயங்களில் ஆசாரியர்கள் கட்டாயப்படுத்தியிருந்த சடங்காச்சாரங்களுக்குமேலாக அன்பும் அனுதாபமும் உடைய போதனைகளை ஏற்றுக்கொண்டிருந்தன. ஆசாரியர்களும் ரபிமார்களும் இடைபடாதிருந்திருந்தால், உலகம் இதுவரை ஒருபோதும் கண்டிராத சீர்திருத்தத்தை அவரது போதனைகள் உண்டுபண்ணியிருந்திருக்கும். ஆனால் இந்தத் தலைவர்கள் அவர்களது சொந்த வல்லமையைத் தக்கவைத்துக்கொள்ளுவதற்காக இயேசுவின் செல்வாக்கைத் தகர்க்கத் தீர்மானஞ்செய்திருந்தனர். சனகரீம் சங்கத்தின்முன்

அவர் குற்றவாளியாக்கப்பட்டதும் அவரது போதனைகள் பகிரங்கமாகக் குற்றப்படுத்தியதும், இதனை சாத்தியப்படுத்த உதவக்கூடியதாக இருந்தது. ஏனெனில், மக்கள் இன்னும் தங்களுடைய மதத்தலைவர்களின்மீது அதிகமான பக்தியுடையவர்களாகவே இருந்தனர். எவர்கள் ரபிமார்களால் வைக்கப்பட்ட கோரிக்கைகளை குற்றப்படுத்தத் துணிந்தனரோ அல்லது அவர்கள் மக்கள்மீது ஏற்றியிருந்த சுமையை இலகுவாக்க முயன்றனரோ அவர்கள் குற்றமுள்ளவர்களாகவும், தேவதூஷணங்கூறுபவர்களாகவும் மட்டுமின்றி, இராஜதுரோகிகளாகவும் கருதப்பட்டிருந்தனர். இந்த அடிப்படையில் ரபிமார்கள் கிறிஸ்துவின்மீது சந்தேகத்தை எழுப்பிவிடலாமென நம்பியிருந்தனர். நடைமுறைப்படுத்தப்பட்டுள்ள பழக்கங்களைக் கவிழ்க்க அவர் முயன்றுகொண்டிருக்கிறார் என எடுத்துக்கூறி, அதன்மூலமாக மக்களுக்குள் பிரிவினையை உண்டாக்கி, ரோமர்களுக்கு முற்றிலுமாக அடிமைப்படுவதற்கான பாதையை ஆயத்தஞ்செய்திருந்தனர். (15)

ரபிமார்கள் இவ்வளவு வைராக்கியத்துடன் நிறைவேற்றுவதற்கென்று செலாற்றியிருந்த திட்டங்களின் ஆரம்பம் சனகரீம் சங்கத்துடன் மட்டுமின்றி வேறொரு சங்கத்தினுடையதாகவும் இருந்தது. வனாந்தரத்தில் கிறிஸ்துவை மேற்கொள்ளுவதில் சாத்தான் தோல்வியடைந்தபின், அவரது ஊழியத்தை எதிர்க்க, கூடுமானால் அதை நடைபெறாமல் செய்துவிட தனது சேனைகளை ஒன்று திரட்டினான். நேரடியான சுயமுயற்சியினால் அவனால் எதை நிறைவேற்ற முடியவில்லையோ அதைத் தந்திரத்தின்மூலமாக நிறைவேற்றத் தீர்மானித்தான். வனாந்தரத்தில் நடைபெற்ற போரிலிருந்து அவன் பின்வாங்கினவுடனேயே தனது தூதகணங்களின் கூட்டமைப்பில் யூத மக்கள் அவரை இனங்கண்டுகொள்ளாது இருக்கும்படி யூத மக்களின் மனங்களைக் குருடாக்குவதற்கு மேற்கொண்டு திட்டங்களைத் தீட்டினான். சத்தியத்தின் வீரரான அவருக்கு எதிராகவுள்ள தனது எதிர்ப்பை மனிதர்களுக்குள்ளும் உண்டாக்கி, மத உலகின் மனித ஏதுகரங்களின்மூலமாகச் செயலாற்ற அவன் திட்டமிட்டான். ஊழியத்தை செய்யாதபடி அவரை அதைரியப்படுத்தலாம் என்னும் நம்பிக்கையுடன், அவன் கிறிஸ்துவை புறக்கணிக்கும்படி அவர்களை நடத்தி, அவரது வாழ்க்கையை எந்த அளவிற்கு கசப்பானதாக்கமுடியுமோ, அந்த அளவிற்கு கசப்பானதாக்கினான். இரட்சகருக்கு எதிராகப் போர்செய்வதில் இஸ்ரவேலர்கள் சாத்தானின் கருவிகளாக இருந்தனர் .(16)

“கர்த்தர் தமது நீதியினிமித்தம் அவன்மேல் பிரியம் வைத்திருந்தார்; அவர் வேதத்தை முக்கியப்படுத்தி அதை மகிமையுள்ளதாக்குவார்.” “அவர் நியாயத்தைப் பூமியிலே நிலைப்படுத்துமட்டும் இளக்கரிப்பதுமில்லை, பதறுவதுமில்லை”–ஏசாயா 42:21,4. ஆசீர்வாதமாக இருப்பதற்குப்பதிலாக

பாரமானதாக ஆக்கப்பட்டிருந்த ஓய்வுநாள் கட்டுப்பாடுகளிலிருந்து அதற்கு விடுதலை வழங்க அவர் வந்திருந்தார். (17)

இந்தக் காரணத்தினாலேயே பெதஸ்தாவில் சுகமளிக்க அவர் ஓய்வுநாளைத் தெரிந்துகொண்டார். அந்த நோயாளியை வாரத்தின் மற்ற எந்த நாளிலும் அதைப்போலவே அவரால் சுகப்படுத்தியிருக்கமுடியும். அல்லது "உன் படுக்கையை எடுத்துக்கொண்டு போ" என்று கூறாமல் அவனைச் சாதாரணமாக சுகப்படுத்தியிருந்திருக்கக்கூடும். ஆனால் அது அவர் விரும்பியிருந்த வாய்ப்பினை அவருக்குக் கொடுத்திருக்காது. பூமியிலுள்ள இயேசுவின் வாழ்க்கையின் ஒவ்வொரு செயலுக்கு அடியிலும் ஞானமிக்க ஒரு நோக்கம் உள்ளது. அவர் செய்த அனைத்தும் முக்கியமானதாகவும் போதனை அடங்கியதாகவும் உள்ளது. குளக்கரையில் நோயுற்று இருந்தவர்களில் தமது குணமளிக்கும் வல்லமையைப் பயன்படுத்த அவர் மிகவும் மோசமான ஒரு நோயாளியைத் தெரிந்தெடுத்து அவன்மீது அவரது குணமாக்கும் வல்லமையைச் செயல்படுத்தி, இந்த மாபெரும் அற்புதத்தை பிரசித்தம் செய்வதற்காக அவனைப் படுக்கையை எடுத்துக்கொண்டு நகரத்திற்கு ஊடாகச் செல்லும்படி பணித்தார். அது ஓய்வுநாளில் எதைச்செய்வது சட்டப்பூர்வமானதாக இருக்கும் என்னும் கேள்வியை எழுப்பி, கர்த்தருடைய நாளைக்குறித்த யூதர்களின் கட்டுப்பாடுகளை மறுக்கவும் அவர்களது சடங்காச்சாரங்கள் வீணானவை என்று அறிவிக்கவும் அவருக்கு ஒரு வழியைத் திறக்கும் (18)

துயரப்படுபவர்களுக்கு நிவாரணம் வழங்குவது ஓய்வுநாள் கற்பனைக்கு இசைவானதுதான் என்று இயேசு அறிவித்தார். துன்பத்திலிருக்கும் மனித இனத்திற்கு ஊழியம் செய்வதற்கென்று பரலோகத்திலிருந்து பூமிக்கும், பூமியிலிருந்து பரலோகத்திற்கும் எப்போதும் இறங்கிக்கொண்டும் ஏறிக்கொண்டுமிருக்கும் தூதர்களின் பணியுடன் இது இசைவுள்ளதாக இருக்கிறது. "என் பிதா இதுவரைக்கும் கிரியைசெய்துவருகிறார், நானும் கிரியைசெய்துவருகிறேன்" என்று இயேசு அறிவித்தார். மனித இனத்திற்கென்று தமது திட்டங்களைச் செயலாற்றும் சகல நாட்களும் தேவனுடைய நாட்களாகும். கற்பனையைப்பற்றி யூதர்களின் விளக்கம் சரியானதாக இருந்திருந்தால் பூமிக்கு அவர் அஸ்திவாரமிட்ட நாள்முதல், உயிருள்ள அனைத்தையும் படைத்துத் தாங்கும் பணியைச் செய்துவரும் யேகோவா தவறானவராக இருப்பார். அதன்பின் தாம் செய்ததை நல்லது என்று அறிவித்து, நிறைவின் ஞாபகச்சின்னமாக ஓய்வுநாளை ஏற்படுத்தினவர், அவரது வேலைக்கு ஒரு கால அளவைக்குறித்து, முடிவற்றவிதமாக இயங்கிவரும் பிரபஞ்சத்தின் சுழற்சியை நிறுத்தவேண்டியதாயிருக்கும். (19)

சூரியன் ஓய்வுநாளில் தனது பணியைச் செய்யக்கூடாது என்று தடைசெய்து, பூமியை உஷ்ணப்படுத்தித் தாவரங்களைப் போஷிக்கும் உயிரூட்டும் கதிர்களை தேவன் நிறுத்தவேண்டுமா? அந்த பரிசுத்தநாளில் உலகங்களின் அமைப்பு அப்படியே நின்றுவிடவேண்டுமா? வயல்களையும் காடுகளையும் நனைக்காமலிருக்கும்படி ஆறுகளுக்கும் ஓடைகளுக்கும், தங்கள் அலைகளை உண்டாக்காமல் அவைகளை நிறுத்தவேண்டுமென்று கடல்களுக்கும் கட்டளையிடவேண்டுமா? கோதுமையும் தானியங்களும் வளருவதையும், காய்கள் கனிந்து நிறம் மாறுவதையும் நிறுத்தவேண்டுமா? மரங்களும் மலர்களும் மொக்குகளை ஓய்வுநாளில் மலரச்செய்யாமலிருக்கவேண்டுமா? (20)

அப்படிப்பட்ட ஒரு நிலைமையில், மனிதர்கள் நிலத்தின் பலன்களையும், வாழ்க்கையை விரும்பக்கூடியதாக்கும் ஆசீர்வாதங்களையும் இழந்துவிடவேண்டியதுவரும். இயற்கை அதன் மாறாத செயலை ஆற்றுவதில் தொடரவேண்டும். வினாடி நேரத்திற்கும் தேவனால் தமது கரத்தை நிறுத்தவியலாது. இல்லாவிட்டால் மனிதன் மயங்கிச் செத்துவிடுவான். இந்தநாளில் மனிதன் செய்யவேண்டிய பணியும் உள்ளது. வாழ்க்கையின் தேவைகள் கவனிக்கப்பட்டாகவேண்டும். நோயாளிகள் கவனிக்கப்பட்டாக வேண்டும். ஏழைகளின் தேவைகள் வழங்கப்பட்டாக வேண்டும். ஓய்வுநாளில் துயர்துடைப்பதை அலட்சியஞ்செய்பவர்கள் அவரால் குற்றமற்றவர்களாக விடப்படமாட்டார்கள். தேவனுடைய பரிசுத்தமான இளைப்பாறும் நாள், மனிதனுக்காக உண்டாக்கப்பட்டது. எனவே, இரக்கத்தின் செயல்கள் அந்த நோக்கத்துடன் பூரணமான இசைவுள்ளதாக உள்ளது. ஓய்வுநாளிலாவது மற்ற எந்த நாளிலாவது விடுவிக்க சாத்தியமான வேதனையை, அவருடைய சிருஷ்டிகள் ஒரு மணி நேரம்கூட அதிகமாக அனுபவிப்பதை தேவன் விரும்புவதில்லை. (21)

தேவன் நம்மிடம் எதிர்பார்ப்பது மற்ற நாட்களைவிடவும் ஓய்வுநாளில் அதிகமாக இருக்கிறது. அன்று அவருடைய மக்கள் தங்களுடைய அனுதின வேலைகளை விட்டு, தியானத்திலும் ஆராதிப்பதிலும் நேரத்தை செலவுசெய்கிறார்கள். மற்ற நாட்களில் கேட்பதைவிடவும் அதிகமான தயவுகளை ஓய்வுநாளிலே கேட்கிறார்கள். அவருடைய விசேஷமான கவனத்தை உரிமையுடன் கோருகிறார்கள். அவருடைய தேர்ந்தெடுக்கப்பட்ட ஆசீர்வாதங்களுக்காக ஏங்குகிறார்கள். தேவன் அவைகளைக் கொடுக்குமுன் ஓய்வுநாள் முடியவேண்டும் என்று காத்திருக்கிறதில்லை. அவர்களுடைய வேண்டுதல்களை தரகிறார். பரலோகத்தின் வேலை ஒருபோதும் நிற்பதில்லை. மனிதனும் நன்மைசெய்வதிலிருந்து ஒருபோதும்

இளைப்பாறக்கூடாது. ஓய்வுநாளின் நோக்கம்—பிரயோஜனமில்லாத, எவ்வித செயலும் செய்யாத நேரமாக அது இருக்கவேண்டும் என்பதல்ல. ஆண்டவருடைய ஓய்வுநாளில் உலகப்பிரகாரமான வேலைகளைச் செய்வதை கற்பனை தடைசெய்கிறது.வாழ்க்கைக்கான ஆதாரத்திற்கான வேலை நிறுத்தப்படவேண்டும். உலக இன்பங்களுக்கும் இலாபத்துமாக அந்த நாளிலே செய்யப்படுகின்ற வேலைகள் சட்டத்துக்கு புறம்பானவை. தேவன் தமது சிருஷ்டிப்பின் வேலையை நிறுத்தி, ஓய்வுநாளிலே ஓய்ந்திருந்து அதை ஆசீர்வதித்ததுபோல, மனிதனுமத் தன்னுடைய அன்றாட வேலைகளை விட்டு, அந்தபரிசுத்த மணித்துளிகளை ஆரோக்கியமான ஓய்வுக்கும், ஆராதனைக்கும் பரிசுத்தமான செயல்களுக்கும் அர்ப்பணிக்கவேண்டும். நோயுற்றிருந்தவனை நலமாக்கிய கிறிஸ்துவின் ஊழியம், கற்பனையுடன் பூரணஇசைவுள்ளதாக இருந்தது. அது ஓய்வுநாளை மேன்மைப்படுத்தியது. (22)

பரலோகத்தில் பிதா செய்கிற கிரியைக்கு ஒத்த, அதற்குச் சமமான பரிசுத்தமுள்ள கிரியையைச் செய்ததினால், இயேசு தேவனுக்கு சமமான உரிமையை கோரினார். ஆனால் பரிசேயர்கள் அதிகமான கோபத்தால் மிகவும் எரிச்சலடைந்து, அவர்களது புரிந்துகொள்ளுதலின்படி, அவர் கற்பனையை மீறினது மட்டுமல்லாது, தேவனைத் தமது சொந்தப் பிதா (யோவான் 5:18) என்று அழைத்து, தேவனுக்குச் சமமாக இருப்பதாகவும் சொன்னார் என்று அறிவித்தார்கள். (23)

யூதர்கள் அனைவரும் தேவனைத் தங்களது பிதா என்று அழைத்திருந்தனர். எனவே, கிறிஸ்துவும் அதேவிதமான தேவனுடனுள்ள உறவில் நின்றுகொண்டிருந்தால், அது அவர்களை அந்த அளவிற்கு கோபமடையச் செய்திருக்காது. ஆனால் அவர் இந்த உரிமையை அதன் மிக உயர்வான பொருளில் பாராட்டி இருந்ததை அவர்கள் புரிந்துகொண்டிருப்பதைக்காட்டி, அவரைப்பற்றி தேவதூஷணம் கூறுகிறார் என்று குற்றஞ்சாட்டினர். (24)

கிறிஸ்துவின் இந்த எதிராளிகளால், அவர்களுடைய மனசாட்சிக்கு அவர் கொண்டுவந்த சத்தியங்களைச் சந்திக்கக்கூடிய வாதங்கள் எதுவும் இல்லாமலிருந்தது, அவர்களால் அவர்களுடைய பழக்கங்களையும் பாரம்பரியங்களையும்மட்டுமே சுட்டிக்காட்ட முடிந்தது. தேவனுடைய வார்த்தைகளிலிருந்தும், இயற்கையின் ஓய்வற்ற செயல்களிலிருந்தும் இயேசு எடுத்துவைத்த வாதங்களுடன் ஒப்பிடப்பட்டபோது, அவை பலவீனமானதாகவும், உயிரற்றவையாகவும் காணப்பட்டன. ஒளியைப் பெற்றுக்கொள்ளவேண்டும் என்று ரபிமார்கள் விரும்பியிருந்தால், இயேசு சத்தியத்தைக் கூறினார் என்னும்

மனநிறைவைப் பெற்றிருந்திருப்பார்கள். ஆனால் ஓய்வுநாளைப்பற்றி அவர் கூறிய காரியங்களிலிருந்து அவர்கள் வழுவிச்சென்று, அவர் தேவனுக்குச் சமமாக இருப்பதாக உரிமைபாராட்டி இருந்ததினால் அவருக்கு எதிராகக் கோபத்தைத் தூண்டிவிட அவர்கள் வகைதேடியிருந்தனர். அதிபதிகளின் கடுங்கோபத்திற்கு எல்லையில்லாமலிருந்தது. அவர்கள் மக்களுக்குப் பயப்படாமல் இருந்திருந்தால், ஆசாரியர்களும் ரபிமார்களும் அந்த இடத்திலேயே இயேசுவைக் கொலைசெய்திருந்திருப்பார்கள். ஆனால் மக்களின் பொதுவான கருத்துக்கள் அவருக்குச் சாதகமாக பலமிக்கதாக இருந்தது. தங்களுடைய நோய்களைச் சுகப்படுத்தி, துயரங்களில் ஆறுதல் அளித்த நண்பரை அநேகர் இயேசுவில் கண்டிருந்து, பெதஸ்தாவில் நோயுற்றிருந்தவனை அவர் சுகப்படுத்தியதை நியாயப்படுத்தியிருந்தனர். எனவே, தற்போதைக்கு தலைவர்கள் தங்களுடைய வெறுப்பைக் கட்டுப்படுத்திக்கொள்ள வேண்டியவர்களானார்கள். (25)

தேவதூஷணம் கூறுவதாகக் கூறப்பட்ட குற்றச்சாட்டை இயேசு எதிர்த்தார். என்னைக்குறித்து நீங்கள் குற்றப்படுத்தும் செயல்களைச் செய்வதில் எனது அதிகாரம் என்னவெனில்: இயல்பிலும், சித்தத்திலும், நோக்கத்திலும் நான் தேவனுடைய குமாரனாக இருக்கிறேன். படைப்பு, பராமரித்தல் ஆகிய அவரது பணிகள் அனைத்திலும் நான் தேவனுடன் கூட்டுறவு கொள்ளுகிறேன். “பிதாவானவர் செய்யக் குமாரன் காண்கிறதெதுவோ, அதையேயன்றி, வேறொன்றையும் தாமாய்ச் செய்யமாட்டார்;” தேவன் அவரைச் செய்யும்படி உலகத்திற்குள் அனுப்பின அதே வேலையை அவர் செய்ததற்காக ஆசாரியர்களும் ரபிமார்களும் தேவகுமாரனை கண்டிப்பான நடவடிக்கைக்குள்ளாக்கியிருந்தனர். தங்களுடைய பாவங்களினால் தங்களுடைய தேவனைவிட்டுத் தாங்களாகவே பிரிந்திருந்து, அவர்களது அகந்தையினால் அவர்கள் தேவனைவிட்டுத் தனியாக இருந்திருந்தனர். சகல காரியங்களிலும் அவர்கள் தங்களுக்குத் தாங்களாகவே போதுமானவர்கள் என்று உணர்ந்திருந்து, அவர்களுடைய செயல்களை இயக்க உன்னதமான ஒரு ஞானம் தேவையில்லையென்னும் உணர்வை உடையவர்களாக இருந்தனர். ஆனால் தேவகுமாரன் பிதாவின் சித்தத்திற்கு தம்மை ஒப்புக்கொடுத்தவராக இருந்து, அவரது வல்லமையைச் சார்ந்தவராக இருந்தார். கிறிஸ்து அவருக்கென்று எவ்விதமான திட்டமும் செய்யாமல் தம்மைத்தாமே முற்றிலும் வெறுமையாக்கினார். அவருக்கான தேவனுடைய திட்டத்தை அவர் ஏற்றுக்கொண்டார். தேவன் நாள்தோறும் அவரது திட்டங்களை அவருக்கு விவரித்துக் காண்பித்திருந்தார். அப்படியே நமது வாழ்க்கை அவரது சாதாரணத் திட்டத்தைச் செயல்படுத்துவதாக இருந்து, நாமும் தேவனைச் சார்ந்தவர்களாக இருக்கவேண்டும். (26)

தேவன் வாசஞ்செய்யும்படியான ஒரு ஆசரிப்புக்கூடாரத்தை மோசே அமைக்கத் தொடங்கியபோது, மலையில் அவனுக்குக் காட்டப்பட்ட மாதிரியின்படியே யாவற்றையும் செய்யும்படி கட்டளைபெற்றான். மிகத் திறமைவாய்ந்த கைவினைஞர்களான மனிதர்கள் அவனது கருத்துப்படி செயலாற்ற அவனருகில் இருந்தனர். தேவனுடைய வேலையைச் செய்ய முழு வைராக்கியமுள்ளவனாக மோசே இருந்தான். அப்படியிருந்தும், ஒரு மணியையோ, ஒரு மாதுளம்பழத்தையோ, ஒரு தொங்கும் குஞ்சத்தையோ, நூல் தொங்கலையோ, ஒரு திரைச்சீலையையோ, அல்லது ஆசரிப்புக்கூடாரத்தின் எந்தப் பாத்திரத்தையோ செய்ய அவனுக்குக் காட்டப்பட்ட மாதிரியைத் தவிர்த்து வேறுவிதமாகச் செய்யக்கூடாதவனாக இருந்தான். தேவன் அவனை மலைக்கு அழைத்து, பரலோகப் பொருட்களைக் காட்டினார். அந்த மாதிரியைக் காணும்படி தேவன் அவனைத் தமது சொந்த மகிமையினால் மூடினார். அதன்படியே அனைத்தும் செய்யப்பட்டன. அப்படியே தமது வாசஸ்தலத்தை எவர்கள்மூலமாகச் செய்ய விரும்பியிருந்தாரோ, அந்த இஸ்ரவேலருக்கு அவர் தமது குணத்தின் மகிமைமிக்க குறிக்கோளை வெளிக்காட்டினார். சீனாய் மலையிலிருந்து கற்பனைகள் கொடுக்கப்பட்டபோது, அதன் மாதிரி அவர்களுக்குக் காட்டப்பட்டது. “கர்த்தர் அவனுக்கு முன்பாகக் கடந்துபோகிறபோது, அவர்: கர்த்தர், கர்த்தர்; இரக்கமும், கிருபையும், நீடிய சாந்தமும், மகா தயையும், சத்தியமுமுள்ள தேவன். ஆயிரம் தலைமுறைகளுக்கு இரக்கத்தைக் காக்கிறவர்; அக்கிரமத்தையும் மீறுதலையும் பாவத்தையும் மன்னிக்கிறவர்; குற்றவாளியைக் குற்றமற்றவனாக விடாமல், பிதாக்கள் செய்த அக்கிரமத்தைப் பிள்ளைகளிடத்திலும், பிள்ளைகளுடைய பிள்ளைகளிடத்திலும் மூன்றாம் நான்காம் தலைமுறைமட்டும் விசாரிக்கிறவர்” (யாத்திராகமம் 34:6–7) என்று அறிவித்தார். (27)

இஸ்ரவேலர்கள் அவர்களுடைய சொந்தப் பாதைகளைத் தெரிந்துகொண்டனர். அவர்கள் காட்டப்பட்டிருந்த மாதிரியின்படிக் கட்டவில்லை. ஆனால் தேவன் வாசஞ்செய்யும் உண்மையான ஆலயமாகிய கிறிஸ்து, பூமிக்குரிய அவரது வாழ்க்கையின் ஒவ்வொரு பகுதியின் விபரத்தையும் தேவனுடைய யோசனையின்படியே வார்த்தார். “என் தேவனே, உமக்குப் பிரியமானதைச் செய்ய விரும்புகிறேன்; உமது நியாயப்பிரமாணம் என் உள்ளத்திற்குள் இருக்கிறது” (சங்கீதம் 40:8) என்று அவர் கூறினார். அப்படியே “அவர்மேல் நீங்களும் ஆவியினாலே தேவனுடைய வாசஸ்தலமாகக் கூட்டிக்கட்டப்பட்டுவருகிறீர்கள்” (எபேசியர் 2:22); நமது குணங்களும் கட்டப்பட்டாகவேண்டும். நாமும் அந்த “மாதியின்படியே எல்லாவற்றையும்

செய்ய” (எபிரெயர் 8:5), “தம்முடைய அடிச்சுவடுகளைத்தொடர்ந்து வரும்படி உங்களுக்கு மாதிரியை பின்வைத்துப்போனார்”–1 பேதுரு 2:21. (28)

பரலோகத்திலுள்ள பிதாவுடன் பிரிக்கப்படமுடியாதவர்களாக நாம் கட்டப்பட்டிருக்கிறோம் என்று நம்மைப்பற்றி நாம் கருதவேண்டுமென்று கிறிஸ்துவின் வார்த்தைகள் போதிக்கின்றன. நாம் எந்த நிலைமையில் இருந்தாலும், சகல முடிவுகளையும் தமது கரத்தில் வைத்துள்ள தேவனைச் சார்ந்தவர்களாக இருக்கிறோம். அவர் நமது வேலைகளை ஏற்படுத்தி, அந்த வேலைகளைச் செய்வதற்கான அறிவையும் கருவிகளையும் தந்திருக்கிறார். அவரது பெருந்திட்டத்தில் அவர் ஏற்படுத்தியுள்ள நமது பகுதியை நிறைவேற்ற நமது சித்தத்தை தேவனுக்குக் கீழ்ப்படுத்துகின்றபோதும், அவரது பலத்திலும் ஞானத்திலும் நம்பிக்கைவைக்கும்போதும், பாதுகாப்பான பாதைகளில் நாம் நடத்தப்படுவோம். ஆனால் தனது சொந்த ஞானத்திலும் வல்லமையிலும் சார்ந்திருக்கும் ஒருவன், தன்னை தேவனிடமிருந்து பிரித்துக்கொள்ளுகிறான். அப்படிப்பட்டவன் கிறிஸ்துவுடன் இணைந்து செயலாற்றுவதற்குப் பதிலாக தேவனுக்கும் மனிதனுக்கும் எதிரியாக உள்ளவனின் நோக்கத்தை நிறைவேற்றுகிறான். (29)

“அவர் எவைகளைச் செய்கிறாரோ, அவைகளைக் குமாரனும் அந்தப்படியே செய்கிறார்.... பிதாவானவர் மரித்தோரை எழுப்பி உயிர்ப்பிக்கிறதுபோல, குமாரனும் தமக்குச் சித்தமானவர்களை உயிர்ப்பிக்கிறார்” என்று இரட்சகர் தொடர்ந்தார். சரீரத்தின் உயிர்த்தெழுதல் இல்லையென்று சதுசேயர்கள் எண்ணியிருந்தனர். ஆனால் பிதாவானவர் செய்யும் அநேக காரியங்களில் மிகவும் பெரியது மரித்தோரை எழுப்புவதாகும். இயேசுவும் இதே செயலைச் செய்யும் வல்லமையைத் தமக்குள் தாமே உடையவராக இருக்கிறார். “மரித்தோர் தேவகுமாரனுடைய சத்தத்தைக் கேட்குங் காலம் வரும், அது இப்பொழுதே வந்திருக்கிறது;” பரிசேயர்கள் மரித்தோரின் உயிர்த்தெழுதலில் நம்பிக்கை உடையவர்களாக இருந்தனர். இப்போதுங்கூட மரித்தவர்களுக்கு ஜீவனைக் கொடுக்கும் வல்லமையாக அவர் அவர்களுக்கு மத்தியில் இருக்கிறார். அவர்கள் அதன் வெளிப்படுத்தலைக் காணவேண்டுமென்றும் கிறிஸ்து அறிவிக்கிறார். “அக்கிரமங்களினாலும் பாவங்களினாலும் மரித்த” (எபேசியர் 2:1) ஆத்துமாவிற்கு உயிரை அளிக்கக்கூடிய அதே வல்லமை உயிர்த்தெழுதலின் வல்லமையாக உள்ளது. கிறிஸ்து இயேசுவிலுள்ள அந்த ஜீவ ஆவி—உயிர்ப்பிக்கும் அவரது வல்லமை—“பாவம், மரணம் என்பவைகளின் பிரமாணத்திலிருந்து” மனிதர்களை விடுவிக்கிறது. (பிலிப்பியர் 3:10; ரோமர் 8:2). தீமையின் இராஜ்யம் தகர்க்கப்பட்டு, விசுவாசத்தின்மூலமாக ஆத்துமா

பாவத்திலிருந்து காக்கப்படுகிறது. கிறிஸ்துவின் ஆவிக்கு எவன் தனது இருதயத்தைத் திறக்கிறானோ, அவன் அவனது சரீரத்தைக் கல்லறையில் இருந்து வெளியே கொண்டுவரும் பலத்த வல்லமைக்குப் பங்காளியாகிறான். (30)

தாழ்மையான நசரேயர் அவரது மெய்யான மேன்மைக்கு உறுதிபகருகிறார். அவர் மானிடத்திற்கு மேலாக எழுந்து, பாவம், அவமானம் ஆகியவைகளின் வேஷத்தைக் களைந்து, தேவதூதர்களால் மேன்மைப்படுத்தப்பட்டவராக, தேவகுமாரனாக, பிரபஞ்சத்தின் சிருஷ்டிகருடன் ஒருவராக வெளிக்காட்டப்பட்டு நிற்கிறார். அவரது பேச்சைக் கேட்பவர்கள் கட்டுப்பட்டவர்களாக நிற்கின்றனர். இப்படிப்பட்ட வார்த்தைகளை ஒருமனிதனும் ஒருபோதும் பேசினதில்லை. அல்லது இப்படிப்பட்ட அரச மகத்துவத்தைத் தனக்குத்தான் எடுத்துக்கொண்டதுமில்லை. அவரது வார்த்தைகள் அவரது ஊழியத்தையும் உலகத்தின் கடமையையும் முழுமையாக அறிவிக்கும் தெளிவானவைகளாகவும் வெளிப்படையானவைகளாகவும் உள்ளன. “பிதாவைக் கனம்பண்ணுகிறதுபோல எல்லாரும் குமாரனையும் கனம்பண்ணும்படிக்கு, பிதாவானவர் தாமே ஒருவருக்கும் நியாயத்தீர்ப்புச் செய்யாமல், நியாயத்தீர்ப்புச் செய்யும் அதிகாரம் முழுவதையும் குமாரனுக்கு ஒப்புக்கொடுத்திருக்கிறார்.... பிதாவானவர் தம்மில்தாமே ஜீவனுடையவராயிருக்கிறது போல, குமாரனும் தம்மில்தாமே ஜீவனுடையவராயிருக்கும்படி அருள்செய்திருக்கிறார். அவர் மனுஷ குமாரனாயிருக்கிறபடியால், நியாயத்தீர்ப்புச் செய்யும்படிக்கு அதிகாரத்தையும் அவருக்குக் கொடுத்திருக்கிறார்” (31)

கிறிஸ்துவின் பணியைக் குற்றப்படுத்துவதற்கு ஆசாரியர்களும் அதிபதிகளும் தங்களைத் தாங்களே நீதிபதிகளாக்கிக்கொண்டனர். ஆனால் அவர் தம்மை அவர்களது நீதிபதியாக அறிவித்து, உலகம் முழுவதற்கும் அவர் நீதிபதி என்பதை அறிவித்தார். உலகம் கிறிஸ்துவிடம் ஒப்படைக்கப்பட்டிருக்கிறது. விழுந்துபோன மனித இனத்திற்கு ஒவ்வொரு ஆசீர்வாதமும் அவர்மூலமாக தேவனிடமிருந்து வருகிறது. அவரது அவதாரத்திற்குபின் அவர் இருந்ததைப் போலவே, அதற்குமுன்னும் அவர் மீட்பராகவே இருந்தார். பாவம் தோன்றின உடனே ஒரு இரட்சகர் தோன்றினார். அவர் அனைவருக்கும் ஜீவனையும் ஒளியையும் கொடுத்திருக்கிறார். கொடுக்கப்பட்டுள்ள வெளிச்சத்தின் அளவிற்குத்தக்கதாக ஒவ்வொருவரும் நியாயத்தீர்ப்பை அடையவேண்டியவர்களாக உள்ளனர். ஒளியைக் கொடுத்தவர் மென்மையான கெஞ்சுதல்களுடன் ஆத்துமாவைப் பின்தொடர்ந்தவர், அதைப் பாவத்திலிருந்து பரிசுத்தப்படுத்த வகைதேடுபவர், அதன் பரிந்துபேசுபவராகவும் நீதிபதியாகவும் இருக்கிறார். பரலோகத்தில்

மாபெரும் போராட்டம் ஆரம்பமானதிலிருந்து சாத்தான் வஞ்சகத்தின்மூலமாகத் தனது காரியங்களை நடத்திவந்திருக்கிறான். அவனது திட்டங்களைத் திரைநீக்கஞ்செய்து, அவனது வல்லமையை முறியடிக்க கிறிஸ்து பணியாற்றிக்கொண்டிருக்கிறார். அந்த வஞ்சகனைப் போரில் சந்தித்தவரும், அடிமைகளாக இருப்பவர்களை அவனது பிடியிலிருந்து விடுவிக்க வகைதேடி யுகங்கள் நெடுகிலுமாகப் போரிட்டுக்கொண்டிருப்பவரும், ஒவ்வொரு ஆத்துமாவின்மீதும் நியாயத்தீர்ப்புக்கூறுபவரும் அவரே. (32)

“அவர் மனுஷகுமாரனாயிருக்கிறபடியால், நியாயத்தீர்ப்புச் செய்யும்படிக்கு அதிகாரத்தையும் அவருக்குக் கொடுத்திருக்கிறார்.” மனித துன்பங்களையும் சோதனையாகிய வண்டல்களையும் அவர் ருசித்துள்ளதால், மனிதர்களுடைய சுகவீனங்களையும் பாவங்களையும் புரிந்துகொண்டிருப்பதினால், சாத்தானின் சோதனைகளை அவர் நமது சார்பாக வெற்றிகரமாகத் தாங்கி நின்றதினால், காப்பாற்றும்படியாகத் தமது சொந்த இரத்தஞ்சொரியப்பட்ட அந்த ஆத்துமாவிடம் அவர் நீதியாகவும் மென்மையாகவும் ஈடுபடுவார். இதனால்தான் நியாயத்தீர்ப்புச்செய்யும்படி மனுஷகுமாரன் ஏற்படுத்தப்பட்டிருக்கிறார். (33)

ஆனால் கிறிஸ்துவின் ஊழியம் நியாயத்தீர்ப்பிற்காக அல்லாமல் இரட்சிப்பிற்காக இருக்கிறது. “உலகத்தை ஆக்கினைக்குள்ளாகத் தீர்க்கும்படி தேவன் தம்முடைய குமாரனை உலகத்தில் அனுப்பாமல், அவராலே உலகம் இரட்சிக்கப்படுவதற்காகவே அவரை அனுப்பினார்” —யோவான் 3:17. “என் வசனத்தைக் கேட்டு, என்னை அனுப்பினவரை விசுவாசிக்கிறவனுக்கு நித்தியஜீவன் உண்டு; அவன் ஆக்கினைத் தீர்ப்புக்குட்படாமல், மரணத்தைவிட்டுநீங்கி, ஜீவனுக்குட்பட்டிருக்கிறான்” (யோவான் 5:24) என்று சனகரீம் சங்கத்திற்குமுன் இயேசு அறிவித்தார். (34)

அவரது பேச்சைக் கேட்டுக்கொண்டிருந்தவர்களை ஆச்சரியப்படாமலிருக்கும்படிக்கூறி, எதிர்காலத்தின் இரகசியத்தை இன்னும் விசாலமான காட்சிக்கு அவர்கள்முன் கிறிஸ்து திறந்தார். “இதைக்குறித்து நீங்கள் ஆச்சரியப்படவேண்டாம்; ஏனென்றால் பிரேதக்குழிகளிலுள்ள அனைவரும் அவருடைய சத்தத்தைக் கேட்குங்காலம் வரும்; அப்பொழுது, நன்மைசெய்தவர்கள் ஜீவனை அடையும்படி எழுந்திருக்கிறவர்களாகவும், தீமைசெய்தவர்கள் ஆக்கினையை அடையும்படி எழுந்திருக்கிறவர்களாகவும் புறப்படுவார்கள்” (யோவான் 5:28,29) என்று அவர் கூறினார். (35)

இஸ்ரவேலர்கள் இவ்வளவு காலமாகக் காத்திருந்து, மேசியாவின் வருகையில் பெற்றுக்கொள்ளலாம் என்று நம்பியிருந்த எதிர்கால

வாழ்க்கையின் நிச்சயம் அதில் இருந்தது. கல்லறையின் துயர இருளைத் தணிக்கக்கூடிய ஒரே ஒளி அவர்கள்மீது பிரகாசித்துக்கொண்டிருந்தது. ஆனால் சுயசித்தம் என்பது குருடானதாக உள்ளது. இயேசு அவர்களது ரபிமார்களின் சடங்காச்சாரங்களை மீறி, அவர்களது அதிகாரத்தை மதிக்காமல் புறக்கணித்திருந்ததினால் அவர்கள் அவரை நம்ப மறுத்தனர். (36)

அந்த வேளை, அந்த இடம், அந்த சந்தர்ப்பம், அந்த மன்றத்தில் நிலவியிருந்த உணர்சிகளின் தீவிரம் ஆகிய அனைத்தும் ஒன்றுசேர்ந்து, சனகரீம் சங்கத்தின்முன் இயேசு கூறிய வார்த்தைகளுக்கு அதிக அழுத்தத்தைக் கொடுத்தது. இஸ்ரவேலைத் திரும்ப அமைப்பவர் அவர்தான் என்று தம்மை அறிவித்தவரின் உயிரை வாங்க அந்த சமுகத்தின் மேம்பட்ட நிலையிலிருந்த அதிகாரிகள் வகைதேடியிருந்தனர். ஓய்வுநாள் கட்டளையை மீறினார் என்று பூமிக்குரிய ஒரு விசாரணைமன்றத்தின்முன் ஓய்வுநாளுக்கு ஆண்டவராயிருப்பவர் குற்றஞ்சாட்டப்பட்டார். அவர் அவ்விதமாக அச்சமின்றி அவரது ஊழியத்தைப்பற்றி அறிவித்தபோது, அவரது நியாயாதிபதிகள் அவரை ஆச்சரியத்துடனும் கோபத்துடனம் நோக்கினர். ஆனால் அவரது வார்த்தைகள் மறுமொழி கொடுக்கப்படமுடியாதவைகளாக இருந்தன.அவர்களால் அவரைக் குற்றப்படுத்தமுடியவில்லை. அவரைக் கேள்வி கேட்கவும், அவரது ஊழியத்தில் குறுக்கிடவும் உள்ள ஆசாரியர்களின் உரிமையை அவர் மறுத்தார். அவர்களுக்கு அப்படிப்பட்ட அதிகாரம் கொடுக்கப்பட்டிருக்கவில்லை. அவர்களுடைய உரிமைகள் அவர்களுடைய சுயமான அகந்தையையும் மேலாதிக்க உணர்வினையும் அடிப்படையாகக்கொண்டிருந்தன. அவர்கள் சாட்டிய குற்றச்சாட்டிற்குப் பதில்கூறவும் அல்லது அவர்களால் மதபோதனை செய்யப்படவும் அவர் மறுத்துவிட்டார். (37)

அவர்கள் குறைகூறியவைகளுக்காக மன்னிப்புக் கேட்பதற்கும் அல்லது அதைச் செய்வதிலுள்ள அவரது நோக்கத்தை விளக்குவதற்கும் பதிலாக இயேசு அதிபதிகளின்மீது திரும்பவே, குற்றஞ்சாட்டியவர்கள் குற்றவாளிகளானார்கள். அவர்களுடைய இதயக் கடினத்திற்காகவும், வேதவாக்கியங்களைப்பற்றிய அறியாமைக்காகவும் அவர் அவர்களைக் கடிந்துகொண்டார். தேவன் அனுப்பியிருந்த அவரை புறக்கணித்ததின் மூலமாக அவர்கள் தேவனுடைய வார்த்தைகளை புறக்கணித்திருந்தனர் என்று அவர் அறிவித்தார். "வேதவாக்கியங்களை ஆராய்ந்து பாருங்கள்; அவைகளால் உங்களுக்கு நித்தியஜீவன் உண்டென்று எண்ணுகிறீர்களே, என்னைக்குறித்துச் சாட்சிகொடுக்கிறவைகளும் அவைகளே" (யோவான் 5:39) என்றார். (38)

வரலாறாக இருந்தாலும் சரி, கற்பனையாக இருந்தாலும் சரி, தீர்க்கதரிசனமாக இருந்தாலும் சரி, பழைய ஏற்பாட்டு வேதவாக்கியங்களாக இருந்தாலும் சரி, அவைகளின் ஒவ்வொரு பக்கமும் தேவகுமாரனுடைய மகிமையால் ஒளிவிட்டுப் பிரகாசிக்கின்றது. யூத மார்க்கத்தின் முறைமைகள் முழுவதும் அது தெய்வீக அமைப்பாக இருக்கும்வரைக்கும், சுவிசேஷத்தின் தீர்க்கதரிசனத் தொகுப்பாக இருந்தது. “அவரை விசுவாசிக்கிறவன் எவனோ அவன் அவருடைய நாமத்தினாலே பாவமன்னிப்பைப் பெறுவானென்று தீர்க்கதரிசிகளெல்லாரும் அவரைக்குறித்தே சாட்சிகொடுக்கிறார்கள்”– அப்போஸ்தலர் 10:43. ஆதாமிற்குக் கொடுக்கப்பட்ட வாக்குத்தத்தத்திலிருந்து முற்பிதாக்களின் வழிவகையும் சட்டப்பூர்வமான சமுக அமைப்பாகிய அனைத்தையும், மீட்பரின் அடிச்சுவடுகளையும், பரலோக மகிமைமிக்க ஒளி தெளிவு செய்கிறது. எதிர்கால நிகழ்ச்சிகள் தேவ இரகசியமாக வரிசையாக முன்கடந்துசென்றபோது, ஷீலோவாக வரவிருந்த பெத்லகேமின் நட்சத்திரத்தை ஞானதிருஷ்டிக்காரர்கள் கண்டனர். ஒவ்வொரு பலியிலும் கிறிஸ்துவின் மரணம் காட்டப்பட்டிருந்தது. ஒவ்வொரு தூபவர்க்கப் புகையிலும் அவரது நீதி உயர எழும்பிச் சென்றது. ஒவ்வொரு யூபிலி எக்காளத்திலும் அவரது பெயர் தொனிக்கப்பட்டிருந்தது. மகா பரிசுத்த ஸ்தலத்திலுள்ள மகத்துவமான இரகசியத்தில் அவரது மகிமை வாசஞ்செய்திருந்தது. (39)

யூதர்கள் வேதவாக்கியங்களை அவர்களது உடமையாகக் கொண்டிருந்து, அந்த வார்த்தையின் சாதாரணமான வெளிப்படையான அறிவினால் மட்டும் அவர்களுக்கு நித்திய ஜீவன் இருந்தது என்று உத்தேசித்திருந்தனர். “அவருடைய வசனம் உங்களில் தரித்திருக்கிறதுமில்லை” என்று இயேசு கூறினார். கிறிஸ்துவின் வார்த்தையை அவர்கள் புறக்கணித்தபடியால், அவரையே புறக்கணித்தனர். “உங்களுக்கு ஜீவன் உண்டாகும்படி என்னிடத்தில் வர உங்களுக்கு மனதில்லை” என்றார். (40)

மேசியாவின் இராஜ்யத்தைப்பற்றின தீர்க்கதரிசனப் போதனைகளை யூதமதத் தலைவர்கள் ஆராய்ந்திருந்தனர். ஆனால் சத்தியத்தை அறிந்துகொள்ளவேண்டுமென்ற உண்மையான வாஞ்சையால் இதைச் செய்யாமல், அவர்களது ஆசைமிக்க நம்பிக்கைக்கான சான்றுகளைத் தேடும் நோக்கத்துடன் ஆராய்ந்திருந்தனர். அவர்களுடைய எதிர்பார்ப்பிற்கு நேர் எதிரானவிதத்தில் கிறிஸ்து வந்தபோது, அவர்களால் அவரை ஏற்றுக்கொள்ள முடியவில்லை. தங்களை நியாயப்படுத்துவதற்காக அவரை ஒரு வஞ்சகர் என்று மெய்ப்பிக்க முயன்றனர். இந்தப் பாதையில் அவர்கள் அடியெடுத்துவைத்தபோது, கிறிஸ்துவிற்கு நேரான அவர்களுடைய

எதிர்ப்பை வலிமைப்படுத்துவது சாத்தானுக்கு எளிதாக இருந்தது. அவரது தெய்வீகத்திற்குச் சான்றாகப் பெற்றுக்கொள்ளப்படவேண்டியதாயிருந்த அதே வார்த்தைகள் அவருக்கு எதிரானவைகளாக விளங்கிக்கொள்ளப்பட்டன. இப்படியாக, அவர்கள் தேவனுடைய சத்தியத்தை ஒரு பொய்யாக மாற்றினதால், இரட்சகர் அவரது ஊழியத்தின் இரக்கத்தினால் எந்த அளவிற்கு அதிகமாக அவர்களிடம் நேரடியாகப் பேசினாரோ, அந்த அளவிற்கு அதிகமாக அவர்கள் ஒளியைத் தடைசெய்வதில் தீர்மானமுள்ளவர்களாக இருந்தனர். (41)

“நான் மனுஷரால் மகிமையை ஏற்றுக்கொள்ளுகிறதில்லை” என்று இயேசு கூறினார். அவர் சனகரீம் சங்கத்தின் செல்வாக்கையோ அங்கீகாரத்தையோ வாஞ்சிக்கவில்லை. அவர்களது முடிவான சான்றுகளின் அங்கீகாரத்தால் உண்டாகும் மகிமையை ஏற்றுக்கொள்பவராக அவர் இருக்கவில்லை. அவர் பரலோக மகிமையையும் அதிகாரத்தையும் பெற்றவராக இருந்தார். அவர் அதை விரும்பியிருந்தால் அவரைத் துதிக்க தூதர்கள் வந்திருப்பார்கள். அவரது தெய்வீகத்தைப்பற்றிப் பிதா மறுபடியும் சாட்சி பகர்ந்திருப்பார். ஆனால் அவர்களுக்காகவே, அவர்கள் தலைவர்களாக இருந்த அந்த ஜனத்திற்காகவே, யூத அதிகாரிகள் அவரது குணத்தை அறிந்து, அவர்களுக்காக அவர் கொண்டுவந்திருந்த ஆசீர்வாதங்களை அவர்கள் பெற்றுக்கொள்ளவேண்டும் என்று அவர் விரும்பினார். (42)

“நான் என் பிதாவின் நாமத்தினாலே வந்திருந்தும் நீங்கள் என்னை ஏற்றுக்கொள்ளவில்லை, வேறொருவன் தன் சுயநாமத்தினாலே வந்தால் அவனை ஏற்றுக்கொள்வீர்கள்.” இயேசு தேவனுடைய அதிகாரத்தினாலும், அவரது ரூபத்தைத் தாங்கிக்கொண்டும், அவரது வார்த்தைகளை நிறைவேற்றிக்கொண்டும், அவரது மகிமையைத் தேடிக்கொண்டும் வந்தார். அப்படியிருந்தும் யூதத் தலைவர்களால் அவர் ஏற்றுக்கொள்ளப்படவில்லை. ஆனால் கிறிஸ்துவின் வேஷத்தைத் தரித்துக்கொண்டு, தங்கள் சுயசித்தத்தினால் ஏவப்பட்டவர்களாக, தங்களுடைய சுயமகிமையைத்தேடி மற்றவர்கள் வந்தால், அவர்கள் ஏற்றுக்கொள்ளப்படுவார்கள். ஏன்? ஏனெனில் தன் சுயமகிமையைத் தேடுகிறவன், சுயத்தை உயர்த்தவேண்டும் என்ற மனதின் ஆசையை மற்றவர்களில் தூண்டிவிடுகிறான். இவ்விதமான வேண்டுகோள்களுக்கு யூதர்கள் பதிலளிக்கக்கூடியவர்களாக இருந்தனர். அவர்கள் பொய்யான ஆசாரியர்களை ஏற்றுக்கொள்ளுவார்கள். ஏனெனில் அப்படிப்பட்டவர்கள் யூதர்கள் போற்றியிருந்த கருத்துக்களையும் பாரம்பரியங்களையும் அங்கீகரித்து, அவர்களது பெருமையை பாராட்டியிருந்திருப்பார்கள். ஆனால் கிறிஸ்துவின் போதனைகள் அவர்களுடைய எண்ணங்களுடன் ஒன்றுசேராமல் இருந்தது. அது

ஆவிக்குரியதாக இருந்து, சுயத்தைத் தியாகஞ்செய்யும்படிக் கோரியிருந்தது. எனவே அவர்கள் அதை ஏற்றுக்கொள்ளமாட்டார்கள். அவர்கள் தேவனுடன் அறிமுகம் இல்லாதவர்களாக இருந்தனர். கிறிஸ்துவின்மூலமாக உள்ள அவரது சத்தம் அவர்களுக்கு ஒரு அந்நியனின் சத்தமாக இருந்தது. (43)

அதே செயல் இப்பொழுது நமது நாட்களிலும் திரும்பச் செய்யப்படுவதில்லையா? இன்று பரிசுத்த ஆவியானவருக்கு எதிராகத் தங்களது இருதயங்களைக் கடினப்படுத்தி, தேவனுடைய சத்தத்தை அடையாளம் கண்டுகொள்ளமுடியாதவர்களாயிருக்கும் அநேகரும் மதத்தலைவர்களுங்கூட இருக்கவில்லையா? தங்களுடைய சொந்த சடங்காச்சாரங்களைக் காத்துக்கொள்ளுவதற்காக அவர்கள் தேவனுடைய வார்த்தையை தள்ளிப்போடுவதில்லையா? (44)

“நீங்கள் மோசேயை விசுவாசித்தீர்களானால், என்னையும் விசுவாசிப்பீர்கள்; அவன் என்னைக்குறித்து எழுதியிருக்கிறானே. அவன் எழுதின வாக்கியங்களை நீங்கள் விசுவாசியாமலிருந்தால் நான் சொல்லுகிற வசனங்களை எப்படி விசுவாசிப்பீர்கள் என்றார்.” கிறிஸ்துதான் மோசேயின் மூலமாக இஸ்ரவேலர்களுடன் பேசியிருந்தார். அவர்களது பெரும் தலைவனின்மூலமாகப் பேசிய தெய்வீக சத்தத்தை அவர்கள் கவனித்திருந்தார்களானால் அவர்கள் கிறிஸ்துவின் போதனைகளில் அதை அடையாளம் கண்டிருந்திருப்பார்கள். அவர்கள் மோசேயை நம்பியிருந்தார்களானால் மோசே எழுதியிருந்த ஒருவரை, நம்பியிருந்திருப்பார்கள். (45)

ஆசாரியர்களும் ரபிமார்களும் அவரது உயிரைப் பறித்துக்கொள்ளும் தீர்மானமுடையவர்களாக உள்ளனர் என்பதை இயேசு அறிந்திருந்தார். அப்படியிருந்தும் அவருக்குப் பிதாவுடனிருந்த ஐக்கியத்தையும் இந்த உலகத்துடனுள்ள உறவையும் தெளிவாக விளக்கினார். அவர்மீதான அவர்களுடைய எதிர்ப்பு, சாக்குப்போக்கு இல்லாததாக இருப்பதை அவர்கள் கண்டனர். இருந்தாலும் கொலைசெய்யவேண்டும் என்னும் அவர்களுடைய வெறுப்பின் தாகம் தணியாததாக இருந்தது. அவரது ஊழியத்தினால் உண்டாயிருந்த மன உணர்த்துதலை அவர்கள் கண்டபோது, பயம் அவர்களைப் பற்றிக்கொண்டது. எனவே அவரது வேண்டுகோள்களை அவர்கள் எதிர்த்து, தங்களை இருளுக்குள் பூட்டிக்கொண்டனர். (46)

இயேசுவின் அதிகாரத்தைக் கவிழ்ப்பதிலும், அல்லது அவரது வார்த்தைகளினால் உணர்வடைந்த அநேகருடைய மரியாதையையும் கவனத்தையும் முறிப்பதிலும் அவர்கள் குறிப்பாகத் தோல்வியடைந்திருந்தனர். அதிபதிகளின் மனச்சாட்சிகளின்மீது அவர்களுடைய குற்றத்தை அவர்

ஆழமாகப் பதித்தபோது, அவர்கள் தாங்களே ஆழமான குற்றவாளிகளாக உணர்ந்தனர். ஆயினும் அது அவர்களை அவருக்கெதிராக மிகவும் கசப்புள்ளவர்களாகமட்டுமே ஆக்கியது. அவரைக் கொலைசெய்வதற்கு அவர்கள் தீர்மானமுள்ளவர்களாக இருந்தனர். இயேசு ஒரு போலியானவர், வேஷக்காரர் என்று மக்களை எச்சரிக்கும்படி அவர்கள் நாடு முழுவதற்கும் தூதுவர்களை அனுப்பினர். அவர் என்ன பேசினார்; என்ன செய்தார்; என்பதைக் கவனித்து அறிக்கை அனுப்பும்படி வேவுகாரர்கள் அனுப்பப்பட்டிருந்தனர். அருமையான இரட்சகர் மிக நிச்சயமாகவே இப்பொழுது சிலுவையின் நிழலின்கீழ் நின்றுகொண்டிருந்தார். (47) ★

# 22

# யோவான் ஸ்நானகனின் சிறைவாசமும்—மரணமும்!

**மத்தேயு 11:1–11; 14:1–11; மாற்கு 6:17–28; லூக்கா 7:19–28**

**(The Desire of Ages, pp. 214–225)**

கிறிஸ்துவின் இராஜ்யத்தை அறிவிப்பதிலும் பாடுகளை அனுபவிப்பதிலும் யோவான் ஸ்நானகன் முதலாவதானவனாக இருந்தான். வனாந்தரத்தின் தூய்மைமிக்க காற்றிலும் அவனது வார்த்தைகளைச் சார்ந்திருந்த பெருங்கூட்டத்திலும் இருந்து இப்பொழுது அவன் பாதாளச்சிறையில் அடைக்கப்பட்டான். ஏரோது அந்திப்பாவின் ஆளுகைக்கு உட்பட்ட யோர்தானுக்குக் கிழக்கே இருந்த பிரதேசத்தில், யோவானுடைய ஊழியத்தின் பெரும்பகுதி செலவிடப்பட்டிருந்தது. யோவானின் பிரசங்கத்தை ஏரோதுதானும் கேட்டிருந்தான். சன்மார்க்க நெறிகளை இழந்து, காமவெறியனாக இருந்த அவன், யோவானின் "மனந்திரும்புங்கள்" என்னும் அழைப்பினைக் கேட்டு நடுங்கினான். யோவான், நீதியும் பரிசுத்தமுமிக்க ஒரு மனிதன் என்பதை அறிந்து, அவனுக்குப் பயந்தான். யோவானின் உரைகளையும் அவன் செயலாற்றியவைகளையும்பற்றிக் கேள்வியுற்றிருந்த ஏரோது, அவனது உரையை மகிழ்ச்சியுடன் கேட்டான். ஏரோது அவனது சகோதரனின் மனைவியாக இருந்த ஏரோதியாளை சேர்த்துக்கொண்டிருந்த அக்கிரமமான குற்றத்தை, யோவான் ஸ்நானகன் விசுவாசத்துடன் வெளிப்படையாகக் கண்டித்திருந்தான். தன்னைப் பிணைத்திருந்த இச்சையாகிய சங்கிலியை அறுக்க ஏரோது சிலகாலம் பலவீனமாக முயன்றிருந்தான். ஆனால் ஏரோதியாள் தனது முயற்சியால் அவனை மிக உறுதியாக விடாமல்பிடித்து, யோவானைச் சிறையிலிடும்படி ஏரோதை இணங்கச்செய்து, யோவான் ஸ்நானகனைப் பழிவாங்கினாள். (1)

அதிகமாக ஊழியஞ்செய்கின்ற ஒன்றாக யோவானின் வாழ்க்கை இருந்தது. துயரமும் செயலற்றதுமான சிறைவாழ்க்கை அவனுக்கு மிகுந்த பாரமானதாக இருந்தது. எவ்விதமான மாற்றமும் இன்றி, ஒன்றன்பின் ஒன்றாக வாரங்கள் கடந்துசென்றபோது, மனமடிவும் ஐயமும் அவனுள் உண்டாயின.

அவனது சீடர்கள் அவனைக் கைவிடவில்லை. அவர்கள் சிறைச்சாலைக்குச் சென்று யோவான் ஸ்நானகனைச் சந்திக்க அனுமதிக்கப்பட்டபோது, அவர்கள் இயேசுவின் உழியங்களைப்பற்றியும் மக்கள் எவ்விதமாகத் திரளாக அவரிடம் கூடுகின்றனர் என்பதையும் அவர்கள் அவனிடம் கூறினார்கள். ஆனால் இந்தப் புதிய போதகர் மேசியாவாக இருந்தால், யோவானை விடுதலைசெய்ய எதுவும் செய்யாமலிருப்பது ஏன்? என்று அவர்கள் கேள்வி கேட்டனர். அவரது விசுவாசமிக்க கட்டியக்காரனாக இருப்பவன் சுதந்திரத்தை இழக்கும்படியும், ஒருவேளை உயிரையே இழக்கவும் அவரால் எந்தவிதமாக அனுமதிக்க முடிந்தது? (2)

இந்தக் கேள்விகளுக்குப் பலனில்லாமல் இருக்கவில்லை. அப்படியில்லாதபட்டத்தில் ஒருபோதும் ஏற்படாதிருக்கக்கூடிய சந்தேகங்கள் யோவானுக்குத் தெரிவிக்கப்பட்டன. இந்த சீடர்களின் வார்த்தைகளைக் கேட்டு அவர்களின் சொற்கள் எந்தவிதமாகக் கர்த்தருடைய ஊழியக்காரனின் ஆத்துமாவைக் காயப்படுத்தினது என்பதில் சாத்தான் மகிழ்ச்சியடைந்தான். ஆ! ஒரு நல்ல மனிதனின் நண்பர்கள் என்று பெரும்பாலும் தங்களைப்பற்றி நினைத்துக்கொண்டிருப்பவர்களும் அவன்மீதுள்ள தங்களுடைய விசுவாசத்தைக் காட்ட மிகுந்த ஆவலுள்ளவர்களாக இருப்பவர்களும் அவனது மிகப் பயங்கரமான விரோதிகள் என்று அடிக்கடி எந்தவிதமாக மெய்ப்பிக்கப்பட்டுவிடுகிறார்கள்! அவனது விசுவாசத்தைப் பலப்படுத்துவதற்குப்பதிலாக அவர்களுடைய வார்த்தைகள் அவனை எந்தவிதமாக அடிக்கடி மனமடிவடையச்செய்து இருதயத்தை நலிவடையச்செய்கின்றன! (3)

இரட்சகரின் சீடர்களைப்போலவே யோவான் ஸ்நானகனின் சீடர்களும் கிறிஸ்துவினுடைய இராஜ்யத்தின் தன்மையைப் புரியாதவர்களாக இருந்தனர். தாவீதின் அரியணையில் அவர் அமர்வார் என்று ஆன் எதிர்பார்த்திருந்தான். காலங் கடந்துசென்றபின்னும் இரட்சகர் அரசருக்குரிய அதிகாரத்தின்மீது உரிமைபாராட்டாமல் இருந்ததில், யோவான் குழப்பமடைந்து சஞ்சலமடையத் தொடங்கினான். கர்த்தருக்கு வழியை ஆயத்தஞ்செய்வதற்கு ஏசாயாவின் தீர்க்கதரிசனம் நிறைவேறியாகவேண்டும். மலைகளும் குன்றுகளும் நேராக்கப்பட்டு, கோணலானவைகள் சரிசெய்யப்படும் என்று அவன் மக்களுக்கு அறிவித்திருந்தான். மனிதர்களின் உச்சகட்ட நிலையிலுள்ள அகந்தையும் வல்லமையும் கீழாகத் தாழ்த்தப்படுவதைக் காண அவன் காத்திருந்தான். தமது களஞ்சியத்தை நன்கு தூற்றி, சுத்திகரித்து, கோதுமையைத் தமது களஞ்சியத்தில் சேர்த்து, பதரை அவியாத அக்கினியில் எரிக்கும் ஒருவராக அவன் மேசியாவைச் சுட்டிக்காட்டியிருந்தான். அவன்

எலியாவின் ஆவியையும் வல்லமையையும் உடையவனாக இஸ்ரவேலில் வந்து அக்கினியால் பதிலளிக்கும் ஒரு தேவனாகக் கர்த்தர் தம்மை வெளிப்படுத்துவதைக் காண எதிர்நோக்கியிருந்தான். (4)

மேலானவர்கள் கீழானவர்கள் ஆகிய இரு வகுப்பினரிடையேயும் இருந்த அக்கிரமத்தை அச்சமின்றி கடிந்துகொள்ளும் ஒருவனாக யோவான் ஸ்நானகன் அவனது பணியில் நின்றிருந்தான். ஏரோது அரசனின் பாவத்தை அவனுக்குத் தெளிவாகக் காண்பிக்க, அவனைச் சந்திக்கும் துணிவுள்ளவனாக அவன் இருந்தான். தனக்கு நியமிக்கப்பட்டிருந்த ஊழியத்தை நிறைவேற்றுவதில், அவன் தனது உயிரை அருமையாக எண்ணவில்லை. இப்பொழுது யூதா கோத்திரத்துச் சிங்கம் எழும்பி, ஒடுக்குபவனின் அகந்தையைத் தாழ்த்தி, அபயக்குரலிடும் ஏழைகளையும், தன்னையும் விடுவிக்கப்போவதைத் தன் நிலவறையிலிருந்து கவனித்திருந்தான். ஆனால் தம்மிடம் சீடர்களைச் சேர்ப்பதிலும் மக்களுக்குச் சுகமளிப்பதிலும் போதனைசெய்வதிலும் இயேசு திருப்தியுள்ளவராக இருப்பதுபோல் காணப்பட்டது. ரோமர்களின் நுகம் நாள்தோறும் இஸ்ரவேலர்களின்மீது பாரமாகிக்கொண்டிருந்தபோது, ஏழைகள், துன்பப்படுபவர்கள் ஆகியோரின் அழுகுரல்கள் பரலோகத்தை நோக்கிச் சென்றபோது, அவர் ஆயக்காரரின் மேஜைகளின்மீது உணவருந்தியிருந்தார். (5)

வனாந்தரத்துத் தீர்க்கதரிசிக்கு இவை அனைத்தும் அவனது அறிவின் ஆழத்திற்கு அப்பாற்பட்ட இரகசியமாக இருந்தது. அவனது ஆத்துமாவைப் பேய்களின் மெல்லிய குரல்கள் சித்திரவதை செய்திருந்த நேரங்கள் இருந்தன. பயத்தின் பயங்கரமான ஒரு நிழல் அவன்மீது மெல்லப்படிந்தது. வெகுகாலமாக நம்பிக்கையுடன் எதிர்பார்த்திருந்த விடுதலை வழங்குபவர் இதுவரைத் தோன்றாமலிருந்திருக்கக்கூடுமோ? அப்படியிருந்தால் தான் கொடுக்கும்படியாக ஏற்பட்டிருந்த தூதின் பொருள் என்ன? யோவான் அவனது ஊழியத்தின் பலனில் கசப்புமிக்க ஏமாற்றமடைந்தவனாக இருந்தான். யோசியாவின் நாட்களிலும் எஸ்றாவின் நாட்களிலும் நியாயப்பிரமாணம் வாசிக்கப்பட்டபோது உண்டான மிக ஆழ்ந்த மனந்திரும்புதலும் கர்த்தரிடத்திற்கு திரும்புதலும் (2 நாளாகமம் 34; நெகேமியா 8,9) இந்த தூது உண்டுபண்ணும் என அவன் எதிர்பார்த்திருந்தான். ஏனென்றால், இந்த ஊழியத்தின் வெற்றிக்காக அவனது வாழ்க்கை முழுவதும் தியாகஞ்செய்யப்பட்டிருந்தது. ஆது வீணானதாக இருந்ததா? (6)

யோவான் ஸ்நானகனின்மீது அவனது சீடர்கள் வைத்திருந்த அன்பின் காரணமாக, இயேசுவின்மீது அவர்கள் அவநம்பிக்கையை வளர்ப்பதைக் கண்டபோது, யோவான் ஸ்நானகன் சஞ்சலமடைந்தான்.

அவர்களுக்கான அவனது உழியம் கனியற்றதாக இருந்திருந்ததா? தனது ஊழியத்திலிருந்து இப்பொழுது அவன் தடைசெய்யப்பட்டிருப்பதால் அவன் தன் ஊழியத்தில் விசுவாசம் இல்லாதவனாக இருந்திருந்தானா? வாக்குத்தத்தஞ்செய்யப்பட்டிருந்த விடுதலை வழங்குபவர் தோன்றியிருந்தால் யோவான் அவனது அழைப்பிற்கு உண்மையுள்ளவனாக இருந்திருந்தால் இயேசு இப்பொழுது ஒடுக்குபவனின் வல்லமையைத் தகர்த்து, அவருக்கு முன்னோடியாக இருந்தவனை விடுதலைசெய்யமாட்டாரா? (7)

ஆனால் யோவான் ஸ்நானகன் தனது விசுவாசத்தைக் கிறிஸ்துவிடம் சரண்செய்யவில்லை. வானத்திலிருந்து உண்டான சத்தம், இறங்கும் புறா, இயேசுவின் கறையற்ற தூய்மை, இரட்சகரின் சமுகத்திற்குமுன் வந்தபோது யோவானின்மீது தங்கிய பரிசுத்த ஆவியின் வல்லமை, தீர்க்கதரிசன வேதவாக்கியங்களின் சாட்சி ஆகிய இவையனைத்தும் நசரேயனாகிய இயேசுதான் வாக்குத்தத்தம் செய்யப்பட்டிருந்த ஒருவர் என்று சாட்சி பகர்ந்தன. (8)

யோவான் தனது சந்தேகங்களையும் கவலைகளையும்பற்றி அவனது கூட்டாளிகளுடன் விவாதிக்கவில்லை. ஒரு விசாரணையின் தூதினை இயேசுவிற்கு அனுப்ப அவன் தீர்மானித்தான். இரட்சகருடனுள்ள ஒரு நேர்முகச்சந்திப்பு, தனது சீடர்களின் விசுவாசத்தை உறுதிப்படுத்தி அவர்களுடைய சகோதரர்களுக்கு நிச்சயத்தைக் கொண்டுவரும் என்னும் நம்பிக்கையில், அவன் தனது சீடர்களில் இருவரிடம் இந்தப் பணியினை ஒப்படைத்தான். தனக்காகக் கிறிஸ்துவால் கூறப்படும் சில வார்த்தைகளுக்காக அவன் ஏங்கியிருந்தான். (9)

“வருகிறவர் நீர்தானா, அல்லது வேறொருவர் வரக் காத்திருக்க வேண்டுமா?” என்னும் தூதுடன் அந்த சீடர்கள் இயேசுவிடம் வந்தனர். (10)

“இதோ, உலகத்தின் பாவத்தைச் சுமந்துதீர்க்கிற தேவ ஆட்டுக்குட்டி.” “அவர் எனக்குப் பின்வந்தும் என்னிலும் மேன்மையுள்ளவர்” என்று யோவான் ஸ்நானகன் இயேசுவைச் சுட்டிக்காட்டியதிலிருந்து இது எவ்வளவு குறுகிய காலமாக இருந்தது! அப்படியிருந்தும் வரவிருப்பவர் நீர்தானா? என்னும் கேள்வி இப்பொழுது எழுந்தது. மனித இயல்பில் இது மிகவும் கசப்பும் ஏமாற்றமும் தருவதாக இருந்தது. இயேசுவிற்கு முன்னோடியாகச் சென்றிருந்த யோவானே கிறிஸ்துவின் ஊழியத்தின் தன்மையை அறியமுடியாதவனாக இருந்திருந்தால், சுயத்தை மையமாகக் கொண்டிருக்கும் திரளானவர்களிடமிருந்து எதை எதிர்பார்க்கமுடியும்? (11)

அந்த சீடர்களின் கேள்விகளுக்கு இரட்சகர் உடனடியாகப் பதில் கூறவில்லை. அவரது மௌனத்தில் ஆச்சரியமடைந்தவர்களாக அவர்கள் நின்றிருந்தபோது, நோயாளிகளும் துன்பப்பட்டிருந்தவர்களும் குணமடைவதற்காக அவரிடம் வந்துகொண்டிருந்தனர். கூட்டத்திற்கிடையில் குருடர்கள் தங்களுடைய வழியைத் தடவிக் கண்டுபிடித்துக்கொண்டும், சிலர் நண்பர்களால் சுமக்கப்பட்டும் மிகுந்த ஆவலுடன் இயேசுவின் சமுகத்தை நெருங்கிக்கொண்டிருந்தனர். குணமாக்கும் வல்லமைமிக்கவரின் சத்தம் செவிடாயிருந்த காதிற்குள் நுழைந்து சென்றது. பகலின் வெளிச்சத்தையும் இயற்கையின் காட்சிகளையும் நண்பர்களின் முகங்களையும் விடுதலை வழங்குபவரின் முகத்தையும் காணச்செய்வதாக அவரது ஒரு வார்த்தை—ஒரு தொடுதல் இருந்தது. இயேசு நோயைக் கடிந்து, ஜுரத்தை விரட்டியடித்தார். மரணத்தருவாயிலிருந்தவர்களிடம் அவரது குரல் எட்டவேண்டும்; அவர்கள் பூரண நலத்துடன் எழுந்தனர். அசுத்த ஆவிகளினால் அசைக்கமுடியாத வண்ணம் நோயாளிகளாக்கப்பட்டிருந்தவர்கள், அவரது வார்த்தைக்குக் கீழ்ப்படிந்தனர். அவர்களது பைத்தியம் அவர்களைவிட்டு விலகவே அவர்கள் அவரைத் தொழுதனர். அவர்களது நோய்களைக் குணப்படுத்திய அதே நேரத்தில், அவர் மக்களுக்குப் போதனையும் அளித்தார். ஏழைகளாக இருந்த விவசாயத் தொழிலாளர்களும் கூலிக்காரர்களும், ரபிமார்களால் அசுத்தமானவர்கள் என ஒதுக்கப்பட்டிருந்தனர். அவர்கள் அவரை நெருக்கமாகச் சூழ்ந்துகொண்டிருந்தனர். அவர் அவர்களுக்கு நித்தியஜீவனைப்பற்றிய வார்த்தைகளைக் கூறினார். யோவானின் சீடர்கள் இவைகளைப் பார்த்துக்கொண்டும் கேட்டுக்கொண்டுமிருக்க, இவ்வாறாக அந்த நாள் கடந்து சென்றது. கடைசியில் இயேசு அந்த சீடர்களைத் தம்மிடம் அழைத்து, அவர்கள் கண்டதையும் கேட்டதையும் யோவானுக்கு அறிவிக்கும்படிக் கூறி, "என்னிடத்தில் இடறலடையாதிருக்கிறவன் எவனோ அவன் பாக்கியவான்" (லூக்கா 7:23) என்றார். மனித துன்பங்ளைத் துடைத்து நீக்குவதற்குத் தேவையான தெய்வீகத்தன்மை அவரைத் தழுவியிருந்தது சாட்சியாகக் காணப்பட்டது; நமது கீழான நிலைமைக்கு அவர் தம்மைத் தாழ்த்தினதில் அவரது மகிமை வெளிக்காட்டப்பட்டது. (12)

சீடர்கள் அந்தத் தூதினை யோவானுக்கு அறிவித்தனர். அது போதுமானதாக இருந்தது. "கர்த்தராகிய தேவனுடைய ஆவியானவர் என்மேல் இருக்கிறார்; சிறுமைப்பட்டவர்களுக்குச் சுவிசேஷத்தை அறிவிக்கக் கர்த்தர் என்னை அபிஷேகம்பண்ணினார்; இருதயம் நொறுங்குண்ட வர்களுக்குக் காயங்கட்டுதலையும், சிறைப்பட்டவர்களுக்கு விடுதலை யையும், கட்டுண்டவர்களுக்குக் கட்டவிழ்த்தலையும் கூறவும், கர்த்தருடைய அநுக்கிரகவருஷத்தையும், நம்முடைய தேவன் நீதியைச் சரிக்கட்டும்

நாளையும் கூறவும், துயரப்பட்ட அனைவருக்கும் ஆறுதல் செய்யவும்" (ஏசாயா 61:1,2) என்னும் மேசியாவைப்பற்றிய தீர்க்கதரிசனத்தை யோவான் நினைவுகூர்ந்தான். கிறிஸ்துவின் செயல்கள் அவர்தான் மேசியா என்பதைமட்டும் அறிவிக்காமல், எவ்விதமாக அவரது இராஜ்யம் ஏற்படுத்தப்படவுள்ளது என்பதையும் அறிவித்தது. வனாந்திரத்தில் எலியாவிற்கு வந்த அதே சத்தியம், யோவானுக்கு திறக்கப்பட்டது. "கர்த்தருக்கு முன்பாகப் பர்வதங்களைப் பிளக்கிறதும் கன்மலைகளை உடைக்கிறதுமான பலத்த பெருங்காற்று உண்டாயிற்று; ஆனாலும் அந்தக் காற்றிலே கர்த்தர் இருக்கவில்லை; காற்றிற்குப்பின் பூமி அதிர்ச்சி உண்டாயிற்று: பூமி அதிர்ச்சியிலும் கர்த்தர் இருக்கவில்லை. பூமி அதிர்ச்சிக்குப்பின் அக்கினி உண்டாயிற்று; அக்கினியிலும் கர்த்தர் இருக்கவில்லை;" (1 இராஜாக்கள் 19:11,12) அக்கினிக்குப்பின் உண்டான அமர்ந்த மெல்லிய சத்தத்தினால் கர்த்தர் அவனுடனே பேசினார். அதைப்போல ஆயுதங்களின் மோதல்களிலும், சிங்காசனங்களையும் இராஜ்யங்களையும் கவிழ்ப்பதிலும் இயேசு அவரது பணியைச் செய்யவேண்டியவராக இராமல், இரக்கமிக்க ஒரு வாழ்க்கையினாலும், தற்தியாகத்தினாலும், மனித இதயங்களுடன் பேசுவதினாலும் தமது பணியைச் செய்யவேண்டியவராக இருந்தார். (13)

சுயத்தை வெறுத்தல் என்னும் ஸ்நானகனின் சொந்த வாழ்க்கையின் கொள்கையே மேசியாவின் இராஜ்யத்தின் கொள்கையாக இருந்தது. இஸ்ரவேல் தலைவர்களின் கொள்கைகளுக்கும் நம்பிக்கைகளுக்கும் இது எவ்விதமாக மாறுபட்டிருந்தது என்பதை யோவான் நன்கு அறிந்திருந்தான். கிறிஸ்துவின் தெய்வீகத்தைப்பற்றின சாட்சியாக அவனுக்கு எது இருந்ததோ, அது அவர்களுக்குச் சாட்சியாக இருக்கவில்லை. வாக்குத்தத்தஞ்செய்யப்படாத ஒரு மேசியாவை அவர்கள் எதிர்நோக்கியிருந்தனர். இரட்சகரின் ஊழியம் வெறுப்பையும் கண்டனத்தையும் மட்டுந்தான் உண்டுபண்ணும் என்பதை யோவான் கண்டான். முன்னோடியாக இருந்த அவன், கிறிஸ்து முற்றிலுமாகப் பருகியே ஆகவேண்டியிருந்த பாத்திரத்தின் வண்டல்களைப் பருகிக்கொண்டிருந்தான். (14)

"என்னிடத்தில் இடறலடையாதிருக்கிறவன் எவனோ அவன் பாக்கியவான்" என்னும் இரட்சகரின் வார்த்தைகள் யோவானுக்கான மென்மைமிக்க கடிந்துகொள்ளுதலாக இருந்தது. அது அவன்மீது பலன்தராமல் போகவில்லை. கிறிஸ்துவின் ஊழியத்தின் தன்மைகளை இப்பொழுது தெளிவாகப் புரிந்துகொண்டு, ஜீவனுக்கானாலும் சரி, மரணத்திற்கானாலும் சரி, தான் மிகவும் நேசித்த நோக்கத்திற்காக சேவைசெய்யவேண்டும் என்று அவன் தன்னை தேவனுக்கு ஒப்புக்கொடுத்தான். (15)

அந்தத் தூதுவர்கள் புறப்பட்டுச்சென்றபின், யோவானைப்பற்றி இயேசு மக்களிடம் பேசினார். இப்பொழுது ஏரோதின் பாதாளச்சிறையில் அடைக்கப்பட்டிருந்த விசுவாசமிக்க சாட்சியை நோக்கி, இயேசுவின் இதயம் அனுதாபத்துடன் சென்றது. தேவன் யோவானைக் கைவிட்டார் அல்லது சோதனையின் நாளில் அவனது விசுவாசம் தோல்வியடைந்துவிட்டது என்று மக்கள் முடிவு செய்யும்படி அவர் விட்டுவிடமாட்டார். “எதைப் பார்க்க வனாந்தரத்திற்குப் போனீர்கள்? காற்றினால் அசையும் நாணலையோ?” (16)

யோர்தானுக்கருகில் வளர்ந்திருந்த உயரமான நாணல்கள் ஸ்நானகனின் ஊழியத்தைக்குறித்து விமர்சகர்களாகவும் நீதிபதிகளாகவும் நின்றிருந்த ரபிமார்களுக்குப் பொருத்தமான உதாரணமாக இருந்தது. மக்களால் பாராட்டப்படும் பொதுக்கருத்து என்னும் காற்றினால் அவர்கள் இந்தப்பக்கமும் அந்தப்பக்கமும் ஆடி அசைபவர்களாக இருந்தனர். இருதயத்தை ஆராயும் ஸ்நானகனின் தூதைப் பெற்றுக்கொள்ள அவர்கள் தங்களைத் தாழ்த்தமாட்டார்கள். அப்படியிருந்தபோதும், மக்களுக்குப் பயந்து அவனது ஊழியத்தை வெளிப்படையாக எதிர்க்கத் துணியாதவர்களாக இருந்தனர். ஆனால் தேவனுடைய தூதுவன் அவ்விதமான கோழைத்தனமான ஆவியை உடையவனாக இருக்கவில்லை. கிறிஸ்துவைச் சூழ்ந்திருந்த திரளானவர்கள் யோவானின் ஊழியத்திற்குச் சாட்சிகளாக இருந்தனர். அவன் அச்சமின்றிப் பாவத்தைக் கடிந்துகொண்டதை அவர்கள் கேட்டிருந்தனர். சுயநீதிமிக்க பரிசேயர்கள், ஆசாரியத்தன்மைமிக்க சதுசேயர்கள், ஏரோது அரசன், அவனது அரச மன்றத்தினர், அவனது இளவரசர்கள், இராணுவ வீரர்கள், ஆயக்காரர்கள், விவசாயிகள் அனைவரிடத்திலும் யோவான் ஒரே சீராகத் தெளிவாகப் பேசியிருந்தான். மனிதப் போற்றுதல் அல்லது தவறான எண்ணம் என்னும் ஆடி அசையக்கூடிய நாணலாக அவன் இருக்கவில்லை. வனாந்தரத்தில் தேவனுடைய தூதைப் பிரசங்கித்தபோது, தேவனுக்குப் பக்தி விசுவாசமாகவும், நீதியின்மேல் அதிக வாஞ்சையோடும் இருந்ததைப்போன்றே சிறையிலும் இருந்தான். கொள்கையின்மீதுள்ள தனது விசுவாசத்தில் அவன் ஒரு கன்மலையைப்போன்று உறுதிமிக்கவனாக இருந்தான். (17)

“அல்ல” என்று இயேசு தொடர்ந்தார். அவனது காலத்திலிருந்த பாவங்களையும் அத்துமீறல்களையும் கடிந்துகொள்ளும்படி யோவான் அழைக்கப்பட்டிருந்தான். அவனது எளிய உடையும் சுயத்தை மறுக்கும் வாழ்க்கையும் அவனது ஊழியத்தின் தன்மைக்கு இசைவாக இருந்தன. அந்த வாழ்க்கையில் உள்ள செல்வச் செருக்கான உடைகளும்

ஆடம்பரங்களும் தேவனுடைய ஊழியக்காரரின் பங்காக இல்லை. அரச மன்றங்களில் வாழும் இந்த உலகத்தின் அதிபதிகளுக்கும், வல்லமைக்கும் செல்வங்களுக்கும் சம்பந்தப்பட்டவர்களுக்கு இது பொருந்தக்கூடியதாக உள்ளது. யோவான் அணிந்திருந்த உடைக்கும் ஆசாரியர்களும் அதிபதிகளும் அணிந்திருந்த உடைக்கும் இருந்த வேற்றுமையை மக்கள் கவனிக்கவேண்டுமென்று இயேசு விரும்பினார். இந்த அதிகாரிகள் மிக விலையுயர்ந்த ஆடைகளினாலும் அணிகலன்களினாலும் தங்களை அலங்கரித்திருந்தனர். அவர்கள் விளம்பரத்தை விரும்பினர். மக்களின் கண்களைக் கூசச்செய்து இவ்வாறாகப் பெரிய மதிப்பைப் பெறலாம் என்று நம்பியிருந்தனர். தேவனுடைய அங்கீகரிப்பைப் பெறக்கூடிய இருதயத்தின் தூய்மையை அடைவதைவிட அவர்கள் மனிதர்களால் உண்டாகக்கூடிய புகழ்ச்சியைப் பெற்றுக்கொள்ள மிகுந்த ஆவலுள்ளவர்களாக இருந்தனர். அவர்களது உறவு தேவனுடனுள்ளதாக இராமல், இந்த உலக இராஜ்யத்தினுடையதாக இருந்தது என்பதை இவ்விதமாக அவர்கள் வெளிப்படுத்தியிருந்தனர். (18)

“அல்லவென்றால், எதைப் பார்க்கப்போனீர்கள்? மெல்லிய வஸ்திரந்தரித்த மனுஷனையோ? மெல்லிய வஸ்திரந்தரித்திருக்கிறவர்கள் அரசர் மாளிகைகளில் இருக்கிறார்கள். அல்லவென்றால், எதைப் பார்க்கப்போனீர்கள்? தீர்க்கதரிசியையோ? ஆம், தீர்க்கதரிசியைப்பார்க்கிலும் மேன்மையுள்ளவனையே என்று உங்களுக்குச் சொல்லுகிறேன்.” (19)

“இதோ, நான் என் தூதனை உமக்கு முன்பாக அனுப்புகிறேன்; அவன் உமக்கு முன்னே போய், உமது வழியை ஆயத்தம்பண்ணுவான்” (20)

“ஸ்திரீகளிடத்திலே பிறந்தவர்களில் யோவான்ஸ்நானனைப்பார்க்கிலும் பெரியவன் ஒருவனும் எழும்பினதில்லை;” யோவான் பிறப்பதற்குமுன் சகரியாவிற்கு அருளப்பட்ட அறிவிப்பில் தூதன் “அவன் கர்த்தருக்கு முன்பாகப் பெரியவனாயிருப்பான்” (லூக்கா 1:15) என்று அறிவித்திருந்தான். பரலோகத்தின் பார்வையில் மேன்மையான தன்மையை எது அமைத்து உருவாக்குகிறது? உலகத்தால் மிகச்சிறந்ததென்று மதிப்பீடு செய்யப்படும் காரியங்கள் அல்ல; அவர்களிடத்தில் காணப்படும் செல்வம் அல்ல; அந்தஸ்து அல்ல; மேன்மையான வம்சாவளி அல்ல; அல்லது நுண்ணறிவின் ஈவுகளும் அல்ல. நுண்ணறிவின் மேன்மை, உயர்வாகக் கருதப்படும் எந்தவொரு காரியத்தைப்பார்க்கிலும் மதிக்கப்படுவதற்கு ஏற்றதாக இருக்குமானால், சாத்தானுக்கே நமது வணக்கம் உரியதாகிவிடும். ஏனெனில் அவனது அறிவின் ஆற்றலுக்கு எந்த ஒரு மனிதனும் என்றுமே இதுவரை நிகராகக்

காணப்பட்டதில்லை. பெரும் ஈவு எந்த அளவிற்கு சுயத்தை சேவிப்பதற்கென்று திரிபுசெய்யப்படுகிறதோ, அந்த அளவிற்கு அது பெரும் சாபமாக மாறிவிடுகிறது. சன்மார்க்கத் தகுதியைத்தான் தேவன் மதிக்கிறார். அன்பு, தூய்மை ஆகிய பண்புகளைத்தான் அவர் அதிக மேலானதாக மதிக்கிறார். சனகரீம் சங்கத்திலிருந்து அனுப்பப்பட்ட தூதுவர்களின் முன்னும் தனது சொந்த சீடர்களுக்கு முன்னும், மக்கள்முன்னும், தனக்கு மேன்மையைத் தேடுவதிலிருந்து விலகி, வாக்குத்தத்தஞ்செய்யப்பட்ட ஒருவராக அவன் இயேசுவைச் சுட்டிக்காட்டியபோது, அவன் கர்த்தருடைய பார்வையில் பெரியவனாக இருந்தான். கிறிஸ்துவின் ஊழியத்தின் பேரிலுண்டாயிருந்த அவனது சுயநலமற்ற மகிழ்ச்சியானது, மனிதனில் ஒருபோதும் இல்லாதவிதத்தில் வெளிக்காட்டப்பட்ட மிக மேலான தன்மையைக் காட்டுகிறது. (21)

இயேசுவைப்பற்றிய அவனது சாட்சியைக் கேட்டிருந்தவர்கள் அவனது மரணத்திற்குப்பின் கொடுத்த சாட்சி: “யோவான் ஒரு அற்புதத்தையும் செய்யவில்லை; ஆகிலும் இவரைக்குறித்து யோவான் சொன்னதெல்லாம் மெய்யாயிருக்கிறது” (யோவான் 10:41) என்பதே. எலியா செய்ததைப்போல வானத்திலிருந்து அக்கினியை இறங்கப்பண்ணவோ அல்லது மரித்தவனை எழுப்பவோ அல்லது தேவனுடைய பெயரால் வல்லமைமிக்க ஒரு கோலை உடையவனாக மோசே இருந்ததுபோலவோ இருக்கும்படி யோவானுக்கு அருளப்படவில்லை. இரட்சகரின் வருகையை முன்னறிவிக்கவும், அவரது வருகைக்கென்று ஆயத்தப்படும்படி மக்களை அழைக்கவும் அவன் அனுப்பப்பட்டிருந்தான். “இவரைக்குறித்து யோவான் சொன்னதெல்லாம் மெய்யாக இருக்கிறது” என்றார்கள். ஆண்டவரின் சீடர்கள் ஒவ்வொருவரும் கிறிஸ்துவின் அப்படிப்பட்ட சாட்சியாக இருக்கும்படி அழைக்கப்படுகின்றனர். இயேசுவைப்பற்றி யோவான் எவ்விதமாகப் போதனைசெய்திருந்தான் என்பது மக்களின் நினைவிற்கு வந்தது. இவரைக்குறித்து யோவான் சொன்னதெல்லாம் உண்மை என்று அவர்கள் கூறுமளவிற்கு யோவான் தனது ஊழியத்தை மிகுந்த விசுவாசத்துடன் நிறைவேற்றியிருந்தான். கிறிஸ்துவின் சீடனாக இருக்கும் ஒவ்வொருவரும் இவ்விதமான கிறிஸ்துவிற்கான சாட்சியை உடையவர்களாக இருக்கவேண்டும். (22)

மேசியாவின் வருகையை முன்னறிவிப்பதில் யோவான் தீர்க்கதரிசி களைப் பார்க்கிலும் மேன்மயுள்ளவனாக இருந்தான். ஏனெனில் கிறிஸ்துவின் வருகையைத் தீர்க்கதரிசிகள் வெகுதூரத்திலிருந்து கண்டிருந்தனர். ஆனால் அவரைக் காணவும், அவரது மேசியா என்னும் தன்மையைப்பற்றிப் பரலோகம் கொடுத்த சாட்சியைக் கேட்கவும், தேவனால் அனுப்பப்பட்டிருந்த அவரை

இஸ்ரவேலிற்குக் காண்பிக்கவும், யோவான் அருள்செய்யப்பட்டிருந்தான். அப்படியிருந்தும், "பரலோகராஜ்யத்தில் சிறியவனாயிருக்கிறவன் அவனிலும் பெரியவனாயிருக்கிறானென்று" இயேசு கூறினார். (23)

அந்த இரண்டு மதக்கோட்பாடுகளையும் (யூதமதம், கிறிஸ்தவ மதம்) இணைக்கின்ற வளையமாக யோவான் ஸ்நானகன் இருந்தான். கிறிஸ்தவ மதக்கோட்பாட்டுடன் பிரமாணத்திற்கும் தீர்க்கதரிசிகளுக்கும் உள்ள உறவைக் காட்டுவதற்கு அவன் தேவனுடைய பிரதிநிதியைப்போல நின்றிருந்தான். பெரும் ஒளி பின்தொடரவேண்டிய குறைவான ஒளியாக அவன் இருந்தான். அவனுடைய ஜனங்களின்மீது ஒளியை வீசச்செய்வதற்காக யோவானுடைய மனம் பரிசுத்த ஆவியினால் ஒளிப்படுத்தப்பட்டிருந்தது. ஆனால் இயேசுவின் போதனையிலிருந்தும் உதாரணத்திலிருந்தும் வெளித்தோன்றியிருந்த ஒளியைவிட வேறு எந்த ஒளியும் விழுந்துபோன மனிதனின்மீது ஒருபோதும் பிரகாசித்திருக்கவுமில்லை, பிரகாசிக்கப்போவதுமில்லை. எனவே, நிழலாட்டமாக இருந்த பலிமுறையினால் அடையாளமாகக் காட்டப்பட்டிருந்த கிறிஸ்துவும் அவருடைய ஊழியமும் மங்கலாகவே புரிந்து கொள்ளப்பட்டிருந்தது. யோவானுங்கூட மீட்பரின்மூலமாக எதிர் காலத்தில் பெற்றுக்கொள்ளப்படவிருக்கின்ற சாவாமை எனப்படும் நித்திய ஜீவனைக்குறித்து முற்றிலுமாகப் புரிந்துகொள்ளவில்லை. (24)

யோவான் தனது இறைப்பணியின்மூலம் தான் பெற்ற மகிழ்ச்சியைத்தவிர மற்றபடி அவனது வாழ்க்கை மனத்துயரங்கொண்டதாகவே இருந்தது. வனாந்தரத்தைத்தவிர வேறு எந்த இடத்திலும் அவனது குரல் கேட்கப்படவில்லை. தனிமை நிறைந்த வாழ்க்கையே அவனது பங்காக இருந்தது. அவனது சுய உழைப்பின் பலனைக் காணும்படி அவன் அனுமதிக்கப்படவில்லை. கிறிஸ்துவுடனிருந்து அந்தப் பெரும் ஒளியில் உண்டாயிருந்த வல்லமையைக் காணும் சலுகை அவனுடையதாக இருக்கவில்லை. குருடர்கள் பார்வையடையும்படி சுகப்படுத்தப்படுவதையும், நோயாளிகள் சுகமடைவதையும், மரித்தோர் உயிருடன் எழுப்பப்படுவதையும் காணும் வாய்ப்பு அவனுக்கு அருளப்படவில்லை. அவரது வார்த்தைகள் ஒவ்வொன்றிலிருந்தும் வீசிய ஒளி, தீர்க்கதரிசனங்களில் இருந்த வாக்குத்தத்தங்களின்மீது பிரகாசித்து, அவைகளை மகிமைப்படுத்தியிருந்ததை அவன் காணவில்லை. இந்த ஒரு தன்மையில் கிறிஸ்துவின் வல்லமைமிக்க செயல்களையும் அவரது வார்த்தைகளையும் கேட்டிருந்த மிகச்சிறியவனாக இருந்த சீடனும் இந்த அர்த்தத்தில் யோவான் ஸ்நானகனைவிட மேலான சலுகைகளை அடைந்தவனாக இருந்ததினால், அவன் யோவானைவிடப் பெரியவன் என்று சொல்லப்பட்டுள்ளது. (25)

யோவானின் பிரசங்கத்தைக் கேட்ட திரளான மக்களின் மூலமாக நாடெங்கிலும் அவனது புகழ் பரவியது. அவன் காவலில் அடைக்கப்பட்டதின் விளைவுகள்குறித்து ஒரு ஆழ்ந்த பற்றுணர்வு மக்களிடையே காணப்பட்டது. எனினும் அவனது குற்றமற்ற தூய வாழ்க்கை அவனுக்கு ஆதரவாகப் பொதுமக்களிடையே எழுப்பியிருந்த வலுவான உணர்ச்சிப் பெருக்கு ஆகியவை யோவானுக்கு விரோதமாக வன்முறையான எந்தநடவடிக்கையும் எடுக்கப்படாது என்ற நம்பிக்கைக்கு வழிநடத்தியது. (26)

யோவான் தேவனுடைய ஒரு தீர்க்கதரிசி என்று ஏரோது நம்பினான். அவனை விடுதலைசெய்யவேண்டுமென்று முற்றிலுமாக திட்டமிட்டிருந்தான். ஆனால் அவன் ஏரோதியாளுக்குப் பயந்து, தனது நோக்கத்தை நிறைவேற்றுவதில் காலதாமதஞ்செய்தான். (27)

யோவானைக் கொலைசெய்வதற்கு நேரடியான செயல்களின்மூலமாக இணங்கச்செய்வது இயலாதது என்பதை ஏரோதியாள் அறிந்து, சூழ்ச்சியின் திட்டத்தினால் தனது நோக்கத்தை நிறைவேற்றிக்கொள்ளத் தீர்மானித்தாள். அரசனின் பிறந்தநாளில் அரசவையிலிருந்த அதிகாரிகளுக்கும் மேன் மக்களுக்கும் ஒரு கேளிக்கை விருந்து கொடுக்கப்படவேண்டியதாக இருந்தது, அந்த விருந்தில் மதுவெறியும் இருக்கும். இந்த ஒரு நிலையில் ஏரோது எச்சரிப்பற்றவனாக இருக்கும்படிச் செய்யப்பட்டு, அதை அடுத்து அவளது விருப்பத்தின்படிச் செயல்பட அவனை இணங்கச்செய்யவேண்டும். (28)

இந்த பெருநாள் வந்தபோது, அந்த அரசன் தனது பிரபுக்களுடன் சேர்த்து விருந்துண்டும் மது அருந்தியும் இருந்த வேளையில் ஏரோதியாள் விருந்தினர்களை மகிழ்விப்பதற்காக அவளது மகளை விருந்துசாலையில் நடனமாடும்படி அனுப்பி வைத்தாள். செலோமி, இளமையின் முதல் துடிப்பில் இருந்தாள். காமவெறியூட்டும் அவளது அழகு, வெறித்திருந்த பிரபுக்களின் உணர்ச்சிகளைக் கவர்ந்திழுத்தது. இப்படிப்பட்ட கொண்டாட்டங்களின்போது அவைகளில் அரச குடும்பப் பெண்கள் தோன்றும் வழக்கம் இல்லாமலிருந்தது, இந்த ஒரு சூழ்நிலையில், அரசனின் விருந்தினர்களை மகிழ்விக்க இஸ்ரவேலின் ஆசாரியர்களுக்கும் பிரபுக்களுக்கும் குமாரத்தியானவள் நடனமாடியதற்காக ஏரோதைப் புகழ்ந்து பாராட்டிப் பேசினர். (29)

அந்த அரசன் மதுவின் போதையில் உணர்வு மழுங்கிய நிலையிலிருந்தான். இச்சை ஆதிக்கம் செலுத்தியது. பகுத்தறிவு வெளியே தள்ளப்பட்டது. போதையிலிருந்த விருந்தினர்கள், பளபளக்கும் மது, மின்னும் விளக்குகள், இவைகளுக்கிடையில் நடனமாடும் அந்தப் பெண், இவற்றால்

மகிழ்ச்சியில் திளைத்திருந்த அந்த மண்டபத்தை மட்டுமே கண்டான். செயல்களின் பலனைப்பற்றி எச்சரிக்கையில்லாதிருந்து, அந்த வினாடியில் தனது ஆளுகைக்குட்பட்டிருந்த பெரிய மனிதர்களுக்குமுன் தன்னை உயர்த்த ஏதாவது பகட்டாகக் காட்டவேண்டுமென அவன் விரும்பினான். இவ்விதமாக ஏரோதியாளின் மகளுக்கு, அவள் எதைக்கேட்டாலும்—இராஜ்யத்தில் பாதியைக் கேட்டாலுங்கூடத் தருவதாக ஒரு ஆணையை வாக்குறுதியாகக் கொடுத்தான். (30)

எதைக் கேட்கவேண்டுமென்று அறிந்துகொள்ளுவதற்காகச் சலோமி தன் அன்னையிடம் விரைந்து சென்றாள். யோவான் ஸ்நானகனின் தலை என்னும் பதில் ஆயத்தமாக இருந்தது; தனது அன்னையின் இருதயத்திலிருந்த பழிவாங்கும் தாகத்தை சலோமி அறியாதவளாக இருந்ததினால், அந்த வேண்டுகோளை முன்வைக்க அவள் தயங்கினாள். ஆனால் ஏரோதியாளின் தீர்மானம் அவளை மேற்கொண்டது. "ஒரு தாலத்தில் யோவான்ஸ்நானனுடைய தலையை எனக்குத் தரவேண்டும் என்று கேட்டாள்"—மாற்கு 6:25. (31)

ஏரோது ஆச்சரியமும் குழப்பமும் அடைந்துபோனான். மதுவெறியின் ஆரவாரங்கள் அனைத்தும் நின்றுபோயின. வெறியாட்டமிக்கதாக இருந்த அந்த இடத்தில் ஒரு சோகமயமான மௌனம் குடிகொண்டது. யோவானின் உயிரை வாங்குவது என்னும் எண்ணத்தில் அந்த அரசனை பயங்கரம் பற்றிப்பிடித்தது. விருந்தினர்களின் கௌரவத்திற்காக அந்த ஆணையிடப்பட்டிருந்தது. அவன் ஏற்கனவே வாக்குறுதி கொடுத்துவிட்டதால், மாறுகிற இயல்புடையவன் அல்லது கண்மூடித்தனமானவன் என்று காணப்பட அவன் விரும்பவில்லை. இந்த வாக்குத்தத்தத்தை நிறைவேற்ற வேண்டியதில்லையென்று அவர்களில் யாராவது ஒருவர் கூறியிருந்தால்கூட அவன் அந்தத் தீர்க்கதரிசியை மிகுந்த சந்தோஷத்துடன் விட்டுவைத்திருப்பான். கைதியாக இருந்தவனின் சார்பில் பேசுவதற்கு அவன் அவர்களுக்கு வாய்ப்பைக் கொடுத்தான். யோவானின் பிரசங்கத்தைக் கேட்க அவர்கள் வெகுதொலைவிலிருந்து பயணஞ்செய்து வந்திருந்தனர். அவன் குற்றமற்ற ஒருவன் என்றும், தேவனுடைய ஊழியக்காரன் என்றும் அவர்கள் அறிந்திருந்தனர். அந்தப் பெண்ணின் கோரிக்கையில் அவர்கள் அதிர்ச்சியடைந்தபோதிலும் மறுப்புத்தெரிவிக்கவும் குறுக்கிடவும்முடியாத அளவிற்கு மதிமயங்கியவர்களாக இருந்தனர். பரலோகத் தூதுவனின் உயிரைக் காப்பதற்கு ஒரே ஒருவரின் குரல்கூட எழவில்லை. இந்த மனிதர்கள் அந்த நாட்டின் நம்பிக்கைக்குப் பாத்திரமான மேலான நிலையிலிருந்தனர். அவர்கள்மீது பெரும் பொறுப்பு தங்கியிருந்தது. அப்படியிருந்தும் அவர்கள் தங்களுடைய புலன்கள் மரத்துப்போகுமளவிற்கு

விருந்துண்பதிலும் மது அருந்துவதிலும் ஈடுபட்டிருந்தனர். இசையும் நாட்டியமும் கலந்த காட்சியால் அவர்களுடைய தலைகள் மயங்கவே அவர்களுடைய மனச்சாட்சி உறங்கியது. ஒழுக்கங்கெட்ட ஒரு பெண்ணின் பழிவாங்கும் நோக்கத்தை திருப்திப்படுத்துவதற்காக அவர்கள் தங்களுடைய மௌனத்தினால் தேவனுடைய தீர்க்கதரிசியின்மீது மரணதண்டனையை அறிவித்தனர். (32)

ஏரோது அவன் கொடுத்த ஆணையிலிருந்து விடுபட வீணாகக் காத்திருந்தான். அதன்பின் அவன் விருப்பமற்றவனாக தீர்க்கதரிசியின் மரணதண்டனையை நிறைவேற்றக் கட்டளையிட்டான். வெகுவிரைவில் யோவானின் தலை அந்த அரசனுக்கும் அவனது விருந்தினர்களுக்கும் முன்பாகக் கொண்டுவரப்பட்டது. பாவமான வாழ்க்கையைவிட்டுத் திரும்பும்படி விசுவாசத்துடன் ஏரோதை எச்சரித்திருந்த அந்த உதடுகளுக்கு என்றைக்குமாக முத்திரை இடப்பட்டது. மனந்திரும்பும்படி மனிதர்களை அழைக்கும் அந்தக் குரல் இனி ஒருபோதும் கேட்கப்படமாட்டாது. ஒரு இரவின் வெறியாட்டம் தீர்க்கதரிசிகளில் மிகவும் பெரியவனாயிருந்த ஒருவனின் உயிருக்கு விலையாயிற்று. (33)

ஆ! நீதியின் பாதுகாவலர்களாக இருக்கவேண்டியவர்களின் புலனடக்கமின்மையினால் குற்றமற்றவர்களின் உயிர்கள் எவ்விதமாக அடிக்கடி பலியாக்கப்பட்டுள்ளன! போதையூட்டும் கோப்பையை எவனொருவன் தன் உதட்டின்மேல் வைக்கிறானோ, அவன் மதிமயங்கச்செய்யும் அதன் சக்தியினால் செயலாற்றும் அநீதிகள் அனைத்திற்கும் பொறுப்புள்ளவனாக இருக்கிறான். தனது புலன்களை மரத்துப்போகச் செய்வதினால் அவனால் அமைதியாக மதிப்பீடு செய்யவோ அல்லது எது சரி, எது தவறு என்று தெளிவாக உணர்ந்துகொள்ளவோ முடியாமலாகிவிடுகிறது. குற்றமற்றவர்களை ஒடுக்குவதற்கும் அழிப்பதற்கும் சாத்தான் அவன்மூலமாகச் செயலாற்றுவதற்குப் பாதையைத் திறக்கிறான். “திராட்சரசம் பரியாசஞ்செய்யும், மதுபானம் அமளிபண்ணும்; அதினால் மயங்குகிற ஒருவனும் ஞானவானல்ல”—நீதிமொழிகள் 20:1; “நியாயம் பின்னிட்டு அகன்றது; நீதி தூரமாய் நின்றது; சத்தியம் வீதியிலே இடறி, யதார்த்தம் வந்து சேரமாட்டாமற்போகிறது. சத்தியம் தள்ளுபடியாயிற்று; பொல்லாப்பை விட்டு விலகுகிறவன் கொள்ளையாகிறான்; இதைக் கர்த்தர் பார்த்து நியாயமில்லையென்று விசனமுள்ளவரானார்”—ஏசாயா 59:14.15. தங்களுடைய உடன் மனிதர்களின் உயிருக்குப் பொறுப்பாக இருப்பவர்கள் இச்சையடக்கமின்மைக்குத் தங்களை விட்டுக்கொடுக்கும்போது, அந்தக் குற்றத்திற்கு அவர்கள் பொறுப்பாளிகளாகவேண்டும். சட்டத்தை நடப்பிக்கும்

அனைவரும் சட்டத்தின்படி நடக்கிறவர்களாக இருக்கவேண்டும். அவர்கள் சுயக்கட்டுப்பாடுள்ள மனிதர்களாக இருக்கவேண்டும். அவர்கள் தங்களுடைய சரீரமான சன்மார்க்க வல்லமைகளின்மீது முழுமையான கட்டுப்பாட்டையும் நீதியைப்பற்றின மிக உயர்வான உணர்வையும் உடையவர்களாக இருக்கவேண்டியது மிகவும் அவசியம். (34)

யோவான் ஸ்நானகனின் தலை ஏரோதியாளிடத்திற்குக் கொண்டுசெல்லப்பட்டது. அவள் அதைத் தனது பேய்த்தனமான திருப்தியுடன் பெற்றுக்கொண்டாள். வஞ்சம் தீர்த்துவிட்டதில் அவள் வெற்றிச்சிரிப்புச் சிரித்தாள். இனிமேல் ஏரோதின் மனச்சாட்சி அவனைத் துன்பப்படுத்தாது என்று அவள் தனக்குத்தானே பெருமைப்பட்டுக்கொண்டாள். ஆனால் அவளது பாவத்திலிருந்து அவளுக்கு மகிழ்ச்சி பலனாகக் கிடைக்கவில்லை. அவளுடைய பெயர் பயங்கரமானவள் வெறுக்கப்படவேண்டியவள் என்றாயிற்று. மேலும் தீர்க்கதரிசியின் எச்சரிப்பினால் உண்டாயிருந்த குற்ற உணர்வைவிட இப்போது ஏரோது அதிகமான குற்ற உணர்வினால் வாதிக்கப்பட்டான். யோவானின் போதனையினால் உண்டான செல்வாக்கு அமைதிப்படுத்தப்படவில்லை. காலத்தின் முடிவுவரை அது ஒவ்வொரு தலைமுறைக்கும் பரவிச்செல்லவேண்டியதாக இருந்தது. (35)

ஏரோதின் பாவம் எப்பொழுதும் அவன்முன் இருந்தது. குற்றமுள்ள ஒரு மனச்சாட்சியின் குற்றஞ்சாட்டுதலிலிருந்து இளைப்பாறுதலைக் காண அவன் ஓயாமல் வகைதேடிக்கொண்டிருந்தான். யோவானின் மீதிருந்த அவனது நம்பிக்கை அசைக்க முடியாததாக இருந்தது. சுயமறுப்புமிக்க அவனது வாழ்க்கை, பக்திவிநயமான அக்கறைமிக்க வேண்டுகோள்கள், ஆலோசனையினால் அவனிடம் காணப்பட்டிருந்த மேலான நியாயம், அவன் எவ்விதமாக தனது மரணத்திற்கு வந்தான் என்பவை ஏரோதின் நினைவிற்கு வந்தபோது, அவனால் இளைப்பாறுதலைக் காணமுடியவில்லை. தன்மீது ஒரு சாபம் இருக்கிறது என்னும் பயம் அவனை எப்பொழுதும் ஒடுக்கிக்கொண்டிருந்தது. நாட்டின் காரியங்களில் அவன் ஈடுபட்டிருந்தபோதும் மனிதர்களிடமிருந்து கௌரவத்தைப் பெற்றுக்கொண்டிருந்தபோதும் அவன் சிரித்த முகத்தையும் மதிப்புமிக்க குணத்தையும் உடையவன்போலத் தன்னைக் காண்பித்துக்கொண்டிருந்தான். (36)

தேவனிடமிருந்து எதையும் மறைக்கமுடியாது என்னும் யோவானின் வார்த்தைகளால் ஏரோது மிக ஆழமாக உணர்த்தப்பட்டிருந்தான். தேவன் எங்கும் இருக்கிறார், அந்த விருந்து சாலையில் நிகழ்ந்த வெறியாட்டத்தை அவர் சாட்சியாகக் கண்டிருந்தார், யோவானை சிரச்சேதஞ்செய்யம்படி கொடுத்த கட்டளையை அவர் கேட்டிருந்தார், ஏரோதியாளின் வெற்றிச்சிரிப்பு

தன்னைக் கடிந்துகொண்டிருந்தவனின் துண்டிக்கப்பட்டிருந்த தலைக்கு அவள் கொடுத்த அவமானம் ஆகியவைகளை அவர் கண்டிருந்தார் என்பதைப்பற்றியவைகளில் அவன் மன உணர்வு உள்ளவனாக இருந்தான். வனாந்தரத்தில் யோவான் பிரசங்கம்செய்திருந்ததைவிட அந்தத் தீர்க்கதரிசியின் உதடுகளிலிருந்து ஏரோது கேட்டிருந்தவை இப்பொழுது அவனது மனச்சாட்சியில் மிகவும் தெளிவாகப் பேசின. (37)

கிறிஸ்துவின் ஊழியத்தைப்பற்றி ஏரோது கேள்விப்பட்டபோது, அவன் மிகவும் அதிகமாகக் கலங்கிப் போனான். தேவன் மரித்தோரிலிருந்து யோவானை எழுப்பி, பாவத்தைக் கண்டனஞ்செய்யும்படி மேலும் அதிகமான வல்லமையுடன் அனுப்பினார் என்று அவன் எண்ணினான். யோவான் தனது மரணத்திற்காக ஏரோதின்மீதும் அவன் குடும்பத்தின்மீதும் பழிசுமத்தி, வஞ்சம் தீர்ப்பான் என்னும் தொடர்ச்சியான பயத்தில் இருந்தான். பாவநடத்தையின் பலனைப்பற்றி தேவன் அறிவித்திருந்ததை ஏரோது அறுவடைசெய்துகொண்டிருந்தான். "அந்த ஜாதிகளுக்குள்ளே உனக்கு இளைப்பாறுதல் இராது, உன் உள்ளங்கால்கள் தங்கித் தரிக்க இடமும் இராது; அங்கே கர்த்தர் உனக்குத் தத்தளிக்கிற இருதயத்தையும், சோர்ந்துபோகிற கண்களையும், மனச்சஞ்சலத்தையும் கொடுப்பார். உன் ஜீவன் உனக்குச் சந்தேகத்தில் ஊசலாடும்; உன் ஜீவனைப்பற்றிய நம்பிக்கையில்லாமல் இரவும் பகலும் திகில்கொண்டிருப்பாய். நீ பயப்படும் உன் இருதயத்தின் திகிலினாலும், உன் கண்கள் காணும் காட்சியினாலும், விடியற்காலத்தில் எப்பொழுது சாயங்காலம் வருமோ என்றும், சாயங்காலத்தில், எப்பொழுது விடியற்காலம் வருமோ என்றும் சொல்லுவாய்"–உபாகமம் 28:65–67. பாவியின் எண்ணங்களே அவனைக் குற்றஞ்சாட்டுபவைகளைப்போல இருந்தது. இரவும் பகலும் இளைப்பாறுதல் இல்லாமல் உள்ள குற்றமுள்ள மனச்சாட்சியின் கொட்டுதல்களைவிட அதிகமான சித்தரவதை வேறு எதுவும் இருக்கமுடியாது. (38)

யோவான் ஸ்நானகனின் முடிவு அநேக உள்ளங்களில் புரிந்து கொள்ளமுடியாத ஆழமான இரகசியமாக உள்ளது. சிறைத்துன்பம் அனுபவித்து மரணமடையும்படி அவன் ஏன் விட்டுவிடப்பட்டான்? இருண்ட இந்த தெய்வீக ஏற்பாட்டின் இரகசியத்தை நமது மனிதப் பார்வையால் ஊடுருவிப் பார்க்கமுடியாது. ஆனால் யோவான் கிறிஸ்துவின் பாடுகளில் ஒரு பங்காளியாக இருந்தான் என்பதை நாம் நினைவுகூரும்போது, அது தேவன்மீது நாம் கொண்டுள்ள நம்பிக்கையை ஒருபோதும் அசைக்காது. கிறிஸ்துவைப் பின்பற்றும் அனைவரும் தியாகம் என்னும் கிரீடத்தை அணிந்தவர்களாக இருப்பார்கள். சுயநலமிக்க மனிதர்களும் தவறாகக்

கருதப்பட்டிருந்து சாத்தானின் பயங்கரமான தாக்குதலின் ஒரு அடையாளமாக இருப்பார்கள். தற்தியாகஞ்செய்யும் இந்தக் கொள்கையை அழிப்பதற்காக அவனுடைய இராஜ்யம் அமைக்கப்பட்டுள்ளது. எனவே, அவனுக்கு எதிரான கொள்கை எங்கெல்லாம் வெளிக்காணப்படுமோ, அதற்கு எதிராக அவன் போர்செய்வான். (39)

யோவானின் குழந்தைப் பருவம், வாலிபப் பருவம், மற்றும் முழுவளர்ச்சிப் பருவம் ஆகியவை மன திடத்தினாலும், சன்மார்க்க வல்லமையினாலும் அடையாளப்படுத்தப்பட்டிருந்தது. “கர்த்தருக்கு வழியை ஆயத்தப்படுத்துங்கள்; அவருக்குப் பாதைகளைச் செவ்வைபண்ணுங்கள்” (மத்தேயு 3:3) என்று கூறும் அவனது சத்தம் வனாந்தரத்தில் கேட்கப்பட்டபோது, சாத்தான் தனது இராஜ்யத்தின் பாதுகாப்பையெண்ணிப் பயந்தான். மனிதர்கள் நடுங்கும் விதத்தில் பாவத்தின் தன்மை வெளிப்படுத்தப்பட்டது. தனது கட்டுப்பாட்டின் கீழாக அநேகர்மீதிருந்த சாத்தானின் வல்லமை தகர்க்கப்பட்டது. தேவனிடம் பரிபூரணமான சரணாகதி உடைய வாழ்க்கையை உடையவனாக இருந்த ஸ்நானகனை அப்படிப்பட்ட வாழ்க்கையிலிருந்து, தேவனைவிட்டுத் தூரமாக விலக்க, சாத்தான் மேற்கொண்ட முயற்சிகளில் அவன் களைப்படையாதவனாக இருந்தான். எனினும் சாத்தான் தோற்றுப்போனான். இயேசுவை மேற்கொள்ளுவதிலும் அவன் தோற்றிருந்தான். வனாந்திரத்தில் உண்டான சோதனையில் சாத்தான் தோற்கடிக்கப்பட்டான். அதனால் அவனுடைய கோபம் மிகவும் அதிகமாக இருந்தது. இப்பொழுது யோவானை அடித்து வீழ்த்துவதின்மூலமாக கிறிஸ்துவிற்குத் துயரத்தை உண்டுபண்ண அவன் தீர்மானித்தான். எந்த ஒருவரை அவனால் பாவத்துடன் பிணைத்துவைக்கமுடியாதோ, அப்படிப்பட்டவரை அவன் பாடுகளுக்குள்ளாக்கினான். (40)

இயேசு அவருடைய ஊழியக்காரனை விடுவிப்பதற்காக இடைப்படவில்லை. யோவான் இந்தச் சோதனையைத் தாங்கியாகவேண்டும் என்பதை அவர் அறிந்திருந்தார். யோவான் சிறைவைக்கப்பட்டிருந்த பாதாளச்சிறையின் துயர நிலையை ஒளிபெறச்செய்ய இயேசு மகிழ்ச்சியுடன் அங்கு வந்திருக்கக்கூடும். ஆனால் அவர் தமது ஊழியத்திற்கு அபாயத்தை உண்டுபண்ணும்வண்ணம் எதிரிகளின் கரங்களில் தம்மைத்தாமே வைக்கமாட்டார். அவர் தமது ஊழியக்காரனை மகிழ்ச்சியுடன் விடுவித்திருக்கக்கூடும். ஆனால் பின்வரும் வருடங்களில் சிறையிலிருந்து மரணத்திற்குக் கடந்து செல்லவேண்டியவர்களாக இருந்த ஆயிரக்கணக்கானவர்களுக்காக இரத்தசாட்சியாக உயிர்நீத்தல் என்ற தியாகக் கோப்பையில் யோவான் பருகவேண்டியதாக இருந்தது. பாதாளச்சிறையின்

பலவீனங்களிலோ, அல்லது வாளால் உண்டாகும் மரணத்திலோ, அல்லது தூக்குமேடையிலோ, அல்லது சிதைநெருப்பிலோ, வெளித்தோற்றத்தில் தேவனாலும் மனிதர்களாலும் கைவிடப்பட்டவர்களைப்போலிருந்த கிறிஸ்துவின் அடியார்கள் துன்பப்படவேண்டியிருந்தபோது, எவனுடைய விசுவாசத்தைப்பற்றி இயேசுவே சாட்சிபகர்ந்திருந்தாரோ அந்த யோவான் ஸ்நானகனைப்பற்றின எண்ணமும், கிறிஸ்துவின் அதேவிதமான அனுபவத்தைப்பற்றின எண்ணமும், அவர்களுக்குச் சுமைதாங்கியாக இருந்தது. (41)

தேவனுடைய தூதுவனுடைய பூமிக்குரிய வாழ்க்கையைக் குறைத்துப்போடுவதற்கு சாத்தான் அனுமதிக்கப்பட்டிருந்தான். ஆனால் "கிறிஸ்துவுடனே தேவனுக்குள் மறைந்திருக்கிற" (கொலோசேயர் 33) ஜீவனை அழிப்பவனால் சமீபிக்க முடியவில்லை கிறிஸ்துவிற்குத் துயரத்தை உண்டுபண்ணிவிட்டதற்காக அவன் வெற்றிச்சிரிப்புச் சிரித்தான். ஆனால் யோவானை வெற்றிகொள்ளுவதில் அவன் தோற்றுப்போனான். மரணம் தானாகவே அவனைச் சோதனையின் வல்லமைக்கு அப்பாற்பட்ட நிலைமையில் நிரந்தரமாக வைத்தது. இந்த யுத்தத்தில் சாத்தான் அவனது குணத்தை வெளிக்காட்டிக்கொண்டிருந்தான். மனிதனுக்கும் தேவனுக்கும் எதிரான அவனது பகையை பிரபஞ்சத்திற்குமுன் அவன் சாட்சிபகர்ந்து வெளிக்காட்டினான். (42)

அற்புதமான விடுதலை எதுவும் யோவானுக்கு வழங்கப்படாமலிருந்த போதிலுங்கூட, அவன் கைவிடப்படவில்லை. கிறிஸ்துவைப்பற்றிய தீர்க்கதரிசனங்களையும், வேதவாக்கியங்களில் இருந்த வாக்குத்தத்தங் களையும் அவனுக்கு விளக்கிக்காட்டியிருந்த பரலோக தூதர்களின் தோழமை உறவில் அவன் எப்போதும் இருந்தான். வரவிருந்த காலங்களில் தேவனுடைய பிள்ளைகளின் தாங்குதலாக இருந்த இவைகள் அவனது தாங்குதலாகவுமிருந்தது. "உலகத்தின் முடிவுபரியந்தம் சகல நாட்களிலும் நான் உங்களுடனேகூட இருக்கிறேன்" (மத்தேயு 28:20) என்னும் வாக்குறுதி யோவான் ஸ்நானகனுக்கும் அவனுக்குப் பின்வந்தவர்களுக்கும் கொடுக்கப்பட்டிருக்கிறது. (43)

தேவன், தம்முடைய பிள்ளைகள் ஆரம்பத்திலேயே முடிவையும் அவரோடு உடன்ஊழியர்களாக நிறைவேற்றிக்கொண்டிருக்கும் நோக்கத்தின் மகிமையையும் பார்த்துப் புரிந்துகொண்டு தம்மால் நடத்தப்படவேண்டுமென்று தெரிந்துகொள்ளாதபோது, அவர்களை ஒருபோதும் நடத்தமாட்டார். பாதாளச்சிறையில் தனிமையானவனாக இருந்து மடிந்துபோன யோவான் ஸ்நானகனைவிட பரலோகத்திற்கு எடுத்துச்செல்லப்பட்ட ஏனோக்கோ அல்லது

அக்கினி இரதத்தில் உயரே எழுந்துசென்ற எலியாவோ பெரியவர்களோ அல்லது மேலாக கௌரவிக்கப்பட்டவர்களோ அல்ல. “கிறிஸ்துவினிடத்தில் விசுவாசிக்கிறதற்குமாத்திரமல்ல, அவர் நிமித்தமாகப் பாடுபடுகிறதற்கும் உங்களுக்கு அருளப்பட்டிருக்கிறது”—பிலிப்பியர் 1:29. பரலோகம் மனிதர்களுக்கு அருளக்கூடிய பரிசுகள் அனைத்திலும், கிறிஸ்துவின் பாடுகளில் பங்காளிகளாவது, சிறப்பான—கனமிக்க நம்பிக்கையாகவும், மிகவும் உயர்ந்த மேன்மையாகவும் உள்ளது. (44) ★

# 23

# தேவனுடைய இராஜ்யம் சமீபித்திருக்கிறது!

## (The Desire if Ages, pp. 231-235)

"இயேசு கலிலேயாவிலே வந்து, தேவனுடைய ராஜ்யத்தின் சுவிசேஷத்தைப் பிரசங்கித்து: காலம் நிறைவேறிற்று, தேவனுடைய ராஜ்யம் சமீபமாயிற்று; மனந்திரும்பி, சுவிசேஷத்தை விசுவாசியுங்கள்" (மாற்கு 1:14,15) என்று பிரசங்கித்தார். (1)

மேசியாவின் வருகை முதலில் யூதேயாவில் அறிவிக்கப்பட்டிருந்தது. எருசலேம் தேவாலயத்தில் சகரியா ஊழியஞ்செய்துகொண்டிருந்தபோது, முன்னோடியின் பிறப்பைப்பற்றி அவனுக்கு முன்னறிவிக்கப்பட்டிருந்தது. பெத்லகேமின் குன்றுகளின்மீதிருந்து தேவதூதர்கள் இயேசுவின் பிறப்பை அறிவித்திருந்தனர். அவரைத் தேடி எருசலேமிற்கு ஞானிகள் வந்திருந்தனர். தேவாலயத்தில் சிமியோனும் அன்னாளும் அவரது தெய்வத்தன்மைபற்றி சாட்சிபகர்ந்திருந்தனர். யோவான் ஸ்நானகனின் பிரசங்கத்தை எருசலேம், யூதேயா முழுவதும் கேட்டிருந்தது. அத்துடன் சனகரீம் சங்கத்திலிருந்து அனுப்பப்பட்டிருந்த பிரதிநிதிகளும் திரளானவர்களுடன் சேர்ந்து இயேசுவைக்குறித்த அவனது சாட்சியைக் கேட்டிருந்தனர். கிறிஸ்து அவரது முதல் சீடர்களை யூதேயாவில் தெரிந்துகொண்டார். அவரது ஆரம்பகால ஊழியத்தின் அதிகமான நேரம் இங்குதான் செலவிடப்பட்டிருந்தது. ஆலயத்தைச் சுத்திகரித்தபோது, அவரிடமிருந்து வெளிப்பட்ட தெய்வத்தன்மை, அவரது சுகமளிக்கும் அற்புதங்கள், அவரது உதட்டிலிருந்து வெளிப்பட்ட தெய்வ சத்தியங்கள் ஆகிய அனைத்தும், பெதஸ்தாவில் அவர் அருளிய சுகப்படுத்துதலுக்குப்பின் சனகரீம் சங்கத்தின்முன் நித்தியமானவருடனுள்ள அவரது குமாரன் என்னும் அந்தஸ்தை அறிவித்தன. (2)

இஸ்ரவேலின் தலைவர்கள் இயேசுவை ஏற்றுக்கொண்டிருந்தால், தமது சுவிசேஷத்தின் தூதினை உலகத்திற்கு எடுத்துச் செல்லும் தூதுவர்கள் என அவர்களை அவர் மேன்மைப்படுத்தியிருப்பார். அவரது இராஜ்யத்தையும், தேவகிருபையையும் முன்னறிவிப்பவர்களாக இருக்கும்

வாய்ப்பு அவர்களுக்கு முதலில் அருளப்பட்டிருந்தது; ஆனால், இஸ்ரவேல் நாடு தனக்கு வரப்போகும் தண்டனையின் காலத்தை அறியாதிருந்தது. யூதத் தலைவர்களுக்கிடையில் இருந்த பொறாமை, அவநம்பிக்கை ஆகியவை வெளிப்படையான வெறுப்பாக முதிர்ந்திருக்கவே, மக்களின் இதயங்கள் இயேசுவைவிட்டு வேறு திசையில் திரும்பியிருந்தன. (3)

சனகரீம் சங்கம் கிறிஸ்துவின் தூதைப் புறக்கணித்து, அவரைக் கொலைசெய்ய வேண்டும் என்ற தீர்மானத்தில் பிடிவாதமானதாக இருந்தது; எனவே, இயேசு எருசலேமைவிட்டும், ஆசாரியர்களைவிட்டும், தேவாலயத்தைவிட்டும், சமயத் தலைவர்களைவிட்டும், பிரமாணத்தைப்பற்றிய போதனையைப் பெற்றிருந்த மக்களைவிட்டும் பிரிந்து, தமது தூதை வேறொரு வகுப்பினருக்கு அறிவிப்பதற்கும், எல்லா ஜாதியினருக்கும் (நாட்டினருக்கும்) சுவிசேஷத்தை அறிவிக்கக்கூடியவர்களைக் கூட்டிச்சேர்க்கவும் சென்றார். (4)

கிறிஸ்துவின் நாட்களில் சமயச்சார்புடைய அதிகாரிகளால் மனிதனுக்கு ஒளியாகவும் ஜீவனாகவும் இருந்தவர் புறக்கணிக்கபட்டது போலவே, அதற்குப்பின்வந்த ஒவ்வொரு தலைமுறையிலும் அது புறக்கணிக்கப்பட்டுவந்துள்ளது. கிறிஸ்து யூதேயாவைவிட்டுப் பின்வாங்கிச் சென்ற காரியம், மறுபடியும் மறுபடியும் தொடர்ந்தது. தேவனுடைய வார்த்தையை சீர்திருத்தக்காரர்கள் பிரசங்கித்தபோது, அமைக்கப்பட்டிருந்த சபையைவிட்டுப் பிரிந்துசெல்ல வேண்டும் என்ற எண்ணம் அவர்களிடம் இருக்கவில்லை; ஆனால், சமயத் தலைவர்கள் ஒளியைச் சகித்துக்கொள்ள முடியாதவர்களாக இருந்தனர்; எனவே, ஒளியைத் தாங்கியிருந்தவர்கள் சத்தியத்திற்காக ஏங்கிக்கொண்டிருந்த மற்றொரு வகுப்பினரைத் தேடிச்செல்லும்படி வற்புறுத்தப்பட்டனர். நமது காலத்தில் தங்களைச் சீர்திருத்தத்தைப் பின்பற்றுபவர்கள் என்று கூறிக்கொள்ளுபவர்களிலும் சிலர், அந்த ஆவியினால் தூண்டப்பட்டவர்களாக உள்ளனர். தேவனுடைய சத்தம் எந்த வடிவத்தில் முன்வைக்கப்பட்டாலும் அதைக் கவனித்து, சத்தியத்தை ஏற்றுக்கொள்ளச் சிலர் ஆயத்தமாக உள்ளனர். சீர்திருத்தக்காரர்களின் அடிச்சுவட்டைப் பின்பற்றுபவர்கள் தேவனுடைய வார்த்தையிலுள்ள தெளிவான போதனையை அறிவிப்பதற்காக, அவர்கள் நேசிக்கும் தங்களுடைய சபையைவிட்டு விலகிச்செல்லும்படி அடிக்கடி வற்புறுத்தப்படுகின்றனர். அநேக சமயங்களில், ஒளியைத் தேடுபவர்கள் அதேவிதமான போதனையால் அதற்குக் கீழ்ப்படிய வேண்டியதிருப்பதினால், தங்களது பிதாக்களின் சபையைவிட்டு வெளியேறவேண்டியது அவசியமாகிறது. (5)

கலிலேய மக்கள் கொடூரமிக்கவர்களும் கல்வியறிவு இல்லாதவர்களுமாக இருந்தனர் என எருசலேமிலிருந்த ரபிமார்களால்

நிந்திக்கப்பட்டிருந்தனர். அவர்கள் அதிகமான அக்கறையும் உண்மையுமுள்ளவர்களாக இருந்தனர். சாதிவேறுபாட்டின் கட்டுப்பாட்டிற்கு அவ்வளவாகக் கீழ்ப்படியாதவர்களாக இருந்தனர். சத்தியத்தை ஏற்றுக்கொள்ள அவர்களது உள்ளங்கள் அதிமாகத் திறந்திருந்தன. கலிலேயாவிற்குச் செல்லுவதின்மூலமாக, இயேசு தனிமையை நாடிச்செல்லவில்லை. அந்தச் சமயத்தில் அந்த மாநிலம் யூதேயாவிலிருந்ததைவிட, அதிகமான பல்வேறு இன மக்களால் நிரம்பிய ஒன்றாக இருந்தது. (6)

இயேசு போதனைசெய்துகொண்டும் சுகப்படுத்திக்கொண்டும் கலிலேயாவினூடாகப் பயணஞ்செய்திருந்தபோது, நகரங்களிலிருந்தும் கிராமங்களிலிருந்தும் திரளானவர்கள் அவரைச் சூழ்ந்துகொண்டனர். யூதேயாவிலிருந்தும் அண்டை மாநிலங்களிலிருந்துங்கூட அநேகர் வந்தனர். அநேக சமயங்களில் மக்களைவிட்டு மறைந்திருக்கும்படியான நிலையில் இருந்தார். மக்களின் உற்சாகம் கரைபுரண்டோடியதால், ஒரு கலகம் உண்டாகிவிடக்கூடும் என்று ரோம அதிகாரிகள் பயப்படக்கூடிய நிலைமையைத் தவிர்க்கும் முன்னெச்சரிக்கை நடவடிக்கை எடுக்கவேண்டியதாக இருந்தது. உலகத்திற்கு இதற்குமுன் ஒருபோதும் இப்படிப்பட்ட ஒரு காலம் ஏற்பட்டிருக்கவில்லை. மனிதர்களை நோக்கிப் பரலோகம் தாழக்கொண்டுவரப்பட்டது. இஸ்ரவேலின் மீட்பிற்காக அதிகக் காலமாக பசிதாகமுடையதாக இருந்த ஆத்துமாக்கள், இரக்கமிக்க ஒரு இரட்சகரின் கிருபையில் மனம் மகிழ்ந்தனர். (7)

“காலம் நிறைவேறியது, தேவனுடைய இராஜ்யம் சமீபமாக இருக்கிறது; நீங்கள் மனந்திரும்பி சுவிசேஷத்தை ஏற்றுக்கொள்ளுங்கள்” என்பது கிறிஸ்துவின் பிரசங்கத்திலிருந்த கருப்பொருளாக இருந்தது. இவ்வாறாக, இரட்சகராகிய அவராலேயே கொடுக்கப்பட்ட சுவிசேஷத்தின் தூது தீர்க்கதரிசனங்களை அடிப்படையாகக்கொண்டதாக இருந்தது. காலம் நிறைவேற உள்ளது என்று அவர் அறிவித்த காலம், காபிரியேல் தூதனால் தானியேலிற்கு அறிவுறுத்தப்பட்டதாக இருந்தது. “மீறுதலைத் தவிர்க்கிறதற்கும், பாவங்களைத் தொலைக்கிறதற்கும் அக்கிரமத்தை நிவிர்த்திபண்ணுகிறதற்கும், நித்திய நீதியை வருவிக்கிறதற்கும், தரிசனத்தையும் தீர்க்கதரிசனத்தையும் முத்திரிக்கிறதற்கும், மகா பரிசுத்தமுள்ளவரை அபிஷேகம்பண்ணுகிறதற்கும், உன் ஜனத்தின்மேலும் உன் பரிசுத்த நகரத்தின்மேலும் எழுபது வாரங்கள் செல்லும்படி குறிக்கப்பட்டிருக்கிறது”- தானியேல் 9:24. தீர்க்கதரிசனத்தில் ஒருநாள் என்பது ஒரு வருடத்தைகுறிக்கும்- எண்ணாகமம் 14:34; எசேக்கியேல் 4:6. (ஆயிரம் வருடம் ஒரு நாளாகவும் கர்த்தருடைய பார்வையில் இருக்கும்- சங்கீதம் 90:4; 2பேதுரு 3:8). எழுபது வாரங்கள் அல்லது 490 நாட்கள் 490 வருடங்களைக் குறிக்கின்றன. இதன்

ஆரம்பகாலம் “இப்போதும் நீ அறிந்து உணர்ந்துகொள்ளவேண்டியது என்னவென்றால்: எருசலேமைத் திரும்ப எடுப்பித்துக் கட்டுகிறதற்கான கட்டளை வெளிப்படுவதுமுதல், பிரபுவாகிய மேசியா வருமட்டும் ஏழுவாரமும், அறுபத்திரண்டு வாரமும் செல்லும்”-தானியேல் 9:25. எருசலேமைத் திரும்ப எடுத்துக்கட்டும் கட்டளை அர்தசஷ்டா அரசனால் கி.மு.457-ம் வருடம், இலையுதிர் காலத்தில் நடைமுறைக்கு வந்தது. (எஸ்றா 6:14; 7:1,9 முதல் பகுதி காண்க). இந்தக் காலத்திலிருந்து 483 வருடங்கள் கி.பி.27-ம் வருடம் இலையுதிர் காலம்வரை செல்லுகிறது. தீர்க்கதரிசனத்தின்படி இந்தக்காலம் அபிஷேகம் பண்ணப்பட்டவரான மேசியாவரை எட்டவேண்டும். கி.பி.27-ல் இயேசு அவரது ஞானஸ்நானத்தின்போது, பரிசுத்த ஆவியானவரால் அபிஷேகம்பண்ணப்பட்டதுடன் அவரது ஊழியத்தைத் தொடங்கினார். அப்பொழுது “காலம் நிறைவேறினது” என்னும் தூது அறிவிக்கப்பட்டது. (8)

அதன்பின் அவர் ஒரு வாரமளவும் (ஏழு வருடங்கள்) அநேகருக்கு உடன்படிக்கையை உறுதிப்படுத்துவார் என்று அந்த தேவதூதன் கூறினான். இரட்சகர் அவரது ஊழியத்தை ஆரம்பித்தது முதல் சுவிசேஷம் மிகக் குறிப்பாக யூதர்களுக்கு ஏழுவருடங்கள் பிரசங்கிக்கப்படவேண்டியதாக இருந்தது. இதில் மூன்றரை வருடங்கள் கிறிஸ்துவினால் நேரடியாகவும், அதன்பின் அப்போஸ்தலர்களாலும் பிரசங்கிக்கப்படவேண்டியதாக இருந்தது. “அந்த வாரம் பாதி சென்றபோது பலியையும் காணிக்கையையும் ஒழியப்பண்ணுவார்”-தானியேல் 9:27. கி.பி.31-ம் வருட வசந்த காலத்தில் கிறிஸ்து மெய்யான பலியாகக் கல்வாரியில் பலியானார். அப்பொழுது தேவாலயத்தின் திரைச்சீலை இரண்டாகக் கிழிந்தது. இது பலிமுறைகளின் ஆராதனையும் பரிசுத்தத் தன்மையும் முடிவடைந்துவிட்டது என்பதை எடுத்துக்காட்டியது. பூமிக்குரிய பலியையும் காணிக்கையையும் (நைவேத்தியங்கள்) ஒழியப்பண்ணவேண்டிய வேளை வந்திருந்தது. (9)

அந்த ஒரு வாரம்—ஏழு வருடங்கள்—கி.பி.34–ல் முடிவடைந்தது. இறுதியாக, அப்போது யூதர்கள் ஸ்தேவானைக் கல்லெறிந்து கொன்றதின்மூலமாக, சுவிசேஷத்தை அவர்கள் புறக்கணித்துவிட்டனர் என்பதற்கான முத்திரையை இட்டனர். உபத்திரவத்தின் காரணமாக “சிதறிப்போன சீடர்கள் எங்கும் சுற்றித்திரிந்து, சுவிசேஷத்தைப் பிரசங்கித்தனர்”-அப்போஸ்தலர் 8:4. இதற்குச் சிறிது காலம் சென்றபின்னர் உபத்திரவப்படுத்துகிறவனாக இருந்த சவுல் என்பவன் மனந்திரும்பி, புறஜாதியாருக்கு அப்போஸ்தலனானான். (10)

கிறிஸ்துவின் வருகையின் காலம், அவர் பரிசுத்த ஆவியால் அபிஷேகம்பண்ணப்படுதல், அவரது மரணம், புறஜாதியினருக்குச் சுவிசேஷம்

கொடுக்கப்படுதல் ஆகியவை குறிப்பாகச் சுட்டிக்காட்டப்பட்டிருந்தன. இந்தத் தீர்க்கதரிசனங்களை அறிந்துகொள்ளுவதும், கிறிஸ்துவின் ஊழியத்தில் அவைகளின் நிறைவேறுதலை அறிந்துகொள்ளுதலும், யூதருக்கு அருளப்பட்ட சலுகையாக இருந்தது. தீர்க்கதரிசனங்களை ஆராயவேண்டியதின் முக்கியத்துவத்தைக் கிறிஸ்து அவரது சீடர்களுக்கு வற்புறுத்திக் கூறியிருந்தார். தானியேலிற்குக் கொடுக்கப்பட்டிருந்த தீர்க்கதரிசனத்தில் காலத்தைக் குறிப்பிட்டு, "வாசிக்கிறவன் சிந்திக்கக்கடவன்" (மத்தேயு 24:15) என்று அவர் கூறினார். அவரது உயிர்த்தெழுதலுக்குப்பின், தீர்க்கதரிசனங்களில் அவரைப்பற்றிக் கூறியிருந்த எல்லாவற்றைப்பற்றியும் சீடர்களுக்கு அவர் விவரித்துக்காட்டினார் (லூக்கா 24:27). அனைத்துக் தீர்க்கதரிசிகளின்மூலமாகவும் இரட்சகர் பேசியிருந்தார். "தங்களிலுள்ள கிறிஸ்துவின் ஆவியானவர் கிறிஸ்துவுக்கு உண்டாகும் பாடுகளையும் அவைகளுக்குப் பின்வரும் மகிமைகளையும் முன்னறிவித்தபோது, இன்னகாலத்தைக் குறித்தாரென்பதையும், அந்தக் காலத்தின் விசேஷம் இன்னதென்பதையும் ஆராய்ந்தார்கள்"–1 பேதுரு 1:11. (11)

தேவகுமாரனுக்கு அடுத்த பதவியிலிருந்த காபிரியேல் தூதன்தான் தெய்வீகத் தூதுடன் தானியேலினிடத்திற்கு வந்தான். அவருக்கு அன்பான சீடனாயிருந்த யோவானிற்கு, எதிர்காலத்தைப்பற்றி அறிவிக்கும்படி கிறிஸ்துவால் அனுப்பப்பட்ட அவரது தூதன் காபிரியேலாக இருந்தான். இந்தத் தீர்க்கதரிசனங்களை வாசிக்கிறவர்களுக்கும், கேட்பவர்களுக்கும், அவைகளின்படி நடப்பவர்களுக்கும் ஒரு ஆசீர்வாதம் அறிவிக்கப்பட்டுள்ளது (வெளிப்படுத்தல் 1:3 காண்க). (12)

"கர்த்தராகிய ஆண்டவர் தீர்க்கதரிசிகளாகிய தம்முடைய ஊழியக்காரருக்குத் தமது இரகசியத்தை வெளிப்படுத்தாமல் ஒரு காரியத்தையும் செய்யார்"-ஆமோஸ் 3:7. "மறைவானவைகள் நம்முடைய தேவனாகிய கர்த்தருக்கே உரியவைகள்; வெளிப்படுத்தப்பட்டவைகளோ, இந்த நியாயப்பிரமாணத்தின் வார்த்தைகளின்படியெல்லாம் செய்யும்படிக்கு, நமக்கும் நம்முடைய பிள்ளைகளுக்கும் என்றென்றைக்கும் உரியவைகள்" -உபாகமம் 29:29. தேவன் இவைகளை நமக்கு ஈந்துள்ளார். தீர்க்கதரிசன வேதவாக்கியங்களை பக்தியுடனும் ஜெபத்துடனும் ஆராய்பவர்களின்மீது அவரது ஆசீர்வாதம் உண்டாகும். (13)

கிறிஸ்துவின் முதலாம் வருகையைப்பற்றிய தூது அவரது கிருபையின் இராஜ்யத்தை அறிவித்ததைப்போல, அவரது இரண்டாம் வருகைப்பற்றிய தூது அவரது மகிமையின் இராஜ்யத்தை அறிவிக்கிறது. முதலாவது தூதைப்போலவே, இரண்டாவது தூதும் தீர்க்கதரிசனங்களை அடிப்படையாகக்

கொண்டுள்ளது. தானியேலிற்குத் தேவதூதனால் கடைசிநாட்கள் சம்பந்தமாகக் கொடுக்கப்பட்ட வார்த்தைகள், கடைசிநாட்களில் புரிந்துகொள்ளப்பட வேண்டியவைகளாக இருந்தன. "அந்த நாட்களில் அநேகர் இங்கும் அங்கும் ஓடி ஆராய்வார்கள், அறிவும் பெருகிப்போம்; துன்மார்க்கரோ துன்மார்க்கமாய் நடப்பார்கள்; துன்மார்க்கரில் ஒருவனும் உணரான்"-தானியேல் 12:4,10. இவைகளெல்லாம் நடந்தேறும்போது, தேவனுடைய இராஜ்யம் சமீபமாயிருக்கிறது என்பதை நீங்கள் அறிந்துகொள்ளவேண்டும் என்று கூறி, இரட்சகர் தாமே அவரது வருகையின் காலங்களின் அடையாளங்களைக் கூறியிருக்கிறார். "அப்படியே இவைகள் சம்பவிக்கிறதை நீங்கள் காணும்போது, தேவனுடைய ராஜ்யம் சமீபமாயிற்றென்று அறியுங்கள்." "உங்கள் இருதயங்கள் பெருந்திண்டியினாலும் வெறியினாலும் லவுகீக கவலைகளினாலும் பாரமடையாதபடிக்கும், நீங்கள் நினையாத நேரத்தில் அந்த நாள் உங்கள் மேல் வராதபடிக்கும் எச்சரிக்கையாயிருங்கள்." "ஆகையால் இனிச் சம்பவிக்கப்போகிற இவைகளுக்கெல்லாம் நீங்கள் தப்பி, மனுஷகுமாரனுக்கு முன்பாக நிற்கப்பாத்திரவான்களாக எண்ணப்படுவதற்கு, எப்பொழுதும் ஜெபம்பண்ணி விழித்திருங்கள் என்றார்"-லூக்கா 21:31,34,36. (14)

இந்த வேதவாக்கியங்களால் முன்னறிவிக்கப்பட்ட காலத்தையெல்லாம் எட்டியிருக்கிற நேரம்—முடிவுகாலத்தின் நேரம்—சமீபித்திருக்கிறது. தீர்க்க தரிசியின் தரிசனங்களின் முத்திரை உடைக்கப்பட்டுள்ளன. அவைகளின் பக்திவிநயமான எச்சரிப்புகள் நமது கர்த்தரின் மகிமைமிக்க வருகை மிக சமீபமாக உள்ளது என்பதைச் சுட்டிக்காட்டுகின்றன. (15)

யூதர்கள் தேவனுடைய வார்த்தைகளுக்குத் தவறான அர்த்தம் கற்பித்து, தவறாக பொருத்திப்பார்த்திருந்தனர்; எனவே, அவர்களைச் சந்திக்கும் காலத்தை அவர்கள் அறியாதிருந்தனர். கிறிஸ்துவும் அவரது அப்போஸ்தலர்களும் செய்திருந்த ஊழியத்தின் வருடங்களை—தெரிந்தெடுக்கப்பட்டிருந்த மக்களுக்குக் கொடுக்கப்பட்டிருந்த விலைமதிப்பு மிக்க இறுதி வருடங்களை—அவர்கள் கர்த்தரின் ஊழியக்காரர்களை அழிப்பதற்காகத் திட்டந்தீட்டுவதில் செலவழித்திருந்தனர். உலகப்பிரகாரமான ஆசைகள் அவர்களை ஈர்த்துக்கொண்டதினால், அவர்களிடம் வந்திருந்த ஆவிக்குரிய இராஜ்யத்தின் ஈவு, வீணானதாக இருந்தது. அதைப்போலவே, இன்றும் இந்த உலகத்தின் இராஜ்யம் மனிதர்களின் எண்ணங்களை ஈர்த்துக்கொள்ளுகின்றது. அவர்கள் துரிதமாக நிறைவேறிவரும் தீர்க்க தரிசனங்களையும் அதிவிரைவாக வந்துகொண்டிருக்கும் தேவனுடைய இராஜ்யத்தின் அடையாளங்களையும் கவனிக்காது இருக்கின்றனர். (16)

"சகோதரரே, அந்த நாள் திருடனைப்போல உங்களைப் பிடித்துக்கொள்ளத்தக்கதாக, நீங்கள் அந்தகாரத்திலிருக்கிறவர்களல்லவே. நீங்களெல்லாரும் வெளிச்சத்தின் பிள்ளைகளும், பகலின் பிள்ளைகளுமாயிருக்கிறீர்கள்; நாம் இரவுக்கும் இருளுக்கும் உள்ளானவர்களல்லவே. ஆகையால், மற்றவர்கள் தூங்குகிறதுபோல நாம் தூங்காமல், விழித்துக்கொண்டு தெளிந்தவர்களாயிருக்கக்கடவோம்"-1 தெசலோனிக்கேயர் 5:4-6. (17) ★

# 24

# இவன் தச்சனுடைய குமாரனல்லவா?

**லூக்கா 4:16–30**

**(The Desire of Ages, pp. 236–243)**

கிறிஸ்துவின் கலிலேய ஊழியத்தின் பிரகாசமான நாட்களுக்கு ஊடாக ஒரு நிழல் உள்ளது. இவன் தச்சனுடைய குமாரனல்லவா? என்று கூறி, நாசரேத்து மக்கள் அவரை புறக்கணித்தனர். (1)

இயேசு சிறுவனாக இருந்த காலத்திலும் வாலிபனாக இருந்த காலத்திலும் நாசரேத்திலிருந்த ஜெப ஆலயத்தில் அவரது சகோதரர்களுக்கு மத்தியில் அவர் தொழுகை செய்திருந்தார். அவரது ஊழியத்தை ஆரம்பித்த காலத்திலிருந்து, அவர் அவர்களுக்கிடையில் இல்லாமல் இருந்தார்; ஆனால், அவருக்கு என்ன நேர்ந்தது என்பதைப்பற்றி அவர்கள் அறியாதவர்களாக இருக்கவில்லை. அவர் அவர்களுக்கிடையில் மறுபடியும் தோன்றியபோது, அவர்களது விருப்பங்களும் எதிர்பார்ப்புகளும் மிகவும் உயர்ந்தெழுந்தன. அவரது குழந்தைப் பருவமுதல் அவருக்கு அறிமுகமான வடிவங்களும் முகங்களும் இருந்தன. இங்கு அவரது அன்னையும் சகோதர சகோதரிகளும் இருந்தனர். அவர் ஓய்வுநாளில் ஜெப ஆலயத்தில் பிரவேசித்து, ஆராதனைசெய்துகொண்டிருந்தவர்களுடன் கலந்துகொண்டபோது, அனைவரது கண்களும் அவர்மீது திரும்பின. (2)

அந்த நாளில், வழக்கமாக நடைபெறும் ஆராதனையில் மூப்பர் தீர்க்கதரிசனங்களிலிருந்து வாசித்து: ஒரு மகிமைமிக்க ஆளுகையினால் சகலவிதமான ஒடுக்குதல்களையும் நீக்குவதற்காக வரவிருக்கும் ஒருவர்மீது நம்பிக்கைவைக்கும்படி உபதேசித்திருந்தார். மேசியாவின் வருகை சமீபமாக இருக்கிறது என்பதை அவர் திரும்பத்திரும்ப எடுத்துரைத்து, அவரது பேச்சைக் கேட்டிருந்தவர்களை உற்சாகப்படுத்த வழிதேடியிருந்தார். இஸ்ரவேலை விடுவிக்க சேனைத் தலைவராக அவர் வருவார் என்னும் எண்ணத்தை (அந்த மூப்பர்) முக்கியப்படுத்தி, அவரது மகிமைமிக்க வருகையை விவரித்திருந்தார். (3)

ஜெப ஆலயத்தில் ஒரு ரபி இருந்தால், அவர் தேவ செய்தியைக் கொடுக்கவேண்டும்; ஏதாவது, ஒரு இஸ்ரவேலன் தீர்க்கதரிசனங்களிலிருந்து வாசிக்கலாம். இந்த ஓய்வுநாள் ஆராதனையில் பங்கு பெறும்படி இயேசு கேட்டுக்கொள்ளப்பட்டார். அவர் "வாசிக்க எழுந்து நின்றார். அப்பொழுது ஏசாயா தீர்க்கதரிசியின் புஸ்தகம் அவரிடத்தில் கொடுக்கப்பட்டது"—லூக்கா 4:16,17. அவர் வாசித்த இந்த வேதவாக்கியம் மேசியாவைக் குறிப்பிடும் ஒன்று என்பது அறியப்பட்டிருந்தது. (4)

"கர்த்தருடைய ஆவியானவர் என்மேலிருக்கிறார். தரித்திரருக்குச் சுவிசேஷத்தைப் பிரசங்கிக்கும்படி என்னை அபிஷேகம்பண்ணினார்; இருதயம் நருங்குண்டவர்களைக் குணமாக்கவும், சிறைப்பட்டவர்களுக்கு விடுதலையையும், குருடருக்குப் பார்வையையும் பிரசித்தப்படுத்தவும், நொறுங்குண்டவர்களை விடுதலையாக்கவும், கர்த்தருடைய அநுக்கிரக வருஷத்தைப் பிரசித்தப்படுத்தவும், என்னை அனுப்பினார்" என்று எழுதியிருக்கிற இடத்தை அவர் கண்டு, "வாசித்து, புஸ்தகத்தைச் சுருட்டி, பணிவிடைக்காரனிடத்தில் கொடுத்து, உட்கார்ந்தார். ஜெபஆலயத்திலுள்ள எல்லாருடைய கண்களும் அவர்மேல் நோக்கமாயிருந்தது.... எல்லாரும் அவருக்கு நற்சாட்சி கொடுத்து, அவருடைய வாயிலிருந்து புறப்பட்ட கிருபையுள்ள வார்த்தைகளைக் குறித்து ஆச்சரியப்பட்டார்கள்"—லூக்கா 4:18–22. (5)

தம்மைப்பற்றிய தீர்க்கதரிசனங்களுக்குத் தாமே உயிருள்ள விளக்கங்கொடுக்கும் ஒருவராக இயேசு மக்களின்முன் நின்றார். அவர் வாசித்த வசனங்களை விளக்கி, அவர் மேசியாவைப்பற்றி ஒடுக்கப்பட்டவர்களை விடுவிப்பவர், அடிமைகளுக்குச் சுதந்திரம் வழங்குபவர், நோயாளிகளைச் சுகமடையச்செய்பவர், குருடருக்குப் பார்வையை அருளுபவர், சத்தியத்தின் ஒளியை உலகத்திற்கு வெளிப்படுத்துபவர் என்று கூறினார். அவரது உணர்த்தும்விதமும் அவரது வார்த்தைகளின் ஆச்சரியமான முக்கியத்துவமும் கேட்டவர்களை இதற்கு முன் அவர்கள் ஒருபோதும் உணர்ந்திராத விதத்தில் மயிர்கூச்செரியச்செய்தது. தெய்வீகச் செல்வாக்கின் அலை, தடைகள் ஒவ்வொன்றையும் வீழ்த்தியது. மோசேயைப்போல அவர்கள் காண முடியாதவரைக் கண்டனர். அவர்களது இருதயங்களை பரிசுத்த ஆவியானவர் அசைத்தபோது, ஆமென்! கர்த்தருக்கு ஸ்தோத்திரம்! என்னும் வாஞ்சைமிக்க வார்த்தைகளால் அவர்கள் பதிலளித்தனர். (5)

ஆனால், "இந்த நாளில் உங்கள் செவிகள் கேட்க இந்த வார்த்தைகள் நிறைவேறின" என்று இயேசு அறிவித்தபோது, திடீரென்று அவர்கள் தங்களைப்பற்றியும் தங்களை நோக்கி உரையாற்றிக்கொண்டிருந்தவர்

கோரிய உரிமையைப்பற்றியும் நினைவுபடுத்திக்கொள்ள எண்ணினர். ஆபிரகாமின் பிள்ளைகளாக இருந்த அவர்கள், அடிமைத்தனத்தில் இருப்பதாகக் குறிப்பிடப்பட்டிருந்தனர். தீமையின் வல்லமையிலிருந்து விடுவிக்கப்படவேண்டிய சிறைக்கைதிகளாக அவர்கள் இருந்தனர் என்று கூறப்பட்டனர். இருளில் இருக்கும் அவர்களுக்கு வெளிச்சம் அவசியமானது என்று கூறப்பட்டனர். அவர்களது பயங்கள் மேலும் அதிகமாக எழுப்பப்பட்டன. அவர்களுக்கான இயேசுவின் ஊழியங்கள், அவர்கள் விரும்பியிருந்ததைவிட ஒட்டுமொத்தமாக வேறுபட்டது என்பதை இயேசுவின் வார்த்தைகள் சுட்டிக்காட்டின. அவர்களது செயல்கள் மிக நெருக்கமாக விசாரிக்கப்பட்டாகவேண்டும். வெளிப்படையான சடங்காச்சாரங்களில் அவர்கள் மிகவும் சரியாக இருந்தபோதிலும், தங்களைத் தெளிவாக ஆராய்ந்துகொண்டிருந்த அந்தக் கூர்மையான கண்களின் பார்வையிலிருந்து அவர்கள் பின்வாங்கியிருந்தனர். (6)

இந்த இயேசு யார்? என அவர்கள் கேள்விகேட்டனர். மேசியாவின் மகிமையைத் தமது என்று உரிமைபாராட்டிக்கொண்ட அவர், ஒரு தச்சனின் மகனாக இருந்து, தமது தகப்பனாயிருந்த யோசேப்புடன் சேர்ந்து, அவரது பணிமனையில் பணிசெய்திருந்தார். அங்கிருந்த குன்றுகளின் வழியாக அவர் ஏறியும் இறங்கியும் சென்றிருந்ததையும் அவர்கள் கண்டிருந்தனர். அவர்கள் அவரது சகோதர—சகோதரிகளுக்கு அறிமுகமானவர்களாக இருந்து, அவரது வாழ்க்கையையும் பணிகளையும் அறிந்திருந்தனர். அவர் சிறுவனாயிருந்து வாலிபனானதையும், வாலிபத்திலிருந்து மனிதனாக வளர்ந்ததையும் அவர்கள் கண்டிருந்தனர். அவரது வாழ்க்கை குற்றமற்றதாக இருந்தபோதிலும், வாக்குத்தத்தம்பண்ணப்பட்ட ஒருவர்—அவர்தான் என அவர்கள் நம்பாதவர்களாக இருந்தனர். (7)

புதிய இராஜ்யத்தைப்பற்றி அவரது போதனைக்கும் தங்களது மூப்பர்களிடத்திலிருந்து, அவர்கள் கேட்டிருந்தவைகளுக்கும் எப்படிப்பட்ட வேற்றுமை இருந்தது! அவர்களை ரோமர்களிடமிருந்து விடுதலை செய்வதைப்பற்றி இயேசு ஒன்றுமே கூறாமலிருந்தார். அவரது அற்புதங்களைப்பற்றி அவர்கள் கேட்டிருந்து, அவர்களுக்குச் சாதகமாக அவரது வல்லமை செயல்படுத்தப்படும் என நம்பியிருந்தனர்; ஆனால், அப்படிப்பட்ட நோக்கத்திற்கான அடையாளம் எதுவும் காணப்படவில்லை. (8)

தற்சமயத்திற்கு மென்மையடைந்திருந்த அவர்களது இருதயங்கள் அவர்கள் சந்தேகத்திற்குக் கதவைத் திறந்தபோது, அதிகமாகக் கடினப்பட்டது. குருடாயிருந்த கண்கள் அந்த நாளில் திறக்கப்படக்கூடாது

என்பதிலும், அடிமைத்தனத்தில் கட்டிவைக்கப்பட்டிருந்த ஆத்துமாக்களுக்கு விடுதலை கிடைக்கக்கூடாது என்பதிலும், சாத்தான் தீர்மானமுடையவனாக இருந்தான். அவநம்பிக்கையில் அவர்களைக் கட்டிவைக்க உக்கிரமான வலுவுடன் அவன் செயலாற்றினான். தங்களிடம் உரை நிகழ்த்தியவர் அவர்களது மீட்பர்தான் என்னும் மனஉணர்த்துதலினால், அவர்கள் பரபரபூட்டப்பட்டபோதும், எற்கனவே கொடுக்கப்பட்டிருந்த அடையாளத்தை அவர்கள் கணக்கிலெடுத்துக்கொள்ளவில்லை. (9)

ஆனால், அவர்களது இரகசியமான எண்ணங்களை வெளிப்படுத்துவதின் மூலமாக இப்பொழுது இயேசு தமது தெய்வத் தன்மைக்கு சாட்சிகொடுத்தார். "வைத்தியனே, உன்னைத்தானே குணமாக்கிக்கொள் என்கிற பழமொழியைச் சொல்லி, நாங்கள் கேள்விப்பட்டபடி கப்பர்நகூமூரில் உன்னால் செய்யப்பட்ட கிரியைகள் எவைகளோ அவைகளை உன் ஊராகிய இவ்விடத்திலும் செய் என்று நீங்கள் என்னுடன் சொல்லுவீர்கள் என்பது நிச்சயம். ஆனாலும் தீர்க்கதரிசி ஒருவனும் தன் ஊரிலே அங்கீகரிக்கப்படமாட்டான் என்று மெய்யாகவே உங்களுக்குச் சொல்லுகிறேன். அன்றியும் எலியாவின் நாட்களிலே மூன்று வருஷமும் ஆறுமாதமும் வானம் அடைபட்டு, தேசமெங்கும் மிகுந்த பஞ்சம் உண்டாயிருந்தபோது, இஸ்ரவேலருக்குள் அநேகம் விதவைகள் இருந்தார்கள். ஆயினும் எலியா சீதோன் நாட்டிலுள்ள சரெப்தா ஊரிலிருந்த ஒரு விதவையினிடத்திற்கு அனுப்பப்பட்டானேயல்லாமல் மற்றொருத்தியினிடத்திற்கும் அனுப்பப்படவில்லை. அல்லாமலும் எலிசா தீர்க்கதரிசியின் காலத்திலே இஸ்ரவேலருக்குள்ளே அநேகம் குஷ்டரோகிகள் இருந்தார்கள்; ஆயினும் சீரியா தேசத்தானாகிய நாகமானேயல்லாமல் அவர்களில் வேறொருவனும் சுத்தமாக்கப்படவில்லை என்று சத்தியத்தின்படியே உங்களுக்குச் சொல்லுகிறேன் என்றார"—லூக்கா 4:23–27. (10)

தீர்க்கதரிசிகளின் வாழ்க்கையில் சம்பந்தப்பட்டிருந்த நிகழ்ச்சிகளினால் அவரது உரையைக் கேட்டிருந்தவர்களின் கேள்விகளை அவர் சந்தித்தார். ஒரு சிறப்பான பணியைச் செய்யும்படி அழைக்கப்பட்டிருந்த தேவனுடைய ஊழியக்காரர்கள் இருதய கடினமும் அவநம்பிக்கையுமுள்ள மக்களுக்காக ஊழியஞ்செய்யும்படி அனுமதிக்கப்படவில்லை; ஆனால், நம்புவதற்கான உணர்வும் விசுவாசமுமிக்க இருதயத்தை உடையவர்களாக இருந்தவர்கள் தீர்க்கதரிசிகளின்மூலமாக அவரது வல்லமையைப்பற்றிய சான்றுகளை சிறப்பான அனுகூலமாக அடைந்திருந்தனர். எலியாவின் நாட்களில் இஸ்ரவேல் தேவனைவிட்டு விலகிச்சென்றிருந்தது. அவர்கள் தங்களது பாவங்களைப்பற்றிக்கொண்டிருந்து, கர்த்தருடைய ஊழியக்காரர்களின் மூலமாகக் கொடுக்கப்பட்ட ஆவியின் எச்சரிப்புகளை புறக்கணித்திருந்தனர். இவ்வாறாக, தேவனுடைய ஆசீர்வாதங்கள் அவர்களுக்கு வரக்கூடியதாக

இருந்த மார்க்கத்தினின்று தங்களைப் புறம்பாக்கிக்கொண்டனர். கர்த்தர் இஸ்ரவேலின் இல்லங்களின் வழியாகக் கடந்துசென்று, புறஜாதியாரின் இடம் ஒன்றில், தெரிந்துகொள்ளப்பட்ட ஜனத்தவளாக இல்லாமலிருந்த ஒரு பெண்ணிடம், தமது ஊழியக்காரனுக்கு அடைக்கலத்தைக் கண்டார். அந்த பெண் தனக்குக் கிடைக்கப்பெற்ற ஒளியைப் பின்பற்றினதால், தேவன் தமது தீர்க்கதரிசியின்மூலமாக அவளுக்கு அனுப்பின பெரிய வெளிச்சத்தை ஏற்றுக்கொள்ள அவளது இருதயம் திறந்திருந்ததினால், அந்த பெண்ணிற்கு அனுகூலமுண்டாயிற்று. (11)

இதே காரணத்தினாலேயே இஸ்ரவேலில் இருந்த குஷ்டரோகிகளைக் கர்த்தர் கடந்துசென்றார்; ஆனால், நாகமான் என்னும் மேன்மைமிக்க ஒரு அஞ்ஞானி, நீதியைப்பற்றிய அவனது மன உணர்த்துதல்களுக்கு விசுவாசமிக்கவனாக இருந்து, அவனுக்கு அவசியமான பெரிய உதவியைப்பற்றி உணர்ந்தவனாக இருந்தான். தேவ கிருபையின் ஈவைப் பெற்றுக்கொள்ளவேண்டிய ஒரு நிலையில் அவன் இருந்தான். அவன் தனது தொழுநோயிலிருந்து சுத்தமாக்கப்பட்டதுமட்டுமின்றி, மெய்யான தேவனைப்பற்றிய அறிவினாலும் ஆசீர்வதிக்கப்பட்டான். (12)

நாம் தேவனுக்கு முன்பாக நிற்றல் என்பது நாம் பெற்றுக்கொண்ட ஒளியின் அளவைச் சார்ந்ததாக இராமல், நாம் பெற்றுக்கொண்ட ஒளியை எவ்விதமாகப் பயன்படுத்துகிறோம் என்பதையே சார்ந்துள்ளது. இவ்விதமாக, பெரும் ஒளியைப் பெற்றுக்கொண்டிருந்து, தேவனைச் சேவிப்பதாகக் கூறிக்கொண்டிருந்து, ஆனால் ஒளியை அவமதித்து, தங்களது அன்றாட வாழ்க்கையில் தங்களது மார்க்கத்துடன் முரண்படுபவர்களைவிட, தங்களால் வேறுபடுத்தி அறியக்கூடிய அளவிற்கு நீதியைத் தெரிந்துகொள்ளும் புறமதத்தினர் அதிகமான—அனுகூலமான நிலைமையில் உள்ளனர். (13)

இயேசுவின் வார்த்தைகள், ஜெப ஆலயத்திலிருந்து அவைகளைக் கேட்டிருந்தவர்களின் சுயநீதியின் அடிவேரைத் தாக்கியது. தேவனைவிட்டுப் பிரிந்துசென்ற அவர்கள், அவரது மக்களாக நாங்கள் இருக்கிறோம் என்னும் அவர்களது உரிமையை இழந்திருந்தார்கள் என்ற கசப்பான உண்மையை அவர்களுக்குள் உண்டுபண்ணினது. அவர்களது உண்மையான நிலைமை அவர்கள்முன் வைக்கப்பட்டபோது, ஒவ்வொரு வார்த்தையும் கத்தியால் வெட்டுவதுபோல் இருந்தது. இயேசு அவர்களை எந்த விசுவாசத்தால் உற்சாகப்படுத்தியிருந்தாரோ அதனை அவர்கள் பரிகசித்தனர். வறுமையிலும் கீழான நிலைமையிலும் இருந்து, வளர்ந்தெழுந்த சாதாரணமான ஒரு மனிதனைவிட, அவர் வேறுபட்டவர் என்பதை அவர்கள் ஒத்துக்கொள்ளாதவர்களாக இருந்தனர். (14)

அவர்களது நம்பிக்கையின்மை குரோதத்தை வளர்த்தது. சாத்தான் அவர்களைக் கட்டுப்படுத்தவே, அவர்கள் தங்களுடைய கோபத்தில் இரட்சகருக்கெதிராகக் கூச்சலிட்டனர். குணப்படுத்தி எடுத்துக்கட்டும் ஊழியத்தை உடையவராக இருந்த அவரைவிட்டு அவர்கள் திரும்பி, அழிப்பவனின் குணக்கேடுகளையே அவர்கள் வெளிப்படுத்தினர். (15)

புறஜாதியினரின்மீது சொரியப்பட்ட ஆசீர்வாதங்களை இயேசு சுட்டிக்காட்டியபோது, அவரது உரையைக் கேட்டிருந்தவர்களின் இனப்பெருமை கிளர்ந்தெழுந்தது. இந்த அமளியின் சத்தத்தில் அவரது சத்தம் அமிழ்ந்துபோயிற்று. இந்த மக்கள் தாங்கள் கற்பனையைக் கைக்கொண்டுவருவதைப்பற்றி தங்களுக்குள்ளே பெருமைப்படுபவர்களாக இருந்தனர். இப்பொழுது அவர்களது தவறான எண்ணங்கள் குற்றப்படுத்தப்பட்டதினால், கொலைசெய்ய ஆயத்தமானார்கள். அந்தக் கூட்டம் கலைந்தது. அவர்கள் இயேசுவின்மீது தங்கள் கைகளைவைத்து, அவரை ஜெப ஆலயத்திலிருந்தும் அந்த ஊரையும்விட்டு வெளியே தள்ளினர். அனைவரும் அவரது அழிவின்மீது ஆவலுள்ளவர்களாக இருப்பதுபோல் காணப்பட்டனர். மலை உச்சியிலிருந்து தலைகீழாகத் தள்ளுவதற்காக அவர்கள் அவரைத் தள்ளிச்சென்றனர். அவருக்கெதிரான கோஷங்களும் வசைச்சொற்களும் எங்கணும் கேட்கப்பட்டன. அவர்மீது சிலர் கல்லெறிந்தபோது, திடீரென்று அவர்களுக்கிடையிலிருந்து அவர் மறைந்து சென்றார். அந்த ஜெப ஆலயத்தில்—அவருக்கருகில்—அவருடன் பரலோகத் தூதர்கள் நின்றிருந்தனர். வெறிபிடித்த அந்தக் கூட்டத்திற்கு அருகில்—இயேசுவிற்கு அருகில் அவர்கள் இருந்தனர். அந்த தூதர்கள் அவரைச் சூழ்ந்து, அவரை மூடி, பாதுகாப்பான ஒரு இடத்திற்கு அவரை அழைத்துச்சென்றனர். (16)

இவ்விதமாகவே தூதர்கள் லோத்தைப் பாதுகாத்து, அவனை சோதோமிற்கு வெளியே பாதுகாப்பாக அழைத்துச் சென்றனர். இந்தவிதமாக எலிசாவும் அந்த மலைமேலிருந்த பட்டணத்தில் பாதுகாக்கப்பட்டான். சீரியா தேசத்து அரசனின் இரதங்களும் குதிரைகளும் எலிசாவைச் சுற்றிலும் இருந்த மலைகளில் நிரம்பியிருந்தபொழுது, ஆயுததாரிகளான அவனது பெரும் சேனை எலிசாவைச் சூழ்ந்தபோது, தேவனுடைய சேனைகளினால் அந்த மலைகள் முழுவதும் மூடப்பட்டிருப்பதை, அக்கினி இரதங்களும் குதிரைகளும் கர்த்தருடைய ஊழியக்காரனைச் சூழ்ந்திருப்பதை, எலிசா கண்டான். (17)

இவ்விதமாகவே யுகங்கள் நெடுகிலும் கிறிஸ்துவின் விசுவாசமிக்க அடியார்களின் அருகில் தூதர்கள் நின்றுகொண்டிருந்திருக்கின்றனர்.

ஜெயங்கொள்ளக்கூடியவர்களுக்கெதிராக தீமையின் சேனைகளின் திரள்கூட்டம் அணிவகுத்து நிற்கின்றது; ஆனால், தேவன் நேசிப்பவர்களை விடுவிப்பதற்கென்று அவர்களைச்சூழப் பரலோக சேனைகள் பாளயமிறங்கி யிருப்பது காணக்கூடாததாக இருக்கும். இதனைப் பார்க்கக்கூடியவர்களாக நாம் இருக்கவேண்டும் என்று இயேசு விரும்புகிறார். காணக்கூடியதும் காணமுடியாததுமான எப்படிப்பட்ட ஆபத்துகளிலிருந்து தூதர்களின் குறுக்கீடுகளினால் நாம் எவ்விதமாகக் காக்கப்பட்டிருந்தோம் என்பதை—அந்த தெய்வீக ஏற்பாடுகளை—நித்தியத்தின் ஒளியில் நாம் காணும்வரை, ஒருபோதும் அறியமாட்டோம். பரலோகக் குடும்பம் முழுவதும் கீழேயுள்ள பூமியின் காரியங்களில் ஆர்வமிக்கதாக இருந்தது என்றும், பரலோக சிங்காசனத்திலிருந்து அனுப்பப்பட்டிருந்த தூதர்கள் நாள்தோறும் நமது அடிச்சுவடுகளைக் காத்திருந்தனர் என்பதையும் அப்பொழுது நாம் அறிந்துகொள்வோம். (18)

ஜெப ஆலயத்திலிருந்த இயேசு, தீர்க்கதரிசனத்திலிருந்து வாசித்தபோது, மேசியாவின் ஊழியத்தின் இறுதிப்பகுதியைப்பற்றிக் குறிப்பிட்டு சற்று நிறுத்தினார். "கர்த்தருடைய அநுக்கிரகவருஷத்தையும் அறிவிக்கவும்" என்று வாசித்துவிட்டு, "நம்முடைய தேவன் நீதியைச் சரிக்கட்டும் நாளையும்" என்னும் பகுதியைத் தவிர்த்தார்—ஏசாயா 61:2. இது தீர்க்கதரிசனத்தின் முதல் பகுதியில் இருந்ததைப்போன்ற சத்தியமாக இருந்தது. இயேசு அவரது மௌனத்தின்மூலமாக அந்த சத்தியத்தை மறுக்கவில்லை; ஆனால், அந்தக் கடைசிப் பகுதியை தியானிப்பதிலும், அதன் நிறைவேறுதலைக் காண்பதிலும்தான் கேட்டுக்கொண்டிருந்தவர்கள் மகிழ்ச்சியுள்ளவர்களாக இருந்தனர். அவர்கள் தங்களுடைய குற்றம் மற்றவர்களது குற்றத்தைவிடப் பெரிதாக உள்ளது என்பதை அறியாதிருந்து, புறமதத்தினர்களுக்கெதிரான நியாயத்தீர்ப்பை வெளிப்படையான குற்றச்சாட்டாக அறிவித்திருந்தனர். அவர்கள் புறமதத்தினர்களிடம் காட்டமறுப்பதற்கு ஆயத்தமாக இருந்த இரக்கம், அவர்களுக்கே மிக அதிகமான தேவையாக இருந்தது. ஜெப ஆலயத்தில் அவர்களுக்கு மத்தியில் இயேசு நின்றிருந்த அந்த நாள், பரலோகத்தின் அழைப்பை ஏற்றுக்கொள்ள அவர்களுக்குக் கொடுக்கப்பட்ட வாய்ப்பாக இருந்தது. "அவர் கிருபை செய்ய விரும்புகிறபடியால்" (மீகா 7:18), அவர்களது பாவங்கள் வரவழைத்துக்கொண்டிருந்த அழிவிலிருந்து அவர் அவர்களை உவகையுடன் இரட்சித்திருந்திருப்பார். (19)

மனந்திரும்பும்படி மேற்கொண்டு ஒரு அழைப்பை விடுவிக்காமல் அவரால் அவர்களை விட்டுவிட்டிருந்திருக்கமுடியும். கலிலேயாவில் அவர் செய்த அவரது ஊழியத்தின் முடிவில், தமது சிறுவயதில்

அவர் இருந்த வீட்டை மறுபடியும் சந்தித்தார். அவர் அந்த இடத்தில் புறக்கணிக்கப்பட்டதிலிருந்து அவரது பிரசங்கத்தின் புகழும் அவர் செய்த அற்புதங்களும் அந்த நாட்டை நிரப்பியிருந்தன. மனித வல்லமையைவிட அதிகமான வல்லமையை உடையவராக அவர் இருந்தார் என்பதை ஒருவராலும் மறுக்கமுடியாமலிருந்தது. அவர் "நன்மைசெய்கிறவராக சாத்தானால் ஒடுக்கப்பட்டிருந்தவர்களை சுகப்படுத்துபவராக எங்கும் சுற்றித்திரிந்தார்" என்பதை நாசரேத்தின் மக்கள் அறிந்தனர். எந்த ஒரு வீட்டிலும் நோயின் முனகல் இல்லாத அநேக முழு கிராமங்கள் அவர்களைச் சுற்றிலும் இருந்தன; ஏனெனில், அவைகளுக்கூடாக அவர் கடந்தசென்று, அவர்களது நோய்களனைத்தையும் குணப்படுத்தியிருந்தார். அவரது வாழ்க்கையின் செயல்கள் ஒவ்வொன்றிலும் வெளிப்படுத்தப்பட்ட இரக்கம் அவரது தெய்வீக அபிஷேகத்திற்குச் சாட்சிபகர்ந்திருந்தது. (20)

மறுபடியும் அவர்கள் அவருடைய வார்த்தைகளைக் கவனித்தபோது, தேவ ஆவியால் அந்த நாசரேத்து மக்கள் நெருக்கி ஏவப்பட்டனர்; ஆனால், இப்போதுங்கூடத் தங்களுக்கிடையில் வளர்ந்துவந்திருந்த அந்த மனிதன், தங்களைவிடப் பெரியவர் என்பதை ஒப்புக்கொள்ளாதிருந்தனர். தாமே **வாக்குத்தத்தஞ்செய்யப்பட்டிருந்த ஒருவர்** என்று அவர் உரிமை பாராட்டியபோது இஸ்ரவேலுக்கிடையில் அவர்களுக்கு ஒரு இடம் இல்லை என்று உண்மையாகவே அவர் மறுத்தபோது உண்டான அவர்களது எரிச்சல், அவர்களது கசப்பான நினைவுகளை மேலும் உடையதாக இருந்தது; ஏனெனில், தேவனுடைய அனுகூலத்தைப் பெறுவதற்கு அவர்கள் ஒரு புற மதத்தின் மனிதனையோ அல்லது பெண்ணையோவிட தகுதிக்குறைவானவர்களாக உள்ளனர் என்பதை அவர் அவர்களுக்குக் காட்டியிருந்தார்; எனவே, இந்த மனிதனுக்கு இந்த ஞானமும் பலத்த செய்கையும் எங்கிருந்து வந்தது என்று அவர்கள் கேட்டபோதிலும், அவரை தேவனுடைய கிறிஸ்து என்று ஏற்றுக்கொள்ளாமலிருந்தனர். அவர்களது அவநம்பிக்கையின் காரணமாக, அவர்களுக்கிடையில் அநேக அற்புதங்களை இரட்சகரால் செய்ய முடியவில்லை. அவரது ஆசீர்வாதத்தைப் பெற்றுக்கொள்ள சில இருதயங்கள்மட்டுமே திறந்திருந்தன. இனி ஒருபோதும் அந்த இடத்திற்கு மீண்டும் வருவதற்கு மனமற்றவராக, அந்த இடத்தை விட்டு அவர் புறப்பட்டுச்சென்றார். (21)

ஒரு முறை பேணப்பட்ட நம்பிக்கையின்மை நாசரேத்தின் மனிதர்களைத் தொடர்ந்து கட்டுப்படுத்தியது. அவ்விதமாகவே அது சனகரீம் சங்கத்தையும் அந்த நாட்டையும் கட்டுப்படுத்தியது. பரிசுத்த ஆவியின் முதல் செயல்விளக்கத்தின் வல்லமையை ஆசாரியர்களும் மக்களும் புறக்கணித்தது, முடிவின் ஆரம்பமாக இருந்தது. அவர்களது முதல்

எதிர்ப்பு சரியானது என்பதை மெய்ப்பிக்க, அதன்பின் எப்போதும் அவர்கள் கிறிஸ்துவின் வார்த்தைகளை ஆட்சேபணை செய்வதில் தொடர்ந்தனர். ஆவியை அவர்கள் புறக்கணித்து, கல்வாரி சிலுவையில்—அந்த நகரத்தின் அழிவில்—வானத்தில் வீசியகாற்றில், அந்த ஜாதி சிதறிப்போவதில் முடிவடைந்தது. (22)

ஆ! விலைமதிப்புமிக்க சத்தியத்தின் கருவூலங்களை இஸ்ரவேலருக்குத் திறப்பதற்காகக் கிறிஸ்து எவ்வளவாக ஏங்கினார்; ஆனால், அவரது இராஜ்யம் சம்பந்தப்பட்ட சத்தியங்களை அவர்களுக்கு வெளிப்படுத்த முடியாதவிதமாக அவர்களது ஆவிக்குரிய குருட்டுத் தன்மை இருந்தது. அவர்களால் ஏற்றுக்கொள்ளப்படப் பரலோக சத்தியம் காத்திருந்தபோது, அவர்கள் தங்களது மதநம்பிக்கைகளையும் பயனற்ற சடங்காச்சாரங்களையும்பற்றித் தொங்கிக்கொண்டிருந்தனர். ஜீவ அப்பம் அவர்களுக்கருகில் இருந்தபொழுது, அவர்கள் தங்கள் பணத்தை உமிக்கும் தவிட்டிற்கும் செலவிட்டிருந்தனர். தாங்கள் தவறுகளில் இருக்கின்றனரா என்பதைத் தெளிவாக அறிந்துகொள்ள அவர்கள் ஏன் தேவனுடைய வார்த்தையினிடம் சென்று அதை அக்கறையுடன் அறிந்துகொள்ள ஆராயாமலிருந்தனர்? கிறிஸ்துவின் ஊழியத்தின் ஒவ்வொரு அம்சத்தையும் பழைய ஏற்பாட்டு வேத வாக்கியங்கள் தெளிவாகக் கூறியிருந்தன. அவர் மறுபடியும் தீர்க்கதரிசனங்களிலிருந்து எடுத்துக்கூறி “இந்த நாளில் உங்கள் செவிகள் கேட்க இந்த வேதவாக்கியங்கள் நிறைவேறின” என்று அறிவித்தார். அவர்கள் நேர்மையாக வேதவாக்கியங்களை ஆராய்ந்திருந்தார்களானால், அவர்களது தத்துவ விளக்கங்களை தேவனுடைய வார்த்தையின் சோதனைக்குக் கொண்டுவந்திருந்தால், அவர்களது மனந்திருந்தாத தன்மைக்காக இயேசு அழுதிருக்கவேண்டிய அவசியமுண்டாகியிருந்திருக்காது. “இதோ, உங்கள் வீடு உங்களுக்குப் பாழாக்கிவிடப்படும்” என்று அவர் அறிவிக்கவேண்டியதிருந்திருக்காது—(லூக்கா 13:35). மேசியா என்னும் அவரது அந்தஸ்தின் சாட்சியை அவர்கள் அறிந்தவர்களாக இருந்திருக்கக்கூடும். பெருமையினால் பாழாக விட்டுவிடும்படி நேரிட்ட அவர்களது பேராபத்து தவிர்க்கப்பட்டிருந்திருக்கலாம்; ஆனால் காரணங்களை அறிய விருப்பமற்ற மத விரோதத்தினால், யூதர்களின் மனங்கள் குறுகியிருந்தன. அவர்களது குணத்திலிருந்த குறைபாடுகளை கிறிஸ்துவின் பாடங்கள் வெளிக்காட்டி, மனந்திரும்பவேண்டும் என்பதைக் கோரியிருந்தது. அவர்கள் அவரது போதனைகளை ஏற்றுக்கொண்டிருந்தால், அவர்களது நடத்தையில் மாறுதல் இருந்திருக்கவேண்டும். தாங்கள் பேணியிருந்த நம்பிக்கைகளைவிட்டு விலகியிருக்கவேண்டும். பரலோகத்தால் கனப்படுத்தப்படுவதற்காக, மனிதர்களால் உண்டாகக்கூடிய மேன்மையை

அவர்கள் தியாகஞ்செய்தாகவேண்டும். இந்த புதிய ரபியின் வார்த்தைகளுக்கு அவர்கள் கீழ்ப்படியவேண்டுமானால், தங்களது காலத்திலிருந்த பெரும் சிந்தனையாளர்கள், போதகர்கள் ஆகியோரின் கருத்துகளுக்கு எதிராக அவர்கள் சென்றாகவேண்டும். (23)

கிறிஸ்துவின் நாளில் சத்தியம் பிரசித்தம் இல்லாததாக இருந்தது. நமது நாளிலும் அது பிரசித்தமற்றதாகவே உள்ளது. சுயத்தை உயர்த்துவதற்கு நடத்தக்கூடிய கட்டுக்கதைகளை சாத்தான் முதன் முதலில் மனிதனின் முன்வைத்த காலத்திலிருந்து, சத்தியம் விருப்பமற்ற தன்மையை உடையதாக இருந்திருக்கிறது. தேவனுடைய வார்த்தையை அஸ்திபாரமாகக்கொண்டிராத தத்துவ விளக்கங்களையும் கோட்பாடுகளையும் நாம் இன்றும் சந்திப்ப தில்லையா? யூதர்கள் தங்களுடைய பாரம்பரியங்களைப்பிடித்துத் தொங்கிக்கொண்டிருந்ததைப்போல, மனிதர்கள் அவைகளை உறுதியாகப் பற்றிக்கொண்டுள்ளனர். (24)

யூதத் தலைவர்கள், ஆவிக்குரிய அகந்தையால் நிறைந்தவர்களாக இருந்தனர். பரிசுத்த ஸ்தலத்தில் அவர்கள் ஆராதனை நடத்திக் கொண்டிருந்தபோதுங்கூட, சுயத்தை மகிமைப்படுத்தும் அவர்களது வாஞ்சை வெளிக்காட்டப்பட்டிருந்தது. சனகரீம் சங்கத்தின் உயர்ந்த ஆசனங்களை அவர்கள் விரும்பியிருந்தனர். சந்தைவெளிகளில் கிடைக்கும் வந்தனங்களை அவர்கள் விரும்பியிருந்தனர். மனிதர்களின் உதடுகளிலிருந்து அவர்களது பட்டம் பதவிகளைப்பற்றிய புகழின் பேச்சில் அவர்கள் மனநிறைவையடைந்தனர்; உண்மையான பக்தி குறைந்துபோகவே, அவர்கள் தங்களுடைய பாரம்பரியங்களின்மீதும் சடங்காச்சாரங்களின்மீதும் அதிக விருப்பமுள்ளவர்களாக இருந்தனர். (25)

சுயத்தினால் உண்டான தவறான எண்ணத்தினால், அவர்களது புரிந்துகொள்ளும் தன்மை இருளடைந்திருந்தது; எனவே மன உணர்த்துதலைக் கொண்டுவரும் கிறிஸ்துவின் வார்த்தைகளில் இருந்த வல்லமையை அவரது வாழ்க்கையின் தாழ்மையுடன் அவர்களால் பொருத்திப்பார்க்க முடியவில்லை. உண்மையான மேன்மை (ஆடம்பரம், டாம்பீகம்) ஆகிய வெளித்தோற்றம் இல்லாதவைகளாக இருக்கலாம், என்னும் உண்மையை அவர்கள் வரவேற்கவில்லை. அந்த மனிதனின் வறுமைத் தோற்றம், தாம் மேசியா என்று அவர் பாராட்டும் உரிமைக்குப் பொருத்தமற்றதாக உள்ளது. அவர் தம்மைப்பற்றி உரிமைபாராட்டிக்கொண்டிருப்பது உண்மையானதாக இருந்தால், அவர் ஏன் அதற்குத் தகுந்த வெளித்தோற்றம் இல்லாதவராக இருக்கிறார்? என்று அவர்கள் கேள்விகேட்டனர். ஆயுதபலம் இல்லாமலிருப்பதில் அவர் திருப்தியுள்ளவராக இருப்பாரானால், தங்களுடைய நாட்டுக்கு என்ன

நேரிடும்? யூதர்களின் நகரம் மற்ற நாடுகளைக் கீழ்ப்படுத்திக்கொண்டுவரும் என்று இவ்வளவு காலமாக எதிர்பார்த்திருந்த வல்லமையும் மகிமையும் எப்படி உண்டாகும்? உலகமனைத்தையும் இஸ்ரவேல் ஆட்சிசெய்யும் என்று போதகர்கள் போதிக்கவில்லையா? பெரும் சமயப் போதகர்கள் தவறில் இருந்தனர் என்பது சாத்தியமானதா? (26)

அவருடைய வாழ்க்கையில் வெளியரங்கமான மகிமை இல்லாமலிருந்தது ஒன்றுமட்டுமே அவரை புறக்கணிக்கும்படி யூதர்களை நடத்தவில்லை. அவர்கள் தூய்மையற்றவர்களாக இருந்தபோது, அவர் தூய்மையின் உறைவிடமாக இருந்தார். கறைதிரையற்ற நேர்மைக்கு ஒரு உதாரணங்காட்டுபவராக அவர் மனிதர்களுக்கிடையில் வாழ்ந்திருந்தார். குற்றங்கூறமுடியாத அவரது வாழ்க்கை, அவர்களது இருதயங்களின்மீது ஒளியைப் பாய்ச்சியது. அவர்களது உண்மையின்மையை அவரது உண்மைத்தன்மை வெளிக்காட்டியது. அது அவர்களது போலியான பக்தியிலிருந்த வெற்றிடத்தை வெளிக்காட்டி, அவர்களிலிருந்த வெறுக்கத்தக்க அக்கிரமத்தின் பண்பை கண்டுபிடித்தது. இந்தவிதமான ஒளி வரவேற்கப்படமுடியாததாக இருந்தது. (27)

கிறிஸ்து பரிசேயர்களின்மீது கவனம்வைத்து, அவர்களது கல்விமிக்க பக்தியைப் புகழ்ந்திருந்தால், அவர்கள் மகிழ்ச்சியுடன் அவரைப் போற்றியிருந்திருப்பார்கள். மனித இனம் முழுவதின்மீதும் இரக்கமிக்க தன்மை உடையதான பரலோக இராஜ்யம்பற்றி அவர் பேசியபோது, அவர்களால் சகித்துக்கொள்ளமுடியாத ஒரு சமயக்கொள்கையை அவர் அவர்களுக்கு வெளிப்படுத்திக்கொண்டிருந்தார். தேவனுக்குச் செலுத்தும் ஆராதனை, விரும்பப்படக்கூடியதாகக் காணப்படவேண்டும் என்பது போன்றதாக அவர்களது சொந்த வாழ்க்கையும் போதனையும் ஒருபோதும் இருக்கவில்லை. அவர்கள் வெறுத்து ஒதுக்கித்தள்ளியவைகளின்மீது, இயேசு கவனஞ்செலுத்திக்கொண்டிருந்ததை அவர்கள் கண்டபோது, அது அவர்களது அகந்தைமிக்க—படுமோசமான இச்சைகளால் நிறைந்திருந்த இருதயங்களைக் கலக்கியது. தங்களது பாவத்தைக் கிறிஸ்து கடிந்துகொள்ளுவதைச் சகிப்பதைவிட, அவரது தூய்மைமிக்க பிரசன்னத்தினால் அவர்கள் உணர்ந்த நிந்தையைச் சகிப்பதைவிட, "யூதா கோத்திரத்துச் சிங்கத்தின்" கீழ் (வெளிப்படுத்தல் 5:5) இஸ்ரவேல் மற்ற எல்லா ஜாதிகளையும்விட மேலானதாக விளங்கவேண்டும் என்ற அவர்களது ஆசை, நம்பிக்கை ஆகியவைகளில் உண்டாகும் ஏமாற்றத்தை அவர்கள் சகித்துக்கொள்ளக்கூடியவர்களாக இருந்தனர். (28) ★

# 23

# தேவனுடைய இராஜ்யம் சமீபித்திருக்கிறது!

**(The Desire if Ages, pp. 231-235)**

“இயேசு கலிலேயாவிலே வந்து, தேவனுடைய ராஜ்யத்தின் சுவிசேஷத்தைப் பிரசங்கித்து: காலம் நிறைவேறிற்று, தேவனுடைய ராஜ்யம் சமீபமாயிற்று; மனந்திரும்பி, சுவிசேஷத்தை விசுவாசியுங்கள்” (மாற்கு 1:14,15) என்று பிரசங்கித்தார். (1)

மேசியாவின் வருகை முதலில் யூதேயாவில் அறிவிக்கப்பட்டிருந்தது. எருசலேம் தேவாலயத்தில் சகரியா ஊழியஞ்செய்து கொண்டிருந்தபோது,

# 25

# கடலருகில் கொடுக்கப்பட்ட அழைப்பு!

**மத்தேயு 4:18–22; மாற்கு 1:16–20; லூக்கா 5:1–11**

**(The Desire of Ages, pp. 244-251)**

கலிலேயா கடலருகில் பொழுதுவிடிந்துகொண்டிருந்தது. இரவு முழுவதும் முயன்றும் பயனற்ற வேலையினால் களைப்படைந்துபோன சீடர்கள், அந்த ஏரியில் தங்களது படகுகளிலேயே இன்னமும் இருந்தனர். அந்த நீர்நிலை அருகில் அமைதியாகச் சற்று நேரத்தைக் கழிக்க இயேசு வந்திருந்தார். நாடோறும் அவரைப் பின்தொடர்ந்திருந்த திரளானவர்களைவிட்டு விலகி, அதிகாலையில் சற்றுநேரம் இளைப்பாறலாம் என அவர் நம்பினார்; ஆனால், விரைவில் மக்கள் அவரைச் சூழ்ந்துகொள்ளத் தொடங்கினார்கள். எல்லாப் பக்கங்களிலும் மக்களின் எண்ணிக்கை அதிகரித்ததால், அனைவரும் அவரை நெருக்கினார்கள்; அந்த நேரத்தில் சீடர்கள் கரைக்கு வந்துசேர்ந்திருந்தனர். கூட்டத்தினரின் நெருக்குதலிலிருந்து தப்புவதற்காக, இயேசு பேதுருவின் படகில் ஏறி, அந்தப் படகைக் கரையிலிருந்து சற்றுத்தள்ளி, நீரில் நிறுத்தும்படிக் கூறினார். அங்கிருந்த இயேசுவை எல்லோராலும் நன்கு பார்க்கவும், அவர் பேசுவதை நன்றாகக் கேட்கவும் முடிந்தது; அந்தக் கடற்கரையில் அவர் திரளானவர்களுக்குப் போதனைசெய்தார். (1)

தூதர்கள் சிந்திக்கத்தக்கதான அளவிற்கு அது எத்தகைய காட்சியாக இருந்தது. மகிமைமிக்க தேவ சேனையின் அதிபதி ஒரு மீன்பிடிப்பவனின் படகில் அமர்ந்திருந்தார். அந்தப் படகு முன்னும்பின்னுமாக அசைந்துகொண்டிருந்தது. நீரின் கரைவரை மக்கள் நெருங்கியிருந்தனர். அவர் இரட்சிப்பின் நற்செய்தியை அறிவித்துக்கொண்டிருந்தார். பரலோகத்தால் மேன்மைப்படுத்தப்பட்டவராக இருந்த ஒருவர், தமது இராஜ்யத்தைப்பற்றின பெரிய காரியங்களைத் திறந்தவெளியிலிருந்து சாதாரண மக்களுக்கு அறிவித்துக்கொண்டிருந்தார்; அப்படியிருந்தபோதிலும், அவரது உழைப்பிற்கு

இதைவிடப் பொருத்தமான காட்சி அமைந்திருக்கவில்லை. அந்த ஏரி, அந்த மலைகள், விசாலமாகப் பரவியிருந்த வயல்வெளிகள், பூமியை ஒளிப்படுத்தின சூரியஒளி, இவையனைத்தும், அவரது போதனைகளை விளக்கி மனத்திரையில் பதிக்க உருவகங்களாயின. கிறிஸ்துவின் போதனை ஒன்றுகூடக் கனிகொடுக்காததாக இல்லை. அவரது உதட்டிலிருந்து வந்த ஒவ்வொரு தூதும், ஏதாவது ஒரு ஆத்துமாவிற்கு நித்திய ஜீவனைக் கொடுக்கும் வார்த்தையாக வந்தது. (2)

ஒவ்வொரு வினாடியும் கடற்கரையில் திரளானவர்களை அதிகரிக்கச் செய்தது. வயது முதிர்ந்தவர்கள் அவர்களுடைய ஊன்றுகோல்களின்மீது சாய்ந்துகொண்டும், கடினமான விவசாயத் தொழிலாளர்கள் குன்றுகளிலிருந்தும், மீன்பிடிப்பவர்கள் ஏரியிலுள்ள அவர்களது உழைப்பிலிருந்தும், வியாபாரிகளும் ரபிமார்களும், செல்வந்தர்களும் கற்றோர்களும், முதியோரும் இளைஞரும் தங்களுடைய நோயாளிகளையும் துன்பப்படுகிறவர்களையும் கொண்டுவந்து, தெய்வீக போதகரின் வார்த்தைகளைக் கேட்க நெருக்கிக் கொண்டிருந்தனர். (3)

இவ்வண்ணமான காட்சிகளைத் தீர்க்கதரிசிகள் எதிர்நோக்கி இவ்விதமாக எழுதினர்:– "ஆகிலும் அவர் செபுலோன் நாட்டையும், நப்தலி நாட்டையும் இடுக்கமாய் ஈனப்படுத்தின முந்தின காலத்திலிருந்ததுபோல அது இருண்டிருப்பதில்லை; ஏனென்றால் அவர் கடற்கரையருகிலும், யோர்தான் நதியோரத்திலுமுள்ள புறஜாதியாருடைய கலிலேயாவாகிய அத்தேசத்தைப் பிற்காலத்திலே மகிமைப்படுத்துவார். இருளில் நடக்கிற ஜனங்கள் பெரிய வெளிச்சத்தைக் கண்டார்கள்: மரண இருளின் தேசத்தில் குடியிருக்கிறவர்களின்மேல் வெளிச்சம் பிரகாசித்தது"–ஏசாயா 9:1–2. (4)

கெனெசரேத்துக் கடற்கரையில் நெரிசலாக இருந்த கூட்டத்தைமட்டுமின்றி, இயேசு கடலின்மீதிருந்து நிகழ்த்திய அவரது உரையைக் கேட்கக்கூடிய மற்றவர்களையும் அவரது மனதில் கொண்டிருந்தார். யுகங்களுக்கு ஊடாக அவரது பார்வையைச் செலுத்தி, அவர்மீது விசுவாசம் உள்ளவர்கள் சிறைச்சாலைகளிலும் நீதிமன்றங்களிலும் சோதனையிலும் தனிமையிலும் துன்பத்திலும் இருப்பதைக் கண்டார். மகிழ்ச்சி, போராட்டம், குழப்பம் ஆகிய ஒவ்வொரு காட்சியும் அவர்முன் வெளியரங்கமாகக் காணப்பட்டது. தம்மைச்சுற்றி இருந்தவர்களுக்குக் கூறப்பட்ட வார்த்தைகளின்மூலமாக, மற்றும் ஏனைய ஆத்துமாக்களிடமுங்கூட அவர் பேசிக்கொண்டிருந்தார். அந்த வார்த்தைகள் சோதனையின்போது, நம்பிக்கையைத் தரும் தூதாகவும், துயரப்படுகிறவர்களுக்கு ஆறுதலாகவும், இருளில் வரும் பரலோக ஒளியாகவும் இருந்தது. கலிலேயாக் கடலில்

மீன்பிடிப்பவர்களின் படகிலிருந்து பரிசுத்த ஆவியின்மூலமாக உண்டான குரல், உலகத்தின் முடிவுவரை மானிட இதயங்களில் சமாதானத்தை கூறிக்கொண்டிருப்பது கேட்கப்படும். (5)

அந்த உரை முடிந்தது; இயேசு பேதுருவைப் பார்த்து படகை நீரில் சற்று தூரமாக நகர்த்தி, வலைவீசி மீன்பிடிக்கும்படி கூறினார்; ஆனால், பேதுரு மனச்சோர்வுடையவனாக இருந்தான். இரவு முழுவதும் வலையை வீசியிருந்தும் அவனுக்கு ஒன்றும் கிடைக்காமலிருந்தது. தனிமைமிக்க அந்த மணிநேரங்களில், சிறையின் தனிமையில் சோர்வுற்றவனாக இருந்த யோவான் ஸ்நானகனைப்பற்றி அவன் சிந்தித்துக்கொண்டிருந்தான். இயேசுவிற்கும் அவரது அடியார்களுக்கும் உண்டாகக்கூடிய எதிர்காலப் பலனைப்பற்றியும், யூதேயாவில் செய்த ஊழியத்தில் உண்டாயிருந்த வெற்றியின்மையைப்பற்றியும், ரபிமார்கள், ஆசாரியர்கள் ஆகியோரின் தீய எண்ணங்களைப்பற்றியும் அவன் சிந்தித்துக்கொண்டிருந்தான். காலியான அவனது வலையை அவன் கவனித்தபோது, அவனது எதிர்காலம் அதைரியத்தை உண்டுபண்ணும் இருளாக இருந்து, அவனது சுயதொழிலுங்கூட அவனுக்குத் தோல்வியை உண்டுபண்ணியிருந்தது. "ஐயரே, இரா முழுவதும் நாங்கள் பிரயாசைப்பட்டும் ஒன்றும் கிடைக்கவில்லை; ஆகிலும் உம்முடைய வார்த்தையின்படியே வலையைப்போடுகிறேன்" என்றான். (6)

அந்த ஏரியின் தெளிந்த நீரில் மீன்பிடிப்பதற்கு இரவு நேரம் மட்டுந்தான் அனுகூலமானதாக இருந்தது. இரவு முழுவதும் வெற்றியில்லாமல் முயன்றபின்னர் பகல்வேளையில் வலையை வீசுவது நம்பிக்கையற்றதுபோல் காணப்பட்டது; ஆனால், அந்தக் கட்டளையை இயேசு கொடுத்திருந்தார். அவர்களது ஆண்டவரின் மீதிருந்த அன்பு கீழ்ப்படியும்படி சீடர்களை நெருக்கி ஏவியது. சீமோனும் அவனது சகோதரனும் சேர்ந்து வலையை வீசினார்கள். அவர்கள் அந்த வலையைப் படகுக்குள் இழுக்க முயன்றபோது, அந்த வலை கிழிந்துபோகுமளவிற்கு மீன்களால் நிறைந்திருந்தது. அவர்கள் யாக்கோபையும் யோவானையும் அவர்களுக்கு உதவிசெய்யவரும்படி அழைக்கவேண்டியதாயிற்று. அந்த மீன்களை அவர்களது படகுகளில் நிறைத்தபோது, அந்தப் படகுகள் (மீன்களின் பாரத்தினால்) மூழ்கிவிடக்கூடிய அபாயத்திலிருந்தன. (7)

ஆனால், பேதுரு இப்பொழுது படகுகளைப்பற்றியோ அவைகளை நிரப்புவதைப்பற்றியோ எண்ணமற்றவனாக இருந்தான். அவன் இதுவரை ஒருபோதும் கண்டிராத இந்த அற்புதம், அவனுக்கு, தெய்வீக வல்லமையின் ஒரு வெளிக்காட்டலாக இருந்தது. இயற்கை அனைத்தையும் தமது கட்டுப்பாட்டிற்குள் வைத்திருக்கும் ஒருவரை, அவன் இயேசுவில் கண்டான்.

தெய்வீகத்தின் பிரசன்னம் அவனது பரிசுத்தமற்ற தன்மையை அவனுக்கு வெளிக்காட்டினது. அவனது ஆண்டவரின்மீதுள்ள அன்பு, அவனது அவநம்பிக்கைக்காக உண்டான வெட்கம், கிறிஸ்து தம்மைத் தாழ்த்தியதில் உண்டான அவனது நன்றி உணர்வு, இவை அனைத்திற்கும் மேலாக, முடிவில்லாத தூய்மைக்குமுன்னுள்ள தனது சுத்தமற்றதன்மை ஆகியவை அவனை அழுத்தியது. வலையில் கிடைத்ததைக் கொண்டுசேர்க்க அவனது தோழர்கள் முயன்றுகொண்டிருந்தபோது, பேதுரு இரட்சகரின் பாதங்களில் வீழ்ந்து: "ஆண்டவரே, நான் பாவியான மனுஷன்; நீர் என்னைவிட்டுப் போகவேண்டும்" என்று கதறினான். (8)

தேவனுடைய தூதனுக்கு முன்பாகத் தீர்க்கதரிசியான தானியேலைச் செத்தவனைப்போல விழச்செய்தது, இதே தெய்வீகப் பிரசன்னத்தின் பரிசுத்தந்தான். "பெலனெல்லாம் போயிற்று; என் உருவம் மாறி வாடிப்போயிற்று; திடனற்றுப்போனேன்"—தானியேல் 10:8. அதைப்போலவே, ஏசாயா கர்த்தருடைய மகிமையைக் கண்டபோது: "ஐயோ! அதமானேன், நான் அசுத்த உதடுகளுள்ள மனுஷன், அசுத்த உதடுகளுள்ள ஜனங்களின் நடுவில் வாசமாயிருக்கிறவன்; சேனைகளின் கர்த்தராகிய ராஜாவை என் கண்கள் கண்டதே" (ஏசாயா 6:5) என்று கூவினான். மானுடம் அதன் பலவீனத்துடனும் பாவத்துடனும் தெய்வீகத்தின் பூரணத்தை ஒப்பிடும்படி கொண்டுவரப்பட்டது. அவன் ஒட்டுமொத்தமாக அவனது குறைபாட்டையும் பரிசுத்தமற்ற தன்மையையும் உணர்ந்தான். தேவனுடைய மகா மேன்மையையும் மகத்துவத்தையும் காணும்படி அருள்செய்யப்பட்ட அனைவரது காரியமும் இப்படிப்பட்டதாகவே இருந்திருக்கிறது. (9)

"ஆண்டவரே, நான் பாவியான மனுஷன்; நீர் என்னைவிட்டுப் போகவேண்டும்" என்று பேதுரு கதறினான்; இருந்தபோதிலும், அவனால் அவரைவிட்டுப் பிரிந்துசெல்லமுடியாது என்னும் உணர்வுடன் அவரது பாதங்களைப் பற்றிக்கொண்டான். அப்பொழுது இயேசு சீமோனை நோக்கி: "பயப்படாதே, இது முதல் நீ மனுஷரைப் பிடிக்கிறவனாயிருப்பாய்" என்றார். ஏசாயா தேவனுடைய பரிசுத்தத் தன்மையையும் தனது தகுதியின்மையையும் கண்டபின்னர்தான், தெய்வீகத் தூது அவனிடம் ஒப்படைக்கப்பட்டது. பேதுரு தனது சுயத்தை மறுத்து, தெய்வீக வல்லமையைச் சார்ந்திருக்கும்படி நடத்தப்பட்டபின்னர்தான், கிறிஸ்துவிற்காக ஊழியஞ்செய்யும் அவரது பணிக்கு அழைக்கப்பட்டான். (10)

அந்த நேரம் வரை இயேசுவின் சீடர்களில் ஒருவரும் அவருடன் பூரணமாக ஒத்துழைக்கும் ஊழியக்காரர்களாக இருக்கவில்லை. அவர்கள் அவரால் செய்யப்பட்ட அநேக அற்புதங்களுக்குச் சாட்சிகளாக இருந்து,

அவரது போதனைகளைக் கவனித்திருந்தனர். அவர்கள் தங்களுடைய பழைய வேலைகளை முற்றிலுமாக விட்டுவிடாதவர்களாகவே இருந்தனர். யோவான் ஸ்நானகனின் சிறைவைப்பு அவர்களுக்கு மிகவும் கசப்பான மனமடிவை உண்டாக்கியிருந்தது. யோவானின் ஊழியத்தின் பலன் இப்படிப்பட்டதாக இருக்குமானால், சமயத்தலைவர்கள் அனைவரும் ஒன்றாக இணைந்து, அவர்களுடைய தலைவராகிய இயேசுவுக்கு எதிராக நிற்கும்போது, அவரைக்குறித்த காரியத்தில் அவரது சீடர்களுக்கு எந்த ஒரு நம்பிக்கையும் இல்லாததுபோல் இருந்தது. இப்படிப்பட்ட ஒரு சூழ்நிலையில், சற்றுநேரத்திற்குத் தங்களுடைய மீன்பிடிக்கும் தொழிலிற்குத் திரும்புவது அவர்களுக்கு ஒரு இளைப்பாறுதலாக இருந்தது; ஆனால், இப்பொழுது அவர்களுடைய பழைய வாழ்க்கையைவிட்டு, அவர்களுடைய விருப்பங்களைத் தமது விருப்பங்களுடன் ஐக்கியப்படுத்தும்படி, இயேசு அவர்களை அழைத்தார். பேதுரு இந்த அழைப்பை ஏற்றுக்கொண்டான். இயேசு கடற்கரையை அடைந்து மற்ற மூன்று சீடர்களையும் நோக்கி: “என் பின்னே வாருங்கள், உங்களை மனுஷரைப் பிடிக்கிறவர்களாக்குவேன்” என்று அழைத்தார். உடனே அவர்கள் அனைத்தையும் விட்டுவிட்டு அவருக்குப் பின்சென்றார்கள். (11)

தங்களுடைய வலைகளையும் மீன்பிடிக்கும் படகுகளையும் விட்டுவிட்டு வருவதற்கு அவர்களை அழைப்பதற்குமுன், அவர்களுடைய தேவைகள் அனைத்தையும் தேவன் கொடுப்பார் என்னும் வாக்குறுதியை இயேசு அவர்களுக்குக் கொடுத்தார். சுவிசேஷ ஊழியத்திற்காகப் பயன்படுத்தப்பட்ட பேதுருவின் படகு மிக அதிகமான செல்வத்தை அவனுக்குத் திரும்பக் கொடுத்திருந்தது. “எல்லாருக்குங் கர்த்தரானவர் தம்மைத் தொழுதுகொள்ளுகிற யாவருக்கும் ஐசுவரியசம்பன்னராயிருக்கிறார்.” “கொடுங்கள், அப்பொழுது உங்களுக்கும் கொடுக்கப்படும்; அமுக்கிக் குலுக்கிச் சரிந்து விழும்படி நன்றாய் அளந்து, உங்கள் மடியிலே போடுவார்கள்”–ரோமர் 10:12; லூக்கா 6:38. அந்த அளவின் படியே அவர் தமது சீடர்களின் சேவைக்குப் பரிசளித்திருந்தார். (12)

“நாம் வேண்டிக்கொள்ளுகிறதற்கும் நினைக்கிறதற்கும் மிகவும் அதிகமாய்... தம்முடைய கிருபையின் மகாமேன்மையான ஐசுவரியத்தை ... (எபேசியர் 3:20; 2:7). அவரது ஊழியத்திற்கென்று செய்யப்படும் ஒவ்வொரு தியாகத்திற்கும் அதிகமான பலன் தரப்படும். (13)

துயரமிக்க அந்த இரவில், கிறிஸ்துவைவிட்டுப் பிரிந்திருந்தபோது, சீடர்கள் அவநம்பிக்கையினால் கடினமாக அழுத்தப்பட்டு, பயனற்ற உழைப்பினால் களைப்புற்றிருந்தனர்; ஆனால், அவரது பிரசன்னம் அவர்களது

விசுவாசத்தை எழுப்பி, அவர்களுக்கு மகிழ்ச்சியையும் வெற்றியையும் கொண்டுவந்தது; நமது காரியமும் அப்படிப்பட்டதுதான். கிறிஸ்து இல்லாத நமது செயல்கள் பயனற்றவையாகிவிட, நம்பிக்கையின்மையை அடைந்து, முறுமுறுத்தல் எளிதாகிவிடுகிறது; ஆனால் அவர் நமக்குச் சமீபமாக இருக்கும்போது, நாம் அவரது வழிகாட்டுதலின்படி உழைக்கும்போது, அவரது வல்லமையின் ஆதாரத்தில் நாம் களிகூருகிறோம். ஆத்துமாவை அதைரியப்படுத்துவது சாத்தானின் வேலையாக உள்ளது. விசுவாசத்தையும் நம்பிக்கையையும் ஊக்குவிப்பது கிறிஸ்துவின் பணியாக உள்ளது. (14)

அந்த அற்புதம் எடுத்துக்காட்டும் ஆழமான பாடம்: தமது வார்த்தையினால் கடலில் மச்சங்களைத் திரட்டக்கூடியவர், மனித இதயங்களையும் உணர்த்தி, அவரது ஊழியக்காரர்கள் மனிதர்களைப் பிடிப்பவர்களாகும்படி தமது அன்பின் கயிற்றினால் இழுக்கக்கூடியவராக இருக்கிறார் என்று அந்த அற்புதம் சீடர்களுக்குக் கற்பித்த ஆழமான பாடம் நமக்கும் ஒரு பாடமாக உள்ளது. (15)

அந்தக் கலிலேயே செம்படவர்கள் மிகவும் எளிமையான—கல்வியறிவற்ற மனிதராக இருந்தனர்; ஆனால், உலகத்திற்கு ஒளியாக இருக்கும் கிறிஸ்து, அவர்களை எதற்காகத் தெரிந்துகொண்டிருந்தாரோ அந்தப் பதவிக்கு அவர்களைத் தகுதியாக்கக்கூடியவராக இருந்தார். இரட்சகர் கல்வியை அவமதிக்கவில்லை; ஏனெனில், தேவனுடைய அன்பினால் கட்டுப்படுத்தப்பட்டு, அவரது ஊழியத்திற்கென்று அர்ப்பணஞ் செய்யும்போது, நுண்ணறிவின் பண்பு ஒரு ஆசீர்வாதமாகிறது. அவருடைய காலத்திலிருந்த ஞானவான்கள் தங்களின் சுயநம்பிக்கையில் துன்பப்படும் மானுடத்தின்மீது அனுதாபமற்றவர்களாகவும், நாசரேத்தின் மனிதருடன் ஊழியக்காரர்களாகவும் இருப்பதற்கு விருப்பமற்றவர்களாகவும் இருந்தபடியால், அவர் அவர்களைவிட்டுக் கடந்துசென்றார். (16)

அவர்களது மத விரோதத்தினால், கிறிஸ்துவால் போதிக்கப்படுவதை அவர்கள் பரிகசித்தனர். அவரது தொடர்பிற்குத் தடையற்ற கிருபையின் வாய்க்கால்களாக அமையப்போகிறவர்களின் ஒத்துழைப்பை கர்த்தராகிய இயேசு தேடுகிறார். தேவனுடன் சேர்ந்து ஊழியஞ்செய்பவர்களாவதற்கு விரும்பக்கூடியவர்கள் கற்றுக்கொள்ள வேண்டிய முதல் பாடம் சுயத்தின்மீது நம்பிக்கைவைக்காமலிருப்பதாகும். அதன்பின், அவர்கள் கிறிஸ்துவின் குணத்தைத் தங்களில் பெற்றுக்கொள்ளுவதற்கு ஆயத்தமாகின்றனர். மிகமேலான விஞ்ஞான ரீதியிலான பள்ளிகளின்மூலமாக இது பெற்றுக்கொள்ளப்படுவதில்லை. இது தெய்வீகப் போதகரிடத்திலிருந்து மட்டுமே பெற்றுக்கொள்ளக்கூடிய ஞானத்தின் கனியாக உள்ளது. (17)

கல்வியறிவில்லாத மீன்பிடிப்பவர்கள் அவர்களது காலத்திலிருந்த பாரம்பரியங்களிலும் தவறான பழக்கங்களிலும் கற்பிக்கப்படாதவர்களாக இருந்ததினால், இயேசு அவர்களைத் தெரிந்துகொண்டிருந்தார். அவர்கள் சுயமான திறமையை உடைய மனிதர்களாக இருந்தனர். அவர்கள் தாழ்மையுள்ளவர்களும் போதிக்கப்படக்கூடியவர்களுமாக இருந்தனர். அவரது ஊழியத்திற்கு அவரால் கற்பிக்கப்படக்கூடிய மனிதர்களாக இருந்தனர். சாதாரணமான அன்றாட வாழ்க்கையில் நாள்தோறும் செய்யவேண்டிய வேலைகளைப் பொறுமையுடன் செய்கின்ற அநேக மனிதர்கள் தங்களுக்குள் தங்களை அறியாது மறைந்திருக்கும் வல்லமையைச் செயலாற்ற அழைத்தால், அது அவர்களை உலகத்தின் அதிக ஞானமுள்ள மனிதர்களுக்குச் சமமானவர்களாக உயர்த்திவிடும். அடங்கிக்கிடக்கும் திறமைகளை எழுப்பிவிட, திறமைமிக்க ஒரு கரத்தின் தொடுதல் அவசியமாக உள்ளது. அப்படிப்பட்ட மனிதர்களைத்தான் இயேசு தமது உடன் ஊழியக்காரர்களாக இருக்கும்படி அழைத்தார். அவர்கள் அவருடன் தோழமைகொள்ளக்கூடிய அனுகூலத்தை அவர்களுக்குக் கொடுத்தார். உலகத்தில் எந்தப் பெரிய மனிதரும் அப்படிப்பட்ட ஒரு போதகரைப் பெற்றிருக்கவில்லை. இரட்சகரிடமிருந்த பயிற்சியிலிருந்து சீடர்கள் வெளிவந்தபோது, அதற்குப்பின் அவர்கள் ஒருபோதும், அறியாமைமிக்கவர்களாகவும் பண்பற்றவர்களாகவும் இருக்கவில்லை. எண்ணத்திலும் குணத்திலும் அவர்கள் அவரைப் போன்றவர்களாகியிருந்தபோது, அவர்கள் இயேசுவுடன் இருந்திருந்தவர்கள் என்பதை மனிதர்கள் அறிந்தனர். (18)

அறிவைப் பிறருக்குச் சாதாரணமாகப் புகட்டுவதுமட்டும் கல்வியின் உயர்ந்த பணியாகாது; மாறாக, மனதுடன் மனதும் ஆத்துமாவுடன் ஆத்துமாவும் தொடர்புகொள்ளுவதினால் கொடுக்கப்படும் ஜீவ சக்தியாக அது உள்ளது. ஜீவனால்மட்டுந்தான் ஜீவனைப் பிறப்பிக்க இயலும்; அப்படியானால், உலகத்தை ஆசீர்வதித்த—ஜீவனைக்கொடுக்கும் ஒவ்வொரு உந்துவிசையும் துவங்கி ஓடிவந்த தெய்வீக ஜீவனோடு மூன்று வருடங்கள் நாள்தோறும் தொடர்ச்சியான உறவினைப் பெற்றிருந்த அவர்களுக்குக் கிடைத்த சலுகை எப்படிப்பட்டதாக இருந்தது! அவரது தோழர்கள் அனைவரையும்விட மேலாக நேசிக்கப்பட்டிருந்த அன்பான சீடன், ஆச்சரியமான அந்த ஜீவனின் வல்லமைக்கு தன்னை இணங்கச்செய்திருந்தான். "அந்த ஜீவன் வெளிப்பட்டது; பிதாவினிடத்திலிருந்ததும், எங்களுக்கு வெளிப்பட்டதுமான நித்தியமாயிருக்கிற அந்த ஜீவனை நாங்கள் கண்டு, அதைக்குறித்துச் சாட்சிகொடுத்து, அதை உங்களுக்கு அறிவிக்கிறோம்... அவருடைய பரிபூரணத்தினால் நாம் எல்லாரும் கிருபையின்மேல் கிருபைபெற்றோம்"– 1 யோவான் 1:2; யோவான் 1:16. (19)

நமது கர்த்தரின் அப்போஸ்தலரில் தங்களுக்கு மகிமையைக் கொண்டுவரக்கூடிய எதுவும் இருக்கவில்லை. அவர்களது ஊழியத்தின் வெற்றி தேவனுக்குமட்டுமே உரித்தானது என்பது சான்றாக இருந்தது. இந்த மனிதர்களின் வாழ்க்கை, அவர்கள் வளர்த்துக்கொண்ட பண்பு, அவர்கள்மூலமாக தேவன் செய்த பலத்த செயல்கள் ஆகிய அனைத்தும் கற்பிக்கப்படக்கூடியவர்களும் கீழ்ப்படியக்கூடியவர்களுமாகிய அனைவருக்கும் அவர் என்ன செய்வார் என்பதற்கு ஒரு சாட்சியாக உள்ளது. (20)

எந்த ஒரு நபர் கிறிஸ்துவை மிகவும் அதிகமாக நேசிக்கிறாரோ, அவர் பெரிய அளவில் நன்மையான செயல்களைச் செய்வார். சுயத்தை ஒரு பக்கமாக நீக்கிவைத்துவிட்டு, தனது இருதயத்தில் பரிசுத்த ஆவியானவர் செயலாற்றுவதற்கு எந்த நபர் இடங்கொடுத்து, தேவனுடைய காரியத்திற்கென்று தனது வாழ்க்கையை முற்றிலுமாக அர்ப்பணஞ்செய்கிறாரோ, அப்படிப்பட்ட நபரால் உண்டாகக்கூடிய பயன்களுக்கு அளவே இல்லை. மனிதர்கள் அவர்களது பாதையில் குறைகூறாதவர்களாகவும் சோர்ந்துபோகாதவர்களாகவும் இருந்து, தேவையான ஒழுக்கத்தைக் கடைப்பிடிப்பார்களானால், தேவன் அவர்களுக்கு ஒவ்வொரு மணிதோறும், ஒவ்வொரு நாள்தோறும் கற்றுக்கொடுப்பார். அவர் தமது கிருபையை வெளிக்காட்ட ஏங்குகிறார். அவரது மக்கள், தடைகளை அகற்றுவார்களானால், இரட்சிப்பின் தண்ணீர்களை ஏராளமான சிற்றாறுகளில், மானிட வாய்க்கால்களின்மூலமாக பெருகி நிறைந்தோடும்படியாக ஊற்றுவார். தாழ்மையான வாழ்க்கையில் இருக்கும் மனிதர்கள், (எபேசியர் 3:20; 2:7) அவர்களால் முடிந்த அளவிற்கு, சகலவிதமான நன்மைகளையும் செய்யும்படி உற்சாகப்படுத்தப்பட்டிருந்தால், அந்த ஆர்வத்தைத் தடைசெய்யும் கரங்கள் அவர்கள்மீது வைக்கப்படாமலிருந்தால், இப்பொழுது கிறிஸ்துவிற்காக ஒரே ஒரு ஊழியக்காரர் இருக்கக்கூடிய இடத்தில், நூற்றுக்கணக்கானவர்கள் இருப்பார்கள்! (21)

மனிதர்கள் தேவனுடைய ஊழியத்தைச் செய்வதற்குத் தாங்களாகவே அவருக்கு இணங்குவார்களானால், தேவன் அவர்கள் இருக்கும் நிலையிலேயே அவர்களை எடுத்து, அவரது ஊழியத்திற்காக, அவர்களைப் பயிற்றுவிப்பார். ஆத்துமாவில் பெற்றுக்கொள்ளப்பட்ட தேவ ஆவி அதன் திறன்கள் அனைத்தையும் எழுப்பிவிடுகிறது. எந்தவிதமான ஒதுக்கிவைத்தலுமில்லாமல் தேவனுக்கென்று பக்திசெலுத்தும் மனம், இசைவாக முன்னேற்றமடைந்து, தேவனுடைய கோரிக்கைகளை நிறைவேற்றுவதற்கு பரிசுத்த ஆவியின் வழிகாட்டுதலினால் பலப்படுத்தப்படவும் அறிவடையவுஞ் செய்கிறது. பலவீனமான அசையக்கூடிய குணம்,

பலமானதும் உறுதியாக நிற்கக்கூடியதாகவும் மாறுகிறது. தொடர்ச்சியான பக்தி இயேசுவிற்கும் அவரது சீடர்களுக்கும் இடையேயுள்ள உறவை மிகவும் நெருக்கமாக்குவதினால், கிறிஸ்தவர்கள் மனத்தாலும் குணத்தாலும் அவரைப்போலாகுகின்றனர். கிறிஸ்துவுடன் உள்ள ஒரு பிணைப்பால், அவன் தெளிவானதும் விசாலமானதுமான பார்வையைப் பெறுகிறான். அவனது தீர்க்கமான அறிந்துகொள்ளும் தன்மை மிகவும் ஊடுருவிச்செல்லக்கூடியதாகவும், அவனது மதிப்பிடும் தன்மை சமநிலை உடையதாகவும் ஆகிறது. கிறிஸ்துவின் சேவைக்குப் பயனுள்ளவனாக வேண்டும் என்று ஏங்குபவன், நீதியின் சூரியனின் ஜீவனைக்கொடுக்கும் வல்லமையினால் எழுப்பப்பட்டு, தேவனுடைய மகிமைக்கென்று அதிகமான கனிகளைக் கொடுக்கும் தகுதியை உடையவனாகிறான். (22)

உலகத்தில் கல்வி அறிவற்றவர்கள் என்று கருதப்பட்டிருந்த மிகவும் தாழ்மையான கிறிஸ்தவர்களிடமிருந்து, கலையிலும் விஞ்ஞானத்திலும் மிக உயர்ந்த கல்வியைப் பயின்றவர்கள் விலை மதிப்புமிக்க பாடங்களைக் கற்றிருக்கின்றனர்; ஆனால், மிகுந்த இருளில் இருந்த இந்த சீடர்கள், அனைத்துப் பள்ளிகளிலும் மேலானதிலிருந்து ஒரு கல்வியைப் பெற்றிருந்தனர். மனிதர்கள் ஒருபோதும் பேசியிராதவிதமாகப் பேசியவரின் பாதத்தில் அவர்கள் உட்கார்ந்திருந்தனர். (23) ★

# 26

# கப்பர்நகூமில்!

## (The Desire of Ages, pp. 252–261)

இயேசு அவரது முன்னும்பின்னுமான பயணங்களின் இடைவேளைகளில் கப்பர்நகூமில் தங்கியிருந்தார்; எனவே, அது அவரது சொந்த நகரம் என்று அறியப்பட்டது. அது கலிலேயாவின் கடற்கரையில் கெனெசரேத் சமவெளியின் எல்லையோரத்தில் இருந்தது. (1)

அந்த ஆழமான ஏரி அதைச் சுற்றிலுமிருந்த சமவெளியில் விரிந்து, தென்பகுதியில் ஒரு நல்ல பருவநிலையை உண்டுபண்ணியிருந்தது. கிறிஸ்துவின் நாட்களில் இங்கு பேரீச்சமரங்களும் ஒலிவமரங்களும் செழித்துவளர்ந்திருந்தன. பழச்சோலைகளும் திராட்சைத்தோட்டங்களும், பசுமையான வயல்வெளிகளும், மிகஅழகிய மலர்ச்செடிகளும் வளர்ந் திருந்தன. இவைகளுக்கெல்லாம் மலைகளிலிருந்து வந்த நீரோடைகள் நீர்ப்பாய்ச்சியிருந்தன. அந்த ஏரியின் கரைகளிலும் சற்று தூரத்தில் அதனைச் சூழ்ந்திருந்த குன்றுகளிலும், சிற்றூர்களும் கிராமங்களும் நிரம்பியிருந்தன. அந்த ஏரியில் மீன்பிடிக்கும் படகுகள் ஏராளமாக இருந்தன. எங்கும் தீவிர வாழ்க்கையின் சுறுசுறுப்பும் சந்தடியும் நிரம்பியிருந்தது. (2)

இரட்சகரின் ஊழியத்திற்குப் பொருத்தமான மையமாகக் கப்பர்நகூம் இருந்தது. தமஸ்குவிற்கும் எருசலேமிற்கும் எகிப்திற்கும் மத்தியதரைக் கடலிற்கும் செல்லும் நெடுஞ்சாலையில் அது இருந்து, பயணஞ்செய்பவர்களின் பெரும் போக்குவரத்துச் சாலையாகத் திகழ்ந்தது. பல இடங்களிலிருந்தும் தங்கள் பயணங்களில் போயும் வந்துமிருந்த மக்கள் அந்த நகரத்தைக் கடந்துசென்றிருந்தனர் அல்லது இளைப்பாறுவதற்காகத் தங்கியிருந்தனர். செல்வந்தர்கள், பெரியோர்கள், ஏழை—எளியவர்கள் ஆகிய அனைத்து வர்க்கத்தினரையும் அந்தஸ்தில் இருந்தவர்களையும் இயேசுவால் சந்திக்கமுடியவே, அவரது போதனைகள் பிறநாடுகளுக்கும் அநேக வீடுகளுக்கும் எடுத்துச்செல்லப்பட்டன. இவ்விதமாக, தீர்க்கதரிசனங்களைப்பற்றிய ஆராய்ச்சி தூண்டப்பட்டு, இரட்சகரின்பால் கவனஞ்செலுத்தப்பட்டு, அவரது ஊழியத்தின் தன்மை உலகத்திற்குமுன் கொண்டுவரப்பட வேண்டியதாக இருந்தது. (3)

சனகரீம் சங்கத்தின் நடவடிக்கைகள் இயேசுவிற்கு எதிராக இருந்தபோதிலும், அவரது ஊழியத்தின் முன்னேற்றத்தைக் காண மக்கள் அக்கறையுடன் காத்திருந்தனர். பரலோகம் முழுவதும் ஆர்வத்தால் உற்றுநோக்கியது. தேவதூதர்கள் மனிதர்களின் இருதயங்களை அசையச்செய்து, அவர்களை இரட்சகர்பால் இழுத்து, அவரது ஊழியத்திற்கான பாதையை ஆயத்தஞ்செய்துகொண்டிருந்தனர். (4)

கப்பர்நகூமில் இயேசுவால் சுகப்படுத்தப்பட்ட ஒரு மேன்மையான மனிதனின் மகன், அவரது வல்லமைக்கு ஒரு சாட்சியாக இருந்தான். அரசவை அதிகாரியும் அவனது வீட்டாரும் தங்களது விசுவாசத்தை மகிழ்ச்சியுடன் அறிவித்தனர். அவர்களுக்கிடையில் போதகர்தாமே இருக்கிறார் என்பதை மக்கள் அறிந்தபோது, அந்த நகரம் முழுவதும் எழுப்பப்பட்டது. அவரது சமூகத்தை நாடித் திரளானவர்கள் சென்றனர். ஓய்வுநாளில் ஜெப ஆலயத்தில் நுழைய இடமின்றி, ஏராளமானவர்கள் திரும்புமளவிற்கு அது நிரம்பிவழிந்தது. (5)

இரட்சகரின் உரையைக் கேட்ட அனைவரும் அவருடைய போதகத்தைக்குறித்து ஆச்சரியப்பட்டார்கள். “ஜனங்கள் அவருடைய போதகத்தைக்குறித்து ஆச்சரியப்பட்டார்கள்”—லூக்கா 4:32; மத்தேயு 7:29. “அவர் வேதபாரகரைப்போல் போதியாமல், அதிகாரமுடையவராய் அவர்களுக்குப் போதித்தார்.” வேதபாரகர்கள், மூப்பர்களுடைய போதனைகள், மனப்பாடஞ்செய்து கற்ற பாடங்களைப்போல், உயிரற்றவையாகவும் வழக்கத்தின்படியானவையாகவும் இருந்தன. அவர்களுக்கு தேவனுடைய வார்த்தைகள் வல்லமையுடையவையாக இருக்கவில்லை. வேதவாக்கியங் களின் போதனைகளுக்குப்பதிலாக, அவர்களது சொந்தக் கருத்துக்களும் பாரம்பரியங்களும் வைக்கப்பட்டிருந்தன. அவர்கள் வழக்கமாகச் செய்திருந்த சடங்குகளினால் நியாயப்பிரமாணத்தை விளக்குவதாகக் கூறிக்கொண்டிருந்தனர்; ஆனால், தேவனிடமிருந்து அவர்களுடைய இருதயங்களில் ஆவிக்குரிய ஒரு தூண்டுதலும் உண்டாகியிருக்கவில்லை; அதைப்போலவே, அவைகளைக் கேட்டிருந்தவர்களின் இருதயங்களையும் ஆவிக்குரிய தூண்டுதல் எழுப்புதலைக் கொண்டுவரவில்லை. (6)

யூதர்களுக்கிடையிலிருந்த பிரிவினைகளில் இயேசுவிற்கு எதுவும் செய்வதற்கில்லை. சத்தியத்தை முன்வைப்பதுமட்டுமே அவரது வேலையாக இருந்தது. முற்பிதாக்கள், தீர்க்கதரிசிகள் ஆகியோரின் போதனைகளின்மீது அவரது வார்த்தைகள் ஒளிவெள்ளத்தைப் பாய்ச்சின. புதிய வெளிப்படுத்தல்களாக வேத வாக்கியங்கள் மனிதர்களிடம் வந்தன. அவரது உரையைக் கேட்டிருந்தவர்கள், இதற்குமுன் ஒருபோதும்

தேவனுடைய வார்த்தையிலிருந்த ஆழமான பொருள்களை அவ்வாறு அறிந்துணர்ந்திருக்கவில்லை. (7)

இயேசு மக்களின் குழப்பங்களுடன் அறிமுகமானவராக, அவர்களது களத்திலேயே அவர்களைச் சந்தித்தார். மிகவும் நேரடியான எளியவிதத்தில் சத்தியத்தை அவர் மக்கள் முன்வைத்து அதனை அழகுள்ளதாக்கினார். அவரது வார்த்தைகள், ஓடிக்கொண்டிருக்கும் ஒரு நீரோடையைப்போன்றதாக, தூய்மையும் தெளிவும் மேம்பாடுடையதாகவும் இருந்தது. ரபிமார்களின் ஒரேவிதமான குரலைக்கேட்டிருந்தவர்களுக்கு, அவரது குரல் இனிமைமிக்க இசைபோன்றதாக இருந்தது; ஆனால், அவரது போதனை எளிமைமிக்கதாக இருந்தபோதிலும், அதிகாரமுள்ள ஒருவரைப்போல அவர் பேசினார். மற்ற அனைவரையும் ஒப்பிட்டுப்பார்க்கும்போது, அவரது குணநலன்கள் அவரது போதனைக்கு இசைவாக இருந்தது. வேதவாக்கியம் ஒரு அர்த்தத்தை அல்லது அதற்கு நேர்எதிரான வேறொரு அர்த்தத்தைக் கொடுக்கும் என்னும்விதத்தில் ரபிமார்கள் சந்தேகத்துடனும் தயக்கத்துடனும் பேசியிருந்தனர். அவைகளைக் கேட்டிருந்தவர்கள் நாள்தோறும் நிச்சயமின்றி இருந்தனர். கேள்விக்கிடமற்றவிதத்தில் அதிகாரமுள்ளவையாக வேதவாக்கியங்கள் உள்ளன என்னும் வகையில் இயேசு போதித்தார். அவர் உரையாற்றியிருந்த பொருள் எதுவாக இருந்தபோதிலும், அவரது வார்த்தைகளுக்கு எதிராக எதிர்வாதம் செய்யமுடியாதவிதத்தில் மிகுந்த வல்லமையுடன் அவர் பேசினார். (8)

அப்படியிருந்தபோதும், அவர் கோபாவேசமுள்ளவராக இராமல், ஆர்வமுள்ளவராக இருந்தார். நிறைவேற்றித்தீர்க்கவேண்டிய ஒரு நோக்கமுடையவராக அவர் பேசினார். நித்திய வார்த்தைகளின் உண்மைத்தன்மையை அவர் காட்சிக்குக் கொண்டுவந்துகொண்டிருந்தார். அவர் விவாதத்திற்கு எடுத்துக்கொண்டிருந்த ஒவ்வொரு பொருளிலும் தேவன் வெளிப்படுத்தப்பட்டார். உலகப் பிரகாரமான காரியங்களில் மூழ்கியிருந்த மனிதர்களிடமிருந்த உலக ஆசைகளை உடைத்தெறிய இயேசு வகைதேடியிருந்தார். இந்த வாழ்க்கைக்குரிய காரியங்கள், நித்திய வாழ்க்கைக்குரிய காரியங்களுக்குக் கீழ்ப்பட்டவை என்னும் உண்மையான நிலையைக் காட்டினார். என்றாலும், அவைகளின் முக்கியத்துவத்தை அவர் மறுக்கவில்லை. பரலோகமும் பூலோகமும் ஒன்றாகப் பிணைக்கப்பட்டிருக்கிறதென்றும், தெய்வீக சத்தியத்தைப்பற்றிய அறிவு அன்றாட வாழ்க்கையில் உள்ள கடமைகளை நன்முறையில் செய்வதற்கு ஆயத்தப்படுத்துகிறது என்றும் அவர் போதித்தார். பரலோகத்துடன் பழக்கப்பட்டவரைப்போலவும், தேவனுடனுள்ள அவரது

உறவைப்பற்றிய உணர்வை உடையவரைப்போலவும் அவர் பேசினார்; அப்படியிருந்தபோதிலும், மானுடத்திலுள்ள ஒவ்வொரு அங்கத்தினருடனும் தமக்குள்ள ஐக்கியத்தை அங்கீகாரம் செய்துள்ளவராகவும் அவர் பேசினார். (9)

அவரது உரையைக் கேட்டிருந்தவர்களுக்குப் பொருந்தக் கூடியவிதத்தில் அவரது இரக்கத்தின் தூதுகள் இருந்தன. "இளைப்படைந்தவனுக்கு சமயத்திற்கேற்ற வார்த்தை சொல்ல" (ஏசாயா 50:4) அவர் அறிந்திருந்தார்; ஏனெனில், சத்தியமாகிய கருவூலத்தை மனிதர்களுக்கு மிகக் கவர்ச்சிதரும் விதத்தில் தெரிவிப்பதற்கு, கிருபை அவரது உதடுகளிலிருந்து ஊற்றப்பட்டிருந்தது. தவறான எண்ணமுடையவர்களாக இருந்தவர்களின் இருதயங்களை உதாரணங்களின்மூலமாக வியப்படையச் செய்து, அவர்களைக் கவர்ந்துகொள்ளும் திறமையுடையவராக அவர் இருந்தார். அப்படிப்பட்ட மனதின் படைப்புத்திறனின்மூலமாக அவர் மக்களின் இருதயங்களை அடைந்தார். அன்றாட வாழ்க்கையின் காரியங்களிலிருந்து அவர் உதாரணங்களை எடுத்துக்கொண்டார். அவைகள் மிகவும் சாதாரண மானவைகளாக இருந்திருந்தபோதிலும், அவைகளுக்குள் ஆழமும் ஆச்சரியமுமிக்க பொருள்கள் அடங்கியிருந்தன. ஆகாயத்தில் பறக்கும் பறவைகள், வயல்களில் உள்ள லீலி மலர்கள், விதை, மேய்ப்பனும் ஆடும்— இந்தப் பொருட்பாடங்களின்மூலமாகக் கிறிஸ்து அழியாமையின் சத்தியங்களை விளக்கிக் காட்டினார். அதன் பின்னர், இப்படிப்பட்ட பொருள்களை வைத்து விளக்கியிருந்த அவரது உரைகளைக் கேட்டிருந்தவர்கள், இயற்கையின் இந்தப் பொருள்களைக் காணநேர்ந்தபோதெல்லாம் அவரது வார்த்தைகளை ஞாபகப்படுத்திக்கொண்டனர். கிறிஸ்துவின் இந்த விளக்கப் பாடங்கள் அவரது போதனைகளைத் தொடர்ந்து கூறிக்கொண்டிருந்தன. (10)

கிறிஸ்து மனிதர்களை ஒருபோதும் முகஸ்துதி செய்யவில்லை. அவர்களது மனத்தோற்றங்களையும் கற்பனைகளையும் உயர்த்தக்கூடிய எதையும் அவர் ஒருபோதும் பேசவில்லை; அல்லது அவர்கள் சாமர்த்தியமாகக் கண்டுபிடித்தவைகளையும் போற்றவில்லை; ஆனால், தவறான எண்ணமற்ற ஆழந்த சிந்தனையாளர்கள் அவரது போதனைகளை ஏற்றுக்கொண்டு, அது அவர்களது ஞானத்தை சோதித்ததைக் கண்டனர். மிகச் சாதாரணமான மொழியால் உணர்த்தப்பட்ட ஆவிக்குரிய சத்தியங்களில் அவர்கள் ஆச்சரியமடைந்தனர். மிக மேலான கல்வியறிவை உடையவர்களாக இருந்தவர்கள் அவரது வார்த்தைகளினால் கவரப்பட்டனர். கல்வி அறிவற்றவர்கள் எப்பொழுதும் பயனடைந்தனர். கல்வி அறிவற்றவர்களுக்கான ஒரு தூது அவரிடமிருந்தது. புற சமயத்தாருங்கூட தங்களுக்கான ஒரு தூது அவரிடம் உள்ளது என்பதைப் புரிந்துகொள்ளும்படி அவர் செய்தார். (11)

மென்மையும் மனஉருக்கமும், துன்பங்களினால் களைத்துப் போயிருந்த இருதயங்களைத் தொட்டபோது, அவைகளுக்குச் சுகத்தைக் கொண்டுவந்தது. கோபமிக்க அவரது எதிரிகளினால் உண்டான கலக்கங்களுக்கு நடுவிலும், அவர் சமாதானமிக்க ஒரு சூழ்நிலையால் சூழப்பட்டிருந்தார். அவரது முகத்தின் அழகு, அவரது பண்பின் இனிமை இவை எல்லாவற்றிற்கும்மேலாக, அவரது பார்வையிலும் குரலிலும் இருந்த அன்பின் உணர்த்துதல் ஆகியவை, அவநம்பிக்கையினால் கடினமடையாத இருதயங்களை உடையவர்களாக இருந்த அனைவரையும் அவர்பால் இழுத்துக்கொண்டது. அவரது பார்வை, வார்த்தை ஒவ்வொன்றிலுமிருந்து இனிமையும் அனுதாபமுமிக்க ஆவி வெளிப்படுத்தப்படாமலிருந்திருந்தால், அவரைச் சூழ்ந்திருந்த பெருங்கூட்டத்தை அவரால் கவர்ந்திருந்திருக்க முடியாது. துன்பப்பட்டிருந்தவர்கள் அவரிடம் வந்திருந்தார்கள். விசுவாசமும் மென்மையுமிக்க ஒரு நண்பராக, அவர் தமது விருப்பத்துடன் அவர்களது விருப்பங்களை இணைத்திருந்ததை அவர்கள் உணர்ந்து, அவர் போதித்த சத்தியங்களை அதிகமாக அறியவிரும்பியிருந்தனர். பரலோகம் சமீபமாகக் கொண்டுவரப்பட்டிருந்தது. அவரது அன்பின் அரவணைப்பு, அவர்களுடன் தொடர்ச்சியாக இருக்கவேண்டும் என்பதற்காக, அவர்கள் அவரது பிரசன்னத்தில் இருக்க ஏங்கினர். (12)

அவரது உரைகளைக் கேட்டிருந்தவர்களின் முகபாவங்களில் உண்டான மாற்றங்களை ஆழந்த அக்கறையுடன் இயேசு கவனித்தார். ஆர்வத்தையும் மகிழ்ச்சியையும் வெளிக்காட்டிய முகங்கள் அவருக்குப் பெரும் திருப்தியைக் கொண்டுவந்தன. சுயநலம் என்னும் தடைகளுக்கு ஊடாக சத்தியத்தின் அம்புகள் ஆத்துமாவிற்குள் சென்று, இருதயம் நொறுங்குதலையும், இறுதியாக நன்றியுணர்வினையும் உண்டுபண்ணின போது, இரட்சகர் மகிழ்ச்சியடைந்தார். அவரது உரையைக் கவனித்துக் கொண்டிருந்தவர்களின் கூட்டத்தின்மீது அவரது பார்வை கடந்துசென்றபோது, இதற்குமுன் அவர் பார்த்திருந்தவர்களின் முகங்களை அவர் மீண்டும் அடையாளங்கண்டபோது, அவரது முகம் மகிழ்ச்சியால் ஒளியடைந்தது. தமது இராஜ்யத்திற்குத் தகுதியானவர்களை அவர் அவர்களில் கண்டார். தெளிவாகப் பேசப்பட்ட சத்தியம், பேணப்பட்டிருந்த சில விக்கிரகங்களைத் தொட்டபோது, அப்படிப்பட்டவர்களின் முகக்களையில் உண்டான மாற்றமும், குளிர்ந்த விருப்பமற்ற பார்வையும், அவர்கள் ஒளியை வரவேற்கவில்லை என்பதையும் அவர் கண்டார். சமாதானத்தின் தூதை மனிதர்கள் மறுத்தபோது, அவரது இதயம் மிகவும் ஆழமாகக் குத்துண்டது. (13)

அவர் அமைப்பதற்காக வந்திருந்த இராஜ்யத்தைப்பற்றியும், சாத்தானுக்கு அடிமைகளாக இருப்பவர்களை விடுதலைசெய்வதைப்

பற்றியும் இயேசு ஜெப ஆலயத்தில் பேசினார். அப்போது பயங்கரமான ஒரு அலறுதலினால் அவர் இடையூறுசெய்யப்பட்டார். அசுத்த ஆவி பிடித்த ஒரு மனிதன் ஜனக்கூட்டத்திற்கிடையிலிருந்து ஒடிவந்து: "ஐயோ, நசரேயனாகிய இயேசுவே, எங்களுக்கும் உமக்கும் என்ன? எங்களைக் கெடுக்கவா வந்தீர்; உம்மை இன்னாரென்று அறிவேன்; நீர் தேவனுடைய பரிசுத்தர்" என்று உரத்த சத்தமிட்டான். (14)

இப்பொழுது அனைத்தும் குழப்பத்திலும் பீதியிலும் நிறைந்திருந்தது. மக்களின் கவனம் கிறிஸ்துவிலிருந்து, வேறு பக்கமாகத் திருப்பப்படவே, அவரது வார்த்தைகள் கேட்கப்படாமல் ஆயிற்று. தன்னால் பாதிக்கப்பட்டவனை ஜெய ஆலயத்திற்குள் நடத்துவது சாத்தானின் நோக்கமாக இருந்தது; ஆனால், இயேசு: "நீ பேசாமல் இவனைவிட்டுப் புறப்பட்டுப் போ என்று அதனை அதட்டினார்; அப்பொழுது பிசாசு அவனை மக்களின் நடுவே விழத்தள்ளி, அவனுக்கு ஒரு சேதமுஞ்செய்யாமல் அவனைவிட்டுப் போய்விட்டது." (15)

பரிதவிக்கும் நிலையிலிருந்த—துன்பப்பட்டிருந்த அந்த மனிதனின் மனம் சாத்தானால் இருளாக்கப்பட்டிருந்தது; ஆனால், இரட்சகரின் பிரசன்னத்தில் இந்த சோக இருளைத் துளைத்துக்கொண்டு, ஒரு ஒளிக்கீற்று சென்றது. சாத்தானின் கட்டுப்பாட்டிலிருந்து விடுதலைபெற முயலும்படி அந்த மனிதன் எழுப்பப்பட்டான். ஆனால், அந்தப் பிசாசு கிறிஸ்துவின் வல்லமையைத் தடுத்தது. அந்த மனிதன் உதவிக்காக இயேசுவை நோக்கி மன்றாட முயன்றபோது, அசுத்த ஆவி அவனது வாயில் வார்த்தைகளை வைக்கவே, அவன் பயத்தின் வேதனையால் அலறினான். தன்னை விடுதலை செய்யக்கூடிய ஒருவரின் பிரசன்னத்தில் இருப்பதை அசுத்த ஆவி பிடித்த அந்த மனிதன் அரைகுறையாக அறிந்து, அந்த வல்லமைமிக்க கரத்தின் அருகில்வர முயன்றபோது, வேறொரு மனம் அவனைத் தடுத்தது. அவன்மூலமாக மற்றொருவனின் வார்த்தைகள் வெளிப்பட்டன. சாத்தானின் வல்லமைக்கும் விடுதலை பெறவேண்டும் என்ற அந்த மனிதனின் விருப்பத்திற்கும் எதிரான போர் மிகப் பயங்கரமானதாக இருந்தது. (16)

வனாந்தரத்தில் சோதனையின்போது, சாத்தானை வென்றவர் மறுபடியும் அவரது சத்துருவை முகமுகமாகச் சந்திக்கும்படிக் கொண்டுவரப்பட்டார். தனது அடிமையைத் தனது கட்டுப்பாட்டிற்குள் வைப்பதற்குப் பிசாசானவன் தனது வல்லமை முழுவதையும் பயன்படுத்தினான். இங்கு தோல்வியடைவது இயேசுவிற்கு வெற்றியைக் கொடுப்பதாக ஆகிவிடும். சித்திரவதை செய்யப்பட்டிருந்த மனிதன் எதிரியுடனுள்ள சண்டையில் தனது உயிரை இழந்து, அழிந்துவிடவேண்டியதிருக்கும் என்பதுபோல்

காணப்பட்டது; ஆனால், இரட்சகர் அதிகாரத்துடன் பேசி, சிறைப்பட்டவனை விடுவித்தார். அசுத்த ஆவியினால் பிடிக்கப்பட்டிருந்த அந்த மனிதன் ஆச்சரியப்பட்டுக்கொண்டிருந்த மக்களின்முன் தன் சுயநிலையில் மகிழ்ச்சியுள்ளவனாக நின்றுகொண்டிருந்தான். இரட்சகரின் தெய்வீக வல்லமைக்குப் பிசாசுங்கூட சாட்சி பகர்ந்தது. (17)

அந்த மனிதன் தனது விடுதலைக்காக தேவனை ஸ்தோத்திரித்தான். இதுவரை பைத்தியம் என்னும் நெருப்பால் வெறித்து நோக்கிக்கொண்டிருந்த அவனது கண்கள், இப்பொழுது நுண்ணறிவுடன் ஒளிவீசி, நன்றியுணர்வுமிக்க கண்ணீர் சிந்தியது.வியப்பினால் மக்கள் பேச்சற்றவர்களானார்கள். அவர்கள் மறுபடியும் பேசும் நிலைக்கு வந்தவுடன், “எல்லாரும் ஆச்சரியப்பட்டு: இது என்ன? இந்தப் புதிய உபதேசம் எப்படிப்பட்டது? இவர் அதிகாரத்தோடே அசுத்த ஆவிகளுக்கும் கட்டளையிடுகிறார், அவைகளும் இவருக்குக் கீழ்ப்படிகிறதே என்று தங்களுக்குள்ளே ஒருவரோடொருவர் சொல்லிக்கொண்டார்கள்”– மாற்கு 1:27. (18)

இந்த மனிதன் காணக்கூடிய தனது நண்பர்களின் பார்வையில் ஒரு பயங்கரமானவனாகவும், தனது வாழ்க்கைக்குத் தானே ஒரு பாரமாகவும் இருந்ததற்கான இரகசியமான காரணம் அவனது சொந்த வாழ்க்கையிலேயே இருக்கிறது. பாவ சந்தோஷங்களினால் அவன் கவரப்பட்டவனாக இருந்து, வாழ்க்கையை ஒரு பெரும் களியாட்டமாக அமைக்க அவன் எண்ணியிருந்தான். உலகத்திற்கு ஒரு பயங்கரமாகவும், தனது குடும்பத்தின் நிந்தனைக்கு ஆளாகவும் வேண்டுமென்று அவன் கனவுகாணவில்லை. குற்றமற்ற தவறுகளில் தனது காலத்தைச் செலவிடலாம் என அவன் எண்ணினான்; ஆனால், ஒருமுறை அவனது பாதங்களை கீழ்நோக்கும் திசையில் அவன் வைத்தபோது, அவைகள் விரைவாக இறங்க ஆரம்பித்தன. அவனது மேன்மைமிக்க குணாதிசயங்களை, இச்சையடக்கமின்மையும் கேவலமான சம்பாஷணைகளும் வழிபிசகச்செய்யவே, சாத்தான் அவனைத் தன் முழுக்கட்டுப்பாட்டிற்குள் வைத்துக்கொண்டான். (19)

பாவத்தைக்குறித்த மனவுறுத்தல் தாமதமாக வந்தது. தனது மனித இயல்பைத் திரும்பவும் பெற்றுக்கொள்ள செல்வத்தையும் இன்பங்களையும் அவன் தியாகஞ்செய்திருக்கக்கூடிய வேளையில், அவன் உதவியற்றவனாகி, சத்துருவின் பிடியில் சிக்கிக்கொண்டான். அவன் தன்னைச் சாத்தானின் தளத்தில் வைத்தபோது, அவனது திறன்களனைத்தையும் சாத்தான் தனது உடைமையாக்கிக்கொண்டான். கவர்ச்சிமிக்க அநேகக் காரியங்களை, அவன் முன்வைத்து, சோதனைக்காரன் அவனை வசீகரித்தான்; ஆனால், இரங்கத்தக்க நிலையிலுள்ள அந்த மனிதன், ஒருமுறை அவனது

வல்லமைக்குள்ளானபோது, பிசாசானவன் அவனது கொடுமையில் மிகவும் கடுமையானவனாகி, அவனைக் கோபத்துடன் ஆட்கொள்ளுவதில் பயங்கரமானவனாக இருந்தான். தீமைக்கு இடங்கொடுக்கும் அனைவரது நிலைமையும் இப்படித்தான் ஆகும். அவர்களது பழக்கங்களின் ஆரம்பத்தில் விநோதமான கவர்ந்திழுக்கும் இன்பங்கள் நம்பிக்கையற்ற இருளில் அல்லது பாழாக்கப்பட்ட ஒரு ஆத்துமாவின் பைத்தியத்தில் முடிவடையும். (20)

வனாந்தரத்தில் கிறிஸ்துவை சோதித்த அதே தீய ஆவி, கப்பர்நகூமில் பைத்தியக்காரனைபற்றிக்கொண்ட அதே அசுத்த ஆவி, அவிசுவாசிகளாயிருந்த யூதர்களையும் கட்டுப்படுத்தியிருந்தது; ஆனால், சாத்தான் ஒரு பக்திமிக்க நிலைமை அவர்களுக்குள் இருப்பதாக எண்ணச்செய்து, இரட்சகரை புறக்கணிக்கின்ற அவர்களது நோக்கத்தில் அவர்களை வஞ்சிக்க வகைதேடினான். பிசாசு பிடித்திருந்தவனைவிட, அவர்களது நிலை மிகவும் மோசமானதாக இருந்தது; ஏனெனில், கிறிஸ்து தேவையில்லை என்னும் உணர்வை உடையவர்களாக அவர்கள் இருந்தனர்; எனவே, அவர்கள் சாத்தானின் வல்லமையின்கீழ் பலமாகக் கட்டிவைக்கப்பட்டிருந்தனர். (21)

மனிதர்களுக்கிடையில் கிறிஸ்து நேரடியாக ஊழியஞ்செய்திருந்த காலந்தான், இருளின் இராஜ்யத்தின் சேனைகளின் அதிகமாக செயல்பட்ட காலமாக இருந்தது; ஏனெனில், ஆண்டாண்டு காலமாக சாத்தான் அவனது தீய தூதர்களுடன் சேர்ந்து, மனிதர்களின் சரீரங்களையும் ஆத்துமாக்களையும் கட்டுப்படுத்தவும், அவர்கள்மீது பாவத்தையும் துன்பங்களையும் கொண்டுவரவும் வகைதேடியிருந்தான். அதன்பின், இந்தத் துன்பங்களுக்கெல்லாம் தேவன்தான் காரணமென்று அவரைக் குற்றப்படுத்தியிருந்தான். இயேசு மனிதர்களுக்கு தேவனுடைய குணத்தை வெளிக்காட்டிக்கொண்டிருந்தார். அவர் சாத்தானின் வல்லமையைத் தகர்த்து, அவனது அடிமைகளை விடுதலைசெய்துகொண்டிருந்தார். புதிய ஜீவன், அன்பு, வல்லமை ஆகியவை பரலோகத்திலிருந்து, மனித இதயங்களின்மீது அசைவாடிக்கொண்டிருந்தன. பொல்லாங்கன் அவனது இராஜ்யத்தின் மேன்மைக்காகப் போராடும்படி எழுப்பப்பட்டான். சாத்தான் தனது சேனைகளையெல்லாம் அணிதிரட்டி, கிறிஸ்துவின் ஊழியத்தின் ஒவ்வொரு அடியிலும் எதிர்த்தான். (22)

நீதிக்கும் பாவத்திற்கும் இடையிலுள்ள இறுதிப் போராட்டத்தில் சாத்தான் ஈடுபடுவான். கிறிஸ்துவின் சீடர்களின்மீது உன்னதத்திலிருந்து புதிய ஜீவன், புதிய ஒளி, புதிய வல்லமை ஆகியவை இறங்கிக்கொண்டிருக்கும்போது, கீழிருந்து ஒரு ஜீவன் கிளர்ந்தெழும்பி, சாத்தானின் ஏவலர்களைப்

பலப்படுத்திக்கொண்டிருக்கும் பூமியிலுள்ள அனைத்து மூலகங்களையும் அதின் உக்கிரம் பற்றிக்கொள்ளும். நூற்றுக்கணக்கான ஆண்டுகளாகப் போராட்டம் நடத்தியதினால், உண்டான தந்திரத்தினால், அந்தகாரப்பிரபு மாறுவேடத்தில் செயலாற்றுகிறான். அவன் ஒளியின் தூதனுடைய வேஷத்தைத் தரித்துக்கொண்டு தோன்றுகிறான். திரளானவர்கள் "வஞ்சிக்கிற ஆவிகளுக்கும் பிசாசுகளின் உபதேசங்களுக்கும் செவிகொடுக்கின்றனர்"–1 தீமோத்தேயு 4:1. (23)

கிறிஸ்துவின் காலத்தில், சாத்தானின் செயலைத் தடுத்து நிறுத்தும் வல்லமையற்றவர்களாக இஸ்ரவேலின் தலைவர்களும் போதகர்களும் இருந்தனர். அசுத்த ஆவிகளுக்கு எதிராக அவர்கள் நின்றிருந்திருக்கக்கூடிய அந்த ஒரே ஒரு வழிவகையை அவர்கள் அலட்சியஞ்செய்துகொண்டிருந்தனர். தேவனுடைய வார்த்தையினால்தான் கிறிஸ்து தீயவனை மேற்கொண்டிருந்தார். தேவனுடைய வார்த்தைக்கு நாங்கள்தான் விளக்கங்கொடுப்பவர்கள் என்று இஸ்ரவேலின் தலைவர்கள் கூறிக்கொண்டிருந்தனர்; ஆனால், அவர்கள் தங்களுடைய பாரம்பரியங்களை நிலைநிறுத்தவும், மனிதனால் உண்டாக்கப்பட்ட ஆசரிப்புகளை வலியுறுத்தவும்மட்டுமே அவைகளை ஆராய்ந்திருந்தனர். அவர்களது விளக்கங்களினால் தேவன் ஒருபோதும் அளித்திராத நுண்ணுணர்வுகளை அவர்கள் வெளிக்காட்டியிருந்தனர். அவர் தெளிவாக்கியிருந்தவைகளையெல்லாம், தேவ இரகசியம் என்னும் அவர்களது கட்டுமானம் தெளிவற்றதாக்கியிருந்தது. முக்கியத்துவமில்லாத மறையியல் சார்ந்த நுட்பமான வேறுபாடுகளைப்பற்றி அவர்கள் தர்க்கஞ்செய்து, அதிமுக்கியமான சத்தியங்களை நடைமுறையில் மறுத்திருந்தனர். இவ்விதமாக, இறை நம்பிக்கையின்மை எங்கும் விதைக்கப்பட்டிருந்தது. தேவனுடைய வார்த்தையிலிருந்த வல்லமை கொள்ளையிடப்படவே, அசுத்த ஆவிகள் அவைகளின் விருப்பப்படிச் செயலாற்றின. (24)

வரலாறு திரும்ப நிகழ்கிறது. நமது காலத்திலுள்ள அநேக சமயத் தலைவர்கள், தங்களுக்கு முன்னால் திறந்த வேதாகமங்களை வைத்துக்கொண்டு, அதின் போதனைகளுக்கு பக்திசெலுத்துவதாகக் கூறிக்கொண்டு, காரியத்திலுள்ள தேவனுடைய வார்த்தைகள் என்னும் விசுவாசத்தை அழித்துக்கொண்டுள்ளனர். வேதவாக்கியங்களைப் பிரித்து, அதின் தெளிவான அறிக்கைகளுக்கு மேலாகத் தங்களுடைய கருத்துக்களை அமைப்பதற்கு, அவர்கள் விரைவானவர்களாக இருந்தனர். அவர்களது கரங்களில், தேவனுடைய வார்த்தை அதன் உயிர்ப்பிக்கும் வல்லமையை இழந்துவிடுகிறது. இதன் காரணமாகத்தான் இறைவன் இல்லை என்னும் கொள்கை பரவி, அக்கிரமம் மலிந்திருக்கிறது. (25)

வேதாகமத்தின்மீதுள்ள விசுவாசத்தைச் சாத்தான் தகர்த்திருக்கும் போது, ஒளிக்காகவும் வல்லமைக்காகவும் வேறு ஆதாரங்களைத் தேடிச்செல்லும்படி மனிதர்களை நடத்துகிறான். இவ்விதமாக, சாத்தான் தன்னை மறைத்துக்கொண்டு வஞ்சகமாகச் செயல்படுகிறான். வேதவாக்கியங்களிலுள்ள தெளிவான போதனைகளிலிருந்தும், தேவனுடைய பரிசுத்த ஆவியின் மன உணர்த்துதலையும் விட்டுத்திரும்புபவர்கள், பேய்களின் கட்டுப்பாட்டை வரவேற்பவர்களாக உள்ளனர். வேதவாக்கியங்களைப்பற்றிய விமரிசனங்களும் யூகங்களும் ஆவிமார்க்கம், ஈசுவர தியானம் ஆகிய நவீனமயமாக்கப்பட்ட பண்டைய புறமதக்கோட்பாடுகள், கர்த்தராகிய இயேசு கிறிஸ்துவின் சபை என்று கூறிக்கொண்டிருப்பவைகளில் இடம்பற்றிக்கொள்ள பாதையைத் திறக்கின்றன. (26)

சுவிசேஷம் பிரசங்கிக்கப்படுகின்ற அதே நேரத்தில், அதனருகில் பொய்யின் ஆவிகளால் இயக்கப்படும் ஏவலர்களும் செயலாற்றுகின்றனர். தெரிந்துகொள்ளவேண்டும் என்ற ஆர்வத்தினால் மட்டும் உந்தப்பட்டு, அநேகர் இதில் ஈடுபட்டு, மனித வல்லமைக்கும் மேலான ஒரு வல்லமை செயல்படுவதைக் கண்டு, தங்களது மனோவலிமையைவிடப் பலம்வாய்ந்த மனோவலிமையால் கட்டுப்படுத்தப்படும்வரை, மேலும் மேலும் கவரப்படுகிறார்கள். இரகசியமான அதன் வல்லமையிலிருந்து அவர்களால் தப்பிக்கமுடியாது. (27)

ஆத்துமாவின் பாதுகாப்புகள் அனைத்தும் தகர்க்கப்படுகின்றன. பாவத்திற்கு எதிரான வேலி அவனுக்கு இல்லை. தேவனுடைய வார்த்தையில் உள்ள கட்டுப்பாடுகளும் அவரது ஆவியும் ஒருமுறை புறக்கணிக்கப்பட்டிருக்கும்போது, கீழ்த்தரத்தின் எந்த ஆழத்திற்குள் அவன் அமிழ்வான் என்பதை ஒரு மனிதனும் அறிவதில்லை. இரகசியமான பாவமோ அல்லது பெரும் இச்சையோ அசுத்த ஆவியினால் பிடிக்கப்பட்டு உதவியற்றவனாக இருந்த அந்தக் கப்பர்நகூம் மனிதனைப்போல, அவனை அடிமையாக்கிவிடும்; அப்படியிருந்தபோதிலும், அவனது நிலைமை நம்பிக்கையற்றதாக இல்லை. (28)

கிறிஸ்து எந்தக் கருவியினால் சாத்தானை மேற்கொண்டாரோ அதே கருவியினால்—தேவனுடைய வார்த்தையின் வல்லமையினால் நாமும் மேற்கொள்ளலாம். நமது சம்மதம் இல்லாமல் தேவன் நமது மனதைக் கட்டுப்படுத்துவதில்லை; ஆனால், நாம் அவரது சித்தத்தை அறிந்து, அதின்படி செயலாற்ற விரும்பினால், அவரது வாக்குத்தத்தங்கள் நமக்கானவையாகின்றன. “நீங்கள் சத்தியத்தையும் அறிவீர்கள், சத்தியம் உங்களை விடுதலையாக்கும்... அவருடைய சித்தத்தின்படி

செய்ய மனதுள்ளவனெவனோ அவன் இந்த உபதேசம் தேவனால் உண்டாயிருக்கிறதோ... என்று அறிந்து கொள்வான்"—யோவான் 8:32; 7:17. இந்த வாக்குத்தத்தத்திலுள்ள விசுவாசத்தின்மூலமாக, தவறின் கண்ணிகளில் இருந்தும் பாவத்தின் கட்டுப்பாட்டிலிருந்தும் ஒவ்வொரு மனிதனும் விடுதலைபெறலாம். (29)

தன்னை எந்த வல்லமை ஆட்சிசெய்யவேண்டும் என்பதைத் தெரிந்துகொள்ள ஒவ்வொரு மனிதனும் சுதந்திரம் உள்ளவனாக இருக்கிறான். அந்த அளவிற்குக் கீழாக ஒருவரும் விழுந்துவிடவில்லை. அவ்வளவு கெட்டவர்களாக ஒருவரும் இல்லை. கிறிஸ்துவில் அவர்களால் விடுதலையைக் காணமுடியும். ஜெபத்திற்குப் பதிலாக அந்த அசுத்த ஆவிபிடித்தவனால் சாத்தானின் வார்த்தைகளைமட்டும் கூறமுடிந்தது. இருந்தபோதிலும், அந்த இருதயத்தால் பேசப்படாத வேண்டுகோள் கேட்கப்பட்டது. தேவைமிக்க ஆத்துமாவிலிருந்துண்டாகும் அழுகுரல், வார்த்தையால் வெளிப்படமுடியாததாகப் போனாலும்கூட, அது கேட்கப்படாமல் இருக்கமாட்டாது. பரலோகத்தின் தேவனுடன் ஒரு உடன்படிக்கையின்மூலமாக உறவுகொள்ள இணங்கும் எவரும், சாத்தானின் வல்லமைக்கோ அல்லது தங்களது பலவீனமான தன்மையிலோ விட்டுவிடப்படமாட்டார்கள். "அவன் என் பெலனைப் பற்றிக்கொண்டு என்னோடே ஒப்புரவாகட்டும்; அவன் என்னோடே ஒப்புரவாவான்" (ஏசாயா 27:5) என்று அவர்கள் இரட்சகரால் அழைக்கப்படுகின்றனர். அந்தகார ஆவிகள் ஒருமுறை அவைகளின் ஆளுகைக்கு உட்பட்டுவிட்ட ஆத்துமாவிற்காகப் போராட்டஞ்செய்யும்; ஆனால், அந்த ஆத்துமாவிற்காக தேவனுடைய தூதர்கள் வெற்றிபெறும் வல்லமை உள்ளவர்களாகப் போரிடுவார்கள். "பராக்கிரமன் கையிலிருந்து கொள்ளைப்பொருளைப் பறிக்கக்கூடுமோ? அல்லது நீதியாய்ச் சிறைப்பட்டுப்போனவர்களை விடுவிக்கக்கூடுமோ? என்றாலும் இதோ, பராக்கிரமனால் சிறைப்படுத்தப்பட்டவர்களும் விடுவிக்கப்படுவார்கள்; பெலவந்தனால் கொள்ளையிடப்பட்டதும் விடுதலையாக்கப்படும்; உன்னோடு வழக்காடுகிறவர்களோடே நான் வழக்காடி, உன் பிள்ளைகளை இரட்சித்துக்கொள்ளுவேன்"—ஏசாயா 49:24,25. (30)

ஜெப ஆலயத்திலிருந்த மக்கள் கூட்டம் இன்னும் திகைத்து செயலற்றவர்களாக இருந்தபோது, இயேசு சற்றுநேரம் இளைப்பாறுவதற்காக அவர்களைவிட்டுப் பேதுருவின் வீட்டிற்குச் சென்றார்; ஆனால், இங்கும் ஒரு நிழல் விழுந்திருந்தது. பேதுருவின் மாமியார் கடுஞ்ஜூரத்தினால் தாக்கப்பட்டு, படுத்திருந்தாள். இயேசு அந்த நோயைக் கடிந்தபோது, அந்த நோயாளி ஜூரத்திலிருந்து விடுபட்டு எழுந்து, ஆண்டவருக்கும் அவரது சீடர்களுக்கும் பணிவிடைசெய்தாள். (31)

கிறிஸ்துவின் ஊழியத்தைப்பற்றிய செய்தி விரைவில் கப்பர்நகூம் எங்கும் பரவியது. மக்கள் ரபிமார்களுக்குப் பயந்து, ஓய்வுநாளில் சுகமடைவதற்காக இயேசுவிடம் வரத் துணியாமலிருந்தனர்; ஆனால், சூரியன் மறைந்தவுடன் மக்களின் கூட்டம் திரண்டது. இயேசு தங்கியிருந்த எளிமையான வீட்டை நோக்கி, வீடுகள், கடைகள், சந்தை வெளிகள் ஆகியவைகளில் இருந்த அந்த நகர மக்கள் நெருங்கிச்சென்றனர். சுகமில்லாதவர்கள் தொட்டிலில் கொண்டுவரப்பட்டனர். அவர்கள் கம்புகளை ஊன்றிக்கொண்டு வந்தனர்; அல்லது நண்பர்களால் தாங்கிக் கொண்டுவரப்பட்டனர். அவர்கள் இரட்சகரின் சமூகத்திற்குத் தள்ளாடியவர்களாய் வந்தனர். (32)

ஒவ்வொரு மணிநேரமாக அவர்கள் வந்துபோய்க்கொண்டிருந்தனர்; ஏனெனில், சுகமளிப்பவர் நாளை அவர்களுக்கு நடுவில் இன்னும் இருப்பாரா என்பதை ஒருவரும் அறியமுடியாதவர்களாக இருந்தனர். இதற்குமுன் கப்பர்நகூம் இப்படிப்பட்ட ஒரு நாளைக் கண்டதே இல்லை. வெற்றி, விடுதலை ஆகியவைகளின் சத்தத்தினால் ஆகாயம் நிரம்பியிருந்தது. இரட்சகர், தாம் விழிப்புணர்வைத் தூண்டி, ஏற்படுத்திய மகிழ்ச்சியினால் அவரும் மகிழ்ந்திருந்தார். அவரிடம் வந்தவர்களின் பாடுகளை அவர் கண்டபோது, அவரது இதயம் அனுதாபத்தினால் கலங்கியது. அவர்களுக்குச் சுகத்தையும் சந்தோஷத்தையும் திரும்பக்கொடுத்திருந்த அவரது வல்லமையில் அவர் களிகூர்ந்தார். (33)

கடைசி நோயாளி சுகமடைகின்றவரை இயேசு தமது பணியைவிட்டு ஓயாதவராக இருந்தார். திரளானவர்கள் சென்று முடிந்தபோது, இரவின் அதிக நேரம் கடந்திருந்தது; சீமோனின் வீட்டில் அமைதி குடிகொண்டது. பரபரப்பான அந்த நீண்டநாள் கழிந்துசெல்லவே, இயேசு இளைப்பாறுதலைத் தேடினார்; ஆனால் அந்த நகரம் இன்னும் நித்திரையிலிருந்தபொழுதே—பொழுதுவிடியுமுன் அதிகாலையிலேயே இரட்சகர் எழுந்து வெளியே தனிமையான ஓரிடத்திற்குச்சென்று, அங்கு ஜெபஞ்செய்தார். (34)

இயேசுவின் பூமிக்குரிய வாழ்க்கையின் நாட்கள் இவ்விதமாகச் செலவிடப்பட்டன. அவர் தமது சீடர்களை தங்களுடைய வீடுகளுக்குச்சென்று இளைப்பாறும்படி அடிக்கடி அனுப்பியிருந்தார்; ஆனால், அவரது பணியிலிருந்து அவரைத் திருப்பும் அவர்களது முயற்சிகளை அவர் மென்மையாகத் தடுத்தார். அறியாமையிலிருந்தவர்களுக்குப் போதனைசெய்து, நோயுற்றவர்களை சுகப்படுத்தி, குருடர்களுக்குப் பார்வை கொடுத்து, திரளானவர்களுக்கு உணவளித்து, நாள் முழுவதும் அவர் உழைத்தார். மாலையிலோ அல்லது காலையிலோ அவரது பிதாவுடன் தொடர்புகொள்ளுவதற்காக அவர் மலைகளில் தூரமாக இருந்த வனங்களுக்குச் சென்றிருந்தார். அடிக்கடி

அவர் இரவு முழுவதையும் ஜெபத்திலும் தியானத்திலும் செலவிட்டு, மக்களின் நடுவில் ஊழியஞ்செய்வதற்காக அதிகாலையில் திரும்பியிருந்தார். (35)

கப்பர்நகூம் மக்கள் அவரைத் தேடிக்கொண்டிருக்கின்றனர் என்று கூறிக்கொண்டு, அதிகாலையில் பேதுருவும் அவனது தோழர்களும் இயேசுவிடம் வந்தனர். இதுவரை இயேசுவிற்குக் கொடுக்கப்பட்டிருந்த வரவேற்புகளினால் அவரது சீடர்கள் மிகவும் மனமடிவடைந்திருந்தனர். எருசலேமிலிருந்த அதிகாரிகள் அவரைக் கொலைசெய்ய வகைதேடியிருந்தனர். அவரது உயிரை எடுத்துக்கொள்ள அவரது ஊர் மனிதர்களுங்கூட முயன்றனர்; ஆனால், கப்பர்நகூமில் அவர் மகிழ்ச்சிமிக்க உற்சாகத்துடன் வரவேற்கப்பட்டார்; அதனால், அவரது சீடர்களின் நம்பிக்கை மீண்டும் கிளர்ந்தெழத்தொடங்கியது, புதிய இராஜ்யத்தை ஆதரிக்கக்கூடியவர்களை விடுதலையை நேசிக்கும் கலிலேயர்களுக்கிடையிலிருந்து காண முடிந்ததுதான் காரணமாக இருக்கவேண்டும். “தேவனுடைய இராஜ்யத்தைப்பற்றி நான் மற்ற ஊர்களிலும் பிரசங்கிக்கவேண்டும்; ஏனெனில் அதற்காகவே நான் அனுப்பப்பட்டிருக்கிறேன்” என்னும் கிறிஸ்துவின் வார்த்தைகளை அவர்கள் ஆச்சரியத்துடன் கேட்டனர். (36)

கப்பர்நகூமில் உண்டான இந்த உணர்ச்சிக்கொந்தளிப்பில் அவரது ஊழியத்தின் நோக்கத்தைப்பற்றிய பார்வையை இழந்து விடக்கூடிய அபாயம் இருந்தது. அற்புதம் நிகழ்த்துபவர், ஆச்சரியம் செய்பவர் அல்லது சரீரப்பிரகாரமான நோய்களை சுகப்படுத்துபவர் என்றுமட்டும், தம்பால் கவனத்தைத் திருப்பும் கவர்ச்சியில் இயேசு திருப்தியில்லாதவராக இருந்தார். அவர் இரட்சகராக மனிதர்களைத் தம்மிடம் இழுத்துக்கொள்ள வகைதேடியிருந்தார். அவர் ஒரு அரசராக தமது பூமிக்குரிய ஆளுகையை அமைப்பதற்கு வந்திருந்தார் என்று நம்புவதற்கு மக்கள் மிகுந்த ஆர்வம் உள்ளவர்களாக இருந்தபோது, அவர் அவர்களது மனங்களை பூமிக்குரியவைகளில் இருந்து ஆவிக்குரியவைகளுக்குத் திருப்ப வாஞ்சைமிக்கவராக இருந்தார். உலகப்பிரகாரமான சாதாரணமான வெற்றி அவரது ஊழியத்திற்கு இடையூறுசெய்யும். (37)

கவனமற்ற மக்களின் ஆச்சரியம் அவரது ஆவியை அதிர்ச்சிப்படுத்தியது. தம்மை மேன்மைப்படுத்திக் காட்டுகின்ற எதுவும் அவரது வாழ்க்கையில் கலந்திருக்கவில்லை. அந்தஸ்து, செல்வம், திறமை ஆகியவைகளுக்கு உலகம் கொடுக்கும் துதி மனிதகுமாரனுக்கு அந்நியமாக இருந்தது. தொடர்புகளையும் போற்றுதல்களையும் பெற்றுக்கொள்ளுவதற்காக மனிதர்கள் பயன்படுத்தும் எவ்விதமான கருவியையும் இயேசு பயன்படுத்தவில்லை. “அவர் கூக்குரலிடவுமாட்டார்; தம்முடைய சத்தத்தை உயர்த்தவும் அதை

வீதியிலே கேட்கப்பண்ணவுமாட்டார். அவர் நெரிந்தநாணலை முறியாமலும், மங்கியெரிகிற திரியை அணயாமலும், நியாயத்தை உண்மையாக வெளிப்படுத்துவார். அவர் நியாயத்தைப் பூமியிலே நிலைப்படுத்துமட்டும் இளக்கரிப்பதுமில்லை, பதறுவதுமில்லை" (ஏசாயா 42:2–4) என்று அவரது பிறப்பிற்கு நூற்றாண்டுகளுக்குமுன் அவரைப்பற்றி தீர்க்கதரிசனம் உரைக்கப்பட்டிருந்தது. (38)

பிறர் குறைகூறாத சடங்குகளிலும் தங்களுடைய தொழுகையின் தர்ம காரியங்களின் பகட்டு ஆரவாரங்களிலும், தங்களைச் சிறப்பித்துக்காட்டிட பரிசேயர்கள் வகைதேடியிருந்தனர். அவர்கள் தங்களது மதக்கோட்பாட்டை விவாதப்பொருளாகச்செய்துகொண்டு, அதனால் மதத்தின்மீதுள்ள தங்களது வைராக்கியத்தை மெய்ப்பிக்க முயன்றிருந்தனர். ஒருவரையொருவர் எதிர்க்கும் கட்சியினருக்கிடையில் நிகழ்ந்திருந்த வாக்குவாதத் குரல்கள் நீண்டு ஓசைமிக்கவையாக இருந்தன. கற்பனையைப்பற்றிக் கற்றறிந்த முனைவர்களுக்கிடையில் உண்டாயிருந்த கோபமிக்க எதிர்வாதத்தின் சத்தத்தைத் கேட்பது வழக்கமானதாக இருந்தது. (39)

இயேசுவின் வாழ்க்கையானது குறிப்பிடத்தகுந்த விதத்தில் அனைத்து வகைகளிலும் மாறுபட்டுக் காணப்பட்டது. ஓசைமிக்க முரண்பாடுகள், ஆடம்பரமிக்க தொழுகை, கைதட்டலைப் பெறுவதற்கான செயல்கள் ஆகிய எதுவும் அந்த வாழ்க்கையில் ஒருபோதும் காணப்படவில்லை. தேவனுக்குள் கிறிஸ்து மறைக்கப்பட்டிருந்து, அவரது குமாரனின் குணத்தில் தேவன் வெளிப்படுத்தப்பட்டிருந்தார். மக்கள் இந்த வெளிப்படுத்தலைக்கண்டு, தங்களது துதியை (தேவனுக்கு) செலுத்தும்வண்ணம் அவர்களது மனங்களைத் திருப்புவதை இயேசு வாஞ்சித்திருந்தார். (40)

கண்களைக் கூசச்செய்யும் தமது மகிமையுடனும் பிரகாசத்துடனும் நீதியின் சூரியன் உலகத்தின்மீது தோன்றவில்லை. "அவருடைய புறப்படுதல் அருணோதயம்போல ஆயத்தமாயிருக்கிறது"—ஓசியா 6:3. "அதின் செட்டைகளின்கீழ் ஆரோக்கியம் உடையதாக" (மல்கியா 4:2). உலகின்மீதுள்ள இருளை நீக்கிக்கொண்டு, உலகத்தை ஜீவனுக்குள் எழுப்பிக்கொண்டு, அமைதியாகவும் மென்மையாகவும் பகலின் ஒளி உதிக்கிறது. (41) ★

# 27

# உம்மால் என்னை சுத்தப்படுத்த முடியும்!

**மத்தேயு 8:2–4; 9:1–8, 32–34; மாற்கு 1:40–45; 2:1–12; லூக்கா 5:12–28**

**(The Desire of Ages, pp. 262–271)**

கீழ்த்திசை நாட்டினரால் சகல நோய்களையும்விட தொழுநோய் மிகவும் பயங்கரமானதாக எண்ணப்பட்டிருந்தது. குணப்படுத்த முடியாத அதன் தன்மை, தொற்றும் தன்மை, அது தாக்கியவர்களின்மீதுண்டாகும் பயங்கரமான பாதிப்பு ஆகியவை மிகவும் தைரியமுள்ளவர்களையுங்கூட பயத்தால் நிரப்பியிருந்தது. அது பாவத்தின் காரணமாக உண்டாகிய நியாயத்தீர்ப்பு என்று யூதர்களால் கருதப்பட்டு, “தாக்குதல்” என்றும், “தேவனுடைய விரல்” என்றும் அழைக்கப்பட்டிருந்தது. ஆழமாக வேரூன்றி, குணப்படுத்தமுடியாத சாவிற்கேதுவான அது, பாவத்தின் ஒரு அடையாளமாகக் காணப்பட்டிருந்தது. சடங்காச்சாரப் பிரமாணத்தினால் தொழுநோயாளி தீட்டானவன் என்று அறிவிக்கப்பட்டிருந்தான். அவன் ஏற்கனவே இறந்துபோன ஒருவனைப்போல மனிதர்கள் வாழுமிடங்களில் இருந்து வெளியே அடைக்கப்பட்டிருந்தான். அவன் தொட்டதெல்லாம் தீட்டாகியிருந்தது. அவனது சுவாசத்தினால் காற்று மண்டலம் மாசடைந்திருந்தது. இந்த நோய் உள்ளதா என்னும் சந்தேகத்திற்குட்பட்ட ஒருவர் தனக்குத் தொழுநோய் உண்டு அல்லது இல்லை என்று சோதித்து முடிவுசெய்யும் ஆசாரியர்களுக்குமுன் தோன்றவேண்டும். அவன் தொழுநோயாளி என்று அறிவிக்கப்பட்டால், தனது குடும்பத்தினரிடமிருந்து பிரிக்கப்பட்டு, இஸ்ரவேல் ஜனக்கூட்டத்திலிருந்து நீக்கப்பட்டு, அதேவிதமான நோயினால் துன்பப்படுகிறவர்களுடன் சேர்ந்துகொள்ளும்படியான, அவலநிலைக்கு ஆளாகவேண்டும். பிரமாணம் அதன் கோரிக்கையில் வளைந்துகொடுக்கக்கூடாததாக இருந்தது. அரசர்களும் அதிபதிகளுங்கூட அதற்கு விதிவிலக்காக இல்லை. பயங்கரமான இந்த நோயினால் தாக்கப்பட்டவர் ஒரு அரசனாக இருப்பினும், தனது செங்கோலை விட்டுவிட்டு சமுதாயத்திலிருந்து ஓடிப்போக வேண்டும். (1)

அவனது நண்பர்கள், உறவினர்கள் ஆகியவர்களைவிட்டுத் தூரமாக விலகியிருந்து, தொழுநோயாளி அவனது நோயின் சாபத்தைச் சுமப்பவனாக இருந்தாகவேண்டும். அவன் தனக்கு நேர்ந்த கடுந்துயர் நிறைந்த அவலநிலையை வெளியில் அறிக்கை செய்யும்விதத்தில், தனது உடைகளைக் கிழித்து, தன்னால் உண்டாகக்கூடிய நோய்த்தொற்றினின்று மற்றவர்கள் விலகி ஓடத்தக்கதாக, எச்சரிப்பின் செய்தியை அபாயக் குரலெழுப்பிக் கூறவேண்டும். சமுகத்திலிருந்து வெளியேற்றப்பட்டு, தனித்திருந்து, மிகுந்த துயரத்துடன் தீட்டு தீட்டு என்னும் அவன் கொடுக்கும் குரல் பயத்துடனும் அவருவருப்புடனும் கேட்கப்படும் ஒரு அடையாளமாக இருந்தது. (2)

கிறிஸ்து ஊழியஞ்செய்திருந்த அந்தப் பிரதேசத்தில் இப்படிப்பட்ட அநேக நோயாளிகள் இருந்தனர். அவரது ஊழியத்தின் செய்தி அவர்களுக்கு எட்டவே, அது நம்பிக்கையின் ஒளியை அவர்களுக்குள் கிளர்ந்தெழச்செய்தது; ஆனால், எலிசா தீர்க்கதரிசியின் காலத்திற்குப்பின், தொழுநோயால் தாக்கப்பட்ட ஒருவன் சுத்தப்படுத்தப்பட்டான் என்பது ஒருபோதும் அறியப்படாததாக இருந்தது. அவர் ஒருபோதும் ஒரு மனிதனுக்கும் செய்திராத ஒன்றினை தங்களுக்குச் செய்வார் என்று அவர்கள் எதிர்பார்க்கத் துணியவில்லை. அப்படியிருந்தும், தனது இருதயத்தில் விசுவாசம் எழும்பத் தொடக்கியிருந்த ஒருவன் இருந்தான். ஆனால், இயேசுவைச் சமீபிப்பது எப்படி என்பதை அந்த மனிதன் அறியாமலிருந்தான். உடன் மனிதர்களுடன் தொடர்புகொள்ளத் தடைசெய்யப்பட்டிருந்த அந்த மனிதனால், சுகப்படுத்துபவரின் சமூகத்திற்கு எப்படிச் செல்லமுடியும்? கிறிஸ்து தன்னைச் சுகப்படுத்துவார? என்று அவன் தனக்குள்ளாகக் கேள்வி கேட்டுக்கொண்டான். தேவனுடைய நியாயத்தீர்ப்பினால் நோயை அனுபவித்துக்கொண்டிருப்பதாக நம்பிக்கொண்டிருக்கும் ஒருவரை கவனிக்க அவர் கீழிறங்கி வருவாரா? பரிசேயர்களையும் வைத்தியர்களையும்போலவே அவரும் அவன்மீது ஒரு சாபத்தைக்கூறி, மனிதர்களுக்கிடையிலிருந்து ஓடிப்போகும்படி அவனை எச்சரிக்கமாட்டாரா? இயேசுவைப்பற்றித் தனக்குக் கூறப்பட்டிருந்தவைகளையெல்லாம் அவன் எண்ணிப் பார்த்தான். அவரது உதவியைத் தேடிச்சென்றிருந்த ஒருவரும் திருப்பி அனுப்பப்படவில்லை. துயர்மிகுந்த அந்த மனிதன் இரட்சகரைக் காணத் தீர்மானித்தான். அவன் நகரத்திற்கு வெளியே அடைக்கப்பட்டிருந்தபோதிலும், ஏதாவது மலைப்பாதையில் உள்ள சாலையில், அவரது பாதையில் அவரைக் குறுக்கிட முடியும் அல்லது ஊருக்கு வெளியில் அவர் போதனைசெய்துகொண்டிருக்கும் போது, அவரைக் கண்டுபிடிக்கமுடியும். சங்கடங்கள் பெரியவைதான், இருப்பினும் அதுவே அவனது ஒரே நம்பிக்கையாக இருந்தது. (3)

அந்தத் தொழுநோயாளி இரட்சகரை நோக்கி வழிநடத்தப்படுகிறான். அருகில் ஓரிடத்தில் இயேசு போதனைசெய்துகொண்டிருக்கிறார். மக்கள் அவரைச் சூழ்ந்துள்ளனர். அந்தத் தொழுநோயாளி தூரத்தில் நின்று இரட்சகரின் உதட்டிலிருந்து பிறக்கும் சில வார்த்தைகளைப் பற்றிக்கொள்ளுகிறான். நோயாளிகளின் தலைகளின்மீது அவர் கரம் வைப்பதை அவன் பார்க்கிறான். முடவர், குருடர், வாதநோயினர், இன்னும் பல்வேறுபட்ட நோய்களினால் மடிந்துகொண்டிருப்பவர்கள் சுகமடைந்து எழும்பி, தங்களுக்கு கிடைத்த விடுதலைக்காக தேவனை ஸ்தோத்திரிப்பதை அவன் காண்கிறான். விசுவாசம் அவனது இருதயத்தைப் பலப்படுத்துகிறது. அந்தக் கூட்டத்தினிடம் நெருங்கி நெருங்கி வருகிறான். அவன்மீது விதிக்கப்பட்டுள்ள தடை, மக்களின் பாதுகாப்பு, மக்கள் அவனைப்பற்றிக் கருதும் விதம் ஆகிய யாவும் மறக்கப்பட்டன. சுகமடையும் ஆசீர்வாதமிக்க நம்பிக்கை ஒன்றைப்பற்றி மட்டுமே அவன் சிந்திக்கிறான். (4)

அவன் பார்ப்பதற்கு வெறுக்கப்படக்கூடிய ஒருவன். அவனது நோய் பயங்கரமான விளைவுகளை அவனுக்குள் கொண்டுவந்துள்ளது. அழுகிக்கொண்டிருக்கும் அவனது சரீரம் பார்ப்பதற்குப் பயங்கரமாக இருக்கிறது. அவனைக் கண்டதும் மக்கள் திகிலினால் பின்னிடுகின்றனர்; அவனது தொடுதலைத் தவிர்க்கும் நோக்கத்தில் அந்தக் கூட்டம் ஒருவரை ஒருவர் நெருக்குகின்றது; அவன் இயேசுவைச் சமீபிப்பதைத் தடுக்கச் சிலர் வீணாக முயலுகின்றனர்; அவன் அவர்களைப் பார்க்கவுமில்லை; அவர்கள் சொல்லுவதைக் கேட்கவுமில்லை; அவனை அருவருக்கின்ற அவர்களது உணர்வுகளைப்பற்றி அவன் நினைக்கவுமில்லை. அவன் தேவகுமாரன் ஒருவரை மட்டுமே காண்கிறான்; இறந்துகொண்டிருப்பவர்களுக்கு ஜீவனை அருளும் சத்தம் ஒன்றைமட்டுமே கேட்கிறான்; இயேசுவிடம் நெருங்கி, அவரது பாதங்களில் வீழ்ந்து: “ஆண்டவரே! உமக்குச் சித்தமானால், என்னைச் சுத்தமாக்க உம்மால் ஆகும் என்றான்.” “எனக்குச் சித்தமுண்டு, சுத்தமாகு” (மத்தேயு 8:2,3) என்று இயேசு பதில் கூறினார். (5)

உடனே அந்தத் தொழுநோயாளியிடத்தில் ஒரு மாறுதல் உண்டானது. அவனது தசைகள் ஆரோக்கியமுள்ளதாயிற்று. நரம்புகள் உணர்வடைந்தன. தசைகள் உறுதியாயின. தொழுநோயின் குறிப்பான கரடுமுரடான செதில்கள் நிறைந்த சருமம் மறைந்து, அந்த இடத்தில் ஒரு ஆரோக்கியமான சிறுபிள்ளையின் சருமத்தைப்போன்ற மென்மையும் காந்தியுமுள்ள சருமம் உண்டாயிற்று. (6)

அவனுள் செயல்படுத்தப்பட்ட செயலைப்பற்றி ஒருவருக்கும் அறிவிக்காமல், நேராகச்சென்று ஆசாரியனுக்குத் தன்னைக் காண்பித்து,

காணிக்கையைச் செலுத்தும்படி இயேசு அவனுக்குக் கட்டளையிட்டார். ஆசாரியர்கள் அவனைச் சோதித்து, அவன் அந்த நோயிலிருந்து முழுவதுமாக விடுதலைபெற்றிருக்கிறான் என்று அறிவிக்கும்வரை அப்படிப்பட்ட காணிக்கை ஏற்றுக்கொள்ளப்பட மாட்டாது. ஆசாரியர்கள் இந்த சேவையைச்செய்வதற்கு விருப்பமற்றவர்களாக இருந்தபோதிலும், இந்த நோயாளியை சோதித்து முடிவுசெய்யும் கடமையிலிருந்து அவர்களால் விலகமுடியாது. (7)

அந்த மனிதன் மௌனமாக இருந்து செயல்படவேண்டியதின் அவசியத்தை எவ்விதமாக இயேசு வலியுறுத்திக் கட்டளையிட்டார் என்பதை வேதவாக்கியம் காட்டுகிறது. "இயேசு அவனை நோக்கி: இதை நீ ஒருவருக்கும் சொல்லாதபடி எச்சரிக்கையாயிரு; ஆயினும், அவர்களுக்குச் சாட்சியாக, நீ போய் ஆசாரியனுக்கு உன்னைக் காண்பித்து, மோசே கட்டளையிட்ட காணிக்கையைச் செலுத்து" (மத்தேயு 8:4) என்றார். அந்தத் தொழுநோயாளியின் குணப்படுத்தலைப்பற்றிய உண்மைகளை ஆசாரியர்கள் அறிந்தார்களானால் கிறிஸ்துவின்மீதிருந்த அவர்களது வெறுப்பினால், அந்த நோயாளி குணமடையவில்லையென்று நேர்மையற்ற முறையில் தீர்ப்பளிக்கக்கூடும். இந்த அற்புதத்தைப்பற்றிய வதந்தி எதுவும் அவர்களைச் சென்றடையுமுன், அந்த மனிதன் தன்னை ஆலயத்தில் காட்டவேண்டுமென்று இயேசு விரும்பினார்; இவ்விதமாக பட்சபாதமற்ற ஒரு தீர்ப்பை அடைந்துகொள்ளமுடியும்; அதனால், சுகப்படுத்தப்பட்ட அந்தத் தொழுநோயாளி மறுபடியும் தனது குடும்பத்துடனும் நண்பர்களுடனும் ஒன்றுசேர அனுமதிக்கப்படலாம். (8)

அந்த மனிதனை மௌனமாயிருக்கும்படி கிறிஸ்து கட்டளையிட்டதற்கு வேறு நோக்கங்களும் இருந்தன. அவரது ஊழியத்தை வரையறைக்குக் கொண்டுவரவும், மக்களை அவரிடமிருந்து திசைதிருப்பிவிடவும், அவரது எதிரிகள் எப்போதும் வகைதேடிக்கொண்டிருப்பதை இரட்சகர் அறிந்திருந்தார். இந்தத் தொழுநோயாளியின் குணப்படுத்தலின் செய்தி மற்றவர்களுக்குத் தெரியவில்லை, பிறரும் கேள்விப்பட்டால், இந்தப் பயங்கரமான நோயினால் துன்பப்பட்டுக்கொண்டிருக்கும் மற்ற தொழுநோயாளிகள் அவரைச் சுற்றிக் கூடுவார்கள். அவர்கள் குரல் உயரும். மக்கள் அவர்களால் தீண்டப்பட்டு, நோய் தொற்றிக்கொள்ள நேரிடும் என்பதையும் அவர் அறிந்திருந்தார்.தொழுநோயாளிகளில் அநேகர் அவர்களுக்கு ஈவாக அருளப்பட்ட உடல்நலத்தைத் தங்களுக்கோ அல்லது மற்றவர்களுக்கோ ஆசீர்வாதமாக இருக்கப் பயன்படுத்தமாட்டார்கள். தொழுநோயாளிகளைத் தம்மைச் சூழச் சேர்ப்பதின்மூலமாக, அவர், நியாயப்பிரமாணத்தின்மூலமாக ஏற்படுத்தப்பட்டிருக்கும் கட்டுப்பாடுகளை மீறிக்கெண்டிருக்கிறார் என்னும்

குற்றச்சாட்டிற்கு ஆளாக நேரிடும். இவ்விதமாக, சுவிசேஷத்தைப் பிரசங்கிக்கும் அவரது ஊழியத்திற்கு இடையூறு உண்டாகக்கூடும். (9)

கிறிஸ்துவின் எச்சரிப்பை அந்த நிகழ்ச்சி நியாயப்படுத்தியது. அந்தத் தொழுநோயாளி சுகப்படுத்தப்பட்டதைத் திரளானவர்கள் சாட்சிகளாகக் கண்டனர். அந்த மனிதன் தன் நண்பர்களிடத்திற்குத் திரும்பினபோது, பெரும் உணர்ச்சிக் கொந்தளிப்பு உண்டானது. இயேசு எச்சரிப்பைக் கொடுத்திருந்துங்கூட, தனக்கு உண்டான சுகத்தை மறைப்பதற்கு அந்த மனிதன் மேற்கொண்டு எந்த முயற்சியும் செய்யவில்லை. உண்மையிலேயே அது மறைத்துவைக்க முடியாத ஒன்றாகத்தான் இருந்தது. அந்தத் தொழுநோயாளி இந்தக் காரியத்தை எங்கும் பரப்பினான். இயேசுவின் அடக்கமான—தன்மைதான் அந்த மனிதன்மீது கட்டுப்பாட்டை விதித்தது என்று எண்ணிக்கொண்டு, அந்தப் பெரும் குணமளிப்பவரின் வல்லமையை எங்கும் சென்று அறிவித்துக்கொண்டிருந்தான். இப்படிப்பட்ட வெளிக்காட்டல்கள் இயேசுவை அழிக்கும்படி ஆசாரியர்களையும் முப்பர்களையும் அதிகமாகத் தீர்மானிக்கும்படிச்செய்தது என்பதை அவன் புரியாமலிருந்தான். சுகமளிக்கும் வரம் மிகவும் விலைமதிப்பு மிக்கது என்பதை, சுகமடைந்த அந்த மனிதன் உணர்ந்தான். மனிதன் என்னும் நிலையில் அவனுக்குண்டான ஆயுள் பலத்தைப்பற்றி அவன் களிகூர்ந்தான். தனது குடும்பத்துடனும் சமுதாயத்துடனும் அவன் மீண்டும் சேர்க்கப்பட்டதற்காக, தன்னை முழுமையாகக் குணப்படுத்தின அந்த வைத்தியருக்கு மகிமையைக் கொடாமலிருக்க முடியவில்லை என்பதை அவன் உணர்ந்தான்; ஆனால், இந்தக் காரியத்தை எங்கும் பரப்பிய செயல் இரட்சகரின் ஊழியத்திற்கு இடையூறாக ஆனது. அது சில சமயம் அவர் தமது ஊழியத்தைச் செய்யாமல் நிறுத்திவிடுமளவிற்கு திரளான மக்களை அவரிடம் கூட்டமாகத் திரளச்செய்தது. (10)

கிறிஸ்துவின் ஊழியத்தின் செயல் ஒவ்வொன்றும் அதன் அதிக ஆழமான நோக்கத்தை உடையதாக இருந்தது. அது அச்செயலில் உண்டாகியிருந்ததைவிட அதிகமான அர்த்தத்தை உடையதாக இருந்தது. தொழுநோயாளியின் காரியமும் இப்படிப்பட்டதாகவே இருந்தது. தம்மிடம் வந்த அனைவருக்கும் இயேசு ஊழியஞ்செய்திருந்தபோது, அவரிடம் வராமலிருந்தவர்களை ஆசீர்வதிப்பதற்கு அவர் மிகுந்த அக்கறையுள்ளவராக இருந்தார். ஆயக்காரர்கள், புறமதத்தினர்கள், சமாரியர்கள் ஆகியோரை அவர் தம்மிடம் இழுத்துக்கொண்டபோது, தவறான எண்ணத்தினாலும் பாரம்பரியத்தினாலும் தங்களை அடைத்துவைத்துக்கொண்டிருந்த ஆசாரியர்களையும் போதகர்களையும் சென்றடைய அவர் ஏங்கினார்.

அவர்களை அடையும்படியாக அவர் முயலாத வழிமுறைகள் எதுவும் இருக்கவில்லை. குணமாக்கப்பட்ட அந்தத் தொழுநோயாளியை, ஆசாரியர்களிடத்தில் அனுப்பிவைத்த காரியத்தில் இயேசு அவர்களுடைய தவறான எண்ணங்களால் உருவாக்கப்படும், தீங்குசெய்யும் ஆற்றலை அகற்றத்தக்கதாக, அதற்கேற்றபடி மதிப்பீடுசெய்து, ஒரு சாட்சியை அவர்களுக்குக் கொடுத்தார். (11)

தேவன் மோசேயின்மூலமாகக் கொடுத்திருந்த பிரமாணங்களுக்கு எதிரானதாக கிறிஸ்துவின் போதனைகள் இருக்கின்றன என்று பரிசேயர்கள் வலியுறுத்தியிருந்தனர்; ஆனால், சுகமாக்கப்பட்ட தொழுநோயாளியை நியாயப்பிரமாணத்தின்படி ஒரு காணிக்கையை செலுத்தும்படி அவர் கொடுத்த கட்டளை இந்தக் குற்றச்சாட்டைப் பொய்ப்பித்தது. மன உணர்த்துதலை அடைய விரும்பியிருந்த அனைவருக்கும் அது போதுமான சாட்சியாக இருந்தது. (12)

கிறிஸ்துவை மரணத்திற்கு உட்படுத்தக்கூடிய ஏதாவதொரு காரணத்தைக் கண்டுபிடிக்கும்படி, எருசலேமிலிருந்த தலைவர்கள் வேவுகாரர்களை அனுப்பியிருந்தனர். மானுடத்தின்மீதிருந்த அவரது அன்பு, நியாயப்பிரமாணத்தின்மீதிருந்த அவரது மரியாதை, பாவத்திலிருந்தும் மரணத்திலிருந்தும் விடுதலையளிக்கக்கூடிய அவரது வல்லமை, ஆகியவைகளுக்குச் சான்று பகர்வதின்மூலம் அவர் பதில் கொடுத்தார். இவ்விதமாக, “நன்மைக்குப் பதிலாக எனக்குத் தீமைசெய்கிறார்கள், என் சிநேகத்துக்குப் பதிலாக என்னைப் பகைக்கிறார்கள்” (சங்கீதம் 109:5) என்று அவர்களைப்பற்றி அவர் சாட்சிகொடுத்தார். “உங்கள் சத்துருக்களைச் சிநேகியுங்கள்” என்னும் கட்டளையை மலையின்மேல் கொடுத்தவர், “தீமைக்குத் தீமையையும், உதாசனத்துக்கு உதாசனத்தையும் சரிக்கட்டாமல், அதற்குப் பதிலாக, நீங்கள் ஆசீர்வாதத்தைச் சுதந்தரித்துக்கொள்ளும்படி அழைக்கப்பட்டிருக்கிறவர்களென்று அறிந்து, ஆசீர்வதியுங்கள்” (மத்தேயு 5:44; 1 பேதுரு 3:9) என்றவர், தாமே அப்படி நடந்து, அந்தக் கொள்கைக்கு உதாரணம் காட்டினார். (13)

அந்தத் தொழுநோயாளி விரட்டியடிக்கப்படும்படி எந்த ஆசாரியர்கள் அவனைக் குற்றப்படுத்தியிருந்தனரோ, அவர்கள் அவன் சுகமாகிவிட்டதற்குச் சான்று வழங்கினர். பொதுமக்களுக்கு முன்பாக அறிவிக்கப்பட்டுப் பதிவுசெய்யப்பட்ட இந்தத் தீர்ப்பு, கிறிஸ்துவிற்காக நிற்கும் சாட்சியாக அமைந்தது. அந்தத் தொழுநோயாளியின்மீது அந்த நோயின் எந்த சாயலும் இல்லை என்ற அந்த ஆசாரியர்களின் சொந்த வாக்குறுதியின்மீது, சுகப்படுத்தப்பட்ட அந்த மனிதன் இஸ்ரவேலின் கூட்டத்திற்குள் மீண்டும்

சேர்த்துக்கொள்ளப்பட்டபோது, அவனைக் குணமாக்கினவருக்கு அவன் தானே ஒரு உயிருள்ள சாட்சியாக இருந்தான். மிகுந்த மகிழ்ச்சியுடன் அவன் தனது காணிக்கையைச் செலுத்தி, இயேசுவின் பெயரைப் பெருமைப்படுத்தினான். இரட்சகரின் தெய்வீக வல்லமையில் ஆசாரியர்கள் மனநிறைவை உடையவர்களானார்கள். சத்தியத்தை அறியவும், ஒளியினால் நன்மையை அடைந்துகொள்ளவும், அவர்களுக்கு வாய்ப்பு அனுமதிக்கப்பட்டது. புறக்கணிக்கப்பட்டால் ஒருபோதும் திரும்பிவராதவிதத்தில் அது கடந்துசெல்லும். அநேகரால் ஒளி புறக்கணிக்கப்பட்டிருந்தது; ஆனபோதிலும், அது வீணாகக் கொடுக்கப்பட்டிருக்கவில்லை. அசைக்கப்பட்ட அநேக இதயங்கள் சிலகாலத்திற்கு அவைகளின் அடையாளத்தை வெளிக்காட்டவில்லை. இரட்சகரின் வாழ்க்கையில் ஆசாரியர்கள், போதகர்கள் ஆகியோரிடமிருந்து அவரது ஊழியம் சிறிதளவுகூட அன்பைப் பதிலாகப் பெற்றுக்கொள்ளுவதாகத் தோன்றவில்லை; ஆனால், அவர் பரத்திற்கு எழுந்தருளிச்சென்றபின், "ஆசாரியர்களில் அநேகரும் விசுவாசத்திற்குக் கீழ்ப்படிந்தார்கள்"—அப்போஸ்தலர் 6:7. (14)

அந்தத் தொழுநோயாளியின் பயங்கரமான நோயிலிருந்து, அவனைச் சுத்திகரித்த கிறிஸ்துவின் செயல் ஆத்துமாவைப் பாவத்திலிருந்து சுத்திகரிக்கும் அவரது செயலிற்கு ஒரு பொருட்பாடமாக உள்ளது. இயேசுவிடம் வந்த அந்த மனிதன் முழுமையாக தொழுநோயாளியாக இருந்தான். சாவிற்கேதுவான அதன் விஷம் அவன் உடலெங்கிலும் பரவியிருந்தது. தங்களுடைய ஆண்டவர் அவனைத் தொடுவதிலிருந்து தடுப்பதற்கு சீடர்கள் முயன்றிருந்தனர்; ஏனெனில் எவனொருவன் ஒரு தொழுநோயாளியைத் தொடுகிறானோ அவனும் தீட்டுப்பட்டவனாகிறான்; ஆனால், இயேசு அந்தத் தொழுநோயாளியின்மீது தமது கரத்தை வைத்ததினால், அவர் அசுத்தமடையவில்லை. அவரது தொடுதல் உயிரைக் கொடுக்கும் வல்லமையைப் பதியச்செய்தது. அந்தத் தொழுநோயாளி சுத்தமாக்கப்பட்டான். ஆழமாக வேரூன்றி, சாவிற்கேதுவாக மனித வல்லமையால் சுகப்படுத்தமுடியாத, பாவம் என்னும் தொழுநோயின் காரியமும் இப்படிப்பட்டதாகவே இருக்கிறது. "தலையெல்லாம் வியாதியும், இருதயமெல்லாம் பலட்சயமுமாய் இருக்கிறது. உள்ளங்கால் தொடங்கி உச்சந்தலைமட்டும் அதிலே சுகமேயில்லை; அது காயமும், வீக்கமும், நொதிக்கிற இரணமுமுள்ளது"—ஏசாயா 1:5,6. அவரது பிரசன்னம் பாவிக்கு சுகமளிக்கும் புண்ணியத்தை உடையதாக உள்ளது. ஆண்டவரே, உமக்குச் சித்தமானால், என்னை சுத்தமாக்க உம்மால் ஆகும் என்று கூறி, விசுவாசத்துடன் அவரது பாதத்தில் எவர்கள் வீழ்ந்தாலும், எனக்குச் சித்தமுண்டு சுத்தமாகு என்னும் பதிலைக் கேட்கலாம். (15)

குணப்படுத்தும் சில நிகழ்ச்சிகளில் தேடப்பட்டிருந்த ஆசீர்வாதத்தை இயேசு உடனடியாக வழங்கவில்லை; ஆனால், இந்தத் தொழுநோயின் காரியத்தில் அந்த வேண்டுகோள் விடுக்கப்பட்ட உடனேயே அருளப்பட்டது. உலகப்பிரகாரமான ஆசீர்வாதங்களுக்காக நாம் ஜெபிக்கும்போது, நமது ஜெபங்களுக்கான பதில் தாமதமாகலாம். நாம் கேட்கும் ஒன்றைவிட வேறு எதையாவது தேவன் நமக்குத் தரலாம்; ஆனால், பாவத்திலிருந்து விடுதலை வேண்டும் என்று நாம் கேட்கும்போது, அப்படி இருக்காது. பாவத்திலிருந்து நம்மை சுத்திகரித்து, நம்மை அவரது பிள்ளைகளாகச்செய்து, ஒரு பரிசுத்தமான வாழ்க்கையை நாம் நடத்த, நம்மைத் தகுதிப்படுத்துவது அவரது சித்தமாக உள்ளது. கிறிஸ்து நம்மை "இப்பொழுதிருக்கிற பொல்லாத பிரபஞ்சத்தினின்று விடுவிக்கும்படி நம்முடைய பிதாவாகிய தேவனுடைய சித்தத்தின்படியே நம்முடைய பாவங்களுக்காகத் தம்மைத்தாமே ஒப்புக்கொடுத்தார்"—கலாத்தியர் 1:4. "நாம் எதையாகிலும் அவருடைய சித்தத்தின்படி கேட்டால், அவர் நமக்குச் செவிகொடுக்கிறாரென்பதே அவரைப் பற்றி நாம் கொண்டிருக்கிற தைரியம். நாம் எதைக் கேட்டாலும், அவர் நமக்குச் செவிகொடுக்கிறாரென்று நாம் அறிந்திருந்தோமானால், அவரிடத்தில் நாம் கேட்டவைகளைப் பெற்றுக்கொண்டோமென்றும் அறிந்திருக்கிறோம்." "நம்முடைய பாவங்களை நாம் அறிக்கையிட்டால், பாவங்களை நமக்கு மன்னித்து எல்லா அநியாயத்தையும் நீக்கி நம்மைச் சுத்திகரிப்பதற்கு அவர் உண்மையும் நீதியும் உள்ளவராயிருக்கிறார்"—1 யோவான் 5:14; 1:9. (16)

கப்பர்நகூமில் ஒரு திமிர்வாதக்காரனை சுகப்படுத்தியதில் கிறிஸ்து மறுபடியும் அதே சத்தியத்தைப் போதித்தார். பாவங்களை மன்னிப்பதற்கு அவருக்கு அதிகாரம் உண்டு என்பதை எடுத்துக்காட்ட அந்த அற்புதஞ்செய்யப்பட்டது. திமிர்வாதக்காரனை சுகப்படுத்தியது மற்ற முக்கியமான சத்தியங்களையுங்கூட விளக்கிக்காட்டுகிறது. அது நம்பிக்கையையும் தைரியமூட்டுதலையும் நிரம்ப உடையதாக உள்ளது. அது சம்பந்தமான மறுப்பு பரிசேயர்களுக்கு ஒரு எச்சரிப்பைக் கொடுக்கும் பாடமாகவும் உள்ளது. (17)

அந்தத் தொழுநோயாளியைப்போலவே இந்தத் திமிர்வாதக்காரனும் சுகம் கிடைக்கும் என்னும் நம்பிக்கையனைத்தையும் இழந்தவனாக இருந்தான். பாவகரமான அவனது வாழ்க்கை அந்த நோய்க்குக் காரணமாக இருந்தது. பாவங்களுக்கான மன வருத்தத்தினால், அவனது பாடுகள் கசப்புள்ளதாக இருந்தது. அவன் இதற்குமுன் பலகாலமாக மனத்துயரிலிருந்தும் உடல் வேதனையிலிருந்தும் நிவாரணம் கிடைக்கும் என்னும் நம்பிக்கையில்

பரிசேயர்களுக்கும் வைத்தியர்களுக்கும் வேண்டுகோள் விடுத்திருந்தான்; ஆனால், அவர்கள் அக்கறையில்லாமல், அவன் சுகமடைய முடியாதவன் என அறிவித்து, அவனை தேவகோபத்திற்குக் கைவிட்டிருந்தனர். துன்பங்கள் தேவ கோபத்தின் சான்று என்று பரிசேயர்கள் கருதி, நோயாளிகளையும் தேவை உள்ளவர்களையும்விட்டுத் தங்களை விலக்கியிருந்தனர்; அப்படியிருந்தும், அடிக்கடி தங்களைத் தாங்களே பரிசுத்தவான்கள் என்று உயர்த்தியிருந்த அவர்கள், எவர்களைக் குற்றப்படுத்தியிருந்தனரோ, அவர்களைவிட அதிகக் குற்றமுடையவர்களாக இருந்தனர். (18)

திமிர்வாதநோய் காரணமாக, அசையமுடியாமல் முற்றிலுமாக உதவியற்றவனாக அந்த மனிதன் இருந்தான். எந்த இடத்திலிருந்தும் தனக்கு உதவிவரக்கூடிய வாய்ப்புகள் இல்லை என்பதை அவன் கண்டு, நம்பிக்கையற்ற நிலையில் மூழ்கியிருந்தான். அப்பொழுது அவன் இயேசுவின் ஆச்சரியமான செயல்களைப்பற்றிக் கேள்விப்பட்டிருந்தான். அவனைப்போலவே பாவமிக்கவர்களாக உதவியற்ற நிலையில் இருந்த மற்றவர்கள் சுகப்படுத்தப்பட்டவிதம் அவனுக்குக் கூறப்பட்டிருந்தது. தொழுநோயாளிகளுங்கூட சுத்தப்படுத்தப்பட்டிருந்தனர். அவனது நண்பர்கள் கூறின இவைகள், தானும் இயேசுவிடம் சுமந்துசெல்லப்பட்டால், சுகமடையமுடியும் என்ற தைரியத்தை அவனுக்குள் உண்டுபண்ணத் தூண்டினது; ஆனால் இந்த நோய் அவனுக்கு எப்படி உண்டானது என்பதைப் பற்றி அவன் நினைத்தபோது, நம்பிக்கையிழந்துவிட்டான். தூய்மையான அந்த வைத்தியர் தன்னை அவரது சமூகத்தில் சகிக்கமாட்டார் என்று அவன் பயந்தான். (19)

அப்படியிருந்தபோதிலும், பாவப்பாரத்திலிருந்து உண்டாகக்கூடிய விடுதலையைவிட, சரீர சுகத்தை அவன் அதிகமாக விரும்பவில்லை. அவனால் இயேசுவைக் காணமுடிந்து, பாவமன்னிப்பையும் பரலோகத்துடனுள்ள சமாதானத்தையும்பற்றிய வாக்குறுதியையும் பெறமுடிந்தால், அதன்பின் அவனால் வாழ்வதானாலும் சரி சாவதானாலும் சரி, தேவசித்தப்படி அதில் திருப்தியுள்ளவனாக இருக்கமுடியும். ஆ! நான் அவருடைய சமூகத்திற்குமட்டும் சென்றுவிட்டால், எவ்வளவு நன்றாக இருக்கும்! என்பது அவனது அழுகையாக இருந்தது. இழப்பதற்கு நேரம் இருக்கவில்லை. ஏற்கனவே சீர்கெட்டுப்போன அவனது தசைகள் அழிவின் அடையாளத்தைக் காட்டிக்கொண்டிருந்தன. தன்னைத் தன் படுக்கையுடன் இயேசுவிடம் சுமந்து செல்லும்படி அவன் தன் நண்பர்களிடம் மன்றாடினான். அவர்கள் அதைச் செய்வதற்கு மகிழ்ச்சியுள்ளவர்களாக இருந்தனர். ஆனால், இரட்சகர் இருந்த வீட்டிற்குள்ளும் அதைச் சுற்றிலும் இருந்த மக்களின் கூட்டம் மிகமிக அதிக

நெருக்கமாக இருந்ததினால், அந்த நோயாளியும் அவனது நண்பர்களும் இயேசுவின் அருகில் செல்லுவதோ அல்லது அவரது சத்தத்தைக் கேட்கக்கூடிய தூரத்திற்குள் நெருங்குவதோ முடியாததாக இருந்தது. (20)

இயேசு பேதுருவின் வீட்டில் இருந்து போதனைசெய்து கொண்டிருந்தார். அவர்களுடைய வழக்கத்தின்படி அவரது சீடர்கள் அவரருகில் அமர்ந்திருந்தனர். அங்கு கலிலேயா, யூதேயா, எருசலேம் ஆகிய ஒவ்வொரு இடத்திலிருந்தும் வந்திருந்த பரிசேயர்களும் நியாயப்பிரமாண அறிவர்களும் அருகில் இருந்தனர். இயேசுவிற்கெதிரான ஒரு குற்றச்சாட்டைக் காணும்படி வெளிவட்டத்தில், பல்வேறுபட்ட ஆவலுள்ள பக்திமிக்க மக்கள், என்ன நிகழ்கிறதென்றறியும் ஆர்வமிக்கவர்கள், நம்பிக்கையில்லாதவர்கள் ஆகியோர் மிகவும் நெருக்கமாக இருந்தனர். பல்வேறுபட்ட ஜாதியினர், சமுதாயத்தின் சகல நிலைகளிலும் இருந்தவர்கள் இருந்தனர். குணமாக்கக்கூடிய கர்த்தரின் வல்லமை அங்கு இருந்தது. ஜீவ ஆவி அந்தக் கூட்டத்தில் அசைவாடியது; ஆனால், பரிசேயர்களும் வேத அறிஞர்களும் அதன் பிரசன்னத்தை அறியவில்லை. தங்கள் சேவையை அவர்கள் உணரவில்லை; எனவே, அந்த சுகப்படுத்துதல் அவர்களுக்கானதாக இருக்கவில்லை. “பசியுள்ளவர்களை நன்மைகளினால் நிரப்பி, ஐசுவரியமுள்ளவர்களை வெறுமையாய் அனுப்பிவிட்டார்”—லூக்கா 1:53. (21)

அந்த திமிர்வாதக்காரனைச் சுமந்துகொண்டிருந்தவர்கள் ஜனக்கூட்டத்திற்குள்ளாகக் கடந்துசெல்ல மறுபடியும் மறுபடியும் முயன்றனர். அது வீணானதாக இருந்தது. அந்த சுகவீனமான மனிதன் வாயினால் சொல்லமுடியாத வேதனையுடன் தன்னைச் சுற்றி உள்ளவர்களை நோக்கினான். ஏக்கத்துடன், எதிர்பார்த்திருந்த நம்பிக்கை அவ்வளவு அருகில் இருக்கும்போது, அவனால் எப்படி நம்பிக்கையை இழக்கமுடியும்? அவனது கருத்தின்படி, அவனது நண்பர்கள் அவனை வீட்டிற்கு மேலே தூக்கி, கூரையைப் பிரித்து, இயேசுவின் பாதத்தருகில் கீழே இறக்கி, வைத்தனர். அந்த உரையாடல் நின்றது. துக்கத்தால் நிறைந்த அந்த முகத்தையும் அவர்மீது பதிந்திருந்த மன்றாடும் கண்களையும் இரட்சகர் நோக்கினார். அந்தக் காரியத்தை அவர் புரிந்துகொண்டார். சந்தேகமும் குழப்பமுமிக்க அந்த ஆவியை அவர் தம்மிடம் இழுத்திருந்தார். அந்தத் திமிர்வாதக்காரன் அவனது வீட்டில் இருந்தபோதே இரட்சகர் அவனது மனச்சாட்சிக்கு மனஉணர்த்துதலைக் கொண்டுவந்திருந்தார். அவன் தனது பாவங்களுக்காக மனம் வருந்தியபோது, அவனைச் சுகப்படுத்தக்கூடிய இயேசுவின் வல்லமையின்மீது நம்பிக்கைவைத்தபோது, ஏக்கமிக்கதாக இருந்த அவனது இருதயத்தை இயேசு முதலில் ஆசீர்வதித்தார். அவனது

விசுவாசத்தின் முதல் மங்கலான ஒளி, அவர் ஒருவர் மட்டும்தான் பாவியின் துணைவர் என்னும் நம்பிக்கையாக வளர்வதையும், அவரது சமூகத்திற்கு வருவதற்காக எடுத்துக்கொள்ளும் ஒவ்வொரு முயற்சியுடனும் அது பலமடைவதையும் இயேசு கண்டிருந்தார். இப்பொழுது அந்த நோயாளியின் செவிகளில் இரட்சகரின் வார்த்தைகள் இனிய இசைபோல் ஒலித்தன. (22)

“மகனே, திடன்கொள்; உன் பாவங்கள் உனக்கு மன்னிக்கப்பட்டது” என்றதும் அந்த நோயாளியின் ஆத்துமாவிலிருந்த நம்பிக்கையின்மையின் பாரம் நீங்குகிறது. பாவமன்னிப்பின் சமாதானம் அவனது ஆவியில் தங்கி, அவனது முகத்தில் பிரகாசிக்கிறது. அவனது உடல் வேதனைகள் நீங்குகின்றன. அவனது சரீரம் முழுவதும் மாற்றமடைகிறது. உதவியற்றவனாக இருந்த அந்தத் திமிர்வாதக்காரன் சுகமாக்கப்பட்டிருக்கிறான். குற்றவாளியான அந்தப் பாவி மன்னிக்கப்பட்டிருக்கிறான். எளிய விசுவாசத்தில் இயேசுவின் வார்த்தைகளை, புதிய வாழ்க்கையின் வரமாக அவன் ஏற்றுக்கொண்டிருக்கிறான். அவனது முகத்தைப் பரலோகத்தின் ஒளி, பிரகாசிப்பித்தது; மக்கள் அந்தக் காட்சியை திகைப்புடன் நோக்கினர். (23)

கிறிஸ்து இந்த நோயை எவ்விதமாகச் சுகப்படுத்துவார் என்பதைக் காண ரபிமார்கள் ஆவலுடன் காத்திருந்தனர். இந்த மனிதன் உதவிக்காக எவ்விதமாக அவர்களிடம் மன்றாடியிருந்தான் என்பதையும், அவர்கள் அவனுக்கு நம்பிக்கையூட்டவோ அல்லது அனுதாபங்காட்டவோ எவ்விதமாக மறுத்திருந்தனர் என்பதையும் ஞாபகப்படுத்திக்கொண்டனர். அத்துடன் திருப்திப்படாமல், அந்த மனிதன் தனது பாவங்களுக்கான சாபத்தை தண்டனையாக அனுபவிக்கிறான் என்றும் அவர்கள் அறிவித்திருந்தனர். நோய்வாய்ப்பட்ட அந்த மனிதனை அவர்கள் தங்கள்முன் கண்டதும் இவைகளெல்லாம் அவர்களது உள்ளங்களில் மீண்டும் தோன்றின. அந்தக் காட்சியை அனைவரும் எவ்விதமான ஆர்வத்துடன் கவனித்துக்கொண்டிருக்கின்றனர் என்பதை அவர்கள் கவனித்து மக்களிடம் தங்களுக்குள்ள அவர்களுடைய சொந்த செல்வாக்கை இழக்கநேரிடுவதைப் பயங்கரமான பயத்துடன் உணர்ந்தனர். (24)

அந்தப் பெரிய மனிதர்கள் ஒருவருக்கொருவர் பேசிக்கொள்ளவில்லை; ஆனால் ஒருவர் முகத்தை ஒருவர் பார்த்தபோது, இந்த உணர்ச்சியின் அலைகளைத் தடுப்பதற்கு ஏதாவது செய்தாக வேண்டும் என்னும் அதே எண்ணத்தை ஒவ்வொருவரிடத்திலும் கண்டனர். அந்தத் திமிர்வாதக்காரனின் பாவங்கள் மன்னிக்கப்பட்டுவிட்டன என்று இயேசு அறிவித்திருந்தார். பரிசேயர்கள் இந்த வார்த்தைகளைத் தேவதூஷணமாகப் பிடித்துக்கெண்டு, இதை மரணதண்டனைக்கு ஏதுவான ஒன்றாக முன்வைக்கமுடியும்

என்று தங்களுக்குள் எண்ணிக்கொண்டனர். “இவன் இப்படித் தேவதூஷணம் சொல்லுகிறதென்ன? தேவன் ஒருவரேயன்றிப் பாவங்களை மன்னிக்கத்தக்கவர் யார்” (மாற்கு 2:7) என்று தங்கள் இருதயங்களில் சிந்தித்துக்கொண்டிருந்தார்கள். (25)

இயேசு தமது பார்வையை அவர்கள்மேல் பதித்து, பயந்து பின்வாங்கியிருந்த அவர்களைப்பார்த்து: “நீங்கள் உங்கள் இருதயங்களில் இப்படிச் சிந்திக்கிறதென்ன? உன் பாவங்கள் மன்னிக்கப்பட்டதென்று சொல்வதோ, எழுந்து உன் படுக்கையை எடுத்துக்கொண்டு நடவென்று சொல்வதோ, எது எளிது? பூமியிலே பாவங்களை மன்னிக்க மனுஷ க்குமாரனுக்கு அதிகாரம் உண்டென்பதை நீங்கள் அறியவேண்டும் என்று சொல்லி, திமிர்வாதக்காரனை நோக்கி: உன் படுக்கையை எடுத்துக்கொண்டு உன் வீட்டுக்குப் போ என்று உனக்குச் சொல்லுகிறேன்” என்றார். (26)

அப்போது படுக்கையோடு இயேசுவிடம் கொண்டுவரப்பட்ட அந்த மனிதன், இளமையின் துடிப்புடனும் பலத்துடனும் தன் கால்களால் எழுந்து நிற்கிறான். அவனது இரத்த நாளங்களின்மூலமாக ஜீவனைக் கொடுக்கும் இரத்தம் ஓடுகிறது. அவனது உடலின் உறுப்புக்கள் ஒவ்வொன்றும் திடீரென்று இயங்குகின்றன. மரணம் நெருங்கிக்கொண்டிருக்கிறதென்பதைக் காட்டியிருந்த வெளிரிய நிறத்தை, உடல்நலத்தின் காந்தி மேற்கொள்ளுகிறது. “உடனே, அவன் எழுந்து, தன் படுக்கையை எடுத்துக்கொண்டு எல்லாருக்கும் முன்பாகப் போனான். அப்பொழுது எல்லாரும் ஆச்சரியப்பட்டு: நாம் ஒருக்காலும் இப்படிக் கண்டதில்லையென்று சொல்லி, தேவனை மகிமைப்படுத்தினார்கள்.” (27)

ஆ! குற்றமுள்ளவர்களையும் துன்பப்படுகிறவர்களையும் சுகப்படுத்தக் குனியும் இயேசுவின் ஆச்சரியமான அன்பு, மானுடம் அனுபவிக்கும் நோய்களுக்காக வருந்தி, அதனை சாந்தப்படுத்தும் தெய்வீகம்! ஆ! இவ்விதமாக மனித மக்களுக்காக வெளிக்காட்டப்பட்ட ஆச்சரியமான வல்லமை! இரட்சிப்பின் தூதை எவரால் சந்தேகிக்க இயலும்? மனஉருக்கமிக்க ஒரு இரட்சகரின் இரக்கங்களை எவரால் அலட்சியப்படுத்தமுடியும்? (28)

அழுகிக்கொண்டிருந்த அந்த சரீரத்தை சுகப்படுத்துவதற்கு அவசியமான வல்லமை படைப்பின் வல்லமையைவிடக் குறைவானதாக இருக்கவில்லை. மண்ணிலிருந்து மனிதனைப்படைத்த அதே சத்தம், செத்துக்கொண்டிருந்த அந்தத் திமிர்வாதக்காரனுக்கு உயிர் கொடுக்கும்படிப் பேசியது. அந்த உடலுக்கு உயிரைக் கொடுத்த அதே வல்லமை, அந்த இருதயத்தைப் புதுப்பித்திருந்தது. “அவர் சொல்ல ஆகும், அவர் கட்டளையிட நிற்கும்” (சங்கீதம் 33:9) என்றபடி, படைத்தவர் மீறுதல்களினாலும்

பாவங்களினாலும் மரித்திருந்த ஆத்துமாவிற்கு ஜீவனைத்தரப் பேசியது, அவனது உடலுக்குக் கொடுக்கப்பட்ட சுகம் ஆகியவை இருதயத்தைப் புதுப்பித்த வல்லமைக்கு ஒரு சாட்சியாக இருந்தது. “பூமியிலே பாவங்களை மன்னிக்க மனுஷகுமாரனுக்கு அதிகாரம் உண்டு என்பதை நீங்கள் அறியவேண்டும் என்று சொல்லி, திமிர்வாதக்காரனை நோக்கி: நீ எழுந்து நட” என்று அவர் கூறினார். (29)

கிறிஸ்துவில் அந்தத் திமிர்வாதக்காரன் ஆத்தும—சரீர சுகத்தைக் கண்டான். ஆவிக்குரிய சுகம் சரீர சுகத்தைப் பின்தொடர்ந்தது. இந்தப் பாடத்தை கவனிக்காமல் விட்டுவிடக்கூடாது. அந்தத் திமிர்வாதக்காரனைப்போல, இன்றும் ஆயிரக்காணக்காக சரீரப்பிரகாரமான நோயினால் துன்பப்பட்டுக்கொண்டிருப்பவர்கள், “உனது பாவங்கள் மன்னிக்கப்பட்டன” என்னும் தூதிற்காக ஏங்கிக்கொண்டுள்ளனர். அமைதியற்றதும் திருப்தியடையாததுமான வாஞ்சைகளுடன் இருக்கும் பாவப்பாரம் அவர்களது நோய்களின் அஸ்திபாரமாக உள்ளது. ஆத்துமாவை சுகப்படுத்துபவரிடம் வராதவரை, அவர்களால் இளைப்பாறுதலைக் காண இயலாது. அவர் ஒருவரால் கொடுக்கப்படக்கூடிய சமாதானம்மட்டுமே மனதிற்குத் தெம்பையும் சரீரத்திற்கு சுகத்தையும் தரும். (30)

பிசாசின் கிரியைகளை அழிப்பதற்கு இயேசு வந்தார். அவருக்குள் ஜீவன் இருந்தது. “நானோ அவைகளுக்கு ஜீவன் உண்டாயிருக்கவும், அது பரிபூரணப்படவும் வந்தேன்” என்று அவர் கூறுகிறார். “அவர் உயிர்ப்பிக்கிற ஆவியாய் இருக்கிறார்”–1 யோவான் 3:8; யோவான் 1:4; 10:10; 1 கொரிந்தியர் 15:45. அவர் உலகத்திலிருந்தபோது, நோயாளிகளை சுகப்படுத்தினார். பாவியிடம் பாவமன்னிப்பைக் கூறினார். அவர் இன்றும் அதேவிதமான ஜீவனைக் கொடுக்கும் வல்லமையை உடையவராக இருக்கிறார். “அவர் உன் அக்கிரமங்களையெல்லாம் மன்னித்து, உன் நோய்களையெல்லாம் குணமாக்குகிறார்”–சங்கீதம் 103:3. (31)

அந்தத் திமிர்வாதக்காரனைச் சுகப்படுத்தியதினால், மக்கள்மீது உண்டான பலன், பரலோகம் திறக்கப்பட்டு, மேலான உலகத்தின் மகிமைகளை வெளிப்படுத்தினதுபோல் இருந்தது. சுகப்படுத்தப்பட்ட அந்த மனிதன் தனது ஒவ்வொரு அடியிலும் தேவனை ஸ்தோத்திரித்துக்கொண்டும், தனது சுமையை (படுக்கையை) ஒரு இறகின் பாரத்தைப்போல இலகுவாக எண்ணிக்கொண்டும், திரளான மக்களுக்கூடாகக் கடந்துசென்றபோது, அவனுக்கு இடங்கொடுப்பதற்காக மக்கள் பின்னிட்டு திகைப்படைந்தவர்களாக அவனைப் பார்த்து, தங்களுக்குள் இரகசியமாக, “அதிசயமான காரியங்களை இன்று கண்டோம்” என்கிறார்கள். (32)

ஆச்சரியத்தினாலும் தோல்வியினாலும் மேற்கொள்ளப்பட்ட பரிசேயர்கள் ஊமையானார்கள். தங்களுடைய பொறாமையைத் திரளானவர்களிடம் அதிகரிக்கச்செய்வதற்கு இங்கு வாய்ப்பில்லாமலிருப்பதை அவர்கள் கண்டனர். தேவனுடைய கோபம் என்று கூறியிருந்த அந்த நோயாளியின்மீது செயல்படுத்தப்பட்ட இந்த ஆச்சரியமான செயல், சிறிது காலத்திற்கு ரபிமார்களை மறந்திருக்கும்படி மக்களை உணர்த்தியிருந்தது. அவர்கள் தேவனுக்கு மட்டுமே உரியது என்று கருதியிருந்த வல்லமையை உடையவராக இயேசு இருப்பதைக் கண்டனர்; அப்படியிருந்தபோதிலும், அவரது மென்மைமிக்க மேலான தன்மை, தங்களுடைய அகந்தைமிக்க நடத்தையுடன் ஒப்பிட்டுப்பார்க்கும்படியாக, மிகக் குறிப்பாக இருந்தது. அவர்கள் தங்களைவிட்டுப் பெரியவர் ஒருவரின் முன்பு இருக்கிறோம் என்பதை அறிக்கைசெய்ய மறுத்து, குழப்பமடைந்தவர்களாகவும் வெட்கமடைந்தவர்களாகவும்—ஆனால்—அவரைப்பற்றி அறிக்கை செய்யாத வர்களாகவுமிருந்தனர். பூமியிலே பாவங்களை மன்னிப்பதற்கு இயேசுவிற்கு வல்லமை இருந்தது என்பதற்கான சான்று எந்த அளவிற்குப் பலமுள்ளதாக இருந்ததோ, அந்த அளவிற்கு அவர்கள், (ஆசாரியர்கள், வேதபாரகர்கள், பரிசேயர்கள்) நம்பிக்கையின்மையில் வலுவான நிலையில் இருந்தனர். அந்தத் திமிர்வாதக்காரன் அவரது வார்த்தையினால் சுகப்படுத்தப்பட்டதைக் கண்டிருந்த அவர்கள், தேவனுடைய குமாரனைப் பேசாமலிருக்கச் செய்வதற்கான புதிய திட்டத்தைக் கண்டுபிடிக்கத் திட்டமிட்டவர்களாக பேதுருவின் வீட்டிலிருந்து சென்றனர். (33)

கிறிஸ்துவின் வல்லமையால் சரீரப்பிரகாரமான நோய்கள், அவைகள் எவ்வளவு பயங்கரமானவைகளாக இருந்தபோதிலும் சுகப்படுத்தப்பட்டன; ஆனால், ஒளிக்கு எதிராகத் தங்கள் கண்களை மூடிக்கொண்டிருந்தவர்களின் ஆத்துமாவிலிருந்த நோய் அவர்களை உறுதியாகப் பற்றிக்கொண்டது. மதவிரோதத்தையும் அவநம்பிக்கையையும்விட (விசுவாசமின்மையையும் விட) தொழுநோயும் பக்கவாதமும் பயங்கரமானவை அல்ல! (34)

சற்று நேரத்திற்குமுன், நண்பர்களால் கட்டிலில் சுமந்துசெல்லப்பட்ட திமிர்வாதக்காரன் சுகமடைந்து, தன் வீட்டிற்குத் திரும்பிவந்தபோது, அவனது குடும்பத்தில் பெரிய மகிழ்ச்சி உண்டாயிற்று. அவர்கள் தங்கள் கண்களையே நம்பமுடியாதவர்களாக மகிழ்ச்சியின் கண்ணீருடன் அவனைச் சூழ்ந்துகொண்டனர். அவன் அவர்கள்முன் ஒரு பூரணமான ஜீவசக்தி உள்ளவனாக, முழு மனிதன் என்னும் நிலையில் நின்றான். உயிரற்றவைகளாக இருந்த அவனது கரங்கள் இப்பொழுது அவனது விருப்பத்தின்படி விரைவாகச் செயலாற்றுபவையாக இருந்தன. சுருங்கி ஈயத்தின் நிறமாக இருந்த தசைகள் இப்பொழுது புதியவையாகவும் சிவந்தவையாகவும் இருந்தன. இப்பொழுது

அவன் சுதந்திரமாகவும் உறுதியாகவும் அடியெடுத்துவைத்து நடந்தான். அவனது முகத்தின் தசைகளிலெல்லாம் மகிழ்ச்சி, நம்பிக்கை ஆகியவை எழுதப்பட்டிருந்தன. பாவம், துன்பங்கள் ஆகியவைகளின் அடையாளங்கள் இருந்த இடத்தில், தூய்மையும் சமாதானமும் குடிகொண்டன. நம்பிக்கை இல்லாமலிருந்தவனுக்கு நம்பிக்கையையும், நோய்வாய்ப்பட்டவனுக்குப் பலமும் கிடைத்ததற்காக மகிழ்ச்சிமிக்க நன்றிகூறுதல் அந்த வீட்டிலிருந்து விண்ணை நோக்கி எழுந்தது. தேவன் அவரது குமாரனின்மூலமாக மகிமைப்படுத்தப்பட்டார். இயேசுவிற்காக உயிரையும் கொடுப்பதற்கு அந்த மனிதனும் அவன் குடும்பத்தினரும் ஆயத்தமாக இருந்தனர். இருளடைந்திருந்த அவர்களது வீட்டிற்குள் ஒளியைக் கொண்டுவந்த அவர்மீதுள்ள அவர்களது விசுவாசத்தை எந்தவிதமான சந்தேகமும் மங்கச் செய்யவில்லை; நம்பிக்கையின்மை (அவிசுவாசம்) அவர்களது உத்தம விசுவாசத்தைக் களங்கப்படுத்தவுமில்லை. (35) ★

# 28

# லேவி மத்தேயு!

**மத்தேயு 9:9–17; மாற்கு 2:14–22; லூக்கா 5:27–39**

**(The Desire of Ages, pp. 272–280)**

பாலஸ்தீனத்திலிருந்த ரோம அதிகாரிகளில் (வரிவசூல் செய்யும்) ஆயக்காரர்களைவிட வேறு ஒருவரும் அதிகமாக வெறுக்கப்படவில்லை. அந்நிய நாட்டு வல்லமை ஒன்றால் வரி விதிக்கப்பட்டிருக்கிற உண்மை, தங்களுடைய சுதந்திரம் இல்லாமலாகிவிட்டது என்பதன் ஞாபகச்சின்னமாக இருந்ததினால், அது யூதர்களுக்குத் தொடர்ச்சியாக எரிச்சலையூட்டுவதாக இருந்தது. வரிவசூலிப்பவர்கள் ரோம ஒடுக்குதல்காரர்களாகமட்டும் இராமல், வன்முறையிலும் வசூல்செய்து, மக்களின் செலவில் தங்களைச் செல்வந்தர்களாக்கிக்கொண்டிருந்தனர். ரோமர்களின் கரத்திலிருந்து இந்த வேலையை ஏற்றுக்கொண்ட ஒரு யூதன், தனது இனத்தின் கௌரவத்திற்கு துரோகஞ்செய்பவன் என்று கருதப்பட்டிருந்தான். ஒரு மருளவிழுந்தவனாக அவன் நிந்திக்கப்பட்டு, சமுதாயத்தில் மிகவும் தீயவர்களின் வகுப்பிற்கு உட்படுத்தப்பட்டிருந்தான். (1)

கெனேசரேத்திலிருந்த நான்கு சீடர்களுக்குப்பின் கிறிஸ்துவின் சேவைக்கென்று அடுத்து அழைக்கப்படவேண்டியவனாக இருந்த லேவி மத்தேயு இந்த வகுப்பைச் சேர்ந்தவனாக இருந்தான். அவனது பணியினை அனுசரித்து, பரிசேயர்கள் அவனை நியாயந்தீர்த்திருந்தனர்; ஆனால், சத்தியத்தை ஏற்பதற்குத் திறக்கப்பட்ட ஒரு இருதயம் இந்த மனிதனில் இருப்பதை இயேசு கண்டார். இரட்சகரின் போதனைகளை மத்தேயு கவனித்திருந்தான். அவனது பாவத்தன்மையைப்பற்றிய மனஉணர்த்துதலை தேவ ஆவியானவர் உணர்த்தினதால், கிறிஸ்துவிடமிருந்து உதவிபெற அவன் ஏங்கினான்; ஆனால், ரபிமார்களுக்கே உரிய குறுகிய மனப்பான்மையில் அவன் பழக்கப்பட்டவனாக இருந்ததினால், இந்த மாபெரும் போதகர் தன்னைக் கவனிக்கக்கூடும் என அவன் எண்ணவில்லை. (2)

ஒருநாள் அந்த ஆயக்காரன் வரி வசூல்செய்யும் சாவடியில் உட்கார்ந்திருந்தபோது, இயேசு வருவதைக் கண்டான். "எனக்குப்

பின்சென்றுவா” என்று அவனுக்குக் கூறப்பட்டதைக் கேட்டதில் அவனது ஆச்சரியம் மிகவும் பெரிதாக இருந்தது. (3)

மத்தேயு எல்லாவற்றையும் விட்டுவிட்டு, அவருக்குப் பின்சென்றான். இலாபம் தரக்கூடிய தொழிலுக்குப் பதிலாக, வறுமையும் துன்பங்களும் உண்டாகுமே என்ற தயக்கம், கேள்விகள் ஆகிய எதுவும் இருக்கவில்லை. இயேசுவின் வார்த்தைகளைக் கவனிப்பதும் அவரது ஊழியத்தில் அவருடன் ஒன்று சேருவதும் அவனுக்குப் போதுமானதாக இருந்தது. (4)

இதற்குமுன் அழைக்கப்பட்டிருந்த சீடர்களின் காரியமும் இதைப்போலவே இருந்தது. பேதுருவையும் அவனது தோழர்களையும் தம்மைப் பின்பற்றும்படி இயேசு அழைத்தபோது, உடனே அவர்கள் தங்களுடைய படகுகளையும் வலைகளையும் விட்டுவிட்டுச் சென்றனர். இந்த சீடர்களில் சிலருக்கு அவர்களைச் சார்ந்திருந்த நண்பர்கள் இருந்தனர்; ஆனால், இரட்சகரின் அழைப்பை அவர்கள் பெற்றபோது, நான் எப்படி வாழ்வேன், என் குடும்பத்தை எப்படிக் காப்பாற்றுவேன் என்று அவர்கள் தயங்கவோ விசாரிக்கவோ இல்லை. அவர்கள் அந்த அழைப்பிற்குக் கீழ்ப்படிந்தனர்; பின்னர் இயேசு அவர்களை நோக்கி: “நான் உங்களைப் பணப்பையும் சாமான்பையும் பாதரட்சைகளும் இல்லாமல் அனுப்பினபோது, ஏதாகிலும் உங்களுக்குக் குறைவாயிருந்ததா என்றார். அவர்கள், ஒன்றும் குறைவாயிருந்ததில்லை” என்றார்கள்—லூக்கா 22:35. (5)

மத்தேயுவிற்கு அவனுக்கிருந்த செல்வத்திலும், அந்திரேயாவிற்கும் பேதுருவிற்கும் அவர்களுடைய வறுமையிலும், இதே சோதனைகள் கொண்டுவரப்பட்டன. ஒவ்வொருவராலும் அதேவிதமான அர்ப்பணம் செய்யப்பட்டது. வலைகள் மீன்களால் நிறைந்திருந்தபோது, பழைய வாழ்க்கையைப்பற்றிய துடிப்புகள் பலமாக இருந்தபோது, வெற்றியின் அந்த வினாடியில் கடற்கரையிலிருந்த இயேசு சுவிசேஷ ஊழியத்திற்காக எல்லாவற்றையும் விட்டுவிடும்படி சீடர்களிடம் கேட்டார். அதைப்போலவே, உலகப்பிரகாரமான நன்மைகளின்மீதுள்ள வஞ்சை அல்லது கிறிஸ்துவுட னுள்ள ஐக்கியம் ஆகியவைகளில் எது அதிகப் பலமுள்ளதாக இருக்கிறது என்று ஒவ்வொரு ஆத்துமாவும் சோதிக்கப்படுகிறது. (6)

கொள்கை எப்போதுமே உடனடியாகச் செய்துதீரவேண்டுமென்ற நிலையை உண்டுபண்ணுவதாக உள்ளது. மனிதனுடைய இருதயம் தேவனுடைய ஊழியத்தில் முழுமையானதாக இருக்காதவரை, தேவனுடைய ஊழியத்தில் ஒருவனாலும் வெற்றியடைய முடியாது. அப்படிப்பட்டவன் கிறிஸ்துவைப்பற்றிய அறிவின் மேன்மைக்காக எல்லாவற்றையும் நஷ்டமாக

எண்ணுகிறான். தனக்கென்று எதையாவது சேமித்து ஒதுக்கிவைப்பவன் ஒருவனும் கிறிஸ்துவின் சீடனாக முடியாது. அவன் அவரது உடன் ஊழியக்காரனாக இருப்பதைவிட, மிகக் குறைவானவனாகவே இருப்பான். மாபெரும் இரட்சிப்பை மனிதர்கள் வரவேற்கும்போது, கிறிஸ்வின் சீடனாக முடியாது. அவன் அவரது உடன் ஊழியக்காரனாக இருப்பதைவிட, மிகக் குறைவானவனாகவே இருப்பான். மாபெரும் இரட்சிப்பை மனிதர்கள் வரவேற்கும்போது, கிறிஸ்துவின் வாழ்க்கையில் காணப்பட்ட தற்தியாகம், அவர்களது வாழ்க்கையிலும் காணப்படும். அவர் எந்தப் பாதையிலெல்லாம் நடத்திச் செல்லுகிறாரோ, அதைப் பின்தொடர்வதில் அவர்கள் மகிழ்ச்சியுள்ளவர்களாக இருப்பார்கள். (7)

கிறிஸ்துவின் சீடர்களில் ஒருவனாக இருக்கும்படி மத்தேயுவிற்கு கொடுக்கப்பட்ட அழைப்பு வேதபாரகர்கள், பரிசேயர்கள் ஆகியோரின் பெரும் கோபத்தைத் தூண்டிவிட்டது. ஏனெனில், மத போதகர் ஒருவர் தனது அருகிலிருக்கும் ஒரு ஊழியக்காரனாக இருக்கும்படி, ஒரு ஆயக்காரனைத் தெரிந்துகொள்ளுவது, மத, சமுதாய, ஜாதி வழக்கங்களுக்கு எதிரான குற்றமாக இருந்தது. நிகழ்காலத்தில் இயேசுவைப்பற்றி மக்கள் கொண்டுள்ள பிரசித்தமான உணர்வினை, தவறான எண்ணங்களைத் தூண்டிவிடும்படி மக்களிடம் வேண்டுகோள் விடுப்பதின்மூலம் திசைதிருப்பிவிடலாம் என்று பரிசேயர்கள் நம்பினார்கள். (8)

ஆயக்காரர்களுக்கு மத்தியில் ஒரு ஆர்வம் பரவலாக உண்டு பண்ணப்பட்டது. அவர்களது இருதயங்கள் தெய்வீகப் போதகரின் பக்கமாக இழுக்கப்பட்டிருந்தது. மத்தேயு தனக்குக் கிடைத்த சீடத்துவ ஸ்தானத்தின் மகிழ்ச்சியில், தனது முந்தைய தோழர்களை இயேசுவிடம் கொண்டுவர ஏங்கினான். அதற்கென்று அவன் தன் வீட்டில் ஒரு விருந்தை ஏற்பாடுசெய்து, அதற்குத் தன் உறவினர்களையும் நண்பர்களையும் அழைத்தான். அதில் ஆயக்காரர்கள் மட்டும் உட்படாமல், சமுதாயத்தில் கேள்விக்குரிய புகழை உடையவர்களும், ஒழுக்கமுள்ள அண்டை அயலகத்தாரால் விலக்கி வைக்கப்பட்டிருந்த அநேகரும் அழைக்கப்பட்டிருந்தனர். (9)

இயேசுவை கௌரவிப்பதற்காக அந்த விருந்து கொடுக்கப்பட்டது. அந்த உபசாரத்தை ஒப்புக்கொள்ள அவர் தயங்கவில்லை. பரிசேயக் கூட்டத்தினரிடமிருந்து அது எதிர்ப்பை உண்டுபண்ணும் என்பதையும் மக்களது பார்வையில் அது அவருக்குத் தரக்குறைவை ஏற்படுத்தும் என்பதையும் அவர் நன்கு அறிந்திருந்தார்; ஆனால், கொள்கை சம்பந்தப்பட்ட எந்தக் கேள்வியாலும் அவரது செயற்பாடுகளை கட்டுப்படுத்தமுடியாமலிருந்தது. வெளிப்படையான சிறப்புத் தகுதிகள் கனமுள்ளவையாக இருக்கவில்லை.

ஜீவத் தண்ணீரின்மீது தாகமாக இருந்த ஆத்துமா ஒன்றுமட்டுமே அவரது இதயத்தைத் தொட்டிருந்தது. (10)

இயேசு அவரது அனுதாபத்தினாலும் சமூக அன்பினாலும் மானுடத்தின் மேன்மையை அங்கீகரித்திருந்தார் என்பதைக் காட்டும் வண்ணம், ஆயக்காரர்களின் மேஜையில் மேன்மைமிக்க விருந்தினராக அமர்ந்தார். அவரது நம்பிக்கைக்கு உகந்தவர்களாவதற்கு மனிதர்கள் ஏங்கினர். தாகமிக்க அவர்களது இருதயங்களில் அவரது வார்த்தைகள் ஆசீர்வாதமிக்க ஜீவனைக் கொடுக்கும் வல்லமையோடு விழுந்தன. புதிய துடிப்புகள் எழுப்பப்பட்டன. சமுதாயத்தால் புறக்கணிக்கப்பட்டிருந்த இவர்களுக்கு ஒரு புதிய வாழ்க்கை சாத்தியமாக்கப்பட்டது. (11)

இப்படிப்பட்ட சமுதாயக் கூட்டங்களில் இரட்சகரின் போதனையால் உணர்த்தப்பட்டு, அவர் பரலோகத்திற்கு எழுந்தருளும்வரை அதை அறிக்கை செய்யாதிருந்தவர்கள் ஒருசிலராக மட்டும் இருக்கவில்லை. பரிசுத்த ஆவி ஊற்றப்பட்டு, ஒரே நாளில் மூவாயிரம்பேர் மனந்திரும்பினபோது, ஆயக்காரர்களின் மேஜையில் முதலாவதாக இந்தச் சத்தியத்தைக் கேட்டிருந்த அநேகர் இருந்தனர். அவர்களில் சிலர் சுவிசேஷத்தின் ஊழியக்காரர்கள் ஆனார்கள். அந்த விருந்தில் இயேசுவின் உதாரணம் மத்தேயுவிற்கே தொடர்ச்சியான பாடமாக இருந்தது. நிந்திக்கப்பட்டிருந்த ஆயக்காரன் தனது சொந்த ஊழியத்தில் ஆண்டவரின் அடிச்சுவடுகளை நெருக்கமாகப் பின்பற்றி, அதிகமதிகமாகப் பக்திசெலுத்தும் சுவிசேஷகரில் ஒருவனானான். (12)

மத்தேயு அளித்த விருந்தில் இயேசு கலந்துகொண்டிருந்தார் என்பதை அறிந்த ரபிமார்கள், சீடர்களின்மூலமாகச் செயலாற்றுவதைத் தெரிந்துகொண்டனர். தவறான எண்ணங்களைத் தூண்டிவிடுவதின்மூலமாக அவர்களை அவர்களது ஆண்டவரிடமிருந்து பிரித்துவிடலாமென்று நம்பினார்கள். கண்டிப்பாகக் காயப்படுத்தும் இடத்திற்குத் தங்களுடைய அம்புகளை குறிவைத்து, கிறிஸ்துவைப்பற்றி அவரது சீடர்களிடமும், சீடர்களைப்பற்றி இயேசுவிடமும் குற்றஞ்சாட்டுவது அவர்களது கொள்கையாக இருந்தது. பரலோகத்தில் சாத்தானிடத்தில் நேசப்பாங்கற்ற தன்மை உருவாகிவிட்டதிலிருந்து அவன் இவ்விதமாகத்தான் செயலாற்றினான். அதிருப்தியையும் பிரிவினையையும் உண்டுபண்ண முயலும் யாவரும் அவனது ஆவியினால் செயலாற்ற முயற்சிக்கின்றனர். (13)

அவர் ஆயக்காரரோடும் பாவிகளோடும் போஜனம்பண்ணுகிறது என்ன? என்று பொறாமைமிக்க ரபிமார்கள் கேட்டார்கள். (14)

இந்தக் குற்றச்சாட்டிற்கு அவருடைய சீடர்கள் பதில்சொல்ல இயேசு காத்திருக்காமல், அவர்தாமே: "பிணியாளிகளுக்கு வைத்தியன் வேண்டியதேயல்லாமல் சுகமுள்ளவர்களுக்கு வேண்டியதில்லை. பலியையல்ல, இரக்கத்தையே விரும்புகிறேன் என்பதின் கருத்து இன்னதென்று போய்க் கற்றுக்கொள்ளுங்கள்; நீதிமான்களையல்ல, பாவிகளையே மனந்திரும்புகிறதற்கு அழைக்க வந்தேன்" என்றார். பரிசேயர்கள், தாங்கள் ஆவிக்குரிய விதத்தில் சுகமுள்ளவர்களாக இருப்பதினால் தங்களுக்கு வைத்தியன் தேவையில்லை என்று உரிமைபாராட்டி, ஆயக்காரரும் புறஜாதியினரும் ஆத்துமாவின் நோய்களினால் மடிந்துகொண்டிருப்பதாகக் கருதியிருந்தனர். அப்படியிருக்கும்போது, அவருடைய உதவி தேவையாக இருக்கும் அந்த வகுப்பினரிடம் போவது, வைத்தியராக இருக்கும் அவரது வேலையில்லையா? (15)

ஆனால் பரிசேயர்கள் தங்களைப்பற்றி மிக மேலாக எண்ணிக்கொண்டிருந்தபோதும், உண்மையில் அவர்கள் நிந்தித்திருந்தவர் களைவிட மிக மோசமான நிலையிலேயே இருந்தனர். ஆயக்காரர்கள் மதவிரோதத்தையும் சுயதிருப்தியையும் மிகக்குறைவாகப் பெற்றிருந்தனர். இயேசு ரபிமார்களிடம், "பலியையல்ல, இரக்கத்தையே விரும்புகிறேன் என்பதின் கருத்து இன்னதென்று போய்க் கற்றுக்கொள்ளுங்கள்" என்றார். இவ்விதமாக அவர்கள் தேவனுடைய வார்த்தைக்கு நாங்கள் விளக்கங் கொடுக்கிறோம் என்று உரிமைபாராட்டியிருந்தபோது, அதன் ஆவிக்குரிய தன்மையைப்பற்றி முற்றிலும் அறியாதவர்களாக இருந்தனர். (16)

பரிசேயர்கள் அப்போதைக்கு மௌனப்படுத்தப்பட்டனர். ஆனால் தங்களது விரோதத்தில் அதிக தீர்மானமுள்ளவர்களாயினர். அடுத்ததாக அவர்கள் யோவான் ஸ்நானகனின் சீடர்களை கண்டுபிடித்து, அவர்களை இரட்சகருக்கு எதிராக அணியமைக்க வகைதேடினர். இந்தப் பரிசேயர்கள் யோவான் ஸ்நானகனின் ஊழியத்தை ஏற்றுக்கொள்ளவில்லை. யோவான் ஸ்நானகனின் புலனடக்கமிக்க மித உணவு வாழ்க்கையையும், எளிமைமிக்க பழக்கங்களையும், அவனது முரட்டு ஆடையையும் பரிகசித்து, அவனை கொள்கை வெறியன் என்று குற்றஞ்சாட்டினார்கள். அவர்களது மாய்மாலத்தை அவன் கண்டனஞ்செய்திருந்ததினால் அவனது வார்த்தைகளைத் தடுத்து, மக்களை அவனுக்கு எதிராகக் கலகஞ்செய்யும்படி எழுப்பிவிட முயன்றிருந்தனர். இந்தப் பரிகாசக்காரர்களின் இருதயங்களின்மீது தேவ ஆவியானவர் அசைவாடி, அவர்களது பாவத்தைப்பற்றிய மன உணர்த்துதலை உண்டுபண்ணியிருந்தார். அதனால் அவர்கள் தேவனுடைய ஆலோசனையைப் புறக்கணித்து, யோவான் பிசாசுபிடித்தவன் என்று அறிவித்திருந்தனர். (17)

அப்பொழுது இயேசு வந்து, மக்களுடன் கலந்து, அவர்களது மேஜையில் போஜனம்செய்தும் பானம்பண்ணியும் இருந்தபோது, அவரை “போஜனப்பிரியனும் மதுபானப்பிரியனுமான மனுஷன்” என்றார்கள். இந்தக் குற்றச்சாட்டினைக் கூறினவர்களே குற்றமுடையவர்களாக இருந்தனர். சாத்தான் தனது தீய பண்புகளை தேவனுக்கு அணிவித்து, அவரைப்பற்றித் தவறாக எடுத்துக்காட்டினதுபோல, கர்த்தருடைய ஊழியக்காரர்களும் இந்தத் துன்மார்க்கரான மனிதர்களால் தவறாகக் குற்றஞ்சாட்டப்பட்டனர். (18)

இருளில் உட்கார்ந்திருந்தவர்களுக்கு ஒளியைக் கொண்டு வருவதற்காகத்தான் இயேசு ஆயக்காரர்களுடனும் பாவிகளுடனும் சேர்ந்து உணவருந்தியிருந்தார் என்பதைப் பரிசேயர்கள் எண்ணிப்பார்க்க விரும்பவில்லை. தெய்வீகப் போதகரால் விதைக்கப்பட்ட வார்த்தைகள் ஒவ்வொன்றும் ஜீவனைத்தரும் விதைகளாக இருந்து, வளர்ந்து, தேவனுடைய மகிமைக்கென்று கனிகொடுக்கும் என்பதைப் பார்க்க விரும்பாதவர்களாக இருந்தனர். ஒளியை ஏற்றுக்கொள்ளக்கூடாது என்று அவர்கள் தீர்மானித்திருந்தனர். அவர்கள் யோவானின் ஊழியத்தை எதிர்த்திருந்தபோதிலும், இயேசுவிற்கு எதிரான ஒத்துழைப்பை அவனது சீடர்களிடமிருந்து பெற்றுக்கொள்ளலாம் என்ற நம்பிக்கையில் இப்பொழுது அவர்களை நண்பர்களாக்கிக்கொள்ள ஆயத்தமாயிருந்தனர். பண்டைய பாரம்பரியங்களையெல்லாம் இயேசு குலைத்துக்கொண்டிருக்கிறார் என்று அவர்கள் எடுத்துக்காட்டினர். இயேசு ஆயக்காரர்களுடனும் பாவிகளுடனும் கலந்து விருந்துண்டிருந்ததை அவர்கள் யோவானின் எளிமையுடனும் பக்தியுடனும் ஒப்பிட்டுக் காட்டினர். (19)

இந்த நேரத்தில் யோவானின் சீடர்கள் மிகுந்த துயரத்தில் இருந்தனர். அது யோவானின் தூதுடன் அவர்கள் இயேசுவைச் சந்தித்ததற்கு முன்னதாக இருந்தது. அவர்களது அன்பான போதகர் சிறையில் இருந்தார். அவர்கள் தங்களது நாட்களைத் துக்கங்கொண்டாடிக் கழித்திருந்தனர். இயேசு யோவானை விடுதலைசெய்ய எந்த முயற்சியும் செய்யாமலிருந்தார். அவனது போதனைகளை மதிக்காதவர்போலவும் அவர் காணப்பட்டார். யோவான் தேவனால் அனுப்பப்பட்டிருந்தால், இயேசுவும் அவரது சீடர்களும் யோவான் ஸ்நானகனிலிருந்து மிகவும் அதிகமாக மாறுபட்ட ஒரு பாதையை பின்பற்றுவது ஏன்? (20)

கிறிஸ்துவின் ஊழியத்தைப்பற்றி யோவானின் சீடர்கள் சரியான அறிவை கொண்டிருக்கவில்லை. பரிசேயர்களின் குற்றச்சாட்டிற்கு ஏதாவது அடித்தளம் இருக்கக்கூடும் என்று அவர்கள் நினைத்தார்கள். அவர்கள்

பரிசேயரால் கொடுக்கப்பட்டிருந்த அநேக சட்டங்களைக் கடைப்பிடித்திருந்து, நியாயப்பிரமாணத்தின் கிரியைகளினால் நீதிமான்களாக்கப்படவும் நம்பியிருந்தனர். உபவாசிப்பது ஒரு புண்ணியமான செயல் என்று யூதர்களால் கடைப்பிடிக்கப்பட்டிருந்தது. மிகவும் உறுதியான கொள்கையை கொண்டிருந்தவர்கள் ஒவ்வொரு வாரத்திலும் இரண்டு நாட்கள் உபவாசித்திருந்தனர். யோவானின் சீடர்கள் இயேசுவிடம் வந்தபோது, நாங்களும் பரிசேயர்களும் உபவாசிக்கும்போது, உம்முடைய சீடர்கள் உபாவாசம் செய்யாமலிருப்பது ஏன்? என்று விசாரித்தனர். (21)

இயேசு அவர்களுக்கு மிக மென்மையாகப் பதில்கூறினார். உபவாசத்தைப்பற்றிய அவர்களது தவறான எண்ணத்தைச் சரிசெய்ய அவர் முயலவில்லை. அவரது சொந்த ஊழியத்தைப்பற்றி சரியாகப் புரியவைக்க முயன்றார். இதை, யோவான் இயேசுவைப்பற்றிச் சாட்சி கொடுத்தபோது எவைகளைப் பயன்படுத்தியிருந்தானோ அதே உருவகத்தைப் பயன்படுத்திக் கூறினார். “மணவாட்டியை உடையவனே மணவாளன்; மணவாளனுடைய தோழனோ, அருகே நின்று, அவருடைய சொல்லைக் கேட்கிறவனாய் மணவாளனுடைய சத்தத்தைக்குறித்து மிகவும் சந்தோஷப்படுகிறான்; இந்தச் சந்தோஷம் இப்பொழுது எனக்குச் சம்பூரணமாயிற்று.” (யோவான் 3:29) என்று யோவான் கூறியிருந்தான். யோவானின் சீடர்களால், அவர்களது போதகரின் இந்த வார்த்தையை நினைவிற்கு கொண்டுவராமலிருக்கமுடியவில்லை. அதே உருவத்தை எடுத்துக்கொண்டு, “மணவாளன் தங்களோடிருக்கையில் மணவாளனுடைய தோழர்களை நீங்கள் உபவாசிக்கச் செய்யக்கூடுமா?” என்றார். (22)

பரலோகத்தின் இளவரசர் அவரது மக்களுக்கிடையில் இருந்தார். தேவனின் மாபெரும் பரிசு உலகத்திற்கு ஈவாக அருளப்பட்டிருந்தது. ஏழைகளுக்கு மகிழ்ச்சி; ஏனெனில் கிறிஸ்து அவர்களைத் தமது இராஜ்யத்தின் சுதந்திரவாளிகளாக்கும்படி வந்திருந்தார். செல்வந்தர்களுக்கு மகிழ்ச்சி; ஏனெனில் நித்தய செல்வங்களைச் சம்பாதிப்பது எப்படி என்று அவர்களுக்கு அவர் போதிப்பார். அறியாமையில் இருப்பவர்களுக்கு மகிழ்ச்சி; ஏனெனில் அவர்களை இரட்சிப்பிற்கேற்ற ஞானவான்களாக அவர் மாற்றுவார். கற்றவர்களுக்கு மகிழ்ச்சி; ஏனெனில் இதுவரை ஒருபோதும் அறிந்திராத ஆழமான இரகசியங்களை அவர் திறப்பார். உலகத்தின் அஸ்திபாரத்திற்கு முன்னிருந்தே மறைபொருளாக வைக்கப்பட்டிருந்த சத்தியங்கள் மனிதர்களுக்கு அவரது ஊழியத்தால் திறக்கப்படும். (23)

இரட்சகரைக் காண்பதில் களிகூருபவனாக யோவான்ஸ்நானகன் இருந்தான். பரலோகத்தின் மகத்துவமானவருடன் கலந்து பேசவும்

நடக்கவுங்கூடிய சலுகையைப் பெற்றுக் களிகூர எப்படிப்பட்ட வாய்ப்பு அவர்களுக்குக் கிடைத்திருந்தது! அவர்கள் துக்கங்கொண்டாடி உபவாசஞ்செய்யவேண்டிய நேரம் இதுவல்ல. இருளிலும், மரண இருளிலும் உட்கார்ந்திருந்தவர்களுக்கு ஒளியைக் கொடுப்பதற்கேதுவாக, அவரது மகிமையின் ஒளியைப் பெற்றுக்கொள்ள அவர்கள் தங்களுடைய இருதயங்களை திறக்கவேண்டும். (24)

கிறிஸ்துவின் வார்த்தைகளால் கூறப்பட்டிருந்தவை ஒளிமிக்க ஒரு ஓவியமாக இருந்தன. ஆனால் அதற்கும் அப்பால் அவர் மட்டுமே அறிந்திருந்த ஒரு கனத்த நிழல் இருந்தது. “மணவாளன் அவர்களை விட்டு எடுபடும் நாட்கள் வரும், அந்த நாட்களிலே உபவாசிப்பார்கள்” என்று அவர் கூறினார். காட்டிக்கொடுக்கப்பட்டு, சிலுவையிலறையப்பட்டவராக அவர்களது கர்த்தரை அவர்கள் பார்க்க நேரிடும்போது, சீடர்கள் துக்கங்கொண்டாடி உபவாசிப்பார்கள். மேலறையிலிருந்தபோது பேசின கடைசி வார்த்தை களில்: “கொஞ்சக்காலத்திலே என்னைக் காணாதிருப்பீர்கள், மறுபடியும் கொஞ்சக்காலத்திலே என்னைக் காண்பீர்கள் என்று நான் சொன்னதைக்குறித்து நீங்கள் உங்களுக்குள்ளே விசாரிக்கிறீர்களோ? மெய்யாகவே மெய்யாகவே நான் உங்களுக்குச் சொல்லுகிறேன்: நீங்கள் அழுது புலம்புவீர்கள், உலகமோ சந்தோஷப்படும்; நீங்கள் துக்கப்படுவீர்கள், ஆனாலும் உங்கள் துக்கம் சந்தோஷமாக மாறும்” என்று கூறினார். (25)

அவர் கல்லறையிலிருந்து வெளியேவரும்போது, அவர்களது துக்கம் சந்தோஷமாக மாறும். அவர் பரமேறிச்சென்றபின், சரீரப்பிரகாரமாக அவர் (அவர்களுக்கருகில்) இருக்கமுடியாதவராக இருந்தார்; ஆனால், தேற்றரவாளனின்மூலமாக, அவர் தொடர்ந்து அவர்களுடனிருப்பார். அவர்கள் தங்களுடைய நேரத்தைத் துக்கங்கொண்டாடுவதில் செலவிடவேண்டியதாக இருக்காது. இதைத்தான் சாத்தான் விரும்பியிருந்தான். அவர்கள் வஞ்சிக்கப்பட்டு, ஏமாற்றப்பட்டுப்போனார்கள் என்ற ஒரு உணர்த்துதலை உலகத்திற்கு கொடுக்கவேண்டும் என்று சாத்தான் விரும்பியிருந்தான்; ஆனால், விசுவாசத்தினால் அவர்கள் உன்னதத்திலுள்ள பரிசுத்த ஸ்தலத்தை நோக்கி, அங்கு அவர்களுக்காக இயேசு ஊழியஞ்செய்துகொண்டிருப்பதை பார்க்கவேண்டியவர்களாக இருந்தனர்; இருந்தபோதிலும், இந்த உலகத்தின் அதிபதிகளுடனும் இருளின் இராஜ்யத்துடனும் அவர்கள் போரிடவேண்டிய சோதனையின் நாட்கள் வரும். கிறிஸ்து அவர்களுடன் நேரிடையாக இல்லாதபோது, அவர்கள் தேற்றரவாளனை அறிந்துகொள்ளத் தவறும்போது, அவர்கள் உபவாசஞ்செய்யவேண்டியது அதிகமான பொருத்தமாக இருக்கும். (26)

பரிசேயர்களின் இருதயங்கள் பொறாமையினாலும் கலகத்தினாலும் நிறைந்திருந்தபோது, சமயச் சடங்குகளைக் கடினமாகக் கடைப்பிடிப்பதின் மூலமாக, அவர்கள் தங்களை உயர்த்த வகைதேடியிருந்தனர். “இதோ, வழக்குக்கும் வாதுக்கும் துஷ்டத்தனத்தையுடைய கையினால் குத்துகிறதற்கும் உபவாசிக்கிறீர்கள்; நீங்கள் உங்கள் கூக்குரலை உயரத்திலே கேட்கப்பண்ணும்படியாய், இந்நாளில் உபவாசிக்கிறதுபோல் உபவாசியாதிருங்கள். மனுஷன் தன் ஆத்துமாவை ஒடுக்குகிறதும், தலைவணங்கி நாணலைப்போல் இரட்டிலும் சாம்பலிலும் படுத்துக்கொள்ளுகிறதும், எனக்குப் பிரியமான உபவாசநாளாயிருக்குமோ? இதையா உபவாசமென்றும் கர்த்தருக்குப் பிரியமான நாளென்றும் சொல்லுவாய்?”—ஏசாயா 58:4,5. (27)

உண்மையான உபவாசம் என்பது சட்டப்பிரகாரமான ஆராதனை அல்ல. தேவன் தெரிந்துகொண்டுள்ள உபவாசத்தைப் பற்றி வேதவாக்கியம்: “அக்கிரமத்தின் கட்டுகளை அவிழ்க்கிறதும், நுகத்தடியின் பிணையல்களை நெகிழ்க்கிறதும், நெருக்கப்பட்டிருக்கிறவர்களை விடுதலையாக்கிவிடுகிறதும், சகல நுகத்தடிகளையும் உடைத்துப்போடுகிறதும், ... பசியுள்ளவனிடத்தில் உன் ஆத்துமாவைச் சாய்த்து, சிறுமைப்பட்ட ஆத்துமாவைத் திருப்தியாக்குவதும்” (ஏசாயா 58:6,10) என்று கூறுகிறது. கிறிஸ்துவின் ஊழியத்திலுள்ள ஆவிக்குரிய தன்மையும் குணமும் இங்கு முன்வைக்கப்பட்டுள்ளது. அவரது முழு வாழ்க்கையும் உலகத்தை இரட்சிப்பதற்காகத் தம்மைத்தாமே தியாகஞ்செய்ததாக இருந்தது. வனாந்தரத்தின் சோதனையின்போதும், உபவாசத்திலிருந்தபோதும், மத்தேயு கொடுத்த விருந்தில் ஆயக்காரர்களுடன் சேர்ந்து உணவருந்தியிருந்தபோதும், தொலைந்துபோனவர்களின் மீட்பிற்காக அவர் தமது ஜீவனைக் கொடுத்துக்கொண்டிருந்தார். ஒன்றும் செய்யாமல் துக்கித்துக்கொண்டிருத்தல், சரீரப்பிரகாரமாகத் தாழ்த்துதல், பலவகையான பலிமுறைகளை ஏராளமாகச் செலுத்துதல், ஆகியவைகளினால் உண்மையான பக்தி வெளிக்காட்டப்படாமல், தேவனுக்கும் மனிதனுக்கும் விருப்பத்துடன் சேவைசெய்வதற்காக சுயத்தைச் சரணடையச்செய்வதில்தான் அது காட்டப்படுகிறது. (28)

இயேசு யோவான் ஸ்நானகனின் சீடர்களுடனுள்ள உரையாடலைத் தொடர்ந்து: “ஒருவனும் புதிய வஸ்திரத்துண்டைப் பழைய வஸ்திரத்தின்மேல் போட்டு இணைக்கமாட்டான், இணைத்தால் புதியது பழையதைக் கிழிக்கும்; புதியவஸ்திரத்துண்டு பழைய வஸ்திரத்துக்கு ஒவ்வாது” என்று கூறினார். யோவான் ஸ்நானனின் தூது மூடநம்பிக்கையுடனும் பாரம்பரியத்துடனும் பின்னிப் பிணைக்கக் கூடாததாக இருந்தது. பரிசேயர்களின் பிரசன்னத்தை

யோவானின் பக்தியுடன் கலப்பது என்பது, அவர்கள் இருசாராருக்கும் இடையிலிருந்த பிளவை அதிகமாக தெளிவாகத் தெரியும்படிச் செய்ததாகிவிடும்.” (29)

கிறிஸ்துவின் போதனையில் உள்ள கொள்கைகளை பரிசேய முறைமைகளுடன் இணைக்கமுடியாது. யோவான் ஸ்நானகனின்போதனைகளினால் உண்டான பிளவை அடைக்கவேண்டியவராகக் கிறிஸ்து இருக்கவில்லை. புதியதற்கும் பழையதற்கும் இடையில் உள்ள பிரிவினையை அவர் அதிகமாக வேறுபடுத்திக் காட்டுவார். இயேசு இந்த உண்மையை: “ஒருவனும் புது திராட்சரசத்தைப் பழந்துருத்திகளில் வார்த்துவைக்கமாட்டான்; வார்த்துவைத்தால் புதுரசம் துருத்திகளைக் கிழித்துப்போடும், இரசமும் சிந்திப்போம், துருத்திகளும் கெட்டுப்போம். புது ரசத்தைப் புது துருத்திகளில் வார்த்துவைக்கவேண்டும், அப்பொழுது இரண்டும் பத்திரப்பட்டிருக்கும்” (லுக்கா 5:37,38) என்று மேலும் ஒரு உவமையினால் கூறி விளக்கிக்காட்டினார். புதிய திராட்சைரசத்தை பாதுகாத்துவைக்க தோலால் செய்யப்பட்ட பாத்திரங்களாக பழைய துருத்திகள் பயன்படுத்தப்பட்டிருந்தன. சிறிது காலத்திற்குப்பின், இந்தப் பழைய துருத்தியின் தோல்கள் கீறல்விட்டுக் கிழிந்துபோய், மறுபடியும் திராட்சரசம் வைப்பதற்குத் தகுதியற்றவை ஆயின. பழக்கப்பட்ட இந்த உருவகத்தின்மூலமாக—அனைவரும் அறிந்த பொருட்பாடத்தின்மூலமாக இயேசு யூதத் தலைவர்களின் நிலைமையை விளக்கிக்காட்டினார். ஆசாரியர்களும் வேதபாரகர்களும் அதிபதிகளும் சடங்காச்சாரங்கள், பாரம்பரியங்கள் என்னும் குழியில் அகப்பட்டிருந்தனர். அவர்களது இருதயங்கள் சுருங்கி, அவர் ஒப்பிட்டுக்காட்டியிருந்த பழைய துருத்திகளைப்போலக் கீறி வெடித்திருந்தன. பிரமாணரீதியான ஒரு மதத்தில் அவர்கள் மனநிறைவடைந்தவர்களாக இருந்தபோது, பரலோக ஜீவ சத்தியத்தின் கருவூலங்களாக இருப்பது அவர்களுக்கு முடியாததாக இருந்தது. தங்களுடைய சுயநீதி தங்களுக்குப் போதுமானது என அவர்கள் எண்ணியிருந்தனர். அவர்களது மதத்திற்குள் ஒரு புதிய மூலக்கூறு கொண்டுவரப்படவேண்டும் என்பதை அவர்கள் விரும்பவில்லை. அவர்கள் அதனைத் தங்களது நல்ல செயல்களின் காரணமாக உண்டாகும் புண்ணியத்துடன் இணைத்திருந்தனர். அன்பினால் செயலாற்றி ஆத்துமாவைத் தூய்மைப்படுத்தும் விசுவாசம், சடங்காச்சாரங்களினாலும் மனிதரின் தடையுத்தரவுகளாலும் உண்டாகியிருந்த பரிசேய சமயத்தோடு ஐக்கியப்படுவதற்கு இடம் காணப்படவில்லை. ஸ்திரப்படுத்தப்பட்டிருந்த மதத்துடன் இயேசுவின் போதனைகளை ஐக்கியப்படுத்தும் முயற்சி வீணானதாகும். புளித்த திராட்சரசத்தைப்போன்ற ஜீவனுள்ள தேவ சத்தியம்,

பழைய துருத்திகளைப்போன்றிருந்த பரிசேயப் பாரம்பரியங்களைக் கிழித்துவிடும். (30)

தாங்கள் உபதேசங்களை ஏற்றுக்கொள்ளும் அவசியமற்ற ஞானமுடையவர்கள் என்றும், இரட்சிப்பே தேவைப்படாத அளவிற்கு அதிக நீதியுள்ளவர்கள் என்றும், கிறிஸ்துவினிடமிருந்து வரக்கூடிய மேன்மையைவிட அதிகமான மேன்மைமிக்கவர்கள் என்றும் பரிசேயர்கள் தங்களைப்பற்றி எண்ணியிருந்தனர். பரலோகத்தின் தூதினைப் பெற்றுக்கொள்ளக்கூடிய மற்றவர்களைக் கண்டுபிடிப்பதற்காக, இரட்சகர் அவர்களைவிட்டுத் திரும்பிச்சென்றார். கல்வியறிவற்ற மீன்பிடிப்பவர்களில், சந்தை வெளியில் இருந்த ஆயக்காரனில், சமாரிய பெண்ணில், அவரது பிரசங்கத்தை மகிழ்ச்சியுடன் கேட்டிருந்த சாதாரணமான மக்களில், அவரது புதிய இரசத்திற்கான புதிய துருத்திகளை அவர் கண்டார். தேவன் தங்களுக்கு அனுப்பும் ஒளியை மகிழ்ச்சியுடன் பெற்றுக்கொள்ளும் ஆத்துமாக்கள் சுவிசேஷ ஊழியத்தில் பயன்படுத்தப்பட உள்ள கருவிகளாக உள்ளனர். இவர்கள் தான் உலகத்திற்கு சத்தியத்தைப்பற்றிய அறிவைக் கற்றுக்கொடுக்கும் ஏதுகரங்களாக உள்ளனர். கிறிஸ்துவின் கிருபையின்மூலமாக, அவரது மக்கள் புதிய துருத்திகளாகும்போது, அவர் அவர்களைப் புதிய திராட்சரசத்தால் நிரப்புவார். (31)

கிறிஸ்துவின் போதனை புதிய திராட்சரசத்தினால் (உருவகமாக) எடுத்துக்காட்டப்பட்டிருந்தபோதிலும், அது ஒரு புதிய கோட்பாடாக இராமல், ஆதிகாலத்திலிருந்தே போதிக்கப்பட்டிருந்ததின் வெளிப்படுத்தலாக இருந்தது; ஆனால், பரிசேயர்களைப் பொறுத்தமட்டில், தேவனுடைய சத்தியம் அதன் ஆதியான முக்கியத்துவத்தையும் அழகையும் இழந்திருந்தது. கிறிஸ்துவின் போதனைகள் அவர்களுக்கு ஏறத்தாழ சகல வகைகளிலும் புதிதாக இருந்தது; எனவே, அது அவர்களுக்கு இனங்கண்டுகொள்ளப்படாததாகவும் ஒப்புக்கொள்ள முடியாததாகவும் இருந்தது. (32)

சத்தியத்தை வரவேற்கும்—வாஞ்சிக்கும் தன்மையை அழித்துவிடும் வல்லமை, தவறான போதனைக்கு இருப்பதை இயேசு சுட்டிக்காட்டினார். பழைய திராட்சரசத்தைக் குடித்த எந்த மனிதனும் புதுத் திராட்சரசத்தை நேராக விரும்புவதில்லை; ஏனெனில் பழையதே மேலானது என்று கூறுவான். முற்பிதாக்கள் மற்றும் தீர்க்கதரிசிகள்மூலமாக உலகத்திற்குக் கொடுக்கப்பட்டிருந்த சத்தியங்களனைத்தும் கிறிஸ்துவின் வார்த்தையில், புது அழகுடன் ஒளிவீசின; ஆனால், வேதபாரகர்களும் பரிசேயர்களும் அத்தகைய விலைமதிப்புமிக்க புதுத் திராட்சரசத்தின்மீது விருப்பமற்றவர்களாக இருந்தனர். பழைய பாரம்பரியங்கள், சம்பிரதாயங்கள், நடைமுறைகள் ஆகியவைகளை

விட்டுவிடாததினால், கிறிஸ்தவின் போதனைகளுக்கு அவர்களது மனதிலும் இருதயத்திலும் இடம் இருக்கவில்லை. அவர்கள் தங்களுடைய செத்துப்போன சடங்குகளைப் பிடித்துத் தொங்கிக்கொண்டிருந்தது, ஜீவனுள்ள சத்தியத்திலிருந்தும் தேவனுடைய வல்லமையிலிருந்தும் விலகிச்சென்றிருந்தனர். (33)

இதுதான் யூதருடைய அழிவிற்குக் காரணமாயிருந்தது. நமது நாட்களிலும் அநேக ஆத்துமாக்களின் அழிவிற்கு இதுவே காரணமாயிருக்கும். மத்தேயு அளித்த விருந்தின்போது, கிறிஸ்து கண்டனஞ்செய்திருந்த—பரிசேயர்கள் செய்திருந்த அதே தவறை இன்றும் ஆயிரக்கணக்கானவர்கள் செய்துகொண்டுள்ளனர். பேணி வளர்க்கப்பட்டுள்ள எண்ணங்களை விட்டுவிடுவதைவிட, அல்லது விக்கிரகமாக அமைந்துள்ள சில கருத்துக்களைத் தவிர்ப்பதைவிட, ஒளியின் பிதாவிடமிருந்து வரும் சத்தியத்தை அநேகர் மறுக்கின்றனர். அவர்கள் தங்கள்மேல் நம்பிக்கைவைத்து, தங்களது சுயஞானத்தைச் சார்ந்து, தங்களுடைய ஆவிக்குரிய வறுமையை உணராதிருக்கிறார்கள். ஏதாவது ஒரு வகையில் இரட்சிக்கப்பட்டிருப்பதை வற்புறுத்தி, அதனால் சில முக்கியமான கிரியையைச் செய்யலாம் என்று அவர்கள் எண்ணுகின்றார்கள். அந்தக் கிரியையில் சுயத்தை நெய்வதற்கான மார்க்கம் இல்லாமலிருப்பதை அவர்கள் காணும்போது, ஏற்படுத்தப்பட்டுள்ள இரட்சிப்பைப் புறக்கணிக்கின்றனர். (34)

பிரமாணத்தின் அடிப்படையிலான ஒரு மதம் ஒருபோதும் ஆத்துமாக்களைக் கிறிஸ்துவினிடத்திற்கு நடத்தாது; ஏனெனில், சுயநீதியைச் செயல்படுத்தும் ஆவியுடன் தூண்டப்படும் உபவாசம் அல்லது ஜெபம் தேவனுடைய பார்வையில் ஒரு அருவருப்பாக உள்ளது. தொழுகைக்கான பக்திவிநயமான கூட்டம் திரும்பத்திரும்பச் செய்யும் சடங்காச்சாரங்கள், வெளிப்படையான தாழ்மை, கட்டாயமாக்கப்பட்ட பலிகள் ஆகிய இவைகளைச் செய்பவர் தன்னைத்தான் நீதியுள்ளவன் என்று எண்ணி, அதனால் தன்னைப் பரலோகத்திற்குத் தகுதியுள்ளவன் என்று கருதுகிறான்; ஆனால், இவை அனைத்தும் ஒரு வஞ்சகமாக உள்ளது. நமது சொந்த செயல்களினால் ஒருபோதும் இரட்சிப்பை விலைக்கு வாங்க இயலாது. (35)

கிறிஸ்துவின் நாட்களில் எவ்விதமாக இருந்ததோ அவ்விதமாகவே இப்போதும் உள்ளது. பரிசேயர்கள் தங்களுடைய ஆவிக்குரிய இயலாமையை அறியாதவர்களாக உள்ளனர். அவர்களுக்கு: “நீ நிர்ப்பாக்கியமுள்ளவனும், பரிதபிக்கப்படத்தக்கவனும், தரித்திரனும், குருடனும், நிர்வாணியுமாயிருக்கிறதைஅறியாமல், நான் ஐசுவரியவானென்றும், திரவிய சம்பன்னனென்றும், எனக்கு ஒரு குறைவுமில்லையென்றும், சொல்லுகிற

படியால்; நான்: நீ ஐசுவரியவானாகும்படிக்கு நெருப்பிலே புடமிடப்பட்ட பொன்னையும், உன் நிர்வாணமாகிய அவலட்சணம் தோன்றாதபடிக்கு நீ உடுத்திக்கொள்வதற்கு வெண்வஸ்திரங்களையும் என்னிடத்திலே வாங்கிக்கொள்ளவும், நீ பார்வையடையும்படிக்கு உன் கண்களுக்குக் கலிக்கம்போடவும் வேண்டுமென்று உனக்கு ஆலோசனை சொல்லுகிறேன்" (வெளிப்படுத்தல் 3:17,18) என்ற தூது வருகிறது. விசுவாசமும் அன்பும் நெருப்பில் புடமிடப்பட்ட பொன்னாக உள்ளன; ஆனால், அநேகருடைய காரியத்தில் இந்தப் பொன் மங்கி, செல்வமிக்க ஒரு பொக்கிஷம் இழக்கப்பட்டுள்ளது. கிறிஸ்துவின் நீதி அவர்களுக்கு அணியாத உடையாகவும் தொடப்படாத நீரூற்றாகவும் உள்ளது. எனவே, "ஆனாலும், நீ ஆதியில் கொண்டிருந்த அன்பை விட்டாய் என்று உன்பேரில் எனக்குக் குறை உண்டு. ஆகையால், நீ இன்ன நிலைமையிலிருந்து விழுந்தாயென்பதை நினைத்து, மனந்திரும்பி, ஆதியில் செய்த கிரியைகளைச் செய்வாயாக; இல்லாவிட்டால் நான் சீக்கிரமாய் உன்னிடத்தில் வந்து, நீ மனந்திரும்பாதபட்சத்தில், உன் விளக்குத்தண்டை அதனிடத்தினின்று நீக்கிவிடுவேன்" (வெளிப்படுத்தல் 2:4,5) என்று கூறப்பட்டுள்ளது. (36)

"தேவனுக்கேற்கும் பலிகள் நொறுங்குண்ட ஆவிதான்; தேவனே, நொறுங்குண்டதும் நருங்குண்டதுமான இருதயத்தை நீர் புறக்கணியீர்" சங்கீதம் 51:17. ஒரு மனிதன் பூரணமான அர்த்தத்தில் இயேசுவில் நம்பிக்கையுள்ளவனாவதற்குமுன், அவன் தன்னை வெறுமையாக்கவேண்டும். மனிதன் சுயத்தை மறுக்கும் போது, கர்த்தரால் அவனை ஒரு புது சிருஷ்டியாக்கமுடியும். புதிய துருத்திகளில், புதிய திராட்சரசத்தை வைக்கலாம். கிறிஸ்துவின் அன்பு மனிதனை புதிய ஜீவனுடன் நடமாடச்செய்யும். விசுவாசத்தைத் துவக்குபவரும் முடிப்பவருமான ஒருவரைப் பார்ப்பவனில் கிறிஸ்துவின் குணம் வெளிக்காட்டப்பட்டும். (37) ★

# 29

# ஓய்வுநாள்!

**(The Desire of Ages, pp. 281–289)**

சிருஷ்டிப்பின்போது, ஓய்வுநாள் பரிசுத்தமாக்கப்பட்டது. "அப்பொழுது விடியற்காலத்து நட்சத்திரங்கள் ஏகமாய்ப்பாடி, தேவபுத்திரர் எல்லாரும் கெம்பீரித்தார்களே" (யோபு 38:7) என்றபடி மனிதனுக்காக ஏற்படுத்தப்பட்ட அதன் தொடக்கம் படைப்பின் ஆரம்பத்தில் உள்ளது. பூமி பரலோகத்துடன் இசைவுள்ளதாக இருந்ததினால் உலகில் சமாதானம் நிலவியிருந்தது. "அப்பொழுது தேவன் தாம் உண்டாக்கின எல்லாவற்றையும் பார்த்தார், அது மிகவும் நன்றாயிருந்தது"–ஆதியாகமம் 1:31. அவர் நிறைவுசெய்த படைப்பின் பணியில் மகிழ்ச்சியடைந்து இளைப்பாறினார். (1)

அவர் ஓய்வுநாளில் ஓய்ந்திருந்தபடியால் "தேவன் ஏழாம் நாளை ஆசீர்வதித்து, அதைப் பரிசுத்தமாக்கினார்"–ஆதியாகமம் 2:3. பரிசுத்தமாகப் பயன்படுத்துவதற்காக அதனை வேறுபடுத்தி வைத்தார். அதை ஒரு இளைப்பாறும் நாளாக ஆதாமிற்கு அவர் கொடுத்தார். அது படைப்பின் நினைவுச்சின்னமாக இருந்தது. இவ்வாறாக தேவனுடைய வல்லமை அன்பு ஆகியவகைளின் அடையாளமாக ஓய்வுநாள் இருந்தது (இருக்கிறது). "அவர் தம்முடைய அதிசயமான செய்கைகளை நினைவுகூரும்படி செய்தார்." "காணப்படாதவைகளாகிய அவருடைய நித்திய வல்லமை தேவத்துவம் என்பவைகள், உண்டாக்கப்பட்டிருக்கிறவைகளினாலே, உலகமுண்டானதுமுதற்கொண்டு, தெளிவாய்க் காணப்படும்"–சங்கீதம் 111:4; ரோமர் 1:20. (2)

தேவகுமாரனால்தான் அனைத்தும் படைக்கப்பட்டன. "ஆதியிலே வார்த்தை இருந்தது, அந்த வார்த்தை தேவனிடத்திலிருந்தது, ... சகலமும் அவர் மூலமாய் உண்டாயிற்று; உண்டானதொன்றும் அவராலேயல்லாமல் உண்டாகவில்லை"–யோவான் 1:1–3. ஓய்வுநாள் படைப்பின் ஒரு நினைவுச்சின்னமாக இருப்பதினால் அது கிறிஸ்துவின் அன்பு வல்லமை ஆகியவைகளின் அடையாளமாக உள்ளது. (3)

ஓய்வுநாள் நமது எண்ணங்களை இயற்கையினிடத்திற்குத் திருப்பி, சிருஷ்டிகருடன் நாம் உறவுகொள்ளும்படி நம்மைக் கொண்டுவருகிறது. பகலின் குளிர்ச்சியான வேளையில் ஏதேனில் ஆதாமுடன் பேசியிருந்தவரின் சத்தத்தை இப்போதும் பறவைகளின் பாடல்களில், மரங்களின் சலசலப்பில், கடலின் ஓசையில் நாம் கேட்கலாம். அவரது வல்லமையை இயற்கையில் காணும்போது, நாம் ஆறுதலடைகிறோம். ஏனெனில் அனைத்தையும் படைத்த அந்த வார்த்தை, ஆத்துமாவிற்கு ஜீவன் உண்டாகும்படி பேசுகிறது. "இருளிலிருந்து வெளிச்சத்தைப் பிரகாசிக்கச்சொன்ன தேவன் இயேசு கிறிஸ்துவின் முகத்திலுள்ள தமது மகிமையின் அறிவாகிய ஒளியைத் தோன்றப்பண்ணும்பொருட்டாக, எங்கள் இருதயங்களிலே பிரகாசித்தார்"–2 கொரிந்தியர் 4:6. (4)

இந்த சிந்தனைதான் "கர்த்தாவே, உமது செய்கைகளால் என்னை மகிழ்ச்சியாக்கினீர், உமது கரத்தின்கிரியைகளினிமித்தம் ஆனந்தசத்தமிடுவேன். கர்த்தாவே, உமது கிரியைகள் எவ்வளவு மகத்துவமானவைகள்! உமது யோசனைகள் மகா ஆழமானவைகள்" (சங்கீதம் 92:4,5) என்கிற பாடலை எழுப்பியது. பரிசுத்த ஆவியானவர் ஏசாயாவின்மூலமாக: "இப்படியிருக்க, தேவனை யாருக்கு ஒப்பிடுவீர்கள்? எந்தச் சாயலை அவருக்கு ஒப்பிடுவீர்கள்? … நீங்கள் அறியீர்களா? நீங்கள் கேள்விப்படவில்லையா? ஆதிமுதல் உங்களுக்குத் தெரிவிக்கப்படவில்லையா? பூமி அஸ்திபாரப்பட்டது முதல் உணராதிருக்கிறீர்களா? அவர் பூமி உருண்டையின்மேல் வீற்றிருக்கிறவர்; அதின் குடிகள் வெட்டுக்கிளிகளைப்போல இருக்கிறார்கள்; அவர் வானங்களை மெல்லிய திரையாகப் பரப்பி, அவைகளைக் குடியிருக்கிறதற்கான கூடாரமாக விரிக்கிறார்…. இப்படியிருக்க, என்னை யாருக்கு ஒப்பிடுவீர்கள்? எனக்கு யாரை நிகராக்குவீர்கள்? என்று பரிசுத்தர் சொல்லுகிறார். உங்கள் கண்களை ஏறெடுத்துப்பாருங்கள்; அவைகளைச் சிருஷ்டித்தவர் யார்? அவர் அவைகளின் சேனையை இலக்கத்திட்டமாகப் புறப்படப்பண்ணி, அவைகளையெல்லாம் பேர்பேராக அழைக்கிறவராமே; அவருடைய மகா பெலத்தினாலும், அவருடைய மகா வல்லமையினாலும், அவைகளில் ஒன்றும் குறையாமலிருக்கிறது. யாக்கோபே, இஸ்ரவேலே: என்வழி கர்த்தருக்கு மறைவாயிற்று என்றும், என் நியாயம் என் தேவனிடத்தில் எட்டாமல் போகிறது என்றும் நீ சொல்வானேன்? பூமியின் கடையாந்தரங்களைச் சிருஷ்டித்த கர்த்தராகிய அநாதிதேவன் சோர்ந்துபோவதுமில்லை, இளைப்படைவதுமில்லை; … சோர்ந்துபோகிறவனுக்கு அவர்பெலன் கொடுத்து, சத்துவமில்லாதவனுக்குச் சத்துவத்தைப் பெருகப்பண்ணுகிறார்." "நீ பயப்படாதே, நான் உன்னுடனே இருக்கிறேன்; திகையாதே, நான் உன் தேவன்; நான் உன்னைப் பலப்படுத்தி

உனக்குச் சகாயம்பண்ணுவேன்; என் நீதியின் வலதுகரத்தினால் உன்னைத் தாங்குவேன்.” “பூமியின் எல்லையெங்குமுள்ளவர்களே, என்னை நோக்கிப்பாருங்கள்; அப்பொழுது இரட்சிக்கப்படுவீர்கள்; நானே தேவன், வேறொருவரும் இல்லை.” இந்தத்தூது இயற்கையில் எழுதப்பட்டுள்ளது. இதன் ஞாபகமாக இருக்கும்படி ஓய்வுநாள் ஏற்படுத்தப்பட்டுள்ளது. கர்த்தர் தம்முடைய ஓய்வுநாளைப் பரிசுத்தமாக ஆசரிக்கும்படி இஸ்ரவேலர்களுக்கு கட்டளையிட்டபோது: “என் ஓய்வுநாட்களைப் பரிசுத்தமாக்குங்கள்; நான் உங்கள் தேவனாகிய கர்த்தர் என்று நீங்கள் அறியும்படிக்கு, அவைகள் எனக்கும் உங்களுக்கும் அடையாளமாயிருக்கும்” என்றார். ஏசாயா 40:18–29; 41:10; 45:22; எசேக்கியேல் 20:20. (5)

சீனாய் மலையின்மீதிருந்து பத்துக்கற்பனைகள் கொடுக்கப்பட்டபோது, ஓய்வுநாள் கற்பனை அதில் பதிக்கப்பட்டிருந்தது. ஆனால் அது ஒரு இளைப்பாறுதலின் நாள் என்று இச்சமயத்தில்தான் முதன்முறையாக அறிவிக்கப்படவில்லை. இஸ்ரவேல் மக்கள் சீனாய்மலைக்கு வருமுன்னே அதைப்பற்றின அறிவை உடையவர்களாக இருந்திருந்தனர். அங்கு வழிநெடுகிலும் ஓய்வுநாள் ஆசரிக்கப்பட்டிருந்தது. சிலர் அதைப் பரிசுத்த குலைச்சலாக்கினபோது: “கர்த்தர் மோசேயை நோக்கி: என் கட்டளைகளையும் என் பிரமாணங்களையும் கைக்கொள்ள எந்தமட்டும் மனதில்லாதிருப்பீர்கள்?” (யாத்திராகமம் 16:28) என்று கடிந்துகொண்டார். (6)

ஓய்வுநாள் இஸ்ரவேலருக்காகமட்டும் கொடுக்கப்படாமல், உலகத்திற்காகக் கொடுக்கப்பட்டிருந்தது. நியாயப்பிரமாணத்திலிருந்த மற்ற கற்பனைகளைப்போலவே அது அழியாத கடமைப்பாட்டினை உடையதாக ஏதேனில் மனிதனுக்கு அறிவிக்கப்பட்டிருந்தது. இந்தக் கற்பனைகளில் ஒருபகுதியாக உள்ள நான்காம் பிரமாணத்தைப்பற்றி: “வானமும் பூமியும் ஒழிந்துபோனாலும், நியாயப்பிரமாணத்திலுள்ளதெல்லாம் நிறைவேறுமளவும், அதில் ஒரு சிறு எழுத்தாகிலும், ஒரு எழுத்தின் உறுப்பாகிலும் ஒழிந்துபோகாது என்று மெய்யாகவே உங்களுக்குச் சொல்லுகிறேன்” (மத்தேயு 5:18) என்று கர்த்தர் அறிவிக்கிறார். வானமும் பூமியும் உள்ளவரை சிருஷ்டிகரின் வல்லமையைக் காட்டும் ஒரு அடையாளமாக ஓய்வுநாள் தொடரும். பூமியின்மீது மறுபடியும் ஏதேன் மலரும்பொழுது, சூரியனுக்குக் கீழேயுள்ள அனைவராலும் தேவனுடைய பரிசுத்த ஓய்வுநாள் மேன்மைப்படுத்தப்படும். “அப்பொழுது: மாதந்தோறும், ஓய்வுநாள்தோறும், மாம்சமான யாவரும் எனக்கு முன்பாகத் தொழுதுகொள்வார்களென்று கர்த்தர் சொல்லுகிறார்”– ஏசாயா 66:23. (7)

ஓய்வுநாள் ஆசரிப்பு யூதர்களிடம் ஒப்படைக்கப்பட்டிருந்தது. இது யூதர்களைச் சுற்றியிருந்த மற்ற ஜாதிகளிலிருந்து அவர்களை வேறுபடுத்திக் காட்டியிருந்தது. அவர்கள் தேவனைத் தொழுதுகொள்ளுபவர்கள் என்று அறியும்படி தேவன் ஓய்வுநாளை வடிவமைத்திருந்ததார். விக்கிரக ஆராதனையிலிருந்து அவர்களை வேறுபடுத்தி, மெய் தேவனுடனுள்ள அவர்களது பிணைப்பைக் காட்டும் ஒரு அடையாளமாக அது திகழவேண்டியதாக இருந்தது. ஓய்வுநாளைப் பரிசுத்தமாக ஆசரிப்பதற்கு மனிதர்கள் தாங்களும் பரிசுத்தமுள்ளவர்களாக இருந்தாகவேண்டும். விசுவாசத்தினால் அவர்கள் கிறிஸ்துவின் நீதியில் பங்குபெறுபவர்களாகவேண்டும். “ஓய்வுநாளைப் பரிசுத்தமாய் ஆசரிக்க நினைப்பாயாக;” என்ற கட்டளை கொடுக்கப்பட்டபோது, “நீங்கள் எனக்குப் பரிசுத்த மனுஷராயிருக்கக்கடவீர்கள்” (யாத்திராகமம் 20:8; 22:31) என்றும் கர்த்தர் கூறினார். ஓய்வுநாள் இவ்விதமாகவே இஸ்ரவேலர்களை தேவனைத்தொழுபவர்கள் என்று எடுத்துக்காட்டும். (8)

யூதர்கள் தேவனைவிட்டு விலகிச்சென்று விசுவாசத்தினால் கிறிஸ்துவின்மூலமாக உண்டாகக்கூடிய நீதியைத் தங்களுக்குச் சொந்தமாக்கிக்கொள்வதிலிருந்து தவறியபோது, ஓய்வுநாளின் முக்கியத்துவம் அவர்களுக்கு இல்லாமலாகிவிட்டது. சாத்தான் தன்னைத்தான் உயர்த்தி, மனிதர்களைக் கிறிஸ்துவிடமிருந்து விலக்க வகைதேடியிருந்தான். ஓய்வுநாள் கிறிஸ்துவின் அடையாளமாக இருந்தபடியால், அதைத் திரித்தப்போட சாத்தான் செயலாற்றினான். தேவனுடைய இளைப்பாறும் நாளை பாரமான கட்டுப்பாடுகளினால் சுமையாக்கி, யூதத்தலைவர்கள் சாத்தானின் சித்தத்தை நிறைவேற்றியிருந்தனர். கிறிஸ்துவின் நாட்களில் ஓய்வுநாள் ஆசரிப்பு அன்புள்ள பரலோகத் தந்தையின் பண்பைப் பிரதிபலித்துக் காட்டுவதைவிட, சுயநலமிக்க ஒருதலைப்பட்சமான மனிதர்களின் குணத்தைக் காட்டும் விதத்தில் திரிபுசெய்யப்பட்டிருந்தது. மனிதர்களால் கீழ்ப்படியமுடியாத கற்பனைகளைக் கொடுக்கும் ஒருவராக, தேவனை ரபிமார்கள் எடுத்துக்காட்டியிருந்தனர். தேவனை ஒரு கொடுங்கோலனாகக் காணும்படியும், அவரது கோரிக்கையின்படி ஓய்வுநாளை ஆசரிப்பது, மனிதர்களை இருதயக்கடினமுள்ளவர்களாகவும் கொடுமைமிக்கவர்களாகவும் மாற்றியிருந்தது என்று எண்ணும்படியும் அவர்கள் மக்களை நடத்தியிருந்தனர். இந்தத் தவறான எண்ணங்களை சீர்திருத்துவதே கிறிஸ்துவின் ஊழியமாக இருந்தது. துன்புறுத்தும் தவறான தன்மையுடன் ரபிமார்கள் அவரைப் பின்தொடர்ந்திருந்தபோதிலும், அவர்களது கோரிக்கைகளுக்கு இணங்கிப்போவதுபோன்ற தோற்றத்தைக்கூட அவர் கொடுக்கவில்லை. ஆனால் ஒளிவுமறைவின்றி தேவனுடைய பிரமாணத்திற்கேற்றபடி ஓய்வுநாளை ஆசரித்தார். (9)

ஒரு ஓய்வுநாளில் இரட்சகரும் அவரது நண்பர்களும் ஆராதனை செய்திருந்த இடத்திலிருந்து கதிர்கள் முற்றியிருந்த வயல் வழியாகத் திரும்பியிருந்தனர். இயேசு அவரது ஊழியத்தில் அதிக நேரம் தொடர்ந்ததினால் வயல்வழியாகக் கடந்துசென்றபோது, சீடர்கள் கதிர்களைக் கொய்து, தங்கள் கரங்களில் தேய்த்து, தானியமணிகளைச் சேர்த்தனர். வேறு எந்த ஒரு நாளிலாவது இப்படிச் செய்திருந்தால் அதைப்பற்றின விமர்சனத்திற்கு இடம் இருந்திருக்காது. ஏனெனில் தானியம் நிறைந்த வயல் அல்லது ஒரு பழத்தோட்டம் அல்லது திராட்சைத்தோட்டம் ஆகியவைகளின் வழியாக ஒருவன் கடந்துசெல்ல நேரிடும்போது, அவன் எதனை உண்ண விரும்புவானோ அதனைச் சேகரிக்கும் சுதந்திரம் உள்ளவனாக இருந்தான். (உபாகமம் 23:24,25 காண்க). ஆனால் ஓய்வுநாளில் இப்படிச் செய்வது ஓய்வுநாளைப் பரிசுத்தக் குலைச்சலாக்கும் செயலாகக் கருதப்பட்டிருந்தது. தானியத்தைச் சேகரிப்பது ஒரு அறுவடை என்பதாக மட்டும் கருதப்படாமல், கைகளினால் அதைத் தேய்ப்பது போரடிப்பதாகவும் கருதப்பட்டிருநத்து. இவ்விதமாக ரபிமார்களின் அபிப்பிராயத்தில் அதில் இரண்டு வகையான குற்றங்கள் இருந்தன. (10)

உடனே ஒற்றர்கள் இயேசுவை நோக்கி: இதோ உம்முடைய சீடர்கள் ஓய்வுநாளில் கற்பனையின்படி செய்யக்கூடாததைச் செய்கின்றனர் என்றார்கள். (11)

அவர் ஓய்வுநாளை மீறுகிறார் என்று பெதஸ்தா என்னுமிடத்தில் அவர்மீது குற்றஞ்சாட்டப்பட்டபோது, அவர் தேவனிடம் தமக்குள்ள குமாரன் என்னும் ஸ்தானத்தை உறுதிப்படுத்தி, தமது பிதாவுடன் இசைவாகச் செயலாற்றினார் என்று தமக்காகப் பேசினார். இப்பொழுது சீடர்கள் தாக்கப்பட்டிருக்கின்ற வேளையில் அவரைக் குற்றப்படுத்துகிறவர்களுக்கு பழைய ஏற்பாட்டிலிருந்து தேவனுடைய ஊழியத்தில் ஈடுபட்டிருந்தவர்கள் ஓய்வுநாளில் வேலைசெய்திருந்ததை உதாரணமாக எடுத்துக்காட்டுகிறார். (12)

யூத போதகர்கள் வேதவாக்கியங்களைப்பற்றி தாங்கள் கொண்டிருந்த அறிவைக்குறித்து அகந்தை உள்ளவர்களாக இருந்திருந்தனர். இரட்சகரின் பதிலில் பரிசுத்த எழுத்துக்களைப்பற்றிய அவர்களது அறியாமைக்கான கடிந்துகொள்ளுதல் அடங்கியிருந்தது. “இயேசு அவர்களுக்குப் பிரதியுத்தரமாக: தாவீதும் அவனோடிருந்தவர்களும் பசியாயிருந்தபோது செய்ததை நீங்கள் வாசிக்கவில்லையா? அவன் தேவனுடைய வீட்டில் பிரவேசித்து, ஆசாரியர்மாத்திரமேதவிர வேறொருவரும் புசிக்கத்தகாத தேவசமுகத்து அப்பங்களைக் கேட்டு வாங்கி, தான் புசித்ததுமன்றி,

தன்னுடனே கூட இருந்தவர்களுக்கும் கொடுத்தானே என்று சொன்னார். மேலும் மனுஷகுமாரன் ஓய்வுநாளுக்கும் ஆண்டவராய் இருக்கிறார் என்றார்” லூக்கா 6:3–5. “பின்பு அவர்களை நோக்கி: மனுஷன் ஓய்வுநாளுக்காக உண்டாக்கப்படவில்லை, ஓய்வுநாள் மனுஷனுக்காக உண்டாக்கப்பட்டது; ஆகையால் மனுஷகுமாரன் ஓய்வுநாளுக்கும் ஆண்டவராய் இருக்கிறார் என்றார்” மாற்கு 2:27,28. “அன்றியும், ஓய்வுநாட்களில் ஆசாரியர்கள் தேவாலயத்தில் ஓய்ந்திராமல், ஓய்வுநாளை வேலை நாளாக்கினாலும், குற்றமில்லாதிருக்கிறார்கள் என்று நீங்கள் வேதத்தில் வாசிக்கவில்லையா? தேவாலயத்திலும் பெரியவர் இங்கே இருக்கிறார் என்று உங்களுக்குச் சொல்லுகிறேன்” (மத்தேயு 12:5,6) என்றார். (13)

பரிசுத்தமான ஒரு உபயோகத்திற்காகப் பிரித்து எடுத்துவைக்கப் பட்டிருந்த அப்பங்களை உண்டு தன் பசியை ஆற்றிக்கொண்டது, தாவீதின் காரியத்தில் சரியானதாக இருந்தால், ஓய்வுநாளின் பரிசுத்தமான நேரத்தில் தங்களுடைய தேவையைப் பூர்த்திசெய்வதற்காக சீடர்கள் கதிர்களைப் பறித்தது சரிதான். மறுபடியும் ஆலயத்திலுள்ள ஆசாரியர்கள் மற்ற நாட்களில் வேலைசெய்திருந்ததைவிடப் பெரிய வேலையை ஓய்வுநாளில் செய்திருந்தனர். மதச்சார்பற்ற (உலகியல் சார்ந்த) தொழிலில் இதேவிதமான வேலை பாவமாக இருந்திருக்கும். ஆனால் ஆசாரியர்களின் வேலை தேவனுடைய ஊழியமாக இருந்தது. கிறிஸ்துவின் மீட்கும் வல்லமையைச் சுட்டிக்காட்டியிருந்த சடங்குகளை அவர்கள் செய்திருந்தனர். அவர்களது வேலை ஓய்வுநாளின் நோக்கத்திற்கு இசைவாக இருந்தது. ஆனால் இப்பொழுது கிறிஸ்துதாமே வந்திருந்தார். கிறிஸ்துவின் ஊழியத்தைச் செய்வதில் சீடர்கள் தேவனுடைய ஊழியத்தில் ஈடுபட்டிருந்தனர். எனவே, இந்த ஊழியத்தை நிறைவேற்றுவதற்கு ஓய்வுநாளில் செய்யவேண்டிதாக இருந்த வேலை ஓய்வுநாள் கற்பனையின்படி சரியானதாக இருக்கிறது. (14)

தேவனுக்கு ஊழியஞ்செய்வதுதான் எல்லாவற்றையும்விட முதன்மை யானது என்று கிறிஸ்து அவரது சீடர்களுக்கும் அவரது விரோதிகளுக்கும் போதித்தார். இந்த உலகில் நடைபெறும் தேவனுடைய ஊழியத்தின் நோக்கம் மனிதனின் மீட்பைப்பற்றியதாக உள்ளது. எனவே, இந்த ஊழியத்தை நிறைவேற்றும்பொருட்டு ஓய்வுநாளில் செய்யப்படும் வேலை, ஓய்வுநாள் கற்பனைக்கு இசைவாக உள்ளது. அனைத்துக் கேள்விகளுக்கும்மேலாக, அனைத்துக் கற்பனைகளுக்கும்மேலாக இயேசு தம்மை ஓய்வுநாளுக்கும் ஆண்டவர் என்று அறிவித்து தமது வாதத்திற்கு முடிசூட்டினார். முடிவற்றவரான இந்த நீதிபதி அவர்கள் எந்தக் கட்டளைகளை மீறிக்கொண்டிருக்கின்றனர்

என்று மேல்முறையீடு செய்யப்பட்டிருந்ததோ, அந்தக் குற்றங்களில் இருந்து சீடர்களுக்கு விடுதலை வழங்குகிறார். (15)

இயேசு அவரது விரோதிகளைக் கடிந்துகொண்டதுடன் அந்தக் காரியத்தை கடந்துசெல்ல விட்டுவிடவில்லை. அவர்கள் தங்களுடைய குருட்டுத்தனத்தினால் ஓய்வுநாளின் நோக்கத்தைத் தவறாகக் கருதியிருக்கின்றனர் என்றும் அவர் அறிவித்தார். “பலியையல்ல இரக்கத்தையே விரும்புகிறேன் என்பதின் கருத்து இன்னதென்று அறிந்தீர்களானால், குற்றமில்லாதவர்களை நீங்கள் குற்றப்படுத்தமாட்டீர்கள்” (மத்தேயு 12:7) என்றார். குறைவுபட்டிருந்த—தேவனை உண்மையாகத் தொழுதுகொள்பவர்களின் குணத்தைக் காட்டியிருந்த—மெய்யான நேர்மையையும் மென்மைமிக்க அன்பையும், அவர்களது மனித நேயமற்ற அநேக சடங்குகளால் நிரப்ப இயலவில்லை. (16)

பலிமுறைகள் அவைகளுக்குள் எந்தவிதமான மதிப்பையும் கொண்டிருக்கவில்லை என்னும் உண்மையை அவர் மறுபடியும் வற்புறுத்திக் கூறினார். அவைகள் இடைநிலைக் கருவிகளாக மட்டுமே இருந்தன. முடிவாக இருக்கவில்லை. அவைகளின் நோக்கம் மனிதர்களை இரட்சகரிடம் நடத்துவதாக இருந்தது. அதன்மூலமாக, அவர்களை தேவனுடன் இசைவாக்கும்படி கொண்டுவருபவையாக இருந்தன. அன்பினால் செய்யப்படும் சேவையைத்தான் தேவன் மதிக்கிறார். அது இல்லாதபோது, வழக்கமாகச் செய்யப்படும் சடங்குகள் அனைத்தும் அவருக்குமுன் குற்றமாக உள்ளது. ஓய்வுநாள் காரியமும் அப்படிப்பட்டதாகவே உள்ளது. தேவனுடன் உறவுகொள்ளுவதற்காக அது வடிவமைக்கப்பட்டிருந்தது. ஆனால் மனம் களைப்பூட்டும் சமயச் சடங்குகளில் ஈடுபட்டிருக்கும்போது, ஓய்வுநாளின் நோக்கம் நலிவாக்கப்படுகிறது. வெளிப்படையான கடைப்பிடித்தல் மட்டுமே என்பது கேலிக்கூத்தாக உள்ளது. (17)

மற்றொரு ஓய்வுநாளில் இயேசு ஜெப ஆலயத்தில் பிரவேசித்தபோது சூம்பின கையையுடைய ஒரு மனிதனை அங்கு கண்டார். அவர் என்ன செய்வார் என்பதைக் காண பரிசேயர்கள் கவனித்திருந்தனர். ஓய்வுநாளில் சுகப்படுத்துவதினால் அவர் ஓய்வுநாளை மீறினவராகக் கருதப்படுவார் என்பதை அவர் நன்கு அறிந்திருந்தார். ஆனாலும் பாரம்பரியங்களினால் உருவாக்கப்பட்ட கோரிக்கைகள் என்னும் ஒரு தடுப்புச்சுவர் ஓய்வுநாளிற்குமுன் கட்டப்பட்டிருந்ததைத் தகர்த்து வீழ்த்த அவர் தயங்கவில்லை. துன்பத்தால் பாதிக்கப்பட்டிருந்த அந்த மனிதனை முன்வரும்படி இயேசு அழைத்து, அவர்களைப் பார்த்து: “ஓய்வுநாட்களில் நன்மைசெய்வதோ, தீமைசெய்வதோ, ஜீவனைக் காப்பதோ அழிப்பதோ, எது

நியாயம்” என்றார். ஒருவனுக்கு நன்மைசெய்யத் திராணி இருக்கும்போது, அதைச் செய்யாமலிருப்பது தீமையாகும். உயிரைக் காப்பாற்றுவதை அலட்சியப்படுத்துவது கொலையைப்போன்றது என்னும் வழக்குச்சொல் யூதர்களுக்கிடையில் நிலவியிருந்தது. இவ்விதமாக இயேசு ரபிமார்களை அவர்களது களத்திலேயே சந்தித்தார். “அவர்கள் போசாமலிருந்தார்கள். அவர்களுடைய இருதயகடினத்தினிமித்தம் அவர் விசனப்பட்டு, கோபத்துடனே சுற்றிலும் இருந்தவர்களைப் பார்த்து, அந்த மனுஷனை நோக்கி: உன் கையை நீட்டு என்றார்; அவன் நீட்டினான்; அவன் கை மறுகையைப்போலச் சொஸ்தமாயிற்று”–மாற்கு 3:4,5. (18)

ஓய்வுநாளில் சொஸ்தமாக்குகிறது நியாயந்தானோ? என்று கேட்கப்பட்டபோது, “அவர்: உங்களில் எந்த மனுஷனுக்காகிலும் ஒரு ஆடு இருந்து, அது ஓய்வுநாளில் குழியிலே விழுந்தால், அதைப் பிடித்துத் தூக்கிவிடமாட்டானோ? ஆட்டைப்பார்க்கிலும் மனுஷனானவன் எவ்வளவோ விசேஷித்திருக்கிறான்! ஆதலால், ஓய்வுநாளிலே நன்மைசெய்வது நியாயந்தான்” (மத்தேயு 12:10–12) என்று சொன்னர். (19)

வேவுகாரர்கள் திரளானவர்களுக்குமுன் தங்களை இக்கட்டுக் குள்ளாக்கிக் கொள்ளக்கூடாது என்பதற்காக திரளானவர்களுக்குமுன் கிறிஸ்துவிற்குப் பதில்கூறத் துணிவற்றவர்களாக இருந்தார்கள். அவர் உண்மையைத்தான் கூறினார் என்பதை அவர்கள் அறிந்திருந்தார்கள். தங்களுடைய பாரம்பரியங்களை மீறுவதைவிட, ஒரு மனிதனைத் துன்பப் படும்படி விட்டுவிட்டு, ஒரு எருதைக் காப்பாற்றுவார்கள். ஏனெனில் எருது அலட்சியப்படுத்தப்பட்டால் அதன் உரிமையாளருக்கு நஷ்டத்தை கொண்டுவந்துவிடும். இப்படியாக தேவ சாயலில் படைக்கப்பட்டிருந்த மனிதன்மீது கவனஞ்செலுத்துவதைவிட, ஊமையான ஒரு மிருகத்தின்மீது அதிகமாகக் கவனம் செலுத்தப்பட்டிருந்தது, இது தவறான சமயக் கோட்பாடுகளின் செயல்கள் அனைத்தையும் சித்தரித்துக் காட்டுகிறது. அது மனிதன் தன்னை தேவனுக்கு மேலாக உயர்த்தவேண்டும் என்ற ஆசையில் உருவாகி, அவனை மிருகமாக்கி விடும் கீழான நிலைமைக்கு நடத்திச் செல்லுகிறது. தேவனுடைய மேலாதிக்கத்திற்கு எதிராகப் போர்செய்யும் ஒவ்வொரு மதமும் சிருஷ்டிப்பின் போது மனிதனுக்குக் கொடுக்கப்பட்டிருந்து, கிறிஸ்துவின்மூலமாக அவனுக்கு திரும்பக் கிடைக்கவிருக்கிற மகிமையை ஏமாற்றி எடுத்துக்கொள்கிறது. தவறான ஒவ்வொரு மதமும் அதனைப் பற்றிக்கொள்ளுபவரை மானிட தேவைகள், பாடுகள், உரிமைகள் ஆகியவைகளில் அலட்சியமாக இருக்கச்செய்கிறது. மானுடம் கிறிஸ்துவின் இரத்தத்தினால் விலைக்கு வாங்கப்பட்டது என்னும் பெரும் மதிப்பை சுவிசேஷம் அதற்குக் கொடுத்து, மனிதனின் தேவைகள் ஆபத்துகள்

ஆகியவைகளைப்பற்றின மென்மைமிக்க கருத்தை உடையதாக உள்ளது. "புருஷனைப் பசும்பொன்னிலும், மனுஷனை ஓப்பீரின் தங்கத்திலும் அபூருவமாக்குவேன்" (ஏசாயா 13:12) என்று கர்த்தர் கூறுகிறார். (20)

இயேசு பரிசேயர்களை நோக்கி: "ஓய்வுநாட்களில் நன்மைசெய்வதோ, தீமைசெய்வதோ, ஜீவனைக் காப்பதோ அழிப்பதோ, எது நியாயம்" என்று கேட்டபோது, அவர்களுடைய தீய நோக்கங்களை அவர் இடைமறித்தார். அவர் ஜீவனைக் காப்பாற்றிக்கொண்டிருந்து திரளானவர்களுக்கு மகிழ்ச்சியைக் கொடுத்துக்கொண்டிருந்தபோது, கசப்புமிக்க வெறுப்புடன் அவர்கள் அவரது உயிரை வேட்டையாடிக்கொண்டிருந்தனர். அவர் செய்வதைப்போல—துன்பப்பட்டுக்கொண்டிருப்பவனை சுகப்படுத்துவதைவிட, அவர்கள் திட்டமிட்டுக்கொண்டிருந்ததுபோல—ஓய்வுநாளில் கொலை செய்வது சிறந்ததா? எல்லா மனிதர்களையும் நேசிப்பதை செயலினால் உணர்த்திக்காட்டும் இரக்கத்தைவிட, தேவனுடைய பரிசுத்த நாளில் கொலைசெய்யவேண்டும் என்ற எண்ணத்தை இருதயத்தில் வைத்திருப்பது அதிக நீதி உடையதாக இருக்குமா? (21)

சூம்பின கையைச் சுகப்படுத்தினதில் இயேசு யூதர்களின் வழக்கத்தைக் கண்டனஞ்செய்து, நான்காவது கற்பனையை கொடுத்தவிதத்தில் நிற்கும்படிச் செய்தார். "ஓய்வுநாட்களில் நன்மைசெய்வது நல்லது" என்று அவர் அறிவித்தார். அவரைக் குற்றப்படுத்தினவர்கள் தேவனுடைய பரிசுத்த நாளிற்கு அவமரியாதை காட்டியிருந்தபோது, யூதர்களின் அறிவற்ற கட்டுப்பாடுகளை ஒழித்துக்கட்டினதின்வழியாக இயேசு ஓய்வுநாளை கனப்படுத்தினார். (22)

கிறிஸ்து சன்மார்க்கப் பிரமாணத்தை (பத்துக்கற்பனைகளை) நீக்கிவிட்டார் என்று கூறுபவர்கள் அவர் ஓய்வுநாளை மீறினார் என்று போதித்து, அவரது சீடர்கள் அப்படியே செய்தனர் என்று நியாயப்படுத்துகின்றனர். இதனால் குதர்க்கம்பேசும் யூதர்களைப்போலவே அவர்களும் செய்கின்றனர். இப்படிச்செய்வதினால் "நான் என் பிதாவின் கற்பனைகளைக் கைக்கொண்டு அவருடைய அன்பிலே நிலைத்திருக்கிறதுபோல" (யோவான் 15:10) என்று இயேசு கொடுத்த அவரது அறிவிப்புடன் அவர்கள் முரண்படுகின்றனர். இரட்சகரோ அல்லது அவரது பின்னடியார்களோ ஓய்வுநாளை மீறவில்லை. கற்பனையின் உயிருள்ள பிரதிநிதியாகக் கிறிஸ்து இருந்தார். அவரது வாழ்க்கையில் கற்பனையை மீறிய செயல் ஒருபோதும் காணப்படவில்லை. அவரில் குற்றங்கண்டுபிடிக்க வகைதேடி சந்தர்ப்பத்தை எதிர்பார்த்திருந்த ஜனத்தைப் பார்த்து: "என்னிடத்தில் பாவம் உண்டென்று உங்களில் யார் என்னைக் குற்றப்படுத்தக்கூடும்?" (யோவான் 8:46) என்று மறுப்புக் கூறமுடியாத விதத்தில் அவரால் கேட்கமுடியும். (23)

முற்பிதாக்களும் தீர்க்கதரிசிகளும் எவைகளைக் கூறியிருந்தார்களோ அவைகளை நீக்குவதற்காக இரட்சகர் வரவில்லை. ஏனெனில் மனிதப் பிரதிநிதிகளாக இருந்த இவர்கள்மூலமாக, கிறிஸ்துதாமே பேசியிருந்தார். தேவனுடைய வார்த்தையிலுள்ள சத்தியங்கள் அனைத்தும் அவரில் இருந்தே வந்தன. ஆனால் விலைமதிப்பிடமுடியாத இந்த வைரங்கள் அனைத்தும் தவறாகப் பதிக்கப்பட்டுவிட்டன. அவைகளின் மதிப்புமிக்க ஒளி தவறுக்கு ஊழியஞ்செய்யும்படிச் செய்யப்பட்டிருந்தது. ஒரு தெய்வீகக் கரத்தினால்மட்டுமே இந்த ஊழியத்தை நிறைவேற்ற முடியும். தவறுடன் உள்ள பிணைப்பினால் அது தேவனுக்கும் மனிதனுக்கும் எதிராளியானவனுக்குச் சேவை செய்துகொண்டிருந்தது. தேவனை மகிமைப்படுத்தக்கூடிய இடத்தில் அதை வைப்பதற்காகவும், மானுடத்தின் இரட்சிப்பிற்கான பணியைச் செய்யவும் கிறிஸ்து வந்திருந்தார். (24)

“மனுஷன் ஓய்வுநாளுக்காக உண்டுபண்ணப்படாமல், ஓய்வுநாள் மனுஷனுக்காக உண்டுபண்ணப்பட்டது” என்று இயேசு கூறினார். தேவன் உண்டுபண்ணியிருக்கும் இந்த அமைப்பு, மனித இனத்தின் நன்மைக்காக இருக்கிறது. “இவையெல்லாம் உங்கள் நிமித்தம் உண்டாயிருக்கிறது.” “பவுலாகிலும், அப்பொல்லோவாகிலும், கேபாவாகிலும், உலகமாகிலும் ஜீவனாகிலும், மரணமாகிலும், நிகழ்காரியங்களாகிலும், வருங்காரியங்களாகிலும், எல்லாம் உங்களுடையது; நீங்கள் கிறிஸ்துவினுடையவர்கள்; கிறிஸ்து தேவனுடையவர்”–2 கொரிந்தியர் 4:15; 1 கொரிந்தியர் 3:22,23. ஓய்வுநாளை உள்ளடக்கிய தேவனுடைய பத்துக்கற்பனைகளை தேவன் மனிதர்களுக்கு ஒரு ஆசீர்வாதமாகக் கொடுத்தார். “நம்மை அவர் உயிரோடே காப்பதற்கும், எந்நாளும் நன்றாயிருக்கிறதற்கும், நம்முடைய தேவனாகிய கர்த்தருக்குப் பயந்து இந்த எல்லாக் கட்டளைகளின்படியேயும் செய்யக் கர்த்தர் நமக்குக் கட்டளையிட்டார்” (உபாகமம் 6:24) என்று மோசே கூறினான். “மகிழ்ச்சியோடே கர்த்தருக்கு ஆராதனைசெய்து, ஆனந்தசத்தத்தோடே அவர் சந்நிதிமுன் வாருங்கள். கர்த்தரே தேவனென்று அறியுங்கள்; நாம் அல்ல, அவரே நம்மை உண்டாக்கினார்; நாம் அவர் ஜனங்களும், அவர் மேய்ச்சலின் ஆடுகளுமாயிருக்கிறோம். அவர் வாசல்களில் துதியோடும், அவர் பிராகாரங்களில் புகழ்ச்சியோடும் பிரவேசித்து, அவரைத் துதித்து, அவருடைய நாமத்தை ஸ்தோத்திரியுங்கள்” (சங்கீதம் 100:2–4) என்னும் தூது சங்கீதக்காரனின்மூலமாக இஸ்ரவேலருக்குக் கொடுக்கப்பட்டது. “ஓய்வுநாளைப் பரிசுத்தக் குலைச்சலாக்காதபடி” ஆசரிக்கிற அனைவரையும், “நான் என் பரிசுத்த பர்வதத்துக்குக் கொண்டுவந்து: என் ஜெபவீட்டிலே அவர்களை மகிழப்பண்ணுவேன்” (ஏசாயா 56:6.7) என்று கர்த்தர் அறிவிக்கிறார். (25)

"ஆகையால் மனுஷகுமாரன் ஓய்வுநாளுக்கும் ஆண்டவராய் இருக்கிறார்." இந்த வார்த்தைகள் போதனையும் ஆறுதலும் நிறைந்ததாக உள்ளன. ஓய்வுநாள் மனிதனுக்காக உண்டாக்கப்பட்டதினால் அது கர்த்தருடைய நாளாக உள்ளது. அது கிறிஸ்துவிற்குரியதாக உள்ளது. "சகலமும் அவர் மூலமாய் உண்டாயிற்று; உண்டானதொன்றும் அவராலேயல்லாமல் உண்டாகவில்லை"–யோவான் 1:3. எல்லாவற்றையும் அவர் உண்டாக்கினதால் ஓய்வுநாளையும் அவர்தான் உண்டாக்கினார். அது படைப்பின் ஞாபகச் சின்னமாக இருக்கும்படி அவரால் தனிப்படுத்தி வைக்கப்பட்டது. அது அவரைச் சிருஷ்டிகரென்றும் பரிசுத்தப் படுத்துகிறவரென்றும் சுட்டிக்காட்டுகிறது. வானத்தையும் பூமியையும் எல்லாவற்றையும் படைத்த அவரால் அனைத்தும் இசைவாக உள்ளன. அப்படிப்பட்டவர் சபைக்குத் தலைவராக இருக்கிறார். அவரது வல்லமையினால் நாம் தேவனுடன் ஒப்புரவாக்கப்பட்டிருக்கிறோம். "நான் தங்களைப் பரிசுத்தம்பண்ணுகிற கர்த்தர் என்று அவர்கள் அறியும்படிக்கு, எனக்கும் அவர்களுக்கும் அடையாளமாய் இருப்பதற்கான என் ஓய்வுநாட்களையும் அவர்களுக்குக் கட்டளையிட்டேன்"–எசேக்கியேல் 20:12. கிறிஸ்து எவர்களையெல்லாம் பரிசுத்தஞ்செய்கிறாரோ, அவர்களுக்கு அது அருளப்பட்டுள்ளது. பரிசுத்தப்படுத்தும் அவரது வல்லமையின் அடையாளமாக அனைவரும் கிறிஸ்துவின்மூலமாக, தேவனுடைய இஸ்ரவேலின் ஒரு பகுதியாக ஆகும்படிக்கு ஓய்வுநாள் அனைவருக்கும் அருளப்பட்டுள்ளது. (26)

"என் பரிசுத்தநாளாகிய ஓய்வுநாளிலே உனக்கு இஷ்டமானதைச் செய்யாதபடி, உன் காலை விலக்கி, … ஓய்வுநாளை மனமகிழ்ச்சியின் நாளென்றும், கர்த்தருடைய பரிசுத்த நாளை மகிமையுள்ள நாளென்றும் சொல்லி, … அப்பொழுது கர்த்தரில் மனமகிழ்ச்சியாயிருப்பாய்"–ஏசாயா 58:13,14. கிறிஸ்துவின் சிருஷ்டிக்கும் வல்லமைக்கும் மீட்கும் வல்லமைக்கும் ஓய்வுநாள் அடையாளமாக உள்ளது என்று அதனைப் பெற்றுக்கொள்ளும் அனைவருக்கும், அது ஒரு மனமகிழ்ச்சியாக இருக்கும். அதில் கிறிஸ்துவை அவர்கள் கண்டு, அவரில் மனமகிழ்ச்சியாக இருக்கின்றனர். ஓய்வுநாள் படைப்பின் மிகுந்த வல்லமைக்கும், மீட்பின் வல்லமைக்கும் சாட்சியாக இருப்பதைச் சுட்டிக்காட்டுகிறது. ஏதேனில் இழந்துபோன சமாதானத்தை அது மனதிற்குக் கொண்டுவந்து, இரட்சகரின்மூலமாக மீண்டும் ஏற்படுத்தப்பட்டுள்ள சமாதானத்தைப்பற்றி கூறுகிறது. "வருத்தப்பட்டுப் பாரஞ்சுமக்கிறவர்களே! நீங்கள் எல்லாரும் என்னிடத்தில் வாருங்கள்; நான் உங்களுக்கு இளைப்பாறுதல் தருவேன்" (மத்தேயு 11:28) என்னும் அழைப்பை இயற்கையில் காணப்படும் ஒவ்வொரு பொருளும் மீண்டும் கூறுகிறது. (27) ★

# 30

# இயேசு தமது சீடர்களை அபிஷேகித்தார்!

**மாற்கு 3:13–19; லூக்கா 6:12–16**

**(The Desire of Ages, pp. 290–297)**

“பின்பு அவர் ஒரு மலையின்மேல் ஏறி, தமக்குச் சித்தமானவர்களைத் தம்மிடத்தில் வரவழைத்தார்; அவர்கள் அவரிடத்திற்கு வந்தார்கள். அப்பொழுது அவர் பன்னிரண்டு பேரைத் தெரிந்துகொண்டு, அவர்கள் தம்மோடுகூட இருக்கவும், பிரசங்கம்பண்ணும்படியாகத் தாம் அவர்களை அனுப்பவும் ... ஏற்படுத்தினார்” மாற்கு 3:13–15. (1)

மலைப்புறத்தில் தங்குவதற்கு வசதியாக இருந்த நிழல்தரும் மரங்களின்கீழ், ஆனால் கலிலேயாக் கடலிற்குச் சற்று தூரத்தில் அப்போஸ்தலர்களாக இருக்கும்படி அவர் பன்னிருவரை அழைத்தார். அங்குதான் மலைப்பிரசங்கம் நிகழ்த்தப்பட்டது. வயல்வெளிகளும் குன்றுகளும் இயேசுவிற்குப் பிடித்தமான தங்குமிடங்களாக இருந்தன. அவரது போதனைகளுள் ஆலயத்திலும் ஜெப ஆலயங்களிலும் கொடுக்கப்பட்டிருந்தவைகளைவிட, திறந்தவெளியில் கொடுக்கப்பட்டவைகளே அதிகமாக இருந்தன. அவரைப் பின்தொடர்ந்தவர்களின் கூட்ட நெரிசலை எந்த ஜெபஆலயமும் தாங்கிக்கொள்ள முடியாததாக இருந்தது. ஆனால் இந்த ஒரே காரணத்திற்காக மட்டும் அவர் வயல்வெளிகளையும் தோப்புகளையும் தெரிந்துகொள்ளவில்லை. இயேசு இயற்கையின் காட்சிகளை மிகவும் விரும்பினார். அமைதிமிக்க ஒவ்வொரு இளைப்பாறுமிடமும் அவருக்கு பரிசுத்தமான ஆலயமாக இருந்தது. (2)

முதன்முதலில் ஏதேனில் வாழ்ந்திருந்தவர்கள், மரங்களுக்குக் கீழ்தான் ஆலயங்கூடிவந்தனர். மனித இனத்தின் தந்தையுடன் அங்கு இயேசு தொடர்பு கொண்டார். பரதீசிலிருந்து துரத்தப்பட்டபோது, நமது முதல்பெற்றோர்கள் வயல்வெளிகளிலும் தோப்புகளிலும் தொழுகை நடத்தியிருந்தனர். அங்கு

கிறிஸ்து தமது கிருபையின் சுவிசேஷத்துடன் அவர்களைச் சந்தித்தார். மம்ரேயில் இருந்த தேவதாரு மரங்களின்கீழ் ஆபிரகாமுடன் பேசியிருந்தவர், ஜெபஞ்செய்வதற்காக வயல்வெளிகளுக்குச் சென்ற ஈசாக்கைச் சந்தித்தவர், மீதியான தேசத்து மலைகளுக்கிடையில் மோசேயைச் சந்தித்தவர், தனது ஆட்டுமந்தையைக் காவல்செய்துகொண்டிருந்தபோது தாவீதைச் சந்தித்தவர், கிறிஸ்துதான். எபிரெயர்கள் தங்கள் வீடுகளை விட்டுவிட்டு ஆயிரத்து ஐநூறு ஆண்டுகளாக, வருடந்தோறும் ஒரு வார காலமளவும் அலங்காரமான விருட்சங்களையும் பேரீச்சையின் ஓலைகளையும் தழைத்திருக்கிற விருட்சங்களின் கிளைகளையும் ஆற்றலரிகளையும் கொண்டுவந்து (கூடாரங்களை உண்டுபண்ணி) கிறிஸ்துவின் கட்டளையின்படி அவைகளில் தங்கியிருந்தனர். (3)

இயேசு தமது சீடர்கள் சுயத்தைத் துறந்தவர்களாக இருக்கவேண்டும் என்ற பாடத்தை அவர்களுக்குப் போதிக் விரும்பியதற்கு இசைவாக அவரது சீடர்களுக்குப் பயிற்சியளிப்பதற்கு நகரத்தின் குழப்பத்திலிருந்து விலகி, அமைதிமிக்க வயல்வெளிகளையும் குன்றுகளையும் தெரிந்துகொண்டார். நீல வானத்திற்குக்கீழ் அல்லது மலைச்சாரலில் இருந்த புல்வெளிகளில் அல்லது ஏரிக்கரைகளில் தமது ஊழியத்தின்போது, மக்களைக் கூட்டிச்சேர்க்க அவர் விரும்பினார். தமது சொந்தப் படைப்பால் சூழப்பட்டிருந்த இந்த இடத்தில் தமது உரையைக் கேட்டிருந்தவர்களின் சிந்தனைகளை செயற்கையிலிருந்து இயற்கைக்கு அவரால் திருப்பமுடிந்தது. இயற்கையின் வளர்ச்சி முன்னேற்றம் ஆகியவைகளில் அவரது இராஜ்யத்தின் கொள்கைகள் வெளிப்படுத்தப்பட்டிருந்தன. தேவனுடைய குன்றுகளின்மீது மனிதர்கள் தங்களுடைய கண்களை உயர்த்தி, அவரது கரத்தின் ஆச்சரியமான செயல்களைக் காணவேண்டியது வரும்போது, தெய்வீக சத்தியத்தின் விலைமதிப்புமிக்க பாடங்களை அவர்களால் கற்றுக்கொள்ள முடியும். இயற்கையின் பொருட்களில் இருந்து கிறிஸ்துவின் போதனைகள் அவர்களுக்கு மீண்டும் கூறப்படும். கிறிஸ்துவைத் தங்கள் இருதயங்களில் உடையவர்களாக வயல்வெளிகளுக்குச் செல்லுபவர்களின் காரியங்களும் இவ்விதமாகவே இருக்கிறது. பரிசுத்தமிக்க ஒரு செல்வாக்கினால் சூழப்பட்டிருப்பதை அப்படிப்பட்டவர்கள் உணருவார்கள். இயற்கையின் பொருட்கள் நமது கர்த்தரின் உவமைகளை எடுத்துக்கொண்டு அவரது ஆலோசனைகளைத் திரும்பக் கூறுகின்றன. இயற்கையின்மூலமாக தேவனுடன் தொடர்புகொள்ளுவதினால் மனம் உயர்த்தப்படுகிறது. இருதயம் இளைப்பாறுதலைக் காண்கிறது. (4)

கிறிஸ்து (பரமேறிச்) சென்றுவிட்டபின், பூமியின்மேல் அவரது பிரதி

நிதியாக இருப்பதற்கு இப்பொழுது சபை அமைப்பிற்காக முதல் அடி எடுக்கவேண்டியதாக இருந்தது. அவர்களுக்கு விலைமதிப்புமிக்க ஆலயம் எங்கும் இருக்கவில்லை. ஆனால் இரட்சகர் மிகவும் விரும்பியிருந்த தனிமையான இடத்திற்கு அவர் அவர்களை நடத்தினார். அந்த நாளின் புனிதமான அனுபவங்கள் அவர்களுடைய உள்ளங்களில் நிரந்தரமாகப் பிணைக்கப்பட்டன. (5)

இயேசுவைப்பற்றி எவைகளைக் கண்டும் கேட்டும் இருந்தனரோ, அவைகளை உலகத்திற்கு அறிவிக்கும் சாட்சிகளாக இருக்கும்படி அவர் தமது சீடர்களை அழைத்திருந்தார். இதுவரை மானிடர் அழைக்கப்பட்டிருந்த அனைத்துப் பதவிகளிலும் சீடர்களுக்குக் கொடுக்கப்பட்ட பதவியே மிகவும் முக்கியமானதாக இருந்தது. அது கிறிஸ்துவிற்கு அடுத்த இரண்டாவதாக இருந்தது, உலகத்தை இரட்சிப்பதற்காக அவர்கள் தேவனுடன் ஊழியக்காரர்களாக இருக்கவேண்டியதாக இருந்தது. பழைய ஏற்பாட்டில் பன்னிரண்டு முற்பிதாக்களும் இஸ்ரவேலின் பிரதிநிதிகளாக இருந்ததுபோல, சுவிசேஷ சபையின் பிரதிநிதிகளாக இந்த பன்னிரண்டு அப்போஸ்தலர்களும் நிற்கவேண்டியவர்களாக இருந்தனர். (6)

இரட்சகர் தாம் தெரிந்துகொண்டிருந்த மனிதர்களின் குணங்களை அறிந்திருந்தார். அவர்களது பலவீனங்கள் தவறுகள் ஆகியவை அவருக்குமுன்பாகத் தெளிவாக இருந்தன. அவர்கள் கடந்துசெல்லவேண்டியிருந்த அபாயங்களையும் அவர்கள்மீதிருந்த பொறுப்புகளையும் அவர் அறிந்திருந்தார். அவரது இருதயம் தெரிந்துகெள்ளப்பட்டிருந்த அவர்களின்மீது மிகுந்த ஏக்கங்கொண்டதாக இருந்தது. கலிலேயக் கடலுக்கருகிலுள்ள மலையடிவாரத்தில் அந்த அப்போஸ்தலர்கள் உறங்கிக்கொண்டிருந்தபோது அந்த மலையின்மீது அவர் தனித்தவராக அவர்களுக்காக ஜெபஞ்செய்வதில் இரவு முழுவதையும் கழித்தார். அதிகாலை சூரியஒளி வீசியபோது, தம்மைச் சந்திக்கும்படி அவர் அவர்களை அழைத்தார். ஏனெனில் அவர்களிடம் கூறவேண்டிய அதிமுக்கியமான ஏதோ ஒன்று அவரிடம் இருந்தது, (7)

இந்த சீடர்கள் சிறிது காலம் அவருடன் தீவிர ஊழியத்தில் ஈடுபட்டிருந்தனர். யோவான், யாக்கோபு, அந்திரேயா, பேதுரு, பிலிப்பு, நாத்தான்வேல், மத்தேயு ஆகியோர் மற்றவர்களைவிட அவருடன் அதிக நெருக்கமான தொடர்பை உடையவர்களாக இருந்து, அவரது அற்புதங்களில் அதிகமானவைகளுக்குச் சாட்சியாக இருந்தனர். அவருடன் உள்ள உறவில் பேதுருவும் யாக்கோபும் யோவானும் மேலும் அதிகமான நெருக்கமுள்ளவர்களாக இருந்தனர். அவர்கள் பெரும்பாலும் எப்பொழுதும்

அவருடன் இருந்து, அவரது அற்புதங்களுக்குச் சாட்சியாக இருந்து, அவரது வார்த்தைகளைக் கேட்டிருந்தனர். யோவான் இயேசுவுடன் மேலும் அதிக நெருக்கமான பாசம் கொண்டவனாக இருந்தான். எனவேதான் இயேசுவிற்கு அன்பான சீடன் என்று அவன் சிறப்பித்துக் கூறப்பட்டிருந்தான். இரட்சகர் அனைவரையும் நேசித்தார். ஆனால் யோவான் அந்த நேசத்தைப் பெற்றுக்கொள்ளும் ஆவியை அதிகமாக உடையவனாக இருந்தான். அவன் மற்றவர்களைவிட வயதில் இளையவனாக இருந்து, ஒரு சிறுபிள்ளையைப்போன்ற ஆர்வம்மிகுந்த நம்பிக்கை உடையவனாக தனது இருதயத்தை இயேசுவிற்குத் திறந்திருந்தான். இப்படியாக அவன் இயேசுவுடன் அதிக அனுதாபத்தில் இருக்கவே, அவன்மூலமாக இரட்சகரின் மிக ஆழமான ஆவிக்குரிய போதனைகள் மக்களுக்குக் கொடுக்கப்பட்டன. (8)

அப்போஸ்தலர்கள் குழுக்களாகப் பிரிந்தபோது, அதில் ஒரு குழுவின் தலைவனாக பிலிப்பு இருந்தான். “என்னைப் பின்பற்றி வா” என்னும் இயேசுவின் சிறப்பான கட்டளையைப் பெற்ற முதல் சீடனாக அவன் இருந்தான். பிலிப்பு, அந்திரேயா பேதுரு ஆகியோரின் நகரமான பெத்சாயிதாவைச் சேர்ந்தவன். அவன் யோவான் ஸ்நானகனின் போதனையையும், கிறிஸ்துவை அவன் தேவஆட்டுக்குட்டி என்று அறிவித்ததையும் கேட்டிருந்தான். உண்மையுடன் சத்தியத்தைத் தேடும் ஒருவனாகப் பிலிப்பு இருந்தான். ஆனால் நம்புவதில் அவன் தயக்கமிக்க இருயதயத்தை உடையவனாக இருந்தான். அவன் கிறிஸ்துவுடன் சேர்ந்திருந்தபோதிலும், கிறிஸ்துவைப்பற்றி நாத்தான்வேலிடம் கூறியவிதம், அவன் இயேசுவின் தெய்வீகத்தைப்பற்றிப் பூரணமாகத் திருப்தியடையாதவனாக இருந்தான் என்பதைக் காட்டுகிறது. கிறிஸ்து தேவனுடைய குமாரன் என்று வானத்திலிருந்துண்டான ஒரு சத்தம் அறிவித்திருந்தாலுங்கூட பிலிப்புவைப் பொறுத்தமட்டில், “அவர் நாசரேத் ஊரானாகிய இயேசு, யோசேப்பின் குமாரன்” என்றுமட்டுந்தான் இருந்தார். மறுபடியும் ஐயாயிரம்பேர் போஷிக்கப்பட்டபோது, பிலிப்புவின் விசுவாசமின்மை வெளிக்காட்டப்பட்டது. “இவர்கள் சாப்பிடத்தக்கதாக அப்பங்களை நாம் எங்கே கொள்ளலாம்?” என்று இயேசு அவனை சோதிப்பதற்காகவே கேட்டார். பிலிப்புவின் பதில் அவனது நம்பிக்கையின்மையைக் காட்டுவதாகவே இருந்தது. “இயேசு தம்முடைய கண்களை ஏறெடுத்து, திரளான ஜனங்கள் தம்மிடத்தில் வருகிறதைக் கண்டு, பிலிப்பை நோக்கி: இவர்கள் சாப்பிடத்தக்கதாக அப்பங்களை எங்கே கொள்ளலாம் என்று கேட்டார். பிலிப்பு அவருக்குப் பிரதியுத்தரமாக: இவர்களில் ஒவ்வொருவனும் கொஞ்சங் கொஞ்சம் எடுத்துக்கொண்டாலும், இருநூறு பணத்து அப்பங்களும் இவர்களுக்குப் போதாதே என்றான்”–யோவான் 6:5,7. இயேசு வருந்தினார். பிலிப்பு அவரது

செயல்களைக் கண்டிருந்தும் அவரது வல்லமையை உணர்ந்திருந்தும் விசுவாசமில்லாதவனாகவே இருந்தான். கிரேக்கர் இயேசுவைப்பற்றி பிலிப்புவினிடம் விசாரித்தபோது, இரட்சகரை அவர்களுக்கு அறிமுகப்படுத்தும் சந்தர்ப்பத்தை அவன் பயன்படுத்தாமல், அந்திரேயாவிடம் இதைக்குறித்துச் சொல்வதற்குச் சென்றான். இயேசு சிலுவையில் அறையப்படுவதற்கு முந்தின கடைசி நேரத்தில் மறுபடியும் பிலிப்புவின் வார்த்தைகள் விசுவாசத்தை அதைரியப்படுத்தக்கூடியவையாயிருந்தன. “தோமா இயேசுவை நோக்கி: ஆண்டவரே, நீர் போகிற இடத்தை அறியோமே, வழியை நாங்கள் எப்படி அறிவோம் என்றான். அதற்கு இயேசு: நானே வழியும் சத்தியமும் ஜீவனுமாயிருக்கிறேன்; என்னாலேயல்லாமல் ஒருவனும் பிதாவினிடத்தில் வரான். என்னை அறிந்தீர்களானால் என் பிதாவையும் அறிந்திருப்பீர்கள்; இதுமுதல் நீங்கள் அவரை அறிந்தும் அவரைக் கண்டும் இருக்கிறீர்கள்” என்றார். பிலிப்புவிடமிருந்து அவநம்பிக்கைமிக்க பதில் வந்தது: “ஆண்டவரே, பிதாவை எங்களுக்குக் காண்பியும் அது எங்களுக்குப் போதும் என்றான்”– யோவான் 14:5–8. மூன்று வருடங்கள் இயேசுவுடன் இருந்தும் அப்படிப்பட்ட மந்த இருதயமுள்ளவனாக, விசுவாசத்தில் பலவீனனாக இந்தச் சீடன் இருந்தான். (9)

பிலிப்புவின் அவநம்பிக்கைக்கு நேர்மாறாக மகிழ்ச்சியானவிதத்தில் நாத்தான்வேலின் சிறுபிள்ளையைப்போன்ற நம்பிக்கை இருந்தது. அவன் அதிக ஆர்வமுடையவனாக இருந்தான். அவனது விசுவாசம் காணப்படாத உண்மைகளைப் பற்றிக்கொண்டிருந்தது. இருந்தபோதிலும் பிலிப்பு கிறிஸ்துவின் பள்ளியில் ஒரு மாணவனாக இருந்தான். அவனது நம்பிக்கையின்மையையும் மந்தபுத்தியையும் அந்த தெய்வீகப் போதகர் பொறுமையுடன் சகித்துக்கொண்டிருந்தார். சீடர்களின்மீது பரிசுத்த ஆவி ஊற்றப்பட்டபோது, பிலிப்பு தெய்வீக முறைமையின்படி ஒரு போதகனாக மாறினான். அவன் பேசினவைகளை அவன் அறிந்திருந்தான். கேட்டவர்களுக்கு மனஉணர்த்துதலைக் கொண்டுவரக்கூடிய நிச்சயத்துடன் அவன் போதித்தான். (10)

இயேசு அவரது சீடர்களின் அபிஷேகத்திற்காக ஆயத்தம் செய்துகொண்டிருந்தபோது, அழைக்கப்படாத ஒருவன் அவர்களுக்கிடையில் வந்து நின்றான். அவன்தான் தன்னைக் கிறிஸ்துவைப் பின்பற்றுபவன் என்று கூறிக்கொண்டிருந்த யூதாஸ்காரியோத்து. இப்பொழுது அவன் முன்வந்து, சீடர்களின் கூட்டத்தின் உள்வட்டத்தில் தனக்கென்று ஒரு இடத்தைப் பிடித்துக்கொண்டான். “ஆண்டவரே நீர் எங்கே போனாலும் நான் உம்மைப் பின்பற்றி வருவேன்” என்று மிகுந்த ஆவலுடனும் வெளிப்படையாக

உண்மைபோன்று தோன்றும்விதத்திலும் அவன் அறிவித்தான். இயேசு அவனைப் புறம்பே தள்ளவோ அல்லது வரவேற்கவோ செய்யவில்லை. “நரிகளுக்குக் குழிகளும் ஆகாயத்துப் பறவைகளுக்குக் கூடுகளும் உண்டு; மனுஷகுமாரனுக்கோ தலைசாய்க்க இடமில்லை” (மத்தேயு 8:19,20) என்ற துக்கம் நிறைந்த வார்த்தைகளை மட்டுமே கூறினார். இயேசு தான் மேசியா என்று யூதாஸ் நம்பினான். அப்போஸ்தலர்களுடன் சேருவதினால் புதிய இராஜ்யத்தில் மேலான ஒரு இடத்தை அடையலாம் என்று அவன் நம்பினான். இந்த நம்பிக்கையை நீக்குவதற்காக இயேசு தமது வறுமைமிக்க நிலைமையைப்பற்றி ஒரு அறிக்கையை வடிவமைத்தார். (11)

அவர்களுடைய கூட்டத்தில் யூதாஸ் ஒருவனாக இருக்கவேண்டும் என்பதில் சீடர்கள் மிகுந்த அக்கறையுள்ளவர்களாக இருந்தனர். அவன் முனைப்பான கெம்பீர தோற்றத்தையுடையவனாக இருந்தான். மேலும் தெளிவான அறிவு நுணுக்கம், செயலாற்றல் ஆகியவைகளை உடையவனாக இருந்தான். அவன் அவரது ஊழியத்தில் பெரிய அளவில் உதவக்கூடிய ஒருவனாக இருப்பான் என்று சீடர்கள் இயேசுவிடம் பாராட்டிப்பேசினர். இயேசு தமது உணர்ச்சிகளை வெளிக்காட்டாமல், அமைதியாக அவனை ஏற்றுக்கொண்டதில் அவர்கள் வியப்படைந்தனர். (12)

இஸ்ரவேல் தலைவர்களின் ஒத்துழைப்பைப் பெற இயேசு முயற்சிசெய்யாமலிருந்ததில் சீடர்கள் மிகவும் ஏமாற்றமடைந்தவர்களாக இருந்தனர். செல்வாக்குமிக்க இந்த மனிதர்களின் ஆதரவினால் அவரது காரியத்தைப் பலப்படுத்தாமல் விட்டுவிடுவது பெரிய தவறு என்று அவர்கள் எண்ணினர். அவர் யூதாசை ஏற்க மறுத்திருந்தால், அவர்கள் அவரது ஞானத்தைப்பற்றித் தங்கள் உள்ளங்களில் கேள்வி எழுப்பியிருந்திருக்கக்கூடும். தேவனுடைய ஊழியத்தைச் செய்வதற்கான மனிதர்களின் தகுதியை முடிவுசெய்வதில் உலகப்பிரகாரமான தகுதிகளைக் கணக்கில் அனுமதிப்பதால் உண்டாகக்கூடிய அபாயத்தை யூதாசின் பிற்கால வரலாறு அவர்களுக்குக் காட்டும். சீடர்கள் அக்கறையுடன் பெற்றுக்கொள்ள எதிர்பார்த்திருந்த அப்படிப்பட்ட மனிதர்களின் ஒத்துழைப்பு தேவனுடைய ஊழியத்தை அவரது மோசமான எதிரிகளின் கரங்களுக்குள் ஒப்படைத்திருந்திருக்கும். (13)

அப்படியிருந்தபோதிலும், யூதாஸ் சீடர்களுடன் சேர்ந்துகொண்டபோது, கிறிஸ்துவின் பண்பின் அழகை உணராதவனாக இருக்கவில்லை. ஆத்துமாக்களை இரட்சகரிடம் இழுத்துக்கொள்ளுகின்ற தெய்வீக வல்லமையின் செல்வாக்கை அவன் உணர்ந்தான். நெரிந்த நாணலை முறிக்கவும், மங்கியெரிகிற திரியை அணைக்கவும் வராமலிருந்த ஒருவர்,

ஒளியை நோக்கி ஒரு விருப்பமாவது சென்றுகொண்டிருக்கும்வரை, அந்த ஆத்துமாவைப் புறக்கணிக்கமாட்டார். யூதாசின் இருதயத்தை இரட்சகர் அறிந்தார். தேவ கிருபையால் விடுதலையாக்கப்படாதவரை யூதாஸ் அமிழ்ந்துபோகக்கூடிய அக்கிரமத்தின் ஆழத்தை அவர் அறிந்திருந்தார். அந்த மனிதனை தம்முடன் இணைத்ததின்மூலமாக, பொங்கிவழிந்தோடும் அவரது சுயநலமற்ற அன்புடன் நாள்தோறும் தொடர்புகொள்ளக்கூடிய இடத்திற்கு அவனைக் கொண்டுவந்து வைத்தார். அவன் தனது இருதயத்தை இயேசுவிற்குத் திறந்திருந்தால், சுயநலம் என்னும் பிசாசை அவனிலிருந்து தேவகிருபை துரத்தியிருந்திருக்கும். யூதாஸ் தேவ இராஜ்யத்தின் ஒரு மகனாக ஆகியிருந்திருப்பான். (14)

தேவன் மனிதர்களை அவர்களது மானிடப் பண்புகளுடனேயே எடுத்து, அவர்கள் அவரால் சீர்படுத்தப்பட்டு, அவரைப் பற்றிக்கொள்ளும்போது, அவர்களைத் தமது சேவைக்கென்று பயிற்றுவிக்கிறார். அவர்கள் பூரணமானவர்களாக இருக்கிறார்கள் என்பதற்காகத் தெரிந்துகொள்கிறதில்லை. அப்படியல்லாமல் அவர்களது பூரணமற்ற தன்மையிலும் சத்தியத்தின் அறிவு, நடத்தை, ஆகியவைகளின்மூலமாகவும் தமது கிருபையின்மூலமாகவும் அவருடைய சாயலை அணிந்துகொள்ளும்படிச் செய்கிறார். (15)

மற்ற சீடர்களுக்கு எவ்வகையான வாய்ப்பு இருந்ததோ அதேவிதமான வாய்ப்பு யூதாஸிற்கும் இருந்தது. அதேவிதமான மேன்மைமிக்க போதனைகளை அவனும் பெற்றிருந்தான். ஆனால் கிறிஸ்து எதிர்பார்த்த சத்திய நடத்தை, யூதாசின் ஆசைகளிலும் நோக்கங்களிலுமிருந்து வேறுபட்டதாக இருந்தது. பரலோகத்திலிருந்து ஞானத்தைப் பெற்றுக்கொள்ளுவதற்கேதுவாக அவன் தனது கருத்துக்களை இணங்கச்செய்ய விரும்பாதவனாக இருந்தான். (16)

அவரைக் காட்டிக்கொடுக்கவிருந்த யூதாசை அவர் எவ்வளவு மென்மையாக நடத்தினார்! பேராசை என்பதின் அடிவேரை வெட்டும்வண்ணம் தர்மச்செயல் சார்ந்த கொள்கைகளின்மீது இயேசு அவரது போதகத்தினூடே விரிவாகப் பேசியிருந்தார். பேராசையின் கொடிய தன்மையை அவர் யூதாசுக்குமுன் எடுத்துக்காட்டினார். அநேக சமயங்களில் அவனது குணந்தான் சித்தரித்துக்காட்டப்பட்டது. அவனது பாவம் சுட்டிக்காட்டப்பட்டது என்பதை அவன் உணர்ந்தான். ஆனால் தனது அநீதியை அறிக்கைசெய்து விட்டுவிடாதிருந்தான். அவன் மட்டற்ற தன்னம்பிக்கையுடையவனாக இருந்தான். சோதனைக்கு எதிர்த்து நிற்பதற்குப்பதிலாக அவன் தனது ஏமாற்றும் தன்மையுள்ள நடத்தையில் தொடர்ந்திருந்தான். தெய்வீக மத்தியஸ்தம் மற்றும் ஊழியத்தின் தன்மையை அவன் அறுவடைசெய்ய விரும்பியிருந்தால், எப்படிப்பட்டவனாக வேண்டும் என்பதற்கு வாழும் ஒரு

உதாரணமாக கிறிஸ்து அவனுக்குமுன் இருந்தார். ஆனால் ஒன்றன்பின் ஒன்றாகக் கொடுக்கப்பட்ட போதனைகள் அனைத்தும் யூதாசின் செவிகளில் ஏறாமற்போயிற்று. (17)

இயேசு அவனது பேராசைக்காக அவனைக் கடுமையாகக் கடிந்துகொள்ளமல், தவறுசெய்துகொண்டிருக்கும் இந்த மனிதனின் இருதயத்தை ஒரு திறந்த புத்தகமாக வாசித்திருந்தபோதும் அவனைப் பொறுமையுடன் சகித்தார். சரியானவைகளைச் செய்வதற்குக் கிடைக்கக்கூடிய மிகமேலான ஊக்கப்பரிசை அவர் அவன்முன் காட்டினார். பரலோகத்தின் ஒளியை புறக்கணிப்பதினால் யூதாஸ் சாக்குப்போக்குக் கூறமுடியாதவனாக இருக்க நேரிடும். (18)

ஒளியில் நடப்பதற்குப்பதிலாக யூதாஸ் அவனது குறைபாடுகளைப் பற்றிக்கொண்டிருப்பதைத் தெரிந்திருந்தான். தீய ஆசைகள், வஞ்சம் தீர்க்கும் வெறிகள், அந்தகாரமும் மனதிற்குள் எரிச்சலுமிக்க கோபங்கள், முடிவில் சாத்தான் அவனைக் கட்டுப்படுத்தும்வரை அவனால் பேணப்பட்டன. யூதாஸ் கிறிஸ்துவின் எதிரியின் பிரதிநிதியானான். (19)

அவன் இயேசுவுடனுள்ள தோழமைக்குள் வந்தபோது, சபைக்கு ஆசீர்வாதமாக அமைந்திருக்கக்கூடிய சில நல்ல பண்புகளை உடையவனாகவே இருந்தான். கிறிஸ்துவின் நுகத்தைச் சுமக்கும் விருப்பமுடையவனாக அவன் இருந்திருந்தால், அப்போஸ்தலர்களின் தலைவனாகியிருந்திருப்பான். ஆனால் அவனது குறைபாடுகள் சுட்டிக்காட்டப்பட்டபோது, அவன் தனது இருதயத்தைக் கடினப்படுத்தினான். அகந்தையினாலும் கலகக்குணத்தினாலும் அவன் தனது சுயநலமிக்க ஆசைகளைத் தெரிந்துகொண்டு, இவ்விதமாக தேவன் அவன் செய்யும்படி அவனிடம் ஒப்படைத்திருக்கக்கூடிய அவரது ஊழியத்தைச் செய்வதற்கு தன்னைத்தானே தகுதியற்றவனாக்கிவிட்டான். (20)

இயேசு தமது ஊழியத்தைச் செய்யும்படி சீடர்களை அழைத்தபோது, எல்லா சீடர்களும் கடுமையான தவறுதல்களை உடையவர்களாகவே இருந்திருந்தனர். தாழ்மையும் எளிமையுமிக்கவராயிருந்த இயேசுவுடன் மிக நெருக்கமான உறவை உடையவனாக இருந்த யோவானுங்கூட இயல்பாகவே எளிமையும் இணக்கமும் இல்லாதவனாகவே இருந்திருந்தான். அவனும் அவனது சகோதரனும் மட்டற்ற தன்னம்பிக்கையுடையவர்களாக "இடிமுழக்கத்தின் மக்கள்" என அழைக்கப்பட்டிருந்தனர். அவர்கள் இயேசுவுடன் இருந்தபோது, இயேசுவுக்கு ஏற்பட்ட சிறிய அவமதிப்புகூட அவர்களது கோபத்தையும் எதிர்த்துப் போராடும் தன்மையையும் எழுப்பியிருந்தது. தீய உணர்வு, பழிவாங்குதல், குற்றங்கண்டுபிடிக்கும்

ஆவி ஆகிய அனைத்தும் அன்பான இந்த சீடனிடத்தில் இருந்திருந்தன. அகந்தையும் ஆசைவெறியும் மிகுந்தவனாக இருந்து, தேவனுடைய இராஜ்யத்தில் முதல்வனாக இருக்க ஆசைப்பட்டிருந்தான். ஆனால் அவன் நாளுக்கு நாள் தனது முரட்டுத்தனமான ஆவியை, மென்மையும் சகிப்புமிக்க இயேசுவுடன் ஒப்பிட்டு, அதனைக்கண்டு, அவரது தாழ்மை, பொறுமை ஆகியவைகளைப்பற்றின அவரது பாடங்களைக் கேட்டான். அவன் கேட்பவனாக மட்டுமின்றி அவைகளைச் செயலாற்றுபவனாகவும் மாறினதால், தெய்வீகச் செல்வாக்கிற்கு அவன் தனது இருதயத்தைத் திறந்தான். சுயம் கிறிஸ்துவிற்குள் மறைக்கப்பட்டிருந்தது. அவன் இயேசுவின் நுகத்தை அணிந்துகொண்டு, அவரது சுமையைச் சுமப்பதற்குக் கற்றுக்கொண்டான். (21)

இயேசு அவரது சீடர்களை எச்சரித்துக் கண்டித்தார். எனினும் யோவானும் அவனது சகோதரர்களும் அவரைவிட்டு விலகவில்லை. இயேசு கண்டனஞ் செய்திருந்தபோதிலும் அவர்கள் அவரைத் தெரிந்துகொண்டிருந்தனர். இரட்சகர் அவர்களது பலவீனங்களுக்காகவும் தவறுகளுக்காவும் அவர்களைவிட்டு விலகிச் செல்லவில்லை. அவரது சோதனைகளில் பங்குகொள்ளவும், அவரது வாழ்க்கையின் பாடங்களைக் கற்றுக்கொள்ளவும் முடிவுவரை அவர்கள் அவருடன் தொடர்ந்தனர். கிறிஸ்துவை நோக்கிப்பார்த்ததினால் அவர்கள் தங்களுடைய குணத்தில் அவரைப்போன்ற மாற்றத்தையும் அடைந்தனர். (22)

பழக்கவழக்கங்களிலும் மனப்பாங்குகளிலும் அவர்கள் ஒருவருக்கொருவர் பெருமளவில் மாறுபட்டவர்களாக இருந்தனர். அங்கு ஆயக்காரனான லேவி மத்தேயுவும், ரோமர்களின் அதிகாரத்துடன் சமரசஞ்செய்ய விருப்பமில்லாத அனல்கக்கும் வைராக்கியமிக்க சீமோனும், உதாரகுணமும் துடிப்புமிக்க பேதுருவும், கீழ்த்தரமான ஆவியை உடைய யூதாசும், உண்மையான கூடவே சந்தேகப்படவுங்கூடிய இருதயங்கொண்ட தோமாவும், மந்த இருதயமும் சந்தேகத்துக்கேதுவான குணம்கொண்ட பிலிப்பும், பேராவல்மிக்க—துணிச்சலாக பேசக்கூடியவர்களான செபதேயுவின் குமாரர்களும் அவர்களது சகோதரரும் இருந்தனர். தீமை செய்வதற்கேதுவாக பிறப்பினாலும், பழக்கங்களினாலும் உருவாக்கிக்கொண்ட தங்களுடைய வேற்றுமைமிக்க தவறுகளோடு அவர்கள் ஒன்றாகக் கொண்டுவரப்பட்டனர். அவர்கள் விசுவாசத்திலும் கோட்பாட்டிலும் ஆவியிலும் ஒருமைப்பட்டு, கிறிஸ்துவிற்குள்ளும் கிறிஸ்துவின்மூலமாகவும் தேவனுடைய குடும்பத்தில் வாழவேண்டியவர்களாக இருந்தனர். அவர்களிடையே சோதனைகள் துன்பங்கள் கருத்துவேறுபாடுகள் இருக்கும். ஆனால் கிறிஸ்து அவர்களது

இருதயங்களில் வாசஞ்செய்திருந்தபோது, பிரிவினைகள் உண்டாக முடியாமலிருந்தது. ஒருவர்மேல் ஒருவர் வைக்கும் அன்புக்கு அவரது அன்பு அவர்களை நடத்தும். சகலவிதமான வேற்றுமைகளையும் இசைவானவையாகச் செய்யும்படி ஆண்டவரின் பாடங்கள் அவர்கள் அனைவரையும் ஏகசிந்தையும் நியாயமும் உள்ளவர்களாக மாறுகின்றவரை சீடர்களை அது ஒருமைப்பாட்டிற்குள் நடத்தும். மாபெரும் மையமாக கிறிஸ்துவே இருக்கிறார். அவர்கள் எவ்விதமாக இந்த நடுமையத்தை சமீபித்திருந்தனரோ, அந்த அளவிற்கு அவர்களால் ஒருவரையொருவர் சமீபிக்கக்கூடும். (23)

இயேசு அவரது சீடர்களுக்கான போதனையைக் கூறிமுடித்தபின்பு, அந்தச் சிறு அணியினரை தமக்கு மிக அருகில் சேர்த்து, அவர்களுக்கு நடுவில் முழங்காலில் நின்று, அவர்களது தலைகளின்மேல் அவரது கரங்களை வைத்து, அவரது பரிசுத்தமான ஊழியத்திற்கு பிரதிஷ்டை செய்யும் அவரது ஜெபத்தை ஏறெடுத்தார். இவ்விதமாகக் கர்த்தருடைய சீடர்கள் சுவிசேஷ ஊழியத்திற்கு அபிஷேகம் பண்ணப்பட்டனர். (24)

மனிதர்களுக்கிடையில் அவரது பிரதிநிதிகளாக இருக்கும்படி கிறிஸ்து ஒருபோதும் விழுந்துபோகாத தூதர்களைத் தெரிந்துகொள்ளாமல், தங்களைப்போன்ற ஆசைகளையுடைய மனிதர்களை இரட்சிப்பதற்கு அவர்களைப்போன்றவர்களையே தெரிந்துகொண்டிருக்கிறார். மானுடத்தைச் சென்றடைய கிறிஸ்து தாமே தம்மீது மானுடத்தை எடுத்துக்கொண்டார். தெய்வீகத்திற்கு மானுடம் தேவையாக இருந்தது. ஏனெனில் உலகத்திற்கு இரட்சிப்பைக் கொண்டுவர மானுடம் தெய்வீகம் ஆகிய இரண்டுமே தேவைப்பட்டது. தேவனுக்கும் மனிதனுக்கும் ஒரு தொடர்பை ஏற்படுத்தும்படி தெய்வீகத்திற்கு மானுடம் தேவைப்பட்டது. கிறிஸ்துவின் வேலைக்காரர்களுக்கும் ஊழியக்காரர்களுக்கும் இடையில் அப்படித்தான் இருக்கிறது. மனிதன் தேவசாயலை மீண்டும் பெறவும், அவருடைய வேலையைச் செய்ய தகுதியடையவும், அவனுக்கும் அப்பாற்பட்ட ஒரு வல்லமை அவசியமாக உள்ளது. ஆனால் அது மனித ஏதுகரத்தை முக்கியமற்றதாகச் செய்வதில்லை. மானுடம் தெய்வீக வல்லமையைத் தனது கரத்தால் பற்றிக்கொள்ளுகிறது. விசுவாசத்தினால் இருதயத்தில் கிறிஸ்து வாசஞ்செய்கிறார். தெய்வீகத்துடனுள்ள கூட்டுறவினால் நல்லவைகளைச் செய்வதற்கு மனித வல்லமை திறனுடையதாகிறது. (25)

கலிலேய செம்படவர்களை எந்த ஒருவர் அழைத்தாரோ, அவர் தொடர்ந்து மனிதர்களைத் தமது சேவைக்காக அழைத்துக்கொண்டிருக்கிறார். முதல் சீடர்களின்மூலமாக அவர் எப்படித் தமது வல்லமையை

வெளிக்காட்டியிருந்தாரோ, அதேவிதமாக, நமது மூலமாகத் தமது வல்லமையை வெளிக்காட்ட அவர் சித்தமுள்ளவராக இருக்கிறார். நாம் எவ்வளவுதான் குறைபாடுள்ளவர்களாகவும் பாவமுள்ளவர்களாகவும் இருந்தாலும் அவருடன் பங்காளிகளாக இருப்பதற்கும் பயிற்சிபெறுபவர்களாக ஆவதற்கும் கர்த்தர் தமது கரத்தை நீட்டுகிறார். தெய்வீகப் போதனையின்கீழ் வரும்படியாக அவர் நம்மை அழைக்கிறார். அப்படிக் கிறிஸ்துவுடன் நாம் ஒற்றுமைப்படும்போது, தேவனுடைய பணியைச் செய்யலாம். (26)

“இந்த மகத்துவமுள்ள வல்லமை எங்களால் உண்டாயிராமல், தேவனால் உண்டாயிருக்கிறதென்று விளங்கும்படி, இந்தப் பொக்கிஷத்தை மண்பாண்டங்களில் பெற்றிருக்கிறோம்” 2 கொரிந்தியர் 4:7. இந்தக் காரணத்தினால்தான் சுவிசேஷத்தைப் பிரசங்கிப்பது தூதர்களை விடுத்து, தவறுசெய்யும் மனிதர்களிடம் ஒப்படைக்கப்பட்டிருக்கிறது, மானிட பலவீனத்திற்கு ஊடாகச் செயல்படும் வல்லமை தேவனுடைய வல்லமை என்று வெளிக்காட்டப்பட்டுள்ளது. நம்போன்ற பலவீனர்களுக்கு உதவும் அந்த வல்லமை, நமக்கும் உதவக்கூடியதாக இருக்கிறதென்று நாம் நம்பும்படி, இவ்விதமாக அது நம்மை ஊக்கப்படுத்துகிறது. “தானும் பலவீனமுள்ளவனானபடியினாலே, அறியாதவர்களுக்கும் நெறிதப்பிப்போனவர்களுக்கும் இரங்கத்தக்கவனாயிருக்கிறான்”– எபிரெயர் 5:2. அவர்களே அபாயத்திலிருந்தபடியாலும் பாதையிலுள்ள ஆபத்துகளுடனும் துன்பங்களுடனும் அறிமுகமானவர்களானபடியாலும் அவர்களைப்போலவே அபாயத்திலிருக்கும் மற்றவர்களுக்கு உதவிசெய்ய அழைக்கப்பட்டுள்ளனர். சந்தேகத்தினால் குழப்பமடைந்த, குறைபாடுகளினால் பாரமடைந்த, விசுவாசத்தில் பலவீனமான, காணக்கூடாததைப் பற்றிக்கொள்ளமுடியாத ஆத்துமாக்கள் உள்ளன. ஆனால் நடுங்கும் தங்களுடைய விசுவாசத்தைக் கிறிஸ்துவுடன் பிணைப்பதற்கு கிறிஸ்துவிற்குப்பதிலாகத் தங்களிடம் வரும் ஒரு நண்பனை இவர்களால் காணமுடியும். (27)

இயேசுவை இந்த உலகத்திற்குக் காட்டுவதற்கு நாம் பரலோக தூதர்களோடு உடன் உழியக்காரர்களாக இருக்கவேண்டியவர்களாக இருக்கிறோம். நமது கூட்டுறவிற்காக ஏறத்தாழப் பொறுமையற்ற வாஞ்சையுடன் தூதர்கள் காத்துக்கொண்டுள்ளனர். ஏனெனில் மனிதனுடன் தொடர்புகொள்ள மனிதன் ஒரு தொடர்பு கருவியாக இருக்கவேண்டும். முழு இருதயத்துடனுள்ள பக்தியுடன் நாம் நம்மைக் கிறிஸ்துவிற்கு ஒப்புக்கொடுக்கும்போது, நமது சத்தத்தின்மூலமாக, தேவனுடைய அன்பை வெளிப்படுத்துவதில் தூதர்கள் பெருமகிழ்ச்சிடைகின்றனர். (28) ★

# 31

# மலைப்பிரசங்கம்!

**மத்தேயு 5,6.7**

**(The Desire of Ages, pp. 298–324)**

கிறிஸ்து அவரது வார்த்தைகளைப் பெற்றுக்கொள்ளும்படி தமது சீடர்களைமட்டும் தனியாக அபூர்வமாகவே அழைத்திருந்தார். பொதுவாக அடிக்கடி அழைப்பதில்லை. வாழ்க்கைப் பாதையை அறிந்திருந்தவர்களைமட்டுமே தமது உரையைக் கேட்பவர்களாக அவர் தெரிந்துகொள்ளவில்லை. அறியாமையிலும் தவறிலும் இருந்த திரளானவர்களைச் சென்று அடைவது அவரது வேலையாக இருந்தது. புரிந்துகொள்ளமுடியாதபடி இருளடைந்திருந்தவைகளைச் சென்றடையும் சத்தியத்தின் பாடங்களை அவர் கொடுத்தார். தம்மிடம் வரும் அனைவரையும் எச்சரிப்பின் வாத்தைகளாலும் மன்றாட்டுகளாலும் தைரியமூட்டுவதாலும் உயர்த்தும்படி அவர்தாமே சத்தியமாக இருந்து, அரையைக் கட்டிக்கொண்டு, ஆசீர்வதிப்பதற்காக நீட்டிய கரங்களுடன் நின்றிருந்தார். (1)

மலைப்பிரசங்கம் குறிப்பாகச் சீடர்களுக்கென்று செய்யப்பட்டதாக இருந்தபோதிலும், திரளானவர்கள் கேட்கும்வண்ணம் பிரசங்கிக்கப்பட்டது. சீடர்களை அபிஷேகஞ்செய்தபின், இயேசு அவர்களுடன் கடல் பக்கமாகச் சென்றார். இங்கு அதிகாலையில் மக்கள் கூட்டமாகத் திரளத்தொடங்கியிருந்தனர். கலிலேய நகரங்களில் இருந்துள்ள வழக்கமான கூட்டங்கள் அல்லாமல், யூதேயாவிலிருந்தும் எருசலேமிலிருந்துங்கூட வந்திருந்தார்கள். மேலும் பெரோயாவிலிருந்தும், தெக்கபோலியிலிருந்தும், இதுமேயாவிலிருந்தும், யூதேயாவிற்குத் தென்புறத்திலிருந்தும், தீரு, சீதோன் ஆகிய இடங்களிலிருந்தும், மத்தியதரைக்கடலின் கரையிலிருந்த பெனிக்கேயாவிலிருந்தும் மக்கள் கூட்டமாகக் கூடியிருந்தனர் "கலிலேயாவிலும், யூதோயாவிலும், எருசலேமிலும், இதுமேயாவிலும், யோர்தானுக்கு அக்கரையிலுமிருந்து திரளான ஜனங்கள் வந்து, அவருக்குப் பின்சென்றார்கள். அல்லாமலும் தீரு சீதோன் பட்டணங்களின் திசைகளிலுமிருந்து திரளான ஜனங்கள் அவர் செய்த அற்புதங்களைக்குறித்துக் கேள்விப்பட்டு, அவரிடத்தில் வந்தார்கள்"—மாற்கு 3:8; "பின்பு அவர் அவர்களுடனேகூட

இறங்கி, சமனான ஒரு இடத்திலே நின்றார். அங்கே அவருடைய சீஷரில் அநேகம் பேரும் அவருடைய உபதேசத்தைக் கேட்கும்படிக்கும், தங்கள் வியாதிகளினின்று குணமாக்கப்படும்படிக்கும், யூதேயா தேசத்துத் திசைகள் யாவற்றிலிருந்தும், எருசலேம் நகரத்திலிருந்தும், தீரு சீதோன் பட்டணங்கள் இருக்கிற கடலோரத்திலிருந்தும் வந்தவர்களாகிய திரளான ஜனங்களும் இருந்தார்கள். அவரிடத்திலிருந்து வல்லமை புறப்பட்டு எல்லாரையும் குணமாக்கினபடியினாலே, ஜனங்கள் யாவரும் அவரைத் தொடும்படிக்கு வகைதேடினார்கள்"—லூக்கா 6:17,19. (2)

அவருடைய உரையைக் கேட்கவேண்டுமென்று வந்திருந்த மக்கள் கூட்டத்தை அந்தக் குறுகிய கடற்கரை தாங்கிக்கொள்ள முடியாததாக இருந்தினால், இயேசு மலைச்சாரலுக்கு வழிவகுத்துச் சென்றார். அந்தப் பெரிய கூட்டத்தினர் ஒன்று சேரக்கூடிய ஒரு சமவெளியைக் கண்டு, அவர் புல்லின்மீது அமரவே, அவரது சீடர்களும் திரளானவர்களும் அவரைப் பின்பற்றி புல்தரையின்மீது அமர்ந்தனர். (3)

சீடர்கள் அமரும் இடம் எப்பொழுதும் இயேசுவிற்கு அடுத்ததாக இருந்தது. மக்கள் தொடர்ந்து அவரை நெருக்கியிருந்தனர். இருந்தபோதிலும் அவர்களை அவரது சமுத்தைவிட்டுத் தூரமாக விலக்கக்கூடாது என்பதை சீடர்கள் புரிந்திருந்தனர். அவரது உபதேசத்தின் ஒரு வார்த்தையைக்கூட இழக்கக்கூடாது என்பதற்காக அவர்கள் அவரது பக்கத்தில் நெருங்கி உட்கார்ந்தனர். அனைத்து நாட்டினருக்கும் காலங்கள் நெடுகிலும் அவர்கள் அறிவிக்கவேண்டிய சத்தியங்களைப் புரிந்துகொள்ள உன்னிப்பாகக் கவனிப்பவர்களாகவும் ஆர்வமிக்கவர்களாகவும் இருந்தனர். (4)

வழக்கத்திற்கும் மாறாக, ஏதோ சற்று அதிகமாக எதிர்பார்க்கலாம் என்னும் உணர்வுடன் இப்பொழுது அவர்கள் தங்கள் ஆண்டவரைச் சுற்றி நெருக்கமாக அமர்ந்திருந்தனர். அவர்கள் காலையில் ஒன்று சேர்ந்த நிகழ்ச்சிகளில் இருந்து (மேசியாவின்) இராஜ்யம் விரைவில் ஏற்படுத்தப்படவிருக்கிறதென்றும், அதைப்பற்றின சில அறிவிப்புகள் கொடுக்கப்படவுள்ளன என்றும் நம்பியிருந்தனர். எதிர்பார்ப்புக்களின் உணர்வுகள் திரளானவர்களிடம் பரவியிருந்தது. அதைப்பற்றிய ஆழமான விருப்பத்திற்கு ஆவல்மிக்க அவர்கள் முகங்கள் சாட்சிபகர்ந்தன. தெய்வீகப் போதகரின் வார்த்தைகளை எதிர்பார்த்து, பசுமையான மலைச்சாரலில் மக்கள் அமர்ந்தபோது, அவர்களது இருதயங்களை எதிர்கால மகிமையைக்குறித்த எண்ணங்களால் நிறைந்திருந்தனர். வெறுக்கப்பட்ட ரோமர்களுக்குமேலாக ஆளுகையை அடைந்து, உலகத்தின் மாபெரும் பேரரசின் செல்வங்களையும் சிறப்புகளையும் கைப்பற்றிக்கொள்ளக்கூடிய

நாளை எதிாப்பாத்திருந்த தொழிலாளர்களும் மீன்பிடிப்பவர்களும் தங்களுடைய துர்ப்பாக்கியமான குடிசைகள், பற்றாக்குறையான உணவு, ஓயாது உழைக்கும் வாழ்க்கை, தேவைகளை முன்னிட்ட அச்சம் ஆகியவை, செழுமைமிக்க மாளிகைகளுக்கும், வசதியான நாட்களுக்கும் மாற்றப்படும் என்ற வாக்குறுதியைக் கேட்பதற்கு எதிர்பார்த்திருந்தனர். பகலில் தங்களுடைய உடையாகவும் இரவில் போர்வையாகவும் இருந்த அவர்களுடைய ஒரேமுரட்டு ஆடை இருக்குமிடத்தில் கிறிஸ்து வெற்றிவீரராக தாம் வென்றவர்களின் விலைமதிப்புமிக்க ஆடைகளைக் கொடுப்பார் என்று அவர்கள் நம்பியிருந்தனர். இஸ்ரவேல் விரைவில் மற்ற அனைத்து நாடுகளுக்குமுன் மேன்மைப்படுத்தப்பட்டதாகவும், எருசலேம் உலகளாவிய ஆளுகையின் தலைமையிடமாகவும் உயர்த்தப்படும் என்ற பெருமைமிக்க நம்பிக்கையில் அனைத்து இருதயங்களும் சிலிர்த்திருந்தன. (5)

உலகப்பிரகாரமான மேன்மையின் நம்பிக்கை அற்றுப்போகத்தக்கதாக, கிறிஸ்து அவர்களை ஏமாற்றமடையச் செய்தார். அவரது மலைப்பிரசங்கத்தில் தவறான கல்வியினால் உண்டாயிருந்த செயலை இல்லாமற்செய்ய வகைதேடி, அவரது பிரசங்கத்தைக் கேட்டுக்கொண்டிருந்தவர்களுக்கு தமது இராஜ்யத்தையும் தமது குணத்தையும்பற்றின சரியான எண்ணத்தைக் கொடுக்கவும் அவர் முயன்றிருந்தார். அப்படியிருந்தபோதிலும் அவர் மக்களின் தவறுகளின்மீது நேரடியான தாக்குதலை நடத்தாதவராக இருந்தார். பாவத்தின் காரணமாக உலகத்தில் உண்டாகியிருந்த துன்பங்களை அவர் கண்டார். இருந்தபோதிலும், அவர்களுடைய இழிந்த நிலைமையின் தெளிவான வரைபடத்தை அவர்கள்முன் அவர் எடுத்துக்காட்டவில்லை. அவர்கள் அறிந்திருந்ததைவிட எல்லையற்றவிதமாக நல்லதாக இருந்த சிலவற்றை அவர் போதித்தார். தேவனுடைய இராஜ்யத்தைப்பற்றிய அவர்களது எண்ணங்களைத் தகர்க்காமல், அதற்குள் பிரவேசிப்பதற்கான நிபந்தனையைக் கூறி, அதன் தன்மையைப்பற்றின தங்களுடைய சொந்த முடிவிற்குவரும்படி அவர்களை விட்டுவிட்டார். அவரைப் பின்பற்றிச்சென்ற திரளானவர்களுக்கு அவர் போதித்த சத்தியம் அவர்களைவிட நமக்கு முக்கியத்துவம் குறைந்ததாக இல்லை. தேவனுடைய இராஜ்யத்தின் அடிப்படைக் கொள்கையை அறிந்துகொள்ளும் அவசியம் அவர்களைவிட நமக்குக் குறைவானதாக இல்லை. (6)

மலையிலிருந்த மக்களுக்குக் கிறிஸ்துவின் முதல் வார்த்தைகள் ஆசீர்வாதங்களின் வார்த்தைகளாக இருந்தன. யாரெல்லாம் தங்களுடைய ஆவிக்குரிய தரித்திர நிலையைப் புரிந்துகொண்டு இரட்சிப்பு தேவை என்பதை உணர்ந்துகொள்ளுகிறார்களோ, அவர்களே மகிழ்ச்சிமிக்கவர்கள் என்று

அவர் கூறினார். சுவிசேஷம் ஏழைகளுக்குப் பிரசங்கிக்கப்பட்டாகவேண்டும். தங்களைச் செல்வந்தர்கள் என உரிமைபாராட்டி, தங்களுக்கு ஒன்றும் தேவையில்லையென்று கூறும் ஆவிக்குரிய அகந்தை உள்ளவர்களுக்கு வெளிப்படுத்தப்படாமல், தங்களுடைய பாவத்திற்காக இதயத்திலே நொறுங்குண்டு தாழ்மையோடிருப்பவர்களுக்குத்தான் சுவிசேஷம் பிரசங்கிக்கப்படவேண்டும். பாவத்திற்கு எதிராக ஒரே ஒரு ஊற்றுமட்டுந்தான் திறக்கப்படவுள்ளது. அது ஆவியில் எளிமையுள்ளவர்களுக்கான ஒரு ஊற்றாகும். (7)

அகந்தைமிக்க இருதயம் இரட்சிப்பைச் சம்பாதிக்க முயலுகிறது. ஆனால் பரலோகத்திற்கான நமது பட்டமும் தகுதியும் கிறிஸ்துவின் நீதியில் காணப்படுகிறது. மனிதன் தனது சொந்த பலவீனத்தைப்பற்றி மனஉணர்வடைந்து, தனது சுயநிறைவுகள் அனைத்தையும் களைந்து, தேவனுடைய கட்டுப்பாட்டிற்கு இணங்கும்வரை, மனிதனைக் குணப்படுத்து வதற்குக் கர்த்தரால் ஒன்றும் செய்யமுடியாது. அதன்பின் தேவன் அவனுக்கு அருளக் காத்திருக்கும் ஈவை அவன் பெறலாம். தனது தேவையை உணரும் ஆத்துமாவிற்குக் கொடுக்கப்படாமல் எதுவும் நிறுத்திவைக்கப்படமாட்டாது. பூரணத்துவம் அனைத்தும் வாசஞ்செய்யும் அவரைச் சமீபிப்பதற்குத் தடைகள் எதுவும் இல்லாத மார்க்கம் உண்டு. "நித்தியவாசியும் பரிசுத்தர் என்கிற நாமமுள்ளவருமாகிய மகத்துவமும் உன்னதமுமானவர் சொல்லுகிறார்: உன்னதத்திலும் பரிசுத்த ஸ்தலத்திலும் வாசம்பண்ணுகிற நான், பணிந்தவர்களின் ஆவியை உயிர்ப்பிக்கிறதற்கும், நொறுங்கினவர்களின் இருதயத்தை உயிர்ப்பிக்கிறதற்கும், நொறுங்குண்டு பணிந்த ஆவியுள்ளவர்களிடத்திலும் வாசம்பண்ணுகிறேன்" (ஏசாயா 57:15) என்கிறார். (8)

"துயரப்படுகிறவர்கள் பாக்கியவான்கள்; அவர்கள் ஆறுதலடை வார்கள்" பாவத்தின் குற்றத்தை நீக்குவதற்கு துயரத்திற்கு அதற்குள்ளாகவே வல்லமை உண்டென இந்த வார்த்தைகளினால் கிறிஸ்து போதிப்பதில்லை. போலியான தாழ்மையையும் தானாக உண்டுபண்ணிக்கொள்ளும் தாழ்மையையும் அவர் அனுமதிப்பதில்லை. அவர்கூறும் துக்கங்கொண்டாடுதல் மனத்துயரிலும் புலம்பலிலும் அடங்கியதல்ல. பாவத்தின் காரணமாக நாம் வருந்தும்போது, நாம் தேவனுடைய பிள்ளைகளாக இருக்கும் சிறப்பான சலுகையைப் பெற்றிருப்பதற்காக களிகூரவேண்டும். (9)

நமது தீய செயல்கள் சந்தோஷமில்லாத பலன்களைக் கொண்டுவருவதினால் நாம் அடிக்கடி வருந்துகிறோம். ஆனால் இது மனந்திரும்புதல் அல்ல. பாவத்திற்காக உண்மையாக வருந்துதல் என்பது

பரிசுத்த ஆவியானவரின் செயலினால் உண்டாவதாகும். இரட்சகரை அவமதித்து வருத்தப்படுத்திய இருதயத்தின் நன்றிகெட்ட தன்மையை ஆவி வெளிப்படுத்தி, நம்மை நொறுங்குண்டவர்களாகச் சிலுவையின் பாதத்தண்டை கொண்டுவருகிறது. ஒவ்வொரு பாவத்தினாலும் இயேசு மறுபடியும் மறுபடியும் காயப்படுத்தப்படுகிறார். நாம் காயப்படுத்தின அவரைப் பார்க்கும்போது, அவர்மீது வேதனையைக் கொண்டுவந்த நமது பாவங்களுக்காக நாம் துக்கங்கொண்டாடுகிறோம். அவ்விதமான துக்கங்கொண்டாடுதல் பாவத்தைவிட்டு விலகுவதற்கு நம்மை வழிநடத்தும். (10)

உலகப்பிரகாரமானவர்கள் இந்தத் துக்கத்தை ஒரு பலவீனம் என்று அறிவிக்கலாம். ஆனால் எல்லையற்ற பரம்பொருளான ஒருவருடன் பிளவுபடாத விதத்தில் பாவத்திற்காக வருந்துபவனை (தேவனுடன்) பிணைக்கும் இது பாலமாகும். இருதய கடினத்தாலும் மீறுதலினாலும் இழக்கப்பட்டுப்போன கிருபைகளை தேவதூதர்கள் ஆத்துமாவிற்குத் திரும்பக்கொண்டுவருகின்றனர் என்பதை அது காட்டுகிறது. பாவத்திற்காக மனம்வருந்துபவனின் கண்ணீர் பரிசுத்தத்தின் சூரிய ஒளிக்குமுன் வருகிறது. இந்தத் துயரம் ஆத்துமாவிலுள்ள ஜீவ ஊற்றாக இருக்கக்கூடிய மகிழ்ச்சியின் முன்னடையாளமாக இருக்கும். “சீயோனிலே துயரப்பட்டவர்களைச் சீர்ப்படுத்தவும், அவர்களுக்குச் சாம்பலுக்குப் பதிலாகச் சிங்காரத்தையும், துயரத்துக்குப் பதிலாக ஆனந்த தைலத்தையும், ஒடுங்கின ஆவிக்குப் பதிலாகத் துதியின் உடையையும் கொடுக்கவும், அவர் என்னை அனுப்பினார்; அவர்கள் கர்த்தர் தம்முடைய மகிமைக்கென்று நாட்டின நீதியின் விருட்சங்களென்னப்படுவார்கள்”–ஏசாயா 61:3. (11)

சோதனையிலும் துன்பத்திலும் துயரப்படுகிறவர்களுக்கு ஆறுதல் உள்ளது. பாவம் சார்ந்த சிற்றின்ப நுகர்ச்சிகளைவிட துயரத்தினாலும் கீழான நிலைமையினாலும் உண்டாகும் கசப்பு நல்லது. தேவனுடைய கிருபையினால், நமது பாவங்களின்மீது வெற்றியடைவதற்காக, நமது குணத்திலுள்ள நோய்ப்பட்ட இடத்தைத் துன்பத்தின்மூலமாக தேவன் வெளிக்காட்டுகிறார். தேவனிடமிருந்து வரும் கடிந்துகொள்ளுதலையும் ஆலோசனையையும் நாம் ஏற்றுக்கொள்ளுவோமா என்பதற்காக, நம்மைப்பற்றி நாம் அறிந்திராத அத்தியாயங்கள் நமக்குமுன்பாகத் திறக்கப்பட்டு, சோதனை வருகிறது. சோதனைக்குள் நாம் கொண்டுவரப்படும்போது, நாம் எரிச்சலடையவும் குறைகூறவுங்கூடாது. நாம் கிறிஸ்துவின் கரத்திலிருந்து வெளியே செல்லும்படி கலகஞ்செய்யவோ வருத்தப்படவோ கூடாது. தேவனுக்குமுன் நமது ஆத்துமாவை நாம் தாழ்த்தவேண்டும். தனக்கு

மகிழ்ச்சியை உண்டுபண்ணக்கூடிய வெளிச்சத்தில் காரியங்களைப் பார்க்க விரும்புகிறவனுக்கு, கர்த்தரின் வழிகள் இருளாக இருக்கின்றன. நமது மனித இயல்பில் அவை இருளாகவும் மகிழ்ச்சியில்லாதவையாகவும் தோன்றுகின்றன. ஆனால் கர்த்தரின் பாதை இரக்கத்தின் பாதையாக இருந்து, முடிவில் இரட்சிப்பை உண்டுபண்ணுவதாக உள்ளது. எலியா, வனாந்தரத்தில் தான் வாழ்ந்ததுபோதும், எனக்கு மரணத்தைத் தாரும் என்று ஜெபித்தபோது, அவன் தான் செய்வது என்ன என்பதை அறியாதவனாக இருந்தான். தேவன் அவரது இரக்கத்தினால் அவனது வார்த்தையைக் கேட்டவுடன் அவனை எடுத்துக்கொள்ளவில்லை. எலியா செய்யவேண்டிய பெரும் பணி இன்னமும் இருந்தது. அவனது பணி முடிந்தவுடன் அவன் வனாந்தரத்தில் அதைரியத்திலும் தனிமையிலும் அலையவேண்டியவனாக இருக்கவில்லை. மரணம் என்னும் பூமியின் தூளில் இறங்கவேண்டியவனாக இராமல், வானுலகின் இரதங்களில் பயணஞ்செய்து உன்னதத்திலுள்ள சிங்காசனத்திற்கு மகிமையில் உயரச்செல்லுபவனாக இருந்தான். (12)

"அவர்கள் வழிகளை நான் பார்த்து, அவர்களைக் குணமாக்குவேன்; அவர்களை நடத்தி, திரும்பவும் அவர்களுக்கும் அவர்களிலே துக்கப்படுகிறவர்களுக்கும் ஆறுதல் அளிப்பேன்." "அப்பொழுது கன்னிகைகளும், வாலிபரும், முதியோருங்கூட ஆனந்தக்களிப்பாய் மகிழுவார்கள்; நான் அவர்கள் துக்கத்தைச் சந்தோஷ மாக மாற்றி, அவர்களைத்தேற்றி, அவர்கள் சஞ்சலம் நீங்க அவர்களைச் சந்தோஷப்படுத்துவேன்"–ஏசாயா 57:18; எரேமியா 31:13. (13)

"சாந்தகுணமுள்ளவர்கள் பாக்கியவான்கள்" கிறிஸ்துவிற்குள் தானாக மறைந்திருக்கும் சாந்தகுணத்தினால் நாம் சந்திக்கவேண்டியதாக இருக்கும் துன்பங்கள் மிகவும் குறைக்கப்படலாம். நமது ஆண்டவரின் தாழ்மையை நாம் கொண்டிருப்போமானால், அலட்சியப்படுத்தப்படுத்துதல் மற்றும் எதிர்த்தாக்குதல்களுக்கும் நாம் நாள்தோறும் சந்திக்கும் தொந்தரவுகளுக்கும் மேலாக உயருவோம். நமது ஆவியின்மீது துயர் இருளைக் கொண்டுவராமல் நின்றுபோகும். சுயக்கட்டுப்பாடு என்பதுதான் ஒரு கிறிஸ்தவனில் உள்ள மிக மேலான தன்மைக்குச் சான்றாக உள்ளது. எவனொருவன் தூஷிக்கப்படும்போதும் கொடுமைப்படுத்தப்படும்போதும் அமைதியும் நம்பிக்கையுமிக்க ஆவியை உடையவனாக இருக்கத் தவறிவிடுகிறானோ, அவன் தேவன் தமது குணத்தின் பூரணத்தை மனிதனில் வெளிப்படுத்தும் உரிமையைக் கொள்ளையாடுகிறான். கிறிஸ்துவின் அடியார்களுக்கு வெற்றியைத் தரும் பலம் அவர்களது இருதயங்களில் உள்ள தாழ்மையாக உள்ளது. உன்னதத்திலுள்ள மன்றத்துடன் தங்களுக்குள்ள பிணைப்பின் அடையாளமாக அது இருக்கிறது. (14)

“கர்த்தர் உயர்ந்தவராயிருந்தும், தாழ்மையுள்ளவனை நோக்கிப் பார்க்கிறார்; மேட்டிமையானவனையோ தூரத்திலிருந்து அறிகிறார்”– சங்கீதம் 138:6. கிறிஸ்துவின் தாழ்மையும் எளிமையுமான ஆவியை வெளிக்காட்டுபவர்கள் தேவனால் கனிவுடனும் மதிப்புடனும் கருதப் படுகின்றனர். உலகம் அவர்களைப் பரிகாசமாக நோக்கலாம். ஆனால் அவர்கள் தேவனுடைய பார்வையில் மிகுந்த மதிப்புள்ளவர்களாக உள்ளனர். ஞானவான்கள், பெரியவர்கள், நன்மை செய்கிறவர்கள் ஆகிய ஓய்வு ஒழிச்சலின்றி பணிசெய்பவர்கள் மட்டுந்தான் பரலோக மன்றத்திற்குச் செல்லும் அனுமதிச்சீட்டைப் பெறுவார்களா? அல்ல! தேவனுடைய சித்தத்தைச் செயல்படுத்துவதையே நோக்கமாகக்கொண்டு, கிறிஸ்துவில் தங்கியிருக்க விரும்பும் ஆவியில் எளிமையுள்ளவர்களான இவர்கள் பரலோகத்திற்கான நுழைவுரிமையை தாராளமாகப் பெற்றுக்கொள்வார்கள். இவர்கள் தங்கள் அங்கிகளை ஆட்டுக்குட்டியானவருடைய இரத்தத்திலே தோய்த்து வெளுத்தவர்களோடு இருப்பார்கள். “ஆனபடியால், இவர்கள் தேவனுடைய சிங்காசனத்திற்கு முன்பாக இருந்து, இரவும் பகலும் அவருடைய ஆலயத்திலே அவரைச் சேவிக்கிறார்கள்; சிங்காசனத்தின்மேல் வீற்றிருக்கிறவர் இவர்களுக்குள்ளே வாசமாயிருப்பார்”–வெளிப்படுத்தல் 7:15. (15)

“நீதியின்மேல் பசிதாகமுள்ளவர்கள் பாக்கியவான்கள்.” தங்களுக்குத் தகுதியில்லை என்னும் உணர்வினை உடையவர்களின் இருதயம் நீதியின்மேல் பசிதாகமுடையதாக இருக்கும்படி நடத்தப்படும். அந்த வாஞ்சையால் ஏமாற்றமுண்டாகாது. இயேசுவிற்குத் தங்கள் இருதயங்களில் இடங்கொடுப்பவர்கள் அவரது அன்பை உணருவார்கள். தேவனுடைய குணம் போன்றதாகத் தங்களுடைய குணம் ஆகவேண்டும் என்று எவர்கள் விரும்புகின்றனரோ, அவர்களனைவரும் மனநிறைவடைவார்கள். இயேசுவைப் பார்த்துக்கொண்டிருக்கும் ஆத்துமாவிற்கு துணைசெய்யாமல், பரிசுத்த ஆவி ஒருபோதும் விட்டுவிடுவதில்லை. அவர் கிறிஸ்துவின் காரியங்களை அவனுக்கு எடுத்துக்காட்டுகிறார். கண்கள் கிறிஸ்துவில் பதிந்திருக்குமானால், அந்த ஆத்துமா கிறிஸ்துவின் சாயலை அணிந்துகொள்ளும்வரை ஆவியானவரின் செயல் நின்றுபோவதில்லை. அன்பின் தூய்மையான மூலக்கூறு மேலான நிலைமையை அடைவதற்கும், பரலோகக் காரியங்களைப்பற்றி அதிகமான அறிவை அடைவதற்கும், அதனால் நிறைவானதற்குக் குறைவான எதிலும் நில்லாதிருப்பதற்கும் வழிவகுக்கும். “நீதியின்மேல் பசிதாகமுள்ளவர்கள் பாக்கியவான்கள்; அவர்கள் திருப்தியடைவார்கள்.” (16)

“இரக்கமுள்ளவர்கள் இரக்கம் பெறுவார்கள்; இருதயத்தில் தூய்மையுள்ளவர்கள் தேவனைத் தரிசிப்பார்கள்.” தூய்மையற்ற எண்ணங்கள்

ஒவ்வொன்றும் ஆத்துமாவைத் தூய்மையற்றதாக்கி, சன்மார்க்கரின் நுண்ணுணர்வினைக் கெடச்செய்து, பரிசுத்த ஆவியினால் உண்டாகும் உணர்த்துதல்களை நீக்கிவிடச்செய்கிறது. அது மனிதர்கள் தேவனைக் காணமுடியாதபடி பார்வையை மங்கச்செய்கிறது.மனம்வருந்தும் பாவியைக் கர்த்தர் மன்னிக்கலாம். மன்னிக்கவுஞ்செய்கிறார். ஆனால் அப்படியே மன்னிக்கப்பட்டாலும் அந்த ஆத்துமா சீர்குலைந்தேயிருக்கிறது. ஆவிக்குரிய சத்தியங்களைப்பற்றின தெளிவான அறிவை அடைந்துகொள்ளவேண்டும் என்று விரும்பும் அனைவரும், பேச்சிலும் எண்ணத்திலும் உள்ள தூய்மையற்ற தன்மைகள் அனைத்தையும் விலக்கியாகவேண்டும். (17)

ஆனால் கிறிஸ்துவின் வார்த்தைகள், புலனுணர்விலுள்ள தூய்மையின்மை, யூதர்கள் வைராக்கியமாக விலக்கியிருந்த சடங்காச் சாரமான தீட்டுகள் ஆகியவைகளில் இருந்துள்ள விடுதலையைவிட அதிகமான பொருளையுடையனவாக இருந்தன. சுயநலம் தேவனைப் பார்ப்பதிலிருந்து நம்மைத் தடைசெய்கிறது. சுயத்தைத் தேடும் ஆவி தேவனையும் ஒட்டுமொத்தமாகத் தன்னைப்போன்றதாக நிதானிக்கச் செய்கிறது. சுயத்திற்கான காரியங்களை நாம் விட்டுவிலகாதவரை அன்பானவராக இருக்கக்கூடிய அவரை நம்மால் புரிந்துகொள்ளமுடியாது. சுயநலமற்ற இருதயம் ஒன்றினால்மட்டுமே தாழ்மையும் நம்பிக்கையுமுள்ள ஆவி ஒன்றினால்மட்டுமே, தேவனை "இரக்கமும், கிருபையும், நீடிய சாந்தமும், மகா தயையும், சத்தியமுமுள்ள தேவன்" (யாத்திராகமம் 34:6) என்று காணவியலும். (18)

"சமாதானம் பண்ணுகிறவர்கள் பாக்கிவான்கள்." கிறிஸ்துவினால் உண்டாகும் சமாதானம், சத்தியத்தால் பிறந்துள்ளதாகும். அது தேவனுடன் இசைவுள்ளதாக உள்ளது. இந்த உலகம் தேவப்பிரமாணத்திற்கு விரோதமான பகைமை உடையதாக இருக்கிறது. பாவிகள் தங்களைப் படைத்தவருடன் பகைமை உள்ளவர்களாக இருக்கின்றனர். அதன் பலனாக அவர்கள் ஒருவருக்கொருவர் விரோதிகளாக உள்ளனர். ஆனால் சங்கீதக்காரன்: "உம்முடைய வேதத்தை நேசிக்கிறவர்களுக்கு மிகுந்த சமாதானமுண்டு; அவர்களுக்கு இடறலில்லை" (சங்கீதம் 119:165) என்று அறிவிக்கிறான். மனிதர்களால் சமாதானத்தைச் சம்பாதிக்க இயலாது. தனிப்பட்டவர்களையோ அல்லது சமுதாயத்தையோ தூய்மைப்படுத்தவும் உயர்த்தவும் செய்யப்படும் மனித திட்டங்கள் தோல்வியடைகின்றன. ஏனெனில் அவை இருதயத்தைச் சென்றடைவதில்லை. சமாதானத்தைப் படைக்கவோ தொடர்ந்து கொண்டுசெல்லவோ கூடிய ஒரே வல்லமை கிறிஸ்துவின் கிருபையில் மட்டுமே உள்ளது. அது இருதயத்தில்

நடப்படும்போது, கலகத்தையும் பிரிவினையையும் உண்டுபண்ணக்கூடிய தீய ஆசைகளை அங்கிருந்து வெளியேற்றும். “முட்செடிக்குப் பதிலாகத் தேவதாரு விருட்சம் முளைக்கும்; காஞ்சொறிக்குப் பதிலாக மிருதுச்செடி எழும்பும்; அது கர்த்தருக்குக் கீர்த்தியாகவும், நிர்மூலமாகாத நித்திய அடையாளமாகவும் இருக்கும்.” “வனாந்தரமும் வறண்ட நிலமும் மகிழ்ந்து, கடுவெளி களித்து, புஷ்பத்தைப்போலச் செழிக்கும்”—ஏசாயா 55:13; 35:1. (19)

பரிசேயர்களுடைய உதாரணம், கட்டளைகள் ஆகியவகைளிலிருந்து முற்றிலுமாக வேறுபட்டவைகளாக இருந்த இந்தப் போதனையில் திரளானவர்கள் ஆச்சரியமடைந்தனர். இவ்வுலகத்திலுள்ள பெருட்களில்தான் மகிழ்ச்சி அடங்கியுள்ளது என்றும், மனிதர்களால் உண்டாகும் புகழ்ச்சியும் மேன்மையும் இச்சிக்கப்படவேண்டியவை என்றும் மக்கள் எண்ணினர். ரபி என்று அழைக்கப்படுவதும், ஞானமும் மதவாழ்க்கையும் உடையவர்கள் என்று போற்றப்படுவதும், பொதுமக்கள்முன் தங்களது மேன்மைகள் விளம்பரப் படுத்தப்படுவதும் மிகுந்த மகிழ்ச்சிதருவதாக இருந்தது. அது சந்தோஷத்தின் கிரீடம் என்று கருதப்பட்டிருந்தது. ஆனால் அந்தப் பெரிய மக்கள் கூட்டத்திற்குமுன் பூமிக்குரிய ஆதாயங்களும் மேன்மைகளும் அவைகளை விரும்பும் அப்படிப்பட்டவர்களுக்கு எப்போதும் கிடைக்கக்கூடியவைதான் என்று இயேசு அறிவித்தார். அவர் நிச்சயத்தை உடையவராகப் பேசினார். மனநிறைவை உண்டுபண்ணக்கூடிய வல்லமை அவரது வார்த்தைகளில் இருந்தது. மக்கள் மௌனப்படுத்தப்பட்டனர். பய உணர்வு அவர்கள்மீது உண்டாயிற்று. அவர்கள் ஒருவரையொருவர் சந்தேகத்துடன் பார்த்தனர். இந்த மனிதனரின் போதனைகள் உண்மையானவைகளாக இருந்தால், அவர்களில் யார் இரட்சிக்கப்படுவார்கள்? “குறிப்பிடப்படக்கூடிய இந்த ஆசிரியர்” தேவ ஆவியினால் ஏவப்பட்டவராக இருக்கிறார். அவரால் கூறப்படும் நுண்ணுணர்வுமிக்க வார்த்தைகள் தெய்வீகமானவைகள் என்னும் மன உணர்த்துதலை அநேகர் அடைந்தனர். (20)

மெய்யான மகிழ்ச்சி எவைகளால் ஆனது என்றும், அதை எவ்வாறு அடையலாம் என்றும் இயேசு விளக்கியபின், தேவனால் போதகர்களாகத் தெரிந்துகொள்ளப்பட்ட அவரது சீடர்கள் மற்றவர்களை நீதியின் பாதையில் நித்திய ஜீவனுக்குள் நடத்தவேண்டிய அவர்களது கடமையைப்பற்றிக் குறிப்பாக அவர் சுட்டிக்காட்டினார். அவர்கள் அடிக்கடி மனமடிவையும் அதைரியத்தையும் அனுபவிக்க நேரிடும். முடிவுசெய்யப்பட்ட எதிர்ப்பை சந்திக்க நேரிடும். அவர்கள் அவமானப்படுத்தப்படுவார்கள். அவர்களது சாட்சிகள் புறக்கணிக்கப்படும் என்பவைகளை அவர் அறிந்திருந்தார். அவரது

ஊழியத்தின் நிறைவேறுதலில் அவரது வார்த்தைகளை மிகக் கவனமாகக் கவனித்திருந்த அந்தத் தாழ்மையான மனிதர்கள், பழிச்சொற்கள், சித்திரவதை, சிறைவாசம், மரணம் ஆகியவைகளைச் சந்திக்கவேண்டிவர்களாவார்கள் என்பதையும் நன்கு அறிந்திருந்த அவர்: (21)

"நீதியினிமித்தம் துன்பப்படுகிறவர்கள் பாக்கியவான்கள்; பரலோகராஜ்யம் அவர்களுடையது. என்னிமித்தம் உங்களை நிந்தித்துத் துன்பப்படுத்தி, பலவித தீமையான மொழிகளையும் உங்கள்பேரில் பொய்யாய் சொல்வார்களானால் பாக்கியவான்களாயிருப்பீர்கள்; சந்தோஷப்பட்டு, களிகூருங்கள்; பரலோகத்தில் உங்கள் பலன் மிகுதியாயிருக்கும்; உங்களுக்கு முன்னிருந்த தீர்க்கதரிசிகளையும் அப்படியே துன்பப்படுத்தினார்களே" (மத்தேயு 5:10–12) என்று தொடர்ந்து கூறினார். (22)

இந்த உலகம் பாவத்தை நேசித்து நீதியை வெறுக்கிறது. அதுவே இயேசுவிற்கு எதிரான அதன் பகைமைக்குக் காரணமாக இருந்தது. எல்லையற்ற அவரது அன்பை வெறுக்கும் அனைவரும் கிறிஸ்தவ மார்க்கம் தொந்தரவை உண்டுபண்ணும் மூலக்கூறை உடையதாக இருப்பதைக் காண்பார்கள். அவர்களுடைய பாவங்களை மறைத்துக்கொண்டிருக்கும் இருளை, கிறிஸ்துவின் ஒளி துடைத்து அப்புறப்படுத்தி சீர்திருத்தத்திற்கான அவசியத்தை வெளிக்காட்டுகிறது. பரிசுத்த ஆவியின் செல்வாக்கிற்கு இணங்குபவர்கள் தங்களுக்கு எதிரான யுத்தத்தை ஆரம்பிக்கும்போது, பாவத்தைப் பற்றிக்கொண்டிருப்பவர்கள் சத்தியத்துடனும் அதன் பிரதிநிதிகளுடனும் யுத்தஞ்செய்கின்றனர். (23)

இவ்வாறாக, சச்சரவு உருவாக்கப்பட்டு, கிறிஸ்துவின் அடியார்கள் மக்களுக்கு உபத்திரவத்தை உண்டுபண்ணுபவர்கள் என்று குற்றஞ்சாட்டப் படுகின்றனர். ஆனால் தேவனோடுகொள்ளும் உறவே உலகத்தின் பகைமையைக் கொண்டுவருகிறது. கிறிஸ்துவின்மீதுள்ள நிந்தையை அவர்கள் சுமக்கின்றனர். பூமியில் மிக மேன்மையானவர் நடந்துசென்ற அதே பாதையில் அவர்கள் நடந்துகொண்டிருக்கின்றனர். அவர்களுக்கு உபத்திரவங்கள் நேரிட்டபோதிலும், துயரத்துடனில்லாமல், மகிழ்ச்சியுடன் நடந்துகொண்டிருக்கின்றனர். நெருப்பைப்போன்ற ஒவ்வொரு சோதனையும் அவர்களுக்குத் தங்களைச் சுத்திகரிக்கும் தேவனுடைய கருவியாக உள்ளது. அவருடன் ஊழியக்காரர்களாக இருக்கும்படி ஒவ்வொன்றும் அவர்களுக்குப் பொருத்தமாகிறது. ஒவ்வொரு போராட்டமும் நீதிக்காக உள்ள ஒவ்வொரு பெரும்போரிலுமுள்ள அதன் இடத்தை உடையதாக இருந்து, அதன் இறுதி வெற்றியில் ஒவ்வொன்றும் அவர்களது மகிழ்ச்சியைக் கூட்டுவதாக இருக்கும். இதைக் கருத்தில்கொண்டு, விசுவாசம், பொறுமை ஆகியவைகள்

சம்பந்தமாக ஏற்படும் சோதனைக்குப் பயந்து விலகுவதைவிட அவைகள் மகிழ்ச்சியுடன் ஏற்றுக்கொள்ளப்படும். இந்த உலகத்திற்கான அவர்கள்மீதுள்ள கடமைப்பாடுகளை நிறைவேற்றுவதில் அக்கரையுள்ளவர்களாக இருந்து, தேவனுடைய அங்கீகாரத்தின்மேல் வாஞ்சையாயிருந்து, மனிதர்களால் உண்டாகக்கூடிய பயத்திற்கும் அனுகூலத்திற்கும் மேலாக, அவரது ஊழியக்காரர்கள் தங்களுடைய கடமையை நிறைவேற்றவேண்டியவர்களாக இருக்கின்றனர். (24)

“நீங்கள் உலகத்திற்கு உப்பாக இருக்கிறீர்கள்” என்று இயேசு கூறினார். உபத்திரவத்தைத் தவிர்ப்பதற்காக நீங்கள் உலகத்திலிருந்து பின்வாங்காதீர்கள். உலகத்தை அழிவிலிருந்து பாதுகாக்கும்படி உப்பைப்போல தேவ அன்பின் சாரமாக இருக்கும்படி நீங்கள் மனிதர்களுக்கிடையில் தங்கவேண்டியவர்களாக இருக்கிறீர்கள். (25)

பரிசுத்த ஆவியின் செல்வாக்கிற்கு பதிலளிக்கும் இருதயங்கள் தேவனுடைய ஆசீர்வாதங்கள் பாய்ந்துசெல்லும் வாய்க்கால்களாக உள்ளன. தேவனை சேவிப்பவர்கள் பூமியிலிருந்து நீக்கப்பட்டிருந்தால், மனிதர்களுக்கிடையிலிருந்து அவரது ஆவி பின்னிழுக்கப்பட்டிருந்தால், இந்த உலகம் பாழான நிலைக்கும் அழிவிற்கும் சாத்தானின் ஆளுகையின் பலனுக்கும் விட்டுவிடப்பட்டிருந்திருக்கும். துன்மார்க்கர் தாங்கள் செய்வது என்ன என்பதை அறியாதவர்களாக இருந்தபோதிலும், இந்த உலகில் அனுபவிக்கும் நன்மைக்கு, அவர்கள் நிந்தித்து ஒடுக்கும் தேவனுடைய மக்களின் பிரசன்னமே காரணம். எனவே அதற்கு அவர்கள் கடமைப்பட்டவர்களாக உள்ளனர். ஆனால் கிறிஸ்தவர்கள் என்று பெயரளவில் மட்டும் இருப்பவர்கள் சாரமற்றுப்போன உப்பைப்போன்றவர்களாக உள்ளனர். தேவனைப்பற்றின அவர்களது தவறான பிரதிநிதித்துவத்தின் காரணமாக அவிசுவாசிகளைவிட அவர்கள் மோசமானவர்களாக உள்ளனர். (26)

“நீங்கள் உலகத்திற்கு வெளிச்சமாயிருக்கிறீர்கள்.” இரட்சிப்பின் நன்மைகள் யூத ஜனங்களுக்குள்மட்டும் அடங்கியதாக இருக்கவேண்டும் என்று யூதர்கள் எண்ணியிருந்தனர். ஆனால் இரட்சிப்பு என்பது சூரியவெளிச்சத்தைப் போன்றது என்று கிறிஸ்து அவர்களுக்கு எடுத்துக்காட்டினார். அது உலகம் முழுவதற்கும் சொந்தமானது. வேதாகமத்தின் சமயக்கோட்பாடு ஒரு புத்தகத்தின் இரு அட்டைகளுக்குள் மட்டுமாக, ஒரு சபையின் சுவர்களுக்குள் மட்டுமாக அடக்கிவைக்கப்படக்கூடாததாக இருந்தது. அது நமது சுயநன்மைக்காக எப்போதாவது வெளிக்கொண்டுவரப்பட்டு, அதன்பின் மறுபடியும் கவனமாக ஒரு பக்கத்தில் வைக்கப்படலாகாது. அது நமது அன்றாட வாழ்க்கையைப் பரிசுத்தப்படுத்துவதற்கும் நமது ஒவ்வொரு

தொழிலிலும் கொடுக்கல் வாங்கலிலும் நமது சமுதாய உறவுகள் அனைத்திலும் வெளிக்காட்டப்படவேண்டியதாக உள்ளது. (27)

உண்மையான குணம் என்பது வெளிப்புறத்தில் உருவாக்கப்பட்டு அணிந்துகொள்ளக்கூடியது அல்ல. அது உட்புறத்திலிருந்து வெளியே பரவிச்செல்லுகிறது. நாம் பிறரை நீதியின் பாதையில் திருப்பவிரும்பினால் நீதியின் கொள்கைகள் நமது இருதயங்களில் பொறிக்கப்படவேண்டும். நமது விசுவாச அறிக்கை நமது மதத்தின் தத்துவ விளக்கங்களை அறிவித்துக் கொண்டிருக்கலாம். ஆனால் நமது நடைமுறை பக்திதான் சத்தியவார்த்தையை எடுத்துக்காட்டும். தொடர்ச்சியான அசைவுள்ள வாழ்க்கை, பரிசுத்தமான உரையாடல்கள், வளைந்துகொடுக்காத நேர்மை, தீவிர அனுதாபமிக்க ஆவி, பக்திமிக்க உதாரணம் ஆகிய இந்த இடைக்கருவிகளின் மூலமாகத்தான் உலகத்திற்கு ஒளி எடுத்துச்செல்லப்படுகிறது. (28)

இயேசு கற்பனைகளின் விளக்க விவரங்களைப்பற்றி விவரித்துக் கொண்டிருக்கவில்லை. ஆனால் அவர் பிரமாணத்தின் கோரிக்கைகளை ஒருபுறமாக நீக்கிவைக்க வந்திருந்தார் என்று அவரது பிரசங்கத்தைக் கேட்டிருந்தவர்கள் முடிவுக்கு வரும்படி அவர் விட்டுவிடவில்லை. தங்களுடைய நோக்கத்தை நிறைவேற்றிக்கொள்ளும் கருத்தாக அவரது வார்த்தை ஒவ்வொன்றையும் பிடித்துக்கொள்ள ஒற்றர்கள் ஆயத்தமாக நின்றிருந்ததை அவர் அறிந்திருந்தார். அவரது உரையைக் கேட்டிருந்தவர்களில் அநேகரின் உள்ளங்களில் இருந்த தவறான எண்ணங்களை அவர் அறிந்திருந்தார். மோசேயின்மூலமாக அவர்களிடம் ஒப்படைக்கப்பட்டிருந்த மதத்தின்பேரிலும் அமைப்புக்களின் பேரிலும் அவர்களுக்கிருந்த விசுவாசத்தை அசைக்கக்கூடிய எதையும் அவர் பேசவில்லை. சன்மார்க்கப் பிரமாணங்களையும் சடங்காச்சாரப் பிரமாணங்களையும் கிறிஸ்துதாமே கொடுத்திருந்தார். அவரது சொந்த போதனையின்மீதிருந்த நம்பிக்கையை அழிப்பதற்காக அவர் வரவில்லை. பிரமாணத்தின்மீதும் தீர்க்கதரிசிகளின்மீதும் அவர் வைத்திருந்த பெரும் பக்தியின் காரணமாகத்தான் யூதர்களைச்சுற்றி அடக்கிக்கொள்ளப்பட்டிருந்த பாரம்பரியத்தினாலுண்டான கோரிக்கைகள் என்னப்படும் சுவரைத் தகர்க்க அவர் வகைதேடியிருந்தார் பிரமாணத்தைப்பற்றின அவர்களது தவறான விளக்கங்களை அவர் ஒருபுறமாக ஒதுக்கிவைத்த அதே நேரத்தில், எபிரெயர்களிடம் ஒப்படைக்கப்பட்டிருந்த ஜீவாதாரமான சத்தியங்களை விட்டுவிடுவதற்கு எதிராக அவர் தமது சீடர்களை கவனத்துடன் பாதுகாத்திருந்தார். (29)

பரிசேயர்கள் பிரமாணத்தின்பாலிருந்த தங்களது கீழ்ப்படிதலைப்பற்றித் தங்களுக்குள் பெருமைப்பட்டுக்கொண்டிருந்தனர். இருந்தபோதிலும் அன்றாட

வாழ்க்கையின் நடைமுறையில் அதன் கொள்கைளைப்பற்றி அவர்கள் அறியாதவர்களாக இருந்ததினால், இரட்சகரின் வார்த்தைகள் அவர்களுக்கு மதப்புரட்டுபோல் தொனித்தது. சத்தியத்தை மூடிமறைத்திருந்த குப்பைகளை அவர் துடைத்து நீக்கியபோது, அவர் சத்தியத்தையே துடைத்து நீக்குவதாக அவர்கள் நினைத்தனர். அவர் பிரமாணத்தை முக்கியமற்றதாக ஆக்குகிறார் என்று அவர்கள் ஒருவருக்கொருவர் இரகசியமாகப் பேசிக்கொண்டனர். அவர் அவர்களது எண்ணங்களை அறிந்து: “நியாயப்பிரமாணத்தையானாலும் தீர்க்கதரிசனங்களையானாலும் அழிக்கிறதற்கு வந்தேன் என்று எண்ணிக்கொள்ளாதேயுங்கள்; அழிக்கிறதற்கு அல்ல, நிறைவேற்றுகிறதற்கே வந்தேன்” (மத்தேயு 5:17) என்று பதில் கூறினார். இங்கு இயேசு பரிசேயர்களின் குற்றச்சாட்டை மறுக்கிறார். நியாயப்பிரமாணத்தை அவர் மீறுகிறார் என்று அவர்கள் குற்றஞ்சாட்டிக்கொண்டிருக்கும் அதேவேளையில், நியாயப்பிரமாணத்தின் பரிசுத்தமான உரிமைகளை நியாயப்படுத்துவதே இந்த உலகத்திற்கு அவர் செய்யும் ஊழியமாக உள்ளது. தேவனுடைய கற்பனை மாற்றப்பட்டிருந்தால் அல்லது சட்டரீதியாக நீக்கப்பட்டிருந்தால், நியாயப்பிரமாணத்தின் நமது மீறுதலுக்கான பலனான பாடுகளை கிறிஸ்து அனுபவித்திருந்திருக்கவேண்டிய அவசியம் உண்டாகியிருந்திருக்காது. மனிதனுக்கும் நியாயப்பிரமாணத்திற்குமுள்ள உறவினை விளக்கவும், தமது கீழ்ப்படிதல்மிக்க வாழ்க்கையினால் அதன் தன்மையைச் சித்திரித்துக்காட்டவும் அவர் வந்தார். (30)

தேவன் மனித இனத்தை நேசிப்பதினால் அவரது பரிசுத்தமான கற்பனைகளை அவர்களுக்குக் கொடுத்திருக்கிறார். மீறுதலின் பலனிலிருந்து நம்மை மறைத்துக் காப்பதற்காக நீதியின் கொள்கைகளை அவர் வெளிப்படுத்துகிறார். தேவனுடைய எண்ணத்தின் வெளிக்காட்டலாகக் கற்பனை இருக்கிறது. கிறிஸ்துவிற்குள்ளாக அதைப் பெறும்போது, அது நமது எண்ணமாகிறது. இயல்பான ஆசைகளிலும் பழக்கங்களிலுமுள்ள வல்லமைக்கும்மேலாக அது நம்மை உயர்த்தி, பாவத்திற்கு வழிநடத்தும் சோதனைக்கும்மேலாக நம்மை மேம்படுத்துகிறது. நாம் சந்தோஷமாக இருக்கவேண்டுமென்று தேவன் விரும்புகிறார். அவரது கற்பனைகளுக்குக் கீழ்ப்படிவதினால் நாம் சந்தோஷத்தைப் பெற்றுக்கொள்ளும்படி அவர் தமது கற்பனைகளைக் கொடுத்தார். இயேசுவின் பிறப்பின்பொழுது தூதர்கள்: “உன்னதத்திலிருக்கிற தேவனுக்கு மகிமையும், பூமியிலே சமாதானமும், மனுஷர்மேல் பிரியமும் உண்டாவதாக” (லூக்கா 2:14) என்று பாடி அவர் முக்கியப்படுத்தி மகிமையுள்ளதாக்கும்படி வந்திருந்த கற்பனையின் கொள்கைகளை அவர்கள் அறிவித்தார்கள். (31)

சீனாய் மலையின்மீதிருந்து கற்பனைகள் அறிவிக்கப்பட்டபோது, மனிதர்கள் தங்களுடைய சொந்த பாவத்தன்மையை அவரது பரிசுத்தமான குணத்துடன் ஒப்பிட்டுப்பார்க்கும்படி வெளிப்படுத்தினார். பாவத்தைப்பற்றிய மன உணர்த்துதலை உண்டுபண்ணவும், அவர்களுக்கு ஒரு இரட்சகர் அவசியம் என்பதை வெளிக்காட்டவும் கற்பனை கொடுக்கப்பட்டது. பரிசுத்த ஆவியானவரால் அதன் கொள்கைகள் இதயத்திலே செயல்படுத்தப்படும்போது, அது இக்காரியத்தை நடப்பிக்கும். அது இன்னும் செயல்படுத்தப்படவேண்டிய ஒரு பணியாக உள்ளது. கிறிஸ்துவின் வாழ்க்கையில் கற்பனையின் கொள்கைகள் தெளிவாக்கப்பட்டுள்ளன. எப்படியெனில்: பரிசுத்த ஆவியானவர் இருதயத்தைத் தொடும்போதும், சுத்திகரிக்கும் கிறிஸ்துவின் இரத்தமும், நீதிமானாக்கும் அவரது நீதியும் தங்களுக்கு அவசியம் என்பதை கிறிஸ்துவின் ஒளி மனிதர்களுக்கு வெளிக்காட்டும்போதும், விசுவாசத்தினால் நாம் நீதிமான்களாக்கப்படும்படி நம்மைக் கிறிஸ்துவிடம் இன்னும் நெருக்கமாகக் கொண்டுவரும் ஒரு உபாத்தியாகவே கற்பனை இருக்கிறது. "கர்த்தருடைய வேதம் குறைவற்றதும், ஆத்துமாவை உயிர்ப்பிக்கிறதுமாயிருக்கிறது"– சங்கீதம் 19:7. (32)

"வானமும் பூமியும் ஒழிந்துபோனாலும் நியாயப்பிரமாணத்தி லுள்ளதெல்லாம் நிறைவேறுமளவும், அதில் ஒரு சிறு எழுத்தாகிலும், ஒரு எழுத்தின் உறுப்பாகிலும் ஒழிந்துபோகாது" என்று இயேசு கூறினார். அவரது கற்பனைகள் மாறாதவையும் நித்தியமானவையாகவும் உள்ளன என்பதற்கு வானத்தில் ஒளிவீசிக்கொண்டிருக்கும் சூரியனும், நீங்கள் வாழ்ந்துகொண்டிருக்கும் திடமான பூமியும் சாட்சி. அவைகள் ஒழிந்துபோனாலுங்கூட தெய்வீகப் பிரமாணங்கள் நிலைத்துநிற்கும். "வேதத்தில் ஒரு எழுத்தின் உறுப்பு அவமாய்ப் போவதைப்பார்க்கிலும், வானமும் பூமியும் ஒழிந்துபோவது எளிதாயிருக்கும்"–லூக்கா 16:17. கிறிஸ்துவை தேவ ஆட்டுக்குட்டியாகச் சுட்டிக்காட்டியிருந்த சாயலான முறைகள் அவரது மரணத்தின்போது நீக்கப்படவேண்டியவையாக இருந்தன. ஆனால் நியாயப்பிரமாணத்திலுள்ள பத்துக்கற்பனைகள் தேவ சிங்காசனத்தைப்போல என்றைக்கும் மாறாதவையாக உள்ளன. (33)

கர்த்தருடைய வேதம் குறைவற்றதாக இருப்பதினால், அதிலிருந்து படிப்படியாக உண்டாகக்கூடிய ஒவ்வொரு மாறுபாடும் தீமையாகவே இருக்கும். தேவனுடைய கற்பனைகளுக்குக் கீழ்ப்படியாதவர்களாக இருந்து அப்படிச்செய்யும்படி மற்றவர்களுக்குப் போதிப்பவர்கள் கிறிஸ்துவினால் கண்டனஞ்செய்யப்படுகின்றனர். இரட்சகரின் கீழ்ப்படிதலுள்ள வாழ்க்கை கற்பனையின் உரிமைகளை நடப்பித்திருந்தது. மானுடத்தினால் தேவப்

பிரமாணங்களைக் கைக்கொள்ளமுடியும் என்பதை அது மெய்ப்பித்து, கீழ்ப்படிதலினால் உண்டாகும் பண்பின் மேன்மையை காட்டியது. அவர் செய்ததுபோல, கற்பனைக்குக் கீழ்ப்படியும் அனைவரும், “கற்பனை பரிசுத்தமாயும் நீதியாயும் நன்மையாயும் இருக்கிறது” (ரோமர் 7:12) என்பதை அறிவிக்கின்றனர். அப்படியில்லாமல், மறுபக்கத்தில் தேவனுடைய பிரமாணங்களை மீறும் அனைவரும், கற்பனை அநீதியானது கீழ்ப்படிய முடியாதது என்னும் சாத்தானின் உரிமைபாராட்டலைத் தாங்குகின்றனர். இவ்விதமாக மாபெரும் எதிராளியின் வஞ்சகத்திற்கு அவர்கள் வழிமொழிந்து தேவனை கனவீனப்படுத்துகின்றனர். அவர்கள் தேவப்பிரமாணத்திற்கு எதிரான முதல் கலகக்காரனாயிருந்த தீயவனின் பிள்ளைகளாக இருக்கின்றனர். அவர்களைப் பரலோகத்தில் அனுமதிக்கும் காரியம், அதிருப்தி, கலகஞ்செய்தல் ஆகியவைகளின் மூலக்கூறுகளை மறுபடியும் கொண்டுவந்து, பிரபஞ்சத்தின் ஆரோக்கியமான நிலைமையை மீண்டும் அபாயத்திற்குள்ளாக்கிவிடும். கற்பனையின் கொள்கையில் ஒன்றை துணிகரமாகப் புறக்கணிக்கும் ஒருவன்கூட பரலோக இராஜ்யத்தில் பிரவேசிக்கமாட்டான். (34)

ரபிமார்கள் அவர்களது நீதியைப் பரலோகத்திற்குச் செல்லும் அனுமதிச்சீட்டாக எண்ணியிருந்தனர். ஆனால் அது போதுமானதுமல்ல, மதிப்புள்ளதுமல்ல என்று இயேசு அறிவித்தார். புறம்பான சடங்காச்சாரங்களும் சத்தியத்தைப்பற்றின தத்துவ விளக்க அறிவும்தான் பரிசேயர்களின் நீதியை ஏற்படுத்தியிருந்தது. கற்பனையைக் கைக்கொள்ளும் ரபிமார்களின் சொந்த முயற்சியின்மூலமாக அவர்கள் பரிசுத்தமானவர்களாக இருப்பதாக உரிமைபாராட்டியிருந்தனர். ஆனால் அவர்களது கிரியைகள் நீதியை மதத்திலிருந்து விலக்கியிருந்தது. சடங்காச்சாரங்களைக் கடைப்பிடிப்பதில் அவர்கள் ஆசார நுணுக்கமிக்கவர்களாக இருந்தபோது, அவர்களது வாழ்க்கைகள் சன்மார்க்கமற்றவையாகவும் கீழ்த்தரமானவையாகவும் இருந்தன. அவர்களால் பெயரளவில் அவ்விதமாக அழைக்கப்பட்டிருந்த நீதியானது ஒருபோதும் பரலோகத்திற்கு நுழையுரிமையைப் பெற்றுக்கொள்ளாது. (35)

கிறிஸ்துவின் நாட்களில் மனித உள்ளங்களில் இருந்த மிகப்பெரும் வஞ்சம் என்னவெனில்: சத்தியத்தைப் பெயரளவில் ஒப்புக்கொள்ளுவது நீதியை ஏற்படுத்துகிறது என்பதுதான். மனித அனுபவங்கள் அனைத்திலும் சத்தியத்தைப்பற்றிய தத்துவ விளக்க அறிவு ஆத்துமாவை இரட்சிப்பதற்குப் போதுமானதல்ல என்பது மெய்ப்பிக்கப்பட்டுள்ளது. அது நீதியின் கனிகளைப் பிறப்பிப்பதில்லை. சத்தியம் பற்றின தத்துவ விளக்கம்

என்று கூறப்படுவதன்மீதுள்ள வைராக்கியமான சார்புடன் வாழ்க்கையில் வெளிக்காட்டப்படும் உண்மையான சத்தியத்தின்மீதுள்ள வெறுப்பு தொடர்கிறது. மதவிரோதமிக்க மதவாதிகளால் செய்யப்பட்ட குற்றங்களின் ஆவணங்களில் வரலாற்றின் இருண்ட அத்தியாயங்கள் நிறைந்து கனத்துக்கிடக்கின்றன. பரிசேயர்கள் தங்களை ஆபிரகாமின் சந்ததியினர் என்று பெருமைபாராட்டியிருந்தனர். அப்படியிருந்தும் இந்த அனுகூலங்கள், சுயநலம், தீய எண்ணங்கள், ஆதாயத்தின்மீதுள்ள பேராசை, மிகக்கீழ்த்தரமான மாய்மாலம் ஆகியவைகளிலிருந்து அவர்களைப் பாதுகாக்கவில்லை. அவர்கள் தங்களை உலகத்தின் மிகப்பெரிய மதவாதிகள் என எண்ணியிருந்தனர். ஆனால் அப்படிக் கூறப்பட்டிருந்த அவர்களது பழமை மதவாதம்தான் மகிமையின் கர்த்தரைச் சிலுவையில் அடிப்பதற்கு வழிநடத்தியது. அதே விதமான ஆபத்து இப்பொழுதும் உள்ளது. குறிப்பிட்ட மதக்கோட்பாட்டிற்கு அங்கத்தினர்களாக இருப்பதினால் அநேகர் தங்களைக் கிறிஸ்தவர்கள் என்று கூறிக்கொள்ளுகின்றனர். ஆனால் நடைமுறை வாழ்க்கையில் அப்படிப்பட்டவர்கள் சத்தியத்தைக் கொண்டுவரவில்லை. அவர்கள் அதை நம்பவும் நேசிக்கவும் இல்லை. எனவே, அவர்கள் சத்தியத்தின்மூலமாக உண்டாகக்கூடிய பரிசுத்தமாக்கப்படுதலினால் வரக்கூடிய வல்லமையையும் கிருபையையும் பெற்றுக்கொள்ளாமலிருக்கின்றனர். சத்தியத்தின்மீதுள்ள விசுவாசத்தை மனிதர்கள் அறிக்கை செய்யலாம். ஆனால் அது அவர்களை உண்மைமிக்க, அன்புமிக்க, பொறுமைமிக்க, தாங்கிக்கொள்ளக்கூடிய பரலோக எண்ணங்களை உடையதாகச் செய்யாவிட்டால், அதை உடையவர் களுக்கு அது ஒரு சாபமாக இருந்து, அவர்களது செல்வாக்கின்மூலமாக உலகத்திற்கும் சாபமாகிறது. (36)

வெளிப்படுத்தப்பட்ட தேவ சித்தத்திற்கு இசைவான இருதயத்தையும் வாழ்க்கையையும் உடையதாக இருப்பதுதான் கிறிஸ்து போதித்த நீதியாகும். பாவமான மனிதர்கள் தேவனில் விசுவாசம் வைக்கும்போதுமட்டுமே நீதிமான்களாகி அவருடன் உயிரோட்டமான தொடர்பை உடையவர்களாக முடியும். அப்பொழுது உண்மையான தெய்வபக்தி எண்ணங்களை உயர்த்தி, வாழ்க்கையை மேன்மையானதாக்கும். அப்பொழுது மதத்தின் புறத்தோற்றமான காரியங்கள் கிறிஸ்தவனின் உள்ளார்ந்த தூய்மைக்கு இசைவுள்ளதாக இருக்கும். அப்பொழுது தேவனுடைய ஆராதனைக்கு அவசியமான சடங்காச்சாரங்கள் மாயக்காரர்களாகிய பரிசேயர்களின் அர்த்தமற்ற சடங்காச்சாரங்களைப் போன்றவையாக இராது. (37)

இயேசு நியாயப்பிரமாணங்களைப் பிரித்தெடுத்து, அவைகளின் அவசியத்தின் ஆழத்தையும் அகலத்தையும் விளக்குகிறார். அவைகளின்

எழுத்திலுள்ள ஒரு புள்ளியின் வலிமையை நீக்குவதற்குப்பதிலாக அவைகளின் கொள்கைகள் எவ்வளவு தூரம் எட்டக்கூடியவையாக இருக்கின்றன என்பதை அவர் காட்டி, யூதர்களின் புறம்பான கீழ்ப்படிதலிலுள்ள சாவிற்கேதுவான தவறை வெளிக்காட்டுகிறார். தீய எண்ணத்தினாலும் அல்லது இச்சையுடனுள்ள பார்வையினாலும் தேவப்பிரமாணம் மீறப்படுகிறது என்று அவர் அறிவிக்கிறார். மிகக் குறைவான அநீதியில் பங்குபெறும் ஒருவன், நியாயப்பிரமாணத்தை மீறி தனது சுயசன்மார்க்க இயல்பைக் கீழானதாக்குகிறான். கொலை செய்யவேண்டும் என்ற எண்ணம் முதலில் மனதில் உண்டாகிறது. வெறுப்பிற்குத் தனது இதயத்தில் இடங்கொடுக்கும் ஒருவன், தனது கால்களைக் கொலைசெய்யும் பாதையில் வைக்கிறான். அவனது காணிக்கைகள் தேவனுக்கு அருவருப்பாக உள்ளது. (38)

திருப்பித் தாக்கும் ஆவியை யூதர்கள் வளர்த்துக்கொண்டிருந்தார்கள். ரோமர்களின்மீதுள்ள அவர்களது வெறுப்பில் அவர்கள் கடினமாக வெளிப்படையான குற்றச்சாட்டுகளைக் கூறி, துன்மார்க்கனின் குணத்தைப் புகழ்ந்துகாட்டி அவனைப் பிரியப்படுத்தியிருந்தனர். இவ்விதமாக அவர்களைச் செய்யும்படி அவன் நடத்தியிருந்த பயங்கரமான செயல்களைச் செய்வதற்கு அவர்கள் தங்களுக்குத் தாங்களே பயிற்சிகொடுத்துக்கொண்டிருந்தனர்.புறஜாதியினருக்கு கடவுட்பற்றைப்பற்றி எடுத்தக்கூறும் அளவிற்கு பரிசேயர்களுடைய மார்க்க சம்பந்தமான வாழ்க்கையில் எதுவும் காணப்படவில்லை. யூதர்கள் தங்களை ஒடுக்குபவர்களுக்கு எதிராக எழவேண்டும் என்ற எண்ணத்தை இருதயத்தில் கொண்டிருந்து, பழிவாங்கவேண்டும் என்ற அவர்களுடைய தவறைப் பேணி வளர்க்கும் ஏக்கமுடையவர்களாக இருந்து, தங்களைத் தாங்களே வஞ்சித்துக்கொள்ளவேண்டாம் என இயேசு அவர்களை அழைத்தார். (39)

கிறிஸ்துவின் அடியார்களிடமுங்கூட நியாயப்படுத்தக்கூடிய ஒரு கோபம் இருக்கிறது என்பது உண்மைதான். தேவன் கனவீனப்படுத்தப்படுவதையும் அவருக்குச் செலுத்தும் ஆராதனை இகழப்படுவதையும் அவர்கள் காணும்போது, குற்றமற்றவர்கள் ஒடுக்கப் படுவதை அவர்கள் பார்க்கும்போது, நியாயமான ஒரு கோபம் அவர்களது ஆத்துமாவைக் கலக்குகிறது. சன்மார்க்க உணர்வில் பிறக்கும் அப்படிப்பட்ட கோபம் ஒரு பாவமல்ல. ஆனால் கோபமூட்டப்படும்போது கோபத்தை நடப்பிப்பதற்கும் கோபத்தை வெளிக்காட்டுவதற்கும் சுதந்திரம் உண்டு என்று உணருபவர்கள் தங்கள் இருதயங்களை சாத்தானுக்குத் திறக்கின்றனர். பரலோகத்துடன் இசைந்தவர்களாக நாம் இருக்கவேண்டுமானால் கசப்பும் விரோதமும் ஆத்துமாவிலிருந்து விரட்டப்படவேண்டும். (40)

இரட்சகர் இதைவிட அதிகதூரம் செல்லுகிறார். "நீ பலிபீடத்தினிடத்தில் உன் காணிக்கையைச் செலுத்த வந்து, உன்பேரில் உன் சகோதரனுக்குக் குறைஉண்டென்று அங்கே நினைவுகூருவாயாகில், அங்கேதானே பலிபீடத்தின் முன் உன் காணிக்கையை வைத்துவிட்டுப்போய், முன்பு உன் சகோதரனோடே ஒப்புரவாகி, பின்பு வந்து உன் காணிக்கையைச் செலுத்து." ஒவ்வொருவரும் தங்களது சகோதரர்களுக்கிடையில் ஒப்புரவாக்கப்படவேண்டிய சந்தோஷ மில்லாத வேற்றுமைகள் இருக்கும்போது, அநேக சமயச்சடங்குகளில் மிகுந்த வைராக்கியமுடையவர்களாக இருக்கின்றனர். சமாதானத்தை மீண்டும் ஏற்படுத்துவதற்காக, அவர்களுடைய வல்லமையில் உள்ள அனைத்தையும் செய்யவேண்டுமென்று தேவன் வேண்டுகிறார். அவர்கள் அதைச் செய்யாதவரை அவர்களுடைய ஆராதனையை அவரால் அங்கீகரிக்க முடியாது. இந்தக் காரியத்தில் ஒரு கிறிஸ்தவனின் கடமை தெளிவாகச் சுட்டிக்காட்டப்பட்டுள்ளது. (41)

அவர் தமது ஆசீர்வாதங்களை அனைவர்மீதும் பொழிகிறார். "அவர் தீயோர் மேலும் நல்லோர்மேலும் தமது சூரியனை உதிக்கப்பண்ணி, நீதியுள்ளவர்கள்மேலும் அநீதியுள்ளவர்கள்மேலும் மழையைப் பெய்யப் பண்ணுகிறார்"—மத்தேயு 5:45. "அவர் நன்றியறியாதவர்களுக்கும் துரோகி களுக்கும் நன்மை செய்கிறாரே"—லூக்கா 6:35. நாம் அவரைப்போலாக வேண்டும் என்று அவர் நம்மை அழைக்கிறார். "உங்கள் சத்துருக்களைச் சிநேகியுங்கள்; உங்களைச் சபிக்கிறவர்களை ஆசீர்வதியுங்கள்; உங்களைப் பகைக்கிறவர்களுக்கு நன்மை செய்யுங்கள்; ... இப்படிச் செய்வதினால் நீங்கள் பரலோகத்திலிருக்கிற உங்கள் பிதாவுக்குப் புத்திரராயிருப்பீர்கள்; இவைகள்தான் கற்பனையின் கொள்கைகளாக இருக்கின்றன. இவைகளே ஜீவ ஊற்றுகளுமாகும். (42)

தேவன் தமது பிள்ளைகளுக்காக வைத்திருக்கும் குறிக்கோள் மனித சிந்தனை எட்டும் உயரத்தைவிட உயர்ந்ததாகும். ஆகையால் "பரலோகத்திலிருக்கிற உங்கள் பிதா பூரண சற்குணராயிருக்கிறதுபோல, நீங்களும் பூரண சற்குணராயிருக்கக்கடவீர்கள்" என்கிற இந்தக் கட்டளை ஒரு வாக்குத்தத்தமாக உள்ளது. சாத்தானின் வல்லமையிலிருந்து நாம் பூரணமாக விடுதலையடையவேண்டும் என்பதே இரட்சிப்பின் திட்டத்தின் ஆழ்ந்த கருத்தாயிருக்கிறது. பாவத்தை எண்ணி நொறுங்குண்ட இதயத்தையுடைய ஆத்துமாவைக் கிறிஸ்து எப்பொழுதும் பாவத்திலிருந்து பிரிக்கிறார். பிசாசின் கிரியைகளை அழிப்பதற்கு அவர் வந்தார். பாவத்திற்காக மனம்வருந்தும் ஒவ்வொரு ஆத்துமாவும் பாவஞ்செய்யாதபடி காக்கப்படும்பொருட்டு, பரிசுத்த ஆவி கொடுக்கப்பட அவர் முன்னேற்பாடு செய்திருக்கிறார். (43)

தவறான எந்த ஒரு செயலிற்கும் சோதனைக்காரனின் பிரதிநிதியைக் காரணமாக வைத்து சாக்குப்போக்குச் சொல்லப்படக்கூடாது. கிறிஸ்துவின் அடியார்கள் என்று கூறிக்கொள்ளுபவர்கள் தங்களுடைய குணத்தின் குறைபாட்டிற்கு சாக்குப்போக்குகளைக் கூறுவதைக் கேட்கும்போது, சாத்தான் வெற்றிமுழக்கமிடுகிறான். இந்தச் சாக்குப்போக்குகள்தான் பாவத்திற்கு நடத்துகின்றன. பாவத்திற்குச் சாக்குப்போக்கு இல்லை. பாவத்திற்காக மனம்வருந்தும் தேவனில் நம்பிக்கைவைக்கும் ஒவ்வொரு பிள்ளைக்கும் பரிசுத்தமான ஒரு குணத்திற்கும் கிறிஸ்துவைப்போன்ற ஒரு வாழ்க்கைக்கும் பாதை உள்ளது. (44)

கிறிஸ்தவப் பண்பின் இலட்சியம் என்பது கிறிஸ்துவைப்போல் இருப்பதாகும். மனிதகுமாரன் அவரது வாழ்க்கையில் பூரண சற்குணராக இருந்ததுபோல, அவரது அடியார்களும் தங்களுடைய வாழ்க்கையில் பூரண சற்குணர்களாக இருந்தாகவேண்டும். இயேசு எல்லாவகையிலும் அவருடைய சகோதரரைப்போலவே உருவாக்கப்பட்டிருந்தார். நம்மைப்போலவே அவர் மாம்சத்தை உடையவரானார். அவர் பசியுள்ளவராகவும் தாகமுள்ளவ ராகவும் களைப்புற்றவராகவும் இருந்தார். அவர் உணவினால் போஷிக்கப்பட்டு, நித்திரையால் புத்துணர்வடைந்திருந்தார். மனிதனின் பாடுகளில் அவர் பங்குபெற்றிருந்தார். அப்படியிருந்தபோதிலும், குற்றமில்லாத தேவகுமாரனாக இருந்தார். அவர் மாம்சத்தில் தோன்றிய தேவனாக இருந்தார். அவரது குணம் நமது குணமாக இருக்கவேண்டும். “நான் அவர்களுக்குள்ளே வாசம்பண்ணி, அவர்களுக்குள்ளே உலாவி, அவர்கள் தேவனாயிருப்பேன், அவர்கள் என் ஜனங்களாயிருப்பார்கள்” (2 கொரிந்தியர் 6:16) என்று கர்த்தர் அவரை நம்புகிறவர்களிடம் கூறுகிறார். (45)

யாக்கோபு ஒரு ஏணியைக் கண்டான். அதன் அடிப்பகுதி பூமியின் மீதிருந்தது. அதன் மேல்நுனி மகிமைமிக்க பரலோக வாசலில் இருந்தது. அந்த ஏணி கிறிஸ்துவே. பூமியை அடைவதற்கு அந்த ஏணி, ஒரு படிக்கட்டு குறைவுள்ளதாக இருந்திருந்தால், நாம் இழந்துபோயிருந்திருப்போம். ஆனால் நாம் எந்த இடத்தில் இருக்கிறோமோ, அந்த இடத்தை இயேசு அடைகிறார். நாம் அவருடைய தன்மையை எடுத்துக்கொண்டு மேற்கொள்ளும்படியாக, அவர் நமது தன்மையை எடுத்துக்கொண்டார். “பாவ மாம்சத்தின் சாயலானார்”—ரோமர் 8:3. பாவமற்ற ஒரு வாழ்க்கையை அவர் வாழ்ந்தார். இப்பொழுது அவரது தெய்வீகத்தினால் பரலோகத்தைப் பற்றிப்பிடித்துக்கொண்டு, மானுடத்தினால் நம்மை எட்டிப்பிடிக்கிறார். அவர் மீது விசுவாசம் வைத்து, தேவ குணத்தின் மகிமையை நாம் முயன்று பெற்றுக்கொள்ள அவர் நம்மை அழைக்கிறார். எனவே பரலோகத்திலிருக்கும்

நமது பிதா பூரண சற்குணராயிருக்கிறதுபோல, நாமும் பூரண சற்குணர்களாக இருக்கவேண்டியவர்களாக இருக்கிறோம். (46)

நீதியில் என்ன அடங்கியிருக்கிறது என்பதை இயேசு காட்டி, அதற்கு ஆதாரம் தேவன்தான் என்பதைச் சுட்டிக்காட்டினார். இப்பொழுது அவர் நடைமுறையிலுள்ள கடமைகளுக்குத் திரும்பினார். தர்மங்கொடுப்பதிலும் ஜெபத்திலும் உபவாசத்திலும் மனிதர்களின் கவனத்தைக் கவரவும், சுயம் புகழப்படவுங்கூடிய எதையும் செய்யவேண்டாம் என்று அவர் கூறினார். துன்பப்படும் ஏழைக்கு நன்மை உண்டாக நேர்மையுடன் கொடுங்கள். ஜெபத்தில் ஆத்துமா தேவனுடன் தொடர்புகொள்ளட்டும். உபவாசம் செய்யும்போது தலையைத் தொங்கப்போட்டுக்கொண்டு, இருதயம் சுயத்தின் எண்ணங்களால் நிறைந்திருக்கவும் வேண்டாம். பரிசேயர்களின் இதயம், தெய்வீக விதைகள் எதுவும் முளைக்கமுடியாத பலன்தராக தரிசுநிலமாக உள்ளது. தேவனால் ஏற்றுக்கொள்ளக்கூடிய விதத்தில் அவருக்கென்று ஊழியஞ்செய்பவன் தனக்கென்று எதையும் தனிப்படுத்திவைக்காமல் அனைத்தையும் அவரிடம் ஒப்படைப்பவனாக இருப்பான். ஏனெனில் தேவனுடனுள்ள ஐக்கியத்தின்மூலமாக, தேவனுடைய குணத்தை மனிதர்களுக்கு முன்வைப்பதினால் மனிதர்கள் தேவனுடன் சேர்ந்து பணியாற்றுபவர்களாகின்றனர். (47)

உண்மையான இருதயத்துடன் செய்யப்பட்ட ஊழியத்திற்கு பெரும் பிரதிபலன் கிடைக்கவிருக்கிறது. “அந்தரங்கத்தில் பார்க்கிற உன் பிதா தாமே உனக்கு வெளியரங்கமாய்ப் பலனளிப்பார்.” கிறிஸ்துவின் கிருபையினால் நாம் நடத்தும் வாழ்க்கையில்தான் நமது குணம் அமைகிறது.ஆத்துமாவிற்கு அதன் ஆதியிலிருந்த அழகு மீண்டும் வழங்கப்படுகிறது. கிறிஸ்துவின் பண்பு வழங்கப்பட்டு, தெய்வீக ரூபம் வெளியில் ஒளிவீசத்தொடங்குகிறது. ஆண்கள், பெண்கள் ஆகியோரின் முகங்கள் பரலோகத்தின் சமாதானத்தை வெளிக்காட்டுகின்றது. அவர்கள் பரலோகச் சூழ்நிலையால் சூழப்பட்டுள்ளனர். ஏனெனில் இந்த ஆத்துமாக்களிடம் தேவனுடைய இராஜ்யம் ஆரம்பமாகி இருக்கிறது. மனித இனத்திற்கு மகிழ்ச்சியைக் கொண்டுவரும் கிறிஸ்துவின் மகிழ்ச்சியை அவர்கள் கொண்டுள்ளனர். எஜமானனின் உபயோகத்திற்கு அங்கீகரிக்கப்பட்ட மேன்மையை உடையவர்களாக அவர்கள் உள்ளனர். அவரது நாமத்தினால் அவரது ஊழியத்தைச் செய்ய அவர்களுக்கு பொறுப்புகள் வழங்கப்பட்டுள்ளன. (48)

“இரண்டு எஜமான்களுக்கு ஊழியஞ் செய்ய ஒருவனாலும் கூடாது;” பிரிவினை உள்ள ஒரு இருதயத்துடன் (அரைமனதுடன்) நம்மால் தேவனுக்கு ஊழியஞ்செய்யமுடியாது. மற்ற அநேகருக்கு மத்தியில் ஒரு செல்வாக்கை

உடையதாக வேதாகம கோட்பாடு இருப்பதில்லை. அதன் செல்வாக்கை மற்றவர்களிடம் பரப்பி, மற்ற ஒவ்வொருவரையும் கட்டுப்படுத்தும் மிக மேலானதாக இருக்கவேண்டியதாக உள்ளது. அது ஒரு திரைச்சீலையின்மீது அங்குமிங்குமாகத் தெளிக்கப்பட்ட வர்ணம்போன்றதாக இருக்கக்கூடாமல், அந்தத் துணியின் ஒவ்வொரு நூலிழையும் மங்காத நிறத்தை உடையதாக இருக்கும்படி, ஆழமாக வர்ணத்திற்குள் அமிழ்த்தப்பட்டதுபோல வாழ்க்கை முழுவதிலும் பரவவேண்டியதாக உள்ளது. (49)

"உன் கண் தெளிவாயிருந்தால், உன் சரீரம் முழுவதும் வெளிச்சமாயிருக்கும். உன் கண் கெட்டதாயிருந்தால், உன் சரீரம் முழுவதும் இருளாயிருக்கும்;" தேவனிடத்திலிருந்து ஒளியைப் பெற்றுக்கொள்ளுவதற்கு காரியத்தின்மீதுள்ள தூய்மையும் உறுதியுந்தான் நிபந்தனையாயிருக்கிறது. சத்தியத்தை அறிந்துகொள்ள வாஞ்சிக்கும் ஒருவன், அது வெளிப் படுத்தும் அனைத்தையும் பெற்றுக்கொள்ளும் விருப்பதோடு இருக்கவேண்டும். அவனால் தவறுடன் சமரசஞ்செய்யமுடியாது. சத்தியத்துடன் உறவுகொண்டிருப்பதில் தடுமாறக்கூடியவனாகவும், அரை மனம் உள்ளவனாகவும் இருப்பது, தவறின் இருளையும் சாத்தானின் மாயத் தோற்றத்தையும் தெரிந்துகொள்ளுவதாக இருக்கும். (50)

உலகக் கொள்கையின் பாதையும், தவறாத நீதியின் கொள்கைகளும் வானவில்லின் நிறத்தைப்போல வெளியில் உணர முடியாதவிதத்தில் ஒன்று கலப்பதில்லை. இவை இரண்டிற்கும் இடையில் மிக அகலமானதும் தெளிவானதுமான ஒரு கோடு நித்தியமான தேவனால் வரையப்பட்டுள்ளது. நடுப்பகல், நடு இரவு இரண்டிற்கும் உள்ள வேற்றுமை நன்கு காணப்படுவதுபோல, கிறிஸ்துவைப்போன்ற தன்மை சாத்தானின் தன்மையிலிருந்து தெளிவாக வேறுபட்டதாக உள்ளது. கிறிஸ்துவின் வாழ்க்கையை வாழ்ந்துகாட்டுபவர்கள் மட்டுமே அவரது உடன் ஊழியக்காரர்களாக உள்ளனர். ஆத்துமாவில் ஒரு பாவம் பேணப்படுமானால், அல்லது வாழ்க்கையில் கடைபிடிக்கப்படும் ஒரு தவறான பழக்கம் இருக்குமானால், அந்த முழு மனிதனும் கறைபடிந்தவனாக இருப்பான். அப்படிப்பட்ட மனிதன் அநீதியின் கருவியாகிவிடுகிறான். (51)

தேவனுடைய ஊழியத்திற்கென்று தெரிந்துகொள்ளப்பட்ட அனைவரும் அவரது பராமரிப்பில் இளைப்பாறவேண்டும். ஆகாயத்தில் பறக்கும் பறவைகளையும் வயல்வெளிகளில் உள்ள மலர்களையும் கிறிஸ்து சுட்டிக்காட்டி, தேவனுடைய படைப்பின் இந்தப் பொருட்களைப்பற்றி எண்ணிப்பாருங்கள் என்றார். "அவைகளைப்பார்க்கிலும் நீங்கள் விசேஷித்தவர்கள் அல்லவா?" (மத்தேயு 6:26) என்று அவர் கூறினார்.

ஒரு பொருளின்மீது வைக்கப்படும் தெய்வீகப்பார்வையின் அளவு அந்தப் பொருளின் தரவரிசையின் அளவுவிகிதப்படி அமைந்துள்ளது. சிறிய அடைக்கலான் குருவியும் தெய்வீகப் பராமரிப்பினால் கவனிக்கப்படுகிறது. வயல்வெளிகளில் உள்ள மலர்களும் பூமியின்மீது படர்ந்திருக்கும் பசும்புல்லும் பரலோகத் தந்தையின் கவனத்தில் பங்குபெறுகின்றன. மாபெரும் தலைமை கலைஞர் சாலமோனின் மகிமையைவிட மேலான அழகை உடையவைகளாக லீலி மலர்கள் இருக்கும்படி அவைகளைக்குறித்து எண்ணினார். தேவனுடைய சொரூபத்தையும் மகிமையையும் கொண்டிருக்கும் மனிதனின்மேல், அவர் எவ்வளவு அதிகமான கவனம் செலுத்துகிறார்! அவரது குணத்தைப்போன்ற அதே தன்மையை வெளிப்படுத்துபவர்களாக அவரது பிள்ளைகள் இருக்கவேண்டுமென்று அவர் ஏங்குகிறார். சூரியனின் கதிர்கள் மலர்களுக்குப் பல்வேறுபட்ட மென்மைமிக்க நிறங்களைக் கொடுக்கின்றன. அதைப்போலவே தேவன் தமது உன்னத குணத்தின் அழகை ஆத்துமாக்களுக்கு வழங்குகிறார். (52)

அன்பு, நீதி, சமாதானம் நிறைந்த கிறிஸ்துவின் இராஜ்யத்தைத் தெரிந்துகொண்டு, மற்றெல்லாவற்றையும்விட அதன்மேலுள்ள ஆர்வத்தை உன்னதமாகக் கருதுபவர்கள் பரலோகத்துடன் இணைக்கப்பட்டிருக்கிறார்கள். இந்த வாழ்க்கைக்குத் தேவையான அனைத்து ஆசீர்வாதங்களும் அவர்களுடையதே. தேவனுடைய அருட்செயல் என்னும் புத்தகத்திலே வாழ்க்கையென்னும் ஏட்டிலே, நம் ஒவ்வொருவருக்கும் ஒரு பக்கம் கொடுக்கப்பட்டுள்ளது. நமது வரலாற்றின் ஒவ்வொரு குறிப்பும் அதில் அடங்கியுள்ளது. தலைமயிர்களெல்லாங்கூட எண்ணப்பட்டுள்ளது. தேவனுடைய பிள்ளைகள் அவரது மனதிலிருந்து ஒருபோதும் இல்லாமற் போவதில்லை. (53)

“நாளைக்காகக் கவலைப்படவேண்டாம்”—மத்தேயு 6:34. நாம் நாள்தோறும் கிறிஸ்துவைப் பின்பற்றவேண்டியவர்களாக இருக்கிறோம். நாளைக்கான உதவியை தேவன் இன்று செய்வதில்லை. அவர் தமது பிள்ளைகளுக்கு அவர்களது வாழ்க்கைப் பயணம் முழுவதிலும் உள்ள வழிகாட்டுதலை அவர்கள் குழப்பமடைந்துவிடாதபடி ஒரே முறையில் கொடுப்பதில்லை. அவர்களால் எந்த அளவிற்கு நினைவில் வைத்துச் செயலாற்றமுடியுமோ, அந்த அளவிற்குமட்டும் கூறுகிறார். நிகழ்கால அவசரத்திற்காக பலமும் ஞானமும் கொடுக்கப்பட்டுள்ளது. “யாவருக்கும் சம்பூரணமாய்க் கொடுக்கிறவரும் ஒருவரையும் கடிந்துகொள்ளாதவருமாகிய தேவனிடத்தில் கேட்கக்கடவன், அப்பொழுது அவனுக்குக் கொடுக்கப்படும்” யாக்கோபு 1:5. (54)

“நீங்கள் குற்றவாளிகளென்று தீர்க்கப்படாதபடிக்கு மற்றவர்களைக் குற்றவாளிகளென்று தீர்க்காதிருங்கள்.” நீ மற்றவர்களைவிட நல்லவன் என்று உன்னைப்பற்றி எண்ணி, உன்னை மற்றவர்களின்மீது நியாயாதிபதி ஆக்காதே. உன்னால் நோக்கங்களை அறியமுடியாததினால், மற்றவர்களை நியாயந்தீர்க்க தகுதியற்றவனாக இருக்கிறாய். அவனைப்பற்றி குறைகூறுவதின்மூலமாக நீ உன்மீது தீர்ப்பை வழங்குகிறாய். ஏனென்றால் சகோதரரைக் குற்றப்படுத்தும் சாத்தானுடன் நீயும் பங்காளி என்பதை காட்டுகிறாய். “நீங்கள் விசுவாசமுள்ளவர்களோவென்று உங்களை நீங்களே சோதித்து அறியுங்கள்; உங்களை நீங்களே பரீட்சித்துப் பாருங்கள்.” “நம்மை நாமே நிதானித்து அறிந்தால் நாம் நியாயந்தீர்க்கப்படோம்”–2 கொரிந்தியர் 13:5; 1 கொரிந்தியர் 11:31. (55)

நல்லமரம் நல்ல கனியைக் கொடுக்கும். மரத்தின் கனி சுவையற்றதாகவும் தகுதியற்றதாகவும் இருந்தால், அது கெட்ட மரமாக இருக்கிறது. அப்படியே வாழ்க்கையில் உண்டாகும் கனி இருதயத்தின் நிலைமைக்கும் பண்பின் சிறப்பிற்கும் சாட்சிபகருகிறது. நல்ல கிரியைகள் இரட்சிப்பை ஒருபோதும் விலைக்கு வாங்காது. ஆனால் அவைகள் அன்பினால் செயலாற்றி, ஆத்துமாவைத் தூய்மைப்படுத்தும் விசுவாசத்திற்கு சாட்சி பகருகிறது. நமது புண்ணியத்தின் காரணமாக நித்திய ஜீவன் நமக்கு அருளப்படாவிட்டாலுங்கூட அது கிறிஸ்துவின் கிருபையின்மூலமாக செய்யப்பட்ட கிரியைக்குத்தக்கதாக இருக்கும். (56)

இவ்விதமாக கிறிஸ்து அவரது இராஜ்யத்தின் கொள்கையை முன்வைத்து வாழ்க்கையின் பெரும்சட்டமாக அது இருக்கவேண்டுமென்று காட்டினார். அந்தப் பாடத்தை உணர்த்திக்காட்ட ஒரு உதாரணத்தை அவர் சேர்க்கிறார். என்னுடைய வார்த்தைகளை நீங்கள் கேட்டால்மட்டும் போதாது என்று அவர் கூறுகிறார். உங்களுடைய கீழ்ப்படிதலினால் அவைகளை நீங்கள் உங்கள் குணத்தின் அஸ்திபாரமாக்கவேண்டும். சுயம் என்பது சரியும் மணலாகும்.. நீங்கள் மனித தத்துவ விளக்கங்களின்மீதும் கண்டுபிடிப்புக்களின்மீதும் கட்டுவீர்களானால் உங்கள் வீடு விழுந்துவிடும். சோதனை என்னும் காற்றுகளினாலும் துன்பம் என்னும் சோதனைகளாகிய புயல் காற்றினாலும் அது அடித்துச் செல்லப்படும். ஆனால் நான் உங்களுக்கு கொடுத்திருக்கும் இந்தக் கொள்கைகள் என்றும் நிலைத்து நிற்கும். என்னை ஏற்றுக்கொள்ளுங்கள். என் வார்த்தைகளின்மேல் கட்டுங்கள். (57)

“ஆகையால், நான் சொல்லிய இந்த வார்த்தைகளைக் கேட்டு, இவைகளின்படி செய்கிறவன் எவனோ, அவனைக் கன்மலையின்மேல் தன் வீட்டைக் கட்டின புத்தியுள்ள மனுஷனுக்கு ஒப்பிடுவேன். பெருமழை

சொரிந்து, பெருவெள்ளம் வந்து, காற்று அடித்து, அந்த வீட்டின்மேல் மோதியும், அது விழவில்லை; ஏன்னென்றால், அது கன்மலையின்மேல் அஸ்திபாரம் போடப்பட்டிருந்தது”—மத்தேயு 7:24,25. (58) ★

# 32

# நூற்றுக்கு அதிபதி!

**மத்தேயு 8:5–13; லூக்கா 7:1–17**

**(The Desire of Ages, pp. 315–320)**

"நீங்கள் அடையாளங்களையும் அற்புதங்களையும் காணா விட்டால் விசுவாசிக்கமாட்டீர்கள்" (யோவான் 4:48) என்று அவர் எந்த நூற்றுக்கு அதிபதியின் மகனைச் சுகப்படுத்தினாரோ, அந்தப் பெருமகனிடம் கூறியிருந்தார். மேசியா என்னும் தமது ஸ்தானத்திற்கான வெளிப்படையான அடையாளங்களைத் தமது சொந்த ஜனங்களே கேட்டதை எண்ணி அவர் துயரடைந்தார். அவர்களுடைய அவநம்பிக்கையைக்குறித்து அவர் மறுபடியும் மறுபடியும் ஆச்சரியமடைந்தார். ஆனால் அவரிடத்திற்கு வந்த நூற்றுக்கு அதிபதியின் விசுவாசத்தில் அவர் அதிசயித்துப்போனார். இரட்சகரின் வல்லமையைப்பற்றி அந்த நூற்றுக்கு அதிபதி கேள்விகள் எதுவும் கேட்கவில்லை. இந்த அற்புதத்தைச் செய்வதற்காக அவர் தனது வீட்டிற்கு நேரடியாக வருகைதரவேண்டும் என்றுகூட அவன் கேட்கவில்லை. "ஆண்டவரே! நீர் என் வீட்டுக்குள் பிரவேசிக்க நான் பாத்திரன் அல்ல; ஒரு வார்த்தைமாத்திரம் சொல்லும், அப்பொழுது என் வேலைக்காரன் சொஸ்தமாவான்" என்று அவன் கூறினான். (1)

அந்த நூற்றுக்கு அதிபதியின் வேலைக்காரன் திமிர்வாதத்தினால் தாக்கப்பட்டு மரணத்தருவாயில் இருந்தான். ரோமர்களுக்கிடையில் வேலைக்காரர்கள் சந்தைவெளிகளில் வாங்குவதற்கும் விற்பதற்கும் இலக்காகவிருந்த அடிமைகளாக இருந்தனர். அவர்கள் கேவலமாகவும் கொடுமையாகவும் நடத்தப்பட்டிருந்தனர். ஆனால் அந்த நூற்றுக்கு அதிபதி தனது வேலைக்காரனுடன் மென்மையாகப் பிணைக்கப்பட்டவனாக இருந்து, அவன் நலம்பெறவேண்டுமென்று பெரிதும் விரும்பியிருந்தான். இயேசுவால் அவனைச் சுகப்படுத்தமுடியும் என்று அவன் நம்பினான். அவன் இரட்சகரைக் கண்டதில்லை. ஆனால் அவன் கேள்விப்பட்டசெய்திகள் அவனது விசுவாசத்தைத் தூண்டிவிட்டிருந்தன. யூதர்களின் ஆச்சார முறைமைகளை ஏற்கெனவே கண்டு அறிந்திருந்தபோதும் இந்த அதிகாரி

யூதரிகளின் மதம் தனது மதத்தைவிட உயர்வானது என்னும் மனநிறைவை உடையவனாக இருந்திருந்தான். வெற்றிபெற்றவர்களுக்கும் வெற்றிக்குக் கீழ்ப்பட்டவர்களுக்குமிடையில் பிரிவினையாக இருந்த ஜாதியின் அடிப்படை யிலான தவறான எண்ணம், வெறுப்பு ஆகியவைகளை அவன் ஏற்கனவே உடைத்திருந்தான். தேவனுக்குச் செலுத்தும் ஆராதனைக்கு அவன் மதிப்புக்கொடுத்து, அவரைத் தொழுபவர்களாக இருந்த யூதர்களிடம் அன்பைக் காட்டியிருந்தான். பிறர்மூலமாக அறிந்திருந்தபடி ஆத்துமாவிற்குத் தேவையானது கிறிஸ்துவின் போதனையில் இருந்ததை அவன் கண்டிருந்தான். அவனுள் இருந்த ஆவிக்குரிய தன்மைகள் அனைத்தும் இரட்சகரின் வார்த்தைகளுக்குப் பதிலளித்தன. ஆனால் இயேசுவின் சமுகத்திற்கு வருவதற்குத் தனது தகுதியின்மையை அவன் உணர்ந்து தனது வேலைக்காரனைச் சுகப்படுத்த இயேசுவிடம் கேட்டுக்கொள்ளும்படி யூதப்பெரியவர்களிடம் கேட்டுக்கொண்டான். அந்த மாபெரும் போதகருடன் அவர்கள் அறிமுகமானவர்களாக இருந்தனர். அதனால் அவருடைய ஆதரவைப் பெறுவதற்காக அவரை எவ்விதமாக அணுகவேண்டும் என்பதை அவர்கள் அறிந்திருக்கக்கூடும் என்று அவன் நினைத்தான். (2)

இயேசு கப்பர்நகூமிற்குள் பிரவேசித்தவுடனே யூதமூப்பர்களின் பிரதிநிதிகள் அவரைச் சந்தித்து, அந்த நூற்றுக்கு அதிபதியின் வாஞ்சையைப் பற்றி அவரிடம் கூறினார்கள். "நீர் இந்தத் தயவுசெய்கிறதற்கு அவன் பாத்திரனாயிருக்கிறான். அவன் நம்முடைய ஜனத்தை நேசிக்கிறான், நமக்கு ஒரு ஜெபஆலயத்தையும் கட்டினான் என்றார்கள்"—லூக்கா 7:4.5. (3)

உடனே இயேசு அந்த அதிகாரியின் வீட்டை நோக்கிப் புறப்பட்டார். ஆனால் திரள் கூட்டமானவர்களால் அவர் நெருக்கப்பட்டதினால் அவரால் மெதுவாகத்தான் செல்லமுடிந்தது. அவர் வருகிறார் என்னும் செய்தி அவருக்கு முன்செல்லவே, அந்த நூற்றுக்கு அதிபதி தனது நம்பிக்கையின்மையில் "ஆண்டவரே! நீர் வருத்தப்படவேண்டாம்; நீர் என் வீட்டு வாசலுக்குள் பிரவேசிக்க நான் பாத்திரன் அல்ல" என்னும் செய்தியை அனுப்பிவைத்தான். ஆனால் இரட்சகர் அவரது பாதையில் சென்றுகொண்டிருந்தார். கடைசியாக நூற்றுக்கு அதிபதி தானாகவே அவரைநேரில் சந்திக்கமுயன்று, "நான் உம்மிடத்தில் வரவும் என்னைப் பாத்திரனாக எண்ணவில்லை; ஒரு வார்த்தைமாத்திரம் சொல்லும், அப்பொழுது என் வேலைக்காரன் சொஸ்த மாவான். நான் அதிகாரத்துக்குக் கீழ்ப்பட்டவனாயிருந்தும், எனக்குக் கீழ்ப்பட்டிருக்கிற சேவகருமுண்டு; நான் ஒருவனைப் போவென்றால் போகிறான், மற்றொருவனை வாவென்றால் வருகிறான்; என் வேலைக்காரனை, இதைச் செய்யென்றால் செய்கிறான்" என்றான். நான் ரோம அரசின்

வல்லமைக்குப் பிரதிநிதியாக இருக்கிறதுபோல, எனது இராணுவவீரர்கள் எனது அதிகாரத்தைஅறிந்து அதற்குக் கீழ்ப்படிகிறதுபோல, நீர் முடிவில்லாத தேவனுடைய வல்லமைக்குப் பிரதிநிதியாக இருக்கிறீர். சிருஷ்டிக்கப்பட்டுள்ள அனைத்துப்பொருட்களும் உம்முடைய வார்த்தைக்குக் கீழ்ப்படிகின்றன. அந்த நோயை விலகிச்செல்லும்படிக் கட்டளையிட உம்மால் அகும். அது உமக்குக் கீழ்ப்படியும். உம்முடைய பரலோகத் தூதர்களுக்கு உம்மால் கட்டளைஇட முடியும். அவர்களால் சுகமாக்கும் நற்பணியைச் செய்யமுடியும். ஒரு வார்த்தை மாத்திரம் கூறும். அப்பொழுது எனது வேலைக்காரன் சொஸ்தமடைவான் என்றான். (4)

“இயேசு இவைகளைக் கேட்டு அவனைக் குறித்து ஆச்சரியப்பட்டு, திரும்பி, தமக்குப் பின்செல்லுகிற திரளான ஜனங்களை நோக்கி: இஸ்ரவேலருக்குள்ளும் நான் இப்படிப்பட்ட விசுவாசத்தைக் காணவில்லை என்று உங்களுக்குச் சொல்லுகிறேன் என்றார்.” பின்பு இயேசு நூற்றுக்கு அதிபதியை நோக்கி: “நீ போகலாம், நீ விசுவாசித்தபடியே உனக்கு ஆகக்கடவது என்றார். அந்த நாழிகையிலே அவன் வேலைக்காரன் சொஸ்தமானான்.” (5)

நூற்றுக்கு அதிபதியை கிறிஸ்துவிடம் பரிந்துரைசெய்த யூத மூப்பர்கள் தாங்கள் சுவிசேஷத்தின் ஆவியைப் பெறாதவர்களாக எவ்வளவு தூரம் விலகி நின்றிருந்தனர் என்பதைக் காட்டியிருந்தனர். தேவனுடைய இரக்கத்தின்மீது நாம் உரிமைபாராட்டுவது மட்டுந்தான் நமது பெரும் தேவை என்பதை அவர்கள் இனங்கண்டுகொள்ளாதவர்களாக இருந்தனர். தங்களுடைய சுயநீதியில், அவன் தங்களுடைய ஜனத்துக்குக் காட்டின தயவினிமித்தம் அந்த நூற்றுக்கு அதிபதியை புகழ்ந்தனர். ஆனால் அந்த நூற்றுக்கு அதிபதி “நான் பாத்திரவானல்ல” என்று தன்னைப்பற்றிக் கூறினான். கிறிஸ்துவின் கிருபையினால் அவனது இருதயம் தொடப்பட்டிருந்தது. அவன் தனது தகுதியின்மையைக் கண்டிருந்தான். அப்படியிருந்தும், உதவியைக் கேட்பதற்கு அவன் பயப்படவில்லை. அவன் தனது சொந்த நற்குணத்தின்மீது நம்பிக்கை வைக்கவில்லை. அவனது மாபெரும் தேவைதான் அவனது காரண காரிய விளக்கமாக இருந்தது. அவனது விசுவாசம் அதன் உண்மையான தன்மையுடன் கிறிஸ்துவைப் பற்றிக்கொண்டது. அவன் அவரில் அற்புதங்களைச்செய்யும் சாதாரணமான ஒரு ஊழியக்காரனைக் காணாமல், மனித இனத்தின் நண்பரையும் இரட்சகரையும் கண்டான். (6)

இவ்விதமாகத்தான் ஒவ்வொரு பாவியும் இயேசுவிடம் வரலாம். “நாம் செய்த நீதியின் கிரியைகளினிமித்தம் அவர் நம்மை இரட்சியாமல், தமது இரக்கத்தின்படியே, . . . நம்மை இரட்சித்தார்”—தீத்து 3:5. நீங்கள் ஒரு பாவியென்று

சாத்தான் உங்களிடம் கூறி, தேவனிடமிருந்து ஆசீர்வாதங்களைப்பெறலாம் என்று நம்பமுடியாது என்று கூறும்போது, பாவிகளை இரட்சிக்கக் கிறிஸ்து உலகத்தில் வந்தார் என்று அவனிடம் கூறுங்கள். தேவனிடம் நம்மைப் பரிந்துரை செய்வதற்கு நம்மிடம் எதுவுமில்லை. ஆனால் இப்பொழுதும் எப்பொழுதும் நாம் வற்புறுத்தி மன்றாடும் நமது மன்றாட்டு, நமது நிலைமை படுமோசமாக, உதவியற்றதாக இருப்பதாக காண்பித்து, அதுவே அவரது மீட்கும் வல்லமையை ஒரு தவிர்க்கமுடியாத அவசியமாக ஆக்கிவிடுகிறது. சுயத்தைச் சார்ந்திருக்கும் அனைத்தையும் மறுத்து, நாம் கல்வாரிச் சிலுவையை நோக்கிப்பார்த்து "எனது கரத்தில் எந்தக் கிரயத்தையும் நான் கொண்டுவரவில்லை; வெறுமையாக உமது சிலுவையை விடாமல் பற்றிக்கொண்டிருக்கிறேன்" என்று கூறலாம். (7)

மேசியாவின் ஊழியத்தைப்பற்றி யூதர்கள் பிள்ளைப்பருவத்திலிருந்தே போதிக்கப்பட்டிருந்தனர். முற்பிதாக்கள், தீர்க்கதரிசிகள் ஆகியோரால் ஆவியின் தூண்டுதலினால் கொடுக்கப்பட்ட வார்த்தைகள் அடையாளமாக இருந்த பலிமுறை ஆராதனைகள் ஆகியவை அவர்களது உரிமைச்சொத்துக்களாக இருந்தன. ஆனால் அவர்கள் ஒளியை புறக்கணித்துவிட்டிருந்தனர். இப்பொழுது விரும்பக்கூடிய எதையும் இயேசுவில் அவர்களால் காணமுடியவில்லை. ஆனாலும் புறமதத்தில் பிறந்தவனாயிருந்த அந்த நூற்றுக்கு அதிபதி தனது சுற்றுப்புறத்தால் ரோம வல்லரசின் விக்கிரக ஆராதனையில் கற்பிக்கப்பட்டிருந்து ஒரு இராணுவ வீரனாகப் பயிற்றுவிக்கப்பட்டிருந்தவன், ஆவிக்குரிய வாழ்க்கையிலிருந்து வேறுபடுத்தப்பட்டவனைப்போலக் காணப்பட்டவன், அதற்கும்மேலாக யூதர்களின் மத விரோதத்தினால் விலக்கப்பட்டிருந்தவன், இஸ்ரவேல் மக்கள் காரணமாக தனது சொந்தநாட்டு மக்களால் அவமதிக்கப்பட்டிருந்தவன்—இந்த மனிதன் ஆபிரகாமின் சந்ததியினர் குருடர்களாக இருந்தபோது, சத்தியத்தை உணர்ந்திருந்தான். தம்மை மேசியா என்று உரிமை பாராட்டியிருந்த ஒருவரை யூதர்கள் தாமே ஏற்றுக்கொள்ளுவார்களா அல்லது மாட்டார்களா? என்பதைக் காண அவன் காத்திருக்கவில்லை. "உலகத்திலே வந்து எந்த மனுஷனையும் பிரகாசிப்பிக்கிற ஒளி" அவன்மீது பிரகாசித்திருந்தது. அவன் அதிகமான தூரத்தில் இருந்திருந்தபோதிலும் தேவகுமாரனின் மகிமையை அறிந்திருந்தான். (8)

புறஜாதியினருக்கு நிறைவேற்றப்படவிருந்த சுவிசேஷ ஊழியத்தில் இயேசுவிற்கு இது மிகவும் அக்கறையான ஒரு ஊழியமாக இருந்தது. சகல ஜாதிகளிலிருந்தும் அவருடைய இராஜ்யத்திற்கு ஆத்துமாக்கள் சேர்க்கப்படவிருப்பதை அவர் மகிழ்ச்சியுடன் முன்னோக்கிப் பார்த்தார்.

அவரது கிருபையை புறக்கணிப்பதினால் யூதர்களுக்கு உண்டாகவிருந்த பலனை மிகுந்த வருத்தத்துடன் அவர் சித்தரித்துக்காட்டினார். "அநேகர் கிழக்கிலும் மேற்கிலுமிருந்து வந்து, பரலோகராஜ்யத்தில் ஆபிரகாம் ஈசாக்கு யாக்கோபு என்பவர்களோடே பந்தியிருப்பார்கள். ராஜ்யத்தின் புத்திரரோ புறம்பான இருளிலே தள்ளப்படுவார்கள்; அங்கே அழுகையும் பற்கடிப்பும் உண்டாயிருக்குமென்று உங்களுக்குச் சொல்லுகிறேன் என்றார்"–மத்தேயு 8:11–12. ஆ! ஐயோ! அதேவிதமான சாவுக்குரிய மனமடிவிற்கு அநேகர் மேலும் எவ்விதமாக ஆயத்தஞ்செய்துகொண்டிருக்கின்றனர்! புறமதத்தின் இருளில் உள்ள ஆத்துமாக்கள் அவரது கிருபையைப் பெற்றுக்கொள்ளும்போது, கிறிஸ்தவ நாடுகளில் தங்கள்மேல் பிரகாசிக்கும் ஒளியைப் புறக்கணித்துத் தள்ளுகிறவர்கள் எவ்வளவு அதிகமாக இருக்கின்றனர்! (9)

கப்பர்நகூமிலிருந்து இருபது மைல்களுக்கும் அதிகமான தூரத்தில் இருந்த மேட்டுப்பகுதியான விசாலமான அழகிய எஸ்தரலோன் சமவெளியில் நாயீன் என்னும் கிராமம் இருந்தது. அந்த இடத்தை நோக்கி இயேசு நடந்தார். அவரது சீடர்களும் மற்ற அநேகரும் அவருடன் இருந்தனர். பாதைநெடுகிலும் மக்கள் அன்பும் இரக்கமுமிக்க அவரது வார்த்தைகளைக் கேட்கவும் அவரால் சுகப்படுத்தப்படவும் தங்களது சுகவீனமானவர்களைக் கொண்டுவந்திருந்தனர். இப்படிப்பட்ட ஆச்சரியமான வல்லமையை உடைய இவர், தம்மை இஸ்ரவேலின் அரசர் என்று அவராகவே அறிவிப்பார் என்னும் நம்பிக்கையுடன் அவர்கள் வந்திருந்தனர். திரளானவர்கள் அவரது அடிச்சுவடுகளில் நெருக்கியிருந்தனர். அது மிகுந்த மகிழ்ச்சியும் எதிர்பார்ப்புமிக்க ஒரு கூட்டமாக இருந்து, அந்த மலைக்கிராமத்தின் பாறைகள்மிக்க பாதையின்மேல் அவரைப் பின்தொடர்ந்தது. (10)

அவர்கள் அந்தக் கிராமத்தை நெருங்கினபோது, ஒரு சவ ஊர்வலம் கிராமத்து வாசல்வழியாக வருவது காணப்பட்டது. புதைக்குமிடத்தை நோக்கி, துயரமிக்க நடையுடன் அது மெதுவாக வந்துகொண்டிருந்தது. அந்த ஊர்வலத்திற்குமுன்னர் இறந்தவனின் உடலைச் சுமந்த ஒரு திறந்த பாடை இருந்தது. அதனைச் சூழ மார்பிலடித்துத் துக்கங்கொண்டாடி ஒப்பாரிவைக்கும் கூட்டம் அதன் அழுகையால் ஆகாயத்தை நிரப்பியிருந்தது. இறந்தவனுக்குத் தங்களுடைய பரிவைக்காட்டவும், அந்த ஊரின் மக்கள் அனைவரும் திரண்டிருந்ததுபோலக் காணப்பட்டது. (11)

அனுதாபத்தை எழுப்பும் ஒரு காட்சியாக அது இருந்தது. இறந்துபோனவன் அவனது அன்னையின் ஒரே மகனாக இருந்தான். அவள் விதவையாக இருந்தாள். அந்தத் தனித்வளான துக்கம் நிறைந்த அன்னை பூமிக்குரிய தனது ஒரே ஆதரவும் ஆறுதலுமாக இருந்த அந்த மகனின்

பிணத்தை பின்தொடர்ந்து கல்லறையை நோக்கிச் சென்றுகொண்டிருந்தாள். கர்த்தர் அவளைக் கண்டபோது, அவள்மீது மனதுருகினார். அவள் அவரது பிரசன்னத்தைக் கவனிக்காதவளாக அழுதவண்ணம், குருட்டுத்தனமாக நகர்ந்துகொண்டிருந்தபோது, அவர் அவளருகில் வந்து “அழாதே” என்று மென்மையாகக் கூறினார். அவளது துயரத்தை இயேசு மகிழ்ச்சிமிக்கதாக மாறச்செய்யவிருக்கிறார். இருந்தபோதிலும் அவரால் அவரது மென்மைமிக்க அனுதாப உணர்வின் வெளிக்காட்டுதலை அடக்கிவைக்க முடியவில்லை. (12)

அவர் வந்து அந்தப் பாடையைத் தொட்டார். இறந்தவனைத் தொடுவது அவருக்குத் தீட்டை உண்டுபண்ணாது. பாடையைச் சுமந்திருந்தவர்கள் நின்றார்கள். துக்கங்கொண்டாடுபவர்களின் புலம்பல்கள் ஓய்ந்தன. நம்பிக்கை யின்மை அதற்கு எதிரான நம்பிக்கை ஆகிய இரு அணிகளும் அந்தப் பாடையருகில் சேர்ந்தன. நோயை நீக்கிப் பிசாசை ஓடச்செய்திருந்த ஒருவர் அங்கே இருந்தார். சாவும்கூட அவரது வல்லமைக்குக் கீழானதா? (13)

தெளிவான அதிகாரமிக்க சத்தத்துடன் வார்த்தைகள் பேசப்பட்டன. “வாலிபனே, எழுந்திரு என்று உனக்குச் சொல்லுகிறேன்” என்ற சத்தம் இறந்தவனின் செவிகளைத் துளைத்துக்கொண்டு செல்லுகிறது. அந்த வாலிபன் தன் கண்களைத் திறக்கிறான். இயேசு அவனைத் தம் கரத்தினால் பிடித்துத் தூக்கிவிடுகிறார். அவனுக்கு அருகில் நின்று அழுதுகொண்டிருந்த அவனது அன்னையை அவன் பார்க்கிறான். தாயும் மகனும் ஒருவரையொருவர் மகிழ்ச்சியுடன் நெடுநேரம் கட்டித்தழுவிக்கொள்கின்றனர். திரளானவர்கள் பேச்சற்றவர்களாகப் பார்க்கின்றனர். “எல்லாரும் பயமடைந்து: மகா தீர்க்கதரிசியானவர் நமக்குள்ளே தோன்றியிருக்கிறார் என்றும், தேவன் தமது ஜனங்களைச் சந்தித்தார் என்றும் சொல்லி, தேவனை மகிமைப்படுத்தினார்கள்.” அந்த சவ ஊர்வலம் வெற்றி ஊர்வலமாக, நாயீன் கிராமத்தை நோக்கித் திரும்பிச்சென்றது. “இந்தச் செய்தி யூதேயா தேசமுழுவதிலும் சுற்றியிருக்கிற திசைகள் யாவற்றிலும் பிரசித்தமாயிற்று.” (14)

நாயீன் கிராமத்தின் வாசலின் அருகில் துக்கத்துடன் இருந்த அன்னைக்கு அருகில் நின்றிருந்தவர், பாடைக்கு அருகில் துக்கத்துடன் புலம்பும் ஒவ்வொருவரையும் கவனிக்கிறார். நமது துயரத்தால் தொடப் பட்டவராக அவர் இருக்கிறார். அன்புகாட்டி இரக்கப்பட்ட அவரது இருதயம் மாறாத மென்மைமிக்க இருதயமாக உள்ளது. இறந்த அந்த நாயீன் ஊர் இளைஞனை நோக்கி உயிரடையும்படி பேசிய அவரது வார்த்தை இப்பொழுது வல்லமை குறைந்ததாக இல்லை. (அதே வல்லமையை

உடையதாக இருக்கிறது). “வானத்திலும் பூமியிலும் சகல அதிகாரமும் எனக்குக் கொடுக்கப்பட்டிருக்கிறது” (மத்தேயு 28:18) என்று கூறுகிறார். வருடங்கள் கடந்துசென்றதினாலோ அல்லது பொங்கிவழியும் கிருபையின் செயலில் அது இடைவிடாததாக இருப்பதினாலோ அந்த வல்லமை குறைந்துவிடவில்லை. அவர்மீது நம்பிக்கை உடையவர்களாக இருக்கும் அனைவருக்கும் இப்போதுங்கூட அவர் உயிருள்ள இரட்சகராக இருக்கிறார். (15)

இயேசு அந்த அன்னையிடம் அவளது மகனை ஒப்படைத்தபோது, அவளது துயரம் மகிழ்ச்சியாக மாறியது. அப்படியிருந்தும் அந்த இளைஞன் இந்த உலகத்தின் வருத்தங்களை அனுபவிக்கவும், அதில் உழைக்கவும், அதின் அபாயங்களில் பங்குபெறவும், மறுபடியும் மரணத்தின் வல்லமைக்குக் கீழ்ப்படிந்துசெல்லவும் மட்டுமே அழைக்கப்பட்டிருந்தான். ஆனால் இயேசு இறந்தவர்களுக்காக உள்ள நமது துயரத்தில் முடிவில்லாத ஒரு நம்பிக்கையின் தூதுடன் நமக்கு ஆறுதல் செய்கிறார். “மரித்தேன், ஆனாலும், இதோ, சதாகாலங்களிலும் உயிரோடிருக்கிறேன், ஆமென்; நான் மரணத்திற்கும் பாதாளத்திற்குமுரிய திறவுகோல்களை உடையவராயிருக்கிறேன்.” “ஆதலால், பிள்ளைகள் மாம்சத்தையும் இரத்தத்தையும் உடையவர்களாயிருக்க, அவரும் அவர்களைப்போல மாம்சத்தையும் இரத்தத்தையும் உடையவரானார்; மரணத்துக்கு அதிகாரி யாகிய பிசாசானவனைத் தமது மரணத்தினாலே அழிக்கும்படிக்கும், ஜீவகாலமெல்லாம் மரணபயத்தினாலே அடிமைத்தனத்திற்குள்ளானவர்கள் யாவரையும் விடுதலைபண்ணும்படிக்கும் அப்படியானார்”—வெளிப்படுத்தல் 1:18; எபிரெயர் 2:14,15. (16)

மரித்தவர்கள் உயிரடைந்துவரும்படி தேவகுமாரன்அழைக்கும்போது, சாத்தானால் அவர்களைப் பிடித்துவைக்க முடியாது. கிறிஸ்துவின் வார்த்தையாகிய வல்லமையை விசுவாசத்தினால் பெற்றுக்கொள்ளும் ஒரு ஆத்துமாவையும் அவனால் ஆவிக்குரிய மரணத்தில் நிறுத்திவைக்க முடியாது. “தூங்குகிற நீ விழித்து, மரித்தோரை விட்டு எழுந்திரு” (எபேசியர் 5:14) என்று பாவத்தில் மரித்துப்போன அனைவரிடமும் தேவன் கூறுகிறார். அந்த வார்த்தை நித்திய ஜீவனாக உள்ளது. முதல் மனிதனை உயிர்பெற்றுவரும்படி தேவனுடைய வார்த்தை அழைத்ததைப்போல இன்னமும் அது நமக்கு ஜீவனைக் கொடுக்கிறது. “வாலிபனே, எழுந்திரு என்று உனக்குச் சொல்லுகிறேன்” என்ற கிறிஸ்துவின் வார்த்தை நாயீன் ஊர் இளைஞனுக்கு உயிரைக் கொடுத்ததைப்போல “மரித்தோரை விட்டு எழுந்திரு” என்னும் வார்த்தை அதைப் பெற்றுக்கொள்ளும்

ஆத்துமாவிற்கு ஜீவனாக இருக்கிறது. தேவன் “இருளின் அதிகாரத்தினின்று நம்மை விடுதலையாக்கி, தமது அன்பின் குமாரனுடைய ராஜ்யத்திற்கு உட்படுத்தியிருக்கிறார்” (கொலோசெயர் 1:13). இவை அனைத்தும் அவரது வார்த்தையில் நமக்குக் கொடுக்கப்பட்டுள்ளன. நாம் அந்த வார்த்தையைப் பெற்றிருந்தால் விடுதலையைப் பெற்றிருக்கிறோம். (17)

“அன்றியும் இயேசுவை மரித்தோரிலிருந்து எழுப்பினவருடைய ஆவி உங்களில் வாசமாயிருந்தால், கிறிஸ்துவை மரித்தோரிலிருந்து எழுப்பினவர் உங்களில் வாசமாயிருக்கிற தம்முடைய ஆவியினாலே சாவுக்கேதுவான உங்கள் சரீரங்களையும் உயிர்ப்பிப்பார்.” “கர்த்தர் தாமே ஆரவாரத்தோடும், பிரதான தூதனுடைய சத்தத்தோடும், தேவ எக்காளத்தோடும் வானத்தி லிருந்து இறங்கிவருவார்; அப்பொழுது கிறிஸ்துவுக்குள் மரித்தவர்கள் முதலாவது எழுந்திருப்பார்கள்.பின்பு உயிரோடிருக்கும் நாமும் கர்த்தருக்கு எதிர்கொண்டுபோக, மேகங்கள்மேல் அவர்களோடேகூட ஆகாயத்தில் எடுத்துக்கொள்ளப்பட்டு, இவ்விதமாய் எப்பொழுதும் கர்த்தருடனேகூட இருப்போம்.”—ரோமர் 8:11; 1 தெசலோனிக்கேயர் 4:16,17. இதுதான் ஒருவரை யொருவர் தேற்றும்படி அவர் நமக்குக் கொடுத்திருக்கிற ஆறுதலின் வார்த்தையாக உள்ளது. (18) ★

# 33

# யார் எனக்குச் சகோதரர்கள்?

**மத்தேயு 12:22–50; மாற்கு 3:20–35**

**(The Desire of Ages, pp. 321–327)**

இயேசுவின் ஊழியத்தில் யோசேப்பின் குமாரர்கள் கொஞ்சமும் அனுதாபமற்றவர்களாக இருந்தனர். அவரது வாழ்க்கை ஊழியம் ஆகியவைகளைப்பற்றி அவர்களுக்குக் கிடைத்த செய்திகள் அவர்களை வியப்பிலும் திகைப்பிலும் ஆழ்த்தியது. அவர் இரவு முழுவதையும் ஜெபத்தில் செலவிட்டிருந்தார் என்றும், பகல் முழுவதிலும் திரள்கூட்டமான மக்களால் நெருக்கப்பட்டிருந்தார்; உணவருந்தக்கூட அவருக்கு நேரமில்லாமல் இருந்தது என்றும் அவர்கள் கேள்விப்பட்டனர். ஓய்வொழிச்சலற்ற வேலை யினால் அவர் தம்மைத்தாமே நலிவடையச்செய்கிறார் என்று அவரது நண்பர்கள் உணர்ந்தனர். பரிசேயர்களிடம் அவர் நடந்துகொண்டவிதம்பற்றி அவர்களால் எதுவும் கணிக்கமுடியவில்லை. அவரது பகுத்தறியும் தன்மை குழப்பமடைந்துகொண்டிருந்தது என்று சிலர் பயந்திருந்தனர். (1)

அவரது சகோதரர்கள் இதைப்பற்றிக் கேள்விப்பட்டனர். அவர் சாத்தானின் வல்லமையினால் பிசாசுகளைத் துரத்துகிறார் என்ற பரிசேயர்களின் குற்றச்சாட்டையும் கேள்விப்பட்டனர். இயேசுவுடன் இருந்த உறவின்மூலமாக அவர்கள்மீது உண்டான நிந்தையை குறிப்பாக உணர்ந்தனர். அவரது வார்த்தைகளும் ஊழியங்களும் எவ்விதமான அமளியை உண்டுபண்ணினது என்பதை அறிந்தனர். அவரது தைரியமிக்க அறிக்கைகளின்மூலமாக அவர்கள் திகிலடைந்தது மட்டுமின்றி, வேதபாரகர்களையும் பரிசேயர்களையும் அவர் வெளிப்படையாகக் குற்றஞ்சாட்டினதற்காக அவர்மீது கோபமுமடைந்தனர். இத்தகைய முறையில் அவர் ஊழியஞ்செய்வதை நிறுத்தத்தக்கதாக அவரை இணங்கச்செய்யவேண்டும் அல்லது கட்டாயப்படுத்தவேண்டும் என்று முடிவுசெய்து, மரியாளின்மீதுள்ள அவரது அன்பு எதிர்காலத்தைப்பற்றி அவரைச் சிந்திக்கச்செய்யும் என்று நினைத்து, இந்தக் காரியத்தைச் செய்வதில் அவர்கள் மரியாளையும்த் தங்களோடு சேர்ந்திருக்கும்படி தூண்டினர். (2)

இதற்குச் சற்றுமுன்புதான் குருடனும் ஊமையனுமாயிருந்த ஒரு மனிதனைச் சுகப்படுத்தும் அவரது இரண்டாவது அற்புதத்தை அவர் செய்திருந்தார். “இவன் பிசாசுகளின் தலைவனாலே பிசாசுகளைத் துரத்துகிறான்” (மத்தேயு 9:34) என்று குற்றச்சாட்டைப் பரிசேயர்கள் திரும்பவும் கூறியிருந்தனர். பரிசுத்த ஆவியானவரின் செயலை சாத்தானின் செயலிற்குச் சூட்டுவதினால், ஆசீர்வாதத்தின் ஊற்றிலிருந்து அவர்கள் தாங்களாகவே தங்களை விலக்கிக்கெள்கின்றனர் என்று அவர்களிடம் கிறிஸ்து தெளிவாகக் கூறினார். இயேசுவின் தெய்வத்தன்மையை அறியாமல், அவருக்கு எதிராகப் பேசினவர்கள் மன்னிப்பைப் பெறலாம். ஏனென்றால் பரிசுத்த ஆவியின்மூலமாக அவர்கள் தங்களுடைய தவறைக் கண்டு மனந்திரும்ப முடியும். மனம் வருந்தி நம்பிக்கைவைக்கும் ஆத்துமாவின் பாவம் எப்படிப்பட்டதாக இருந்தாலும் கிறிஸ்துவின் இரத்தத்தில் கழுவிச் சுத்திகரிக்கப்படும். ஆனால் பரிசுத்த ஆவியின் ஊழியத்தைப் புறக்கணிக்கும் ஒருவன் மனந்திரும்புதலும் விசுவாசமும் தன்னிடம் வரமுடியாத ஒரு இடத்தில் தன்னை வைக்கிறான். ஆவியானவரின் மூலமாகத்தான் இருதயத்தின்மீது தேவன் செயலாற்றுகிறார். மனிதர்கள் வேண்டுமென்றே ஆவியை புறக்கணித்து, அது சாத்தானிடமிருந்து உண்டாயிருக்கிறதென்று அறிவிக்கும்போது, தேவன் அவர்களுடன் தொடர்புகொள்ளக்கூடிய மார்க்கத்தை தடைசெய்கின்றனர். இறுதியாக பரிசுத்த ஆவியானவர் புறக்கணிக்கப்படும்போது, அந்த ஆத்துமாவிற்காக தேவனால் செய்யக்கூடியது இனி ஒன்றுமில்லை. (3)

இந்த எச்சரிப்பை இயேசு எந்தப் பரிசேயர்களிடம் பேசியிருந்தாரோ அவர்கள் அவருக்கு எதிராகக் கொண்டுவந்த குற்றச்சாட்டைத் தாங்களே நம்பாமலிருந்தனர். இரட்சகரண்டைக்கு இழுத்துக்கொள்ளப்படாத ஒரு பெரிய மனிதன்கூட இருக்கவில்லை. இவர்தான் இஸ்ரவேலுக்காக அபிஷேகம்பண்ணப்பட்டவர் என்று தங்களை அவரது சீடராகும்படி வற்புறுத்தி அறிவிக்கும் ஆவியின் சத்தத்தை அவர்கள் தங்களுடைய சொந்த இருதயங்களில் கேட்டிருந்தனர். அவரது சமுகத்தின் ஒளியில் அவர்கள் தங்களுடைய பரிசுத்தமற்ற தன்மையை உணர்ந்து தங்களால் உண்டுபண்ணமுடியாத நீதிக்காக ஏங்கியிருந்தனர். ஆனால் அவரைப் புறக்கணித்தபின் மீண்டும் அவரை மேசியா என்று ஏற்றுக்கொள்வது அவர் களுக்குக் கேவலமாக இருந்தது. நம்பிக்கையின்மையின் பாதையில் தங்கள் பாதங்களை வைத்துவிட்டபின், தங்களுடைய தவறை அறிக்கைசெய்யமுடியாத அளவிற்கு அவர்கள் அதிகமான அகந்தையுள்ளவர்களாக இருந்தனர். சத்தியத்தை ஏற்றுக்கொள்வதைத் தவிர்ப்பதற்காக அவர்கள் துணிகரமான பலாத்காரத்துடன் இரட்சகரின் போதனைகளின்மீது குறைகூற முயன்றனர். அவரது வல்லமை இரக்கம் ஆகியவைகளின் சான்று அவர்களை அதிகமாக

எரிச்சலடையச் செய்தது. இரட்சகர் அற்புதங்களைச் செய்வதை அவர்களால் தடுக்கமுடியவில்லை. அவரது போதனைகளை அவர்களால் அமைதிப்படுத்த முடியவில்லை. ஆனால் அவரைப்பற்றித் தவறாக எடுத்துக்காட்டவும், அவருடைய வார்த்தைகளை பெய்யாக்கவும் அவர்கள் தங்களுடைய வல்லமைக்குட்பட்ட அனைத்தையும் செய்தனர். அப்படியிருந்தும், மன உணர்த்துதலைக் கொண்டுவரும் ஆவி அவர்களைப் பின்தொடர்ந்திருந்தது. அதன் வல்லமையைத் தடுத்துநிற்கச்செய்வதற்கு அவர்கள் அநேக தடுப்புச் சுவர்களை எழுப்பவேண்டியதாக இருந்தது. மனித இருதயத்தின்மீது செயலாற்றக்கூடிய மாபெரும் வல்லமையின் முகவர் செயலாற்றியிருந்தார். ஆனாலும் அவர்கள் இணங்காதவர்களாகவே இருந்தனர். (4)

மனிதர்களின் கண்களைக் குருடாக்கி, இருதயங்ளைக் கடினப்படுத்துவது தேவன் அல்ல. அவர்கள் தங்களுடைய தவறைத் திருத்திப் பாதுகாப்பான பாதையில் தங்களை நடத்தும்படி அவர் ஒளியை அனுப்புகிறார். இந்த ஒளியை புறக்கணிப்பதினால்தான் கண்கள் குருடாகின்றன. இருதயம் கடினப்படுகின்றது. இந்தச் செயற்பாடு அடிக்கடி கொஞ்சமானதாகவும் உணரமுடியாததாகவும் உள்ளது. தேவனுடைய வார்த்தையின்மூலமாகவும்அவரது ஊழியக்காரர்களின்மூலமாகவும் அல்லது ஆவியானவரின் நேரடியான ஏதுகரத்தின்மூலமாகவும் ஆத்துமாவிற்கு ஒளி வருகிறது. ஆனால் ஒளியின் ஒரு கதிர் மதிக்கப்படாமல் போகும்போது, ஆவிக்குரிய உணர்வில் ஒரு பகுதி மரத்துப்போகிறது. அதன் காரணமாக, ஒளியின் இரண்டாவது வெளிப்படுத்தல் முன்னையதைவிட மங்கலாகத் தெரிகிறது. அதனால் ஆத்துமாவில் இருள் பெருகி, இருண்டுவிடுகிறது. இந்த யூதத்தலைவர்களின் காரியமும் இப்படிப்பட்டதாகவே இருந்தது. ஒரு தெய்வீக வல்லமை கிறிஸ்துவிடம் இருந்தது என்பதை மனதிலே உணர்திருந்தார்கள். ஆனால் சத்தியத்தை எதிர்ப்பதற்காக அவர்கள் பரிசுத்த ஆவியின் செயல்களை சாத்தானின் செயல்கள் என்று கூறினார்கள். இதைச் செய்வதில் அவர்கள் வஞ்சகத்தைத் திட்டமிட்டுத் தெரிந்துகொண்டார்கள். அவர்கள் தாங்களாகவே சாத்தானுக்கு இணங்கினதால் அதற்குப்பின்னர் சாத்தானின் வல்லமையினால் கட்டுப்படுத்தப்பட்டனர். (5)

பரிசுத்த ஆவிக்கு விரோதமான பாவத்தைப்பற்றிய கிறிஸ்துவின் எச்சரிப்பு வீணான வாத்தைகள் மற்றும் தீய வார்த்தைகளுக்கு எதிரான எச்சரிப்புடன் நெருங்கிய தொடர்புடையதாக இருக்கிறது. இருதயத்தில் என்ன இருக்கிறது என்பதற்கு அடையாளமாக வார்த்தைகள் உள்ளன. "இருதயத்தின் நிறைவினால் வாய் பேசுகிறது;" ஆனால் வார்த்தைகள் குணத்தின் சுட்டிக்காட்டுதலைவிட அதிகமானதாக உள்ளது. பண்பின்மீது

எதிராகச் செயலாற்றும் வல்லமையுடையதாக அவை உள்ளன. மனிதர்கள் அவர்களது சொந்த வார்த்தைகளினாலேயே மாற்றத்திற்கு உட்படுத்தப்படுகின்றனர். அடிக்கடி சாத்தானால் உண்டுபண்ணப்படும் வினாடிநேர உணர்ச்சித் தூண்டுதலினால் அவர்கள் உண்மையாக நம்பாதவைகளை உணர்த்தி, பொறாமையானவைகளையும் ஆதாரமற்ற பழிகளையும் கூறுவதற்கு இடங்கொடுக்கின்றனர். எனவே அப்படிப்பட்ட வெளிக்காட்டல்கள், எண்ணங்களின்மீது திரும்பச்செயல்படுகின்றன.அவர்கள் தங்களுடைய வார்த்தைகளினால் வஞ்சிக்கப்பட்டு, பேசிய உண்மை சாத்தானின் தூண்டுதலினால் உண்டானது என்று நம்ப ஆரம்பிக்கின்றனர். ஒரு தடவை தங்களுடைய கருத்தையோ முடிவையோ அறிவித்தபின்பு அதை மறுப்பதற்கு அவர்கள் அதிகமான அகந்தையுள்ளவர்களாக இருந்து, தங்களது நிலையே சரியானது என்று மெய்ப்பிக்க முயன்று தங்களுடைய நிலை சரியானதுதான் என்று நம்புமளவிற்கு வந்துவிடுகின்றனர்.தெய்வீக ஒளியைப்பற்றி சந்தேகமான ஒரு வார்த்தையைக் கூறுவதும் அதைக்குறித்து கேள்விகேட்பதும் குற்றங்கண்டுபிடிப்பதும் மிகவும் ஆபத்தானது. கவனமற்ற, அவபக்தியான விதத்தில் குற்றஞ்சாட்டும் வழக்கம், பக்தியின்மையையும் அவநம்பிக்கையையும் வளர்த்து, குணத்திலே எதிர்விளைவை ஏற்படுத்திவிடுகிறது. இப்படிப்பட்ட பழக்கத்தில் திளைக்கும் அநேகர் ஆபத்தை அறியாதவர்களாக பரிசுத்த ஆவியானவரின் ஊழியத்தில் குற்றங்கண்டுபிடித்து தள்ளிப்போடுமளவிற்கு ஆயத்தமாகிறார்கள். “மனுஷர் பேசும் வீணான வார்த்தைகள் யாவையும் குறித்து நியாயத்தீர்ப்பு நாளிலே கணக்கொப்புவிக்கவேண்டும் என்று உங்களுக்குச் சொல்லுகிறேன். ஏனெனில், உன் வார்த்தைகளினாலே நீதிமான் என்று தீர்க்கப்படுவாய்; அல்லது உன் வார்த்தைகளினாலே குற்றவாளி என்று தீர்க்கப்படுவாய்” என்று இயேசு கூறினார். (6)

அதன்பின் அவரது வார்த்தைகளினால் உணர்த்தப்பட்டவர்களுக்கும், அவைகளைச் சந்தோஷத்துடன் கேட்டிருந்தும் தங்களுக்குள் வாழும் பரிசுத்த ஆவியானவருக்குத் தங்களை ஒப்புக்கொடுக்காதவர்களுக்கும் ஒரு எச்சரிப்பையும் சேர்த்துக் கூறினார். தடைசெய்வதினால் மட்டுமின்றி அலட்சியஞ்செய்வதினாலுங்கூட ஆத்துமா அழிக்கப்படுகிறது. “அசுத்த ஆவி ஒரு மனுஷனை விட்டுப் புறப்படும்போது, வறண்ட இடங்களில் அலைந்து, இளைப்பாறுதல் தேடியும் கண்டடையாமல்: நான் விட்டுவந்த என் வீட்டுக்குத் திரும்பிப்போவேன் என்று சொல்லி; அங்கே வந்து, அந்த வீடு வெறுமையாகவும், பெருக்கி, ஜோடிக்கப்பட்டதாகவும் இருக்கக்கண்டு, திரும்பிப்போய், தன்னிலும் பொல்லாத வேறு ஏழு ஆவிகளைத் தன்னோடே கூட்டிக்கொண்டுவந்து, உட்புகுந்து, அங்கே குடியிருக்கும்; அப்பொழுது,

அந்த மனுஷனுடைய முன்னிலைமையிலும் அவன் பின்னிலைமை அதிக கேடுள்ளதாயிருக்கும்; அப்படியே இந்தப் பொல்லாத சந்ததியாருக்கும் சம்பவிக்கும் என்றார்.” (7)

சாத்தானின் கட்டுப்பாட்டைத் தற்சமயத்திற்குத் தகர்த்துவிட்டதுபோல காணப்படும் மனிதர் இன்று இருப்பதுபோல கிறிஸ்துவின் நாட்களிலும் அநேகர் இருந்தனர். ஆத்துமாவின்மீது ஆளுகைசெய்திருந்த தீய ஆவிகளின் பிடியிலிருந்து அவர்கள் தேவ கிருபையால் விடுதலைசெய்யப்பட்டிருந்தனர். அவர்கள் தேவ அன்பில் களிகூர்ந்திருந்தனர். ஆனால் கற்பாறையான நிலம் என்னும் உவமையைக் கேட்டிருந்தவர்களைப்போல அவரது அன்பில் தங்கித் தரித்திருக்கவில்லை. கிறிஸ்து அவர்களுடைய இருதயத்தில் வாழும்படி அவர்கள் தங்களை நாள்தோறும் தேவனுக்கு ஒப்புக்கொடுக்கவில்லை. அதனால் தீய ஆவி திரும்பி வந்தபோது, தன்னிலும் பொல்லாத ஏழு ஆவிகளைக் கூட்டிக்கொண்டுவந்தது. அவர்களனைவரும் முற்றிலுமாகத் தீய வல்லமையினால் ஆளுகைசெய்யப்பட்டனர். (8)

ஆத்துமா தானாக கிறிஸ்துவிடம் சரணடையும்போது, அந்தப் புதிய இருதயத்தை ஒரு புதிய வல்லமை பற்றிக்கொள்ளுகிறது. தன்னால் ஒருபோதும் நிறைவேற்றமுடியாத ஒருமாறுதல் உண்டுபண்ணப்படுகிறது. அது இயற்கைக்கு மேலான ஒரு செயலாக இருந்து, மானிட இயல்பிலே இயற்கைக்கு அப்பாற்பட்ட தெய்வீக அருள் நிகழ்வின் மூலக்கூறினைப் புகுத்திவிடுக்கிறது. கலகஞ்செய்யும் இந்த உலகில், தன்னைக் கிறிஸ்துவிற்கு ஒப்படைத்துவிட்ட ஆத்துமா அவரது சொந்தக் கோட்டையாகிவிடவே அவரது அதிகாரத்தைத்தவிர வேறொரு அதிகாரமும் அதற்குள் அறியப்படலாகாது என்று அவர் விரும்புகிறார். பரலோக ஏதுகரங்களின் ஆதிக்கத்திற்குள் இவ்விதமாக வைக்கப்பட்டிருக்கும் ஒரு ஆத்துமா, சாத்தானின் தாக்குதல் கள் உள்ளே நுழையமுடியாத ஒரு இடத்தில் இருக்கிறது. நாம் கிறிஸ்துவின் கட்டுப்பாட்டிற்கு இணங்காதவரை தீய ஒன்றினால் ஆளுகை செய்யப்படுபவர்களாக இருப்போம். உலகின் மேலாதிக்கத்திற்காக ஒன்றினை ஒன்று எதிர்த்துப் போர்செய்துகொண்டிருக்கும் இந்த இரு பெரும் வல்லமைகளில் ஒன்றின் கட்டுப்பாட்டின்கீழ் தவிர்க்கமுடியாதவிதத்தில் நாம் இருப்போம். இருளின் ஆளுகையின்கீழ் வருவதற்காக அதற்குச் சேவை செய்வதை நாம் திட்டமிட்டுத் தெரிந்துகொள்ளவேண்டிய அவசியம் இல்லை. ஒளியின் இராஜ்யதுடனுள்ள நமது பிணைப்பை நாம் அலட்சியப்படுத்துவதுமட்டுமே போதுமானதாக இருக்கும். பரலோக ஏதுகரங்களுடன் நாம் ஒத்துழைக்காவிட்டால், சாத்தான் நமது இருதயத்தைக் கைப்பற்றி, அதைத் தனது தங்குமிடமாக்கிக்கொள்ளுவான்.

கிறிஸ்துவின் நீதியின்மேலுள்ள விசுவாசத்தின்மூலமாக, நமது இருதயத்தில் வாசம்செய்யும் கிறிஸ்து ஒருவர்மட்டுமே, தீமைக்கு எதிரான நமது பாதுகாப்பாக இருக்கிறார். நாம் உயிரோட்டமுள்ளவர்களாக தேவனுடன் பிணைக்கப்பட்டவர்களாக இராதவரை, தூய்மையற்ற சுயத்தின்மீதுள்ள அன்பு, சுயத்தின் தங்குதடையற்ற இன்பங்களை நுகருதல், பாவஞ்செய்வதற்கான சோதனை ஆகிய தூய்மையாக்கப்படாத விளைவுகளை நம்மால் ஒருபோதும் தடைசெய்ய இயலாது. அநேக கெட்ட பழக்கங்களை நாம் விட்டுவிடலாம். தற்சமயத்திறகு நாம் சாத்தானின் உறவைவிட்டுப் பிரியலாம். ஆனால் விநாடிதோறும் நாம் அவரிடம் சரணடைந்து, தேவனுடன் ஜீவனுள்ள ஒரு தொடர்பில்லாதவர்களாக இருந்தால், நாம் மேற்கொள்ளப்பட்டுப்போவோம். கிறிஸ்துவுடன் நேரயடியான ஒரு அறிமுகமில்லாமல் தொடர்ந்து தொடர்பற்றவர்களாக இருந்தால், எதிராளியின் இரக்கத்திற்குள் இருந்து முடிவிலே அவன் சொல்லுவதைச் செய்பவர்களாக இருப்போம். (9)

அவனது பின்னிலைமை முன்னிலைமையைக் காட்டிலும் அதிகக் கேடுள்ளதாக இருக்கும். அப்படியே இந்தப் பொல்லாத சந்ததியாருக்கும் இருக்கும் என்று இயேசு கூறினார். கிருபையின் ஆவிக்கு எதிராக இரக்கத்தின் அழைப்பை அலட்சியப்படுத்தினவர்களைப்போன்ற கடினமானவர்கள் ஒருவரும் இல்லை. பரிசுத்த ஆவிக்கு விரோதமாக மிகப் பொதுவாக வெளிக்காட்டப்படும் பாவம், மனந்திரும்பும்படி பரலோகம் கொடுக்கும் அழைப்பை தொடர்ந்து அலட்சியப்படுத்துவதாகும். கிறிஸ்துவைப் புறக்கணிப்பதில் நாம் எடுத்துவைக்கும் ஒவ்வொரு அடியும் மேலும் இரட்சிப்பை புறக்கணிப்பதற்காகவும் பரிசுத்த ஆவியானவருக்கு விரோதமாக பாவம் செய்வதற்காகவும் எடுத்துவைக்கப்படும் அடியாக உள்ளது. மனந்திரும்புதலுக்காக பரலோகம் விடுக்கும் ஒவ்வொரு அழைப்பையும் விடாப்பிடியாக அலட்சியம்செய்வதே பரிசுத்த ஆவிக்கு விரோதமாக மிகச் சாதாரணமாகச் செய்யப்படும் பாவத்தின் வெளிப்படையான நிலையாகும். (10)

கிறிஸ்துவை விலக்கிவைத்ததில் யூத மக்கள் மன்னிக்கமுடியாத பாவத்தைச் செய்திருந்தனர். அதைப்போலவே இரக்கத்தின் அழைப்பை மறுதலிப்பதினால் நாமும் அதே தவறைச் செய்யலாம். அவரால் பிரதிநிதிகளாக அனுப்பப்பட்ட தூதர்களின் வார்த்தைகளை நாம் கவனிக்க மறுத்து, அதற்குப் பதிலாக கிறிஸ்துவிடமிருந்து ஆத்துமாவைத் தூரமாக விலக்கும் சாத்தானின் ஏதுகரங்களின் வாாத்தைகளை நாம் கவனிக்கும்போது, நாம் ஜீவாதிபதிக்கு அவமதிப்பைக்கொடுத்து, சாத்தானின் சங்கத்திற்கு முன்பாகவும் பரலோகப் பிரபஞ்சத்திற்கு முன்பாகவும் அவரை வெட்கப்படவைக்கிறோம். ஒருவன்

இப்படிச் செய்துகொண்டிருக்கும்வரை, அவனால் நம்பிக்கையையும் மன்னிப்பையும் காணமுடியாது. இறுதியாக தேவனுடன் ஒப்புரவாகுகின்ற ஆசைகள் அனைத்தையும் அவன் இழந்துவிடுவான். (11)

இயேசு மேலும் மக்களுக்குப் போதித்துக்கொண்டிருக்கும்போது, அவரது தாயாரும் சகோரரர்களும் அவரைப் பார்க்கும் ஆசையுடன் வெளியில் காத்துக்கொண்டிருக்கின்றனர் என்னும் செய்தியை சீடர்கள் அவரிடம் கொண்டுவந்தனர். அவர்களுடைய இருதயத்தில் என்ன இருக்கிறது என்பதை அவர் அறிந்து: "என் தாயார் யார்? என் சகோதரர் யார்? என்று சொல்லி, தம்முடைய கையைத் தமது சீஷர்களுக்கு நேரே நீட்டி: இதோ, என் தாயும் என் சகோதரரும் இவர்களே! பரலோகத்திலிருக்கிற என் பிதாவின் சித்தத்தின்படி செய்கிறவன் எவனோ, அவனே எனக்குச் சகோதரனும் சகோதரியும் தாயுமாய் இருக்கிறான் என்றார்." (12)

விசுவாசத்தினால் கிறிஸ்துவைப் பெற்றுக்கொள்ளும் அனைவரும் மனித உறவைவிட நெருக்கமான உறவினால் அவருடன் ஐக்கியப் பட்டிருக்கின்றனர். அவர் அவரது பிதாவுடன் ஒன்றாக இருப்பதுபோல அவர்களும் அவருடன் ஒன்றாக இருப்பார்கள். அவருடைய தாயார் அவளுடைய இயற்கையான உறவின்மூலமாக அவருக்கு உறவினளாக இருந்ததைவிட, அவரது விசுவாசியாக அவரது வார்த்தைகளின்படிச் செய்பவளாக மேலும் நெருக்கமும் இரட்சிக்கப்படக்கூடிய உறவையும் உடையவளாக இருந்தாள். அவரை அவர்களது சொந்த இரட்சகராக ஏற்றுக்கொள்ளாதவரையிலும் அவருடைய சகோதரர்கள் அவருடனுள்ள உறவினால் எந்த நன்மையையும் பெற்றுக்கொள்ளமாட்டார்கள். (13)

அவருடைய உறவினர்கள் அவரைப் பரலோகத்திலிருந்து வந்தவர் என்று நம்பி, தேவனுடைய ஊழியத்தைச் செய்வதில் அவருடன் ஒத்துழைத்திருந்தார்களானால், அவர்களிடமிருந்து எப்படிப்பட்ட ஒரு ஆதரவை கிறிஸ்து பூமிக்குரிய உறவில் கண்டிருந்திருப்பார்! அவர்களுடைய நம்பிக்கையின்மை பூமிக்குரிய இயேசுவின் வாழ்க்கையின்மீது ஒரு இருளைப் படியச்செய்தது. நமக்காக அவர் பருகிய கசப்புமிக்க வேதனையின் பாத்திரத்தின் ஒரு பகுதியாக அது இருந்தது. (14)

சுவிசேஷத்திற்கு எதிரான நெருப்பாக மனித இருதயங்களில் எரிந்த பகை, தேவகுமாரனால் மிகத்தெளிவாக உணரப்பட்டது. அவரது இல்லத்தில் அது அதிகமான வேதனையைத் தருவதாக இருந்தது. ஏனெனில் அவரது இருதயம் அன்பினாலும் நேசத்தினாலும் நிறைந்திருந்தது. குடும்ப உறவில் உள்ள அன்பான தன்மையை அவர் வரவேற்றிருந்தார். அவரது சகோதரர்கள் தங்களுடைய யோசனைகளுக்கு அவர் இணங்கவேண்டும்

என்று விரும்பியிருந்தனர். அப்படிப்பட்ட ஒரு நடத்தை அவரது தெய்வீகப் பணிக்கு முற்றிலும் எதிரானதாக இருந்திருக்கும். தங்களுடைய ஆலோசனை அவருக்குத் தேவைப்படுகிறது என்னும் விதத்தில் அவர்கள் அவரைப் பார்த்தனர். அவர்கள் தங்களுடைய மனிதக் கண்ணோட்டத்தில் அவரை மதிப்பிட்டு, வேதபாரகர்களும் பரிசேயர்களும் ஒப்புக்கொள்ளக்கூடிய காரியங்களைமட்டும் அவர் பேசினால், அவரது வார்த்தைகளினால் உண்டான ஒவ்வாத எதிர்வாதங்களைத் தடுத்திருக்கலாம் என்று எண்ணினார்கள். தெய்வீக அதிகாரத்தைத் தம்மீது உரிமைபாராட்டுவதில் அவர் தன்னிச்சையாக இருக்கிறார் என்று அவர்கள் எண்ணினார்கள். அவரைக் குற்றப்படுத்துவதற்கான சந்தர்ப்பத்தைப் பரிசேயர்கள் தேடிக்கொண்டிருக்கின்றனர் என்பதை அவர்கள் அறிந்திருந்தனர். அவர் அவர்களுக்குப் போதுமான சந்தர்ப்பதைக் கொடுத்திருந்தார் என்பதையும் அவர்கள் உணர்ந்திருந்தனர். (15)

தங்களது குறைவான அளவுகோலினால் அவர் நிறைவேற்றிவந்திருந்த ஊழியத்தின் ஆழத்தை அவர்களால் அறியமுடியவில்லை. எனவே அவர்களால் அவரது சோதனைகளில் அனுதாபம் காட்டமுடியவில்லை. அவர்களுடைய முரட்டுத்தனமாக பாராட்டுதலில்லாத சொற்கள், அவரது பண்பைப்பற்றின சரியான உணர்வை அவர்கள் பெற்றிருக்கவில்லை என்பதைக் காட்டியது. தெய்வத்துவம் மானுடத்துடன் கலந்திருந்தது என்பதை அவர்கள் அறியாமலிருந்தனர். துக்கத்தால் நிறைந்தவராக அவர் இருப்பதை அவர்கள் அடிக்கடி கண்டிருந்தனர். அவருக்கு ஆறுதல் அளிப்பதற்குப்பதிலாக, அவர்களுடைய ஆவியும் வார்த்தைகளும் அவரது இருதயத்தைக் காயப்படுத்துவதை மாத்திரமே செய்தது. அவரது கூருணர்வு சித்திரவதைக்குட்படுத்தப்பட்டு, அவரது இலட்சியங்கள் தவறாகப் புரிந்துகொள்ளப்பட்டிருந்தன. அவரது ஊழியம் புரிந்துகொள்ளக்கூடாததாக இருந்தது. (16)

காலத்தால் தொய்ந்து நைந்து கந்தையாகிப்போயிருந்த பரிசேயர் களின் தத்துவத்தை அவரது சகோதரர்கள் அடிக்கடி முனைப்புடன் அவர்முன் வைத்தார்கள். சகல சத்தியங்களையும் சகல இரகசியங்களையும் அறிந்திருந்த அவருக்கு, அவர்களால் போதனை செய்யமுடியும் என்று துணிச்சலுடன் எண்ணத்தொடங்கியிருந்தார்கள். அவர்களால் புரிந்துகொள்ள முடியாதவைகளைப்பற்றி தாராளமாகப் பழித்துக்கூறியிருந்தார்கள். அவர்களது நிந்தனைகள் அவரை ஊடுருவிக் குத்தவே, அவரது ஆத்துமா களைப்புற்றதாகவும் துன்பப்பட்டதாகவும் இருந்தது. தேவன் மாம்சத்தில் அவர்களுடன் இருந்தபோது, அவரை அறியாமலிருந்த

அவர்கள் தேவன்மீதுள்ள விசுவாசத்தை அறிக்கைசெய்து தேவனை நியாயப்படுத்துவதாக எண்ணியிருந்தனர். (17)

இந்தக் காரியங்கள் அவர் நடந்துசெல்லவேண்டியிருந்த பாதையை முட்களால் நிரப்பின. அவரது சொந்த வீட்டிலே அவரைப்பற்றின தவறான புரிந்துகொள்ளுதலின்காரணமாக, அப்படியில்லாத ஒரு இடத்திற்குச்செல்லுவது இளைப்பாறுதல் தரும் என்னும் அளவிற்கு அவர் வேதனையடைந்தார். அவர் சந்திக்க விரும்பிய ஒரு வீடு இருந்தது. அது லாசரு, மரியாள், மார்த்தாள் ஆகியோரின் வீடு. ஏனென்றால் விசுவாசமும் அன்புமிக்க அந்தச் சூழ்நிலையில் அவரது ஆவி இளைப்பாறியிருந்தது. இருந்தபோதிலும், அவரது தெய்வீக ஊழியத்தைப்பற்றிப் புரிந்துகொள்ளக்கூடிய ஒருவர்கூட பூமியில் இருக்கவில்லை. அல்லது மனித இனத்திற்காக அவர் சுமந்திருந்த பாரத்தை ஒருவரும் அறியவில்லை. அடிக்கடித் தனியாக இருந்து அவரது பரலோகத் தந்தையுடன் தொடர்புகொள்ளுவது ஒன்றினால் மட்டுமே அவரால் இளைப்பாறுதலைக் காணமுடிந்தது. (18)

கிறிஸ்துவிற்காகப் பாடுகளை அனுபவிக்கும்படி அழைக்கப்பட்டவர்கள் தங்கள் சொந்த வீட்டிலேயே தவறாகப் புரிந்துகொள்ளப்படுவதையும், நம்பிக்கையின்மையையும் தாங்கவேண்டியிருப்பவர்கள் இவைகளை எல்லாம் இயேசு தாங்கியிருக்கிறார் என்னும் எண்ணத்தினால் ஆறுதலைக் கண்டடையலாம். அவர்களுக்காக அவர் மன உருக்கத்தினால் அசைக்கப் பட்டார். அவரில் தோழமையைக் காணும்படி அவர் அழைக்கிறார். அவர் இளைப்பாறுதலை எங்கு கண்டாரோ, அதே இடத்தில் பிதாவுடன் உள்ள தொடர்பினால் அவர்களும் இளைப்பாறுதலைக் காணலாம் என்கிறார். (19)

கிறிஸ்துவைத்தங்களுடைய சொந்த இரட்சகராக ஏற்றுக்கொள்பவர்கள், வாழ்க்கையின் சோதனைகளைத் தனிமையாக அனுபவிக்கும்படி அநாதைகளைப்போல விட்டுவிடப்படுவதில்லை. அவர்களைப் பரலோகக் குடும்பத்தின் அங்கத்தினர்களாக அவர் ஏற்றுக்கொள்கிறார். அவருடைய பிதாவைத் தங்களுடைய பிதா என்று அழைக்கும்படி அவர் அவர்களை அழைக்கிறார். தேவனுடைய இருதயத்திற்கு மிகவும் அருமையானவர்களாக இருந்து, மிகவும் மென்மையும் நிலைத்திருக்கக்கூடியதுமான பிணைப்பினால் அவருடன் கட்டப்பட்டிருக்கும் அவரது “சிறுபிள்ளைகளாக” அவர்கள் உள்ளனர். தெய்வீகத்தன்மை மனுஷீகத்தன்மையைவிட மேலானதாக இருப்பதினால், மனிதத் தாய் தகப்பனின் அன்பைவிட, அதிகமான அன்பை அவர்கள்மீது உடையவராக அவர் இருக்கிறார். (20)

இஸ்ரவேலர்களுக்குக் கொடுக்கப்பட்ட கற்பனைகளில் தமது மக்களுடன் கிறிஸ்துவின் உறவிற்கு ஒரு அழகிய பொருட்பாடம்

கொடுக்கப்பட்டுள்ளது. வறுமையினால் ஒரு எபிரெயன் தனது சுதந்திரவீதத்தை இழக்கும்படி வற்புறுத்தப்படும்போது, தன்னை ஒரு அடிமையாக அவன் விற்க நேரிடும்போது, அவனையும் அவன் சுதந்திரவீதத்தையும் மீட்கும் கடமை, அவனுக்கு நெருங்கிய உறவினன்மீது விழுந்திருந்தது. (லேவியராகமம் 25:25; 47:49; ரூத் 2:20 காண்க). அப்படியே, பாவத்தின்மூலமாக தொலைந்துபோன நம்மையும் நமது சுதந்திரவீதத்தையும் மீட்கும் கடமை, "நமக்கு நெருங்கிய உறவினரான" அவர்மீது விழுந்தது. நம்மை மீட்பதற்காகவே அவர் நமது உறவினரானார். தகப்பன், தாய், சகோதரன், நண்பன் அல்லது நேசன் ஆகியவர்களைவிட நமக்கு மிக நெருக்கமானவராக நமது இரட்சகராகிய கர்த்தர் இருக்கிறார். "இப்போதும் யாக்கோபே, உன்னைச் சிருஷ்டித்தவரும், இஸ்ரவேலே, உன்னை உருவாக்கினவருமாகிய கர்த்தர் சொல்லுகிறதாவது: பயப்படாதே; உன்னை மீட்டுக்கொண்டேன்; உன்னைப்பேர்சொல்லி அழைத்தேன்; நீ என்னுடையவன். நீ என் பார்வைக்கு அருமையானபடியினால் கனம்பெற்றாய்; நானும் உன்னைச் சிநேகித்தேன், ஆதலால் உனக்குப் பதிலாக மனுஷர்களையும், உன் ஜீவனுக்கு ஈடாக ஜனங்களையும் கொடுப்பேன்"—ஏசாயா 43:1,4. (21)

கிறிஸ்து அவரது சிங்காசனத்தைச்சூழ இருக்கும் பரலோகவாசிகளை நேசிக்கிறார். ஆனால் அவர் நம்மை நேசித்த பெரும் அன்பிற்கு எது ஈடாகும்? அதை நம்மால் புரிந்துகொள்ளமுடியாது. ஆனால் நமது சொந்த அனுபவத்தினால் அது உண்மை என்பதை அறிந்துகொள்ளமுடியும். அவருடன் உள்ள உறவினன் என்னும் உறவை நாம் பற்றிக்கொண்டிருப்போமானால், நமது கர்த்தருக்குச் சகோதரிகளும் சகோதரர்களுமாக இருப்பவர்களிடம் நாம் எப்படிப்பட்ட மென்மையானவர்களாக இருப்போம்! நமது தெய்வீக உறவின் உரிமைகளை இனங்கண்டுகொள்வதில் நாம் விரைவானவர்களாக இருக்கவேண்டாமா? தேவனுடைய குடும்பத்திலே சுவீகாரமாக எடுத்துக்கொள்ளப்பட்ட நாம், நமது உறவினர்களையும் கனப்படுத்தவேண்டாமா? (22) ★

# 34

# அழைப்பு!

**மத்தேயு 11:28–30**

**(The Desire of Ages, pp. 328–332)**

“வருத்தப்பட்டுப் பாரஞ்சுமக்கிறவர்களே! நீங்கள் எல்லாரும் என்னிடத்தில் வாருங்கள்; நான் உங்களுக்கு இளைப்பாறுதல் தருவேன்.” (1)

ஆறுதலளிக்கும் இந்த வார்த்தைகள் இயேசுவைப் பின்தொடர்ந்த திரளானவர்களுக்குக் கூறப்பட்டது. இரட்சகர் அவர்மூலமாகமட்டுமே தேவனைப்பற்றின அறிவை மனிதர்கள் அடைந்துகொள்ள முடியும் என்று கூறியிருந்தார். பரலோகக் காரியங்களைப்பற்றின அறிவைப் பெற்றுக்கொண்டவர்களாக சீடர்கள் இருந்தனர் என்னும் கருத்தில் அவர்களிடம் அவர் பேசியிருந்தார். அவரது விசாரிப்பிலும் அன்பிலும் இருந்து புறம்பாக்கப்பட்டுள்ளதாக ஒருவரும் உணரும்படி அவர் விட்டுவிடவில்லை. வருத்தப்பட்டுப் பாரஞ்சுமக்கும் அனைவரும் அவரிடம் வரலாம். (2)

வேதபாரகர்களும் ரபிமார்களும் சமயச்சடங்குகளை அவைகளின் வழக்கத்தின்படியும் ஒழுங்கின்படியும் இம்மியளவும் பிசகாமல் செய்வதை நோக்கமாகக்கொண்டிருந்து, பாவப்பரிகாரச் செயல்களினால் ஒருபோதும் திருப்தியடையாத உணர்வினைக் கொண்டிருந்தனர். ஆயக்காரர்களும் பாவிகளும் பூமிக்குரிய காரியங்களைப்பற்றின உணர்வினால் திருப்தியுடையவர்களாக இருப்பதுபோல தங்களைப் பாவித்துக்கொண்டு ஆனால் தங்களுடைய இருதயங்களுக்குள் அவநம்பிக்கையையும் பயத்தையும் உடையவர்களாக இருந்தனர். துன்பப்பட்டிருந்தவர்கள், பாரமிக்க இருதயத்தை உடையவர்கள், நம்பிக்கை இழந்தவர்கள், ஆத்துமாவின் ஏக்கத்தை பூமிக்குரிய மகிழ்ச்சியினால் அமைதிப்படுத்த வகைதேடியிருந்தவர்கள் ஆகியவர்களை இயேசு நோக்கி, அவர்களனைவரும் அவரில் இளைப்பபாறுதலைக் காணும்படி அழைத்தார். (3)

“என் நுகத்தை உங்கள்மேல் ஏற்றுக்கொண்டு, என்னிடத்தில் கற்றுக்கொள்ளுங்கள்; அப்பொழுது, உங்கள் ஆத்துமாக்களுக்கு இளைப் பாறுதல் கிடைக்கும்” என்று பாடுபட்டுக்கொண்டிருந்தவர்களை அவர் அழைத்தார். (4)

இந்த வார்த்தைகளினால் கிறிஸ்து ஒவ்வொரு மனிதனுடனும் பேசிக்கொண்டிருக்கிறார். அவர்கள் அறிந்திருக்கிறார்களோ இல்லையோ அனைவரும் பாரம் சுமந்து களைத்துப்போனவர்களாக உள்ளனர். கிறிஸ்து ஒருவரால் மட்டுமே நீக்கிவிடக்கூடிய பாரத்தால் அமிழ்த்தப்பட்டவர்களாக அனைவரும் உள்ளனர். நாம் சுமக்கும் சுமைகள் அனைத்திலும் பாவபாரம்தான் மிக அதிகமான பாரமிக்கதாக உள்ளது. இந்த பாரத்தைச் சுமக்கும்படி நாம் அப்படியே விட்டுவிடப்பட்டால், அது நம்மை நொறுக்கிவிடும். ஆனால் பாவமற்ற ஒருவர் நமது இடத்தை எடுத்துக்கொண்டார். “கர்த்தரோ நம்மெல்லாருடைய அக்கிரமத்தையும் அவர்மேல் விழப்பண்ணினார்”—ஏசாயா 53:6. நமது குற்றங்களின் பாரத்தை அவர் சுமந்துகொண்டார். களைப்புற்ற நமது தோள்களில் இருந்து அவர் அந்த பாரத்தை எடுத்துக்கொள்ளுவார். அவர் நமக்கு இளைப்பாறுதல் தருவார். கவலை, துயரம் ஆகியவைகளின் பாரத்தையுங்கூட அவர் சுமந்துகொள்வார். ஏனெனில் அவர் நம்மை அவரது இருதயத்தில் சுமந்துகொண்டிருக்கிறார். (5)

நமது இனத்தின் மூத்த சகோதரர் நித்திய சிங்காசனத்தில் இருக்கிறார். அவரைத் தனது இரட்சகராக எண்ணி, தன் முகத்தை அவர்பால் திருப்பும் ஒவ்வொரு ஆத்துமாவையும் அவர் பார்க்கிறார். மனித இனத்தின் பலவீனங்கள் என்ன? நமது தேவைகள் என்ன? நமது சோதனைகளின் பலன் எங்கே இருக்கிறது? என்பவைகளையெல்லாம் அவர் அனுபவத்தினால் அறிந்திருக்கிறார். ஏனெனில் அவர் எல்லாவற்றிலேயும் நம்மைப்போல் சோதிக்கப்பட்டும் பாவமற்றவராக இருக்கிறார். நடுங்கிக் கொண்டிருக்கும் தேவனுடைய பிள்ளைகளாகிய உங்களை அவர் விழிப்போடு கவனித்துக்கொண்டிருக்கிறார். நீங்கள் சோதிக்கப்படுகிறீர்களா? அவர் உங்களை விடுவிப்பார். நீங்கள் பலவீனரா? அவர் உங்ளைப் பலப்படுத்துவார். நீங்கள் அறியாமை உள்ளவர்களா? அவர் உங்களுக்கு அறிவைப் புகட்டுவார். நீங்கள் பயப்படுகிறீர்களா? அவர் சுகப்படுத்துவார். “அவர் நட்சத்திரங்களின் இலக்கத்தை எண்ணி, அவைகளுக்கெல்லாம் பேரிட்டு அழைக்கிறார். இருதயம் நொறுங்குண்டவர்களைக் குணமாக்குகிறார், அவர்களுடைய காயங்களைக் கட்டுகிறார்” சங்கீதம் 147:4,3. “என்னிடத்திற்கு வாருங்கள்” என்பது அவருடைய அழைப்பாக உள்ளது. உங்களுடைய கவலைகளும் சோதனைகளும் எப்படிப்பட்டவையானாலும் சரி, உங்கள் காரியங்களைக்

கர்த்தருக்கு முன்பாக வெளிப்படையாக வையுங்கள். உங்களுடைய ஆவி அவைகளைத் தாங்கிக்கொள்ளும் பலத்தைப் பெறும். திகைப்பு சங்கடம் ஆகியவைகளிலிருந்து நீங்கள் விடுதலையடையும்படி உங்களுக்குப் பாதை திறக்கப்படும். நீங்கள் எந்த அளவிற்கு உங்களுடைய பலவீனத்தையும் உதவியற்ற நிலையையும்பற்றி அறிந்திருக்கிறீர்களோ, அந்த அளவிற்கு அவருடைய பலத்தினால் பலமடைவீர்கள். உங்களது பாரங்கள் எந்த அளவிற்கு அதிக கனமுள்ளவைகளாக இருக்கின்றனவோ, அந்த அளவிற்கு அந்தச் சுமைகளை பாரம் சுமப்பவர்மீது வைத்துவிடுவதினால் கிடைக்கும் இளைப்பாறுதல் அதிக ஆசீர்வாதமுடையதாக இருக்கும். கிறிஸ்து வழங்க முன்வந்திருக்கும் இளைப்பாறுதல் நிபந்தனைக்குட்பட்டதாக உள்ளது. இந்த நிபந்தனைகள் குறிப்பிட்டுக்காட்டப்பட்டுள்ளன. அனைவராலும் உடன்படக்கூடியவைகளாக உள்ளன. அவரில் கிடைக்கக்கூடிய இளைப் பாறுதலைக் கண்டுகொள்ளுவது எப்படி என்று அவர் கூறுகிறார். (6)

என் நுகத்தை ஏற்றுக்கொள்ளுங்கள் என்று இயேசு கூறுகிறார். நுகம் என்பது சேவைக்கான ஒரு கருவியாகும். வேலைசெய்தவற்காக மிருகங்களுக்கு நுகம் பூட்டப்படுகிறது. அவைகள் திறமையாக வேலைசெய்வதற்கு நுகம் அவசியமாக உள்ளது. உயிருள்ளவரை நாம் சேவை செய்வதற்கு இந்த விளக்கத்தின் உதாரணத்தினால் அழைக்கப்பட்டிருக்கிறோம். அவருடன் நாம் உடன் ஊழியக்காரர்களாக இருப்பதற்காக அவரது நுகத்தை ஏற்றுக்கொள்ளவேண்டியவர்களாக இருக்கிறோம். (7)

இந்த சேவையைப் பிணைக்கும் நுகமாக தேவனுடைய கற்பனை இருக்கிறது. ஏதேனில் வெளிப்படுத்தப்பட்டு, சீனாய் மலையிலிருந்து அறிவிக்கப்பட்டு, புதிய உடன்படிக்கையினால் இருதயத்தில் எழுதப்பட்டுள்ள மாபெரும் அன்பின் பிரமாணம், மானிட ஊழியக்காரனை தேவனுடைய சித்தத்துடன் பிணைப்பதாக இருக்கிறது. நமது மனவிருப்பங்களைப்பற்றி நமது மனம் எங்கே செல்ல விரும்புமோ, அங்கே செல்ல நாம் அனுமதிக்கப்பட்டிருந்தால், சாத்தானின் அணியில் விழுந்து, அவனது தன்மைகளை உடையவர்களாக வேண்டியதிருந்திருக்கும். எனவே நாம் மிகவும் மேலானதும், மென்மைமிக்கதும், நம்மை உயர்த்தக்கூடியதுமான தேவனுடைய சித்தத்திற்கு நமது சித்தத்தை அமையவைக்க அழைக்கிறார். சேவையின் கடமைகளை நாம் பொறுமையுடனும் ஞானத்துடனும் செய்யவேண்டுமென்று அவர் விரும்புகிறார். சேவையின் நுகத்தை மானுடத்தில் கிறிஸ்துதாமே சுமந்தார். “என் தேவனே, உமக்குப் பிரியமானதைச் செய்ய விரும்புகிறேன்; உமது நியாயப்பிரமாணம் என் உள்ளத்திற்குள் இருக்கிறது

என்று சொன்னேன்" "என் சித்தத்தின்படியல்ல, என்னை அனுப்பினவருடைய சித்தத்தின்படி செய்யவே நான் வானத்திலிருந்திறங்கிவந்தேன்"–சங்கீதம் 40:8; யோவான் 6:38. தேவன்பாலுள்ள அன்பு, அவரது மகிமையின்மீதுள்ள வைராக்கியம், விழுந்துபோன மானுடத்தின்மீதான அன்பு ஆகியவை பாடுபடவும் மரிக்கவும் இயேசுவை பூமிக்குக் கொண்டுவந்தது. இதுதான் அவரது வாழ்க்கையைக் கட்டப்படுத்தியிருந்த வல்லமை. இந்த கொள்கையைப் பற்றிக்கொள்ள அவர் நம்மை அழைக்கிறார். (8)

உலகத்தின் அந்தஸ்தை அடைந்துவிட வகைதேடுவதினால் அநேகருடைய இருதயங்கள் அந்தக் கவலைமிக்க சுமையால் வேதனையடைந்துகொண்டிருக்கின்றன. அவர்கள் அதன் சேவைகளைத் தெரிந்துகொண்டு, அதன் குழப்பங்களை ஏற்றுக்கொண்டு, அதன் வழக்கங்களைப் பற்றிக்கொண்டுள்ளனர். இவ்விதமாக அவர்களது பண்பு சீர்கெட்டு, அவர்களுடைய வாழ்க்கை களைப்புமிக்கதாக உள்ளது. மேலான ஆசைகள் உலகப்பிரகாரமான விருப்பங்கள் ஆகியவைகளைத் திருப்திப்படுத்த, அவர்கள் மனச்சாட்சியைக் காயப்படுத்துகிறார்கள். இதனால் தவறுசெய்ததற்கான ஆழ்ந்த வருத்தமிக்க அதிகப்படியான சுமையைக் கொண்டுவருகின்றனர். தொடர்ச்சியான கவலைகள் ஜீவ சக்திகளைக் களைப்படையச் செய்கின்றன. இந்த அடிமைத்தனத்தின் நுகத்தை ஒருபக்கமாக வைத்துவிடவேண்டுமென்று நமது கர்த்தர் விரும்புகிறார். அவரது நுகத்தை ஏற்றுக்கொள்ளும்படி அவர் நம்மை அழைக்கிறார். "என் நுகம் மெதுவாயும் என் சுமை இலகுவாயும் இருக்கிறது" என்று அவர் கூறுகிறார். தேவனுடைய இராஜ்யத்தையும் அவருடைய நீதியையும் முதலில் தேடும்படி அவர்களை அவர் அழைக்கிறார். இந்த வாழ்க்கைக்குத் தேவையான அனைத்துங்கூடக் கொடுக்கப்படும் என்பது அவரது வாக்குத்தத்தமாக உள்ளது. வருத்தம் என்பது குருட்டுத்தன்மை உள்ளதாக இருந்து, எதிர்காலத்தைப்பற்றி அறிந்துகொள்ளமுடியாததாக உள்ளது. ஆனால் இயேசு ஆரம்பத்திலிருந்து முடிவுவரை அனைத்தையும் பார்க்கிறார். ஒவ்வொரு துன்பத்திலும் நிவாரணத்தைக் கொண்டுவரும் அவரது பாதையை அவர் ஆயத்தஞ்செய்துவைத்திருக்கிறார். நாம் அறியாத ஆயிரக்கணக்கான பாதைகளை நமது பிதா, நமக்காக ஏற்பாடு செய்திருக்கிறார். தேவனுக்குச் சேவைசெய்து தேவனை மேன்மைப்படுத்துவதை மேலானதாகக் கருதும் கொள்கையை ஏற்றுக்கொள்ளுபவர்கள் குழப்பங்கள் மறைந்து தங்களது பாதங்களுக்குமுன் ஒருதெளிவான பாதை இருப்பதைக் காண்பார்கள். (9)

"நான் சாந்தமும் மனத்தாழ்மையுமாய் இருக்கிறேன்; ... என்னிடத்தில் கற்றுக்கொள்ளுங்கள்" என்று இயேசு கூறுகிறார். நாம் கிறிஸ்துவிடமிருந்து

சாந்தத்தையும் மனத்தாழ்மையையும் கற்றுக்கொள்ள அவரது பள்ளியில் சேரவேண்டியவர்களாக இருக்கிறோம். ஆத்துமாவைப் பரலோகத்திற்கென்று ஆயத்தப்படுத்தும் மீட்பின் இயக்கம் இப்படிப்பட்டதாக உள்ளது. இந்தப் பயிற்சியின்பொருள்கிறிஸ்துவைப்பற்றிய அறிவை அடைந்துகொள்ளுவதாகும். அதன்பொருள் அந்தகாரப் பிரபுவின் பள்ளியிலிருந்து கற்றுக்கொண்ட யோசனைகள் பழக்கங்கள் நடத்தைகள் ஆகியவைகளிலிருந்து விடுதலை பெறுவதாகும். தேவனுக்குப் பக்திவிசுவாசமாக இருப்பதை எதிர்க்கும் அனைத்தையும்விட்டு ஆத்துமா விடுதலை பெறவேண்டும். (10)

தேவனோடிருந்த கிறிஸ்துவின் இதயத்தில் நிறைவான இசைவிணக்கம் ஆளுகை செய்தது. பிறரால் புகழ்ந்து போற்றப்பட்டபோது அவர் வீண் பெருமிதம் அடைந்ததில்லை. கண்டனத்திற்குள்ளாகும்போதும், ஏமாற்றத்தைச் சந்தித்தபோதும் உளச்சோர்வு அடைந்ததுமில்லை. மாபெரும் எதிர்ப்பிற்கு மத்தியிலும் கொடுமைமிக்க நடத்துதல்களுக்கிடையிலும் அவர் நல்ல தைரியமுடையவராக இருந்தார். ஆனால் அவரைப் பின்பற்றுகிறோம் என்று கூறிக்கொள்ளுகின்ற அநேகர் கவலையோடும் கலக்கமிக்க இருதயத்தோடும் உள்ளனர். ஏனெனில் அவர்கள் தாங்களே தேவனில் நம்பிக்கைவைப்பதற்கு அஞ்சுபவர்களாக இருக்கிறார்கள். ஆகையால் தங்களை முற்றிலுமாக தேவனிடம் ஒப்படைக்கிறதில்லை. ஏனெனில் அப்படிப்பட்ட சரணாகதியினால் ஏற்படும் விளைவுகளிலிருந்து அவர்கள் பின்வாங்குகின்றனர். இப்படி அவர்கள் சரணடையாதவரை அவர்களால் சமாதானத்தைக் காணமுடியாது. (11)

சுயத்தின்மேலுள்ள அன்புதான் மனக்குழப்பத்தைக் கொண்டுவருகிறது. நாம் மறுபடியும் பிறக்கும்போது, இரட்சிக்கப்பட தம்மைத் தாழ்த்தும்படி நடத்தின அதே இயேசுவின் சிந்தை நம்மில் உண்டாகும். அப்பொழுது நாம் மேலான இடத்தைத் தேடிக்கொண்டிருக்கமாட்டோம். நாம் இயேசுவின் பாதத்தருகில் அமர்ந்து, அவரைப்பற்றிக் கற்றுக்கொள்ள விரும்புவோம். நமது பணியின் மதிப்பு, தோற்றத்திலோ, அல்லது இந்த உலகத்தின் ஆரவாரத்திலோ, அல்லது நமது சொந்த பலத்தில் தீவிரமாகவும் வைராக்கியமாகவும் இருப்பதிலோ இல்லை என்பதை நாம் புரிந்துகொள்ளுவோம். அது, பரிசுத்த ஆவியானவர் எந்த விகிதத்தின்படி நமக்கு அருளப்பட்டிருக்கிறாரோ, அதற்கேற்றதாக இருக்கும். பொறுமையில் நாம் நமது ஆத்துமாக்களை காத்துக்கொள்ளும்படி, தேவன்மீதுள்ள நம்பிக்கை மனதிற்குத் தூய்மையான தன்மைகளைக் கொண்டுவருகிறது. (12)

சுமையை எளிதாக இழுத்துச்செல்லுவதற்கு உதவும்படி எருதுகளின்மீது நுகம் வைக்கப்படுகிறது. கிறிஸ்துவின் நுகமும் இப்படிப்பட்டதாகவே உள்ளது.

தேவனுடைய சித்தத்தினால் நமது சித்தம் ஆட்கொள்ளப்படும்போது, அவரது ஈவுகளை மற்றவர்களின் ஆசீர்வாதத்திற்கென்று நாம் பயன்படுத்தும்போது, வாழ்க்கையின் பாரம் இலகுவாக இருப்பதை நாம் காண்போம். தேவனுடைய நியாயப்பிரமாணங்களின் பாதையில் நடக்கும் ஒருவன், கிறிஸ்துவின் தோழமையில் நடந்துகொண்டிருக்கிறான். அதனால் அவரது அன்பில் இருதயம் இளைப்பாறுகிறது. "உம்முடைய வழியை எனக்கு அறிவியும்" என்று மோசே ஜெபித்தபோது: "என் சமுகம் உனக்கு முன்பாகச் செல்லும், நான் உனக்கு இளைப்பாறுதல் தருவேன்" (யாத்திராகமம் 33:13,14) என்று கர்த்தர் அவனுக்கு பதில் கூறினார். "வழிகளிலே நின்று, பூர்வ பாதைகள் எவையென்று கேட்டு விசாரித்து, நல்ல வழி எங்கே என்று பார்த்து, அதிலே நடவுங்கள்; அப்பொழுது உங்கள் ஆத்துமாவுக்கு இளைப்பாறுதல் கிடைக்கும் என்று கர்த்தர் சொல்லுகிறார்" (எரேமியா 6:16) என்னும் தூது தீர்க்கதரிசியின்மூலமாகக் கொடுக்கப்பட்டது. "ஆ, என் கற்பனைகளைக் கவனித்தாயானால் நலமாயிருக்கும்; அப்பொழுது உன் சமாதானம் நதியைப்போலும், உன் நீதி சமுத்திரத்தின் அலைகளைப்போலும் இருக்கும்"– ஏசாயா 48:18. (13)

கிறிஸ்துவை அவரது வார்த்தையில் ஏற்றுக்கொள்ளுபவர்களும், அவர் தங்களைக் காக்கும்படி தங்களை அவரிடம் ஒப்புக்கொடுப்பவர்களும் அவரது கட்டளையின்படி நடக்கத் தங்கள் வாழ்க்கையை ஒப்புக் கொடுப்பவர்களும் சமாதானத்தையும் அமைதியையும் காண்பார்கள். இயேசு தமது பிரசன்னத்தினால் அவர்களை மகிழ்விக்கும்போது, உலகத்தி லுள்ள எதனாலும் அவர்களைத் துயரடையச் செய்யமுடியாது. முற்றிலும் நிறைவான, தடையற்ற இணக்கத்தில் பூரணமான இளைப்பாறுதல் இருக்கிறது. "உம்மை உறுதியாய்ப் பற்றிக்கொண்ட மனதையுடையவன் உம்மையே நம்பியிருக்கிறபடியால், நீர் அவனைப் பூரண சமாதானத்துடன் காத்துக்கொள்வீர்" (ஏசாயா 26:3) என்று கர்த்தர் கூறுகிறார். நமது வாழ்க்கை சிக்கல்மிக்க ஒன்றாகத் தோன்றலாம். ஆனால் ஞானமிக்க தலைமை ஊழியரான அவரிடம் நம்மை நாம் ஒப்படைக்கும்போது, அவர் நமது வாழ்க்கையின் மாதிரியையும் குணத்தையும் அவரது மகிமைக்கு இசைவானதாக மாற்றியமைப்பார். கிறிஸ்துவின் மகிமையையுடைய அந்த குணத்தை வெளிக்காட்டும் அப்படிப்பட்ட குணம், தேவனுடைய பரதீசுக்குள் பெற்றுக்கொள்ளப்படும். புதுப்பிக்கப்பட்ட ஒரு இனம், வெண்ணங்கி அணிந்து அவருடன் நடக்கும். ஏனெனில் அவர்கள் அதற்குத் தகுதிவாய்ந்தவர்களாக உள்ளனர். (14)

இயேசுவின்மூலமாக நாம் இளைப்பாறுதலுக்குள் நுழையும்போது, அங்கு பரலோகம் ஆரம்பமாகிறது. என்னிடத்தில் வந்து கற்றுக்கொள்ளுங்கள்

என்னும் அழைப்பிற்கு நாம் பதிலளிக்கும்போது, இப்படியாக நாம் நித்திய ஜீவனைத் தொடங்குகிறோம். கிறிஸ்துவின்மூலமாக இடையறாமல் தேவனை நெருங்கிச் சேர்வதே பரலோகமாக இருக்கிறது. முடிவில்லாத பரலோக ஆனந்தத்தில் நாம் எவ்வளவு காலம் இருக்கின்றோமோ, அந்த அளவிற்கு அதிகமதிகமான மகிமை நமக்குமுன் திறக்கப்படும். நாம் எந்த அளவிற்கு அதிகமாக தேவனை அறிகிறோமோ, அந்த அளவிற்கு அதிகமான வலிமை உடையதாக நமது மகிழ்ச்சி இருக்கும். இந்த வாழ்க்கையில் நாம் இயேசுவுடன் நடக்கும்போது, அவரது அன்பினால் நிரப்பப்பட்டு, அவரது பிரசன்னத்தில் திருப்தியடைந்தவர்களாக இருப்போம். மனித இயல்பினால் தாங்கிக்கொள்ளக்கூடிய அனைத்தையும் நாம் இங்கு பெற்றுக்கொள்ளலாம். ஆனால் இதற்குப்பின் வரவிருப்பதுடன் ஒப்பிட்டுப்பார்க்கும்போது, அது எப்படிக் காணப்படுகிறது? “ஆனபடியால், இவர்கள் தேவனுடைய சிங்காசனத்திற்கு முன்பாக இருந்து, இரவும் பகலும் அவருடைய ஆலயத்திலே அவரைச் சேவிக்கிறார்கள்; சிங்காசனத்தின்மேல் வீற்றிருக்கிறவர் இவர்களுக்குள்ளே வாசமாயிருப்பார். இவர்கள் இனி பசியடைவதுமில்லை, இனி தாகமடைவது மில்லை; வெயிலாவது உஷ்ணமாவது இவர்கள்மேல் படுவதுமில்லை. சிங்காசனத்தின் மத்தியிலிருக்கிற ஆட்டுக்குட்டியானவரே இவர்களை மேய்த்து, இவர்களை ஜீவத்தண்ணீருள்ள ஊற்றுகளண்டைக்கு நடத்துவார்; தேவன்தாமே இவர்களுடைய கண்ணீர் யாவையும் துடைப்பார் என்றான்”– வெளிப்படுத்தல் 7:15–17. (15) ★

# 35

# அமைதி உண்டாகட்டும்!

**மத்தேயு 8:23–34; மாற்கு 4:35–41; லூக்கா 8:22–39**

(The Desire of Ages, pp. 333–341)

அந்த நாள் இயேசுவின் வாழ்க்கையில் முக்கிய நிகழ்ச்சிகள் நிறைந்த நாளாக இருந்தது. கலிலேயா கடலருகில், ஏற்கெனவே பழக்கமாகியிருந்த எடுத்துக்காட்டுதல்களின் வழியாக, அவரது இராஜ்யத்தின் தன்மையையும் அது அமைக்கப்படக்கூடிய விதத்தையும் மீண்டும் அவரது முதல் உவமைகளால் அவர் பேசியிருந்தார். தம்முடைய ஊழியத்தை விதைக்கிறவனைப்பற்றின உவமைக்கும், தமது இராஜ்யத்தின் வளர்ச்சியை கடுகு விதையின் வளர்ச்சிக்கும், புளித்தமாவின் வேலைக்கும் ஒப்புமைப்படுத்தியிருந்தார். நீதிமான்களும் துன்மார்க்கரும் கடைசியாகப் பிரிக்கப்படுவதை, கோதுமையும் களைகளும் பற்றின உவமையினாலும், மீன்களை வலையில் பிடித்து வேறுபடுத்தும் விளக்கத்தினாலும் போதித்திருந்தார். அவர் போதித்த மிக விலையுயர்ந்த சத்தியத்தை, நிலத்தில் மறைத்துவைக்கப்பட்டிருந்த பொக்கிஷத்திற்கும் விலைமதிப்புமிக்க முத்துக்கும் ஒப்பிட்டு, தமது சீடர்கள் அவரது பிரதிநிதிகளாக இருந்து எவ்விதமாகப் பணியாற்றவேண்டும் என்பதை ஒரு உக்கிராணக்காரனின் உவமையாலும் போதித்திருந்தார். (1)

பகல் முழுவதும் அவர் போதித்துக்கொண்டும் சுகப்படுத்திக் கொண்டுமிருந்தார். மாலை நேரமானபோது, பெரும்கூட்டத்தினர் அவரை நெருக்கினார்கள். உணவிற்காகவோ அல்லது ஓய்விற்காகவோ நேரம் இல்லாமல் அவர் அவர்களுக்காக ஊழியஞ்செய்திருந்தார். பரிசேர்கள் தீய எண்ணங்களுடனும் அவரைப்பற்றித் தவறாக எடுத்துக்காட்டிக்கொண்டும் விடாமல் அவரைப் பின்தொடர்ந்திருந்தனர். அது அவரது பணியை அதிகக் கடுமையானதாகவும் தொல்லை கொடுக்கக்கூடியதாகவும் ஆக்கியிருந்தது. இப்பொழுது மாலை நேரத்தில் அவர் மிகுந்த களைப்புற்றவராக இருந்தார். ஏரிக்கு அப்பால் எதாவது ஒரு தனிமையான இடத்தில் இளைப்பாறவேண்டுமென்று அவர் தீர்மானித்தார். (2)

கெனேசரேத்துக் கரையின் கிழக்குப் பகுதியில் ஊர்களும் நகரங்களும் இருந்தன. அவை மக்கள் வாழுமிடமாக இருந்தன. இருந்தபோதிலும் மேற்குப்பகுதியுடன் ஒப்பிட்டுப்பார்க்கும்போது, அது மக்கள் குடியில்லாத ஒரு இடமாகவே கருதப்பட்டிருந்தது. அங்கு யூதர்களைவிட புறமதத்தினரே அதிகமாக இருந்தனர். அதனால் கலிலேயாவுடனுள்ள தொடர்பு குறைவானதாக இருந்தது. இவ்விதமாக அந்த இடம் இயேசு தேடியிருந்த தனிமையை அவருக்குத் தந்தது. எனவே இப்பொழுது அவர் தமது சீடர்களைத் தம்முடன் அந்த இடத்திற்கு வரும்படி அழைத்தார். (3)

அவர்கள் ஜனங்களை அனுப்பிவிட்டு, அவர் படவிலிருந்தபடியே அவரைக் கொண்டுபோனார்கள். அந்தப் படகு விரைவாகப் புறப்பட்டது. ஆனால் அவர்கள் தனியாகச் செல்லமுடியாதவர்களாக இருந்தனர். கடற்கரை அருகில் மீன்பிடிக்கும் வேறு படகுகளும் இருந்தன. இயேசுவைப் பார்பதற்காகவும் அவர் பேசுவதைக் கேட்பதற்காகவும் மிகுந்த ஆவல்கொண்டிருந்தவர்கள் கூட்டமாகக் கூடி அந்தப் படகுகளில் இயேசுவைப் பின்தொடர்ந்தார்கள். (4)

இறுதியில் இரட்சகர் திரளானவர்களின் நெருக்குதலில் இருந்து விடுபட்டு, களைப்பினாலும் பசியினாலும் மேற்கொள்ளப்பட்டவராக அந்தப் படகின் பின்பகுதியில் படுத்து விரைவில் அயர்ந்த நித்திரைக்குள்ளானார். அந்த மாலை நேரம் அமைதியாகவும் மகிழ்ச்சிதருவதாகவும் இருந்தது. அந்த ஏரியின்மீது அமைதி குடிகொண்டிருந்தது. ஆனால் திடீரென்று வானம் கருமேகங்களால் இருளடைந்தது. மலையிடுக்குகளின் வழியாக அந்த ஏரியின் கீழ்க்கரையை நோக்கி பெருங்காற்று வீசத்தொடங்கியது. அந்த ஏரியின்மீது பயங்கரமான புயல்காற்று திடீரெனத் தாக்கியது. (5)

சூரியன் மறைந்துவிட்டது. புயல் வீசும் அந்தக் கடலை இரவின் இருள் கவ்விக்கொண்டது. பேரிரைச்சலுடன் அலைகள் பயங்கரமாக சீடரின் படகின்மீது மோதியடித்து, அதைச் சூழ்ந்துகொள்ளப்போவதைப்போலப் பயமுறுத்தினது. கடுமையான உழைப்பாளிகளாக இருந்த அந்த மீன்பிடிப்ப வர்கள், அந்த ஏரியின்மீது தங்களுடைய வாழ்க்கையைக் கழித்திருந்தனர். அவர்கள் அநேக புயல்களினூடாகத் தங்கள் படகுகளை பாதுகாப்போடு ஓட்டிச்சென்றிருந்தனர். ஆனால் இப்பொழுது அவர்களுடைய பலமும் திறமை யும் ஒன்றுக்கும் உதவாததாக இருந்தது. அந்தப் புயலின் பிடியில் அவர்கள் உதவியற்றவர்களாக இருந்தனர். அவர்கள் நம்பிக்கை இழந்தவர்களாக அவர்களுடைய படகில் தண்ணீர் நிறைவதைக் கண்டனர். (6)

அவர்கள் தங்களைக் காத்துக்கொள்ளும் முயற்சியில் மூழ்கியிருந்தனர். அந்தப் படகில் இயேசு இருந்தார் என்பதை அவர்கள்

மறந்திருந்தனர். அவர்களுடைய முயற்சிகள் வீணானவை என்பதையும், சாவு ஒன்றுமட்டுமே அவர்களுக்குமுன் இருப்பதையும் அவர்கள் கண்டனர். அந்தக் கடலைக் கடப்பதற்கு எவருடைய கட்டளையின்பேரில் அவர்கள் புறப்பட்டனர் என்பதை இப்பொழுது நினைவுகூர்ந்தனர். அவர்களுடைய நம்பிக்கை இப்பொழுது இயேசுவில் மாத்திரமே இருந்தது. உதவியும் நம்பிக்கையும் இல்லாத நிலைமையில் அவர்கள்: "ஐயரே, ஐயரே!" என்று கூக்குரலிட்டனர். கடுமையான அந்த இருள் அவர்களுடைய பார்வையிலிருந்து அவரை மறைத்தது. புயலின் சீற்றத்தில் அவர்களுடைய சத்தங்கள் அமிழ்ந்துபோயின. ஒரு பதிலும் வரவில்லை. சந்தேகமும் பயமும் அவர்களைத் தாக்கின. இயேசு அவர்களைக் கைவிட்டிருந்தாரா? நோய்களையும் பேய்களையும் மரணத்தையுங்கூட வெற்றிகொண்டிருந்த அவர், இப்பொழுது அவரது சீடர்களுக்கு உதவிசெய்ய வல்லமையற்றுப் போய்விட்டாரா? அவர்களுடைய இக்கட்டான நிலையிலே அவர் அக்கறையற்றவராகப் போய்விட்டாரா? (7)

அவர்கள் மறுபடியும் அழைக்கின்றனர். ஆனால் பயங்கரமான அலைகளின் மோதல் சத்தத்தைத்தவிர, பதில் எதுவும் கிடைக்கவில்லை. அவர்களுடைய படகு மூழ்கிக்கொண்டிருக்கிறது. ஒரே ஒரு வினாடி மட்டுந்தான். அதன்பின் பசிமிக்க தண்ணீர்களினால் அவர்கள் மூழ்கப்போவதுபோல வெளிப்படையாகக் காணப்பட்டது. (8)

திடீரென்று ஒரு மின்னல் இருளைப் பிளந்துகொண்டு செல்லுகிறது. அந்த இரைச்சலின் அமளியினால் உபத்திரவம் அடையாதவராக இயேசு நித்திரை செய்கிறார். அதை அவர்கள் காணுகின்றனர். ஆச்சரியத்துடனும் நம்பிக்கையின்மையுடனும் அவர்கள்: "போதகரே, நாங்கள் மடிந்துபோகிறது உமக்குக் கவலையில்லையா" என்று கூவுகின்றனர். அவர்கள் ஆபத்திலே மரணத்துடன் போர்செய்துகொண்டிருக்கும்போது, அவரால் எப்படி இளைப்பாற முடியும்? (9)

அவர்களுடைய கூக்குரல் இயேசுவை எழுப்புகிறது. மின்னொளி அவரது முகத்தைக் காட்டுகிறது. அவரது முகத்தில் அவர்கள் பரலோகத்தின் அமைதியைக் காணுகின்றனர். அவரது பார்வையில் உள்ள சுயத்தை மறந்த மென்மைமிக்க அன்பை அவர்கள் அறிகின்றனர். அவர்கள் தங்களுடைய இருதயங்களை அவரை நோக்கித் திரும்பி: "ஆண்டவரே! எங்களை இரட்சியும், மடிந்துபோகிறோம்" என்று கதறுகின்றனர். (10)

ஆத்துமாவின் அப்படிப்பட்ட அழுகுரல் ஒருபோதும் கேட்கப்படாததாக இருந்ததில்லை. சீடர்கள் கடைசி முயற்சியாகத் தங்களது துடுப்புகளை துழாவுகின்ற நேரத்தில் இயேசு எழுந்திருக்கிறார். புயல் காற்று

கோபாவேசமாகச் சீறி எழுந்து, அலைகள் அவர்மீது மோதின. மின்னல்கள் அவரது முகத்தை ஒளிரச்செய்தன. அவர் தமது சீடர்களுக்கு நடுவில் நிற்கிறார். இரக்கத்தின் செயல்களைச் செய்யும்போது, அடிக்கடி உயர்த்தும் அவரது கரங்களை இப்போது உயர்த்தி, கோபமிக்கக் கடல் அலைகளிடம் “அமைதியாயிரு” என்று கூறினார். (11)

புயல் நின்றுவிடுகிறது. உயர்ந்தெழுந்த அலைகள் அடங்குகின்றன. மேகங்கள் உருண்டு செல்லுகின்றன. விண்மீன்கள் ஒளிவீசுகின்றன. அமைதியடைந்த அந்தக் கடலின்மீது அந்தப் படகு சலனமற்றதாகிறது. அதன்பின் இயேசு துயரத்துடன் தமது சீடர்களை நோக்கி: “ஏன் இப்படிப் பயப்பட்டீர்கள்? ஏன் உங்களுக்கு விசுவாசம் இல்லாமற்போயிற்று” (மாற்கு 4:40) என்றார். (12)

சீடர்களின்மீது ஒரு மௌனமிக்க பயம் குடிகொண்டது. பேதுருவுங்கூட தனது இருதயத்தை நிரப்பின திகிலை வெளிக்காட்ட முயலாதவனாக இருந்தான். இயேசுவைத் தொடரும்படி புறப்பட்டுச் சென்ற மற்ற படகுகளும் சீடர்கள் எந்தவிதமான ஆபத்தில் இருந்தனரோ, அதேவிதமான ஆபத்தில் இருந்தனர். அவைகளில் இருந்தவர்களை பயமும் நம்பிக்கையின்மையும் பற்றிக்கொண்டிருந்தது. ஆனால் இயேசுவின் கட்டளை அமளிமிக்க அந்தக் காட்சியில் அமைதியைக் கொண்டுவந்தது. புயலின் சீற்றம் அந்தப் படகுகளையெல்லாம் ஒன்றுக்கொன்று மிக நெருக்கமாகக் கொண்டுவந்தது. அந்தப் படகுகளில் இருந்த அனைவரும் அந்த அற்புதத்தைக் கண்டனர். அதைத் தொடர்ந்து ஏற்பட்ட அமைதியில் பயம் மறக்கப்பட்டுப்போயிற்று. “இவர் யாரோ? காற்றும் கடலும் இவருக்குக் கீழ்ப்படிகிறதே என்று, ஒருவரோடொருவர் சொல்லிக்கொண்டார்கள்.” (13)

புயலைக் காணும்படி இயேசு எழுப்பப்பட்டபோது, அவர் பூரண சமாதானமுள்ளராக இருந்தார். அவரது வார்த்தையிலோ அல்லது பார்வை யிலோ பயத்தின் ரேகை காணப்படவில்லை. ஏனெனில் அவருடைய இருதயத்தில் பயம் இல்லை. அவர் சர்வவல்லமையுள்ளவராக இருந்து, அதனால் இளைப்பாறவில்லை. பூமிக்கும் கடலுக்கும் வானத்திற்கும் அவர் எஜமானனைப் போன்றவராக இருந்து, அதனால் இளைபாறினவராக இருக்கவில்லை. அவர் அந்த வல்லமையை விட்டுவிட்டு: “நான் என் சுயமாய் ஒன்றுஞ் செய்கிறதில்லை” (யோவான் 5:30) என்று கூறுகிறார். பிதாவின் வல்லமையில் அவர் நம்பிக்கை உள்ளவராக இருந்தார். விசுவாசத்தினால்—தேவனுடைய அன்பு பராமரிப்பு ஆகியவைகளின்மீதுள்ள விசுவாசத்தினால் இயேசு இளைப்பாறியிருந்தார். புயலை அமைதியடையச்செய்த அந்த வார்த்தையின் வல்லமை—தேவனுடைய வல்லமையாக இருந்தது. (14)

இயேசு அவரது பிதாவின் பராமரிப்பில் விசுவாசம் கொண்டவராக இளைப்பாறினதுபோல நாமும் நமது இரட்சகரின் பராமரிப்பில் இளைப்பாறவேண்டியவர்களாக இருக்கிறோம். சீடர்கள் இயேசுவின்மீது நம்பிக்கை வைத்திருந்தார்களானால், சமாதானத்தோடு காக்கப்பட்டிருந் திருப்பார்கள். ஆபத்தான நேரத்தில் அவர்களில் உண்டான பயம் அவர்களுடைய அவிசுவாசத்தை வெளிக்காட்டியது. தங்களைக் காப்பாற்றிக்கொள்ளும் அவர்களுடைய முயற்சியில் அவர்கள் இயேசுவை மறந்துவிட்டனர். சுயத்தைச் சார்ந்திருத்தலில் அவர்களது நம்பிக்கை அற்றுப்போனபோதுதான் அவரால்தான் அவர்களுக்கு உதவிசெய்யமுடியும் என்று அவர்கள் எண்ணி, அவரிடத்திற்குத் திரும்பினார்கள். (15)

எவ்வளவிற்கதிகமாக மீண்டும் மீண்டும் நம்முடைய அனுபவமும் இந்த சீடர்களின் அனுபவத்தைப்போன்றதாகவே இருக்கிறது! சோதனை என்னும் புயல்கள் சூழும்போது, பயங்கரமான மின்னல்கள் வெட்டும்போது, அலைகள் நம்மீது புரண்டுசெல்லும்போது, நமக்கு உதவக்கூடிய ஒருவர் இருக்கிறார் என்பதை நாம் மறந்து அந்தப் புயலுடன் தனித்துப் போரிட்டுக்கொண்டிருக்கிறோம். நம் நம்பிக்கை தொலைந்து, அழிவதற்கு ஆயத்தமாகும்வரை நமது சுயபலத்தில் நாம் நம்பிக்கை வைக்கிறோம். பின்னர் இயேசுவை நினைக்கிறோம். நம்மைக் காப்பாற்றும்படி நாம் அவரை அழைப்போமானால், நாம் வீணாக அழுபவர்களாக இருக்கமாட்டோம். நமது அவிசுவாசத்தையும் தன்னம்பிக்கையையும் குறித்து அவர் வருத்தத்துடன் நம்மைக் கடிந்துகொள்ளுகின்றபோதிலும் நமக்குத் தேவையான உதவியை அவர் ஒருபோதும் செய்யாமலிருப்பதில்லை. நாம் கரையிலிருந்தாலும்சரி, அல்லது கடலின்மீதிருந்தாலும்சரி, நமது இரட்சகர் நமது இருதயத்தில் இருந்தால் பயப்படவேண்டிய அவசியம் இருப்பதில்லை. மீட்பரின்மீதுள்ள ஜீவனுள்ள விசுவாசம், வாழ்க்கை என்னும் கடலை அமைதியடையச்செய்து, அவருக்கு மிகவும் நன்மையாகத் தோன்றும் பாதையில் நடத்தி, நம்மை ஆபத்திலிருந்து விடுவிக்கும். (16)

அந்தப் புயலை அமைதியடையும்படி நிறுத்திய அற்புதத்தில் வேறொரு ஆவிக்குரிய பாடமும் உள்ளது. வேதவாக்கியங்களில் உள்ள சத்தியத்திற்கு ஒவ்வொரு மனிதனுடைய அனுபவமும் சாட்சி பகருகிறது. “துன்மார்க்கரோ கொந்தளிக்கும் கடலைப்போலிருக்கிறார்கள்; அது அமர்ந்திருக்கக்கூடாமல், அதின் ஜலங்கள் சேற்றையும் அழுக்கையும் கரையில் ஒதுக்குகிறது. துன்மார்க்கருக்குச் சமாதானம் இல்லையென்று என் தேவன் சொல்லுகிறார்”—ஏசாயா 57:20,21. பாவம் நமது சமாதானத்தை அழித்துள்ளது. சுயம் தாழ்த்தப்படாமல் இருக்கும்போது, நம்மால்

இளைப்பாறுதலைக் காணமுடியாது. இருதயத்தில் உள்ள ஆதிக்க வெறியுள்ள இச்சைகளை எந்த மானிட வல்லமையாலும் கட்டுப்படுத்த முடியாது. சீறிப்பாய்ந்த புயலை அமைதிப்படுத்த அந்த சீடர்களால் ஒன்றுஞ்செய்யமுடியவில்லை. அவர்களைப்போலவே நாமும் இவ்வுலகில் உதவியற்ற நிலையில் இருக்கிறோம். கலிலேயாக் கடலின் அலைகளை அமைதிப்படும்படிக் கூறிய அவர், ஒவ்வொரு ஆத்துமாவிற்கும் அமைதியின் வார்த்தையைக் கூறியிருக்கிறார். புயல் எவ்வளவு பயங்கரமாக இருந்தாலும் சரி, ஆண்டவரே எங்களைக் காப்பாற்றும் என்ற அழுகுரலுடன் அவரை நோக்கித் திரும்புபவர்கள் விடுதலையைக் காண்பார்கள். ஆத்துமாவை தேவனுடன் ஒப்புரவாக்கும் கிருபை, மனித இனத்தின் கலகஞ்செய்யும் ஆசைகளை அமைதியடையச்செய்கிறது. அவரது அன்பில் இருதயம் இளைப்பாறுதலைக் கண்டடைகிறது. "கொந்தளிப்பை அமர்த்துகிறார், அதின் அலைகள் அடங்குகின்றது. அமைதலுண்டானதினிமித்தம் அவர்கள் சந்தோஷப்படுகிறார்கள்; தாங்கள் நாடின துறைமுகத்தில் அவர்களைக் கொண்டுவந்து சேர்க்கிறார்." "இவ்விதமாக, நாம் விசுவாசத்தினாலே நீதிம ான்களாக்கப்பட்டிருக்கிறபடியால், நம்முடைய கர்த்தராகிய இயேசுகிறிஸ்து மூலமாய் தேவனிடத்தில் சமாதானம் பெற்றிருக்கிறோம்." "நீதியின் கிரியை சமாதானமும், நீதியின் பலன் என்றுமுள்ள அமரிக்கையும் சுகமுமாம்"– சங்கீதம் 107:29,30; ரோமர் 5:1; ஏசாயா 32:17. (17)

இரட்சகரும் அவரது தோழர்களும் அதிகாலையில் கரைக்கு வந்தனர். உதிக்கும் சூரியனின் ஒளி சமாதானத்தின் ஆசீர்வாதத்தைக் கொண்டுவருவதுபோலக் கடலையும் நிலத்தையும் தொட்டது. அவர்கள் கடற்கரையின்மீது இறங்கின உடனே, அந்தப் புயலின் சீற்றத்தைவிடப் பயங்கரமான ஒருகாட்சி அவர்களது கண்களை வரவேற்றது. கல்லறைகளுக்கு இடையில் இருந்த ஏதோ ஒரு மறைவான இடத்திலிருந்து, அவர்களைத் துண்டு துண்டாகக் கிழித்துவிடுவதைப்போன்று இரு பைத்தியக்காரர்கள் அவர்களை நோக்கி ஓடிவந்தனர். அவர்களைக் கட்டிவைத்திருந்த சங்கிலிகளை உடைத்துக்கொண்டு அவர்கள் தப்பிவரவே, மீந்திருந்த அந்தச் சங்கிலித் துண்டுகள் அவர்கள்மீது தொங்கிக்கொண்டிருந்தன. கூர்மையான கற்களினால் அவர்கள் தங்களுடைய தசைகளைக் கிழித்திருந்தனர். சடைபிடித்துப்போன நீண்ட தலைமயிர்களுக்கூடாக அவர்களுடைய கண்கள் பளபளத்துக்கொண்டிருந்தன. அவர்களைப் பிடித்திருந்த பிசாசுகள் காரணமாக அவர்களுடைய மனித இயல்புகள் முற்றிலும் நீக்கப்பட்டு விட்டதுபோலக் காணப்பட்டது. அவர்கள் மனிதர்கள் என்பதைவிட, காட்டு மிருகங்களைப்போலவே காணப்பட்டனர். (18)

சீடர்களும் அவர்களுடைய தோழர்களும் பேரச்சங்கொண்டவர்களாக விரைந்தோடினர். ஆனால் இயேசு இப்போது அவர்களுடன் இருக்கவில்லை என்பதை அறிந்து, அவரைப் பார்ப்பதற்காகத் திரும்பினார்கள். அவர்கள் அவரை எந்த இடத்தில் விட்டுவந்திருந்தார்களோ அதே இடத்தில் அவர் நின்றுகொண்டிருந்தார். புயலை அமைதிப்படுத்தியவர் இதற்குமுன் சாத்தானைச் சந்தித்து அவனை வெற்றிகொண்டவர், இந்தப் பிசாசுகளுக்கு முன்னாலிருந்து ஓடவில்லை. அந்த மனிதர்கள் அவர்களுடைய பற்களைக் கடித்துக்கொண்டும் வாயிலிருந்து நுரைதள்ளிக்கொண்டும் அவரைச் சமீபித்தபோது, அலைகளை அமைதியடையும்படி உயர்த்திய தமது கரத்தை இயேசு உயர்த்தவே, அவர்களால் அவருக்கருகில் வரமுடியவில்லை. அவர்கள் கோபாவேசமிக்கவர்களாக, ஆனால் ஒன்றும் செய்யமுடியாதவர்களாக நின்றனர். (19)

அவர் மிகுந்த அதிகாரத்துடன் அந்த அசுத்த ஆவிகளை அவர்களைவிட்டு வெளியே வரும்படி அழைத்தார். அவல நிலையிலிருந்த அந்த மனிதர்களின் இருளடைந்த மனதிற்குள் அவரது வார்த்தைகள் ஊடுருவிச் சென்றன. தங்களை உபத்திரவப்படுத்திக்கொண்டிருந்த பிசாசு களிடமிருந்து, அவர்களைக் காப்பாற்றக்கூடிய ஒருவர் அவர்களருகில் இருக்கிறார் என்பதை அவர்கள் மங்கலாக உணர்ந்தனர். அவரைத் தொழும்படி அவரது பாதங்களில் விழுந்தனர். அவரது இரக்கத்திற்காக மன்றாடும்படி அவர்கள் தங்களுடைய உதடுகளைத் திறந்தபோது, அவர்களுக் குள்ளிருந்த பிசாசுகள் உக்கிரமான கோபத்துடன் உரத்த சத்தத்தில் அலற, அவர்கள்: "இயேசுவே, உன்னதமான தேவனுடைய குமாரனே, எனக்கும் உமக்கும் என்ன? என்னை வேதனைப்படுத்தாதபடிக்கு உம்மை வேண்டிக்கொள்ளுகிறேன்" என்று மிகுந்த சத்தமிட்டுச் சொன்னார்கள். (20)

"இயேசு அவனை நோக்கி: உன் பேர் என்னவென்று கேட்டார்; அதற்கு அவன்: லேகியோன் என்றான்; அநேகம் பிசாசுகள் அவனுக்குள் புகுந்திருந்தபடியால் அந்தப் பேரைச் சொன்னான்." துன்பப்படுத்தப்பட்டிருந்த அந்த மனிதர்களை இணைப்பு ஊடகமாகக்கொண்டு தங்களை அந்த ஊரைவிட்டு வெளியே அனுப்பிவிடக்கூடாது என்று அவைகள் வேண்டிக்கொண்டன. சற்றுத் தொலைவிலிருந்த மலைச்சரிவில் ஒரு பெரிய கூட்டமான பன்றிகள் மேய்ந்துகொண்டிருந்தன. அந்தப் பன்றிகளுக்குள் பிரவேசிக்க அனுமதிக்கும்படி அந்தப் பிசாசுகள் அவரை வேண்டிக் கொண்டபோது, அவர் அனுமதித்தார். உடனே அந்தப் பன்றிகளின் கூட்டத்தில் ஒரு கலவரம் உண்டாயிற்று. அவைகள் வெறித்தனமாக மலை உச்சியிலிருந்து கீழ்நோக்கி ஓடி, கரையில் அவைகளால் கட்டுப்படுத்தமுடியாமல் அந்த ஏரிக்குள் மூழ்கி மடிந்தன. (21)

அந்த வேளையில் பிசாசு பிடித்திருந்தவர்களில் ஒரு ஆச்சரியமான மாறுதல் உண்டாகியிருந்தது. அவர்களுடைய மனங்களுக்குள் ஒளி பிரகாசித்திருந்தது. அவர்களுடைய கண்கள் நுண்ணறிவினால் ஒளிவீசின. அவர்களுடைய முகக்களை நீண்ட காலமாக சாத்தானின் சாயலினால் உருவழிந்துபோயிருந்தன. இப்பொழுது அவை திடீரென்று மென்மையாயின. இரத்தக்கறை படிந்திருந்த அவர்களுடைய கரங்கள் அமைதியாயின. அந்த மனிதர்கள் அவர்களுக்குக் கிடைத்த விடுதலைக்காக மகிழ்ச்சியுடன் தேவனைத் துதித்தனர். (22)

மலை உச்சியிலிருந்து பன்றிகளை மேய்த்திருந்தவர்கள் நிகழ்ந்தவைகளையெல்லாம் கண்டிருந்தனர். அவர்கள் தங்களை வேலைக்கு அமர்த்தியிருந்தவர்களுக்கும் பொதுமக்களுக்கும் இந்தச் செய்திகளை அறிவிக்க விரைந்துசென்றனர். பயத்துடனும் ஆச்சரியத்துடனும் அந்த மக்களனைவரும் இயேசுவைச் சந்திக்கக் கூடினர். பிசாசுபிடித்திருந்த இருவரும் அந்த நாட்டுப்புறப்பகுதிக்கு பயங்கரமானவர்களாக இருந்திருந்தனர். அவர்கள் இருந்த இடத்தைக் கடந்துசெல்லுவதில் ஒருவர்கூடப் பாதுகாப்பாக இருக்கவில்லை. ஏனெனில் பிசாசுகளின் சீற்றத்துடன் அவர்கள் ஒவ்வொரு பயணியின்மீதும் பாய்ந்தனர். இப்பொழுது அந்த மனிதர்கள் சீராக ஆடையணிந்து, நல்ல குணத்துடன் இயேசுவின் பாதத்தருகில் உட்கார்ந்திருந்தனர். அவர்கள் அவருடைய வார்த்தைகளைக் கவனித்திருந்தனர். அவர்களைச் சுகப்படுத்தியவரின் பெயரை அவர்கள் மகிமைப்படுத்திக்கொண்டிருந்தனர். ஆனால் ஆச்சரியமான இந்தக் காட்சியைக் கண்ட மக்கள் மகிழ்ச்சியடையவில்லை. சாத்தானால் சிறையாக்கப்பட்டிருந்த அந்த இரு மனிதர்களுடைய விடுதலையைவிட பன்றிகளை இழந்தது அவர்களுக்குப் பெரிய நஷ்டமாகத் தோன்றியது. (23)

அந்தப் பன்றிகளின் உரிமையாளர்களின்மீது உண்டான இரக்கத்தினால்தான் அவர்களுக்கு இந்த நஷ்டம் வரும்படி அனுமதிக்கப்பட்டது. அவர்கள் இந்த உலகக் காரியங்களில் மூழ்கியிருந்தனர். அதனால் அவர்கள் ஆவிக்குரிய வாழ்க்கையின் காரியங்களில் பெரிதும் அக்கறையற்றவர்களாக இருந்தனர். சுயநலத்தினால் உண்டான கவனமற்ற தன்மையைத் தகர்க்க இயேசு விரும்பினார். அதனால் அவர்களால் கிருபையை ஏற்றுக்கொள்வது சாத்தியமாக இருந்தது. ஆனால் உலகப்பிரகாரமான இழப்பினால் உண்டான வருத்தமும் கோபமும் இரட்சகரின் இரக்கத்தைக் காணமுடியாதபடி அவர்களுடைய கண்களைக் குருடாக்கியிருந்தது. (24)

இயற்கைக்கும்மேலான வல்லமையின் வெளிக்காட்டுதல் மக்களின் மூடநம்பிக்கையையும் பயங்களையும் எழுப்பிவிட்டது. இந்த அந்நியரைத்

தங்கள் மத்தியில் விட்டுவைப்பதினால் மேலும் பேரிடர்கள் ஏற்படலாம். அவைகள் பண நஷ்டத்தை உண்டுபண்ணும் என்று அவர்கள் பயந்தார்கள். எனவே அவரது சமுகத்திலிருந்த விடுபட அவர்கள் தீர்மானித்தனர். இயேசுவுடன் ஏரியைக் கடந்திருந்தவர்கள் சென்றுபோன இரவில் நிகழ்ந்த அனைத்தையும் கூறினர். புயலினால் அவர்களுக்கு உண்டான அபாயத்தையும், காற்றும் கடலும் எவ்விதமாக அமைதிப்படுத்தப்பட்டது என்பதையும் கூறினார்கள். ஆனால் அவர்களது வார்த்தைகளினால் எவ்விதமான பலனும் உண்டாகவில்லை. பயத்தினால் அவர்கள் இயேசுவைச் சூழ்ந்தனர். அவர்களைவிட்டுச்செல்லும்படி வேண்டினர். அவரும் அவர்களுக்கு இசைந்து, உடனே படகிலேறி, எதிர்க்கரையை நோக்கிச் சென்றார். (25)

கதரேனே மக்களுக்குமுன் கிறிஸ்துவின் வல்லமையும் இரக்கமும் உயிருள்ள சாட்சியாக இருந்தது. அந்த மனிதர்கள் அறிவுள்ளவர்களாக மாறினதை அவர்கள் கண்டனர். ஆனால் தங்களுடைய பூமிக்குரிய காரியங்களை ஆபத்துக்குள்ளாக்குவதில் அவர்கள் மிகவும் பயமுள்ள வர்களாக இருந்தார்கள். அவர்களுடைய கண்களுக்கு முன்னால் அந்தகாரப் பிரபுவைத் துரத்தியவர், ஒரு அத்துமீறல்காரராக நடத்தப்பட்டார். பரலோகத்தின் ஈவு அவர்களுடைய வாசல்களைவிட்டுத் திருப்பி அனுப்பப்பட்டது. கதரேனே மக்கள் கிறிஸ்துவைத் தங்களிடமிருந்து திருப்பி அனுப்பினதைப்போல நடக்கின்ற வாய்ப்பு நமக்கு உண்டாகவில்லை. ஆனால் அவரது வார்த்தையை மறுதலிக்கும் அநேகர் இப்பொழுதும் உள்ளர். ஏனெனில் கீழ்ப்படிதல் என்பது உலகப்பிரகாரமான ஆதாயத்தை தியாகஞ்செய்வதுடன் சம்பந்தப்பட்டதாக உள்ளது. அவரது பிரசன்னம் தங்களுக்குப் பண நஷ்டத்தை உண்டாக்கிவிடக்கூடாது என்பதற்காக, அநேகர் அவரது கிருபையைப் புறக்கணித்து, அவருடைய ஆவியை தங்களிலிருந்து வெளியேற்றிவிடுகின்றனர். (26)

ஆனால் சுகப்படுத்தப்பட்ட அந்தப் பிசாசு பிடித்திருந்தவர்களின் உணர்ச்சி முற்றிலும் வித்தியாசமாக இருந்தது. அவர்களை விடுதலை செய்தவரின் தோழமையை அவர்கள் விரும்பினார்கள். தங்களுடைய வாழ்க்கையை உபத்திரவப்படுத்தி, தங்களுடைய மனநிலையைப் பாழாக்கிவிட்ட பிசாசுகளிடமிருந்து கிடைத்த பாதுகாப்பை அவரது பிரசன்னத்தில் அவர்கள் உணர்ந்தனர். இயேசு படகில் ஏறப்போகும் சமயத்தில் அவர்கள் அவரருகில் வந்து, அவரது பாதங்களில் பணிந்து, அவருடைய வார்த்தைகளை எப்போதும் கேட்கும்படி தங்களை அவரருகில் வைத்துக்கொள்ளவேண்டும் என்று கெஞ்சினார்கள். ஆனால் கர்த்தர்

அவர்களுக்குச் செய்த பெரிய காரியங்களைக் கூறுவதற்காக தங்களுடைய வீட்டிற்குச் செல்லும்படி இயேசு அவர்களுக்குக் கட்டளையிட்டார். (27)

அவர்கள் செய்யவேண்டிய ஒரு வேலை அங்கு அவர்களுக்கிருந்தது. அதாவது புறமதத்தர்களாகிய அவர்கள் தங்களுடைய வீட்டிற்குச் சென்று, இயேசுவிடமிருந்து அவர்களுக்குக் கிடைத்த ஆசீர்வாதத்தைப்பற்றி கூறவேண்டும். இரட்சகரிடமிருந்து பிரிக்கப்படுதல் அவர்களுக்குக் கடினமானதாக இருந்தது. புறமதத்தர்களாகிய அவர்களது ஊரார்களுடன் உள்ள அவர்களுடைய உறவில் அவர்களைப் பெரும் துன்பங்கள் சூழுவது நிச்சயமானதாக இருந்தது. சமுதாயத்திலிருந்து அவர்கள் நீண்ட நாட்களாக தனிமைப்படுத்தப்பட்டிருந்தனர். அது செய்யும்படியாகக் கூறியிருந்த பணியினைச் செய்வதில் அவர்களைத் தகுதியற்றவர்களாக்கியதுபோலக் காணப்பட்டிருந்தது. ஆனால் இயேசு அவர்களுடைய கடமையைச் சுட்டிக்காட்டியதும் அவர்கள் கீழ்ப்படிய ஆயத்தமாயிருந்தனர். அவர்கள் தங்களுடைய வீட்டாருக்கும் அயலார்களுக்கும் மட்டும் இயேசுவைப்பற்றிக் கூறினதோடல்லாமல், தெக்கபோலி எங்கும் சென்றனர். அங்கு காப்பாற்றக் கூடிய அவரது வல்லமையையும் அவர் எப்படிப் பிசாசுகளிடமிருந்து தங்களுக்கு விடுதலை வழங்கினார் என்பதையும் அறிவித்தனர். அவர்கள் தங்களுடைய நன்மைக்காகமட்டும் இயேசுவின் சமுகத்தில் இருந்திருந்தால் அவர்களுக்கு உண்டாகியிருந்திருக்கக்கூடியதைவிட பெரிய ஆசீர்வாதத்தை, இந்த ஊழியத்தினால் பெறக்கூடியவர்களாக இருந்தனர். இரட்சிப்பின் நற்செய்தியைப் பரப்புவதில் செய்யும் பணியினால்தான், நாம் இரட்சகருக்கு அருகில் கொண்டுவரப்படுகிறோம். (28)

பிசாசு பிடித்திருந்து சுகமடைந்த அந்த இருவர்தான் தெக்கபோலிப் பிரதேசத்தில் சுவிசேஷத்தைப் பிரசங்கிக்கும்படி கிறிஸ்துவால் அனுப்பப்பட்ட முதல் இறைப்பணியாளர்களாக இருந்தனர். கிறிஸ்துவின் போதனையைக் கேட்கும் சலுகையை இந்த மனிதர்கள் சில விநாடிகள் மட்டுமே பெற்றிருந்தனர். அவரது உதட்டிலிருந்து உண்டான ஒரு பிரசங்கம் இவர்களது செவிகளில் ஒருபோதும் விழவில்லை. கிறிஸ்துவுடன் நாள்தோறும் இருந்த சீடர்கள் மக்களுக்குப் போதனைசெய்யும் தகுதியையுடையவர்களாக இருந்தனர். அப்படிப்பட்ட தகுதி இவர்களிடம் இல்லை. ஆனால் அவர்கள் தங்களுடைய சரீரங்களில் இயேசுதான் மேசியா என்பதற்கான சாட்சியை உடையவர்களாக இருந்தனர். அவர்கள் கிறிஸ்துவின் வல்லமையை எவ்விதமாக அறிந்திருந்தார்களோ—அவர்களாகவே கண்டிருந்தார்களோ—கேட்டிருந்தார்களோ—உணர்ந்திருந்தார்களோ, அவைகளைக் கூறக் கூடியவர்களாக இருந்தனர். தேவனுடைய கிருபையினால் இருதயம்

தொடப்பட்ட ஒவ்வொருவராலும் இதைச் செய்யமுடியும். அன்பான சீடனான யோவான்: “ஆதிமுதல் இருந்ததும், நாங்கள் கேட்டதும், எங்கள் கண்களினாலே கண்டதும், நாங்கள் நோக்கிப்பார்த்ததும், எங்கள் கைகளினாலே தொட்டதுமாயிருக்கிற ஜீவவார்த்தையைக்குறித்து உங்களுக்கு அறிவிக்கிறோம்.... அந்த ஜீவனை நாங்கள் கண்டு, அதைக் குறித்துச் சாட்சிகொடுத்து, அதை உங்களுக்கு அறிவிக்கிறோம்” (1 யோவான் 1:1–3) என்று எழுதினான். கிறிஸ்துவின் சாட்சிகளாக இருக்கிற நாம் எவைகளை அறிந்தும், பார்த்தும், கேட்டும், உணர்ந்தும் இருக்கிறோமோ அவைகளை கூறவேண்டியவர்களாக இருக்கிறோம். நாம் படிப்படியாக இயேசுவைப் பின்தொடர்ந்துகொண்டிருந்தால் அவர் நம்மை நடத்தியிருக்கும் விதம்பற்றி கூறுவதற்கு நம்மிடம் ஏதாவது சரியான குறிப்பு ஒன்று இருக்கும். அவருடைய வாக்குத்தத்தத்தை நாம் எப்படி சோதித்தோமென்றும், அது எப்படி உண்மையாக இருந்தது என்பதைக் கண்டுகொண்டதைப்பற்றியும், நம்மால் கூறமுடியும். கிறிஸ்துவின் கிருபையைப்பற்றி நாம் என்ன அறிந்திருக்கிறோமோ அதைப்பற்றி நாம் சாட்சிகூற முடியும். இந்த சாட்சியைக் கொடுப்பதற்குக் கர்த்தர் அழைக்கிறார். அது இல்லாததினால் உலகம் அழிந்துகொண்டிருக்கிறது. (29)

கதரேனே மக்கள் இயேசுவை ஏற்றுக்கொள்ளாவிட்டாலும், அவர்கள் தெரிந்துகொண்ட இருளிற்குள் அவர் அவர்களை விட்டுவிடவில்லை. அவர்களைவிட்டுப் பிரிந்துசெல்லும்படி அவர்கள் அவரிடம் கேட்டுக் கொண்டபோது, அவர்கள் அவரது வார்த்தைகளைக் கேட்டிராதவர்களாக இருந்திருந்தனர். அவர்கள் எதனை புறக்கணித்துக்கொண்டிருந்தனாரோ அதைப்பற்றிய அறிவற்றவர்களாக இருந்தனர். எனவே, எவர்களுடைய வார்த்தைகளைக் கவனிப்பதற்கு அவர்கள் மறுக்கமுடியாதவர்களாக இருந்தனரோ, (அந்தப் பிசாசு பிடித்து சுகமடைந்தவர்களின் வார்த்தைகளுக்கு) அவர்கள்மூலமாக அவர் அவர்களுக்கு ஒளியை அனுப்பினர். (30)

பன்றிகளை அழித்துப்போட்ட சம்பவத்தில் மக்களை இரட்சகரிடமிருந்து திசைதிருப்பிவிடுவது சாத்தானின் நோக்கமாக இருந்தது. இவ்விதமாக அந்தப் பகுதியில் சுவிசேஷம் பிரசங்கிக்கப்படுவதைத் தடுப்பது அவனது நோக்கமாக இருந்தது. ஆனால் அதே நிகழ்ச்சி வேறெந்த விதத்திலும் செய்யமுடியாத அளவிற்கு அந்த நாடு முழுவதையும் விழிப்படையச் செய்துவிட்டது. அது மக்களின் கவனத்தைக் கிறிஸ்துவின்பால் திருப்பியது. இரட்சகர் தாமாகவே சென்றுவிட்டபோதிலும், அவரால் சுகமடைந்த மனிதர்கள் அவரது வல்லமைக்குச் சாட்சிகளாக அங்கு இருந்தனர். அந்தகாரப் பிரபுவின் கருவிகளாக இருந்தவர்கள், ஒளியின் வாய்க்கால்களாகவும்

தேவகுமாரனின் தூதுவர்களாகவும் மாறினார்கள். ஆச்சரியமான அந்தச் செய்திகளைக் கவனித்த மனிதர்கள் வியப்படைந்தனர். அந்தப் பிரதேசம் முழுவதற்கும் சுவிசேஷத்தின் ஒரு கதவு திறக்கப்பட்டது. இயேசு மறுபடியும் தெக்கபோலிக்குத் திரும்பிவந்தார். அப்பொழுது மூன்று நாட்கள் மக்கள் கூட்டமாக வந்து அவரைச் சூழ்ந்துகொண்டனர். அந்த ஊர் மக்கள் மட்டுமின்றி அந்தப் பிரதேசத்தைச் சுற்றிலுமிருந்த ஆயிரக்கணக்கானவர்கள் இரட்சிப்பின் தூதைக் கேட்டார்கள். பிசாசுகளின் வல்லமையுங்கூட இரட்சகரின் கட்டுப்பாட்டிற்குள் உள்ளது. நல்ல காரியங்களைச் செய்வதற்காக தீமைகளின்மேல் வெற்றி நிகழ்த்தப்பட்டுள்ளது. (31)

கதரேனேயிலிருந்த, பிசாசுபிடித்தவர்களுடன் நடந்த ஒரு மோதலில் சீடர்களுக்கு ஒரு பாடம் இருந்தது. மனித இனம் முழுவதையும் சாத்தான் கீழ்நோக்கி இழுத்துச்செல்லும் ஆழங்களை அது காட்டியது. இயேசுவின் ஊழியம் அவர்களைச் சாத்தானின் வல்லமையிலிருந்து விடுவிப்பதையும் அது காட்டியது. பிசாசுகளினால் ஆட்கொள்ளப்பட்டு கல்லறைகளுக்கருகில் அந்தத் துர்ப்பாக்கியமான மனிதர்கள் வாழ்ந்துகொண்டிருந்தனர். சாத்தானின் எல்லைக்குள் விட்டுவிடப்பட்டால், மனித இனத்தின் நிலைமை என்ன ஆகும் என்பதை அவர்களது கட்டுப்பாடற்ற வெறிகளும் வெறுக்கப்படக்கூடிய இச்சைகளும் சுட்டிக்காட்டுகின்றன. மனிதனின் புலன்களைத் திசைதிருப்பவும் தீமைசெய்யும்படி மனதைக் கட்டுப்படுத்தவும் பலாத்காரங்களையும் குற்றங்களையும் செய்ய மனதைத் தூண்டிவிடவும் சாத்தான் அவனது செல்வாக்கைத் தொடர்ச்சியாகப் பயன்படுத்திக்கொண்டிருக்கிறான். உடலை பலவீனப்படுத்தி, நுண்ணறிவை இருளடையச்செய்து, அவன் ஆத்துமாவைக் கீழ்த்தரமானதாக்குகிறான். மனிதர்கள் இரட்சகரின் அழைப்பை புறக்கணிக்கும்போதெல்லாம் அவர்கள் தாங்களாகவே சாத்தானுக்கு தங்களை ஒப்புக்கொடுத்துவிடுகின்றனர். வாழ்க்கையின் ஒவ்வொரு துறையிலும் வீட்டிலும் வியாபாரத்திலும் சபையிலுங்கூட திரளானவர்கள் அதை இன்றும் செய்துகொண்டுள்ளனர். இதன் காரணமாகவே பலாத்காரங்களும் குற்றங்களும் பூமியில் அளவிற்கு அதிகமாகப் பெருகியுள்ளன. மரணத்தின் துயரப் போர்வையாக சன்மார்க்க இருள் மனிதர்கள் வாழுமிடங்களை மூடிக்கொண்டுள்ளது. மாயத்தோற்றமான சோதனைகளின்மூலமாக மிகமிக மோசமான தீமைகளுக்குள் கீழ்த்தரமாக்கி, மிகுந்த ஒழுக்கச் சீர்கேடும் அழிவும் பலனாக உண்டாகும்வரை சாத்தான் மனிதர்களை நடத்துகிறான். அவனது வல்லமைக்கு எதிரான ஒரே பாதுகாப்பு, இயேசுவின் பிரசன்னத்தில் காணப்படுகிறது. மனிதர்களுக்கும் தூதர்களுக்கும்முன்பாக மனிதனின் எதிரியாகவும் அழிக்கின்றவனாகவும் சாத்தான் வெளிப்படுத்தப்பட்டிருக்கிறான். கிறிஸ்து மனிதனின் நண்பராகவும்

விடுதலை தருபவராகவும் வெளிப்படுத்தப்பட்டிருக்கிறார். அவரது ஆவி மனிதனுக்குள் அவனை மேம்பாடடையச்செய்யக்கூடியதும் அவனது இயல்பை மேன்மைப்படுத்தக்கூடியதுமான தன்மைகளை வளரச்செய்யும். அது மனிதனை தேவனுடைய மகிமைக்கென்று அவனது ஆவி, ஆத்துமா, சரீரம் ஆகியவைகளைக் கட்டுமானம் செய்யும். “தேவன் நமக்குப் பயமுள்ள ஆவியைக் கொடாமல், பலமும் அன்பும் தெளிந்த புத்தியுள்ள ஆவியையே கொடுத்திருக்கிறார்”–2 தீமோத்தேயு 1:7; “நீங்கள் நம்முடைய கர்த்தராகிய இயேசுகிறிஸ்துவின் மகிமையை அடையும்பொருட்டாக” “தமது குமாரனுடைய சாயலுக்கு ஒப்பாயிருப்பதற்கு முன்குறித்திருக்கிறார்”–2 தெசலோனிக்கேயர் 2:14; ரோமர் 8:29. (32)

சாத்தானின் கருவிகளாக இருக்கும்படி கீழ்த்தரமாக்கப்பட்ட ஆத்துமாக்கள் தொடர்ந்து கிறிஸ்துவின் வல்லமையின்மூலமாக நீதியின் தூதர்களாக இருக்கும்படி மறுரூபமாக்கப்பட்டுள்ளனர். இவர்கள் … “உனக்காகக் கர்த்தர் பெரிய காரியங்களைச் செய்திருக்கிறார். உன்மீது மன உருக்கமுள்ளவராக இருக்கிறார்” என்று கூறும்படி தேவகுமாரனால் அனுப்பப்பட்டுள்ளனர். (33) ★

# 36

# விசுவாசத்தின் தொடுதல்!

**மத்தேயு 9:18–26; மாற்கு 5:21–43; லூக்கா 8:40–56**

**(The Desire of Ages, pp. 342–348)**

இயேசு கதரேனருடைய நாட்டிலிருந்து மேற்குக் கரைக்குத் திரும்பிவந்தார். அவரை வரவேற்கத் திரளானவர்கள் காத்திருப்பதை அவர் கண்டார். அவர்கள் அவரை மகிழ்ச்சியுடன் வாழ்த்தி வரவேற்றனர். சற்றுநேரம் அவர் கடலருகில் தங்கியிருந்து போதனை செய்தார். சுகப்படுத்தினார். அதன்பின் விருந்தில் ஆயக்காரர்களைச் சந்திப்பதற்காக லேவி மத்தேயுவின் வீட்டிற்குச் சென்றார். அங்கு ஜெப ஆலயத் தலைவனான யவீரு அவரைக் கண்டான். (1)

யூதர்களின் மூப்பனாக இருந்த அவன் மிகுந்த துன்பத்துடன் இயேசுவிடம் வந்தான். அவரது பாதத்தில் விழுந்து: "என் குமாரத்தி மரண அவஸ்தைப்படுகிறாள், அவள் ஆரோக்கியம் அடையும்படிக்கு நீர் வந்து, அவள்மேல் உமது கைகளை வையும், அப்பொழுது பிழைப்பாள் என்று அவரை மிகவும் வேண்டிக்கொண்டான்" மாற்கு 5:23. (2)

இயேசு உடனே அந்த அதிபதியுடன் அவனது வீட்டிற்குப் புறப்பட்டார். அவரது இரக்கத்தின் அநேக செயல்களை சீடர்கள் கண்டிருந்தபோதிலும் அகந்தைமிக்க அந்த ரபியின் மன்றாட்டிற்கு அவர் இணங்கியதில் ஆச்சரிய மடைந்தனர். இருந்தபோதும், தங்களுடைய ஆண்டவரைப் பின்தொடர்ந்தனர். மிகுந்த ஆவலுடனும் எதிர்பார்ப்புடனும் மக்களும் பின்தொடர்ந்தனர். (3)

அந்த அதிபதியின் வீடு அதிக தூரத்தில் இருக்கவில்லை. ஆனால் இயேசுவும் அவரது கூட்டத்தினரும் மெதுவாகவே சென்றனர். கூட்டம் எல்லாப் பக்கங்களிலிருந்தும் அவரை நெருக்கியது. கவலைமிக்க அந்தத் தகப்பன் தாமதத்தைக்கண்டு பொறுமையிழந்தவனாக இருந்தான். ஆனால் மக்கள்மீது இயேசு தயவுவைத்து பாடனுபவிக்கும் ஒவ்வொருவருக்கும் நிவாரணம் அளிக்கவும் அல்லது கலக்கமடைந்த இருதயத்தை ஆறுதற்படுத்தவும் அவ்வப்போது நின்றிருந்தார். (4)

அவர்கள் இன்னும் வழியில் இருக்கும்போதே, ஒரு தூதுவன் கூட்டத்தினூடே நுழைந்து, அவன் மகள் செத்துப்போனாள் என்றும், இனி போதகரை வருத்தப்படுத்துவதில் பயனில்லை என்றும் சொன்னான். அந்த வார்த்தை இயேசுவின் செவிகளில் விழுந்தது. அவர்: “பயப்படாதே; விசுவாசமுள்ளவனாயிரு, அப்பொழுது அவள் இரட்சிக்கப்படுவாள்” என்று கூறினார். (5)

யவீரு இரட்சகரை மிகவும் நெருங்கி அவர்கள் இருவரும் சேர்ந்து, வீட்டிற்கு விரைந்தனர். ஏற்கனவே கூலிக்கு அமர்த்தப்பட்ட துக்கங்கொண்டாடுபவர்களும் குழல் ஊதுபவர்களும் அங்கேயிருந்தனர். அவர்களுடைய இடைவிடாத கூச்சலினால் ஆகாயத்தை நிரப்பியிருந்தனர். கூட்டத்தினரின் பிரசன்னமும் அந்த சந்தடியும் இயேசுவின் ஆவியை அதிரச்செய்தது. “நீங்கள் சந்தடிபண்ணி அழுகிறதென்ன? பிள்ளை மரிக்கவில்லை, நித்திரையாயிருக்கிறாள்” என்றார். அந்த அந்நியரின் வார்த்தையில் அவர்கள் கோபமடைந்தனர். அந்தச் சிறுமி மரணத்தைத் தழுவியதை அவர்கள் கண்டிருந்தனர். அவரைப் பரிகசிப்பதற்காக அவர்கள் சிரித்தனர். அனைவரையும் அந்த வீட்டைவிட்டு வெளியே செல்லும்படி அவர் வற்புறுத்தினார். அதன்பின் இயேசு அந்தச் சிறுமியின் தகப்பனையும் தாயையும் அவரது மூன்று சீடர்களான பேதுருவையும் யாக்கோபையும் யோவானையும் அழைத்துக்கொண்டு, அந்த மரணம் நிகழ்ந்த அறைக்குள் சென்றார். (6)

இயேசு அந்தச் சிறுமியின் படுக்கைக்கு அருகில் சென்று, அவளது கையைத் தமது கரத்தால் பற்றி, அவளது வீட்டில் பேசக்கூடிய வழக்கமான மொழியில்: “சிறுபெண்ணே எழுந்திரு என்று உனக்குச் சொல்லுகிறேன்” என்று மெதுவாகக் கூறினார். (7)

உடனே நினைவற்றுக்கிடந்த அந்த உடலில் ஒரு அதிர்ச்சி உண்டாயிற்று. உயிரின் நாடித்துடிப்புகள் மீண்டும் இயங்க ஆரம்பிக்கின்றன. மறுபடியும் துடிக்கின்றன. ஒரு புன்சிரிப்புடன் உதடுகள் விரிகின்றன. உறக்கத்திலிருந்து விழித்ததுபோலக் கண்கள் அகலமாகத் திறந்தன. அந்தச் சிறுமி அவளருகில் நின்றிருந்த கூட்டத்தினரை ஆச்சரியத்துடன் பார்த்தாள். அவள் எழுந்தாள். அவளது பெற்றோர்கள் அவளைத் தங்கள் கைகளில் அணைத்து ஆனந்தக்கண்ணீர் பெருக்கினர். (8)

அந்த அதிபதியின் வீட்டிற்குச் செல்லும் பாதையில் இயேசு சென்றபோது, பன்னிரண்டு வருடங்களாக நோயினால் வாழ்க்கை பாரமாகித் துன்பப்பட்டிருந்த ஒரு பெண்ணை ஜனக்கூட்டத்தில் சந்தித்தார். அவள் தனக்குள்ளவைகள் அனைத்தையும் வைத்தியர்களுக்காவும்

மருந்துகளுக்காகவும் செலவிட்டிருந்தாள். முடிவு இந்த நோய் சுகமடையாது என்னும் அறிவிப்பாக இருந்தது. ஆனால் கிறிஸ்து நிறைவேற்றியிருந்த குணமாக்குதல்களைப்பற்றி அவள் கேள்விப்பட்டபோது, அவளது நம்பிக்கை எழுப்புதலடைந்தது. அவரிடத்திற்குச் சென்றால் அவளது நோய் நிச்சயமாகவே நீங்கும் என்று உணர்ந்தாள். பலவீனத்துடனும் பாடுகளுடனும் அவள் அவர் போதித்துக்கொண்டிருந்த கடற்கரைக்கு வந்தாள். கூட்டத்திற்கூடாகக் கடந்துசெல்ல அவள் வீணாக முயன்றாள். மறுபடியும் லேவி மத்தேயுவின் வீட்டிலிருந்து அவரைப் பின்தொடர்ந்தாள். ஆனால் அவளால் இன்னமும் அவரை நெருங்கமுடியவில்லை. அவள் நம்பிக்கையை இழக்கத் தொடங்கியிருந்தாள். அவர் திரளானவர்களுக்கிடையில் தமது பாதையை உண்டுபண்ணிச் சென்றபோது, அவள் எங்கிருந்தாளோ அந்த இடத்திற்கு வந்தார். (9)

பொன்னான வாய்ப்பு வந்துள்ளது. அவள் மாபெரும் வைத்தியரின் சமுகத்தில் இருக்கிறாள்! அந்தக் குழப்பத்திற்கிடையில் அவளால் அவருடன் பேசமுடியவில்லை. அல்லது அவர் கடந்து செல்லும்போது, அவரது உருவத்தை அரைகுறையான பார்வைக்குமேல் அவளால் காணமுடியவில்லை. நிவாரணம் கிடைக்கக்கூடிய ஒரு வாய்ப்பை இழந்துபோகக்கூடிய பயத்துடன் "நான் அவருடைய வஸ்திரத்தையாகிலும் தொட்டால் சொஸ்தமாவேன்" என்று தன் உள்ளத்தில் எண்ணிக்கொண்டு, அவருடைய வஸ்திரத்தின் ஓரத்தைமட்டும் தொடுவதில் வெற்றியடைந்தாள். அதே வினாடியில் அவள் சுகமடைந்ததையும் அறிந்தாள். அவளது வாழ்வின் விசுவாசம் அந்த ஒரு தொடுதலில் ஒருமுகப்பட்டிருந்தது. உடனேயே வேதனையும் பலவீனமும் மறைந்தது. அவளது உடல் ஆற்றலையும் பூரண சுகத்தையும் பெற்றுக்கொண்டது. (10)

பின்பு அவள் ஒரு நன்றியுள்ள இருதயத்துடன் அந்தக் கூட்டத்தைவிட்டு விலகிச்செல்ல முயன்றாள். ஆனால் திடீரென்று இயேசு நின்றார். அவருடன் மக்களும் நின்றனர். அவர் திரும்பி, சுற்றிப்பார்த்து, அந்தத் திரளானவர்களால் ஏற்படுத்தப்பட்ட குழப்பத்திற்கும்மேலாக மிகத் தெளிவாகக் கேட்கக்கூடிய சத்தத்தில்: "என்னைத் தொட்டது யார்?" என்றார். இந்தக் கேள்விக்கு மக்கள் வியப்பு நிறைந்த தோற்றத்துடன் அவரைப் பார்த்தார்கள். எல்லாப் பக்கங்களிலிலுமிருந்து ஒருவரையொருவர் நெருக்கிக்கொண்டும், முரட்டுத்தனமாக அங்குமிங்குமாகத் தள்ளிக்கொண்டும் இருந்த அந்த நிலையில், அது ஒரு மாறுபட்ட கேள்வியாகக் காணப்பட்டது. (11)

எப்பொழுதும் பேசுவதற்கு ஆயத்தமாக இருந்த பேதுரு: "திரளான ஜனங்கள் உம்மை நெருக்கிக்கொண்டிருக்கிறதை நீர் கண்டும், என்னைத்

தொட்டது யார் என்று கேட்கிறீரே” என்றான். அதற்கு இயேசு: “என்னிலிருந்து வல்லமை புறப்பட்டதை அறிந்திருக்கிறேன்; ஆதலால் ஒருவர் என்னைத் தொட்டதுண்டு” என்றார். சாதாரணமாகக் கவனமற்றவிதத்தில் அவரைத் தொடுவதிலிருந்து மாறுபட்டவிதத்தில் விசுவாசத்துடன் அவரைத் தொடுவதை அவரால் வேறுபடுத்தி அறிய முடிந்திருந்தது. அப்படிப்பட்ட தொடுதல் விமர்சனமின்றிக் கடந்துசெல்லக் கூடாததாக இருந்தது. அந்தத் தாழ்மையான பெண்ணிற்கு மகிழ்ச்சி நிறைந்த கிணற்றின் ஊற்றாக இருக்கக்கூடிய வார்த்தையை அவர் பேசினார். அந்த வார்த்தைகள் உலகின் இறுதிக்காலமட்டும் ஒரு ஆசீர்வாதமாக அமைந்திருக்கும். (12)

இயேசு அந்தப் பெண்ணைப்பார்த்து, அவரைத் தொட்டது யார் என்பதை அறிய வற்புறுத்தினார். மறைப்பது வீண் என்று கண்டு, அவள் நடுக்கத்துடன் முன்வந்தாள். அவரது பாதத்தில் விழுந்தாள். நன்றிமிக்க கண்ணீருடன் தனது துயரத்தின் கதையையும், அதிலிருந்து எப்படி தான் சுகத்தைப் பெற்றாள் என்பதையும் கூறினாள். இயேசு அவளை நோக்கி: “மகளே, திடன்கொள், உன் விசுவாசம் உன்னை இரட்சித்தது, சமாதானத்தோடே போ” என்று மென்மையாகக் கூறினார். அவருடைய வஸ்திரத்தைத் தொட்டதினால் உண்டான சுகத்தின் புண்ணியத்தைப்பற்றி மூடநம்பிக்கை உரிமைபாராட்டுவதற்கு அவர் வாய்ப்புக் கொடுக்கவில்லை. வெளிப்படையான ஒரு தொடுதலினால் அது நிகழவில்லை. அவரது தெய்வீக வல்லமையைப் பற்றிக்கொண்ட விசுவாசத்தின்மூலமாக அந்த சுகமளித்தல் நிகழ்த்தப்பட்டது. (13)

ஆச்சரியத்துடன் அவரைச் சூழ்ந்து நெருக்கிக்கொண்டிருந்த கூட்டத்திற்கு அவரது உயிராற்றலின் வல்லமையை உணர்த்துவதற்கு மார்க்கம் உண்டாகவில்லை. ஆனால் துன்பப்பட்டுக்கொண்டிருந்த அந்தப் பெண், சுகப்படுத்தப்படுவேன் என்ற நம்பிக்கையுடன் அவரைத் தொடுவதற்காக அவளது கரத்தை நீட்டினதும் சுகப்படுத்தும் வல்லமையை உணர்ந்தாள். ஆவிக்குரிய காரியங்களிலும் அப்படியே உள்ளது. மதத்தைப்பற்றிச் சாதாரணமானவிதத்தில் பேசுவதும், ஆவிக்குரிய பசியில்லாமல் ஜெபிப்பதும் ஜீவனுள்ள விசுவாசமில்லாமல் இருப்பதும் ஒன்றையும் சாதிப்பதில்லை. கிறிஸ்துவை உலகப்பிரகாரமான இரட்சகர் என்று ஒப்புக்கொள்ளும்— அவர்மீதுள்ள பெயரளவிலான விசுவாசம் ஆத்துமாவிற்கு சுகத்தை ஒருபோதும் கொண்டுவராது. சாதாரணமாக நுண்ணறிவினால் சத்தியத்திற்கு இணங்குவது என்பது இரட்சிக்கப்படுவதற்கான விசுவாசம் ஆகமாட்டாது. விசுவாசத்தை நடப்பிப்பதற்குமுன் பூரணமான அறிவிற்காகக் காத்திருக்கும் ஒருவனாலும் தேவனிடத்திலிருந்து ஆசீர்வாதத்தைப் பெற்றுக்கொள்ள

முடியாது. கிறிஸ்துவை விசுவாசித்தால் மட்டும் போதாது. நாம் அவரில் விசுவாசம் வைக்கவேண்டும். நமது சொந்த இரட்சகராக அவரைத் தழுவும் நமது ஒரே விசுவாசம் மட்டுமே நமக்கு நன்மையைத் தரும். அது அவரது புண்ணியங்களை நமக்குத் தருகிறது. விசுவாசத்தை அநேகர் ஒரு அபிப்பிராயம் எனக் கருதுகின்றனர். இரட்சிக்கும் விசுவாசம் என்பது ஒரு கொடுக்கல் வாங்கலாகும். அதன்மூலமாகக் கிறிஸ்துவைப் பெற்றுக்கொள்ளுபவர்கள் தங்களை தேவனுடன் ஒரு உடன்படிக்கையாகிய உறவினால் பிணைக்கின்றனர். உண்மையான விசுவாசம் உயிராக உள்ளது. உயிராற்றலை அதிகப்படுத்துதல், பலத்த நம்பிக்கை ஆகியவைகளால் ஆத்துமா வெற்றியடையும் ஒரு வல்லமையாக மாறுகிறது. உயிருள்ள ஒரு விசுவாசம் என்பதின் பொருள் இதுவே. (14)

அந்தப் பெண்ணை சுகப்படுத்தியபின், அவள் பெற்றிருந்த ஆசீர்வாதத்தை அவள் அறிக்கைசெய்யவே இயேசு விரும்பினார். சுவிசேஷம் தரும் பரிசுகள் திருட்டுத்தனமாகப் பாதுகாத்து வைக்கப்படவோ அல்லது இரகசியமாக சந்தோஷப்பட்டுக்கொள்ளுவதாகவோ இருக்கக்கூடாது. எனவே, அவரது நல்ல தன்மையை நாம் அறிக்கைசெய்யும்படி கர்த்தர் நம்மை அழைக்கிறார். “நானே தேவன் என்பதற்கு நீங்கள் எனக்குச் சாட்சிகள் என்று கர்த்தர் சொல்லுகிறார்”—ஏசாயா 43:12. (15)

அவர்மீதுள்ள நமது விசுவாச அறிக்கை கிறிஸ்துவை உலகத்திற்கு வெளிக்காட்டும் பரலோகத்தால் தெரிந்துகொள்ளப்பட்ட ஏதுகரமாக உள்ளது. பண்டைய பரிசுத்த மனிதர்கள்மூலமாக தெரிவிக்கப்பட்டது போல, நாமும் அவரது கிருபையை ஒப்புக்கொள்ளவேண்டியவர்களாக இருக்கிறோம். ஆனால் நமது சொந்த அனுபவத்தின் சாட்சியே மிகவும் பெலனுள்ளதாயிருக்கும். சக்திவாய்ந்த சாட்சியாக இருக்கும். தெய்வீக வல்லமை நமக்குள் செயலாற்றுவதை நாம் வெளிப்படுத்தும்போதுமட்டுமே நாம் தேவனுக்குச் சாட்சிகளாக இருக்கிறோம். மற்றவர்களில் இருந்து மாறுபட்டவிதத்தில் ஒவ்வொரு தனி நபரிடமும் ஒரு ஜீவன் உள்ளது. அதைப்போலவே மற்றவர்களிலிருந்து மாறுபட்ட ஒரு அனுபவமும் முக்கியமானதாக உள்ளது. நமது தனித்தன்மையினால் குறிப்பிடப்பட்ட நமது துதி அவரை நோக்கி மேலே எழும்பவேண்டுமென்று தேவன் விரும்புகிறார். அவரது கிருபையின் மகிமையைப் போற்றுகின்ற இப்படிப்பட்ட விலைமதிப்புமிக்க அறிக்கைகள் கிறிஸ்துவின் வாழ்க்கையைப்போன்ற வாழ்க்கையால் தாங்கப்படும்போது, ஆத்துமாக்களின் இரட்சிப்பிற்காகப் பணிபுரியும் தடுக்கமுடியாத ஒரு வல்லமையை உடையதாக இருக்கிறது. (16)

சுகமடைவதற்குப் பத்து குஷ்டரோகிகள் இயேசுவிடம் வந்தபோது, நீங்கள் போய் ஆசாரியனுக்கு உங்களைக் காட்டுங்கள் என்று அவர் கட்டளையிட்டார். செல்லும் வழியில் அவர்கள் சுகமடைந்தனர். ஆனால் அவர்களில் ஒரே ஒருவன் மட்டுமே அவருக்கு மகிமையைச் செலுத்தத் திரும்பிவந்தான். மற்றவர்கள் அவர்களைச் சுகப்படுத்தினவரை மறந்து தங்கள் வழியே சென்றுவிட்டனர். அதே மாதிரி இன்றும் எத்தனை பேர்கள் செய்துகொண்டிருக்கிறார்கள்! மனித இனத்தின் நன்மைக்காக தொடர்ச்சியாகக் கர்த்தர் செயலாற்றுகிறார். அவர் தமது ஈவுகளையெல்லாம் எப்பொழுதும் கொடுத்துக்கொண்டிருக்கிறார். நோயினால் பலவீனமாகப் படுக்கையில் கிடக்கிறவர்களை அவர் எழுப்புகிறார். மனிதர்கள் பார்க்காமலிருக்கும் ஆபத்துக்களிலிருந்து அவர் அவர்களை விடுவிக்கிறார். பேரபாயங்களிலிருந்து அவர்களைக் காப்பாற்றும்படி அவர் தமது தூதர்களை ஏற்பாடு செய்கிறார். "இருளில் நடமாடும் கொள்ளைநோய்க்கும், மத்தியானத்தில் பாழாக்கும் சங்காரத்துக்கும் பயப்படாதிருப்பாய்" (சங்கீதம் 91:6). ஆனால் அவர்களுடைய இருதயங்கள் உணர்த்தப்படாதவைகளாக உள்ளன. அவர்களை மீட்பதற்காக அவர் பரலோகத்தின செல்வங்கள் அனைத்தையும் கொடுத்திருக்கிறார். அப்படியிருந்தும் அவர்கள் அவரது பேரன்பைச் சிந்திக்காதவர்களாகவே உள்ளனர். அவர்கள் தங்களுடைய நன்றிகெட்ட தன்மையினால் தேவனுடைய கிருபைக்கு எதிராக அவர்களுடைய இருதயங்களை மூடிக்கொள்ளுகின்றனர். அவர்கள் பாலைவனத்திலுள்ள தரிசு நிலத்தைப்போல நன்மை எப்பொழுது வரும் என்பதை அறியாதவர்களாக உள்ளனர். அவர்களுடைய ஆத்துமாக்கள் வனாந்தரத்திலுள்ள காய்ந்து வெடித்த இடங்களில் தங்கியுள்ளன. (17)

நமது சொந்த நன்மைக்காக நாம் எப்போதும் தேவனுடைய ஒவ்வொரு ஈவையும் நமது ஞாபகத்தில் புதிதாக வைத்துக்கொள்ள வேண்டும். இவ்வாறாக அதிகமதிகமாக உரிமைபாராட்டவும் பெற்றுக்கொள்ளவும் விசுவாசம் பலப்படுத்தப்படுகிறது. பிறருடைய விசுவாசம் அனுபவம் ஆகியவைகளின் விபரங்கள் அனைத்தையும் நாம் வாசித்து அறிந்துகொள்ளுவதைவிட, தேவனிடத்திலிருந்து நாமாகப் பெற்றுக்கொள்ளுகின்ற மிகக் குறைவான ஆசீர்வாதத்தில் நமக்கான பெரும் தைரியமூட்டுதல் உள்ளது. தேவனுடைய கிருபைக்குப் பதிலளிக்கும் ஆத்துமா ஒரு நீர்ப்பாய்ச்சலான தோட்டத்தைப் போலிருக்கும். அவனுடைய உடல் நலம் விரைவாக முன்னேறும். இருளில் அவனுக்கு வெளிச்சம் உண்டாகும். கர்த்தருடைய மகிமை அவன்மேல் காணப்படும். அப்படியானால் கர்த்தருடைய நேசமிக்க அன்பையும் திரளான அவரது மேன்மைமிக்க இரக்கங்களையும் நாம் நினைவில் வைத்துக்கொள்வோமாக. இஸ்ரவேல் மக்கள் செய்ததுபோல நாம் சாட்சியின்

கல்தூண்களை நிறுத்துவோமாக. அவைகளின்மீது கர்த்தர் நமக்குச் செய்த விலைமதிப்புமிக்க கதையை எழுதுவோமாக. நமது இந்த பரதேசப் பயணத்தில் அவர் நம்முடன் இடைப்பட்டதை நாம் திருப்பிப்பார்க்கும்போது, நன்றியால் உருகியோடும் இருதயத்திலிருந்து: "கர்த்தர் எனக்குச் செய்த எல்லா உபகாரங்களுக்காகவும், அவருக்கு என்னத்தைச் செலுத்துவேன். இரட்சிப்பின் பாத்திரத்தை எடுத்துக்கொண்டு, கர்த்தருடைய நாமத்தைத் தொழுதுகொள்ளுவேன். நான் கர்த்தருக்குச் செய்த பொருத்தனைகளை அவருடைய ஜனங்களெல்லாருக்கு முன்பாகவும் செலுத்துவேன" (சங்கீதம் 116:12–14) என்று அறிவிப்போமாக. (18) ★

# 37

# முதல் சுவிசேஷகர்கள்!

**மத்தேயு 10; மாற்கு 6:7–11; லூக்கா 9:1–6**

**(The Desire of Ages, pp. 349–358)**

அப்போஸ்தலர்கள் இயேசுவின் குடும்பத்தின் அங்கத்தினர்களாக இருந்தனர். அவர் கலிலேயாவிற்கு ஊடாகக் கால்நடையாகச் சென்றிருந்தபோது, தங்களை மேற்கொண்டிருந்த உழைப்புகளையும் கஷ்டங்களையும் அவருடன் பகிர்ந்துகொண்டிருந்தனர். அவரது பிரசங்கங்களை அவர்கள் கவனித்திருந்து, தேவகுமாரனுடன் நடந்தும் பேசியும் இருந்தனர். அவரிடமிருந்துள்ள அனுதின உபதேசங்களால் மனித சமுதாயத்தின் உயர்விற்காக, எப்படிப் பணியாற்றவேண்டும் என்று கற்றிருந்தனர். இயேசு அவரைச் சூழ்ந்திருந்த திரளானவர்களுக்காக ஊழியஞ்செய்திருந்தார். அவரது சீடர்கள் அப்போது அவருடன் இருந்தனர். அவரது அழைப்பைக் கொடுப்பதற்கு ஆவலுள்ளவர்களாகவும், அவரது வேலையை எளிதாக்குவதற்குமாகக் செயலாற்றினார்கள். மக்களை ஒழுங்குபடுத்துவதிலும், துன்பப்பட்டிருந்தவர்களை இரட்சகரிடம் கொண்டு வருவதிலும், எல்லாருக்கும் வசதிகள் செய்துகொடுப்பதிலும் அவர்கள் உதவிசெய்திருந்தனர். ஆர்வத்துடன் கவனித்திருந்தவர்களுக்கு அவர்கள் வேத வாக்கியங்களை விளக்கியிருந்தனர். அவர்களுடைய ஆவிக்குரிய நன்மைகளுக்காகப் பலவழிகளிலும் பணியாற்றியிருந்தனர். இயேசுவைப்பற்றி அறிந்திருந்தவைகளை அவர்கள் போதித்தனர். அவர்கள் ஒவ்வொரு நாளும் மேலான அனுபவங்களை அடைந்திருந்தனர். ஆனாலும் தனிப்பட்டவிதமாக ஊழியஞ்செய்வதில் அவர்களுக்கு ஒரு அனுபவம் தேவையாக இருந்தது, அதிகமான உபதேசங்கள், நீடிய பொறுமை, மென்மைமிக்க தன்மை ஆகியவை இன்னும் அவர்களுக்குத் தேவையாக இருந்தன. அவர்களுடைய தவறுகளை நேரடியாக அவர்களுக்குச் சுட்டிக்காட்டவும் அவர்களுக்கு ஆலோசனைகள் கூறவும், சீர்படுத்தவும் அவர்தாமே அவர்களுடன் இருந்தார். இரட்சகர் அவர்களைத் தமது பிரதிநிதிகளாக வேறிடங்களுக்கு அனுப்பிவைத்தார். (1)

அவர்கள் அவருடன் இருந்தபோது, ஆசாரியர்கள், பரிசேயர் ஆகியோரின் போதனைகளால் அடிக்கடி குழப்பமடைந்திருந்தனர். எனவே, தங்களுடைய குழப்பங்களை இயேசுவிடம் கொண்டுவந்திருந்தனர். பாரம்பரியங்களோடு வேதவாக்கிய சத்தியங்களுக்குள்ள வேற்றுமைகளை ஒப்பிட்டு, அவர் அவர்கள்முன் வைத்திருந்தார். இவ்வாறாக அவர் தேவனுடைய வார்த்தையிலுள்ள அவர்களது நம்பிக்கையை பலப்படுத்தி யிருந்தார். ரபிமார்களின்மீதிருந்த பயத்திலிருந்தும், பாரம்பரியங்களினால் உண்டாகியிருந்த அடிமைத்தனத்திலிருந்தும் அவர் அவர்களைப் பெருமள விற்கு விடுதலை செய்திருந்தார். சீடர்களுக்குப் பயிற்சியளிப்பதில் இயேசுவின் வாழ்க்கையில் இருந்த உதாரணம் சாதாரணமான மதக்கோட்பாடுகளின் உபதேசங்களைவிட மிக அதிகமான நற்பயன் தரக்கூடியதாக இருந்தது. அவர்கள் அவரிடமிருந்து பிரிக்கப்பட்டிருந்தபோது, அவருடைய ஒவ்வொரு பார்வையும், குரலின் தன்மையும், வார்த்தையும் அவர்களுடைய ஞாபகத்திற்கு வந்தது. சுவிசேஷத்தின் எதிரிகளுடன் அவர்கள் அடிக்கடி எதிர்வாதஞ்செய்ய நேரிட்டபோது, அவருடைய வார்த்தைகளையே கூறி, அதனால் மக்கள்மீதுண்டான நற்பயனைக் கண்டு, பெருமளவில் மகிழ்ச்சியடைந்தனர். (2)

அவர் அந்தப் பன்னிருவரையும் தம்மிடம் அழைத்து, இருவர் இருவராக கிராமங்களுக்கும் பேரூர்களுக்கும் செல்லும்படி அவர்களுக்குக் கட்டளை கொடுத்தார். ஒருவரும் தனித்தவராக அனுப்பப்படவில்லை. சகோதரன் சகோதரனுடனும் நண்பன் நண்பனுடனும் சேர்த்து அனுப்பப்பட்டனர். இவ்வாறாக அவர்கள் ஆலோசனை கூறுவதிலும், ஜெபஞ்செய்வதிலும் ஒருவருக்கொருவர் உதவியாகவும் தைரியமூட்டக்கூடியவர்களாகவும் இருந்தனர். இவ்வாறாக ஒவ்வொருவருடைய பலமும் மற்றவருடைய பலவீனத்தைச் சரிக்கட்டுவதாக இருந்தது. இதேவிதமாகப் பின்னர் அவர் எழுபதுபேரை அனுப்பிவைத்தார். சுவிசேஷத்தின் தூதுவர்கள் தங்களுடைய பாதையில் தோழமையுள்ளவர்களாக இருக்கவேண்டும் என்பது இரட்சகரின் நோக்கமாக இருந்தது. இந்த உதாரணம் மிக நெருக்கமாக நமது காலத்தில் பின்பற்றப்பட்டிருந்தால், மிக அதிகமான வெற்றியுடையதாக இருந்திருக்கும். (3)

“பரலோகராஜ்யம் சமீபித்திருக்கிறது” என்ற யோவான் ஸ்நானகன் மற்றும் கிறிஸ்துவின் தூதைப்போன்றதாகவே சீடர்களின் தூதும் இருந்தது. நாசரேத்தூரைச்சேர்ந்த இயேசுதான் மேசியாவா என்னும் எதிர்வாதத்தில் அவர்கள் மக்களுடன் ஈடுபடாமல், அவர் செய்த அதே கிருபையின் கிரியைகளை அவருடைய நாமத்தினாலே செய்யவேண்டியவர்களாக

இருந்தனர். “வியாதியுள்ளவர்களைச் சொஸ்தமாக்குங்கள், குஷ்டரோகிகளைச் சுத்தம்பண்ணுங்கள், மரித்தோரை எழுப்புங்கள், பிசாசுகளைத் துரத்துங்கள்; இலவசமாய்ப் பெற்றீர்கள், இலவசமாய்க் கொடுங்கள்” என்று அவர் அவர்களுக்குக் கட்டளையிட்டார். (4)

இயேசுவின் ஊழியங்களின்போது, பிரசங்கம் செய்வதைவிட நோயாளிகளைச் சுகப்படுத்துவதற்கு அதிக நேரத்தை அவர் செலவிட்டிருந்தார். அவர் செய்த அற்புதங்கள், அழிப்பதற்கு அல்ல, இரட்சிப்பதற்கே அவர் வந்தார் என்று அவரது வார்த்தைகளின் சத்தியத்திற்குச் சாட்சிபகர்ந்தன. அவரது நீதி அவருக்கு முன்பாகச் சென்றது. கர்த்தருடைய மகிமை அவருக்குப் பின் சென்றது. அவர் சென்ற இடங்களிலெல்லாம் அவரது இரக்கத்தின் செய்திகள் அவருக்கு முன்சென்றன. அவர் எந்த இடத்தைக் கடந்துசென்றாரோ, அங்கு அவரது மனஉருக்கத்திற்கு இலக்காக இருந்தவர்கள் உடல்நலத்தினால் களிகூர்ந்து, புதிதாகக் கிடைத்த பலத்தை ருசித்துக்கொண்டிருந்தனர். கர்த்தர் அவர்களுக்குச் செய்தவைகளை அவர்களது உதடுகளிலிருந்து கேட்கும்படி கூட்டங்கள் அவர்களைச் சூழ்ந்தன. அவருடைய குரல்தான் அநேகர் கேட்ட முதல் குரலாகவும், அவருடைய பெயர்தான் அநேகர் முதலில் கூறிய வார்த்தையாகவும் இருந்தது. அவருடைய முகமே அநேகர் தாங்கள் முதன்முதலாக பார்த்த முகமாக இருந்தது. அவர்கள் ஏன் இயேசுவை நேசிக்கக்கூடாது? அவரைப் புகழ்ந்து கூறக்கூடாது? அவர் பேரூர்களையும் நகரங்களையும் கடந்துசென்றபோது, அவர் சென்ற இடங்களிலெல்லாம் ஜீவனையும் மகிழ்ச்சியையும் பரப்பும் ஒரு உயிரோட்டமான வாய்க்காலாக இருந்தார். (5)

கிறிஸ்துவின் அடியார்கள் அவர் செயலாற்றியதைப்போல செயலாற்றவேண்டும். நாம் பசியுள்ளவர்களுக்கு உணவுவழங்கி, ஆடை இல்லாதவர்களுக்கு ஆடை அணிவித்து, துன்பப்பட்டு வேதனையில் இருப்பவர்களுக்கு ஆறுதலளிக்கவேண்டும். நம்பிக்கை இழந்தவர்களுக்கு ஊழியஞ்செய்து, நம்பிக்கையற்றவர்களுக்கு நம்பிக்கையூட்டவேண்டும். அப்போது, “உன் நீதி உனக்கு முன்னாலே செல்லும்; கர்த்தருடைய மகிமை உன்னைப் பின்னாலே காக்கும்” (ஏசாயா 58:8) என்கிற வாக்குத்தத்தம் நம்மிலும் நிறைவேறும். தீமை செய்பவனைச் சீர்திருத்தும் செயலில் பட்டயமும் நீதிமன்றமும் பலன் தருவதைவிட, சுயநலமற்ற ஊழியத்தினால் வெளிக்காட்டப்படும் கிறிஸ்துவின் அன்பு அதிகமான பலன்தரக்கூடியதாக இருக்கும். சட்டத்தை மீறுபவனுக்குப் பயத்தை உண்டுபண்ணுவதற்கு இவை அவசியந்தான். ஆனால் அன்பான இறைப்பணியாளர்கள் அதைவிட அதிகமாகச் செய்யமுடியும். அடிக்கடி கடிந்துகொள்ளுவதினால் இருதயம்

கடினமடையும். ஆனால் கிறிஸ்துவின் அன்பின்கீழ் அது உருகும். சரீரப்பிரகாரமான நோய்களிலிருந்து நிவாரணம் அளிப்பதுமட்டுமின்றி, பாவம் என்னும் தொழுநோயினால் காக்கப்பட்டிருக்கும் ஆத்துமாவை சுத்தப்படுத்தக்கூடிய மாபெரும் வைத்தியரிடத்திற்குப் பாவியை நடத்தவும் இறைப்பணியாளனால் முடியும். நோயுற்றவர்கள், நல்வாய்ப்பினை இழந்தவர்கள், தீய ஆவிகளால் பிடிக்கப்பட்டவர்கள் அவருடைய சத்தத்தை அவரது ஊழியக்காரர்களின்மூலமாகக் கேட்க தேவன் ஏற்பாடு செய்கிறார். மனித ஏதுகரங்களின்மூலமாக உலகம் அறியாதவிதத்தில் ஒரு தேற்றரவாளனாக இருக்க அவர் விரும்புகிறார். (6)

சீடர்கள் அவர்களுடைய முதல் மிஷனரிப் பயணத்தின்போது, "காணாமற்போன ஆடுகளாகிய இஸ்ரவேல் வீட்டாரிடத்திற்கு" மட்டுமே செல்லவேண்டியவர்களாக இருந்தனர். இப்பொழுது அவர்கள் சமாரியர்களுக்கோ அல்லது புறஜாதியினருக்கோ சுவிசேஷத்தைப் பிரசங்கம் செய்திருந்தால், யூதர்களிடம் அவர்களுக்கிருந்த செல்வாக்கை இழக்க நேரிட்டிருந்திருக்கும். பரிசேயர்களின் தவறான எண்ணத்தை எழுப்பிவிடுவதினால் தங்களுடைய ஊழியத்தின் ஆரம்பத்திலேயே அவர்களாகவே பரிசேயர்களுடன் எதிர்வாதத்தில் ஈடுபட்டு, அவர்களுடைய தவறான எண்ணத்தைத் தூண்டிவிட நேர்ந்து, அதனால் அதைரியமடைய நேரிட்டிருந்திருக்கும். சுவிசேஷம் சகல நாடுகளுக்கும் எடுத்துச்செல்லப்படவேண்டும் என்பதை அறிந்துகொள்ளுவதில் அப்போஸ்தலர்களுங்கூட புரிந்துகொள்ளக்கூடாத அளவிற்கு மந்தமானவர்களாகவே இருந்தனர். அவர்கள் தாங்களே சத்தியத்தைப் பற்றிக்கொள்ளாதவர்களாக இருந்தவரை, புறமதத்தினருக்கு ஊழியஞ்செய்வதற்கு ஆயத்தமற்றவர்களாகவே இருந்தனர். யூதர்கள் சுவிசேஷத்தை ஏற்றுக்கொண்டால், அவர்களைப் புறஜாதியினருக்கான அவருடைய தூதுவர்களாக ஏற்படுத்தவேண்டும் என்ற நோக்கத்தை உடையவராக தேவன் இருந்தார். (7)

கிறிஸ்து ஊழியஞ்செய்த பணித்தளம் எங்கணும் தங்களுடைய தேவையை உணர்ந்து விழிப்படைந்த ஆத்துமாக்கள் சத்தியத்திற்காக பசியோடும் தாகத்தோடும் இருந்தன. இத்தகைய ஏக்கமுள்ள இருதயங்களுக்கு அவரது அன்பின் செய்தியை அனுப்பவேண்டிய நேரம் வந்துவிட்டது. இத்தகைய நபர்களுக்கு இயேசுவின் பிரதிநிதிகளாக அவர்கள் செல்லவேண்டியவர்களாக இருந்தனர். எனவே, முதன்முதலாக சத்தியத் தூதை அவர்களே கேட்டார்கள். (8)

இவ்வாறாக, விசுவாசிகள் அவர்களை தெய்வீகத்தினால் ஏற்படுத்தப்பட்ட ஆசிரியர்களாகக் காணும்படி நடத்தப்பட்டு, இரட்சகர்

அவர்களிடமிருந்து எடுத்துக்கொள்ளப்படநேரும்போது, போதகர்களின்றி இருக்கமாட்டார்கள். (9)

சீடர்கள் இறைப்பணிக்காகச் செய்த இந்த முதலாவது பயணத்தின்போது, இயேசு அவர்களுக்குமுன்பு எங்கு சென்றிருந்து நண்பர்களைச் சம்பாதித்திருந்தாரோ, அந்த இடத்திற்குமட்டுமே செல்லவேண்டியவர்களாக இருந்தனர். அந்தப் பயணத்திற்கான அவர்களது ஆயத்தம் மிகவும் எளிமையாக இருக்கவேண்டியதாக இருந்தது. அவர்களுடைய பெரும்பணியிலிருந்து அவர்களது மனதை வேறெதுவும் திசைதிருப்ப அனுமதிக்கக்கூடாது. அல்லது மேற்கொண்டுள்ள ஊழியத்திற்கான கதவை மூடிவிடக்கூடியவிதத்தில் எதுவும் எதிர்ப்பைத் தூண்டிவிடவுங்கூடாது. மதப்போதகர்கள் அணிகின்றவிதமான ஆடைகளை அவர்கள் அணியக்கூடாது; அல்லது தாழ்மையான விவசாயமக்கள் அணிகின்ற உடையிலிருந்து தங்களை வேறுபடுத்திக்காட்டக்கூடிய வெளித்தோற்றமுள்ள உடைகளையும் அணியக்கூடாது. அவர்கள் ஜெப ஆலயங்களுக்குள் சென்று பொது ஆராதனைக்காக ஒன்றுகூடும்படி மக்களை அழைக்கக்கூடாது. அவர்களது முயற்சிகள் அனைத்தும் வீட்டிற்கு வீடுசென்று செய்யும் உழியமாக இருக்கவேண்டியதாக இருந்தது. அனாவசியமான வந்தனங்களை அவர்கள் ஏற்பதிலும், பொழுதுபோக்கிற்காக வீடுகளைச் சந்திக்கச் செல்வதிலும் அவர்கள் காலத்தை வீணாக்கக்கூடாது. ஆனால் கிறிஸ்துவை இதயப்பூர்வமாக வரவேற்று, அவருக்கு உபசாரஞ்செய்வதுபோல தகுதியான ஒவ்வொரு இடத்திலுமிருந்து கிடைக்கக்கூடிய உபசரணையை ஏற்றுக்கொள்ளவேண்டும். “இந்த வீட்டுக்குச் சமாதானம் உண்டாவதாக“ (லூக்கா 10:5) என்னும் மிக அழகிய ஒரு வந்தனத்துடன் அவர்கள் வீட்டுக்குள் பிரவேசிக்கவேண்டியவர்களாக இருந்தனர். அவர்களுடைய ஜெபங்களினாலும், துதியின் பாடல்களினாலும், குடும்ப வட்டத்தில் வேதவாக்கியங்களைத் திறப்பதினாலும் அந்தவீடு ஆசீர்வதிக்கப்படும். (10)

இந்த சீடர்கள் தங்களுடைய ஆண்டவரின் வருகைக்கென்று பாதையை ஆயத்தஞ்செய்கின்ற கட்டியக்காரர்களாக இருக்கவேண்டி இருந்தனர். அவர்கள் சுமந்துசெல்லவேண்டியதாக இருந்த தூது, நித்திய ஜீவனைப்பற்றின வார்த்தையாக இருந்தது. மனிதர்களின் முடிவு அதை ஏற்பதையோ அல்லது புறக்கணிப்பதையோ சார்ந்திருந்தது. அதன் பக்தி விநயத்தை உணர்த்திக்காட்டுவதற்காக இயேசு சீடர்களுக்கு “எவனாகிலும் உங்களை ஏற்றுக்கொள்ளாமலும், உங்கள் வார்த்தைகளைக் கேளாமலும் போனால், அந்த வீட்டையாவது பட்டணத்தையாவது விட்டுப் புறப்படும்போது, உங்கள் கால்களில் படிந்த தூசியை உதறிப்போடுங்கள்.

நியாயத்தீர்ப்பு நாளிலே அந்தப் பட்டணத்திற்கு நேரிடுவதைப்பார்க்கிலும் சோதோம், கொமோரா நாட்டிற்கு நேரிடுவது இலகுவாயிருக்கும் என்று, மெய்யாகவே உங்களுக்குச் சொல்லுகிறேன்" (மத்தேயு 10:14,15) என்று கட்டளைகொடுத்தார். (11)

இப்பொழுது இயேசுவின் கண்கள் எதிர்காலத்திற்கூடாக நுழைந்துசெல்லுகிறது. அவரது மரணத்திற்குப்பின் சீடர்கள் செயலாற்ற வேண்டிய விசலமான இடங்களையும், அவைகளுள் அவருடைய சாட்சிகளாக இருக்கவேண்டிவர்களாக இருந்ததையும் அவர் கண்டார்.அவர் இரண்டாவது தடவை வரும்வரை, யுகங்கள் நெடுகிலும் அவரது ஊழியக்காரர்களுக்கு நேரிடவுள்ள அனுபவங்களையெல்லாம் அவரது தீர்க்கதரிசனப் பார்வை காண்கிறது. அவர்கள் சந்திக்கவேண்டிய போராட்டங்களை அவர் தமது பின்னடியார்களுக்குக் காட்டுகிறார். அந்த யுத்தத்தின் திட்டத்தையும் தன்மையையும் அவர் அவர்களுக்கு வெளிக்காட்டுகிறார். அவர்கள் சந்திக்கவேண்டிய அபாயங்களையும் அவர்களுக்கு அவசியமான சுய மறுப்பையும் அவர் அவர்கள்முன் திறந்துவைக்கிறார். சற்றும் எதிர்பாராத விதமாக எதிரியால் அவர்கள் பிடிக்கப்படாதபடிக்கு, அதினிமித்தமாக அவர்கள் செலுத்தப்போகும் கிரயத்தை (அடையப்போகும் துன்பங்களை) அவர்கள் கணக்கிடவேண்டுமென்று அவர் விரும்புகிறார். அவர்கள் மாம்சத்தோடும் இரத்தத்தோடும் மட்டும் யுத்தஞ்செய்பவர்களாக இல்லாமல், துரைத்தனங்களோடும், அதிகாரங்களோடும், இப்பிரபஞ்சத்தின் அந்தகார லோகாதிபதிகளோடும், வானமண்டலங்களிலுள்ள பொல்லாத ஆவிகளின் சேனைகளோடும் போராடுபவர்களாக உள்ளனர். இயற்கைக்கு மேற்பட்ட வல்லமைகளுடன் அவர்கள் எதிர்த்துநிற்கவேண்டியவர்களாக உள்ளனர். ஆனால் இயற்கைக்கு மேலான உதவி அவர்களுக்கு வாக்குறுதி செய்யப்பட்டுள்ளது. இந்த சேனையிலே பரலோகத்தின் அனைத்து அறிவுஜீவிகளும் இருக்கின்றனர். அதில் தேவதூதர்களுக்கும் மேலானவர்கள் உள்ளனர். இந்தப் போரில் இயக்குனராகச் செயல்பட கர்த்தருடைய சேனையின் அதிபதிக்குப் பிரதிநிதியாக பரிசுத்த ஆவியானவர் இருக்கிறார். நமது குறைபாடுகள் அநேகமானவைகளாக இருக்கலாம். நமது பாவங்களும் தவறுகளும் மிகவும் பொறுக்க முடியாத அளவிற்குத் தீங்கானவையாக இருக்கலாம். ஆனால் பாவத்தினால் வேதனைப்பட்டு, நொறுங்குண்ட இருதயத்துடன் தேவனுடைய கிருபையைத் தேடும் அனைவருக்கும் தேவனுடைய கிருபை உள்ளது. தேவன்மேல் நம்பிக்கை வைப்பவர்களின் சார்பில் சர்வவல்லவரின் வல்லமை ஆதரவாக உள்ளது. (12)

"ஆடுகளை ஓய்நாய்களுக்குள்ளே அனுப்புகிறதுபோல, இதோ, நான் உங்களை அனுப்புகிறேன்; ஆகையால், சர்ப்பங்களைப்போல

வினாவுள்ளவர்களும் புறாக்களைப்போல கபடற்றவர்களுமாய் இருங்கள்" (மத்தேயு 10:16) என்று இயேசு கூறினார். சத்தியத்தின் ஒரு வார்த்தையைக்கூட இயேசு மூடிமறைத்துப் பேசவில்லை. மாறாக அதனை எப்பொழுதும் அன்புடன் பேசினார். மக்களுடன் உறவாடுகின்ற அவரது செயலில் மேலான திறமை, சிந்தனை, அன்புமிக்க கவனம் ஆகியவைகளை அவர் செயற்படுத்தியிருந்தார். அவர் ஒருபோதும் கொடூரமாக இருக்கவில்லை. தேவையின்றி ஒருபோதும் கடினமான ஒரு வார்த்தையையும் கூறவில்லை. மென்மைமிக்க உணர்வுடைய ஒரு ஆத்துமாவிற்கும் தேவையற்ற வேதனையை அவர் ஒருபோதும் உண்டுபண்ணவில்லை. மனித பலவீனத்தை அவர் கண்டனஞ்செய்யவில்லை. மாய்மாலம், அவிசுவாசம், அக்கிரமம் ஆகியவைகளின்மீது அவர் அச்சமின்றி வெளிப்படையாகக் குற்றஞ்சாட்டினார். காயம் உண்டுபண்ணும் கடிந்துகொள்ளுதலைக் கூறியபோதெல்லாம், அவரது குரலில் அழுகை நிரம்பியிருந்தது. வழியும் சத்தியமும் ஜீவனுமாயிருந்த அவரை ஏற்றுக்கொள்ள மறுத்த—அவரால் நேசிக்கப்பட்டிருந்த எருசலேமிற்காக அழுதார். இரட்சகராக இருந்த அவரை அவர்கள் புறக்கணித்தனர். ஆனால் அவர் அவர்களைத் தமது இரக்கமிக்க அன்புடன் நோக்கிப் பார்த்தார். அவரது இருதயத்தை உடைக்குமளவிற்கு அவரது துயரம் ஆழமிக்கதாக இருந்தது. அவரது பார்வையில் ஒவ்வொரு ஆத்துமாவும் அருமையானதாக இருந்தது. அவர் தமது தெய்வீக மேன்மையை எப்பொழுதும் உடையவராக இருந்திருந்தபோதிலும், தேவனுடைய குடும்பத்தின் அங்கத்தினராயிருந்த ஒவ்வொருவரிடத்திலும் மென்மைமிக்க நன்மதிப்புடன் சிரந்தாழ்த்தினார். அனைத்து மனிதரிலும் விழுந்துபோன ஆத்துமாக்களைக்கண்டு, அவர்களை இரட்சிப்பது அவரது ஊழியமாக இருந்தது என்பதை அவர் கண்டார். (13)

இயல்பான இருதயத்திலிருந்துண்டாகும் கட்டளைகளுக்கு இசைவாக கிறிஸ்துவின் ஊழியக்காரர்கள் செயல்படக்கூடாது. அவர்கள் தேவனோடு நெருங்கிய தொடர்பு வைத்திருக்கவேண்டும். இல்லாவிட்டால், கோபமூட்டப்படும்போது, சுயத்தை உயர்த்தி, உலர்ந்துபோய்க்கொண்டிருக்கும் மக்களை புத்துணர்வடையச் செய்யும் மென்மையான தூறலைப்போலவோ, அல்லது பனியைப்போலவோ இராமல், பெருமழையைப்போலப் பொருத்தமற்ற வார்த்தைகளைப் பொழிந்து தள்ளிவிடுவார்கள். அவர்கள் இவைகளையே செய்யவேண்டுமென்று சாத்தான் விரும்புகிறான். ஏனெனில் இவைகள் அவனது வழிமுறைகளாக உள்ளன. வலுசர்ப்பமே வெறிகொண்டிருக்கிறது. கோபத்திலும் குற்றங்கூறுவதிலும் சாத்தானின் ஆவியே வெளிப்படுத்தப்படுகிறது. ஆனால் தேவனுடைய ஊழியக்கரர்கள் அவருடைய பிரதிநிதிகளாக இருக்கவேண்டும். பரலோக நடைமுறைப்போக்கில் மாத்திரமே அவர்கள்

செயல்படவேண்டுமென்று அவர் விரும்புகிறார். அதாவது, அவரது சொந்த சாயலையுடைய மேல்விலாசத்தைக் கொண்டுள்ள சத்தியத்தில் மாத்திரமே அவர்கள் ஈடுபடவேண்டும். சாத்தானை முறியடிப்பதற்கு அவர்கள் பயன்படுத்தவேண்டிய வல்லமை கிறிஸ்துவின் வல்லமையாக மாத்திரமே இருக்கவேண்டும். கிறிஸ்துவின் மகிமை அவர்களுடைய பலமாக உள்ளது. அவரது அழகின்மீது அவர்கள் தங்களுடைய கண்களைப் பதிக்கவேண்டும். அப்போது தெய்வீக உபாயத்துடனும் சாதுவான தன்மையுடனும் அவர்களால் சுவிசேஷத்தை முன்வைக்க முடியும். எந்தவிதமான வலிமைமிக்க வாதத்தையும்விட, கோபமூட்டப்படும்போதும் மென்மையாகக் காக்கப்படும் ஆவி, சத்தியத்திற்குச் சாதமாக அதிகப் பலனுள்ளவிதத்தில் பேசும். (14)

சத்தியத்திற்கு விரோதிகளாக இருப்பவர்களை எதிர்வாதத்தில் சந்திக்க நேரிடுபவர்கள் மனிதர்களை மட்டுமின்றி சாத்தானையும் அவனது பிரதிநிதிகளையும் சந்திக்க நேரிடும். “ஆட்டுக்குட்டிகளை ஓநாய்களுக்குள்ளே அனுப்புகிறதுபோல, இதோ, நான் உங்களை அனுப்புகிறேன்” (லூக்கா 10:3) என்னும் இரட்சகரின் வார்த்தைகளை அவர்கள் நினைவுகூரட்டும். தேவனுடைய அன்பில் அவர்கள் இளைப்பாறுவார்களாக. நேரடியாக நிந்திக்கப்பட்டாலும் அப்போஸ்தலரின் ஆவி அமைதியுள்ளதாகக் காக்கப்படும். தெய்வீகப் போர்க்கவசத்தினால் கர்த்தர் அவர்களைப் போர்த்துவார். குரைக்கும் ஓநாய்களின் சத்தத்தைப் பற்றிக்கொள்ளாதபடி அவரது பரிசுத்த ஆவி மனதையும் இருதயத்தையும் ஆட்கொள்ளும். (15)

இயேசு அவரது சீடர்களுக்கான உபதேசத்தைத் தொடர்ந்து, “மனுஷரைக்குறித்து எச்சரிக்கையாயிருங்கள்” என்றார். தேவனை அறியாதவர்களின்மீது அவர்கள் தங்களுடைய முழு நம்பிக்கையையும் வைக்காமலும், தங்களுடைய ஆலோசனைகளை அவர்களுக்கு திறக்காமலும் இருக்கவேண்டும். ஏனெனில் இது சாத்தானின் பிரதிநிதிகளுக்கு ஒரு அனுகூலத்தை உண்டுபண்ணும். மனிதனுடைய கண்டுபிடிப்புகள் அடிக்கடி தேவனுடைய திட்டங்களுக்கு எதிர்ச்செயலாக உள்ளன. கர்த்தருடைய ஆலயத்தைக் கட்டுபவர்கள் மலையின்மீது காட்டப்பட்ட மாதிரியின்படியே தெய்வீக சாயலாகக் கட்டவேண்டும். பரிசுத்த ஆவியின் வழிநடத்துதலின்கீழ் இல்லாத மனிதர்களின் ஆலோசனையை தேவனுடைய ஊழியக்காரர்கள் சார்ந்துகொள்ளும்போது, தேவனுக்கு அவமதிப்பும் சுவிசேஷத்திற்கு துரோகமும் உண்டாகிறது. உலக ஞானம் தேவனுக்கு விரோதமான பகை. அதைச் சாருபவர்கள் நிச்சயமாகவே தவறுவார்கள். (16)

“அவர்கள் உங்களை ஆலோசனைச் சங்கங்களுக்கு ஒப்புக் கொடுத்து, ... அவர்களுக்கும் புறஜாதியாருக்கும் சாட்சியாக

என்னிமித்தம் அதிபதிகளுக்கு முன்பாகவும், ராஜாக்களுக்கு முன்பாகவும் கொண்டுபோகப்படுவீர்கள்”—மத்தேயு 10:17,18. உபத்திரவம் ஒளியைப் பரப்பும். கிறிஸ்துவின் ஊழியக்காரர்கள் உலகத்தின் பெரிய மனிதர்களுக்குமுன் கொண்டுவரப்படுவார்கள். அப்படியில்லாவிட்டால், அவர்கள் ஒருபோதும் சுவிசேஷத்தைக் கேட்டிருக்க முடியாது. சத்தியம் அவர்களுக்குத் தவறானவிதத்தில் எடுத்துக்கூறப்பட்டுள்ளது. கிறிஸ்துவின் சீடர்களைப்பற்றின தவறான குற்றச்சாட்டுகளை அவர்கள் கேட்டிருக்கின்றனர். பெரும்பாலும் தங்களுடைய விசுவாசத்திற்காக விசாரிக்கப்படும்படி கொண்டுவரப்படுபவர்களின் சாட்சியை வைத்தே அவர்கள் அதன் உண்மையான இயல்பை அறிந்துகொள்ளமுடியும். விசாரணையின்கீழ் கொண்டுவரப்படும்பொழுது, இவர்கள் பதில்கூறவும், அவர்களால் கூறப்படும் சாட்சியை நீதிபதிகள் உன்னிப்பாகக் கவனிக்கவும் வேண்டியது அத்யாவசியமாகிறது. அப்படிப்பட்ட அவசர நிலைமையைச் சந்திக்க தேவனுடைய ஊழியக்காரர்களுக்கு அவரது கிருபை அருளப்படும். “நீங்கள் பேசவேண்டுவது அந்நேரத்தில் உங்களுக்கு அருளப்படும்” என்று இயேசு கூறுகிறார். தேவனுடைய ஊழியக்காரர்களின் மனங்களை தேவனுடைய ஆவியானவர் ஒளியடையச்செய்யும்போது, சத்தியம் அதன் தெய்வீக வல்லமையுடனும் சரியான தன்மையுடனும் முன்வைக்கப்படும். சத்தியத்தைப் புறக்கணிப்பவர்கள் சீடர்களின்மீது குற்றஞ்சாட்டவும் அவர்களை ஒடுக்கவும் எழுந்து நிற்பார்கள். ஆனால் இழப்பு, பாடுகள், மரணத்தின்கீழுங்கூட, கர்த்தருடைய பிள்ளைகள் தங்களுடைய சாந்தத்தினால் தெய்வீக முன்மாதிரியை வெளிப்படுத்தவேண்டியவர்களாக உள்ளனர். இவ்விதமாக சாத்தானின் பிரதிநிதிகளுக்கும் கிறிஸ்துவின் பிரதிநிதிகளுக்கும் இடையிலுள்ள வேற்றுமை ஒப்பிட்டுக் காணப்படும். அதிபதிகளுக்கும் மக்களுக்கும் முன்பாக இரட்சகர் உயர்த்தப்படுவார். (17)

இரத்த சாட்சிகளைப்போன்ற தைரியத்தையும் வேதனைகளைச் சகித்துக்கொள்ளும் மனோபலத்தையும் உடையவர்களாக இருக்கும் அருள், அப்படிப்பட்ட அவசியம் உண்டாகும்வரை சீடர்களுக்குக் கொடுக்கப்பட வில்லை. அப்பொழுது, இரட்சகரின் வாக்குத்தத்தம் நிறைவேறியது. சனகரீம் ஆலோசனை சங்கத்திற்குமுன் பேதுருவும் யோவானும் சாட்சிபகர்ந்தபோது, அவர்கள் “ஆச்சரியப்பட்டு, அவர்கள் இயேசுவுடனேகூட இருந்தவர்களென்று அறிந்துகொண்டார்கள்”—அப்போஸ்தலர் 4:13 இராயனின் நியாயசங்கத்தில் நிகழ்ந்த தனது நியாயவிசாரணையைப்பற்றிப் பவுல் எழுதும்போது: “நான் முதல்விசை உத்தரவுசொல்ல நிற்கையில் ஒருவனும் என்னோடேகூட இருக்கவில்லை, எல்லாரும் என்னைக் கைவிட்டார்கள்; ... கர்த்தரோ எனக்குத் துணையாகநின்று, என்னாலே பிரசங்கம் நிறைவேறுகிறதற்காகவும்,

புறஜாதியாரெல்லாரும் கேட்கிறதற்காகவும், என்னைப் பலப்படுத்தினார்; சிங்கத்தின் வாயிலிருந்தும் நான் இரட்சிக்கப்பட்டேன்" (2 தீமோத்தேயு 4:16,17) என்று கூறுகிறான். (18)

கிறிஸ்துவின் ஊழியக்காரர்கள் விசாரணைக்காகக் கொண்டுவரப் படும்போது, பேசுவதற்கென்று எந்த ஒரு உரையையும் ஆயத்தம் செய்யவேண்டிய அவசியம் இல்லை. தேவனுடைய வார்த்தையில் உள்ள சத்தியத்தை நாளுக்கு நாள் பொக்கிஷமாகச் சேகரித்து வைப்பதினாலும், ஜெபத்தினால் தங்களுடைய விசுவாசத்தைப் பலப்படுத்துவதினாலும் அவர்களுடைய ஆயத்தமாகுதல் செய்யப்படவேண்டியதாகவிருந்தது. விசாரணைக்காக அவர்கள் கொண்டுவரப்படும்போது, தேவையான சத்தியங்களைப் பரிசுத்த ஆவியானவர் அவர்களுடைய ஞாபகத்திற்குக் கொண்டுவருவார். (19)

தேவனையும் அவரால் அனுப்பப்பட்ட கிறிஸ்துவையும் அறிந்துகொள்ளும் அன்றாட விடாமுயற்சி, ஆத்துமாவிற்கு வல்லமையையும் திறமையையும் கொண்டுவரும். அக்கறையுடன் வேதவாக்கியங்களை ஆராய்ந்ததினால் உண்டான அறிவு, சரியான நேரத்தில் மின்னலைப்போல ஞாபகத்திற்குக் கொண்டுவரப்படும். ஆனால் கிறிஸ்துவின் வார்த்தைகளுடன் அறிமுகமானவர்களாக இருப்பதற்கு எவர்களாவது அலட்சியமாயிருந்தால், அவரது கிருபையின் வல்லமையை சோதனையின்போது அவர்கள் ஒருபோதும் சோதித்துப்பார்க்காதவர்களாக இருந்திருந்தால், அப்படிப்பட்டவர்கள் பரிசுத்த ஆவியானவர் அவருடைய வார்த்தைகளை தங்களது ஞாபகத்திற்கு கொண்டுவருவார் என்று எதிர்பார்க்க முடியாது. முழுமையான பற்றுதலுடன் அவர்கள் நாள்தோறும் தேவனுக்குச் சேவை செய்திருந்து, பின்னர் அவரை நம்பவேண்டும். (20)

பூமிக்குரிய மிகவும் பிரியமான உறவுங்கூட புறக்கணிக்கப்பட்டுப் போகும்படி, சுவிசேஷத்தின்மீதான பகை அவ்வளவு கசப்புள்ளதாக இருக்கும். கிறிஸ்துவின் சீடர்கள் அவர்களுடைய குடும்பத்தினராலேயே மரணத்திற்குக் காட்டிக்கொடுக்கப்படுவார்கள். "என் நாமத்தினிமித்தம் எல்லாராலும் பகைக்கப்படுவீர்கள். முடிவுபரியந்தம் நிலைநிற்பவனே இரட்சிக்கப்படுவான்" (மாற்கு 13:13) என்றார். ஆனால் தங்களைத் தேவையில்லாமல் உபத்திரவத்திற்கு உள்ளாக்கிக்கொள்ளவேண்டாம் என்று அவர் அவர்களுக்குக் கட்டளையிட்டார். அவரது உயிரை எடுத்துக்கொள்ள வகைதேடியவர்களிடமிருந்து தப்பித்துக்கொள்ளுவதற்காக அவர் அடிக்கடி ஊழியஞ்செய்திருந்த ஒரு இடத்திலிருந்து வேறொரு இடத்திற்குச் சென்றிருந்தார். நாசரேத்தில் அவர் புறக்கணிக்கப்பட்டபோது,

அவரது சொந்த ஊர்க்காரர்களே அவரைக் கொலைசெய்ய முயன்றபோது, அவர் கப்பர்நகூமிற்குச் சென்றார். “அவருடைய வசனம் அதிகாரமுள்ளதாயிருந்தபடியால் அவருடைய போதகத்தைக்குறித்து அவர்கள் ஆச்சரியப்பட்டார்கள்”—லூக்கா 4:32. அப்படியே அவரது ஊழியக்காரர்களும் உபத்திரவத்தினால் அதைரியமடையாதவர்களாக இருந்து, ஆத்துமாக்களின் இரட்சிப்பிற்காக மேலும் ஊழியஞ்செய்யக்கூடிய வேறு ஒரு இடத்தைத் தேடவேண்டும். (21)

பணியாள் எஜமானனைவிடப் பெரியவனல்ல. பரலோகத்தின் இளவரசர் (இயேசு), பெயல்செபூல் என்று அழைக்கப்பட்டார். அவரது சீடர்களும் அதேவிதமாக தவறாக எடுத்துக்காட்டப்படுவார்கள். அபாயம் எப்படிப்பட்டதாக இருந்தாலும் சரி, கிறிஸ்துவின் அடியார்கள் தங்களுடைய கொள்கைகளில் உறுதியுள்ளவர்களாக இருக்கவேண்டும். ஒளிந்துகொண்டிருத்தலை அவர்கள் வெறுத்தொதுக்கவேண்டும். சத்தியத்தை அறிக்கைசெய்வதில்தான் பாதுகாப்பு உள்ளது என்னும் நிச்சயத்தைப் பெறும்வரை, அவர்களால் பொறுப்பற்றவர்களாக இருக்கமுடியாது. மனிதர்களுக்குள்ள ஆபத்தை அறிவிக்கும்படி அவர்கள் காவல்காரர்களாக ஏற்படுத்தப்பட்டுள்ளனர். கிறிஸ்துவிடமிருந்து பெற்றுக்கொள்ளப்பட்ட சத்தியம் இலவசமாகவும் வெளிப்படையாகவும் அனைவருக்கும் கற்றுக்கொடுக்கப்படவேண்டும். “நான் உங்களுக்கு இருளிலே சொல்லுகிறதை நீங்கள் வெளிச்சத்திலே சொல்லுங்கள்; காதிலே கேட்கிறதை நீங்கள் வீடுகளின்மேல் பிரசித்தம்பண்ணுங்கள்” (மத்தேயு 10:27) என்று இயேசு கூறினார். (22)

இயேசு சமரசத்தினால் சமாதானத்தை ஒருபோதும் விலைக்கு வாங்கவில்லை. மனித இனம் முழுவதற்குமான அன்பினால் அவரது இருதயம் நிரம்பிவழிந்தது. ஆனால் அவர் ஒருபோதும் அவர்களது பாவத்திற்கு இடங்கொடுக்கவில்லை. தமது சொந்த இரத்தத்தின் கிரயத்தினால் விலைக்கு வாங்கியிருந்த ஆத்துமாக்கள் தங்களுடைய ஆத்துமாவைக் கெடுக்கக்கூடிய ஒரு நடவடிக்கையைப் பின்தொடர்ந்தபோது, மௌனமாக இருக்கும் ஒரு நண்பராக அவர் இருக்கவில்லை. மனிதன் தனக்குத்தானும், மேலான நித்திய காரியங்களிலும் உண்மையுள்ளவனாக இருக்கவேண்டும் என்பதற்காக அவர் உழைத்தார். கிறிஸ்துவின் ஊழியக்காரர்கள் அதேவிதமான வேலைக்கு அழைக்கப்பட்டுள்ளனர். முரண்பாடுகளைத் தவிர்ப்பதற்கு வகைதேடுவதில் சத்தியத்தை விட்டுவிடாமலிருப்பதைப்பற்றி அவர்கள் எச்சரிக்கையாக இருக்கவேண்டும். “சமாதானத்திற்கடுத்தவைகளை” (ரோமர் 14:19) அவர்கள் நாடவேண்டியவர்களாக உள்ளனர். ஆனால் கொள்கைகளை விட்டுக்கொடுத்துச் சமரசஞ்செய்வதினால் உண்மையான சமாதானத்தை

ஒருபோதும் அடையமுடியாது. எதிர்ப்பைத் தூண்டிவிடாமல் எந்த ஒரு மனிதனாலும் கொள்கைக்கு உண்மையுள்ளவனாக இருக்கமுடியாது. ஆவிக்குரியதாக இருக்கும் ஒரு கிறிஸ்தவம் கீழ்ப்படியாமையின் பிள்ளைகளால் எதிர்க்கப்படும். ஆனால் “ஆத்துமாவைக் கொல்ல வல்லவர்களாயிராமல், சரீரத்தை மாத்திரம் கொல்லுகிறவர்களுக்கு நீங்கள் பயப்படவேண்டாம்” என்று இயேசு அவரது சீடர்களிடம் கூறினார். தேவனுக்கு உண்மையாக இருப்பவர்கள் மனிதர்களின் வல்லமைக்கோ அல்லது சாத்தானின் பகைமைக்கோ பயப்படவேண்டியதில்லை. அவர்களுடைய நித்தியஜீவன் கிறிஸ்துவிற்குள் பாதுகாப்பாக இருக்கிறது. தேவன் எந்த நம்பிக்கையை அவர்கள்மீது வைத்து அவர்களை மேன்மைப்படுத்தியிருந்தாரோ, அந்த நம்பிக்கையை மறுதலித்து, சத்தியத்தை சரணடையச் செய்துவிடுவோமோ என்ற பயம் மாத்திரமே அவர்களுடையதாக இருக்கவேண்டும். (23)

மனித இருதயங்களை சந்தேகங்களால் நிரப்புவது சாத்தானின் வேலையாக இருக்கிறது. தேவனை ஒரு கடுமையான நியாயாதிபதியாகப் பார்க்கும்படி அவன் மனிதர்களை நடத்துகிறான். பாவஞ்செய்யும்படி அவன் சோதனையை உண்டுபண்ணுகிறான். அதன்பின் அவர்கள் தங்களுடைய பரலோகப் பிதாவையோ அல்லது அவரது இரக்கத்தையோ எழுப்பிவிட அவரை சமீபிக்க முடியாத அளவிற்கு மிகவும் கெட்டவர்கள் என்று கருதச் செய்கிறான். இவைகளையெல்லாம் கர்த்தர் புரிந்திருக்கிறார். தங்களுடைய தேவைகளிலும் பலவீனங்களிலும் அவர்களுக்குத் தேவையான தேவனுடைய அனுதாபத்தை இயேசு அவரது சீடர்களுக்கு நிச்சயப்படுத்துகிறார். எந்தப் பெருமூச்சானாலும், எத்தகைய வேதனையின் உணர்வானாலும், ஆத்துமாவை ஊடுருவும் எத்தகைய துக்கமானாலும், பிதாவின் இதயத்தினின்று வரும் நாடித்துடிப்பின் அதிர்வுகளைத் தொடாமல் நடைபெறுவதில்லை. (24)

உன்னதத்திலும் பரிசுத்த ஸ்தலத்திலும் இருக்கும் தேவன் செயலாற்றாத நிலையில் இல்லை என்று வேதாகமம் கூறுகிறது. அவர் மௌனத்திலும் தனிமையிலும் இல்லை. ஆனால் ஆயிரமாயிரமான பதினாயிரம் பதினாயிரங்களான பரிசுத்தமிக்க நுண்ணறிவாளர்களால் சூழப்பட்டிருக்கிறார். அவர்கள் அனைவரும் அவரது சித்தத்தை நிறைவேற்றக் காத்திருக்கின்றனர். நம்மால் அறிந்துகொள்ளமுடியாத மார்க்கங்களின்மூலமாக, தேவன் அவரது ஆளுகையிலுள்ள ஒவ்வொரு பகுதியுடனும் தீவிரமான தொடர்புடையவராக இருக்கிறார். ஆனால் புள்ளியைப் போன்ற இந்த உலகத்திலுள்ள ஆத்துமாக்களை இரட்சிப்பதற்காக, அவர் தமது ஒரே பேறான குமாரனை அனுப்பினார்.

இதில் அவரது விருப்பமும் பரலோகத்திலுள்ள அனைவருடைய விருப்பமும் மையங்கொண்டிருக்கிறது. ஒடுக்கப்பட்டவர்களின் அழுகுரலைக் கேட்பதற்கு தேவன் தமது சிங்காசனத்திலிருந்து குனிந்துபார்க்கிறார். உண்மையான ஒவ்வொரு ஜெபத்திற்கும் "இதோ, நான் இங்கே இருக்கிறேன்" என்று அவர் பதிலளிக்கிறார். துன்பப்படுகிறவர்களையும் மிதிபட்டுக்கிடக்கிறவர்களையும் அவர் தூக்கிவிடுகிறார். நமது துன்பங்கள் அனைத்திலும் அவர் துன்பமடைகிறார். ஒவ்வொரு சோதனையிலும் விசாரணையிலும் நம்மை விடுவிப்பதற்காக அவரது சமுகத்தின் தூதன் நம்மருகில் இருக்கிறான். (25)

பிதாவின் கவனமின்றி ஒரு அடைக்கலான் குருவிகூட தரையில் விழுவதில்லை. தேவனுக்கு எதிரான சாத்தானின் வெறுப்பு இரட்சிப்பின் பராமரிப்பில் உள்ள ஒவ்வொரு பொருளையும் வெறுக்கும்படி அவனை நடத்துகிறது. தேவனுடைய கரத்தின் கிரியைகளைச் சீர்குலைக்க அவன் வகைதேடுகிறான். ஊமையான பிராணிகளை அழிப்பதில்கூட அவன் சந்தோஷப்படுகிறான். தேவனுடைய பாதுகாக்கும் பராமரிப்பினால்தான் ஆகாயத்துப் பறவைகள் பாதுகாக்கப்பட்டு மகிழ்ச்சிதரும் பாடல்களினால் நம்மை மகிழ்விக்கின்றன. ஆனால் அவர் அடைக்கலான் குருவிகளைக்கூட மறக்கிறதில்லை. "பயப்படாதிருங்கள்; அநேகம் அடைக்கலான் குருவிகளைப் பார்க்கிலும் நீங்கள் விசேஷித்தவர்களாயிருக்கிறீர்கள் என்கிறார்." (26)

மனிதர்களின் முன்பாக என்னை அறிக்கைசெய்யும்போது, பிதாவிற்குமுன்பாகவும் பரிசுத்த தூதர்களுக்கு முன்பாகவும் நானும் உங்களை அறிக்கைசெய்வேன் என்று அவர்மேலும் கூறுகிறார். உலகம் நலமடைவதற்கான எனது கிருபையின் வாய்க்கால்களாக இருக்கும்படி பூமியின்மேல் நீங்கள் எனது சாட்சிகளாக இருக்கவேண்டும். அப்படியே பரலோகத்தில் நான் உங்களது பிரதிநிதியாக இருப்பேன். தவறுகள்மிக்க உங்களுடைய குணத்தைப் பிதா பார்க்காமல், எனது பூரணத்தன்மையினால் போர்த்தப்பட்டவர்களாக உங்களைப் பார்க்கிறார். பரலோகத்தின் ஆசீர்வாதங்கள் உங்களிடம் வருவதற்கு நான் இடைக்கருவியாக இருக்கிறேன். காணாமற்போனவர்களுக்காக உள்ள எனது தியாக பலியை அறிக்கைசெய்வதினால் அதில் பங்குபெறும் ஒவ்வொருவரும் மீட்கப்பட்டவர்களின் மகிமையிலும் மகிழ்ச்சியிலும் பங்காளிகளாக இருப்பார்கள். (27)

கிறிஸ்துவை அறிக்கைசெய்பவன் தனக்குள் கிறிஸ்துவைக் கொண்டிருக்கவேண்டும். தான் பெற்றுக்கொள்ளாத ஒன்றை அவனால் கொடுக்கமுடியாது. சீடர்கள் கோட்பாடுகளைப்பற்றிச் சரளமாகப் பேசலாம். கிறிஸ்துதாமே கூறியவைகளை அவர்கள் மீண்டும் கூறலாம். ஆனால்

அவர்கள் கிறிஸ்துவைப்போன்ற சாந்தமும் அன்பும் உடையவர்களாக ஆகாதவரை, அவரை அறிக்கை செய்கிறவர்கள் அல்ல. கிறிஸ்துவின் ஆவிக்கு எதிரான ஒரு ஆவி, அது தன்னை எப்படி அழைத்துக்கொண்டாலும் அவரை மறுதலிக்கவே செய்யும். தீமையானவைகளைப் பேசுவதாலும், முட்டாள்தனமாகப் பேசுவதாலும், உண்மையற்ற வார்த்தைகளை அல்லது அன்பற்ற வார்த்தைகளைப் பேசுவதாலும் மனிதர்கள் கிறிஸ்துவை மறுதலிக்கலாம். வாழ்க்கையின் சுமைகளை ஏற்க மறுப்பதினாலும், பாவமான செயல்களில் ஈடுபடுவதினாலும் அவர்கள் அவரை மறுக்கலாம். உலகத்திற்கு இசைவாக இருப்பதினாலும், உதாரமற்ற குணத்தினாலும், தங்களுடைய சொந்த மதிப்பீடுகளின்மீதுள்ள அன்பினாலும், சுயத்தைச் சரியென்று காட்டுவதினாலும், சந்தேகத்தை நெஞ்சாரப் பேணுவதினாலும், துன்பங்களை வருவித்துக்கொள்வதினாலும், இருளில் வாழ்வதினாலும் அவர்கள் அவரை மறுதலிக்கலாம். இந்தப் பாதைகள் அனைத்திலும் தங்களுக்குள் கிறிஸ்து இல்லை என்பதை அவர்கள் அறிவிக்கின்றனர். “மனுஷர் முன்பாக என்னை மறுதலிக்கிறவன் எவனோ, அவனை நானும் பரலோகத்திலிருக்கிற என் பிதாவின் முன்பாக மறுதலிப்பேன்” என்று அவர் கூறுகிறார். (28)

சுவிசேஷத்திற்கு எதிரான பகை மேற்கொள்ளப்படுமென்றும், சிறிது காலத்திற்குப்பின் அதன்மீதுள்ள எதிர்ப்பு இல்லாமலாகிவிடும் என்றும் நம்பவேண்டாம் என்று இரட்சகர் அவரது சீடர்களிடம் கூறினார். “சமாதானத்தையல்ல, பட்டயத்தையே அனுப்பவந்தேன்” என்றார். உண்டாகிற கலகம் சுவிசேஷத்தின் பலனல்ல; அதற்கு உண்டாகும் எதிர்ப்பின் பலனாக உள்ளது. எல்லாவிதமான உபத்திரவங்களிலும், வீட்டில் உண்டாகும் வேற்றுமையும் பூமிக்குரிய நண்பர்களில் உண்டாகும் பிரிவினையும்தான் மிகவும் கடுமையானது. ஆனால் “தகப்பனையாவது தாயையாவது என்னிலும் அதிகமாய் நேசிக்கிறவன் எனக்குப் பாத்திரன் அல்ல; மகனையாவது மகளையாவது என்னிலும் அதிகமாய் நேசிக்கிறவன் எனக்குப் பாத்திரன் அல்ல. தன் சிலுவையை எடுத்துக்கொண்டு என்னைப் பின்பற்றாதவன் எனக்குப் பாத்திரன் அல்ல” என்று இயேசு அறிவிக்கிறார். (29)

கிறிஸ்துவின் ஊழியக்காரர்களின் பணி, மிகவும் கனமுள்ளதும் பரிசுத்தமான பொறுப்புள்ளதுமாக உள்ளது. “உங்களை ஏற்றுக்கொள்ளுகிறவன் என்னை ஏற்றுக்கொள்ளுகிறான்; என்னை ஏற்றுக்கொள்ளுகிறவன் என்னை அனுப்பினவரை ஏற்றுக்கொள்ளுகிறான்.” அவரது நாமத்தின் பெயரால் அவர்களிடம் காட்டப்படும் அன்புமிக்க செயல் எதுவும்

அறியப்படாததாகவும் பரிசு இல்லாததாகவும் தவறிப்போகாது. “சீஷன் என்னும் நாமத்தினிமித்தம் இந்தச் சிறியரில்”—விசுவாசத்திலும், கிறிஸ்துவை அறிகிற அறிவிலும் குழந்தைகளாக இருப்பவர்களுக்கு “ஒருவனுக்கு ஒரு கலசம் தண்ணீர்மாத்திரம் குடிக்கக் கொடுக்கிறவனும் தன் பலனை அடையாமற் போகான் என்று, மெய்யாகவே உங்களுக்குச் சொல்லுகிறேன்” என்று இயேசு அறிவிக்கிறார். (30)

இவ்வாறாக இரட்சகர் அவரது உபதேசங்களை முடித்தார். அவர் சென்றதுபோல, தெரிந்துகொள்ளப்பட்ட அந்தப் பன்னிருவரும் கிறிஸ்துவின் பெயரால் “இருதயம் நருங்குண்டவர்களைக் குணமாக்கவும், சிறைப்பட்டவர்களுக்கு விடுதலையையும், குருடருக்குப் பார்வையையும் பிரசித்தப்படுத்தவும், நொறுங்குண்டவர்களை விடுதலையாக்கவும், கர்த்தருடைய அநுக்கிரக வருஷத்தைப் பிரசித்தப்படுத்தவும்” (லூக்கா 4:18,19) சென்றனர். (31) ★

# 38

# சற்று இளைப்பாறும்படி செல்வோம் வாருங்கள்!

**மத்தேயு 14:1,2,12,13; மாற்கு 6:30–32; லூக்கா 9:7–10**

**(The Desire of Ages, pp. 359–363)**

இறைப்பணிக்காகச் சென்றிருந்த பயணத்தை முடித்துத் திரும்பிவந்த அப்போஸ்தலர் "இயேசுவினிடத்தில் கூடிவந்து, தாங்கள் செய்தவைகள் உபதேசித்தவைகள் யாவையும் அவருக்கு அறிவித்தார்கள். அவர் அவர்களை நோக்கி: வனாந்தரமான ஓரிடத்தில் தனித்துச் சற்றே இளைப்பாறும்படி போவோம் வாருங்கள் என்றார்; ஏனெனில், வருகிறவர்களும் போகிறவர்களும் அநேகராயிருந்தபடியினால் போஜனம்பண்ணுகிறதற்கும் அவர்களுக்குச் சமயமில்லாதிருந்தது"–மாற்கு 6:30,31. (1)

சீடர்கள் இயேசுவிடம் எல்லாவற்றையும் கூறினார்கள். அவருடன் அவர்களுக்கு நெருக்கமான உறவு இருந்தது. அதனால் தங்களுடைய சாதகமான பாதகமான அனுபவங்களை அவரிடம் கூறுவதற்கு அவர்கள் தைரியமுள்ளவர்களாக இருந்தனர். தங்களுடைய ஊழியத்தில் கண்ட பலன்களின் மகிழ்ச்சியையும் அவர்களுடைய தோல்விகள், தவறுகள், பலவீனங்கள் ஆகியவைகளால் உண்டான துயரங்களையும் அவரிடம் கூறினார்கள். சுவிசேஷகர்கள் என்னும் அவர்களுடைய முதல் பணியில் அவர்கள் தவறுகள் செய்திருந்தனர். அவர்களுடைய அனுபவங்களை அவர்கள் இயேசுவிடம் மனந்திறந்து கூறினார்கள். அவர்களுக்கு அதிகமான அறிவுரைகள் தேவை என்பதை அவர் கண்டார். அவர்களுடைய உழைப்பின் காரணமாக, அவர்கள் களைத்திருந்ததையும் அவர்களுக்கு ஓய்வு தேவை என்பதையும் அவர் கண்டார். (2)

ஆனால் அப்பொழுது அவர்கள் எந்த இடத்தில் இருந்திருந்தார்களோ, அந்த இடத்தில் அவர்களால் தனித்து ஓய்வெடுக்க முடியாதவர்களாக இருந்தனர். "வருகிறவர்களும் போகிறவர்களும் அநேகராயிருந்தபடியினால்

போஜனம்பண்ணுகிறதற்கும் அவர்களுக்குச் சமயமில்லாதிருந்தது” சுகமடையவேண்டுமென்ற ஆவலுடனும் கிறிஸ்துவின் வார்த்தைகளைக் கேட்பதற்கென்றும் மக்கள் கூட்டம் அவரை நெருக்கிக்கொண்டிருந்தது. சகலவிதமான ஆசீர்வாதங்களின் ஊற்றாகவும் அவர் காணப்பட்டார். அநேகர் அவரிடத்திற்கு இழுக்கப்பட்டதை உணர்ந்தனர். விலைமதிப்புமிக்க வரமாகிய உடல் நலத்தைப் பெற்றுக்கொள்ள அவரை நெருக்கின அநேகர் அவரைத் தங்களது இரட்சகராக ஏற்றுக்கொண்டனர். அப்போது அவரை அறிக்கைசெய்வதற்கு பரிசேயர்களின் காரணமாகப் பயந்த மற்ற அநேகர், பரிசுத்த ஆவி இறங்கினபோது மனமாற்றமடைந்து, கோபமிக்க ஆசாரியர்கள், அதிபதிகள்முன் அவரைத் தேவகுமாரன் என்று ஏற்றுக்கொண்டனர். (3)

ஆனால் இப்பொழுது கிறிஸ்து அவரது சீடர்களுடனிருந்து இளைப்பாறத் தனிமையான இடத்தை நாடினார். ஏனெனில் அவர் அவர்களுக்கு அதிகமான அறிவுரை கூறவேண்டியதிருந்தது. அவர்கள் தங்களுடைய பணியில் போராட்டம் என்னும் சோதனைக்கு ஊடாகக் கடந்துசென்று, பல்வேறு எதிர்ப்புகளைச் சந்தித்திருந்தனர். இதுவரை ஒவ்வொரு காரியத்திலும் இயேசுவிடம் ஆலோசனை கேட்டிருந்தனர். ஆனால் கொஞ்சகாலம் தனியாக இருந்திருந்தனர். அப்போது சில சமயங்களில் என்ன செய்வது என்று அறியாமல் கலங்கியிருந்தனர். அவர்கள் தங்களுடைய பணியில் அதிகமான உற்சாகத்தைக் கண்டனர். ஏனெனில் கிறிஸ்து அவருடைய ஆவியில்லாதவர்களாக அவர்களை அனுப்பவில்லை. அவர்மீதுள்ள விசுவாசத்தினால் அவர்கள் அநேக அற்புதங்களைச் செய்திருந்தனர். ஆனால் இப்பொழுது அவர்கள் ஜீவ அப்பத்தினால் போஷிக்கப்படவேண்டிய தேவையை உடையவர்களாக இருந்தனர். ஓய்வெடுக்கக்கூடிய ஒரு இடத்திற்குச் செல்லுவது அவர்களுக்கு அவசியமாக இருந்தது. இயேசுவோடு தொடர்புகொண்டு தங்களுடைய எதிர்கால ஊழியத்திற்காக அறிவுரைகளைப் பெற்றுக்கொள்ளுவதற்கு தனிமையான ஒரு இடத்திற்குச் செல்லவேண்டியது அவர்களுக்கு அவசியமாக இருந்தது. (4)

“அவர் அவர்களை நோக்கி: வனாந்தரமான ஓரிடத்தில் தனித்துச் சற்றே இளைப்பாறும்படி போவோம் வாருங்கள்” என்றார். கிறிஸ்து அவரது ஊழியத்தில் ஈடுபட்டுள்ள அனைவரின்மீதும் அன்பும் மனஉருக்கமும் மிகுந்தவராக இருக்கிறார். தேவன் பலியை அல்ல, இரக்கத்தையே விரும்புகிறார் என்பதை அவர்களுக்குக் காட்டக்கூடியவராக இருக்கிறார். அவர்கள் தங்களுடைய முழு ஆத்துமாவையும் ஊழியத்தில் ஈடுபடுத்தியிருந்தனர். அது அவர்களது சரீர, மன பலத்தைக் களைப்படையச் செய்திருந்தது. இளைப்பாறுவது அவர்களது கடமையாக இருந்தது. (5)

சீடர்கள் தங்களுடைய ஊழியத்தில் வெற்றியைக் கண்டிருந்தனர். அதனால் அதற்குரிய மதிப்பை தங்களுக்குச் சூட்டிக்கொள்ளும் அபாயத்தில் இருந்திருந்தனர். ஆவிக்குரிய அகந்தையை நெஞ்சாரப்பேணி அதனால் சாத்தானின் சோதனைகளின்கீழ் விழும் அபாயத்தில் அவர்கள் இருந்தனர். அவர்களுக்குமுன் மாபெரும் பணி ஒன்று இருந்தது. ஆனால் முதலில் அவர்கள் தங்களுடைய பலம் சுயத்தில் இல்லை, தேவனிடத்தில்தான் உள்ளது என்பதைக் கற்றுக்கொள்ளவேண்டும். சீனாய் வனாந்தரத்திலிருந்த மோசேயைப்போலவும், யூதேயாவின் குன்றுகளிலிருந்த தாவீதைப்போலவும், கேரீத் நதியின் அருகில் இருந்த எலியாவைப்போலவும் தங்களுடைய ஓழிச்சலற்ற பணியிடங்களிலிருந்து கிறிஸ்துவுடனும், இயற்கையுடனும், தங்களுடைய இருதயங்களுடனும் தொடர்புகொள்ள சீடர்கள் வெளியே விலகிவரவேண்டியது அவசியமாக இருந்தது. (6)

சீடர்கள் தங்களுடைய இறைப்பணிக்காகச் சென்றிருந்தபோது, இயேசு மற்ற பேரூர்களையும் கிராமங்களையும் சந்தித்து, இராஜ்யத்தின் சுவிசேஷத்தைப் பிரசங்கித்திருந்தார். இந்தச் சமயத்தில்தான் அவர் யோவான் ஸ்நானகனின் மரணம்பற்றிய செய்தியைப் பெற்றிருந்தார். அந்த நிகழ்ச்சி, அவரது பாதங்கள் நடந்து சென்றிருந்ததின் முடிவை அவருக்குமுன் மிகத் தெளிவாகக் கொண்டுவந்தது; அதன் நிழல்கள் அவரது பாதையைச் சுற்றிலும் கனமாகப் படிந்துகொண்டிருந்தது. அவரது மரணத்திற்கேதுவான சூழ்ச்சிகளில் ஆசாரியர்களும் ரபிமார்களும் கவனம் செலுத்திக்கொண்டிருந்தனர். வேவுகாரர்கள் அவரது அடிச்சுவட்டைப் பின்பற்றி இருந்தனர். அவரை அழிப்பதற்காக எல்லாப் பக்கங்களிலும் சதித்திட்டங்கள் பெருகிக்கொண்டிருந்தன. கலிலேயாவெங்கும் சீடர்கள் பிரசங்கம் செய்துகொண்டிருக்கும் செய்தி ஏரோதை அடைந்தது. அது இயேசுவின்மீதும் அவரது ஊழியத்தின்மீதும் அவனது கவனத்தை ஈர்த்தது. “இவன் யோவான் ஸ்நானகன்; இவன் மரித்தோரிலிருந்து எழுந்தான்” என்று கூறி, இயேசுவைக் காணவேண்டும் என்ற அவனது விருப்பத்தை வெளிக்காட்டினான். ஏரோதை அவனது சிங்காசனத்திலிருந்து நீக்குவதற்காகவும் யூத ஜனத்தின்மீதுள்ள ரோமர்களின் நுகத்தை உடைக்கவும், இரகசியமான ஒரு புரட்சி நடத்தப்படலாம் என அவன் பயந்தான். மக்களுக்கிடையில் அதிருப்தியும் கலகத்தின் ஆவியும் முதிர்ந்துகொண்டிருந்தது. மக்களுக்கிடையிலான கிறிஸ்துவின் பொது ஊழியம் நீண்ட நாட்களுக்குக் கலிலேயாவில் தொடரமுடியாததாக இருந்தது தெளிவாகத் தெரிந்தது. அவரது பாடுகளின் காட்சிகள் நெருங்கிக்கொண்டிருந்தன. அவர் திரளானவர்களின் கூட்டத்தினால் உண்டாகியிருந்த குழப்பத்திலிருந்து சிறிது காலம் விலகியிருக்க வாஞ்சித்தார். (7)

சிதைக்கப்பட்ட யோவான் ஸ்நானகனின் உடலை அவனது சீடர்கள் துயரமிக்க இதயத்துடன் அடக்கஞ்செய்ய எடுத்துச்சென்றனர். அதன்பின் அவர்கள் இயேசுவிடம் சென்று (விபரம்) கூறினார்கள். யோவானிடமிருந்து மக்களை கிறிஸ்து அவரிடம் இழுத்துக்கொள்ளுவதாகக் காணப்பட்டபோது, இந்த சீடர்கள் கிறிஸ்துவின்மீது பொறாமைகொண்டார்கள். மத்தேயு கொடுத்த விருந்தில் இயேசு ஆயக்காரர்களுடன் உட்கார்ந்திருந்தார். அதைப்பற்றி பரிசேயர்கள் அவர்மீது குற்றஞ்சாட்டினார்கள். யோவானின் சீடர்கள் அந்தப் பரிசேயர்களுடன் சேர்ந்துகொண்டனர். அவர் யோவானுக்கு விடுதலை வழங்க முன்வரவில்லை. அதனால் அவரது தெய்வீக ஊழியத்தின்மீது அவர்கள் சந்தேகங்கொண்டனர். இப்பொழுது யோவான் இறந்துவிட்டான்.அவர்கள் தங்களுடைய பெருந்துயரில் ஆறுதல் கிடைக்க ஏங்கினார்கள். அவர்கள் இயேசுவிடம் வந்து, தங்களது நோக்கங்களை அவரது நோக்கத்துடன் இணைத்துக்கொண்டனர். மேலும் அவர்களுடைய எதிர்கால ஊழியத்தைப்பற்றிய ஆலோசனைக்காகவும் அவரிடம் வந்தனர். இரட்சகருடன் உரையாட அவர்களுக்கும் ஒரு அமைதியான நேரம் தேவையாயிருந்தது. (8)

பெத்சாயிதா குளத்தின் வடக்குக் கரையருகில் ஒரு தனிமையான இடம் இருந்தது. வசந்தகாலப் பசுமையினால் அழகடைந்திருந்த அது இயேசுவையும் அவரது சீடர்களையும் வரவேற்றது. அந்த இடத்தை நோக்கி அவர்கள் தங்கள் படகில் தண்ணீரைக் கடந்துசெல்லப் புறப்பட்டிருந்தனர். அங்கு அவர்கள் பெரும் பயணச்சாலையில் அமைந்திருந்த நகரத்தின் சந்தடிகளிலிருந்தும் குழப்பங்களிலிருந்தும் தூரமாக விலகியிருக்கமுடியும். இயற்கையின் காட்சிகள் அவைகளிலேயே ஓய்வை உடையவையாக இருந்தன. இவை புலன்களுக்குச் சுகந்தரும் மாறுதலை உடையவையாக இருந்தன. கோபாவேசமிக்க இடையூறுகள், வேதபாரகர் பரிசேயரின் திருப்பித்தாக்குதல், குற்றஞ்சுமத்துதல் எதுவுமின்றி அவர்களால் கிறிஸ்துவின் வார்த்தைகளைக் கவனிக்கமுடியும். இங்கு ஒரு குறைந்த காலத்திற்கு அவர்களால் சந்தோஷத்தை அனுபவிக்கமுடியும். (9)

கிறிஸ்துவும் அவரது சீடர்களும் எடுத்துக்கொண்ட ஓய்வு சுயத்தில் திளைப்பதற்கான ஓய்வு அல்ல. ஓய்வில் அவர்கள் செலவிட்ட நேரம் சந்தோஷத்தைப் தேடுவதாக இருக்கவில்லை. தேவனுடைய ஊழியத்தைப்பற்றியும் இந்தப் பணியில் அதிகமான திறமையைச் செயல்படுத்தும் சாத்தியக்கூறுகள் பற்றியும் அவர்கள் ஒருமித்து உரையாடினார்கள். அந்த சீடர்கள் கிறிஸ்துவுடன் இருந்திருந்து, அவரைப் புரிந்துகொள்ளக்கூடியவர்களாக இருந்தனர். அவர்களிடம் அவர்

உவமைகளால் பேசவேண்டிய அவசியம் இல்லை. அவர் அவர்களுடைய தவறுகளைத் திருத்தி, மக்களைச் சந்திப்பதற்கான சரியான மார்க்கத்தை எடுத்துக் காட்டினார். தெய்வீக சத்தியத்தின் விலைமதிப்புமிக்க பொக்கிஷங்களை அவர்களுக்கு அவர் அதிக முழுமையாகத் திறந்துகாட்டினார். அவர்கள் தெய்வீக வல்லமையினால் உயிராற்றலடைந்து, நம்பிக்கையினாலும் தைரியத்தினாலும் தூண்டப்பட்டனர். (10)

இயேசுவால் அற்புதங்களைச் செய்யமுடிந்தபோதிலும், அற்பதங்களைச் செய்ய சீடர்களுக்கு வல்லமை அளிக்கப்பட்டிருந்தபோதிலும், களைப்படைந்திருந்த அவரது ஊழியக்காரர்களை ஊரைவிட்டு வெளியே சென்று ஓய்வெடுக்கும்படி அவர் கட்டளையிட்டார். "அறுப்பு மிகுதி, வேலையாட்களோ கொஞ்சம்" என்று அவர் கூறியபோது, அவரது சீடர்கள் ஓய்வின்றி உழைக்கவேண்டிய அவசியத்தை அவர் வற்புறுத்தாமல், "அறுப்புக்கு எஜமான் தமது அறுப்புக்கு வேலையாட்களை அனுப்பும்படி அவரை வேண்டிக்கொள்ளுங்கள்" (மத்தேயு 9:37) என்றார். தேவன் ஒவ்வொரு மனிதனுக்கும் அவனவனுடைய திறமைக்குத்தக்க வேலையை நியமித்திருக்கிறார். பலர் பாரமற்றவர்களாகவும் ஆத்தும வேதனையற்றவர்களாகவும் இருக்கும்போது, சிலர் அதிக பாரமான பொறுப்புக்களைச் சுமப்பவர்களாக இருக்கும்படி விடமாட்டார். (எபேசியர் 4:11–13). (11)

இயேசுவின் மன உருக்கமிக்க வார்த்தைகள் அவரது சீடர்களுக்குக் கூறப்பட்ட அதே நிச்சயத்துடன் இன்றும் கூறப்படுகின்றன. நீங்கள் வந்து சற்று இளைப்பாருங்கள் என்று அவர் களைத்துச் சோர்ந்திருப்பவர்களிடம் கூறுகிறார். மனிதர்களின் ஆவிக்குரிய தேவைகளுக்காக ஊழியஞ்செய்வதிலும்கூட எப்பொழுதும் வேலையின் பாரத்துடனும் பரபரப்போடும் இருப்பது ஞானமற்ற செயலாகும். அதனால் சுயபக்தி அலட்சியப்படுத்தப்படுகிறது. மனம், ஆத்துமா, சரீரம் ஆகியவைகளின் வல்லமை அதிகமாகப் பாரப்படுத்தப்படுகிறது. கிறிஸ்துவின் சீடர்களிடமிருந்து சுயமறுப்பு கோரப்படுகிறது. ஆகையால் தியாகங்கள் செய்யப்பட்டாகவேண்டும். ஆனால் அதிதீவிர வாஞ்சையினால் உண்டாகக்கூடிய மானுட பலவீனத்தை சாத்தான் சாதகமாக்கிக்கொள்ளாதபடியும், தேவனுடைய ஊழியம் இடையூறு அடையாதபடியும் இருப்பதற்கும் கவனம் செலுத்தப்படவேண்டும். (12)

எப்பொழுதும் அதிதீவிரமான செயலில் ஈடுபட்டிருப்பதுதான் மதத்தின் நோக்கம் என்பது ரபிமார்களின் கணிப்பாக இருந்தது. தங்களுடைய மேலான பக்தியைக் காட்டுவதற்கு அவர்கள் ஏதாவது வெளியரங்கமான செயலைச் சார்ந்திருந்தனர். இவ்விதமாக அவர்கள் தங்களுடைய ஆத்துமாவை தேவனிடமிருந்து விலக்கி,

சுயநிலையில் தங்களைக் கட்டுமானஞ்செய்திருந்தனர். அதேவிதமான அபாயங்கள் இன்றும் உள்ளன. செயற்பாடுகள் அதிகரிக்கும்போது, தேவனுடைய ஊழியத்திற்காக எதையாகிலும் செய்வதில் மனிதர்கள் வெற்றியடையும்போது, மானுடத்திட்டங்களையும் வழிமுறைகளையும் நம்பும் அபாயம் உண்டாகிறது. குறைவாக ஜெபிக்கின்ற தன்மையும் குறைவான விசுவாசத்தை உடையவர்களாக இருக்கின்ற தன்மையும் உண்டாகிறது. சீடர்களைப்போலவே, தேவனைச் சார்ந்திருக்கவேண்டிய நமது பார்வையை இழந்து நமது செயல்களையே இரட்சகராக ஆக்கிக்கொள்ளுகின்ற அபாயத்தில் நாம் இருக்கிறோம். ஊழியத்தை நடத்துவது அவரது வல்லமைதான் என்பதை உணர்ந்து, இயேசுவையே தொடர்ந்து பார்க்கவேண்டிய அவசியம் உள்ளது. தொலைந்துபோனவர்களின் இரட்சிப்பிற்காக நாம் அக்கறையுடன் ஊழியஞ்செய்யவேண்டிய அதேநேரத்தில், தியானம் செய்வதற்காகவும், ஜெபஞ்செய்வதற்காகவும், தேவனுடைய வார்த்தையை வாசிப்பதற்காகவும், நேரத்தை எடுத்துக்கொள்ளவேண்டும். ஜெபத்துடன்கூட நிறைவேற்றப்பட்டு, கிறிஸ்துவின் புண்ணியத்தினால் பரிசுத்தமாக்கப்பட்ட ஊழியம் மட்டுமே நன்மைக்கான வல்லமையுள்ளதாக இருந்திருக்கிறது என்பது முடிவில் மெய்ப்பிக்கப்படும். (13)

இயேசுவின் வாழ்க்கையைப்போன்று மக்கள் கூட்டம் நிறைந்ததாகவும் உழைப்பும் பொறுப்பும் மிகுந்ததாகவும் வேறொருவருடைய வாழ்க்கையும் ஒருபோதும் இருந்ததில்லை. அப்படியிருந்தும் அவர் எவ்விதமாக அடிக்கடி ஜெபத்தில் காணப்பட்டிருந்தார்! தேவனுடனுள்ள அவரது தொடர்பு எவ்வளவு நிலையானதாக இருந்தது! பூமிக்குரிய அவரது வாழ்க்கையின் வரலாற்றில் மறுபடியும் மறுபடியும் "அவர் அதிகாலையில், இருட்டோடே எழுந்து புறப்பட்டு, வனாந்தரமான ஓரிடத்திற்குப்போய், அங்கே ஜெபம்பண்ணினார்" (மாற்கு 1:35; லூக்கா 5:15,16; 6:12) என்றும் குறிப்புகள் காணப்படுகின்றன. (14)

மற்றவர்களுடைய நன்மைக்கென்று முற்றிலுமாகப் பிரதிஷ்டை செய்யப்பட்டிருந்த இரட்சகரின் வாழ்க்கையில், பயணஞ்செய்யும் சாலைகளிலிருந்தும், நாளுக்குநாள் அவரைப் பின்தொடர்ந்திருந்த மக்கள் கூட்டத்தின் நெரிசலிலிருந்தும் விலகிச்செல்லவேண்டியது அவசியம் என்று இரட்சகர் கண்டார். ஓய்வு ஒழிச்சலற்ற ஊழியத்திலிருந்தும் மனித தேவைகளுக்கான தொடர்பிலிருந்தும் அவர் விடுபட்டு, ஓய்வைத் தேடவும், தமது பிதாவுடனுள்ள அறுந்துபோகாத தொடர்பினை உடையவராக இருக்கவும், அவர் வேறுபக்கம் திரும்பவேண்டும். நமது தேவைகளிலும் பலவீனங்களிலும் பங்குபெறும் ஒருவராக அவர் முற்றிலுமாக தேவனைச்

சாந்திருந்து, தமது கடமைகளைச் செய்யவும், சோதனைகளைச் சந்திக்கவும், ஜெபஞ்செய்யவும், தனிமையான இடத்தில் தெய்வீக பலத்தைத் தேடினார். தேவனுடன் உள்ள உறவினால் அவரை நொறுக்கிக்கொண்டிருந்த துயரங்களின் பாரத்தை அவரால் பாரமில்லாமலாக்க முடிந்திருந்தது. இங்கு அவர் ஆறுதலையும் மகிழ்ச்சியையும் கண்டார். (15)

முடிவில்லாத இரக்கத்தை உடையவராக பிதாவிடம் மனித இனத்தின் அழுகுரல் கிறிஸ்துவின்மூலமாகச் சென்றடைந்தது. மானுடம் தெய்வீகத்துடன் இணைக்கப்படவேண்டும் என்பதற்காக, அவரது மானிடத் தன்மை பரலோக வல்லமையால் நிரப்பப்படும்வரை ஒரு மனிதனாக தேவசிங்காசனத்தை நோக்கி அவர் விண்ணப்பஞ்செய்தார். உலகத்திற்கு உயிரைக் கொடுப்பதற்காக அவர் தொடர்ச்சியான உறவின்மூலமாக தேவனிடத்திலிருந்து ஜீவனைப் பெற்றுக்கொண்டார். அவரது அனுபவங்கள் நமது அனுபவங்களாக இருக்கவேண்டும். (16)

சற்றே இளைப்பாறப் போவோம் வாருங்கள் என்று அவர் அழைக்கிறார். நாம் அவரது வார்த்தைகளுக்குச் செவிகொடுப்போமானால் அதிக வல்லமையும் பயனும் உள்ளவர்களாவோம். சீடர்கள் இயேசுவைக் கண்டடைந்து அவரிடம் யாவற்றையும் கூறினார்கள். அவர் அவர்களைத் தைரியப்படுத்தி, உபதேசங்கள் செய்தார். இன்று நாம் இயேசுவிடம் சென்று நமது தேவைகளைக்கூறுவதற்கு நேரத்தை எடுத்துக்கொள்வோமானால், அவர் அதிகாலையில், இருட்டோடே எழுந்து புறப்பட்டு, வனாந்தரமான ஓரிடத்திற்குப்போய், அங்கே ஜெபம்பண்ணினார். ஏமாற்றமடையத் தேவை யில்லை. நமக்கு உதவுவதற்கு அவர் நமது வலதுபக்கத்தில் இருப்பார். நமது இரட்சகரில் அதிகமான நம்பிக்கை வைப்பதற்கு நமக்கு எளிமையும் நம்பிக்கையும் அவசியமாக உள்ளது. வல்லமையுள்ள தேவன், நித்திய பிதா, சமாதானப்பிரபு என்னும் பெயர்களையுடைய அவரைப்பற்றி: "கர்த்தத்துவம் அவர் தோளின்மேலிருக்கும். அவர் ... ஆலோசனைக்கர்த்தா" (ஏசாயா 9:6) என்று கூறப்பட்டுள்ளது. நாம் ஞானத்தை அவரிடத்தில் கேட்கும்படி அழைக்கப்பட்டிருக்கிறோம். "யாவருக்கும் சம்பூரணமாய்க் கொடுக்கிறவரும் ஒருவரையும் கடிந்துகொள்ளாதவருமாகிய தேவனிடத்தில் கேட்கக்கடவன்" (யாக்கோபு 1:5) என்று கூறப்பட்டுள்ளது. (17)

தேவனுடைய பயிற்சியின்கீழிருக்கும் அனைவரிடத்திலும் உலகம் அதின் பழக்கங்களை அல்லது நடைமுறைகளை இசைந்திராக ஒரு வாழ்க்கை வெளிப்படுத்தப்படவேண்டியதாக உள்ளது. தேவனுடைய சித்தத்தை அறிகிற அறிவை ஒவ்வொருவரும் அடைந்துகொள்ளுவது அவசியமாக உள்ளது. இருதயத்தில் அவர் பேசுவதை நாம் தனிப்பட்ட

விதத்தில் கேட்கவேண்டும். மற்ற எல்லாக் குரல்களும் அமைதியடையும்போது, அமைதியாக அவர்முன் நாம் காத்திருக்கும்போது, தேவனுடைய சத்தத்தை ஆத்துமாவின் மௌனம் அதிகத் தெளிவானதாக்கிக்கொள்கிறது. "நீங்கள் அமர்ந்திருந்து, நானே தேவனென்று அறிந்துகொள்ளுங்கள்" (சங். 46:10) என்று அவர் அழைக்கிறார். உண்மையான இளைப்பாறுதலை இங்குமட்டுமே காணமுடியும். தேவனுக்காக உழைக்கும் அனைவருக்கும் பலன்தர அது ஆயத்தமாக உள்ளது. பரபரப்பான மக்கள் கூட்டத்திற்கிடையிலும், வாழ்க்கையின் கடுமைமிக்க நெருக்கடிகளுக்கிடையிலும் இவ்விதமாக இளைப்பாறும் ஆத்துமா, ஒளியும் சமாதானமுமிக்க ஒரு சூழ்நிலையால் சூழப்பட்டிருக்கும். அப்படிப்பட்ட வாழ்க்கை மனிதர்களின் இருதயங்களைச் சென்றடையக்கூடிய தெய்வீக வல்லமையை இனிய வாசனையாக வெளிப்படுத்தும். (18) ★

# 39

# நீங்களே அவர்களுக்கு ஆகாரங்கொடுங்கள்!

**மத்தேயு 14:13–21; மாற்கு 6:32–44; லூக்கா 9:10–17; யோவான் 6:1–12**

**(The Desire of Ages, pp. 364–376)**

கிறிஸ்து தமது சீடர்களுடன் ஒரு தனிமையான இடத்திற்குச் சென்றிருந்தார். ஆனால் அந்த அபூர்வமான அமைதிமிக்க நேரம் விரைவில் கலைக்கப்பட்டது. தங்களைத் தொந்தரவு செய்யாமலிருக்கக்கூடிய இடத்திற்கு ஓய்வாக வந்துவிட்டதாக சீடர்கள் எண்ணிக்கொண்டனர். ஆனால் தெய்வீகப் போதகரைத் திரளானவர்கள் தவறவிட்டவுடனே அவர் எங்கே இருக்கிறார்? என்று விசாரித்தனர். அவர்களுக்கிடையில் இருந்தவர்களில் சிலர் இயேசுவும் அவரது சீடர்களும் சென்ற திசையைக் கவனித்திருந்தனர். அவர்களைச் சந்திப்பதற்கு அநேகர் நடந்துசென்றனர். மற்றவர்கள் படகுகளில் ஏறி தண்ணீரைக் கடந்து சென்றனர். பஸ்கா பண்டிகை சமீபித்திருந்தது. தூரத்திலும் அருகிலும் இருந்து திருத்தலப் பயணிகளின் கூட்டங்கள் எருசலேமிற்குச் செல்லும் வழியில் இயேசுவைக் காண்பதற்குத் திரண்டன. பெண்களும் பிள்ளைகளும் அல்லாமல், ஆண்களின் எண்ணிக்கை ஐயாயிரம் என்கிற அளவிற்கு அதிகரித்திருந்தது. கிறிஸ்து கரையை அடைந்தார். திரளானவர்கள் அவருக்காகக் காத்திருந்தனர். ஆனால் அவர்கள் காணாதவண்ணம் அவர் கரையில் இறங்கி, தமது சீடர்களுடன் சேர்ந்து, சற்றுத்தூரமான இடத்தில் சிறிது நேரத்தைச் செலவிட்டார். (1)

மலைச்சரிவிலிருந்து நடந்துசெல்லும் திரளானவர்களை அவர் பார்த்தார். அனுதாபத்தினால் அவரது இருதயம் கலக்கமடைந்தது. திடீரென்ற ஏற்பட்ட குறுக்கீட்டினால் அவர் தமது இளைப்பாறுதலை இழக்கவேண்டியதாயிற்று. அவர் பொறுமையை இழந்து விடவில்லை. மக்கள் மேலும்மேலும் வந்துகொண்டிருந்ததை அவர் பார்த்தபோது, அதிகமாகக் கவனம் செலுத்தவேண்டிய அவசியம் இருப்பதைக் கண்டார்.

“அவர்கள் மேய்ப்பனில்லாத ஆடுகளைப்போலிருந்தபடியால், அவர்கள் மேல் மனதுருகி” அவரது தனிமையான இடத்தைவிட்டு வெளியேறி அவர்களுக்கு ஊழியஞ்செய்வதற்கு வசதியான ஒரு இடத்தைக் கண்டார். ஆசாரியர்களிடமிருந்தும் அதிபதிகளிடமிருந்தும் அவர்கள் எவ்விதமான உதவியையும் பெறவில்லை. இரட்சிப்பின் மார்க்கத்தைப் பற்றித் திரளானவர்களுக்கு அவர் போதித்தபோது, சுகமளிக்கும் ஜீவத்தண்ணீர் கிறிஸ்துவிடமிருந்து பாய்ந்துசென்றது. (2)

தேவகுமாரனுடைய உதடுகளிலிருந்து அவ்வளவு தாராளமாகப் பறப்பட்ட இரக்கத்தின் வார்த்தைகளை மக்கள் செவிமடுத்தனர். அவர்களுடைய ஆத்துமாக்களுக்குக் கீலேயாத்தின் பிசின் தைலமாக இருந்த மிகவும் எளிமையும் தெளிவுமான கிருபையின் வார்த்தைகளை அவர்கள் கேட்டனர். மரித்துக்கொண்டிருந்தவர்களுக்கு ஜீவனையும் மகிழ்ச்சியையும், நோயினால் துன்பப்பட்டுக்கொண்டிருந்தவர்களுக்கு ஆரோக்கியத்தையும் நலத்தையும் அவரது சுகமளிக்கும் கரம் கொண்டுவந்தது. பரலோகம் பூமியின்மீது வந்துவிட்டதுபோன்று அந்தநாள் அவர்களுக்குக் காணப்பட்டது. எவ்வளவு நேரமாக ஒன்றும் புசிக்காமல் இருக்கிறோம் என்பதைப்பற்றி அவர்கள் முற்றிலுமாக உணர்வற்றவர்களாக இருந்தனர். (3)

அந்த நாள் முழுமையாகச் செலவிடப்பட்டது. சூரியன் மேற்குத்திசையில் மறைந்துகொண்டிருந்தது. இருந்தபோதிலும், மக்கள் தாமதித்திருந்தனர். உணவும் ஓய்வும் இல்லாமல் இயேசு பகல் முழுவதிலும் உழைத்திருந்தார். களைப்பாலும் பசியாலும் அவர் சோர்ந்திருந்தார். அவர் தமது வேலையை நிறுத்தவேண்டும் என்று சீடர்கள் அவரைக் கேட்டுக்கொண்டனர். ஆனால் அவர்மீது நெருக்கியிருந்த திரளானவர்களைவிட்டு அவரால் பின்வாங்க இயலவில்லை. (4)

இறுதியில் சீடர்கள் அவரிடம் வந்தனர். அவர்களுக்காக வேண்டியாவது மக்களை அவர் அனுப்பிவிடவேண்டும் என்று அவரை வற்புறுத்தினர். அநேகர் வெகுதூரத்திலிருந்து வந்திருந்து, காலையிலிருந்து ஒன்றும் புசிக்காதவர்களாக இருந்திருந்தனர். அவர்களைச் சுற்றிலுமிருந்த பேரூர்களிலும் கிராமங்களிலுமிருந்து அவர்களால் உணவை விலைக்கு வாங்கமுடியும். ஆனால் “நீங்களே அவர்களுக்குப் போஜனங்கொடுங்கள்” என்று அவர் கூறினார். பின்பு, பிலிப்புவை நோக்கி: “இவர்கள் சாப்பிடத்தக்கதாக அப்பங்களை எங்கே கொள்ளலாம்” என்று கேட்டார். சீடனின் விசுவாசத்தைச் சோதிக்கும்படி இவ்வாறு கேட்டார். பிலிப்பு திரளான மக்கள் கூட்டத்தை நோக்கிப்பார்த்து: இத்தனை பெரிய மக்கள் கூட்டத்தின் தேவையைத் திருப்திப்படுத்த ஆகாரம் வழங்குவது எவ்வளவு

சாத்தியமற்ற காரியமென எண்ணினான். மேலும் பிலிப்பு அவரைநோக்கி: "இவர்களில் ஒவ்வொருவனும் கொஞ்சங் கொஞ்சம் எடுத்துக்கொண்டாலும், இருநூறு பணத்து அப்பங்களும் இவர்களுக்குப் போதாதே" என்றான். பின்பு இயேசு அந்தக் கூட்டத்தினரின் மத்தியிலிருந்து எவ்வளவு ஆகாரத்தைப் பெற்றுக்கொள்ள முடியுமென்று வினவினார். அப்பொழுது அந்திரேயா அவரை நோக்கி, "இங்கே ஒரு பையன் இருக்கிறான், அவன் கையில் ஐந்து வாற்கோதுமை அப்பங்களும் இரண்டு மீன்களும் உண்டு, ஆனாலும் அவைகள் இத்தனை ஜனங்களுக்கு எம்மாத்திரம்" என்றான். அவைகளைத் தம்மிடம் கொண்டுவரும்படி அவர் கேட்டார். பின்பு ஒழுங்கைக் கடைப்பிடிப்பதற்காக வந்திருந்த மக்களை ஐம்பது பேர்களும் நூறு பேர்களுமாக வரிசையில் புல்லின்மேல் அமரவைக்கும்படி சீடர்களுக்குக் கட்டளை கொடுத்தார். எல்லாரும் அவர் என்ன செய்யவிருக்கிறார் என்பதைச் சாட்சியாகக் காணும்படி இப்படிச்செய்தார். அதன்பின் "இயேசு அந்த அப்பங்களை எடுத்து, ஸ்தோத்திரம்பண்ணி, சீஷர்களிடத்தில் கொடுத்தார்; சீஷர்கள் பந்தியிருந்தவர்களுக்குக் கொடுத்தார்கள்." "எல்லாரும் சாப்பிட்டுத் திருப்தியடைந்தார்கள்; மீதியான துணிக்கைகளைப் பன்னிரண்டு கூடைநிறைய எடுத்தார்கள்." (5)

சமாதானத்தையும் சந்தோஷத்தையும் அடைந்துகொள்ளுவதற்கான மார்க்கத்தை மக்களுக்குப் போதித்தவர், அவர்களுடைய ஆவிக்குரிய தேவைகளைப்பற்றி எண்ணியிருந்ததுபோல உலகப்பிரகாரமான தேவைகளைப்பற்றியும் எண்ணுபவராக இருந்தார். மக்கள் களைத்தும் தளர்ந்தும் இருந்தனர். தங்கள் கரங்களில் சிறுகுழந்தைகளை வைத்திருந்த தாய்மார்கள் அங்கிருந்தனர். அவர்களுடைய ஆடைகளைப் பற்றிக்கொண்டிருந்த சிறுபிள்ளைகள் அங்கிருந்தனர். அநேகர் மணிக்கணக்காக நின்றுகொண்டிருந்தனர். அவர்கள் மிகுந்த அக்கரையுடன் கிறிஸ்துவின் வார்த்தைகளைக் கேட்டுக்கொண்டிருந்ததினால் உட்காரவேண்டுமென்றுகூட நினைக்கவில்லை. ஒருவரையொருவர் காலால் மிதித்து நசுக்கிவிடக்கூடிய அபாயம் உண்டாகுமளவிற்கு அந்தக் கூட்டம் அவ்வளவு பெரியதாக இருந்தது. இளைப்பாற இயேசு அவர்களுக்கு ஒரு தருணம் கொடுத்தார். அவர் அவர்களை உட்காரும்படிக் கூறினார். அது அதிகமான புல்லுள்ள தரையாக இருந்து, அனைவருக்கும் இளைப்பாறுதலையும் சௌகரியத்தையும் தரக்கூடியதாக இருந்தது. (6)

ஒரு உண்மையான தேவையைப் பூர்த்திசெய்வதற்கு மட்டுமேயன்றி கிறிஸ்து ஒருபோதும் ஒரு அற்புதத்தையும் செய்யவில்லை. ஒவ்வொரு அற்புதமும் மக்கள் ஆரோக்கியம் அடைவதற்கு ஏதுவான இலைகளை

உடைய ஜீவ விருட்சத்திற்கு நடத்துகின்ற தன்மையை உடையதாக இருந்தது. சீடர்களின் கரத்தினால் ஒவ்வொருவருக்கும் கடந்துசென்ற அந்த எளிய உணவில் பாடங்களாயிருந்த ஒரு நிறைந்த முழுப்பொக்கிஷமும் அடங்கியிருந்தது. கொடுக்கப்பட்ட உணவு மிகவும் எளிமையானதாக இருந்தது. கலிலேயக்கடலில் செல்லுகின்ற மீனவர்களின் அன்றாட உணவாக வாற்கோதுமை அப்பங்களும் மீன்களும் இருந்தன. கிறிஸ்துவால் அவர்களுக்கு ஒரு மிகப்பெரிய விருந்தைக் கொடுத்திருக்கமுடியும். ஆனால் இன்சுவையின் திருப்திக்காக மாத்திரமே செய்யப்படும் உணவு, அவர்களுடைய நன்மைக்கான எந்தப் போதனையையும் கொடுத்திருந்திருக்காது. மனிதனுக்கு என்று தேவன் இயற்கையாக ஏற்படுத்தியிருந்தவைகள் திரிபுசெய்யப்பட்டிருந்தன என்னும் ஒரு பாடத்தைக் கிறிஸ்து இதனால் அவர்களுக்குப் போதித்தார். மனிதர்களின் குடியிருப்புக்களில் இருந்து மிகவும் தூரமாக இருந்த இந்த இடத்தில் கிறிஸ்து வழங்கிய அந்த எளிமையான ஆகாரத்தையும் ஓய்வையும் மக்கள் மகிழ்ச்சியுடன் அனுபவித்ததைப்போல திரிபுசெய்யப்பட்டிருந்த சுவைகளின் ஆவலைப் பூர்த்தி செய்வதற்காக ஆயத்தஞ்செய்யப்பட்டிருந்த ஆடம்பரமான விருந்துகளில் பங்குகொண்டிருந்த மக்கள்கூட ஒருபோதும் அனுபவித்திருந்ததில்லை. (7)

ஆரம்பத்தில் ஆதாமும் ஏவாளும் இருந்ததுபோல, இன்றும் மனிதர்கள் தங்களுடைய பழக்கங்களில் எளிமையுள்ளவர்களாகவும், இயற்கையின் பிரமாணங்களுடன் இசைவுள்ளவர்களாகவும் இருந்திருந்தால், மனித குடும்பத்தின் தேவையைப் பூர்த்திசெய்யக்கூடிய அனைத்தும் ஏராளமானதாக இருக்கும். மனதின் கற்பனையில் எழும் தேவைகள் கொஞ்சமாக இருக்கும். தேவனுடைய வழிகளில் செயல்பட அதிகமான வாய்ப்புகள் உண்டாகியிருக்கும். ஆனால் சுயநலமும் இயற்கைக்கு மாறுபட்ட இன்சுவை நுகர்ச்சியும் பாவத்தையும் துன்பத்தையும் கொண்டுவந்து, உலகத்திற்குள் ஒருபக்கம் ஏராளத்தையும் மறுபக்கம் பற்றாக்குறையையும் உண்டுபண்ணியிருக்கிறது. (8)

ஆடம்பரங்களைத் திருப்திப்படுத்தும் விருப்பத்தை நடைமுறைப் படுத்துவதினால் மக்களைக் கவர்ந்துகொள்ள இயேசு வகைதேடவில்லை. எழுப்புதல்மிக்க, அந்த அதிக நேரமிக்கதாக இருந்த நாளில் களைப்புடனும் பசியுடனுமிருந்த அந்தக் கூட்டத்திற்கு வழங்கப்பட்ட அந்த எளிமையான உணவு அவரது வல்லமையின் நிச்சயமாக மட்டுமிராமல், அவர்களது வாழ்க்கையின் அன்றாடத் தேவைகளைப்பற்றிய காரியத்தில் அவருக்கிருந்த மென்மையான பராமரிப்பையும் காட்டுவதாக இருந்தது. இரட்சகர் அவரது அடியார்களுக்கு உலகத்தின் ஆடம்பரங்களை வாக்குத்தத்தஞ்செய்யவில்லை.

அவர்களுடைய தேவைகள் சாதாரணமானவையாகவும் பற்றாக்குறை உள்ளவையாகவுங்கூட இருக்கலாம். வறுமை அவர்களுடைய பங்காக இருந்திருக்கலாம். ஆனால் அவர்களுடைய தேவை வழங்கப்படும் என்னும் உறுதிமொழியாக அவரது வார்த்தை உள்ளது. உலக நன்மையைவிட மேலானதாக, அவரது சமுகத்தின் பிரசன்னம் தங்கியிருப்பதினால் உண்டாகும் நன்மையை அவர் வாக்குத்தத்தஞ்செய்திருக்கிறார். (9)

ஐயாயிரம் பேருக்கு உணவளித்ததில் இயேசு இயற்கையின் உலகத்திலிருந்த திரையை உயர்த்தி, நமது நன்மைக்காகத் தொடர்ந்து செயலாற்றிக்கொண்டிருக்கும் வல்லமையை வெளிக்காட்டுகிறார். பூமியின் அறுவடைக்கான ஏற்பாடுகளில் தேவன் ஒவ்வொரு நாளும் ஒரு அற்புதத்தைச் செய்துவருகிறார். திரளானவர்களுக்கு உணவளிப்பதில் செயல்படுத்தப்பட்ட அதே செயல், இயற்கையின் ஏதுகரங்களின்மூலமாக நிறைவேற்றப்பட்டுவருகிறது. மனிதர்கள் நிலத்தை ஆயத்தஞ்செய்து விதைவிதைக்கின்றனர். ஆனால் தேவனிடமிருந்துள்ள ஜீவன்தான் அந்த விதையை வளரச்செய்கிறது. தேவனுடைய மழை, காற்று, சூரிய ஒளி ஆகியவைதான் “முன்பு முளையையும், பின்பு கதிரையும், கதிரிலே நிறைந்த தானியத்தையும்” (மாற்கு 4:28) கொடுக்கிறது. பூமியில் நிலங்களின் அறுவடையினால் ஒவ்வொரு நாளும் கோடிக்கணக்கானவர்களைப் போஷிப்பவர் தேவன்தான். தானியங்களைப் பாதுகாக்கவும், அப்பங்களை ஆயத்தஞ்செய்யவும், தேவனுடன் ஒத்துழைக்கும்படி மனிதர்கள் அழைக்கப்பட்டுள்ளனர். இதனால் தெய்வீக ஏதுகரத்தைப்பற்றிய பார்வையை அவர்கள் இழந்துவிடுகின்றனர். தேவனுடைய பரிசுத்த நாமத்திற்குக் கொடுக்கப்படவேண்டிய மகிமையை அவர்கள் கொடுக்காமலிருக்கின்றனர். செயலாற்றும் அவரது வல்லமை, இயற்கையின் காரணங்களுக்கும் அல்லது மனிதக் கருவிகளுக்கும் சூட்டப்படுகிறது. தேவனுக்குப்பதிலாக மனிதன் மகிமைப்படுத்தப்படுகிறான். அவரது கிருபையான ஈவுகள் சுயநலத்திற்குப் பயன்படுத்தத் திரிபுசெய்யப்பட்டு, ஆசீர்வாதத்திற்குப்பதிலாக ஒரு சாபமாக்கப்படுகிறது. இவைகளையெல்லாம் மாற்றியமைக்க தேவன் வகைதேடுகிறார். அவரது இரக்கமிக்க அன்பை அறிந்து, அவரது வல்லமையின் செயற்பாட்டிற்காக அவரை மகிமைப்படுத்த நமது மந்தமான புலன்கள் எழுப்புதல் அடையவேண்டுமென்று அவர் விரும்புகிறார். அவரது ஈவுகளின் வழியாக, நாம் அவரை இனங்கண்டுகொள்ளவேண்டுமென்று அவர் விரும்புகிறார். அதன்மூலமாக அவர் விரும்பியபடி அவைகள் நமக்கு ஒரு ஆசீர்வாதமாக இருக்கவேண்டும் என்று அவர் விரும்புகிறார். இந்த நோக்கத்தை நிறைவேற்றுவதற்காகத்தான் கிறிஸ்துவின் அற்புதங்கள் செயல்படுத்தப்பட்டன. (10)

திரளானவர்கள் போஷிக்கப்பட்டபின்பு ஏராளமான உணவு மீதமாக இருந்தது. ஆனால் எல்லையில்லாத வல்லமையை தமது அதிகாரத்திற்குள் உள்ளவராக, எல்லா ஆதாரங்களையும் உடையவராக இருந்த அவர்: “ஒன்றும் சேதமாய்ப் போகாதபடிக்கு மீதியான துணிக்கை களைச் சேர்த்துவையுங்கள்” என்றார். அப்பங்களைக் கூடைகளில் நிரப்புவதைவிட அதிகமான அர்த்தமுள்ளதாக இந்த வார்த்தைகள் உள்ளன. அந்தப் பாடம் இரு வகையானதாக இருந்தது. எதுவும் வீணாக்கப் படக்கூடாது. உலகப்பிரகாரமான அனுகூலங்களை நாம் நழுவும்படி விட்டுவிடக்கூடாது. ஒரு மனிதனுக்குப் பயன்படக்கூடிய எதையும் நாம் அலட்சியஞ்செய்யக்கூடாது. பூமியின்மீது பசியுடன் உள்ள ஒருவருக்கு நிவாரணங்கிடைக்கும்வண்ணம் ஒவ்வொன்றும் சேகரிக்கப்படட்டும். இதேவிதமான கவனம் ஆவிக்குரிய காரியங்களிலும் இருக்கவேண்டும். துணிக்கைகளால் நிறைந்த கூடைகள் சேகரிக்கப்பட்டபோது, வீட்டிலிருந்த தங்களுடைய நண்பர்களைப்பற்றி மக்கள் நினைத்தனர். கிறிஸ்துவால் ஆசீர்வதிக்கப்பட்டிருந்த அந்த அப்பங்களில் அவர்கள் பங்குபெறவேண்டும் என்று விரும்பினார்கள். ஆவல்மிக்க கூட்டத்தினர்களுக்கிடையில் அந்தக் கூடைகளில் இருந்தவைகள் பகிர்ந்தளிக்கப்பட்டன. அவை சுற்றிலுமிருந்த அனைத்து இடங்களுக்கும் எடுத்துச் செல்லப்பட்டன. அப்படியே அந்த விருந்தில் பங்குகொண்டிருந்தவர்கள் வானத்திலிருந்து இறங்கிவந்த அப்பத்தை மற்றவர்களுக்குக் கொடுக்கவேண்டியவர்களாக இருந்தனர். தேவனைப்பற்றிய ஆச்சரியமானவைகளைப்பற்றி அவர்கள் எவ்விதமாகக் கேட்டிருந்தார்களோ, அவைகளை திரும்பவும் கூறவேண்டியவர்களாக இருந்தனர். எதுவும் வீணாக்கப்பட்டுவிடக்கூடாது. அவர்களுடைய நித்திய இரட்சிப்புடன் சம்பந்தப்பட்ட ஒரு வார்த்தைகூட பயனற்றதாக நிலத்தில் விழக்கூடாது. (11)

தேவனைச் சார்ந்திருப்பதின் ஒரு பாடத்தைப் போதிப்பதாக அப்பங்களின் அற்புதம் உள்ளது. கிறிஸ்து ஐயாயிரம் பேருக்கு உணவளித்தபோது, ஆகாரமானது உடனே கிடைக்கத்தக்கதாக அருகில் இல்லை. அவரது கட்டளையைச் செயல்படுத்தும் எந்தக் கருவியும் வெளிப்படையாக அவரிடம் இருக்கவில்லை. இங்கு வனாந்தரத்தில் பெண்களும் குழந்தைகளும் அல்லாமல் ஐயாயிரம் ஆண்கள் இருந்தார்கள். அவர் பெருங்கூட்டமாக இருந்த அவர்களைத் தம்மைப் பின்பற்றிவரும்படி அழைக்கவில்லை. அழைப்பும் கட்டளையும் இல்லாமல் அவர்கள் தாங்களாகவே வந்திருந்தனர். ஆனால் அவ்வளவு அதிக நேரமாக அவரது போதனைகளைக் கவனித்திருந்தபின், அவர்கள் பசியால் சோர்ந்துபோவார்கள் என்பதை அவர் அறிந்திருந்தார். ஏனெனில் அவர்களுடைய உணவுத் தேவையில் அவர்களில்

அவரும் ஒருவராக இருந்தார். அவர்கள் வீட்டைவிட்டு வெகுதொலைவில் இருந்திருந்தனர். இரவும் சமீபமாயிருந்தது. அவர்களில் அநேகர் உணவை விலைக்கு வாங்கப் பணம் இல்லாதவர்களாக இருந்தனர். அவர்களுக்காக வனாந்தரத்தில் நாற்பது நாட்கள் உபவாசமாயிருந்த அவர், அவர்களைப் பசியுடன் தங்களுடைய வீடுகளுக்குத் திரும்பிச்செல்ல விடமாட்டார். இயேசு எங்கே இருந்திருந்தாரோ, அங்கு தெய்வீக ஏற்பாடு செய்யப்பட்டிருந்தது. தேவைகளில் நிவாரணம் பெறுவதற்கான பொருட்களுக்காக அவர் தமது பரலோகத் தந்தையைச் சார்ந்திருந்தார். (12)

இடுக்கமான சந்தர்ப்பங்களைச் சந்திக்கத்தக்கதாக கொண்டுவரப் படும்போது, நாம் தேவனைச் சார்ந்திருக்கவேண்டியவர்களாக இருக்கிறோம். வாழ்க்கையின் ஒவ்வொரு செயலிலும் நாம் ஞானத்தையும் நியாயத்தையும் செயல்படுத்தக்கூடியவர்களாக இருக்கவேண்டும். விளைவுகளைப்பற்றிய எச்சரிக்கையற்ற நடத்தையினால் நம்மை சோதனைக்குட்படுத்தாதவர்களாக நாம் இருக்கவேண்டும். தேவன் வழங்கியிருக்கும் செயல் ஆதாரங்களை நாம் அலட்சியஞ்செய்யக்கூடாது. அவர் நமக்குத் தந்துள்ள அறிவின் மேன்மைகளை நாம் தவறாகப் பயன்படுத்தி, துன்பங்களுக்குள் மூழ்கிவிடாதவர்களாக இருக்கவேண்டும். கிறிஸ்துவின் ஊழியக்காரர்கள் அவரது போதனைகளுக்கு ஐயமின்றி பற்றுறுதியோடு முழுநிறை நம்பிக்கையோடு கீழ்ப்படியவேண்டும். ஊழியம் தேவனுடையது. நாம் பிறரை ஆசீர்வதிக்கவேண்டுமானால், அவரது திட்டங்களைப் பின்பற்றவேண்டும். சுயத்தை மையமாக வைக்கக்கூடாது. சுயம் எந்த மேன்மையையும் பெறக்கூடாது. நமது சொந்த யோசனைகளின்படி நாம் திட்டந்தீட்டினால், கர்த்தர் நமது சொந்தத் தவறுகளில் நம்மை விட்டுவிடுவார். ஆனால் அவரது யோசனைகளைப் பின்பற்றினபின் நாம் நெருக்கடிமிக்க இடங்களுக்குக் கொண்டுவரப்பட்டால் அவர் நம்மை விடுவிப்பார். நாம் அதைரியத்தினால் சோர்ந்துவிடக்கூடாது. ஆனால் ஒவ்வொரு அவசர நிலையிலும் நாம் எல்லையற்ற வள ஆதாரங்களை தமது கட்டளையின்கீழ் வைத்துள்ளவரின் உதவியைத் தேடவேண்டும். அடிக்கடி சோதிக்கும் சூழ்நிலைகளால் நாம் சூழப்படுவோம். அப்பொழுது நாம் பூரணமான நம்பிக்கையுடன் தேவனைச் சர்ந்திருக்கவேண்டும். கர்த்தருடைய பாதையில் நடக்க முயலுவதின்மூலமாக, குழப்பத்திற்குள்ளாகக் கொண்டுவரப்படும் ஒவ்வொரு ஆத்துமாவையும் அவர் காப்பார். (13)

“பசியுள்ளவனுக்கு உன் ஆகாரத்தைப் பகிர்ந்துகொடுக்கிறதும், துரத்துண்ட சிறுமையானவர்களை வீட்டிலே சேர்த்துக்கொள்ளுகிறதும், வஸ்திரமில்லாதவனைக் கண்டால் அவனுக்கு வஸ்திரங் கொடுக்கிறதும்”

(ஏசாயா 58:7–10) அவசியம் என்று கிறிஸ்து அவரது தீர்க்கதரிசியின்மூலமாக நமக்குக் கட்டளை கொடுத்திருக்கிறார். “நீங்கள் உலகமெங்கும் போய், சர்வ சிருஷ்டிக்கும் சுவிசேஷத்தைப் பிரசங்கியுங்கள்” (மாற்கு 16:15) என்று அவர் நம்மை அழைத்திருக்கிறார். ஆனால் தேவை எவ்வளவு அதிகமாக இருக்கிறது என்பதையும், நம்மிடமுள்ள நிதி ஆதாரம் எவ்வளவு கொஞ்சமாக உள்ளது என்பதையும் நாம் பார்க்கும்போது, அடிக்கடி எவ்விதமாக நமது இதயங்கள் தொய்ந்து விசுவாசம் தோல்வியடைகிறது? ஐந்து வாற்கோதுமை அப்பங்களும் இரண்டு மீன்களும் இத்தனை மக்களுக்கு எம்மாத்திரம் என்று அந்திரேயா கூறியதைப்போல நாமும் கூறுகிறோம். கொடுப்பதற்கும் பிறருக்காகச் செலவிடுவதற்கும் பயந்து நமக்குள்ள அனைத்தையும் கொடுப்பதற்கு விருப்பமற்றவர்களாக அடிக்கடி நாம் தயங்குகிறோம். ஆனால் அவர்களுக்கு நீங்களே போஜனங்கொடுங்கள் என்று இயேசு கூறுகின்றார். அவரது கட்டளை ஒரு வாக்குத்தத்தமாக உள்ளது. கடற்கரைக்கு வந்திருந்த திரளானவர்களைப் போஷித்த அதே வல்லமை அதற்குப் பின்னால் உள்ளது. (14)

பசிமிக்க திரளானவர்களின் உலகப்பிரகாரமான தேவைகளை வழங்கிய கிறிஸ்துவின் செயலில் அவரது ஊழியர்கள் அனைவருக்குமான ஒரு ஆழமிக்க ஆவிக்குரிய பாடம் கொடுக்கப்பட்டுள்ளது. கிறிஸ்து பிதாவிடமிருந்து பெற்றுக்கொண்டார். அதனை அவர் சீடர்களுக்குக் கொடுத்தார். அவர்கள் திரளான மக்களுக்குக் கொடுத்தனர். மக்கள் ஒருவருக் கொருவர் கொடுத்தனர். அப்படியே கிறிஸ்துவுடன் ஐக்கியப்பட்டிருக்கும் அனைவரும் பரலோக உணவாகிய ஜீவ அப்பத்தை அவரிடமிருந்து பெற்று, மற்றவர்களுக்குக் கொடுப்பார்கள். (15)

தேவன்மீதுள்ள பூரணமான விசுவாசத்தைச் சார்ந்திருத்தலில் இயேசு அந்தச் சிறு அப்பத்துணிக்கைகளை எடுத்தார். சீடர்களாகிய அவரது சொந்தக்குடும்பத்திற்காக ஒரு சிறு பகுதிமட்டும் இருந்திருந்தபோதிலும் அவர்களைப் புசிக்கும்படி அவர் அழைக்கவில்லை. மக்களுக்குப் பரிமாறும்படி அழைத்து, பகிர்ந்தளிக்கத் தொடங்கினார். தாமே ஜீவ அப்பமாக இருந்த கிறிஸ்துவிடம் அந்த உணவு சென்றடைந்தபோது, ஒருபோதும் முற்றிலும் வெறுமையாகாமல் அவரது கரங்களிலும் சீடர்களின் கரங்களிலும் பெருகியது. அச்சமயம் இருப்பிலிருந்த சிறிதளவு ஆகாரம் அனைவருக்கும் போதுமானதாயிற்று. மக்களின் தேவைகள் வழங்கப்பட்டபின், துணிக்கைகள் சேகரிக்கப்பட்டன. பரலோகம் வழங்கிய விலைமதிப்புமிக்க உணவை கிறிஸ்துவும் அவரது சீடர்களும் ஒன்றுசேர்ந்து உண்டனர். (16)

கிறிஸ்துவிற்கும் மக்களுக்கும் இடையிலுள்ள தொடர்புக் கருவிகளாக சீடர்கள் இருந்தனர். அது இன்றுள்ள அவரது சீடர்களுக்குப் பெரும் தைரியமூட்டுதலாக இருக்கவேண்டும். சகலவிதமான வளத்திற்கும் ஆதாரத்தின் பெரும் மையமாகக் கிறிஸ்து இருக்கிறார். சீடர்கள் அவர்களுக்குரிய தேவைகளை அவரிடமிருந்து பெற்றுக்கொள்ளவேண்டும். மிகுந்த நுண்ணறி வாளர்களானாலும், மிகுந்த ஆவிக்குரிய மனமுள்ளவர்களானாலும், அவரிடமிருந்து பெறும்போதுமட்டுமே அவர்களால் வழங்கமுடியும். ஆத்துமாவின் தேவைகளுக்காக அவர்களால் தங்களாலேயே எதையும் வழங்க இயலாது. கிறிஸ்துவிடமிருந்து பெற்றுக்கொள்ளுவதைமட்டுமே நம்மால் பெற்றுக்கொள்ளமுடியும். நாம் தொடர்ந்து கொடுக்கும்போது, தொடர்ந்து பெற்றுக்கொள்ளுகிறோம். எந்த அளவிற்கு அதிகமாக நாம் கொடுக்கிறோமோ, அந்த அளவிற்கு அதிகமாக பெற்றுக்கொள்ளுகிறோம். இவ்விதமாக நாம் தொடர்ந்து நம்புபவர்களாக, நம்பிக்கை வைப்பவர்களாக, பெறுபவர்களாக, வழங்குபவர்களாக ஆகலாம். (17)

கிறிஸ்துவின் இராஜ்யத்தைக் கட்டும் பணி மெதுவாக நடப்பதுபோல எல்லாவிதத்திலும் காணப்பட்டாலும், இயலாமைகளால் அது முன்செல்லாது என்பதுபோல தோன்றினாலும், அது முன்செல்லும். வேலை தேவனுடையது. அதற்கு வேண்டிய பொருளாதாரத்தை அவர் ஏற்பாடு செய்வார். அவர் உதவியாளர்களையும் உண்மையும் ஆர்வமுமிக்க சீடர்களையும் அனுப்புவார். அவர்களுடைய கரங்கள் பட்டினியாயிருக்கும் திரளானவர்களுக்கான உணவைக் கொண்டிருக்கும். அழிந்துகொண்டிருக்கும் ஆத்துமாக்களுக்கு ஜீவவார்த்தையைக் கொடுப்பதற்காக அன்பினால் செயல்படும் ஊழியக்காரர்கள் தங்கள் பகுதியாக பசியுள்ள மற்ற ஆத்துமாக்களுக்கு உணவளிப்பதற்காக, தங்களது கரங்களை நீட்டி தேவனை சமீபிப்பவர்களை எண்ணாதவராக அவர் இருப்பதில்லை. (18)

மனிதன் தனது தாலந்துகளினாலும் திறமையினாலும் தேவனுக்குப் பணிசெய்கிறான். ஆனால் தான் எல்லாவற்றையும் செய்துவிடலாம் என்று தன்னை அதிகமாகச் சார்ந்திருக்கும் அபாயம் இதிலுள்ளது. இப்படியாக நம் எஜமானனாகிய தலைமை ஊழியக்காரரைப்பற்றிய பார்வையை இழந்துவிடுகிறோம். கிறிஸ்துவிற்காக ஊழியஞ்செய்யும் ஊழியக்காரன் அடிக்கடி தனது சொந்தப் பொறுப்புக்களை உணரத் தவறிவிடுகிறான். சகலவிதமான பலத்திற்கும் ஆதாரமானவராக இருப்பவரைச் சார்ந்திருப்பதற்குப் பதிலாக தனது பாரத்தை ஸ்தாபனத்தின்மீது சுமத்திவிடும் அபாயத்தில் இருக்கிறான். தேவனுடைய பணியில் மனித ஞானத்தின்மீதுள்ள எண்ணிக்கையின்மீது நம்பிக்கை வைப்பது பெரும் தவறாகும். காரியத்தின்மீதுள்ள தூய்மை

விசுவாசத்தைச் சார்ந்திருக்கும்.உண்மையான ஆர்வமிக்க எளிமையைவிட கிறிஸ்துவிற்காகச் செய்யப்படும் வெற்றிகரமான பணி, எண்ணிக்கைகளையும் தாலந்துகளையும் சார்ந்திராமல் தூய்மையான நோக்கம், உண்மையான எளிமையின் ஊக்கமுள்ள விசுவாசம் ஆகியவைகளைச் சார்ந்துள்ளது. கிறிஸ்துவை அறியாதவர்களுக்காக சொந்தமாகப் பொறுப்புகள் ஏற்கப்படவேண்டும். சொந்தமாகக் கடமைகள் ஏற்றுக்கொள்ளப்படவேண்டும். சொந்த முயற்சிகள் மேற்கொள்ளப்படவேண்டும். உங்களைவிட மிகவும் அதிகமான திறமையுடையவர் என்று நீங்கள் ஒருவரை எண்ணி, பொறுப்புக்களை அவர்மீது சுமத்துவதற்குப்பதிலாக உங்களுடைய திறமைக்குத்தக்கவாறு நீங்களே செயலாற்றுங்கள். (19)

“இவர்கள் சாப்பிடத்தக்கதாக அப்பங்களை எங்கே கொள்ளலாம்?” என்னும் கேள்வி உங்கள் இருதயத்தில் உண்டாகும்போது, உங்களது பதில் நம்பிக்கையில்லாததாக இருக்காதபடி பார்த்துக்கொள்ளுங்கள். “நீங்களே அவர்களுக்குப் போஜனங்கொடுங்கள்” என்னும் இரட்சகரின் கட்டளையை சீடர்கள் கேட்டபோது, அவர்களது மனங்களில் சகலவிதமான சங்கடங்களும் உண்டாயின. நாங்கள் கிராமங்களுக்குப் போய் போஜனம் வாங்கக்கூடுமோ? என்று அவர்கள் கேட்டனர். அதைப்போலவே இப்பொழுது மக்கள் ஜீவ அப்பம் இல்லாத அநாதைகளாக இருக்கும்போது, தூரத்திலிருந்து ஒருவர் வந்து அவர்களுக்கு உணவளிக்கும்படி ஒருவரை அழைத்துவர “நாங்கள் யாரையாவது அனுப்பலாமா” என்று கர்த்தருடைய பிள்ளைகள் கேள்வி கேட்கின்றனர். ஆனால் கிறிஸ்து என்ன கூறினார்? மக்களை உட்காரவையுங்கள் என்றார். அங்கு அவர்களை அவர் போஷித்தார். அப்படியே தேவைமிக்க ஆத்துமாக்களால் சூழப்பட்டிருக்கும்போது, கிறிஸ்து அங்கே இருக்கிறார் என்பதை நீங்கள் அறிந்துகொள்ளுங்கள். அவரோடு பேசுங்கள். உங்களுடைய வாற்கோதுமை அப்பங்களை அவரிடம் கொண்டு வாருங்கள். (20)

நம்மிடமுள்ள பொருட்கள் அந்த வேலைக்குப் போதுமானதாக இல்லை என்பதுபோலத் தோன்றலாம். எல்லாவற்றிற்கும் போதுமானதாக உள்ள தேவனுடைய வல்லமையின்மீது விசுவாசம் உள்ளவர்களாக நாம் முன்சென்றால், ஏராளமான வள ஆதாரங்கள் நமக்கு முன்பாகத் திறக்கப்படும். அந்த வேலை தேவனுடையதாக இருந்தால், அவர்தாமே அதை நிறைவேற்றுவதற்கான பொருட்களை ஏற்பாடு செய்வார். எளிமையாக அவரைச் சார்ந்துள்ள நேர்மைக்கு அவர் பரிசளிப்பார். பரலோகத்தின் கர்த்தருடைய சேவைக்கென்று ஞானமாகவும் சிக்கனமாகவும் பயன்படுத்தப்படும் சொற்பம், சிறு அளவு, அதைக் கொடுக்கும் செயலினால்

அதிகரிக்கும். சிறு அளவாக இருந்த உணவு, இயேசுவின் கரத்தில் பசியால் வாடியிருந்த திரளானவர்கள் உண்ணத்தகுந்த விதத்தில் திருப்தி அடையும்வரை குறையாததாக இருந்தது. பெற்றுக்கொள்ளும்படி நமது கரங்களை நீட்டினவர்களாக நாம் சகல செல்வங்களுக்கும் ஆதாரமாக இருப்பவரிடம் செல்லுவோமானால், தடைகள் மிகுந்த சூழ்நிலையிலும் நமது பணியில் தாங்கப்பட்டு, மற்றவர்களுக்கு ஜீவ அப்பத்தைக் கொடுப்பதற்குத் தகுதிப்படுத்தப்படுவோம். (21)

"கொடுங்கள், அப்பொழுது உங்களுக்கும் கொடுக்கப்படும்;" "சிறுக விதைக்கிறவன் சிறுக அறுப்பான், பெருக விதைக்கிறவன் பெருக அறுப்பான். ... மேலும், நீங்கள் எல்லாவற்றிலும் எப்பொழுதும் சம்பூரணமுடையவர்களாயும், சகலவித நற்கிரியைகளிலும் பெருகுகிறவர் களாயுமிருக்கும்படியாக, தேவன் உங்களிடத்தில் சகலவித கிருபையையும் பெருகச்செய்ய வல்லவராயிருக்கிறார். வாரியிறைத்தான், ஏழைகளுக்குக் கொடுத்தான், அவனுடைய நீதி என்றென்றைக்கும் நிற்கும் என்று எழுதியிருக்கிறபடியாகும். விதைக்கிறவனுக்கு விதையையும், புசிக்கிறதற்கு ஆகாரத்தையும் அளிக்கிறவர் உங்களுக்கு விதையை அளித்து, அதைப் பெருகப்பண்ணி, உங்கள் நீதியின் விளைச்சலை வர்த்திக்கச்செய்வார். தேவனுக்கு எங்களால் ஸ்தோத்திரமுண்டாவதற்கு ஏதுவாயிருக்கும் மிகுந்த உதாரகுணத்திலே நீங்கள் எவ்விதத்திலும் சம்பூரணமுள்ளவர்களாவீர்கள்" (லூக்கா 6:38; 2 கொரிந்தியர் 9:6–11) என்று கர்த்தர் சொன்னார். (22) ★

# 40

# ஏரியில் ஓர் இரவு!

**மத்தேயு 14:22–23; மாற்கு 6:45–52; யோவான் 6:14–21**

**(The Desire of Ages, pp. 377–382)**

அது வசந்த காலத்து மாலைமயங்கும் நேரம். புல்தரையின்மீது அமர்ந்து இயேசு கொடுத்திருந்த உணவை மக்கள் உண்டனர். அந்நாளில் அவர்கள் கேட்டிருந்த வார்த்தைகள் தேவனிடத்திலிருந்து வந்த வார்த்தைகளைப்போலத் தோன்றியது. அவர்கள் பார்த்த சுகமளிக்கும் செயல்கள், தெய்வீக வல்லமையினால்மட்டுமே செய்யப்படக்கூடியவைகள் போலிருந்தன. ஆனால் அப்பத்துணிக்கைகள்பற்றிய அற்புதம் அந்தத் திரளான கூட்டத்தின் கவனத்தைக் கவர்ந்திருந்தது. அதன் நன்மையில் அனைவரும் பங்குபெற்றிருந்தனர்.மோசேயின் நாட்களில் வனாந்தரத்தில் தேவன் மக்களை மன்னாவினால் போஷித்திருந்தார். இந்த நாளில் அவர்களைப் போஷித்தவர் மோசேயினால் முன்குறிக்கப்பட்டவராக இராமல், வேறு யாராக இருக்கக்கூடும்? பசியுடனிருந்த ஆயிரக்கணக்கான மக்களுக்கு போதுமான அளவு உணவை ஐந்து வாற்கோதுமை அப்பங்களினாலும் இரண்டு சிறிய மீன்களினாலும் வழங்குவது என்பது எப்படிப்பட்ட மனித வல்லமையினாலும் இயலாததாகும். அவர்கள் ஒருவருடனொருவர் "மெய்யாகவே இவர் உலகத்தில் வருகிறவரான தீர்க்கதரிசி" என்றார்கள். (1)

மனஉணர்த்துதல் நாள் முழுவதிலும் பலமடைந்துகொண்டிருந்தது. வெகு நாட்களாக எதிர்பார்த்திருந்த விடுதலை வழங்குபவர், அவர்களுக்கிடையில் இருக்கிறார் என்னும் நிச்சயம், மேலான செயலாக இருந்தது. மக்களின் நம்பிக்கைகள் மேலும் மேலும் அதிகரித்துக்கொண்டிருக்கிறது.யூதேயாவை பூலோகத்தின் பரதீசாகவும், பாலும்தேனும் ஓடுகிற நாடாகவும் மாற்றக்கூடியவர் இவர்தான். ஒவ்வொரு வாஞ்சையையும் அவரால் திருப்திப்படுத்தமுடியும். வெறுக்கப்படுகிறவர்களாக உள்ள ரோமர்களின் வல்லமையை இவரால் தகர்க்கமுடியும். யூதேயாவையும் எருசலேமையும் அவரால் விடுவிக்கமுடியும். போரில் காயப்படும் இராணுவவீரர்களை அவரால் சுகப்படுத்தமுடியும். சேனைகளனைத்திற்கும்

அவரால் ஆகாரம் வழங்கமுடியும். நாடுகளை வென்று வெகுகாலமாகத் தேடியிருந்த ஆளுகையை அவரால் இஸ்ரவேலுக்குக் கொடுக்கமுடியும். (2)

மக்கள் தங்களுடைய உற்சாகத்தின் மிகுதியினால் அவருக்கு உடனே அரசர் என்று முடிசூட்ட ஆயத்தமாக இருக்கின்றனர். அவர் தமக்கு மேன்மையைத் தேடிக்கொள்ளவோ, அல்லது மக்களின் கவனத்தை ஈர்க்கவோ எதுவும் செய்யாமலிருப்பதை அவர்கள் காணுகின்றனர். இந்தக் காரியத்தில் அவர் ஆசாரியர்களிலும் அதிபதிகளிலுமிருந்து மிகவும் சிறப்பான விதத்தில் மாறுபட்டவராக காணப்படுகிறார். அவர் தாவீதின் சிங்காசனத்தின்மீது ஒருபோதும் உரிமைபாராட்டாமலிருந்துவிடுவாரோ என்று அவர்கள் அஞ்சுகின்றனர். அவரை இஸ்ரவேலின் அரசர் என்று அறிவிக்க அவர்கள் ஒன்றுகூடி ஆலோசித்து, ஒரு இசைவிற்கு வருகின்றனர். தங்களுடைய ஆண்டவரை தாவீதின் சிங்காசனத்திற்கு உரிமையுள்ள வாரிசாக அறிவிப்பதில் திரளானவர்களுடன் அவரது சீடர்களும் ஒன்று சேர்ந்துகொள்கின்றனர். அப்படிப்பட்ட மேன்மையை மறுப்பதற்குக் கிறிஸ்துவிடமுள்ள அடக்கமே காரணம் என்று அவர்கள் கூறுகின்றனர். தங்களுடைய விடுதலை வீரரை மக்கள் உயர்த்துவார்களாக. தேவனுடைய அதிகாரத்தை உடையாக அணிந்துகொண்டுவரும் அவரை மேன்மைப்படுத்தும்படி அகந்தைமிக்க ஆசாரியர்களும் அதிபதிகளும் வற்புறுத்தப்படட்டும். (3)

தங்களுடைய நோக்கத்தை நிறைவேற்றும் ஏற்பாடுகளை அவர்கள் அக்கறையுடன் செய்கின்றனர். ஆனால் அவர்களால் புரிந்துகொள்ளமுடியாமலிருக்கும் அவரது பாதபடியின்கீழ் என்ன இருக்கிறது என்பதையும், அந்த இயக்கத்தின் பலன் எப்படி இருக்கும் என்பதையும் இயேசு பார்க்கிறார். அவரது உயிரை வேட்டையாடுவதில் ஆசாரியர்களும் அதிபதிகளும் இப்போதுங்கூட ஈடுபட்டுள்ளனர். மக்களைத் தங்களிடமிருந்து கவர்ந்திழுத்துக்கொண்டிருக்கிறார் என்று அவர்கள் அவர்மீது குற்றஞ் சாட்டுகின்றனர். அவரைச் சிங்காசனத்தில் அமரச்செய்வதற்கான ஒரு முயற்சியில் பலாத்காரமும் கலகமும் புரட்சியும் ஏற்படலாம். அது ஆவிக்குரிய ஆளுகையின் ஊழியத்திற்கு இடையூறு செய்யும். அந்த இயக்கம் தாமதமின்றித் தடுக்கப்பட்டாகவேண்டும். மக்களைக் கலைந்துசெல்லும்படி விட்டுவிட்டு, உடனே கப்பர்நகூமிற்குத் திரும்பிச்செல்லுவதற்குப் படகை செலுத்தும்படி இயேசு சீடர்களை அழைத்துக் கட்டளையிடுகிறார். (4)

நிறைவேற்ற மறுக்கமுடியாதவிதத்திலுள்ள இப்படிப்பட்ட ஒரு கட்டளை இதற்குமுன் ஒருபோதும் கிறிஸ்துவிடமிருந்து வந்ததில்லை. இயேசுவைச் சிங்காசனத்தில் அமரச்செய்வதற்கான ஒரு பிரசித்தமான இயக்கம்

உண்டாகவேண்டுமென்று சீடர்கள் அதிக நாட்களாக எதிர்பார்த்திருந்தனர். இந்த உற்சாகமெல்லாம் ஒன்றுமில்லாமற்போகும் என்னும் எண்ணத்தை அவர்களால் தாங்கிக்கொள்ளமுடியவில்லை. பஸ்கா பண்டிகையை ஆசரிப்பதற்குக் கூடிய திரளானவர்கள் இந்தப் புதிய தீர்க்கதரிசியைக் காண மிகுந்த ஆவலுள்ளவர்களாக இருந்தனர். தங்களால் மிகவும் நேசிக்கப்படுகின்ற தங்களுடைய ஆண்டவரை இஸ்ரவேலின் சிங்காசனத்தில் அமரச்செய்வதற்கு இது பொன்னான வாய்ப்பு என்பதுபோல அவரது அடியார்களுக்குக் காணப்பட்டது. இப்படிப்பட்ட புதிய பேராவல் நிறைந்த ஆர்வத்தினால் கனன்றெரியும் வேளையில் தனிமைமிக்க கடற்கரையில் இயேசுவைத் தனியாக விட்டுவிட்டு, தாங்களாகவே செல்லுவது என்பது அவர்களுக்குக் கடினமாக இருந்தது. இந்த ஏற்பாட்டிற்கு அவர்கள் மறுப்பு தெரிவித்தனர். ஆனால் இயேசு இதுவரை அவர்களுக்கெதிராக எடுத்துக்கொள்ளாத ஒரு அதிகாரத்துடன் அவர்களிடம் பேசினார். அதற்குமேலுள்ள அவர்களது எதிர்ப்பினால் எந்த பயனும் உண்டாகப்போவதில்லை என்பதை அவர்கள் அறிந்து, மௌனமாகக் கடலை நோக்கித் திரும்பினர். (5)

அப்பொழுது கலைந்துசெல்லும்படி இயேசு திரளானவர்களுக்குக் கட்டளையிடுகிறார். அவரது தன்மை தீர்மானமிக்கதாக இருப்பதினால் அதற்குக் கீழ்ப்படிய மறுப்பதற்கு அவர்கள் துணிவில்லாதவர்களாக உள்ளனர். தோத்திரங்கள் புகழ்ச்சி ஆகியவைகளின் வார்த்தைகள் அனைத்தும் அவர்களது உதடுகளில் இல்லாமலாகி விடுகின்றன. அவரை சிங்காசனத்தில் அமர்த்துவதற்காகச் செய்ய முயன்ற அவர்களது செயல் நின்றுவிடவே, அவர்களுடைய முகங்களிலிருந்து மகிழ்ச்சியும் ஆவலும் மறைந்துவிடுகிறது. அந்தக் கூட்டநெரிசலில் பலமிக்க மனதும் உறுதிமிக்க தீர்மானமுமுள்ள மனிதர்கள் உள்ளனர். ஆனால் அரச தோரணையிலுள்ள இயேசுவின் தன்மையும் அமைதியுடன் கட்டளையிடும் அவரது சில வார்த்தைகளும் அந்தச் சந்தடியை அடங்கச்செய்து, அவர்களுடைய நோக்கங்களை அடிபணியச் செய்கிறது. பூமியின்மீதுள்ள வல்லமைகள் யாவற்றையும்விட மேலான அவரது வல்லமைகளை அறிந்து எந்தவிதமான கேள்வியுமில்லாமல் அவர்கள் கீழ்ப்படிகின்றனர். (6)

அவர் தனித்து விடப்பட்டபோது, “ஜெபம்பண்ணுவதற்காக ஒரு மலையின்மேல் ஏறிச் சென்றார்.” மணிக்கணக்காக அவர் தேவனுடன் மன்றாடுவதில் ஈடுபட்டிருந்தார். அந்த ஜெபங்கள் அவருக்காக அல்லாமல், மனிதர்களுக்காக ஏறெடுக்கப்பட்டிருந்தன. சாத்தான் அவர்களது புரிந்துகொள்ளும் திறனைக் குருடாக்கிவிடாமலிருப்பதற்காகவும், அவரது ஊழியத்தின் தெய்வீகத்தன்மையை மனிதர்களுக்கு வெளிப்படுத்துவதற்கு

வேண்டிய வல்லமைக்காகவும் அவர் ஜெபித்தார். பூமியின்மீது இரட்சகரது ஊழியத்தின் நாட்கள் ஏறத்தாழ முடிவடைந்துவிட்டது என்பதையும், ஒரு சிலர் மட்டுமே அவரைத் தங்களுடைய மீட்பராக ஏற்றுக்கொள்வார்கள் என்பதையும் அவர் அறிந்திருந்தார். மிகுந்த வேதனையுடனும் ஆத்துமாவின் போராட்டத்துடனும் அவர் தமது சீடர்களுக்காக ஜெபித்தார். அவர்கள் கடுமையாக சோதிக்கப்படவிருந்தனர். பிரசித்தமான மாயத்தோற்றத்தின் அடிப்படையில் அவர்கள் நீண்ட காலமாக நெஞ்சாரப் பேணி வைத்திருந்த நம்பிக்கைகள் மிகுந்த வேதனையும் கேவலமுமான விதத்தில் ஏமாற்றத்திற்குள்ளாகவேண்டியதாக இருந்தது. தாவீதின் சிங்காசனத்திற்கு உயர்த்தப்படுவதற்குப்பதிலாக அவர் சிலுவையில் அறையப்படுவதை அவர்கள் காணவேண்டியதாக இருந்தது. உண்மையில் இதுதான் அவரது முடிசூட்டுவிழாவாக இருக்கவேண்டியதாக இருந்தது. ஆனால் அவர்கள் அதைச் சரியாக விளங்கிக்கொள்ளவில்லை. அதன் பலனாக பலத்த சோதனைகள் அவர்களுக்கு நேரிடும். அவைகளை சோதனைகள் என்று இனங்கண்டுகொள்ளுவது அவர்களுக்குக் கடினமாக இருக்கும். மனதை ஒளிப்படுத்தி புரிந்துகொள்ளுதலை விரிவடையச்செய்யும் பரிசுத்த ஆவி இல்லாததினால் சீடர்களின் விசுவாசம் விழுந்துவிடும்.அவரது இராஜ்யத்தைப்பற்றிய அவர்களுடைய கருத்துக்கள், உலகப் பிரகாரமான அதிகமான வல்லமை மேன்மை என்பவைகளுக்குள் மட்டும் அடங்கியிருந்து, இயேசுவிற்கு வேதனை தருவதாக இருந்தது. அவர்களைப்பற்றிய பாரத்தினால் அவரது இருதயம் கனத்தது. அவர் தமது மன்றாட்டுக்களை மிகுந்த வேதனையுடனும் கண்ணீருடனும் ஏறெடுத்தார். (7)

இயேசு அவர்களுக்கு வழிகாட்டியிருந்தவிதமாக சீடர்கள் உடனடியாக அந்த இடத்திலிருந்து புறப்பட்டுச் செல்லவில்லை. அவர் அவர்களிடத்திற்கு வருவார் என்னும் நம்பிக்கையில் அவருக்காகச் சற்று நேரம் காத்திருந்தனர். ஆனால் இரவு விரைந்துகொண்டிருப்பதை கண்டபோது, “படவில் ஏறி, கடலின் அக்கரையிலுள்ள கப்பர்நகூமுக்கு நேராய்ப்போனார்கள்.” அவர்கள் அவரை தங்களுடைய ஆண்டவர் என்று ஏற்றுக்கொண்டதிலிருந்து இதற்குமுன் ஒருபோதும் இருந்திராதவிதத்தில் அதிருப்திமிக்க இருதயங்களுடனும் அவர்மீது பொறுமையில்லாதவர்களாகவும் இயேசுவை விட்டுச்சென்றனர். அவரை அரசர் என்று பறைசாற்றுவதற்கு அவர்கள் அனுமதிக்கப்படாததினால் முறுமுறுத்தனர். அவரது கட்டளைக்கு உடனே கீழ்ப்படிந்ததற்காக தங்களையே குற்றப்படுத்திக்கொண்டனர். இன்னும் அதிகமான பிடிவாதமுள்ளவர்களாக இருந்திருந்தால், அவர்களால் தங்களுடைய நோக்கத்தை நிறைவேற்றியிருந்திருக்கமுடியும் என்று தர்க்கஞ்செய்துகொண்டனர். (8)

நம்பிக்கையின்மை அவர்களது மனங்களையும் இருதயங்களையும் பற்றிக்கொண்டிருந்தது. மேன்மையின்மீதுள்ள ஆசை அவர்களைக் குருடாக்கியிருந்தது. இயேசு பரிசேயர்களால் வெறுக்கப்பட்டிருந்தார் என்பதை அவர்கள் அறிந்திருந்தனர். எனவே சீடர்கள் தாங்கள் எண்ணியிருந்தபடி அவர் உயர்த்தப்பட்டிருப்பதைக் காண விரும்பினர். பலத்த அற்புதங்களைச் செய்யும் ஒரு போதகருடன் ஐக்கியப்பட்டிருப்பதும், அதே நேரத்தில் ஏமாற்றுக்காரர்கள் என்று பழிக்கப்படுவதும் அவர்களால் தாங்கிக்கொள்ளமுடியாத ஒரு சோதனையாக இருந்தது. ஒரு கள்ளத்தீர்க்கதரிசியின் அடியார்களாக அவர்கள் எப்பொழுதும் கணக்கிடப்படவேண்டியவர்களாக இருந்தார்களா? கிறிஸ்து தாம் அரசர் என்னும் அதிகாரத்தை ஒருபோதும் எடுத்துக் கொள்ளமாட்டாரா? பெரிய வல்லமையை உடையவராக இருந்த அவர் தமது உண்மையான தன்மையை வெளிக்காட்டி அவர்களுடைய பாதையை ஏன் வேதனையற்றதாகச் செய்யக்கூடாது? கொடுமைமிக்க ஒரு மரணத்திலிருந்து யோவான் ஸ்நானகனை அவர் ஏன் காப்பாற்றவில்லை? இப்படியாகப் பெரும் ஆவிக்குரிய இருள் தங்கள்மீது படியும்வரை அந்தச் சீடர்கள் காரண காரியங்களை ஆராய்ந்துகொண்டிருந்தனர். பரிசேயர்கள் துணிவாகக் கூறிக்கொண்டிருப்பதுபோல அவர் ஒரு வேஷதாரியாக இருக்கக்கூடுமா? என்று அவர்கள் வினவிக்கொண்டிருந்தனர். (9)

அந்தநாளில் அந்த சீடர்கள் கிறிஸ்துவின் ஆச்சரியமான செயல்களைக் கண்டிருந்தனர். அது பரலோகம் பூமியின்மீது இறங்கி விட்டதுபோலக் காணப்பட்டிருந்தது. விலைமதிப்பும் மகிமையுமிக்க அந்த நாளின் நினைவுகளை அவர்கள் விசுவாசத்தினாலும் நம்பிக்கையினாலும் நிரப்பியிருந்திருக்க வேண்டும். அவர்களது இருதயத்தின் நிறைவிலிருந்து அவர்கள் இந்தக் காரியங்களைப்பற்றி ஒன்று கலந்து உரையாடிக்கொண்டிருந்தார்களானால் சோதனைக்குள் பிரவேசித்திருக்கமாட்டார்கள். ஆனால் அவர்களுடைய ஏமாற்றம் அவர்களுடைய எண்ணங்களை ஈர்த்திருந்தது. “ஒன்றும் சேதமாய்ப் போகாதபடிக்கு மீதியான துணிக்கைகளைச் சேர்த்துவையுங்கள்” என்ற கிறிஸ்துவின் வார்த்தைகளுக்குக் கவனம் செலுத்தப்படவில்லை. அந்த நேரம் சீடர்களுக்கு மிகுந்த ஆசீர்வாதமான நேரமாக இருந்தது. ஆனால் அவர்கள் அதை மறந்திருந்தனர். அவர்கள் கொந்தளிக்கும் தண்ணீரின் நடுவில் இருந்தனர். அவர்களுடைய எண்ணங்கள் புயலாகவும் காரணமற்றவையாகவும் இருந்தன. அவர்கள் தங்களுடைய ஆத்துமாக்களைத் தாழ்த்தவும், அவர்களுடைய எண்ணங்களை நிரப்பவும் கர்த்தர் வேறொன்றை அவர்களுக்குக் கொடுத்தார். மனிதர்கள் பாரங்களையும் கஷ்டங்களையும் தங்களுக்குத் தாங்களே உண்டுபண்ணிக்கொள்ளும்போது, தேவன் இப்படிப்பட்ட காரியங்களை அடிக்கடி செய்கிறார். கஷ்டங்களைத் தங்களுக்கு

உண்டுபண்ணிக்கொள்ளவேண்டிய அவசியம் சீடர்களுக்கு இல்லாமலிருந்தது. அபாயம் ஏற்கனவே விரைவாக நெருங்கிக்கொண்டிருந்தது. (10)

ஒரு பயங்கரமான புயல்காற்று அவர்களை நோக்கி வந்து கொண்டிருந்தது. அவர்கள் அதற்கு ஆயத்தமற்றவர்களாக இருந்தனர். ஒப்பிட்டுப்பார்க்கும்போது, அது திடீரென்று உண்டான ஒன்றாக இருந்தது. ஏனென்றால் அந்தப் பகல் அமைதியாக இருந்தது. அந்தப் புயல் அவர்களைத் தாக்கியபோது, அவர்கள் பயந்தனர். தங்களுடைய பற்றின்மை, நம்பிக்கையின்மை, பொறுமையின்மை ஆகியவைகளை மறந்துவிட்டனர். அந்தப் படகு மூழ்கிவிடாமலிருக்கும்படி ஒவ்வொருவரும் வேலைசெய்தனர். இயேசுவைச் சந்திக்க எதிர்பார்த்திருந்த இடம் பெத்சாயிதாவிலிருந்து கடல்வழியாகச் செல்லவேண்டிய சிறிது தூரமாக இருந்தது. சாதாரணமான பருவநிலையில் அந்தப் பயணத்திற்குச் சிலமணிநேரம் போதுமானதாக இருந்தது. ஆனால் இப்பொழுது அவர்கள் தேடியிருந்த குறிப்பிட்ட இடத்திலிருந்து அதிகமதிகமான தூரத்திற்கு விரட்டப்பட்டிருந்தனர். இரவின் நான்காம் சாமம்வரை அவர்கள் துடுப்பு வலித்துக்கொண்டிருந்தனர். அதன்பின் களைப்புற்ற அந்த மனிதர்கள் தங்களை “தொலைந்தவர்கள்” என்று எண்ணுமளவிற்கு வந்துவிட்டனர். அவர்களுடைய சுய உதவியற்ற நிலையைப் புயலும் இருளும் அவர்களுக்குப் போதித்தன. அவர்கள் தங்களுடைய ஆண்டவரின் பிரசன்னத்திற்காக ஏங்கித் தவித்தனர். (11)

இயேசு அவர்களை மறக்கவில்லை. கடற்கரையில் நின்றிருந்து அவர்களைக் கவனித்திருந்த அவர், பயத்தால் தாக்கப்பட்டுப் புயலுடன் போராடிக்கொண்டிருந்த அந்த மனிதர்களைக் கண்டார். தமது சீடர்களின்மீதிருந்த அவரது பார்வையை அவர் விநாடி நேரங்கூட இழக்கவில்லை. பாரத்துடனிருந்து புயலில் தத்தளிக்கும் அந்தப் படகை அவரது கண்கள் ஆழ்ந்த அக்கறையுடன் பின்பற்றிச் சென்றன. ஏனெனில் இந்த மனிதர்கள்தான் உலகத்திற்கு ஒளியாக இருக்கவேண்டியவர்களாக இருந்தனர். ஒரு தாய் தன் பிள்ளையை மிகுந்த அன்புடன் கவனிப்பதுபோல மனஉருக்கமிக்க ஆண்டவர் அவரது சீடர்களைக் கவனித்தார். அவர்களது இருதயங்கள் தாழ்மையடைந்தபோது, பரிசுத்தமற்ற அவர்களுடைய ஆசைகள் இல்லாமற்போனபோது, மிகுந்த தாழ்மையுடன் அவர்கள் உதவிக்காக ஜெபித்தனர். அது அவர்களுக்கு அருளப்பட்டது. (12)

தாங்கள் அழிவை நெருங்கிவிட்டார்கள் என்று எண்ணிய அதே விநாடியில், தண்ணீரின்மீது தெளிவற்ற நிலையில் ஒரு உருவம் அவர்களைச் சமீபிப்பதை அவர்கள் ஒரு மின்னலின் ஒளிக்கீற்றில் கண்டனர். ஆனால் அவர்தான் இயேசு என்பதை அறியாமலிருந்தனர். அவர்களுடைய

உதவிக்காக வந்திருக்கும் ஒருவரை அவர்கள் சத்துரு என எண்ணினர். பயம் அவர்களை மேற்கொள்கிறது. துடுப்பைப்பற்றியிருந்த இரும்புபோன்ற தசைகளையுடைய கைகள் அவைகளின் பிடியை விட்டுவிடுகின்றன. அலைகளின் விருப்பத்திற்கு அந்தப் படகு அசைந்தாடுகிறது. வெண்நுரை எழுப்பும் கடலின் அலைகளின்மீது நடந்துவரும் ஒரு மனிதனின் காட்சியின்மீது அவர்களுடைய கண்களனைத்தும் பதிகிறது. (13)

தங்களுடைய அழிவின் முன்னறிகுறியாகத்தோன்றும் ஒரு ஆவேசம் அது என்று அவர்கள் நினைத்து, பயத்தினால் அலறுகின்றனர். இயேசு அவர்களைக் கடந்துசெல்பவரைப்போலக் காட்டி, முன்செல்லுகிறார். ஆனால் அவரை அடையாளங்கண்டு, உதவிக்காக அவரை நோக்கி அவர்கள் மன்றாடுகின்றனர். அவர்களுக்கு அருமையான ஆண்டவர் அவர்களிடம் திரும்பி: “திடன்கொள்ளுங்கள், நான் தான், பயப்படாதிருங்கள்” என்று கூறவே, அவரது குரல் அவர்களது பயத்தை அற்றுப்போகச்செய்கிறது. (14)

இந்த ஆச்சரியமான உண்மையை அவர்கள் வரவேற்ற அதே நேரத்தில், பேதுரு மகிழ்ச்சியினால் தன்னை மீறினவனானான். அவன் அபூர்வமாக நம்பமுடியாதவனாக, “ஆண்டவரே! நீரேயானால் நான் ஜலத்தின்மேல் நடந்து உம்மிடத்தில் வரக் கட்டளையிடும்” என்றான். அதற்கு அவர் “வா” என்றார். (15)

இயேசுவைப் பார்த்துப் பேதுரு பாதுகாப்பாக நடந்துவருகிறான். ஆனால் சுயதிருப்தியடைந்தவன்போல படகிலிருந்த அவனது தோழர்களைத் திரும்பிப்பார்க்கும்போது, அவனது கண்கள் இரட்சகரைவிட்டுத் திரும்புகின்றன. காற்று மிகுந்த இரைச்சலாக இருக்கிறது. அவனுக்கும் ஆண்டவருக்கும் இடையில் அலைகள் உயர்ந்து எழும்புகின்றன. அவன் பயப்படுகிறான். வினாடிநேரத்திற்கு அவனது பார்வையிலிருந்து கிறிஸ்து மறைக்கப்படுகிறார். அவனது விசுவாசம் இல்லாமல் போகிறது. அவன் மூழ்கத்தொடங்குகிறான். பேரலைகள் மரணத்தைப்பற்றி பேசினபோது, கோபமிக்கத் தண்ணீரிலிருந்து பேதுரு தனது கண்களை உயர்த்தி, அவைகளை இயேசுவின்மீது பதித்து: “ஆண்டவரே, என்னை ரட்சியும்” என்று கூப்பிட்டான். இயேசு நீட்டப்பட்ட அவனுடைய கரத்தைப் பிடித்தவராக: “அற்பவிசுவாசியே, ஏன் சந்தேகப்பட்டாய்” என்றார். (16)

பேதுரு தனது ஆண்டவரின் கரத்தைப்பற்றிக்கொள்ள அருகருகே நடந்து அவர்கள் இருவரும் சேர்ந்து படகிற்குள் ஏறுகின்றனர். இப்பொழுது பேதுரு அடங்கியவனாக மௌனமாக இருக்கிறான். தன்னுடனுள்ளவர்களைவிடத்

தான் பெரியவன் என்று பெருமையடித்துக்கொள்ள இப்பொழுது காரணம் இருக்கவில்லை. ஏனெனில் அவிசுவாசத்தின் மூலமாகவும் தன்னை உயர்த்தினதின்மூலமாகவும் கிட்டத்தட்ட அவன் தனது ஜீவனை இழந்தவனாக இருந்தான். அவன் இயேசுவிடமிருந்து தனது பார்வையை திருப்பியபோது, கால்கள் தடுமாறின. அலைகளுக்கு மத்தியில் அமிழ்ந்தான். (17)

துன்பங்கள் நமக்கு உண்டாகும்போது, நாம் பெரும்பாலும் பேதுருவைப்போல இருக்கிறோம்! இரட்சகரின்மீது நமது பார்வையை வைப்பதற்குப்பதிலாக அலைகளைப் பார்க்கிறோம். நமது காலடிகள் வழுக்கிவிடுகின்றன. பெருமைமிக்க தண்ணீர்கள் நமது ஆத்துமாவிற்குமேல் புரண்டு செல்லுகின்றன. பேதுரு அழிந்துபோகவேண்டுமென்பதற்காக இயேசு அவனைத் தம்மிடம் அழைக்கவில்லை. அவரைப் பின்பற்றும்படி அவர் நம்மை அழைத்து, பின்னர் கைவிட்டுவிடுபவரல்ல. “இப்போதும் யாக்கோபே, உன்னைச் சிருஷ்டித்தவரும், இஸ்ரவேலே, உன்னை உருவாக்கினவருமாகிய கர்த்தர் சொல்லுகிறதாவது: பயப்படாதே; உன்னை மீட்டுக்கொண்டேன்; உன்னைப்பேர்சொல்லி அழைத்தேன்; நீ என்னுடையவன். நீ தண்ணீர்களைக் கடக்கும்போது நான் உன்னோடு இருப்பேன்; நீ ஆறுகளைக் கடக்கும்போது அவைகள் உன்மேல் புரளுவதில்லை; நீ அக்கினியில் நடக்கும்போது வேகாதிருப்பாய்; அக்கினிஜுவாலை உன்பேரில் பற்றாது. நான் இஸ்ரவேலின் பரிசுத்தரும், உன் இரட்சகருமாயிருக்கிற உன் தேவனாகிய கர்த்தர்; உன்னை மீட்கும்பொருளாக எகிப்தையும், உனக்கு ஈடாக எத்தியோப்பியாவையும் சேபாவையும் கொடுத்தேன்”—ஏசாயா 43:1–3. (18)

இயேசு அவரது சீடர்களின் குணத்தை வாசித்தறிந்தார். அவர்களுடைய விசுவாசம் எவ்வளவு கடினமாகப் பரீட்சிக்கப்படவுள்ளது என்பதை அவர் அறிந்திருந்தார். கடலின்மேல் நிகழ்ந்த இந்தச் சம்பவத்தினால், பேதுருவிற்கு அவனுடைய பலவீனத்தையும், தெய்வீக வல்லமையை தொடர்ச்சியாகச் சார்ந்திருப்பதில்தான் அவனது பாதுகாப்பு இருந்தது என்பதையும் காட்ட விரும்பினார். தன்னை நம்புவதை முற்றிலும் விடுத்து, இரட்சகரைச் சார்ந்திருந்தால் மாத்திரமே அவனால் சோதனைகள் என்னும் புயல்களுக்கு நடுவில் பாதுகாப்பாக நடக்கமுடியும். பேதுரு நான் பலமிக்கவனாக இருக்கிறேன் என்று தன்னைப்பற்றி எண்ணிக்கொண்ட இந்தக் காரியத்தில்தான் பலவீனனாக இருந்தான். அவனுடைய பலவீனத்தை அவன் அறியாதவரை கிறிஸ்துவைச் சார்ந்திருக்கவேண்டும் என்ற அவனது தேவையை அவன் உணராதவனாக இருந்தான். கடலின்மீது உண்டான அனுபவத்தினால் இயேசு அவனுக்குப் போதிக்க வகைதேடியிருந்த போதனையை அவன்

கற்றிருந்தானானால், பெரும் சோதனை அவன்மீது வந்தபோது, அவன் தோல்வியடைந்திருக்கமாட்டான். (19)

தேவன் தமது பிள்ளைகளுக்கு நாள்தோறும் போதிக்கிறார். தெய்வீக ஏற்பாடு ஆயத்தஞ்செய்திருக்கும் காரியங்களைத் தேவனுடைய பிள்ளைகள் விசாலமான அரங்கில் செய்வதற்கு அவர் அவர்களை அன்றாட வாழ்க்கையின் சூழ்நிலைகளினால் ஆயத்தஞ்செய்கிறார். வாழ்க்கையின் பெரும் நெருக்கடியில் அவர்களுடைய வெற்றி அல்லது தோல்வியைத் தீர்மானிப்பது நாள்தோறும் உண்டாகும் பரீட்சையிலுள்ள பிரச்சனையாகும். (20)

தாங்கள் எப்போதுமே தேவனைச் சார்ந்தவர்களாக இருக்கின்றனர் என்பதை உணர மறுப்பவர்கள் சோதனைகளினால் மேற்கொள்ளப்பட்டு விடுவார்கள். இப்பொழுது நமது பாதங்கள் பாதுகாப்பாக உள்ளன. நாம் ஒருபோதும் அசைக்கப்படமாட்டோம் என்று உத்தேசிக்கலாம். "நான் விசுவாசித்திருக்கிறவர் இன்னார் என்று அறிவேன்; தேவன்மேலும் அவருடைய வார்த்தையின்மேலும் நான் வைத்திருக்கும் விசுவாசத்தை எதுவும் அசைக்கமுடியாது" என்று நம்பிக்கையுடன் கூறலாம். நமது மரபுவழி வருகின்றதும், மற்றும் நாமே உருவாக்கி வளர்த்துக்கொண்ட குணக்கூறுகளையும் தனக்குச் சாதகமாகப் பயன்படுத்திக்கொள்ளுவதற்காக நமது சொந்தத் தேவைகளையும் குறைபாடுகளையும்பற்றி, நமது கண்களைக் குருடாக்க சாத்தான் திட்டந்தீட்டிக்கொண்டிருக்கிறான். நமது சொந்தமான பலவீனங்களை நாம் உணர்வதினாலும், இயேசுவை உறுதியாக நோக்குவதினாலும் மட்டுமே நம்மால் பாதுகாப்பாக நடக்கமுடியும். (21)

இயேசு அந்தப் படகில் அவரது இருக்கையில் உட்கார்ந்தவுடனே அந்தக் காற்று நின்றது. பயங்கரமான இரவை காலை தொடர்ந்தது. சீடர்களும் படகிலிருந்த மற்றவர்களும் வந்து: "மெய்யாகவே நீர் தேவனுடைய குமாரன்" என்று சொல்லி, நன்றியான இருதயத்துடன் அவரது பாதங்களில் விழுந்து பணிந்துகொண்டார்கள். (22) ★

# 41

# கலிலேயாவில் ஏற்பட்ட நெருக்கடி...!

**யோவான் 6:22–71**

**(The Desire of Ages, pp. 383–394)**

தம்மை அரசர் என்று மக்கள் அறிவிப்பதை கிறிஸ்து தடுத்தபோது, தரது வரலாற்றில் ஒரு திருப்புமுனை ஏற்பட்டுவிட்டது என்பதை அவர் அறிந்திருந்தார். இன்று அவரைச் சிங்காசனத்திற்கு உயர்த்தவேண்டும் என்று விரும்பும் திரளானவர்கள், நாளைக்கு அவருக்கு எதிராகத் திரும்புவார்கள். மேலான நிலைமையின்மீதுள்ள அவர்களுடைய சுயநலமிக்க ஆசைகள், அவர்களுடைய அன்பை வெறுப்பாகவும் அவர்களுடைய புகழ்ச்சியைச் சாபங்களாகவும் மாற்றும் என்பதை அவர் அறிந்திருந்தார். இதை அவர் அறிந்திருந்தபோதிலும், இந்த நெருக்கடியைத் தவிர்க்க எந்த நடவடிக்கையும் எடுக்கவில்லை. பூமிக்குரிய பரிசுகளைப்பற்றிய நம்பிக்கைக்கு இடமில்லை என்பதை அவர் ஆரம்பத்திலிருந்தே அவரைப் பின்பற்றியவர்களுக்குத் தெரிவித்திருந்தார். அவருடைய சீடனாவதற்கு விரும்பி, அவரிடம் வந்த ஒருவனை நோக்கி: “நரிகளுக்குக் குழிகளும் ஆகாயத்துப் பறவை களுக்குக் கூடுகளும் உண்டு; மனுஷகுமாரனுக்கோ தலைசாய்க்க இடமில்லை” (மத்தேயு 8:20) என்று அவர் கூறினார். மனிதர்களுக்குக் கிறிஸ்துவுடன்கூட உலகமும் கிடைக்கக்கூடியதாக இருந்திருந்தால், திரளானவர்கள் அவருடைய உறவை ஆசித்திருந்திருப்பார்கள். ஆனால் அப்படிப்பட்ட சேவையை அவரால் ஏற்றுக்கொள்ள முடியவில்லை. இப்பொழுது அவருடன் சம்பந்தப்பட்டிருந்தவர்களில் உலகப்பிரகாரமான ஆளுகையின்மீதுள்ள நம்பிக்கையால் கவரப்பட்ட அநேகர் இருந்தனர். அவர்கள் ஏமாறக்கூடாது. அப்பங்களைப்பற்றிய அற்புதத்தில் இருந்த ஆழமான ஆவிக்குரிய போதனை புரிந்துகொள்ளப்படாமலிருந்து, தெளிவுபடுத்தப்படவேண்டியதாக இருந்தது. இந்தப் புதிய வெளிப்படுத்தல் அதனுடன் ஒரு நெருக்கமான சோதனையையும் கொண்டுவந்தாகவேண்டும். (1)

அப்பங்களைப்பற்றிய அற்புதம் அருகிலும் தூரத்திலும் பரவியது. மறுநாள் அதிகாலையில் இயேசுவைக் காண்பதற்காக மக்கள் பெத்சாயிதாவில் ஒன்றுதிரண்டனர். அவர்கள் பெருமளவில் தரைமார்க்கமாகவும் கடல்மார்க்க மாகவும் வந்திருந்தனர். முந்தின நாள் இரவில் அவரைவிட்டுப் போனவர்கள் இன்னமும் அவர் அங்கே இருப்பார் என்று எதிர்ப்பார்த்து அந்த இடத்திற்குத் திரும்பியிருந்தனர். ஏனெனில் அக்கரைக்கு அவர் கடந்துசெல்லுவதற்கு அங்கு படகு எதுவும் இருக்கவில்லை. ஆனால் அவர்களுடைய தேடுதல் பயனற்றதாக இருந்தது. அநேகர் அவரை தொடர்ந்து தேடிக்கொண்டு கப்பர்நகூமில் தங்கிவிட்டனர். அப்படியிருந்தபோது, அவர் ஒருநாள் யாருக்கும் தென்படாமலிருந்து, கெனேசரேத்திற்கு வந்துசேர்ந்தார். அவர் வந்திருக்கிறார் என்பதை அறிந்தவுடனே, மக்கள் “அந்தச் சுற்றுப்புறமெங்கும் ஓடித் திரிந்து, பிணியாளிகளைப் படுக்கைகளில் கிடத்தி, அவர் வந்திருக்கிறாரென்று கேள்விப்பட்ட இடங்களிலெல்லாம் சுமந்து கொண்டுவந்தார்கள்”—மாற்கு 6:55. (2)

பிறகு அவர் ஜெப ஆலயத்திற்குச் சென்றார். பெத்சாயிதாவிலிருந்து வந்திருந்தவர்கள் அங்கு அவரைக் கண்டனர். அவர் எவ்விதமாகக் கடலைக் கடந்தார் என்பதை அவரது சீடர்களிடமிருந்து அறிந்துகொண்டனர். புயலின் வேகம், பாதகமான காற்றுக்கு எதிராக அவர்கள் படகை ஓட்டின பயனற்ற முயற்சிகள், தண்ணீரின்மீது நடந்து கிறிஸ்து தோன்றினது, அதனால் உண்டான பயம், சமாதானப்படுத்தும் அவரது வார்த்தைகள், பேதுருவின் துணிச்சலான செயல், அதன் பலன், திடீரென்று நின்றுபோன புயல், படகு கரை சேர்ந்தது ஆகிய அனைத்தும் ஆச்சரியமடைந்த கூட்டத்தினருக்கு விசுவாசத்துடன் மீண்டும் எடுத்துக்கூறப்பட்டது. அப்படியிருந்தும், அதில் திருப்தியடையாத அநேகர் இயேசுவைச் சூழ்ந்து: “ரபீ, நீர் எப்பொழுது இவ்விடம் வந்தீர்” என்றார்கள். இந்த அற்புதத்தைப்பற்றிய விளக்கத்தை அவரிடமிருந்து பெறலாம் என்று அவர்கள் நம்பியிருந்தனர். (3)

இயேசு அவர்களுடைய அறியவேண்டும் என்ற ஆர்வத்தை திருப்திப்படுத்தவில்லை. “நீங்கள் அற்புதங்களைக் கண்டதினால் அல்ல, நீங்கள் அப்பம் புசித்துத் திருப்தியானதினாலேயே என்னைத் தேடுகிறீர்கள்” என்று வருத்தத்துடன் கூறினார். மதிப்புமிக்க எந்த ஒரு நோக்கத்துடனும் அவர்கள் அவரைத் தேடவில்லை. ஆனால் அப்பங்களினால் போஷிக்கப்பட்டதைப்போலவே, தங்களை அவருடன் பிணைத்துக்கொள்வதின்மூலமாக, உலகப்பிரகாரமான நன்மைகளையும் பெற்றுக்கொள்ளலாம் என்று நம்பினார்கள். “அழிந்துபோகிற போஜனத்திற்காக அல்ல, நித்தியஜீவன்வரைக்கும் நிலைநிற்கிற போஜனத்திற்காகவே கிரியை

நடப்பியுங்கள்" என்று இரட்சகர் அவர்களை அழைத்தார். பொருட்களுக்காக மாத்திரம் அவரைத் தேடாதீர்கள். இப்போதிருக்கிற வாழ்க்கைக்காக சம்பாதிப்பது நமது முதல் முயற்சியாக இருக்கவேண்டாம். மாறாக, ஆவிக்குரிய உணவை, நித்திய வாழ்க்கைவரைக்கும் நிலைக்கப்போகிற அந்த ஞானத்தைத் தேடுங்கள். அதை தேவகுமாரன் மட்டுமே கொடுக்க முடியும்; "அவரைப் பிதாவாகிய தேவன் முத்திரித்திருக்கிறார்" என்றார். (4)

அந்த நேரத்தில் அதைக் கேட்டிருந்தவர்களின் ஆர்வம் எழுப்பப் பட்டது. "தேவனுக்கேற்ற கிரியைகளை நடப்பிக்கும்படி நாங்கள் என்ன செய்யவேண்டும்" என்று அவர்கள் வியப்புடன் கேட்டார்கள். தேவனிடம் ஆதரவைப் பெறும்படி அவர்கள் அநேக பாரமிக்க சடங்குகளைச் செய்துகொண்டிருந்தனர். அதிகமான புண்ணியத்தை அடைந்துகொள்ள மேலும் கடைப்பிடிக்கும்படியான புதிய முறைமைகளை கேட்பதற்கு அவர்கள் ஆயத்தமாக இருந்தனர். பரலோகத்திற்கான தகுதியை அடைவதற்கு நாங்கள் என்ன செய்யவேண்டும்? வரவிருக்கும் நித்திய ஜீவனைப் பெற்றுக்கொள்வதற்காக நாங்கள் கொடுப்பதற்கு அவசியமான கிரயம் என்ன? என்பது அவர்களது கேள்வியின் பொருளாக இருந்தது. (5)

"அவர் அனுப்பினவரை நீங்கள் விசுவாசிப்பதே தேவனுக்கேற்ற கிரியையாயிருக்கிறது" என்று இயேசு அவர்களுக்குப் பதில் கூறினார். பரலோகத்திற்கான கிரயம் இயேசுதான்! "உலகத்தின் பாவத்தைச் சுமந்துதீர்க்கிற தேவஆட்டுக்குட்டி" (யோவான் 1:29)யின்மீது வைக்கும் விசுவாசம்தான் பரலோகத்திற்கான பாதையாக இருக்கிறது. (6)

ஆனால் தெய்வீக சத்தியம் அடங்கிய இந்த அறிக்கையைப் பெற்றுக்கொள்ளுவதை மக்கள் தெரிந்துகொள்ளவில்லை. மேசியா எவைகளைச் செய்வார் என்பதை தீர்க்கதரிசனங்கள் முன்னறிவித்திருந்தன. அவைகளையே இயேசு செய்திருந்தார். ஆனால் சுயநலமிக்க அவர்களுடைய நம்பிக்கைகள் அவரது கிரியைகளைப்பற்றி ஒரு சித்திரம் வரைந்திருந்தது. அவைகளை அவர்கள் (இயேசுவில்) காணவில்லை. உண்மையாகவே ஒரு முறை கிறிஸ்து திரளானவர்களை வாற்கோதுமை அப்பங்களால் போஷித்திருந்தார். ஆனால் மோசேயின் காலத்தில் இஸ்ரவேலர் நாற்பது வருடங்கள் மன்னாவினால் போஷிக்கப்பட்டிருந்தனர். அதற்கும் மேலான ஆசீர்வாதங்கள் மேசியாவிடமிருந்து எதிர்பார்க்கப்பட்டிருந்தன. அவர்கள் கண்டிருந்த அநேக ஆச்சரியமான காரியங்களை இயேசுவினால் செய்ய முடிந்திருந்தால், அவரால் உடல் பலத்தையும் நலத்தையும் செல்வங்களையும் ஏன் மக்களுக்குக் கொடுக்கமுடியாது? தங்களை ஒடுக்குபவர்களிடமிருந்து

அவர்களை விடுதலைசெய்து, அவர்களை வல்லமையும் மேன்மையுமிக்க நிலைமைக்கு ஏன் உயர்த்தமுடியாது? என்று அதிருப்திமிக்க அவர்களது இருதயங்களில் கேள்வி கேட்டனர். அவர் தேவனால் அனுப்பப்பட்டவர் என்ற உண்மையும், அப்படியிருந்தும் இஸ்ரவேலின் அரசராவதற்கு அவர் மறுத்ததும், அவர்களால் அறிந்துகொள்ளமுடியாத மறைபொருளாக இருந்தன. அவரது மறுப்பு தவறானவிதத்தில் எடுத்துக்காட்டப்பட்டது. அவரது உரிமையைப் பற்றிக்கொள்ள அவர் துணியாமலிருப்பதற்கு அவரது ஊழியத்தின் தெய்வீகத்தன்மையை அவரே சந்தேகப்பட்டதாகும் என்ற முடிவுக்கு அநேகர் வந்தனர். இவ்விதமாக அவர்கள் தங்களுடைய இருதயங்களை சந்தேகத்திற்குத் திறந்துவிடவே, சாத்தான் விதைத்த விதைகள், தவறாகப் புரிந்துகொள்ளுதல், கைவிட்டுச்செல்லுதல் என்னும் தன் கனிகளைக் கொடுத்தது. (7)

இப்பொழுது அரைகுறை பரிகாசத்துடன் ஒரு ரபி: “அப்படியானால் உம்மை விசுவாசிக்கும்படிக்கு நாங்கள் காணத்தக்கதாக நீர் என்ன அடையாளத்தைக் காண்பிக்கிறீர்? என்னத்தை நடப்பிக்கிறீர்? வானத்திலிருந்து அவர்களுக்கு அப்பத்தைப் புசிக்கக்கொடுத்தார் என்று எழுதியிருக்கிறபடி, நம்முடைய பிதாக்கள் வனாந்தரத்தில் மன்னாவைப் புசித்தார்களே” (யோவான் 6:30,31) என்றான். (8)

யூதர்கள் மோசேயை மன்னாவைக் கொடுத்தவராகச் சிறப்பித்து, எவர்மூலமாக அந்தச் செயல் நிறைவேற்றப்பட்டிருந்ததோ அவரைப்பற்றின பார்வையை இழந்து அதற்குக் கருவியாக இருந்தவனைப் புகழ்ந்திருந்தார்கள். அவர்களுடைய பிதாக்கள் மோசேக்கு எதிராக முறுமுறுத்து, அவனது தெய்வீக ஊழியத்தை சந்தேகித்து மறுத்திருந்தனர். இப்பொழுது அவர்களுக்கு தெய்வீகத் தூதைக் கொண்டுவந்திருந்த ஒருவரை, பிள்ளைகள் அதே ஆவியால் புறக்கணித்தனர். இயேசு அவர்களை நோக்கி: “வானத்திலிருந்து வந்த அப்பத்தை மோசே உங்களுக்குக் கொடுக்கவில்லை; என் பிதாவோ வானத்திலிருந்து வந்த மெய்யான அப்பத்தை உங்களுக்குக் கொடுக்கிறார் என்று, மெய்யாகவே மெய்யாகவே உங்களுக்குச் சொல்லுகிறேன். வானத்திலிருந்திறங்கி, உலகத்துக்கு ஜீவனைக் கொடுக்கிற அப்பமே தேவன் அருளிய அப்பம்” (யோவான் 6:32,33) என்றார். (9)

உலகப்பிரகாரமான உணவைப்பற்றித்தான் இயேசு குறிப்பிடுகிறார் என்று இன்னமும் நினைத்துக்கொண்டு, அவரது பேச்சைக் கேட்டிருந்த சிலர்: “ஆண்டவரே, இந்த அப்பத்தை எப்பொழுதும் எங்களுக்குத் தரவேண்டும்” என்று கேட்டனர். அப்பொழுது இயேசு தெளிவாக: “ஜீவ அப்பம் நானே” என்றார். (10)

இயேசு ஜீவ அப்பம் என்று பயன்படுத்தின உருவகம் யூதர்களுக்குப் பழக்கப்பட்டதாக இருந்தது. மோசே ஆவியினால் ஏவப்பட்டு: "மனுஷன் அப்பத்தினால் மாத்திரம் அல்ல; கர்த்தருடைய வாயிலிருந்து புறப்படுகிற ஒவ்வொரு வார்த்தையினாலும் பிழைப்பான்" என்று கூறினான். எரேமியா: "உம்முடைய வார்த்தைகள் கிடைத்தவுடனே அவைகளை உட்கொண்டேன்; உம்முடைய வார்த்தைகள் எனக்குச் சந்தோஷமும், என் இருதயத்துக்கு மகிழ்ச்சியுமாயிருந்தது" (உபாகமம் 8:3; எரேமியா 15:16) என்றான். அப்பம் புசித்தல் என்பது அதன் ஆவிக்குரிய முக்கியத்துவத்தில் பிரமாணங்களைப்பற்றி அறிதலும், நற்செயல்களைச் செய்வதுமாக இருக்கிறது என்பது ரபிமார்களுக்கிடையில் கூறப்பட்டிருந்த ஒரு வழக்குச்சொல்லாக இருந்தது. மேசியாவின் வருகையில் இஸ்ரவேலனைத்தும் போஷிக்கப்படும் என்றும் பேசப்பட்டிருந்தது. அப்பங்களில் இருந்த அற்புதம் தீர்க்கதரிசிகளின் போதனைகளில் ஆழ்ந்த ஆவிக்குரிய பாடத்தைத் தெளிவுபடுத்தியிருந்தது. ஜெப ஆலயத்தில் கிறிஸ்துவின் பேச்சைக் கேட்டிருந்தவர்களுக்கு இந்தப் பாடத்தைத் திறப்பதற்கு இயேசு வகைதேடியிருந்தார். அவர்கள் வேதவாக்கியங்களைப் புரிந்திருந்தார்களானால், "ஜீவ அப்பம் நானே" என்ற அவர் கூறியபோது, அவருடைய வார்த்தைகளைப் புரிந்து கொண்டிருந்திருப்பார்கள். அதற்கு முந்தின நாளில்தான் திரளான பெருங்கூட்டத்தினர் பசியினால் களைத்து மயங்கியிருந்தபோது, அவர் கொடுத்த அப்பங்களினால் போஷிக்கப்பட்டிருந்தனர். அந்த அப்பங்களிலிருந்து அவர்கள் சரீரப்பிரகாரமான பலத்தையும் புத்துணர்வையும் அடைந்ததுபோல கிறிஸ்துவிடமிருந்து நித்திய ஜீவனுக்கான ஆவிக்குரிய பலத்தைப் பெற்றுக்கொள்ளலாம். "என்னிடத்தில் வருகிறவன் ஒருக்காலும் பசியடையான், என்னிடத்தில் விசுவாசமாயிருக்கிறவன் ஒருக்காலும் தாகமடையான்" என்றார். கூடவே, "நீங்கள் என்னைக் கண்டிருந்தும் விசுவாசியாமலிருக்கிறீர்கள்" என்று மேலும் கூறினார். (11)

பரிசுத்த ஆவியின் சாட்சியினாலும் அவர்களுடைய ஆத்துமாவிற்கு தேவனால் உண்டான வெளிப்படுத்துதலினாலும் அவர்கள் கிறிஸ்துவைக் கண்டிருந்தனர். அவருடைய வல்லமையைப்பற்றிய ஜீவனுள்ள சான்றுகள் அவர்கள்முன் நாள்தோறும் இருந்தன. அப்படியிருந்தும் அவர்கள் வேறொரு அடையாளத்தைக் கேட்டனர். அப்படிக் கொடுக்கப்பட்டிருந்தாலும், இதற்கு முன்னிருந்ததைப்போன்ற நம்பிக்கையின்மையிலேதான் அவர்கள் இருந்திருப்பார்கள். அவர்கள் கண்டவைகளிலும் கேட்டவைகளிலும் திருப்தியற்றவர்களாக இருக்கும்போது, மேலும் ஆச்சரியமான செயல்களை நடப்பிப்பது அவர்களுக்குப் பயனற்றதாகவே இருந்திருக்கும். நம்பிக்கையின்மை, சந்தேகத்திற்கான சாக்குப்போக்கை எப்போதும்

கொண்டிருக்கும். மிகச் சரியான சான்றினையும் மறுக்க எப்போதும் காரணமுள்ளதாக இருக்கும். (12)

"என்னிடத்தில் வருகிறவனை நான் புறம்பே தள்ளுவதில்லை" என்று அந்தப் பிடிவாதமான இருதயங்களிடம் இயேசு வேண்டுகோள் விடுத்தார். விசுவாசத்தினால் அவரை ஏற்றுக்கொள்ளும் அனைவரும் நித்திய ஜீவனைப் பெற்றாக வேண்டும். ஒருவர்கூட தொலைந்துபோகமாட்டார். எதிர்கால ஜீவனைப்பற்றி பரிசேயர்களும் சதுசேயர்களும் விவாதஞ்செய்யவேண்டிய அவசியமில்லை. இறந்துபோனவர்களுக்காக இனிமேல் நம்பிக்கையில்லாத வருத்தத்துடன் துக்கங்கொண்டாடவேண்டியதில்லை. "குமாரனைக் கண்டு, அவரிடத்தில் விசுவாசமாயிருக்கிறவன் எவனோ, அவன் நித்தியஜீவனை அடைவதும், நான் அவனைக் கடைசிநாளில் எழுப்புவதும், என்னை அனுப்பினவருடைய சித்தமாயிருக்கிறது" (யோவான் 6:40) என்றார். (13)

ஆனால் ஜனங்களின் தலைவர்கள் வருத்தமடைந்தனர். "இவன் யோசேப்பின் குமாரனாகிய இயேசு அல்லவா, இவனுடைய தகப்பனையும் தாயையும் அறிந்திருக்கிறோமே; அப்படியிருக்க, நான் வானத்திலிருந்திறங்கி வந்தேன் என்று இவன் எப்படிச் சொல்லுகிறான்" (யோவான் 6:42) என்று இயேசுவின் தாழ்மையான பிறப்பைக்குறித்துப் பரிகாசமாகக் குறிப்பிட்டு, தவறான எண்ணத்தைத் தூண்டிவிட முயன்றனர். அவர் ஒரு கலிலேயத் தொழிலாளி, அவரது குடும்பம் ஏழ்மையும் கீழானதுமான ஒன்று என்று அவரது வாழ்க்கையைப்பற்றிக் குறைவாகப் பேசிக்கொண்டனர். இந்தக் கல்வியறிவில்லாத தச்சன் கோரும் உரிமை அவர்களது கவனத்தைக் கவர்வதற்குத் தகுந்ததாக இல்லையென்று கூறிக்கொண்டனர். அவரது மறைவடக்கமான பிறப்பின் காரணத்தினால், அவரது பெற்றோரைக்குறித்த விவரம், சந்தேகத்திற்கிடமானது என்று மறைமுகமாகக் குறிப்பிட்டு, இழிவுபடுத்தி, இவ்வாறு அவரது பிறப்பைக்குறித்த மானிடச் சூழ்நிலைகள் அவரது வரலாற்றிலேயே ஒரு களங்கமாக இருக்கிறதென்றனர். (14)

இயேசுவின் பிறப்பிலிருந்த இரகசியத்தை அவர் விளக்க முயலவில்லை. அவர் கடலைக் கடந்துவந்ததைப்பற்றின கேள்விகளுக்கு அவர் எவ்விதமாகப் பதில் கூறாமலிருந்துவிட்டாரோ, அதைப்போலவே வானத்திலிருந்து இறங்கிவந்திருப்பவர் என்பதைப்பற்றின கேள்விகளுக்கும் பதில் கூறவில்லை. அவரது பிறப்பில் அடங்கியிருந்த அற்புதத்தைக் கவனிக்கும்படியும் அவர் ஒருவரையும் அழைக்கவில்லை. அவர் தாமாகவே தமக்கென்று எந்தப் புகழையும் தேடாமல், ஒரு அடிமையின் ரூபத்தை எடுத்துக்கொண்டார். ஆனால் அவரது வார்த்தைகளும் செயல்களும் அவரது குணத்தை வெளிப்படுத்தின. தெய்வீக ஒளிக்குத் திறக்கப்பட்டவர்களின்

இருதயங்கள் அனைத்தும் அவரை: “கிருபையினாலும் சத்தியத்தினாலும் நிறைந்த... பிதாவுக்கு ஒரேபேறானவராக” அடையாளங்கண்டுகொள்ளும். (15)

பரிசேயர்களின் கேள்விகள் சுட்டிக்காட்டுவதைவிட அவர்களது தவறான எண்ணங்கள் அதிக ஆழமுள்ளவையாக உள்ளன. அது அவர்களது இருதயங்களில் திரிபுமிக்க தன்மைகளின் வேரையுடையதாக இருந்தது. இயேசுவின் ஒவ்வொரு வார்த்தையும் செயலும் அவர்களுக்குள் எதிர்ப்பை எழுப்பியிருந்தது. ஏனெனில் அவர்கள் பேணியிருந்த ஆவி அவரில் பதிலைக் காணமுடியாததாக இருந்தது. (16)

“என்னை அனுப்பின பிதா ஒருவனை இழுத்துக்கொள்ளாவிட்டால் அவன் என்னிடத்தில் வரமாட்டான்; கடைசிநாளில் நான் அவனை எழுப்புவேன். எல்லாரும் தேவனாலே போதிக்கப்பட்டிருப்பார்கள் என்று தீர்க்கதரிசிகளின் ஆகமத்தில் எழுதியிருக்கிறதே; ஆகையால் பிதாவினிடத்தில் கேட்டுக் கற்றுக்கொள்ளுகிறவன் எவனும் என்னிடத்தில் வருகிறான்” (யோவான் 6:44,45) என்றார். பிதாவினுடைய அன்பினால் இழுக்கப்படுதலுக்கு பதிலளிப்பவர்களைத்தவிர, வேறு எவரும் ஒருபோதும் கிறிஸ்துவிடம் வரமாட்டார்கள். ஆனால் தேவன் அனைவருடைய இருதயங்களையும் தம்மிடம் இழுத்துக்கொண்டிருக்கிறார். அவரது கவர்ந்திழுத்தலை மறுப்பவர்கள் மட்டுமே கிறிஸ்துவிடம் வர மறுப்பார்கள். (17)

“எல்லாரும் தேவனாலே போதிக்கப்பட்டிருப்பார்கள்” என்னும் வார்த்தைகளில் இயேசு ஏசாயாவின் தீர்க்கதரிசனத்தைக் குறிப்பிட்டிருந்தார். “உன் பிள்ளைகளெல்லாரும் கர்த்தரால் போதிக்கப்பட்டிருப்பார்கள்; உன் பிள்ளைகளுடைய சமாதானம் பெரிதாயிருக்கும்” ஏசாயா 54:13. இந்த வேதவாக்கியத்தை யூதர்கள் தங்களுக்குப் பொருத்தியிருந்தனர். தேவன் அவர்களுடைய போதகராக இருந்தார் என்பது அவர்களுடைய பெருமைபாராட்டலாக இருந்தது. ஆனால் இந்த உரிமைபாராட்டுதல் எவ்வாறு வீணானதாக இருந்தது என்பதை இயேசு அவர்களுக்கு எடுத்துக்காட்டினார். “பிதாவினிடத்தில் கேட்டுக் கற்றுக்கொள்ளுகிறவன் எவனும் என்னிடத்தில் வருகிறான்.” கிறிஸ்துவின்மூலமாக மட்டுந்தான் அவர்களால் பிதாவைப்பற்றிய அறிவை அடைந்துகொள்ளமுடியும். அவரது தரிசனத்தின் மகிமையை மானுடத்தால் தாங்கிக்கொள்ள இயலாது. தேவனைப்பற்றி அறிந்திருந்தவர்கள் அவருடைய குமாரனின் குரலுக்கு செவிமடுத்துக்கொண்டிருந்தனர். நாசரேத்தினின்று வந்த இயேசுவில் இயற்கையின்மூலமாகவும் வெளிப்படுத்தலின்மூலமாகவும் பிதாவை அறிவித்தவரை அடையாளங்கண்டுகொள்ளக்கூடும். (18)

"என்னிடத்தில் விசுவாசமாயிருக்கிறவனுக்கு நித்திய ஜீவன் உண்டென்று மெய்யாகவே மெய்யாகவே உங்களுக்குச் சொல்லுகிறேன்"– யோவான் 6:47. இந்த வார்த்தைகளை அன்பான சீடனாயிருந்த யோவானின்மூலமாகக் கவனித்திருந்தவர்களுக்கு பரிசுத்த ஆவியானவர் "தேவன் நமக்கு நித்தியஜீவனைத் தந்திருக்கிறார், அந்த ஜீவன் அவருடைய குமாரனில் இருக்கிறதென்பதே அந்தச் சாட்சியாம். குமாரனை உடையவன் ஜீவனை உடையவன், தேவனுடைய குமாரன் இல்லாதவன் ஜீவன் இல்லாதவன்" (1 யோவான் 5:11,12) என்று அறிவித்தார். அவனை கடைசி நாளில் நான் எழுப்புவேன் என்று இயேசு கூறினார். நாம் கிறிஸ்துவுடன் கூட ஒரே ஆவியுள்ளவர்களாக இருக்கவேண்டும் என்பதற்காக அவர் நம்முடனே ஒரே மாம்சமானார். இந்த இணைப்பின் புண்ணியத்தினால் நாம் கல்லறைகளிலிருந்து வெளியே வரவேண்டியவர்களாக இருக்கிறோம்— கிறிஸ்துவின் வல்லமையை வெளிக்காட்டும்படி அது நடக்கிறதில்லை; மாறாக, விசுவாசத்தின்மூலமாக அவரது ஜீவன் நம்முடையதாகியிருக்கிறது. கிறிஸ்துவை அவரது மெய்யான குணத்தில் கண்டு, அவரைத் தங்களுடைய இருதயத்தில் பெற்றுக்கொள்பவர்கள் நித்தியஜீவனைப் பெற்றிருக்கிறார்கள். ஆவியின்மூலமாகக் கிறிஸ்து நமக்குள் வாசஞ்செய்கிறார். விசுவாசத்தினால் இருதயத்தில் பெற்றுக்கொள்ளப்பட்ட தேவனுடைய ஆவி நித்தியஜீவனின் ஆரம்பமாக இருக்கிறது. (19)

மக்கள் தங்களுடைய பிதாக்கள் வனாந்தரத்தில் புசித்திருந்த மன்னாவைக்குறித்து: அந்த உணவைக் கொடுத்தது இயேசு செய்த அற்புதத்தைவிடப் பெரிதாக இருப்பதுபோலக் கிறிஸ்துவிடம் குறிப்பிட்டனர். ஆனால் அவர் கொடுப்பதற்காக வந்துள்ள ஆசீர்வாதங்களுடன் ஒப்பிடும்போது அது எவ்வளவு சாதாரணமானது என்பதை அவர்களுக்கு காட்டுகிறார். அந்த மன்னா இந்த பூமிக்குரிய ஜீவனைமட்டுமே தாங்கக்கூடியதாக இருந்தது. மரணத்தை அது தடுக்கவில்லை. அல்லது அழியாமையை அது காப்பீடு செய்யவில்லை. ஆனால் வானத்திலிருந்து வந்த அப்பம் ஆத்துமாவை நித்தியஜீவனுக்கென்று வளப்படுத்தும். "ஜீவ அப்பம் நானே. உங்கள் பிதாக்கள் வனாந்தரத்திலே மன்னாவைப் புசித்திருந்தும் மரித்தார்கள். இதிலே புசிக்கிறவன் மரியாமலிருக்கும்படி வானத்திலிருந்திறங்கின அப்பம் இதுவே. நானே வானத்திலிருந்திறங்கின ஜீவ அப்பம்; இந்த அப்பத்தைப் புசிக்கிறவன் என்றென்றைக்கும் பிழைப்பான்" என்று இரட்சகர் கூறினார். இந்த உருவகத்துடன் கிறிஸ்து வேறொன்றையும் சேர்க்கிறார். மரிப்பதினால் மட்டுமே அவரால் மனிதர்களுக்கு நித்திய ஜீவனைக் கொடுக்கமுடியும். இரட்சிப்பதற்கான கருவியாக அவரது மரணம் இருக்கிறது என்பதை "நான்

கொடுக்கும் அப்பம் உலகத்தின் ஜீவனுக்காக நான் கொடுக்கும் என் மாம்சமே” என்ற வார்த்தைகளினால் சுட்டிக்காட்டுகிறார். (20)

யூதர்கள் எருசலேமில் பஸ்கா பண்டிகையை ஆசரிக்கவிருந்தனர். சங்காரத்தூதன் எகிப்தியர்களின் தலைச்சன்களைக் கொன்று இஸ்ரவேலருக்கு விடுதலை வழங்கிய இரவின் நினைவுகூருதலாக அது இருந்தது. தேவ ஆட்டுக்குட்டியைப் பஸ்கா ஆட்டுக்குட்டியில் அவர்கள் காணவேண்டுமென்றும், அந்த அடையாளத்தின்மூலமாக, உலகத்திற்காகத் தமது ஜீவனைக் கொடுத்த அவரை அவர்கள் பெற்றுக்கொள்ளவேண்டுமென்றும் தேவன் வாஞ்சித்திருந்தார். ஆனால் யூதர்கள் அந்த அடையாளத்தின் முக்கியத்துவத்தை கவனிக்காமல் விட்டுவிட்டு, அந்த அடையாளத்தை மிக முக்கியமானதாகப் பற்றிக்கொண்டனர். அவர்கள் கர்த்தரின் சரீரத்தை தெளிவாக அறிந்துகொள்ளவில்லை. பஸ்கா பண்டிகை ஆராதனையின் அடையாளமாகக் காட்டப்பட்டிருந்த அதே சத்தியம் கிறிஸ்துவின் வார்த்தைகளால் போதிக்கப்பட்டிருந்தது; ஆனால் அது இன்னும் சரியாக அறிந்துகொள்ளப்படாமலிருந்தது. (21)

“இவன் தன்னுடைய மாம்சத்தை எப்படி நமக்குப் புசிக்கக் கொடுப்பான்” என்று இப்பொழுது ரபிமார்கள் கோபத்துடன் வாக்குவாதஞ்செய்தனர். “ஒரு மனுஷன் முதிர்வயதாயிருக்கையில் எப்படிப் பிறப்பான்?” (யோவான் 3:4) என்று நிக்கொதேமு கூறினதைப்போல அவர்கள் அவருடைய வார்த்தைகளுக்கு அதேவிதமாக எழுத்தின்படியான அர்த்தத்தை எடுத்துக்கொண்டனர். இயேசுவின் வார்த்தைகளை அவர்கள் ஓரளவிற்கு அறிந்துகொண்டனர். ஆனால் அதை ஏற்றுக்கொள்ள விருப்பமற்றவர்களாக இருந்தனர். அவரது வார்த்தைகளை அவர்கள் தவறாக அர்த்தங்கொண்டு, அவருக்கெதிரான தவறான எண்ணத்தை மற்றவர்களிடம் எழுப்பிவிடலாமென்று நம்பினர். (22)

கிறிஸ்து உருவகமாக எடுத்துக்காட்டியிருந்ததை விளக்கவில்லை. அவர் அந்த சத்தியத்தை மிகுந்த ஆற்றல்வாய்ந்த மொழிநடையிலே: “நீங்கள் மனுஷகுமாரனுடைய மாம்சத்தைப் புசியாமலும், அவருடைய இரத்தத்தைப் பானம்பண்ணாமலும் இருந்தால் உங்களுக்குள்ளே ஜீவனில்லை என்று மெய்யாகவே மெய்யாகவே உங்களுக்குச் சொல்லுகிறேன். என் மாம்சத்தைப் புசித்து, என் இரத்தத்தைப் பானம்பண்ணுகிறவனுக்கு நித்தியஜீவன் உண்டு; நான் அவனைக் கடைசிநாளில் எழுப்புவேன். என் மாம்சம் மெய்யான போஜனமாயிருக்கிறது, என் இரத்தம் மெய்யான பானமாயிருக்கிறது. என் மாம்சத்தைப் புசித்து, என் இரத்தத்தைப் பானம்பண்ணுகிறவன் என்னிலே நிலைத்திருக்கிறான், நானும் அவனிலே நிலைத்திருக்கிறேன்” (யோவான் 6:53–56) என்று கூறினார். (23)

கிறிஸ்துவின் மாம்சத்தைப் புசித்து அவரது இரத்தத்தைப் பானம்பண்ணுதல் என்பது அவர் நமது பாவங்களை மன்னிக்கிறார், நாம் அவரில் பூரணமானவர்களாக இருக்கிறோம் என்று நம்பி, அவரை நமது சொந்த இரட்சகராகப் பெற்றுக்கொள்வதாகும். அவரது அன்பைப் பார்த்து, அதை தியானஞ்செய்து, அதில் பானம்பண்ணுவதின் வழியாக அவரது இயல்பில் நாம் பங்குபெறுகிறோம். சரீரத்திற்கு உணவு எப்படிப்பட்டதாக இருக்கிறதோ, அதைப்போலவே கிறிஸ்து ஆத்துமாவிற்கானவராக வேண்டும். நாம் உணவை உண்டு, அது நம்மில் ஒரு பகுதியாகாதவரை உணவு நமக்குப் பயன்தராது. அப்படியே கிறிஸ்துவும் நமது சொந்த இரட்சகர் என்பதை நாம் அறியாவிட்டால், அவரால் நமக்கு எவ்விதமான பயனுமில்லை. தத்துவவிளக்க அறிவினாலான ஒரு அறிவினால் நமக்கு எவ்விதமான பயனுமில்லை. அவரது ஜீவன் நமது ஜீவனாகும்படி நாம் அவரைப் புசித்து, (அறிந்து) இருதயத்தில் பெற்றுக்கொள்ளவேண்டும். அவரது அன்பும் அவரது கிருபையும் தன்வயமாக்கப்படவேண்டும். (24)

ஆனால் விசுவாசி கிறிஸ்துவுடன் கொண்டிருக்கும் உறவின் சிலாக்கியத்தை இந்த உருவகங்களும்கூட காட்டத் தவறிவிடுகின்றன. “ஜீவனுள்ள பிதா என்னை அனுப்பினதுபோலவும், நான் பிதாவினால் பிழைத் திருக்கிறதுபோலவும், என்னைப் புசிக்கிறவனும் என்னாலே பிழைப்பான்.” பிதாவின்மேலுள்ள விசுவாசத்தினால் தேவகுமாரன் பிழைத்திருக்கிறதுபோல, நாமும் கிறிஸ்துவின்மீதுள்ள விசுவாசத்தினால் பிழைக்கவேண்டியவர்களாக இருக்கிறோம். பிதா ஒருவர் மட்டுமே தமது வாழ்க்கையில் காணப்படும்படி இயேசு தமது சித்தத்தைப் பூரணமாக பிதாவின் சித்தத்திற்கு ஒப்படைத்திருந்தார். நம்மைப்போல அவர் எல்லாவகையிலும் சோதிக்கப்பட்டிருந்தபோதிலும் உலகத்திற்குமுன் தம்மைச் சூழ்ந்திருந்த தீமையினால் கறைபடாதவராக இருந்தார். இவ்விதமாக கிறிஸ்து மேற்கொண்டதுபோல நாமும் மேற்கொள்ளவேண்டியவர்களாக இருக்கிறோம். (25)

நீங்கள் கிறிஸ்துவின் ஒரு பின்னடியாரா? அப்படியானால் ஆவிக்குரிய வாழ்க்கையைப்பற்றி எழுதப்பட்டுள்ள அனைத்தும் உங்களுக்காகவே எழுதப்பட்டிருக்கிறது. இயேசுவுடன் நீங்கள் இணைந்துகொள்வதின்மூலம் அவைகளையெல்லாம் அடைந்துகொள்ளலாம். உங்களுடைய ஆர்வம் பலவீனமடைந்துவிட்டதா? உங்களுடைய ஆரம்பகால அன்பு குளிர்ந்து விட்டதா? ஏற்றுக்கொள்ளும்படி உங்கள்முன் வைக்கப்பட்ட இயேசுவின் அன்பை மீண்டும் ஏற்றுக்கொள்ளுங்கள். அவருடைய மாம்சத்தைப் புசித்து, அவருடைய இரத்தத்தைப் பானம்பண்ணுங்கள். அப்போது நீங்கள் பிதாவுடனும் குமாரனுடனும் ஒன்றாகிவிடுவீர்கள். (26)

நம்பிக்கையில்லாத யூதர்கள் இரட்சகரின் வார்த்தையிலிருந்த எழுத்தின்படியான அர்த்தத்தைத்தவிர வேறெதையும் பார்க்க மறுத்துவிட்டனர். இரத்தத்தை ருசிப்பதிலிருந்து சடங்காச்சாரப்பிரமாணங்களினால் அவர்கள் விலக்கப்பட்டிருந்தனர். எனவே, இப்பொழுது கிறிஸ்துவின் மொழியை அவர்கள் பரிசுத்தக்குலைச்சலான பேச்சு என்று பொருள்கொண்டு, அதைப்பற்றி அவர்களுக்குள் வாக்குவாதஞ்செய்தனர். "இது கடினமான உபதேசம், யார் இதைக் கேட்பார்கள்" என்று அநேகரும், சீடர்களுங்கூடக் கூறினர். (27)

"இது உங்களுக்கு இடறலாயிருக்கிறதோ? மனுஷகுமாரன் தாம் முன்னிருந்த இடத்திற்கு ஏறிப்போகிறதை நீங்கள் காண்பீர்களானால் எப்படியிருக்கும்? ஆவியே உயிர்ப்பிக்கிறது, மாம்சமானது ஒன்றுக்கும் உதவாது; நான் உங்களுக்குச் சொல்லுகிற வசனங்கள் ஆவியாயும் ஜீவனாயும் இருக்கிறது" என்று இரட்சகர் அவர்களுக்குப் பதில் கொடுத்தார். (28)

இந்த உலகத்திற்கு ஜீவனைக் கொடுக்கும் கிறிஸ்துவின் ஜீவன் அவரது வார்த்தையில் இருக்கிறது. இயேசு அவரது வார்த்தையினால்தான் நோய்களைக் குணப்படுத்தி, பிசாசுகளைத் துரத்தியிருந்தார். அவரது வார்த்தையினால் அவர் கடலை அமைதிப்படுத்தி, மரித்தவர்களை எழுப்பியிருந்தார். அவரது வார்த்தைகள் வல்லமையுடையவையாக இருந்தன என்று மக்கள் சாட்சி கொடுத்திருந்தனர். பழைய ஏற்பாட்டுக் காலத்திலிருந்த சகல தீர்க்கதரிசிகளின்மூலமாகவும் போதகர்களின் மூலமாகவும் பேசியிருந்ததுபோல அவர் தேவனுடைய வார்த்தையைப் பேசினார். வேதாகமம் முழுவதும் கிறிஸ்துவைப்பற்றிய ஒரு வெளிப்படுத்தலாக உள்ளது. இரட்சகர் அவரது அடியார்கள் தங்களுடைய விசுவாசத்தை வார்த்தையின்மீது பதிக்கவேண்டும் என்று வாஞ்சித்தார். சரீரப்பிரகாரமாகக் காணக்கூடிய அவரது பிரசன்னம் அவர்களைவிட்டு எடுத்துக்கொள்ளப்படும்போது, அந்த வார்த்தை அவர்களது வல்லமையின் ஊற்றாக இருக்கவேண்டும். அவர்களது ஆண்டவரைப்போலவே அவர்களும் "தேவனுடைய வாயிலிருந்து புறப்படுகிற ஒவ்வொரு வார்த்தையினாலும்" (மத்தேயு 4:4) பிழைக்கவேண்டும். (29)

நமது மாம்சப்பிரகாரமான சரீரம் உணவினால் தாங்கப்படுவதுபோல நமது ஆவிக்குரிய வாழ்க்கை தேவனுடைய வார்த்தையினால் தாங்கப்படுகிறது. ஒவ்வொரு ஆத்துமாவும் தனக்கென்று தேவனுடைய வார்த்தையிலிருந்து ஜீவனைப் பெற்றுக்கொள்ளவேண்டியதாக உள்ளது. உடல் ஊட்டச்சத்தைப் பெற்றுக்கொள்ள நாம் நமக்கென்று உணவருந்துவதைப்

போல நாம் நமக்கென்று அந்த வார்த்தையைப் பெற்றுக்கொள்ள வேண்டும். நாம் சாதாரணமான வகையில் வேறொரு மனதின்மூலமாக அதை அடைந்துகொள்ளக்கூடாது. அவருடைய வார்த்தையைப் புரிந்து கொள்வதற்கு பரிசுத்த ஆவியானவரின் உதவியைத் தரும்படி தேவனிடம் கேட்டு, மிகவும் கவனமாக வேதாகமத்தை வாசிக்கவேண்டும். நாம் ஒரு வசனத்தை எடுத்துக்கொண்டு, அந்த வசனத்தில் நமக்காக தேவன் வைத்திருக்கும் எண்ணத்தை உறுதியாக அறிந்துகொள்ள நமது மனதை ஒருமுகப்படுத்தவேண்டும். அது நமது சொந்தமாகும்வரை, அந்தச் சிந்தனையில் நாம் ஈடுபடவேண்டும். அப்போது கர்த்தர் என்ன சொல்கிறார் என்பதை நாம் அறிந்துகொள்வோம். (30)

அவருடைய வாக்குத்தத்தங்களிலும் எச்சரிப்புகளிலும் இயேசு என்னையே குறிப்பிடுகிறார்; தேவன் தம்முடைய ஒரே பேறான குமாரனை விசுவாசிக்கிற நான் கெட்டுப்போகாமல் நித்திய ஜீவனை அடையும்படிக்கு அவரைத் தந்தருளி இவ்வளவாய் என்னில் அன்புகூர்ந்தார். தேவனுடைய வார்த்தையில் சம்பந்தப்பட்டுள்ள அனுபவங்கள் என்னுடைய அனுபவங்களாக இருக்கவேண்டியதிருக்கிறது. ஜெபம், வாக்குத்தத்தம், கற்பனை, எச்சரிப்பு ஆகியவை எனக்காக இருப்பவை. “கிறிஸ்துவுடனேகூடச் சிலுவையிலறையப்பட்டேன்; ஆயினும், பிழைத்திருக்கிறேன்; இனி நான் அல்ல, கிறிஸ்துவே எனக்குள் பிழைத்திருக்கிறார்; நான் இப்பொழுது மாம்சத்தில் பிழைத்திருக்கிறதோ, என்னில் அன்புகூர்ந்து எனக்காகத் தம்மைத்தாமே ஒப்புக்கொடுத்த தேவனுடைய குமாரனைப்பற்றும் விசவாசத்தினாலே பிழைத்திருக்கிறேன்”–கலாத்தியர் 2:20. விசுவாசம் இவ்விதமாகப் பெற்றுக்கொள்ளப்பட்டு, சத்தியத்தின் கொள்கைகள் தன்மய மாக்கப்படும்போது, அவை மனிதனின் ஒரு பகுதியாகவும் வாழ்க்கையை நடத்தும் இலட்சியத்தின் வல்லமையாகவும் மாறுகிறது. ஆத்துமாவில் பெற்றுக்கொள்ளப்பட்ட தேவனுடைய வார்த்தை எண்ணங்களை வனைந்து, குணத்தின் முன்னேற்றத்தில் பிரவேசிக்கிறது. (31)

விசுவாசக் கண்ணினால் இயேசுவைத் தொடர்ச்சியாகப் பார்ப்பதினால் நாம் பலப்படுத்தப்படுவோம். பசியுடனும் தாகத்துடனுமிருக்கும் தேவனுடைய மக்களுக்கு அவர் விலைமதிப்புமிக்க வெளிப்படுத்தல்களைக் கொடுப்பார். இயேசுவை அவர்கள் சொந்த இரட்சகராகக் காண்பார்கள்.அவருடைய வார்த்தையை அவர்கள் புசிக்கும்போது, அது ஜீவனாயும் ஆவியாயும் இருப்பதைக் காண்பார்கள். அந்த வார்த்தை பூமிக்குரிய இயல்பான தன்மையை அழித்து, கிறிஸ்துவில் ஒரு புதிய ஜீவனைத் தருகிறது. பரிசுத்த ஆவியானவர் தேற்றரவாளனாக ஆத்துமாவிற்குள் வருகிறார்.

மாற்றமடையச் செய்யும் அவரது கிருபை என்னும் கருவியினால் சீடனுக்குள் தேவனுடைய சாயல் திரும்பவும் உண்டாக்கப்படுகிறது. அவன் ஒரு புதிய சிருஷ்டியாகிறான். வெறுப்பின் இடத்தை அன்பு பற்றிக்கொள்ளுகிறது. இருதயம் தெய்வீக சாயலை அடைந்துகொள்கிறது. தேவனுடைய வாயிலிருந்து புறப்படும் ஒவ்வொரு வார்த்தையினாலும் பிழைப்பதன் பொருள் இதுதான். வானத்திலிருந்து இறங்கிவரும் அப்பத்தைப் புசிப்பது இதுதான். (32)

கிறிஸ்து அவருக்கும் அவரது அடியார்களுக்குமிடையில் உள்ள உறவைப்பற்றிப் பரிசுத்தமான நித்திய சத்தியத்தைப் பேசியிருந்தார். தங்களை அவருடைய சீடர்கள் என்று உரிமைபாராட்டியிருந்த சீடர்களின் குணத்தை அவர் அறிந்திருந்தார். அவரது வார்த்தைகள் அவர்களுடைய விசுவாசத்தைப் பரீட்சித்தன. அவர்கள் அவருடைய போதனைகளைப் பெற்றுக்கொண்டு, அதன்படி செயலாற்றவேண்டியவர்களாக உள்ளனர் என்று அவர் அறிவித்திருந்தார். அவரைப் பெற்றுக்கொள்ளும் அனைவரும் அவரது தன்மையில் பங்குகொண்டு, அவரது குணத்திற்கு இசைவானவர்களாக வேண்டும். அது அவன் பேணியிருந்த மேலான ஆசைகளை விட்டுவிடுவதில் சம்பந்தப்பட்டிருந்தது. அது அவர்கள் இயேசுவிடம் முற்றிலுமாகச் சரணடையவேண்டுமென்று கோரியது. மேலும் தற்தியாகஞ்செய்பவர்களாகவும், இருதயத்தில் தாழ்மையும் எளிமையுமிக்கவர்களாகவும் மாறும்படி அழைக்கப்பட்டிருந்தனர். நித்தியஜீவன், பரலோகத்தின் மகிமை ஆகிய ஈவுகளில் பங்குபெற விரும்பினால், கல்வாரியின் மனிதர் நடந்துசென்றிருந்த இடுக்கமான பாதையில் அவர்களும் நடக்கவேண்டும். (33)

அந்தப் பரீட்சை மிகவும் பெரியதாக இருந்தது. பலாத்காரமாக அவரைக் கொண்டுச்சென்று அரசராக்கவேண்டும் என்றிருந்தவர்களின் உற்சாகம் குளிர்ந்துபோனது. ஜெப ஆலயத்தில் நிகழ்த்தப்பட்ட இந்தச் சொற்பொழிவு அவர்களது கண்களைத் திறந்ததாக அவர்கள் அறிவித்தனர். இப்பொழுது அவர்கள் வஞ்சிக்கப்படாதவர்களாக இருந்தனர். அவரது நேரடியான அறிக்கையிலுள்ள வார்த்தைகள் அவர் மேசியா அல்ல என்பதை அவர்களது உள்ளங்களில் உண்டுபண்ணிவிட்டது. பூமிக்குரிய எவ்விதமான பரிசும் அவருடனுள்ள பிணைப்பினால் கிடைக்கப்போவதில்லை என்பதையும் அவர்கள் அறிந்துகொண்டனர். அற்புதங்களைச் செய்யும் அவரது வல்லமையை அவர்கள் வரவேற்றிருந்தனர். நோயிலிருந்தும் துன்பங்களிலிருந்தும் விடுதலைபெற அவர்கள் அக்கரையுள்ளவர்களாக இருந்தனர். ஆனால் சுயத்தைத் தியாகஞ்செய்யும் அவரது வாழ்க்கையில் அனுதாபங்காட்டுவதற்கு அவர்கள் வரமாட்டார்கள். அவர் கூறிய தேவ

இரகசியமாக ஆவிக்குரிய இராஜ்யத்தைப்பற்றி அவர்கள் ஆர்வம் கொள்ளவில்லை. அவரைத் தேடியிருந்த உண்மையற்றவர்களும் சுயநலமிக்கவர்களும் அதற்குமேல் அவரை விரும்பவில்லை. அவரது வல்லமையையும் செல்வாக்கையும் ரோமர்களிடமிருந்து விடுதலைபெற அவர் செலவிடாவிட்டால், அவருடன் ஈடுபடுவதற்கு அவர்களுக்கு ஒன்றுமில்லாமலிருக்கும். (34)

“ஆகிலும் உங்களில் விசுவாசியாதவர்கள் சிலர் உண்டு” என்று இயேசு அவர்களிடம் தெளிவாகக் கூறினார். அவர்கள் அவரிடமாக இழுத்துக்கொள்ளப்படாவிட்டால், அவர்களுடைய இருதயங்கள் பரிசுத்த ஆவிக்கு திறக்கப்படாததே காரணம் என்பதை அவர்கள் புரிந்துகொள்ளவேண்டும் என்று அவர் விரும்பினார். “ஜென்மசுபாவமான மனுஷனோ தேவனுடைய ஆவிக்குரியவைகளை ஏற்றுக்கொள்ளான்; அவைகள் அவனுக்குப் பைத்தியமாகத் தோன்றும்; அவைகள் ஆவிக்கேற்றபிரகாரமாய் ஆராய்ந்து நிதானிக்கப்படுகிறவைகளானதால், அவைகளை அறியவுமாட்டான்”–1 கொரிந்தியர் 2:14. விசுவாசத்தினால் ஆத்துமா இயேசுவின் மகிமையைக் காண்கிறது. பரிசுத்த ஆவியின்மூலமாக ஆத்துமாவில் விசுவாசம் எழுப்பப்படும்வரை இந்த மகிமை மறைக்கப்பட்டிருக்கிறது. (35)

அவர்களுடைய நம்பிக்கையின்மையைப்பற்றிய வெளியரங்கமான கடிந்துகொள்ளுதலின் காரணமாக, சீடர்கள் இயேசுவிடமிருந்து மேலும் அதிகமாக விலகிச்சென்றனர். அவர்கள் அதிகமாக அதிருப்தியடைந்து இரட்சகரைப் புண்படுத்த விரும்பி, பரிசேயர்களின் தீய நோக்கத்தை திருப்திப்படுத்தி, அவருக்கு முதுகைக் காட்டி அவமதித்து, அவரைவிட்டு விலகிச்சென்றனர். தங்களுடைய தெரிந்துகொள்ளுதலைத் தாங்களாகவே செய்திருந்தனர். ஆவிக்குரிய தன்மையற்ற உருவை அவர்கள் எடுத்துக்கொண்டிருந்தனர். உள்ளிருக்கும் பருப்பை விட்டுவிட்டு உமியை எடுத்துக்கொண்டனர். அதற்குப்பின் அவர்கள் இயேசுவுடன் நடக்காததினால் அவர்களுடைய தீர்மானம் பின்பு ஒருபோதும் மாற்றப்படவில்லை. (36)

“தூற்றுக்கூடை அவர் கையில் இருக்கிறது; அவர் தமது களத்தை நன்றாய் விளக்கி, தமது கோதுமையைக் களஞ்சியத்தில் சேர்ப்பார்; பதரையோ அவியாத அக்கினியினால் சுட்டெரிப்பார்”–மத்தேயு 3:12. இது களத்தை விளக்குகின்ற நேரங்களில் ஒன்றாக இருந்தது. சத்திய வசனங்களினால் கோதுமையிலிருந்து உமி வேறுபடுத்தப்பட்டுக்கொண்டிருந்தது. ஏனெனில் அவர்கள் தாழ்மையான ஒரு வாழ்க்கையை ஏற்றுக்கொள்ளவும் கடிந்துகொள்ளுதலைப் பெற்றுக்கொள்ளவும் விருப்பமற்றவர்களாக இருந்தனர். அவர்கள் மிதமிஞ்சிய வீணர்களாகவும், சுயநீதி உடையவர்

களாகவுமிருந்து உலகத்தை அதிகமாக நேசித்தனர். அதனால் அநேகர் இயேசுவைவிட்டு விலகித் தூரமாகச் சென்றனர். தொடர்ந்து அநேகர் அதையே செய்துகொண்டுள்ளனர். கப்பர்நகூம் ஜெப ஆலயத்திலிருந்த சீடர்கள் சோதிக்கப்பட்டிருந்ததுபோல இன்றும் ஆத்துமாக்கள் சோதிக்கப்படுகின்றனர். சத்தியம் அவர்களது இருதயத்திற்குக் கொண்டுவரப்படும்போது, அவர்களுடைய வாழ்க்கை தேவனுடைய சித்தத்திற்கு இசைவானதாக இல்லாமலிருப்பதை அவர்கள் காணுகின்றனர். தங்களுக்குள் ஒரு முழுமையான மாற்றம் உண்டாகவேண்டியதின் அவசியத்தை அவர்கள் காணுகின்றனர். ஆனால் சுயத்தை மறுக்கும் பணிகளை ஏற்றுக்கொள்ள அவர்கள் விருப்பமற்றவர்களாக உள்ளனர். எனவே அவர்களுடைய பாவங்கள் கண்டுபிடிக்கப்படும்போது, அவர்கள் கோபமடைகின்றனர். சீடர்கள் முணுமுணுத்துக்கொண்டு இயேசுவைவிட்டு விலகிச்சென்றதுபோல, அவர்களும் “இது கடினமாக உபதேசம்”என்று கூறி, அவரைவிட்டு விலகிச்செல்கின்றனர். (37)

போற்றுதலும் முகஸ்துதிசெய்தலும் அவர்களது செவிகளுக்கு இன்பமாக இருக்கும். ஆனால் சத்தியம் வரவேற்கப்படமுடியாத ஒன்றாக இருக்கிறது; அதை அவர்களால் கேட்கமுடியாது. திரளானவர்கள் பின்செல்லும்போது, கூட்டமானவர்கள் போஷிக்கப்படும்போது, வெற்றி முழக்கங்கள் கேட்கப்படும்போது, அவர்களுடைய குரல்கள் துதி செலுத்துவதில் உரத்ததாக உள்ளது. ஆனால் ஆராயும் தேவனுடைய ஆவி அவர்களுடைய பாவங்களை வெளிப்படுத்தி அதை விட்டுவிடும்படி அழைக்கும்போது, அவர்கள் சத்தியத்திற்கு தங்கள் முதுகைத் திருப்பி, அதற்குமேல் இயேசுவுடன் நடப்பதில்லை. (38)

பிரியமில்லாத அந்த சீடர்கள் கிறிஸ்துவைவிட்டுப் பிரிந்து சென்றபோது, மாறுபட்ட ஒரு ஆவி அவர்களைத் தன் கட்டுப்பாட்டிற்குள் கொண்டுவந்தது. ஒரு சமயத்தில் மிகவும் விரும்பியிருந்த அவரிடம் இப்பொழுது கவர்ச்சிமிக்க எதையும் அவர்களால் காணமுடியவில்லை. அவரது விரோதியுடன் அவர்களது ஆவியும் செயலும் இசைந்திருந்ததினால், அவரது விரோதிகளைத் தேடிச்சென்றனர். அவரது வார்த்தைகளை தவறாக எடுத்துக்காட்டினர். அவரது அறிவிப்புக்களைத் தவறாகத் திரித்துக்கூறினர். அவரது நோக்கங்களை இழிவுபடுத்திக்காட்டினர். அவருக்கு எதிராக இருக்கக்கூடிய ஒவ்வொன்றையும் ஒன்றுசேர்ப்பதின்மூலமாக அவர்கள் தங்களுடைய பாதையை வகுத்துக்கொண்டனர். இப்படிப்பட்ட தவறான செய்திகளின்மூலமாகக் கோபம் தூண்டிவிடப்பட்டதினால் அவரது உயிர் ஆபத்திலிருந்தது. (39)

நசரேயனாகிய இயேசு மேசியா அல்ல என்பதை அவர்தாமே அறிவித்துவிட்டார் என்னும் செய்தி வேகமாகப் பரவியது. இப்படியாக ஒருவருடத்திற்குமுன் யூதேயாவிலிருந்தவர்களின் பிரசித்தமான உணர்வுகள் அவருக்கு எதிராக எவ்விதமாக இருந்ததோ, அதைப்போலவே கலிலேயாவிலும் மக்களின் பிரசித்தமான உணர்வுகள் அவருக்கு எதிராகத் திருப்பிவிடப்பட்டது. இஸ்ரவேலுக்கு ஐயோ! உலகப்பிரகாரமான வல்லமையைக் கொடுக்கக்கூடிய ஒரு வெற்றிவீரருக்காக அவர்கள் ஏங்கியிருந்ததினால் இரட்சகரைப் புறக்கணித்துவிட்டனர். நித்திய ஜீவன் வரைக்கும் நிலைத்துநிற்கக்கூடிய போஜனத்தை விரும்பாமல் அவர்கள் அழியக்கூடிய ஒரு போஜனத்தை விரும்பினர். (40)

இயேசுவிற்கு சீடர்களாக இருந்தவர்கள் மனிதருக்கு ஜீவனும் ஒளியுமாக இருந்தவரைவிட்டுப் பிரிந்துசெல்லுவதை ஏக்கமிக்க ஒரு இருதயத்துடன் இயேசு நோக்கினார். அவரது மன உருக்கம் வரவேற்கப்படவில்லை. அவரது இரக்கம் அலட்சியப்படுத்தப்பட்டது. அவரது அன்பிற்கு பதிலீடு செய்யப்படவில்லை. அவரது இரட்சிப்பு புறக்கணிக்கப்பட்டது. இவைகளினால் உண்டான மன உணர்வு வெளியில் உணர்த்தப்படமுடியாததாக இருந்தது. அது அவரைத் துயரத்தால் நிரப்பியது. இப்படிப்பட்ட சம்பவங்களின் வளர்ச்சிதான் அவரைத் துக்கம் நிறைந்தவராயும் பாடு அனுபவித்தவராயும் மாற்றியது. (41)

அவரைவிட்டுப் பிரிந்துசென்றிருந்தவர்களுக்கு இடையூறு எதுவும் செய்யாமல் இயேசு அந்தப் பன்னிருவரிடமும் திரும்பி: “நீங்களும் போய்விட மனதாயிருக்கிறீர்களோ?” என்றார். (42)

“சீமோன் பேதுரு அவருக்குப் பிரதியுத்தரமாக: ஆண்டவரே, யாரிடத்தில் போவோம், நித்தியஜீவ வசனங்கள் உம்மிடத்தில் உண்டே” என்று பேதுரு மறுமொழியாகப் பதிலளித்தான். “நீர் ஜீவனுள்ள தேவனுடைய குமாரனாகிய கிறிஸ்து என்று நாங்கள் விசுவாசித்தும் அறிந்தும் இருக்கிறோம்” என்று மேலும் கூறினான். (43)

நாங்கள் யாரிடத்தில் போவோம்? இஸ்ரவேலின் போதகர்கள் முறைமைகளுக்கு அடிமைகளாக இருந்தனர். பரிசேயர்களும் சதுசேயர்களும் தொடர்ந்து சண்டையிட்டுக்கொண்டிருந்தனர். இயேசுவை விட்டுப் பிரிந்துசெல்லுதல் சடங்குகளையும் ஆராதனை முறைகளையும் பற்றிக்கொண்டிருந்து, தங்களுடைய சுயமகிமையைத்தேடி ஆசித்துக் கொண்டிருந்தவர்களுக்கு மத்தியில் விழுவதாக இருக்கும். சீடர்கள் அவர்களுடைய கடந்தகால வாழ்க்கையில் இருந்ததைவிட அதிகமான மகிழ்ச்சியையும் சமாதானத்தையும் இயேசுவை ஏற்றுக்கொண்டதிலிருந்து

கண்டிருந்தனர். பாவிகளுக்கு நண்பனாக இருந்த ஒருவரைப் பரிகசித்து, உபத்திரவப்படுத்தினவர்களிடத்திற்கு அவர்களால் எப்படித் திரும்பிச்செல்ல முடியும்? அவர்கள் அதிகக் காலமாக மேசியாவிற்காகக் காத்திருந்தனர். அவர் இப்பொழுது வந்திருந்தார். அவர்களால் இப்பொழுது அவரது சமுகத்திலிருந்து அவரது உயிரை வேட்டையாடிக்கொண்டிருந்தவர் களிடத்திற்கும் அவரது அடியார்களானதற்காக அவர்களை உபத்திரவப்படுத்தி இருந்தவர்களிடத்திற்கும் திரும்பிச்செல்ல முடியாது. (44)

“நாங்கள் யாரிடத்தில் போவோம்?” கிறிஸ்துவின் போதனைகள் அவரது அன்பு, இரக்கம் ஆகியவைகளைப்பற்றின பாடங்களைவிட்டு விலகி, நம்பிக்கையின்மையாகிய இருளுக்குள்ளும் உலகத்தின் துன்மார்க்கத்திற்குள்ளும் எங்களால் செல்லமுடியாது. அவரது ஆச்சரியமான செயல்களுக்குச் சாட்சியாக இருந்த அநேகரால் இரட்சகர் கைவிடப்பட்டிருந்தபோது, “நீர் கிறிஸ்து” என்று கூறி, சீடர்களின் விசுவாசத்தைப் பேதுரு உணர்த்திக் காட்டினான். இந்த நங்கூரத்தை இழக்கும் எண்ணம் அவர்களுடைய ஆத்துமாக்களைப் பயத்தினாலும் வேதனையினாலும் நிரப்பினது. இரட்சகரில்லாத அநாதைகளாக இருப்பதென்பது இருண்டு புயல்வீசும் கடலில் அடித்துச் செல்லப்படுவதுபோலிருக்கும். (45)

வரம்புள்ள மனங்களுக்கு இயேசுவின் வார்த்தைகளிலும் செயல்களிலும் சில புதைபொருளாகத் தோன்றுகிறது. ஆனால் இரட்சிப்பின் பணியில் ஒவ்வொரு வார்த்தையும் செயலும் அதன் குறிப்பான நோக்கத்தை உடையதாக இருந்தது. ஒவ்வொன்றும் அதன் பலனை உண்டுபண்ணும்படி கணக்கிடப்பட்டிருந்தது. அவரது நோக்கங்களைப் புரிந்துகொள்ளக்கூடியவர்களாக நாம் இருந்தோமானால் அனைத்தும் முக்கியமானதாகவும், நிறைவுள்ளதாகவும், அவரது ஊழியத்துடன் இசைவுள்ளதாகவும் தோன்றும். (46)

தேவனுடைய செயல்களையும் பாதைகளையும் அறிந்துகொள்ள முடியாமலிருக்கிற இப்பொழுதும், மனிதர்களுடன் இடைப்படும் அவரது காரியங்கள் அனைத்திலுமிருந்து அவரது பேரன்பை நாம் அறிந்துகொள்ளலாம். இயேசுவிற்கு அருகில் எவனொருவன் வாழ்கின்றானோ அவன் தேவபக்திக்குரிய இரகசியத்தை அதிகமாக அறிந்துகொள்வான். கடிந்துகொண்டு, குணத்தைச் சோதித்து, இருதயத்தின் நோக்கத்தை வெளிச்சத்திற்குக் கொண்டுவரும் இரக்கத்தை அடையாளங்கண்டுகொள்வான். (47)

இயேசுவின் சீடர்கள் திரும்பிச்செல்வதற்குக் காரணமாக இருந்த சோதனையாகிய சத்தியத்தை இயேசு முன்வைத்தபோது, அவரது வார்த்தைகளின் பலன் என்னவாக இருக்கும் என்பதை அவர் அறிந்திருந்தார்.

ஆனால் நிறைவேற்றவேண்டியிருந்த இரக்கத்தின் ஒரு நோக்கம் அவருக்கு இருந்தது. அவரால் நேசிக்கப்பட்ட சீடர்களில் ஒவ்வொருவரும் சோதனையின் நேரத்தில் கடுமையாக சோதிக்கப்படுவார்கள் என்பதை அவர் முன்னதாகவே கண்டிருந்தார். கெத்செமனேயில் அவரது வேதனை, காட்டிக்கொடுக்கப்படுதல், சிலுவையில் அறையப்படுதல் ஆகியவை அவர்களைப் பரீட்சிக்கும் கனமாக காரியமாக இருக்கும் என்பதைக் கண்டார். முன்னதாக ஒரு சோதனை நடத்தப்படாமலிருந்தால் சுயநலமான நோக்கங்களுடன் மட்டுமே செயலாற்ற ஏவப்பட்ட அநேகர் அவருடன் பிணைக்கப்பட்டிருந்திருப்பார்கள். ஆண்டவர் நியாயவிசாரணை மண்டபத்தில் குற்றவாளியாகக் கண்டனஞ்செய்யப்படும்போதும், அவரை அரசராகப் போற்றியிருந்த திரளானவர்கள் அவரில் சீறிப் பரிகாசஞ்செய்யும்போதும், கூட்டத்தினர் பரிகாசமாக அவனைச் சிலுவையில் அறையும் என்று கூக்குரலிடும்போதும்—சுயத்தைத் தேடும் அவர்கள், உலகப்பிரகாரமான தங்களுடைய ஆசைகள் ஏமாற்றமடைந்ததால், இயேசுவுடனுள்ள தங்களின் பிணைப்பை மறுத்து, விரும்பியிருந்த நம்பிக்கைகள் சிதைந்ததால் ஏமாற்றமடைந்திருந்த சீடர்களுடைய துக்கத்தோடு, கசப்பான இருதயத்தைப் பாரப்படுத்தும் வருத்தத்தையும் குவித்திருப்பார்கள். அந்த இருண்ட மணிவேளையில், அவரிடமிருந்து விலகிச்சென்ற அவர்கள், மற்றவர்களையும் அவர்களுடன் இழுத்துச் சென்றிருப்பார்கள். கிறிஸ்து அவரது நேரடியான பிரசன்னம் இருந்தபோதே, அவரை உண்மையாகப் பின்பற்றினவர்களுடைய விசுவாசத்தை பலப்படுத்துவதற்காக இந்த நெருக்கடியைக் கொண்டுவந்திருந்தார். (48)

தம்மை எதிர்நோக்கிக் காத்திருக்கும் துயரத்தைப்பற்றிய முழு அறிவையும் உடையவராகவிருந்த பரிவுள்ள இரட்சகர் சீடர்களுக்கான வழியை மென்மையாக்கி, வரவிருக்கும் சோதனைக்கு அவர்களை ஆயத்தப்படுத்தி, இறுதியான தேர்வுக்கு அவர்களைப் பலப்படுத்தினார். (49) ★

# 42

# பாரம்பரியம்!

**மத்தேயு 15:1–20; மாற்கு 7:1–23**

**(The Desire of Ages, pp. 395–398)**

பஸ்கா பண்டிகையின் வேளையில் இயேசுவின் வருகையை எதிர்நோக்கி, வேதபாரகர்களும் பரிசேயர்களும் அவருக்கு ஒரு கண்ணியை வைத்திருந்தனர். ஆனால் இயேசு அவர்களுடைய நோக்கத்தை அறிந்திருந்து, அந்தக் கூட்டத்திற்கு வராமலிருந்துவிட்டார். அப்பொழுது "வேதபாரகர்களும் பரிசேயர்களும்" அவரிடம் வந்தனர். அவர்களிடத்திற்கு அவர் போகாமலிருக்கவே, அவரிடத்திற்கு அவர்கள் வந்தனர். கலிலேய மக்கள் இயேசுவை மேசியா என்று ஏற்றுக்கொள்ளக்கூடுமென்றும் அந்தப் பகுதியிலிருந்த சமய குருமார்களுக்குரிய நிலை அமைப்பின் வல்லமை தகர்க்கப்படும் என்றும் கொஞ்ச நேரத்திற்குக் காணப்பட்டது. கிறிஸ்துவின் பணி விரிவடைவதைக் காட்டுவதாக அந்தப் பன்னிருவரின் ஊழியம் இருந்தது, மேலும் அது ரபிமார்களுடன் நேரடியாக மோதும் வகையில் சீடர்களைக் கொண்டுவந்ததாகத் தெரிந்ததினால், எருசலேமிலிருந்த தலைவர்களின் பொறாமையை மீண்டும் எழுப்பியது. அவரது ஊழியத்தின் ஆரம்பகாலத்தில் அவர் ஓய்வுநாளை மீறினாரென்று அவர்மீது குற்றஞ்சுமத்துவதற்காக அவர்கள் ஒற்றர்களை அனுப்பியிருந்தனர். அந்த ஒற்றர்கள் குழப்பத்திற்கு உள்ளாக்கப்பட்டிருந்தனர். ஆனால் ரபிமார்கள் தங்களுடைய நோக்கத்தை நிறைவேற்றுவதில் முனைந்திருந்தனர். இப்பொழுது அவரது போக்கையும் வரத்தையும் கவனிக்கவும், அவருக்கு விரோதமாக ஏதாவது குற்றச்சாட்டைக் கண்டுபிடிக்கவும் வேறொரு குழுவினர் அனுப்பப்பட்டனர். (1)

முன்னிருந்ததுபோலவே, தேவப்பிரமாணத்தைச் சூழ்ந்திருந்த பாரம்பரியக் கட்டளைகளை அவர் மதிக்காமலிருந்தார் என்பதுவே இப்போதும் குற்றச்சாட்டின் அடித்தளமாக இருந்தது. இந்த வழக்கங்கள் தேவப்பிரமாணத்திற்குப் பாதுகாப்பு அளிப்பதற்கென்றே வடிவமைக்கப் பட்டிருந்தன. ஆனால் தேவப்பிரமாணத்தைவிட அவை அதிகப் பரிசுத்த மானவை என்று கருதப்பட்டிருந்தன. சீனாய் மலையில் கொடுக்கப்பட்டிருந்த

பத்துக்கற்பனைகளுடன் மோதும் நிலைமை அவர்களுக்கு உண்டானபோது, ரபிமார்களின் கட்டளைகளுக்கு முன்னுரிமை கொடுக்கப்பட்டிருந்தது. தூய்மையடைதல் என்பது இச்சடங்குகளின்மூலமாக மிகக் கடுமையாக வற்புறுத்தப்பட்டிருந்தது. உணவருந்துவதற்குமுன் கடைப்பிடிக்கப்படவேண்டிய ஒரு சடங்கின் அலட்சியம்—இந்த உலகம், அடுத்த உலகம் ஆகிய இரண்டிலும் மிகவும் வெறுக்கப்படத்தக்க ஒரு பாவம் என்று கணக்கிடப்பட்டிருந்தது. அந்த மீறுதலைச் செய்தவனை அழிப்பது ஒரு புண்ணியமாகக் கருதப்பட்டிருந்தது. (2)

தூய்மைப்படுத்துவதற்காக கடைப்பிடிக்கப்பட்டிருந்த சட்டங்கள் எண்ணிலடங்காதவையாக இருந்தன. இவைகளையெல்லாம் கற்றுக் கொள்ளுவதற்கு ஒருவனுடைய ஆயுட்காலம் போதாததாக இருந்தது. ரபிமார்கள் அவசியம் என்று ஏற்படுத்தியிருந்த சடங்குகளைப் பின்பற்ற முயன்றிருந்தவர்கள், தீட்டிலிருந்து தங்களைக் காத்துக்கொள்ள முடிவில்லாத கழுவுதல்களையும் சுத்திகரிப்புக்களையும் செய்யும் நீண்ட கடினமான முயற்சிகள் மேற்கொள்ளப்படவேண்டியதாக இருந்தது. தேவன் அவசியமென்று கருதாத அற்பமான காரியங்களைச் செய்வதில் மக்கள் மிகுந்த கவனமுடனிருந்தபோது, தேவப்பிரமாணத்தின் கொள்கை களிலிருந்து அவர்களது கவனம் வேறு பக்கத்திற்குத் திருப்பப்பட்டிருந்தது. கிறிஸ்துவும் அவரது சீடர்களும் இந்தச் சடங்காச்சாரக் கழுவுதல்களைக் கடைப்பிடிக்கவில்லை. ஒற்றர்கள் இந்த அலட்சியத்தை அவர்கள்மீது குற்றஞ்சாட்டுவதற்கு ஒரு தளமாக அமைத்துக்கொண்டனர். எப்படி யிருந்தாலும் அவர்கள் கிறிஸ்துவுடன் நேரடியான ஒரு மோதலில் ஈடுபடாமல், அவருடைய சீடர்களைப்பற்றிய ஒரு குற்றச்சட்டுடன் அவரைச் சமீபித்தனர். திரளானவர்களுக்கு முன்னால் அவர்கள், “உம்முடைய சீஷ ர்கள் முன்னோர்களின் பாரம்பரியத்தை ஏன் மீறி நடக்கிறார்கள்? கை கழுவாமல் போஜனம் பண்ணுகிறார்களே!” என்றார்கள். ஏனெனில் அவர்கள் போஜனம்பண்ணுமுன் கைகளைக் கழுவாமலிருந்தனர். (3)

சிறப்பான ஒரு வல்லமையுடன் சத்தியத்தின் தூது இருதயமாகிய வீட்டிற்குள் வரும்போதெல்லாம் ஏதாவதொரு சிறிய காரியத்தைச் சுட்டிக்காட்டி வாக்குவாதஞ்செய்யும்படி சாத்தான் அவனது முகவர்களைத் தூண்டிவிடுகிறான். இவ்விதமாக உண்மையான காரியத்திலிருந்து கவனத்தை வேறுபக்கமாகத் திருப்ப அவன் முயலுகிறான். எப்பொழுதெல்லாம் ஒரு நல்ல ஊழியம் ஆரம்பமாகின்றதோ, அப்போதெல்லாம் வழக்கத்திலுள்ள உள்ளார்ந்த காரியங்களினின்று மக்களது மனங்களைத் திருப்பி, அவர்களை வெளியே இழுப்பதற்காக சில அமைப்புகள் மற்றும்

நடைமுறைக் காரியங்களைக்குறித்து விவாதத்தில் நுழைவதற்கு சில குதர்க்கவாதிகள் ஆயத்தமாக இருக்கிறார்கள். தேவன் அவருடைய மக்களுக்காக விசேஷமான ஒரு விதத்தில் செயலாற்றப்போகிறார் என்பதாக காரியங்கள் தோன்றும்போது, ஆத்துமாக்களைப் பாழ்ப்படுத்தக்கூடிய எதிர்வாதச் செயல்களில் கவர்ந்திழுக்கப்படாமலிருப்பார்களாக. நம்முடன் மிகவும் சம்பந்தப்படும் கேள்விகள் என்னவெனில்: இரட்சிக்கப்படக்கூடிய விசுவாசத்துடன் நாம் தேவகுமாரனில் நம்பிக்கையுடையவனாக இருக்கிறேனா? எனது வாழ்க்கை தேவப்பிரமாணங்களுக்கு இசைவாக இருக்கிறதா? என்பதே. “குமாரனிடத்தில் விசுவாசமாயிருக்கிறவன் நித்தியஜீவனை உடையவனாயிருக்கிறான்; குமாரனை விசுவாசியாதவனோ ஜீவனைக் காண்பதில்லை”—யோவான் 3:36. “அவருடைய கற்பனைகளை நாம் கைக்கொள்ளுகிறவர்களானால், அவரை அறிந்திருக்கிறோமென்பதை அதினால் அறிவோம்”—1 யோவான் 2:3. (4)

இயேசு தம்மையோ அல்லது சீடர்களையோ காப்பதற்காக முயற்சிசெய்யவில்லை. அவர்களுக்கு எதிராக சாட்டப்பட்ட குற்றச்சாட்டுகளையும் அவர் குறிப்பிடாமல் மனித சமயச்சடங்குகளை விடாப்பிடியாகக் கொண்டிருக்கும் இவர்கள் எந்த ஆவியினால் நடத்தப்படுகிறார்கள் என்பதைக் காட்டப் புறப்பட்டார். அவர்கள் எவைகளைத் திரும்பத்திரும்பச் செய்துகொண்டிருந்தனர் என்பதற்கும் அவரைத் தேடிவருவதற்குமுன் என்ன செய்திருந்தார்கள் என்பதற்கும் ஒரு உதாரணம் கொடுத்தார். “நீங்கள் உங்கள் பாரம்பரியத்தினாலே தேவனுடைய கற்பனையை ஏன் மீறி நடக்கிறீர்கள்? உன் தகப்பனையும் உன் தாயையும் கனம்பண்ணுவாயாக என்றும்; தகப்பனையாவது தாயையாவது நிந்திக்கிறவன் கொல்லப்படவேண்டும் என்றும், தேவன் கற்பித்திருக்கிறாரே. நீங்களோ, எவனாகிலும் தகப்பனையாவது தாயையாவது நோக்கி: உனக்கு நான் செய்யத்தக்க உதவி எது உண்டோ, அதைக் காணிக்கையாகக் கொடுக்கிறேன் என்று சொல்லி, தன் தகப்பனையாவது தன் தாயையாவது கனம்பண்ணாமற்போனாலும், அவனுடைய கடமை தீர்ந்ததென்று போதித்து, உங்கள் பாரம்பரியத்தினாலே தேவனுடைய கற்பனையை அவமாக்கிவருகிறீர்கள்” என்றார். எந்தவிதமான பலனும் இல்லாததைப்போல அவர்கள் ஐந்தாவது கற்பனையை ஒருபக்கமாக விலக்கிவைத்துவிட்டு, மூப்பர்களால் உண்டுபண்ணப்பட்ட பாரம்பரியங்களைச் செயல்படுத்துவதற்கு மிகவும் கவனமுள்ளவர்களாக இருந்தனர். தங்களுடைய பெற்றோர்களைப் பராமரிப்பதைவிட தங்களுடைய சொத்துக்களை ஆலயத்திற்குக் காணிக்கையாகக் கொடுத்துவிடுவது மிகவும் பரிசுத்தமான ஒரு கடமை என்று அவர்கள் மக்களுக்குப் போதித்தார்கள். இவ்விதமாக ஆலயத்திற்கென்று அர்ப்பணஞ்செய்யப்பட்ட

சொத்தின் எந்தவொரு பகுதியையாவது தகப்பனுக்காவது தாய்க்காவது அவர்களது தேவை எவ்வளவு பெரிதாக இருப்பினுங்கூட பங்களிப்பது அதன் புனிதத்தன்மையைக் கெடுக்கும் செயலென்று போதிக்கப்பட்டது. கடமையைச் செய்ய மறுக்கும் ஒரு பிள்ளை, தனது சொத்தின்மீது: “கொர்பான்” என்ற வார்த்தையை உச்சரித்தால்மட்டும் போதும். சொத்தைக் கொர்பான் என்று—தேவனுக்குரிய காணிக்கை என்று கூறிவிட்டு அதனை அவனது ஆயுட்காலம் முழுவதும் தனது சொந்த உபயோகத்திற்குப் பயன்படுத்திக்கொள்ளலாம். அவனது மரணத்திற்குப்பிறகு அது ஆலயப் பராமரிப்பிற்காக ஒப்படைக்கப்படவேண்டியதாக இருந்தது. இவ்விதமாக தேவன் பேரிலுள்ள ஈடுபாடு என்னும் ஒரு போலியான திரைமறைவில் இந்த வாழ்க்கையிலும் மரணத்திலும் தனது தகப்பனையும் தாயையும் அவமதிக்கவும் வஞ்சிக்கவும் அவன் சுயாதீனமுள்ளவனாக இருந்தான். (5)

தேவனுக்குச் செலுத்தப்படவேண்டிய அன்பளிப்புகள் காணிக்கைகள் ஆகியவைகளில் மனிதனுக்குள்ள அவனது கடமையை இயேசு வார்த்தையினாலோ செயலினாலோ ஒருபோதும் குறைக்கவில்லை. தசமபாகம் காணிக்கைகள் ஆகியவைகளைப்பற்றிய அனைத்து உபதேசங்களையும் கொடுத்தவர் கிறிஸ்துதான். தனக்குள்ள எல்லாவற்றையும் ஆலயக் கருவூலத்திற்குக் கொடுத்த ஏழையான பெண்ணை உலகத்திலிருந்தபோது, புகழ்ந்திருந்தவரும் அவர்தான். ஆனால் ஆசாரியர்களும் ரபிமார்களும் வெளியரங்கமாகக் காட்டியிருந்த அவர்களுடைய ஆர்வங்கள் அவர்களுடைய சுயமேன்மையை விரிவுபடுத்திக்கொள்ளும் வாஞ்சையை மறைப்பதற்கான வேலிகளாக இருந்தன. அவர்களால் மக்கள் வஞ்சிக்கப்பட்டிருந்தனர். தேவன் ஏற்படுத்தியிராத அதிகமான பாரங்களை அவர்கள் சுமந்துகொண்டிருந்தனர். கிறிஸ்துவின் சீடர்களுங்கூட பிறப்பினால் பெற்றுக்கொண்டிருந்த தவறான எண்ணங்களிலிருந்தும், ரபிமார்களால் தங்கள்மீது பூட்டப்பட்டிருந்த நுகத்திலிருந்தும் முற்றிலும் விடுதலை பெறாதவர்களாக இருந்தனர். இப்பொழுது உண்மையாகவே தேவனைச் சேவிக்கவேண்டுமென்று விரும்பியிருந்த அனைவரையும் ரபிமார்களின் உண்மையான ஆவியை வெளிக்காட்டுவதினால் விடுதலைசெய்ய இயேசு வகைதேடினார். (6)

இந்த வாஞ்சகமிக்க ஒற்றர்களை நோக்கி: “மாயக்காரரே, உங்களைக்குறித்து: இந்த ஜனங்கள் தங்கள் வாயினால் என்னிடத்தில் சேர்ந்து, தங்கள் உதடுகளினால் என்னைக் கனம்பண்ணுகிறார்கள்; அவர்கள் இருதயமோ எனக்குத் தூரமாய் விலகியிருக்கிறது; மனுஷருடைய கற்பனைகளை உபதேசங்களாகப் போதித்து, வீணாய் எனக்கு ஆராதனை செய்கிறார்கள் என்று, ஏசாயா தீர்க்கதரிசி நன்றாய்ச் சொல்லியிருக்கிறான்”

என்று அவர் கூறினார். கிறிஸ்துவின் இந்த வார்த்தைகள் பரிசேய முறை அனைத்தின்மீதும் கூறப்பட்ட ஒரு கண்டனமாக இருந்தது. தங்களுடைய கோரிக்கைகளை தேவனுடைய கற்பனைகளுக்கும் மேலாக வைத்ததின்மூலம் ரபிமார்கள் தங்களைத் தேவனுக்கும்மேலாக உயர்த்தியிருக்கின்றனர் என்று அவர் அறிவித்தார். (7)

எருசலேமிலிருந்து வந்த பிரதிநிதிகள் கோபாவேசமிக்கவர் களானார்கள். சீனாய் மலையிலிருந்து கொடுக்கப்பட்ட பிரமாணத்தை அவர் மீறினாரென்று கிறிஸ்துவை அவர்களால் குற்றப்படுத்தமுடியவில்லை. ஏனெனில் அவர்களுடைய பாரம்பரியங்களுக்கு எதிராக அவர் பிரமாணத்தின் பாதுகாவலராகப் பேசினார். அவர் மக்கள்முன் வைத்திருந்த பிரமாணத்தைப்பற்றிய பெரும் கொள்கைவிளக்கம் மனிதர்கள் ஏற்படுத்தியிருந்த அற்பமான சட்டங்களுடன் ஒப்பிட்டுப்பார்க்கக்கூடிய அளவிற்குத் தெளிவாக இருந்தது. (8)

திரளானவர்களுக்கும் பின்னர் சீடர்களுக்கும் இயேசு அசுத்தம் வெளிப்புறத்திலிருந்து வராமல், உள்ளேயிருந்து உண்டாகிறது என்பதை முற்றிலும் தெளிவாக விவரித்துக் காட்டினார். தூய்மையும் தூய்மையின்மையும் ஆத்துமாவுடன் சம்பந்தப்பட்டதாக உள்ளது. மனிதன் உண்டுபண்ணியுள்ள வெளிப்படையான சடங்காச்சாரங்களில் உள்ள அலட்சியம் அல்ல, தீய செயல், தீய வார்த்தை, தீய எண்ணம் ஆகிய தேவப்பிரமாணத்தை மீறுகின்ற செயல்தான் மனிதனைத் தீட்டுப்படுத்துகிறது. (9)

ஒற்றர்களின் தவறான போதனைகள் வெளிக்காட்டப்பட்டதினால் அவர்களுக்கு உண்டான கோபாவேசத்தைச் சீடர்கள் கவனித்தனர். அவர்களுடைய கோபமிக்க பார்வைகளையும் அதிருப்தியான மற்றும் பழிவாங்குதலைக் காட்டும் அரைகுறையான முணுமுணுப்பின் வார்த்தைகளையும் சீடர்கள் காணவும் கேட்கவுஞ்செய்தனர். ஒரு திறந்த புத்தகத்தைப்போல அவர் அடிக்கடி எவ்விதமாக இருதயங்களை வாசித்தறிந்திருந்தார் என்பதை மறந்து, அவரது வார்த்தைகளினால் உண்டாகக்கூடிய பலனைப்பற்றி அவர்கள் அவரிடம் கூறினர். இயேசு கோபமிக்க அதிகாரிகளுடன் ஒப்புரவாகவேண்டும் என்ற எதிர்பார்ப்புடன் சீடர்கள்: “பரிசேயர் இந்த வசனத்தைக் கேட்டு இடறலடைந்தார்கள் என்று அறிவீரா” என்றார்கள். அவர் பிரதியுத்தரமாக: “என் பரமபிதா நடாத நாற்றெல்லாம் வேரோடே பிடுங்கப்படும்” என்றார். ரபிமார்களால் மிக அதிகமாக மதிக்கப்பட்டிருந்த பழக்கங்களும் பாரம்பரியங்களும் பரலோகத்தினுடையவைகளாக இராமல், இந்த உலகத்தினுடையவைகளாக இருந்தன. அவர்களின் அதிகாரம் மக்களின் மத்தியில் எவ்வளவு பெரிதாக

இருந்தபோதிலும் அவைகளால் தேவனுடைய பரீட்சையில் நிற்க இயலாமலிருந்தன. “ஒவ்வொரு கிரியையையும், அந்தரங்கமான ஒவ்வொரு காரியத்தையும், நன்மையானாலும் தீமையானாலும், தேவன் நியாயத்திலே கொண்டுவருவார்”–பிரசங்கி 12:14. தேவன் நியாயத்திலே கொண்டுவரும் நாளில் தேவனுடைய கற்பனைகளுக்குப் பதிலாக ஏற்படுத்தப்பட்ட மனிதக்கண்டுபிடிப்புகள் அனைத்தும் மதிப்பில்லாததாகக் காணப்படும். (10)

தேவப்பிரமாணங்களுக்குப்பதிலாக மனிதன் ஏற்படுத்தும் கற்பனைகள் நின்றுபோகவில்லை. அவை தொடர்ந்துகொண்டே உள்ளன. கிறிஸ்தவர்களுக்கு மத்தியிலுங்கூட பிதாக்களுடைய பாரம்பரியங்களைவிடச் சிறப்பான அடிப்படை இல்லாத அமைப்புகளும் நடைமுறைகளும் காணப்படுகின்றன. வெறும் மனித அதிகாரத்தைச் சாரந்துள்ள அப்படிப்பட்ட அமைப்புகள் தெய்வீக ஏற்பாட்டிற்குப் பதிலாக மாற்று ஏற்பாடுகளைச் செய்துள்ளன. மனிதர்கள் தங்களுடைய பாரம்பரியங்களைப் பற்றிக்கொண்டிருந்து, தங்களுடைய பழக்கவழக்கங்களை உயர்வாக மதித்து, அவர்களுடைய தவறுகளைக் காட்ட வகைதேடுபவர்களுக்கு எதிராக வெறுப்பை நெஞ்சாரப் பேணுகின்றனர். தேவனுடைய கற்பனைகளையும் இயேசுவின் மேலுள்ள விசுவாசத்தையும் காத்துக்கொள்ளும்படி இந்த நாளில் நாம் அழைக்கப்பட்டவர்களாக இருக்கும்போது, கிறிஸ்துவின் காலத்தில் வெளிக்காட்டப்பட்டிருந்த அதேவிதமான பகைமையை நாம் காண்கிறோம். தேவனுடைய மக்களைப்பற்றி: “அப்பொழுது வலுசர்ப்பமானது ஸ்திரீயின்மேல் கோபங்கொண்டு, தேவனுடைய கற்பனைகளைக் கைக்கொள்ளுகிறவர்களும், இயேசுகிறிஸ்துவைக்குறித்துச் சாட்சியை உடையவர்களுமாகிய அவளுடைய சந்ததியான மற்றவர்களுடனே யுத்தம்பண்ணப்போயிற்று” (வெளிப்படுத்தல் 12:17) என்று எழுதப்பட்டுள்ளது. (11)

ஆனால் “என் பரமபிதா நடாத நாற்றெல்லாம் வேரோடே பிடுங்கப்படும்.” சபைகளின் பிதாக்கள் என்று அழைக்கப்படுபவர்களின் அதிகாரத்திற்குப் பதிலாக நித்திய பிதாவின் வார்த்தைகளை ஏற்றுக் கொள்ளும்படி வானத்திற்கும் பூமிக்கும் கர்த்தராயிருக்கிற தேவன் நம்மை அழைக்கிறார். தவறுடன் கலவாத சத்தியம் இங்கு மட்டுந்தான் உள்ளது. “உம்முடைய சாட்சிகள் என் தியானமாயிருக்கிறபடியால், எனக்குப் போதித்தவர்களெல்லாரிலும் அறிவுள்ளவனாயிருக்கிறேன். உம்முடைய கட்டளைகளை நான் கைக்கொண்டிருக்கிறபடியால், முதியோர்களைப் பார்க்கிலும் ஞானமுள்ளவனாயிருக்கிறேன்” (சங்கீதம் 119:99,100) என்று தாவீது கூறினான். சபையின் பழக்கவழக்கங்களையும் அல்லது பிதாக்களின்

பாரம்பரியங்களையும் மனித அதிகாரத்தையும் ஏற்றுக்கொள்ளும் அனைவரும் "மனுஷருடைய கற்பனைகளை உபதேசங்களாகப் போதித்து, வீணாய் எனக்கு ஆராதனை செய்கிறார்கள்" (மாற்கு 7:7) என்று கிறிஸ்துவினால் கூறப்பட்டுள்ள வார்த்தைகளில் காணப்படும் எச்சரிப்பிற்குச் செவிசாய்ப்பார்களாக. (12) ★

# 43

# தடைகள் தகர்க்கப்பட்டன!

**மத்தேயு 15:21–28; மாற்கு 7:24–36**

**(The Desire of Ages, pp. 399–403)**

பரிசேயர்களுடன் விவாதஞ்செய்தபின் இயேசு கப்பர்நகூமைவிட்டுச் சென்றார். அவர் கலிலேயாவைக் கடந்து பெனிக்கேயாவின் எல்லைகளின் அருகிலுள்ள மலைநாட்டிற்குச் சென்றார். மேற்குத் திசையில் கீழ்ப்பக்கமாகப் பரந்து விரிந்துகிடந்த சமவெளியை அவர் பார்த்தபோது, அங்கு பழங்கால நகரங்களாக இருந்த தீருவையும் சீதோனையும் அவரால் காணமுடிந்தது. அங்குள்ள அஞ்ஞானிகளின் கோவில்களையும் பிரம்மாண்டமான அரண் மனைகளையும் வியாபார ஸ்தலங்களையும் கப்பல்கள் நிறைந்த துறைமுகங்களையும் கண்டார். அதற்கு அப்பால் நீல நிறத்துடன் மத்திய தரைக்கடல் பரந்து கிடந்தது. சுவிசேஷத்தின் மகிழ்ச்சிமிக்க தூதுகளை அதன் தூதுவர்கள் பெரும் பேரரசின் மையமாக இருந்த இந்த இடத்திற்குக் கொண்டுசெல்லவேண்டியவர்களாக இருந்தனர். ஆனால் அதற்கான காலம் இன்னும் வரவில்லை. அவர்முன் இப்பொழுது இருந்த பணி, சீடர்களை அவர்களுடைய ஊழியத்திற்காக ஆயத்தப்படுத்துவதாக இருந்தது. இந்தப் பிரதேசத்திற்கு வந்ததில் பெத்சாயிதாவில் அவரால் காணமுடியாமலிருந்த இளைப்பாறுதல் கிடைக்கக்கூடும் என்று அவர் நம்பினார். இருந்தபோதிலும் அவர் இந்தப் பயணத்தை மேற்கொண்டதின் நோக்கம் அதுமட்டுமாக இருக்கவில்லை. (1)

“அப்பொழுது, அந்தத் திசைகளில் குடியிருக்கிற கானானிய ஸ்திரீ ஒருத்தி அவரிடத்தில் வந்து: ஆண்டவரே, தாவீதின் குமாரனே, எனக்கு இரங்கும், என் மகள் பிசாசினால் கொடிய வேதனைப்படுகிறாள் என்று சொல்லிக் கூப்பிட்டாள்”–மத்தேயு 15:22. இந்த மாவட்டத்திலிருந்த மக்கள் பண்டைய கானானிய இனத்தைச் சேர்ந்தவர்களாக இருந்தனர். அவர்கள் விக்கிரக ஆராதனைக்காரர்களாக இருந்தனர். யூதர்களால் நிந்திக்கப்பட்டும் வெறுக்கப்பட்டுமிருந்தனர். இயேசுவிடம் வந்த பெண் அந்த வகுப்பைச் சேர்ந்தவளாக இருந்தாள். அவள் அஞ்ஞான மார்க்கத்தைச் சேர்ந்த

ஒருத்தியாக இருந்தாள். எனவே, யூதர்கள் நாள்தோறும் அனுபவித்திருந்த அனுகூலங்களிலிருந்து அவள் விலக்கப்பட்டிருந்தாள். பெனிக்கேயர்களுக்கு மத்தியில் அநேக யூதர்கள் வாழ்ந்திருந்தனர். இயேசுவின் கிரியைகளைப்பற்றிய செய்திகள் இந்தப் பிரதேசத்திலும் ஊடுருவியிருந்தது. மக்களில் சிலர் அவரது வார்த்தைகளைக் கேட்டிருந்து, ஆச்சரியமாக அவரது செயல்களுக்குச் சாட்சி பகர்ந்திருந்தனர். சகலவிதமான நோய்களையும் இந்தத் தீர்க்கதரிசி சுகப்படுத்தியிருந்தார் என்னும் செய்தியை அந்த பெண் கேள்விப்பட்டிருந்தாள். அவரது வல்லமையைப்பற்றிக் கேள்விப்பட்டதினால் அவளது இருதயத்தில் நம்பிக்கை உண்டானது. தாயன்பினால் ஏவப்பட்ட அவள், தனது மகளின் காரியத்தை அவர்முன் வைப்பது என்று தீர்மானித்தாள். தனது துன்பத்தை இயேசுவிடம் கொண்டுவருவது அவளது தீர்மானமான நோக்கமாக இருந்தது. அவளது பிள்ளையை அவர் சுகப்படுத்தியாகவேண்டும். அஞ்ஞான தெய்வங்களிடமிருந்து அவள் உதவியைத் தேடியிருந்தாள். ஆனால் அவைகளிடமிருந்து அவளால் சுகம்பெற முடியவில்லை. இந்த யூதப் போதகரால் எனக்கு என்ன செய்யமுடியும்? என்று சில சமயங்களில் அவள் நினைத்தாள். சகலவிதமான நோய்களையும் அவர் சுகப்படுத்துகிறார். அவரிடம் வந்தவர்கள் ஏழைகளானாலும் சரி, செல்வந்தர்களானாலும் சரி அனைவரையும் அவர் சுகப்படுத்துகிறார் என்னும் செய்தி அவளுக்குக் கிடைத்திருந்தது. அவளது ஒரே நம்பிக்கையை இழந்துவிடக்கூடாது என்று தீர்மானித்தாள். (2)

அந்தப் பெண்ணின் நிலைமையைக் கிறிஸ்து அறிந்திருந்தார். அவரைப் பார்ப்பதற்கு அவள் ஏக்கமுடையவளாக இருக்கிறாள் என்பதை அவர் அறிந்து, அவளது பாதையில் வந்தார். அவளது துயரத்திற்கு ஊழியஞ்செய்வதின்மூலமாக அவர் போதிக்கவிரும்பியிருந்த உயிருள்ள எடுத்துக்காட்டான ஒரு பாடத்தை அவரால் போதிக்கமுடியும். அதற்காகவே அவர் அவரது சீடர்களை இந்தப் பகுதிக்கு அழைத்துக்கொண்டுவந்திருந்தார். இஸ்ரவேல் தேசத்திற்கு அருகிலிருந்த தேசங்களிலும் நகரங்களிலும் கிராமங்களிலும் நிலவியிருந்த அறியாமையை அவர்கள் காண வேண்டுமென்று அவர் விரும்பினார். சத்தியத்தைப் புரிந்துகொள்ளும் வாய்ப்பினை பெற்றிருந்த அந்த மக்கள் தங்களைச் சுற்றிலுமிருந்தவர்களின் தேவையைப்பற்றிய அறிவு இல்லாதவர்களாக இருந்தனர். இருளிலிருந்த ஆத்துமாக்களுக்கு உதவிசெய்ய எந்த முயற்சியும் செய்யப்படாமலிருந்தது. யூதரின் இனப்பெருமையால் எழுப்பப்பட்டிருந்த பிரிவினைச் சுவர், அஞ்ஞான உலகத்தினிடம் அனுதாபங்காட்டமுடியாதபடி சீடர்களையும் தடுத்திருந்தது. ஆனால் இந்தத் தடைவேலிகள் தகர்க்கப்படவேண்டியதாக இருந்தது. (3)

அந்தப் பெண்ணின் வேண்டுகோளுக்குக் கிறிஸ்து உடனே பதில் கொடுக்கவில்லை. அவமதிக்கப்பட்டிருந்த அந்த இனத்தின் பிரதிநிதிக்கு யூதர்கள் என்ன செய்திருந்திருப்பார்களோ அதேவிதமாகவே அவர் அவளை (புறத்தோற்றத்தில்) ஏற்றார். இப்படிப்பட்ட காரியத்தில் யூதர்கள் எவ்விதமான இரக்கமற்ற தன்மையுடனும் இதயமற்றவிதத்திலும் நடந்திருப்பார்கள் என்பதைச் சீடர்களின் மனதில் உணர்த்திக்காட்ட வேண்டுமென்று அவர் திட்டமிட்டார். இப்படிப்பட்ட காரியத்தில் யூதர்கள் கல்நெஞ்சர்களாகவும் இதயமற்றவர்களாகவும் இருக்கக்கூடும். ஆனால் தமது சீடர்கள் இப்படிப்பட்ட துன்பமிக்க காரியங்களில் எப்படி நடந்துகொள்ளவேண்டும் என்பதை அவர்களுக்குப் போதிப்பதற்காக அந்தப் பெண்ணை அவர் மனஉருக்கத்துடன் வரவேற்று பின்னர் அவளது விண்ணப்பத்திற்கு அனுகூலஞ்செய்தார். (4)

ஆனால் இயேசு பதில் கூறாமலிருந்தபோதிலும் அந்தப் பெண் தனது விசுவாசத்தை இழந்துவிடவில்லை. அவர் சொல்வதைக் கேட்காததுபோல அவர் அவளைக் கடந்துசென்றபோது, அவள் தனது மன்றாட்டுடன் அவரைப் பின்தொடர்ந்தாள். அவளது விடாப்பிடியான கெஞ்சுதலினால் களைப்புற்ற சீடர்கள் அவளை அனுப்பிவிடும்படி இயேசுவிடம் கேட்டனர். அவர்களுடைய ஆண்டவர் அவளை பிரியமில்லாதவிதத்தில் நடத்தினதாகச் சீடர்கள் கண்டனர். எனவே கானானியர்களுக்கெதிராக யூதர்களிடம் காணப்பட்டிருந்த தவறான எண்ணம் அவருக்குப் பிரியமானதாக இருந்தது என்று அவர்கள் உத்தேசித்தனர். ஆனால் அந்தப் பெண் யாரிடம் மன்றாடியிருந்தாளோ, அவர் இரக்கமுள்ள இரட்சகராக இருந்தார். சீடர்களின் வேண்டுகோளுக்குப் பதில்தரும்விதமாக அவர்: "காணாமற்போன ஆடுகளாகிய இஸ்ரவேல் வீட்டாரிடத்திற்கு அனுப்பப்பட்டேனேயன்றி, மற்றப்படியல்ல" என்றார். யூதர்களின் தவறான எண்ணத்திற்கு அது இசைவானதுபோல் காணப்பட்டிருந்த போதிலும் அது சீடர்களைக் கடிந்துகொள்ளும் பொருளை உள்ளடக்கியதாக இருந்தது. அவரை ஏற்றுக்கொள்ளும் அனைவரையும் இரட்சிப்பதற்காக அவர் வந்தார் என்று அடிக்கடி சீடர்களிடம் கூறியிருந்ததின் பொருளை அவர்கள் பின்னர் புரிந்துகொண்டனர். (5)

அவள் கிறிஸ்துவின் பாதங்களில் பணிந்து, தனது காரியத்தை மிகுந்த அக்கறையுடன் வற்புறுத்தினாள். "ஆண்டவரே, எனக்கு உதவி செய்யும்" என்று அவள் அழுதாள். அப்போதும் அவளது மன்றாட்டை உணர்வில்லாத யூதர்களைப்போல புறக்கணித்தவராக: "பிள்ளைகளின் அப்பத்தை எடுத்து, நாய்க்குட்டிகளுக்குப் போடுகிறது நல்லதல்ல" என்றார். தேவனுடைய அனுகூலங்களைப் பெற்றிருந்த மக்களாகிய இஸ்ரவேலின்மீது அருள்பபட்டிருந்த ஆசீர்வாதங்களை அந்நியருக்கும் இஸ்ரவேலிற்குப்

புறம்பானவர்களுக்கும் கொடுப்பது நீதியாக இருக்காது என்பதை அது உறுதிப்படுத்துவதாக இருந்தது. இந்தப் பதில் குறைவான அக்கறையுடன் தேடும் எவரையும் அதைரியப்படுத்தியிருந்திருக்கும். ஆனால் அந்தப் பெண் தனக்கு ஒரு வாய்ப்பு வந்திருந்ததைக் கண்டாள். இயேசுவின் வெளிப்படையான மறுப்புக்கு அடியிலும், அவரால் மறைக்கமுடியாத ஒரு மன உருக்கம் இருப்பதை அவள் கண்டாள். “மெய்தான் ஆண்டவரே, ஆகிலும் நாய்க்குட்டிகள் தங்கள் எஜமான்களின் மேஜையிலிருந்து விழும் துணிக்கைகளைத் தின்னுமே” என்றாள். பிள்ளைகள் தகப்ப னுடைய மேசையிலிருந்து உண்ணும்போது, நாய்கள் உணவின்றி விட்டுவிடப் படவில்லை. மேஜையிலிருந்து விழும் துணிக்கைகளின்மீது அவைகளுக்கு ஒரு உரிமை இருக்கிறது. அப்படியே இஸ்ரவேலிற்கு அநேக ஆசீர்வாதங்கள் வழங்கப்பட்டிருந்தபோது, அவளுக்கும் ஒரு ஆசீர்வாதம் இருக்காதா? அவள் ஒரு நாயைப்போல கருதப்பட்டிருந்தாள். அப்படியானால், ஏராளத்திலிருந்து விழும் துணிக்கையை அவள் உரிமைபாராட்ட முடியாதா? (6)

இயேசுவின் உயிரைப் பறிப்பதற்கு வேதபாரகர்களும் பரிசேயர்களும் வகைதேடியிருந்தனர். எனவே, இயேசு அவர் ஊழியம் செய்திருந்த இடத்தைவிட்டு அப்போதுதான் விலகிச் சென்றிருந்தார். அவர்கள் முறுமுறுத்துக் குற்றஞ்சாட்டினர். அவர்கள் நம்பிக்கையின்மையையும் கசப்பையும் வெளிக்காட்டி, அவ்வளவு இலவசமாக அவர்களுக்கு வழங்கப்பட்டிருந்த இரட்சிப்பை மறுத்திருந்தனர். தேவனுடைய வார்த்தையிலுள்ள ஒளியினால் அனுகூலம் அளிக்கப்படாத வாய்ப்பு வளங்களற்ற நிந்திக்கப்பட்டிருந்த ஒரு ஜாதியை இயேசு இங்கு சந்திக்கிறார். அவள் உடனே கிறிஸ்துவினால் உண்டான தெய்வீக செல்வாக்கிற்குக் கீழ்ப்படிகிறாள். அவள் கேட்கும் அனுகூலத்தை அனுமதிக்கக்கூடிய அவரது தகுதியில் அசைக்கமுடியாத விசுவாசம்வைத்து கேட்கிறாள். எஜமானனின் மேஜையின்மீதிருந்து கீழே விழும் அப்பத்துணிக்கைகளுக்காக அவள் கெஞ்சிக்கேட்கிறாள். ஒரு நாய்க்குள்ள சலுகை அவளுக்குக் கிடைக்கக்கூடுமானால், ஒரு நாயைப்போல கருதப்பட அவள் விருப்பமுள்ளவளாக இருக்கிறாள். அவளது பாதையில் ஆதிக்கஞ்செலுத்தும்படியான ஜாதி அல்லது மதம் என்னும் தவறான எண்ணமோ அல்லது அகந்தையோ அவளிடம் இருக்கவில்லை. இயேசுவினிடத்தில் அவள் எவைகளைக் கேட்கின்றாளோ அவைகளையெல்லாம் அருளும் தகுதி உடையவராக அவரை அறிந்து, உடனே அவரை உலக மீட்பர் என்று ஏற்றுக்கொள்கிறாள். (7)

இரட்சகர் திருப்தியடைகிறார். அவரிலே அவள் கொண்டிருந்த விசுவாசத்தை சோதித்துவிட்டார். அவளுடன் உள்ள இடைபடுதலில்

இஸ்ரவேலிலிருந்து புறம்பாக்கப்பட்டவளாகக் கருதப்பட்டிருந்த அவள் இனி ஒருபோதும் புறம்பாக்கப்பட்டவளாக இராமல், தேவனுடைய வீட்டில் ஒரு பிள்ளையாக இருக்கிறாள் என்பதை அவர் காட்டியிருக்கிறார். அவள் தேவனுடைய ஒரு பிள்ளையாக, அவரது ஈவில் பங்குபெறும் சலுகையை உடையவளாக இருக்கிறாள். இப்பொழுது கிறிஸ்து அவளது வேண்டுகோளை அனுமதித்து, தமது சீடர்களுக்கான போதனையை முடிக்கிறார். அவர் அவளை அன்புடனும் இரக்கத்துடனும் நோக்கி: "ஸ்திரீயே, உன் விசுவாசம் பெரிது; நீ விரும்புகிறபடி உனக்கு ஆகக்கடவது என்றார். அந்நேரமே அவள் மகள் ஆரோக்கியமானாள்." அதன்பின் அந்தப் பிசாசு அவளை ஒருபோதும் உபத்திரவஞ்செய்யவில்லை. அந்தப் பெண் தனது மன்றாட்டிற்குப் பதில் அருளப்பட்டதினால் மகிழ்ச்சியுடன் தனது இரட்சகரை அறிக்கை செய்தவளாகச் சென்றாள். (8)

இயேசு தமது இந்தப் பயணத்தின்போது இந்த ஒரே அற்புதத்தைமட்டும் செய்தார். இதைச் செய்வதற்காகவே அவர் தீரு, சீதோன் ஆகியவைகளின் எல்லைக்குச் சென்றார். வேதனையிலிருந்த அந்தப் பெண்ணின் துயரைத் துடைக்க விரும்பியிருந்தார். அதேசமயத்தில் நிந்திக்கப்பட்டிருந்த மக்களுக்கு தமது ஊழியத்திலிருந்த இரக்கத்தை ஒரு உதாரணமாக வைத்து, இனிமேல் அவர் தமது சீடர்களுடன் இல்லாமலிருக்கப்போகின்ற நேரத்தில் அவர்களுக்கு நன்மையாக அமையவேண்டுமென்றும் விரும்பியிருந்தார். அவர்களை யூத ஜனம் என்னும் தனிக்கோட்டத்திலிருந்து வெளியேற்றி, அவர்கள் தங்களுடைய மக்களுக்குமட்டுமின்றி மற்றவர்களுக்காகவும் ஊழியஞ்செய்வதில் ஆர்வமுள்ளவர்களாக்க வேண்டுமென்று அவர் விரும்பியிருந்தார். (9)

புறஜாதிகள் சுவிசேஷத்தினாலே உடன் சுதந்திரர்களாக வேண்டுமென்பது நீண்ட நெடுங்காலங்களாக மறைத்து வைக்கப்பட்டிருந்தது. இந்த சத்தியத்தின் ஆழமான இரகசியங்களை விவரிக்க இயேசு ஏக்கமுடையவராக இருந்தார். "புறஜாதிகள் சுவிசேஷத்தினாலே உடன் சுதந்தரருமாய், ஒரே சரீரத்திற்குள்ளானவர்களுமாய், கிறிஸ்துவுக்குள் அவர் பண்ணின வாக்குத்தத்தத்துக்கு உடன்பங்காளிகளுமாயிருக்கிறார்களென்கிற இந்த இரகசியத்தை அவர் எனக்கு வெளிப்படுத்தி அறிவித்தார்"—எபேசியர் 3:3. இந்த சத்தியத்தை அறிந்துகொள்வதில் சீடர்கள் மந்தமானவர்களாக இருந்தனர். எனவே தெய்வீகப் போதகர் அவர்களுக்குப் போதனையின்மேல் போதனை கொடுத்தார். கப்பர்நகூமிலிருந்த நூற்றுக்கு அதிபதியின் விசுவாசத்திற்குத் தமது ஈவை அளித்ததிலும் சீகாரிலுள்ள மக்களுக்குச் சுவிசேஷத்தை பிரசங்கித்ததிலும் யூதர்களின் சகிப்புத்தன்மையின்மையில்

அவர் பங்குபெறவில்லை என்பதற்கு அவர் ஏற்கெனவே சான்று பகர்ந்திருந்தார். ஆனால் தேவனைப்பற்றிய சிறிதளவு அறிவு சமாரியர்களுக்கு இருந்திருந்தது. அந்த நூற்றுக்கு அதிபதி இஸ்ரவேலர்களிடம் தனது அன்பைக் காட்டியிருந்தான். இப்பொழுது அவரிடமிருந்து அனுகூலம் பெறத் தங்களது மக்களைவிட மேலானவர்களாகப் புறஜாதியினரை எவ்விதத்திலும் கருதமுடியாது என்று சீடர்கள் எண்ணியிருந்த ஒரு புறஜாதிப் பெண்ணுடன் அறிமுகமடையும்படி இயேசு அவர்களைக் கொண்டுவந்திருந்தார். அப்படிப்பட்ட ஒருவன் அல்லது ஒருத்தி எவ்விமாக நடத்தப்படவேண்டும் என்பதற்கு அவர் ஒரு உதாரணம் கொடுக்கக்கூடியவராக இருந்தார். அவர் தமது கிருபையை அளவிற்கு அதிகமாக வாரி வழங்கிவிட்டார் என்று சீடர்கள் எண்ணியிருந்தனர். அவரது அன்பு ஒரு ஜாதி அல்லது ஒரு நாடு என்னும் குறுகிய வட்டத்திற்குட்பட்டதாக இருக்காது என்பதை அவர் வெளிப்படுத்த விரும்பினார். (10)

நான் “காணாமற்போன ஆடுகளாகிய இஸ்ரவேல் வீட்டாரிடத்திற்கு அனுப்பப்பட்டேனேயன்றி, மற்றப்படியல்ல” என்று அவர் கூறியபோது, சத்தியத்தை அறிவித்து, அந்தக் கானானிய பெண்ணிற்காகச் செய்த செயலில் அவர் தமது ஊழியத்தை நிறைவேற்றிக்கொண்டிருந்தார். இஸ்ரவேலர்கள் காப்பாற்றியிருந்திருக்கவேண்டிய ஒரு காணாமற்போன ஆடாக இந்தப் பெண் இருந்தாள். அது அவர்களுக்காக ஏற்படுத்தப்பட்டிருந்த வேலையாக இருந்தது. அவர்கள் அதனை அலட்சியஞ்செய்திருந்தனர். அதனையே கிறிஸ்து செய்துகொண்டிருந்தார். (11)

புறஜாதிகளுக்கு மத்தியில் அவர்கள் செய்யவேண்டியதாக இருந்த ஊழியத்தைப்பற்றி அறிந்துகொள்ள, இந்தச் செயல் அவர்களது மனங்களை முழுவதுமாகத் திறந்தது. யூதேயாவிற்கு வெளியே பயன்தரும் ஒரு பெரிய பணித்தளம் இருப்பதை அவர்கள் கண்டனர். மிகவும் அனுகூலமடைந்தவர்களுக்குத் தெரியாதவிதத்தில் அதிகமான துயரங்களைச் சுமந்துகொண்டிருக்கும் ஆத்துமாக்களை அவர்கள் கண்டனர். அவர்களால் நிந்திக்கும்படி கற்பிக்கப்பட்டிருந்தவர்களுக்கிடையில் வல்லமைமிக்க பரிகாரியின் உதவியைத்தேடி சத்திய ஒளியின்மீது பசியுடையவர்களாக ஆத்துமாக்கள் ஏங்கிக்கொண்டிருந்தன. ஆனால் மேற்கூறப்பட்ட இத்தகைய அனுகூலங்கள் ஏற்கனவே யூதர்களுக்கு ஏராளமாக வழங்கப்பட்டிருந்தன. (12)

சீடர்கள் இயேசுவை வரவிருக்கும் உலக இரட்சகர் என்று அறிவித்தனர். கிறிஸ்துவின் மரணம் யூதர், புறஜாதி ஆகியோருக்கிடையில் பிரிவினையாக நின்றிருந்த தடுப்புச்சுவரைத் தகர்த்தது. இந்தப் பாடமும் இவைபோன்ற

வேறு பாடங்களும் ஜாதி, இனம், நாடு ஆகியவைகளால் கட்டுப்படுத்த முடியாதவைகளாக இருந்த சுவிசேஷத்தை சுட்டிக்காட்டியிருந்தது. இது சுவிசேஷ ஊழியத்தை இயக்குவதில் கிறிஸ்துவின் பிரதிநிதிகளின்மீது வல்லமைமிக்க செல்வாக்கை உடையதாக இருந்தது. எனவே, பின்னர் யூதர்கள் மிகப் பிடிவாதமான சீடர்களைவிட்டுத் திரும்பிச்சென்றனர். (13)

இயேசு பெனிக்கேயாவிற்குச் சென்றதிலும் அங்கு நிகழ்த்திய அற்புதத்தின்மேலும் ஒரு பரந்த நோக்கம் இருந்தது. அங்கு நிறைவேற்றப்பட்ட ஊழியம் துன்பப்பட்டிருந்த அந்தப் பெண்ணிற்கு மட்டுமாக இராமல், சீடர்களுக்கும் அவர்களுடைய உழைப்பைப் பெற்றுக்கொண்டவர்களுக்கு மட்டுங்கூட இராமல், "இயேசு தேவனுடைய குமாரனாகிய கிறிஸ்து என்று நீங்கள் விசுவாசிக்கும்படியாகவும், விசுவாசித்து அவருடைய நாமத்தினாலே நித்தியஜீவனை அடையும்படியாகவும்" (யோவான் 20:31) இருந்தது. ஆயிரத்து எண்ணூறு வருடங்களுக்கு (இந்த நூல் 19–ம் நூற்றாண்டில் எழுதப்பட்டது) முன்னதாக மனிதர்களைக் கிறிஸ்துவிடமிருந்து தடைசெய்திருந்த அதே சக்திகள் இன்றும் செயலாற்றிக்கொண்டிருக்கின்றன. யூதர்கள் புறஜாதியினர் ஆகியோருக்கிடையில் பிரிவினையாகிய சுவரை எழுப்பின ஆவி இன்றும் தீவிரமாக உள்ளது. பல்வேறுபட்ட மனிதர்களுக்கிடையில் அகந்தையும் தவறான எண்ணமும் பிரிவினையாகிய பலத்த சுவரை எழுப்பியுள்ளன. கிறிஸ்துவும் அவரது ஊழியமும் தவறான விதத்தில் எடுத்துக்காட்டப்பட்டுள்ளது. திரளானவர்கள் தாங்கள் சுவிசேஷ ஊழியத்திலிருந்து வெளியில் அடைத்துவைக்கப்பட்டுள்ளதாக உணருகின்றனர். அப்படிப்பட்டவர்கள் தாங்கள் கிறிஸ்துவைவிட்டு வெளியில் அடைக்கப்பட்டுள்ளதாக எண்ணாமலிருப்பார்களாக. விசுவாசம் நுழைய முடியாதபடியுள்ள தடுப்புச்சுவர்களை மனிதனாலோ அல்லது சாத்தானாலோ எழுப்பமுடியாது. (14)

பெனிக்கேயாவின் அந்தப் பெண் யூதர்களுக்கும் புறஜாதியினருக்கும் நடுவில் எழுப்பப்பட்டிருந்த தடையை விசுவாசத்தினால் கடந்துசென்றாள். அதைரியமடைதல், சந்தேகத்திற்கு வழிநடத்தியிருக்கக்கூடிய தோற்றம் ஆகியவைகளைப்பற்றி எண்ணாமல், அதற்கெதிராக இரட்சகரின் அன்பின்மீது அவள் நம்பிக்கை வைத்தாள். இவ்விதமாகத்தான் நாம் கிறிஸ்துவில் நம்பிக்கை வைக்கவேண்டுமென்று அவர் விரும்புகிறார். இரட்சிப்பின் ஆசீர்வாதம் ஒவ்வொரு ஆத்துமாவிற்கானதாகவும் உள்ளது. சுவிசேஷத்தினால் கிறிஸ்துவில் உள்ள வாக்குத்தத்தத்தில் பங்குபெறுவதிலிருந்து ஒருவனுடைய சொந்தத் தெரிந்துகொள்ளுதலைத்தவிர வேறு எதுவும் அவனைத் தடுக்காது. (15)

ஜாதி வேற்றுமை தேவனுக்கு வெறுப்பானதாக உள்ளது. இப்படிப்பட்ட தன்மைகள் அனைத்தையும் அவர் புறக்கணிக்கிறார். அவரது பார்வையில் சகல மனிதர்களின் ஆத்துமாக்களும் சமமானவையாக உள்ளன. "மனுஷஜாதியான சகல ஜனங்களையும் அவர் ஒரே இரத்தத்தினாலே தோன்றப்பண்ணி, பூமியின்மீதெங்கும் குடியிருக்கச்செய்து, முன் தீர்மானிக்கப்பட்ட காலங்களையும் அவர்கள் குடியிருப்பின் எல்லைகளையும் குறித்திருக்கிறார்; கர்த்தராகிய தம்மை அவர்கள் தடவியாகிலும் கண்டுபிடிக்கத்தக்கதாகத் தம்மைத் தேடும்படிக்கு அப்படிச் செய்தார்; அவர் நம்மில் ஒருவருக்கும் தூரமானவரல்லவே"–அப்போஸ்தலர் 17:26,27. வயது, அந்தஸ்து, ஜாதி அல்லது மதச்சலுகைகள் ஆகிய வேறுபாடுகள் எதுவுமின்றி அவரிடம் வந்து வாழும்படி அனைவரும் அழைக்கப்படுகின்றனர். "அவரை விசுவாசிக்கிறவன் எவனோ அவன் வெட்கப்படுவதில்லை" "யூதனென்றும் கிரேக்கனென்றுமில்லை. அடிமையென்றும் சுயாதீனனென்றுமில்லை." "ஐசுவரியவானும் தரித்திரனும் ஒருவரையொருவர் சந்திக்கிறார்கள்; அவர்கள் அனைவரையும் உண்டாக்கினவர் கர்த்தர்." "எல்லாருக்குங் கர்த்தரானவர் தம்மைத் தொழுதுகொள்ளுகிற யாவருக்கும் ஐசுவரியசம்பன்னராயிருக்கிறார். ஆதலால் கர்த்தருடைய நாமத்தைத் தொழுதுகொள்ளுகிற எவனும் இரட்சிக்கப்படுவான்"–கலாத்தியர் 3:28; நீதிமொழிகள் 22:2; ரோமர் 10:11–13. (16) ★

# 44

# மெய்யான அடையாளம்!

**மத்தேயு 15:29–39; 16:1–12; மாற்கு 7:31–37; 8:1–21**

**(The Desire of Ages, pp. 404–409)**

“மறுபடியும், அவர் தீரு சீதோன் பட்டணங்களின் எல்லைகளை விட்டுப் புறப்பட்டு, தெக்கப்போலியின் எல்லைகளின் வழியாய்க் கலிலேயாக் கடலருகே வந்தார்”—மாற்கு 7:31. (1)

கதரேனருடைய பட்டணத்திலுள்ள அசுத்த ஆவி பிடித்திருந்தவர்கள் தெக்கப்போலி என்று அழைக்கப்பட்ட இந்தப் பிரதேசத்தில்தான் சுகப்படுத்தப் பட்டிருந்தனர். இங்கிருந்த மனிதர்கள் தங்களுடைய பன்றிகள் மாண்டு போனதால் பயப்பட்டு, இயேசு அந்த இடத்தைவிட்டுப் போகவேண்டும் என்று வற்புறுத்தினர். ஆனால் அவர் விட்டுச்சென்ற தூதுவர்கள் சொன்னதை அவர்கள் கவனித்தனர். அதனால் அவரைக் காணவேண்டுமென்ற ஒரு ஆர்வம் அவர்களுக்குள் உண்டாயிற்று. அவர் மறுபடியும் அந்த இடத்திற்கு வந்தபோது, ஒருகூட்டம் அவரைச் சூழ்ந்துகொண்டது. செவிடனும் ஊமையனுமாயிருந்த ஒருவனை அவரிடத்திற்குக் கொண்டுவந்தனர். இயேசு அவரது வழக்கத்தின்படி ஒரு வார்த்தையினால் மாத்திரம் அவனைச் சுகப்படுத்தவில்லை. அவர் அவனை ஜனக்கூட்டத்திலிருந்து வெளியே அழைத்துச்சென்று, அவனது செவிகளில் அவரது விரல்களைவைத்து, அவனது நாக்கைத் தொட்டார். சத்தியத்தைக் கேட்பதற்குத் திறக்காமலிருந்த அந்தச் செவிகளையும், மீட்பரை ஏற்றுக்கொள்ள மறுத்திருந்த நினைவுகளையும் பற்றிய எண்ணத்தில் அவர் வானத்தை நோக்கிப் பெருமூச்செறிந்தார். “திறக்கப்படுவதாக” என்ற அந்த வார்த்தையில் அவனது பேசும் திறன் அவனுக்குத் திரும்பவந்தது. இதனை ஒருவருக்கும் தெரிவிக்கவேண்டாம் என்ற கட்டளையைப் புறக்கணித்து, தனக்குக் கிடைத்த சுகத்தை அவன் எங்கும்சென்று பறைசாற்றினான். (2)

இயேசு ஒரு மலையின்மீது ஏறிப்போனார். அங்கு திரளானவர்கள் அவரைச் சூழ்ந்து, தங்களுடைய முடவர்களையும் சுகவீனமானவர்களையும்

அவரது பாதத்தருகில் கொண்டுவந்து வைத்தனர். அவர்களனைவரையும் அவர் சுகப்படுத்தினார். அஞ்ஞான மார்க்கத்தாராக இருந்த அந்த மக்கள் இஸ்ரவேலின் தேவனை மகிமைப்படுத்தினார்கள். இரவு நேரத்தில் திறந்த வெளியில் உறங்கியும், பகலில் இயேசுவின் வார்த்தைகளைக் கவனிக்கவும், அவரது செயல்களைக் காணவும், அவர்கள் தொடர்ச்சியாக மூன்று நாட்களாக இரட்சகரை ஆவலுடன் நெருங்கிக் குழுமியிருந்தனர். மூன்றாம் நாள் முடிவில் அவர்களது உணவு தீர்ந்துவிட்டது. இயேசு அவர்களைப் பசியுடன் அனுப்பிவிட மனதில்லாதவராக அவர்களுக்கு உணவு வழங்கும்படி தமது சீடர்களுக்குச் சொன்னார். சீடர்கள் மீண்டும் தங்களுடைய அவிசுவாசத்தை வெளிக்காட்டினார்கள். அவர்களிடமிருந்த மிகச்சிறிய அளவிலான உணவு கிறிஸ்துவின் ஆசீர்வாதத்துடன் திரளானவர்களுக்கு எவ்விதமாகப் பகிர்ந்தளிக்கப்பட்டிருந்தது என்பதை கண்டிருந்தனர். அப்படியிருந்தும் பசியுள்ள கூட்டத்தினருக்கு உணவு வழங்கக்கூடிய அவரது வல்லமையின்மீது அவர்கள் நம்பிக்கை வைக்கவில்லை. தங்களிடமிருந்த உணவைப் பெருகும்படி அவரிடம் கொண்டுவரவுமில்லை.மேலும் முன்னர் பெத்சாயிதாவில் போஷிக்கப்பட்டிருந்தவர்கள் யூதர்களாக இருந்தனர். இவர்களோ புறஜாதியினராகவும் அஞ்ஞானிகளாகவும் இருந்தனர். யூதர்களிடமிருந்த தவறான எண்ணம் சீடர்கள் இதயங்களிலும் வலுவாக இருந்தது. எனவே அவர்கள் கிறிஸ்துவிற்கு "இந்த வனாந்தரத்திலே ஒருவன் எங்கேயிருந்து அப்பங்களைக் கொண்டுவந்து இத்தனை பேர்களைத் திருப்தியாக்கக்கூடும்" (மாற்கு 8:4) என்று பதில் கூறினார்கள். ஆனாலும் அவருடைய வார்த்தைக்குக் கீழ்ப்படிந்து தங்களிடமிருந்த ஏழு அப்பங்களையும் இரண்டு மீன்களையும் அவரிடத்தில் கொண்டுவந்தனர். அதனால் பெருங்கூட்டத்தினர் போஷிக்கப்பட்டனர். மீதமாயிருந்த அப்பங்களை ஏழு பெரும் கூடைகளில் சேகரித்தனர். பெண்களும் குழந்தைகளும் நீங்கலாக நான்காயிரம் ஆண்கள் இவ்விதமாகப் பசியாற்றப்பட்டனர். மகிழ்ச்சியுடனும் நன்றியால் நிறைந்த இதயங்களுடனும் இருந்த மக்களை இயேசு அனுப்பிவைத்தார். (3)

அதற்குப்பின் அவர் தமது சீடர்களுடன் படகிலேறி கெனேசரேத் சமவெளியின் தெற்கு ஓரத்திலிருந்த மக்தலா என்னுமிடத்திற்குக் கடந்து சென்றார். தீரு, சீதோன் எல்லையில் சிரோபெனிக்கேய பெண்ணின் உறுதியான நம்பிக்கையினால் அவரது ஆவி புத்துணர்வடைந்திருந்தது. தெக்கப்போலியிலிருந்த அஞ்ஞான மக்கள் அவரை மகிழ்ச்சியுடன் வரவேற்றனர். அவரது வல்லமை எங்கு மிகச் சிறப்பான விதத்தில் வெளிக்காட்டப்பட்டிருந்ததோ, எங்கு அவரது இரக்கத்தின் செயல்கள் அதிகமாகச் செயலாற்றப்பட்டிருந்ததோ, எங்கு அவரது போதனைகள்

கொடுக்கப்பட்டிருந்ததோ, எங்கு அவமதிப்பையும் அவநம்பிக்கையையும் அவர் சந்தித்திருந்தாரோ அந்த கலிலேயாவை அவர் இப்போது மறுபடியும் வந்தடைந்தார். (4)

சதுசேயர்கள் செல்வந்தர்களாகவும் பிரபுக்களாகவும் இருந்தனர். இவர்களுடைய பிரதிநிதிகளுடன் பரிசேயர்களின் பிரதிநிதிகள், சந்தேகவாதிகள், இந்த இனத்தின் மேட்டுக்குடி மக்கள் ஆகியோர் ஒன்று சேர்ந்திருந்தனர். பரிசேயர்கள் சதுசேயர்கள் ஆகிய இரு வகுப்பினரும் ஒருவருக்கொருவர் வைராக்கியமான எதிரிகளாக இருந்துவந்தனர். சதுசேயர்கள் தங்களுடைய சொந்த நிலைமையையும் அதிகாரத்தையும் தக்கவைத்துக்கொள்வதற்காக ஆளும் வல்லமையின் அதிகாரத்தைத் தேடியிருந்தனர். மற்றொரு பக்கத்தில் பரிசேயர்கள் ரோமர்களுக்கு எதிராக இருந்த பிரசித்தமான வெறுப்பைத் தூண்டிவிட்டு, தங்களை வெற்றிகொண்டிருந்தவர்களின் நுகத்தை முறிப்பதற்கான நேரத்தை எதிர்நோக்கி ஏங்கியிருந்தனர். ஆனால் இப்பொழுது கிறிஸ்துவிற்கு எதிராகப் பரிசேயர்களும் சதுசேயர்களும் ஒன்று சேர்ந்தனர். ஒத்ததை ஒத்ததே நாடுகிறது. தீமை எங்கு இருந்தபோதிலும் அது நன்மையை அழிப்பதற்காக தீமையுடன் கைகோர்த்துக்கொள்கிறது. (5)

இப்பொழுது பரிசேர்களும் சதுசேயர்களும் வானத்திலிருந்து ஒரு அடையாளத்தைக் காட்டும்படிக் கேட்டு கிறிஸ்துவிடம் வந்தனர். யோசுவாவின் நாட்களில் பெத்தொரான் என்னுமிடத்தில் கானானியர்களோடு யுத்தஞ்செய்வதற்காக இஸ்ரவேல் புறப்பட்டுச்சென்றபோது, வெற்றியடையும் வரை தலைவர்களின் கட்டளைப்படி சூரியன் தரித்து நின்றது. இப்படிப்பட்ட அநேக ஆச்சரியங்கள் அவர்களது வரலாற்றில் வெளிக்காட்டப்பட்டிருந்தன. இயேசுவிடமிருந்து அப்படிப்பட்ட ஏதாவது அடையாளம் கோரப்பட்டது. ஆனால் யூதர்களுக்குத் தேவைப்பட்டிருந்தது இந்த அடையாளங்களல்ல; வெறும் வெளித்தோற்றமான சாட்சிகள் அவர்களுக்கு நன்மை பயக்காது. அறிவுப்பூர்வமான வெளிச்சம் அல்ல, ஆவிக்குரிய எழுப்புதலே அவர்களுக்குத் தேவை. (6)

“மாயக்காரரே, வானத்தின் தோற்றத்தை நிதானிக்க உங்களுக்குத் தெரியுமே, காலங்களின் அடையாளங்களை நிதானிக்க உங்களால் கூடாதா?” என்று இயேசு கூறினார். பாவத்தைப்பற்றிய உணர்த்துதலை உண்டுபண்ணியிருந்த பரிசுத்த ஆவியின் வல்லமையுடன் பேசியிருந்த கிறிஸ்துவின் சொந்த வார்த்தைகள் அவர்களது இரட்சிப்பிற்காக தேவனால் அருளப்பட்ட அடையாளமாக இருந்தது. கிறிஸ்துவின் ஊழியத்திற்குச் சான்றுபகரும் அடையாளம் பரலோகத்திலிருந்து நேரடியாகக் கொடுக்கப்

பட்டிருந்தது. மேய்ப்பர்களிடம் தேவதூதர்கள் பாடின பாடல், ஞானிகளை வழிநடத்தின நட்சத்திரம், அவரது ஞானஸ்நானத்தின்போது காணப்பட்ட புறா, வானத்திலிருந்து உண்டான சத்தம், ஆகியவை அவருக்கான அடையாளங்களாக இருந்தன. (7)

“அவர் தம்முடைய ஆவியில் பெருமூச்சுவிட்டு: இந்தச் சந்ததியார் அடையாளம்தேடுகிறதென்ன?” “யோனா தீர்க்கதரிசியின் அடையாளமேயன்றி வேறே அடையாளம் இவர்களுக்குக் கொடுக்கப்படுவதில்லை” என்றார். யோனாவின் பிரசங்கம் நினிவே மக்களுக்கு ஒரு அடையாளமாக இருந்தது போல, கிறிஸ்துவின் போதனை அவரது தலைமுறையினருக்கு ஒரு அடையாளமாக இருந்தது. ஆனால் வார்த்தையை ஏற்றுக்கொண்டதில் எப்படிப்பட்ட வேற்றுமை இருந்தது? தேவனிடமிருந்து வந்த எச்சரிப்பைக் கேட்டபோது, அந்தப் பெரும் அஞ்ஞான நகர மக்கள் நடுங்கினர்.அரசர்களும் பிரபுக்களும் தங்களைத் தாழ்த்தினர். மேலானவர்களும் கீழானவர்களும் பரலோகத்தின் தேவனை நோக்கிக் கதறினர். அவரது இரக்கம் அவர்களுக்கு அனுமதிக்கப்பட்டது. “யோனா இரவும் பகலும் மூன்றுநாள் ஒரு பெரிய மீனின் வயிற்றில் இருந்ததுபோல, மனுஷகுமாரனும் இரவும் பகலும் மூன்றுநாள் பூமியின் இருதயத்தில் இருப்பார். யோனாவின் பிரசங்கத்தைக் கேட்டு நினிவே பட்டணத்தார் மனந்திரும்பினார்கள். இதோ, யோனாவிலும் பெரியவர் இங்கே இருக்கிறார். ஆதலால் நியாயத்தீர்ப்புநாளிலே நினிவே பட்டணத்தார் இந்தச் சந்ததியாரோடெழுந்து நின்று இவர்கள்மேல் குற்றஞ்சுமத்துவார்கள்” (மத்தேயு 12:40,41) என்றார். (8)

கிறிஸ்து செய்த ஒவ்வொரு அற்புதமும் அவரது தெய்வீகத்தின் அடையாளமாக இருந்தது. மேசியாவைப்பற்றி முன்னுரைக்கப்பட்டிருந்த அதே செயல்களை அவர் செய்துகொண்டிருந்தார். ஆனால் இரக்கத்தின் இந்தச் செயல்கள் பரிசேயர்களுக்கு எதிரான குற்றமாக இருந்தன. மனிதர்களின் துன்பங்களை யூதத்தலைவர்கள் இதயமற்ற அக்கறையின்மையோடு நோக்கியிருந்தனர். அவர்களது சுயநலம், மற்றவர்களை ஒடுக்கும் குணம் ஆகியவைகளின் காரணமாக உண்டாகியிருந்த துன்பங்களுக்குக் கிறிஸ்து நிவாரணமளித்திருந்தார். இப்படியாக அவர் செய்த அற்புதங்கள் அவர்களுக்கு கண்டனங்களாக இருந்தன. (9)

இரட்சகரின் கிரியைகளைப் புறக்கணிக்கும்படி யூதர்களை எது நடத்தியிருந்ததோ, அது அவரது மிக மேலான தெய்வீக குணத்திற்குச் சான்றாக இருந்தது. அவர் நிகழ்த்திய அற்புதங்களில் இருந்த முக்கியத்துவம் என்னவெனில்: அவை மனித இனத்திற்கான ஆசீர்வாதமாகக் காணப்பட்டிருந்தன என்பதுதான். அவர் தேவனிடத்திலிருந்து வந்தார் என்பதற்கான மிக மேலான

சான்று என்னவெனில்: அவருடைய வாழ்க்கை தேவனுடைய குணத்தை வெளிக்காட்டியது என்பதுதான். அவர் தேவனுடைய செயல்களைச் செய்து அவருடைய வார்த்தைகளைப் பேசியிருந்தார். அப்படிப்பட்ட ஒரு வாழ்க்கை, எல்லாவிதமான அற்புதங்களிலும் மிக மேலானதாக உள்ளது. (10)

நமது காலத்தில் சத்தியத்தின் தூது பிரசங்கிக்கப்படும்போது, யூதர்களைப்போலவே அநேகர் எங்களுக்கு ஒரு அடையாளத்தைக் காட்டுங்கள்; எங்களுக்கு ஒரு அற்புதத்தைச் செய்யுங்கள் என்று கூச்சலிடுகின்றனர். பரிசேயர்களின் கோரிக்கைகளுக்கு இணங்கி, கிறிஸ்து ஒரு அற்புதத்தையும் செய்யவில்லை. வனாந்தரத்தில் சாத்தான் செய்த சூழ்ச்சிக்குப் பதிலளிக்கும்வகையில் அவர் ஒரு அற்புதத்தையும் செய்யவில்லை. நம்பிக்கையின்மை, அகந்தை ஆகியவைகளின் கோரிக்கைகளைத் திருப்திப்படுத்துவதற்காக தம்மை நியாயப்படுத்திக்காட்டுவதற்கான வல்லமையை அவர் நமக்குத் தருவதில்லை. ஆனால் சுவிசேஷம் அதன் தெய்வீக ஆரம்பத்தையுடைய ஒரு அடையாளமாக இருந்தது. சாத்தானின் அடிமைத்தளையை நம்மால் உடைத்தெறிய முடியும் என்பது ஒரு அற்புதமில்லையா? சாத்தானுக்கு எதிரான பகை மனித இருதயத்திற்கு இயல்பானதல்ல. அது தேவனுடைய கிருபையினால் மனதில் பதிவை ஏற்படுத்துகிறது. பிடிவாதமாக மனம்போனபோக்கில் வாழும் மனதினால் கட்டுப்படுத்தப்பட்டிருக்கும் ஒருவன் விடுதலையாக்கப்படும்போது, தேவனுடைய பரலோக ஏதுகரங்களுக்குத் தன்னை இணங்கச்செய்யும்போது, ஒரு அற்புதம் நிகழ்த்தப்படுகிறது. பலத்த மாயையிலிருந்து விடுபட்டு சத்தியத்தைப் புரிந்துகொள்ள வருவதும் அதைப்போன்றதாகவே உள்ளது. ஒரு ஆத்துமா மனமாற்றமடைந்து, தேவனை நேசிக்கக் கற்றுக்கொண்டு, அவருடைய கற்பனைகளைக் கைக்கொள்ளும் ஒவ்வொரு நேரத்திலும் தேவனுடைய வாக்குத்தத்தம் நிறைவேறுகிறது. “உங்களுக்கு நவமான இருதயத்தைக் கொடுத்து, உங்கள் உள்ளத்திலே புதிதான ஆவியைக் கட்டளையிட்டு, கல்லான இருதயத்தை உங்கள் மாம்சத்திலிருந்து எடுத்துப்போட்டு, சதையான இருதயத்தை உங்களுக்குக் கொடுப்பேன்”– எசேக்கியேல் 36:26. மனித இதயங்களில் உண்டாகும் ஒரு மாற்றம் ஆத்துமாக்களை மீட்க என்றும் வாழும் ஒரு இரட்சகர் இருக்கிறார் என்பதை வெளிப்படுத்திக்காட்டும் ஒரு அற்புதமாக இருக்கின்றது. கிறிஸ்துவிற்குள் உள்ள ஒரு அசைவுமிக்க வாழ்க்கை, பெரும் அற்புதமாக உள்ளது. தேவனுடைய வார்த்தையை பிரசங்கிப்பதில் இப்பொழுதும் எப்பொழுதும் வெளிக்காட்டப்படும் அடையாளம் என்னவெனில்: அந்த வார்த்தையைக் கேட்பவரைப் புத்துயிர் அடையச்செய்யும் வல்லமையை உடையதாக

இருக்கச்செய்வது பரிசுத்த ஆவியானவரின் பிரசன்னமே என்பதுதான். அவரது குமாரனின் தெய்வீக ஊழியத்திற்கு உலகத்திற்குமுன் தேவனுடைய சாட்சியாக இருக்கிறது. (11)

இயேசுவிடமிருந்து ஒரு அடையாளத்தை விரும்பினவர்கள் அவநம்பிக்கையினால் மிகவும் அதிகமான இதயக்கடினமடைந்தவர்களாக இருந்தனர். அவர்கள் அவரது குணத்தில் தேவனின் சாயலை சரியாகப் புரிந்துகொள்ளவில்லை. வேதவாக்கியங்களின் நிறைவேறுதலாக அவரது ஊழியம் இருக்கிறது என்பதை அவர்கள் காணமுடியாதவர்களாக இருந்தனர். ஐசுவரியவானும் லாசருவும் என்னும் உவமையில் இயேசு பரிசேயர்களிடம்: "அவர்கள் மோசேக்கும் தீர்க்கதரிசிகளுக்கும் செவிகொடாவிட்டால், மரித்தோரிலிருந்து ஒருவன் எழுந்துபோனாலும், நம்பமாட்டார்கள்" (லூக்கா 16:31) என்று கூறியிருந்தார். வானத்திலிருந்து அல்லது பூமியிலிருந்து உண்டாகக்கூடிய எந்த அடையாளமும் அவர்களுக்குப் பயன்தரமுடியாததாக இருந்தது. (12)

இயேசு ஆவியில் பெருமூச்சுவிட்டு, குற்றங்காண்பவர்களின் கூட்டத்தைவிட்டுத் திரும்பி, அவரது சீடர்களுடன் மீண்டும் படகில் ஏறினார். துயரமிக்க மௌனத்துடன் அவர்கள் மீண்டும் அந்த ஏரியைக் கடந்துசென்றனர். அப்படியிருந்தபோதிலும் அவர்கள் எந்த இடத்தைவிட்டுச் சென்றிருந்தார்களோ, அந்த இடத்திற்குத் திரும்பாமல், எங்கு முன்பு ஐயாயிரம் பேர்கள் போஷிக்கப்பட்டிருந்தனரோ, அந்த பெத்சாயிதாவிற்குத் திரும்பி னார்கள். அக்கரையை அடைந்ததும் இயேசு அவர்களை நோக்கி: "பரிசேயர் சதுசேயர் என்பவர்களின் புளித்த மாவைக்குறித்து எச்சரிக்கையாயிருங்கள்" என்றார். மோசேயின் நாட்களிலிருந்து பஸ்கா பண்டிகையின் காலத்தில் புளிப்பைத் தங்களிடமிருந்து விலக்குகின்ற வழக்கம் உடையவர்களாக இஸ்ரவேலர் இருந்து, அதைப் பாவத்தின் ஒரு அடையாளமாகக் காணும்படி போதிக்கப்பட்டிருந்தனர். அப்படியிருந்தும் இயேசு கூறியதன் பொருளைச் சீடர்கள் புரிந்துகொள்ளவில்லை. மக்தலாவிலிருந்து புறப்பட்டபோது, தங்களுடன் அப்பங்களை எடுத்துச்செல்ல மறந்திருந்தனர். அவர்களிடம் ஒரு அப்பத்துணிக்கைமட்டுமே இருந்தது. இந்தச் சூழ்நிலையில் பரிசேயர் களிடமிருந்தோ அல்லது சதுயேசர்களிடமிருந்தோ அப்பங்களை வாங்காதீர்கள் என்ற எச்சிரிப்பைத்தான் கிறிஸ்து குறிப்பிடுகிறார் என்று அவர்கள் புரிந்துகொண்டனர். அவர்களது விசுவாசமின்மையும் ஆவிக்குரிய அகப்பார்வையின்மையும் அவரது வார்த்தைகளை தவறாகக் கருதும்படி பெரும்பாலும் வழிநடத்தியிருந்தன. ஆயிரக்கணக்கானவர்களைச் சில மீன்களினாலும் வாற்கோதுமை அப்பங்களினாலும் போஷித்திருந்தவர்,

பக்திவிநயமான இந்த எச்சரிப்பில் உலகப்பிரகாரமான உணவைப்பற்றித்தான் குறிப்பிடுகிறார் என்ற சீடர்களின் எண்ணத்திற்காக இயேசு அவர்களைக் கடிந்துகொண்டார். பரிசேயர்கள் சதுசேயர்களின் தந்திரமான உபாயங்கள் தமது சீடர்களின் அவநம்பிக்கையினால் அவர்களைப் புளிப்படையச்செய்து கிறிஸ்துவின் ஊழியங்களை மலிவானதாகக் கருதச்செய்யக்கூடிய அபாயம் அதில் இருந்தது. (13)

வானத்திலிருந்து ஒரு அடையாளத்தைக் காட்டவேண்டுமென்ற பரிசேயர்கள், சதுசேயர்களின் கோரிக்கையை அவர்களது ஆண்டவர் அனுமதித்திருக்கவேண்டும் என்று சீடர்கள் சிந்திக்கும்படி நடத்தப்பட்டனர். அதைச்செய்ய அவர் முற்றிலும் தகுதியுடையவராக இருக்கிறார் என்று அவர்கள் நம்பினார்கள். அப்படிப்பட்ட ஒரு அடையாளம் அவர்களது எதிரிகளை மௌனப்படுத்திவிடும் என்றும் அவர்கள் நம்பினார்கள். இவ்வாறு குற்றங்காண்பவர்களின் மாய்மாலத்தை அவர்கள் தெளிவாக புரிந்துகொள்ளவில்லை (14)

பல மாதங்கள் கடந்தபின்னர், "மாயமாகிய பரிசேயருடைய புளித்த மாவைக்குறித்து எச்சரிக்கையாயிருங்கள்" (லூக்கா 12:1) என்று இதே வார்த்தைகளை அவர் மறுபடியும் கூறினார். (15)

உணவில் கலக்கப்படும் புளிப்பு உணரமுடியாதவிதத்தில் செயல்பட்டு உணவு முழுவதையும் புளிப்புத்தன்மையுடையதாக மாற்றிவிடுகிறது. அப்படியே மாய்மாலம் இருதயத்தில் இருக்க அனுமதிக்கப்படுமானால் அது குணத்தையும் வாழ்க்கையையும் ஊடுருவிச்சென்றுவிடும். பெற்றோருக்குச் செய்யயவேண்டிய கடமையைச் செய்யாமல், அதனைக் கொர்பான் என்னும் காணிக்கையாகிய போர்வையின்கீழ் ஆலயத்திற்கு மானியம் என்று அறிவித்து, கடமையைச் செய்வதிலிருந்து வழுவிவிடும் முறையை பரிசேயர்களும் பிறரும் ஏற்படுத்தியிருந்தனர். பரிசேயர்கள் சதுசேயர்கள் ஆகியோரின் இந்த அலட்சியமான நடத்தையை—மாய்மாலத்தை இயேசு ஏற்கெனவே கடிந்துகொண்டிருந்தார். இது ஒரு குறிப்பான உதாரணமாக இருந்தது. வேதபாரகர்களும் பரிசேயர்களும் வஞ்சகமிக்க கொள்கைகளை உட்புகுத்திக்கொண்டிருந்தனர். அவர்கள் தங்களுடைய கோட்பாடுகளின் உண்மையான தன்மையை மறைத்து, அவைகளை அதைக் கேட்பவர்களின் உள்ளங்களில் தந்திரமாக புகுத்துவதற்கான ஒவ்வொரு சந்தர்ப்பத்தையும் முன்னேறச்செய்திருந்தனர். ஒருதடவை உணவில் கலக்கப்பட்ட புளிப்பு செயலாற்றுவதுபோல இந்தத் தவறான கொள்கைகள் ஒருதடவை ஏற்றுக்கொள்ளப்பட்டுவிட்டால், அது ஊடுருவி குணத்தை மாற்றக்கூடியதாக உள்ளது. வஞ்சகமிக்க இந்தப் போதனைதான் கிறிஸ்துவின்

வார்த்தைகளை ஏற்றுக்கொள்ளுவதை மக்களுக்குக் கடினமாக்கியிருந்தது. “தங்களுடைய நடத்தைகளுக்கு இசைவானவிதத்தில் இருக்கும்படி தேவப்பிரமாணத்தை விளக்கும் முயற்சியில் இதே செல்வாக்குகள் இன்றும் செயல்பட்டுக்கொண்டுள்ளன. இந்த வகுப்பினர் தேவப்பிரமாணத்திற்கு எதிராக வெளிப்படையான தாக்குதலை நடத்துவதில்லை. ஆனால் அவைகள் கொள்கைகளின் அடிமட்டத்தைத் தகர்க்கும்படி, மறைமுகமாகச் சூழ்ச்சிசெய்கின்ற, யூகம் சார்ந்த விளக்கங்களை முன்வைக்கின்றனர். அதன் வலிமையை அழிக்கும்விதத்தில் அவர்கள் விளக்கம் தருகின்றனர். (16)

பரிசேயர்களின் மாய்மாலம் சுயத்தை தேடுதல் என்பதின் விளைவாக இருந்தது. தங்களைத் தாங்களே மகிமைப்படுத்திக்கொள்ளுதல் என்பது அவர்களது வாழ்க்கையின் குறிக்கோளாக இருந்தது. இதுதான் வேதவாக்கியங்களைத் திரிபுசெய்து தவறாகப் பயன்படுத்த அவர்களை நடத்தியது. இது கிறிஸ்துவின் ஊழியத்தைப்பற்றி அவர்களைக் குருடாக்கியிருந்தது. கிறிஸ்துவின் சீடர்களுங்கூட இந்தத் தந்திரமான தீமையை மனதார நேசிக்கும் அபாயம் இருந்தது. இயேசுவின் சீடர்களாவதற்காக அனைத்தையும் விட்டுவிடாதவர்களாக இருந்து, இயேசுவின் அடியார்களுடன் தங்களைத்தாங்களாகவே வைத்திருந்தவர்கள் பரிசேயர்களின் வாதத்தினால் பெருமளவிற்கு ஆட்கொள்ளப்பட்டிருந்தனர். அவர்கள் கிறிஸ்துவில் இருந்த ஞானத்தின் பொக்கிஷங்களை அறியாது, விசுவாசம் விசுவாசமின்மை ஆகிய இரண்டிற்கும் நடுவில் அசைந்தாடிக்கொண்டிருந்தனர். சீடர்களுங்கூட இயேசுவிற்காக எல்லாவற்றையும் விட்டுவிட்டதாக வெளிப்படையாகக் காணப்பட்டிருந்தபோதிலும், தங்கள் இருதயங்களில் தங்களுக்கான மேலானவைகளைத் தேடுவதிலிருந்து விடுபட்டிருக்கவில்லை. தங்களுக்குள் யார் பெரியவன் என்னும் கலகத்தை இந்த ஆவிதான் தூண்டியது. இதுதான் அவர்களுக்கும் கிறிஸ்துவிற்கும் இடையில் வந்து, தற்தியாகம் செய்யும் அவரது ஊழியத்தை மிக அற்பமானதாகக் கருத அவர்களை நடத்தியது. இதுதான் மீட்பின் இரகசியத்தை அறிவதில் அவர்களை மந்தமடையச் செய்தது. புளிப்பு அதன் வேலையை நிறைவாகச் செய்யயும்படி அனுமதிக்கப்பட்டால் அழிவைக்கொண்டுவரும். சுயத்தை நாடும் ஆவியும் அதைப்போலவே செயலாற்றுகிறது. அது நெஞ்சார நேசித்து பேணப்படுமானால் ஆத்துமாவில் அசுத்தத்தையும் அழிவையும் உண்டுபண்ணிச் செயலாற்றும். (17)

முற்காலத்தைப்போலவே இன்றைக்கும் நமது கர்த்தரைப் பின்பற்று பவர்களுக்கிடையில் தந்திரமும் வஞ்சகமுமிக்க பாவம் எவ்வளவு அதிகமாகப் பரவியிருக்கிறது! தன்னை உயர்த்தும் இரகசியமான வாஞ்சை காரணமாக கிறிஸ்துவிற்கான நமது சேவையும் ஒருவருடனுள்ள ஒருவரது உறவும்

எவ்விதமாக அடிக்கடி சீர்குலைகின்றது! சுயத்தை மேன்மைப்படுத்தும் எண்ணம் மனிதர்களால் அங்கீகரிக்கப்படவேண்டும் என்ற ஏக்கம் ஆகியவை எவ்வளவு ஆபத்தாக இருக்கிறது! சுயத்தின்மீதுள்ள ஆசை தேவன் ஏற்படுத்தியுள்ள பாதையைவிட இலகுவாக உள்ளவற்றின்மீதுள்ள விருப்பம் ஆகியவை மனித தத்துவ விளக்கங்களையும் பாரம்பரியங்களையும் தெய்வீகக் கட்டளைகளுக்குப் பதிலாகப் பின்பற்றும்படி நடத்துகின்றன. "பரிசேயருடைய புளித்தமாவைக்குறித்து எச்சரிக்கையாயிருங்கள்" என்னும் கிறிஸ்துவின் வார்த்தைகள் அவரது சொந்த சீடர்களிடம் பேசப்பட்டுள்ளன. (18)

உண்மையாயிருத்தல் என்பதுவே கிறிஸ்துவின் மார்க்கமாக இருக்கிறது. தேவனுடைய மகிமைக்கான வைராக்கியமாக இருக்கவேண்டும் என்பதே பரிசுத்த ஆவியினால் உள்ளத்திலே பதிக்கப்படும் நோக்கமாக இருக்கிது. ஆவியின் பலன்தரும் ஊக்கமான செயலினால் மாத்திரமே இந்தச் செயல்நோக்கத்தைப் பதியவைக்கமுடியும். சுயத்தைத் தேடுவதையும் மாய்மாலத்தையும் தேவனுடைய வல்லமையினால் மட்டுமே விரட்டியடிக்க முடியும். இந்த மாற்றம் அவரது செயலில் அடையாளமாக உள்ளது. நாம் ஏற்கும் விசுவாசம், சுயநலத்தையும் பாசாங்கையும் அழிக்கும்போது, நமது சொந்த மகிமையைத் தேடாமல் தேவனுடைய மகிமையைத் தேட நடத்தும்போது, அதன் சரியான ஒழுங்கில் இருக்கிறது என்பதை நாம் அறிந்துகொள்ளமுடியும். பிதாவே, உம்முடைய நாமம் மகிமைப்படுவதாக என்பதுவே கிறிஸ்துவின் வார்த்தையின் கருப்பொருளாக இருந்தது. நாம் அவரைப் பின்பற்றினால் நமது வாழ்க்கையின் கருப்பொருளாக அது இருக்கும். "அவருக்குள் நிலைத்திருக்கிறேனென்று சொல்லுகிறவன், அவர் நடந்தபடியே தானும் நடக்கவேண்டும்." "அவருடைய கற்பனைகளை நாம் கைக்கொள்ளுகிறவர்களானால், அவரை அறிந்திருக்கிறோமென்பதை அதினால் அறிவோம்"–1 யோவான் 2:6,3. (19) ★

# 45

# சிலுவையின் முன்னடையாளம்!

**மத்தேயு 16:13–28; மாற்கு 8:27–38; லூக்கா 9:18–27**

**(The Desire of Ages, pp. 410–418)**

கிறிஸ்துவின் உலக ஊழியம் அதன் முடிவை நோக்கி விரைந்துகொண்டிருந்தது. அவரது பாதங்கள் நடந்துசெல்லும் பாதையின் காட்சிகள் அவர்முன் தெளிவாக உள்ளன. அவர் தம்மீது மானிட இயல்பை எடுத்துக்கொள்ளுவதற்குமுன்பே தொலைந்துபோனதை இரட்சிப்பதற்காக பயணஞ்செய்யவேண்டியதாக இருந்த பாதையின் முழு நீளத்தையும் கண்டார். தமது தெய்வத்துவத்தை மனிதத்துவத்தால் போர்த்துக்கொள்ளுவதற்காக தமது கிரீடத்தையும் அரச உடையையும் கழற்றிவைத்துவிட்டு. தமது சிங்காசனத்தைவிட்டுக் கீழிறங்கினார். அவரது இருதயத்தைக் கிழிக்கவிருந்த ஒவ்வொரு வேதனையும் அவரது சிரசின்மீது குவிக்கப்படவிருந்த ஒவ்வொரு அவமானமும் அவர் சகிக்கும்படி அழைக்கப் பட்டிருந்த தனிமை ஒவ்வொன்றும் அதற்கு முன்பாகவே அவரது பார்வையில் நின்றிருந்தது. தொழுவத்திலிருந்து கல்வாரி வரையிலான பாதை அவரது கண்களுக்குமுன்பாக இருந்தது. அவர்மீது வரவிருந்த வேதனையை அவர் அறிந்திருந்தார். அவைகளனைத்தையும் அவர் அறிந்திருந்தும்: "இதோ, வருகிறேன், புஸ்தகச்சுருளில் என்னைக்குறித்து எழுதியிருக்கிறது" (சங்கீதம் 40:7,8) என்று கூறினார். (1)

அவரது உழியத்தின் பலனை அவர்முன் எப்போதும் அவர் கண்டிருந்தார். கடும்உழைப்பும் தற்தியாகமும் நிறைந்ததாக இருந்த அவரது பூமிக்குரிய வாழ்க்கையில் இந்தத் துன்பங்களனைத்தும் பலனின்றி வீணாகப்போகாது என்னும் எண்ணத்தால் அவர் உற்சாகப்படுத்தப்பட்டிருந்தார். மனிதர்களின் ஜீவனுக்காகத் தமது ஜீவனைக் கொடுப்பதினால் அவர் இந்த உலகத்தை தேவன்மீது பக்திவிசுவாசமிக்கதாக்கி, மீண்டும் வெற்றியுடன் பெற்றுக்கொள்வார். இரத்தத்தினாலான ஞானஸ்நானத்தை முதலில் பெறவேண்டியதாக இருந்த போதிலும், குற்றமில்லாத அவரது ஆத்துமாவின்மீது இந்த உலகத்தின் பாரம் அழுத்தவேண்டியதாக இருந்தபோதிலும், சொல்லமுடியாத துன்பத்தின்

நிழல் அவர்மீது படிந்திருந்தபோதிலும், அவருக்குமுன் வைக்கப்பட்டிருந்த மகிழ்ச்சியை எண்ணி, சிலுவையையும் நிந்தையையும் அவமானத்தையும் சகித்துக்கொள்வதைத் தெரிந்துகொண்டார். (2)

அவரது ஊழியத்தில், அவரால் தெரிந்துகொள்ளப்பட்டிருந்த தோழர்களின் பார்வையிலிருந்து அவர்முன் இருந்த இந்தக் காட்சிகள் மறைத்துவைக்கப்பட்டிருந்தன. ஆனால் அவரது கடுந்துயரை அவர்கள் காணவேண்டியதாக இருந்த நேரம் நெருங்கிக்கொண்டிருந்தது. அவர்கள் நம்பியும் நேசித்துமிருந்த அவர், அவரது எதிரிகளின் கையில் ஒப்புக்கொடுக்கப் படுவதையும், அவர் கல்வாரியின் சிலுவையில் தொங்குவதையும், அவர்கள் காண்டாகவேண்டும். காணக்கூடிய அவரது பிரசன்னத்தின் ஆறுதல் இல்லாமல் இந்த உலகத்தை அவர்கள் சந்திக்கும்படி, அவர் அவர்களை விட்டுவிட்டுச் சென்றாகவேண்டும். வெறுப்பும் நம்பிக்கையின்மையும் அவர்களை எவ்வளவு கடுமையாக உபத்திரவப்படுத்தும் என்பதை அவர் அறிந்து, அந்தச் சோதனைகளுக்கு அவர்களை ஆயத்தப்படுத்த விரும்பினார். (3)

இப்பொழுது இயேசுவும் அவரது சீடர்களும் செசரியா பிலிப்பி பட்டணங்களில் ஒன்றுக்கு வந்திருந்தனர். அவைகள் கலிலேயாவின் எல்லைக்கு அப்பாலிருந்தன. இந்தப் பிரதேசத்தில் விக்கிரக ஆராதனை நிலவியிருந்தது. இங்கு யூத மார்க்கத்தின் கட்டுப்பாட்டின் ஆதிக்கத்திலிருந்து சீடர்கள் பின்வாங்கப்பட்டு, அஞ்ஞானத் தொழுகை செய்பவர்களுக்கருகில் நெருங்கிவர வேண்டியதாயிற்று. உலகின் சகல பகுதிகளிலுமிருந்த மூட நம்பிக்கையை எடுத்துக்காட்டும் அமைப்புகள் அவர்களைச் சுற்றிலும் இருந்தன. இவைகளைப்பற்றிய ஒரு பார்வையானது அஞ்ஞானிகளிடம் சீடர்களுக்கு இருக்கவேண்டிய பொறுப்பை உணரச்செய்ய வழிநடத்தும் என்று இயேசு விரும்பினார். இந்தப் பிரதேசத்தில் அவர் தங்கியிருந்தபோது, மக்களுக்குப் போதனைசெய்வதிலிருந்து விலகி, அந்த நேரத்தை சீடர்களுக்கென்று முற்றிலுமாகச் செலவிடமுயன்றார். (4)

அவரை எதிர்நோக்கியிருந்த பாடுகளைப்பற்றி அவர்களிடம் அவர் கூறுவதற்கிருந்தார். ஆனால் அவரது வார்த்தைகளை அவர்களது இருதயங்களில் பெற்றுக்கொள்வதற்கு அவர்கள் ஆயத்தமாகவேண்டும். அதற்காக அவர் முதலில் தனியே சென்று அவர்களுக்காக ஜெபஞ்செய்தார். அவர்களது மனதில் எவைகளைப் புகட்டவேண்டுமென்று அவர் விரும்பியிருந்தாரோ, அவைகளை உடனே தெரியப்படுத்தவில்லை. வரவிருக்கும் சோதனைக்கு அவர்கள் பலப்படுத்தப்படவேண்டும். அதற்காக அவர்மீதுள்ள விசுவாசத்தை அவர்கள் அறிக்கைசெய்வதற்கு ஒரு வாய்ப்பை

அவர்களுக்குக் கொடுத்தார். "மனுஷகுமாரனாகிய என்னை ஜனங்கள் யார் என்று சொல்லுகிறார்கள்" என்று கேட்டார். (5)

இஸ்ரவேலர்கள் தங்களுடைய மேசியாவை ஏற்றுக்கொள்ளத் தவறிவிட்டனர் என்பதை ஒப்புக்கொள்ள சீடர்கள் வருத்தத்துடன் வற்புறுத்தப் பட்டனர். மெய்யாகவே சிலர் அவர் செய்த அற்புதங்களைக் கண்டபோது, அவர் தாவீதின் குமாரன் என்று அறிவித்திருந்தனர். பெத்சாயிதாவில் போஷிக்கப்பட்ட திரளானவர்கள் அவரை இஸ்ரவேலின் அரசர் என்ற அறிக்கைசெய்ய விரும்பினர். அவரை ஒரு தீர்க்கதரிசி என்று ஒப்புக்கொள்ள அநேகர் ஆயத்தமாக இருந்தனர். ஆனால் அவர்தான் மேசியாவென்று அவர்கள் நம்பவில்லை. (6)

இப்பொழுது இயேசு சீடர்களுடன் சம்பந்தப்பட்ட இரண்டாவது கேள்வியை அவர்களிடமே கேட்டார். "நீங்கள் என்னை யார் என்று சொல்லுகிறீர்கள்" என்றார். அதற்கு: "நீர் ஜீவனுள்ள தேவனுடைய குமாரனாகிய கிறிஸ்து" என்று பேதுரு பதில் கூறினான். (7)

பேதுரு ஆரம்பத்திலிருந்தே இயேசுதான் மேசியா என்று நம்பியிருந்தான். யோவான் ஸ்நானகனின் பிரசங்கத்தினால் மன உணர்த்துதலையடைந்து கிறிஸ்துவை ஏற்றுக்கொண்டிருந்த மற்றும் அநேகர், யோவான் ஸ்நானகன் சிறையில் வைக்கப்பட்டு மரணத்திற்குள்ளானபோது, யோவானுடைய ஊழியத்தைப்பற்றிச் சந்தேகிக்கத் தொடங்கினர். இப்போது, நீண்டகாலமாக எதிர்பார்த்திருந்த மேசியா இயேசுதானோ என்று சந்தேகமடைந்தனர். இயேசு தாவீதின் சிங்காசனத்தில் அரசராக அமர்வார் என்று உறுதியாக எதிர்பார்த்திருந்த அவருடைய சீடர்களில் அநேகர், அவருக்கு அப்படிப்பட்ட விருப்பம் இல்லை என்பதை உணர்ந்தவுடன் அவரைவிட்டுப் பிரிந்துசென்றனர். ஆனால் பேதுருவும் அவனது தோழர்களும் அவரது உறவைவிட்டுப் பிரியவில்லை. நேற்றுவரை அவரைப் புகழ்ந்திருந்து, இன்று அவரைப் பழித்தவர்களின் உறுதியில்லாத நடத்தை இரட்சகரின் உண்மையான அடியார்களிடமிருந்த விசுவாசத்தை அழிக்கவில்லை. "நீர் ஜீவனுள்ள தேவனுடைய குமாரனாகிய கிறிஸ்து" என்று பேதுரு அறிக்கைசெய்தான். அவன் அவரது அரசமேன்மையில் அவருக்குக் கிரீடம் சூட்டக் காத்திராமல் அவரது அவமானமான நிலைமையில் அவரை ஏற்றுக்கொண்டான். (8)

பன்னிருவரின் விசுவாசத்தையும் பேதுரு வெளிப்படுத்தினான். அப்படியிருந்தும் கிறிஸ்துவின் ஊழியத்தைப்பற்றிப் புரிந்துகொள்ளுவதில் சீடர்கள் இன்னும் வெகுதூரத்தில் இருந்தனர். ஆசாரியர்கள் அதிபதிகளால் உண்டான எதிர்ப்பு, தவறான எடுத்துக்காட்டுதல் ஆகியவைகளால் சீடர்களைக் கிறிஸ்துவைவிட்டுத் திருப்ப முடியாமலிருந்தபோதிலும், அவை

அவர்களுக்குப் பெரும் குழப்பத்திற்குக் காரணமாக இருந்தன. அவர்களுடைய பாதையை அவர்கள் தெளிவாகக் காணவில்லை. அவர்களுடைய ஆரம்பகாலப் பயிற்சியின் செல்வாக்கு, ரபிமார்களின் போதனை, பாரம்பரியத்தின் வல்லமை ஆகியவை இன்னும் சத்தியத்தைப்பற்றிய அவர்களது பார்வையை வழிமறித்திருந்தன. அவ்வப்போது ஒளியின் விலைமதிப்புமிக்க கதிர்கள் இயேசுவிடமிருந்து அவர்கள்மீது பிரகாசித்தது. அப்படியிருந்தும் அவர்கள் அடிக்கடி நிழல்களுக்கு மத்தியில் தடவித்திரியும் மனிதர்களைப்போலிருந்தனர். ஆனால் இந்த நாளில் அவர்களுடைய விசுவாசத்தைப்பற்றிய பெரும் சோதனை அவர்களுக்கு முகமுகமாகக் கொண்டுவரப்படுவதற்குமுன் பரிசுத்த ஆவி அவர்கள்மீது வல்லமையுடன் தங்கினார். சற்றுநேரத்திற்குக் காணப்படுகிறவைகளிலிருந்து காணப்படாதவைகளைப் பார்க்கும்படி அவர்களது கண்கள் திருப்பப்பட்டன. மானுடன் என்னும் திரையின்கீழ் தேவகுமாரனுடைய மகிமையை அவர்கள் அறிந்துகொண்டனர். (9)

“யோனாவின் குமாரனாகிய சீமோனே, நீ பாக்கியவான்; மாம்சமும் இரத்தமும் இதை உனக்கு வெளிப்படுத்தவில்லை, பரலோகத்திலிருக்கிற என் பிதா இதை உனக்கு வெளிப்படுத்தினார்” என்று இயேசு பேதுருவைப் பார்த்து பதில் கூறினார். (10)

பேதுரு அறிக்கை செய்த சத்தியம் அதனை நம்புபவர்களுடைய விசுவாசத்தின் அஸ்திபாரமாக உள்ளது. இதுதான் கிறிஸ்து அறிவித்த நித்தியஜீவனாக இருக்கின்றது. ஆனால் இந்த அறிவை உடையவராக இருப்பது சுயமகிமைக்கான ஆதாரமாக இருக்கவில்லை. பேதுருவிற்குச் சொந்தமாக இருந்த ஞானம் அல்லது புண்ணியம் ஆகிவைகளின்மூலமாக அது வெளிப்படுத்தப்படவில்லை. தெய்வீகத்தைப்பற்றிய ஒரு அறிவை மானுடத்தில் தானாக ஒருபோதும் அடைந்துகொள்ளமுடியாது. “அது வானபரியந்தம் உயர்ந்தது; உம்மால் என்ன ஆகும்? அது பாதாளத்திலும் ஆழமானது, நீர் அறியக் கூடியது என்ன?”–யோபு 11:8; “தேவன் தம்மில் அன்புகூருகிறவர்களுக்கு ஆயத்தம்பண்ணினவைகளைக் கண் காணவுமில்லை, காது கேட்கவுமில்லை, அவைகள் மனுஷருடைய இருதயத்தில் தோன்றவுமில்லை; நமக்கோ தேவன் அவைகளைத் தமது ஆவியினாலே வெளிப்படுத்தினார்; அந்த ஆவியானவர் எல்லாவற்றையும், தேவனுடைய ஆழங்களையும், ஆராய்ந்திருக்கிறார்”–1 கொரிந்தியர் 2:9,10; “கர்த்தருடைய இரகசியம் அவருக்குப் பயந்தவர்களிடத்தில் இருக்கிறது; அவர்களுக்குத் தம்முடைய உடன்படிக்கையைத் தெரியப்படுத்துவார்”–சங்கீதம் 25:14; பேதுரு கிறிஸ்துவினுடைய மகிமையை அடையாளங்கண்டான்

என்பது அவன் "பிதாவினிடத்தில்" (யோவான் 6:45) கேட்டுக் கற்றுக்கொண்டான் என்பதற்கு அத்தாட்சியாயிருக்கிறது. "யோனாவின் குமாரனாகிய சீமோனே, நீ பாக்கியவான்; மாம்சமும் இரத்தமும் இதை உனக்கு வெளிப்படுத்தவில்லை" என்பது உண்மையாக உள்ளது. (11)

மேலும் "நான் உனக்குச் சொல்லுகிறேன், நீ பேதுருவாய் இருக்கிறாய், இந்தக் கல்லின்மேல் என் சபையைக் கட்டுவேன்; பாதாளத்தின் வாசல்கள் அதை மேற்கொள்வதில்லை." பேதுரு என்னும் சொல், ஒரு கல்லை அதாவது உருளக்கூடிய ஒரு கல்லை எடுத்துக்காட்டுகிறது. சபை கட்டப்பட்டுள்ள அஸ்திபாரக் கல்லாகப் பேதுரு ஏற்படுத்தப்படவில்லை. அவன் அவனது கர்த்தரை மறுதலித்து சபித்து ஆணையிட்டபோது, பாதாளத்தின் வாசல்கள் அவனை வெற்றிகொண்டன. பாதாளத்தின் வாசல்களால் மேற்கொள்ளப்படமுடியாத ஒருவரின்மீது சபை கட்டப்பட்டிருந்தது. (12)

இரட்சகரின் வருகைக்கு நூற்றாண்டுகளுக்கு முன்னரே, இஸ்ரவேலின் இரட்சிப்பாக இருந்த கன்மலையை மோசே சுட்டிக்காட்டியிருந்தான். "பெலனான என் கன்மலை"யைப்பற்றி சங்கீதக்காரன் பாடியிருந்தான். "இதோ, அஸ்திபாரமாக ஒரு கல்லை நான் சீயோனிலே வைக்கிறேன்; அது பரீட்சிக்கப்பட்டதும், விலையேறப்பெற்றதும், திட அஸ்திபாரமுள்ளதுமான மூலைக்கல்லாயிருக்கும்"—உபாகமம் 32:4; சங்கீதம் 62:7; ஏசாயா 28:16. பேதுரு தானும் ஆவியினால் ஏவப்பட்டு, இந்தத் தீர்க்கதரிசனத்தை இயேசுவிற்குப் பொருத்துகிறான். "மனுஷரால் தள்ளப்பட்டதாயினும், தேவனால் தெரிந்துகொள்ளப்பட்டதும் விலையேறப்பெற்றதுமாயிருக்கிற ஜீவனுள்ள கல்லாகிய அவரிடத்தில் சேர்ந்தவர்களாகிய நீங்களும், ஜீவனுள்ள கற்களைப்போல ஆவிக்கேற்ற மாளிகையாகவும், இயேசுகிறிஸ்துமூலமாய்த் தேவனுக்குப் பிரியமான ஆவிக்கேற்ற பலிகளைச் செலுத்தும்படிக்குப் பரிசுத்தஆசாரியக்கூட்டமாகவும் கட்டப்பட்டுவருகிறீர்கள்" ( 1 பேதுரு 2:4,5) என்றான். (13)

"போடப்பட்டிருக்கிற அஸ்திபாரமாகிய இயேசுகிறிஸ்துவை அல்லாமல் வேறே அஸ்திபாரத்தைப் போட ஒருவனாலும் கூடாது"—1 கொரிந்தியர் 3:11. இந்தக் கல்லின்மீது என் சபையைக் கட்டுவேன் என்று இயேசு கூறினார். தேவனுடைய சமுகத்திற்குமுன்னும் பரலோக நுண்ணறிவாளர்களுக்குமுன்னும் காணக்கூடாத பாதாளத்தின் சேனைக்கு முன்னும் ஜீவனுள்ள கற்பாறையின்மீது கிறிஸ்து தமது சபையை ஸ்தாபித்தார். அந்தப் பாறை அவராக—நமக்காகப் பிய்க்கப்பட்ட நொறுக்கப்பட்ட அவரது சொந்த சரீரமாக உள்ளது. அந்த அஸ்திபாரத்தின்மீது கட்டப்பட்டுள்ள சபையை பாதாளத்தின் வாசல்கள் மேற்கொள்ளமாட்டாது. (14)

இந்த வார்த்தைகளைக் கிறிஸ்து கூறியபோது, சபை எவ்வளவு பலவீனமானதாக தோன்றியிருந்தது! விரல்விட்டு எண்ணணக்கூடிய சிலர்மட்டுமே அந்த சபையின் விசுவாசிகளாக இருந்தனர். அவர்களுக்கெதிராக பிசாசுகள், தீய மனிதர்கள் ஆகியோருடைய அனைத்து வல்லமைகளும் திருப்பிவிடப்பட்டிருந்தன. அப்படியிருந்தபோதிலும் கிறிஸ்துவின் அடியார்கள் பயப்படத் தேவையில்லாதவர்களாக இருந்தனர். தங்களுடைய பெலனாக இருந்த கன்மலையின்மீது கட்டப்பட்டிருந்த அவர்கள் கவிழ்க்கப்பட முடியாதவர்களாக இருந்தனர். (15)

கிறிஸ்துவின்மீதுள்ள விசுவாசம் ஆறாயிரம் ஆண்டுகளாகக் கட்டப்பட்டு வந்துள்ளது. நமது இரட்சிப்பின் கன்மலையின்மீது ஆறாயிரம் ஆண்டுகளாக சாத்தானின் உக்கிர கோபமாகிய வெள்ளங்களும் புயல்களும் மோதியடித்துள்ளன. ஆனால் அது அசையாமல் நிற்கின்றது. (16)

சபையின் விசுவாசத்தின் அஸ்திபாரமாக இருக்கும் சத்தியத்தைப் பேதுரு உணர்த்திக்காட்டியிருந்தான். எனவே விசுவாசிகளாகிய முழுச் சரீரத்திற்கும் பிரதிநிதியாக இருக்கும்படி இப்பொழுது இயேசு அவனை மேன்மைப்படுத்தினார். “பரலோகராஜ்யத்தின் திறவுகோல்களை நான் உனக்குத் தருவேன்; பூலோகத்திலே நீ கட்டுகிறது எதுவோ அது பரலோகத்திலும் கட்டப்பட்டிருக்கும், பூலோகத்திலே நீ கட்டவிழ்ப்பது எதுவோ அது பரலோகத்திலும் கட்டவிழ்க்கப்பட்டிருக்கும்” என்றார். (17)

கிறிஸ்துவின் வார்த்தைகள் பரலோக இராஜ்யத்தின் திறவு கோல்களாக உள்ளன. பரிசுத்த வேதாகமத்தின் வார்த்தைகள் அனைத்தும் அவருடையவை. அவைகளும் இதில் அடங்கும். பரலோகத்தைத் திறக்கவும் மூடவுங்கூடிய வல்லமை இந்த வார்த்தைகளுக்கு உண்டு. மனிதர்களை ஏற்றுக்கொள்ளுகின்ற அல்லது புறக்கணிக்கின்ற நிபந்தனைகளை அவை அறிவிக்கின்றன. இவ்வாறாக தேவனுடைய வார்த்தைகளைப் பிரசங்கிக்கிறவர்களின் பணி ஜீவனுக்குமேல் ஜீவனாகவும், அல்லது மரணத்திற்குமேல் மரணமாகவுமான ஒரு வாசனையாக இருக்கிறது. நித்திய பலன்களை உடையவையாக—அவர்களது ஊழியம் கனமுடையதாக இருக்கிறது. (18)

இரட்சகர் சுவிசேஷ ஊழியத்தைத் தனிப்பட்ட விதத்தில் பேதுருவிடம்மட்டும் ஒப்புவிக்கவில்லை. பின்னர் ஒரு சமயத்தில் பேதுருவிற்குக் கூறிய வார்த்தையை அவர் மீண்டும் கூறி, அதை நேரடியாக சபைக்குப் பொருத்தினார். விசுவாசிகளின் சரீரத்தின் பிரதிநிதிகளாக இருந்த அந்தப் பன்னிருவருக்கும் அது பொருளாக இருக்கும்படி பேசப்பட்டது. இயேசு அவரது சீடர்களில் யாராவது ஒருவருக்கு மற்றவர்களைவிடச் சிறப்பான

அதிகாரத்தைக் கொடுத்திருந்தால், தங்களுக்குள் எவன் பெரியவன் என்று அவர்கள் ஒருவருக்கொருவர் அடிக்கடி வாக்குவாதஞ்செய்வதை நாம் கண்டிருக்கமாட்டோம். அவர்கள் தங்களுடைய ஆண்டவரின் விருப்பத்திற்குக் கீழ்ப்படிந்து, அவர் தெரிந்தெடுத்த ஒருவரை மேன்மைப்படுத்தி யிருந்திருப்பார்கள். “அவர்களுக்கு ஒருவரைத் தலைவராக இருக்கும்படி ஏற்படுத்துவதற்குப்பதிலாக அவர்: “நீங்களோ ரபீ என்றழைக்கப்படாதிருங்கள்;” “நீங்கள் குருக்கள் என்றும் அழைக்கப்படாதிருங்கள்; கிறிஸ்து ஒருவரே உங்களுக்குக் குருவாயிருக்கிறார்” (மத்தேயு 23:8,10) என்று கூறினார். (19)

“ஒவ்வொரு புருஷனுக்கும் கிறிஸ்து தலையாயிருக்கிறாரென்றும்” தேவன் எல்லாவற்றையும் இரட்சகருடைய பாதங்களுக்குக் கீழ்ப்படுத்தி, எல்லாவற்றையும் எல்லாவற்றாலும் நிரப்புகிறவருடைய நிறைவாகிய சரீரமான சபைக்கு அவரை எல்லாவற்றிற்கும் மேலான தலையாகத் தந்தருளினார்”–1 கொரிந்தியர் 11:3; எபேசியர் 1:22,23. கிறிஸ்துவை அஸ்திபாரமாகக்கொண்டு சபை அதன்மீது கட்டப்பட்டுள்ளது. அது தலைவராக உள்ள அவருக்குக் கீழ்ப்படியவேண்டும். அது மனிதனைச் சார்ந்ததாகவோ அல்லது மனிதனால் கட்டுப்படுத்தப்பட்டதாகவோ இருக்கக்கூடாது. சபையின் பொறுப்பான பதவி, மற்றவர்கள் எதை நம்பவேண்டும் அல்லது எவைகளைச் செய்யவேண்டும் என்பதைத் தீர்மானிக்கும் சர்வாதிகாரத்தைத் தங்களுக்குக் கொடுப்பதாக அநேகர் உரிமைபாராட்டுகின்றனர். இப்படிப்பட்ட உரிமையை தேவன் அனுமதிக்கிறதில்லை. “நீங்கள் எல்லாரும் சகோதரர்கள்” என்று இரட்சகர் அறிவிக்கிறார். அனைவரும் சோதனைக்கு ஆளாகி தவறு செய்யக்கூடியவர்களாக உள்ளனர். வழிகாட்டுதலுக்காக எல்லைக்குட்பட்ட ஒரு மனிதனை நம்மால் சார்ந்திருக்கமுடியாது. கற்பாறையாகிய விசுவாசமே சபையில் இருக்கும் கிறிஸ்துவின் ஜீவனுள்ள சமுகம். மிகவும் பலவீனமானவர்கள் இதனைச் சார்ந்திருக்கலாம். தங்களை மிகவும் பலவான்கள் என்று நினைப்பவர்கள், கிறிஸ்துவைத் தங்களுடைய பலமாகக்கொள்ளாவிட்டால், மிகவும் பலவீனர்களென்று மெய்ப்பிக்கப்படுவார்கள். “மனுஷன்மேல் நம்பிக்கைவைத்து, மாம்சமானதைத் தன் புயபலமாக்கிக்கொண்டு, கர்த்தரை விட்டு விலகுகிற இருதயமுள்ள மனுஷன் சபிக்கப்பட்டவன் என்று கர்த்தர் சொல்லுகிறார்.” “அவர் கன்மலை; அவர் கிரியை உத்தமமானது; அவர் வழிகளெல்லாம் நியாயம்.” “அவரை அண்டிக்கொள்ளுகிற யாவரும் பாக்கியவான்கள்”–எரேமியா 17:5; உபாகமம் 32:4; சங்கீதம் 2:12. (20)

பேதுருவின் பாவ அறிக்கைக்குப்பின் தாம்தான் கிறிஸ்து என்று ஒருவருக்கும் கூறவேண்டாம் என்று இயேசு சீடர்களுக்குக் கட்டளையிட்டார்.

வேதபாரகர்கள் பரிசேயர்கள் ஆகியோரிடமிருந்து உண்டாகியிருந்த எதிர்ப்பின் காரணமாக இந்தக் கட்டளை கொடுக்கப்பட்டது. இதற்கும்மேலாக மக்களும் சீடர்களுங்கூட மேசியாவைப்பற்றிய ஒரு தவறான கருத்தை உடையவர்களாக இருந்ததினால், ஒரு பொது அறிவிப்பு அவரது குணத்தையும் ஊழியத்தையும்குறித்த உண்மையான கருத்தை அவர்களுக்குக் கொடுக்காது. ஆனால் நாள்தோறும் அவர் தம்மை இரட்சகராக அவர்களுக்கு வெளிப்படுத்திக்கொண்டிருந்து, இவ்விதமாக அவர்தான் மேசியா என்பதைப்பற்றிய ஒரு சரியான எண்ணத்தை அவர்களுக்குக் கொடுக்க விரும்பினார். (21)

உலகப்பிரகாரமான ஒரு இளவரசராக அவர் இருக்கவேண்டும் என்று சீடர்கள் இன்னமும் எதிர்நோக்கியிருந்தனர். அவர் தமது திட்டத்தை இவ்வளவு காலமாக மறைத்து வைத்திருந்தபோதிலும், எப்போதும் ஏழ்மையிலும் அறியப்படாத நிலையிலும் இருக்கமாட்டார் என்றும், அவருடைய ஆட்சியை நிறுவுகின்ற வேளை சமீபத்திலிருக்கிறது என்றும் அவர்கள் நம்பியிருந்தனர். ஆசாரியர்கள் ரபிமார்களின் வெறுப்பை ஒருபோதும் மேற்கொள்ளமுடியாது; கிறிஸ்து அவரது சொந்த மக்களாலேயே ஒரு வஞ்சகரென்று பழிக்கப்பட்டு புறக்கணிக்கப்படுவார்; ஒரு குற்றவாளியாக சிலுவையில் அறையப்படுவார் என்னும் அப்படிப்பட்ட ஒரு எண்ணத்தை சீடர்கள் ஒருபோதும் வரவேற்றிருக்கவில்லை. ஆனால் அந்தகார சக்தியின் நேரம் நெருங்கிக்கொண்டிருந்தது. இயேசு அவர்களுக்கு முன்னுள்ள போராட்டத்தைப்பற்றி சீடர்களுக்கு எடுத்துச்சொல்லவேண்டும். அந்த சோதனையை எதிர்பார்த்ததினால் அவர் துக்கமுள்ளவராக இருந்தார். (22)

இதுவரை அவர் தமது பாடுகளையும் மரணத்தையும்பற்றிய எதையும் அவர்களுக்கு அறிவிக்காமலிருந்தார். நிக்கொதேமுவுடனுள்ள அவரது உரையாடலில்: "சர்ப்பமானது மோசேயினால் வனாந்தரத்திலே உயர்த்தப்பட்டதுபோல மனுஷகுமாரனும், தன்னை விசுவாசிக்கிறவன் எவனோ அவன் கெட்டுப்போகாமல் நித்தியஜீவனை அடையும்படிக்கு, உயர்த்தப்படவேண்டும்" (யோவான் 3:14,15) என்று அவர் கூறினார். ஆனால் சீடர்கள் அதைக் கேட்கவில்லை. அவர்கள் கேட்டிருந்தாலும் புரிந்திருக்கமாட்டார்கள். ஆனால் இப்பொழுது அவர்கள் இயேசுவுடனிருந்து அவரது வார்த்தைகளைக் கவனித்து செயல்களைப் பார்ப்பதுமட்டுமின்றி அவரைச் சூழ்ந்திருந்த கேவலமான நிலைமையையும், ஆசாரியர்கள் மக்கள் ஆகியோரின் எதிர்ப்பையும் அறிந்திருந்து, "நீர் ஜீவனுள்ள தேவனுடைய குமாரனாகிய கிறிஸ்து" என்ற பேதுருவின் சாட்சியுடன் சேர்ந்துகொண்டவர்களாக இருந்தனர். எதிர்காலத்தை மறைத்திருந்த

திரையை விலக்கவேண்டிய நேரம் இப்பொழுது வந்திருந்தது. “அதுமுதல் இயேசு, தாம் எருசலேமுக்குப்போய், மூப்பராலும் பிரதான ஆசாரியராலும் வேதபாரகராலும் பல பாடுகள் பட்டு, கொலையுண்டு, மூன்றாம் நாளில் எழுந்திருக்கவேண்டும் என்பதைத் தம்முடைய சீஷர்களுக்குச் சொல்லத் தொடங்கினார்”–மத்தேயு 16:21. (23)

துயரத்தினாலும் திகைப்பினாலும் பேச்சற்றுப்போன சீடர்கள் அவர் கூறியவைகளைக் கவனித்தனர். அவர் தேவகுமாரனாக இருக்கிறார் என்று பேதுருவின் ஒப்புக்கொள்ளுதலை கிறிஸ்து ஏற்றுக்கொண்டிருந்தார். இப்பொழுது அவரது பாடுகளையும் மரணத்தையும் சுட்டிக்காட்டும் அவரது வார்த்தைகள் புரிந்துகொள்ளப்படமுடியாததுபோலத் தோன்றியது. பேதுருவால் மௌனமாயிருக்கமுடியவில்லை. வரப்போகும் அழிவினின்று அவரை மீட்டு வெளியே கொண்டுவரும் நோக்கத்தில் அவன் ஆண்டவரைப் பற்றிக்கொண்டு, “ஆண்டவரே இது உமக்கு நேரிடக்கூடாதே; இது உமக்குச் சம்பவிப்பதில்லை என்று அவரைக் கடிந்துகொள்ளத் தொடங்கினான். (24)

பேதுரு அவனது கர்த்தரை நேசித்திருந்தான். இவ்விதமாக அவரது பாடுகளிருந்து அவரைக் காக்கவேண்டுமென்று அவன் வெளிக்காட்டிய அவனது விருப்பத்தைக்குறித்து இயேசு அவனைப் பாராட்டவில்லை. அவருக்குமுன் வைக்கப்பட்டிருந்த பெரும் சோதனையில் உதவியாகவும் ஆறுதலாகவும் பேதுருவின் வார்த்தைகள் இருக்கவில்லை. தொலைந்துபோயிருந்த ஒரு உலகத்திற்காக தேவன் கொண்டிருந்த கிருபைமிக்க நோக்கத்திற்கும் தமது சொந்த உதாரணத்தின்மூலமாக இயேசு போதிக்க வந்திருந்த தற்தியாகம் என்னும் பாடத்திற்கும் இசைவானதாக அவை இருக்கவில்லை. கிறிஸ்துவின் செயல்களில் சிலுவையைக் காண்பதற்கு பேதுரு விரும்பவில்லை. அவனது வார்த்தைகள் உண்டுபண்ணியிருந்திருக்கக்கூடிய உணர்த்துதல்கள் அவரது அடியார்களின் மனங்களில் உண்டுபண்ணக் கிறிஸ்து விரும்பியிருந்தவைகளுக்கு நேரெதிரானவையாக இருந்தன. எனவே அவரது உதடுகளிலிருந்து ஒருபோதும் வீழ்ந்திராக கடினமான கடிந்துகொள்ளுதலைக் கூறும்படி இரட்சகர் நெருக்கப்பட்டார். “பேதுருவைப் பார்த்து: எனக்குப் பின்னாகப்போ, சாத்தானே, நீ எனக்கு இடறலாயிருக்கிறாய்; தேவனுக்கு ஏற்றவைகளைச் சிந்தியாமல் மனுஷருக்கு ஏற்றவைகளைச் சிந்திக்கிறாய்” என்றார். (25)

இயேசுவை அதைரியப்படுத்தி அவரை அவரது ஊழியத்தை விட்டுத் திரும்பச்செய்வதற்கு சாத்தான் முயன்றுகொண்டிருந்தான். பேதுரு அவனது குருட்டுத்தனமான அன்பினால் அந்த சோதனைக்குக் குரல்கொடுத்துக் கொண்டிருந்தான். பொல்லாங்கன் அந்த எண்ணத்திற்கு

ஆசிரியனாக இருந்தான். உணர்ச்சியின் வேகத்தினாலுண்டாயிருந்த அந்த வேண்டுகோளிற்குப்பின் அவனது ஏவுதல் இருந்தது. அவமானம் தற்தியாகம் என்னும் பாதையைவிட்டு விலகுதல் என்னும் நிபந்தனையின்பேரில் வனாந்தரத்தில் உலகத்தின் ஆளுகையைக் கிறிஸ்துவிற்குக் கொடுக்க சாத்தான் முன்வந்தான். இப்பொழுது அதே சோதனையை அவன் கிறிஸ்துவின் சீடர்களின்முன் வைத்துக்கொண்டிருந்தான். பேதுரு சிலுவைக் காட்சியைக் காண தன் கண்களைத் திருப்பவேண்டுமென்று இயேசு விரும்பியிருந்தபோது, அதைப் பார்க்காமல், பூமிக்குரிய மகிமையின்மீது பேதுருவின் கண்களைப் பதியச்செய்ய சாத்தான் முயன்றுகொண்டிருந்தான். பேதுருவின் மூலமாக மறுபடியும் சாத்தான் தனது சோதனையை இயேசுவின் மீது அழுத்தினான். ஆனால் இரட்சகர் அதற்குச் செவிசாய்க்கவில்லை. அவரது எண்ணங்கள் அவரது சீடர்களின்மீதிருந்தது. பேதுருவிற்காகக் கிறிஸ்து ஏற்கவிருந்த அவமானத்தைப்பற்றிய பார்வையினால் அவன் தொடப்பட முடியாதபடி பேதுருவிற்கும் அவனது ஆண்டவருக்கும் இடையில் சாத்தான் குறுக்கிட்டு நின்றான். அவரது வார்த்தைகள் பேதுருவிற்கு எதிராகக் கூறப்படாமல், அவனை அவனது மீட்பரிடமிருந்து பிரிக்கமுயன்றிருந்த ஒருவனுக்கெதிராகக் கூறப்பட்டிருந்தது. எனக்குப் பின்னாகப்போ சாத்தானே! எனக்கும் தவறுசெய்துகொண்டிருக்கும் எனது ஊழியக்காரனுக்கும் இடையில் இனிமேல் வராதே. எனது அன்பின் இரகசியத்தை அவனுக்கு வெளிப்படுத்தும்படி நான் பேதுருவை முகமுகமாகக் காணவிடு என்றார். (26)

பூமியின்மீதுள்ள கிறிஸ்துவின் பாதை வேதனை, அவமானம் ஆகியவைகளுக்கூடாக அமைக்கப்பட்டிருக்கிறது என்பது பேதுருவிற்கு ஒரு கசப்புமிக்க பாடமாக இருந்தது. அவன் அதனை மிக மெதுவாகக் கற்றுக்கொண்டான். அந்த சீடன் அவனது கர்த்தருடைய பாடுகளில் பங்கு பெறுவதிலிருந்து பின்வாங்கிப்போனான். ஆனால் எரியும் சூளையின் சூட்டில் அவன் அதன் ஆசீர்வாதத்தைப்பற்றிக் கற்றுக்கொள்ளவேண்டியவனாக இருந்தான். அநேக நாட்களுக்குப்பின் உழைப்பை உடையதாக இருந்த அவனது உருவம் முதுமையினாலும் உழைப்பினாலும் வளைந்துபோனபின், “பிரியமானவர்களே, உங்களைச் சோதிக்கும்படி உங்கள் நடுவில் பற்றியெரிகிற அக்கினியைக்குறித்து ஏதோ புதுமையென்று திகையாமல், கிறிஸ்துவின் மகிமை வெளிப்படும்போது நீங்கள் களிகூர்ந்து மகிழும்படியாக அவருடைய பாடுகளுக்கு நீங்கள் பங்காளிகளானதால் சந்தோஷப்படுங்கள்” (1 பேதுரு 4:12:13) என்று எழுதினான். (27)

அவர்களுடைய வாழ்க்கை எப்படிப்பட்டதாக இருக்கவேண்டும் என்பதற்கு சுயத்தை வெறுக்கும் அவருடைய வாழ்க்கை ஒரு உதாரணமாக

இருந்தது என்பதை இப்போது இயேசு அவரது சீடர்களுக்கு விளக்கிக் காட்டினார். அருகில்வரத் தயங்கிக்கொண்டிருந்த சீடர்களை அவர் தம்மிடம் அழைத்து: "ஒருவன் என்னைப் பின்பற்றி வர விரும்பினால், அவன் தன்னைத் தான் வெறுத்து, தன் சிலுவையை எடுத்துக்கொண்டு என்னைப் பின்பற்றக்கடவன்" என்றார். ரோமர்களின் வல்லமையுடன் சம்பந்தப்பட்டதாகச் சிலுவை இருந்தது. கொடுமையும் கேவலமுமான மரணத்தின் அடையாளமாக அந்தக் கருவி இருந்தது. மோசமான குற்றவாளிகள் தண்டனை நிறைவேற்றப்படும் இடத்திற்கு தங்களது சிலுவையைச் சுமந்து செல்லவேண்டும். அது அவர்களது தோள்களின்மீது வைக்கப்படும்போது, மேற்கொள்ளப்பட்டு அவர்களோடு சேர்த்து அது கட்டப்படும்வரை, மிகவும் மோசமான முரட்டுத்தனத்துடன் அதை அவர்கள் தடுத்திருந்தனர். ஆனால் இயேசு அவரது அடியார்களை, சிலுவையைச் சுமந்து அவரைப் பின்தொடரும்படிக் கூறினார். அவரது வார்த்தைகளை சீடர்கள் குறைவாகவே புரிந்திருந்தாலும், மிகக் கசப்பான தாழ்மைக்கு அவர்கள் தங்களை ஒப்புக்கொடுக்கவேண்டும் என்பதை—கிறிஸ்துவிற்காக மரணம் வரைக்கும் தங்களை ஒப்புக்கொடுப்பதை அது குறிப்பிட்டது. இதைவிடவும் முழுமையான சுயஒப்படைப்பை இரட்சகரின் வார்த்தைகள் காட்டியிருந்திருக்கமுடியாது. ஆனால் இவைகளனைத்தையும் அவர்களுக்காக அவர் ஏற்றுக்கொண்டார். நாம் தொலைந்துபோயிருந்தபோது, இயேசு பரலோகத்தை விரும்பக்கூடிய ஒரு இடமாக எண்ணவில்லை. நிந்தை, அவமானம், கேவலமான மரணம் ஆகியவைமிக்க ஒரு வாழ்க்கைக்காக அவர் பரலோக மன்றங்களை விட்டுவந்தார். அவருடைய ஏழ்மையினால் நாம் செல்வந்தர்களாக வேண்டுமென்பதற்காக விலைமதிக்க இயலாத பரலோகக் கருவூலங்களுக்கு உரிமையாளராக இருந்த அவர் ஏழையானார். அவர் நடந்துசென்ற பாதையை நாம் தொடரவேண்டும். (28)

கிறிஸ்து யாருக்காக மரித்தாரோ அந்த ஆத்துமாக்களை நேசிப்பது என்பது சுயத்தை சிலுவையில் அறைவதாகும். தேவனுடைய பிள்ளையாக இருக்கும் ஒருவர் இதுமுதல் தன்னை உலகத்தை இரட்சிக்கும்படி கீழே தொங்கவிடப்பட்ட ஒரு சங்கிலியின் கண்ணியாக, கிறிஸ்துவினுடைய இரக்கத்தின் திட்டத்தில் அவருடன் ஒருவராக, இழந்துபோனதைத் தேடி இரட்சிக்கும்படி அவரோடு செல்லுபவராகக் காணவேண்டும். கிறிஸ்தவன் தன்னைத் தேவனுக்கென்று அர்ப்பணஞ்செய்திருப்பதையும் குணத்தில் அவன் கிறிஸ்துவை வெளிப்படுத்தவேண்டும் என்பதையும் உணரவேண்டும். கிறிஸ்துவின் வாழ்க்கையினால் வெளிக்காட்டப்பட்டிருந்த தற்தியாகம், அனுதாபம், அன்பு ஆகியவை தேவனுடைய ஊழியக்காரனின் வாழ்க்கையில் திரும்பவும் காணப்படவேண்டும். (29)

“தன் ஜீவனை ரட்சிக்க விரும்புகிறவன் அதை இழந்துபோவான்; என்னிமித்தமாகத் தன் ஜீவனை இழந்துபோகிறவன் அதைக் கண்டடைவான்.” சுயநலம் மரணமாக உள்ளது. உடலின் எந்த உறுப்பும் தனக்குமட்டுமே சேவைசெய்வது என்றால் உடலின் எந்த உறுப்பாலும் உயிர்வாழ முடியாது. உடலுக்கு உயிரைத் தரும் இரத்தத்தை கைக்கும் தலைக்கும் அனுப்புவதற்கு இருதயம் மறுத்துவிட்டால், விரைவில் அது தனது சக்தியை இழந்துவிடும். இரத்தம் நமது உடலின் உயிராக இருப்பதுபோல அவரது தெய்வத்தன்மை வாய்ந்த உடலின் ஒவ்வொரு பகுதியிலிருந்தும் கிறிஸ்துவின் அன்பு பரப்பப்படுகிறது. நாம் ஒருவருக்கொருவர் அவயவங்களாக இருக்கிறோம். அதை ஏற்றுக்கொள்ள மறுக்கும் ஆத்துமா அழிந்துபோகும். “மனுஷன் உலகம் முழுவதையும் ஆதாயப்படுத்திக்கொண்டாலும், தன் ஜீவனை நஷ்டப்படுத்தினால் அவனுக்கு லாபம் என்ன? மனுஷன் தன் ஜீவனுக்கு ஈடாக என்னத்தைக் கொடுப்பான்?” என்று இயேசு வினவினார். (30)

இப்போதுள்ள வறுமை, அவமானம் ஆகியவைகளுக்கப்பால், பூமிக்குரிய சிங்காசனத்தின் மேன்மையிலல்ல, “தம்முடைய பிதாவின் மகிமைபொருந்தினவராய்த் தம்முடைய தூதரோடுங்கூட” வரவிருப்பதை அவர் தமது சீடர்களுக்குச் சுட்டிக்காட்டினார். “அப்பொழுது, அவனவன் கிரியைக்குத்தக்கதாக அவனவனுக்குப் பலனளிப்பார்” என்றார். பின்னர் அவர்களுக்குத் தைரியமூட்டுவதற்காக “இங்கே நிற்கிறவர்களில் சிலர் மனுஷகுமாரன் தம்முடைய ராஜ்யத்தில் வருவதைக் காணுமுன், மரணத்தை ருசிபார்ப்பதில்லை” என்றார். ஆனால் அவரது சீடர்கள் அவரது வார்த்தைகளின் பொருளை அறிந்துகொள்ளவில்லை. அந்த மகிமை வெகுதூரத்தில் இருப்பதாகக் காணப்பட்டது. அவர்களுடைய கண்கள் பூமிக்குரிய தாழ்மையான வாழ்க்கை, கேவலம், பாடுகள் ஆகிய அருகிலிருந்தவைகளின்மீது பதிந்திருந்தது. மேசியாவின் இராஜ்யத்தைப்பற்றிய அவர்களுடைய ஒளிமயமான எதிர்பார்ப்புகள் கைவிட்டுவிடப்படவேண்டுமா? அவர்களுடைய கர்த்தர் தாவீதின் சிங்காசனத்திற்கு உயர்த்தப்படுவதை அவர்கள் பார்க்கவேண்டாமா? தாழ்மையான வீடில்லாத அலைந்து திரிபவராக, நிந்திக்கப்படுவதற்கும் புறக்கணிக்கப்படுவதற்கும், மரணத்தை அனுபவிப்பதற்கும்தான் கிறிஸ்து வாழவேண்டியவராக இருந்திருப்பாரா? அவர்கள் அவர்களுடைய ஆண்டவரை நேசித்திருந்ததினால் துயரம் அவர்களுடைய இருதயங்களை அழுத்தியது. சந்தேகங்களும் அவர்களுடைய மனதைத் துன்பப்படுத்தின. ஏனெனில் தேவகுமாரன் அப்படிப்பட்ட கொடுமைமிக்க கேவலத்திற்கு உள்ளாகவேண்டும் என்பது புரிந்துகொள்ளமுடியாததுபோலக் காணப்பட்டது. அவர் அவர்களிடம் கூறியிருந்தபடியான நடத்துதலைப் பெற்றுக்கொள்ள அவர் ஏன் தாமாகவே

எருசலேமிற்குச் செல்லவேண்டும் என்று கேள்விகள் கேட்டுக்கொண்டனர். அவர் எப்படி தம்மை அப்படிப்பட்ட நிலைக்கு விடமுடியும்? கூடவே, தம்மை அவர்களுக்கு வெளிப்படுத்துவதற்குமுன் இருந்து தடவிக்கொண்டிருந்த இருளைவிடவும் அதிக காரிருளுக்கு அவர்களை அவர் எப்படி விடுவார்? (31)

செசரியா, பிலிப்பி பிரதேசங்களில் காய்பா, ஏரோது ஆகியோருக்கு எட்டாத இடத்தில் கிறஸ்து இருந்தார் என்று சீடர்கள் காரணம் கண்டுகொண்டிருந்தனர். யூதர்களின் வெறுப்பு அல்லது ரோமர்களின் அதிகாரம் ஆகியவைகளைப்பற்றி அவர் அஞ்சவேண்டிய அவசியம் எதுவும் இருக்கவில்லை. பரிசேயர்களைவிட்டுத் தூரமாக விலகியிருந்து ஏன் ஊழியஞ்செய்யக்கூடாது? அவர் தம்மைத்தாமே மரணத்திற்கு ஒப்புக்கொடுக்கவேண்டிய அவசியம் எனன? அவர் மரிக்கவேண்டியவராக இருந்தால், பாதாளத்தின் வாசல்கள் மேற்கொள்ளமுடியாதபடி அவரது இராஜ்யம் அவ்வளவு உறுதியாக அமைக்கப்படுவது எப்படி? சீடர்களுக்கு உண்மையில் அது ஒரு இரகசியமாக இருந்தது. (32)

தங்களுடைய நம்பிக்கைகள் யாவும் நசுக்கப்படவுள்ள அந்த நகரத்தை நோக்கி, கலிலேயாக் கடற்கரை ஓரமாக அவர்கள் இப்பொழுது பயணஞ்செய்துகொண்டிருந்தனர். அவர்கள் கிறிஸ்துவிடம் மறுப்புக்கூறத் துணிவின்றி, ஆனால் எதிர்காலம் எப்படி இருக்கும் என்பதைப்பற்றித் தாழ்வான குரலில் ஒருவருடன் ஒருவர் பேசியிருந்தனர். தங்களுடைய ஆண்டவர்மீது வரவிருப்பதாகத் தோன்றுகின்ற ஏதோ ஒரு அழிவைத் தவிர்ப்பதற்காக சற்றும் எதிர்பாராத ஏதாவதொரு சூழ்நிலை ஏற்படும் என்ற எண்ணத்தைத் தங்களுடைய கேள்விகளுக்கிடையில் அவர்கள் பற்றிக்கொண்டிருந்தனர். இவ்வாறு ஆறு நீண்ட இருண்ட நாட்களாக அவர்கள் துன்பப்பட்டார்கள்; சந்தேகப்பட்டார்கள்; நம்பிக்கையோடிருந்தார்கள்; பயத்துடனிருந்தார்கள். (33) ★

# 46

# அவர் மறுரூபமானார்!

**மத்தேயு 17:1–8; மாற்கு 9:2–8; லூக்கா 9:28–36**

**(The Desire of Ages, pp. 419–425)**

பேதுரு, யாக்கோபு, யோவான் ஆகிய மூன்று சீடர்களையும் இயேசு அவரருகில் அழைத்தபோது, மாலை நேரம் சமீபித்துக்கொண்டிருந்தது. அவர் அவர்களைச் சற்றுத்தொலைவிலிருந்த கரடுமுரடான பாதையின் வழியாக ஒரு தனியான மலைப்பக்கத்திற்கு நடத்திச்சென்றார். இரட்சகரும் அவரது சீடர்களும் பயணஞ்செய்வதிலும் போதனைசெய்வதிலுமாக நேரத்தையும் தூரத்தையும் கழித்துக்கொண்டிருந்தபொழுது, அந்த மலையின்மீது ஏறுவது அவர்களுடைய களைப்பை அதிகரிக்கின்றது. அநேகருடைய உடல்களிலும் மனங்களிலும் இருந்த பாரங்களைக் கிறிஸ்து நீக்கியிருந்தார். பலவீனமாயிருந்த அவர்களுடைய உடற்கூட்டிற்குள் அவர் உயிரின் இயக்கத்தை அனுப்பியிருந்தார். ஆனால் அவரும் மானிட இயல்பால் நெருக்கப்பட்டவராக இருக்கிறார். அந்த மலை ஏறுதலில் அவரது சீடர்களுடன் சேர்ந்து அவரும் களைப்படைந்திருக்கிறார். (1)

மறைந்துகொண்டிருந்த சூரியனின் ஒளி மலை முகடுகளில் தயங்கி நின்றது. மங்கும் ஒளியில் அவர்கள் பயணஞ்செய்யும் பாதை பொன்னிறமாயிருக்கிறது. ஆனால் விரைவில் அந்த ஒளி அந்தக் குன்றிலிருந்தும் பள்ளத்தாக்கிலிருந்தும் மறைந்துவிடுகிறது. மேற்கு அடிவானத்திற்கு அப்பால் சூரியன் மறைந்துவிடுகிறது. தனிமையில் பயணஞ்செய்திருந்தவர்களை இருள் சூழ்ந்துகொள்கிறது. அவர்களுடைய வருத்தமிக்க வாழ்க்கையுடன் கனத்த மேகங்கள் சூழ்வது, அவர்களது துன்பமிக்க சுற்றுப்புறத்துடன் இசைந்துபோவதுபோலக் காணப்படுகிறது. (2)

அவர் எங்கே சென்றுகொண்டிருக்கிறார் அல்லது என்ன நோக்கத்துடன் செல்லுகிறார் என்பதைக் கேட்க சீடர்கள் துணியவில்லை. அவர் அடிக்கடி இரவுமுழுவதையும் மலைகளில் ஜெபஞ்செய்தலில் கழித்திருந்தார். எவரது

கரம் மலைகளையும் பள்ளத்தாக்குகளையும் உருவாக்கினதோ, அவர் இயற்கையுடன் இசைந்திருந்து, அதன் அமைதியில் மகிழ்கிறார். கிறிஸ்து வழிகாட்டி முன்சென்ற பாதையை சீடர்கள் பின்தொடர்கின்றனர். அவர்கள் களைப்புற்றவர்களாக இருக்கும்பொழுதும், அவரது ஆண்டவருக்கும் இளைப்பாறுதல் அவசியமாக இருக்கும்பொழுதும், அந்த உடலுழைப்புமிக்க மலையேற்றத்திற்கு அவர் ஏன் அவர்களை நடத்திச்செல்லவேண்டும் என்பதைப்பற்றி அவர்கள் ஆச்சரியப்படுகின்றனர். (3)

அப்படியிருக்கும்போது, இதற்கும்மேலாக அவர்கள் செல்ல வேண்டியதில்லை என்று கிறிஸ்து கூறுகிறார். துயரமிக்க அந்த மனிதர் அவர்களைவிட்டு சற்றுவிலகிச்சென்று பலத்த சத்தத்துடனும் கண்ணீருடனும் தமது விண்ணப்பங்களை ஏறெடுக்கிறார். மானுடத்தின் சார்பாக அவர் சகிக்கவேண்டியதாக இருந்த சோதனையைத் தாங்கிக்கொள்வதற்கான வல்லமைக்காக அவர் ஜெபிக்கிறார். சர்வல்லமையுள்ளவரை அவர் தாமாகவே மீண்டும் பற்றிக்கொள்ள வேண்டும். ஏனெனில், அதன்மூலமாகத்தான் எதிர்காலத்தைப்பற்றி அவரால் ஆழ்ந்து சிந்திக்கமுடியும். சோதனையின் வல்லமைமிக்க இருண்ட நேரத்தில் அவர்களுடைய விசுவாசம் தோற்றுப்போகக் கூடாது என்பதற்காக அவர் தமது சீடர்களுக்காக இதயத்தின் ஏக்கத்தை ஊற்றுகிறார். குனிந்து ஜெபித்துக்கொண்டிருக்கும் அவரது உடலின்மீது பனித்துளிகள் விழுகின்றன. ஆனால் அவர் அதைப் பொருட்படுத்தாதவராக இருக்கிறார். காரிருள் அவரைச் சூழ்ந்துகொள்கிறது.ஆனால் அவைகளினால் உண்டாகும் துன்பத்தை அவர் பொருட்படுத்தாமல் இருக்கிறார். இவ்விதமாக நேரம் மெதுவாகக் கடந்து செல்லுகிறது. ஆரம்பத்தில் அவரது இயல்பான தியானத்துடன் சீடர்களும் சேர்ந்து ஒருமிக்கின்றனர். ஆனால் சற்று நேரத்திற்குப்பின் அவர்கள் களைப்பினால் மேற்கொள்ளப்படுகின்றனர். அந்தக் காட்சியின்மீது தங்களுடைய ஆர்வத்தைத் தக்கவைத்துக்கொள்ளத் தவறிவிடுகின்றனர். அவர்கள் விரும்பினபோதிலும் உறங்கிவிடுகின்றனர். இயேசு அவரது பாடுகளைப்பற்றி அவர்களிடம் கூறியிருக்கிறார். அவர்கள் அவருடன் ஜெபத்தில் ஐக்கியப்படவேண்டுமென்று அவர் அவர்களைத் தம்முடன் அழைத்துச்சென்றிருக்கிறார். இப்பொழுதுங்கூட அவர் அவர்களுக்காக ஜெபித்துகொண்டிருக்கிறார். இரட்சகர் தமது சீடர்களின் துயரத்தைக் கண்டிருக்கிறார். அவர்களுடைய விசுவாசம் வீணாக இருப்பதில்லை. இந்த வாக்குறுதியை அவர்களுக்குக் கொடுத்து, அதனால் அவர்களுடைய துயரத்தை இலகுவாக்க, அவர் ஏக்கமுள்ளவராக இருக்கிறார். அந்தப் பன்னிருவரில் அனைவரும் அவர் கொடுக்கவிரும்பும் வெளிப்படுத்தலைப் பெற்றுக்கொள்ளக்கூடியவர்களாக இல்லை. கெத்செமனே தோட்டத்தில் அவரது வேதனைகளுக்குச் சாட்சிகளாக இருக்கவேண்டியவர்களாக

இருந்த அந்த மூவர்மட்டுமே அந்த மலையின்மீது இருக்கும்படி தெரிந்துகொள்ளப்பட்டுள்ளனர். இப்பொழுது அவரது ஜெபத்தின் பாரம்: உலகத்தோற்றத்திற்குமுன்னர் பிதாவுடன் தமக்குண்டாயிருந்த மகிமையின் வெளிப்படுத்தலை அவர்களுக்கு வெளிக்காட்டவேண்டும் என்பதுதான். அதன்மூலமாக அவரது இராஜ்யத்தின் மகிமை மனிதக் கண்களுக்கு வெளிக்காட்டப்படவேண்டும் என்பதாக இருந்தது. அதைக் கண்டு, அவரது சீடர்கள் பலப்படுத்தப்படவேண்டும் என்பதாக இருந்தது. அவர் தேவகுமாரனாக, மனிதனின் பிணையாளியாக இருக்கிறார். கேவலமான அவரது மரணம் இரட்சிப்பின் திட்டத்தில் ஒரு பகுதியாக இருக்கிறது. (4)

அவரது ஜெபம் கேட்கப்பட்டிருக்கிறது. அவர் தனிமையில் கல்தரையின்மீது குனிந்து ஜெபித்தபோது, திடீரென்று வானங்கள் திறக்கின்றன. தேவனுடைய நகரத்தின் பொற்கதவுகள் விசாலமாகத் திறக்கின்றன. பரிசுத்தமான பிரகாசம் அந்த மலையின்மீது இறங்கி இரட்சகரைச் சூழ்ந்துகொள்கிறது. தெய்வீகம் மானுடத்திற்குள் மின்னவேண்டும்; உன்னதத்திருலிருந்து வரும் மகிமை மானுடத்தைச் சந்திக்கிறது. சாஷ்டாங்கமாக விழுந்துகிடந்த நிலையிலிருந்து கிறிஸ்து எழுந்து, தேவ மகத்துவத்துடன் நிற்கிறார். ஆத்துமாவின் வேதனை கடந்துசென்றுவிட்டது. அவரது முகம் இப்பொழுது சூரியனைப்போலப் பிரகாசிக்கிறது. அவரது உடைகள் இப்பொழுது ஒளியைப்போல வெண்மையாக உள்ளன. (5)

சீடர்கள் விழித்தெழுந்து, அந்த மலை முழுவதையும் ஒளிப்படுத்தும் ஒளிவெள்ளத்தின் மகிமையைக் காணுகின்றனர். பயத்துடனும் வியப்புடனும் அவர்கள் தங்களுடைய ஆண்டவரின் பிரகாசமான வடிவைக் காணுகின்றனர். அவர்கள் ஆச்சரியமான அந்த ஒளியைத் தாங்கிநிற்கும் தகுதியை அடைந்தபோது, இயேசு அங்கு தனியாக இருக்கவில்லை என்பதைக் காணுகின்றனர். அவருக்கருகில் இரு பரலோகவாசிகள் நெருங்கிநின்று உரையாடுவதை அவர்கள் காணுகின்றனர். அவர்கள் சீனாய் மலையில் தேவனுடன் பேசியிருந்த மோசேயும், மிக மேலான சலுகையைப் பெற்றிருந்த—மரணத்திற்கு ஒருபோதும் கீழ்ப்படியவேண்டிய அவசியமில்லாதவனாக இருந்த ஆதாமின் குமாரர்களில் ஒருவனான எலியாவுமாக இருந்தனர். (6)

பதினைந்து நூற்றாண்டுகளுக்குமுன் (இந்தநூல் 19—ம்நூற்றாண்டில் எழுதப்பட்டது) பிஸ்காவின்மீது நின்று வாக்குத்தத்தஞ்செய்யப்பட்டிருந்த தேசத்தை மோசே பார்த்திருந்தான். மேரீபாவில் அவன் செய்த பாவத்தின் காரணமாக அவனால் அந்த தேசத்திற்குள் நுழைய முடியவில்லை. இஸ்ரவேல் மக்களை அவர்களது பிதாக்களுக்குச் சுதந்தரமாகக்

கொடுக்கப்பட்டிருந்த இடத்திற்கு நடத்திச்செல்லும் மகிழ்ச்சி அவனுக்கு மறுக்கப்பட்டது. “நான் கடந்துபோய் யோர்தானுக்கு அப்புறத்திலுள்ள அந்த நல்ல தேசத்தையும், அந்த நல்ல மலையையும், லீபனோனையும் பார்க்கும்படி உத்தரவு கொடுத்தருளும்” (உபாகமம் 3:25) என்ற விண்ணப்பம் மறுக்கப்பட்டது. வனாந்தர அலைச்சல்களின் இருளை நாற்பது வருடங்களாக ஒளிப்படுத்தியிருந்த நம்பிக்கை மறுக்கப்படவேண்டியதாக இருந்தது. உழைப்புமிக்க அந்த வருடங்கள்—இருதய பாரமிக்க பராமரிப்பு ஆகியவைகளின் இலக்கு வனாந்தரத்திலிருந்த ஒரு கல்லறையாகிப்போனது. ஆனால் “நாம் வேண்டிக்கொள்ளுகிறதற்கும் நினைக்கிறதற்கும் மிகவும் அதிகமாய் நமக்குள்ளே கிரியைசெய்கிற வல்லமையின்படியே, நமக்குச் செய்ய வல்லவராகிய” (எபேசியர் 3:20) அவர், தமது அளவின்படி அவரது ஊழியக்காரனுடைய ஜெபத்திற்குப் பதிலளித்திருந்தார். மோசே மரணத்தின் ஆளுகைக்குள் கடந்துசென்றான். ஆனால் கல்லறையில் இருக்கவேண்டியவனாக இருக்கவில்லை. அவனை உயிரடையும்படி கிறிஸ்துதாமே அழைத்தார். மோசேயின் பாவத்தின் காரணமாக சோதனைக்காரனாகிய சாத்தான் மோசேயின் சரீரத்தின்மீது உரிமைபாராட்டினான். ஆனால் இரட்சகராகிய கிறிஸ்து அவனைக் கல்லறையிலிருந்து வெளியே கொண்டுவந்தார். (யூதா 9). (7)

பாவம், மரணம் ஆகியவைகளின்மீதான கிறிஸ்துவின் வெற்றிக்கு மோசே மறுரூப மலையின்மீது சாட்சியாக இருந்தான். நீதிமான்களின் உயிர்த்தெழுதலின்போது, கல்லறையிலிருந்து வெளியே வருபவர்களுக்கு அவன் பிரதிநிதியாக இருந்தான். மரணத்தைக் காணாமல் பரலோகத்திற்கு மறுரூபப்பட்டுச்சென்ற எலியா, கிறிஸ்துவின் இரண்டாம் வருகையின்போது, பூமியின்மீது உயிருள்ளவர்களாக இருக்கக்கூடியவர்களுக்குப் பிரதிநிதியாக இருந்தான். “இதோ, ஒரு இரகசியத்தை உங்களுக்கு அறிவிக்கிறேன்; நாமெல்லாரும் நித்திரையடைவதில்லை; ஆகிலும் கடைசி எக்காளம் தொனிக்கும்போது, ஒரு நிமிஷத்திலே, ஒரு இமைப்பொழுதிலே, நாமெல்லாரும் மறுரூபமாக்கப்படுவோம். எக்காளம் தொனிக்கும், அப்பொழுது மரித்தோர் அழிவில்லாதவர்களாய் எழுந்திருப்பார்கள்; நாமும் மறுரூபமாக்கப்படுவோம். அழிவுள்ளதாகிய இது அழியாமையையும், சாவுக்கேதுவாகிய இது சாவாமையையும் தரித்துக்கொள்ளவேண்டும்”–1 கொரிந்தியர் 15:51–53. இரட்சிப்பை அருளும்படியாக இயேசு இரண்டாம்தடவை தோன்றும்போது இருக்கக்கூடியவிதத்தில் அவர் ஒளியின் ஆடையைத் தரித்தவராக இருந்தார். ஏனெனில், “பாவமில்லாமல் தரிசனமாவார்.” “தமது பிதாவின் மகிமைபொருந்தினவராய்ப் பரிசுத்த தூதர்களோடுங்கூட வரும்போது”–எபிரெயர் 9:28; மாற்கு 8:38. இரட்சகர் சீடர்களுக்குக் கொடுத்திருந்த

வாக்குத்தத்தம் இப்பொழுது நிறைவேறியிருந்தது. வரவிருக்கும் மகிமையின் இராஜ்யம் அதன் மிகச்சிறிய வடிவில் அந்த மலையில் எடுத்துக்காட்டப்பட்டது. கிறிஸ்து அரசராகவும், உயிர்த்தெழுந்த பரிசுத்தவான்களின் பிரதிநிதியாக மோசேயும், மறுரூபமாக்கப்பட்டவர்களின் பிரதிநிதியாக எலியாவும் இருந்தனர். (8)

அப்படியிருந்தும், அந்தக் காட்சியை சீடர்கள் இன்னும் புரிந்துகொள்ளாத நிலையில் உள்ளனர். ஆனால் பொறுமைமிக்க அந்த ஆசிரியர், தாழ்மையும் எளிமையுமான அவர், உதவியற்ற ஒருவராக அங்குமிங்கும் அலைந்துதிரிந்தவர், பரலோகத்தால் சிறப்பிக்கப்பட்டிருந்தவர்களால் (மோசே, எலியா) மேன்மைப்படுத்தப்பட்டிருக்கிறார். மேசியாவின் ஆளுகையை அறிவிப்பதற்காக எலியா வந்திருக்கிறான் என்றும், கிறிஸ்துவின் இராஜ்யம் பூமியின்மீது அமைக்கப்படப்போகிறது என்றும் அவர்கள் நம்புகின்றனர். அவர்களுடைய பயம், ஏமாற்றம் ஆகியவைகளைப்பற்றிய ஞாபகம் என்றுமாக நீக்கப்படவுள்ளது. தேவனுடைய மகிமை வெளிப்படுத்தப்பட்டிருக்கும் இந்த இடத்தில் தங்கியிருக்க அவர்கள் விரும்புகின்றனர். “ஆண்டவரே, நாம் இங்கே இருக்கிறது நல்லது; உமக்குச் சித்தமானால், இங்கே உமக்கு ஒரு கூடாரமும்,மோசேக்கு ஒரு கூடாரமும், எலியாவுக்கு ஒரு கூடாரமுமாக, மூன்று கூடாரங்களைப் போடுவோம்” என்றான். மோசேயும் எலியாவும் அவரது ஆண்டவரைப் பாதுகாக்கவும், அரசர் என்னும் அவரது அதிகாரத்தை ஏற்படுத்தவும் அனுப்பப்பட்டுள்ளனர் என்று அவர்கள் நிச்சயமாக நம்புகின்றனர். (9)

ஆனால் கிரீடத்திற்குமுன் சிலுவை வந்தாகவேண்டும். இயேசுவுடன் நிகழ்ந்த உரையாடலில் இந்த பொருள் கிறிஸ்து அரசர் என்னும் ஆரம்பம்பற்றினதாக இராமல், எருசலேமில் நிறைவேற்றப்படவேண்டிய மரணம் பற்றியதாக இருந்தது. மானிடத்தின் பலவீனங்களைத் தாங்கிக்கொண்டு, அதன் துயரம், பாவம் ஆகியவைகளின் பாரத்துடன் மனிதர்களுக்கிடையில் இயேசு தனிமையானவராக நடந்திருந்தார். வரவிருக்கும் சோதனையின் இருள் அவரை அழுத்தியபோது, அவரை அறியாத உலகில் ஆவியில் தனிமையானவராக அவர் இருந்தார். அவர் நேசித்திருந்த சீடர்களுங்கூட தங்களுடைய மேலான நம்பிக்கைகளின்மீதுள்ள சந்தேகத்திலும் துயரத்திலும் மூழ்கியிருந்து, அவரது ஊழியத்தின் இரகசியத்தை அறிந்து கொள்ளாதவர்களாக இருந்தனர். பரலோகத்தின் அன்பு, ஐக்கியம் ஆகியவைகளின் மத்தியில் அவர் வாழ்ந்திருந்தார். ஆனால் அவர் படைத்த அதே உலகத்தில் அவர் தனிமையானவராக இருந்தார். இப்பொழுது பரலோகம் அதன் தூதர்களை இயேசுவிடம் அனுப்பியிருந்தது.

பூமிக்குரிய இந்த வாழ்க்கையில் இரட்சகர் பாடுகளையும் துயரங்களையும் சகித்திருந்தார். இரட்சரின் சோதனையில் அவர்மீது அனுதாபம் காட்டக் கூடியவர்களாக மனிதர்கள் இருந்தனர். எனவே அவரது இந்தச் சோதனையில் அவரைப் பலப்படுத்த தூதர்கள் அனுப்பப்படாமல், அவர்மீது அனுதாபங்காட்டக்கூடியவர்களாக இருந்த மனிதர்கள் அனுப்பப்பட்டிருந்தனர். மோசேயும் எலியாவும் கிறிஸ்துவோடு உடன் ஊழியக்காரர்களாக இருந்தனர். மனிதர்களின் இரட்சிப்பைப்பற்றி அவர் கொண்டிருந்த ஏக்கத்தில் அவர்கள் பங்குபெற்றிருந்தனர். மோசே இஸ்ரவேலருக்காக மன்றாடியிருந்தான். "தேவரீர் அவர்கள் பாவத்தை மன்னித்தருளுவீரானால் மன்னித்தருளும்; இல்லாவிட்டால் நீர் எழுதின உம்முடைய புஸ்தகத்திலிருந்து என் பேரைக் கிறுக்கிப்போடும்" (யாத்திராகமம் 32:32) என்றான். எலியா தனது ஆவியின் தனிமையை அறிந்தவனாக இருந்தான். மூன்றரை வருடப் பஞ்சகாலத்தில் அந்த நாட்டின் வெறுப்பையும் அதன் சாபங்களையும் சுமந்தவனாக அவன் இருந்தான். தேவனுக்காக அவன் கர்மேல் பர்வதத்தில் தனித்து நின்றிருந்தான். வேதனையினாலும் நம்பிக்கையின்மையினாலும் அவன் தனிப்பட்டவனாக வனாந்தரத்திற்கு ஓடிப்போயிருந்தான். தேவ சிங்காசனத்தைச் சூழ்ந்திருந்த எல்லா தூதர்களையும்விட, மேலானவர்களாக இந்த மனிதர்கள் தெரிந்துகொள்ளப்பட்டிருந்தனர். இயேசுவின் பாடுகளைப்பற்றிய அவரது காட்சியைப்பற்றி அவர்கள் உரையாடியிருந்தனர். அவர்மீது பரலோகம் கொண்டுள்ள அனுதாபத்தின் நிச்சயத்தை அவருக்கு உறுதிசெய்து, அவரை ஆறுதல்படுத்த அவர்கள் அனுப்பப்பட்டிருந்தனர். உலகத்தின் நம்பிக்கை ஒவ்வொரு மனிதனின் இரட்சிப்பு ஆகியவை அவர்களது நேர்காணலின் பாரமாக இருந்தது. (10)

சீடர்கள் தூக்கமயக்கத்தினால் மேற்கொள்ளப்பட்டிருந்தனர். அதனால் கிறிஸ்துவிற்கும் பரலோகத்திலிருந்து வந்த தூதுவர்களுக்குமிடையில் நிகழ்ந்த உரையாடலில் அவர்கள் பேசிக்கொண்டது என்ன என்பதை அவர்கள் கேட்கவில்லை. ஜெபிக்கவும், விழித்திருக்கவும் அவர்கள் தவறிவிட்டனர். அதனால் அவர்களுக்கு தேவன் கொடுக்கவேண்டுமென்றிருந்தவைகளை அவர்களால் பெற்றுக் கொள்ளமுடியவில்லை. அதாவது, கிறிஸ்துவிற்கு ஏற்படவிருக்கும் பாடுகளைப்பற்றியும், அதைத்தொடர்ந்து வரக்கூடிய மகிமையைப்பற்றியும் உள்ள அறிவை அவர்கள் பெற்றுக்கொள்ளவில்லை. அவரது தற்தியாகத்தில் பங்குபெறுவதின்மூலமாக அவர்களுடையதாக இருந்திருக்கக்கூடிய ஆசீர்வாதத்தை அவர்கள் இழந்துவிட்டனர். இந்த சீடர்கள் நம்புவதற்கு மந்தமான இருதயம் உள்ளவர்களாக இருந்தனர். எனவே, பரலோகம் அவர்களை வளப்படுத்த விரும்பியிருந்த பொக்கிஷத்தை அவர்கள் வரவேற்ற முடியாதவர்களாக இருந்தனர். (11)

அப்படியிருந்துங்கூட, அவர்கள் பெரும் ஒளியைப் பெற்றுக்கொண்டனர். கிறிஸ்துவைப் புறக்கணிப்பதின்மூலமாகவுள்ள யூத ஜாதியின் பாவத்தை பரலோகம் முழுவதும் அறிந்திருக்கிறது என்னும் நிச்சயம் அவர்களுக்குக் கொடுக்கப்பட்டிருந்தது. மீட்பரின் செயலைப்பற்றிய ஒரு தெளிவான அகப்பார்வை அவர்களுக்குக் கொடுக்கப்பட்டிருந்தது. மனிதனின் புரிந்துகொள்ளுதலுக்கும் அப்பாற்பட்டவையாக இருந்தவைகளை அவர்கள் தங்களது கண்களினால் கண்டனர். காதுகளினால் கேட்டனர். அவருடைய மகத்துவத்தைக் கண்ணாரக்கண்டனர். மெய்யாகவே இயேசுதான் மேசியா என்பதை உணர்ந்தனர். முற்பிதாக்களாலும் தீர்க்கதரிசிகளாலும் சாட்சிபகரப்பட்டிருந்த மேசியா மெய்யாகவே இயேசுதான் என்பதையும், அவரைப் பரலோகப் பிரபஞ்சம் அங்கீகரித்துள்ளது என்பதையும் அவர்கள் உணர்ந்தனர். "அவருடைய மகத்துவத்தைக் கண்ணாரக்கண்டவர்களாகவே"–2 பேதுரு 1:16.(12)

மலையின்மீதிருந்த அந்தக் காட்சியை இவ்வாறாக கண்டுகொண்டிருந்தபோது, ஒரு பிரகாசமான மேகம் அவர்களை மூடியது. "இவர் என்னுடைய நேச குமாரன், இவரில் பிரியமாயிருக்கிறேன், இவருக்குச் செவிகொடுங்கள்" என்னும் ஒரு குரல் அந்த மேகத்திலிருந்து தொனித்ததையும் கேட்டனர். இஸ்ரவேல் ஜாதியினருக்கு முன்பாக வனாந்தரத்தில் முன்சென்றிருந்த மேகத்தைவிட அதிக மகிமைமிக்கதாக இருந்த மேகத்தைப் பார்த்து, மலைகள் நடுங்கத்தக்க பயங்கரமான மகத்துவத்துடனுள்ள தேவனுடைய குரலை கேட்டபோது, சீடர்கள் அடிபட்டவர்களைப்போல தரையின்மீது விழுந்தனர். "இயேசு வந்து, அவர்களைத் தொட்டு: எழுந்திருங்கள், பயப்படாதேயுங்கள்" என்று கூறினதைக் கேட்கும்வரை, அவர்கள் முகங்குப்புற விழுந்துகிடந்தனர். அவர்கள் தங்கள் கண்களைத் திறக்கத் துணிந்தபோது, அந்தப் பரலோக மகிமை போய்விட்டிருந்தது. மோசேயும் எலியாவும் மறைந்துபோய்விட்டதையும் அவர்கள் கண்டனர். அவர்கள் அந்த மலையின்மீது இயேசுவுடன் தனித்திருந்தனர். (13) ★

# 47

# ஊழியம்!

**மத்தேயு 17:9–21; மாற்கு 9:9–29; லூக்கா 9:37–45**

**(The Desire of Ages, pp. 426–431)**

அந்த இரவு முழுவதும் அந்த மலையின்மீது கழிக்கப்பட்டது. உதயமானதும் இயேசுவும் அவரது சீடர்களும் அந்த மலையைவிட்டுக் கீழே இறங்கினார்கள். நிகழ்ந்தவைகளைப்பற்றிய சிந்தனையில் மூழ்கியவர்களாகச் சீடர்கள் பிரமிப்பிலும் மௌனத்திலுமிருந்தனர். பேதுருவுங்கூட ஒரு வார்த்தையும் கூறமுடியாதவனாக இருந்தான். தேவகுமாரன் தமது மகிமையை அங்கு வெளிக்காட்டியிருந்தார். பரலோக ஒளியால் அந்த இடம் தொடப்பட்டுப் பரிசுத்தமாகியிருந்தது. அந்த இடத்தில் அவர்களால் மகிழ்ச்சியுடன் தங்கியிருந்திருக்கமுடியும். ஆனால் தூரத்திலிருந்தும் அருகிலிருந்தும் மக்கள் ஏற்கெனவே இயேசுவைத் தேடிக்கொண்டிருந்தனர். அந்த மக்களுக்காகச் செய்யவேண்டிய பணி இருந்தது. (1)

அந்த மலையின் அடிவாரத்தில் ஒரு பெரும் கூட்டத்தினர் கூடியிருந்தனர். இயேசு எங்கே இருக்கிறார் என்பதை அவர்கள் அறியவில்லை. ஆனால் பின்னாலிருந்த சீடர்களைக் கண்டு, அவர்கள் அங்கு வந்தனர். இரட்சகர் அருகில் வந்துசேர்ந்தபோது, அவர்கள் கண்ட காட்சியைப்பற்றி மௌனமாயிருக்கும்படி அவர் அந்த மூன்று சீடர்களுக்கும் கட்டளையிட்டார். “மனுஷகுமாரன் மரித்தோரிலிருந்து எழுந்திருக்கும்வரைக்கும் இந்தத் தரிசனத்தை ஒருவருக்கும் சொல்லவேண்டாம் என்று கட்டளையிட்டார்.” சீடர்கள் அதை மற்றவர்களுக்கு விளம்பரம்செய்யாமல் தங்கள் இருதயங்களில் அதைப்பற்றிச் சிந்திக்கும்படி அது அவர்களுக்கு வெளிப்படுத்தப்பட்டது. திரளான மக்களுக்கு அதைக் கூறுவதினால் அது பரிகாசத்தையோ அல்லது நம்பமுடியாத ஆச்சரியத்தையோ மட்டுந்தான் உண்டுபண்ணியிருந்திருக்கும். கிறிஸ்து மரித்தோரிலிருந்து உயிர்த்தெழும்வரை, மற்ற ஒன்பது அப்போஸ்தலர்களுங்கூட, அந்தக் காட்சியைப் புரிந்துகொண்டிருக்கமாட்டர்கள். அனுகூலம் பெற்றிருந்த அந்த மூன்று சீடர்களுங்கூட எவ்விதமாக மந்தமான அறியும் திறனை

உடையவர்களாக இருந்தனர்? அவர்கள் அதைக் கண்டிருந்ததுமட்டுமன்றி, தமக்குமுன் என்ன வைக்கப்பட்டிருக்கிறது என்பதைக் கிறிஸ்து அவர்களிடம் கூறியுமிருந்தார். அப்படியிருந்தும், மரித்தோரிலிருந்து எழும்புவதென்றால் என்ன? என்று அவர்கள் ஒருவருக்கொருவர் கேள்விகேட்டுக்கொண்டிருந்தனர். எனினும், அவர்கள் இயேசுவிடமிருந்து எந்த விளக்கத்தையும் கேட்கவில்லை. எதிர்காலத்தைப்பற்றிய அவரது வார்த்தைகள் அவர்களைத் துயரத்தால் நிரப்பியிருந்தது. இப்படிப்பட்ட ஒரு காரியம் ஒருபோதும் நடக்கக்கூடாது என்ற நம்பிக்கையில் அவர்கள் அதிகமான விருப்பமுடையவர்களாக இருந்தனர். ஆகையால் அவர்கள் அதைப்பற்றி மேற்கொண்டு எந்த வெளிப்படுத்தலையும் அறிந்துகொள்ள வகைதேடாமலிருந்தனர். (2)

மக்கள் மலையடிவாரத்தில் அவரைக் கண்டவுடன், பக்தியையும் மகிழ்ச்சியையும் வெளிக்காட்டி அவரைச் சந்திக்க ஓடினார்கள். இருந்தும், அவர்கள் பெரும் குழப்பத்திலிருப்பதை அவரது வேகமான பார்வை அறிந்துகொண்டது. சீடர்கள் தொந்தரவில் இருப்பதுபோலக் காணப்பட்டனர். அவர்களுக்கு ஏமாற்றத்தையும் கேவலத்தையும் உண்டுபண்ணியிருந்த ஒரு சூழ்நிலை இப்பொழுதுதான் நிகழ்ந்திருந்தது. (3)

அவர்கள் அந்த மலை அடிவாரத்தில் காத்துக்கொண்டிருந்தனர். அப்போது, ஒரு தகப்பன் தனது மகனை உபத்திரவப்படுத்தியிருந்த ஊமையான ஆவியிடமிருந்து அவனுக்கு விடுதலை கிடைக்கும்படி, அவனை அவர்களிடம் கொண்டுவந்தான். கலிலேயா எங்கும் பிரசங்கிக்கும்படி இயேசு அவரது பன்னிரண்டு சீடர்களையும் அனுப்பினபோது, அசுத்த ஆவிகளைத் துரத்தும் அதிகாரத்தை அவர்களுக்குக் கொடுத்திருந்தார். அவர்கள் விசுவாசத்தில் பலமுள்ளவர்களாகச் சென்றபோது, அசுத்த ஆவிகள் அவர்களது வார்த்தைக்குக் கீழ்ப்படிந்தன. இப்பொழுது அவர்கள் அந்த மகனைப் பிடித்திருந்த அசுத்த ஆவியை அவனைவிட்டுப் போகும்படி கிறிஸ்துவின் பெயரால் கட்டளையிட்டனர். ஆனால் அந்தப் பிசாசு தனது பெரிதான வல்லமையைக் காட்டி அவர்களைப் பரிகசித்தது. தங்களுடைய தோல்விக்கான காரணத்தை அறியமுடியாதவர்களாக இருந்த சீடர்கள் தங்கள்மீதும் தங்களுடைய ஆண்டவரின்மீதும் அவமதிப்பைக் கொண்டுவந்ததை உணர்ந்தனர். இந்தக் கூட்டத்தில் சீடர்களைக் கேவலப்படுத்துவதற்கு அந்த வாய்ப்பினைப் பயன்படுத்திக்கொண்ட வேதபாரகர்கள் இருந்தனர். அந்த வேதபாரகர்கள் சீடர்களைச் சூழ்ந்துகொண்டு, அவர்களும் அவர்களுடைய ஆண்டவரும் ஏமாற்றுக்காரர்கள் என்பதை மெய்ப்பிக்கப் பலகேள்விகளை சீடர்களின்மீது அடுக்கினர். சீடர்களாலோ அல்லது கிறிஸ்துவினாலோ வெற்றிகொள்ளமுடியாத ஒரு அசுத்த ஆவி இருக்கிறது என்று ரபிமார்கள்

வெற்றியின் ஆரவாரத்தை எழுப்பினார்கள். மக்கள் வேதபாரகர்களுடன் சேர்ந்துகொள்ளும்படி நடத்தப்பட்டனர். அவமதிப்பும் பரிகாசமுமிக்க உணர்ச்சிகள் அந்தக் கூட்டத்தில் பரவியது. (4)

ஆனால் திடீரென்று அந்தக் குற்றச்சாட்டுகள் நின்றுவிட்டன. இயேசுவும் அந்த மூன்று சீடர்களும் சமீபித்து வருவது காணப்பட்டது. மக்கள் துரிதமாக மாறுபட்ட ஒரு உணர்வோடு அவர்களைச் சந்திக்கத் திரும்பினர். இரவில் பரலோக மகிமையுடன் கொண்டிருந்த தொடர்பின் சாயல் இரட்சகரின்மீதும் அவரது தோழர்களின்மீதும் இருந்தது, அவர்களைப் பார்க்கின்றவர்களைத் திகைக்கச்செய்கின்ற பிரகாசம் அவர்களுடைய முகங்களில் இருந்தது. மக்கள் இயேசுவை வரவேற்றபோது, வேதபாரகர்கள் பயத்துடன் பின்வாங்கினர். (5)

நிகழ்ந்தவைகள் அனைத்திற்கும் இரட்சகர் ஒரு சாட்சியாக இருந்ததுபோல போராட்டத்தின் இடத்திற்கு அவர் வந்து, அவரது பார்வையை வேதபாரகர்களின்மீது பதித்து, அவர்களிடத்தில் நீங்கள் கேட்கும் கேள்வி என்ன? என்றார். (6)

இதுவரை தைரியமும் அகந்தையுமிக்கதாக இருந்த குரல்கள் இப்போது மௌனமடைந்துவிட்டன. அந்தக் கூட்டம் முழுவதிலும் ஒரு நிசப்தம் நிலவியது. இப்பொழுது துன்பமடைந்திருந்த தகப்பன் கூட்டத்திற்கு இடையில்வந்து, இயேசுவின் பாதங்களில் விழுந்து, அவனது துன்பத்திற்கான காரணத்தையும் அவனது ஏமாற்றத்தையும் அவரிடம் கூறினான். (7)

“ஆண்டவரே, என் மகனுக்கு இரங்கும், அவன் சந்திரரோகியாய்க் கொடிய வேதனைப்படுகிறான்; … அவனை உம்முடைய சீஷர்களிடத்தில் கொண்டுவந்தேன்; அவனைச் சொஸ்தமாக்க அவர்களால் கூடாமற் போயிற்று” என்றான். (8)

இயேசு தம்மைச் சூழ்ந்திருந்த திகைப்படைந்திருந்த திரளானவர் களையும் குற்றங்கண்டுபிடிக்கும் வேதபாரகர்களையும் குழப்பமிக்கவர்களாக இருந்த சீடர்களையும் பார்த்தார். ஒவ்வொரு இருதயத்திலுமிருந்த விசுவாசமின்மையையும் அவர் வாசித்தறிந்து, துயரம் நிறைந்த ஒரு குரலில்: “விசுவாசமில்லாத மாறுபாடுள்ள சந்ததியே, எதுவரைக்கும் நான் உங்களோடு இருப்பேன்? எதுவரைக்கும் உங்களிடத்தில் பொறுமையாய் இருப்பேன்? அவனை என்னிடத்தில் கொண்டுவாருங்கள்” என்றார். (9)

அந்தச் சிறுவன் கொண்டுவரப்பட்டான். இரட்சகரின் கண்கள் அவன்மீது பதிந்தபோது, அந்தப் பொல்லாத ஆவி அவனை வேதனையுடன் தரையில் புரளும்படிச் செய்தது. அவன் கீழே விழுந்து

வலித்துக்கொண்டும் இழுத்துக்கொண்டும் வாயில் நுரைதள்ளினவனாகவும் சத்தமிட்டுக்கொண்டிருந்தான். (10)

மறுபடியும் ஜீவாதிபதியும் அந்தகார சக்திகளின் பிரபுவும் சந்தித்தனர். கிறிஸ்து அவரது ஊழியத்தின் நிறைவேறுதலாக சிறைப்பட்டவர்களை விடுதலை செய்யவும்... (லூக்கா 4:18) நருங்குண்டவர்களை குணமாக்கவும் வந்தார். அதே நேரத்தில், சாத்தான் தனக்கு இரையானவனைத் தன் கட்டுப்பாட்டிற்குள் வைக்க வகைதேடி இவ்வாறு போர்க்களத்தில் சந்தித்தான். ஒளியின் தூதர்களும் தீமைகளின் சேனையும் அந்தப் போரைக் காண நெருங்கிநின்றனர். பார்த்துக்கொண்டிருப்பவர்கள் விடுதலை நிகழ்வதைக் காணவேண்டுமென்பதற்காக தீமையின் ஆவியை விநாடி நேரத்திற்கு அதன் செயலை வெளிக்காட்டுவதற்கு இயேசு அனுமதித்தார். (11)

ஏராளமானவர்கள் திகைத்தவர்களாகவும், அவனது தந்தை வேதனைமிக்க நம்பிக்கையுடனும் அதைக் கண்டனர். அவர் அவனுடைய தகப்பனை நோக்கி: "இது இவனுக்கு உண்டாகி எவ்வளவு காலமாயிற்று" என்று கேட்டார். அநேக வருடங்களாக உள்ள பாடுகளின் கதையை அந்தத் தந்தை கூறி, அதற்குமேல் அதனைத் தாங்கிக்கொள்ளமுடியாதவனாக "நீர் ஏதாகிலும் செய்யக்கூடுமானால், எங்கள்மேல் மனதிரங்கி, எங்களுக்கு உதவிசெய்யவேண்டும்" (உம்மால்கூடுமானால்!) என்றான். இப்போதுங்கூட அந்தத் தகப்பன் கிறிஸ்துவின் வல்லமையைப்பற்றிக் கேள்விகேட்டான். (12)

"இயேசு அவனை நோக்கி: நீ விசுவாசிக்கக்கூடுமானால் ஆகும், விசுவாசிக்கிறவனுக்கு எல்லாம் கூடும்" என்றார். கிறிஸ்துவின் பகுதியில் வல்லமைக் குறைவு எதுவும் இருக்கவில்லை. மகள் சுகமடைதல் தகப்பனின் விசுவாசத்தைச் சார்ந்ததாக இருக்கிறது. அந்தத் தகப்பன் தனது பலவீனத்தை உணர்ந்தவனாகக் கண்ணீருடன் கிறிஸ்துவின் இரக்கத்திற்காக அவரது பாதத்தில் விழுந்து "விசுவாசிக்கிறேன் ஆண்டவரே! என் அவிசுவாசம் நீங்கும்படி உதவிசெய்யும்" என்று கண்ணீரோடே சத்தமிட்டுச் சொன்னான். (13)

இயேசு துன்பப்பட்டுக்கொண்டிருந்தவனின் பக்கம் திரும்பி, அந்த அசுத்த ஆவியை நோக்கி: "ஊமையும் செவிடுமான ஆவியே, இவனை விட்டுப் புறப்பட்டுப்போ, இனி இவனுக்குள் போகாதே என்று நான் உனக்குக் கட்டளையிடுகிறேன் என்று அதட்டினார்." ஒருஅலறலும் வேதனைமிக்க அலைக்கழிப்பும் உண்டாகிறது. தனது இரையைவிட்டு வெளியே செல்லும் பிசாசு அவனது உயிரை எடுத்துவிடுவதுபோலத் தோன்றுகிறது. அதன்பின், அந்தச் சிறுவன் அசைவற்றவனாக வெளித்தோற்றத்திற்குச் செத்தவனைப்போலக் கிடக்கிறான். அவன் செத்துப்போனான் என்று

அநேகர் மெதுவாகப் பேசிக்கொள்ளுகின்றனர். ஆனால் இயேசு அவன் கையைப்பிடித்து, அவனைத் தூக்கி, மனதிலும் சரீரத்திலும் பூரணமான சுகமுள்ளவனாக அவனை அவனது தகப்பனுக்குக் காட்டுகிறார். தங்களுக்கு விடுதலை வழங்கியவரை, தகப்பனும் மகனும் துதிக்கின்றனர். தோல்வியடைந்து தலைகுனிவடைந்த வேதபாரகர்கள் அந்த இடத்தைவிட்டு மிகுந்த கோபத்துடன் செல்லுகின்றனர். (14)

“நீர் ஏதாகிலும் செய்யக்கூடுமானால், எங்கள்மேல் மனதிரங்கி, எங்களுக்கு உதவிசெய்யவேண்டும்” பாவப்பாரம் சுமந்த எத்தனை ஆத்துமாக்களிலிருந்து அந்த ஜெபம் எதிரொலித்திருக்கிறது. அவர்களனைவருக்கும் இரட்சகரின் பதில்: “நீ விசுவாசிக்கக்கூடுமானால் ஆகும், விசுவாசிக்கிறவனுக்கு எல்லாம் கூடும்” என்பதாகும். பரலோகத்துடன் நம்மை இணைத்து, அந்தகார சக்திகளை மேற்கொள்வதற்கு வல்லமையைத் தருவது விசுவாசந்தான். பாவமிக்க குணங்களைக் கீழ்ப்படுத்து வதற்கும், சோதனைகள் எவ்வளவுதான் பலமுள்ளவைகளாக இருந்த போதிலும் அவைகளைத் தடுக்கவும், தேவன் கிறிஸ்துவைக் கருவியாக ஏற்பாடுசெய்திருக்கிறார். அநேகர் தங்களிடம் விசுவாசம் இல்லை என்று உணர்ந்து, அதன் காரணமாக கிறிஸ்துவைவிட்டு விலகிநிற்கின்றனர். அப்படிப்பட்ட ஆத்துமாக்கள் தங்களுடைய உதவியற்ற நிலையிலும் தகுதியற்ற நிலையிலும் தங்கள்மீது மனஉருக்கமிக்க இரட்சகரின் இரக்கத்தின்மீது தங்களை வைப்பார்களாக; சுயத்தை பார்ப்பதை விட்டுவிட்டு, கிறிஸ்துவை நோக்கிப் பாருங்கள். மனிதர்களுக்கிடையில் சஞ்சரித்திருந்தபோது, நோயுற்றவர்களைச் சுகப்படுத்தி, பிசாசுகளைத் துரத்தியிருந்த அவர் இன்றும் அதே வல்லமையுள்ள மீட்பராக இருக்கிறார். விசுவாசம் தேவனுடைய வார்த்தையினால் உண்டாகிறது. அப்படியானால், “என்னிடத்தில் வருகிறவனை நான் புறம்பே தள்ளுவதில்லை” (யோவான் 6:37) என்னும் அவருடைய வாக்குத்தத்தத்தைப் பற்றிக்கொள்ளுங்கள். “ஆண்டவரே, என் அவிசுவாசம் நீங்கும்படி உதவிசெய்யும்” என்று கூறி, அவரது பாதத்தில் விழுந்துவிடுங்கள். அவ்வாறு செய்யும்போது, ஒருபோதும் கெட்டுப்போகமாட்டீர்கள். (15)

சற்றுநேர கால இடைவெளியில் அனுகூலம் பெற்றிருந்த சீடர்கள் மிகமேலான மகிமையையும் கேவலத்தையும் கண்டுள்ளனர். சாத்தானின் சாயலில் கீழ்த்தரமாக மாறியிருந்த மானுடம் தேவனுடைய ரூபத்தில் மறுரூபமடைந்ததை அவர்கள் கண்டுள்ளனர். அந்த மலையின்மீது அவர் பரலோகத் தூதுவர்களுடன் உரையாடியிருந்தார். அவர் தேவனுடைய குமாரன் என்று குரல் அறிவித்ததை அவர்கள் கேட்டிருந்தனர். ஒளிவீசும்

அந்த மலையிலிருந்து துன்பமும் கலகஞ்செய்தலுமாகிய காட்சியைக் காணும்படி இயேசு கீழே இறங்கியதை அவர்கள் கண்டுள்ளனர். எந்த மனித வல்லமையினாலும் நிவாரணமளிக்க முடியாதவனாக இருந்து, உருக்குலைந்த முகத்துடன் பற்களைக் கடித்துக்கொண்டு, கீழே புரண்டு கொண்டிருந்த அந்தச் சிறுவனை அவர் காண நேரிட்டதை அவர்கள் கண்டனர். சில மணிநேரங்களுக்குமுன் வியப்படைந்தவர்களாக இருந்த தமது சீடர்களுக்குமுன் மகிமையுடையவராக நின்றிருந்த இந்த வல்லமைமிக்க மீட்பர், சாத்தானின் இரையாக இருந்து தரையில் புரண்டுகொண்டிருந்தவனை உடலிலும் மனதிலும் ஆரோக்கியமுள்ளவனாக அவனது தகப்பனிடத்திலும் வீட்டிலும் திரும்ப எடுத்து நிறுத்துவதற்காகக் கீழே குனிகிறார். (16)

தெய்வத்துவத்தில் ஒருவராக இருந்த ஒருவர் தமது பிதாவின் மகிமையிலிருந்து இழந்துபோனதை மீட்கும்படி தம்மைக் கீழாகத் தாழ்த்துவது மீட்பைக் காணக்கூடிய ஒரு பொருட்பாடமாக இருந்து, அந்த சீடர்களின் ஊழியத்தையுங்கூட எடுத்துக்காட்டியிருந்தது. கிறிஸ்துவின் ஊழியக்காரர்களுடைய வாழ்க்கை ஆவிக்குரிய ஒளிமிக்க வேளையில் இயேசுவுடன் மலையின்மீது மட்டும் செலவிடப்படக்கூடாததாக உள்ளது. மலை அடிவாரத்திலுள்ள சமவெளியில் செய்யவேண்டிய வேலை அவர்களுக்குள்ளது. சாத்தானால் அடிமைப்படுத்தப்பட்டுள்ள ஆத்துமாக்கள் தங்களுக்கு விடுதலையை வழங்கக்கூடிய விசுவாச வார்த்தைகளுக்காகவும் ஜெபத்திற்காகவும் காத்திருக்கின்றனர். (17)

அந்த ஒன்பது சீடர்களும் தங்களுக்குண்டான தோல்வியாகிய கசப்பான உண்மையைப்பற்றியே இன்னும் சிந்தித்துக்கொண்டிருந்தனர். “அதைத் துரத்திவிட எங்களால் ஏன் கூடாமற்போயிற்று” என்று அவர்கள் கேட்டார்கள். “அதற்கு அவர்: இவ்வகைப் பிசாசு ஜெபத்தினாலும் உபவாசத்தினாலுமேயன்றி மற்றெவ்விதத்தினாலும் புறப்பட்டுப்போகாது” என்றார். அவர்களது நம்பிக்கையின்மை அவர்களைக் கிறிஸ்துவுடன் ஆழ்ந்த அனுதாபமற்றவர்களாக அடைத்துவைத்திருந்தது. அவர்களிடம் ஒப்படைக்கப்பட்டிருந்த பரிசுத்தமான பணியை அவர்கள் கவனமற்றதாகக் கருதினது, அந்த சக்திகளுடன் அவர்களுக்குண்டான போரில் அவர்களது தோல்விக்குக் காரணமாயிற்று. (18)

தமது மரணத்தைச் சுட்டிக்காட்டியிருந்த கிறிஸ்துவின் வார்த்தைகள் அவர்களுக்குத் துயரத்தையும் சந்தேகத்தையும் கொண்டுவந்திருந்தது. இயேசுவுடன்கூட மலைக்குச்செல்ல அவர் மூன்று சீடர்களைத் தேர்ந்தெடுத்தது மற்ற ஒன்பது பேர்களுடைய பொறாமையையும் தூண்டிவிட்டிருந்தது. ஜெபத்தினாலும் தியானத்தினாலும் கிறிஸ்துவின் வார்த்தைகளின்மீது அவர்கள்

தங்களுடைய விசுவாசத்தைப் பலப்படுத்திக்கொள்வதற்குப்பதிலாக தனிப்பட்ட விதத்தில் தங்களுக்கிருந்த மனக்குறைகளையும் அதைரியங்களையும் பற்றிச் சிந்தித்துக்கொண்டிருந்தனர். இப்படிப்பட்ட இருண்ட நிலையில் அவர்கள் சாத்தானுடனுள்ள போரில் ஈடுபட்டிருந்தனர். (19)

இவ்விதமான ஒருபோரில் அவர்கள் வெற்றிபெற அந்தப் பணியில் வேறுவிதமான ஒரு ஆவியுடன் வந்திருக்க வேண்டும். ஆர்வமிக்க ஜெபத்தினாலும் உபவாசத்தினாலும் இருதயத்தைத் தாழ்த்துவதினாலும் அவர்களுடைய விசுவாசம் பலப்படுத்தப்பட்டிருந்திருக்கவேண்டும். சுயத்தை வெறுமையாக்கி அவர்கள் தேவ ஆவியினாலும் தேவனுடைய பலத்தினாலும் நிறைந்திருந்திருக்கவேண்டும். தேவன்மீதுள்ள விசுவாசத்துடன்கூடிய அக்கறை, விடாமுயற்சிமிக்க ஜெபம், தேவனையே முற்றிலுமாகச் சார்ந்திருக்கக்கூடிய விசுவாசம், அவரது ஊழியத்திற்கான முழு அர்ப்பணம் ஆகியவை மட்டுமே, துரைத்தனங்களோடும், அதிகாரங்களோடும், இப்பிரபஞ்சத்தின் அந்தகார லோகாதிபதிகளோடும், வானமண்டலங்களிலுள்ள பொல்லாத ஆவிகளின் சேனைகளோடுமுள்ள யுத்தத்தில் பரிசுத்த ஆவியின் உதவியை மனிதர்களுக்குக் கொண்டுவரும். (20)

“கடுகுவிதையளவு விசுவாசம் உங்களுக்கு இருந்தால்” என்று இயேசு கூறினார். கடுகின் விதை மிகச் சிறியதாக இருந்தபோதிலும் மிக உயரமான ஒரு மரமாக அது வளர்வதற்கான உயிர்க்கொள்கையின் இரகசியம் அதனுள் அடங்கியிருக்கிறது. கடுகுவிதை நிலத்தில் விதைக்கப் படும்போது, அதனுள் உள்ள நுண்ணிய உயிர்ச்சத்து, அது வளர்வதற்குத் தேவையானதாக இருக்கும்படி தேவன் ஏற்படுத்தியுள்ள ஊட்டச்சத்தை பற்றிக்கொள்ளுகிறது. பலத்த வளர்ச்சியை உடைய ஒன்றான அது மாறுகிறது. உங்களுக்கு இப்படிப்பட்ட விசுவாசம் இருக்குமானால் நீங்கள் தேவனுடைய வார்த்தையையும் அவர் ஏற்படுத்தியிருக்கும் உதவும் ஏதுகரங்கள் அனைத்தையும் பற்றிக்கொள்வீர்கள். இவ்விதமாக உங்களுடைய விசுவாசம் பலப்பட்டு, அது பரலோகத்தின் வல்லமையை உங்களுக்கு உதவியாகக் கொண்டுவரும். உங்களது பாதைக்குக் குறுக்காகத் தடைகளைச் சாத்தான் குவித்தபோதிலும், ஒருபோதும் கடக்கமுடியாத நித்திய உயரமான மலையைப்போல புறத்தோற்றத்தில் காணப்பட்டபோதிலும், அது விசுவாசத்தின் கோரிக்கையின்முன் மறைந்துபோய்விடும். உங்களால் கூடாத காரியம் ஒன்றுமிருக்காது. (21) ★

# 48

# யார் பெரியவன்?

**மத்தேயு 17:22–27; 18:1–20; மாற்கு 9:30–35; லூக்கா 9:46–48**

**(The Desire of Ages, pp. 432–442)**

இயேசு கப்பர்நகூமிற்குத் திரும்பிவந்ததும் அவர் மக்களுக்குப் போதித்திருந்த—வழக்கமாக இளைப்பாறக்கூடிய இடத்திற்குச் செல்லாமல், தற்காலிக வீடாக இருந்த இடத்திற்கு அவரது சீடர்களுடன் சென்றார். அவர் அதற்குப்பின் கலிலேயாவில் தங்கியிருந்த நாட்களில் திரளானவர்களுக்காக ஊழியஞ்செய்வதைவிட, சீடர்களுக்குப் போதிப்பதே அவரது நோக்கமாக இருந்தது. (1)

கலிலேயாவை நோக்கியுள்ள பயணத்தின்போது, தமக்குமுன் இருக்கக்கூடிய காட்சிகளுக்கு சீடர்களின் மனங்களை ஆயத்தஞ் செய்வதற்கு அவர் மறுபடியும் முயன்றிருந்தார். அவர் எருசலேமிற்குச் சென்று, மரணாக்கினைக்குட்பட்டு மறுபடியும் உயிர்த்தெழவேண்டியதாக உள்ளது என்று அவர்களிடம் கூறினார். அவர் தமது எதிரிகளின் கையில் காட்டிக்கொடுக்கப்பட உள்ளார் என்னும் பக்திவிநயமான, வழக்கத்திற்கு மாறான காரியத்தைச் சேர்த்துக்கூறினார். இப்பொழுதுங்கூட சீடர்கள் அவரது வார்த்தைகளைப் புரிந்துகொள்ளவில்லை. துயரத்தின் ஒரு பெரும் நிழல் அவர்கள்மீது படிந்திருந்தபோதிலும், அவர்களது இருதயங்களில் ஒரு போட்டியின் ஆவி இடம் பெற்றிருந்தது. அந்த இராஜ்யத்தில் யார் பெரியவனாகக் கருதப்படவேண்டும் என்று அவர்கள் தங்களுக்குள் தர்க்கஞ்செய்திருந்தனர். இந்த உண்மையை அவர்கள் இயேசுவிடமிருந்து மறைக்க எண்ணினார்கள். வழக்கம்போல் அவர்கள் இயேசுவின் அருகில் இருக்காமல், அவர் கப்பர்நகூமிற்குள் பிரவேசித்தபோது, பின்தங்கி நடந்திருந்ததினால், அவர் முன்னாகச் சென்றிருந்தார். இயேசு அவர்களது எண்ணங்களை அறிந்து, அவர்களுக்கு ஆலோசனை கொடுத்து உபதேசிக்க ஏங்கினார்; ஆனால், அவரது வார்த்தைகளைப் பெற்றுக்கொள்ள அவர்களது இருதயங்கள் திறக்கக்கூடிய ஒரு அமைதியான நேரத்திற்காகக் காத்திருந்தார். (2)

அவர்கள் அந்த ஊரைச் சென்றடைந்ததும், ஆலய வரி வசூலிப்பவன், “உங்கள் போதகர் வரிப்பணம் செலுத்துகிறதில்லையா” என்ற கேள்வியுடன் பேதுருவிடம் வந்தான். இது அரசாங்கத்திற்குச் செலுத்தவேண்டிய வரியல்ல. ஆலயத்தைப் பாரமரிப்பதற்காக ஒவ்வொரு யூதனும் வருடந்தோறும் செலுத்தவேண்டிய மத சம்பந்தமான வரித்தொகையாக இருந்தது. அதைக்கொடுக்க மறுப்பது ஆலயத்தின்மீதுள்ள பக்தி விசுவாசமின்மையாகக் கருதப்படும். இது ரபிமார்களின் அனுமானத்தில் மிகப் பெரும் பாவமாகக் கருதப்பட்டிருந்தது. ரபிமார்களின் சட்டங்களைப்பற்றிய இரட்சகரது மனோபாவம், பாரம்பரியங்களைப் பாதுகாத்துவந்திருந்தவர்களுக்கெதிரான அவரது தெளிவான கடிந்துகொள்ளுதல் ஆகியவை, அவர் ஆலயப் பராமரிப்பைக் கவிழ்க்க வகைதேடிக்கொண்டிருந்தார் என்பதுபோன்ற குற்றச்சாட்டிற்கு இடமளித்திருந்தது. இப்பொழுது அவரது எதிரிகள், அவர்மீது மரியாதைக் குறைவைக் கொண்டுவரக்கூடிய ஒரு சந்தர்ப்பத்தைக் கண்டனர். குற்றஞ்சாட்டுவதற்கு ஆயத்தமாக இருக்கும் ஒருவனை அவர்கள் வரிவசூலிப்பவனின் உருவில் கண்டனர். (3)

வரிவசூலிப்பவனின் கேள்வியில், தேவனுடைய ஆலயத்தைப்பற்றிய கிறிஸ்துவின் பக்திவிசுவாசத்தைக் குறைகாணும் தன்மை அடங்கியிருப்பதைப் பேதுரு கண்டான். தனது ஆண்டவரின் கௌரவத்தில் வைராக்கியமுள்ளவனாக இருந்த பேதுரு, இயேசுவிடம் கலந்தாலோசிக்காமல், இயேசு வரிகொடுப்பார் என்று அவசரப்பட்டுக் கூறிவிட்டான். (4)

ஆனால், கேள்வி கேட்டவனின் நோக்கத்தைப் பேதுரு அரைகுறையாகவே அறிந்திருந்தான். வரிகொடுப்பதிலிருந்து சிலர் தவிர்க்கப்பட்டிருந்தனர். மோசேயின் காலத்தில் ஆசரிப்புக்கூடார ஆராதனைகளைச் செய்வதற்கென்று லேவியர்கள் பிரித்தெடுக்கப்பட்டிருந்தனர். மக்களுக்கிடையில் அவர்களுக்கு சுதந்திரவீதம் இல்லாமலிருந்தது. “லேவிக்கு அவன் சகோதரரோடே பங்கும் சுதந்தரமும் இல்லை; உன் தேவனாகிய கர்த்தர் அவனுக்குச் சொன்னபடி, கர்த்தரே அவனுக்குச் சுதந்தரம்” (உபாகமம் 10:9) என்று கர்த்தர் கூறினார். கிறிஸ்துவின் காலத்தில், ஆசாரியர்களும் லேவியர்களும் ஆலயப்பணிகளுக்கென்று பிரதிஷ்டை செய்யப்பட்டவர்கள் என்று இன்னமும் கருதப்பட்டிருந்தனர். அவர்கள் வருடாந்திர வரித்தொகையைச் செலுத்த வேண்டிய அவசியமில்லாதவர்களாகக் கருதப்பட்டிருந்தனர். தீர்க்கதரிசிகளும் இதிலிருந்து விலக்கப்பட்டிருந்தனர். இயேசுவை வரிகொடுக்கும்படி கேட்டதின்மூலமாக, அவர் ஒரு தீர்க்கதரிசியோ அல்லது போதகரோ என்னும் உரிமையை ரபிமார்கள் மறுத்து, மற்ற பொது மனிதனிடம் எவ்விதமாக நடந்துகொள்வார்களோ அவ்விதமாகவே நடந்துகொண்டனர்.

வரிசெலுத்த அவர் மறுத்திருந்தால், ஆலயக்காரியங்களில் அவர் பக்திவிசுவாசமற்றவர் என்று எடுத்துக்காட்டப்பட்டிருந்திருப்பார்; மறுபக்கத்தில், அவர் வரிசெலுத்தினால், அவர்கள் அவரைத் தீர்க்கதரிசி அல்ல என்று புறக்கணித்திருந்தது நியாயமானதாகிவிடும். (5)

சற்றுநேரத்திற்கு முன்புதான், இயேசு தேவகுமாரன் என்று பேதுரு ஒப்புக்கொண்டிருந்தான்; ஆனால், இப்பொழுது அவனது ஆண்டவரின் இயல்பை முன்வைத்திருந்திருக்கக்கூடிய ஒரு வாய்ப்பைத் தவறவிட்டு விட்டான். அவரைப்பற்றி ஆசாரியர்களும் அதிபதிகளும் எவ்விதமான தவறான எண்ணத்தை உண்டுபண்ண முயன்றிருந்தனரோ அதனை, வரிவசூலிப்ப வனுக்குக் கொடுத்த பதிலின்மூலமாகப் பேதுரு அங்கீகரித்தான். (6)

பேதுரு, வீட்டிற்குள் நுழைந்தபோது, என்ன நிகழ்ந்தது என்பதைப்பற்றி இயேசு குறிப்பிடாமல்: "சீமோனே, உனக்கு எப்படித் தோன்றுகிறது? பூமியின் ராஜாக்கள் தீர்வையையும் வரியையும் தங்கள் பிள்ளைகளிடத்திலோ, அந்நியரிடத்திலோ, யாரிடத்தில் வாங்குகிறார்கள்?" என்று கேட்டார். அதற்குப் பேதுரு: "அந்நியரிடத்தில் வாங்குகிறார்கள்" என்றான். "இயேசு அவனை நோக்கி: அப்படியானால் பிள்ளைகள் அதைச் செலுத்தவேண்டுவதில்லையே" என்றார். அரசனின் பராமரிப்புச் செலவிற்காக நாட்டு மக்கள்மீது வரிசுமத்தப்படும்போது, அரசனின் சொந்தப் பிள்ளைகள் அதிலிருந்து தவிர்க்கப்பட்டுள்ளனர். அப்படியே தங்களைத் தேவனுடைய மக்கள் என்று கூறிக்கொள்ளும் இஸ்ரவேலர்கள், அவருக்குச் சேவைசெய்யத் தேவைப்பட்ட செலவுகளை ஏற்க எதிர்பார்க்கப்பட்டிருந்தனர்; ஆனால், தேவகுமாரனாகிய இயேசு அந்தக் கடமையின்கீழ் இருக்கவில்லை. ஆசாரியர்களும் லேவியர்களும் ஆலயத்தின்மீதுள்ள அவர்களது பணித்தொடர்பினால், வரிசெலுத்துவதிலிருந்து தவிர்க்கப்பட்டிருந்தார்களானால், ஆலயத்தைத் தமது பிதாவின் வீடாகக் கொண்டிருந்த அவர் எவ்வளவு அதிகமாகத் தவிர்க்கப்பட்டாகவேண்டும்? (7)

மறுப்பு எதுவுமின்றி இயேசு வரிசெலுத்தியிருந்தால், வரி செலுத்தும்படி கோரியிருந்த உரிமையை நியாயப்படுத்தியிருந்திருப்பார். அதன் காரணமாக, அவர் தமது தெய்வீகத்தை மறுத்திருப்பார்; ஆனால், வரிவசூல்செய்வதிலுள்ள நல்ல தன்மையை கண்ட அதே நேரத்தில், அந்த உரிமைபாராட்டலின் அடிப்படையை அவர் மறுத்திருந்தார். வரிசெலுத்துவதற்கு அவர் ஏற்பாடு செய்ததின்மூலமாக, அவர் தமது தெய்வத்தன்மைக்குச் சான்று பகர்ந்தார். அவர் தேவனுடன் ஒருவராக இருக்கிறாரென்பதும், அதனால் அந்த நாட்டு மக்களில் ஒருவரைப்போல வரிசெலுத்துவதற்கு அவர் கீழ்ப்பட்டவரல்ல என்பதும் வெளிக்காட்டப்பட்டது. (8)

“ஆகிலும், நாம் அவர்களுக்கு இடறலாயிராதபடிக்கு, நீ கடலுக்குப் போய், தூண்டில்போட்டு, முதலாவது அகப்படுகிற மீனைப் பிடித்து, அதின் வாயைத் திறந்துபார்; ஒரு வெள்ளிப்பணத்தைக் காண்பாய்; அதை எடுத்து எனக்காகவும் உனக்காகவும் அவர்களிடத்தில் கொடு” என்றார்—மத்தேயு 17:27. (9)

அவர் தமது தெய்வத்தன்மையை மனித இயல்பினால் திரையிட்டிருந்தபோதிலும், இந்த அற்புதத்தில் அதை வெளிப்படுத்தினார். “சகல காட்டுஜீவன்களும், பர்வதங்களில் ஆயிரமாயிரமாய்த் திரிகிற மிருகங்களும் என்னுடையவைகள். மலைகளிலுள்ள பறவைகளையெல்லாம் அறிவேன்; வெளியில் நடமாடுகிறவைகளெல்லாம் என்னுடையவைகள். நான் பசியாயிருந்தால் உனக்குச் சொல்லேன்; பூமியும் அதின் நிறைவும் என்னுடையவைகளே” (சங்கீதம் 50:10–12) என்று தாவீதின்மூலமாக அறிவித்தவர் இவர்தான் என்பது சான்றாக இருந்தது. (10)

அவர் வரிசெலுத்தக் கடமைப்பட்டவரல்ல என்பதைத் தெளிவு படுத்தின அதேநேரத்தில், அந்தக் காரியத்தில் யூதர்களுடன் எவ்விதமான எதிர்வாதத்திலும் ஈடுபடவில்லை; ஏனென்றால், அவர்கள் அவரது வார்த்தைகளை தவறாகத் திரித்துக் கூறி, மக்களை அவருக்கு எதிராக திரும்பச்செய்திருந்திருப்பார்கள். வரியைக் கொடுக்காமலிருந்து அதனால் ஒரு எதிர்ப்பு உண்டாவதைத் தவிர்ப்பதற்காக, நியாயமாக அவர் வரிசெலுத்தவேண்டிய அவசியமில்லாதிருந்தபோதிலும், வரிசெலுத்தினார். இந்தப் பாடம் அவரது சீடர்களுக்கு மிகுந்த விலைமதிப்புள்ளதாக இருக்கும். ஆலய ஆராதனைக் காரியங்களில் குறிப்பிடத்தக்க மாறுதல்கள் விரைவில் நிகழவேண்டியுள்ளன; ஏற்கெனவே, ஏற்படுத்தப்பட்டுள்ள ஆராதனை ஒழுங்குகளுக்கெதிரான நிலையில் தேவையில்லாமல் அவர்கள் தங்களை வைக்கக்கூடாது என்று கிறிஸ்து அவர்களுக்குப் போதனை செய்திருந்தார். அவர்களது விசுவாசத்தைப்பற்றித் தவறாக எடுத்துக்கூறுவதற்கான சந்தர்ப்பங்களை, அவர்கள் முடிந்தவரை தவிர்க்கவேண்டும். சத்தியத்தின் ஒரு கொள்கையைக்கூடக் கிறிஸ்தவர்கள் விட்டுக்கொடுக்காமலிருக்கவேண்டிய அதேநேரத்தில், எதிர்வாதங்களைத் தவிர்க்கமுடியும்போதெல்லாம் தவிர்க்கவும் வேண்டும். (11)

பேதுரு கடலுக்குச் சென்றிருந்தபோது, கிறிஸ்துவும் சீடர்களும் தனிமையாக வீட்டிலிருந்தனர். அப்போது இயேசு மற்றவர்களைத் தம்மிடம் அழைத்து: “நீங்கள் வழியிலே எதைக்குறித்து உங்களுக்குள்ளே தர்க்கம்பண்ணினீர்கள்” என்று கேட்டார். அவர்கள் தங்கள் பாதையில், போட்டியிட்டுக்கொண்டிருந்த அந்தக் காரியம் அவர்களுக்குக் காணப்

பட்டிருந்ததைவிட, வித்தியாசமான ஒளியில், இயேசுவின் சமூகத்திலும் அவரது கேள்வியிலும் தோற்றமளித்தது. வெட்கமும் சுய கண்டனமும் அவர்களை மௌனப்படுத்தின. அவர்களுக்காக இயேசு மரிக்கவேண்டியவராக இருக்கிறார் என்பதை அவர் அவர்களிடம் கூறியிருந்தார். அதாவது, சுயநலமற்ற அன்புடன் ஒப்பிடும்போது, அவர்களது சுயநலமிக்க ஆசைகள் வேதனையுள்ளவையாக இருந்தன. (12)

அவர் மரித்து மறுபடியும் உயிர்த்தெழவேண்டும் என்று இயேசு அவர்களிடம் கூறியபோது, அவர்களது விசுவாசத்தின் பெரும் சோதனையான காரியத்தைப்பற்றிய உரையாடலில் அவர்களை ஈர்க்க அவர் முயன்றிருந்தார். அவர்களுக்கு எவைகளை அறியச்செய்யவேண்டுமென்று அவர் விரும்பியிருந்தாரோ, அவைகளைப் பெற்றுக்கொள்ள, அவர்கள் ஆயத்தமாக இருந்திருந்தார்களானால், கசப்புமிக்க வேதனையிலிருந்தும் நம்பிக்கையின்மையிலிருந்தும் அவர்கள் காப்பாற்றப்பட்டிருந்திருப்பார்கள். துக்கங்கொண்டாடினபோதும், ஏமாற்றமடைந்தபோதும் அவரது வார்த்தைகள் அவர்களுக்கு ஆறுதலைக் கொண்டுவந்திருந்திருக்கும். அவர்களுக்கு நிகழக் காத்திருந்தவைகளைப்பற்றி அவர் மிகத்தெளிவாக அவர்களிடம் கூறியிருந்தபோதும், அவர் விரைவில் எருசலேமுக்குச் செல்லவேண்டியதைக் குறிப்பிட்டிருந்தது, அவருடைய இராஜ்யம் ஸ்தாபிக்கப்பட இருக்கிறது என்ற நம்பிக்கையை அவர்களில் தூண்டியது. யார் யார் மேலான பதவிகளில் இருப்பார்கள் என்னும் கேள்விக்கு அது அவர்களை வழிநடத்தினது. பேதுரு கடலிலிருந்து திரும்பிவந்ததும் சீடர்கள் இரட்சகரின் கேள்வியைப்பற்றி அவனிடம் கூறினர். இறுதியில் அவர்களில் ஒருவன் இயேசுவிடம்: "பரலோக இராஜ்யத்தில் யார் பெரியவனாயிருப்பான்" என்று கேட்டான். (13)

இரட்சகர் சீடர்களை அவரருகில் ஒன்றுசேர்த்து, (உங்களில்) "எவனாகிலும் முதல்வனாயிருக்க விரும்பினால், அவன் எல்லாருக்கும் கடையானவனும் எல்லாருக்கும் ஊழியக்காரனாகவும் இருக்கக்கடவன்" என்று கூறினார். சீடர்கள் அறிந்திருந்ததைவிட மிக அதிகமான பக்தி விநயமும் உணர்த்துதல்களும் அந்த வார்த்தைகளில் இருந்தன. கிறிஸ்து அறிந்திருந்தவைகளை அவர்களால் காணமுடியவில்லை. கிறிஸ்துவின் இராஜ்யத்தின் தன்மையை அவர்கள் புரிந்துகொள்ளாதவர்களாக இருந்தனர். அவர்களது போட்டிக்கு இந்த அறியாமையே காரணமாகத் தெரிந்தது; ஆனால், உண்மையான காரணம் இன்னும் ஆழத்தில் இருக்கிறது. அவரது இராஜ்யத்தின் தன்மையை விளக்குவதின்மூலமாக, தற்காலிகமாகக் கிறிஸ்துவால் அவர்களுக்கிடையில் இருந்த சச்சரவை சமாதானப்படுத்தியிருக்கமுடியும்; ஆனால், அது அடித்தளத்தில் இருக்கும்

காரணத்தைத் தொட்டிருந்திருக்காது. பூரணமான அறிவை அவர்கள் அடைந்துகொண்ட பின்புங்கூட, யார் முன்வைக்கப்பட வேண்டும் என்னும் ஏதேனும் ஒரு கேள்வி அந்தச் சச்சரவைப் புதிப்பித்திருந்திருக்கும். இவ்விதமாக, கிறிஸ்து சென்றபின் சபைக்கு அழிவு உண்டாகியிருந்திருக்கும். பரலோகத்தின் மேலான இடத்திற்கான கலகத்தை உண்டுபண்ணியிருந்த ஆவியின் செயல், மேலுலகிலுள்ள உலகங்களில் உண்டான மாபெரும் எதிர்வாதத்தின் ஆரம்பமாக இருந்தது. அதுவே கிறிஸ்துவை மரிக்கும்படி பரலோகத்திலிருந்து கொண்டுவந்திருந்தது. தேவ சிங்காசனத்தைச் சூழ்ந்திருந்த தூதர்கள் அனைவரையும்விட, அதிகமான மகிமையை உடையவனாக லூசிபர் இருந்தான். தேவகுமாரனுடன் மிக நெருக்கமான பிணைப்பை உடையவனாகவும் இருந்தான். இந்த "அதிகாலையின் மகனாகிய விடிவெள்ளி"யான லூசிபரைப்பற்றிய ஒரு கண்ணோட்டம் இயேசுவிற்கு ஏற்பட்டது. "நான் உன்னதமானவருக்கு ஒப்பாவேன்" (ஏசாயா 14:12,14) என்று அவன் கூறினான். சுயத்தை உயர்த்தவேண்டும் என்ற வாஞ்சை பரலோகப் பிராகாரத்தில் கலகத்தை உண்டுபண்ணி, தேவனுடைய சேனையிலிருந்த ஏராளமானவர்களைப் பரலோகத்திலிருந்து விரட்டியடித்திருந்தது. லூசிபர் உண்மையாகவே உன்னதமானவருக்கு ஒப்பாக விரும்பியிருந்தால், பரலோகத்தில் அவனுக்கென்று ஏற்படுத்தப்பட்டிருந்த அவனது இடத்தைவிட்டு ஒருபோதும் ஓடிப்போயிருந்திருக்கமாட்டான்; ஏனெனில், சுயநலமில்லாத ஊழியத்தில்தான் உன்னதமானவருடைய ஆவி வெளிக்காட்டப்படுகிறது. லூசிபர் தேவனுடைய குணத்தை விரும்பாமல், அவரது வல்லமையை விரும்பினான். அவன் மேலான இடத்தைத் தனக்காகத் தேடினான். அவனுடைய ஆவியினால் செயல்படும் ஒவ்வொருவரும் அப்படியே செய்வார்கள். இவ்விதமாக விலகிச்செல்லுதல், அதிருப்தி, கலகம் ஆகியவை தவிர்க்கமுடியாதவைகளாக உள்ளன. ஆளுகை பலமுள்ளவரின் பரிசாக அமைகிறது. சாத்தானின் இராஜ்யம் பலாத்காரத்தின் ஒரு இராஜ்யமாக உள்ளது. தனிப்பட்ட ஒவ்வொருவரும், மற்ற ஒவ்வொருவரையும் முன்னேற்றத்திற்குத் தடையாகக் கருதுகின்றனர்; அல்லது அப்படிப்பட்டவர் மேலான இடத்திற்கு ஏறுவதற்கான ஒரு படிக்கல்லாகப் பிறரைக் கருதுகின்றனர். (14)

தேவனுக்குச் சமமாக இருப்பது கைப்பற்றிக்கொள்ளப்படவேண்டிய ஒரு பொருள் என்று லூசிபர் எண்ணினபோது, மேலான ஒருவராக இருந்த கிறிஸ்து, "தம்மைத்தாமே வெறுமையாக்கி, அடிமையின் ரூபமெடுத்து, மனுஷர் சாயலானார். அவர் மனுஷரூபமாய்க் காணப்பட்டு, மரணபரியந்தம், அதாவது சிலுவையின் மரணபரியந்தமும் கீழ்ப்படிந்தவராகி, தம்மைத்தாமே

தாழ்த்தினார்"–பிலிப்பியர் 2:7,8. சிலுவை இப்பொழுது அவருக்கு முன்பாக இருந்தது. சாத்தானின் இராஜ்யத்தின் கொள்கை சுயத்தை உயர்த்துவதாக இருந்தது. அதே கொள்கையின்மீது நாட்டமுடையவர்களாக அவரது சொந்த சீடர்கள் இருந்ததினால், அவர்களால் தங்களது கர்த்தருடன் அனுதாபத்திற்குள் பிரவேசிக்க முடியாமலிருந்தது. அல்லது அவர்களுக்காகப் படவிருக்கிற அவமானத்தைப்பற்றிக் கூறிய அவரை, அவர்களால் புரிந்துகொள்ளமுடியவில்லை. (15)

மிக மென்மையாகவும், அதேநேரத்தில் பக்திவிநயமிக்க வற்புறுத்துதலுடனும் அந்தத் தீங்கைச் சீர்படுத்த இயேசு முயன்றார். உன்னதத்தின் பிராகாரங்களால் கணிக்கப்படும் தரத்தின்படி, பரலோக இராஜ்யத்தில் இயங்கிவரும் கொள்கை எது என்பதையும், மிகப்பெரியதன்மை எதில் அடங்கியிருக்கிறது என்பதையும் அவர் காட்டினார். அகந்தையினாலும் தனிச்சிறப்புவாய்ந்தவர்களாக இருக்கவேண்டும் என்னும் வாஞ்சையினாலும் செயல்படுத்தப்பட்டிருந்தவர்கள், தாங்கள் பெற்றிருந்த ஈவுகளுக்குத்தக்கதாக, தேவனுக்கு அவைகளை எவ்விதமாகத் திரும்பச்செலுத்தவேண்டும் என்பதற்குப் பதிலாக, தங்களைப்பற்றியும் தங்களுக்குக் கிடைக்கவேண்டியதாக இருந்த பரிசைப்பற்றியும்மட்டுமே சிந்தித்துக்கொண்டிருந்தனர். அவர்கள் சாத்தானின் அணியில் உள்ளவர்களாக அடையாளப்படுத்தப்பட்டிருந்ததினால், பரலோக இராஜ்யத்தில் அவர்களுக்கு இடமிருக்காது. (16)

மேன்மைக்கு முன்னதாகத் தாழ்மை உள்ளது. யோவான் ஸ்நானகனைப்போல, தேவனுக்குமுன்பாக ஒரு கீழான இடத்தில் தன்னை வைக்கும் ஒரு ஊழியக்காரனை, மனிதர்களுக்குமுன்பாக ஒரு மேலான இடத்தை நிரப்பப் பரலோகம் தேர்ந்தெடுக்கிறது. சிறுபிள்ளையைப்போன்ற சீடன், தேவனுடைய ஊழியத்தில் மிகவும் திறமைமிக்கவனாக இருக்கிறான். தன்னை உயர்த்துவதற்கு வகைதேடாமல், ஆத்துமாக்களை இரட்சிப்பதற்காக வகைதேடும் ஒருவனுடன் பரலோக அறிவாளர்கள் ஒத்துழைப்பார்கள். தனக்கு ஆண்டவரின் உதவி தேவை என்று ஆழமாகச் சிந்திக்கின்ற ஒருவன் அதற்காக மன்றாடுவான். அப்பொழுது பரிசுத்த ஆவியானவர் அவனது ஆத்துமாவைப் பலப்படுத்தி உயர்த்துவதற்காக, இயேசுவைப்பற்றிய பார்வையை அவனுக்குக் கொடுப்பார். கிறிஸ்துவுடனுள்ள உறவினால், தங்கள் பாவங்களில் கெட்டுப்போய்க்கொண்டிருப்பவர்களுக்காக ஊழியஞ் செய்ய அவன் முன்செல்லுவான். அவன் தன் ஊழியத்திற்கென்று அபிஷேகம் செய்யப்பட்டிருக்கிறான். கற்றவர்களும் நுண்ணறிவின் ஞானமுள்ளவர்களுமான அநேகர் தோல்வியடையக்கூடிய இடத்தில், அவன் வெற்றி பெறுகிறான். (17)

ஆனால் தேவனுடைய பெரிய திட்டத்தின் வெற்றிக்குத் தாங்கள் ஒரு அவசியம் என்ற உணர்வுடன் மனிதர்கள் தங்களை உயர்த்தும்போது, கர்த்தர் அவர்களை ஒருபுறமாக ஒதுக்கிவைக்கிறார். கர்த்தர் அவர்களைச் சார்ந்தவராக இல்லை என்பது தெளிவாக எடுத்துக்காட்டப்பட்டிருக்கிறது. அப்படிப்பட்டவர்களை அந்த வேலையிலிருந்து நீக்கினதால், அந்த வேலை நின்றுபோகாமல், அதிகமான வல்லமையுடன் முன்செல்லுகின்றது. (18)

தேவனுடைய இராஜ்யத்தைப்பற்றிமட்டுமே போதிக்கப்பட்டிருப்பது இயேசுவின் சீடர்களுக்குப் போதுமானதல்ல; கொள்கைகளில் இசைவானவர்களாக இருக்கும்படி அவர்களைக் கொண்டுவரக்கூடிய இருதயத்தில் உண்டாகும் மாற்றமே அவர்களுக்கு அவசியமாகும். இயேசு ஒரு சிறுபிள்ளையை அழைத்து, அவர்களுக்கு நடுவில் நிறுத்தி, அந்தப்பிள்ளையை அன்புடன் கரத்திலேந்தி, “நீங்கள் மனந்திரும்பி, சிறுபிள்ளைகளைப் போலாகாவிட்டால், பரலோக இராஜ்யத்தில் பிரவேசிக்கமாட்டீர்கள்” என்றார். எளிமை, சுயத்தை மறந்துவிடுதல், ஒரு சிறுபிள்ளையின் அன்பைப்போன்ற அன்பிற்கு இசைவாக இருத்தல் ஆகியவைதான் பரலோகத்தால் சிறப்பிக்கப்படும் மதிப்பாக உள்ளது. (19)

உலகப்பிரகாரமான மேன்மை, ஆடம்பரம் ஆகியவைகளால் அவரது இராஜ்யம் அடையாளப்படுத்தப்பட்டிருப்பதில்லை என்று இயேசு மறுபடியும் தமது சீடர்களிடம் விளக்கினார். இந்த சிறப்புகள் அனைத்தும் இயேசுவின் பாதத்தில் மறக்கப்பட்டுள்ளன. செல்வந்தர்கள், ஏழைகள், கற்றோர், கல்லாதவர் ஆகிய அனைவரும், ஜாதி அல்லது உலகமேன்மை ஆகியவைப்பற்றிய எண்ணங்களற்றவர்களாக ஒன்றாகக் கூடுகின்றனர். தேவனுக்கென்று தங்களை மீட்ட ஒருவரைச் சார்ந்தவர்களாக, இயேசுவின் இரத்தத்தால் கிரயத்திற்குக் கொள்ளப்பட்டவர்களாக அனைவரும் ஒன்றுசேருகின்றனர். (20)

உண்மையும் நறுங்குண்டதுமான ஆத்துமா தேவனுடைய பார்வையில் விலைமதிப்புமிக்கதாக உள்ளது. அவர் மனிதர்களின்மீது அவர்களது அந்தஸ்திற்காக அல்லாமல், நுண்ணறிவின் பெரிய தன்மைக்காக அல்லாமல், கிறிஸ்துவுடன் ஒன்றானவர்களாக இருப்பதினால்மட்டுமே தமது முத்திரையைப் பதிக்கிறார். இருதயத்தில் எளிமையும் தாழ்மையும் உள்ளவர்களுடன் மகிமையின் கர்த்தர் திருப்தியுள்ளவராக இருக்கிறார். “உம்முடைய இரட்சிப்பின் கேடகத்தையும் எனக்குத் தந்தீர் … உம்முடைய காருணியம் என்னைப் பெரியவனாக்கும்” (சங்கீதம் 18:35) என்று தாவீது கூறினான். மனிதப்பண்பின் ஒரு கூறாக இருக்கும் இந்தக் காருணியமே மனிதனைப் பெரியவனாக்கும். (21)

"இப்படிப்பட்ட சிறுபிள்ளைகளில் ஒன்றை என் நாமத்தினாலே ஏற்றுக்கொள்ளுகிறவன் என்னை ஏற்றுக்கொள்ளுகிறான்" என்று இயேசு கூறினார். "வானம் எனக்குச் சிங்காசனம், பூமி எனக்குப் பாதபடி; ... ஆனாலும் சிறுமைப்பட்டு, ஆவியில் நொறுங்குண்டு, என் வசனத்துக்கு நடுங்குகிறவனையே நோக்கிப்பார்ப்பேன்"—ஏசாயா 66:1,2. (22)

இரட்சகரின் வார்த்தைகள் சுயத்தின்மீது நம்பிக்கைவைக்கக்கூடாது என்னும் உணர்வினை சீடர்களுக்குள் எழுப்பிவிட்டது. பதில்கூறும்படி ஒருவரும் விசேஷமாகச் சுட்டிக்காட்டப்படவில்லை; ஆனால் ஒரு காரியத்தில், தனது செயல் சரியாக இருந்ததா? என்று கேள்விகேட்கும்படி யோவான் நடத்தப்பட்டான். ஒரு சிறுபிள்ளையின் ஆவியுடன் அவன் அந்தக் காரியத்தை இயேசுவின் முன் வைத்தான். "போதகரே, நம்மைப் பின்பற்றாதவன் ஒருவன் உமது நாமத்தினாலே பிசாசுகளைத் துரத்துகிறதைக் கண்டோம்; அவன் நம்மைப் பின்பற்றாதவனானதால், அவனைத் தடுத்தோம்" என்றான். (23)

இந்த மனிதனைத் தடுத்ததில், யாக்கோபும் யோவானும் தங்களை போதகரின் மேன்மையைப்பற்றிய பார்வையை கொண்டவர்களாக எண்ணியிருந்தனர். ஆனால் தங்களது சுயத்தின்மீது வாஞ்சையோடிருந்ததை அவர்கள் காணத் தொடங்கினார். அவர்கள் தங்களது தவறை ஒப்புக்கொண்டு, இயேசுவின் கடிந்துகொள்ளுதலை ஏற்றுக்கொண்டனர். எந்த வகையிலாவது கிறிஸ்துவிடம் அன்புள்ளவர்களாகக் காணப்படும் ஒருவரையும் தடைசெய்யக் கூடாது. கிறிஸ்துவின் குணத்தினாலும் செயலினாலும் ஆழமாக அசைக்கப்பட்டவர்களாக, விசுவாசத்தினால் தங்கள் இருதயங்களைக் கிறிஸ்துவிற்குத் திறந்திருந்த அநேகர் இருந்தனர். நோக்கங்களை அறியமுடியாதவர்களாக இருந்த சீடர்கள், இந்த ஆத்துமாக்களை அதைரியப்படுத்தாமலிருப்பதற்கு மிகவும் கவனத்தோடு இருக்கவேண்டும். இயேசுவானவர் சரீரப்பிரகாரமாக அவர்களுக்கிடையில் இராமல், இந்த ஊழியம் அவர்களது கரங்களில் ஒப்படைக்கப்பட்டிருந்தபோது, அவர்கள் தங்களை மட்டும் உள்ளடக்கிய குறுகிய ஆவியை நடப்பிக்கிறவர்களாக இல்லாமல், அவர்களது ஆண்டவரிடம் கண்டிருந்த வெகுதூரத்திற்கு எட்டும் அனுதாபத்தை வெளிக்காட்டவேண்டும். (24)

எல்லாக் காரியங்களிலும் ஒருவர் நமது சொந்த யோசனைகளுடனும் எண்ணங்களுடனும் இசைவாக இல்லை என்பதினால், அவர் தேவனுக்காக உழைப்பதைத் தடுப்பது நம்மை நியாயப்படுத்தாது. நாம் நியாயந்தீர்க்கவோ கட்டளையிடவோகூடாது; கிறிஸ்துவே பெரும் போதகராக இருக்கிறார். நாம் ஒவ்வொருவரும் இயேசுவின் பாதத்தினருகில் அமர்ந்து, தாழ்மையுடன் அவரைப்பற்றித் தெரிந்துகொள்ளவேண்டும்.

விருப்பமுள்ளவர்களாக இருக்கும்படி தேவன் ஏற்படுத்தியுள்ள ஒவ்வொரு ஆத்துமாவும், கிறிஸ்து அவரை மன்னிக்கும் அன்பை வெளிப்படுத்தும் ஒரு வாய்க்காலாக இருக்கிறது. தேவனுடைய ஒளியைச் சுமந்துசெல்லும் ஒருவரை அதைரியப்படுத்தி, அதன் காரணமாக, அவர் உலகத்தின்மீது வீசியிருக்கக்கூடிய ஒளிக்கதிரை இடைமறித்துவிடாதபடி நாம் எவ்வளவு கவனமுள்ளவர்களாக இருக்கவேண்டும். (25)

கிறிஸ்து, தம்மிடம் இழுத்துக்கொண்டிருக்கும் ஒருவருக்கு எதிராகச் சீடர்களால் காட்டப்படும் கடினமான தன்மை, அல்லது குளிர்ந்த தன்மை, (அன்பற்ற) கிறிஸ்துவின் பெயரால் ஒருவன் செய்திருந்த அற்புதத்தை யோவான் தடுத்திருந்த செயல்—அப்படிப்பட்டவனின் பாதங்களை சத்துருவின் பாதையில் திருப்பி, ஒரு ஆத்துமாவின் இழப்பிற்குக் காரணமாக ஆகிவிடும். அதைவிட: "அவனுடைய கழுத்தில் ஏந்திரக்கல்லைக் கட்டி, சமுத்திரத்தில் அவனைத் தள்ளிப்போடுகிறது அவனுக்கு நலமாயிருக்கும்." "உன் கை உனக்கு இடறல் உண்டாக்கினால், அதைத் தறித்துப் போடு; நீ இரண்டு கையுடையவனாய் அவியாத அக்கினியுள்ள நரகத்திலே போவதைப்பார்க்கிலும், ஊனனாய் ஜீவனுக்குள் பிரவேசிப்பது உனக்கு நலமாயிருக்கும். உன் கால் உனக்கு இடறல் உண்டாக்கினால் அதைத் தறித்துப்போடு; நீ இரண்டு காலுடையவனாய் அவியாத அக்கினியுள்ள நரகத்திலே தள்ளப்படுவதைப் பார்க்கிலும், சப்பாணியாய் ஜீவனுக்குள் பிரவேசிப்பது உனக்கு நலமாயிருக்கும்" (மாற்கு 9:42–45) என்று தொடர்ந்து கூறினார். (26)

இதைவிடக் கடினமானதாக எதுவும் இருக்கமுடியாத—இப்படிப்பட்ட கடுமையான வார்த்தைகள் ஏன்? ஏனெனில், இழந்து போனதை மீட்கவும் இரட்சிக்கவும் மனிதகுமாரன் வந்திருக்கிறார். பரலோகத்தின் மகத்துவமானவர் காட்டியிருந்ததைவிட, அவரது சீடர்கள் அவர்களது உடன் மனிதர்களாக உள்ள ஆத்துமாக்களிடம் குறைவான அக்கறையைக் காட்டலாமா? ஒவ்வொரு ஆத்துமாவும் அளவிடமுடியாத விலையுள்ளதாக இருக்கிறது. அப்படியே ஒருவருக்காகக் கிறிஸ்து காட்டிய அன்பும் அனுபவித்த அவமானமும் வீணாகும்படி அந்த ஆத்துமாவைக் கிறிஸ்துவிடமிருந்து பிரிப்பது எவ்வளவு பயங்கரமான பாவமாக உள்ளது! (27)

"இடறல்களினிமித்தம் உலகத்துக்கு ஐயோ, இடறல்கள் வருவது அவசியம், ஆனாலும் எந்த மனுஷனால் இடறல் வருகிறதோ, அவனுக்கு ஐயோ!"–மத்தேயு 18:7. சாத்தானால் ஏவிவிடப்பட்டுள்ள உலகம் நிச்சயமாகவே கிறிஸ்துவின் அடியார்களை ஒடுக்கவும், அவர்களது விசுவாசத்தை அழிக்கவும் வகை தேடிக்கொண்டிருக்கிறது; ஆனால், கிறிஸ்துவின்

பெயரை எடுத்துக்கொண்டு, அந்த ஊழியம் செய்கிறவனுக்கு ஐயோ! கர்த்தருக்குச் சேவைசெய்பவர்களென்று உரிமைபாராட்டிக்கொண்டிருந்து, அவரது குணத்தைத் தவறாக எடுத்துக்காட்டி, அதனால் திரளானவர்கள் வஞ்சிக்கப்படவும் தவறான பாதையில் நடத்தப்படவும் காரணமாக உள்ள அப்படிப்பட்டவர்களால் நமது கர்த்தர் வெட்கத்திற்குள்ளாக்கப்படுகிறார். (28)

கிறிஸ்துவிற்கு மரியாதைக் குறைவைக் கொண்டுவரக்கூடிய விதத்தில், பாவத்திற்குள் நடத்தக்கூடிய எந்தப் பழக்கத்தையும் நடை முறையையும் விட்டுவிலக, எப்படிப்பட்ட தியாகமாயிருந்தாலும் அதைச் செய்வது நல்லது. தேவனுக்கு அவமதிப்பை உண்டுபண்ணக்கூடிய எதுவும் ஆத்துமாவிற்கு நன்மை பயக்காது. நித்தியமான நீதியின் கொள்கைகளை மீறுகின்ற எந்த மனிதனின்மீதும் பரலோகத்தின் ஆசீர்வாதம் உண்டாகாது. குணத்தின் தரத்தைக் கீழானதாக்கி, மற்றவர்களைத் தவறாக நடத்துவதற்கு, பேணும் ஒரு பாவமே போதுமானதாக உள்ளது. சரீரத்தை மரணத்திலிருந்து காப்பாற்றுவதற்காக, காலாவது கையாவது வெட்டப்படுவதோ அல்லது கண் பிடுங்கப்படுவதோ அவசியமானால், ஆத்துமாவிற்கு உண்டாகக்கூடிய மரணத்தைத் தூரமாக விலக்க நாம் எவ்வளவு அதிக அக்கறையுள்ளவர்களாக இருக்கவேண்டும்? (29)

சடங்காச்சார ஆராதனையில் ஒவ்வொரு பலியுடனும் உப்பு சேர்க்கப்பட்டிருந்தது. அது சுகந்தவர்க்கத்தைப்போன்று, கிறிஸ்துவின் நீதிமட்டுமே அந்த ஆராதனையை தேவன் அங்கீகரிக்கிற ஒன்றாக மாற்றும் என்று சுட்டிக்காட்டியது. அந்தப் பழக்கத்தைச் சுட்டிக்காட்டி: "எந்தப் பலியும் உப்பினால் உப்பிடப்படுவதுபோல, ... உங்களுக்குள்ளே உப்புடையவர்களாயிருங்கள், ஒருவரோடொருவர் சமாதானமுள்ளவர் களாயும் இருங்கள்" என்று இயேசு கூறினார். தங்களை "பரிசுத்தமும் தேவனுக்குப் பிரியமுமான ஜீவபலியாக" (ரோமர் 12:1) ஒப்புக்கொடுக்க விரும்பும் அனைவரும் இரட்சிக்கப்படுவதற்கான உப்பாக இருக்கும் இரட்சகரின் நீதியைப் பெறவேண்டும்; அப்பொழுது பொருட்கள் கெடுவதை உப்பு கட்டுப்படுத்துவதுபோல, மனிதர்களுக்கிடையிலிருந்து தீமையைக் கட்டுப்படுத்த அவர்கள் பூமிக்கு உப்பாக இருப்பார்கள். உப்பு அதன் சாரத்தை இழந்துவிட்டால், கிறிஸ்துவின் அன்பு இல்லாமல் தெய்வபக்தியின் வேஷம்மட்டுமே இருந்தால், அதில் நன்மை பயக்கும் வல்லமை இருப்பதில்லை. அப்படிப்பட்ட வாழ்க்கை உலகத்தின்மீது இரட்சிக்கும் செல்வாக்கை உடையதாக இருக்காது. எனது இராஜ்யத்தை நிர்மாணிப்பதற்கான உங்களது சக்தியும் திறனும் என்னுடைய ஆவியைப் பெற்றுக்கொள்ளுவதைச் சார்ந்து இருக்கிறது என்று இயேசு கூறுகிறார்.

நித்திய ஜீவனுக்கு அழைத்துச்செல்லும் சாரமாக இருப்பதற்கு நீங்கள் எனது கிருபையில் பங்கு பெறுபவர்களாகவேண்டும். அப்படியாகும்பொழுது, போட்டிகள், சுயத்திற்கானவைகளைத் தேடுதல், மேலான இடத்தின்மீதுள்ள வாஞ்சை ஆகியவை இருக்காது. நீங்கள் "தனக்கானவைகளை" நாடாத—மற்றவர்கள் ஐசுவரியவான்களாகவேண்டும் என்ற அன்பை உடையவர்களாக இருப்பீர்கள். (30)

மனம் வருந்துகிற பாவி, "உலகத்தின் பாவத்தைச் சுமந்து தீர்க்கும் ஆட்டுக்குட்டியின்மீது" (யோவான் 1:29) தன் பார்வையைப் பதிப்பானாக. அப்படிப் பார்ப்பதினால், அவன் மாறுதலடைகிறான். அவனது பயம் சந்தோஷமாகவும், சந்தேகம் நம்பிக்கையாகவும் மாறுகிறது. நன்றி உணர்வு உயர்ந்தெழுகின்றது. கல்லான இருதயம் நொறுங்குகிறது. ஆத்துமாவிற்குள் அன்பின் அலை எழுகிறது. அவனுக்குள்ளிருக்கும் கிறிஸ்து நித்தியஜீவனைத் தரும் ஒரு ஊற்றாக—கிணறாக இருக்கிறார். துயரத்துடனும் வருத்தத்துடனும் அறிமுகமானவராக, இழந்துபோனதை இரட்சிப்பதற்காகச் செயலாற்றுபவராக, நிந்திக்கப்பட்டு, பரிகசிக்கப்பட்டு, தாழ்த்தப்பட்டவராக நடத்தப்பட்டு, அவரது ஊழியம் நிறைவேறும்வரை பட்டணங்கள்தோறும் விரட்டப்பட்டவராக இருந்த இயேசுவை நாம் காணும்போது— கெத்செமனேயில் பெரும் துளிகளாக இரத்த வியர்வை சிந்தும் அவரை நாம் காணும்போது—சிலுவையின்மீது வேதனையுடன் மரித்துக்கொண்டிருக்கும் அவரை நாம் காணும்போது—அதற்குமேல் சுயம் தன்னை இனங்காட்டுவதற்காக சத்தமிடாது. இதைப்பார்த்து நாம், நமது அன்பற்ற தன்மைக்காகவும் உணர்வற்ற தன்மைக்காகவும் சுயத்தைத்தேடும் தன்மைக்காகவும் வெட்கப்படுவோம். நமது ஆண்டவருக்காக இதயப்பூர்வமான சேவைசெய்வதற்காக நாம் ஏதாவதொன்றாகவோ அல்லது ஒன்றுமில்லாத நிலையிலோ இருப்போம். இயேசுவிற்குப்பின் சிலுவையைச் சுமப்பதிலும் நமக்கு அன்பான அவருக்காக, சோதனை, வெட்கம், உபத்திரவம் ஆகியவைகளைச் சகித்துக்கொள்வதிலும் நாம் களிகூருவோம். (31)

"அன்றியும், பலமுள்ளவர்களாகிய நாம் நமக்கே பிரியமாய் நடவாமல், பலவீனருடைய பலவீனங்களைத் தாங்கவேண்டும்"—ரோமர் 15:1. கிறிஸ்துவில் நம்பிக்கை உள்ள ஆத்துமாவை, அவனது விசுவாசம் பலவீனமானதாக இருந்தபோதிலும், எடுத்துவைக்கும் காலடிகள் சிறுகுழந்தையைப்போலத் தடுமாறக்கூடியதாக இருந்தபோதிலும், இலேசானதாகக் கருதக்கூடாது. கல்வி, மொழித்தூய்மை, குணத்தின் மேலான தன்மை, கிறிஸ்தவப் பயிற்சி, மத சம்பந்தமான அனுபவம் ஆகியவைகளில் ஒருவரைவிட ஒருவர் அதிகமான அனுகூலம் உடையவராக இருந்தபோதிலும், நம்மைவிடக்

குறைவான அனுகூலம் உள்ளவர்களுக்கு, நாம் கடனாளிகளாக இருக்கிறோம்; எனவே, நமது சக்திக்கு உட்பட்டவரையில் நாம் அவர்களுக்கு ஊழியஞ்செய்யவேண்டியவர்களாக இருக்கிறோம். நாம் பலமுள்ளவர்களாக இருந்தால், பலவீனமானவர்களின் கரங்களை தாங்கவேண்டியவர்களாக இருக்கிறோம். பரலோகத்திலுள்ள பிதாவின் முகத்தை எப்பொழுதும் தரிசித்துக்கொண்டிருக்கும் மகிமையுள்ள தேவதூதர்கள் அவரது சிறியவர்களுக்கு ஊழியஞ்செய்வதில் மகிழ்ச்சியுள்ளவர்களாக உள்ளனர். வேண்டாத குணங்களைக் கொண்டிருந்து, நடுங்கும் அநேக ஆத்துமாக்கள், அந்த தூதர்களின் சிறப்பான பொறுப்பில் உள்ளனர். எங்கு மிகவும் அதிகமான அவசியம் உள்ளதோ அங்கு தூதர்கள் எப்பொழுதும் பிரசன்னமாக உள்ளனர். சுயத்துடன் கடினமாகப் போராடிக்கொண்டிருப்பவர்களிடத்திலும், எவர்களுடைய சுற்றுப்புறம் மிகுந்த அதைரியமூட்டுவதாக உள்ளதோ அங்கும், தூதர்கள் பிரசன்னமாக உள்ளனர். கிறிஸ்துவின் உண்மையான அடியார்கள் இந்த ஊழியத்தில் ஒத்துழைப்பார்கள். இந்தச் சிறியரில் ஒருவர் மேற்கொள்ளப்பட்டு, உங்களுக்கு எதிராகத் தவறுசெய்தால், அவரைத் திரும்ப சீர்படுத்த முயல்வது உங்களுடைய வேலையாக உள்ளது. ஒப்புரவாகுதல் என்னும் செயலின் முதல் முயற்சியை அவர் செய்யட்டும் என்று காத்திருக்காதீர்கள். “உங்களுக்கு எப்படித் தோன்றுகிறது? ஒரு மனுஷனுக்கு நூறு ஆடுகளிருக்க, அவைகளில் ஒன்று சிதறிப்போனால், அவன் மற்றத் தொண்ணூற்றொன்பது ஆடுகளையும் மலைகளில் விட்டுப் போய்ச் சிதறிப்போனதைத் தேடாமலிருப்பானோ? அவன் அதைக் கண்டுபிடித்தால், சிதறிப்போகாத தொண்ணூற்றொன்பது ஆடுகளைக்குறித்து சந்தோஷப்படுகிறதைப்பார்க்கிலும், அதைக்குறித்து அதிகமாய்ச் சந்தோஷப்படுவான் என்று மெய்யாகவே உங்களுக்குச் சொல்லுகிறேன். இவ்விதமாக, இந்தச் சிறியரில் ஒருவனாகிலும் கெட்டுப்போவது பரலோகத்திலிருக்கிற உங்கள் பிதாவின் சித்தமல்ல”–மத்தேயு 18:12–14. (32)

“நீங்கள் சாந்தமுள்ள ஆவியோடே அப்படிப்பட்டவனைச் சீர்பொருந்தப்பண்ணுங்கள்; நீயும் சோதிக்கப்படாதபடிக்கு உன்னைக்குறித்து எச்சரிக்கையாயிரு”–காலாத்தியர் 6:1. “நீயும் அவனும் தனித்திருக்கையில் அவன் குற்றத்தை அவனுக்கு உணர்த்து.” அவனுடைய தவறைப் பிறருக்குத் தெரியப்படுத்தி, அதனால் அவனை வெட்கத்திற்குட்படுத்தாதீர்கள். அதைப்போலவே, கிறிஸ்துவின் பெயரைத் தரித்துக்கொண்டிருக்கும் ஒருவரின் தவறையும் பாவத்தையும் பலருக்குத் தெரியப்படுத்தி, கிறிஸ்துவின்மீது மேன்மைக் குறைவைக் கொண்டுவராதீர்கள். தவறுசெய்பவர்களிடம் அவ்வப்போது உண்மையைத் தெளிவாகக் கூறியாகவேண்டும். அவன்

சீர்திருந்தும்படி, அவன் தனது பாவத்தைக் காணும்படி நடத்தப்படவேண்டும்; ஆனால், நியாயந்தீர்க்கவோ அல்லது பழிக்கவோகூடாது. சுயநீதியில் முயற்சிசெய்யாதீர்கள். உங்களது முயற்சிகள் அனைத்தும் அவன் குணமடைவதற்கானதாக இருக்கட்டும். ஆத்துமாவின் காயத்திற்குச் சிகிச்சை அளிப்பதில் மிகவும் மென்மையான தொடுதல் மிக மிருதுவான புலனுணர்வுகள் இருக்கவேண்டியது அவசியம். கல்வாரிச் சிலுவையிலிருந்து பிரவாகிக்கும் அன்பு ஒன்றுமட்டுமே இங்கு மருந்தாகக் கிடைக்கக்கூடியதாக உள்ளது. நீங்கள் வெற்றியடைந்தால், ஒரு ஆத்துமாவை மரணத்திலிருந்து காப்பாற்றுவீர்களென்பதையும், திரளான பாவங்களை மூடுவீர்களென்பதையும் அறிந்து, சகோதரன் சகோதரனுடன் இடைப்படுவானாக. “தப்பிப்போன மார்க்கத்தினின்று பாவியைத் திருப்புகிறவன் ஒரு ஆத்துமாவை மரணத்தினின்று இரட்சித்து, திரளான பாவங்களை மூடுவானென்று அறியக்கடவன்”—யாக்கோபு 5:20. (33)

ஆனால், இந்த முயற்சியுங்கூடப் பயனற்றதாகிவிடலாம்; அப்பொழுது உங்களுடன் ஒருவரையோ இருவரையோ அழைத்துச் செல்லுங்கள். முதல் முயற்சி வெற்றிபெறாமலாகிவிடும்போது, அவர்களது ஒன்றுபட்ட செல்வாக்கு வெற்றிபெறலாம். துன்பங்களை உண்டுபண்ணும் கட்சிகளாக இல்லாமல், அநேகமாக நடுநிலையானவர்களாகச் செயல்படும்போது, அவர்கள் கொடுக்கும் ஆலோசனை, தவறில் இருப்பவருக்கு உண்மையில் மிகுந்த பயனுள்ளதாக இருக்கும். (34)

அவன் அவர்களுக்குச் செவிகொடுக்காவிட்டால் (அப்படிச் செவிகொடுக்க மறுக்காதவரை), அந்தக் காரியம் விசுவாசிகள் யாவருக்கும் முன்பாகக் கொண்டுவரப்படவேண்டும். கிறிஸ்துவின் பிரதிநிதிகளாக உள்ள சபை அங்கத்தினர்கள் யாவரும், ஜெபத்திலும் அன்புமிக்க வேண்டுதலிலும் ஒன்றுபடுவார்களாக. அலைந்துதிரிபவர் தேவனிடத்திற்குத் திரும்பும் விதம் பரிந்துபேசுபவர்களான அவரது ஊழியக்காரர்களின்மூலமாகப் பரிசுத்த ஆவியானவர் பேசுவார். அப்போஸ்தலனாகிய பவுல் பரிசுத்த ஆவியினால் ஏவப்பட்டு, “தேவனானவர் எங்களைக்கொண்டு புத்திசொல்லுகிறதுபோல, நாங்கள் கிறிஸ்துவுக்காக ஸ்தானாபதிகளாயிருந்து, தேவனோடே ஒப்புரவாகுங்கள் என்று, கிறிஸ்துவினிமித்தம் உங்களை வேண்டிக்கொள்ளுகிறோம்” (2 கொரிந்தியர் 5:20) என்று கூறுகிறான். ஒற்றுமைப்பட்ட இந்த முயற்சியை புறக்கணிக்கும் ஒருவர், தன்னைக் கிறிஸ்துவுடன் பிணைத்திருக்கும் கட்டை அறுத்து, இவ்விதமாக, சபையுடனுள்ள உறவைத் தாமாகவே துண்டித்து விடுகிறார். அதற்குமேல், “அவன் உங்களுக்கு ஒரு அஞ்ஞானியைப்

போலவும் ஆயக்காரனைப்போலவும் இருப்பானாக” என்று இயேசு கூறினார்; ஆனாலும், தேவனுடைய இரக்கத்திலிருந்து துண்டிக்கப்பட்ட ஒருவனைப்போல அவனைக் கருதக்கூடாது. அவனது முன்னைய சகோதரர்களால் அவன் நிந்திக்கப்படாமலும், அலட்சியப்படுத்தப்படாமலும், காணாமல்போன ஆட்டைத் தமது தொழுவத்திற்குள் கொண்டுவரதொடர்ந்து தேடிக்கொண்டிருப்பதுபோல, மென்மையுடனும் மன உருக்கத்துடனும் நடத்தப்படுவானாக. (35)

தவறுசெய்பவர்களை நடத்துகின்றவிதத்தில் இருக்கின்ற கிறிஸ்துவின் போதனை, இஸ்ரவேலருக்குக் கொடுக்கப்பட்டிருந்த போதனையைத் திரும்பக்கூறும் வடிவில் மிகக் குறிப்பானதாக உள்ளது. “உன் சகோதரனை உன் உள்ளத்தில் பகையாயாக; பிறன்மேல் பாவம் சுமராதபடிக்கு அவனை எப்படியும் கடிந்துகொள்ளவேண்டும்”—லேவியராகமம் 19:17. தவறிலும் பாவத்திலும் உள்ள ஒருவனை சீர்படுத்தும் முயற்சியில், கிறிஸ்து கட்டளையிட்டிருக்கும் கடமையை ஒருவன் அலட்சியஞ்செய்தால், அந்தப் பாவத்தில் அவன் பங்காளியாகிறான். நாம் தடுத்திருந்திருக்கக்கூடிய தீமையைத் தடுக்காமல் விட்டுவிடும்போது, நாமே அந்தக் குற்றத்தைச் செய்ததுபோல, அச்செயலிற்குப் பொறுப்பானவர்களாக இருப்போம். (36)

ஆனால், தவறுசெய்பவரிடம்தான் அந்தத் தவறை எடுத்துக் காட்டவேண்டும். நாம் அதனை விமர்சனம்செய்து, நமக்கிடையில் குற்றம்கண்டுபிடிக்கும் செயலைச் செய்பவர்களாக இருக்கக்கூடாது. இக்காரியமானது, சபைக்குமுன்பாக அறிவிக்கப்பட்டபின்னருங்கூட, நாம் அதைக்குறித்து மற்றவர்களிடம் மீண்டும் பேசுவதற்கு நமக்கு உரிமை கிடையாது. கிறிஸ்தவர்களின் தவறைப்பற்றிய ஒரு அறிவு, நம்பிக்கை இல்லாத ஒரு உலகத்திற்கு, இடறுதலுக்கான ஒரு காரணமாக இருக்கும். இவைகளைக்குறித்து சிந்தித்துப் பேசிக்கொண்டிருப்பதால், நாம் நமக்குப் பொல்லாங்கைத்தான் வருவித்துக்கொள்ளுவோம். நாம் நோக்கிப் பார்ப்பதின் மூலமாக மாறுதலையடைகிறோம். ஒரு சகோதரனின் தவறுகளைச் சீர்திருத்த நாம் முயலும்போது, முடிந்தவரை, அந்த சகோதரனை அவனது சொந்த சகோதரர்களிடமிருந்துண்டாகும் விமரிசனம், நம்பிக்கையில்லாத உலகத்தின் கண்டனம், ஆகியவைகளிலிருந்து காத்திட, கிறிஸ்துவின் ஆவி நம்மை நடத்தும். நாமே தவறுசெய்கிறவர்களாக இருக்கிறோம். கிறிஸ்துவின் இரக்கம், மன்னிப்பு ஆகியவை நமக்குத் தேவையாக இருக்கிறது. அவர் நம்மை எவ்விதமாக நடத்தவேண்டுமென்று நாம் விரும்புகிறோமோ, அதேவிதமாக, நாமும் மற்றவர்களை நடத்தவேண்டும் என்று நமக்குக் கட்டளையிடுகிறார். (37)

“பூலோகத்திலே நீங்கள் எவைகளைக் கட்டுவீர்களோ அவைகள் பரலோகத்திலும் கட்டப்பட்டிருக்கும்; பூலோகத்திலே நீங்கள் எவைகளைக் கட்டவிழ்ப்பீர்களோ அவைகள் பரலோகத்திலும் கட்டவிழ்க்கப்பட்டிருக்கும்”– மத்தேயு 18:18. நீங்கள் பரலோகநாட்டின் தூதர்களாகச் செயலாற்றுகிறீர்கள். உங்கள் பணியிலுள்ள முடிவுகள் நித்தியத்திற்கானவைகளாக உள்ளன. (38)

ஆனால், இப்பெரும் பொறுப்பை நாம் தனியாகச் சுமக்க வேண்டியதில்லை. எங்கெல்லாம் அவரது வார்த்தைகள் உண்மையான இருதயத்துடன் கீழ்ப்படியப்படுகின்றதோ, அங்கெல்லாம் கிறிஸ்து தங்குகிறார். சபைக்கூட்டத்தில்மட்டுமின்றி, சீடர்கள் எங்கெல்லாம் இருக்கின்றார்களோ, அவர்கள் எந்த அளவிற்குச் சிலராக இருந்தபோதிலும், அவரது நாமத்தில் கூடும்போது, அங்கெல்லாம் அவரும் இருப்பார். “அல்லாமலும், உங்களில் இரண்டு பேர் தாங்கள் வேண்டிக்கொள்ளப்போகிற எந்தக் காரியத்தைக் குறித்தாகிலும் பூமியிலே ஒருமனப்பட்டிருந்தால், பரலோகத்தில் இருக்கிற என் பிதாவினால் அது அவர்களுக்கு உண்டாகும் என்று உங்களுக்குச் சொல்லுகிறேன்” (மத்தேயு 18:19) என்று அவர் கூறுகிறார். (39)

பரலோகத்திலிருக்கிற என் பிதா என்று இயேசு கூறும்போது, அவரது மானுடத்தினால் சீடர்களுடன் பிணைக்கப்பட்டிருந்தபோதிலும், அவர்களது சோதனையில் அவர் ஒரு பங்குதாரராகவும், அவர்களது பாடுகளில் அனுதாபம் உள்ளவராகவும் இருந்தபோதிலும், அவரது தெய்வீகத்தினால், முடிவில்லாதவரின் சிங்காசனத்துடன் அவர் பிணைக்கப்பட்டவராக இருக்கிறார். ஆச்சரியமான வாக்குறுதி! பரலோக நுண்ணறிவாளர்கள் மனிதர்களுடன் ஒற்றுமைப்பட்டு, இழந்துபோனதை இரட்சிக்க அனுதாபத்துடன் பணியாற்றுகின்றனர்! கிறிஸ்துவிடம் ஆத்துமாக்களைக் கொண்டுவருவதற்காக, மனிதத் திறமையுடன் இணையும்படி பரலோகத்தின் வல்லமைகள் அனைத்தும் கொண்டுவரப்பட்டுள்ளன. (40) ★

# 49

# கூடாரப் பண்டிகையில்...!

**யோவன் 7:1–15, 37–39**

**(The Desire of Ages, pp. 443–454)**

வருடத்திற்கு மூன்று முறை யூதர்கள் மத சம்பந்தமான நோக்கங்களுக்காக எருசலேமில் கூடுவது அவசியமாயிருந்தது. இந்த ஒன்றுகூடுதல்களைப்பற்றிய கட்டளைகளை மேகஸ்தம்பத்திலிருந்து முழுவதுமாகத் தம்மை மறைத்துக்கொண்ட நிலையில் இஸ்ரவேலரின் காணக்கூடாதவராக இருந்து வழிநடத்திச்சென்றவர் கொடுத்திருந்தார். யூதர்கள் அடிமைத்தனத்திலிருந்தபோது அவர்களால் இதை ஆசரிக்க முடியாமலிருந்தது. ஆனால் அந்த மக்கள் மீண்டும் தங்களது சொந்த நாட்டை வந்தடைந்தபோது, இந்த நினைவு சாட்சிகளை ஆசரிப்பது மறுபடியும் ஆரம்பமாயிற்று. இந்த வருடாந்திரப் பண்டிகைகள் தேவனை அவர்கள் நினைத்துக்கொள்ளவேண்டுமென்பது, அவருடைய திட்டமாக இருந்தது. ஆனால் ஒரு சில விதிவிலக்குகளுடன் அந்த தேசத்தின் ஆசாரியர்களும் தலைவர்களும் இந்த நோக்கத்தின் பார்வையை இழந்துவிட்டிருந்தனர். இந்த தேசிய சபை கூடுதல்களை ஏற்படுத்தியிருந்து அவைகளின் முக்கியத்துவத்தைப் புரிந்திருந்தவர் அவர்களுடைய முரண்பாடுகளுக்குச் சாட்சியாயிருந்தார். (1)

கூடாரப்பண்டிகை வருடத்தின் முடிவுக்கூட்டமாக இருந்தது. அந்த நேரத்தில் மக்கள் தேவனால் பெற்ற நன்மையையும் இரக்கத்தையும் பிரதிபலிக்கவேண்டுமென்பது தேவனுடைய திட்டமாக இருந்தது. அந்த தேசம் முழுவதும் அவருடைய ஆசீர்வாதத்தைப் பெற்று அவருடைய வழிநடத்துதலின்கீழ் இருந்தது. அவருடைய விழிப்புமிக்க கரிசனை இரவும் பகலும் தொடர்ந்திருந்தது. பூமி தன்னுடைய கனிகளை உற்பத்திசெய்யும்படி வெயிலும் மழையும் உதவியிருந்தன. பாலஸ்தீனத்தின் பள்ளத்தாக்குகளிலும் சமவெளிகளிலுமிருந்து அறுவடை சேகரிக்கப்பட்டிருந்தது. ஒலிவப் பழங்கள் பறிக்கப்பட்டு, விலைமதிப்புமிக்க எண்ணெய் துருத்திகளில் சேகரித்து வைக்கப்பட்டிருந்தது, பேரீச்சமரங்களும் அவைகளின் கனிகளைக்

கொடுத்திருந்தன. கருஞ்சிவப்புத் திராட்சைக் குலைகள் திராட்சை ஆலையில் மிதிக்கப்பட்டிருந்தன. (2)

அந்தப் பண்டிகை ஏழு நாட்களாகத் தொடர்ந்திருந்தது. அதைக் கொண்டாடுவதற்காக பாலஸ்தீனத்தின் குடிமக்களும் மற்ற தேசங்களி லிருந்துள்ள அநேகரும் அவர்களுடைய வீடுகளைவிட்டு எருசலேமிற்கு வந்திருந்தனர். தூரத்திலும் சமீபத்திலுமிருந்த மக்கள் மகிழ்ந்து, களிகூருதலின் அடையாளத்தை அவர்களுடைய கைகளில் கொண்டுவந்திருந்தனர். வருடத்தை நன்மையினால் முடிசூட்டி, அவருடைய பாதைகளைச் செழுமைப் படுத்தியிருந்தவருக்கு நன்றியறிதலின் காணிக்கையாக முதியோர்களும் இளைஞர்களும் செல்வந்தரும் வறியோரும் ஏதாவதொரு அன்பளிப்பை கொண்டுவந்திருந்தனர். கண்களைக் கவர்கின்ற அனைத்தும் மகிழ்ச்சியை மொத்தமாக உணர்த்திக்கொடுக்கின்ற அனைத்தும் காடுகளிலிருந்து கொண்டுவரப்பட்டிருந்தன. அந்த நகரம் ஒரு அழகிய வனத்தின் தோற்றத்தை உடையதாக இருந்தது. (3)

அந்தப் பண்டிகை அறுவடையின் நன்றியை செலுத்துவதாக மட்டுமிராமல், வனாந்தரத்தில் இஸ்ரவேலின்மீது தேவன் வைத்திருந்த அவருடைய பாதுகாக்கும் கரிசனையின் நினைவுச்சின்னமாகவுமிருந்தது. இஸ்ரவேலர்கள் அவர்களுடைய கூடார வாழ்க்கையை நினைவுகூருகின்ற விதமாக அந்தப் பண்டிகையின்போது, சாவடிகளிலோ அல்லது மரக்கிளை களாலான குடிசைகளிலோ தங்கியிருந்தனர். அவைகள் வீதிகளிலும் ஆலய பிராகாரங்களிலும், அல்லது வீடுகளின்மேலும் அமைக்கப்பட்டிருந்தன. எருசலேமைச் சுற்றிலுமிருந்த குன்றுகளும் பள்ளத்தாக்குகளும்கூட இப்படிப்பட்ட இலைகளாலான குடிசைகளினால் நிரம்பியிருந்து, மக்களால் உயிரோட்டமுள்ளவைகளைப்போலக் காணப்பட்டிருந்தன. (4)

ஆராதனை செய்திருந்தவர்கள் இந்தச் சந்தர்ப்பத்தைப் பரிசுத்தமான பாடல்களினாலும் நன்றிசெலுத்துதலினாலும் கொண்டாடினார்கள். அந்தப் பண்டிகைக்குச் சற்றுமுன் பாவநிவாரண நாள் இருந்தது. மக்கள் அவர்களுடைய பாவங்களை அறிக்கைசெய்தபின், தேவனுடன் சமாதானமுள்ளவர்களாக இருந்தனர் என்பது அறிவிக்கப்பட்டிருந்தது. இவ்விதமாக அந்தப் பண்டிகையின் களிகூருதலுக்கான பாதை ஆயத்தஞ் செய்யப்பட்டிருந்தது. “அல்லேலூயா, கர்த்தரைத் துதியுங்கள்; அவர் நல்லவர், அவர் கிருபை என்றுமுள்ளது” (சங். 106:1) என்னும் சங்கீதம் வெற்றிகரமாக தொனித்து எழுந்தபோது, ஓசன்னா என்னும் முழக்கத்துடன் சகலவிதமான இசைகளும் கலந்து, ஒன்றுபட்ட பாடல்களுடன் தொடர்ந்து ஒலித்த அந்த ஆலயம் அண்டசராசரத்திற்கும் மகிழ்ச்சியின் மையமாக

இருந்தது. பலிசெலுத்தும் சமயச்சடங்குகளின் ஆடம்பரம் அங்கு இருந்தது. பரிசுத்தமான அந்தக் கட்டிடத்தின் வெள்ளைச் சலவைக்கல் படிக்கட்டுகளின் இரண்டு பக்கங்களிலும் அணிவகுத்து நின்றவர்களாக லேவியர்களின் பாடற்குழுவினர் துதியின் கீதங்களை ஏறெடுத்திருந்தனர். ஆராதனை செய்திருந்த திரளானவர்கள் அவர்களுடைய பேரீச்சமரக் கிளைகளையும் நறுமண மலர்ச்செடிகளையும் அசைத்து, பாடல்களைத் தொடர்ந்து பாடி, அந்தப் பல்லவிகளை எதிரொலிக்கச் செய்திருந்தனர். அந்த இனிய இசை மறுபடியும் சுற்றிலுமுள்ள குன்றுகள் துதியின் குன்றுகளாகும்வரை அருகிலும் தூரத்திலுமிருந்த குரல்களினால் பற்றிக்கொள்ளப்பட்டிருந்தது. (5)

அந்த ஆலயமும் அதன் பிராகாரமும் இரவில் செயற்கையான ஒளியினால் பிரகாசித்துக்கொண்டிருந்தது. அந்த இசை, அசைக்கப்பட்டிருந்த பேரீச்ச மரக்கிளைகள், மகிழ்ச்சிமிக்க ஓசன்னாக்கள், தொங்கிக்கொண்டிருந்த விளக்குகளிலிருந்து வந்த ஒளிவெள்ளம் படிந்திருந்த மக்கள் கூட்டம், ஆசாரியர்களின் அணிவரிசைகள், அந்தச் சடங்காச்சாரங்களின் மகத்துவங்கள் ஆகியவை ஒன்று சேர்ந்த அந்தக் காட்சி பார்ப்போரின் உள்ளங்களில் ஆழமான எண்ணப்பதிவை உருவாக்கியிருந்தது. ஆனால் அந்தப் பண்டிகையில் மிக அதிகமான உணர்த்துதலை உடைய சடங்காச்சாரமான ஒன்று மிக அதிகமான களிகூருதலை அழைத்திருந்தது, அது வனாந்தர அலைச்சலை நினைவுகூருகின்ற ஒரு சம்பவமாக இருந்தது. (6)

முதல் நாள் அதிகாலையில் ஆசாரியர்கள் அவர்களுடைய வெள்ளி எக்காளங்களிலிருந்து ஒரு நீண்ட ஓசையை ஒலிக்கச்செய்தபோது, மறுமொழி எக்காளங்களினாலும், மக்கள் அவர்களுடைய குடிசைகளிலிருந்து உண்டுபண்ணின மகிழச்சிமிக்க சத்தங்களினாலும், குன்றுகளையும் பள்ளத்தாக்குகளையும் எதிரொலிக்கச்செய்து அந்தப் பண்டிகையை வரவேற்றிருந்தனர். அதற்குப்பின் ஓடிக்கொண்டிருந்த கீதரோன் ஆற்றில் ஆசாரியன் கலசத்தை அமிழ்த்தி, தண்ணீரை எடுத்து, எக்காளங்கள் ஒலித்துக்கொண்டிருக்கும்போது, அதை மேலாக உயர்த்தி, ஆலயத்தின் அகலமான படிக்கட்டுகளின்மீது ஒலித்துக்கொண்டிருந்த இசைக்குத் தக்கவிதமாக மெதுவாகவும் அளக்கப்பட்டவிதமாகவும் காலடிகளைவைத்து, "எருசலேமே, உன் வாசல்களில் எங்கள் கால்கள் நிற்கலாயிற்று" (சங். 122:2) என்று கூறிக்கொண்டு நடந்திருந்தான். (7)

ஆசாரியர்கள் பணியாற்றும் பிராகாரத்தின் மையத்திலிருந்த பலிபீடத்திற்கு அவன் அந்தக் கலசத்தைச் சுமந்துசென்றிருந்தான். அங்கு இரண்டு வெள்ளிக் கொப்பரைகள் இருந்தன. அவைகள் ஒவ்வொன்றுக்கு

அருகிலும் ஒரு ஆசாரியன் நின்றுகொண்டிருந்தான். அவைகளில் ஒன்றில் அந்தக் கலசத்தின் தண்ணீர் ஊற்றப்பட, மற்றொன்றில் திராட்சரசம் ஊற்றப்பட்டு, அவை இரண்டும் ஒரு குழாயின் வழியாக ஒழுகிச்சென்று கீதரோன் ஆற்றில் கலந்து, சவக்கடலுக்கு அனுப்பப்பட்டிருந்தது. அர்ப்பணஞ் செய்யப்பட்டிருந்த தண்ணீரின் இந்தப் பகட்டான காட்சி, இஸ்ரவேலரின் தாகத்தைத் தீர்ப்பதற்காக தேவனுடைய கட்டளையின்படி கன்மலையிலிருந்து புறப்பட்ட ஊற்றை எடுத்துக்காட்டியிருந்தது. “இதோ, தேவனே என் இரட்சிப்பு; நான் பயப்படாமல் நம்பிக்கையாயிருப்பேன்; ... நீங்கள் இரட்சிப்பின் ஊற்றுகளிலிருந்து மகிழ்ச்சியோடே தண்ணீர்மொண்டுகொள்வீர்கள்” (ஏசாயா 12:2,3) என்னும் வெற்றிக்களிப்புமிக்க பாடல்கள் ஒலித்தன. (8)

கூடாரப்பண்டிகையில் கலந்துகொள்வதற்காக யோசேப்பின் குமாரர்கள் ஆயத்தஞ்செய்தபோது, கிறிஸ்து அந்தக் கூட்டத்தில் கலந்துகொள்ளுகின்ற அவருடைய விருப்பத்தைக் காட்டாததை அவர்கள் கண்டனர். கவலையுடன் அவரைக் கவனித்தனர். பெதஸ்தாவில் சுகப்படுத்தின சமயத்திலிருந்து அவர் எந்த தேசியக் கூட்டங்களிலும் கலந்துகொள்ளாமலிருந்தார். எருசலேமின் தலைவர்களுடன் தேவையில்லாத எதிர்வாதத்தைத் தவிர்ப்பதற்காக அவர் அவருடைய ஊழியங்களை கலிலேயாவிற்குள் அடக்கிக்கொண்டிருந்தார். அந்தப் பெரும் தேசியக் கூட்டங்களை அவர் அலட்சியஞ்செய்திருந்ததும், அவருக்கு நேராக ஆசாரியர்களாலும் ரபிமார்களாலும் வெளிக்காட்டப் பட்டிருந்த பகையும் அதைச் சுற்றிலுமிருந்த மக்களுக்கும் அவருடைய சொந்த சீடர்களுக்கும் அவருடைய இனத்தாருக்குங்கூட குழப்பத்திற்கு ஒரு காரணமாயிருந்தது. அவருடைய சோதனைகளில் தேவனுடைய நியாயப்பிரமாணத்திற்குக் கீழ்ப்படிவதினால் உண்டாகக்கூடிய ஆசீர்வாதங் களைப்பற்றிப் பேசியிருந்தார். அப்படியிருந்தும், தெய்வீகத்தினால் ஏற்பாடு செய்யப்பட்டிருந்த ஆராதனைக்கு அவர்தாமே அக்கறையற்றவராக இருப்பதுபோலக் காணப்பட்டிருந்தார். அவர் ஆயக்காரர்களுடனும் சமுதாயத்தில் மதிப்பற்றிருந்த மற்றவர்களுடனும் கலந்துகொண்டிருந்தது, ஆசாரியர்களின் ஆசரிப்புக்களை மதிக்காமல் இருந்தது, ஓய்வுநாளைப்பற்றிய பாரம்பரியமான கோரிக்கைகளை ஒதுக்கிவைத்த சுதந்திரம் ஆகிய அனைத்தும் சமய சம்பந்தமான அதிகாரிகளுக்கு அவரை எதிரியாக வைப்பதுபோலக் காணப்பட்டும் அதிகமான கேள்வியை எழுப்பியுமிருந்தது. தேசத்தின் பெரிய கற்றிந்த மனிதர்களைவிட்டு விலகிச்செல்லுவதின்மூலம், அவர் தவறு செய்துகொண்டிருக்கிறாரென்று அவருடைய சகோதரர்கள் நினைத்தனர். இயேசு அவர்களுக்கு எதிராகத் தம்மை வைத்ததில் தவறாக இருந்தார் என்றும் அந்த மனிதர்கள் சரியாகவே இருக்கவேண்டும் என்றும் எண்ணி, அவருடைய சீடர்களுடன் அவருடைய அணியில்

சேராமலிருந்திருந்தபோதிலும், அவருடைய குற்றமில்லாத வாழ்க்கைக்கு சாட்சி கூறியிருந்து அவருடைய செயல்களினால் ஆழமாக உணர்த்தப் பட்டிருந்தனர். அவருடைய புகழ், அவர்களுடைய பேராவலுக்கு மன நிறைவைக் கொடுத்துக்கொண்டிருந்தது. அவர் தம்மைப்பற்றி என்ன கூறிக்கொண்டிருந்தாரோ, அதேவிதமாக இருந்தார் என்பதைப் பரிசேயர்கள் காண்பதற்கு, அவருடைய வல்லமையின் ஒரு சான்றினை அவர் கொடுப்பார் என்று அவர்கள் இன்னமும் நம்பியிருந்தனர். இஸ்ரவேலின் இளவரசரான மேசியாவாக அவர் இருந்தால் எப்படியிருக்கும்! பெருமைமிக்க திருப்தியுடன் அவர்கள் அந்த எண்ணத்தைப் பேணியிருந்தனர். (9)

இதைப்பற்றி அவர்கள் அப்படிப்பட்ட கவலை உள்ளவர்களாக, கிறிஸ்துவை எருசலேமிற்குச் செல்லுமாறு வற்புறுத்தியிருந்தனர். “நீர் செய்கிற கிரியைகளை உம்முடைய சீஷர்களும் பார்க்கும்படி, இவ்விடம்விட்டு யூதேயாவுக்குப் போம். பிரபலமாயிருக்க விரும்புகிற எவனும் அந்தரங்கத்திலே ஒன்றையும் செய்யமாட்டான்; நீர் இப்படிப்பட்டவைகளைச் செய்தால் உலகத்துக்கு உம்மை வெளிப்படுத்தும்” என்று அவர்கள் கூறினார்கள். “நீர் செய்தால்” என்னும் சொல், அவர்களுடைய சந்தேகத்தையும் நம்பிக்கையின்மையையும் உணர்த்திக்காட்டியிருந்தது. அவர்கள் அவர்மீது கோழைத்தன்மையையும் பலவீனத்தையும் சாட்டினார்கள். அவர்தான் மேசியா என்பதை அவர் அறிந்திருந்தாரானால், இந்த மாறுபட்ட ஒதுங்குதலும் செயலற்ற தன்மையும் ஏன்? உண்மையாகவே அவர் அப்படிப்பட்ட வல்லமையை உடையவராக இருந்திருந்தால், ஏன் தைரியமாக எருசலேமிற்குச்சென்று அவருடைய உரிமைகளை வலியுறுத்தக்கூடாது? கலிலேயாவில் அவரைப்பற்றி, அறிவிக்கப்பட்டிருந்த ஆச்சரியமான செயல்களை அவர் ஏன் எருசலேமிலும் செய்யக்கூடாது? நீர் ஒதுக்குப்புறமான இடங்களில் மறைந்திருந்து, உம்முடைய பலத்த செயல்களை அறியாமைமிக்க விவசாயிகளுக்கும் மீன்பிடிப்பவர்களுக்கும் மட்டும் நன்மை உண்டாகும்படி செய்யாமலிரும். நீர் தலைநகரத்திற்குச் சென்று உம்மை அறிமுகப்படுத்தி, ஆசாரியர்கள் அதிபதிகள் ஆகியோரின் ஆதரவை பெற்று, ஒரு புதிய இராஜ்யத்தை அமைப்பதில் அவர்களுடன் ஒன்றுசேரும் என்றார்கள். (10)

பகட்டான வெளிக்காட்டுதலில் எவர்களுடைய இருதயங்களில் பேராவல் அடிக்கடி காணப்பட்டிருந்ததோ, அப்படிப்பட்டவர்கள் இந்த இயேசுவின் சகோதரர்கள். அவர்களுடைய சுயநலமிக்க உள்நோக்கங்களினால் நியாயவாதஞ்செய்திருந்தனர். இந்த ஆவி, உலகத்தை ஆட்சிசெய்கின்ற ஆவியாக இருந்தது. உலகப்பிரகாரமான ஒரு சிங்காசனத்தைத்

தேடுவதற்குப்பதிலாக ஜீவ அப்பம் நானே என்று கிறிஸ்து தம்மைப்பற்றி அறிவித்திருந்ததினால், அவர்கள் உள்ளத்தில் புண்பட்டிருந்தனர். அவருடைய சீடர்களில் அநேகர் அவரை விட்டுச்சென்றபோது, அவர்கள் மிகவும் அதிகமாக ஏமாற்றமடைந்திருந்தனர். “அவர் தேவனால் அனுப்பப்பட்டவர்” என்பதை அவருடைய பணி வெளிப்படுத்தியிருந்தது. அத்தகைய பணியை ஏற்றுக்கொள்ளுதல் என்பது ஒரு சிலுவையாகக் காணப்பட்டது. அந்தச் சிலுவையினின்று தப்புவதற்காக அவரைவிட்டு அவரது சீடர்கள் தாங்களாகவே விலகிச்சென்றனர். (11)

அப்பொழுது இயேசு, “என் வேளை இன்னும் வரவில்லை, உங்கள் வேளையோ எப்பொழுதும் ஆயத்தமாயிருக்கிறது. உலகம் உங்களைப் பகைக்கமாட்டாது; அதின் கிரியைகள் பொல்லாதவைகளாயிருக்கிறதென்று நான் சாட்சிகொடுக்கிறபடியினாலே அது என்னைப் பகைக்கிறது. நீங்கள் இந்தப் பண்டிகைக்குப் போங்கள்; என் வேளை இன்னும் வராதபடியால் நான் இந்தப் பண்டிகைக்கு இப்பொழுது போகிறதில்லை” (யோவான் 7:6–8) என்றார். “இவைகளை அவர்களுடனே சொல்லி, பின்னுங் கலிலேயாவிலே தங்கினார்.” அவருடைய சகோதரர்கள் அவர் நடந்துகொள்ளவேண்டிய விதத்தைக்குறித்து அவரிடத்தில் அதிகாரத்துடன் கூடிய ஒரு குரலில் பேசினார்கள். அவர் அவர்களை அவருடைய சுயத்தை மறுக்கின்ற சீடர்களின் அணியில் சேர்க்காமல், உலகத்துடன் சேர்த்து, அவர்களுடைய கடிந்துகொள்ளுதலை அவர்களிடத்திற்கே திருப்பினார். “உலகம் உங்களைப் பகைக்கமாட்டாது; அதின் கிரியைகள் பொல்லாதவைகளாயிருக்கிறதென்று நான் சாட்சிகொடுக்கிறபடியினாலே அது என்னைப் பகைக்கிறது” என்றார். உலகம் ஆவிக்குரிய விதத்தில் அதைப்போலவே இருப்பவர்களைப் பகைப்பதில்லை. அது அவர்களை அதற்குச் சொந்தமானவர்களைப்போல நேசிக்கிறது. (12)

சுக சௌகரியத்தையும் சுயத்தையும் உயர்த்துகிற இடமாக கிறிஸ்துவிற்கு இந்த உலகம் இருக்கவில்லை. அதன் வல்லமையையும் மகிமையையும் பற்றிக்கொள்ளும் ஒரு வாய்ப்பிற்காக அவர் எதிர்பார்த்துக் கொண்டிருக்கவுமில்லை. அது அவருக்கு அப்படிப்பட்ட பரிசை வைத்திருக்கவும் இல்லை. அவருடைய பிதா அவரை அனுப்பியிருந்த இடம் அப்படிப்பட்டதாக இருந்தது. உலகத்திற்கு ஜீவனுண்டாகும்படி, மாபெரும் மீட்பின் திட்டத்தைச் செயலாற்றுவற்காக அவர் அனுப்பப்பட்டிருந்தார். விழுந்துபோன இனத்திற்கான தம்முடைய பணியை அவர் நிறைவேற்றிக் கொண்டிருந்தார். ஆனால் அவர் துணிகரமாயிருக்கக்கூடாது; ஆபத்திற்குள் விரைவாக நுழையக்கூடாது; நெருக்கடிக்குள் துரிதமாக செல்லக்கூடாது.

அவருடைய ஒவ்வொரு பணிக்கும் நேரம் குறிக்கப்பட்டிருந்தது. அவர் பொறுமையுடன் காத்திருக்கவேண்டும். உலகத்தின் வெறுப்பை பெறவேண்டியதிருக்கும் என்பதை அவர் அறிந்திருந்தார். தம்முடைய பணி மரணத்தில் முடியும் என்பதை அவர் அறிந்திருந்தார். ஆனால் வேளை வருவதற்குமுன் அவர் தம்மை வெளிப்படுத்திக் காட்டுவது அவருடைய பிதாவின் சித்தமாக இருக்காது. (13)

எருசலேமிலிருந்து கிறிஸ்துவின் அற்புதங்களைப்பற்றிய செய்தி யூதர்கள் எங்கெல்லாம் சிதறியிருந்தார்களோ அங்கெல்லாம் பரவியிருந்தது. பல மாதங்களாக அவர் பண்டிகைகளில் கலந்துகொள்ளாமலிருந்திருந்த போதிலும், மக்களுக்கு அவரில் இருந்த ஆர்வம் தணியாதிருந்தது. அவரைப் பார்க்கமுடியுமென்ற நம்பிக்கையுடன் அநேகர் உலகத்தின் எல்லாப் பகுதிகளிலிருந்தும் கூடாரப்பண்டிகைக்கு வந்திருந்தனர். அந்தப் பண்டிகையின் ஆரம்பத்தில் அவரைப்பற்றி அநேக விசாரிப்புகள் செய்யப்பட்டன. பரிசேயர்களும் அதிபதிகளும் அவரைக் கண்டனஞ்செய்வதற்கான ஒரு வாய்ப்பு கிடைக்குமென்ற நம்பிக்கையுடன் அவரது வருகையை நோக்கிக் காத்திருந்தனர். “அவர் எங்கே?” என்று அவர்கள் அக்கறையோடு விசாரித்தனர். ஆனாலும் ஒருவரும் அறிந்திருக்கவில்லை. அவரைப்பற்றிய எண்ணம் எல்லோருடைய மனங்களிலும் ஓங்கியிருந்தது. ஆசாரியர்களையும் அதிகாரிகளையும்பற்றிய பயத்தினால் ஒருவரும் அவரை மேசியா என்று ஏற்றுக்கொள்ளத் துணியவில்லை. ஆனாலும் எல்லா இடங்களிலும் அவரைப்பற்றின அமைதியும் அக்கறையுமிக்க விவாதம் நடந்துகொண்டிருந்தது. அவர் தேவனிடத்திலிருந்து அனுப்பப்பட்டிருந்த ஒருவர் என்று அநேகர் அவரை ஆதரித்தபோது, மற்றவர்கள் அவரை மக்களை வஞ்சிப்பவர் என்று வெளிப்படையாகக் குற்றஞ்சாட்டியிருந்தனர். (14)

அந்த நேரத்தில் இயேசு எருசலேமிற்கு அமைதியாக வந்து சேர்ந்திருந்தார். எல்லாப் பகுதிகளிலிருந்தும் நகரத்தை நோக்கித் தங்கள் பாதையில் சென்றுகொண்டிருந்த பயணிகளைத் தவிர்ப்பதற்காக ஜனநடமாட்டமில்லாத ஒரு தடத்தில் செல்லுவதை அவர் தெரிந்துகொண்டிருந்தார். அந்தப் பண்டிகைக்காகச் சென்றுகொண்டிருந்த எந்த பயணிகளின் கூட்டத்திலாவது அவர் சேர்ந்திருந்தாரானால் நகரத்திற்குள் நுழைந்ததும் பொதுமக்களின் கவனம் ஈர்க்கப்பட்டிருக்கும். அவருக்கு பிரபலமான ஆதரவு காட்டப்பட்டிருந்திருக்கும். அது அதிகாரிகளை அவருக்கு எதிராக எழுப்பியிருந்திருக்கும். அதைத் தவிர்ப்பதற்காகவே அவர் அந்தப் பயணத்தைத் தனியாக மேற்கொண்டார். (15)

பண்டிகையின் மத்தியில் அவரைப்பற்றிய உணர்ச்சிகளின் கொந்தளிப்பு அதன் உச்சக்கட்டத்தில் இருந்தபோது, திரளானவர்களின் கூட்டத்திற்கு முன்னிலையில் அவர் ஆலயப்பிராகாரத்தில் பிரவேசித்தார். பண்டிகையில் அவர் தோன்றாமல் இருந்ததினால், அவர் தம்மை ஆசாரியர்கள் மற்றும் அதிபதிகளுடைய அதிகாரத்திற்குள் வைக்கத் துணிவில்லாதவராக இருந்தார் என்று கருதப்பட்டிருந்தது. அவருடைய பிரசன்னத்தில் அனைவரும் ஆச்சரியமடைந்திருந்தனர். ஒவ்வொரு குரலும் மௌனமடைந்தது. அவருடைய உயிரின்மீது தாகமாயிருந்த வல்லமைமிக்க எதிரிகளுக்கு நடுவில் அவருடைய மேன்மையான, தைரியமான நடத்தையைக் கண்டு அனைவரும் அதிசயித்தனர். (16)

அந்தப் பெரும் கூட்டத்தின் நடுவில் அனைவரது கவனத்தையும் கவர்ந்தவராக, ஒருவரும் இதுவரை பேசியிராதவிதமாக இயேசு அவர்களிடம் பேசினார். அவரது வார்த்தைகள் இஸ்ரவேலரின் சட்டங் களையும் அமைப்புக்களையும், அவர்களுடைய பலிமுறைகளையும் தீர்க்கதரிசிகளின் போதனைகளையும்குறித்த அறிவை வெளிக்காட்டினது. அது ஆசாரியர்களிடத்திலும் ரபிமார்களிடத்திலுமிருந்த அறிவைவிட மிகவும் அளவுகடந்திருந்தது. தடைகளாக இருந்த முறைமைகளையும் பாரம்பரியங்களையும் அவர் உடைத்தெறிந்தார். எதிர்கால வாழ்க்கையின் காட்சிகள் அவருக்கு முன்பாக விரித்துவைக்கப்பட்டிருந்ததைப்போலக் காணப்பட்டது. தீர்மானமிக்க அதிகாரத்துடன், காணப்படாதவைகளைக் கண்டவரைப்போலவும், பூமிக்குரியவைகளையும் பரலோகத்திற்குரியவை களையும் குறித்தும், மானுடத்தையும் தெய்வீகத்தையும்குறித்தும் பேசினார். அவருடைய வார்த்தைகள் மிகத் தெளிவாகவும் மனதை உணர்த்துபவையாகவும் இருந்தன. மீண்டும், கப்பர்நகூமிலிருந்ததைப் போலவே மக்கள் ஆச்சரியமடைந்தனர். “அவருடைய வசனம் அதிகார முள்ளதாயிருந்தபடியால் அவருடைய போதகத்தைக்குறித்து அவர்கள் ஆச்சரியப்பட்டார்கள்”—லூக்கா 4:32. அவர்களுக்குக் கொடுக்கும்படி கொண்டுவந்திருக்கிற ஆசீர்வாதங்களை தள்ளிவிடுகிற அனைவரையும் பின்தொடரவிருக்கிற ஆபத்தைக்குறித்து வெவ்வேறு விதங்களில் தம்மைக் கேட்டுக்கொண்டிருப்பவர்களை அவர் எச்சரித்தார். அவர் தேவனிடத்திலிருந்து வந்திருக்கிறார் என்பதற்குக் கொடுக்கமுடிந்த அத்தனை அத்தாட்சிகளையும் கொடுத்து, அவர்களை மனந்திருப்ப அழைப்பதற்கான அனைத்து முயற்சிகளையும் செய்தார். அப்படிப்பட்ட குற்றஉணர்விலிருந்து அவர்களை காப்பாற்றக்கூடுமானால், அவரது சொந்த ஜனத்தால் அவர் தள்ளப்பட்டு கொலைசெய்யப்பட்டிருக்கமாட்டார். (17)

நியாயப்பிரமாணத்தையும் தீர்க்கதரிசனங்களையும்பற்றிய அவருடைய அறிவில் அனைவரும் ஆச்சரியமடைந்தனர். "இவர் கல்லாதவராயிருந்தும் வேத எழுத்துக்களை எப்படி அறிந்திருக்கிறார்" என்று ஒருவரையொருவர் கேட்டுக்கொண்டனர். ரபிமார்களின் பள்ளிகளில் கல்வி கற்காத ஒருவன் மதத்தலைவனாவதற்குத் தகுதியானவனாக மதிக்கப்படவில்லை. இயேசுவும் யோவான் ஸ்நானகனும் இருவரும் இந்தப் பயிற்சியைப் பெறாததால் அறிவில்லாதவர்களாக எடுத்துக்காட்டப்பட்டிருந்தனர். அவர்களுடைய பேச்சைக் கேட்டிருந்தவர்கள்: "கல்லாதவராயிருந்தும்" வேதவாக்கியங்களைப்பற்றிய அவர்களுடைய அறிவில் ஆச்சரியமடைந் திருந்தனர். மெய்யாகவே அவர்கள் மனிதர்களால் போதிக்கப்படாதவர்களாக இருந்தும், பரலோகத்தின் தேவன் அவர்களுடைய ஆசிரியராக இருக்கவே, அவரிடத்திலிருந்து மிகவும் அதிகமான உயர்ந்த ஞானத்தைப் பெற்றிருந்தனர். (18)

இயேசு ஆலயப்பிராகாரத்தில் பேசினபோது, மக்கள் கட்டுண்டவர்களைப் போலக் காணப்பட்டனர். எந்த மனிதர்கள் அவருக்கெதிராக மிக அதிகமான வன்முறையோடிருந்தார்களோ, அதே மனிதர்கள் அவருக்குத் தீங்கு செய்ய வல்லமையற்றிருந்ததை தாங்களே உணர்ந்தார்கள். அந்த நேரத்தில் மற்ற காரியங்களனைத்தும் மறக்கப்பட்டிருந்தன. (19)

அந்தப் பண்டிகையின் கடைசிப் பெரிய நாள்வரை நாள்தோறும் அவர் மக்களுக்குப் போதனை செய்தார். அந்த நாளின் காலைநேரத்தில் தொடர்ந்து நீண்ட நாட்களாக அதிக காலமாக பண்டிகை கொண்டாட்டத்தில் ஈடுபட்டிருந்த மக்கள் களைப்புற்றவர்களாக காணப்பட்டனர். திடீரென்று இயேசு அந்தப் பிராகாரமெங்கும் ஒலிக்கின்றவிதமாக அவருடைய குரலை உயர்த்தினார். (20)

"ஒருவன் தாகமாயிருந்தால் என்னிடத்தில் வந்து, பானம் பண்ணக்கடவன். வேதவாக்கியம் சொல்லுகிறபடி என்னிடத்தில் விசுவாசமா யிருக்கிறவன் எவனோ, அவன் உள்ளத்திலிருந்து ஜீவத்தண்ணீருள்ள நதிகள் ஓடும்" என்றார். மக்களின் நிலைமை இந்த வேண்டுகோளை மிகவும் வலிமையானதாக்கியிருந்தது. ஆடம்பரமும் பண்டிகை கொண்டாடு தலுமாகிய ஒரு தொடர்ச்சியான காட்சியில் அவர்கள் ஈடுபட்டிருந்தனர். ஒளியினாலும் வண்ணத்தினாலும் அவர்களுடைய கண்கள் கூசியிருந்தன. மிக அதிகமான ஓசையுள்ள இசையினால் அவர்களுடைய செவிகள் களியாட்டமடைந்திருந்தன. ஆனால் அழியாது நிலைத்திருப்பதை அடைந்துகொள்வதற்காக, ஆத்துமாவின் தாகத்தைத் திருப்திப்படுத்த, தேவைகளைச் சந்திக்க, அந்த தொடர்ச்சியான சமயச்சடங்குகளனைத்திலும்

எதுவுமே இருக்கவில்லை. அவர்களில் நீரூற்றாக இருந்து நித்திய ஜீவனுக்கென்று பாயக்கூடிய—ஜீவ ஊற்றினிடத்திற்குப் பருகவரும்படி இயேசு அவர்களை அழைத்தார். (21)

வனாந்தரத்தில் கன்மலையின்மீது அடித்ததை நினைவுபடுத்துகின்ற சமயச்சடங்கை அந்த ஆசாரியன் செய்திருந்தான். தாகமாயிருக்கும் அனைவருக்கும் தம்முடைய மரணத்தினால் பாய்ந்தோடக்கூடிய இரட்சிப்பின் ஜீவ ஊற்றாக அவர் இருக்கப்போவதின் அடையாளமாக அந்தக் கன்மலை இருந்தது. கிறிஸ்துவின் வார்த்தைகளே ஜீவ தண்ணீராகும். கூடியிருந்த அந்த கூட்டத்திற்கு முன்னிலையில், உலகம் முழுவதற்கும் ஜீவத் தண்ணீர் பாய்ந்தோடுவதற்கேதுவாக அவர்களுக்காக அடிக்கப்படும்படி இயேசு தம்மை நிறுத்தினார். கிறிஸ்துவை அடிப்பதினால் ஜீவாதிபதியை அழித்துவிடலாம் என்று சாத்தான் நினைத்தான். ஆனால் அடிக்கப்பட்ட அந்தக் கன்மலையிலிருந்து ஜீவத்தண்ணீர் பாய்ந்தோடினது. இயேசு மக்களிடம் பேசினபோது, மாறுபட்ட ஒரு பயத்தினால் அவர்களுடைய இருதயங்கள் கிளர்ச்சியடைந்தது. சமாரியப் பெண்ணைப்போல அநேகர்: “எனக்குத் தாகமுண்டாகாமலும், ... இருக்கும்படி அந்தத் தண்ணீரை எனக்குத் தரவேண்டும்” என்று சொல்லுவதற்கு ஆயத்தமாக இருந்தனர். (யோவான் 4:15). (22)

இயேசு ஆத்துமாவின் தேவைகளை அறிந்திருந்தார். ஆடம்பரம், செல்வங்கள், கனம் ஆகியவைகளால் இருதயத்தைத் திருப்திப்படுத்த முடியாது. “ஒருவன் தாகமாயிருந்தால் என்னிடத்தில் வந்து, பானம் பண்ணக்கடவன்.” செல்வந்தார்கள், ஏழைகள், மேலானவர்கள், கீழானவர்கள் ஆகிய அனைவரும் ஒரேவிதமாக வரவேற்கப்படுகின்றனர். பாரமடைந்துள்ள மனதிற்கு விடுதலையைத் தருவதாகவும், துயரப்படுகிறவர்களுக்கு ஆறுதல் செய்வதாகவும், நம்பிக்கையிழந்தவர்களுக்கு நம்பிக்கையைத் தருவதாகவும் அவர் வாக்குத்தத்தம் பண்ணுகிறார். இயேசுவின் பேச்சைக் கேட்டிருந்தவர்களில் அநேகர் நம்பிக்கைகளில் ஏமாற்றமடைந்தும், துக்கத்தில் மூழ்கியும் இருந்தனர். அநேகர் இரகசியமான வருத்தத்தை நெஞ்சிலே பேணியவர்களாக இருந்தனர். அநேகர் உலகப்பிரகாரமான பொருட்களினாலும் மனிதர்களின் போற்றுதலினாலும் இளைப்பாறுதல் இல்லாத ஏக்கங்களைத் திருப்திப்படுத்துவதற்காக வகைதேடிக்கொண்டிருந்தனர். ஆனால் எல்லாவற்றையும் அடைந்துகொண்டபின், தங்களுடைய தாகத்தைத் தணிக்கமுடியாத ஒரு வெடிப்புள்ள தொட்டியை சமீபிப்பதற்குத்தான் பாடுபட்டுக்கொண்டிருந்ததை அவர்கள் கண்டனர். மகிழ்ச்சிமிக்க அந்தக் காட்சியின் பிரகாசத்திற்கு மத்தியில் திருப்தியில்லாதவர்களாகவும்,

துயரமடைந்தவர்களாகவும் அவர்கள் நின்றிருந்தனர். "ஒருவன் தாகமாயிருந்தால்" என்று திடீரென்று ஒலித்த அந்தக் குரல், துயரமிக்க தியானத்திலிருந்து அவர்களை திடுக்கிடச்செய்து, அதைப் பின்தொடர்ந்த வார்த்தைகள் ஒரு புதிய நம்பிக்கையினால் அவர்களுடைய மனங்களை தூண்டிவிட்டன. இரட்சிப்பின் விலைமதிப்புமிக்க ஈவு கொடுக்கப்படுவதை அவர்கள் காணும்வரை, பரிசுத்த ஆவியானவர் அந்த அடையாளத்தை அவர்கள்முன் வைத்தார். (23)

தாகமுள்ள ஆத்துமாவுக்கான கிறிஸ்துவின் குரல் இன்றும் சென்றுகொண்டிருக்கிறது. அந்தப் பண்டிகையின் கடைசி நாளில் அந்த ஆலயத்தில் இருந்தவர்கள் கேட்டிருந்ததைவிட அதிக வல்லமையுடன் அது நமக்கு வேண்டுகோள் விடுக்கின்றது. அந்த ஊற்று எல்லோருக்காவும் திறக்கப்பட்டிருக்கிறது. களைப்படைந்து வெறுமையாக இருப்பவர்களுக்கு நித்திய ஜீவனான புத்துணர்வு தரும் அந்தப் பருகுதல் கொடுக்கப்படுகிறது. "ஒருவன் தாகமாயிருந்தால் என்னிடத்தில் வந்து, பானம் பண்ணக்கடவன்." "தாகமாயிருக்கிறவன் வரக்கடவன்; விருப்பமுள்ளவன் ஜீவத்தண்ணீரை இலவசமாய் வாங்கிக்கொள்ளக்கடவன்" (வெளிப்படுத்தல் 22:17; யோவான் 4:14) என்று இயேசு தொடர்ந்து குரல்கொடுத்துக்கொண்டிருக்கிறார். (24) ★

# 50

# கண்ணிகளுக்கு நடுவில்...!

**யோவான் 7:16–36, 40–53; 8:1–11**

**(The Desire of Ages, pp. 455–462)**

இயேசு பண்டிகையின்போது எருசலேமில் இருந்தபோதெல்லாம் ஒற்றர்கள் அவரை மறைமுகமாகப் பின்தொடர்ந்திருந்தனர். ஒவ்வொரு நாளும் அவரை மௌனப்படுத்துவதற்கு புதிய திட்டங்கள் முயற்சிசெய்யப்பட்டன. அவரைக் கண்ணியில் அகப்படுத்தும்படி ஆசாரியர்களும் அதிபதிகளும் விழிப்போடு கவனித்துக்கொண்டிருந்தனர். வன்முறையினால் அவரை நிறுத்திவிட அவர்கள் திட்டமிட்டுக்கொண்டிருந்தனர். கூடவே, மக்களுக்குமுன் இருந்த அந்த தாழ்மையான கலிலேய ரபியை கேவலப்படுத்தவும் அவர்கள் விரும்பியிருந்தனர். (1)

பண்டிகையின் முதல் நாளில் அவர் எந்த அதிகாரத்தினால் போதிக்கிறார் என்று கேட்டுக்கொண்டு அதிபதிகள் அவரிடம் வந்திருந்தனர். அவர்மீதிருந்த கவனத்தை அவருடைய போதிக்கும் உரிமையைப்பற்றின கேள்விக்கும், இவ்விதமாக அவர்களுடைய சொந்த முக்கியத்திற்கும் அதிகாரத்திற்கும் திசைதிருப்ப அவர்கள் விரும்பினார்கள். (2)

“என் உபதேசம் என்னுடையதாயிராமல், என்னை அனுப்பினவருடையதாயிருக்கிறது. அவருடைய சித்தத்தின்படி செய்ய மனதுள்ளவனெவனோ அவன் இந்த உபதேசம் தேவனால் உண்டா யிருக்கிறதோ, நான் சுயமாய்ப் பேசுகிறேனோ என்று அறிந்துகொள்ளுவான்” (யோவான் 7:16,17) என்று இயேசு கூறினார். ஆட்சேபனைக்கு பதில் தராமல், ஆத்தும இரட்சிப்பிற்கு அவசியமான சத்தியத்தை திறந்து காண்பித்து, ஆட்சேபித்தவர்களுக்குப் பதில் கொடுத்தார். சத்தியத்தை உணருவதும் போற்றுவதும், இருதயத்தைவிட மனதையே சார்ந்திருக்கிறது. சத்தியம் ஆத்துமாவிற்குள் ஏற்றுக்கொள்ளப்படவேண்டும். சித்தத்தின் பெரும்மரியாதையை அது வேண்டுகிறது. சத்தியம் பகுத்தறிவிற்குமட்டுமே சரணடையக்கூடுமானால், அதைப் பெற்றுக்கொள்ளுவதில் அகந்தை

இடையூறு செய்யாது. ஆனால் அது கிருபையின்மூலமாக இருதயத்தில் பெற்றுக்கொள்ளப்படவேண்டும். அதைப்பெறுவது தேவனுடைய ஆவி வெளிப்படுத்தும் ஒவ்வொரு பாவத்தையும் மறுப்பதைச் சார்ந்து இருக்கிறது. சத்தியத்தை அடைந்துகொள்வதற்கான மனிதனுடைய அனுகூலங்கள் எவ்வளவுதான் பெரியதாக இருந்தாலும், அதைப் பெற்றுக்கொள்ள இருதயம் திறக்கப்படாதவரை, அதன் கொள்கைகளுக்கு எதிராக இருக்கிற ஒவ்வொரு பழக்கத்யையும் நடத்தையையும் மனப்பூர்வமாக ஒப்படைக்காதவரை அதனால் அவனுக்கு எந்த பயனுமிருக்காது. இவ்விதமாக அவருடைய சித்தத்தை அறிந்து அதன்படி செயலாற்ற உண்மையான வாஞ்சையுள்ளவர்களாக தங்களை ஒப்படைக்கிறவர்களுக்கு சத்தியம் அவர்களை இரட்சிக்கும் தேவனுடைய வல்லமையாக வெளிப்படுத்தப்பட்டிருக்கிறது. இவர்களால் தேவனுக்காகப் பேசுபவர்களுக்கும் தனக்காகமட்டுமே பேசுபவனுக்கும் இடையிலுள்ள வேறுபாட்டைப் பிரித்தறிய முடியும். பரிசேயர்கள் அவர்களுடைய சித்தத்தை தேவனுடைய சித்தத்தின் பகுதியில் வைக்கவில்லை. அவர்கள் சத்தியத்தை அறிவதற்கு அல்ல, அதிலிருந்து விலகிச்செல்லுவதற்கான சாக்குப்போக்குகளையேத் தேடிக்கொண்டிருந்தார்கள். அதனால்தான் அவர்களால் அவருடைய போதனையைப் புரிந்துகொள்ளமுடியவில்லை என்பதை கிறிஸ்து சுட்டிக்காட்டினார். (3)

வஞ்சகனிலிருந்து உண்மையான போதகரைப் பிரித்தறியக்கூடிய ஒரு பரீட்சையை இப்போது அவர் கொடுத்தார். “சுயமாய்ப் பேசுகிறவன் தன் சுயமகிமையைத் தேடுகிறான், தன்னை அனுப்பினவரின் மகிமையைத் தேடுகிறவனோ உண்மையுள்ளவனாயிருக்கிறான், அவனிடத்தில் அநீதி யில்லை” என்றார். தன்னுடைய சுயமகிமையைப் பேசுகிறவன் தனக்காகவே பேசுகிறான். சுயத்தைத் தேடுகின்ற ஆவி, அதன் பிறப்பை காண்பித்து விடுகிறது. ஆனால் கிறிஸ்து தேவனுடைய மகிமையைத் தேடிக் கொண்டிருந்தார். அவர் தேவனுடைய வார்த்தைகளைப் பேசினார். இதுவே அவர் சத்தியத்தின் போதகர் என்ற அவருடைய அதிகாரத்திற்குச் சான்றாக இருந்தது. (4)

இயேசு அவர்களுடைய இருதயங்களை வாசிக்கிறார் என்பதைக்காட்டி, தம்முடைய தெய்வீகத்திற்கான ஒரு சான்றை ரபிமார்களுக்குக் கொடுத்தார். பெதஸ்தாவில் குணப்படுத்தினதிலிருந்து அவர்கள் அவரைக் கொலைசெய்யத் திட்டந்தீட்டிக்கொண்டிருந்தனர். இவ்விதமாக, தாங்கள் பாதுகாப்பதாகக் கூறிக்கொண்டிருந்த பிரமாணத்தை அவர்களே மீறிக்கொண்டிருந்தார்கள். “மோசே நியாயப்பிரமாணத்தை உங்களுக்குக் கொடுக்கவில்லையா? அப்படியிருந்தும் உங்களில் ஒருவனும் அந்த நியாயப்பிரமாணத்தின்படி

நடக்கிறதில்லை; நீங்கள் ஏன் என்னைக் கொலைசெய்யத் தேடுகிறீர்கள்" என்று அவர் அவர்களை வினவினார். (5)

ஒரு விரைவான மின்னலின் ஒளியைப்போல இந்த வார்த்தைகள் ரபிமார்களுக்கு அவர்கள் மூழ்கவிருந்த அழிவின் குழியை வெளிப்படுத்திக் காட்டியது. வினாடிநேரத்திற்கு அவர்கள் பயம் நிறைந்தவர்களானார்கள். எல்லையற்ற வல்லமையுடையவரோடு போராட்டத்தில் ஈடுபட்டிருந்ததை அவர்கள் கண்டார்கள். ஆனால் அவர்கள் எச்சரிப்பை ஏற்கமாட்டார்கள். மக்களிடம் அவர்களுக்கிருந்த செல்வாக்கைத் தக்கவைத்துக்கொள்வதற்காக அவர்களுடைய கொலைகாரத் திட்டங்கள் மறைக்கப்பட்டாகவேண்டும். இயேசுவின் கேள்வியிலிருந்து விலகி: "நீ பிசாசுபிடித்தவன்; உன்னைக் கொலைசெய்யத் தேடுகிறவன் யார்" என்று குரலெழுப்பினார்கள். இயேசுவின் ஆச்சரியமான கிரியைகள் ஒரு அசுத்த ஆவியினால் ஏவப்பட்டது என்று அவர்கள் மறைமுகமாகக் கூறினார்கள். (6)

மறைமுகமான இந்தக் குறைகூறுதலுக்கு கிறிஸ்து செவி சாய்க்கவில்லை. பெதஸ்தாவில் அவர் சுகப்படுத்தின செயல் ஓய்வுநாள் பிரமாணத்திற்கு இசைவானது என்றும், பிரமாணத்தைப்பற்றி யூதர்கள் கொடுத்திருந்த விளக்கங்களினாலேயே அது நிரூபிக்கப்பட்டிருந்தது என்றும் அவர் தொடர்ந்து விளக்கிக்காட்டினார். "விருத்தசேதனம் ... மோசே ... உங்களுக்கு நியமித்தான்; நீங்கள் ஓய்வுநாளிலும் மனுஷனை விருத்தசேதனம்பண்ணுகிறீர்கள்" என்றார். நியாயப்பிரமாணத்தின்படி ஒவ்வொரு ஆண்பிள்ளையும் எட்டாம் நாளில் விருத்தசேதனம் பண்ணப்படவேண்டும். நியமிக்கப்பட்டிருந்த அந்த நாள் ஓய்வுநாளில் வந்துவிட்டாலும், அன்று அந்தச் சடங்கு செய்யப்பட்டாகவேண்டும். அப்படியானால் ஓய்வுநாளில் ஒரு மனுஷனை முழுவதும் சுகமாக்கினதினாலே அது ஆவிக்குரிய விதமாக நியாயப்பிரமாணத்துடன் எவ்வளவு அதிகமாக இசைவுள்ளதாக இருக்குமென்று அவர்கூறி, "தோற்றத்தின்படி தீர்ப்புசெய்யாமல், நீதியின்படி தீர்ப்புசெய்யுங்கள்" என்று அவர்களை எச்சரித்தார். (7)

அந்த அதிபதிகள் மௌனப்படுத்தப்பட்டனர். மக்களில் அநேகர் இவனையல்லவா கொலைசெய்யத் தேடுகிறார்கள் "இவனையல்லவா கொலைசெய்யத் தேடுகிறார்கள்? இதோ, இவன் தாராளமாய்ப் பேசுகிறானே, ஒருவரும் இவனுக்கு ஒன்றும் சொல்லுகிறதில்லையே, மெய்யாய் இவன் கிறிஸ்துதான் என்று அதிகாரிகள் நிச்சயமாக அறிந்திருக்கிறார்களோ?" என்று வியந்து கூறினார்கள். (8)

கிறிஸ்துவின் போதனைகளைக் கேட்டிருந்த எருசலேமில் வாழ்ந்திருந்தவர்களில் அநேகர் அவருக்கெதிரான அதிபதிகளின் திட்டங்களை

அறிந்திருந்தனர். அவர்கள் தடுக்கமுடியாத ஒரு வல்லமையினால் அவரிடத்திற்கு இழுக்கப்பட்டிருந்ததை அவர்களாகவே உணர்ந்தனர். அவர் தேவகுமாரன் என்னும் மன உணர்த்துதல் அவர்கள்மீது அழுத்தியிருந்தது. ஆனால் சந்தேகங்களை எடுத்துக்கூற சாத்தான் ஆயத்தமாக இருந்தான். அதற்கு மேசியாவைப்பற்றியும் அவரது வருகையைப்பற்றியுமுள்ள அவர்களுடைய சொந்த தவறான யோசனைகளும் பாதையை ஆயத்தஞ்செய்திருந்தன. கிறிஸ்து பெத்லகேமில் பிறப்பார் என்றும், சிறிது காலத்திற்குப்பின் அவர் மறைந்துவிடுவாரென்றும் அவருடைய இரண்டாம் வருகையின்போது அவர் எங்கேயிருந்து வந்தார் என்று ஒருவருக்கும் தெரியாது என்றும் பொதுவாக நம்பப்பட்டிருந்தது. மனித இனத்துடன் இயற்கையான உறவு மேசியாவிற்கு இருக்காது என்னும் கருத்தை சிலர் மட்டும் கொண்டிருக்கவில்லை. மேசியாவின் மகிமையைப்பற்றிய பிரசித்தமான எண்ணங்களை நசரேயனாகிய இயேசு சந்திக்காதபடியால்: “இவன் இன்ன இடத்திலிருந்து வந்தவனென்று நாம் அறிந்திருக்கிறோம், கிறிஸ்து வரும்போதோ, அவர் இன்ன இடத்திலிருந்து வருகிறவரென்று ஒருவனும் அறியமாட்டானே” என்னும் கருத்திற்கு அநேகர் செவிசாய்த்திருந்தனர். (9)

இவ்விதமாக அவர்கள் சந்தேகத்திற்கும் விசுவாசத்திற்குமிடையில் தடுமாறிக்கொண்டிருந்தபோது, இயேசு அவர்களுடைய சிந்தனைகளை அறிந்து: “நீங்கள் என்னை அறிவீர்கள், நான் எங்கேயிருந்து வந்தேனென்றும் அறிவீர்கள்; நான் என் சுயமாய் வரவில்லை, என்னை அனுப்பினவர் சத்தியமுள்ளவர், அவரை நீங்கள் அறியாதிருக்கிறீர்கள்” என்று பதில்கூறினர். கிறிஸ்துவின் தோற்றம் எப்படிப்பட்டதாக இருக்கும் என்பதை தாங்கள் அறிந்திருப்பதாகக் கூறியும், அதைப்பற்றி முற்றிலும் அறியாமல் இருந்தனர். அவர்கள் தேவனுடைய சித்தத்தின்படி வாழ்ந்திருந்தார்களானால் அவருடைய குமாரன் தம்மை அவர்களுக்கு வெளிப்படுத்தினபோது, அவரை அறிந்திருப்பார்கள். (10)

கேட்டிருந்தவர்கள் கிறிஸ்துவின் வார்த்தைகளைப் புரிந்து கொண்டனர். அநேக மாதங்களுக்குமுன் சனகரீம் சங்கத்திற்குமுன் தாம் தேவகுமாரன் என்று தம்மைப்பற்றி அவர் அறிவித்திருந்த அதே உரிமைதான் மீண்டும் கூறப்பட்டிருந்தது. அதிபதிகள் அப்பொழுது அவரைக் கொலைசெய்ய தேடியிருந்ததைப்போலவே, இப்பொழுதும் வகைதேடியிருந்தனர். ஆனால், இவ்வளவு தூரம் வரை செல்லலாம் அதற்குமேல் கூடாது என்று அவர்களுடைய சீற்றத்திற்கு தடை விதித்திருந்த காணமுடியாத ஒரு வல்லமையினால் தடைசெய்யப்பட்டனர். (11)

மக்களிலும் அநேகர் அவர்மீது நம்பிக்கைவைத்து: “ கிறிஸ்து வரும்போது, இவர் செய்கிற அற்புதங்களைப்பார்க்கிலும் அதிகம் செய்வாரோ” என்று கூறினார்கள். நடைபெற்றுக்கொண்டிருக்கும் சம்பவங்களை அக்கறையுடன் கவனித்துக்கொண்டிருந்த பரிசேயத் தலைவர்கள், கூட்டத்தினரிடம் உண்டான அனுதாபத்தின் வெளிப்பாட்டைக் கண்டார்கள். அவர்கள் பிரதான ஆசாரியரிடத்திற்கு விரைந்துசென்று அவரைக் கைது செய்வதற்கான அவர்களுடைய திட்டத்தை முன்வைத்தார்கள். அப்படியிருந்தும் மக்களுக்குமுன் அவரைப் பிடிக்க துணிவில்லாததால், தனியாக இருக்கும்போது அவரைப் பிடிக்க ஏற்பாடு செய்தார்கள். மறுபடியும் அவர்களுடைய நோக்கத்தை தாம் வாசிக்கிறதை அவர்களுக்கு அவர் வெளிக்காட்டினார். “இன்னுங் கொஞ்சக்காலம் நான் உங்களுடனேகூட இருந்து, பின்பு என்னை அனுப்பினவரிடத்திற்குப் போகிறேன். நீங்கள் என்னைத் தேடுவீர்கள், ஆனாலும் என்னைக் காணமாட்டீர்கள்; நான் இருக்கும் இடத்திற்கு நீங்கள் வரவுங்கூடாது” என்று சொன்னார். விரைவில் அவர்களுடைய பரிகாசத்திற்கும் வெறுப்பிற்கும் அப்பாலுள்ள ஒரு அடைக்கலத்தை அவர் காண்பார். மறுபடியும் தூதர்களால் போற்றப்படுபவராக அவர் தமது பிதாவிடத்திற்கு ஏறிப்போவார். அங்கே அவரது கொலைகாரர்கள் ஒருபோதும் செல்ல முடியாது. (12)

“இவரை நாம் காணாதபடிக்கு எங்கே போவார், கிரேக்கருக்குள்ளே சிதறியிருக்கிறவர்களிடத்திற்குப் போய், கிரேக்கருக்கு உபதேசம் பண்ணுவாரோ?” என்று அந்த ரபிமார்கள் ஏளனமாகக் கூறினார்கள். தங்களுடைய பரிகாச வார்த்தைகளினால் கிறிஸ்துவின் ஊழியத்தைச் சித்தரித்துக்கொண்டிருந்ததை அந்த குற்றம்பிடிப்பவர்கள் அறியாதிருந்தனர். கீழ்ப்படியாதவர்களும் எதிர்த்துப் பேசுகிறவர்களுமாயிருக்கிற ஜனங்களிடத்திற்கு நாள்முழுதும் தமது கைகளை நீட்டினார். என்றாலும் அவரைத் தேடாதிருந்தவர்களாலே கண்டறியப்படுவார். அவரை விசாரித்துக் கேளாதிருந்தவர்களுக்கு வெளியரங்கமாவார் (ரோமர் 10:20,21). (13)

இயேசு தேவகுமாரன்தான் என்று உணர்த்தப்பட்ட அநேகர் ஆசாரியர்கள் மற்றும் ரபிமார்களின் தவறான நியாயவாதத்தினால் தடம்மாறி நடத்தப்பட்டிருந்தனர். இந்த ஆசாரியர்கள், “சேனைகளின் கர்த்தர் சீயோன் மலையிலும் எருசலேமிலும் ஆளுகைசெய்வதால், ... அவருடைய மூப்பர்களுக்கு முன்பாக மகிமை உண்டாயிருக்கும்” “ஒரு சமுத்திரந்தொடங்கி மறுசமுத்திரம்வரைக்கும், நதிதொடங்கி பூமியின் எல்லைகள்வரைக்கும் அவர் அரசாளுவார்” (ஏசாயா 24:23; சங். 72:8) என்ற மேசியாவைப்பற்றிய தீர்க்கதரிசனங்களை மிகுந்த வலிமையுடன் மீண்டும்

கூறியிருந்தனர். அதன்பின் இங்கு சித்திரிக்கப்பட்டிருந்த மகிமைக்கும் இயேசுவின் தாழ்மையான தோற்றத்திற்குமிடையில் ஏளனஞ்செய்கின்ற ஒப்பிடுதல்களை செய்திருந்தனர். தவறை அனுமதிக்கிறதற்கேதுவாக தீர்க்கதரிசனத்தின் அதே வார்த்தைகள் திரிக்கப்பட்டிருந்தன. மக்கள் தங்களுக்கென்று வேதவாக்கியங்களை வாசித்திருந்தார்களானால் தவறாக நடத்தப்பட்டிருக்கமாட்டார்கள். கிறிஸ்து செய்யவேண்டியிருந்த—அவர் செய்த அதே பணிகளையே—என்று ஏசாயா 61–ம் அதிகாரம் சாட்சி பகருகிறது. உலகத்தில் அவர் புறக்கணிக்கப்படுவதையும் அவரது பாடுகளையும் 53–ம் அதிகாரம் முன்வைக்கிறது. ஆசாரியர்கள் மற்றும் ரபிமார்களின் குணத்தை 59–ம் அதிகாரம் விவரிக்கிறது. (14)

தங்களுடைய அவநம்பிக்கையை விட்டுவிடவேண்டும் என்று தேவன் ஒருபோதும் மனிதர்களை வற்புறுத்துவதில்லை. அவர்களுக்குமுன் ஒளியும் இருளும், சத்தியமும் தவறும் உள்ளன. எதை ஏற்றுக்கொள்ளவேண்டும் என்று முடிவுசெய்வது அவர்களுடையது. உண்மைக்கும் தவறுக்கும் இடையிலுள்ள வேற்றுமையை அறிந்துகொள்ளக்கூடிய வல்லமை மனித மனதிற்குக் கொடுக்கப்பட்டிருக்கிறது. மனிதர்கள் உணர்ச்சிகளின் துடிப்பினால் அல்லாமல், சான்றுகளின் பெலத்தினால் வேதவாக்கியங்களை வேதவாக்கியங்களுடன் கவனமாக ஒப்பிட்டு முடிவுசெய்யவேண்டுமென்று தேவன் வடிவமைக்கிறார். யூதர்கள் அவர்களுடைய தவறான எண்ணங்களை விட்டுவிட்டு, இயேசுவின் வாழ்க்கையில் காணப்பட்ட உண்மையை தீர்க்கதரிசனத்துடன் ஒப்பிட்டிருந்தார்களானால், தீர்க்கதரிசனங்களுக்கும் அவைகளின் நிறைவேறுதல்களுக்கும் இருக்கிற அழகான இசைவை தாழ்மையான கலிலேயனின் வாழ்க்கையிலும் ஊழியத்திலும் கண்டிருப்பார்கள். (15)

யூதர்கள் வஞ்சிக்கப்பட்டிருந்ததைப்போலவே இன்றும் அநேகர் வஞ்சிக்கப்பட்டுள்ளனர். மத ஆசிரியர்கள் வேதாகமத்தை அவர்களுடைய சொந்தப் புரிந்துகொள்ளுதலின் ஒளியிலும் பாரம்பரியத்திலும் வாசிக்கின்றனர். அவைகளை தங்களுக்கென்று ஆராயாமல், சத்தியம் இதுதான் என்று தாங்களே தீர்மானித்துக்கொள்கின்றனர். தங்களுடைய தீர்மானத்தை விட்டுக்கொடுத்து, தங்களுடைய ஆத்துமாக்களை தங்களுடைய தலைவர்களிடம் ஒப்படைக்கின்றனர். அவருடைய வார்த்தையும் பிரசங்கமும் ஒளியைப் பரப்புவதற்காக தேவன் அபிஷேகஞ்செய்திருக்கும் ஊடகங்களில் ஒன்றாக இருக்கிறது. ஆனால் ஒவ்வொரு மனிதனின் போதனையையும் நாம் வேதவாக்கியங்களின் பரீட்சைக்குக் கொண்டுவரவேண்டும். சத்தியத்தை அறிந்துகொள்ளவேண்டும் என்றும், அதற்குக் கீழ்ப்படியவேண்டுமென்றுமுள்ள

வாஞ்சையுடன் எவர்களெல்லாம் ஜெபத்துடன் வேதவாக்கியங்களை வாசிக்கிறார்களோ அவர்களெல்லாம் தெய்வீக அறிவூட்டலைப் பெற்றுக் கொள்வார்கள். அவன் வேதவாக்கியங்களைப் புரிந்துகொள்ளுவான். “அவருடைய சித்தத்தின்படி செய்ய மனதுள்ளவனெவனோ அவன் இந்த உபதேசம் தேவனால் உண்டாயிருக்கிறதோ, நான் சுயமாய்ப் பேசுகிறேனோ என்று அறிந்துகொள்ளுவான்” (யோவான் 7:17). (16)

பண்டிகையின் கடைசி நாளில் இயேசுவைக் கைதுசெய்யும்படியாக ஆசாரியர்களாலும் அதிபதிகளாலும் அனுப்பப்பட்டிருந்த அதிகாரிகள், அவரில்லாமல் திரும்பிவந்தார்கள். “நீங்கள் அவனை ஏன் கொண்டு வரவில்லை” என்று கோபத்துடன் வினவியபோது, பக்திவிநயமான முகத்துடன் அவர்கள்: “அந்த மனுஷன் பேசுகிறதுபோல ஒருவனும் ஒருக்காலும் பேசினதில்லை” என்று பதில் கூறினார்கள். (17)

அவர்களுடைய இருதயங்களைப்போலவே கடினமடைந்திருந்தபோதும் அவருடைய வார்த்தைகளினால் அவர்கள் உருக்கப்பட்டிருந்தனர். ஆலயப் பிராகாரத்தில் அவர் பேசிக்கொண்டிருந்தபோது, அவருக்கு எதிராக எதையாவது கண்டுபிடித்துவிடலாம் என்ற நோக்கத்துடன் அவருக்கருகில் அவர்கள் காலம் தாழ்த்தியிருந்தனர். ஆனால் கவனித்தபோது, எந்த நோக்கத்திற்காக அவர்கள் அனுப்பப்பட்டிருந்தார்களோ அது மறக்கப்பட்டது. மெய்மறந்த மனிதர்களைப்போல அவர்கள் நின்றிருந்தனர். அவர்களுடைய ஆத்துமாக்களுக்கு கிறிஸ்து தம்மை வெளிப்படுத்தினார். ஆசாரியர்களாலும் அதிபதிகளாலும் காணமுடியாமலிருந்ததை—மானுடம் தெய்வீக மகிமையினால் ஒளிப்படுத்தபட்டிருந்ததை அவர்கள் கண்டனர். இந்த எண்ணத்தினால் நிரம்பினவர்களாக அவருடைய வார்த்தைகளினால் உணர்த்தப்பட்டவர்களாகத் திரும்பின அவர்களால்: “நீங்கள் அவனை ஏன் கொண்டுவரவில்லை” என்ற விசாரணைக்கு “அந்த மனுஷன் பேசுகிறதுபோல ஒருவனும் ஒருக்காலும் பேசினதில்லை” என்றுமட்டுமே பதில்கூற முடிந்தது. (18)

முதல்முதலாகக் கிறிஸ்துவின் சமுகத்திற்கு வந்திருந்த ஆசாரியர்களும் அதிபதிகளும் அதேவிதமான மனஉணர்த்துதலை அடைந்திருந்தனர். அவர்களுடைய இருதயங்கள் ஆழமாக அசைக்கப்பட்டு, அந்த எண்ணங்கள் அவர்கள்மீது வலியுறுத்தப்பட்டன. “அந்த மனுஷன் பேசுகிறதுபோல ஒருவனும் ஒருக்காலும் பேசினதில்லை” என்னும் எண்ணம் அவர்களை அதிக வல்லமையோடு பற்றிக்கொண்டது. ஆனால் பரிசுத்த ஆவியினால் உண்டான மனஉணர்த்துலை அவர்கள் மூழ்கடித்துவிட்டார்கள். இப்பொழுது சட்டத்தைச் செயல்படுத்துகின்ற கருவிகளுங்கூட வெறுக்கப்பட்ட

இந்தக் கலிலேயனின் செல்வாக்கிற்கு உள்ளானதால், கோபமடைந்த அவர்கள் "நீங்களும் வஞ்சிக்கப்பட்டீர்களா? அதிகாரிகளிலாவது பரிசேயரி லாவது யாதாமொருவர் அவனை விசுவாசித்ததுண்டா? வேதத்தை அறியாதவர்களாகிய இந்த ஜனங்கள் சபிக்கப்பட்டவர்கள்" என்று கூக்குரலிட்டனர். (19)

சத்தியத்தின் தூது எவர்களிடமெல்லாம் பேசப்பட்டிருக்கிறதோ, அவர்கள் அது சத்தியம்தானா? என்ற கேட்பதற்குப் பதிலாக அது யாரால் பரிந்துரைக்கப்பட்டிருக்கிறது? என்று கேட்கின்றனர். திரளானவர்கள் ஏற்றுக்கொள்ளுபவர்களின் எண்ணிக்கையினால் அதை அனுமானிக்கின்றனர். கற்றறிந்த மனிதர்கள் யாராவது அல்லது சமயத் தலைவர்கள் யாராவது விசுவாசித்ததுண்டா? என்கிற கேள்வி இன்றும் கேட்கப்படுகிறது. கிறிஸ்துவின் நாட்களில் இருந்ததைவிட மனிதர்கள் இன்று எவ்வளவும் உண்மையான தெய்வபக்தி உள்ளவர்களாக இல்லை. நித்திய செல்வங்களை அலட்சியஞ்செய்து, பூமிக்குரிய நன்மைகளை விருப்பத்துடன் தேடிக்கொண்டிருக்கின்றனர். பெரிய எண்ணிக்கையில் உள்ளவர்களோ, அல்லது இந்த உலகத்தின் பெரிய மனிதர்களோ, அல்லது மத சம்பந்தமான தலைவர்களோ அதை ஏற்பதற்கு ஆயத்தமாக இல்லை என்பது, சத்தியத்திற்கு எதிரான தர்க்கமென்று கருதப்படமுடியாது. (20)

இயேசுவைக் கைதுசெய்வதற்கான திட்டங்களைத் தீட்டுவதற்கு மறுபடியும் ஆசாரியர்களும் அதிபதிகளும் புறப்பட்டனர். அவரை அதிக காலத்திற்குச் சுதந்திரமாக விட்டுவிட்டால், நியமிக்கப்பட்டிருக்கிற தலைவர் களிடமிருந்து மக்களைத் தூரமாக இழுத்துக்கொள்ளுவார் என்றும், தாமதமில்லாமல் அவரை அமைதிப்படுத்துவதுதான் பாதுகாப்பான மார்க்கம் என்றும் வற்புறுத்தப்பட்டது. அவர்களுடைய விவாதத்தின் முழு வேகத்தின்போது, திடீரென்று தடைசெய்யப்பட்டனர். "ஒரு மனுஷன் சொல்லுவதைக் கேட்டு, அவன் செய்கைகளை அறிகிறதற்கு முன்னே, அவனை ஆக்கினைக்குட்படுத்தலாமென்று நம்முடைய நியாயப்பிரமாணம் சொல்லுகிறதா" என்று நிக்கொதேமு கேட்டான். அந்த மன்றத்தில் மௌனம் நிலவியது. நிக்கொதேமுவின் வார்த்தைகள் அவர்களுடைய மனச்சாட்சிக்குள் சென்றன. விசாரணைசெய்யாமல் ஒரு மனிதனை அவர்களால் ஆக்கினைக்கு உட்படுத்தமுடியாது. ஆனால் இந்த ஒரே காரணத்திற்காக மட்டும் அகந்தைமிக்க அந்த அதிபதிகள் மௌனமாக இல்லை. நீதிக்கு ஆதரவாகப் பேசத் துணிந்த ஒருவனை உற்றுப்பார்த்தனர். அவர்களில் ஒருவனே அவரது பாதுகாப்பிற்காக பேசும்படி இயேசுவின் குணத்தினால் ஆட்கொள்ளப்பட்டிருக்கிறான் என்பதில் திடுக்கிட்டு, கடும்

எரிச்சலடைந்தனர். அவர்களுடைய வியப்பிலிருந்து விடுதலையடைந்தபோது, "நீரும் கலிலேயனோ? கலிலேயாவிலிருந்து ஒரு தீர்க்கதரிசியும் எழும்புகிறதில்லை என்பதை ஆராய்ந்துபாரும்" என்ற சாட்டையடிபோன்ற பரிகாசவார்த்தைகளோடு நிக்கொதேமுவைச் சாடினர். (21)

இருந்தபோதிலும் அந்த மறுப்பு, அந்த ஆலோசனைச்சங்கத்தின் நடவடிக்கைகளை நிறுத்துவதற்கு ஏதுவாயிற்று. ஒரு விசாரணை இல்லாமல் இயேசுவை ஆக்கினைக்குட்படுத்துகின்ற அவர்களுடைய நோக்கத்தைச் செயற்படுத்த அதிபதிகளால் முடியாமலாகிவிட்டது. அந்த நேரத்தில் அடைந்த தோல்வியுடன் "அவரவர் தங்கள் தங்கள் வீட்டுக்குப் போனார்கள்." இயேசு அங்கிருந்து ஒலிவமலைக்குச் சென்றார். (22)

நகரத்தின் உணர்ச்சிக் கொந்தளிப்பு மற்றும் குழப்பங்களிலிருந்தும், ஆவல்மிக்க கூட்டத்தார் மற்றும் துரோகஞ்செய்யும் ரபிமார்களிடமிருந்தும் இயேசு திரும்பி, தேவனுடன் தனித்திருக்கக்கூடிய அமைதிமிக்க ஒலிவத்தோப்பிற்குச் சென்றார். ஆனால் அதிகாலையில் அவர் ஆலயத்திற்குத் திரும்பிவந்தபோது, மக்கள் அவரைச் சூழ்ந்துகொள்ளவே, அவர் கீழே உட்கார்ந்து அவர்களுக்குப் போதனை செய்தார். (23)

விரைவில் அவர் இடைமறிக்கப்பட்டார். திகிலடைந்த ஒரு பெண்ணை இழுத்துக்கொண்டு, ஏழாவது கற்பனையை மீறிவிட்டாள் என்ற குற்றச்சாட்டுடனும், கடினமான எதிர்பார்ப்புமிக்க குரல்களுடனும் பரிசேயரும் வேதபாரகருமாகிய ஒரு கூட்டத்தினர் அவரைச் சமீபித்தனர். அவளை இயேசுவிற்கு முன்பாகத் தள்ளி, மாய்மாலமான மரியாதையுடன்: "இப்படிப்பட்டவர்களைக் கல்லெறிந்து கொல்லவேண்டுமென்று மோசே நியாயப்பிரமாணத்தில் நமக்குக் கட்டளையிட்டிருக்கிறாரே, நீர் என்ன சொல்லுகிறீர்" என்று அவரிடம் வினவினார்கள். (24)

அவர்களுடைய பாசாங்கு நிறைந்த பயபக்தி அவரை அழிவிற்கு நடத்திச்செல்லும் ஆழமான திட்டத்தை மறைத்திருந்தது. அவர் எந்த முடிவை எடுத்தாலும் அவரைக் குற்றப்படுத்துகின்ற வாய்ப்பை அவர்களால் காணமுடியும்என்று நினைத்துக்கொண்டு, அவரை ஆக்கினைக்குட்படுத்துகின்ற இந்தச் சந்தர்ப்பத்தை அவர்கள் பார்த்துக்கொண்டிருந்தனர். அவளை அவர் விடுதலைசெய்தால் அவர் மோசேயின் நியாயப்பிரமாணத்தை அவமதித்தார் என்று அவர்மீது குற்றஞ்சாட்டலாம்; அவள் மரணத்திற்குத் தகுதியானவள் என்று அவர் அறிவித்தால், ரோம அரசு அதிகாரிகளுக்குமட்டுமே உரிமையான இந்த அதிகாரத்தை அவர் எடுத்துக்கொண்டார் என்று அவர்மீது குற்றஞ்சாட்டலாம் எனத் திட்டமிட்டனர். (25)

வெட்கப்பட்டு நடுங்கிக்கொண்டிருக்கும் குற்றவாளியையும், மனித இரக்கமுங்கூட இல்லாத கடினமான முகத்தையுடைய மேன்மக்களையும் இயேசு ஒரு வினாடி பார்த்தார். கறையில்லாத தூய்மையான அவருடைய ஆவி அந்தக் காட்சியைக் கண்டு குறுகியது. இந்த வழக்கு என்ன நோக்கத்துடன் அவரிடம் கொண்டுவரப்பட்டிருக்கிறது என்பதை அவர் நன்கு அறிந்தார். இருதயங்களை வாசித்து அவருடைய சமுகத்திலிருந்த ஒவ்வொருவருடைய குணத்தையும் வாழ்க்கை வரலாற்றையும் அறிந்தார். நீதியின் பாதுகாவலர்களாக இருக்கவேண்டியவர்களே இயேசுவிற்கு ஒரு கண்ணியை வைப்பதற்காக அந்த இரையை பாவத்திற்குள் நடத்தியிருந்தனர். அவர்களுடைய கேள்வியை கேட்டதுபோலக் காட்டிக்கொள்ளாமல், அதற்கான எந்த அடையாளத்தையும் கொடுக்காமல், அவர் கீழே குனிந்து தமது கண்களை நிலத்தின்மீது பதித்து, தூசியில் எழுதத்தொடங்கினார். (26)

அவரது தாமதத்தில் வெளியரங்கமான அக்கறையற்ற தன்மையைக்கண்டு, பொறுமையை இழந்த குற்றஞ்சாட்டினவர்கள், அருகில் நெருங்கிவந்து, அந்தக் காரியத்தில் கவனம் வைக்கும்படி அவரை வற்புறுத்தினார்கள். ஆனால் இயேசுவின் கண்களைத் தொடர்ந்த அவர்களுடைய கண்கள், அவரது பாதத்தினருகிலிருந்த தரையின்மீது பதிந்தபோது, அவர்களுடைய முகபாவங்கள் மாறின. அவர்களுடைய சொந்த வாழ்க்கையின் இரகசியமான குற்றங்கள் அங்கு வரையப் பட்டிருந்தன. அவர்களுடைய முகபாவங்களில் உண்டான திடீர் மாற்றத்தைப் பார்த்துக்கொண்டிருந்த மக்கள், அப்படி என்ன ஆச்சரியத்தையும் வெட்கத்தையும் அவர்கள் கண்டார்கள் என்பதைக் காண முன்னால் நெருங்கினார்கள். (27)

நியாயப்பிரமாணத்தின்மீதுள்ள அவர்களுடைய பக்தியின் அனைத்து வெளிக்காட்டல்களுடனும் இந்தப் பெண்ணிற்கு எதிராகக் கொண்டுவந்திருந்த இந்த ரபிமார்களின் குற்றச்சாட்டு, அந்தப் பிரமாணத்தின் ஏற்பாடுகளைப் புறக்கணிப்பதாக இருந்தது. அவளுக்கு எதிராக நடவடிக்கை எடுக்கவேண்டியது அவளுடைய கணவனின் கடமையாக இருந்தது. அதில் சம்பந்தப்பட்டிருந்த குற்றவாளிகளான இருவரும் சமமாகத் தண்டிக்கப்படவேண்டியவர்களாக இருந்தனர். குற்றஞ்சாட்டினவர்களின் செயல்கள் முற்றிலும் அதிகாரமற்றதாக இருந்தது. அப்படியிருந்தபோதிலும் அவர்களை அவர்களுடைய சொந்தக் களத்திலேயே அவர் சந்தித்தார். இந்த வழக்கில் சாட்சிகள்தான் முதலில் கல்லெறியவேண்டும் என்று பிரமாணம் குறிப்பிட்டிருந்தது. இப்பொழுது திட்டமிட்டுக்கொண்டிருந்தவர்களுக்கு நேராக இயேசு நிமிர்ந்துபார்த்து:

"உங்களில் பாவமில்லாதவன் இவள்மேல் முதலாவது கல்லெறியக்கடவன் என்று சொல்லி, அவர் மறுபடியும் குனிந்து, தரையிலே எழுதினார்." (28)

மோசேயின்மூலமாகக் கொடுக்கப்பட்டிருந்த பிரமாணத்தை அவர் ஒதுக்கிவைக்கவில்லை; ரோம அரசின் அதிகாரத்தையும் மீறவில்லை. குற்றஞ்சாட்டினவர்கள் தோற்கடிக்கப்பட்டிருந்தனர். அவர்களுடைய போலியான பரிசுத்தத்தின் உடை அவர்களிலிருந்து இப்பொழுது கிழிக்கப்பட, முடிவில்லாத தூய்மையானவரின் சமுகத்தில் அவர்கள் குற்றவாளிகளாகவும் கண்டிக்கப்பட்டவர்களாகவும் நின்றிருந்தனர். அவர்களுடைய வாழ்க்கையின் மறைவான அக்கிரமங்கள் திரளானவர்களுக்குமுன் திறக்கப்பட்டுவிடுமோ என்று அவர்கள் நடுங்கினர். தலைகவிழ்ந்தவர்களாக—கண்களைக் கீழே கவிழ்த்தினவர்களாக—தங்களுடைய இரையை இரக்கமிக்க இரட்சகரிடம் விட்டுவிட்டு, ஒருவர்பின் ஒருவராக திருட்டளவாக அந்த இடத்தைவிட்டுச் சென்றனர். (29)

இயேசு எழுந்து அந்தப் பெண்ணைப் பார்த்து: "ஸ்திரீயே, உன்மேல் குற்றஞ்சாட்டினவர்கள் எங்கே? ஒருவனாகிலும் உன்னை ஆக்கினைக்குள்ளாகத் தீர்க்கவில்லையா என்றார். அதற்கு அவள்: இல்லை, ஆண்டவரே, என்றாள். இயேசு அவளை நோக்கி: நானும் உன்னை ஆக்கினைக்குள்ளாகத் தீர்க்கிறதில்லை; நீ போ, இனிப் பாவஞ்செய்யாதே" என்றார். (30)

பயத்தினால் நடுங்கினவளாக அந்தப் பெண் இயேசுவிற்குமுன் நின்றிருந்தாள். "உங்களில் பாவமில்லாதவன் இவள்மேல் முதலாவது கல்லெறியக்கடவன்" என்ற அவரது வார்த்தைகள் ஒரு மரண தண்டனையைப்போல அவளிடம் வந்திருந்தது. இரட்சகருடைய முகத்தைப் பார்க்க அவள் துணியாமல், மௌனமாக அவளுடைய மரணத்தீர்ப்பிற்காகக் காத்திருந்தாள். அவளைக் குற்றஞ்சாட்டினவர்கள் பேச்சற்றவர்களாகவும் குழப்பமடைந்தவர்களாகவும் செல்லுவதை அவள் ஆச்சரியத்துடன் பார்த்தாள். அதன்பின்: "நானும் உன்னை ஆக்கினைக்குள்ளாகத் தீர்க்கிறதில்லை; நீ போ, இனிப் பாவஞ்செய்யாதே" என்னும் நம்பிக்கையின் வார்த்தைகள் அவளது செவிகளில் விழுந்தன. அவளுடைய இருதயம் உருகியிருந்தது. நன்றிமிக்க அன்பினால் அழுதுகொண்டும், கசப்பான கண்ணீர்களுடன் அவளது பாவங்களை அறிக்கைசெய்துகொண்டும் இயேசுவின் பாதத்தில் அவள் விழுந்தாள். (31)

தூய்மையும் சமாதானமும் நிறைந்த, தேவனுடைய சேவைக்கென்று அர்ப்பணிக்கப்பட்ட ஒரு புதிய வாழ்க்கையின் ஆரம்பமாக

இது அவளுக்கு இருந்தது, விழுந்துபோயிருந்த இந்த ஆத்துமாவைத் தூக்கியெடுத்து நிறுத்தியதில் சாவிற்கேதுவான சரீரப்பிரகாரமான நோயை சுகப்படுத்துவதைவிட மிகவும் பெரிதான அற்புதத்தை இயேசு செய்தார். நித்திய மரணத்திற்கு ஏதுவானதாக இருந்த ஆவிக்குரிய நோயை அவர் சுகப்படுத்தினார். பாவப் பரிகாரஞ்செய்த இந்தப் பெண், அவருடைய அடியார்களில் மிகவும் உறுதிமிக்க ஒருவளானாள். அவள் தனது சுயத்தைத் தியாகஞ்செய்யும் அன்பினாலும் பக்தியினாலும் மன்னித்த அவருடைய கிருபைக்கு கைமாறு செய்தாள். (32)

அந்தப் பெண்ணை மன்னித்ததிலும் ஒரு நல்ல வாழ்க்கை நடத்தும்படி அவளை தைரியப்படுத்தினதிலும் இயேசுவின் குணம் அதன் பூரணமான நீதியின் அழகுடன் ஒளி வீசுகிறது. பாவத்தை குறைத்து மதிப்பிடவோ அல்லது பாவ உணர்வினை குறைக்காவோ செய்யாதபோதும், கண்டிக்க அல்ல இரட்சிக்கவே வகைதேடுகிறார். தவறுசெய்துகொண்டிருந்த அந்தப் பெண்ணிற்கு அவமதிப்பையும் பரிகாசத்தையுமே இந்த உலகம் வைத்திருந்தது. ஆனால் ஆறுதலும் நம்பிக்கையுமுள்ள வார்த்தைகளை இயேசு பேசுகிறார். பாவமில்லாத ஒருவர் பாவியின் பலவீனத்தின்மீது இரக்கப்பட்டு, அவளுக்கு ஒரு உதவும் கரத்தை நீட்டுகிறார். மாய்மாலமிக்க பரிசேயர்கள் வெளிப்படையாகக் குற்றஞ்சாட்டும்போது, இயேசு, “நீ போ, இனிப் பாவஞ்செய்யாதே” என்று கட்டளையிடுகிறார். (33)

தவறு செய்பவர்களிடமிருந்து கண்களை வேறுபக்கமாகத் திருப்பி, இழிவான நடத்தையை தொடரும்படி இடையூறு செய்யாமல் அவர்களை விட்டுவிடுபவர்கள் கிறிஸ்துவின் அடியார்களல்ல. மற்றவர்களைக் குறைகூறுவதற்கு முதலில் நின்று அவர்களை நியாயவிசாரணைக்குக் கொண்டுவருபவர்கள் அடிக்கடி தங்களுடைய சொந்த வாழ்க்கையில் அவர்களைவிட அதிகமான குற்றமுடையவர்களாக உள்ளனர். மனிதர்கள் பாவத்தை நேசிக்கும்போது, பாவியை வெறுக்கின்றனர். கிறிஸ்து பாவத்தை வெறுக்கிறார். ஆனால் பாவியை நேசிக்கிறார். அவரைப் பின்பற்றுகிற அனைவரது ஆவியும் இதுவாக இருக்கும். கிறிஸ்தவ அன்பு கண்டனஞ்செய்வதற்கு தாமதமாயும், பாவப்பரிகாரத்தை அறிவதில் விரைவானதாயும், மன்னிப்பதற்கும், தைரியப்படுத்துவதற்கும், பாதைமாறிப் போனவனை பரிசுத்தம் என்னும் பாதையில் நடத்தி தொடர்ந்து அதில் நிலைவரப்படுத்துவதற்கும் ஆயத்தமாக இருக்கும். (34) ★

# 51

# ஜீவ ஒளி!

**யோவான் 8:12–59; 9**

**(The Desire of Ages, pp. 463–475)**

மறுபடியும இயேசு ஜனங்களை நோக்கி: “நான் உலகத்திற்கு ஒளியாயிருக்கிறேன், என்னைப் பின்பற்றுகிறவன் இருளிலே நடவாமல் ஜீவஒளியை அடைந்திருப்பான்” என்று கூறினார். (1)

இந்த வார்த்தைகளை இயேசு கூறினபோது, அவர் குறிப்பாகக் கூடாரப்பண்டிகையின் ஆராதனைகளுடன் சம்பந்தப்பட்டிருந்த ஆலயப் பிராகாரத்தில் இருந்தார். அந்தப் பிராகாரத்தின் நடுவில் பெரிய அளவிலான விளக்குத்தண்டுகளைத் தாங்கிக்கொண்டு இரண்டு பெரிய தூண்கள் இருந்தன. மாலை ஆராதனைக்குப்பின் எல்லா விளக்குகளும் ஏற்றப்பட்டு, எருசலேமின்மீது பிரகாசித்துக்கொண்டிருந்தன. இந்தச் சமயச்சடங்கு இஸ்ரவேலரை வனாந்தரத்தில வழிநடத்தியிருந்த அக்கினி ஸ்தம்பத்தை நினைவுபடுத்துவதாக இருந்ததுடன் மேசியாவின் வருகையைச் சுட்டிக்காட்டுவதாகவும் கருதப்பட்டிருந்தது. மாலை நேரத்தில் அந்த விளக்குகள் ஏற்றப்பட்டபோது, அந்தப் பிராகாரம் பெரும் களிகூருதலின் காட்சியாக இருந்தது. முடிநரைத்த மனிதர்களும் ஆலயத்தின் ஆசாரியர்களும் மக்களின் அதிபதிகளும் இசைக்கருவிகளின் ஒலிகளுக்கும் லேவியரின் திரும்பத்திரும்பப் பாடுகின்ற ஒலிக்கும் இசைவாக பண்டிகைக் காலத்து மகிழ்ச்சியான நடனங்களில் ஒன்றுபட்டிருந்தனர். (2)

எருசலேம் ஒளிப்படுத்தப்படுவதில் இஸ்ரவேலின்மீது அவருடைய ஒளியைப் பிரகாசிக்கச் செய்யும் மேசியாவின் வருகையின்மீதான நம்பிக்கையை மக்கள் வெளிக்காட்டியிருந்தனர். ஆனால் இயேசுவிற்கு இந்தக் காட்சி ஒரு விசாலமான பொருளை உடையதாக இருந்தது. ஆலயத்தின் ஒளிவீசும் விளக்குகள் அவைகளைச் சுற்றியிருந்த அனைத்தையும் ஒளிப்படுத்தியிருந்ததுபோல, ஆவிக்குரிய ஒளியின் ஆதாரமாக இருக்கும் கிறிஸ்து உலகத்தின் இருளை நீக்கி, ஒளியைப்

பரப்புகின்றார். அப்படியிருந்தபோதிலும் அந்த அடையாளம் பூரணமானதாக இல்லை. வானங்களிலும் அவருடைய சொந்தக் கரம் ஸ்தாபித்திருந்த பெரிய விளக்கு அவரது உண்மையான ஊழியத்தின் மகிமையின் எடுத்துக்காட்டுவதாக இருந்தது. (3)

அது காலை நேரமாக இருந்தது, ஒலிவமலைக்கு மேலாக அப்பொழுதுதான் சூரியன் எழும்பி, அதன் ஒளிக்கதிர்கள் திளங்கும் ஒளியுடன் பளிங்குக் கற்களினாலான அரண்மனைகளின்மீது விழுந்து, ஆலயத்தின் தங்கச் சுவர்களை ஒளிப்படுத்திக்கொண்டிருந்தபோது, இயேசு அதைச்சுட்டிக்காட்டி: "நான் உலகத்திற்கு ஒளியாயிருக்கிறேன்" என்றார். (4)

இந்த வார்த்தைகளை கவனித்திருந்த நபரின் மனதில் "அவருக்குள் ஜீவன் இருந்தது, அந்த ஜீவன் மனுஷருக்கு ஒளியாயிருந்தது. அந்த ஒளி இருளிலே பிரகாசிக்கிறது; இருளானது அதைப் பற்றிக்கொள்ளவில்லை." "உலகத்திலே வந்த எந்த மனுஷனையும் பிரகாசிப்பிக்கிற ஒளியே அந்த மெய்யான ஒளி" (யோவான் 1:4,5,9) என்னும் மிகச் சிறப்பான வாசகங்கள் நீண்ட நாட்களுக்குப்பின்னர் எதிரொலித்தன. அவர்களுடைய மனங்கள் தெவீக அன்பிற்குத் திறக்கப்பட்டிருந்தால் அவர்கள் இயேசுவை ஏற்றுக் கொண்டிருந்திருப்பார்கள். இயேசு பரத்திற்கு எழுந்தருளிச் சென்றதற்கு நீண்ட நாட்களுக்குப்பின் தெய்வீக ஆவியினால் ஒளிப்படுத்தப்பட்ட பேதுருவும்: "அதிக உறுதியான தீர்க்கதரிசன வசனமும் நமக்கு உண்டு; பொழுது விடிந்து விடிவெள்ளி உங்கள் இருதயங்களில் உதிக்குமளவும் இருளுள்ள ஸ்தலத்தில் பிரகாசிக்கிற விளக்கைப்போன்ற அவ்வசனத்தைக் கவனித்திருப்பது நலமாயிருக்கும்" (2 பேதுரு 1:19) என்று இயேசு பயன்படுத்தியிருந்த அடையாளத்தை நினைவுபடுத்தினான். (5)

தேவன் அவருடைய மக்களுக்குத் தம்மை வெளிக்காட்டினதில் அவரது பிரசன்னத்தின் அடையாளமாக ஒளி இருந்தது. ஆதியில் கூறப்பட்ட படைப்பின் வார்த்தையில் இருளிலிருந்து ஒளி பிரகாசித்திருந்தது. இஸ்ரவேலின் பெரும் சேனையை நடத்திக்கொண்டிருந்து, பகலில் மேகஸ்தம்பத்தையும் இரவில் அக்கினி ஸ்தம்பத்தையும் ஒளி மூடியிருந்தது. பயபக்திமிக்க கம்பீரத்துடன் சீனாய் மலையின்மீது கர்த்தரைச் சூழ ஒளி சுடர்விட்டிருந்தது. ஆசரிப்புக் கூடாரத்தில் கிருபாசனத்தின்மீது ஒளி தங்கியிருந்தது. சாலமோனின் ஆலயப் பிரதிஷ்டையின்போது ஒளி ஆலயத்தை நிரப்பியிருந்தது. காவல் செய்துகொண்டிருந்த மேய்ப்பர்களுக்கு இரட்சிப்பின் தூதை தூதர்கள் கொண்டுவந்தபோது, பெத்லகேமின் குன்றுகளின்மீது ஒளி பிரகாசித்தது. (6)

தேவன் ஒளியாயிருக்கிறார். "நான் உலகத்திற்கு ஒளியாயிருக்கிறேன்" என்னும் வார்த்தைகளில் தேவனுடன் அவர் ஒன்றாக இருந்ததையும் மனிதக் குடும்பம் முழுவதுடனுமுள்ள அவருடைய உறவையும் அவர் அறிவித்தார். ஆதியில் "இருளிலிருந்து ஒளியைப் பிரகாசிக்கச் செய்தவர்" (2 கொரிந்தியர் 4:6) அவர்தான். சூரியன், சந்திரன், விண்மீன்கள் ஆகியவைகளுக்கு அவர்தான் ஒளியாக இருக்கிறார். அடையாளம், மாதிரிப்படிவம், தீர்க்கதரிசனம் ஆகியவைகளினால் இஸ்ரவேலின்மீது பிரகாசித்திருந்த ஆவிக்குரிய ஒளியாக அவர் இருந்தார். ஆனால் அந்த ஒளி இஸ்ரவேல் ஜனத்திற்கு மட்டுமாக கொடுக்கப்படவில்லை. பூமியின் மிகவும் ஒதுக்குப்புறமான மூலைமுடுக்குகளிலுங்கூட சூரிய ஒளிக்கதிர்கள் நுழைந்து செல்லுவதைப்போல, ஒவ்வொரு ஆத்துமாவின்மீதும் நீதியின் சூரியனின் ஒளி பிரகாசிக்கிறது. (7)

"உலகத்திலே வந்த எந்த மனுஷனையும் பிரகாசிப்பிக்கிற ஒளியே அந்த மெய்யான ஒளி." பெரும் நுண்ணறிவையும் ஆச்சரியமான ஆராய்ச்சிகளையும் செய்த, சிந்தனைகளை ஊக்குவித்த வார்த்தைகளைப் பேசி அறிவின் விசாலமான கண்களைத் திறந்த அநேக ஆசிரியர்களை இந்த உலகம் பெற்றிருந்திருக்கிறது. அந்த மனிதர்கள் அவர்களுடைய இனத்திற்கு நன்மை செய்பவர்களாகவும் வழிகாட்டிகளாகவும் கனப்படுத்தப் பட்டிருக்கின்றனர். ஆனால் மற்றெல்லாரையும்விட உயர்ந்தவராக ஒருவர் நிற்கிறார். "அவருடைய நாமத்தின்மேல் விசுவாசமுள்ளவர்களாய் அவரை ஏற்றுக்கொண்டவர்கள் எத்தனைபேர்களோ, அத்தனைபேர்களும் தேவனுடைய பிள்ளைகளாகும்படி, அவர்களுக்கு அதிகாரங் கொடுத்தார்." "தேவனை ஒருவனும் ஒருக்காலும் கண்டதில்லை, பிதாவின் மடியிலிருக்கிற ஒரேபேறான குமாரனே அவரை வெளிப்படுத்தினார்"—யோவான் 1:12,18. உலகின் பெரிய ஆசிரியர்களை மனித ஆவணங்கள் எட்டும்வரை நம்மால் கண்டுபிடிக்க முடியும். ஆனால் அவர்களுக்கு முன்பிருந்தே அந்த ஒளி இருந்தது, சூரிய மண்டலத்திலுள்ள சந்திரனும் விண்மீன்களும் சூரியனுடைய ஒளியைப் பிரதிபலிப்பதுபோல, அவர்களுடைய போதனைகள் உண்மையாக இருக்கும்வரை உலகின் அந்தப் பெரும் சிந்தனையாளர்கள் நீதியின் சூரியனுடைய ஒளியையே பிரதிபலிக்கிறார்கள். மதிப்பான சிந்தனை ஒவ்வொன்றும், நுண்ணறிவின் ஒவ்வொரு வீச்சும் உலகத்திற்கு ஒளியானவரிடத்திலிருந்து உண்டாகியிருக்கிறது. இந்நாட்களில் "உயர் கல்வி"யைப்பற்றி நாம் அதிகமாகக் கேள்விப்படுகிறோம். "ஞானம் அறிவு என்பவைகளாகிய பொக்கிஷங்களெல்லாம் அடங்கியிருக்கிற" "அவருக்குள் ஜீவன் இருந்தது, அந்த ஜீவன் மனுஷருக்கு ஒளியாயிருந்தது" (கொலோசெயர் 2:3; யோவான் 1:4) என்பவரால் கொடுக்கப்படுவதே

உண்மையான உயர்கல்வி. "என்னைப் பின்பற்றுகிறவன் இருளிலே நடவாமல் ஜீவஒளியை அடைந்திருப்பான்" என்று இயேசு கூறினார். (8)

"நான் உலகத்திற்கு ஒளியாயிருக்கிறேன்" என்னும் வார்த்தைகளில் இயேசு தாமே மேசியா என்ற அறிவித்தார். கிறிஸ்து இப்பொழுது எங்கு பிரசங்கஞ்செய்துகொண்டிருந்தாரோ அதே தேவாலயத்தில் வயது முதிர்ந்தவனான சிமியோன் அவரைப்பற்றி: "புறஜாதிகளுக்குப் பிரகாசிக்கிற ஒளியாகவும், உம்முடைய ஜனமாகிய இஸ்ரவேலுக்கு மகிமையாகவும்" (லூக்கா 2:30) என்று கூறியிருந்தான். இந்த வார்த்தைகளில் இஸ்ரவேலர்கள் அனைவருக்கும் பழக்கப்பட்டதாக இருந்த ஒரு தீர்க்கதரிசனத்தை அவன் பொருத்திக்கொண்டிருந்தான். ஏசாயா தீர்க்கதரிசியின்வழியாக: "யாக்கோபின் கோத்திரங்களை எழுப்பவும், இஸ்ரவேலில் காக்கப்பட்டவர்களைத் திருப்பவும், நீர் எனக்குத் தாசனாயிருப்பது அற்பகாரியமாயிருக்கிறது; நீர் பூமியின் கடைசிபரியந்தமும் என்னுடைய இரட்சிப்பாயிருக்கும்படி, உம்மை ஜாதிகளுக்கு ஒளியாகவும் வைப்பேன்" (ஏசாயா 49:6) என்று பரிசுத்த ஆவியானவர் அறிவித்திருந்தார். இந்தத் தீர்க்கதரிசனம் மேசியாவைப்பற்றிக் கூறியிருந்தது என்று பொதுவாக அனைவராலும் புரிந்துகொள்ளப்பட்டிருந்தது. "நான் உலகத்திற்கு ஒளியாயிருக்கிறேன்" என்று இயேசு கூறினபோது, அவர்தான் வாக்குத்தத்தம்பண்ணப்பட்டவர் என்னும் அவருடைய உரிமை பாராட்டுதலை மக்கள் இனங்கண்டுகொள்ளத் தவறவில்லை. (9)

இந்த உரிமைபாராட்டுதல் பரிசேயர்களுக்கும் அதிபதிகளுக்கும் பெருமையான நினைப்பாகத் தோன்றியது. அவர்களைப்போலவே இருந்த ஒரு மனிதன் அப்படி பாசாங்குசெய்வதை அவர்களால் சகித்துக்கொள்ளமுடியவில்லை. அவருடைய வார்த்தைகளை மதிக்காதவர்கள்போல, "நீர் யார்?" என்று அதிகாரத்தோடு வினவினார்கள். தாமே கிறிஸ்து என்று அவராகவே அறிவிக்கும்படி அவரைக் கட்டாயப்படுத்த வேண்டுமென்று உறுதிபூண்டனர். மக்களின் எதிர்பார்ப்புகளிலிருந்து அவருடைய தோற்றமும் செயலும் வேறுபட்டிருந்தது. அதனால் அவர் தன்னை மேசியா என்று நேரடியாக அறிவிப்பது அவரை ஒரு ஏமாற்றுக்காரன் என்று புறக்கணிப்பதற்குக் காரணமாக அமையும் என்று தந்திரமான அவருடைய விரோதிகள் நம்பினார்கள். (10)

ஆனால் "நீர் யார்?" என்னும் அவர்களுடைய கேள்விக்கு "நான் ஆதிமுதலாய் உங்களுக்குச் சொல்லியிருக்கிறவர்தான்" என்று இயேசு பதில் அளித்தார். அவருடைய வார்த்தைகளில் வெளிப்படுத்தப்பட்டிருந்தவைகள் அவரது குணத்திலும் வெளிப்படுத்தப்பட்டிருந்தது. அவர் போதித்திருந்த சத்தியங்களின் உருவமாக அவர் இருந்தார். "நான் என் சுயமாய் ஒன்றும்

செய்யாமல், என் பிதா எனக்குப் போதித்தபடியே இவைகளைச் சொன்னேன். என்னை அனுப்பினவர் என்னுடனே கூட இருக்கிறார், பிதாவுக்குப் பிரியமானவைகளை நான் எப்பொழுதும் செய்கிறபடியால் அவர் என்னைத் தனியேயிருக்கவிடவில்லை" என்று அவர் தொடர்ந்து கூறினார். அவர் மேசியா என்னும் தமது பதவியின்மீது உரிமைபாராட்டாமல், தேவனுடன் அவருக்கிருக்கும் ஐக்கியத்தை எடுத்துக் கூறினார். அவர்களுடைய இருதயங்கள் தேவனுடைய அன்பிற்கு திறக்கப்பட்டிருந்தால், அவர்கள் இயேசுவை ஏற்றுக்கொண்டிருந்திருப்பார்கள். (11)

அவருடைய பேச்சைக் கேட்டிருந்தவர்களில் அநேகர் விசுவாசத்தினால் அவரிடம் இழுக்கப்பட்டிருந்தனர். அவர்களிடம்: "நீங்கள் என் உபதேசத்தில் நிலைத்திருந்தால் மெய்யாகவே என் சீஷராயிருப்பீர்கள்; சத்தியத்தையும் அறிவீர்கள், சத்தியம் உங்களை விடுதலையாக்கும்" (யோவான் 8:22) என்றார். (12)

இந்த வார்த்தைகள் பரிசேயர்களைப் பாதித்தது. நீண்டகாலமாக அந்த நாடு ஒரு அந்நிய நாட்டின் நுகத்திற்குக் கீழாக இருப்பதையுங்கூட எண்ணிப்பார்க்காமல் கோபத்துடன்: "நாங்கள் ஆபிரகாமின் சந்ததியா யிருக்கிறோம், நாங்கள் ஒருக்காலும் ஒருவனுக்கும் அடிமைகளாயிருக்க வில்லை; விடுதலையாவீர்களென்று நீர் எப்படிச் சொல்லுகிறீர்" என்று கூக்குரலிட்டனர். வன்மத்திற்கு அடிமைகளாக இருந்து, பழிவாங்கும் மனப்பாங்கோடிருந்த இந்த மனிதர்களைப் பார்த்து: "பாவஞ்செய்கிறன் எவனும் பாவத்துக்கு அடிமையாயிருக்கிறான் என்று மெய்யாகவே மெய்யாகவே உங்களுக்குச் சொல்லுகிறேன்" என்று வருத்தத்துடன் இயேசு பதில் கூறினார். அவர்கள் தீமையின் ஆவியினால் ஆளுகைசெய்யப்பட்டு, படுமோசமான அடிமைத்தனத்தில் இருந்தனர். (13)

தன்னை தேவனுக்கு ஒப்புக்கொடுக்க மறுக்கும் ஒவ்வொரு ஆத்துமாவும் வேறொரு வல்லமையின் கட்டுப்பாட்டிற்குள் இருக்கிறது. அவன் தனக்குச் சொந்தமானவனல்ல; சுதந்தரத்தைப்பற்றி அவன் பேசிக்கொண்டிருக்கலாம்; ஆனால் அவன் மிக இழிவான அடிமைத்தனத்திற்குள் இருக்கிறான். அவனுடைய மனம் சாத்தானுடைய கட்டுப்பாட்டின்கீழ் இருப்பதினால் சத்தியத்தின் அழகை காணும்படி அவன் அனுமதிக்கப்படவில்லை. அவன் தனது மனச்சாட்சி கூறும் தீர்ப்புக்களைப் பின்பற்றுவதாக பெருமைப்பட்டுக் கொண்டிருக்கும்போது, அந்தகாரப் பிரபுவின் சித்தத்திற்குக் கீழ்ப்படிகிறான். ஆத்துமாவிலுள்ள பாவ அடிமைத்தனத்தின் விலங்கை உடைப்பதற்காகக் கிறிஸ்து வந்தார். "குமாரன் உங்களை விடுதலையாக்கினால் மெய்யாகவே விடுதலையாவீர்கள்." "கிறிஸ்து இயேசுவினாலே ஜீவனுடைய ஆவியின்

பிரமாணம் ... பாவம் மரணம் என்பவைகளின் பிரமாணத்தினின்று விடுதலையாக்கும்"–ரோமர் 8:2. (14)

மீட்பின் செயலில் வற்புறுத்துதல் இல்லை. வெளியிலிருந்துள்ள சக்தி எதுவும் நியமிக்கப்பட்டிருக்கவில்லை. தேவ ஆவியின் செல்வாக்கின்கீழ் மனிதன் யாரைச் சேவிப்பான் என்பதைத் தெரிந்துகொள்ளும்படி அவன் சுதந்திரமாக விடப்பட்டிருக்கிறான். ஆத்துமா கிறிஸ்துவிடம் சரணடையும்போது, உண்டாகும் மாற்றத்தில் சுதந்திரத்தின் மிக மேலான உணர்வு இருக்கிறது. பாவத்தை வெளியேற்றுவது ஆத்துமாவின் சுயமான செயலாக உள்ளது. சாத்தானின் கட்டுப்பாட்டிலிருந்து நம்மை நாமே விடுவித்துக்கொள்ள நம்மிடம் வல்லமை இல்லை. ஆனால் பாவத்திலிருந்து விடுதலைபெறவேண்டுமென்று நாம் வாஞ்சித்து, நம்முடைய மாபெரும் தேவையை உணர்ந்தவர்களாக நமக்கு வெளியேயும் மேலேயும் இருக்கின்ற வல்லமைக்காகக் கதறும்போது, ஆத்துமாவின் வல்லமைகள் பரிசுத்த ஆவியின் தெய்வீக சக்தியினால் நிரப்பப்படுகிறது. அப்போது தேவனுடைய சித்தத்தை நிறைவேற்றுவதற்கேதுவாக மனதின் சித்தத்திற்குக் கீழ்ப்படிகிறோம். (15)

மனிதனுடைய சுதந்திரம் சாத்தியமாவதற்கான ஒரே நிபந்தனை கிறிஸ்துவுடன் ஒன்றாகிவிடுவதாகும். "சத்தியம் உங்களை விடுதலையாக்கும்" கிறிஸ்து சத்தியமாக இருக்கிறார். மனதை பலவீனப்படுத்தி, ஆத்துமாவின் சுயாதீனத்தை அழிப்பது ஒன்றினால் மட்டுமே பாவத்தால் வெற்றிபெறமுடியும். தேவனுக்குக் கீழ்ப்பட்டிருத்தல் என்பது ஒரு மனிதனை உண்மையான மகிமைக்கும் மேன்மைக்கும் மீண்டும் எடுத்துக்கட்டுவதாகும். நாம் கீழ்ப்படுத்தப்பட்டிருக்கிற தெய்வீகப் பிரமாணமே "சுயாதீனப்பிரமாணமாக" (யாக்கோபு 2:12) இருக்கிறது. (16)

பரிசேயர்கள் தங்களை ஆபிரகாமின் பிள்ளைகள் என்று அறிவித்திருந்தனர். ஆபிரகாம் செய்திருந்த கிரியைகளைச் செய்வதினால் மட்டுமே இந்த உரிமைபாராட்டுதல் நிலைப்படுத்தப்படமுடியும் என்று இயேசு அவர்களிடம் கூறினார். ஆபிரகாமின் உண்மையான பிள்ளைகள் தேவனுக்குக் கீழ்ப்படிகின்ற ஒரு வாழ்க்கையை வாழ்ந்து, அவன் செய்திருந்ததுபோலச் செய்வார்கள். தேவனிடத்திலிருந்து அவருக்குக் கொடுக்கப்பட்டிருந்த சத்தியத்தைப் பேசிக்கொண்டிருக்கும் ஒருவரைக் கொலைசெய்ய முயல மாட்டார்கள். கிறிஸ்துவிற்கு எதிராகத் திட்டந்தீட்டுவதில் ரபிமார்கள் ஆபிரகாமின் கிரியைகளைச் செய்துகொண்டிருக்கவில்லை. ஆபிராகாமின் வம்சாவழியில் தோன்றுவதால் எந்தவிதமான மதிப்பும் இல்லை. ஆபிரகாமின் ஆவியையே வெளிக்காட்டி, அவனுடைய கிரியைகளையே செய்ய,

அவனுடன் ஆவிக்குரிய பிணைப்பு கொண்டிராதவர்கள் அவனுடைய பிள்ளைகள் அல்ல. (17)

கிறிஸ்தவ உலகத்தை நீண்டகாலமாகக் குழப்பிக்கொண்டிருக்கும் ஒரு கேள்வியின்மீது அப்போஸ்தலர்களின் வழித்தோன்றல்கள் என்பதும் இதே கொள்கையைப் பின்பற்றுகிறது. ஆபிரகாமின் பின்சந்ததி என்பது வம்சாவழித்தோன்றலினால் மெய்ப்பிக்கப்படாமல், குணத்தின் ஒற்றுமையினால் மெய்ப்பிக்கப்படுகிறது. அப்படியே அப்போஸ்தலரின் சந்ததியும் சபை அதிகாரத்தைச் சார்ந்ததாக இராமல், ஆவிக்குரிய உறவைச் சார்ந்து இருக்கிறது. அப்போஸ்தலர்களின் ஆவியினால் உந்தப்பட்ட ஒரு ஆவியும், அவர்கள் போதித்திருந்த சத்தியத்தை நம்புவதும் போதிப்பதும்தான் அப்போஸ்தல வழித்தோன்றலுக்கான உண்மையான சான்று. இதுதான் சுவிசேஷத்தின் முதல் போதகர்களின் வழித்தோன்றல்களாக மனிதர்களை ஏற்படுத்துகிறது. (18)

யூதர்கள் ஆபிரகாமின் பிள்ளைகள் என்பதை இயேசு மறுத்தார். "நீங்கள் உங்கள் பிதாவின் கிரியைகளைச் செய்கிறீர்கள்" என்று அவர் கூறினார். அவர்கள் பரிகாசமாக: "நாங்கள் வேசித்தனத்தினால் பிறந்தவர்களல்ல; ஒரே பிதா எங்களுக்குண்டு, அவர் தேவன்" என்றார்கள். இந்த வார்த்தைகள் அவரை நம்பத் தொடங்கியிருந்தவர்களுக்குமுன் அவருடைய பிறப்பு சம்பந்தப்பட்ட சூழ்நிலையை ஒப்பிட்டு கிறிஸ்துவிற்கு எதிராக தாக்குதல்நடத்தும் நோக்கத்தோடு பேசப்பட்டது. அந்தக் கீழ்த்தரமான மறைமுகச் சொற்களுக்கு இயேசு செவிசாய்க்காமல்: "தேவன் உங்கள் பிதாவாயிருந்தால் என்னிடத்தில் அன்பாயிருப்பீர்கள். ஏனெனில் நான் தேவனிடத்திலிருந்து வந்திருக்கிறேன்" என்றார். (19)

அவர்களுடைய செயல்கள் பொய்யனும் கொலைகாரனுமாக இருந்த ஒருவனுடனுள்ள அவர்களுடைய உறவிற்குச் சாட்சி பகர்ந்திருந்தது. "நீங்கள் உங்கள் பிதாவாகிய பிசாசானவனால் உண்டானவர்கள்; உங்கள் பிதாவினுடைய இச்சைகளின்படி செய்ய மனதாயிருக்கிறீர்கள்; அவன் ஆதிமுதற்கொண்டு மனுஷ கொலைபாதகனாயிருக்கிறான்; சத்தியம் அவனிடத்திலில்லாதபடியால் அவன் சத்தியத்திலே நிலைநிற்கவில்லை; ... நான் உங்களுக்குச் சத்தியத்தைச் சொல்லுகிறபடியினாலே நீங்கள் என்னை விசுவாசிக்கிறதில்லை" (யோவான் 8:44,45) என்றார். இயேசு சத்தியத்தை நிச்சயத்துடன் கூறினார் என்பதுதான் அவர் யூதத் தலைவர்களால் ஏற்றுக்கொள்ளப்படாததற்குக் காரணமாக இருந்தது. இந்த சத்தியம்தான் அந்த சுயநீதியான மனிதர்களை எதிர்க்கச் செய்தது. பிழையிலுள்ள போலி வாதத்தை சத்தியம் வெளிக்காட்டியிருந்தது. அது அவர்களுடைய

போதனைகளையும் நடத்தைகளையும் கண்டனம் செய்திருந்ததினால் வரவேற்கப்படமுடியாததாக இருந்தது. அவர்கள் தவறில் இருந்தார்கள் என்பதை அறிக்கை செய்வதற்காகத் தங்களைத் தாழ்த்துவதைவிட சத்தியத்திற்கு தங்களுடைய கண்களை மூடிக்கொள்ளுவார்கள். அவர்கள் சத்தியத்தை நேசிக்கவில்லை அது சத்தியமாக இருந்தபோதிலும் அதனை வாஞ்சிக்கவில்லை. (20)

"என்னிடத்தில் பாவம் உண்டென்று உங்களில் யார் என்னைக் குற்றப்படுத்தக்கூடும்? நான் சத்தியத்தைச் சொல்லியிருக்க, நீங்கள் ஏன் என்னை விசுவாசிக்கிறதில்லை." கிறிஸ்துவின் குணத்தில் ஏதாவது குறையைக் கண்டுபிடிப்பதற்காக அவருடைய சத்துருக்கள் மூன்று வருடங்களாக நாள்தோறும் அவரைப் பின்தொடர்ந்திருந்தனர். அவரை மேற்கொள்ளுவதற்காகச் சாத்தானும் அவனுடைய சகல கூட்டணியினரும் வகைதேடியிருந்தனர். ஆனால் அனுகூலமடைவதற்கான ஒன்றையும் அவர்களால் அவரிடத்தில் காணமுடியவில்லை. "நீர் தேவனுடைய பரிசுத்தர்" (மாற்கு 1:24) என்று பிசாசுகளுங்கூட அறிக்கை செய்யும்படி தள்ளப்பட்டிருந்தன. பரலோகத்தின் பார்வையிலும், விழுந்துபோகாத உலகங்களின் பார்வையிலும், பாவமிக்க மனிதர்களின் பார்வையிலும் இயேசு நியாயப்பிரமாணத்தின்படி வாழ்ந்தார். தூதர்கள், மனிதர்கள், பிசாசுகளுக்கு முன்பாக, வேறு ஏதாவது உதடுகளினால் பேசப்பட்டிருந்தால் தேவதூஷணமாகக் கருதப்பட்டிருக்கும் "பிதாவுக்குப் பிரியமானவைகளை நான் எப்பொழுதும் செய்கிறபடியால்" என்னும் வார்த்தைகளை சவால் விடமுடியாதபடி பேசினார். (21)

கிறிஸ்துவில் எந்தப் பாவத்தையும் காணமுடியாமலிருந்தது என்பது உண்மையாக இருந்தபோதிலும், யூதர்கள் அவரை ஏற்றுக்கொள்ளாதது தேவனுடன் அவர்கள் உறவில்லாதவர்களாக இருந்தனர் என்பதை மெய்ப்பித்திருந்தது. அவர்கள் தேவனுடைய குரலை அவருடைய குமாரனின் தூதில் இனங்காண முடியாதவர்களாக இருந்தனர். கிறிஸ்துவின்மீது தாங்களாகவே நியாயத்தீர்ப்புச் செய்வதாக நினைத்திருந்தனர். ஆனால் அவரைப் புறக்கணிப்பதினால் அவர்கள் தங்கள்மீதே நியாயத்தீர்ப்பைக் கூறிக்கொண்டிருந்தனர். "தேவனால் உண்டானவன் தேவனுடைய வசனங்களுக்குச் செவிகொடுக்கிறான்; நீங்களும் தேவனால் உண்டாயிராதபடியினால் செவிகொடாமலிருக்கிறீர்கள்" என்றார். (22)

அந்தப் போதனை எல்லாக் காலத்திற்கும் உண்மையாக இருக்கிறது. இரு பொருட்படப் பேசுவதிலும் குற்றங்கண்டுபிடிப்பதிலும் தேவனுடைய வார்த்தையில் ஏதாவது கேள்விகேட்பதற்கு வகைதேடிக்கொண்டிருப்பதிலும்

மனிதன் மகிழ்சியடைகிறான். அதனால் சிந்தனையின் சுதந்திரத்திற்கும் மனக்கூர்மைக்கும் சான்று பகருவதாக மனிதர்களில் அநேகர் நினைக்கின்றனர். அவன் வேதாகமத்தின்மீது நியாயத்தீர்ப்புச் செலுத்தும் நியாயாசனத்தில் உட்கார்ந்துகொண்டிருப்பதாக நினைத்திருக்கும்போது, மெய்யாக தன்மீது தானே நியாயத்தீர்ப்பைச் செலுத்திக்கொண்டிருக்கிறான். பரலோகத்திலிருந்துண்டாகி, நித்தியகாலத்தைச் சூழ்ந்துகொண்டிருக்கும் சத்தியங்களை வரவேற்கத் தகுதியுடையவனாக இருப்பதுபோல வெளிக்காட்டுகிறான். தேவனுடைய நீதியென்னும் பெரிய பர்வதத்தின்முன் அவனுடைய ஆவி பயபக்தி இல்லாததாக இருக்கிறது. நம்பிக்கைத் துரோகஞ்செய்யும் இந்தக் காரியத்தில் அவன் குப்பை கூளங்களை சேகரிப்பதில் தீவிரமாக ஈடுபட்டு, தேவனை வரவேற்கின்ற தகுதியை விரைவாக இழக்கும் ஒரு குறுகிய பூமிக்குரிய இதயத்தை உடையவனாகிறான். யாருடைய இருதயம் தெய்வீகத் தொடுதலுக்குப் பதில்கொடுக்கின்றதோ, அவன் தேவனைப்பற்றிய அறிவை அதிகரித்து, குணத்தை சுத்திகரித்து, உயர்த்துவதற்கு வகைதேடிக்கொண்டிருக்கிறான். ஒரு மலர் அதன் அழகிய நிறங்களை அடைவதற்காகச் சூரியனின் ஒளிக்கதிர்கள் அதனைத் தொடும்படி அதைநோக்கித் திரும்புவதுபோல, கிறிஸ்துவின் குணமாகிய கிருபைகளினால் பரலோகத்தின் ஒளி குணத்தை அழகுபடுத்தும்படி ஆத்துமா நீதியின் சூரியனை நோக்கித் திரும்பும். (23)

யூதர்களுக்கும் ஆபிரகாமிற்கும் இடையில் குறிப்பாகக் காணப்பட்ட வேறுபாட்டை தெளிவாகக் காட்டி: "உங்கள் பிதாவாகிய ஆபிரகாம் என்னுடைய நாளைக் காண ஆசையாயிருந்தான்; கண்டு களிகூர்ந்தான்" என்று தொடர்ந்து கூறினார். (24)

வாக்குத்தத்தம்பண்ணப்பட்டிருந்த இரட்சகரைக் காண்பதற்கு ஆபிரகாம் அதிகமாக வாஞ்சித்திருந்தான். தனது மரணத்திற்குமுன் மேசியாவைக் காணவேண்டுமென்று மிகவும் அக்கறைமிக்க ஜெபத்தை ஏறெடுத்தான். கிறிஸ்துவை அவன் கண்டான். இயற்கைக்கும் மேற்பட்ட ஒரு ஒளி அவனுக்குக் கொடுக்கப்பட்டு, அவன் கிறிஸ்துவின் தெய்வீகக்குணத்தை ஏற்றுக்கொண்டான். அவன் அவருடைய நாளைக் கண்டு களிகூர்ந்தான். பாவத்திற்கான தெய்வீகத் தியாகபலியின் காட்சி அவனுக்குக் கொடுக்கப்பட்டது. அவனுடைய சொந்த அனுபவத்தில் இந்த தியாகபலியைப்பற்றிய ஒரு விளக்கத்தை தன்னுடைய சொந்த அனுபவத்திலேயே பெற்றான். "உன் புத்திரனும் உன் ஏகசுதனும் உன் நேசகுமாரனுமாகிய ஈசாக்கை நீ இப்பொழுது அழைத்துக்கொண்டு, மோரியா தேசத்துக்குப் போய், அங்கே நான் உனக்குக் குறிக்கும்

மலைகள் ஒன்றின்மேல் அவனைத் தகனபலியாகப் பலியிடு" (ஆதியாகமம் 22:2) என்னும் கட்டளை அவனுக்கு வந்தது. வாக்குத்தத்தத்தின் குமாரனாக இருந்தவனை—அவனுடைய நம்பிக்கைகள் அனைத்திற்கும் மையமாக இருந்த அவனுடைய குமாரனை பலிபீடத்தின்மீது அவன் கிடத்தினான். அதற்குப்பின் தேவனுக்குக் கீழ்ப்படிவதற்காக அவனுடைய கத்தியை உயர்த்தினபோது: "பிள்ளையாண்டான்மேல் உன் கையைப் போடாதே, அவனுக்கு ஒன்றும் செய்யாதே; நீ அவனை உன் புத்திரன் என்றும், உன் ஏகசுதன் என்றும் பாராமல் எனக்காக ஒப்புக்கொடுத்தபடியினால் நீ தேவனுக்குப் பயப்படுகிறவன் என்று இப்பொழுது அறிந்திருக்கிறேன்" (ஆதியாகமம் 22:12) என்னும் ஒருகுரலை அவன் வானத்திலிருந்து கேட்டான். அவன் கிறிஸ்துவின் நாளைக் காணவேண்டும் என்பதற்காகவும், மிகவும் கீழான தன்மையிலிருந்த உலகத்தை உயர்த்தவும், உலகத்தின்மீதுள்ள தேவனுடைய பெரிய அன்பை உணரச்செய்யவும், அவர் ஒரே பேறான குமாரனை அவமானமிக்க மரணத்திற்கு ஒப்புக்கொடுத்தார் என்பதை உணரச்செய்யவும், இந்தவித பயங்கரமான கடுமையான சோதனை அவன்மீது திணிக்கப்பட்டது. (25)

அழிவிற்குரிய மனிதனுக்கு ஒருபோதும் கொடுக்கப்பட்டிராத தேவனைப்பற்றிய பெரிய சோதனையை ஆபிரகாம் கற்றான். மரிப்பதற்குமுன் கிறிஸ்துவைக் காணவேண்டும் என்ற அவனுடைய ஜெபத்திற்கு மறுமொழி கொடுக்கப்பட்டது. அழிவிற்குரியவர்கள் கண்டாலும் உயிர்வாழும் அளவிற்கு கிறிஸ்துவை அவன் கண்டான். முழுமையாக சரணடைந்ததினால் அவனுக்குக் கொடுக்கப்பட்ட கிறிஸ்துவின் தரிசனத்தை அவனால் புரிந்துகொள்ள முடிந்தது. நித்திய அழிவிலிருந்து பாவியை இரட்சிக்கும்படி தேவன் தமது ஒரே பேறான குமாரனைக் கொடுத்ததினால் மனிதனால் ஒருபோதும் செய்யமுடியாத மிகவும் பெரியதும் ஆச்சரியமானதுமான தியாகத்தை தேவன் செய்திருந்தார் என்பது அவனுக்குக் காட்டப்பட்டிருந்தது. (26)

ஆபிரகாமின் அனுபவம் "என்னத்தைக்கொண்டு நான் கர்த்தருடைய சந்நிதியில் வந்து, உன்னதமான தேவனுக்கு முன்பாகப் பணிந்துகொள்வேன்? தகனபலிகளைக் கொண்டும், ஒரு வயது கன்றுக்குட்டிகளைக்கொண்டும் அவர் சந்நிதியில் வரவேண்டுமோ? ஆயிரங்களான ஆட்டுக்கடாக்களின்பேரிலும், எண்ணெயாய் ஓடுகிற பதினாயிரங்களான ஆறுகளின்பேரிலும், கர்த்தர் பிரியமாயிருப்பாரோ? என் அக்கிரமத்தைப் போக்க என் முதற்பேறானவனையும், என் ஆத்துமாவின் பாவத்தைப் போக்க என் கர்ப்பக்கனியையும் கொடுக்கவேண்டுமோ?" (மீகா 6:6,7) என்ற கேள்விக்கு பதிலளித்தது.

“தேவன் தமக்குத் தகனபலிக்கான ஆட்டுக்குட்டியைப் பார்த்துக்கொள்வார்” (ஆதியாகமம் 22:8) என்னும் ஆபிரகாமின் வார்த்தைகளிலும், ஈசாக்கிற்குப் பதிலாக தேவன் ஏற்படுத்தியிருந்த பலியிலும் ஒரு மனிதனாலும் தனக்காக ஈடு செய்யமுடியாது என்பது அறிவிக்கப்பட்டது. அஞ்ஞான மக்களின் பலிமுறைகள் தேவனால் முற்றிலும் ஏற்றுக்கொள்ளமுடியாததாக இருந்தது. பாவ நிவாரணத்திற்காக ஒரு தகப்பனும் தனது மகனையோ அல்லது மகளையோ பலிசெலுத்தவேண்டியதில்லை; தேவகுமாரன் மாத்திரமே உலகத்தின் பாவத்தைச் சுமக்கமுடியும். (27)

ஆபிரகாமின் சொந்தப் பாடுகளின்மூலமாகத் தம்மைத் தியாகபலியாகச் செலுத்தும் இரட்சகரின் ஊழியத்தைக் காணும்படி அவன் தகுதிப்படுத்தப்பட்டான். ஆனால் இஸ்ரவேலர்களுக்கு அவர்களுடைய அகந்தைமிக்க இருதயங்களால் வரவேற்கமுடியாமலிருந்ததைப் புரிந்து கொள்ளமுடியவில்லை. ஆபிரகாமைப்பற்றிய கிறிஸ்துவின் வார்த்தைகள் அதைக் கேட்டிருந்தவர்களுக்கு எந்தவிதமான ஆழ்ந்த சிறப்பான உட்கருத்தையும் கொடுக்கவில்லை. பரிசேயர்கள் அவரில் குற்றம் கண்டுபிடிப்பதற்கான புதிய களத்தை மட்டுமே கண்டனர். “உனக்கு இன்னும் ஐம்பது வயதாகவில்லையே, நீ ஆபிரகாமைக் கண்டாயோ” என்ற ஏளனமான வார்த்தையோடு இயேசுவை ஒரு பைத்தியக்காரனாக மெய்ப்பிப்பதாக மீண்டும் கூறினார்கள். (28)

அதற்கு இயேசு: “ஆபிரகாம் உண்டாகிறதற்கு முன்னமே நான் இருக்கிறேன் என்று மெய்யாகவே மெய்யாகவே உங்களுக்குச் சொல்லுகிறேன்” என்று பக்திவிநமான மேன்மையுடன் பதில்கூறினார். (29)

அந்தப் பெரிய கூட்டத்தில் அமைதி நிலவியது. தேவன் நித்தியமானவர் என்னும் எண்ணத்தை உணர்த்திக்காட்டும் விதத்தில் மோசேக்குக் கொடுக்கப்பட்டிருந்த தேவனுடைய நாமம் அந்தக் கலிலேய ரபியினால் தமக்குச் சொந்தமானது என்று உரிமைபாராட்டப்பட்டது. தாமாகவே இருக்கிறவர் என்றும், “அவருடைய புறப்படுதல் அநாதிநாட்களாகிய பூர்வத்தினுடையது” (மீகா 5:2) என்று இஸ்ரவேலுக்கு வாக்குத்தத்தம்பண்ணப்பட்டவர் என்றும் அவர் தம்மைப்பற்றி அறிவித்திருந்தார். (30)

மறுபடியும் ஆசாரியர்களும் ரபிமார்களும் இயேசு தேவதூஷணம் கூறினார் என்று அவருக்கெதிராகக் குரலெழுப்பினார்கள். அவர் தேவனுடன் ஒருவராக இருக்கிறார் என்னும் அவரது முந்தைய உரிமைபாராட்டுதல் அவருடைய உயிரை எடுக்கும்படி அவர்களைத் தூண்டியிருந்தது. இப்பொழுது சில மாதங்களுக்குப் பின்னர் அவர்கள்: “நற்கிரியையினிமித்தம் நாங்கள் உன்மேல் கல்லெறிகிறதில்லை; நீ மனுஷனாயிருக்க, உன்னைத்

தேவன் என்று சொல்லி, இவ்விதமாகத் தேவதூஷணஞ்சொல்லுகிறபடியினால் உன்மேல் கல்லெறிகிறோம்" (யோவான் 10:33) என்று வெளிப்படையாக அறிவித்தார்கள். அவர் அவ்வாறேயிருப்பதினாலும் அவர் தம்மைத்தாமே தேவகுமாரனென்று கூறிக்கொண்டதினாலும் அவரை அழிக்கவேண்டுமென்று உறுதிபூண்டார்கள். அப்பொழுது மக்களிலும் அநேகர் ஆசாரியர்களோடும் ரபிமார்களோடும் சேர்ந்துகொண்டு, அவர்மீது எறிவதற்காக கைகளில் கற்களை எடுத்தார்கள். "இயேசு மறைந்து, அவர்கள் நடுவே கடந்து, தேவாலயத்தை விட்டுப்போனார்." (31)

இருளில் ஒளி பிரகாசித்துக்கொண்டிருந்தது, ஆனால் "இருளானது அதைப் பற்றிக்கொள்ளவில்லை"—யோவான் 1:5. (32)

"அவர் அப்புறம் போகையில் பிறவிக் குருடனாகிய ஒரு மனுஷனைக் கண்டார். அப்பொழுது அவருடைய சீஷர்கள் அவரை நோக்கி: ரபீ, இவன் குருடனாய்ப் பிறந்தது யார் செய்த பாவம், இவன் செய்த பாவமோ, இவனைப் பெற்றவர்கள் செய்த பாவமோ என்று கேட்டார்கள். இயேசு பிரதியுத்தரமாக: அது இவன் செய்த பாவமுமல்ல, இவனைப் பெற்றவர்கள் செய்த பாவமுமல்ல, தேவனுடைய கிரியைகள் இவனிடத்தில் வெளிப்படும் பொருட்டு இப்படிப் பிறந்தான். ... இவைகளைச் சொல்லி, அவர் தரையிலே துப்பி, உமிழ்நீரினால் சேறுண்டாக்கி, அந்தச் சேற்றைக் குருடனுடைய கண்களின்மேல் பூசி: நீ போய், ஸீலோவாம் குளத்திலே கழுவு என்றார். ஸீலோவாம் என்பதற்கு அனுப்பப்பட்டவன் என்று அர்த்தமாம். அப்படியே அவன் போய்க் கழுவி, பார்வையடைந்தவனாய்த் திரும்பிவந்தான்." (33)

பாவம் இந்த உலகத்திலேயே தண்டிக்கப்படுகிறது என்று பொதுவாக யூதர்கள் நம்பியிருந்தனர். ஒவ்வொரு துன்பமும் ஏதாவது ஒரு தவறான செயலுக்கான தண்டனை என்று கருதப்பட்டிருந்தது. பாடுகள் அனைத்தும் தேவனுடைய கற்பனையை மீறுவதின் பலன்தான் என்பது மெய்தான். ஆனால் இந்த உண்மை திரிபுசெய்யப்பட்டிருந்தது. பாவங்களுக்கும் பாவங்களின் பலன்களுக்கும் ஆக்கியோனாக இருக்கும் சாத்தான், நோய்களும் மரணமும் பாவத்தின் காரணமாக தோராயமான தண்டனையாக தேவனிடத்திலிருந்து புறப்படுகின்றன என்றும் பார்க்கும்படி மனிதர்களை நடத்தியிருந்தான். எனவே பெரும் துன்பமும் பேராபத்தும் எந்த ஒருவனின்மீது விழுந்திருந்ததுவோ அவன் அவைகளுடன் சேர்ந்து ஒரு மாபெரும் பாவியென்று கருதப்பட்டுக்கொண்டிருந்த பாரத்தையும் சுமந்தான். (34)

இவ்விதமாக இயேசுவைப் புறக்கணிப்பதற்கான பாதை யூதர்களுக்கு ஆயத்தஞ்செய்யப்பட்டிருந்தது, "நம்முடைய பாடுகளை ஏற்றுக்கொண்டு,

நம்முடைய துக்கங்களைச் சுமந்த” அவர் “தேவனால் அடிபட்டு வாதிக்கப்பட்டு, சிறுமைப்பட்டவரென்று” யூதர்களால் எண்ணப்பட்டார் (ஏசாயா 53:4). அவர்கள் அவரைவிட்டு தங்களுடைய முகத்தை மறைத்துக்கொண்டனர். (35)

இதைத் தடுப்பதற்கென்று தேவன் ஒரு பாடத்தை வடிவமைத்திருந்தார். துன்பங்கள் சாத்தானால்தான் கொடுக்கப்படுகின்றன என்றும், அது கிருபை காண்பிப்பதற்காக தேவனால் தடுக்கப்படுகின்றன என்றும், யோபுவின் வரலாறு காட்டியிருந்தது. ஆனால் இஸ்ரவேலர்கள் அந்தப் போதனையைப் புரிந்துகொண்டிருக்கவில்லை. எந்த ஒரு தவறுக்காக தேவன் யோபுவின் நண்பர்களைக் கடிந்துகொண்டிருந்தாரோ, அதே தவறு கிறிஸ்துவை புறக்கணிப்பதில் யூதர்களால் மீண்டும் செய்யப்பட்டது. (36)

பாவத்திற்கும் பாடுகளுக்கும் இடையில் உண்டாயிருந்த உறவைப்பற்றிய யூதர்களின் நம்பிக்கையை கிறிஸ்துவின் சீடர்களும் பற்றிக்கொண்டிருந்தனர். இயேசு அவர்களுடைய தவறைச் சரிசெய்தபோது, மனிதனுக்கு உண்டாகின்ற துன்பங்களின் காரணத்தை விளக்காமல், அதன் பலன் என்னவாக இருக்கும் என்று கூறினார். அதன் காரணமாக தேவனுடைய கிரியைகள் வெளிக்காட்டப்படும். “நான் உலகத்திலிருக்கையில் உலகத்திற்கு ஒளியாயிருக்கிறேன் என்றார்.” அதன்பின் குருடனின் கண்களில் சேற்றைப்பூசி, ஸீலோவாம் குளத்தில் கழுவும்படிக் கூறியனுப்பினார். அவன் அப்படிச் செய்தபோது, மீண்டும் பார்வை பெற்றான். இவ்விதமாக அறிந்துகொள்ளவேண்டும் என்ற ஆர்வத்தினால் கேட்கப்பட்டிருந்த கேள்விகளுக்கு வழக்கமாகப் பதில் கூறியிருந்ததுபோல சீடர்களின் கேள்விக்கும் இயேசு செயல்முறையில் ஒரு பதில் கொடுத்தார். பாவம் செய்திருந்தவன் யார்? அல்லது பாவஞ்செய்யாமலிருந்தது யார்? என்று விவாதஞ்செய்யும்படி சீடர்கள் அழைக்கப்படாமல், அந்தக் குருடனுக்குப் பார்வையைக் கொடுத்ததிலிருந்த தேவனுடைய வல்லமையையும் இரக்கத்தையும் புரிந்துகொள்ளும்படி அழைக்கப்பட்டனர். அந்தக் களிமண்ணிலோ அல்லது கழுவுவதற்காக அனுப்பப்பட்ட ஸீலோவாம் குளத்திலோ அல்ல; கிறிஸ்துவில் மட்டுமே சுகப்படுத்தும் புண்ணியம் இருந்தது என்பது நன்றாகத் தெரிந்திருந்தது. (37)

அந்தச் சுகப்படுத்துதலில் பரிசேயர்களால் வியப்படையாமல் இருக்கமுடியவில்லை. அப்படியிருந்தும் இதற்குமுன் எப்போதும் இருந்ததை விட அதிகமான வெறுப்பை அடைந்தனர். ஏனெனில், அந்த அற்புதம் ஒரு ஓய்வுநாளில் செய்யப்பட்டிருந்தது. (38)

அந்த வாலிபனின் அயலாகத்தார்களும் குருடான நிலைமையில் அவனை அறிந்திருந்தவர்களும்: "இவன் உட்கார்ந்து பிச்சை கேட்டுக்கொண்டிருந்தவனல்லவா" என்றனர். அவனைச் சந்தேகத்துடன் அவர்கள் பார்த்தார்கள். ஏனெனில் அவனுடைய கண்கள் திறக்கப்பட்டபோது, அவனுடைய முகத்திலும் மாறுதல் உண்டாகி அது பிரகாசமடைய, அவன் வேறொரு மனிதனைப்போலத் தோன்றினான். கேள்வி ஒருவரிடமிருந்து அடுத்தவருக்குக் கடந்துசென்றது. "சிலர்: அவன்தான் என்றார்கள். வேறுசிலர்: அவனுடைய சாயலாயிருக்கிறான் என்றார்கள்." ஆனால் அந்த பெரும் ஆசீர்வாதங்களைப் பெற்றுக்கொண்டவன்: "நான்தான் அவன்" என்று கூறி, கேள்விக்கு முடிவை உண்டுபண்ணினான். அதற்குப்பின் அவன் இயேசுவைப்பற்றிக்கூறி, அவன் எவ்விதமாக சுகப்படுத்தப்பட்டான் என்பதையும் கூறினான். அப்பொழுது அவர்கள் அவர் எங்கே என்று விசாரித்தபோது, அவன் எனக்குத் தெரியாது என்றான். (39)

அதற்குப்பின் அவர்கள் அவனை ஒரு பரிசேயர்களின் ஆலோசனைச் சங்கத்திற்குக் கொண்டுவந்தனர். அவனுக்கு கண்பார்வை எப்படிக் கிடைத்தது என்று அவர்கள் மறுபடியும் அவனிடம் கேட்டார்கள். அவன்: "அவர் என் கண்களின்மேல் சேற்றைப் பூசினார், நான் கழுவினேன், காண்கிறேன்" என்றான். ஆகையால் பரிசேயரில் சிலர் அந்த மனுஷன் ஓய்வுநாளைக் கைக்கொள்ளாததினால் அவன் தேவனிடத்திலிருந்து வந்தவனல்ல என்றார்கள். பரிசேயர்கள் இயேசுவை ஒரு பாவியென்றும் மேசியா அல்லவென்றும் தீர்க்கலாமென்று நம்பினார்கள். ஓய்வுநாளை உண்டுபண்ணினவர் அவர் என்பதையும், குருடனை சுகப்படுத்தின அவர் ஓய்வுநாளின் கடமைகளை அறிந்திருக்கிறார் என்பதையும் அவர்கள் அறியாதிருந்தனர். ஓய்வுநாளை ஆசரிப்பதில் அவர்கள் ஆச்சரியமான விதத்தில் வைராக்கியமாகக் காணப்பட்டு, அதே சமயம் அன்று கொலைசெய்ய திட்டமிட்டுக்கொண்டிருந்தனர். ஆனால் இந்த அற்புதத்தைக் கேட்ட அநேகர் மிக அதிகமாக அசைக்கப்பட்டு, அந்தக் குருடனின் கண்களைத் திறந்த ஒருவர் சாதாரணமான மனிதனைவிட மேலானவர் என்னும் மன உணர்த்துதலை அடைந்தனர். அப்பொழுது பரிசேயரில் சிலர்: அந்த மனுஷன் ஓய்வுநாளைக் கைக்கொள்ளாததினால் அவன் தேவனிடத்திலிருந்து வந்தவனல்ல என்றார்கள். வேறுசிலர்: பாவியாயிருக்கிற மனுஷன் இப்படிப்பட்ட அற்புதங்களை எப்படிச் செய்வான் என்றார்கள். (40)

"உன் கண்களைத் திறந்தானே, அவனைக்குறித்து நீ என்ன சொல்லுகிறாய்" என்று அந்த ரபிமார்கள் மறுபடியும் அந்தக் குருடனிடம் கேட்டார்கள். (41)

தான் குருடனாக இருந்ததையும் இப்பொழுது பார்வையடைந்ததையும் அறிவித்துக்கொண்டு அந்த மனிதன்தானே அங்கு இருந்தான். ஆனால் பரிசேயர்கள் தாங்கள் தவறில் இருப்பதை ஒத்துக்கொள்ளுவதைவிட தங்களுடைய சொந்தப் புலன்களின் சான்றை மறுப்பவர்களாக இருந்தனர். பரிசேயர்களின் தவறான எண்ணம் அவ்வளவு வலிமையானதாக இருந்தது. அவர்களுடைய நீதி அப்படி உருக்குலைப்பதாக இருந்தது. (42)

அந்தப் பரிசேயர்களிடம் ஒரே ஒரு நம்பிக்கை விட்டுவைக்கப்பட்டிருந்தது. அது அந்த மனிதனின் பெற்றோரைப் பயப்படுத்துதான். “இப்பொழுது இவன் எப்படிப் பார்வையடைந்தான்” என்று வெளிப்படையாகத் தோன்றுகின்ற நேர்மையுடன் கேட்டனர். எவர்களெல்லாம் இயேசுவை கிறிஸ்து என்று ஏற்றுக்கொள்வார்களோ அவர்களெல்லாம் ஜெப ஆலயத்திலிருந்து நீக்கப்படுவார்கள் அதாவது முப்பது நாட்களுக்கு விலக்கிவைக்கப்படுவார்கள் என்று அறிவிக்கப்பட்டிருந்ததினால், அந்தப் பெற்றோர்கள் பயத்தினால் சமரசஞ்செய்பவர்களாக இருந்தனர். இந்த நாட்களில் ஆலயச் சட்டத்தை மீறினவர்களின் வீட்டிலுள்ள ஆண் குழந்தை எதுவும் விருத்தசேதனம் செய்யப்படமாட்டாது. இறந்தவர்களுக்காக புலம்பவும் மாட்டார்கள். இந்தத் தண்டனை ஒரு பேராபத்தாக கருதப்பட்டிருந்தது. அது மனந்திரும்புதலை உண்டுபண்ணுவதற்குத் தவறியிருந்தால் மிகவும் கடினமாக ஒரு தண்டனை பின்தொடரவிருந்தது. அவர்களுடைய மகனுக்காகச் செய்யப்பட்டிருந்த பெரிய கிரியை அந்தப் பெற்றோர்களுக்குள் மன உணர்த்துதலைக் கொண்டுவந்திருந்தது. இருந்தபோதிலும்: “இவன் எங்கள் குமாரன்தான் என்றும், குருடனாய்ப் பிறந்தான் என்றும் எங்களுக்குத் தெரியும். இப்பொழுது இவன் பார்வையடைந்த வகை எங்களுக்குத் தெரியாது; இவன் கண்களைத் திறந்தவன் இன்னான் என்பதும் எங்களுக்குத் தெரியாது; இவன் வயதுள்ளவனாயிருக்கிறான், இவனைக் கேளுங்கள், இவனே சொல்லுவான்” என்று பதில் கூறினார்கள். இவ்விதமாக அவர்கள் தங்களுடைய பொறுப்புகளனைத்தையும் அவர்களிடமிருந்து அவர்களுடைய மகனிடத்திற்கு மாற்றினார்கள். ஏனெனில், அவர்கள் கிறிஸ்துவை அறிக்கைசெய்யத் துணியவில்லை. (43)

அந்த பரிசேயர்கள் குழப்பத்தில் வைக்கப்பட்டது, அவர்கள் கேள்வி கேட்டது, அவர்களுடைய தவறான எண்ணம், அந்தக் காரியத்திலிருந்த உண்மையின்மீது அவர்கள் கொண்டிருந்த நம்பிக்கையின்மை ஆகியவை திரளானவர்களின் கண்களை—குறிப்பாகப் பொதுமக்களின் கண்களைத் திறந்தது. இயேசு தெருக்களில் வெளியரங்கமாக அடிக்கடி அவருடைய அற்பதங்களைச் செய்திருந்தார். அவருடைய பணிகள் எப்பொழுதும்

பாடுகளுக்கு நிவாரணமளிக்கும் தன்மையுடையதாக இருந்தது. பரிசேயர்கள் பிடிவாதமாகக் கூறியிருந்தபடி, இயேசு ஒரு வேஷதாரியாக இருந்திருந்தால் ஒரு வேஷதாரியான மனிதனின்மூலமாக தேவன் இப்படிப்பட்ட பலத்த கிரியைகளைச் செய்வாரா? என்பது அநேக மனங்களில் கேள்வியாக இருந்தது. இந்த எதிர்வாதம் இரு பக்கங்களிலும் மிகுந்த அக்கறை உடையதாகிக்கொண்டிருந்தது. (44)

இயேசுவால் செய்யப்பட்டிருந்த கிரியைகளுக்கு தாங்கள் விளம்பரம் செய்துகொண்டிருந்ததை பரிசேயர்கள் கண்டனர். அவர்களால் அந்த அற்புதத்தை மறுக்கமுடியவில்லை. அந்தக் குருடன் மகிழ்ச்சியினாலும் நன்றியறிதலினாலும் நிரப்பப்பட்டிருந்தான். அவன் இயற்கையின் ஆச்சரியமான பொருட்களைக்கண்டு, வானம் பூமி ஆகியவைகளின் அழகில் மகிழ்ச்சியால் நிரப்பப்பட்டிருந்தான். அவன் தனது அனுபவத்தை தாராளமாக வெளிக்காட்டினான். அவர்கள் மறுபடியும் “நீ தேவனை மகிமைப்படுத்து; இந்த மனுஷன் பாவியென்று நாங்கள் அறிந்திருக்கிறோம்” என்று கூறி, அவனை அமைதிப்படுத்த முயன்றார்கள். (45)

அதற்குக் குருடன்: “அவர் பாவியென்று எனக்குத் தெரியாது; நான் குருடனாயிருந்தேன், இப்பொழுது காண்கிறேன்; இது ஒன்றுதான் எனக்குத் தெரியும்” என்று பதில் கூறினான். (46)

அவர்கள் மறுபடியும்: “உனக்கு என்னசெய்தான், உன் கண்களை எப்படித் திறந்தான்” என்றார்கள். அவன் தான் ஒரு பொய்த்தோற்றத்தில் இருப்பதாக நினைக்கவேண்டும் என்பதற்காக அநேக வார்த்தைகளினால் அவனைக் குழப்ப முயன்றனர். சாத்தானும் அவனுடைய தூதர்களும் பரிசேயர்களின் பக்கத்திலிருந்து கிறிஸ்துவின் செல்வாக்கிற்கு எதிர்ச் செயலாற்றுவதற்காக மனிதனின் நியாயவாதத்துடன் தங்களுடைய சக்திகளையும் தந்திரங்களையும் ஒன்றுபடுத்தியிருந்தனர். அநேக மனங்களில் ஆழமாகிக்கொண்டிருந்த மனஉணர்த்துதல்களை அவர்கள் மழுங்கச் செய்தனர். தனது பார்வையை மீண்டும் பெற்ற மனிதனைப் பலப்படுத்துவதற்காக தூதர்களும் அந்தக் களத்தில் இருந்தனர். (47)

பிறவியில் குருடனாக இருந்து, கல்வியறிவு இல்லாதிருந்த அந்த மனிதனைத்தவிர மற்றொருவருடனும் இடைபடவேண்டியதிருந்ததைப் பரிசேயர்கள் உணரவில்லை. அவர்கள் யாருடன் எதிர்வாதம் செய்துகொண்டிருந்தனர் என்பதை அறிந்திருக்கவில்லை. குருடனாக இருந்த அந்த மனிதனின் ஆத்துமாவின் அறைக்குள் தெய்வீக ஒளி பிரகாசித்தது. அவனை நம்பிக்கையற்றவனாக்க இந்த மாயக்காரர்கள் முயன்றபோது, அவனுடைய பதிலில் இருந்த உறுதியினாலும் கூர்மையினாலும் அவனை

கண்ணியில் அகப்படுத்த முடியாது என்று காட்டுவதற்கு தேவன் அவனுக்கு உதவிசெய்தார். அவன்: “முன்னமே உங்களுக்குச் சொன்னேன், நீங்கள் கேளாமற்போனீர்கள்; மறுபடியும் கேட்க வேண்டியதென்ன? அவருக்குச் சீஷராக உங்களுக்கும் மனதுண்டோ என்றான். அப்பொழுது அவர்கள் அவனை வைது: நீ அவனுடைய சீஷன், நாங்கள் மோசேயினுடைய சீஷர். மோசேயுடனே தேவன் பேசினாரென்று அறிவோம், இவன் எங்கேயிருந்து வந்தவனென்று அறியோம் என்றார்கள்.” (48)

இந்த மனிதன் எப்படிப்பட்ட கடும் சோதனைக்கூடாகக் கடந்துசென்று கொண்டிருக்கிறான் என்பதை கர்த்தராகிய இயேசு அறிந்திருந்து அவன் கிறிஸ்துவிற்கு ஒரு சாட்சியாகும்படி அவனுக்குக் கிருபையையும் வார்த்தைகளையும் கொடுத்தார். தன்னிடம் கேள்வி கேட்டிருந்தவர்களை வெட்டிப்பிளக்கும் கடிந்துரைகளால் பதில் கூறினான். அவர்கள் தங்களை வேதவாக்கியங்களுக்குத் தெளிவுரை கூறுபவர்கள் என்றும், அந்த ஜாதியினருக்கு மதசம்பந்தமான வழிகாட்டிகள் என்றும் உரிமை பாராட்டியிருந்தனர். அப்படியிருந்தபோதிலும் இங்கு அற்புதங்களைச் செய்யும் ஒருவர் இருந்தார். அவருடைய வல்லமையின் ஆதாரத்தைப்பற்றியும் அவருடைய குணம், அவர் பாராட்டும் உரிமை ஆகியவைகளைப்பற்றியும் அவர்கள் சொல்லமுடியாத அளவிற்கு அறியாமைமிக்கவர்களாக இருந்தனர். “அவர் என் கண்களைத் திறந்திருந்தும், அவர் எங்கேயிருந்து வந்தவரென்று நீங்கள் அறியாதிருக்கிறது ஆச்சரியமான காரியம். பாவிகளுக்குத் தேவன் செவிகொடுக்கிறதில்லையென்று அறிந்திருக்கிறோம், ஒருவன் தேவபக்தியுள்ளவனாயிருந்து அவருக்குச் சித்தமானதைச் செய்தால் அவனுக்குச் செவிகொடுப்பார். பிறவிக்குருடனுடைய கண்களை ஒருவன் திறந்தானென்று உலகமுண்டானது முதல் கேள்விப்பட்டதில்லையே. அவர் தேவனிடத்திலிருந்து வராதிருந்தால் ஒன்றும் செய்யமாட்டாரே” என்று அந்த மனிதன் கூறினான். (49)

அந்த மனிதன் அவனை விசாரித்தவர்களை அவர்களுடைய களத்திலேயே சந்தித்தான். அவனுடைய கூர்மையான—தீர்மானமான வார்த்தைகளுக்குமுன் அந்தப் பரிசேயர்கள் கட்டுண்டவர்களாக வாயடைத்திருந்தனர். சில விநாடிகளுக்கு அங்கு அமைதி நிலவியிருந்தது. அதற்குப்பின் கோபமடைந்தவர்களாக ஆசாரியர்களும் ரபிமார்களும் அவனுடன்தொடர்புகொண்டதினால்ஏதோ தீட்டிற்குப்பயப்பட்டவர்களைப்போல ஒன்று சேர்ந்து தங்களுடைய வஸ்திரங்களை உதறிக்கொண்டு, தங்கள் பாதங்களில் படிந்திருந்த தூசியை உதறிப்போட்டு, “முழுவதும் பாவத்தில் பிறந்த நீ எங்களுக்குப் போதிக்கிறாயோ” என்று சொல்லி, அவனை ஜெபஆலயத்திற்குப் புறம்பாக்கினார்கள். (50)

அவனை அவர்கள் புறம்பே தள்ளிவிட்டதை இயேசு கேள்விப்பட்டு, அவனைக் கண்டபோது: “நீ தேவனுடைய குமாரனிடத்தில் விசுவாசமாயிருக்கிறாயா” என்றார். (51)

குருடனாக இருந்த அந்த மனிதன் முதல்தடவையாக அவனைச் சுகப்படுத்தியவரின் முகத்தைப் பார்த்தான். ஆலோசனைச்சங்கத்திற்குமுன் துன்பமும் குழப்பமும் அடைந்தவர்களாக இருந்த அவனுடைய பெற்றோரை அவன் கண்டிருந்தான். ரபிமார்களின் கோபமிக்க முகங்களை அவன் பார்த்திருந்தான். இப்பொழுது அவனுடைய கண்கள் அன்பும் சமாதானமுமுள்ள இயேசுவின் முகத்தின்மீது தங்கின. ஏற்கெனவே மிகப்பெரும் கிரயத்தின்மூலம் அவன் அவரை தெய்வீக மகிமையின் பிரதிநிதியாக ஏற்றுக்கொண்டிருந்தான். இப்பொழுது அவனுக்குப் பெரிய வெளிப்படுத்துதல் அனுமதிக்கப்பட்டிருந்தது. (52)

“நீ தேவனுடைய குமாரனிடத்தில் விசுவாசமாயிருக்கிறாயா” என்னும் கேள்விக்கு அந்தக் குருடன்: “ஆண்டவரே, அவரிடத்தில் நான் விசுவாசமாயிருக்கும்படிக்கு அவர் யார்” என்றான். இயேசு அவனை நோக்கி: “நீ அவரைக் கண்டிருக்கிறாய், உன்னுடனே பேசுகிறவர் அவர்தான்” என்றார். அந்த மனிதன் இரட்சகருடைய பாதத்தில் விழுந்து அவரைப் பணிந்துகொண்டான். அவனுடைய இயற்கையான பார்வை மட்டுமின்றி அவனுடைய புரிந்துகொள்ளும் கண்களும் திறக்கப்பட்டன. அவனுடைய ஆத்துமாவிற்குக் கிறிஸ்து வெளிப்படுத்தப்பட்டார். அவன் அவரை தேவனிடமிருந்து அனுப்பப்பட்டவராக ஏற்றுக்கொண்டான். (53)

பரிசேயர்கள் கூட்டம் அங்கு ஒன்று கூடியிருப்பதை இயேசு கண்டார். அது, அவருடைய வார்த்தைளுக்கும் அவருடைய ஊழியத்திற்கும் எப்போதும் ஏற்படும் முரண்பாட்டை அவர் மனதிற்குக் கொண்டுவந்தது. “காணாதவர்கள் காணும்படியாகவும், காண்கிறவர்கள் குருடராகும்படியாகவும் நியாயத்தீர்ப்புக்கு நான் இந்த உலகத்தில் வந்தேன்” என்றார். பார்வையற்ற கண்களைத் திறக்கவும், இருளில் உட்கார்ந்திருப்பவர்களுக்கு ஒளியைக் கொடுக்கவும் கிறிஸ்து வந்திருந்தார். அவர் தம்மை உலகத்திற்கு ஒளியாக இருப்பதாக அறிவித்திருந்தார். தற்சமயம் செய்யப்பட்ட அற்புதம் அவரது ஊழியத்திற்கு ஒரு உறுதிச்சான்றை வழங்குவதாக இருந்தது. இரட்சகரை அவரது வருகையின்போது கண்டிருந்த மக்கள், உலகம் இதற்குமுன் ஒருபோதும் அனுபவித்திராதவிதத்திலுள்ள தெய்வீகப் பிரசன்னத்தின் முழுமையான வெளிக்காட்டுதலினால் அனுகூலமடைந்திருந்தனர். மிக அதிகமான பூரணத்துடன் தேவனைப்பற்றின அறிவு வெளிப்படுத்தப்பட்டது. ஆனால் இதே வெளிப்படுத்தலில் மனிதர்களின்மீது நியாயத்தீர்ப்பு

நடந்துகொண்டிருந்தது. அவர்களுடைய பண்பு சோதிக்கப்பட்டது. அவர்களுடைய முடிவு தீர்மானிக்கப்பட்டது. (54)

தெய்வீக வல்லமையின்மூலமாக குருடனாக இருந்த அந்த மனிதனுக்கு கொடுக்கப்பட்டிருந்த இயற்கையானதும் ஆவிக்குரியதுமான இரண்டு வெளிக்காட்டல்களும் பரிசேயர்களை மேலும் ஆழமான இருளுக்குள் விட்டிருந்தது. அவரது பேச்சைக் கேட்டிருந்தவர்களில் சிலர், கிறிஸ்துவின் வார்த்தைகள் அவர்களுக்குப் பொருத்தமாக இருந்தது என்று உணர்ந்து, “நாங்களும் குருடரோ” என்றார்கள். “நீங்கள் குருடராயிருந்தால் உங்களுக்குப் பாவமிராது; நீங்கள் காண்கிறோம் என்று சொல்லுகிறபடியினால் உங்கள் பாவம் நிலை நிற்கிறது” என்று இயேசு பதில் கூறினார். நீங்கள் உங்களால் பார்க்கமுடியுமென்று கூறுகிறீர்கள். ஆனால் எதன்மூலமாக மாத்திரம் பார்வையைப் பெற்றுக்கொள்ளமுடியுமோ அதைப் புறக்கணிக்கிறீர்கள்; மேலும் நீங்கள்: “காண்கிறோம்” என்கிறீர்கள். தங்களுடைய தேவையை உணர்ந்த அனைவருக்கும் உதவிசெய்ய எல்லயற்ற விதத்தில் கிறிஸ்து வந்தார். ஆனால் பரிசேயர்கள் அவர்களுக்குத் தேவை எதுவும் இல்லையென்று அறிக்கை செய்தனர். அவர்கள் கிறிஸ்துவிடம் வர மறுத்துவிட்டனர். எனவே அவர்கள் குருட்டுத்தனத்தில்—தாங்களாகவே குற்றவாளிகளாக இருக்கக்கூடிய ஒரு குருட்டுத்தன்மையில் விட்டுவிடப்பட்டனர். “உங்கள் பாவம் நிலை நிற்கிறது” என்று இயேசு கூறினார். (55) ★

# 52

# தெய்வீக மேய்ப்பன்!

**யோவான் 10:1–30**

**(The Desire of Ages, pp. 476–484)**

"நானே நல்ல மேய்ப்பன்; நல்ல மேய்ப்பன் ஆடுகளுக்காகத் தன் ஜீவனைக் கொடுக்கிறான்." "நானே நல்ல மேய்ப்பன்; பிதா என்னை அறிந்திருக்கிறதுபோலவும், நான் பிதாவை அறிந்திருக்கிறதுபோலவும், நான் என்னுடையவைகளை அறிந்தும் என்னுடையவைகளால் அறியப்பட்டு மிருக்கிறேன்; ஆடுகளுக்காக என் ஜீவனையும் கொடுக்கிறேன்."(1)

அவர்கள் வழக்கமாகக் கூடுகிற தோழமையின் கூட்டுறவின்படி இயேசு அவருடைய வார்த்தைகளைக் கேட்டிருந்தவர்களின் மனங்களுக்கு மறுபடியும் வழியைக் கண்டார். அவர் ஆவியின் செல்வாக்கை புத்துணர்வை உண்டுபண்ணும் தண்ணீருக்கு ஒப்பிட்டிருந்தார். அவர் தம்மை ஒளியாகவும், ஜீவனுக்கு ஆதாரமாகவும், இயற்கைக்கும் மனிதனுக்கும் மகிழ்ச்சியை உண்டுபண்ணுபவராகவும் எடுத்துக்காட்டியிருந்தார். இப்பொழுது அவர் தம்மீது நம்பிக்கை வைத்திருந்தவர்களுக்கும் அவருக்கும் இடையிலுள்ள உறவை ஒரு அழகிய மேய்ப்பனின் சித்திரமாக எடுத்துக்காட்டுகிறார். அவரது பேச்சைக் கேட்டிருந்தவர்களுக்கு இந்தச் சித்திரத்தைவிட வேறு எதுவும் அதிகமான பழக்கமுடையதாக இருக்கவில்லை. கிறிஸ்துவின் வார்த்தைகள் அதை என்றென்றைக்குமாக அவருடன் பிணைத்திருந்தன. இரட்சகரின் போதனையை நினைவிற்குக் கொண்டுவராமல், மேய்ப்பர்கள் அவர்களுடைய மந்தைகளை மேய்ப்பதை சீடர்களால் ஒருபோதும் பார்க்கமுடியாமலிருந்தது. விசுவாசமிக்க ஒவ்வொரு மேய்ப்பனிலும் அவர்கள் கிறிஸ்துவைக் கண்டார்கள். உதவியற்றதும் சார்ந்திருந்ததுமான ஒவ்வொரு மந்தையிலும் அவர்கள் தங்களைக் கண்டார்கள். (2)

தீர்க்கதரிசியான ஏசாயா இந்த உருவகத்தை "சீயோன் என்னும் சுவிசேஷகியே, நீ உயர்ந்த பர்வதத்தில் ஏறு; எருசலேம் என்னும் சுவிசேஷகியே, நீ உரத்த சத்தமிட்டுக் கூப்பிடு, பயப்படாமல் சத்தமிட்டு, யூதா

பட்டணங்களை நோக்கி: இதோ, உங்கள் தேவன் என்று கூறு. இதோ, கர்த்தராகிய ஆண்டவர் பராக்கிரமசாலியாக வருவார்; அவர் தமது புயத்தினால் அரசாளுவார்; இதோ, அவர் அளிக்கும் பலன் அவரோடேகூட வருகிறது; அவர் கொடுக்கும் பிரதிபலன் அவருடைய முகத்துக்கு முன்பாகச் செல்லுகிறது. மேய்ப்பனைப்போலத் தமது மந்தையை மேய்ப்பார்; ஆட்டுக்குட்டிகளைத் தமது புயத்தினால் சேர்த்து, தமது மடியிலே சுமந்து, கறவலாடுகளை மெதுவாய் நடத்துவார்" என்று கூறி, மேசியாவின் ஊழியத்தை இந்த ஆறுதலளிக்கும் வார்த்தைகளில் ஒப்பிட்டிருந்தான். "கர்த்தர் என் மேய்ப்பராயிருக்கிறார்; நான் தாழ்ச்சியடையேன்" என்று சங்கீதக்காரன் பாடியிருந்தான். எசேக்கியேலின்மூலமாகப் பரிசுத்த ஆவியானவர்: "ஒரே மேய்ப்பனை நான் அவர்கள்மேல் விசாரிப்பாயிருக்க ஏற்படுத்துவேன்; இவர் அவர்களை மேய்த்து" "நான் காணாமற்போனதைத்தேடி, துரத்துண்டதைத் திரும்பக்கொண்டுவந்து, எலும்பு முறிந்ததைக் காயங்கட்டி, நசல்கொண்டதைத் திடப்படுத்துவேன்;" "நான் அவர்களோடு சமாதானஉடன்படிக்கைசெய்து" "இனி அவர்கள் புறஜாதிகளுக்குக் கொள்ளையாவதில்லை, பூமியின் மிருகங்கள் அவர்களைப் பட்சிப்பதுமில்லை; தத்தளிக்கப்பண்ணுவார் இல்லாமல் சுகமாய்த் தங்குவார்கள்" (ஏசாயா 40:9–11; சங்கீதம் 23:1; எசேக்கியேல் 34:23,16,25,28) என்றார். (3)

இந்த தீர்க்கதரிசனங்களைக் கிறிஸ்து தமக்கு ஒப்பிட்டு, அவருடைய சொந்த குணத்திற்கும் இஸ்ரவேலின் தலைவர்களின் குணத்திற்கும் இடையிலுள்ள வேறுபாட்டை தெளிவுபடுத்தினார். கிறிஸ்துவின் வல்லமைக்கு சாட்சிகூறத் துணிந்த காரணத்தினால் பரிசேயர்கள் இப்பொழுதுதான் ஒருவனை —அந்தக் கண்திறக்கப்பட்ட குருடனை தொழுவத்திலிருந்து விரட்டியிருந்தனர். உண்மையான மேய்ப்பன் தம்மிடத்திற்கு இழுத்துக்கொண்டிருந்த ஒரு ஆத்துமாவைப் பரிசேயர்கள் தூரமாக விலக்கியிருந்தனர். இப்படிச் செய்ததில் அவர்களிடம் ஒப்படைக்கப்பட்டிருந்த பணியைப்பற்றி அவர்கள் அறிவில்லாதவர்களாக இருந்ததையும், மந்தையின் மேய்ப்பர்கள் என்னும் அவர்கள்மேலிருந்த நம்பிக்கைக்கு அவர்கள் தகுதியற்றவர்கள் என்பதையும் காட்டியிருந்தனர். இப்பொழுது இயேசு அவர்களுக்கும் நல்ல மேய்ப்பனுக்கும் இடையிலிருந்த வேறுபாட்டை அவர்கள்முன் வைத்து, கர்த்தருடைய மந்தையைக் காக்கும் உண்மையான காப்பாளராக அவர் இருப்பதை சுட்டிக்காட்டினார். அப்படியிருந்தபோதிலும் அதைச் செய்வதற்குமுன் அவர் தம்மைப்பற்றி மற்றொரு உருவகத்தில் பேசுகிறார். (4)

"ஆட்டுத்தொழுவத்துக்குள் வாசல்வழியாய்ப் பிரவேசியாமல், வேறுவழியாய் ஏறுகிறவன் கள்ளனும் கொள்ளைக்காரனுமாயிருக்கிறான். வாசல்வழியாய்ப் பிரவேசிக்கிறவனோ ஆடுகளின் மேய்ப்பனாயிருக்கிறான்"

என்றார். இந்த வார்த்தைகள் பரிசேயர்களுக்கு எதிராகப் பேசப்பட்டிருந்தன என்பதை அவர்கள் தெளிவாகப் புரிந்துகொள்ளவில்லை. அவர்கள் அந்த வார்த்தைகளின் அர்த்தத்தைப்பற்றி ஆராய்ந்தபோது, இயேசு: “நானே வாசல், என் வழியாய் ஒருவன் உட்பிரவேசித்தால், அவன் இரட்சிக்கப்படுவான், அவன் உள்ளும் புறம்பும் சென்று, மேய்ச்சலைக் கண்டடைவான். திருடன் திருடவும் கொல்லவும் அழிக்கவும் வருகிறானேயன்றி வேறொன்றுக்கும் வரான். நானோ அவைகளுக்கு ஜீவன் உண்டாயிருக்கவும், அது பரிபூரணப்படவும் வந்தேன்” என்று வெளிப்படையாகக் கூறினார். (5)

தேவனுடைய தொழுவத்திற்குக் கிறிஸ்து வாசலாக இருக்கிறார். இந்த வாசல் வழியாக ஆதிகாலத்திலிருந்து அவருடைய பிள்ளைகள் நுழைந்திருக்கிறார்கள். உருவகங்களால்காட்டப்பட்டும், அடையாளங்களினால் நிழலிடப்பட்டும், தீர்க்கதரிசிகளால் வெளிப்படுத்தப்பட்டும், சீடர்களுக்குக் கொடுக்கப்பட்டிருந்த போதனைகளில் வெளிப்பட்டிருந்த இயேசுவிலும், மனித குமாரர்களுக்காகச் செய்யப்பட்டிருந்த அற்புதங்களிலும் அவர்கள்: “உலகத்தின் பாவத்தைச் சுமந்துதீர்க்கிற தேவ ஆட்டுக்குட்டி”யைக் கண்டிருந்து, அவர்மூலமாக அவருடைய கிருபையின் தொழுவத்திற்குள் கொண்டுவரப்படுகிறார்கள். அநேகர் மற்ற அநேக பொருட்களை உலகத்தின் விசுவாசத்திற்காக முன்வைத்து வந்திருக்கின்றனர். நீதிமானாக்கப்படுவதற்கும், தேவனிடத்தில் சமாதானம் காணவும், அப்படியே அவரது தொழுவத்திற்குள் பிரவேசிப்பதற்கும், மதச் சடங்காச்சாரங்களும் முறைகளும் மனிதர்களால் வகுக்கப்பட்டிருக்கின்றன. ஆனால் கிறிஸ்துவே ஒரே வாசலாக இருக்கிறார். கிறிஸ்துவின் இடத்தை எடுத்துக்கொள்ளுகிற வேறு எதையாவது புகுத்துபவர்களும், வேறு ஏதாவது வழியில் தொழுவத்திற்குள் நுழைய முயலும் அனைவரும் திருடரும் கொள்ளைக்காரருமாக உள்ளனர். (6)

பரிசேயர்கள் வாசல்வழியாக உட்பிரவேசிக்கவில்லை. அவர்கள் கிறிஸ்து இல்லாத வேறுவழியில் தொழுவத்திற்குள் ஏறியிருந்து, மெய்யான மேய்ப்பனின் பணியை நிறைவேற்றியிருக்கவில்லை. ஆசாரியர்களும் அதிபதிகளும் வேதபாரகர்களும் பரிசேயர்களும் மேய்ச்சலிடங்களை அழித்து, ஜீவ ஊற்றின் தண்ணீரைத் தீட்டுப்படுத்தியிருந்தனர். அந்தத் தவறான மேய்ப்பர்களைப்பற்றி: “நீங்கள் பலவீனமானவைகளைப் பலப்படுத்தாமலும், நசல்கொண்டவை களைக் குணமாக்காமலும், எலும்பு முறிந்தவைகளைக் காயங் கட்டாமலும், துரத்துண்டவைகளைத் திருப்பிக்கொண்டு வராமலும், காணாமற்போனவைகளைத் தேடாமலும் போய், பலாத்காரமும் கடூரமுமாய் அவைகளை ஆண்டீர்கள்” (எசேக்கியேல் 34:4) என்று ஆவியின் ஏவுதலின் வார்த்தைகள் விவரிக்கின்றன. (7)

ஆத்துமாவின் தேவையைத் திருப்திப்படுத்துவதற்காகக் காலங்கள் நெடுகிலும் தத்துவ சாஸ்திரிகளும் ஆசிரியர்களும் உலகத்திற்குத் தத்துவ விளக்கங்களைக் கொடுத்துக்கொண்டிருந்தனர். மீட்பிற்கு கிறிஸ்து அல்லாத வேறு வழிகளைக் காட்டி, மனிதர்களின் கண்களைப் பிதாவின் முகத்திலிருந்து திருப்பி, ஆசீர்வாதத்தைமட்டுமே அருளி யிருந்தவரைப்பற்றிய பயத்தால் அவர்களுடைய இருதயங்களை நிறைத்துக் கொண்டிருந்த சமயமுறைகளையும் பெரிய ஆசிரியர்களையும் ஒவ்வொரு அஞ்ஞானக் கூட்டமும் கொண்டிருந்தது. அவர்களுடைய செயல்களின் போக்கு படைப்பினாலும் மீட்பினாலும் தேவனுக்கு சொந்தமானதை கொள்ளையடிப்பதாக இருக்கிறது. அந்தப் போலியான போதகர்கள் அதைப்போலவே மனிதனையும் கொள்ளையிடுகின்றனர். லட்சக்கணக் கானவர்கள் தவறான மதங்களின்கீழ் கட்டப்பட்டவர்களாக, அடிமைக்குரிய பயத்தால் அடைபட்டு, ஈர்ப்பில்லாத அலட்சியத்தோடு, அக்கறையில்லாத மிருகங்களைப்போல உழைத்துக்கொண்டு, இந்த வாழ்க்கையின் நம்பிக்கையோ அல்லது மகிழ்ச்சியோ அல்லது ஆர்வமோ இல்லாதவர்களாக, இதற்கப்பாலுள்ளவைகளைப்பற்றின மங்கின பயத்தோடு இருக்கின்றனர். தேவ கிருபையின் சுவிசேஷம் ஆத்துமாவை உயர்த்தக்கூடியதாக இருக்கிறது. தேவனுடைய குமாரனில் வெளிக்காட்டப்பட்டிருக்கும் அன்பைத் தியானஞ்செய்வது இருதயத்தைத் தூண்டி, மற்றொன்றினாலும் செய்யமுடியாத விதத்தில் ஆத்துமாவின் வல்லமைகளை எழுப்பும். மனிதனில் தேவ சாயலை மறுபடியும் சிருஷ்டிப்பதற்காகக் கிறிஸ்து வந்தார். எவன் மனிதர்களை கிறிஸ்துவிலிருந்து திருப்புகிறானோ, அவன் அவர்களை உண்மையான முன்னேற்றத்தின் ஆதாரத்திடமிருந்து தூரமாக விலக்குகிறான். அவன் வாழ்க்கையின் நம்பிக்கையையும், நோக்கத்தையும், மகிமையையும் அவர்களிடமிருந்து மோசடி செய்கிறான். அவன் ஒரு திருடனும் கொள்ளைக்காரனுமாக இருக்கிறான். (8)

“வாசல்வழியாய்ப் பிரவேசிக்கிறவனோ ஆடுகளின் மேய்ப்பனாயிருக்கிறான்.” கிறிஸ்து வாசலாகவும் மேய்ப்பனாகவும் இருக்கிறார். அவர் தமது வழியாகவே பிரவேசிக்கிறார். தம்மையே பலியாகத்தந்ததின்மூலமாக ஆடுகளின் மேய்ப்பனாகிறார். “வாசலைக் காக்கிறவன் அவனுக்குத் திறக்கிறான்; ஆடுகளும் அவன் சத்தத்துக்குச் செவிகொடுக்கிறது. அவன் தன்னுடைய ஆடுகளைப் பேர்சொல்லிக் கூப்பிட்டு, அவைகளை வெளியே நடத்திக் கொண்டுபோகிறான். அவன் தன்னுடைய ஆடுகளை வெளியே விட்டபின்பு, அவைகளுக்கு முன்பாக நடந்துபோகிறான், ஆடுகள் அவன் சத்தத்தை அறிந்திருக்கிறபடியினால் அவனுக்குப் பின்செல்லுகிறது.” (9)

சகல பிராணிகளிலும் ஆடு மிகவும் பயந்த குணமும் உதவியற்றதுமாக இருக்கிறது. கீழ்த்திசை நாடுகளில் மந்தையின்மீதான மேய்ப்பனின் கவனம் தளரா முயற்சியுடையதாகவும் இடைவிடாததாகவும் இருக்கிறது. இப்போதைப்போலவே முற்காலத்திலும் மதில்சூழ்ந்த பட்டணங்களுக்கு வெளியில் பாதுகாப்பு இருக்கவில்லை. மந்தைகளைக் கொள்ளையிடுவதற்காக எல்லையிலுள்ள கொள்ளைக்காரரும் இரைதேடும் விலங்குகளும் பாறைகள்மிக்க மறைவிடங்களில் காத்திருந்தனர். அந்த வேளையில் தன்னுடைய உயிருக்கு ஆபத்து இருக்கிறது என்பதை அறிந்திருந்தும், மேய்ப்பன் அவனிடம் ஒப்புவிக்கப்பட்டிருந்ததை விழிப்புடன் காவல்செய்திருந்தான். ஆரானிலிருந்த மேய்ச்சல் நிலத்தில் லாபானின் ஆடுகளைக் காவல் செய்திருந்த யாக்கோபு, தனது சோர்வில்லாத உழைப்பைப்பற்றி: "பகலிலே வெயிலும் இரவிலே குளிரும் என்னைப் பட்சித்தது; நித்திரை என் கண்களுக்குத் தூரமாயிருந்தது" (ஆதியாகமம் 31:40) என்று கூறினான். தாவீது தனது தகப்பனின் ஆடுகளைத் தனித்திருந்து காவல்செய்தபோதுதான் சிங்கத்தையும் கரடியையும் எதிர்த்து அவைகளின் பற்களிலிருந்து கவர்ந்து செல்லப்பட்டிருந்த ஆட்டுக்குட்டிகளைக் காப்பாற்றியிருந்தான். (10)

பாறைகள்மிக்க குன்றுகளின்மீதும், வனங்களுக்கூடாகவும், மலை இடுக்குகளுக்கூடாகவும், ஆற்றருகிலுள்ள புற்கள்மிக்க ஒதுக்கிடங்களிலும் அவனுடைய மந்தையை நடத்தியிருந்தான். தனிமையான இரவில் கொள்ளைக்காரர்களிடமிருந்து அவைகளை பாதுகாக்கும்படி அவன் விழித்திருந்து காவல்செய்திருந்தபோது, சுகவீனமாகிப் பலவீனமாயிருந்த வைகளை மென்மையாக நடத்தியிருந்தபோது, அவனுடைய கவனம் அவைகளுடன் ஒன்றியிருந்தது. அவனுடைய கவனிப்பிலுள்ள பிராணிகளின்மீது பலத்த பாசம் மிகுந்த பிணைப்பு அவனை இணைக்கிறது. ஒரு மந்தை எவ்வளவுதான் பெரியதாக இருந்தபோதிலும், மேய்ப்பன் ஒவ்வொரு ஆட்டையும் அறிந்திருக்கிறான். ஒவ்வொரு ஆடும் அதன் பெயரைப் பெற்று, மேய்ப்பன் பெயர்கூறி அழைக்கும்போது பதிலளிக்கின்றது. (11)

பூமிக்குரிய ஒரு மேய்ப்பன் அவனுடைய ஆடுகளை அறிந்திருப்பதைப்போல தெய்வீக மேய்ப்பன் உலகெங்கும் சிதறியுள்ள அவரது ஆடுகளை அறிந்திருக்கிறார். "என் மந்தையும் என் மேய்ச்சலின் ஆடுகளுமாகிய நீங்கள் மனுஷர்; நான் உங்கள் தேவன் என்று கர்த்தராகிய ஆண்டவர் உரைக்கிறார்." "உன்னைப்பேர்சொல்லி அழைத்தேன்; நீ என்னுடையவன்." "இதோ, என் உள்ளங்கைகளில் உன்னை வரைந்திருக்கிறேன்"—எசேக்கியேல் 34:31; ஏசாயா 43:1; 49:16. (12)

இயேசு நம்மைத் தனிப்பட்ட நபர்களாக அறிந்து, நமது பலவீனங்களைப்பற்றிய உணர்ச்சிகளினால் தொடப்பட்டிருக்கிறார். அவர் நம்மனைவரையும் நமது பெயர்களுடன் அறிந்திருக்கிறார். நாம் வாழுகின்ற வீட்டையும் அதில் வாழும் ஒவ்வொருவருடைய பெயரையும் அவர் அறிந்திருக்கிறார். சில சமயங்களில் குறிப்பிட்ட நகரத்தில், குறிப்பிட்ட தெருவில் உள்ள அவருடைய ஆடுகளில் ஒன்றைக்காண, குறிப்பிட்ட வீட்டிற்குச் செல்லும்படி அவருடைய ஊழியக்காரர்களுக்குக் கட்டளையிடுகிறார். (13)

ஒரே ஒருவன் மட்டும் இருந்ததைப்போலவும், அந்த ஒரே ஒருவனுக்காக மரித்ததைப்போலவும், ஒவ்வொரு ஆத்துமாவும் இயேசுவால் முற்றிலுமாக அறியப்பட்டிருக்கிறது. ஒவ்வொருவரின் துன்பமும் அவரது இருதயத்தைத் தொடுகிறது. உதவிக்கான அழுகை அவரது செவிகளைச் சென்றடைகிறது. எல்லா மனிதர்களையும் அவரிடம் இழுத்துக்கொள்வதற்காக அவர் வந்தார். “என்னைப் பின்பற்றிவா” என்று அவர்களுக்குக் கட்டளையிட்டு, அவர் அழைக்கிறார். அவரிடத்திற்கு வரும்படி அவருடைய ஆவி அவர்களுடைய இருதயங்களை அழைக்கிறது. இழுத்துக்கொள்ளப்படுவதற்கு அநேகர் மறுக்கின்றனர். அவர்கள் யார் என்பதை இயேசு அறிந்திருக்கிறார். அவருடைய அழைப்பை மகிழ்ச்சியுடன் கேட்டு மேய்ப்பன் என்னும் அவருடைய கரிசனையின்கீழ்வர ஆயத்தமாக இருப்பவர்களையும் அவர் அறிந்திருக்கிறார். “என் ஆடுகள் என் சத்தத்திற்குச் செவிகொடுக்கிறது; நான் அவைகளை அறிந்திருக்கிறேன், அவைகள் எனக்குப் பின்செல்லுகிறது” என்கிறார். பூமியின்மேல் வேறு ஒருவருமே இல்லை என்பதைப்போல அவர் ஒவ்வொருவருக்காகவும் கரிசனையுள்ளவராக இருக்கிறார். (14)

“அவன் தன்னுடைய ஆடுகளைப் பேர்சொல்லிக் கூப்பிட்டு, அவைகளை வெளியே நடத்திக்கொண்டுபோகிறான்.... ஆடுகள் அவன் சத்தத்தை அறிந்திருக்கிறபடியினால் அவனுக்குப் பின்செல்லுகிறது” கிழக்கத்திய மேய்ப்பன் அவனுடைய ஆடுகளை ஓட்டுவதில்லை. அவன் பலாத்காரத்தையும் அல்லது பயத்தையும் சார்ந்தவனாக இராமல், முன்னால் சென்று அவைகளை அழைக்கிறான். அவைகள் அவனுடைய குரலை அறிந்து அந்த அழைப்பிற்குக் கீழ்ப்படிகின்றன. மேய்ப்பனாக இருக்கும் இரட்சகர் தமது ஆடுகளுக்கும் அப்படியே செய்கிறார். “மோசே ஆரோன் என்பவர்களின் கையால், உமது ஜனங்களை ஒரு ஆட்டுமந்தையைப்போல வழிநடத்தினீர்” (சங்கீதம் 77:20) என்று வேதவாக்கியம் கூறுகிறது. “அநாதி சிநேகத்தால் உன்னைச் சிநேகித்தேன்; ஆதலால் காருணியத்தால் உன்னை இழுத்துக்கொள்ளுகிறேன்” (எரேமியா 31:3) என்று தீர்க்கதரிசியின் மூலமாக

இயேசு அறிவிக்கிறார். அவரைப் பின்பற்றும்படி அவர் ஒருவரையும் வற்புறுத்துவதில்லை. "மனுஷரைக் கட்டி இழுக்கிற அன்பின் கயிறுகளால் நான் அவர்களை இழுத்தேன்" (ஓசியா 11:4) என்கிறார். (15)

தண்டனை கிடைக்கும் என்ற பயமோ அல்லது நித்தியமான பரிசைப்பற்றிய நம்பிக்கையோ கிறிஸ்துவைப் பின்பற்றும்படி அவருடைய சீடர்களை நடத்துவதில்லை. பெத்லகேமின் முன்னணையிலிருந்து கல்வாரி சிலுவைவரையிலான பூமியின்மீதிருந்த அவருடைய புனிதப் பயணம் முழுவதிலும் வெளிப்படுத்தப்பட்டிருந்த அவருடைய நிகரற்ற அன்பும், அவரைப்பற்றிய பார்வையுமே ஆன்மாவை கவர்ந்திழுத்து மென்மைப்படுத்திக் கீழ்ப்படுத்துகிறது. பார்ப்பவர்களின் இருதயங்களை அன்பு விழிப்படையச் செய்கிறது. அவர்கள் அவருடைய குரலைக் கேட்டு, அவரைப் பின்பற்றுகின்றனர். (16)

பாதையிலுள்ள ஆபத்துகளை முதலில் சந்திப்பவனாக மேய்ப்பன் ஆடுகளுக்குமுன் செல்லுவதைப்போலவே இயேசு அவருடைய மக்களுக்கு முன்செல்லுகிறார். "அவன் தன்னுடைய ஆடுகளை வெளியே விட்டபின்பு, அவைகளுக்கு முன்பாக நடந்துபோகிறான்." இரட்சகருடைய அடிச்சுவடுகளினால் பரலோகத்தின் பாதை அர்ப்பணஞ்செய்யப்பட்டிருக்கிறது. அந்தப் பாதை செங்குத்தாகவும் கரடுமுரடாகவும் இருக்கலாம். ஆனால் அதில் இயேசு பயணஞ்செய்திருக்கிறார். அந்தப் பாதையை நமக்குச் சௌகரியமானதாக்குவதற்காக அவருடைய பாதங்கள் அதிலிருந்த கொடூரமான முட்களை மிதித்து அழித்துச் சென்றிருக்கின்றன. நாம் சுமக்கும்படி அழைக்கப்பட்டிருக்கும் ஒவ்வொரு சுமையையும் நமக்காக அவர் சுமந்திருக்கிறார். (17)

இப்பொழுது அவர் தேவசமுகத்திற்கு எழுந்தருளி, பிரபஞ்ச சிங்காசனத்தில் பங்குபெற்றுக்கொண்டிருக்கின்றபோதிலும், இயேசு அவருடைய மனஉருக்கத்தில் எதையும் இழந்துவிடவில்லை. இன்றும் அதே மென்மையான அனுதாபமிக்க இதயம் மனித இனத்தின் துயரங்கள் அனைத்திற்காகவும் திறந்திருக்கின்றது. துளைக்கப்பட்ட அவரது கரங்கள் இன்றும் உலகத்திலுள்ள அவருடைய மக்களை வெகுவாக ஆசீர் வதிப்பதற்காக முன்னால் நீட்டப்பட்டிருக்கின்றன. "அவைகள் ஒருக்காலும் கெட்டுப்போவதில்லை, ஒருவனும் அவைகளை என் கையிலிருந்து பறித்துக்கொள்வதுமில்லை." தன்னைத்தான் கிறிஸ்துவிற்குக் கொடுத்துள்ள ஆத்துமா உலகம் முழுவதையும்விட அவரது பார்வையில் அதிகமான விலைமதிப்புள்ளதாக இருக்கிறது. ஒரேஒருவனாக இருந்தாலுங்கூட அந்த ஒரே ஒருவன் இரட்சிக்கப்படுவதற்காக இரட்சகர் கல்வாரியின் கடுந்துயர்

அனைத்தினூடாகவும் சென்றிருந்திருப்பார். யாருக்காக மரித்திருந்தாரோ அவனை அவர் ஒருபோதும் கைவிடமாட்டார். அவரைப் பின்பற்றுபவர்கள் அவரைவிட்டு விலகிச்செல்வதைத் தாங்களே தெரிந்துகொண்டாலொழிய, அவர் அவர்களை உறுதியாகப் பற்றிக்கொள்ளுவார். (18)

நமது பரீட்சைகள் அனைத்திற்கு ஊடாகவும் ஒருபோதும் தவறாத ஒரு உதவியாளரை பெற்றிருக்கிறோம். சோதனைகளுடன் சண்டையிடவும், தீமையுடன் யுத்தஞ்செய்யவும், இறுதியில் பாரங்களினாலும் துயரங்களினாலும் நொறுக்கப்படவும் அவர் நம்மைத் தனியாக விடுவதில்லை. அழிவிற்குரிய கண்களிலிருந்து இப்பொழுது அவர் மறைக்கப்பட்டிருந்தாலும், விசுவாசத்தின் செவிகளினால்: "மரித்தேன், ஆனாலும், இதோ, சதாகாலங்களிலும் உயிரோடிருக்கிறேன்" (வெளிப்படுத்தல் 1:18) என்று அவர் கூறுவதை நாம் கேட்க முடியும். நான் உனது துயரங்களைத் தாங்கியிருக்கிறேன். உன்னுடைய போராட்டங்களை அனுபவித்து இருக்கிறேன். உனது சோதனைகளைச் சந்தித்திருக்கிறேன். உனது கண்ணீர்களை நான் அறிந்திருக்கிறேன். நானும் அழுதிருக்கிறேன். எந்த மனிதனுடைய செவியாலும் கேட்கமுடியாதவிதத்தில் மிகுந்த ஆழத்திலிருக்கும் துயரங்களை நான் அறிந்திருக்கிறேன். உன்னை அனாதை என்றும் கைவிடப்பட்டவன் என்றும் நினைத்துக்கொள்ளாதே. பூமியின் எந்த ஒரு இருதயத்தின் நாடியிலும் பதில் ஒலி கிடைக்கும்படி உனது வேதனை தொடப்படாவிட்டாலும் என்னைப் பார்த்து உயிர்வாழ்வாயாக. "மலைகள் விலகினாலும், பர்வதங்கள் நிலைபெயர்ந்தாலும், என் கிருபை உன்னைவிட்டு விலகாமலும், என் சமாதானத்தின் உடன்படிக்கை நிலைபெயராமலும் இருக்கும்"—ஏசாயா 54:10. (19)

ஒரு மேய்ப்பன் அவனுடைய ஆடுகளை எந்த அளவிற்கு அதிகமாக நேசித்தாலும் அதைவிட அவன் அவனுடைய குமாரர்களையும் குமாரத்திகளையும் அதிகமாக நேசிக்கிறான். இயேசு நமது மேய்ப்பனாக மட்டுமிராமல், நமது நித்திய பிதாவாகவும் இருக்கிறார். "நானே நல்ல மேய்ப்பன்; பிதா என்னை அறிந்திருக்கிறதுபோலவும், நான் பிதாவை அறிந்திருக்கிறதுபோலவும், நான் என்னுடையவைகளை அறிந்தும் என்னுடையவைகளால் அறியப்பட்டுமிருக்கிறேன்; ஆடுகளுக்காக என் ஜீவனையும் கொடுக்கிறேன்"—யோவான் 10:14,15. எப்படிப்பட்ட ஒரு அறிவிப்பாக இது இருக்கிறது! பிதாவின் மடியில் இருக்கும் ஒரே பேறான குமாரன் என் உடன் மனிதனாக இருக்கிறார் என்று தேவன் அறிவிக்கின்றார் (சகரியா 13:7). அவருக்கும் நித்திய பிதாவிற்கும் இடையிலுள்ள தொடர்பு பூமியில் கிறிஸ்துவிற்கும் அவருடைய பிள்ளைகளுக்கும் இடையிலுள்ள தொடர்பை குறிப்பதாக எடுத்துக்கொள்ளப்பட்டிருக்கிறது! (20)

நாம் பிதாவின் ஈவாகவும், அவருடைய கிரியைகளின் பரிசாகவும் இருப்பதினால் இயேசு நம்மை நேசிக்கிறார். அவர் நம்மை அவரது பிள்ளைகளைப்போல நேசிக்கிறார். வாசகரே! அவர் உங்களை நேசிக்கிறார். இதைவிட அதிகப் பெரிதான அதிக நன்மையானதாகப் பரலோகத்தினாலுங்கூட அருள முடியாது. எனவே நம்புங்கள். (21)

உலகம் முழுவதிலும் தவறான மேய்ப்பர்களால் தவறாக நடத்தப்பட்டிருந்த ஆத்துமாக்களைப்பற்றி இயேசு சிந்தித்தார். அவர் எவர்களைத் தமது மந்தையின் ஆடுகளாகச் சேர்த்துக்கொள்ள ஏங்கியிருந்தாரோ, அவர்கள் ஓநாய்களுக்கு நடுவில் சிதறடிக்கப்பட்டிருந்தனர். “இந்தத் தொழுவத்திலுள்ளவைகளல்லாமல் வேறே ஆடுகளும் எனக்கு உண்டு; அவைகளையும் நான் கொண்டுவர வேண்டும், அவைகள் என் சத்தத்துக்குச் செவிகொடுக்கும், அப்பொழுது ஒரே மந்தையும் ஒரே மேய்ப்பனுமாகும்” என்று அவர் கூறினார். (22)

“நான் என் ஜீவனை மறுபடியும் அடைந்துகொள்ளும்படிக்கு அதைக் கொடுக்கிறபடியினால் பிதா என்னில் அன்பாயிருக்கிறார்.” அதாவது, பிதா உங்களை நேசிக்கிறார்; உங்களை மீட்பதற்காக நான் என்னுடைய ஜீவனைக் கொடுத்ததினால் அவர் என்னை இன்னும் அதிகமாக நேசிக்கிறார். உங்களுடைய பிணையாளியாகவும் பதிலாளியாகவும் ஆனதினால்—என்னுடைய ஜீவனை நான் ஒப்படைத்ததினால்—உங்களுடைய பாடுகளையும் மீறுதல்களையும் எடுத்துக்கொண்டதினால்—நான் என்னுடைய பிதாவிற்கு மிகவும் அருமையானவனாக்கப்பட்டிருக்கிறேன். (23)

“நான் என் ஜீவனை மறுபடியும் அடைந்துகொள்ளும்படிக்கு அதைக் கொடுக்கிறபடியினால் ... ஒருவனும் அதை என்னிடத்திலிருந்து எடுத்துக்கொள்ளமாட்டான்; நானே அதைக் கொடுக்கிறேன், அதைக் கொடுக்கவும் எனக்கு அதிகாரம் உண்டு, அதை மறுபடியும் எடுத்துக்கொள்ளவும் எனக்கு அதிகாரம் உண்டு.” மனிதக் குடும்பத்தின் அங்கத்தினராக அவர் சாவுக்கேதுவானவராக இருந்தபோது, தேவனாக அவர் உலகத்தின் ஜீவ ஊற்றாக இருந்தார். மரணம் வருவதைத் தடுத்து நிறுத்தி, அதன் ஆளுகையின்கீழ் வருவதற்கு அவரால் மறுத்திருக்கமுடியும். ஆனால் ஜீவனையும் அழியாமையையும் வெளிச்சத்திற்குக் கொண்டுவருவதற்காக அவர் வலியவந்து தாமாகவே அவரது ஜீவனைக் கொடுத்தார். அவர் உலகத்தின் பாவத்தைச் சுமந்து, அதன் சாபத்தைத் தாங்கி, மனிதன் நித்தியகாலமாக மரித்துவிடக்கூடாது என்பதற்காக ஒரு தியாக பலியாக அவருடைய ஜீவனை விட்டுக்கொடுத்தார். “மெய்யாகவே அவர் நம்முடைய பாடுகளை ஏற்றுக்கொண்டு, நம்முடைய துக்கங்களைச் சுமந்தார்;

நாமோ, அவர் தேவனால் அடிபட்டு வாதிக்கப்பட்டு, சிறுமைப்பட்டவரென்று எண்ணினோம். நம்முடைய மீறுதல்களினிமித்தம் அவர் காயப்பட்டு, நம்முடைய அக்கிரமங்களினிமித்தம் அவர் நொறுக்கப்பட்டார்; நமக்குச் சமாதானத்தை உண்டுபண்ணும் ஆக்கினை அவர்மேல் வந்தது; அவருடைய தழும்புகளால் குணமாகிறோம். நாமெல்லாரும் ஆடுகளைப்போல வழிதப்பித் திரிந்து, அவனவன் தன் தன் வழியிலே போனோம்; கர்த்தரோ நம்மெல்லாருடைய அக்கிரமத்தையும் அவர்மேல் விழப்பண்ணினார்"—ஏசாயா 53:4–6. (24) ★

# 53

# கலிலேயாவிலிருந்து கடைசிப் பயணம்...!

**லூக்கா 9:51–56; 10:1–24**

**(The Desire of Ages, pp. 485–496)**

கிறிஸ்துவின் ஊழியம் அதன் முடிவை நெருங்கினபோது, அவருடைய பணியின் தன்மையில் ஒரு மாறுதல் காணப்பட்டிருந்தது. இதுவரை அவர் கிளர்ச்சியையும் விளம்பரத்தையும் தவிர்த்திருந்தார். பிரசித்தமான உற்சாகம் அவருக்கு அனுகூலமாக, கட்டுப்பாட்டிற்கு அப்பால் எழும்புவதுபோலக் காணப்பட்டபோது, அவர் மக்களின் மரியாதையை ஏற்க மறுத்து, இடம்விட்டு இடத்திற்கு விரைவாகக் கடந்துசென்றிருந்தார். அவரை கிறிஸ்து என்று ஒருவரும் அறிவிக்கக்கூடாது என்று அவர் மீண்டும் கட்டளையிட்டிருந்தார். (1)

கூடாரப்பண்டிகையின் நேரத்தில் எருசலேமிற்கான அவருடைய பயணம் விரைவாகவும் இரகசியமானதாகவும் இருந்தது. தம்மை மேசியா என்று பொதுமக்கள்முன் காட்டும்படி அவருடைய சகோதரர்களால் அவர் வற்புறுத்தப்பட்டிருந்தபோது: "என் வேளை இன்னும் வரவில்லை" (யோவான் 7:6) என்பது அவருடைய பதிலாக இருந்தது. கவனிக்கப்படாதவிதமாக எருசலேமிற்கு பயணம் மேற்கொண்டு, திரளானவர்களால் கவனிக்கப் படாதவராகவும் அவரைக்குறித்த பொது அறிவிப்பு இன்றியும் கனப்படுத்தப் படாதவராகவும் நகரத்திற்குள் பிரவேசித்தார். ஆனால் அவருடைய கடைசிப் பயணத்தில் அப்படி இருக்கவில்லை. ஆசாரியர்கள் அதிபதிகள் ஆகியோரின் வன்மம் காரணமாக, சிறிது காலத்திற்கு அவர் எருசலேமைவிட்டுச் சென்றிருந்தார். ஆனால் இப்பொழுது அவர் மிக அதிகமாக பொதுமக்களுக்குத் தெரியக்கூடியவிதமாக ஒரு சுற்றுச்சாலையின் வழியாக இதுவரை ஒருபோதும் செய்திராதவிதமாக அவருடைய வருகைபற்றிய அறிவிப்பு முன்செல்ல, எருசலேமை நோக்கிப் புறப்பட்டார். அவருடைய மாபெரும் தியாகபலியின்

காட்சியை முன்நோக்கியவராக அவர் சென்றுகொண்டிருந்தார். அதன்மீது மக்களின் கவனம் திருப்பப்படவேண்டும். (2)

“சர்ப்பமானது மோசேயினால் வனாந்தரத்திலே உயர்த்தப்பட்டதுபோல மனுஷகுமாரனும்,... உயர்த்தப்படவேண்டும்”–யோவான் 3:14,15. சுகமடைவதற்கேதுவான அடையாளமாக உயர்த்தப்பட்டிருந்த சர்ப்பத்திற்கு இஸ்ரவேலர்கள் அனைவரின் கண்களும் திருப்பப்பட்டிருந்ததைப்போல தொலைந்துபோன உலகத்திற்கு இரட்சிப்பைக் கொண்டுவந்திருந்த தியாகபலியான கிறிஸ்துவின்மீது எல்லோருடைய கண்களும் இழுக்கப்பட வேண்டும். (3)

மேசியாவின் பணியைப்பற்றிய ஒரு தவறான எண்ணமும் இயேசுவின் தெய்வீகக் குணத்தின்மீதுள்ள விசுவாசமின்மையும்தான், கூடாரப் பண்டிகையில் பொதுமக்கள்முன் காட்டும்படி அவரை வற்புறுத்த அவருடைய சகோதரர்களை நடத்தியிருந்தது. இப்பொழுது அதனுடன் உறவுள்ள ஒரு ஆவியுடன் எருசலேமிற்கான அவருடைய பயணத்தை அவர் செய்வதிலிருந்து சீடர்கள் அவரைத் தடைசெய்திருந்திருக்கக் கூடும். அவருக்கு அங்கு என்ன நடக்கும் என்பதைப்பற்றிய அவருடைய வார்த்தைகளை அவர்கள் நினைத்திருந்து, சமயத்தலைவர்களின் சாவிற்கேதுவான பகையை அவர்கள் அறிந்திருந்து, அவர்களுடைய ஆண்டவரை வேறுவழியில்லாமல் அங்கு செல்லவேண்டாமெனத் தடைசெய்திருந்திருக்கக் கூடும். (4)

கிறிஸ்துவிற்குப் பிரியமான சீடர்களின் பயங்கள், ஏமாற்றம், நம்பிக்கையின்மை ஆகியவைகளுக்கு எதிராக, அவர்கள் பாதையில் முன்நோக்கிச் செல்லுவது என்பது கிறிஸ்துவின் இருதயத்திற்கு ஒரு கசப்பான கடினமான வேலையாக இருந்தது. எருசலேமில் அவர்களுக்குக் காத்திருந்த மனவேதனை நம்பிக்கையிழப்பு ஆகியவைகளுக்கு அவர்களை முன்னாக நடத்துவது கடினமாக இருந்தது. மனுஷகுமாரனின்மீது தனது சோதனைகளை அழுத்துவதற்கு சாத்தான் அருகில் இருந்தான். மரணத்தை நிச்சயமாக்கிக்கொள்ளுவதற்காக இப்போது அவர் ஏன் எருசலேமிற்குச் செல்லவேண்டும்? ஜீவ அப்பத்திற்காகப் பசியுள்ள ஆத்துமாக்கள் அவரைச் சுற்றிலும் எங்கும் இருந்தன. சுகமளிக்கும் அவருடைய வார்த்தைக்காக காத்துக்கொண்டு துன்பப்படுகிறவர்கள் ஒவ்வொரு பக்கத்திலும் எங்கும் இருந்தனர். அவருடைய கிருபையின் சுவிசேஷத்தினால் செய்யப்படவேண்டியதாக இருந்தபணி, இப்பொழுதுதான் ஆரம்பமாகியிருந்தது. அவர் ஆண்மகனின் செழுமைப்பருவத்தில், சக்தியும் மனோபலமும் நிறைந்தவராக இருந்தார். அவருடைய கிருபையின் வார்த்தைகளுடனும் சுகமளிக்கும் வல்லமையின் தொடுதலுடனும்

உலகத்தின் விசாலமான களங்களுக்கு ஏன் முன்நோக்கிச் செல்லக்கூடாது? இருளடைந்தும், துயரிலும் இருக்கும் இலட்சக்கணக்கானோருக்கு ஒளியையும் மகிழ்ச்சியையும் கொடுக்கின்ற சந்தோஷத்தை ஏன் அவருக் கென்று அவர் எடுத்துக்கொள்ளக்கூடாது? விசுவாசத்தில் பலவீனமாகவும், புரிந்துகொள்ளுவதில் மந்தமாகவும், செயலாற்றுவதில் தாமதமாகவும் இருக்கின்ற சீடர்களிடத்திற்கு அறுவடையின் சேகரிப்பை ஏன் விடவேண்டும்? இப்பொழுது மரணத்தைச் சந்தித்து, ஊழியத்தை அதன் குழந்தைப் பருவத் திலேயே ஏன் விட்டுவிடவேண்டும்? வனாந்தரத்தில் கிறிஸ்துவை எதிர்த்த எதிரி இப்பொழுது பயங்கரமானதும் தந்திரமிக்கதுமான சோதனைகளினால் அவரைத் தாக்கினான். விநாடி நேரத்திற்கு இயேசு இணங்கியிருந்தால், தம்மைக் காப்பாற்றிக்கொள்வதற்காக ஏதாவது மிகக் குறைவாக அவர் தமது பாதையின் நடைமுறையை மாற்றியிருந்தால், சாத்தானின் ஏதுகரங்கள் வெற்றியடைந்திருக்கும். இந்த உலகம் இழக்கப்பட்டிருக்கும். (5)

ஆனால் எருசலேமிற்குச் செல்லுவதற்காக அவருடைய முகத்தை அவர் உறுதியுடன் திருப்பியிருந்தார். பிதாவின் சித்தம் ஒன்று மட்டுமே அவருடைய வாழ்க்கையின் ஒரே பிரமாணமாக இருந்தது, அவருடைய சிறுவயதில் பையனாக தேவாலயத்திற்குச் சென்றபோது, மரியாளிடம்: "என் பிதாவுக்கடுத்தவைகளில் நான் இருக்கவேண்டியதென்று அறியீர்களா" (லூக்கா 2:49) என்று கூறியிருந்தார். கானாவூரில் அவருடைய அற்புதம் செய்யும் வல்லமையை வெளிப்படுத்தவேண்டும் என்று மரியாள் விரும்பினபோது: "என் வேளை இன்னும் வரவில்லை" (யோவான் 2:4) என்பது அவருடைய பதிலாக இருந்தது. பண்டிகைக்குச் செல்லும்படி அவருடைய சகோதரர்கள் அவரை வற்புறுத்தினபோது, அதே வார்த்தைகளினால் அவர்களுக்குப் பதில் கொடுத்தார். ஆனால் தேவனுடைய பெரிய திட்டத்தில் மனிதர்களின் பாவங்களுக்காக தம்மைத்தாமே அவர் பலியாகச் செலுத்தும்படியான நேரம் நியமிக்கப்பட்டிருந்தது, அந்த நேரம் விரைவில் வரவேண்டியதாக இருந்தது. அவர் தோற்கவோ அல்லது தடுமாறவோ மாட்டார். அவருடைய உயிரை எடுப்பதற்காக அவருடைய எதிரிகள் எங்கு நீண்டகாலமாகத் திட்டமிட்டிருந்தனரோ, அந்த எருசலேமிற்கு நேராக அவருடைய காலடிகள் திரும்பியிருக்கின்றன. இப்பொழுது அவர் தமது ஜீவனைக் கொடுப்பார். உபத்திரவம், மறுதலிப்பு, புறக்கணிப்பு, ஆக்கினைத் தீர்ப்பு, மரணம் ஆகியவைகளுக்கு நேராக அவருடைய முகத்தை அவர் உறுதியுடன் திருப்பிவைத்திருக்கிறார். (6)

"தமக்கு முன்னாகத் தூதர்களை அனுப்பினார். அவர்கள் போய், அவருக்கு இடத்தை ஆயத்தம்பண்ணும்படி சமாரியருடைய ஒரு

கிராமத்திலே பிரவேசித்தார்கள்.” ஆனால் அவர் எருசலேமை நோக்கிச் சென்றுகொண்டிருந்ததினால் அந்த மக்கள் அவரை ஏற்றுக்கொள்ள மறுத்துவிட்டனர். தாங்கள் வெறுத்த யூதர்களுக்கு அவர் முக்கியத்துவம் கொடுத்திருந்ததினால் இப்படிச் செய்வதாக பொருட்படுத்தினர். அவர் கெரிசீம் மலையில் இருந்த ஆலயத்தைத் திரும்ப எடுத்துக்கட்டவும் ஆராதனை நடத்தவும் வந்திருந்தாரானால், அவர்கள் அவரை மகிழ்ச்சியுடன் ஏற்றுக்கொண்டிருந்திருப்பார்கள். ஆனால் அவர் எருசலேமிற்குச் சென்று கொண்டிருந்தார். எனவே அவர்கள் அவருக்கு உபசாரம் செய்யமாட்டார்கள். பரலோகத்தால் அருளப்பட்டிருந்த மிகவும் மேலான ஈவை அவர்களுடைய வாசல்களிலிருந்து திருப்பி அனுப்பிவிட்டனர் என்பதை அவர்கள் சிறிதும் உணராதிருந்தனர். இயேசு அவரை ஏற்றுக்கொள்ளும்படி மனிதர்களை அழைத்தார். மிகவும் மேலான ஆசீர்வாதங்களை அவர்களுக்கு அருளுவதற்காக அவர்கள் அவருக்குச் சமீபமாக வரவேண்டும் என்பதற்காக அவர்களுடைய கைகளிலிருந்து ஆதரவைக் கேட்டார். ஏனெனில் அவருக்கு நேராகக் காட்டப்பட்ட ஒவ்வொரு அனுகூலத்திற்கும் விலைமதிப்புமிக்க ஒரு கிருபையை அவர் திருப்பிக்கொடுத்திருந்தார். ஆனால் சமாரியர்களுடைய தவறான எண்ணங்களினாலும் மதவிரோதத்தினாலும் அவை அனைத்தும் இழக்கப்பட்டது. (7)

கிறிஸ்துவின் தூதுவர்களாக அனுப்பப்பட்டிருந்த யாக்கோபும் யோவானும் அவர்களுடைய கர்த்தருக்குக் காட்டப்பட்ட அவமானத்தில் மிகவும் அதிகமாகக் கோபமடைந்திருந்தனர். எந்த ஒருவர் அவருடைய பிரசன்னத்தினால் சமாரியர்களை கனப்படுத்திக் கொண்டிருந்தாரோ, அவர் கொடூரமானவிதமாக நடத்தப்பட்டதற்காக யாக்கோபும் யோவானும் கோபத்தால் நிரம்பியிருந்தனர். சமீபத்தில்தான் அவர்கள் அவருடன் மறுரூப மலையில் இருந்தனர். அவர் தேவனால் மகிமைப்படுத்தப்பட்டிருந்ததையும் மோசேயினாலும் எலியாவினாலும் கனப்படுத்தப்பட்டிருந்ததையும் கண்டிருந்தனர். சமாரியர்களின் பகுதியிலிருந்து வெளிக்காட்டப்பட்ட இந்த கனவீனம் காணப்படக்கூடிய தண்டனை இல்லாமல் கடந்துசெல்லும்படி விட்டுவிடப்படவேண்டுமா? என்று அவர்கள் நினைத்தார்கள். (8)

அவர்கள் கிறிஸ்துவினிடத்திற்கு வந்து சமாரியர்களுடைய வார்த்தைகளைக் கூறி, ஒரு இரவு தங்குவதற்கும்கூட அனுமதிக்க மறுத்துவிட்டனர் என்றனர். அவருக்கு நேராக ஒரு கொடூரமான தவறு செய்யப்பட்டது என்று அவர்கள் நினைத்தார்கள். கள்ளத்தீர்க்கதரிசிகளை எலியா கொலைசெய்திருந்த கர்மேல் மலையைத் தூரத்தில் அவர்கள் கண்டு, “ஆண்டவரே, எலியா செய்ததுபோல, வானத்திலிருந்து அக்கினி

இறங்கி இவர்களை அழிக்கும்படி நாங்கள் கட்டளையிட உமக்குச் சித்தமா" என்றார்கள். அவர்களுடைய வார்த்தையினால் இயேசு அதிக வேதனையடைந்தார் என்பதைக் கண்டு ஆச்சரியமடைந்தார்கள். "நீங்கள் இன்ன ஆவியுள்ளவர்களென்பதை அறியீர்கள் ... மனுஷகுமாரன் மனுஷருடைய ஜீவனை அழிக்கிறதற்கு அல்ல, இரட்சிக்கிறதற்கே வந்தார்" என்ற கடிந்துகொள்ளுதலை கேட்டபோது, இன்னும் அதிக ஆச்சரியமடைந்தார்கள். பின்பு அவர் வேறொரு கிராமத்திற்குச் சென்றார். (9)

கிறிஸ்துவை ஏற்றுக்கொள்ளும்படி மனிதர்களை வற்புறுத்துவது அவர்களுடைய ஊழியத்தின் பகுதியாக இல்லை. சாத்தானாலும் அவனுடைய ஆவியாலும் செயலாற்றத் தூண்டப்பட்டுள்ளவர்கள்தான் மனச்சாட்சியை நிர்பந்தஞ்செய்கின்றனர். நீதியின்மேலுள்ள பேரார்வம் என்னும் பாசாங்கின்கீழ், பொல்லாத தூதர்களின் கூட்டணியிலுள்ள மனிதர்கள், உடன் மனிதர்களை மத சம்பந்தமான எண்ணங்களுக்கு மாற்றஞ்செய்வதற்காக அவர்கள்மீது பாடுகளைக் கொண்டுவருகின்றனர். ஆனால் கிறிஸ்து எப்பொழுதும் இரக்கத்தைக் காட்டிக்கொண்டிருந்து, அவருடைய அன்பை வெளிப்படுத்துவதினால் வெற்றியடைய வகைதேடிக்கொண்டிருக்கிறார். ஆத்துமாவில் ஒரு போட்டியை அனுமதிக்கவோ அல்லது அரைகுறையான சேவையை ஏற்றுக்கொள்ளவோ அவரால் முடியாது. ஆனால் அன்பின் நெருக்கி ஏவுதலின்கீழ் மனப்பூர்வமாகச் சரணடைகின்ற இருதயத்தை, தானாகவே வலியவந்து செய்யக்கூடிய சேவையைமட்டுமே அவர் வாஞ்சிக்கிறார். நாம் சாத்தானின் குணத்தை கொண்டிருக்கிறோம் என்பதற்கு, நமது செயலை பாராட்டாதவர்களை அல்லது நமது யோசனைகளுக்கு எதிராக இருப்பவர்களை உபத்திரவஞ்செய்து அழிக்கிற நமது தன்மையைக் காட்டிலும் அதிகமான சான்று வேறு எதுவும் இல்லை. (10)

ஆவி, ஆத்துமா, சரீரம் ஆகியவைகளை உடைய ஒவ்வொரு மானிடனும் தேவனுடைய உடைமையாக இருக்கிறான். எல்லாரையும் மீட்கும்படிக் கிறிஸ்து மரித்தார். மனிதன், மத விரோதத்தின்மூலமாக இரட்சகரின் இரத்தத்தால் விலைக்கு வாங்கப்பட்டவர்களின்மீது பாடுகளை கொண்டுவருவதைவிட வேறு எதுவும் தேவனை அதிகமாக வேதனைப்படுத்துவது இல்லை. (11)

"அவர் அவ்விடம் விட்டெழுந்து, யோர்தானுக்கு அக்கரையிலுள்ள தேசத்தின் வழியாய் யூதேயாவின் எல்லைகளில் வந்தார். ஜனங்கள் மறுபடியும் அவரிடத்தில் கூடிவந்தார்கள். அவர் தம்முடைய வழக்கத்தின்படியே மறுபடியும் அவர்களுக்குப் போதகம்பண்ணினார்"—மாற்கு 10:1. (12)

கிறிஸ்துவின் ஊழியத்தின் முடிவில் குறிப்பட்ட ஒரு பகுதி யூதேயாவிற்கு அப்பல் இருந்த பெரேயா மாநிலத்தில் செலவிடப்பட்டிருந்தது. இங்கு அவருடைய ஊழியத்தின் ஆரம்பத்தில் கலிலேயாவில் இருந்ததுபோல அவருடைய காலடியில் திரளானவர்கள் நெருக்கமாகக் கூடியிருக்கவே, அவருடைய முந்தைய போதனைகளில் அதிகமானவை மீண்டும் போதிக்கப்பட்டது. (13)

அவர் பன்னிரண்டு பேரை அனுப்பியிருந்ததைப்போல "இவைகளுக்குப் பின்பு கர்த்தர் வேறே எழுபதுபேரை நியமித்து, தாம் போகும் சகல பட்டணங்களுக்கும் இடங்களுக்கும் அவர்களைத் தமக்கு முன்னே இரண்டிரண்டு பேராக அனுப்பினார்" (லூக்கா 10:1). இந்த சீடர்கள் அவர்களுடைய ஊழியப் பயிற்சிக்காக சிறிது காலம் அவருடன் இருந்தனர். அந்தப் பன்னிருவரும் தனிப்பட்ட ஊழியத்தில் முதல் தடவையாக அனுப்பப்பட்டபோது, மற்ற சீடர்கள் இயேசு கலிலேயாவிற்கூடாக மேற்கொண்ட அவருடைய பயணத்தில் அவருடன் தொடர்ந்து சென்றிருந்தனர். இவ்விதமாக அவர்கள் அவருடன் நெருக்கமாகத் தோழமையையும் நேரடியான சொந்த உபதேசத்தையும் பெறுகின்ற வாய்ப்பை உடையவர்களாக இருந்தனர். இப்பொழுது இந்தப் பெரிய எண்ணிக்கையிலிருந்தவர்களுங்கூட ஒரு தனிப்பட்ட ஊழியத்தில் முன்செல்லவேண்டியவர்களாக இருந்தனர். (14)

அந்த எழுபதுபேருக்கும் கொடுக்கப்பட்டிருந்த கட்டளைகள் அந்தப் பன்னிருவருக்கும் கொடுக்கப்பட்டிருந்ததைப் போலவே இருந்தது. ஆனால் புறஜாதியினரின் நகரங்களிலும் அல்லது சமாரியர்களின் நகரங்களிலும் பிரவேசிக்கக்கூடாது என்று பன்னிருவருக்கும் கொடுக்கப்பட்டிருந்த கட்டளை அந்த எழுபது பேருக்கும் கொடுக்கப்பட்டிருக்கவில்லை. இப்பொழுதுதான் கிறிஸ்து சமாரியர்களால் வெறுத்தொதுக்கப்பட்டிருந்தார். என்றாலும் அவர்கள்மீதிருந்த அவருடைய அன்பு மாறாததாக இருந்தது. அவருடைய நாமத்தில் அந்த எழுபதுபேரும் சென்றபோது, முதலில் சமாரியாவின் நகரங்களைச் சந்தித்தனர். (15)

சமாரியாவிற்கு இரட்சகரது நேரடியான சந்திப்பு, அதற்குப்பின் நல்லசமாரியனைப் பற்றிய புகழ்ச்சி, கிறிஸ்துவிற்கு நன்றிகூறுவதற்காக வந்த பத்துகுஷ்டரோகிகளில் ஒருவனான சமாரியன் ஆகியவை அந்த சீடர்களுக்கு முக்கியத்துவம் நிறைந்ததாக இருந்தது, அந்தப் பாடங்கள் அவர்களுடைய இதயங்களில் ஆழமாகப் பதிந்திருந்தது. இயேசு அவருடைய பரமேறுதலுக்குச் சற்றுமுன் அவர்களுக்கு நியமித்த ஊழியத்தில் அவர்கள் முதலாவதாக சுவிசேஷத்தைப் பிரசங்கஞ்செய்யவேண்டிய இடங்களாக எருசலேமுடனும் யூதேயாவுடனும் சமாரியாவைக் குறிப்பிட்டிருந்தார்.

அவருடைய ஊழியத்தில் இருந்த இந்தப் போதனை அவர்களை செய்துமுடிக்கும்படி ஆயத்தப்படுத்தியிருந்தது. அவர்களுடைய ஆண்டவரின் நாமத்தில் அவர்கள் சமாரியாவிற்குச் சென்றபோது, அவர்களை ஏற்றுக்கொள்ளுவதற்கு அந்த மக்கள் ஆயத்தமாயிருந்ததை கண்டார்கள். கிறிஸ்துவின் புகழ்ச்சியான வார்த்தைகளையும் அவர்களுக்கான அவருடைய இரக்கத்தின் செயல்களையும்பற்றி சமாரியர்கள் கேள்விப் பட்டிருந்தனர். அவருக்கு நேரான அவர்களுடைய கொடூரமான நடத்தைக்கு எதிராக அவர்கள்மீது அன்பின் எண்ணங்களைமட்டுமே உடையவராக அவர் இருந்ததைக் கண்டபோது, அவர்களுடைய இருதயங்கள் வெல்லப்பட்டிருந்தன. அவர் பரமேறிச்சென்றபின், அவருடைய தூதுவர்களை அவர்கள் வரவேற்கவே, ஒருசமயத்தில் அதிகக் கசப்பான எதிரிகளுக்கு நடுவிலிருந்து சீடர்கள் விலைமதிப்புமிக்க அறுடையைச் சேகரித்திருந்தனர். "அவர் நெரிந்த நாணலை முறியாமலும், மங்கியெரிகிற திரியை அணையாமலும், நியாயத்தை உண்மையாக வெளிப்படுத்துவார்." "அவருடைய நாமத்தின்மேல் புறஜாதியார் நம்பிக்கையாயிருப்பார்கள்"– ஏசாயா 42:3;மத்தேயு 12:21. (16)

எழுபது பேரை அனுப்பும்போது, பன்னிரண்டு பேருக்கும் கட்டளையிட்டிருந்ததைப்போல எங்கு அவர்கள் வரவேற்கப்படாமல் இருந்தார்களோ அங்கு செல்வதைத் தவிர்க்கவேண்டுமென்று கட்டளை யிட்டிருந்தார். "யாதொரு பட்டணத்தில் நீங்கள் பிரவேசிக்கிறபொழுது, ஜனங்கள் உங்களை ஏற்றுக்கொள்ளாவிட்டால் அதின் வீதிகளிலே நீங்கள் போய்: எங்களில் ஒட்டின உங்கள் பட்டணத்தின் தூசியையும் உங்களுக்கு விரோதமாய்த் துடைத்துப்போடுகிறோம்; ஆயினும் தேவனுடைய ராஜ்யம் உங்களுக்குச் சமீபமாய் வந்திருக்கிறதென்பதை அறிந்துகொள்வீர்களாக" என்று சொல்லுங்கள் என்றார். ஆத்திரமிக்க உள்நோக்கத்திலிருந்தோ அல்லது அவர்களுடைய மேன்மை காயப்பட்டிருந்ததினாலோ அவர்கள் அதைச்செய்யக்கூடாது. கர்த்தருடைய தூதையோ அலலது தூதுவர்களையோ மறுப்பது எவ்வளவு கொடூரமான ஒரு காரியம் என்பதைக் காட்டவேண்டியவர்களாக இருந்தனர். கர்த்தருடைய ஊழியக்காரர்களைப் புறக்கணிப்பது கர்த்தரையே புறக்கணிப்பதாக உள்ளது. (17)

"அந்தப் பட்டணத்திற்கு நேரிடுவதைப்பார்க்கிலும் அந்த நாளிலே சோதோம் நாட்டிற்கு நேரிடுவது இலகுவாயிருக்கும் என்று உங்களுக்குச் சொல்லுகிறேன்" என்று இயேசு மேலும் கூறினார். அதற்குப்பின் அவருடைய ஊழியத்தின் அதிகமான பகுதி எங்கு செலவிடப்பட்டிருந்ததோ அந்த இடங்களான கலிலேய நகரங்களை நோக்கி அவருடைய மனம் பின்னாகத்

திரும்பினது. “கோராசீன் பட்டணமே, உனக்கு ஐயோ, பெத்சாயிதா பட்டணமே, உனக்கு ஐயோ, உங்களில் செய்யப்பட்ட பலத்த செய்கைகள் தீருவிலும் சீதோனிலும் செய்யப்பட்டிருந்ததானால், அப்பொழுதே இரட்டுடுத்தி, சாம்பலில் உட்கார்ந்து, மனந்திரும்பியிருப்பார்கள். நியாயத்தீர்ப்புநாளில் உங்களுக்கு நேரிடுவதைப்பார்க்கிலும், தீருவுக்கும் சீதோனுக்கும் நேரிடுவது இலகுவாயிருக்கும். வானபரியந்தம் உயர்த்தப்பட்ட கப்பர்நகூமே, நீ பாதாளபரியந்தம் தாழ்த்தப்படுவாய்” என்னும் துயர்தரும் வார்த்தைகளை அவர் விளம்பினார். (18)

பரலோகத்தின் மிக அதிகமான செல்வமிக்க ஆசீர்வாதங்கள் கலிலேயாக் கடலின் அருகிலிருந்த சுறுசுறுப்பான தீவிரமான நகரங்களுக்கு அருளப்பட்டிருந்தன. அவைகளுக்கு உள்ளேயும் வெளியேயும் ஜீவாதிபதி நாள்தோறும் சென்றிருந்தார். இரட்சகரின் காலடிகளில் நெருக்கமாகக் கூடியிருந்த திரளானவர்களின்மீது தீர்க்கதரிசிகளும் அரசர்களும் பார்ப்பதற்காக ஏங்கிக்கொண்டிருந்த தேவனுடைய மகிமை பிரகாசித்திருந்தது. அப்படியிருந்துங்கூட பரலோகத்தின் அந்த ஈவை அவர்கள் தள்ளிப்போட்டனர். (19)

இந்தப் புதிய ஆசிரியரால் போதிக்கப்பட்ட புதிய கோட்பாடுகளைப் பெற்றுக்கொள்வதற்கு எதிராக மக்களை ரபிமார்கள் முன்யோசனையுள்ள பெரும் வெளிக்காட்டுதலுடன் எச்சரித்திருந்தனர். ஏனெனில் அவருடைய கோட்பாட்டின் விளக்கங்களும் நடைமுறைகளும் ரபிமார்களின் போதனை களுக்கு எதிராக இருந்தன. தேவனுடைய வார்த்தையைத் தங்களுக்கென்று புரிந்துகொள்வதற்கு வகைதேடுவதற்குப் பதிலாக ஆசாரியர்களும் பரிசேயர் களும் எவைகளைப் போதித்திருந்தனரோ அவைகளுக்கு மக்கள் மதிப்புக் கொடுத்திருந்தனர். தேவனைக் கனப்படுத்துவதற்குப் பதிலாக அவர்கள் ஆசாரியர்களையும் அதிபதிகளையும் கனப்படுத்தியிருந்து, அவர்களுடைய சொந்தப் பாரம்பரியங்களைக் காத்துக்கொள்வதற்காக சத்தியத்தைப் புறக்கணித்திருந்தனர். அநேகர் உணர்த்தப்பட்டும் ஏறத்தாழ இணங்கும்படிச் செய்யப்பட்டுமிருந்தனர். எனினும் அவர்களுடைய மன உணர்த்துதலின்படி செயல்படாமல் கிறிஸ்துவின் பக்கத்தில் சேராதவர்களாக இருந்தனர். ஒளி இருளாகத் தோன்றும்வரை சாத்தான் அவனுடைய சோதனைகளை முன்வைத்திருந்தான். இவ்விதமாக ஆத்துமாவின் இரட்சிப்பை மெய்ப்பித் திருக்கக்கூடிய சத்தியத்தை அநேகர் புறக்கணித்திருந்தனர். (20)

“இதோ, வாசற்படியிலே நின்று தட்டுகிறேன்” (வெளிப்படுத்தல் 3:20) என்று உண்மையும் சத்தியமுமுள்ள சாட்சி கூறுகிறார். தேவனுடைய வார்த்தையிலும் அவருடைய தூதுவர்களின்மூலமாகவும் உள்ள

ஒவ்வொரு எச்சரிப்பும் கடிந்துகொள்ளுதலும் இருதயக் கதவின்மீதுள்ள ஒரு தட்டுதலாக உள்ளது. உள்ளே பிரவேசிப்பதற்கான அனுமதியைக் கேட்பது இயேசுவின் குரலாக இருக்கிறது. செவிசாய்க்கப்படாத ஒவ்வொரு தட்டுதலுடன் திறப்பதற்கான குணம் பலவீனமடைகிறது. பரிசுத்தஆவியினால் உண்டாக்கப்படும் உணர்த்துதல்கள் இன்று மதிக்கப்படாவிட்டால் நாளைக்கு அது பலமுள்ளதாக இருக்காது. இருதயத்தின் உணர்த்துதல் குறைவாகி, வாழ்க்கையின் குறுகியகாலம்பற்றியும் அதற்கப்பாலுள்ள பெரும் நித்தியத்துவம்பற்றியும் நினைக்கமுடியாத ஆபத்து சுயநினைவற்ற நிலைக்குள் நழுவிவிடுகிறது. நியாயத்தீர்ப்பில் நமக்கு உண்டாகக்கூடிய ஆக்கினை நாம் தவறில் இருக்கிறோம் என்னும் உண்மையின் பலனாக இல்லாமல், சத்தியம் என்றால் என்ன என்று கற்றுக்கொள்வதற்குப் பரலோகம் நமக்கு அனுப்பின வாய்ப்புகளை நாம் அலட்சியஞ்செய்திருக்கிறோம் என்னும் உண்மையில் இருக்கிறது. (21)

அந்த எழுபதுபேரும் அப்போஸ்தலர்களைப்போலவே இயற்கைக்கு மேலான வரங்களை அவர்களுடைய ஊழியத்தின் முத்திரையாகப் பெற்றிருந்தனர். அவர்களுடைய பணி முடிவடைந்தபோது, "ஆண்டவரே, உம்முடைய நாமத்தினாலே பிசாசுகளும் எங்களுக்குக் கீழ்ப்படிகிறது" என்றார்கள். இயேசு பதிலாக: "சாத்தான் மின்னலைப்போல வானத்திலிருந்து விழுகிறதைக் கண்டேன்" என்றார். (22)

இயேசுவின் மனதிற்குமுன் கடந்தகாலம் எதிர்காலம் ஆகியவைகளின் காட்சிகள் காட்டப்பட்டன. பரலோகத்திலிருந்து லூசிபர் முதலாவதாக வெளியே தள்ளப்பட்டதை அவர் பார்த்தார். தமது மரணவேதனையின் போது அனைத்து உலகங்களுக்கும்முன்பாக வஞ்சகனின் குணம் வெளிப்படுத்தபடப்போவதைப் பார்த்தார். தொலைந்துபோன இனத்தின்மீட்பு என்றென்றைக்குமாக உறுதியாக்கப்பட்டதையும், சாத்தானின் தூண்டிவிட்ட குற்றச்சாட்டுகள், வஞ்சகங்கள், பாசாங்குகள் ஆகியவைகளுக்கு எதிராகப் பரலோகம் நித்தியமாகப் பாதுகாக்கப்பட்டிருக்கிறதையும் அறிவிக்கும் "முடிந்தது" (யோவான் 19:30) என்னும் சொல்லைக் கேட்டார். (23)

வானமண்டலங்களில் அதிபதி, அவனது கலகத்தினால் இவ்வளவு காலமாகக் களங்கப்படுத்தப்பட்டிருந்த பூமியில் அவனுடைய அழிவைச் சந்திக்கும் நாளான, வேதனையையும் வெட்கத்தையும் கொண்டிருந்த கல்வாரி சிலுவைக்கு அப்பாலிருந்த கடைசி பெரும் நாளை இயேசு எதிர்நோக்கியிருந்தார். தீமையின் செயல்கள் என்றென்றைக்குமாக முடிவடைந்துவிட்டதையும், தேவனுடைய சமாதானம் பரலோகத்தையும் பூமியையும் நிறைத்திருப்பதையும் இயேசு கண்டார். (24)

இயேசுவின் அடியார்கள் இதுமுதல் சாத்தானை தோற்கடிக்கப்பட்டுவிட்ட ஒரு எதிரியாகப் பார்க்கவேண்டியவர்களாக இருந்தனர். அவர்களுக்காக இயேசு சிலுவையின்மீது வெற்றியடையவேண்டியவராக இருந்தார். அந்த வெற்றியை தங்களுடைய சொந்த வெற்றியாக அவர்கள் ஏற்றுக்கொள்ளவேண்டுமென்று விரும்பியிருந்தார். “இதோ, சர்ப்பங்களையும் தேள்களையும் மிதிக்கவும், சத்துருவினுடைய சகல வல்லமையையும் மேற்கொள்ளவும் உங்களுக்கு அதிகாரங்கொடுக்கிறேன்; ஒன்றும் உங்களைச் சேதப்படுத்தமாட்டாது” என்றார். (25)

நொறுங்குண்ட ஒவ்வொரு ஆத்துமாவிற்கும் பரிசுத்த ஆவியான வருடைய சர்வ வல்லமை பாதுகாப்பாக இருக்கிறது. மனவருத்தத்துடனும் விசுவாசத்துடனும் அவருடைய பாதுகாப்பைக் கோரும் ஒருவரையும் சத்துருவின் வல்லமையின்கீழ் கடந்துசெல்ல கிறிஸ்து அனுமதிக்கமாட்டார். பரீட்சிக்கப்பட்டு சோதிக்கப்படுகிறவர்களின் பக்கத்தில் இரட்சகர் இருக்கிறார். தவறுதல், நஷ்டம், இயலாமை அல்லது தோல்வி ஆகியவைபோன்ற எதுவும் அவரிடம் இருக்கமுடியாது. நம்மைப் பலப்படுத்துகின்ற அவர்மூலமாக நம்மால் எல்லாவற்றையும் செய்யமுடியும். சோதனைகளும் பரீட்சைகளும் வரும்போது, எல்லாத் தொல்லைகளையும் சமாளிப்பதற்காக காத்திருக்காமல், உங்கள் உதவியாளரான இயேசுவை நோக்குங்கள். (26)

சாத்தானின் வல்லமையைப்பற்றி மிகைப்படுத்தி அதிகமாக நினைத்துப் பேசுகின்ற கிறிஸ்தவர்கள் இருக்கிறார்கள். அவர்கள் அவர்களுடைய எதிரியைப்பற்றி நினைக்கின்றனர்; அவனைக்குறித்து ஜெபிக்கின்றனர்; அவனைப்பற்றிப் பேசுகின்றனர்; அப்பொழுது அவன் அவர்களுடைய மனத்தோற்றத்தில் மேலும் மேலும் உயர்ந்து காணப்படுகிறான். சாத்தான் வல்லமையுள்ள ஒருவன் என்பது உண்மைதான். ஆனால் பொல்லாங்கனான ஒருவனைப் பரலோகத்திலிருந்து வெளியில் தள்ளின பலமிக்க ஒரு இரட்சகரை நாம் கொண்டிருப்பதற்காக தேவனுக்கு நன்றி செலுத்துவோம். சாத்தானின் வல்லமையை நாம் பெரிதுபடுத்தும்போது, அவன் சந்தோஷமடைகிறான். இயேசுவைப்பற்றி ஏன் பேசக்கூடாது? அவருடைய வல்லமையையும் அவருடைய அன்பையும் நாம் பெருமையாக ஏன் பேசக்கூடாது? (27)

உன்னதத்திலுள்ள சிங்காசனத்தை வளைத்து நிற்கும் வாக்குத்தத்தத்தின் வானவில் “தேவன், தம்முடைய ஒரேபேறான குமாரனை விசுவாசிக்கிறவன் எவனோ அவன் கெட்டுப்போகாமல் நித்தியஜீவனை அடையும்படிக்கு, அவரைத் தந்தருளி, இவ்வளவாய் உலகத்தில் அன்புகூர்ந்தார்” (யோவான் 3:16) என்பதற்கான நித்திய சாட்சியாக

இருக்கிறது. தேவன் அவருடைய மக்கள் தீமையோடு செய்கின்ற போராட்டத்தில் அவர்களை ஒருபோதும் கைவிடமாட்டார் என்று அது சாட்சி பகருகிறது. அந்த சிங்காசனம் இருக்கின்ற காலம்வரை பலம், பாதுகாப்பு ஆகியவகைளுக்கு அது ஒரு நிச்சயமாக இருக்கிறது. (28)

“ஆகிலும் ஆவிகள் உங்களுக்குக் கீழ்ப்படிகிறதற்காக நீங்கள் சந்தோஷப்படாமல், உங்கள் நாமங்கள் பரலோகத்தில் எழுதியிருக்கிறதற்காகச் சந்தோஷப்படுங்கள்” என்று அவர் மேலும் கூறினார். நீங்கள் தேவனைச் சார்ந்திருக்கிறீர்கள் என்னும் பார்வையை இழந்துபோகாமலிருக்கத்தக்கதாக பெற்றிருக்கிற வல்லமையைக்குறித்து சந்தோஷப்படாமலிருங்கள். உங்களுடைய ஆண்டவரின் ஆவியிலும் பலத்திலும் செயலாற்றுவதைவிடுத்து உங்களுடைய சுயபலத்தில் செயலாற்றும்படி, சுயத்தின்மீதுள்ள நம்பிக்கை உங்களுக்குள் வந்துவிடாமலிருக்கும்படி எச்சரிக்கையாக இருங்கள். ஊழியத்தில் ஏதாவதொரு அளவில் வெற்றி உண்டாகும்போது, அதன் மதிப்பை எடுத்துக்கொள்ள சுயம் எப்பொழுதும் ஆயத்தமாயிருக்கிறது. சுயம் பாராட்டப்பட்டு உயர்த்தப்பட்டிருக்கும்போது, தேவன் எல்லாவற்றிலும் எல்லாமுமாயிருக்கிறார் என்னும் உணர்த்துதல் மற்ற மனங்களில் ஏற்படாமல் போய்விடுகிறது. “நான் பலவீனமாயிருக்கும்போதே பலமுள்ளவனாயிருக்கிறேன்” (2 கொரிந்தியர் 12:10) என்று அப்போஸ்தலனாகிய பவுல் கூறுகிறான். நமது பலவீனம்பற்றிய ஒரு உணருதலை நாம் கொண்டிருக்கும்போது, நம்முடன் இயற்கையாக அமையப்பெறாத ஒரு வல்லமையைச் சார்ந்திருப்பதற்கு நாம் கற்றுக்கொள்ளுகிறோம். நாம் தேவனுக்குப் பொறுப்பாளிகளாக இருக்கிறோம் என்று நம்மில் தங்கியிருக்கும் உணர்வைவிட வேறு எதுவும் இருதயத்தின்மீது ஒரு பலமிக்கப் பிடியை உடையதாக இருக்காது. கிறிஸ்துவின் மன்னிக்கும் அன்பைப்பற்றிய ஒரு உணர்வினைப்போல, நடத்தையின் ஆழமான உள்நோக்கங்களை நோக்கி முழு ஆழத்திற்கு வேறு எதுவும் சென்றடைவதில்லை. நாம் தேவனுடன் தொடர்புகொண்டிருக்கும்போது நமது உடன் மனிதர்களுடன் உறவுள்ளவர்களாக வரும்படி நம்மைத் தகுதிப்படுத்தக்கூடிய பரிசுத்தஆவியினால் ஊக்குவிக்கப்படுவோம். அப்பொழுது நீங்கள் கிறிஸ்துவின்மூலமாக தேவனுடனும் பரலோகக் குடும்பத்துடனும் பிணைக்கப்பட்டிருக்கிறீர்கள் என்பதற்காக மகிழ்ந்து களிகூருங்கள். உங்களைவிட நீங்கள் உயர்ந்தவராகக் காணப்படும்போது, மானுடத்தின் பலவீனத்தைப்பற்றித் தொடர்ச்சியான உணர்வை உடையவர்களாக இருப்பீர்கள். சுயத்தை எந்த அளவிற்கு குறைவாகப் பேணுகின்றீர்களோ அந்த அளவிற்கு இரட்சகரின் மேன்மைபற்றிய உங்களுடைய அறிந்துகொள்ளுதல் சிறப்பானதாகவும் முழுமையானதாகவும் இருக்கும். நீங்கள் எந்த அளவிற்கு

அதிகமாக ஒளிக்கும் வல்லமைக்கும் ஆதாரமாக இருப்பவருடன் உங்களை இணைத்துக்கொள்ளுகிறீர்களோ அந்த அளவிற்குப் பெரிய ஒளி உங்கள்மீது பிரகாசிக்கும். அப்பொழுது, தேவனுக்கென்று செயலாற்றுவதற்கான பெரிய வல்லமை உங்களுடையதாயிருக்கும். நீங்கள் தேவனுடனும் கிறிஸ்துவுடனும் பரலோகக்குடும்பம் முழுவதுடனும் ஒன்றித்து ஒருவராக இருப்பதற்காக மகிழ்ந்து களிகூருங்கள். (29)

கிறிஸ்துவின் வார்த்தைகளை அந்த எழுபதுபேரும் கவனித்துக் கொண்டிருந்தபோது, உயிரோட்டமான உண்மைகளைப் பரிசுத்த ஆவியானவர் அவர்களுடைய மனங்களில் உணர்த்திக்கொண்டும், ஆத்துமாவின் பலகைகளின்மீது எழுதிக்கொண்டுமிருந்தார். திரளானவர்கள் அவர்களைச் சூழ்ந்துகொண்டிருந்தபோதிலும் அவர்கள் தேவனுடைய சமுகத்தில் இருப்பவர்களைப்போலக் காணப்பட்டார்கள். (30)

அந்த நேரத்தின் அத்தூண்டுதலை அவர்கள் பிடித்திருந்தனர் என்பதை அறிந்த இயேசு ஆவியிலே களிகூர்ந்து: “பிதாவே! வானத்துக்கும் பூமிக்கும் ஆண்டவரே! இவைகளை நீர் ஞானிகளுக்கும் கல்விமான்களுக்கும் மறைத்து, பாலகருக்கு வெளிப்படுத்தினபடியால் உம்மை ஸ்தோத்திரிக்கிறேன்; ஆம், பிதாவே! இப்படிச் செய்வது உம்முடைய திருவுளத்துக்குப் பிரியமாயிருந்தது. சகலமும் என் பிதாவினால் எனக்கு ஒப்புக்கொடுக்கப்பட்டிருக்கிறது; பிதா தவிர வேறொருவனும் குமாரன் இன்னாரென்று அறியான், குமாரனும், குமாரன் அவரை எவனுக்கு வெளிப்படுத்தச் சித்தமாயிருக்கிறாரோ அவனுந்தவிர, வேறொருவனும் பிதா இன்னாரென்று அறியான்” என்றார். (31)

உலகத்தால் கனப்படுத்தப்பட்ட மனிதர்களாலும், புகழ்வாய்ந்தவர்கள் என்று அழைக்கப்பட்ட ஞானமிக்க மனிதர்களாலும், அவர்கள் பெருமைபாராட்டியிருந்த ஞானத்தினாலும் கிறிஸ்துவின் குணத்தை அறிந்து கொள்ளமுடியாமலிருந்தது. அவருடைய வெளித்தோற்றத்திலிருந்தும் மானிடனாக இருந்த அவருடைய தாழ்மையான நிலையிலிருந்தும் அவர்கள் அவரை மதிப்பீடு செய்திருந்தனர். ஆனால் மீன்பிடிப்பவர்களுக்கும் ஆயக்காரர்களுக்கும் காணக்கூடாதரவாக இருக்கின்ற அவரை காணும் பாக்கியம் கிடைத்தது. இயேசு அவர்களுக்கு வெளிப்படுத்தவேண்டுமென்று விரும்பியிருந்தவைகளனைத்தையும் புரிந்துகொள்ளுவதற்கு சீடர்களுங் கூடத் தவறியிருந்தனர். ஆனால் பரிசுத்த ஆவியின் வல்லமைக்குத் தாங்களாகவே சரணடைந்தபோது, அவர்களுடைய மனங்கள் பிரகாசமடைந்தன. வல்லமைமிக்க தேவன் மானுடன் என்னும் உடையில் தங்களுக்கு மத்தியிலிருந்தார் என்பதை அவர்கள் தெளிவாகப் புரிந்துகொண்டனர். ஞானமிக்கவர்களும் யோசனையுள்ளவர்களும்

இந்த அறிவைப் பெற்றுக்கொள்ளாதிருந்தபோதும், தாழ்மையான இந்த மனிதர்களுக்கு அது வெளிப்படுத்தப்பட்டிருந்ததற்காக இயேசு மகிழ்ந்து களிகூர்ந்தார். பழைய ஏற்பாட்டு வேதவாக்கியங்களை அவர்கள்முன் அவர் அடிக்கடி வைத்து, அவை தம்மையும் தமது பாவநிவாரண ஊழியத்தையும் சுட்டிக்காட்டுவதை எடுத்துக்காட்டினபோது, அவருடைய ஆவியினால் அவர்கள் விழிப்படைந்து, பரலோகச் சூழலுக்குள் உயர்த்தப்பட்டிருந்தனர். தீர்க்கதரிசிகளால் உரைக்கப்பட்டிருந்த ஆவிக்குரிய சத்தியங்களைப்பற்றி அவைகளை எழுதியிருந்த ஆரம்பகால எழுத்தாளர் களைவிட அவர்கள் தெளிவாகப் புரிந்துகொண்டிருந்தனர். இனிமேல் அவர்கள் பழைய ஏற்பாட்டு வேதவாக்கியங்களை வேதபாரகர்கள் பரிசேயர்களின் கோட்பாடுகளைப்போலவும் இறந்துபோன ஞானிகளின் வார்த்தைகளைப்போலவும் வாசிக்காமல், தேவனிடத்திலிருந்து வந்த புதிய வெளிப்படுத்தலாகவே படிப்பார்கள். அவர்கள் அவரை "உலகம் அந்தச் சத்திய ஆவியானவரைக் காணாமலும் அறியாமலும் இருக்கிறபடியால் அவரைப் பெற்றுக்கொள்ளமாட்டாது; அவர் உங்களுடனே வாசம்பண்ணி உங்களுக்குள்ளே இருப்பதால், நீங்கள் அவரை அறிவீர்கள்" (யோவான் 14:17) என்றபடி கண்டனர். (32)

கிறிஸ்துவின் ஆவியினால் இருதயத்தை மென்மைமிக்கதாகவும் உள்ளடங்கியதாகவும் காத்துக்கொள்ளுவது ஒன்றினால் மட்டுமே சத்தியம்பற்றிய மிகவும் அதிகமான—பூரணமான அறிவைப் புரிந்துகொள்ளுவதற்கான ஒரு பாதையை நம்மால் அடையமுடியும். எல்லா மாயையிலிருந்தும் பெருமையிலிருந்தும் ஆத்துமா சுத்திகரிக்கப்பட்டு, அதை ஆக்கிரமித்திருந்த அனைத்தும் காலிசெய்யப்பட்டு, அதற்குள் கிறிஸ்து அமர்த்தப்படவேண்டும். பாவநிவாரணத்தைப் புரிந்துகொள்ளக்கூடாத அளவிற்கு மானுட விஞ்ஞானம் அதிகமான அளவில் எல்லைக்குட்பட்டதாக இருக்கிறது. மீட்பின் திட்டம் தத்துவங்களால் விளக்கமுடியாத அளவிற்கு அதிகதூரம் சென்றடையக்கூடியதாக இருக்கிறது. மிகவும் ஆழ்ந்த நியாய வாதத்தினாலுங்கூட ஆழம் காணமுடியாதவிதமான ஒரு தேவ இரகசியமாக அது எப்பொழுதும் இருக்கும். இரட்சிப்பின் விஞ்ஞானத்தை விளக்க முடியாது. ஆனால் அனுபவத்தினால் அதை அறிந்துகொள்ளமுடியும். இரட்சகரின் விலைமதிப்புமிக்க தன்மையை எவனொருவன் தனது சொந்தப் பாவத்தன்மையில் காண்கிறானோ, அவனால் மட்டுமே தெளிவாகப் புரிந்துகொள்ள முடியும். (33)

கிறிஸ்து கலிலேயாவிலிருந்து எருசலேமை நோக்கி காலந்தாழ்த்தி அவருடைய பாதையில் சென்றிருந்தபோது, அவர் போதித்த பாடங்கள்

உபபேதசங்கள் நிறைந்தவைகளாக இருந்தன. அவருடைய வார்த்தைகளைச் சீடர்கள் அக்கறையுடன் கவனித்திருந்தனர். கலிலேயாவிலிருந்ததைப்போலவே பெரேயாவிலிருந்த மக்கள், யூதேயாவிலிருந்ததைவிட யூத மதவிரோதத்தின் குறைவான கட்டுப்பாட்டின்கீழ் இருந்தனர். எனவே அவருடைய போதனை அவர்களுடைய இருதயங்களில் பதிலைப் பெற்றிருந்தது. (34)

கிறிஸ்துவின் உவமைகளில் அநேகமானவை அவருடைய ஊழியத்தின் இந்தக் கடைசி மாதங்களில் கூறப்பட்டிருந்தன. எப்பொழுதும் அதிகரித்துக்கொண்டிருந்த கசப்புடன் ஆசாரியர்களும் ரபிமார்களும் அவரைப் பின்தொடர்ந்துகொண்டிருந்தபோது, அவர்களுக்கான எச்சரிக்கைகளை அவர் அடையாளங்களால் திரையிட்டிருந்தார். அவருடைய அர்த்தத்தில் அவர்களால் தவறு காணமுடியவில்லை. இருந்தபோதிலும், அவருக்கு எதிராகக் குற்றஞ்சாட்டக்கூடியவிதமாக ஒரு ஆதாரத்தையும் அவருடைய வார்த்தைகளில் அவர்களால் காணமுடியவில்லை. பரிசேயனையும் ஆயக்காரனையும்பற்றிய உவமையில் பரிசேயன் நின்று: "நான் … மற்ற மனுஷரைப்போலவும்" என்று சுயத்திலே அதிக நம்பிக்கைகொண்ட ஜெபம், "தேவனே! பாவியாகிய என்மேல் கிருபையாயிரும்" (லூக்கா 18:11,13) என்று ஆயக்காரன் செய்த ஜெபத்துடன் மிகத் தெளிவானவிதத்தில் வேறுபட்டுக் காணப்பட்டது. இவ்விதமாக கிறிஸ்து யூதர்களின் மாய்மாலத்தை கடிந்துகொண்டிருந்தார். கனிகொடாத அத்திமரம். பெரிய இரவு விருந்து ஆகிய உருவகங்களின்கீழ் மனந்திரும்பாத அந்த தேசத்தின்மீது விழவிருந்த தண்டனையை முன்னுரைத்தார். சுவிசேஷ விருந்திற்கான அழைப்பை பரிகாசத்துடன் புறக்கணித்திருந்தவர்கள், "அழைக்கப்பட்டிருந்த அந்த மனுஷரில் ஒருவனாகிலும் என் விருந்தை ருசிபார்ப்பதில்லையென்று உங்களுக்குச் சொல்லுகிறேன்" (லூக்கா 14:24) என்னும் அவருடைய எச்சரிப்பின் வார்த்தைகளைக் கேட்டார்கள். (35)

சீடர்களுக்குக் கொடுக்கப்பட்டிருந்த உபதேசம் மிகவும் விலைமதிப்பு மிக்கதாக இருந்தது. இடைவிடாமல் கெஞ்சி மன்றாடுகின்ற விதவை, நடு இரவில் அப்பம் கேட்டுக்கொண்டிருந்த நண்பன் ஆகிய உவமைகள்: "கேளுங்கள், அப்பொழுது உங்களுக்குக் கொடுக்கப்படும்; தேடுங்கள், அப்பொழுது கண்டடைவீர்கள்; தட்டுங்கள், அப்பொழுது உங்களுக்குத் திறக்கப்படும்" (லூக்கா 11:9) என்னும் அவருடைய வார்த்தைகளுக்குப் புதிய வலிமையைக் கொடுத்தது. "தேவன் தம்மை நோக்கி இரவும் பகலும் கூப்பிடுகிறவர்களாகிய தம்மால் தெரிந்துகொள்ளப்பட்டவர்களின் விஷயத்தில் நீடிய பொறுமையுள்ளவராயிருந்து அவர்களுக்கு நியாயஞ்செய்யாமலிருப்பாரோ? சீக்கிரத்திலே அவர்களுக்கு நியாயஞ்

செய்வார் என்று உங்களுக்குச் சொல்லுகிறேன்" (லூக்கா 18:7,8) என்று கிறிஸ்து கூறியிருந்தவைகளைப்பற்றிய ஞாபகத்தினால் அடிக்கடி தடுமாறிக்கொண்டிருந்த அவர்களுடைய விசுவாசம் பலப்படுத்தப்பட்டிருந்தது. (36)

காணாமற்போன ஆட்டைப்பற்றிய அழகிய உவமையைக் கிறிஸ்து திரும்பவும் கூறினார். மேலும் காணாமற்போன வெள்ளிக்காசையும் கெட்ட குமாரனைப்பற்றியும் அவர் கூறினபோது, அதன் போதனையை அவர் மேலும் அதிக முனைப்புடன் எடுத்துக்கூறினார். இந்தப் பாடங்களின் வலிமையை அப்பொழுது சீடர்கள் முழுவதுமாகப் பாராட்டமுடியாதவர்களாக இருந்தனர். ஆனால் பரிசுத்த ஆவியின் அருள்மாரிக்குப்பின் புறஜாதியினர் சபைக்குள் சேர்க்கப்படுவதையும் யூதர்களின் பமைமைமிக்க கோபத்தையும் அவர்கள் கண்டபோது, கெட்டகுமாரனைப்பற்றிய பாடத்தை மேலும் நல்லவிதமாகப் புரிந்து, "நாம் சந்தோஷப்பட்டு மகிழ்ச்சியாயிருக்கவேண்டுமே" "என் குமாரனாகிய இவன் மரித்தான், திரும்பவும் உயிர்த்தான்; காணாமற்போனான், திரும்பவும் காணப்பட்டான்" என்பதை உணர்ந்தனர். பயணத்தில் பேசப்பட்டிருந்த "பயப்படாதே சிறுமந்தையே, உங்களுக்கு ராஜ்யத்தைக் கொடுக்க உங்கள் பிதா பிரியமாயிருக்கிறார். உங்களுக்கு உள்ளவைகளை விற்றுப் பிச்சைகொடுங்கள், பழமையாய்ப்போகாத பணப்பைகளையும் குறையாத பொக்கிஷத்தையும் பரலோகத்திலே உங்களுக்குச் சம்பாதித்துவையுங்கள், அங்கே திருடன் அணுகுகிறதுமில்லை, பூச்சி கெடுக்கிறதுமில்லை" என்னும் கட்டளைகளை மீண்டும் கூறி, அடிக்கடி அவர்கள் தங்களுடைய இருதயங்களைப் பலப்படுத்தியிருந்தனர். (37) ★

# 54

# நல்ல சமாரியன்!

**லூக்கா 10:25–37**

**(The Desire of Ages, pp. 497–505)**

உண்மையான மதத்தின் தன்மையைக் கிறிஸ்து நல்ல சமாரியன் என்னும் கதையில் சித்தரித்துக் காட்டுகிறார். அவைகள் அமைப்புகள், மதக்கோட்பாடுகள் அல்லது சமயச்சடங்குகளில் இல்லாமல், அன்புமிக்க செயல்களில் உண்மையான நல்லதன்மையுடனுள்ள காரியங்களைப் பிறருக்குக் கொண்டுவருவதில் அடங்கியிருக்கிறதென்று அவர் காட்டுகிறார். (1)

கிறிஸ்து மக்களுக்குப் போதித்துக்கொண்டிருந்தபோது, "நியாய சாஸ்திரி ஒருவன் எழுந்திருந்து, அவரைச் சோதிக்கும்படி: போதகரே, நித்திய ஜீவனைச் சுதந்தரித்துக்கொள்ளும்படிக்கு நான் என்ன செய்யவேண்டும்" என்று கேட்டான். அங்கிருந்த பெரும் கூட்டத்தினர் மூச்சுவிடாத பெரும் கவனத்துடன் பதிலுக்காகக் காத்திருந்தனர். ஆனால் ஆசாரியர்களும் அதிபதிகளும் சேர்ந்து, கிறிஸ்துவிடம் இந்தக் கேள்வியைக் கேட்கவைத்து, அதன்மூலமாக அவரைக் கண்ணியில் அகப்படுத்திவிடலாம் என்று எண்ணி யிருந்தனர். ஆனால் இரட்சகர் எந்தவிதமான எதிர்வாதத்திற்குள்ளும் பிரவேசிக்கவில்லை. கேள்வி கேட்டவனிடத்திலிருந்தே பதிலைக் கோரினார். "நியாயப்பிரமாணத்தில் என்ன எழுதியிருக்கிறது? நீ வாசித்திருக்கிறது என்ன" என்றார். யூதர்கள் சீனாய் மலையிலிருந்து கொடுக்கப்பட்ட பிரமாணத்தை இயேசு அற்பமாகக் கருதுவதாக தொடர்ந்து குற்றஞ்சாட்டிக்கொண்டிருந்தனர். ஆனால் இரட்சிப்பைப்பற்றிய அந்தக் கேள்வியை, பிரமாணங்களைக் கைக்கொள்ளுவதன்மீது இருக்கிறதென்று அவர் திருப்பினார். (2)

அந்த நியாயசாஸ்திரி: "உன் தேவனாகிய கர்த்தரிடத்தில் உன் முழு இருதயத்தோடும் உன் முழு ஆத்துமாவோடும் உன் முழுப் பலத்தோடும் உன் முழுச்சிந்தையோடும் அன்புகூர்ந்து, உன்னிடத்தில் அன்புகூருவதுபோலப் பிறனிடத்திலும் அன்புகூருவாயாக என்று எழுதியிருக்கிறது" என்றான்.

இயேசு "நிதானமாய் உத்தரவு சொன்னாய்; அப்படியே செய், அப்பொழுது பிழைப்பாய்" என்றார். (3)

பரிசேயர்களுடைய பதவிகளிலும் செயல்களிலும் அந்த நியாயசாஸ்திரி திருப்தியில்லாதிருந்தான். வேத வாக்கியங்களின் உண்மையான அர்த்தம் என்ன என்பதை அறிந்துகொள்ளவேண்டும் என்ற வாஞ்சையுடன் அவன் வேதவாக்கியங்களை ஆராய்ந்துகொண்டிருந்தான். அந்தக் காரியத்தில் அவன் முதன்மையான ஆர்வமுடையவனாக இருந்தான். அவன் நேர்மை யுடன் "நான் என்ன செய்யவேண்டும்?" என்று கேட்டான். பிரமாணம் எதிர்பார்க்கிறதைப்பற்றிய அவனுடைய பதிலில் அவன் சமயசம்பந்தமான சடங்குகள் அனைத்தையும் கடந்திருந்தான். இவைகளுக்கு அவன் எந்த மதிப்பும் கொடுக்காமல், பிரமாணங்களனைத்தும் தீர்க்கதரிசனங்களும் எந்த இரண்டு மாபெரும் கொள்கைகளை அடிப்படையாகக் கொண்டிருக்கிறதோ அவைகளை அவர்முன் வைத்தான். அந்த பதில் கிறிஸ்துவால் புகழப்பட்டு, இரட்சகரை ரபிமார்களுடன் ஒரு சாதகமான நிலையில் வைத்தது. பிரமாணத்திற்கு விளக்கங்கொடுக்கிறவனால் முன்வைக்கப்படுவதை அவர் அங்கீகரித்ததால் அவர்களால் அவரைக் குற்றப்படுத்தமுடியவில்லை. (4)

"அப்படியே செய், அப்பொழுது பிழைப்பாய்" என்று அவர் கூறினார். இதில் அவர் நியாயப்பிரமாணத்தை ஒரு தெய்வீகத் தொகுப்பாகக் காண்பித்து, கற்பனையில் ஒன்றைக் கடைபிடித்துக்கொண்டு மற்றவைகளை மீறுவது சாத்தியம் இல்லை; ஏனெனில் ஒரே கொள்கைதான் எல்லாக் கற்பனைகளுக்கும் ஊடாக ஓடுகிறது என்னும் பாடத்தைப் போதித்தார். மனிதனுடைய முடிவு அவன் நியாயப்பிரமாணம் முழுவதற்கும் கீழ்ப்படிவதில்தான் தீர்மானிக்கப்படும். தேவனிடத்தில் மேலான அன்பும் மனிதனின்மீது பட்சபாதமற்ற அன்பும் வாழ்க்கையில் செயல்படுத்தப்படவேண்டிய கொள்கைகளாக உள்ளன. (5)

அந்த நியாயசாஸ்திரி, தன்னை நியாயப்பிரமாணத்தை மீறும் ஒருவனாகக் கண்டான். ஆராயும் கிறிஸ்துவின் வார்த்தைகளின்கீழ் அவன் மன உணர்த்துதலை அடைந்தான். அவன் அறிந்திருப்பதாக உரிமைபாராட்டியிருந்த நியாயப்பிரமாணத்தினால் உண்டாகும் நீதியை செயலாற்றாதவனாக இருந்தான். அவன் தன் உடன்மனிதர்களிடம் அன்பை வெளிக்காட்டாதவனாக இருந்தான். மனந்திரும்புதல் அவசியமானதாக இருந்தது; ஆனால் மனந்திரும்புவதற்குப்பதிலாக அவன் தன்னைத்தானே நியாயப்படுத்திக்கொள்ள முயன்றுகொண்டிருந்தான். சத்தியத்தை ஏற்றுக் கொள்வதைவிட பிரமாணங்களை நிறைவேற்றுவது எவ்வளவு கடினமாக இருக்கிறது என்பதைக் காட்டுவதற்கு அவன் வகைதேடியிருந்தான்.

இவ்விதமாக மன உணர்த்துதலிலிருந்து தப்புவதற்காகவும், மக்களுடைய கண்களில் தன்னை நல்லவன் என்று மெய்ப்பிக்கவும் அவன் நம்பியிருந்தான். அவன் தானாகவே பதில்கூறக்கூடியவனாக இருந்ததினால் அந்தக் கேள்வி அவசியமில்லாததாக இருந்தது என்பதை இரட்சகரின் வார்த்தைகள் காட்டி யிருந்தன. அப்படியிருந்துங்கூட, "எனக்குப் பிறன் யார்" என்னும் வேறொரு கேள்வியை அவன் கேட்டான். (6)

யூதர்களுக்கிடையில் இந்தக் கேள்வி முடிவில்லாத ஒரு விவாதத்தை உண்டுபண்ணியிருந்தது, அஞ்ஞானிகளும் சமாரியர்களும் சம்பந்தப்பட்டவரையில் அவர்களுக்குச் சந்தேகம் உண்டாகியிருக்கவில்லை. அவர்கள் அந்நியர்களும் சத்துருக்களுமாயிருந்தனர். ஆனால் அவர்க ளுடைய சொந்த ஜாதியினருக்கிடையிலும் சமுதாயத்திலிருந்த பல்வேறுபட்ட வகுப்பினருக்கிடையிலும் இந்த வேறுபாட்டை எங்கே காண்பது? ஆசாரியனும் ரபியும் மூப்பனும் யாரை அயல்வாசியாகக் கருதுவது? அவர்கள் தங்களைத் தாங்களே தூய்மைப்படுத்திக்கொள்ள திரும்பத் திரும்பச் சடங்காச்சாரங்களைச் செய்வதில் அவர்களுடைய வாழ்க்கையையே முற்றிலுமாக செலவழித்திருந்தனர். அறியாமை மற்றும் கவனமற்றவர்களுமான திரளானவர்களுடனுள்ள தொடுதல் உறவு, தீட்டை உண்டுபண்ணுமென்றும் அவைகளை நீக்க தீவிர முயற்சியைச் செய்யவேண்டியது அவசியம் என்றும் அவர்கள் போதித்திருந்தனர். "தீட்டுள்ளவர்களை" அவர்கள் பிறராக கருதவேண்டுமா? (7)

இயேசு எதிர்வாதத்திற்குள் இழுக்கப்படுவதற்கு மறுபடியும் மறுத்துவிட்டார். அவர்மீது குற்றம் சுமத்துவதற்காகச் சமயம் பார்த்திருந்த வர்களின் மதவிரோதத்தை அவர் வெளிப்படையாகக் குற்றப்படுத்தவில்லை. ஆனால் ஒரு எளிமையான கதையின் வழியாக எல்லாருடைய இருதயங் களையும் தொட்ட பரலோக அன்பின் ஊற்றைக் குறித்த ஒரு படத்தை தம்மைக் கேட்டுக்கொண்டிருந்தவர்களின்முன் வைத்தார். நியாயசாஸ்திரியிடமிருந்து சத்தியத்தைப்பற்றிய அறிக்கையிடுதலைக் கொண்டுவந்தார். (8)

இருளை நீக்குவதற்கான பாதை ஒளியை வரவேற்பதில் இருக்கிறது. பிழையைக்குறித்த விஷயத்தில் நாம் செய்யவேண்டிய சிறந்த ஒரு வழி, சத்தியத்தை முன்வைப்பதேயாகும். தன்னில்தானே சுயத்தை மையமாகக்கொண்டிருக்கும் இருதயத்தின் குறைபாட்டையும் பாவத்தையும் தேவ அன்பின் வெளிப்படுத்துதல் வெளிக்காட்டுகிறது. (9)

"ஒரு மனுஷன் எருசலேமிலிருந்து எரிகோவுக்குப் போகையில் கள்ளர் கையில் அகப்பட்டான்; அவர்கள் அவன் வஸ்திரங்களை உரிந்துகொண்டு, அவனைக் காயப்படுத்தி, குற்றுயிராக விட்டுப் போனார்கள். அப்பொழுது

தற்செயலாய் ஒரு ஆசாரியன் அந்த வழியே வந்து, அவனைக் கண்டு, பக்கமாய் விலகிப்போனான். அந்தப்படியே ஒரு லேவியனும் அந்த இடத்துக்கு வந்து, அவனைக் கண்டு, பக்கமாய் விலகிப்போனான்"– லூக்கா 10:30–32. இது ஒரு கற்பனையான காட்சியாக இல்லாமல், எடுத்துக்காட்டப் பட்டிருந்ததைப்போல மிகவும் சரியாக அறியப்பட்டிருந்த ஒரு உண்மைச் சம்பவமாக இருந்தது. கிறிஸ்துவின் வார்த்தைகளைக் கேட்டிருந்தவர்களின் மறுபக்கத்தில் அந்த ஆசாரியனும் லேவியனும் இருந்திருந்தனர். (10)

எருசலேமிலிருந்து எரிகோவிற்குப் பயணம் செய்திருந்த அந்தப் பயணி, யூதேயாவின் வனாந்தரத்தின் ஒரு பகுதி வழியாகக் கடந்துசெல்ல வேண்டியவனாக இருந்தான். அந்தப் பாதை காட்டிலுள்ள குறுகிய மலையிடுக்கின் பாறைகள் வழியாகச் சென்றிருந்தது. அந்தப் பாதை கொள்ளைக்காரர்களால் நிறைந்ததாகவும், அடிக்கடி வன்முறைகளின் காட்சிகளை உடையதாகவுமிருந்தது; அங்குதான் அந்தப் பயணி தாக்கப்பட்டு தன்னிடமிருந்த விலைமதிப்புமிக்க பொருட்களையெல்லாம் இழந்து, காயமடைந்தவனாக பாதையில் ஏறக்குறைய மரித்த நிலையில் விட்டுவிடப்பட்டிருந்தான். இப்படி அவன் கிடக்கும்போது, அந்த ஆசாரியன் அந்த வழியாக வந்தான். ஆனால் அவன் காயப்பட்டுக் கிடந்த அந்த மனிதனைச் சாதாரணமாகப் பார்க்கமட்டுமே செய்தான்.அதற்குப்பின் அந்த லேவியன் அங்கு தோன்றினான். என்ன நிகழ்ந்தது என்பதை அறிவதற்கு ஆவலுள்ளவனாக, அவன் நின்று அங்கு காயப்பட்டுக் கிடந்தவனைப் பார்த்தான். தான் என்ன செய்யவேண்டும் என்னும் மனஉணர்த்துதலை அடைந்தான். ஆனால் அது ஒத்துக்கொள்ளக்கூடிய கடமையாக இருக்க வில்லை. அந்தப் பாதையில் வராமலிருந்தால் காயப்பட்ட அந்த மனிதனைப் பார்த்திருக்கவேண்டிய அவசியம் இருந்திருக்காது என்று நினைத்தான். அது தன்னுடன் சம்பந்தப்பட்டதல்ல என்று அவன் தனக்குத்தானே தீர்மானித்துக்கொண்டான். (11)

ஆனால் அந்த மனிதர்கள் பரிசுத்தமான பதவியில் இருந்து தங்களை வேதவாக்கியங்களுக்கு விளக்கமளிப்பவர்கள் என்று கூறிக்கொண்டிருந்தனர். அவர்கள் மக்களுக்குத் தேவனுடைய பிரதிநிதிகளாக இருக்கும்படி சிறப்பாகத் தெரிந்துகொள்ளப்பட்டிருந்தனர். அறியாமைமிக்கவர்களின்மீதும் வழிதவறி இருப்பவர்களின்மீதும் அவர்கள் மனஉருக்கமுள்ளவர்களாக இருக்க வேண்டியிருந்து, மனித இனத்தின்மீதுள்ள தேவனுடைய பெரிய அன்பைப் புரிந்துகொள்ளும்படி மனிதர்களை நடத்தவேண்டியவர்களாக இருந்தனர். "தானும் பலவீனமுள்ளவனானபடியினாலே, அறியாதவர்களுக்கும் நெறி தப்பிப்போனவர்களுக்கும் இரங்கத்தக்கவனாயிருக்கிறான்" (எபிரெயர் 5:2) என்று இயேசு கூறினபோது, செய்யும்படி அழைக்கப்பட்டிருந்த பணி அவர்

விவரித்ததைப்போன்று “தரித்திரருக்குச் சுவிசேஷத்தைப் பிரசங்கிக்கும்படி என்னை அபிஷேகம்பண்ணினார்; இருதயம் நருங்குண்டவர்களைக் குணமாக்கவும், சிறைப்பட்டவர்களுக்கு விடுதலையையும், குருடருக்குப் பார்வையையும் பிரசித்தப்படுத்தவும், நொறுங்குண்டவர்களை விடுதலை யாக்கவும்” (லூக்கா 4:18) என்பதாக இருந்தது. (12)

பூமியின்மீதுள்ள தேவனுடைய குடும்பத்தின் துன்பத்தைப் பரலோகத்தின் தூதர்கள் பார்த்து, ஒடுக்குதலிலிருந்தும் பாடுகளிலிருந்தும் அவர்களை விடுவிப்பதற்கு அவர்களுடன் ஒத்துழைப்பதற்கு ஆயத்தமுள்ளவர்களாக இருக்கின்றனர். காயமடைந்து பாடுபடும் அந்த மனிதனுக்கு அவசியமான இரக்கத்தையும் உதவியையும் பார்க்கும்படி தேவன் அந்த ஆசாரியனையும் லேவியனையும் தெய்வீக ஏற்பாட்டினால் அவன் கிடந்த பாதையில் கொண்டுவந்திருந்தார். மனித இனத்திற்கு உண்டாகும் ஆபத்திற்காக இந்த மனிதர்களின் இருதயங்கள் இரக்கத்தினால் தொடப்படுவதைப் பார்க்க பரலோகம் முழுவதும் கவனித்திருந்தது. வனாந்தரத்தில் எபிரெயர்களுக்கு இரட்சகர் போதித்திருந்தார். மக்கள் ஆசாரியர்களிடமிருந்தும் போதகர் களிடமிருந்தும் பெற்றிருந்த உபதேசங்களிலிருந்து மாறுபட்ட பாடத்தை கர்த்தர் மேகஸ்தம்பத்திலிருந்தும் அக்கினிஸ்தம்பத்திலிருந்தும் அவர்களுக்குக் கற்றுக்கொடுத்திருந்தார். அவருடைய கிருபைமிக்க ஏற்பாடு, தங்களுடைய தேவைகளையும் பாடுகளையும் சொல்லத்தெரிந்திராத கீழான மிருகங் களிடத்திற்குங்கூட நீட்டப்பட்டிருந்தது. இந்தக் காரியத்தில் இஸ்ரவேல் மக்களுக்காக மோசேமூலமாகக் கட்டளைகள் கொடுக்கப்பட்டிருந்தன. “உன் சத்துருவின் மாடாவது அவனுடைய கழுதையாவது தப்பிப்போகக்கண்டால், அதைத் திரும்ப அவனிடத்தில் கொண்டுபோய் விடுவாயாக. உன்னைப் பகைக்கிறவனுடைய கழுதை சுமையோடே விழுந்துகிடக்கக் கண்டா யானால், அதற்கு உதவிசெய்யாதிருக்கலாமா? அவசியமாய் அவனோடே கூட அதற்கு உதவிசெய்வாயாக”—யாத்திராகமம் 23:4,5. ஆனால் கொள்ளைக்காரர்களால் காயமடைந்திருந்த இந்த மனிதனில், பாடுகளை அனுபவித்துக்கொண்டிருக்கும் ஒரு சகோதரனின் காரியத்தை இயேசு முன்வைத்தார். சுமைசுமக்கும் ஒரு மிருகத்தைவிட, அவன்மீதுள்ள இரக்கத்தினால் அவர்களுடைய இருதயங்கள் எவ்வளவு அதிகமாக அசைக்கப்பட்டிருக்கவேண்டும்! “உங்கள் தேவனாகிய கர்த்தர் தேவாதி தேவனும், கர்த்தாதி கர்த்தரும், மகத்துவமும் வல்லமையும் பயங்கரமுமான தேவனுமாயிருக்கிறார்; … அவர் திக்கற்ற பிள்ளைக்கும் விதவைக்கும் நியாயஞ்செய்கிறவரும், அந்நியன்மேல் அன்புவைத்து … இருக்கிறார்…. அந்நியரைச் சிநேகிப்பீர்களாக” “நீங்கள் உங்களில் அன்புகூருகிறதுபோல அவனிலும் அன்புகூருவீர்களாக” (உபாகமம் 10:17,18; லேவியராகமம்

19:34) என்னும் தூது கர்த்தரால் மோசேயின்மூலமாக அவர்களுக்குக் கொடுக்கப்பட்டிருந்தது. (13)

"பரதேசி வீதியிலே இராத்தங்கினதில்லை; வழிப்போக்கனுக்கு என் வாசல்களைத் திறந்தேன்" (யோபு 31:32) என்று யோபு கூறினான். அந்த இரண்டு தூதர்களும் மனிதர்களின் உருவத்தில் சோதோமிற்கு வந்தபோது, லோத்து தன் முகத்தைத் தரைமட்டும் குனிந்து: "ஆண்டவன்மார்களே, அடியேனுடைய வீட்டு முகமாய் நீங்கள் திரும்பி, உங்கள் கால்களைக் கழுவி, இராத்தங்கி, காலையில் எழுந்து பிரயாணப்பட்டுப் போகலாம்" (ஆதியாகமம் 19:2) என்றான். இந்தப் போதனைகள் அனைத்துடனும் அந்த ஆசாரியனும் லேவியனும் பழக்கப்பட்டவர்களாக இருந்தனர். ஆனால் அவர்கள் அவைகளைத் தங்களுடைய நடைமுறை வாழ்க்கையில் கொண்டு வராமலிருந்தனர். ஜாதி அடிப்படையிலான மதவிரோதம் என்னும் பள்ளியில் பயிற்சிபெற்றவர்களாக இருந்த அவர்கள், சுயநலம், குறுகிய தன்மை, தனித்தன்மை ஆகியவைகளை உடையவர்களாக மாறியிருந்தனர். அவர்கள் காயமடைந்திருந்த அந்த மனிதனைக் கண்டபோது, அவர்களுடைய ஜாதிக்காரனா இல்லையா என்பதை அவர்களால் கூறமுடியவில்லை. அவன் ஒருசமாரியனாக இருக்கலாம் என்று நினைத்து விலகிச்சென்றார்கள். (14)

கிறிஸ்து அதை விவரித்திருந்ததுபோன்ற அவர்களுடைய செயலில் நியாயப்பிரமாணத்தின் எதிர்பார்ப்புக்கு எதிரான ஒன்றையும் அந்த நியாயசாஸ்திரி காணவில்லை. ஆனால் இப்பொழுது வேறொரு காட்சி முன்வைக்கப்பட்டது. (15)

பாடுகளை அனுபவித்துக்கொண்டிருந்த அந்த மனிதன் இருந்த இடத்திற்கு வந்த ஒரு சமாரியன், அவனைக் கண்டபோது, அவன்மேல் மனதுருகினான். அந்த அந்நியன் ஒரு யூதனா அல்லது ஒரு புறஜாதியானா என்று அவன் கேட்கவில்லை. அடிபட்டவன் ஒரு சமாரியனாக இருந்து, வந்தவன் யூதனாக இருந்திருந்தால், யூதன் அடிபட்டவன்மீது துப்பி அவனை அவமதித்துக் கடந்துசென்றிருப்பான் என்பதை அந்த சமாரியன் நன்கு அறிந்திருந்தான். ஆனால் அவன் தயங்கவில்லை. இந்த இடத்தில் தாமதஞ்செய்வதினால் அவனே ஆபத்துக்குள்ளாகிவிடலாம் என்றும் ஆலோசிக்கவில்லை. அவனுக்கு முன்பாக தேவையும் பாடுமுள்ள ஒரு மனிதன் இருக்கிறான் என்பது போதுமானதாக இருந்தது. அந்த காயமடைந்தவனைப் போர்த்துவதற்காக தனது உடையைக் கழற்றினான். அவனது சொந்தப் பயணத்திற்கென்று ஏற்பாடு செய்துவைத்திருந்த எண்ணெயையும் திராட்சரசத்தையும் காயமடைந்திருந்த அந்த மனிதனை சுகப்படுத்துவதற்காகவும் அவனுக்குப் புத்துணர்வு உண்டுபண்ணுவதற்காகவும்

பயன்படுத்தினான். அவனைத் தனது மிருகத்தின்மேல் ஏற்றி, அந்தப் பயணத்தின்போது, அவனுடைய வேதனை அதிகரித்துவிடக்கூடாது என்பதற்காக அந்த மிருகத்தைப் பாதையில் மெதுவாக நடத்திச்சென்றான். அவனை ஒரு சத்திரத்திற்குக் கொண்டுவந்து, இரவு முழுவதும் மென்மையான அன்புடன் அவனைக் கவனித்தான். காலையில் நோயுற்றிருந்த அந்த மனிதன் சற்று சுகமடைந்தபோது, அந்த சமாரியன் அவனுடைய பாதையில் செல்லுவதற்குப் புறப்பட்டான். ஆனால் இதைச் செய்வதற்குமுன் அவன் சத்திரத்தைக் காப்பவனிடம் அவனை ஒப்படைத்து, அதற்கான கட்டணத்தைச் செலுத்தி, மேற்கொண்டு செலவாகும் பணத்திற்காக ஒரு தொகையை வைப்புநிதியாகச் செலுத்தினான். இதனாலும் திருப்தியடையாத அந்தச் சமாரியன், நீ இவனைக் கவனித்துக்கொள். அதிகமாக ஏதாகிலும் இவனுக்காகச் செலவழித்தால் நான் திரும்பிவரும்போது, அதை உனக்குத் தருவேன் என்று கூறி, மேற்கொண்டுள்ள மற்ற தேவைகளுக்கும் ஏற்பாடு செய்தான். (16)

அந்த கதை முடிந்தது. இயேசு அந்த நியாயசாஸ்திரியின் இருதயத்தை வாசிப்பதுபோலக் காணப்பட்ட விதமாக அவன்மீது தமது கண்களைப் பதித்து: "இப்படியிருக்க, கள்ளர்கையில் அகப்பட்டவனுக்கு இந்த மூன்றுபேரில் எவன் பிறனாயிருந்தான்? உனக்கு எப்படித் தோன்றுகிறது" என்றார். (17)

இப்போதுங்கூட சமாரியன் என்னும் பெயரை தன் உதடுகளினால் உச்சரிக்க விரும்பாத அந்த நியாயசாஸ்திரி, "அவனுக்கு இரக்கஞ் செய்தவனே" என்றான். அப்பொழுது இயேசு அவனை நோக்கி: "நீயும் போய் அந்தப்படியே செய்" என்றார். (18)

இவ்விதமாக, எனக்குப் பிறன் யார்? என்னும் கேள்விக்கு என்றென்றைக்குமாக பதிலளிக்கப்பட்டது. நமக்குப் பிறன் என்பவர் சாதாரணமாக நமது அங்கத்தினர்களில் ஒருவராகவோ, நமது விசுவாசக் குடும்பத்தில் ஒரு நபராகவோ மட்டுமில்லை என்பதைக் கிறிஸ்து காட்டியிருந்தார். இனம், நிறம் அல்லது வகுப்புவேறுபாடு ஆகியவைபற்றிய குறிப்பு எதுவும் அதற்கு இல்லை. நமது உதவி யாருக்குத் தேவையாக இருக்கிறதோ, அவன் நமக்குப் பிறனாக இருக்கிறான். எதிரியால் காயப்படுத்தப்பட்டுக் காயமடைந்த ஒவ்வொரு ஆத்துமாவும் நமக்குப் பிறனாக இருக்கிறது. தேவனுடைய உடைமையாக இருக்கும் ஒவ்வொருவனும் நமக்குப் பிறனாக இருக்கிறான். (19)

நல்ல சமாரியன் கதையில் இயேசு அவரைப்பற்றியும் அவரது ஊழியத்தைப்பற்றியுமுள்ள ஒரு சித்திரத்தைக் கொடுத்தார். மனிதன்

சாத்தானால் வஞ்சிக்கப்பட்டு, காயப்படுத்தப்பட்டு, கொள்ளையடிக்கப்பட்டு, அழிவைச் சந்திக்கும்படி விட்டுவிடப்பட்டிருக்கிறான். நமது உதவியற்ற நிலைமையின்மீது இரட்சகர் மன உருக்கமுள்ளவராக இருக்கிறார். நம்மை மீட்பதற்காக அவர் தமது மகிமையை விட்டார். நாம் சாகும் நிலையில் இருப்பதை கண்டு, நமது காரியத்தை அவர் ஏற்றுக்கொண்டார். அவர் நமது காயங்களைச் சுகப்படுத்தி அவருடைய நீதி என்னும் உடையினால் நம்மைப் போர்த்தினார். நமக்குப் பாதுகாப்பான ஒரு அடைக்கலத்தை அவர் திறந்து, அவருடைய சொந்தக் கிரயத்தில் நமக்கான முழு ஏற்பாட்டையும் செய்தார். நம்மை மீட்கும்படி அவர் மரித்தார். அவருடைய சொந்த உதாரணத்தைச் சுட்டிக்காட்டி அவருடைய அடியார்களுக்கு "நீங்கள் ஒருவரிலொருவர் அன்பாயிருக்கவேண்டுமென்றே இவைகளை உங்களுக்குக் கற்பிக்கிறேன்" "நீங்களும் ஒருவரிலொருவர் அன்பாயிருங்கள் என்கிற புதிதான கட்டளையை உங்களுக்குக் கொடுக்கிறேன்" (யோவான் 15:17; 13:34) என்று கூறுகிறார். (20)

நான் என்ன செய்யவேண்டும்? என்பது அந்த நியாயசாஸ்திரி இயேசுவிடம் கேட்ட கேள்வியாக இருந்தது. தேவன்மீதும் மனிதன்மீதும் உள்ள அன்பு நீதியின் மொத்தத் தொகையாக இருப்பதை இயேசு கண்டு, "அப்படியே செய், அப்பொழுது பிழைப்பாய்" என்றார். இருதயத்தின் கட்டளைகளுக்கு அந்த சமாரியன் கீழ்ப்படிந்திருந்து இப்படிச்செய்ததினால் நியாயப்பிரமாணத்தின்படிச் செயலாற்றுகிறான் என்பதை மெய்ப்பித்திருந்தான். கிறிஸ்து அந்த நியாயசாஸ்திரிக்கு "நீயும் போய் அந்தப்படியே செய்" என்று கட்டளையிட்டார். சாதராணமாக கூறுவதைவிட்டு செய்தல் என்பது தேவனுடைய பிள்ளைகளிடதிலிருந்து எதிர்பார்க்கப்படுகிறது. "அவருக்குள் நிலைத்திருக்கிறேனென்று சொல்லுகிறவன், அவர் நடந்தபடியே தானும் நடக்கவேண்டும்"–1 யோவான் 2:6. (21)

இந்த போதனை இயேசுவின் உதடுகளிலிருந்த விழுந்ததைவிட இன்று உலகத்திற்குக் குறைவான சுயநலமும் குளிர்ந்துபோன முறைமைகளும் அன்பென்னும் அனலை அவித்துப்போட்டது. குணத்தை நறுமணமிக்கதாகச் செய்யக்கூடிய கிருபைகளைச் சிதறடித்துப்போட்டது. அவரது பெயரைச் சொல்லிக்கொண்டிருக்கும் அநேக கிறிஸ்தவர்கள் கிறிஸ்துவை எடுத்துக்காட்டுபவர்களாக இருக்கவேண்டுமென்னும் உண்மையைப்பற்றிய பார்வையை இழந்துள்ளனர். பிறருக்கு நல்லதைச் செய்வதற்காகக் குடும்ப வட்டத்திலும் அயலார்களிடத்திலும் சபையிலும் நாம் எங்கே இருந்தாலும் அங்கெல்லாம் நடைமுறையில் சுயத்தைத் தியாகஞ்செய்தல் இல்லாதவரை நாம் அறிவித்துக்கொண்டிருப்பது எதுவாக இருந்தாலும் நாம் கிறிஸ்தவர்களாக இல்லை. (22)

கிறிஸ்து அவருடைய விருப்பங்களை மானுடத்துடன் இணைத்து, மானுடத்தை இரட்சிப்பதற்காக அவருடன் ஒன்றாகவேண்டும் என்று கேட்கிறார். “இலவசமாய்ப் பெற்றீர்கள், இலவசமாய்க் கொடுங்கள்” (மத்தேயு 10:8) என்கிறார். அனைத்து தீமைகளையும்விட பாவம் மிகப்பெரியதாக இருக்கிறது. பாவிக்கு இரக்கம்வைத்து உதவுவது நம்முடைய வேலை. தவறுசெய்து தங்களுடைய அவமானத்தையும் தவறையும் உணருகின்ற அநேகர் இருக்கின்றனர். தைரியமூட்டக்கூடிய வார்த்தைகளின்மீது அவர்கள் பசி உடையவர்களாக இருக்கின்றனர். நம்பிக்கையில்லாத நிலைமைக்கு விரட்டப்படும்வரை அவர்கள் தங்களுடைய தவறுகளையும் குற்றங்களையும் பார்க்கின்றனர். இந்த ஆத்துமாக்களை நாம் அலட்சியப்படுத்தக்கூடாது. நாம் கிறிஸ்தவர்களாக இருந்தால், நமது உதவி யாருக்கு மிக அதிகமாகத் தேவைப்படுகிறதோ, அத்தகைய நபர்களிடமிருந்து எவ்வளவு தூரம் நம்மை நாம் வைத்துக்கொள்ள முடியுமோ, அவ்வளவு தூரம் விலகி, அவர்களைவிட்டு அடுத்த பக்கத்திற்குக் கடந்துசெல்ல மாட்டோம். துன்பங்களின்மூலமாகவோ அல்லது பாவத்தின்மூலமாகவோ துன்பத்திலிருக்கும் மனிதர்களை நாம் காணும்போது, அது எனக்குச் சம்பந்தமானது அல்ல என்று நாம் ஒருபோதும் சொல்லக்கூடாது. (23)

“ஆவிக்குரியவர்களாகிய நீங்கள் சாந்தமுள்ள ஆவியோடே அப்படிப் பட்டவனைச் சீர்பொருந்தப்பண்ணுங்கள்”—கலாத்தியர் 6:1. விசுவாசத்தினாலும் ஜெபத்தினாலும் சத்துருவின் வல்லமையைப் பின்னோக்கித் தள்ளுங்கள். காயமடைந்திருக்கும் ஒருவனுக்குச் சுகமளிக்கும் களிம்பாக இருக்கும் விசுவாசத்தையும் தைரியத்தையும் உடைய வார்த்தை களைக் கூறுங்கள். மகிழ்விக்கின்ற அன்பான ஒரு வார்த்தை மேற்கொள்ளும்படி அவர்களைப் பலப்படுத்தியிருந்திருக்கும்போது, அது இல்லாததினால் வாழ்க்கைபோரில் மிகவும் அதிகமானவர்கள் மயங்கி அதைரியமுள்ளவர்களாக உள்ளனர். நாம் தேவனால் ஆறுதல்படுத்தப்பட்டிருப்பதைப்போல பாடுகளை அனுபவித்துக் கொண்டிருக்கும் ஆத்துமாவிற்கு ஆறுதலைக் கொடுக்க வகைதேடாமல், ஒருபோதும் கடந்துசெல்லக் கூடாது. (24)

இவை அனைத்தும் நியாயப்பிரமாணத்தை நிறைவேற்றுவதின் கொள்கைகளாக உள்ளன. நல்ல சமாரியனின் கதையில் சித்தரிக்கப்பட்டுள்ள கொள்கையாக இயேசுவின் வாழ்க்கையில் வெளிக்காட்டப்பட்ட செயல்கள் உள்ளன. நியாயப்பிரமாணத்தின் முக்கியத்துவத்தை அவருடைய குணம் வெளிப்படுத்தி, நம்மிடத்தில் நாம் அன்புகூருவதுபோலப் பிறனிடத்திலும் அன்புகூருவது எப்படி? என்பதைக் காட்டுகிறது. தேவனுடைய பிள்ளைகள் இரக்கம், அன்பு, நேசம் ஆகியவைகளை எல்லா மனிதர்களிடத்திலும்

வெளிக்காட்டும்போது, அவர்களும் பரலோகப் பிரமாணங்களின் குணத்திற்கு சாட்சி பகர்ந்து கொண்டிருக்கின்றனர். “கர்த்தருடைய வேதம் குறைவற்றதும், ஆத்துமாவை உயிர்ப்பிக்கிறதுமாயிருக்கிறது” (சங்கீதம் 19:7) என்னும் உண்மைக்கு அவர்கள் சாட்சியுடையவர்களாக இருக்கின்றனர். இந்த அன்பை வெளிக்காட்ட எவனொருவன் தவறிவிடுகின்றானோ அவன் தான் பக்தி செலுத்துவதாக அறிவித்துக்கொண்டிருக்கும் பிரமாணத்தை மீறிக்கொண்டிருக்கிறான். ஏனெனில் நமது சகோதரர்களுக்கு எதிராக நாம் வெளிக்காட்டும் ஆவி, தேவனுடனுள்ள நமது ஆவி எப்படிப்பட்டதாக இருக்கிறது என்பதை அறிவிக்கிறது. இருதயத்தில் உள்ள தேவனை நேசிக்கும் அன்பு ஒன்றுமட்டுமே நாம் நமது அயலானிடம் காட்டுகின்ற அன்பின் ஊற்றாக உள்ளது. “தேவனிடத்தில் அன்புகூருகிறேனென்று ஒருவன் சொல்லியும், தன் சகோதரனைப் பகைத்தால், அவன் பொய்யன்; தான் கண்ட சகோதரனிடத்தில் அன்புகூராமலிருக்கிறவன், தான் காணாத தேவனிடத்தில் எப்படி அன்புகூருவான்?” “நாம் ஒருவரிடத்தில் ஒருவர் அன்புகூர்ந்தால் தேவன் நமக்குள் நிலைத்திருக்கிறார்; அவருடைய அன்பும் நமக்குள் பூரணப்படும்”–1 யோவான் 4:20,12. (25) ★

# 55

# வெளித்தோற்றத்தின்படி அல்ல!

**லூக்கா 17:20–22**

**(The Desire of Ages, pp. 506–510)**

“தேவனுடைய ராஜ்யம் எப்பொழுது வருமென்று” கேட்டுக்கொண்டு பரிசேயரில் சிலர் இயேசுவிடம் வந்திருந்தனர். “பரலோகராஜ்யம் சமீபித்திருக்கிறது” (மத்தேயு 3:2) என்னும் தூதை எக்காளத்தொனியைப்போல யோவான் ஸ்நானகன் கொடுத்து, மூன்று வருடங்களுக்கும் மேலாகியிருந்தது. அப்படியிருந்தும், இந்த பரிசேயர்கள் தேவனுடைய இராஜ்யம் அமைக்கப்படுவதற்கான எந்த அடையாளத்தையும் காணவில்லை. யோவான் ஸ்நானகனைப் புறக்கணித்திருந்த அநேகர் இயேசு எடுத்துவைத்த ஒவ்வொரு அடியிலும் அவரை எதிர்த்து, அவரது ஊழியம் தோல்வியடைந்துவிட்டது என்று மறைமுகமாகக் கூறியிருந்தனர். (1)

இயேசு “தேவனுடைய ராஜ்யம் பிரத்தியட்சமாய் வராது. இதோ, இங்கே என்றும், அதோ, அங்கே என்றும் சொல்லப்படுகிறதற்கும் ஏதுவிராது; இதோ, தேவனுடைய ராஜ்யம் உங்களுக்குள் இருக்கிறதே” என்றார். தேவனுடைய இராஜ்யம் இருதயத்தில் ஆரம்பமாகியது. அதன் வருகையை அடையாளப்படுத்துகின்ற பூமிக்குரிய வெளிக்காட்டலை அங்குமிங்கும் பார்க்காதீர்கள். (2)

அவருடைய சீடர்களின் பக்கமாக அவர் திரும்பி: “மனுஷ குமாரனுடைய நாட்களிலொன்றைக் காணவேண்டுமென்று நீங்கள் ஆசைப்படுங்காலம் வரும்; ஆனாலும் அதைக் காணமாட்டீர்கள்” என்றார். அது உலகப்பிரகாரமான ஆடம்பரத்துடன் இல்லாமலிருப்பதினால், அந்த ஊழியத்தின் மகிமையை அறிந்துகொள்வதில் தவறிவிடக்கூடிய அபாயத்தில் நீங்கள் இருக்கிறீர்கள். மனிதர்களின் ஜீவனும் ஒளியுமாக இருப்பவர் மானுடத்தில் திரையிடப்பட்டவராக இருந்தபோதிலும் உங்களுக்கு மத்தியில் நீங்கள் அவரைப் பெற்றிருப்பது உங்களுடைய எப்படிப்பட்ட பெரும்

சிலாக்கியம் என்பதை நீங்கள் உணராதிருக்கிறீர்கள். தேவகுமாரனுடன் நடந்தும் பேசியும் இப்பொழுது நீங்கள் அனுபவிக்கின்ற வாய்ப்புகளை பின்னர் நினைத்து ஏங்கக்கூடிய நாட்கள் வரும். (3)

இயேசுவின் சீடர்களுடைய சுயநலத்தினாலும் பூமிக்குரிய தன்மைகளினாலும் அவர் வெளிப்படுத்த வகைதேடியிருந்த ஆவிக்குரிய மகிமையை அறிந்துகொள்ள அவர்களால் முடியவில்லை. கிறிஸ்து அவருடைய பிதாவினிடத்திற்கு எழுந்தருளிச்சென்று அதற்குப் பிறகு விசுவாசிகளின்மீது பரிசுத்த ஆவி ஊற்றப்பட்டவரைக்கும் சீடர்கள் இரட்சகரின் ஊழியத்தையும் குணத்தையும் முற்றிலுமாக பாராட்டமுடியாதவர்களாக இருந்தனர். ஆவியானவரின் ஞானஸ்நானத்தைப் பெற்றுக்கொண்டபின்புதான் இதுவரைக்கும் மகிமையின் கர்த்தருடைய சமுகத்தில் இருந்தனர் என்பதை உணரத்தொடங்கினார்கள். தீர்க்கதரிசனங்களை அறிந்துகொள்ளும்படியும், அவர் செய்திருந்த அற்புதங்களைப் புரிந்துகொள்ளும்படியும், கிறிஸ்துவின் சொற்கள் ஞாபகத்திற்குக் கொண்டுவரப்பட்டபோது, அவர்களுடைய மனங்கள் திறக்கப்பட்டன. அவருடைய வாழ்க்கையின் அதிசயங்கள் அவர்களுக்கு முன்பாகக் கடந்துசென்றபோது, அவர்கள் கனவிலிருந்து விழித்தெழுந்த மனிதர்களைப்போலிருந்தனர். அவர்கள் "அந்த வார்த்தை மாம்சமாகி, கிருபையினாலும் சத்தியத்தினாலும் நிறைந்தவராய், நமக்குள்ளே வாசம்பண்ணினார்; அவருடைய மகிமையைக் கண்டோம்; அது பிதாவுக்கு ஒரேபேறானவருடைய மகிமைக்கு ஏற்ற மகிமையாகவே இருந்தது" (யோவான் 1:14) என்பதை உணர்ந்தனர். விழுந்துபோன ஆதாமின் குமாரர்களையம் குமாரத்திகளையும் இரட்சிப்பதற்காக பாவம் நிறைந்த உலகத்திற்கு கிறிஸ்து உண்மையாகவே தேவனிடத்திலிருந்து வந்திருந்தார். இதற்குமுன் சீடர்கள் தங்களைப்பற்றிப் புரிந்துகொண்டிருந்ததைவிட இப்பொழுது தாங்கள் மிகவும் குறைந்த முக்கியத்துவம் உடையவர்களாக உணர்ந்தனர். அவரது வார்த்தைகளையும் செயல்களையும் மீண்டும்மீண்டும் கூறுவதில் அவர்கள் ஒருபோதும் களைப்பில்லாதவர்களாக இருந்தனர். இதுவரை அவர்கள் மங்கலாகப் புரிந்துகொண்டிருந்த அவருடைய போதனைகள் இப்பொழுது அவர்களுக்கு ஒரு புதிய வெளிப்படுத்துதலாக வந்தது, வேதவாக்கியங்கள் அவர்களுக்கு ஒரு புதிய புத்தகமானது. (4)

கிறிஸ்துவைப்பற்றி சாட்சி பகர்ந்திருந்த வேதவாக்கியங்களைச் சீடர்கள் ஆராய்ந்தபோது, அவர்கள் தேவனுடனுள்ள உறவிற்குள் கொண்டுவரப்பட்டு, பூமியின்மீது ஆரம்பத்திலிருந்த பணியை நிறைவடையச் செய்வதற்காகப் பரலோகத்திற்கு எழுந்தருளிச் சென்ற அவரைப்பற்றிக் கற்றுக்கொண்டனர். தெய்வீக ஏதுகரத்தின் உதவியில்லாமல் எந்த

மனிதனாலும் அறிந்துகொள்ளமுடியாததாக இருந்த அறிவு அவருக்குள் வாசஞ்செய்திருந்தது என்னும் உண்மையை அவர்கள் கண்டுகொண்டனர். அரசர்களும் தீர்க்கதரிசிகளும் நீதிமான்களுமாயிருந்த மனிதர்களும் முன்னுரைத்திருந்த அவரது உதவி அவர்களுக்குத் தேவையாயிருந்தது. அவரது குணம், செயல் ஆகியவைபற்றிய விளக்கங்களை அவர்கள் ஆச்சரியத்துடன் திரும்பத்திரும்ப வாசித்தனர். இதுவரை தீர்க்கதரிசன வேதவாக்கியங்களை அவர்கள் எவ்வளவு மங்கலாகப் புரிந்துகொண்டிருந்தனர்! கிறிஸ்துவைப்பற்றிய பெரும் சத்தியங்களைப் பற்றிக்கொள்ளுவதற்கு அவர்கள் எவ்வளவு தாமதமாக இருந்தனர்! அவருடைய சிறுமையில் அவரைப் பார்த்தபோதும், அவர் மனிதனாக மனிதர்களுக்கு மத்தியில் நடந்தபோதும், அவருடைய இரட்டை தன்மையையும் அவருடைய பிறப்பின் இரகசியத்தையும் அவர்கள் புரிந்துகொள்ளவில்லை. அவர்களுடைய கண்கள் கட்டுப்படுத்தப்பட்டிருந்ததினால் மானுடத்தில் இருந்த தெய்வீகத்தை அவர்களால் முழுமையாகக் கண்டுகொள்ளமுடியவில்லை. ஆனால் பரிசுத்த ஆவியினால் பிரகாசிக்கப்பட்டபிறகு அவரை மறுபடியும் பார்க்கவும் அவருடைய பாதங்களில் தங்களை வைக்கவும் அவர்கள் எப்படி ஏங்கினர்! அவரிடத்திற்கு வரவும், தங்களால் அறிந்துகொள்ளமுடியாமலிருந்த வேதவாக்கியங்களுக்கு அவர் விளக்கங்கொடுக்கவேண்டுமென்றும் எப்படி விரும்பினர்! அவருடைய வார்த்தைகளை எவ்வளவு உன்னிப்பாகக் கவனித்திருப்பார்கள்! “இன்னும் அநேகங்காரியங்களை நான் உங்களுக்குச் சொல்லவேண்டியதாயிருக்கிறது, அவைகளை நீங்கள் இப்பொழுது தாங்கமாட்டீர்கள்” (யோவான் 16:12) என்று கிறிஸ்து எதைக் குறித்துச் சொன்னார்? அவைகளனைத்தையும் அறிந்துகொள்ள அவர்கள் எவ்வளவு ஆவலுள்ளவர்களாக இருந்தனர்! உண்மையை அறிந்துகொள்ளத் தவறியிருந்ததற்காகவும், தங்களுடைய விசுவாசம் பலவீனமாக இருந்ததற்காகவும், நிஜத்தைப் புரிந்துகொள்ள தவறுவதற்கேதுவாக அவர்களுடைய எண்ணம் குறிக்கோளைவிட்டு வேறுவிதமாக பரவியிருந்ததற்காகவும் துக்கப்பட்டார்கள். (5)

கிறிஸ்துவின் வருகையை முன்னறிவிப்பதற்காகவும், யூத ஜாதியினர் மற்றும் உலகத்தாரின் கவனத்தை அவருடைய ஊழியத் திற்குத் திருப்புவதற்காகவும், அவரை வரவேற்பதற்கு மனிதர்களை ஆயத்தம்செய்வதற்காகவும், ஒரு கட்டியக்காரன் தேவனிடத்திலிருந்து அனுப்பப்பட்டிருந்தான். யோவான் ஸ்நானகனால் அறிவிக்கப்பட்டிருந்த அந்த ஆச்சரியமான மனிதர் முப்பது ஆண்டுகளுக்கும்மேலாக அவர்களுக் கிடையில் இருந்திருந்தார். ஆனால் அவர் தேவனால் அனுப்பப்பட்டவர் என்பதை அவர்கள் உண்மையாகவே அறியாமலிருந்தனர். அக்காலத்தி லிருந்த நம்பிக்கையின்மை அவர்களுடைய கருத்துக்களைப் புளிப்படையச்

செய்யவும், அவர்களுடைய புரிந்துகொள்ளுதலை மேகம் போல மறைக்கவும் அனுமதித்ததினால் குற்றஉணர்வு சீடர்களைப் பற்றிக் கொண்டது. இருண்ட உலகின் துயர்களுக்கு மத்தியில் உலகத்தின் ஒளி பிரகாசித்துக்கொண்டிருந்தது. அதன் ஒளிக்கதிர்கள் எங்கிருந்து வந்தன என்பதைப் புரிந்துகொள்ள அவர்கள் தவறியிருந்தனர். அடிக்கடி அவரது உரையாடல்களைத் திரும்பக்கூறி, மோசேயைவிடப் பெரியவரான ஒருவர், சாலமோனைவிட ஞானமுள்ளவரான ஒருவர் நமக்கிடையில் இருந்து நமக்கு உபதேசஞ்செய்துகொண்டிருந்ததை அறியாமல், உலகப்பிரகாரமான ஆலோசனைகளும் ஆசாரியர்கள் ரபிமார்களால் உண்டான எதிர்ப்புகளும் நமது புலன்களைக் குழப்பமடையச்செய்ய நாம் ஏன் அனுமதித்தோம் என்று கூறினார்கள். கிறிஸ்து நம்மைக் கடிந்துகொள்ளவேண்டிய ஒரு வழியை நாம் ஏன் பின்பற்றியிருந்தோம்? நமது செவிகள் எப்படி மந்தமாக இருந்தன! நமது புரிந்து கொள்ளுதல் எப்படிப் பலவீனமாக இருந்தது! என்று அவர்கள் தங்களுக்குத் தாங்களே கேட்டுக்கொண்டனர்.! (6)

ரோம நாட்டின் ராணுவ வீரர்களால் உண்டான காயத்திற்குள் தனது விரலையிட்டாலொழிய நம்பமுடியாதவனாக தோமா இருந்தான். அவரது அவமானத்திலும் புறக்கணிப்பிலும் பேதுரு அவரை மறுதலித்திருந்தான். மிகவும் வேறுபட்டுத் தெரியக்கூடியவிதத்தில் இந்த வேதனைமிக்க ஞாபகங்கள் அவர்கள்முன் வந்தன. அவர்கள் அவரோடு இருந்தபோதிலும், அவரை அறியாதவர்களாகவும் பாராட்டாதவர்களாகவும் இருந்தனர். தங்களுடைய அவநம்பிக்கையை கண்டுகொண்டபோது, இப்பொழுது அவைகள் அவர்களுடைய இருதயங்களை எப்படிக் கலக்கின? (7)

ஆசாரியர்களும் அதிபதிகளும் அவர்களுக்கெதிராக ஒன்றுபட்டபோது, ஆலோசனைச் சங்கங்களுக்கு முன்பாகக் கொண்டுவரப்பட்டிருந்தபோதும், சிறைக்குள் தள்ளப்பட்டிருந்தபோதும், “அவருடைய நாமத்துக்காகத் தாங்கள் அவமானமடைவதற்குப் பாத்திரராக எண்ணப்பட்டபடியினால், சந்தோஷமாய்” (அப்போஸ்தலர் 5:41) மனிதர்களுக்கும் தூதர்களுக்கும்முன்பாக கிறிஸ்துவின் மகிமையை கண்டு, அனைத்து இழப்புகளிலும் அவரைப் பின்தொடர்வதை தெரிந்துகொண்டிருப்பதை மெய்ப்பிப்பதில் கிறிஸ்துவின் அடியார்கள் மகிழ்ந்து களிகூர்ந்தனர். (8)

தெய்வீக ஆவியின் ஒளிப்படுத்தலில்லாமல் கிறிஸ்துவின் மகிமையை மானுடத்தினால் அறிந்துகொள்ள முடியாதென்பது அப்போஸ்தலர்களின் நாட்களில் இருந்ததைப்போல இப்பொழுதும் உண்மையாக இருக்கிறது. தேவனுடைய சத்தியமும் அவருடைய செயல்களும் உலகத்தை நேசிக்கின்ற சமரசம்பண்ணுகின்ற கிறிஸ்தவத்தினால் வரவேற்கப்படாதவைகளாக

உள்ளன. சௌகரியத்திலும், உலக கனம் உலகத்துடனுள்ள இசைவிலும் ஆண்டவரைப் பின்பற்றுபவர்கள் காணப்படக்கூடாது. அதைவிடவும் முன்னேறி, உழைப்பு, சிறுமை, அவமானம் ஆகியவைகளின் பாதையில் “மாம்சத்தோடும் இரத்தத்தோடுமல்ல, துரைத்தனங்களோடும், அதிகாரங் களோடும், இப்பிரபஞ்சத்தின் அந்தகார லோகாதிபதிகளோடும், வானமண்டலங் களிலுள்ள பொல்லாத ஆவிகளின் சேனைகளோடும்” (எபேசியர் 6:12) செய்யும் யுத்தத்தில் முன்னணியிலும் நிற்கிறார்கள். கிறிஸ்துவின் நாட்களைப்போலவே இப்பொழுதும், அவர்கள் ஆசாரியர்களாலும் அதிபதி களாலும் தவறாகப்புரிந்துகொள்ளப்பட்டும் நிந்திக்கப்பட்டும் ஒடுக்கப்பட்டும் இருக்கிறார்கள். (9)

வெளிப்படையான காட்சிகளுடன் தேவனுடைய இராஜ்யம் வருகிறதில்லை. சுயத்தின் தேவைகளைக் கட்டுப்படுத்துகின்ற ஆவியுடனுள்ள தேவகிருபையின் சுவிசேஷம், உலகத்தின் ஆவியுடன் இசைந்ததாக ஒருபோதும் இருக்காது. அந்த இரண்டு கொள்கைகளும் ஒன்றையொன்று எதிர்ப்பவையாக உள்ளன. “ஜென்மசுபாவமான மனுஷனோ தேவனுடைய ஆவிக்குரியவைகளை ஏற்றுக்கொள்ளான்; அவைகள் அவனுக்குப் பைத்தியமாகத் தோன்றும்; அவைகள் ஆவிக்கேற்றபிரகாரமாய் ஆராய்ந்து நிதானிக்கப்படுகிறவைகளானதால், அவைகளை அறியவுமாட்டான்”–1 கொரிந்தியர் 2:14. (10)

ஆனால் இன்று மதசம்பந்தமான உலகில் ஏராளமானவர்கள் அவர்கள் நம்புவதைப்போல கிறிஸ்துவின் இராஜ்யத்தை பூமிக்குரிய ஒன்றாகவும், உலகப்பிரகாரமான ஆளுகையாகவும் அமைக்கும் பணியைச் செய்துகொண்டிருக்கின்றனர். இந்த உலகத்தின் இராஜ்யங்களுக்கு அதிபதி யாகவும், அதன் பிராகாரங்களிலும் பாளயங்களிலும் அதிபதியாகவும், அதன் சட்டமன்றங்களிலும் அரண்மனைகளிலும் சந்தைகளிலும் அதிபதியாகவும் நமது கர்த்தரை ஏற்படுத்த அவர்கள் வாஞ்சிக்கின்றனர். மனித அதிகாரத் தினால் வற்புறுத்தப்பட்டுள்ள சட்டப்பிரகாரமான விதிமுறைகளை அமைப்பதின் மூலமாக, அவர் அரசாளவேண்டும் என்று அவர்கள் எதிர்பார்க்கின்றனர். இன்று கிறிஸ்து சரீரப்பிரகாரமாக இங்கு இல்லாததினால் அவருக்குப்பதிலாக அவருடைய இராஜ்யத்தின் சட்டங்களை ஏற்படுத்துவதைச் செயலாற்ற அவர்கள் தாங்களாகவே பொறுப்பை எடுத்துக்கொள்ளுவார்கள். கிறிஸ்துவின் நாட்களில் அப்படிப்பட்ட ஒரு இராஜ்யம் அமைக்கப்படுவதுதான் யூதர்கள் விரும்பியதாக இருந்தது. உலகப்பிரகாரமான ஒரு ஆளுகையை நிறுவுவதற்கு அவர்கள் எவைகளை தேவனுடைய பிரமாணங்கள் என்று எண்ணியிருந்தார்களோ அவைகளை வலியுறுத்தவும், அவருடைய சித்தத்தை

விளக்குபவர்களாக மாற்றவும் அவருடைய அதிகாரத்தின் முகவர்களாக அவர்களை ஏற்படுத்தவும் இயேசு விருப்பமுள்ளவராக இருந்திருந்தால், அவர்கள் அவரை ஏற்றுக்கொண்டிருந்திருப்பார்கள். ஆனால் அவர் "என் ராஜ்யம் இவ்வுலகத்திற்குரியதல்ல" (யோவான் 18:36) என்று கூறினார். பூமிக்குரிய சிங்காசனத்தை அவரால் ஏற்றுக்கொள்ள முடியவில்லை. (11)

இயேசு எந்த ஒரு அரசாங்கத்தின்கீழ் வந்திருந்தாரோ, அது ஊழல்மிக்கதாகவும் ஒடுக்குகின்றதாகவும் இருந்தது. சடடத்திற்குப் புறம்பாக வசூல்செய்தல், ஒடுக்குதல், நசுக்கும் கொடூரம், அத்துமீறல்கள் ஆகியவைபற்றிய மிக மோசமாக கவனிக்கப்படவேண்டிய வஞ்சகங்கள் இருந்திருந்தன. எனினும் மீட்பர் எத்தகைய உள்நாட்டுச் சீர்திருத்தங்களையும் ஏற்படுத்த முயற்சிசெய்யவில்லை. நாட்டில் நடைபெற்றுவந்த தவறான காரியங்களையோ அல்லது நாட்டிற்கு எதிராயிருந்த சத்துருக்களையோ அவர் கண்டனம் செய்யவில்லை. அதிகாரத்திலுள்ளவர்களுடனோ அல்லது நிர்வாகத்திலிருந்து ஆளுகைசெய்பவர்களுடனோ அவர் எந்த விஷயத்திலும் குறுக்கிடவில்லை. நமக்கு முன்மாதிரியாக இருந்த அவர், பூமிக்குரிய அரசாங்கத்திலிருந்து விலகியே இருந்தார். மனிதர்கள் அனுபவிக்கும் துயரங்களில் அக்கறையற்றவராக அவர் இருந்தார் என்பதினால் அல்லாமல், அதற்கான பரிகாரம் சாதாரணமாக மனிதர்களிடத்திலும் வெளிப்பிரகாரமான நடவடிக்கைகளிலும் இல்லை என்பதே காரணமாகும். ஆற்றலோடு காரியங்கள் செய்யப்படவேண்டுமானால் அந்த குணமாகுதல் மனிதரை தனித்தனியாகச் சென்றடைந்து அவர்களது இதயங்களுக்குப் புத்துயிர் அளிக்கவேண்டும். (12)

கிறிஸ்துவின் இராஜ்யம் நீதிமன்றங்களின் முடிவுகளினாலும் அல்லது ஆலோசனைச் சங்கங்களினாலும் அல்லது சட்டமன்றங்களினாலும் அல்லது உலகப்பிரகாரமான பெரிய மனிதர்கள் பங்கேற்பதினாலும் ஏற்படுத்தப் படாமல், பரிசுத்த ஆவியின் செயலின்மூலமாக மானுடத்தில் கிறிஸ்துவின் குணம் நடப்படுவதினால் உண்டாகிறது. "அவருடைய நாமத்தின்மேல் விசுவாசமுள்ளவர்களாய் அவரை ஏற்றுக்கொண்டவர்கள் எத்தனை பேர்களோ, அத்தனைபேர்களும் தேவனுடைய பிள்ளைகளாகும்படி, அவர்களுக்கு அதிகாரங்கொடுத்தார். அவர்கள், இரத்தத்தினாலாவது மாம்ச சித்தத்தினாலாவது புருஷனுடைய சித்தத்தினாலாவது பிறவாமல், தேவனாலே பிறந்தவர்கள்"–யோவான் 1:12,13. மனித இனத்தை உயர்த்துவதற்காகச் செயலாற்றக்கூடிய ஒரே வல்லமை இங்குதான் இருக்கிறது. இந்தப் பணியை நிறைவேற்றுவதில் உள்ள மனித ஏதுகரமாக தேவனுடைய போதனைகளும் நடைமுறைப்படுத்தல்களும் இருக்கின்றன. (13)

மக்கள்தொகைப் பெருக்கத்தினாலும் செல்வத்தினாலும் துன்மார்க்கத்தினாலும் அஞ்ஞான மார்க்கத்தின் எண்ணிலடங்காத தீய பழக்கங்களினாலும் மாசுபட்டிருந்த கொரிந்து பட்டணத்தில் அப்போஸ்தலனாகிய பவுல் அவனுடைய ஊழியத்தை ஆரம்பித்தபோது, "இயேசுகிறிஸ்துவை, சிலுவையில் அறையப்பட்ட அவரையேயன்றி, வேறொன்றையும் உங்களுக்குள்ளே அறியாதிருக்கத் தீர்மானித்திருந்தேன்" (1 கொரிந்தியர் 2:2) என்று கூறினான். படுமோசமான பாவங்களினால் கறைபடிந்தவர்களாக இருந்த சிலருக்கு பிற்காலத்தில் எழுதியிருந்தபோது: "கர்த்தராகிய இயேசுவின் நாமத்தினாலும், நமது தேவனுடைய ஆவியினாலும் கழுவப்பட்டீர்கள், பரிசுத்தமாக்கப்பட்டீர்கள், நீதிமான்களாக்கப்பட்டீர்கள்." "அவர் மூலமாய் உங்களுக்கு அளிக்கப்பட்ட தேவகிருபைக்காக, நான் உங்களைக்குறித்து எப்பொழுதும் என் தேவனை ஸ்தோத்திரிக்கிறேன்" (1 கொரிந்தியர் 6:11; 1:6) என்றான். (14)

கிறிஸ்துவின் நாட்களில் இருந்ததைப்போலவே இப்பொழுதும், தேவனுடைய இராஜ்யத்தின் பணி, பூமிக்குரிய அதிபதிகளாலும் மனித சட்டங்களினாலும் இனங்கண்டுகொள்ளக்கூடிய ஆரவாரங்களில் இல்லாமல், பெற்றுப்கொள்ளுகிறவர்கள் தங்கள் மனங்களில்: "கிறிஸ்துவுடனேகூடச் சிலுவையிலறையப்பட்டேன்; ஆயினும், பிழைத்திருக்கிறேன்; இனி நான் அல்ல, கிறிஸ்துவே எனக்குள் பிழைத்திருக்கிறார்; நான் இப்பொழுது மாம்சத்தில் பிழைத்திருக்கிறதோ, என்னில் அன்புகூர்ந்து எனக்காகத் தம்மைத்தாமே ஒப்புக்கொடுத்த தேவனுடைய குமாரனைப்பற்றும் விசவாசத்தினாலே பிழைத்திருக்கிறேன்" (கலாத்தியர் 2:20) என்னும் பவுலின் அனுபவத்தைச் செயல்படுத்துவதற்கேதுவாக, ஆவிக்குரிய சத்தியங்களை அவருடைய நாமத்தில் மக்களுக்கு வெளிப்படுத்துகிற மக்களில் இருக்கிறது. அப்பொழுது அவர்கள் மனிதர்களின் நன்மைக்காக பவுல் ஊழியஞ்செய்ததைப்போல செய்வார்கள். "ஆனபடியினாலே, தேவனானவர் எங்களைக்கொண்டு புத்திசொல்லுகிறதுபோல, நாங்கள் கிறிஸ்துவுக்காக ஸ்தானாபதிகளாயிருந்து, தேவனோடே ஒப்புரவாகுங்கள் என்று, கிறிஸ்துவினிமித்தம் உங்களை வேண்டிக்கொள்ளுகிறோம்"–2 கொரிந்தியர் 5:20. (15) ★

# 56

# பிள்ளைகளை ஆசீர்வதித்தல்!

**மத்தேயு 19:13–15; மாற்கு 10:13–16; லூக்கா 18:15–17**

**(The Desire of Ages, pp. 511–517)**

இயேசு எப்பொழுதும் பிள்ளைகளை நேசிக்கின்ற ஒருவராக இருந்தார். சிறுகுழந்தையின் இயல்பிற்கேற்ற வெளிப்படையான அன்பையும் அவர் ஏற்றுக்கொண்டிருந்தார். அவர்களுடைய தூய்மையான உதடுகளிலிருந்து வெளிப்பட்ட நன்றிமிக்க துதி, அவரது செவிகளுக்கு இசையைப் போன்றிருந்தது. தந்திரமும் மாய்மாலமுமிக்க மனிதர்களுடனுள்ள தொடர்பினால் அவர் ஒடுக்கப்பட்டிருந்தபோது, அது அவருடைய ஆவியைப் புத்துணர்வடையச் செய்திருந்தது. இரட்சகர் சென்றிருந்த இடங்களிலெல்லாம் அவரது முகத்தில் காணப்பட்டிருந்த அன்பான பண்பும் அவருடைய சாதுவான தன்மையும் பிள்ளைகளின் அன்பையும் நம்பிக்கையையும் வென்றிருந்தது. (1)

பிள்ளைகளின் தலைகளின்மீது கைவைத்து ஆசீர்வதிக்கும்படி அவர்களை ஏதாவதொரு ரபியிடம் கொண்டுவருவது யூதர்களுக்கிடையிலிருந்த வழக்கமாக இருந்தது. ஆனால் இதைவிட இரட்சகருடைய பணி அதிக முக்கியமுடையது என்று அவரது சீடர்கள் எண்ணியிருந்தனர். தாய்மார்கள் அவர்களுடைய சிறார்களுடன் அவரிடத்திற்கு வந்தபோது, சீடர்கள் அவர்களை ஆதரவற்றவிதமாகப் பார்த்திருந்தனர். இயேசுவைச் சந்தித்து, நன்மையடையமுடியாத அளவிற்கு அந்தப் பிள்ளைகள் மிகவும் வயது குறைவானவர்களாக இருக்கிறார்கள் என்றும், அவர்களுடைய வருகையினால் அவர் அதிருப்தியடைவார் என்றும் அவர்கள் எண்ணியிருந்தார்கள். ஆனால் அவர் சீடர்களிடந்தான் அதிருப்தியுள்ளவரானார். தேவனுடைய வார்த்தையின்படி தங்களுடைய பிள்ளைகளைப் பயிற்றுவிக்க வகைதேடிக்கொண்டிருந்த தாய்மார்களின் கரிசனையையும் பாரத்தையும் இரட்சகர் புரிந்துகொண்டிருந்தார். அவர்களுடைய ஜெபங்களை அவர் கேட்டிருந்தார். அவர்தாமே அவர்களைத் தமது பிரசன்னத்தில் இழுத்திருந்தார். (2)

ஒரு தாய் அவளுடைய பிள்ளையுடன் இயேசுவைக் கண்டுபிடிப்பதற்காக அவளுடைய வீட்டைவிட்டுச் சென்றிருந்தாள். அவளுடைய பாதையில் அவள் தன் அயல்வாசியிடம் தான் செல்லும் நோக்கத்தைக் கூறினபோது, அந்த அயல்வாசி இயேசு அவளுடைய பிள்ளைகளையும் ஆசீர்வதிக்கவேண்டுமென்று விரும்பினாள். இவ்விதமாக பல தாய்மார்கள் ஒன்றுசேர்ந்து தங்களுடைய சிறுபிள்ளைகளுடன் வந்தனர். பிள்ளைகளில் சிலர் குழந்தைப் பருவத்திற்கும் அப்பால், பிள்ளைப் பருவத்திற்கும் இளைஞர் பருவத்திற்கும் கடந்திருந்தனர். அந்தத் தாய்மார்கள் அவர்களுடைய வாஞ்சைகளை அறியச்செய்தபோது, இயேசு அந்த அச்சத்துடனும் கண்ணீருடனுங்கூடிய வேண்டுகோளை அனுதாபத்துடன் கேட்டார். ஆனால் சீடர்கள் அவர்களை எவ்விதமாக நடத்துவார்கள் என்பதை அறிவதற்காக அவர் காத்திருந்தார். அவருக்கு அனுகூலம் செய்ய நினைத்து, அந்தத் தாய்மார்களை அவர்கள் அனுப்பிவிடுவதை அவர் கண்டபோது, அவர்களுடைய தவறை அவர்களுக்கு வெளிப்படுத்தி, “சிறு பிள்ளைகள் என்னிடத்தில் வருகிறதற்கு இடங்கொடுங்கள்; அவர்களைத் தடைபண்ணாதிருங்கள்; பரலோகராஜ்யம் அப்படிப்பட்டவர்களுடையது” என்றார். அவர் அந்தச் சிறுபிள்ளைகளை அவருடைய கைகளில் எடுத்து, அவருடைய கரங்களை அவர்களது தலைகளின்மேல் வைத்து, அவர்கள் எதற்காக வந்திருந்தார்களோ அந்த ஆசீர்வாதத்தை அவர்களுக்குக் கொடுத்தார். (3)

அந்தத் தாய்மார்கள் ஆறுதற்படுத்தப்பட்டனர். அவர்கள் கிறிஸ்துவின் வார்த்தைகளினால் பலப்படுத்தப்பட்டவர்களாகவும் ஆசீர்வதிக்கப்பட்டவர்களாகவும் அவர்களுடைய வீடுகளுக்குத் திரும்பிச் சென்றனர். புதிய உற்சாகத்துடன் தங்களுடைய பாரங்களை எடுத்துக்கொள்ளவும் தங்களுடைய பிள்ளைகளுக்காக நம்பிக்கையுடன் செயலாற்றவும் அவர்கள் தைரியப்படுத்தப்பட்டனர். இன்றையத் தாய்மார்கள் அதேவிதமான விசுவாசத்துடன் அவருடைய வார்த்தைகளைப் பெற்றுக்கொள்ள வேண்டியவர்களாக இருக்கின்றனர். மனிதர்களுக்கு மத்தியில் கிறிஸ்து வாழ்ந்திருந்தபோது இருந்ததைப்போலவே இன்றும் அவர் ஒரு மெய்யான இரட்சகராக இருக்கிறார். யூதேயாவில் அவர் சிறுபிள்ளைகளைத் தமது கரங்களில் சேர்த்தபோது, தாய்மார்களுக்கு உதவியாளராக இருந்ததைப்போலவே இன்றும் தாய்மார்களுக்கு அதே விதமான மெய்யான உதவியாளராக இருக்கிறார். நீண்ட காலத்திற்கு முன்னிருந்த பிள்ளைகள் அவருடைய இரத்தத்தால் கிரயத்திற்குக் கொள்ளப்பட்டிருந்ததைப்போலவே நமது குடும்பத்திலுள்ள பிள்ளைகளும் அவருடைய இரத்தத்தால் கிரயத்திற்குக் கொள்ளப்பட்டுள்ளனர். (4)

ஒவ்வொரு அன்னையின் இதய பாரத்தையும் இயேசு அறிந்திருக்கிறார். வறுமையுடனும் தனிமையிலும் போராடிக்கொண்டிருந்த ஒரு அன்னையை உடையவராக இருந்த அவர், ஒவ்வொரு அன்னையுடனும் அவளுடைய உழைப்புகளிலும் அனுதாபப்படுகிறார். ஒரு கானானியப் பெண்ணின் கவலைமிக்க இருதயத்திற்கு பரிகாரமளிப்பதற்காக ஒரு நீண்ட பயணத்தைச் செய்த அவர், அதேவிதமாக இன்றைய அன்னையர்களுக்கும் செய்வார். நாயீன் ஊர் விதவைக்கு அவளுடைய ஒரே மகனைத் திரும்பக் கொடுத்த அவர், சிலுவையின்மீதான அவருடைய பெரும் வேதனையிலும் தமது சொந்த அன்னையை நினைவில்கொண்டிருந்த அவர், இன்றும் அன்னையர்களின் துயரத்தால் தொடப்பட்டிருக்கிறார். ஒவ்வொரு வருத்தத்திலும் ஒவ்வொரு தேவையிலும் அவர் ஆறுதலையும் உதவியையும் கொடுப்பார். (5)

தாய்மார்கள் தங்களுடைய குழப்பங்களுடன் இயேசுவினிடத்திற்கு வருவார்களாக. அவர்கள் தங்களுடைய பிள்ளைகளை கண்காணித்து நடத்துவதற்கு உதவியாக இருக்கக்கூடிய போதுமான கிருபையைக் காண்பார்கள். இரட்சகருடைய பாதத்தில் தனது பாரங்களை வைக்கின்ற ஒவ்வொரு அன்னைக்காகவும் வாசல்கள் திறக்கப்பட்டிருக்கின்றன. “சிறு பிள்ளைகள் என்னிடத்தில் வருகிறதற்கு இடங்கொடுங்கள்; அவர்களைத் தடைபண்ணாதிருங்கள்” என்பது, தங்களுடைய பிள்ளைகள் ஆசீர்வதிக்கப்படும்படி அவர்களை அவரிடத்திற்கு நடத்த அன்னையர்களை தொடர்ந்து அழைக்கின்றது. ஜெபஞ்செய்யும் அன்னையின் விசுவாசத்தின் மூலமாக, தனது அன்னையின் கரங்களில் இருக்கும் குழந்தையுங்கூட சர்வவல்லவருடைய நிழலின்கீழ் வாசஞ்செய்வதுபோல வாழலாம். யோவான் ஸ்நானகன் அவனுடைய பிறப்பிலிருந்தே பரிசுத்த ஆவியினால் நிறையப்பெற்றவனாக இருந்தான். நாமும் தேவனுடனுள்ள தொடர்புடன் வாழ்வோமானால், நமது சிறுபிள்ளைகளையுங்கூட தெய்வீக ஆவி அவர்களுடைய ஆரம்பகாலத்திலிருந்தே வனைவார் என்று எதிர்பார்க்கலாம். (6)

இயேசுவால் தொடப்படும்படி கொண்டுவரப்பட்டிருந்த பிள்ளைகளில் அவருடைய கிருபையின் வாரிசுகளாகவும் அவருடைய இராஜ்யத்தின் குடிமக்களாகவும் இருக்கவேண்டிய ஆண்களையும் பெண்களையும் அவர் கண்டதுடன், அவருக்காக இரத்தசாட்சிகளாகப் போகிற சிலரையும் அவர் கண்டார். உலகப்பிரகாரமாக ஞானமுள்ளவர்களாகவும் கடின இருதயமுள்ளவர்களாகவுமுள்ள வளர்ந்து பெரியவர்களாயிருக்கும் ஜனங்களைவிட, இந்தச் சிறுபிள்ளைகள் அவரைக் கவனிப்பார்கள் என்பதையும் அவரைத் தங்களுடைய மீட்பராக ஏற்றுக்கொள்வார்கள் என்பதையும் அவர்

அறிந்திருந்தார். போதிப்பதில் அவர்களுடைய நிலைக்குத்தக்கதாக அவர் கீழே இறங்கி வந்தார். பரலோகத்தின் மகத்துவமானவராக அவர்களுக்குப் பதில்கொடுப்பதற்கும், அவர்களுடைய சிறுபிள்ளைத் தனமான புரிந்துகொள்ளு தலுக்கேற்ப அவருடைய முக்கியமான பாடங்களை எளிமைப்படுத்துவதற்கும் பரலோகத்தின் மகத்துவமானவர் அலட்சியம் காட்டவில்லை; பின்வரக்கூடிய வருடங்களில் வளர்ந்து நித்திய ஜீவனுக்கென்று கனிகொடுக்கக்கூடிய சத்தியத்தின் விதைகளை அவர்களுடைய மனங்களில் அவர் நட்டார். (7)

சுவிசேஷத்தின் போதனைகளை சிறுபிள்ளைகள் அதிகமாக ஏற்றுக்கொள்ளக்கூடியவர்களாக இருக்கிறார்கள் என்பது இன்றைய நாட்களிலும் உண்மையாக இருக்கிறது. தெய்வீக செல்வாக்குகளுக்கு அவர்களுடைய இருதயங்கள் திறக்கப்பட்டதாகவும், பெற்றுக்கொண்ட பாடங்களைத் தங்களைவிட்டு நீங்காமல் வைத்துக்கொள்ளுவதற்குப் பலமுள்ளவைகளாகவும் இருக்கின்றன. அந்தச் சிறுபிள்ளைகள் அவர்களுடைய வருடங்களுக்குத்தக்க ஒரு அனுபவத்தை உடைய கிறிஸ்தவர்களாகவும் இருக்கலாம். அவர்கள் கிறிஸ்துவின் குணத்தைப்போன்ற சாயலை அடைந்துகொள்ளுவதற்காக ஆவிக்குரிய காரியங்களில் கற்பிக்கப்படவேண்டியதும், பெற்றோர்கள் அவர்களுக்கு எல்லாவிதமான அனுகூலங்களையும் கொடுக்கவேண்டியதும் அவசியமாக உள்ளது. (8)

தந்தையர்களும் அன்னையர்களும் தங்களுடைய பிள்ளைகளைப் பரலோகத்திற்கென்று கற்பிக்கும்படித் தங்களிடம் ஒப்படைக்கப்பட்டுள்ள கர்த்தருடைய குடும்பத்தின் இளைய அங்கத்தினர்களைப்போலப் பார்க்க வேண்டும். இளம் மனங்கள் பெற்றுக்கொள்ளக்கூடிய விதத்தில் கொஞ்சங் கொஞ்சமாக பரலோகத்தின் கொள்கைகளிலுள்ள அழகின் பாடங்களை நாமே கிறிஸ்துவிடமிருந்து கற்றுக்கொள்ளுவதைப்போல நமது பிள்ளை களுக்குக் கற்றுக்கொடுக்கவேண்டும். இவ்விதமாக ஒரு கிறிஸ்தவ இல்லமானது கிறிஸ்துதாமே தலைமை ஆசிரியராகவும் அவருக்கடியில் பெற்றோர்கள் ஆசிரியர்களாகவுமிருந்து சேவைசெய்யும் பள்ளியாகவும் மாறவேண்டும். (9)

நமது பிள்ளைகளின் மனமாற்றத்திற்காகச் செயலாற்றுவதில் பாவத்தைப்பற்றிய மன உணர்த்துதலுக்கு வலிமைமிக்க உணர்ச்சிப்பெருக்கை முக்கியமான சான்றாக நாம் பார்க்காமலிருக்கவேண்டும். அவர்கள் மாற்றமடைந்ததின் மிகச்சரியான நேரத்தை அறிவதும் அவசியமில்லாதது. அவர் நேரடியாக பூமியிலிருந்தபோது பிள்ளைகளை ஏற்றுக்கொண் டிருந்ததைப்போலவே இப்பொழுதும் மன்னிக்கிறாரென்றும் ஏற்றுக்கொள்ளு கிறாரென்றும் நம்பி, மன்னிப்பைக் கேட்டு, அவர்களுடைய பாவங்களை

இயேசுவினிடத்திற்குக் கொண்டுவரவேண்டுமென்று நாம் அவர்களுக்குப் போதிக்கவேண்டும். (10)

தனது குழந்தைகள் தன்னை நேசிப்பதினால் தனக்குக் கீழ்ப்படிகின்றனர் என்று தாய் தனது பிள்ளைகளுக்குப் போதிப்பதைப்போல கிறிஸ்தவ வாழ்க்கையிலுள்ள முதல் படங்களை அவர் அவர்களுக்குப் போதித்துக்கொண்டிருக்கிறாள். தாயின் அன்பு கிறிஸ்துவின் அன்பைப் பிள்ளைகளுக்கு எடுத்துக்காட்டுகிறது. தங்களுடைய அன்னையை நம்பி, அவளுக்குக் கீழ்ப்படியும் சிறுபிள்ளைகள் இரட்சகரை நம்பி, அவருக்குக் கீழ்ப்படிவதற்குக் கற்றுக்கொண்டிருக்கின்றனர். (11)

இயேசு பிள்ளைகளுக்கு மாதிரியாக இருந்ததுடன் அவர் தந்தையர்களுக்கு உதாரணமாகவுங்கூட இருந்தார். அதிகாரமுடைய ஒருவரைப்போல அவர் பேசியிருந்தார். அவருடைய வார்த்தை அதிகாரத்துடன் இருந்தது. ஆயினும் கடுகடுப்பும் முரட்டுத்தனமுமுள்ள மனிதர்களுடன் அவர்களுடைய உறவுகளனைத்திலும் அவர் அன்பில்லாத அல்லது மரியாதையற்ற ஒரு உணர்த்துதலைக்கூடப் பயன்படுத்தவில்லை. இருதயத்தில் உள்ள கிறிஸ்துவின் கிருபை பரலோகத்திலிருந்து பிறந்த ஒரு உயர்வான தன்மையையும் நேர்மையின் உணர்வையும் கொடுக்கும். முரட்டுத்தனமாக எதையும் அது மென்மைப்படுத்தி, கரடுமுரடாக உள்ளவைகளையும் அன்பற்றவைகளையும் கீழ்ப்படுத்தும். அது தந்தையர்களும் அன்னையர்களும் எவ்விதமாகத் தாங்கள் நடத்தப்படவேண்டுமென்று விரும்புகிறார்களோ அதே விதமாக அவர்களுடைய பிள்ளைகளையும் நுண்ணறிவுள்ளவர்களைப்போல நடத்தும். (12)

பெற்றோர்களே, உங்கள் பிள்ளைகளைப் பயிற்றுவிப்பதில் தேவன் இயற்கையின்மூலமாகக் கொடுத்துள்ள பாடங்களைக் கற்றுக்கொள்ளுங்கள். நீங்கள் ஒரு இளஞ்சிவப்பு வண்ண மலர்ச்செடியையோ அல்லது ரோஜா செடியையோ லில்லிச்செடியையோ பயிற்றுவிக்க வேண்டியதாக இருந்தால் அதைப் எப்படிச் செய்வீர்கள்? ஒவ்வொரு கிளையும் இலையும் மிக அழகாகவும் நேர்த்தியாகவும் சரியான ஒத்திசைவிலும் வனப்பிலும் செழித்து வளருவதற்கு எந்த முறைகளைக் கையாளுகிறான் என்று தோட்டக்காரனிடம் கேளுங்கள். முரட்டுத்தனமான தொடுதலினாலோ அல்லது கடினமாகக் கையாளுவதினாலோ அக்காரியம் செய்யப்படுவதில்லையென்று அவன் உங்களிடம் கூறுவான். ஏனெனில் அதை தன்மையற்ற விதத்தில் கையாளும்போது, இளந்தண்டுகள் முறிந்துவிடும். அது அடிக்கடி மீண்டும் மீண்டும் அனுமதிக்கப்பட்ட சின்னஞ்சிறு கவனமிக்க செயல்களால் வளர்க்கப்பட்டிருந்தது. அவன் மண்ணை ஈரப்படுத்தி, வளர்ந்துவந்த

செடிகளைப் பயங்கரமான பனியிலிருந்தும் கடுமையான சூரிய ஒளியிலிருந்தும் பாதுகாப்பான். தேவன் அவைகளைச் செழித்து வளரவும், வாசனைமிக்க மலர்களை வழங்கிடவும் மலரவும் செய்தார். உங்களுடைய பிள்ளைகளை நடத்துவதில் தோட்டக்காரனின் முறையைப் பின்பற்றுங்கள். கிறிஸ்துவின் குணத்தின் சாயலில் அவர்களுடைய குணத்தை வனைவதற்காக மென்மையான தொடுதல்களினாலும் அன்புமிக்க ஊழியங்களினாலும் வகைதேடுங்கள். (13)

தேவனுக்கு நேராகவும் ஒருவருக்கொருவர் நேராகவுமுள்ள அன்பின் உணர்த்துதலை உற்சாகப்படுத்துங்கள். இந்த உலகத்தில் ஏராளமான இருதயக்கடினமுள்ள ஆண்களும் பெண்களும் இருப்பதற்குக் காரணம்: உண்மையான பாசம் பலவீனம் என்று கருதப்பட்டு, அதைரியப்படுத்தப்பட்டு, அடித்தமர்த்தப்பட்டிருக்கிறது. இந்த மனிதர்களின் நல்ல தன்மைகள் அவர்களுடைய பிள்ளைப்பருவத்தில் அடக்கப்பட்டிருக்கிறது. அவர்களுடைய குளுமைமிக்க சுயநலத்தை தெய்வீக அன்பின் ஒளி உருகச்செய்யாதவரை அவர்களுடைய மகிழ்ச்சி என்றென்றைக்குமாகப் பாழாக்கப்பட்டிருக்கும். நமது பிள்ளைகள் இயேசுவின் மென்மைமிக்க ஆவியையும் தூதர்கள் நமக்காக வெளிக்காட்டுகின்ற அனுதாபத்தையும் உடையவர்களாக இருக்கவேண்டுமென்று நாம் விரும்பினால் பிள்ளைப்பருவத்திலுள்ள பெருந்தன்மையுடன் அன்புசெலுத்துகின்ற உணர்ச்சித் துடிப்புக்களை நாம் உற்சாகப்படுத்தவேண்டும். (14)

இயற்கையில் இயேசுவைப் பார்க்கும்படி பிள்ளைகளுக்குப் போதியுங்கள். வெளியிடங்களுக்கும் பெரிய மரங்களுக்கடியிலும் தோட்டத்திற்கும் சிருஷ்டிப்பின் ஆச்சரியமான செயல்கள் அனைத்தி னிடத்திற்கும் அவர்களை அழைத்துச் சென்று, ஆண்டவருடைய அன்பின் வெளிப்படுத்துதல்களைக் காணும்படி அவர்களுக்குப் போதியுங்கள். உயிரினங்கள் அனைத்தையும் ஆளுகைசெய்வதற்கு அவர் பிரமாணங்களை உண்டுபண்ணினார் என்பதையும், நமக்காவும் பிரமாணங்களை உண்டு பண்ணினார் என்பதையும் இந்தப் பிரமாணங்கள் நமது சந்தோஷத்திற்கும் மகிழ்ச்சிக்குமானவைகள் என்பதையும் அவர்களுக்குப் போதியுங்கள். நீண்ட ஜெபங்களினாலும் மனச்சோர்வூட்டும் உபதேசங்களினாலும் அவர்களைக் களைப்படையச்செய்யாமல், இயற்கையின் பொருட்பாடங்களின்மூலமாக தேவனுடைய பிரமாணத்திற்குக் கீழ்ப்படிவதை அவர்களுக்குக் கற்றுக்கொடுங்கள். (15)

நீங்கள் கிறிஸ்துவின் அடியார்களாக இருக்கிறீர்கள் என்னும் உங்கள்மீதுள்ள அவர்களுடைய நம்பிக்கையை வென்றபின், அவர் எந்த

அன்பினால் நம்மிடம் அன்புகூர்ந்தாரோ அத்தகைய மாபெரும் அன்பை அவர்களுக்குப் போதிப்பது எளிதாயிருக்கும். இரட்சிப்பின் சத்தியங்களை நீங்கள் வெளிப்படையாக முயன்று, கிறிஸ்துவை ஒரு சொந்த இரட்சகராக பிள்ளைகளுக்குச் சுட்டிக்காட்டும்போது, தூதர்கள் உங்கள் பக்கத்தில் இருப்பார்கள். உண்மையாகவே உலகத்தின் நம்பிக்கையாக இருக்கும் பெத்லகேமின் குழந்தையைப்பற்றிய விலைமதிப்புமிக்க கதையின்மீது சிறுவர்களுக்கு ஆர்வத்தை உண்டுபண்ணுவதற்குத் தேவையான கிருபையை கர்த்தர் அன்னையர்களுக்கும் தந்தையர்களுக்கும் கொடுப்பார். (16)

சிறுபிள்ளைகள் இயேசுவினிடத்திற்கு வருவதற்குத் தடை பண்ணாதிருக்கும்படி அவர் சீடர்களிடம் கூறினபோது, யுகங்கள் நெடுகிலுமுள்ள அவருடைய அடியர்களிடத்திலும் சபையின் அதிகாரி களிடத்திலும் ஊழியர்களிடத்திலும் உதவியாளர்களிடத்திலும் எல்லாக் கிறிஸ்தவர்களிடத்திலும் பேசியிருந்தார். இயேசு சிறுபிள்ளைகளைத் தம்மிடத்தில் இழுத்துக்கொண்டிருந்து, அவர்களை என்னிடத்தில் வரவிடுங்கள் என்கிறார். நீங்கள் அவர்களுக்கு இடையூறு செய்யாவிட்டால் அவர்கள் என்னிடத்திற்கு வருவார்கள் என்று அவர் கூறுவதைப்போல நமக்குக் கட்டளையிடுகிறார். (17)

கிறிஸ்துவைப் போலல்லாத உங்களுடைய குணம் இயேசுவைத் தவறாக எடுத்துக்காட்டாமலிருப்பதாக. உங்களுடைய புறக்கணிப்பிலும் இனிமையற்ற குணத்தினாலும் சிறுவர்களை அவரைவிட்டு விலக்கி வைக்காமலிருங்கள். நீங்கள் பரலோகத்திலிருந்தால், அந்த இடம் அவர்களுக்கு ஒரு சந்தோஷமான இடமாக இருக்காது என்று அவர்கள் எண்ணுவதற்கு ஒருபோதும் இடம் கொடுக்காமலிருங்கள். மதம் சிறுபிள்ளைகளால் அறிந்துகொள்ளமுடியாதது என்றோ அல்லது சிறுபிள்ளைகள் அவர்களுடைய சிறுபிராயத்தில் இயேசுவை ஏற்றுக்கொள்ள எதிர்பார்க்கப்படுவதில்லை என்பதுபோல மதத்தைப்பற்றிப் பேசாதீர்கள். கிறிஸ்துவின்மதம் ஒரு துயரத்தின் மதம் என்றும், இரட்கரிடத்தில் வரும்போது, வாழ்க்கையை மகிழ்ச்சிமிக்கதாக்கக்கூடிய எல்லாவற்றையும் அவர்கள் விட்டுவிடவேண்டும் என்றும் தவறான உணர்த்துதலை அவர்களுக்குக் கொடுக்காமலிருங்கள். (18)

பிள்ளைகளின் இருதயங்களின்மீது பரிசுத்த ஆவியானவர் அசைவாடும்போது, அவருடைய பணியுடன் ஒத்துழையுங்கள். இரட்சகர் அவர்களை அழைக்கிறார் என்றும், அவர்களுடைய மலரும் புத்துணர்வுமிக்க வயதில் அவர்கள் தங்களை அவருக்குக் கொடுப்பதைவிட வேறு எதுவும்

பெரிய மகிழ்ச்சியை அவருக்குக் கொடுக்காது என்றும் அவர்களுக்குப் போதியுங்கள். (19)

இரட்சகர் அவருடைய சொந்த இரத்தத்தினால் விலைக்கு வாங்கியிருக்கும் ஆத்துமாக்களை எல்லையற்ற பரிவுடன் கருதுகிறார். அவருடைய அன்பின் உரிமையாக அவர்கள் இருக்கின்றனர். சொல்லமுடியாத ஏக்கத்துடன் அவர் அவர்களைப் பார்க்கிறார். மிகவும் சிறப்பான விதமாக நடந்துகொள்கின்ற பிள்ளைகளிடத்திற்கு மட்டுமின்றி, தங்களுடைய பிறப்பின் தன்மையினால் வெறுக்கத்தக்க குணத்தோடு இருப்பவர்களிடத்திற்கும் அவருடைய இருதயம் இழுக்கப்பட்டிருக்கிறது. தங்களுடைய பிள்ளைகளிடத்திலுள்ள இப்படிப்பட்ட நடத்தைக்குப் பெற்றோர்கள் எந்த அளவிற்குப் பொறுப்புள்ளவர்களாக இருக்கிறார்கள் என்பதை அநேக பெற்றோர்கள் புரிந்துகொள்ளாமலிருக்கின்றனர். அவர்கள் எவ்விதமாக இருக்கிறார்களோ அவ்விதமாகவே பயிற்றுவித்த அவர்கள், தவறுசெய்பவர்களுடன் இடைபடுவதற்கான மென்மையான தன்மையும் ஞானமும் இல்லாதவர்களாக இருக்கின்றனர். ஆனால் இயேசு பரிவுடன் அந்தச் சிறுபிள்ளைகளை நோக்கிப் பார்க்கிறார். காரணத்திற்கான விளைவைக் கண்டறிகிறார். (20)

இந்தச் சிறுபிள்ளைகளை இரட்சகரிடத்திற்கு இழுக்கின்ற கிறிஸ்துவின் முகவராகக் கிறிஸ்தவ ஊழியக்காரன் இருக்கலாம். ஞானத்தினாலும் திறமையினாலும் அவர்களை அவன் தனது இருதயத்துடன் இணைத்துக்கொள்ளலாம். அவன் அவர்களுக்கு தைரியத்தையும் நம்பிக்கையையும் கொடுக்கலாம். கிறிஸ்துவின் கிருபையின்மூலமாக அவர்கள் குணம் மாறியிருப்பதை அவர்கள் காணலாம்! அதனால் அவர்களைப்பற்றி: “பரலோகராஜ்யம் அப்படிப்பட்டவர்களுடையது” என்று கூறப்படலாம். (21) ★

# 57

# உன்னிடத்தில் ஒரு குறைவு உண்டு!

**மத்தேயு 19:16–22; மாற்கு 10:17–22; லூக்கா 18:18–23**

**(The Desire of Ages, pp. 518–523)**

“நல்ல போதகரே, நித்திய ஜீவனை அடைவதற்கு நான் எந்த நன்மையைச் செய்யவேண்டும்” என்று கேட்டான். (1)

இந்தக் கேள்வியைக் கேட்ட அந்த வாலிபன் ஒரு அதிபதியாக இருந்தான். அவன் பெரும் ஆஸ்தியை கொண்டிருந்து, பொறுப்பான பதவிகளை வகித்துவந்தான். இயேசுவினிடத்திற்குக் கொண்டுவரப்பட்டிருந்த சிறுபிள்ளைகளிடத்தில் இயேசு வெளிக்காட்டியிருந்த அன்பை அவன் கண்டான். அவர் அவர்களை எவ்விதமாக மென்மையுடன் ஏற்றுக்கொண்டார் என்பதையும், அவர்களை அவர் கரங்களால் எடுத்துக்கொண்டார் என்பதையும் அவன் கண்டபோது, இரட்சகரின்மேலுள்ள அன்பினால் அவனுடைய இருதயம் அனலடைந்தது. அவருடைய சீடனாகவேண்டும் என்னும் ஒரு வாஞ்சையை அவன் உணர்ந்தான். கிறிஸ்து அவருடைய பாதையில் சென்றுகொண்டிருந்தபோது, அவனுடைய இருதயம் ஆழமாக அசைக்கப்பட்டிருந்ததினால் அவன் அவருக்குப் பின்னாக ஓடிச்சென்று, அவருடைய பாதத்தில் முழங்காலில் நின்று, அவனுடைய ஆத்துமாவிற்கும் ஒவ்வொரு மனித ஆத்துமாவிற்குமான முக்கியமான “நித்திய ஜீவனை அடைவதற்கு நான் எந்த நன்மையைச் செய்யவேண்டும்” என்ற கேள்வியை உண்மையுடனும் அக்கறையுடனும் கேட்டான். அதற்கு இயேசு: “நீ ஜீவனில் பிரவேசிக்க விரும்பினால் கற்பனைகளைக் கைக்கொள்” என்று கூறினார். அந்த அதிபதியின் உத்தம குணத்தை இயேசு சோதிக்க விரும்பி, அவன் எவ்விதமாக அவரை நல்லவர் என்று கருதியிருக்கிறான் என்பதை அவனிடத்திலிருந்து அறிந்துகொள்ள விரும்பினார். எந்த ஒருவருடன் பேசிக்கொண்டிருந்தானோ அவர் தேவகுமாரன் என்பதை அவன்

உணர்ந்திருந்தானா? அவனுடைய இருதயத்தின் உண்மையான உணர்வு என்னவாக இருந்தது? (2)

அந்த அதிபதி அவனுடைய சொந்த நீதியைப்பற்றின ஒரு உயர்வான மதிப்பைக் கொண்டிருந்தான். உண்மையாகவே தான் எந்தக் காரியத்திலும் குறைவுபடவில்லை என்று நினைத்தாலுங்கூட, மொத்தத்தில் திருப்தியில்லாதவனாக இருந்தான். தன்னிடத்தில் இல்லாத ஏதோ ஒன்று தனக்குத் தேவை என்று உணர்ந்தான். அந்த சிறுபிள்ளைகளை ஆசீர்வதித்ததைப்போல அவனையும் ஆசீர்வதித்து அவனுடைய ஆத்துமாவின் தேவையை இயேசுவால் திருப்திப்படுத்தமுடியாதா? (3)

நித்திய ஜீவனை அடைந்துகொள்ள விரும்பினால் தேவனுடைய பிரமாணங்களுக்குக் கீழ்ப்படியவேண்டும் என்று அவனுடைய கேள்விக்கு அவர் பதில் கூறினார். மனிதனுக்கு உடன் மனிதர்களுடனுள்ள கடமையைக் காட்டுகின்ற பல கட்டளைகளை அவர் மேற்கோள் காட்டினார். அந்த அதிபதியின் பதில் நிச்சயமானதாக இருந்தது. “இவைகளையெல்லாம் என் சிறுவயதுமுதல் கைக்கொண்டிருக்கிறேன்; இன்னும் என்னிடத்தில் குறைவு என்ன” என்றான். (4)

கிறிஸ்து அவனுடைய வாழ்க்கையை வாசிப்பதைப்போலவும் அவனுடைய குணத்தை ஆராய்வதைப்போலவும் அந்த வாலிபனின் முகத்தைப் பார்த்தார். அவனுடைய குணத்தை மாற்றக்கூடிய சமாதானத்தையும் கிருபையையும் சந்தோஷத்தையும் கொடுப்பதற்கு அவன்மீது அவர் அன்புள்ளவராகவும் வாஞ்சையுள்ளவராகவும் இருந்தார். “நீ பூரண சற்குணனாயிருக்க விரும்பினால், போய், உனக்கு உண்டானவைகளை விற்று, தரித்திரருக்குக் கொடு, அப்பொழுது, பரலோகத்தில் உனக்குப் பொக்கிஷம் உண்டாயிருக்கும்; பின்பு என்னைப் பின்பற்றிவா” என்றார். (5)

கிறிஸ்து இந்த வாலிபனிடத்தில் இழுக்கப்பட்டிருந்தார். “இவைகளையெல்லாம் என் சிறுவயதுமுதல் கைக்கொண்டிருக்கிறேன்” என்ற அவனுடைய கணக்கிடுதலின்படி அவன் சரியானவனாக இருப்பதாக அறிந்திருந்தான். இருதயப்பூர்வமான பக்தி, கிறிஸ்தவ நற்குணம் ஆகியவைகளின் அவசியத்தைப் பார்ப்பதற்காக அவனைத் தகுதிப்படுத்தக்கூடிய அறியும் தன்மையை அவனுக்குள் உருவாக்கவும் மீட்பர் ஏங்கினார். அன்பின் பற்றாக்குறையை கிறிஸ்துவின் பரிபூரணத்தில் மறைத்துவைத்து அவருக்குச் செலுத்தப்படவேண்டிய மிக உன்னதமான அன்பை உணர்ந்ததிலிலுள்ள ஒரு தாழ்மையான நொறுங்குண்ட இதயத்தைக் காண அவர் ஏக்கங்கொண்டவராக இருந்தார். (6)

தாம் விரும்பியிருந்த அதே உதவி, இரட்சிப்பின் பணியில் தன்னுடன் இந்த வாலிபன் ஊழியக்காரனானால் அவனில் கிடைக்கும் என்பதை இயேசு கண்டார். கிறிஸ்துவின் வழிகாட்டுதலின்கீழ் அவன் தன்னை வைப்பானானால், நன்மைக்கான ஒரு வல்லமையாக இருப்பான். குறிப்பிட்ட அளவில் அந்த அதிபதியால் கிறிஸ்துவை எடுத்துக்காட்டியிருந்திருக்கமுடியும். ஏனெனில் அவன் இரட்சகருடன் ஒன்றுபட்டவனாக இருந்திருந்தால், மனிதர்களுக்கு மத்தியில் ஒரு தெய்வீக சக்தியாக இருக்கும்படி அவனைத் தகுதிப்படுத்தக்கூடிய தகுதிகளை உடையவனாக இருந்தான். அவனுடைய குணத்தைக் கண்ட கிறிஸ்து அவனை நேசித்தார். அன்பு அன்பைப் பிறப்பிப்பதினால் கிறிஸ்துவின்மீதுள்ள அன்பு அந்த அதிபதியின் இருதயத்தில் விழிப்படைந்துகொண்டிருந்தது. இயேசு அவனை அவருடன் ஒரு ஊழியக்காரனாக காண்பதற்கு ஏக்கமுடையவராக இருந்தார். அவர் அவனை தேவனுடைய சாயலைப் பிரதிபலிக்கின்ற ஒரு கண்ணாடியைப்போல —தம்மைப்போல ஆக்குவதற்கு ஏங்கினார். அவனுடைய குணத்தின் உயர்வான தன்மையை முன்னேற்றமடையச் செய்யவும், ஆண்டவருடைய ஊழியத்திற்குப் பயன்படுத்த அதைப் பரிசுத்தப்படுத்தவும் அவர் ஏங்கினார். அந்த அதிபதி அப்பொழுதே தன்னை கிறிஸ்துவிற்கு ஒப்புக்கொடுத்திருந்தால், அவருடைய பிரசன்னத்தின் சூழ்நிலையில் வளர்ந்திருப்பான். அவன் இந்தத் தெரிந்துகொள்ளுதலைச் செய்திருந்தால், அவனுடைய எதிர்காலம் எவ்விதமாக மாறுபட்டிருந்திருக்கும்! (7)

“இன்னும் உன்னிடத்தில் ஒரு குறைவு உண்டு; உனக்கு உண்டானவைகளையெல்லாம் விற்றுத் தரித்திரருக்குக் கொடு, அப்பொழுது பரலோகத்திலே உனக்குப் பொக்கிஷம் உண்டாயிருக்கும்; பின்பு என்னைப் பின்பற்றிவா” என்று இயேசு கூறினார். அந்த அதிபதியின் இருதயத்தை இயேசு வாசித்தார். ஒரே ஒரு காரியம் அவனிடத்தில் குறைவுபட்டது. ஆனால் அது ஒரு ஜீவாதாரமான கொள்கையாக இருந்தது. ஆத்துமாவில் தேவனுடைய அன்பு அவனுக்கு அவசியமாக இருந்தது. இந்தப் பற்றாக்குறை வழங்கப்படாவிட்டால் அது அவனுக்கு மரணம் என்று மெய்ப்பிக்கப்படும். அவனுடைய இயல்பு முழுவதும் கறைபடிந்ததாகிவிடும். சிற்றின்பங்களில் திளைப்பதின்மூலம் சுயநலம் பலமடைந்துவிடும். அவன் தேவனுடைய அன்பைப் பெற்றுக்கொள்ளும்படி சுயத்தின்மேலுள்ள அவனுடைய மேலான ஆசை சரணடையவேண்டும். (8)

கிறிஸ்து அந்த மனிதனுக்கு ஒரு பரீட்சையைக் கொடுத்தார். பரலோகப் பொக்கிஷம் அல்லது உலகத்தின் மேன்மை இவைகளில் ஒன்றைத் தெரிந்துகொள்ளும்படி அவர் அவனை அழைத்தார். அவன்

கிறிஸ்துவைப் பின்பற்றுவானானால் பரலோகப் பொக்கிஷம் அவனுக்கு நிச்சயஞ்செய்யப்பட்டிருந்தது. ஆனால் சுயம் கீழ்ப்படுத்தப்படவேண்டும். அவனுடைய சித்தம் கிறிஸ்துவின் கட்டுப்பாட்டிற்குள் ஒப்புக்கொடுக்கப்பட வேண்டும். தேவனின் பரிசுத்த தன்மை அந்த வாலிப அதிபதிக்கு கொடுப்பதற்காக வைக்கப்பட்டிருந்தது. தேவனுடைய ஒரு குமாரனாவதற்கும் பரலோகப் பொக்கிஷத்திற்குக் கிறிஸ்துவுடன் ஒரு சுதந்தரவாளியாவதற்குமான சிலாக்கியத்தை உடையவனாக இவன் இருந்தான். ஆனால் அவன் சிலுவையை எடுத்துக்கொண்டு, சுயத்தை மறுத்தல் என்னும் பாதையில் இரட்சகரைப் பின்பற்றவேண்டும். (9)

"யாரைச் சேவிப்பீர்கள் என்று இன்று தெரிந்துகொள்ளுங்கள்" (யோசுவா 24:15) என்பது மெய்யாகவே கிறிஸ்துவின் வார்த்தைகளில் அந்த அதிபதிக்கு கொடுக்கப்பட்ட அழைப்பாக இருந்தது. தெரிந்துகொள்ளும் வாய்ப்பு அவனிடத்தில் விட்டுவைக்கப்பட்டிருந்தது. அவனுடைய மனமாற்றத்திற்காக இயேசு மிகுந்த ஆவலுள்ளவராக இருந்தார். அவனுடைய குணத்தில் இருந்த நோயுற்ற இடத்தை அவர் அவனுக்குக் காட்டினார். அந்தக் கேள்வியை அந்த வாலிபன் எடைபோட்டபோது, எப்படிப்பட்ட ஆழமான ஆர்வத்துடன் அந்தப் பிரச்சனையை அவர் கவனித்தார். அவன் இயேசுவைப் பின்பற்ற முடிவுசெய்திருந்தால், எல்லாக் காரியங்களிலும் அவன் அவருடைய வார்த்தைகளுக்குக் கீழ்ப்படியவேண்டும். பேராவல்மிக்க அவனுடைய திட்டங்களிலிருந்து அவன் திரும்பவேண்டும். தேவ ஆவியின் அழைப்பிற்கு அவன் இணங்குவான் என்று நம்பிக்கொண்டு, எப்படிப்பட்ட அக்கறையுடனும் கவலைமிக்க ஏக்கத்துடனும் எவ்விதமான ஆத்துமப் பசியுடனும் இரட்சகர் அந்த வாலிபனை நோக்கிப் பார்த்தார்! (10)

அந்த அதிபதி எங்கு கிறிஸ்துவ குணத்தில் பூரணமடைய முடியுமோ அந்த இடத்தில் அவனை வைப்பதற்கு கிறிஸ்து ஒரே ஒரு நிபந்தனையை மட்டுமே கொடுத்தார். அவருடைய வார்த்தைகள் கடுமையானதாகவும் வலியுறுத்துவதுபோலவும் காணப்பட்டிருந்தபோதிலும் அவை ஞானத்தின் வார்த்தைகளாக இருந்தன. அவைகளை ஏற்றுக்கொண்டு, கீழ்ப்படிவதில் மட்டுமே அந்த அதிபதியின் இரட்சிப்பின் ஒரே நம்பிக்கை இருந்தது. அவனுடைய உயர்வான பதவியும் அவனுடைய ஆஸ்திகளும் அவனுடைய குணத்தில் மறைமுகமான ஒரு தீய செல்வாக்கைச் செயல்படுத்திக்கொண்டிருந்தது. அவைகள் போற்றிப் பேணப்பட்டிருந்தால் அவனுடைய பாசங்களில் தேவனுக்கு மேலாக அவை அமைந்திருக்கும். தேவனிடத்திலிருந்து கொஞ்சமாகவோ அல்லது அதிகமாகவோ அவன் தன்வசமாக வைத்திருப்பது அவனுடைய சன்மார்க்க பலத்தையும்

திறமையையும் குறைத்துப்போடும். ஏனெனில் இந்த உலகத்தின் பொருட்கள் எவ்வளவுதான் நிச்சயமற்றவைகளாகவும் விலைமதிப்பற்றவைகளாகவும் இருந்தாலும், அவை நெஞ்சார நேசிக்கப்பட்டால் அனைத்தையும் ஈர்த்துக்கொள்ளும் காரியங்களாக மாறிவிடும். (11)

கிறிஸ்துவின் வார்த்தைகளில் சம்பந்தப்பட்டிருந்த அனைத்தையும் அறிந்துகொள்ளுவதற்கு அந்த அதிபதி தீவிரமானவனாக இருந்து, துயரமுள்ளவனானான். கொடுக்கப்பட்ட ஈவின் விலைமதிப்பை அவன் உணர்ந்திருந்தால் விரைவாக அவன் தன்னைக் கிறிஸ்துவின் அடியார்களின் பட்டியலில் பதிவுசெய்திருந்திருப்பான். அவன் கனமிக்க யூத ஆலோசனை சங்கத்தின் அங்கத்தினர்களில் ஒருவனாக இருந்தான். பெருமைமிக்க எதிர்கால வாய்ப்புகளைப்பற்றி சாத்தான் அவனை சோதித்துக்கொண்டிருந்தான். பரலோகப் பொக்கிஷத்தை அவன் தேடிக்கொண்டிருந்தான். ஆனால் அவனுடைய செல்வங்கள் கொண்டுவரக்கூடிய உலகப்பிரகாரமான அனுகூலங்களையும்கூட அவன் தேடிக்கொண்டிருந்தான். அப்படிப்பட்ட நிபந்தனைகள் இருந்ததற்காக அவன் வருத்தமடைந்தான். அவன் நித்திய ஜீவனை வாஞ்சித்தான். ஆனால் தியாகஞ்செய்தவற்கு விருப்பமில்லாதவனாக இருந்தான். நித்திய ஜீவனின் விலை மிகவும் பெரியதுபோல காணப்பட்டது. “அவன் அதிக ஐசுவரியமுள்ளவனானபடியினால்” வருத்தம் நிறைந்தவனாகச் சென்றான். (12)

தேவனுடைய பிரமாணத்தைக் காத்துக்கொண்டிருந்ததாக எண்ணி யிருந்தது ஒரு வஞ்சகமே. ஐசுவரியங்கள் அவனுடைய விக்கிரகங்களாக இருந்தன என்பதையே அவன் காட்டினான். அவனுடைய பாசங்களில் உலகம் முதலாவது இடத்தைப் பிடித்திருந்தபோது, அவனால் தேவனுடைய பிரமாணங்களைக் காத்துக்கொள்ள முடியவில்லை. ஈவுகளைக் கொடுப்பவரை நேசிப்பதைவிட அவன் தேவனுடைய ஈவுகளை அதிகமாக நேசித்திருந்தான். கிறிஸ்துவுடனுள்ள தோழமையை அந்த வாலிபனுக்குக் கொடுக்க அவர் முன்வந்திருந்தார். “என்னைப் பின்பற்றிவா” என்று அவர் கூறினார். ஆனால் மனிதர்களுக்கு மத்தியில் அவனுடைய சொந்தப் பேரும், ஆஸ்திகளும் இருந்த அளவிற்கு இரட்சகர் அவனுக்கு அதிகமானவராக இருக்கவில்லை. காணமுடியாததாக இருந்த பரலோகப் பொக்கிஷத்திற்காக காணக்கூடியதாக இருந்த பூமிக்குரிய பொக்கிஷத்தை விட்டுவிடுவது அவனுக்கு பெரும் அபாயத்திற்கேதுவான ஒன்றாக இருந்தது. நித்தியஜீவன் என்னும் கொடையை அவன் மறுத்துச் சென்றான். அதற்குப்பின் அவனுடைய ஆராதனையை உலகம் பெறவேண்டியிருந்தது. கிறிஸ்துவை உலகத்திற்கெதிராக எடைபோட்டுக்கொண்டு, இந்தப் பயங்கரமான

பரீட்சைக்கூடாக ஆயிரக்கணக்கானோர் கடந்துசென்றுகொண்டிருக்கின்றனர். அநேகர் உலகத்தைத் தெரிந்துகொள்ளுகின்றனர். வாலிபனான அந்த அதிபதியைப்போல, இந்த மனிதரை நான் எனது தலைவராக பெறமாட்டேன் என்று தங்கள் இருதயங்களில் கூறிக்கொண்டு, அவர்கள் இரட்சகரை விட்டுத் திரும்பிவிடுகின்றனர். (13)

அந்த வாலிபனுடனுள்ள கிறிஸ்துவின் இடைபடுதல் ஒரு பொருட்பாடமாக முன்வைக்கப்பட்டிருக்கிறது. தேவனுடைய ஊழியக்காரர்கள் ஒவ்வொருவரும் பின்பற்றவேண்டிய நடத்தையின் சட்டத்தை தேவன் நமக்குக் கொடுத்திருக்கிறார். அது அவருடைய பிரமாணத்திற்குக் கீழ்ப்படிவதாக இருக்கிறது. சாதாரணமான சட்டப்படியான ஒரு கீழ்ப்படிதலாக இல்லாமல், வாழ்க்கையினால் பிரவேசிக்கின்ற ஒரு கீழ்ப்படிதலாக இருந்து, குணத்தில் முன்மாதிரியாக வைக்கப்பட்டிருக்கிறது. தேவனுடைய இராஜ்யத்தின் பிரஜைகளாகவேண்டிய அனைவருக்கும் தேவன் அவருடைய சொந்த குணத்தின் படித்தரத்தை ஏற்படுத்தி வைத்திருக்கிறார். கிறிஸ்துவுடன் ஊழியக்காரன் ஆகின்றவர்கள் மட்டுமே—கர்த்தாவே என்னுடையவை அனைத்தும், நானும், உம்முடையவை என்று கூறுபவர்கள் மட்டுமே தேவனுடைய குமாரர்களாகவும் குமாரத்திகளாகவும் ஏற்றுக்கொள்ளப்படுவார்கள். பரலோகத்தை வாஞ்சித்தும், முன்வைக்கப்பட்டிருக்கும் நிபந்தனைகளின் காரணமாக தூரமாக விலகிச்செல்லும் அனைவரும் அதன் பொருள் என்னவென்று ஆலோசிக்கவேண்டும். கிறிஸ்துவிடம் "மாட்டேன்" என்று கூறுவதில் பொருள் என்ன என்பதைப்பற்றிச் சிந்தியுங்கள். "முடியாது" "என்னால் எல்லாவற்றையும் உம்மிடம் கொடுக்க முடியாது" என்று அந்த அதிபதி கூறினான். நாமும் அவ்வாறு சொல்லுகின்றோமா? தேவன் நம்மிடம் கொடுத்திருக்கிற வேலையில் நம்முடன் பங்குபெற இரட்சகர் அனுமதி கேட்கிறார். இந்த உலகத்தில் அவருடைய வேலையை எடுத்து முன்னேற்றிச் செல்லுவதற்கு நமக்கு தேவன் கொடுத்திருக்கிற பொருளாதார வசதிகளைப் பயன்படுத்தவேண்டுமென்று அவர் நம்மிடம் கேட்கிறார். அந்த வழியில் மாத்திரமே அவர் நம்மை இரட்சிக்கமுடியும். (14)

அந்த அதிபதியின் ஆஸ்திகள் அவன் ஒரு விசுவாசமிக்க உக்கிராணக்காரனாக இருக்கிறான் என்பதை மெய்ப்பிக்கும்படி அவனிடம் ஒப்படைக்கப்பட்டிருந்தன. தேவைப்படுபவர்களுக்கு ஆசீர்வாதமாக இருக்கும்படி அந்தப் பொருட்களை அவன் வழங்கவேண்டிவனாக இருந்தான். அப்படியே இப்பொழுதும் கர்த்தர் மனிதர்களிடம் பொருட்களையும் தாலந்துகளுடன் சந்தர்ப்பங்களையும் ஒப்படைத்து, அவர்கள் ஏழை களுக்கும் துன்பப்படுபவர்களும் உதவிசெய்யக்கூடியவைகளாக

இருக்கும்படிச் செய்திருக்கிறார். தேவன் வடிவமைக்கின்றபடி அவனிடத்தில் ஒப்படைக்கப்பட்டுள்ள ஈவுகளை எவனொருவன் பயன்படுத்துகின்றானோ அவன் இரட்சகரின் உடன் ஊழியக்காரனாகிறான். அவன் கிறிஸ்துவின் குணத்தை எடுத்துக்காட்டுபவனாக இருப்பதினால், கிறிஸ்துவிற்கென்று ஆத்துமாக்களை ஆதாயஞ்செய்கிறான். (15)

அந்த வாலியனான அதிபதியைப்போல நம்பிக்கைக்குரிய உயர்ந்த பதவியையும் பெரும் ஆஸ்தியையும் உடையவர்களுக்கு கிறிஸ்துவைப் பின்பற்றுவதற்காக எல்லாவற்றையும் விட்டுவிடுவது ஒரு பெரிய தியாகம்போல காணப்படலாம். ஆனால் கிறிஸ்துவின் சீடர்களாக விரும்பும் அனைவருக்கும் அதுவே நடத்தைக்கான சட்டமாக இருக்கிறது. கீழ்ப்படிதலுக்கு குறைவான எதுவும் ஏற்றுக்கொள்ளப்படமாட்டாது. சுயத்தைச் சரணடையச்செய்தல் கிறிஸ்துவின் போதனைகளின் பொருளாக இருக்கிறது. எந்தக் காரியங்களை நடப்பித்தால் அவை முழுமனிதனையும் சன்மார்க்கமற்றவனாக்கிவிடுமோ அவைகளை வெட்டி நீக்குவதைவிட வேறுபாதை எதுவும் இல்லாமலிருப்பதினால் அடிக்கடி அது அதிகாரமுடையதுபோலக் காணப்படுகின்ற மொழியினாலும் ஆணைபோன்றும் முன்வைக்கப்பட்டிருக்கின்றது. (16)

கிறிஸ்துவின் பின்னடியார்கள் ஆண்டவராகிய அவருக்குச் சொந்தமானதை அவருக்குத் திரும்பவும் கொடுக்கும்போது, "நல்லது, உத்தமமும் உண்மையுமுள்ள ஊழியக்காரனே, ... உன் எஜமானுடைய சந்தோஷத்திற்குள் பிரவேசி" என்னும் வார்த்தைகளைக் கேட்கும்போது கொடுக்கப்படவுள்ள செல்வத்தை சேகரித்துக்கொண்டிருக்கின்றனர். "அவர் தமக்குமுன் வைத்திருந்த சந்தோஷத்தின்பொருட்டு, அவமானத்தை எண்ணாமல், சிலுவையைச் சகித்து, தேவனுடைய சிங்காசனத்தின் வலதுபாரிசத்தில் வீற்றிருக்கிறார்"—மத்தேயு 25:23; எபிரெயர் 12:2. மீட்கப்பட்ட ஆத்துமாக்களை—நித்தியமாக இரட்சிக்கப்பட்ட ஆத்துமாக்களைப் பார்க்கின்ற சந்தோஷம் "என்னைப் பின்பற்றுங்கள்" என்று கூறினவரின் அடிச்சுவடுகளில் தங்களுடைய பாதங்களை வைத்த அனைவருக்குமான பரிசாக இருக்கிறது. (17) ★

# 58

# லாசருவே வெளியே வா!

**லூக்கா 10:38–42; யோவான் 11:1–44**

**(The Desire of Ages, pp. 524–536)**

கிறிஸ்துவின் சீடர்களுக்கிடையில் பெத்தானியாவைச் சேர்ந்த லாசரு மிகவும் உறுதியாக நின்றிருந்தான். அவர்களுடைய முதல் சந்திப்பிலிருந்தே கிறிஸ்துவில் இருந்த அவனுடைய விசுவாசம் பலமுள்ளதாக இருந்தது. அவர்மீதான அவனுடைய அன்பு, ஆழமானதாக இருந்தது. அவன் மிகவும் அதிகமாக மீட்பரால் நேசிக்கப்பட்டிருந்தான். கிறிஸ்துவின் அற்புதங்களில் மிகப் பெரிய அற்புதம் லாசருவிற்காகச் செயற்படுத்தப்பட்டிருந்தது. அவருடைய உதவியைத் தேடியிருந்த அனைவரையும் இரட்சகர் ஆசீர்வதித்திருந்தார். மனிதக் குடும்பம் முழுவதையும் அவர் நேசிக்கிறார். ஆனால் சிலருடன் அவர் தனிச்சிறப்பான விதமான மென்மையான தோழமைகளில் பிணைக்கப் பட்டிருக்கிறார். பெத்தானியாவின் குடும்பத்துடன் பலமிக்க பாசம் என்னும் பிணைப்பினால் அவருடைய இருதயம் பின்னப்பட்டிருந்தது. அவர்களில் ஒருவனுக்காக அவருடைய மிகவும் ஆச்சரியமான செயல் நடத்தப் பட்டிருந்தது. (1)

லாசருவின் வீட்டில் இயேசு அடிக்கடி இளைப்பாறுதலைக் கண்டிருந்தார். இரட்சகருக்கு அவருக்கென்று சொந்த வீடு இருக்கவில்லை. அவர் அவருடைய நண்பர்கள் சீடர்கள் ஆகியோரின் விருந்தோம்பலைச் சார்ந்து, அடிக்கடி களைப்புற்றவராக, மனிதத் தோழமையின்மீது தாகமுள்ளவராக இருந்தபோது, கோபமிக்க பரிசேயர்களின் சந்தேகம், பொறாமை ஆகியவைகளிலிருந்து தூரமான, இந்த சமாதானமிக்க வீட்டாரிடத்திற்குத் தப்பிச்செல்லுவதில் மகிழ்ச்சியுள்ளவராக இருந்தார். இங்கு அவர் உண்மையான வரவேற்பையும், பரிசுத்தமும் தூய்மையுமான நட்பையும் கண்டிருந்தார். அவருடைய வார்த்தைகள் புரிந்துகொள்ளப்பட்டு, பொக்கிஷமாகக் காக்கப்படும் என்பதை அறிந்திருந்த அவரால் எளிமையாகவும் பூரணமான சுதந்தரத்துடனும் பேசமுடிந்திருந்தது. (2)

நமது இரட்சகர் ஒரு அமைதிமிக்க வீட்டையும் ஆர்வத்துடன் கேட்பவர்களையும் வரவேற்றிருந்தார். மனித அன்பு, உபசரிப்பு, பாசம் ஆகியவைகளுக்காக அவர் ஏக்கமுடையவராக இருந்தார். அவர் எப்பொழுதும் அருள்வதற்கு ஆயத்தமாயிருந்த பரலோக உபதேசத்தைப் பெற்றுக்கொண்டவர்கள் பெருமளவில் ஆசீர்வதிக்கப்பட்டிருந்தனர். திறந்த வயல்வெளிகளுக்கூடாகத் திரளான மக்கள் அவரைப் பின்தொடர்ந்தபோது, இயற்கை உலகத்தின் அழுக்குகளை அவர் அவர்களுக்கு விவரித்துக் காட்டினார். தேவனுடைய கரம் எவ்விதமாக உலகத்தைத் தாங்குகிறது என்பதை அவர்கள் காண்பதற்காக அவர்களுடைய புரிந்துகொள்ளுதலின் கண்களைத் திறப்பதற்கு அவர் வகைதேடியிருந்தார். தேவனுடைய நலம் வழங்கும் மேன்மை, அன்புச்செயல்கள் ஆகியவற்றை மக்கள் பாராட்டத்தக்கதாக நல்லோருக்கும் தீயோருக்கும் ஒரேவிதமாகக் கொடுக்கப்படும்—மென்மையாக விழும் பனித்துளிக்கும், மிருதுவாகப் பெய்யும் மழைக்கும், பிரகாசமிக்க சூரியஒளிக்கும் அவரது பேச்சைக் கேட்டிருந்தவர்களின் கவனத்தை ஈர்த்தார். அவர் படைத்துள்ள மனிதக் கருவிகளாக இருப்பவர்களுக்கு தேவன் அருளியிருக்கும் மதிப்பை மனிதர்கள் முழுமையாக உணரவேண்டுமென்று அவர் வாஞ்சித்தார். ஆனால் அந்தத் திரளான மக்கள் கேட்பதற்கு மந்தமானவர்களாக இருந்தனர். எனவே, பொது வாழ்வின் போராட்டத்தில் களைப்படைந்தவராக இருந்த கிறிஸ்து பெத்தானியாவிலிருந்த லாசருவின் வீட்டில் இளைப்பாறுதலைக் கண்டார். இங்கு தெய்வீக ஏற்பாட்டின் புத்தகங்களில் உள்ளவைகளைக் கேட்பதை வரவேற்கின்றவர்களுக்கு அவர் அதைத் திறந்தார். பலதரப்பட்டவர்களாகக் கலந்திருந்த திரளானவர்களுக்குக் கூற அவர் முயலாமலிருந்தவைகளை இந்தத் தனிப்பட்ட நேர்காணல்களில் அவர் பேசுவதைக் கேட்டிருந்தவர்களுக்கு அவர் விவரித்தார். அவர்களுடைய நண்பர்களுக்கு அவர் உவமைகளாகக் கூறவேண்டிய அவசியம் அவருக்கு ஏற்படவில்லை. (3)

கிறிஸ்து அவர்களுக்கு ஆச்சரியமான பாடங்களைக் கொடுத்தபொழுது, மரியாள் பயபக்தியுடன் தியானஞ்செய்கின்ற ஒருவளாக அவருடைய பாதங்களருகில் உட்கார்ந்திருந்தாள். ஒரு சந்தர்ப்பத்தில் உணவை ஆயத்தஞ்செய்வதில் குழப்படைந்தவளாக இருந்த மார்த்தாள் கிறிஸ்துவிடம் சென்று: "ஆண்டவரே, நான் தனியே வேலைசெய்யும்படி என் சகோதரி என்னை விட்டுவந்திருக்கிறதைக் குறித்து உமக்குக் கவையில்லையா? எனக்கு உதவி செய்யும்படி அவளுக்குச் சொல்லும்" என்றாள். அது முதல் தடவையாக கிறிஸ்து பெத்தானியாவுக்கு வந்திருந்த சந்தர்ப்பமாக இருந்தது. இரட்சகரும் அவருடைய சீடர்களும் எரிகோவிலிருந்து கஷ்டமான பயணம் செய்து வந்திருந்தார்கள். அவர்களுடைய வசதிகளுக்கான ஏற்பாடுகளைச்

செய்வதில் மார்த்தாள் கவலையுள்ளவளாக இருந்தாள். அவளுடைய கவலையில் விருந்தினருக்கு காட்டவேண்டியதாகவிருந்த விருந்தோம்பலை அவள் மறந்தாள். இயேசு மென்மையும் ஆனால் பொறுமையுமிக்க வார்த்தைகளால்: "மார்த்தாளே, நீ அநேக காரியங்களைக்குறித்துக் கவலைப்பட்டுக் கலங்குகிறாய். தேவையானது ஒன்றே, மரியாள் தன்னை விட்டெடுபடாத நல்ல பங்கைத் தெரிந்துகொண்டாள்" என்று கூறினார். மரியாள் பூமியின் அதிக விலைமதிப்புமிக்க ஆபரணங்களைவிட அதிக மதிப்பானதாயிருந்த இரட்சகரின் உதடுகளிலிருந்து விழுந்த வார்த்தைகளை அவளுடைய உள்ளத்தில் சேகரித்துக்கொண்டிருந்தாள். (4)

மார்த்தாளுக்குத் தேவையாக இருந்த "அந்த ஒன்று" ஒரு அமைதியான பக்திமிக்க ஆவியாகவும், எதிர்காலம்பற்றிய ஆழமான அறிவைப்பற்றியதாகவும், அழியாத நித்திய ஜீவனைப்பற்றியதாகவும், ஆவிக்குரிய முன்னேற்றத்திற்குத் தேவையான கிருபைகளைப்பற்றியதாகவுமிருந்தது. அழிந்துபோகும் பொருட்களைப்பற்றி குறைவான அக்கறையும் என்றென்றைக்குமாக நிலைத்து நிற்கக்கூடிய பொருட்களின்மீது அதிகமான அக்கறையும் அவளுக்குத் தேவையாக இருந்தது. இரட்சிப்பிற்கேற்ற ஞானமுடையவர்களாகச் செய்கின்ற வாய்ப்புகள் ஒவ்வொன்றையும் இயேசுவின் பிள்ளைகள் பற்றிக்கொள்ளவேண்டுமென்று அவர் போதிக்கிறார். கவனமுள்ள சக்திமிக்க ஊழியக்காரர்களே கிறிஸ்துவின் ஊழியத்திற்குத் தேவையாக இருக்கிறார்கள். தீவிரமான மதசம்பந்தமான பணியில் அவர்களுடைய பேரார்வத்துடன் ஈடுபடக்கூடிய மார்த்தாள்களுக்கு ஒரு விசாலமான பணிக்களம் இருக்கிறது. ஆனால் அவர்கள் முதலில் மரியாளுடன் சேர்ந்து இயேசுவின் பாதங்களுக்கருகில் உட்காருவார்களாக. கிறிஸ்துவின் கிருபையினால் தளரா உழைப்பு, விரைந்து செயல்படும் தன்மை, சக்தி ஆகியவை பரிசுத்தமாக்கப்படுவதாக. அப்பொழுது நற்காரியங்களுக்கான வாழ்க்கையானது வென்றடக்க முடியாத ஒரு வல்லமையாக விளங்கும். (5)

இயேசு எங்கு இளைப்பாறியிருந்தாரோ, அந்த வீட்டிற்குள் துயரம் நுழைந்திருந்தது. லாசரு திடீரென்று நோயினால் தாக்கப்படவே, அவனுடைய சகோதரிகள்: "ஆண்டவரே, நீர் சிநேகிக்கிறவன் வியாதியாயிருக்கிறான்" என்று அறிவிப்பதற்கு ஆள் அனுப்பினார்கள். அவர்களுடைய சகோதரனைப் பற்றிக்கொண்டிருந்த நோயின் உக்கிரத்தை அவர்கள் கண்டனர். ஆனால் எல்லாவிதமான நோய்களையும் சுகப்படுத்துவதற்குக் கிறிஸ்து தகுதியுள்ளவராக இருக்கிறார் என்பதை அவர்கள் அறிந்திருந்தனர். அவர்களுடைய துயரத்தில் அவர்களிடம் அவர் அனுதாபங்காட்டுவார் என்று

அவர்கள் நம்பியிருந்தனர். எனவே அவருடைய உடனடி வருகைக்காக அவர்கள் தீவிரமான எந்தக் கோரிக்கையையும் வைக்கவில்லை. ஆனால் “நீர் சிநேகிக்கிறவன் வியாதியாயிருக்கிறான்” என்னும் செய்தியை மட்டும் தெரிவித்தார்கள். அந்தச் செய்திக்கு உடனே அவர் பதிலளித்து அவரால் எவ்வளவு விரைவாக பெத்தானியாவிற்கு வந்துசேரமுடியுமோ அவ்வளவு விரைவாக அவர் வருவார் என்று அவர்கள் நினைத்தார்கள். (6)

இயேசுவிடமிருந்து வரவிருக்கும் வார்த்தைக்காக அவர்கள் கவலையுடன் காத்திருந்தனர். ஜீவனின் பொறி அவர்களுடைய சகோதரனில் உயிருடன் இருந்தவரை அவர்கள் ஜெபஞ்செய்து, இயேசு வருவதற்காகக் காத்திருந்தார்கள். ஆயினும் “இந்த வியாதி மரணத்துக்கு ஏதுவாயிராமல்” என்னும் செய்தியை அவன் கொண்டுவந்தபோது, லாசரு பிழைத்துக்கொள்ளுவான் என்ற நம்பிக்கையை அவர்கள் பற்றிக்கொண்டனர். ஏறத்தாழ சுயநினைவற்றவனாகத் துன்பப்பட்டக்கொண்டிருந்த அவனுக்குத் தைரியமூட்டும் வார்த்தைகளைக் கூற அவர்கள் மென்மையுடன் முயன்றிருந்தனர். லாசரு மரித்தபோது, மிகவும் கசப்பான விதத்தில் அவர்கள் ஏமாற்றமடைந்திருந்தனர். ஆனால் இயேசுவின் தாங்கும் கிருபையை உணர்ந்தவர்களாக இருந்ததினால் அது இரட்சகரின்மீது எந்தவிதமான குற்றத்தையும் பிரதிபலிப்பதிலிருந்து அவர்களைக் காத்திருந்தது. (7)

கிறிஸ்து அந்தச் செய்தியைக் கேட்டபோது, அவர் அதை எவ்வித கிளர்ச்சியுமின்றி ஏற்றுக்கொண்டார் என்று சீடர்கள் நினைத்தார்கள். வெளிப்படுத்துவார் என்று அவர்கள் எதிர்பார்த்த துயரை அவர் வெளிக்காட்ட வில்லை. அவர்களைப் பார்த்து, அவர்: “இந்த வியாதி மரணத்துக்கு ஏதுவாயிராமல் தேவனுடைய மகிமை விளங்குவதற்கு ஏதுவாயிருக்கிறது; தேவனுடைய குமாரனும் அதினால் மகிமைப்படுவார்” என்று கூறினார். இரண்டு நாட்களாக அவர் எங்கே தங்கியிருந்தாரோ அங்கேயே இருந்தார். இந்தத் தாமதம் சீடர்களுக்குப் புரியாத ஒரு புதிராக இருந்தது. துன்பப்பட்டிருந்த வீட்டாருக்கு அவருடைய பிரசன்னம் எப்படிப்பட்ட ஆறுதலாக இருந்திருக்கும் என்று அவர்கள் நினைத்தனர். பெத்தானியாவிலிருந்த அந்தக் குடும்பத்துடன் அவர் கொண்டிருந்த பலமிக்க பாசம் சீடர்களுக்கு நன்கு தெரிந்த ஒரு காரியமாக இருந்தது. “நீர் சிநேகிக்கிறவன் வியாதியாயிருக்கிறான்” என்னும் அந்தத் துயரமிக்க செய்திக்கு அவர் எதுவும் செய்யாமலிருந்ததால் அவர்கள் ஆச்சரியமடைந்தனர். (8)

அந்த இரண்டு நாட்களிலும் கிறிஸ்து அந்தச் செய்தியை அவருடைய மனதிலிருந்து நீக்கிவிட்டவர்போலக் காணப்பட்டிருந்தார். ஏனெனில் அவர் லாசருவைப்பற்றிப் பேசாமலிருந்தார். இயேசுவிற்கு முன்னோடியாக

இருந்த யோவான் ஸ்நானகனைப்பற்றி சீடர்கள் சிந்தித்தார்கள். ஆச்சரியமான அற்புதங்களைச் செய்கின்ற வல்லமையுடைய இயேசு ஏன் யோவான் ஸ்நானகனை சிறையில் வாடிவதங்கும்படிச் செய்து, இறுதியில் அந்த வன்முறையான மரணத்தை அனுபவிக்கும்படி விட்டுவிட்டார் என்று எண்ணி அவர்கள் ஆச்சரியமடைந்திருந்தனர். அப்படிப்பட்ட வல்லமையை உடையவராக இருக்கும் இயேசு ஏன் யோவானின் உயிரை காப்பாற்றவில்லை? கிறிஸ்து தேவகுமாரனாக இருக்கிறார் என்னும் அவருடைய உரிமைபாராட்டுதலுக்கெதிரான—பதில்கூற முடியாத ஒரு தர்க்கமாக அதை முன்வைத்திருந்த பரிசேயர்களால் இந்தக் கேள்வி அடிக்கடி கேட்கப்பட்டிருந்தது. பரீட்சைகள் இழப்புகள் உபத்திரவம் ஆகியவைபற்றி இரட்சகர் அவருடைய சீடர்களை எச்சரித்திருந்தார். சோதனையில் அவர் அவர்களைக் கைவிட்டுவிடுவாரோ? அவருடைய ஊழியத்தை தவறாகப் புரிந்துகொண்டிருக்கிறோமா என்று சிலர் கேள்வி கேட்டனர். அனைவரும் ஆழ்ந்த கலக்கமடைந்திருந்தனர். (9)

இரண்டு நாட்கள் தாமதித்தபின் இயேசு: "நாம் மறுபடியும் யூதேயாவுக்குப் போவோம் வாருங்கள்" என்று சீடர்களிடம் கூறினார். இயேசு யூதேயாவிற்குச் செல்லுவதாக இருந்தால் அவர் ஏன் இரண்டு நாட்கள் தாமதஞ்செய்தார் என்று சீடர்கள் கேட்டனர். ஆனால் இயேசுவைப்பற்றியும் தங்களைப்பற்றியும் உள்ள அவர்களுடைய கவலை அவர்களுடைய மனங்களில் மிகவும் மேலோங்கியதாக இருந்தது. அவர் பின்பற்றியிருந்த நடத்தையில் அபாயத்தைத்தவிர வேறு ஒன்றையும் அவர்களால் காணமுடியவில்லை. "ரபீ, இப்பொழுது தான் யூதர் உம்மைக் கல்லெறியத் தேடினார்களே, மறுபடியும் நீர் அவ்விடத்திற்குப் போகலாமா" என்று அவர்கள் வினவினார்கள். "இயேசு பிரதியுத்தரமாக: பகலுக்குப் பன்னிரண்டு, மணிநேரம் இல்லையா?" நான் என்னுடைய பிதாவின் வழிநடத்துதலில் இருக்கிறேன். நான் அவருடைய சித்தத்தின்படிச் செய்கிறவரை என்னுடைய ஜீவன் பாதுகாப்பாக இருக்கிறது. என்னுடைய பகலின் பன்னிரண்டு மணிநேரம் இன்னும் முடியவில்லை. நான் எனது நாளின் கடைசி மீதிப்பகுதியில் பிரவேசித்திருக்கிறேன். இதில் ஏதாவது மீந்தீருக்கும்வரை நான் பாதுகாப்பாயிருக்கிறேன் என்று அவர் பதில் கூறினார். (10)

"ஒருவன் பகலிலே நடந்தால் அவன் இந்த உலகத்தின் வெளிச்சத்தைக் காண்கிறபடியினால் இடறமாட்டான்" என்று அவர் தொடர்ந்தார். தேவனுடைய சித்தத்தின்படி செய்கிறவன், தேவனால் குறிக்கப்பட்டிருக்கும் பாதையில் நடப்பவனாதலால் இடறிவிழ முடியாது. அவனுடைய கடமையைப்பற்றிய தெளிவான உணர்த்துதலை தேவனுடைய

வழிகாட்டும் ஒளி கொடுத்து, அவனுடைய கடமை முடிவடையும்வரை அவனைச் சரியான விதமாக நடத்துகிறது. "ஒருவன் இரவிலே நடந்தால் தன்னிடத்தில் வெளிச்சம் இல்லாதபடியினால் இடறுவான்" என்றார். தேவன் ஒருவனை அழைக்காத பாதையில்—அவனுடைய தெரிந்துகொள்ளுதலின் சொந்தப் பாதையில் நடப்பவன் இடறுவான். ஏனெனில் அவனுக்குப் பகல் இருளாக்கப்பட்டிருக்கிறது. அவன் எங்கே இருந்தாலும் பாதுகாப்பாக இல்லை. (11)

"இவைகளை அவர் சொல்லியபின்பு அவர்களை நோக்கி: நம்முடைய சிநேகிதனாகிய லாசரு நித்திரையடைந்திருக்கிறான், நான் அவனை எழுப்பப்போகிறேன்" என்றார். "நம்முடைய சிநேகிதனாகிய லாசரு நித்திரையடைந்திருக்கிறான்" என்ற வார்த்தைகள் எவ்விதமாகத் தொடக்கூடியவை! எவ்வளவு அனுதாபம் நிறைந்ததாக இருக்கின்றன! எருசலேமிற்குச் செல்லுவதினால் அவர்களுடைய ஆண்டவர் அடையவிருக்கும் ஆபத்தைப்பற்றிய சிந்தனையில் சீடர்கள் பெத்தானியாவிலிருந்த மரண துக்கமுடைய குடும்பத்தை ஏறத்தாழ மறந்திருந்தனர். ஆனால் கிறிஸ்து அப்படியிருக்கவில்லை. சீடர்கள் கடிந்துகொள்ளப்பட்டதாக உணர்ந்தனர். அந்தச் செய்திக்கு கிறிஸ்து உடனடியாக எதுவும் செய்யாமலிருந்ததினால் அவர்கள் மனச்சோர்வடைந்திருந்தனர். அவர்கள் நினைத்திருந்தபடியான மென்மையான அன்பை அவர் லாசருவின்மீதும் அவனுடைய சகோதரி களின்மீதும் கொண்டிருக்கவில்லை என்றும், இல்லாவிட்டால் செய்தி கொண்டுவந்திருந்தவனுடன் சேர்ந்து அவரும் சென்றிருந்திருப்பார் என்றும் நினைக்கும்படி அவர்கள் சோதிக்கப்பட்டிருந்தனர். ஆனால், "நம்முடைய சிநேகிதனாகிய லாசரு நித்திரையடைந்திருக்கிறான்" என்னும் வார்த்தைகள் அவர்களுடைய மனங்களில் சரியான உணர்ச்சிகளை எழுப்பினது. பாடுகளை அனுபவித்துக்கொண்டிருக்கும் அவருடைய நண்பர்களை கிறிஸ்து மறந்திருக்கவில்லை என்னும் மனதிருப்தியை அடைந்தனர். (12)

அதன்பின் அவருடைய சீடர்கள்: "ஆண்டவரே, நித்திரை யடைந்திருந்தால் சுகமடைவான் என்றார்கள். இயேசுவானவர் அவனுடைய மரணத்தைக்குறித்து அப்படிச் சொன்னார்; அவர்களோ நித்திரைசெய்து இளைப்பாறுகிறதைக்குறித்துச் சொன்னாரென்று நினைத்தார்கள்." கிறிஸ்துவை விசுவாசிக்கும் அவருடைய பிள்ளைகளுக்கு மரணம் ஒரு உறக்கத்தைப்போல இருக்கிறது என்று அவர் எடுத்துக்காட்டுகிறார். அவர்களுடைய ஜீவன் கிறிஸ்துவுடனேகூட தேவனுக்குள் மறைந்திருக்கிறது. கடைசி எக்காளம் ஒலிக்கும்வரை மரிப்பவர்கள் அவருக்குள் நித்திரைசெய்வார்கள். (13)

“அப்பொழுது இயேசு அவர்களை நோக்கி: லாசரு மரித்துப்போனான் என்று வெளிப்படையாய்ச் சொல்லி; நான் அங்கே இராததினால் நீங்கள் விசுவாசமுள்ளவர்களாகிறதற்கு ஏதுவுண்டென்று உங்கள்நிமித்தம் சந்தோஷப்படுகிறேன்; இப்பொழுது அவனிடத்திற்குப்போவோம் வாருங்கள்” என்றார். அவனுடைய ஆண்டவர் யூதேயாவிற்குச் சென்றால் அவருக்கு மரணத்தைத்தவிர வேறு எதுவும் அங்கு காத்திருக்கவில்லை என்பதை மட்டும் தோமாவினால் காணமுடிந்திருந்தது. ஆனால் அவன் தன் ஆவியில் அரைக்கட்டிக்கொண்டவனாக மற்ற சீடர்களைப் பார்த்து: “அவரோடேகூட மரிக்கும்படி நாமும் போவோம் வாருங்கள்” என்றான். கிறிஸ்துவிற்கு எதிராக இருந்த யூதருடைய வெறுப்பை அவன் அறிந்திருந்தான். அவருடைய மரணத்தைச் சுற்றிவளைத்துக்கொண்டுவருவது அவர்களுடைய நோக்கமாக இருந்தது. ஆனால் அவருக்கென்று வைக்கப்பட்டிருந்த நேரத்தில் இன்னும் கொஞ்சம் இருந்ததினால் அந்த நோக்கம் வெற்றியடையாமலிருந்தது. அப்போது, பரலோகத் தூதர்களை இயேசு பெற்றிருந்தார். அதனால் ரபிமார்களின் சதித்திட்டத்தினால் யூதேயாவின் பிரதேசத்திலுங்கூட எவ்விதமான இடையூறும் அவரிடத்திற்கு வரமுடியவில்லை. (14)

“லாசரு மரித்துப்போனான் … நான் அங்கே இராததினால் … உங்கள்நிமித்தம் சந்தோஷப்படுகிறேன்” என்னும் கிறிஸ்துவின் வார்த்தைகளில் சீடர்கள் ஆச்சரியமடைந்தனர். இரட்சகர் அவருடைய சொந்த தெரிந்துகொள்ளுதலினால் துன்பப்பட்டுக்கொண்டிருக்கும் நண்பர்களின் வீட்டை விலக்கியிருந்தாரா? மரியாளும் மார்த்தாளும் மரித்துக்கொண்டிருந்த லாசருவும் வெளியரங்கமாகத் தனித்து விடப்பட்டவர்கள்போலக் காணப்பட்டனர். ஆனால் அவர்கள் தனியாக இருக்கவில்லை. அந்தக் காட்சி முழுவதையும் கிறிஸ்து கண்டிருந்து, லாசருவின் மரணத்திற்குப்பின் துயரமடைந்திருந்த அந்தச் சகோதரிகளை அவருடைய கிருபையினால் தாங்கியிருந்தார். மரணம் என்னும் பலமிக்க எதிரியுடன் அவர்களுடைய சகோதரன் போராடிக்கொண்டிருந்தபோது, அவர்களுடைய கிழிக்கப்பட்ட இருதயங்களின் துயரத்தை இயேசு சாட்சியாகக் கண்டார். “லாசரு மரித்துப்போனான்” என்று அவருடைய சீடர்களிடம் அவர் கூறியபோது, தாங்கவொண்ணா மனவேதனையை அவர் உணர்ந்தார். ஆனால் பெத்தானியாவில் உள்ளவர்களைமட்டும் நினைக்கவேண்டியிராமல், தமது சீடர்களின் பயிற்சியையும் கிறிஸ்து கவனிக்கவேண்டியவராக இருந்தார். பிதாவின் ஆசீர்வாதம் அனைவரையும் தழுவும்படி அவர்கள் உலகத்திற்கு அவருடைய பிரதிநிதிகளாக இருக்கவேண்டியதிருந்தது. அவர்களுக்காக அவர் லாசருவை மரிப்பதற்கு அனுமதித்தார். அவனை நோயிலிருந்து ஆரோக்கியமடையச் செய்திருப்பாரானால், அவருடைய தெய்வீக

குணத்திற்கு மிகவும் அதிகமான சான்றாக இருந்த அந்த அற்புதம் செய்யப்பட்டிருந்திருக்கமாட்டாது. (15)

கிறிஸ்து அந்த வியாதிப்பட்டிருந்தவனின் அறையில் இருந்திருந் தாரானால் அவன் மரித்திருக்கமாட்டான். ஏனெனில் சாத்தானுக்கு அவன் மீது வல்லமை இருந்திருக்காது. ஜீவாதிபதியின் சமுகத்திற்குமுன்பாக மரணத்தால் அதன் அம்பை லாசருவிற்கு நேராகக் குறிவைத்திருக்க முடியாது. ஆகையால் கிறிஸ்து தூரமாகத் தங்கியிருந்தார். தோல்வியடைந்த எதிரியாக அவனைப் பின்நோக்கித் துரத்துவதற்காக அவர் அவனுடைய வல்லமையைச் செயலாற்றுவதற்கு சத்துருவுக்கு இடங்கொடுத்தார். லாசரு மரணத்தின் ஆளுகையின்கீழ் கடந்துசெல்லவும், துன்பப்பட்டுக்கொண்டிருந்த அவனுடைய சகோதரிகள் தங்களுடைய சகோதரன் கல்லறையில் கிடத்தப்படுவதைக் காணவும் அவர் அனுமதித்தார். மரணமடைந்த சகோதரனின் முகத்தை அவர்கள் காணும்போது, மீட்பரின்மீதுள்ள அவர்களுடைய விசுவாசம் கடுமையாகச் சோதிக்கப்படும் என்பதையும் கிறிஸ்து அறிந்திருந்தார். அவர்கள் இப்பொழுது கடந்துகொண்டிருக்கும் போராட்டத்தின்மூலமாக அவர்களுடைய விசுவாசம் மிகவும் பெரிய வல்லமையுடன் பிரகாசிக்கும் என்பதையும் அவர் அறிந்திருந்தார். அவர்கள் தாங்கியிருந்த துயரத்தின் ஒவ்வொரு வேதனையையும் அவர் அனுபவித்திருந்தார். தாமதித்ததினால் அவர் அவர்களைக் குறைவாக நேசித்தார் என்று பொருள் அல்ல. ஆனால் அவர்களுக்காவும் லாசருவிற்காகவும் தமக்காகவும் தமது சீடர்களுக்காகவும் ஒரு வெற்றி பெற்றுக்கொள்ளப்படவேண்டியதாக இருந்தது என்பதை அவர் அறிந்திருந்தார். (16)

“உங்கள்நிமித்தம்” “நீங்கள் விசுவாசமுள்ளவர்களாகிறதற்கு ஏதுவுண்டென்று” தேவனுடைய வழிநடத்தும் கரத்தை உணருவதற்காகச் சமீபிக்கின்ற அனைவருக்கும் தெய்வீக உதவி மிகவும் அருகில் இருக்கின்ற நேரம், மிகப் பெரும் அதைரியமுள்ள நேரமாக இருக்கின்றது. அவர்களுடைய பாதையின் மிகவும் இருண்ட பகுதியின்மீது அவர்கள் நன்றியறிதலுடன் திரும்பிப் பார்ப்பார்கள். “ கர்த்தர் தேவபக்தியுள்ளவர்களைச் சோதனையினின்று இரட்சிக்கவும், … அறிந்திருக்கிறார்” (2 பேதுரு 2:9). அவர் அவர்களை உறுதியான விசுவாசத்துடனும் செழுமைமிக்க அனுபவத்துடனும் ஒவ்வொரு சோதனையிலிருந்தும் பரீட்சையிலிருந்தும் வெளியில் கொண்டுவருவார். (17)

லாசருவினிடத்திற்கு வருவதில் தாமதம்செய்ததில் அவரை ஏற்றுக்கொள்ளாமலிருந்தவர்களுக்கு நேராக கிறிஸ்து இரக்கத்தின் ஒரு நோக்கத்தை உடையவராக இருந்தார். லாசருவை மரித்தோரிலிருந்து

உயிருடன் எழுப்புவதினால் அவரை நம்பாத பிடிவாதமான மக்களுக்குத் தாமே உண்மையில் “உயிர்த்தெழுதலும் ஜீவனுமாயிருக்கிறார்” என்னும் மற்றொரு சான்றினைக் கொடுப்பதற்காக அவர் தாதமஞ்செய்தார். ஏழைகளும் அலைந்து திரிகின்ற ஆடுகளுமாக இருக்கும் இஸ்ரவேல் மக்கள் அனைத்து நம்பிக்கையையும் இழந்துவிடுவதை அவர் விரும்பவில்லை. மனந்திரும்பாத அவர்களுடைய தன்மையினால் அவருடைய இருதயம் நொறுங்கிக்கொண்டிருந்தது. அவர்தான் திரும்பவும் எடுத்துக்கட்டுபவர் என்பதற்கும், ஜீவனையும் அழியாமையையும் ஒளியையும் கொண்டுவரும் ஒரேஒருவர் என்பதற்குமான ஒரு சான்றைக் கொடுக்க அவருடைய இரக்கத்தில் அவர் தீர்மானித்தார். ஆசாரியர்கள் தவறாக எடுத்துக்காட்டமுடியாத ஒரு சான்றாக அது இருக்கவேண்டியதாயிருந்தது. பெத்தானியாவிற்கு அவர் தாமதமாகச் சென்றுகொண்டிருந்ததற்கு அது ஒரு காரணமாக இருந்தது. லாசருவை உயிருடன் எழுப்பின அந்த சிகரம்போன்ற அற்புதம் அவருடைய பணியின்மீதும் தெய்வீகத்தின் உரிமைபாராட்டுதலின்மீதும் தேவனுடைய முத்திரையைப் பதிப்பதாக இருந்தது. (18)

பெத்தானியாவிற்கான அவருடைய பயணத்தில் அவருடைய வழக்கத்தின்படி நோயாளிகளுக்கும் தேவையிலிருந்தவர்களுக்கும் ஊழியஞ்செய்தார். அந்த ஊரை அடைந்ததும் அவர் வந்துசேர்ந்திருப்பதின் செய்தியை லாசருவின் சகோதரிகளிடத்திற்கு அனுப்பினார். கிறிஸ்து உடனே அந்த வீட்டிற்குள் பிரவேசிக்காமல் வழியருகில் இருந்த ஒரு அமைதியான இடத்தில் இருந்தார். நண்பர்கள் உறவினர்கள் ஆகியோரின் இறப்பில் யூதர்களால் கடைபிடிக்கப்பட்டிருந்த வெளிப்படையான விளம்பரங்கள் கிறிஸ்துவின் ஆவியுடன் இசைவாக இல்லை. கூலிக்கு மாரடிப்பவர்களிடமிருந்துண்டான ஒலியை அவர் கேட்டு, குழப்பமிக்க அந்தக் காட்சியில் அந்தச் சகோதரிகளைக் காண விருப்பமற்றவராக இருந்தார். துக்கங்கொண்டாடியிருந்த நண்பர்களுக்கிடையில் அந்தக் குடும்பத்தின் உறவினர்களும் இருந்தனர். அவர்களில் எருசலேமில் மிகவும் பொறுப்பான உயர் பதவிகளில் இருந்த சிலரும் இருந்தனர். அவர்களுடைய நோக்கங்களை அறிந்திருந்த கிறிஸ்து, உடனடியாகத் தம்மை வெளிப்படுத்தாமலிருந்தார். (19)

அந்த அறையிலிருந்த மற்றவர்கள் கேட்காதவிதமாக அந்தச் செய்தி மார்த்தாளுக்குக் கொடுக்கப்பட்டிருந்தது. தனது வருத்தத்தில் மூழ்கியிருந்த மரியாள் அந்த வார்த்தைகளைக் கேட்கவில்லை. மார்த்தாள் உடனே எழுந்து தனது கர்த்தரைச் சந்திக்கச் சென்றாள். ஆனால் லாசரு அடக்கம் பண்ணப்பட்டிருந்த இடத்திற்குத்தான் மார்த்தாள் சென்றிருக்கிறாள் என்று

நினைத்துக்கொண்டு மரியாள் இன்னமும் அவளுடைய வருத்தத்தில் உட்கார்ந்துகொண்டு அதை அறியாமல் இருந்தாள். (20)

போராட்டமிக்க உணர்ச்சிகளால் கலக்கமடைந்திருந்த இருதயத்துடன் இயேசுவைச் சந்திப்பதற்காக மார்த்தாள் விரைந்தாள். உணர்ச்சிகளை வெளிக்காட்டக்கூடிய அவருடைய முகத்தில் எப்பொழுதுமே காணப்பட்டிருந்த அதேவிதமான மென்மையையும் அன்பையும் கண்டாள். அவர்மீதிருந்த அவளுடைய நம்பிக்கை உறுதியாக இருந்தது. ஆனால் தான் மிக அருமையாக நேசித்திருந்த தனது சகோதரனை அவள் நினைத்தாள். அவனை இயேசுவும் நேசித்திருந்தார். இயேசு வராததினால் அவளுடைய இருதயத்தில் வருத்தம் பொங்கிக்கொண்டிருந்தது. ஆயினும், அவர்களை ஆறுதற்படுத்த அவர் ஏதாவது செய்வார் என்னும் நம்பிக்கையுடன் அவள்: "ஆண்டவரே, நீர் இங்கேயிருந்தீரானால் என் சகோதரன் மரிக்கமாட்டான்" என்றாள். துக்கங்கொண்டாடுபவர்களின் சந்தடிக்கும்மேலாக, அந்தச் சகோதரிகள் இந்த வார்த்தைகளை மீண்டும் மீண்டும் கூறியிருந்தனர். (21)

மனித—தெய்வீக இரக்கத்துடன் இயேசு அவளுடைய துயரமும் கவலையுமுடைய முகத்தைப் பார்த்தார். கடந்த காலத்தை திரும்ப நினைத்துப் பார்க்க விருப்பமற்றவளாக மார்த்தாள் இருந்தாள். "ஆண்டவரே, நீர் இங்கேயிருந்தீரானால் என் சகோதரன் மரிக்கமாட்டான்" என்னும் துயரமிக்க வார்த்தைகளினால் எல்லாம் வெளிக்காட்டப்பட்டிருந்தது. ஆனால் அன்புமிக்க அந்த முகத்தைப் பார்த்துக்கொண்டு அவள்: "இப்பொழுதும் நீர் தேவனிடத்தில் கேட்டுக்கொள்ளுவதெதுவோ அதைத் தேவன் உமக்குத் தந்தருளுவாரென்று அறிந்திருக்கிறேன்" என்று மேலும் கூறினாள். (22)

"உன் சகோதரன் உயிர்த்தெழுந்திருப்பான்" என்று இயேசு கூறி, அவளுடைய விசுவாசத்திற்குத் தைரியமூட்டினார். உடனடியான ஒரு மாற்றத்தைப்பற்றிய நம்பிக்கையைத் தூண்டுகின்ற நோக்கத்தை உடையதாக அவருடைய பதில் இல்லை. நிகழ்காலத்தில் உள்ள அவளுடைய சகோதரனைத் திரும்பப் பெறுவதற்கும்அப்பால் மார்த்தாளின் சிந்தனைகளை அவர் எடுத்துச்சென்று, நீதிமான்களின் உயிர்த்தெழுதலின்மீது பதித்தார். மரித்த பரிசுத்தவான்கள் அனைவரும் உயிர்த்தெழுவார்கள் என்னும் வாக்குறுதியையும் அது இரட்சகரின் வல்லமையினால் நிறைவேற்றப்படும் என்பதற்கான ஒரு நிச்சயத்தையும் லாசருவின் உயிர்த்தெழுதலில் அவள் காணவேண்டும் என்பதற்காக அவர் இதைச் சொன்னார். (23)

"உயிர்த்தெழுதல் நடக்கும் கடைசிநாளிலே அவனும் உயிர்த்தெழுந்திருப்பான் என்று அறிந்திருக்கிறேன்" என்று மார்த்தாள் பதில் கூறினாள். (24)

அவளுடைய விசுவாசத்திற்கு இன்னும் ஒரு உண்மையான திசையைக் காட்ட வகைதேடிக்கொண்டு அவர்: “நானே உயிர்த்தெழுதலும் ஜீவனுமாயிருக்கிறேன், என்னை விசுவாசிக்கிறவன் மரித்தாலும் பிழைப்பான்” என்றார். கிறிஸ்துவில் இருந்த ஜீவன் ஆதிமுதல் இருந்ததாயும், இரவலாக வாங்கப்படாததாயும், ஏதோ ஒரு மூலத்தினின்று உருவாகாததாயுமிருந்தது. “குமாரனை உடையவன் ஜீவனை உடையவன், தேவனுடைய குமாரன் இல்லாதவன் ஜீவன் இல்லாதவன்”–1 யோவான் 5:12. கிறிஸ்துவின் தெய்வீகம், விசுவாசிப்பவனின் நித்திய ஜீவனைப்பற்றிய வாக்குறுதியாக இருக்கிறது. “இதை விசுவாசிக்கிறாயா” என்று இயேசு வினவினார். இங்கு கிறிஸ்து அவருடைய இரண்டாம் வருகையின் நேரத்தை முன்நோக்கிப் பார்க்கிறார். அப்பொழுது மரித்த நீதிமான்கள் அழியாமையை உடையவர்களாக எழுப்பப்பட்டு, உயிருள்ள நீதிமான்கள் மரணத்தைப் பார்க்காதவர்களாக பரலோகத்திற்கு மறுரூபப்படுத்தப்படுவார்கள். மரித்தோரிலிருந்த லாசருவை உயிர்த்தெழுப்பும்படி கிறிஸ்து செய்யவிருந்த அற்புதம் மரித்த நீதிமான்களின் உயிர்தெழுதலையும் எடுத்துக்காட்டக்கூடியதாக இருக்கும். அவருடைய வார்த்தைகளினாலும் செயல்களினாலும், தாமே உயிர்த்தெழுலின் துவக்கமாக இருப்பதை அவர் அறிவித்தார். விரைவில் சிலுவையில் மரிக்கவேண்டியவராக இருந்த அவர், கல்லறையின்மீது வெற்றிகொண்டவராக மரணத்தின் திறவுகோலை உடையவராக நின்றிருந்து, நித்திய ஜீவனைக் கொடுக்கின்ற அவருடைய உரிமை, வல்லமை ஆகியவைகளை வலியுறுத்தினார். (25)

“இதை விசுவாசிக்கிறாயா” என்னும் இரட்சகரின் வார்த்தைகளுக்கு மாார்த்தாள் “ஆம், ஆண்டவரே, நீர் உலகத்தில் வருகிறவரான தேவகுமாரனாகிய கிறிஸ்து என்று நான் விசுவாசிக்கிறேன்” என்று பதில் கொடுத்தாள். கிறிஸ்துவால் பேசப்பட்டிருந்த அனைத்து வார்த்தைகளின் முக்கியத்துவத்தையும் அவள் அறிந்துகொள்ளாதவளாக இருந்தாள். ஆனால் அவருடைய தெய்வீகத்தின்மீதிருந்த அவளுடைய விசுவாசத்தையும் அவருக்குப் பிரியமானது எதுவோ அதைச் செய்வதற்கு அவர் வல்லமை உடையவராக இருக்கிறார் என்ற அவளுடைய நம்பிக்கையையும் அறிக்கை செய்தாள். (26)

“இவைகளைச் சொன்னபின்பு, அவள்போய், தன் சகோதரியாகிய மரியாளை இரகசியமாய் அழைத்து: போதகர் வந்திருக்கிறார், உன்னை அழைக்கிறார்” என்றாள். அவளுடைய செய்தியை எவ்வளவு அமைதியாகக் கொடுக்கமுடியுமோ அவ்வளவு அமைதியாக அவள் கொடுத்தாள். ஏனெனில் சந்தர்ப்பம் கிடைக்கும்போது, அவரைக் கைதுசெய்தவற்காக ஆசாரியர்களும் அதிபதிகளும் ஆயத்தமாக இருந்தனர். துக்கங்கொண்டாடுபவர்களின்

அழுகுரல்கள் அவளுடைய வார்த்தைகள் கேட்கப்படுவதைத் தடை செய்திருந்தன. (27)

அந்தச் செய்தியைக் கேட்டதும் மரியாள் அவசரமாக எழுந்து அவளுடைய முகத்தில் ஆர்வமுள்ள பார்வையுடன் அந்த அறையைவிட்டு வெளியேறினாள். அவள் அழுவதற்காகக் கல்லறைக்குச் சென்றிருக்கிறாள் என்று நினைத்துக்கொண்டு, துக்கங்கொண்டாடுபவர்கள் மரியாளைப் பின்தொடர்ந்தார்கள். "இயேசு இருந்த இடத்தில் மரியாள் வந்து, அவரைக் கண்டவுடனே, அவர் பாதத்தில் விழுந்து: ஆண்டவரே, நீர் இங்கே இருந்தீரானால் என் சகோதரன் மரிக்கமாட்டான்" என்றாள். துக்கங்கொண்டாடுபவர்களின் அழுகுரல்கள் அவளுக்கு வேதனை நிறைந்ததாக இருந்தது. ஏனெனில், அவள் இயேசுவுடன் தனியாகச் சில வார்த்தைகளை அமைதியுடன் பேசுவதற்கு ஏக்கமுடையவளாக இருந்தாள். அங்கே இருந்தவர்களில் சிலர் தங்களுடைய இருதயங்களில் கிறிஸ்துவிற்கு எதிராகப் பேணியிருந்த வன்மத்தையும் பொறாமையையும் அவள் அறிந்திருந்தாள். ஆகவே அவளுடைய வருத்தத்தை முழுவதுமாக வெளிக்காட்டுவதிலிருந்து கட்டுப்படுத்தப்பட்டிருந்தாள். (28)

"அவள் அழுகிறதையும் அவளோடே கூட வந்த யூதர்கள் அழுகிறதையும் இயேசு கண்டபோது ஆவியிலே கலங்கித்துயரமடைந்து" கூடியிருந்த அனைவரின் எண்ணங்களையும் அவர் அறிந்தார். அநேகரில் வருத்தத்தின் வெளிக்காட்டலாக நடந்திருந்ததெல்லாம் வெறும் பாசாங்காக மட்டுமே இருந்தது என்பதை அவர் கண்டார். அந்தக் கூட்டத்தில் மாய்மாலமிக்க துயரத்தை இப்பொழுது வெளிக்காட்டிக்கொண்டிருப்பவர்கள் சில நாட்களுக்குள் பலத்த அற்புதத்தைச் செய்பவரை மட்டுமின்றி, மரித்தோரிலிருந்து எழுப்பப்படவுள்ளவனின் மரணத்திற்கும் திட்டமிடுவார்கள் என்பதையும் அவர் அறிந்திருந்தார். அவர்களுடைய பாசாங்கான துயரம் என்னும் மேலாடையைக் கிறிஸ்துவால் கிழித்திருக்கமுடியும். ஆனால் அவருடைய நீதியான கோபத்தை அவர் கட்டுப்படுத்திக்கொண்டார். தம்மிடம் உண்மையான விசுவாசம் வைத்திருக்கும் நேசிக்கப்படத்தக்க அந்தப் பெண், மரியாள் துக்கம் நிறைந்தவளாக தனது பாதத்தருகில் முழங்காலில் நின்றுகொண்டிருந்தபடியால், அனைத்து சத்தியத்துடனும் அவர் பேசியிருந்திருக்கக்கூடிய வார்த்தைகளை அவர் பேசவில்லை. (29)

"அவனை எங்கே வைத்தீர்கள்" என்று அவர் கேட்டார். "ஆண்டவரே, வந்து பாரும்" என்றார்கள். அவர்கள் ஒன்றாகச் சேர்ந்து கல்லறைக்குப் புறப்பட்டார்கள். அது ஒரு துக்கங்கொண்டாடும் காட்சியாக இருந்தது. லாசரு மிகவும் நேசிக்கபட்டவனாக இருந்தான். அவனுக்கு

நண்பர்களாக இருந்தவர்கள் மரணத்தால் துயரமடைந்திருந்த அந்தச் சகோதரிகளின் கண்ணீருடன் அவர்களுடைய கண்ணீரைக் கலந்தபோது, அவனுடைய சகோதரிகள் அவனுக்காக உடைந்த இருதயங்களுடன் அழுதனர். இந்த மானிட மனத்துயரை கருத்தில்கொண்டும், உலக இரட்சகரே அருகில் நின்றிருந்தபோதும் துன்பமடைந்த நண்பர்கள் மரித்தவனுக்காகத் துக்கங்கொண்டாடுவதைக் கண்டும் “இயேசு கண்ணீர் விட்டார்.” அவர் தேவகுமாரனாக இருந்தபோதிலும் தம்மீது மனித இயல்பை எடுத்துக்கொண்டிருந்ததினால் மனிதத் துயரத்தால் அசைக்கப்பட்டார். அவருடைய மென்மையும் இரக்கமுமுள்ள இருதயம் பாடுகள் காரணமாக அனுதாபப்படும்படி எப்பொழுதும் எழுப்பப்பட்டிருக்கிறது. அழுபவர்களுடன் சேர்ந்து அவரும் அழுகிறார். களிகூருபவர்களுடன் சேர்ந்து அவரும் களிகூருகிறார். (30)

ஆனால் மரியாள் மார்த்தாளின்மீதிருந்த மானிட அனுதாபத்தினால் மட்டும் இயேசு அழவில்லை. அவருடைய கண்ணீரில் பூமியைவிட வானங்கள் எவ்வளவு உயரத்தில் இருக்கின்றதோ, அதைப்போன்ற மனிதத்துயரத்திற்கும் மேலான ஒரு துயரம் இருந்தது. கிறிஸ்து லாசருவிற்காக அழவில்லை. ஏனெனில் அவனை அவர் கல்லறையிலிருந்து அழைக்கப்போகிறார். லாசருவிற்காக இப்பொழுது துக்கங்கொண்டாடிக் கொண்டிருப்பவர்களில் அநேகர் உயிர்த்தெழுதலும் ஜீவனுமாக இருப்பவரது மரணத்திற்காக விரைவில் திட்மிடுவார்கள் என்று அழுதார். ஆனால் விசுவாசமில்லாத யூதர்கள் எவ்விதமாக அவருடைய கண்ணீரைச் சரியாக விளங்கிக்கொள்ள முடியாதவர்களாக இருந்தனர்? அவருடைய வருத்தத்திற்குக் காரணமாக அவருக்கு முன்னால் இருக்கும் வெளிப்படையான சூழ்நிலைகளைப்பற்றிய காட்சிக்கு அதிகமாக எதையும் காணமுடியாதவர்களாக இருந்த சிலர்: “இதோ, இவர் அவனை எவ்வளவாய்ச் சிநேகித்தார்” என்று மெதுவாகக் கூறினார்கள். அங்கு இருந்தவர்களின் இருதயங்களில் அவநம்பிக்கையின் விதையை விதைக்க வகைதேடியிருந்த மற்றவர்கள் ஏளனமாக: “குருடனுடைய கண்களைத் திறந்த இவர், இவனைச் சாகாமலிருக்கப்பண்ணவும் கூடாதா” என்றார்கள். (31)

பரிசேயர்கள் சதுசேயர்கள் ஆகியோருடைய பகையை கிறிஸ்து தீர்க்கதரிசனக் கண்களுடன் பார்த்தார். அவர்கள் அவருடைய மரணத்தை முன்கூட்டியே திட்டமிட்டுக்கொண்டிருந்தனர் என்பதை அவர் அறிந்திருந்தார். இப்பொழுது வெளியரங்கமான அனுதாபத்தைக் காட்டிக்கொண்டிருப்பவர்களில் சிலர், விரைவில் தங்களுக்கெதிராகத் தாங்களே நம்பிக்கையின் கதவையும் தேவனுடைய நகரத்தின் வாசல்களையும் மூடிவிடுவார்கள் என்பதையும்

அவர் அறிந்திருந்தார். எருசலேமின் அழிவிற்குக் காரணமான அவருடைய அவமானமும் சிலுவைமரணமும் அவருடைய காட்சிக்கு வந்தது. அந்த அழிவில் மரித்தவர்களுக்காக ஒருவரும் புலம்பமாட்டார்கள் என்பதையும் அறிந்தார். எருசலேமின்மீது வந்துகொண்டிருந்த தேவ கோபமாகிய தண்டனை வெளிப்படையாக அவருக்கு முன்பாகச் சித்தரிக்கப்பட்டிருந்தது. பல்லாயிரக்கணக்கான ரோம நாட்டு வீரர்களால் எருசலேம் சூழப்பட்டிருந்ததை அவர் கண்டார். லாசருவிற்காக இப்பொழுது அழுதுகொண்டிருப்பவர்களில் அநேகர் அந்த நகரத்தின் முற்றுகையில் மடிந்துபோவார்கள் என்பதையும் அவர்களுடைய மரணத்தில் நம்பிக்கை இருக்காது என்பதையும் அவர் அறிந்திருந்தார். (32)

அவருக்கு முன்பாக இருந்த காட்சிக்காகமட்டும் கிறிஸ்து அழவில்லை. யுகங்கள் நெடுகிலுமுள்ள துக்கத்தின் பாரம் அவர்மீது இருந்தது. தேவனுடைய நியாயப்பிரமாணத்தை மீறுவதன் பயங்கரமான பலனைக் கண்டார். ஆபேலின் மரணத்துடன் ஆரம்பமாகி இந்த உலகத்தின் வரலாற்றில் நன்மைக்கும் தீமைக்கும் இடையிலான போராட்டம் நின்றுவிடாமலிருந்ததை அவர் கண்டார். வரவிருந்த காலங்களுக்கூடாக அவர் பார்த்தபோது, பாடுகள் துயரம், கண்ணீர், மரணம் ஆகியவை மனிதனின் பங்காக இருக்கப்போவதை அவர் கண்டார். எல்லாக் காலங்களிலும் எல்லாத் தேசங்களிலும் உள்ள மனிதக் குடும்பத்தின் வேதனையினால் அவருடைய இருதயம் துளைக்கப்பட்டிருந்தது. பாவமிக்க இனத்தின் ஆபத்துக்கள் அவருடைய ஆத்துமாவின்மீது பாரமாக இருக்கவேண்டும். அவர்களுடைய துன்பங்கள் அனைத்தையும் விடுவிக்க அவர் ஏங்கினபோது, அவருடைய கண்ணீரின் ஊற்று உடைந்தது. (33)

“இயேசு மறுபடியும் தமக்குள்ளே கலங்கிக் கல்லறையினிடத்திற்கு வந்தார்.” ஒரு பாறையிலிருந்த குகையில் லாசரு கிடத்தப்பட்டிருந்தான். அதன் நுழைவாயிலில் ஒரு பெரிய கல் வைக்கப்பட்டிருந்தது. “கல்லை எடுத்துப்போடுங்கள்” என்று கிறிஸ்து கூறினார். மார்த்தாள் அவர் மரித்தவனைப் பார்க்கமட்டுமே விரும்பினார் என்று நினைத்துக்கொண்டு, அந்த உடல் நான்கு நாட்களுக்குமுன் அடக்கஞ்செய்யப்பட்டிருந்ததால் அழிவு ஏற்கெனவே அதன் வேலையைச் செய்யத்தொடங்கியிருக்கும் என்று கூறிக்கொண்டு தடைசெய்தாள். லாசருவை எழுப்புவதற்குமுன் கொடுக்கப்பட்ட இந்த அறிக்கை வஞ்சகம் செயலாற்றப்பட்டது என்று கிறிஸ்துவைப்பற்றி அவருடைய எதிரிகள் கூறுதவற்கு இடமில்லாமல் செய்துவிட்டது. கடந்தகாலத்தில் தேவனுடைய வல்லமையின் மிகவும் ஆச்சரியமான வெளிக்காட்டல்களைப்பற்றிப் பரிசேயர்கள் தவறான

அறிக்கைகளைச் சுற்றுக்கு விட்டிருந்தனர். யவீருவின் மகளை கிறிஸ்து உயிரடையும்படி எழுப்பினபோது, “பிள்ளை மரிக்கவில்லை, நித்திரையாயிருக்கிறாள்” (மாற்கு 5:39) என்று அவர் கூறியிருந்தார். அவள் குறைவான நேரமே நோயுற்றிருந்ததினாலும், மரித்த உடனே எழுப்பப்பட்டிருந்ததினாலும் அந்தப் பிள்ளை மரிக்கவில்லை என்றும் அவள் நித்திரைசெய்துகொண்டிருக்கிறாள் என்றும் கிறிஸ்துவே கூறியிருந்தார் என்று பரிசேயர்கள் அறிவித்திருந்தனர். கிறிஸ்துவினால் நோயைக் குணப்படுத்த முடியவில்லையென்றும் அவருடைய அற்புதங்களில் நேர்மைக்கேடான செயல்கள் மட்டுமே இருந்தன என்றும் தோன்றும்படிச் செய்ய அவர்கள் முயன்றிருந்தனர். ஆனால் இந்தக் காரியத்தில் லாசரு இறந்திருந்தான் என்பதை ஒருவராலும் மறுக்கமுடியாமலிருந்தது. (34)

கர்த்தர் ஒரு காரியத்தைச் செயலாற்ற இருக்கும்போது, அதை மறுப்பதற்குச்சாத்தான்யாரையாவது ஏவுகிறான். “கல்லை எடுத்துப்போடுங்கள்” என்று கிறிஸ்து கூறினார். எவ்வளவு தூரத்திற்கு முடியுமோ அவ்வளவு தூரத்திற்கு என்னுடைய வேலைக்காகப் பாதையை ஆயத்தம்பண்ணுங்கள். ஆனால் மார்த்தாளின் தீவிரமும் பேராவலுமிக்க இயல்பானது அதைத்தானே எடுத்துக்கொண்டது. அழுகிக்கொண்டிருக்கும் அந்த உடலைப் பார்வைக்குக் கொண்டுவர அவள் விருப்பமில்லாதவளாக இருந்தாள். கிறிஸ்துவின் வார்த்தைகளைப் புரிந்துகொள்வதற்கு மனித இருதயம் மந்தமாக இருக்கிறது. மார்த்தாளின் விசுவாசம் அவருடைய வாக்குத்தத்தத்தின் உண்மையான அர்த்தத்தைப் பிடித்துக்கொள்ளாமலிருந்தது. (35)

கிறிஸ்து மார்த்தாளைக் கடிந்துகொண்டார். எனினும் அவருடைய வார்த்தைகள் மிகவும் மென்மையாக கனிவுடன் பேசப்பட்டிருந்தன. “நீ விசுவாசித்தால் தேவனுடைய மகிமையைக் காண்பாய் என்று நான் உனக்குச் சொல்லவில்லையா” என்னுடைய வல்லமையைப்பற்றி நீ சந்தேகிக்கவேண்டியது ஏன்? என்னுடைய கோரிக்கைகளுக்கு எதிராக மறுப்புத் தெரிவிப்பது ஏன்? நீ என் வார்த்தையை உடையவளாக இருக்கிறாய். நீ விசுவாசித்தாயானால் தேவனுடைய மகிமையைக் காண்பாய். சர்வவல்லமை உடைய ஒருவருடைய கிரியைகளை இயற்கையின் இயலாமைகளால் தடைசெய்ய முடியாது. சந்தேகவாதங்களும் நம்பிக்கையின்மையும் தாழ்மை அல்ல. கிறிஸ்துவின் வார்த்தையின்மீதுள்ள உள்ளார்ந்த நம்பிக்கைதான் உண்மையான தாழ்மையாகவும் உண்மையான சுயத்தின் சரணாகதியாகவும் இருக்கிறது. (36)

“கல்லை எடுத்துப்போடுங்கள்.” அந்தக் கல்லை அகன்றுபோகும்படி கிறிஸ்துவால் கட்டளையிட்டிருந்திருக்க முடியும். அதுவும் அவருடைய

குரலிற்குக் கீழ்ப்படிந்திருக்கும். அதைச் செய்யும்படி அவருக்கு அருகில் இருந்த தூதர்களுக்கு அவர் கட்டளை கொடுத்திருந்திருக்க முடியும். அவருடைய கட்டளையின்படி கண்களுக்குப் புலப்படாத கரங்கள் அந்தக் கல்லை நீக்கியிருந்திருக்கும். ஆனால் மனிதக் கைகளினால் அது எடுத்துப்போடப்படவேண்டியதாக இருந்தது. இவ்விதமாக தெய்வீகத்துடன் மானுடம் ஒத்துழைக்கவேண்டும் என்பதைக் காட்ட கிறிஸ்து விரும்புகிறார். மனித வல்லமையினால் எதைச் செய்ய முடிந்திருந்ததோ அதைச் செய்யும்படி தெய்வீக வல்லமை அழைக்கப்பட்டிருக்கவில்லை. மனித உதவியைப் பகிர்ந்து பெறுபவராக தேவன் இல்லை. அவர் அவனைப் பலப்படுத்தி அவனுக்குக் கொடுக்கும் வல்லமைகளையும் திறமைகளையும் பயன்படுத்தும்போது அவனுடன் ஒத்துழைக்கிறார். (37)

அவர் கொடுத்த கட்டளைக்கு அருகிலிருந்தோர் கீழ்ப்படிகிறார்கள். அந்தக் கல் நகர்த்தப்படுகிறது. எல்லாக் காரியங்களும் வெளிப்படையாகவும் திட்டமான நோக்கத்தோடும் செய்யப்பட்டிருக்கிறது. எந்தவிதமான ஏமாற்றுவேலையும் செய்யப்படவில்லை என்பதைப் பார்ப்பதற்கு அனைவருக்கும் ஒரு வாய்ப்பு கொடுக்கப்பட்டிருக்கிறது. பாறையினாலான ஒரு கல்லறையில் லாசருவின் உடல் மரணத்தில் குளுமையாகவும் குளிர்ந்த நிலையிலும் அமைதியாகக் கிடக்கின்றது. துக்கங்கொண்டாடுபவர்களின் அழுகைகள் மௌனமடைந்துவிடுகின்றன. என்ன நிகழ இருக்கிறது என்பதைப் பார்ப்பதற்காக ஆச்சரியத்துடனும் எதிர்பார்ப்புடனும் அந்த கூட்டத்தினர் அந்தக் கல்லறையைச் சுற்றி நிற்கின்றனர். (38)

அந்தக் கல்லறைக்குமுன் கிறிஸ்து அமைதியாக நிற்கிறார். அங்கு நிற்கும் அனைவரின்மீதும் ஒரு பரிசுத்தமான பக்திவிநயம் காணப்படுகிறது. கிறிஸ்து அந்தக் கல்லறையை நெருங்கிச் செல்லுகிறார். தமது கண்களை வானத்திற்கு நேராக உயர்த்தி: "பிதாவே, நீர் எனக்குச் செவிகொடுத்தபடியினால் உம்மை ஸ்தோத்தரிக்கிறேன். நீர் எப்பொழுதும் எனக்குச் செவிகொடுக்கிறீர் என்று நான் அறிந்திருக்கிறேன்; ஆனாலும் நீர் என்னை அனுப்பினதைச் சூழ்ந்துநிற்கும் ஜனங்கள் விசுவாசிக்கும்படியாக அவர்கள்நிமித்தம் இதைச் சொன்னேன்" என்று கூறினார். இதற்குச் சற்றுமுன்பாக கிறிஸ்து தேவதூஷணம் சொன்னார் என்று கூறி, அவருடைய எதிரிகள் அவரைக் குற்றப்படுத்தினதுடன் அவர் தாம் தேவகுமாரனாக இருக்கிறார் என்று கூறினதால் அவர்மீது எறியும்படி கற்களையும் எடுத்துக்கொண்டிருந்தனர். அவர் சாத்தானின் வல்லமையினால்தான் அற்புதங்களைச் செய்கிறார் என்று அவர்மீது அவர்கள் குற்றஞ்சாட்டியிருந்தனர். ஆனால் இங்கு தாம் தேவ குமாரன் என்னும் பூரணமான நம்பிக்கையுடன் கிறிஸ்து தேவனைத் தமது பிதா என்று அழைக்கிறார். (39)

கிறிஸ்து செய்திருந்த யாவற்றிலும் அவர் அவருடைய பிதாவுடன் ஒத்துழைத்திருந்தார். அவர் தனிப்பட்டவராக எதையும் செய்யவில்லையென்பதற்குச் சான்று பகர்வதற்கு எப்பொழுதும் கவனமுள்ளவராக இருந்தார். அவருடைய அற்புதங்களை விசுவாசத்தினாலும் ஜெபத்தினாலும்தான் செயலாற்றியிருந்தார். பிதாவுடன் அவருக்கிருந்த உறவை அனைவரும் அறியவேண்டுமென்று கிறிஸ்து விரும்பியிருந்தார். "பிதாவே, நீர் எனக்குச் செவிகொடுத்தபடியினால் உம்மை ஸ்தோத்திரிக்கிறேன். நீர் எப்பொழுதும் எனக்குச் செவிகொடுக்கிறீர் என்று நான் அறிந்திருக்கிறேன்; ஆனாலும் நீர் என்னை அனுப்பினதைச் சூழ்ந்துநிற்கும் ஜனங்கள் விசுவாசிக்கும்படியாக அவர்கள்நிமித்தம் இதைச் சொன்னேன்" என்றார். இங்கு கிறிஸ்துவிற்கும் தேவனுக்குமிடையில் இருந்துகொண்டிருக்கும் உறவைப்பற்றிய மிக அதிகமான நம்பிக்கையூட்டும் சான்று கொடுக்கப்படவேண்டியதாக இருந்தது. கிறிஸ்து கூறுவது ஒரு வஞ்சகமல்ல என்பதற்கு அவைகள் காட்டப்படவேண்டியதாக இருந்தது, (40)

"இவைகளைச் சொன்னபின்பு: லாசருவே, வெளியே வா என்று, உரத்த சத்தமாய்க் கூப்பிட்டார்." தெளிவானதும் நுழைந்துசெல்லக் கூடியதுமாக இருந்த அவருடைய குரல் மரித்தவனின் செவியைத் துளைக்கிறது. அவர் பேசுகின்றபோது, மானுடத்திற்கு ஊடாக தெய்வீகம் திடீரெனப் பளிச்சிடுகிறது. தேவனுடைய மகிமையினால் ஒளிப்படுத்தப்பட்டுள்ள அவருடைய முகத்தில் அவருடைய வல்லமையின் நிச்சயத்தை மக்கள் காணுகின்றனர். அந்தக் குகையின் நுழைவாயிலின்மீது ஒவ்வொரு கண்ணும் பதிகின்றது. மிகவும் மெல்லிய ஓசையைக்கூடப் பிடித்துக்கொள்ளும்படி ஒவ்வொரு செவியும் சாய்ந்திருக்கிறது. கிறிஸ்துவின் தெய்வீகத்தின் பரீட்சைக்காக தாம் தேவகுமாரன் என்று அவர் பாராட்டும் உரிமையை மெய்ப்பிப்பதற்காக அல்லது அந்த நம்பிக்கையை என்றைன்றைக்குமாக அணைப்பதற்காக மிகவும் மும்முரமும் வேதனையுமிக்க ஆர்வத்துடனும் அனைவரும் காத்திருக்கின்றனர். (41)

மௌனமிக்க அந்தக் கல்லறையில் ஒரு சலனம் உண்டாகிறது. மரித்திருந்த அவன் கல்லறையின் வாசலில் நிற்கிறான். அவனுடைய அசைவுகள் அவன் கிடத்தப்பட்டபோது அவன்மீது சுற்றப்பட்டிருந்த துணிகள் அவனது உடலின் இயக்கத்தைத் தடைசெய்கிறது.ஆச்சரியத்துடன் பார்த்துக்கொண்டிருப்பவர்களிடம் "இவனைக் கட்டவிழ்த்துவிடுங்கள்" என்றார். மனித ஊழியக்காரன் தேவனுடன் ஒத்துழைக்கவேண்டும் என்பது அவர்களுக்கு மறுபடியும் காட்டப்படுகிறது.லாசரு விடுதலையாக்கப்பட்டவனாக அந்தக் கூட்டத்திற்குமுன்னால் நிற்கிறான். நோயினால் மெலிந்தவனாக

பலவீனமாக தடுமாறிக்கொண்டிருக்கும் கைகால்களை உடையவனாக அல்ல, வாழ்க்கையின் முழுவளர்ச்சியையுமுடைய ஒரு மனிதனாகவும் ஒரு மேன்மைமிக்க மனித வல்லமையுடனும் நிற்கிறான். அவனுடைய கண்கள் நுண்ணிறிவுடனும் இரட்கரின்மீதான அன்பினாலும் பிரகாசிக்கின்றன. அவன் இயேசுவைப் போற்றி அவருடைய பாதங்களில் விழுகிறான். (42)

அதைக் கண்டிருந்தவர்கள் முதலில் வியப்பினால் பேச்சற்றவர்கள் ஆகின்றனர். அதற்குப்பின் களிகூருதல் நன்றியறிவித்தல் ஆகியவைகளின் சொல்லிமுடியாத ஒரு காட்சி பின்தொடருகிறது. அந்தச் சகோதரிகள் அவர்களுடைய சகோதரனை தேவனுடைய ஒரு ஈவாகத் திரும்பவும் உயிருடன் பெறுகின்றனர். மகிழ்ச்சியின் கண்ணீருடன் அவர்கள் தங்களுடைய நன்றியறிதலை நொறுங்குண்டவர்களாக வெளிக்காட்டுகின்றனர். ஆனால் சகோதரனும் சகோதரிகளும் நண்பர்களும் இந்த ஐக்கியத்தில் களிகூர்ந்துகொண்டிருக்கும்போது, இயேசு அந்தக் காட்சியிலிருந்து பின்வாங்கிச் செல்லுகிறார். அவர்கள் ஜீவாதிபதியைத் தேடிப்பார்க்கும்போது, அவரைக் காணவில்லை. (43) ★

# 59

# ஆசாரியர்களின் சதித்திட்டங்கள்...!

**யோவான் 11:47-54**

**(The Desire of Ages, pp. 537-546)**

லாசருவை எழுப்பின செய்தி எருசலேம் நகருக்கு விரைவில் எடுத்துச்செல்லப்படுமளவிற்கு பெத்தானியா கிராமம் எருசலேமிற்கு மிகவும் அருகிலிருந்தது. அந்த அற்புதத்திற்கு சாட்சிகளாக இருந்த வேவுகாரர்களின்மூலமாக, அந்த உண்மைகளை யூத அதிபதிகள் விரைவில் பெற்றுக்கொண்டனர். என்ன செய்யவேண்டும் என்று முடிவுசெய்வதற்காக உடனே சனகரீம் சங்கம் கூட்டப்பட்டது. மரணம், கல்லறை ஆகியவைகளின்மீது கிறிஸ்து கட்டுப்பாட்டைக் கொண்டிருந்தார் என்பதை இப்பொழுது அவர் முழுமையாக வெளிக்காட்டியிருந்தார். தேவன் மனிதர்களின் இரட்சிப்பிற்காக, அவருடைய குமாரனை உலகத்திற்குள் அனுப்பியிருந்தார் என்பதற்கான, தேவனால் கொடுக்கப்பட்டிருந்த கிரீடமான சாட்சியாக அது இருந்தது. காரணம் காணுதல், மனச்சாட்சியின் அறிவூட்டுதல் ஆகியவைகளின் கட்டுப்பாட்டின்கீழிருந்த ஒவ்வொரு மனதிலும் மனஉணர்த்துதலை உண்டுபண்ணுவதற்குப் போதுமான செயல்விளக்கமாக அது இருந்தது. லாசருவின் உயிர்த்தெழுதலிற்குச் சாட்சிபகர்ந்திருந்த அநேகர் இயேசுவை நம்பும்படி நடத்தப்பட்டிருந்தனர்; ஆனால், அவருக்கு எதிரான ஆசாரியர்களின் வெறுப்பு வலிமையடைந்திருந்தது. அவருடைய தெய்வீகத்தின் குறைவான சான்றுகள் அனைத்தையும் அவர்கள் புறக்கணித்திருந்து, இந்தப் புதிய அற்புதத்தினால் சீற்றமடைந்திருந்தனர். மரித்திருந்த அவன் பகலின் வெளிச்சத்தில்—சாட்சிகளாக இருந்த ஒரு கூட்டத்தினருக்கு முன்பாக எழுப்பப்பட்டிருந்தான். அப்படிப்பட்ட சான்றிற்கு எதிராக எந்தவிதமான தந்திரத்தினாலும் விளக்கம் கொடுக்கமுடியாமலிருந்தது. இந்த இதே காரணத்திற்காக ஆசாரியர்களின் பகைமை சாவிற்கேதுவானதாக வளர்ந்தது. அவர்கள் இதற்குமுன் ஒருபோதும் இல்லாமலிருந்தவிதமாக, கிறிஸ்துவின் பணியை நிறுத்துவதற்குத் தீர்மானமுள்ளவர்களாக இருந்தனர். (1)

சதுசேயர்கள் கிறிஸ்துவிற்கு ஆதரவானவர்களாக இல்லாமலிருந்த போதிலும், பரிசேயர்கள் இருந்ததைப்போல அவருக்கு நேராக வன்மம் நிறைந்தவர்களாக இருக்கவில்லை. அவர்களுடைய வெறுப்பு அந்த அளவிற்குக் கசப்பானதாகவும் இருக்கவில்லை; ஆனால், இப்பொழுது அவர்கள் முற்றிலும் குழப்பமடைந்தவர்களாக இருந்தனர். மரித்தவர்களின் உயிர்த்தெழுதலை அவர்கள் நம்பியிருக்கவில்லை. அப்படிப்பட்ட விஞ்ஞானமென்று அழைக்கப்பட்ட காரியத்தை முன்வைத்து, ஒரு மரித்த உடலை ஜீவனுடையதாகக் கொண்டுவருவது என்பது முடியாத காரியமாக இருக்கும் என்று அவர்கள் வாதஞ்செய்திருந்தனர்; ஆனால், கிறிஸ்துவினிடத்திலிருந்துண்டான சில வார்த்தைகளினால், அவர்களுடைய விஞ்ஞான தத்துவவிளக்கம் தோற்கடிக்கப்பட்டிருந்தது. வேதவாக்கியங்கள், தேவனுடைய வல்லமை ஆகிய இரண்டையும்பற்றி அவர்கள் அறிவில்லாதவர்களாக இருக்கின்றனர் என்பது காட்டப்பட்டது. அந்த அற்புதத்தினால், மக்களிடத்தில் உண்டுபண்ணப்பட்டிருந்த உணர்த்துதலை நீக்குவது சாத்தியமென்பதை அவர்களால் காணமுடியவில்லை. மரித்தவனை கல்லறையிடமிருந்து வலிய பறித்து வெற்றியடைந்தவரிடத்திலிருந்து, மனிதர்களை எப்படி விலக்கமுடியும்? பொய்யான அறிக்கைகள் எங்கும் சுற்றுக்கு விடப்பட்டன; ஆனால் அந்த அற்புதத்தை மறுக்கமுடியவில்லை; அதன் விளைவுகளை எதிர்ப்பது எப்படி என்று அவர்கள் அறியவுமில்லை. இதுவரை சதுசேயர்கள் இயேசுவைக் கொலைசெய்யவேண்டும் என்னும் திட்டத்தை ஊக்கப்படுத்தாதவர்களாக இருந்தனர்; ஆனால் லாசருவின் உயிர்த்தெழுதலிற்குப்பின், அவர்களுக்கெதிரான அவருடைய அச்சமில்லாத வெளிப்படையான குற்றச்சாட்டை, அவருடைய மரணத்தினால் மட்டுமே நிறுத்தமுடியும் என்று அவர்கள் முடிவுசெய்தனர். (2)

உயிர்த்தெழுதலின்மீது நம்பிக்கை கொண்டிருந்த பரிசேயர்களால் மேசியா அவர்களுக்கு மத்தியில் இருந்தார் என்பதற்கான ஒரு சான்றாக இருந்த இந்த அற்புதத்தைப் பார்க்காது இருக்கமுடியவில்லை; ஆனால், அவர்கள் கிறிஸ்துவின் பணியை எப்பொழுதுமே எதிர்த்திருந்தனர். அவர்களுடைய மாய்மாலமிக்க போலித்தன்மைகளை அவர் வெளிக்காட்டியிருந்ததினால், முதலிலிருந்தே அவர்கள் அவரை வெறுத்திருந்தனர். அவர்களுடைய சன்மார்க்கக் குறைபாடுகளை மறைத்துவைத்திருந்த கடுமையான மதச்சடங்குகள் என்னும் மேலாடையை அவர் கிழித்தெறிந்திருந்தார். அவர் போதித்திருந்த தூய்மையான மதம் அவர்களுடைய பயபக்தியின் போலிவேடத்தைக் கண்டனஞ்செய்திருந்தது. கூர்மையான அவருடைய கடிந்துகொள்ளுதலுக்காக, அவர்மீது பழிவாங்குவதற்காக அவர்கள் தாகத்தோடிருந்தனர். அவரைக் குற்றப்படுத்துவதற்கான சந்தர்ப்பத்தை

அவர்களுக்குக் கொடுக்கக்கூடியவிதமாக, அவர் ஏதாவது சொல்லும்படி அல்லது செய்யும்படி அவரைத் தூண்டுவதற்கு அவர்கள் முயன்றிருந்தனர். அவர்மேல் கல்லெறிவதற்குப் பல தடவைகள் அவர்கள் முயன்றபோது, அவர் அமைதியாக விலகிச்சென்றிருந்ததினால், அவர்கள் அவரைப் பார்க்கமுடியாமற்போயிற்று. (3)

ஓய்வுநாளில் அவர் செய்திருந்த அற்புதங்கள் அனைத்தும் துன்பப்பட்டிருந்தவர்களுக்கான நிவாரணமாக இருந்தது; ஆனால், அவர் ஓய்வுநாளை மீறுபவர் என்று கண்டனம்பண்ண பரிசேயர்கள் வகைதேடியிருந்தனர். அவருக்கு எதிராக ஏரோதியர்களை எழுப்பிவிட அவர்கள் முயன்றிருந்தனர். ஒரு போட்டி இராஜ்யத்தை ஏற்படுத்த அவர் வகைதேடிக்கொண்டிருக்கிறார் என்று அவர்கள் எடுத்துக் கூறி, அவரை ஒழிப்பது எப்படியென்று அவர்களுடன் ஆலோசனை செய்திருந்தனர். அவருக்கு எதிராக ரோமர்களை எழுப்பிவிடுவதற்காக, அவர்களுடைய அதிகாரத்தைக் கவிழ்ப்பதற்கு அவர் முயன்றுகொண்டிருக்கிறார் என்றும் அவர்கள் அவரைச் சுட்டிக்காட்டியிருந்தனர். மக்களை அவருடைய செல்வாக்கிற்குள் கொண்டுவருவதிலிருந்து அவரை விலக்கவேண்டுமென்று, ஒவ்வொரு சாக்குப்போக்கையும் சொல்வதற்கு அவர்கள் முயற்சி செய்திருந்தனர்; ஆனால், இதுவரை அவர்களுடைய முயற்சிகள் தடைசெய்யப்பட்டிருந்தன. அவருடைய இரக்கத்தின் செயல்களுக்குச் சாட்சிகளாக இருந்து, அவருடைய தூய்மையும் பரிசுத்தமுமான போதனைகளைக் கேட்டிருந்தவர்கள் இவைகள் ஓய்வுநாளைமீறும் ஒருவரின் அல்லது தேவதூஷணம் கூறும் ஒருவரின் வார்த்தைகளாகவோ அல்லது செயல்களாகவோ இருக்கவில்லை என்பதை அறிந்திருந்தனர். பரிசேயர்களால் அனுப்பப்பட்டிருந்த அதிகாரிகளுங்கூட அவர்மீது அவர்களுடைய கைகளை வைக்கமுடியாத வண்ணமாக, அவருடைய வார்த்தைகளினால் ஆட்கொள்ளப்பட்டிருந்தனர். யூதர்கள் இறுதியாக நம்பிக்கையற்ற துணிவுடன், இயேசுவின்மீது விசுவாசத்தை அறிக்கைசெய்யும் எந்த மனிதனும் ஜெப ஆலயத்திலிருந்து புறம்பாக்கப்படவேண்டும் என்னும் ஒரு கட்டளையை நிறைவேற்றினார்கள். (4)

அப்படியே, ஆசாரியர்களும் அதிபதிகளும் மூப்பர்களும் ஆலோசனைசெய்வதற்காக ஒன்றுகூடியபோது, எல்லா மனிதர்களும் ஆச்சரியப்பட்டிருந்த—ஆச்சரியப்படக்கூடிய காரியங்களைச் செய்தவரை அமைதிப்படுத்த (கொலைசெய்ய) வேண்டும் என்பது அவர்களுடைய முடிவான தீர்மானமாக இருந்தது. இதற்குமுன் ஒருபோதும் இருந்திராத விதமாக, பரிசேயர்களும் சதுசேயர்களும் ஒன்றுபட்டனர். இதுவரை

பிரிந்திருந்த அவர்கள் கிறிஸ்துவை எதிர்ப்பதில் ஒருமித்தவர்களானார்கள். முந்தின கூட்டங்களில் நிக்கொதேமுவும் யோசேப்பும் இயேசுவை ஆக்கினைக்குட்படுத்துவதைத் தடுத்திருந்தனர்; அந்தக் காரணத்திற்காக, அவர்கள் அழைக்கப்படாமலிருந்தனர். அந்தக் கூட்டத்திலும் இயேசுவின்மீது நம்பிக்கை வைத்திருந்த செல்வாக்குடைய மற்றவர்கள் இருந்தனர்; ஆனால், வன்மமிக்க பரிசேயர்களுக்கெதிராக அவர்களுடைய செல்வாக்கு எதையும் மேற்கொள்ளவில்லை. (5)

ஆயினும் அந்தக் கூட்டத்தின் அங்கத்தினர்கள் அனைவரும் ஒத்துப்போகவில்லை. அந்த நேரத்தில், அந்த சனகரீம் சங்கம், சட்டப்படியான ஒரு சபையாக இருக்கவில்லை. அது சகிப்புத்தன்மையினால்மட்டுமே நிலைத்திருந்தது. அவர்களுடைய எண்ணிக்கையில் சிலர், கிறிஸ்துவைக் கொலைசெய்யும் காரியத்திலுள்ள விவேகம்பற்றிக் கேள்விகேட்டனர். இது ஆசாரியர்களிடமுள்ள ரோமர்களின் ஆதரவை மேற்கொண்டு நிறுத்தி, மேலும் அவர்களிடத்திலிருந்த வல்லமையையும் எடுத்துக்கொள்ளக் காரணமாகக்கூடிய கலகத்தை மக்களுக்கிடையில் எழுப்பிவிடுமென்றும் அவர்கள் பயந்தார்கள். கிறிஸ்துவின்மீதிருந்த வெறுப்பில் சதுசேயர்கள் ஒன்றுபட்டவர்களாக இருந்தனர்; ஆயினும், அவர்களுடைய உயர்வான நிலைமையிலிருந்து ரோமர்கள் அவர்களை நீக்கிவிடக்கூடும் என்று பயந்து, அவர்களுடைய இயக்கங்களில் எச்சரிக்கையாக இருக்கவேண்டும் என்னும் நோக்கமுடையவர்களானார்கள். (6)

கிறிஸ்துவின் மரணத்திற்குத் திட்டமிடும்படிக் கூடியிருந்த இந்தக் கூட்டத்தில், நேபுகாத்நேச்சாரின் பெருமைமிக்க வார்த்தைகளைக் கேட்டிருந்தவர்—பெல்ஷாத்சாரின் விக்கிரக ஆராதனைமிக்க விருந்துக்குச் சாட்சியாக இருந்தவர்—கிறிஸ்து தாமே அபிஷேகம் பண்ணப்பட்டவர் என்று நாசரேத்தில் அறிவித்தபோது பிரசன்னமாயிருந்தவர்—இருந்தார். இந்த சாட்சியானவர் அதிபதிகள் இப்பொழுது செய்துகொண்டிருந்த வேலையில் அவர்களை உணர்த்திக்கொண்டிருந்தார். கிறிஸ்துவின் வாழ்க்கையில் இருந்த சம்பவங்கள், அவர்களை பீதியடையச் செய்யும்விதமாக—மிகத்தெளிவான விதத்தில் அவர்களுக்குமுன் எழும்பியிருந்தன. இயேசு பன்னிரண்டு வயதுச் சிறுவனாக, கற்றறிந்த முனைவர்களுக்கு முன்பாக நின்று கேட்ட கேள்விகளில், அவர்கள் ஆச்சரியமடைந்திருந்த தேவாலயத்தின் காட்சியை நினைத்தனர். இயேசு தேவகுமாரனைத்தவிர வேறு யாராகவும் இருக்கவில்லை என்பதற்கு இப்போதுதான் செயலாற்றப்பட்டிருந்த அற்புதம் சாட்சிபகர்ந்துகொண்டிருந்தது. கிறிஸ்துவைப்பற்றிய பழைய ஏற்பாட்டு வேதவாக்கியங்கள் அவைகளின் உண்மையான முக்கியத்துவத்துடன்

அவர்களுடைய மனங்களுக்கு முன்பாக மின்னலிட்டன. குழப்பமும் கலக்கமும் அடைந்த அந்த அதிபதிகள்: "நாம் என்ன செய்கிறோம்" என்று கேட்டனர். அந்தக் கூட்டத்தில் பிரிவினை இருந்தது. பரிசுத்த ஆவியானவரின் உணர்த்துதலின்கீழ், தேவனுக்கு எதிராகப் போராடிக்கொண்டிருந்தனர் என்னும் மன உணர்த்துதலை அகற்ற முடியாதவர்களாக, அந்த ஆசாரியர்களும் அதிபதிகளும் இருந்தனர். (7)

அந்த ஆலோசனைச் சங்கம் குழப்பத்தின் உச்சநிலையில் இருந்தபோது, பிரதான ஆசாரியனான காய்பா எழுந்தான். காய்பா, அகந்தையும் கொடூரமும் அதிகாரத் தோரணைமிக்கவனும் சகிப்புத்தன்மை இல்லாதவனுமான ஒரு மனிதனாக இருந்தான். அவனுடைய குடும்ப உறவுகளில் அகந்தையும், துணிகரமும், யோசனையற்ற தன்மையும், பேராவலும், கொடூரமும் நிறைந்திருந்தது. அவைகளைப் போலியான நீதியென்னும் ஆடையினால் மறைத்திருந்த சதுசேயர்களும் இருந்திருந்தனர். காய்பா தீர்க்கதரிசனங்களை வாசித்திருந்து, அவைகளின் உண்மையான பொருள்பற்றி அறிவில்லாதவனாக இருந்தபோதிலும், பெரிய அதிகாரத்துடனும் வாக்குறுதியுடனும் பேசினான்: "உங்களுக்கு ஒன்றும் தெரியாது. ஜனங்களெல்லாரும் கெட்டுப்போகாதபடிக்கு ஒரே மனுஷன் ஜனங்களுக்காக மரிப்பது நமக்கு நலமாயிருக்கும் என்று நீங்கள் சிந்தியாமலிருக்கிறீர்கள்" என்றான். இயேசு குற்றமற்றவராக இருந்திருந்தாலும்கூட தங்களது வழியிலிருந்து நீக்கப்பட்டாகவேண்டுமென்று அந்த பிரதான ஆசாரியன் வற்புறுத்தினான். அவன் சச்சரவு உண்டுபண்ணுபவனாக இருந்து, மக்களைத் தன்னிடத்தில் சேர்த்துக்கொண்டு, அதிபதிகளின் அதிகாரத்தைக் குறைத்துக்கொண்டிருந்தான்; அவன் ஒருவன்; அதிபதிகளின் அதிகாரம் பலவீனப்படுத்தப்படுவதைவிட, அவன் மரிப்பது நன்றாக இருக்கும். அதிபதிகளின்மீதுள்ள நம்பிக்கையை மக்கள் இழக்கநேர்ந்தால், தேசிய வல்லமை அழிக்கப்பட்டுவிடும். இந்த அற்புதத்திற்குப்பின், இயேசுவைப் பின்பற்றுபவர்கள் கலகஞ்செய்யும்படி எழக்கூடும் என்று காய்பா வற்புறுத்தினான். அப்பொழுது ரோமர்கள் வந்து நமது தேவாலயத்தை மூடிவிடுவார்கள்; நமது பிரமாணங்களை ஒழித்து, நம்மை ஒரு தேசமாக இல்லாமல் அழித்துவிடுவார்கள் என்று அவன் கூறினான். இந்த தேசத்தின் ஜீவனை ஒப்பிடும்போது, இந்தக் கலிலேயனுடைய ஜீவனின் மதிப்பு என்ன? இஸ்ரவேலின் நலனின் பாதையில் அவன் நிற்பானானல், அவனை ஒழிப்பது தேவனுக்குச் செய்கின்ற ஒரு சேவையாக இருக்காதா? இந்த தேசம் முழுவதும் அழிவதைவிட, ஒரு மனிதன் அழிவது நன்றாயிருக்கும் என்றான். (8)

அந்த தேசத்திற்காக ஒருவன் மரிக்க வேண்டும் என்று அறிவித்திருந்தது, தீர்க்கதரிசனங்களைப்பற்றிய ஏதோ ஒரு அறிவு—அதுவும் மிகவும் குறைந்த அளவில், இருப்பதுபோல் காணப்பட்டிருந்தபோதிலும், அதை உடையவனாக காய்பா இருந்தான் என்பதை அவனது பேச்சு சுட்டிக்காட்டியது; ஆனால், யோவான் இந்தக் காட்சியைப்பற்றிய அவனுடைய விவரிப்பில், அந்தத் தீர்க்கதரிசனத்தை எடுத்துக்கொண்டு, அதன் மிகவும் விசாலமான ஆழமான முக்கியத்துவத்துடன் காட்டுகிறான். “அந்த ஜனங்களுக்காக மாத்திரமல்ல, சிதறியிருக்கிற தேவனுடைய பிள்ளைகளை ஒன்றாகச் சேர்க்கிறதற்காகவும் மரிக்கப்போகிறாரென்றும் தீர்க்கதரிசனமாய்ச் சொன்னான்.” அகந்தைமிக்க காய்பா இரட்சகரின் ஊழியத்தை எப்படிக் குருட்டுத்தனமாக ஒப்புக்கொண்டிருந்தான். (9)

அதிக விலைமதிப்புமிக்க இந்த சத்தியம் காய்பாவின் உதடுகளில் பொய்யாகத் திருப்பப்பட்டிருந்தது. அவன் பரிந்துபேசியிருந்த செயல்திட்டம் அஞ்ஞான மார்க்கத்திலிருந்து கடனாகப் பெற்றிருந்த ஒரு கொள்கையின் அடிப்படையிலானதாக இருந்தது. மனித இனத்திற்காக ஒருவன் மரிக்கவேண்டியவனாக இருந்தான் என்னும் அஞ்ஞான மார்க்கத்தினருக்கிடையிலிருந்த மங்கிய உணர்வு, நரபலிகள் செலுத்தும்படி நடத்தியிருந்தது. அப்படியே குற்றமுள்ள தேசத்தை இயேசுவின் பலியினால் காப்பாற்றலாம் என்று காய்பா முன்மொழிந்தது, மீறுதலிலிருந்து காப்பாற்றப்படுவதற்கு என்றில்லாமல், அவர்கள் பாவத்தில் தொடர்வதற்காக, மீறுதலில் காப்பாற்றப்படுவதாக இருந்தது. இதுவரை மரணத்திற்கேதுவானதொன்றும் இயேசுவில் காணப்படவில்லை என்று எதிர்க்கத் துணிபவர்களை, இந்த அவனுடைய காரணங்காட்டுதலினால் மௌனப்படுத்திவிடலாம் என்று அவன் நினைத்தான். (10)

இந்த ஆலோசனை சங்கத்தில் கிறிஸ்துவின் எதிரிகள் தாங்கள் குற்றவாளிகள் என்ற ஆழ்ந்த மனஉணர்த்துதலை அடைந்திருந்தனர்; பரிசுத்த ஆவியானவர் அவர்களது உள்ளங்களிலே எண்ணப்பதிவை ஏற்படுத்தியிருந்தார். ஆனால், அவர்கள்மீதான கட்டுப்பாட்டை எடுத்துக்கொள்ள சாத்தான் முயன்றிருந்தான். கிறிஸ்துவின் காரணமாக, அவர்கள் அனுபவித்திருந்த வருத்தங்களை சாத்தான் அவர்களுடைய கவனத்திற்குக் கொண்டுவந்து வலியுறுத்தினான். அவர்களுடைய ஆசாரியர்கள் நீதியை அந்த அளவிற்குக் குறைவாக கனப்படுத்தியிருந்தனர். தேவனுடைய பிள்ளைகள் எனப்படுபவர்கள் அனைவரும் பெற்றிருக்கவேண்டிய, மிகவும் பெரிதான ஒரு நீதியை அவர் முன்வைத்தார். அவர்களுடைய அமைப்புகளையும் சடங்காச் சாரங்களையும் கவனத்தில் எடுத்துக்கொள்ளாமல், ஒரு

இரக்கமுள்ள பிதாவினிடத்திற்குச்சென்று, அவர்களுடைய தேவைகளை அறியச் செய்யவும், தேவனிடத்திற்கு நேரடியாகக் செல்லும்படி அவர் பாவிகளைத் ஊக்கப்படுத்தியிருந்தார். இவ்விதமாக, அவர்களுடைய கருத்தின்படி, ஆசாரியத்துவத்தை இயேசு ஒரு பக்கமாக ஒதுக்கிவைத்தார். ரபிமார்களின் பள்ளிகளில் இருந்த இறையியலை ஏற்றுக்கொள்ள அவர் மறுத்திருந்தார். ஆசாரியர்களின் தீய நடத்தைகளை அவர் வெளியரங்கமாக்கியிருந்து, சரிப்படுத்தமுடியாதவிதமாக அவர்களுடைய செல்வாக்கிற்குக் குணமாக்கமுடியாத காயத்தை உண்டுபண்ணியிருந்தார். அவர்களுடைய பழமொழிகளையும் பாரம்பரியங்களையும் அவர் காயப்படுத்தியிருந்து, சடங்காச்சாரப் பிரமாணங்களைக் கடுமையாகக் கடைப்பிடித்தியிருந்தபோதிலும், அவர்கள் தேவனுடைய பிரமாணத்தை பயனற்றதாக்கியிருந்தார்கள். இவைகளனைத்தையும் இப்பொழுது சாத்தான் அவர்களுடைய நினைவிற்குக் கொண்டுவந்தான். (11)

அவர்களுடைய அதிகாரத்தை நிலைநிறுத்துவதற்காக, அவர்கள் இயேசுவைக் கொலைசெய்யவேண்டுமென்று சாத்தான் அவர்களிடம் கூறினான். இந்த ஆலோசனையை அவர்கள் பின்பற்றினார்கள். அவர்கள் அப்பொழுது செயலாற்றியிருந்த வல்லமையை இழக்கநேரிடும் என்ற உண்மை, ஏதாவதொரு முடிவிற்கு வருவதற்குப் போதுமான காரணம் என்று அவர்கள் நினைத்தார்கள். தங்களுடைய மனங்களில் இருந்த வைகளைப் பேசத் துணியாதவர்களாக இருந்த சிலரைத்தவிர, சனகரீம் சங்கத்தில் இருந்தவர்கள் காய்பாவின் வார்த்தைகளை தேவனுடைய வார்த்தையைப்போலப் பெற்றுக்கொண்டனர். அந்த ஆலோசனைச் சங்கத்திற்கு நிம்மதி வந்தது; முரண்பாடுகள் இல்லாமலாயின. சாதகமான முதல் சந்தர்ப்பத்திலேயே கிறிஸ்துவைக் கொலைசெய்துவிடவேண்டும் என்று அவர்கள் தீர்மானஞ்செய்தார்கள். இயேசுவின் தெய்வீகத் தன்மைக்கான சான்றை புறக்கணிப்பதில் இந்த ஆசாரியர்களும் அதிபதிகளும் தங்களை ஊடுருவிச்செல்லமுடியாத இருளுக்குள் வைத்து, தங்களைத் தாங்களே பூட்டிக்கொண்டனர். நித்திய அழிவின் விளிம்பிற்கு விரைவதற்கு அவர்கள் முற்றிலுமாக சாத்தானுடைய அதிகாரத்திற்குக்கீழாக வந்திருந்தனர்; ஆயினும், அவர்கள் தங்களுக்குள்ளாகத் தாங்களே சந்தோஷமடையும் அளவிற்கு, அவர்களுடைய வஞ்சகம் அப்படிப்பட்டதாக இருந்தது. அந்த தேசத்தின் இரட்சிப்பிற்காக வகைதேடியிருந்த தேசபக்தர்கள் என்றும் அவர்கள் தங்களைத் தாங்களே கருதிக்கொண்டனர். (12)

அப்படியிருந்தபோதிலும், மக்கள் கோபமூட்டப்பட்டவர்களாகி விடக்கூடாது என்று பயந்து, அவருக்கு எதிராகத் திட்டஞ்செய்யப்பட்ட

வன்முறை தங்கள்மீதே விழுந்துவிடக்கூடாது என்பதற்காகவும், இயேசுவிற்கு எதிராக மூர்க்கமான நடவடிக்கை எடுப்பதற்கு சனகரீம் சங்கம் பயந்தது; அந்தக் காரணத்தினால், அந்தச் சங்க அங்கத்தினர்கள் அறிவித்திருந்த தண்டனையைச் செயல்படுத்துவதில் தாமதஞ்செய்தனர். ஆசாரியர்களின் சதித்திட்டங்களை இரட்சகர் புரிந்துகொண்டிருந்தார். அவருக்கு ஒரு முடிவை ஏற்படுத்த அவர்கள் ஏக்கமுடையவர்களாக இருந்தனர் என்பதையும், அவர்களுடைய நோக்கம் விரைவில் நிறைவேற்றப்பட்டுவிடும் என்பதையும், அவர் அறிந்திருந்தார்; ஆனால், அந்த நெருக்கடியை விரைவுபடுத்துவது அவருடைய வேலையாக இல்லாமலிருக்கவே, அந்தப் பிரதேசத்திலிருந்து அவருடைய சீடர்களை அழைத்துக்கொண்டு திரும்பிச்சென்றார். இவ்விதமாக, இயேசு தமது சொந்த உதாரணத்தினால் மீண்டும் அவருடைய சீடர்களுக்குப் பின்வரும் உபதேசத்தைக் கொடுத்தார்; அவரது ஆலோசனையின்படி: “ஒரு பட்டணத்தில் உங்களைத் துன்பப்படுத்தினால் மறு பட்டணத்திற்கு ஓடிப்போங்கள்” (மத்தேயு 10:23) என்பதே. ஆத்துமாக்களின் இரட்சிப்பிற்காகச் செயலாற்றுவதற்கு ஒரு விசாலமான களம் இருந்தது. அவர்மீதுள்ள உத்தம விசுவாசம் அதற்காகக் கோரிக்கை செய்யாமலிருக்கும்வரை கர்த்தருடைய ஊழியக்காரர்கள் அவர்களுடைய உயிர்களை ஆபத்திற்குட்படுத்திக் கொள்ளக்கூடாதவர்களாக இருந்தனர். இயேசு இப்பொழுது இந்த உலகத்திற்கு மூன்று வருடங்களாக பொதுமக்களுக்கான ஊழியத்தைச் செய்திருந்தார். சுயமறுப்பும் ஆசைகள் எதுவும் இல்லாத அனுதாபமும் அவர்முன் இருந்தது. தூய்மைமிக்கதும்—பாடுகளை அனுபவிப்பதும்—பக்திமிக்கதுமான அவருடைய ஊழியம் எல்லாருக்கும் தெரிந்திருந்தது; ஆயினும் குறுகிய காலமாக இருந்த அந்த மூன்று வருடங்கள், உலகம் அதன் மீட்பரின் பிரசன்னத்தைத் தாங்கிக்கொள்வதற்குப் போதுமான நீண்ட காலமாக இருந்தது. (13)

உபத்திரவமும் அவமானமும்மிக்க ஒன்றாக அவருடைய வாழ்க்கை இருந்தது. பொறாமைமிக்க ஒரு அரசனால் பெத்லகேமிலிருந்து துரத்தப்பட்டு, நாசரேத்திலிருந்த அவருடைய சொந்த மக்களால் புறக்கணிக்கப்பட்டு, காரணம் ஒன்றுமில்லாமல் எருசலேமில் மரணதண்டனைக்கு ஆளாக்கப் பட்டிருந்த இயேசு, அவருடைய சில விசுவாசமிக்க அடியார்களுடன், ஒரு அந்நிய நகரத்தில் தற்காலிகமான அடைக்கலத்தைக் கண்டார். மனித துயரங்களினால் எப்பொழுதும் தொடப்பட்டவராக இருந்த அவர், நோயாளிகளை சுகப்படுத்தினவர், பார்வையற்றவர்களை மீண்டும் பார்க்கச்செய்தவர், செவிடர்களுக்கு கேட்கும் திறமையை திரும்பக் கொடுத்தவர், ஊமையர்களுக்கு பேச்சைக் கொடுத்தவர், பசியுற்றிருந்த வர்களைப் போஷித்து, துயரப்பட்டிருந்தவர்களைத் தேற்றினவர்,

எவர்களை இரட்சிப்பதற்காக உழைத்திருந்தாரோ, அந்த மக்களிடமிருந்து துரத்தப்பட்டிருந்தார். உயர்ந்தும் தாழ்ந்தமிருந்த அலைகளுக்கு மேலாக நடந்திருந்தவர், அவைகளின் கோபமிக்க உறுமல்களை ஒரு வார்த்தையினால் அமைதிப்படுத்தினவர், பேய்கள் விரட்டப்பட்டு புறப்பட்டுச்சென்றபோது அவைகளால் தேவகுமாரன் என்று ஏற்றுக்கொள்ளப்பட்டவர், மரித்தோரின் நித்திரையைக் கலைத்தவர், தமது ஞானமிக்க வார்த்தைகளினால் ஆயிரக்கணக்கான மக்களை கட்டுண்டவர்கள்போல் வைத்திருந்தவர், தவறான எண்ணத்தினாலும் வெறுப்பினாலும் குருடர்களானவர்களாக இருந்து பிடிவாதமாக ஒளியை புறக்கணித்திருந்தவர்களின் இருதயங்களைச் சமீபிக்க முடியாதவராக இருந்தார். (14) ★

# 60

# புதிய இராஜ்யத்தின் சட்டம்!

### மத்தேயு 20:20–28; மாற்கு 10:32–45; லூக்கா 18:31–34

### (The Desire of Ages, pp. 547–551)

பஸ்கா பண்டிகையின் காலம் சமீபித்துக்கொண்டிருந்தது; இயேசு மறுபடியும் எருசலேமிற்கு நேராகத் திரும்பினார். பிதாவின் சித்தத்துடனுள்ள ஒருமைப்பாட்டின் பூரண சமாதானம் அவருடைய இருதயத்தில் இருந்தது. பலியின் இடத்திற்கு நேராக அவர் தமது அடிச்சுவடுகளை ஆவலுடன் முன்வைத்தார்; ஆனால், இரகசியம், சந்தேகம், பயம் ஆகியவைகளின் ஒரு உணர்வு சீடர்களின்மீது விழுந்தது. இரட்சகர் "அவர்களுக்கு முன்னே நடந்துபோனார். அவர்கள் திகைத்து, அவருக்குப்பின்னே பயத்தோடே போனார்கள்." (1)

கிறிஸ்து மறுபடியும் அந்தப் பன்னிருவரையும் தம்மிடத்திற்கு அழைத்து, இதற்குமுன் ஒருபோதும் இருந்திராதவிதமான பெரிய நிச்சயத்துடன் அவரது காட்டிக்கொடுக்கப்படுதலையும்பாடுகளையும்அவர்களுக்கு எடுத்துக்கூறினார். "இதோ எருசலேமுக்குப் போகிறோம். அங்கே மனுஷகுமாரன் பிரதான ஆசாரியரிடத்திலும் வேதபாரகரிடத்திலும் ஒப்புக்கொடுக்கப்படுவார். அவர்கள் அவரை மரண ஆக்கினைக்குள்ளாகத்தீர்த்து, புறதேசத்தாரிடத்தில் ஒப்புக் கொடுப்பார்கள். அவர்கள் அவரைப் பரியாசம்பண்ணி, அவரை வாரினால் அடித்து, அவர்மேல் துப்பி, அவரைக் கொலைசெய்வார்கள்; ஆகிலும் மூன்றாம் நாளிலே அவர் உயிரோடே எழுந்திருப்பார்" என்று அவர் கூறினார். இவைகளில் ஒன்றையும் அவர்கள் உணரவில்லை. அவைகளின் பொருள் அவர்களுக்கு மறைவாயிருந்தது; அவர் சொன்னவைகளை அவர்கள் அறிந்துகொள்ளவில்லை. (2)

"பரலோக இராஜ்யம் சமீபமாயிருக்கிறது" என்று இப்பொழுதுதான் அவர்கள் எங்கும் அறிவித்திருக்கவில்லையா? அநேகர் ஆபிரகாமுடனும் ஈசாக்குடனும் யாக்கோபுடனும் தேவனுடைய இராஜ்யத்தில் உட்கார்ந் திருப்பார்கள் என்று அநேகருக்குக் கிறிஸ்து தாமே வாக்குத்தத்தம்பண்ணி யிருக்கவில்லையா? இஸ்ரவேலின் பன்னிரண்டு கோத்திரத்தாரையும்

நியாயம் விசாரிப்பவர்களாக அவர்கள் சிங்காசனங்களில் உட்காருவார்கள் என்னும் உயர்வான கனமிக்க பதவிகளைப்பற்றிய சிறப்பான வாக்குத் தத்தத்தை அவர்களுக்கு அவர் கொடுத்திருக்கவில்லையா? அவரைப்பற்றி தீர்க்கதரிசிகளால் எழுதப்பட்டிருக்கும் எல்லாக் காரியங்களும் நிறைவேறி யாகவேண்டும் என்று இப்பொழுதுங்கூட அவர் கூறியிருந்தார். மேசியாவின் ஆளுகையின் மகிமையைப்பற்றி தீர்க்கதரிசிகள் முன்னுரைத் திருக்கவில்லையா? இந்த சிந்தனைகளின் வெளிச்சத்தில், அவர் காட்டிக்கொடுக்கப்படுவது, உபத்திரவம், மரணம் ஆகியவை நிச்சய மில்லாதவையாகவும் மங்கலானவையாகவும் காணப்பட்டிருந்தன. எப்படிப்பட்ட தொல்லைகள் குறுக்கிட்டாலும் அந்த இராஜ்யம் விரைவில் ஏற்படுத்தப்பட்டுவிடும் என்று அவர்கள் நம்பினார்கள். (3)

செபெதேயுவின் குமாரனாகிய யோவான் இயேசுவை முதலாவதாகப் பின்பற்றிய இரண்டு சீடர்களில் முதலாமவனாக இருந்தான். அவருடைய சேவைக்கென்று எல்லாவற்றையும் விட்டுவிட்ட முதலாவது குழுவில் அவனும் அவனுடைய சகோதரனாகிய யாக்கோபும் இருந்தனர். அவருடன் அவர்கள் இருப்பதற்காக வீட்டையும் நண்பர்களையும் மகிழ்ச்சியுடன் கைவிட்டிருந்தனர்; அவருடன் அவர்கள் நடந்தும் பேசியும் இருந்தனர். வீட்டின் தனிமையிலும் பொதுக்கூட்டங்களிலும் அவர்கள் அவருடன் இருந்தனர். அவர்களுடைய பயங்களை அவர் அமைதிப்படுத்தியிருந்து, ஆபத்திலிருந்து அவர்களை விடுவித்திருந்து, அவர்களுடைய பாடுகளுக்கு நிவாரணமளித்திருந்து, அவர்களுடைய வருத்தங்களில் தேற்றியிருந்து, அவர்களுடைய இருதயங்கள் அவருடைய இருதயத்துடன் இணைக்கப்பட்டதுபோல் காணப்பட்டவரை, பொறுமையுடனும் மென்மையாகவும் அவர்களுக்குப் போதித்திருந்தார். அவர்களுடைய அன்பின் ஆர்வத்தில் அவருடைய இராஜ்யத்தில் அவருக்கு மிகவும் அருகிலிருக்க அவர்கள் ஏக்கமுடையவர்களாக இருந்தனர். சாத்தியமான ஒவ்வொரு சந்தர்ப்பத்திலும் யோவான் அவனுடைய இடத்தை இயேசுவிற்கு அடுத்தபடி எடுத்திருந்தான். அவருடன் நெருக்கமான பிணைப்பு உள்ளவன் என்று கனப்படுத்தப்படுவதற்காக ஏங்கினான். (4)

அவர்களுடைய தாய் கிறிஸ்துவைப் பின்பற்றும் ஒருவளாக இருந்து, அவளுடைய பொருளினால் அவருக்குத் தாராளமாக ஊழியம் செய்திருந்தாள். ஒரு தாயாக இருந்த அவளுடைய குமாரர்களின் மீதிருந்த அன்பினாலும் பேராவலினாலும், புதிய இராஜ்யத்தில் மிக அதிகக் கனமிக்க இடம் அவர்களுக்குக் கிடைக்கவேண்டுமென்று அவள் இச்சித்திருந்தாள். அதற்கான வேண்டுகோள்செய்யும்படி அவள் அவர்களை உற்சாகப்படுத்தியிருந்தாள். (5)

அந்தத் தாயும் அவளுடைய குமாரர்களும் ஒன்றாகச் சேர்ந்து அவர்களுடைய இருதயங்களிலிருந்த வாஞ்சையின் விண்ணப்பத்தை அவர் அனுமதிக்கவேண்டுமென்று கேட்டுக்கொண்டு, அவர்கள் இயேசுவிடம் வந்தனர். (6)

“நான் உங்களுக்கு என்ன செய்யவேண்டும் என்று விரும்புகிறீர்கள்?” என்று அவர் கேட்டார். (7)

“உம்முடைய இராஜ்யத்தில் என் குமாரராகிய இவ்விரண்டு பேரில் ஒருவன் உமது வலதுபாரிசத்திலும் ஒருவன் உமது இடதுபாரிசத்திலும் உட்கார்ந்திருக்கும்படி அருள் செய்ய வேண்டும்” என்று அவள் பதில் கூறினாள். (8)

அவர்களுடைய சகோதரர்களைக்காட்டிலும் மேலான இடத்தைத் தேடியிருந்த சுயநலத்திற்காக இயேசு அவர்களைக் கடிந்துகொள்ளாமல், அவர்களுடன் மென்மையாக நடந்துகொள்கிறார். அவர்களுடைய இதயங்களை அவர் வாசிக்கிறார். அவருடனுள்ள அவர்களுடைய பிணைப்பின் ஆழத்தை அவர் அறிந்திருக்கிறார். அவர்களுடைய அன்பு அதன் பூமிக்குரிய மனித வாய்க்காலினால் தீட்டுப்பட்டதாக இருந்தபோதிலும், அது சாதாரணமான மனிதப் பாசமாக இருக்காமல், அவருடைய சொந்த மீட்கும் அன்பின் ஊற்றிலிருந்து வழிந்தோடுகிறதாக இருக்கிறது. அவர் கடிந்துகொள்ளாமல், ஆழப்படுத்தித் தூய்மைப்படுத்துவார். “நான் குடிக்கும் பாத்திரத்தில் நீங்கள் குடிக்கவும் நான் பெறும் ஸ்நானத்தை நீங்கள் பெறவும் உங்களால் கூடுமா? என்று அவர் கேட்டார். அவருடைய விசாரணையையும் பாடுகளையும் சுட்டிக்காட்டுகின்ற அவருடைய இரகசியமான வார்த்தைகளை அவர்கள் ஞாபகப்படுத்திக்கொண்டு, ஆயினும் நம்பிக்கையுடன் “கூடும்” என்று பதில் கூறினார்கள். அவர்களுடைய கர்த்தரின்மீது விழவிருக்கின்ற அனைத்திலும் பங்குகொள்ளுவதினால், தங்களுடைய உத்தம விசுவாசத்தை மெய்ப்பிப்பதை அவர்கள் மிக உயர்வான கனம் என்று எண்ணுவார்கள். (9)

“நான் குடிக்கும் பாத்திரத்தில் நீங்கள் குடிப்பீர்கள். நான் பெறும் ஸ்நானத்தையும் நீங்கள் பெறுவீர்கள்” என்று அவர் கூறினார். அவருக்கு முன்பாக ஒரு சிங்காசனத்திற்குப் பதிலாக ஒரு சிலுவையும், அவருடைய வலது பக்கத்திலும் இடது பக்கத்திலும் அவருடன் சிலுவையில் தொங்குவதற்காக இரண்டு கொடிய குற்றவாளிகளும் இருந்தனர். யோவானும் யாக்கோபும் அவர்களுடைய ஆண்டவருடன் பாடுகளில் பங்குபெறவேண்டியவர்களாக இருந்தனர். அந்த சகோதரர்களில் முதலாவதான ஒருவன் பட்டயத்தால் சாகவேண்டியவனாக இருந்தான். எல்லாரையும்விட நீண்டகாலமாக

இருந்த மற்றவன் உழைப்பு, நிந்தனை, உபத்திரவம் ஆகியவைகளைத் தாங்கவேண்டியவனாக இருந்தான். (10)

"ஆனாலும், என் வலதுபாரிசத்திலும் என் இடதுபாரிசத்திலும் உட்கார்ந்திருக்கும்படி என் பிதாவினால் எவர்களுக்கு ஆயத்தம்பண்ணப் பட்டிருக்கிறதோ அவர்களுக்கேயல்லாமல், மற்றொருவருக்கும் அதை அருளுவது என் காரியமல்ல" என்று அவர் தொடர்ந்தார். தேவனுடைய இராஜ்யம் பதவி, பாரபட்சத்தினால் அடைந்துகொள்ளப்படுவதில்லை; அது சம்பாதிக்கப்படுவதோ அல்லது ஒரு தன்னிச்சையான கொடுக்கலினால் பெற்றுக்கொள்ளப்படுவதோ அல்ல. அது குணத்தின் பலனாக இருக்கிறது. கிரீடமும் சிங்காசனமும் நிலைமையை அடைந்துகொண்டதின் அடையாளங் களாக இருக்கின்றன. அவைகள் நமது கர்த்தராகிய இயேசு கிறிஸ்துவின் மூலமாக, சுயத்தின் அடைந்த வெற்றியின் அடையாளங்களாக உள்ளன. (11)

நீண்ட காலத்திற்குப்பின், கிறிஸ்துவின் பாடுகளிலுள்ள தோழமையினால் சீடர்கள் கிறிஸ்துவின் அனுதாபத்திற்குள் கொண்டு வரப்பட்டபோது, அவருடைய இராஜ்யத்தில் சமீபமாயிருப்பதற்கான நிபந்தனை என்ன என்பதைக் கர்த்தர் யோவானுக்கு வெளிப்படுத்தினார். "நான் ஜெயங்கொண்டு என் பிதாவினுடைய சிங்காசனத்திலே அவரோடேகூட உட்கார்ந்ததுபோல, ஜெயங்கொள்ளுகிறவனெவனோ அவனும் என்னுடைய சிங்காசனத்தில் என்னோடேகூட உட்காரும்படிக்கு அருள்செய்வேன்." என்று கிறிஸ்து கூறினார். "ஜெயங்கொள்ளுகிறவனெவனோ அவனை என் தேவனுடைய ஆலயத்திலே தூணாக்குவேன், அதினின்று அவன் ஒருக்காலும் நீங்குவதில்லை; என் தேவனுடைய நாமத்தையும்... என் புதிய நாமத்தையும் அவன்மேல் எழுதுவேன்." (வெளிப்படுத்தல் 3:21,12); அப்படியே "நான் இப்பொழுதே பானபலியாக வார்க்கப்பட்டுப்போகிறேன்; நான் தேகத்தைவிட்டுப் பிரியும் காலம் வந்தது. நல்ல போராட்டத்தைப் போராடினேன், ஓட்டத்தை முடித்தேன், விசுவாசத்தைக் காத்துக்கொண்டேன். இதுமுதல் நீதியின் கிரீடம் எனக்காக வைக்கப்பட்டிருக்கிறது, நீதியுள்ள நியாயாதிபதியாகிய கர்த்தர் அந்நாளிலே அதை எனக்குத் தந்தருளுவார்" (2தீமோத்தேயு 4:6–8) என்று அப்போஸ்தலனாகிய பவுல் எழுதினான். (12)

"அன்பு நீடிய சாந்தமும் தயவுமுள்ளது; அன்புக்குப் பொறாமை யில்லை; அன்பு தன்னைப் புகழாது, இறுமாப்பாயிராது, அயோக்கியமானதைச் செய்யாது, தற்பொழிவை நாடாது, சினமடையாது, தீங்கு நினையாது" என்ற விதமாக பூமியின்மீது எவனொருவன் சுயத்தைத் தியாகம்செய்யும் கிறிஸ்துவின் அன்பின் ஆவியில் மிகவும் ஆழமாகப் பருகியிருக்கிறானோ

அவன் கிறிஸ்துவிற்கு மிகவும் அருகில் நிற்கும் ஒருவனாக இருக்கிறான். –1கொரிந்தியர் 13:4–5. அன்பு நமது கர்த்தரை அசைத்ததைப்போல, சீடர்களை அசைக்கும் அந்த அன்பு, எல்லாவற்றையும் கொடுப்பதற்கும் வாழ்வதற்கும் உழைப்பதற்கும் மரணம்வரைக்குங்கூடத் தியாகம்செய்வதற்கும் அசைக்கிறது. பவுலின் வாழ்க்கையில் இந்த ஆவி வெளிக்காட்டப்பட்டிருந்தது. "கிறிஸ்து எனக்கு ஜீவன்" என்று அவன் கூறினான். ஏனெனில், அவனுடைய வாழ்க்கை மனிதர்களுக்குக் கிறிஸ்துவை வெளிப்படுத்தினது. மறுபடியும் கிறிஸ்துவை ஆதாயப்படுத்த "சாவு எனக்கு ஆதாயம்"; மரணம் அவரது கிருபையின் வல்லமையை வெளிக்காட்டி, ஆத்துமாக்களை அவரிடம் சேர்க்கும். "ஜீவனாலாகிலும், சாவினாலாகிலும், கிறிஸ்து என் சரீரத்தினாலே மகிமைப்படுவார்" (பிலிப்பியர் 1:20,21) என்று அவன் கூறினான். (13)

யாக்கோபு, யோவான் ஆகியோரின் வேண்டுகோளை அந்த பத்து பேரும் கேட்டபோது, அவர்கள் அதிகமாகக் கோபமடைந்திருந்தனர். அவர்களில் ஒவ்வொருவனும் தனக்கென்று எதைத் தேடிக்கொண்டிருந்தான் என்பது, அந்த இராஜ்யத்தில் முதல் இடம் என்பதாக இருந்து, அந்த இரண்டு சீடர்களும் காணக்கூடிய விதமாக அவர்களுக்கும் மேலாக அனுகூலமடைந்திருந்தனர் என்பதில் அவர்கள் கோபமுள்ளவர்களாக இருந்தனர். (14)

தங்களில் எவன் பெரியவனாக இருக்கவேண்டும் என்னும் சண்டை மறுபடியும் புதுப்பிக்கப்படுவதுபோல் காணப்பட்டபோது, கோபமிக்கவர்களாக இருந்த சீடர்களை அவரிடத்தில் அவர் அழைத்து: "புறஜாதியாருக்கு அதிகாரிகளாக எண்ணப்பட்டவர்கள் அவர்களை இறுமாப்பாய் ஆளுகிறார்கள் என்றும், அவர்களில் பெரியவர்கள் அவர்கள்மேல் கடினமாய் அதிகாரம் செலுத்துகிறார்கள் என்றும் நீங்கள் அறிந்திருக்கிறீர்கள்; உங்களுக்குள்ளே அப்படி இருக்கலாகாது" என்று கூறினார். (15)

உலகத்தின் இராஜ்யத்தில் பதவி என்றால் சுயத்தை உயர்த்துதல் என்று பொருள்படுகிறது. ஆளும் வகுப்பினரின் நன்மைக்காகமட்டுமே மக்கள் உயிர்வாழுகின்றனர் என்று நினைக்கப்பட்டிருந்தது. செல்வாக்கு, செல்வம், கல்வி, ஆகியவை, தலைவர்களின் பயனுக்காக கூட்டத்தினரை கட்டுப்பாட்டிற்குள் ஆதாயப்படுத்துகின்ற மிகவும் அதிகமான அநேகமான கருவிகளாக இருந்தன. சிந்திக்கவும் முடிவெடுக்கவும் அனுபவிக்கவும் ஆட்சிசெய்யவும் வேண்டியவர்களாக உயர்வகுப்பினரும், கீழ்ப்படிவதற்கும் சேவைசெய்வதற்கும் வேண்டியவர்களாகக் கீழ்வகுப்பினரும் இருந்தனர். மற்ற எல்லாப் பொருட்களையும்போல மதமும் அதிகாரத்தின் ஒரு பொருளாக இருந்தது. தங்களுடைய மேலதிகாரிகள் கட்டளையிட்டதை மக்கள்

நம்பவும் செய்யவும் வேண்டும் என்று எதிர்பார்க்கப்பட்டிருந்தனர். மனிதன் மனிதனாக இருக்கவேண்டும்மென்னும் உரிமையும், தனக்கென்று சிந்தித்துச் செயலாற்றுகின்ற உரிமையும் முற்றிலுமாக அங்கீகரிக்கப்படாமலிருந்தது. (16)

வேறுபட்ட அடிப்படைக் கொள்கைகளின்மீது கிறிஸ்து ஒரு இராஜ்யத்தை ஏற்படுத்திக்கொண்டிருந்தார். அதிகாரம் செலுத்துவதற்காக இல்லாமல், பலவீனமானவர்களின் பலவீனங்களைப் பலமுள்ளவர்கள் தாங்கும்படியாகவும், அவர் மனிதர்களை அழைத்தார். வல்லமை, பதவி, தாலந்து, கல்வி ஆகியவை, அவைகளை உடையவனை உடன் மனிதர் களுக்குச் சேவைசெய்கின்ற பெரும் கடமைப்பாட்டின்கீழ் வைத்தது. கிறிஸ்துவின் சீடர்களில் மிகவும் கீழானவனுக்கும் கூட, “இவையெல்லாம் உங்கள் நிமித்தம் உண்டாயிருக்கிறது” (2 கொரிந்தியர் 4:15) என்று கூறப்பட்டிருக்கிறது. (17)

“மனுஷக்குமாரனும் ஊழியம் கொள்ளும்படி வராமல் ஊழியம் செய்யவும், அநேகரை மீட்கும் பொருளாகத் தம்முடைய ஜீவனைக் கொடுக்கவும் வந்தார்.” கிறிஸ்து அவருடைய சீடர்களுக்கு மத்தியில் கவனித்துக்கொள்ள நியமிக்கப்பட்டவராகவும், பாரம் சுமப்பவராகவும் இருந்தார். அவர்களுடைய வறுமையில் அவர் பங்குபெற்று, அவர்கள் சார்பாக அவர் சுயமறுப்பை நடப்பித்து, மிகவும் கடினமான இடங்களை இலகுவாக மாற்றத்தக்கதாக அவர்களுக்கு முன்சென்று, பூமியின்மீது அவருடைய ஜீவனைவிடுவதினால், அவருடைய பணியை அவர் நிறைவடையச்செய்ய எந்த அடிப்படைக் கொள்கையின்மீது கிறிஸ்து செயலாற்றினாரோ, அது அவருடைய சரீரமாக இருக்கும் சபையின் அங்கத்தினர்களை செயற்படுத்தச் செய்வதாக இருக்கிறது. இரட்சிப்பின் திட்டமும் களமுமாக அன்பு இருக்கிறது. கிறிஸ்துவின் இராஜ்யத்தில் அவர் கொடுத்திருக்கும் உதாரணத்தைப் பின்பற்றி, அவருடைய மந்தையின் மேய்ப்பர்களாகச் செயலாற்றுபவர்கள் பெரியவர்களாக இருப்பார்கள். (18)

கிறிஸ்தவ வாழ்க்கையிலுள்ள, உண்மையான மேன்மையையும் கனத்தையும் பவுலின் வார்த்தைகள் வெளிப்படுத்துகின்றன: “நான் ஒருவருக்கும் அடிமைப்படாதவனாயிருந்தும், நான் அதிக ஜனங்களை ஆதாயப்படுத்திக்கொள்ளும்படிக்கு, என்னைத்தானே எல்லாருக்கும் அடிமையாக்கினேன்”; நான் என் சுயபிரயோஜனத்தைத் தேடாமல், அநேகருடைய பிரயோஜனத்தைத் தேடி, அவர்கள் இரட்சிக்கப்படும்படிக்கு, எவ்விதத்திலும் எல்லாருக்கும் பிரியமாய் நடக்கிறதுபோல... – 1 கொரிந்தியர் 9:19; 10:32. (19)

மனச்சாட்சி சம்பந்தப்பட்ட காரியங்களில், ஆத்துமாவின் முன்னேற்றத்திற்கு இடையூறுசெய்யாமல் விட்டுவிடப்படவேண்டும். மற்றொருவருக்காக நாம் தீர்ப்புச்சொல்வது அல்லது அவனுடைய கடமையைக் குறிப்பதற்காக ஒருவரும் அடுத்தவருடைய மனதைக் கட்டுப்படுத்தக்கூடாது. சிந்திப்பதற்கான சுதந்தரத்தையும், அவனுடைய சொந்த மனஉணர்த்துதலைப் பின்பற்றுகின்ற சுதந்தரத்தையும் தேவன் ஒவ்வொரு ஆத்துமாவிற்கும் கொடுக்கிறார். "நம்மில் ஒவ்வொருவனும் தன்னைக்குறித்துத் தேவனுக்குக் கணக்கொப்புவிப்பான்." –ரோமர் 14:12. தனது சொந்தத் தனித்தன்மையை மற்றொருவனின் தனித்தன்மையுடன் ஒன்றுசேர்க்கும் உரிமை ஒருவனுக்கும் கிடையாது. அடிப்படைக் கொள்கை சம்பந்தப்பட்டுள்ள எல்லாக் காரியங்களிலும், "அவனவன் தன்தன் மனதிலே முழு நிச்சயத்தை உடையவனாயிருக்கக்கடவன்" –ரோமர்14:5. பிரபுத்துவ ஒடுக்குதல், நடத்தைபற்றிய வற்புறுத்தல் ஆகியவை கிறிஸ்துவின் இராஜ்யத்தில் இல்லை. ஆளுகைசெய்வதற்காகவும் வணக்கத்தைப் பெற்றுக்கொள்ளுவதற்காகவும் பரலோகத்தின் தேவதூதர்கள் பூமிக்கு வராமல், மனித இனத்தை உயர்த்துவதில், மனிதர்களுடன் ஒத்துழைப்பதற்காக, இரக்கத்தின் தூதுவர்களாக வருகின்றனர். (20)

நேசிக்கப்பட்டவர்களாக இருந்த சீடர்களின் ஞாபகத்தில், அடிப்படைக் கொள்கைகளும் இரட்சகரின் போதனைகளின் அதே வார்த்தைகளும் அவைகளின் தெய்வீக அழகில் வாழ்ந்தன. யோவானின் கடைசி நாட்களில் இருந்த, சபைகளுக்கான அவனுடைய சாட்சியின் பாரத்தில், "நாம் ஒருவரிலொருவர் அன்புகூரவேண்டுமென்பதே நீங்கள் ஆதிமுதல் கேள்விப்பட்ட விசேஷமாயிருக்கிறது. அவர் தம்முடைய ஜீவனை நமக்காகக் கொடுத்ததினாலே அன்பு இன்னதென்று அறிந்திருக்கிறோம்; நாமும் சகோதரருக்காக ஜீவனைக் கொடுக்கக் கடனாளிகளாயிருக்கிறோம்"–1 யோவான் 3:11,16. (21)

ஆரம்பகால சபையில் இந்த ஆவிதான் பரவியிருந்தது. பரிசுத்த ஆவி ஊற்றப்பட்டதற்குப்பின், "விசுவாசிகளாகிய திரளான கூட்டத்தார் ஒரே இருதயமும் ஒரே மனமுமுள்ளவர்களாயிருந்தார்கள். ஒருவனாகிலும் தனக்குள்ளவைகளில் ஒன்றையும் தன்னுடையதென்று சொல்லவில்லை; அவர்களில் ஒருவனுக்கும் ஒன்றும் குறைவாயிருந்ததில்லை. கர்த்தராகிய இயேசுவின் உயிர்த்தெழுதலைக்குறித்து அப்போஸ்தலர்கள் மிகுந்த பலமாய்ச் சாட்சிகொடுத்தார்கள்; அவர்களெல்லார்மேலும் பூரண கிருபை உண்டாயிருந்தது"–அப்போஸ்தலர் 4:32,33. (22) ★

# 61

# சகேயு!

**லூக்கா 19:1–10**

**(The Desire if Ages, pp. 552-556)**

இயேசு எருசலேமிற்குப்போகிற வழியில், "எரிகோவில் பிரவேசித்து, அதன் வழியாக நடந்து சென்றார்." யோர்தானிலிருந்து சில மைல் தூரத்தில், அந்தப் பள்ளத்தாக்கின் மேற்கு ஓரத்தில், அங்கு ஒரு சமவெளி பரவியிருந்தது. அங்கு மித வெப்பமண்டல பசுமைக்கு மத்தியில் வளமிக்கதும் அழகானதுமான இடத்தில் அந்த நகரம் இருந்தது. உயிரோட்டமுள்ள ஊற்றுக்களினால் தண்ணீர் பாய்ச்சப்பட்டிருந்த செழுமையான தோட்டங்களுடனும், பேரீச்ச மரங்களுடனும், அந்த இடம் சுண்ணாம்புக் கற்கள்மிக்க குன்றுகள் மற்றும் பாழடைந்த குறுகிய மலை இடுக்குகள் ஆகியவைகள் சூழ அமைந்த இடத்தில், அந்த நகரம், மரகதம்போன்று பச்சைப்பசேலென்று பளிச்சிட்டுக்கொண்டிருந்தது. (1)

பண்டிகைக்காகத் தங்கள் பாதையில் சென்றிருந்த அநேக பாலைவனப் பயணிகளின் கூட்டங்கள் எரிகோ வழியாகக் கடந்து சென்றிருந்தன. அவைகளின் வருகை எப்பொழுதும் ஒரு கொண்டாட்டமான காலமாக இருந்தது. ஆனால் இப்பொழுது ஒரு ஆழ்ந்த ஆர்வம் மக்களைக் கலக்கியிருந்தது. சமீப நாட்களில் லாசருவை உயிர்ப்பித்துக்கொண்டுவந்த அந்தக் கலிலேய ரபி, அந்தக் கூட்டத்தில் இருந்தார் என்று அறியப்பட்டிருந்தது. ஆசாரியர்களின் சதித்திட்டங்களைப்பற்றிய இரகசியமான பேச்சுமிதமிஞ்சியதாக இருந்தபோதிலும், அவருக்கு வணக்கஞ்செலுத்துவதற்குத் திரளானவர்கள் ஆவலுள்ளவர்களாக இருந்தனர். (2)

ஆசாரியர்களுக்கென்று பண்டைய காலத்திலிருந்தே வேறு படுத்திவைக்கப்பட்டிருந்த நகரங்களில் ஒன்றாக எரிகோ இருந்திருந்ததுடன், இந்த நேரத்தில் பெரும் எண்ணிக்கையிலுள்ள ஆசாரியர்கள் அவர்களுடைய வீடுகளை அங்கே உடையவர்களாக இருந்திருந்தனர்; ஆனால், அந்த நகரம் விரிந்து பரந்த பல்வேறுபட்ட தன்மைகளை உடைய ஜனக்கூட்டத்தை உடையதாகவுங்கூட இருந்தது. சுங்க வரிகளை வசூலிக்கும் காரியமானது

அந்த இடத்தை அநேக ஆயக்காரர்களின் வீடுகளாக்கியிருந்தது; ரோம அரசின் அதிகாரிகள், சேனைவீரர்கள் ஆகியோருடன் பல்வேறுபட்ட இடங்களிலிருந்தும் உள்ள அந்நியர்களும் காணப்பட்டிருந்து, போக்குவரத்தின் பெரும் மையமாகவும் அது இருந்தது. (3)

ஆயக்காரர்களுக்குத் தலைவனாக இருந்த சகேயு, ஒரு யூதனாக இருந்து, அந்த நாட்டு மக்களால் வெறுக்கப்பட்டவனாக இருந்தான். அவனுடைய பதவியும் செல்வமும் அவர்கள் அருவருத்திருந்ததின் ஒரு பரிசாக இருந்து, அநீதி, பணம் வசூலித்தல், ஆகியவைகளின் மறுபெயராகக் கருதப்பட்டிருந்தது; ஆயினும், அந்த செல்வந்தனான வரிவசூல்செய்யும் அதிகாரி, அவன் காணப்பட்டிருந்ததைப்போல, ஒட்டுமொத்தமாக உலகப்பிரகாரமாகக் கடினப்பட்டிருந்த ஒரு மனிதனாக இருக்கவில்லை. உலகப்பிரகாரமான தன்மை, பெருமை ஆகியவைகளின் தோற்றத்திற்கடியில் தெய்வீக செல்வாக்குகளுக்கு இணங்கக்கூடிய ஒரு இருதயம் இருந்தது. சகேயு இயேசுவைப்பற்றிக் கேள்விப்பட்டிருந்தான். தடைசெய்யப்பட்டிருந்த வகுப்பினருக்கு நேராக அன்பையும் மரியாதையையும் தம்மில் உடையவராக இருந்த ஒருவரைப்பற்றிய அறிக்கை அதிகத் தூரமாகவும் விசாலமாகவும் பரவியிருந்தது. மேலான வாழ்க்கைக்கான ஒரு ஏக்கம் இந்த ஆயக்காரர்களுக்குத் தலைவனாக இருந்தவனிடத்தில் எழுப்பப்பட்டிருந்தது. யோர்தானிலிருந்து சில மைல்கள் தூரத்தில் யோவான் ஸ்நானகன் பிரசங்கஞ்செய்திருந்தபோது, மனந்திரும்புதலுக்கான அழைப்பை சகேயு கேட்டிருந்தான். “உங்களுக்குக் கட்டளையிட்டிருக்கிறதற்கு அதிகமாய் ஒன்றும் வாங்காதிருங்கள்” (லூக்கா 3:13) என்னும் ஆயக்காரர்களுக்கான உபதேசம் வெளிப்புறமாகக் புறக்கணிக்கப்பட்டிருந்தபோதிலும், அது அவனுடைய மனதை உணர்த்தியிருந்தது. அவன் அந்த வேத வாக்கியங்களை அறிந்திருந்து, அவனுடைய நடத்தை தவறானது என்று உணர்த்தப்பட்டிருந்தான். இப்பொழுது மாபெரும் ஆசிரியரின் வார்த்தைகளிலிருந்தும் வந்திருந்தது என்னும் அறிவிப்பைக்கேட்டு, தேவனுடைய பார்வையில் அவன் ஒரு பாவியாக இருக்கிறான் என்பதை உணர்ந்தான்; ஆயினும் அவன் இயேசுவைப்பற்றிக் கேட்டிருந்தது அவனுடைய இருதயத்தில் நம்பிக்கையை ஊக்கப்படுத்தியிருந்தது. மனந்திரும்புதல், வாழ்க்கையில் சீர்திருத்தம் ஆகியவை அவனுக்குங்கூட சாத்தியமானதாக இருந்தது. புதிய போதகரின் அதிகமான நம்பிக்கைக்குரிய சீடர்களில் ஒருவனாக இருந்தவன் (மத்தேயு) ஆயக்காரனாக இருக்கவில்லையா? சகேயு அவனைப் பிடித்துக்கொண்ட மனஉணர்த்துதலைப் பின்பற்ற உடனே ஆரம்பித்து, அவன் எவர்களுக்கெல்லாம் தவறுசெய்திருந்தானோ அவர்களிடத்தில் அவைகளைத் திரும்பச்செலுத்த ஆரம்பித்தான். (4)

இயேசு அந்த நகரத்திற்குள் பிரவேசித்துக்கொண்டிருக்கிறார் என்னும் செய்தி எரிகோ முழுவதிலும் ஒலித்திருந்தபோது, சகேயு இவ்விதமாகத் தன் அடிச்சுவடுகளைத் திருப்பிவைக்க ஏற்கெனவே ஆரம்பித்திருந்தான். சகேயு அவரைப் பார்ப்பதற்குத் தீர்மானித்தான். பாவத்தின் கனிகள் எவ்விதமாகக் கசப்பானவைகளாக இருக்கின்றன என்பதையும், தவறான ஒரு நடத்தையிலிருந்து திரும்ப முயலும் ஒருவனுடைய பாதை எவ்வளவு கஷ்டமானதாக இருக்கிறது என்பதையும் அவன் உணரத்தொடங்கினான். அவனுடைய தவறைச் சரிசெய்யும் முயற்சியில் தவறாகப் புரிந்துகொள்ளப்பட்டவனாக இருப்பதும், சந்தேகம் நம்பிக்கையின்மை ஆகியவைகளைச் சந்திப்பவனாக இருப்பதும் தாங்குவதற்குக் கடினமானதாக இருந்தது. எந்த ஒருவருடைய வார்த்தைகள் அவனுடைய இருதயத்திற்கு நம்பிக்கையைக் கொண்டுவந்திருந்ததோ, அவருடைய முகத்தைப் பார்ப்பதற்காக, அந்த ஆயக்காரர்களின் தலைவன் ஏக்கமுடையவனாக இருந்தான். (5)

தெருக்களெல்லாம் கூட்டமாக இருந்தன. மிகவும் குள்ளமான உருவத்தை உடையவனாக இருந்த சகேயுவினால், மக்களின் தலைகளுக்குமேலாக எதையும் பார்க்கமுடியவில்லை. அவனுக்கு வழிவிட ஒருவரும் இருக்கவில்லை; எனவே, திரளானவர்களுக்கு முன்பாக பாதையின்மீது தொங்கிக்கொண்டிருந்த ஒரு அத்திமரத்தின் கிளையைநோக்கிச் சற்றுதூரம் ஓடி, அதன் கிளைகளுக்கிடையில் உட்கார்ந்துகொள்ள, செல்வந்தனான அந்த ஆயக்காரன் அந்த மரத்தின்மீது ஏறி, கீழாக அந்த ஊர்வலம் கடந்துசெல்லும்போது, அதைப் பார்க்கக்கூடியவிதமாக உட்கார்ந்தான். அந்தக் கூட்டம் சமீபமாக வருகிறது; அது சென்றுகொண்டிருக்கின்றது. அவன் பார்ப்பதற்கு ஏக்கமுற்றவனாக இருந்த உருவத்தை கண்டுகொள்வதற்காக, அக்கறைமிக்க கண்களால் சகேயு தேடிப்பார்க்கிறான். (6)

ஆசாரியர்கள், ரபிமார்கள், திரளானவர்களிடமிருந்துள்ள வரவேற்பின் சத்தங்கள் ஆகியவைகளின் சந்தடிகளுக்கும் மேலாக அந்த ஆயக்காரர்களின் தலைவனின் பேசாத வாஞ்சை இயேசுவின் இருதயத்துடன் பேசினது. திடீரென்று அந்த அத்திமரத்தின்கீழ் ஒரு குழு நிற்கிறது. அதற்கு முன்னும் பின்னுமாக இருந்த கூட்டமும் அமைதியாக நிற்கிறது. எந்த ஒருவருடைய பார்வை அந்த ஆத்துமாவை வாசிப்பதுபோல் காணப்படுகிறதோ—அந்த ஒருவர், மேலே பார்க்கிறார். ஏறத்தாழ அவனுடைய புலன்களில் சந்தேகம் கொள்ளும் விதமாக அந்த மரத்தின் மேலிருந்த மனிதன், “சகேயுவே, நீ சீக்கிரமாய் இறங்கி வா; இன்றைக்கு நான் உன் வீட்டிலே தங்குவேன்” என்னும் வார்த்தைகளைக் கேட்கிறான். (7)

அந்தத் திரளானவர்கள் வழிவிடுகின்றனர். சகேயு ஒரு கனவில் நடந்துகொண்டிருப்பவனைப்போல, தனது சொந்த வீட்டிற்கு நேராக, பாதையில் முன்நடந்துசெல்லுகிறான்; ஆனால், கோபமிக்க முகங்களுடன் ரபிமார்கள் அதைப்பார்த்து, அதிருப்தியுடனும் பரிகாசத்துடனும்: "இவர் பாவியான மனிதனிடத்தில் தங்கும்படி போனார்" என்று முறுமுறுத்தார்கள். (8)

மிகவும் தகுதியற்றவனாக இருந்த அவனுடைய நிலைமைக்குக் கீழே இறங்கின, அவருடைய அன்பிலும் தாழ்த்துதலிலும் சகேயு உணர்ச்சியினால் மேற்கொள்ளப்பட்டவனாகி, ஆச்சரியமடைந்தவனாகி மௌனமாகிவிட்டான். இப்பொழுது புதிதாகக் காணப்பட்ட அவனுடைய உதடுகளின் முத்திரையை உடைக்கின்றது. அவன் பொதுமக்களுக்கு முன்பாக அவனுடைய பாவ அறிக்கையையும் மனந்திரும்புதலையும் அறியச்செய்வான். (9)

திரளானவர்களுடைய சமூகத்தில், சகேயு நின்று கர்த்தரை நோக்கி: "ஆண்டவரே, என் ஆஸ்திகளில் பாதியை ஏழைகளுக்குக் கொடுக்கிறேன், நான் ஒருவனிடத்தில் எதையாகிலும் அநியாயமாய் வாங்கினதுண்டானால், நாலத்தனையாகத் திரும்பச் செலுத்துகிறேன்." (10)

இயேசு அவனை நோக்கி: "இன்றைக்கு இந்த வீட்டுக்கு இரட்சிப்பு வந்தது; இவனும் ஆபிரகாமுக்குக் குமாரனாயிருக்கிறானே" என்றார். (11)

ஐசுவரியவானாக இருந்த வாலிபன் இயேசுவைவிட்டுத் திரும்பிசென்றபோது, "ஐசுவரியத்தின்மேல் நம்பிக்கையாயிருக்கிறவர்கள் தேவனுடைய ராஜ்யத்தில் பிரவேசிக்கிறது எவ்வளவு அரிதாயிருக்கிறது!" என்று அவர்களுடைய ஆண்டவர் கூறினதில் சீடர்கள் ஆச்சரியமடைந்தனர்; "அப்படியானால் யார் இரட்சிக்கப்படக்கூடும்?" என்று அவர்கள் ஒருவருக்கொருவர் வியந்து கூறினார்கள். இப்பொழுது கிறிஸ்துவின் வார்த்தைகளில் கொடுக்கப்பட்ட—அதாவது "மனுஷரால் இது கூடாததுதான், தேவனால் இதுகூடாததல்ல; தேவனாலே எல்லாம் கூடும்" என்னும் சத்தியத்திற்கு ஒரு செயல்முறை விளக்கத்தை அவர்கள் அடைந்தார்கள் – மாற்கு 10:24,26; லுக்கா 18:27. தேவனுடைய கிருபையினால், ஒரு செல்வந்தன் எவ்விதமாக தேவ இராஜ்யத்திற்குள் பிரவேசிக்கமுடியும் என்பதை இப்பொழுது அவர்கள் கண்டார்கள். (12)

சகேயு கிறிஸ்துவின் முகத்தைப் பார்த்ததற்குமுன்பே, உண்மையாக மனம்வருந்தினவன் என்பதை வெளிக்காட்டும் வேலையைச்செய்ய ஆரம்பித்திருந்தான். மனிதனால் குற்றப்படுத்தப்படுவதற்குமுன்பே, அவன் அவனுடைய பாவங்களை அறிக்கை செய்திருந்தான். பரிசுத்த ஆவியினால்

உண்டான மனஉணர்த்துதலுக்கு அவன் இணங்கியிருந்து, பண்டைய இஸ்ரவேலருக்காகவும் அதைப்போலவே நமக்காகவும் எழுதப்பட்டுள்ள வார்த்தைகளின் போதனைகளைச் செயலாற்ற ஆரம்பித்திருந்தான். நீண்டகாலத்திற்கு முன்னதாகவே கர்த்தர், “உன் சகோதரன் தரித்திரப்பட்டு, கையிளைத்துப்போனவனானால், அவனை ஆதரிக்கவேண்டும்; பரதேசியைப் போலும் தங்கவந்தவனைப்போலும் அவன் உன்னோடே பிழைப்பானாக. நீ அவன் கையில் வட்டியாவது பொலிசை யாவது வாங்காமல், உன் தேவனுக்குப் பயந்து, உன் சகோதரன் உன்னோடே பிழைக்கும்படி செய்வாயாக. அவனுக்கு உன் பணத்தை வட்டிக்கும், உன் தானியத்தைப் பொலிசைக்கும் கொடாயாக; ... உங்களில் ஒருவனும் பிறனுக்கு அநியாயம் செய்யக்கூடாது; உன் தேவனுக்குப் பயப்படவேண்டும்; நான் உங்கள் தேவனாகிய கர்த்தர்” (லேவியராகமம் 25:35–37,17) என்று கூறியிருந்தார். கிறிஸ்து மேகஸ்தம்பத்தில் தம்மை முழுவதும் மறைத்தவராக இருந்தபோது, இந்த வார்த்தை அவரால் கூறப்பட்டிருந்தது. கிறிஸ்துவின் அன்பிற்கான சகேயுவின் பிரதிச்செயல், ஏழைகளுக்கும் துன்பப்படுகிறவர்களுக்கும் நேராக மனஉருக்கத்தை வெளிக்காட்டியதில் இருந்தது. (13)

ஆயக்காரர்களுக்கிடையில் மக்களை ஒடுக்குவதற்கும் தங்களுடைய மோசடியான செயல்களில் ஒருவரை மற்றொருவர் தாங்குவதற்கும் வசதியான—ஒரு சட்டவிரோதமான கூட்டமைப்பு இருந்தது. அவர்களுடைய பணம் வசூல்செய்யும் காரியத்தில் ஏறத்தாழ எங்கும் பரவியதாக இருந்த வழக்கத்தையே அவர்கள் செய்துகொண்டிருந்தனர். அவர்களை நிந்தித்திருந்த ஆசாரியர்களும் ரபிமார்களுங்கூட அவர்களுடைய பரிசுத்தமான அழைப்பு என்னும் மறைவிற்குக்கீழ் கனவீனமான நடத்தைகளினால் தங்களைச் செல்வந்தர்களாக்கியிருந்த குற்றத்தை உடையவர்களாக இருந்தனர்; ஆனால், பரிசுத்த ஆவியின் செல்வாக்கிற்கு சகேயு இணங்கினவுடனே, நேர்மைக்கு எதிராக இருந்த அனைத்துப் பழக்கங்களையும் தூரமாக விலக்கிவிட்டான். (14)

சீர்திருத்தத்தைச் செயலாற்றாத மனம்வருந்துதல் எதுவும் உண்மையானதல்ல. பாவஅறிக்கை செய்யப்படாததும் விட்டுவிடப்படாததுமான பாவத்தை மறைக்கும் உடையாகக் கிறிஸ்துவின் நீதி இல்லை. குணத்தை மறுரூபப்படுத்தி, நடத்தையைக் கட்டுப்படுத்துகின்ற, வாழ்க்கையின் அடிப்படையான ஒரு கொள்கையாக அது இருக்கிறது. பரிசுத்தம் என்பது தேவனுக்காக முழுமையானதாக இருக்கிறது. அது உள்ளே வாசஞ்செய்யும் பரலோகத்தின் அடிப்படைக் கொள்கைகளுக்கு, இருதயத்தையும் வாழ்க்கையையும் முற்றிலுமாகச் சரணடையச்செய்வதாக இருக்கிறது. (15)

நமது கர்த்தர், தொழில் அமைப்புகளை எவ்விதமாக நடத்துவாரோ, அதேவிதமாகக் கிறிஸ்தவனும் அவனுடைய தொழில் வாழ்க்கையில் உலகிற்கு ஒரு எடுத்துக்காட்டாக இருக்கவேண்டும். ஒவ்வொரு நடவடிக்கையிலும் தேவன் அவனுடைய போதகராக இருக்கிறார் என்பதை வெளிக்காட்டச்செய்ய வேண்டியவனாக அவன் இருக்கிறான். நாட்குறிப்புகள், பேரேடுகள், ஒப்பந்தங்கள் ரசீதுகள், பணமாற்ற பில்கள் ஆகியவைகளின்மீதும், "கர்த்தருக்குப் பரிசுத்தம்" என்று எழுதப்படவேண்டும். தங்களைக் கிறிஸ்துவின் அடியார்கள் என்று கூறிக்கொண்டிருந்து, அநீதியானவிதமாக இடைபடுபவர்கள், ஒரு பரிசுத்தமும் நீதியும் இரக்கமுமுள்ள தேவனுடைய குணத்திற்கு எதிராகப் பொய்ச்சாட்சி கொடுத்துக்கொண்டிருக்கின்றனர். சகேயுவைப்போல மனம்மாறின ஒவ்வொரு ஆத்துமாவும், அவனுடைய வாழ்க்கையை அடையாளப்படுத்தியிருந்த அநீதியான நடத்தைகளை விட்டொழித்து, அவனுடைய இருதயத்தில் கிறிஸ்து பிரவேசித்திருப்பதை அடையாளப்படுத்திக்காட்டுவான். திருப்பிக்கொடுக்கும் செயல்களினால், தனது உண்மைத்தன்மைக்கு அந்த ஆயக்காரர்களின் தலைவனைப்போல் சான்றுகொடுப்பான். "துன்மார்க்கன் தான் வாங்கின அடைமானத்தையும் தான் கொள்ளையிட்ட பொருளையும் திரும்பக்கொடுத்துவிட்டு, அநியாயம் செய்யாதபடி ஜீவப்பிரமாணங்களில் நடந்தால், அவன் செய்த அவனுடைய எல்லாப் பாவங்களும் அவனுக்கு விரோதமாக நினைக்கப்படுவதில்லை... அவன் பிழைக்கவே பிழைப்பான்" (எசேக்கியேல் 33:15,16) என்று கர்த்தர் கூறுகிறார். (16)

அநீதியான எந்தவிதமான தொழில் நடத்தைகளினாலாவது வியாபாரத்தில் நாம் அதிக இலாபம் அடைந்திருந்தால், அல்லது எந்த மனிதனையாவது மோசடிசெய்திருந்தால், அது சட்டவரம்பிற்குட்பட்டதாக இருந்தபோதிலும், அதனால் நாம் பிறரைக் காயப்படுத்தியிருந்தால், நமது தவறை நாம் பாவ அறிக்கைசெய்து நமது வல்லமைக்குள் உள்ள தூரம்வரை திருப்பிக்கொடுப்பதைச் செய்யவேண்டும். நாம் எடுத்துக்கொண்டிருப்பதைமட்டும் திருப்பிக் கொடுப்பதுமட்டுமின்றி, அதை மிகவும் சரியானவிதமாகவும் ஞானத்துடனும் இந்தக்காலத்தில் பயன்படுத்தியிருந்தால், எந்த அளவிற்கு அது கைவசத்தில் இருக்கும்போது, பெருகியிருந்திருக்குமோ அவ்வாறு அதைத் திருப்பிக்கொடுப்பது நமக்குச் சரியானதாக இருக்கும். (17)

சகேயுவிடம் இரட்சகர்: "இன்றைக்கு இந்த வீட்டுக்கு இரட்சிப்பு வந்தது" என்று கூறினார். சகேயு ஒருவன் மட்டும் ஆசீர்வதிக்கப்படாமல், அவனுடைய வீட்டார் அனைவருங்கூட ஆசீர்வதிக்கப்பட்டனர். சத்தித்தின்

பாடங்களை அவனுக்குப் போதிக்கவும், இராஜ்யத்தின் காரியங்களைப் பற்றி அவனுடைய வீட்டாருக்கு வெளிப்படுத்தவும் அவன் வீட்டிற்குச் சென்றார். ரபிமார்கள், ஆராதனைசெய்பவர்கள் ஆகியோரின் அவமதிப்பினால் அவர்கள் ஜெப ஆலயத்திலிருந்து புறம்பாக்கப்பட்டிருந்தனர்; ஆனால், இப்பொழுது எரிகோ முழுவதிலும் ஆதரவுபெற்றவர்களாக இருந்த வீட்டார் அனைவரும் (சகேயுவின்) சொந்தவீட்டில், அந்த தெய்வீகப் போதகரைச்சுற்றி ஒன்றுசேர்ந்து, தங்களுக்கென்று ஜீவவார்த்தைகளைக் கேட்டார்கள். (18)

கிறிஸ்துவை சொந்த இரட்சகராக ஏற்றுக்கொள்ளும்போது தான் ஆத்துமாவிற்கு இரட்சிப்பு வருகிறது. தனது வீட்டைக் கடந்து செல்லும் ஒரு விருந்தினராகமட்டும் இயேசுவை சாதாரணமாகச் சகேயு ஏற்றுக்கொள்ளாமல், ஆத்துமாவாகிய ஆலயத்தில், வாசஞ்செய்பவராகவும் ஏற்றுக்கொண்டிருந்தான். வேதபாரகர்களும் பரிசேயர்களும் அவனை ஒரு பாவியென்று குற்றஞ்சாட்டினார்கள். கிறிஸ்து அவனுடைய விருந்தினரானதற்காக, அவர்கள் அவருக்கெதிராக முறுமுறுத்தார்கள்; ஆனால் கர்த்தர் அவனை ஆபிரகாமின் ஒரு குமாரன் என்று அங்கீகாரம்செய்தார்; ஏனெனில், “விசுவாசமார்க்கத்தார்கள் எவர்களோ அவர்களே ஆபிரகாமின் பிள்ளைகளாக இருக்கின்றனர்”—கலாத்தியர் 3:7. (19) ★

# 62

# சீமோன் வீட்டில் நடைபெற்ற விருந்தில்...!

**மத்தேயு 26:6–13; மாற்கு 14:3–11; லூக்கா 7:36–50; யோவான் 11:55–57; 12:1–11**

(The Desire of Ages, pp. 557-568)

பெத்தானியா ஊரானாக இருந்த சீமோன், இயேசுவின் சீடன் என்று எண்ணப்பட்டிருந்தான். கிறிஸ்துவின் அடியார்களுடன் வெளிப்படையாகச் சேர்ந்திருந்த சில பரிசேயர்களில் அவனும் ஒருவனாக இருந்தான். இயேசுவை அவன் ஒரு போதகராக ஏற்றுக்கொண்டு, அவர் மேசியாவாக இருக்கக்கூடும் என்று நம்பியிருந்து, ஆனால் அவரை ஒரு இரட்சகர் என்று ஒப்புக்கொள்ளாதவனாக இருந்தான். அவனுடைய குணம் மறுரூபமடையாததாகவும், அவனுடைய அடிப்படைக்கொள்கைகள் மாறாததாகவுமிருந்தன. (1)

தொழுநோயிலிருந்து சீமோன் சுகப்படுத்தப்பட்டிருந்தான்; இந்தக் காரியம் அவனை இயேசுவிடம் இழுத்திருந்தது. இதற்காகத் தன்னுடைய நன்றியைக் காட்ட விரும்பி, கிறிஸ்து கடைசித் தடவையாகப் பெத்தானியாவிற்கு வந்தபோது, இரட்சகருக்கும் அவருடைய சீடர்களுக்கும் ஒரு விருந்துசெய்தான். அந்த விருந்து அநேக யூதர்களை ஒன்று சேர்த்திருந்தது. அந்த நேரத்தில் எருசலேமில் அதிகமான உணர்ச்சிகளின் கொந்தளிப்பு இருந்தது. இதற்குமுன் எப்பொழுதும் இருந்ததைவிட, கிறிஸ்துவும் அவரது ஊழியமும் பெரிய அளவில் மக்களின் கவனத்தை ஈர்த்திருந்தது. அந்த விருந்திற்கு வந்திருந்தவர்கள் அவரது செயற்பாடுகளை நெருக்கமாகக் கவனித்திருந்தனர். அவர்களில் சிலர் அன்பற்ற பார்வையுடன் அவரைக் கவனித்திருந்தனர். (2)

பஸ்கா பண்டிகைக்கு ஆறுநாட்களுக்குமுன்புதான் இரட்சகர் பெத்தானியாவிற்கு வந்திருந்து, அவருடைய வழக்கத்தின்படி லாசருவின் வீட்டில் இளைப்பாறுதலைத் தேடியிருந்தார். அந்த நகரத்திற்குக் கடந்து

சென்றிருந்த பயணிகளின் கூட்டங்கள், அவர் எருசலேமிற்கு வந்து கொண்டிருக்கிறார் என்றும், ஓய்வுநாளின்போது அவர் பெத்தானியாவில் லாசருவின் வீட்டில் இளைப்பாறுவார் என்றும் செய்தியைப் பரப்பியிருந்தன. மக்களுக்கு மத்தியில் உற்சாகம் கரைபுரண்டோடியிருந்தது. சிலர் இயேசுவின்மீதிருந்த அனுதாபத்தினாலும், மற்றவர்கள் மரித்தோரிலிருந்து எழுப்பப்பட்டிருந்த ஒருவனைப் பார்க்கவேண்டுமென்னும் ஆர்வத்தினாலும் பெத்தானியாவில் கூட்டமாகக் கூடியிருந்தனர். (3)

மரணத்திற்குப்பின் என்னனென்ன ஆச்சரியமான காட்சிகள் நடைபெற்றன என்பதைக்குறித்து லாசருவிடமிருந்து அறிந்துகொள்ள அநேகர் எதிர்பார்த்திருந்தனர். அதைப்பற்றி கூறுவதற்கு அவனிடம் எதுவும் இல்லாதிருந்ததையறிந்து அவர்கள் வியப்படைந்தனர். கூறுவதற்கு அப்படிப்பட்ட எதுவும் அவனிடம் இல்லை. “மரித்தவர்கள் ஒன்றும் அறியார்கள்... அவர்கள் சிநேகமும், அவர்கள் பகையும், அவர்கள் பொறாமையும் எல்லாம் ஒழிந்துபோயிற்று” (பிரசங்கி 9:5,6); ஆனால், கிறிஸ்துவின் பணியைப்பற்றிய ஆச்சரியமான ஒரு சாட்சியை லாசரு கொடுக்கவேண்டியவனாக இருந்தான். இந்த நோக்கத்திற்காக அவன் மரித்தோரிலிருந்து எழுப்பப்பட்டிருந்தான். மிகுந்த நிச்சயத்துடனும் வல்லமை யுடனும் இயேசுவை தேவனுடைய குமாரன் என்று அவன் அறிவித்தான். (4)

அவரைச் சந்திக்க பெத்தானியாவிற்கு வந்திருந்தவர்களால் திரும்ப எடுத்துச்செல்லப்பட்டிருந்த அறிக்கைகள் உணர்ச்சிகளின் எழுப்புதலை அதிகரித்திருந்தது. இயேசுவைக் காண்பதற்கும் அவர் பேசுவதைக் கேட்பதற்கும் மக்கள் ஆவலுள்ளவர்களாக இருந்தனர். அவருடன் சேர்ந்து லாசருவும் எருசலேமிற்கு வருவானா? பஸ்கா பண்டிகையின் பொழுது அந்தத் தீர்க்கதரிசி அரசர் என்று முடிசூட்டப்படுவாரா? என்னும் ஒரு பொதுவான விசாரிப்பும் இருந்தது. மக்களின்மீதுள்ள பிடிப்பு மேலும் பலவீனமடைந்துகொண்டிருப்பதை ஆசாரியர்களும் அதிபதிகளும் கண்டபோது, இயேசுவிற்கு எதிரான அவர்களுடைய சீற்றம் மிகவும் அதிக கசப்பாக வளர்ந்தது. அவர்களுடைய பாதையிலிருந்து அவரை என்றென்றைக்குமாக நீக்குவதற்கான சந்தர்ப்பத்திற்காக அவர்கள் காத்திருக்கமுடியாதவர்களாக இருந்தனர். நேரம் கடந்துசென்றபோது, அவர் எருசலேமிற்கு வராமலிருந்துவிடலாமென்று எண்ணி அவர்கள் கலக்கமடையத் தொடங்கினார்கள். எவ்விதமாக அவர்களுடைய கொலைகாரத் திட்டத்தை அவர் அடிக்கடி திணறடித்திருந்தாரென்பதை நினைத்திருந்து, அவருக்கெதிரான அவர்களுடைய நோக்கத்தை இப்பொழுதும் அவர்

வாசித்தறிந்து தூரமாக இருந்துவிடுவாரோ என்னும் பயத்தோடு இருந்தனர். அவர்களுடைய கவலையை அவர்கள் தவறானவிதத்தில் மறைத்து, “உங்களுக்கு எப்படித் தோன்றுகிறது, அவர் பண்டிகைக்கு வரமாட்டாரோ” என்று ஒருவருக்கொருவர் கேள்விகேட்டுக்கொண்டனர். (5)

ஆசாரியர்கள், பரிசேயர்கள் ஆகியோரின் ஒரு ஆலோசனைச் சங்கம் கூட்டப்பட்டது. லாசருவை எழுப்பினதிலிருந்து, மக்களின் அனுதாபம் கிறிஸ்துவின்மீது முழுமையாக இருந்ததினால், அவரை வெளிப்படையாகப் பிடிப்பது ஆபத்தானதாக இருக்கும். அப்படியே அவரை இரகசியமாகப் பிடிக்கவும், எவ்வளவு விரைவாக முடியுமோ அவ்வளவு விரைவாக விசாரணையை நடத்தவும், அதிகாரிகள் தீர்மானித்தார்கள். அவருடைய தண்டனை வெளிப்படும்போது, அடிக்கடி மனம்மாறுகின்ற பொதுமக்களின் கருத்துக்கள் அவர்களுக்கு ஆதரவாக அமைந்துவிடும் என்றும் அவர்கள் நம்பினார்கள். (6)

இவ்விதமாக, அவர்கள் இயேசுவை அழிக்கத் திட்டமிட்டார்கள்; மேலும், லாசரு உயிருடன் இருக்கும்வரை, தங்களால் பாதுகாப்பாக இருக்கமுடியாது என்பதையும் ஆசாரியர்களும் ரபிமார்களும் அறிந்திருந்தனர். நான்கு நாட்கள் கல்லறையிலிருந்து, இயேசுவின் ஒரு வார்த்தையினால் திரும்ப எழுப்பப்பட்டு, இப்பொழுது உயிருடன் இருக்கும் ஒரு மனிதனின் காரியம் விரைவாகவோ அல்லது தாமதமாகவோ பாதகமான ஒரு எதிர்விளைவை ஏற்படுத்தும். அப்படிப்பட்ட அற்புதஞ்செய்யக்கூடிய ஒருவரின் ஜீவனை எடுத்துக்கொண்டதற்காக மக்களின் தலைவர்கள், மக்களால் பழிவாங்கப்படுவார்கள்; ஆகையால், லாசருவுங்கூட சாகவேண்டுமென்று சனகரீம் சங்கம் முடிவுசெய்தது. சூழ்ச்சியும் தவறான எண்ணமும் அவைகளின் அடிமைகளை எவ்வளவு தூரத்திற்கு நடத்துகின்றன! எந்த ஒருவனை முடிவில்லாத வல்லமை கல்லறையிலிருந்து மீட்டிருந்ததோ, அவனுடைய ஜீவனை எடுக்கும்வரை யூதத் தலைவர்களின் வெறுப்பும் நம்பிக்கையின்மையும் அதிகரித்திருந்தது. (7)

எருசலேமில் இந்த சதித்திட்டம் நடந்துகொண்டிருந்தபொழுது, சீமோனின் விருந்திற்கு இயேசுவும் அவருடைய நண்பர்களும் அழைக்கப் பட்டிருந்தனர். எந்த ஒருவனுடைய அருவருக்கத்தக்க நோயை இரட்சகர் சுகப்படுத்தியிருந்தாரோ, அவனுடன்—அந்த சீமோனுடன் இரட்சகர் மேஜையில் உட்கார்ந்திருந்தார். அவருக்கு அடுத்த பக்கத்தில் அவர் உயிருடன் எழுப்பியிருந்த லாசரு உட்கார்ந்திருந்தான். மார்த்தாள் உணவு பரிமாறிக்கொண்டிருந்தாள்; ஆனால், மரியாள் இயேசுவின் உதடுகளிலிருந்துண்டான ஒவ்வொரு வார்த்தையையும் அக்கறையுடன்

கவனித்துக்கொண்டிருந்தாள். இயேசு அவருடைய இரக்கத்தில் அவளுடைய பாவங்களை மன்னித்திருந்தார். அவளுடைய சகோதரனை அவர் கல்லறையிலிருந்து வெளியே அழைத்திருந்தார்; அதனால், மரியாளின் இருதயம் நன்றியால் நிறைந்திருந்தது. அவரை நெருங்கிக்கொண்டிருக்கும் மரணத்தைப்பற்றி இயேசு பேசுவதை அவள் கேட்டிருந்தாள். அவளுடைய ஆழ்ந்த அன்பினாலும் துயரத்தினாலும் அவருக்குத் தனது கனத்தைக் காட்ட ஏக்கமுடையவளாக இருந்தாள். “நளதம் என்னும் விலையேறப்பெற்ற தைலத்தை” அவருடைய சரீரத்தில் பூசுவதற்காக அவள் பெரும் தியாகஞ்செய்து வாங்கியிருந்தாள்; ஆனால், அவர் அரசராக முடிசூட்டப்பட இருக்கிறார் என்று அப்பொழுது அநேகர் அறிவித்துக்கொண்டிருந்தனர். அவளுடைய வருத்தம் சந்தோஷமாக மாறியது. தனது கர்த்தரைக் கனப்படுத்துவதில் முதலாவதாக இருப்பதற்கு அவள் அக்கறையுள்ளவளாக இருந்தாள். மரியாள் தைலக்குப்பியை உடைத்து, அந்தத் தைலத்தை இயேசுவின் சிரசிலும் பாதங்களிலும் ஊற்றினாள்; அதன்பின் அழுதுகொண்டு, முழங்காலில் நின்று, தன் நீண்ட கூந்தலைக் கண்ணீரால் நனைத்து, அவருடைய பாதங்களைத் துடைத்தாள். (8)

பிறர் பார்ப்பதைத் தவிர்க்க அவள் வகைதேடியிருந்தாள். அவளுடைய செயல்கள் கவனிக்கப்படாமலிருந்திருக்கும்; ஆனால், அந்தத் தைலம் அதன் வாசனையை அந்த அறை முழுவதிலும் நிரப்பினதால், அவளுடைய செயலை அங்கிருந்த அனைவருக்கும் வெளியிட்டது. இந்தச் செயலைப் பெரும் கோபத்துடன் யூதாஸ் பார்த்தான். அந்தக் காரியம்பற்றி கிறிஸ்து என்ன கூறுவார் என்பதைக் கேட்பதற்காகக் காத்திருப்பதற்குப்பதிலாக, அப்படிப்பட்ட வீணாக்குதலை அனுமதித்ததற்காக கிறிஸ்துவின்மீது நிந்தனையை வீசி, அவனுடைய குற்றச்சாட்டுகளை அவனுக்கு அருகிலிருந்தவர்களிடத்தில் மெல்லிய குரலில் கூறினான். பாசமற்றதன்மைக்கு, தான் காரணமாகிவிடக்கூடாதென்று அவன் தந்திரமாக ஆலோசனை கொடுத்தான். (9)

யூதாஸ் சீடர்களுக்குப் பொருளாளராக இருந்து, அவர்களுடைய சிறிய சேமிப்பிலிருந்து தனது சொந்த உபயோகத்திற்காக இரகசியமாக எடுத்திருந்து, இவ்விதமாக அவர்களுடைய நிதி ஆதாரங்களை மிகவும் குறைவாக்கியிருந்தான். அவனால் அடைந்துகொள்ளமுடிந்த அனைத்தையும் பையில் போட்டுக்கொள்ள அவன் அக்கறையுள்ளவனாக இருந்தான். பையிலிருந்த பணம் அடிக்கடி ஏழைகளுக்கு உதவிசெய்வதற்காக எடுக்கப்பட்டிருந்தது. யூதாசினால் முக்கியமில்லாததாகக் கருதப்பட்டிருந்த ஏதாவது வாங்கப்பட்டால், இந்த வீண் செலவு ஏன்? இதற்காகச் செலவிடப்பட்ட பணம் ஏழைகளுக்கென்று நான் சுமந்துகொண்டிருக்கும்

பையில் ஏன் போடப்படவில்லை? என்று அவன் கூறுவான். இப்பொழுது மரியாளின் செயல் அவனுடைய சுயநலமிக்க செயலுடன் ஒப்பிடப்பட்டபோது, அவன் வெட்கத்திற்குள்ளானான். அவனுடைய வழக்கத்தின்படி அவளுடைய அன்பளிப்பிற்கான அவனுடைய எதிர்ப்பிற்கு, ஒரு மதிப்புமிக்க நோக்கத்தை நியமித்திருந்தான். சீடர்களிடமாகத் திரும்பி, அவன்: “இந்தத் தைலத்தை முந்நூறு பணத்துக்கு விற்று, தரித்திரருக்குக் கொடாமல்போன தென்ன?” என்று கேட்டான். “அவன் தரித்திரரைக்குறித்துக் கவலைப்பட்டு இப்படிச்சொல்லாமல், அவன் திருடனானபடியினாலும், பணப்பையை வைத்துக்கொண்டு, அதிலே போடப்பட்டதைச் சுமக்கிறவனானபடியினாலும் இப்படிச்சொன்னான்.” யூதாஸ் ஏழைகளின்மீது இரக்கம் இல்லாதவனாக இருந்தான். மரியாளின் தைலம் விற்கப்பட்டு, அதன் விலை அவனுக்குக் கிடைத்திருந்தாலும், அது ஏழைகளுக்கு எந்தவிதமான நன்மையையும் செய்திருக்காது. (10)

காரியங்களை நடத்தும் தனது சொந்தத் திறமையைப்பற்றி யூதாஸ் உயர்வான எண்ணங்கொண்டிருந்தான். நிதி நிர்வாகப் பொறுப்பில் இருந்த அவன், தன்னுடைய சக சீடர்களைவிட, தான் மேம்பட்டவன் என்று தன்னைக்குறித்து எண்ணிக்கொண்டிருந்தான். அதைப்போலவே அவனை மதிக்கும்படியும் அவன் அவர்களை நடத்தியிருந்தான். அவர்களுடைய நம்பிக்கையைச் சம்பாதித்து, பலத்த செல்வாக்கைப் பெற்றிருந்தான். ஏழைகளின்மீது அவன் காட்டியிருந்த பெயரளவிலான அனுதாபம் அவர்களை வஞ்சித்திருந்தது. அவனுடைய ஏமாற்றும் தன்மையுள்ள ஈர்க்கும் செயல்கள், மரியாளின் பக்தியை அவர்கள் நம்பிக்கையில்லாமல் பார்ப்பதற்குக் காரணமாயிற்று. “இந்தத் தைலத்தை முந்நூறு பணத்துக்கு விற்று, தரித்திரருக்குக் கொடாமல்போனதென்ன?” என்னும் முறுமுறுப்பு அந்த மேஜையைச்சுற்றிக் கடந்துசென்றது. (11)

குறையாகக் கூறப்பட்ட வார்த்தைகளை மரியாள் கேட்டாள். அவளது இதயம் அவளுக்குள் நடுங்கினது. அவளுடைய வீண் செலவிற்காக அவளுடைய சகோதரி அவளை கடிந்துகொள்ளக்கூடும் என்று அவள் பயந்தாள். அவளுடைய சிக்கனமற்ற செயலைப்பற்றி ஆண்டவருங்கூட நினைக்கலாம். எந்தவிதமான மன்னிப்பும் சாக்குப்போக்குமில்லாமல் அவள் திரும்பிச்செல்ல இருந்தபொழுது, “அவளை விட்டுவிடுங்கள். ஏன் அவளைத் தொந்தரவுபடுத்துகிறீர்கள்?” என்னும் அவளுடைய கர்த்தரின் குரல் கேட்கப்பட்டது. அவள் திகைத்துத் துன்பமடைந்ததை அவர் கண்டார். இந்த சேவையின் செயலினால், அவளுடைய பாவங்கள் மன்னிக்கப்பட்டதற்கான நன்றியை அவள் வெளிக்காட்டியிருந்ததை அவர் கண்டு, அவளுடைய

மனதின் பாரத்தை எடுத்துப்போட்டார்; பரிகாசத்தின் முறுமுறுப்புகளுக்கும் மேலாக, அவர் தமது குரலை உயர்த்தி: "என்னிடத்தில் நற்கிரியையைச் செய்திருக்கிறாள். தரித்திரர் எப்போதும் உங்களிடத்தில் இருக்கிறார்கள்; நானோ எப்போதும் உங்களிடத்தில் இரேன். இவள் தன்னால் இயன்றதைச் செய்தாள். நான் அடக்கம்பண்ணப்படுவதற்கு எத்தனமாக என் சரீரத்தில் தைலம்பூச முந்திக்கொண்டாள்" என்று கூறினார். (12)

இரட்சகரின் இறந்த உடலின்மீது பூசலாம் என்று அவன் எண்ணியிருந்த சுகந்த வாசனையான ஈவை, அவருடைய உயிருள்ள உடலின்மீது அவள் ஊற்றினாள். அடக்கத்தின்போது, அதன் இனிய வாசனை கல்லறையைமட்டுமே நிரப்பியிருந்திருக்கக்கூடும்; இப்பொழுது அது அவளுடைய விசுவாசம், அன்பு ஆகியவைகளின் நிச்சயத்தினால், அவருடைய இருதயத்தைச் சந்தோஷப்படுத்தியிருந்தது. இயேசு உயிருடன் இருந்தபோது, அரிமத்தியா ஊரானாகிய யோசேப்பும் நிக்கொதேமுவும் அவர்களுடைய அன்பின் பரிசைச் செலுத்தவில்லை. அவருடைய குளிர்ந்துபோன—சுயநினைவற்ற உடலிற்கு கசப்புமிக்க கண்ணீருடன் அவர்கள் தங்களுடைய விலையுயர்ந்த சுகந்தவர்க்கங்களைக் கொண்டு வந்திருந்தனர். கல்லறைக்கு சுகந்தவர்க்கங்களைக் கொண்டுவந்திருந்த பெண்கள் அவர் உயிர்த்தெழுந்திருந்ததினால், தங்களுடைய பயணத்தின் நோக்கம் பயனற்றதாகியிருந்ததைக் கண்டார்கள்; ஆனால், இரட்சகர் மரியாளின் பக்தியைப்பற்றிய உணர்வுள்ளவராக இருந்தபோது, அவள் அவர்மீது அவளுடைய அன்பை ஊற்றி, அடக்கத்திற்கென்று தைலம் பூசிக்கொண்டிருந்தாள். அவருடைய பெரும் பரீட்சையான இருளுக்குள் அவர் சென்றபோது, அவரால் மீட்கப்பட்ட ஒருவளிடமிருந்த—என்றென்றைக்கும் அவரிடமிருக்கக்கூடிய அவளுடைய அன்பைப்பற்றிய அந்தச் செயலின் ஞாபகத்தை தன்னுடன் அவர் சுமந்துசென்றார். (13)

மரித்தவர்களுக்குக்காக அநேகர் தங்களுடைய விலைமதிப்புமிக்க பரிசுகளைக் கொண்டுவருகின்றனர். குளிர்ந்துபோன மௌனமான அந்த உடலுக்கருகில் அவர்கள் நிற்கும்போது, அன்பின் வார்த்தைகள் தாராளமாகப் பேசப்படுகின்றன. பார்க்கவும் கேட்கவும் முடியாதவராக இருக்கும் ஒருவரின்மீது மென்மையான தன்மைகள், போற்றுதல்கள், பக்தி ஆகிய அனைத்தும் அபரிமிதமாகச் சொரியப்படுகின்றன. களைப்படைந்ததாக இருந்த அந்த ஆத்துமாவிற்கு அப்படிப்பட்டவைகள் அவசியமாக இருந்தபொழுது—செவி கேட்கக்கூடியதாக இருந்தபோது—இருதயம் உணரக்கூடியதாக இருந்தபொழுது இந்த வார்த்தைகள் பேசப்பட்டிருந்தால், அவைகளின் சுகந்த வாசனை எவ்விதமாக விலைமதிப்புமிக்கதாக இருந்திருக்கும்! (14)

மரியாள் அவளுடைய அன்பான செயலின் முக்கியத்துவத்தை அறியாமலிருந்தாள். அவளைக் குற்றப்படுத்தியிருந்தவர்களுக்கு பதில்கூற முடியாதவளாக இருந்தாள். அவளுக்காகப் பரிசுத்த ஆவியானவர் திட்டமிட்டிருந்தார். அவள் அவருடைய தூண்டுதலிற்குக் கீழ்ப்படிந்திருந்தாள். காரணம் கொடுப்பதற்காக ஆவியின் ஏவுதல் கீழே குனிவதில்லை. காணமுடியாத ஒரு பிரசன்னம், அது மனதுடனும் ஆத்துமாவுடனும் பேசி, செயலாற்றும்படி இருதயத்தை அசைக்கிறது; அது அதன் சொந்த சுத்திகரித்தலாக இருக்கிறது. (15)

கிறிஸ்து மரியாளுடைய செயலின் அர்த்தத்தைக் கூறினார். இவ்வாறு கூறியதினால் அவர் பெற்றுக்கொண்டதைவிட அதிகமாக அவளுக்குக் கொடுத்தார். "இவள் இந்தத் தைலத்தை என் சரீரத்தின்மேல் ஊற்றினது என்னை அடக்கம்பண்ணுவதற்கு எத்தனமான செய்கையாயிருக்கிறது" எனறார். அந்த பரிமளதைலக் குப்பி உடைக்கப்பட்டு, சுகந்தவாசனை அந்த வீடு முழுவதையும் நிரப்பினதுபோல, கிறிஸ்து மரிக்கவேண்டியவராகவும், அவருடைய சரீரம் பிய்க்கப்படவேண்டியதாகவும், மேலும் அவர் கல்லறையிலிருந்து உயிர்த்தெழவேண்டியவராகவும், அவருடைய ஜீவனின் சுகந்தம் பூமி முழுவதையும் நிரப்பவேண்டியதாகவும் இருந்தது. "கிறிஸ்து நமக்காகத் தம்மைத் தேவனுக்குச் சுகந்த வாசனையான காணிக்கையாகவும் பலியாகவும் ஒப்புக்கொடுத்து நம்மில் அன்புகூர்ந்தார்" –எபேசியர் 5:2. (16)

"இந்தச் சுவிசேஷம் உலகத்தில் எங்கெங்கே பிரசங்கிக்கப்படுமோ அங்கங்கே இவளை நினைப்பதற்காக இவள் செய்ததும் சொல்லப்படும் என்று மெய்யாகவே உங்களுக்குச் சொல்லுகிறேன்" என்று கிறிஸ்து அறிவித்தார். இரட்சகர் எதிர்காலத்தின்மீது பார்வையைச் செலுத்தினவராக, அவருடைய சுவிசேஷத்தைப்பற்றிய நிச்சயத்துடன் பேசினார். அது உலகம் முழுவதற்கும் பிரசங்கிக்கப்படவேண்டியதாக இருந்தது. சுவிசேஷம் விரிவடைந்த இடங்களிலெல்லாம் மரியாளின் பரிசு அதன் சுகந்த வாசனையைப் பரப்பும்; அவளுடைய கல்வியற்ற செயலின்மூலமாக, இதயங்கள் ஆசீர்வதிக்கப்படும்; இராஜ்யங்கள் எழும்—விழும்! அரசர்கள், வெற்றிவீரர்களின் பெயர்கள் மறக்கப்பட்டுவிடக்கூடும்; ஆனால், பரிசுத்தமான வரலாற்றின் பக்கங்களில் அந்தப் பெண்ணின் செயல் அழிவற்றதாக்கப்படும். காலம் இனியில்லை என்றாகும்வரை, உடைக்கப்பட்ட அந்தத் தைலக்குப்பி, விழுந்துபோன மனித இனத்திற்கான தேவனுடைய ஏராளமான அன்பின் கதையைக் கூறிக்கொண்டிருக்கும். (17)

மரியாளின் செயல் யூதாஸ் செய்யவிருந்த செயலுடன் குறிப்பான விதத்தில் எதிரிடையாக இருந்தது. சீடர்களின் மனங்களுக்குள் பரியாசம்,

தீயவைகளைச் சிந்தித்தல் ஆகிய விதையை விதைத்திருந்த அவனுக்கு, எவ்விதமான ஒரு கூர்மையான பாடத்தை கிறிஸ்து கொடுத்திருக்கக்கூடும். குற்றஞ்சாட்டுபவன் எவ்விதமாக நீதியாகக் குற்றஞ்சாட்டப்பட்டிருந்திருப்பான். ஒவ்வொரு இதயத்தின் உள்ளான நோக்கத்தையும் வாசித்தறியவும், ஒவ்வொருவருடைய செயலையும் புரிந்துகொள்ளவும் முடிந்தவரான அவர், அந்த விருந்தில் இருந்தவர்களுக்கு முன்பாக, யூதாசின் அனுபவத்திலிருந்த இருண்ட அதிகாரங்களைத் திறந்தார். அந்தத் துரோகி அவனுடைய வார்த்தைகளை எந்த உண்மையில்லாத போலித்தன்மையின் அடிப்படையில் பேசினானோ, அவைகள் திறந்துகாட்டப்பட வேண்டும்; ஏனெனில், ஏழைகளின்மீது அனுதாபப்படுவதற்குப் பதிலாக, அவர்களுக்கு உதவிசெய்வதற்கென்று வைக்கப்பட்டிருந்த பணத்தை அவன் கொள்ளை யடித்துக்கொண்டிருந்தான். விதவைகள், அநாதைகள், கூலிக்காரர் களை அவன் ஒடுக்கியிருந்ததற்காக, அவனுக்கெதிராக கோபம் எழுப்பப்பட்டிருந் திருக்கவேண்டும்; ஆனால், யூதாசின் முகமூடியைக் கிறிஸ்து நீக்கியிருந்தால், அவன் காட்டிக்கொடுத்தற்கு இதுதான் காரணம் என்று கூறப்பட்டிருந்திருக்க முடியும். யூதாஸ் ஒரு திருடனாக இருந்தான் என்று குற்றஞ்சாட்டப பட்டிருந்தபோதிலுங்கூட, சீடர்களுக்கு மத்தியில் அவன் அனுதாபத்தை சம்பாதித்திருப்பான். இரட்சகர் அவனைக் கடிந்துகொள்ளாது, இவ்விதமாக அவனுடைய நம்பிக்கைத் துரோகத்திற்கு ஒரு சாக்குப்போக்குக் கொடுப்பதைத் தவிர்த்திருந்தார். (18)

எனினும், இரட்சகர் அவனுடைய மாய்மாலத்தை பார்த்திருந்தார் என்பதையும், அவனுடைய கீழ்த்தரமான அவமதிக்கப்படக்கூடிய குணத்தை வாசித்திருந்தார் என்பதையும், யூதாசின்மீது இயேசு வைத்த பார்வை அவனுக்கு உணர்த்தினது. கடுமையாகக் குற்றப்படுத்தப்பட்டிருந்த மரியாளின் செயலைப் புகழ்ந்ததில், கிறிஸ்து யூதாசைக் கடிந்திருந்தார். இதற்குமுன் ஒருபோதும் இரட்சகர் அவனை நேரடியாகக் கடிந்துகொள்ளாமலிருந்தார்; இப்பொழுது அந்தக் கடிந்துகொள்ளுதல் அவனுடைய இருதயத்தை எரிச்சலடையச்செய்துகொண்டிருந்தது. அவன் பழிவாங்கத் தீர்மானித்தான். அந்த இரவு விருந்திலிருந்து அவன் நேராகப் பிரதான ஆசாரியனின் அரண்மனைக்குச்சென்று, அங்கு ஆலோசனைச்சங்கம் கூடியிருப்பதைக்கண்டு, அவர்களுடைய கரங்களில் இயேசுவைக் காட்டிக்கொடுக்க முன்வந்தான். (19)

அந்த ஆசாரியர்கள் பெரிய அளவில் மகிழ்ந்து களிகூர்ந்தனர். பணமும் இல்லாமல் விலையும் இல்லாமல் கிறிஸ்துவைத் தங்களுடைய இரட்சகராக ஏற்றுக்கொள்ளக்கூடிய சிறப்புரிமை இஸ்ரவேலின் இந்தத்

தலைவர்களுக்குக் கொடுக்கப்பட்டிருந்தது; ஆனால், நெருக்கி ஏவுகின்ற அன்பினால் மென்மையாக அவர்களுக்குக் கொடுக்கப்பட்ட விலைமதிப்பு மிக்க ஈவை அவர்கள் மறுத்துவிட்டனர். பொன்னைவிட அதிகமான விலைமதிப்புடையதாக இருந்த இரட்சிப்பை ஏற்றுக்கொள்ள மறுத்து, அவர்கள் முப்பது வெள்ளிக்காசிற்கு அவர்களுடைய கர்த்தரை விலைக்கு வாங்கினார்கள். (20)

யூதாஸ் அவனுடைய நல்ல குணங்கள் ஒவ்வொன்றின்மேலும் பேராசை வெற்றிகொள்ளும்வரை அதில் திளைத்திருந்தான். இயேசுவிற்குக் கொடுக்கப்பட்ட காணிக்கையினிமித்தம்(தைலம்) அவன் எரிச்சலடைந்தான். பூமியின் அரசர்களுக்குப் பொருந்தக்கூடிய ஒரு வெகுமதியைப் பெறுபவராக இரட்சகர் இருக்கவேண்டுமா? என்னும் வன்மத்தில் அவனுடைய இருதயம் பற்றியெரிந்தது. அந்தக் தைலக்குப்பியின் விலையைவிட மிகவும் குறைவான விலைக்கு அவன் அவனுடைய கர்த்தரைக் காட்டிக்கொடுத்தான். (21)

சீடர்கள் யூதாசைப்போல் இருக்கவில்லை. அவர்கள் இரட்சகரை நேசித்தனர்; ஆனாலும், அவருடைய உயர்வான குணத்தை சரியான முறையில் பாராட்டவில்லை. அவர்களுக்காக அவர் என்ன செய்திருக்கிறார் என்பதை அவர்கள் உணர்ந்திருந்தார்களானால், அவருக்கென்று செலவிடப் பட்ட எதுவும் வீணல்ல என்பதை உணர்ந்திருப்பார்கள். இயேசுவைப்பற்றி மிகவும் குறைவாக அறிந்திருந்த கீழ்த்திசை ஞானிகள் அவருக்குத் தகுதியான மேன்மையை எடுத்துக்காட்டும்வண்ணம் ஒரு உண்மையான பாராட்டுதலைக் காட்டியிருந்தனர். இரட்சகர் ஒரு குழந்தையாக இருந்து, ஒரு முன்னணையின் தொட்டிலில் தாலாட்டப்பட்டிருந்தபோது, அவர்கள் விலைமதிப்புமிக்க அன்பளிப்புகளைக் கொண்டுவந்து, அவருக்கு வணக்கஞ்செலுத்திப் பணிந்தனர். (22)

இதயப்பூர்வமான பணிவின் செயல்களை கிறிஸ்து மதிக்கிறார். யாராவது ஒருவன் அவருக்கு ஒரு ஆதரவான காரியத்தைச் செய்தபோது, பரலோகத்திற்குரிய மரியாதையுடன் அப்படிச் செய்தவனை அவர் ஆசீர்வதித்திருந்தார். அன்புடன் கொடுக்கப்பட்ட, ஒரு சிறுபிள்ளையின் கரத்தினால் பறிக்கப்பட்ட சாதாரணமான ஒரு மலரைக்கூட அவர் மறுக்கவில்லை. பிள்ளைகளின் காணிக்கைகளை அவர் ஏற்றுக்கொண்டு, அவர்களின் பெயர்களை ஜீவபுஸ்தகத்தில் எழுதிக்கொண்டு, அவர்களை ஆசீர்வதித்திருந்தார். மரியாள் இயேசுவை அபிஷேகஞ்செய்த செயல், மற்ற மரியாள்களிடமிருந்து அவளைப் பிரித்துக் காட்டியது. இயேசுவின்மீதான அன்பும் பயபக்தியுமிக்க செயல்கள், அவர் தேவகுமாரன் என்னும் விசுவாசத்தின் சான்றாக இருக்கின்றது. “பரிசுத்தவான்களுடைய கால்களைக்

கழுவி, உபத்திரவப்படுகிறவர்களுக்கு உதவிசெய்து, சகலவித நற்கிரியைகளையும்" (1 தீமோத்தேயு 5:10) நடப்பிப்பது, ஒரு பெண் கிறிஸ்துவின்மீது வைத்திருக்கும் உத்தம விசுவாசத்தின் சான்றாக இருக்குமென்று பரிசுத்த ஆவியானவர் குறிப்பிடுகிறார். (23)

கர்த்தருடைய சித்தத்தின்படிச் செய்கின்ற மரியாளின் அக்கறைமிக்க வாஞ்சையில் கிறிஸ்து மகிழ்ச்சியடைந்திருந்தார். அவருடைய சீடர்கள் செய்யாமலிருந்ததும், அவர்களால் புரிந்துகொள்ள முடியாததுமாயிருந்த தூய்மையான பாசம் என்னும் செல்வத்தை அவர் ஏற்றுக்கொண்டார். தனது கர்த்தருக்காக இந்த சேவையைச் செய்ய மரியாள் கொண்டிருந்த வாஞ்சை, கிறிஸ்துவிற்கு உலகத்திலிருந்த எல்லா வாசனைத் திரவியங்களைவிடவும், அதிக விலைமதிப்புள்ளதாக இருந்தது; ஏனெனில், அது உலக மீட்பரில் இருந்த அவளுடைய பாராட்டுதலை வெளிக்காட்டியிருந்தது. கிறிஸ்துவின் அன்புதான் அவளை நெருக்கி ஏவியிருந்தது. கிறிஸ்துவின் குணத்தின் ஈடு இணையற்ற மேன்மை அவளுடைய ஆத்துமாவை நிரப்பியிருந்தது. அந்த தைலம் அதைக் கொடுத்தவளுடைய இருதயத்தின் அடையாளமாக இருந்தது. அது பரலோக நீரோடைகளில் கரைபுரண்டு ஓடியிருந்த, அன்பின் வெளிப்படையான செயல் விளக்கமாக இருந்தது. (24)

தாங்கள் அவர்மீது வைத்திருக்கும் அன்பை வெளிக்காட்டுவது கிறிஸ்துவிற்கு மகிழ்ச்சியைக் கொடுக்கும் என்கிற சீடர்களுக்கு அவசியமான பாடம் மரியாளின் செயலில் இருந்தது. அவர் அவர்களுக்கு எல்லாமுமாக இருந்தார். விரைவில் அவருடைய பிரசன்னத்தை இழந்து விடுவார்கள் என்பதையும், அவருடைய மகத்தான அன்பிற்கு நன்றியைக் காண்பிக்க முடியாமல்போகும் என்பதையும் அவர்கள் உணரவில்லை. பரலோக மன்றங்களிலிருந்து பிரிந்து மனித வாழ்க்கை வாழ்ந்து கொண்டிருந்த இயேசுவின் தனிமையைச் சீடர்கள் எவ்விதமாகப் புரிந்து பாராட்டி இருந்திருக்கவேண்டுமோ அந்த அளவிற்கு அவர்கள் ஒருபோதும் பாராட்டாமலும் உணராமலுமிருந்தனர். சீடர்களிடமிருந்து பெற்றிருந்திருக்க வேண்டியவைகளைப் பெறாததினால், அவர் அடிக்கடி வருத்தப்பட்டிருந்தார். அவருக்கு துணையாயிருந்த பரலோகத் தூதர்களின் செல்வாக்கின்கீழ் அவர்கள் இருந்திருந்தால், இருதயத்தின் ஆவிக்குரிய பாசத்தை வெளிக்காட்ட விலைமதிப்புமிக்க எந்த காணிக்கையும் போதுமானதாக இருக்காது என்பதை அவர்களும் சிந்தித்திருப்பார்கள். (25)

தங்களுடைய இருதயத்தின் அன்பையும் நன்றியையும் உணர்த்திக்காட்டும் அநேக காரியங்களை இயேசு தங்களருகில் இருந்தபோது செய்திருக்கலாமே என்ற உண்மையான உணர்வை பின்நாட்களில்

அவர்கள் பெற்றுக்கொண்ட அறிவு அவர்களுக்குக் கொடுத்தது. பின்னர், இயேசு அவர்களுடன் இல்லாதபோது, உண்மையாகவே மேய்ப்பனில்லாத ஆடுகளாக இருப்பதை அவர்கள் உணர்ந்தார்கள். அவருடைய இருதயத்திற்கு மகிழ்ச்சியைக் கொண்டுவந்திருக்கக்கூடியவைகளின்மீது கவனம் செலுத்தியிருக்கலாமே என்பதையும் அவர்கள் காணத்தொடங்கினார்கள். அதற்குப்பின், அவர்கள் மரியாளின்மீது குற்றஞ்சுமத்தாமல், தங்கள்மீதே குற்றஞ்சுமத்திக்கொண்டார்கள். ஆ! கிறிஸ்துவைவிட ஏழைகள் அந்த பரிசைப் பெறுவதற்கு தகுதியானவர்கள் என்று தாங்கள் முன்வைத்ததில் இருந்த கண்டனத்தை அவர்களால் திருப்பிப்பெறமுடிந்திருந்தால், எவ்வளவு நன்றாக இருந்திருக்கும்! அவர்களுடைய கர்த்தரின் சிதைக்கப்பட்ட உடலைச் சிலுவையிலிருந்து எடுத்தபொழுது, அந்தக் கடிந்துகொள்ளுதலை அவர்கள் தெளிவாக உணர்ந்தார்கள். (26)

இன்றைய நமது உலகத்திலும் அதேவிதமான தேவை இருப்பது தெளிவாகத் தெரிகிறது. மரியாளுடைய பெரிய அன்பின் வெளிக்காட்டுதலை அவர்கள் செய்திருந்தால், அந்தத் தைலம் பூசுதல் இலவசமாக, தாராளமாகச் செய்யப்பட்டிருந்திருக்கும். விலைமதிப்புமிக்க அந்தத் தைலம் வீண்செலவு என்று அழைக்கப்படாது. கிறிஸ்துவிற்காக நாம் கொடுப்பது எதுவுமே அதிகமான விலைக்கிரயமுள்ளதென்று எண்ணப்படாது. அவருக்காக தாங்கள் அனுபவிக்கும் சுயமறுப்பும் சுயத்தியாகமும் மிகப்பெரியதாகத் தெரியாது. (27)

“இந்த வீண் செலவு என்னத்திற்கு” என்று கோபத்துடன் கூறப்பட்டிருந்த வார்த்தைகள், இதுவரை ஒருபோதும் செய்யப்பட்டிராத, மாபெரும் பலியாகவிருந்த கிறிஸ்துவின்முன்—இழந்துபோன உலகத்தை ஒப்புரவாக்கவிருந்த ஈவாகிய அவருக்குமுன்—தெளிவாகக் கொண்டுவந்தது. கர்த்தரால் இன்னும் அதிகமாகச் செய்திருந்திருக்கமுடியுமென்று சொல்ல முடியாதவிதமாக, மனிதக் குடும்பத்திற்கு அவர் தாராளமுள்ளவராக இருந்தார். இயேசுவை ஈவாகக் கொடுத்ததில், தேவன் பரலோகம் முழுவதையும் கொடுத்தார். மனிதப் பார்வையில் அப்படிப்பட்ட ஒரு தியாகபலி அதிகமான வீண்காரியம் போன்றிருந்தது. மனித விவாதத்தில்—காரணங்களை அறிதலில்—இரட்சிப்பின் திட்டம் முழுவதும் இரக்கங்கள், ஆதாரங்கள் ஆகியவைகளின் ஒரு வீண்செலவாக—வீணான செயலாக—இருக்கிறது. சுயத்தை மறுத்தல், முழு இருதயத்துடனுள்ள தியாகம் ஆகியவை நம்மை எங்கும் சந்திக்கின்றன. உயர்த்தப்படவும் கிறிஸ்துவில் வெளிக்காட்டப்பட்டுள்ள எல்லையில்லாத அன்பினால் செறிவூட்டப்படவும் மறுக்கின்ற மனித குடும்பத்தை, பரலோக சேனைகள் ஆச்சரியத்துடன்

நன்கு பார்க்கலாம். "இவ்வளவு பெரிய வீணடிப்பு எதற்கு?" என்று அவர்கள் வினவலாம். (28)

ஆனால், தொலைந்துபோன உலகத்திற்கான பாவநிவாரணம் பூரணமானதாகவும் தாராளமானதாகவும் நிறைவானதாகவும் இருக்க வேண்டியதிருந்தது. தேவன் உண்டாக்கின ஒவ்வொரு ஆத்துமாவையும் சென்றடையக்கூடியவிதத்தில் கிறிஸ்துவின் பலி மிக தாராளமானதாக இருந்தது. அந்தப் பெரும் ஈவை ஏற்றுக்கொள்ளுகிறவர்களின் எண்ணிக் கையை மிஞ்சக்கூடாது என்று அதைத் தடைசெய்யமுடியாது. எல்லா மனிதர்களும் இரட்சிக்கப்படுவதில்லை; அது எந்த அளவிற்கு ஏற்பாடு செய்யப்பட்டிருந்ததோ, அத்தனையையும் சம்பாதிக்காவிடினும் இரட்சிப்பின் திட்டம் வீணல்ல. போதுமானதும், அதற்கும் அதிகமாக மீதமானதுமாக இருக்கவேண்டும். (29)

மரியாளின் அன்பளிப்பின்மீதான யூதாசின் குற்றச்சாட்டினால் விருந்துகொடுத்தவனான சீமோன் பாதிக்கப்பட்டு, இயேசுவின் நடத்தையில் ஆச்சரியமடைந்திருந்தான். அவனுடைய பரிசேயப் பெருமை அவமதிக்கப் பட்டிருந்தது. அவனுடைய விருந்தினர்களில் அநேகர் கிறிஸ்துவை அவநம்பிக்கையுடனும் கோபத்துடனும் பார்த்துக்கொண்டிருந்தனர் என்று அறிந்தான். தன்னுடைய இருதயத்தில்: "இவர் தீர்க்கதரிசியாய் இருந்தால், தன்னைத் தொடுகிற ஸ்திரீ இன்னாளென்றும்—இப்படிப்பட்டவளென்றும் அறிந்திருப்பார், இவள் பாவியாய் இருக்கிறாளே" என்று கூறிக்கொண்டான். (30)

தொழுநோயிலிருந்து சீமோனைச் சுகப்படுத்தினதில், கிறிஸ்து அவனை உயிருள்ள ஒரு மரணத்திலிருந்து காப்பாற்றியிருந்தார்; ஆனால், இப்பொழுது, இரட்சகர் ஒரு தீர்க்கதரிசிதானா? என்று சீமோன் கேள்விகேட்டான். இந்த ஸ்திரீ தம்மை சமீபிக்கும்படி கிறிஸ்து அனுமதித்ததினால், அவளுடைய பாவம் மன்னிக்கப்படமுடியாத அளவிற்கு மிகவும் பெரியது என்று அவர் அவளைக் கோபத்துடன் வெறுத்துத் தள்ளாததினால், அவள் விழுந்துபோனவள் என்று தாம் உணர்ந்ததை காட்டிகொள்ளாததினால், அவர் ஒரு தீர்க்கதரிசி அல்ல என்று நினைக்கும்படி சீமோன் சோதிக்கப்பட்டான். தனது செயல் விளக்கங்களில் தாராளமானவளாக இருக்கும் இந்த பெண்ணைப்பற்றி இயேசுவிற்கு ஒன்றும் தெரியாது; இல்லாவிட்டால், அவரைத் தொடும்படி அவர் அவளை அனுமதித்திருக்கமாட்டாரென்று அவன் நினைத்தான். (31)

ஆனால், தேவனைப்பற்றியும் அவருடைய கிறிஸ்துவைப் பற்றியதுமான சீமோனின் அறியாமைதான் அப்படிச் சிந்திக்கும்படி அவனை நடத்தினது. மனஉருக்கத்துடனும், மென்மையுடனும் இரக்கத்துடனும் தேவன்

நடந்துகொள்ளுகின்றவிதமாகவே குமாரனும் செயல்பட வேண்டியவராக இருக்கிறார் என்பதை அவன் உணரவில்லை. மரியாளின் மனம் வருந்தின சேவையைக் கவனிக்காத ஒன்றாக சீமோனின் பாதை இருந்தது. கிறிஸ்துவின் பாதங்களை முத்தமிட்டதும், அந்தப் பாதங்களில் தைலம் பூசினதுமான அவளுடைய செயல், அவனுடைய கடின இருதயத்திற்கு எரிச்சலையூட்டியிருந்தது. கிறிஸ்து ஒரு தீர்க்கதரிசியாக இருந்திருந்தால், அவர் பாவிகளை இனங்கண்டு, அவர்களைக் கடிந்துகொண்டிருந்திருப்பார் என்று அவன் நினைத்தான். (32)

பேசப்படாமலிருந்த இந்த எண்ணத்திற்காக இரட்சகர்: "சீமோனே, உனக்கு நான் ஒரு காரியம் சொல்லவேண்டும் என்றார்.... ஒருவனிடத்தில் இரண்டு பேர் கடன்பட்டிருந்தார்கள். ஒருவன் ஐந்நூறு வெள்ளிக்காசும் மற்றவன் ஐம்பது வெள்ளிக்காசும் கொடுக்கவேண்டியதாக இருந்தது. கொடுக்க அவர்களுக்கு நிர்வாகமில்லாமலிருந்தபோது, இருவருக்கும் கடனை மன்னித்துவிட்டான்; இப்படியிருக்க, அவர்களில் எவன் அவனிடத்தில் அதிகமாய் அன்பாயிருப்பான்? அதைச் சொல்" என்று பதிலளிக்கும்படி கூறினார். சீமோன் பதிலாக: "எவனுக்கு அதிகமாய் மன்னித்துவிட்டானோ, அவனே அதிக அன்பாயிருப்பான்" என்று கூறினான். அதற்கு அவர்: "நீ சரியாய் நிதானித்தாய்" என்று கூறினார். (33)

நாத்தான் தாவீதிற்குச் செய்ததைப்போல கிறிஸ்துவும் அவனுடைய இருதயத்திற்குள் செலுத்தும் ஒன்றை ஒரு உவமை என்னும் திரையின்கீழ் மறைத்தார். அவருக்கு விருந்துகொடுத்திருந்தவனின்மீது, தன்மீது தானே தண்டனையை அறிவிக்கின்ற பாரத்தை வைத்தார்; இப்பொழுது சீமோன் எந்த ஒரு பெண்ணை நிந்தித்திருந்தானோ—அவளை, அவனே பாவத்திற்குள் நடத்தியிருந்தான். அவனால் அவள் மோசமான—முறைகேடான வழியிலே நடத்தப்பட்டிருந்தாள். ஆழமானவிதமாகத் தவறிழைக்கப்பட்டிருந்தாள். இரண்டு கடன்பட்டிருந்தவர்களைப்பற்றிய உவமையினால் சீமோனும் அந்த பெண்ணும் எடுத்துக்காட்டப்பட்டிருந்தனர். கடன்களின் இரண்டு விதமான தன்மைகளும் அந்த இருவராலும் உணரப்படவேண்டும் என்பதைப் போதிக்க இயேசு திட்டஞ்செய்திருக்கவில்லை; ஏனெனில் திருப்பிக்கொடுக்கமுடியாததாக இருந்த நன்றிக்கடனுக்கு இருவரும் உடன்பட்டிருந்தனர்; ஆனால், மரியாளைவிடத் தான் அதிகமான நீதிமான் என்று சீமோன் தன்னைப்பற்றி நினைத்துக்கொண்டிருந்தபோது, உண்மையில் அவனுடைய குற்றம் எவ்வளவு பெரிதாக இருந்தது என்பதை அவன் பார்க்கவேண்டுமென்று இயேசு வாஞ்சித்தார். ஐம்பது வெள்ளிக்காசைவிட ஐந்நூறு வெள்ளிக்காசு ஒரு பெரிய கடனாக இருப்பதைப்போல, அவனுடைய பாவம் அவளுடைய

பாவத்தைவிடப் பெரியதாக இருந்ததென்பதை அவனுக்குக் காட்டுபவராக அவர் இருந்தார். (34)

இப்பொழுது சீமோன் ஒரு புதிய ஒளியில் தன்னைக் காணத் தொடங்கினான். ஒரு தீர்க்கதரிசியைவிட மேம்பட்டவராக இருந்த ஒருவரால் மரியாள் எவ்விதமாகக் கருதப்பட்டாள் என்பதை அவன் கண்டான். அன்பும் பக்தியுமிக்க அவளுடைய இருதயத்தைக் கிறிஸ்து அவருடைய தெளிவான தீர்க்கதரிசனக் கண்ணினால் எவ்விதமாக வாசித்திருந்தார் என்பதை அவன் கண்டான். வெட்கம் அவனைப்பற்றிக்கொள்ள, தன்னைவிட மேலான ஒருவருக்கு முன்பாக அவன் இருந்தான் என்பதை உணர்ந்தான். (35)

“நான் உன்னுடைய வீட்டிலே பிரவேசித்தேன், நீ என் கால்களுக்குத் தண்ணீர் தரவில்லை” என்று கிறிஸ்து தொடர்ந்தார்; ஆனால், மனந் திரும்பினதால் உண்டான கண்ணீருடனும், அன்பினால் தூண்டப்பட்டும், மரியாள் என் கால்களைக் கழுவி, அவைகளைத் தலைமயிரினால் துடைத்தாள். “நீ என்னை முத்தம் செய்யவில்லை; ஆனால், நீ நிந்திக்கின்ற இந்த ஸ்திரீ நான் உட்பிரவேசித்ததுமுதல் என் பாதங்களை ஓயாமல் முத்தம் செய்தாள்” என்றார். தனது கர்த்தருக்கு தன்னுடைய அன்பைக் காட்டவும், தனக்காக செய்யப்பட்டிருந்தவைகளைப் பாராட்டவும், சீமோனுக்கு கொடுக்கப்பட்டிருந்த வாய்ப்புகளை கிறிஸ்து மீண்டும் விவரித்தார். இரட்சகரின் பிள்ளைகள் அன்பின் வார்த்தைகளினாலும் செயல்களினாலும் தங்களுடைய நன்றியைக் காட்டுவதை அலட்சியப்படுத்தும்போது, அவருடைய இருதயம் வருத்தமடைகிறது என்பதை அவருடைய சீடர்களிடம் அவர் வெளிப்படையாகவும், பண்புமிக்க மரியாதையுடனும் உறுதியுடனும் கூறினார். (36)

மரியாளைச் செயலாற்றும்படி நடத்தின அவளுடைய உள்ளெண்ணத்தை, இருதயத்தை ஆராய்பவர் வாசித்தார். கூடவே சீமோனின் வார்த்தைகளைத் தூண்டியிருந்த ஆவியையும் கண்டார். “இந்த ஸ்திரீயைப் பார்க்கிறாயே” என்று அவர் அவனிடம் கூறினார். அவள் ஒரு பாவி. “நான் உனக்குச் சொல்லுகிறேன். இவள் செய்த அநேக பாவங்கள் மன்னிக்கப்பட்டது. இவள் மிகவும் அன்புகூர்ந்தாளே. எவனுக்குக் கொஞ்சம் மன்னிக்கப்படுகிறதோ அவன் கொஞ்சமாய் அன்புகூருவான்” என்றார். (37)

சீமோனின் உபசரிப்பற்ற தன்மையும் இரட்சகருக்கு நேராக உள்ள அலட்சியமும் அவன் பெற்றிருந்த இரக்கத்தை எவ்வளவு கொஞ்சமாகப் பாராட்டியிருந்தான் என்பதைக் காட்டினது. இயேசுவைத் தனது வீட்டிற்கு அழைத்ததினால், அவன் அவரைக் கனப்படுத்தியிருந்ததாக நினைத்திருந்தான்; ஆனால், இப்பொழுது உண்மையில் அவன் தன்னைப்பற்றிய நிலையைக்

கண்டான். அவன் தனது விருந்தாளியின் எண்ணங்களை வாசிப்பதாக நினைத்துக்கொண்டிருந்தபோது, அவனுடைய விருந்தாளி அவனை வாசித்துக் கொண்டிருந்தார். அவனைப்பற்றிய கிறிஸ்துவின் கணிப்பு எவ்விதமாக உண்மையாக இருந்தது என்பதை அவன் கண்டான். அவனுடைய மதம் பரிசேய மார்க்கம் என்னும் ஒரு உடையினாலானதாக இருந்தது. அவன் இயேசுவின் மன உருக்கத்தை நிந்தித்திருந்தான். அவரை தேவனுடைய பிரதிநிதியென்று இனங்காணாமலிருந்தான். மரியாள் மன்னிக்கப்பட்ட ஒரு பாவியாக இருந்தபோது, அவன் மன்னிக்கப்படாத ஒரு பாவியாக இருந்தான். அவளுக்கு எதிராக அவன் கட்டாயப்படுத்த விரும்பியிருந்த வளையாத நீதியின் சட்டம், அவனை ஆக்கினைக்குட்படுத்தியிருந்தது. (38)

விருந்தினர்களுக்குமுன்பாக தன்னை வெளிப்படையாகக் கடிந்து கொள்ளாமலிருந்த இயேசுவின் அன்பினால் சீமோன் தொடப்பட்டிருந்தான். மரியாள் எவ்விதமாக நடத்தப்படவேண்டும் என்று அவன் விரும்பியிருந்தானோ அவ்விதமாக அவன் நடத்தப்படாமலிருந்தான். இயேசு அவனுடைய குற்றத்தை மற்றவர்களுக்குமுன்பாக வெளிக்காட்ட விரும்பாமலிருந்ததையும் ஆனால் அந்தக் காரியம்பற்றிய ஒரு உண்மையான அறிக்கையினால் அவனுடைய மனதிற்கு உணர்த்துதலை உண்டுபண்ணியிருந்ததையும், இரக்கமிக்க அன்பினால் அவனுடைய இருதயத்தைப் பணியச்செய்ததையும் அவன் கண்டான். கண்டிப்பான—வெளிப்படையான குற்றச்சாட்டு சீமோனை மனந்திரும்புதலுக்கெதிராகக் கடினப்படுத்தியிருந்திருக்கும்; ஆனால், பொறுமைமிக்க எச்சரிப்பு அவனுடைய தவறைப்பற்றிய உணர்வினை அவனில் உண்டுபண்ணியது. அவன் தனது கர்த்தருக்குச் செலுத்தவேண்டியதாக இருந்த கடன் எவ்வளவு பெரியது என்று கண்டான்; அவனுடைய பெருமை தாழ்த்தப்பட்டது; அவன் மனந்திரும்பினான். அகந்தைமிக்கவனாக இருந்த அந்தப் பரிசேயன், மிகவும் தாழ்மையான—சுயத்தைத் தியாகஞ்செய்கின்ற சீடனாக மாறினான். (39)

மரியாள் ஒரு பெரிய பாவி என்னும்விதமாகப் பார்க்கப்பட்டிருந்தாள்; ஆனால், அவளுடைய வாழ்க்கையை உருவாக்கியிருந்த சூழ்நிலைகளைக் கிறிஸ்து அறிந்திருந்தார். அவளுடைய ஆத்தும நம்பிக்கையிலிருந்து ஒவ்வொரு பொறியையும் அவரால் அணைத்திருந்திருக்கமுடியும்; ஆனால், அவர் அப்படிச்செய்யவில்லை. நம்பிக்கையிழந்த நிலைமையிலிருந்தும் அழிவிலிருந்தும் அவளைத் தூக்கியெடுத்தவராக அவர் இருந்தார். அவளுடைய இருதயத்தையும் மனதையும் கட்டுப்படுத்தியிருந்த பிசாசை அவர் கடிந்துகொண்டிருந்ததை ஏழு தடவைகள் அவள் கேட்டிருந்தாள். அவள் சார்பாக பிதாவை நோக்கிச் செய்திருந்த அவருடைய பலத்த

அழுகுரல்களை அவள் கேட்டிருந்தாள். கறையில்லாத அவருடைய தூய்மைக்குமுன், பாவம் எவ்விதமாக எதிர்ப்புள்ளதாக இருக்கிறது என்பதை அவள் அறிந்து, அவருடைய பலத்தினால் வெற்றியடைந்தாள். (40)

மனிதக் கண்களுக்கு அவளுடைய காரியம் நம்பிக்கையற்றதாகத் தோன்றினபோது, நல்ல காரியங்களுக்கான திறமைகள் மரியாளிடத்தில் இருப்பதை அவர் கண்டார். அவளுடைய குணத்திலிருந்த நல்ல தன்மைகளை அவர் கண்டார். இரட்சிப்பின் திட்டம் மாபெரும் வாய்ப்புகளை மானுடத்தின்மீது முதலீடு செய்திருக்கிறது. மரியாளின் இந்த அனுகூலங்கள் அடைந்துகொள்ளக்கூடியவைகளாக இருந்தன. அவருடைய கிருபையின்மூலமாக, தெய்வத்தன்மையில் பங்குபெறும் ஒருவளாக அவள் ஆனாள். எந்த ஒருவள் விழுந்துபோனவளாக இருந்தாளோ, எந்த ஒருவளுடைய மனம் பிசாசுகளின் குடியிருப்பாக இருந்ததோ, அது இரட்சகரின் தோழமையினாலும் ஊழியத்தினாலும் அவருக்கருகில் கொண்டுவரப்பட்டது. அவருடைய பாதங்களில் உட்கார்ந்திருந்து அவரைப்பற்றிக் கற்றுக்கொண்டவளாக மரியாள் இருந்தாள். அவருடைய சிரசின்மேல் விலைமதிப்புமிக்க அபிஷேக தைலத்தை ஊற்றி, அவருடைய பாதங்களைத் தன் கண்ணீரினால் ஸ்நானம் செய்வித்தவளாக மரியாள் இருந்தாள். சிலுவைக்கு அருகில் நின்று, கல்லறைக்கு அவரைப் பின்தொடர்ந்தாள். அவருடைய உயிர்த்தெழுதலுக்குப்பின் மரியாள்தான் முதலாவதாகக் கல்லறையினிடத்தில் இருந்தாள். உயிர்த்தெழுந்த இரட்சகரை முதலில் அறிவிக்கும் ஒருவளாகவும் மரியாள் இருந்தாள். (41)

ஒவ்வொரு ஆத்துமாவின் சூழ்நிலையையும் இயேசு அறிந்திருக்கிறார். நான் பாவமுள்ளவனாக—அதிகப் பாவமுள்ளவனாக இருக்கிறேன் என்று நீங்கள் கூறலாம். நீங்கள் அப்படி இருக்கலாம்; ஆனால், எந்த அளவிற்கு நீங்கள் மிகவும் கெட்டவராக இருக்கிறீர்களோ அந்த அளவிற்கு அதிகமாக உங்களுக்கு இயேசு தேவையானவராக இருக்கிறார். அழுதுகொண்டிருக்கும்—நொறுங்குண்டவர்களாக இருக்கும் ஒருவரையும் அவர் திருப்பியனுப்புவதில்லை. வெளிப்படுத்த விரும்பும் அனைத்தையும் மற்ற எவருக்கும் அவர் கூறாமல், நடுங்கும் ஒவ்வொரு ஆத்துமாவையும் தைரியமடையும்படி அழைக்கிறார். மன்னிப்பிற்காகவும் திரும்ப எடுத்துக் கட்டப்படுவதற்காகவும் அவரிடத்திற்கு வரும் அனைவரையும் அவர் தாராளமாக—இலவசமாக—மன்னிப்பார். (42)

தேவன்மீதுள்ள வெறுப்பினால் நிறைந்திருக்கும் அனைவரையும் அழிக்கும்படி, நமது உலகத்தின்மீது அவருடைய கோபாக்கினையின் பாத்திரத்தை ஊற்றும்படி, கிறிஸ்து பரலோகத்தின் தூதர்களுக்குக்

கட்டளையிடலாம். அவருடைய பிரபஞ்சத்திலிருந்து இந்த இருண்ட இடத்தை அவர் துடைத்து நீக்கலாம்; ஆனால், அவர் அதைச் செய்வதில்லை; இன்று அவர் தூபபீடத்திற்கருகில் நின்றுகொண்டு, அவருடைய உதவியை வாஞ்சிக்கும் அனைவருடைய ஜெபங்களையும், தேவனுக்கு முன்பாக ஏறெடுத்துக்கொண்டிருக்கிறார். (43)

அடைக்கலம் தேடி, அவரிடத்திற்குத் திரும்பும் ஆத்துமாக்களை, குற்றப்படுத்துதலுக்கும் தாக்குதல்களின் சண்டைக்கும் மேலாக இயேசு உயர்த்துகிறார். எந்த மனிதர்களாலும் பொல்லாத தூதர்களாலும் இந்த ஆத்துமாக்களைக் குற்றப்படுத்த முடியாது. கிறிஸ்து அவருடைய சொந்த தெய்வீக—மானிட இயல்புடன் அவர்களை ஒன்றுபடுத்துகிறார். தேவ சிங்காசனத்திலிருந்து புறப்படும் ஒளியினால் மாபெரும் பாவம் சுமப்பவருக்கு அருகில் அவர்கள் நிற்கின்றனர். "தேவன் தெரிந்துகொண்டவர்கள்மேல் குற்றஞ்சாட்டுகிறவன் யார்? தேவனே அவர்களை நீதிமான்களாக்குகிறவர். ஆக்கினைக்குள்ளாகத் தீர்க்கிறவன் யார்? கிறிஸ்துவே மரித்தவர்; அவரே எழுந்துமிருக்கிறவர்; அவரே தேவனுடைய வலது பாரிசத்திலும் இருக்கிறவர்; நமக்காக வேண்டுதல்செய்கிறவரும் அவரே"—ரோமர் 8:33,34. ★ (44)

# 63

# இதோ, உன் இராஜா வருகிறார்!

**மத்தேயு 21:1–11; மாற்கு 11:1–10; லூக்கா 19:29–44; யோவான் 12:12–19**

**(The Desire of Ages, pp. 569-579)**

"சீயோன் குமாரத்தியே, மிகவும் களிகூரு; எருசலேம் குமாரத்தியே, கெம்பீரி; இதோ, உன் ராஜா உன்னிடத்தில் வருகிறார்; அவர் நீதியுள்ளவரும் இரட்சிக்கிறவரும் தாழ்மையுள்ளவரும், கழுதையின்மேலும் கழுதைக்குட்டியாகிய மறியின்மேலும் ஏறி வருகிறவருமாயிருக்கிறார்"– சகரியா 9:9. (1)

இஸ்ரவேலின் அரசரின் வருகையைக்குறித்து தீர்க்கதரிசியான சகரியா கிறிஸ்துவின் பிறப்பிற்கு ஐந்நூறு வருடங்களுக்குமுன், இவ்விதமாக முன்னறிவித்தான். அந்தத் தீர்க்கதரிசனம் இப்போது நிறைவேறவேண்டியதாக இருந்தது. இவ்வளவு காலமாக இராஜரீக கனங்களை மறுத்திருந்த அவர், இப்பொழுது தாவீதின் சிங்காசனத்திற்கென்று வாக்குத்தத்தம்பண்ணப்பட்டிருந்த வாரிசாக எருசலேமிற்கு வருகிறார். (2)

கிறிஸ்து எருசலேமிற்குள் அவருடைய வெற்றிகரமான பிரவேசத்தைச் செய்தது, வாரத்தின் முதல் நாளாக இருந்தது. பெத்தானியாவில் அவரைக் காணும்படியாகக் கூடியிருந்த திரளானவர்கள், அவருடைய வரவேற்பிற்குக் சாட்சியாக இருப்பதற்காக, அக்கறையுடன் இப்பொழுது அவருடன் சென்றிருந்தனர். பஸ்காவை ஆசரிப்பதற்காக அநேகர் அந்த நகரத்தைநோக்கி தங்களின் பாதையில் சென்றிருந்தனர். அவர்களும் இயேசுவுடன் சென்றிருந்த திரளானவர்களுடன் சேர்ந்துகொண்டனர். இயற்கை முழுவதும் மகிழ்ந்து களிகூருவதுபோல் காணப்பட்டிருந்தது. மரங்கள் பசுமையான இலைகளால் போர்த்தப்பட்டிருந்தன. அவைகளின் விரிந்த மலர்கள் ஆகாயத்தில் மென்மையான வாசனையைப் பரப்பியிருந்தன. ஒரு புதிய ஜீவனும் மகிழ்ச்சியும் மக்களை உற்சாகப்படுத்தியிருந்தது. புதிய இராஜ்யம்பற்றிய நம்பிக்கை மறுபடியும் துளிர்த்துக்கொண்டிருந்தது. (3)

எருசலேமிற்குப் பவனிவரும் நோக்கத்துடன் அவரிடத்திற்கு ஒரு கழுதையையும் அதன் குட்டியையும் கொண்டுவரும்படி இயேசு அவருடைய சீடர்களில் இருவரை அனுப்பியிருந்தார். இரட்சகர் அவருடைய பிறப்பில் அந்நியர்களின் உதவியை எதிர்பார்த்திருந்தார். அவர் கிடத்தப்பட்டிருந்த முன்னணை இரவலாகப் பெற்றிருந்த ஒரு இளைப்பாறும் இடமாக இருந்தது. பர்வதங்களில் ஆயிரமாய்த் திரிகின்ற மிருகங்கள் அவருடையவைகளாக இருந்தபோதிலும், இப்பொழுது எருசலேமில் அதன் அரசராகப் பிரவேசிப்பதற்காக—ஒரு மிருகத்திற்காக (கோவேறு கழுதை)—ஒரு அந்நியனுடைய அன்பைச் சார்ந்தவராக அவர் இருந்தார்; ஆனால், அவருடைய இந்தப் பயணத்திற்காக, சீடர்களுக்குக் கொடுக்கப்பட்டிருந்த நுணுக்கமான கட்டளைகளிலுங்கூட மறுபடியும் அவருடைய தெய்வத்தன்மை வெளிக்காட்டப்பட்டிருந்தது. “இவைகள் ஆண்டவருக்கு வேண்டும்” என்னும் வேண்டுகோளை அவர் முன்னறிவித்திருந்ததுபோல, அது உடனே அனுமதிக்கப்பட்டது. இயேசு இதுவரை எந்த மனிதனும் ஒருபோதும் உட்கார்ந்திராத கழுதைக்குட்டியை அவருடைய உபயோகத்திற்கென்று தெரிந்துகொண்டார். சீடர்கள் மகிழ்ச்சிமிக்க உற்சாகத்துடன் தங்கள் உடைகளை அந்த கோவேறு கழுதைமீது விரித்து, தங்களுடைய ஆண்டவரை அதன்மீது அமரச்செய்தனர். இதுவரை எப்பொழுதும் இயேசு கால்நடையாகவே பயணஞ்செய்திருந்தார்; இப்பொழுது ஒரு கழுதையின்மீது ஏறிச்செல்வதை அவர் தெரிந்துகொண்டதற்காகச் சீடர்கள் முதலில் ஆச்சரியமடைந்தனர். அவர் தலைநகருக்குள் பிரவேசிக்கப்போகிறார் என்பதிலும், தம்மை அரசர் என்று அறிவிக்க இருக்கிறார் என்பதிலும், அவருடைய இராஜரீக வல்லமையை எடுத்துக்கொள்ள இருக்கிறார் என்னும் மகிழ்ச்சிமிக்க எண்ணங்களுடன் அவர்களுடைய இருதயங்களின் நம்பிக்கை பிரகாசமடைந்தது. தங்களுடைய பயணத்தின்போது, இயேசுவின் நண்பர்களிடத்தில் அவர்களுடைய பிரகாசமான எதிர்பார்ப்புகளை அறிவித்தனர். இந்த உணர்ச்சிகளின் எழுப்புதல் தூரத்திலும் சமீபத்திலும் பரவி, மக்களின் எதிர்பார்ப்புகளை அதன் உச்சக்கட்டத்திற்கு உயர்த்திக்கொண்டிருந்தது. (4)

ஒரு இராஜரீகப் பிரவேசத்திற்கான யூதருடைய வழக்கத்தை கிறிஸ்து பின்பற்றிக்கொண்டிருந்தார். அவர் பவனிவந்திருந்த கோவேறு கழுதை, இஸ்ரவேலின் அரசர்களால் பவனிக்குப் பயன்படுத்தப்பட்டிருந்த வகையானதாக இருந்தது. இவ்விதமாக, மேசியா அவருடைய இராஜ்யத் திற்கு வருவார் என்று தீர்க்கதரிசனம் முன்னுரைத்திருந்தது. அவர் அந்தக் கழுதைக்குட்டியின்மீது அமர்ந்த உடனே, வெற்றியின் ஒரு பெரிய சத்தம் ஆகாயத்தைக் கிழித்தது. திரளானவர்கள் அவரைத் தங்களுடைய

அரசராகிய மேசியா என்று ஆர்ப்பரித்தார்கள். இயேசு இதற்குமுன் ஒருபோதும் அனுமதிக்காமலிருந்த அவர்களுடைய வணக்கத்தை இப்பொழுது ஏற்றுக்கொண்டார். அவரை சிங்காசனத்தின்மீது அமர்த்துவதைக் காண்பதினால், அவர்களுடைய மகிழ்ச்சிமிக்க நம்பிக்கைகள் நிறைவேற்றப்பட இருக்கிறது என்பதின் சாட்சியாக சீடர்கள் இதைப் பெற்றுக்கொண்டனர். அவர்களுடைய விடுதலையின் நேரம் சமீபமாயிருக்கிறது என்று திரளானவர்கள் மனநிறைவை உடையவர்களாக இருந்தனர். ரோமர்களின் சேனை எருசலேமிலிருந்து துரத்தப்படுவதையும், மறுபடியும் இஸ்ரவேல் ஒரு சுதந்தர நாடாகியிருப்பதையும் அவர்கள் கற்பனைசெய்தனர். எல்லோரும் மகிழ்ச்சியுள்ளவர்களாகவும் உணர்ச்சிவசப் பட்டவர்களாகவுமிருந்தனர். அவருக்கு வணக்கஞ்செலுத்துவதில் மக்கள் ஒருவருக்கொருவர் போட்டி யிட்டிருந்தனர். புறம்பான ஆடம்பரத்தையும் கொண்டாட்டத்தையும் அவர்களால் விளம்பரம்செய்ய முடியவில்லை; ஆனால், சந்தோஷமுள்ள இருதயத்தின் தொழுகையை அவர்கள் அவருக்குச் செலுத்தினார்கள். விலைமதிப்புமிக்க அன்பளிப்புகளை முன்வைப்பதற்கு அவர்கள் முடியாதவர் களாக இருந்தனர்; ஆனால், தங்களுடைய மேலாடைகளை அவருடைய பாதையில் ஒரு கம்பளமாக விரித்து, ஒலிவமரக்கிளைகளையும் பேரீச்சை ஓலைகளையுங்கூடப் பாதையில் பரப்பினார்கள். வெற்றியின் அந்த ஊர்வலத்தை இராஜாங்க அந்தஸ்து எதுவுமில்லாமல் அவர்களால் நடத்த முடிந்தது; மேலும் வெற்றியின் அடையாளமாக இருந்த பேரீச்சமரக் கிளைகளை வெட்டிக் கீழே பரப்பியும், உயர்த்திப்பிடித்தும், மனநிறைவுமிக்க பேரார்வத்துடனும் ஓசன்னாக்களுடனும் அசைத்துமிருந்தனர். (5)

அவர்கள் புறப்பட்டுச்சென்றபோது, இயேசு வந்துகொண்டிருப்பதைப் பற்றிக் கேள்விப்பட்டவர்கள், அந்த ஊர்வலத்தில் சேர்ந்துகொள்ள விரைந்ததினால், திரளானவர்களின் கூட்டம் தொடர்ச்சியாக அதிகரித் திருந்தது. கூட்டநெரிசலுடன் பார்வையாளர்கள் தொடர்ச்சியாகக் கலந்துகொண்டிருந்து, “இவர் யார்?” என்று கேட்டிருந்தனர். இந்தக் கொந்தளிப்பு எதை அடையாளப்படுத்துகிறது? அவர்களனைவரும் இயேசுவைப்பற்றிக் கேட்டிருந்து, அவர் எருசலேமிற்குச் செல்லுவார் என்று எதிர்பார்த்திருந்தனர். ஆனால் அவரைச் சிங்காசனத்தில் அமரச்செய்யும் முயற்சிகளனைத்தையும் இதுவரை அவர் அதைரியப்படுத்தியிருந்தார் என்பதை அவர்கள் அறிந்திருந்தனர். எனவே இவர் தான் அவர் என்பதை அறிந்து, அவர்கள் பெரிதும் ஆச்சரியமடைந்தனர். தமது இராஜ்யம் இந்த உலகத்திற்குரியதல்ல என்று அறிவித்திருந்தவரில், எது இந்த மாறுதலை உண்டுபண்ணியிருந்திருக்கும் என்று அவர்கள் அதிசயித்திருந்தனர். (6)

வெற்றியின் முழக்கத்தினால் அவர்கள் கேள்விகள் மௌனப்படுத்தப் பட்டன. அக்கறைமிக்க கூட்டநெரிசலினால் மறுபடியும் அது திரும்பவும் கூறப்படுகிறது. அது தூரத்திலிருக்கும் மக்களால் எடுத்துக்கொள்ளப்பட்டு, சுற்றிலுமுள்ள குன்றுகளிலிருந்தும் பள்ளத்தாக்குகளிலிருக்கும் எதிரொலிக்கப் படுகிறது. இப்பொழுது அந்த ஊர்வலத்தில் எருசலேமிலிருந்த கூட்டமும் சேர்ந்துகொண்டிருக்கின்றது. பஸ்கா பண்டிகையில் கலந்துகொள்வதற்காக ஒன்றுகூடியிருந்த திரளானவர்களிலிருந்து, இயேசுவை வரவேற்க ஆயிரக்கணக்கானவர்கள் முன்செல்லுகின்றனர். பேரீச்சமரக் கிளைகளை அசைத்துக்கொண்டும், பரிசுத்தமான பாடலின் உரத்த சத்தத்துடனும் அவர்கள் அவரை வாழ்த்தி வரவேற்கின்றனர். அந்திபலி ஆராதனைக்காக ஆலயத்திலுள்ள ஆசாரியர்கள் எக்காளங்களை ஒலிக்கின்றனர்; ஆனால், அதற்கு மறுமொழி கொடுக்கச் சிலர் மட்டுமே உள்ளனர். அதிபதிகள் அபாய எச்சரிப்புடன் ஒருவருக்கொருவர்: "உலகமே அவனுக்குப் பின்சென்று போயிற்றே" (யோவான் 12:19) என்று கூறுகின்றனர். (7)

அப்படிப்பட்ட ஒரு செயல்விளக்கத்தை இயேசு அவருடைய பூமிக்குரிய வாழ்க்கையில் இதற்குமுன் ஒருபோதும் அனுமதித்திருக்கவில்லை. அதன் பலனை அவர் தெளிவாக முன்னதாகவே கண்டிருந்தார். அது அவரைச் சிலுவைக்குக் கொண்டுவரும்; ஆனால், பொதுமக்களுக்கு முன்பாகத் தம்மை மீட்பர் என்று முன்வைப்பது அவருடைய நோக்கமாக இருந்தது. விழுந்துபோன ஒரு உலகத்திற்கான அவருடைய ஊழியத்தின் கிரீடமாக இருக்கும் அவருடைய தியாகபலியின்மீது கவனம்வைக்கும்படி அழைப்பதை அவர் வாஞ்சித்திருந்தார். பஸ்கா பண்டிகையைக் கொண்டாடுவதற்காக மக்கள் எருசலேமில் கூடிக்கொண்டிருந்தபோது, ஆட்டுக்குட்டியாகவிருந்த அவர், தாமாக முன்வந்த ஒரு செயலினால், தம்மை வேறுபடுத்தி ஒரு பலியாக வைத்தார். வரவிருக்கும் யுகங்கள் நெடுகிலும் அவருடைய சபைக்கு உலகத்தின் பாவத்திற்கான அவருடைய மரணத்தை ஆழ்ந்த சிந்தனைக்கும் ஆராய்ச்சிக்குமான ஒரு ஆய்வுப்பொருளாகச் செய்வது அவசியமானதாக இருக்கும்; அதனுடன் சம்பந்தப்பட்ட ஒவ்வொரு உண்மையும் சந்தேகத்திற்கு அப்பாற்பட்டவிதமாக விசாரித்தறியப்பட வேண்டும். எல்லா மக்களுடைய கண்களும் இப்பொழுது அவர் பக்கமாகத் திருப்பப்படவேண்டியது அவசியம். அவருடைய பெரிய தியாகபலிக்குமுன் நடைபெறும் நிகழ்ச்சிகள், அந்த பலியின்மீது கவனம்வைக்கும்படி அவர்களை அழைப்பதாக இருக்கவேண்டும். அவருடைய எருசலேம் பிரவேசத்துக்குக் கிடைத்த அப்படிப்பட்ட வரவேற்பிற்குப்பின் அனைத்து கண்களும் கடைசிக்காட்சியை நோக்கிய அவருடைய விரைவான பயணத்தைப் பின்தொடரும். (8)

வெற்றிகரமான அந்த பவனியுடன் சம்பந்தப்பட்ட சம்பவங்கள் ஒவ்வொரு நாவின் பேச்சாகவும் இருந்து, ஒவ்வொரு மனதிற்குமுன்னும் இயேசுவைக் கொண்டுவரும். அவர் சிலுவையில் அறையப்பட்டதற்குப்பின், அவரைப்பற்றிய விசாரணை, மரணம் ஆகியவைகளுடன் சம்பந்தமுள்ள இந்த சம்பவங்களை அநேகர் மீண்டும் நினைப்பார்கள். தீர்க்கதரிசனங்களை ஆராயும்படி நடத்தப்பட்டு, இயேசுதான் மேசியா என்னும் மனநிறைவை அடைவார்கள். எல்லா தேசங்களிலும் அந்த விசுவாசத்திற்கு மாறுபவர்கள் பெருகுவார்கள். (9)

இந்த ஒரு காட்சியில், பரலோகத் தூதர்களின் பாதுகாப்பு வளையத்துடன் தேவ எக்காளம் தொனிக்க இரட்சகர் தோன்றியிருந்திருக்கமுடியும்; ஆனால், அப்படிப்பட்ட செயல்விளக்கம் அவருடைய ஊழியத்தின் நோக்கத்திற்கு எதிரானதாகவும், அவருடைய வாழ்க்கையை இயக்கியிருந்த பிரமாணத்திற்கு எதிரானதாகவும் இருந்திருக்கும்; அவர் ஏற்றுக்கொண்டிருந்த தாழ்மையான பங்கில் உண்மையாக இருந்தார். உலகத்தின் ஜீவனுக்காக (மக்களுக்காக) அவருடைய ஜீவன் கொடுக்கப்படும்வரை மானுடத்தின் பாரத்தை அவர் சுமந்தாக வேண்டும். (10)

சீடர்களுக்கு, அவர்களுடைய வாழ்க்கையில் கிரீடம் அணியும் நாள்போல் காணப்பட்டிருந்த அந்த நாள், அந்த களிகூருதலின் காட்சி, அவர்களுடைய ஆண்டவரின் பாடுகள், மரணம் ஆகியவைகளின் முன்னுரை என்பதை அவர்கள் அறிந்திருந்தார்களானால், அந்த நாள் துயரத்தின் மேகங்களால் நிழலிடப்பட்டிருந்த ஒரு நாளாக இருந்திருக்கும். அவருடைய நிச்சயமான பலியைப்பற்றி அவர் மீண்டும்மீண்டும் கூறியிருந்தபோதிலும், நிகழ்காலத்தின் மகிழ்ச்சிமிக்க வெற்றியில், அவருடைய துயரம் நிறைந்த வார்த்தைகளை மறந்து, தாவீதின் சிங்காசனத்தின்மீதிருந்து செய்யவிருந்த செழுமைமிக்க ஆளுகையை அவர்கள் எதிர்பார்த்திருந்தனர். (11)

அந்த ஊர்வலத்திற்கு கூடுதலான புதிய காரியங்கள் சேர்ந்துகொண்டே இருந்தது. சிலரைத்தவிர அதில் சேர்ந்துகொண்ட அனைவரும் அந்த நேரத்தின் எழுச்சியைப் பற்றிக்கொண்டு, ஓசன்னாக்களை குன்றுகளிலிருந்து குன்றுகளுக்கும் பள்ளத்தாக்கிலிருந்து பள்ளத்தாக்கிற்கும் மீண்டும்மீண்டும் எதிரொலித்துப் பரப்புவதற்கு உதவிசெய்தனர். தாவீதின் குமாரனுக்கு ஓசன்னா! கர்த்தருடைய நாமத்தினால் வருகிறவர் ஸ்தோத்திரிக்கப்பட்டவர்! உன்னத்திலே ஓசன்னா! என்னும் தொனிகள் தொடர்ச்சியாக மேலெழுந்தன. (12)

வெற்றிமுழக்கமிக்க அப்படிப்பட்ட ஒரு ஊர்வலத்தை இதற்குமுன் ஒருபோதும் இந்த உலகம் கண்டிருந்திருக்கவில்லை. அது உலகத்தின் மிகப்

பிரபலமான வெற்றி வீரர்களுக்கு நடந்ததைப்போன்றதாக இருக்கவில்லை. அரசனின் வெற்றிச்சின்னங்களான, துக்கங்கொண்டாடும், சிறைக்கைதிகளின் அணியின் விசேஷக் காட்சியாக அது இருக்கவில்லை; ஆனால், இரட்சகரைச்சுற்றிலும் பாவம்நிறைந்த மனிதனுக்கான அவரது அன்பின் பணிகளின் மகிமைமிக்க வெற்றிச் சின்னங்கள் இருந்தன. சாத்தானின் வல்லமையிலிருந்து அவர் காப்பாற்றியிருந்த—தங்களுடைய விடுதலைக்காக தேவனைப் போற்றிக்கொண்டிருந்த அடிமைகள், விடுதலைபெற்றவர்கள் அங்கு இருந்தனர். எந்தக் குருடர்களுக்கு அவர் பார்வையைக் கொடுத்திருந்தாரோ—அவர்கள் பாதையை வழிநடத்தியிருந்தனர். எந்த ஊமையர்களின் நாக்குகள் கட்டவிழ்க்கப்பட்டிருந்ததோ—அவர்கள் உரத்த குரலில் ஓசன்னாக்களை முழக்கமிட்டிருந்தனர். அவர் சுகப்படுத்தியிருந்த சப்பாணிகள் சந்தோஷத்துடன் குதித்து, பேரீச்சமரக்கிளைகளை முறித்து, இரட்சகருக்குமுன்பாக அசைப்பதில் மிகவும் தீவிரமானவர்களாக இருந்தனர். விதவைகளும் திக்கற்றவர்களும் இயேசு அவர்களுக்காகச் செய்த இரக்கத்தின் செயல்களுக்காக இயேசுவின் நாமத்தை உயர்த்தி துதித்துக்கொண்டிருந்தனர். அவர் சுகப்படுத்தியிருந்த தொழுநோயாளிகள் அவர்களுடைய கறையற்ற மேலாடைகளை அவருடைய பாதையில் விரித்து, அவரை மகிமையின் அரசர் என்று போற்றியிருந்தனர். மரணத்தின் நித்திரையில் இருந்த எவர்களை அவருடைய குரல் எழுப்பியிருந்ததோ—அவர்கள் அந்தக் கூட்ட நெரிசலில் இருந்தனர். எந்த ஒருவனுடைய உடல் கல்லறையில் தன் அழிவைக் கண்டிருந்ததோ, அந்த லாசரு, இப்பொழுது அவனுடைய மகிமைமிக்க மானுடத்தில், இரட்சகர் பவனிவந்திருந்த கழுதையை வழிநடத்தியிருந்தான். (13)

அநேக பரிசேயர்கள் அந்தக் காட்சியை சாட்சியாகக்கண்டு, வன்மத்துடனும் குரோதத்துடனும் ஜனக்கூட்டத்தின் உணர்ச்சிகளின் ஓட்டத்தைத் திசைதிருப்புவதற்கு வகைதேடியிருந்தனர். அவர்களுடைய அனைத்து அதிகாரங்களுடனும் மக்களை மௌனப்படுத்த அவர்கள் முயன்றனர்; ஆனால், அவர்களுடைய முறையீடுகளும் அச்சுறுத்தல்களும் அந்த உற்சாகத்தை அதிகரிக்கமட்டுமே செய்தன. அந்தத் திரள்கூட்ட மக்கள் அவர்களுடைய எண்ணிக்கையின் பலத்தினால் இயேசுவை அரசராக்கிவிடுவார்கள் என்று அவர்கள் பயந்தனர். ஒரு கடைசி முயற்சியாக, அந்தக் கூட்டத்திற்கூடாக இரட்சகர் எங்கே இருந்தாரோ அங்கு சென்று, அவரைக் கடிந்துகொள்ளுகின்ற—பயமுறுத்துகின்ற வார்த்தைகளுடன் கையசைத்துக் கூப்பிட்டு: “போதகரே, உம்முடைய சீஷரை அதட்டும்” என்று கூறினார்கள். இப்படிப்பட்ட சத்தமிக்க செயல்விளக்கங்கள் சட்ட விரோதமானவையாக இருப்பதுடன், அதிகாரிகளால் அனுமதிக்கப்படமாட்டாது

என்றும் அவர்கள் அறிவித்தார்கள்; ஆனால், “இவர்கள் பேசாமலிருந்தால் கல்லுகளே கூப்பிடும் என்று உங்களுக்குச் சொல்லுகிறேன்” என்னும் இயேசுவின் பதிலினால் அவர்கள் வாயடைக்கப்பட்டனர். வெற்றியின் அந்தக் காட்சி தேவனுடைய சொந்த ஏற்பாடாக இருந்தது. அது தீர்க்கதரிசியால் முன்னுரைக்கப்பட்டிருந்தது. தேவனுடைய நோக்கத்தை புறக்கணிக்க மனிதன் வல்லமையற்றவனாக இருந்தான். அவருடைய திட்டத்தைச் செயல்படுத்த மனிதர்கள் தவறியிருந்தால், அசையாப் பொருட்களாக இருக்கும் கற்களுக்கு அவர் ஒரு குரலைக் கொடுத்திருப்பார். அவைகள் துதியின் ஆரவாரங்களினால் அவருடைய குமாரனைப் போற்றியிருந்திருக்கும். மௌனமடைந்த பரிசேயர்கள் பின்வாங்கிச்சென்றபோது, நூற்றுக்கணக்கான குரல்களினால், “சீயோன் குமாரத்தியே, மிகவும் களிகூரு; எருசலேம் குமாரத்தியே, கெம்பீரி; இதோ, உன் ராஜா உன்னிடத்தில் வருகிறார்; அவர் நீதியுள்ளவரும் இரட்சிக்கிறவரும் தாழ்மையுள்ளவரும், கழுதையின்மேலும் கழுதைக்குட்டியாகிய மறியின்மேலும் ஏறி வருகிறவருமாயிருக்கிறார்.” என்னும் சகரியாவின் வார்த்தைகள் உச்சக்கட்டத்தில் தொனித்தன. (14)

அந்த ஊர்வலம் குன்றின் விளிம்பை அடைந்து, அந்த நகரத்திற்குள் கீழ்நோக்கி இறங்கவிருந்தபோது, இயேசு சற்றுநேரம் நின்றார். திரள்கூட்டமான அனைவரும் அவருடன் நின்றனர். அப்பொழுது அஸ்தமிக்கும் சூரிய ஒளியினால் தோய்ந்த நிலையில், எருசலேம் அதன் மகிமையுடன் அவர்களுக்குமுன் இருந்தது. அந்த ஆலயம் எல்லாக் கண்களையும் கவர்ந்தது. கம்பீரமான ஆடம்பரமிக்க தோற்றத்துடன் மற்ற எல்லாவற்றையும்விட, அது உயர்ந்தெழும்பி ஜீவனுள்ள ஒரே தேவனுக்கு நேராக மக்களுக்குப் பரலோகத்தைச் சுட்டிக்காட்டுவதுபோல் காணப்பட்டிருந்தது. நீண்டகாலமாக அந்த தேவாலயம் யூததேசத்தின் பெருமையும் மகிமையுமாக இருந்தது. அதன் அற்புதமான வடிவத்தில் ரோமர்களும் பெருமைப்பட்டிருந்தனர். அதைத் திரும்பக் கட்டவும் அழகுபடுத்தவும் ரோமர்களால் நியமிக்கப்பட்டிருந்த ஒரு அரசன் யூதர்களுடன் ஒன்றுசேர்ந்திருந்தான். ரோம நாட்டின் பேரரசன் அவனுடைய அன்பளிப்புகளினால் அதை அழகுபடுத்தியிருந்தான். அதன் பலம், அலங்காரம், நேர்த்தி ஆகியவை அதனை உலக அதிசயங்களில் ஒன்றாக்கியிருந்தது. (15)

மேற்கே மறைந்துகொண்டிருந்த சூரியன், வானங்களை வண்ணமயமாக்கி பளபளப்பாக்கிக்கொண்டிருந்தபோது, கண்களைக் கூசச் செய்யும் அதன் மகிமை அந்த ஆலயத்தின் தூய்மைமிக்க வெள்ளைச் சலவைக் கற்களை ஒளிரச்செய்து, அதன் தூண்களின் பொன்கூரைகளைத் திளங்கச்செய்திருந்தது. இயேசுவும் அவருடைய அடியார்களும் நின்றிருந்த

சிகரத்திலிருந்து, அது பொன்மயமான கோபுரங்களையுடைய பெரும் பனிக்குன்றின் உருவம்போல் தோற்றமளித்தது. அந்த ஆலயத்தின் நுழைவாயிலில் பொன்னும் வெள்ளியும் கலந்த நிறத்திலுள்ள திராட்சைச் செடியிலே பச்சைநிற இலைகளையும் பெரும் திராட்சைக் குலைகளையும் உடையதாக இருக்கும்வண்ணம் திறமைமிக்க கலைஞர்களால் வனையப் பட்டதாக (திராட்சைச்செடி) இருந்தது. இந்த வடிவமைப்பு இஸ்ரவேலை ஒரு செழிப்பான திராட்சைச்செடியாக எடுத்துக்காட்டியிருந்தது. பொன், வெள்ளி, உயிரோட்டமுள்ள பச்சை நிறம் ஆகியவை அபூர்வமான கலைநயத்துடன் மிக அழகிய வேலைப்பாட்டினால் ஒன்று சேர்க்கப்பட்டிருந்தது. அது வெண்ணிறத்துடன் பிரகாசித்துக்கொண்டிருந்த தூண்களை அதன் கொடிச்சுருள்களுடனும் அவைகளின் பொன்னாலான ஆபரணங்களுடனும் பற்றிக்கொண்டிருந்தபோது, மறைந்துகொண்டிருந்த சூரியனின் சிறப்பைப் பற்றியிருந்து, வானத்திலிருந்து இரவலாகப்பெற்ற ஒரு மகிமையைப்போல பிரகாசித்துக்கொண்டிருந்தது. (16)

இயேசு அந்தக் காட்சியைப் பார்க்கிறார். அந்தத் திரளானவர்கள் திடீரென்றுண்டான அழகிய தோற்றத்தினால் உண்டான ஆச்சரியத்தினால் வாயடைத்துக் கட்டுண்டவர்களாக, அவர்களுடைய வாழ்த்து முழக்கங்களை நிறுத்திவிடுகின்றனர். அவர்களனைவரும் உணர்ந்த பாராட்டுதலை இரட்சகரின் முகத்தில் காண்பதற்காக எதிர்பார்த்து, எல்லாருடைய கண்களும் அவர்மீது திரும்புகின்றன; ஆனால், அதற்குப்பதிலாக அவர்கள் துயரத்தின் ஒரு மேகத்தை அவரிடம் காண்கின்றனர். அவருடைய கண்கள் கண்ணீரால் நிறைவதையும், ஒரு பெரும் புயலுக்கு முன்பாக ஒரு மரம் அசைந்தாடுவதைப்போல, அவருடைய உடல் முன்னும் பின்னுமாகத் தள்ளாடுவதையும், நடுங்கும் அவருடைய உதடுகளிலிருந்து உடைந்துபோன ஒரு இருதயத்தின் ஆழங்களிலிருந்து வருவதைப்போன்ற வேதனையின் பேரழுகை வெடிப்பதையும் பார்த்து, அவர்கள் ஆச்சரியமும் ஏமாற்றமும் அடைகின்றனர். தேவதூதர்களால் நேசிக்கப்படும் அவர்களுடைய சேனையின் தலைவர், கண்ணீரின் வேதனையில் இருப்பதைப் பார்ப்பது தூதர்களுக்கு எப்படிப்பட்ட ஒரு காட்சியாக இருக்கிறது! வெற்றியின் முழக்கங்களுடனும் பேரீச்ச இலைகளை அசைத்துக்கொண்டும், அவர் எந்த இடத்திலிருந்து ஆளுகைசெய்வார் என்று அவர்கள் அன்புடன் நம்பியிருந்தார்களோ, அந்த மகிமைமிக்க நகரத்திற்கு, அவரைப் பாதுகாப்பாக வழிநடத்திக்கொண்டிருந்த மகிழ்ச்சிமிக்க கூட்டநெரிசலிற்கு இது எப்படிப்பட்ட ஒரு காட்சியாக இருந்தது! லாசருவின் கல்லறையில் இயேசு அழுதிருந்தார்; ஆனால் அது மானிட துயரத்தோடு தேவன் இணைந்து வெளிக்காட்டும் கடுந்துயராக இருந்தது. ஆனால் இந்த—திடீர் சோகம் ஒரு மாபெரும் வெற்றிக்குழுவின் பாடலிலுள்ள

புலம்பலின் ஒரு குறிப்பைப்போன்று இருந்தது. களிகூருதலின் ஒரு காட்சிக்கு மத்தியில், எல்லாரும் அவருக்கு வணக்கஞ்செலுத்திக்கொண்டிருந்த பொழுது, இஸ்ரவேலர்களின் அரசர் கண்ணீரில் இருந்தார். அது மகிழ்ச்சியின் மௌனமான கண்ணீராக இராமல், அடக்கமுடியாத வேதனையின் புலம்பலாக இருந்தது. திடீரென்று உண்டான ஒரு துயரத்தினால் திரளானவர்கள் தாக்கப்பட்டிருந்தனர். அவர்களது புகழ்ச்சியின் பேராரவாரங்கள் அனைத்தும் நின்றுபோயின. அநேகர் அவர்களால் அறிந்துகொள்ளமுடியாததாக இருந்த துக்கத்தோடு கூடிய அனுதாபத்தால் அழுதனர். (17)

இயேசுவின் கண்ணீர் அவருடைய சொந்தப் பாடுகளை எதிர்பார்த்ததினால் உண்டாயிருக்கவில்லை. விரைவில் எங்கு பேரபாயம் அவர்மீது நிழலிட இருந்ததோ—அந்த கெத்செமனே அவருக்கு முன்பாக—சமீபத்தில் இருந்தது. நூற்றாண்டுகளினூடாகப் பலிமிருகங்கள் பலிசெலுத்தப்படுவதற்காக எந்த வழியாக நடத்தப்பட்டிருந்தனவோ, அந்த ஆட்டுவாசலுங்கூட பார்வையில் இருந்தது. உலகத்தின் பாவங்களுக்காக, தியாகபலியாக இருக்கவேண்டியவராக இருந்த ஒருவரை, எந்தப் பலிகள் சுட்டிக்காட்டியிருந்தனவோ, அவைகளின் மாபெரும் மாதிரிப் படிவமாக (**ANTITYPE**) இருப்பவருக்கு நேராக விரைவில் இந்த வாசல் திறக்கப்படவேண்டியதாக இருந்தது. அவரை சமீபித்துக்கொண்டிருந்த வேதனைக் காட்சியின் இடமாக கல்வாரி சமீபத்தில் இருந்தது; ஆயினும் மீட்பர், அவருடைய கொடூரமான மரணத்தின் இந்த ஞாபகப்படுத்தல்களினால் ஆவியில் வேதனையடைந்து அழுது புலம்பவில்லை. அவருடைய துயரம் சுயநலத்தினாலானதாக இருக்கவில்லை. அவருடைய சொந்த வேதனையைப்பற்றிய எண்ணம் அந்த மேன்மைமிக்க சுயத்தைத் தியாகஞ்செய்கின்ற ஆத்துமாவை அச்சுறுத்தவில்லை. எருசலேமைப்பற்றிய பார்வைதான், இயேசுவின் இருதயத்தைத் துளைத்திருந்தது. தேவகுமாரனைப் புறக்கணித்து, அவருடைய அன்பைப் பரிகசித்திருந்த எருசலேம், அவருடைய பலத்த அற்புகங்களால் மனஉணர்வை அடைய மறுத்திருந்த எருசலேம், அவருடைய உயிரை எடுத்துக்கொள்ளப்போவதாக இருந்த எருசலேமைப்பற்றிய பார்வை, அவருடைய இருயத்தைத் துளைத்திருந்தது. தனது மீட்பரை புறக்கணித்திருந்த குற்றத்தில் அவள் எப்படிப்பட்டவளாக இருந்தாள் என்பதையும், எந்த ஒருவரால் மட்டுமே அவளுடைய காயத்தைச் சுகப்படுத்தியிருந்திருக்க முடியுமோ, அவரை அவள் ஏற்றுக்கொண்டிருந்தால் எப்படிப்பட்டவளாகியிருப்பாள் என்பதையும் அவர் கண்டார். அவளை (எருசலேம்) இரட்சிக்கும்படி அவர் வந்திருந்தார்; அவளை அவரால் எவ்விதமாக விட்டுவிடமுடியும்? (18)

இஸ்ரவேலர்கள் ஆதரவுபெற்ற ஒரு ஜனமாக இருந்தனர். அவர்களுடைய தேவாலயத்தை தேவன் அவருடைய வாசஸ்தலமாகச் செய்திருந்தார். அது "வடிப்பமான ஸ்தானமும் சர்வபூமியின் மகிழ்ச்சியுமாயிருக்கிறது"—சங்கீதம் 48:2. ஒரு தகப்பன் தனது மகனைச் சுமப்பதுபோன்றதாக, கிறிஸ்துவின் காப்பாளர் என்னும் கரிசனை, மென்மையான அன்பு ஆகியவைகளின் ஆயிரம் வருடங்களுக்கும் அதிகமான ஆவணம், அதன்மீதிருந்தது. தீர்க்கதரிசிகள் பக்திவிநயமான அவர்களுடைய எச்சரிக்கைகளை ஆலயத்தில் கூறியிருந்தனர். அங்கு புகையும் தூபகலசங்கள் அசைக்கப்பட்டன. அப்பொழுது தொழுகை செய்வர்களின் ஜெபங்களோடு சுகந்த வாசனையானது தேவனிடத்திற்கு எழும்பிச்சென்றது. அங்கு கிறிஸ்துவின் இரத்தத்திற்குப் பொருளாக இருந்த மிருகங்களின் இரத்தம் சிந்தப்பட்டிருந்தது. அங்கு கிருபாசனத்திற்கு மேலாக யேகோவா அவருடைய மகிமையை வெளிக்காட்டியிருந்தார். அங்கு ஆசாரியர்கள் சமயச்சடங்குகளைச் செய்திருந்தனர். அவை நூற்றுண்டுகளாக நடைபெற்றிருந்தன; ஆனால் இவை அனைத்தும் ஒரு முடிவை உடையதாக இருந்தாக வேண்டும். (19)

நோயாளிகளையும் பாடுகளை அனுபவித்துக்கொண்டிருந்தவர் களையும் ஆசீர்வதிப்பதற்காகத் தமது கரத்தை அடிக்கடி உயர்த்தியிருந்த இயேசு, தண்டனையடைந்திருந்த அந்த நகரத்திற்கு நேராகத் தமது கரத்தை உயர்த்தி, துக்க உணர்வு மேலோங்கி வெளிவந்த உடைந்த வார்த்தைகளினால்: "உனக்குக் கிடைத்த இந்த நாளிலாகிலும் உன் சமாதானத்துக்கு ஏற்றவைகளை நீ அறிந்திருந்தாயானால்" என்று கூறி, தயங்கி, தேவன் அவளுக்குக் (எருசலேம்) கொடுக்க விரும்பியிருந்த ஈவை—அவருடைய நேசகுமாரனாகிய ஈவைப் பெற்றிருந்தாளானால், எருசலேமின் நிலைமை எப்படிப்பட்டதாக இருந்திருக்கும் என்பதைக் கூறாமல் விட்டுவிட்டார். எருசலேம், அவள் அறிந்துகொள்ளவேண்டும் என்பதற்காக, அவளுக்குக் கொடுக்கப்பட்டிருந்த சிறப்புரிமைகளை அறிந்திருந்து, பரலோகம் அனுப்பியிருந்த ஒளிக்கு அவள் செவிசாய்த் திருந்தால், செழுமையின் பூரிப்பில் இராஜ்யங்களின் அரசியாக, தேவனால் கொடுக்கப்பட்டிருந்த வல்லமையினால் சுதந்திரமானவளாக நின்றிருந்திருக்கமுடியும். அவளுடைய வாசல்களில் ஆயுதமணிந்த சேனை வீரர்கள் நின்றிருந்திருக்கமாட்டார்கள். அவளுடைய மதில்களிலிருந்து ரோமர்களின் கொடி அசைந்தாடியிருந்திருக்காது. எருசலேம் அவளுடைய மீட்பரை ஏற்றுக்கொண்டிருந்தால், எருசலேமை ஆசீர்வதித்திருக்ககூடிய மகிமைமிக்க முடிவு தேவகுமாரனுக்கு முன்பாக எழுந்தது. அவள் அவளுடைய சாவிற்கேதுவான வியாதியிலிருந்து அவர்மூலமாக

சுகப்படுத்தப்பட்டிருந்திருக்க முடியுமென்பதையும், அடிமைத்தனத்திலிருந்து விடுதலைபெற்றிருந்திருக்க முடியும் என்பதையும், பூமியின் பலமிக்க உயர்ந்த நாடாக உயர்ந்தெழும்பி ஸ்தாபிக்கப்பட்டிருந்திருக்கமுடியும் என்பதையும் அவர் கண்டார். அவள் (எருசலேம்) உலகத்தின் மகிமையின் கிரீடமாக இருந்திருப்பாள். (20)

ஆனால், எருசலேம் எப்படிப்பட்டதாக இருந்திருக்க வேண்டும் என்னும் ஒளிமிக்க சித்திரம் இரட்சகரின் பார்வையிலிருந்து மங்குகிறது. ரோம நாட்டினரின் நுகத்தின்கீழ், தேவ கோபத்தை தாங்கிக்கொண்டு, அவருடைய தண்டனையைப் பெற்றுக்கொண்டு, இப்பொழுது அவள் எப்படி இருக்கிறாள் என்பதை அவர் அறிந்திருக்கிறார். அவர் அவருடைய புலம்பலின் அறுந்துபோன நூலை எடுத்து, "இப்பொழுதோ உன் கண்களுக்கு மறைவாயிருக்கிறது. உன்னைச் சந்திக்குங்காலத்தை நீ அறியாமற்போனபடியால், உன் சத்துருக்கள் உன்னைச் சூழ மதில்போட்டு, உன்னை வளைந்துகொண்டு, எப்பக்கத்திலும் உன்னை நெருக்கி, உன்னையும் உன்னிலுள்ள உன் பிள்ளைகளையும் தரையாக்கிப்போட்டு, உன்னிடத்தில் ஒரு கல்லின்மேல் ஒரு கல்லிராதபடிக்குச் செய்யும் நாட்கள் உனக்கு வரும்" என்றார். (21)

எருசலேமை அவளது பிள்ளைகளுடன் காப்பாற்ற கிறிஸ்து வந்தார். ஆனால், பரிசேயப் பெருமை, மாய்மாலம், பொறாமை, சூழ்ச்சி ஆகியவை அவருடைய நோக்கத்தை நிறைவேற்றுவதிலிருந்து அவரைத் தடைசெய்திருந்தது. தண்டனை பெற்றிருந்த அந்த நகரத்தைச் சந்திக்கவிருந்த தேவகோபமாகிய பயங்கரமான தண்டனையை அவர் அறிந்திருந்தார். எருசலேம் சேனைகளால் சூழப்பட்டிருந்ததையும், முற்றுகையிடப்பட்டிருந்த அந்த நகரத்தின் குடிகள் பட்டினிக்கும் மரணத்திற்கும் விரட்டப்பட்டிருந்ததையும், தாய்மார்கள் இறந்துபோன அவர்களின் சொந்தப் பிள்கைளின் உடல்களைத் தின்பதையும், பெற்றோரும் பிள்ளைகளுமாகிய இருசாராரும் உணவின் கடைசிக் கவளத்தை ஒருவரிடமிருந்து ஒருவர் பிடுங்குவதையும், அரித்துத்தின்னும் பசியின் தாங்கமுடியாத வேதனையால் இயற்கையான பாசம் அழிக்கப்பட்டுக்கொண்டிருப்பதையும் அவர் கண்டார். அவரால் உண்டாக இருந்த இரட்சிப்பை அவர்கள் புறக்கணித்ததின் சான்றையும், அது ஆக்கிரப்புச்செய்துகொண்டிருந்த சேனைகளுக்குப் பணிய அவர்கள் மறுத்ததுமான யூதர்களின் பிடிவாதத்தையும் அவர் கண்டார். வனத்தின் மரங்களைப்போல நெருக்கமாக ஏற்படுத்தப்பட்டிருந்த சிலுவைகளுக்கிடையில் அவர் உயர்த்தப்பட வேண்டியதாக இருந்த கல்வாரியையும் அவர் கண்டார்; துர்ப்பாக்கியமான குடிகள் சித்தரவதைசெய்யும் கருவியினாலும் சிலுவையில் அறையப்படுவதினாலும் பாடுகளை அனுபவிப்பதினாலும்,

அழகிய அரண்மனைகள் அழிக்கப்பட்டிருந்தையும், ஆலயம் பாழ்க்கடிப்பில் இருந்ததையும், ஒரு கல்லின்மீது ஒரு கல் இராதபடி அதன் பெரும் சுவர்கள் இடிக்கப்பட்டிருந்ததையும், ஒரு வயலைப்போல அந்த நகரம் உழப்பட்டிருந்ததையும் அவர் கண்டார். அந்த பயங்கரமான காட்சியின் காரணமாக, உண்டான வேதனையினால் இரட்சகர் அழுவது சரியானதாக இருக்கவேண்டும். (22)

எருசலேம் இயேசுவின் பராமரிப்பின் பிள்ளையாக இருந்திருந்தது. சொற்கேளாத ஒரு மகனுக்காக மென்மையான தகப்பன் துக்கங்கொண்டாடுவதைப்போல, அவரால் நேசிக்கப்பட்டிருந்த அந்த நகரத்திற்காக அவர் அழுதார். உன்னை எப்படி என்னால் விட்டுவிட முடியும்? நீ அழிவிற்கென்று விட்டுவிடப்படுவதை என்னால் எப்படிப் பார்க்கமுடியும்? உன்னுடைய அக்கிரமத்தின் பாத்திரத்தை நீ நிரப்பும்படி உன்னை நான் விட்டுவிட வேண்டுமா? ஒரு ஆத்துமாவை அதனுடன் ஒப்பிடும்போது, முக்கியமில்லாதவைகளாக மூழ்கிப்போகும் உலகங்களைவிட அதன் மதிப்பு அவ்வளவு அதிகமானதாக இருக்கிறது; ஆனால், இங்கு ஒரு ஜாதி முழுவதும் இழக்கப்படும்படி இருந்தது. மேற்றிசையில் விரைவாக மறைந்துகொண்டிருக்கும் சூரியனின் பார்வை வானங்களிலிருந்து நீங்கும் போது, எருசலேமின் கிருபையின் நாள் முடிவடைந்திருக்கும் ஒலிவமலையின் சிகரத்தின்மீது அந்த ஊர்வலம் நின்றிருந்தபோது, எருசலேம் மனம்திரும்புவதற்கு இன்னும் அதிகத் தாமதமாகியிருக்கவில்லை. இரக்கத்தின் தூதனாக இருந்தவர், நீதிக்கும் விரைவாக வந்துகொண்டிருக்கும் நியாயத்தீர்ப்பிற்கும் இடங்கொடுப்பதற்காக, தன் இறக்கைகளை மடித்துக்கொண்டு, பொற்சிங்காசனத்தைவிட்டுக் கீழே இறங்கினார்; ஆனால், அவருடைய இரக்கங்களைப் பரிகசித்து, அவருடைய எச்சரிக்கைகளை நிந்தித்து, அவருடைய இரத்தத்தில் தனது கரங்களைத் தோய்க்கவிருந்த எருசலேமிற்காக, கிறிஸ்துவின் மாபெரும் அன்பின் இதயம் தொடர்ந்து பரிந்துபேசிக்கொண்டிருந்தது. எருசலேம் மனந்திருபியிருந்தால், இன்னுங்கூட அது அதிகமான தாமதமாக இருந்திருக்காது. மறைந்துகொண்டிருந்த சூரியனின் கடைசிக் கதிர்கள் ஆலயத்தின்மீதும் கோபுரத்தின்மீதும் உப்பரிகையின்மீதும் நிலைத்திருந்தபோது, ஏதாவதொரு நல்ல தேவதூதன் அவளை இரட்சகரின் அன்பினிடத்திற்கு நடத்தி, அவளுடைய தண்டனையைத் தவிர்க்கமாட்டானா? தீர்க்கதரிசிகளைக் கல்லெறிந்து, தேவகுமாரனை புறக்கணித்திருந்து, அவளுடைய மனம் வருந்துதல் இல்லாமையினால் தனக்குத்தானே அடிமைத்தளையின் விலங்கைப் பூட்டிக்கொண்டதாக, அந்த நகரம் அழகும் பரிசுத்தமில்லாமைமிக்கதுமான இருந்தது. அவளுடைய இரக்கத்தின் நாள் முடியுந்தருவாயிலிருந்தது. (23)

ஆயினும், தேவனுடைய ஆவி எருசலேமினிடத்தில் மறுபடியும் பேசுகிறது. அந்த நாள் முடிவடையுமுன்னரே மற்றுமொரு சாட்சியானது, கிறிஸ்துவிடத்திற்கு எடுத்துச்செல்லப்பட்டது. கடந்தகால தீர்க்கதரிசனத்தின் அழைப்பிற்கிணங்கி, பதிலாக சாட்சியின் குரல் உயர்த்தப்பட்டிருக்கிறது. எருசலேம் அந்த அழைப்பைக் கேட்குமானால், அவளுடைய வாசல்களுக்குள் பிரவேசித்துக்கொண்டிருக்கும் இரட்சகரை அவள் ஏற்றுக்கொள்வாளானால், இன்னமுங்கூட அவள் காப்பாற்றப்படலாம். (24)

மக்களின் பெரும் கூட்டத்துடன் இயேசு அந்த நகரத்தை சமீபித்துக்கொண்டிருக்கிறார் என்னும் அறிவிப்புகள் எருசலேமிலுள்ள அதிபதிகளிடம் சேர்ந்திருக்கின்றன; ஆனால், தேவகுமாரனுக்கு அவர்களிடம் வரவேற்பு எதுவுமில்லை. அந்தத் திரள்கூட்டத்தைக் கலைத்து விடலாமென்று நம்பிக்கொண்டு, அவரைச் சந்திக்க பயத்துடன் அவர்கள் வெளியில் செல்லுகின்றனர். ஒலிவமலையின்மீதிருந்து அந்த ஊர்வலம் கீழே இறங்கப்போகும் வேளையில், அது அதிபதிகளால் தடைசெய்யப்படுகிறது. சந்தடிமிக்க களிகூருதலுக்கான காரணம் என்ன என்று அவர்கள் விசாரிக்கின்றனர். இவர் யார்? என்று அவர்கள் கேட்கும்போது, ஆவியின் ஏவுதலினால் நிறைந்த சீடர்கள் அந்தக் கேள்விக்குப் பதில் கூறுகின்றனர். சொல்வன்மைமிக்க குரலில் கிறிஸ்துவைப்பற்றிய தீர்க்கதரிசனங்களை அவர்கள் மீண்டும் கூறுகின்றனர். (25)

ஸ்தீரியின் வித்தாக இருந்த சர்ப்பத்தின் தலையை மிதிப்பார் என்று ஆதாம் உங்களுக்கு கூறுவான். (26)

ஆபிரகாமைக் கேளுங்கள், "அவர் சாலேமின் ராஜாவாகிய மெல்கிசேதேக்கு, சமாதானத்தின் இராஜா" (ஆதியாகமம் 14:18) என்று உங்களிடம் கூறுவான். (27)

அவர் யூதா கோத்திரத்து ஷீலோ என்று யாக்கோபு உங்களிடம் கூறுவான். (28)

"அவர் இம்மானுவேல். அவர் நாமம் அதிசயமானவர், ஆலோசனைக் கர்த்தா, வல்லமையுள்ள தேவன், நித்திய பிதா, சமாதானப்பிரபு" (ஏசாயா 9:6) என்ற ஏசாயா உங்களிடம் கூறுவான். (29)

தாவீதின் கிளையானவர் "நமது நீதியாயிருக்கிற கர்த்தர்" (எரேமியா 23:6) என்று எரேமியா உங்களிடம் கூறுவான். (30)

அவர் "மேசியா" என்று தானியேல் உங்களிடம் கூறுவான். (31)

கர்த்தராகிய அவர் சேனைகளின் தேவன், "யேகோவா என்பது

அவருடைய நாமசங்கீர்த்தனம்" (ஓசியா 12:5) என்று ஓசியா உங்களிடம் கூறுவான். (32)

அவர் "உலகத்தின் பாவத்தைச் சுமந்துதீர்க்கிற தேவ ஆட்டுக்குட்டி" (யோவான் 1:29) என்று யோவான் ஸ்நானகன் உங்களிடம் கூறுவான். (33)

மிகவும் பெரியவரான யேகோவா, அவருடைய சிங்காசனத்திலிருந்து "இவர் என்னுடைய நேசகுமாரன்" (மத்தேயு 3:17) என்று அறிவித்திருக்கிறார். (34)

இவர், இயேசு, மேசியா, ஜீவாதிபதி, உலகத்தின் மீட்பர் என்று அவருடைய சீடர்களாகிய நாங்கள் அறிவிக்கிறோம். (35)

அந்தகார சக்திகளின் பிரபு அவரை "உம்மை இன்னார் என்று அறிவேன், நீர் தேவனுடைய பரிசுத்தர்" (மாற்கு 1:24) என்று கூறி ஒப்புக்கொண்டிருக்கிறான். (36) ★

(37)

(38)

(39)

# 64

# அழிவிற்கு விடப்பட்ட ஒரு மக்கள் கூட்டம்!

**மாற்கு 11:11–14,20,21; மத்தேயு 21:17–19**

**(The Desire of Ages, pp. 580–588)**

எருசலேமிற்குள் இயேசு செய்திருந்த வெற்றியின் பவனி, தூதர்களின் வெற்றிமுழக்கத்துக்கும் பரிசுத்தவான்களின் களிகூருதலுக்கும் மத்தியில் வல்லமையுடனும் மகிமையுடனும் அவர் வானமேகங்களின்மீது வருவதின் ஒரு மங்கலான முன்னடையாளமாக இருந்தது. "கர்த்தருடைய நாமத்தினாலே வருகிறவர் ஸ்தோத்திரிக்கப்பட்டவர் என்று நீங்கள் சொல்லுமளவும், இதுமுதல் என்னைக் காணாதிருப்பீர்கள் என்று உங்களுக்குச் சொல்லுகிறேன்" (மத்தேயு 23:39) என்று கூறிய கிறிஸ்துவின் வார்த்தைகள் அப்பொழுது ஆசாரியர்களிடத்திலும் பரிசேயர்களிடத்திலும் நிறைவேறியிருந்திருக்கும். தீர்க்கதரிசனத்தில் சகரியாவிற்கு அந்த வெற்றியின் கடைசிநாள் காட்டப்பட்டது; அத்துடன் கிறிஸ்துவின் முதலாவது வருகையின் போது அவரைப் புறக்கணித்திருந்தவர்களின் தண்டனையையுங்கூட அவன் கண்டான். "அப்பொழுது அவர்கள் தாங்கள் குத்தின என்னை நோக்கிப்பார்த்து, ஒருவன் தன் ஒரே பேறானவனுக்காகப் புலம்புகிறதுபோல எனக்காகப் புலம்பி, ஒருவன் தன் தலைச்சன் பிள்ளைக்காகத் துக்கிக்கிறதுபோல எனக்காக மனங்கசந்து துக்கிப்பார்கள்"—சகரியா 12:10. கிறிஸ்து அந்த நகரத்தைக்கண்டு, அதற்காக அழுதபோது, இந்தக் காட்சியை அவர்முன் தீர்க்கதரிசனமாகக் கண்டார். தேவகுமாரனுடைய இரத்தத்தைப்பற்றிக் குற்றமுடையவர்களாக இருந்த மக்களின் இறுதி அழிவை எருசலேமின் உலகப்பிரகாரமான பயங்கர அழிவில் அவர் கண்டார். (1)

கிறிஸ்துவின்மீது யூதர்கள் கொண்டிருந்த வெறுப்பை சீடர்கள் கண்டனர். ஆயினும் அது எதற்கு வழிநடத்தும் என்பதை அவர்கள் இதுவரை காணவில்லை. இஸ்ரவேலின் உண்மையான நிலையையும், எருசலேமின்மீது விழவிருந்த தேவகோபமாகிய தண்டனையையும் அவர்கள்

இன்னும் புரிந்துகொள்ளாதிருந்தனர். இதை ஒரு குறிப்பான பொருட்பாடத்தின் வழியாக கிறிஸ்து அவர்களுக்குத் திறந்துகாட்டினார். (2)

எருசலேமிற்கான கடைசி முறையிடுதல் வீணானதாக இருந்தது. கடந்தகால தீர்க்கதரிசனங்களில் இருந்தவைகளை இவர் யார்? என்னும் கேள்விக்கான பதிலாக திரளானவர்கள் எதிரொலிப்பதை ஆசாரியர்களும் அதிபதிகளும் கேட்டிருந்தனர். ஆனால் அதனை ஆவியின் ஏவுதலின் குரலாக அவர்கள் ஏற்றுக்கொள்ளவில்லை. மக்களை மௌனப்படுத்துவதற்கு அவர்கள் கோபத்துடனும் ஆச்சரியத்துடனும் முயன்றனர். அந்தத் திரள்கூட்டத்தில் ரோம நாட்டு அதிகாரிகள் இருந்தனர். அவர்களிடத்தில் இயேசுவை கலகத்தின் தலைவர் என்று அவருடைய எதிரிகள் வெளிப்படையாகக் குற்றஞ்சாட்டினார்கள். அவர் ஆலயத்தைக் கைவசமாக எடுத்துக்கொண்டு, எருசலேமின் அரசராக ஆளுகைசெய்யவிருக்கிறார் என்று அவர்கள் எடுத்துக்கட்டியிருந்தனர். (3)

ஆனால் உலகப்பிரகாரமான ஒரு ஆளுகையை ஏற்படுத்துவதற்காக அவர் வந்திருக்கவில்லை என்பதை மறுபடியும் அறிவித்த இயேசுவின் அமைதியான குரல், அந்த சந்தடிமிக்க திரள்கூட்டத்தை வினாடி நேரத்திற்கு மௌனமடையச்செய்தது. விரைவில் அவர் அவருடைய பிதாவி னிடத்திற்கு எழுந்தருளிச் செல்லவேண்டும். அவர் மறுபடியும் மகிமையில் திரும்பிவரும்வரை குற்றஞ்சாட்டுபவர்கள் அவரைப் பார்க்கமாட்டார்கள். அவரை ஏற்றுக்கொள்ளும்போது, அவர்களது இரட்சிப்பு ஏற்கெனவே பிந்திவிட்டிருக்கும். இந்த வார்த்தைகளை இயேசு துயரத்துடனும் தனிப்பட்ட வல்லமையுடனும் பேசினார். ரோமநாட்டின் அதிகாரிகள் மௌனப்படுத்தப்பட்டுச் சமாளிக்கப்பட்டனர். அவர்களுடைய இருதயங்கள் தெய்வீக செல்வாக்கிற்கு அந்நியமானவைகளாக இருந்தபோதிலும், இதற்கு முன் ஒருபோதும் அசைக்கப்படாத அளவிற்கு அசைக்கப்பட்டிருந்தன. அவர்கள் இயேசுவின் அமைதியும் பக்திவிநயமுமான முகத்தில் அன்பு, அனுதாபம், அமைதிமிக்க மேன்மை, ஆகியவைகளைக் கண்டார்கள். அவர்களால் புரிந்துகொள்ளமுடியாத ஒரு அனுதாபத்தினால் அவர்கள் கலக்கமடைந்திருந்தனர். இயேசுவை கைதுசெய்வதற்குப்பதிலாக, அவருக்கு வணக்கஞ்செலுத்தும்படி அவர்கள் அதிகமாக விரும்பினர். அவர்கள் ஆசாரியர், அதிபதிகளின் பக்கம் திரும்பி, கலவரமுண்டாக்கிக் கொண்டிருப்பதாக அவர்கள்மேல் குற்றஞ்சாட்டினார்கள். ஏமாற்றத்தையும் தோல்வியையும் அடைந்திருந்த இந்தத் தலைவர்கள் அவர்களுடைய குற்றச்சாட்டுகளுடன் மக்கள் பக்கமாகத் திரும்பி, தங்களுக்குள் கோபத்துடன் வாக்குவாதஞ்செய்தனர். (4)

அந்த நேரத்தில் கவனிக்கப்படாதவராக இயேசு ஆலயத்திற்குள் கடந்துசென்றார். ஒலிவமலையின்மீதிருந்த காட்சி மக்களின் கவனத்தைத் திருப்பவே, அங்கு அனைத்தும் அமைதியாக இருந்தது. இயேசு துயரமிக்க கண்களுடன் ஆலயத்தைப் பார்த்தவராக சற்றுநேரம் அங்கு தங்கி யிருந்தார். அதற்குப்பின் பின்னிட்டுத் திரும்பி, அவருடைய சீடர்களுடன் பெத்தானியாவிற்குத் திரும்பினார். சிங்காசனத்தின்மீது அமர்த்த மக்கள் அவரைத் தேடினபோது, அவர் காணப்படமுடியாதவராக இருந்தார். (5)

அந்த இரவு முழுவதையும் ஜெபத்தில் செலவிட்டு, காலையில் மறுபடியும் இயேசு தேவாலயத்திற்கு வந்தார். வழியில் அவர் ஒரு அத்திப் பழத்தோட்டத்தைக் கடந்துசென்றார். “அவருக்குப் பசியுண்டாயிற்று. அப்பொழுது இலைகளுள்ள ஒரு அத்திமரத்தைத் தூரத்திலே கண்டு, அதில் ஏதாகிலும் அகப்படுமோ எனறு பார்க்கவந்தார். அத்திப்பழக் காலமா யிராதபடியால், அவர் அதினிடத்தில் வந்தபோது அதில் இலைகளை யல்லாமல், வேறொன்றையும் காணவில்லை.” (6)

குறிப்பிட்ட சில இடங்களைத் தவிர மற்ற இடங்களில் அது அத்திப்பழக் காலமாயிருக்கவில்லை. எருசலேமைச் சுற்றியிருந்த மேட்டுப்பாங்கான இடங்களில் அத்திப்பழக்காலமல்லவென்பது தெளிவாகத் தெரிந்தது. ஆனால் இயேசு பிரவேசித்த தோட்டத்தில் மற்ற எல்லாவற்றையும்விட ஒரு மரம் அதிகச் செழிப்பாகக் காணப்பட்டது. அது இலைகளால் மூடப்பட்டிருந்தது. அத்திமரத்தின் இயல்பின்படி இலைகள் விரிவடைவதற்குமுன் வளரும் கனிகள் தென்படும். ஆகவே இலைகள் நிறைந்திருந்த அந்த மரம், நன்கு முதிர்ந்த கனிகளை கொண்டிருப்பதாக உறுதியளித்தது. ஆனால் அதன் தோற்றம் வஞ்சகமானதாக இருந்தது. கீழேயிருந்த கிளையிலிருந்து உச்சிவரையிலான கிளைவரை தேடினபோது, இலைகளைத் தவிர வேறொன்றையும் இயேசு காணவில்லை. அது போலியான இலைகளின் ஒரு கூட்டமாக இருந்ததேயன்றி, வேறொன்றும் அதிகமாக இருக்கவில்லை. (7)

அந்த மரத்திற்கு எதிராக, அது பட்டுப்போகும்படி ஒரு சாபத்தைக் கிறிஸ்து கூறினார். “இதுமுதல் ஒருக்காலும் ஒருவனும் உன்னிடத்தில் கனியைப் புசியாதிருக்கக்கடவன்” என்றார். மறுநாள் காலையில் இரட்சகரும் அவருடைய சீடர்களும் மறுபடியும் அந்தப் பாதையில் நகரத்தை நோக்கிச் சென்றுகொண்டிருந்தபோது, காய்ந்துபோன கிளைகளும் வாடிப்போன இலைகளும் அவர்களுடைய கவனத்தைக் கவர்ந்தன. “ரபீ, இதோ, நீர் சபித்த அத்திமரம் பட்டுப்போயிற்று” என்று பேதுரு கூறினான். (8)

அந்த அத்திமரத்தைச் சபித்த கிறிஸ்துவின் செயலில் சீடர்கள் ஆச்சரியமடைந்திருந்தனர். அது அவருடைய நடத்தைகளுக்கும் செயல்களுக்கும் எதிரானதுபோலக் காணப்பட்டது. அவர் உலகத்தை ஆக்கினைக்குட்படுத்த வராமல், அவர்மூலமாக உலகம் இரட்சிக்கப்படுவதற்காகவே வந்திருப்பதாக அடிக்கடி அறிவித்ததை அவர்கள் கேட்டிருந்தனர். “மனுஷகுமாரன் மனுஷருடைய ஜீவனை அழிக்கிறதற்கு அல்ல, இரட்சிக்கிறதற்கே வந்தார்” (லூக்கா 9:56) என்னும் அவருடைய வார்த்தைகளை அவர்கள் நினைத்தார்கள். அவருடைய ஆச்சரியமான செயல்கள் அழிப்பதற்காக இல்லாமல், எடுத்துக்கட்டுவதற்கானவைகளாகவே இருந்தன. சீடர்கள் அவரை எடுத்துக் கட்டுபவராகவும் சுகப்படுத்துபவராகவும் மட்டுமே அறிந்திருந்தனர். ஆனால் இச்செயலோ அதினின்று மாறுபட்டு, ஒரு தனித்தன்மையோடு காணப்பட்டது. அதன் நோக்கம் என்ன? என்று அவர்கள் கேள்வி கேட்டனர். (9)

தேவன் “கிருபை செய்ய விரும்புகிறபடியால்” “கர்த்தராகிய ஆண்டவர் உரைக்கிறது என்னவென்றால்: நான் துன்மார்க்கனுடைய மரணத்தை விரும்பாமல்”—மீகா 7:8; எசேக்கியேல் 33:11. அழிக்கும் செயலும் நியாயத்தீர்ப்பின் குற்றஞ்சாட்டுதலும் “அபூர்வமான கிரியை” (ஏசாயா 28:21) யாக அவருக்கு இருக்கிறது. ஆனால் இரக்கமும் அன்பும் உடையவராக, அவர் எதிர்காலத்திலிருந்த திரையை உயர்த்தி, பாவநடத்தையின் பலன்களை மனிதர்களுக்கு வெளிப்படுத்துகிறார். (10)

அத்திமரத்தைச் சபித்தது, ஒரு செயல்படுத்தப்பட்ட உவமையாக இருந்தது, கனிகெடுக்காமலிருந்த போலியான இலைகளையும் கிளைகளையும் கிறிஸ்துவின் முகத்திற்கு நேராக ஆடம்பரமாகக் காட்டியிருந்த அந்த மரம், யூதஜனத்திற்கு அடையாளமாக இருந்தது. இஸ்ரவேலின் தண்டனைக்கான காரணத்தையும் நிச்சயத்தையும் சீடர்களுக்கு வெளிப்படுத்த இரட்சகர் விரும்பினார். அந்த நோக்கத்திற்காக அவர் அந்த மரத்திற்கு சன்மார்க்கத் தன்மைகளைச் சூட்டி, அதை தெய்வீக சத்தியத்தை வெளிப்படுத்தும் ஒன்றாகச் செய்தார். யூதர்கள் தேவனிடத்தில் பற்றுறுதி உள்ளவர்களாக இருப்பதாகக் கூறிக்கொண்டு, மற்ற ஜனங்களைவிடத் தனிச்சிறப்பானவர்களாக நின்றிருந்தனர். அவரால் சிறப்பானவிதமாக ஆதரிக்கப்பட்டிருந்து, மற்ற எல்லா மக்களையும்விட அதிகமாக நீதியின்மீது உரிமைபாராட்டியிருந்தனர். ஆனால் உலகத்தின்மீதுள்ள ஆசையினாலும் ஆதாயத்தின்மீதிருந்த பேராசையினாலும் கறைப்படுத்தப்பட்டிருந்தனர். தங்களுடைய அறிவைப்பற்றி பெருமைபாராட்டி, ஆனால் தேவனால் கொடுக்கப்பட்ட கோரிக்கைகளைப்பற்றி அறியாமைமிக்கவர்களாகவிருந்து, மாய்மாலத்தால் நிறைந்திருந்தனர். அந்தக் கனியற்ற மரத்தைப்போல,

அவர்கள் தங்களுடைய போலியான கிளைகளை உயரமாகப் பரப்பி, ஆடம்பரமான தோற்றத்தைக் கொடுத்து, கண்களுக்கு அழகாக இருந்து, ஆனால் இலைகளைத்தவிர கனிகளைக் கொடுக்காதவர்களாக இருந்தனர். யூத மதம் அதன் மிகப்பெரிய ஆலயத்துடனும் அதன் பரிசுத்தமான பலிபீடங்களுடனும் அதன் நெற்றிப்பட்டமணிந்த ஆசாரியர்களுடனும் மனதில் பதிக்கக்கூடிய சடங்காச்சாரங்களுடனும் உண்மையில் வெளித்தோற்றத்தில் அழகுள்ளதாக இருந்தது. ஆனால் தாழ்மை, அன்பு, அனுதாபம் ஆகியவைகள் இல்லாததாக இருந்தது, (11)

அத்திமரத் தோப்பிலிருந்த மரங்கள் யாவும் கனியற்றவைகளாக இருந்தன. ஆனால் இலையற்ற மரங்கள் எதிர்பார்ப்புகளை உண்டுபண்ண வில்லை; ஏமாற்றத்திற்குக் காரணமாயிருக்கவில்லை. இந்த மரங்களினால் புறஜாதியினர் எடுத்துக்காட்டப்பட்டிருந்தனர். தெய்வபக்தியில்லாத யூதர்கள் இருந்ததைப்போலவே அவர்களும் இருந்தனர். ஆனால் அவர்கள் தேவனை சேவிப்பதாகக் கூறிக்கொண்டிருக்கவில்லை. நல்லதன்மைகளைக் கொண்டவர்களாக போலியாக பெருமைபாராட்டிக்கொண்டிருக்கவில்லை. அவர்கள் தேவனுடைய செயல்களுக்கும் பாதைகளுக்கும் குருடர்களாக இருந்தனர். அவர்களுக்கு அத்திப்பழத்தின் காலம் இன்னும் வராமலிருந்தது. ஒளியையும் நம்பிக்கையையும் கொண்டுவரக்கூடிய ஒரு நாளுக்காக அவர்கள் இன்னும் காத்துக்கொண்டிருந்தனர். தேவனிடத்திலிருந்து பெரிய ஒளியைப் பெற்றிருந்த யூதர்கள் இந்த ஈவுகளைத் தவறாகப் பயன்படுத்தி யிருந்ததற்காகக் கணக்குக் கொடுக்கும்படி வைக்கப்பட்டிருந்தனர். எந்தச் சிறப்புரிமைகளைப்பற்றி பெருமைபாராட்டிக்கொண்டிருந்தார்களோ அவைகள் அவர்களுடைய குற்றத்தை அதிகரிக்கமட்டுமே செய்தன. (12)

பசியோடிருந்த இயேசு உணவைக் காண்பதற்காக அந்த அத்தி மரத்தினிடத்திற்கு வந்திருந்தார். அதேவிதமாக, அவர் அவர்களில் நீதியின் கனிகளைக் காண்பதற்காக பசியுற்றவராக வந்திருந்தார். உலகத்தின் ஆசீர்வாதத்திற்காக அவர்கள் கனி கொடுக்கவேண்டுமென்று அவருடைய ஈவுகளை அவர்கள்மீது ஏராளமாகச் சொரிந்திருந்தார். ஒவ்வொரு வாய்ப்பும் சிறப்புரிமையும் அவர்களுக்கு அனுமதிக்கப்பட்டிருந்தது. அதற்குப்பதிலாக, அவருடைய கிருபையின் ஊழியத்தில் அவர்களுடைய அனுதாபம் ஒத்துழைப்பு ஆகியவைகளை அவர் தேடியிருந்தார். சுயத்தைத் தியாகஞ்செய்தல், மனஉருக்கம், தேவனுக்கான பேரார்வம், தங்களுடைய உடன் மனிதர்களின் இரட்சிப்பிற்கான ஆழ்ந்த அக்கறை ஆகியவைகளை அவர்களில் காண்பதற்கு அவர் ஏக்கமுடையவராக இருந்தார். அவர்கள் தேவனுடைய நியாயப்பிரமாணத்தைக் கைக்கொண்டிருந்திருப்பார்களானால், கிறிஸ்து செய்திருந்ததைப்போன்ற அதேவிதமான சுயநலமற்ற பணியைச்

செய்திருப்பார்கள். ஆனால் பெருமையினாலும் சுயநிறைவினாலும் தேவன்மீதான அன்பும் மனிதனின்மீதான அன்பும் மறைக்கப்பட்டிருந்தது. பிறருக்கு ஊழியஞ்செய்ய மறுத்ததினால் அவர்கள் தங்கள்மீது அழிவைக் கொண்டுவந்திருந்தனர். தேவன் அவர்களிடத்தில் ஒப்படைத்திருந்த சத்தியத்தின் கருவூலங்களை அவர்கள் உலகத்திற்குக் கொடுக்கவில்லை. கனிகொடாமலிருந்த அந்த மரத்தில் அவர்கள் தங்களுடைய பாவம், அதற்கான தண்டனை ஆகிய இரண்டையும் உணர்ந்துகொண்டிருக்கலாம். இரட்சகரின் சாபத்தின்கீழ் வாடி, இலைகள் இல்லாமல் காய்ந்துநின்று, வேர்களில் உலர்ந்துபோயிருந்த அந்த மரம், யூதர்களிடமிருந்த தேவ கிருபை நீக்கப்படும்போது, அவர்கள் எப்படிப்பட்டவர்களாவார்கள் என்பதைக் காட்டியது. ஆசீர்வாதத்தைப் பகிர்ந்தளிக்க மறுக்கும்போது, இனி ஒருபோதும் அதைப் பெற்றுக்கொள்ளமாட்டார்கள். “இஸ்ரவேலே, நீ உனக்குக் கேடுண்டாக்கிக்கொண்டாய்” (ஓசியா 13:9) என்று கர்த்தர் கூறுகிறார். (13)

அந்த எச்சரிக்கை எல்லாக் காலத்திற்குமாக இருக்கிறது. கிறிஸ்துவின் சொந்த வல்லமையினால் சிருஷ்டிக்கப்பட்ட அந்த மரத்தை அவர் சபித்தது, எல்லா சபைகளுக்கும் அனைத்துக் கிறிஸ்தவர்களுக்கும் ஒரு எச்சரிக்கையாக நிற்கிறது. பிறருக்கு ஊழியஞ்செய்யாமல், ஒருவராலும் தேவப்பிரமாணத்தின்படி வாழமுடியாது. ஆனால் கிறிஸ்துவின் இரக்கம் நிரம்பிய—சுயநலமற்ற வாழ்க்கையை வாழாத அநேகர் இருக்கின்றனர். தாங்கள் மிகசிறப்பான கிறிஸ்தவர்கள் என்று தங்களைப்பற்றி நினைத்துக்கொண்டிருக்கும்போது, தேவனுக்குச் சேவை செய்வதின் அர்த்தத்தைப் புரிந்துகொள்ளாமலிருக்கின்றனர். அவர்கள் தங்களைச் சந்தோஷப்படுத்துவதற்காகவே திட்டமிடுகின்றனர்; வாஞ்சிக்கின்றனர். அவர்கள் சுயத்தைக்குறித்து மட்டுமே செயலாற்றுகின்றனர். அவர்கள் தங்களுக்கென்று ஒன்றுசேரும்போதுமட்டுமே, நேரம் மதிப்புள்ளதாக இருக்கிறது. அவர்களுடைய வாழ்க்கையின் காரியங்கள் அனைத்திலும் இதுவே அவர்களுடைய நோக்கமாக இருக்கிறது. அவர்கள் பிறருக்காக ஊழியஞ்செய்யாமல், தங்களுக்கென்றே ஊழியம் செய்கின்றனர். சுயநலமற்ற சேவை செய்வதற்காக தேவன் அவர்களை இந்த உலகத்தில் சிருஷ்டித்தார். சாத்தியமான எல்லா வழிகளிலும் தங்கள் உடன் மனிதர்களுக்கு உதவிசெய்தவற்காக தேவன் அவர்களை வடிவமைத்தார். ஆனால் அவர்களால் வேறு எதையும் பார்க்கமுடியாதபடி, சுயம் மிகவும் பெரியதாக இருக்கிறது. அவர்கள் மானுடத்தால் தொடப்படாதவர்களாக இருக்கின்றனர். இவ்விதமாக, சுயத்திற்காக வாழுபவர்கள் எல்லாவிதமான பாசாங்கு களையும் செய்திருந்த அந்த அத்திமரத்தைப்போல இருந்து, ஆனால் கிளையற்றவர்களாக உள்ளனர். அவர்களும் மனந்திரும்புதல் அல்லது

விசுவாசம் ஆகியவைகள் இன்றி ஆராதனையின் வெளிவடிவங்களைக் கடைப்பிடித்துக்கொண்டிருக்கின்றனர். அவர்கள் வெளித்தோற்றத்தில் தேவனுடைய நியாயப்பிரமாணத்தைக் கனப்படுத்தியிருந்து, ஆனால் கீழ்ப்படியாதவர்களாக இருக்கின்றனர். அவர்கள் பேசுகின்றனர்; ஆனால் செயலாற்றுவதில்லை. இந்த வீணான பாசாங்கு, கிறிஸ்துவின் கண்களுக்கு எவ்விதம் வெறுப்புள்ளதாக இருக்கிறது என்பதை அவர் அந்த அத்திமரத்திற்கு அறிவித்த தண்டனையினால் செயல்விளக்கம் கொடுக்கிறார். தன்னை தேவனுக்குச் சேவைசெய்பவன் என்று கூறிக்கொண்டிருந்து, ஆனால் அவருடைய மகிமைக்கென்று கனிகொடுக்காமலிருப்பவனைவிட, வெளிப்படையான பாவி, குறைவான குற்றமுடையவனாக இருக்கிறான் என்று அவர் அறிவிக்கிறார். (14)

கிறிஸ்து எருசலேமைச் சந்திப்பதற்குமுன் கூறின அத்திமரத்தைப்பற்றிய உவமை, கனியற்ற அந்தமரத்தைச் சபித்ததில் இருந்த அவருடைய போதனையுடன் நேரடியான பிணைப்பைக்கொண்டிருந்தது. ஏனெனில் அந்த உவமையில் இருந்த கனிகொடாத மரத்திற்காக அந்தத் தோட்டக்காரன் பரிந்து பேசினான். “ஐயா, இது இந்த வருஷமும் இருக்கட்டும்; நான் இதைச் சுற்றிலுங் கொத்தி, எருப்போடுவேன், கனிகொடுத்தால் சரி, கொடாவிட்டால், இனிமேல் இதை வெட்டிப்போடலாம்” என்று சொன்னான். கனிகொடாத அந்த மரத்தின்மீது அதிகப்படியான கவனம் செலுத்தப்படவேண்டியதாக இருந்தது. அது எல்லாவிதமான அனுகூலங்களையும் உடையதாக இருக்கவேண்டியதிருந்தது. ஆனால் அது கனிகொடாது இருக்குமானால் அழிவிலிருந்து அதை எதனாலும் காப்பாற்ற முடியாது. அந்த உவமையில் தோட்டக்காரனின் வேலையின் பலன் முன்கூறப்படவில்லை. எந்த மக்களிடம் கிறிஸ்துவின் வார்த்தைகள் பேசப்பட்டிருந்ததோ, அந்த மக்களைச் சார்ந்ததாக அது இருந்தது. அவர்கள் கனியற்ற அந்த மரத்தால் சுட்டிக்காட்டப்பட்டு, தங்களுடைய முடிவை தாங்களே தீர்மானிக்க விடப்பட்டிருந்தனர். பரலோகத்தால் கொடுக்கமுடிந்திருந்த அனுகூலங்களெல்லாம் அவர்களுக்கு கொடுக்கப்பட்டிருந்தது. ஆனால் அதிகரிக்கப்பட்ட அவர்களுக்கான ஆசீர்வாதங்களினால் அவர்கள் இலாப மடையவில்லை. கனிகொடாத அந்த மரத்தைச் சபித்த கிறிஸ்துவின் செயலினால் பலன் காட்டப்பட்டிருந்தது. அவர்களுடைய சொந்த அழிவை, அவர்களே தீர்மானஞ்செய்திருந்தனர். (15)

ஆயிரம் வருடங்களுக்கும் அதிமாக யூதஜனம் தேவனுடைய இரக்கத்தை வீணாக்கியிருந்து, அவருடைய நியாயத்தீர்ப்பை அழைத்து இருந்தது. அவர்கள் அவருடைய எச்சரிக்கைகளை புறக்கணித்து,

அவருடைய தீர்க்கதரிசிகளைக் கொலைசெய்திருந்தனர். அதே பாதையைப் பின்தொடர்ந்த கிறிஸ்துவின் நாளிலிருந்த மக்கள் இந்தப் பாவங்களுக்குத் தங்களைப் பொறுப்பாக்கிக்கொண்டிருந்தனர். அவர்களுடைய காலத்தின் இரக்கங்களையும் எச்சரிக்கைகளையும் புறக்கணித்ததில் அந்தத் தலை முறையின் குற்றம் இருக்கிறது. அந்த ஜனம் நூற்றுக்கணக்கான வருடங்க ளாக வார்ப்பித்துக்கொண்டிருந்த கால்விலங்குகளை கிறிஸ்துவின் நாளிலிருந்த மக்கள் தங்கள்மீது பூட்டிக்கொண்டனர். (16)

ஒவ்வொரு காலக்கட்டத்திலும் மனிதர்கள் தேவனுடன் ஒப்புரவாகும்படி அவர்களுடைய நாளில் ஒளி, சலுகை, தவணையின்காலம் ஆகியவை கொடுக்கப்பட்டிருக்கின்றன. ஆனால் அந்தக் கிருபைக்கும் ஒரு எல்லை இருக்கிறது. இரக்கம் வருடக்கணக்காகப் பரிந்துபேசி, அற்பமாக எண்ணப்பட்டு, புறக்கணிக்கப்பட்டிருக்கலாம், ஆனால் அது கடைசியாகப் பரிந்துபேசும் நேரம் வருகிறது. தேவ ஆவிக்குப் பதிலளிப்பதை நிறுத்திவிடுகின்ற அளவிற்கு இருதயம் கடினமடைந்துவிடுகின்றது. அதற்குப்பின் பாவியிடம் கெஞ்சும் அந்த இனிமையான வெற்றியின் குரல், இல்லாமலாகிவிடுவதினால், கடிந்து கொள்ளுதல்களும் எச்சரிக்கைகளும் இல்லாமலாகிவிடுகின்றன. (17)

அந்த நாள், எருசலேமிற்கு வந்திருந்தது. தண்டனைக்குட்பட்ட அந்த நகரத்திற்காக இயேசு வேதனையுடன் அழுதார். ஆனால் அவரால் அவளை விடுவிக்க முடியவில்லை. எல்லா ஆதாரங்களையும் அவர் செலவழித்துத் தீர்த்திருந்தார். தேவஆவியின் எச்சரிக்கைகளை புறக்கணித்ததினால் உதவி கிடைப்பதற்கான ஒரே பலியை இஸ்ரவேல் புறக்கணித்திருந்தது. அவர்களை விடுதலைசெய்யக்கூடிய வேறு வல்லமை எதுவும் இருக்கவில்லை. (18)

யுகங்கள் நெடுகிலுமுள்ள முடிவில்லாத அன்பின் பரிந்து பேசுதல்களைப் பரிகசிக்கின்ற மக்களின் ஒரு அடையாளமாக யூதஜனம் இருந்தது. எருசலேமிற்காக இயேசு அழுதபோது, அவருடைய கண்ணீர் எல்லா காலங்களிலுமுள்ள பாவங்களுக்கானதாக இருந்தது. தேவனுடைய பரிசுத்த ஆவியினால் கொடுக்கப்படும் கடிந்துகொள்ளுதல்களையும் எச்சரிக்கைகளையும் புறக்கணிப்பவர்கள், இஸ்ரவேலின்மீது கூறப்பட்ட நியாயத்தீர்ப்புகளினால் தங்களுடைய சொந்த தண்டனையை அறிந்து கொள்ளலாம். (19)

இந்தத் தலைமுறையிலும் நம்பிக்கையில்லாதவர்களாக இருந்த யூதர்கள் நடந்துசென்றிருந்த அதே களத்தில் செல்லுகின்ற அநேகர் இருக்கின்றனர். அவர்கள் தேவனுடைய வல்லமையின் வெளிக்காட்டுதல்களை சாட்சியாகக் கண்டிருக்கின்றனர். பரிசுத்த ஆவியானவர், அவர்களுடைய இருதயங்களில் பேசியிருக்கிறார். ஆனால்

அவர்கள் அவர்களுடைய நம்பிக்கையின்மைகளையும் எதிர்ப்பையும் தொடர்ந்து பற்றிக்கொண்டிருக்கின்றனர். தேவன் அவர்களுக்கு எச்சரிக்கை களையும் கடிந்துகொள்ளுதல்களையும் அனுப்புகிறார். ஆனால் அவர்கள் தங்களுடைய தவறுகளை அறிக்கைசெய்வதற்கு விருப்பமில்லாதவர்களாக இருந்து, அவருடைய தூதையும் தூதுவரையும் புறக்கணிக்கின்றனர். அவர்கள் குணமடைவதற்காக அவர் பயன்படுத்தும் கருவிகள் அவர்களுக்கு இடறுதற்கான ஒருகல்லாக ஆகிவிடுகிறது. (20)

மருளவிழுந்துள்ள இஸ்ரவேலர்களின் மறைவான பாவங்கள் தேவனுடைய தீர்க்கதரிசிகளின்மூலமாக வெளிச்சத்திற்குக்கொண்டுவரப் பட்டிருந்ததினால் அவர்கள் வெறுக்கப்பட்டிருந்தனர். ஆகாபின் இரகசியமான அக்கிரமங்களுக்காக அவனைக் கடிந்துகொள்ளுவதில் எலியா உண்மை யாக இருந்ததினால், எலியாவை தன்னுடைய எதிரியென்று ஆகாப் கருதியிருந்தான். அதைப்போலவே, பாவத்தைக் கடிந்துகொள்ளுகின்ற கிறிஸ்துவின் ஊழியக்காரன் இன்று பரிகாசத்துடன் எதிர்த்தாக்குதல்களைச் சந்திக்கிறான். கிறிஸ்துவின் மதமாகிய வேதாகம சத்தியம் பலமிக்க சன்மார்க்கத் தூய்மையின்மையின் ஈர்ப்பிற்கெதிராகப் போராடுகிறது. மனிதர்களின் இருதயங்களில் தவறான எண்ணம் கிறிஸ்துவின் நாளில் இருந்ததைவிட இன்று அதிக பலமுள்ளதாக இருக்கிறது. மனிதர்களின் எதிர்பார்ப்புகளைக் கிறிஸ்து நிறைவேற்றவில்லை. அவருடைய வாழ்க்கை அவர்களுடைய பாவங்களுக்கு ஒரு கடிந்துகொள்ளுதலாக இருக்கவே, அவர்கள் அவரை புறக்கணித்தனர். அதைப்போலவே இப்பொழுதும் தேவனுடைய வார்த்தையிலுள்ள சத்தியம் மனிதர்களின் நடத்தைகளுடனும் இயற்கையான விருப்பங்களுடனும் இசைவில்லாததாக இருப்பதினால் ஆயிரக்கணக்கானவர்கள் அதன் ஒளியைப் புறக்கணிக்கின்றனர். சாத்தானால் தூண்டிவிடப்படும் மனிதர்கள் தேவனுடைய வார்த்தைகளைச் சந்தேகித்து, தங்களுடைய சொந்த மதிப்பீட்டைச் செயற்படுத்துவதைத் தெரிந்துகொள்கின்றனர். அவர்கள் ஒளியைவிட இருளைத் தெரிந்து கொள்கின்றனர். ஆனால் அவர்களுடைய ஆத்துமாவிற்கு ஆபத்தை உண்டுபண்ணும்வகையில் அதைச் செய்கின்றனர். கிறிஸ்துவின் வார்த்தைகளிலே குற்றம்கண்டுபிடித்தவர்கள், அப்படிப்பட்ட காரணங்களை சத்தியத்தினின்றும் ஜீவனினின்றும் தாங்கள் விலகிச்செல்லும்வரை தொடர்ந்து கண்டுபிடித்துக்கொண்டிருந்தார்கள். இப்பொழுதும் அதைப்போலவே நடைபெறுகின்றது. தேவனுடைய சத்தியத்திற்கு எதிராக மாம்சப்பிரகாரமான இருதயம் கொண்டுவருகின்ற தடைகள் ஒவ்வொன்றையும் நீக்கும் நோக்கமுடையவராக தேவன் இல்லை. இருளை ஒளிப்படுத்தக்கூடிய விலைமதிப்புமிக்க ஒளியின் கதிர்களை மறுப்பவர்களுக்கு தேவனுடைய

வார்த்தையில் உள்ள இரகசியங்கள் எப்பொழுதும் அத்தகையதாகவே இருக்கும். சத்தியம் அவர்களிடத்திலிருந்து மறைத்துவைக்கப்பட்டிருக்கிறது. அவர்களுக்குமுன்பாக உள்ள அழிவை அறியாத குருடர்களாக அவர்கள் நடக்கின்றனர். (21)

கிறிஸ்து உலகத்தையும் எல்லாக்காலங்களையும் ஒலிவமலையின் மீதிருந்து பார்த்தார். தெய்வீக இரக்கத்தின் பரிந்துபேசுதல்களை அலட்சியப்படுத்துகின்ற ஒவ்வொரு ஆத்துமாவிற்கும், அவருடைய வார்த்தைகள் ஏற்றவாறு அமைந்துள்ளன. "உன் சமாதானத்துக்கு ஏற்றவைகளை அறிந்திருந்திருக்கவேண்டிய நீ" என்று அவருடைய அன்பைப் பரிகசிக்கும் உங்களிடம் இன்று அவர் பேசுகிறார். உனக்கென்று கண்ணீர் விடுவதற்குக் கண்ணீரில்லாதவளாக இருக்கும் உனக்காக, இயேசு கண்ணீர் விடுகிறார். பரிசேயர்களை ஏற்கெனவே அழித்திருந்த சாவிற்கேதுவான அவர்களுடைய இருதயத்தின் கடினத்தன்மை, உன்னிலும் வெளிக்காட்டப்பட்டிருக்கிறது. தேவ கிருபையின் ஒவ்வொரு சான்றும், தெய்வீக ஒளியின் ஒவ்வொரு ஒளிக்கதிரும், ஆத்துமாவை உருக்கிக் கீழ்ப்படுத்துகிறது அல்லது அதை நம்பிக்கையற்ற மனவருத்தத்தில் உறுதிப்படுத்துகிறது. (22)

எருசலேம் கல்நெஞ்சுள்ளதாகவும் பாவத்திற்காக மனம்வருந்தாததாகவும் இருக்கும் என்பதை, கிறிஸ்து முன்னதாகவே (தெய்வீகத்தில்) கண்டிருந்தார். ஆயினும், எல்லாக் குற்றங்களும் இரக்கத்தைப் புறக்கணித்ததின் பலன்கள் யாவும், அவர்களுடைய வாசற்படியில் படுத்திருக்கிறது. அதே நடத்தையைப் பின்பற்றுகின்ற ஒவ்வொரு ஆத்துமாவின் நிலையும் அப்படிப்பட்டதாகவே இருக்கும். "இஸ்ரவேலே, நீ உனக்குக் கேடுண்டாக்கிக்கொண்டாய்;" "பூமியே, கேள்; ஜனங்கள் என் வார்த்தைகளைக் கேளாமலிருந்து, என் நியாயப்பிரமாணத்துக்குச் செவிகொடாமல் அதை வெறுத்துவிடுகிறார்கள்; அவர்கள்மேல் நான் அவர்கள் நினைவுகளின் பலனாகிய தீங்கை வரப்பண்ணுவேன்"—ஓசியா 13:9; எரேமியா 6:19. (23)

★

# 65

# ஆலயம் மீண்டும் சுத்திகரிக்கப்படல்...!

**மத்தேயு 21:12–16; மாற்கு 11:15–19, 27–33, 12:1–12; லூக்கா 19:45–48, 20:1–19**

**(The Desire of Ages, pp. 589–600)**

கிறிஸ்து அவருடைய ஊழியத்தின் ஆரம்பத்தில் தங்களுடைய பரிசுத்தமற்ற செயல்களினால் ஆலயத்தைத் தீட்டுப்படுத்தியிருந்தவர்களை ஆலயத்திலிருந்து துரத்தியிருந்தார். திட்டமிட்டு வியாபாரம் செய்திருந்த வர்களின் இருதயங்களுக்கு அவருடைய கண்டிப்பான தேவனைப்போன்ற குணம் பயத்தை உண்டுபண்ணியது. அவருடைய ஊழியம் முடிவடைய விருந்த நேரத்தில் அவர் மறுபடியும் தேவாலயத்திற்கு வந்து, அது முந்தியிருந்ததைப்போலவே தொடர்ந்து பரிசுத்தக் குலைச்சலாக்கப்பட்டுக் கொண்டிருப்பதைக் கண்டார். காரியங்களின் நிலைமை முன்னிருந்ததைவிட இப்பொழுது அதிக மோசமாக இருந்தது. ஆலயத்தின் வெளிப்பிராகாரம் மிருகங்களின் ஒரு பெரிய பண்ணையைப்போல இருந்தது.மிருகங்களின் சத்தங்களுடனும் நாணயங்களின் ஒலியுடனும் விற்போர் வாங்குவோருக் கிடையிலான கோபமிக்க பேச்சுவார்த்தைகள் கலந்திருந்ததுடன், அவர்களுக்கிடையில் பரிசுத்தமான பதவிகளில் இருந்த மனிதர்களின் குரல்களும் கேட்கப்பட்டிருந்தன. ஆலயத்தின் மேன்மக்களே வாங்குவதிலும் விற்பதிலும் பணமாற்றஞ்செய்வதிலும் தங்களை ஈடுபடுத்தி யிருந்தனர். இலாபத்தின்மீதான அவர்களுடைய பேராசையினால், அவர்கள் முழுமையாகக் கட்டுப்படுத்தப்பட்டிருந்து, தேவனுடைய பார்வையில் திருடர்களாகவே இருந்தனர். (1)

செய்யவேண்டியதாக இருந்த அவர்களுடைய வேலைகளிருந்த பக்திவிநயத்தை உணராதவர்களாக, ஆசாரியர்களும் அதிபதிகளும் இருந்தனர். ஒவ்வொரு பஸ்கா பண்டிகையின்போதும் கூடாரப்பண்டிகையின்போதும் ஆயிரக்கணக்கான மிருகங்கள் கொல்லப்பட்டிருந்து, அவைகளின் இரத்தம்

ஆசாரியர்களால் பிடிக்கப்பட்டு, பலிபீடத்தின்மீது ஊற்றப்பட்டிருந்தது. இரத்தத்தைச் சிந்துவதில் யூதர்கள் பழக்கப்பட்டிருந்து, இந்த மிருகங்களின் இரத்தமனைத்தும் இவ்விதமாகச் சிந்தப்படுவதற்குப் பாவந்தான் காரணம் என்னும் உண்மையைப்பற்றின பார்வையை ஏறத்தாழ இழந்திருந்தனர். அது உலகத்தின் ஜீவனுக்காகச் சிந்தப்படவேண்டியதாக இருந்த தேவனுடைய அருமையான குமாரனின் இரத்தத்தை முன்னடையாளப்படுத்தியிருந்ததையும், பலிசெலுத்துவதினால் சிலுவையில் அறையப்பட்ட ஒரு மீட்பரிடத்திற்கு மனிதர்கள் நடத்தப்பட்டிருந்தனர் என்பதையும் அறியாது இருந்தனர். (2)

குற்றமில்லாத பலியிடப்படும் மிருகங்களை இயேசு பார்த்தார். கூடவே அந்தப் பெரும் ஆராதனைகளை யூதர்கள் எவ்வாறு வெறும் இரத்தஞ்சிந்துகிற கொடூரமான செயல்களின் காட்சிகளாக்கியிருந்தனர் என்பதையும் கண்டார். பாவத்திற்காகத் தாழ்மையுடன் மனம் வருந்துவதற்குப்பதிலாக, இருதயமில்லாத ஒரு ஆராதனையினால் தேவன் கனப்படுத்தப்படுவார் என்பதுபோல அவர்கள் பலிசெலுத்தப்படும் மிருகங்களின் எண்ணிக்கையைப் பெருக்கியிருந்தனர். சுயநலம், பேராசை ஆகியவைகளின்மூலமாக ஆசாரியர்களும் அதிபதிகளும் அவர்களுடைய இருதயங்களைக் கடினப்படுத்தியிருந்தனர். தேவ ஆட்டுக்குட்டியைச் சுட்டிக்காட்டிக்கொண்டிருந்த அந்த அடையாளத்தை அவர்கள் இலாபம் சம்பாதிக்கும் ஒரு கருவியாக்கியிருந்தனர். இவ்விதமாக, மக்களுடைய கண்களிலிருந்து பலிசெலுத்தும் ஆராதனையின் பரிசுத்தத்தன்மை பெரிய அளவில் அழிக்கப்பட்டிருந்தது. இயேசுவின் கோபம் தூண்டப்பட்டது. இடைவிடாமல் சிந்தப்பட்டிருந்த மிருகங்களின் இரத்தத்தைப்போலவே உலகத்தின் பாவங்களுக்காக விரைவில் சிந்தப்படவிருக்கின்ற அவருடைய இரத்தமும் ஆசாரியர்களாலும் அதிபதிகளாலும் பாராட்டப்படாது என்பதை அவர் அறிந்திருந்தார். (3)

இந்தப் பழக்கங்களுக்கு எதிராக தீர்க்கதரிசிகளின்மூலமாகக் கிறிஸ்து பேசியிருந்தார். சாமுவேல்: “கர்த்தருடைய சத்தத்துக்குக் கீழ்ப்படிகிறதைப் பார்க்கிலும், சர்வாங்க தகனங்களும் பலிகளும் கர்த்தருக்குப் பிரியமாயிருக்குமோ? பலியைப் பார்க்கிலும் கீழ்ப்படிதலும், ஆட்டுக்கடாக்களின் நிணத்தைப்பார்க்கிலும் செவிகொடுத்தலும் உத்தமம்” என்றான். யூதர்களின் மருளவிழுகையைத் தீர்க்கதரிசனத்தில் கண்ட ஏசாயா அவர்களை சோதோம் கொமோராவின் அதிபதிகளைப்போலக் கருதி: “சோதோமின் அதிபதிகளே, கர்த்தருடைய வார்த்தையைக் கேளுங்கள்; கொமோராவின் ஜனமே, நமது தேவனுடைய வேதத்துக்குச் செவிகொடுங்கள். உங்கள் பலிகளின் திரள் எனக்கு என்னத்துக்கு என்று

கர்த்தர் சொல்லுகிறார்; ஆட்டுக்கடாக்களின் தகனபலிகளும், கொழுத்த மிருகங்களின் நிணமும் எனக்கு அரோசிகமாயிருக்கிறது; காளைகள், ஆட்டுக்குட்டிகள், கடாக்களுடைய இரத்தத்தின்மேல் எனக்குப் பிரியமில்லை. நீங்கள் என் சந்நிதியில் வரும்போது, என் பிராகாரங்களை இப்படி மிதிக்கவேண்டுமென்று உங்களிடத்தில் கேட்டது யார்?" "உங்களைக் கழுவிச் சுத்திகரியுங்கள்; உங்கள் கிரியைகளின் பொல்லாப்பை என் கண்களுக்கு மறைவாக அகற்றிவிட்டு, தீமைசெய்தலை விட்டு ஓயுங்கள்; நன்மைசெய்யப் படியுங்கள்; நியாயத்தைத் தேடுங்கள்; ஒடுக்கப்பட்டவனை ஆதரித்து, திக்கற்றப்பிள்ளையின் நியாயத்தையும், விதவையின் வழக்கையும் விசாரியுங்கள்" (1 சாமுவேல் 15:22; ஏசாயா 1:10–12,16,17) என்றான். (4)

இந்தத் தீர்க்கதரிசனங்களை எந்த ஒருவர் கொடுத்திருந்தாரோ அவர், இப்பொழுது கடைசித் தடவையாக அந்த எச்சரிக்கையைத் திரும்பக் கூறினார். தீர்க்கதரிசனத்தின் நிறைவேறுதலாக இயேசுவை இஸ்ரவேலின் அரசர் என்று மக்கள் அறிவித்திருந்தனர். அவர்களுடைய வணக்கத்தை அவர் பெற்று, அரசர் என்னும் பதவியை ஏற்றுக்கொண்டார். இந்தத் தன்மையில் அவர் செயலாற்றவேண்டும். ஊழல்மிக்க, கறைபடிந்த ஒரு ஆசாரியத்துவத்தை சீர்திருத்தும் அவருடைய முயற்சிகள் வீண் என்பதை அவர் அறிந்திருந்தார். ஆயினும், அவருடைய பணி செய்யப்பட்டாகவேண்டும். அவருடைய தெய்வீக ஊழியத்தின் சான்று, நம்பிக்கையில்லாது இருக்கும் ஒரு ஜனத்திற்குக் கொடுக்கப்பட்டாக வேண்டும். (5)

பரிசுத்தக் குலைச்சலாக்கப்பட்டிருந்த ஆலயப்பிராகாரத்தின்மீது மறுபடியும் அவருடைய கூர்மையான பார்வை சென்றது. எல்லாக் கண்களும் அவருக்கு நேராகத் திரும்பியிருந்தன. பரலோக அரசரின் மகத்துவத்துடன் அவர்களுக்குமுன்பாக நின்றிருந்த அவரை, ஆசாரியர்கள், அதிபதிகள், பரிசேயர்கள், புறஜாதியினர் ஆகியோர் ஆச்சரியத்துடனும் பயத்துடனும் பார்த்தனர். இதற்குமுன் ஒருபோதும் வெளிக்காட்டியிராத மேன்மையையும் மகிமையையும் அணிந்தவராக மானுடத்திற்கூடாக தெய்வீகம் பளிச்சிட கிறிஸ்து திகழ்ந்தார். அவருக்கு மிக அருகில் நின்றிருந்தவர்கள் எவ்வளவு தூரம் விலகிச்செல்லமுடியுமோ, அவ்வளவு தூரம் விலகிச் சென்றனர். அவருடைய சீடர்களில் சிலரைத் தவிர்த்து, இரட்சகர் தனித்து நின்றார். ஒவ்வொரு சத்தமும் நின்றிருந்தது. ஆழமான அந்த மௌனம் தாங்கிக்கொள்ள முடியாததாகக் காணப்பட்டது. பலத்த ஒரு புயல் காற்று மக்களை அடித்துச்செல்லுவதைப்போன்ற ஒரு வல்லமையுடன் இயேசு: "என்னுடைய வீடு ஜெபவீடாயிருக்கிறதென்று எழுதியிருக்கிறது; நீங்களோ அதைக் கள்ளர் குகையாக்கினீர்கள்" என்றார். அவருடைய குரல், ஆலயத்திற்கூடாக ஒரு

எக்காளத்தைப்போல ஒலித்தது. அவருடைய முகத்தின் கோபம் எரிகின்ற அக்கினியைப்போலக் காணப்பட்டது. அதிகாரத்துடன் அவர்: "இவைகளை இவ்விடத்திலிருந்து எடுத்துக்கொண்டுபோங்கள்" (யோவான் 2:16) என்று கட்டளையிட்டார். (6)

மூன்று வருடங்களுக்குமுன் இயேசுவின் கட்டளைக்குமுன்னால் ஆலயத்தைவிட்டு ஓடிப்போனதைப்பற்றி, அதிபதிகள் வெட்கமடைந்தவர்களாக இருந்திருந்தனர். அன்றிலிருந்து ஒரு தனிப்பட்ட தாழ்மையான மனிதனைப் பற்றின அவர்களுடைய பயங்களையும், கேள்விகேட்காத கீழ்ப்படிதலையும் பற்றி ஆச்சரியமடைந்திருந்தனர். அவர்களுடைய மேன்மைகளை விட்டுவிட்டு, திரும்பவும் சரணடைவது முடியாத காரியம் என்று அவர்கள் உணர்ந் திருந்தனர். ஆயினும் முன்பைவிட இப்பொழுது அவர்கள் அதிகமாகப் பயந்து, அவருடைய கட்டளைக்குக் கீழ்ப்படிவதற்கு விரைந்தனர். அவருடைய அதிகாரத்தை எதிர்த்துக் கேள்வி கேட்க அங்கு ஒருவரும் இல்லை. ஆசாரியர்களும் அதிபதிகளும் அவர்களுடைய மிருகங்களை ஓட்டிக்கொண்டு, அவருடைய சமுகத்திலிருந்து ஓடிப்போனார்கள். (7)

ஆலயத்திலிருந்து சென்றபோது, பெரும் சுகமளிப்பவரைப்பற்றி விசாரித்துக்கொண்டு தங்களுடைய நோயாளிகளுடன் வந்த மக்களைச் சந்தித்தனர். ஓடிச்சென்றுகொண்டிருந்தவர்கள் கொடுத்த அறிக்கை இவர்களில் சிலரைத் திரும்பிச் சென்றுவிட வழிநடத்தியது. தம்முடைய பிரசன்னத்திலிருந்து ஆசாரியர்களையும் அதிபதிகளையும் துரத்தியிருந்த ஒருவருடைய பார்வையைச் சந்திக்க அவர்கள் பயப்பட்டார்கள். ஆனால் விரைந்துகொண்டிருந்த கூட்டத்திற்கூடாக, தங்களுடைய ஒரே நம்பிக்கையாக இருந்தவரைச் சமீபிப்பதற்காக, பெரும் எண்ணிக்கையில் இருந்தவர்கள் முன்நோக்கிச் சென்றனர். திரளானவர்கள் அந்த ஆலயத்தைவிட்டு ஓடிப்போனபோது, அநேகர் பின்னால் தங்கியிருந்தனர். இப்பொழுது, அவர்கள் புதிதாக வருபவர்களுடன் சேர்ந்துகொண்டிருந்தனர். மறுபடியும் அந்த ஆலயப்பிராகாரம் நோயுற்றவர்களாலும் இறந்துகொண்டிருந்தவர்களாலும் நிரம்பியது. மறுபடியும் இயேசு அவர்களுக்கு ஊழியஞ்செய்தார். (8)

சற்று நேரத்திற்குப்பின் ஆசாரியர்களும் அதிபதிகளும் ஆலயத்திற்குத் திரும்புவதற்குத் துணிவுகொண்டனர். அந்தக் கலவரம் அமைதியடைந்தபின், இயேசுவின் அடுத்த நடவடிக்கை என்னவாக இருக்குமென்பதை அறிந்துகொள்ளுகின்ற கவலையினால் அவர்கள் ஆட்கொள்ளப்பட்டார்கள். அவர் தாவீதின் சிங்காசனத்தை எடுத்துக்கொள்ளுவார் என்று அவர்கள் எதிர்பார்த்தனர். அமைதியாக ஆலயத்திற்குத் திரும்பின அவர்கள், ஆண்களும், பெண்களும், பிள்ளைகளும் தேவனைத் துதித்துக்கொண்டிருந்த குரல்களைக்

கேட்டார்கள். அவர்கள் ஆலயத்திற்குள் பிரவேசித்தபோது, அங்கு கண்ட ஆச்சரியமான காட்சியின்முன் பேச்சற்றவர்களானார்கள். நோயாளிகள் சுகமடைந்ததையும், குருடர்கள் பார்வையடைந்ததையும், செவிடர்கள் கேட்கும் திறனடைந்ததையும், சப்பாணிகள் மகிழ்ச்சியால் குதிப்பதையும் அவர்கள் கண்டார்கள். களிகூருவதில் பிள்ளைகள் முன்னணியில் இருந்தனர். இயேசு அவர்களுடைய நோய்களைச் சுகப்படுத்தியிருந்தார். அவர் அவர்களைத் தமது கரங்களால் பற்றிக்கொண்டிருந்து, அவர்களுடைய நன்றிமிக்க பாசமுள்ள முத்தங்களைப் பெற்றிருந்தார். அவர் மக்களுக்குப் போதனை செய்துகொண்டிருந்தபோது, அந்தச் சிறுபிள்ளைகளில் சிலர், அவரது மார்பில் உறங்கியிருந்தனர்; இப்பொழுது மகிழ்ச்சிமிக்க குரல்களில் பிள்ளைகள் அவரைப் போற்றியிருந்தனர். அதற்கு முந்தின நாளில் நடந்தவிதமாக, அவர்கள் ஓசன்னாக்களைத் திரும்பவும் பாடி, பேரீச்ச மரக்கிளைகளை இரட்சகருக்குமுன்பாக வெற்றிகரமாக அசைத்தனர். அவர்களுடைய ஒப்புதலின் மகிழ்ச்சிமிக்க ஆரவாரங்கள் அந்த ஆலயத்தில், "கர்த்தருடைய நாமத்தினாலே வருகிறவர் ஸ்தோத்திரிக்கப்பட்டவர்;" "இதோ, உன் ராஜா உன்னிடத்தில் வருகிறார்; அவர் நீதியுள்ளவரும் இரட்சிக்கிறவரும் தாழ்மையுள்ளவரும்" (சங். 118:26; சகரியா 9:9) "தாவீதின் குமாரனுக்கு ஓசன்னா!" என்று மீண்டும் மீண்டும் எதிரொலித்தன. (9)

மகிழ்ச்சியும் அடக்கவுங்கூடாத இந்தக் குரல்களின் ஒலி, அந்த ஆலயத்தின் அதிபதிகளுக்கு எதிர்ப்பாக இருந்தது. அப்படிப்பட்ட செயல்விளக்கங்களை நிறுத்துவதற்கு அவர்கள் புறப்பட்டார்கள். பிள்ளைகளின் பாதங்களினாலும் அவர்களுடைய களிகூருதலின் ஒலியினாலும் தேவனுடைய ஆலயம் பரிசுத்தக்குலைச்சலாக்கப்பட்டுவிட்டதென்று அவர்கள் மக்களிடம் எடுத்துக் கூறினார்கள். அவர்களுடைய வார்த்தைகள் மக்களின்மீது எந்தவித உணர்த்துதலையும் உண்டுபண்ணவில்லையென்பதை அவர்கள் கண்டு, கிறிஸ்துவிடம்: "இவர்கள் சொல்லுகிறதைக் கேட்கிறீரோ" என்று முறையிட்டார்கள். அதற்கு இயேசு: "ஆம், கேட்கிறேன். குழந்தைகளுடைய வாயினாலும் பாலகருடைய வாயினாலும் துதி உண்டாகும்படி செய்தீர் என்பதை நீங்கள் ஒருக்காலும் வாசிக்கவில்லையா" என்றார். இயேசு அரசர் என்று அறிவிக்கப்படவேண்டும் என்று தீர்க்கதரிசனம் முன்னுரைத்திருந்தது. அந்த வார்த்தை நிறைவேறியாக வேண்டும். இஸ்ரவேலரின் ஆசாரியர்களும் அதிபதிகளும் அவருடைய மகிமைக்குச் சாட்சிகூற மறுத்திருந்ததால், அவருடைய சாட்சிகளாக இருக்கும்படி தேவன் சிறுபிள்ளைகளை அசைத்தார். அந்தப் பிள்ளைகளின் குரல் மௌனமாயிருந்திருந்தால், அந்த ஆலயத்தின் தூண்களே இரட்சகரின் துதியைத் தொனித்திருந்திருக்கும். (10)

பரிசேயர்கள் முற்றிலுமாக குழப்பமடைந்து அமைதியிழந்திருந்தனர். எந்த ஒருவரை அவர்களால் அச்சுறுத்த முடியாமலிருந்ததோ, அவர் இப்பொழுது அதிகாரம் செலுத்துபவராக இருந்தார். அந்த ஆலயத்தின் காப்பாளர் என்னும் அவருடைய பதவியை இயேசு எடுத்திருந்தார். அப்படிப்பட்ட அரச அதிகாரத்தை அவர் இதற்குமுன்னர் ஒருபோதும் எடுத்துக்கொண்டிருக்கவில்லை. அப்படிப்பட்ட ஒரு பெரிய வல்லமையை அவருடைய வார்த்தைகளும் செயல்களும் இதற்குமுன் ஒருபோதும் உடையதாக இல்லை. எருசலேம் முழுவதிலும் அவர் ஆச்சரியமான செயல்களைச் செய்திருந்தார். ஆனால் இதற்குமுன்னர் ஒருபோதும் அப்படிப்பட்டவிதமாகவும் பக்திவிநயமான உணர்த்துதலை உண்டுபண்ணக் கூடியவிதமாகவும் அவர் செயலாற்றியிருக்கவில்லை. அவருடைய ஆச்சரியமான செயல்களுக்குச் சாட்சிகளாக இருந்த மக்களுக்குமுன்பாக, வெளிப்படையான எதிர்ப்பைக் காட்டுவதற்கு, ஆசாரியர்களும் அதிபதிகளும் துணியாதவர்களாக இருந்தனர். அவருடைய பதிலினால் அவர்கள் சீற்றமடைந்தவர்களாகவும் குழப்பமடைந்தவர்களாகவும் இருந்திருந்த போதிலும், அந்த நாளில் மேற்கொண்டு எதையும் நிறைவேற்ற முடியாதவர் களாக இருந்திருந்தனர். (11)

அடுத்த நாள் காலையில் மறுபடியும் சனகரீம் சங்கம் கூடி, இயேசுவிற்கு எதிராக என்ன செய்யலாம் என்று ஆலோசித்தது. மேசியா என்னும் அந்தஸ்தைப்பற்றின ஒரு அடையாளத்தைக் காட்டும்படி, மூன்று வருடங்களுக்குமுன் அவர்கள் ஒரு கோரிக்கையை வைத்திருந்தனர். அந்த நேரத்திலிருந்து அந்த தேசம் முழுவதிலும் அவர் பலத்த செயல்களைச் செய்திருந்தார். அவர் நோயாளிகளைச் சுகப்படுத்தியிருந்தார். ஆயிரக்கணக்கான மக்களுக்கு அற்புதமானவிதமாக உணவளித்திருந்தார். அலைகளின்மீது நடந்திருந்தார். கொந்தளித்துக்கொண்டிருந்த கடலினிடம் அமைதியாயிருக்கும்படி கட்டளையிட்டிருந்தார். ஒரு திறந்த புத்தகத்தைப் போல, மனிதர்களின் இருதயங்களை அவர் மீண்டும் மீண்டும் வாசித்திருந்தார். பிசாசுகளைத் துரத்தி, மரித்தவர்களை எழுப்பியிருந்தார். மேசியா என்பதற்கான சான்றுகளை அதிபதிகள் அவர்களுடைய முன்பாக பெற்றிருந்தனர். இப்பொழுது அவருடைய அதிகாரத்திற்கான அடையாளத்தை கேட்காமல், அவரை ஆக்கினைக்குட்படுத்துவதற்கேதுவான ஏதாவதொரு ஒத்துக்கொள்ளுதலையோ அல்லது அறிவிப்பையோ அவரிடத்திலிருந்து பெற முடிவுசெய்தனர். (12)

அவர் போதித்துக்கொண்டிருந்த ஆலயத்திற்குச் சென்று அவரிடம்: "நீர் எந்த அதிகாரத்தினால் இவைகளைச் செய்கிறீர்? இந்த அதிகாரத்தை

உமக்குக் கொடுத்தவர் யார்?” என்று கேட்கத் தொடங்கினார்கள். அவருடைய அதிகாரம் தேவனிடத்திலிருந்து வந்தது என்று அவர் கூறுவார் என்று எதிர்பார்த்தார்கள். அப்படிப்பட்ட உரிமையை மறுக்கும் நோக்கத்தை உடையவர்களாக அவர்கள் இருந்தனர். ஆனால் வேறொரு பொருளுடன் வெளித்தோற்றத்திற்குச் சம்பந்தமுடையதுபோலத் தோன்றின ஒரு கேள்வியினால் இயேசு அவர்களைச் சந்தித்தார். அவர்கள் பதில்கூறுவதை, தம்முடைய பதிலுக்கான நிபந்தனையாக வைத்து, “இயேசு பிரதியுத்தரமாக: நானும் உங்களிடத்தில் ஒரு காரியத்தைக் கேட்கிறேன், அதை எனக்குச் சொல்லுவீர்களானால், நானும் இன்ன அதிகாரத்தினாலே இவைகளைச் செய்கிறேனென்று உங்களுக்குச் சொல்லுவேன்” என்றார். (13)

ஆசாரியர்கள் தாங்கள் ஒரு இக்கட்டான நிலையில் இருப்பதையும், எந்தவிதமான குதர்க்கங்களும் தங்களை அதிலிருந்து வெளியேற்ற முடியாது என்பதையும் கண்டார்கள். யோவான் கொடுத்த ஸ்நானம் பரலோகத்திலிருந்துண்டானது என்று கூறினால், அவர்களுடைய பொருத்தமின்மை வெளிப்படையாகிவிடும். அப்படியானால் நீங்கள் ஏன் அவனை விசுவாசிக்கவில்லையென்று இயேசு கேட்பார். யோவான் கிறிஸ்துவைப்பற்றி: “இதோ, உலகத்தின் பாவத்தைச் சுமந்துதீர்க்கிற தேவ ஆட்டுக்குட்டி” (யோவான் 1:29) என்று சாட்சி கூறியிருந்தான். யோவானின் சாட்சியை அவர்கள் நம்பியிருந்தார்களானால் கிறிஸ்துதான் மேசியா என்பதை அவர்களால் எப்படி மறுக்கமுடியும்? யோவானின் ஊழியம் மனிதர்களால் உண்டானது என்னும் அவர்களுடைய உண்மையான நம்பிக்கையை அறிவிப்பார்களானால், யோவான் ஒரு தீர்க்கதரிசி என்று மக்கள் நம்பியிருப்பதினால் தாங்களாகவே தங்கள்மீது ஒரு கோபப் புயலை கொண்டுவருவார்கள். (14)

திரளானவர்கள் தீவிரமான ஆர்வத்துடன் (அவருடைய பதிலுக்காக) காத்திருந்தனர். யோவானின் ஊழியத்தை தாங்கள் ஏற்றுக்கொள்வதாக ஆசாரியர்கள் கூறியிருந்ததை மக்கள் அறிந்திருந்தனர். எனவே, அவன் தேவனால் அனுப்பப்பட்டவன் என்பதை அவர்கள் ஒத்துக்கொள்வார்கள் என்று எதிர்பார்த்திருந்தனர். ஆனால் ஆசாரியர்கள் ஒன்றுகூடி இரகசியமாக ஆலோசனைசெய்தபின், தாங்களாகவே வாக்குக்கொடுக்கக்கூடாது என்று முடிவுசெய்தனர். மாய்மாலமாக, அறியாதவர்கள்போல நடித்துக்கொண்டு, “எங்களுக்குத் தெரியாது” என்றார்கள். கிறிஸ்துவும்: “நானும் இன்ன அதிகாரத்தினால் இவைகளைச் செய்கிறேனென்று உங்களுக்குச் சொல்லேன்” என்று கூறினார். (15)

வேதபாரகர்கள், ஆசாரியர்கள், அதிபதிகள் யாவரும் மௌனப்படுத்தப் பட்டிருந்தனர். தடங்கல் செய்யப்பட்டவர்களாக, ஏமாற்றமடைந்தவர்களாக தங்கள் புருவங்களைத் தாழ்த்திக்கொண்டு, கிறிஸ்துவிடம் மேற்கொண்டு கேள்விகளை வற்புறுத்தாதவர்களாக நின்றனர்; அப்பொழுது அவர்களுக்கு அருகில் நின்றிருந்த அகந்தைமிக்கவர்களும், சுயநீதி உள்ளவர்களுமாக இருந்த இந்த மனிதர்களின் தோல்வியை வேடிக்கை பார்ப்பதற்காக நின்றிருந்த மக்களுக்குமுன் அவர்கள் தங்களுடைய கோழைத்தன்மை, முடிவுசெய்ய இயலாமை ஆகியவைகளால் மக்களின் மரியாதையை இழந்தவர்களாக இருந்தனர். (16)

கிறிஸ்துவின் வார்த்தைகள், செயல்களாகிய அனைத்தும் முக்கிய மானவைகளாக இருந்ததுடன், அவருடைய சிலுவைமரணம், பரமேறு தலுக்குப்பின் அவைகளின் செல்வாக்கு எப்பொழுதும் அதிகரித்துக் கொண்டிருக்கும் அளவில் உணரப்படவேண்டியதாகவும் இருந்தது. இயேசுவைக் கேள்விகேட்பதின் பலன்களுக்காகக் காத்துக்கொண்டிருந்தவர் களில் அநேகர், அந்த நிகழ்ச்சிமிக்க நாளில் முதலாவது அவருடைய வார்த்தைகளினால் அவருக்கு நேராக இழுக்கப்பட்டிருந்து, முடிவில் இயேசுவின் சீடர்களாக வேண்டியவர்களாக இருந்தனர். ஆலயப்பிராகாரத்தின் அந்தக் காட்சி, அவர்களுடைய மனங்களிலிருந்து ஒருபோதும் மங்காததாக இருக்கவேண்டியதிருந்தது. இயேசுவிற்கும் பிரதான ஆசரியனுக்கும் இடையில் இருந்த வேறுபாடு, அவர்களிருவரும் ஒன்றாகப் பேசினபோது, குறிப்பிடக்கூடியதாக இருந்தது. அந்த ஆலயத்தின் அகந்தைமிக்க மேன்மையானவன், அலங்காரமான விலைமதிப்புமிக்க உடையை அணிந்திருந்தான். அவனுடய சிரசின்மீது ஒரு தலைப்பகை இருந்தது. அவனுடைய நடத்தை மகத்துவமானதாக இருந்து, மூப்பினால் நீண்ட தலைமுடியும் தாடியும் வெள்ளியைப்போல இருந்தது. அவனுடைய தோற்றம் பார்ப்பவர்களுக்கு அச்சத்தை உண்டுபண்ணியிருந்தது. எந்தவிதமான உடை அலங்காரமும் போற்றுதலும் இல்லாதவராக, பரலோகத்தின் மகத்துவமானவர் இந்த கம்பீரமான பிரமுகன்முன் நின்றிருந்தார். அவரது உடைகள் பயணத்தால் கறைபட்டவைகளாக இருந்தன. அவருடைய முகம் வெளிரியிருந்து, பொறுமைமிக்க ஒரு துயரத்தை வெளிக்காட்டியிருந்தது. ஆனால் எழுதப்பட்டிருந்ததைப்போல, அந்தப் பிரதான ஆசாரியனின் அகந்தை, தன்னம்பிக்கை, கோபம் ஆகியவைகளுடன் அவரது முகத்தில் காணப்பட்ட மேன்மைமிக்க தன்மையும் அனுதாபமும் விசித்தரமான விதத்தில் மாறுபட்டுக் காணப்பட்டது. இயேசுவின் வார்த்தைகளையும் செயல்களையும் ஆலயத்தில் சாட்சியாகக் கண்டிருந்தவர்களில் அநேகர் அந்த நேரத்திலிருந்து அவரை ஒரு தீர்க்கதரிசியாகத் தங்களின் இருதயங்களில் ஏற்றுக்கொண்டனர்.

ஆனால் மக்களின் உணர்ச்சிகள் அவருக்கு ஆதரவாகத் திரும்பினபோது, இயேசுவிற்கு நேரான ஆசாரியர்களின் வெறுப்பு அதிகரித்தது. அவருடைய பாதங்களுக்கு வைக்கப்பட்டிருந்த கண்ணிகளிலிருந்து தப்பின அவருடைய ஞானம் அவரது தெய்வத்தன்மைக்கு ஒரு புதிய சான்றாக இருந்து, அவர்களுடைய கோபத்திற்கு எரிபொருளைச் சேர்த்தது. (17)

ரபிமார்களுடனான கிறிஸ்துவின் போட்டியில் அவருடைய எதிரிகளைத் தாழ்த்தவேண்டும் என்பது அவருடைய நோக்கமல்ல. ஒரு கடினமான இடத்தில் அவர்களைக் காண்பதில் அவர் சந்தோஷமடையவில்லை. போதிப்பதற்கு ஒரு முக்கியமான பாடத்தைக்கொண்டிருந்தார். அவருடைய எதிரிகள் அவருக்கென்று விரித்திருந்த வலையில் அவர்களையே சிக்கவைத்து அவமானப்படுத்தியிருந்தார். யோவான் கொடுத்த ஸ்நானத்தின் தன்மையைப்பற்றி ஒப்புக்கொண்டிருந்த அவர்களுடைய அறியாமை, அவருக்குப் பேசுவதற்கான ஒரு வாய்ப்பைக் கொடுத்தது. அவைகளின் உண்மையான நிலைமையை அவர்கள்முன் வைத்து, அந்த வாய்ப்பை முன்னேற்றமடையச்செய்து, ஏற்கெனவே கொடுக்கப்பட்டிருந்த அநேக எச்சரிக்கைகளுடன் மற்றொரு எச்சரிக்கையையும் சேர்த்தார். (18)

“ஆயினும் உங்களுக்கு எப்படித் தோன்றுகிறது? ஒரு மனுஷனுக்கு இரண்டு குமாரர் இருந்தார்கள்; மூத்தவனிடத்தில் அவன் வந்து: மகனே நீ போய் இன்றைக்கு என் திராட்சத்தோட்டத்தில் வேலைசெய் என்றான். அதற்கு அவன்: மாட்டேன் என்றான்; ஆகிலும், பின்பு அவன் மனஸ்தாபப்பட்டுப் போனான். இளையவனிடத்திலும் அவன் வந்து, அப்படியே சொன்னான்; அதற்கு அவன்: போகிறேன் ஐயா, என்று சொல்லியும், போகவில்லை. இவ்விருவரில் எவன் தகப்பனுடைய சித்தத்தின்படி செய்தவன்” என்று வினவினார். (19)

திடீரென்ற இந்தக் கேள்வி, அவருடைய பேச்சைக் கேட்டிருந்தவர்களை நிலைகுலையச் செய்தது. அந்த உவமையை கவனமாகப் பின்தொடர்ந்திருந்து, “மூத்தவன்தான்” என்று உடனே பதில் கூறினார்கள். இயேசு அவர்களை கூர்ந்து பார்த்து, கடுமையும் பக்திவிநயமுமான குரலில், “ஆயக்காரரும் வேசிகளும் உங்களுக்கு முன்னே தேவனுடைய ராஜ்யத்தில் பிரவேசிக்கிறார்கள் என்று மெய்யாகவே உங்களுக்குச் சொல்லுகிறேன்” என்றார். (20)

கிறிஸ்துவின் கேள்விக்கு ஆசாரியர்களும் அதிபதிகளும் சரியான பதில் கூறினார்கள். இவ்விதமாக, மூத்த குமாரனுக்கு ஆதரவான கருத்தை அவர் பெற்றார். இந்தக் குமாரன், பரிசேயர்களால் நிந்திக்கப்பட்டும் வெறுக்கப்பட்டுமிருந்த ஆயக்காரர்களை எடுத்துக்காட்டியிருந்தது.

அவர்கள் மொத்தத்தில் சன்மார்க்கமில்லாதவர்களாக இருந்தனர். அவர்கள் உண்மையாகவே அவர்களுடைய வாழ்க்கையில் அவருடைய கோரிக்கை களுக்கு முழுமையான தடையைக் காட்டி, தேவனுடைய நியாயப்பிரமாணத்தை மீறியிருந்தனர். அவர்கள் நன்றியில்லாதவர்களாகவும், பரிசுத்தமில்லாதவர்களாகவும் இருந்திருந்தனர். கர்த்தருடைய திராட்சைத் தோட்டத்திற்குச் சென்று வேலை செய்யும்படிக் கூறப்பட்டபோது, அவர்கள் அவமதிப்புமிக்க ஒரு மறுப்பைத் தெரிவித்திருந்தனர். ஆனால் மனந்திரும்புதலையும் ஞானஸ்நானத்தையும் பிரசங்கம்செய்துகொண்டு யோவான் வந்தபோது, ஆயக்காரர்கள் அவனுடைய தூதை ஏற்றுக்கொண்டு, ஞானஸ்நானம் பெற்றிருந்தனர். (21)

இரண்டாவது குமாரன் யூத ஜனத்தின் தலைவர்களாக இருந்த மனிதர்களைச் சுட்டிக்காட்டியிருந்தான். பரிசேயர்களில் சிலர் மனந்திரும்பி, யோவான் கொடுத்த ஞானஸ்நானத்தைப் பெற்றிருந்தனர். ஆனால் அவன் தேவனிடத்திலிருந்து வந்தவன் என்பதை ஏற்றுக்கொள்ளாதிருந்திருந்தனர். அவனுடைய எச்சரிக்கைகளும் வெளிப்படையான குற்றச்சாட்டுகளும் அவர்களைச் சீர்திருத்தத்திற்கு நடத்தவில்லை. “பரிசேயரும் நியாய சாஸ்திரிகளுமோ அவனாலே ஞானஸ்நானம் பெறாமல் தங்களுக்குக் கேடுண்டாகத் தேவனுடைய ஆலோசனையைத் தள்ளிவிட்டார்கள்”—லூக்கா 7:30. அவர்கள் அவனுடைய தூதை ஆணவத்துடன் புறக்கணித்திருந்தார்கள். அழைக்கப்பட்டபோது இரண்டாவது குமாரனைப்போல—நான் போகிறேன் ஐயா என்று கூறியும் போகாமலிருந்தைப்போல, ஆசாரியர்களும் அதிபதிகளும் கீழ்ப்படிவதாகக் கூறிகொண்டு, கீழ்ப்படியாமையைச் செயலாற்றியிருந்தனர். அவர்கள் பக்தியின் பெரிய வெளிவேஷத்தோடு தேவனுடைய பிரமாணத்திற்குக் கீழ்ப்படிவதாகக் கூறிக்கொண்டிருந்து, ஒரு தவறான கீழ்ப்படிதலைமட்டுமே செய்துகொண்டிருந்தனர். ஆயக்காரர்கள் வெளிப்படையாக பரிசேயர்களால் குற்றஞ்சாட்டப்பட்டவர்களாகவும் கடவுள் நம்பிக்கையில்லாதவர்கள் என்று சபிக்கப்பட்டவர்களாகவும் இருந்தனர். ஆனால் ஒளியைப் பெற்றிருந்தும், தங்களுடைய தெய்வபக்தியைப்பற்றி கூறிக்கொண்டிருந்ததுடன் சம்பந்தமில்லாதிருந்த இந்த சுயநீதிமிக்க மனிதர் களுக்குமுன் அவர்கள் பரலோகத்திற்குள் சென்றுகொண்டிருப்பதாக அவர்களுடைய விசுவாசத்தினாலும் செயல்களினாலும் காட்டிக் கொண்டிருந்தனர். (22)

ஆராயும் இந்தச் சத்தியங்களைத் தாங்கிக்கொள்ள விருப்ப மில்லாதவர்களாக ஆசாரியர்களும் அதிபதிகளும் இருந்தனர். அப்படியிருந்த போதிலும், இயேசுவிற்கு எதிராக அவர்களைத் திருப்பிவிடக்கூடிய எதையாவது

அவர் கூறுவார் என்று நம்பிக்கொண்டு, அவர்கள் மௌனமாக இருந்தனர். ஆனால் அவர்கள் மேலும் அதிகமாகத் தாங்கிக்கொள்ளவேண்டியவைகளை உடையவர்களாக இருந்தனர். (23)

"வேறொரு உவமையைக் கேளுங்கள்: வீட்டெஜமானாகிய ஒரு மனுஷன் இருந்தான், அவன் ஒரு திராட்சத்தோட்டத்தை உண்டாக்கி, அதைச் சுற்றிலும் வேலியடைத்து, அதில் ஒரு ஆலையை நாட்டி, கோபுரத்தையும் கட்டி, தோட்டக்காரருக்கு அதைக் குத்தகையாகவிட்டு, புறதேசத்துக்குப்போயிருந்தான். கனிகாலம்சமீபித்தபோது, அதின் கனிகளை வாங்கிக்கொண்டுவரும்படி தன் ஊழியக்காரரைத் தோட்டக்காரரிடத்தில் அனுப்பினான். தோட்டக்காரர் அந்த ஊழியக்காரரைப்பிடித்து, ஒருவனை அடித்து, ஒருவனைக் கொலைசெய்து, ஒருவனைக் கல்லெறிந்து கொன்றார்கள். பின்னும் அவன் முந்தினவர்களிலும் அதிகமான வேறே ஊழியக்காரரை அனுப்பினான்; அவர்களையும் அப்படியே செய்தார்கள். கடைசியிலே அவன்: என் குமாரனுக்கு அஞ்சுவார்கள் என்று சொல்லி, தன் குமாரனை அவர்களிடத்தில் அனுப்பினான். தோட்டக்காரர் குமாரனைக் கண்டபோது: இவன் சுதந்தரவாளி; இவனைக் கொன்று, இவன் சுதந்தரத்தைக் கட்டிக்கொள்வோம் வாருங்கள் என்று ஒருவரோடொருவர் சொல்லிக்கொண்டு, அவனைப் பிடித்துத் திராட்சத்தோட்டத்திற்குப் புறம்பே தள்ளிக் கொலைசெய்தார்கள். அப்படியிருக்க, திராட்சத்தோட்டத்தின் எஜமான் வரும்போது, அந்தத் தோட்டக்காரரை என்ன செய்வான் என்று கேட்டார்." (24)

இயேசு அங்கேயிருந்த அனைவரிடமும் பேசினார். ஆனால் ஆசாரியர்களும் அதிபதிகளும் பதில் கூறினார்கள். அதற்கு அவர்கள்: "அந்தக் கொடியரைக் கொடுமையாய் அழித்து, ஏற்றகாலங்களில் தனக்குக் கனிகளைக் கொடுக்கத்தக்க வேறே தோட்டக்காரரிடத்தில் திராட்சத்தோட்டத்தைக் குத்தகையாகக் கொடுப்பான்" என்றார்கள். பேசியிருந்தவர்கள் முதலில் அந்த உவமையின் பொருத்தத்தை உணராமலிருந்தனர். ஆனால் இப்பொழுது அவர்களே தங்களுடைய சொந்தத் தண்டனையை அறிவித்ததைக் கண்டார்கள். இந்த உவமையில் எஜமான் தேவனையும், திராட்சத்தோட்டம் யூதஜனத்தையும் அவர்களுடைய பாதுகாக்கும் வேலி தேவனுடைய நியாயப்பிரமாணத்தையும் எடுத்துக்காட்டியிருந்தது. அந்தக் கோபுரம் தேவாலயத்தின் ஒரு அடையாளமாக இருந்தது, அந்தத் திராட்சத்தோட்டத்தின் எஜமான், அதன் செழுமைக்கான எல்லாவற்றையும் செய்திருந்தான். "நான் என் திராட்சத்தோட்டத்திற்காகச் செய்யாத எந்த வேலையை அதற்கு இனிச் செய்யலாம்?" (ஏசாயா 5:4)

என்று அவர் கூறுகிறார். இஸ்ரவேலருக்கான தேவனுடைய சலிப்படையாத கவனம், இவ்விதமாக எடுத்துக்காட்டப்பட்டிருந்தது. திராட்சத்தோட்டத்தின் கனிகளில் ஒரு விகிதாச்சாரத்தைத் தோட்டக்காரர்கள் எஜமானுக்குத் திருப்பிக்கொடுக்கவேண்டியவர்களாக இருந்ததைப்போல, தேவனுடைய மக்கள் அவர்களுக்குக் கிடைத்துள்ள புனிதமான வாய்ப்புகளுக்குத்தக்கதான வாழ்க்கையினால் அவரைக் கனப்படுத்தவேண்டியவர்களாயிருந்தனர். ஆனால் கனிகளை வாங்கிக்கொண்டுவரும்படி எஜமான் அனுப்பின ஊழியக்காரர்களைத் தோட்டக்காரர்கள் கொலைசெய்ததைப்போல, யூதர்களை மனந்திரும்பும்படி அழைப்பதற்காக தேவன் அனுப்பியிருந்த தீர்க்கதரிசிகளை அவர்கள் கொலை செய்திருந்தனர். ஊழியக்காரனுக்குப்பின் ஊழியக்காரனாக தொடர்ந்து கொலைசெய்யப்பட்டிருந்தனர். இவ்வளவு தூரம்வரை அந்த உவமை மிகச்சரியாகப் பொருந்தியிருந்து, இதற்குப்பின்னும் தெளிவாகவே இருந்தது. கடைசியாகக் கீழ்ப்படியாத வேலைக்காரர்களிடத்திற்கு அனுப்பின—அவர்கள் பிடித்துக் கொலைசெய்த அன்பான குமாரனில், குறிப்பான இயேசுவின் படத்தையும், அவருக்கு ஏற்படவிருக்கிற முடிவையும், ஆசாரியர்களும் அதிபதிகளும் கண்டார்கள். ஒரு கடைசி முறையீடாக அவர்களிடத்திற்குப் பிதா அனுப்பியிருந்த அவரைக் கொலைசெய்ய அவர்கள் ஏற்கெனவே திட்டமிட்டுக்கொண்டிருந்தனர். நன்றிகெட்டவர்களாக இருந்த அந்தத் தோட்டக்காரர்களின்மீது, செலுத்தப்பட்ட தேவகோபமாகிய தண்டனையில், கிறிஸ்துவைக் கொலைசெய்பவர்களுடைய தண்டனையும் சித்தரிக்கப்பட்டிருந்தது. (25)

அவர்களை இரக்கத்துடன் பார்த்த இரட்சகர்: “வீடு கட்டுகிறவர்கள் ஆகாதென்று தள்ளின கல்லே மூலைக்குத் தலைக்கல்லாயிற்று, அது கர்த்தராலே ஆயிற்று, அது நம்முடைய கண்களுக்கு ஆச்சரியமாயிருக்கிறது என்று நீங்கள் வேதத்தில் ஒருக்காலும் வாசிக்கவில்லையா? ஆகையால், தேவனுடைய ராஜ்யம் உங்களிடத்திலிருந்து நீக்கப்பட்டு, அதற்கேற்ற கனிகளைத் தருகிற ஜனங்களுக்குக் கொடுக்கப்படும். இந்தக் கல்லின்மேல் விழுகிறவன் நொறுங்கிப்போவான்; இது எவன்மேல் விழுமோ அவனை நசுக்கிப்போடும் என்று நான் உங்களுக்குச் சொல்லுகிறேன்” என்று தொடர்ந்தார். (26)

இந்தத் தீர்க்கதரிசனத்தை யூதர்கள் மேசியாவின் வருகையுடன் பொருத்தி, அடிக்கடி ஜெப ஆலயங்களில் திரும்பத்திரும்பக் கூறியிருந்தனர். யூதஇனத்தின் வாழ்வாதாரத்தின் மூலைக்கல்லாகவும், இரட்சிப்பின் முழுத் திட்டமாகவும் கிறிஸ்து இருந்தார். இஸ்ரவேலரின் ஆசாரியர்களும், அதிபதிகளும், கட்டுபவர்களுமாக இருந்த யூதர்கள், இப்பொழுது அந்த

அஸ்திபாரக் கல்லைப் புறக்கணித்துக்கொண்டிருந்தனர். அவர்களுடைய அபாயத்தை அவர்களுக்குக் காட்டியிருந்த தீர்க்கதரிசனங்களுக்கு இரட்சகர் அவர்களுடைய கவனத்தை ஈர்த்தார். அவர்கள் செய்யவிருந்த செயலின் தன்மையை அவர்களுக்கு வெளிப்படையாக்குவதற்காக அவருடைய வல்லமைக்குள் இருந்த எல்லாவிதமான வழிகளிலும் அவர் வகை தேடியிருந்தார். (27)

அவருடைய வார்த்தைகளில் வேறொரு நோக்கம் இருந்தது. “திராட்சத்தோட்டத்தின் எஜமான் வரும்போது, அந்தத் தோட்டக்காரரை என்ன செய்வான்” என்னும் ஒரு கேள்வியைக் கேட்டதில் பரிசேயர்கள் செய்திருந்ததைப்போல அவர்கள் பதில் கூறவேண்டுமென்று கிறிஸ்து திட்டம் செய்திருந்தார். அவர்கள் தங்களைத் தாங்களே கண்டனத்திற்கு உட்படுத்தவேண்டுமென்று அவர் திட்டஞ்செய்திருந்தார். மனந்திரும்பும்படி அவர்களை எழுப்புவதில் தோல்வியடைந்திருந்த அவருடைய எச்சரிக்கைகள் அவர்களுடைய தண்டனைக்கு முத்திரையிடுமென்பதால், அவர்களுடைய அழிவை அவர்கள்மீது அவர்களாகவே கொண்டுவந்திருந்ததை பார்க்க வேண்டுமென்று அவர் விரும்பினார். அவர்களுடைய தேசிய சலுகைகளை பின்னிழுத்திருந்ததில் இருந்த தேவனுடைய நீதியையும், அது ஏற்கெனவே ஆரம்பமாகியிருந்ததையும், அது அவர்களுடைய தேவாலயத்தின் அழிவில் மட்டுமின்றி, அந்த ஜனம் சிதறிப்போவதில் முடிவடையும் என்பதையும் அவர்களுக்குக் காட்டுவதற்குத் திட்டஞ்செய்திருந்தார். (28)

கேட்டிருந்தவர்கள் அந்த எச்சரிக்கையை இனங்கண்டுகொண்டார்கள். அந்த ஆசாரியர்களும் அதிபதிகளும் தங்களுக்குத் தாங்களே தண்டனையைக் கூறிக்கொண்டதுமட்டுமின்றி, “இவன் சுதந்தரவாளி இவனைக் கொலைசெய்வோம் வாருங்கள்” என்று கூறிக்கொண்டு, அந்தத் சித்தத்தை நிறைவேற்ற ஆயத்தமுமாகியிருந்தனர். ஆனால் அவர்கள் அவர்மீது கைகளை வைக்க வகைதேடினபோது, திரளானவர்களுக்காகப் பயந்தார்கள். ஏனெனில், பொதுமக்களின் பேராதரவு கிறிஸ்துவின் பக்கம் இருந்தது. (29)

தள்ளப்பட்ட கல்லைப்பற்றிய தீர்க்கதரிசனத்தைக் கிறிஸ்து மேற்கோள் காட்டினதில், இஸ்ரவேலரின் வரலாற்றில் இருந்த ஒரு உண்மையான நிகழ்ச்சியைக் குறிப்பிட்டிருந்தார். அந்த நிகழ்ச்சி முதலாவது தேவாலயத்தின் கட்டிடமான வேலையுடன் சம்பந்தப்பட்டிருந்தது. அது கிறிஸ்துவின் முதலாம் வருகையுடன் சிறப்பானவிதத்தில் பொருத்தமுடையதாயிருந்தது. அது யூதர்களை நோக்கி தனிச்சிறப்பானவிதமாக வேண்டுகோள் விடுத்தபோது, நமக்கும் ஒரு பாடத்தை வைத்திருக்கிறது. சாலமோனின்

தேவாலயம் கட்டப்பட்டிருந்தபோது, அதன் சுவர்களுக்கும் அஸ்திபாரத்திற்குமான பெரிய கற்கள் அனைத்தும் கல்லுடைக்கும் பாறையிலேயே ஆயத்தஞ்செய்யப்பட்டிருந்தன. அதற்குப்பின் அந்தக் கற்கள் கட்டிடம் கட்டப்படுகின்ற இடத்திற்கு அவைகளின்மீது எந்தவிதமான கருவியும்படாமல் கொண்டுவரப்பட்டிருந்தன. கட்டிடம்கட்டும் வேலைக்காரர்கள் அவைகளை அந்தந்த இடங்களில் மட்டுமே வைக்கவேண்டியவர்களாயிருந்தனர். அந்த அஸ்திபாரத்தில் பயன்படுத்துவதற்காக அசாதாரணமான அளவையும் உருவத்தையும் உடைய ஒரு கல் கொண்டுவரப்பட்டிருந்தது. ஆனால் வேலைக்காரர்கள் அதற்கு ஒரு இடத்தைக் காணமுடியாதவர்களாகவும், அதை ஏற்றுக்கொள்ளாதவர்களாகவும் இருந்தனர். அது அவர்களுடைய பாதையில் பயன்படாததாகக் கிடந்து, அவர்களுக்கு ஒரு தொல்லையாக இருந்தது. நீண்ட காலமாகப் புறக்கணிக்கப்பட்ட ஒன்றாக, அது அங்கு கிடந்தது. ஆனால் மூலைக்கல்லை வைப்பதற்கு வேலையாட்கள் வந்தபோது, அந்த இடத்திற்குப் போதுமான வடிவத்தையும் பலத்தையுமுடைய, அந்த இடத்தின்மீது உண்டாகக்கூடிய பெரும்பாரத்தைத் தாங்கக்கூடிய ஒரு கல்லிற்காக அதிக நேரம் தேடினர். இந்த முக்கியமான இடத்திற்காக அவர்கள் ஒரு ஞானமற்ற தேர்ந்தெடுத்தலைச் செய்வார்களானால், அந்த முழுக்கட்டிடத்தின் பாதுகாப்பும் ஆபத்துக்குள்ளாகிவிடும். வெயில், பனி, புயல் ஆகியவைகளைத் தடுக்கின்ற தன்மையை உடைய ஒரு கல்லை அவர்கள் காணவேண்டும். பல்வேறு சமயங்களில் பலவிதமான கற்கள் தேர்ந்தெடுக்கப்பட்டன. ஆனால் பெரிய அளவு பாரத்தினால் அவைகள் துண்டுகளாக நொறுங்கிப்போயின. மற்றவைகள் ஆகாயவெளியில் திடீரென்று உண்டாயிருந்த மாறுதலின் பரீட்சையைத் தாங்கமுடியாதவைகளாக இருந்தன. கடைசியில் அவ்வளவு நீண்ட நாட்களாக புறக்கணிக்கப்பட்டிருந்த கல்லின்மீது கவனம் செலுத்தப்பட்டது. அது காற்றுக்கும் வெயிலிற்கும் விட்டுவிடப்பட்டு, சிறு வெடிப்பைக்கூட வெளிக்காட்டாததாக இருந்தது. கட்டுபவர்கள் இந்தக் கல்லைச் சேதித்துப் பார்த்தார்கள். அது ஒரு சோதனையைத்தவிர மற்றெல்லாவற்றையும் தாங்கியிருந்தது. அதனால் கடுமையான அழுத்தசோதனையைத் தாங்கிக்கொள்ள முடியுமானால் அதை மூலைக்கல்லாக ஏற்றுக்கொள்ள அவர்கள் முடிவுசெய்தனர். அந்தச் சோதனை நடத்தப்பட்டது. அந்தக் கல் ஏற்றுக்கொள்ளப்பட்டு, அதற்கான இடத்திற்குக் கொண்டுவரப்பட்டது. அது மிகவும் சரியாகப் பொருந்தியது. அந்தக் கல், கிறிஸ்துவிற்கு ஒரு அடையாளமாக இருந்தது என்று ஏசாயாவிற்கு தீர்க்கதரிசனத்தில் காட்டப்பட்டது. அவன்:– (30)

“சேனைகளின் கர்த்தரையே பரிசுத்தம்பண்ணுங்கள்; அவரே உங்கள் பயமும், அவரே உங்கள் அச்சமுமாயிருப்பாராக. அவர் உங்களுக்குப் பரிசுத்த

ஸ்தலமாயிருப்பார்; ஆகிலும் இஸ்ரவேலின் இரண்டு கோத்திரத்துக்கும் தடுக்கலின் கல்லும், இடறுதலின் கன்மலையும், எருசலேமின் குடிகளுக்குச் சுருக்கும் கண்ணியுமாயிருப்பார். அவர்களில் அநேகர் இடறிவிழுந்து நொறுங்கிச் சிக்குண்டு பிடிபடுவார்கள்.” தரிசனத்திலே முதலாம் வருகைவரை எடுத்துச்செல்லப்பட்ட தீர்க்கதரிசி, கிறிஸ்து சோதனைகளையும் போராட்டங்களையும் தாங்கவேண்டும் என்பதை கண்டார். அதை, சாலமோனின் ஆலயத்தில் மூலையின் தலைக்கல்லுக்கு கொடுக்கப்பட்ட சோதனை அடையாளமாகக் காட்டியிருந்தது. “ஆதலால் கர்த்தராகிய ஆண்டவர் உரைக்கிறதாவது: இதோ, அஸ்திபாரமாக ஒரு கல்லை நான் சீயோனிலே வைக்கிறேன்; அது பரீட்சிக்கப்பட்டதும், விலையேறப்பெற்றதும், திட அஸ்திபாரமுள்ளதுமான மூலைக்கல்லாயிருக்கும், விசுவாசிக்கிறவன் பதறான்” (ஏசாயா 8:13–15; 28:16) என்று கூறுகிறான். (31)

தேவன் அவருடைய எல்லையற்ற ஞானத்தினால் அந்த அஸ்திபாரக் கல்லைத் தெரிந்தெடுத்து, அதைத் தாமாகவே வைத்தார். அதை “ஒரு உறுதியான அஸ்திபாரம்” என்றும் அவர் கூறினார். முழு உலகமும் அவைகளின் கவலைகளையும் வருத்தங்களையும் அதன்மீது வைக்கலாம். அவைகளையெல்லாம் அது தாங்கிக்கொள்ளும். பூரணமான பாதுகாப்புடன் அதன்மீது அவர்கள் கட்டலாம். கிறிஸ்து “பரீட்சிக்கப்பட்ட ஒரு கல்லாக” இருக்கிறார். அவர்மீது நம்பிக்கை வைக்கும் எவரையும் அவர் ஒருபோதும் ஏமாற்றுவதில்லை. அவர் ஒவ்வொரு பரீட்சையையும் தாங்கியிருக்கிறார். ஆதாமின் குற்றத்தையும் அவனுடைய சந்ததியினரின் குற்றபாரத்தையும் அவர் தாங்கியிருந்து, தீமையின் வல்லமைகள் அனைத்தையும்விட, அதிகமான வெற்றிவீரராக வெளிவந்திருக்கிறார். மனந்திரும்புகின்ற ஒவ்வொரு பாவியினாலும் அவர்மீது வைக்கப்பட்டுள்ள பாரங்களை அவர் சுமந்திருக்கிறார். குற்றமுள்ள இருதயம் கிறிஸ்துவிற்குள் இளைப்பாறுதலைக் கண்டிருக்கிறது. அவர் அதிக உறுதியான அஸ்திபாரமாக இருக்கிறார். அவரை முற்றிலுமாக சார்ந்திருப்பவர்கள் அனைவரும் தங்களின் பூரணமான பாதுகாப்பில் இளைப்பாறுதல் அடைகின்றனர். (32)

ஏசாயாவின் தீர்க்கதரிசனத்தில் கிறிஸ்து ஒரு உறுதியான அஸ்திபாரமென்றும் இடறுதற்கான கல் என்றும் அறிவிக்கப்படுகிறார். அப்போஸ்தலனாகிய பேதுரு பரிசுத்த ஆவியின் ஏவுதலினால் கிறிஸ்து எவர்களுக்கு அஸ்திபாரமாகிய கல்லாகவும் இடறுதற்கேதுவான கன்மலையாகவும் இருக்கிறார் என்று தெளிவாகக் காட்டுகிறான். (33)

“நீங்கள் வளரும்படி, புதிதாய்ப் பிறந்த குழந்தைகளைப்போல, திருவசனமாகிய களங்கமில்லாத ஞானப்பாலின்மேல் வாஞ்சையாயிருங்கள்.

மனுஷரால் தள்ளப்பட்டதாயினும், தேவனால் தெரிந்துகொள்ளப்பட்டதும் விலையேறப்பெற்றதுமாயிருக்கிற ஜீவனுள்ள கல்லாகிய அவரிடத்தில் சேர்ந்தவர்களாகிய நீங்களும், ஜீவனுள்ள கற்களைப்போல ஆவிக்கேற்ற மாளிகையாகவும், இயேசுகிறிஸ்து மூலமாய்த் தேவனுக்குப் பிரியமான ஆவிக்கேற்ற பலிகளைச் செலுத்தும்படிக்குப் பரிசுத்தஆசாரியக்கூட்டமாகவும் கட்டப்பட்டுவருகிறீர்கள். அந்தப்படியே: இதோ, தெரிந்துகொள்ளப்பட்டதும் விலையேறப்பெற்றதுமாயிருக்கிற மூலைக்கல்லை சீயோனில் வைக்கிறேன்; அதின்மேல் விசுவாசமாயிருக்கிறவன் வெட்கப்படுவதில்லை என்று வேதத்திலே சொல்லியிருக்கிறது. ஆகையால் விசுவாசிக்கிற உங்களுக்கு அது விலையேறப்பெற்றது; கீழ்ப்படியாமலிருக்கிறவர்களுக்கோ வீட்டைக் கட்டுகிறவர்களால் தள்ளப்பட்ட பிரதான மூலைக்கல்லாகிய அந்தக் கல் இடறுதற்கேதுவான கல்லும் விழுதற்கேதுவான கன்மலையுமாயிற்று; அவர்கள் திருவசனத்திற்குக் கீழ்ப்படியாதவர்களாயிருந்து இடறுகிறார்கள்; அதற்கென்றே நியமிக்கப்பட்டவர்களாயும் இருக்கிறார்கள்”–1 பேதுரு 2:3–8. (34)

விசுவாசிக்கிறவர்களுக்கு கிறிஸ்து அதிக உறுதியான அஸ்திபாரமாயிருக்கிறார். இவர்கள்தான் அந்தப் பாறையின்மீது விழுந்து நொறுங்கிப்போகிறவர்களாக இருக்கின்றனர். கிறிஸ்துவிற்குக் கீழ்ப்படிதலும், அவர்மீதுள்ள விசுவாசமும் இங்கு எடுத்துக்காட்டப்பட்டுள்ளது. அந்தப் பாறையின்மீது விழுந்து நொறுக்கப்படுவது என்பது சுயநீதியை விட்டுவிடுவதும், ஒரு சிறுபிள்ளையின் தாழ்மையுடன் கிறிஸ்துவிடம் செல்லுவதும், நமது மீறுதலுக்காக மனம்வருந்துவதும், மன்னிக்கும் அன்பின்மீது நம்பிக்கை வைப்பதுமாக உள்ளது. அதைப்போலவே, விசுவாசத்தினாலும் கீழ்ப்படிதலினாலும் நமது அஸ்திபாரமாக இருக்கும் கிறிஸ்துவின்மீது நாம் கட்டுகிறோம். (35)

ஜீவனுள்ள இந்தக் கல்லின்மீது யூதர்களும் புறஜாதியினரும் ஒரேவிதமாகக் கட்டலாம். அது எல்லாருக்கும் போதுமான அளவிற்கு அகலம் உள்ளதாகவும், உலகம் முழுவதின் கனத்தையும் பாரத்தையும் தாங்குவதற்குப் போதுமான பலமுள்ளதாகவும் இருக்கிறது. நாம் பாதுகாப்புடன் கட்டக்கூடிய ஒரே அஸ்திபாரமாக அது ஒன்றுமட்டுமே உள்ளது. ஜீவனுள்ள கல்லாகிய கிறிஸ்துவுடன் பிணைக்கப்படுவதினால் அந்த அஸ்திபாரத்தின்மேல் கட்டும் அனைவரும் ஜீவனுள்ள கற்களாகின்றனர். அநேகர் தங்களுடைய சுயமுயற்சியினால் கற்களாகிய தங்களைச் செதுக்கவும், மெருகூட்டவும், அழகுபடுத்தவும் முயலுகின்றனர். ஆனால் அவர்கள் கிறிஸ்துவுடன் பிணைக்கப்படாமலிருப்பதினால் அவர்களால் ஜீவனுள்ள கற்களாக

முடியாது. இந்தப் பிணைப்பு இல்லாமல், ஒரு மனிதனாலும் இரட்சிக்கப்பட முடியாது. கிறிஸ்துவின் ஜீவன் நம்மில் இல்லாமல், சோதனைகளாகிய புயல்களை எதிர்த்து நம்மால் நிற்கமுடியாது. நமது நித்திய பாதுகாப்பு, உறுதியான அஸ்திபாரத்தின்மீது நம்மை நாம் கட்டுவதைச் சார்ந்துள்ளது. இன்று திரளானவர்கள் பரீட்சிக்கப்படாமலிருக்கும் அஸ்திபாரங்களின்மீது கட்டுகின்றனர். பெருமழை பெய்யும்போது, புயல்காற்று சீறும்போது, பெருவெள்ளம் வரும்போது, அவர்களது வீடு நித்திய கன்மலையின்மீது—மூலைக்குத் தலைக்கல்லாகிய கிறிஸ்துவின்மீது கட்டப்படாமலிருப்பதினால் விழுந்துவிடும். (36)

"திருவசனத்திற்கு கீழ்ப்படியாதிருப்பவர்களுக்கு" கிறிஸ்து இடறுதற்கேதுவான கல்லாக இருக்கிறார். ஆனால், "வீடு கட்டுகிறவர்கள் ஆகாதென்று தள்ளினகல்லே மூலைக்குத் தலைக்கல்லாயிற்று." கிறிஸ்து அவருடைய பூமிக்குரிய ஊழியத்தில் ஆகாதென்று தள்ளப்பட்ட கல்லைப்போல, அலட்சியத்தையும் தகாதவைகளையும் தாங்கியிருந்தார். "அவர் அசட்டைபண்ணப்பட்டவரும், மனுஷரால் புறக்கணிக்கப்பட்டவரும், துக்கம் நிறைந்தவரும், பாடு அநுபவித்தவருமாயிருந்தார்"—ஏசாயா 53:3; ஆனால் அவர் மகிமைப்படுத்தப்படவேண்டிய நேரம் சமீபித்துக் கொண்டிருந்தது. "மரித்தோரிலிருந்து உயிர்த்தெழுந்ததினாலே, பலமாய் ரூபிக்கப்பட்ட தேவகுமாரனுமாயிருக்கிறார்"—ரோமர் 1:5. அவருடைய இரண்டாம் வருகையின்போது, அவர் பரலோகத்திற்கும் பூமிக்கும் ஆண்டவர் என்று வெளிப்படுத்தப்படுவார். இப்பொழுது அவரைச் சிலுவையில் அறைய இருப்பவர்கள் அவருடைய மகத்துவத்தை இனங்கண்டுகொள்ள வேண்டும். ஆகாதென்று தள்ளப்பட்ட அந்தக் கல், பிரபஞ்சத்திற்குமுன் மூலைக்குத் தலைக்கல்லாகும். (37)

"இது எவன்மேல் விழுமோ அவனை நசுக்கிப்போடும்." கிறிஸ்துவைப் புறக்கணித்த மக்கள் விரைவில் அவர்களுடைய நகரமும், அவர்களுடைய தேசமும் அழிந்திருப்பதைக் காணவேண்டியவர்களாக இருந்தனர். காற்றிற்கு முன்னாலுள்ள தூசியைப்போல அவர்களுடைய மகிமை உடைக்கப்பட்டுச் சிதறடிக்கப்படும். யூதர்களை அழித்தது, எது? எந்த ஒரு கல்லின்மீது கட்டியிருந்திருந்தால் அவர்களுக்குப் பாதுகாப்பு இருந்திருக்குமோ, அந்தக் கல் அதுவாக இருந்தது. அது அவர்கள் அவமதித்திருந்த அவருடைய நல்ல தன்மை, அவர்கள் வெறுத்துத் தள்ளியிருந்த அவருடைய நீதி, அலட்சியப்படுத்திய அவருடைய இரக்கம் ஆகியவைகளாக இருக்கிறது. மனிதர்கள் தேவனுக்கு எதிராகத் தங்களைத் தாங்களே நிலைப்படுத்திக்கொள்கிறார்கள். அவர்களுடைய இரட்சிப்பிற்காக

இருந்த அனைத்தும் அவர்களுடைய அழிவிற்கென்று திரும்பின. தேவன் அவர்களுடைய ஜீவனுக்கென்று ஏற்படுத்தியிருந்த அனைத்தையும் சாவிற்கேதுவானதாக அவர்கள் கண்டார்கள். எருசலேமின் அழிவு, யூதர்கள் கிறிஸ்துவைச் சிலுவையில் அறைந்ததுடன் சம்பந்தப்பட்டதாக இருந்தது. கல்வாரியில் சிந்தப்பட்ட இரத்தம், இந்த உலகத்திலும் வரப்போகின்ற உலகத்திலும் அவர்களை அழிவிற்குள் அமிழ்த்தக்கூடிய பாரமாக இருந்தது. தேவ கிருபையைப் புறக்கணிப்பவர்களின்மீது கடைசி நாளில் விழவிருக்கின்ற நியாயத்தீர்ப்பும் அப்படிப்பட்டதாகவே இருக்கும். அப்பொழுது அவர்களுக்கு இடறுதற்கேதுவான கன்மலையாயிருக்கும் கிறிஸ்து ஒரு பழிவாங்கும் மலையாக இருப்பார். நீதிமான்களுக்கு ஜீவனாக இருக்கக்கூடிய அவருடைய முகத்தின் மகிமை, துன்மார்க்கருக்கு அவர்களை சுட்டெரிக்கும் அக்கினியாக இருக்கும். அன்பு புறக்கணிக்கப்பட்டதினால், கிருபை அவமதிக்கப்பட்டதினால், பாவி அழிக்கப்படுவான். (38)

தேவகுமாரனைப் புறக்கணிப்பதினால் உண்டாகக்கூடிய விளைவு என்னவாக இருக்கும் என்பதை, அநேக உதாரணங்களினாலும் எச்சரிக்கை களினாலும் இயேசு யூதர்களுக்கு மீண்டும் மீண்டும் எடுத்துக்காட்டினார். காலங்கள் நெடுகிலும், அவரை மீட்பராக ஏற்றுக்கொள்ள மறுக்கும் அனைவரிடத்திலும், இந்த வார்த்தைகளினால் அவர் பேசியிருந்தார். ஒவ்வொரு எச்சரிக்கையும் அவர்களுக்குரியதாக இருக்கிறது. பரிசுத்தக் குலைச்சலாக்கப்பட்ட ஆலயம், கீழ்ப்படியாத குமாரன், தவறான தோட்டக்காரர்கள், கர்வங்கொண்ட கட்டுபவர்கள் ஆகியவை ஒவ்வொரு பாவியினிடத்திலுமுள்ள அனுபவத்தை ஒத்ததாக இருக்கின்றன. அந்த நபர் மனந்திரும்பாவிட்டால், நிழலாக ஏற்கெனவே கூறப்பட்ட அழிவு, அந்த நபருடையதாக இருக்கும். (39) ★

# 66

# எதிர்வாதம்!

**மத்தேயு 22:15–46; மாற்கு 12:13–40; லூக்கா 20:20–47**

**(The Desire of Ages, pp. 601–609)**

கிறிஸ்துவின் கூர்மையான கடிந்துகொள்ளுதல்களை ஆசாரியர்களும் அதிபதிகளும் மௌனமாகக் கவனித்திருந்தனர். அவருடைய குற்றச்சாட்டுகளை அவர்களால் மறுக்கமுடியவில்லை. ஆனால் அவரைச் சிக்கவைப்பதற்கு அவர்கள் அதிகமான தீர்மானமுடையவர்களாக, அந்த நோக்கத்துடன், அவருடைய வார்த்தைகளால் அவரை ஆளுநரின் வல்லமைக்குள்ளும் அதிகாரத்திற்குள்ளும் ஒப்படைப்பதற்காக, தங்களை நீதிமான்களைப்போல பாசாங்குகாட்டுகின்ற வேவுகாரர்களை அவரிடத்திற்கு அனுப்பிவைத்தார்கள். இயேசுவை அடிக்கடிச் சந்தித்திருந்த வயதான பரிசேயர்களை அவரிடத்திற்கு அனுப்பாமல், ஆர்வமும் வைராக்கியமுமுள்ள வாலிபர்களை, கிறிஸ்து அறியாதவர்கள் என்று நினைத்து அனுப்பினார்கள். கிறிஸ்துவின் வார்த்தைகளைக்கேட்டு, அவர்மீதான விசாரணையின்போது, அவருக்கெதிராகச் சாட்சிகூறக்கூடிய குறிப்பட்ட சில ஏரோதியர்களையும் அவர்களுடன் செல்லும்படி அனுப்பியிருந்தனர். பரிசேயர்களும் ஏரோதியர்களும் ஒருவருக்கொருவர் கசப்புமிக்க எதிரிகளாக இருந்திருந்தனர். ஆனால் இப்பொழுது அவர்கள் கிறிஸ்துவிற்கு எதிரிகளாவதில் ஒருமித்திருந்தனர். (1)

ரோமர்களுக்கு வரிசெலுத்துவதில் பரிசேயர்கள் எப்பொழுதும் எரிச்சலுள்ளவர்களாக இருந்திருந்தனர். வரிகொடுப்பது தேவனுடைய பிரமாணத்திற்கு எதிரானது என்று அவர்கள் வலியுறுத்திக்கொண்டிருந்தனர். இப்பொழுது, இயேசுவிற்கு எதிராக கண்ணிவைப்பதற்கான ஒரு வாய்ப்பை அவர்கள் கண்டனர். வெளிப்படையாகக் காணப்படுகின்றதுபோன்ற உண்மையுடனும் அவர்களுடைய கடமையை அறிந்துகொள்ளுகின்ற வாஞ்சை உடையவர்கள்போலவும் வேவுகாரர்கள் அவரிடம் வந்து: “போதகரே, நீர் சத்தியமுள்ளவரென்றும், தேவனுடைய மார்க்கத்தைச் சத்தியமாய்ப் போதிக்கிறவரென்றும், நீர் முகதாட்சிணியம் இல்லாதவராகையால் எவனைக்

குறித்தும் உமக்குக் கவலையில்லையென்றும் அறிந்திருக்கிறோம். ஆதலால், உமக்கு எப்படித் தோன்றுகிறது? இராயனுக்கு வரிகொடுக்கிறது நியாயமோ, அல்லவோ? அதை எங்களுக்குச் சொல்லும்" என்று கேட்டார்கள். (2)

"நீர் சத்தியமுள்ளவரென்றும், தேவனுடைய மார்க்கத்தைச் சத்தியமாய்ப் போதிக்கிறவரென்றும் ... அறிந்திருக்கிறோம்" என்னும் அவர்களுடைய வார்த்தைகள் உண்மையானவைகளாக இருந்திருந்தால், அவை ஒரு ஆச்சரியமான ஏற்றுக்கொள்ளுதலாக இருந்திருக்கும். ஆனால் வஞ்சிப்பதற்காக அவைகள் பேசப்பட்டிருந்தன. ஆயினும், அவர்களுடைய சாட்சி உண்மையானதாக இருந்தது. கிறிஸ்து சரியானவிதமாகப் பேசவும் போதிக்கவும் செய்தார் என்பதைப் பரிசேயர்கள் அறிந்திருந்தனர். அவர்களின் சொந்த சாட்சியினால் அவர்கள் நியாயந்தீர்க்கப்படுவார்கள். (3)

இயேசுவைக் கேள்வி கேட்டவர்கள் அவர்களுடைய நோக்கத்தைப் போதுமான அளவிற்கு மறைத்திருப்பதாக நினைத்திருந்தனர். ஆனால் ஒரு திறந்த புத்தகத்தைப்போல இயேசு அவர்களுடைய இருதயங்களை வாசித்து, அவர்களுடைய மாய்மாலத்தை வெளிப்படுத்தினார். "மாயக்காரரே, நீங்கள் என்னை ஏன் சோதிக்கிறீர்கள்?" என்று அவர் கூறினார். இவ்விதமாக, அவர்கள்கேட்காத ஒரு அடையாளத்தை அவர்களுக்குக் கொடுத்ததினால் மறைத்து வைத்திருந்த அவர்களுடைய நோக்கத்தை அவர் வாசித்திருந்தார். "வரிக்காசை எனக்குக் காண்பியுங்கள்" என்று அவர் தொடர்ந்து கூறினபோது, அவர்கள் இன்னும் அதிகமாக குழப்பமடைந்தார்கள். அவர்கள் அதைக் கொண்டுவந்தார்கள். "இந்தச் சுரூபமும் மேலெழுத்தும் யாருடையது" என்று கேட்டார். அவர்கள்: "இராயனுடையது" என்று பதில் கூறினார்கள். "அப்படியானால், இராயனுடையதை இராயனுக்கும், தேவனுடையதை தேவனுக்கும் செலுத்துங்கள்" என்றார். (4)

இயேசு நேரடியாக ஏதாவதொரு வழியாக இப்படியாக அல்லது அப்படியாக பதில் கூறுவார் என்று வேவுகாரர்கள் எதிர்பார்த்தார்கள். அவர் இராயனுக்கு வரிசெலுத்துவது நியாயப்பிரமாணத்தின்படி சரியல்ல என்று கூறுவாரானால், கலகத்தைத் தூண்டிவிடுகிறார் என்று ரோமர்களின் அதிகாரிகளுக்கு அறிவிக்கப்பட்டு கைதுசெய்யப்படுவார்; வரி செலுத்துவது நியாயந்தான் என்று கூறுவாரானால், தேவனுடைய நியாயப்பிரமாணத்தை எதிர்க்கிறார் என்று அவர்மீது மக்களிடம் குற்றஞ்சாட்டலாமென்று அவர்கள் திட்டஞ்செய்திருந்தனர். இப்பொழுது தாங்களே தடுமாறித் தோல்வியடைந்திருப்பதை உணர்ந்தனர். அவர்களுடைய திட்டங்கள் கலைக்கப்பட்டிருந்தன. அவர்களுடைய கேள்விக்கு முடிவுகட்டப்பட்டவிதம் மேற்கொண்டு எதையும் கூறமுடியாதபடிச் செய்தது. (5)

கிறிஸ்துவின் பதில் நழுவுகின்ற ஒன்றாக இல்லாமல், அவர்களுடைய கேள்விக்கான யதார்த்தமான பதிலாக இருந்தது. அவர்கள் ரோமர்களின் பாதுகாப்பின்கீழ் வாழ்ந்துகொண்டிருந்ததினால், அது உரிமைபாராட்டியிருந்த வல்லமைக்கு அதைவிட மேலான கடமையுடன் முரண்படாதவரைக் கீழ்ப்படியவேண்டும் என்று அவர் தமது கரத்தில் இராயனுடைய பெயரும் சொரூபமும் பொறிக்கப்பட்டிருந்த ஒரு நாணயத்தைப் பிடித்துக்கொண்டு அறிவித்தார். ஆனால் தேசத்தின் சட்டங்களுக்கு அமைதியானவிதமாகக் கீழ்ப்பட்டிருக்கின்றபோது, அவர்களனைவரும் முதலில் எல்லா நேரங்களிலும் தேவனுடனுள்ள உத்தம விசுவாசத்தைக் காட்டவேண்டும். (6)

சதியாலோசனை செய்துகொண்டிருந்த யூதர்களுக்கு, "தேவனுடையதை தேவனுக்கும் செலுத்துங்கள்" என்ற இரட்சகரின் வார்த்தைகள் கடுமையான கடிந்துகொள்ளுதலாக இருந்தது. தேவனுக்கு செய்யவேண்டிய கடமைகளை அவர்கள் விசுவாசத்துடன் நிறைவேற்றி இருந்தார்களானால் ஒரு அந்நிய வல்லமைக்குக் கீழ்ப்பட்டிருக்கின்ற உடைந்த தேசமாக அவர்களுடைய நாடு இருந்திருக்காது. ரோம நாட்டின் கொடி எதுவும் எருசலேமின்மீது பறந்திருக்காது. ரோம நாட்டின் ஒரு காவலாளனும் அவளது வாசல்களில் நின்றிருந்திருக்கமாட்டான். அவளுடைய மதில்களுக்குள் ரோம நாட்டின் ஒரு ஆளுநரும் ஆளுகை செய்திருந்திருக்கமாட்டான். தேவனிடத்திலிருந்து விழுந்துபோன மருளவிழுகையின் தண்டனையை அப்பொழுது யூத தேசம் அனுபவித்துக்கொண்டிருந்தது, (7)

பரிசேயர்கள் "அதைக்கேட்டு ஆச்சரியப்பட்டு அவரை விட்டுப் போய்விட்டார்கள்." அவர்களுடைய மாய்மாலத்தையும் துணிகரத்தையும் அவர் கடிந்துகொண்டிருந்தார். அதைச் செய்ததினால் சமுக அரசாங்கத்திற்கு மனிதன் ஆற்றவேண்டிய கடமை, தேவனிடமுள்ள அவனுடைய கடமை ஆகியவைகளின் ஒரு பெரும் அடிப்பகைக் கொள்கையை மிகத்தெளிவாக விளக்கும் ஒரு எல்லையை விவரித்திருந்தார். அநேக மனங்களில் தொல்லையை உண்டுபண்ணிக்கொண்டிருந்த ஒரு கேள்விக்குத் தீர்வு காணப்பட்டிருந்தது. அதற்குப்பின் எப்பொழுதும் அவர்கள் சரியான அடிப்படைக்கொள்கையைப் பின்பற்றியிருந்தனர். அதிருப்தியோடு அநேகர் சென்றிருந்தபோதிலும், அந்தக் கேள்விக்கடியில் இருந்த அடிப்படைக்கொள்கை தெளிவாக முன்வைக்கப்பட்டிருந்ததை அவர்கள் கண்டு, இயேசுவின் தொலைநோக்கு அறிவுக்கூர்மையில் ஆச்சரியமடைந்தனர். (8)

பரிசேயர்கள் மௌனப்படுத்தப்பட்டபின் விரைவில் சதுசேயர்கள் அவர்களுடைய தந்திரமான கேள்விகளுடன் முன்வந்தனர். இந்த இரு கட்சியினரும் ஒருவருக்கொருவர் கசப்புமிக்க எதிர்ப்பைக் கொண்டிருந்தனர்.

பாரம்பரியங்களை வளையாமல் பற்றிக்கொள்ளுபவர்களாகப் பரிசேயர்கள் இருந்திருந்தனர். வெளிப்படையாக உள்ள சடங்குகள், கழுவுதல்களில் விழிப்புணர்வு, உபவாசங்கள், நீண்ட ஜெபங்கள், தானம் செய்வதில் காட்டப்பட்டிருந்த பெரிய விளம்பரங்கள் ஆகியவைகளை அவர்கள் மிகவும் சரியாகக் கடைப்பிடித்திருந்தனர். ஆனால் அவர்கள் மனிதர்களுடைய கற்பனைகளை வீணாகப் போதித்து, தேவப்பிரமாணத்தில் உள்ளவைகளை விட்டுவிட்டிருந்தார்கள் என்று கிறிஸ்து அறிவித்தார். மதவிரோதமும் மாயக்காரத்தன்மையுமிக்க ஒரு வகுப்பினராக அவர்கள் இருந்தனர். ஆயினும், கிறிஸ்துவின் போதனைகளை ஏற்றுக்கொண்டு, அவருக்குச் சீடர்களாகியிருந்த அநேகர் அவர்களுக்கு மத்தியில் இருந்திருந்தனர். அவர்கள் உண்மையான பக்தியுள்ளவர்களாக இருந்திருந்தனர். சதுசேயர்கள் பரிசேயர்களின் பாரம்பரியங்களை புறக்கணித்திருந்தனர். வேதவாக்கியங்களின் பெரும் பகுதிகளை நம்புபவர்கள்போல அவர்கள் கூறிக்கொண்டு, அவைகளைச் செயல்களின் சட்டமாகக் கருதியிருப்பதாகவும் கூறிக்கொண்டிருந்து, ஆனால் நடைமுறையில் கடவுள் இல்லை என்பவர்களாகவும், உலக ஆதாயத்தை விரும்புகிறவர்களாகவுமிருந்தனர். (9)

தூதர்கள், மரித்தோரின் உயிர்த்தெழுதல், எதிர்கால வாழ்க்கை பற்றிய கொள்கை, அதன் பலன்கள், தண்டனைகள் ஆகிய கோட்பாடுகள் அனைத்திலும் சதுசேயர்கள் நம்பிக்கை வைக்கவில்லை. இந்தக் காரியங்கள் அனைத்திலும் அவர்கள் பரிசேயர்களிலிருந்து வேறுபட்டிருந்தனர். இந்த இரண்டு கட்சிகளுக்கிடையிலும் உயிர்த்தெழுதல் என்பது ஒரு விசேஷ மான எதிர்வாத விஷயமாக இருந்தது. பரிசேயர்கள் உயிர்த்தெழுதலின்மீது உறுதியான நம்பிக்கையுள்ளவர்களாக இருந்தாலும், இந்த விவாதங்களில் எதிர்கால நிலைமைபற்றிய அவர்களுடைய பார்வைகள் குழப்பமிக்கவைகளாக இருந்தன. மரணம் அவர்களுக்குத் தெளிவுபடுத்தப்படமுடியாத ஒரு இரகசியமாயிருந்தது. சதுசேயர்களின் வாதங்களைச் சந்திக்கமுடியாமலிருந்த அவர்களுடைய தொடர்ச்சியான திறமையின்மை, தொடர்ச்சியான எரிச்சலை எழுப்பிக்கொண்டிருந்தது. இந்த இரண்டு கட்சியினருக்கும் இடையில் இருந்த விவாதங்கள் வழக்கமாக முன்பிருந்ததைவிட அதிகமாக விலகிச் செல்லக்கூடிய கோபமிக்க வாதங்களை ஏற்படுத்தியிருந்தது. (10)

எண்ணிக்கையில் சதுசேயர்கள் அவர்களின் எதிரிகளைவிட மிகவும் குறைவானவர்களாக இருந்து, பொதுமக்களின்மீது பலமிக்க பிடியில்லாதவர்களாக இருந்தனர். ஆனால் அவர்களில் அநேகர் செல்வந்தர்களாக செல்வாக்குகளை கொண்டிருந்திருந்தனர். ஆசாரியர்களில் அதிகமானவர்கள் அவர்களுடைய அணியில் இருந்ததுடன், வழக்கமாகப்

பிரதான ஆசாரியன் அவர்களுக்கு மத்தியிலிருந்து தேர்ந்தெடுக்கப்பட்டிருந்தான். அப்படியிருந்தபோதும், அவர்களுடைய சந்தேகவாதக் கருத்துக்களை ஆதரிக்கின்ற கொள்கையை முன்வைக்கக்கூடாது என்னும் வெளிப்படையான நிபந்தனையுடன் அது செய்யப்பட்டிருந்தது. பரிசேயர்களின் எண்ணிக்கை, புகழின் காரணமாக, அவர்களுடைய கோட்பாடுகளுக்கு வெளிப்படையாக இணங்கவேண்டியது, ஆசரியப் பதவியில் இருந்த சதுசேயர்களுக்கு அவசியமாக இருந்தது; ஆனால் அப்படிப்பட்ட பதவிகளுக்கு அவர்கள் தகுதி உள்ளவர்களாக இருந்தனர் என்னும் காரணம் அவர்களுடைய தவறுகளுக்குச் செல்வாக்கைக் கொடுத்திருந்தது. (11)

சதுசேயர்கள் இயேசுவின் போதனைகளைப் புறக்கணித்தார்கள். ஒரு ஆவியின் வெளிக்காட்டுதலினால் இயேசு இயக்கப்பட்டுக்கொண்டிருந்தார் என்று அவர்கள் கருதினாலும், தேவனைப்பற்றியும் எதிர்கால வாழ்க்கையைப்பற்றியுமுள்ள அவருடைய போதனைகள் தங்களுடைய கொள்கை விளக்கங்களுடன் முரண்பட்டதினால், சதுசேயர்கள் இயேசுவின் போதனைகளைப் புறக்கணித்தனர். மனிதனைவிட மேலானவராக இருப்பவர் தேவன் ஒருவர் மட்டுமே என்று அவர்கள் நம்பினார்கள் . ஆனால் எதையும் மேற்கொள்ளக்கூடிய தெய்வீக ஏற்பாடும், தெய்வீக எதிர்காலப் பார்வையும் மனிதனுடைய சன்மார்க்க சுதந்திரத்தன்மையை எடுத்து, அவனை ஒரு அடிமை என்னும் நிலைக்குத் தாழ்த்திவிடுகிறது என்று அவர்கள் வாதஞ்செய்திருந்தனர். தேவன் மனிதனைப் படைத்தபின், மேலான செல்வாக்கு இல்லாதவனாக அவனைத் தன்போக்கிற்கே விட்டுவிட்டார் என்பது அவர்களுடைய நம்பிக்கையாக இருந்தது. தனது சொந்த வாழ்க்கையைக் கட்டுப்படுத்தவும், உலகத்தின் நிகழ்வுகளை உருப்படுத்தவும் மனிதன் சுதந்திரமுடையவனாக இருக்கிறான் என்றும், அவனுடைய வாழ்வும் முடிவும் அவன் சொந்தக் கைகளில் இருக்கிறதென்றும் அவர்கள் கருதியிருந்தனர். மனித முயற்சிகளின்மூலமாகவோ அல்லது இயற்கையின் ஊடகங்களின்மூலமாகவோ, தேவனுடைய ஆவி செயலாற்றுகிறது என்பதை அவர்கள் மறுத்திருந்தனர். ஆயினும், அவனுடைய இயற்கையான வல்லமைகளைச் சரியானவிதத்தில் செயல்படுத்துவதினாலும், கடினமாக நெறிவழுவாத நடத்தைகளினாலும், மனிதன் உயர்த்தப்பட்டவனாகவும் அறிவூட்டப்பட்டவனாகவும் ஆகமுடியும் என்றும், அவனுடைய வாழ்க்கை தூய்மைப்படுத்தப்படமுடியும் என்றும் தொடர்ந்து நம்பினார்கள். (12)

தேவனைப்பற்றிய அவர்களுடைய எண்ணங்கள் அவர்களுடைய சொந்த கனத்தை வனைந்தன. அவர்களுடைய பார்வையில் தேவன் மனிதர்களுடைய காரியங்களில் அக்கறையில்லாதவர் என்பதைப்போல

எண்ணியிருந்ததினால். அவர்களும் பிறர்மீது அக்கறை இல்லாதவர்களாக இருந்தார்கள். எனவே அவர்களுக்கிடையில் ஒற்றுமை இல்லாமலிருந்தது. மனித செயலின்மீதிருந்த பரிசுத்த ஆவியின் செல்வாக்கை ஒப்புக்கொள்ள மறுத்திருந்த அவர்கள், தங்களுடைய வாழ்க்கையில் அவருடைய வல்லமையை இழந்திருந்தனர். மற்ற யூதர்களைப்போலவே அவர்களும் நாங்கள் ஆபிரகாமின் பிள்ளைகள் என்னும் பிறப்புரிமையைப்பற்றியும் நியாயப்பிரமாணம் கோருகின்ற அவசியங்களைக் கண்டிப்புடன் கடைப் பிடிப்பதைப்பற்றியும் பெருமைபாராட்டிக்கொண்டிருந்தார்கள். ஆனால் நியாயப்பிரமாணத்தின் உண்மையான ஆவியும் ஆபிரகாமிடமிருந்த விசுவாசமும் இரக்க மனப்பாங்கும் இல்லாதிருந்தார்கள். அவர்களுடைய இயற்கையான அனுதாபங்கள் ஒரு குறுகிய வட்டத்திற்குள் கொண்டுவரப் பட்டிருந்தன. வாழ்க்கையின் சௌகரியங்களையும் ஆசீர்வாதங்களையும் எல்லாராலும் அடைந்துகொள்ளமுடியும் என்று அவர்கள் நம்பியிருந்தனர். மற்றவர்களின் தேவைகளினாலும் பாடுகளினாலும் அவர்களுடைய இருதயங்கள் தொடப்படாதவைகளாக இருந்தன. அவர்கள் தங்களுக்கென்றே வாழ்ந்துகொண்டிருந்தனர். (13)

இயற்கைக்கும்மேலான பலன்களை உண்டுபண்ணுகின்ற ஒரு வல்லமை இருக்கிறது என்பதற்கும், நிகழ்காலத்திற்கும் அப்பால் ஒரு எதிர்கால வாழ்க்கை இருக்கிறது என்பதற்கும், மனிதப் பிள்ளைகளின் ஒரு தகப்பனாக இருந்து, அவர்களுடைய உண்மையுள்ள காரியங்களில் எப்பொழுதும் கவனஞ்செலுத்தும் ஒரு தேவன் இருக்கிறார் என்பதற்கும், கிறிஸ்து அவருடைய வார்த்தைகளினாலும் செயல்களினாலும் சாட்சி பகர்ந்தார். சதுசேயர்களின் சுயநலமிக்க தனித்தன்மையைக் கடிந்துகொள்ளுகின்றதாக அது இருந்து, இரக்கத்துடனும் மனஉருக்கத்துடனும் செயலாற்றிக்கொண்டிருக்கும் தெய்வீக வல்லமையை அவர் வெளிப்படுத்தினார். மனிதனின் இந்த உலகத்திற்குரியதும் நித்தியத்திற்குரியதுமான நன்மைக்காக பரிசுத்த ஆவியினால் தேவன் மனிதர்களின் இருதயத்தின்மீது அசைவாடுகிறார் என்று அவர் போதித்தார். மனிதனுடைய குணத்தில் தேவ ஆவியினால் மட்டுமே மாறுதலைக் கொண்டுவரமுடியும் என்பதை நம்பாமல், மனித வல்லமையின்மீது நம்பிக்கை வைப்பதிலுள்ள தவறை அவர் எடுத்துக்காட்டினார். (14)

சதுசேயர்கள் மேற்கூறப்பட்ட போதனையை மதிக்காமலிருக்கின்ற தீர்மானமுடையவர்களாக இருந்தனர். இயேசுவுடன் ஒரு எதிர்வாதம் செய்யத் தேடுவதினால் அவர்மீதான தண்டனையை அவர்களால் பெற்றுக்கொடுக்க முடியாமற்போனாலும், அவரது புகழுக்கு இழுக்கைக் கொண்டுவர முடியும் என்பதில் அவர்கள் நம்பிக்கைகொண்டிருந்தனர். அவரிடம் கேள்விகேட்க

அவர்கள் தெரிந்துகொண்டிருந்த விஷயம் உயிர்த்தெழுதல்பற்றியதாக இருந்தது. அவர் அவர்களோடு ஒத்துப்போவாரானால், பரிசேயர்களுக்கு இன்னும் அதிகமான எதிர்ப்பைக் கொடுப்பார். அவர்களிடமிருந்து வித்தியாசப்படுவாரானால் அவருடைய போதனை பரிகாசத்திற்குரியது என்று கூற அவர்கள் திட்டமிட்டிருந்தனர். (15)

அழிவிற்குரியதாகிய இந்த சரீரம் அதன் அழியாமையின்போது, அதே அழிவிற்குரிய பொருட்களை உடையதாக இருக்குமானால், மரித்தோரி லிருந்து எழுப்பப்படும்போது அது மாம்சத்தையும் இரத்தத்தையும் கொண்டிருக்க வேண்டும் என்றும், பூமியின்மீது தடை செய்யப்பட்ட உயிரைத் திரும்ப நித்திய உலகத்தில் கொண்டிருக்கவேண்டும் என்றும் அவர்கள் காரணம் கண்டார்கள். அப்படியாகுமானால், பூமிக்குரிய உறவுகள் மீண்டும் தொடரப்படும். கணவனும் மனைவியும் திரும்பவும் ஒன்றுசேருவார்கள். திருமணம் நடைபெறும். அத்துடன் எல்லாக் காரியங்களும் மரணத்திற்கு முன்னிருந்த அதேவிதமாகவே செல்லும் என்றும், இந்த வாழ்க்கையில் உள்ள குற்றங்களும் குறைபாடுகளும் வெறிகளும் இந்த வாழ்க்கைக்கு அப்பாலும் தொடரும் என்றும் அவர்கள் முடிவுசெய்தனர். (16)

அவர்களுடைய கேள்விக்குப் பதிலாக, எதிர்காலத்தின் திரையை இயேசு உயர்த்தினார். “உயிர்த்தெழுதலில் கொள்வனையும் கொடுப்பனையும் இல்லை; அவர்கள் பரலோகத்திலே தேவதூதரைப்போல் இருப்பார்கள்” என்றார். சதுசேயர்கள் அவர்களுடைய நம்பிக்கையில் தவறாக இருக்கின்றனர் என்பதை அவர் எடுத்துக்காட்டினார். அவர்களுடைய காரணங்கள் தவறாக இருந்தன. “நீங்கள் வேதவாக்கியங்களையும், தேவனுடைய வல்லமையையும் அறியாமல் தப்பான எண்ணங்கொள்ளுகிறீர்கள்” என்று அவர் மேலும் கூறினார். பரிசேயர்களை மாயக்காரர்கள் என்று குற்றஞ்சாட்டினதுபோல அவர் சதுசேயர்களின்மீது குற்றஞ்சாட்டாமல், அவர்கள் நம்பிக்கை தவறு என்று கூறினார். (17)

எல்லா மனிதர்களிலும் சதுசேயர்கள்தான் அதிகக் கண்டிப்பான விதத்தில் வேதவாக்கியங்களைப் பற்றிக்கொண்டிருப்பதாகத் தங்களுக்குத் தாங்களே பெருமைபாராட்டிக்கொண்டிருந்தனர். ஆனால் அவைகளின் உண்மையான அர்த்தத்தை அவர்கள் அறியாதவர்களாக இருந்தனர் என்பதை இயேசு வெளிப்படுத்தினார். அந்த அறிவு, பரிசுத்த ஆவியின் அறிவூட்டுதலினால் இருதயமாகிய வீட்டிற்குக் கொண்டுவரப்பட வேண்டும். அவர்களுடைய விசுவாசத்திலிருந்த குழப்பத்திற்கும் மனதின் இருளுக்கும், வேதவாக்கியங்களின்மீதும் தேவனுடைய வல்லமையின்மீதுமுள்ள அவர்களுடைய அறியாமையே காரணம் என்று அவர் அறிவித்தார்.

அவர்களுடைய முடிவுள்ள—குறைவுள்ள அறிவின் வட்டத்திற்குள் தேவஇரகசியங்களைக் கொண்டுவருவதற்கு, அவர்கள் வகைதேடிக் கொண்டிருந்தனர். புரிந்துகொள்ளுதலை விசாலப்படுத்தி பலப்படுத்தக்கூடிய பரிசுத்தமான சத்தியங்களுக்கு அவர்களுடைய மனங்களைத் திறக்கும்படி கிறிஸ்து அவர்களை அழைத்தார். அவர்களுடைய முடிவுள்ள—குறைவுள்ள மனம் தேவனுடைய இரகசியங்களை அறிந்துகொள்ளமுடியாதிருந்ததினால், ஆயிரக்கணக்கானவர்கள் கடவுள் இல்லை என்கின்றனர். தெய்வீக ஏற்பாடு களிலுள்ள தெய்வீக வல்லமையின் ஆச்சரியமான வெளிக்காட்டல்களை அவர்களால் புரிந்துகொள்ளமுடியாது. ஆகையால் அவர்களால் இன்னும் மிகக்குறைவாக அறிந்து கொள்ளக்கூடியவைகளை அவருடைய இயற்கையின் ஏதுகரங்களுக்குச் சாட்டி, அப்படிப்பட்ட வல்லமையின் சான்றுகளை புறக்கணிக்கின்றனர். நம்மைச் சுற்றிலுமுள்ள இரகசியங்களுக்கான ஒரே திறவுகோல், அவைகள் அனைத்திலும் தேவனுடைய பிரசன்னமும் வல்லமையும் இருக்கின்றன என்பதை ஏற்றுக்கொள்வதுதான். பிரபஞ்சத்தின் சிருஷ்டிகராக தேவனை ஏற்றுக்கொள்ளுவது மனிதனுக்கு அவசியம். அவருடைய குணம் அவருடைய ஏதுகரங்களின் இரகசியம் ஆகியவைபற்றிய விசாலமான பார்வை அவர்களுக்கு அவசியமாக உள்ளது. (18)

கிறிஸ்து அவருடைய உரையைக் கேட்டிருந்தவர்களிடம் மரித்தோரின் உயிர்த்தெழுதல் இல்லாவிட்டால், அவர்கள் நம்புவதாகக் கூறிக்கொள்ளும் வேதவாக்கியங்கள் பயனற்றவையாக இருக்கும் என்று கூறினார். “மரித்தோர் உயிர்த்தெழுதலைப்பற்றி: நான் ஆபிரகாமின் தேவனும், ஈசாக்கின் தேவனும், யாக்கோபின் தேவனுமாயிருக்கிறேன் என்று தேவனால் உங்களுக்கு உரைக்கப்பட்டிருக்கிறதை நீங்கள் வாசிக்கவில்லையா? தேவன் மரித்தோருக்குத் தேவனாயிராமல், ஜீவனுள்ளோருக்குத் தேவனாயிருக்கிறார் என்றார்.” தேவன், இல்லாதவைகளை இருக்கிறதுபோல எண்ணுகிறார். அவர் முடிவிலிருந்து ஆரம்பத்தைப் பார்த்து, அவருடைய செயலின் பலனை இப்பொழுதுதான் நிறைவேறினதைப்போல பார்க்கிறார். மேன்மையான ஆதாம்முதல், கடைசியாக மரிக்கும் பரிசுத்தவான்வரை அனைவரும் தேவகுமாரனுடைய குரலைக் கேட்டு, கல்லறையிலிருந்து அழியாமையை உடைய ஜீவனுள்ளவர்களாக வெளியே வருவார்கள். தேவன் அவர்களுடைய தேவனாக இருப்பார். அவர்கள் அவருடைய மக்களாக இருப்பார்கள். தேவனுக்கும் உயிர்த்தெழுந்த பரிசுத்தவான்களுக்குமிடையில் மிகவும் நெருக்கமும் மென்மையுமிக்க ஒரு உறவு இருக்கும். அவருடைய நோக்கத்தில் எதிர்பார்க்கப்பட்டிருந்த இந்த நிலைமையை அது ஏற்கெனவே இருக்கிறது என்னும் விதமாக அவர் பார்க்கிறார். மரித்தவர்கள் அவருக்குள் பிழைத்திருக்கிறார்கள். (19)

கிறிஸ்துவின் வார்த்தைகளினால் சதுசேயர்கள் மௌனப்படுத்தப் பட்டனர். அவர்களால் அவருக்குப் பதில்கூற முடியவில்லை. அவரை ஆக்கினைக்கு உட்படுத்தக்கூடியவிதத்தில் மிகவும் குறைவான அனுகூலம் உடைய ஒரு வார்த்தையும் பேசப்படவில்லை. அவருடைய எதிரிகள் மக்களின் அவமதிப்பைத்தவிர வேறு எதையும் அடையவில்லை. (20)

அப்படியிருந்தபோதிலும், அவருக்கு எதிராகப் பயன்படுத்துவதற்கு தீர்மானித்திருந்த வார்த்தையைப் பேசவைப்பதற்கு அவரைத் தூண்டலாம் என்பதில் பரிசேயர்கள் நம்பிக்கையை இழக்கவில்லை. நியாயப்பிரமாணத்தில் எந்தக் கற்பனை அதிக முக்கியமானது என்று இயேசுவிடம் கேள்வி கேட்கும்படி மிகவும் கற்றறிந்த ஒரு வேதபாரகனை தங்களது செல்வாக்கின்மூலம் சரிப்படுத்தி அனுப்பி, அவரை மேற்கொள்ள முயன்றார்கள். (21)

மனிதன் அவனை உண்டுபண்ணினவருக்குச் செய்யவேண்டிய கடமையைச் சுட்டிக்காட்டுகின்ற முதல் நான்கு கற்பனைகளும், உடன் மனிதனுக்குச் செய்யவேண்டிய கடமையை விளக்குகின்ற ஆறு கற்பனைகளைவிட மிக அதிகமான பலன்களை உடையதென்று சொல்லி, முதல் நான்கு கற்பனைகளை பரிசேயர்கள் உயர்த்தியிருந்தனர். அதன்பலனாக அவர்கள் நடைமுறை தெய்வபக்தியில் பெரிய அளவில் தவறியிருந்தனர். இயேசு மக்களுக்கு அவர்களுடைய பெரிய குறைபாடுகளைக் காட்டி, மரம் அதன் கனியினால் அறியப்படுகிறது என்று அறிவித்து, நற்கிரியைகளின் அவசியத்தை அவர்களுக்குப் போதித்திருந்தார். இந்தக் காரணத்தினால் அவர் கடைசி ஆறு கற்பனைகளை முதல் நான்கு கற்பனைகளைவிட மேலாக உயர்த்தியிருந்தார் என்று குற்றஞ்சாட்டப்பட்டிருந்தார். (22)

நியாயப்பிரமாணத்திலே எந்தக் கற்பனை பிரதானமானது? என்னும் நேரடியான ஒரு கேள்வியுடன் அந்த நியாயசாஸ்திரி இயேசுவை சமீபித்தான். “உன் தேவனாகிய கர்த்தரிடத்தில் உன் முழு இருதயத்தோடும் உன் முழு ஆத்துமாவோடும் உன் முழு மனதோடும் அன்புகூருவாயாக” என்பது எல்லாக் கற்பனைகளிலும் முதலாவதாக இருக்கிறது. இரண்டாவது கற்பனை முதலாவதைப்போன்றதே. ஏனெனில் அதிலிருந்துதான் இது பாய்தோடுகிறது. “இதற்கு ஒப்பாயிருக்கிற இரண்டாம் கற்பனை என்னவென்றால், உன்னிடத்தில் நீ அன்புகூருவதுபோலப் பிறனிடத்திலும் அன்புகூருவாயாக என்பதே. இவ்விரண்டு கற்பனைகளிலும் நியாயப்பிரமாணம் முழுமையும் தீர்க்கதரிசனங்களும் அடங்கியிருக்கிறது” என்றார். (23)

“உன் தேவனாகிய கர்த்தரிடத்தில் உன் முழு இருதயத்தோடும் ... அன்புகூருவாயாக” என்னும் ஒரு பெரிய கற்பனையில் பத்துக்கற்பனை களிலுமுள்ள முதல் நான்கு கற்பனைகளும் தொகையாக அடங்கியிருக்கிறது.

“உன்னிடத்தில் நீ அன்புகூருவதுபோலப் பிறனிடத்திலும் அன்புகூருவாயாக” என்பதில் கடைசி ஆறுகற்பனைகளும் உட்படுத்தப்பட்டுள்ளன. இந்த இரண்டு கற்பனைகளும்அன்பின் கொள்கையின் வெளிக்காட்டுதலாக இருக்கின்றது. இரண்டாவதை மீறிவிட்டு, முதலாவதைக் கைக்கொள்ள முடியாது. அல்லது இரண்டாவதைக் கைக்கொண்டு, முதலாவதை மீற முடியாது. இருதயத்தின் சிங்காசனத்தில் தேவனுக்குச் சரியான இடமிருக்கும்போது, நமது அயலானுக்கும் சரியான இடத்தை நாம் கொடுப்போம். நாம் நம்மை நேசிப்பதுபோல அயலானையும் நேசிப்போம். எல்லாவற்றிற்கும்மேலாக நாம் தேவனை நேசிக்கும்போதுமட்டுமே நாம் நமது அயல்வாசியைப் பட்சபாதமின்றி நேசிப்பது சாத்தியமாக இருக்கிறது. (24)

தேவனிடத்தில் அன்பு, மனிதனிடத்தில் அன்பு, என்பவைகளில் எல்லாக் கற்பனைகளும் அடங்கியிருப்பதினால் இந்தக் கொள்கையை மீறாமல், ஒரு கற்பனையையும் மீற முடியாது என்பது அறிந்துகொள்ளப்படுகிறது. இவ்விதமாக தேவனுடைய நியாயப்பிரமாணம் அதிக முக்கியத்துவம்வாய்ந்த சில கற்பனைகளையும் குறைந்த முக்கியத்துவம்வாய்ந்த சில கற்பனைகளையும் உடைய அநேகவிதமான வேறுபட்ட கற்பனைகளை உடைதாக இராமலும், தண்டனையற்ற விதமாகவும், அசட்டைபண்ணக்கூடியதாகவுமில்லாமல் அமைந்திருக்கிறதென்று கிறிஸ்து அவரது போதனையைக் கேட்டிருந்தவர் களுக்குப் போதித்தார். நமது கர்த்தர் முதல் நான்கும் கடைசி ஆறும் ஆகிய கற்பனைகள் தெய்வீகத்தின் ஒரு முழுமையானது என்று முன்வைத்து, தேவனிடத்தில் அன்புகூருவது அவருடைய எல்லாக் கற்பனைகளுக்கும் கீழ்ப்படிவதில் காட்டப்படும் என்று போதிக்கிறார். (25)

இயேசுவிடம் கேள்வி கேட்டிருந்த அந்த நியாயசாஸ்திரி நியாயப் பிரமாணத்தைப்பற்றி நன்கு கற்றறிந்தவனாக, அவருடைய வார்த்தைகளில் ஆச்சரியமடைந்தான். வேதவாக்கியங்களைப்பற்றிய அவ்வளவு ஆழமும் முழுமையுமான அறிவை அவர் வெளிக்காட்டுவார் என்று அவன் எதிர்பார்க்கவில்லை. பரிசுத்தமான கற்பனைகளுக்கடியில் அடங்கியிருக்கும் கொள்கைகளைப்பற்றிய விசாலமான பார்வையை அவன் அடைந்திருந்தான். நியாயப்பிரமாணம்பற்றிய சரியான ஒரு விளக்கத்தை கிறிஸ்து கொடுத்திருந்தார் என்று அவன் அங்கு கூடியிருந்த ஆசாரியர்களுக்கும் அதிபதிகளுக்கும்முன் கூறி, உண்மையுடன் ஏற்றுக் கொண்டிருந்தான். (26)

“அதற்கு வேதபாரகன்: சரிதான், போதகரே, நீர் சொன்னது சத்தியம்; ஒரே தேவன் உண்டு, அவரைத் தவிர வேறொரு தேவன் இல்லை. முழு இருதயத்தோடும், முழு மனதோடும், முழு ஆத்துமாவோடும், முழுப்பலத்தோடும் அவரிடத்தில் அன்புகூருகிறதும், தன்னிடத்தில்

அன்புகூருகிறதுபோல் பிறனிடத்தில் அன்புகூருகிறதுமே சர்வாங்கதகனம் முதலிய பலிகளைப் பார்க்கிலும் முக்கியமாயிருக்கிறது என்றான்.” (27)

கிறிஸ்துவின் பதிலில் இருந்த ஞானம், அந்த வேதபாரகனிடத்தில் மன உணர்த்துதலை உண்டுபண்ணிற்று. உள்ளான தெய்வபக்தியைவிட, வெளிப்பார்வையிலான சமயச்சடங்குகளை உடையதாக யூதமார்க்கம் இருந்தது என்பதை அவன் அறிந்தான். சாதாரணமான சடங்காச்சார முறையில் இருந்த மதிப்பின்மையைப்பற்றியும், பாவப்பரிகாரத்திற்காக விசுவாசமில்லாமல் இரத்தம் சிந்துவதைப்பற்றியும் அவன் ஒருவகையில் உணர்வுடையவனாக இருந்தான். இந்தச் சடங்காச்சாரங்கள் அனைத்தையும்விட தேவனிடத்தில் அன்புசெலுத்தி, அவருக்கு கீழ்ப்படிவதும், சுயநலமின்றி மனிதன்மீது பற்றுவைப்பதும், அதிக மதிப்புடையதாக அவனுக்குத் தோன்றினது. கிறிஸ்துவின் நியாயம் காட்டுதலில் இருந்த சரியான தன்மையை ஏற்றுக்கொள்வதிலிருந்த இந்த மனிதனின் ஆயத்தம், மக்களுக்குமுன் அவனுடைய முடிவானதும் உடனடியானதுமான மறுமொழி, ஆசாரியர்கள் அதிபதிகள் ஆகியவர்களில் இருந்த ஆவியிலிருந்து முற்றிலுமாக வேறுபட்டிருந்த ஒன்றினை வெளிக்காட்டியிருந்தது. அந்த நியாயசாஸ்திரியின் இருதயத்தின் உணர்த்துதல்களை ஆசாரியர்களின் கோபங்கள், அதிபதிகளின் அச்சுறுத்தல்கள் ஆகியவை நேரடியாகச் சந்தித்தும், பேசுவதற்குத் தைரியமுள்ளவனாக இருந்த அவனிடத்திற்கு இயேசுவின் இருதயம் இரக்கத்துடன் சென்றது. அவன் மிகவும் ஜாக்கிரதையாக புத்திசாலித்தனமாக பதில் கூறினதை இயேசு கண்டபோது, அவர் அவனை நோக்கி: “நீ தேவனுடைய ராஜ்யத்துக்குத் தூரமானவனல்ல” என்றார். (28)

சர்வாங்க தகனபலிகளையும்விட நீதியின் செயல்கள் தேவனால் அதிகமாக ஏற்றுக்கொள்ளப்படக்கூடியவைகளாக இருக்கின்றன என்பதை கண்டிருந்ததில் அந்த வேதபாரகன் தேவனுடைய இராஜ்யத்திற்குச் சமீபமாக இருந்தான். ஆனால் கிறிஸ்துவின் தெய்வீகக் குணத்தை இனங்கண்டுகொள்ளுவதும், அவர்மீதுள்ள விசுவாசத்தின்மூலமாக நீதியின் செயல்களைச்செய்வதற்கான வல்லமையைப் பெற்றுக்கொள்ளவேண்டியதும் அவனுக்கு அவசியமாயிருந்தது. சமயச்சடங்குகள் ஜீவனுள்ள விசுவாசத்தினால் கிறிஸ்துவுடன் பிணைக்கப்படாதவரை, எந்தவிதமான மதிப்பும் இல்லாதிருந்தன. சன்மார்க்கப்பிரமாணமுங்கூட, இரட்சகருடன் அதற்குள்ள உறவில் புரிந்துகொள்ளப்படாதவரை அதன் நோக்கத்தை இழந்துவிட்டிருக்கிறது. சாதாரணமான அதிகாரமிக்க கட்டளைகளைவிட, ஆழமான சில காரியங்கள் அவருடைய பிதாவின் பிரமாணத்தில்

அடங்கியிருக்கிறதென்பதைக் கிறிஸ்து மீண்டும் மீண்டும் வெளிப்படுத்தி யிருந்தார். சுவிசேஷத்தில் வெளிப்படுத்தப்பட்டுள்ள அதே அடிப்படைக் கோட்பாடுகள் நியாயப்பிரமாணத்தில் உருக்கொண்டுள்ளன. நியாயப் பிரமாணம் மனிதனுடைய கடமையைச் சுட்டிக்காட்டி, அவனுடைய குற்றத்தை அவனுக்குக் காட்டுகிறது. பாவமன்னிப்பிற்காகவும், நியாயப்பிரமாணம் கட்டளையிடுவதைச் செய்கின்ற வல்லமைக்காகவும், அவன் கிறிஸ்துவைப் பார்க்கவேண்டும். (29)

அந்த வேதபாரகனின் கேள்விக்கு இயேசு பதில்கூறினபோது, பரிசேயர்கள் அவரை நெருக்கமாகச் சூழ்ந்திருந்தனர். அப்பொழுது அவர் அவர்களிடத்திற்குத் திரும்பி: “கிறிஸ்துவைக்குறித்து நீங்கள் என்ன நினைக்கிறீர்கள், அவர் யாருடைய குமாரன்?” என்னும் கேள்வியைக் கேட்டார். மேசியாவைப்பற்றிய அவர்களுடைய நம்பிக்கையை பரீட்சிக்கவும், அவர்கள் அவரை ஒரு சாதாரணமான மனிதனாகவா அல்லது தேவ குமாரனாகவா எவ்வாறு கருதியிருக்கிறார்கள் என்பதை அவர்களுக்குக் காட்டவும் இந்தக் கேள்வி வடிவமைக்கப்பட்டிருந்தது. “தாவீதின் குமாரன்” என்னும் ஒரு கூட்டத்தினரின் குரல்கள் பதில் கொடுத்தன. மேசியாவிற்குத் தீர்க்கதரிசனம் கொடுத்திருந்த பட்டமாக அது இருந்தது. இயேசு அவருடைய பலத்த அற்புதங்களினாலும் நோயாளிகளைச் சுகப்படுத்தி மரித்தோரை எழுப்பினதினாலும் தமது தெய்வீகத்தை வெளிப்படுத்தினபோது, மக்கள் தங்களுக்குள்: “இவன் தாவீதின் குமாரனல்லவா?” என்று விசாரித்திருந்தனர். சிரோபெனிக்கேயா பெண்ணும், பர்த்திமேயு என்னும் குருடனும், இன்னும் அநேகரும் அவரிடம் உதவிக்காக, “ஆண்டவரே, தாவீதின் குமாரனே” என்மீது இரக்கமாயிரும் என்று கதறியிருந்தனர்–மத்தேயு 15:22. அவர் எருசலேமிற்குள் பவனிசென்றிருந்தபோது, “தாவீதின் குமாரனுக்கு ஓசன்னா!” (மத்தேயு 21:9) என்னும் மகிழ்ச்சிமிக்க முழக்கங்களுடன் அவர் புகழப்பட்டிருந்தார். ஆலயத்திலிருந்த சிறுபிள்ளைகள் அந்த சந்தோஷமிக்க கடவுளைப்பற்றிய புகழுரையை அந்த நாளில் எதிரொலிக்கச்செய்திருந்தனர். ஆனால் இயேசுவை தாவீதின் குமாரன் என்று அழைத்திருந்தவர்களில் அநேகர் அவருடைய தெய்வீகத்தை இனங்கண்டுகொள்ளாமலிருந்தனர். தாவீதின் குமாரனாக இருந்தவர், தேவ குமாரனாகவுங்கூட இருந்தார் என்பதை அவர்கள் புரிந்துகொள்ளாமலிருந்தனர். (30)

கிறிஸ்து தாவீதின் குமாரன் என்னும் அறிக்கைக்கு மறுமொழியாக இயேசு: “தாவீது பரிசுத்த ஆவியினாலே அவரை ஆண்டவர் என்று சொல்லியிருக்கிறது எப்படி? நான் உம்முடைய சத்துருக்களை உமக்குப் பாதபடியாக்கிப்போடும்வரைக்கும் நீர் என்னுடைய வலதுபாரிசத்தில் உட்காரும்

என்று கர்த்தர் என் ஆண்டவரோடே சொன்னார் என்று சொல்லியிருக்கிறானே. தாவீது அவரை ஆண்டவர் என்று சொல்லியிருக்க, அவனுக்கு அவர் குமாரனாயிருப்பது எப்படி" என்றார். "அதற்கு மாறுத்தரமாக ஒருவனும் அவருக்கு ஒரு வார்த்தையும் சொல்லக்கூடாதிருந்தது. அன்றுமுதல் ஒருவனும் அவரிடத்தில் கேள்விகேட்கத் துணியவில்லை." (31) ★

# 67

# பரிசேயர்களுக்கு ஐயோ...!

**மத்தேயு 23; மாற்கு 12:41–44; லூக்கா 20:45–47; 21:1–14**

**(The Desire of Ages, pp. 610–620)**

அந்த நாள் கிறிஸ்து தேவாலயத்தில் போதனை செய்த கடைசி நாளாக இருந்தது. எருசலேமில் கூடியிருந்த திரளானவர்கள் அனைவரும் அவரிடத்திற்கு ஈர்க்கப்பட்டிருந்தனர். விறுவிறுப்பாகத் தொடர்ந்துகொண்டிருந்த சர்ச்சையின்போது, ஆலயப்பிராகாரத்தில் கூட்டமாகக் குழுமியிருந்த மக்கள் அவருடைய உதடுகளிலிருந்து விழுந்த ஒவ்வொரு வார்த்தையையும் ஆவலுடன் கவனித்துக்கொண்டிருந்தனர். இதற்குமுன் ஒருபோதும் அப்படிப்பட்ட ஒரு காட்சி காணப்பட்டிருக்கவில்லை. பூமிக்குரிய எந்தவித கனமும், அல்லது இராஜரீகச் சின்னமும் இல்லாதவராக அங்கு அந்தக் கலிலேய இளைஞன் நின்றிருந்தான். விலையுயர்ந்த ஆடைகளை அணிந்திருந்த ஆசாரியர்களும், தங்களுடைய மேலான பதவிகளைக் காட்டுகின்ற உடைகளையும் சின்னங்களையும் அணிந்திருந்த அதிபதிகளும், அடிக்கடி தங்களிடமிருந்த வேதாகமச் சுருள்களைக் கவனித்திருந்த வேத பாரகர்களும் அவரைச் சூழ்ந்திருந்தனர். ஒரு அரசனின் மேன்மையுடன் இயேசு அவர்களுக்கு முன்பாக அமைதியுடன் நின்றிருந்தார். அவரது போதனைகளைப் புறக்கணித்து, அவமதித்து, அவருடைய உயிரின்மீது தாகமுள்ளவர்களாக இருந்த அவருடைய எதிரிகளை அவர் அச்சத்தால் பின்வாங்காதவராக பரலோகத்தின் அதிகாரத்தைப் பெற்றிருந்த ஒருவரைப்போலப் பார்த்தார். பெரிய எண்ணிக்கையில் இருந்தவர்கள் அவரைத் தாக்கியிருந்தனர். ஆனால் அவரைக் கண்ணியில் அகப்படுத்தவும், ஆக்கினைக்குட்படுத்தவும், அவர்கள் செய்திருந்த திட்டங்கள் வீணானதாக இருந்தது. ஆசாரியர், பரிசேயர்கள் ஆகியோரின் இருளும் தவறுகளுமாகியவைகளுடன் வேறுபடுத்திக் காட்டுகின்ற தூய்மையும் ஒளியுமிக்க சத்தியங்களை முன்வைத்து, அடுத்தடுத்து வந்த சவால்களை அவர் சந்தித்தார். இந்தத் தலைவர்களுக்கு அவர்களுடைய உண்மையான நிலைமையையும் தீய செயல்களில் பிடிவாதமாகத் தொடர்ந்தால் நிச்சயமாகப் பின்வரவிருக்கின்ற தேவ கோபமாகிய தண்டனையையும் முன்வைத்தார். அந்த எச்சரிக்கை

விசுவாசத்துடன் கொடுக்கப்பட்டிருந்தது. இருந்தபோதிலும், கிறிஸ்து செய்யவேண்டியதாகவிருந்த வேறொரு வேலையும் இருந்தது. இன்னும் நிறைவேற்றப்படவேண்டிய வேறொரு நோக்கமும் இருந்தது. (1)

கிறிஸ்துவிலும் அவருடைய பணியிலும் மக்களின் ஆர்வம் சீராக அதிகரித்திருந்தது. அவருடைய போதனைகளினால் அவர்கள் கவர்ந்திழுக்கப்பட்டிருந்தனர். எனவே, அவர்கள் பெரிய அளவில் குழப்ப மடைந்துமிருந்தனர். அவர்கள் ஆசாரியர்கள் ரபிமார்கள் ஆகியோரின் நுண்ணறிவிற்காகவும் வெளித்தோற்றத்திலிருந்த பக்திக்காகவும் மரியாதை காட்டியிருந்தனர். மதசம்பந்தமாக எல்லாக் காரியங்களிலும் அவர்கள் எப்பொழுதும் அவர்களுடைய அதிகாரத்திற்கு மறுப்பில்லாத கீழ்ப்படிதலை உடையவர்களாக இருந்தனர். ஆயினும், எந்த ஒரு ஆசிரியருடைய புண்ணியமும் அறிவும் அவர்களுடைய ஒவ்வொரு தாக்குதலுக்கும் எதிராக அதிகமாகப் பிரகாசித்திருந்ததோ, அந்த இயேசுவிற்கு மதிப்புக்குறைவை உண்டுபண்ண இந்த மனிதர்கள் முயன்றுகொண்டிருந்ததை இப்பொழுது அவர்கள் கண்டார்கள். அவர்கள் கீழ்நோக்கிக்கொண்டிருக்கும் ஆசாரியர் கள் மூப்பர்கள் ஆகியோரின் முகங்களைப் பார்த்து, அங்கு தோல்வி யையும் குழப்பத்தையும் கண்டார்கள். இயேசுவின் போதனைகள் அந்த அளவிற்கு வெளிப்படையானதாகவும் எளிமையானதாகவும் இருந்தபோதிலும், அதிபதிகள் இயேசுவை நம்பாமலிருந்ததில் அவர்கள் ஆச்சரியமடைந்தனர். என்ன நடவடிக்கை எடுக்கவேண்டும் என்பதை அவர்களே அறியாமலிருந்தனர். அவர்கள் எப்பொழுதும் எவர்களுடைய ஆலோசனையைப் பின்பற்றியிருந்திருந்தார்களோ, அவர்களின் செயல்களை அக்கறைமிக்க கவலையுடன் கவனித்திருந்தனர். (2)

கிறிஸ்து கூறியிருந்த உவமைகளில் அதிபதிகளை எச்சரிப்பதும் போதிக்கப்படுவதற்கு விருப்பமுள்ளவர்களாக இருந்த மக்களுக்கு உபதேசஞ் செய்வதுமாகிய இரண்டும் அவருடைய நோக்கமாக இருந்தது. ஆனால் மேலும் வெளிப்படையாகப் பேசவேண்டிய அதிகமானைவைகள் இருந்தன. பாரம்பரியத்தின்மீதான பயபக்தி, ஊழல்மிக்க ஆசாரியர்களின்மீதிருந்த குருட்டுத்தனமான விசுவாசம், ஆகியவைகளின்மூலமாக, மக்கள் அடிமைப்படுத்தப்பட்டிருந்தனர். இந்த சங்கிலிகளைக் கிறிஸ்து உடைக்கவேண்டும். ஆசாரியர்கள் அதிபதிகள் பரிசேயர்கள் ஆகியோரின் குணங்கள் மிகவும் அதிகமாக முழுமையாக வெளிக்காட்டப்படவேண்டும். (3)

“வேதபாரகரும் பரிசேயரும் மோசேயினுடைய ஆசனத்தில் உட்கார்ந்திருக்கிறார்கள்; ஆகையால், நீங்கள் கைக்கொள்ளும்படி

அவர்கள் உங்களுக்குச் சொல்லுகிற யாவையும் கைக்கொண்டு செய்யுங்கள்; அவர்கள் செய்கையின்படியோ செய்யாதிருங்கள்; ஏனெனில், அவர்கள் சொல்லுகிறார்கள், சொல்லியும் செய்யாதிருக்கிறார்கள்" என்று இயேசு கூறினார். மோசேக்குக் கொடுக்கப்பட்டிருந்த அதேவிதமான தெய்வீக அதிகாரத்தைப் பெற்றிருப்பதாக வேதபாரகரும் பரிசேயர்களும் உரிமைகோரிக்கொண்டிருந்தனர். தாங்கள் நியாயப்பிரமாணத்திற்கு விளக்கங்கூறுபவர்களாகவும், மக்களின் நியாயாதிபதிகளின் (மோசேயின்) ஸ்தானத்தை எடுத்துக்கொண்டிருப்பதாகவும் நினைத்துக்கொண்டனர். ஆகையால் அவர்கள் மக்களிடமிருந்து மிக அதிகமான மதிப்பையும் கீழ்ப்படிதலையும் உரிமைபாராட்டியிருந்தனர். இயேசு அவரது உரையைக் கேட்டுக்கொண்டிருந்தவர்களுக்கு நியாயப்பிரமாணத்தின்படி ரபிமார்கள் போதிப்பதைச் செய்யும்படியும் ஆனால் அவர்களுடைய உதாரணத்தைப் பின்பற்றாமலிருக்கும்படியும் கட்டளையிட்டார். அவர்களுடைய சொந்தப் போதனையை அவர்களே செயற்படுத்தாமலிருந்தார்கள். (4)

வேதவாக்கியங்களுக்கு எதிராக இருந்தவைகளை அவர்கள் அதிகமாகப் போதித்திருந்தனர். "சுமப்பதற்கரிய பாரமான சுமைகளைக்கட்டி மனுஷர் தோள்களின்மேல் சுமத்துகிறார்கள்; தாங்களோ ஒரு விரலினாலும் அவைகளைத் தொடமாட்டார்கள்" என்று இயேசு கூறினர். பரிசேயர்கள் பாரம்பரியத்தை அஸ்திபாரமாகக்கொண்ட ஏராளமான ஒழுங்கு முறைகளைக் கட்டளையிட்டு, தனிமனித உரிமையை காரணமின்றிக் கட்டுப்படுத்தியிருந்தனர். அவர்கள் நியாயப்பிரமாணத்தின் குறிப்பிட்ட சில பகுதிகளை இரகசியமாகப் புறக்கணித்திருந்து, சில பகுதிகளை மக்கள் கைக்கொள்ளவேண்டுமென்று விளக்கி, அவர்கள்மீது திணித்திருந்தனர். ஆனால் அவர்களுடைய நோக்கத்தை அது நிறைவேற்றியபோது, அதைக் கைக்கொள்ளுவதினின்று அவர்களுக்கு விலக்களிக்கப்படவேண்டுமென்று உரிமைபாராட்டியிருந்தனர். (5)

அவர்களுடைய பக்தியை வெளிக்காட்டச்செய்வது அவர்களுடைய தொடர்ச்சியான குறியாக இருந்தது. இந்த முடிவை அடைவதற்கு முடியாதவிதமாக எதுவும் அதிகமான பரிசுத்தமாயிருக்கவில்லை. தேவனுடைய நியாயப்பிரமாணத்தைப்பற்றி அவர் மோசேயிடம்: "அவைகளை உன் கையின்மேல் அடையாளமாகக் கட்டிக்கொள்வாயாக; அவைகள் உன் கண்களுக்கு நடுவே ஞாபகக்குறியாய் இருக்கக்கடவது" (உபாகமம் 6:8) என்று கூறியிருந்தார். இந்த வார்த்தைகள் ஆழமான பொருளை உடையவையாக இருக்கின்றன. தேவனுடைய வார்த்தை தியானிக்கப்பட்டுச் செயல்படுத்தப்படும்போது, முழு மனிதனும் மேன்மைப்படுத்தப்படுகிறான்.

நீதியும் இரக்கமுமிக்க இடைபடுதலினால் தேவனுடைய பிரமாணம் ஒரு முத்திரை மோதிரமாக இருப்பதைக் கைகள் வெளிப்படுத்தும். இலஞ்சங்களிலிருந்தும், ஊழல்களிலிருந்தும், வஞ்சகங்களிலிருந்தும் அவைகள் சுத்தமுள்ளவைகளாகக் காக்கப்பட்டிருக்கும். அன்பும் மனஉருக்கமும் உள்ள பணிகளில் அவை தீவிரமானவைகளாக இருக்கும். மேன்மையான ஒரு நோக்கத்திற்கு நேராகத் திருப்பப்பட்டிருக்கும் கண்கள், தெளிவானவையாகவும் உண்மையானவையாகவும் இருக்கும். தேவனுடைய வார்த்தையை நேசித்து, அதைக் கனப்படுத்துபவனின் குற்றமில்லாத குணத்திற்கு அதை வெளிக்காட்டும் முகமும் பேசும் கண்களும் சாட்சிபகரும். ஆனால் கிறிஸ்துவின் நாளில் இருந்த யூதர்களால் இவை யாவும் கண்டுகொள்ளமுடியாதவைகளாக இருந்தன. வேதவாக்கியங்களிலுள்ள கற்பனைகளைப்பற்றி மோசேக்குக் கொடுக்கப்பட்ட கட்டளை சரீரத்தின்மீது அணியப்பட்டிருக்கவேண்டுமென்று பொருள்கொள்ளப்பட்டிருந்தது. அதன்படி அவை தோல்சுருள்களில் எழுதப்பட்டு, நன்றாகத் தெரியக்கூடியவிதமாக தலையிலும் மணிக்கட்டுகளிலும் கட்டப்பட்டிருந்தன. ஆனால் அவை மனதையும் இருதயத்தையும் உறுதியாகப் பற்றிக்கொள்ளாமலிருந்தது. இந்தத் தோல் சுருள்கள், சாதாரணமாக கவனத்தைக் கவரும்படியான அடையாளச் சின்னங்களாக அணியப்பட்டிருந்தன. அதை அணிந்துகொள்ளுபவரைப்பற்றி மக்களிடம் பயபக்தியை உண்டுபண்ணுகின்ற பக்தியின் உணர்வினைக்காட்டும் என்று நினைக்கப்பட்டிருந்தன. வீணான இந்தப் போலிச் செயலுக்கு இயேசு ஒரு அடி கொடுத்தார். (6)

“தங்கள் கிரியைகளையெல்லாம் மனுஷர் காணவேண்டுமென்று செய்கிறார்கள்; தங்கள் காப்புநாடாக்களை அகலமாக்கி, தங்கள் வஸ்திரங்களின் தொங்கல்களைப் பெரிதாக்கி, விருந்துகளில் முதன்மையான இடங்களையும், ஜெபஆலயங்களில் முதன்மையான ஆசனங்களையும், சந்தைவெளிகளில் வந்தனங்களையும், மனுஷரால் ரபீ, ரபீ, என்று அழைக்கப்படுவதையும் விரும்புகிறார்கள். நீங்களோ ரபீ என்றழைக்கப்படாதிருங்கள்; கிறிஸ்து ஒருவரே உங்களுக்குப் போதகராயிருக்கிறார்.” கனமிக்க இடத்தையும் வல்லமை யையும் அடைந்துகொள்ளுவதற்காக முயன்றுகொண்டிருக்கும் இருதயத்தின் பேராசையையும், சுயநலமிக்க பேராசையால் நிரம்பியிருக்கும் இருதயம் போலியான ஒரு தாழ்மையை விளம்பரஞ்செய்வதையும் இரட்சகர் சுட்டிக்காட்டி வெளிப்படுத்தினார். விருந்திற்கு மனிதர்கள் அழைக்கப்பட்டிருந்தபோது, விருந்தினர்கள் அவர்களுடைய பதவிக்குத்தக்கபடி உட்காரவைக்கப்பட்டிருந்து, மிகவும் கனமிக்க இடம் அளிக்கப்பட்டிருந்தவர்கள் முதல் கவனத்தையும், சிறப்பான அனுகூலங்களையும் பெற்றிருந்தனர்.

இந்த மரியாதைகளை அடைந்தகொள்வதற்குப் பரிசேயர்கள் எப்பொழுதும் திட்டமிட்டிருந்தனர். இந்த நடத்தையை இயேசு கடிந்துகொண்டார். (7)

ரபி அல்லது குரு என்னும் பதவியின்மேல் இச்சை கொள்ளுவதில் காட்டப்பட்டிருந்த மாயையையும் அவர் கடிந்துகொண்டிருந்தார். அப்படிப்பட்ட பட்டம் மனிதனுக்குச் சொந்தமானதாக இராமல், கிறிஸ்துவிற்குச் சொந்தமாக இருந்தது. ஆசாரியர்கள் வேதபாரகர்கள் அதிபதிகள் ஆகியோரும் நியாயப்பிரமாணத்தை விளக்குபவர்களும் நிர்வாக அதிகாரிகள் ஆகிய அனைவரும் ஒரே பிதாவின் பிள்ளைகளாக இருந்தனர். தங்களுடைய மனச்சாட்சியை அல்லது விசுவாசத்தைக் கட்டுப்படுத்தக்கூடிய ஒரு பதவியை எந்த ஒரு மனிதனுக்கும் கொடுக்காதவர்களாக மக்கள் இருக்கவேண்டும் என்று இயேசு அவர்களுக்கு உணர்த்தினார். (8)

“ரெவரண்ட்” அல்லது “ரைட் ரெவரண்ட்” என்னும் பட்டங்களைத் தாங்கினவர்களால் இன்று பூமியின்மீது இயேசு சூழப்பட்டிருந்தால், “பூமியிலே ஒருவனையும் உங்கள் பிதா என்று சொல்லாதிருங்கள்; பரலோகத்திலிருக்கிற ஒருவரே உங்களுக்குப் பிதாவாயிருக்கிறார். நீங்கள் குருக்கள் என்றும் அழைக்கப்படாதிருங்கள்; கிறிஸ்து ஒருவரே உங்களுக்குக் குருவாயிருக்கிறார்” என்று அவர் திரும்பக்கூறமாட்டாரா? தேவனைப்பற்றி வேதவாக்கியம்: “அவருடைய நாமம் பரிசுத்தமும் பயங்கரமுமானது” என்று அறிவிக்கிறது. எந்த மனிதனுக்கு அப்படிப்பட்ட பட்டம் பொருத்தமானதாயிருக்கும்? மனிதன் அவனுடைய ஞானம் நீதி ஆகியவைகளில் எந்த அளவிற்கு சிறியவனாக இருக்கிறான் என்பதை அது அடையாளப்படுத்திக் காட்டுகிறது. இந்தப் பட்டத்தை எடுத்துக்கொள்ளும் அநேகரில் எத்தனைபேர்கள் தேவனுடைய நாமத்தையும் குணத்தையும் தவறாக எடுத்துக்காட்டுகின்றனர்? ஐயோ, பாவம்! உலகப்பிரகாரமான பேராவல் எதேச்சாதிகாரம் மிகவும் கீழ்த்தரமான பாவங்கள் ஆகியவை, எவ்விதமாக அடிக்கடி மிகவும் உயர்வும் பரிசுத்தமுமான பதவிக்குரிய அலங்காரமான ஆடையின்கீழ் மறைந்துகொண்டிருக்கின்றன. இரட்சகர் தொடர்ந்து: (9)

“உங்களில் பெரியவனாயிருக்கிறவன் உங்களுக்கு ஊழியக்காரனாயிருக்கக்கடவன். தன்னை உயர்த்துகிறவன் தாழ்த்தப்படுவான், தன்னைத் தாழ்த்துகிறவன் உயர்த்தப்படுவான்” என்றார். உண்மையான மகத்துவம் சன்மார்க்கத்தகுதியினால்தான் அளக்கப்படுகிறது என்று கிறிஸ்து மறுபடியும் மறுபடியும் போதித்திருந்தார். நமது உடன் மனிதர்களின் நன்மைக்காக வாழுதல், அன்பு, இரக்கம் ஆகியவைகளின் செயலைச் செய்தல் போன்றவையே பரலோகத்தின் மதிப்பீட்டில் குணத்தின் மேன்மைமிக்க

காரியமாக விளங்குகிறது. மகிமையின் அரசராக இருக்கும் கிறிஸ்து விழுந்துபோன மனிதனின் ஊழியக்காரனாக இருந்தார். (10)

“மாயக்காரராகிய வேதபாரகரே! பரிசேயரே! உங்களுக்கு ஐயோ, மனுஷர் பிரவேசியாதபடி பரலோகராஜ்யத்தைப் பூட்டிப்போடுகிறீர்கள்; நீங்கள் அதில் பிரவேசிக்கிறதுமில்லை, பிரவேசிக்கப் போகிறவர்களைப் பிரவேசிக்க விடுகிறதுமில்லை” என்று அவர் கூறினார். வேதவாக்கியங்களைத் திரித்துப் பேசினதால் ஆசாரியர்களும் நியாயசாஸ்திரிகளும் மனிதர்களின் மனங்களைக் குருடாக்கியிருந்தனர். அப்படியில்லாமல் இருந்திருந்தால், அவர்கள் கிறிஸ்துவின் இராஜ்யத்தைப்பற்றிய ஒரு அறிவையும் உண்மையான பரிசுத்தத்தன்மைக்கு முக்கியமானதாக இருந்த உள்ளான தெய்வீக வாழ்க்கையையும் பெற்றிருந்திருப்பார்கள். (11)

“மாயக்காரராகிய வேதபாரகரே! பரிசேயரே! உங்களுக்கு ஐயோ, பார்வைக்காக நீண்ட ஜெபம்பண்ணி, விதவைகளின் வீடுகளைப் பட்சித்துப்போடுகிறீர்கள்; இதினிமித்தம் அதிக ஆக்கினையை அடைவீர்கள்” பரிசேயர்கள் மக்களிடத்தில் மிகுந்த செல்வாக்கை உடையவர்களாக இருந்திருந்தனர். அதன் காரணமாக, அவர்கள் தங்களுடைய சொந்தக் காரியங்களை நடத்துகின்ற அனுகூலத்தைப் பெற்றிருந்தனர். பக்திமிக்க விதவைகளின் நம்பிக்கையை அவர்கள் ஆதாயப்படுத்தி, அதற்குப்பின் அந்த விதவைகளிடம் அவர்களுடைய ஆஸ்திகளை மதசம்பந்தமான காரியங்களுக்குக் கொடுக்கவேண்டியது அவர்களுடைய கடமை என்று எடுத்துக்காட்டியிருந்தனர். அவர்களுடைய பணத்தின்மீது கட்டுப்பாடு கிடைத்தவுடன், சூழ்ச்சியாகத் திட்டமிட்டிருந்த அவர்கள் அதனைத் தங்களுடைய சுய இலாபத்திற்குப் பயன்படுத்தியிருந்தனர். அவர்களுடைய நேர்மையற்ற செயல்களை மறைப்பதற்காக அவர்கள் பொது இடங்களில் நீண்ட ஜெபங்களை ஏறெடுத்து, பயபக்தியின் ஒரு மாபெரும் வேஷத்தைக் காட்டியிருந்தனர். இந்த மாய்மாலம், பெரிய தண்டனையை அவர்கள்மீது கொண்டுவருமென்று கிறிஸ்து அறிவித்தார். நமது நாளிலும், பக்தியின் பெரிய வேஷத்தை வெளிக்காட்டிக்கொண்டிருக்கும் அநேகரின்மீது, அதே கடிந்துகொள்ளுதல் விழுகிறது. அவர்களுடைய வாழ்க்கை, சுயநலத்தினாலும் பேராசையினாலும் கறைபடிந்ததாக இருக்கிறது. ஆயினும், அவர்கள் அதன்மீது பக்திபோலக் காணப்படும் உடையைப்போர்த்தி, இவ்விதமாக சிறிது காலத்திற்குத் தங்களின் உடன் மனிதர்களை வஞ்சிக்கின்றனர். ஆனால் அவர்களால் தேவனை வஞ்சிக்கமுடியாது. அவர் இருதயத்தின் ஒவ்வொரு நோக்கத்தையும் வாசிக்கிறார். அவர் ஒவ்வொரு மனிதனையும் அவனுடைய செயல்களுக்குத்தக்கதாக நியாயந்தீர்ப்பார். (12)

அத்துமீறல்களைக் கடுமையாகக் கண்டித்த கிறிஸ்து கடமைகளைக் குறைக்காமலிருப்பதில் கவனமுள்ளவராக இருந்தார். விதவைகளிடமிருந்த நன்கொடைகளைப் பலவந்தமாக வசூலித்து, தவறாகச் செலவுசெய்திருந்த சுயநலத்தை அவர் கடிந்துகொண்டிருந்தார். அதேசமயத்தில் தேவனுடைய கருவூலத்திற்குத் தனது காணிக்கையைக் கொண்டுவந்த விதவையை அவர் புகழ்ந்தார். தேவனுக்குக் காணிக்கை கொண்டுவருபவர்களிடமிருந்து கிடைக்கும் அன்பளிப்புகளை மனிதர் தவறாகச் செலவுசெய்தபோதிலும், அதனால் காணிக்கை கொடுப்பவர்களுக்குக் கிடைக்கும் ஆசீர்வாதத்தைத் திருப்பமுடியாது. (13)

இயேசு ஆலயப்பிராகாரத்தில் காணிக்கைப்பெட்டிகளுக்கருகிலிருந்து அங்கு தங்களுடைய காணிக்கைகளைச் செலுத்த வந்தவர்களைக் கவனித்தார். செல்வந்தர்களில் அநேகர் பெருந்தொகைகளைக் கொண்டுவந்து, பெரும் ஆடம்பரத்துடன் செலுத்தினார்கள். இயேசு அவர்களைத் துயரத்துடன் பார்த்து, ஆனால் அவர்களுடைய தாராளமான காணிக்கையைப்பற்றி விளக்கம் எதுவும் செய்யாமலிருந்தார். அப்படியிருக்கும்போது, தன்னை யாராவது கவனித்துவிடுவார்களோ என்ற பயத்துடன், தயங்கினவளாக ஒரு விதவை சமீபித்துக்கொண்டிருந்ததைக் கண்டபோது, அவருடைய முகம் பிரகாசித்தது. செல்வமும் அகந்தையுமிக்கவர்கள் காணிக்கையைச் செலுத்தக் கடந்துசென்றிருந்தபோது, மேற்கொண்டு செல்வதற்குத் துணிவில்லாதவளைப்போல, அவள் தயங்கியவாறு பின்னிட்டாள். ஆயினும் அவள் நேசித்த காரியத்திற்காக, அவளால் கொடுக்கக்கூடியது மிகவும் சிறியதாக இருந்தபோதிலும், அதைச் செய்வதற்கு அவள் ஏங்கியிருந்தாள். தனது கையிலிருந்த காணிக்கையை அவள் பார்த்தாள். தன்னைச் சுற்றிலுமிருந்தவர்களின் காணிக்கையுடன் ஒப்பிடும்போது, அது மிகவும் சிறியதாக இருந்தது. இருந்தபோதிலும், அவளிடம் இருந்ததெல்லாம் அதுமட்டும்தான். அவளுடைய வாய்ப்பிற்காக அவள் கவனித்திருந்து, அவளுடைய இரண்டு காசுகளையும் அவசரமாகப் போட்டுவிட்டு, விரைந்துசென்றுவிட அவள் திரும்பினாள். ஆனால் அப்படிச்செய்தபோது, அவள்மீது அக்கறையுடன் பதிந்திருந்த இயேசுவின் கண்களை அவளுடைய கண்கள் கண்டது. (14)

இரட்சகர் அவருடைய சீடர்களை அவரிடத்திற்கு அழைத்து, அந்த விதவையின் வறுமையைக் குறிக்கும்படி கட்டளையிட்டார். “மற்றெல்லாரைப் பார்க்கிலும் இந்த ஏழை விதவை அதிகமாய்ப் போட்டாள் என்று மெய்யாகவே உங்களுக்குச் சொல்லுகிறேன்” என்ற அவருடைய புகழ்ச்சி அவளுடைய செவிகளில் விழுந்தது. தன்னுடைய செயல் புரிந்துகொள்ளப்பட்டு

போற்றப்பட்டது என்பதை அவள் உணர்ந்தபோது, மகிழ்ச்சியின் கண்ணீர் அவளுடைய கண்களை நிரப்பிற்று. அந்தச் சிறிய தொகையை அவளுடைய சொந்த உபயோகத்திற்கு வைத்துக்கொள்ளும்படி, அநேகர் அவளுக்கு ஆலோசனை கூறியிருந்திருக்கலாம். நன்றாகப் போஷிக்கப்பட்டிருந்த ஆசாரியர்களின் கைகளில் அது கொடுக்கப்பட்டிருந்தால், கருவூலத்திற்குக் கொண்டுவரப்பட்டிருந்த அநேக விலைமதிப்புமிக்க காணிக்கைகளுக்கிடையில் அது பார்வைக்குக் கொண்டுவரப்படாததாக இருந்திருக்கலாம். ஆனால் அவளுடைய உள்ளான மனதில், தேவாலயத்தில் நடைபெற்றிருந்த ஊழியம் தேவனால் நியமிக்கப்பட்டது என்று அவள் நம்பி, அதைத் தாங்குவதற்காக அவளால் முடிந்த அனைத்தையும் செய்தவற்கு அவள் கவலை உள்ளவளாக இருந்தாள். அவளால் முடிந்ததை செய்தாள். அவளது இந்தச் செயல் அவளுடைய ஞாபகச்சின்னமாகவும், அவளுடைய மகிழ்ச்சி நித்தியத்திலும் அனைத்து யுகங்களிலும் இருக்கும். அவளுடைய இருதயம் அவளுடைய காணிக்கையுடன் சென்றது. அவளுடைய காணிக்கை அந்த நாணயத்தின் மதிப்பினால் மதிப்பீடு செய்யப்படாமல், தேவன்மீதுள்ள அன்பினாலும், அந்தச் செயலைச் செய்யும்படி அவளைத் தூண்டியிருந்த செயலில் இருந்த ஆர்வத்தினாலும் மதிப்பீடு செய்யப்பட்டிருந்தது, (15)

அந்த ஏழை விதவையைப்பற்றி இயேசு: “மற்றெல்லாரைப் பார்க்கிலும் இந்த ஏழை விதவை அதிகமாய்ப் போட்டாள்” என்று கூறினார். செல்வந்தர்கள், அவர்களுடைய ஏராளத்திலிருந்து கொடுத்தார்கள். அவர்களில் அநேகர் மனிதர்களால் பார்க்கப்படுவதற்காகவும், கனப்படுத்தப்படுவதற்காகவும் கொடுத்தார்கள். அவர்களுடைய பெரிய நன்கொடைகள், அவர்களுடைய எந்த சௌகரியத்தையும் சுகபோகத்தையுங்கூட இழக்கச்செய்திருக்கவில்லை. அவர்கள் எந்தத் தியாகத்தையும் செய்தவற்கு அவசியமில்லாதவர்களாக இருந்ததுடன், அந்த விதவையின் காசின் மதிப்புடன் ஒப்பிடப்பட முடியாதவை களாக அவைகள் இருந்தன. (16)

நமது செயல்களின்மீது அவமானம் அல்லது உயர்வான சன்மார்க்க மதிப்பு ஆகிய குணத்தின் தன்மையை முத்திரையாகப் பதிப்பது, உள்ளத்தின் நோக்கமாக இருக்கிறது. எல்லாக் கண்களும் காணுகின்ற அல்லது எல்லா நாவுகளும் போற்றுகின்ற பெரிய காரியங்களை விலைமதிப்புமிக்கதாக தேவன் கணக்கிடுவதில்லை. அவருடைய பார்வையில் மகிழ்ச்சியுடன் செய்யப்பட்ட சிறிய கடமைகள், விளம்பரம் எதையும் காட்டாத சிறிய அன்பளிப்புகள், மனிதக் கண்களுக்கு விலைமதிப்பில்லாதவைகளாகத் தோன்றக்கூடியவைகள் அடிக்கடி மிகவும் உயர்வானவைகளாக நிற்கின்றன. மிகவும் விலையுயர்ந்த காணிக்கையைவிட விசுவாசமும் அன்பும் உள்ள ஒரு இருதயம் தேவனுக்கு

மிகவும் அருமையானதாக இருக்கிறது. அந்த ஏழை விதவை அந்தச் சிறிய செயலைச் செய்வதற்காக தனது ஜீவனத்திற்கானதைக் கொடுத்தாள். அவள் நேசித்த காரியத்திற்காக இரண்டு காசைக் கொடுப்பதற்காக அவள் தனது உணவை இழந்திருந்தாள். பரலோகத்திலிருக்கிற அவளுடைய பரமபிதா, அவளுடைய தேவையைப் பார்க்காமல் இருக்கமாட்டார் என்னும் விசுவாசத்தில், அவள் அதைச் செய்தாள். அந்த சுயநலமற்ற ஆவியும் சிறுபிள்ளையைப்போன்ற விசுவாசமும்தான் இரட்சகரின் பாராட்டுதலைப் பெற்றிருந்தது. (17)

தேவனுடைய கிருபைக்காகவும், சத்தியத்திற்காகவும் அவருக்கு நன்றியறிதலைக்காட்ட ஏக்கமுடையவர்களாக ஏழைகளுக்கு மத்தியில் அநேகர் இருக்கின்றனர். அவருடைய ஊழியத்தைத் தாங்குவதில் தங்களுடைய அதிகச் செல்வச் செழிப்புமிக்க சகோதரர்களுடன் பங்குபெறுவதற்கு பெரிய அளவில் அவர்கள் வாஞ்சையுள்ளவர்களாக இருக்கின்றனர். அந்த ஆத்துமாக்கள் பின்னிட்டுச்செல்லும்படி துரத்தப்படக்கூடாது. பரலோக வங்கியில் அவர்கள் தங்களுடைய காசுகளைச் செலுத்துவார்களாக. தேவன்மீதுள்ள அன்பினால் நிரப்பப்பட்ட இருதயத்திலிருந்து கொடுக்கப்பட்டிருக்கும்போது, அற்பமானவைகளாகக் காணப்படும் இவைகள் அர்ப்பணிக்கப்பட்ட அன்பளிப்புகளாகவும் விலையுயர்ந்த காணிக்கைகளாகவும் எண்ணப்படுகிறது. அவைகளை தேவன் புன்னகையுடன் ஆசீர்வதிக்கிறார். (18)

“மற்றெல்லாரைப் பார்க்கிலும் இந்த ஏழை விதவை அதிகமாய்ப் போட்டாள்” என்று அந்த விதவையைப்பற்றி இயேசு கூறினபோது, அந்த வார்த்தைகள் உள்நோக்கத்தைப்பற்றி மட்டுமின்றி, அவளுடைய காணிக்கையின் பலன்களைப்பற்றிய உண்மையாகவுமிருந்தது. ஒரு துட்டு ஆகக்கூடியதாக இருந்த அந்த இரண்டு காசுகள் தேவனுடைய கருவூலத்திற்கு யூதச் செல்வந்தர்களால் கொடுக்கப்பட்டிருந்த காணிக்கைகளைவிட மிகவும் பெரிய ஒரு தொகையான பணமாக இருந்தது. அந்தச் சிறிய காணிக்கையின் செல்வாக்கு, ஆரம்பத்தில் மிகவும் சிறியதாக இருந்து, பின்பு அகலமும் ஆழமுமாகக் காலங்கள் நெடுகிலும் ஓடக்கூடிய ஒரு நீரோட்டத்தைப்போல இருந்தது. ஏழைகளுக்கு உதவிசெய்யவும், சுவிசேஷத்தைப் பரப்பவும், அது ஆயிரம் வழிகளில் சகாயஞ்செய்திருக்கிறது. சுயத்தைத் தியாகஞ்செய்த அவளுடைய உதாரணம், ஒவ்வொரு தேசத்திலும் ஒவ்வொரு காலத்திலுமுள்ள ஆயிரக்கணக்கான இதயங்களின்மீது மீண்டும் மீண்டும் செயலாற்றியிருக்கிறது. அது செல்வந்தர்களிடத்திலும் ஏழைகளிடத்திலும் வேண்டுகோள் விடுத்து, அவர்களுடைய காணிக்கைகள் அவளுடைய காணிக்கையின் மதிப்பைப் பெருக்கியிருக்கின்றது. அந்த விதவையின்

காசின்மீதான தேவனுடைய ஆசீர்வாதம், அதனை மாபெரும் பலன்களுக்கு ஆதாரமாகச் செய்திருக்கிறது. தேவனுடைய மகிமைக்கென்று உண்மையான வாஞ்சையுடன் அளிக்கப்படும் ஒவ்வொரு காணிக்கையும், செய்யப்படும் ஒவ்வொரு செயலும், அதேவிதமாகவே இருக்கின்றது. அது சர்வவல்லவரின் நோக்கங்களுடனும் பிணைக்கப்பட்டிருக்கிறது. நன்மைக்கான அதன் பலனை ஒரு மனிதனாலும் அளவிடமுடியாது. (19)

"குருடரான வழிகாட்டிகளே! உங்களுக்கு ஐயோ, எவனாகிலும் தேவாலயத்தின்பேரில் சத்தியம்பண்ணினால் அதினால் ஒன்றுமில்லையென்றும், எவனாகிலும் தேவாலயத்தின் பொன்னின்பேரில் சத்தியம்பண்ணினால் அவன் கடனாளியென்றும் சொல்லுகிறீர்கள். மதிகேடரே, குருடரே! எது முக்கியம்? பொன்னோ, பொன்னைப் பரிசுத்த மாக்குகிற தேவாலயமோ? மேலும், எவனாகிலும் பலிபீடத்தின்பேரில் சத்தியம்பண்ணினால் அதினால் ஒன்றுமில்லையென்றும், எவனாகிலும் அதின்மேல் இருக்கிற காணிக்கையின்பேரில் சத்தியம்பண்ணினால், அவன் கடனாளியென்றும் சொல்லுகிறீர்கள். மதிகேடரே, குருடரே! எது முக்கியம்? காணிக்கையோ, காணிக்கையைப் பரிசுத்தமாக்குகிற பலிபீடமோ?" என்று இரட்சகர் வேதபாரகர்களையும் பரிசேயர்களையும் வெளியரங்கமாகக் குற்றஞ்சாட்டுவதில் தொடர்ந்தார். ஆசாரியர்கள் அவர்களுடைய சொந்த—தவறான—குறுகிய தரத்தின்படி தேவனுடைய கோரிக்கைகளுக்கு விளக்கங் கொடுத்திருந்தனர். பல்வேறுதரப்பட்ட ஒப்பிடக்கூடிய காலங்களுக்கு நேர்த்தியான வித்தியாசத்தைச் செய்யத் துணிகரம்கொண்டு, சிலவற்றை மிகவும் இலேசானதாக விட்டுவிட்டு, மற்ற சிலவற்றை மன்னிப்புக் கேட்பதற்கான விளைவுகள் இல்லாதவைகளைப்போல நடத்தியிருந்தனர். மனிதர்கள் செய்திருந்த ஆணைகளிலிருந்து பணத்திற்காக அவர்களை விடுவித்திருந்தனர். மிகப்பெரிய குற்றங்களையுங்கூட சில சமயங்களில் அவர்கள் பெருந்தொகையான பணத்திற்காக காணாதவர்கள்போல விட்டிருந்தனர். அதேநேரத்தில், இந்த ஆசாரியர்களும் அதிபதிகளும் அற்பமான மற்ற குற்றங்களுக்குக்கூடக் கடுமையான நியாயத்தீர்ப்பைக் கூறியிருந்தனர். (20)

"மாயக்காரராகிய வேதபாரகரே! பரிசேயரே! உங்களுக்கு ஐயோ, நீங்கள் ஒற்தலாமிலும் வெந்தையத்திலும் சீரகத்திலும் தசமபாகம் செலுத்தி, நியாயப்பிரமாணத்தில் கற்பித்திருக்கிற விசேஷித்தவைகளாகிய நீதியையும் இரக்கத்தையும் விசுவாசத்தையும் விட்டுவிட்டீர்கள், இவைகளையும் செய்யவேண்டும், அவைகளையும் விடாதிருக்கவேண்டுமே." பரிசுத்தமான கடமையை தகாதவிதமாக உபயோகிப்பதை இந்த வார்த்தைகளால்

கிறிஸ்து மறுபடியும் ஆக்கினைக்குட்படுத்துகிறார். அந்தக் கடமையை அவர் நீக்கிவைப்பதில்லை. தசமபாக முறை தேவனால் ஏற்படுத்தப்பட்டு, அது ஆரம்ப காலங்களிலிருந்தே கடைப்பிடிக்கப்பட்டு வந்திருக்கிறது. விசுவாசிகளின் தகப்பனான ஆபிரகாம் அவனுக்குண்டான எல்லாவற்றிலுமிருந்து தசமபாகம் செலுத்தியிருந்தான். தசமபாகத்தின் கடமையை யூத அதிபதிகள் இனங்கண்டிருந்தனர். அது சரியானதாக இருந்தது. ஆனால் மக்கள் அவர்களுடைய கடமையைப்பற்றிய மன உணர்த்துதலின்படிச் செயல் படுவதற்கு அவர்களை விடாமலிருந்தனர். ஒவ்வொரு காரியத்திலும் தன்னிச்சையான சட்டங்கள் முன்வைக்கப்பட்டிருந்தன. அந்த கோரிக்கைகள் அவர்களால் நிறைவேற்றமுடியாதவிதத்தில் சிக்கலாகியிருந்தன. அவர்களுடைய கடமைகள் எப்பொழுது நிறைவேறியிருந்தன என்பதை ஒருவரும் அறியாமலிருந்தனர். தேவன் கொடுத்திருந்த விதத்தில் அந்த முறை நீதியானதாகவும் நியாயமானதாகவும் இருந்தது. ஆனால் ஆசாரியர்களும் ரபிமார்களும் அதை ஒரு சலிப்பூட்டும் சுமையாக்கியிருந்தனர். (21)

தேவன் கட்டளையிடும் அனைத்தும் அவைகளின் பலனை உடையதாக இருக்கிறது. தசமபாகம் கொடுப்பதை ஒரு கடமையென்று கிறிஸ்து அங்கீகரித்திருந்தார். ஆனால் அது மற்ற கடமைகளை அசட்டை செய்வதற்கு ஒரு சாக்குப்போக்காக ஆகக்கூடாது என்பதையும் சுட்டிக்காட்டினார். பரிசேயர்கள் விவசாயப்பொருட்களான ஒற்தலாம், வெந்தயம், சீரகம் போன்றவைகளில் தசமபாகம் வசூலிப்பதில் கண்டிப்பாக இருந்தனர். அதில் அவர்களுக்குச் செலவு குறைவாக இருந்தது. அவர்களுடைய சரியான தன்மைக்கும் பரிசுத்தத்திற்கும் ஒரு புகழை அது அவர்களுக்குக் கொடுத்தது. அதேநேரத்தில், பயனற்ற அவர்களுடைய கட்டுப்பாடுகள் மக்களை ஒடுக்கி, தேவனுடைய சொந்த ஏற்பாடாக இருந்த பரிசுத்தமான முறைமையின்மீதிருந்த மரியாதையை அழித்திருந்தது. அவை மனிதர்களின் மனங்களை அற்பமான வேறுபாடுகளில் ஈடுபடச்செய்து, அவர்களுடைய கவனத்தை முக்கியமான சத்தியத்திலிருந்து வேறு பக்கமாகத் திருப்பியிருந்தது. நியாயப்பிரமாணத்திலிருந்த நீதி, இரக்கம், சத்தியம் ஆகிய கனமிக்கக் காரியங்கள் அலட்சியப்படுத்தப்பட்டிருந்தன. “இவைகளையும் செய்யவேண்டும், அவைகளையும் விடாதிருக்கவேண்டுமே” என்று கிறிஸ்து கூறினார். (22)

மற்ற பிரமாணங்களும் அதேவிதமாக ரபிமார்களால் தாறுமாறாக்கப்பட்டிருந்தன. மோசேயின்மூலமாகக் கொடுக்கப்பட்டிருந்த கட்டளைகளில் அசுத்தமானவைகளைப் புசிப்பது தடைசெய்யப்பட்டிருந்தது. பன்றி மற்றும் சில மிருகங்களின் இறைச்சிகளைப் பயன்படுத்துவது,

இரத்தத்தை மாசுபடுத்தக்கூடியதாகவும் ஆயுட்காலத்தைக் குறைப்பதாகவும் இருந்ததினால், அவை தடைசெய்யப்பட்டிருந்தன. ஆனால் பரிசேயர்கள் தேவன் கொடுத்திருந்த இத்தகைய கட்டுப்பாடுகளை அப்படியே விட்டுவிடவில்லை. அவர்கள் தேவைப்படாத மிதமிஞ்சிய எல்லைக்கும் அப்பால் சென்றிருந்தனர். அசுத்தமான மிருகங்களைப்போலவே தண்ணீரிலுள்ள நுண்ணிய பூச்சிகளையும் வகைப்படுத்தி, அவை தண்ணீரில் இருப்பதைத் தவிர்க்கவேண்டும் என்பதற்காக மற்ற பொருட்களுக்கிடையில் தண்ணீரும் வடிகட்டப்படவேண்டும் என்று கூறப்பட்டிருந்தது. இந்த அற்பமான தேவையற்ற பணிச்சுமைகளுடன் அவர்களுடைய உண்மையான பாவங்களின் பெரிய அளவை ஒப்பிட்டுக்காட்டி, பரிசேயர்களை நோக்கி: “கொசுயில்லாதபடி வடிகட்டி, ஒட்டகத்தை விழுங்குகிறவர்களாயிருக்கிறீர்கள்” என்று இயேசு கூறினார். (23)

“மாயக்காரராகிய வேதபாரகரே! பரிசேயரே! உங்களுக்கு ஐயோ, வெள்ளையடிக்கப்பட்ட கல்லறைகளுக்கு ஒப்பாயிருக்கிறீர்கள், அவைகள் புறம்பே அலங்காரமாய்க் காணப்படும், உள்ளேயோ மரித்தவர்களின் எலும்புகளினாலும் சகல அசுத்தத்தினாலும் நிறைந்திருக்கும்” என்றார். உடலில் அழுகி நாறும் மீதமானவைகள் வெள்ளையடிக்கப்பட்டு, அழகாக அலங்கரிக்கப்பட்டுள்ள கல்லறைகளால் உள்ளே மறைத்துவைக்கப்பட்டிருப்பதைப்போல, ஆசாரியர்கள் அதிபதிகள் ஆகியோரின் வெளித்தோற்றமான பரிசுத்தத்தன்மை, அக்கிரமங்களை உள்ளே மறைத்து வைத்திருக்கிறது என்று கூறி, மேலும் இயேசு தொடர்ந்தார்: (24)

“மாயக்காரராகிய வேதபாரகரே! பரிசேயரே! உங்களுக்கு ஐயோ, நீங்கள் தீர்க்கதரிசிகளின் கல்லறைகளைக் கட்டி, நீதிமான்களின் சமாதிகளைச் சிங்காரித்து: எங்கள் பிதாக்களின் நாட்களில் இருந்தோமானால், அவர்களோடே நாங்கள் தீர்க்கதரிசிகளின் இரத்தப்பழிக்கு உடன்பட்டிருக்கமாட்டோம் என்கிறீர்கள். ஆகையால், தீர்க்கதரிசிகளைக் கொலை செய்தவர்களுக்குப் புத்திரராயிருக்கிறீர்கள் என்று உங்களைக்குறித்து நீங்களே சாட்சிகளாயிருக்கிறீர்கள்” என்றார். மரித்த தீர்க்கதரிசிகளின்மீதிருந்த தங்களுடைய நன்மதிப்பைக் காட்டுவதற்கக அவர்களுடைய கல்லறைகளை அழகுபடுத்துவதில் யூதர்கள் பேரார்வமுடையவர்களாயிருந்து, அவர்களுடைய போதனைகளினால் நன்மையடையாதவர்களாகவும் அல்லது அவர்களுடைய கடிந்துகொள்ளுதல்களுக்குச் செவிசாய்க்காதவர்களாகவுமிருந்தனர். (25)

கிறிஸ்துவின் நாட்களில் மரித்தோர் இளைப்பாறியிருந்த இடங்களின்மீது மூடபக்திமிக்க மரியாதை பேணப்பட்டிருந்து, அவைகளை அழகுபடுத்துவதில் பெருந்தொகையான பணம் செலவிடப்பட்டிருந்தது.

தேவனுடைய பார்வையில் இது விக்கிரக ஆராதனையாக இருந்தது. மரித்தோரிடத்தில் மனிதர்கள் காட்டியிருந்த தேவையற்ற மரியாதையினால் அவர்கள் தேவனை எல்லாவற்றிற்கும்மேலாக நேசிக்கவில்லை என்பதையும், அல்லது உடன் மனிதர்களைத் தங்களைப்போல நேசிக்கவில்லை என்பதையும் காட்டியிருந்தனர். அதேவிதமாக, பெரிய அளவிலான விக்கிரக ஆராதனை இன்றும் செய்யப்படுகிறது. மரித்தவர்களுக்கான விலைமதிப்புமிக்க நினைவுச்சின்னங்களைக் கட்டுவதற்காக விதவைகள், திக்கற்ற பிள்ளைகள், நோயாளிகள், ஏழைகள் ஆகியோரை அலட்சியஞ்செய்வதில் குற்றமுடையவர்களாக அநேகர் இருக்கின்றனர். உயிருள்ளவர்களுக்குச் செய்யவேண்டிய கடமைகளும் இயேசு வெளிப்படையாகக் கொடுத்திருந்த கட்டளைகளும் செய்யப்படாமல் விடப்பட்டிருக்கும்போது, இந்த நோக்கத்திற்காகக் காலம், பணம், உழைப்பு ஆகியவை தாராளமாகச் செலவிடப்படுகின்றன. (26)

பரிசேயர்கள் தீர்க்கதரிசிகளுக்கு கல்லறைகளைக் கட்டி, அவைகளை அலங்கரித்து, “நாங்கள் எங்கள் பிதாக்களின் நாட்களில் இருந்திருந்தோமானால், தேவனுடைய ஊழியக்காரர்களின் இரத்தம் சிந்தப்படுவதற்கு உடந்தையாக இருந்திருக்கமாட்டோம்” என்று ஒருவருக் கொருவர் கூறியிருந்தனர். அதேநேரத்தில், (தேவனுடைய) குமாரனைக் கொலைசெய்யத் திட்டமிட்டுக்கொண்டிருந்தனர். இது நமக்கு ஒரு பாடமாக இருக்கவேண்டும். இது சத்தியத்தின் ஒளியிலிருந்து திரும்புகின்ற மனதை வஞ்சிப்பதற்கான சாத்தானின் வல்லமையைப் பார்க்கும்படி, நமது கண்களைத் திறக்கவேண்டும். பரிசேயர்களின் நடத்தையை அநேகர் பின்பற்றுகின்றனர். தங்களுடைய விசுவாசத்திற்காக மரித்தவர்களை அவர்கள் வணங்குகின்றனர். கிறிஸ்துவை புறக்கணித்ததிலிருந்த யூதர்களின் குருட்டுத்தன்மையில் அவர்கள் ஆச்சரியமடைகின்றனர். அவருடைய நாளில் நாங்கள் வாழ்ந்திருந்தோமானால் அவருடைய போதனைகளை மகிழ்ச்சியுடன் பெற்றுக்கொண்டிருந்து, இரட்சகரைப் புறக்கணித்தவர்களின் குற்றத்தில் ஒருபோதும் பங்குபெற்றிருக்கமாட்டோம் என்று அறிவிக்கின்றனர். ஆனால் தேவனுக்குக் கீழ்ப்படியும் காரியம், சுயமறுப்பையும் தாழ்மையையும் கோரும்போது, இந்த அதே மனிதர்கள் தங்களுடைய மனதின் உணர்த்துதல்களை அடித்தமர்த்தி, கீழ்ப்படிதலை மறுக்கின்றனர். இவ்விதமாக கிறிஸ்து எந்தப் பரிசேயர்களைக் குற்றப்படுத்தியிருந்தாரோ, அந்தப் பரிசேயர்களின் அதே ஆவியை வெளிக்காட்டுகின்றனர். (27)

கிறிஸ்துவை புறக்கணித்ததில் சம்பந்தப்பட்டிருந்த பயங்கரமான பொறுப்பை உணராதவர்களாக யூதர்கள் இருந்திருந்தனர். குற்றமற்ற

இரத்தம் முதலில் சிந்தப்பட்டிருந்த நாளிலிருந்து—நீதிமானான ஆபேல் காயீனின் கையினால் விழுந்த நேரத்திலிருந்து, அதிகரிக்கும் குற்றத்துடன் அதே வரலாறு மீண்டும் நிகழ்த்தப்பட்டிருந்தது. ஒவ்வொரு காலகட்டத்திலும் தீர்க்கதரிசிகள், அரசர்கள், அதிபதிகள், மக்கள் ஆகியோர், தேவன் அவர்களுக்குக் கொடுத்திருந்த வார்த்தைகளைப் பேசி, தங்களுடைய உயிர்களின் அபாயத்தில் அவருடைய சித்தத்திற்குக் கீழ்ப்படிந்து, அவர்களுக்கெதிராகத் தங்களுடைய குரல்களை உயர்த்தியிருந்தனர். ஒளியையும் சத்தியத்தையும் புறக்கணித்தவர்களுக்கான ஒரு பயங்கர மான தண்டனை தலைமுறைகள்தோறும் குவிந்துகொண்டிருந்தது, இப்பொழுது அதைக் கிறிஸ்துவின் எதிரிகள் அவர்களுடைய சொந்தத் தலைகளின்மீது இழுத்துப்போட்டுக்கொண்டிருந்தனர். முன்பைவிட, எந்தத் தலைமுறையைவிடவும் ஆசாரியர்கள் அதிபதிகள் ஆகியோரின் பாவங்கள் மிகவும் பெரியதாக இருந்தன. இரட்சகரை அவர்கள் புறக்கணித்ததினால், ஆபேலிலிருந்து கிறிஸ்துவரை கொலை செய்யப்பட்டிருந்த நீதிமான்கள் அனைவரின் இரத்தத்திற்கும் தங்களைத் தாங்களே பொறுப்பாளிகளாகிக் கொண்டிருந்தனர். அவர்களுடைய அக்கிரமத்தின் பாத்திரத்தை அவர்கள் நிரம்பிவழியச்செய்யப் போகிறவர்களாக இருந்தனர். விரைவில் அது தேவகோபமாகிய நீதியாக, அவர்களுடைய தலைகளின்மீது ஊற்றப்படவேண்டியதாக இருந்தது. இயேசு அவர்களை: (28)

“நீதிமானாகிய ஆபேலின் இரத்தம் முதல் தேவாலயத்துக்கும் பலிபீடத்துக்கும் நடுவே நீங்கள் கொலைசெய்த பரகியாவின் குமாரனாகிய சகரியாவின் இரத்தம்வரைக்கும், பூமியின்மேல் சிந்தப்பட்ட நீதிமான்களின் இரத்தப்பழியெல்லாம் உங்கள்மேல் வரும்படியாக இப்படிச் செய்வீர்கள்” என்று எச்சரித்தார். (29)

இயேசுவின் பேச்சைக் கவனித்திருந்த வேதபாரகர்களும் பரிசேயர்களும் அவருடைய வார்த்தைகள் உண்மையானவை என்பதை அறிந்திருந்தனர். தீர்க்கதரிசியான சகரியா எவ்விதமாகக் கொலைசெய்யப்பட்டான் என்பதை அவர்கள் அறிந்திருந்தனர். தேவனுடைய எச்சரிக்கையின் வார்த்தைகள் அவனுடைய உதடுகளில் இருந்தபோது, மருளவிழுந்திருந்த அரசனை ஒரு பேய்த்தனமான கோபம் பற்றிக்கொண்டது. அவனுடைய கட்டளையால் அந்த தீர்க்கதரிசி மரணத்திற்குள்ளாக்கப்பட்டான். அவனுடைய இரத்தம் ஆலயப்பிராகாரத்தின் கற்களின்மீது படிந்திருந்து, அழிக்கமுடியாததாக மருளவிழுந்துபோன இஸ்ரவேலருக்கெதிரான சாட்சியாக இருந்தது. அந்த ஆலயம் நிற்கும் காலம் முழுவதிலும் அந்த நீதிமானின் இரத்தம் அங்கேயிருந்து பழிவாங்கும்படி தேவனை நோக்கி அழுதுகொண்டிருந்தது.

இந்தப் பயங்கரமான பாவங்களை இயேசு சுட்டிக்காட்டியபோது, ஒரு பயங்கரமான கிளர்ச்சி திரளானவர்களுக்கூடாக உருவாகியது. (30)

இயேசு முன்நோக்கிப்பார்த்து, யூதர்களின் பாவத்திற்கென்று வருந்தாத தன்மையும் தேவனுடைய ஊழியக்காரர்களுக்கெதிரான அவர்களுடைய சகிப்பற்றத் தன்மையும் கடந்த காலத்திலிருந்ததைப்போலவே எதிர்காலத்திலும் இருக்கும் என்று அறிவித்தார். (31)

"ஆகையால், இதோ, தீர்க்கதரிசிகளையும் ஞானிகளையும் வேதபாரகரையும் உங்களிடத்தில் அனுப்புகிறேன்; அவர்களில் சிலரைக் கொன்று சிலுவைகளில் அறைவீர்கள், சிலரை உங்கள் ஆலயங்களில் வாரினால் அடித்து, ஊருக்கு ஊர் துன்பப்படுத்துவீர்கள்;" பூரணமாக விசுவாசத்தையும் பரிசுத்த ஆவியையும் உடைய தீர்க்கதரிசிகள், ஞானமிக்க மனிதர்கள், ஸ்தேவான், யாக்கோபு மற்றும் பலர் ஆக்கினைக்கு உட்படுத்தப்பட்டுக் கொலைசெய்யப்படுவார்கள் வானத்திற்கு நேராக உயர்த்தப்பட்ட கரத்துடன் ஒரு தெய்வீக ஒளி அவரைச் சூழ்ந்திருக்க கிறிஸ்து அவர்களுக்கு முன்னாலிருந்தவர்களிடத்தில் ஒரு நியாயாதிபதியைப்போலப் பேசினார். சாதுவான தன்மையுடனும் மன்றாடுகின்றவிதத்திலும் அடிக்கடி கேட்கப்பட்டிருந்த அவருடைய குரல் இப்பொழுது கடிந்துகொள்ளுகின்ற விதமாகவும் கண்டனஞ்செய்கின்ற விதமாகவும் கேட்கப்பட்டது. அதைக் கேட்டுக்கொண்டிருந்தவர்கள் நடுங்கினார்கள். அவருடைய வார்த்தைகளி னாலும் அவருடைய பார்வையினாலும் உண்டுபண்ணப்பட்டிருந்த உணர்த்துதல் ஒருபோதும் நீக்கப்படமுடியாததாக இருந்தது. (32)

தங்களுடைய சொந்த ஆத்துமாக்களை அழித்து, மக்களை வஞ்சித்து, தேவனைக் கனவீனப்படுத்திக்கொண்டு வாழ்ந்திருந்த மனிதர்களின் மாய்மாலம், பெரும் பாவங்கள் ஆகியவைகளுக்கு எதிராக கிறிஸ்துவின் கோபம் திருப்பிவிடப்பட்டிருந்தது. ஆசாரியர்களிடமும் அதிபதிகளிடமும் காணப்பட்டிருந்த பார்வைக்கு நல்லவைபோலத் தோன்றின தீய வஞ்சகமிக்க நியாயங்களில், சாத்தானின் ஏதுகரங்களின் செயல்பாடுகளை அவர் அறிந்திருந்தார். பாவத்தைப்பற்றிய அவருடைய வெளிப்படையான குற்றச்சாட்டு, தெளிவானதாகவும் ஆராய்வதாகவுமிருந்தது. ஆனால் திருப்பித்தாக்கும் எந்த வார்த்தைகளையும் அவர் பேசியிருக்கவில்லை. அந்தகார பிரபுவிற்கு எதிராக அவர் ஒரு பரிசுத்தமான உக்கிர கோபத்தை உடையவராக இருந்தார். ஆனால் எரிச்சலுள்ள ஒரு குணத்தை அவர் வெளிக்காட்டவில்லை. அதைப்போலவே தேவனுடன் இசைவாக வாழ்ந்துகொண்டிருக்கும் ஒரு கிறிஸ்தவனும், அன்பு, இரக்கம் ஆகியவைகளின் இனிமையை உடையவனாக இருக்கும் கிறிஸ்தவனும்,

பாவத்திற்கெதிரான ஒரு நீதியான கோபத்தை உணருபவனாக இருப்பான். தன்னைத் தூற்றுபவனை திரும்பத் தூற்றும்படி உணர்ச்சிவசப்படமாட்டான். தவறானவைகளைப் பாராமரிக்கும்படி அடிமட்டத்திலிருந்து வருகின்ற ஒரு வல்லமையினால் நடத்தப்படுபவர்களைச் சந்திப்பதிலுங்கூட அவன் கிறிஸ்துவினால் தொடர்ந்து அமைதியையும் தன்னடக்கத்தையும் காத்துக் கொள்ளுவான். (33)

தேவகுமாரன் அவருடைய நிலைத்துநிற்கும் பார்வையை தேவாலயத்தின்மீதும் அவர் பேசுவதைக் கேட்டிருந்தவர்களின்மீதும் வைத்தபோது, அவரது முகத்தை தெய்வீக இரக்கம் அடையாளப் படுத்தியிருந்தது. "எருசலேமே, எருசலேமே, தீர்க்கதரிசிகளைக் கொலை செய்து, உன்னிடத்தில் அனுப்பப்பட்டவர்களைக் கல்லெறிகிறவளே! கோழி தன் குஞ்சுகளைத் தன் சிறகுகளின்கீழே கூட்டிச் சேர்த்துக் கொள்ளும்வண்ணமாக நான் எத்தனை தரமோ உன் பிள்ளைகளைக் கூட்டிச் சேர்த்துக்கொள்ள மனதாயிருந்தேன்" என்று இருதயத்தில் ஆழ்ந்த கடுந்துயர் நிறைந்தவராக, திணறிய ஒரு குரலுடன், கசப்புமிக்க கண்ணீரை சிந்திய நிலையில், வேதனையுடன் விம்மினார். இது பிரிதலின் ரோபாராட்டமாக இருந்தது. கிறிஸ்துவின் புலம்பலில் தேவனுடைய இருதயமே ஊற்றப்பட்டிருந்தது. அது தெய்வீகத்தின் நீடிய பொறுமைமிக்க அன்பின் இரகசியமான பிரிவுபசாரமாக இருக்கிறது. (34)

பரிசேயர்களும் சதுசேயர்களும் ஒன்றுபோல மௌனப்படுத்தப்பட்டனர். இயேசு அவருடைய சீடர்களை அழைத்து, தேவாலயத்தைவிட்டுச்செல்ல ஆயத்தஞ்செய்தார். தோற்கடிக்கப்பட்ட ஒருவரைப்போலவும், அவருடைய எதிரிகளின்சமுகத்திலிருந்துநீங்கிச்செல்லும்படிபாலவந்தம்செய்யப்பட்டவரைப் போலவும் இல்லாமல், தமது பணியை நிறைவேற்றிவிட்ட ஒருவரைப்போலப் புறப்பட்டுச்செல்ல ஆயத்தஞ்செய்தார். அந்த சர்ச்சையிலிருந்து ஒரு வெற்றி வீரராக அவர் விலகிச்சென்றார். (35)

சம்பவங்கள் மிகுந்த அந்த நாளில் கிறிஸ்துவின் உதடுகளிலிருந்து விழுந்த சத்தியத்தின் வைரங்கள் அநேக இருதயங்களில் பொக்கிஷமாக சேகரிக்கப்பட்டிருந்தனர். அவர்களுடைய வாழ்க்கையில் புதிய எண்ணங்கள் புறப்பட்டன. புதிய மேலான நோக்கங்கள் விழிப்படைந்திருந்தன. ஒரு புதிய வரலாறு ஆரம்பமாயிற்று. கிறிஸ்துவின் சிலுவை மரணத்திற்கும் உயிர்த்தெழுதலிற்கும்பின், அந்த மனிதர்கள் முன்வந்து, அந்த வேலையின் பெரிய அளவிற்குத்தக்கவிதமான ஞானத்துடனும் பேரார்வத்துடனும் அவர்களுடைய தெய்வீக ஊழியத்தை நிறைவேற்றினார்கள். ஆயிரக்கணக் கானவர்களின் வாழ்க்கையை நீண்டகாலமாக குற்றப்படுத்தியிருந்த

பழைய மூடநம்பிக்கைகளை பலவீனப்படுத்திக்கொண்டு, மனிதர்களின் இருதயங்களில் மேல்முறையீடு செய்கின்ற ஒரு தூதை, அவர்கள் உடையவர்களாக இருந்தனர். அவர்களுடைய சாட்சிகளுக்குமுன் மனிதக் கோட்பாடுகளின் விளக்கங்களும் தத்துவங்களும் வீணான—செயலற்ற கட்டுக்கதைகளாக இருந்தன. எருசலேம் தேவாலயத்தில் ஆச்சரியத்தால் திகைப்படைந்திருந்த கூட்டத்தினருக்கு, இரட்சகரின் வார்த்தைகளிலிருந்து பாய்ந்தோடியிருந்தவைகளின் பலன்கள் பலத்தவைகளாக இருந்தன. (36)

ஆனால் ஒரு ஜனமாக இருந்த இஸ்ரவேல், தேவனிடத்திலிருந்து தன் உறவை முறித்திருந்தாள். ஒலிவமரத்தின் இயற்கையான கிளைகள் முறிக்கப்பட்டிருந்தன. அந்த ஆலயத்தின் உட்புறத்தை கடைசித் தடவையாகப் பார்த்த இயேசு, துயரத்தோடு: “இதோ, உங்கள் வீடு உங்களுக்குப் பாழாக்கிவிடப்படும். கர்த்தருடைய நாமத்தினாலே வருகிறவர் ஸ்தோத்திரிக்கப்பட்டவர் என்று நீங்கள் சொல்லுமளவும், இதுமுதல் என்னைக் காணாதிருப்பீர்கள் என்று உங்களுக்குச் சொல்லுகிறேன்” என்றார். இதுவரை அவர் அந்த தேவாலயத்தைத் தமது பிதாவின் வீடு என்று கூறியிருந்தார். ஆனால் இப்பொழுது தேவகுமாரன் அதன் சுவர்களைக் கடந்து வெளியில் செல்லும்போது, அவருடைய மகிமைக்கென்று கட்டப்பட்டிருந்த அந்த ஆலயத்திலிருந்து, என்றென்றைக்குமாக தேவப்பிரசன்னம் பின்னிழுத்துக்கொள்ளப்பட்டிருக்கும். இனிமேல், அதன் மதச்சடங்குகள் அர்த்தமற்றவையாகவும், அதன் ஆராதனைகள் பொருளற்றவையாகவும் இருக்கும். (37) ★

# 68

# வெளிப்பிராகாரத்தில்!

**யோவான் 12:20–43**

**(The Desire of Ages, pp. 621–626)**

“பண்டிகையில் ஆராதனை செய்யவந்தவர்களில் சில கிரேக்கர் இருந்தார்கள். அவர்கள் கலிலேயாநாட்டுப் பெத்சாயிதா ஊரானாகிய பிலிப்புவினிடத்தில் வந்து: ஐயா, இயேசுவைக் காண விரும்புகிறோம் என்று அவனைக் கேட்டுக்கொண்டார்கள். பிலிப்பு வந்து, அதை அந்திரேயாவுக்கு அறிவித்தான்; பின்பு அந்திரேயாவும் பிலிப்புவும் அதை இயேசுவுக்கு அறிவித்தார்கள்.” (1)

இந்த நேரத்தில் கிறிஸ்துவின் ஊழியம் மோசமான தோல்வியைச் சந்தித்ததைப்போலத் தோற்றமளித்தது. ஆசாரியர்கள் அதிபதிகளோடிருந்த எதிர்வாதத்தில் அவர் வெற்றிவீரராக இருந்தார். ஆனால் அவர் ஒருபோதும் அவர்களால் மேசியா என்று ஏற்றுக்கொள்ளப்படமாட்டார் என்பது நன்கு தெரிந்திருந்தது. இறுதியாகப் பிரியும் நேரம் வந்திருந்தது. அவருடைய சீடர்களுக்குக் காரியம் நம்பிக்கையில்லாததுபோலத் தோன்றியிருந்தது. ஆனால் கிறிஸ்து அவருடைய பணியின் நிறைவைச் சமீபித்துக்கொண்டிருந்தார். யூத ஜனத்தை மட்டுமின்றி, உலகம் முழுவதையும்பற்றிய பெரிய நிகழ்ச்சி, நடக்கப்போவதாக இருந்தது. “இயேசுவைக் காண விரும்புகிறோம்” என்ற அக்கறைமிக்க வேண்டுகோள்—உலகத்தின் பசியுள்ள அழுகுரல் எதிரொலித்தபோது, அவருடைய முகம் மிகவும் பிரகாசமடைந்தது. அவர்: “மனுஷகுமாரன் மகிமைப்படும்படியான வேளை வந்தது” என்று கூறினார். கிரேக்கர்களின் வேண்டுகோளில் அவரது பெரிய தியாகபலியின் பலன்களைப்பற்றிய ஒரு அக்கறையை அவர் கண்டார். (2)

இரட்சகருடைய வாழ்க்கையின் ஆரம்பத்தில் கிழக்கிலிருந்து ஞானவான்கள் வந்ததைப்போல, அவருடைய வாழ்க்கையின் முடிவின் போது, இரட்சகரைக் காண்பதற்கு இந்த மனிதர்கள் மேற்கிலிருந்து வந்தனர். கிறிஸ்துவின் பிறப்பின்போது, அவருடைய வருகையை அறியாமலிருக்கக்கூடியவிதமாக யூதமக்கள் அவர்களுடைய பேராவல்மிக்க

திட்டங்களில் மனங்களை ஈடுபடுத்தியிருந்தனர். இரட்சகரைத் தொழுது கொள்வதற்காக, அஞ்ஞான தேசத்திலிருந்து ஞானிகள் தங்களுடைய காணிக்கைகளுடன் முன்னணைக்கு வந்தனர். அப்படியே, தேசங்களையும் கோத்திரங்களையும் உலகத்தின் மக்களையும் பிரதிநிதித்துவப்படுத்தியிருந்த இந்த கிரேக்கர்கள், இயேசுவைக் காண வந்தனர். அதைப்போலவே, எல்லாத் தேசங்களிலும் எல்லா யுகங்களிலும் உள்ள மக்கள் இரட்சகரின் சிலுவையினால் இழுத்துக்கொள்ளளப்படுவார்கள். அப்படியே "அநேகர் கிழக்கிலும் மேற்கிலுமிருந்து வந்து, பரலோகராஜ்யத்தில் ஆபிரகாம் ஈசாக்கு யாக்கோபு என்பவர்களோடே பந்தியிருப்பார்கள்"—மத்தேயு 8:11. (3)

எருசலேமிற்குள் கிறிஸ்து வெற்றிகரமாகப் பிரவேசித்ததை அந்த கிரேக்கர்கள் கேள்விப்பட்டிருந்தனர். அவர் ஆசாரியர்களையும் அதிபதிகளையும் ஆலயத்திலிருந்து துரத்தியிருந்தாரென்றும், அவர் தாவீதின் சிங்காசனத்தைக் கைவசப்படுத்தி இஸ்ரவேலரின் அரசராக ஆளுகைசெய்வார் என்றும் சிலர் யூகஞ்செய்து, அந்த அறிக்கையைச் சுற்றுக்கு விட்டிருந்தனர். அவருடைய ஊழியம்பற்றிய உண்மையை அறிந்து கொள்வதற்கு அந்த கிரேக்கர்கள் ஏக்கமுடையவர்களாக இருந்திருந்தனர். "இயேசுவைக் காண விரும்புகிறோம்" என்று அவர்கள் கூறினார்கள். அவர்களுடைய விருப்பம் அனுமதிக்கப்பட்டது. அந்த வேண்டுகோள் இயேசுவிடம் கொண்டுவரப்பட்டிருந்தபோது, யூதர்களைத்தவிர மற்றனைவரும் தவிர்க்கப்பட்டிருந்த ஆலயத்தின் ஒரு பகுதியில் அவர் இருந்தார். பின்னர் வெளிப்பிராகாரத்திலிருந்த அந்த கிரேக்கரிடம் சென்று அவர்களுடன் தனிப்பட்ட உரையாடல் நடத்தினார். (4)

இயேசு மகிமைப்படுகின்ற நேரம் வந்திருந்தது. அவர் சிலுவையின் நிழலில் நின்றுகொண்டிருந்தார். அந்த கிரேக்கர்களின் விசாரணை, அவர் செய்யவிருக்கும் தியாகபலி அநேக குமாரர்களையும் குமாரத்திகளையும் தேவனிடத்திற்குக் கொண்டுவரும் என்பதை அவருக்குக் காண்பித்தது. அப்பொழுது கிரேக்கர்கள் கனவு கண்டிருந்திராத ஒரு நிலையில்—ஒரு அந்தஸ்தில், அவர்கள் விரைவில் அவரைக் காண்பார்கள் என்பதை அவர் அறிந்திருந்தார். தேவகுமாரனுக்கு முன்னால் விடுதலைசெய்யப்படும்படி தெரிந்துகொள்ளப்படவிருக்கும் கொள்ளைக்காரனும் கொலைகாரனுமான பரபாசுக்கருகில் அவர் வைக்கப்படுவதை அவர்கள் காண்பார்கள். ஆசாரியர்களாலும் அதிபதிகளாலும் ஏவிவிடப்பட்ட மக்களின் தெரிந்து கொள்ளுதலை அவர்கள் கேட்பார்கள். "கிறிஸ்து என்னப்பட்ட இயேசுவை நான் என்னசெய்யவேண்டும்" என்னும் கேள்விக்கு "அவனைச் சிலுவையில்

அறையவேண்டும்” (மத்தேயு 27:22) என்று பதில் கொடுக்கப்படும். மனிதர்களின் பாவங்களுக்காக இந்த ஒப்புரவாக்குதலைச் செய்வதனால் அவருடைய இராஜ்யம் பூரணப்படுத்தப்படும் என்பதையும், உலகம் முழுவதிலும் விரிவடையும் என்பதையும் கிறிஸ்து அறிந்திருந்தார். திரும்ப எடுத்துக்கட்டுபவராக அவர் செயலாற்றுவார். அவருடைய ஆவி வெற்றியடையும். ஒரு வினாடிநேரம் அவர் வருங்கால நிகழ்ச்சிகளைப் பார்த்து, பூமியின் எல்லாப் பாகங்களும் “இதோ, உலகத்தின் பாவத்தைச் சுமந்துதீர்க்கிற தேவ ஆட்டுக்குட்டி” (யோவான் 1:29) என்று அறிவிப்பதை அவர் கேட்டார். யூதர்களுக்கும் புறஜாதியினருக்கும் இடையிலுள்ள பிரிவினையாகிய நடுச்சுவர் நீக்கப்படும்போது, எல்லா ஜாதியினரும், பாஷைக்காரரும், மக்களும் இரட்சிப்பின் தூதைக் கேட்டாகவேண்டும் என்பதை பெரிய அறுவடையைப்பற்றிய உறுதிமொழியை இந்த அந்நியர்களில் அவர் கண்டார். அவருடைய நம்பிக்கைகளை நிறைவேற்றும் இந்த எதிர்பார்ப்பு, “மனுஷகுமாரன் மகிமைப்படும்படியான வேளை வந்தது” என்னும் வார்த்தைகளில் வெளிக்காட்டப்பட்டுள்ளது. ஆனால் அந்த மகிமைப்படுதல், எவ்விதமாக நடைபெறவேண்டும் என்பது கிறிஸ்துவின் மனதில் ஒருபோதும் இல்லாமல் இல்லை. சமீபித்துக்கொண்டிருக்கும் அவரது மரணத்தைத் தொடர்ந்து, புறஜாதியினர் உள்ளே சேர்க்கப்படுவது பின்தொடரும். அவருடைய மரணத்தினால் மட்டுமே உலகம் இரட்சிக்கப்படக்கூடும். ஒரு கோதுமை மணியைப்போல தேவகுமாரன் மரித்து, பூமிக்குள் வைக்கப்பட்டு, பார்வையிலிருந்து மறையும்படி புதைக்கப்படவேண்டும். ஆனால் அவர் மறுபடியும் உயிர்வாழவேண்டியவராக இருந்தார். (5)

கிறிஸ்து அவருடைய எதிர்காலத்தைச் சீடர்கள் புரிந்துகொள்ள வேண்டும் என்பதற்காக இயற்கையின் பொருட்களுடன் அதைச் சித்தரித்து அவர்கள்முன் வைத்தார். அவருடைய மரணத்தின்மூலமாக அவருடைய ஊழியத்தின் உண்மையான பலன் அடைந்துகொள்ளப்படவேண்டியதாக இருந்தது. “மெய்யாகவே மெய்யாகவே நான் உங்களுக்குச் சொல்லுகிறேன், கோதுமை மணியானது நிலத்தில் விழுந்து சாகாவிட்டால் தனித்திருக்கும், செத்ததேயாகில் மிகுந்த பலனைக்கொடுக்கும்” என்று அவர் கூறினார். கோதுமை மணி நிலத்தில் விழுந்து சாகும்போது, அது முளைத்து, விளைச்சலாகிய பலனைக் கொடுக்கிறது. அப்படியே கிறிஸ்துவின் மரணமும் தேவனுடைய இராஜ்யத்திற்கென்று கனிகொடுக்கும் பலனாக இருக்கும். தாவர உலகத்தின் பிரமாணத்திற்குத் தக்கவிதமாக அவருடைய மரணத்தின் பலன், ஜீவனாக இருக்கவேண்டியதாக இருந்தது. (6)

நிலத்தை உழுபவர்கள் இந்த சித்திரவிளக்கத்தை எப்பொழுதும் தங்கள்முன் உடையவர்களாக இருக்கின்றனர். ஒவ்வொரு வருடமும்

தெரிந்தெடுக்கப்பட்ட தானிய விதைகளை வெளியில் தோன்றுகிறபடி வீசி எறிவதின் வழியாக, மனிதன் தனது தானியத்தைப் பாதுகாக்கிறான். அது கர்த்தரால் கவனிக்கப்படுவதற்குக் குறிப்பிட்ட காலம்வரை உழவுச்சாலின்கீழ் மறைந்திருக்கவேண்டும். அதற்குப்பின் அது துளிர்க்கும். அதற்குப்பின் கதிரும், பின் கதிரில் தானியமும் தோன்றுகிறது. ஆனால் அந்தத் தானியம் பார்வையிலிருந்து மறையும்படி புதைக்கப்படாதவரை எல்லாத் தோற்றத்திலும் இழக்கப்பட்டதாக இருக்கும்.. (7)

நிலத்தில் புதைக்கப்பட்ட விதை, கனியை உண்டுபண்ணுகிறது. மறுபடியும் அது நடப்படுகிறது. இவ்விதமாக அறுவடை பெருக்கப்படுகிறது. அப்படியே கிறிஸ்துவின் கல்வாரிச் சிலுவை மரணம் நித்தியஜீவனுக்கென்று கனிகொடுக்கும். அந்த தியாகபலியின் கனியாக இருப்பவர்கள் நித்திய காலத்திற்கூடாக வாழுவார்கள். அந்தத் தியாகபலியைப்பற்றிய தியானம் அவர்களுடைய மகிமையாக இருக்கும். (8)

தனது சொந்த ஜீவனைப் பாதுகாத்துக்கொள்ளுகின்ற கோதுமை மணியினால் கனியை உண்டுபண்ண முடியாது. அது தன்னந்தனியாக உயிர்வாழ்கின்றது. கிறிஸ்து அவரை மரணத்திலிருந்து காப்பாற்றிக் கொள்ளுவதைத் தெரிந்துகொண்டிருந்தால், அவரால் அது முடிந்திருக்கும். ஆனால் அதைச் செய்திருந்தால், அவர் தனியாக வாழவேண்டும். அவரால் குமாரர்களையும் குமாரத்திகளையும் தேவனிடத்திற்குக் கொண்டுவரமுடியாது. அவருடைய ஜீவனை அவர் விட்டுக்கொடுத்ததினால்மட்டுமே அவரால் மானுடத்திற்கு ஜீவனைக் கொடுக்க முடிந்தது. மரிப்பதற்கென்று நிலத்தில் விழுந்ததினால்மட்டுமே, ஒவ்வொரு ஜாதியிலும், கோத்திரத்திலும், பாஷையிலும், ஜனக்கூட்டத்திலுமிருந்து வந்த அந்த ஏராளமான அறுவடைக்கான, அதாவது தேவனுக்காக மீட்கப்பட்டவர்களுக்கான விதையாக முடியும். (9)

இந்த சத்தியத்துடன் அனைவரும் கற்றுக்கொள்ளவேண்டிய சுயத்தைத் தியகஞ்செய்தல் என்னும் பாடத்தை கிறிஸ்து இணைக்கிறார். “தன் ஜீவனைச் சிநேகிக்கிறவன் அதை இழந்துபோவான்; இந்த உலகத்தில் தன் ஜீவனை வெறுக்கிறவனோ அதை நித்திய ஜீவகாலமாய்க் காத்துக் கொள்ளுவான்.” கிறிஸ்துவுடன் ஊழியக்காரர்களாக இருந்து, நற்பலன்களைக் கொண்டுவரும் அனைவரும், முதலில் நிலத்தில் விழுந்து மரிக்கவேண்டும். உலகத்தின் அவசியம் என்னும் உழவுச்சாலில் ஜீவன் போடப்படவேண்டும். சுயத்தின்மீதான நேசம், சுயத்தின்மீதான ஆர்வம் ஆகியவை சாகவேண்டும். சுயத்தைத் தியாகஞ்செய்கின்ற பிரமாணமே, சுயத்தைப் பாதுகாக்கின்ற பிரமாணமாக இருக்கின்றது. தோட்டக்காரன் அவனுடைய தானியத்தை

விதைப்பதினால்மட்டுமே அவனுடைய அதைப் பாதுகாக்கிறான். மனித உயிரும் அப்படிப்பட்டதாகவே இருக்கிறது. கொடுப்பதுதான் உயிர்வாழ்வதாகும். பாதுகாக்கப்பட்டிருக்கும் ஜீவன், தேவனுக்கும் மனிதனுக்கும் சேவைசெய்ய இலவசமாகக் கொடுக்கப்பட்டிருக்கும் ஜீவனாகும். இந்த உலகத்தில் கிறிஸ்துவிற்காகத் தங்களுடைய ஜீவனைத் தியாகஞ்செய்பவர்கள், நித்திய ஜீவனுக்கென்று அதைக் காக்கின்றனர். (10)

சுயத்தின்மீது செலவிடப்பட்ட வாழ்க்கை, புசிக்கப்பட்டுவிட்ட தானியத்தைப்போல இருக்கிறது. அது மறைந்துவிடுகிறது. ஆனால் அதிகரிப்பு எதுவும் அதில் இல்லை. ஒரு மனிதன் அவனால் முடிந்த அனைத்தையும் சுயத்திற்கென்று சேகரிக்கலாம். அவன் சுயத்திற்கென்று வாழவும், சிந்திக்கவும், திட்டமிடவும் செய்யலாம். ஆனால் அவனுடைய வாழ்க்கை கடந்துசெல்லுகிறது. அவனுக்கு ஒன்றும் இருப்பதில்லை. சுயத்திற்கென்று சேவைசெய்யும் பிரமாணம், சுயத்தை அழிக்கின்ற பிரமாணமாகவே இருக்கின்றது. (11)

“ஒருவன் எனக்கு ஊழியஞ்செய்கிறவனானால் என்னைப் பின்பற்றக்கடவன், நான் எங்கே இருக்கிறேனோ அங்கே என் ஊழியக்காரனும் இருப்பான்; ஒருவன் எனக்கு ஊழியஞ்செய்தால் அவனைப் பிதாவானவர் கனம்பண்ணுவார்.” இயேசுவுடன் சேர்ந்து சிலுவையைச் சுமந்திருக்கும் அனைவரும், அவருடன், அவருடைய மகிமையில் பங்குபெறுபவர்களாக இருப்பார்கள். அவருடைய சீடர்கள் அவருடன் மகிமைப்படுத்தப்படவேண்டும் என்பதுதான் கிறிஸ்துவின் அவமானத்திலும் வேதனையிலும் அவருடைய மகிழ்ச்சியாக இருந்தது. அவர்கள் அவருடைய தன்னல மறுப்பின் கனிகளாக இருக்கின்றனர். அவருடைய சொந்த குணமும் ஆவியும் அவர்களில் செயல்படுவதுதான் அவருக்குக் கிடைத்த பலன். அதுவே நித்தியகாலம் முழுவதிலும் அவருடைய மகிழ்ச்சியாக இருக்கும். மற்ற இருதயங்களிலும் வாழ்க்கையிலும் அவர்களுடைய ஊழியமும் தியாகமும் கனியாகக் காணப்படும்போது, இந்த சந்தோஷத்தை அவர்கள் அவருடன் பகிர்ந்துகொள்கின்றனர். அவர்கள் கிறிஸ்துவுடன் இணைந்த ஊழியக்காரர்களாக உள்ளனர். பிதாவானவர் தமது குமாரனைக் கனம்பண்ணுவதைப்போல அவர்களையும் கனம்பண்ணுவார். (12)

புறஜாதியினர் ஒன்றுசேர்க்கப்படுவதை, கிரேக்கர்களின் தூது முன்நிழலாட்டமாகக் காட்டியிருந்ததுபோல, இயேசுவின் மனதில் அவருடைய முழு ஊழியமும் கொண்டுவரப்பட்டது. இரட்சிப்பின் திட்டம், பரலோகத்தில் வைக்கப்பட்ட நேரத்திலிருந்து, சமீபத்தில் இருந்த மரணம்வரையுள்ள மீட்பின்பணி, அவர்முன் கடந்துசென்றிருந்தது. இரகசியமான ஒரு மேகம்

தேவகுமாரனைப் போர்த்திக்கொள்ளுவதுபோலக் காணப்பட்டது. அவருக்கு அருகில் இருந்தவர்களால் அதன் துயரம் உணரப்பட்டிருந்தது. அவர் சிந்தனையில் ஆழ்ந்து அமர்ந்திருந்தார். கடைசியில் அவருடைய துக்கம் நிறைந்த குரலில்: “இப்பொழுது என் ஆத்துமா கலங்குகிறது, நான் என்ன சொல்லுவேன். பிதாவே, இந்த வேளையினின்று என்னை இரட்சியும் என்று சொல்வேனோ” என்று கூறியபோது அந்த மௌனம் கலைக்கப்பட்டது. எதிர்பார்ப்புடன் கிறிஸ்து ஏற்கெனவே அந்தக் கசப்பான பாத்திரத்தில் பருகிக்கொண்டிருந்தார். அந்த நரக வல்லமைகளுடனுள்ள அவருடைய போராட்டத்தில் பின்னர்வரும் கெடுதியை முன்னறிவிக்கும் ஒரு குறி, மனித மீறுதலின் பயங்கரமான சுமையினால் உண்டான ஒரு உணர்வு, பாவத்தின் காரணமாக உண்டான பிதாவின் கோபம் ஆகியவை இயேசுவின் ஆவியை மயங்கச்செய்தது. மரணத்தின் வெளிரிய நிறம் அவரது முகத்தில் பரவியது. (13)

அதற்குப்பின் பிதாவின் சித்தத்திற்கான தெய்வீகக் கீழ்ப்படிதல் வந்தது. “ஆகிலும், இதற்காகவே இந்த வேளைக்குள் வந்தேன். பிதாவே, உமது நாமத்தை மகிமைப்படுத்தும்” என்றார். கிறிஸ்துவின் மரணத்தினால்மட்டுமே, சாத்தானின் இராஜ்யத்தை முடிவிற்குக் கொண்டு வரமுடியும். இவ்விதமாக மட்டுமே, மனிதன் மீட்கப்படவும் தேவன் மகிமைப்படவும் முடியும். அந்தக் கடுந்துயருக்கு இயேசு சம்மதித்தார். அந்தத் தியாகத்தை அவர் ஏற்றுக்கொண்டார். பாவத்தைச் சுமப்பவராக இருப்பதற்கு பரலோகத்தின் மகத்துவமானவர் சம்மதித்தார். “பிதாவே, உமது நாமத்தை மகிமைப்படுத்தும்” என்று அவர் கூறினார். இந்த வார்த்தைகளைக் கிறிஸ்து பேசியபோது, அவருடைய சிரசுக்குமேலாக வட்டமிட்டுக்கொண்டிருந்த ஒரு மேகத்திலிருந்து “மகிமைப்படுத்தினேன், இன்னமும் மகிமைப்படுத்துவேன்” என்னும் ஒரு மறுமொழி வந்தது. முன்னணைமுதல் இந்த வார்த்தைகள் தொனிக்கப்பட்ட நேரம்வரையிலான கிறிஸ்துவின் வாழ்க்கை முழுவதும் தேவனை மகிமைப்படுத்தியிருந்ததுடன், வரவிருக்கும் பரீட்சையில் அவருடைய தெய்வீக—மானிடப் பாடுகள் உண்மையாகவே அவருடைய பிதாவின் நாமத்தை மகிமைப்படுத்தும். (14)

அந்தக் குரல் கேட்கப்பட்டபோது, முடிவில்லாத வல்லமையின் கரங்கள் ஒரு அக்கினிச் சுவரைப்போல அவரைச் சூழ்ந்துகொள்வதைப்போல மேகத்திலிருந்து ஒரு ஒளி அம்புபோல் பாய்ந்து கிறிஸ்துவைச்சுற்றி வளைந்துகொண்டது. மக்கள் திகிலுடனும் ஆச்சரியத்துடனும் இந்தக் காட்சியைக் கண்டனர். ஒருவரும் பேசத்துணியவில்லை. மௌனமான உதடுகளுடனும், பயத்தால் மூச்சுவிடமுடியாதவர்களாகவும், இயேசுவின்மீது

கண்களைப் பதித்தவர்களாக அனைவரும் நின்றனர். பிதாவின் சாட்சி கொடுக்கப்பட்டிருந்தது. அந்த மேகம் நீக்கப்பட்டு, வானங்களில் சிதறினது. அப்போதைக்கு பிதாவிற்கும் குமாரனுக்கும் இடையிலிருந்த தொடர்பு முடிவடைந்திருந்தது. (15)

அங்கே நின்றுகொண்டிருந்து, அதைக் கேட்ட ஜனங்கள்: "இடிமுழக்கமுண்டாயிற்று" என்றார்கள். வேறுசிலர்: "தேவதூதன் அவருடனே பேசினான்" என்றார்கள். ஆனால் விசாரித்துக்கொண்டிருந்த அந்த கிரேக்கர்கள் அந்த மேகத்தைக் கண்டு, அந்தக் குரலைக் கேட்டு, அதன் அர்த்தத்தைப் புரிந்துகொண்டு, உண்மையாகவே கிறிஸ்துவை அறிந்துகொண்டனர். அவர்களுக்கு தேவனால் அனுப்பப்பட்டவராக அவர் வெளிப்படுத்தப்பட்டிருந்தார். (16)

இயேசுவின் ஊழியத்தின் ஆரம்பத்தில், அவருடைய ஞான ஸ்நானத்தின்போதும், மறுபடியும் மறுரூபமலையின்மீதும், தேவனுடைய குரல் கேட்கப்பட்டிருந்தது. இப்பொழுது அவருடைய ஊழியத்தின் முடிவில், மூன்றாவது தடவையாக பெரும் எண்ணிக்கையில் உள்ள மக்களுக்கு விசேஷித்தவிதமான சூழ்நிலைகளில் அது கேட்கப்பட்டது. யூதர்களின் நிலைமையைப்பற்றி மிக அதிக பக்திவிநயமான சத்தியத்தை இப்போதுதான் இயேசு பேசியிருந்தார். அவருடைய கடைசி முறையீட்டை அவர் செய்திருந்து, அவர்களுடைய தண்டனையைக் கூறியிருந்தார். இப்பொழுது தேவன் மறுபடியும் அவருடைய குமாரனின் ஊழியத்தின்மீது முத்திரையைப் பதித்தார். எந்த ஒருவரை இஸ்ரவேல் புறக்கணித்திருந்ததோ, அவரை அவர் அங்கீகாரம் செய்தார். "இந்தச் சத்தம் என்னிமித்தம் உண்டாகாமல் உங்கள் நிமித்தமே உண்டாயிற்று" என்று இயேசு கூறினார். அது அவருடைய மேசியா என்னும் பதவிக்கான கிரீடமான சான்றாகவும், இயேசு சத்தியத்தைத்தான் பேசியிருந்தார் என்பதற்கும், அவர் தேவகுமாரன் என்பதற்குமான அடையாளமாகவும் இருந்தது. (17)

"இப்பொழுதே இந்த உலகத்துக்கு நியாயத்தீர்ப்பு உண்டாகிறது; இப்பொழுதே இந்த உலகத்தின் அதிபதி புறம்பாகத் தள்ளப்படுவான். நான் பூமியிலிருந்து உயர்த்தப்பட்டிருக்கும்போது, எல்லாரையும் என்னிடத்தில் இழுத்துக்கொள்ளுவேன் என்றார். தாம் இன்னவிதமான மரணமாய் மரிக்கப்போகிறாரென்பதைக் குறிக்கும்படி இப்படிச் சொன்னார்." இது உலகத்தின் நெருக்கடியாக இருக்கிறது. மனிதர்களின் பாவங்களுக்கான ஒப்புரவாகுதலாக நான் ஆவேனேயாகில் உலகம் ஒளிப்படுத்தப்படும். மனித ஆத்துமாக்களின்மீதான சாத்தானின் பிடி உடைக்கப்படும். சீரழிக்கப்பட்ட தேவனுடைய உருவம், மானுடத்தில் திரும்பவும் எடுத்துக்கட்டப்படும்.

நம்பிக்கையுள்ள பரிசுத்தவான்களின் குடும்பம், முடிவில் பரலோக வீட்டை சுதந்தரித்துக்கொள்ளும். இது கிறிஸ்துவின் மரணத்தின் பலனாக இருக்கிறது. அவருக்குமுன் அழைக்கப்பட்டிருந்த வெற்றியின் காட்சியைத் தியானஞ்செய்வதில் இரட்சகர் தம்மை இழந்திருந்தார். அனைத்து பயங்கரங்களும் நிறைந்த கொடூரமான சிலுவையை—அவமானச் சிலுவையை அதன் மகிமையுடன் சுடர்விடுகின்ற சிலுவையாக அவர் காண்கிறார். (18)

ஆனால் சிலுவையினால் நிறைவேற்றப்பட்டது, மனித மீட்பின்பணி மட்டுமல்ல. தேவனுடைய அன்பு, பிரபஞ்சத்திற்கு வெளிக்காட்டப்பட்டிருக்கிறது. இந்த உலகத்தின் பிரபு, புறம்பாக்கப்பட்டிருக்கிறான். தேவனுக்கு எதிராகச் சாத்தான் கொண்டுவந்திருக்கும் குற்றச்சாட்டுகள் மறுக்கப்பட்டுள்ளன. பரலோகத்தின்மீது அவன் வைத்துள்ள நிந்தனை என்றைன்றைக்குமாக நீக்கப்பட்டிருக்கிறது. தூதர்களும் அவர்களைப்போலவே மனிதர்களும் மீட்பரிடத்திற்கு இழுக்கப்பட்டுள்ளனர். “நான் பூமியிலிருந்து உயர்த்தப் பட்டிருக்கும்போது, எல்லாரையும் என்னிடத்தில் இழுத்துக்கொள்ளுவேன்” என்று அவர் கூறினர். (19)

கிறிஸ்து இந்த வர்த்தைகளைக் கூறினபோது, அநேகர் அவரைச் சூழ்ந்திருந்தனர். அவர்களில் ஒருவன்: “கிறிஸ்து என்றென்றைக்கும் இருக்கிறார் என்று வேதத்தில் சொல்லியதை நாங்கள் கேட்டிருக்கிறோம், அப்படியிருக்க மனுஷகுமாரன் உயர்த்தப்படவேண்டியதென்று எப்படிச் சொல்லுகிறீர்; இந்த மனுஷகுமாரன் யார் என்றார்கள். அதற்கு இயேசு: இன்னும் கொஞ்சக் காலம் ஒளி உங்களிடத்தில் இருக்கும்; இருளில் நீங்கள் அகப்படாதபடிக்கு ஒளி உங்களோடிருக்கையில் நடவுங்கள்; இருளில் நடக்கிறவன் தான் போகிற இடம் இன்னதென்று அறியான்” என்றார். (20)

ஆனாலும், “அவர் இத்தனை அற்புதங்களை அவர்களுக்கு முன்பாகச் செய்திருந்தும், அவர்கள் அவரை விசுவாசிக்கவில்லை.” ஒருமுறை அவர்கள் இரட்சகரிடம்: “உம்மை விசுவாசிக்கும்படிக்கு நாங்கள் காணத்தக்கதாக நீர் என்ன அடையாளத்தைக் காண்பிக்கிறீர்? என்னத்தை நடப்பிக்கிறீர்?” (யோவான் 6:30) என்று கேட்டார்கள். எண்ணிலடங்காத அடையாளங்கள் கொடுக்கப்பட்டிருந்தன. ஆனாலும் அவர்களுடைய கண்களை அவர்கள் மூடி, இருதயங்களைக் கடினப்படுத்தியிருந்தனர். இப்பொழுது பிதா தாமே பேசியிருந்ததினால், அவர்களால் மேற்கொண்டு எந்த அடையாளத்தையும் கேட்கமுடியாதவர்களாக இருந்து, நம்புவதற்கு தொடர்ந்து மறுத்திருந்தனர். (21)

"ஆகிலும் அதிகாரிகளிலும் அநேகர் அவரிடத்தில் விசுவாசம் வைத்தார்கள். அப்படியிருந்தும் ஜெபஆலயத்துக்குப் புறம்பாக்கப்படாதபடி, பரிசேயர்நிமித்தம் அதை அறிக்கைபண்ணாதிருந்தார்கள்." தேவனால் அங்கீகரிக்கப்படுவதைவிட, மனிதர்களால் புகழப்படுவதை அவர்கள் நேசித்திருந்தனர். அவமதிப்பிலிருந்தும் வெட்கத்திலிருந்தும் தங்களைக் காத்துக்கொள்ளுவதற்காக அவர்கள் கிறிஸ்துவை மறுதலித்து, நித்திய ஜீவனின் ஈவைப் புறக்கணித்தனர். அப்பொழுதிலிருந்து நூற்றாண்டு களுக்கூடாக எத்தனையோ ஏராளமானவர்கள் அதையே செய்து கொண்டிருக்கின்றனர். அவர்களனைவருக்கும், "தன் ஜீவனைச் சிநேகிக் கிறவன் அதை இழந்துபோவான்" என்கிற இரட்சகரின் வார்த்தைகள் பொருந்துகிறது. "என்னைத் தள்ளி என் வார்த்தைகளை ஏற்றுக்கொள்ளாத வனை நியாயந்தீர்க்கிறதொன்றிருக்கிறது; நான் சொன்ன வசனமே அவனைக் கடைசிநாளில் நியாயந்தீர்க்கும்" (யோவான் 12:48) என்று இயேசு கூறினார். (22)

அவர்களைச் சந்திக்கும் காலத்தை அவர்கள் அறியாமலிருப்பதினால் ஐயோ பாவம்! மெதுவாகவும் வருத்தத்துடனும் கிறிஸ்து என்றென்றைக்குமாக அந்த ஆலயப்பிராகாரத்தைவிட்டுச் சென்றார். (23) ★

# 69

# ஒலிவ மலையின்மேல்...!

**மத்தேயு 24; மாற்கு 13; லூக்கா 21:5–38**

**(The Desire of Ages, pp. 627–636)**

"இதோ, உங்கள் வீடு உங்களுக்குப் பாழாக்கிவிடப்படும்" (மத்தேயு 23:38) என்ற கிறிஸ்துவின் வார்த்தைகள் ஆசாரியர்களுக்கும்அதிபதிகளுக்கும் அவர்களுடைய இருதயங்களில் பெரும் பயத்தை உண்டுபண்ணியது. அவர்கள் அதைப்பற்றி அலட்சியமாக இருந்திருந்தபோதிலும், அந்த வார்த்தைகளின் முக்கியத்துவம்பற்றிய கேள்வி, அவர்களுடைய மனங்களில் எழுந்துகொண்டே இருந்தது. காணமுடியாத ஒரு அபாயம் அவர்களைப் பயப்படுத்துவதுபோலக் காணப்பட்டிருந்தது. அந்த தேசத்தின் மகிமையாக இருந்த அந்த மிகப்பெரிய தேவாலயம் விரைவில் ஒரு பாழாக்கப்பட்ட குவியலாகிவிட முடியுமோ? அந்த தீய சம்பவத்தைப்பற்றிய முன்னடையாளத்தில் சீடர்கள் பங்கடைந்திருந்து, இயேசுவிடத்திலிருந்து கிடைக்கக்கூடிய வேறு அதிகக் குறிப்பான அறிக்கைக்காக கவலையுடன் காத்திருந்தனர். அவர்கள் அந்த ஆலயத்தைவிட்டு வெளியில் கடந்துசென்றபோது, அதன் உறுதியான தன்மை, அழகு ஆகியவைபற்றி இயேசுவின் கவனத்தை ஈர்த்தனர். அந்த ஆலயத்தின் கற்கள் மிகவும் தூய்மையான சலவைக்கற்களாக இருந்து, அவைகளில் சில பெரிய அளவாக இருந்தன. அந்தச் சுவரின் ஒரு பகுதி நேபுகாத்நேச்சாரின் முற்றுகையைச் சமாளித்து நின்றிருந்தது. அதன் பூரணமான கல் கட்டுமானத்தில் கற்பாறையிலிருந்து தோண்டியெடுக்கப்பட்ட ஒரே கல்லைப்போலத் தோன்றியிருந்தது. அந்த பலமிக்க சுவர்கள் எவ்விதமாக இடிக்கப்படும் என்பதை சீடர்கள் அறிந்துகொள்ள முடியாதவர்களாக இருந்தனர். (1)

அந்த ஆலயத்தின் பெரிய வடிவத்தின் கவனம், கிறிஸ்துவால் கவரப்பட்டிருந்தபோது, அசட்டைசெய்யப்பட்டவராக இருந்த ஒருவரின் சொல்லப்படாத சிந்தனைகள் எப்படிப்பட்டதாக இருந்திருக்கும்! அவருக்கு முன்னாலிருந்த காட்சி, உண்மையாகவே அழகானதாக இருந்தது. ஆனால் மனத்துயரத்துடன் அவர் நான் அவைகளையெல்லாம் பார்க்கிறேன் என்றார்.

இந்தச் சுவர்கள் வெளிப்பார்வைக்கு அழிக்கப்படமுடியாதவைகள் என்று நீங்கள் சுட்டிக்காட்டுகிறீர்கள். ஆனால் எனது வார்த்தைகளை நீங்கள் கவனியுங்கள். “இவைகளையெல்லாம் பார்க்கிறீர்களே, இவ்விடத்தில் ஒரு கல்லின்மேல் ஒரு கல்லிராதபடிக்கு எல்லாம் இடிக்கப்பட்டுப்போகும்” என்றார். (2)

ஒரு பெரிய கூட்டமான மக்கள் கேட்கும்விதமாகக் கிறிஸ்துவின் வார்த்தைகள் பேசப்பட்டிருந்தன. ஆனால் அவர் தனித்திருந்தபோது, பேதுருவும், யோவானும், யாக்கோபும், அந்திரேயாவும் அவரிடத்தில் வந்தனர். “இவைகள் எப்பொழுது சம்பவிக்கும்? உம்முடைய வருகைக்கும், உலகத்தின் முடிவுக்கும் அடையாளம் என்ன? எங்களுக்குச் சொல்ல வேண்டும்” என்று அவர்கள் கேட்டார்கள். எருசலேமின் அழிவு கிறிஸ்துவின் வருகையின் மகா நாள் ஆகிய இரண்டையும் தனியாகப் பிரித்து அவர் சீடர்களுக்குப் பதில் கூறவில்லை. இந்த இரு நிகழ்ச்சிகளையும் அவர் ஒன்றாகக் கலந்தார். எதிர்கால நிகழ்ச்சிகளை அவர் கண்டவிதமாக சீடர்களுக்குமுன் திறந்திருந்தாரானால், அந்தக் காட்சியை அவர்கள் தாங்கியிருக்கமாட்டார்கள். அவர்கள்மீதிருந்த இரக்கத்தினால் அந்த இரண்டு நெருக்கடிகளின் விளக்கங்களையும் ஒன்றுகலந்து, அவைகளின் பொருளை சீடர்கள் அவர்களுக்கென்று அவர்களே ஆராய்ந்துகொள்ளும்படி விட்டுவிட்டார். எருசலேமின் அழிவைப்பற்றிய அவருடைய விளக்கத்தை அவர் குறிப்பிட்டபோது, உலகத்தை அதன் அக்கிரமத்திற்காகத் தண்டிக்கும்படி கர்த்தர் அவருடைய இடத்திலிருந்து எழுகின்ற இறுதிப் பெரும் அக்கினியால் எரிக்கப்படும் சம்பவத்தின் நாளிற்கு அப்பால், பூமி தனது இரத்தத்தை வெளிக்காட்டுகின்ற சம்பவத்திற்கு அப்பால், கொலைசெய்யப்பட்டவர்களை மூடாமலிருக்கின்ற சம்பவத்திற்கு அப்பால், அவருடைய தீர்க்கதரிசன வார்த்தைகள் சென்றடைந்திருந்தன. இந்த முழுமையான வெளிக்காட்டுதல், சீடர்களுக்குமட்டுமாக இராமல், பூமியின் வரலாற்றின் கடைசிச் சம்பவங்களின்போது வாழக்கூடியவர்களுக்காவும் கொடுக்கப்பட்டிருந்தது. (3)

கிறிஸ்து சீடர்களிடமாகத் திரும்பி: “ஒருவனும் உங்களை வஞ்சியாதபடிக்கு எச்சரிக்கையாயிருங்கள்; ஏனெனில், அநேகர் வந்து, என் நாமத்தைத் தரித்துக்கொண்டு: நானே கிறிஸ்து என்று சொல்லி, அநேகரை வஞ்சிப்பார்கள்” என்று கூறினார். அநேக கள்ள மேசியாக்கள் தோன்றி, அற்புதங்களைச் செய்வதாகவும், யூத தேசத்தின் விடுதலையின்நேரம் வந்திருக்கிறது என்றும் அறிவிப்பார்கள். இவர்கள் அநேகரைத் தவறாக நடத்துவார்கள். கிறிஸ்துவின் வார்த்தைகள் நிறைவேறியிருந்தன. அவருடைய மரணத்திற்கும், எருசலேமின் முற்றுகைக்குமிடையில், அநேக கள்ள

மேசியாக்கள் தோன்றினார்கள். ஆனால் உலகத்தின் இந்தக் காலத்தில் வாழ்ந்துகொண்டிருப்பவர்களுக்குங்கூட இந்த எச்சரிக்கை கொடுக்கப் பட்டிருந்தது. எருசலேமின் அழிவிற்குமுன், காலங்கள் நெடுகிலும் நடத்தப் பட்டிருந்த அதே வஞ்சகங்கள் மறுபடியும் நடத்தப்படும். (4)

“யுத்தங்களையும் யுத்தங்களின் செய்திகளையும் கேள்விப்படுவீர்கள்; கலங்காதபடி எச்சரிக்கையாயிருங்கள்; இவைகளெல்லாம் சம்பவிக்க வேண்டியதே; ஆனாலும், முடிவு உடனே வராது.” எருசலேமின் அழிவிற்குமுன் மேலாதிக்கதிற்காக மனிதர்கள் போராடியிருந்தனர். பேரரசர்கள் கொலைசெய்யப்பட்டிருந்தனர். சிங்காசனத்திற்கு அடுத்து நின்றிருந்தவர்கள் கொலைசெய்யப்பட்டிருந்தனர். யுத்தங்களும் யுத்தங் களைப்பற்றிய வதந்திகளும் உண்டாயிருந்தன. “இவைகளெல்லாம் சம்பவிக்க வேண்டியதே; ஆனாலும், முடிவு உடனே வராது. ஜனத்துக்கு விரோதமாய் ஜனமும், ராஜ்யத்துக்கு விரோதமாய் ராஜ்யமும் எழும்பும்; பஞ்சங்களும், கொள்ளைநோய்களும், பூமியதிர்ச்சிகளும் பல இடங்களில் உண்டாகும்” என்று இயேசு கூறினார். இந்த அடையாளங்களை ரபிமார் காணும்போது, தேவனுடைய தெரிந்துகொள்ளப்பட்ட மக்களை அடிமைகளாகப் பிடித்து வைத்திருப்பதினால் தேசங்களின்மீதான தேவனுடைய நியாயத்தீர்ப்புகளாக அவைகள் இருக்கின்றன என்று அவர்கள் கூறுவார்கள். இந்த அடையாளங்கள், மேசியாவின் வருகைக்கான அடையாளங்கள் என்று அவர்கள் அறிவிப்பார்கள். வஞ்சிக்கப்படாமலிருங்கள். அவைகள் அவருடைய நியாயத்தீர்ப்புகளின் ஆரம்பமாக இருக்கின்றன. மக்கள் தங்களையே பார்த்துக்கொண்டிருக்கின்றனர். நான் அவர்களைக் குணப்படுத்தும்படி, அவர்கள் மனம்வருந்தி மனமாறவில்லை. அவர் களுடைய அடிமைத்தனத்திலிருந்து விடுதலையின் அடையாளங்களாக எடுத்துக்காட்டப்படுபவைகள் அவர்களுடைய அழிவின் அடையாளங்களாக இருக்கின்றன. (5)

“உங்களை உபத்திரவங்களுக்கு ஒப்புக்கொடுத்து, உங்களைக் கொலைசெய்வார்கள்; என் நாமத்தினிமித்தம் நீங்கள் சகல ஜனங்களாலும் பகைக்கப்படுவீர்கள்.” இந்தப் பாடுகளையெல்லாம் கிறிஸ்தவர்கள் அனுபவித்தார்கள். தந்தையர்களும் அன்னையர்களும் அவர்களுடைய பிள்ளைகளைக் காட்டிக்கொடுத்தார்கள். பிள்ளைகள் பெற்றோரைக் காட்டிக் கொடுத்தார்கள். நண்பர்கள் தங்கள் நண்பர்களை சனகரீம் சங்கத்தில் ஒப்புவித்தார்கள். ஸ்தேவான், யாக்கோபு மற்றும் பிற கிறிஸ்தவர்களைக் கொலைசெய்து உபத்திரவப்படுத்துபவர்கள் அவர்களுடைய நோக்கத்தைச் செயலாற்றினார்கள். (6)

யூத மக்கள் மனந்திரும்புவதற்கான ஒரு கடைசி வாய்ப்பை, தேவன் அவர்களுக்கு அவருடைய ஊழியக்காரர்களின்மூலமாகக் கொடுத்தார். அவருடைய சாட்சிகள் கைதுசெய்யப்பட்டதின்மூலமாகவும், அவர்களுடைய விசாரணையிலும், அவர்கள் சிறைப்பட்டுப்போனதிலும், அவர் தம்மைத்தாமே வெளிக்காட்டினார். ஆயினும் அவர்களுடைய நியாயாதிபதிகள் அவர்கள்மீது மரணதண்டனை விதித்தார்கள். அவர்கள் இந்த உலகத்திற்கு மதிப்பற்ற மனிதர்களாக இருந்தனர். அவர்களைக் கொலைசெய்ததினால் யூதர்கள் தேவகுமாரனை மறுபடியும் சிலுவையில் அறைந்திருந்தனர். அதைப்போலவே மறுபடியும் நடக்கும். மார்க்க சுதந்திரத்தைத் தடைசெய்கின்ற சட்டங்களை அதிகாரிகள் உண்டுபண்ணுவார்கள். தேவனுக்குமட்டுமே உரிமையாக இருப்பதை அவர்கள் எடுத்துக்கொள்ளுவார்கள். தேவன் ஒருவர்மட்டுமே கட்டுப்படுத்தக்கூடிய மனச்சாட்சியின் கட்டுப்பாட்டை அவர்களால் பலவந்தஞ் செய்யமுடியும் என்று நினைப்பார்கள். இப்பொழுதுங்கூட ஒரு ஆரம்பத்தை அவர்கள் செய்துகொண்டிருக்கின்றனர். அவர்களால் கடக்கமுடியாத ஒரு எல்லையை அடையும்வரை இந்த வேலையை அவர்கள் முன்கொண்டு செல்லுவார்கள். தேவனுடைய கற்பனைகளை காத்துக்கொள்ளுகின்ற அவருடைய பற்றுறுதியுள்ள பக்திமிக்க மக்களின் சார்பில் தேவன் குறுக்கிடுவார். (7)

உபத்திரவம் நடைபெறும் ஒவ்வொரு சந்தர்ப்பத்திலும் அதற்கு சாட்சியாக இருப்பவர்கள் கிறிஸ்துவிற்காக அல்லது அவருக்கு எதிராக முடிவெடுக்கின்றனர். தவறானவிதத்தில் ஆக்கினைக்குட்படுத்தப்பட்டவர்கள் மீது அனுதாபங்காட்டுபவர்கள் கிறிஸ்துவுடன் அவர்களுக்குள்ள பிணைப்பைக் காட்டுகின்றனர். மற்றவர்களுடைய நடத்தையை சத்தியத்தின் கோட்பாடுகள் நேரடியாக குறுக்காக வெட்டுவதினால் அவர்கள் எதிர்ப்புள்ளவர்களாகின்றனர். ஒரு சமயத்தில் பரிந்துபேசியிருந்த விசுவாசத்திலிருந்த மருளவிழுந்து அநேகர் தடுமாறி விழுகின்றனர். விசாரணையின் நேரத்தில் மருள விழுபவர்கள் தங்களுடைய சுய பாதுகாப்பை அடைந்துகொள்ளுவதற்காக பொய்ச்சாட்சிகூறி, தங்களுடைய சகோதர சகோதரிகளைக் காட்டிக் கொடுக்கின்றனர். ஒளியைப் புறக்கணிப்பவர்களின் இயற்கைக்கு மாறான கொடூரமான நடத்தையைப்பற்றி நாம் ஆச்சரியமடையாமலிருக்கும்படி கிறிஸ்து இதைப்பற்றி நம்மை எச்சரித்திருக்கிறார். (8)

எருசலேமின்மீது வரவிருக்கும் அழிவைப்பற்றி கிறிஸ்து அவருடைய சீடர்களுக்கு ஒரு அடையாளத்தைக் கொடுத்தார். “எருசலேம் சேனைகளால் சூழப்பட்டிருப்பதை நீங்கள் காணும்போது, அதின் அழிவு சமீபமாயிற்றென்று அறியுங்கள். அப்பொழுது யூதேயாவிலிருக்கிறவர்கள் மலைகளுக்கு ஓடிப்போகவும், எருசலேமிலிருக்கிறவர்கள் வெளியே புறப்படவும், நாட்டுப்

புறங்களிலிருக்கிறவர்கள் நகரத்தில் பிரவேசியாமலிருக்கவும்கடவர்கள். எழுதியிருக்கிற யாவும் நிறைவேறும்படி நீதியைச் சரிக்கட்டும் நாட்கள் அவைகளே" என்றார். நாற்பது வருடங்களுக்குப்பின் நடைபெறவிருக்கின்ற எருசலேமின் அழிவை கேட்கும்படி இந்த எச்சரிப்பு கொடுக்கப்பட்டிருந்தது. கிறிஸ்தவர்கள் இந்த எச்சரிக்கைக்குக் கீழ்ப்படிந்தார்கள். அந்த நகரத்தின் வீழ்ச்சியில் ஒரு கிறிஸ்தவன்கூட மடியவில்லை! (9)

"நீங்கள் ஓடிப்போவது மாரிகாலத்திலாவது, ஓய்வுநாளிலாவது, சம்பவியாதபடிக்கு வேண்டிக்கொள்ளுங்கள்" என்று கிறிஸ்து கூறினார். ஓய்வுநாளை உண்டுபண்ணினவர், அதைச் சிலுவையிலறைந்து நீக்கவில்லை. அவருடைய மரணத்தினால் ஓய்வுநாள் செல்லுபடியாகாததாகும்படி ரத்து செய்யப்படவில்லை. அவர் சிலுவையில் அறையப்பட்டதற்கு நாற்பது வருடங்களுக்குப்பின்னருங்கூட அது தொடர்ந்து பரிசுத்தமானதாக ஆசரிக்கப்படவேண்டியதாகத்தான் இருந்தது. சீடர்கள் ஓடிப்போவது ஓய்வுநாளில் நிகழ்ந்துவிடக்கூடாது என்று நாற்பது வருடங்கள் அவர்கள் ஜெபஞ்செய்யவேண்டியவர்களாக இருந்தனர். (10)

எருசலேமின் அழிவைப்பற்றிக் கூறிவிட்டு, தேவகுமாரனாகிய கிறிஸ்து மகத்துவத்துடனும் மகிமையிலும் வரப்போகின்ற இந்த உலக வரலாற்றுச் சங்கிலியின் கடைசிக் கண்ணியாக இருக்கின்ற அந்த மாபெரும் சம்பவத்தைப்பற்றிக் கூறுவதற்காக துரிதமாகக் கடந்துசென்றார். இந்த இரண்டு சம்பவங்களுக்கிடையில் இருண்ட அநேக நீண்ட நூற்றாண்டுகள்—அவருடைய சபை இரத்தத்தினாலும் கண்ணீரினாலும் கடுந்துயரினாலும் அடையாளப்படுத்தவிருப்பது கிறிஸ்துவின் பார்வைக்குமுன் திறந்துவைக்கப்பட்டிருக்கிறது. இந்தக் காட்சிகளைப் பார்ப்பதற்கு அப்பொழுது அவருடைய சீடர்கள் தாங்கும் சக்தியில்லாதவர்களாக இருந்ததினால் ஒரு சுருக்கமான குறிப்பிடுதலுடன் இயேசு அவைகளை விரைவாகக் கடந்துசென்றார். "உலகமுண்டானதுமுதல் இதுவரைக்கும் சம்பவித்திராததும், இனிமேலும் சம்பவியாததுமான மிகுந்த உபத்திரவம் அப்பொழுது உண்டாயிருக்கும். அந்நாட்கள் குறைக்கப்படாதிருந்தால், ஒருவனாகிலும் தப்பிப்போவதில்லை; தெரிந்துகொள்ளப்பட்டவர்களி னிமித்தமோ அந்த நாட்கள் குறைக்கப்படும்" என்று அவர் கூறினார். ஆயிரம் வருடங்களுக்குப்பின்னர் உலகம் இதற்குமுன் ஒருபோதும் அறிந்திராத விதமான உபத்திரவம், கிறிஸ்துவின் அடியார்களின்மீது வரவேண்டியதாக இருந்தது. இலட்சக்கணக்கான அவருடைய விசுவாசமிக்க சாட்சிகள் கொலைசெய்யப்படவேண்டியவர்களாக இருந்தனர். தேவனுடைய மக்களைப் பாதுகாக்கும்படி, அவருடைய கரம் நீட்டப்படாமலிருந்திருந்தால்,

எல்லோரும் அழிந்திருப்பார்கள். ஆனால், “தெரிந்துகொள்ளப்பட்டவர்களி னிமித்தமோ அந்த நாட்கள் குறைக்கப்படும்” என்று அவர் கூறினார். (11)

இப்பொழுது நமது கர்த்தர் அவருடைய இரண்டாம் வருகையைப்பற்றி சற்றும் தவறாத மொழியில் பேசி, அவர் இந்த உலகத்திற்கு வருவதற்குமுன் நிகழவுள்ள அபாயங்களைப்பற்றிய எச்சரிக்கையைக் கொடுக்கிறார். “அப்பொழுது, இதோ, கிறிஸ்து இங்கே இருக்கிறார், அதோ, அங்கே இருக்கிறார் என்று எவனாகிலும் சொன்னால் நம்பாதேயுங்கள். ஏனெனில், கள்ளக்கிறிஸ்துக்களும் கள்ளத்தீர்க்கதரிசிகளும் எழும்பி, கூடுமானால் தெரிந்துகொள்ளப்பட்டவர்களையும் வஞ்சிக்கத்தக்கதாகப் பெரிய அடையாளங்களையும் அற்புதங்களையும் செய்வார்கள். இதோ, முன்னதாக உங்களுக்கு அறிவித்திருக்கிறேன். ஆகையால்: அதோ, வனாந்தரத்தில் இருக்கிறார் என்று சொல்வார்களானால், புறப்படாதிருங்கள்; இதோ, அறைவீட்டிற்குள் இருக்கிறார் என்று சொல்வார்களானால் நம்பாதிருங்கள். மின்னல் கிழக்கிலிருந்து தோன்றி மேற்குவரைக்கும் பிரகாசிக்கிறதுபோல, மனுஷகுமாரனுடைய வருகையும் இருக்கும்.” எருசலேமின் அழிவின் அடையாளங்களில் ஒன்றாக, “அநேகங் கள்ளத்தீர்க்கதரிசிகளும் எழும்பி, அநேகரை வஞ்சிப்பார்கள்” என்று கிறிஸ்து கூறியிருந்தார். மக்களை வஞ்சித்துக்கொண்டும் பெரும் எண்ணிக்கையில் உள்ளவர்களை தவறானவிதமாக பாலைவனங்களுக்குள் நடத்திக்கொண்டும் கள்ளத்தீர்க்க தரிசிகள் எழும்பியிருந்தனர். அற்புதமான வல்லமையை பெற்றிருப்பதாகக் கூறிக்கொண்டு, மந்திரவாதிகளும் சூனியக்காரர்களும் மக்களை அவர்களுக்குப்பின்னாக மலையின் தனிமையான இடங்களுக்கு இழுத்துச் சென்றிருந்தனர். ஆனால் இந்த தீர்க்கதரிசனம் கடைசி நாட்களுக்காகவுங் கூடக் கூறப்பட்டிருந்தது. இந்த அடையாளம் இயேசுவின் இரண்டாம் வருகைக்கான அடையாளமாகக் கொடுக்கப்பட்டிருக்கிறது. அவருடைய சீடர்களை வஞ்சிப்பதற்காக இப்பொழுதுங்கூட கள்ளக்கிறிஸ்துக்களும் கள்ளத்தீர்க்கதரிசிகளும் அடையாளங்களையும் அற்புதங்களையும் காட்டிக் கொண்டிருக்கின்றனர். “அதோ, வனாந்தரத்தில் இருக்கிறார்” என்னும் சத்தத்தை நாம் கேட்பதில்லையா? கிறிஸ்துவைக் காணலாம் என்ற நம்பிக்கையுடன் ஆயிரக்கணக்கானவர்கள் வனாந்தரத்திற்குள் சென்றிருக்க வில்லையா? மரித்தவர்களின் ஆவிகளுடன் தொடர்புகொள்ளுவதாகக் கூறிக்கொள்ளுபவர்களின் ஆயிரக்கணக்கான கூட்டங்களில், “இதோ அவர் அறைவீட்டிற்குள் இருக்கிறார்” என்னும் அழைப்பு இப்பொழுது கேட்கப்படுவதில்லையா? ஆவிமார்க்கம் முன்வைக்கும் உரிமைபாராட்டுதல், இதுவாக இருக்கிறது. ஆனால் கிறிஸ்து: “நம்பாதேயுங்கள்” என்று கூறுகிறார். (12)

இரட்சகர் அவருடைய வருகையின் அடையாளங்களைக்கொடுத்து, இதற்கும் அதிகமாக இந்த அடையாளங்களில் முதல் அடையாளம், தோன்றும் காலத்தையும் நிச்சயிக்கிறார். "அந்நாட்களின் உபத்திரவம் முடிந்தவுடனே, சூரியன் அந்தகாரப்படும், சந்திரன் ஒளியைக் கொடாதிருக்கும், நட்சத்திரங்கள் வானத்திலிருந்து விழும், வானத்தின் சத்துவங்கள் அசைக்கப்படும். அப்பொழுது, மனுஷகுமாரனுடைய அடையாளம் வானத்தில் காணப்படும். அப்பொழுது, மனுஷகுமாரன் வல்லமையோடும் மிகுந்த மகிமையோடும் வானத்தின் மேகங்கள்மேல் வருகிறதைப் பூமியிலுள்ள சகல கோத்திரத்தாரும் கண்டு புலம்புவார்கள். வலுவாய்த் தொனிக்கும் எக்காள சத்தத்தோடே அவர் தமது தூதர்களை அனுப்புவார்; அவர்கள் அவரால் தெரிந்துகொள்ளப்பட்டவர்களை வானத்தின் ஒரு முனை முதற்கொண்டு மறுமுனைமட்டும் நாலு திசைகளிலுமிருந்து கூட்டிச் சேர்ப்பார்கள்." (13)

போப்பு மார்க்கத்தினால் உண்டாகும் பெரிய உபத்திரவத்தின் முடிவின்போது, சூரியன் இருளடையும்; சந்திரன் தன் ஒளியைக் கொடாதிருக்கும் என்று கிறிஸ்து அறிவித்தார். அதை அடுத்து, வானத்திலிருந்து நட்சத்திரங்கள் விழவேண்டும். "அத்திமரத்தினால் ஒரு உவமையைக் கற்றுக்கொள்ளுங்கள்; அதிலே இளங்கிளை தோன்றி, துளிர்விடும்போது, வசந்தகாலம் சமீபமாயிற்று என்று அறிவீர்கள். அப்படியே இவைகளையெல்லாம் நீங்கள் காணும்போது, அவர் சமீபமாய் வாசலருகே வந்திருக்கிறார் என்று அறியுங்கள்" (மத்தேயு 24:32,33) என்றார். (14)

கிறிஸ்து அவருடைய வருகையின் அடையாளங்களைக் கொடுத்திருக்கிறார். அவர் சமீபமாய் எப்பொழுது வாசலருகே இருக்கிறார் என்பதை நாம் அறிந்துகொள்ளலாம் என்று அவர் அறிவிக்கிறார். இந்த அடையாளங்களைப் பார்ப்பவர்களைப்பற்றி: "இவைகளெல்லாம் சம்பவிக்கு முன்னே இந்தச் சந்ததி ஒழிந்துபோகாதென்று, மெய்யாகவே உங்களுக்குச் சொல்லுகிறேன். வானமும் பூமியும் ஒழிந்துபோம், என் வார்த்தைகளோ ஒழிந்துபோவதில்லை" என்று அவர் கூறுகிறார். இந்த அடையாளங்கள் தோன்றியிருக்கின்றன. கர்த்தருடைய வருகை சமீபமாயிருக்கிறதென்பதை இப்பொழுது நாம் நிச்சயமாகவே அறிந்துகொள்ளலாம். "வானமும் பூமியும் ஒழிந்துபோம், என் வார்த்தைகளோ ஒழிந்துபோவதில்லை" என்று அவர் கூறுகிறார். (15)

கிறிஸ்து மேகங்களுடனும் பெரும் மகிமையுடனும் வந்துகொண்டிருக்கிறார். ஒளிமிக்க திரளான தூதர்கள் அவருடன் இருப்பார்கள். மரித்தோரை உயிருடன் எழுப்பவும், உயிருள்ள பரிசுத்தவான்களை மகிமைக்குமேல் மகிமையுள்ளவர்களாக மாற்றவும் அவர் வருவார். அவரை

நேசித்து, அவருடைய கற்பனைகளைக் காத்துக்கொண்டிருந்தவர்களைக் கனப்படுத்தவும், அவர்களை அவரிடத்திற்கு அழைத்துக்கொள்ளவும் அவர் வருவார். அவர் அவர்களையோ அல்லது அவருடைய வாக்குத் தத்தத்தையோ மறக்கவில்லை. குடும்பச் சங்கிலியின் கண்ணியை மறுபடியும் இணைக்கின்ற ஒன்று உண்டாகும். நமது மரித்தவர்களை நாம் பார்க்கும்போது, "மரித்தோர் அழிவில்லாதவர்களாய் எழுந்திருப்பார்கள்; நாமும் மறுரூபமாக்கப்படுவோம்"–1 கொரிந்தியர் 15:52. தேவனுடைய எக்காளம் தொனிக்கும் காலை நேரத்தைப்பற்றி நாம் நினைப்போம். இன்னும் சிறிது காலத்தில் நாம் அரசரை அவருடைய அழகில் காண்போம். இன்னும் சிறிது காலத்தில் நமது கண்களிலிருந்து கண்ணீர் யாவையும் அவர் துடைப்பார். இன்னும் சிறிது காலத்தில் அவர் "தமது மகிமையுள்ள சந்நிதானத்திலே மிகுந்த மகிழ்ச்சியோடே உங்களை மாசற்றவர்களாய் நிறுத்துவார்" (யூதா 24). ஆகையால் அவருடைய வருகையின் அடையாளங்களை அவர் கொடுத்தபோது, "இவைகள் சம்பவிக்கத் தொடங்கும்போது, உங்கள் மீட்பு சமீபமாயிருப்பதால், நீங்கள் நிமிர்ந்துபார்த்து, உங்கள் தலைகளை உயர்த்துங்கள்" என்று கூறினார். (16)

ஆனால், கிறிஸ்துவின் வருகையின் நாளையும் நேரத்தையும் அவர் வெளிப்படுத்தவில்லை. அவருடைய இரண்டாம் வருகையின் தரிசனத்தின் நாளையும் நேரத்தையும் அவராலேயே அறியச்செய்ய முடியாதென்று அவருடைய சீடர்களுக்கு அவர் வெளிப்படையாக அறிவித்தார். இதை வெளிப்படுத்துகின்ற சுயாதீனத்தை உடையவராக அவர் இருந்திருந்தால் எதிர்பார்க்கும் மனோபாவத்தைத் தொடர்ச்சியாக உடையவர்களாக அவர்கள் இருக்கவேண்டும் என்று அவர் புத்திசெல்லியிருந்திருக்கவேண்டிய அவசியம் ஏன்? நமது கர்த்தர் தரிசனமாகவிருக்கின்ற நாளையும் நேரத்தையும் அறிந்திருப்பதாகக் கூறும் அநேகர் இருக்கின்றனர். எதிர்காலத்தை வரைந்துகாட்டுவதில் இவர்கள் மிகுந்த அக்கறை உடையவர்களாக இருக்கின்றனர். ஆனால் அவர்கள் அந்தக் காரியத்தைக் விட்டுவிலகும்படி கர்த்தர் அவர்களை எச்சரித்திருக்கிறார். மனுஷகுமாரனுடைய வருகையின் மிகச்சரியான நேரம் தேவ இரகசியமாக இருக்கிறது. (17)

அவருடைய வருகையின்போது, உலகம் இருக்கக்கூடிய நிலைமையைச் சுட்டிக்காட்டுவதில் கிறிஸ்து தொடர்கிறார். "நோவாவின் நாட்களில் நடந்தது போல மனுஷகுமாரனுடைய நாட்களிலும் நடக்கும். நோவா பேழைக்குள் பிரவேசித்த நாள்வரைக்கும் ஜனங்கள் புசித்துக் குடித்தார்கள், பெண்கொண்டு கொடுத்தார்கள்; ஜலப்பிரளயம் வந்து எல்லாரையும் அழித்துப்போட்டது." அனைவரும் நித்தியத்திற்கென்று ஆயத்தப்படத்தக்கதாக உலகப்பிரகாரமான ஆயிரமாண்டு காலக்கட்டத்தை

கிறிஸ்து இங்கு நமது காட்சிக்குக் கொண்டுவருகிறதில்லை. நோவாவின் நாட்களில் எவ்விதமாக இருந்ததோ, அதைப்போலவே, மனுஷகுமாரன் மறுபடியும் வரும் நாளிலும் இருக்கும் என்று அவர் நம்மிடம் கூறுகிறார். (18)

நோவாவின் நாளில் எப்படி இருந்தது? "மனுஷனுடைய அக்கிரமம் பூமியிலே பெருகினது என்றும், அவன் இருதயத்து நினைவுகளின் தோற்றமெல்லாம் நித்தமும் பொல்லாததே" (ஆதியாகமம் 6:5) என்றும் தேவன் கண்டார். ஜலப்பிரளயத்திற்கு முன்னான காலத்திலிருந்த உலகத்தின் குடிகள், யேகோவாவின் பரிசுத்தமான சித்தத்தின்படிச் செய்ய மறுத்து, அவரைவிட்டுத் திரும்பியிருந்தார்கள். அவர்கள் பரிசுத்தமில்லாத நினைவுகளையும் திரிபு செய்யப்பட்டிருந்த எண்ணங்களையும் பின்பற்றியிருந்தனர். அவர்களுடைய துன்மார்க்கத்தின் காரணமாகவும் திரிபுசெய்யப்பட்ட எண்ணங்களின் காரணமாகவும் அழிக்கப்பட்டிருந்தனர். இன்று உலகம் அதே பாதையைப் பின்பற்றிச் சென்றுகொண்டிருக்கிறது. அது ஆயிரம் வருட மகிமையைப்பற்றிய மேன்மையான அடையாளங்களை முன்வைப்பதில்லை. தேவனுடைய நியாயப்பிரமாணத்தை மீறுபவர்கள் இந்தப் பூமியைத் துன்மார்க்கத்தினால் நிரப்பிக்கொண்டிருக்கின்றனர். அவர்களுடைய போட்டிகள், அவர்களுடைய குதிரைப் பந்தயங்கள், அவர்களுடைய சூதாட்டங்கள், அவர்களுடைய கூடாவொழுக்கங்களினாலான விரயங்கள், அவர்களுடைய இச்சைமிக்க நடத்தைகள், அவர்களுடைய கட்டுக்கடங்காத வெறிகள் ஆகியவை உலகத்தை விரைவாக வன்முறையினால் நிரப்பிக்கொண்டிருக்கின்றன. (19)

எருசலேமின் அழிவைப்பற்றியுள்ள தீர்க்கதரிசனத்தில் "அக்கிரமம் மிகுதியாவதினால் அநேகருடைய அன்பு தணிந்துபோம். முடிவுபரியந்தம் நிலைநிற்பவனே இரட்சிக்கப்படுவான்" என்று கிறிஸ்து கூறினார். இந்தத் தீர்க்கதரிசனம் மறுபடியும் நிறைவேற்றப்படும். அந்த நாளில் மிகுதியாகின்ற அக்கிரமத்தின் மறுபகுதியை இந்தத் தலைமுறை காண்கிறது. சுவிசேஷம் பிரசங்கிக்கப்படுவதைப்பற்றிய முன்னறிவிப்பும் அப்படியே இருக்கிறது. எருசலேமின் விழுகைக்குமுன், பரிசுத்த ஆவியினால் ஏவப்பட்டுப் பவுல் எழுதினபோது: "அந்தச் சுவிசேஷம் வானத்தின் கீழிருக்கிற சகல சிருஷ்டிகளுக்கும் பிரசங்கிக்கப்பட்டுவருகிறது; அதற்கென்றே பவுலாகிய நான் ஊழியக்காரனானேன்" (கொலோசெயர் 1:23) என்று அறிவித்தான். அப்படியே இப்பொழுதும் மனுஷகுமாரன் வருவதற்குமுன் இந்த நித்திய சுவிசேஷம், "சகல ஜாதிகளுக்கும், கோத்திரத்தாருக்கும், பாஷைக்காரருக்கும், ஜனக்கூட்டத்தாருக்கும்" (வெளிப்படுத்தல் 14:6,14)

பிரசங்கிக்கப்படவேண்டியதாக உள்ளது. "ஒரு நாளைக் குறித்திருக்கிறார்; அதிலே அவர் ... பூலோகத்தை நீதியாய் நியாயந்தீர்ப்பார்"–அப்போஸ்தலர் 17:31. அந்த நாள் எப்பொழுது வரவிருக்கிறது என்பதைக் கிறிஸ்து நம்மிடம் கூறுகிறார். உலகம் முழுவதும் மனமாற்றம் அடையும் என்று அவர் கூறாமல், "ராஜ்யத்தினுடைய இந்தச் சுவிசேஷம் பூலோகமெங்குமுள்ள சகல ஜாதிகளுக்கும் சாட்சியாகப் பிரசங்கிக்கப்படும், அப்போது முடிவு வரும்" என்கிறார். சுவிசேஷத்தை உலகத்திற்குக் கொடுப்பதினால் நமது கர்த்தர் திரும்ப வருவதை விரைவுபடுத்துகின்ற வல்லமை நம்மிடம் இருக்கிறது. நாம் தேவனுடைய நாளைப் பார்ப்பவர்களாகமட்டும் இல்லாமல், அந்த நாளின் வருகையை விரைவுபடுத்தவேண்டியவர்களாகவும் இருக்கிறோம். (2 பேதுரு 3:12). கர்த்தர் ஏற்படுத்தியிருந்த பணியை கிறிஸ்துவின் சபை செய்திருந்திருக்குமானால், இதற்கு முன்னரே உலகம் முழுவதும் எச்சரிக்கப்பட்டிருந்திருக்கும். நமது கர்த்தராகிய இயேசு வல்லமையுடனும் பெரும் மகிமையுடனும் நமது பூமிக்கு வந்திருப்பார். (20)

அவருடைய வருகையின் அடையாளங்களைக் கொடுத்தபின் கிறிஸ்து: "விழித்திருந்து ஜெபம்பண்ணுங்கள்" என்று கூறினார். வரவிருக்கும் நியாயத்தீர்ப்புகளைப்பற்றி தேவன் எப்பொழுதும் மனிதர் களுக்கு எச்சரிக்கையைக் கொடுத்திருக்கிறார். அவர்களுடைய காலத்திலிருந்த அவருடைய தூதை விசுவாசித்து, அவருடைய நியாயப்பிரமாணத்திற்கு கீழ்ப்படிவதினால் தங்களுடைய விசுவாசத்தைச் செயலாற்றியிருந்தவர்கள் கீழ்ப்படியாமலும் நம்பாமலுமிருந்தவர்களின்மீது விழுந்த நியாயத்தீர்ப்புகளிலிருந்து தப்பியிருந்தனர். "நீயும் உன் வீட்டார் அனைவரும் பேழைக்குள் பிரவேசியுங்கள்; இந்தச் சந்ததியில் உன்னை எனக்கு முன்பாக நீதிமானாகக் கண்டேன்" என்னும் வார்த்தை நோவாவிற்கு வந்தது. நோவா கீழ்ப்படிந்ததினால் இரட்சிக்கப்பட்டான். "நீங்கள் எழுந்து இந்த ஸ்தலத்தை விட்டுப் புறப்படுங்கள்; கர்த்தர் இந்தப் பட்டணத்தை அழிக்கப்போகிறார்" என்னும் தூது லோத்துக்கு வந்தது. (ஆதியாகமம் 7:1; 19:14). பரலோகத் தூதுவர்களின் பாதுகாவலின்கீழ் லோத்து தன்னை வைத்ததினால், காப்பாற்றப்பட்டான். அப்படியே, எருசலேமின் அழிவைப்பற்றி கிறிஸ்துவின் சீடர்களுக்கும் எச்சரிப்பு கொடுக்கப்பட்டிருந்தது. வந்துகொண்டிருந்த அழிவைக் கவனித்துக்கொண்டிருந்தவர்களும் அந்த நகரத்தைவிட்டு ஓடிப்போனவர்களும் அழிவிலிருந்து தப்பினார்கள். அப்படியே கிறிஸ்துவின் இரண்டாம் வருகையைப்பற்றியும் இந்த உலகத்தின்மீது விழவிருக்கும் அழிவைப்பற்றியும் நாம் எச்சரிக்கப்பட்டிருக்கிறோம். அந்த எச்சரிப்பிற்குச் செவிசாய்ப்பவர்கள் இரட்சிக்கப்படுவார்கள். (21)

அவருடைய வருகையின் மிகச்சரியான நேரத்தை நாம் அறியாதவர்களாக இருப்பதினால் விழிப்பாயிருக்கும்படி நாம் கட்டளையிடப் பட்டிருக்கிறோம். "எஜமான் வரும்போது, விழித்திருக்கிறவர்களாகக் காணப்படுகிற ஊழியக்காரரே பாக்கியவான்கள்"—லூக்கா 12:37. கர்த்தருடைய வருகைக்கென்று காத்திருப்பவர்கள் செயலாற்றாமல் எதிர்பார்த்துக் கொண்டிருப்பதில்லை. கிறிஸ்துவின் வருகையை எதிர்பார்த்திருப்பது என்பது, மனிதர்களைக் கர்த்தருக்குப் பயப்படும்படிச்செய்வதும், மீறுதலின்மீதுள்ள அவருடைய நியாயத்தீர்ப்பைப் பற்றிய பயத்தோடிருத்தலுமாக உள்ளது. அவருடைய இரக்கத்தின் ஈவுகளை புறக்கணிக்கின்ற பெரிய பாவத்திற்கு அவர்களைத் துயிலெழச்செய்வதாக அது இருக்கிறது. கர்த்தருக்காக விழித்துக்கொண்டிருப்பவர்கள் சத்தியத்திற்குக் கீழ்ப்படிவதினால் தங்களுடைய ஆத்துமாக்களைத் தூய்மைப்படுத்திக்கொண்டிருக்கின்றனர். விழிப்புமிக்க கவனத்துடன் அவர்கள் அக்கறைமிக்க செயலாற்றுதலை இணைக்கின்றனர். கர்த்தர் வாசலருகில் இருக்கிறார் என்பதை அவர்கள் அறிந்திருப்பதினால் ஆத்துமாக்களின் இரட்சிப்பிற்காகச் செயலாற்றுவதில் தெய்வீக நுண்ணறிவுகளுடன் செயலாற்ற ஒத்துழைக்கும்படி அவர்களுடைய பேரார்வம் எழுப்பப்பட்டிருக்கிறது. இவர்களே "ஏற்றவேளையிலே தன் வேலைக்காரருக்குப் போஜனங்கொடுத்து அவர்களை விசாரிக்கும்படி எஜமான் வைத்த உண்மையும் விவேகமுமுள்ள ஊழியக்காரர்" (மத்தேயு 24:45). இப்பொழுது, சிறப்பாகப் பொருந்தக்கூடிய சத்தியத்தை அவர்கள் அறிவித்துக்கொண்டிருக்கின்றனர். ஏனோக்கு, நோவா, ஆபிரகாம், மோசே ஆகிய ஒவ்வொருவரும் அவர்களுடைய காலத்தின் சத்தியத்தை அறிவித்ததைப்போல இப்பொழுது கிறிஸ்துவின் ஊழியக்காரர்களும் தங்களுடைய தலைமுறையினருக்கான சிறப்பான எச்சரிக்கையைக் கொடுப்பார்கள். (22)

ஆனால் கிறிஸ்து வேறொரு வகுப்பினரைப் பார்வைக்குக் கொண்டுவருகிறார். "அந்த ஊழியக்காரனோ, என் எஜமான் வர நாள் செல்லும் என்று தனக்குள்ளே சொல்லிக்கொண்டு, வேலைக்காரரையும் வேலைக்காரிகளையும் அடிக்கவும், புசித்துக் குடித்து வெறிக்கவும் தலைப்பட்டால், அவன் நினையாத நாளிலும், அறியாத நேரத்திலும், அந்த ஊழியக்காரனுடைய எஜமான்" வருவான். (23)

பொல்லாத ஊழியக்காரன், "என் எஜமான் வர நாள் செல்லும்" என்கிறான். கிறிஸ்து வருவார் என்று அவன் சொல்லாமலில்லை. அவருடைய இரண்டாம் வருகை என்னும் யோசனையைப்பற்றி அவன் ஏளனமும் செய்வதில்லை. ஆனால் அவனுடைய செயல்களினாலும் வார்த்தை

களினாலும் அவனுடைய ஆண்டவரின் வருகை தாமதிக்கிறது என்பதைத் தன் இருதயத்தில் அறிவிக்கிறான். கர்த்தர் விரைவாக வந்துகொண்டிருக்கிறார் என்னும் மனஉணர்த்துதலை அவன் மற்றவர்களுடைய மனங்களிலிருந்து அகற்றிவிடுகிறான். அவனுடைய செல்வாக்கு, மனிதர்களைத் துணிகரமுள்ளவர்களாக்குவதற்கும் கவனமற்ற தாமதத்திற்கும் வழிநடத்துகின்றது. அவர்கள் தங்களுடைய உலகப்பிரகாரமான தன்மையிலும் மயக்கத்திலும் இருக்கின்றனர். பூமிக்குரிய வெறிகளும், அழிவிற்குரிய சிந்தனைகளும் மனதைக் கைவசப்படுத்திக்கொள்ளுகின்றன. பொல்லாத ஊழியக்காரன் வெறியர்களுடன் சேர்ந்து, புசிக்கவும், குடிக்கவுஞ்செய்து, உலக இன்பங்களைத் தேடுபவர்களுடன் ஒன்றுபடுகிறான். தங்களுடைய ஆண்டவருக்கு விசுவாசமுள்ளவர்களாக இருக்கும் அவனுடைய உடன் வேலையாட்களை அவன் குற்றப்படுத்தி, ஆக்கினைக்குட்படுத்தி அடிக்கிறான். அவன் உலகத்துடன் கலந்திருக்கிறான். மீறுதலில் உள்ளவர்கள் மீறுதலில் வளருகின்றனர். அது பயங்கரமான தன்மயமாக்கும் செயலாக இருக்கிறது. அவன் உலகத்துடன் சேர்ந்து கண்ணியில் அகப்பட்டுக்கொள்ளுகிறான். "அவன் நினையாத நாளிலும், அறியாத நேரத்திலும், அந்த ஊழியக்காரனுடைய எஜமான் வந்து, அவனைக் கடினமாய்த் தண்டித்து, உண்மையில்லாதவர்களோடே அவனுக்குப் பங்கை நியமிப்பான்." (24)

"நீ விழித்திராவிட்டால், திருடனைப்போல் உன்மேல் வருவேன்; நான் உன்மேல் வரும்வேளையை அறியாதிருப்பாய்"—வெளிப்படுத்தல் 3:3. கிறிஸ்துவின் வருகை, கள்ளப்போதகர்களை ஆச்சரியப்படச்செய்யும். சமாதானம், சௌக்கியம் என்று அவர்கள் கூறிக்கொண்டிருக்கின்றனர். எருசலேமின் விழுகைக்குமுன் இருந்த ஆசாரியர்களையும் போதகர்களையும்போல, சபை உலகப்பிரகாரமான செழுமையையும் மகிமையையும் அனுபவிப்பதை அவர்கள் பார்க்கின்றனர். காலங்களின் அடையாளங்கள் இதை நிழலாட்டமாக முன்காட்டுகின்றன என்று அவர்கள் விளக்கஞ்செய்கின்றனர். ஆனால் ஆவியின் ஏவுதலின் வார்த்தை என்ன கூறுகிறது? "சமாதானமும் சவுக்கியமும் உண்டென்று அவர்கள் சொல்லும்போது, கர்ப்பவதியானவளுக்கு வேதனை வருகிறதுபோல, அழிவு சடிதியாய் அவர்கள்மேல் வரும்; அவர்கள் தப்பிப்போவதில்லை" 1 தெசலோனிக்கேயர் 5:3. பூமியனைத்தின்மீதும் வாழுகின்ற அனைவரின் மீதும் இந்த உலகத்தைத் தங்களுடைய வீடாக்கிக்கொண்டிருக்கும் அனைவரின்மீதும் தேவனுடைய நாள் ஒரு கண்ணியைப்போல வரும். பதுங்கியிருக்கும் ஒரு திருடனைப்போல அது அவர்கள்மீது வரும். (25)

உலகம் முழுவதும் கலகங்களிலும் தேவனற்ற இன்ப நுகர்ச்சிகளிலும் ஈடுபட்டு, நித்திரையில் அதாவது மாம்சப்பிரகாரமான பாதுகாப்பு என்ற

ஒரு நித்திரையில் ஆழ்ந்திருக்கிறது. கர்த்தருடைய வருகையை மக்கள் தூரமாக வைத்திருக்கின்றனர். எச்சரிக்கைகளில் அவர்கள் சிரிக்கின்றனர். "அவர் வருவார் என்று சொல்லுகிற வாக்குத்தத்தம் எங்கே? பிதாக்கள் நித்திரையடைந்தபின்பு சகலமும் சிருஷ்டிப்பின்தோற்றமுதல் இருந்தவிதமாயிருக்கிறதே" "நாளையத்தினம் இன்றையத்தினம்போலவும், இதற்கு அதிகமாகவும் இருக்கும்" (2 பேதுரு 3:4; ஏசாயா 56:12) என்று அகந்தையுடன் பெருமைபாராட்டுகின்றனர். இன்பங்களை நேசிப்பதில் நாம் இன்னும் ஆழமாகச் செல்லுவோம் என்கின்றனர். ஆனால் "இதோ, திருடனைப்போல் வருகிறேன்" (வெளிப்படுத்தல் 16:15) என்று கிறிஸ்து கூறுகிறார். "அவர் வருவார் என்று சொல்லுகிற வாக்குத்தத்தம் எங்கே?" என்று உலகம் பரிகாசத்துடன் கேட்டுக்கொண்டிருக்கும் அதே நேரத்தில், அடையாளங்கள் நிறைவேறிக்கொண்டிருக்கின்றன. "சமாதானமும் சவுக்கியமும் உண்டென்று" அவர்கள் குரல் கொடுத்துக் கொண்டிருக்கும்போது, திடீரென்று அழிவு வருகிறது. சத்தியத்தைப் பரிகசிப்பவர்களும் புறக்கணிப்பவர்களும் துணிகரமடையும்போது, கொள்கை எதுவுமின்றிப் பணம் சம்பாதிப்பதையே வழக்கமாகக்கொண்டு, பணம் உண்டுபண்ணும் பல்வேறு தொழில்களைச் செய்துகொண்டிருக்கும்போது, மாணவன் வேதாகமம் ஒன்றைத்தவிர மற்றெல்லாவற்றைப்பற்றியும் உள்ள அறிவைத் தேடிக்கொண்டிருக்கும்போது, கிறிஸ்து ஒரு திருடனைப்போல வருகிறார். (26)

உலகத்திலுள்ள அனைத்தும் குழப்பத்தில் இருக்கிறது. காலங்களின் அடையாளங்கள் வரப்போகும் அழிவைக்குறித்த அறிகுறிகளை உடையவைகளாக இருக்கின்றன. வரவிருக்கின்ற சம்பவங்கள் முன்னதாகவே அவைகளின் நிழல்களைக் காட்டுகின்றன. தேவனுடைய ஆவி பூமியிலிருந்து பின்னிழுத்துக்கொள்ளப்பட்டுக் கொண்டிருக்கின்றது. கடலிலும் நிலத்திலும் பேராபத்திற்குப்பின் பேராபத்து தொடருகிறது. புயல்காற்றுகள், பூமி அதிர்ச்சிகள், தீ விபத்துக்கள், வெள்ளங்கள் அனைத்துவிதத்திலுமான கொலைகளும் நடைபெறுகின்றன. எதிர்காலத்தை யாரால் வாசிக்கமுடியும்? பாதுகாப்பு எங்கே இருக்கிறது? மனிதக் காரியத்திலோ அல்லது பூமிக்குரிய காரியத்திலோ, எந்தவிதமான நிச்சயமும் இல்லை. மனிதர்கள் தாங்கள் தெரிந்தெடுத்திருக்கும் கொடியின்கீழ் விரைவாக அணிவகுத்துக்கொண்டிருக்கின்றனர். அவர்கள் தங்களுடைய தலைவர்களின் இயக்கங்களை அமைதியில்லாதவிதமாகக் கவனித்துக்கொண்டும் காத்துக்கொண்டுமிருக்கின்றனர். நமது கர்த்தரின் தரிசனத்திற்காகக் காத்துக்கொண்டும் கவனித்துக்கொண்டும் செயலாற்றிக் கொண்டும் இருப்பவர்களும் இருக்கின்றனர். முதலில் பெரிதாக மருளவிழுந்த

சேனைத்தலைவனின் தலைமையின்கீழ் அணிவகுத்து நிற்கும் மற்றொரு கூட்டத்தினரும் உள்ளனர். நாம் தவிர்க்கவேண்டிய ஒரு நரகமும் வெற்றியாக அடைந்துகொள்ளவேண்டிய ஒரு பரலோகமும் இருக்கின்றன என்று இதயப்பூர்வமாகவும் ஆத்மீகப்பிரகாரமாகவும் நம்புகிறவர்கள் மிகமிகச் சிலரே. (27)

இந்த நெருக்கடி, திருட்டளவாக நம்மீது கொஞ்சம் கொஞ்சமாக வந்துகொண்டிருக்கிறது. சூரியன் அதன் வழக்கமான சுற்றில் வானங்களில் பிரகாசிக்கின்றது. வானங்கள் இன்னும் தேவனுடைய மகிமையை அறிவிக்கின்றன. மனிதர்கள் இன்னும் புசித்துக்கொண்டும், குடித்துக்கொண்டும், நட்டுக்கொண்டும். கட்டிக்கொண்டும், பெண் கொண்டும், பெண்கொடுத்துக்கொண்டும் உள்ளனர். வியாபாரிகள் இன்னும் வாங்கிக்கொண்டும், விற்றுக்கொண்டும் இருக்கின்றனர். உயர்ந்த பதவிகளை அடைவதற்காக மனிதர்கள் ஒருவருடன் ஒருவர் போட்டியிட்டுக்கொண்டும், ஒருவரையொருவர் இடித்துக்கொண்டும், முண்டியடித்துக்கொண்டும் இருக்கின்றனர். இன்பங்களை நாடுகின்ற திரளான மக்கள் நாடக சாலைகளிலும், நடன சாலைகளிலும் சினிமா காட்சிகளிலும், குதிரைப் பந்தயங்களிலும் சூதாட்ட விடுதிகளிலும் கூடுகின்றனர். பரபரப்பூட்டும் உணர்ச்சிவேகங்கள் மேலோங்கி நிற்கின்றன. ஆயினும் தவணையின் நேம் விரைவாக முடிவடைந்துகொண்டிருக்கிறது. ஒவ்வொரு வழக்கும் நித்தியமாக முடிவு செய்யப்படவிருக்கிறது. சாத்தான் அவனுக்கான நேரம் மிகவும் குறைந்திருப்பதைக் காண்கிறான். தவணையின் நாள் முடிவடையும்வரை, இரக்கத்தின் கதவு என்றென்றைக்குமாக மூடப்படும்வரை, மனிதர்கள் வஞ்சிக்கப்படவும் பொய்த்தோற்றத்தினால் ஏமாற்றப்படவும், பல காரியங்களில் ஈடுபட்டவர்களாக இருக்கவும், அவன் அவனுடைய ஏதுகரங்கள் அனைத்தையும் வேலையில் ஈடுபடுத்தியிருக்கிறான். (28)

நமது கர்த்தர் ஒலிவ மலையின்மீதிருந்து நமக்குக் கொடுத்த எச்சரிப்பின் வார்த்தைகள் நூற்றாண்டுகளுக்கூடாக பக்திவிநயத்துடன் நம்மை நோக்கி வருகின்றன. “உங்கள் இருதயங்கள் பெருந்திண்டியினாலும் வெறியினாலும் லவுகீக கவலைகளினாலும் பாரமடையாதபடிக்கும், நீங்கள் நினையாத நேரத்தில் அந்த நாள் உங்கள்மேல் வராதபடிக்கும் எச்சரிக்கையாயிருங்கள். பூமியிலெங்கும் குடியிருக்கிற அனைவர்மேலும் அது ஒரு கண்ணியைப்போல வரும். ஆகையால் இனிச் சம்பவிக்கப்போகிற இவைகளுக்கெல்லாம் நீங்கள் தப்பி, மனுஷகுமாரனுக்கு முன்பாக நிற்கப்பாத்திரவான்களாக எண்ணப்படுவதற்கு, எப்பொழுதும் ஜெபம்பண்ணி விழித்திருங்கள்” (லூக்கா 21:34,36) என்றார். (29) ★

# 70

# இவர்களில் மிகவும் சிறியவர்களான என் சகோதரர்கள்...!

**மத்தேயு 25:31–46**

**(The Desire of Ages, pp. 637–641)**

"அன்றியும் மனுஷகுமாரன் தமது மகிமைபொருந்தினவராய்ச் சகல பரிசுத்த தூதரோடுங்கூட வரும்போது, தமது மகிமையுள்ள சிங்காசனத்தின் மேல் வீற்றிருப்பார். அப்பொழுது, சகல ஜனங்களும் அவருக்கு முன்பாகச் சேர்க்கப்படுவார்கள். மேய்ப்பனானவன் செம்மறியாடுகளையும் வெள்ளாடுகளையும் வெவ்வேறாகப் பிரிக்கிறதுபோல அவர்களை அவர் பிரித்து" இவ்விதமாக கிறிஸ்து ஒலிவமலையின்மீதிருந்து நியாயத்தீர்ப்பின் பெரிய நாளின் காட்சியைச் சீடர்களுக்குச் சித்தரித்துக் காட்டினார். அந்த நியாயத்தீர்ப்பைப்பற்றிய முடிவு ஒரே ஒரு தகுதியை மாத்திரமே நோக்கிச் சுழலுகின்றது என்று அவர் சுட்டிக்காட்டினார். ஜாதிகள் அவருக்கு முன்பாகச் சேர்க்கப்பட்டிருக்கும்போது, இரண்டு வகுப்பினர்மட்டுமே இருப்பார்கள். ஏழைகள் துன்பப்பட்டுக்கொண்டிருப்பவர்கள் ஆகியோரின் உருவத்திலிருக்கும் அவருக்கு எதைச் செய்தார்கள் அல்லது எதைச் செய்வதை அலட்சியஞ்செய்தார்கள் என்பதைவைத்து அவர்களுடைய நித்தியத்தின் முடிவு தீர்மானிக்கப்படும். (1)

அந்த நாளில் அவர்களுடைய மீட்பிற்காக அவருடைய ஜீவனைக் கொடுத்திருந்த பெரும் பணியை, அவர் மனிதர்களுக்குமுன் வைப்பதில்லை. அவருக்காக அவர்கள் செய்திருக்கும் விசுவாசமிக்க வேலையை முன்வைக்கிறார். அவருடைய வலது பக்கத்தில் நிறுத்தப்பட்டிருப்பவர்களுக்கு: "வாருங்கள் என் பிதாவினால் ஆசீர்வதிக்கப்பட்டவர்களே, உலகம் உண்டானது முதல் உங்களுக்காக ஆயத்தம்பண்ணப்பட்டிருக்கிற ராஜ்யத்தைச் சுதந்தரித்துக்கொள்ளுங்கள். பசியாயிருந்தேன், எனக்குப்

போஜனங்கொடுத்தீர்கள்; தாகமாயிருந்தேன், என் தாகத்தைத் தீர்த்தீர்கள்; அந்நியனாயிருந்தேன், என்னைச் சேர்த்துக்கொண்டீர்கள்; வஸ்திரமில்லா திருந்தேன், எனக்கு வஸ்திரங்கொடுத்தீர்கள்; வியாதியா யிருந்தேன், என்னை விசாரிக்க வந்தீர்கள்; காவலிலிருந்தேன், என்னைப் பார்க்கவந்தீர்கள்" என்று அவர் கூறுவார். ஆனால் எவர்களைக் கிறிஸ்து புகழ்கிறாரோ அவர்கள், அவருக்கு ஊழியம் செய்துகொண்டிருந்திருக்கின்றனர் என்பதை அறியாதவர்களாக இருக்கின்றனர். குழப்பத்தோடுகூடிய அவர்களுடைய விசாரிப்புகளுக்கு அவர்: "மிகவும் சிறியவராகிய என் சகோதரரான இவர்களில் ஒருவனுக்கு நீங்கள் எதைச் செய்தீர்களோ, அதை எனக்கே செய்தீர்கள் என்று மெய்யாகவே உங்களுக்குச் சொல்லுகிறேன்" என்று பதில் கூறுகிறார். (2)

வியாதியினாலும் தனிமையினாலும் துன்பமடைபவர்களில் அநேகர், சகல மனிதர்களாலும் வெறுக்கப்பட்டு, உபத்திரவப்படுத்தப்படவும், துன்பப்படுத்தப்படவும் வேண்டியவர்களாக இருப்பார்கள் என்றும் இயேசு சீடர்களிடம் கூறியிருந்தார். அநேகர் அவர்களுடைய வீடுகளிலிருந்து துரத்தப்பட்டு, வறுமைக்குள் கொண்டுவரப்படுவார்கள். அநேகர் சிறைச் சாலையில் போடப்படுவார்கள். அவருக்காக நண்பர்களையும் அல்லது வீட்டையும் இழந்துவிட்டவர்களுக்கு இந்த வாழ்க்கையில் நூறுமடங்கை அவர் வாக்குத்தத்தஞ்செய்திருந்தார். இப்பொழுது தங்களுடைய சகோதர சகோதரிகளுக்காக ஊழியஞ்செய்யும் அனைவருக்கும் ஒரு சிறப்பான ஆசீர்வாதத்தை வாக்குறுதி செய்தார். என் நாமத்திற்காகப் பாடுகளை அனுபவிக்கும் அனைவரிலும் நீங்கள் என்னை இனங்கண்டுகொள்ள வேண்டியவர்களாக இருக்கிறீர்கள் என்று கூறினார். எனக்கு நீங்கள் ஊழியஞ்செய்வதைப்போல அவர்களுக்கும் நீங்கள் செய்யவேண்டும். நீங்கள் எனது சீடர்களாக இருக்கிறீர்கள் என்பதற்கான சான்றாக அது இருக்கிறது. (3)

பரலோகக் குடும்பத்திற்குள் பிறந்திருக்கும் அனைவரும் ஒரு சிறப்பான அர்த்தத்தில் கர்த்தருடைய சகோதரர்களாக இருக்கின்றனர். கிறிஸ்துவின் அன்பு அவருடைய குடும்பத்தின் அங்கத்தினர்களை ஒன்றுசேர்த்துக் கட்டுகிறது. எங்கெல்லாம் அந்த அன்பு வெளிக்காட்டப்படுகிறதோ, அங்கெல்லாம் அந்த தெய்வீக உறவு வெளிப்படுத்தப்பட்டிருக்கிறது. "அன்புள்ள எவனும் தேவனால் பிறந்து, அவரை அறிந்திருக்கிறான்"–1 யோவான் 4:7. (4)

நியாயத்தீர்ப்பில் கிறிஸ்து எவர்களையெல்லாம் பாராட்டுகிறாரோ, அவர்கள் இறையியலை அறியாதவர்களாக இருக்கலாம். ஆனால் அவர்கள்

அவருடைய அடிப்படைக் கொள்கைகளை நெஞ்சாரப் பேணியிருந்தனர். தெய்வீக ஆவியின் செல்வாக்கின்மூலமாக, தங்களைச் சுற்றிலும் உள்ளவர்களுக்கு அவர்கள் ஒரு ஆசீர்வாதமாக இருந்திருக்கின்றனர். ஜீவ வார்த்தைகள் அவர்களுடைய செவிகளுக்குள் விழுவதற்கு முன்பே, அவர்கள் மிஷனரிமார்களிடம் நட்புப்பாராட்டியிருந்து, அவர்களுடைய சொந்த உயிரின் ஆபத்திலுங்கூட அவர்களுக்கு ஊழியஞ்செய்திருக்கின்றனர். அஞ்ஞானிகளுக்கு மத்தியில் அறியாமையுடன் தேவனைத் தொழுது கொள்பவர்களும் மனிதக் கருவிகளின்மூலமாக ஒருபோதும் ஒளியைப் பெற்றிராதவர்களும் இருக்கின்றனர். இருப்பினும் அவர்கள் அழியமாட்டார்கள். எழுதப்பட்டுள்ள தேவனுடைய நியாயப்பிரமாணம்பற்றி அறிவில்லாதவர்களாக இருந்தபோதிலும், இயற்கையின்மூலமாகப் பேசும் அவருடைய குரலை அவர்கள் கேட்டிருந்து, நியாயப்பிரமாணம் கோரியிருக்கும் காரியங்களைச் செய்திருக்கின்றனர். பரிசுத்த ஆவி அவர்களைத் தொட்டிருக்கிறது என்பதற்கு அவர்களுடைய செயல்கள் சான்றாக இருந்து, அவர்கள் தேவனுடைய பிள்ளைகள் என்று இனங்கண்டு கொள்ளப்பட்டிருக்கின்றனர். (5)

“மிகவும் சிறியவராகிய என் சகோதரரான இவர்களில் ஒருவனுக்கு நீங்கள் எதைச் செய்தீர்களோ, அதை எனக்கே செய்தீர்கள்” என்று இரட்சகரின் உதடுகளிலிருந்து கேட்பதற்கு, ஜாதிகளுக்கு மத்தியில் மிகவும் கீழானவர்களாகவும் அஞ்ஞானிகளுக்கு மத்தியிலும் இருப்பவர்கள் எவ்விதமாக ஆச்சரியமும் மகிழ்ச்சியும் அடைவார்கள்! அவருடைய அடியார்கள் அவருடைய அங்கீகாரத்தின் வார்த்தைகளை ஆச்சரியத்துடனும் மகிழ்ச்சியுடனும் கேட்கும்போது, முடிவில்லாத அன்பை உடையவரின் இருதயம் எவ்விதமாக மகிழ்ச்சியடையும்! (6)

கிறிஸ்துவின் அன்பு, இந்த ஒரு வகுப்பினருக்கு மட்டும் என்று கட்டுப்படுத்தப்பட்டிருக்கவில்லை. மானுடத்தின் ஒவ்வொரு பிள்ளையுடனும் அவர் தம்மைத்தாமே அடையாளப்படுத்துகிறார். நாம் பரலோகக்குடும்பத்தின் அங்கத்தினர்களாக வேண்டுமென்பதற்காக அவர் பூமிக்குரிய குடும்பத்தின் ஒரு அங்கத்தினரானார். அவர் மனுஷகுமாரனாக இருப்பதினால் ஆதாமின் ஒவ்வொரு மகனுக்கும் மகளுக்கும் ஒரு சகோதரராக இருக்கிறார். அவருடைய அடியார்கள் அவர்களைச் சுற்றிலும் உள்ள அழிந்துகொண்டிருக்கும் உலகத்திலிருந்து தாங்கள் பிரிக்கப்பட்டிருக்கிறோமென்று எண்ணக்கூடாது. மனித இனத்துடன் இணையும் ஒரு பெரிய இணைப்பின் பகுதியாக அவர்கள் இருக்கின்றனர். அவர்கள் பாவிகளுக்கும் அதைப்போலவே பரிசுத்தவான்களுக்கும், சகோதரர்களாக இருக்கின்றனர் என்று அவர்களைப் பரலோகம் பார்க்கின்றது. கிறிஸ்துவின் அன்பு விழுந்துபோனவர்களையும் தவறுசெய்பவர்களையும் பாவமுள்ளவர்களயும் தழுவுகிறது. விழுந்துபோன

ஒரு ஆத்துமாவை எடுத்து நிறுத்துவதற்காகச் செய்யப்பட்டுள்ள ஒவ்வொரு அன்பின் செயலும், இரக்கத்தின் ஒவ்வொரு செயலும், அவருக்குச் செய்யப்பட்டதாக ஏற்றுக்கொள்ளப்பட்டிருக்கிறது. (7)

இரட்சிப்பைச் சுதந்தரித்துக்கொள்ள இருப்பவர்களுக்கு ஊழியம் செய்வதற்கென்று பரலோகத்தின் தூதர்கள் அனுப்பப்பட்டிருக்கின்றனர். அவர்கள் யார் என்பதை இப்பொழுது நாம் அறியோம். எவர்கள் ஜெயங்கொண்டு ஒளியிலுள்ள பரிசுத்தவான்களின் சுதந்தரத்தில் பங்குபெறுவார்கள் என்பது இன்னும் வெளிக்காட்டப்படவில்லை. ஆனால் துயரப்பட்டுக்கொண்டிருப்பவர்களுக்கு ஆறுதல்செய்ய வகைதேடிக் கொண்டும், ஆபத்தில் உள்ளவர்களைப் பாதுகாக்கவும் மனிதர்களின் இருதயங்களைக் கிறிஸ்துவிற்கென்று வெற்றிகொள்ளவும், பரலோகத்தின் தூதர்கள் பூமியின் பரப்பெல்லை எங்கிலும் குறுக்கும் நெடுக்குமாகக் கடந்து கொண்டிருக்கின்றனர். எந்த ஒருவரும் அசட்டை செய்யப்படவோ அல்லது கவனிக்காமல் கடந்துசெல்லப்படவோ இல்லை. தேவன் பட்சபாதமுள்ளவராக இல்லாமல், அவர் படைத்திருக்கும் அனைத்து ஆத்துமாக்களின்மீதும் சமமான கரிசனை உடையவராக இருக்கிறார். (8)

தேவையிலும் பாடுகளிலும் இருக்கிற கிறிஸ்துவினுடையவர்களுக்காக நீங்கள் உங்கள் கதவுகளைத் திறக்கும்போது, காணமுடியாதவர்களாக இருக்கும் தூதர்களை நீங்கள் வரவேற்கிறீர்கள். பரலோக ஜீவிகளின் தோழமையை நீங்கள் வரவேற்கிறீர்கள். சந்தோஷத்தின் சமாதானத்தின் ஒரு பரிசுத்தமான சூழ்நிலையை அவர்கள் கொண்டுவருகின்றனர். அவர்கள் தங்களுடைய உதடுகளில் துதிகளுடன் வருகின்றனர். அதற்குப் பதிலளிக்கும் இசை பரலோகத்தில் கேட்கப்படுகிறது. இரக்கத்தின் ஒவ்வொரு செயலும் அங்கு இசையை உண்டுபண்ணுகிறது. பிதாவானவர் அவருடைய சிங்காசனத்திலிருந்து சுயநலமில்லாத ஊழியக்காரர்களை அவருடைய விலைமதிப்புமிக்க கருவூலங்களுக்கு மத்தியில் எண்ணுகிறார். (9)

கிறிஸ்துவின் இடதுபக்கத்தில் இருந்தவர்கள், ஏழைகளும் பாடுகளை அனுபவிப்பவர்களுமாக இருந்தவர்களின் வடிவிலிருந்த கிறிஸ்துவை அலட்சியஞ்செய்திருந்து, தங்களுடைய குற்றத்தைப்பற்றிய உணர்வில்லாதவர்களாக இருந்தனர். சாத்தான் அவர்களைக் குருடர் களாக்கியிருந்தான். அவர்களுடைய சகோதரர்களுக்கு அவர்கள் எவ்வித மாகக் கடமைப்பட்டிருந்தனர் என்பதை உணராமலிருந்தனர். அவர்கள் சுயத்தில் மூழ்கினவர்களாக மற்றவர்களின் தேவைகளைப்பற்றிக் கவனமில்லாதவர்களாக இருந்திருந்தனர். (10)

பாடுகளை அனுபவிக்கும் தேவனுடைய பிள்ளைகளுக்கு உதவிகளையும் ஆறுதலையும் அளிக்கவேண்டுமென்பதற்காக தேவன் செல்வந்தர்களுக்குச் செல்வத்தைக் கொடுத்திருக்கிறார். ஆனால் அவர்கள் மிகவும் அடிக்கடி மற்றவர்களின் தேவைகளின்மீது அக்கறை யற்றவர்களாக இருக்கின்றனர். அவர்கள் அவர்களுடைய ஏழை சகோதரர்களைவிட உயர்வானவர்களாக இருப்பதாக தங்களுக்குத் தாங்களே உணருகின்றனர். அவர்கள் தங்களை ஏழையான மனிதனிடத்தில் வைப்பதில்லை. ஏழைகளின் சோதனைகளையும் போராட்டங்களையும் புரிந்துகொள்ளாதவர்களாக இருந்த அவர்களுடைய இருதயங்களிலிருந்த இரக்கம் மடிந்துபோகின்றது. செல்வந்தார்கள் ஏழைகளிடமிருந்து தூரமாக விலகி, தங்களை விலைமதிப்புமிக்க வீடுகளிலும் அலங்காரமான ஆலயங்களிலும் அடைத்துக்கொள்கின்றனர். தேவைப்பட்டவர்களுக்கு ஆசீர்வாதமாக இருக்கும்படி தேவன் கொடுத்திருக்கும் பொருளாதாரங்கள், பெருமைக்கும் சுயநலத்திற்கும் வீணான செலவுகளுக்குமாக வீணடிக்கப் படுகிறது. தேவனுடைய மேன்மைமிக்க இரக்கங்களைப்பற்றி ஏழைகள் அடைந்திருக்கவேண்டிய கல்வி நாள்தோறும் அவர்களிடமிருந்து கொள்ளையடிக்கப்பட்டிருக்கின்றது. ஏனெனில் வாழ்க்கையின் தேவைகளினால் அவர்கள் ஆறுதல் செய்யப்படவேண்டுமென்பதற்கு அவர் போதுமான ஏற்பாடுகளைச் செய்திருக்கிறார். வாழ்க்கையை இடுக்கமடையச்செய்கின்ற வறுமையை உணரும்படி அவர்கள் வற்புறுத்தப்பட்டு, அடிக்கடி வன்மம், பொறாமை, தீய அனுமானங்களினால் நிறைந்தவர்களாக இருக்கும்படி சோதிக்கப்பட்டிருக்கின்றனர். தேவைகளின் அழுத்தங்களைத் தாங்களாகவே தாங்காதவர்கள், ஏழைகளை அவமதிப்பானவிதமாக அடிக்கடி நடத்தி, அவர்கள் தரித்திரராக இருப்பதை உணரும்விதமாக பார்க்கப்படுகின்றனர். (11)

ஆனால் அவைகளனைத்தையும் கிறிஸ்து பார்த்து, பசியுள்ளவனாகவும் தாகமுள்ளவனாகவும் இருந்தவன் நான்தான் என்று கூறுகிறார். ஒரு அந்நியனாக இருந்தவன் நான்தான்; நோயுற்றிருந்தவன் நான்தான்; சிறைச்சாலையில் இருந்தவன் நான்தான்; ஏராளமான உணவுகள் உங்கள் மேசையின்மீது விருந்தாகப் பரப்பப்பட்டிருந்தபோது, நான் குடிசையில் அல்லது காலியானத் தெருவில் கடும் பசியால் வாடிக்கொண்டிருந்தேன். வசதிகள்மிக்க உங்களுடைய வீட்டில் நீங்கள் சௌகரியமாக இருந்தபோது, என்னுடைய தலையைச் சாய்ப்பதற்கு இடமில்லாதவனாக நான் இருந்தேன். உங்களுடைய உடைகளை வைக்கின்ற பெட்டியை அதிக விலையுள்ள உடைகளால் நெருக்கமாக நிறைத்திருந்தபோது, நான் எதுவுமற்றவனாக

இருந்தேன். நீங்கள் உங்கள் இன்பங்களில் தொடர்ந்திருந்தபோது, நான் சிறைச்சாலையில் நலிவுற்று வாடியிருந்தேன். (12)

பட்டினியாக இருந்த ஏழைக்கு நீங்கள் அற்பமான உணவைப் பிச்சையிட்டிருந்தபோது, குளிரின் தீண்டுதலிலிருந்து அவர்களைக் காப்பதற்காகக் கந்தலான உடைகளை நீங்கள் கொடுத்திருந்தபோது, மகிமையின் கர்த்தருக்குத்தான் நீங்கள் கொடுத்துக்கொண்டிருந்தீர்கள் என்பதை நினைத்தீர்களா? உங்களுடைய வாழ்க்கையின் நாட்கள் முழுவதிலும் இந்தத் துன்பப்பட்டிருப்பவர்களின் வடிவில் நான் உங்களுக்கு அருகில் இருந்தேன். ஆனால் நீங்கள் என்னைத் தேடவில்லை. நீங்கள் என்னுடன் தோழமைக்குள் பிரவேசிக்க விரும்பவில்லை. உங்களை நான் அறியேன். (13)

பூமியின்மீது கிறிஸ்துவின் வாழ்க்கையின் காட்சிகளாக இருந்த இடங்களைச் சந்திப்பதும், அவர் நடந்துசென்ற இடத்தில் நடப்பதும், அவர் உபதேசஞ்செய்வதற்கு விரும்பியிருந்த ஏரியின் பக்கத்தைக் காண்பதுவும், அவருடைய கண்கள் அடிக்கடி பதிந்திருந்த குன்றுகளையும் பள்ளத்தாக்குகளையும் பார்ப்பதும் ஒரு பெரிய சிறப்புரிமையாக இருக்கும் என்று அநேகர் உணருகின்றனர். ஆனால் இயேசுவின் அடிச் சுவடுகளில் நடப்பதற்காக நாசரேத்துக்கோ, கப்பர்நகூமிற்கோ அல்லது பெத்தானியாவிற்கோ நாம் செல்லவேண்டிய அவசியமில்லை. நோயுற்றவர் களின் படுக்கைக்கருகிலும், வறுமையின் சிறிய குடிசைகளிலும், பெரிய நகரங்களின் ஜனக்கூட்டமிக்க சந்துகளிலும், ஆறுதல் தேவைப்படுகின்ற மனித இருதயங்கள் உள்ள எல்லா இடங்களிலும், நாம் அவருடைய அடிச்சுவடுகளின் அடையாளத்தைக் காணலாம். இயேசு பூமியின்மேல் இருந்தபோது, அவர் செய்திருந்ததைப்போல செய்வதினால் நாம் அவருடைய அடிச்சுவடுகளில் நடக்கலாம். (14)

செய்வதற்கென்று எல்லாரும் எதையாவது காணலாம். “தரித்திரர் எப்பொழுதும் உங்களிடத்தில் இருக்கிறார்கள்” (யோவான் 12:8) என்று இயேசு கூறினார். அவருக்காக வேலை செய்யவேண்டிய இடம் இல்லையென்று ஒருவரும் எண்ணவேண்டிய அவசியமில்லை. அறியாமை, பாவம் ஆகிய சங்கிலிகளால் கட்டப்பட்டவர்களாக, அவர்கள்மீதுள்ள கிறிஸ்துவின் அன்பைப்பற்றி அதிகமாகக் கேட்டிராத, இலட்சக்கணக்கான ஆத்துமாக்கள் அழிவதற்கு ஆயத்தமாக உள்ளன. நமது நிலைமைகளும் அவர்களுடைய நிலைமைகளும் நேர்மாறாகத் திரும்புமானால், அதாவது அவர்களது இடத்தில் நாம் வைக்கப்பட்டு, நம்முடைய இடத்தில் அவர்கள் வைக்கப்படுவார்களானால் நமக்காக அவர்கள் என்ன

செய்யவேண்டுமென்று நாம் விரும்புவோம்? இவைகள் அனைத்தும் நமது வல்லமைக்குள் இருக்கும்வரை, அவர்களுக்கென்று செயலாற்றுகின்ற மிகவும் பக்திவிநயமான கடமையின்கீழாக நாம் இருக்கிறோம். "மனுஷர் உங்களுக்கு எவைகளைச்செய்ய விரும்புகிறீர்களோ, அவைகளை நீங்களும் அவர்களுக்குச் செய்யுங்கள்" (மத்தேயு 7:12) என்பதும் எதனால் நாம் நியாயத்தீர்ப்பில் நிற்கவோ அல்லது விழவோ வேண்டுமோ, அது கிறிஸ்து கொடுத்துள்ள வாழ்க்கையின் சட்டமாக இருக்கிறது. (15)

துயரம் நிறைந்ததும் சோதிக்கப்பட்டுள்ளதுமாக உள்ள ஆத்துமாக்களைக் கவனிப்பதற்குத் தகுதியை உடைய ஒரு சபையை ஏற்படுத்துவதற்காக இரட்சகர் அவருடைய விலைமதிப்புமிக்க ஜீவனைக் கொடுத்திருக்கிறார். விசுவாசிகளின் ஒரு கூட்டம் ஏழையானதாகவும், கல்வியற்றதாகவும் அறியப்படாததாகவும் இருக்கலாம். ஆயினும் கிறிஸ்துவினால் அவர்கள் வீட்டிலும், அயலகத்திலும் சபையிலும் அந்தப் பிரதேசங்களுக்கு அப்பாலும் ஒரு வேலையைச் செய்யலாம். அவைகளின் பலன்கள் நித்தியத்தைப்போல தூரமாகச் சென்றடையலாம். (16)

இந்தப் பணி அலட்சியப்படுத்தப்படுவதினால் அநேக வாலிபச் சீடர்கள் கிறிஸ்தவ அனுபவத்தில் சாதாரணமான அரிச்சுவடிக்கும் அப்பால் ஒருபோதும் முன்னேறாதவர்களாக இருக்கின்றனர். உங்கள் பாவங்கள் உங்களுக்கு மன்னிக்கப்பட்டது என்று இயேசு கூறினபோது, அவர்களுடைய சொந்த இருதயங்களில் பிரகாசித்த ஒளியை, தேவையில் இருந்தவர்களுக்கு உதவுவதினால் அவர்களால் உயிருடன் காத்திருந்திருக்க முடியும். இளைஞர்களின் ஆபத்திற்கு அடிக்கடி ஆதாரமாக இருக்கும் ஓய்வற்ற சக்தி, ஆசீர்வாதங்களின் நீரோட்டங்களாக பாய்ந்திருக்கக்கூடிய வாய்க்கால்களுக்கூடாகத் திருப்பிவிடப்பட்டிருக்கவேண்டும். மற்றவர்களுக்கு நல்லதைச் செய்யும் அக்கறைமிக்க பணியில் சுயம் மறக்கப்பட்டுவிடும். (17)

மற்றவர்களுக்கு ஊழியஞ்செய்பவர்களுக்குப் பிரதான மேய்ப்பர் ஊழியஞ்செய்வார். அவர்கள் தாங்களாகவே ஜீவத்தண்ணீரைப் பருகி திருப்தியடைவார்கள். கிளர்ச்சியடையச்செய்யும் பொழுதுபோக்கிற்காகவும் அல்லது தங்களுடைய வாழ்க்கையின் மாறுதலுக்காகவும் அவர்கள் ஏக்கமுடையவர்களாக இருக்கமாட்டார்கள். அழிவதற்கு ஆயத்தமாகிக் கொண்டிருக்கும் ஆத்துமாக்களைக் காப்பாற்றுவது எப்படி என்பது அவர்களுடைய ஆர்வமுள்ள பெரிய பேச்சின் தலைப்பாக இருக்கும். சமுதாய உறவுகள் ஆதாயமுள்ளதாக இருக்கும். மீட்பரின்மீதுள்ள அன்பு இருதயங்களை ஒன்றுசேர்த்து, ஒற்றுமைக்குள் இழுக்கும். (18)

நாம் தேவனுடன் ஒருமித்த ஊழியக்காரர்களாக இருக்கிறோம் என்பதை உணரும்போது, அவருடைய வாக்குத்தத்தங்களைப்பற்றி அலட்சியமாகப் பேசமாட்டோம். அவை நமது இருதயங்களில் பற்றியெரிந்து, நமது உதடுகளிலும் பற்றியெரியும். அறியாமைமிக்கவர்களும் ஒழுக்க மில்லாதவர்களும் கலகஞ்செய்பவர்களுமாக இருந்த மக்களுக்கு ஊழியஞ்செய்யும்படி மோசே அழைக்கப்பட்டபோது, “என் சமுகம் உனக்கு முன்பாகச் செல்லும், நான் உனக்கு இளைப்பாறுதல் தருவேன்” (யாத்திராகமம் 33:14) என்னும் வாக்குத்தத்தத்தை தேவன் கொடுத்தார். “நான் உன்னோடே இருப்பேன்” (யாத்திராகமம் 3:12) என்றார். துன்பப்பட்டு, பாடுகளை அனுபவித்துக்கொண்டிருக்கும் அனைவருக்கும், கிறிஸ்துவிற்காக உழைப்பவர்களுக்கும் இந்த வாக்குத்தத்தம் உள்ளது. (19)

மனிதனிடத்தில் காட்டப்படும் அன்பு, தேவன் பூமியிலுள்ள மக்களுக்குக் காட்டும் அன்பின் வெளிப்பாடாக இருக்கிறது. இந்த அன்பை நடுவதற்காகவும், நம்மை ஒரு குடும்பத்தின் பிள்ளைகளாக்குவதற்காகவும், மகிமையின் அரசர் நம்மில் ஒருவரானார். “நான் உங்களில் அன்பாயிருக்கிறதுபோல நீங்களும் ஒருவரிலொருவர் அன்பாயிருக்கவேண்டுமென்பதே என்னுடைய கற்பனையாயிருக்கிறது” (யோவான் 15:12) என்று அவரது பிரிவின்போது கூறின வார்த்தைகள் நிறைவேறியிருக்கின்றன. அவர் உலகத்தை நேசித்ததைப்போல நாம் அதை நேசிக்கும்போது, நமக்கான அவருடைய ஊழியம் நிறைவேறுகிறது. நாம் பரலோகத்திற்கு தகுதியுள்ளவர்களாக்கப் பட்டிருக்கிறோம். ஏனெனில் பரலோகத்தை நமது இருதயங்களில் உடையவர்களாக இருக்கிறோம். (20)

“மரணத்துக்கு ஒப்புவிக்கப்பட்டவர்ளையும், கொலையுண்ணப் போகிறவர்களையும் விடுவிக்கக்கூடுமானால் விடுவி. அதை அறியோம் என்பாயாகில், இருதயங்களைச் சோதிக்கிறவர் அறியாரோ? உன் ஆத்துமாவைக் காக்கிறவர் கவனியாரோ? அவர் மனுஷருக்கு அவனவன் கிரியைக்குத்தக்கதாகப் பலனளியாரோ?”—நீதிமொழிகள் 24:11,12. பெரும் நியாயத்தீர்ப்பின் நாளில் கிறிஸ்துவிற்காகச் செயலாற்றாமலிருப்பவர்களும் தங்களைப்பற்றியே சிந்தித்து வழுவிச்சென்றவர்களும், தங்களையே கவனித்திருந்தவர்களும், பூமி முழுவதற்கும் நியாயாதிபதியாக இருப்பவரால் தீமைசெய்தவர்களுடன்கூட வைக்கப்படுவார்கள்; அதே தண்டனையை அவர்களும் அடைவார்கள். (21)

ஒவ்வொருவருக்கும் ஒரு அறக்கட்டளை சார்ந்த பொறுப்பு கொடுக்கப்பட்டிருக்கிறது. “உங்கள் கண்களை ஏறெடுத்து, வடக்கேயிருந்து வருகிறவர்களைப் பாருங்கள்; உனக்குக் கொடுக்கப்பட்டிருந்த மந்தையும்,

உன் மகிமையான ஆட்டுக்கிடையும் எங்கே? அவர் உன்னை விசாரிக்கும்போது என்ன சொல்லுவாய்? அவர்கள் உன்மேல் ஆதிக்கக்காரரும் தலைவருமாயிருக்க, நீ அவர்களைப் பழக்குவித்தாயே; கர்ப்பவதிக்குப் பிரசவவேதனை உண்டாகும்போது உண்டாகும் வேதனைகளைப்போல் வேதனைகள் உன்னைப் பிடிப்பதில்லையோ?" (எரேமியா 13:20,21) என்று பிரதான மேய்ப்பர் அதிகாரத்துடன் கேட்பார். (22) ★

# 71

# வேலைக்காரர்களில் ஒரு வேலைக்காரராக...!

**லூக்கா 22:7–18,24; யோவான் 13:1–17**

**(The Desire of Ages, pp. 642–651)**

"எருசலேமில் ஒரு வீட்டின் மாடி அறையில், கிறிஸ்து அவருடைய சீடர்களுடன் ஒரு மேஜை அருகில் அமர்ந்திருந்தார். பஸ்கா பண்டிகையைக் கொண்டாடும்படி அவர்கள் கூடியிருந்தனர். இந்தப் பண்டிகை விருந்தை அந்தப் பன்னிருவருடன்மட்டும் ஆசரிக்க இரட்சகர் விரும்பியிருந்தார். அவருடைய வேளை வந்திருந்தது என்பதையும், அவர்தாமே உண்மையான பஸ்கா ஆட்டுக்குட்டி என்பதையும் அவர் அறிந்திருந்தார். பஸ்கா புசிக்கப்பட வேண்டிய அந்த நாளில், அவர் தியாகபலியாக மரிக்கவேண்டியதிருந்தது. கோபாக்கினையின் பாத்திரத்தில் அவர் பருகப்போகிறவராக இருந்தார். பாடுகளாகிய முடிவான ஸ்நானத்தை விரைவில் அவர் பெறவேண்டும்; ஆனால், அவருக்கு அமைதிமிக்க இன்னும் சில மணிநேரங்கள் மீதியாக இருந்தன. அவை, அவரால் நேசிக்கப்பட்டிருந்த சீடர்களின் நன்மைக்காகச் செலவிடப்படவேண்டியதாக இருந்தன. (1)

கிறிஸ்துவின் வாழ்க்கை முழுவதும் சுயநலமில்லாத சேவையின் ஒரு வாழ்க்கையாக இருந்தது. அவரது ஒவ்வொரு செயலும் "ஊழியங் கொள்ளும்படி வராமல், ஊழியஞ் செய்வதாக" (மத்தேயு 20:28) இருந்தது; ஆனால் சீடர்கள், அந்தப் பாடத்தை இன்னமும் கற்றுக்கொள்ளாதவர்களாக இருந்தனர். அந்தக் கடைசி பஸ்கா இரவு விருந்தில், அவர்களுடைய மனங்களிலும் இருதயங்களிலும் எப்பொழுதும் உணர்த்துதலை உண்டுபண்ணியிருந்த ஒரு உதாரணத்தினால், இயேசு அவருடைய போதனையை மறுபடியும் வழங்கினார். (2)

இயேசுவிற்கும் அவருடைய சீடர்களுக்குமிடையில் நிகழ்ந்திருந்த நேர்காணல்கள், வழக்கமாக அவர்களால் அமைதியாகவும் சந்தோஷத்தோடு மிக உயர்வாக மதிக்கப்படுகின்றதுமான நேரங்களாக

இருந்திருந்தன. பஸ்கா இரவு உணவுகள் சிறப்பான ஆர்வமான காட்சிகளைக் கொண்டிருந்திருந்தன; ஆனால், இந்தச் சந்தர்ப்பத்தில் இயேசு கலக்கமடைந்தவராக இருந்தார். அவருடைய இருதயம் பாரமடைந்ததாக இருந்ததுடன், அவரது முகத்தின்மீது ஒரு நிழல் படிந்திருந்தது. மேலறையில் அவர் சீடர்களைச் சந்தித்தபோது, அவரது மனதை ஏதோ ஒன்று பாரப்படுத்திக்கொண்டிருக்கிறது என்பதை அவர்கள் உணர்ந்தனர். அதன் காரணத்தை அவர்கள் அறியாமலிருந்தபோதிலும், அவருடைய வருத்தத்தில் அவர்கள் அனுதாபப்பட்டிருந்தனர். (3)

அவர்கள் மேஜையைச்சுற்றிச் சேர்ந்திருந்தபோது, தொடுகின்ற துயரத்தின் குரலில், "நான் பாடுபடுகிறதற்கு முன்னே உங்களுடனேகூட இந்தப் பஸ்காவைப் புசிக்க மிகவும் ஆசையாயிருந்தேன். தேவனுடைய ராஜ்யத்திலே இது நிறைவேறுமளவும் நான் இனி இதைப் புசிப்பதில்லையென்று உங்களுக்குச் சொல்லுகிறேன்" என்று அவர் கூறினார். "அவர் பாத்திரத்தை எடுத்து, ஸ்தோத்திரம்பண்ணி: நீங்கள் இதைவாங்கி உங்களுக்குள்ளே பங்கிட்டுக்கொள்ளுங்கள்; தேவனுடைய ராஜ்யம் வருமளவும் நான் திராட்சப்பழரசத்தைப் பானம்பண்ணுவதில்லையென்று உங்களுக்குச் சொல்லுகிறேன்" என்றார். (4)

கிறிஸ்து, உலகத்தைவிட்டுப்பிரிந்து, அவருடைய பிதாவினிடத்திற்குச் செல்லவேண்டிய நேரம் வந்திருந்ததை அறிந்தார். இந்த உலகத்தில் அவருக்குச் சொந்தமானவர்களாக இருந்தவர்களை நேசித்தார்; இறுதிமட்டும் அவர்களை நேசித்தார். இப்பொழுது அவர் சிலுவையின் நிழலில் இருந்தார்; அந்த வேதனை அவரைச் சித்திரவதை செய்துகொண்டிருந்தது. அவர் காட்டிக்கொடுக்கப்படுகின்ற நேரத்தில் கைவிடப்பட்டிருப்பார் என்பதை அறிந்திருந்தார். குற்றவாளிகள் எவ்விதமான கேவலமான நடவடிக்கைகளுக்கு உட்படுத்தப்படுவர்கள் என்பதையும், அவர் மரணத்திற்குள்ளாக்கப்படுவார் என்பதையும், அறிந்திருந்தார். எவர்களை இரட்சிப்பதற்காக வந்திருந்தாரோ, அவர்களுடைய நன்றிகெட்ட தன்மையையும் கொடூரத்தையும் அவர் அறிந்திருந்தார். அவர் செய்யவேண்டியதாக இருந்த தியாகபலி எவ்வளவு பெரியது என்பதையும் அவர் அறிந்திருந்தார். தமக்குமுன் இருந்த அனைத்தையும் அறிந்திருந்த அவர், அவருடைய சொந்த அவமானம், பாடுகள், ஆகியவைபற்றிய நினைப்பில் இயற்கையாகவே நசுக்கப்பட்டிருந்திக்கவேண்டும்; ஆனால், வெட்கம், துயரம் ஆகிய வேதனை தரும்விதத்தில் அவர் கையாளப்படுவது முடிந்தபின், போராடும்படி இந்த உலகத்தில் விடப்படவுள்ள—அவருக்குச் சொந்தமானவர்களைப்போல அவருடன் இருந்த அந்தப் பன்னிருவரையும் பார்த்தார். அவர் படவேண்டிய

பாடுகளைக்குறித்த நினைவுகள், எப்பொழுதும் அவருடைய சீடர்களுடன் பிணைக்கப்பட்டவைகளாக இருந்தன. அவர் தம்மைப்பற்றிச் சிந்திக்கவில்லை. அவர்களைப்பற்றிய அக்கறை அவருடைய மனதில் மேலோங்கியிருந்தது. (5)

இயேசுவின் சீடர்களுடனான இந்தக் கடைசி மாலைப்பொழுதின் சந்திப்பில், அவர்களிடம் கூறும்படி அதிகமானவைகளை அவர் கொண்டிருந்தார். எவைகளை அவர்களுக்குப் போதனையாகக் கொடுக்க அவர் ஏங்கியிருந்தாரோ, அவைகளைப் பெற்றுக்கொள்ள அவர்கள் ஆயத்தமாக இருந்திருந்தால், இதயத்தை உடைக்கும் வேதனையிலிருந்தும் ஏமாற்றத்திலிருந்தும் நம்பிக்கையின்மையிலிருந்தும் அவர்கள் காப்பாற்றப் பட்டிருந்திருப்பார்கள்; ஆனால், அவர் கூற இருந்தவைகளைத் தாங்கிக் கொள்ளமுடியாதவர்களாக அவர்கள் இருந்ததை இயேசு கண்டார். அவர்களுடைய முகங்களை அவர் பார்த்தபோது, எச்சரிக்கை, ஆறுதல் ஆகியவைகளின் வார்த்தைகள், அவருடைய உதடுகளில் தங்கிவிட்டன. ஒவ்வொரு விநாடியும் மௌனமாகக் கடந்துசென்றது. இயேசு காத்திருப்பவர் போல் காணப்பட்டார். சீடர்கள் அமைதியில்லாதவர்களாக இருந்தனர். கிறிஸ்துவின் வருத்தத்தினால் விழிப்படைந்திருந்த அனுதாபமும் பரிவும் கடந்துசென்றுவிட்டதுபோல் காணப்பட்டது. அவருடைய சொந்தப் பாடுகளைப் பற்றிய அவருடைய துயரமிக்க வார்த்தைகள் எந்தவித உணர்த்துதல் களையும் ஏற்படுத்தாமலிருந்தது. அவர்கள் ஒருவரையொருவர் பார்த்த பார்வைகள் பொறாமையையும் போட்டியையும் கூறியது. (6)

“பின்பு தங்களில் எவன் பெரியவனாயிருப்பான்” என்கிற வாக்குவாதம் அவர்களுக்குள் உண்டாயிற்று. கிறிஸ்துவின் சமூகத்தில் நிகழ்த்தப்பட்ட அந்தப் போட்டி அவரை காயப்படுத்தி வேதனையடையச் செய்தது. கிறிஸ்து அவருடைய வல்லமையை உறுதிப்படுத்தி, தாவீதின் சிங்காசனத்தின்மீது அவருடைய உரிமையை எடுத்துக்கொள்ளுவார் என்னும், அவர்களுக்கு விருப்பமான எண்ணத்தைச் சீடர்கள் பற்றிக்கொண்டிருந்தனர். அவர்களில் ஒவ்வொருவரும் அவர்களுடைய இருதயத்தில் இராஜ்யத்தின் மிகவும் உயர்ந்த இடத்தின்மேல் ஏக்கமுடையவர்களாக இருந்தனர். அவர்கள் தங்களைவிடத் தங்களுடைய சகோதரர்கள் அதிக மதிப்புவாய்ந்தவர்கள் என்று கருதுவதற்குப்பதிலாக, தங்களைப்பற்றி ஒரு சொந்த மதிப்பீட்டை வைத்திருந்து தங்களை முதலாவதாக வைத்து எண்ணிக்கொண்டிருந்தனர். கிறிஸ்துவின் சிங்காசனத்திற்கு வலதுபக்கத்திலும் இடதுபக்கத்திலும் தாங்கள் உட்காரவேண்டும் என்னும் யாக்கோபு, யோவான் ஆகியோரின் வேண்டுகோள் மற்றவர்களின் கோபத்தை எழுப்பியிருந்தது. மிகவும் உயர்வான பதவியைக்

கேட்க, அந்த இரு சகோதரர்களும் துணிவடைந்தது, பிரிவினையை அச்சுறுத்தும்விதமாக, அந்தப் பத்துப்பேர்களையும் கலக்கியது. அவர்கள் தவறானவிதத்தில் நிதானிக்கப்பட்டுவிட்டனரென்றும், அவர்களுடைய எஜமானபக்தியும் தாலந்துகளும் சரியாக மதிக்கப்படவில்லையென்றும் அவர்கள் எண்ணினர். யாக்கோபின்மீதும் யோவானின்மீதும், யூதாஸ் மிகவும் கடுமையுள்ளவனாக இருந்தான். (7)

சீடர்கள் இரவு உணவின் அறைக்குள் பிரவேசித்தபோது, அவர்களுடைய இருதயங்கள் கோப உணர்வினால் நிறைந்தவையாக இருந்தன. கிறிஸ்துவிற்கு அடுத்தபடியாக இடதுபக்கத்தில் யூதாஸ் நெருக்கமாக உட்கார்ந்திருந்தான். யோவான் வலதுபக்கத்தில் இருந்தான். மிகவும் உயர்வான ஒரு இடமிருக்குமானால், அதை அடைந்துகொள்ளத் தீர்மானமுடையவனாக யூதாஸ் இருந்தான். அது கிறிஸ்துவிற்கு அடுத்த இடமாக இருக்கவேண்டும் என்று நினைக்கப்பட்டிருந்தது. யூதாஸ், காட்டிக் கொடுக்கும் ஒரு துரோகியாக இருந்தான். (8)

பிரிவினைக்கான வேறு ஒரு காரணமும் எழுந்திருந்தது. விருந்துகளில் விருந்தினர்களின் பாதங்களை ஒரு வேலைக்காரன் கழுவுவது, வழக்கமாக இருந்தது. இந்தச் சந்தர்ப்பத்தில், அந்த சேவைக்கான ஆயத்தஞ்செய்யப்பட்டிருந்தது. பாதங்களைக் கழுவுவதற்காக அங்கு தண்ணீர் கூஜா, கால்வைக்கும் பாத்திரம், துண்டு ஆகியவை ஆயத்தமாக இருந்தன; எனவே, அதைச் செய்வது சீடர்களின் பங்காக இருந்தது; ஆனால், புண்பட்டுப்போன பெருமைக்கு தன்னை ஒப்புக்கொடுத்திருந்த ஒவ்வொரு சீடனும், வேலைக்காரனின் பகுதியைச் செய்யாமலிருப்பதற்குத் தீர்மானித்திருந்தான். அவர்கள் செய்யவேண்டிய காரியம் ஏதோ இருக்கிறது என்பதைப்பற்றிய சுய உணர்வு இல்லாதவர்களைப்போல் காணப்பட்டு, அனைவரும் கடுமையாக தங்களை அடக்கிக்கொண்டவர்கள்போன்று அக்கறையற்ற நிலையை வெளிப்படையாகக் காட்டிக்கொண்டிருந்தனர். தங்களைத் தாழ்த்த மனமின்றி, அவர்கள் அமைதிகாத்துக்கொண்டிருந்தனர். (9)

இந்த ஏழை ஆத்துமாக்களின்மீது சாத்தான் ஒரு முடிவான வெற்றியை அடைந்துகொள்ளமுடியாத அளவிற்கு கிறிஸ்து எவ்விதமாக அவர்களைக் கொண்டுவரமுடியும்? சீடத்துவம் என்று சாதாரணமாகக் கூறிக்கொண்டது அவர்களைச் சீடர்களாக்கவில்லை என்பதையும், அல்லது அவருடைய இராஜ்யத்தில் ஒரு இடம் அவர்களுக்குக் காப்பீடுசெய்யப்படவில்லை என்பதையும், அவரால் எவ்விதமாகக் காட்டமுடியும்? உண்மையான அன்புள்ள சேவையும், தாழ்மையும்தான் உயரிய தன்மையை அமைக்கின்றது என்பதை

அவரால் எவ்வாறு காட்டமுடியும்? அவர்களுடைய இருதயங்களில் அன்பை தூண்டியெழுப்பி, கூறுவதற்கு அவர் ஏக்கத்தோடு இருந்ததை அவர்கள் அறிந்துகொள்ளும்படி எவ்விதமாக அவர்களைத் தகுதிப்படுத்தமுடியும்? (10)

சீடர்கள், ஒருவர் மற்றவருக்காக சேவைசெய்கின்றதை வெளிப்படுத்தும் எந்த நடவடிக்கையிலும் ஈடுபடவில்லை. அவர்கள் என்ன செய்வார்கள் என்பதைக் காண்பதற்காக, இயேசு சற்று நேரம் காத்திருந்தார். அதற்குப்பின், தெய்வீக ஆசிரியராக இருந்த அவர், தமது இருக்கையைவிட்டு எழுந்தார். அவருடைய செயற்பாட்டிற்கு இடையூறாக இருந்திருக்கக்கூடிய மேலாடையைக் கழற்றி ஒருபக்கமாக வைத்துவிட்டு, ஒரு சீலையை எடுத்துத் தம்மை அரைக்கட்டிக்கொண்டார். ஆச்சரியமிக்க ஆர்வத்துடன், அடுத்து என்ன பின்தொடர உள்ளது என்று பார்க்க சீடர்கள் காத்திருந்தனர். "பின்பு பாத்திரத்தில் தண்ணீர் வார்த்து, சீடருடைய கால்களைக் கழுவவும், தாம் கட்டிக்கொண்டிருந்த சீலையால் துடைக்கவும் தொடங்கினார்." இந்தச் செயல் சீடர்களின் கண்களைத் திறந்தது. கசப்புமிக்க வெட்கமும் அவமானமும் அவர்களுடைய இருதயங்களை நிரப்பின. பேசப்படாத கடிந்துகொள்ளுதலை அவர்கள் புரிந்துகொண்டு, ஒட்டுமொத்தமாக தங்களை ஒரு புதிய ஒளியில் கண்டனர். (11)

அப்படியே கிறிஸ்து அவருடைய சீடர்களின்மீதிருந்த அன்பை உணர்த்திக் காட்டினார். அவர்களுடைய சுயநலமிக்க ஆவி அவரை துயரத்தால் நிரப்பியது; ஆனால், அவர்களுடைய கஷ்டத்தைப்பற்றி அவர்களுடன் அவர் எதிர்வாதத்திற்குள் பிரவேசிக்கவில்லை. அதற்குப் பதிலாக, அவர்களால் ஒருபோதும் மறக்கமுடியாத ஒரு உதாரணத்தை அவர்களுக்குக் கொடுத்தார். அவர்கள்மீதிருந்த அவருடைய அன்பு, எளிதில் சீர்குலைக்கப்படவோ அல்லது அணைக்கப்படவோ இல்லை. பிதாவானவர் எல்லாவற்றையும் அவருடைய கரங்களில் ஒப்படைத்திருந்தார் என்பதையும், அவர் தேவனிடத்திலிருந்து வந்தார் என்பதையும், தேவனிடத்திற்குச் சென்றார் என்பதையும் அறிந்திருந்தார். அவருடைய தெய்வீகம்பற்றிய முழுமையான உணர்வினை உடையவராக அவர் இருந்தார்; ஆனால், அவருடைய அரச முடியையும் அரச உடைகளையும் ஒரு பக்கமாக வைத்துவிட்டு, ஒரு வேலைக்காரனுடைய உருவத்தை எடுத்துக்கொண்டிருந்தார். ஒரு வேலைக்காரனாகத் தம்மை அரைக்கட்டிக்கொண்டதும், ஒரு வேலைக் காரனின் பணியைச்செய்ததும், பூமியின்மீதிருந்த அவருடைய வாழ்க்கையின் கடைசிச் செயல்களில் ஒன்றாக இருந்தது. (12)

பஸ்கா பண்டிகைக்குமுன், யூதாஸ் இரண்டாவது தடவையாக ஆசாரியர்களையும் வேதபாரகர்களையும் சந்தித்திருந்து, இயேசுவை அவர்களுடைய கைகளில் ஒப்புக்கொடுக்கும் ஒப்பந்தத்தை முடித்திருந்தான்; ஆயினும் அதற்குப்பின், அவன் எந்தத் தவறைப்பற்றியும் குற்றமில்லாத வனைப்போலவும் பஸ்கா விருந்திற்காக ஆயத்தஞ்செய்கின்ற காரியத்தில் ஆர்வமுள்ளவனாக இருப்பதைப்போலவும் காட்டிக்கொண்டு, சீடர்களுடன் கலந்திருந்தான். சீடர்கள் யூதாசின் நோக்கத்தை அறியாதிருந்தனர். இயேசுமட்டுமே அவனுடைய இரகசியத்தை வாசிக்கக்கூடியவராக இருந்தார்; அப்படியிருந்தபோதிலும், அவனைப்பற்றிய காரியத்தை அவர் வெளிப்படுத்தவில்லை. அவனுடைய ஆத்துமாவிற்காக இயேசு ஏக்கத்தோடிருந்தார். தண்டனைக்குள்ளானதாக இருந்த எருசலேம் நகரத்திற்காக அவர் அழுதபோது, எவ்விதமான பாரத்தை உடையவராக இருந்தாரோ, அதே பாரத்தை அவனுக்காகவும் அவர் உணர்ந்தார். "உன்னை எப்படி நான் கைவிடுவேன்" என்று அவருடைய இதயம் அழுதுகொண்டிருந்தது. அந்த அன்பின் நெருக்கி ஏவும் வல்லமை யூதாசால் உணரப்பட்டிருந்தது. தூசிபடிந்த அந்த பாதங்களை இரட்சகரின் கரங்கள் கழுவிக்கொண்டிருந்தபோதும், சீலையால் துடைத்துக்கொண்டிருந்தபோதும், அவனுடைய இருதயம் அப்பொழுதே அங்கேயே பாவ அறிக்கை செய்யும்படி முழுவதுமாக துடித்துக் கிளர்ச்சியடைந்தது; ஆனால், அவன் தன்னைத் தாழ்த்தாது இருந்தான். மனந்திரும்புதலுக்கெதிராக, அவன் தனது இருதயத்தைக் கடினப்படுத்தினான். அந்த நேரத்தில் ஒரு பக்கமாக ஒதுக்கிவைக்கப்பட்டிருந்த உணர்ச்சித் துடிப்புகள் அவனை மறுபடியும் கட்டுப்படுத்தினது. கிறிஸ்து அவருடைய சீடர்களின் கால்களைக் கழுவுகின்ற செயலில் யூதாஸ் எதிர்ப்படைந்தவனாக இருந்தான். இயேசுவால் அந்த அளவிற்கு அவர் தம்முடைய தரத்தைத் (அவனது எண்ணப்படி) தாழ்த்தமுடியுமானால், அவர் இஸ்ரவேலருக்கு அரசராக முடியாது என்று அவன் நினைத்தான். உலகப்பிரகாரமான ஒரு இராஜ்யத்தின் கனம்பற்றிய நம்பிக்கைகள் யாவும் அழிந்துபோயிற்று; கிறிஸ்துவைப் பின்பற்றுவதினால், எந்த ஆதாயமும் கிடைக்கப்போவதில்லை என்பதில் யூதாஸ் தீர்மானமான முடிவிற்கு வந்துவிட்டான். அவர் தம்மைத்தாமே தரந்தாழ்த்துவதைக் கண்டபின், அவன் நினைத்திருந்ததைப்போல, அவருடன் தனக்குள்ள உறவைத் துண்டித்துக்கொள்ளவேண்டுமென்ற தனது நோக்கத்தில் உறுதியடைந்தான்; மேலும் தான் வஞ்சிக்கப்பட்டுவிட்டதை அறிவிப்பதிலும் உறுதியுள்ளவனாக இருந்தான். அவன் ஒரு பிசாசினால் பிடிக்கப்பட்டிருந்து, அவனுடைய கர்த்தரைக் காட்டிக்கொடுக்க ஒப்புக்கொண்டிருந்த வேலையை நிறைவேற்றத் தீர்மானஞ்செய்தான். (13)

யூதாஸ் மேசையருகில் அவன் உட்காரும் இடத்தைத் தெரிந்துகொள்ளுவதில் தன்னை முதலில்வைக்க முயன்றிருந்தான். ஒரு வேலைக்காரனைப்போல இருந்த கிறிஸ்து, முதலில் அவனுக்குச் சேவைசெய்தார். எந்த ஒருவனுக்கு எதிராக யூதாஸ் அதிகமான கசப்புணர்வை கொண்டிருந்தானோ, அந்த யோவான் கடைசிவரை காத்திருக்கும்படி விடப்பட்டான். ஆனால், யோவான் இதனை ஒரு கடிந்துகொள்ளுதலாகவோ அவமரியாதையாகவோ எடுத்துக்கொள்ளவில்லை. கிறிஸ்துவின் செயலைச் சீடர்கள் கவனித்தபோது, பெரிய அளவில் அசைக்கப்பட்டனர். பேதுருவின் வரிசைமுறை வந்தபோது, அவன் ஆச்சரியத்துடன் “ஆண்டவரே, நீர் என் கால்களைக் கழுவலாமா” என்று குரலெழுப்பினான். கிறிஸ்து தம்மைத்தாமே தாழ்த்திய விதம் அவனுடைய இருதயத்தை உடைத்தது. சீடர்களில் ஒருவன் இந்த சேவையைச் செய்துகொண்டிருக்கவில்லை என்பதை நினைத்தபோது, அவன் வெட்கத்தால் நிரப்பப்பட்டான். “நான் செய்கிறது இன்னதென்று இப்பொழுது நீ அறியாய், இனிமேல் அறிவாய்” என்று கிறிஸ்து கூறினார். பேதுரு எவரைத் தேவகுமாரனாக நம்பியிருந்தானோ, அவனுடைய அந்த ஆண்டவர், ஒரு வேலைக்காரனின் வேலையைச் செய்துகொண்டிருப்பதைக் காணச் சகிக்கமுடியாதவனாக இருந்தான். இந்த அவமானத்திற்கு எதிராக அவனுடைய முழு ஆத்துமாவும் எழுந்தது. இதற்காகவே கிறிஸ்து இந்த உலகத்திற்கு வந்தார் என்பதை அவன் உணராமலிருந்தான். “நீர் ஒருக்காலும் என் கால்களைக் கழுவக்கூடாது” என்று அவன் பெரும் அழுத்தத்துடன் கூறினான். (14)

கிறிஸ்து பேதுருவை நோக்கி, பக்திவிநயத்துடன்: “நான் உன்னைக் கழுவாவிட்டால் என்னிடத்தில் உனக்குப் பங்கில்லை” என்று கூறினார். பேதுரு மறுத்திருந்த ஊழியம் ஒரு உயர்வான சுத்திகரிக்கப்படுதலின் மாதிரியாக இருந்தது. பாவத்தின் கறையிலிருந்து இதயத்தைக் கழுவுவதற்காகவே கிறிஸ்து வந்திருந்தார். கிறிஸ்து பேதுருவின் கால்களைக் கழுவ அனுமதிக்க மறுத்ததில், அவன் கீழான சுத்திகரிப்பில் உள்ளடங்கியிருந்த மேலான சுத்திகரிப்பை மறுத்துக்கொண்டிருந்தான். அவன் உண்மையாகவே அவனுடைய ஆண்டவரை புறக்கணித்துக்கொண்டிருந்தான். நமது சுத்திகரிப்பிற்காகச் செயலாற்றும்படி, நமது எஜமானரை அனுமதிப்பது அவருக்கு கேவலமல்ல. நமது சார்பில் செய்யப்படும் எந்த ஏற்பாட்டையும் நன்றியுள்ள இருதயத்துடன் பெற்றுக்கொள்வதும், கிறிஸ்துவிற்காக அக்கறையுடன் ஊழியஞ்செய்வதும், அதிக உண்மையான தாழ்மையாக இருக்கிறது. (15)

“நான் உன்னைக் கழுவாவிட்டால் என்னிடத்தில் உனக்குப் பங்கில்லை” என்று கிறிஸ்து கூறினார். பேதுரு அவனுடைய பெருமையையும்

சுய சித்தத்தையும் ஒப்புக்கொடுத்தான். கிறிஸ்துவினிடத்திலிருந்து பிரிந்துவிடுதல் என்னும் எண்ணத்தை அவனால் தாங்கிக்கொள்ள முடியவில்லை. அது அவனுக்கு மரணமாக இருந்திருக்கும். “ஆண்டவரே, என் கால்களை மாத்திரமல்ல, என் கைகளையும் என் தலையையும்கூடக் கழுவவேண்டும்” என்று அவன் கூறினான். இயேசு அவனிடம்: “முழுகினவன் தன் கால்களை மாத்திரம் கழுவவேண்டியதாயிருக்கும், மற்றப்படி அவன் முழுவதும் சுத்தமாயிருக்கிறான்” என்று கூறினார். (16)

அந்த வார்த்தைகள், சரீர சுத்திகரிப்பைவிட அதிக அர்த்தமுள்ளதாக இருந்தன. கீழான சுத்திகரிப்பினால் உதாரணமாக்கப்பட்டிருந்ததுபோல, கிறிஸ்து இன்னும் உயர்வான சுத்திகரிப்பைப்பற்றிப் பேசிக்கொண்டிருக்கிறார். ஸ்நானத்திலிருந்து வந்தவன் சுத்தமாக இருந்தான்; ஆனால், பாதரட்சை அணிந்திருந்த பாதங்கள் விரைவில் தூசிபடிந்தவைகளாகி மறுபடியும் கழுவப்படவேண்டியதாக இருந்தது. அப்படியே பாவத்திற்காகவும் அசுத்தத்திற்காகவும் திறக்கப்பட்டிருந்த பெரும் ஊற்றில் பேதுருவும் அவனுடைய சகோதரர்களும் கழுவப்பட்டிருந்தனர். கிறிஸ்து அவர்களை தம்முடையவர்களென்று ஏற்றுக்கொண்டிருந்தார்; ஆனால், சோதனை அவர்களைத் தீமைக்குள் நடத்தியிருந்தது; எனவே, இன்னமும் அவருடைய சுத்திகரிக்கும் கிருபை அவர்களுக்கு அவசியமாயிருந்தது. அவர்களுடைய பாதங்களிலிருந்த தூசியைக் கழுவுவதற்காக இயேசு அரையில் ஒரு சீலையைக் கட்டினபோது, அதே செயலினால் அவர்களுடைய இருதயங்களிலிருந்த பிரிவினை, பொறாமை, பெருமை ஆகியவைகளையும் கழுவ விரும்பினார். இது தூசி நிறைந்த அவர்களுடைய பாதங்களைக் கழுவுவதைவிட மிக அதிகமான விளைவைக் கொண்டிருந்தது. அந்த நேரத்தில் அவர்களிடமிருந்த ஆவியுடன், அவர்களில் ஒருவன்கூட அவருடன் தொடர்புகொள்ள ஆயத்தமாயிருக்கவில்லை. தாழ்மை, அன்பு என்னும் நிலைமைக்குக் கொண்டுவரப்படாதவரை, பஸ்கா இரவு விருந்திலும் கிறிஸ்து ஏற்படுத்தவிருந்த நினைவின் ஆராதனையிலும் பங்குபெறுவதற்கு, அவர்கள் ஆயத்தமில்லாதவர்களாக இருந்தனர். அவர்களுடைய இருதயங்கள் சுத்திகரிக்கப்படவேண்டும். பெருமையும் சுயத்தைத் தேடுதலும், பிரிவினையையும் வெறுப்பையும் உண்டுபண்ணுகின்றது; ஆனால், இயேசு அவர்களுடைய பாதங்களைக் கழுவினதால், அவைகளைக் கழுவி நீக்கினார். உணர்ச்சியில் ஒரு மாறுதல் கொண்டுவரப்பட்டது. அவர்களைப் பார்த்து, நீங்கள் சுத்தமா யிருக்கிறீர்கள் என்று இயேசுவால் கூறமுடிந்தது; இப்பொழுது, இருதயத்தில் ஒற்றுமையும் ஒருவர்மீது மற்றவருக்கும் அன்பும் இருந்தது. அவர்கள் தாழ்மையானவர்களாகவும் போதிக்கப்படக்கூடியவர்களாகவும் மாறியிருந்தனர். யூதாசைத் தவிர, ஒவ்வொருவரும் மிகவும் மேலான

இடத்தை மற்றவருக்குக் கொடுக்க இணக்கமுள்ளவர்களாக இருந்தனர்; இப்பொழுது, நன்றியுள்ள—அடக்கமுள்ள இருதயங்களுடன் வார்த்தைகளை அவர்களால் பெற்றுக்கொள்ளமுடிந்தது. (17)

பேதுருவையும் அவனுடைய சகோதரரையும்போல, நாமுங்கூடக் கிறிஸ்துவின் இரத்தத்தினால் கழுவப்பட்டிருக்கின்றபோதிலும் தீமையுடனுள்ள தொடர்பின்மூலமாக, நமது இருதயத்தின் தூய்மை மாசுபடுத்தப்பட்டிருக்கிறது. சுத்திகரிக்கும் அவருடைய கிருபைக்காக நாம் கிறிஸ்துவிடம் வரவேண்டும். பேதுரு அவனுடைய கர்த்தரும் ஆண்டவருமாக இருந்தவரின் கரங்களால் தொடப்படுவதற்கு, அவனுடைய தூசிபடிந்த பாதங்களைக் கொண்டுவருவதிலிருந்து தயங்கிக் குறுகினான். ஆனால், நாம் எவ்விதமாக அடிக்கடி நமது பாவம் நிறைந்த மாசுபடிந்த இருதயங்களை கிறிஸ்துவின் இருதயத்துடன் தொடர்புகொள்ளக் கொண்டுவருகிறோம்! நமது பொல்லாத குணம், நமது மாயை, பெருமை ஆகியவைகள் அவருக்கு எவ்விதமாக வேதனை தரக்கூடியதாக இருக்கிறது! இருந்தபோதிலும், நமது பலவீனங்களையும் அசுத்தங்களையும் நாம் அவரிடம் கொண்டுவரவேண்டும். அவர் ஒருவரால் மட்டுமே, நம்மைச் சுத்தமாகக் கழுவமுடியும். அவருடைய சக்தியினால் சுத்திகரிக்கப்படாதவரை, அவருடன் தொடர்புகொள்ளுவதற்கு நாம் ஆயத்தமானவர்களாக இருக்கமாட்டோம். (18)

“நீங்களும் சுத்தமாயிருக்கிறீர்கள்; ஆகிலும் எல்லாரும் அல்ல” என்று இயேசு சீடர்களிடம் கூறினார். அவர் யூதாசின் பாதங்களைக் கழுவியிருந்தார்; ஆனால், அந்த இருதயம் அவருடன் இணங்கியிருக்கவில்லை. அது தூய்மைப்படுத்தப்பட்டிருக்கவில்லை. யூதாஸ் தன்னை கிறிஸ்துவிற்குக் கீழ்ப்படுத்தாதவனாக இருந்தான். (19)

கிறிஸ்து அவருடைய சீடர்களின் பாதங்களைக் கழுவினபின், அவருடைய உடையை அணிந்துகொண்டு, மறுபடியும் உட்கார்ந்து அவர்களிடம், “நான் உங்களுக்குச் செய்ததை அறிந்திருக்கிறீர்களா? நீங்கள் என்னைப் போதகரென்றும், ஆண்டவரென்றும் சொல்லுகிறீர்கள், நீங்கள் சொல்லுகிறது சரியே, நான் அவர் தான். ஆண்டவரும் போதகருமாகிய நானே உங்கள் கால்களைக் கழுவினதுண்டானால், நீங்களும் ஒருவருடைய கால்களை ஒருவர் கழுவக்கடவீர்கள். நான் உங்களுக்குச் செய்ததுபோல நீங்களும் செய்யும்படி உங்களுக்கு மாதிரியைக் காண்பித்தேன். மெய்யாகவே மெய்யாகவே நான் உங்களுக்குச் சொல்லுகிறேன், ஊழியக்காரன் தன் எஜமானிலும் பெரியவனல்ல. அனுப்பப்பட்டவன் தன்னை அனுப்பினவரிலும் பெரியவனல்ல. நீங்கள் இவைகளை அறிந்திருக்கிறபடியினால், இவைகளைச் செய்வீர்களானால், பாக்கியவான்களாயிருப்பீர்கள்” என்று கூறினார். (20)

கிறிஸ்து தமது சீடர்களின் பாதங்களைக் கழுவியிருந்தபோதிலும், அது எந்தவிதத்திலும் அவருடைய மேன்மையைக் குறைக்கவில்லை என்பதைச் சீடர்கள் புரிந்துகொள்ளவேண்டும் என்று அவர் விரும்பினார். "நீங்கள் என்னைப் போதகரென்றும், ஆண்டவரென்றும் சொல்லுகிறது சரியே, நான் அவர்தான்." அவர் எல்லையற்ற மேம்பாடுடையவராய் இருந்தும், அந்த ஆராதனைக்குக் கிருபையையும் முக்கியத்துவத்தையும் அருளினார். கிறிஸ்துவைப்போல வேறு ஒருவரும் உயர்த்தப்பட்டிருக்கவில்லை; அப்படியிருந்தபோதிலும், மிகவும் தாழ்மையான வேலையைச் செய்வதற்கு அவர் தம்மைத் தாழ்த்தினார். இயல்பான இருதயத்தில் வாசஞ்செய்யும் சுயநலம், சுயத்திற்குச் சேவை செய்வதைப் பலப்படுத்துகின்ற சுயநலம் ஆகியவைகளால் அவருடைய சீடர்கள் தவறாக நடத்தப்பட்டுவிடக்கூடாது என்பதற்காகவும், கிறிஸ்து தாமே தாழ்மையின் உதாரணத்தை முன்வைத்தார். இந்தப் பெரிய ஊழியத்தை அவர் மனிதனின் பொறுப்பில் விட்டுவிடமாட்டார். அதற்கு அவ்வளவு அதிகமான பலன் இருப்பதாகக் கருதினதால், தேவனுக்குச் சமமானவராக இருக்கும் அவர், தாமே அவருடைய சீடர்களுக்கு வேலைக்காரனாகச் செயலாற்றினார். மிகவும் மேலான இடத்திற்காக அவர்கள் சண்டையிட்டுக்கொண்டிருந்தபோது, எந்த ஒருவருக்குமுன் முழங்கால்கள் யாவும் முடங்குமோ—அவர், எந்த ஒருவருக்கு சேவைசெய்வதை மகிமையின் தேவதூதர்கள் மகிமையாகவும் கனமானதென்றும் எண்ணுகிறார்களோ—அவர், தம்மை ஆண்டவர் என்று அழைத்திருந்தவர்களின் பாதங்களைக் கழுவுவதற்காகக் கீழே குனிந்தார். அவரைக் காட்டிக்கொடுத்தவனின் பாதங்களையும் அவர் கழுவினார். (21)

கிறிஸ்து அவருடைய வாழ்க்கையினாலும் போதனைகளினாலும், தேவனில் அதன் பிறப்பிடத்தை உடையதாக இருக்கும் சுயநலமில்லாத ஊழியத்திற்கு ஒரு பூரணமான உதாரணத்தைக் கொடுத்திருக்கிறார். தேவன் அவருக்கென்று வாழ்கிறதில்லை. இந்த உலகத்தைப் படைத்ததினாலும் எல்லாவற்றையும் தாங்குவதினாலும் அவர் மற்றவர்களுக்காகத் தொடர்ந்து ஊழியஞ்செய்துகொண்டிருக்கிறார். "அவர் தீயோர்மேலும் நல்லோர்மேலும் தமது சூரியனை உதிக்கப்பண்ணி, நீதியுள்ளவர்கள்மேலும் அநீதியுள்ளவர்கள்மேலும் மழையைப் பெய்யப்பண்ணுகிறார்"–மத்தேயு 5:45. ஊழியத்தின் இந்த சிறந்த கொள்கையைத் தேவன் அவருடைய குமாரனிடம் ஒப்படைத்திருக்கிறார். ஊழியஞ்செய்வது என்றால் என்ன என்பதை அவருடைய உதாரணத்தினால் போதிப்பதற்காக மனிதஇனத்தின் தலைமையில் நிற்கும்படியான பொறுப்பு இயேசுவிடம் கொடுக்கப் பட்டிருந்தது. அவருடைய வாழ்க்கைமுழுவதும் ஊழியம் என்னும் பிரமாணத்தின்கீழ் இருந்தது. அவர் எல்லாருக்கும் சேவைசெய்து,

எல்லாருக்கும் ஊழியஞ்செய்தார். இவ்விதமாக, அவர் தேவனுடைய நியாயப்பிரமாணத்தின்படி வாழ்ந்து, அவருடைய உதாரணத்தினால் நாம் அதற்கு எவ்விதமாகக் கீழ்ப்படியவேண்டும் என்பதைக் காட்டினார். (22)

இந்த அடிப்படைக் கோட்பாட்டை அவருடைய சீடர்களுக்கு மத்தியில் நிலைநாட்ட இயேசு மறுபடியும் மறுபடியும் முயற்சி செய்திருந்தார். யாக்கோபும் யோவானும் தனிப்பெரும் சிறப்பிடத்திற்காக வேண்டுகோள் விடுத்தபோது, அவர்: “உங்களில் எவனாகிலும் பெரியவனாயிருக்க விரும்பினால், அவன் உங்களுக்குப் பணிவிடைக்காரனாயிருக்கக்கடவன்” (மத்தேயு 20:26) என்று கூறியிருந்தார். என்னுடைய இராஜ்யத்தில் முன்னுரிமை, தனி மேலாதிக்கம் ஆகிய கோட்பாடுகளுக்கு இடமில்லை. ஒரே மாபெரும் குணம்—தாழ்மை என்னும் தலையாய குணமே! பிறருக்கு ஊழியஞ்செய்ய ஈடுபடுவது ஒன்றில்மட்டுமே தனிச்சிறப்பு காணப்படுகிறது. (23)

இப்பொழுது சீடர்களின் பாதங்களைக் கழுவினபின் அவர் “நான் உங்களுக்குச் செய்ததுபோல நீங்களும் செய்யும்படி உங்களுக்கு மாதிரியைக் காண்பித்தேன்” என்று கூறினார். இந்த வார்த்தைகளினால் கிறிஸ்து விருந்தோம்பல் என்னும் பழக்கத்தைமாத்திரம் கட்டளையிட்டிருக்கவில்லை. பயணத்தின் தூசியை நீக்குவதற்காக விருந்தினர்களின் பாதங்களைக் கழுவுவதைவிட, அதிகமான அர்த்தம் (இதில்) இருந்தது. இங்கு கிறிஸ்து ஒரு மத ஆராதனையை ஏற்படுத்திக்கொண்டிருந்தார். நமது கர்த்தருடைய செய்கையினால், தாழ்மைமிக்க இந்தச் சடங்காச்சாரம், அற்பணிக்கப்பட்ட ஒரு நியமனமாக ஏற்படுத்தப்பட்டது. தாழ்மை, சேவை ஆகிய பாடங்களைச் சீடர்கள் எப்பொழுதும் அவர்களுடைய மனங்களில் காத்துக்கொள்ளும்படி அது சீடர்களால் ஆசரிக்கப்படவேண்டியதாக இருந்தது. (24)

இந்தக் கட்டளை திருவிருந்து ஆராதனையின் ஆயத்தமாக இருக்கும்படிக் கிறிஸ்துவால் நியமிக்கப்பட்டிருக்கிறது. பெருமை, பேராசை, மேலாதிக்கத்திற்கான சண்டை ஆகியவைகள் பேணப்பட்டிருக்கும்போது, இருதயத்தால் கிறிஸ்துவுடன் தோழமைக்குள் பிரவேசிக்கமுடியாது. அவருடைய சரீரம், இரத்தம் ஆகியவைகளின் ஒற்றுமைக்குள் வருவதற்கு நாம் ஆயத்தமில்லாதவர்களாக இருக்கிறோம்; ஆகையால் அவருடைய தாழ்மையின் நினைவுச்சின்னம் முதலில் ஆசரிக்கப்படவேண்டும் என்று இயேசு நியமித்தார். (25)

இந்த நியமனத்தில் தேவனுடைய பிள்ளைகள் பங்குபெற வரும்போது, அவர்கள் “நான் உங்களுக்குச் செய்ததை அறிந்திருக்கிறீர்களா? நீங்கள் என்னைப் போதகரென்றும், ஆண்டவரென்றும் சொல்லுகிறீர்கள், நீங்கள் சொல்லுகிறது சரியே, நான் அவர்தான். ஆண்டவரும் போதகருமாகிய

நானே உங்கள் கால்களைக் கழுவினதுண்டானால், நீங்களும் ஒருவருடைய கால்களை ஒருவர் கழுவக்கடவீர்கள். நான் உங்களுக்குச் செய்ததுபோல நீங்களும் செய்யும்படி உங்களுக்கு மாதிரியைக் காண்பித்தேன். மெய்யாகவே மெய்யாகவே நான் உங்களுக்குச் சொல்லுகிறேன், ஊழியக்காரன் தன் எஜமானிலும் பெரியவனல்ல. அனுப்பப்பட்டவன் தன்னை அனுப்பினவரிலும் பெரியவனல்ல. நீங்கள் இவைகளை அறிந்திருக்கிறபடியினால், இவைகளைச் செய்வீர்களானால், பாக்கியவான்களாயிருப்பீர்கள்" என்னும் ஜீவாதிபதியாயும் மகிமைமிக்கவராகவும் இருக்கும் கர்த்தரின் வார்த்தைகளை தங்களுடைய நினைவிற்குக் கொண்டுவரவேண்டும். மனிதனுக்குள் தன் சகோதரனைவிடத் தன்னை உயர்வாக எண்ணுகின்றதும், சுயத்திற்கென்று செயலாற்றுகின்றதும் மேலான இடத்தைத் தேடுகின்றதும் ஆகிய ஒரு குணம் இருந்து, அது அடிக்கடி தவறாக யூகஞ்செய்தலையும் கசப்பான ஆவியையும் பலனாக உண்டுபண்ணுகிறது. இந்தத் தவறான புரிந்துகொள்ளுதல்களை நீக்கவும், மனிதனை அவனுடைய சுயநலத்திலிருந்து வெளியே கொண்டுவரவும், சுயத்தை உயர்த்துதல் என்னும் பொய்களிலிருந்து கீழேகொண்டுவரவும், தனது சகோதரனுக்காகச் சேவைசெய்ய நடத்துகின்ற இருதயத்தின் தாழ்மையைக் கொண்டுவரவும், கர்த்தருடைய திருவிருந்திற்கு முந்தினதாக இந்தச் சடங்கு இருக்கிறது. (26)

இந்த காலக்கட்டத்தில் உள்ளத்தை உய்த்தாராயவும், பாவத்தைப் பற்றிய உணர்த்துதலை உண்டுபண்ணவும், பாவமன்னிப்பைப்பற்றிய பாக்கியமான நிச்சயத்தை உண்டுபண்ணவும் பரலோகத்தின் பரிசுத்தமான காவலாளர் பிரசன்னமாயிருக்கிறார். சுயநலம் என்னும் வாய்க்கால்களில் ஓடிக்கொண்டிருக்கும் எண்ணங்களின் ஓட்டத்தை மாற்றுவதற்குக் கிறிஸ்து அவருடைய கிருபையின் பூரணத்துடன்—நிறைவுடன் அங்கு இருக்கிறார். தங்களுடைய கர்த்தரின் உதாரணத்தைப் பின்பற்றுகிறவர்களின் உணரும் தன்மைகளைப் பரிசுத்த ஆவியானவர் எழுப்பிவிடுகிறார். நமக்கான இரட்சகரின் தாழ்மையும் அவமானமும் நினைக்கப்படும்போது, எண்ணத்துடன் எண்ணம் பிணைக்கப்படுகிறது; தேவனுடைய மேலான நன்மை, பூமிக்குரிய நண்பர்களிடமுள்ள ஆதரவு, மென்மையான தன்மை ஆகியவைகளைப்பற்றிய நினைவுகள் ஒரு சங்கிலித்தொடராக நினைவிற்குக் கொண்டுவரப்படுகின்றன. மறக்கப்பட்ட ஆசீர்வாதங்கள், தவறாகச் செலவிடப்பட்ட இரக்கங்கள், அலட்சியப்படுத்தப்பட்ட அன்பின் குணங்கள் ஆகியவை மனதிற்கு அழைக்கப்படுகின்றன. அன்பு என்னும் விலைமிக்க செடியை வேருடன் பிடுங்கியெறிந்திருக்கும் கசப்பின் வேர்கள் வெளிக்காட்டப்படுகின்றன. குணத்தில் உள்ள குறைபாடு, கடமைகளில் காட்டப்பட்ட அலட்சியம், தேவனுக்கு எதிரான நன்றிகெட்ட தன்மை, நமது

சகோதரர்களுக்கு எதிரான அக்கறையற்ற தன்மை ஆகியவை ஞாபகத்திற்கு அழைக்கப்படுகின்றன. பாவத்தை தேவன் எவ்விதமாகப் பார்க்கின்றாரோ, அதே ஒளியில் அது காணப்படுகிறது. நமது எண்ணங்கள் சுயத்தால் உண்டாகும் திருப்தியான அமைதியின் எண்ணங்களாக இல்லாமல், சுயத்தைக் கண்டனஞ்செய்வதாகவும் தாழ்மையானதாகவும் உள்ளன. பிரிவினைக்குக் காரணமாக இருக்கும் தடைகள் ஒவ்வொன்றையும் உடைத்து வீழ்த்த மனம் சக்தியூட்டப்படுகின்றது. தீமையைச் சிந்திப்பதும் தீமையைப் பேசுவதும் விலக்கப்படுகின்றன. பாவங்கள் அறிக்கைசெய்யப்பட்டு மன்னிக்கப்படுகின்றன. தாழ்த்தும் கிறிஸ்துவின் கிருபை ஆத்துமாவிற்குள் வருகிறது. கிறிஸ்துவின் அன்பு இருதயங்களை ஒரு அன்பின் ஐக்கியத்தில் ஒன்றுசேர்க்கிறது. (27)

ஆயத்தப்படுத்தும் ஆராதனைபற்றிய பாடம் இவ்விதமாகக் கற்றுக்கொள்ளப்பட்டபின், ஒரு மேலான ஆவிக்குரிய வாழ்க்கைக்கான வாஞ்சை எழுப்பப்படுகிறது. இந்த வாஞ்சைக்கு தெய்வீக சாட்சி பதில் கொடுக்கும். ஆத்துமா உயர்த்தப்படும். பாவங்கள் மன்னிக்கப்பட்டுவிட்டன என்னும் மனஉணர்வுடன் திருவிருந்து ஆராதனையில் நம்மால் பங்குகொள்ளமுடியும். மனதின் அறைகளையும் ஆத்துமா என்னும் ஆலயத்தையும் கிறிஸ்துவின் நீதியாகிய சூரிய ஒளி நிரப்பும். “உலகத்தின் பாவத்தைச் சுமந்துதீர்க்கிற தேவ ஆட்டுக்குட்டியை” (யோவான் 1:29) நாம் பார்க்கிறோம். (28)

இந்த ஆராதனையின் ஆவியைப் பெற்றுக்கொள்ளுகிறவர்களுக்கு, அது ஒருபோதும் ஒரு சாதாரணமான சடங்காச்சாரமாக இருக்கமுடியாது. “அன்பினாலே ஒருவருக்கொருவர் ஊழியஞ்செய்யுங்கள்” (கலாத்தியர் 5:13) என்பது அதன் தொடர்ச்சியான பாடமாக இருக்கும். பரலோகக் கருவூலத்தின் நித்திய செல்வத்திற்கு அவர்களை சுதந்திரவாளிகளாக்குவதற்காக, அவர் எந்தவிதமான ஊழியத்தையும், அது எவ்வளவு தாழ்மையானதாக இருந்தாலும் செய்வார் என்பதற்குக் கிறிஸ்து சாட்சிகொடுத்தார். அதே சடங்கை அவருடைய சீடர்கள் அதேவிதமாகத் தங்களுடைய சகோதரர்களுக்குச் செய்ய உறுதிமொழி எடுத்துக்கொள்கின்றனர். இந்தக் கட்டளை சரியானவிதமாக நடைமுறைப்படுத்தப்படும்போதெல்லாம், ஒருவருக்கொருவர் உதவிசெய்யவும் ஆசீர்வதிக்கவுங்கூடிய பரிசுத்தமான உறவிற்குள் தேவனுடைய பிள்ளைகள் கொண்டுவரப்படுகின்றனர். சுயநலமற்ற ஊழியத்திற்கு, வாழ்க்கை தத்தஞ்செய்யப்படும் என்று அவர்கள் உடன்படிக்கை செய்கின்றனர். இது ஒருவருக்கொருவரோடு மட்டுமில்லை. அவர்கள் உழைக்கும் களம் அவர்களுடைய ஆண்டவர் உழைத்த களத்தைப்போலவே விசாலமாயிருக்கிறது. நமது ஊழியம் யாருக்குத்

தேவைப்படுகிறதோ அப்படிப்பட்டவர்களால் இந்த உலகம் நிறைந்திருக்கிறது. ஏழைகளும் உதவியற்றவர்களும் அறியாமைமிக்கவர்களும் ஒவ்வொரு பக்கத்திலும் இருக்கின்றனர். வீட்டின் மேலறையில் கிறிஸ்துவுடன் தொடர்புள்ளவர்கள் அவர் ஊழியஞ்செய்ததைப்போலவே ஊழியஞ்செய்யச் செல்லுவார்கள். (29)

அனைவராலும் பணிவிடையைப் பெற்றிருந்த இயேசு, அனைவருக்கும் ஊழியக்காரனாக இருப்பதற்காக வந்தார். அவர் எல்லாருக்கும் ஊழியஞ்செய்ததினால், எல்லோரும் அவருக்கு ஊழியஞ் செய்வார்கள். எல்லோராலும் அவர் கனப்படுத்தப்படுவார். அவருடைய தெய்வீகக் குணாதிசயங்களில் பங்குபெற விரும்புபவர்களும், மீட்கப்பட்ட ஆத்துமாக்களைக் காண்பதில் உள்ள மகிழ்ச்சியில் பங்குபெற விரும்பு பவர்களும், அவருடைய சுயநலமற்ற ஊழியத்தின் உதாரணத்தைப் பின்பற்ற வேண்டும். (30)

இவை அனைத்தும் “நான் உங்களுக்குச் செய்ததுபோல நீங்களும் செய்யும்படி உங்களுக்கு மாதிரியைக் காண்பித்தேன்” என்னும் அவருடைய வார்த்தைகளில் அறியப்படும்படி இருந்தன. அவர் ஏற்படுத்தின ஆராதனையின் (திருவிருந்து) நோக்கம் இதுவாக இருந்தது. “நீங்கள் இவைகளை அறிந்திருக்கிறபடியினால், இவைகளைச் செய்வீர்களானால், பாக்கியவான்களாயிருப்பீர்கள்” என்று அவர் கூறுகிறார். (31) ★

# 72

# என்னை நினைவுகூரும்படி...!

**யோவான் 13:18–30**

**(The Desire of Ages, pp. 652–661)**

"நான் உங்களுக்கு ஒப்புவித்ததைக் கர்த்தரிடத்தில் பெற்றுக் கொண்டேன்; என்னவெனில், கர்த்தராகிய இயேசு தாம் காட்டிக்கொடுக்கப்பட்ட அன்று இராத்திரியிலே அப்பத்தை எடுத்து, ஸ்தோத்திரம்பண்ணி, அதைப்பிட்டு: நீங்கள் வாங்கிப் புசியுங்கள், இது உங்களுக்காகப் பிட்கப்படுகிற என்னுடைய சரீரமாயிருக்கிறது; என்னை நினைவுகூரும்படி இதைச் செய்யுங்கள் என்றார். போஜனம்பண்ணினபின்பு, அவர் அந்தப்படியே பாத்திரத்தையும் எடுத்து: இந்தப் பாத்திரம் என் இரத்தத்தினாலாகிய புதிய உடன்படிக்கையாயிருக்கிறது; நீங்கள் இதைப் பானம்பண்ணும்போதெல்லாம் என்னை நினைவுகூரும்படி இதைச் செய்யுங்கள் என்றார். ஆகையால் நீங்கள் இந்த அப்பத்தைப் புசித்து, இந்தப் பாத்திரத்தில் பானம்பண்ணும்போதெல்லாம் கர்த்தர் வருமளவும் அவருடைய மரணத்தைத் தெரிவிக்கிறீர்கள்"–1 கொரிந்தியர் 11:23–26. (1)

இரண்டு ஆட்சிமுறைகளுடைய பெரிய பண்டிகைக் காலங்களில் மாறுதல் உண்டாகவிருக்கின்ற கட்டத்திற்கிடையில் கிறிஸ்து நின்று கொண்டிருந்தார். குற்றமில்லாத தேவ ஆட்டுக்குட்டியான அவர், நாலாயிரம் வருடங்களாக அவருடைய மரணத்தைச் சுட்டிக்காட்டிக்கொண்டிருந்த மாதிரிப் படிவங்களின் அமைப்பையும், சடங்காச்சாரங்களையும் முடிவிற்குக் கொண்டுவருவதற்காக தம்மை ஒரு பாவநிவாரண பலியாக முன்வைக்க இருந்தார். அவர் பஸ்காவை அவருடைய சீடர்களுடன் ஒன்றுசேர்ந்து புசித்தபோது, அவருடைய பெரிய தியாகபலியின் நினைவுச்சின்னமாக இருக்கக்கூடிய ஒரு ஆராதனையை அதன் இடத்தில் ஏற்படுத்தினார். கர்த்தருடைய திருவிருந்தின் கட்டளை கிறிஸ்துவின் மரணத்தினால் செயலாற்றப்பட்ட ஒரு பெரும் விடுதலையின் நினைவுச்சின்னமாகக் கொடுக்கப்பட்டிருந்தது. யூதர்களின் தேசிய பண்டிகை என்றென்றைக்குமாகக் கடந்துசெல்லவேண்டியதாக இருந்தது. கிறிஸ்து ஏற்படுத்தின ஆராதனை

அவருடைய அடியார்களால் அனைத்து நாடுகளிலும் எல்லா யுகங்களுக்கும் ஊடாக ஆசரிக்கப்படவேண்டியதாக இருந்தது. (2)

எகிப்தின் அடிமைத்தனத்திலிருந்து இஸ்ரவேலருக்குக் கிடைத்த விடுதலையின் நினைவு விழாவாக பஸ்கா பண்டிகை நியமிக்கப்பட்டிருந்தது. ஆண்டுகள்தோறும் இஸ்ரவேலர்களின் பிள்ளைகள், இந்தக் கட்டளையின் பொருள்பற்றிக் கேட்கும்போது, அந்த வரலாறு மீண்டுமாகக் கூறப்படவேண்டும். இவ்விதமாக அந்த ஆச்சரியமான விடுதலை அனைவருடைய மனங்களிலும் புதிதாகக் கொண்டுவரப்படவேண்டியதாக இருந்தது. கர்த்தருடைய திருவிருந்து ஆராதனை கிறிஸ்துவின் மரணத்தினால் உண்டான பெரிய விடுதலையை நினைவுகூரும்படி கொடுக்கப்பட்டிருந்தது. அவர் இரண்டாவது தடவையாக வல்லமையுடனும் மகிமையுடனும் வரும்வரை, இந்த நியமனம் ஆசரிக்கப்படவேண்டும். நமக்கான அவருடைய பெரும்பணியை நமது மனங்களில் எப்பொழுதும் புதிதாக வைத்திருக்கும்படியான ஒரு வழிமுறையாக அது இருக்கின்றது. (3)

இஸ்ரவேல் மக்கள் எகிப்திலிருந்து விடுதலையான நேரத்தில் நின்றுகொண்டும், தங்களுடைய அரைகளைக் கட்டினவர்களாகவும், தங்களுடைய கைகளில் கோல்களைப் பிடித்துக்கொண்டும், அவர்களுடைய பயணத்திற்கு ஆயத்தமாயிருந்து, பஸ்காவைப் புசித்திருந்தனர். இந்தக் கட்டளையை அவர்கள் ஆசரித்திருந்தவிதம், அவர்களுடைய நிலைமை யுடன் இசைந்திருந்தது. ஏனெனில் அவர்கள் எகிப்து தேசத்திலிருந்து துரத்தப்படவிருந்து, வனாந்தரத்திற்கூடாகவுள்ள வேதனையும் தொல்லையு மிக்க ஒரு பயணத்தை ஆரம்பிக்கவேண்டியிருந்தனர். ஆனால் கிறிஸ்துவின் காலத்தில் காரியங்களின் நிலைமை மாறியிருந்தது. இப்பொழுது அவர்கள் ஒரு அந்நிய தேசத்திலிருந்து துரத்தப்படப்போகிறவர்களாக இல்லாமல், அவர்களுடைய சுயதேசத்தில் வாழ்ந்துகொண்டிருந்தனர். அவர்களுக்குக் கொடுக்கப்பட்டிருந்த இளைப்பாறுதலிற்கு இசைவாக, அப்பொழுதிருந்த மக்கள் உட்கார்ந்து பஸ்காவில் பங்குபெற்றனர். மேஜையைச் சுற்றிலும் மிருதுவான சாய்வு நாற்காலிகள் வைக்கப்பட்டிருந்தன. விருந்தினர்கள் அவர்களுடைய இடது கைகளின்மேல் தலைசாய்த்திருந்து, வலது கைகளினால் உணவைப் புசிப்பதற்கு வசதியான விதத்தில் சாய்ந்திருந்தனர். இந்த ஒரு நிலையில் ஒரு விருந்தினர் தனக்கு அடுத்தாற்போல மேலாக உட்கார்ந்திருந்தவரின் மார்பின்மீது தலையை சாய்த்தவண்ணம், தனது கால்கள் சாய்வு நாற்காலியின் வெளி ஓரத்தில் இருக்க, அந்த வட்டத்திற்கு வெளியில் சுற்றிவந்துகொண்டிருக்கும் ஒருவரால் கால்கள் கழுவப்படக்கூடியவிதத்தில் இருந்தனர். (4)

பஸ்கா இரவு உணவு பரப்பிவைக்கப்பட்டிருக்கும் மேஜைக்கு அருகிலேயே இன்னும் கிறிஸ்து இருக்கிறார். பஸ்கா பண்டிகையின் நேரத்தின்போது பயன்படுத்தப்படுகின்ற புளிப்பில்லாத அப்பங்கள் அவர்முன் இருக்கின்றன. பஸ்காவின் புளிப்பில்லாத திராட்சரசம் மேஜையின்மேல் இருக்கிறது. குற்றமில்லாத அவருடைய சொந்த மாசற்ற தியாகபலியை எடுத்துக்காட்டுகின்ற இந்த அடையாளங்களை கிறிஸ்து பயன்படுத்துகிறார். "குற்றமில்லாத மாசற்ற ஆட்டுக்குட்டியாகிய" (1 பேதுரு 1:19). பாவத்திற்கும் மரணத்திற்கும் அடையாளமாக இருக்கும் புளிப்பினால் கெட்டுப்போன எதையும் வைத்து எடுத்துக்காட்டமுடியாது. (5)

அவர்கள் போஜனம்பண்ணுகையில் இயேசு அப்பத்தை எடுத்து, ஆசீர்வதித்து, அதைப் பிட்டு, சீடர்களுக்குக் கொடுத்து: "அவர்கள் போஜனம்பண்ணுகையில், இயேசு அப்பத்தை எடுத்து, ஆசீர்வதித்து, அதைப் பிட்டு, சீஷர்களுக்குக் கொடுத்து: நீங்கள் வாங்கிப் புசியுங்கள், இது என்னுடைய சரீரமாயிருக்கிறது" என்றார். பின்பு, பாத்திரத்தையும் எடுத்து, ஸ்தோத்திரம்பண்ணி, அவர்களுக்குக் கொடுத்து: "நீங்கள் எல்லாரும் இதிலே பானம்பண்ணுங்கள்; இது பாவமன்னிப்புண்டாகும்படி அநேகருக்காகச் சிந்தப்படுகிற புது உடன்படிக்கைக்குரிய என்னுடைய இரத்தமாயிருக்கிறது. இதுமுதல் இந்தத் திராட்சப்பழரசத்தை நவமானதாய் உங்களோடேகூட என் பிதாவின் ராஜ்யத்திலே நான் பானம்பண்ணும் நாள் வரைக்கும் இதைப் பானம் பண்ணுவதில்லையென்று உங்களுக்குச் சொல்லுகிறேன்" என்றார். –மத்தேயு 26:26–29. (6)

காட்டிகொடுப்பவனான யூதாஸ் அந்தத் திருவிருந்து ஆராதனையில் இருந்தான். அவன் இயேசுவிடமிருந்து அவருடைய நொறுக்கப்பட்ட சரீரம், சிந்தப்பட்ட இரத்தம் ஆகியவைகளின் அடையாளங்களைப் பெற்றான். "என்னை நினைவுகூரும்படி இதைச் செய்யுங்கள்" என்னும் அவருடைய வார்த்தைகளை அவன் கேட்டான். தேவஆட்டுக்குட்டியின் அதே பிரசன்னத்தில் அவன் உட்கார்ந்துகொண்டு, அந்தக் காட்டிக்காடுப்பவன், அவனுடைய சொந்த இருண்ட நோக்கங்களைப்பற்றிச் சிந்தித்துக்கொண்டிருந்து, அவனுடைய மனதிற்குள் கோபமிக்க பழிவாங்கும் எண்ணங்களைப் பேணிக் கொண்டிருந்தான். (7)

இயேசு யூதாசின் கால்களைக் கழுவினபோது, அவனுடைய குணத்தைப் அவர் புரிந்துகொண்டிருந்தார் என்பதற்கான நிச்சயமான சான்றினைக் கொடுத்தார். "தம்மைக் காட்டிக்கொடுக்கிறவனை அவர் அறிந்திருந்தபடியினால் நீங்களெல்லாரும் சுத்தமுள்ளவர்கள் அல்ல" (யோவான் 13:11) என்று கூறினார். கிறிஸ்து அந்தக் கள்ளச் சீடனின்

இரகசியமான நோக்கத்தை வாசித்திருந்தார் என்பதை இந்த வார்த்தைகள் அவனுக்கு உணர்த்தின. இப்பொழுது கிறிஸ்து மிக அதிக வெளிப்படையாகப் பேசினார். அவர்கள் மேசையருகில் உட்கார்ந்திருந்தபோது, அவருடைய சீடர்களைப் பார்த்து “உங்களெல்லாரையுங்குறித்து நான் பேசவில்லை, நான் தெரிந்துகொண்டவர்களை அறிவேன்; ஆகிலும் வேதவாக்கியம் நிறைவேறத்தக்கதாக, என்னுடனே அப்பம் புசிக்கிறவன் என்மேல் தன் குதிகாலைத் தூக்கினான்” என்றார். (8)

இப்போதுங்கூட சீடர்கள் யூதாசின்மீது சந்தேகங்கொள்ளவில்லை. ஆனால் கிறிஸ்து பெரிய அளவில் கலங்கினவராகத் தோன்றியதை அவர்கள் கண்டார்கள். அவர்களால் புரிந்துகொள்ள முடியாத தன்மை யை உடையதாக இருந்த ஏதோ ஒரு பயங்கரமான பேராபத்தைக்குறித்த முன்னெச்சரிக்கையின் மேகம் அவர்களனைவரின்மீதும் தங்கினது. அவர்கள் மௌனமாகப் புசித்தார்கள். “உங்களில் ஒருவன் என்னைக் காட்டிக்கொடுப்பான் என்று, மெய்யாகவே மெய்யாகவே உங்களுக்குச் சொல்லுகிறேன்” என்றார். இந்த வார்த்தைகள் அவர்களுக்கு ஆச்சரியத்தையும் குழப்பத்தையும் கொடுத்தது. அவர்களுடைய தெய்வீக ஆசிரியரிடம் அவர்களில் ஒருவனால் எவ்விதமாக நம்பிக்கைத் துரோகமாக இடைபடமுடியும் என்பதை அவர்களால் புரிந்துகொள்ள முடியவில்லை. என்ன காரணத்திற்காக அவர்கள் அவருக்கு நம்பிக்கைத் துரோகம் செய்வார்கள்? யாருக்குக் காட்டிக்கொடுப்பார்கள்? அப்படிப்பட்ட திட்டத்தை எவருடைய இருதயம் பிறப்பிக்கும்? மற்ற அனைவரையும்விட அவருடைய போதனைகளை அதிகமாகக் கேட்கின்ற சிறப்புரிமையைப் பெற்றிருந்தவர்களும், அவருடைய ஆச்சரியமான அன்பில் பங்குபெற்றிருந்தவர்களும், தம்மோடு நெருக்கமான தொடர்புக்குள் அவர்களைக் கொண்டுவந்து அவர்களுக்காக அதிக அக்கறை காட்டியிருந்த அவருக்கு எதிராக இந்தப் பன்னிருவரில் ஒருவன் நிச்சயமாகவே இருக்கமுடியாது! (9)

அவருடைய வார்த்தைகளின் முக்கியத்துவத்தை அவர்கள் உணர்ந்தபோது, அவருடைய வார்த்தைகள் எவ்விதம் உண்மையாக இருந்தன என்பதை அவர்கள் நினைத்தபோது, பயமும் தன்னம்பிக்கை யின்மையும் அவர்களைப் பற்றிக்கொண்டன. அவர்களுடைய இருதயங்களில் அவர்களுடைய ஆண்டவருக்கு எதிரான எண்ணம் இருக்கிறதா என்பதைப் பார்ப்பதற்காக தங்களுடைய சொந்த இருதயங்களை ஆராயத் தொடங்கி னார்கள். மிக அதிகமான வேதனையுள்ள மனக்கிளர்ச்சியுடன் “ஆண்டவரே, நானோ, நானோ?” என்று ஒருவர்பின் ஒருவராக விசாரித்தனர். ஆனால் யூதாஸ் அமைதியாக அமர்ந்திருந்தான். கடைசியாக ஆழமான

மனத்துயருடன், “ஆண்டவரே, அவன் யார்” என்று யோவான் கேட்டான். இயேசு: “என்னோடேகூடத் தாலத்தில் கையிடுகிறவனே என்னைக் காட்டிக்கொடுப்பான்” என்று பதில் கூறினார். சீடர்கள்: ஆண்டவரே, நானோ அவன்! என்று கேட்டபோது, ஒருவனுடைய முகத்தை மற்றவர்கள் நெருக்கமாக ஆராய்ந்திருந்தனர். அப்பொழுது யூதாசின் மௌனம், எல்லாருடைய கண்களையும் அவனுக்கு நேராக இழுத்தது. கேள்விக்கான இயேசுவின் பதிலை யூதாஸ் கேட்கவில்லை. ஆனால் இப்பொழுது சீடர்களின் ஆழ்ந்த ஆராய்ச்சியிலிருந்து தப்புவதற்காக சீடர்கள் செய்திருந்ததைப்போல யூதாசும் “ரபீ, நானோ?” என்று கேட்டான். இயேசு பக்திவிநயத்துடன் “நீ சொன்னபடிதான்” என்றார். (10)

அவனுடைய நோக்கம் வெளிக்காட்டப்பட்டுவிட்டதில் உண்டான ஆச்சரியத்துடனும் குழப்பத்துடனும் யூதாஸ் அந்த அறையைவிட்டு விரைவாக வெளியேற எழுந்தான். “அப்பொழுது இயேசு அவனை நோக்கி: நீ செய்கிறதைச் சீக்கிரமாய்ச் செய் என்றார்.” “அவன் அந்தத் துணிக்கையை வாங்கினவுடனே புறப்பட்டுப்போனான்; அப்பொழுது இராக்காலமாயிருந்தது.” அவன் கிறிஸ்துவை விட்டு வெளியே இருளுக்குள் திரும்பினபோது, அந்தக் காட்டிக்கொடுப்பவனுக்கு அது இரவாக இருந்தது. (11)

இந்த அடியை எடுத்துவைக்கின்றவரை மனந்திரும்புவதற்கான சாத்தியத்திற்கு அப்பால் அவன் கடந்துசென்றிருக்கவில்லை. ஆனால் அவன் அவனுடைய கர்த்தரின் சமுகத்தையும் உடன் சீடர்களையும் விட்டுச்சென்றபோது, இறுதி முடிவு செய்யப்பட்டிருந்தது. அவன் எல்லையைக் கடந்துவிட்டிருந்தான். (12)

சோதிக்கப்பட்ட இந்த ஆத்துமாவை இயேசு நடத்திய விதத்தில் இருந்த நீடிய பொறுமை, ஆச்சரியமானதாக இருந்தது. யூதாஸ் அவனுடைய கர்த்தரைக் காட்டிக்கொடுப்பதற்கு இரண்டு தடவைகள் ஒப்பந்தம் செய்திருந்தபின்பும் அவனுடைய மனந்திரும்புதலுக்கான வாய்ப்பை தொடர்ந்து இயேசு அவனுக்குக் கொடுத்திருந்தார். அந்தத் துரோகியின் இரகசியமான நோக்கத்தை வாசித்த கிறிஸ்து, அவருடைய தெய்வீகத்திற்காக இறுதிச் சான்றினை அவனுக்குக் கொடுத்தார். அந்தக் கள்ளச்சீடனுக்கு மனந்திரும்புவதற்காகக் கொடுக்கப்பட்ட இறுதி அழைப்பாக அது இருந்தது. மனித இருதயத்திற்குக் கொடுக்கப்படக்கூடியதாக இருந்த கிறிஸ்துவின் இருதயத்தின் எந்த வேண்டுகோளும் முறையீடும் கொடுக்கப்படாமல் விட்டுவைக்கப்பட்டிருக்கவில்லை. பிடிவாதமான அகந்தையினால் திருப்பி அனுப்பப்பட்டிருந்த இரக்கத்தின் அலைகள் கீழ்ப்படுத்தும் அன்பினால் அதிக பலமிக்க அலையாகத் திரும்பியிருந்தது. ஆனால் அவனுடைய குற்றம்

கண்டுபிடிக்கப்பட்டதில் ஆச்சரியத்தையும் அபாய எச்சரிக்கையையும் அடைந்த யூதாஸ், அதிக தீர்மானமுடையவனாக மட்டுமே ஆனான். காட்டிக்கொடுக்கும் வேலையை நிறைவேற்றுவதற்காக அன்றைய இரவில் நடைபெற்ற திருவிருந்திலிருந்து அவன் வெளியில் சென்றான். (13)

யூதாசின் ஆபத்தை அறிவித்ததில் கிறிஸ்து சீடர்களுக்கு நேரான இரக்கத்தின் நோக்கத்தை உடையவராக இருந்தார். இவ்விதமாக, அவர் மேசியா என்னும் அந்தஸ்தின் கிரீடம்போன்ற சான்றையும் அவர்களுக்குக் கொடுத்தார். "அது நடக்கும்போது நானே அவரென்று நீங்கள் விசுவாசிக்கும்பொருட்டு, இப்பொழுது அது நடப்பதற்கு முன்னமே அதை உங்களுக்குச் சொல்லுகிறேன்" என்று அவர் கூறினார். அவர்மீது என்ன நிகழவிருக்கிறது என்பதைப்பற்றி வெளிப்படையான அறியாமையில் இயேசு இருந்திருப்பாரானால், சீடர்கள் அவர்களுடைய ஆண்டவர் தெய்வீக முன்பார்வையைப் பெற்றிருக்கவில்லை என்று நினைத்திருந்த கொலைகாரக் கலகக் கும்பலின் கரங்களில் காட்டிக்கொடுக்கப்பட்டதைப்பற்றி ஆச்சரியமடைந்திருப்பார்கள். இயேசு ஒருவருடத்திற்கு முன்னமேயே சீடர்களிடம், தாம் பன்னிருவரைத் தெரிந்துகொண்டிருக்கிறதாகவும் அவர்களில் ஒருவன் பிசாசாக இருக்கிறனென்றும் கூறியிருந்தார். இப்பொழுது யூதாசின் நம்பிக்கைத் துரோகத்தை அவனுடைய ஆண்டவர் முழுவதுமாக அறிந்திருப்பதைக் காட்டியிருந்த வார்த்தைகள் கிறிஸ்துவின் அவமானத்தின்போது, அவருடைய உண்மையான அடியார்களின் விசுவாசத்தைப் பலப்படுத்தும். யூதாஸ் அவனுடைய பயங்கரமிக்க முடிவிற்கு வந்திருக்கும்போது, காட்டிக்கொடுப்பவனின்மீது அவர் கூறியிருந்த வார்த்தைகள் கிறிஸ்துவின் தாழ்மையின்போது, அவருடைய உண்மையாக பின்பற்றினவர்களுடைய விசுவாசத்தைப் பலப்படுத்தியிருக்கும். யூதாஸ் அவனுடைய பயங்கரமான முடிவுக்கு வரும்போது, காட்டிக்கொடுப்பவனின்மீது இயேசு சொல்லியிருந்த ஆபத்தை நினைத்துப் பார்த்திருப்பார்கள்.(14)

மேலும் இரட்சகர் வேறொரு நோக்கத்தையும் உடையவராக இருந்தார். தம்மைக் காட்டிக்கொடுப்பவனை அவர் அறிந்திருந்தும், அவனிடமிருந்து அவருடைய ஊழியத்தை அவர் நிறுத்தவில்லை. பாதங்களைக் கழுவினபோது, "நீங்களெல்லாரும் சுத்தமுள்ளவர்கள் அல்ல" என்றும், "என்னுடனே அப்பம் புசிக்கிறவன் என்மேல் தன் குதிகாலைத் தூக்கினான்" (யோவான் 13:11,18) என்றும் அவர் சொன்ன வார்த்தைகளை சீடர்கள் புரிந்திருக்கவில்லை. ஆனால் பின்பு அதனுடைய அர்த்தம் வெளியாக்கப்பட்டபோது, மிக அதிகமாக சாவிற்கேதுவான தவறைச் செய்துகொண்டிருப்பவனுக்கும் காட்டப்பட்ட தேவனுடைய

பொறுமையையும் இரக்கத்தையும்பற்றி அவர்கள் சிந்திப்பதற்கான ஏதோ காரியத்தை உடையவர்களாக இருந்தனர். (15)

ஆரம்பத்திலிருந்தே யூதாசை அறிந்திருந்தபோதும், அவனுடைய பாதங்களை இயேசு கழுவினார். திருவிருந்து ஆராதனையில் ஒன்றுசேருகின்ற சிறப்புரிமையை உடையவனாக அந்தக் காட்டிக்கொடுப்பவனும் இருந்தான். பாவியாக இருந்த அவன், அவரைப் பெற்றுக்கொள்ளுவதற்கும், மனந்திரும்புவதற்கும், பாவமென்னும் அசுத்தத்திலிருந்து சுத்திகரிக்கப்படுவதற்கும் நீடிய பொறுமையுள்ளவராக இருந்த இரட்சகர் ஒவ்வொரு தூண்டுதலையும் கொடுத்திருந்தார். இந்த உதாரணம், நமக்கானதாகவும் இருக்கிறது. ஒருவர் தவறிலும் பாவத்திலும் இருப்பதாக நாம் யூகஞ்செய்யும்போது, அவரைவிட்டுப் பிரிந்துவிடக்கூடாது. சோதனைக்கு இரையாகும்படி அல்லது சாத்தானின் போர்க்களத்திற்குள் விரட்டும்படியாக அக்கறையற்ற விதத்திலம் நாம் அந்த நபரைவிட்டுப்பிரிந்து அவரை விட்டுவிடக்கூடாது. இது கிறிஸ்துவின் வழிமுறை அல்ல. சீடர்கள் தவறு செய்துகொண்டும் தவறுசெய்பவர்களாகவும் இருந்ததினால், அவர் அவர்களுடைய பாதங்களைக் கழுவினார். ஆனால் அந்தப் பன்னிருவரில் ஒருவனைத்தவிர மற்ற அனைவரும் இவ்விதமாக மனந்திரும்பும்படிக் கொண்டுவரப்பட்டனர். (16)

கிறிஸ்துவின் உதாரணம் திருவிருந்து ஆராதனையில் ஒதுங்கியிருப்பதைத் தடைசெய்கிறது. வெளிப்படையான பாவம், குற்றம் செய்தவனை ஒதுங்கச் செய்கிறது என்பது உண்மைதான். இதைப் பரிசுத்த ஆவியானவர் வெளிப்படையாகப் போதிக்கிறார். (1 கொரிந்தியர் 5:11). ஆனால் இதற்கப்பால் நியாயத்தீர்ப்பு செய்யக்கூடியவர்களாக ஒருவரும் இல்லை. இந்த சந்தர்ப்பங்களில் தங்களைத் தாங்களே யார் முன்வைப்பது என்பதைக் கூறும்படிக் கர்த்தர் மனிதர்களிடத்தில் அதை விட்டுவைக்கவில்லை. ஏனெனில் இருதயத்தை யாரால் வாசிக்கமுடியும்? யாரால் கோதுமையிலிருந்து களையைப் பிரித்தெடுக்கமுடியும்? ஏனெனில் “எந்த மனுஷனும் தன்னைத்தானே சோதித்தறிந்து, இந்த அப்பத்தில் புசித்து, இந்தப் பாத்திரத்தில் பானம்பண்ணக்கடவன். இப்படியிருக்க, எவன் அபாத்திரமாய்க் கர்த்தருடைய அப்பத்தைப் புசித்து, அவருடைய பாத்திரத்தில் பானம்பண்ணுகிறானோ, அவன் கர்த்தருடைய சரீரத்தையும் இரத்தத்தையும்குறித்துக் குற்றமுள்ளவனாயிருப்பான். என்னத்தினாலெனில், அபாத்திரமாய்ப் போஜனபானம்பண்ணுகிறவன், கர்த்தருடைய சரீரம் இன்னதென்று நிதானித்து அறியாததினால், தனக்கு ஆக்கினைத்தீர்ப்பு வரும்படி போஜனபானம்பண்ணுகிறான்”–1 கொரிந்தியர் 11:28,27,29. (17)

நியமங்களைக் கொண்டாடுவதற்காக விசுவாசிகள் ஒன்றுகூடும்போது, மனிதக் கண்களால் பார்க்கமுடியாத தூதர்கள் அங்கு இருக்கின்றனர். அந்தக் கூட்டத்தில் ஒரு யூதாசும் இருக்கலாம். அப்படியானால், அந்தகாரப் பிரபுவிடமிருந்துள்ள தீய தூதர்களும் அங்கு இருக்கின்றனர். ஏனெனில் பரிசுத்த ஆவியின் கட்டுப்பாட்டை மறுக்கும் அனைவரையும் அவர்கள் கவனிக்கின்றனர். பரலோகத்தின் தூதர்களும் அங்கு உள்ளனர். அப்படிப்பட்ட ஒவ்வொரு சந்தர்ப்பத்திலும் காணமுடியாத இந்த வருகையாளர்கள் பிரசன்னமாகி உள்ளனர். இருதயத்தில் சத்தியத்திற்கும் பரிசுத்தத்திற்கும் ஊழியக்காரர்களாக இல்லாதவர்கள் அந்த ஆராதனையில் தடுக்கப்படக்கூடாது. இயேசு சீடர்களின் பாதங்களையும் யூதாசின் பாதங்களையும் கழுவினபோது, சாட்சியாக இருந்திருந்தவர்கள் அங்கு சாட்சிகளாக இருக்கின்றனர். மனிதக் கண்களைவிட அதிகமானவை அந்தக் காட்சியைக் கண்டிருந்தன. (18)

கிறிஸ்து அவருடைய சொந்த நியமனத்தின்மீது முத்திரை வைக்க, பரிசுத்த ஆவியினால் அங்கு இருக்கிறார். இருதயத்தில் மன உணர்த்துதலை உண்டுபண்ணவும், இருதயத்தை மென்மைப்படுத்தவும் அவர் அங்கு இருக்கிறார். பாவத்தை நினைத்து வருந்தும் எந்த ஒரு பார்வையும் எந்த ஒரு நொறுங்குதலின் நினைவும் அவருடைய கவனத்திலிருந்து தப்புவதில்லை. மனந்திரும்பியுள்ள உடைந்த இருதயத்தையுடைய ஒருவருக்காக அவர் காத்திருக்கிறார். அந்த ஆத்துமாவை வரவேற்பதற்காக எல்லாக் காரியங்களும் ஆயத்தமாக உள்ளன. யூதாசின் பாதங்களைக் கழுவினவர், பாவத்தின் கறையிலிருந்து ஒவ்வொரு இருதயத்தையும் கழுவ ஏக்கமுடையவராக இருக்கிறார். (19)

தகுதியற்ற யாரோ சிலர் இருக்கலாம் என்பதற்காக திருவிருந்து ஆராதனையிலிருந்து ஒருவரும் தங்களைத் தவிர்க்கக் கூடாது. வெளியரங்கமானவிதமாகப் பங்குபெறும்படியும், அதனால் அவன் கிறிஸ்துவைத் தனது சொந்த இரட்சகராக ஏற்றுக்கொள்கிறான் என்பதற்குச் சாட்சி பகரவும் ஒவ்வொரு சீடனும் அழைக்கப்பட்டிருக்கிறான். அவருடைய இந்த சொந்த ஏற்பாடுகளில்தான் கிறிஸ்து அவருடைய மக்களைச் சந்தித்து. அவருடைய பிரசன்னத்தினால் அவர்களை வல்லமைபெறச் செய்கிறார். தகுதியற்ற இருதயங்களும் கரங்களுங்கூட அந்த சமயச் சடங்கினை நடத்திவைக்கலாம். அப்படியிருந்தபோதிலும், அவருடைய பிள்ளைகளுக்கு ஊழியஞ்செய்யக் கிறிஸ்து அங்கு அருகிலிருக்கிறார். தங்களுடைய விசுவாசத்தை அவர்மீது பதித்தவர்களாக வருகின்ற அனைவரும் பெரிய அளவில் ஆசீர்வதிக்கப்படுவார்கள். தெய்வீக சலுகையின் இந்தக்

காலங்களை அலட்சியஞ்செய்யும் அனைவரும் இழப்பை அனுபவிப்பார்கள். அவர்களைப்பற்றி: “நீங்களெல்லாரும் சுத்தமுள்ளவர்கள் அல்ல” என்று பொருத்தமாகக் கூறப்படலாம். (20)

அப்பத்திலும் திராட்சரசத்திலும் சீடர்களுடன் பங்குபெற்றதில் கிறிஸ்து அவர்களுடைய மீட்பராக இருக்கிறார் என்று அவர்தாமே வாக்குறுதி கொடுத்தார். அவரை ஏற்றுக்கொள்ளும் அனைவரும் தேவனுடைய பிள்ளைகளாக கிறிஸ்துவுக்கு உடன் சுதந்திரர் என்கிற புதிய உடன்படிக்கையை அவர்களிடம் அவர் ஒப்படைத்தார். இந்த வாழ்க்கைக்கும் வரவிருக்கும் வாழ்க்கைக்கும் பரலோகம் அருளக்கூடிய ஒவ்வொரு ஆசீர்வாதமும் அந்த உடன்படிக்கையினால் அவர்களுடையதாயிருந்தது. இந்த உடன்படிக்கையின் ஒப்பந்தம் கிறிஸ்துவின் இரத்தத்தினால் அங்கீகரிக்கப்படவேண்டியதாக இருந்தது. அந்தத் திருவிருந்து ஆராதனை செயல்முறைப்படுத்தப்பட்டிருந்தது. அதாவது, சீடர்கள் ஒவ்வொருவருக்கும் தனிப்பட்டமுறையில் வைக்கப்படத்தக்கதாக அந்த எல்லையற்ற தியாகபலி செய்யப்பட்டிருந்தது. அது விழுந்துபோன மானிட இனம் முழுவதற்குமாகச் செய்யப்பட்ட காரியத்தின் ஒரு பகுதியாக இருந்தது. (21)

ஆனால் திருவிருந்து ஆராதனையின் வேளை துயரப்படுகின்ற ஒரு வேளையாக இருக்கக்கூடாது. அது அதன் நோக்கமாக இருக்கவில்லை. கர்த்தருடைய சீடர்கள் மேசையில் ஒன்றுசேரும்போது, அவர்களுடைய குறைபாடுகளைப்பற்றி அவர்கள் நினைப்பவர்களாகவும், புலம்புபவர்களாகவும் இருக்கக்கூடாது. அவர்கள் தங்களுடைய மதசம்பந்தமான கடந்தகால அனுபவங்களின்மீது, அந்த அனுபவம் உயர்த்துவதோ தாழ்த்துவதோ எதுவாக இருந்தாலும் அவைகளைக்குறித்து சிந்தித்து பேசிக்கொண்டிருக்கக்கூடாது. அவர்களுக்கும் அவர்களுடைய சகோதரர்களுக்குமிடையில் உள்ள வேற்றுமைகளை திரும்பவும் நினைப்பூட்டிக்கொண்டிருக்கக்கூடாது. ஆயத்த ஆராதனை இவை அனைத்தையும் உள்ளடக்கியிருக்கிறது. தன்னைத்தான் பரிசோதனை செய்தல், பாவ அறிக்கைசெய்தல், வேற்றுமைகளை ஒப்புரவுசெய்தல் ஆகிய அனைத்தும் நடத்தப்பட்டுள்ளன. இப்பொழுது அவர்கள் கிறிஸ்துவைச் சந்திக்க வந்துள்ளனர். அவர்கள் சிலுவையின் நிழலில் நிற்கவேண்டியவர்களாக இல்லாமல், இரட்சிக்கும் அதன் ஒளியில் நிற்கவேண்டிவர்களாக உள்ளனர். நீதியின் சூரியனின் பிரகாசமான ஒளிக்கதிர்களுக்கு அவர்கள் தங்கள் ஆத்துமாவைத் திறக்கவேண்டியவர்களாக உள்ளனர். கிறிஸ்துவின் அதிக விலைமதிப்புள்ள இரத்தத்தினால் இருதயம் சுத்திகரிக்கப்பட்டவர்களாக காணப்படாமலிருந்தபோதிலும், அவருடைய பிரசன்னத்தைப்பற்றிய முழு உணர்வை உடையவர்களாக: “சமாதானத்தை

உங்களுக்கு வைத்துப்போகிறேன், என்னுடைய சமாதானத்தையே உங்களுக்குக் கொடுக்கிறேன்; உலகம் கொடுக்கிறபிரகாரம் நான் உங்களுக்குக் கொடுக்கிறதில்லை" (யோவான் 14:27) என்னும் அவருடைய வார்த்தைகளை அவர்கள் கேட்கவேண்டியவர்களாக இருக்கின்றனர். (22)

பாவத்தைப்பற்றிய உணர்த்துதலின்கீழ், நான் உங்களுக்குச் செய்ததை நினைவுகூருங்கள் என்று நமது கர்த்தர் கூறுகிறார். எனக்காகவும் சுவிசேஷத்திற்காகவும் ஒடுக்கப்படும்போதும் உபத்திரவப்படுத்தப்படும்போதும் உங்களுக்காக நான் என்னுடைய ஜீவனைக் கொடுத்த அந்தப் பெரிய என்னுடைய அன்பை நினைத்துப் பாருங்கள். உங்களுடைய கடமைகள் கண்டிப்பானதாகவும் கடுமையானதாகவும் தோன்றும்போதும், உங்களுடைய பாரங்கள் தாங்கிக்கொள்ளுவதற்கு அதிகப் பாரமானதாகத் தோன்றும்போதும், உங்களுக்காக நான் சிலுவை சுமந்ததையும் அவமானங்களைத் தாங்கிக்கொண்டதையும் நினைத்துக்கொள்ளுங்கள். உங்களைச் சோதிக்கும் பயங்கரமான சோதனையினால் உங்கள் இருதயம் சுருங்கும்போது, உங்களுக்காகப் பரிந்துபேச உங்களுடைய மீட்பர் ஜீவிக்கிறார் என்பதை நினைத்துக்கொள்ளுங்கள். திருவிருந்து ஆராதனை கிறிஸ்துவின் இரண்டாம் வருகையைச் சுட்டிக்காட்டுகிறது. இந்த நம்பிக்கை சீடர்களின் மனங்களில் தெளிவாக இருப்பதற்கென்று வடிவமைக்கப்பட்டிருந்தது. அவருடைய மரணத்தை நினைவுகூரும்படி அவர்கள் ஒன்றுகூடியிருந்தபோதெல்லாம் "பாத்திரத்தையும் எடுத்து, ஸ்தோத்திரம்பண்ணி, அவர்களுக்குக் கொடுத்து: நீங்கள் எல்லாரும் இதிலே பானம்பண்ணுங்கள்; இது பாவமன்னிப்புண்டாகும்படி அநேகருக்காகச் சிந்தப்படுகிற புது உடன்படிக்கைக்குரிய என்னுடைய இரத்தமாயிருக்கிறது. இதுமுதல் இந்தத் திராட்சப்பழரசத்தை நவமானதாய் உங்களோடேகூட என் பிதாவின் ராஜ்யத்திலே நான் பானம்பண்ணும் நாள் வரைக்கும் இதைப் பானம் பண்ணுவதில்லையென்று உங்களுக்குச் சொல்லுகிறேன்" என்று அவர் சொன்னதை அவர்கள் திரும்பவும் எண்ணிப்பார்த்திருந்தனர். அவர்களுடைய உபத்திரவத்தில், அவர்களுடைய கர்த்தராகிய இயேசுவின் இரண்டாம் வருகையைப்பற்றிய நம்பிக்கையில் அவர்கள் ஆறுதலைக் கண்டனர். "நீங்கள் இந்த அப்பத்தைப் புசித்து, இந்தப் பாத்திரத்தில் பானம்பண்ணும்போதெல்லாம் கர்த்தர் வருமளவும் அவருடைய மரணத்தைத் தெரிவிக்கிறீர்கள்" (1 கொரிந்தியர் 11:26) என்னும் எண்ணம் அவர்களுக்குச் சொல்ல முடியாதவிதமாக மதிப்புள்ளதாக இருந்தது. (23)

நாம் ஒருபோதும் மறந்துவிடக்கூடாததாக இந்தக் காரியங்கள் இருக்கின்றன. நெருக்கி ஏவுகின்ற வல்லமையுடனுள்ள இயேசுவின் அன்பு,

நமது நினைவில் எப்பொழுதும் புதிதாகக் காக்கப்படவேண்டும். நமது சார்பாக வெளிக்காட்டப்பட்டுள்ள தேவனுடைய அன்பை நமது புலன்களினால் பேசக்கூடியவிதத்தில் கிறிஸ்து இந்த ஆராதனையை ஏற்படுத்தியிருக்கிறார். கிறிஸ்துவின்மூலமாக மட்டுமேயல்லாமல் நமது ஆத்துமாக்களுக்கும் தேவனுக்கும் இடையில் ஒருமைப்பாடு இருக்கமுடியாது. இயேசுவின் அன்பினால் சகோதரனுக்கும் சகோதரனுக்குமிடையிலுள்ள ஒற்றுமையும் அன்பும் சாந்துபூசப்பட்டு நித்தியமானதாக்கப்படவேண்டும். கிறிஸ்துவின் மரணத்திற்குக் குறைவான எதுவும் நமக்கான அவருடைய அன்பைப் பயனுள்ளதாகச் செய்யாது. அவருடைய மரணம் ஒன்றினால்மட்டுமே அவருடைய இரண்டாம்வருகையை நம்மால் மகிழ்ச்சியுடன் பார்க்கமுடியும். அவருடைய தியாகபலி நமது நம்பிக்கையின் மையமாக இருக்கிறது. அதன்மீது நாம் நமது நம்பிக்கையைப் பதிக்கவேண்டும். (24)

நமது கர்த்தரின் அவமானம், பாடுகள் ஆகியவைகளைச் சுட்டிக்காட்டுகின்ற இந்தக் கட்டளைகள், சடங்கைப்போலக் கருதப்படுகின்றன. அவை ஒரு நோக்கத்திற்காக ஏற்படுத்தப்பட்டிருந்தன. நமது புலன்கள் தெய்வீகத்தன்மையின் இரகசியத்தைப் பிடித்துக்கொள்ள எழுப்பப்படவேண்டும். கிறிஸ்துவின் பாடுகள், நாம் புரிந்துகொண்டிருக்கிறதைவிட மிகவும் அதிகமானதாக இருப்பதினால் அதை அறிந்துகொள்வது நம்மனைவருடைய சிறப்புரிமையாக இருக்கிறது. “சர்ப்பமானது மோசேயினால் வனாந்தரத்திலே உயர்த்தப்பட்டதுபோல மனுஷகுமாரனும், தன்னை விசுவாசிக்கிறவன் எவனோ அவன் கெட்டுப்போகாமல் நித்தியஜீவனை அடையும்படிக்கு, உயர்த்தப்படவேண்டும்”—யோவான் 3:14,15. மரித்துக்கொண்டிருக்கும் இரட்சகரைத் தாங்கிக்கொண்டிருக்கும் கல்வாரிச் சிலுவையை நாம் பார்க்கவேண்டும். கிறிஸ்துவின்மீது விசுவாசம் வைக்கவேண்டும் என்று நமது நித்திய வாஞ்சைகள் கோருகின்றன. (25)

“நீங்கள் மனுஷகுமாரனுடைய மாம்சத்தைப் புசியாமலும், அவருடைய இரத்தத்தைப் பானம்பண்ணாமலும் இருந்தால் உங்களுக்குள்ளே ஜீவனில்லை ... என் மாம்சம் மெய்யான போஜனமாயிருக்கிறது, என் இரத்தம் மெய்யான பானமாயிருக்கிறது” (யோவான் 6:53–55) என்று நமது கர்த்தர் கூறியிருக்கிறார். நமது உடற்கூறைப்பற்றிய காரியத்தில் இது உண்மையாக இருக்கிறது. நமது இந்த உலக வாழ்க்கைக்காகவும்கூட நாம் கிறிஸ்துவிற்குக் கடனாளிகளாக இருக்கிறோம். நாம் புசிக்கும் அப்பம் அவருடைய நொறுக்கப்பட்ட சரீரத்தினால் விலைக்கு வாங்கப்பட்டதாக இருக்கிறது. நாம் குடிக்கும் தண்ணீர் சிந்தப்பட்ட அவருடைய இரத்தத்தினால் விலைக்கு வாங்கப்பட்டதாக இருக்கிறது. எந்த ஒரு பரிசுத்தவானாவது

அல்லது பாவியாவது கிறிஸ்துவின் சரீரத்தினாலும் இரத்தத்தினாலும் போஷிக்கப்படாமல், தனது அன்றாட உணவைப் புசிப்பதில்லை. ஒவ்வொரு அப்பத்துணிக்கையின்மீதும் கல்வாரிச் சிலுவையின் முத்திரை குத்தப்பட்டுள்ளது. ஒவ்வொரு தண்ணீர் ஊற்றிலும் அது பிரதிபலிக்கின்றது. அவருடைய பெரிய தியாக பலியின் அடையாளங்களை நியமித்ததில் கிறிஸ்து இவை எல்லாவற்றையும் போதித்திருக்கிறார். வீட்டின் மேலறையில் நடத்தப்பட்ட திருவிருந்து ஆராதனையிலிருந்து பிரகாசிக்கும் ஒளி, நமது அன்றாட வாழ்க்கைக்கான உணவுப்பொருட்களை பரிசுத்தமடையச் செய்கின்றது. குடும்பத்தின் உணவு மேஜை கர்த்தருடைய மேஜையைப்போல ஆகிறது. ஒவ்வொரு உணவும் ஒரு தேவ பிரசாதமாகிறது. (26)

நமது ஆவிக்குரிய தன்மையைப்பற்றிய கிறிஸ்துவின் வார்த்தைகள் எந்த அளவிற்கு சத்தியமாக இருக்கிறது! “என் மாம்சத்தைப் புசித்து, என் இரத்தத்தைப் பானம்பண்ணுகிறவனுக்கு நித்தியஜீவன் உண்டு.” கல்வாரி சிலுவையின்மீது சிந்தப்பட்ட ஜீவனை பெற்றுக்கொள்ளுவதினால்தான் நம்மால் அந்தப் பரிசுத்தமான வாழ்க்கையை வாழமுடியும். அந்த ஜீவனை— அவருடைய வார்த்தையைப் பெறுவதினாலும், அவர் கட்டளையிட்டிருக்கின்ற காரியங்களைச் செய்வதினாலும் நாம் பெற்றுக்கொள்கிறோம். இவ்விதமாக நாம் அவருடன் ஒன்றாகிறோம். “என் மாம்சத்தைப் புசித்து, என் இரத்தத்தைப் பானம்பண்ணுகிறவன் என்னிலே நிலைத்திருக்கிறான், நானும் அவனிலே நிலைத்திருக்கிறேன். ஜீவனுள்ள பிதா என்னை அனுப்பினதுபோலவும், நான் பிதாவினால் பிழைத்திருக்கிறதுபோலவும், என்னைப் புசிக்கிறவனும் என்னாலே பிழைப்பான்” (யோவான் 6:54,56,57) என்று அவர் கூறினார். ஒரு சிறப்பான பொருளில் இந்த வேதவாக்கியங்கள் திருவிருந்து ஆராதனைக்குப் பொருந்துகிறது. விசுவாசமானது நமது கர்த்தருடைய பெரிய தியாகபலியை தியானஞ்செய்யம்போது, ஆத்துமா கிறிஸ்துவின் ஆவிக்குரிய ஜீவனுடன் ஒன்றிவிடுகின்றது. ஒவ்வொரு தொடர்பிலிருந்தும் ஆத்துமா ஆவிக்குரிய பலத்தைப் பெற்றுக்கொள்கிறது. இந்த ஆராதனை விசுவாசி கிறிஸ்துவுடன் ஒன்றாகக் கட்டப்பட்டு, அதனால் பிதாவுடன் கட்டப்படுகின்ற ஒரு ஜீவனுள்ள பிணைப்பை ஏற்படுத்துகிறது. ஒரு சிறப்பான அர்த்தத்தில் சார்ந்தவர்களாக இருக்கும் மனிதர்களுக்கும் தேவனுக்கும் இடையில் ஒரு பிணைப்பை ஏற்படுத்துகின்றது. (27)

கிறிஸ்துவின் பிய்க்கப்பட்ட சரீரம், சிந்தப்பட்ட அவருடைய இரத்தம், ஆகியவைகளின் அடையாளமாக நாம் அப்பத்தையும் இரசத்தையும் பெற்றுக்கொள்ளும்போது, கற்பனையில் நாமும் மேல்மாடி அறையில் நடைபெற்ற திருவிருந்தின் காட்சியில் சேர்ந்துகொள்ளுகிறோம். உலகத்தின்

பாவங்களைச் சுமந்தவரின் வேதனையினால் புனிதப்படுத்தப்பட்ட தோட்டத்திற்கூடாக நாம் கடந்துசெல்பவர்களாகக் காணப்படுகிறோம். எவ்விதமான போராட்டத்தினால் தேவனுடனுள்ள நமது ஒப்புரவாகுதல் அடைந்துகொள்ளப்பட்டது என்பதை நாம் சாட்சியாகக் காண்கிறோம்? (28)

சிலுவையிலறையப்பட்ட மீட்பரைப் பார்த்து, பரலோகத்தின் மகத்துவமானவரால் செய்யப்பட்ட மாபெரும் தியாகபலியின் பெரிய அளவையும் பெருளையும் நாம் அதிகமாக முற்றிலுமாக அறிந்து கொள்ளுகிறோம். இரட்சிப்பின் திட்டம் நமக்கு முன்பாக மகிமைப்படுத்தப் பட்டிருக்கிறது. கல்வாரியைப்பற்றிய சிந்தனை நமக்குள் ஜீவனுள்ளதும் பரிசுத்தமுள்ளதுமான உள்ளக்கிளர்ச்சிகளை நமது இருதயங்களில் எழச்செய்கிறது. நமது இருதயங்களிலும் உதடுகளின்மேலும் தேவனுக்கும் ஆட்டுக்குட்டியானவருக்கும் உள்ள துதி இருக்கும். ஏனெனில் கல்வாரிக் காட்சிகளைப் பசுமையாக வைத்துக்கொண்டிருக்கும் ஆத்துமாவில் அகந்தையும் சுயத்தைப் போற்றுதலும் வளரமுடியாது. (29)

இரட்சகரின் நிகரற்ற அன்பை எவனொருவன் காண்கின்றானோ, அவன் சிந்தனையில் உயர்த்தப்பட்டவனாக, இருதயத்தில் தூய்மையடைந்தவனாக, குணத்தில் மாறுதலடைந்தவனாக இருப்பான். இரகசியமான இந்த அன்பை ஏதாவதொரு அளவில் பிரதிபலிக்கின்ற ஒரு ஒளியாக உலகத்திற்கு இருப்பதற்காக அவன் முன்நோக்கிச் செல்லுவான். கிறிஸ்துவின் சிலுவையைப்பற்றி எந்த அளவிற்கு அதிகமாக நாம் தியானஞ்செய்கிறோமோ, அந்த அளவிற்கு அதிகமாக, “நானோ நம்முடைய கர்த்தராகிய இயேசுகிறிஸ்துவின் சிலுவையைக் குறித்தேயல்லாமல் வேறொன்றையுங்குறித்து மேன்மைபாராட்டாதிருப்பேனாக; அவரால் உலகம் எனக்குச் சிலுவையிலறையுண்டிருக்கிறது, நானும் உலகத்திற்குச் சிலுவையிலறையுண்டிருக்கிறேன்” (கலாத்தியர் 6:14) என்று அப்போஸ் தலனைப்போல சொல்லக் கற்றுக்கொள்வோம். (30) ★

# 73

# உங்கள் இருதயம் கலங்காதிருப்பதாக!

**யோவான் 13:31–38; 14–17**

**(The Desire of Ages, pp. 662–684)**

கிறிஸ்து அவருடைய சீடர்களைத் தெய்வீக அன்புடனும் மிகவும் மென்மைமிக்க அனுதாபத்துடனும் நோக்கிப்பார்த்து, “இப்பொழுது மனுஷ குமாரன் மகிமைப்படுகிறார், தேவனும் அவரில் மகிமைப்படுகிறார்” என்று கூறினார். யூதாஸ் மேல்வீட்டின் அறையைவிட்டுச் சென்றிருந்தான். கிறிஸ்து அந்தப் பதினொருவருடனும் தனித்திருந்தார். சமீபித்துக்கொண்டிருக்கும் அவர்களிடமிருந்துள்ள அவருடைய பிரிவைப்பற்றி அவர் பேசவிருந்தார். ஆனால் அதைச் செய்வதற்குமுன் அவருடைய ஊழியத்தின் பெரிய நோக்கத்தை அவர் சுட்டிக்காட்டினார். இதைத்தான் அவர் எப்பொழுதும் அவர்கள்முன் வைத்திருந்தார். அவருடைய அவமானம், பாடுகள் ஆகிய அனைத்தும் பிதாவின் நாமத்தை மகிமைப்படுத்தும் என்பதுதான் அவருடைய மகிழ்ச்சியாக இருந்தது. அதற்குமுன், முதலில் அவருடைய சீடர்களின் எண்ணங்களை அவர் திருப்புகிறார். (1)

அதற்குப்பின் மிகவும் அருமையானவிதத்தில், “பிள்ளைகளே, இன்னும் கொஞ்சக்காலம் நான் உங்களுடனேகூட இருப்பேன்; நீங்கள் என்னைத் தேடுவீர்கள்; ஆனாலும் நான் போகிற இடத்துக்கு நீங்கள் வரக்கூடாதென்று நான் யூதரோடே சொன்னதுபோல இப்பொழுது உங்களோடும் சொல்லுகிறேன்” என்று அவர்களிடம் கூறினார். (2)

சீடர்கள் இதைக் கேட்டபொழுது, அவர்களால் சந்தோஷப்பட முடியவில்லை. பயம் அவர்கள்மேல் விழுந்தது. அவர்கள் இரட்சகரைச்சுற்றி நெருங்கினார்கள். அவர்களுடைய ஆண்டவரும் கர்த்தரும் அவர்களால் நேசிக்கப்பட்ட ஆசிரியரும் நண்பருமானவர் அவர்களுக்கு உயிரைவிட அதிகம் அருமையானவராக இருந்தார். அவர்களுடைய தொல்லைகள்

அனைத்திலும் உதவிக்காகவும், அவர்களுடைய துயரத்திலும் ஏமாற்றங் களிலும் ஆறுதலுக்காகவும், அவர்கள் அவரையே நோக்கிப்பார்த்திருந்தனர். இப்பொழுது அவர் அவர்களை ஒரு தனிமையான, தங்களையே சார்ந் திருக்கின்ற கூட்டத்தினராக விட்டுச்செல்ல வேண்டியவரானார். துயர சம்பவங்களின் அடையாளங்கள் அவர்களுடைய இருதயங்களை நிரப்பியிருந்தன. (3)

ஆனால் அவர்களுக்கான இரட்சகரின் வார்த்தைகள், நம்பிக்கை நிறைந்ததாக இருந்தன. அவர்கள் எதிரியினால் தாக்கப்படவேண்டியவர்களாக இருந்தனர் என்பதையும், தொல்லைகளினால் மனம் தொய்ந்து போயிருப்பவர் களுக்கெதிரான சாத்தானின் தந்திரம் அதிகமான வெற்றியை உடையதாக இருக்கும் என்பதையும் அவர் அறிந்திருந்தார். எனவே அவர்கள் மனங்களைக் காணப்படுகிறவைகளிலிருந்து காணப்படாதவைகளிடத்திற்கு (2 கொரிந்தியர் 14:18) திருப்பினார். பரதேச பூமியிலிருந்து பரலோக வீட்டிற்கு அவர்களுடைய சிந்தைகளைத் திருப்பினார். (4)

“உங்கள் இருதயம் கலங்காதிருப்பதாக; தேவனிடத்தில் விசுவாசமாயிருங்கள், என்னிடத்திலும் விசுவாசமாயிருங்கள். என் பிதாவின் வீட்டில் அநேக வாசஸ்தலங்கள் உண்டு; அப்படியில்லாதிருந்தால், நான் உங்களுக்குச் சொல்லியிருப்பேன்; ஒரு ஸ்தலத்தை உங்களுக்காக ஆயத்தம் பண்ணப்போகிறேன். நான் போய் உங்களுக்காக ஸ்தலத்தை ஆயத்தம் பண்ணினபின்பு, நான் இருக்கிற இடத்திலே நீங்களும் இருக்கும்படி, நான் மறுபடியும் வந்து உங்களை என்னிடத்தில் சேர்த்துக்கொள்ளுவேன். நான் போகிற இடத்தை அறிந்திருக்கிறீர்கள், வழியையும் அறிந்திருக்கிறீர்கள்” என்றார். ஏனெனில் உங்களுக்காகவே நான் இந்த உலகத்திற்கு வந்தேன். உங்களுக்காகவே நான் செயலாற்றிக்கொண்டிருக்கிறேன். தூரமாகச் செல்லும்போது. நான் இன்னும் அதிகமான அக்கறையுடன் செயலாற்று வேன்; நீங்கள் என்னை நம்பவேண்டும் என்பதற்காக, என்னை உங்களுக்கு வெளிப்படுத்துவதற்காக, நான் இந்த உலகத்திற்குள் வந்தேன். நான் உங்களுக்காகப் பிதாவுடன் சேர்ந்து ஒத்துழைப்பதற்காக அவரிடத்திற்குச் செல்லுகிறேன். கிறிஸ்து புறப்பட்டுச் சென்றதின் பொருள், சீடர்கள் எதற்குப் பயந்திருந்தார்களோ, அதற்கு நேர்எதிரானதாக இருந்தது, அது ஒரு இறுதிப் பிரிவு என்னும் பொருளை கொண்டிருக்கவில்லை. அவர்களுக்காக ஒரு ஸ்தலத்தை ஆயத்தஞ்செய்தபின், மறுபடியும் திரும்பிவந்து அவர்களை அவரிடத்தில் சேர்த்துக்கொள்ளுவதாக அவர் செல்லவிருந்தார். அவர்களுக்காக ஒரு வாசஸ்தலத்தை அவர் ஆயத்தஞ் செய்துகொண்டிருக்கும்போது, அவர்கள் தெய்வீக சாயலில் தங்களுடைய குணத்தைக் கட்டவேண்டும். (5)

சீடர்கள் இன்னமும் குழப்பமுள்ளவர்களாகவே இருந்தனர். சந்தேகத்தினால் எப்பொழுதும் கலக்கமடைந்திருந்த தோமா: “ஆண்டவரே, நீர் போகிற இடத்தை அறியோமே, வழியை நாங்கள் எப்படி அறிவோம் என்றான். அதற்கு இயேசு: நானே வழியும் சத்தியமும் ஜீவனுமாயிருக்கிறேன்; என்னாலேயல்லாமல் ஒருவனும் பிதாவினிடத்தில் வரான். என்னை அறிந்தீர்களானால் என் பிதாவையும் அறிந்திருப்பீர்கள்; இதுமுதல் நீங்கள் அவரை அறிந்தும் அவரைக் கண்டும் இருக்கிறீர்கள்” என்றார். (6)

பரலோகத்திற்கு அநேக பாதைகள் இல்லை. ஒவ்வொருவரும் தங்களுடைய சொந்தப் பாதையைத் தெரிந்துகொள்ளமுடியாது. “நானே வழியும் ... இருக்கிறேன்; என்னாலேயல்லாமல் ஒருவனும் பிதாவினிடத்தில் வரான்” என்று கிறிஸ்து கூறுகிறார். சுவிசேஷத்தின் முதல் பிரசங்கம் செய்யப்பட்டதிலிருந்து—சர்ப்பத்தின் தலையை ஸ்திரீயின் வித்து நசுக்கும் என்று ஏதேனில் அறிவிக்கப்பட்டபோதிருந்து, வழியும் சத்தியமும் ஜீவனுமாகக் கிறிஸ்து உயர்த்தப்பட்டிருந்தார். ஆதாம் உயிர்வாழ்ந்திருந்தபோதும், மீட்பரின் இரத்தத்தை எடுத்துக்காட்டுவதாக இருந்த அடிக்கப்பட்ட ஆட்டுக்குட்டியின் இரத்தத்தை ஆபேல் தேவனுக்குமுன்பாகப் படைத்திருந்தபோதும், அவரே வழியாக இருந்தார். கிறிஸ்துவே முற்பிதாக்களும் தீர்க்கதரிசிகளும் இரட்சிக்கப்படுவதற்கான வழியாக இருந்தார். நாம் தேவனிடத்திற்கு சமீபிக்கக்கூடிய வழியாக அவர்மட்டுமே இருக்கிறார். (7)

“என்னை அறிந்தீர்களானால் என் பிதாவையும் அறிந்திருப்பீர்கள்; இதுமுதல் நீங்கள் அவரை அறிந்தும் அவரைக் கண்டும் இருக்கிறீர்கள்” என்றார். ஆனால், சீடர்கள் இன்னும் பிதாவைப் புரிந்துகொள்ளாதவர்களாக இருந்தனர். “ஆண்டவரே, பிதாவை எங்களுக்குக் காண்பியும் அது எங்களுக்குப் போதும்” என்று பிலிப்பு உணர்ச்சி ததும்பக் கேட்டான். (8)

அவனுடைய அறிந்துகொள்ளும் தன்மையில் இருந்த மந்தமான நிலைமையில் ஆச்சரியமடைந்த கிறிஸ்து: “பிலிப்புவே, இவ்வளவுகாலம் நான் உங்களுடனேகூட இருந்தும் நீ என்னை அறியவில்லையா? என்னைக் கண்டவன் பிதாவைக் கண்டான்; அப்படியிருக்க, பிதாவை எங்களுக்குக் காண்பியும் என்று நீ எப்படிச் சொல்லுகிறாய்?” என்றார். கிறிஸ்து மனிதனானபோது அவர் தேவன் என்பது முடிந்துபோகவில்லை. மானுடத்தின் நிலைக்கு அவர் தம்மைத் தாழ்த்தியிருந்தபோதிலும், தேவத்துவம் இன்னும் அவருக்குச் சொந்தமானதாக இருந்தது. கிறிஸ்து ஒருவரால் மட்டுமே பிதாவை மானுடத்திற்கு எடுத்துக்காட்ட முடிந்திருந்தது. இந்த எடுத்துக்காட்டுதலை—பிரதிநிதித்துவத்தை காணும்படியான சிலாக்கியத்தை மூன்று ஆண்டுகளுக்கும்மேலாக சீடர்கள் பெற்றிருந்தனர். (9)

“நான் பிதாவிலும் பிதா என்னிலும் இருக்கிறதை நம்புங்கள்; அப்படியில்லாவிட்டாலும் என் கிரியைகளினிமித்தமாவது என்னை நம்புங்கள்” என்றார். அவரைத்தவிர வேறொருவனும் செய்திராததும், வேறு ஒருவனாலும் செய்யமுடியாததுமான கிறிஸ்துவின் செயல்களில் கொடுக்கப் பட்ட சான்றின்மீது அவர்களுடைய விசுவாசம் பாதுகாப்பாகத் தங்க வேண்டும். கிறிஸ்துவின் செயல்கள் அவருடைய தெய்வீகத்திற்குச் சாட்சி கொடுத்திருந்தது. அவர்மூலமாகப் பிதா வெளிப்படுத்தப்பட்டிருந்தார். (10)

பிதாவிற்கும் குமாரனுக்கும் இடையில் இருந்த ஜீவாதாரமான பிணைப்பைச் சீடர்கள் நம்பியிருந்தார்களானால், அழிந்துகொண்டிருந்த உலகத்தை இரட்சிப்பதற்கான கிறிஸ்துவின் பாடுகளையும் மரணத்தை யும் கண்டபோது அவர்களுடைய விசுவாசம் அவர்களைக் கைவிட்டிருந் திருக்காது. அவர் யார்—அவர் மாம்சத்திலிருந்த தேவன் என்பதை அவர்கள் உண்மையாக உணர்வது நன்மையாக இருக்குமென விரும்பினார். ஏனெனில், மிகக் கீழான நிலையிலிருந்த அவர்களது விசுவாசத்திலிருந்து, பெற்றுக்கொள்ளக்கூடிய (உயர்வான) அனுபவத்திற்கு அவர்களை நடத்துவதற்குக் கிறிஸ்து வகைதேடியிருந்தார். அவர்களுடைய விசுவாசம், அவர்களை தேவனிடத்திற்கு நடத்தி, அங்கு நங்கூரமிடப்பட்டிருப்பதைக் காண்பதற்கு, அவர் வாஞ்சையுள்ளவராக இருந்தார். சீடர்களின்மீது விரைவில் வரவிருந்த சோதனையாகிய புயலிற்கு அவர்களை ஆயத்தஞ்செய்வதற்கு, நமது மனஉருக்கமுள்ள இரட்சகர் எவ்விதமான அக்கறையுடனும் விடாமுயற்சியுடனும் வகைதேடியிருந்தார்! அவர்களைத் தேவனுக்குள் தம்முடன் மறைத்துவைக்கக்கூடியவராக அவர் இருந்தார். (11)

இந்த வார்த்தைகளை கிறிஸ்து பேசிக்கொண்டிருந்தபோது, அவருடைய முகத்திலிருந்து தேவனுடைய மகிமை பிரகாசித்துக்கொண்டிருந்ததுடன், அங்கு மெய்மறந்து கவனித்துக்கொண்டிருந்த அனைவரும் ஒரு பரிசுத்தமான பயத்தை உணர்ந்தனர். அவர்களுடைய இருதயங்கள் முடிவானவிதமாக, அவரிடத்தில் இழுக்கப்பட்டிருந்தன. அவர்கள் கிறிஸ்துவினிடத்திற்கு மாபெரும் அன்பினால் இழுக்கப்பட்டிருந்ததைப்போல, ஒருவருடன் ஒருவர் நெருங்கிவரும்படியும் இழுக்கப்பட்டிருந்தனர். பரலோகம் மிகவும் சமீபமாயிருக்கிறது என்பதையும், அவர்கள் கவனித்திருந்த வார்த்தைகள் அவர்களுடைய பரலோகப் பிதாவிடமிருந்து வந்த ஒரு தூது என்பதையும் அவர்கள் உணர்ந்தார்கள். (12)

“என்னை விசுவாசிக்கிறவன் நான் செய்கிற கிரியைகளைத் தானும் செய்வான்” என்று கிறிஸ்து தொடர்ந்தார். இரட்சகரின் தெய்வீகம் என்ன நோக்கத்திற்காக மானுடத்துடன் ஐக்கியப்பட்டது என்பதைச் சீடர்கள்

புரிந்துகொள்ளவேண்டும் எனபதற்காக அவர் ஆழ்ந்த கவலையுள்ளவராக இருந்தார். தேவனுடைய மகிமையை அனைவருக்கும் வெளிப்படுத்திக் காட்டவும், திரும்ப எடுத்துக்கட்டும் அதன் வல்லமையினால் மனிதன் உயர்த்தப்படவேண்டும் என்பதற்காகவும், அவர் இந்த உலகத்திற்கு வந்தார். அவர் மனிதர்களில் வெளிக்காட்டப்படவேண்டும் என்பதற்காக தேவன் அவரில் வெளிக்காட்டப்பட்டார். இயேசுவின்மீதுள்ள விசுவாசத்தினால் மனிதர்கள் அடைந்துகொள்ள முடியாத எந்தத் தன்மையையும் இயேசு வெளிக்காட்டவுமில்லை; எந்த வல்லமையையும் செயற்படுத்தவுமில்லை. அவர் தேவனுக்குக் கீழ்ப்படிபவராக இருந்ததுபோல, அவருடைய சீடர்களும் இருப்பார்களானால், அவர்களும் அடைந்துகொள்ளக்கூடியதாக அவருடைய பூரணமான மானிட இயல்பு இருக்கிறது. (13)

"இவைகளைப்பார்க்கிலும் பெரிய கிரியைகளையும் செய்வான்" என்று கிறிஸ்து கூறினது, சீடர்களின் பணி அவருடைய பணியைவிட மிகவும் உயர்வான தன்மையோடு இருக்கும் என்றில்லாமல், விசாலமாக விரிவடைந்திருக்கும் என்று பொருள்படுகிறது. சாதாரணமாக அற்புதங்களைச் செய்வதைமட்டும் அவர் குறிப்பிடாமல், பரிசுத்த ஆவியின் செயலாற்றுதலின் கீழ் நடைபெறக்கூடிய எல்லாவற்றையும் குறிப்பிட்டார். (14)

கர்த்தரின் பரமேறுதலுக்குப்பின் சீடர்கள் அவருடைய வாக்குத் தத்தத்தின் நிறைவேறுதலை உணர்ந்தனர். கிறிஸ்து சிலுவையில் அறையப்பட்டது, உயிர்த்தெழுந்தது, பரமேறிச்சென்றது ஆகியவைகளின் காட்சிகள் அவர்களுக்கு ஒரு ஜீவனுள்ள உண்மையாக இருந்தது. தீர்க்கதரிசனங்கள் வார்த்தைக்கு வார்த்தை சரியான விதத்தில் நிறைவேறியிருந்ததை அவர்கள் கண்டனர். அவர்கள் வேதவாக்கியங்களை ஆராய்ந்து, அவைகளின் போதனைகளை இதற்குமுன் அறிந்திராத ஒரு விசுவாசத்துடனும், நிச்சயத்துடனும் ஏற்றுக்கொண்டனர். அந்த தெய்வீக ஆசிரியர், தம்மை யார் என்று கூறியிருந்தாரோ, அவைகள் அனைத்தும் சரி என்பதை அவர்கள் அறிந்துகொண்டனர். அவர்களுடைய அனுபவத்தைக் கூறி தேவனுடைய அன்பை உயர்த்தினபோது, மனிதர்களின் இருதயங்கள் உருகித் தாழ்த்தப்படவேண்டும். திரளானவர்கள் இயேசுவின்மீது நம்பிக்கை வைத்தார்கள். (15)

இரட்சகரின் சீடர்களுக்கான வாக்குத்தத்தம் காலத்தின் கடைசிவரை சபைக்கான அவருடைய வாக்குத்தத்தமாக இருக்கிறது. மனிதர்களை மீட்கின்ற தேவனுடைய ஆச்சரியமான திட்டம், முக்கியமில்லாத பலன்களைமட்டுமே அடையவேண்டும் என்று அவர் திட்டமிடவில்லை. தங்களால் என்ன செய்யமுடியும் என்பதில் நம்பிக்கை வைக்காமல்,

அவர்கள்மூலமாக தேவனால் என்ன செய்யமுடியும் என்று நம்பி பணிசெய்யச் செல்லும் அனைவரும் அவருடைய வாக்குத்தத்தம் நிறைவேறுவதை நிச்சயமாகவே உணருவார்கள். “நீங்கள் என் நாமத்தினாலே எதைக் கேட்பீர்களோ, குமாரனில் பிதா மகிமைப்படும்படியாக, அதைச் செய்வேன்” என்று ஆண்டவர் அறிவிக்கின்றார். (16)

இரட்சகரின் எல்லையில்லாத ஆதாரங்களுடனும் வல்லமையுடனும் சீடர்கள் இன்னும் அறிமுகமில்லாதவர்களாக இருந்ததினால், “இதுவரைக்கும் நீங்கள் என் நாமத்தினாலே ஒன்றும் கேட்கவில்லை; கேளுங்கள், அப்பொழுது உங்கள் சந்தோஷம் நிறைவாயிருக்கும்படி பெற்றுக்கொள்வீர்கள்” (யோவான் 16:24) என்று அவர்களிடம் கூறினார். அவர்களுடைய வெற்றியின் இரகசியம் பலத்திற்காகவும் கிருபைக்காகவும் அவருடைய நாமத்தில் கேட்பதில் இருக்கும் என்று அவர் விளக்கினார். அவர்களுக்காக வேண்டுதல் செய்வதற்காக அவர் பிதாவின் சமூகத்தில் இருப்பார். தாழ்மையுடன் விண்ணப்பஞ்செய்பவனின் ஜெபத்தை, அந்த ஆத்துமாவின் சார்பாக அவருடைய சொந்த வாஞ்சையைப்போல அவர் முன்வைக்கிறார். ஒவ்வொரு உண்மையான ஜெபமும், பரலோகத்தில் கேட்கப்பட்டிருக்கிறது. அது சரளமாக வெளிக்காட்டப்படாததாக இருக்கலாம். ஆனால் இருதயம் அதில் இருக்குமானால் இயேசு ஊழியஞ்செய்துகொண்டிருக்கும் பரிசுத்த ஸ்தலத்திற்கு அது உயரும். எந்தவிதமான குளறுபடியான விகாரமிக்க ஒரு வார்த்தையும் இல்லாததாக, அழகும் சுகந்தவாசனையுமிக்க அவருடைய சொந்த பூரணமான சுகந்தவாசனையுடன் அதை அவர் பிதாவிற்கு முன்பாக வைப்பார். (17)

உண்மை, நேர்மை ஆகியவைகளின் பாதை, தடைகளிலிருந்து விடுபட்ட ஒரு பாதையாக இருப்பதில்லை. ஆனால் ஒவ்வொரு தொல்லையிலும் ஜெபத்திற்கான ஒரு அழைப்பை நாம் பார்க்கவேண்டியவர்களாக இருக்கிறோம். தேவனிடமிருந்து ஏதாவது வல்லமையைப் பெற்றுக்கொள்ளாமல், வாழ்ந்து கொண்டிருக்கும் ஒருவனும் இல்லை. அது எங்கிருந்து வருகிறதோ, அதன் ஆதாரம் மிகவும் பலவீனமான மனிதனுக்குங்கூடத் திறக்கப்பட்டிருக்கிறது. “நீங்கள் என் நாமத்தினாலே எதைக் கேட்பீர்களோ, குமாரனில் பிதா மகிமைப்படும்படியாக, அதைச் செய்வேன். என் நாமத்தினாலே நீங்கள் எதைக் கேட்டாலும் அதை நான் செய்வேன்.” (18)

“என் நாமத்தினாலே” ஜெபிக்கவேண்டும் என்று கிறிஸ்து சீடர்களுக்குக் கட்டளையிட்டார். கிறிஸ்துவின் நாமத்தினால் அவருடைய அடியார்கள் தேவனுக்குமுன் நிற்கவேண்டியவர்களாக உள்ளனர். அவர்களுக்காகச் செய்யப்பட்ட தியாகபலியின் விலைமதிப்பின் மூலமாக, அவர்கள்

தேவனுடைய பார்வையில் மதிப்புமிக்கவர்களாக உள்ளனர். கிறிஸ்துவினால் அணிவிக்கப்பட்டுள்ள நீதியினால் அவர்கள் விலைமதிப்புமிக்கவர்களாகக் கணக்கிடப்பட்டுள்ளனர். கர்த்தருக்குப் பயப்படுகிறவர்களைக் கிறிஸ்துவிற்காக அவர் மன்னிக்கிறார். பாவியின் தீய தன்மைகளை அவர் பார்ப்பதில்லை. தமது குமாரனை விசுவாசிக்கும் அவர்களில், அவர் தமது குமாரனின் சாயலைக் காண்கிறார். (19)

தேவனுடைய மக்கள் தங்கள்மீது கீழான மதிப்பு வைக்கும்போது, கர்த்தர் ஏமாற்றமடைகிறார். அவரால் தெரிந்துகொள்ளப்பட்டுள்ள அவருடைய பிறப்புரிமையானவர்கள் தங்கள்மீது அவர் வைத்துள்ள விலைக்குத்தக்கவிதமாக தங்களை மதிக்கவேண்டும் என்று அவர் விரும்புகிறார். அவர்களுக்கு அவர் தேவைப்பட்டார். அப்படியில்லாவிட்டால், அவர்களை மீட்பதற்காக தமது குமாரனை அப்படிப்பட்ட அதிகமான மகத்துவமான பயணத்திற்கு (உயிரைப் பணயம் வைக்கும்) அனுப்பியிருந்திருக்கமாட்டார். அவர் அவர்களுக்கு உதவியாக இருக்கிறார். அவருடைய நாமத்தை மகிமைப்படுத்துவதற்கேதுவாக, அவர்மீது மிகவும் உயர்வான கோரிக்கைகளை அவர்கள் வைக்கும்போது, அவர் மிகவும் மகிழ்ச்சியடைகிறார். அவருடைய வாக்குத்தத்தங்களை விசுவாசித்தால், அவர்கள் பெரிய காரியங்களை எதிர்பார்க்கலாம். (20)

ஆனால் கிறிஸ்துவின் நாமத்தினால் ஜெபம்செய்வது என்பது அதிக அர்த்தமுள்ளது. அவருடைய குணத்தை ஏற்றுக்கொள்ளுவதும், அவருடைய ஆவியை வெளிக்காட்டுவதும், அவர் செய்த பணிகளைச் செய்வதும் அதன் பொருளாக இருக்கிறது. இரட்சகரின் வாக்குத்தத்தம் “நீங்கள் என்னிடத்தில் அன்பாயிருந்தால் என் கற்பனைகளைக் கைக்கொள்ளுங்கள்” என்னும் நிபந்தனையின்பேரில் கொடுக்கப்பட்டிருக்கிறது. அவர் மனிதர்களைப் பாவத்தில் இரட்சிக்காமல், பாவத்திலிருந்து இரட்சிக்கிறார். அவரை நேசிப்பவர்கள் அவர்களுடைய அன்பைக் கீழ்ப்படிதலினால் காட்டுவார்கள். (21)

உண்மையான கீழ்ப்படிதல்கள் அனைத்தும் இருதயத்திலிருந்து வருகிறது. அது மனதிலிருந்து கிறிஸ்துவிற்குக் கீழ்ப்படிவதாகும். நாம் சம்மதிப்போமானால் அவர் நமது எண்ணங்களோடும் குறிக்கோள்களோடும் தம்மை அடையாளப்படுத்திக் காட்டுவார். அவரது சித்தத்திற்கு இசைவாக நமது இதயங்களையும் உள்ளங்களையும் இணைப்பார். அப்போது, அவருக்கு கீழ்ப்படியும்போது, நமது சொந்த உணர்வுகளையே செயற்படுத்துவோம். சுத்திகரிக்கப்பட்டுப் பரிசுத்தமடைந்துள்ள (நமது) சித்தம், அவருடைய சேவையைச் செய்வதில் மிகவும் உயர்வான

மகிழ்ச்சியைக் காணும். தேவனை அறிந்துகொள்வது நமது சிறப்புரிமை என்பதை நாம் அறிந்துகொள்ளும்போது, நமது வாழ்க்கை தொடர்ச்சியான கீழ்ப்படிதலுள்ள ஒரு வாழ்க்கையாக இருக்கும். கிறிஸ்துவின் குணத்தைப் பாராட்டுவதின்மூலமாக, தேவனுடன் தொடர்புகொள்வதின்மூலமாக, பாவம் நமக்கு வெறுப்புள்ளதாகும். (22)

பலத்திற்காக, பலமுள்ளதை நாம் பற்றிக்கொள்வோமானால், கிறிஸ்து மானுடத்தில் நியாயப்பிரமாணத்தின்படி வாழ்ந்ததைப்போல நாமும் வாழ்வோம். ஆனால் நமது கடமையின் பொறுப்பைப் பிறர்மீது வைப்பவர்களாக நாம் இருக்கக்கூடாது. நாம் என்ன செய்யவேண்டும் என்பதை அவர்கள் நமக்குக் கூறுவதற்காக நாம் காத்திருக்கக்கூடாது. ஆலோசனைக்காக நம்மால் மானுடத்தைச் சார்ந்திருக்கமுடியாது. வேறு ஒருவருக்கு விருப்பத்துடன் போதனை செய்வதைப்போலவே, கர்த்தர் நமக்கும் விருப்பத்துடன் போதனை செய்வார். விசுவாசத்துடன் நாம் அவரிடத்திற்கு வருவோமானால், அவர் தமது இரகசியங்களை நம்மோடு நேரடியாகப் பகிர்ந்துகொள்வார். அவர் ஏனோக்குடன் தொடர்புகொண்டதைப்போல நம்முடன் தொடர்புகொள்ள நெருங்கி வரும்போது, நமது இருதயங்கள் அடிக்கடி நமக்குள் கொழுந்துவிட்டெரியும். தேவனுக்குப் பிரியமில்லாத எந்தக் காரியத்தையும் செய்வதில்லை என்று முடிவுசெய்பவர்கள், அவர்களுடைய காரியத்தை தேவனுக்குமுன் வைத்தபின், எந்த நடத்தையைப் பின்பற்றவேண்டும் என்பதை அறிந்துகொள்ளுவார்கள். அப்பொழுது, அவர்கள் ஞானத்தை மட்டுமின்றி பலத்தையும் பெற்றுக்கொள்வார்கள். கிறிஸ்து வாக்குத்தத்தம் பண்ணியிருப்பதைப்போல ஊழியஞ்செய்வதற்கும் கீழ்ப்படிவதற்கும் வல்லமை அவர்களுக்கு அருளப்படும். மானுடத்தின் தலைவராகவும் பிரதிநிதியாகவும் இருக்கும் கிறிஸ்துவிற்கு எவைகளெல்லாம் கொடுக்கப்பட்டிருந்ததோ அவைகளனைத்தும், விழுந்துபோன மனிதர்களின் தேவைகளுக்காக வழங்கப்படும். “அவருடைய கற்பனைகளை நாம் கைக்கொண்டு அவருக்குமுன்பாகப் பிரியமானவைகளைச் செய்கிறபடியினால் நாம் வேண்டிக்கொள்ளுகிறதெதுவோ அதை அவராலே பெற்றுக்கொள்ளுகிறோம்”–1 யோவான் 3:22. (23)

கிறிஸ்து தியாகபலியாக தம்மைத்தாமே செலுத்துவதற்குமுன், மிகவும் முக்கியமானதும் நிறைவானதுமான ஒரு ஈவை—கிருபையின் எல்லையில்லாத ஆதாரங்களை அவர்கள் அடைந்துகொள்ளுவதற்கேதுவாக அவர்களுக்குச் சமீபமாகக் கொண்டுவரக்கூடிய ஒரு ஈவை, தமது அடியார்களுக்கு அருளுவதற்கு வகைதேடியிருந்தார். “நான் பிதாவை வேண்டிக்கொள்ளுவேன், அப்பொழுது என்றென்றைக்கும் உங்களுடனேகூட இருக்கும்படிக்குச் சத்திய

ஆவியாகிய வேறொரு தேற்றரவாளனை அவர் உங்களுக்குத் தந்தருளுவார். உலகம் அந்தச் சத்திய ஆவியானவரைக் காணாமலும் அறியாமலும். இருக்கிறபடியால் அவரைப் பெற்றுக்கொள்ளமாட்டாது; அவர் உங்களுடனே வாசம்பண்ணி உங்களுக்குள்ளே இருப்பதால், நீங்கள் அவரை அறிவீர்கள். நான் உங்களைத் திக்கற்றவர்களாகவிடேன், உங்களிடத்தில் வருவேன்" (யோவான் 14:16–18) என்றார். (24)

இதற்குமுன்னரும் ஆவியானவர் இந்த உலகத்தில் இருந்தார். மீட்பின் பணியின் ஆரம்பத்திலிருந்தே அவர் மனிதர்களின் இருதயங்களின்மீது அசைவாடிக்கொண்டிருந்தார். ஆனால் கிறிஸ்து உலகத்திலிருந்தபோது, சீடர்கள் வேறு உதவியாளரின்மீது விருப்பமுள்ளவர்களாக இருக்கவில்லை. அவருடைய பிரசன்னத்தை இழக்கும்வரை ஆவியானவர் அவசியம் என்பதை அவர்கள் உணரமாட்டார்கள். பின்னர் அவர் வருவார். (25)

பரிசுத்த ஆவியானவர் கிறிஸ்துவின் பிரதிநிதியாக இருக்கிறார். ஆனால் மானுடத்தின் குறிப்பிடத்தக்க தோற்றம் இல்லாதவராகவும் அதிலிருந்து தனித்தியங்குபவராகவும் இருக்கிறார். மனித வடிவத்துடனிருந்த கிறிஸ்துவால் எல்லா இடங்களிலும் நேரடியாக இருக்கமுடியவில்லை. அவர்களுக்காக அவர் பிதாவினிடத்திற்குச் செல்லவும், பூமியில் அவருக்கடுத்தவராக இருக்கும்படி பரிசுத்த ஆவியானவரை அனுப்பவும் வேண்டியதாக இருந்தது. அவரே இங்கு இருந்திருப்பாரானால், கிறிஸ்துவோடு தனி உறவு வைத்துக்கொள்ளமுடியாததாலும், நாம் வசிக்கும் இடத்தினாலும் எவரும் எந்த அனுகூலத்தையும் அவரிடமிருந்து பெறமுடிந்திருக்காது. ஆவியானவரால் எல்லாருக்கும் இரட்சகரோடு தொடர்புகொள்ளமுடியும். இந்த அர்த்தத்தில், அவர் உயரே எழுந்தருளிச் செல்லும்போது, அவர்களுக்கு மிகவும் சமீபமாக இருப்பார். (26)

"என்னிடத்தில் அன்பாயிருக்கிறவன் என் பிதாவுக்கு அன்பாயிருப்பான்; நானும் அவனில் அன்பாயிருந்து, அவனுக்கு என்னை வெளிப்படுத்துவேன்." இயேசு சீடர்களின் எதிர்காலத்தை வாசித்தார். ஒருவன் கழுமரத்திற்கும், ஒருவன் சிலுவைக்கும் கொண்டுவரப்படுவதையும், ஒருவன் கடலின் மத்தியிலிருக்கும் தனிமையான ஓர் இடத்திற்கு நாடுகடத்தப்படுவதையும், மற்றவர்கள் உபத்திரவத்திற்கும் மரணத்திற்கும் கொண்டுவரப்படுவதையும் அவர் கண்டார். அவர்களுடைய ஒவ்வொரு பரீட்சையின்போதும், அவர்களுடன் அவர் இருப்பார் என்னும் வாக்குத்தத்தத்தினால் அவர்களை அவர் தைரியப்படுத்தினார். அந்த வாக்குத்தத்தம், அதன் வலிமையில் எதையும் இழந்திருக்கவில்லை. அவருக்காகச் சிறையில் கிடப்பவர்களாகவும் அல்லது தனிமையான தீவுகளுக்குத் துரத்திவிடப்பட்டவர்களாகவும் இருக்கும்

அவருடைய விசுவாசமிக்க ஊழியக்காரர்களின் எல்லாக் காரியங்களையும் கர்த்தர் அறிந்திருக்கிறார். அவருடைய சொந்தப் பிரசன்னத்தினால் அவர்களை அவர் தேற்றுகிறார். அநீதியான நியாயசங்கங்களின் கூண்டுகளில் சத்தியத்தின் காரணமாக விசுவாசி நிற்கும்போது, கிறிஸ்து அவனுக்கருகில் நிற்கிறார். அவன்மீது விழும் நிந்தனைகள் யாவும், கிறிஸ்துவின்மேல் விழுகின்றன. தமது சீடனின் வடிவில் இருக்கும் கிறிஸ்து மறுபடியும் ஆக்கினைக்குட்படுத்தப்படுகிறார். சிறைச்சாலைச் சுவர்களுக்கிடையில் ஒருவன் சிறைவைக்கப்பட்டிருக்கும்போது, கிறிஸ்து தமது அன்பினால் அவனுடைய இருதயத்தை மகிழ்ச்சியால் நிறைக்கிறார். அவருக்காக ஒருவன் மரணத்தை அனுபவிக்கும்போது, "மரித்தேன், ஆனாலும், இதோ, சதாகாலங்களிலும் உயிரோடிருக்கிறேன், ஆமென்; நான் மரணத்திற்கும் பாதாளத்திற்குமுரிய திறவுகோல்களை உடையவராயிருக்கிறேன்" (வெளிப்படுத்தல் 1:18) என்கிறார். எனக்காகத் தியாகஞ்செய்யப்பட்டிருக்கும் ஜீவன், நித்திய மகிமைக்கென்று பாதுகாக்கப்பட்டிருக்கிறது என்று கிறிஸ்து கூறுகிறார். (27)

எல்லா நேரங்களிலும், எல்லா இடங்களிலும், எல்லாத் துயரங்களிலும், எல்லாத் துன்பங்களிலும், மனத்தோற்றம் இருளாகக் காணப்படும்போதும், எதிர்காலம் குழப்பமுடையதாக இருக்கும்போதும், நாம் உதவியற்று தனித்திருப்பதாக உணரும்போதும், விசுவாசமுள்ளவர்களின் ஜெபத்திற்கு மறுமொழியாகத் தேற்றரவாளன் அனுப்பிவைக்கப்படுவார். சூழ்நிலைகள் பூமிக்குரிய ஒவ்வொரு நண்பனிடத்திலிருந்தும் நம்மைப் பிரித்துவிடலாம். ஆனால் பரலோகத் தேற்றரவாளனிடத்திலிருந்து எந்தச் சூழ்நிலையினாலும் தூரத்தினாலும் நம்மைப் பிரிக்கமுடியாது. நாம் எங்கே இருந்தாலும், நாம் எங்கே சென்றாலும், நம்மை ஆதரிக்கவும், தாங்கவும், தூக்கி நிறுத்தவும், உற்சாகமுள்ளவர்களாக வைக்கவும் அவர் எப்பொழுதும் நமது பக்கத்தில் இருக்கிறார். (28)

கிறிஸ்துவின் வார்த்தைகளை அவைகளின் ஆவிக்குரிய பொருளில் புரிந்துகொள்ள சீடர்கள் தொடர்ந்து தவறியிருந்தனர். எனவே மீண்டும் அதன் பொருளை அவர்களுக்கு விளக்கிக் கூறினார். அவர் ஆவியினால் தம்மை அவர்களுக்கு வெளிக்காட்டுவார் என்று கூறினார். "என் நாமத்தினாலே பிதா அனுப்பப்போகிற பரிசுத்த ஆவியாகிய தேற்றரவாளனே எல்லாவற்றையும் உங்களுக்குப் போதிப்பார்." அதற்குப்பின் என்னால் புரிந்துகொள்ளமுடியவில்லை என்று நீங்கள் கூறமாட்டீர்கள். இனி நீங்கள் ஒரு கண்ணாடியின்மூலமாக, மங்கலாகப் பார்க்கமாட்டீர்கள். நீங்கள் சகல பரிசுத்தவான்களுடனுங்கூட கிறிஸ்துவினுடைய அன்பின் அகலமும் நீளமும்,

ஆழமும், உயரமும் இன்னதென்று உணர்ந்துகொள்ளுவீர்கள். (எபேசியர் 3:18,19). (29)

கிறிஸ்துவின் வாழ்க்கைக்கும் பணிக்கும் சீடர்கள் சாட்சி கொடுக்க வேண்டியவர்களாக இருந்தனர். பூமியின்மேலுள்ள சகல மனிதர்களுடனும் அவர்களுடைய வார்த்தைகளின்மூலமாக அவர் பேசவேண்டியவராக இருந்தார். ஆனால் கிறிஸ்துவின் அவமானத்திலும் மரணத்திலும் அவர் பெரும்பரீட்சைகளையும் ஏமாற்றங்களையும் அனுபவிக்கவேண்டிவர்களாக இருந்தனர். இந்த அனுபவத்திற்குப்பின் அவர்களுடைய வார்த்தை மிகவும் சரியானதாக இருக்கவேண்டும் என்பதற்காக இயேசு: "நான் உங்களுக்குச் சொன்ன எல்லாவற்றையும் உங்களுக்கு நினைப்பூட்டுவார்" என்று வாக்குத்தத்தம் பண்ணினார். (30)

"இன்னும் அநேகங்காரியங்களை நான் உங்களுக்குச் சொல்ல வேண்டியதாயிருக்கிறது, அவைகளை நீங்கள் இப்பொழுது தாங்கமாட்டீர்கள். சத்தியஆவியாகிய அவர் வரும்போது, சகல சத்தியத்திற்குள்ளும் உங்களை நடத்துவார்; அவர் தம்முடைய சுயமாய்ப் பேசாமல், தாம் கேள்விப்பட்டவைகள் யாவையுஞ்சொல்லி, வரப்போகிற காரியங்களை உங்களுக்கு அறிவிப்பார். அவர் என்னுடையதில் எடுத்து உங்களுக்கு அறிவிப்பதினால் என்னை மகிமைப்படுத்துவார்" என்று அவர் தொடர்ந்தார். இயேசு, அவருடைய சீடர்களுக்கு முன்னால் சத்தியத்தின் ஒரு விசாலமான பாதையைத் திறந்திருந்தார். ஆனால் வேதபாரகர்கள் பரிசேயர்கள் ஆகியோரின் பாரம்பரியங்களிலிருந்தும் பழமொழிகளிலிருந்தும் வேறுபட்டதாக இருந்த அவருடைய பாடங்களைத் தெளிவாக கண்டறிந்து பின்பற்றுவது அவர்களுக்கு மிகவும் கடினமாக இருந்தது. ரபிமார்களின் போதனைகளை தேவனுடைய குரல் என்று ஏற்றுக்கொள்ளும்படி அவர்கள் போதிக்கப்பட்டிருந்தனர். அவை தொடர்ந்து அவர்களுடைய நுண்ணுணர்வுகளை வனைந்திருந்தது. பூமிக்குரிய யோசனைகள், பூமிக்குரிய காரியங்கள் ஆகியவை இன்னும் அவர்களுடைய மனங்களில் ஒரு பெரிய இடத்தை உடையதாக இருந்தது. கிறிஸ்துவின் இராஜ்யத்தின் ஆவிக்குரிய தன்மையைப்பற்றி அவர் அடிக்கடி அவர்களுக்கு விளக்கியிருந்தபோதிலும், அவர்கள் அதைப் புரிந்துகொள்ளாதவர்களாக இருந்தனர். அவர்களுடைய மனங்கள் குழப்பமடைந்தவைகளாக இருந்திருந்தன. கிறிஸ்து அவர்களுக்குமுன் வைத்த வேதவாக்கியங்களின் மதிப்பை அவர்கள் அறியாமலிருந்தனர். அவருடைய பாடங்களில் அநேகமானவை அவர்களில் இழக்கப்பட்டுப் போனவைகள்போலிருந்தன. அவருடைய வார்த்தைகளின் உண்மையான பொருளை அவர்கள் பற்றிக்கொள்ளவில்லை என்பதை இயேசு கண்டார்.

கூறப்பட்டிருந்த இவைகளை அவர்களுடைய மனங்களுக்குப் பரிசுத்த ஆவியானவர் திரும்பவும் கொண்டுவருவார் என்று அவர் மன உருக்கத்துடன் வாக்குத்தத்தம் பண்ணினார். சீடர்களால் அறிந்துகொள்ளக்கூடாதவைகளாக இருந்த அநேகக் காரியங்களை அவர் கூறாமல் விட்டுவிட்டிருந்தார். இவைகளுங்கூட ஆவியானவரால் அவர்களுக்குத் திறக்கப்படவேண்டும். பரலோகக் காரியங்களைப்பற்றி ஒரு பாராட்டுதலை உடையவர்களாக இருக்கும்படி அவர்களுடைய புரிந்துகொள்ளுதலை, ஆவியானவர் எழுப்பவேண்யவராக இருந்தார். “சத்தியஆவியாகிய அவர் வரும்போது, சகல சத்தியத்திற்குள்ளும் உங்களை நடத்துவார்” என்று இயேசு கூறினார். (31)

தேற்றரவாளன் “சத்திய ஆவியானவர்” என்று அழைக்கப்படுகிறார். சத்தியத்தை விளக்குவதும் அதன்படி தொடர்ந்து செயலாற்றுவதும் அவருடைய பணியாக இருக்கிறது. முதலாவது அவர் சத்திய ஆவியாக இருதயத்தில் வாசம்செய்து, இவ்விதமாக தேற்றரவாளனாகிறார். சத்தியத்தில் ஆறுதலும் சமாதானமும் இருக்கிறது. ஆனால் தவறில் உண்மையான சமாதானத்தையும் அல்லது ஆறுதலையும் காணமுடியாது. சாத்தான் தவறான தத்துவ விளக்கங்களின்மூலமாகவும், பாரம்பரியங்களின் மூலமாகவும் மனங்களின்மீதான அவனுடைய வல்லமையை ஆதாயமாக அடைந்துகொள்ளுகிறான். தவறான தரங்களில் மனிதர்களைத் திருப்பிவிடுவதினால்தான், அவன் குணத்தை தவறானவிதத்தில் வடிவமைக் கிறான். வேதவாக்கியங்களின்மூலமாக பரிசுத்த ஆவியானவர் மனங்களிடம் பேசி, இருதயத்தின்மீது சத்தியத்தை உணர்த்துகிறார். இவ்விதமாக அவர் தவறை வெளிக்காட்டி, அதை ஆத்துமாவிலிருந்து வெளியேற்றுகிறார். தேவனுடைய வார்தையின்மூலமாகச் செயலாற்றும் பரிசுத்த ஆவியினால் கிறிஸ்து அவரால் தெரிந்துகொள்ளப்பட்ட மக்களை அவருக்குக் கீழ்ப்படுத்துகிறார். (32)

பரிசுத்த ஆவியானவரின் செயற்பாடுகளைப்பற்றி இயேசு அவருடைய சீடர்களுக்கு விவரித்தபோது, அவருடைய சொந்த இருதயத்தை ஏவியிருந்த மகிழ்ச்சியினாலும் நம்பிக்கையினாலும் அவர்களை ஏவு வதற்கு அவர் வகைதேடியிருந்தார். அவருடைய சபைக்காக அவர் ஏற்படுத்தின ஏராளமான உதவியின் காரணத்தால் மகிழ்ந்து களி கூர்ந்தார். அவருடைய மக்களை உயர்த்துவதற்காகப் பிதாவிடமிருந்து அவரால் வரவேற்கக்கூடியதாக இருந்த ஈவுகளனைத்திலும் மிகவும் உயர்ந்தவராகப் பரிசுத்த ஆவியானவர் இருந்தார். புதுப்பிக்கிற ஒரு முகவராக, ஆவியானவர் அருளப்படவேண்டியவராக இருந்தார். அது

இல்லாவிட்டால், கிறிஸ்துவின் தியாகபலி பலனற்றதாக இருந்திருக்கும். தீமையின் வல்லமை நூற்றாண்டுகளாகப் பலமடைந்துகொண்டிருந்தது. சாத்தானின் இந்த அடிமைத்தனத்திற்கு மனிதர்கள் கீழ்ப்படிவது ஆச்சரியமாக இருந்தது. தேவத்துவத்தின் மூன்றாம் நபரின் பலத்த ஏதுகரத்தினால்மட்டுமே பாவத்தைத் தடுக்கவும் மேற்கொள்ளவும் முடியும். அவர் மாறுபட்ட எந்த சக்தியுடனும் வராமல், தெய்வீக வல்லமையின் நிறைவுடன் வருவார். உலக மீட்பரால் என்ன செய்யப்பட்டிருக்கிறதோ, அதை உரிமையுடையதாக ஆக்குவது ஆவியானவர்தான். ஆவியானவரால்தான் இருதயம் தூய்மைப் படுத்தப்படுகிறது. ஆவியானவரின்மூலமாக விசுவாசிப்பவன், தெய்வீக இயல்பில் பங்குபெறுகிறான். பிறவிக் குணங்கள் அனைத்தின்மீதும், பழக்கப்படுத்தப்பட்டுள்ள தீமையான குணங்களின்மீதும் வெற்றியடைவதற்கும் அவருடைய சொந்த குணத்தைச் சபையின்மீது பதிப்பதற்கும் கிறிஸ்து தமது ஆவியை ஒரு தெய்வீக வல்லமையாகக் கொடுத்திருக்கிறார். (33)

ஆவியானவரைப்பற்றி இயேசு: "அவர் என்னை மகிமைப்படுத்துவார்" என்று கூறினார். இரட்சகர் அவருடைய அன்பின் செயல்விளக்கத்தினால், பிதாவை மகிமைப்படுத்த வந்தார். அதேவிதமாக ஆவியானவர் அவருடைய கிருபையை உலகத்திற்கு வெளிக்காட்டுவதினால், கிறிஸ்துவை மகிமைப்படுத்தவேண்டியவராக இருந்தார். மானுடத்தின்மீது தேவனுடைய அதே சாயல் திரும்பவும் உண்டுபண்ணப்படவேண்டும். தேவனுடைய மக்களின் குணத்தில் உள்ள பூரணம், தேவனுடைய மேன்மை கிறிஸ்துவின் கனம் ஆகியவைகளுடன் சம்பந்தப்பட்டிருக்கிறது. (34)

"அவர் வந்து, பாவத்தைக்குறித்தும், நீதியைக்குறித்தும், நியாயத் தீர்ப்பைக்குறித்தும், உலகத்தைக் கண்டித்து உணர்த்துவார்." பரிசுத்த ஆவியானவரின் தொடர்ச்சியான பிரசன்னமும் உதவியும் இல்லாதபோது, வார்த்தையைப் பிரசங்கஞ்செய்வது பயனில்லாததாக இருக்கும். அவர் ஒருவர்தான் தெய்வீக சத்தியத்தை வல்லமையுடன் பிரசங்கஞ்செய்யும் போதகராக இருப்பார். ஆவியானவருடன் சேர்ந்து சத்தியம் இருதயத்திற்குச் செல்லும்போதுமட்டுமே அது மனச்சாட்சியை விழிப்பூட்டி வாழ்க்கையை மறுரூபப்படுத்தும். தேவனுடைய வார்த்தையின் எழுத்தை முன்வைக்க ஒருவர் திறமைமிக்கவராக இருக்கலாம். அவர் அதன் கட்டளைகளுடனும் வாக்குத்தத்தங்களுடனும் அறிமுகமான ஒருவராக இருக்கலாம். ஆனால் பரிசுத்த ஆவியானவர் சத்தியத்தை உள்ளத்தில் நிலைப்படுத்தாதவரை எந்த ஆத்துமாவும் பாறையின்மீது விழுந்து நொறுங்க முடியாது. கல்வி எந்த அளவில் இருந்தாலும், அனுகூலங்கள் எவ்விதமாகப் பெரியதாக இருந்தாலும், தேவஆவியின் ஒத்துழைப்பு இல்லாதவரை, ஒருவரை

தெய்வீக ஒளியின் வாய்க்காலாகச் செய்யமுடியாது. சுவிசேஷத்தின் விதை பரலோகத்தின் பனியினால் உயிரடையும்படி எழுப்பப்படாதவரை, சுவிசேஷ விதையை விதைப்பது ஒரு வெற்றியாக இருக்காது. கிறிஸ்து பரலோகத்திற்கு எழுந்தருளிச்சென்றபின், புதிய எற்பாட்டின் ஒரு புத்தகம் எழுதப்படுவதற்குமுன், சுவிசேஷத்தின் ஒரு போதனை பிரசங்கஞ்செய்யப்படுவதற்குமுன், ஜெபம் செய்துகொண்டிருந்த அப்போஸ்தலர்களின்மீது பரிசுத்த ஆவியானவர் வந்தார். அப்பொழுது எதிரிகளின் சாட்சி: "எருசலேமை உங்கள் போதகத்தினாலே நிரப்பி"னீர்கள் (அப்போஸ்தலர் 5:28) என்பதாக இருந்தது. (35)

பரிசுத்த ஆவியாகிய ஈவை கிறிஸ்து அவருடைய சபைக்கு வாக்குத்தத்தஞ்செய்திருக்கிறார். அந்த வாக்குத்தத்தம், முதல் சீடர் களுக்குச் சொந்தமாக இருந்ததைப்போல நமக்கும் சொந்தமாக இருக்கிறது. ஆனால் மற்ற அனைத்து வாக்குத்தத்தங்களையும்போலவே அதுவும் நிபந்தனையில்பேரில் கொடுக்கப்பட்டிருக்கிறது. அநேகர், கர்த்தருடைய வாக்குத்தத்தத்தின்மீது உரிமைபாராட்டி அதை நம்பிக்கொண்டிருக்கின்றனர்; கிறிஸ்துவைப்பற்றியும் பரிசுத்த ஆவியைப்பற்றியும் பேசுகின்றனர்; ஆயினும் அவர்கள் எந்தவிதமான நன்மையையும் பெற்றுக்கொள்ளுவதில்லை. தெய்வீக ஏதுகரங்களினால் வழிகாட்டப்படவும் கட்டுப்படுத்தப்படவும் அவர்கள் ஆத்துமாவை சரணடையச் செய்வதில்லை. நம்மால் பரிசுத்த ஆவியைப் பயன்படுத்தமுடியாது. ஆவியானவர் நம்மை பயன்படுத்தவேண்டும். "தேவனே தம்முடைய தயவுள்ள சித்தத்தின்படி விருப்பத்தையும் செய்கையையும் உங்களில் உண்டாக்குகிறவராயிருக்கிறார்"–பிலிப்பியர் 2:13. ஆவியின்மூலமாக, அவருடைய மக்களில் செயலாற்றுகிறார். ஆனால் அநேகர் இதற்குக் கீழ்ப்படியமாட்டார்கள். அவர்கள் தங்களைத் தாங்களே நிர்வாகஞ்செய்ய விரும்புகின்றனர். இதன் காரணமாகத்தான் அவர்கள் பரலோகத்தின் அந்த ஈவைப் பெற்றுக்கொள்ளவில்லை. எவர்கள் தாழ்மையுடன் தேவனுக்கென்று காத்திருக்கிறார்களோ அவர்களுக்கு ஆவி கொடுக்கப்பட்டிருக்கிறது. அவர்களுடைய கோரிக்கை, வரவேற்பு ஆகியவைகளுக்காக தேவன் காத்துக்கொண்டிருக்கிறார். விசுவாசத்தினால் கேட்டுக்கொள்ளப்பட்ட வாக்குத்தத்தம் பண்ணப்பட்டுள்ள இந்த ஆசீர்வாதம், அத்துடன் மற்ற எல்லா ஆசீர்வாதங்களையும் கொண்டுவருகிறது. அது கிறிஸ்துவின் கிருபையின் ஐசுவரியத்திற்குத்தக்கவிதமாகக் கொடுக்கப்பட்டிருக்கிறது. அவர் ஒவ்வொரு ஆத்துமாவின் பெற்றுக்கொள்ளும் அளவிற்குத்தக்கதாக வழங்குவதற்கு ஆயத்தமாக இருக்கிறார். (36)

சீடர்களுக்கான இந்தப் பிரசங்கத்தில் இயேசு அவருடைய சொந்தப் பாடுகள், மரணம் ஆகியவைபற்றிய துக்கம் நிறைந்த மறைவான குறிப்புகள்

எதையும் சுட்டிக்காட்டவில்லை. அவர்களுக்கான அவருடைய கடைசிப் பரம்பரைச் சொத்தாக பரம்பரைச் சமாதானம் இருந்தது. “சமாதானத்தை உங்களுக்கு வைத்துப்போகிறேன், என்னுடைய சமாதானத்தையே உங்களுக்குக் கொடுக்கிறேன்; உலகம் கொடுக்கிறபிரகாரம் நான் உங்களுக்குக் கொடுக்கிறதில்லை. உங்கள் இருதயம் கலங்காமலும் பயப்படாமலும் இருப்பதாக” என்றார். (37)

அந்த மேல்வீட்டின் அறையைவிட்டு வெளியேறுமுன், இரட்சகர் சீடர்களை ஒரு துதியின் பாடலில் நடத்தினார். அவருடைய குரல் துக்கங்கொண்டாடும் புலம்பலின் சத்தமாகக் கேட்கப்படாமல், பஸ்காவின் அல்லேலூயாவை உடைய மகிழ்ச்சியின் தொனியில் கேட்கப்பட்டது. (38)

> “ஜாதிகளே, எல்லாரும் கர்த்தரைத் துதியுங்கள்; ஜனங்களே, எல்லாரும் அவரைப் போற்றுங்கள். அவர் நம்மேல் வைத்த கிருபை பெரியது; கர்த்தரின் உண்மை என்றென்றைக்குமுள்ளது. அல்லேலூயா” சங்கீதம் 117. (39)

அந்தப் பாடலுக்குப்பின் அவர்கள் வெளியில் சென்றார்கள். ஒலிவமலைக்கு நேராக, நகரத்தின் வாசலைக் கடந்து, ஜனக்கூட்டமிக்க தெருக்களின்வழியாகச் சென்றார்கள். ஒவ்வொருவரும் அவரவருடைய எண்ணத்தில் தீவிரமான சிந்தனையிருக்க மெதுவாக இறங்கிச் சென்றார்கள். அந்த மலைக்கு நேராக அவர்கள் இறங்கத் தொடங்கினபோது, மிகவும் ஆழ்ந்த துயரமிக்க குரலில் இயேசு: “மேய்ப்பனை வெட்டுவேன், மந்தையின் ஆடுகள் சிதறடிக்கப்படும் என்று எழுதியிருக்கிறபடி, இந்த இராத்திரியிலே நீங்கள் எல்லாரும் என்னிமித்தம் இடறலடைவீர்கள்” (மத்தேயு 26:31) என்று கூறினார். சீடர்கள் துயரத்துடனும் ஆச்சரியத்துடனும் கவனித்தனர். கப்பர்நகூமின் ஜெப ஆலயத்தில் கிறிஸ்து தம்மை “ஜீவ அப்பம் நானே” என்று கூறினபோது, எவ்விதமாக அநேகர் எதிர்ப்படைந்து அவரைவிட்டுச் சென்றார்கள் என்பதை அவர்கள் நினைத்துப் பார்த்தார்கள். ஆனால் அந்தப் பன்னிருவரும் தாங்கள் விசுவாசமில்லாதவர்கள் என்பதைக் காட்டவில்லை. அப்பொழுது தனது சகோதரர்களுக்காகப் பேசிய பேதுரு, கிறிஸ்துவின் மீதிருந்த அவனுடைய உத்தம விசுவாசத்தை அறிவித்திருந்தான். அப்பொழுது இரட்சகர்: “பன்னிருவராகிய உங்களை நான் தெரிந்துகொள்ளவில்லையா? உங்களுக்குள்ளும் ஒருவன் பிசாசாயிருக்கிறான்” (யோவான் 6:70) என்று கூறியிருந்தார். மேல்வீட்டு அறையில் பன்னிருவரில் ஒருவன் அவரைக் காட்டிக்கொடுப்பான் என்றும், பேதுரு அவரை மறுதலிப்பான் என்றும் இயேசு கூறினார். ஆனால் இப்பொழுது அவருடைய வார்த்தைகள் அவர்கள் எல்லோரையும் உட்படுத்தியிருந்தது, (40)

இப்பொழுது தீவிரமாக மறுக்கும் விதத்தில்: “உமதுநிமித்தம் எல்லாரும் இடறலடைந்தாலும், நான் இடறலடையேன்” என்னும் பேதுருவின் குரல் கேட்கப்படுகிறது. மேல்வீட்டின் அறையில் “உமக்காக என் ஜீவனையும் கொடுப்பேன்” என்று அவன் அறிவித்திருந்தான். அவன் அவனுடைய இரட்சகரை அதே இரவில் மறுதலிப்பான் என்ற இயேசு அவனை எச்சரித்திருந்தார். அப்பொழுது கிறிஸ்து அவனை நோக்கி: “இன்றைக்கு, இந்த இராத்திரியிலே, சேவல் இரண்டுதரம் கூவுகிறதற்குமுன்னே, நீ மூன்றுதரம் என்னை மறுதலிப்பாய் என்று மெய்யாகவே உனக்குச் சொல்லுகிறேன்” என்றார். அதற்கு அவன்: “நான் உம்மோடே மரிக்கவேண்டியதாயிருந்தாலும் உம்மை மறுதலிக்கமாட்டேன்” என்று உறுதியாய்ச் சொன்னான்; “எல்லாரும் அப்படியே சொன்னார்கள்”—மாற்கு 14:29–31. சுயத்தின்மேலிருந்த நம்பிக்கையில், இவைகளை அறிந்திருந்தவரின் அறிக்கையை அவர்கள் மறுத்தார்கள். அவர்கள் பரீட்சைக்கு ஆயத்தமில்லாதவர்களாக இருந்தனர். சோதனை அவர்களை மேற்கொள்ளும்போது, அவர்களுடைய சொந்த பலவீனத்தை அவர்கள் அறிந்துகொள்வார்கள். (41)

பேதுரு சிறைச்சாலைக்கும் மரணத்திற்கும் அவனுடைய கர்ததருக்கு பின்செல்லுவான் என்று கூறினபோது, அவன் அதனை—அதன் ஒவ்வொரு வார்த்தையையும் அறிந்திருந்தான். ஆனால் அவன் தன்னைப்பற்றி தானே அறியாதவனாக இருந்தான். வாழ்க்கையின் சூழ்நிலைகளை வெளிக்கொண்டுவரக்கூடிய தீமையின் மூலக்கூறுகள் அவனுடைய இருதயத்தில் மறைந்திருந்தன. அவை சந்தர்ப்பங்கள் கொடுக்கப்படும்போது, உயிர்பெற்றுவிடும். அவனுடைய ஆபத்தைப்பற்றி அவன் உணர்வுடையவனாகாதவரை அவை அவனுடைய நித்தியமான அழிவிற்கு அவனை நடத்தும். இரட்சகர் அவனில் உள்ள கிறிஸ்துவின் மேலுள்ள அன்பையும் மேற்கொள்ளுகின்ற கர்வமான சுயத்தின்மீதான அன்பையும் நிச்சயத்தையும் கண்டார். புலனடக்கமற்ற பாவம், ஆவியின் கவனமற்ற தன்மை, பரிசுத்தமடையாத மனநிலை, சோதனைக்குள் பிரவேசிப்பதில் செவிசாய்க்காமலிருக்கும் தன்மை ஆகிய அவனுடைய அதிகமான பலவீனங்கள் அவனுடைய அனுபவத்தில் வெளிக்காட்டப் பட்டிருந்தன. கிறிஸ்துவின் பக்திவிநயமான ஒரு எச்சரிக்கை இருதயத்தை ஆராய்வதற்கான ஒரு அழைப்பாக இருந்தது. சுயத்தின்மீது நம்பிக்கை வைக்காமலிருப்பதும், கிறிஸ்துவின்மீது ஆழமான விசுவாசத்தை கொண்டிருப்பதும், பேதுருவிற்கு அவசியமாயிருந்தது. தாழ்மையுடன் அந்த எச்சரிக்கையைப் பெற்றிருந்தால், அவன் மந்தையின் மேய்ப்பரிடத்தில் அவருடைய ஆடுகளைக் காத்துக்கொள்ளும்படி முறையீடு செய்திருப்பான். கலிலேயாக் கடலில் அவன் மூழ்க நேர்ந்தபோது, “ஆண்டவரே, என்னை

ரட்சியும்" (மத்தேயு 14:30) என்று அவன் கூக்குரலிட்டிருந்தான். அவனுடைய கையைப் பற்றிக்கொள்ளக் கிறிஸ்துவின் கரம் வெளியே நீட்டப்பட்டிருந்தது. அதேவிதமாக இப்பொழுது அவன் என்னை எனது சுயத்திலிருந்து இரட்சியும் என்று இயேசுவை அழைத்திருந்தால் காக்கப்பட்டிருப்பான். ஆனால் பேதுரு நம்பிக்கைக்குரியவனாக இல்லாதிருந்தான் என்று உணர்ந்து அதைக் கொடூரமானதாக நினைத்தான். ஏற்கனவே அவன் இடறல் அடைந்து தன்னுடைய சுயத்தின்மீதான நம்பிக்கையில் அதிகமான பிடிவாதமுள்ளவனானான். (42)

இயேசு மனஉருக்கத்துடன் தமது சீடர்களைப் பார்க்கிறார். சோதனைகளிலிருந்து அவரால் அவர்களைக் காப்பாற்ற முடியாது. ஆனால் அவர்களை ஆறுதலற்றவர்களாக அவர் விட்டுவிடுகிறதில்லை. அவர் கல்லறையின் சங்கிலிகளை உடைக்கவேண்டியவராக இருக்கிறாரென்றும், அவர்கள்மீதான அவருடைய அன்பு தோல்வியடையாததென்றும் அவர் வாக்குறுதி செய்கிறார். "நான் உயிர்த்தெழுந்த பின்பு, உங்களுக்கு முன்னே கலிலேயாவுக்குப் போவேன்" (மத்தேயு 26:32) என்கிறார். மறுதலிப்பிற்கு முன்னேயே அவர்கள் மன்னிப்பின் நிச்சயத்தைப் பெற்றார்கள். அவருடைய மரணத்திற்கும் உயிர்த்தெழுதலிற்கும் பின்னர் அவர்கள் மன்னிக்கப்பட்டனர் என்பதையும், கிறிஸ்துவின் இருதயத்திற்கு அருமையானவர்களாக இருந்தனர் என்பதையும் அறிந்தார்கள். (43)

இயேசுவும் அவருடைய சீடர்களும் அவர் தியானஞ்செய்தவற்கென்றும் ஜெபஞ்செய்வதற்கும் அடிக்கடி சென்றிருந்த ஒரு தனிமையான இடமான ஒலிவமலையின் அடிவாரத்திலிருந்த கெத்செமனே என்னும் இடத்தை நோக்கி, அவர்களுடைய பாதையில் சென்றிருந்தனர். உலகத்திற்கான அவருடைய ஊழியத்தைப்பற்றியும், அவர்கள் அவருடன் தொடரவேண்டியதாக இருந்த ஆவிக்குரிய உறவைப்பற்றியும் இரட்சகர் சீடர்களுக்கு விவரித்துக் கொண்டிருந்தார். இப்பொழுது அவர் அந்தப் பாடத்தைச் சித்தரித்துக் காட்டுகிறார். பிரகாசித்துக்கொண்டிருந்த நிலவொளியில் நன்றாகச் செழித்து வளர்ந்திருந்த திராட்சைச்செடியை அவர் கண்டார். சீடர்களின் கவனத்தை அதன்மீது இழுத்து, அதை ஒரு அடையாளமாக பயன்படுத்துகிறார். (44)

"நான் மெய்யான திராட்சச்செடி" என்று கூறினார். அழகிய பேரீச்சமரத்தையும் உயர்ந்தோங்கியுள்ள தேவதாரு மரத்தையும் பலமிக்க கேதுரு மரத்தையும் தெரிந்துகொள்வதற்குப்பதிலாக, பற்றிக்கொண்டிருக்கும் கொடிச்சுருள்களுடனுள்ள திராட்சைச்செடியை எடுத்து, அதைத் தமக்கு உதாரணமாகக் காட்டுகிறார். பேரீச்ச மரமும் தேவதாரு மரமும் கேதுரு மரமும் தனியாக நிற்கின்றன. அவைகளுக்கு தாங்கிகள் எதுவும்

அவசியமில்லை. ஆனால் திராட்சைச்செடியின் கொடிகள் பந்தலில் சுற்றிப் படர்ந்து, இவ்விதமாக வானத்தை நோக்கி மேலே ஏறுகின்றது. அப்படியே கிறிஸ்துவும் அவருடைய மானுடத்தில் தெய்வீக வல்லமையின்மீது சார்ந்திருந்தார். “நான் என் சுயமாய் ஒன்றுஞ் செய்கிறதில்லை” (யோவான் 5:30) என்று அறிவித்தார். (45)

“நான் மெய்யான திராட்சச்செடி, என் பிதா திராட்சத்தோட்டக்காரர்.” யூதர்கள் எப்பொழுதும் திராட்சைச்செடியை மிகவும் அதிக மேன்மையான செடியாகவும் மிகவும் வல்லமையுள்ள ஒன்றைப்போலவும் உயர்வானதாக கனிகொடுப்பதாக கருதியிருந்தனர். வாக்குத்தத்தம் பண்ணப்பட்டிருந்த தேசத்தில் தேவனால் நடப்பட்டிருந்த ஒரு திராட்சைச்செடியாக இஸ்ரவேல் எடுத்துக்காட்டப்பட்டிருந்தது. யூதர்கள் தங்கள் இரட்சிப்பைப்பற்றின நம்பிக்கையை, இஸ்ரவேலுடனிருந்த பிணைப்பின்மேல் வைத்திருந்தனர். ஆனால், நானே மெய்யான திராட்சைச்செடி; இஸ்ரவேலுடனுள்ள பிணைப்பின்மூலமாக தேவனுடைய ஜீவனில் பங்குபெறலாம் என்றும், அவருடைய வாக்குத்தத்தத்திற்குச் சுதந்திரவாளிகளாகலாம் என்றும் நினைக்கவேண்டாம்; என்மூலமாக மட்டுமே ஆவிக்குரிய ஜீவன் பெற்றுக் கொள்ளப்படுகிறது என்று இயேசு கூறுகிறார். (46)

“நானே திராட்சச்செடி, நீங்கள் கொடிகள்” பாலஸ்தீனக் குன்றுகளின்மீது நமது பரலோகப் பிதா இந்த நல்ல திராட்சைச்செடியை நட்டிருந்தார். அவரே அதன் தோட்டக்காரராக இருந்தார். இந்த திராட்சச்செடியின் அழகினால் அநேகர் கவரப்பட்டிருந்து, அதன் பரலோகப் பிறப்பிடத்தை அறிவித்திருந்தனர். ஆனால் இஸ்ரவேலின் தலைவர்களுக்கு அது வறண்ட நிலத்திலிருந்து துளிர்த்த வேரைப்போலிருந்தது. அவர்கள் அந்தச் செடியைப்பார்த்து, அதைக் காயப்படுத்தி, அவர்களுடைய பரிசுத்தமில்லாத பாதங்களின்கீழிட்டு அதை மிதித்திருந்தனர். அதை என்றென்றைக்குமாக அழிக்கவேண்டுமென்பது அவர்களுடைய எண்ணமாக இருந்தது. ஆனால் அந்தப் பரலோகத் தோட்டக்காரர் அவருடைய செடியின்மீதிருந்த பார்வையை ஒருபோதும் இழக்காமலிருந்தார். அதை அழித்துவிட்டோம் என்று மனிதர்கள் நினைத்திருந்தபோது, அதை அவர் எடுத்து, சுவருக்கு அடுத்த பக்கத்தில் நட்டார். அதற்குப்பின் அந்தத் திராட்சச்செடியின் அடிமரம் காணமுடியாததாகிவிட்டது. மனிதர்களின் கொடூரமான தாக்குதல்களிலிருந்து அது மறைத்துவைக்கப்பட்டிருந்தது. ஆனால் அந்தத் திராட்சச்செடியின் கிளைகள், சுவரின்மீது தொங்கினது. அவைகள் அந்தத் திராட்சச்செடியை எடுத்துக்காட்டவேண்டியவைகளாக இருந்தன. அவைகளின்மூலமாக மற்றவைகள் அந்தத் திராட்சச்செடியுடன்

ஒட்டவைக்கப்பட்டு, இன்னும் ஒன்றுபடக்கூடியவைகளாக இருக்கின்றன. அவைகளிலிருந்து கனிகள் அடைந்துகொள்ளப்பட்டுள்ளன. அதைக் கடந்து சென்றவர்களால் பறிக்கப்பட்டிருக்கிற ஒரு அறுவடை இருந்திருக்கிறது. (47)

"நானே திராட்சச்செடி, நீங்கள் கொடிகள்" என்று கிறிஸ்து சீடர்களுக்குக் கூறினார். அவர் அவர்களிடமிருந்து விலக்கப்படவேண்டியவராக இருந்திருந்தபோதிலும், அவருடனுள்ள அவர்களுடைய ஆவிக்குரிய ஒற்றுமை மாறாததாக இருக்கவேண்டியதாக இருந்தது. திராட்சைக்கொடியிலுள்ள பிணைப்பு, நீங்கள் என்னுடன் கொண்டிருக்கவேண்டிய உறவினை எடுத்துக் காட்டுகிறது. ஒட்டவைப்பதற்காக வெட்டப்படும் கிளை, ஜீவனுள்ள திராட்சச்செடியுடன் இழையுடன் இழையாக நரம்புடன் நரம்பாக ஒட்டப்பட்டு, அதன் அடிமரத்துடன் வளர்கிறது. திராட்சச்செடியின் ஜீவன் அந்தக் கிளையின் ஜீவனாகிவிடுகிறது. அப்படியே மீறுதலிலும் பாவத்திலும் மரித்துப்போன ஆத்துமா, கிறிஸ்துவுடனுள்ள பிணைப்பினால் ஜீவனைப் பெறுகிறது. சொந்த இரட்சகர் என்னும் அவர்மீதுள்ள விசுவாசத்தினால் அந்த ஒற்றுமை உண்டாக்கப்படுகிறது. பாவி அவனுடைய பலவீனத்தை கிறிஸ்துவின் பலத்துடனும், அவனுடைய வெறுமையைக் கிறிஸ்துவின் நிறைவுடனும், அவனுடைய குறைபாடுகளை கிறிஸ்துவின் தாங்கும் பலத்துடனும் பிணைத்து ஒன்று சேர்க்கிறான். அப்பொழுது அவன் கிறிஸ்துவின் சிந்தையை உடையவனாயிருக்கிறான். கிறிஸ்துவின் மானுடம் நமது மானுடத்தை தொட்டிருக்கின்றபோது, நமது மானுடம் தெய்வீகத்தைத் தொட்டிருக்கிறது. இவ்விதமாக, பரிசுத்த ஆவியின் ஏதுகரத்தின்மூலமாக, மனிதன் தெய்வீகத் தன்மையில் பங்குபெறுகிறவனாகிறான். பிரியமானவரால் அவன் ஏற்றுக்கொள்ளப்பட்டிருக்கிறான். (48)

ஒருதடவை ஏற்படுத்தப்பட்டுள்ள கிறிஸ்துவுடனுள்ள இந்த ஐக்கியம் தொடர்ந்து கொண்டுசெல்லப்படவேண்டும். "என்னில் நிலைத்திருங்கள், நானும் உங்களில் நிலைத்திருப்பேன்; கொடியானது திராட்சச்செடியில் நிலைத்திராவிட்டால் அது தானாய்க் கனிகொடுக்கமாட்டாதது போல, நீங்களும் என்னில் நிலைத்திராவிட்டால், கனிகொடுக்கமாட்டீர்கள்" என்று கிறிஸ்து கூறினார். இது தற்செயலான தொடுதல் அல்ல. விட்டுவிட்டு உண்டாகும் பிணைப்புமல்ல. அந்தக் கிளை ஜீவனுள்ள திராட்சச்செடியின் ஒரு பகுதியாகிவிடுகிறது. வேரிலிருந்து கிளைகளுக்குள்ள ஜீவன், பலம், கனிதரும் தன்மை ஆகியவைகளின் தொடர்பு, தடைகள் இல்லாததாகவும் தொடர்ச்சியானதாகவும் ஆகின்றது. திராட்சச்செடியிலிருந்து பிரிக்கப்பட்ட கிளையினால் உயிர்வாழ முடியாது. என்னையல்லாமல் உங்களால் வாழமுடியாது என்று இயேசு கூறினார். என்னிடமிருந்து நீங்கள்

பெற்றுக்கொண்டுள்ள ஜீவனை இடைவிடாத தொடர்பினால் மட்டுமே பாதுகாத்துக்கொள்ள முடியும். என்னையல்லாமல் உங்களால் ஒரு பாவத்தை மேற்கொள்ளவோ, அல்லது ஒரு சோதனையைத் தடுக்கவோ முடியாது என்கிறார். (49)

"என்னில் நிலைத்திருங்கள், நானும் உங்களில் நிலைத்திருப்பேன்." கிறிஸ்துவில் நிலைத்திருப்பது என்றால் அவருடைய ஆவியைத் தொடர்ச்சியாகப் பெறுவதும், அவருடைய சேவைக்கென்று முற்றிலுமாகச் சரணடைகிற ஒரு வாழ்க்கையாக இருக்கிறது. மனிதனுக்கும் அவனுடைய தேவனுக்கும் இடையில் உள்ள தொடர்பின் மார்க்கம், எப்பொழுதும் திறந்திருக்கவேண்டும். ஜீவனுள்ள திராட்சச்செடியிலிருந்து திராட்சக்கிளை தொடர்ச்சியாக ஜீவசத்தைப் பெற்றுக்கொண்டிருப்பதைப்போல நாமும் இயேசுவைப் பற்றிக்கொண்டிருந்து, விசுவாசத்தினால் அவருடைய சொந்த குணத்தில் உள்ள பலத்தையும் பூரணத்தையும் பற்றிக்கொள்ள வேண்டியவர்களாக இருக்கிறோம். (50)

வேர் அதன் ஊட்டச்சத்தை மிகவும் ஓரமாகவுள்ள கொப்பிற்குக் கிளையின்மூலமாக அனுப்புகிறது. அதைப்போலவே ஒவ்வொரு விசுவாசிக்கும் ஆவியின் பலத்தின் ஓட்டத்தைக் கிறிஸ்து கொடுக்கிறார். ஆத்துமா கிறிஸ்துவுடன் பிணைக்கப்பட்டிருக்கும்வரை, அது வாடிவிடும் அல்லது அழுகிவிடும் என்னும் அபாயம் உண்டாவதில்லை. (51)

திராட்சச்செடியின் ஜீவன் கிளைகளின்மீது வாசனைமிக்க கனிகளாக வெளிக்காட்டப்படும். "ஒருவன் என்னிலும் நான் அவனிலும் நிலைத்திருந்தால், அவன் மிகுந்த கனிகளைக் கொடுப்பான்; என்னையல்லாமல் உங்களால் ஒன்றும் செய்யக்கூடாது" என்று இயேசு கூறினார். தேவகுமாரனின்மீதுள்ள விசுவாசத்தினால் நாம் வாழும்போது, நமது வாழ்க்கையில் ஆவியின் கனிகள் காணப்படும். ஒன்றுகூடத் தவறாது. (52)

"என்னில் கனிகொடாதிருக்கிற கொடிஎதுவோ, அதை அவர் அறுத்துப்போடுகிறார்;" ஒட்டவைக்கப்படுதலினால் திராட்சச்செடியுடன் வெளியரங்கமான பிணைப்பு இருந்தபோதிலும், ஜீவாதாரமான பிணைப்பு இல்லாமல் இருக்கலாம். அப்பொழுது வளர்ச்சி அல்லது கனிகொடுக்கும் தன்மை இருக்காது. அவ்வாறாகவே கிறிஸ்துவுடன் விசுவாசத்தினால் உண்மையான ஒரு பிணைப்பு இல்லாமல், அவருடன் வெளியரங்கமான ஒரு பிணைப்பு இருக்கலாம். மதத்தை அறிக்கை செய்வது மனிதர்களை சபையில் வைக்கிறது. ஆனால் குணமும் நடத்தையும் அவர்கள் கிறிஸ்துவுடன் பிணைக்கப்பட்டவர்களாக இருக்கிறார்களா இல்லையா என்பதைக் காட்டுகின்றது. அவர்கள் கனிகொடுக்காவிட்டால் தவறான

கிளைகளாக இருக்கின்றனர். கிறிஸ்துவிடமிருந்துள்ள அவருடைய பிரிவினை செத்துப்போன ஒரு கிளையால் எடுத்துக்காட்டப்படுவதைப்போல அழிவில் முழுமையாகச் சம்பந்தமுடையதாக இருக்கிறது. "ஒருவன் என்னில் நிலைத்திராவிட்டால், வெளியே எறியுண்ட கொடியைப்போல அவன் எறியுண்டு உலர்ந்து போவான்; அப்படிப்பட்டவைகளைச் சேர்த்து, அக்கினியிலே போடுகிறார்கள்; அவைகள் எரிந்துபோம்" என்று கிறிஸ்து கூறினார். (53)

"கனிகொடுக்கிற கொடி எதுவோ, அது அதிக கனிகளைக் கொடுக்கும்படி, அதைச் சுத்தம்பண்ணுகிறார்." இயேசுவைப் பற்றியிருந்த—தெரிந்தெடுக்கப்பட்டிருந்த பன்னிருவரில் ஒருவன் வாடிவிட்ட கிளையாக நீக்கப்படவும், மீதியானவர்கள் கசப்பான பரீட்சை என்னும் சுத்தஞ்செய்யும் கத்தியின்கீழ்க் கடந்துசெல்லவும் வேண்டிவர்களாக இருந்தனர். இயேசு பக்திவிநயமான மென்மையுடன் தோட்டக்காரரின் நோக்கத்தை விளக்கினார். சுத்தஞ்செய்தல் வேதனையை உண்டுபண்ணும். ஆனால் கத்தியைப் பயன்படுத்துபவர் பிதாவாக இருக்கிறார். வேண்டுமென்றே செய்கின்ற கரத்துடனோ அல்லது சிரத்தையில்லாத இருதயத்துடனோ அவர் செயலாற்றுவதில்லை. தரையின்மீது இழைந்துகொண்டிருக்கும் பூச்சுருள்கள் உள்ளன. இவைகளின் கொடிச்சுருள்கள் பற்றிக்கொண்டிருக்கும் பூமிக்குரிய தாங்குதலிலிருந்து வெட்டி நீக்கப்படவேண்டும். அவைகள் வானத்திற்கு நேராகச் சென்றடையவேண்டியவைகளாகவும், தேவனில் அவைகளின் தாங்குதலைக் காணவேண்டியவைகளாகவும் உள்ளன. கனியிலிருந்து ஜீவ ஓட்டத்தை எடுத்துக்கொள்ளும் அந்த அதிகப்படியான இலைகளும் கிளைகளும் வெட்டி நீக்கப்பட வேண்டும். நீதியின் சூரியனின் சுகமளிக்கும் ஒளிக்கதிர்களைப் பெற்றுக்கொள்ள இடம் உண்டாகும்வண்ணம், மீறி வளர்ந்திருக்கும் பகுதி வெட்டப்படவேண்டும். கனிகள் சிறப்பானவைகளாக இருப்பதற்கும், ஏராளமாவதற்கும், கேடுண்டாக்கும் வளர்ச்சியைத் தோட்டக்காரர் சுத்திகரித்து நீக்குகிறார். (54)

"நீங்கள் மிகுந்த கனிகளைக் கொடுப்பதனால் என் பிதா மகிமைப்படுவார்" என்று இயேசு கூறினார். தேவன் பரிசுத்தம், அனுதாபம், மனஉருக்கம் ஆகிய அவருடைய சொந்த குணத்தை உங்கள்மூலமாக வெளிக்காட்ட வாஞ்சிக்கிறார். ஆயினும், கனிகொடுக்கும்படி இரட்சகர் சீடர்களுக்குக் கட்டளையிடுவதில்லை. அவரில் தங்கியிருக்கும்படி அவர் அவர்களிடம் கூறுகிறார். "நீங்கள் என்னிலும், என் வார்த்தைகள் உங்களிலும் நிலைத்திருந்தால், நீங்கள் கேட்டுக்கொள்வதெதுவோ அது உங்களுக்குச் செய்யப்படும்" என்கிறார். கிறிஸ்து அவருடைய வார்த்தையின்மூலமாக,

அவருடைய அடியார்களில் வாசஞ்செய்கிறார். அவருடைய மாம்சத்தைப் புசித்து அவருடைய இரத்தத்தைப் பானஞ்செய்வதை எடுத்துக்காட்டு கின்றதைப்போன்ற அதே ஜீவாதாரமான ஐக்கியமாக அது இருக்கிறது. கிறிஸ்துவின் வார்த்தைகள் ஆவியும் ஜீவனுமாயிருக்கின்றன. அவைகளைப் பெற்றுக்கொள்வதினால் நீங்கள் திராட்சச்செடியின் ஜீவனைப் பெற்றுக் கொள்ளுகிறீர்கள். “தேவனுடைய வாயிலிருந்து புறப்படுகிற ஒவ்வொரு வார்த்தையினாலும் பிழைப்பான்”–மத்தேயு 4:4. உங்களில் உள்ள கிறிஸ்துவின் ஜீவன் அவரில் உள்ளதுபோன்ற அதே கனிகளை உண்டு பண்ணுகிறது. கிறிஸ்துவில் வாழும்போது, கிறிஸ்துவைப் பற்றிக் கொள்ளும்போது, கிறிஸ்துவால் தாங்கப்படும்போது, கிறிஸ்துவிலிருந்து ஊட்டச்சத்தை எடுத்துக்கொள்ளும்போது, நீங்கள் கிறிஸ்துவின் சாயலின் மாதிரியாகக் கனிகொடுக்கிறீர்கள். (55)

சீடர்களுடனான கிறிஸ்துவின் கடைசிச் சந்திப்பில் அவர்களுக்காகக் கிறிஸ்து வெளிக்காட்டிய பெரிய வாஞ்சை—அவர் அவர்களை நேசித்திருந்ததைப்போல அவர்கள் ஒருவரிலொருவர் அன்புள்ளவர்களாக இருக்கவேண்டும் என்பதாக இருந்தது. இதைப்பற்றி அவர் மறுபடியும் மறுபடியும் பேசினார். “நான் உங்களில் அன்பாயிருக்கிறதுபோல நீங்களும் ஒருவரிலொருவர் அன்பாயிருக்கவேண்டுமென்பதே என்னுடைய கற்பனையா யிருக்கிறது” என்று அவர் மீண்டும் மீண்டும் கூறினார். அவர்களுடன் அவர் மேல்வீட்டு அறையில் தனித்திருந்தபோது, கொடுத்த முதல் கட்டளை “நீங்கள் ஒருவரிலொருவர் அன்பாயிருங்கள்; நான் உங்களில் அன்பாயிருந்ததுபோல நீங்களும் ஒருவரிலொருவர் அன்பாயிருங்கள் என்கிற புதிதான கட்டளையை உங்களுக்குக் கொடுக்கிறேன்” என்பதே. இந்தக் கட்டளை சீடர்களுக்குப் புதிதாக இருந்தது. ஏனெனில் கிறிஸ்து அவர்களிடத்தில் அன்பாயிருந்ததுபோல, அவர்கள் ஒருவரிலொருவர் அன்பாயிருக்கவில்லை. புதிய எண்ணங்களும் உணர்ச்சி வேகங்களும் அவர்களைக் கட்டுப்படுத்தவேண்டும் என்பதையும், புதிய கொள்கைகளை அவர்கள் கடைப்பிடிக்கவேண்டும் என்பதையும், அவருடைய வாழ்க்கை மரணம் ஆகியவைகளின்மூலமாக, அன்பைப்பற்றிய ஒரு புதிய எண்ணத்தையும் அடைந்துகொள்ளவேண்டியவர்களாக இருந்தனர் என்பதை அவர்கள் கண்டனர். அவருடைய தற்தியாகத்தின் ஒளியில் ஒருவரில் ஒருவர் அன்புள்ளவர்களாக இருக்கவேண்டும் என்னும் கட்டளை ஒரு புதிய பொருள் பொதிந்ததாக இருந்தது. அன்பு, சுயத்தை மறுத்தல், சுயத்தைத் தியாகஞ்செய்யும் முயற்சி, ஆகிய தொடர்ச்சியான சேவை, கிருபையின் முழுமையான செயலாக இருக்கிறது. கிறிஸ்து பூமியின்மீது சஞ்சரித்திருந்த ஒவ்வொரு மணி நேரத்தின்போதும். தடுத்து நிறுத்தமுடியாத

ஓட்டமாக தேவனுடைய அன்பு அவரிடமிருந்து பாய்ந்துகொண்டிருந்தது. அவருடைய ஆவியினால் ஊக்குவிக்கப்பட்ட அனைவரும், அவர் அன்பு செலுத்தினதுபோல அன்புசெலுத்துவார்கள். கிறிஸ்துவைச் செயலாற்றும்படிச் செய்திருந்த அதே கோட்பாடு, அவர்களனைவரையும் ஒருவருடன் மற்றவர் இடைபடுகின்ற எல்லாக் காரியங்களிலும் செயலாற்றச் செய்யும். (56)

இந்த அன்பு அவர்களுடைய சீடத்துவத்தின் சான்றாக இருக்கிறது. “நீங்கள் ஒருவரிலொருவர் அன்புள்ளவர்களாயிருந்தால், அதினால் நீங்கள் என்னுடைய சீஷர்களென்று எல்லாரும் அறிந்துகொள்வார்கள்” என்று இயேசு கூறினார். வற்புறுத்தலும் சுயநோக்கமும் இல்லாமல், அன்பினால் மனிதர்கள் ஒன்றுசேர்த்துக் கட்டப்படும்போது, மனித செல்வாக்கு ஒவ்வொன்றிற்கும் மேலான ஒரு செல்வாக்கு செயலாற்றுவதை அவர்கள் காட்டுகின்றனர். எங்கு இந்த ஒருமைப்பாடு இருக்கின்றதோ, அங்கு வாழ்க்கையின் ஒரு புதிய கோட்பாடு நடப்பட்டிருக்கிறது. மானுடத்தில் தேவனுடைய சாயல் திரும்ப எடுத்துக்கட்டப்பட்டிருக்கிறது என்பதற்கு அது சான்றாக இருக்கிறது. இயற்கைக்கு மேற்பட்ட தீமையின் ஏதுகரங்களுடன் எதிர்த்து நிற்கவும், இயல்பான இருதயத்தில் இணைபிரியாததாக உள்ள சுயநலத்தைக் கீழ்ப்படுத்தவும் தெய்வீக இயல்பில் வல்லமை இருக்கிறது என்பதை அது காட்டுகிறது. (57)

சபையில் வெளிக்காட்டப்படும் இந்த அன்பு, நிச்சயமாகவே சாத்தானின் கோபத்தைக் கிளறிவிடும். ஒரு வசதியான பாதையைக் கிறிஸ்து அவருடைய சீடர்களுக்கு அடையாளப்படுத்திக் கொடுக்க வில்லை. “உலகம் உங்களைப் பகைத்தால், அது உங்களைப் பகைக்கிறதற்கு முன்னே என்னைப் பகைத்ததென்று அறியுங்கள். நீங்கள் உலகத்தாரா யிருந்தால், உலகம் தன்னுடையதைச் சிநேகித்திருக்கும்; நீங்கள் உலகத்தாராயிராதபடியினாலும், நான் உங்களை உலகத்திலிருந்து தெரிந்துகொண்டபடியினாலும், உலகம் உங்களைப் பகைக்கிறது. ஊழியக்காரன் தன் எஜமானிலும் பெரியவனல்லவென்று நான் உங்களுக்குச் சொன்ன வார்த்தையை நினைத்துக்கொள்ளுங்கள். அவர்கள் என்னைத் துன்பப்படுத்தினதுண்டானால், உங்களையும் துன்பப்படுத்துவார்கள்; அவர்கள் என் வசனத்தைக் கைக்கொண்டதுண்டானால், உங்கள் வசனத்தையும் கைக்கொள்ளுவார்கள். அவர்கள் என்னை அனுப்பினவரை அறியாதபடியினால் என் நாமத்தினிமித்தமே இவைகளையெல்லாம் உங்களுக்குச் செய்வார்கள்” என்று அவர் கூறினார். எதிர்ப்பு, ஆபத்து, இழப்பு, பாடுகள் ஆகியவைகளுக்கு மத்தியில், முனைப்பான போராட்டத்தோடு சுவிசேஷம் முன்கொண்டுசெல்லப்படவேண்டியதாக இருக்கிறது. ஆனால்

இந்தப் பணியைச் செய்பவர்கள்மட்டுமே, தங்களுடைய ஆண்டவரின் அடிச்சுவடுகளைப் பின்பற்றுகின்றனர். (58)

உலகத்தின் மீட்பராக இருந்த கிறிஸ்து தொடர்ந்து வெளிப்படையாக தோல்விபோன்று காணப்படும் காரியத்தை தமது ஊழியத்தில் நேருக்கு நேர் தொடர்ந்து சந்திக்கவேண்டியதிருந்தது. நமது உலகத்துக்கான இரக்கத்தின் தூதுவராக இருந்த அவர் உயர்த்தவும் காப்பாற்றவும் ஏங்கியிருந்த பணியை சொற்பமாகச் செய்வதுபோல் காணப்பட்டிருந்தது. அவருடைய பாதையை எதிர்த்த சாத்தானின் செல்வாக்குகள் தொடர்ச்சியாகச் செயலாற்றிக்கொண்டிருந்தன. எனினும் அவர் அதைரியமடையாதவராக இருந்தார். ஏசாயா தீர்க்கதரிசியின்மூலமாக அவர்: “அதற்கு நான்: விருதாவாய் உழைக்கிறேன், வீணும் வியர்த்தமுமாய் என் பெலனைச் செலவழிக்கிறேன்; ஆகிலும் என் நியாயம் கர்த்தரிடத்திலும், என் பலன் என் தேவனிடத்திலும் இருக்கிறது என்று சொன்னேன். … இஸ்ரவேலோ சேராதேபோகிறது; ஆகிலும் கர்த்தருடைய பார்வையில் கனமடைவேன், என் தேவன் என் பெலனாயிருப்பார்” என்று அறிவிக்கிறார். “இஸ்ரவேலின் மீட்பரும் அதின் பரிசுத்தருமாகிய கர்த்தர், மனுஷரால் அசட்டைபண்ணப்பட்டவரும், ஜாதியாரால் அருவருக்கப்பட்டவரும், அதிகாரிகளுக்கு ஊழியக்காரனுமாயிருக்கிறவரை நோக்கி, … நீர் பூமியைச் சீர்ப்படுத்தி, பாழாய்க்கிடக்கிற இடங்களைச் சுதந்தரிக்கப்பண்ணவும்; கட்டுண்டவர்களை நோக்கி: புறப்பட்டுப்போங்கள் என்றும்; இருளில் இருக்கிறவர்களை நோக்கி: வெளிப்படுங்கள் என்றும் சொல்லவும், நான் உம்மைக் காப்பாற்றி, உம்மை ஜனங்களுக்கு உடன்படிக்கையாக ஏற்படுத்துவேன்: … அவர்கள் பசியாயிருப்பதுமில்லை, தாகமாயிருப்பதுமில்லை; உஷ்ணமாகிலும், வெயிலாகிலும் அவர்கள்மேல் படுவதுமில்லை; அவர்களுக்கு இரங்குகிறவர் அவர்களை நடத்தி, அவர்களை நீரூற்றுகளிடத்திற்குக் கொண்டுபோய்விடுவார்” (ஏசாயா 49:4,5,7–10) என்னும் அந்த வாக்குத்தத்தம் கிறிஸ்துவிற்குக் கொடுக்கப்பட்டிருக்கிறது. (59)

இந்த வார்ததையின்மீது இயேசு சார்ந்திருந்து சாத்தானுக்கு அனுகூலங்கொடுக்காது இருந்தார். கிறிஸ்துவின் அவமானமிக்கக் கடைசி அடிகள் எடுத்துவைக்கப்பட்டபோது, மிகவும் ஆழமான துயரம் அவருடைய ஆத்துமாவைச் சூழ்ந்துகொண்டிருந்தபோது, அவரது சீடர்களிடம்: “இந்த உலகத்தின் அதிபதி வருகிறான், அவனுக்கு என்னிடத்தில் ஒன்றுமில்லை.” “இந்த உலகத்தின் அதிபதி நியாயந்தீர்க்கப்பட்டதினாலே” “இப்பொழுதே இந்த உலகத்தின் அதிபதி புறம்பாகத் தள்ளப்படுவான்” (யோவான் 14:30; 16:11; 12:31) என்று கூறினார். அவருடைய இறுதிப் போரில் நடைபெறவிருக்கும் காட்சிகளைத் தீர்க்கதரிசனக் கண்ணுடன் கிறிஸ்து

விவரித்தார். “எல்லாம் முடிந்தது” என்று அவர் கூறும்போது, பரலோகம் முழுவதும் வெற்றிபெறும் என்பதை அவர் அறிந்திருந்தார். பரலோகப் பிராகாரங்களினல் உண்டாகவிருக்கின்ற தூரத்து இசையும் வெற்றியின் முழக்கங்களும் அவருடைய செவியில் விழுந்தன. அப்பொழுது சாத்தானின் இராஜ்யத்திற்கு சாவுமணி அடிக்கப்படும் என்பதையும், பிரபஞ்சம் முழுவதிலும், உலகத்திலிருந்து உலகங்களுக்கு கிறிஸ்துவின் நாமம் பறைசாற்றப்படும் என்பதையும் அவர் அறிந்திருந்தார். (60)

கிறிஸ்து அவருடைய அடியார்கள் கேட்பதற்கும் நினைப்பதற்கும் அதிகமாக அவர்களுக்குச் செய்யமுடியும் என்பதில் மகிழ்ந்து களிகூர்ந்தார். உலகம் படைக்கப்படுவதற்கு முன்னமே ஒரு சர்வல்லமைமிக்க கட்டளை கொடுக்கப்பட்டிருந்தது என்பதை அறிந்து அவர் நிச்சயத்துடன் பேசினார். தீமையுடனுள்ள போராட்டத்தில் பரிசுத்த ஆவியின் சர்வவல்லமையை ஆயுதமாக உள்ள சத்தியம் வெற்றியடையும் என்பதையும், அவருடைய அடியார்களுக்கு மேலாக இரத்தக்கறைபடிந்த கொடி வெற்றிகரமாக அசைந்தாடும் என்பதையும், அவர் அறிந்திருந்தார். அவர்மீது நம்பிக்கை வைத்திருக்கும் அவருடைய சீடர்களின் வாழ்க்கையையும் அவருடையதைப்போன்ற தடங்கல்கள் எதுவும் இல்லாத வரிசைகளாக இங்கு காணப்படமுடியாதவைகளாக இருந்து, வரவிருக்கும் மகத்தான எதிர்காலத்தில் இனங்கண்டுகொள்ளப்படும் என்பதையுங்கூட அவர் அறிந்திருந்தார். (61)

“என்னிடத்தில் உங்களுக்குச் சமாதானம் உண்டாயிருக்கும்பொருட்டு இவைகளை உங்களுக்குச் சொன்னேன். உலகத்தில் உங்களுக்கு உபத்திரவம் உண்டு, ஆனாலும் திடன்கொள்ளுங்கள்; நான் உலகத்தை ஜெயித்தேன்” என்று அவர் கூறினார். கிறிஸ்து தோற்கவும் இல்லை, அவர் அதைரியம் அடையவுமில்லை. அதைப்போலவே, அவருடைய அடியார்களும் அதேவிதமான தாங்கிக்கொள்ளும் இயல்பை உடைய விசுவாசத்தை வெளிக்காட்டவேண்டியவர்களாக உள்ளனர். அவர்கள் பெரும் பிரதான ஊழியக்காரரைச் சார்ந்தவர்களாக இருப்பதினால் அவர் வாழ்ந்தவிதமாக அவர்களும் வாழ்ந்து, அவர் பணிசெய்தவிதமாக அவர்களும் பணிசெய்யவேண்டிவர்களாக இருக்கின்றனர். அவர்கள் தைரியம், சக்தி, விடாமுயற்சி ஆகியவைகளை பெற்றிருக்கவேண்டும். வெளியரங்கமான சாத்தியமின்மைகள் அவர்களுடைய பாதையைத் தடைசெய்தபோதிலும் அவருடைய கிருபையினால் அவர்கள் முன்நோக்கிச்செல்லவேண்டியவர்களாக இருக்கின்றனர். தொல்லைகளைப்பற்றி அழுதுகொண்டிராமல், அவைகளை மேற்கொள்ளும்படி அழைக்கப்பட்டுள்ளனர். அவர்கள் எதிலும் சோர்ந்து

போகாமல் எல்லாவற்றிலும் நம்பிக்கையோடு இருக்கவேண்டும். அவருடைய ஈடில்லாத அன்பாகிய பொற்சங்கிலியினால், கிறிஸ்து அவர்களைத் தேவ சிங்காசனத்துடன் பிணைத்திருக்கிறார். எல்லா வல்லமைகளின் ஆதாரத்திலிருந்தும்வெளிப்பட்டுக்கொண்டிருக்கும்—பிரபஞ்சத்தின்உயர்வான செல்வாக்கு அவர்களுடையதாக இருக்கவேண்டும் என்பது அவருடைய நோக்கமாக இருக்கிறது. கிறிஸ்து ஜெயங்கொண்டதைப்போல, அவர்களும் ஜெயங்கொள்வதற்காக, பூமியினாலோ அல்லது மரணத்தினாலோ அல்லது பாதாளத்தினாலோ மேற்கொள்ளமுடியாத ஒரு வல்லமையை, தீமையைத் தடுப்பதற்காக அவர்கள் பெற்றிருக்கவேண்டும். (62)

பரலோகத்தின் ஒழுங்கமைவு, பரலோக அரசாங்கத்தின் திட்டம், பரலோகத்தின் தெய்வீக இசைவு ஆகியவைகளைப் பூமியிலுள்ள கிறிஸ்துவின் சபை எடுத்துக்காட்டவேண்டும் என்று கிறிஸ்து வடிவமைக்கிறார். இவ்விதமாக அவருடைய மக்களில் அவர் மகிமைப்படுத்தப்பட்டிருக்கிறார். நீதியின் சூரியன் அவர்கள்மூலமாக மங்காத ஒளியுடன் உலகத்தில் பிரகாசிக்கும். தாம் கிரயம் செலுத்தி மீட்டவர்களிடமிருந்து மிகப் பெரிய மகிமையைப் பெற்றுக்கொள்ளும்படி, கிறிஸ்து அவருடைய சபைக்குப் போதுமான வசதிகளைக் கொடுத்திருக்கிறார். அவருடைய நிறைவை, அவர்கள் எடுத்துக்காட்டும்படி அவருடைய மக்களின்மீது திறமைகளையும் ஆசீர்வாதங்களையும் அவர் அருளியிருக்கிறார். கிறிஸ்துவின் இரக்கத்தின் ஐசுவரியம், அவருடைய கிருபை, அவருடைய அன்பு ஆகியவைகளைக் கருவூலமாகக் கொண்டுள்ள அவருடைய நீதியை இலவசமாக அடைந்திருக்கும் சபையில் அவை முழுமையாகவும் சாட்சியாகவும் தோன்ற வேண்டியவைகளாக உள்ளன. பரவிச்செல்லும் சகல மகிமையின் பெரும் மையமாக இருக்கும் அவருடைய மக்களை அவர்களின் தூய்மையிலும் பூரணத்திலும் அவருடைய அவமானத்தின் பரிசாகவும் மகிமையின் சேர்க்கையாகவும் அவர் பார்க்கிறார். (63)

இரட்சகர் பலமும் நம்பிக்கையுமிக்க வார்த்தைகளுடன் அவருடைய உபதேசத்தை முடித்தார். அதற்குப்பின் சீடர்களுக்கான அவருடைய ஆத்துமா பாரத்தை ஜெபத்தில் ஊற்றினார். வானத்திற்கு நேராக அவருடைய கண்களை உயர்த்திக்கொண்டு: “பிதாவே, வேளை வந்தது, நீர் உம்முடைய குமாரனுக்குத் தந்தருளின யாவருக்கும் அவர் நித்தியஜீவனைக் கொடுக்கும்பொருட்டு மாம்சமான யாவர்மேலும் நீர் அவருக்கு அதிகாரங்கொடுத்தபடியே, உம்முடைய குமாரன் உம்மை மகிமைப்படுத்தும்படிக்கு நீர் உம்முடைய குமாரனை மகிமைப்படுத்தும். ஒன்றான மெய்த்தேவனாகிய உம்மையும் நீர் அனுப்பினவராகிய இயேசு

கிறிஸ்துவையும் அறிவதே நித்தியஜீவன்" (யோவான் 17:23) என்று கூறினார். (64)

கிறிஸ்து அவருக்குக் கொடுக்கப்பட்டிருந்த பணியைச் செய்து முடித்திருந்தார். அவர் பூமியின்மேல் தேவனை மகிமைப்படுத்தியிருந்தார். பிதாவின் நாமத்தை அவர் வெளிக்காட்டியிருந்தார். மனிதர்களுக்கிடையில் அவருடைய பணியை தொடரவேண்டியிருந்தவர்களை அவர் ஒன்றுசேர்த்து, "அவர்களில் நான் மகிமைப்பட்டிருக்கிறேன். நான் இனி உலகத்திலிரேன், இவர்கள் உலகத்திலிருக்கிறார்கள்; நான் உம்மிடத்திற்கு வருகிறேன். பரிசுத்த பிதாவே, நீர் எனக்குத் தந்தவர்கள் நம்மைப்போல ஒன்றாயிருக்கும்படிக்கு, நீர் அவர்களை உம்முடைய நாமத்தினாலே காத்துக்கொள்ளும்" (யோவான் 17:10,11) என்று கூறினார். "நான் இவர்களுக்காக வேண்டிக்கொள்ளுகிறதுமல்லாமல், இவர்களுடைய வார்த்தையினால் என்னை விசுவாசிக்கிறவர்களுக்காகவும் வேண்டிக்கொள்ளுகிறேன். அவர்களெல்லாரும் ஒன்றாயிருக்கவும், பிதாவே, நீர் என்னை அனுப்பினதை உலகம் விசுவாசிக்கிறதற்காக, நீர் என்னிலேயும் நான் உம்மிலேயும் இருக்கிறதுபோல, அவர்களெல்லாரும் நம்மில் ஒன்றாயிருக்கவும் வேண்டிக்கொள்ளுகிறேன்" என்றார். (65)

இவ்விதமாக, தெய்வீக அதிகாரத்தை உடைய ஒருவரின் மொழியில் கிறிஸ்து அவரால் தெரிந்துகொள்ளப்பட்ட சபையைப் பிதாவின் கரங்களில் கொடுக்கிறார். பிரதிஷ்டை செய்யப்பட்ட ஒரு மகா பிரதான ஆசாரியராக அவர் அவருடைய மக்களுக்காகப் பரிந்து பேசுகிறார். விசுவாசமுள்ள ஒரு மேய்ப்பராக அவர் அவருடைய மந்தையை சர்வவல்லவரின் நிழலில் பலமும் நிச்சயமுமான அடைக்கலத்தில் ஒன்று சேர்க்கிறார். அவருக்காக சாத்தானுடனுள்ள கடைசி யுத்தம், அங்கு காத்துக்கொண்டிருக்கிறது. அதைச் சந்திப்பதற்காக அவர் முன்நோக்கிச் செல்கிறார். (66) ★

# 74

# கெத்செமனே!

**மத்தேயு 26:36–56; மாற்கு 14:32–50; லூக்கா 22:39–53; யோவான் 18:10–12**

**(The Desire of Ages, pp. 685–697)**

சீடர்களின் கூட்டத்துடன் இரட்சகர் கெத்செமனே தோட்டத்தை நோக்கி, அவருடைய பாதையில் மெதுவாகச் சென்றார். முழுமையாக இருந்த பஸ்கா நிலா, மேகமில்லாத ஒரு வானத்திலிருந்து ஒளிவீசிக்கொண்டிருந்தது. யாத்திரீகரின் கூடாரங்கள் ஆழ்ந்த அமைதியில் மூழ்கியிருந்தன. (1)

இயேசு அவருடைய சீடர்களுடன் அக்கறையாக உரையாடி, அவர்களுக்கு உபதேசித்துக்கொண்டிருந்தார். ஆனால் கெத்செமனேயைச் சமீபித்தபோது, வித்தியாசமான ஒரு மௌன நிலையில் காணப்பட்டார். தியானஞ்செய்வதற்காகவும் ஜெபஞ்செய்வதற்காகவும் அவர் அடிக்கடி அந்த இடத்திற்கு வந்திருந்தார். ஆனால் இதற்குமுன் ஒருபோதும் இருந்திராதவிதமாக கடுந்துயர்மிக்க அந்தக் கடைசி இரவில் அவருடைய இருதயம் துயரத்தால் நிறைந்திருந்தது. பூமியின்மீதான அவரது வாழ்க்கை முழுவதிலும் அவர் தேவப்பிரசன்னத்தின் ஒளியில் நடந்திருந்தார். சாத்தானின் அதே ஆவியினால் ஏவப்பட்டிருந்த மனிதர்களுடனான போராட்டத்திலிருந்தபோது, "என்னை அனுப்பினவர் என்னுடனேகூட இருக்கிறார், பிதாவுக்குப் பிரியமானவைகளை நான் எப்பொழுதும் செய்கிறபடியால் அவர் என்னைத் தனியேயிருக்கவிடவில்லை" (யோவான் 8:29) என்று அவரால் கூற முடிந்திருந்தது. ஆனால் இப்பொழுது அவர் தேவனுடைய தாங்கும் பிரசன்னத்தின் ஒளிக்கு வெளியில் அடைக்கப்பட்டவர்போலக் காணப்பட்டார். இப்பொழுது அவர் அக்கிரமக்காரர்களுடன் வைத்து எண்ணப்பட்டிருந்தார். விழுந்துபோன மானிடத்தின் குற்றத்தை அவர் சுமக்கவேண்டும். பாவத்தை அறியாத அவர்மீது நம்மனைவருடைய அக்கிரமங்களும் சுமத்தப்படவேண்டும். பிதாவின் அன்பிலிருந்து வெளியில் வைத்து அடைத்துவிடக்கூடியதாக பாவம் இருக்கும் என்று அதைப்பற்றி அவர் பயப்படும்படி சோதிக்கப்பட்டார். ஏனெனில்

பாவம் அந்த அளவிற்கு அவருக்குப் பயங்கரமானதாகத் தோன்றுகிறது. அவர் சுமக்கவேண்டியதாக இருக்கும் குற்றத்தின் பாரம் அந்த அளவிற்குப் பெரியதாக இருக்கிறது. மீறுதலுக்கெதிரான தேவனுடைய கோபம், எந்த அளவிற்கு பயங்கரமானது என்பதை அவர் உணர்ந்து, “என் ஆத்துமா மரணத்துக்கேதுவான துக்கங்கொண்டிருக்கிறது” என்று கதறுகிறார். (2)

அவர்கள் அந்தத் தோட்டத்தைச் சமீபித்தபோது, அவர்களுடைய ஆண்டவரிடத்தில் வந்த மாறுதலைச் சீடர்கள் கண்டிருந்தனர். அந்த அளவிற்குத் துயரமும் மௌனமும் உள்ளவராக அவரை இதற்குமுன் ஒருபோதும் அவர்கள் கண்டிருக்கவில்லை. அவர் தொடர்ந்தபோது, இந்தத் துயரம் ஆழமடைந்தது. ஆயினும் அதன் காரணம்பற்றி அவரிடம் கேட்பதற்கு அவர்கள் துணியவில்லை. விழுந்துவிடப்போவதைப்போல அவருடைய சரீரம் தள்ளாடினது. அந்தத் தோட்டத்தை அடைந்தபின், தங்களுடைய ஆண்டவர் வழக்கமாக இளைப்பாறும் இடத்தைச் சீடர்கள் கவலையுடன் பார்த்தனர். இப்பொழுது அவர் எடுத்துவைத்த ஒவ்வொரு அடியும் கஷ்டத்தோடு எடுத்துவைப்பதைப்போல இருந்தது. ஒரு பயங்கரமான சுமையின் பாரத்தால் அழுத்தப்பட்டு, வேதனைப்படுபவரைப்போல அவர் உரத்த சத்தத்துடன் புலம்பினார். அவருடைய தோழர்கள் இரண்டுமுறை அவரைத் தாங்கினார்கள். இல்லாவிட்டால் அவர் தரையில் விழுந்திருப்பார். (3)

அந்தத் தோட்டத்தின் நுழைவாயிலுக்கருகில் மூன்றுபேரைத்தவிர மற்றவர்களை அங்கேயே அவர்களுக்காகவும் தமக்காவும் ஜெபிக்கும்படி வேண்டிக்கொண்டார். பேதுருவோடும், யாக்கோபோடும், யோவானோடும் அதன் தனியான பகுதிக்குள் அவர் பிரவேசித்தார். இந்த மூன்று சீடர்களும் இயேசுவிற்கு மிகவும் நெருங்கின தோழர்களாக இருந்தனர். மறுரூபமலையின்மேல் அவர்கள் அவருடைய மகிமையைக் கண்டிருந்தனர். மோசேயும் எலியாவும் அவருடன் உரையாடினதை அவர்கள் கேட்டிருந்தனர். வானத்திலிருந்துண்டான சத்தத்தை அவர்கள் கேட்டிருந்தனர். இப்பொழுது அவருடைய பெரிய போராட்டத்தில் அவர்களுடைய பிரசன்னம் அவருக்கருகில் இருக்கவேண்டுமென்று கிறிஸ்து விரும்பினார். அந்தத் தனிமையான இடத்தில் அவர்கள் அடிக்கடி அவருடன் இரவைக் கழித்திருந்தனர். அந்தச் சந்தர்ப்பங்களில் சற்று நேரம் விழிப்பிலும் ஜெபத்திலும் இருந்தபின், மீண்டும் ஊழியத்திற்குச் செல்லுவதற்காக காலையில் அவர்களை அவர் எழுப்பும்வரை அவர்களுடைய ஆண்டவருக்குச் சற்று தூரத்தில் அவர்கள் தொந்தரவு இல்லாது நித்திரைசெய்வார்கள். ஆனால் இப்பொழுது அவர்கள் அந்த இரவை அவருடன் ஜெபத்தில் கழிக்கவேண்டுமென்று விரும்பினார்.

ஆனாலும் அவர் அனுபவிக்கவேண்டியதாகவிருந்த கடுந்துயரை அவர்கள் காண்பதை அவரால் தாங்கிக்கொள்ள முடியவில்லை. (4)

"நீங்கள் இங்கே தங்கி, என்னோடேகூட விழித்திருங்கள்" என்று அவர் கூறினார். (5)

அவர்களைவிட்டு அவர் சற்றுதூரம் சென்று, மிக அதிக தூரம் இல்லாமல் அவர்களால் அவரைப் பார்க்கவும் கேட்கவுங்கூடிய தூரத்தில் தரையில் முகங்குப்புற விழுந்தார். பாவத்தினால் அவர் தம்முடைய பிதாவினிடத்திலிருந்து பிரிக்கப்பட்டுக்கொண்டிருப்பதை உணர்ந்தார். அந்தப் பெரும் பிளவு மிகவும் அகலமானதாகவும் இருண்டதாகவும் ஆழமானதாகவும் இருந்ததால் அதற்குமுன் நின்றிருந்த அவருடைய ஆவி நடுங்கினது. இந்தக் கடுந்துயரிலிருந்து தப்பித்துக்கொள்ள அவருடைய தெய்வீக வல்லமையை அவர் பயன்படுத்தக்கூடாது. மனிதனின் பாாவத்தின் பலன்களையெல்லாம் ஒரு மனிதனாக அவர் அனுபவிக்கவேண்டும். மீறுதலிற்கெதிரான தேவ கோபத்தை ஒரு மனிதனாக அவர் தாங்கவேண்டும். (6)

கிறிஸ்து இதற்குமுன் எப்பொழுதும் எவ்விதமாக நின்றிருந்தாரோ, அதிலிருந்து மாறுபட்ட ஒரு மனோபாவத்துடன் இப்பொழுது நின்றிருந்தார். அவருடைய பாடுகளைச் சிறப்பானவிதத்தில் தீர்க்கதரிசிகளின் வார்த்தை யினால் மட்டுமே விவரிக்கமுடியும். "பட்டயமே, என் மேய்ப்பன்மேலும் என் தோழனாகிய புருஷன்மேலும் எழும்பு என்று சேனைகளின் கர்த்தர் சொல்லுகிறார்"—சகரியா 13:7. பாவமுள்ள மனிதனின் பதிலாளியாகவும் பிணையாளியாகவும் தெய்வீக நியாயத்தீர்ப்பின்கீழ் கிறிஸ்து பாடுகளை அனுபவித்துக்கொண்டிருந்தார். நியாயத்தீர்ப்பு என்றால் என்ன என்பதை அவர் கண்டார். இதுவரை அவர் மற்றவர்களுக்காகப் பரிந்துபேசுபவராக இருந்தார். இப்பொழுது அவருக்காக ஒரு பரிந்துபேசுபவர் வேண்டுமென்று அவர் ஏங்கினார். (7)

பிதாவுடனுள்ள அவருடைய இணைப்பு முறிந்துவிட்டதைக் கிறிஸ்து உணர்ந்தபோது, வரவிருக்கும் இருளின் வல்லமைகளுடனுள்ள போராட்டத்தை தமது மானிட இயல்புடன் தம்மால் தாங்க முடியாதோ என்று பயந்தார். வனாந்தரத்தில் உண்டான சோதனையில் மனித இனத்தின் முடிவு ஊசலாடிக்கொண்டிருந்தது. அப்பொழுது கிறிஸ்து வெற்றிவீரரானார். இப்பொழுது சோதனைக்காரன் கடைசிப் பயங்கரமான போருக்காக வந்திருந்தான். கிறிஸ்துவின் மூன்று வருட ஊழியத்தின்போது, இதற்காக அவன் ஆயத்தஞ்செய்துகொண்டிருந்தான். அவனுடைய வெற்றியும் தோல்வியும் இதில் தொக்கிநின்றது. இங்கு அவன் தோற்றுப்போனால் ஆதிக்கத்தின்மீதுள்ள அவனுடைய நம்பிக்கை இழக்கப்படும். முடிவில்

உலகத்தின் இராஜ்யங்கள் கிறிஸ்துவினுடையதாகிவிடும். அவன் தானாகவே தோல்வியடைந்து புறம்பே தள்ளப்படுவான். ஆனால் கிறிஸ்து தோல்வியடைவாரானால், இந்தப் பூமி சாத்தானின் இராஜ்யமாகிவிடும். அதைத் தொடர்ந்து மனித இனம் முழுவதும், என்றென்றைக்கும் அவனுடைய வல்லமையில் இருக்கும். போராட்டத்தின் பிரச்சனைகள் அவருக்குமுன் இருக்க தேவனிடத்திலிருந்து பிரிக்கப்பட்டுவிடலாம் என்னும் பயத்தால் கிறிஸ்துவின் ஆத்துமா நிறைக்கப்பட்டிருந்தது. பாவமிக்க ஒரு உலகத்திற்கு அவர் பிணையாளியானால் அந்தப் பிரிவினை நித்தியமானதாக இருக்கும் என்று சாத்தான் அவரிடம் கூறினான். மேலும் அவர் அவனது இராஜ்யத்தில் ஒருவராக அடையாளப்படுத்தப்பட்டு, இனி ஒருபோதும் தேவனுடன் ஒன்றாக இருக்கமாட்டார் என்றும் கூறினான். (8)

இந்த தியாகத்தினால் உண்டாகக்கூடிய இலாபம் என்ன? மனிதர்களின் குற்றமும் நன்றிகெட்ட தன்மையும் எவ்வளவு நம்பிக்கையற்ற நிலையில் காணப்பட்டது! அதன் மிகவும் கடினமாக அம்சங்களில் சாத்தான் அந்த நெருக்கடியான நிலையை மீட்பரின்மீது அழுத்தினான். உலகப்பிரகாரமாகவும் ஆவிக்குரிய அனுகூலங்களிலும் மற்றெல்லாவற்றையும்விட மேலாக இருந்த மக்கள் அவரை புறக்கணித்திருக்கின்றனர்; ஒரு விசேஷமான மக்களாக அவர்களுக்குக் கொடுக்கப்பட்டிருந்த வாக்குத்தத்தத்தங்களின் முத்திரையாகவும், அஸ்திபாரமாகவும், மையமாகவும் இருக்கிற உம்மை அழிக்க அவர்கள் வகைதேடிக்கொண்டிருக்கிறார்கள்; உம்முடைய சொந்த சீடர்களில் ஒருவன்—உம்முடைய போதனைகளைக் கவனித்திருக்கிறவன்—சபைக்காரியங்களில் இருந்தவர்களுக்கிடையில் முன்னணியில் இருந்தவன் உம்மைக் காட்டிக்கொடுப்பான்; உம்முடைய அடியார்களுக்கு மத்தியில் மிக அதிகமான அக்கறையுள்ள ஒருவன் உம்மை மறுதலிப்பான்; எல்லாரும் உம்மைக் கைவிடுவார்கள்; இந்த எண்ணத்தை கிறிஸ்து முழுமையாக அருவருத்தார். எவர்களை இரட்சிக்கும் பொறுப்பை அவர் எடுத்திருந்தாரோ, எவர்களை அந்த அளவிற்கு அதிகமாக அவர் நேசித்திருந்தாரோ, அவர்கள் சாத்தானின் சதித்திட்டங்களில் ஒன்றுசேருவார்கள். இந்தக் காரியம் அவருடைய ஆத்துமாவை ஊடுருவிச்சென்றது. அந்தப் போராட்டம் பயங்கரமானதாக இருந்தது. அது, அவருக்குச் சொந்தமான யூத மக்கள், அவரைக் குற்றஞ்சாட்டுபவர்கள், காட்டிக்கொடுப்பவன், துன்மார்க்கத்தில் கிடக்கும் ஒரு உலகத்தின் குற்றத்தைப்போன்று பெரிதாக இருந்தது. மனிதர்களின் பாவங்கள் கிறிஸ்துவின்மீது பாரமாக அழுத்தின. பாவத்திற்கெதிரான தேவனுடைய கோபத்தின் உணர்வு அவருடைய ஜீவனை நொறுக்கிக்கொண்டிருந்தது. (9)

மனித ஆத்துமாவிற்காக கொடுக்கப்படவேண்டிய விலையைப்பற்றித் தியானஞ்செய்துகொண்டிருக்கும் அவரைப் பாருங்கள்; அவருடைய கடுந் துயரில், தேவனிடத்திலிருந்து தூரமாக இழுக்கப்பட்டுக்கொண்டிருப்பதைத் தடுப்பதைப்போல, அவர் குளிர்ந்த தரையைப் பற்றிக்கொள்ளுகிறார். முகங்குப்புற விழுந்துகிடக்கும் அவரது உடலின்மீது இரவின் நடுங்கச்செய்யும் பனித்துளிகள் விழுகின்றன. ஆனால் அவர் அதைப் பொருட்படுத்தவில்லை. "என் பிதாவே, இந்தப் பாத்திரம் என்னைவிட்டு நீங்கக்கூடுமானால் நீங்கும்படி செய்யும்" என்னும் கசப்புமிக்க அழுகுரல் அவருடைய வெளிரிய உதடுகளிலிருந்து வருகிறது. என்றாலும் இப்பொழுதுங்கூட, "ஆகிலும் என் சித்தத்தின்படியல்ல, உம்முடைய சித்தத்தின்படியே ஆகக்கடவது" என்று அவர் தொடர்ந்து கூறுகிறார். (10)

மனித இருதயம் பாடுகளின்போது அனுதாபத்திற்காக ஏங்குகிறது. ஏக்கமுடையவராக இருந்த கிறிஸ்து அதை அவரில் மிகவும் ஆழமாக உணர்ந்தார். அவருடைய ஆத்துமாவின் அதிகமான கடுந்துயரில் எவர்களை அவர் அடிக்கடி ஆசீர்வதித்து, ஆறுதற்படுத்தி, துயரத்திலும் நம்பிக்கையற்ற நிலையிலும் கேடயமாகப் பாதுகாத்திருந்தாரோ, அந்த சீடர்களிடத்திலிருந்து ஆறுதலின் சில வார்த்தைகளைக் கேட்பதற்கு மிகுந்த ஆவலுடன் வந்தார். அவர்களுக்காக எப்பொழுதும் ஆறுதலின் வார்த்தைகளை உடைய ஒருவர், இப்பொழுது மனித இயல்பிற்கும் மேலான வேதனையை அனுபவித்துக்கொண்டிருந்தார். அவர்கள் அவருக்காகவும் அவர்களுக்காகவும் ஜெபிக்கிறார்களா என்பதை அறிந்துகொள்ள ஏக்முடையவராக இருந்தார். பாவத்தின் கடுமையான தன்மை, எவ்விதமான இருளாகக் காணப்பட்டது! அவர் தேவனுக்குமுன் குற்றமில்லாதவராக நின்றிருந்தபோது, மனித இனம் அதன் குற்றத்தின் பலன்களை தானே சுமந்துகொள்ளட்டும் என்று விட்டுவிடுகின்ற சோதனை பயங்கர மானதாக இருந்தது. அவருடைய சீடர்கள் அதைப் புரிந்துகொண்டும் பாராட்டியும் இருந்தனர் என்பதை அவரால் அறியக்கூடுமானால், அவர் பலப்படுத்தப்பட்டிருந்திருப்பார். (11)

வேதனைமிக்க முயற்சியுடன் எழுந்து அவர் எந்த இடத்தில் அவருடைய தோழர்களை விட்டுவந்திருந்தாரோ, அந்த இடத்திற்குத் தள்ளாடிச் சென்றார். ஆனால் அவர்கள் நித்திரை செய்வதை அவர் காண்கிறார். அவர்கள் ஜெபிப்பதைக் கண்டிருந்தாரானால் அவருடைய பாரம் குறைந்திருக்கும்.சாத்தானின் ஏதுகரங்கள் அவர்களை வெற்றிகொள்ளாதபடி அவர்கள் தேவனில் அடைக்கலம் தேடியிருந்தார்களானால், அவர்களுடைய உறுதியான விசுவாசத்தினால் அவர் ஆறுதலடைந்திருப்பார். ஆனால் அவர்கள் "விழித்திருந்து ஜெபம்பண்ணுங்கள்" என்று திரும்பத்திரும்பக்

கூறப்பட்டிருந்த எச்சரிக்கைக்குச் செவிசாய்க்கவில்லை. வழக்கமாக அமைதியாகவும் மேன்மையாகவும் இருக்கும் அவர்களுடைய ஆண்டவர் அறிந்துகொள்ளுதலிற்கு அப்பாலுள்ள துயரத்துடன் போராடிக்கொண் டிருந்ததில் முதலில் அவர்கள் மிகவும் கலக்கமடைந்திருந்தனர். பாடுகளை அனுபவித்துக்கொண்டிருந்தவரின் பலத்த அழுகையின் சத்தத்தைக் கேட்டபோது, அவர்கள் ஜெபித்தனர். அவர்கள் தங்களுடைய கர்த்தரைக் கைவிடும் நோக்கத்தில் இல்லை. ஆனால் தேவனிடத்தில் மன்றாடுவதில் தொடர்ந்திருப்பார்களானால் அவர்களை செயலற்றுப்போகச் செய்ததுபோன்று காணப்பட்ட அந்த மயக்க நிலையை உதறித் தள்ளியிருந்திருக்கலாம். சோதனையைத் தாங்கி நிற்பதற்கு விழிப்பு, அக்கறைமிக்க ஜெபம் ஆகியவைகளின் அவசியத்தை அவர்கள் உணரவில்லை. (12)

அந்தத் தோட்டத்தை நோக்கிச் செல்லுமுன் இயேசு தமது சீடர்களிடம்: "இந்த இராத்திரியிலே நீங்களெல்லாரும் என்னிமித்தம் இடறலடைவீர்கள்" என்று கூறியிருந்தார். அவருடனேகூட சிறைச்சாலைக்கும் மரணத்திற்கும் செல்லுவோம் என்னும் பலமிக்க வாக்குறுதியை அவர்கள் அவருக்குக் கொடுத்திருந்தனர். அப்பொழுது பலவீனனும் சுயநிறைவும் உடைய பேதுரு: "உமதுநிமித்தம் எல்லாரும் இடறலடைந்தாலும், நான் இடறலடையேன்" என்று மேலும் கூறினான் (மாற்கு 14: 27,28). ஆனால் சீடர்கள் தங்கள்மீதே நம்பிக்கை வைத்திருந்தனர். கிறிஸ்து கொடுத்த ஆலோசனையின்படி அவர்கள் பலமிக்க உதவியாளரை நோக்கிப் பார்க்கவில்லை. இவ்விதமாக அவர்களுடைய அனுதாபமும் ஜெபமும் மிகவும் அதிகமாக இரட்சகருக்குத் தேவைப்பட்டிருந்தபோது, அவர்கள் நித்திரை செய்பவர்களாக காணப் பட்டார்கள். பேதுருவுங்கூட நித்திரைசெய்துகொண்டிருந்தான். (13)

இயேசுவின் மார்பில் சாய்ந்திருந்த அன்பான சீடன் யோவானும் நித்திரைசெய்திருந்தான். தனது ஆண்டவரின்மீதான யோவானின் அன்பு நிச்சயமாகவே அவனை விழிப்போடு வைத்திருக்கவேண்டும். அவருடைய மிகவும் அதிகமான துயரத்தில் அவன் நேசித்திருந்த இரட்சகரின் ஜெபத்துடன் அவனுடைய அக்கறைமிக்க ஜெபங்கள் கலந்திருக்கவேண்டும். சீடர்களின் விசுவாசம் தவறிவிடக்கூடாது என்பதற்காக அவர்களுக்காக மீட்பர் அநேக இரவுகளை ஜெபத்தில் செலவளித்திருந்தார். இப்பொழுது இயேசு யாக்கோபிடத்திலும் யோவானிடத்திலும் அவர் ஒரு தடவை கேட்டிருந்த "நான் குடிக்கும் பாத்திரத்தில் நீங்கள் குடிக்கவும், நான் பெறும் ஸ்நானத்தை நீங்கள் பெறவும் உங்களால் கூடுமா" என்ற கேள்வியைக் கேட்டிருந்தால், "கூடும்" (மத்தேயு 20:22) என்னும் பதிலைக்கூறத் துணிந்திருக்கமாட்டார்கள். (14)

இயேசுவின் குரலில் சீடர்கள் நித்திரையிலிருந்து விழித்தெழுந்தனர். ஆனால் வேதனையினால் அவருடைய முகம் மாறியிருந்ததினால் அவரை அறிந்துகொள்வது அவர்களுக்குக் கடினமாயிருந்தது. பேதுருவை நோக்கி: “நீங்கள் ஒரு மணி நேரமாவது என்னோடேகூட விழித்திருக்கக்கூடாதா? நீங்கள் சோதனைக்குட்படாதபடிக்கு விழித்திருந்து ஜெபம்பண்ணுங்கள்; ஆவி உற்சாகமுள்ளதுதான், மாம்சமோ பலவீனமுள்ளது” என்றார். சீடர்களின் பலவீனம் இயேசுவின் அனுதாபத்தை விழிப்படையச்செய்தது, காட்டிக்கொடுக்கப்படல், அவருடைய மரணம் ஆகியவைகளால் அவர்கள்மீது வரக்கூடிய சோதனையை அவர்கள் தாங்கிக்கொள்ளமுடியாதவர்களாக இருப்பார்கள் என்று அவர் பயந்தார். அவர்களைக் கடிந்துகொள்ளாமல்: “நீங்கள் சோதனைக்குட்படாதபடிக்கு விழித்திருந்து ஜெபம்பண்ணுங்கள்” என்றார். அவருடைய மாபெரும் கடுந்துயரிலும்கூட அவர்களுடைய பலவீனத்தை மன்னிக்க அவர் வகைதேடிக்கொண்டிருந்தார். “ஆவி உற்சாகமுள்ளதுதான், மாம்சமோ பலவீனமுள்ளது” என்றார். (15)

மறுபடியும் தேவகுமாரன் மனித இயல்பிற்கு மேற்பட்ட வேதனையால் பற்றிக்கொள்ளப்பட்டார். மயக்கமும் சோர்வும் அடைந்தவராக, அவருடைய முந்திய போராட்டத்தின் இடத்திற்கே தள்ளாடித் திரும்பினார். அவருடைய பாடுகள் முந்தியதைவிட மிகவும் பெரியதாக இருந்தன. ஆத்துமாவின் கடுந்துயர் அவர்மீது வந்தபோது, “அவருடைய வேர்வை இரத்தத்தின் பெருந்துளிகளாய்த் தரையிலே விழுந்தது.” தேவதாரு மரங்களும் பேரீச்ச மரங்களும் அவருடைய வேதனைக்கு மௌனமான சாட்சிகளாக இருந்தன. அவைகளின் இலைகள்மிகுந்த கிளைகளிலிருந்து தாக்கப்பட்டிருந்த அவரின் உடலின்மீது பாரமான பனித்துளிகள் விழுந்தன. அது, இருளின் வல்லமைகளுடன் இயற்கையின் சிருஷ்டிகர் தனியாக போராடுவதைக்கண்டு இயற்கையும் அழுவதைப்போலிருந்தது, (16)

சற்று நேரத்திற்குமுன், ஒரு பலமிக்க தேவதாரு மரத்தைப்போல, அவருக்கெதிராக வீசிய எதிர்ப்பு என்னும் புயலின் சீற்றத்தை அவர் தாங்கிநின்றிருந்தார். அவரைக் குழப்பவும், அவர்மீது வெற்றிகொள்ளவும், குரோதத்தினாலும் தந்திரத்தினாலும் நிரப்பப்பட்டிருந்த பிடிவாதமான மனங்களும் இருதயங்களும் வீணாக முயன்றிருந்தன. தேவகுமாரனாக அவர் தெய்வீக மகத்துவத்துடன் நின்றிருந்தார். இப்பொழுதோ அவர் கோபமிக்க புயலினால் தாக்கப்பட்ட ஒரு நாணலைப்போலிருந்தார். எடுத்துவைத்த ஒவ்வொரு அடியிலும் அந்தகார வல்லமைகளின்மீது வெற்றியடைந்தவராக, ஒரு வெற்றிவீரராக அவருடைய பணியின் நிறைவேறுதலை சமீபித்திருந்தார். ஏற்கெனவே மகிமைப்படுத்தப்பட்ட ஒருவராக, தேவனுடனுள்ள ஒன்றித்த

தன்மையின்மீது அவர் உரிமைபாராட்டியிருந்தார். அவருடைய துதியின் பாடல்களை தடுமாறாதவிதத்தில் அவர் ஏறெடுத்திருந்தார். தைரியமும் மென்மையுமுள்ள வார்த்தைகளினால் அவருடைய சீடர்களிடத்தில் அவர் பேசியிருந்தார். இப்பொழுது இருளின் வல்லமையின் நேரம் வந்திருந்தது. இப்பொழுது நிசப்தமான அந்த இரவுக் காற்றில் அவருடைய குரல் வெற்றியின் குரலாக இல்லாமல், மனித வேதனை நிறைந்ததாகக் கேட்கப்பட்டது. நித்திரை மயக்கத்திலிருந்த சீடர்களின் செவிகளுக்கு, “என் பிதாவே, இந்தப் பாத்திரத்தில் நான் பானம்பண்ணினாலொழிய இது என்னைவிட்டு நீங்கக்கூடாதாகில், உம்முடைய சித்தத்தின்படி ஆகக்கடவது” என்னும் இரட்சகரின் வார்த்தைகள் எடுத்துச்செல்லப்பட்டிருந்தன. (17)

அவரிடத்திற்குச் செல்லவேண்டும் என்பது சீடர்களின் முதல் உணர்ச்சித் துடிப்பாக இருந்தது. ஆனால் அவர்களை அங்கேயே விழித்திருப்பதிலும் ஜெபத்திலும் தரித்திருங்கள் என்று கட்டளையிட்டிருந்தார். இயேசு அவர்களிடத்தில் வந்தபோது, அவர்கள் தொடர்ந்து நித்திரைசெய்துகொண்டிருந்ததை அவர் கண்டார். மறுபடியும் அவர் தோழமைக்கான ஒரு ஏக்கத்தை உணர்ந்தார். ஏனெனில் சீடர்களிடமிருந்துள்ள சில வார்த்தைகள் அவருக்கு நிவாரணத்தைக் கொண்டுவந்து, அவரை ஏறத்தாழ மிக அருகில் மேற்கொண்டிருந்த அந்தகாரத்தின் வீச்சை உடைக்கும். ஆனால் அவர்களுடைய கண்கள் மிகுந்த நித்திரை மயக்கமடைந்திருந்தது. மறுமொழியாக அவருக்குச் சொல்வது இன்னதென்று அவர்கள் அறியாமலிருந்தார்கள். அவருடைய பிரசன்னம் அவர்களை எழுப்பினது. அவருடைய முகம் கடுந்துயரின் இரத்த வியர்வையினால் அடையாளப்படுத்தப்பட்டிருந்ததை அவர்கள் கண்டு, பயம் நிறைந்தவர்களானார்கள். “மனுஷனைப்பார்க்கிலும் அவருடைய முகப்பார்வையும், மனுபுத்திரரைப்பார்க்கிலும் அவருடைய ரூபமும், இவ்வளவு அந்தக்கேடு அடைந்தபடியினாலே, அவரைக்கண்ட அநேகர் பிரமிப்படைந்தார்கள்”—ஏசாயா 52:14. (18)

இயேசு திரும்பி, மறுபடியும் அதே இடத்திற்குச்சென்றார். இருளின் பயங்கரத்தினால் மேற்கொள்ளப்பட்டு முகங்குப்புற விழுந்தார். சோதனையான அந்த நேரத்தில் தேவ குமாரனுடைய மானிடத்தன்மை நடுங்கினது. இப்பொழுது அவருடைய சீடர்களின் விசுவாசம் தோல்வி அடைந்துவிடக்கூடாது என்பதற்காக ஜெபிக்காமல், சோதிக்கப்பட்டு கடுந்துயரிலிருந்த அவருடைய சொந்த ஆத்துமாவிற்காக ஜெபித்தார். பயமூட்டுகின்ற அந்த நேரம்—உலகத்தின் மீட்பை முடிவுசெய்கின்ற அந்த இறுதி வேளை வந்திருந்தது. மானுடத்தின் மீட்பு தராசில் ஊசலாடியது.

குற்றமள்ள மனிதனுக்கு பங்காகக் கொடுக்கப்பட்டிருந்த பாத்திரத்தில் பருக இப்போதுங்கூடக் கிறிஸ்துவால் மறுக்கமுடியும். அது இப்போதுங்கூட அதிகத் தாமதமாயிருக்கவில்லை. அவருடைய நெற்றியிலிருந்த இரத்த வியர்வையைத் துடைத்துவிட்டு, மனிதன் தன்னுடைய அக்கிரமத்தில் அழியும்படி அவனை அவரால் விட்டிருக்கமுடியும். மீறுகின்ற நபர் அவனுடைய பாவத்தின் தண்டனையைப் பெற்றுக்கொள்ளட்டும். நான் என் பிதாவினிடத்திற்குத் திரும்பிச்செல்லுவேன் என்று அவரால் கூறியிருந்திருக்கமுடியும். அவமானம், வேதனை ஆகியவைகளின் கசப்பான பாத்திரத்தில் தேவகுமாரன் பானம் பண்ணுவாரா? குற்றமுள்ளவனை இரட்சிப்பதற்காக பாவத்தினுடைய சாபத்தின் பலன்களைக் குற்றமில்லாதவர் அனுபவிப்பாரா? "என் பிதாவே, இந்தப் பாத்திரத்தில் நான் பானம்பண்ணினாலொழிய இது என்னைவிட்டு நீங்கக்கூடாதாகில், உம்முடைய சித்தத்தின்படி ஆகக்கடவது" என்னும் வார்த்தைகள் நடுக்கத்துடன் இயேசுவின் வெளிரிய உதடுகளிலிருந்து விழுந்தன. (19)

அந்த ஜெபத்தை அவர் மூன்று தடவைகள் ஏறெடுத்தார். மூன்று முறை மானிடம் இறுதியான கிரீடம்போன்ற தியாகபலியிலிருந்து பின்வாங்கினது. ஆனால் இப்பொழுது மனித இனத்தின் வரலாறு உலகத்தின் மீட்பருக்குமுன்பாக வருகிறது. நியாயப்பிரமாணத்தை மீறினவர்களை அவர்களிடமே விட்டுவிட்டால், அவர்கள் அழிந்தாக வேண்டும் என்பதை அவர் காண்கிறார்; மனிதனின் உதவியற்ற நிலையை அவர் காண்கிறார்; பாவத்தின் வல்லமையை அவர் காண்கிறார்; தண்டனையடைந்த ஒரு உலகத்தின் ஆபத்துகளும் புலம்பல்களும் அவர்முன் எழும்புகின்றது. இந்த உலத்திற்கு நிகழவிருக்கும் அழிவை நோக்கிப் பார்க்கிறார். அவர் தமது தீர்மானத்தைச் செய்கிறார். அவருக்கு என்ன நிகழ்ந்தபோதிலும், எவ்விதத்தினாலும் அவர் மனிதனை இரட்சிப்பார். அழிந்துகொண்டிருக்கும் இலட்சக்கணக்கானவர்கள் அவர்மூலமாக நித்திய ஜீவனை ஆதாயமாக அடைந்துகொள்ளலாம் என்பதற்காக அவர் தம்முடைய இரத்த ஸ்நானத்தை ஏற்றுக்கொள்ளுகிறார். தொலைந்துபோன ஒரு ஆட்டை இரட்சிப்பதற்காக, மீறுதலினால் விழுந்திருக்கும் ஒரு உலகத்தை இரட்சிப்பதற்காக, அனைத்தும் தூய்மையும் மகிழ்ச்சியும் மகிமையுமாக உள்ள பரலோகத்தின் பிராகாரங்களை விட்டு அவர் வந்திருக்கிறார். அவருடைய ஊழியத்திலிருந்து அவர் திரும்பமாட்டார். பாவஞ்செய்வதற்கு விரும்பியிருந்த ஒரு இனத்திற்கு அவர் சமாதானம் உண்டுபண்ணுவார். "இந்தப் பாத்திரத்தில் நான் பானம்பண்ணினாலொழிய இது என்னைவிட்டு நீங்கக்கூடாதாகில், உம்முடைய சித்தத்தின்படி ஆகக்கடவது" என்னும் கீழ்ப்படிதலைமட்டுமே அவருடைய ஜெபம் மூச்சாகக் கொண்டிருக்கிறது. (20)

அந்த முடிவைச் செய்தபின், அவர் செத்தவரைப்போலத் தரையில் விழுந்தார். அதிலிருந்து ஓரளவு எழும்பினார். மயங்கிக்கொண்டிருக்கும் தங்களுடைய ஆண்டவரின் சிரசிற்குக்கீழ் தங்கள் கரங்களை மென்மையாக வைத்துத் தாங்கி, மனுபுத்திரரின் முகங்களைவிட கேடடைந்திருக்கும் அவருடைய புருவத்தைத் துடைப்பதற்கு அவருடைய சீடர்கள் இப்பொழுது எங்கேயிருந்தனர்? இரட்சகர் திராட்சை ஆலையை தனியாக மிதித்தார். மக்களில் ஒருவரும் அவருடன் இருக்கவில்லை. (21)

ஆனால் தேவன் அவருடைய குமாரனுடன் பாடுகளை அனுபவித்தார். இரட்சகரின் வேதனையை தூதர்கள் கண்டார்கள். ஆயிரக்கணக்கான சாத்தானின் சேனைகளால் தங்களுடைய கர்த்தர் சூழப்பட்டிருப்பதை அவர்கள் கண்டார்கள். தள்ளாடச்செய்யும் ஒரு விசித்திரமான பயத்தினால் அவருடைய இயல்பு தள்ளாடி கனமாகக் கீழ்நோக்கி இழுக்கப்பட்டது. பரலோகத்தில் மௌனம் நிலவியிருந்தது. ஒரு சுரமண்டலமும் மீட்டப்படவில்லை. ஒளியின் கதிர்களையும் அன்பையும் மகிமையையும் பிதா அவருடைய நேசகுமாரனிலிருந்து விலக்கினதை மௌனமிக்க வருத்தத்துடனும் ஆச்சரியத்துடனும் பரலோகத்தின் சேனைகள் பார்த்திருந்ததை அழிவிற்குரியவர்கள் பார்த்திருப்பார்களானால் அவருடைய பார்வையில் பாவம் எவ்விதம் எதிர்ப்புடையது என்பதைச் சரியாகப் புரிந்துகொள்வார்கள். (22)

அந்தப் போராட்டம் அதன் முடிவை நெருங்கினபோது, அதை விழுந்துபோகாத உலகங்களும் பரலோகத்தின் தூதர்களும் தீவிரமான ஆர்வத்துடன் கவனித்தனர். மீட்பின் பணியிலுண்டான இந்தப் பெரிய நெருக்கடியை சாத்தானும் அவனுடைய பொல்லாத கூட்டத்தினரான அதாவது, மருளவிழுந்துபோன ஆயிரக்கணக்கான தீய தூதர்களும் ஆவலுடன் கவனித்தனர். மூன்று தடவைகள் திரும்பத் திரும்ப ஏறெடுக்கப்பட்ட கிறிஸ்துவின் ஜெபத்திற்கு வரும் பதிலுக்காக நன்மையின் வல்லமைகளும் தீமையின் வல்லமைகளும் காத்திருந்தன. பாடுகளை அனுபவித்துக்கொண்டிருக்கும் தெய்வீகமானவருக்கு நிவாரணத்தைக் கொண்டுவர தூதர்கள் ஏக்கத்தோடு இருந்தனர். ஆனால் அதைச் செய்யமுடியாது. தேவகுமாரனுக்குத் தப்பிச்செல்லும் பாதை எதுவும் காணப்படவில்லை. பயங்கரமான அந்த நெருக்கடியில் அனைத்தும் வெற்றியா அல்லது தோல்வியா என்று உறுதியற்ற போராட்ட நிலையில் இருந்தபோது, பாடுகளை அனுபவித்துக்கொண்டிருப்பவரின் கரத்தில் எவரும் விளங்கிக்கொள்ளக்கூடாத நிலையிலுள்ள அந்தப் புதிரான பாத்திரம் நடுங்கிக்கொண்டிருந்தபோது, வானம் திறக்கப்பட்டது. அந்தப்

புயல்மிக்க நெருக்கடியின் இருளுக்கிடையில் ஒரு ஒளி பிரகாசித்தது. அப்பொழுது விழுந்துபோன சாத்தானின் இடத்தில் வைக்கப்பட்டிருக்கும்—தேவ சமுகத்தில் நிற்கும் அந்த பலமிக்க தூதன் கிறிஸ்துவின் அருகில் வந்தான். கிறிஸ்துவின் கரத்திலிருந்து அந்தப் பாத்திரத்தை எடுத்துப்போட அவன் வராமல், பிதாவின் அன்பைப்பற்றிய வாக்குறுதியுடன் அதைப் பானம் பண்ணுவதற்கு அவரைப் பலப்படுத்த வந்தான். தெய்வீக மானிடராக இருந்தவருக்கு வல்லமையைக் கொடுப்பதற்காக அவன் வந்தான். அவன் திறந்திருந்த வானத்தை அவருக்குச் சுட்டிக்காட்டி, அவருடைய பாடுகளின் பலனாக இரட்சிக்கப்படவிருக்கும் ஆத்துமாக்களைப்பற்றி அவருக்கு கூறினான். சாத்தானைவிட அவருடைய பிதா மிகவும் பெரியவர் என்றும், வல்லமை உள்ளவரென்றும் உறுதிகூறி, அவருடைய மரணம் சாத்தானின் முழுமையான தோல்விக்குக் காரணமாகும் என்றும், இந்த உலகத்தின் இராஜ்யம் உன்னதமானவரின் பரிசுத்தவான்களுக்குக் கொடுக்கப்படும் என்றும் கூறினான். அவர் தம்முடைய ஆத்தும வருத்தத்தின் பலனைக்கண்டு, அதனால் திருப்தியடைவாரென்றும், ஏனெனில் மனித இனத்தின் திரளானவர்களை இரட்சிக்கப்பட்டவர்களாக—நித்தியகாலத்திற்கென்று இரட்சிக்கப்பட்டவர்களாக அவர் காண்பாரென்றும் அவரிடம் கூறினான். (23)

கிறிஸ்துவின் கடுந்துயரங்கள் நீங்கவில்லை. ஆனால் அவருடைய ஆவியின் சோர்வும் அதைரியமும் அவரைவிட்டுச் சென்றது. எந்தவிதத்திலும் அந்தப் புயல் தணியவில்லை. ஆனால் அதன் இலக்காக எவர் இருந்தாரோ அவர் அதன் சீற்றத்தைச் சந்திக்கும்படி பலப்படுத்தப்பட்டார். அவர் அமைதியாகவும் கலங்காமலும் முன்வந்தார். இரத்தக்கறைபடிந்த அவரது முகத்தின்மீது ஒரு பரலோக சமாதானம் தங்கியது. எந்த ஒரு மனிதனாலும் ஒருபோதும் தாங்கிக்கொள்ள முடியாமலிருந்ததை அவர் தாங்கிக்கொண்டார். ஏனெனில் மரணத்தின் பாடுகளை ஒவ்வொரு மனிதனுக்காகவும் அவர் ருசிபார்த்தார். (24)

இரட்சகரைச் சூழ்ந்திருந்த ஒளியினால் நித்திரைசெய்துகொண்டிருந்த சீடர்கள் திடீரென்று விழித்துக்கொண்டனர். முகங்குப்புற விழுந்துகிடக்கும் அவர்களுடைய ஆண்டவரை நோக்கி அந்தத் தூதன் குனிந்திருப்பதை அவர்கள் கண்டார்கள். இரட்சகரின் தலையை அவன் தன் மார்பிற்கு உயர்த்தி வானத்திற்கு நேராகச் சுட்டிக்காட்டுவதை அவர்கள் கண்டார்கள். ஆறுதலையும் நம்பிக்கையையும் உடைய வார்த்தைகளைப் பேசுகின்ற இனிய இசைபோன்ற அவனுடைய குரலை அவர்கள் கேட்டார்கள். மறுரூப மலையின்மீதான காட்சியைச் சீடர்கள் திரும்பவும் நினைத்துக்கொண்டார்கள். ஆலயத்தில் வைத்து இயேசுவைச் சூழ்ந்த மகிமையையும், மேகத்திலிருந்து

பேசின தேவனுடைய குரலையும் அவர்கள் ஞாபகப்படுத்திக்கொண்டார்கள். இப்பொழுது அதேவிதமான மகிமை மறுபயும் வெளிப்படுத்தப்படவேண்டும். அதற்குமேல் அவர்களுடைய ஆண்டவருக்காக பயமடையவில்லை. அவர் தேவனுடைய கவனத்தின்கீழ் இருந்தார். அவரைப் பாதுகாக்கும்படி பலமிக்க ஒரு தூதன் அனுப்பப்பட்டிருந்தான். மறுபடியும் சீடர்கள் அவர்களுடைய களைப்பில் அவர்களை மேற்கொண்டிருந்த அபூர்வமான மயக்கத்திற்கு ஆளானார்கள். மறுபடியும் இயேசு அவர்கள் நித்திரை செய்வதைக் காண்கிறார். (25)

துயரத்துடன் அவர்களைப் பார்த்து: "இனி நித்திரைபண்ணி இளைப்பாறுங்கள்; இதோ, மனுஷகுமாரன் பாவிகளுடைய கைகளில் ஒப்புக்கொடுக்கப்படுகிற வேளை வந்தது" என்று கூறினர்ர். (26)

இந்த வார்த்தைகளை அவர் பேசிக்கொண்டிருக்கும்போதே, அவரைத் தேடிக்கொண்டிருக்கும் கூட்டத்தினரின் காலடிச் சத்தத்தை அவர்கேட்டு, "என்னைக் காட்டிக்கொடுக்கிறவன், இதோ, வந்துவிட்டான், எழுந்திருங்கள், போவோம்" என்றார். (27)

அவரைக் காட்டிக்கொடுப்பவனைச் சந்திப்பதற்காக இயேசு முன்சென்றபோது, சற்றுமுன்னர் அவர் அனுபவித்த கடுந்துயரின் சுவடுகள் எதுவும் காணக்கூடியதாக இல்லை. அவருடைய சீடர்களுக்குமுன்பாக நின்று அவர்களை நோக்கி: "யாரைத் தேடுகிறீர்கள்" என்றார். அதற்கு அவர்கள் பிரதியுத்தரமாக: "நசரேயனாகிய இயேசுவைத் தேடுகிறோம்" என்றார்கள். "நான்தான்" என்று இயேசு பதில் கூறினார். இந்த வார்த்தைகள் பேசப்பட்டபோது, இயேசுவிற்கு ஊழியஞ்செய்திருந்த தூதன் அவருக்கும் அந்தக் கூட்டத்தினருக்கும் இடையில் நகர்ந்தான். இரட்சகரின் முகத்தை ஒரு தெய்வீக ஒளி பிரகாசிக்கச் செய்தது. அப்பொழுது புறாவைப்போன்ற ஒரு வடிவம் அவர்மேல் நிழலிட்டது. இந்த தெய்வீக ஒளியின் பிரசன்னத்தில் அந்தக் கொலைகார கும்பலினால் விநாடிநேரங்கூட நிற்கமுடியவில்லை. அவர்கள் தள்ளாடி பின்னிட்டு விழுந்தார்கள். ஆசாரியர்களும், மூப்பர்களும், சேனைவீரர்களும், யூதாசுங்கூட செத்த மனிதர்களைப்போல தரையில் விழுந்தார்கள். (28)

அந்தத் தூதன் பின்னிட்டுச் சென்றபோது, அந்த ஒளி மங்கி மறைந்தது. இயேசு தப்பிச்செல்லும் வாய்ப்பைப் பெற்றிருந்தார். ஆனால் அவர் அமைதியும் தன்னடக்கமும் உள்ளவராக அங்கேயே இருந்தார். இரக்கமற்ற அந்தக் கூட்டத்தினர் உதவியற்றவர்களாக அவருடைய பாதத்தில் முகங்குப்புற விழுந்துகிடந்தபோது, அவர்களுக்கு நடுவில்

அவர் மகிமைப்படுத்தப்பட்டவராக நின்றார். சீடர்கள் மௌனமாகவும் ஆச்சரியத்துடனும் பயத்துடனும் பார்த்துக்கொண்டிருந்தனர். (29)

ஆனால் விரைவில் அந்தக் காட்சி மாறியது. அந்தக் கூட்டத்தினர் மீண்டும் எழுந்தனர். ரோம அரசின் சேனை வீரர்களும் ஆசாரியர்களும் யூதாசும் கிறிஸ்துவைச் சூழ்ந்துகொண்டனர். அவர்களுடைய பலவீனத்தைக்குறித்து அவர்கள் வெட்கமடைந்ததுபோலக் காணப்பட்டதுடன், அவர் இன்னுங்கூடத் தப்பித்துக்கொள்வார் என்று பயந்தார்கள். நீங்கள் “யாரைத் தேடுகிறீர்கள்” என்னும் கேள்வி, மறுபடியும் கேட்கப்பட்டது. அவர்களுக்கு முன்பாக நின்றிருந்தவர் தேவகுமாரன்தான் என்னும் சான்றினை அவர்கள் பெற்றனர். ஆனாலும் மன உணர்த்துதலை அடையக்கூடாதவர்களாக இருந்தனர். நீங்கள் “யாரைத் தேடுகிறீர்கள்?” என்ற கேள்விக்கு அவர்கள் மறுபடியும் “நசரேயனாகிய இயேசுவைத் தேடுகிறோம்” என்று பதில் கூறினார்கள். அதற்கு அவர்: “நான்தானென்று உங்களுக்குச் சொன்னேனே; என்னைத் தேடுகிறதுண்டானால், இவர்களைப் போகவிடுங்கள்” என்று சீடர்களை சுட்டிக்காட்டிக் கூறினார். அவர்கள் எப்படிப் பலவீனமாக இருந்தனர் என்பதை அவர் அறிந்து, சோதனையிலிருந்தும் பரீட்சையிலிருந்தும் அவர்களைப் பாதுகாக்க வகைதேடினார். அவர்களுக்காகத் தம்மைத் தியாகஞ்செய்ய அவர் ஆயத்தமாயிருந்தார். (30)

காட்டிக்கொடுக்க இருந்த யூதாஸ், அவன் செயலாற்ற வேண்டிய பகுதியை மறக்காமலிருந்தான். அந்தக் கூட்டத்தினர் அந்தத் தோட்டத்திற்குள் பிரவேசித்தபோது, பிரதான ஆசாரியன் நெருக்கமாகப் பின்தொடர, அவன் அவர்களை வழிநடத்தியிருந்தான். இயேசுவைத் தொடர்ந்திருந்தவர்களுக்கு: “நான் எவனை முத்தஞ்செய்வேனோ அவன்தான், அவனைப் பிடித்துக்கொள்ளுங்கள்” என்று கூறி அவன் ஒரு அடையாளத்தைக் கொடுத்திருந்தான். இப்பொழுது அவர்களுடன் தனக்குப் பங்கில்லை என்பதுபோல அவன் நடிக்கிறான். இயேசுவிற்கு அருகில் வந்து, ஒரு பழக்கமான நண்பனைப்போல அவருடைய கரத்தை எடுக்கிறான். “ரபீ வாழ்க” என்னும் வார்த்தைகளுடன் அவரைத் திரும்பவும் திரும்பவும் முத்தஞ்செய்து, அவருடைய ஆபத்தில் அவர்மீது அனுதாபப்பட்டு அழுவதைப்போலக் காண்பிக்கிறான். (31)

இயேசு அவனிடம்: “சிநேகிதனே, என்னத்திற்காக வந்திருக்கிறாய்” என்றார். கூடவே “யூதாசே முத்தத்தினாலேயா மனுஷகுமாரனைக் காட்டிக் கொடுக்கிறாய்” என்றபோது, துயரத்தினால் அவருடைய குரல் நடுங்கினது. இந்த முறையீடு அந்தக் காட்டிக்கொடுப்பவனின் மனச்சாட்சியை எழுப்பி, அவனுடைய பிடிவாதமான இருதயத்தைத் தொட்டிருந்திருக்கவேண்டும்.

ஆனால் கனம், நேர்மை, மனித மேன்மைகள் ஆகியவை அவனைவிட்டு விலகியிருந்தன. அவன் தைரியமுள்ளவனாகவும் கீழ்ப்படிய மறுப்பவனாகவும் இரக்கத்தைக் காட்டாதவனாகவும் இருந்தான். அவன் தன்னைத்தானே சாத்தானுக்கு ஒப்புக்கொடுத்திருந்ததினால், அவனை எதிர்த்து நிற்கும் வல்லமை இல்லாதவனாக இருந்தான். அந்தக் காட்டிக்கொடுப்பவனின் முத்தத்தை இயேசு மறுக்கவில்லை. (32)

சற்றுநேரத்திற்குமுன்பாக அவர்களுடைய கண்களுக்குமுன்னால் மகிமைப்படுத்தப்பட்டிருந்தவரை யூதாஸ் தொடுவதைக் கண்டபோது, அந்தக் கூட்டத்தினர் தைரியமடைந்தனர். இப்பொழுது அவர்கள் இயேசுவைப்பிடித்து, நன்மை செய்வதற்கென்று எப்பொழுதும் செயலாற்றியிருந்த அவருடைய அருமையான கரங்களைக் கட்டுவதற்கு ஆயத்தமானார்கள். (33)

பிடித்துக்கொள்ளப்படுவதற்கு அவர்களுடைய ஆண்டவர் தம்மை அனுமதிக்கமாட்டார் என்று சீடர்கள் நினைத்திருந்தனர். ஏனெனில் அந்தக் கூட்டத்தினரைச் செத்த மனிதர்களைப்போல விழச்செய்திருந்த அதே வல்லமை, இயேசுவும் அவருடைய தோழர்களும் தப்பிச்செல்லும்வரைக்கும் அவர்களை உதவியற்றவர்களாகவே வைக்கும் என்று அவர்கள் நம்பியிருந்தனர். நேசித்திருந்தவரின் கைகளைக் கட்டுவதற்காகக் கயிறுகள் கொண்டுவரப்பட்டதை அவர்கள் கண்டபோது, ஏமாற்றமும் கோபமும் அடைந்தனர். பேதுரு அவனுடைய கோபத்தில் யோசனையின்றி அவனுடைய பட்டயத்தை உருவி, அவனுடைய ஆண்டவரைப்பாதுகாக்க முயன்றான். ஆனால் அவனால் பிரதான ஆசாரியனின் வேலைக்காரனின் செவியைமட்டுமே வெட்டமுடிந்தது. என்ன செய்யப்பட்டது என்பதை இயேசு கண்டபோது, ரோம அரசின் சேனை வீரர்களால் அவருடைய கரங்கள் உறுதியாகக் கட்டப்பட்டிருந்தபோதிலும் அவைகளை விடுவித்து, “இம்மட்டில் நிறுத்துங்கள்” என்று கூறினார். காயமடைந்த அந்தச் செவியை அவர் தொட்டார். உடனே அது முழுமையடைந்தது அதற்குப்பின் அவர் பேதுருவை நோக்கி: “உன் பட்டயத்தைத் திரும்ப அதின் உறையிலே போடு; பட்டயத்தை எடுக்கிற யாவரும் பட்டயத்தால் மடிந்து போவார்கள். நான் இப்பொழுது என் பிதாவை வேண்டிக்கொண்டால், அவர் பன்னிரண்டு லேகியோனுக்கு அதிகமான தூதரை என்னிடத்தில் அனுப்பமாட்டாரென்று நினைக்கிறாயா?” என்றார். ஒவ்வொரு சீடனுக்கும் பதிலாக ஒரு லேகியோன் தூதர்களை அவர் அனுப்பமுடியும். ஆ, ஏன் அவரையும் நம்மையும் அவர் காப்பாற்றாமலிருக்கிறார் என்று சீடர்கள் நினைத்தார்கள். பேசாத அவர்களுடைய எண்ணத்திற்கு மறுமொழியாக அவர்: “அப்படிச் செய்வேனானால், இவ்விதமாய்ச் சம்பவிக்கவேண்டும் என்கிற வேதவாக்கியங்கள் எப்படி நிறைவேறும்” என்ற தொடர்ந்து கூறினார். (34)

இயேசுவைப் பின்தொடர்ந்து பிடிக்கும் காரியத்தில் யூதத்தலைவர் களின் பதவிக்குரிய அந்தஸ்து அவர்களைத் தடைசெய்யாமலிருந்தது. கீழ்நிலைப் பணியாளர்களின்மீது நம்பிக்கை வைக்கமுடியாத அளவிற்கு அவரைக் கைதுசெய்யும் காரியம் மிகவும் முக்கியமானதாக இருந்தது. கெத்செமனேவிற்கு யூதாசுடன் செல்லுவதற்கு சூழ்ச்சி நிறைந்த ஆசாரியர்களும் மூப்பர்களும் ஆலயத்தின் காவலாளர்களுடனும் கலகம் செய்யும் கூட்டத்தினருடனும் ஒன்றுசேர்ந்தனர். சமுதாயத்தில் மேன்மையாகக் கருதப்பட்ட அவர்கள், உணர்ச்சிகளின் எழுப்புதலில் அக்கறைமிக்கவர்களாக, எல்லாவிதமான ஆயுதங்களையும் எடுத்துக்கொண்டு, ஒரு காட்டுவிலங்கைத் தொடருவதைப்போன்ற ஒரு கூட்டத்தினருடன் ஒன்றுபடுவதற்கு அந்தக் கூட்டம் எப்படிப்பட்ட ஒன்றாக இருந்தது! (35)

கிறிஸ்து ஆசாரியர்கள், மூப்பர்கள் ஆகியோரின் பக்கம் திரும்பி, ஆராயும் அவருடைய பார்வையை அவர்கள்மீது பதித்தார். அவர் பேசின வார்த்தைகள் உயிருள்ளவரை மறக்கமுடியாதவைகளாக இருந்தன. அவைகள் சர்வவல்லவரின் அம்புகளைப்போலக் கூர்மையாக இருந்தன. மிகுந்த மேன்மையுடன்: கள்ளனைப் பிடிக்கப் புறப்படுகிறதுபோல, நீங்கள் பட்டயங்களையும் தடிகளையும் எடுத்துக்கொண்டு என்னைப் பிடிக்கவந்தீர்கள்; நான் தினந்தோறும் உங்கள் நடுவிலே உட்கார்ந்து தேவாலயத்தில் உபதேசம்பண்ணிக்கொண்டிருந்தேன்; உங்களுடைய செய்கைக்கு இரவு பொருத்தமானதாக இருக்கிறது. “இதுவோ உங்களுடைய வேளையும் அந்தகாரத்தின் அதிகாரமுமாயிருக்கிறது” என்றார். (36)

தம்மைப் பிடித்துக்கொள்ளவும், கட்டவும், இயேசு தாமே அனுமதித்ததைக் கண்டபோது, சீடர்கள் திகிலடைந்தார்கள். அவருக்கும் தங்களுக்குமான இந்த அவமானத்தை அவர் அனுமதித்ததற்காக அவர்கள் இடறலடைந்தார்கள். அவருடைய நடவடிக்கையை அவர்கள் புரிந்துகொள்ள முடியாதவர்களாயிருந்து, அந்தக் கூட்டத்தினருக்குக் கீழ்ப்படிந்ததற்காக அவரைக் குற்றப்படுத்தினார்கள். அவர்களுடைய கோபத்திலும் அச்சத்திலும் அவர்கள் தங்களைத் தாங்களே காப்பாற்றிக்கொள்ளவேண்டும் என்று பேதுரு முன்மொழிந்தான். இந்த ஆலோசனையைப் பின்பற்றி “அப்பொழுது, சீஷர்களெல்லாரும் அவரைவிட்டு ஓடிப்போனார்கள்.” இந்த ஓடிப்போகுதலைப்பற்றி கிறிஸ்து “இதோ, நீங்கள் சிதறுண்டு, அவனவன் தன்தன் இடத்துக்குப் போய், என்னைத் தனியே விட்டுவிடுங்காலம் வரும்; அது இப்பொழுது வந்திருக்கிறது; ஆனாலும் நான் தனித்திரேன், பிதா என்னுடனேகூட இருக்கிறார்” (யோவான் 16:32) என்று முன்னதாகவே கூறியிருந்தார். (37) ★

# 75

# அன்னா—காய்பாவின் விசாரணை மன்றத்திற்குமுன்!

**மத்தேயு 26:57–75, 27:1; மாற்கு 14:53–72, 15:1; லூக்கா 22:54–71; யோவான் 18:13–27**

**(The Desire of Ages, pp. 698–715)**

கீதரோன் ஆற்றுக்குமேலாகத் தோட்டங்களையும் ஒலிவத் தோப்புகளையும் கடந்து, நித்திரையிலிருந்த அந்த சப்தமில்லாத நகரத்தின் வழியாக அவர்கள் இயேசுவை துரிதமாகக் கொண்டுசென்றார்கள். அந்த நேரம் நடு இரவைக் கடந்திருந்தது. அமைதியாக இருந்த அந்தச் சூழ்நிலையில் அவரைப் பின்தொடர்ந்து சென்றிருந்த கலகக்கூட்டத்தினரின் வெறுப்பூட்டும் குரல்கள் அமைதியைக் கலைத்திருந்தது. இரட்சகர் கட்டப்பட்டு நெருக்கமாகக் காவல் செய்யப்பட்டிருந்தார். அவர் வேதனையுடன் நடந்தார். ஆனால் அவரைப் பிடித்தவர்கள் அக்கறைமிக்க அவசரத்துடன் முந்தைய பிரதான ஆசாரியனாக இருந்த அன்னாவின் அரண்மனைக்கு அவருடன் சென்றனர். (1)

அன்னா, ஆசாரிய ஊழியஞ்செய்துகொண்டிருக்கும் ஆசாரிய குடும்பத்தின் தலைவனாக இருக்கவே, அவனுடைய வயதினிமித்தம் பிரதான ஆசாரியன் என்று மக்களால் ஏற்றுக்கொள்ளப்பட்டிருந்தான். அவனுடைய ஆலோசனை தேடப்பட்டு, அதனை தேவனுடைய குரலாகச் செயல்படுத்தியிருந்தனர். ஆசாரியத்துவ வல்லமைக்குமுன் கைதியாக இருக்கும் இயேசுவை முதலில் அவன் காணவேண்டும்.அவர்கள் எந்த நோக்கத்திற்காகச் செயலாற்றிக்கொண்டிருக்கிறார்களோ, அந்த நோக்கத்தை அடைந்துகொள்ளுவதில் அனுபவக்குறைவுள்ள காய்பா தோற்றுவிடக்கூடும் என்னும் பயத்தினால், கைதியை விசாரணை செய்யும்போது அன்னா அங்கு இருக்கவேண்டுமென்று எண்ணப்பட்டது. இந்தச் சந்தர்ப்பத்தில் அவனுடைய யுக்தி, தந்திரம், புத்திக்கூர்மை ஆகியவை உபயோகப்படுத்தப்படவேண்டும்.

ஏனெனில், எப்படியாகிலும் கிறிஸ்துவிற்குத் தண்டனை விதிக்கப்பட வேண்டும். (2)

முறைமையின்படி சனகரீம் சங்கத்திற்குமுன்பாகக் கிறிஸ்து விசாரிக்கப்படவேண்டும். ஆனால் அதற்குமுன் அன்னாவிற்கு முன்பாக அவர் ஒரு தொடக்க விசாரணைக்குக் கீழ்ப்படுத்தப்படவேண்டும். ரோம நாட்டின் சட்டத்தின்படி சனகரீம் சங்கம் மரணதண்டனையை செயற்படுத்தக்கூடாது. அவர்கள் ஒரு கைதியை விசாரணைசெய்து தீர்ப்பு மாத்திரமே வழங்கமுடியும். அந்தத் தீர்ப்பு ரோம நாட்டின் அதிகாரிகளால் அங்கீகரிக்கப்படும்படி அவர்களிடத்திற்கு அனுப்பிவைக்கப்படவேண்டும். ஆகையால் கிறிஸ்து குற்றவாளிதான் என்று ரோமர்களால் கருதப்படும்படியான குற்றச்சாட்டுக்களை அவருக்கு எதிராகக் கொண்டுவருவது அவசியமானதாக இருந்தது. அவரை ஆக்கினைக்குட்படுத்தக்கூடிய ஒரு குற்றம் யூதர்களுடைய கண்களுக்கு முன்பாகவும் காணப்படவேண்டும். கிறிஸ்துவின் போதனைகளால் மன உணர்த்துலை அடைந்தவர்கள் ஆசாரியர்களிலும் அதிபதிகளிலும் சிலர் மட்டுமல்ல. ஆனால் சமுகத்திலிருந்து தள்ளிவைக்கப்பட்டுவிடுவோம் என்னும் பயம் அவரை அறிக்கை செய்வதிலிருந்து அவர்களைத் தடுத்திருந்தது. "ஒரு மனுஷன் சொல்லுவதைக் கேட்டு, அவன் செய்கைகளை அறிகிறதற்கு முன்னே, அவனை ஆக்கினைக்குட்படுத்தலாமென்று நம்முடைய நியாயப்பிரமாணம் சொல்லுகிறதா" (யோவான் 7:51) என்ற நிக்கொதேமுவின் கேள்வியை அந்த ஆசாரியர்கள் தெளிவாக நினைவு கூர்ந்தனர். இந்தக் கேள்வி, அப்போதைக்கு அந்த ஆலோசனை சங்கத்தைத் தோல்வியடையச் செய்து, அவர்களுடைய திட்டங்களைத் தடைசெய்திருந்தது. இப்பொழுது அழைக்கப்படக் கூடாதவர்களாக அரிமத்தியா ஊரானாகிய யோசேப்பும் நிக்கொதேமுவும் இருந்தனர். மேலும் நியாயத்திற்கு ஆதரவாகப் பேசுகின்ற துணிவை உடைய மற்றவர்களும் இருந்தனர். சனகரீம் சங்கத்தின் அங்கத்தினர்கள் கிறிஸ்துவிற்கு எதிராக ஒன்றுபடக்கூடியவிதமாக அந்த விசாரணை நடத்தப்படவேண்டும். ஆசாரியர் கள் நிலைநிறுத்த விரும்பின இரண்டு குற்றச்சாட்டுக்கள் இருந்தன. இயேசு தேவதூஷணம் கூறுபவர் என்பது மெய்ப்பிக்கப்படக்கூடுமானால், அவர் யூதர்களால் ஆக்கினைக்குட்படுத்தப்படுவார். இராஜத்துரோகம் என்னும் குற்றம் மெய்ப்பிக்கப்பட்டுவிட்டால், ரோமர்களால் உண்டாகக்கூடிய தண்டனையை அது கொண்டுவரும். இரண்டாவது குற்றச்சாட்டை நிலைநிறுத்த அன்னா முதலில் முயன்றான். அந்தக் கைதி கூறப்போகின்ற பதில்களில் ஏதாவது ஒரு காரியம் அகப்படுமானால் தாங்கள் தொடர்ந்து செயலாற்றலாமென்று நம்பி, அவன் அவருடைய சீடர்களைப்பற்றியும் அவருடைய கோட்பாடுகளைப்பற்றியும் இயேசுவிடம் கேள்வி கேட்டான்.

ஒரு புதிய இராஜ்யத்தை அமைக்கின்ற நோக்கத்துடன் ஒரு இரகசியமான சங்கத்தை ஏற்படுத்த அவர் வகைதேடிக்கொண்டிருக்கிறார் என்பதை மெய்ப்பிக்கக்கூடிய ஏதாவதொரு அறிக்கையை வரவழைக்கலாம் என்று அவன் நினைத்தான். அப்பொழுது அவரை அமைதியைக் கலைப்பவர் என்றும், கலகத்தை உருவாக்குபவர் என்றும் கூறி, ஆசாரியர்களால் அவரை ரோமர்களிடத்தில் ஒப்புக்கொடுக்கமுடியும். (3)

கிறிஸ்து ஆசாரியனின் நோக்கத்தை ஒரு திறந்த புத்தகத்தைப்போல வாசித்தார். தன்னை விசாரிப்பவனின் உள்ளான ஆத்துமாவை வாசிப் பதைப்போல, அவருக்கும் அவருடைய அடியார்களுக்குமிடையில் ஒரு இரகசியமான ஒற்றுமையின் பிணைப்பையும் அல்லது அவருடைய திட்டங்களை மறைப்தற்காக அவர்களை இரகசியமாக இருளில் கூட்டிச் சேர்த்தார் என்பதையும் அவர் மறுத்தார். அவருடைய நோக்கம் அல்லது கோட்பாடுபற்றி எந்த ஒரு இரகசியமும் அவரிடம் இல்லை. “நான் வெளியரங்கமாய் உலகத்துடனே பேசினேன்; ஜெபஆலயங்களிலேயும் யூதர்களெல்லாரும் கூடிவருகிற தேவாலயத்திலேயும் எப்பொழுதும் உபதேசித்தேன்; அந்தரங்கத்திலே நான் ஒன்றும் பேசவில்லை” என்றார். (4)

இரட்சகர் அவருடைய பணியின் தன்மையை அவர்மீது குற்றஞ்சாட்டுபவர்களின் செயல்முறைகளுடன் ஒப்பிட்டு, அதன் வேறுபாட்டைக் காட்டினார். நியாயமான வழிகளில் அடைந்துகொள்ள முடியாமலிருந்ததை பொய்ச்சாட்சியின்மூலமாக அடைந்துகொள்ளுவதற்காகவும், அவரைப் பொறியில் சிக்கவைக்கவும், இரகசிய விசாரணை சங்கத்திற்குமுன் கொண்டுவருவதற்கும் மாதக்கணக்கில் முயன்று அவர்கள் அவரை வேட்டையாடியிருந்தனர். இப்பொழுது அவர்களுடைய நோக்கத்தைச் செயலாற்றிக்கொண்டிருந்தனர். இயேசு கண்டனம் செய்யப்படுமுன்னரே, அல்லது குற்றங்சாட்டப்படுமுன்னரே, கலகக்கார கும்பலால் நள்ளிரவில் பிடிக்கப்பட்டு, இழுத்துக்கொண்டுபோகப்பட்டார். பரிகாசஞ்செய்தல் அவமதிப்போடு நடத்துதல் ஆகியவை அவர்களது நடவடிக்கைகளின் தன்மையாக இருந்தது. ஆனால் இயேசுவின் செயல்முறைகள் அப்படிப்பட்டவையல்ல. அவர்களுடைய செயல் நியாயப்பிரமாணத்தை மீறுவதாக இருந்தது. ஒருவன் குற்றவாளி என்பது மெய்ப்பிக்கப்படும்வரை, ஒவ்வொரு மனிதனும் குற்றமில்லாதவன் என்பதைப்போல நடத்தப்படவேண்டும் என்று அவர்களுடைய சொந்த நியாயப்பிரமாணம் அறிவித்தது. அந்த ஆசாரியர்கள் அவர்களுடைய சொந்தச் சட்டங்களினாலேயே ஆக்கினைக்குட்பட்டவர்களாக நின்றனர். (5)

இயேசு அவரிடம் கேள்வி கேட்டவனுக்கு நேராகத் திரும்பி, “நீர் என்னிடத்தில் விசாரிக்கவேண்டியதென்ன?” என்றார். அவருடைய செயல்களை கவனிக்கும்படியும், ஒவ்வொரு வார்த்தையைப்பற்றியும் அறிக்கைகொடுக்கும்படியும் ஆசாரியர்களும் அதிபதிகளும் வேவுகாரர்களை அனுப்பியிருக்கவில்லையா? மக்கள் ஒன்றுகூடியிருந்த ஒவ்வொரு கூட்டத்திலும் அவர்கள் வந்திருந்து, அவர் பேசியிருந்தவைகளையும் செய்திருந்தவைகளையும்பற்றிய தகவலை ஆசாரியர்களிடத்தில் கொண்டு செல்லவில்லையா? “நான் சொன்னவைகளைக் கேட்டவர்களிடத்தில் விசாரியும்; நான் பேசினவைகளை அவர்கள் அறிந்திருக்கிறார்களே” என்று பதில் கூறினார். (6)

அந்தப் பதிலில் இருந்த முடிவினால் அன்னா மௌனப்படுத்தப்பட்டான். அவனுடைய நடத்தையைப்பற்றிக் கிறிஸ்து ஏதாவது கூறிவிடுவாரோ என்று அவன் பயந்து, ஒன்றும் பேசாமல் மறைந்திருப்பதைத் தெரிந்து இந்த நேரத்தில் அவரிடத்தில் மேலும் அதிகமாக ஒன்றும் பேசாமலிருந்தான். அன்னா மௌனப்படுத்தப்பட்டதைக் கண்ட அவனுடைய அதிகாரிகளில் ஒருவன், கோபத்தால் நிறைந்து, “பிரதான ஆசாரியனுக்கு இப்படியா உத்தரவு சொல்லுகிறது” என்று கூறி, இயேசுவின் கன்னத்தில் ஒரு அறை அறைந்தான். (7)

கிறிஸ்து அமைதியாக, “நான் தகாத விதமாய்ப் பேசினதுண்டானால், தகாததை ஒப்புவி; நான் தகுதியாய்ப் பேசினேனேயாகில், என்னை ஏன் அடிக்கிறாய்” என்றார். பதிலுக்குப்பதில்செய்யும் எரிச்சலான எந்த வார்த்தையையும் அவர் கூறவில்லை. பாவமில்லாத பொறுமையான சாதுவான கோபமடையாத ஒரு இருதயத்திலிருந்து அவருடைய அமைதியான பதில் வந்தது. (8)

அவதூறையும் அவமானத்தையும் கிறிஸ்து மிகக் கடுமையான நிலையில் அனுபவித்தார். அவர் எவர்களைப் படைத்திருந்தாரோ, அவர்களுடைய கரங்களிலிருந்து, அவர் யாருக்காக முடிவில்லாத தியாகத்தைச் செய்துகொண்டிருந்தாரோ அவர்களிடத்திலிருந்து எல்லா விதமான அவமதிப்பையும் பெற்றார். அவருடைய பரிசுத்தத்தின் பரிபூரணத் திற்கும் பாவத்தின்மீதான அவருடைய வெறுப்பிற்கும் தக்க விகிதாச்சாரத்தில் அவர் பாடுகளை அனுபவித்தார். பிசாசுகளைப்போன்ற மனிதர்களால் அவர்மீது நடத்தப்பட்ட நியாயவிசாரணை அவருக்கு ஒரு நிரந்தரமான தியாகமாக இருந்தது. சாத்தானின் கட்டுப்பாட்டின்கீழுள்ள மனிதர்களால் சூழப்பட்டிருப்பது, அவருக்கு அருவருப்பாக இருந்தது. அவரைக் கொடூரமாகச் சித்திரவதை செய்பவர்களுக்கெதிராக அவருடைய தெய்வீக

வல்லமையை மின்னலிடச் செய்வதினால் அவர்களைப் பூமியின் தூளில் ஒரு வினாடியில் கிடத்திவிடமுடியும் என்பதை அவர் அறிந்திருந்தார். அது அந்த சோதனையை தாங்கக்கூடாத கடினமாக்கியிருந்தது. (9)

வெளிப்பிரகாரமான ஒரு தோற்றத்துடன் வெளிப்படவேண்டிய ஒரு மேசியாவை யூதர்கள் எதிர்நோக்கியிருந்தனர். மேற்கொள்ளுகின்ற சித்தத்தின் ஒரு வீச்சினால் மனிதர்களின் எண்ண ஓட்டத்தை மாற்றி, தம்முடைய மேலாதிக்கத்தை அறிக்கைசெய்ய அவர்களை கட்டாயப்படுத்தும் ஒருவராக அவரை அவர்கள் எதிர்பார்த்தார்கள். இவ்விதமாக அவருடைய உயர்வை அவரே அடைந்துகொள்வாரென்றும், அவர்களுடைய பேராவல்களை நடத்திவைப்பார் என்றும் அவர்கள் நம்பினார்கள். இத்தகைய முறையில் கிறிஸ்து அவமதிப்புடன் நடத்தப்பட்டபோது, அவருடைய தெய்வீக குணத்தை வெளிக்காட்டுகின்ற ஒரு பலமிக்க சோதனை அவருக்கு அங்கு வந்தது. ஒரு வார்த்தையினாலோ, அல்லது ஒரு பார்வையினாலோ, அவர்தான் அரசர்களுக்கும், அதிபதிகளுக்கும், ஆசாரியர்களுக்கும், தேவாலயத்துக்கும் மேலான கர்த்தர் என்று அறிக்கை செய்ய, அவரை விசாரிப்பவர்களைக் கட்டாயப்படுத்த அவரால் முடியும். மனித இனத்துடன் ஒருவராக இருக்கும்படி அவர் தெரிந்துகொண்ட அந்த இடத்தைக் காப்பதுதான் அவருக்குக் கடினமான காரியமாக இருந்தது. (10)

தங்களுக்கு அன்பான சேனைத்தலைவருக்கு எதிராகச் செய்யப்பட்ட இயக்கங்கள் ஒவ்வொன்றையும், பரலோகத்தின் தூதர்கள் சாட்சியாகக் கண்டனர். கிறிஸ்துவை விடுதலைசெய்ய அவர்கள் ஏங்கியிருந்தனர். தேவனுக்குக் கீழாக தூதர்கள் எல்லா வல்லமையையும் உடையவர்களாக இருக்கின்றனர். ஒரு சந்தர்ப்பத்தில் கிறிஸ்துவின் கட்டளைக்குக் கீழ்ப்படிந்து, அவர்கள் அசீரிய சேனையிலிருந்த ஒரு இலட்சத்து எண்பத்தையாயிரம் மனிதர்களை ஒரே இரவில் கொலைசெய்திருந்தனர். கிறிஸ்துவை விசாரணை செய்கின்ற அந்த வெட்கம் நிறைந்த காட்சியைக் கண்டுகொண்டிருந்த தூதர்களால் தேவனுக்குப் பகைவர்களை அழிப்பதின்மூலம் தங்களுடைய கோபத்திற்கு எவ்வளனவு எளிதாகச் சாட்சிகொடுத்திருக்க முடியும்! ஆனால் அதைச் செய்யும்படி அவர்கள் கட்டளையிடப்படவில்லை. எனினும் எந்த ஒருவரால் அவருடைய எதிரிகளுக்கு மரணதண்டனை கொடுத்திருக்கமுடியுமோ, அவர் அவர்களுடைய கொடூரங்களைத் தாங்கிக்கொண்டார். தமது பிதாவின்மீதிருந்த அவருடைய அன்பும், உலகத்திற்கு அஸ்திபாரம் இடுவதற்கு முன்னமே பாவத்தைச் சுமப்பவராக கொடுத்திருந்த உறுதிமொழியும், எவர்களை இரட்சிப்பதற்காக வந்திருந்தாரோ, அவர்களுடைய முரட்டுத்தனமான நடத்துதலை எந்தவிதமான குற்றச்சாட்டுமில்லாமல் தாங்கிக்கெள்ள

அவரை நடத்தியிருந்தது. மனிதர்களால் அவர்மீது குவிக்க முடிந்திருந்த சகலவிதமான இகழ்ச்சிகளையும் அவமரியாதைமிக்க நடத்துதல்களையும் மானிடத்தில் தாங்கிக்கொள்ளுவது அவருடைய ஊழியத்தின் ஒரு பகுதியாக இருந்தது. மனிதர்களுடைய கைகளிலிருந்தும் இருதயங்களிலிருந்தும் வெளிப்படும் அனைத்தையும் தாங்கிக்கொள்ளக்கூடிய கிறிஸ்துவின் இந்தக் கீழ்ப்படிதல்மட்டுமே மானிடத்தின் ஒரே நம்பிக்கையாக இருந்தது, (11)

அவர்மீது குற்றஞ்சாட்டுபவர்களுக்கு ஒரு அனுகூலத்தைக் கொடுக்கக்கூடிய எதையும் கிறிஸ்து கூறியிருக்கவில்லை. அப்படியிருந்தும் ஆக்கினைக்குட்படுத்தப்பட்டிருந்தார் என்பதை அடையாளப்படுத்தும்படி அவர் கட்டப்பட்டிருந்தார். இருந்தபோதிலும் நியாயம் விசாரிப்பதுபோன்ற ஒரு பாசாங்கு இருக்கவேண்டியதாக இருந்தது. சட்டப்படியான ஒரு விசாரணையின் வடிவம் இருக்கவேண்டும் என்பது அவசியமானதாக இருந்தது. அதை விரைவுபடுத்த அதிகாரிகள் தீர்மானமுள்ளவர்களாக இருந்தனர். இயேசு மக்களால் எவ்விதம் உயர்வாக மதிக்கப்பட்டிருந்தார் என்பதை அவர்கள் அறிந்திருந்து, அவரைக் கைதுசெய்தது வெளியில் தெரியவந்தால், அவரை மீட்கும் முயற்சி செய்யப்பட்டுவிடுமென்று பயந்தனர். மறுபடியும் அந்த விசாரணையும் தண்டனையும் உடனே நடத்தப்படாவிட்டால், பஸ்கா பண்டிகை கொண்டாடுவதின் காரணமாக ஒரு வார காலத்தாமதம் உண்டாகும். இது அவர்களுடைய திட்டங்களைத் தோல்வியடையச்செய்யக்கூடும். இயேசுவை ஆக்கினைக்குட்படுத்துவதை அடைந்துகொள்ள அவர்கள் எருசலேமின் கலகக்காரர்களாக இருந்த கூட்டத்தின் சந்தடியைச் சார்ந்திருந்தனர். ஒரு வாரத் தாமதம் உண்டாகுமானால் அந்த உணர்ச்சிகளின் எழுச்சி தணிந்து, ஒரு எதிர்ச்செயல் உண்டாகிவிடக்கூடும். மக்களில் பெரும் பகுதியினர் கிறிஸ்துவிற்கு ஆதரவாக எழுப்பப்பட்டுவிடுவார்கள். அவர் செய்திருந்த பலத்த செயல்களின் ஒளியை வெளிச்சத்திற்குக் கொண்டுவந்து, அவரை மெய்ப்பிக்கும் சாட்சியுடன் அநேகர் முன்வருவார்கள். இது சனகரீம் சங்கத்திற்கு எதிராக பொதுமக்களின் கோபத்தை எழுப்பும்.அவர்களுடைய நடவடிக்கைகள் ஆக்கினைக்குட்படுத்தப்பட்டு, திரளானவர்களிடமிருந்து புதிய வணக்கத்தைப் பெற்றுக்கொள்ளும்படி இயேசு விடுதலைசெய்யப்பட்டுவிடுவார். ஆகையால் அவர்களுடைய நோக்கம் அறியப்படுவதற்குமுன், இயேசு ரோமர்களின் கரங்களில் ஒப்புக்கொடுக்கப்படவேண்டும் என்று ஆசாரியர்களும் அதிபதிகளும் தீர்மானித்தார்கள். (12)

ஆனால் முதலாவதாக ஒரு குற்றச்சாட்டு. காணப்படவேண்டியதாக இருந்தது. இதுவரை அவர்களுக்கு எந்த ஆதாயமும் கிடைக்கவில்லை. இயேசுவைக் காய்பாவிடம் கொண்டுசெல்லும்படி அன்னா கட்டளையிட்டான்.

காய்பா சதுசேயர்களைச் சேர்ந்தவனாக இருந்தான். சதுசேயர்களில் சிலர் இப்பொழுது ஆபத்தை உணர்ந்து இயேசுவிற்குத் துணிகரமான எதிரிகளாக இருந்தனர். அவன் தானும் குணத்தில் உக்கிரமில்லாதவனைப்போல இருந்தாலும், அன்னாவைப்போலவே முழுமையாக கடுமையானவனாக—இருதயமில்லாதவனாக—தவறுகளுக்காக வெட்கப்படாதவனாக இருந்தான். இயேசுவை அழிப்பதற்காக எந்த உபாயத்தையும் முயற்சி செய்யாமல் விடவில்லை. அது அதிகாலையும் அதிக இருளாகவும் இருந்தது, ஆயுததாரிகளாக இருந்த அந்தக் கூட்டத்தினர் தீவட்டிகளுடனும் விளக்குகளுடனும் அவைகளின் வெளிச்சத்தினால் பிரதான ஆசாரியனின் அரண்மனையை நோக்கி, அவர்களுடைய கைதியுடன் புறப்பட்டுச் சென்றனர். இங்கு சனகரீம் சங்கத்தின் அங்கத்தினர்கள் ஒன்றுசேர்ந்து வந்துகொண்டிருந்தபோது, அன்னாவும் காய்பாவும் மறுபடியும் இயேசுவிடம் கேள்வி கேட்டார்கள். ஆனால் அவைகளால் வெற்றி உண்டாகவில்லை. (13)

நியாயவிசாரணை மன்றத்தில் அந்தச் சங்கம் கூடியிருந்தபோது, அந்தக் கூட்டத்திற்குத் தலைமை தாங்க காய்பா அவனுடைய இருக்கையில் உட்கார்ந்தான். இருபக்கத்திலும் நியாயாதிபதிகளும் அந்த விசாரணையின்மீது சிறப்பான ஆர்வமுள்ளவர்களும் இருந்தனர். சிங்காசனத்திற்குக்கீழாக இருந்த மேடையின்மீது ரோம நாட்டுச் சேனைவீரர்கள் இருந்தனர். அந்த சிங்காசனத்தின் பாதத்தில் இயேசு நின்றிருந்தார். திரளானவர்களின் பார்வை அவர்மீது பதிந்திருந்தது. அந்த உணர்ச்சிகளின் எழுச்சி கடுமையானதாக இருந்தது. அந்தக் கூட்ட நெரிசல் முழுவதிலும் அவர் ஒருவர் மட்டுமே அமைதியானவராகவும் கலக்கமடையாதவராகவும் இருந்தார். அவரைச் சுற்றிலுமிருந்த சூழ்நிலையில் ஒரு பரிசுத்தமுள்ள செல்வாக்குப் பரவியிருந்தது. (14)

காய்பா இயேசுவை அவனுடைய போட்டியாளராகக் கருதியிருந்தான். இரட்சகரின் பேச்சைக் கேட்பதற்கு மக்களிடமிருந்த அக்கறையும், அவருடைய போதனைகளைப் பெற்றுக்கொள்ள அவர்கள் வெளியரங்கமாக ஆயத்தமாயிருந்ததும் பிரதான ஆசாரியனின் கசப்புமிக்க பொறாமையை எழுப்பியிருந்தது. ஆனால் இப்பொழுது அந்தக் கைதியைப் பார்த்தபோது, அவருடைய மேன்மையும் கண்ணியமிக்க தன்மையும் அவனைப் பாராட்டத் தூண்டியது. இந்த மனிதர் தேவனுக்குச் சொந்தக்காரராக இருக்கிறார் என்னும் ஒரு மன உணர்த்துதல் அவன்மீது வந்தது. அடுத்த வினாடியில் அவன் பரிகாசத்துடன் அந்த எணணத்தைப் புறம்பே தள்ளிப்போட்டான். உடனே அவனுடைய குரல் இயேசு அவருடைய பலத்த அற்புதங்களில்

ஒன்றை அவர்களுக்கு முன்பாகச் செய்துகாட்டவேண்டும் என்னும் கோரிக்கை அகந்தைமிக்க ஏளனத்துடம் கேட்கப்பட்டது. ஆனால் அவர் அவைகளை கேட்காதது போலிருந்தார். இயேசுவின் அமைதியும் மகத்துவமுமிக்க தன்மையுடன், உணர்ச்சியால் உந்தப்பட்ட வன்மமிக்கவர்களான அன்னா காய்பாவின் தன்மையை மக்கள் ஒப்பிட்டனர். கடினமடைந்திருந்த அந்தத் திரளானவர்களின் மனங்களில்கூட, தெய்வத்தன்மையின் பிரசன்னத்தை உடையவரைப்போலக் காணப்படும் இந்த மனிதர் ஒரு குற்றவாளியாக ஆக்கினைக்கு உட்படுத்தப்பட்டிருக்கிறாரா? என்னும் கேள்வி எழுந்தது. (15)

அவர் அடைந்துகொண்டிருந்த செல்வாக்கை உணர்ந்த காய்பா, அந்த விசாரணையை விரைவுபடுத்தினான். இயேசுவின் எதிரிகள் பெரும் குழப்பத்தில் இருந்தனர். அவர்மேல் தண்டனையை சுமத்த அவர்கள் பிடிவாதமுள்ளவர்களாக இருந்தனர். ஆனால் அதை நிறைவேற்றுவது எப்படி? என்று அறியாதவர்களாக இருந்தனர். அந்த சங்கத்தின் அங்கத்தினர்களுக்கிடையில் பரிசேயர்கள் சதுசேயர்கள் என்னும் பிரிவினை இருந்தது. அவர்களுக்கிடையில் மிகவும் கசப்பான பகையும் எதிர்வாதமும் இருந்தது. விவாதத்திற்குரிய குறிப்பிட்ட சில காரியங்களினால் சச்சரவு வந்துவிடக்கூடும் என்னும் பயத்தால் அவர்கள் சமீபிக்காமலிருந்தனர். ஒருசில வர்த்தைகளினால், அவர்களுக்கிடையில் தவறான எண்ணங்களை எழச்செய்து, இவ்விதமாக அவருக்கெதிரான அவர்களுடைய கோபத்தை அவரிடத்திலிருந்து திசைதிருப்ப கிறிஸ்துவால் முடிந்திருக்கும். காய்பா அதை அறிந்திருந்து, ஒரு சச்சாரவு உண்டாவதைத் தவிர்க்க விரும்பியிருந்தான். கிறிஸ்து ஆசாரியர்களையும் வேதபாரகர்களையும் மதப்புரட்டர்கள் என்றும் கொலைகாரர்கள் என்றும் வெளிப்படையாகக் குற்றஞ்சாட்டியிருந்தார் என்பதை மெய்ப்பிப்பதற்கு ஏராளமான சாட்சிகள் இருந்தனர். ஆனால் இந்தச் சாட்சியை முன்கொண்டு வருவது, சந்தர்ப்பத்திற்குப் பொருத்தமானதாக இருக்கவில்லை. பரிசேயர்களுடனுள்ள தங்களுடைய கூர்மையான சச்சரவில் சதுசேயர்கள் இதேவிதமான பேச்சைப் பயன்படுத்தியிருந்தனர். பரிசேயர்கள் இந்தவிதமான பாசாங்குகளினால் வெறுப்படைந்திருந்த ரோமர்களிடத்தில் அப்படிப்பட்ட சர்ச்சை எந்தவிதமான பாரமும் இல்லாமலிருக்கும். இயேசு யூதர்களின் பாரம்பரியங்களை மதிக்காமல் அவர்களுடைய நியமங்களில் அநேகமானவைகளைப்பற்றி பக்தியில்லாதவிதமாகப் பேசியிருந்தார் என்பதற்கான சான்றுகள் ஏராளமாக இருந்தன. ஆனால் பாரம்பரியத்தைப் பொருத்தமட்டில், பரிசேயர்களும் சதுசேயர்களும் வாள்முனையில் இருந்தனர். ஏனெனில் ஒரு பரிசோதனை அவரது ஊழியத்தின் தன்மையை வெளிப்படுத்திவிடும் என்று அவர்கள் பயந்தனர். அவர் சுகப்படுத்தியிருந்த

அற்புதங்கள் வெளிச்சத்திற்குக் கொண்டுவரப்பட்டிருந்தால், ஆசாரியர்களின் நோக்கம் தோற்கடிக்கப்பட்டுவிடும். (16)

கலகத்தைத் தூண்டிவிடவும், ஒரு தனி அரசாங்கத்தை ஏற்படுத்தவும் இயேசு வகைதேடிக்கொண்டிருக்கிறார் என்று குற்றஞ்சாட்டும்படி பொய் சாட்சிகள் இலஞ்சம் கொடுக்கப்பட்டிருந்தனர். ஆனால் அவர்களுடைய சாட்சி நிச்சயமில்லாததாகவும் முரண்பாடுள்ளதாகவும் மெய்ப்பிக்கப்பட்டது. நிருபிப்பதற்கு அவர்கள் தங்களுடைய சொந்த அறிக்கைகளுக்கு எதிராகத் தவறியிருந்தனர். (17)

கிறிஸ்து அவருடைய ஊழியத்தின் ஆரம்பகாலத்தில் “இந்த ஆலயத்தை இடித்துப் போடுங்கள், மூன்று நாளைக்குள்ளே இதை எழுப்புவேன் என்றார்” என்று கூறியிருந்தார். தீர்க்கதரிசனத்தின் உருவக மொழியில் இவ்விதமாக அவர் அவருடைய சொந்த மரணத்தையும் உயிர்த்தெழுதலையும் முன்னுரைத்திருந்தார். “அவரோ தம்முடைய சரீரமாகிய ஆலயத்தைக்குறித்துப் பேசினார்”—யோவான் 2:21. இந்த வார்த்தைகள் எருசலேமிலிருந்த ஆலயத்தைக்குறிப்பதாக யூதர்கள் எழுத்தின்படி புரிந்துகொண்டிருந்தனர். கிறிஸ்து கூறியிருந்தவைகளில், இந்த ஒன்றைத்தவிர வேறு எதையும் அவருக்கு எதிராகப் பயன்படுத்துவதற்கு ஆசாரியர்களால்காரணம்காணமுடியவில்லை. இந்தவார்த்தைகளைத்தவறாக அறிவித்துக்கொண்டு, அதனால் ஒரு அனுகூலத்தை அடைந்துகொள்ளலாம் என்று அவர்கள் நம்பியிருந்தனர். அந்த தேவாலயத்தைத் திரும்ப எடுத்துக்கட்டுவதிலும் அழகுபடுத்துவதிலும் ரோமர்கள் ஈடுபட்டிருந்து, மிகவும் பெரிய அளவில் பெருமை உடையவர்களாக இருந்தனர். அதற்கு எதிராகக் கூறப்படும் நிந்தனைகள் நிச்சயமாகவே அவர்களுடைய கோபத்தை எழுப்புவதாக இருந்தது. அந்த தேவாலயத்தின்மீது அனைவரும் பெரும் பயபக்தியை உடையவர்களாக இருந்ததினால், இங்கு ரோமர்களாலும் யூதர்களாலும் பரிசேயர்களாலும் சதுசேயர்களாலும் ஒன்றுபட முடிந்திருந்தது. இந்த விஷயத்தில் மற்றவர்களைப்போல முரண்பட்டதாக இல்லாதிருந்த இரண்டு சாட்சிகள் காணப்பட்டிருந்தனர். இயேசுவின்மீது குற்றஞ்சாட்டும்படி இலஞ்சம் கொடுக்கப்பட்டவர்களில் ஒருவன்: “தேவனுடைய ஆலயத்தை இடித்துப்போடவும், மூன்றுநாளைக்குள்ளே அதைக் கட்டவும் என்னாலே ஆகும் என்று இவன் சொன்னான்” என்றான். இவ்விதமாக கிறிஸ்துவின் வார்த்தைகள் தவறானவிதத்தில் அறிவிக்கப்பட்டிருந்தன. அவர் பேசியிருந்த அதேவிதமாக மிகச்சரியாக அவர்கள் அறிவித்திருந்தார்களானால் அவருடைய தண்டனையைச் சனகரீம் சங்கதிலிருந்துங்கூட அடைந்திருக்கமாட்டார்கள். யூதர்கள் கூறியிருந்ததைப்போல இயேசு ஒரு சாதாரண மனிதராக

இருந்திருந்தால், அது தேவதூஷணம் என்று அர்த்தங்கொள்ளப்படாமல், காரணமில்லாத பெருமையின் ஆவியைமட்டுமே சுட்டிக்காட்டியிருந்திருக்கும். பொய்ச்சாட்சிக்காரர்களால் தவறாக எடுத்துக்காட்டப்பட்டிருந்த இந்த வார்த்தையிலும் ரோமர்களால் மரண தண்டனைக்குத் தகுதியாக கருதப்பட்டிருந்த எதுவும் அடங்கியிருக்கவில்லை. (18)

முரண்பாடுகள்மிக்க அறிக்கைகளை இயேசு பொறுமையுடன் கவனித்திருந்தார். தமது தற்காப்பிற்காக அவர் ஒரு வார்த்தையும் பேசவில்லை. கடைசியில் அவரைக் குற்றஞ்சாட்டினவர்கள் அகப்பட்டுக் கொண்டவர்களாகவும், குழப்பமடைந்தவர்களாகவும் வெறி பிடித்தவர்கள் போலவுமானார்கள். அந்த விசாரணையில் முன்னேற்றம் எதுவும் உண்டாகவில்லை. அவர்களது திட்டங்களெல்லாம் தோல்வியடைவதால் காய்பா நம்பிக்கையிழந்தான். கடைசியில் ஒரேஒரு வழி மட்டும் மீந்திருந்தது. கிறிஸ்து தம்மைத்தாமே ஆக்கினைக்கு உட்படுத்திக்கொள்ளும்படி நிர்ப்பந்திக்கப்படவேண்டும். அந்தப் பிரதான ஆசாரியன் கடுகடுப்பான முகத்தோடு, வெறியுள்ளவனாக, அக்காரியம் அவனது அதிகாரத்திற்குள் இருந்திருக்குமானால், அவனுக்கு முன்பாக இருந்த கைதியை அடித்துக் கீழே வீழ்த்தியிருந்திருக்கக்கூடியவிதமாக, அவனுடைய குரலும் நடத்தையும் வெளிப்படையாகக் காட்டக்கூடியவிதத்தில் நியாயாசனத்திலிருந்து எழுந்தான். “இவர்கள் உனக்கு விரோதமாய்ச் சாட்சிசொல்லுகிறதைக்குறித்து நீ ஒன்றும் சொல்லுகிறதில்லையா” என்று சத்தமிட்டான். (19)

இயேசு அமைதியாக இருந்தார். “அவர் நெருக்கப்பட்டும் ஒடுக்கப்பட்டும் இருந்தார், ஆனாலும் தம்முடைய வாயை அவர் திறக்கவில்லை; அடிக்கப்படும்படி கொண்டுபோகப்படுகிற ஒரு ஆட்டுக்குட்டியைப்போலவும், தன்னை மயிர்கத்தரிக்கிறவனுக்கு முன்பாகச் சத்தமிடாதிருக்கிற ஆட்டைப்போலவும், அவர் தம்முடைய வாயைத் திறவாதிருந்தார்”—ஏசாயா 53:7. (20)

கடைசியாக, காய்பா தனது வலதுகையை வானத்திற்கு நேராக உயர்த்தி, ஒரு பக்திவிநயமான பிரமாணம் செய்கின்றவிதமாக “நீ தேவனுடைய குமாரனாகிய கிறிஸ்துதானா? அதை எங்களுக்குச் சொல்லும்படி ஜீவனுள்ள தேவன்பேரில் உன்னை ஆணையிட்டுக் கேட்கிறேன்” என்றான். (21)

இந்த வேண்டுகோளுக்கு, இயேசுவால் மௌனமாயிருக்க முடியவில்லை. மௌனமாக இருக்க ஒரு நேரம் உண்டு; பேச ஒரு நேரம் உண்டு. நேரடியாகக் கேள்வி கேட்கப்படும்வரை, அவர் பேசாமலிருந்தார். இப்பொழுது பதில் கூறுவது, அவருடைய மரணத்தை

நிச்சயப்படுத்தும் என்பதை அவர் அறிந்திருந்தார். ஆனால் அந்த வேண்டுகோள், அந்த நேரத்தின் மிகவும் அதிகாரத்தை உடையவர் என்று ஏற்றுக்கொள்ளப்பட்டவராலும் உன்னதமானவரின் நாமத்தினாலும் விடுக்கப்பட்டிருந்தது. நியாயப்பிரமாணத்திற்குச் சரியான மரியாதையைக் காட்டுவதற்கு கிறிஸ்து தவறமாட்டார். அதற்கும் அதிகமாக, பிதாவுடனுள்ள அவருடைய சொந்த உறவு, இப்பொழுது கேள்வியாக அழைக்கப் பட்டிருக்கிறது. அவருடைய குணத்தையும் ஊழியத்தையும்பற்றி அவர் வெளிப்படையாக அறிவிக்கவேண்டும். இயேசு அவருடைய சீடர்களிடம் "மனுஷர் முன்பாக என்னை அறிக்கை பண்ணுகிறவன் எவனோ, அவனை நானும் பரலோகத்திலிருக்கிற என் பிதாவின் முன்பாக அறிக்கைபண்ணுவேன்" (மத்தேயு 10:32) என்று கூறியிருந்தார். இப்பொழுது அவருடைய சொந்த உதாரணத்தினால் அந்தப் பாடத்தை திரும்பவும் கூறினார். (22)

"நீர் சொன்னபடிதான்" என்று அவர் பதில் கூறினபோது, அதைக் கவனிப்பதற்காக ஒவ்வொரு செவியும் சாய்ந்திருந்தது. ஒவ்வொரு கண்ணும் அவருடைய முகத்தின்மீது பதிந்திருந்தது. "அன்றியும், மனுஷகுமாரன் சர்வவல்லவருடைய வலதுபாரிசத்தில் வீற்றிருப்பதையும் வானத்தின் மேகங்கள்மேல் வருவதையும் இதுமுதல் காண்பீர்களென்று, உங்களுக்குச் சொல்லுகிறேன்" என்று அவர்தொடர்ந்து கூறியபோது, அவருடைய வெளிரிய முகத்தின்மீது பரலோகத்தின் ஒரு ஒளி பிரகாசிப்பதுபோலக் காணப்பட்டது. (23)

விநாடி நேரத்திற்கு மானுடத்தினால் தம்மை மறைத்துக்கொண்டிருந்த அந்த மானுடத்தின்மூலமாக கிறிஸ்துவின் தெய்வீகம் மின்னலைப்போலப் பளிச்சிட்டது. இரட்சகரின் துருவி ஆராயும் கண்களுக்கு முன்பாக அந்தப் பிரதான ஆசாரியன் பயந்து நடுங்கினான். அந்தப் பார்வை, மறைத்துவைக்கப்பட்டிருந்த அவனுடைய எண்ணங்களை வாசித்து, அவனுடைய இருதயத்திற்குள் எரிவதைப்போலக் காணப்பட்டது. உபத்திரவப் படுத்தப்பட்ட தேவகுமாரனின் ஆராயும் அந்தப் பார்வையை அவனது வாழ்க்கையின் பின்னான காலத்தில் அவன் ஒருபோதும் மறக்கவில்லை. (24)

"மனுஷகுமாரன் சர்வவல்லவருடைய வலதுபாரிசத்தில் வீற்றிருப்பதையும் வானத்தின் மேகங்கள்மேல் வருவதையும் இதுமுதல் காண்பீர்களென்று, உங்களுக்குச் சொல்லுகிறேன்" என்று இயேசு கூறினார். இந்த வார்த்தைகளில் அப்பொழுது நடந்துகொண்டிருந்தவைகளுக்கு நேர்எதிரான காட்சியைக் கிறிஸ்து முன்வைத்தார். ஜீவனும் மகிமையுமிக்க கர்த்தராக இருக்கின்ற அவர், தேவனுடைய வலது பாரிசத்தில்

உட்காருவார். பூமி முழுவதற்கும் அவர் நியாயாதிபதியாக இருப்பார். அவருடைய முடிவிலிருந்து மேல்முறையிட எதுவும் இருக்காது. அப்பொழுது தேவனுடைய முகத்திலிருந்து பிரகாசிக்கும் ஒளியில் இரகசியமான ஒவ்வொரு செயலும் முன்வைக்கப்பட்டு, ஒவ்வொரு மனிதனின்மீதும் அவனுடைய செயலிற்குத்தக்கதாக நியாயத்தீர்ப்பு வழங்கப்படும். (25)

கிறிஸ்துவின் வார்த்தைகள் அந்த பிரதான ஆசாரியனைத் திடுக்கிடச் செய்தது. மரித்தோர் உயிர்த்தெழுவர் என்ற எண்ணமும், அப்பொழுது அனைவரும் தேவனுடைய நீதி மன்றத்திற்குமுன்பாக அவர்களுடைய செயல்களுக்குத்தக்க பரிசை அடைவதற்காக நின்றாகவேண்டும் என்பதும், காய்பாவிற்குப் பயங்கரத்தை உண்டுபண்ணக்கூடிய ஒரு எண்ணமாக இருந்தது. அவனுடைய செயல்களுக்குத்தக்கதாக எதிர்காலத்தில் அவன் தண்டனையைப் பெறவேண்டியவனாக இருப்பான் என்பதை நம்புவதற்கு அவன் விருப்பமில்லாதவனாக இருந்தான். இறுதி நியாயத்தீர்ப்பின் காட்சிகள் ஒரு பெரும் விசாலமான காட்சியாக அவனது மனதில் விரைந்துவந்தன. என்றென்றைக்குமாக மறைத்துவிடலாம் என்று அவன் நம்பியிருந்த இரகசியங்களடங்கியிருந்த கல்லறைகள் அவைகளில் இருந்தவர்களை எழுப்பத் திறக்கின்ற பயங்கரமாக காட்சியை விநாடி நேரத்திற்கு அவன் கண்டான். நித்திய நியாயாதிபதிக்கு முன்பாக தான் நின்றுகொண்டிருப்பதைப்போலவும், எல்லாவற்றையும் பார்க்கிற அவருடைய கண்கள், அவனுடைய ஆத்துமாவை வாசித்தறிந்து, இறந்தவர்களுடன் மறைக்கப்பட்டுவிட்டதாக நினைத்துக் கொண்டிருந்த அவனுடைய இரகசியங்களை வெளிச்சத்திற்குக் கொண்டுவருவதைப்போலவும் விநாடி நேரத்திற்கு அவன் உணர்ந்தான். (26)

அந்த ஆசாரியனின் தரிசனத்தைவிட்டு அந்தக் காட்சி கடந்துசென்றது. சதுசேயனான அவனை எழுப்பும்படி கிறிஸ்துவின் வார்த்தைகள் அவனை ஊடுருவிச்சென்றது. உயிர்த்தெழுதல், நியாயத்தீர்ப்பு, எதிர்கால வாழ்வு ஆகிய கோட்பாடுகளைக் காய்பா மறுத்திருந்தான். இப்பொழுது சாத்தானுக்கே உரிய கோபத்தினால் அவன் வெறிகொண்டிருந்தான். தனக்கு முன்பாகக் கைதியாக நின்றிருக்கும் இந்த மனிதன், அவன் பேணியிருந்த கொள்கை விளக்கங்களைத் தாக்குபவனாக இருந்தானா? அவனுடைய பாசாங்கான பயங்கரத்தை அந்த மக்கள் காணவேண்டுமென்பதற்காக அவன் தன்னுடைய மேலாடையை (ஆசாரிய வஸ்திரத்தை) கிழித்துக்கொண்டு, தேவதூஷணம் கூறின குற்றத்திற்காக மேற்கொண்டு எந்தவிதமான பூர்வாங்க விசாரணையுமில்லாமல் ஆக்கினைக்குட்படுத்தப்படவேண்டும் என்று அதிகாரத்துடன் கூறினான். “இவன் தேவதூஷணம் சொன்னான்;

இனிச்சாட்சிகள் நமக்கு வேண்டியதென்ன? இதோ, இவன் தூஷணத்தை இப்பொழுது கேட்டீர்களே. உங்களுக்கு என்னமாய்த் தோன்றுகிறது" என்றான். அவர்கள் அனைவரும் அவரை ஆக்கினைக்குள்ளாகத் தீர்த்தார்கள். (27)

வெறியுடன் கலந்த மன உணர்த்துதல் அவன் செய்ததைப்போலச் செய்யும்படி நடத்தினது. கிறிஸ்துவின் வார்த்தைகளை நம்பினதற்காக அவன் தம்மீதே கோபமுள்ளவனாக இருந்து, சத்தியத்தின்மீதுள்ள ஆழமான உணர்வின்கீழ்த் தனது இருதயத்தைக் கிழிப்பதற்கும் இயேசுதான் மேசியா என்று அறிக்கைசெய்வதற்கும் பதிலாக, தீர்மானமாக தடையுடன் அவனுடைய ஆசாரிய உடையைக் கிழித்தான். நண்பர்களின் மரணத்தின்போது, அணிந்திருக்கும் உடையைக் கிழித்துக்கொள்வது யூதர்களுக்கிடையில் வழக்கமாக இருந்தது. ஆனால் இந்த வழக்கத்தை ஆசாரியர்கள் ஆசரிக்க வேண்டியதில்லை. இதைப்பற்றிய வெளிப்படையான கட்டளை கிறிஸ்துவால் மோசேக்குக் கொடுக்கப்பட்டிருந்தது. (லேவியராகமம் 10:6). (28)

ஆசாரியனால் அணியப்படுகின்ற ஒவ்வொன்றும் முழுமையானதாகவும் எவ்விதமான பழுதும் இல்லாததாகவும் இருக்கவேண்டும். அந்தப் பதவிக்குரிய அழகிய ஆடைகளினால் பெரும் நிஜமாக இருந்த இயேசு கிறிஸ்துவின் குணம் எடுத்துக்காட்டப்பட்டிருந்தது. உடை, மனப்பாங்கு, வார்த்தை, ஆவி, ஆகியவைகளில் பூரணத்துவத்தைத் தவிர வேறு எதுவும் தேவனால் ஏற்றுக்கொள்ளமுடியாததாக இருக்கிறது. அவர் பரிசுத்தமாயிருக்கிறார். பூமிக்குரிய ஆராதனையில் அவருடைய மகிமையும் பரிபூரணமும் எடுத்துக்காட்டப்படவேண்டும். பரலோக ஆராதனையின் பரிசுத்தத்தன்மையை, பரிபூரணத்தைத்தவிர வேறு எதுவும் சரியானவிதத்தில் எடுத்துக்காட்டாது. முடிவுள்ள மனிதன் ஒரு நொருங்குண்டதும் தாழ்மையுமான ஆவியினால் அவனுடைய சொந்த இருதயத்தைக் கிழிக்கவேண்டும். தேவன் இதை அறிந்துகொள்ளுவார். ஆனால் ஆசாரிய உடைகளில் கிழிசலை உண்டுபண்ணக்கூடாது. ஏனெனில் அது பரலோகப் பொருட்களின் எடுத்துக்காட்டுதலில் களங்கத்தை உண்டுபண்ணிவிடும். கிழிந்த மேலாடையுடன் பரிசுத்த அலுவலில் தோன்றுவதற்குத் துணிந்து, பரிசுத்த ஸ்தலத்தின் ஆராதனையில் ஈடுபடுபவன் தன்னைத் தேவனிடமிருந்து துண்டிக்கப்பட்டவன்போலப் பார்க்கப்பட்டிருந்தான். தனது ஆடையைக் கிழித்ததினால், எடுத்துக்காட்டாக இருக்கும் குணத்திலிருந்து அவன் தன்னைத் துண்டித்து நீக்கியிருந்தான். அதற்குமேல், அவன் ஆராதனை ஊழியஞ்செய்யும் ஒரு ஆசாரியனாக தேவனால் ஏற்றுக்கொள்ளப்படவில்லை. காய்பாவினால் வெளிப்படுத்தப்பட்டதுபோன்ற இந்த நடத்தையின் செய்கை மனித வெறியையும் மனிதனின் பூரணமற்ற தன்மையையும் காட்டினது. (29)

மனிதர்களின் பாரம்பரியங்களைப் பின்பற்றுவதற்காக காய்பா அவனுடைய ஆடையைக் கிழித்ததினால் தேவப்பிரமாணத்தை வலிமையற்றதாகச் செய்தான். தேவதூஷணமான ஒருகாரியத்தில் பாவத்தின்மீதுள்ள பயங்கரத்தினால் ஒரு ஆசாரியன் அவனுடைய ஆடையைக் கிழித்தாலும் குற்றமில்லாதவனாக இருக்கலாம் என்று மனிதனால் செய்யப்பட்ட பிரமாணம் ஏற்பாடு செய்திருந்தது. இவ்விதமாக, மனிதர்களுடைய பிரமாணத்தினால் தேவப்பிரமாணங்கள் செல்லுபடியாகாததாக ஆக்கப்பட்டிருந்தது. பிரதான ஆசாரியனின் ஒவ்வொரு செயலும் மக்களால் ஆர்வத்துடன் கவனிக்கப்பட்டிருந்தது. எனவே, அவனுடைய பக்தியை ஆதாயத்திற்காக வெளிக்காட்ட நினைத்தான். ஆனால் கிறிஸ்துவிற்கெதிரான ஒரு குற்றச்சாட்டாக வடிவமைக்கப்பட்டிருந்த இந்த செயலில் "என் நாமம் அவர் உள்ளத்தில் இருக்கிறது" (யாத்திராகமம் 23:21) என்று தேவன் கூறியிருந்த ஒருவருடன் அவன் எதிர்த்து நின்றிருந்தான். தேவனுடைய ஆக்கினையின் கீழ் நின்றுகொண்டிருந்த அவன், கிறிஸ்து ஒரு தேவதூஷணம் கூறுபவர் என்று அவர்மீது தண்டனையை அறிவித்தான். (30)

காய்பா அவனுடைய ஆடையைக் கிழித்தது, யூதஜனம் ஒரு தேசமாக அதற்குப்பின் தேவனுக்குமுன் இருக்காது என்று அடையாளப்படுத்தியிருந்தது. ஒரு காலத்தில் தேவனால் ஆதரிக்கப்பட்டிருந்த மக்கள் தாங்களாகவே தேவனிடத்திலிருந்து பிரிந்துசென்று விரைவாக யேகோவாவினால் அவருக்குச் சொந்தமானவர்களல்ல என்று ஆகினர். "முடிந்தது" (யோவான் 19:30) என்று சிலுவையின் மேலிருந்து கிறிஸ்து உரத்தசத்தமிட்டபோது, தேவாலயத்தின் திரைச்சீலை இரண்டாகக் கிழிந்தபோது, கவனித்துக்கொண்டிருந்த பரிசுத்தமானவர், யூதமக்கள் அவர்களுடைய அனைத்துப் பொருட்களுக்கும் நிஜமாகவும், அவர்களுடைய நிழலாட்டங்கள் அனைத்திற்கும் பொருளாகவும் இருந்த அவரை புறக்கணித்திருந்தனர் என்று அறிவித்தார். இஸ்ரவேல் தேவனிடத்திலிருந்து மணமுறிவு செய்யப்பட்டிருந்தது. காய்பா பிரதான ஆசாரியனாக இருந்தான் என்பதை எடுத்துக்காட்டியிருந்த அவனுடைய பதவிக்குரிய ஆடையைக் கிழித்தது சரியானதாக இருந்து என்று கூறலாம். ஏனெனில், அதற்குமேல் அவைகளில் அவனுக்கும் அல்லது அந்த மக்களிலும் எந்தவிதமாக அர்த்தமும் இருக்கவில்லை. அந்தப் பிரதான ஆசாரியன் அவனுக்காவும் அவனுடைய ஜாதிக்காகவும் கொண்டிருந்த அதிகமான பயத்தினால் அவனுடைய ஆடையைக் கிழித்துக்கொண்டது சரி என்னப்படலாம். (31)

இயேசு மரணத்திற்குப் பாத்திரமானவர் என்று சனகரீம்சங்கம் கூறியிருந்தது. ஆனால் ஒரு கைதியை, இரவில் நியாயவிசாரணை

செய்வது யூதர்களுடைய பிரமாணத்திற்கு எதிராக இருந்தது. சட்டப்படி தண்டனை வழங்குவதில் பகலின் வெளிச்சத்தையும், நியாயவிசாரணை சங்கத்தின் முழு அங்கத்தினர்களையும் தவிர்த்து, சனகரீம் சங்கம் எதையும் செய்யக்கூடாமலிருந்தது. இதற்கு நேரெதிராக இப்பொழுது இரட்சகர் ஒரு குற்றவாளியாக நடத்தப்பட்டிருந்து, மனித இனத்தில் மிகவும் கீழ்த்தரமானவர்களாலும் வெட்கக்கேடானவர்களாலும் தகாதவிதமாகப் பேசப்படுவதற்கும் கொடுக்கப்பட்டார். பிரதான ஆசாரியனின் அரண்மனை ஒரு திறந்தவெளி அரங்கத்தால் சூழப்பட்டிருந்தது. அங்கு சேனை வீரர்களும் திரளானவர்களும் ஒன்றுகூடியிருந்தனர். இயேசு அந்த அரங்கத்திற்கூடாக காவல் அறைக்குக் கொண்டுசெல்லப்பட்டார். அவர் பாதை நெடுகிலும் ஒவ்வொரு பக்கத்திலும் இருந்தவர்களால் தம்மைத் தேவகுமாரன் என்று கூறியிருந்ததற்காகப் பரிகசிக்கப்பட்டதைச் சந்தித்துக்கொண்டிருந்தார். “சர்வவல்லவருடைய வலதுபாரிசத்தில் வீற்றிருப்பதையும்” “வானத்தின் மேகங்கள்மேல் வருவதையும்” என்னும் வார்த்தைகள் கேலியாக மீண்டும் கூறப்பட்டிருந்தன. சட்டப்படியான விசாரணைக்காகக் காத்துக்கொண்டு, அவர் காவல் அறையில் இருந்தபோது, பாதுகாக்கப்படாமலிருந்தார். அந்த நியாயசங்கத்திற்கு முன்பாக அவர் நடத்தப்பட்டிருந்த கொடூரமான விதத்தைக் கண்டிருந்த அறியாமைமிக்க கலகக்காரர்கள் அவர்களுடைய இயல்பிலிருந்த எல்லாவிதமான சாத்தானின் தன்மையின் மூலக்கூறுகளையும் வெளிக்காட்டுவதற்கு உரிமம் எடுத்துக்கொண்டனர். கிறிஸ்துவின் மேன்மையான தன்மையும், தேவன்போன்ற நடத்தையும் அவர்களை பயித்தியக்காரர்களாவதற்கு ஏவினது. அவருடைய தாழ்மையான தன்மையும், அவருடைய குற்றமற்ற தன்மையும், அவருடைய மகத்துவமான பொறுமையும் அவர்களைச் சாத்தானால் பிறந்த வெறுப்பினால் நிறைத்தது. இரக்கமும், நீதியும் காலின்கீழிட்டு மிதிக்கப்பட்டிருந்தன. தேவகுமாரன் நடத்தப்பட்டிருந்தவிதமாக, அத்தகைய மனிதத்தன்மை இல்லாதவிதமாக எந்த ஒரு மனிதனும் நடத்தப்பட்டிருக்கவில்லை. (32)

ஆனால் ஒரு தெளிவான வேதனை இயேசுவின் இருதயத்தைக் கிழித்தது. எந்த ஒரு எதிரியின் கரத்தினாலும் இடைபடுத்தப்படாமலிருந்த அந்த அடியினால் உண்டுபண்ணப்பட்ட காயத்தின் வேதனை மிகவும் ஆழமானதாக இருந்தது. அவர் காய்பாவிற்கு முன்பாக ஒரு பரிகாசமான விசாரணைக்குக் கீழ்ப்பட்டிருந்தபோது, அவருடைய சொந்த சீடர்களில் ஒருவனால் மறுதலிக்கப்பட்டிருந்தார். (33)

தங்களுடைய ஆண்டவரைவிட்டு ஓடிப்போனதற்குப்பின் சீடர்களில் இருவர், இயேசுவைத் தங்கள் பொறுப்பில் வைத்திருந்த கூட்டத்தினை

சற்றுதூரத்தில் பின்தொடர்ந்திருந்தனர். பேதுருவும் யோவானுமே அந்த சீடர்கள். யோவான் இயேசுவின் சீடன் என்று நன்கு அறியப்பட்டிருந்தான் என்பதை ஆசாரியர்கள் கண்டு, அவனுடைய தலைவரின் அவமானத்தைச் சாட்சியாக காணும்போது, அப்படிப்பட்ட ஒருவர் தேவகுமாரன் என்னும் எண்ணத்தை பரிகசிப்பான் என்று நம்பி, அவனை அந்த மன்றத்தில் அனுமதித்தனர். யோவான் பேதுருவிற்கு ஆதரவாகப் பேசி, அந்த நியாயவிசாரணை மன்றத்திற்குள் நுழைவதற்கு அனுமதியைப் பெற்றான். (34)

சூரிய உதயத்திற்கு முன்னான அந்த நேரம், இரவின் மிகவும் அதிகக் குளிரான நேரமாக இருந்ததினால், அந்தத் திறந்தவெளி அரங்கில் நெருப்பு மூட்டப்பட்டிருந்தது. ஒரு கூட்டத்தினர் அந்த நெருப்பிற்கருகில் கூடினார்கள். அவர்களுடன் பேதுருவும் துணிச்சலாக இடம்பெற்றிருந்தான். அவன் தன்னை இயேசுவின் சீடன் என்று காட்டிக்கொள்ள விருப்பமில்லாதிருந்தான். கூட்டத்தினருடன் கவனிக்கப்படாத ஒருவனாகக் கலந்துகொள்ளுவதினால் அவன் இயேசுவை அந்த அரங்கத்திற்குக் கொண்டுவந்திருந்தவர்களில் ஒருவனாக கருதப்படுவான் என்று நம்பினான். (35)

ஆனால் ஒளி பேதுருவின் முகத்தின்மீது வீசினபோது, வாசல்காத்துக்கொண்டிருந்த ஸ்திரீ அவன்மீது தனது ஆராயும் பார்வையைச் செலுத்தினாள். அவன் யோவானுடன் சேர்ந்து உள்ளே வந்ததை அவள் கவனித்திருந்தாள். அவனுடைய முகத்திலிருந்த மனத்தளர்ச்சியை—துக்கத்தை அவள் கண்டு, அவன் இயேசுவின் ஒரு சீடனாக இருக்கவேண்டும் என்று நினைத்தாள். அவன் காப்பாவின் வீட்டு வேலைக்காரிகளில் ஒருத்தியாக இருந்து, அறிந்துகொள்ளும் ஆவலுள்வளாக இருந்தாள். அவள் பேதுருவிடம் "நீயும் கலிலேயனாகிய இயேசுவோடேகூட இருந்தாய்" என்றாள். பேதுரு திடுக்கிட்டுக் குழப்பமடைந்தவனானான். உடனே அந்தக் கூட்டத்தினரின் கண்கள் அவன்மீது பதிந்தன. கூறியதைப் புரிந்துகொள்ளாதவன்போல அவன் பாசாங்கு செய்தான். ஆனால் அவள் பிடிவாதமாக, அவனைச் சுற்றிலும் இருந்தவர்களிடம் இந்த மனிதன் இயேசுவுடன் இருந்தான் என்றாள். பதில் கூறும்படி வற்புறுத்தப்பட்டதை உணர்ந்த பேதுரு கோபத்துடன்: "நீ சொல்லுகிறது எனக்குத் தெரியாது" என்றான். இது முதலாவது மறுதலிப்பாக இருந்தது. உடனே சேவல் கூவியது. ஆ! பேதுருவே! இவ்வளவு விரைவாக உன்னுடைய ஆண்டவரைப்பற்றி வெட்கப்பட்டுவிட்டாயே! உன்னுடைய கர்த்தரை இவ்வளவு விரைவில் மறுதலித்துவிட்டாயே! (36)

சீடனாக இருந்த யோவான் நியாயவிசாரணை மன்றத்தில் பிரவேசித்தபோது தான் இயேசுவின் அடியான் என்னும் உண்மையை

மறைக்கவில்லை. அவனுடைய ஆண்டவரை நிந்தித்துக்கொண்டிருந்த முரட்டுத்தனமான கூட்டத்தினருடன் அவன் கலந்துகொள்ளவில்லை. அவனை ஒருவரும் கேள்வி கேட்கவில்லை. ஏனெனில் அவன் ஒரு தவறான தோற்றத்தைக் காட்டி, தன்மீது சந்தேகத்தை உண்டுபண்ணுவதற்கு இடங்கொடுக்கவில்லை. அவன் அந்தக் கூட்டத்தினரைவிட்டுத் தூரமாக, கூட்டமில்லாத ஒரு மூலையைத் தேடவும் இல்லை. முடிந்தவரை இயேசுவிற்கு அருகில் இருப்பதற்கு அவன் வகைதேடியிருந்தான். இந்த இடத்திலிருந்து அவனால் அவனுடைய கர்த்தருக்கு எதிரான விசாரணை முழுவதையும் பார்க்கவும் கேட்கவும் முடிந்திருந்தது. (37)

பேதுரு அவனுடைய உண்மையான குணம் அறியப்படவேண்டும் என்று திட்டமிட்டிருக்கவில்லை. ஒரு அக்கறையற்ற தன்மையை எடுத்துக்கொண்டிருந்ததினால், அவன் தன்னைத்தானே எதிரியின் களத்தில் வைத்து, அதனால் சோதனைக்கு ஒரு எளிதான இரையானான். அவனுடைய ஆண்டவருக்காகச் சண்டையிடும்படி அவன் அழைக்கப்பட்டிருந்தால், ஒரு தைரியமிக்க சேனைவீரனாக இருந்திருப்பான். ஆனால் பரிகாசத்தின் விரல் அவனுக்கு நேராகச் சுட்டிக்காட்டப்பட்டபோது, அவன் தான் ஒரு கோழை என்பதை நிரூபித்தான். தங்களுடைய கர்த்தருக்கென்று தீவிரமான போரில் ஈடுபடுவதற்குப் பின்வாங்காதவர்களாக இருக்கும் அநேகர் அவர்களுடைய விசுவாசத்தை மறுக்கும்படி பரிகாசத்தினால் விரட்டப்பட்டுள்ளனர். எவர்களை தவிர்க்கவேண்டுமோ, அவர்களுடன் தோழமைகொள்ளுவதினால் அவர்கள் தங்களைத் தாங்களே சோதனை என்னும் பாதையில் வைக்கின்றனர். மற்ற எந்தச் சூழ்நிலைகளின்கீழ், அவர்கள் ஒருபோதும் குற்றமில்லாதவர்களாக இருந்திருப்பர்களோ, அவைகளைக் கூறவும், செய்யவும்கூடியவிதத்தில் நடத்தப்படுவதற்கு அவர்களைச் சோதிக்கும்படி அவர்கள் சத்துருவை அழைக்கின்றனர். நமது நாளில் பாடுகளையும் நிந்தைகளையும் அனுபவிக்கப் பயப்படுவதின்மூலமாகத் தனது விசுவாசத்தை மறைக்கின்ற கிறிஸ்துவின் சீடன், நியாயவிசாரணை மன்றத்தில் பேதுரு அவனுடைய கர்த்தரை மறுதலித்ததைப்போலத் தானும் உண்மையாகவே மறுதலிக்கிறான். (38)

பேதுரு அவனுடைய ஆண்டவரின் விசாரணையில் ஆர்வமில்லாதவனாக இருப்பவன்போலக் காட்டிக்கொள்ள முயன்றிருந்தான். அவர் அனுபவித்துக்கொண்டிருந்த கொடூரமான நிந்தைகளை அவன் கேட்டபோதும், அந்தத் தவறான நடத்துதல்களைக் கண்டபோதும், அவனுடைய இருதயம் துயரத்தால் கசக்கிப் பிழியப்பட்டிருந்தது. அதற்கும்மேலாக, அவ்விதமாக நடத்தப்படுவதற்கு இயேசு தம்மைத்தாமே கீழ்ப்படுத்தினதால் அவருக்கும் அவருடைய அடியார்களுக்கும் உண்டான

அவமானத்தில் அவன் ஆச்சரியமும் கோபமும் உடையவனாயிருந்தான். அவனுடைய உண்மையான உணர்ச்சிகளை மறைப்பதற்காக இயேசுவின் மீது வழக்குத் தொடர்ந்திருந்தவர்களின் சமயத்திற்குப் பொருந்தாத கேலிப்பேச்சுகளில் சேர்ந்துகொள்ள அவன் முயன்றான். ஆனால் அவனுடைய தோற்றம் இயற்கைக்கு மாறானதாக இருந்தது. அவன் ஒரு பொய்யை நடித்துக்கொண்டிருந்து, சம்பந்தமில்லாதவனைப்போலப் பேச வகைதேடிக்கொண்டிருந்தபோது, அவனுடைய ஆண்டவரின்மீது குவிக்கப்பட்ட நிந்தையான வார்த்தைகளினால் அவனில் உண்டான கோபத்தின் வெளிக்காட்டல்களை கட்டுப்படுத்தமுடியாதிருந்தான். (39)

இரண்டாவது தடவையாக அவன்மீது கவனம் வைக்கப்பட்டு, அவன் இயேசுவைப்பின்பற்றுபவன்என்றுமறுபடியும்குற்றஞ்சாட்டப்பட்டான்.இப்பொழுது ஒரு ஆணையுடன் "அந்த மனுஷனை நான் அறியேன்" என்று அறிவித்தான். மேலும் மற்றுமொரு சந்தர்ப்பம் அவனுக்குக் கொடுக்கப்பட்டிருந்தது. ஒருமணிநேரம் கழிந்தது. அப்பொழுது எந்த ஒருவனுடைய செவியைப் பேதுரு வெட்டியிருந்திருந்தானோ அவனுடைய உறவினர்களில் ஒருவனும் பிரதான ஆசாரியனின் வேலைக்காரர்களில் ஒருவன் அவனிடம்: "மெய்யாகவே நீயும் அவர்களில் ஒருவன்; உன் பேச்சு உன்னை வெளிப்படுத்துகிறது" என்றான். அதில் பேதுரு கோபாவேசத்திற்குள்ளானான். இயேசுவின் சீடர்கள் அவர்களுடைய பேச்சின் தூய்மைக்காகக் குறிப்பிடப்பட்டிருந்தனர். அவனிடம் கேள்விகேட்டிருந்தவர்களை முழுவதுமாக ஏமாற்றுவதற்காகவும், அவன் தற்காலிகமாக மேற்கொண்டிருந்த பாவனையை நியாயப்படுத்தவும், இப்பொழுது சபிக்கவும் சத்தியம் பண்ணவுஞ்செய்து, அவனுடைய ஆண்டவரை மறுதலித்தான். மறுபடியும் சேவல் கூவினது. அப்பொழுது அதைக் கேட்ட பேதுரு: "இன்றைக்கு, இந்த இராத்திரியிலே, சேவல் இரண்டுதரம் கூவுகிறதற்குமுன்னே, நீ மூன்றுதரம் என்னை மறுதலிப்பாய் என்று மெய்யாகவே உனக்குச் சொல்லுகிறேன்" (மாற்கு 14:30) என்ற இயேசுவின் வாாத்தைகளை நினைவுகூர்ந்தான். (40)

மிகவும் கீழ்த்தரமான ஆணையிடுதல், பேதுருவின் உதடுகளில் புதிதாக இருந்தபோது, அந்தச் சேவலின் கூவல் சத்தம் இன்னும் அவனுடைய செவிகளில் ஒலித்துக்கொண்டிருந்தபோது, இரட்சகர் கோபமிக்க முகத்தை உடைய நியாயாதிபதிகளிடமிருந்து திரும்பி, அவருடைய பலவீனமான சீடனை முழுமையாக பார்த்தார். அதே நேரத்தில், பேதுருவின் கண்களும் அவனுடைய ஆண்டவருக்கு நேராக இழுக்கப்பட்டன. சாதுவான அந்த முகத்தில் ஆழ்ந்த இரக்கத்தையும் துயரத்தையும் அவன் கண்டான். ஆனால் அங்கு கோபம் இருக்கவில்லை. (41)

பாடுகளை அனுபவித்துக்கொண்டிருக்கும் அந்த வெளிரிய முகத்தின் பார்வை, நடுங்கிக்கொண்டிருந்த அந்த உதடுகள், மன உருக்கமும் மன்னிக்கும் தன்மையுமிக்க அந்தப் பார்வை ஆகியவை ஒரு அம்பைப்போல அவனுடைய இருதயத்தை ஊடுருவியது. மனச்சாட்சி விழித்துக்கொண்டது. ஞாபகம் தீவிரமடைந்தது. சில குறுகிய மணி நேரங்களுக்குமுன் பேதுரு அவனுடைய கர்த்தருடன் சிறைக்கும் மரணத்திற்கும் செல்லுவதாகக் கூறியிருந்த அவனது வாக்குறுதியை மீண்டும் நினைவிற்குக் கொண்டுவந்தான். இரட்சகர் மேலறையில்வைத்து அவன் அவனுடைய கர்த்தரை அதே இரவில் மூன்று முறை மறுதலிப்பான் என்று கூறியிருந்தபோது, அவனுக்குண்டான பெரிய வருத்தத்தை அவன் நினைத்துப் பார்த்தான். பேதுரு இப்போதுதான் இயேசுவை அவனுக்குத் தெரியாது என்று அறிவித்திருந்தான். ஆனால் அவனுடைய கர்த்தர் எவ்விதமாக மிகவும் நன்றாக அவனை அறிந்திருந்தார் என்பதையும், அவனுக்குங்கூட அறியாததாக இருந்த அவனுடைய இருதயத்தின் போலியான தன்மையை எவ்விதமாக மிகச்சரியாக வாசித்திருந்தார் என்பதையும் இப்பொழுது அவன் உணர்ந்தான். (42)

நினைவுகளின் ஒரு அலை அவன்மீது விரைந்தது. தவறு செய்துகொண்டிருக்கும் அவருடைய சீடர்களுக்கு நேராக, இரட்சகரின் மென்மைமிக்க இரக்கம், அவருடைய அன்பு, நீடிய பொறுமை ஆகிய யாவும் நினைவுகூரப்பட்டன. “சீமோனே, சீமோனே, இதோ, கோதுமையைச் சுளகினால் புடைக்கிறதுபோலச் சாத்தான் உங்களைப் புடைக்கிறதற்கு உத்தரவு கேட்டுக்கொண்டான். நானோ உன் விசுவாசம் ஒழிந்து போகாதபடிக்கு உனக்காக வேண்டிக்கொண்டேன்” (லூக்கா 22:31,32) என்னும் எச்சரிக்கையை அவன் திரும்பவும் நினைத்தான். அவன் தன்னுடைய சொந்த நன்றிகெட்ட தன்மையையும், தன்னுடைய தவறான தன்மையையும் பெய்ச்சாட்சியையும் பயத்துடன் திருப்பிப் பார்த்தான். மீண்டும் ஒருதடவை அவனுடைய ஆண்டவரின் முகத்தைப் பார்த்தபோது, அவருடைய முகத்தில் அறைவதற்காக அவபக்தியான ஒரு கரம் உயர்வதைக் கண்டான். அதற்குமேல் அந்தக் காட்சியைத் தாங்கிக்கொள்ளமுடியாதவனாக, இருதயம் உடைந்தவனாக அந்த மன்றத்தைவிட்டு விரைந்தோடினான். (43)

எங்கே செல்வது என்பதைப்பற்றி அறியாமலும் கவனம்வைக்காமலும் தனிமையில் இருளுக்குள் ஓடினான். கடைசியில், தான் கெத்செமனேயில் இருப்பதை அவன் கண்டான். சிலமணிநேரங்களுக்கு முந்தின காட்சி அவனுடைய மனதில் மிகத்தெளிவாக வந்தது. இரத்த வியர்வையினால் கறைபடிந்து, பாடுகளை அனுபவித்துக்கொண்டும் வேதனையால்

துடித்துக்கொண்டுமிருந்த அவனுடைய கர்த்தரின் முகம், அவனுக்குமுன்பாக எழுந்தது. இயேசு அழுகையுடனும் வேதனையுடனும் ஜெபத்தில் இருந்தபோது, சோதனைமிக்க அந்த நேரத்தில் அவருடன் ஐக்கியப்பட்டிருந்திருக்க வேண்டியவர்களான அவர்கள் நித்திரை செய்துகொண்டிருந்ததைக் கசப்புமிக்க குற்றஉணர்வுடன் அவன் ஞாபகப்படுத்திக்கொண்டான். “நீங்கள் சோதனைக்குட்படாதபடிக்கு விழித்திருந்து ஜெபம்பண்ணுங்கள்” (மத்தேயு 26:41) என்னும் அவருடைய பக்திவிநயமான கட்டளையை அவன் ஞாபகப்படுத்திக்கொண்டான். நியாயவிசாரணை மன்றத்தின் காட்சியை அவன் மறுபடியும் கண்டான். இரட்சகரின் அவமானத்திற்கும் வருத்தத்திற்கும் அதிகமான பாரத்தை அவன் சேர்த்திருக்கிறான் என்பதை அறிவது இரத்தம் சிந்திக்கொண்டிருந்த இருதயத்திற்கு சித்திரவதையாக இருந்தது. எந்த இடத்தில் இயேசு அவருடைய ஆத்துமாவை வேதனையுடன் அவருடைய பிதாவிடத்திற்கு ஊற்றியிருந்தாரோ, அந்த—அதே இடத்தில் பேதுரு முகங்குப்புற விழுந்து அவன் சாகவேண்டும் என்று விரும்பினான். (44)

விழித்திருந்து ஜெபம்பண்ணும்படி இயேசு கட்டளையிட்டிருந்தபோது, பேதுரு நித்திரைசெய்ததினால் அவனுடைய பெரிய பாவத்திற்கு பாதையை ஆயத்தஞ்செய்தான். நெருக்கடியான அந்த நேரத்தில் சீடர்கள் அனைவரும் நித்திரை செய்ததினால் ஒரு பெரிய இழப்பை அடைந்தனர். அவர்கள் கடந்துசெல்லவேண்டியதாக இருந்த பயங்கரமான சோதனையைக் கிறிஸ்து அறிந்திருந்தார். அந்தப் பரீட்சைக்கு அவர்கள் ஆயத்தமாகாதபடி அவர்களுடைய புலன்களைச் சாத்தான் செயலிழக்கச்செய்துவிடுவான் என்பதை அவர் அறிந்திருந்தார். அப்படியிருந்ததினால்தான் அவர் அவர்களுக்கு அந்த எச்சரிக்கையைக் கொடுத்திருந்தார். அந்தத் தோட்டத்தில் செலவிடப்பட்டிருந்த நேரம் விழித்திருப்பதிலும் ஜெபம்பண்ணுவதிலும் செலவிடப்பட்டிருந்தால், தனது சொந்த பலவீனமான நிலையை சார்ந்திருக்கும்படி பேதுரு விடப்பட்டிருந்திருக்கமாட்டான். அவன் அவனுடைய கர்த்தரை மறுதலித்திருக்கமாட்டான். கிறிஸ்துவின் வேதனையில் அவர்கள் விழித்திருந்து கவனித்திருந்திருப்பார்களானால், அவருடைய சிலுவையின் மீதுள்ள பாடுகளைக் காண்பதற்கு ஆயத்தமாக இருந்திருப்பார்கள். அவரை மேற்கொண்டிருந்த வேதனையின் தன்மையை ஓரளவிற்கு அவர்கள் புரிந்துகொண்டிருந்திருப்பார்கள். அவருடைய பாடுகளையும் மரணத்தையும் உயிர்த்தெழுதலையும்பற்றி அவர் முன்னுரைத்திருந்ததைத் திரும்பவும் நினைப்பதற்கு அவர்கள் தகுதியானவர்களாக இருந்திருப்பார்கள். கடுஞ்சோதனையின் துயரத்திற்கிடையில், இருளுக்கிடையில் நமபிக்கையின் ஏதாவது ஒளிக்கீற்று அந்த இருளை ஒளிப்படுத்தி, அவர்களுடைய விசுவாசத்தைத் தாங்கியிருந்திருக்கும். (45)

பொழுது விடிந்தவுடனே சனகரீம் சங்கம் மீண்டும் கூடியது. அந்த ஆலோசனைச் சங்கத்திற்குமுன் இயேசு மீண்டும் கொண்டுவரப்பட்டார். அவர் தம்மைத்தாமே தேவகுமாரன் என்று அறிவித்திருந்தார். அந்த வார்த்தைகளை அவர்கள் அவருக்கெதிரான குற்றச்சாட்டாக அர்த்தப்படுத்திக்கொண்டார்கள். ஆனால் அதன் கரணமாக அவர்களால் அவரை தண்டனைக்குட்படுத்த முடியவில்லை. ஏனெனில் அந்த இரவு நேரத்தில் அவர்களில் அநேகர் இருக்கவில்லை. அத்துடன் அவருடைய வார்த்தைகளை அவர்கள் கேட்டிருக்கவில்லை மேலும் ரோமர்களின் நியாயவிசாரணை சங்கம் அவைகளில் மரணதண்டனைக்குரிய எதையும் காணாது என்பதையும் அவர்கள் அறிந்திருந்தனர். ஆனால் அவருடைய சொந்த உதடுகளினால் அந்த வார்த்தைகள் திரும்பக் கூறப்படுவதை அவர்களனைவராலும் கேட்கமுடியுமானால் அவர்களுடைய நோக்கத்தை ஆதாயமாக அடைந்துகொள்ளலாம். மேசியா என்னும் பதவியின்மீதுள்ள அவருடைய உரிமைபாராட்டுதல் ஒரு இராஜத்துரோகமான அரசியல் உரிமைபாராட்டுதலாகப் பொருள்கொள்ளப்படும். (46)

“நீ கிறிஸ்துவா? அதை எங்களுக்குச் சொல்” என்று கூறினார்கள். ஆனால் கிறிஸ்து மௌனமாக இருந்தார். கேள்விகளினால் அவரை வளைப்பதற்கு அவர்கள் தொடர்ந்தார்கள். கடைசியில் துக்ககரமான குரலில் துயரத்துடன்: “நான் உங்களுக்குச் சொன்னாலும் நம்பமாட்டீர்கள். நான் உங்களிடத்தில் வினாவினாலும் எனக்கு மாறுத்தரம் சொல்லமாட்டீர்கள், என்னை விடுதலைபண்ணவுமாட்டீர்கள்” என்று பதில் கூறினார். ஆனால் அவர்கள் சாக்குப்போக்கு இல்லாதவர்களாக விட்டுவைக்கப்படும்படி: “இதுமுதல் மனுஷகுமாரன் சர்வவல்லமையுள்ள தேவனுடைய வலதுபாரிசத்தில் வீற்றிருப்பார்” என்னும் பக்திவிநயமான எச்சரிக்கையைத் தொடர்ந்து கூறினார். (47)

அவர்கள் ஒரே குரலில்: “ அப்படியானால், நீ தேவனுடைய குமாரனா” என்று கேட்டார்கள் அவர் அவர்களிடம் “நீங்கள் சொல்லுகிறபடியே நான் அவர்தான்” என்றார். “இனி வேறு சாட்சி நமக்கு வேண்டுவதென்ன? நாமே இவனுடைய வாயினாலே கேட்டோமே” என்று சத்தமிட்டார்கள். (48)

அப்படியே யூதர்களால் வழங்கப்பட்ட மூன்றாவது ஆக்கினைத் தீர்ப்பின்படி இயேசு மரிக்க வேண்டியவராக இருந்தார். இப்பொழுது அவர்கள் அவசியம் என்று நினைத்தெல்லாம் இந்த தண்டனையை ரோமர்கள் அங்கீகரித்து, அவரை அவர்களுடைய கைகளில் ஒப்பக்கொடுக்கவேண்டும் என்பதாக இருந்தது. (49)

அப்பொழுது அறியாமைமிக்க கீழ்மக்களிடமிருந்து அவர் பெற்றுக்கொண்டதைவிட மோசமான நிந்தனையும் பரிகாசமுமிக்க மூன்றாவது சம்பவம் நிகழ்ந்தது. ஆசாரியர்கள் அதிபதிகள் ஆகியோரின் சமுகத்திலும் அவர்களுடைய அனுமதியுடனும் இது நடந்தது. அவர்களுடைய இருதயங்களிலிருந்து, அனுதாபம் மனிதத்தன்மை ஆகியவைகளின் உணர்வுகள் ஒவ்வொன்றும் நீங்கியிருந்தன. அவர்களுடைய வாதங்கள் பலவீனமாக இருந்து, அவருடைய குரலை மௌனப்படுத்துவதில் தோற்றிருந்ததால், எல்லாக் காலங்களிலும் மதப்புரட்டர்களை மௌனப்படுத்தும்படி பயன்படுத்தப்பட்டிருந்த மற்ற ஆயுதங்களை— துன்பப்படுத்துதல், வன்முறைச் செயல்களைச் செய்தல், மரணத்தை உண்டுபண்ணுதல் ஆகியவைகளை அவர்கள் உடையவர்களாக இருந்தனர். (50)

இயேசுவின் தண்டனை நியாயாதிபதிகளால் கூறப்பட்டபோது, சாத்தானின் வெறி மக்களைப் பற்றிக்கொண்டது. அந்த கர்ஜனை செய்யும் குரல்கள் காட்டு விலங்குகளின் கர்ஜனையைப்போல இருந்தன. அவர் குற்றமுள்ளவர், அவரை மரணத்திற்குட்படுத்துங்கள் என்று கூக்குரலிட்டுக்கொண்டு, அந்தக் கூட்டத்தினர் இயேசுவிற்கு நேராக விரைந்தார்கள். ரோம நாட்டின் சேனை வீரர்கள் இல்லாமலிருந்தால், கல்வாரி சிலுவையில் ஆணியால் அறையப்படும்படி—அதுவரையில் இயேசு உயிர்வாழ்ந்திருக்கமாட்டார். ரோம நாட்டின் அதிகாரிகள் குறுக்கிட்டு, ஆயுதங்களின் வலிமையினால் கூட்டத்தினரின் வன்முறையைக் கட்டுப்படுத்தாமலிருந்திருந்தால், அவர் நியாயாதிபதிகளுக்குமுன்பாக துண்டு துண்டுகளாகக் கிழிக்கப்பட்டிருந்திருப்பார். (51)

ஒன்றுமே மெய்ப்பிக்கப்படாத ஒருவருக்கெதிரான மிருகத்தனமான நடத்தைக்காக அஞ்ஞான மனிதர்கள் கோபமுள்ளவர்களாக இருந்தனர். இயேசுவின்மீது ஆக்கினையைக் கூறினதில் யூதர்கள் ரோம அரசின் வல்லமையை மீறிக்கொண்டிருந்தனர் என்றும், ஒரு மனிதனை அவனுடைய சொந்த சாட்சியின்மீது மரணதண்டனைக்குட்படுத்துவது யூதர்களுடைய நியாயப்பிரமாணத்திற்குங்கூட எதிரானது என்றும், ரோம நாட்டின் அதிகாரிகள் அறிவித்தனர். இந்தக் குறுக்கிடுதல், அந்த நடவடிக்கைகளில் சற்று நேர இடைவெளியைக் கொண்டுவந்தது. ஆனால் யூதத்தலைவர்கள் இரக்கத்திற்கும் வெட்கத்திற்கும் ஒரேவிதமாக மரித்திருந்தனர். (52)

ஆசாரியர்களும் அதிபதிகளும் அவர்களுடைய பதவியின் மேன்மையையும் மறந்து தேவகுமாரனை அவதூறான அடைமொழிகளால் நிந்தித்தார்கள். அவர்கள் அவருடைய பரம்பரையைப்பற்றி நிந்தித்தனர்.

அவர் தம்மைதாமே மேசியா என்று துணிகரமாக அறிவித்தது, அவரை மிகவும் அவமானமான மரணத்திற்குத் தகுதிப்படுத்தியது என்று அவர்கள் அறிவித்தார்கள். மிக அதிகமான சிற்றின்பப்பிரியர்களாக இருந்த மனிதர்கள் இரட்சகரை மிகவும் இகழ்ச்சியானவிதமாக நிந்திப்பதில் ஈடுபட்டனர். அவருடைய தலையின்மீது ஒரு பழைய ஆடை எறியப்பட்டது. அவரை உபத்திரவப்படுத்தியிருந்தவர்கள் அவரைக் கன்னத்தில் அறைந்து “கிறிஸ்துவே, உம்மை அடித்தவன் யார்? அதை ஞானதிருஷ்டியினால் எங்களுக்குச் சொல்லும்” என்ற சொல்லத் தொடங்கினார்கள். அந்த ஆடை கழற்றப்பட்டபோது, இழிநிலையிலுள்ள ஒருஅற்பமான மனிதன் அவருடைய முகத்தில் துப்பினான். (53)

தூதர்கள் அவர்களால் நேசிக்கப்பட்டிருந்த சேனைத்தலைவருக்கு எதிரான ஒவ்வொரு அவமானமிக்க பார்வையையும் வார்த்தையையும் செயலையும் மிகவும் கவனமாகப் பதிவுசெய்தனர். கிறிஸ்துவைப் பரிகசித்து, அமைதியும் வெளிரியதுமான கிறிஸ்துவின் முகத்தில் துப்பின கீழ்த்தரமான மனிதர்கள் ஒருநாள், சூரியனைவிட அதிகமான பிரகாசத்துடன் ஒளிவீசிக்கொண்டிருக்கும் அந்த முகத்தை அதன் மகிமையில் காண்பார்கள். (54) ★

# 76

# யூதாஸ்...!

**(The Desire of Ages, pp. 716–721)**

யூதாசின் வரலாறு, தேவனால் கனப்படுத்தப்பட்டிருந்திருக்கவேண்டிய ஒருவனின் வாழ்க்கையில் ஏற்பட்ட துயரமிக்க முடிவை முன்வைக்கிறது. யூதாஸ் எருசலேமிற்கான அவனுடைய கடைசிப் பயணத்திற்குமுன் மரணமடைந்திருப்பானானால், அந்தப் பன்னிருவருக்கிடையில் தகுதியனான ஒரு மனிதன் என்று கருதப்பட்டு, அவனது பிரிவு ஒரு பேரிழப்பாக எண்ணப்பட்டிருந்திருக்கும். யூதாசின் வரலாற்றின் முடிவு நேரத்திலே அவனது இயல்பான குணங்கள்மட்டும் வெளிப்பட்டிருக்காவிட்டால் நூற்றாண்டுகள் நெடுகிலும் அவனைப்பற்றிய காரியத்தில பின்தொடர்ந்திருந்த அருவருப்பான சிந்தனைகள் நிலைத்து நின்றிருக்காது. ஆனால் ஒரு நோக்கத்திற்காகத்தான் அவனுடைய குணம் திறந்துவைக்கப்பட்டிருந்தது. அவனைப்போல பரிசுத்தமான நம்பிக்கைகளுக்குத் துரோகம் செய்பவர்களுக்கெதிரான ஒரு எச்சிரிக்கையாக அது இருக்கவேண்டியதிருந்தது. (1)

பஸ்கா பண்டிகைக்குச் சற்றுமுன், இயேசுவை ஆசாரியர்களின் கைகளில் ஒப்புக்கொடுக்கின்ற அவர்களுடனான ஒப்பந்தத்தை யூதாஸ் புதுப்பித்திருந்தான். அப்பொழுது இரட்சகர் தியானஞ்செய்வதற்காகவும் ஜெபஞ்செய்வதற்காகவும் தங்கும் இடங்களில் ஒன்றிலிருந்து அவர் பிடித்துக்கொள்ளப்படவேண்டும் என்று ஏற்பாடு செய்யப்பட்டிருந்தது. சீமோனின் வீட்டில் நடைபெற்றிருந்த விருந்தின்போதிருந்து செய்வதாக அவன் ஒப்பந்தஞ்செய்திருந்த அச்செயலை மனதில் எண்ணிப் பார்க்க யூதாசுக்கு வாய்ப்பு இருந்திருந்தது. ஆனால் அவனுடைய நோக்கம் மாறாமலிருந்தது. ஒரு அடிமையின் விலையாக இருந்த முப்பது வெள்ளிக்காசிற்காக அவன் மகிமையின் கர்த்தரை அவமானத்திற்கும் மரணத்திற்கும் விற்றான். (2)

யூதாஸ் இயற்கையாகவே பணத்தின்மீது ஆசையுள்ளவனாக இருந்திருந்தான். ஆனால் இதைபோன்ற ஒரு ஒப்பந்தத்தைச் செய்யுமளவிற்கு எப்போதும் ஊழல் மிக்கவனாக இல்லை. பேராசை என்னும் தீய ஆவியை, அது அவனுடைய வாழ்க்கையின் உள்நோக்கை ஆளுகைசெய்யும்வரை

அவன் ஊட்டி வளர்த்திருந்தான். செல்வத்தின்மீதிருந்த அவனுடைய நேசம், கிறிஸ்துவின்மீதிருந்த அவனுடைய அன்பை மேற்கொண்டது. ஒரு தீயபழக்கத்திற்கு அடிமையானதின்மூலமாக பாவத்தின் எந்த தூரங்களுக்கும் விரட்டப்படும்படி அவன் தன்னைத்தான் சாத்தானுக்கு ஒப்புக்கொடுத்தான். (3)

திரளானவர்கள் கிறிஸ்துவைப் பின்பற்றிக்கொண்டிருந்தபோது, யூதாஸ் சீடர்களுடன் சேர்ந்துகொண்டான். ஜெப ஆலயத்திலும், கடல் பக்கத்திலும், மலையின்மீதும் அவர் போதித்தபோது, அவருடைய வார்த்தைகளுக்காக ஏங்கியிருந்த இருதயங்களை அது அசைத்தது. பேரூர்களிலிருந்தும், நகரங்களிலிருந்தும் நோயாளிகளும் முடவர்களும் குருடரும் இயேசுவினிடத்தில் ஒன்று திரள்வதை அவன் கண்டான். இறந்துகொண்டிருப்பவர்கள் அவருடைய பாதங்களுக்கருகில் கிடத்தப் பட்டிருந்ததை அவன் கண்டான். நோயாளிகளை சுகப்படுத்துவதிலும், பிசாசுகளைத் துரத்துவதிலும், மரித்தவர்களை உயிருடன் எழுப்புவதிலும் இரட்சகரிடமிருந்த பலத்த செயல்களை அவன் சாட்சியாகக் கண்டான். கிறிஸ்துவின் வல்லமையை அவன் தனது சொந்த சரீரத்தில் உணர்ந்தான். அவன் இதுவரை கேட்டிருந்த எல்லாவற்றையும்விட உயர்ந்ததாகக் கிறிஸ்துவின் போதனைகள் இருப்பதை கண்டான். அந்தப் பெரிய ஆசிரியரை அவன் நேசித்து, அவருடனிருக்க விரும்பினான். குணத்திலும் வாழ்க்கையிலும் மாறுபட்டவனாக வேண்டும் என்னும் ஒரு வாஞ்சையை உணர்ந்து, தன்னை இயேசுவுடன் பிணைத்துக்கொள்ளுவதினால் அதை அனுபவிக்கலாம் என்று அவன் நம்பினான். இரட்சகர் யூதாசை விலக்கவில்லை. அவர் பன்னிருவருக்கிடையில் அவனுக்கு ஒரு இடத்தைக் கொடுத்தார். ஒரு சுவிசேஷகனுடைய பணியைச் செய்தவற்கு அவர் அவனை நம்பினார். நோயாளிகளைச் சுகப்படுத்தவும், பிசாசுகளைத் துரத்தவும் அவனுக்கு வல்லமையை அருட்கொடையாக வழங்கினார். ஆனால் தன்னை முற்றிலுமாக இயேசுவிடம் ஒப்படைப்பதற்கு யூதாஸ் வரவில்லை. அவனுடைய உலகப்பிரகாரமான போராவலையும் அல்லது பணத்தின்மீதுள்ள ஆசையையும் அவன் விட்டுவிடவில்லை. தன்னைக் கிறிஸ்துவின் ஊழியக்காரனாக ஒப்புக்கொண்டிருந்தும் தெய்வீக வனைதலுக்குக் கீழாக்கவில்லை. அவனுடைய சொந்த தீர்மானங்களையும் கருத்துக்களையும் அவனால் தக்கவைத்துக்கொள்ளமுடியும் என்று அவன் உணர்ந்ததோடு, விமரிசனஞ்செய்கின்றதும் குற்றப்படுத்துகிறதுமான ஒரு குணத்தை வளர்த்துக்கொண்டிருந்தான். (4)

யூதாஸ் சீடர்களால் மிகவும் உயர்வாகக் கருதப்பட்டிருந்து, அவர்கள்மீது பெரும் செல்வாக்கை கொண்டிருந்தான். அவனுடைய சொந்தத்

தகுதிகளைப்பற்றி தனக்குள் உயர்வான எண்ணத்தைக் கொண்டிருந்து, தீர்மானங்கள் செய்வதிலும், திறமையிலும் தன்னுடைய சகோதரர்கள் தன்னைவிட மிகவும் தரந்தாழ்ந்தவர்கள் என்று அவர்களை நோக்கியிருந்தான். அவர்கள் தங்களுடைய வாய்ப்புகளைப் பார்க்காமலும், சூழ்நிலைகளை அனுகூலமாக எடுத்துக்கொள்ளமலுமிருந்தனர் என்று நினைத்தான். அப்படிப்பட்ட கிட்டப்பார்வையுடைய மனிதர்களைத் தலைவர்களாகக் கொண்டிருப்பதினால் சபை ஒருபோதும் முன்னேற்றமடையாது என்று எண்ணினான். மேலும், பேதுருவை, ஆராயாமல் செயல்படுபவனாகவும் கவனமின்றி காரியங்களில் இறங்குகிறவனாகவும் எண்ணினான். கிறிஸ்துவின் உதடுகளிலிருந்து விழுந்த சத்தியங்களை பொக்கிஷ மாகச் சேகரித்த யோவானை, மோசமான நிதி நிர்வாகி என்று அவன் கருதினான். எல்லாக் காரியங்களிலும் சரியாக இருக்கவேண்டுமென்று பயிற்சியின்போது போதிக்கப்பட்டிருந்த மத்தேயுவை, நேர்மையைப் பொறுத்த காரியத்தில் மிகவும் குறிப்புள்ளவனாகவும், எப்பொழுதும் கிறிஸ்துவின் வார்த்தைகளைத் தியானஞ்செய்துகொண்டிருப்பவனாகவும், முற்றிலுமாக அவைகளில் ஈடுபாடு கொண்டவனாகவும் மாறிவிட்டவனாக யூதாஸ் அறிந்திருந்தான். ஆனாலும் கூர்மையான தூரத்துப் பார்வையையுடைய தொழிலில் மத்தேயுவை நம்பமுடியாது என்று எண்ணினான். இவ்விதமாக, அனைத்து சீடர்களைப்பற்றியும் கணக்கிட்டிருந்து, ஒரு மேலாளன் என்னும் அவனுடைய திறமையில்லாதிருந்தால் சபை அடிக்கடி குழப்பத்திற்குள்ளும் தர்மசங்கடமான நிலைமைக்குள்ளும் கொண்டுவரப்பட்டிருக்கும் என்றும் அவன் தன்னைப்பற்றித் தானே பெருமையாக நினைத்துக்கொண்டான். மற்றவர்களால் மேற்கொள்ள முடியாத திறமையுள்ள ஒருவனாக தான் இருப்பதாகத் தன்னைப்பற்றிக் கருதியிருந்தான். அவனுடைய சொந்த மதிப்பீட்டில் ஊழியம் சம்மந்தப்பட்ட காரியங்களில் தான் மேன்மையாக கருதப்படுகிறவனென்றும், அப்படி இருப்பதினால், எப்பொழுதும் தன்னையே எடுத்துக்காட்டுபவனுமாயிருந்தான். (5)

யூதாஸ் அவனுடைய சொந்த குணத்தின் பலவீனத்திற்குக் குருடாக்கப்பட்டிருந்தான். அவன் தன்னுடைய தவறைப் பார்ப்பதற்கும், அதை சரிசெய்துகொள்ளுவதற்கும் ஒரு வாய்ப்பை உடையவனாக இருக்கக்கூடிய இடத்தில் கிறிஸ்து அவனை வைத்தார். சீடர்களுக்கு காசாளனாக இருந்த அவன், அந்தச் சிறுகூட்டத்தின் தேவைகளுக்கான ஏற்பாட்டைச் செய்யவும் ஏழைகளின் உதவிகளுக்கானவைகளைச் செய்யவும் அழைக்கப்பட்டிருந்தான். பஸ்கா விருந்தின் அறையில் இருந்தபோது, “நீ செய்கிறதைச் சீக்கிரமாய்ச் செய்” (யோவான் 13:27) என்று இயேசு அவனிடம் கூறினார். அந்த விருந்திற்கான எதையோ வாங்குவதற்காகவோ அல்லது

ஏழைகளுக்கு எதையாவது கொடுப்பதற்காகவோ அவர் அவனுக்குக் கட்டளையிட்டிருந்தார் என்று சீடர்கள் நினைத்துக்கொண்டார்கள். பிறருக்கு ஊழியஞ்செய்வதினால் ஒரு சுயநலமில்லாத ஆவியை அவனால் முன்னேற்றமடையச் செய்திருக்கமுடியும். ஆனால் கிறிஸ்துவின் போதனைகளை நாள்தோறும் கவனித்திருந்தும், அவருடைய சுயநலமற்ற வாழ்க்கைக்குச் சாட்சியாக இருந்திருந்தும், அவன் அவனுடைய பேராசைமிக்கக் குணத்தை நடத்தியிருந்தான். அவனுடைய கைகளுக்குள் வந்திருந்த சிறிய தொகைகள் ஒரு தொடர்ச்சியான சோதனையாக இருந்தது. கிறிஸ்துவிற்காக ஏதாவதொரு சேவையை அடிக்கடி செய்திருந்தபோது, அல்லது மத சம்பந்தமான காரியங்களுக்காகச் சிறிது நேரத்தைச் செலவிட்டிருந்தபோது, அந்தச் சிறிய நிதியிலிருந்து அவன் தனக்குச் சம்பளம் எடுத்திருந்தான். அவனுடைய சொந்தக் கண்களில் இந்தப் பாசாங்குகள் அவனுடைய செயலிற்கு சாக்குப்போக்காக இருக்க உதவியிருந்தன. ஆனால் தேவனுடைய பார்வையில் அவன் ஒரு திருடனாக இருந்தான். (6)

கிறிஸ்துவின் இராஜ்யம் இந்த உலகத்திற்குரியதல்ல என்று அவரால் அடிக்கடி திரும்பத்திரும்பக் கூறப்பட்டிருந்த அறிக்கை யூதாசில் எதிர்ப்பை உண்டுபண்ணியிருந்தது. அவன் ஒரு வரைபடத்தை வரைந்திருந்து அதன்படி கிறிஸ்து செயலாற்றவேண்டும் என்று எதிர்பார்த்தான். யோவான் ஸ்நானகள் சிறைச்சாலையிலிருந்து விடுதலை செய்யப்படவேண்டும் என்று அவன் திட்டமிட்டிருந்தான். ஆனால் இதோ, சிரச்சேதம்பண்ணப்படுவதற்கு யோவான் விட்டுவிடப்பட்டிருந்தான். இயேசு, அவருடைய இராஜரீக உரிமையைப் பாராட்டுவதற்கும், யோவான் ஸ்நானகனின் மரணத்திற்குப் பழிவாங்குவதற்கும் பதிலாக, தமது சீடர்களுடன் அவர் ஒரு நாட்டுப்புறமான இடத்திற்கு விலகிச்சென்றிருந்தார். கோபமாக எதிர்க்கும் ஒரு போக்கை யூதாஸ் விரும்பியிருந்தான். சீடர்கள் அவர்களுடைய திட்டங்களின்படி செயலாற்றுவதை இயேசு தடுக்காமலிருந்திருந்தால் அந்தப் பணி அதிகமான வெற்றியுடையதாக இருந்திருக்கும் என்று அவன் நினைத்தான். யூதத்தலைவர்களிடமிருந்து அதிகரித்துவரும் பகைமையை அவன் குறித்துவைத்து, வானத்திலிருந்து ஒரு அடையாளத்தைக் காட்டும்படியான அவர்களுடைய கோரிக்கை செவிமடுக்கப்படாமலிருந்ததைக் குறிப்பிட்டான். நம்பிக்கையின்மைக்கு அவனுடைய இருதயம் திறக்கப்பட்டிருந்தபோது, கேள்விகேட்கின்றதும் கலகஞ்செய்வதுமான எண்ணங்களை சத்துரு வழங்கியிருந்தான். அதைரியத்தை உண்டுபண்ணக்கூடியவைகளின்மீது இயேசு ஏன் வாழ்ந்துகொண்டிருந்தார்? அவருக்கும் அவருடைய சீடர்களுக்கும் உபத்திரவம் உண்டாகும் என்று அவர் ஏன் முன்னுரைத்திருந்தார்?

புதிய இராஜ்யத்தில் ஒரு உயர்ந்த இடத்தை அடைந்துகொள்ளலாம் என்னும் இலாபமான நோக்கம், கிறிஸ்துவின் காரியத்தில் தன்னைப் பிணைத்துக்கொள்ளும்படி யூதாசை நடத்தியிருந்தது. அவனுடைய நம்பிக்கைகள் ஏமாற்றமடையவேண்டியவைகளா? இயேசு தேவகுமாரன் அல்ல என்று யூதாஸ் முடிவு செய்திருக்கவில்லை. ஆனால் அவருடைய பலத்த செய்கைகளைப்பற்றி அவன் கேள்விகேட்டுக்கொண்டும், அதற்கான ஏதாவது விளக்கத்தைக் காண்பதற்கும் வகைதேடிக்கொண்டிருந்தான். (7)

இரட்சகரின் சொந்தப் போதனைக்கு நேர் எதிராக கிறிஸ்து எருசலேமில் அரசராக ஆட்சிசெய்வார் என்னும் யோசனையை தொடர்ச்சியாக முன்கொண்டுசென்றிருந்தான். ஐயாயிரம்பேருக்கு உணவளித்தபோது, இந்தக் காரியத்தைக் கொண்டுவர அவன் முயன்றான். அந்த சந்தர்ப்பத்தில் பசியுற்றிருந்த திரளானவர்களுக்கு உணவு வழங்குவதில் யூதாஸ் உதவிசெய்திருந்தான். மற்றவர்களுக்குப் பகிர்ந்தளிக்கும்படி தன்னுடைய வல்லமைக்குள் இருந்த ஆதாயத்தை பார்க்கக்கூடிய ஒரு வாய்ப்பு அவனுக்கு இருந்தது. தேவனுக்குச் சேவை செய்வதினால் எப்பொழுதும் வரும் மன நிறைவை அவன் உணர்ந்தான். திரளானவர்களுக்கிடையிலிருந்த நோயாளிகளையும் துன்பப்படுபவர்ளையும் கிறிஸ்துவினிடத்திற்குக் கொண்டுவருவதற்கு அவன் உதவி செய்திருந்தான். புதுப்பிப்பவரின் சுகமளிக்கும் வல்லமையினால் மனித இருதயங்களுக்கு வந்த நிவாரணத்தையும், மகிழ்ச்சியையும், சந்தோஷத்தையும் அவன் கண்டான். கிறிஸ்துவின் முறைகளை அவன் அறிந்துகொண்டிருக்கவேண்டும். ஆனால் அவனுடைய சொந்த சுயநலமிக்க வாஞ்சைகளினால் அவன் குருடாக்கப்பட்டிருந்தான். அப்பத்துணிக்கைகளின் அற்புதத்தால் உண்டான உற்சாகத்தையும் எழுப்புதலையும் அனுகூலமாக எடுத்துக்கொள்வதில் யூதாஸ் முதல் நபராக இருந்தான். கிறிஸ்துவை வற்புறுத்தி, அவரை அரசராகச் செய்கின்ற திட்டத்தை ஆரம்பித்தவன் அவன் தான். அவனுடைய நம்பிக்கைகள் உயர்வானவையாக இருந்தன. அவனுடைய ஏமாற்றம் கசப்பானதாக இருந்தது. (8)

ஜீவ அப்பம்பற்றி கிறிஸ்து ஜெப ஆலயத்தில் செய்த பிரசங்கம் யூதாசின் வரலாற்றில் திருப்புமுனையாக இருந்தது. “நீங்கள் மனுஷ குமாரனுடைய மாம்சத்தைப் புசியாமலும், அவருடைய இரத்தத்தைப் பானம்பண்ணாமலும் இருந்தால் உங்களுக்குள்ளே ஜீவனில்லை” (யோவான் 6:53) என்னும் வார்த்தைகளை அவன் கேட்டிருந்தான். உலகப்பிரகாரமான நன்மையைவிட ஆவிக்குரிய நன்மைகளைக் கிறிஸ்து வழங்கிக்கொண்டிருந்தார் என்பதை அவன் கண்டான். அவன் தன்னைப்பற்றின

தூரப்பார்வையைத் தான் பெற்றிருப்பதாகக் கருதிக்கொண்டு, இயேசு கனம் எதுவும் இல்லாதவராக இருக்கிறார் என்றும், அவரைப் பின்பற்றுபவர்களுக்கு மேலான எந்தப் பதவியையும் அவரால் அருளமுடியாது என்றும் தன்னால் பார்க்கமுடிகிறது என்று நினைத்துக்கொண்டான். கிறிஸ்துவுடன் மிகவும் நெருக்கமாக ஒன்று சேராமல், தூரமாக விலகிச்செல்லவேண்டும் என்று அவன் தீர்மானஞ்செய்தான். அவன் விழிப்பாயிருக்கவேண்டும். அவன் விழிப்பாயிருந்தான். (9)

சீடர்களைக் குழம்பச் செய்திருந்த சந்தேகங்களை அவன் வெளிக்காட்டியிருந்த நேரத்திலிருந்து, எதிர்வாதங்களையும் தவறாக நடத்தும் நுண்ணுணர்வுகளையும் அறிமுகஞ்செய்திருந்து, கிறிஸ்து கூறியிருந்தவைகளுக்கெதிராக வேதபாரகர்களும் பரிசேயர்களும் வற்புறுத்தியிருந்த வாதங்களைத் திரும்பக் கூறியிருந்தான். சுவிசேஷத்தின் முன்னேற்றத்திற்கு எதிராக இருக்கும் பெரியதும் சிறியதுமான கஷ்டங் களையும், சிலுவைகளையும், தொல்லைகளையும், வெளியரங்கமான இடையுறுகளையும் அதன் மெய்த்தன்மைக்கெதிரான சான்றுகள் என்று விளக்கியிருந்தான். கிறிஸ்து முன்வைத்துக்கொண்டிருந்த சத்தியங்களுடன் சம்பந்தமில்லாத வேதவாக்கிய வசனங்களை அவன் அறிமுகம் செய்தான். அவைகளின் சம்பந்தத்திலிருந்து பிரிக்கப்பட்டிருந்த இந்த வசனங்கள் சீடர்களைக் குழப்பமடையச்செய்து, அவர்கள்மீது எப்பொழுதும் தொடர்ச்சியாக அழுத்திக்கொண்டிருந்து, அவர்களுடைய அதைரியத்தை அதிகரித்திருந்தன. ஆயினும் இவையனைத்தும் யூதாசினால், அவன் மனச்சாட்சியுள்ளவனாக இருக்கிறான் என்று தோன்றக்கூடியவிதமாகச் செய்யப்பட்டிருந்தது. சீடர்கள் அவர்களுடைய பெரிய ஆசிரியரின் வார்த்தைகளை உறுதிப்படுத்துவதற்கான சான்றுகளை ஆராய்ந்துகொண்டிருந்தபோது, யூதாஸ் ஏறத்தாழ சீடர்களால் உணரமுடியாதவிதமாக வேறொரு பாதையில் அவர்களை நடத்துபவனாக இருந்தான். இவ்விதமாக ஒரு மதசம்பந்தமானதும், வெளித்தோற்றத்திற்கு ஞானமாகத் தோன்றுகிறதுமான விதத்தில், இயேசு அவர்களுக்குக் கொடுத்ததிலிருந்து மாறுபட்டிருந்த ஒரு ஒளியில், அவர் தெரிவிக்காத அர்த்தத்தை அவருடைய வார்த்தைகளுக்குக் கொடுத்துக்கொண்டிருந்தான். அவனுடைய கருத்துக்கள் எல்லாம், தொடர்ச்சியாக, உலகப்பிரகாரமான மேலானவைகளைத் தெரிந்துகொள்ளுவதில் பேராவலை எழுப்புகின்ற வாஞ்சையை உடையதாக இருந்து, இவ்விதமாக சீடர்கள் ஆலோசித் திருக்கவேண்டிய முக்கியமான காரியங்களிலிருந்து அவர்களைத் திருப்பிக்கொண்டிருந்தது. அவர்களில் எவன் பெரியவன் என்னும் பிரிவினை பொதுவாக யூதாசால் தூண்டிவிடப்பட்டிருந்தது, (10)

ஐசுவரியவானான வாலிப அதிபதிக்குச் சீடத்துவத்தின் நிபந்தனையை இயேசு முன்வைத்தபோது, யூதாஸ் அதிருப்தியடைந்தான். ஒரு தவறு செய்யப்பட்டிருந்தது என்று அவன் நினைத்தான். அந்த அதிபதியைப்போன்ற மனிதர்கள் விசுவாசிகளுடன் பிணைக்கப்படக்கூடுமானால் கிறிஸ்துவின் ஊழியத்தைத் தாங்குவதற்கு அவர்கள் உதவுவார்கள். ஒரு ஆலோசகனாக மட்டும் யூதாஸ் ஏற்றுக்கொள்ளப்பட்டிருந்தால், அந்தச் சிறிய சபையின் அனுகூலத்திற்காக அவனால் அநேக திட்டங்களைக் கருத்துடனே கூறமுடிந்திருக்கும் என்று அவன் நினைத்தான். அவனது கொள்கைகளும் வழிமுறைகளும் கிறிஸ்துவினுடையதிலிருந்து ஓரளவிற்கு மாறுபட்டதாக இருந்தது. ஆனால் இந்தக் காரியங்களில் அவன் தன்னைக் கிறிஸ்துவைவிட அதிக ஞானமுள்ளவனாக நினைத்துக்கொண்டான். (11)

கிறிஸ்து அவருடைய சீடர்களுக்குக் கூறியிருந்த சில காரியங்களில் யூதாஸ் அவனுடைய இருதயத்தில் ஒத்துப்போகாதிருந்தான். அவனுடைய செல்வாக்கின்கீழ், பாசமின்மை என்னும் புளிப்பு அதன் வேலையை விரைவாகச் செய்துகொண்டிருந்தது. இவைகள் அனைத்திலும் இருந்த ஏதுகரத்தை சீடர்கள் பார்க்கவில்லை. ஆனால் சாத்தான் அவனது இயல்புகளை யூதாசிற்குக் கொடுத்துக்கொண்டிருந்ததையும், இவ்விதமாக மற்ற சீடர்களையும் அவனது செல்வாக்கிற்குள் கொண்டுவரத்தக்கதாக ஒரு வாய்க்கால் திறக்கப்பட்டுக்கொண்டிருப்பதையும் இயேசு கண்டார். இதைப்பற்றி அவர் காட்டிக்கொடுக்கப்படுவதற்கு ஒரு வருடத்திற்கு முன்பே: "பன்னிருவராகிய உங்களை நான் தெரிந்துகொள்ளவில்லையா? உங்களுக்குள்ளும் ஒருவன் பிசாசாயிருக்கிறான்" (யோவான் 6:70) என்று கூறினார். (12)

அப்படியிருந்தும் வெளிப்படையான எதிர்ப்பைக் காட்டவோ அல்லது இரட்கசகரின் போதனைகளின்மீது கேள்விகேட்கிறவனைப்போலவோ யூதாஸ் காணப்படவில்லை சீமோனின் வீட்டில் நடைபெற்றிருந்த விருந்தின் நேரம்வரை அவன் வெளிப்படையாக முறுமுறுக்கவில்லை. மரியாள் இரட்சகரின் பாதங்களில் தைலம் பூசினபோது, அவனுடைய பேராசைமிக்க மனப்பான்மையை வெளிக்காட்டினான். இயேசுவிடமிருந்துண்டான கடிந்து கொள்ளுதலில் அவனுடைய ஆவி கசப்புமிக்கதாக மாறினதுபோலக் காணப்பட்டது. காயமடைந்த பெருமையும், பழிவாங்கவேண்டுமென்ற வாஞ்சையும், வேலிகளை முறித்து வீழ்த்தவே, இவ்வளவு காலமாக திளைக்கப்பட்டிருந்த பேராசை அவனைக் கட்டுப்பாட்டில் நிறுத்தினது. பாவத்துடன் விடாப்பிடியாக விளையாடும் ஒவ்வொருவரின் அனுபவமும் இப்படிப்பட்டதாகவே இருக்கும். தடைசெய்யப்படாததும், மேற்கொள்ளப்

படாததுமான துர்ப்புத்தியின் மூலக்கூறுகள் சாத்தானின் சோதனைக்குள் வீழ்ந்துவிடும்போது, ஆத்துமா அவனுடைய சித்தத்திற்கு அடிமையாகும்படி நடத்தப்படுகிறது. (13)

ஆனால் யூதாஸ் இன்னும் முற்றிலுமாகக் கடினமடையவில்லை. இரட்சகரைக் காட்டிக்கொடுப்பதாக இரண்டு தடவைகள் அவன் உறுதிமொழி கொடுத்திருந்தபோதிலும் மனந்திரும்புவதற்கு இன்னும் வாய்ப்பு இருந்தது. பஸ்கா பண்டிகையின் இரவு விருந்தில் துரோகியின் நோக்கத்தை வெளிப்படுத்தினதில் இயேசு அவருடைய தெய்வீகத்தை மெய்ப்பித்தார். சீடர்களுக்குச் செய்திருந்த ஊழியத்தில் அவர் மென்மையாக யுதாசையும் சேர்த்திருந்தார். ஆனால் அன்பின் கடைசி வேண்டுகோளும் செவிசாய்க்கப்படாமல் போனது. அப்பொழுது யூதாசின் காரியம் முடிவு செய்யப்பட்டுவிட்டது. இயேசு கழுவியிருந்த பாதங்கள் காட்டிக்கொடுப்பவனின் பணியைச் செய்வதற்காக முன்நோக்கிச்சென்றன. (14)

இயேசு சிலுவையில் அறையப்படவேண்டியதாக இருந்தால், அந்தச் சம்பவம் கட்டாயமாக நடக்கும்; அவரைக் காட்டிக்கொடுக்கின்ற அவனுடைய சொந்தச் செயல் அந்தப் பலனில் மாறுதலை உண்டுபண்ணாது என்று யூதாஸ் காரணம் சொன்னான். இயேசு மரிக்க வேண்டியவராக இல்லாமலிருந்தால், அது அவரை அவராகவே விடுதலை செய்துகொள்ள வற்புறுத்தும். எல்லாச் சம்பவங்களிலும் அவனுடைய துரோகச் செயலினால் யூதாஸ் எதையாவது இலாபமாக அடைந்துகொள்வான். தன்னுடைய கர்த்தரைக் காட்டிக்கொடுப்பதில் அவன் ஒரு திறமையான பேரத்தை முடித்திருந்ததாக எண்ணினான். (15)

அப்படியிருந்தபோதிலும், தம்மைக் கைதுசெய்வதற்கு கிறிஸ்து தாமாகவே அனுமதிப்பார் என்று அவன் நம்பவில்லை. அவரைக் காட்டிக்கொடுப்பதில் அவருக்கு ஒரு பாடத்தைப் போதிப்பது அவனுடைய நோக்கமாக இருந்தது. அப்போதிருந்து அவனைத் தக்கவிதமான மரியாதையுடன் நடத்தவேண்டும் என்பதில் இரட்சகரைக் கவனமுள்ளவராக இருக்கச் செய்வதற்கு ஒரு காரியத்தைச் செய்ய அவன் நோக்க முடையவனாக இருந்தான். ஆனால் கிறிஸ்துவை மரணத்திற்கு ஒப்புக்கொடுத்துக்கொண்டிருந்ததை யூதாஸ் அறியாதிருந்தான். அடிக்கடி உவமைகளினால் இரட்சகர் போதித்திருந்தபோது, மனதில் பதியத்தக்க அவருடைய சித்திரவிளக்கங்களினால் வேதபாரகர்களும் பரிசேயர்களும் எவ்விதம் ஈர்க்கப்பட்டிருந்தனர்! இவ்விதமாக அவர்கள் எத்தனையோ தடவை தங்களுக்கு எதிராக தாங்களே நியாயத்தீர்ப்பைக் கூறியிருந்தனர்! அடிக்கடி அவர்களுடைய உள்ளத்தில் சத்தியம் கொண்டுவரப்பட்டபோது,

கோபம் நிறைந்தவர்களாக அவர்மீது எறிவதற்காக கற்களை ஆயத்தமாக வைத்துக்கொண்டிருந்தனர். ஆனால் இயேசு மறுபடியும் மறுபடியும் அவர் தப்பிச்சென்றிருந்தார். அநேகக் கண்ணிகளிலிருந்து அவர் தப்பியிருந்ததினால், தம்மை பிடித்துக்கொள்வதற்கு நிச்சயமாகவே அவர் அனுமதிக்கமாட்டார் என்று யூதாஸ் நினைத்தான். (16)

அந்தக் காரியத்தை பரீட்சை செய்ய யூதாஸ் முடிவு செய்தான். உண்மையாகவே இயேசு மேசியாவாக இருந்தால், எந்த மக்களுக்காக அவர் அதிகமாகச் செயலாற்றியிருந்தாரோ அவர்கள் அவரைச் சூழ்ந்து அரசராக அவரை அறிவிப்பார்கள். இப்பொழுது நிச்சயமின்மையில் இருக்கும் அநேக உள்ளங்களுக்கு என்றென்றைக்குமான தீர்வைக் கொடுக்கும். அவரைத் தாவீதின் சிங்காசனத்தில் அமர்த்தினதற்கான மதிப்பை யூதாஸ் அடைந்துகொள்ளுவான். இந்தச் செயல், புதிய இராஜ்யத்தில் கிறிஸ்துவிற்கு அடுத்தபடியான முதலாவது இடத்தை அடைந்துகொள்ள அவனுக்கு உதவும். (17)

இயேசுவைக் காட்டிக்கொடுப்பதில் அந்த போலிச்சீடன் அவனுடைய பங்கைச் செய்திருந்தான். தோட்டத்தில் கலகக்கார கூட்டத்தின் தலைவர் களிடத்தில்: “நான் எவனை முத்தஞ்செய்வேனோ அவன்தான், அவனைப் பிடித்துக்கொள்ளுங்கள்” (மத்தேயு 26:48) என்று கூறினபோது, கிறிஸ்து அவர்களுடைய கைகளிலிருந்து தப்பிவிடுவார் என்று அவன் முற்றிலுமாக நம்பினான். அப்பொழுது, அவர்கள் அவனைக் குறைகூறினால், அவரைப் பிடித்துக்கொள்ளுங்கள் என்று நான் சொல்லவில்லையா? என்று அவனால் கூறமுடியும். (18)

கிறிஸ்துவைக் கைதுசெய்பவர்களையும் அவனுடைய வார்த்தைகளின்படி அவரை உறுதியாகக் கட்டுபவர்களையும் யூதாஸ் பார்த்தான். கொண்டுசெல்லப்படுவதற்கு இரட்சகர் தாமாகவே அனுமதித்ததை அவன் ஆச்சரியத்துடன் பார்த்தான். தோட்டத்திலிருந்த யூத அதிபதிகளுக்கு முன்பாக அவர் விசாரணைக்கு அழைத்துச்செல்லப்பட்டபோது, அவன் கவலையுடன் அவரைப் பின்தொடர்ந்தான். அவர்களுக்கு முன்பாக தேவகுமாரனாகத் தோன்றுவதினால், அவர்களுடைய திட்டங்களையும் வல்லமையையும் செயலற்றுப்போகச் செய்து, அவர்களை ஆச்சரியப்படச் செய்வார் என்று அவன் ஒவ்வொரு விநாடியிலும் எதிர்பார்த்தான். ஆனால் ஒவ்வொரு மணிவேளையும் கடந்துசென்றபோது, அவர்மீது குவிக்கப்பட்ட நிந்தனைகள் அனைத்திற்கும் அவர் தம்மைக் கீழ்ப்படுத்தினபோது, தன்னுடைய ஆண்டவரை மரணத்திற்கு விற்றுவிட்டதைக்குறித்த ஒரு பயங்கரமான பயம் அவனைப் பற்றிக்கொண்டது. (19)

அந்த விசாரணை முடிவைச் சமீபித்தபோது, அதற்குமேல் குற்றமுள்ள தன்னுடைய மனச்சாட்சியின் சித்தரவதையை அவனால் தாங்கமுடியவில்லை. திடீரென்று, ஓ, காய்பாவே! அவர் குற்றமில்லாதவர்! அவரை விட்டுவிடு! என்னும் ஒரு கரடுமுரடான குரல் அந்த மன்றம் முழுவதிலும் ஒலித்து, எல்லா இருதயங்களிலும் பயத்தின் ஒரு கிளர்ச்சியை அனுப்பினது. (20)

திடுக்கிட்டிருந்த கூட்ட நெரிசலுக்கூடாக யூதாசின் உயரமான உருவம் இப்பொழுது முன்நோக்கிச்செல்லுவது காணப்பட்டது. அவனுடைய முகம் வெளிரி விகாரமாயிருந்தது. அவனுடைய நெற்றியின்மீது வியர்வையின் பெரும்துளிகள் நின்றன. நியாயாதிபதியின் சிங்காசனத்தை நோக்கி அவன் விரைந்து பிரதான ஆசாரியனுக்கு முன்னால் அவனுடைய கர்த்தரைக் காட்டிக்கொடுத்ததற்கான விலையான முப்பது வெள்ளிக்காசை வீசினான். அவன் மிகுந்த அக்கறையுடன் காய்பாவின் மேலாடையைப் பற்றிக்கொண்டு, இயேசு மரணத்திற்குத் தகுதியான ஒன்றையும் செய்யவில்லையென்று அறிவித்து, அவரை விடுதலை செய்யும்படிக் கெஞ்சி மன்றாடினான். காய்பா கோபத்துடன் அவனை உதறித் தள்ளினான். ஆனால் அவன் குழப்பமடைந்து என்ன சொல்லுவதென்று அறியாதிருந்தான். ஆசாரியர்களின் துரோகம் வெளிப்படுத்தப்பட்டிருந்தது. அவனுடைய ஆண்டவரைக் காட்டிக்கொடுக்கும்படி அந்த சீடனுக்கு இலஞ்சம் கொடுக்கப்பட்டது என்பது தெளிவாகக் காணப்பட்டது. (21)

“குற்றமில்லாத இரத்தத்தை நான் காட்டிக்கொடுத்ததினால் பாவஞ்செய்தேன்” என்று அவன் கதறினான். ஆனால் அந்தப் பிரதான ஆசாரியன் மறுபடியும் அவனுடைய சுய நிலைமையை அடைந்து, பரிகாசத்துடன்: “எங்களுக்கென்ன, அது உன்பாடு” (மத்தேயு 27:4) என்றான். யூதாசைத் தங்களுடைய கருவியாகப் பயன்படுத்த விரும்பின ஆசாரியர்கள் அவனுடைய கீழ்த்தரமான குணத்தை நிந்தித்தார்கள். பாவ அறிக்கையுடன் அவன் அவர்களிடத்திற்குத் திரும்பினபோது, அவர்கள் அவனை வெறுத்துத் தள்ளினார்கள். (22)

இப்பொழுது யூதாஸ் தானே இயேசுவின் பாதத்தில் விழுந்து, அவர் தம்மை தேவகுமாரன் என்று ஒப்புக்கொண்டு, தம்மைத்தாமே விடுவித்துக்கொள்ளும்படி அவரிடம் கெஞ்சி மன்றாடினான். அவரைக் காட்டிக்கொடுத்தவனை இரட்சகர் நிந்திக்கவில்லை. யூதாஸ் மனந்திரும்ப வில்லை என்பதை அவர் அறிந்திருந்தார். ஆக்கினையையும் நியாயத் தீர்ப்பையுங்குறித்த ஒரு பயங்கரமான உணர்வினாலான குற்றமிக்க அவனுடைய ஆத்துமாவிலிருந்து அவனுடைய பாவ அறிக்கை வற்புறுத்தப்பட்டிருந்தது. ஆனால் கறையில்லாதிருந்த தேவகுமாரனைக்

காட்டிக்கொடுத்து, இஸ்ரவேலின் பரிசுத்தமான ஒருவரை மறுதலித்ததற்கான ஆழமான இருதயத்தை அடைக்கின்ற வருத்தத்தை அவன் உணரவில்லை. அப்படியிருந்தும், ஆக்கினைக்குட்படுத்துகின்ற ஒரு வார்த்தையையும் இயேசு கூறவில்லை. அவர் யூதாசை இரக்கத்துடன் பார்த்து: இதற்காகவே இந்த உலகத்தில் வந்தேன் என்று கூறினார். (23)

ஆச்சரியத்தின் முணுமுணுப்பு அந்தக் கூட்டமெங்கிலும் உண்டானது. தம்மைக் காட்டிக்கொடுத்தவனுக்கு நேராக இயேசு காட்டியிருந்த பொறுமையை, அவர்கள் ஆச்சரியத்துடன் பார்த்தார்கள். மறுபடியும் இந்த மனிதர் இறப்பிற்கு அப்பாற்பட்டவர் என்னும் உணர்த்துதல் அனைவரது உள்ளத்தையும் ஆக்கிரமித்தது. ஆனால் அவர் தேவகுமாரனாக இருந்தால், அவருடைய கட்டுகளிலிருந்து தம்மைத்தாமே அவர் ஏன் விடுவித்துக்கொண்டு, அவரைக் குற்றஞ்சாட்டுபவர்களிடமிருந்து வெற்றியடையவில்லை? என்று கேள்வி கேட்டார்கள். (24)

யூதாஸ் அவனுடைய மன்றாட்டுகள் வீண் என்பதைக் கண்டு, மிகவும் பிந்திவிட்டது! மிகவும் பிந்திவிட்டது! என்று கூவிக்கொண்டு, அந்த மன்றத்தைவிட்டு விரைந்தான். இயேசு சிலுவையில் அறையப்படுவதைப் பார்ப்பதற்கு அவனால் உயிருடன் இருக்கமுடியாது என்று உணர்ந்து, நம்பிக்கையின்மையுடன் வெளியில் சென்று, தன்னைத்தானே தூக்கிலிட்டுக் கொண்டான். (25)

அந்த நாளின் பிற்பகுதியில் பிலாத்துவின் முற்றத்திலிருந்து கல்வாரிக்குச் செல்லும் பாதையில் இயேசுவைச் சிலுவையில் அறைகின்ற இடத்திற்கு நடத்திச்சென்றிருந்த துன்மார்க்கரின் கூட்டநெரிசலில் உண்டாயிருந்த முழக்கங்களுக்கும் பரிகாசக் குரல்களுக்கும் ஒரு குறுக்கீடு வந்தது. மக்கள் நடமாட்டமில்லாத ஒரு இடத்தை அவர்கள் கடந்தபோது, ஒரு பட்டமரத்தின் அடியில், யூதாசின் உடலை அவர்கள் கண்டார்கள். அது ஒரு அருவருப்பான காட்சியாக இருந்தது. அவன் தன்னை மரத்துடன் கட்டித் தொங்கியிருந்த அந்தக் கயிறு அவனுடைய பாரத்தினால் அறுந்து விட்டிருந்தது. கீழே விழுந்ததில் அவனுடைய உடல் பயங்கரமாகச் சிதைந்து இப்பொழுது நாய்கள் அதைத் தின்றுகொண்டிருந்தன. அந்த உடலில் மீதமாக இருந்த பாகங்கள் பார்வையிலிருந்து நீங்கும்படி உடனே புதைக்கப்பட்டன. ஆனால் கூட்ட நெரிசலுக்கிடையில் பரிகாசம் குறைவாக இருந்தது. அநேக வெளிரிய முகங்கள் உள்ளாக இருந்த எண்ணங்களை வெளிக்காட்டின. இயேசுவின் இரத்தத்தைக்குறித்து குற்றமுள்ளவர்களாக இருந்தவர்களை தேவ கோபமாகிய தண்டனை ஏற்கெனவே சந்திப்பதுபோலக் காணப்பட்டிருந்தது. (26) ★

77

# பிலாத்துவின் நியாயவிசாரணை மன்றத்தில்...!

**மத்தேயு 27:2,11–31; மாற்கு 15:1–20; லூக்கா 23:1–15; யோவான் 18:28–40, 19:1–16**

(The Desire of Ages, pp. 723–740)

ரோம நாட்டு ஆளுநரான பிலாத்துவின் நியாய விசாரணை மன்றத்திற்குமுன், கிறிஸ்து கட்டப்பட்ட ஒரு கைதியாக நிற்கிறார். அவரைச் சுற்றிலும் இராணுவ வீரர்கள் காவல்செய்கின்றனர். அந்த மன்றம் பார்வையாளர்களால் விரைவாக நிரம்பிக்கொண்டிருக்கிறது. நுழைவாயிலுக் கருகில் வெளியே, சனகரீம் சங்கத்தின் நியாயாதிபதிகளும் ஆசாரியர்களும் அதிபதிகளும் மூப்பர்களும் கலகஞ்செய்யும் கூட்டத்தினரும் இருக்கின்றனர். (1)

இயேசுவை தண்டனைக்குட்படுத்தினபின், சனகரீம் சங்கத்து அங்கத்தினர்களின் சபை அந்தத் தண்டனையை உறுதிப்படுத்தவும் நிறைவேற்றவும் பிலாத்துவினிடத்திற்கு வந்தது. ஆனால் இந்த யூத அதிகாரிகள் ரோம நாட்டின் நியாயவிசாரணை மன்றத்திற்குள் நுழையமாட்டார்கள். அவர்களுடைய சடங்காச்சாரப் பிரமாணத்தின்படி, அப்படிச்செய்வதினால் அவர்கள் தீட்டுப்பட்டு, பஸ்கா பண்டிகையில் பங்குபெறுவதிலிருந்து தடைசெய்யப்படுவார்கள். கொலைசெய்யும் அந்த வெறுப்பு அவர்களுடைய இருதயங்களைத் தீட்டுப்படுத்தியிருந்ததை அவர்களுடைய குருட்டுத்தனத்தில் அவர்கள் காணவில்லை. கிறிஸ்துதான் மெய்யான பஸ்கா ஆட்டுக்குட்டி என்பதையும், அவரை அவர்கள் புறக்கணித் ததினால் அவர்களைப் பொறுத்தவரை அந்தப் பெரிய பண்டிகை அதன் முக்கியத்துவத்தை இழந்திருந்ததையும் அவர்கள் காணவில்லை. (2)

நியாய விசாரணை மன்றத்திற்குள் இரட்சகர் கொண்டுவரப்பட்டபோது, பிலாத்து அவரை நட்புடன்கூடிய கண்களால் பார்க்கவில்லை. அந்த ரோம

நாட்டு ஆளுநர் அவனுடைய படுக்கை அறையிலிருந்து அவசரமாக அழைக்கப்பட்டிருந்து, அவன் தனது வேலையை எவ்வளவு விரைவாக முடிக்கமுடியுமோ, அவ்வளவு விரைவாக முடிக்கத் தீர்மானித்திருந்தான். ஒரு நீதிபதியின் கடுமையுடன் அந்தக் கைதியுடன் இடைபட அவன் ஆயத்தமாயிருந்தான். அதிகாலை நேரத்தில் அவனுடைய இளைப்பாறுதலிலிருந்து நியாய விசாரணை செய்யும்படி அழைக்கப்பட்டிருந்த அவன், தனது முகபாவத்தை மிகவும் கடுமையாக்கிக்கொண்டு, அவனால் விசாரணை செய்யப்படவேண்டியதிருந்த மனிதன் எப்படிப்பட்டவனாக இருப்பான் என்பதை காணத் திரும்பினான். விசாரிப்பதற்கும் அவசரமாகத் தண்டிப்பதற்கும் யூத அதிகாரிகள் கவலைமிக்கவர்களாக இருந்த அப்படிப்பட்ட ஒருவனாக அவன் இருந்தாகவேண்டும் என்பதை அவன் அறிந்திருந்தான். (3)

இயேசுவைத் தங்கள் பொறுப்பில் வைத்திருந்த மனிதர்களைப் பிலாத்து பார்த்தான். அப்பொழுது அவனுடைய பார்வை ஆராயும்விதமாக இயேசுவின்மேல் பதிந்தது. எல்லாவிதமான குற்றவாளிகளுடனும் அவன் இடைபடவேண்டியவனாக இருந்திருந்தான். ஆனால் இதற்குமுன் அவரைப்போன்ற நல்ல தன்மையையும் மென்மையையும் உடைய ஒருவனும் ஒருபோதும் அவனுக்குமுன் கொண்டுவரப்பட்டிருக்கவில்லை. அவருடைய முகத்தில் அவன் குற்றத்தின் அடையாளத்தையோ, பயத்தின் உணர்வையோ, தைரியமின்மையையோ, அல்லது அதிகார மறுப்பையோ காணவில்லை. குற்றவாளியின் அடையாளங்களை உடைய முகமாக இல்லாமல், பரலோகத்தின் கையொப்பத்தை உடைய முகத்தையும், அமைதியும் மேன்மையுமிக்க நடத்தையையும் உடைய ஒருவரை அவன் கண்டான். (4)

கிறிஸ்துவின் தோற்றம் பிலாத்துவின்மீது ஒரு சாதகமான உணர்த்துதலை உண்டுபண்ணினது. சிறப்பான அவனுடைய நல்ல இயல்பு எழுப்பப்பட்டது. அவன் இயேசுவைப்பற்றியும் அவருடைய செயல்களைப் பற்றியும் கேள்விப்பட்டிருந்தான். அந்த கலிலேயத் தீர்க்கதரிசியால் செய்யப்பட்டிருந்த ஆச்சரியமான செயல்களில் சிலவற்றை அதாவது அவர் நோயாளிகளைச் சுகப்படுத்தினதையும், மரித்தோரை எழுப்பினதையும், அவனுடைய மனைவி அவனிடம் கூறியிருந்தாள். இப்பொழுது அது பிலாத்துவின் மனதில் ஒரு கனவாக எழும்பினது. பல இடங்களிலிருந்து கேள்விப்பட்டிருந்த வதந்திகளை இப்பொழுது திரும்பவும் அவன் நினைத்தான். அந்தக் கைதிக்கு எதிரான யூதர்களுடைய குற்றச்சாட்டுகளை கேட்க அவன் தீர்மானித்தான். (5)

இந்த மனிதன் யார்? என்ன காரணத்திற்காக நீங்கள் அவனைக் கொண்டுவந்தீர்கள்? அவனுக்கு எதிராக என்ன குற்றச்சாட்டை நீங்கள் கொண்டுவருகிறீர்கள்? என்று அவன் கேட்டான். யூதர்கள் கலக்கத்திற் குள்ளானவர்களாகி குழப்பமடைந்திருந்தனர். கிறிஸ்துவிற்கு எதிரான குற்றச்சாட்டுகளை மெய்ப்பிக்கமுடியாதவர்களாக அவர்கள் இருந்தனர் என்பதையும், ஒரு பொது இடத்து விசாரணையை அவர்கள் விரும்பவில்லை என்பதையும் அவன் அறிந்தான். அவர்கள்: அவர் நசரேயனாகிய இயேசு என்னும் ஒரு வஞ்சகர் என்று பதில் கூறினார்கள். (6)

"இந்த மனுஷன்மேல் என்ன குற்றஞ்சாட்டுகிறீர்கள்" என்று மறுபடியும் பிலாத்து கேட்டான். ஆசாரியர்கள் அவனுடைய கேள்விக்குப் பதில் கூறாமல், அவர்களுடைய எரிச்சலைக் காட்டி: "இவன் குற்றவாளியாயிராவிட்டால், இவனை உம்மிடத்தில் ஒப்புக்கொடுக்கமாட்டோம்" என்றார்கள். சனகரீம் சங்கத்தில் உறுப்பினர்கள்—அந்த தேசத்தின் முதல் மனிதர்களாக இருப்பவர்கள், மரணத்திற்குப் பாத்திரவானாக கருதப்படும் ஒருவனை உம்மிடத்திற்குக் கொண்டுவரும்போது, அவனுக்கெதிரான குற்றச்சாட்டைக் கேட்கவேண்டிய அவசியம் இருக்கிறதா? அவர்களுடைய முக்கியத்துவம்பற்றிய ஒரு உணர்வைப் பிலாத்துவின்மீது உணர்த்தலாம் என்று அவர்கள் நம்பியிருந்து, இவ்விதமாக, அநேக அடிப்படையான தங்களுடைய வேண்டுகோளிற்கு இணங்கும்படி அவனை நடத்தலாமென்று நம்பினார்கள். அவர்கள் அறிவித்த தண்டனை அங்கீகரிக்கப்படவேண்டும் என்பதில் அவர்கள் அக்கறையுள்ளவர்களாக இருந்தனர். ஏனெனில் கிறிஸ்துவின் ஆச்சரியமான செயல்களுக்குச் சாட்சிகளாக இருந்த மக்களால், இப்பொழுது அவர்களாகவே புனைந்து உருவாக்கி ஒத்திகைசெய்துகொண்டிருக்கும் காரியத்திலிருந்து முற்றிலும் மாறுபட்ட கதையைக் கூறமுடியும் என்பதை அவர்கள் அறிந்திருந்தனர். (7)

பலவீனமும் சஞ்சல புத்தியுமுள்ள பிலாத்துவின்மூலமாக தங்களுடைய திட்டங்களைத் தொல்லைகள் எதுவுமின்றி நடத்திவிடலாமென்று அந்த ஆசாரியர்கள் நினைத்தார்கள். இதற்குமுன், மரணத்திற்குப் பாத்திரவான் அல்ல என்று அவர்கள் அறிந்திருந்த மனிதர்களுக்கு, பிலாத்து மரணதண்டனைச் சீட்டை அவசரமாக எழுதியிருந்தான். அவனுடைய மதிப்பீட்டில் ஒரு சிறைக்கைதியின் ஜீவன் அற்பமானதாக இருந்தது. அவன் குற்றமில்லாதவனோ அல்லது குற்றமுள்ளவனோ, அது விசேஷமான பலனை பெற்றிருக்கவில்லை. இப்பொழுதும் பிலாத்து இயேசுவை விசாரிக்காமல் அவர்மீது மரணதண்டனையை விதிப்பான் என்று அவர்கள் நம்பியிருந்தனர். அதை அவர்கள் தங்களுடைய பெரிய தேசியப்பண்டிகையின்போது ஒரு சலுகையாக அளிக்கப்படவேண்டுமென்று கெஞ்சிக்கேட்டனர். (8)

ஆனால் இப்படிச் செய்வதிலிருந்து பிலாத்துவைப் பின்னிட்டு நிறுத்தின ஏதோ ஒன்று அந்தக் கைதியிடம் இருந்தது. அதைச் செய்வதற்கு அவன் துணிவில்லாதவனாக இருந்தான். ஆசாரியர்களின் நோக்கங்களை அவன் அறிந்துகொண்டான். சில நாட்களுக்குமுன் இறந்து நான்கு நாட்களான லாசரு என்னும் ஒரு மனிதனை இயேசு எழுப்பியிருந்ததை அவன் ஞாபகப்படுத்திக்கொண்டு, ஆக்கினைத் தீர்ப்பில் கையொப்பம் இடுவதற்குமுன் அவருக்கு எதிராக இருந்த குற்றச்சாட்டுகள் என்ன? அவைகளை மெய்ப்பிக்கமுடியுமா? என்பதை அறிய தீர்மானித்தான். (9)

உங்களுடைய நியாயத்தீர்ப்பு போதுமானதாக இருந்தால் இந்தக் கைதியை ஏன் என்னிடத்திற்குக் கொண்டுவருகிறீர்கள்? "இவனை நீங்களே கொண்டுபோய், உங்கள் நியாயப்பிரமாணத்தின்படி நியாயந்தீருங்கள்" என்று கூறினான். இவ்விதமாக வற்புறுத்தப்பட்ட ஆசாரியர்கள் ஏற்கெனவே அவர்மீது தண்டனையை அறிவித்துவிட்டிருந்தனர் என்றும், ஆனால் அவர்களுடைய கண்டனையை மதிப்புள்ளதாக்குவதற்கு பிலாத்துவின் தீர்ப்பும் அவர்களுக்குத் தேவை என்பதையும் கூறினார்கள். நீங்கள் விதித்த தண்டனை என்ன? என்று பிலாத்து கேட்டான். மரண தண்டனை என்று அவர்கள் பதில்கூறி, ஆனால் எந்த மனிதனையும் மரணத்திற்குட்படுத்துவது எங்களுக்குச் சட்டப்படியானதல்ல என்றும் கூறினார்கள். கிறிஸ்துவின் குற்றத்தைப்பற்றி அவர்களுடைய வார்த்தையை எடுத்துக்கொள்ளவேண்டும் என்றும், அவர்கள் அளித்த தண்டனையை நடப்பிக்கவேண்டும் என்றும் அவர்கள் பிலாத்துவைக் கேட்டார்கள். அதனுடைய விளைவின் பொறுப்பை அவர்கள் ஏற்றுக்கொள்ளுவார்கள். (10)

பிலாத்து, ஒரு நீதியான அல்லது மனச்சாட்சியுள்ள ஒரு நியாயாதிபதியாக இல்லாமல், சன்மார்க்க வல்லமையில் பலவீனமுள்ளவனாக இருந்திருந்தபோதிலும், இந்த வேண்டுகோளை அனுமதிக்க மறுத்து விட்டான். இயேசுவிற்கு எதிரான ஒரு குற்றச்சாட்டு அவனுக்கு முன்பாகக் கொண்டுவரப்படாதவரை அவன் அவரை ஆக்கினைக்கு உட்படுத்த மாட்டாதவனாக இருந்தான். (11)

அந்த ஆசாரியர்கள் ஒரு குழப்பமான நிலையில் இப்படியா அல்லது அப்படியா என்று தீர்மானிக்க முடியாதிருந்தனர். அவர்கள் தங்களுடைய மாய்மாலத்தை மேலங்கியினால் முழுமையாக மறைக்கவேண்டியிருந்ததைக் கண்டனர். மத சம்பந்தமான காரணங்களுக்காகக் கிறிஸ்து கைது செய்யப்பட்டிருந்தார் என்று தோன்றுவதை அவர்கள் அனுமதிக்கக்கூடாது. அது ஒரு காரணமாக வைக்கப்பட்டிருந்தால் அவர்களுடைய சட்ட நடவடிக்கைகளுக்கு பிலாத்துவிடம் எந்தவிதமான அழுத்தமான

செல்வாக்கும் இருந்திருக்காது. இயேசு பொதுவான சட்டத்திற்கு எதிராகச் செயலாற்றிக்கொண்டிருந்தார் என்று தோன்றும்படி அவர்கள் அதைச் செய்திருக்கவேண்டும். அப்பொழுது அவர் ஒரு அரசியல் எதிர்ப்பாளராகத் தண்டிக்கப்படமுடியும். யூதர்களுக்கிடையில் ரோம அரசாங்கத்திற்கெதிரான சந்தடிகளும் கலகங்களும் தொடர்ச்சியாக எழுந்துகொண்டிருந்தன. இந்தக் கலகங்களை அடக்குவதில் ரோமர்கள் கடுமையானவிதமாக இடைப்பட்டிருந்து, கலகம் வெடிக்கக்கூடிய எல்லாவற்றையும் அடக்குவதற்கு தொடர்ச்சியாக விழித்திருந்தனர். (12)

இதற்குச் சில நரட்களுக்கு முன்புதான் "இராயனுக்கு வரிகொடுக்கிறது நியாயமோ அல்லவோ" என்று ஒரு கேள்வியை கேட்டு கிறிஸ்துவைச் சிக்கவைப்பதற்காக பரிசேயர்கள் முயற்சித்திருந்தனர். ஆனால் அவர்களுடைய மாய்மாலத்தைக் கிறிஸ்து திரைநீக்கம் செய்திருந்தார். "இராயனுடையதை இராயனுக்கும் தேவனுடையதை தேவனுக்கும் செலுத்துங்கள்" (லூக்கா 20:22–25) என்ற அவருடைய பதிலினால் சதித்திட்ட மிட்டிருந்தவர்கள் முற்றிலுமாகத் தோல்வியடைந்திருந்ததை அங்கு இருந்த ரோமர்கள் கண்டிருந்தனர். (13)

அந்தச் சந்தர்ப்பத்தில் அவர் எதைப் போதிக்கவேண்டும் என்று அவர்கள் நினைத்திருந்தார்களோ அதையே அவர் போதித்திருந்தார் என்று தோன்றும்படிச்செய்ய அப்பொழுது ஆசாரியர்கள் நினைத்தார்கள். அவர்களுடைய வரம்புகடந்த நிலையில் அவர்களுடைய உதவிக்கு பொய்ச்சாட்சிகளை அழைத்தனர். "இவன் தன்னைக் கிறிஸ்து என்னப்பட்ட ராஜாவென்றும், ராயருக்கு வரிகொடுக்க வேண்டுவதில்லையென்றும் சொல்லி, ஜனங்களைக் கலகப்படுத்தக் கண்டோம்" என்று அவர்மேல் குற்றஞ்சாட்டத்தொடங்கினார்கள். இந்த மூன்று குற்றச்சாட்டுகளும் அடிப்படை இல்லாதவைகளாக இருந்தன. அந்த ஆசாரியர்கள் அதை அறிந்திருந்தனர். ஆனால் அவர்களுடைய முடிவை அடைந்துகொள்ள முடியுமானால் அதற்காகப் பொய்ச்சாட்சி கூறவும் அவர்கள் விருப்பமுள்ளவர்களாக இருந்தனர். (14)

பிலாத்து, அவர்களுடைய நோக்கம் முழுவதையும் கண்டறிந்தான். அந்தக் கைதி, அரசாங்கத்திற்கு எதிராகச் சதிசெய்தார் என்பதை அவன் நம்பவில்லை. அவருடைய தாழ்மையும் எளிமையுமான தோற்றம் அந்தக் குற்றச்சாட்டிற்கு எதிராக ஒட்டுமொத்தமாக மாறுபட்டிருந்தது. யூதர்களில் மேன்மையானவர்களின் பாதையில் நின்றிருந்த ஒரு குற்றமில்லாத மனிதனை அழிப்பதற்கு ஆழமான சதித்திட்டங்கள் இடப்பட்டிருந்தன என்பதில் மனஉணர்வினை உடையவனாக பிலாத்து இருந்தான்.

அவன் இயேசுவினிடத்திற்குத் திரும்பி: “நீ யூதருடைய ராஜாவா” என்று கேட்டான். இரட்சகர்: “நீர் சொல்லுகிறபடிதான்” என்று பதில் கூறினார். அவர் பேசினபோது, ஒரு சூரிய ஒளிக்கதிர் அவரது முகத்தின்மீது பிரகாசித்ததைப்போல அவருடைய முகம் ஒளியடைந்தது, (15)

அவருடைய பதிலை அவர்கள் கேட்டபோது, காய்பாவும் அவனுடன் இருந்தவர்களும் எந்தக் குற்றச்சாட்டு இயேசுவின்மீது சாட்டப்பட்டிருந்ததோ, அதை ஒத்துக்கொண்டிருந்தார் என்பதற்குப் பிலாத்துவும் சாட்சியென்று கூறினார்கள். அவருக்கு மரணதண்டனை விதிக்கப்படவேண்டும் என்று ஆசாரியர்களும் அதிபதிகளும் வேதபாரகர்களும் உரத்த சத்தத்துடன் கோரிக்கை விடுத்தனர். அந்தக் கூக்குரல் கலகக்கூட்டத்தாராலும் எடுத்துக்கொள்ளப்பட்டது. அந்த பெருஞ்சத்தம் செவிடாக்குவதாக இருந்தது. பிலாத்து குழப்பமடைந்தான். அவர்மீது குற்றம் சாட்டுபவர்களுக்கு இயேசு பதில் கூறாமலிருந்ததைக் கண்டு, அவரிடம்: “நீ உத்தரவு ஒன்றும் சொல்லுகிறதில்லையா” என்று கேட்டான். “இயேசுவோ அப்பொழுதும் உத்தரவு ஒன்றும் சொல்லவில்லை.” (16)

பிலாத்துவிற்குப் பின்னாக, அந்த மன்றத்தில் இருந்த அனைவரும் பார்க்கக்கூடியவிதமாக நின்றிருந்த கிறிஸ்து, நிந்தனைகளையெல்லாம் கேட்டார். ஆனால் அவருக்கெதிரான பொய்க்குற்றச்சாட்டுகளுக்கு எதிராக ஒரு வார்த்தைகூடப் பதில் கூறவில்லை. அவர்களுடைய ஒட்டுமொத்த நடத்தையும் அவரது மனப்பூர்வமான குற்றமின்மைக்குச் சான்று கொடுத்தது. அவர்மீது மோதியடித்த கோபத்தின் அலையினால் அசைக்கப்படாதவராக அவர் நின்றார். அது மூர்க்கத்தனமான சமுத்திரத்தின் அலைகள் உயரத்திற்குமேல் உயரமாக எழுகின்றதைப் போன்று, கோபத்தின் பாரமான அலைகளாக அவரைச் சுற்றிலும் வீசியிருந்தது. ஆனால் அவை அவரைத் தொடவில்லை. அவர் மௌனமாக நின்றார். ஆனால் அந்த மௌனமே திறமையான பதிலாக இருந்தது. அது மனிதனின் உள்ளாக இருந்து வெளியில் பிரகாசிக்கும் ஒளியாக இருந்தது. (17)

அவருடைய நடத்தையில் பிலாத்து ஆச்சரியமடைந்தான். இந்த மனிதர் அவருடைய உயிரைக் காப்பாற்றிக்கொள்ளுவதற்குக் கவனமுள்ளவராக இல்லாமலிருப்பதினால், இவர் நீதிமன்ற நடவடிக்கை களைப் புறக்கணிக்கின்றாரா? என்று அவன் தனக்குத்தானே கேட்டுக் கொண்டான். அவமானத்தையும் பரிகாசத்தையும் எதிர்த்துப் போராடாமல், தாங்கிக்கொண்டிருந்த இயேசுவை அவன் பார்த்தபோது, அமளி செய்துகொண்டிருக்கும் ஆசாரியர்களைப்போல அவர் அநீதியுள்ளவ ராகவும், அநியாயக்காரராகவும் இருக்கமுடியாது என்று உணர்ந்தான்.

அவரிடத்திலிருந்து உண்மையை அறிந்துகொள்ளலாம் என்ற நம்பிக்கை யுடனும், அந்தக் கூட்டத்தினரின் அமளியிலிருந்து தப்புவதற்கு முடியுமென்ற நம்பிக்கையுடனும் பிலாத்து இயேசுவை ஒரு பக்கமாக அழைத்து மறுபடியும் “நீ யூதருடைய ராஜாவா” என்று கேட்டான். (18)

இந்தக் கேள்விக்கு இயேசு நேரடியாகப் பதில் கூறவில்லை. பரிசுத்த ஆவியானவர் பிலாத்துவுடன் போராடிக்கொண்டிருந்தார் என்பதை அவர் அறிந்து, அவனுடைய மன உணர்த்துதலை ஒப்புக்கொள்வதற்கு அவனுக்கு வாய்ப்பைக் கொடுத்தார். “நீராய் இப்படிச் சொல்லுகிறீரோ? அல்லது மற்றவர்கள் என்னைக்குறித்து இப்படி உமக்குச் சொன்னார்களோ” என்று கேட்டார். அதாவது பிலாத்துவை அந்தக் கேள்வியைக் கேட்கும்படியாகத் தூண்டினது ஆசாரிகளின் குற்றச்சாட்டுகளா அல்லது கிறிஸ்துவிடமிருந்து ஒளியைப் பெற்றுக்கொள்ளுவதற்கான ஒரு வாஞ்சையா? கிறிஸ்துவின் அர்த்தத்தைப் பிலாத்து புரிந்துகொண்டான். ஆனால் அகந்தை அவனுடைய இருதயத்தில் எழுந்தது. அவன்மீது அழுத்தியிருந்த மன உணர்த்துதலை அவன் ஏற்றுக்கொள்ளாதவனாக இருந்தான். நான் யூதனா? என்று அவன் வினவினான். “உன் ஜனங்களும் பிரதான ஆசாரியரும் உன்னை என்னிடத்தில் ஒப்புக்கொடுத்தார்கள், நீ என்ன செய்தாய்” என்றான். (19)

பிலாத்துவின் பொன்னான வாய்ப்பு கடந்துசென்றது. ஆயினும் மேற்கொண்டு ஒளியில்லாமல் இயேசு அவனை விட்டுவிடவில்லை. பிலாத்துவின் கேள்விக்கு அவர் நேரடியாக பதில் கொடுக்காமலிருந்தபோது, அவருடைய சொந்த ஊழியத்தை அவர் வெளிப்படையாக அறிவித்தார். பூமிக்குரிய ஒரு சிங்காசனத்தை அவர் தேடிக்கொண்டிருக்கவில்லை என்பதை பிலாத்து புரிந்துகொள்ளும்படிச்செய்தார். (20)

“என் ராஜ்யம் இவ்வுலகத்திற்குரியதல்ல, என் ராஜ்யம் இவ்வுலகத்திற் குரியதானால் நான் யூதரிடத்தில் ஒப்புக்கொடுக்கப்படாதபடிக்கு என் ஊழியக்காரர் போராடியிருப்பார்களே; இப்படியிருக்க என் ராஜ்யம் இவ்விடத்திற்குரியதல்ல என்றார். அப்பொழுது பிலாத்து அவரை நோக்கி: அப்படியானால் நீ ராஜாவோ என்றான். இயேசு பிரதியுத்தரமாக: நீர் சொல்லுகிறபடி நான் ராஜாதான்; சத்தியத்தைக்குறித்துச் சாட்சிகொடுக்க நான் பிறந்தேன், இதற்காகவே இந்த உலகத்தில் வந்தேன்; சத்தியவான் எவனும் என் சத்தம் கேட்கிறான்” என்றார். (21)

கிறிஸ்துவின் வார்த்தையைப் பெற்றுக்கொள்ளுவதற்கு ஆயத்தமாக இருப்பவர்களுக்கு அவருடைய வார்த்தையில் உள்ள இரகசியத்தைத் திறப்பதற்கு அது தன்னில்தானே ஒரு திறவுகோலாக இருக்கிறது என்று அவர் உறுதிப்படுத்தினார். அது தனக்குத்தானே பரிந்துபேசும் வல்லமையை

பெற்றிருக்கிறது. இதுதான் அவருடைய சத்திய இராஜ்யம் பரவுவதற்கான இரகசியம். சத்தியத்தைப் பெற்று அதைப் பகிர்ந்தளிப்பது ஒன்றினால் மட்டுமே, கேடடைந்துள்ள அவனுடைய இயல்பு திரும்பவும் எடுப்பித்துக்கட்டப்பட முடியும் என்பதைப் பிலாத்து புரிந்துகொள்ளவேண்டுமென்று அவர் வாஞ்சித்தார். (22)

சத்தியத்தை அறிந்துகொள்ளவேண்டும் என்ற ஒரு வாஞ்சையை பிலாத்து கொண்டிருந்தான். அவன் மனம் குழப்பத்தில் ஆழ்ந்திருந்தது. அவன் இரட்சகரின் வார்த்தைகளை அக்கறையுடன் பற்றிக்கொண்டதுடன், உண்மையாகவே அது என்ன? அதை எப்படி அடைந்துகொள்வது? என்னும் பெரும் ஏக்கத்தினால் இருதயம் கலங்கியிருந்தான். சத்தியம் என்றால் என்ன? என்று அவன் விசாரித்தான். ஆனால் ஒரு பதிலுக்காக அவன் காத்திருக்கவில்லை. வெளியில் உண்டான சந்தடி, அந்த நேரத்தின் காரியங்களை அவனுக்கு ஞாபகப்படுத்தினது. ஏனெனில் உடனடியான நடவடிக்கைக்காக ஆசாரியர்கள் அமளிசெய்துகொண்டிருந்தனர். அவன் வெளியில் யூதர்களிடத்திற்குச் சென்று: “இந்த மனுஷனிடத்தில் நான் ஒரு குற்றத்தையும் காணவில்லை” என்று அழுத்தமாக அறிவித்தான். (23)

ஒரு அஞ்ஞான நியாயாதிபதியினிடத்திலிருந்து வந்த இந்த வார்த்தைகள் இரட்சகரைக் குற்றஞ்சாட்டிக்கொண்டிருந்த இஸ்ரவேலின் அதிபதிகளுக்கு அவர்களுடைய நம்பிக்கைத்துரோகம், தவறான தன்மை ஆகியவைகளுக்கு இழுக்கை உண்டுபண்ணும் கடிந்துகொள்ளுதலாக இருந்தது. பிலாத்துவினிடத்திலிருந்து இதை ஆசாரியர்களும் மூப்பர்களும் கேட்டபோது, அவர்களுடைய ஏமாற்றமும் கோபமும் எல்லையில்லாததாக ஆனது. நீண்டகாலமாக சதிசெய்திருந்து, இந்த வாய்ப்பிற்காக அவர்கள் காத்திருந்தனர். இயேசுவை விடுதலை செய்யக்கூடிய அறிகுறியை அவர்கள் கண்டபோது, அவரைத் துண்டுதுண்டாகக் கிழிப்பதற்கு ஆயத்தமா யிருந்தது காணப்பட்டது. உரத்த சத்தத்துடன் பிலாத்துவின்மீது வெளிப்படையாகக் குற்றஞ்சாட்டி, ரோம அரசுக்கு எதிரானவன் என்று கண்டனஞ்செய்தனர். இராயனுக்கு எதிரானவர் என்று அவர் தம்மை நிலைப்படுத்தியிருப்பதாக அவர்கள் உறுதியாகக் கூறி, இயேசுவை ஆக்கினைக்குட்படுத்த மறுப்பதாகவும் அவன்மீது குற்றஞ்சாட்டினார்கள். (24)

இயேசுவின் அரசிற்கு எதிரான செல்வாக்கு இந்த நாடு முழுவதிலும் நன்கு அறியப்பட்டிருக்கிறது என்று உறுதியுடன் அறிவிக்கும் கோபமிக்க குரல்கள் இப்பொழுது கேட்கப்பட்டன. “இவன் கலிலேயா நாடுதொடங்கி இவ்விடம்வரைக்கும் யூதேயாதேசமெங்கும் உபதேசம்பண்ணி, ஜனங்களைக் கலகப்படுத்துகிறான்” என்று ஆசாரியர்கள் கூறினார்கள். (25)

அந்த நேரத்தில் பிலாத்து இயேசுவிற்கு தண்டனையளிக்கின்ற எண்ணம் உடையவனாக இருக்கவில்லை. வெறுப்பினாலும் தவறான எண்ணத்தினாலும் யூதர்கள் அவரைக் குற்றப்படுத்தியிருந்தனர் என்பதை அவன் அறிந்திருந்தான். அவனுடைய கடமையை அவன் அறிந்திருந்தான். கிறிஸ்து உடனே விடுதலைசெய்யப்படவேண்டும் என்று நீதி கோரியது. ஆனால் மக்களின் தீய எண்ணங்களுக்குப் பிலாத்து பயந்தான். இயேசுவை அவர்களுடைய கைகளில் ஒப்புக்கொடுக்க அவன் மறுத்தால் ஒரு அமளி எழும்பும். அதைச் சந்திக்க அவன் பயந்தான். கிறிஸ்து கலிலேயாவிலிருந்துள்ளவர் என்பதை அவன் கேள்விப்பட்டபோது, அந்த மாநிலத்தின் அதிபதியாக இருந்து, அந்த நேரத்தில் எருசலேமிலிருந்த ஏரோதுவினிடத்திற்கு அவரை அனுப்ப அவன் முடிவுசெய்தான். இப்படிச் செய்வதினால் நியாய விசாரணையின் பொறுப்பைத் தன்னிடமிருந்து ஏரோதுவினிடத்திற்கு மாற்றிவிடலாம் என்று அவன் நினைத்தான். அவனுக்கும் ஏரோதுக்குமிடையில் இருந்த சண்டடையைச் சரிப்படுத்தி சமாதானம் செய்வதற்கு இது ஒரு நல்ல வாய்ப்பு என்றுங்கூட அவன் நினைத்தான். அதுவும் அதேவிதமாக மெய்ப்பிக்கப்பட்டது. இரட்சகரின்மீதான விசாரணையினால் அந்த இரண்டு நீதிபதிகளும் நண்பர்களாக்கப்பட்டனர். (26)

பிலாத்து இயேசுவை மறுபடியும் இராணுவ வீரர்களிடம் ஒப்படைத்தான். கலகஞ்செய்யும் கூட்டத்தினரின் பரிகாசத்துடனும் நிந்தைகளுடனும் அவர் ஏரோதின் நியாயவிசாரணை மன்றத்திற்கு அவசரமாகக் கொண்டுசெல்லப்பட்டார். “அவரைக் கண்டபோது, மிகவும் சந்தோஷப்பட்டான்.” இதற்குமுன் ஒருபோதும் அவன் இரட்சகரைச் சந்திக்காதவனாக இருந்து, “இயேசுவைக்குறித்து அநேக காரியங்களைக் கேள்விப்பட்டிருந்ததினாலும், அவரால் செய்யப்படும் அடையாளத்தைப் பார்க்கவேண்டுமென்று விரும்பியிருந்ததினாலும், அவரைக் காணும்படி வெகுநாளாய் ஆசைகொண்டிருந்தான்.” இந்த ஏரோது யோவான் ஸ்நானகனின் இரத்தத்தால் தனது கைகளை கறைப்படுத்தியிருந்தான். ஏரோது முதல்தடவையாக இயேசுவைப்பற்றிக் கேள்விப்பட்டபோது, திடுக்கிட்டு, “அவன் நான் சிரச்சேதம் பண்ணின யோவான்தான்; அவன் மரித்தோரிலிருந்து எழுந்தான்” (மாற்கு 6:16; மத்தேயு 14:2) என்றான். ஆயினும் அவன் இயேசுவைக் காண வாஞ்சித்தான். இப்பொழுது அந்தத் தீர்க்கதரிசியின் உயிரைக் காப்பாற்றக்கூடிய ஒரு வாய்ப்பு வந்திருந்தபோது, அந்த அரசன், ஒரு தட்டின்மீது வைக்கப்பட்டு அவனிடத்தில் கொண்டுவரப்பட்டிருந்த அந்த இரத்தம் தோய்ந்த தலையைப்பற்றிய ஞாபகத்தை தன்னுடைய மனதிலிருந்த என்றென்றைக்குமாக அகற்றிவிடலாம் என்று நம்பினான். இயேசுவைப்பற்றி

மேலும் அறிந்துகொள்ளவேண்டுமென்று அவனுக்கிருந்த ஆர்வத்தை அவன் திருப்திப்படுத்த எண்ணினான். மேலும் விடுதலைசெய்யப்படக்கூடிய வாய்ப்பு கிறிஸ்துவிற்குக் கொடுக்கப்படுமானால் ஏரோதினிடத்தில் கேட்கப்படும் எதையும் அவன் செய்யக்கூடியவனாகவுமிருந்தான். (27)

கிறிஸ்துவுடன் கூட ஒரு பெரும் கூட்டமான ஆசாரியர்களும் அதிபதிகளும் ஏரோதுவினிடத்திற்குச் சென்றிருந்தனர். இரட்சகர் உள்ளே கொண்டுவரப்பட்டபோது, பரபரப்புடன் பேசியிருந்த இந்த மேன்மையானவர்கள் அனைவரும் அவருக்கெதிரான அவர்களுடைய குற்றச்சாட்டுக்களை வற்புறுத்தினார்கள். ஆனால் ஏரோது அவர்களுடைய குற்றச்சாட்டுகளுக்கு மதிப்புக் கொடுக்கவில்லை. கிறிஸ்துவிடம் கேள்விகேட்பதற்கான ஒரு வாய்ப்பிற்காக வாஞ்சித்து, மௌனமாயிருக்கும்படி அவன் அனைவருக்கும் கட்டளையிட்டான். கிறிஸ்துவைக் கட்டியிருந்த விலங்குகளைக் கழற்றிவிடும்படி அவன் உத்தரவிட்டபோது, அவரை முரட்டுத்தனமாக நடத்தினதற்காக அவருடைய எதிரிகள்மீதும் குற்றஞ்சாட்டியிருந்தான். உலக மீட்பரின் அமைதியான முகத்தை மனஉருக்கத்துடன் பார்த்த அவன், அதில் ஞானத்தையும் தூய்மையையும்மட்டுமே கண்டான். வன்மத்தினாலும் பொறாமையினாலும் கிறிஸ்து குற்றஞ்சாட்டப்பட்டிருந்தார் என்று பிலாத்துவைப்போலவே அவனும் நம்பினான். (28)

ஏரோது, அநேக வார்த்தைகளினால் கிறிஸ்துவைக் கேள்வி கேட்டான். ஆனால் இரட்சகர் ஒரு ஆழ்ந்த மௌனத்தை முற்றிலுமாகக் கடைப்பிடித்திருந்தார். அந்த அரசனின் கட்டளையின்படி முதுமையினால் தளர்ந்தவர்களும் ஊனமுற்றவர்களும் உள்ளேவரும்படி அழைக்கப்பட்டு, அற்புதஞ்செய்வதினால் அவன் கூறியிருந்தவைகளை —அவர் உரிமைபாராட்டியிருந்தவைகளை மெய்ப்பிக்கும்படி கிறிஸ்து கட்டளையிடப்பட்டார். உம்மால் நோயாளிகளைச் சுகப்படுத்த முடியுமென்று மனிதர்கள் கூறுகிறார்களே என்று கேட்டான். எங்கணும் பரவியிருக்கும் உம்முடைய புகழ் பொய்யாக்கப்பட்டுவிடக்கூடாது என்பதைக் காண நான் ஆர்வமுடையவனாக இருக்கிறேன் என்றான். இயேசு பதில் கூறவில்லை. மற்றவர்களுக்காக உம்மால் அற்புதங்களைச் செய்யமுடியுமானால் இப்பொழுது அவைகளை உம்முடைய நன்மைக்காகச் செய்யும். அது உமக்கு ஒரு நல்ல நோக்கத்திற்காகப் பயன்படும் என்று ஏரோது வற்புறுத்துவதைத் தொடர்ந்தான். மேலும் சான்றுகளோடு ஏற்கப்பட்டிருக்கும் வதந்திகளின்படியும், உம்மிடத்தில் வல்லமை இருக்கிறது என்பதைக் காட்டவும் எங்களுக்கு ஒரு அடையாளத்தைக் காட்டும் என்று அவன் மறுபடியும் கட்டளையிட்டான். ஆனால் கிறிஸ்து ஒன்றையும் கேட்காத—

காணாத ஒருவரைப்போல இருந்தார். தேவகுமாரன் தம்மீது மனிதனின் தன்மையை எடுத்துக்கொண்டிருந்தார். அப்படிப்பட்ட சூழ்நிலைகளில் மனிதன் எவ்விதமாகச் செயலாற்றுவானோ அதேவிதமாக அவரும் செயலாற்றவேண்டும். ஆகையால் அதைப்போன்ற ஒரு நிலைமையில் வைக்கப்பட்டிருக்கும்போது, மனிதன் தாங்கிக்கொள்ள வேண்டியதாக இருந்த வேதனையையும் அவமானத்தையும் அவர் தாங்கிக்கொள்ள நேரும்போது, அதிலிருந்து தம்மைக் காப்பற்றிக்கொள்வதற்காக அவர் ஒரு அற்புதத்தையும் செய்யமாட்டார். (29)

ஏரோதின் சமுகத்தில் கிறிஸ்து ஏதாவது அற்புதத்தைச் செய்வாரானால் அவர் விடுதலை செய்யப்படவேண்டும் என்று அவன் வாக்குக்கொடுத்திருந்தான். அவருடைய வல்லமையினால் கிறிஸ்து செய்திருந்த பலத்த செயல்களை அவரைக் குற்றஞ்சாட்டுபவர்கள் தங்களுடைய சொந்தக் கண்களினால் கண்டிருந்தனர். கல்லறைக்குள் இருந்த மரித்தோரை விட்டுவிடும்படி அவர் கல்லறைக்குக் கட்டளையிட்டதை அவர்கள் கேட்டிருந்தனர். அவருடைய குரலுக்குக் கீழ்ப்படிந்து மரித்தவன் உயிருடன் வருவதை அவர்கள் கண்டிருந்தனர். இப்பொழுது அவர் ஒரு அற்புதத்தைச் செய்துவிடக்கூடாது என்னும் பயம், அவர்களைப் பற்றிக்கொண்டிருந்தது. எல்லாவற்றையும்விட, அவர் தம்முடைய வல்லமையை வெளிக்காட்டுவதைப்பற்றி அதிகமாகப் பயந்தனர். அப்படிப்பட்ட ஒரு வெளிக்காட்டுதல் அவர்களுடைய திட்டங்களுக்கு ஒரு மரண அடியாக அமைந்து, ஒருவேளை அவர்களுடைய உயிரையும் எடுப்பதாக அமையலாம். ஆசாரியர்களும் அதிபதிகளும் மறுபடியும் பெரும் கவலையில் அவருக்கெதிரான குற்றச்சாட்டுகளை வற்புறுத்தினார்கள். அவர்கள் தங்களுடைய குரல்களை உயர்த்தி அவர் ஒரு இராஜத்துரோகி, ஒரு தேவதூஷணம் கூறுபவர் என்று அறிவித்தார்கள். அவர் பிசாசுகளின் தலைவனான பெயல்செபூலினால் அவருக்குக் கொடுக்கப்பட்டுள்ள வல்லமையினால் அற்புதங்களைச் செய்கிறார் என்றனர். அந்த மன்றம் ஒருவர் ஒன்றைக் கூறுவதும், மற்றொருவர் வேறு ஒன்றைக் கூறுவதுமான ஒரு குழப்பத்தின் காட்சியாயிற்று. (30)

யோவான் ஸ்நானகனின் தலையை ஏரோதியாள் வேண்டினபோது பயத்தால் நடுங்கியிருந்ததைவிட இப்பொழுது ஏரோதின் மனச்சாட்சி மிக அதிக அளவில் உணர்வற்றதாக இருந்தது. சிறிது காலத்திற்கு அவனுடைய பயங்கரமான செயலிற்கான குற்ற உணர்வின் தெளிவான தொடுதல்களை அவன் உணர்ந்திருந்தான். ஆனால் அவனுடைய காமவெறிமிக்க வாழ்க்கையினால் அவனுடைய சன்மார்க்க அறிவு உணர்ச்சிகள் அதிகமதிகமாகக் கீழ்த்தரமாகியிருந்தது. இப்பொழுது

அவனைக் கடிந்துகொள்ளத் துணிந்திருந்த யோவானுக்கு அவன் கொடுத்த தண்டனையைப்பற்றி பெருமைபாராட்டிக்கொள்ளுமளவிற்கு அவனுடைய இருதயம் கடினமடைந்திருந்தது. இப்பொழுது அவன் இயேசுவை விடுதலைசெய்யவும், அவருக்கு தண்டனை அளிக்கவுங்கூடிய வல்லமையை உடையவனாக இருப்பதைத் திரும்பத்திரும்ப அறிவித்து, அவரைப் பயமுறுத்தினான். ஆனால் அந்த வார்த்தையைக் கேட்டதற்கான எந்த அடையாளமும் சான்றாக இயேசுவினிடத்திலிருந்து கொடுக்கப்படவில்லை. (31)

இந்த மௌனத்தினால் ஏரோது எரிச்சலடைந்தான். அது அவனுடைய அதிகாரத்தின்மீதிருந்த அசட்டை மனப்பான்மையை சுட்டிக்காட்டுவதுபோல காணப்பட்டிருந்தது. வீணனும் ஆடம்பரமிக்கவனுமான அந்த அரசனுக்கு இவ்விதமாகப் புறக்கணிப்பதைவிட வெளிப்படையான கடிந்துகொள்ளுதல் குறைவான எதிர்ப்பாக இருந்திருக்கும். மேலும் அசையாதவராகவும் மௌனமாகவும் இருந்த இயேசுவை அவன் மறுபடியும் கோபத்துடன் அச்சுறுத்தினான். (32)

இந்த உலகத்திலுள்ள கிறிஸ்துவின் ஊழியம், வீணான அக்கறையில் திருப்திப்படவேண்டியதாக இருக்கவில்லை. இருதயம் நொறுங்குண்டவர்களைச் சுகப்படுத்தி, பாவத்தால் நோயுற்றிருந்த ஆத்துமாக்களின் காயங்களைச் சுகப்படுத்தி, ஏதாவது வார்த்தையைப் பேச அவரால் முடிந்திருந்தால் அவர் மௌனமாக இருந்திருக்கமாட்டார். ஆனால் சத்தியத்தை தங்களுடைய பரிசுத்தமில்லாத கால்களின்கீழிட்டு மிதிப்பவர்களுக்கு அவரிடத்தில் வார்த்தைகள் எதுவும் இருக்கவில்லை. (33)

கடினமடைந்துவிட்டிருந்த ஏரோது அரசனின் செவிகளைத் துளைத்துச்சென்றிருக்கக்கூடிய வார்த்தைகளைக் கிறிஸ்து பேசியிருந் திருக்கலாம். அவனுடைய வாழ்க்கையின் முழு அக்கிரமங்களையும், சமீபித்துக்கொண்டிருக்கும் அவனுக்குரிய தண்டனையின் பயங்கரத்தையும் அவன்முன் வைத்து, அவனைப் பயத்தாலும் நடுக்கத்தாலும் அவர் தாக்கியிருந்திருக்கலாம். ஆனால் கிறிஸ்துவின் மௌனம், அவர் கொடுத்திருக்கக்கூடிய கடிந்துகொள்ளுதலைவிட மிகக் கடுமையானதாக இருந்தது. தீர்க்கதரிசிகளில் மிகவும் பெரியவராக இருந்தவரால் பேசப்பட்டிருந்த சத்தியத்தை ஏரோது புறக்கணித்திருந்தான். இன்னமும் அவன் பெற்றுக்கொள்ளவேண்டிய தூது வேறெதுவுமில்லை. பரலோகத்தின் மகத்துவமானவர் அவனுக்காக ஒரு வார்த்தையும் வைத்திருக்கவில்லை. மனிதத்துயரங்களுக்கென்று எப்பொழுதுமே திறக்கப்பட்டிருந்த அந்தச் செவி,

ஏரோதின் கட்டளைகளுக்குத் திறக்கப்படாமல் இருந்தது. பாவத்திற்காக மனம் வருந்தியிருந்த பாவியின்மீது இரக்கத்தையும் மன்னிக்கும் அன்பையும் பதித்திருந்த அந்தக் கண்கள், ஏரோதை ஏறெடுத்துப் பார்க்காமலிருந்தது. மிகவும் அதிகமான உணர்த்துல்களை உடைய சத்தியத்தைக் கூறியிருந்து, மிக மோசமான பாவிக்காகவும், மிகக் கீழ்த்தரமானவர்களுக்காவும் மென்மையான குரலில் மன்றாடியிருந்த அந்த உதடுகள், ஒரு இரட்சகர் அவசியம் இல்லையென்று உணர்ந்திருந்த அந்த அகந்தைமிக்க அரசனுக்கு மூடியிருந்தன. (34)

வெறியினால் ஏரோதின் முகம் இருளடைந்தது. கூட்டத்திடம் அவன் திரும்பி, இயேசு ஒரு வேஷக்காரன் என்று கோபத்துடன் வெளிப்படையாகக் குற்றஞ்சாட்டினான். நீர் கூறுகின்றதற்கான சான்றை நீர் கொடுக்காவிட்டால் நான் உம்மை சேனை வீரர்களிடத்திலும் மக்களிடத்திலும் ஒப்புக்கொடுப்பேன் என்றான். உம்மைப் பேசவைப்பதில் அவர்கள் வெற்றியடையலாம். நீ ஒரு வேஷக்காரனானால் அவர்களுடைய கைகளில் மரணமடைவதற்கு தகுதியானவனாயிருப்பாய். நீர் தேவனுடைய குமாரனாக இருந்தால் ஒரு அற்புதம்செய்து, உம்மை நீரே காப்பாற்றிக்கொள்ளும் என்று அவன் கிறிஸ்துவிடம் எடுத்துக் கூறினான். (35)

இந்த வார்த்தைகள் கூறப்பட்டவுடனே கிறிஸ்துவை நோக்கி ஒரு கூட்டம் பாய்ந்தது. காட்டுவிலங்குகளைப்போல அந்தக் கூட்டத்தினர் அவர்களுடைய இரையின்மீது பாய்ந்தனர். தேவ குமாரனை அவமானப்படுத்துவதற்கு ஏரோது வகைதேடி, அந்தக் கலகக்கார கூட்டத்தினருடன் சேர்ந்துகொண்டபோது, இயேசு அந்தப்பக்கமும் இந்தப் பக்கமுமாக இழுக்கப்பட்டார். ரோம நாட்டின் இராணுவ வீரர்கள் குறுக்கிட்டு, வெறிபிடித்த அந்தக் கூட்டத்தினரைப் பின்னாகத் தள்ளாமலிருந்திருந்தால், இரட்சகர் பிய்க்கப்பட்டிருப்பார். (36)

“அப்பொழுது ஏரோது தன் போர்ச்சேவகரோடுகூட அவரை நிந்தித்துப் பரியாசம்பண்ணி, மினுக்கான வஸ்திரத்தை அவருக்கு உடுத்தினான்” ரோம நாட்டின் இராணுவ வீரர்கள் அந்த நிந்தனையாக காரியத்தில் சேர்ந்துகொண்டார்கள். ஏரோதினாலும் யூதர்களின் மேன்மையானவர்களாலும் உதவிசெய்யப்பட்டிருந்த துன்மார்க்கமும் ஊழல்மிக்கவர்களுமான அந்தச் சேனைவீரர்கள் அவர்களால் என்ன தீமையையெல்லாம் தூண்டிவிடமுடியுமோ அத்தனையையும் இரட்சகரின்மீது குவித்தார்கள். அப்படியிருந்தபோதிலும் அவருடைய தெய்வீகப் பொறுமை தோல்வியடையவில்லை. (37)

கிறிஸ்துவை உபத்திரவப்படுத்தினவர்கள் அவர்களுடைய சொந்தக் குணத்தினால் அவருடைய குணத்தை அளக்கக் முயன்றார்கள். அவர்கள் அவரைத் தங்களைப்போன்ற துஷ்டர் என்று எடுத்துக்காட்டியிருந்தனர். ஆனால்

இந்த நிகழ்காலத் தோற்றங்களனைத்திற்கும்பின்னால் வேறொரு காட்சி—ஒரு நாளில் அதன் அனைத்து மகிமையிலும் காணக்கூடிய ஒரு காட்சி உள்ளே நுழைந்தது. கிறிஸ்துவின் சமுகத்தில் நடுங்கின சிலர் இருந்தனர். கொடூரமான அந்தக் கூட்டத்தினர் பரிகாசமாக அவரைத் தொழுதுகொண்டிருந்தபோது, அந்த நோக்கத்தோடு முன்னால் வந்த சிலர் பயத்துடனும் மௌனமாகவும் பின்னிட்டுத் திரும்பினார்கள். ஏரோது மனஉணர்த்துதலை அடைந்தான். பாவத்தால் கடினமடைந்துவிட்ட அவனுடைய இருதயத்தின்மீது இரக்கத்தின் கடைசி ஒளிக்கதிர்கள் வீசிக்கொண்டிருந்தன. அவர் ஒரு சாதாரணமான மனிதர் அல்ல என்பதை அவன் உணர்ந்தான். ஏனெனில் தெய்வீகம் மானுடத்திற்கூடாகப் பளிச்சிட்டிருந்தது. பரிகாசஞ்செய்பவர்கள் விபச்சாரக்காரர்கள் கொலைகாரர்கள் ஆகியோரால் கிறிஸ்து சூழப்பட்டிருந்த அதே நேரத்தில் ஏரோது தேவ சிங்காசனத்தின்மீதிருக்கும் ஒரு தேவனைப் பார்த்துக்கொண்டிருப்பதாக உணர்ந்தான். (38)

கடந்த காலத்திலிருந்ததைப்போலவே கடின இருதயமுடையவனாக இருந்த ஏரோது கிறிஸ்துவின் தண்டனையை அங்கீகரிக்கத் துணியவில்லை. பயங்கரமான அந்தப் பொறுப்பிலிருந்து அவன் தன்னை விடுவித்துக்கொள்ள விரும்பி, இயேசுவை மீண்டும் ரோமர்களின் நியாயவிசாரணை மன்றத்திற்கு அனுப்பினான். (39)

பிலாத்து ஏமாற்றமும், அதிகமான அதிருப்தியும் அடைந்திருந்தான். யூதர்கள் அவர்களுடைய கைதியுடன் திரும்பினபோது, அவன் என்ன செய்யவேண்டுமென்று அவர்கள் விரும்புகிறார்கள் என்று கேட்டான். அவன் ஏற்கெனவே இயேசுவை விசாரணை செய்துவிட்டான் என்றும் அவரிடத்தில் ஒரு தவறையும் காணவில்லையென்றும் அவர்களுக்கு ஞாபகப்படுத்தினான். அவருக்கெதிராக அவர்கள் குற்றச்சாட்டுக்களைக் கொண்டுவந்திருந்தார்கள் என்றும், ஆனால் ஒரு குற்றத்தைக்கூட மெய்ப்பிக்க அவர்கள் தகுதியானவர்களாக இருக்கவில்லையென்றும் அவன் கூறினான். நான்கு ஆளுநர்களில் ஒருவனாக இருந்த கலிலேயா நாட்டின் அரசன் ஏரோதுவினிடத்திற்கு—அவர்கள் ஜனத்தில் ஒருவனாக இருந்தவனிடத்திற்கு அவன் இயேசுவை அனுப்பியிருந்தான். ஆனால் அவனுங்கூட மரணத்திற்குத் தகுதியான ஒன்றையும் அவரிடத்தில் காணவில்லை. “இவனைத் தண்டித்து, விடுதலையாக்குவேன்” என்று கூறினான். (40)

இங்கு பிலாத்து அவனுடைய பலவீனத்தைக் காட்டினான். இயேசு குற்றமில்லாதவர் என்று அவன் அறிவித்திருந்தான். அப்படியிருந்தபோதிலும் அவர்மீது குற்றஞ்சாட்டுபவர்களைச் சாந்தப்படுத்துவதற்காக அவரைச் சவுக்கால் அடிப்பதற்கு அவன் விருப்பமுள்ளவனாக இருந்தான்.

கலகஞ்செய்யும் கூட்டத்தினருடன் சமரசஞ்செய்துகொள்ளுவதற்காக அவன் நீதியையும் கொள்கையையும் பலியிடத் துணிபவனாக இருந்தான். அது அவனை ஒரு அனுகூலமற்ற நிலைமையில் வைத்தது. அவனுடைய தீர்மானமெடுக்கமுடியாத நிலையை அறிந்த அந்தக் கூட்டத்தினர் துணிவுள்ளவர்களாகி, அந்தக் கைதியின் உயிருக்காக அதிகமாக அமளிசெய்தனர். தான் குற்றமில்லாதவனாகக் கண்ட ஒரு மனிதனைத் தண்டிக்க மறுத்ததில், பிலாத்து முதலிலேயே உறுதியாக நின்றிருந்தால், அவன் உயிருடனிருக்கும்வரை பாவத்திற்கான வருத்தத்தினாலும் குற்றஉணர்வினாலும் அவனைக் கட்டியிருந்திருக்கக்கூடிய சாவிற்கேதுவான சங்கிலியை அவனால் உடைத்திருந்திருக்கமுடியும். அவனுடைய உரிமையாக இருந்த மனஉணர்த்துதலை அவன் செயலாற்றியிருந்தால், அவனுக்கு உத்தரவிட யூதர்கள் துணிந்திருக்கமாட்டார்கள். கிறிஸ்து மரணத்திற்கு உட்படுத்தப்பட்டிருந்திருப்பார். ஆனால் அந்தக் குற்றம் பிலாத்துவின்மீது தங்கியிருந்திருக்காது. ஆனால் பிலாத்து அவனுடைய மனச்சாட்சியை மீறுவதில் அடிமேல் அடியெடுத்து வைத்திருந்தான். நீதியுடனும் நேர்மையுடனும் நியாயந்தீர்ப்பதிலிருந்து தப்புவதற்காக தனக்கென்று சாக்குப்போக்கை உடையவனாகிவிட்ட பிலாத்து, இப்பொழுது ஆசாரியர்கள் அதிபதிகள் ஆகியவர்களின் கைகளில் ஏறத்தாழ தான் உதவியற்றவனாக இருப்பதைக் கண்டான். அவனுடைய தடுமாற்றமும் முடிவுசெய்ய இயலாமையும் அவனுடைய அழிவை மெய்ப்பித்தது. (41)

இப்பொழுதுங்கூட, குருட்டுத்தனமாகச் செயல்படும்படி பிலாத்து விட்டுவிடப்பட்டிருக்கவில்லை. அவன் செய்யவிருந்த செயலைக்குறித்து தேவனிடத்திலிருந்து வந்த ஒரு தூது அவனை எச்சரித்தது. கிறிஸ்துவின் ஜெபத்திற்கு மறுமொழியாக பரலோகத்திலிருந்து ஒரு தூதன் பிலாத்துவின் மனைவியைச் சந்திக்கவேண்டும். ஒரு தரிசனத்தில் அவள் இரட்சகரைக் கண்டு, அவருடன் உரையாடினாள். பிலாத்துவின் மனைவி ஒரு யூத ஸ்திரீ அல்ல. ஆனால் அவளுடைய கனவில் அவள் இயேசுவைக் கண்டபோது, அவருடைய குணத்திலும் அல்லது ஊழியத்திலும் சந்தேகமில்லாதவளாக இருந்தாள். அவர் தேவனுடைய இளவரசர் என்பதை அவள் அறிந்திருந்தாள். நியாயவிசாரணை மன்றத்தில் அவர் விசாரிக்கப்படுவதை அவள் கண்டாள். ஒரு குற்றவாளியின் கைகளைக் கட்டுவதைப்போல அவருடைய கைகள் இறுக்கமாகக் கட்டப்பட்டிருப்பதை அவள் கண்டாள். ஏரோதும் அவனுடைய போர்ச்சேவகர்களும் செய்த பயங்கரமான வேலையை அவள் கண்டாள். வன்மத்தினாலும் பொறாமையினாலும் நிறைந்திருந்த ஆசாரியர்களும் வெறிபிடித்தவர்களாக அவர்மீது குற்றஞ்சாட்டிக்கொண்டிருப்பதை அவள் கேட்டாள். “எங்களுக்கு ஒரு நியாயப்பிரமாணமுண்டு, ... அந்த

நியாயப்பிரமாணத்தின்படியே, இவன் சாகவேண்டும்" என்ற வார்த்தைகளை அவள் கேட்டாள். பிலாத்து, "நான் இவனிடத்தில் ஒரு குற்றமும் காணேன்" என்று அறிவித்தபின், இயேசுவைச் சவுக்கால் அடிப்பதற்கு ஒப்புக்கொடுத்ததை அவள் கண்டாள். பிலாத்துவினால் கூறப்பட்ட தண்டனையையும் அவன் கிறிஸ்துவைக் கொலைகாரர்களிடம் ஒப்புக்கொடுத்ததையும் அவள் கண்டாள். கல்வாரியில் சிலுவை நிறுத்தப்பட்டிருந்ததை அவள் கண்டாள். பூமி இருளால் மூடப்பட்டிருந்ததை அவள் கண்டாள். "முடிந்தது" என்னும் புரிந்துகொள்ளமுடியாத சத்தத்தை அவள் கேட்டாள். இன்னும் வேறொரு காட்சி அவளுடைய பார்வையைச் சந்தித்தது. அந்தர வெளியில் பூமி தள்ளாடினபோதும், கிறிஸ்து ஒரு வெண்மேகத்தின்மீது அமர்ந்திருப்பதை அவள் கண்டாள். பயங்கரமான ஒரு அலறலுடன் அவள் தூக்கத்தைவிட்டு எழுந்து, உடனே எச்சரிப்பின் வார்த்தைகளை பிலாத்துவிற்கு எழுதினாள். (42)

என்ன செய்வதென்று பிலாத்து தயங்கிக்கொண்டிருந்தபோது, கூட்டத்திற்குள்ளாக ஒரு தூதுவன் நுழைந்து சென்று அவனுடைய மனைவியிடமிருந்துள்ள கடிதத்தை அவனிடம் கொடுத்தான். அந்தக் கடிதத்தில் "நீர் அந்த நீதிமானை ஒன்றும் செய்யவேண்டாம்; அவர் நிமித்தம் இன்றைக்குச் சொப்பனத்தில் வெகு பாடுபட்டேன்" என்று எழுதப்பட்டிருந்தது. (43)

பிலாத்துவின் முகம் வெளிரியது. ஒன்றை ஒன்று எதிர்க்கின்ற அவனுடைய சொந்த மனக்கிளர்ச்சியினால் அவன் குழப்படைந்தவனானான். ஆனால் அந்தச் செயலைத் தாமதஞ்செய்துகொண்டிருந்தபோது, ஆசாரியர்களும் அதிபதிகளும் மக்களுடைய மனங்களை மேலும் தூண்டிவிட்டுக்கொண்டிருந்தனர். செயலாற்றும்படி பிலாத்து வற்புறுத்தப் பட்டான். இப்பொழுது அவன் கிறிஸ்துவை விடுதலை செய்வதை அடைந்துகொள்ள உதவக்கூடிய ஒரு வழக்கத்தை ஞாபகப்படுத்திக் கொண்டான். இந்தப் பண்டிகையின்போது மக்களால் தெரிந்துகொள்ளப்படும் ஏதாவது ஒரு சிறைக்கைதியை விடுதலை செய்வது வழக்கமாக இருந்தது. இந்தப் பழக்கம் அஞ்ஞானிகளின் கண்டுபிடிப்பாக இருந்தது. அதில் நியாயத்தின் எந்த நிழலும் இருக்கவில்லை. ஆனால் அது யூதர்களால் பெரிய அளவில் மதிக்கப்பட்டிருந்தது. அந்த நேரத்தில் ரோம நாட்டின் அதிகாரிகள் மரண தண்டனைக்குக் கீழ்ப்பட்டவனாக இருந்த பரபாஸ் என்னும் பெயருடைய ஒரு கைதியைப் பிடித்து வைத்திருந்தனர். அவன் தன்னை மேசியா என்று கூறிக்கொண்டிருந்தான். உலகத்தைச் சரியான வழியில் வைப்பதற்கு காரியங்களை வித்தியாசமான கிரமத்தில் ஏற்படுத்துவதற்குத் தனக்கு அதிகாரம் வேண்டும் என்று அவன் கூறிக்கொண்டிருந்தான்.

சாத்தானாலான பொய்த்தோற்றத்தின்கீழ், கனவினாலோ அல்லது கொள்ளையினாலோ அவனால் எவைகளையெல்லாம் அடைந்துகொள்ள முடியுமோ, அவைகளையெல்லாம் அவனுக்குச் சொந்தம் என்று அவன் கூறிக்கொண்டிருந்தான். சாத்தானின் ஏதுகரங்களினால் அவன் ஆச்சரியமான காரியங்களைச் செய்திருந்து, மக்கள் தன்னைப் பின்பற்றும் மக்களை சம்பாதித்திருந்தான். ரோமர்களின் அரசிற்கு எதிரான வஞ்சத்தை எழுப்பியிருந்தான். மத சம்பந்தமான உற்சாசம் என்னும் போர்வையின்கீழ் கலகத்தையும் கொடூரமான செயல்களையும் துணிந்துசெய்யும் மனப்பாங்குடையவனாக இருந்தான். மேலும் குற்றம் புரியும் தன்மையை உடையவனாக இருந்து, கடினமும் துணிகரமுமிக்க ஒரு பாதகனாகவுமிருந்தான். இந்த மனிதனுக்கும் குற்றமற்றவரான இரட்சகருக்குமிடையில் ஒருவரைத் தெரிந்துகொள்ளும் வாய்ப்பை மக்களுக்குக் கொடுத்து, மக்களை நீதியின்மீது உணர்வுள்ளவர்களாக எழுப்பலாம் என்று பிலாத்து நினைத்தான். ஆசாரியர்களுக்கும் அதிபதிகளுக்கும் எதிராக இயேசுவின்மீதான மக்களின் அனுதாபத்தை ஆதாயமாக அடைந்துகொள்ளலாம் என்று அவன் நம்பினான். அப்படியே அவன் கூட்டத்தினரிடம் திரும்பி, மிகுந்த அக்கறையுடன்: "எவனை நான் உங்களுக்கு விடுதலையாக்கவேண்டுமென்றிருக்கிறீர்கள்? பரபாசையோ? கிறிஸ்து என்னப்படுகிற இயேசுவையோ?" என்று கேட்டான். (44)

"பரபாசை" என்னும் மறுமொழி, காட்டுவிலங்குகளின் உறுமலைப்போல அந்தக் கலகஞ்செய்யும் கூட்டத்தினரிடமிருந்து வந்தது. பரபாஸ்! பரபாஸ்! என்ற அந்தக் கூக்குரல் அதிகமதிகமாக உயர்ந்தது. அந்த மக்கள் அவனுடைய கேள்வியின் அர்த்தத்தைப் புரிந்துகொள்ளவில்லையென்று நினைத்துக்கொண்டு, "நான் யூதருடைய ராஜாவை உங்களுக்கு விடு தலையாக்கவேண்டுமென்றிருக்கிறீர்களா?" என்று கேட்டான். அவர்கள் மறுபடியும் "பரபாசை எங்களுக்கு விடுதலையாக்கும்" என்று சத்தமிட்டுக் கூறினார்கள். "அப்படியானால், கிறிஸ்து என்னப்பட்ட இயேசுவை நான் என்னசெய்யவேண்டும்" என்றான். கொதித்தெழுந்த திரள்கூட்டத்தினர் முன்னாகப் பாய்ந்து பிசாசுகளைப்போலக் கர்ஜித்தார்கள். பிசாசுகளே மனித வடிவில் அந்தக் கூட்டத்தில் இருந்தன. அப்படியிருக்கும்போது, "அவனைச் சிலுவையில் அறையவேண்டும்" என்னும் பதிலைத்தவிர வேறு எதை எதிர்பார்க்கமுடியும்? (45)

பிலாத்து கலக்கமடைந்தான். அது இப்படியாகும் என்று அவன் நினைத்திருக்கவில்லை. குற்றமில்லாத ஒரு மனிதனை மிகவும் அவமானமான மரணத்துக்கு ஒப்புக்கொடுப்பதிலிருந்து அவன் பின்வாங்கினான். அந்தக்

குரல்களின் கர்ஜனை நின்றபின் அவன்: “ஏன் என்ன பொல்லாப்புச் செய்தான்” என்று அவர்களிடம் திரும்பக் கேட்டான். ஆனால் அந்த வழக்கு வாதங்களுக்கு அப்பால் வெகுதூரம் சென்றிருந்தது. அவர்கள் கிறிஸ்துவின் குற்றமின்மைக்கான சான்றினை விரும்பாமல், அவருடைய தண்டனையை விரும்பியிருந்தார்கள். (46)

தொடர்ந்து பிலாத்து, அவரைக் காப்பாற்றுவதற்காக முயற்சி செய்தான். “அவன் மூன்றாந்தரம் அவர்களை நோக்கி: ஏன் இவன் என்ன பொல்லாப்புச் செய்தான்? மரணத்துக்கு ஏதுவான குற்றம் ஒன்றும் இவனிடத்தில் நான் காணவில்லையே; ஆகையால் நான் இவனைத் தண்டித்து, விடுதலையாக்குவேன்” என்று கூறினான். ஆனால் அவருடைய விடுதலையைப்பற்றிக் குறிப்பிட்டது, மக்களுடைய ஆவேசத்தைப் பத்து மடங்கு அதிகமாக்கியது. “அவனைச் சிலுவையில் அறையும், சிலுவையில் அறையும்” என்று அவர்கள் சத்தமிட்டார்கள். பிலாத்துவை தீர்மானமெடுக்க முடியாத நிலைக்கு கொண்டுசெல்லுமளவிற்கு அந்தக் கூச்சலும் அமளியும் மேலும்மேலும் அதிகரித்தது. (47)

களைப்பினால் மயக்கமுற்றவராகவும் காயங்கள் நிறைந்தவராகவும் இருந்த இயேசு இழுத்துச்செல்லப்பட்டுத் திரளானவர்களின் பார்வையில் சவுக்கால் அடிக்கப்பட்டார். “போர்ச்சேவகர் அவரைத் தேசாதிபதியின் அரமனையாகிய மாளிகையில் கொண்டுபோய், அவ்விடத்தில் போர்ச் சேவகருடைய கூட்டமுழுவதையும் கூடிவரச்செய்து, சிவப்பான மேலங்கியை அவருக்கு உடுத்தி, முள்முடியைப் பின்னி அவருக்குச் சூட்டி: யூதருடைய ராஜாவே, வாழ்க என்று அவரை வாழ்த்தி, அவரைச் சிரசில் கோலால் அடித்து, அவர்மேல் துப்பி, முழங்கால்படியிட்டு அவரை வணங்கினார்கள்.” சில சமயங்களில் ஏதோ ஒரு துன்மார்க்கமான கை அவருடைய கையில் வைக்கப்பட்டிருந்த கோலைப் பிடுங்கி, அதினால் அவரது சிரசின்மேலிருந்த முள்முடியின்மீது அடித்து, அதன் முட்கள் அவரது நெற்றிக்குள் பாயும்படிச்செய்து, இரத்தத்தை அவருடைய முகத்திலும் தாடியிலும் சொட்டுச்சொட்டாக வடியும்படிச் செய்தது. (48)

ஆ! பரலோகங்களே! ஆச்சரியமடையுங்கள்!; ஆ! பூமியே! ஆச்சரியமடைந்திரு! ஒடுக்குபவனையும் ஒடுக்கப்படுபவரையும் பாருங்கள்! வெறிபிடித்த கூட்டம் உலக இரட்சகரைச் சூழ்ந்துகொள்ளுகிறது. கேலியும் பரிகாசமும் தூஷணமான சபதங்களோடு கலந்திருக்கின்றது. உணரமுடியாத அந்தக் கலகஞ்செய்யும் கூட்டத்தினரால் அவருடைய ஏழ்மையான பிறப்பும் தாழ்மையான வாழ்க்கையும் வர்ணிக்கப்பட்டிருக்கின்றன. தான்தேவகுமாரன் என்னும் அவருடைய கூற்று, எள்ளி நகையாடப்பட்டிருந்ததுடன்,

கொச்சையான பரிகாசமும் அவமானப்படுத்தும் உறுமலும் உதடுகளிலிருந்து உதடுகளுக்குக் கடந்துசென்றது. (49)

இரட்சகரை நிந்தனை செய்வதில் சாத்தான் கலகஞ்செய்யும் கொடூரமான கூட்டத்தினரை நடத்தினான். முடிந்தால் திருப்பித்தாக்கும்படி அவருடைய கோபத்தை எழுப்பிவிடுவதும், அல்லது தம்மைத்தாமே விடுவித்துக்கொள்ள ஒரு அற்புதத்தைச் செய்யும்படி அவரை விரட்டுவதும், இவ்விதமாக இரட்சிப்பின் திட்டத்தைத் தகர்ப்பதும் அவனுடைய நோக்கமாக இருந்தது. அவருடைய மனித வாழ்க்கையில் உண்டாகக்கூடிய ஒரு கறையினால், அந்தப் பயங்கரமான பரீட்சையைத் தாங்கிக்கொள்ளுவதில் அவருடைய மனித இயல்பில் உண்டாகக்கூடிய ஒரு தோல்வியினால், தேவ ஆட்டுக்குட்டி ஒரு பூரணமில்லாத பலியாகி, அதினால் மனிதனின் மீட்பு தோல்வியடையும். ஆனால் தமது ஒரு கட்டளையினால் பரலோகத்தின் சேனையை அவருடைய உதவிக்குக் கொண்டுவரக்கூடிய ஒருவரான அவர், தம்முடைய தெய்வீகத்தன்மையின் மகத்துவத்தை மின்னலைப்போல பளிச்சிடச் செய்வதினால் அந்தக் கலகஞ்செய்யும் கூட்டத்தினரை அவருடைய பார்வையிலிருந்து பயந்து ஓடச் செய்யக்கூடிய ஒருவரான அவர், அந்தக் கொடூரமான அவமானத்திற்கும் கோபத்திற்கும் பூரண அமைதியுடன் தம்மைக் கீழ்ப்படுத்தினார். (50)

கிறிஸ்துவின் தெய்வீகத்தன்மைக்குச் சான்றாக ஒரு அற்புதத்தைச் செய்துகாட்டும்படி அவருடைய எதிரிகள் கோரிக்கை செய்தார்கள். அவர்கள் தேடியிருந்த எல்லாவற்றையும்விட மிகவும் பெரிய சான்றினை அவர்கள் கொண்டிருந்தார்கள். அவர்களுடைய கொடூரமான தன்மைகள் அவரைச் சித்திரவதை செய்திருந்தவர்களை மானிடத்தன்மைகளுக்கும் சாத்தானின் தன்மைக்கும் கீழாக்கினதற்கு இணையாக, அவருடைய எளிமையும் தாழ்மையும் பொறுமையும் இயேசுவை மானிட இயல்பிற்கும் மேலாக உயர்த்தி, அவர் தேவனுக்கு உறவினர் என்பதை மெய்ப்பிக்கிறது. அவருடைய தாழ்மை, அவருடைய உயர்விற்கான உறுதிமொழியாக இருக்கிறது. காயமடைந்த அவருடைய நெற்றியிலிருந்து கீழ்நோக்கி அவருடைய முகத்திலும் தாடியிலும் வடிந்த வேதனையின் இரத்தத் துளிகள், நமது பிரதான ஆசாரியராக அவர் அபிஷேகம் பண்ணப்பட்டதின் உறுதிமொழியான ஆனந்தத் தைலமாக இருக்கிறது. (எபிரெயர் 1:9). (51)

இரட்சகரின்மீது காயமாக உண்டுபண்ணப்பட்ட நிந்தனைகள் அனைத்தும், அவருடைய உதடுகளிலிருந்து மிகவும் குறைவான முறுமுறுப்பைக்கூட உண்டுபண்ண அவரை நிர்ப்பந்தஞ்செய்யமுடியவில்லை என்பதைச் சாத்தான் கண்டபோது, அவன் மிகவும் கோபமுடையவனானான்.

அவர் தம்மீது மானிட இயல்பை எடுத்துக்கொண்டிருந்தபோதிலும் தேவனைப் போன்ற ஒரு சகிக்கும் தன்மையை உடையவராக இருந்து, எந்த ஒரு காரியத்திலும் அவருடைய பிதாவின் சித்தத்தைவிட்டு விலகிச்செல்லாதவராக இருந்தார். (52)

இயேசுவைச் சவுக்கால் அடிப்பதற்கும் பரிகாசஞ்செய்வதற்கும் பிலாத்து ஒப்புக்கொடுத்தபோது, அதனால் திரளானவர்களின் இரக்கத்தை எழுப்பிவிடலாம் என்று அவன் நினைத்தான். இந்தத் தண்டனைபோதுமானது என்று அவர்கள் முடிவுசெய்வார்கள் என்று அவன் நம்பினான். ஆசாரியர்களின் தீய எண்ணங்கூட திருப்தியடைந்துவிட்டிருக்கும் என்று அவன் நம்பினான். குற்றமில்லாதவன் என்று அறிவிக்கப்பட்டிருந்த ஒரு மனிதனை இவ்விதமாகத் தண்டிப்பதிலிருந்த பெலவீனத்தை யூதர்கள் மிகவும் தெளிவாகக் கண்டனர். அந்தக் கைதியின் உயிரைக் காப்பாற்றப் பிலாத்து முயன்றுகொண்டிருந்தான் என்பதை அவர்கள் அறிந்து, இயேசு விடுதலை செய்யப்பட்டுவிடக்கூடாது என்பதில் தீர்மானமுள்ளவர்களாக இருந்தனர். நம்மை மகிழ்ச்சிப்படுத்தவும் திருப்திசெய்யவுந்தான் பிலாத்து அவரைச் சவுக்கால் அடித்திருக்கிறான் என்றும், அந்தக் காரியத்தின் முடிவிற்காக நாம் நிர்பந்தஞ்செய்தால் நமது முடிவை நிச்சயமாகவே நாம் அடைந்துகொள்ளலாம் என்றும் அவர்கள் நினைத்தார்கள். (53)

இப்பொழுது பரபாசை நீதிமன்றத்திற்கு கொண்டுவரும்படி பிலாத்து ஆட்களை அனுப்பினான். அதற்குப்பின் அந்த இரண்டு கைதிகளையும் பக்கம் பக்கமாக நிறுத்தி, இரட்சகரைச் சுட்டிக்காட்டி: “நான் இவனிடத்தில் ஒரு குற்றமும் காணேன் என்று நீங்கள் அறியும்படிக்கு, இதோ, உங்களிடத்தில் இவனை வெளியே கொண்டுவருகிறேன்” “இதோ, இந்த மனுஷன்” என்ற பக்திவிநயமான ஒரு மன்றாடும் குரலில் அவன் கூறினான். (54)

பரிகாசத்தின் உடையையும் முள்முடியையும் அணிந்தவராக தேவகுமாரன் நின்றிருந்தார். இடுப்புவரை உடை நீக்கப்பட்டதால் அவருடைய முதுகிலிருந்த நீண்ட காயங்களின் வரிசைகளையும் அவைகளிலிருந்து இரத்தம் ஏராளமாக ஒழுகிக்கொண்டிருந்ததையும் அவருடைய முதுகு காட்டினது. அவருடைய முகம் இரத்தத்தால் கறைபடிந்திருந்து, தளர்ச்சி, வேதனை ஆகியவைகளின் அடையாளத்தைக் காட்டியது. ஆனால் இப்பொழுது இருந்ததைவிட அவருடைய முகம், இதற்குமுன் ஒருபோதும் அதிகமான அழகுடையதாகத் தோன்றியிருக்கவில்லை. இரட்சகரின் உருவம் அவருடைய எதிரிகளுக்குமுன்பாக அழகு குலைந்ததாக இருக்கவில்லை. அவருடைய ஒவ்வொரு தோற்றமும் சாதுவான தன்மையையும் சகிப்புத்தன்மையையும் அவருடைய கொடூரமான எதிரிகளின்மீதான

மிகவும் மென்மையான இரக்கத்தையும் வெளிக்காட்டியிருந்தது. அவருடைய நடத்தையில் கோழைத்தனமான பலவீனம் இல்லாமல், நீடிய பொறுமையின் பலமும் மேன்மையும் இருந்தது. அவருக்குப் பக்கத்தில் இருந்த கைதி, முற்றிலும் எதிர்மாறான விதத்தில் காணப்பட்டான். பரபாசின் முகத்தில் இருந்த கோடுகள் ஒவ்வொன்றும் அவன் மிகவும் கடினப்பட்டுப்போன ஒரு துஷ்டன் என்பதைத் தெரிவித்துக்கொண்டிருந்தது. பார்த்திருந்த ஒவ்வொருவரிடத்திலும் அந்த வேறுபாடு பேசியது. பார்த்துக்கொண்டிருந்தவர்களில் சிலர் அழுதுகொண்டிருந்தனர். அவர்கள் இயேசுவைப் பார்த்தபோது, அவர்களுடைய இருதயங்கள் அனுதாபத்தினால் நிறைந்தன. ஆசாரியர்களும் அதிபதிகளுங்கூட அவர் தம்மைப்பற்றி என்ன கூறியிருந்தாரோ அதைப்போலவே இருப்பதை உணர்ந்தனர். (55)

கிறிஸ்துவைச் சூழ்ந்திருந்த ரோம நாட்டின் போர்ச்சேவகர்கள் எல்லாரும் கடினமானவர்களாக இருக்கவில்லை. அவர் ஒரு குற்றவாளி என்பதற்கான அல்லது பயங்கரமானவர் என்பதற்கான சான்றை எதிர்பார்த்து, சிலர் அவருடைய முகத்தை அக்கறையுடன் பார்த்துக்கொண்டிருந்தனர். அவர்கள் அவ்வப்போது, பரபாசின்மீது தங்களுடைய அவமதிப்புடன்கூடிய பார்வையைச் செலுத்துவதற்காகத் திரும்பியிருந்தனர். அவனை முழுவதுமாக வாசித்தறிவதற்கு ஆழமான அகப்பார்வை அவசியமாயிருக்கவில்லை. மறுபடியும் அவர்கள் விசாரணை செய்யப்பட்டுக்கொண்டிருந்த ஒருவரிடமாகத் திரும்பியிருந்தனர். அவர்கள் ஆழமான இரக்கத்தின் உணர்ச்சிகளுடன் பாடுபட்டுக்கொண்டிருக்கும் தெய்வீகமானவரைப் பார்த்துக்கொண்டிருந்தனர். அவர்கள் அவரைக் கிறிஸ்து என்று அறிக்கைசெய்யும்வரை அல்லது அவரைப் புறக்கணிப்பதினால் அவர்களுடைய இறுதிமுடிவைத் தீர்மானிக்கும்வரை கிறிஸ்துவின் மௌனமான கீழ்ப்படிதல் அவர்களுடைய மனங்களின்மீது அந்தக் காட்சியை முத்திரையிட்டது. (56)

இரட்சகரின் குற்றங்கூறாத பொறுமையினால் பிலாத்து ஆச்சரியத்தால் நிறைந்தவனானான். பரபாசுடன் இயேசுவை ஒப்பிட்டு நோக்கும்போது காணப்பட்ட வேற்றுமைகளினால் இந்த மனிதனின் காட்சி யூதர்களை அனுதாபம் அடையும்படி அசைக்கும் என்பதில் அவன் சந்தேகப்படவில்லை. ஆனால் உலகத்திற்கு ஒளியாக இருக்கவேண்டியவர்களாக இருந்த ஆசாரியர்கள் அவர்களுடைய இருளையும் தவறையும் வெளிக்காட்டும்படியாக மதவெறிமிக்க வெறுப்பை உடையவர்களாக ஏன் இருக்கின்றனர் என்பதை அவன் புரிந்தகொள்ளாதவனாக இருந்தான். அவர்கள் கலகஞ்செய்யும் அந்தக் கூட்டத்தினரை வெறியடையும்படிச் செய்திருந்தனர். மறுபடியும் ஆசாரியர்களும் அதிபதிகளும் மக்களும் “அவனைச் சிலுவையில்

அறையும், சிலுவையில் அறையும” என்று பயங்கரமான சத்தத்துடன் கூக்குரலிட்டார்கள். கடைசியாக அவர்களுடன் காரணம்காண விரும்பாத கொடூரத்தினால் பொறுமையை இழந்த பிலாத்து நம்பிக்கையிழந்தவனாக “நீங்களே இவனைக் கொண்டுபோய்ச் சிலுவையில் அறையுங்கள், நான் இவனிடத்தில் ஒரு குற்றமும் காணேன்” என்று சத்தமிட்டான். (57)

அந்த ரோம நாட்டு ஆளுநர் கொடூரமான காட்சிகளுடன் பழக்கப்பட்டவனாக இருந்திருந்தபோதிலும், பாடுகளை அனுபவித்துக் கொண்டிருக்கும் அந்தக் கைதியின்மீதுள்ள—தண்டனையடைந்து சவுக்கால் அடிக்கப்பட்டு இரத்தம் சொட்டும் நெற்றியுடனும் காயமடைந்த முதுகோடும் இருந்த அவர்மீதுள்ள—இன்னும் தனது சிங்காசனத்தின்மீது அமர்ந்திருக்கும் ஒரு அரசனின் தன்மையை உடையவராக இருந்த அவர் மீதுள்ள அனுதாபத்தினால் அசைக்கப்பட்டான். ஆனால் ஆசாரியர்கள் “எங்களுக்கு ஒரு நியாயப்பிரமாணமுண்டு, இவன் தன்னைத் தேவனுடைய குமாரனென்று சொன்னபடியினால், அந்த நியாயப்பிரமாணத்தின்படியே, இவன் சாகவேண்டும்” என்று அறிவித்தார்கள். (58)

பிலாத்து திடுக்கிட்டான். அவனுக்கு கிறிஸ்துவைப்பற்றியும் அவருடைய ஊழியத்தைப்பற்றியும் சரியான அறிவு இல்லாமலிருந்தபோதிலும் அவன் தேவன்மீதும் மனித இனத்திற்கு மேற்பட்டவர்களாக இருக்கக்கூடியவர் களின்மீதும் ஒரு தெளிவில்லாத விசுவாசத்தை உடையவனாக இருந்திருந்தான். இதற்குமுன் ஒருதடவை அவனுடைய மனதில் கடந் துசென்றிருந்த ஒரு எண்ணம், இப்பொழுது அதிக நிச்சயமான உருவத்தை எடுத்துக்கொண்டது. பரிகாசமிக்க சிவப்பு நிறமான ஒரு அங்கியை அணிந்து, முள்முடி சூட்டப்பட்டவராக அவனுக்கு முன்பாக நின்றிருப்பவர் தெய்வீகமான ஒருவராக இருக்கக்கூடுமா என்று அவன் ஒரு கேள்வியை கேட்டுக்கொண்டான். (59)

அவன் மறுபடியும் நியாயவிசாரணை மன்றத்திற்குள் சென்று இயேசுவிடம் “நீ எங்கேயிருந்து வந்தவன்” என்று கேட்டான். ஆனால் இயேசு அவனுக்குப் பதில் கூறவில்லை. இரட்சகர் சத்தியத்திற்கு ஒரு சாட்சியாக இருக்கும் அவருடைய ஊழியத்தைப்பற்றி விவரித்துப் பிலாத்துவிடம் தாராளமாகப் பேசியிருந்தார். அந்த ஒளியைப் பிலாத்து மதிக்காமலிருந்தான். கலகம் செய்யும் கூட்டத்தினரின் கோரிக்கைகளுக்கு அவனுடைய கொள்கை களையும் அதிகாரத்தையும் இணங்கச் செய்ததினால் நியாயாதிபதியென்னும் அவனுடைய உயர்வான பதவியை அவன் அவமதித்திருந்தான். மேற்கொண்டு அவனுக்குக் கொடுக்கத்தக்கதான வெளிச்சம் இயேசுவிடம் இல்லை. அவருடைய மௌனத்தினால் சலிப்படைந்த பிலாத்து கோபத்துடன்: (60)

"நீ என்னோடே பேசுகிறதில்லையா? உன்னைச் சிலுவையில் அறைய எனக்கு அதிகாரமுண்டென்றும், உன்னை விடுதலைபண்ண எனக்கு அதிகாரமுண்டென்றும் உனக்குத் தெரியாதா" என்றான். (61)

இயேசு பிரதியுத்தரமாக: "பரத்திலிருந்து உமக்குக் கொடுக்கப்படாதிருந்தால், என்மேல் உமக்கு ஒரு அதிகாரமுமிராது; ஆனபடியினாலே என்னை உம்மிடத்தில் ஒப்புக்கொடுத்தவனுக்கு அதிக பாவமுண்டு" (யோவான் 19:11) என்றார். (62)

இரக்கமிக்க இரட்சகர் அவருடைய உக்கிரமான பாடுகளுக்கும் வருத்தத்திற்கும் நடுவில் தம்மைச் சிலுவையில் அறையும்படி ஒப்புக்கொடுத்த ரோம நாட்டு ஆளுநரின் செயலிற்கு முடிந்தவரை மன்னிப்பு கொடுத்தார். எல்லாக் காலங்களுக்கும் உலகத்திற்குக் கொடுக்கும்படியாக இருந்த இந்தக் காட்சி எப்படிப்பட்டதாக இருக்கிறது! பூமியனைத்திற்கும் நீதிபதியாக இருக்கும் ஒருவரின் குணத்தின்மீது அது சிந்தும் ஒளி எப்படிப்பட்டதாக இருக்கிறது! (63)

"என்னை உம்மிடத்தில் ஒப்புக்கொடுத்தவனுக்கு அதிக பாவமுண்டு" என்று இயேசு கூறினார். இதனால் யூதஜனத்தின் பிரதிநிதியாக இருந்த பிரதான ஆசாரியனான காய்பாவைக் கிறிஸ்து அர்த்தப்படுத்தினார். ரோமநாட்டின் அதிகாரிகளைக் கட்டுப்படுத்தியிருந்த கொள்கைகளை அவர்கள் அறிந்திருந்தனர். கிறிஸ்துவைப்பற்றிச் சாட்சி பகர்ந்திருந்த தீர்க்கதரிசனங்களைப்பற்றியும் அவருடைய சொந்தப் போதனைகளிலும் அற்புதங்களிலும் அவர்கள் ஒளியைப் பெற்றிருந்தனர். அந்த யூத நியாயாதி பதிகள் எவரை மரணதண்டனைக்கு உட்படுத்தியிருந்தார்களோ அவரது தெய்வீகத்தைப்பற்றி தவறான சான்றைப் பெற்றிருந்தனர். அவர்களுடைய ஒளிக்குத்தக்கதாக அவர்கள் நியாயந்தீர்க்கப்படுவார்கள். (64)

கீழ்த்தரமானவிதத்தில் துரோகஞ்செய்துகொண்டிருந்த பரிசுத்தமான நம்பிக்கைகளின் கருவூலங்களாக இருந்து, அந்த தேசத்தின் மிக உயர்ந்த அந்தஸ்தில் நின்றிருந்தவர்கள்மேல் மிகவும் பெரிய குற்றமும் அதிக பாரமிக்க பொறுப்பும் இருந்தது. ஒப்பிட்டுப்பார்க்கும்போது, பிலாத்தும் ஏரோதும் ரோமநாட்டுப் போர்ச்சேவகர்களும் இயேசுவைப்பற்றி அறியாதிருந்தனர். அவரை நிந்திப்பதினால் ஆசாரியர்களையும் அதிபதிகளையும் மகிழ்ச்சிப்படுத்தலாம் என்று அவர்கள் நினைத்தனர். யூதஜனம் மிகவும் ஏராளமாகப் பெற்றிருந்த ஒளியை அவர்கள் பெற்றிருக்கவில்லை. அந்தப் போர்சேவகர்களுக்கு ஒளிகொடுக்கப்பட்டிருந்தால், அவர்கள் கிறிஸ்துவை அப்படிக் கொடூரமாக நடத்தியிருந்திருக்கமாட்டார்கள். (65)

மறுபடியும் பிலாத்து, இரட்சகரை விடுதலை செய்வதை முன்மொழிந்தான். ஆனால் யூதர்கள் அவனை நோக்கி: "இவனை விடுதலைபண்ணினால் நீர் இராயனுக்குச் சிநேகிதனல்ல" என்றார்கள். இவ்விதமாக, இந்த மதப்புரட்டர்கள் இராயனின் அதிகாரத்தின்மேல் வைராக்கியம் உள்ளவர்களைப்போல பாசாங்கு செய்தார்கள். ரோம நாட்டின் ஆட்சியை எதிர்த்திருந்த அனைவரிலும் யூதர்கள் மிகவும் கசப்பானவர்களாக இருந்தனர். தாங்கள் விரும்பினதைச் செய்வது தங்களுக்குப் பாதுகாப்பாக இருந்தபோது, தங்களுடைய சொந்த தேசிய மத சம்பந்தமான அவசியங்களை நிர்ப்பந்திப்பதில் மிகக்கொடுமையானவர்களாக இருந்தார்கள். ஆனால் ஏதாவது கொடூரமான நோக்கத்தைக் செயல்படுத்த வாஞ்சித்திருந்தபோது, இராயனின் வல்லமையை உயர்த்தியிருந்தனர். கிறிஸ்துவை ஒழித்துக்கட்டும் தங்கள் ஆவலை நிறைவேற்றுவதற்காக அவர்கள் வெறுத்திருந்த அந்நிய ஆட்சிக்கு இராஜபக்தி உடையவர்களைப்போல பாசாங்கு செய்தார்கள். (66)

"தன்னை ராஜாவென்கிறவனெவனோ அவன் இராயனுக்கு விரோதி" என்று அவர்கள் தொடர்ந்தார்கள். இது பிலாத்துவை அவனுடைய பலவீனமாக பகுதியில் தொடுவதாக இருந்தது, அவன் ரோம அரசாங்கத்தின் சந்தேகத்தின்கீழ் இருந்தான். அப்படிப்பட்ட ஒரு அறிக்கை அவனுக்கு அழிவைக் கொண்டுவரும் என்பதை அவன் அறிந்திருந்தான். யூதர்களின் திட்டத்திற்கு இடையூறு ஏற்பட்டால், அவர்களுடைய கோபம் அவனுக்கு எதிராகத் திரும்பும் என்பதை அவன் அறிந்திருந்தான். அவர்களுடைய பழிவாங்குதலை நிறைவேற்றுவதற்காக அவர்கள் எதையும் செய்யாமல் விடமாட்டார்கள். அவர்கள் வெறுத்திருந்த ஒருவரின் உயிரை எடுக்க வகைதேடியிருந்த அவர்களுடைய பிடிவாதத்தை அவன் தன்முன் ஒரு உதாரணமாக கண்டான். (67)

அதற்குப்பின் பிலாத்து அவனுடைய நியாயசனத்தில் உட்கார்ந்து, மறுபடியும் இயேசுவை மக்கள்முன் நிறுத்தி, "இதோ, உங்கள் ராஜா" என்றான். மறுபடியும் "இவனை அகற்றும், இவனை சிலுவையில் அறையும்" என்னும் வெறிபிடித்த கூக்குரல் கேட்கப்பட்டது. தூரத்திலும் அருகிலும் கேட்டிருந்த ஒரு குரலில் பிலாத்து, "உங்கள் ராஜாவை நான் சிலுவையில் அறையலாமா" என்று கேட்டான். ஆனால், "இராயனேயல்லாமல் எங்களுக்கு வேறே ராஜா இல்லை" என்னும் வார்த்தைகள் தேவ நிந்தனைமிக்க தேவதூஷணம் கூறும் உதடுகளிலிருந்து வெளிவந்தன. (68)

இவ்விதமாக ஒரு அஞ்ஞான அதிபதியைத் தெரிந்துகொண்டதினால் யூததேசம் தேவனுடைய ஆட்சியிலிருந்தும் மதத்தலைவர்களின் ஆட்சியி

லிருந்தும் பின்வாங்கினது. தேவன் அவர்களுடைய அரசராக இருப்பதை அவர்கள் புறக்கணித்திருந்தனர். இனிமேல் அவர்களுக்கு விடுதலை வழங்குபவர் இல்லை. அவர்களுக்கு இராயனையல்லாமல் அரசர் இல்லை. அந்த அளவிற்கு ஆசாரியர்களும் போதகர்களும் மக்களை நடத்தியிருந்தனர். அதினிமித்தம் அதைப்பின்தொடர்ந்த பலன்களுக்கு அவர்கள் பொறுப்பானவர்களாக இருந்தனர். ஒரு தேசத்தின் பாவத்திற்கும் ஒரு தேசத்தின் அழிவிற்கும் அதன் மதத்தலைவர்கள் காரணமாக இருந்தனர். (69)

கலகம் அதிகமாகிறதேயல்லாமல் தன் முயற்சிகளினாலே எதையும் சாதிக்கமுடியவில்லையென்பதை பிலாத்து கண்டு, தண்ணீரை அள்ளி, மக்களுக்கு முன்பாகக் கைகளைக் கழுவி: “இந்த நீதிமானுடைய இரத்தப்பழிக்கு நான் குற்றமற்றவன், நீங்களே பார்த்துக்கொள்ளுங்கள்” என்றான். பயத்துடனும் தன்னில்தானே ஆக்கினைக்குள்ளானவனாகவும் ஆகிவிட்ட பிலாத்து, இரட்சகரைப் பார்த்தான். மேல்நோக்கும் முகங்களை உடையதாக இருந்த அந்த விசாலமான மனிதக்கடலில் அவருடைய முகம்மட்டும் அமைதியுடையதாக இருந்தது. அவருடைய சிரசைச் சுற்றிலும் ஒரு மென்மையான ஒளி பிரகாசிப்பதுபோலக் காணப்பட்டது. அவர் ஒரு தேவன் என்று பிலாத்து அவனுடைய இருதயத்தில் கூறிக்கொண்டான். திரளானவர்களிடத்திற்குப் பிலாத்து திரும்பி, அவருடைய இரத்தத்தைப்பற்றி நான் குற்றமில்லாதவனாக இருக்கிறேன் . நீங்கள் அவரை அழைத்துச் சென்று அவரை சிலுவையில் அறையுங்கள். ஆனால் ஆசாரியர்களும் அதிபதிகளுமாக இருப்பவர்களே, நீங்கள் குறித்துக்கொள்ளுங்கள்; நானும் அவரை ஒரு நீதிமான் என்று அறிவிக்கிறேன். இந்த நாளின் செயலிற்காக எந்த ஒருவர் எவரைத் தமது பிதா என்று கூறுகிறாரோ, அவர் என்னையல்லாமல் உங்களை நியாயந்தீர்ப்பாராக என்றான். அதற்குப்பின் அவன் இயேசுவிடம்: “இந்தச் செயலிற்காக என்னை மன்னியுங்கள்; என்னால் உங்களைக் காப்பாற்றமுடியவில்லை” என்று கூறினான். மறுபடியும் அவன் இயேசுவைச் சவுக்கால் அடித்து, சிலுவையில் அறையப்படுவதற்காக அவரை ஒப்புக்கொடுத்தான். (70)

இயேசுவை விடுதலைசெய்தவற்கு பிலாத்து ஏக்கமுடையவனாக இருந்தான். ஆனால் அதைச் செய்யமுடியாது என்பதையும், அப்படிச்செய்தால் அவனுடைய சொந்தப் பதவியையும் கனத்தையும் தக்கவைத்துக்கொள்ள முடியாது என்பதையும் அவன் கண்டான். உலகப்பிரகாரமான அவனுடைய வல்லமையை இழப்பதைவிட குற்றமில்லாத ஒரு ஜீவனை பலிசெலுத்துவதை அவன் தெரிந்துகொண்டான். இழப்பிலிருந்தும் அல்லது

பாடுகளிலிருந்தும் தப்பித்துக்கொள்ளுவதற்காக அதேவிதமாக எத்தனை பேர்கள் கொள்கையைத் தியாகஞ்செய்கின்றனர். மனச்சாட்சியும் கடமையும் ஒரு பாதையைச் சுட்டிக்காட்டும்போது, சுய ஆர்வம் வேறொரு பாதையைச் சுட்டிக்காட்டுகின்றது. அந்த ஓட்டம் தவறான திசையில் புறப்படுகிறது. எவனொருவன் தீமையுடன் சமரசம் செய்துகொள்ளுகிறானோ அவன் குற்றம் என்னும் கனத்த இருளுக்குள் தூரமாக அடித்துச்செல்லப்படுகிறான். (71)

கலகஞ்செய்யும் கூட்டத்தினரின் கோரிக்கைளுக்குப் பிலாத்து இணங்கினான். தனது பதவியை இழந்துவிடக்கூடிய அபாயமான நிலையை அடைவதைவிடுத்து இயேசுவைச் சிலுவையில் அறைவதற்கு ஒப்புக்கொடுத்தான். ஆனால் முன்னெச்சரிக்கையாக அவன் எவைகளுக்காகப் பயந்திருந்தானோ அதே காரியம் பின்னால் அவன்மீது வந்தது, அவனுடைய மேன்மைக்குரிய தகுதிகள் அவனிடமிருந்து நீக்கப்பட்டன. அந்த உயர்வான பதவியிலிருந்து அவன் கீழே தள்ளப்பட்டிருந்தான். குற்ற உணர்வினாலுண்டான வருத்தத்தினாலும் காயமடைந்த அகந்தையினாலும் சிலுவையில் அறையப்பட்டதற்குப்பின் அதிக நாட்கள் செல்லாமல், அவன் அவனுடைய சொந்த உயிரை முடித்துக்கொண்டான். அதைப்போலவே பாவத்துடன் சமரசஞ்செய்துகொள்ளும் அனைவரும் துயரத்தையும் அழிவையும் மட்டுமே ஆதாயமாக அடைந்துகொள்வார்கள். "மனுஷனுக்குச் செம்மையாய்த் தோன்றுகிறவழி உண்டு; அதின் முடிவோ மரண வழிகள்"—நீதிமொழிகள் 14:12. (72)

கிறிஸ்துவின் இரத்தத்தின் குற்றமின்மையைப் பிலாத்து தானே அறிவித்தபோது, காய்பா கீழ்ப்படிய மறுக்கும் எதிர்ப்புடன்: "இவனுடைய இரத்தப்பழி எங்கள்மேலும் எங்கள் பிள்ளைகள்மேலும் இருப்பதாக" என்று பதில் கூறினான். அந்த பயங்கரமான வார்த்தைகள் ஆசாரியர்களாலும் அதிபதிகளாலும் ஏற்கப்பட்டிருந்து, அந்தக் கூட்டத்தினரின் ஒரு மனிதத் தன்மையற்ற குரலினால் எதிரொலித்தது. அந்தத் திரளான கூட்டத்தினர் அனைவரும் "இவனுடைய இரத்தப்பழி எங்கள்மேலும் எங்கள் பிள்ளைகள்மேலும் இருப்பதாக" என்று கூக்குரலிட்டார்கள். (73)

இஸ்ரவேல் மக்கள் அவர்களுடைய தெரிந்துகொள்ளுதலைச் செய்திருந்தார்கள். அவர்கள் இயேசுவைச் சுட்டிக்காட்டி: "இவனையல்ல, பரபாசை விடுதலைபண்ண வேண்டும்" என்று கூறியிருந்தார்கள். கொள்ளைக்காரனும் கொலைகாரனுமாக இருந்த பரபாஸ் சாத்தானின் பிரதிநிதியாக இருந்தான். கிறிஸ்து தேவனுடைய பிரதிநிதியாக இருந்தார். கிறிஸ்து புறக்கணிக்கப்பட்டு, பரபாஸ் தெரிந்துகொள்ளப்பட்டிருந்தான். அவர்கள் தங்களுக்கு பரபாசை வேண்டுமென்றனர். அவர்கள் இந்தத்

தெரிந்துகொள்ளுதலைச் செய்ததில் ஆரம்பத்திலிருந்தே பொய்யனும் கொலைகாரனுமாக இருந்தவனை ஏற்றுக்கொண்டிருந்தார்கள். சாத்தான் அவர்களுடைய தலைவனாக இருந்தான். ஒரு ஜனமாக—ஒரு தேசமாக அவர்கள் அவன் கூறுவதைச் செய்பவர்களாக இருந்தனர். அவனுடைய வேலையை அவர்கள் செய்பவர்களாக இருந்தனர். அவனுடைய ஆளுகையை அவர்கள் சகித்துக்கொள்ளவேண்டும். கிறிஸ்துவிற்குப்பதிலாகப் பரபாசைத் தெரிந்துகொள்ளுபவர்கள் காலம் நீடித்திருக்கின்றவரை பரபாசின் கொடூரத்தை உணர வேண்டியவர்களாக இருப்பார்கள். (74)

அடிக்கப்பட்ட தேவ ஆட்டுக்குட்டியைப் பார்த்து யூதர்கள் "இவனுடைய இரத்தப்பழி எங்கள்மேலும் எங்கள் பிள்ளைகள்மேலும் இருப்பதாக" என்று கூக்குரலிட்டார்கள். அந்த பயங்கரமான கூக்குரல் தேவ சிங்காசனத்தை நோக்கி உயர எழுந்தது. அவர்கள்மீது அவர்களாகவே கூறிக்கொண்ட தண்டனை பரலோகத்தில் எழுதப்பட்டிருந்தது. அந்த ஜெபம் கேட்கப்பட்டது. தேவகுமாரனுடைய இரத்தத்தின் சாபம் தொடர்ச்சியாக அவர்களுடைய பிள்ளைகள்மீதும் பிள்ளைகளின் பிள்ளைகள்மீதும் இருந்தது. (75)

எருசலேமின் அழிவில் அது பயங்கரமானவிதமாக உணரப்பட்டது. யூத ஜாதியினரின் நிலைமையில் திராட்சைச்செடியிலிருந்து முறிக்கப்பட்ட ஒரு கிளையாக, ஒரு செத்த கனிகொடாத கிளையாக எரிக்கப்படுவதற்கென்று கூட்டிச்சேர்க்கப்பட்டதாக அது பதினெட்டு நூற்றாண்டுகளாக (இந்நூல் 19—ம் நூற்றாண்டில் எழுதப்பட்டது.) பயங்கரமானவிதமாக வெளிக்காட்டப்பட்டிருக்கிறது. உலகமுழுவதிலும், ஒவ்வொரு நாட்டிலும், நூற்றாண்டுகள் நெடுகிலும் மீறுதலிலும் பாவங்களிலும் மரித்தவர்களாக அவர்கள் உள்ளனர். (76)

மாபெரும் நியாயத்தீர்ப்பு நாளில் அந்த ஜெபம் பயங்கரமான விதமாக நிறைவேற்றப்படும். கிறிஸ்து மறுபடியும் இந்த பூமிக்கு வரும்போது, இழிந்த மனிதர்களால் சூழப்பட்டவராக அல்ல, அவரைப் பரலோக்தின் அரசராக மனிதர்கள் பார்ப்பார்கள். கிறிஸ்து அவருடைய சொந்த மகிமையுடனும் அவருடைய பிதாவின் மகிமையுடனும் பரிசுத்த தூதர்களின் மகிமையுடனும் வருவார். அவருடைய பாதையில் ஆயிரமாயிரமான பதினாயிரம் பதினாயிரங்களான தூதர்களும் அழகும் வெற்றியுமிக்க தேவ புத்திரர்களும் அளவு கடந்த அழகுடனும் மகிமையுடனும் அவருடன் புடைசூழ வருவார்கள். அச்சமயத்தில் அவர் தமது மகிமையுள்ள சிங்காசனத்தின்மீது வீற்றிருப்பார். சகல ஜாதியினரும் அவர்முன் சேர்க்கப்படுவார்கள். அப்பொழுது கண்கள் யாவும் அவரைக் காணும். அவரைக் குத்தினவர்களும் அவரைக் காண்பார்கள். முள்முடி இருந்த இடத்தில் அவர் ஒரு மகிமையின்

கிரீடத்தை அணிந்திருப்பார். அரசனுக்குரிய பழைய இரத்தாம்பர உடைக்குப் பதிலாக "பூமியிலே எந்த வண்ணானும் வெளுக்கக்கூடாத" (மாற்கு 9:3) வெண்மையிலும் வெண்மையான ஒரு உடையை அவர் அணிந்திருப்பார்; "ராஜாதி ராஜா, கர்த்தாதி கர்த்தா என்னும் நாமம் அவருடைய வஸ்திரத்தின்மேலும் அவருடைய தொடையின் மேலும்" (வெளிப்படுத்தல் 19:16) எழுதப்பட்டிருக்கும். அவரைப் பரிகாசஞ்செய்தவர்களும் அடித்தவர்களும் அங்கே இருப்பார்கள். நியாயவிசாரணை மன்றத்தில் நடந்த காட்சியை ஆசாரியர்களும் அதிபதிகளும் மறுபடியும் காண்பார்கள். நெருப்பினால் எழுதப்பட்ட ஒரு கடிதத்தைப்போல எல்லா சூழ்நிலைகளும் அவர்களுக்கு முன்பாகத் தோன்றும். அப்பொழுது "இவனுடைய இரத்தப்பழி எங்கள்மீதும் எங்கள் பிள்ளைகள்மீதும் இருப்பதாக" என்று ஜெபித்தவர்கள் அவர்களுடைய ஜெபத்திற்கான பதிலைப் பெறுவார்கள். அப்பொழுது உலகம் முழுவதும் அறிந்து புரிந்துகொள்ளும். தரித்திரரும் பலவீனமானவர்களும் முடிவுள்ளவர்களுமாயிருந்த அவர்கள், யாருக்கு எதிராக, என்னவிதமாகப் போர்செய்துகொண்டிருந்தனர் என்பதை அப்பொழுது உணர்ந்து கொள்வார்கள்! பயங்கரமான வேதனையுடனும் பயங்கரத்துடனும் அவர்கள் "எங்கள்மேல் விழுந்து, சிங்காசனத்தின்மேல் வீற்றிருக்கிறவருடைய முகத்திற்கும், ஆட்டுக்குட்டியானவருடைய கோபத்திற்கும் எங்களை மறைத்துக்கொள்ளுங்கள்; அவருடைய கோபாக்கினையின் மகாநாள் வந்துவிட்டது, யார் நிலைநிற்கக்கூடும்" (வெளிப்படுத்தல் 6:16,17) என்று கூக்குரலிடுவார்கள். (77) ★

# 78

# கல்வாரி!

**மத்தேயு 27:31–53; மாற்கு 15:20–38; லூக்கா 23:26–46; யோவான் 19:16–30**

**(The Desire of Ages, pp. 741–757)**

கபாலஸ்தலம் என்று அர்த்தம்கொள்ளும் கொல்கொதா என்னும் இடத்திற்கு அவரைக் கொண்டுபோய், அங்கே அவரைச் சிலுவையில் அறைந்தார்கள். (1)

"அந்தப்படியே, இயேசுவும் தம்முடைய சொந்த இரத்தத்தினாலே ஜனத்தைப் பரிசுத்தஞ்செய்யும்படியாக நகரவாசலுக்குப் புறம்பே பாடுபட்டார்."—எபிரெயர் 13:12. தேவனுடைய நியாயப்பிரமாணத்தை மீறினதற்காக ஆதாமும் ஏவாளும், ஏதேனிலிருந்து துரத்தப்பட்டிருந்தனர். நமக்குப் பதிலாளியாக இருந்த கிறிஸ்து, எருசலேமின் எல்லைகளுக்கு வெளியில் பாடுபடவேண்டியவராக இருந்தார். பெரும் குற்றவாளிகளுக்கும் கொலைகாரர்களுக்கும் தண்டனை நிறைவேற்றப்பட்டிருந்த இடமான நகர வாசலுக்கு வெளியில், அவர் மரித்தார். "கிறிஸ்து நமக்காகச் சாபமாகி, நியாயப்பிரமாணத்தின் சாபத்திற்கு நம்மை நீங்கலாக்கி மீட்டுக்கொண்டார்." (கலாத்தியர் 3:13) என்னும் வார்த்தைகள் முக்கியத்துவம் நிறைந்தவையாக உள்ளன. (2)

ஒரு பெரும் திரளான கூட்டத்தினர், நியாய விசாரணை மன்றத்திலிருந்து கல்வாரிக்கு இயேசுவைப் பின்தொடர்ந்தனர். அவருடைய தண்டனையைப்பற்றிய செய்தி, எருசலேமெங்கும் பரவியிருந்து, எல்லா வகுப்பையும் எல்லா அந்தஸ்தையும் சேர்ந்த மக்கள், சிலுவையில் அறையப்படும் இடத்திற்கு நேராக ஒன்று திரண்டார்கள்.கிறிஸ்து தாமாகவே தம்மை அவர்களிடத்தில் ஒப்புக்கொடுத்தால், கிறிஸ்துவின் அடியார்களை உபத்திரவம் செய்வதில்லை என்னும் ஒரு வாக்குத்தத்தத்தினால் ஆசாரியர்களும் அதிபதிகளும் கட்டப்பட்டிருந்து, நகரத்திலிருந்து சீடர்களும்

விசுவாசிகளும் சுற்றுப்புறப் பிரதேசத்தில் இருந்தவர்களும், இரட்சகரைப் பின்தொடர்ந்திருந்த கூட்டத்தினருடன் சேர்ந்துகொண்டார்கள். (3)

இயேசு, பிலாத்துவின் மன்றத்தின் வாசலைக் கடந்தபோது, பரபாசிற்கென்று ஆயத்தஞ்செய்யப்பட்டிருந்த சிலுவை, அவருடைய காயமடைந்து இரத்தம் ஒழுகிக்கொண்டிருந்த தோளின்மீது வைக்கப்பட்டது. பரபாசின் இரண்டு தோழர்கள் இயேசுவுடன்கூட அதே நேரத்தில் மரிக்கவேண்டியவர்களாக இருந்து, அவர்கள்மீதுங்கூட சிலுவைகள் வைக்கப் பட்டிருந்தன. இரட்சகரின் பலவீனமும் பாடுபடும் நிலைமையில் அவருடைய சுமையும் அவருக்கு அதிகமான பாரமாக இருந்தது. சீடர்களுடன் சேர்ந்து பஸ்கா இரவு உணவைப் புசித்த நேரத்திலிருந்து, அவர் உணவைப் புசிக்காமலும் குடிக்காமலும் இருந்திருந்தார். கெத்செமனேயில், சாத்தானின் ஏதுகரங்களுடனான அவருடைய போராட்டத்தில், அவர் தாங்கமுடியாத மனவேதனையடைந்தவராக இருந்தார். காட்டிக்கொடுக்கப்படுவதின் வேதனையை அவர் தாங்கியிருந்து, அவருடைய சீடர்கள் அவரைக் கைவிட்டுவிட்டு ஓடிப்போவதை அவர் கண்டிருந்தார். அவர் அன்னாவிடத்திற்கும் காய்பாவினிடத்திற்கும் அதற்குப்பின் பிலாத்துவினிடத்திற்கும் கொண்டு செல்லப்பட்டிருந்தார். பிலாத்துவினிடத்திலிருந்து அவர் ஏரோதுவினிடத்திற்குக் கொண்டுசெல்லப்பட்டிருந்து, அதன்பின், மறுபடியும் பிலாத்துவினிடத்திற்கு அனுப்பப்பட்டிருந்தார். அவமானத்தின்மேலிருந்து புதுப்பிக்கப்பட்டிருந்த அவமானத்துடனும், பரிகாசத்திலிருந்து பரிகாசத்திற்கும், இரண்டு தடவைகள் சவுக்கால் அடிக்கப்பட்டும், ஒரு மனிதனின் ஆத்துமாவை எந்த அளவிற்குச் சோதிக்கமுடியுமோ அப்படிப்பட்ட தன்மையின் காட்சிக்குப்பின் காட்சி, அந்த இரவு முழுவதிலும் இருந்திருந்தது. கிறிஸ்து தவறிவிடவில்லை. தேவனை மகிமைப்படுத்தக்கூடியதைத்தவிர வேறு எந்த வார்த்தையையும் பேசாதவராக அவர் இருந்திருந்தார். விசாரணை என்னும் ஒரு அவமரியாதையான கேலிக்கூத்து முழுவதற்கும் ஊடாக, அவர் தம்மை உறுதியுடனும் மேன்மையுடனும் தாங்கியிருந்தார்; ஆனால், இரண்டாவது சவுக்கடிக்குப்பின், சிலுவை அவர்மீது வைக்கப்பட்டபோது, மனித இயல்பினால் அதற்குமேல் தாங்கமுடியவில்லை. அந்தப் பாரத்தின்கீழ் அவர் மயங்கினவராகக் கீழேவிழுந்தார். (4)

இரட்சகரைப் பின்தொடர்ந்துசென்றிருந்த கூட்டத்தினர், அவருடைய பலவீனமும் தள்ளாடுதலுமிக்க அடியெடுத்துவைத்தலைக் கண்டனர்; ஆனால், அவர்கள் மனஉருக்கத்தை வெளிக்காட்டவில்லை. அவர் அந்த பாரமான சிலுவையைச் சுமக்கமுடியாதவராக இருந்ததற்காக, அவர்கள் அவரை இகழ்ந்து நிந்தித்தனர். மறுபடியும் அந்தச் சுமை அவர்மீது

வைக்கப்பட்டது. அவர் மறுபடியும் மயக்கமடைந்து தரையின்மீது விழுந்தார். அதற்குமேல் அவரால் அவருடைய சுமையைச் சுமக்கமுடியாது என்பதை அவரை உபத்திரவப்படுத்துபவர்கள் கண்டார்கள். அவமானம் தரும் அந்த பாரத்தைச் சுமக்கக்கூடிய யாராவது ஒருவரைக் கண்டுபிடிப்பதில், அவர்கள் குழப்பமடைந்திருந்தனர். அந்தத் தீட்டு யூதர்களைப் பஸ்கா பண்டிகையை ஆசரிப்பதிலிருந்து தடுத்துவிடும் என்பதற்காக, யூதர்கள் தாங்களாக இதைச் செய்யமுடியாதவர்களாக இருந்தனர். அவரைப்பின் தொடர்ந்திருந்த கூட்டத்தினரில் ஒருவன்கூட அந்தச் சிலுவையைச் சுமப்பதற்கு, தன்னைத் தாழ்த்துபவனாக இருக்கவில்லை. (5)

அந்த நேரத்தில், ஒரு அன்னியனும் சிரேனே ஊரானுமாக இருந்த சீமோன் என்பவன், நாட்டுப்புறத்திலிருந்து வந்துகொண்டிருந்து, அந்தக் கூட்டத்தைச் சந்திக்கிறான். அவன் அந்தக் கூட்டத்தினரின் நிந்தனையையும் ஆபாசப் பேச்சையும் கேட்கிறான். யூதர்களின் இராஜாவிற்கு வழிவிடுங்கள் என்னும் இகழ்ச்சியான வார்த்தைகள் திரும்பத்திரும்பக் கூறப்படுவதை அவன் கேட்கிறான். அந்தக் காட்சியில் அவன் வியப்புடன் நிற்கிறான். அவன் அவனுடைய மன உருக்கத்தை வெளிக்காட்டும்போது, அவர்கள் அவனைப்பிடித்து, அவனுடைய தோள்களின்மீது அந்தச் சிலுவையை வைக்கின்றனர். (6)

சீமோன், இயேசுவைப்பற்றிக் கேட்டிருந்திருக்கிறான். அவனுடைய குமாரர்கள் இரட்சகரை விசுவாசிப்பவர்களாக இருந்தனர். ஆனால், அவன் ஒரு சீடனாக இருக்கவில்லை. அந்தச் சிலுவையைக் கல்வாரிக்குச் சுமந்துசென்றது, சீமோனுக்கு ஒரு ஆசீர்வாதமாக இருந்தது. அதற்குப்பின் எப்பொழுதும் இந்த தெய்வீக ஏற்பாட்டிற்காக அவன் நன்றியுள்ளவனாக இருந்தான். தனது தெரிந்துகொள்ளுதலினால் கிறிஸ்துவின் சிலுவையைத் தன்மீது எடுத்துக்கொள்ளுவதற்கும் அதன் பாரத்தின்கீழ் சந்தோஷத்துடன் நிற்பதற்கும், அது அவனை நடத்தியிருந்தது. (7)

குற்றவாளியாகத் தீர்க்கப்படாதவரின் கொடூரமான மரணத்திற்கு, அவரைப் பின்தொடரும் கூட்டத்தில் இருக்கும் பெண்கள், ஒரு சிலராகமட்டும் இருக்கவில்லை. அவர்களுடைய கவனம் இயேசுவின்மீது பதிந்திருக்கிறது; அவர்களில் சிலர், இதற்குமுன் அவரை பார்த்திருக்கின்றனர், அவர்களில் சிலர், அவர்களுடைய நோயுற்றவர்களையும் துன்பப்பட்டிருந்தவர்களையும் அவரிடத்திற்குச் சுமந்துசென்றிருக்கின்றனர். சிலர், தாங்களே சுகமடைந் திருக்கின்றனர். நிகழ்ந்திருக்கின்ற கதையின் காட்சிகள், விவரிக்கப் பட்டிருக்கிறது. எந்த ஒருவருக்காக அவர்களுடைய இருதயங்கள் உருகிக் கொண்டும் உடைந்துவிட ஆயத்தமாகவும் இருக்கிறதோ, அவருக்கு நேரான,

அந்தக் கூட்டத்தினரின் வெறுப்பைக்கண்டு, அவர்கள் அதிசயிக்கின்றனர். வெறிபிடித்த அந்தக் கூட்டத்தினரின் செயலிற்கும் ஆசாரியர்கள், அதிபதிகள் ஆகியோரின் கோபமிக்க வார்த்தைகளுக்கும் எதிராக, அந்த பெண்கள் அவர்களுடைய அனுதாபத்தை வெளிக்காட்டி உணர்த்துகின்றனர். இயேசு சிலுவைக்குக்கீழாக மயங்கிவிழும்போது, அவர்கள் மார்பிலறைந்துகொண்டு அழுகின்றனர். (8)

கிறிஸ்துவின் கவனத்தைக் கவர்ந்ததாக இந்த ஒரு காரியம் மட்டுந்தான் இருந்தது. உலகத்தின் பாவங்களைச் சுமந்துகொண்டு, பாடுகள் நிறைந்தவராக அவர் இருந்தபோதிலும், வருத்தத்தின் வெளிக்காட்டுதலுக்கு, அவர் கவனமற்றவராக இருக்கவில்லை. மென்மைமிக்க மனஉருக்கத்துடன், அவர் அந்த பெண்களைப் பார்த்தார். அவர்கள் அவர்மீது விசுவாசமுள்ளவர் களாக இருக்காமல், அவர் தேவனிடத்திலிருந்து அனுப்பப்பட்டிருந்த ஒருவர் என்பதற்காக அவருக்காகப் புலம்பாமல், மனித இரக்கத்தின் உணர்ச்சிகளினால் அசைக்கப்பட்டிருந்தனர் என்பதை, அவர் அறிந்திருந்தார். அவர்களுடைய அனுதாபத்தை அவர் அவமதிக்காமல், ஆனால் அது அவர்கள்மீதான ஒரு ஆழமான அனுதாபத்தை அவருடைய இருதயத்தில் எழுப்பினது: “எருசலேமின் குமாரத்திகளே, நீங்கள் எனக்காக அழாமல், உங்களுக்காகவும் உங்கள் பிள்ளைகளுக்காகவும் அழுங்கள்” என்று அவர் கூறினார். கிறிஸ்து அவருக்கு முன்னாலிருந்த காட்சியிலிருந்து, எருசலேமின் அழிவின் காலத்தை முன்னாக நோக்கினார். அந்த பயங்கரமான காட்சியில், இப்பொழுது அவருக்காக அழுதுகொண்டிருப்பவர்களில் அநேகர், அவர்களுடைய பிள்ளைகளுடனுங்கூட அழிந்துபோகவேண்டியவர்களாக இருந்தனர். (9)

எருசலேமின் விழுகையிலிருந்து இயேசுவின் எண்ணங்கள், ஒரு விசாலமான நியாயத்தீர்ப்பை நோக்கிக் கடந்துசென்றது. பாவத்திற்கென்று வருந்தாத, அந்த நகரத்தின் அழிவில், உலகத்தின்மீது வரவிருந்த இறுதி அழிவின் அடையாளத்தை, அவர் கண்டார். “அப்பொழுது மலைகளை நோக்கி: எங்கள்மேல் விழுங்களென்றும், குன்றுகளை நோக்கி: எங்களை மறைத்துக்கொள்ளுங்களென்றும் சொல்லத்தொடங்குவார்கள். பச்சை மரத்துக்கு இவைகளைச் செய்தால், பட்டமரத்துக்கு என்ன செய்யமாட்டார்கள்” என்று அவர் கூறினார். பச்சைமரத்தினால் குற்றமில்லாத மீட்பராக இருந்த இயேசு, தம்மை எடுத்துக்காட்டியிருந்தார். தேவன் மீறுதலுக்கெதிரான அவருடைய கோபத்தை, அவருடைய நேசகுமாரனின்மீது விழுவதற்கு அனுமதித்தார். மனிதர்களின் பாவங்களுக்காக, இயேசு சிலுவையில் அறையப்படவேண்டியவராக இருந்தார்; அப்படியானால், பாவத்தில்

தொடர்ந்துகொண்டிருக்கும் பாவி, எந்தவிதமான பாடுகளை அனுபவிக்க வேண்டியதாக இருக்கும்? பாவத்திற்காக மனம் வருந்தாதவர்களும் விசுவாச மில்லாதவர்களுமான அனைவரும், மனிதமொழி உணர்த்தத் தவறும் ஒரு துயரத்தையும் துன்பத்தையும் அறிந்துகொள்ள வேண்டியதாயிருக்கும். (10)

இரட்சகருடன் கல்வாரிக்குப் பின்தொடர்ந்து சென்றிருந்த திரளானவர்களில் அநேகர், அவர் வெற்றியுடன் எருசலேமிற்குள் பவனி சென்றபோது, மகிழ்ச்சிமிக்க ஓசன்னாக்களுடனும் பேரீச்சமரக்கிளைகளை அசைத்துக்கொண்டும் அவருடன் சென்றிருந்தனர்; ஆனால், அப்படிச் செய்வது பிரசித்தமானதாக இருந்தபடியினால், அப்பொழுது அவரை வாழ்த்தி முழக்கமிட்டிருந்தவர்களில், இப்பொழுது இவனைச் சிலுவையில் அறையும், இவனைச் சிலுவையில் அறையும் என்னும் குரலைப் உயர்த்தியிருந்தவர்கள், ஒரு சிலராக இருக்கவில்லை. கிறிஸ்து எருசலே மிற்குள் பவனிசென்றிருந்தபோது, சீடர்களின் நம்பிக்கை மிகவும் உயர்ந்து—உச்சக்கட்டத்தை அடைந்திருந்தது. அவர்கள், அவருடன் பிணைக்கப்பட்டிருப்பது ஒரு மேலான கனம் என்னும் உணர்ச்சியுடன், அவர்களுடைய ஆண்டவருக்கருகில் அவரை மிகவும் நெருக்கிக் கொண்டிருந்தனர். இப்பொழுது அவருடைய அவமானத்தில், அவர்கள் சற்று தூரத்திலிருந்து, அவரைப் பின்தொடர்ந்திருந்தனர். அவர்கள் வருத்தம் நிறைந்தவர்களாகவும் நம்பிக்கைகளை இழந்தவர்களாகவும் தலை கவிழ்ந்தவர்களாகவுமிருந்தனர். “மேய்ப்பனை வெட்டுவேன், மந்தையின் ஆடுகள் சிதறடிக்கப்படும் என்று எழுதியிருக்கிறபடி, இந்த இராத்திரியிலே நீங்கள் எல்லாரும் என்னிமித்தம் இடறலடைவீர்கள்” (மத்தேயு 26:31) என்ற இயேசுவின் வார்த்தைகள் எவ்விதமாக மெய்ப்பிக்கப்பட்டிருந்தன. தண்டனை நிறைவேற்றப்படும் இடத்திற்கு வந்து சேர்ந்தபின், அந்த சிறைக் கைதிகள், சித்திரவதைசெய்யும் கருவிகளுடன் கட்டப்பட்டனர். அந்த இரண்டு கள்ளர்களும், அவர்களைச் சிலுவையின்மேல் வைத்தவர்களின் கைகளுடன் போராடினர்; ஆனால் இயேசு, எந்த எதிர்ப்பையும் காட்டவில்லை. அன்பான சீடனாக இருந்த யோவானால் தாங்கப்பட்டவளாக, இயேசுவின் அன்னை, அவருடைய குமாரனின் காலடிகளைப்பின்பற்றி கல்வாரிக்குப் பின்தொடர்ந்தாள். சிலுவையின் பாரத்தின்கீழ், அவர் மயக்கமடைவதை அவள் கண்டு, காயமடைந்திருந்த அவரது சிரசிற்குக்கீழாகத் தன் கையைவைத்துக் தாங்கவும், ஒரு சமயத்தில் தனது மார்பைத் தலையணையாகக்கொண்டிருந்த அந்த நெற்றியைக் கழுவவும், அவள் ஏக்கமுடையவளாக இருந்தாள்; ஆனால், துக்கம் நிறைந்த அவளுக்கு இந்தச் சலுகை, அனுமதிக்கப்படாமலிருந்தது. இயேசு, அவருடைய வல்லமையை வெளிக்காட்டி, அவருடைய

எதிரிகளிடத்திலிருந்து, அவர் தாமே தம்மை விடுவித்துக்கொள்ளுவார் என்னும் நம்பிக்கையை சீடர்களுடன் சேர்ந்து அவளும் பேணியிருந்தாள். அப்பொழுது நடைபெற்றுக்கொண்டிருந்த அதே காட்சிகளை, அவர் முன்னுரைத்திருந்தவைகளை, அவள் மறுபடியும் நினைத்துப் பார்த்தபோது, அவளுடைய இருதயம் அமிழ்ந்துபோவதுபோலிருந்தது. அந்தக் கள்ளர்கள் சிலுவையுடன் கட்டப்பட்டபோது, என்ன நடக்கும் என்பதைப்பற்றிய நிச்சயமில்லாத வேதனையுடன், அவள் பார்த்தாள். மரித்தவர்களுக்கு ஜீவனைக்கொடுத்த அவர், தாம் சிலுவையில் அறையப்படுவதற்குத் தம்மை அனுமதிப்பாரா? இவ்விதமாகக் கொடூரமாகக் கொலைசெய்யப்படுவதற்கு, தேவகுமாரன் தம்மை அனுமதிப்பாரா? இயேசுதான் மேசியா என்னும் அவளது விசுவாசத்தை அவள் விட்டுவிடவேண்டுமா? அவருடைய மனத் துயரத்தில், அவருக்கு ஊழியஞ்செய்கின்ற சலுகையுங்கூட இல்லாமல், அவருடைய அவமானத்திற்கும் துயரத்திற்கும் அவள் சாட்சியாக வேண்டுமா? அவரது கைகள் சிலுவையின்மீது விரிக்கப்படுவதையும், சுத்தியலும் ஆணிகளும் கொண்டுவரப்பட்டு, அவருடைய மென்மைமிக்க மாமிசத்திற்கூடாக ஆணிகள் கடாவப்பட்டதையும் கண்ட அவள் மயக்கமடைந்தபோது, இருதயம் நொறுங்குண்ட சீடர்கள் அந்த கொடூரமான காட்சியிலிருந்து, இயேசுவின் அன்னையைத் தூரமாகச் சுமந்துசென்றனர். (11)

இரட்சகர் குற்றச்சாட்டுகள் எதையும் முணுமுணுக்கவில்லை. அவரது முகம் அமைதியாகவும் சாந்தமாகவும் இருந்தது; ஆனால், அவரது நெற்றியின்மீது, இரத்தத்தின் வியர்வையின் பெரும் துளிகள் நின்றன. அவரது முகத்தில் படிந்திருந்த மரணத்தின் வியர்வைத் துளிகளை துடைக்க இரக்கமிக்க கரங்கள் அங்கில்லை; அவருடைய மானிட இருதயத்தைத் தாங்கும் ஆதாரம்போன்ற பரிவு நிறைந்ததும் மாறாத விசுவாசமுள்ளதுமான வார்த்தைகளும் அங்கு கூறப்படவில்லை. போர்ச்சேவகர்கள் அவர்களுடைய பயங்கரமான பணியைச் செய்து கொண்டிருந்தபொழுது, இயேசு அவருடைய எதிரிகளுக்காக: “பிதாவே, இவர்களுக்கு மன்னியும், தாங்கள் செய்கிறது இன்னதென்று அறியாதிருக்கிறார்களே” என்று ஜெபித்தார். அவருடைய மனம் அவருடைய சொந்தப்பாடுகளிலிருந்து, அவரை உபத்திரவப்படுத்துபவர்களின் பாவங்களுக்கும் அவர்களுடையதாக இருக்கக்கூடியதாக இருந்த பயங்கரமான தேவ கோபத்தின் தண்டனைக்கும் கடந்துசென்றது. மிகவும் முரட்டுத்தனமானவிதமாக அவருடன் நடந்துகொண்டிருந்த போர்ச் சேவகர்களின்மீது, சாபங்கள் எதுவும் கூறப்படவில்லை. தங்களுடைய நோக்கம் நிறைவேற்றப்படுவதை மனநிறைவுடன் கவனித்துக்கொண்டிருந்த ஆசாரியர்கள், அதிபதிகள் ஆகியோரின்மீது, எவ்விதமான பழிவாங்குதலும் கூறப்படவில்லை. அவர்களுடைய அறியாமைக்காகவும் குற்றத்திற்காகவும்

இரட்சகர் இரக்கப்பட்டார். “தாங்கள் செய்வது இன்னதென்று அவர்கள் அறியாமலிருக்கிறார்களே” என்னும், பாவமன்னிப்பிற்கான ஒரு மன்றாட்டை மட்டும் ஏறெடுத்தார். (12)

பாவமுள்ள இனத்தை நித்திய அழிவிலிருந்து இரட்சிப்பதற்காக, வந்திருந்த ஒருவரைச் சித்திரவதைசெய்துகொண்டிருப்பதை, அவர்கள் அறிந்திருந்தார்களானால், அவர்கள் குற்ற உணர்வினாலும் பயங்கரத்தினாலும், பற்றிக்கொள்ளப்பட்டிருந்திருப்பார்கள்; ஆனால், அவர்களுடைய அறியாமை, அவர்களுடைய குற்றத்தை நீக்கவில்லை; ஏனெனில், இயேசு அவர்களுடைய இரட்சகர் என்பதை, அறிந்துகொள்ளுவதும் அவரை ஏற்றுக்கொள்ளுவதும் அவர்களுடைய சிறப்புரிமையாக இருந்தது. அவர்களில் சிலர், இன்னுங்கூட அவர்களுடைய பாவங்களைப் பார்க்கவும், அதற்காக மனம்வருந்தவும் மனம்மாறவுங்கூடியவர்களாக இருந்தனர். அவர்களுக்கான கிறிஸ்துவின் ஜெபத்திற்கு, அவர்களுக்காக பதில் கிடைப்பதை, ஒரு சாத்தியமற்ற தாக்குகின்றவிதமாக, தங்களுடைய பாவங்களுக்காக வருந்தாத சிலரின் தன்மை செய்திருந்தது. ஆயினும் அதேவிதமான தேவனுடைய நோக்கம், அதன் நிறைவேறுதலைச் சமீபித்துக்கொண்டிருந்தது. இயேசு அவருடைய பிதாவின் சமுகத்தில், மனிதர்களின் பரிந்துபேசுபவராக இருக்கின்ற உரிமையைச் சம்பாதித்துக்கொண்டிருந்தார். (13)

கிறிஸ்துவின் எதிரிகளுக்கான அவருடைய ஜெபம், உலகத்தைத் தழுவினது. அது, உலகத்தின் ஆரம்பத்திலிருந்து, காலத்தின் முடிவுரை வாழ்ந்திருந்த அல்லது வாழவேண்டிய, ஒவ்வொரு பாவியையும் உள்ளடக்கியது. தேவகுமாரனைச் சிலுவையில் அறைகின்ற குற்றம், அனைவர்மீதும் தங்குகிறது. பாவமன்னிப்பு அனைவருக்கும் இலவசமாக அருளப்பட்டிருக்கிறது. எவர்கள் விரும்புகிறார்களோ அவர்கள் அனைவரும், தேவனுடன் சமாதானத்தையும் நித்தியஜீவனையும் உரிமையாக அடைந்துகொள்வார்கள். (14)

இயேசு சிலுவையில் அறையப்பட்ட உடனே, பலமிக்க மனிதர்களால் அது உயர்த்தப்பட்டு, அதற்கென்று ஆயத்தஞ்செய்யப்பட்டிருந்த இடத்தில் (குழிக்குள்) பெரும் வன்முறையுடன் போடப்பட்டது. அது தேவகுமாரனுக்கு மிக அதிக உக்கிரமான வேதனையை உண்டுபண்ணினது; அப்பொழுது பிலாத்து, எபிரெயு, கிரேக்கு, லத்தீன் ஆகிய மொழிகளில் ஒரு வாசகத்தை எழுதி, இயேசுவின் சிரசிற்குமேலாக, சிலுவையின்மீது பொருத்தினான். அதில்: “நசரேயனாகிய இயேசு யூதருடைய இராஜா” என்று எழுதப்பட்டிருந்தது. அந்த எழுத்து யூதர்களை எரிச்சலடையச்செய்தது. பிலாத்துவின் நீதிமன்றத்தில்: “இவனைச் சிலுவையில் அறையும்; இராயனேயல்லாமல்

எங்களுக்கு வேறே இராஜா இல்லை” (யோவான் 19:15) என்று அவர்கள் கூக்குரலிட்டிருந்தனர். வேறு எவனாவது ஒருவனை அரசன் என்று ஏற்றுக் கொள்ளும் எவனும் இராஜத்துரோகியாக இருப்பான் என்று அவர்கள் அறிவித்திருந்தனர். அவர்கள் வெளிப்படுத்தியிருந்த நுண்ணுணர்வைப் பிலாத்து எழுதிவைத்திருந்தான். இயேசு யூதர்களின் இராஜாவாக இருந்தார் என்பதைத்தவிர, வேறு குற்றம் எதுவும் குறிப்பிடப்படவில்லை. அந்த எழுத்து ரோம நாட்டு வல்லமையுடன் யுதர்களுக்கிருந்த தேசபக்தியின் ஒரு பெயரளவிலான ஒப்புதலாக இருந்தது. இஸ்ரவேலின் அரசன் என்று தன்னை எவன் அறிவித்தாலும், அவன் மரணத்திற்குத் தகுதியானவன் என்று நியாயந்தீர்க்கப்படவேண்டுமென்று அது அறிவித்தது. ஆசாரியர்கள் தாங்களாகவே வரம்பு மீறியிருந்தனர். கிறிஸ்துவின் மரணத்தைப்பற்றி அவர்கள் சதியாலோசனைசெய்துகொண்டிருந்தபோது, தேசத்தைப் பாதுகாப்பதற்காக ஒருவன் மரிப்பது தகுந்ததாயிருக்கும் என்று காய்பா அறிவித்திருந்தான். இப்பொழுது அவர்களுடைய மாய்மாலம் வெளிப்படுத்தப்பட்டிருந்தது. கிறிஸ்துவை அழிப்பதற்காக, தங்களுடைய இனத்தையே தியாகஞ்செய்யவும் அவர்கள் ஆயத்தமாக இருந்தனர். (15)

ஆசாரியர்கள், அவர்கள் என்னசெய்திருந்தார்கள் என்பதைக் கண்டு, அந்த எழுத்தை மாற்றும்படி பிலாத்துவைக் கேட்டார்கள். “தான் யூதருடைய இராஜா என்று அவன் சொன்னதாக எழுதும்” என்று அவர்கள் கேட்டார்கள்; ஆனால், அவனுடைய முன்னைய பலவீனத்தினால் தன்மீதே கோபமாக இருந்த பிலாத்து, பொறாமையும் தந்திரமுமிக்கவர்களாக இருந்த ஆசாரியர்களையும் அதிபதிகளையும் முழுவதுமாக நிந்தித்தான். அக்கறை யற்றவிதமாக அவன்: “நான் எழுதினது, எழுதினதே” என்றான். (16)

பிலாத்துவையும் அல்லது யூதர்களையும்விட, மிகவும் உயர்வான ஒரு வல்லமை, அந்த எழுத்தை இயேசுவின் சிரசிற்குமேல் வைக்கும்படி நடத்தியிருந்தது. தெய்வீக ஏற்பாட்டில் அது சிந்தனையையும் வேத வாக்கியங்களைப் புலனாய்வுசெய்வதையும் எழுப்பவேண்டியதாக இருந்தது. கிறிஸ்து சிலுவையில் அறையப்பட்ட இடம் நகரத்திற்கு அருகில் இருந்தது; அப்பொழுது, ஆயிரக்கணக்கான மக்கள், எல்லாத் தேசங்களிலிருந்தும் வந்து, எருசலேமில் கூடியிருந்தனர். நசரேயனாகிய இயேசு, மேசியா என்று அறிவிக்கும் அந்த எழுத்து, அவர்களுடைய கவனத்திற்கு வரும். அது தேவனால் வழிநடத்தப்பட்ட ஒரு கரத்தினால் மாற்றி வரையப்பட்ட ஒரு ஜீவனுள்ள சத்தியமாக இருந்தது. (17)

சிலுவையின்மீது கிறிஸ்து அனுபவித்த பாடுகளில், தீர்க்க தரிசனம் நிறைவேறியிருந்தது. அந்த நடத்துதலைப்பற்றி, சிலுவையில்

அறையப்படுவதற்கு நூற்றாண்டுகளுக்கு முன்பாக இரட்சகர் முன்னுரைத்திருந்தார்: “நாய்கள் என்னைச் சூழ்ந்திருக்கிறது; பொல்லாதவர்களின் கூட்டம் என்னை வளைந்துகொண்டது; என் கைகளையும் என் கால்களையும் உருவக் குத்தினார்கள். என் எலும்புகளையெல்லாம் நான் எண்ணலாம்; அவர்கள் என்னை நோக்கிப் பார்த்துக்கொண்டிருக்கிறார்கள். என் வஸ்திரங்களைத் தங்களுக்குள்ளே பங்கிட்டு, என் உடையின்பேரில் சீட்டுப்போடுகிறார்கள்.” (சங்கீதம் 22:16–18) என்று அவர் கூறினார். அவருடைய உடைகளைப்பற்றிய தீர்க்கதரிசனம், சிலுவையில் அறையப்பட்டிருந்த ஒருவரின் நண்பர்கள் அல்லது விரோதிகளின் ஆலோசனை அல்லது குறுக்கிடுதல் இல்லாமல் செயற்படுத்தப்பட்டிருந்தது. அவரைச் சிலுவையின்மேல் வைத்திருந்த போர்ச்சேவகர்களுக்கு அவருடைய வஸ்திரங்கள் கொடுக்கப்பட்டிருந்தன. அந்த வஸ்திரங்களை அவர்கள் பங்கிட்டபோது, உண்டான அந்த மனிதர்களின் சச்சரவின் வார்த்தைகளை அவர் கேட்டார். அவருடைய உடை தையலின்றி முழுவதுமாக நெய்யப்பட்டிருந்தது. அவர்கள் நாம் அதைக் கிழிக்காமல், அது யாருடையதாகும் என்று அறியும்படி, சீட்டுப்போடுவோமாக என்று கூறினார்கள். (18)

மற்றொரு தீர்க்கதரிசனத்தில், இரட்சகர்: “நிந்தை என் இருதயத்தைப் பிளந்தது; நான் மிகவும் வேதனைப்படுகிறேன்; எனக்காக பரிதபிக்கிறவனுண்டோ என்று காத்திருந்தேன், ஒருவனும் இல்லை; தேற்றுகிறவர்களுக்குக் காத்திருந்தேன், ஒருவனையும் காணேன். என் ஆகாரத்தில் கசப்புக் கலந்து கொடுத்தார்கள், என் தாகத்துக்குக் காடியைக் குடிக்கக்கொடுத்தார்கள்.” (சங்கீதம் 69:20,21) என்று அறிவித்திருந்தார். சிலுவையினால் மரணதண்டனையை அனுபவித்துக்கொண்டிருந்தவர்களுக்கு அவர்களுடைய வேதனையை மறத்துப்போகும்படிச் செய்வதற்கு போதையூட்டும் பானம் அனுமதிக்கப்பட்டிருந்தது. இது இயேசுவிற்குக் கொடுக்கப்பட்டது; ஆனால், அதை ருசிபார்த்தபின், அதை அவர் மறுத்துவிட்டார். அவரது மனதை இருளடையச்செய்யக்கூடிய எதையும் அவர் பெற்றுக்கொள்ளமாட்டார். அவருடைய விசுவாசம் தேவனை விரைவாகப் பற்றிக்கொண்டிருக்கவேண்டும். அது ஒன்றுமட்டுமே அவருடைய பலமாக இருந்தது. அவருடைய புலன்களை இருளடையச்செய்வது சாத்தானுக்கு ஒரு அனுகூலத்தைக் கொடுக்கும். (19)

இயேசு சிலுவையின்மீது தொங்கிக்கொண்டிருந்தபோது, அவருடைய எதிரிகள் அவர்மீதுள்ள அவர்களுடைய கோபத்தை வெளிக்காட்டினார்கள். இறந்துகொண்டிருந்த இரட்சகரைப் பரிகாசஞ்செய்வதில், ஆசாரியர்களும், அதிபதிகளும், வேதபாரகர்களும் கலகஞ்செய்யும் கூட்டத்தினருடன்

சேர்ந்துகொண்டனர். கிறிஸ்து தேவகுமாரன் என்று அறிவிக்கும் தேவனுடைய குரல், அவருடைய ஞானஸ்நானத்தின்போதும் மறுரூபமானபோதும் கேட்கப்பட்டிருந்தது. மறுபடியும் அவர் காட்டிக்கொடுக்கப்படுவதற்குச் சற்றுமுன், அவருடைய தெய்வீகத்திற்குச் சாட்சிகொடுத்துக்கொண்டு பிதா பேசியிருந்தார். ஆனால், இப்பொழுது பரலோகத்திலிருந்துள்ள அந்தக் குரல் மௌனமாயிருந்தது. கிறிஸ்துவிற்கு அனுகூலமாக எந்த சாட்சியும் கேட்கப்படவில்லை. துன்மார்க்கமான மனிதர்களிடத்திலிருந்து அவர் மறுபடியும் நிந்தனையையும் பரிகாசத்தையும் அனுபவித்தார். (20)

“நீ தேவனுடைய குமாரனேயானால் சிலுவையிலிருந்து இறங்கி வா” என்று அவர்கள் கூறினார்கள். “இவன் தேவனால் தெரிந்துகொள்ளப்பட்ட கிறிஸ்துவானால், தன்னைத்தானே இரட்சித்துக்கொள்ளட்டும்” என்றார்கள். சோதனையின் வனாந்தரத்தில் சாத்தான்: “நீர் தேவனுடைய குமாரனே யானால், இந்தக் கல்லுகள் அப்பங்களாகும்படி சொல்லும்.” “நீர் தேவனுடைய குமாரனேயானால் தேவாலயத்தின் கோபுரத்திலிருந்து தாழக் குதியும்” என்று அவன் கூறினான் — மத்தேயு 4:3,6. சாத்தான் அவனுடைய தூதர்களுடன் மனித உருவத்தில் சிலுவையின் அருகில் இருந்திருந்தான். தலைமைப் பிசாசானவனும் அவனுடைய சேனைகளும் ஆசாரியர்களுடனும் அதிபதிகளுடனும் ஒத்துழைத்துக்கொண்டிருந்தனர். கிறிஸ்துவிற்கு எதிராகச் சாட்சிகூறும்படி வற்புறுத்தப்படும்வரை, அவரை ஒருபோதும் பார்த்திராதவர்களாக இருந்த அநேகரை, அவருக்கெதிராக நியாயத்தீர்ப்புக்கூறும்படி, அறியாமைமிக்கவர்களாக இருந்த, கலகஞ்செய்யும் கூட்டத்தினரை—மக்களின் ஆசிரியர்கள் தூண்டிவிட்டிருந்தனர். சாத்தானின் தன்மைமிக்க ஒரு வெறியில் ஆசாரியர்களும், அதிபதிகளும், பரிசேயர்களும் கடினமானவர்களான—கீழ்மக்களின் கூட்டணியினராக ஒன்றுசேர்ந்திருந்தனர். சாத்தானுடனும் அவனுடைய தூதர்களுடனும் மார்க்கத்தின் தலைவர் களும் ஒன்றுபட்டிருந்தனர். அவனுடைய கட்டளையை அவர்கள் செயலாற்றிக் கொண்டிருந்தனர். (21)

பாடுகளை அனுபவித்துக்கொண்டும் மடிந்துகொண்டுமிருந்த இயேசு, “மற்றவர்களை இரட்சித்தான், தன்னைத்தான் இரட்சித்துக்கொள்ளத் திராணியில்லை; இவன் இஸ்ரவேலின் இராஜாவானால், இப்பொழுது சிலுவையிலிருந்து இறங்கிவரட்டும்; அப்பொழுது இவனை விசுவாசிப்போம்” என்று ஆசாரியர்கள் அறிவித்த ஒவ்வொரு வார்த்தையையும் கேட்டார். கிறிஸ்துவால் அந்தச் சிலுவையிலிருந்து கீழே இறங்கிவந்திருக்க முடியும்; ஆனால் அவர் தம்மைத்தாமே இரட்சித்துக்கொள்ளாதவராக இருப்பதினால், பாவிக்கு மன்னிப்பு, தேவனுடன் அனுகூலம் ஆகியவைபற்றிய நம்பிக்கை யிருக்கிறது. (22)

இரட்சகரை அவர்கள் செய்யும் பரிகாசத்தில், தங்களைத் தீர்க்கதரிசனங்களை விளக்குபவர்கள் என்று கூறிக்கொண்டிருந்த மனிதர்கள், அந்தச் சந்தர்ப்பத்தில் அவர்கள் கூறுவார்கள் என்று ஆவியின் ஏவுதல் முன்னுரைத்திருந்த, அதே வார்த்தைகளைத் திரும்பவும் கூறிக்கொண்டிருந்தனர்; அப்படியிருந்தபோதிலும், அவர்களுடைய குருட்டுத்தனத்தினால் அவர்கள், தீர்க்கதரிசனத்தை நிறைவேற்றிக்கொண்டிருந்தனர் என்பதைப் உணராம லிருந்தனர். “தேவன்மேல் நம்பிக்கையாயிருந்தானே; அவர் இவன்மேல் பிரியமாயிருந்தால் இப்பொழுது இவனை இரட்சிக்கட்டும்; ஏனெனில், அவன் தன்னைத் தேவனுடைய குமாரன் என்று கூறியிருந்தானே” என்று, தங்களுடைய ஏளனத்தில் இந்த வார்த்தைகளைக் கூறியிருந்தவர்கள், அவர்களுடைய சாட்சி யுகங்கள் நெடுகிலும் ஒலிக்கும் என்பதைப்பற்றிச் சிந்திக்காமலிருந்தனர்; ஆனால், பரிகாசமாக இந்த வார்த்தைகள் கூறப்பட்டிருந்தபோதிலும், அவை இதற்குமுன் ஒருபோதும் இல்லாதவிதமாக வேதவாக்கியங்களை ஆராயும்படி மனிதர்களை நடத்தினது. ஞானவான்கள் கேட்டு—ஆராய்ந்து—சிந்தித்து—ஜெபஞ்செய்தனர். வேதவாக்கியங்களுடன் வேதவாக்கியங்களை ஒப்பிட்டு, கிறிஸ்துவின் ஊழியத்தின் அர்த்தத்தை அவர்கள் காணும்வரை ஒருபோதும் ஓய்வெடுக்காதவர்களாக இருந்தனர். இயேசு சிலுவையின்மீது தொங்கியிருந்தபோது, அவரைப்பற்றிய ஒரு பொது அறிவு, அதற்குமுன் ஒருபோதும் ஏற்பட்டிருக்கவில்லை. சிலுவைக் காட்சியைக் கண்டிருந்தவர்களும் கிறிஸ்துவின் வார்த்தைகளைக் கேட்டிருந்தவர்களுமாகிய அநேகருடைய இருதயங்களில் சத்தியத்தின் ஒளி பிரகாசித்துக்கொண்டிருந்தது. (23)

சிலுவையின்மீது கடுந்துயரில் இருந்த இயேசுவிற்கு ஆறுதலின் ஒரு ஒளிக்கதிர் வந்தது; அது, பாவத்திற்காக மனம் வருந்தின அந்தக் கள்ளனின் ஜெபமாக இருந்தது. இயேசுவுடன் சிலுவையில் அறையப்பட்டிருந்த அந்த இரண்டு கள்ளர்களும் முதலில் இயேசுவைத் தூஷித்திருந்தனர். அவர்களில் ஒருவன் அவனுடைய பாடுகளின்கீழ் நம்பிக்கையற்ற துணிகரமும் எதிர்க்கின்ற பண்பும் உடையவனாக இருந்தான்; ஆனால், அவனுடைய தோழன் அப்படியிருக்கவில்லை. அந்த மனிதன் ஒரு கடினமாகிவிட்ட குற்றவாளியாக இருக்கவில்லை. பொல்லாதவர்களுடனுள்ள கூட்டுறவினால் தவறான வழியில் நடத்தப்பட்டிருந்து, ஆனால் சிலுவைக்குப் பக்கத்தில் நின்று இரட்சகரை நிந்தித்துக்கொண்டிருந்தவர்களைவிட, குறைவான குற்றமுடையவனாக இருந்தான். அவன் இயேசுவைக் கண்டும் அவரைப்பற்றிக் கேள்விப்பட்டுமிருந்து, அவருடைய போதனையினால் மன உணர்த்துதலை உடையவனாகவும் இருந்தான்; ஆனால் அவன் ஆசாரியர்களாலும் அதிபதிகளாலும் அவரிடத்திலிருந்து திருப்பிவிடப்பட்டிருந்தான். மனஉணர்த்துதலை

அடக்குவதற்கு வகைதேடியிருந்து, அவன் கைதுசெய்யப்பட்டு, ஒரு குற்றவாளியாக விசாரிக்கப்பட்டு, சிலுவையில் மரிக்கும்படி தண்டனை அடையும்வரைப் பாவத்திற்குள் ஆழமாக, அதிக ஆழமாக மூழ்கியிருந்தான். நியாயவிசாரணை மன்றத்திலும் கல்வாரிக்குச்செல்லும் பாதையிலும் அவன் இயேசுவுடன் இருந்தான். "நான் இவனிடத்தில் ஒரு குற்றமும் காணவில்லை" (யோவான் 19:4) என்று பிலாத்து அறிவிப்பதை, அவன் கேட்டிருந்தான். தேவனைப்போன்ற அவருடைய நடத்தையையும் அவரை உபத்திரவப்படுத்துபவர்களின்மீது அவருடைய மன்னிக்கும் இரக்கத்தையும், அவன் கவனித்திருந்தான். சிலுவையின்மீதிருக்கும் கர்த்தராகிய இயேசுவை நோக்கிப் பெரும் மதவாதிகள் பரிகாசத்துடன் அவர்களுடைய நாவினால் கேலிசெய்வதையும் அவன் காண்கிறான்; துலுக்கும் தலைகளை அவன் காண்கிறான். குற்றவாளியாக எடுத்துச் செல்லப்பட்டிருக்கும் அவனுடைய தோழன்: "நீ கிறிஸ்துவானால் உன்னையும் எங்களையும் இரட்சித்துக்கொள்" என்று திட்டும் பேச்சுக்களை அவன் கேட்கிறான். கடந்துசெல்லுபவர்களில் அநேகர் இயேசுவை ஆதரிப்பதை அவன் கேட்கிறான். அவருடைய வார்த்தைகளை அவர்கள் திரும்பக் கூறுவதை அவன் கேட்பதுடன், அவருடைய செயல்களைப்பற்றிக் கூறுவதை கேட்கிறான். இவர்தான் அந்தக் கிறிஸ்து என்னும் மன உணர்த்துதல் அவனுக்குத் திரும்பவும் வருகிறது. அவன் தனது உடன் குற்றவாளியின் பக்கமாகத் திரும்பி: "நீ இந்த ஆக்கினைக்குட்பட்டவனாயிருந்தும் தேவனுக்குப் பயப்படுகிறதில்லையா?" என்று கூறுகிறான். இறந்துகொண்டிருக்கும் அந்தக் கள்ளர்கள், இதற்குமேல் மனிதனிடத்திலிருந்து பயப்படக்கூடிய எதுவும் இருக்கவில்லை; ஆனால், பயப்படுவதற்கு, ஒரு தேவனும் அவனை நடுங்கச்செய்கின்ற காரணத்தை உடைய ஒரு எதிர்காலமும் இருக்கிறது என்னும் மனஉணர்த்துதல் அவர்களில் ஒருவன்மீது அழுத்துகிறது; இப்பொழுது அவன் இருக்கும்வண்ணமாக உள்ள அவனுடைய பாவத்தால் மாசுபடிந்த வாழ்க்கையின் வரலாறு முடிவடைய இருக்கிறது. நாமோ நியாயப்படி தண்டிக்கப்படுகிறோம்; நாம் நடப்பித்தவைகளுக்குத்தக்க பலனை அடைகிறோம்; இவரோ தகாததொன்றையும் நடப்பிக்கவில்லையே" என்று அவன் புலம்புகிறான். (24)

அப்பொழுது எந்தக் கேள்வியும் இல்லை, சந்தேகங்களும் இல்லை, நிந்தனைகளும் இல்லை, அந்தக் கள்ளன் அவனுடைய குற்றத்திற்காக தண்டிக்கப்பட்டபோது, அவன் நம்பிக்கையிழந்து மனமுறிவடைந்தான்; ஆனால், மாறுபட்ட மென்மையான எண்ணங்கள் இப்பொழுது உயர்ந்தெழுகின்றன. இயேசு எவ்விதமாக நோயுற்றவர்களைச் சுகப்படுத்தியிருந்தார் என்பதையும், பாவத்தை மன்னித்திருந்தார் என்பதையும், அவன் கேள்விப்பட்டிருந்த

யாவையும் மீண்டும் நினைவிற்குள் கொண்டுவருகிறான். இயேசுவை விசுவாசித்திருந்தவர்களின் வார்த்தைகளையும், அழுதுகொண்டு அவரைப் பின்தொடர்ந்திருந்தவர்களையும்பற்றிக் கேள்விபட்டு, இரட்சகரின் சிரசிற்கு மேலாக எழுதிவைக்கப்பட்டிருந்த பட்டத்தை அவன் கண்டும் வாசித்து மிருக்கிறான். கடந்துசென்றிருந்தவர்களில் சிலர், வருத்தத்துடனுள்ள நடுங்கும் உதடுகளுடனும், மற்றவர்கள் கேலியாகவும் பரிகாசத்துடனும் பேசுவதையும் அவன் கேட்டிருக்கிறான். பரிசுத்த ஆவியானவர், அவனுடைய மனதை ஒளிப்படுத்துகிறார்; அதனால், சான்றுகளின் சங்கிலி கொஞ்சம் கொஞ்சமாக ஒன்றாகச் சேர்க்கப்படுகிறது. காயப்படுத்தப்பட்டுப் பரிகசிக்கப்பட்டு, சிலுவையின்மீது தொங்கிக்கொண்டிருக்கும் இயேசுவில், அவன் உலகத்தின் பாவத்தைச் சுமந்துதீர்க்கும் தேவஆட்டுக்குட்டியைக் காண்கிறான். மரித்துக்கொண்டிருக்கும் உதவியற்ற அந்த ஆத்துமா, மரித்துக்கொண்டிருக்கும் இரட்சகரின்மீது தன்னை வைக்கும்போது, அவனுடைய குரலில் வேதனையுடன் நம்பிக்கையும் கலந்திருக்கிறது. “ஆண்டவரே, நீர் உம்முடைய இராஜ்யத்தில் வரும்போது அடியேனை நினைத்தருளும்” என்று அவன் அழுகிறான். (25)

பதில் விரைவாக வருகிறது: “இன்றைக்கு நீ என்னோடேகூடப் பரதீசிலிருப்பாய் என்று மெய்யாகவே உனக்குச் சொல்லுகிறேன்” என்னும் வார்த்தைகள், மிருதுவான—மெல்லிய—இனிய குரலில், நிறைவான அன்பு, மன உருக்கம், வல்லமை ஆகியவைகள் நிறைந்த வார்த்தைகளாக வெளிவந்தன. (26)

வேதனைமிக்க நீண்ட மணி நேரங்களாக நிந்தனையும் பரிகாசமுஞ்செய்கின்ற வார்த்தைகள், இயேசுவின் செவிகளில் விழுந்திருக்கின்றன. அவர் சிலுவையின்மீது தொங்கிக்கொண்டிருக்கும்போது, இன்னுங்கூட கேலிப்பேச்சுக்களும் சாபங்களின் சத்தமும் அவரிடத்திற்கு மிதந்து செல்லுகின்றன. அவருடைய சீடர்களிடத்திலிருந்து விசுவாசத்தின் ஏதாவது வெளி உணர்த்துதல் வருமென்று ஏக்கமிக்க இதயத்துடன் அவர் கவனித்திருந்திருக்கிறார். இஸ்ரவேலை மீட்பவராக இவர் இருந்திருப்பார் என்னும் துக்ககரமான வார்த்தைகளைமட்டுமே அவர் கேட்டிருக்கிறார். அந்த நேரத்தில் மரித்துக்கொண்டிருந்த அந்தக் கள்ளனிடத்திலிருந்துண்டான விசுவாசமும் அன்புமுள்ள வார்த்தைகள், எவ்விதமான நன்றியை உடையதாக இருந்தன. தலைவர்களாக இருந்த யூதர்கள் அவரை மறுத்துக்கொண்டிருக்கும்போது, அவருடைய தெய்வீகம்பற்றிச் சீடர்களுங்கூட சந்தேகித்துக்கொண்டிருந்தபோது, ஏழையான அந்தக் கள்ளன், அவனுடைய நித்தியத்தின் விளிம்பிலிருந்து இயேசுவைக் கர்த்தர் என்று அழைத்தான். அவர்

அற்புதங்களைச் செய்தபோதும், அவர் கல்லறையிலிருந்து எழுந்தபின்பும், அவரைக் கர்த்தர் என்று அழைக்க அநேகர் ஆயத்தமாகயிருந்தனர்; ஆனால், பதினோராம் மணிநேரத்தில் இரட்சிக்கபட்டவனாக இருந்த—பாவத்திற்காக வருந்தின—அந்தக் கள்ளனைத்தவிர, வேறு ஒருவரும் அவர் சிலுவையில் தொங்கி மரித்துக்கொண்டிருந்தபோது, அவரை ஏற்றுக்கொள்ளவில்லை. (27)

அந்தக் கள்ளன் இயேசுவைக் கர்த்தர் என்று அழைத்த வார்த்தைகளை அருகில் இருந்தவர்கள் பற்றிக்கொண்டனர். மனம் வருந்தியிருந்த அந்த மனிதனுடைய குரலின் தன்மை அவர்களுடைய கவனத்தை கவர்ந்தது. சிலுவைக்கு அடியில், கிறிஸ்துவின் வஸ்திரங்களுக்காகத் தங்களுக் கிடையில் சண்டையிட்டுக்கொண்டிருந்து, அவருடைய உடையின்மீது சீட்டுப்போட்டுக்கொண்டிருந்த அவர்கள், அதைக் கவனிக்க நின்றனர். கோபமிக்க அவர்களுடைய குரல்கள் மௌனமடைந்திருந்தன. அவர்கள் மூச்சுவிடாமல் கிறிஸ்துவைப் பார்த்து, இறந்துகொண்டிருக்கும் அந்த உதடுகளிலிருந்து, வரக்கூடிய பதிலிற்காகக் காத்திருந்தனர். (28)

வாக்குத்தத்தத்தின் வார்த்தைகளை அவர் பேசினபோது, சிலுவையைச் சூழ்ந்துகொண்டிருந்ததைப்போல் காணப்பட்டிருந்த இருண்ட மேகத்தை, ஒரு பிரகாசமிக்க ஜீவனுள்ள ஒளி ஊடுருவிச் சென்றது. மனம் வருந்தின அந்தக் கள்ளனுக்கு தேவனால் ஏற்றுக்கொள்ளப்பட்ட பூரணமான சமாதானம் வந்தது. தமது அவமானத்திலிருந்த கிறிஸ்து மகிமைப்படுத்தப்பட்டார். எல்லாருடைய கண்களிலும் தோற்றுப்போனவராகப் காணப்பட்டிருந்த அவர், ஒரு வெற்றியடைந்தவரானார். பாவத்தைச் சுமப்பவர் என்று அவர் ஏற்றுக்கொள்ளப்பட்டிருந்தார். மனிதர்கள் அவருடைய சரீரத்தின்மீது தங்களுடைய வல்லமையைச் செயலாற்றலாம். முள்ளுகளுள்ள முடியினால் அவருடைய சென்னியை அவர்கள் துளைக்கலாம். அவருடைய உடையை அவரது உடலிலிருந்து கழற்றி, அதைப் பங்கிடுவதைப்பற்றி அவர்கள் சண்டையிட்டுக்கொள்ளலாம்; ஆனால், பாவத்தை மன்னிக்கும் அவருடைய வல்லமையை அவர்களால் அவரிடத்திலிருந்து பறித்துக்கொள்ளமுடியாது. மரிப்பதில் அவர் தமது சொந்த தெய்வீகத்திற்கும், பிதாவின் மகிமைக்கும், சாட்சி உடையவராக இருக்கிறார். கேட்கமுடியாதபடி அவருடைய செவி மந்தமாகவும், இரட்சிக்கமுடியாதபடி அவருடைய கை குறுகினதாகவும் இல்லை. அவர்மூலமாக தேவனிடத்தில் சேருகிறவர்களை முற்றுமுடிய இரட்சிப்பது அவருடைய இராஜரீக உரிமையாக இருக்கிறது. (29)

“இன்று” நான் உனக்குச் சொல்லுகிறேன். நீ என்னோடேகூடப் பரதீசிலிருப்பாய். அந்தக் கள்ளன் கிறிஸ்துவுடனேகூட அந்த நாளில்

பரதீசிலிருப்பான் என்று அவர் வாக்குத்தத்தம்பண்ணவில்லை. அவர் தாமே அந்த நாளில் பரதீசிற்குச் செல்லவில்லை. அவர் கல்லறையில் நித்திரைசெய்திருந்து, உயிர்த்தெழுந்த நாளின் காலையில், "நான் இன்னும் என் பிதாவினிடத்திற்கு ஏறிப்போகவில்லை" (யோவான் 20:17) என்று கூறினார்; ஆனால், சிலுவையில் அறையப்பட்ட நாளில், தோல்வியும் இருளும் வெளியரங்கமாக இருந்த அந்த நாளில், வாக்குறுதி கொடுக்கப்பட்டது. "இன்று" என்று சொல்லப்பட்ட அந்த நாளில், குற்றவாளியாக அவர் சிலுவையின்மீது மரித்துக்கொண்டிருந்தபோது, ஏழையான அந்தப் பாவிக்கு நீ என்னுடனேகூடப் பரதீசிலிருப்பாய் என்று கிறிஸ்து வாக்குறுதிகொடுக்கிறார். (30)

சிலுவையில் அறையப்பட்ட அந்தக் கள்ளர்கள், பக்கத்திற்கு ஒருவனாகவும், இயேசு நடுவிலுமாக அறையப்பட்டனர். இது ஆசாரியர்கள், அதிபதிகள் ஆகியோரின் கட்டளைப்படிச் செய்யப்பட்டிருந்தது. அந்த இரு கள்ளர்களுக்கும் நடுவில் கிறிஸ்து சிலுவையில் அறையப்பட்டது. அந்த மூன்று குற்றவாளிகளில் அவர் மிகவும் பெரிய குற்றவாளியாக இருந்தார் என்பதைக் குறிப்பிட்டுக்காட்டுவதற்காக இருந்தது. "அக்கிரமக்காரர்களில் ஒருவராக எண்ணப்பட்டார்" (ஏசாயா 53:12) என்னும் வேதவாக்கியம் இவ்விதமாக நிறைவேறியிருந்தது; ஆனால், அவர்களுடைய செய்கையின் முழு அர்த்தத்தை அந்த ஆசாரியர்கள் புரிந்துகொள்ளவில்லை. சிலுவையில் அறையப்பட்டவர்களில் இயேசு நடுவாக வைக்கப்பட்டதைப்போல பாவத்தில் கிடந்துகொண்டிருக்கும் ஒரு உலகத்திற்கு மத்தியில், அவருடைய சிலுவை வைக்கப்பட்டிருந்தது. பாவத்திற்காக மனம் வருந்தின அந்தக் கள்ளனிடம் பேசப்பட்டிருந்த பாவ மன்னிப்பின் வார்த்தைகள், உலகத்தின் மிகவும் தூரமான எல்லைகளிலுங்கூட பிரகாசிக்கச்செய்யக்கூடிய ஒரு ஒளியை ஏற்றியது. (31)

மனதிலும் உடலிலும் கடுமையான வேதனையை அனுபவித்துக் கொண்டிருந்த இயேசு, மற்றவர்களைப்பற்றிமட்டுமே எண்ணினதையும், பாவத்திற்காக வருந்தியிருந்த ஆத்துமாவை விசுவாசிக்கும்படி தைரியப்படுத்தியிருந்த முடிவில்லாத அன்பையும் தேவ தூதர்கள் வியப்புடன் பார்த்தனர். அன்புமிக்க ஒரு இரட்சகராக இருந்த அவர், பாவத்திற்காக மனம் வருந்தின அந்தக் கள்ளனின் பாவத்தை மன்னித்திருந்ததைப்போல, ஒரு தீர்க்கதரிசியாக இருந்த அவர், அவருடைய அவமானத்தில் எருசலேமின் குமாரத்திகளை நோக்கிப் பேசியிருந்த அவர், ஒரு ஆசாரியராகவும் பரிந்துபேசுபவராகவும் அவரைக் கொலைசெய்பவர்களை மன்னிக்கும்படி பிதாவினிடத்தில் பரிந்துபேசினார். (32)

இயேசுவின் கண்கள் அவரைச் சுற்றிலுமிருந்த திரளானவர்களைச் சுற்றிப்பார்த்தபோது, ஒரு நபர், அவருடைய கவனத்தைக் கவர்ந்தார். சீடன் யோவானால் தாங்கப்பட்டவளாகச் சிலுவையின்கீழ் அவருடைய அன்னை நின்றிருந்தாள். அவள் அவளுடைய குமாரனைவிட்டுத் தூரமாக இருப்பதைத் தாங்கமுடியாதவளாக இருப்பதையும், முடிவு சமீபமாயிருக்கிறது என்பதையும் அறிந்த யோவான், அவளை மறுபடியும் சிலுவையினிடத்திற்குக் கொண்டுவந்தான். கிறிஸ்து மரணமடையும் தறுவாயில் அவருடைய அன்னையை நினைவுகூர்ந்தார். துயரத்தால் தாக்கப்பட்டிருந்த அவளுடைய முகத்தையும் அதற்குப்பின் யோவானையும் பார்த்து, அவர் அவளிடம்: “ஸ்திரீயே, அதோ, உன் மகன்” என்று கூறினார்; பின்பு யோவானிடம்: “அதோ, உன் தாய்” என்றார். யோவான் கிறிஸ்துவின் வார்த்தைகளைப் புரிந்துகொண்டு, அந்தப் பொறுப்பை ஏற்றுக்கொண்டான்; உடனே, அவன் மரியாளை அவனுடைய வீட்டிற்கு அழைத்துச்சென்று, அந்த நேரம்முதல் அவளை அன்புடன் கவனித்திருந்தான். ஆ! இரக்கமும் அன்புமுள்ள இரட்சகர்! சரீரப்பிரகாரமான அவருடைய வேதனைக்கும் மனவேதனைக்கும் இடையில், அவருடைய அன்னையின்மீது அவர் ஒரு கரிசனைமிக்க எண்ணத்தை வைத்திருந்தார். அவளுடைய சௌகரியத்திற்கான ஏற்பாடுகளைச் செய்வதற்கு அவரிடம் பணம் இருந்திருக்கவில்லை; ஆனால், யோவானின் இருதயத்தில், அவர் ஒரு புனிதமான இடத்தில் வைக்கப்பட்டிருந்து, அதனால் அவர் அவருடைய அன்னையை, அவனிடம் விரும்பி வழங்கப்பட்ட ஒரு நன்கொடையைப்போன்று ஒப்படைத்தார். இவ்விதமாக, அவர் அவளுக்கு மிகவும் அவசியமானதாக இருந்த மரியாளை நேசித்த யோவானிடமிருந்து, மரியாளுக்கு மிகவும் தேவையாயிருந்த மென்மையான அனுதாபத்தைப் பெற்றுக்கொள்ளத்தக்கதாக ஏற்பாடு செய்தார். ஒரு பரிசுத்தமான பொறுப்பாக அவளைப் பெற்றுக்கொண்டதில் யோவான் ஒரு பெரிய ஆசீர்வாதத்தைப் பெற்றுக்கொண்டிருந்தான். அவனுடைய அன்பான ஆண்டவரைத் தொடர்ச்சியாக நினைப்பூட்டும் ஒருவளாக இருந்தாள்—மரியாள். (33)

கிறிஸ்துவின், பெற்றோரின்மீதான பூரணமான அன்பின் உதாரணம், காலம் என்னும் மூடுபனியிலிருந்து, வெளியில் மங்காத ஒளியுடன் பிரகாசிக்கிறது. குடும்பப் பாரத்தைச் சுமக்க உதவும் அன்றாட உழைப்பில், இயேசு ஏறத்தாழ முப்பது வருடங்கள் உதவியிருந்தார்; இப்பொழுதும் அவருடைய கடைசிக் கடுந்துயரிலுங்கூட, துக்கத்தில் ஆழ்ந்திருக்கும் அவருடைய விதவையான அன்னைக்கான ஏற்பாட்டைச் செய்வதற்கு அவர் நினைக்கிறார். நமது கர்த்தருடைய ஒவ்வொரு சீடனிடத்திலும் இதேவிதமான ஆவி காணப்படும். தங்களுடைய பெற்றோரை மதிப்பதும் அவர்களுக்கான ஏற்பாடுகளைச் செய்வதும் தங்களுடைய மதத்தின்

ஒரு பகுதியாக இருக்கிறது என்பதை கிறிஸ்துவைப் பின்பற்றுபவர்கள் உணருவார்கள். அவருடைய அன்பு எங்கு நெஞ்சார நேசிக்கப்படுகிறதோ, அந்த இருதயத்திலிருந்து, சிந்தனையுள்ள கரிசனையையும் மென்மைமிக்க அனுதாபத்தையும் பெற்றுக்கொள்ள தகப்பனும் தாயும் ஒருபோதும் தவறமாட்டார்கள். (34)

மனித இனத்தின் மீட்பின் விலையாக, மகிமையின் கர்த்தர் உயிர்விட்டுக்கொண்டிருந்தார். தமது விலைமதிப்புமிக்க ஜீவனைக் கொடுப்பதினால், வெற்றிமிக்க மகிழ்ச்சியினால், கிறிஸ்து உயர்த்தப்பட்டிருந்திருக்கவில்லை. அனைத்தும் ஒடுக்கும் துக்கமாக இருந்தது. மரணத்தைப்பற்றிய பயம் அவர்மீது பாரமாக இருக்கவில்லை. அவருடைய வெளிக்காட்டமுடியாத வேதனைக்கு சிலுவையின் வேதனையும் அவமானமும் காரணமாயிருக்கவில்லை. பாடுகளை அனுபவிப்பவர்களின் பிரபுவாகக் கிறிஸ்து இருந்தார்; ஆனால், அவருடைய பாடுகள், பாவத்தின் கடுமையின் தீவிரமான தன்மை, தீமையுடனுள்ள பழக்கத்தினால் அதன் மிகப் பெரிய குற்றத்திற்கு மனிதன் குருடனாகிவிட்டிருப்பதைப்பற்றிய ஒரு அறிவு, ஆகியவைபற்றிய உணர்வு, காரணமானதாக இருந்தது. மனித இருதயத்தின் மீதுள்ள பாவத்தின்பிடி, எவ்வளவு ஆழமானதாக இருந்தது? எப்படி ஒரு சிலர்மட்டுமே அதன் வல்லமையிலிருந்து விடுதலைபெற விருப்பமுள்ளவர்களாக இருப்பார்கள் என்பதைக் கிறிஸ்து கண்டார். தேவனிடத்திலிருந்து உதவியில்லாவிட்டால், மானுடம் அழிந்தாக வேண்டும் என்பதை அவர் அறிந்திருந்ததுடன், ஏராளமான உதவிகிடைக்கின்ற அந்த இடத்திலேயே, திரளானவர்கள் அழிந்துகொண்டிருப்பதையும் அவர் கண்டார். (35)

நமது அக்கிரமங்களனைத்தும் நமது பதிலாளியும் பிணையாளியுமான கிறிஸ்துவின்மீது வைக்கப்பட்டது. நியாயப்பிரமாணத்தின் ஆக்கினையிலிருந்து நம்மை மீட்பதற்காக, அவர் ஒரு அக்கிரமக்காரராக எண்ணப்பட்டார். ஆதாமின் பின்சந்ததியினர் ஒவ்வொருவரின் குற்றமும், அவருடைய இருதயத்தை அழுத்திக்கொண்டிருந்தது. பாவத்திற்கெதிரான தேவனுடைய கோபம், அக்கிரமத்தின் காரணமாக வெளிக்காட்டப்பட்ட அவருடைய பயங்கர அதிருப்தி ஆகியவை, அவருடைய குமாரனின் ஆத்துமாவை பேரச்சத்தினால் நிரப்பினது. கிறிஸ்து, அவருடைய வாழ்க்கை முழுவதிலும் விழுந்துபோன ஒரு உலகத்திற்கு, தேவனுடைய இரக்கம், மன்னிக்கும் அன்பு ஆகியவைகளை வெளிப்படுத்திக்கொண்டிருந்தார். பாவிகளில் பெரியவனாக இருந்தவனுக்கு இரட்சிப்பை அருளுவது அவருடைய கொள்கையின் கருப்பொருளாக இருந்தது; ஆனால், இப்பொழுது அவர் சுமந்துகொண்டிருக்கும் குற்றத்தின் பயங்கரமான பாரத்துடன், ஒப்புரவுசெய்யும்

அவருடைய பிதாவின் முகத்தை, அவரால் பார்க்கமுடியாது. மிக அதிகமான வேதனைமிக்க இந்த நேரத்தில், இரட்சகரிடமிருந்து தெய்வீக முகம் பின்னிழுத்துக்கொள்ளப்படுவது, மனிதனால் ஒரு போதும் முழுவதுமாக அறிந்துகொள்ளமுடியாத விதத்திலுள்ள ஒரு துயரத்தால் அவருடைய இருதயம் துளைக்கப்பட்டிருந்தது. உடல் வேதனையை உணரமுடியாத அளவிற்கு, அந்த வேதனை மிகவும் பெரியதாக இருந்தது. (36)

சாத்தான் அவனுடைய பயங்கரமான சோதனைகளினால், அவருடைய இருதயத்தைக் கசக்கிப் பிழிந்திருந்தான். கல்லறையின் வாசல்களுக்கூடாகப் பார்க்கமுடியாதவராக இரட்சகர் இருந்தார். கல்லறையைவிட்டு ஒரு வெற்றி வீரராக வருகிறது அல்லது அவருடைய தியாகபலி பிதாவினால் ஏற்றுக்கொள்ளப்பட்டுவிட்டது என்பதை அவரிடம் கூறுகின்ற நம்பிக்கை, அவருக்குக் காணப்படவில்லை. அவர்களுடைய பிரிவு நித்தியமானதாக இருக்குமளவிற்குப் பாவம் தேவனுக்கு எதிர்ப்புள்ளதாக இருந்தது என்பதினால் அவர் பயந்தார். குற்றமுள்ள இனத்திற்காக இனிமேல் இரக்கம் மன்றாடாதபோது, கிறிஸ்து உணர்ந்த வேதனையைப் பாவி உணருவான். மனிதனின் பதிலாளியாக இருக்கும் அவர்மீது, பிதாவின் கோபத்தைக் கொண்டுவரச்செய்ததும், கசப்பான அந்தப் பாத்திரத்தைப் பானம்பண்ணச்செய்து, தேவகுமாரனுடைய இருதயத்தை உடைத்ததும், பாவம்பற்றிய உணர்வாக இருந்தது. (37)

இரட்சகரின் நம்பிக்கையற்ற வேதனையை தேவ தூதர்கள் வியப்புடன் சாட்சியாகக் கண்டிருந்தனர். பரலோக சேனைகள் அந்தப் பயங்கரமான காட்சியிலிருந்து, அவர்களின் முகங்களைத் திரையிட்டு மறைத்துக்கொண்டனர். அசையா இயற்கை, அவமானப்பட்டுக்கொண்டும் மரித்துக்கொண்டுமிருந்த அதன் ஆக்கியோன்மேல் அனுதாபப்பட்டது. பயங்கரமான அந்த காட்சியைக்காண சூரியன் மறுத்துவிட்டது. நண்பகலில் பூமியை ஒளிப்படுத்திக்கொண்டிருந்த அதன் முழுமையான ஒளிக்கதிர்கள், திடீரென்று துடைத்து நீக்கப்பட்டுவிட்டதுபோல் காணப்பட்டது. சவப் பெட்டியை மூடுகின்ற கருப்புத் துணியைப்போல, முழுமையான இருள் சிலுவையை மூடிக்கொண்டது. “ஒன்பதாம்மணி நேரம்வரைக்கும் பூமி யெங்கும் அந்தகாரமுண்டாயிற்று.” அந்த இருளுக்கு கிரகணம் போன்ற எதுவும் இயற்கைக் காரணங்களாக இருக்கவில்லை. அது சந்திரனும் விண்மீன்களுமில்லாத நள்ளிரவைப்போன்ற ஆழ்ந்த இருளாக, பின்வரும் சந்ததியினரின் விசுவாசம் உறுதிப்படும்படி தேவனால் கொடுக்கப்பட்ட சாட்சியாக இருந்தது. (38)

அந்த கனத்த இருளில், தேவப்பிரசன்னம் மறைக்கப்பட்டிருந்தது. இருளை அவருடைய கூடாரமாக்கி, மனிதக்கண்களிலிருந்து அவருடைய மகிமையை மறைக்கிறார். தேவனும் அவருடைய தூதர்களும், சிலுவைக் கருகில் இருந்திருந்தனர். பிதா அவருடைய குமாரனுடன் இருந்தார்; ஆயினும், அவருடைய பிரசன்னம் வெளிப்படுத்தப்படவில்லை. அவருடைய மகிமை மேகத்திலிருந்து மின்னியிருக்குமானால், பார்த்திருந்த ஒவ்வொரு மனிதனும் அழிந்திருப்பான். அந்த பயங்கரமான மணி நேரத்தில், பிதாவின் பிரசன்னத்தினால், கிறிஸ்து ஆறுதற்படுத்தப்படக்கூடாதவராக இருந்தார். அவர் திராட்சை ஆலையைத் தனியாக மிதித்தார்; மக்களில் ஒருவனும் அவருடனிருக்கவில்லை. (39)

தேவன், அவருடைய குமாரனின் கடைசி வேதனையை அந்தக் கனத்த இருளில் திரையிட்டு மூடினார். கிறிஸ்துவை அவருடைய பாடுகளில் கண்டிருந்த அனைவரும், அவருடைய தெய்வீகம்பற்றிய மன உணர்த்துதலை அடைந்திருந்தனர். மானுடத்தினால் ஒருமுறை பார்க்கப்பட்டிருந்த அந்த முகம் ஒருபோதும் மறக்கப்படாமலிருந்தது. ஒரு கொலைகாரன் என்னும் குற்றத்தைக் காயீனின் முகம் வெளிக்காட்டியிருந்ததைப்போல, கிறிஸ்துவின் முகம், குற்றமற்ற தன்மை, அமைதி, அனுதாபம் ஆகிய தேவனுடைய சாயலை வெளிக்காட்டியிருந்தது; ஆனால், பரலோகத்தின் முத்திரை—அடையாளத்திற்கு—அவரைக் குற்றஞ்சாட்டியிருந்தவர்கள் செவிசாய்க்காதவர்களாக இருந்தனர். வேதனைமிக்க நீண்ட மணி நேரங்களுக்கூடாகக் கிறிஸ்து, பரிகாசஞ்செய்யும் திரளானவர்களால் பார்க்கப்பட்டிருந்தார்; இப்பொழுது தேவனுடைய மேலாடையினால், அவர் இரக்கத்துடன் மறைக்கப்பட்டிருந்தார். (40)

கல்லறையின் மௌனம், கல்வாரியின்மீது விழுந்துவிட்டதுபோல் காணப்பட்டது. சிலுவையைச் சுற்றிலும் கூடியிருந்த நெருக்கமான கூட்டத்தினரை, கண்டறியமுடியாத ஒரு பயங்கரம் பற்றிக்கொண்டது. பாதி கூறப்பட்டிருந்த வாக்கியங்களுக்கு நடுவில், சபிப்பதும் நிந்திப்பதும் நின்றுவிட்டது. ஆண்களும் பெண்களும் பிள்ளைகளும் பூமியின்மீது முகங்குப்புற விழுந்தார்கள். அவ்வப்போது மேகத்திலிருந்து தெளிவான மின்னல்கள் தோன்றி, சிலுவையையும் சிலுவையில் அறையப்பட்டிருந்த மீட்பரையும் வெளிப்படுத்தினது. ஆசாரியர்கள், அதிபதிகள், வேதபாரகர்கள், தண்டனையை நடப்பித்தவர்கள், கலகஞ்செய்யும் கூட்டத்தினர் ஆகிய அனைவரும் தேவ கோபமாகிய அவர்களுடைய தண்டனையின் நேரம் வந்துவிட்டது என்று நினைத்தார்கள். சற்று நேரத்திற்குப்பின் சிலர், இயேசு சிலுவையிலிருந்து கீழே இறங்கி வருவார் என்று மெல்லிய குரலில்

பேசிக்கொண்டார்கள். சிலர் தங்களுடைய மார்புகளில் அடித்துக் கொண்டும், பயத்தினால் அழுது புலம்பிக்கொண்டும், இருளில் தடவிக்கொண்டு நகரத்திற்குத் திரும்பச்செல்ல முயன்றனர்.(41)

ஒன்பதாம் மணிநேரத்தில் இருள் மக்களிடத்திலிருந்து நீங்கினது; ஆனால், இன்னும் இருள் இரட்சகரை மூடிக்கொண்டிருந்தது. அது அவருடைய இருதயத்தின்மீது பாரமாக அழுத்திக்கொண்டிருந்த கடுந்துயர், பயங்கரம் ஆகியவைகளின் ஒரு அடையாளமாக இருந்தது. சிலுவையைச் சூழ்ந்திருந்த துயரமிக்க இருளை எந்தக் கண்களினாலும் துளைத்துச் செல்ல முடியாமலிருந்ததுடன், பாடுபட்டுக்கொண்டிருந்த கிறிஸ்துவின் ஆத்துமாவைச் சூழ்ந்திருந்த ஆழமான இருளை ஒருவராலும் ஊடுருவிச் செல்லமுடியாமலிருந்தது. அவர் சிலுவையில் தொங்கினபோது, கோபமிக்க மின்னல்கள் அவர்மீது வீசப்பட்டதுபோல் காணப்பட்டது; அப்பொழுது இயேசு, “ஏலி! ஏலி! லாமா சபக்தானி, என் தேவனே! என் தேவனே! ஏன் என்னைக் கைவிட்டீர்” என்று சத்தமிட்டுக் கூப்பிட்டார். இரட்சகரைச் சுற்றிலும் இருள் அமர்ந்தபோது, அநேகக் குரல்கள், “பரலோகத்தின் பழிவாங்குதல் இவன்மீது இருக்கின்றது; இவன் தன்னை தேவகுமாரன் என்று உரிமை பாராட்டினதால், தேவ கோபமாகிய அம்பு இவன்மீது வீசப்பட்டிருக்கிறது” என்று கூறினார்கள். அவர்மீது நம்பிக்கைவைத்திருந்த அநேகர் அவருடைய நம்பிக்கையை இழந்த அழுகுரலைக் கேட்டார்கள். நம்பிக்கை அவர்களைவிட்டு நீங்கினது. இயேசுவை, தேவன் கைவிட்டிருந்தாரானால், அவருடைய அடியார்களின் நம்பிக்கையில் என்ன இருக்கும்? (42)

ஒடுக்கப்பட்டிருந்த கிறிஸ்துவின் ஆவியினிடத்திலிருந்து, அந்த இருள் நீங்கினபோது, சரீரப்பிரகாரமான பாடுகளை உணரக்கூடிய ஒரு நிலைமைக்கு எழுப்புதலையடைந்து, “நான் தாகமாயிருக்கிறேன்” என்று அவர் கூறினார். உலர்ந்துபோன அந்த உதடுகளைக்கண்ட ரோம நாட்டுப் போர்ச்சேவகர்களில் ஒருவன், கடற்காளானை எடுத்து, அதை ஒரு கோலில் மாட்டி இயேசுவிற்குக் கொடுத்தான்; ஆனால், ஆசாரியர்கள் அவருடைய வேதனையில் அவரைப் பரிகாசஞ்செய்தார்கள். பூமியை இருள்மூடினபோது, அவர்கள் பயத்தால் நிறைந்தவர்களாக இருந்து, அது குறைந்தபோது, இன்னுங்கூட இயேசு அவர்களிடமிருந்து தப்பிச்சென்றுவிடுவார் என்னும் பயம், அவர்களிடத்திற்குத் திரும்பியது. ஏலி! ஏலி! லாமா சபக்தானி என்னும் அவருடைய வார்த்தைகளை, அவர்கள் தவறாக விளக்கஞ் செய்திருந்தனர். கசப்புமிக்க அவமதிப்புடனும் பரிகாசத்துடனும், இவன் எலியாவைக் கூப்பிடுகிறான் என்று அவர்கள் கூறினார்கள். அவருடைய வேதனைகளிலிருந்து, அவரை விடுவிக்கும்படி அவர்களுக்குக் கொடுக்கப்

பட்டிருந்த கடைசி வாய்ப்பை அவர்கள் மறுத்திருந்தனர். “பொறு, எலியா இவனை இரட்சிக்க வருவானோ, பார்ப்போம்” என்றார்கள். (43)

கறையில்லாத தேவகுமாரன், சிலுவையின்மீது தொங்கினார். அடிக்கப்பட்டதினால் அவருடைய சதை கிழிந்திருந்தது. ஆசீர்வதிப்பதற் கென்று அடிக்கடி நீட்டப்பட்டிருந்த கரங்கள் மரக்கட்டைகளில் ஆணிகளால் அடிக்கப்பட்டிருந்தன. அன்பின் ஊழியங்களைச் செய்வதில் களைப்படை யாதவைகளாக இருந்த அந்தப் பாதங்கள், மரத்துடன் சேர்த்து ஆணிகளால் கடாவப்பட்டிருந்தன. முள்முடியினால் அந்த இராஜரீகச் சிரம் துளைக்கப்பட்டிருந்தது. துயரத்தின் அழுகுரலிற்காக அந்த உதடுகள் நடுங்கி நெளிந்திருந்தன. இவைகளனைத்தும்—அதாவது அவருடைய சிரசிலிருந்தும், கைகளிலிருந்தும், பாதங்களிலிருந்தும் ஒழுகின இரத்தத்தின் துளிகள், அவருடைய உடலை அசைத்த கொடிய வேதனை, அவருடைய பிதாவின் முகம் மறைக்கப்படுவதால் உண்டாகும் சொல்லமுடியாத கடுந்துன்பம் ஆகிய யாவும் உனக்காகத்தான்; தேவகுமாரன் இந்தக் குற்றத்தின் பாரத்தைச் சுமக்கச் சம்மதித்திருக்கிறார்; உனக்காகத்தான் மரணத்திற்குக் கொள்ளையாகியிருந்து, பரதீசின் வாசலைத் திறக்கிறார் என்பதை—மனித இனத்தின் பிள்ளையினிடத்தில் அறிவித்துக்கொண்டிருக்கிறது. கோபமிக்க அலைகளை அமைதியடையச்செய்து, நுரைகளால் மூடப்பட்டிருந்த அலைகளின்மீது நடந்தவர், பேய்களை நடுங்கச் செய்து, நோய்களை ஓடச்செய்தவர், குருடான கண்களைத் திறந்திருந்தவர், மரித்தவனை உயிருடன் வரும்படி அழைத்தவர்—தம்மையே ஒரு தியாகபலியாகச் செலுத்தியவர், இதை உன்மீதுள்ள அன்பினால் செய்திருக்கிறார். பாவத்தைச் சுமப்பவராக இருக்கும் அவர், தெய்வீக நியாயத்தீர்ப்பின் கோபத்தை தாங்கிக்கொண்டு உனக்காகப் பாவமாகிறார். (44)

அந்த பயங்கரமான காட்சியின் முடிவை, அதைக் கண்டிருந்தவர்கள் மௌனமாகக் கவனித்திருந்தனர். சூரியன் ஒளிவீசினது; ஆனால், இன்னும் சிலுவையை அந்த இருள் மூடியிருந்தது. ஆசாரியர்களும் அதிபதிகளும் எருசலேமிற்கு நேராகப் பார்த்தார்கள். இதோ, அந்தக் கனமிக்க மேகம் அந்த நகரத்தின்மேலும் யூதேயாவின் சமவெளியின்மேலும் தங்கியிருந்தது. ஒரு சமயத்தில் ஆதரவுள்ளதாக இருந்திருந்த எருசலேமின்மீதிருந்து, நீதியின் சூரியனாக இருந்தவர், உலகத்திற்கு ஒளியாக இருந்தவர், தமது ஒளிக்கதிர்களைப் பின்னிழுத்துக்கொண்டிருந்தார். தனது முடிவை அடைந்திருந்த அந்த நகரத்தின்மீது, தேவ கோபமாகிய பயங்கரமான மின்னல்கள் அனுப்பப்பட்டிருந்தன. (45)

தீடீரென்று அந்த இருள் சிலுவையைவிட்டு உயர்ந்து நீங்கினபோது, படைப்பு முழுவதிலும் திரும்ப ஒலிக்கின்றது போன்ற—தெளிவான எக்காளம்போன்ற குரல்களில் கிறிஸ்து: "முடிந்தது", பிதாவே, உம்முடைய கைகளில் என் ஆவியை ஒப்புவிக்கிறேன்" என்று மகா சத்தமாய்க் கூப்பிட்டுச் சொன்னார். சிலுவையைச் சுற்றிலும் ஒரு ஒளி வட்டமிட்டது. இரட்சகரின் முகம் சூரியனைப்போன்ற மகிமையுடன் பிரகாசித்தது. அதற்குப்பின் அவர் தமது தலையைத் தமது மார்பின்மேல் சாய்த்து ஜீவனைவிட்டார். (46)

பயங்கரமான அந்த இருளுக்கு மத்தியில், வெளித்தோற்றத்திற்கு தேவனால் கைவிடப்பட்டவரைப்போல, மனிதத் துயரத்தின் பாத்திரத்திலிருந்த வண்டலின் கடைசிச் சொட்டுமட்டும் குடித்தார். பயங்கரமான அந்த மணி நேரங்களில் அவருடைய பிதாவின் ஏற்றுக்கொள்ளுதல் அவருக்குக் கொடுக்கப்பட்டிருக்கிறது என்பதற்கான சான்றினை இதுவரை அவர் சார்ந்திருந்தார். அவருடைய பிதாவின் குணத்துடன் அவர் அறிமுகமானவராக இருந்தார். அவருடைய நீதி, இரக்கம், பேரன்பு ஆகியவைகளை அவர் புரிந்துகொண்டிருந்தார். எவருக்குக் கீழ்ப்படிவது அவருடைய மகிழ்ச்சியாக எப்பொழுதும் இருந்ததோ, அவர்மீது விசுவாசத்தினால் அவர் சார்ந்திருந்தார்—இளைப்பாறியிருந்தார். கீழ்ப்படிதலினால் அவர் தம்மைத் தேவனிடம் ஒப்படைத்திருந்தபோது, பிதாவின் ஆதரவை இழந்துவிட்டதின் உணர்வு பின்னால் இழுத்துக்கொள்ளப்பட்டிருந்தது. விசுவாசத்தினால் கிறிஸ்து வெற்றிவீரரானார். (47)

அப்படிப்பட்ட ஒரு காட்சியை பூமி இதற்குமுன் ஒருபோதும் கண்டிருந்திருக்கவில்லை. திரளானவர்கள், அசையாமல் திகைத்து பேச்சற்று மீட்பரையே நோக்கிப்பார்த்தார்கள். பூமியை மறுபடியும் இருள் கவ்வ, பயங்கரமான—கரகரப்பான—உருளும் இடிமுழக்கம் போன்ற சத்தம் ஒன்று கேட்கப்பட்டது. ஒரு கடுமையான பூமியதிர்ச்சி உண்டானது. மக்கள் குவியல்களாக அசைக்கப்பட்டனர். மிகவும் காட்டுத்தனமான பயங்கரமான குழப்பமும் பயமும் உண்டாயிற்று. சுற்றிலுமிருந்த மலைகளில் பாறைகள் வேறுவேறாகப் பிளந்து சமவெளிகளில் சிதறிப்போயின. கல்லறைகள் உடைந்து நொறுங்குண்டு சடலங்கள் வெளியே வீசியெறியப்பட்டன. அணுக்கள் நடுங்கியதைப்போல படைப்பனைத்தும் நடுங்கியது. ஆசாரியர்கள், அதிபதிகள், போர்ச் சேவகர்கள், தண்டனையை நடப்பிப்பவர்கள், மக்கள் ஆகியோர் பயத்தால் பேசாதவர்களாக நிலத்தின்மீது முகங்குப்புற விழுந்தனர். (48)

"முடிந்தது" என்னும் உரத்த சத்தம் கிறிஸ்துவின் உதடுகளிலிருந்து வந்தபோது, ஆசாரியர்கள் தேவாலயத்தில் ஊழியஞ்செய்துகொண்டிருந்தனர்.

அது அந்திப்பலியின் நேரமாக இருந்தது. பலியிடப்படுவதற்கென்று, கிறிஸ்துவை சுட்டிக்காட்டுவதாக இருந்த ஆட்டுக்குட்டி கொண்டுவரப்பட்டிருந்தது. ஆசாரியன் அவனுடைய முக்கியத்துவமிக்க அழகிய ஆசாரிய உடையை அணிந்தவனாக, ஆபிரகாம் தன் குமாரனைப் பலியிடப்போவதற்காக நின்றிருந்ததைப்போல, அவன் தன் கத்தியை உயர்த்தினவனாக நின்றிருந்தான். தீவிரமான ஆர்வத்துடன் மக்கள் பார்த்துக்கொண்டிருந்தனர்; ஆனால், பூமியதிர்ச்சி உண்டாகி பூமி நடுங்குகிறது; ஏனெனில், கர்த்தர் தாமே சமீபித்துக்கொண்டிருக்கிறார். காணமுடியாத ஒரு கையினால் தேவாலயத்தின் உள்பக்கத் திரைச்சீலை மேலிருந்து கீழாக கிழிக்கப்படும் ஒரு சத்தத்துடன் கிழிக்கப்பட்டு, முன்பு தேவப் பிரசன்னத்தினால் நிரப்பப்பட்டிருந்த ஒரு இடம், திரளானவர்கள் பார்க்கும்படி திறந்துவிடப்படுகிறது. இந்த இடத்தில் ஷெகீனா வாசஞ்செய்திருந்தது. இங்கு கிருபாசனத்திற்கு மேலாக, தேவன் அவருடைய பிரசன்னத்தை வெளிக்காட்டியிருந்தார். ஆலயத்தின் மற்ற பகுதியைப் பிரித்திருந்த அந்தத் திரைச்சீலையை, பிரதான ஆசாரியனைத்தவிர வேறு ஒருவனும் ஒருபோதும் உயர்த்தியிருக்கவில்லை. மக்களின் பாவங்களுக்கான பாவ நிவாரணம் செய்வதற்காக, அவன் வருடத்திற்கு ஒரு தடவை அதற்குள் பிரவேசித்திருந்தான்; ஆனால், இதோ, அந்தத் திரைச்சீலை, இரண்டாகக் கிழிக்கப்பட்டிருக்கிறது. பூமிக்குரிய பரிசுத்த ஸ்தலத்தின் மகா பரிசுத்தஸ்தலம், இனிமேல் பரிசுத்தமானதல்ல. (49)

அனைத்தும் பயங்கரமாகவும் குழப்பமாகவும் இருக்கின்றது. அந்திப்பலிக்காக நிறுத்தப்பட்ட ஆட்டை ஆசாரியன் வெட்டப்போகிறவனாக இருக்கிறான்; ஆனால், அவனுடைய நடுங்கும் கையிலிருந்து அந்தக் கத்தி கீழே விழுந்துவிடுவதைத் தொடர்ந்து, அந்த ஆட்டுக்குட்டி தப்பியோடிவிடுகிறது. தேவகுமாரனின் மரணத்தில் நிஜம், பொருளாக இருந்துவந்த நிழலைச் சந்தித்தது. பெரும் தியாகபலி செலுத்தப்பட்டிருக்கிறது. மகா பரிசுத்த ஸ்தலத்திற்கான பாதை திறந்துவைக்கப்பட்டிருக்கிறது. புதியதும் ஜீவனுள்ளதுமான ஒன்று எல்லோருக்காகவும் ஆயத்தஞ்செய்யப்பட்டிருக்கிறது. பிரதான ஆசாரியன் வரவேண்டுமென்று இனிமேல் பாவத்தையுடைய துயரமிக்க மானுடம் காத்துக்கொண்டிருக்கவேண்டியதில்லை. இனிமேல் பரலோகங்களின் பரலோகமாகவுள்ள இடத்தில், ஆசாரியராகவும் பரிந்து பேசுபவராகவும் இரட்சகர் ஊழியஞ்செய்யவேண்டியவராக இருந்தார். அது, ஆராதனைசெய்துகொண்டிருந்தவர்களை நோக்கி, ஒரு ஜீவனுள்ள குரல், இப்பொழுது பாவத்திற்காகப் பலிகளையும் காணிக்கைகளையும் செலுத்துவதில் ஒரு முடிவை உண்டாக்கியிருக்கிறது. “இதோ, வருகிறேன், (புத்தகச் சுருளில் என்னைக் குறித்து எழுதியிருக்கிறது) என் தேவனே! உமக்குப் பிரியமானதைச் செய்ய விரும்புகிறேன் என்ற அவருடைய

வார்த்தையின்படியே தேவகுமாரன் வந்திருக்கிறார். “தம்முடைய சொந்த இரத்தத்தினாலும் ஒரேதரம் மகா பரிசுத்தஸ்தலத்திலே பிரவேசித்து, நித்திய மீட்பை உண்டுபண்ணினார்”—எபிரெயர் 10:7; 9:12. (50) ★

# 79

# முடிந்தது!

## (The Desire of Ages, pp. 758–768)

கிறிஸ்து எந்தப் பணியைச் செய்வதற்காக வந்தாரோ அதை நிறைவேற்றும்வரை தமது ஜீவனை விடாதிருந்து, அவருடைய இறுதி மூச்சை விடும்போது, "முடிந்தது" என்று உரத்த சத்தமிட்டார்–யோவான் 19:30. அந்த யுத்தம் ஜெயிக்கப்பட்டவிட்டது. அவருடைய வலது கரமும் அவரது பரிசுத்தமான புயமும் அவரை வெற்றியடையச் செய்திருந்தது. ஒரு வெற்றிவீரராக அவர் அவருடைய துகில் கொடியை நித்தியமான உயரத்தில் நாட்டினார். தூதர்களுக்கிடையில் மகிழ்ச்சியுண்டாகவில்லையா? இரட்சகரின் வெற்றியில் பரலோகம் முழுவதும் வெற்றியடைந்தது. தான் தோற்கடிக்கப்பட்டு தன்னுடைய இராஜ்யம் கவிழ்ந்தது என்பதை சாத்தான் அறிந்தான். (1)

தூதர்களுக்கும் விழுந்துபோகாத உலகங்களுக்கும் "முடிந்தது" என்னும் அந்த சத்தம், மிக ஆழமான முக்கியத்துவத்தை உடையதாக இருந்தது. அவர்களுக்காகவும், அவர்களைப்போலவே நமக்காகவும் மீட்பின் பெரும்பணி நிறைவேற்றப்பட்டிருந்தது. நம்மோடு அவர்களும் கிறிஸ்துவின் வெற்றியின் கனிகளில் பங்குபெறுகின்றனர். (2)

தூதர்களுக்காவது அல்லது விழுந்துபோகாத உலகங்களில் உள்ளவர்களுக்காவது சாத்தானின் குணம் கிறிஸ்துவின் மரணம்வரை தெளிவாக வெளியாகவில்லை. தலைமைவஞ்சகன் தனது கொள்கைகளை வஞ்சகம் என்னும் உடையால் மறைத்திருந்தான். அது பரிசுத்தமாக இருப்பவர்களாலுங்கூடப் புரிந்துகொள்ளமுடியாததாக இருந்தது. அவனுடைய கலகத்தின் தன்மையை அவர்கள் தெளிவாகக் காணாதிருந்தனர். (3)

தன்னை தேவனுக்கு எதிராக நிறுத்தியிருந்தவன், ஆச்சரியமான வல்லமையையும் மகிமையையும் உடைய ஒருவனாக இருந்தான். லூசிபரைப்பற்றிக் கர்த்தர்: "நீ விசித்திரமாய்ச் செய்யப்பட்ட முத்திரைமோதிரம்; நீ ஞானத்தால் நிறைந்தவன்; பூரண அழகுள்ளவன்" (எசேக்கியேல் 28:12)

என்று கூறுகிறார். லூசிபர் காப்பாற்றுகிறதற்காக அபிஷேகம் பண்ணப்பட்ட கேரூபீனாக இருந்தான். அவன் தேவப்பிரசன்னத்தின் ஒளியில் நின்றிருந்தான். படைக்கப்பட்ட அனைத்திலும் அவன் மிகவும் உயர்ந்தவனாக இருந்து, பிரபஞ்சத்திற்கு தேவனுடைய நோக்கங்களை வெளிப்படுத்துவதில் முதன்மையானவனாக இருந்தான். பாவஞ்செய்தபின் அவனுடைய வஞ்சிக்கும் வல்லமை அதிக வஞ்சகமானது. பிதாவோடு அவன் கொண்டிருந்த மிகவும் உயர்ந்த பதவியினால், அவனுடைய குணத்தைத் திரைநீக்கஞ்செய்வது மிகவும் கடினமானதாக இருந்தது. (4)

ஒரு கூழாங்கல்லை பூமியின்மீது வீசியெறிவதைப்போல மிகவும் எளிதாக தேவனால் சாத்தானையும் அவனுடைய அனுதாபிகளையும் அழித்திருக்கமுடியும். ஆனால் அவர் அதைச் செய்யவில்லை. கலகம், பலாத்காரத்தினால் மேற்கொள்ளப்படக்கூடாத ஒன்றாக அது இருந்தது. சாத்தானின் அரசாங்கத்தின்கீழ் மட்டுந்தான் வற்புறுத்தும் வல்லமை காணப்படுகிறது. கர்த்தருடைய கொள்கைகள் இந்த கிரமத்தில் உள்ளவை கள் அல்ல. அவருடைய அதிகாரம் நல்ல தன்மையிலும், இரக்கத்திலும், அன்பிலும் இருக்கிறது. அந்தக் கொள்கைகளின் அடிப்படையாகக் கொண்டவைகளைத்தான் அவர் உபயோகிக்கவேண்டும்.தேவனுடைய அரசாங்கம் சன்மார்க்கமானது; சத்தியமும் அன்புமே அதன் வெற்றிபெறும் வல்லமைகளாக இருக்கவேண்டும். (5)

நித்தியமான பாதுகாப்பு என்னும் அடிப்படையில் காரியங்களை வைப்பது தேவனுடைய நோக்கமாக இருந்தது. சாத்தான் தன்னுடைய அரசாங்கத்தின் அடிப்படைக் கொள்கைகளை முழுமையாக வளர்ப்பதற்கு அவனுக்குக் காலம் கொடுக்கப்படவேண்டும் என்று பரலோக ஆலோசனைச் சங்கத்தில் முடிவுசெய்யப்பட்டது. இவைகள் தேவனுடைய கொள்கை களைவிட மேலானவைகள் என்று அவன் கூறியிருந்தான். பரலோகப் பிரபஞ்சம் பார்க்கிறதற்கேதுவாக, சாத்தானுக்கு அவனுடைய கொள்கைகளை செயல்படுத்த காலம் கொடுக்கப்பட்டது. (6)

சாத்தான் மனிதர்களைப் பாவத்திற்குள் நடத்தினபோது, மீட்பின் திட்டம் செயலுக்கு வந்தது. மனிதனை உயர்த்துவதற்காக நாலாயிரம் வருடங்களாகக் கிறிஸ்து செயலாற்றிக்கொண்டிருந்தபோது, சாத்தான் அவர்களுடைய அழிவிற்காகவும் கீழான நிலைக்காகவும் செயலாற்றிக் கொண்டிருந்தான். பரலோகப் பிரபஞ்சம் அவையனைத்தையும் கண்டது. (7)

இயேசு உலகத்திற்குள் வந்தபோது, சாத்தானின் வல்லமை அவருக்கெதிராகத் திருப்பிவிடப்பட்டது. பெத்லகேமில் அவர் ஒரு

சிறு குழந்தையாகத் தோன்றின நேரம்முதல், அவருக்கு அழிவைக் கொண்டுவருவதற்காக அந்த அபகரிப்போன் செயலாற்றினான். இயேசு ஒரு பூரணமான பிள்ளையாக வளர்ச்சியடைவதிலிருந்தும், குற்றமில்லாத மனித வயதை அடைவதிலிருந்தும், ஒரு பரிசுத்தமான ஊழியத்தைச் செய்வதிலிருந்தும், ஒரு பழுதற்ற தியாகபலியாவதிலிருந்தும் அவரைத் தடைசெய்ய அவன் தன்னால் முடிந்த எல்லா வழிகளிலும் வகைதேடியிருந்தான். ஆனால் அவன் தோற்கடிக்கப்பட்டான். அவனால் இயேசுவைப் பாவஞ்செய்யும்படி நடத்தமுடியவில்லை. அவரை அதைரியப் படுத்தவோ அல்லது பூமியில் செய்யும்படி வந்திருந்த அவருடைய வேலையிலிருந்து அவரைத் துரத்திவிடவோ அவனால் முடியவில்லை. சாத்தானின் கோபமாகிய புயல், வனாந்தரத்திலிருந்து கல்வாரிவரை அவர்மீது மோதியடித்தது. ஆனால் எந்த அளவிற்கு அதிகமாக இரக்கமற்றவிதத்தில் அது விழுந்ததோ, அந்த அளவிற்கு அதிகமான உறுதியுடன் தேவகுமாரன் அவருடைய பிதாவின் கரத்தைப் பற்றிக்கொண்டிருந்து, இரத்தக்கறைபடிந்த பாதையில் முன்னோக்கி நடந்தார். அவரை ஒடுக்குவதற்காகவும், அவர்மீது ஜெயங்கொள்ளுவதற்காகவும் சாத்தான் செய்த முயற்சிகள் அனைத்தும் அவருடைய கறையற்ற குணத்தை ஒரு தூய்மையான ஒளியில் வெளியில் கொண்டுவந்தது. (8)

அந்த மாபெரும் எதிர்வாதத்திற்கு பரலோகம் முழுவதும் விழுந்து போகாத உலகங்களும் சாட்சியாக இருந்தன. அந்தப் போராட்டத்தின் முடிவுக்காட்சிகளை அவர்கள் எப்படிப்பட்ட ஆழ்ந்த ஆர்வத்துடன் பின்தொடர்ந்திருந்தார்கள்! இரட்சகர் கெத்செமனே தோட்டத்திற்குள் பிரவேசிப்பதையும் பெரும் இருளின் பயங்கரத்தினால் அவருடைய ஆத்துமா கூனிப்போயிருப்பதையும் அவர்கள் கண்டார்கள். "என் பிதாவே, இந்தப் பாத்திரம் என்னைவிட்டு நீங்கக்கூடுமானால் நீங்கும்படி செய்யும்" (மத்தேயு 26:39) என்னும் அவருடைய கசப்பான கதறலை அவர்கள் கேட்டார்கள். பிதாவின் பிரசன்னம் அவரைவிட்டுப் பின்னிழுத்துக்கொள்ளப்பட்டபோது, மரணத்துடனிருந்த இறுதிப் போராட்டத்தின் துயரத்தைவிட மிக அதிகமான ஒரு கசப்புமிக்க துயரத்தில் அவர் இருந்ததை அவர்கள் கண்டார்கள். அவருடைய சருமத் துவராங்களிலிருந்து இரத்த வியர்வை வேகமாக வெளியில்வந்து, துளிகளாக நிலத்தின்மீது விழுந்தன. அந்த ஜெபம் அவருடைய உதடுகளிலிருந்து மூன்றுதடவை மனவருத்தத்துடன் வெளிவந்தது. அதற்கு மேல் அந்தக் காட்சியை சகித்துக்கொள்ள முடியாததாகப் பரலோகம் இருந்தது. தேற்றும் ஒரு தூதுவன் தேவகுமாரனிடத்திற்கு அனுப்பப்பட்டான். (9)

கலகஞ்செய்யும் கொலை பாதகக்கூட்டத்தினரின் கைகளுக்குள் அவர் காட்டிக்கொடுக்கப்பட்டதையும், பரிகாசத்துடனும் வன்முறையுடனும் ஒரு ஆலோசனை சங்கத்திலிருந்து மற்றொன்றுக்கு அவசரமாக அவர் கொண்டுசெல்லப்பட்டதையும் பரலோகம் கண்டது. அவருடைய தாழ்மையான பிறப்பின் காரணமாக அந்த உபத்திரவஞ்செய்பவர்கள் உறுமினதை அது கேட்டது. மிக அதிகமாக நேசிக்கப்பட்டிருந்த அவருடைய சீடர்களில் ஒருவனுடைய சபித்தலுடன்கூடிய மறுதலிப்பை அது கேட்டது. சாத்தானின் ஆவேசமிக்க செயலையும் மனிதர்களின் இருதயங்களின் மீதிருந்த அவனுடைய வல்லமையையும் அது கண்டது. ஆ! எத்தனை பயங்கரமான காட்சி! கெத்செமனேயில் நள்ளிரவில் பிடிக்கப்பட்ட இரட்சகர் அரண்மனையிலிருந்து நியாயவிசாரணை மன்றத்துக்கு முன்னும் பின்னுமாக இழுக்கப்பட்டு, ஆசாரியர்களுக்குமுன்பாக இரண்டு தடவைகள் குற்றஞ்சாட்டப்பட்டு, இரண்டு தடவைகள் சனகரீம் சங்கத்திற்கு முன்பாகவும், இரண்டு தடவைகள் பிலாத்துவிற்கு முன்பாகவும், ஒரு தடவை ஏரோதிற்கு முன்பாகவும் குற்றஞ்சாட்டப்பட்டு, பரிகசிக்கப்பட்டு, சவுக்கால் அடிக்கப்பட்டு, ஆக்கினைக்குட்படுத்தப்பட்டு, பாரமிக்க சிலுவையைச் சுமந்தவராக, சிலுவையில் அறையப்படும்படி எருசலேம் குமாரத்திகளின் அழுகைக்கும் புலம்பலுக்கும் இடையில் பரிகாசஞ்செய்யும் கீழ்மக்களுக்கிடையில் நடத்தப்பட்டார். (10)

காயமடைந்த சென்னியிலிருந்து இரத்தம் ஒழுகிக்கொண்டும், இரத்தம் கலந்த வியர்வை நெற்றியின்மீது படிந்துமிருக்க, கிறிஸ்து சிலுவையின்மீது தொங்கிக்கொண்டிருந்ததைப் பரலோகம் வருத்தத்துடனும் வியப்புடனும் பார்த்தது. சிலுவையை தூக்கி நிறுத்தும்படித் துளைக்கப்பட்டிருந்த பாறையின்மேல் அவருடைய பாதங்களிலிருந்தும் கைகளிலிருந்தும் இரத்தம் துளித்துளியாக விழுந்தது. அவருடைய உடலின் பாரம் கைகளை இழுத்தபோது, ஆணிகளால் உண்டான காயம் பிளந்தது. உலக பாவத்தின் பாரங்களால் அவருடைய ஆத்துமா பெருமூச்சுவிட்டபோது, கஷ்டமானதாக இருந்த அவருடைய மூச்சு, விரைவானதாகவும் ஆழமானதாகவும் ஆயிற்று. கிறிஸ்துவின் பயங்கரமான பாடுகளுக்கு மத்தியில், “பிதாவே, இவர்களுக்கு மன்னியும், தாங்கள் செய்கிறது இன்னதென்று அறியாதிருக்கிறார்களே” (லூக்கா 23:34) என்னும் ஜெபம் ஏறெடுக்கப்பட்டபோது, பரலோகம் முழுவதும் ஆச்சரியத்தால் நிரம்பியது; அப்படியிருந்தபோதிலும் தேவனுடைய ஒரேபேறான குமாரனின் ஜீவனை நொறுக்கி நீக்குவதற்காக தேவசாயலில் உருவாகியிருந்த மனிதர்கள் அங்கு சேர்ந்து நின்றிருந்தனர். பரலோகப் பிரபஞ்சத்திற்கு அது எப்படிப்பட்ட ஒரு காட்சியாக இருந்தது! (11)

அந்தகாரத் துரைத்தனங்களும் வல்லமைகளும் சிலுவையைச்சுற்றி ஒன்றுகூடியிருந்தன. அவை மனிதர்களின் இருதயங்களில் நரகத்தன்மைமிக்க நம்பிக்கையின்மை என்னும் நிழலை வீசிக்கொண்டிருந்தன. கர்த்தருடைய சிங்காசனத்திற்குமுன் நிற்கும்படி அவர் இவர்களைப் படைத்தபோது, அவர்கள் அழகும் மகிமையுமிக்கவர்களாக இருந்தனர். அவர்களுடைய வனப்பும் பரிசுத்தத்தன்மையும் அவர்களுடைய உயர்வான பதவிக்கு ஒத்தவைகளாக இருந்திருந்தன. அவர்கள் தேவ ஞானத்தினால் செறிவூட்டப்பட்டவர்களாக பரலோகக் கவசத்தினால் மூடப்பட்டிருந்தனர். அவர்கள் யேகோவாவின் ஊழியர்களாக இருந்தனர். ஆனால் விழுந்துபோன இந்த தூதர்களில் ஒரு சமயத்தில் பரலோகப் பிராகாரங்களில் இருந்த சேராபீன்களை யாரால் இனங்காண முடியும்? (12)

பாவிகளில் பிரதான பாவி கிறிஸ்து என்று நம்பும்படி மனிதர்களை நடத்தி, அவரை வெறுப்பான ஒரு பொருளாகச் செய்ய சாத்தானின் முகவர்கள் பொல்லாத மனிதர்களுடன் ஒன்றுசேர்ந்திருந்தனர். கிறிஸ்து சிலுவையின்மேல் தொங்கிக்கொண்டிருந்தபோது, அவரைப் பரிகாசஞ்செய்திருந்தவர்கள் முதல் பெரும் கலகக்காரனின் ஆவியினால் நிரப்பப்பட்டிருந்தனர். அவன் அவர்களைக் கொச்சையான அருவருக்கத்தக்க பேச்சுக்களைப் பேசும்படித் தூண்டியிருந்தான். ஆனால் அவைகள் அனைத்தினாலும் அவன் எதையும் பெற்றுக்கொள்ளவில்லை. (13)

கிறிஸ்துவினிடத்தில் ஒரு பாவம் காணப்பட்டிருந்திருக்குமானால், பயங்கரமான சித்திரவதையிலிருந்து தப்பித்துக்கொள்ளுவதற்காக ஏதாவது ஒரு காரியத்தில் அவர் சாத்தானுக்கு இணங்கியிருந்திருப்பாரானால், தேவனுக்கும் மனிதனுக்கும் எதிரியாக இருப்பவனால் வெற்றியடைந்திருக்கமுடியும். கிறிஸ்து தலை கவிழ்ந்தவராக மரித்தார். ஆனால் அவருடைய விசுவாசத்தையும் தேவனுக்கு கீழ்ப்படிவதையும் உறுதியாகப் பற்றிக்கொண்டிருந்தார். “அப்பொழுது வானத்திலே ஒரு பெரிய சத்தமுண்டாகி: இப்பொழுது இரட்சிப்பும் வல்லமையும் நமது தேவனுடைய ராஜ்யமும், அவருடைய கிறிஸ்துவின் அதிகாரமும் உண்டாயிருக்கிறது; இரவும் பகலும் நம்முடைய தேவனுக்கு முன்பாக நம்முடைய சகோதரர்மேல் குற்றஞ் சுமத்தும்பொருட்டு அவர்கள்மேல் குற்றஞ்சாட்டுகிறவன் தாழத்தள்ளப்பட்டுப்போனான்” (வெளிப்படுத்தல் 12:10) என்றது. (14)

சாத்தான் அவனுடைய வேஷம் கிழிக்கப்பட்டுவிட்டதைக் கண்டான். விழுந்துபோகாத தூதர்களுக்கு முன்பாகவும், பரலோகப் பிரபஞ்சத்திற்கு முன்பாகவும் அவனுடைய நிர்வாகம் திறந்துவைக்கப்பட்டது. தான் ஒரு கொலைகாரன் என்பதை அவனாகவே வெளிப்படுத்தினான். தேவகுமாரனு

டைய இரத்தத்தைச் சிந்தினதால், பரலோகவாசிகள் அவன்மீது வைத்திருந்த அனுதாபத்தை அவனாகவே வேருடன் பிடுங்கியிருக்கிறான். அப்போதிருந்து அவனுடைய வேலை கட்டுப்படுத்தப்பட்டிருக்கிறது. எந்தவிதமான குணத்தைக் காண்பித்தாலும், கிறிஸ்துவின் சகோதரர்கள் கருப்பான உடைகளையும் பாவத்தீட்டையும் அணிந்திருக்கிறார்கள் என்று அவர்களை பரலோகப் பிராகாரங்களிலிருந்து வெளியே வரும் தூதர்களிடம் குற்றப்படுத்திக்கூற அவர்களுக்காக இனிமேல் அவனால் காத்திருக்கமுடியாது. சாத்தானுக்கும் பரலோகத்திற்கும் இடையிலிருந்த அனுதாபமென்னும் சங்கிலியின் கடைசிக் கண்ணி உடைந்திருந்தது. (15)

ஆயினும் சாத்தான் அப்பொழுதே அழிக்கப்படவில்லை. அந்த மாபெரும் பேராட்டத்தில் சம்பந்தப்பட்டிருந்த அனைத்தையும் அப்பொழுதுங் கூடத் தூதர்கள் புரிந்துகொள்ளவில்லை. வெற்றியா தோல்வியா என்னும் போராட்டத்தில் இருந்த கொள்கைகள் முழுவதுமாக வெளிப்படுத்தப்பட வேண்டியவைகளாக இருந்தன. மனிதனுக்காக சாத்தான் உயிர்வாழ்வது தொடரவேண்டும். ஒளியின் பிரபுவிற்கும் அந்தகாரப் பிரபுவிற்கும் இடையில் உள்ள வேறுபாட்டை மனிதனும் தூதர்களும் காணவேண்டும். மனிதன் தான் யாரைச் சேவிப்பான் என்பதை தெரிந்துகொள்ளவேண்டும். (16)

அந்த மாபெரும் எதிர்வாதத்தின் தொடக்கத்தில் தேவனுடைய நியாயப்பிரமாணத்திற்குக் கீழ்ப்படிவது முடியாது; இரக்கத்துடன் நீதி பொருத்தமற்றதாக இருக்கும்; நியாயப்பிரமாணம் மீறப்பட்டால் பாவியை மன்னிப்பது முடியாததாகும் என்று சாத்தான் அறிவித்திருந்தான். ஒவ்வொரு பாவமும் அதன் தண்டனையைச் சந்தித்தாகவேண்டும் என்று அவன் வற்புறுத்தி, தேவன் பாவத்திற்கான தண்டனையை மன்னிப்பாரானால் அவரால் சத்தியமும் நீதியும் உள்ள ஒரு தேவனாக இருக்கமுடியாது என்றான். மனிதர்கள் தேவனுடைய நியாயப்பிரமாணத்தை மீறி அவருடைய சித்தத்திற்குக் கீழ்ப்படிய மறுத்தபோது, அவன் வெற்றிச் சிரிப்புச் சிரித்தான். நியாயப்பிரமாணத்திற்குக் கீழ்ப்படிவது முடியாதது என்பதும், மனிதனுக்கு மன்னிப்புக் கொடுக்கமுடியாது என்பதும் மெய்ப்பிக்கப்பட்டுவிட்டதாக அவன் அறிவித்தான். அவனுடைய கலகத்திற்குப்பின் அவன் பரலோகத்திலிருந்து துரத்தப்பட்டதினால், மனித இனமும், தேவனுடைய ஆதரவிலிருந்து என்றென்றைக்குமாகப் பரலோகத்தைவிட்டு வெளியே அடைக்கப்படவேண்டும் என்றான். தேவன் நீதியுள்ளவராகவும், அதே நேரத்தில் பாவியிடம் இரக்கங் காட்டுபவராகவும் இருக்கமுடியாது என்று அவன் வற்புறுத்தினான். (17)

ஆனால் மனிதன் ஒரு பாவியாக இருந்தபோதிலும் அவன் சாத்தானிலிருந்து ஒரு வித்தியாசமான நிலையில் இருந்தான். லூசிபர்

தேவமகிமையின் ஒளிக்கு முன்பாகப் பரலோகத்தில் பாவஞ்செய்திருந்தான். தேவனுடைய அன்பின் வெளிப்படுத்தல், படைக்கப்பட்ட வேறு எவருக்கும் இல்லாதவிதத்தில் அவனுக்கு கொடுக்கப்பட்டிருந்தது. தேவனுடைய குணத்தைப் புரிந்துகொண்டிருந்ததும், அவருடைய நற்குணத்தை அறிந்திருந்தும், சாத்தான் அவனுடைய சுயநலமிக்க—சுதந்திரமிக்க சித்தத்தைப் பின்பற்றுவதைத் தெரிந்துகொண்டிருந்தான். இந்தத் தெரிந்துகொள்ளுதல் முடிவானதாக இருந்தது. அவனைக் காப்பாற்றுவதற்காக இதற்கும் அதிகமான ஏதுவும் தேவனால் செய்யமுடியவில்லை. ஆனால் மனிதன் வஞ்சிக்கப்பட்டான். சாத்தானுடைய ஏமாற்றுவாதத்தினால் அவனுடைய மனம் இருளடைந்திருந்தது. அவன் தேவனுடைய அன்பின் உயரத்தையும் ஆழத்தையும் அறியாதிருந்தான். தேவனுடைய அன்பைப்பற்றிய அறிவில் அவனுக்கு நம்பிக்கை இருந்தது. அவருடைய குணத்தைப் பார்ப்பதினால் அவன் திரும்பவும் தேவனிடத்திற்கு இழுத்துக்கொள்ளப்படமுடியும். (18)

இயேசுவின்மூலமாக தேவனுடைய இரக்கம் மனிதர்களுக்கு வெளிக்காட்டப்பட்டிருந்தது, ஆனால் இரக்கம், நீதியை ஒருபுறமாக ஒதுக்கி வைப்பதில்லை. தேவனுடைய குணத்தின் இயல்பை நியாயப்பிரமாணம் வெளிப்படுத்துகிறது. எனவே விழுந்துபோன மனிதனின் நிலையை ஏற்றுக்கொள்ளுவதற்காக, அதன் எழுத்துக்களில் ஒன்றாவது அல்லது எழுத்தின் ஒரு உறுப்பாவது மாற்றப்பட முடியாது. தேவன் அவருடைய பிரமாணத்தை மாற்றவில்லை. ஆனால் மனிதனின் மீட்பிற்காகக் கிறிஸ்துவில் அவர் தம்மைத்தாமே பலியாக்கினார். "தேவன் உலகத்தாருடைய பாவங்களை எண்ணாமல், கிறிஸ்துவுக்குள் அவர்களைத் தமக்கு ஒப்புரவாக்கி" (2 கொரிந்தியர் 5:19) னார். (19)

நியாயப்பிரமாணம் (பத்து கற்பனைகள்) நீதியான வாழ்க்கையை—ஒரு பூரணமாக குணத்தை வேண்டுகிறது. இதைக் கொடுக்கக்கூடியவனாக மனிதன் இல்லை. தேவனுடைய பிரமாணத்தின் எதிர்பார்ப்பை அவனால் சந்திக்கமுடியாது. ஆனால் பூமிக்கு ஒரு மனிதனாக வந்து, ஒரு பரிசுத்தமான வாழ்க்கை வாழ்ந்து, பூரணமான குணத்தை கிறிஸ்து உண்டாக்கியிருக்கிறார். இவைகளை இலவசமான ஈவாக, பெற்றுக்கொள்ள விரும்புகிறவர்களுக்கு வழங்குகிறார். மனிதனுடைய ஜீவனுக்காக அவருடைய ஜீவன் நிற்கிறது. இவ்விதமாக தேவனுடைய சகிப்புத்தன்மையின்மூலமாக, அவர்கள் பாவங்களுக்கான மன்னிப்பைப் பெறுகின்றனர். இதற்கும் அதிகமாக, தேவனுடைய பண்புகளை கிறிஸ்து மனிதனுக்கு வழங்குகிறார். அவர் ஆவிக்குரிய பலத்தையும் அழகையும் உடைய தெய்வீக குணத்தின் சாயலில் மனிதனுடைய குணத்தை கட்டுகிறார். இவ்விதமாகக் கிறிஸ்துவில்

விசுவாசமுள்ள ஒருவரில் நியாயப்பிரமாணத்தின் நீதி நிறைவேற்றப்படுகிறது. தேவன் “தாம் நீதியுள்ளவரும், இயேசுவினிடத்தில் விசுவாசமாயிருக்கிறவனை நீதிமானாக்குகிறவருமாய்” (ரோமர் 3:25) இருக்கமுடியும். (20)

தேவனுடைய நீதியில் வெளிக்காட்டப்பட்டுள்ள அவருடைய அன்பு, அவருடைய இரக்கத்தில் உள்ளதைவிடக் குறைவானதாக இல்லை. நீதி அவருடைய சிங்காசனத்தின் அஸ்திபாரமாகவும், அவருடைய அன்பின் கனியாகவும் இருக்கிறது. சத்தியத்திலிருந்தும் நீதியிலிருந்தும் இரக்கத்தை நீக்குவது சாத்தானின் நோக்கமாக இருந்தது. தேவனுடைய நியாயப்பிரமாணத்தின் நீதி சமாதானத்திற்கு ஒரு எதிரியாக இருக்கிறது என்று மெய்ப்பிக்க அவன் வகைதேடினான். ஆனால் தேவனுடைய திட்டத்தில் பிரிக்கப்படமுடியாதவிதமாக அவைகள் ஒன்றுசேர்க்கப்பட்டுள்ளன என்பதையும், அந்த ஒன்று மற்றொன்று இல்லாமல் உயிரிவாழமுடியாது என்பதையும் கிறிஸ்து காட்டுகிறார். “கிருபையும் சத்தியமும் ஒன்றையொன்று சந்திக்கும், நீதியும் சமாதானமும் ஒன்றையொன்று முத்தஞ்செய்யும்” – சங்கீதம் 85:10. (21)

கிறிஸ்து அவருடைய வாழ்க்கையினாலும் மரணத்தினாலும் தேவனுடைய நீதியையும் இரக்கத்தையும் அழிக்கவில்லை என்பதையும், பாவத்தை மன்னிக்கமுடியும் என்பதையும், நியாயப்பிரமாணம் நீதியுள்ளது என்பதையும் அதற்கு பூரணமாகக் கீழ்ப்படியமுடியும் என்பதையும் மெய்ப்பித்தார். சாத்தானின் குற்றச்சாட்டுகள் மறுக்கப்பட, தேவன் அவருடைய அன்பிற்கான தவறாத சான்றினை மனிதனுக்குக் கொடுத்திருந்தார். (22)

இப்பொழுது வேறொரு வஞ்சகம் முன்கொண்டுவரப்படவேண்டியதாக இருந்தது. இரக்கம் நீதியை அழித்துவிட்டது என்றும், கிறிஸ்துவின் மரணம் பிதாவின் கற்பனைகளை ரத்துசெய்துவிட்டது என்றும் சாத்தான் அறிவித்தான். நியாயப்பிரமாணத்தை மாற்றுவதற்கோ அல்லது ஒழித்துக்கட்டுவதற்கோ முடிந்திருந்தால், கிறிஸ்து மரிக்கவேண்டிய அவசியமிருந்திருக்காது. ஆனால் கற்பனையை ஒழிப்பதென்பது மீறுதலை நிரந்தரமாக்கி, உலகத்தைச் சாத்தானின் கட்டுப்பாட்டிற்குள் வைப்பதாக இருக்கும். நியாயப்பிரமாணம் மாறாததாக இருந்ததினால், அதன் கற்பனைகளுக்குக் கீழ்ப்படிவதினால் மட்டுமே மனிதன் இரட்சிக்கப்படமுடியும் என்பதினால், இயேசு சிலுவையில் உயர்த்தப்பட்டிருந்தார். அப்படியிருக்கும்போது, எந்த ஒரு கருவியினால் கிறிஸ்து நியாயப்பிரமாணத்தை நிலைநிறுத்தினாரோ அதுவே அதை அழிப்பதாக சாத்தான் எடுத்துக்காட்டினான். இதிலேதான் கிறிஸ்துவிற்கும் சாத்தானுக்கும் இடையிலுள்ள மாபெரும் போராட்டத்தின் கடைசிப்போராட்டம் இருக்கும். (23)

தேவனுடைய சொந்தக்குரலினால் பேசப்பட்டிருந்த நியாயப்பிரமாணம், தவறானது, அதனால் சில விவரங்கள் ரத்துசெய்யப்பட்டிருக்கிறது என்பது சாத்தான் இப்பொழுது முன்வைக்கும் வாதமாக இருக்கிறது. இதுதான் உலகத்தின்மீது அவன் கொண்டுவரவிருக்கின்ற கடைசிப் பெரும் வஞ்சகம். அவன் நியாயப்பிரமாணம் முழுவதன்மீதும் தாக்குதல் நடத்தவேண்டிய அவசியமில்லை. ஒரு கற்பனையை மதிக்காமலிருக்க மனிதர்களை அவனால் நடத்தமுடியுமானால், அவனுடைய நோக்கம் நிறைவேறிவிடும். ஏனெனில் "ஒருவன் நியாயப்பிரமாணம் முழுவதையும் கைக்கொண்டிருந்தும், ஒன்றிலே தவறினால் எல்லாவற்றிலும் குற்றவாளியாயிருப்பான்"–யாக்கோபு 2:10. ஒரு கற்பனையை மீறுவதற்குச் சம்மதிப்பதினால் மனிதர்கள் சாத்தானுடைய வல்லமையின்கீழ்க் கொண்டுவரப்பட்டிருக்கின்றனர். தேவனுடைய பிரமாணத்திற்குப் பதிலாக மனிதனுடைய பிரமாணத்தை ஏற்படுத்துவதினால் உலகத்தைக் கட்டுப்படுத்துவதற்குச் சாத்தான் வகைதேடுவான். இந்தச் செயல் தீர்க்கதரிசனத்தில் முன்னுரைக்கப்பட்டிருக்கிறது. சாத்தான் பிரதிநிதியாக இருக்கும் மருள விழுந்துள்ள பெரும் வல்லமையைப்பற்றி அவன்: "உன்னதமானவருக்கு விரோதமாக வார்த்தைகளைப் பேசி, உன்னதமானவருடைய பரிசுத்தவான்களை ஒடுக்கி, காலங்களையும் பிரமாணங்களையும் மாற்ற நினைப்பான்; அவர்கள் … அவன் கையில் ஒப்புக்கொடுக்கப்படுவார்கள்" (தானியேல் 7:25) என்று அறிவிக்கப்பட்டுள்ளது. (24)

தேவனுடைய பிரமாணங்களுக்கு எதிராகச் செயலாற்றுவதற்காக மனிதர்கள் நிச்சயமாகவே அவர்களுடைய சொந்தப் பிரமாணங்களை ஏற்படுத்துவார்கள். அவர்கள் மற்றவர்களுடைய மனச்சாட்சியை வற்புறுத்த வகைதேடி, இந்தப் பிரமாணங்களை வற்புறுத்துகின்ற அவர்களுடைய பேரார்வத்தில் தங்களுடைய உடன் மனிதர்களை ஒடுக்குவார்கள். (25)

தேவனுடைய நியாயப்பிரமாணத்திற்கெதிராகப் பரலோகத்தில் ஆரம்பமான யுத்தம் காலத்தின் முடிவுவரைத் தொடரும். ஒவ்வொரு மனிதனும் பரீட்சிக்கப்படுவான். கீழ்ப்படிவதும் கீழ்ப்படியாமலிருப்பதும் உலகம் முழுவதினாலும் முடிவுசெய்யப்படவேண்டிய கேள்வியாகவிருக்கிறது. தேவனுடைய கற்பனை அல்லது மனிதர்களுடைய கற்பனைகள் இவை இரண்டிற்குமிடையில் ஒன்றைத் தெரிந்துகொள்ளும்படி அனைவரும் அழைக்கப் படுவார்கள். இங்கு பிரிக்கும் கோடு வரையப்படும். இரு வகுப்பினர்மட்டுமே இருப்பார்கள். ஒவ்வொரு குணமும் முழுமையாக வளர்ச்சியடைந்திருக்கும். அனைவரும் உத்தம விசுவாசத்தின் அல்லது கலகத்தின் பக்கத்தில் வைக்கப்பட்டு, தெரிந்துகொண்டிருப்பதைக் காட்டுவார்கள். (26)

அப்பொழுது முடிவுவரும். தேவன் அவருடைய பிரமாணத்தை மெய்ப்பித்து, அவருடைய மக்களை விடுவிப்பார். சாத்தானும் கலகத்தில் அவனுடன் சேர்ந்துகொண்ட அனைவரும் சங்கரிக்கப்படுவார்கள். பாவமும் பாவிகளும் வேருடனும் கொப்புடனும் அழிக்கப்படுவார்கள் (மல்கியா 4:1). சாத்தான் வேராகவும் அவனைப் பின்பற்றுபவர்கள் கிளைகளாகவும் உள்ளனர். “ நீ உன் இருதயத்தைத் தேவனின் இருதயத்தைப்போல ஆக்குகிறபடியினால், … காப்பாற்றுகிற கேருபாய் இருந்த உன்னை அக்கினிமயமான கற்களின் நடுவே இராதபடிக்கு அழித்துப்போடுவேன்…. மகா பயங்கரமாவாய்; இனி ஒருபோதும் இருக்கமாட்டாய்.” “துன்மார்க்கன் இரான்; அவன் ஸ்தானத்தை உற்று விசாரித்தாயானால் அவன் இல்லை.” “இராதவர்களைப்போல் இருப்பார்கள்”—எசேக்கியேல் 28:6–19; சங்கீதம் 37:10; ஒபதியா 16. (27)

இது தேவனுடைய பகுதியில் உள்ள ஒருதலைப்பட்சமான வல்லமையாக இல்லை. அவருடைய இரக்கத்தை புறக்கணிப்பவர்கள் தாங்கள் விதைத்ததை அறுவடை செய்வார்கள். தேவன் ஜீவனின் ஊற்றாக இருக்கிறார். ஒருவன் பாவத்திற்கு ஊழியஞ்செய்வதைத் தெரிந்துகொள்ளும்போது, அவன் தன்னை தேவனிடத்திலிருந்து விலக்கி, இவ்விதமாக ஜீவனிலிருந்து பிரித்துக்கொள்ளுகிறான். அவர்கள் “தேவனுடைய ஜீவனுக்கு அந்நியராயிருந்து;” “என்னை வெறுக்கிறவர்கள் யாவரும் மரணத்தை விரும்புகிறவர்கள்” (எபேசியர் 4:18; நீதிமொழிகள் 8:36) என்று கிறிஸ்து கூறுகிறார். மனிதர் தங்களுடைய குணத்தை முன்னேற்றமடையச் செய்யவும், தங்களுடைய கொள்கைகளை வெளிக்காட்டவும், சிறிது காலத்திற்கு உயிர்வாழ்வதற்கு தேவன் அனுமதிக்கிறார். அது நிறைவேற்றப்பட்டவுடன் அவர்கள் தெரிந்துகொண்டதின் சொந்த பலன்களை பெறுகிறார்கள். தேவனுடைய அதே பிரசன்னம், பட்சிக்கிற அக்கினியாக இருக்கும்படி, கலகஞ்செய்யும் ஒரு வாழ்க்கையினால் சாத்தானும் அவனுடன் ஒன்றுசேர்ந்துள்ள அனைவரும் தங்களை தேவனுக்கு இசைவில்லாத இடத்தில் வைக்கின்றனர். அன்பாகவே இருக்கின்ற அவருடைய மகிமை அவர்களை அழிக்கும். (28)

மாபெரும் எதிர்வாதத்தின் ஆரம்பத்தில் தூதர்கள் இதைப் புரிந்துகொள்ளவில்லை. அப்பொழுது சாத்தானும் அவனுடைய சேனையும் அவர்களுடைய பாவத்தின் முழுப்பலனையும் அறுவடை செய்யும்படி விட்டுவிடப்பட்டிருந்தால் அவர்கள் அழிந்திருப்பார்கள்; ஆனால் இதுதான் பாவத்தின் தவிர்க்கமுடியாத பலன் என்பது பரலோகவாசிகளுக்கு வெளியரங்கமாகத் தெரிந்திருக்காது. தேவனுடைய நல்லதன்மையின்மீதுள்ள

ஒரு சந்தேகம், பாவம் ஆபத்து ஆகியவைகளின் சாவிற்கேதுவான கனியை உற்பத்திசெய்வதற்குத் தீமையின் விதையாக அவர்களுடைய மனங்களில் தங்கியிருந்திருக்கும். (29)

ஆனால் அந்த மாபெரும் போராட்டம் முடிவடைந்தபின் அப்படியிருக்காது. மீட்பின் திட்டம் முடிவடைந்தபின்புதான், படைக்கப்பட்டுள்ள நுண்ணறிவு ஜீவிகள் அனைத்திற்கும் தேவனுடைய குணம் வெளிப்படுத்தப்படும். அவருடைய நியாயப்பிரமாணத்தின் கற்பனைகள் பூரணமானதாகவும் மாற்றமுடியாததாகவும் இருப்பது காணப்பட்டிருக்கிறது. அப்பொழுது பாவம் அதன் இயல்பை வெளிப்படுத்திவிட்டிருக்கும். அவரது சித்தத்தின்படி செய்வதில் மகிழ்ச்சியுள்ளவர்களாக, அவரது பிரமாணத்தை தங்களது இருதயத்தில் வைத்திருக்கும் ஒரு பிரபஞ்சத்திற்குமுன்பாக பாவத்தை அழித்தலானது, தேவனுடைய அன்பை மெய்ப்பித்துக்காட்டி அவரது மேன்மையை நிலைநாட்டியிருக்கும். (30)

அதற்குப்பின் இரட்சகருடைய சிலுவையை தூதர்கள் பார்க்கும்போது, அவர்கள் மகிழ்ந்து களிகூருவார்கள். ஏனெனில் அப்பொழுது அவர்கள் எல்லாவற்றையும் புரிந்துகொள்ளாமலிருந்தபோதிலும் பாவமும் சாத்தானும் அழிக்கப்பட்டது என்றென்றைக்கும் நிச்சயமாக்கப்பட்டுவிட்டது என்பதையும், மனிதனின் மீட்பு நிச்சயம் என்பதையும், பிரபஞ்சம் நித்தியமாக பாதுகாக்கப்பட்டிருக்கிறது என்பதையும் அறிந்திருக்கின்றனர். கல்வாரியின்மீது செலுத்தப்பட்ட தியாகபலியின் பலன்களைக் கிறிஸ்துதாமே முழுவதுமாக அறிந்திருந்தார். அவர் சிலுவையின்மீதிருந்து, "முடிந்தது" என்று உரத்த சத்தமிட்டபோது, இவைகளனைத்தையும் எதிர்நோக்கியிருந்தார். (31) ★

## 80

# யோசேப்பின் கல்லறையில்!

## (The Desire of Ages, pp. 769–778)

கடைசியில் இயேசு இளைப்பாறிக்கொண்டிருந்தார். வெட்கமும் சித்திரவதையும் நிறைந்த அந்த நீண்ட நாள் முடிவடைந்தது. மறைத்து கொண்டிருந்த சூரியனின் ஒளிக்திர்கள் ஓய்வுநாளை வரவேற்றபோது, தேவகுமாரன் அமைதியாக யோசேப்பின் கல்லறையில் கிடத்தப்பட்டிருந்தார். அவருடைய பணியை முடித்தவராக, சமாதானத்தில் அவருடைய கரங்களை மடித்தவராக, ஓய்வுநாளின் பரிசுத்தமான மணி நேரங்களுக்கூடாக அவர் ஓய்ந்திருந்தார். (1)

ஆதியில் பிதாவும் குமாரனும் அவர்களுடைய படைப்பின் செயலுக்குப்பின் ஓய்வுநாளில் ஓய்ந்திருந்தனர். "வானமும் பூமியும், அவைகளின் சர்வசேனையும் உண்டாக்கப்பட்டுத் தீர்ந்த"போது (ஆதியாகமம் 2:1) அந்த மகிமையான காட்சியைத் தியானஞ்செய்வதில் சிருஷ்டிகரும் பரலோகவாசிகள் அனைவரும் மகிழ்ந்து களிகூர்ந்தனர். "அப்பொழுது விடியற்காலத்து நட்சத்திரங்கள் ஏகமாய்ப்பாடி, தேவபுத்திரர் எல்லாரும் கெம்பீரித்தார்களே"–யோபு 38:7. இப்பொழுது மீட்பின் பணியிலிருந்து அவர் இளைப்பாறியிருந்தார். பூமியிலே, அவரை நேசித்திருந்தவர்களுக்கிடையில் வருத்தம் இருந்தபோதிலும், பரலோகத்தில் மகிழ்ச்சி உண்டாகியிருந்தது. எதிர்காலம்பற்றிய வாக்குத்தத்தம் பரலோகவாசிகளின் கண்களுக்கு மகிமைமிக்கதாக இருந்தது. பாவத்தின்மீது வெற்றிகொண்டு, புதுப்பிக்கப்பட்ட ஒரு படைப்பு, மீட்கப்பட்ட ஒரு இனம், ஒருபோதும் விழுந்துவிடமுடியாததாக இருந்தது. கிறிஸ்து நிறைவேற்றின ஊழியத்தின் பலனை தூதர்களும் கண்டனர். இந்தக் காட்சியுடன் இயேசு எந்த நாளில் ஓய்ந்திருந்தாரோ அந்த நாள் என்றென்றைக்குமாக இணைக்கப்பட்டிருக்கிறது. ஏனெனில் "அவர் கிரியை உத்தமமானது;" "தேவன் செய்வது எதுவோ அது என்றைக்கும் நிலைக்கும்"–உபாகமம் 32:4; பிரசங்கி 3:14. "உலகத்தோற்றமுதல் தேவன் தம்முடைய பரிசுத்த தீர்க்கதரிசிகளெல்லாருடைய வாக்கினாலும்

உரைத்தவைகள் எல்லாம் நிறைவேறித் தீருங்காலங்கள் வருமளவும்" (அப்போஸ்தலர் 3:21), படைப்பின் ஓய்வுநாளில் இளைப்பாறும்படி இயேசு யோசேப்பின் கல்லறையில் வைக்கப்பட்டார். அந்த நாள், இன்னுங்கூட ஒரு இளைப்பாறும் நாளாகவும் மகிழ்ந்து களிகூரும் நாளாகவும் உள்ளது. "ஓய்வுநாள்தோறும்" (ஏசாயா 66:23) பரலோகமும் பூமியும் துதிப்பதில் ஒன்றுகூடும்போது, தேவனையும் ஆட்டுக்குட்டியானவரையும் மகிழ்ச்சியுடன் ஆராதிக்க இரட்சிக்கப்பட்ட ஜனங்கள் தலைவணங்கி பணிந்துகொள்வார்கள். (2)

சிலுவையில் அறையப்பட்ட நாளின் கடைசி நிகழ்வுகளில் தீர்க்கதரிசன நிறைவேறுதலைப்பற்றிய புதிய சான்று கொடுக்கப்பட்டதுடன், கிறிஸ்துவின் தெய்வீகத்திற்குப் புதிய சாட்சியும் கொடுக்கப்பட்டது. சிலுவையிலிருந்து இருள் அகற்றப்பட்டபோது, இரட்சகரின் மரிக்கும் குரல் ஒலித்தவுடனே "மெய்யாகவே இவர் தேவனுடைய குமாரன்" (மத்தேயு 27:54) என்று கூறுகின்ற மற்றொரு குரலும் கேட்கப்பட்டது. (3)

இந்த வார்த்தைகள் இரகசியமாகப் பேசும் தொனியில் கூறப்பட வில்லை; அவைகள் எங்கேயிருந்து வந்தன என்பதைக் காண்பதற்காக எல்லாக் கண்களும் திரும்பியிருந்தன. பேசியிருந்தது யார்? அவன் ரோம போர்ச்சேவகனான நூற்றுக்கு அதிபதி. இரட்சகரின் தெய்வீகப் பொறுமையும், திடீரென்று உண்டான அவருடைய மரணமும், அவருடைய உதடுகளின் மேலிருந்த வெற்றியின் சத்தமும் அந்த அஞ்ஞானியை உணர்த்தியிருந்தது. சிலுவையின்மீது காயமடைந்து நொறுக்கப்பட்டு தொங்கிக்கொண்டிருந்த அந்த சரீரத்தில், அந்த நூற்றுக்கு அதிபதி தேவகுமாரனுடைய வடிவத்தை கண்டிருந்தான். அவனுடைய விசுவாசத்தை அறிக்கை செய்வதிலிருந்து அவன் பின்வாங்கமுடியாதவனாக இருந்தான். நமது மீட்பர் அவருடைய ஆத்தும வருத்தத்தைக் காணவேண்டியவராக இருந்தார் என்பதற்கான சான்று மீண்டும் கொடுக்கப்பட்டிருந்தது. அவருடைய மரணத்தின் அதேநாளில், ரோம காவலாளிகளை நடத்தியிருந்தவனும், இரட்சகரின் சிலுவையைச் சுமந்திருந்தவனும், அவருக்குப் பக்கத்தில் சிலுவையில் மரித்திருந்தவனும் ஆகிய மூவரும், ஒருவருக்கொருவர் வித்தியாசமானவர்களாக இருந்த போதிலும் அவர்களுடைய விசுவாசத்தை அறிக்கைசெய்திருந்தனர். (4)

மாலை நேரம் சமீபித்தபோது, பூமிக்குரியதல்லாத ஒரு அமைதி (அசைவற்ற நிலை) கல்வாரியின்மீது நின்றது. அந்தக் கூட்டத்தினர் கலைந்து சென்றனர். அவர்களில் அநேகர் காலையில் எந்தவிதமான ஆவியை உடையவர்களாக இருந்திருந்தார்களோ, அதிலிருந்து பெரிய அளவில் மாறுபட்டவர்களாக எருசலேமிற்குத் திரும்பினார்கள். என்ன நடக்கிறது

என்பதை அறிந்துகொள்ளவேண்டும் என்ற ஆர்வத்தில் அநேகர் சிலுவையில் அறையப்பட்ட இடத்தில் ஒன்றுகூடியிருந்தனர். அவர்கள் கிறிஸ்துவிற்கு நேராக வெறுப்புடையவர்களாக இருக்கவில்லை. அப்படியிருந்தும், அவர்கள் ஆசாரியர்களின் குற்றச்சாட்டுகளை நம்பி, கிறிஸ்துவை ஒரு குற்றவாளியாகப் பார்த்தனர். இயற்கைக்கு மாறான ஒரு மனக்கிளர்ச்சியின்கீழ் அவருக்கு எதிராக அணிதிரள்வதில் அவர்கள் கலகஞ்செய்யும் கூட்டத்தினருடன் ஒன்றுபட்டிருந்தனர். ஆனால் பூமி இருளால் மூடப்பட்டிருந்தபோது, அவர்கள் தங்களுடைய சொந்த மனச்சாட்சிகளினால் குற்றஞ்சாட்டப்பட்டவர்களாக நின்றிருந்து, ஒரு பெரும் தவறுசெய்த குற்றவாளிகளாக இருப்பதாக உணர்ந்தனர். அந்த பயங்கரமான இருளுக்கு நடுவில் எந்தவிதமான கேலியும் பரிகாசமும் சிரிப்பும் கேட்கப்படவில்லை. அது நீக்கப்பட்டபோது அவர்கள் தங்களுடைய வீடுகளைநோக்கி பக்திவிநயமான மௌனத்துடன் சென்றனர். ஆசாரியர்களின் குற்றச்சாட்டுகள் தவறானவை என்பதிலும், இயேசு ஒரு பாசாங்கு செய்பவர் அல்ல என்பதிலும் மனநிறைவு உடையவர்களாகி, சில வாரங்களுக்குப்பின் பெந்தெகொஸ்தே நாளில் பேதுரு பிரசங்கஞ்செய்தபோது, கிறிஸ்துவிடத்திற்கு மாற்றமடைந்த ஆயிரக்கணக்கானவர்களுக்கு மத்தியில் அவர்கள் இருந்தனர். (5)

ஆனால் அந்த யூதத்தலைவர்கள், தாங்கள் சாட்சியாகக் கண்டிருந்த சம்பவங்களினால் மாறவில்லை. இயேசுவின்மீதிருந்த அவர்களுடைய வெறுப்பு தணியாததாக இருந்தது. சிலுவையில் அறையப்பட்டபோது, பூமியை உடையைப்போல மூடியிருந்த இருள், இப்பொழுதுங்கூட ஆசாரியர்கள் அதிபதிகள் ஆகியோரின் மனங்களை மூடியிருந்த இருளைவிடக் கனமானதாக இருக்கவில்லை. கிறிஸ்துவை அவருடைய பிறப்பில் அந்த நட்சத்திரம் அறிந்திருந்து, அவர் கிடத்தப்பட்டிருந்த முன்னணைக்கு அந்த ஞானிகளை வழிநடத்தியிருந்தது; பரலோக சேனை அவரை அறிந்திருந்து, அவரது துதியைப் பெத்லகேமின் சமவெளிகளுக்கு மேலாகப் பாடியிருந்தது; கடல் அவரது குரலை அறிந்திருந்து அவருடைய கட்டளைக்குக் கீழ்ப்படிந்தது; நோயும் மரணமும் அவருடைய அதிகாரத்தை இனங்கண்டு அவைகளின் இரையை அவருக்கு விட்டுக்கொடுத்திருந்தன; சூரியன் அவரை அறிந்திருந்து, அவருடைய மரண வேதனையின் காட்சியில் தன்னுடைய முகத்தின் ஒளியை மறைத்திருந்தது; பாறைகள் அவைர அறிந்திருந்து, அவருடைய சத்தத்தில் நடுங்கித் துண்டுகளாகச் சிதறின; அசையாப்பொருளாக இருந்த இயற்கை கிறிஸ்துவை அறிந்திருந்து, அவருடைய தெய்வீகத்திற்குச் சாட்சி கொடுத்திருந்தது; ஆனால் இஸ்ரவேலின் ஆசாரியர்களும் அதிபதிகளுமோ தேவகுமாரனை அறிந்திருக்கவில்லை! (6)

அப்படியிருந்துங்கூட ஆசாரியர்களும் அதிபதிகளும் ஓய்ந்திருக்கவில்லை. கிறிஸ்துவை மரணத்திற்குட்படுத்துவதற்கு அவர்கள் தங்களுடைய நோக்கத்தைச் செயலாற்றியிருந்தனர். ஆனால் எதிர்பார்த்திருந்த வெற்றியின் உணர்வை அவர்கள் உணர்ந்திருக்கவில்லை. அவர்களுடைய வெளித் தோற்றமான வெற்றியின் நேரத்திலுங்கூட அடுத்தபடியாக என்ன நிகழும் என்னும் சந்தேகங்களினால் அலைக்கழிக்கப்பட்டிருந்தனர். "முடிந்தது" "பிதாவே, உம்முடைய கைகளில் என் ஆவியை ஒப்புவிக்கிறேன்" (யோவான் 19:30; லூக்கா 23:46) என்னும் சத்தத்தை அவர்கள் கேட்டிருந்தனர். பாறைகள் பிளப்பதை அவர்கள் கண்டிருந்து, பலத்த பூமியதிர்ச்சியை உணர்ந்து, அமைதியற்றவர்களாகவும் மனநிம்மதியற்றவர்களாகவும் இருந்தனர். (7)

கிறிஸ்து உயிரோடிருந்தபோது மக்களிடம் அவருக்குண்டாயிருந்த செல்வாக்கிற்காக பொறாமையோடிருந்த அவர்கள், அவருடைய மரணத்திலும் அவர்மீது பொறாமையுள்ளவர்களாக இருந்தனர். உயிருடனிருந்த கிறிஸ்துவிற்கு பயந்திருந்ததைவிட மரணமடைந்த கிறிஸ்துவிற்கு மிக அதிகமாகப் பயப்பட்டிருந்தனர். அவர் சிலுவையில் அறையப் பட்டதோடு தொடர்புள்ள சம்பவங்களின் பக்கமாக மக்களின் கவனம் இன்னமும் திரும்பிவிடுமோவென்று அவர்கள் பயப்பட்டார்கள். அந்த நாளுடைய செயலின் விளைவிற்காக அவர்கள் பயப்பட்டார்கள். எந்தக் காரணத்தினாலும் ஓய்வுநாளில் அவருடைய உடல் சிலுவையின்மீது இருக்கும்படி அவர்கள் அனுமதிக்கமாட்டார்கள். ஓய்வுநாள் இப்பொழுது சமீபித்துக்கொண்டிருந்தது. சிலுவையின்மீது உடல்கள் தொங்குவது அதன் புனிதத்தன்மையை மீறுகின்ற ஒன்றாக இருக்கும். அப்படியே இதை ஒரு சாக்காகப் பயன்படுத்தி, யூதத்தலைவர்கள் பிலாத்துவிடம் சிலுவையில் அறையப்பட்டவர்களின் மரணம் விரைவுபடுத்தப்படவேண்டுமென்றும், சூரியன் மறைவதற்குமுன் அவர்களுடைய உடல்கள் அகற்றப்படவேண்டுமென்றும் விண்ணப்பஞ்செய்தார்கள். (8)

இயேசுவின் உடல் சிலுவையின்மீது இருப்பதை அவர்கள் விரும்பாததைப்போல, பிலாத்துவும் விரும்பவில்லை. அவனுடைய சம்மதத்துடன் அந்த இரண்டு கள்ளர்களின் கால்களும் அவர்களின் மரணத்தை விரைவுபடுத்துவதற்காக முறிக்கப்பட்டன. ஆனால் இயேசு ஏற்கெனவே இறந்துவிட்டார். அந்தக் கொடூரமான போர்ச்சேவகர்கள் இயேசுவைப்பற்றி எதைக் கேட்டும் கண்டும் இருந்தார்களோ, அதனால் மென்மையானவர்களாகி, அவருடைய கால்களை முறிப்பதிலிருந்து கட்டுப்படுத்தப்பட்டனர். இவ்விதமாக பஸ்காவின் பிரமாணம், தேவ ஆட்டுக்குட்டியைப் பலிசெலுத்துவதில் நிறைவேறியது. "விடியற்காலம்மட்டும் அதில் ஒன்றும் மீதியாக

வைக்காமலும், அதில் ஒரு எலும்பையும் முறிக்காமலும், பஸ்காவினுடைய சகல முறைமைகளின்படியும் அதை ஆசரிக்கக்கடவர்கள்"—எண்ணாகமம் 9:12. (9)

கிறிஸ்து இறந்திருந்ததைக் காண்பதில் ஆசாரியர்களும் அதிபதிகளும் ஆச்சரியமடைந்திருந்தனர். சிலுவையினால் உண்டாகும் மரணம் தாமதமான மரணமாக இருந்தது. எப்பொழுது மரணம் சம்பவித்தது என்பதைத் தீர்மானஞ்செய்வது கடினமானதாக இருந்தது. சிலுவையிலறையப் பட்டதிலிருந்து ஒருவர் ஆறு மணி நேரத்திற்குள் மரிப்பது, கேள்விப்படாத ஒரு காரியமாக இருந்தது. ஆசாரியர்கள் இயேசுவின் மரணத்தை உறுதிசெய்ய விரும்பினார்கள். அவர்களுடைய கருத்தின்படி ஒரு போர்ச்சேவகன் அவனுடைய ஈட்டியை அவருடைய விலாவில் பாய்ச்சினான். அவ்வாறாக உண்டுபண்ணப்பட்ட காயத்திலிருந்து ஏராளமான தெளிவாகத் தெரிகின்ற இரண்டுவிதமான நீர் பாய்ந்தோடி வந்தது. ஒன்று இரத்தமாகவும் மற்றது நீராகவும் இருந்தது. பார்த்திருந்த அனைவராலும் அது கவனிக்கப்பட்டது. யோவான் அந்த நிகழ்வைப்பற்றி மிகத் திட்டமாகக் கூறுகிறான். அவன்: "ஆகிலும் போர்ச்சேவகரில் ஒருவன் ஈட்டியினாலே அவருடைய விலாவில் குத்தினான்; உடனே இரத்தமும் தண்ணீரும் புறப்பட்டது. அதைக் கண்டவன் சாட்சிகொடுக்கிறான், அவனுடைய சாட்சி மெய்யாயிருக்கிறது; நீங்கள் விசுவாசிக்கும்படி, தான் சொல்லுகிறது மெய்யென்று அவன் அறிந்திருக்கிறான். அவருடைய எலும்புகளில் ஒன்றும் முறிக்கப்படுவதில்லை என்கிற வேதவாக்கியம் நிறைவேறும்படி இவைகள் நடந்தது. அல்லாமலும் தாங்கள் குத்தினவரை நோக்கிப்பார்ப்பார்கள் என்று வேறொரு வேதவாக்கியம் சொல்லுகிறது" (யோவான் 19:34–37) என்கிறான். (10)

கிறிஸ்துவின் உயிர்த்தெழுதலிற்குப்பின் ஆசாரியர்களும் அதிபதிகளும், அவர் சிலுவையின்மீது மரிக்காமல், சாதாரணமாக மயக்கமடைந்து, பின்னர் மறுபடியும் பிழைத்தெழுந்தார் என்னும் அறிக்கையை எங்கும் பரப்பினார்கள். வேறொரு அறிக்கை: அது மாம்சத்தையும் எலும்பையுமுடைய உண்மையான சரீரம் இல்லையென்றும், கல்லறையில் வைக்கப்பட்டது சரீரத்தைப்போன்ற ஒன்று என்றும் உறுதியாகக் கூறியது. ரோம நாட்டின் போர்ச்சேவகர்களின் செயல்கள் அந்தத் தவறான அறிக்கைகளைப் பொய்ப்பிக்கின்றன. அவர் ஏற்கெனவே இறந்திருந்ததினால் அவர்கள் அவருடைய கால்களை முறிக்கவில்லை. ஆசாரியர்களைத் திருப்திப்படுத்துவதற்காக அவர்கள் அவருடைய விலாவில் குத்தினார்கள். முன்னதாகவே ஜீவன் பேகாமலிருந்திருந்தாலும், இது உடனடியான மரணத்தை உண்டுபண்ணியிருந்திருக்கும். (11)

ஆனால் இயேசுவின் மரணத்திற்குக் காரணம் ஈட்டியினால் குத்தப்பட்டது அல்ல, சிலுவையின் வேதனையும் அல்ல. மரணத்தின்போது, அவர்: “ மகா சத்தமாய்க்” கூப்பிட்டதும் (மத்தேயு 27:50; லூக்கா 23:46), இரத்தமும் தண்ணீரும் அவருடைய விலாவிலிருந்து ஒழுகினதும், அவர் இருதயம் உடைந்ததினால் மரணமடைந்தார் என்பதை அறிவித்தது. மனவேதனையினால் அவருடைய இருதயம் உடைந்தது. அவர் உலகத்தின் பாவத்தினால் கொலைசெய்யப்பட்டார். (12)

கிறிஸ்துவின் மரணத்துடன் அவருடைய சீடர்களின் நம்பிக்கைள் அழிந்தன. மூடப்பட்டிருந்த அவருடைய கண்ணிமைகளையும், தொங்கிக்கொண்டிருந்த தலையையும், இரத்தத்தால் ஒட்டிக்கொண்டிருந்த தலைமயிரையும், துளைக்கப்பட்ட அவருடைய கைகளையும் கால்களையும் பார்த்தபோது, அவர்களுடைய மனவேதனை விவரிக்கமுடியாததாக இருந்தது. கடைசிவரையிலும், அவர் மரிப்பார் என்று அவர்கள் நம்பியிருக்கவில்லை. உண்மையாகவே அவர் இறந்துவிட்டார் என்பதை அவர்களால் நம்பமுடியவில்லை. தாங்கமுடியாத துயரத்திலிருந்த அவர்கள், இதே காட்சியைப்பற்றி அவர் முன்னுரைத்திருந்த வார்த்தைகளை நினைவுக்குக் கொண்டுவரவில்லை. அவர்கள் சிலுவையையும், அதன் துன்பத்திற்கு இலக்காகி இரத்தம் சிந்திக்கொண்டிருப்பவரையும் மட்டுமே கண்டார்கள். நம்பிக்கையின்மையினால் எதிர்காலம் இருள்போலக் காணப்பட்டது. இயேசுவின்மீதிருந்த அவர்களுடைய விசுவாசம் அழிந்துவிட்டது. என்றாலும் இப்பொழுது அவர்கள் தங்களுடைய ஆண்டவரை நேசித்ததைப்போல இதற்குமுன் ஒருபோதும் நேசித்திருக்கவில்லை. அவருடைய பெரும் மதிப்பையும், அவர்களுக்கான அவருடைய பிரசன்னத்தின் அவசியத்தையும் இவ்விதமாக இதற்குமுன் ஒருபோதும் அவர்கள் உணர்ந்திருக்கவில்லை. (13)

மரணத்திலுங்கூட கிறிஸ்துவின் சரீரம் மிக அதிகமான மேன்மைமிக்கது என்று சீடர்கள் உணர்ந்தார்கள். ஒரு கனமிக்க அடக்கத்தை அவருக்குக் கொடுப்பதற்கு அவர்கள் ஏக்கமுடையவர்களாக இருந்தனர். ஆனால் அதை எவ்விதமாக நிறைவேற்றுவது என்பதை அறியாதவர்களாக இருந்தனர். ரோம நாட்டின் அரசாங்கத்திற்கு எதிரான இராஜத்துரோகக் குற்றத்திற்காக அவர் தண்டிக்கப்பட்டிருந்தார். இந்தக் குற்றத்திற்காக மரணத்திற்குள்ளானவர்கள் அப்படிப்பட்ட குற்றவாளிகளுக்கென்று ஏற்படுத்தப்பட்டிருந்த மயானத்திற்கு அனுப்பப்பட்டிருந்தனர். யோவான் என்னும் சீடனும் கலிலேயாவிலிருந்து வந்த பெண்களுடன் சிலுவையினருகில் தங்கியிருந்தனர். உணர்ச்சிகளில்லாத போர்ச்சேவகர்களால் தொடப்பட்டு, மதிப்பில்லாத ஒரு கல்லறையில்

அடக்கஞ்செய்யப்படும்படி அவர்களுடைய ஆண்டவருடைய சரீரத்தை விட்டுவிட அவர்களால் முடியவில்லை. எனினும் அவர்களால் அதைத் தடைசெய்ய முடியாது. யூத அதிகாரிகளிடமிருந்து எந்தவிதமான ஆதரவையும் அவர்களால் பெறமுடியாது, பிலாத்துவினிடத்திலும் அவர்களுக்கு எந்த செல்வாக்கும் இல்லை. (14)

இந்த அவசரமான நேரத்தில் சீடர்களுக்கு உதவுவதற்காக, அரிமத்தியா ஊரானாகிய யோசேப்பும் நிக்கொதேமுவும் வந்தனர். அந்த இருவரும் சனகரீம் சங்கத்தின் அங்கத்தினர்களாக இருந்ததுடன், பிலாத்துவிற்கு அறிமுகமானவர்களாகவுமிருந்தனர். இருவரும் செல்வந்தர் களாகவும், செல்வாக்குள்ளவர்களாகவும் இருந்தனர். இயேசுவின் சரீரம் ஒரு மேன்மையான அடக்கத்தைப் பெறவேண்டும் என்பதில் அந்த இருவரும் தீர்மானமுள்ளவர்களாக இருந்தனர். (15)

யோசேப்பு தைரியமாகப் பிலாத்துவிடம் சென்று, அவனிடத்திலிருந்து இயேசுவின் சரீரத்தை கெஞ்சிப் பெற்றுக்கொண்டான். இயேசு உண்மை யாகவே இறந்துவிட்டார் என்பதை முதல் முறையாகப் பிலாத்து அறிந்தான். சிலுவையில் அறையப்படுதலுடன் சம்பந்தப்பட்ட நிகழ்வுகள் பற்றி மாறுபட்ட அறிக்கைகள் அவனிடம் சென்றிருந்தன. ஆனால் கிறிஸ்துவின் மரணம்பற்றிய அறிக்கை வேண்டுமென்றே அவனுக்கு அறிவிக்கப்படாமல் வைக்கப்பட்டிருந்தது. கிறிஸ்துவின் சரீரம்குறித்த அவருடைய சீடர்களின் வஞ்சகத்தைப்பற்றி பிலாத்து ஆசாரியர்களால் எச்சரிக்கப்பட்டிருந்தான். யோசேப்பின் வேண்டுகோளைக் கேட்டபோது அதை உறுதிப்படுத்திக்கொள்ளுவதற்காக அவன் சிலுவையின் காவலுக்குப் பொறுப்பாக இருந்த நூற்றுக்கு அதிபதிக்கு ஆள் அனுப்பி, இயேசுவின் மரணம் நிச்சயம் என்பதை அறிந்துகொண்டான். யோசேப்பின் சாட்சியை உறுதிப்படுத்துகின்ற கல்வாரிக் காட்சியின் விபரங்களை அவனிடத்திலிருந்து தெரிந்துகொண்டான். (16)

யோசேப்பின் வேண்டுகோள் அனுமதிக்கப்பட்டது. யோவான் அவனுடைய ஆண்டவரின் உடலை அடக்கஞ்செய்வதைப்பற்றிக் கலங்கி யிருந்தபோது, கிறிஸ்துவின் சரீரத்திற்கான பிலாத்துவின் உத்தரவுடன் யோசேப்பு திரும்பினான். நிக்கொதேமு அவருடைய சரீரத்தில் பூசுவதற்காக நூறு இராத்தல் எடையுள்ள கந்தவர்க்கங்களுடன் வந்தான். எருசலேம் முழுவதிலும், மிக அதிக கனமுடையவனுக்குங்கூட, மரணத்தில் இந்த அளவிற்கு அதிகமான மரியாதை காட்டப்பட்டிருந்திருக்கமாட்டாது. அந்த சீடர்கள் அவர்களுடைய கர்த்தரின் அடக்கத்தில் எந்த அளவிற்கு ஆர்வமுள்ளவர்களாக இருந்தார்களோ, அந்த அளவிற்கு அதிகமான

ஆர்வமுள்ளவர்களாக இந்தச் செல்வந்த அதிபதிகள் இருப்பதைக் கண்டு அவர்கள் ஆச்சரியமடைந்தனர். (17)

இரட்சகர் உயிருடன் இருந்தபோது, யோசேப்போ அல்லது நிக்கொதேமுவோ வெளிப்படையாக அவரை ஏற்றுக்கொள்ளவில்லை. அப்படிப்பட்ட ஒரு நடவடிக்கை அவர்களைச் சனகரீம் சங்கத்திலிருந்து நீக்கிவிடும் என்பதை அவர்கள் அறிந்திருந்ததுடன், அந்த ஆலோசனைச் சங்கங்களில் உள்ள தங்களுடைய செல்வாக்கினால் அவரைப் பாதுகாக்க லாமென்றும் அவர்கள் நம்பியிருந்தனர். சிறிது காலத்திற்கு அவர்கள் வெற்றியடைவதுபோலக் காணப்பட்டிருந்தனர். ஆனால் கிறிஸ்துவிற்கு அவர்கள் காட்டிய ஆதரவைக்கண்ட சூழ்ச்சிமிக்க அந்த ஆசாரியர்கள், அவர்களுடைய திட்டங்களை முறியடித்தனர். அவர்கள் இல்லாத நேரத்தில், இயேசு தண்டனைக்குள்ளாக்கப்பட்டு சிலுவையில் அறையப்படுவதற்கு ஒப்புக்கொடுக்கப்பட்டார். இப்பொழுது அவர் இறந்திருந்ததினால் அதற்குப்பின் அவருடன் இருந்த தங்களுடைய பிணைப்பை அவர்கள் மறைக்கவில்லை. சீடர்கள் தங்களை இயேசுவின் அடியார்கள் என்று வெளிப்படையாகக் காட்டுவதற்குப் பயந்திருந்தபோது, அவர்களுக்கு உதவுவதற்கு யோசேப்பும் நிக்கொதேமுவும் தைரியமாக முன்வந்தனர். அந்த நேரத்தில் செல்வந்தர்களாகவும் கனமிக்கவர்களுமாக இருந்த இவர்களின் உதவி, பெரிய அளவில் அவசியமாக இருந்தது. ஏழைகளாக இருந்த சீடர்களால் இறந்துபோன அவர்களுடைய ஆண்டவருக்கு எதைச் செய்யமுடியாமலிருந்ததோ, அதை அவர்களால் செய்யமுடிந்திருந்தது, அவர்களுடைய செல்வமும் செல்வாக்கும் சீடர்களை ஆசாரியர்கள் அதிபதிகள் ஆகியோரின் வன்மத்திலிருந்து பெரிய அளவில் பாதுகாத்திருந்தது. (18)

இயேசுவின் உடலை அவர்கள் தங்களுடைய சொந்தக் கரங்களினால் மெதுவாகவும் பயபக்தியுடனும் சிலுவையிலிருந்து இறக்கினார்கள். காயங்களும் சிராய்ப்புகளும் அடைந்திருந்த உடலை அவர்கள் பார்த்தபோது, அவர்களுடைய அனுதாபத்தின் கண்ணீர் விரைந்து வழிந்தது. பாறையில் வெட்டியெடுக்கப்பட்ட ஒரு கல்லறை யோசேப்பிற்குச் சொந்தமாக இருந்தது. அதை அவன் தனக்கென்று தனிப்படுத்தி வைத்திருந்தான். அது கல்வாரிக்கு அருகில் இருந்தது. அதை அவன் இப்பொழுது இயேசுவிற்கென்று ஆயத்தஞ்செய்தான். இரட்சகரின் உடல் நிக்கொதேமு கொண்டுவந்திருந்த கந்தவர்க்கங்களுடன் மிகக் கவனமாக ஒரு மெல்லிய துணியால் சுற்றப்பட்டு, பின்னர் அந்தக் கல்லறைக்கு எடுத்துச்செல்லப்பட்டது. அங்கு அந்த மூன்று சீடர்களும் சிதைக்கப்பட்டிருந்த அந்தக் கை கால்களை விரித்து நீட்டி, காயமடைந்திருந்த அந்தக் கரங்களை

மடித்து நாடித்துடிப்பற்ற மார்பின்மீது வைத்தனர். அந்தக் கலிலேய பெண்கள் அவர்களால் மிகவும் நேசிக்கப்பட்டிருந்த அவர்களுடைய அன்பான போதகரின் உடலுக்கு என்னவெல்லாம் செய்யப்பட்டிருக்கமுடியுமோ அவை அனைத்தும் செய்யப்பட்டிருந்ததைக் கண்டனர். அதற்குப்பின், அந்தப் பாரமான கல் அந்த கல்லறையின் நுழைவாயிலுக்கு எதிராக உருட்டப்பட்டு மூடப்பட்டதையும், இரட்சகர் இளைப்பாறும்படி விட்டுவிடப்பட்டதையும் கண்டார்கள். சிலுவைக்கருகிலும் கிறிஸ்துவின் கல்லறைக்கருகிலும் அந்த பெண்கள் கடைசியானவர்களாக இருந்தனர். மாலை நேரத்தின் நிழல்கள் சேர்ந்துகொண்டிருந்தபோது, மகதலேனா மரியாளும் மற்ற மரியாள்களும் தங்களுடைய கர்த்தர் இளைப்பாறிக்கொண்டிருந்த இடத்திற்கருகில் தரித்திருந்து, தாங்கள் நேசித்திருந்தவருடைய முடிவிற்காகத் துயரக் கண்ணீர் வடித்துக்கொண்டிருந்தார்கள். அவர்கள் "திரும்பிப்போய், கந்தவர்க்கங் களையும் பரிமளதைலங்களையும் ஆயத்தம்பண்ணி, கற்பனையின்படியே ஓய்வுநாளில் ஓய்ந்திருந்தார்கள்"—லூக்கா 23:56. (19)

துயரப்பட்டுக்கொண்டிருந்த சீடர்களுக்கும், அதைப்போலவே அந்த ஆசாரியர்கள், அதிபதிகள், வேதபாரகர்கள், மக்கள் ஆகிய அனைவருக்கும் அது ஒருபோதும் மறக்கமுடியாத ஓய்வுநாளாக இருந்தது. அந்த ஆயத்தநாளின் மாலையில் சூரியன் மறைகின்ற நேரத்தில் ஓய்வுநாள் ஆரம்பமாகியிருந்தது என்பதை அடையாளப்படுத்திக்கொண்டு எக்காளங்கள் ஒலித்தன. பஸ்கா எவரைச் சுட்டிக்காட்டிக்கொண்டிருந்ததோ, அவர் துன்மார்க்கரின் கைகளினால் கொலைசெய்யப்பட்டு, யோசேப்பின் கல்லறையில் வைக்கப்பட்டபோது, நூற்றாண்டுகளாக இருந்த வழக்கத்தின்படியே பஸ்கா ஆசரிக்கப்பட்டிருந்தது. ஓய்வுநாளில் தேவாலயத்தின் பிராகாரங்கள் ஆராதனை செய்பவர்களால் நிரம்பிவழிந்திருந்தன. கொல்கதாவிலிருந்த பிரதான ஆசாரியன் அவனுடைய மிகவும் சிறப்பான ஆசாரிய உடைகளை அணிந்தவனாக அங்கு இருந்தான். வெண்பாகைகளை அணிந்திருந்த ஆசாரியர்கள் ஏராளமான நடவடிக்கை களில் ஈடுபட்டவர்களாக, தங்களது பணிகளைச் செய்திருந்தனர். ஆனால் அங்கு இருந்தவர்களில் சிலர், காளைகளின் இரத்தமும் வெள்ளாடுகளின் இரத்தமும் பாவநிவாரணபலியாகச் செலுத்தப்பட்டபோது, அமைதியற்றவர் களாக இருந்தனர். ஒரு நிஜம் அதன் நிழலைச் சந்தித்தது என்பதையும், உலகத்தின் பாவங்களுக்காக முடிவில்லாத ஒரு தியாகபலி செலுத்தப் பட்டாகிவிட்டது என்பதையும் உணராதிருந்தனர். அவர்களுடைய சமயச் சடங்குகளைச் செய்வதில் இதற்குமேல் எந்தவிதமான மதிப்பும் இல்லை என்பதை அவர்கள் அறியாதிருந்தனர். ஆனால் அவ்விதமான முரண்பட்ட உணர்வுகளுடன் இதற்குமுன் ஒருபோதும் அந்த ஆராதனை சாட்சியாகக் காணப்பட்டிருக்கவில்லை. எக்காளங்களும் இசைக்கருவிகளும் பாடகர்களின்

குரல்களும் எப்பொழுதும்போலவே உரத்த சத்தமுள்ளவைகளாகவும் தெளிவானவைகளாகவும் இருந்தன. நிகழ்ந்திருந்த மாறுபட்ட ஒரு சம்பவத்தைப்பற்றி ஒருவர்பின் ஒருவராக விசாரித்திருந்தனர். மற்றவர்கள் உட்புகுவதிலிருந்து இதுவரை மகா பரிசுத்த ஸ்தலம் பரிசுத்தமானவிதமாகக் காவல் செய்யப்பட்டிருந்தது. ஆனால் இப்பொழுது அனைத்துக் கண்களாலும் காணப்படும்விதமாக அது திறக்கப்பட்டிருந்தது. தூய்மையான சணல் நூலினால் நெய்யப்பட்டு, அழகிய பொன் வேலைகள் செய்யப்பட்டு கருஞ்சிவப்பு இரத்தாம்பரம் ஆகியவைகளால் உண்டுபண்ணப்பட்டிருந்த அந்த கனமான திரைச்சீலை, மேலிருந்து கீழாகக் கிழிக்கப்பட்டிருந்தது. யேகோவா தமது மகிமையினால் தொடர்புகொள்ளும்படியாக பிரதான ஆசாரியனைச் சந்தித்திருந்த இடம், உயர்வானவர்களைக் கண்டு அவர்களுடன் பேசும் தேவனுடைய பரிசுத்தமான அறை, அதற்குமேல் கர்த்தரால் அங்கீகரிக்கப்படாத ஒரு இடமாக எல்லாக் கண்களுக்கும் திறந்து வைக்கப்பட்டிருக்கிறது. ஆசாரியர்கள் பலிபீடத்திற்குமுன் வரவிருக்கும் தீமையைப்பற்றிய முன்னுணர்வின் துக்கத்துடன் ஊழியஞ்செய்து கொண்டிருந்தனர். மகா பரிசுத்த ஸ்தலத்தின் பரிசுத்தமான இரகசியம் திறந்துவைக்கப்பட்டது, வரவிருக்கும் பேரழிவுபற்றிய பயத்தால் அவர்களை நிரப்பினது. (20)

கல்வாரிச் சிலுவையின் காட்சிகளினால் ஆரம்பமான சிந்தனைகளுடன், அநேக மனங்கள் தீவிரமாக ஆக்கிரமிக்கப்பட்டிருந்தன. சிலர் தாங்கள் கொண்டாடிக்கொண்டிருந்த பண்டிகையின் முழுப்பொருளை அறிந்துகொள்ளுவதற்காகவும், சிலர் இயேசு தம்மைப்பற்றிக் கூறியதைப் போன்றவர் அல்ல என்பதற்கான சான்றுகளைக் காண்பதற்காகவும், மற்றவர்கள் துயரமிக்க இருதயங்களுடன் உண்மையான மேசியா அவர்தான் என்பதற்கான சான்றுகளுக்காகவும், சிலுவையில் அறையப்பட்டதுமுதல் உயிர்த்தெழுதல்வரையுள்ள தீர்க்கதரிசனங்களை தூங்காத கண்களுடன் ஆராய்ந்துகொண்டிருந்தனர். காட்சியில் இருந்தவைகளை பல்வேறுவிதமான நோக்கங்களுடன் ஆராய்ந்துகொண்டிருந்தபோதிலும், அதே சத்தியம்பற்றின மனஉணர்த்துதலை அனைவரும் அடைந்திருந்தனர். அதாவது கடந்த சில நாட்களில் நடைபெற்ற நிகழ்வுகளில் தீர்க்கதரிசனம் நிறைவேறியிருந்தது என்றும், சிலுவையில் அறையப்பட்டிருந்த ஒருவர் உலக மீட்பர் என்றும் மன உணர்த்துதலை அடைந்திருந்தனர். அந்த நேரத்தில், அந்த ஆராதனையில் ஒன்றுபட்டிருந்த அநேகர், அதற்குப்பின் ஒருபோதும் பஸ்கா ஆசரிப்பில் மறுபடியும் பங்குபெறவில்லை. இயேசுவின் உண்மையான குணம்பற்றி ஆசாரியர்களில் அநேகருங்கூட மனஉணர்த்துதலை அடைந்திருந்தனர். தீர்க்கதரிசனங்களை அவர்கள் ஆராய்ந்தது வீணாயிருக்கவில்லை.

அவருடைய உயிர்த்தெழுதலிற்குப்பின் அவர்கள் அவரை தேவகுமாரன் என்று ஏற்றுக்கொண்டிருந்தனர். (21)

இயேசு சிலுவையில் உயர்த்தப்பட்டதைக் கண்ட நிக்கொதேமு, ஒலிவமலையின்மீது, அந்த இரவில் அவர் பேசிய வார்த்தைகளை நினைத்துக்கொண்டான். “சர்ப்பமானது மோசேயினால் வனாந்தரத்திலே உயர்த்தப்பட்டதுபோல மனுஷகுமாரனும், தன்னை விசுவாசிக்கிறவன் எவனோ அவன் கெட்டுப்போகாமல் நித்தியஜீவனை அடையும்படிக்கு, உயர்த்தப்படவேண்டும்”—யோவான் 3:14,15. கிறிஸ்து கல்லறையில் கிடத்தி வைக்கப்பட்டிருந்த அந்த ஓய்வுநாளில் அதன் பிரதிபலிப்பை அடைந்து கொள்ளக்கூடிய வாய்ப்பை அவன் அடைந்திருந்தான். ஒரு தெளிவான ஒளி இப்பொழுது அவனுடைய மனதைப் பிரகாசிப்பித்திருந்தது. அதற்குப்பின் அவனிடம் இயேசு பேசியிருந்த வார்த்தைகள் இரகசியமானதாக இருக்கவில்லை. இரட்சகர் உயிருடன் இருந்தபோது அவன் தன்னை அவருடன் பிணைத்துக்கொள்ளாமலிருந்ததினால் அதிகமாக இழந்துவிட்டதை உணர்ந்தான். இப்பொழுது அவன் கல்வாரியின் நிகழ்வுகளை மறுபடியும் நினைத்துப்பார்த்தான். கிறிஸ்துவைக் கொலைசெய்தவர்களுக்காக அவர் ஏறெடுத்த ஜெபம், மரித்துக்கொண்டிருந்த கள்ளனின் விண்ணப்பத்திற்கு அவர் கொடுத்த பதில் ஆகியவை கற்றறிந்த அந்த ஆலோசகனின் இருதயத்தில் பேசின. அவன் மறுபடியும் “முடிந்தது” என்று பேசப்பட்டிருந்த—ஒரு வெற்றி வீரரின் வார்த்தைகளைப் போன்ற கடைசி சத்தத்தைக் கேட்டான். மறுபடியும் அவன் அசைந்தாடும் பூமியையும், இருண்ட வானங்களையும், கிழிந்த திரைச்சீலையையும், நடுங்கின பாறைகளையும் கண்டபோது, அவனுடைய விசுவாசம் என்றென்றைக்குமான ஸ்திரமடைந்தது. சீடர்களின் நம்பிக்கைகளை அழித்திருந்த அதே நிகழ்வுகள், இயேசுவின் தெய்வீகம்பற்றின மனநிறைவை யோசேப்பிலும் நிக்கொதேமுவிலும் உண்டுபண்ணின. உறுதியான ஒரு தைரியத்தினாலும் தடுமாறாத விசுவாசத்தினாலும் அவர்களுடைய பயங்கள் மேற்கொள்ளப்பட்டிருந்தன. (22)

கிறிஸ்து இப்பொழுது, கல்லறையில் கிடத்தப்பட்டிருந்தபோது, திரளானவர்களின் கவனத்தை ஈர்த்திருந்ததைப்போல இதற்குமுன் ஒருபோதும் ஈர்த்திருக்கவில்லை. தங்களுடைய பழக்கத்தின்படியே மக்கள் அவர்களுடைய நோயாளிகளையும் துன்பப்பட்டுக்கொண்டிருந்தவர்களையும் ஆலயப்பிராகாரங்களுக்கு கொண்டுவந்து, நசரேயனாகிய இயேசுவைப்பற்றி நமக்கு யார் கூறுவார்கள்? என்று விசாரித்துக்கொண்டு அலைந்திருந்தனர். நோயுற்றவர்களைச் சுகப்படுத்தி, மரித்தவர்களை எழுப்பியிருந்தவரைக் காண்பதற்காக அநேகர் வெகு தொலையிலிருந்து வந்திருந்தனர். சுகமளிக்கும் கிறிஸ்து எங்களுக்குத் தேவையென்னும் சத்தம், எல்லாப்

பக்கங்களிலிருந்தும் கேட்கப்பட்டிருந்தது. இந்தச் சந்தர்ப்பத்தில் தொழுநோயின் அடையாளத்தைக் காட்டுவதாக எண்ணப்பட்டிருந்தவர்கள் ஆசாரியர்களால் பரிசோதிக்கப்பட்டிருந்தனர். அநேகர் தங்களுடைய கணவரையோ, மனைவியையோ, அல்லது பிள்ளைகளையோ தொழுநோயாளி என்று கூறப்படுவதைக் கேட்பதற்கு வற்புறுத்தப்பட்டிருந்தனர். அவர்கள் தங்களுக்கு அடைக்கலமாக இருந்த வீடுகளிலிருந்தும் அவர்களுடைய நண்பர்களின் கரிசனையிலிருந்தும் தூரமாக விலகிச்செல்லும்படி தண்டிக்கப்பட்டிருந்து, அந்நியர்களைத் துக்கம் நிறைந்த சத்தத்துடன்: தீட்டு! தீட்டு! என்ற எச்சரிக்கும்படிச் செய்யப்பட்டிருந்தனர். அருவருக்கத்தக்கவனாக இருந்த தொழுநோயாளியை சுகப்படுத்தும் தன்மையுடன் தொடுவதற்கு ஒருபோதும் மறுக்காமலிருந்த நசரேயனாகிய இயேசுவின் நட்புமிக்க கரங்கள் அவருடைய மார்பின்மீது மடிக்கப்பட்டிருந்தன. அவனுடைய விண்ணப்பத் திற்கு "எனக்குச் சித்தமுண்டு சுத்தமாகு" (மத்தேயு 8:3) என்னும் ஆறுதலான மறுமொழியைக் கொடுத்திருந்த அந்த உதடுகள் இப்பொழுது மௌனமாகியிருந்தன. அனுதாபத்திற்காகவும் நிவாரணம்பெறவும் அநேகர் தலைமை ஆசாரியர்களிடத்திற்கும் அதிபதிகளிடத்திற்கும் வீணாக முறையீடு செய்திருந்தனர். ஜீவனுள்ள கிறிஸ்து மறுபடியும் அவர்கள் மத்தியில் இருக்கவேண்டுமென்னும் வெளியரங்கமான தீர்மானத்தை உடையவர்களாக அவர்கள் இருந்தனர். அவர்கள் பிடிவாதமான அக்கறையுடன் அவர்களிடம் அவரைக் கேட்டார்கள். அவர்கள் திருப்பிவிடப்பட முடியாதவர்களாக இருந்தனர். ஆனால் தேவாலயத்திலிருந்து அவர்கள் விரட்டியடிக்கப்பட்டனர். தங்களுடைய நோயுற்றவர்களுடனும் மரித்துக்கொண்டிருந்தவர்களுடனும் ஆலயத்திற்குள் பிரவேசிக்க அனுமதிகோரிக்கொண்டு வந்திருந்த திரளானவர்களை பின்னாகத் தள்ளுவதற்காக வாசல்களில் போர்ச்சேவகர்கள் நிறுத்தப்பட்டிருந்தனர். (23)

இரட்சகரால் சுகமடைவதற்கென்று வந்திருந்த நோயாளிகள் அவர்களுடைய ஏமாற்றங்களில் மூழ்கினார்கள். வீதிகள் துக்கங்கொண்டாடு தலினால் நிரம்பியிருந்தன. இயேசுவின் குணமளிக்கும் தொடுதல் இல்லாததினால் நோயாளிகள் மரித்துக்கொண்டிருந்தனர். மருத்துவர் களிடமிருந்து வீணாக ஆலோசனை பெறப்பட்டிருந்தது, யோசேப்பின் கல்லறையில் வைக்கப்பட்டுள்ளவரிடம் இருந்ததுபோன்ற திறமை ஒருவரிடமும் இருக்கவில்லை. (24)

துன்பப்பட்டுக்கொண்டிருந்தவர்களின் துக்கங்கொண்டாடும் சத்தங்கள், ஒரு பெரும் ஒளி உலகத்தைவிட்டுச் சென்றுவிட்டது என்னும் மனஉணர்த்துதலை ஆயிரக்கணக்கான உள்ளங்களுக்குக் கொண்டுவந்தது.

கிறிஸ்து இல்லாமல் பூமி இருண்டு கருத்துக் காணப்பட்டது. “அவனை சிலுவையில் அறையுங்கள்; அவனை சிலுவையில் அறையுங்கள்” என்றும் எவருடைய குரல்கள் எழும்பியிருந்ததோ, அவைகள் இப்பொழுது அவர்கள்மீது விழுந்திருந்த பேராபத்தை உணர்ந்தது. இப்பொழுது அதேவிதமான அக்கறையுடன், இயேசு இன்னும் உயிருடன் இருந்தால் அவரை எங்களுக்குக் கொடுங்கள் என்ற சத்தமிட்டிருந்திருக்கக்கூடியவைகளாக இருந்தன. (25)

இயேசு ஆசாரியர்களால் மரணத்திற்குள்ளாக்கப்பட்டார் என்பதை மக்கள் கேட்டபோது, அவருடைய மரணத்தைப்பற்றி விசாரணைகள் செய்யப்பட்டன. அவரைப்பற்றிய விசாரணைக் குறிப்புகள் முடிந்தவரை இரகசியமாக வைக்கப்பட்டிருந்தன. ஆனால் அவர் கல்லறையில் இருந்த நேரத்தில், ஆயிரக்கணக்கான உதடுகளின்மீது அவருடைய பெயர் இருந்ததுடன், அவரைப்பற்றிய பரிகாசமான விசாரணையும், ஆசாரியர்கள் அதிபதிகள் ஆகியோரின் மனிதத்தன்மையில்லாத நடத்தைபற்றிய விபரங்கள் அனைத்தும் எங்கும் பரவியிருந்தன. நுண்ணறிவுமிக்க மனிதர்களால் மேசியாவைப்பற்றிய பழைய ஏற்பாட்டுத் தீர்க்கதரிசனங்களுக்கு விளக்கங்கூற ஆசாரியர்களும் அதிபதிகளும் அழைக்கப்பட்டனர். அதற்குப் பதிலாகப் பொய்களைப் பிணைக்கும்படி அவர்கள் முயற்சி செய்தபோது, பைத்தியம் பிடித்தவர்களைப்போலானார்கள். கிறிஸ்துவின் பாடுகளையும் மரணத்தையும் சுட்டிக்காட்டியிருந்த தீர்க்கதரிசனங்களை அவர்களால் விளக்க முடியவில்லை. விசாரித்த அநேகருக்கு வேதவாக்கியங்கள் நிறைவேறியிருந்தன என்னும் மனநிறைவு உண்டாயிற்று. (26)

இனிப்பானதாக இருக்கும் என்று ஆசாரியர்கள் நினைத்திருந்த பழிவாங்குதல் ஏற்கெனவே அவர்களுக்குக் கசப்பானதாகியிருந்தது. மக்களின் கடுமையான கண்டனத்தைச் சந்தித்துக்கொண்டிருந்ததை அவர்கள் அறிந்தனர். எவர்களையெல்லாம் இயேசுவிற்கு எதிராக தங்களது செல்வாக்கிற்கு உட்படுத்தியிருந்தார்களோ அவர்கள், அவர்களுடைய வெட்கத்திற்குரிய சொந்தச் செயலினால் திகிலடைந்திருந்தனர் என்பதை அறிந்தார்கள். இயேசுவை ஒரு வஞ்சகர் என்று நம்பவைப்பதற்கு இந்த ஆசாரியர்கள் முயன்றிருந்தனர். ஆனால் அது வீணானதாக இருந்தது. அவர்களில் சிலர் லாசருவின் கல்லறையினருகில் நின்றிருந்து, மரித்தவன் உயிருடன் திரும்பவும் கொண்டுவரப்பட்டதைக் கண்டிருந்தனர். கிறிஸ்து தாமாகவே ஜீவனுள்ளவராக மரித்தோரிலிருந்த உயிர்த்தெழுந்து, மறுபடியும் அவர்களுக்குமுன் தோன்றுவார் என்னும் பயத்தினால் அவர்கள் நடுங்கினார்கள். தம்முடைய ஜீவனைக் கொடுக்கவும், திரும்ப அதை எடுத்துக்கொள்ளவும் தமக்கு வல்லமை உண்டு என்று அவர்

அறிவித்திருந்ததை அவர்கள் கேட்டிருந்தனர். “இந்த ஆலயத்தை இடித்துப் போடுங்கள், மூன்று நாளைக்குள்ளே இதை எழுப்புவேன்” (யோவான் 2:19) என்று அவர் கூறியிருந்ததை அவர்கள் நினைத்தார்கள். இயேசு சீடர்களுடன் எருசலேமிற்கான அவருடைய கடைசிப் பயணத்தைச் செய்துகொண்டிருந்தபோது, “இதோ, எருசலேமுக்குப் போகிறோம்; மனுஷகுமாரன் பிரதான ஆசாரியரிடத்திலும் வேதபாரகரிடத்திலும் ஒப்புக்கொடுக்கப்படுவார்; அவர்கள் அவரை மரண ஆக்கினைக்குள்ளாகத் தீர்த்து, அவரைப் பரியாசம்பண்ணவும், வாரினால் அடிக்கவும், சிலுவையில் அறையவும் புறஜாதியாரிடத்தில் ஒப்புக்கொடுப்பார்கள்; ஆகிலும் மூன்றாம் நாளிலே அவர் உயிரோடே எழுந்திருப்பார்” (மத்தேயு 20:18,19) என்று சீடர்களிடம் கூறியிருந்தார் என்று யூதாஸ் அவர்களிடம் கூறியிருந்தான். அந்த வார்த்தைகளைக் கேட்டபோது, அவர்கள் ஏளனஞ்செய்து பரிகாசமாகச் சிரித்திருந்தனர். ஆனால் இப்பொழுது, கிறிஸ்து முன்னுரைத்திருந்தவைகள் இதுவரை நிறைவேறியிருந்தன என்பதை நினைவுகூர்ந்தார்கள். அவர் மூன்றாம் நாளில் மறுபடியும் உயிர்த்தெழுவேன் என்று கூறியிருந்தார். அது நடைபெறாது என்று எவரால் கூறமுடியும்? அந்த எண்ணங்களை மனதிலிருந்து நீக்க அவர்கள் ஏக்கமுடையவர்களாக இருந்தனர். ஆனால் அவர்களால் முடியவில்லை. அவர்களுடைய பிதாவான பிசாசைப்போலவே அவர்களும் நம்பி நடுங்கியிருந்தனர். (27)

இப்பொழுது அந்த உணர்ச்சிக் கொந்தளிப்பின் மூர்க்கம் கடந்துசென்றிருந்தது. கிறிஸ்துவின் உருவம் அவர்களுடைய மனங்களுக் குள் கடந்துசென்றது. அமைதியுடன் எந்தவிதமான குற்றமும் கூறாதவராக அவருடைய எதிரிகளுக்குமுன் அவர்களால் உண்டான பாடுகளையும் நிந்தைகளையும் அவமதிப்புகளையும் எந்தவிதமான முறுமுறுப்புமின்றி அனுபவித்தவராக நின்றுகொண்டிருந்த அவரை, அவர்கள் கண்டார்கள். அவர் தேவகுமாரன் என்று அவர்களை மேற்கொள்ளுகின்ற ஒரு மனஉணர்த்துதலுடன் அவரைக்குறித்து நடைபெற்ற விசாரணை மற்றும் சிலுவையில் அறையப்படுதல் ஆகிய அனைத்து நிகழ்வுகளும் அவர்களிடத் திற்குத் திரும்பிவந்தன. குற்றஞ்சாட்டினவர்கள் குற்றவாளிகளாகும்படியாகவும், தண்டிக்கப்பட்டவர் தண்டிப்பவராகவும், கொலைசெய்யப்பட்டவர் அவரைக் கொலைசெய்தவர்களின் மரணத்தை நீதியாகக் கோருபவராகவும் எந்த நேரத்திலும் அவர்கள்முன் நிற்கக்கூடும் என்று உணர்ந்தார்கள். (28)

ஓய்வுநாளில் அவர்களால் ஓய்ந்திருக்க முடியவில்லை. தீட்டுப்பட்டு விடக்கூடும் என்ற பயத்தால் அவர்கள் ஒரு புறஜாதியினரின் களத்திற்குள் செல்லமுடியாதவர்களாக இருந்தபோதிலும், கிறிஸ்துவின் உடலைப்பற்றின

ஒரு ஆலோசனைக் கூட்டத்தை நடத்தினார்கள். அவர்களால் சிலுவையில் அறையப்பட்டிருந்தவரை மரணமும் கல்லறையும் நிறுத்திவைக்கவேண்டும். “பிரதான ஆசாரியரும் பரிசேயரும் பிலாத்துவினிடத்தில் கூடிவந்து: ஆண்டவனே, அந்த எத்தன் உயிரோடிருக்கும்போது, மூன்றுநாளைக்குப்பின் எழுந்திருப்பேன் என்று சொன்னது எங்களுக்கு ஞாபகமிருக்கிறது. ஆகையால், அவனுடைய சீஷர்கள் இராத்திரியிலே வந்து, அவனைக் களவாய்க் கொண்டுபோய், மரித்தோரிலிருந்து எழுந்தானென்று ஜனங்களுக்குச் சொல்லாதபடிக்கும், முந்தின எத்தைப்பார்க்கிலும் பிந்தின எத்து கொடிதாகாதபடிக்கும், நீர் மூன்றுநாள்வரைக்கும் கல்லறையைப் பத்திரப்படுத்தும்படி கட்டளையிடவேண்டும் என்றார்கள். அதற்குப் பிலாத்து: உங்களுக்குக் காவல்சேவகர் உண்டே; போய், உங்களால் கூடியமட்டும் பத்திரப்படுத்திக்கொள்ளுங்கள்” (மத்தேயு 27:62–65) என்றான்.. (29)

அந்தக் கல்லறையைப் பாதுகாக்கும்படி ஆசாரியர்கள் கட்டளை கொடுத்தார்கள். அதன் வாசலுக்குமுன் ஒரு பெரிய கல் வைக்கப்பட்டது. அந்தக் கல்லிற்குக் குறுக்காக கயிறுகளைக் கட்டி, அவைகளின் முனைகளை உறுதியான பாறைகளுடன் சேர்த்துக் கட்டி, அவைகளின்மீது ரோமர்களின் முத்திரையால் முத்திரையிட்டார்கள். அந்த முத்திரையை உடைக்காமல் அந்தக் கல்லை நகர்த்த முடியாது. அதில் ஒருவரும் குறுக்கீடு செய்துவிட முடியாதபடி தடைசெய்ய, அந்தக் கல்லறையைச் சுற்றிலும் நூறு போர்ச்சேவகர்கள் காவலாளிகளாக நிறுத்தப்பட்டிருந்தனர். கிறிஸ்துவின் உடல் வைக்கப்பட்டிருந்த இடத்திலேயே இருக்கும்படிச் செய்வதற்கு ஆசாரியர்களால் என்ன செய்யமுடிந்திருந்ததோ அவைகளைச் செய்திருந்தனர். காலங்களனைத்திலும் அவர் அங்கேயே இருந்தாகவேண்டும் என்பதைப்போல, அவர் அவருடைய கல்லறைக்குள் பாதுகாப்பாக வைக்கப்பட்டு முத்திரையிடப்பட்டார். (30)

இவ்வாறாக, பலவீனமாக மனிதர்கள் ஆலோசனைசெய்து திட்டமிட்டனர். இந்த கொலைகாரர்கள் தங்களது முயற்சிகள் பயனற்றவை என்பதை உணராது இருந்தனர். ஆனால் அவர்களுடைய செயலினால் தேவன் மகிமைப்பட்டிருந்தார். கிறிஸ்துவின் உயிர்த்தெழுதலைத் தடைசெய்வதற்காகச் செய்யப்பட்ட அதே முயற்சிகள், அதற்கான சான்றுகளில் மிக அதிகமான மனநிறைவை உண்டுபண்ணும் வாதங்களாக உள்ளன. அந்தக் கல்லறையைச் சுற்றி எந்த அளவிற்கு அதிகமான எண்ணிக்கையில் போர்ச்சேவகர்கள் வைக்கப்படுகிறார்களோ, அந்த அளவிற்கு அவர் உயிர்த்தெழுந்தார் என்பதற்கான பலமிக்க சாட்சியாக அது இருக்கும். கிறிஸ்துவின் மரணத்திற்கு நூற்றாண்டுகளுக்கு

முன்னதாக சங்கீதக்காரனின்மூலமாகப் பரிசுத்த ஆவியானவர்: “ஜாதிகள் கொந்தளித்து, ஜனங்கள் விருதாக்காரியத்தைச் சிந்திப்பானேன்? கர்த்தருக்கு விரோதமாகவும், அவர் அபிஷேகம்பண்ணினவருக்கு விரோதமாகவும், பூமியின் ராஜாக்கள் எழும்பிநின்று, அதிகாரிகள் ஏகமாய் ஆலோசனைபண்ணி: அவர்கள் கட்டுகளை அறுத்து, அவர்கள் கயிறுகளை நம்மைவிட்டு எறிந்துபோடுவோம் என்கிறார்கள். பரலோகத்தில் வீற்றிருக்கிறவர் நகைப்பார்; ஆண்டவர் அவர்களை இகழுவார்” (சங்கீதம் 2:1–4) என்று அறிவித்திருந்தார். ஜீவாதிபதியை கல்லறைக்குள் நிறுத்திவைக்க ரோமக் காவலாளிகளும் ரோமர்களின் ஆயுதங்களும் வல்லமையற்றவைகளாக இருந்தன. அவருடைய விடுதலையின் நேரம் சமீபமாயிருந்தது. (31) ★

# 81

# இயேசு உயிர்த்தெழுந்தார்!

**மத்தேயு 28:2–4, 11–15**

**(The Desire of Ages, pp. 779–787)**

வாரத்தின் முதல்நாள் இரவு, (சனிக்கிழமை இரவு) மெதுவாக சென்றுபோயிற்று. பொழுது விடிவதற்கு முன்னுள்ள மிகவும் இருளான நேரம் வந்திருந்தது. கிறிஸ்து அவருடைய ஒடுக்கமான கல்லறையில் இன்னும் ஒரு கைதியாக இருந்தார். அந்தப் பெரிய கல் இன்னும் அதன் இடத்தில் இருந்தது. ரோமர்கள் வைத்த முத்திரை உடைக்கப்படாமலிருந்தது. ரோம அரசின் காவலாளிகள் காவல்காத்துக்கொண்டிருந்தனர். காணப்படாத காவலாளிகளும் அங்கே இருந்தனர். பொல்லாத தூதர்களின் சேனைகள் அந்த இடத்தைச் சுற்றிலும் ஒன்றுகூடியிருந்தன. முடிந்திருந்தால் அந்தகாரப் பிரபு அவனுடைய மருளவிழுந்த சேனையுடன் தேவகுமாரனை உள்ளே வைத்து முத்திரையிடப்பட்டிருந்த அந்தக் கல்லறையை, என்றென்றைக்குமாக முத்திரையிடப்பட்டதாக வைத்திருந்திருப்பான். ஆனால் ஒரு பரலோக சேனை அந்தக் கல்லறையைச் சூழ்ந்திருந்தது,.வலிமை மிகுந்தவர்களாக இருந்த தூதர்கள் அந்தக் கல்லறையைக் காவல் செய்துகொண்டிருந்து, ஜீவாதிபதியை வரவேற்பதற்காகக் காத்துக்கொண்டிருந்தனர். (1)

"அப்பொழுது, பூமி மிகவும் அதிரும்படி, கர்த்தருடைய தூதன் வானத்திலிருந்திறங்கிவந்தான்" தேவனுடைய போர்க்கவசத்தை அணிந்திருந்த அந்தத் தூதன், பரலோகப் பிராகாரத்தைவிட்டு வந்திருந்தான். தேவ மகிமையின் பிரகாசமிக்க ஒளிக்கதிர்கள் அவனுக்குமுன்சென்று அவனுடைய பாதையை ஒளிப்படுத்தியது. "அவனுடைய ரூபம் மின்னல்போலவும், அவனுடைய வஸ்திரம் உறைந்த மழையைப்போல வெண்மையாகவும் இருந்தது." (2)

ஆசாரியர்களே! அதிபதிகளே! இப்பொழுது உங்களுடைய காவலாளிகளின் வல்லமை எங்கே? மனித வல்லமையைப்பற்றி ஒருபோதும் பயப்படாத தைரியமான போர்வீரர்கள், இப்பொழுது வாளும் வேலும் இல்லாத

கைதிகளைப்போல ஆனார்கள். அவர்கள் எவனுடைய முகத்தை இப்பொழுது பார்க்கின்றார்களோ அது சாவிற்குரிய ஒரு வீரனுடையதைப்போன்று இருக்கவில்லை. அது கர்த்தருடைய சேனையின் தூதர்களில் அதிகப் பலம்வாய்ந்த தூதனின் முகமாக இருக்கிறது. அந்தத் தூதன் சாத்தான் எந்தப் பதவியிலிருந்து விழுந்திருந்தானோ, அந்தப் பதவியை நிரப்பினவனாக இருக்கிறான். பெத்லகேம் குன்றுகளின்மேல் கிறிஸ்துவின் பிறப்பை அறிவித்தவன் அவன். அவன் சமீபிக்கும்போது, பூமி நடுங்குகிறது. இருளின் சேனைகள் ஓடுகின்றன. அவன் அந்தக் கல்லை உருட்டித் தள்ளும்போது, பரலோகம் பூமியை நோக்கிக் கீழே வருவதைப்போலக் காணப்படுகிறது. ஒரு கூழாங்கல்லை அகற்றுவதைப்போல அவன் அந்தக் கல்லை அகற்றுவதை அந்தப் போர்ச்சேவகர்கள் காண்பதுடன், தேவகுமாரனே! வெளியே வாரும்! உம்முடைய பிதா உம்மை அழைக்கிறார் என்று அவன் சத்தமிடுவதை அவர்கள் கேட்கவும் செய்கின்றனர். இயேசு கல்லறையைவிட்டு வெளியில் வருவதை அவர்கள் பார்ப்பதுடன், திறக்கப்பட்ட அந்தக் கல்லறையின் மீதிருந்து: "நானே உயிர்த்தெழுதலும் ஜீவனுமாயிருக்கிறேன்" என்று அவர் அறிவிப்பதையும் கேட்கின்றனர். அவர் மகத்துவத்துடனும் மகிமையுடனும் வரும்போது, தூதர்களின் சேனை அவரைப் போற்றும்வண்ணமாக உலக மீட்பருக்கு முன்பாகத் தாழப் பணிந்து, துதியின் பாடல்களுடன் அவரை வரவேற்கின்றது. (3)

கிறிஸ்து அவருடைய ஜீவனை விட்டபோது, அந்த நேரத்தை ஒரு பூமியதிர்ச்சி குறிப்பிட்டது. அதைப்போலவே அவர் அதை மீண்டும் வெற்றியில் எடுத்துக்கொண்டபோது, அந்த நேரத்திற்கு வேறொரு பூமியதிர்ச்சி சாட்சிபகர்ந்தது, மரணத்தின்மீதும் கல்லறையின்மீதும் வெற்றியடைந்து, வெற்றிவீரரின் நடையில், கல்லறையிலிருந்து வெளியில், பூமி அசைந் தாடுவதற்கு மத்தியில், மின்னல்கள் பிரகாசிக்க, இடி முழக்கத்திற்கு மத்தியில் அவர் வந்தார். அவர் மறுபடியம் பூமிக்கு வரும்போது: "நான் பூமியை மாத்திரமல்ல, வானத்தையும் அசையப்பண்ணுவேன்"—எபிரெயர் 12:26; "வெறித்தவனைப்போல தேசம் தள்ளாடி, ஒரு குடிலைப்போலப் பெயர்த்துப்போடப்படும்." "வானங்கள் புஸ்தகச்சுருளைப்போல் சுருட்டப்பட்டு"—ஏசாயா 24:20,34:4; "பூதங்கள் வெந்து உருகிப்போம், பூமியும் அதிலுள்ள கிரியைகளும் எரிந்து அழிந்துபோம்"—2 பேதுரு 3:10; "ஆனாலும் கர்த்தர் தமது ஜனத்துக்கு அடைக்கலமும் இஸ்ரவேல் புத்திரருக்கு அரணான கோட்டையுமாயிருப்பார்"—யோவேல் 3:16. (4)

இயேசுவின் மரணத்தில் நடுப்பகலில் பூமி இருளால் மூடப்பட்டதைப் போர்ச்சேவகர்கள் கண்டிருந்தார்கள். ஆனால் உயிர்த்தெழுதலில்,

தூதர்களின் பிரகாசம் இரவை ஒளிப்படுத்துவதை கண்டார்கள்; பரலோகத்தில் குடியிருப்பவர்கள் பெரும் மகிழ்ச்சியுடனும் வெற்றியுடனும்: நீர் சாத்தானையும் இருளின் வல்லமைகளையும் அழித்து, மரணத்தை ஜெயமாக விழுங்கினீர் என்று பாடுவதையும் அவர்கள் கேட்டார்கள். (5)

கிறிஸ்து மகிமையடைந்தவராகக் கல்லறையிலிருந்து வெளியே வந்தார். ரோம நாட்டுக் காவலாளிகள் அவரைக் கண்டார்கள். அண்மையில் எவரை அவர்கள் பரிகசித்து ஏளனஞ்செய்திருந்தார்களோ, அவருடைய முகத்தின்மீது அவர்களுடைய கண்கள் பதிக்கப்பட்டிருந்தன. மகிமைப்படுத்தப்பட்டிருந்த இவரில், நியாயவிசாரணை மன்றத்தில் அவர்கள் கண்டிருந்த கைதியையும், எந்த ஒருவருக்காக அவர்கள் முள்கிரீடத்தைப் பின்னியிருந்தார்களோ அவரையும் கண்டிருந்தார்கள். பிலாத்துவிற்கும் ஏரோதுவிற்கும் முன்னால் எந்தவிதமான எதிர்ப்புமில்லாமல் நின்றிருந்த ஒருவராக அவர் இருந்தார். கொடூரமான கசையடியினால் அவரது உருவம் சிராய்க்கப்பட்டிருந்தது. சிலுவையில் ஆணியால் அறையப்பட்டவரும், எவரில் ஆசாரியர்களும் அதிபதிகளும் சுயதிருப்தி உடையவர்களாக "மற்றவர்களை ரட்சித்தான்; தன்னைத் தான் ரட்சித்துக்கொள்ளத் திராணியில்லை" (மத்தேயு 27:42) என்று கூறி, தங்களுடைய தலைகளைத் துலுக்கியிருந்தார்களோ அவராக இருந்தார். யோசேப்பின் புதிய கல்லறையில் வைக்கப்பட்டவர் அவராக இருந்தார். பரலோகத்தின் கட்டளை மரணத்தால் சிறைப்பட்டிருந்தவரை கட்டவிழ்த்திருந்தது. அவருடைய கல்லறைக்குமேலாக மலைகளுக்குமேல் மலைகள் அடுக்கப்பட்டாலும், அவர் அதிலிருந்து வெளியில் வருவதை அவைகளால் தடைசெய்திருந்திருக்க முடியாது. (6)

அந்த தூதனையும் இரட்சகரையும் பார்த்தபோது, ரோம போர்வீரர்கள் செத்தவர்களைப்போலாகி மயங்கி விழுந்தனர். அந்தப் பரலோக அணியினர் அவர்களுடைய பார்வையிலிருந்து மறைந்தபோது, அவர்கள் எழுந்து காலூன்றி நின்று, நடுங்கிக்கொண்டிருந்த அவர்களுடைய கால்கள் அவர்களை எவ்வளவு விரைவாகக் கொண்டுசெல்லமுடியுமோ அவ்வளவு விரைவாக அந்தத் தோட்டத்தின் வாசலை நோக்கிச் சென்றனர். குடிபோதையில் இருந்த மனிதர்களைப்போலத் தள்ளாடினவர்களாக அவர்கள் நகரத்தை நோக்கி விரைந்து, சந்தித்தவர்களிடத்திலெல்லாம் அந்த ஆச்சரியமான கதையைக் கூறினர். அவர்கள் பிலாத்துவினிடத்திற்குச் சென்றுகொண்டிருந்தனர். ஆனால் அவர்களுடைய அறிக்கை யூத அதிகாரிகளிடத்திற்குக் கொண்டுசெல்லப்பட்டிருந்ததினால் தலைமை ஆசாரியர்களும் அதிபதிகளும் முதலில் அவர்களைத் தங்கள்முன் கொண்டுவரும்படி ஆட்களை அனுப்பிவைத்தார்கள். ஒரு அபூர்வமான தோற்றத்தை அந்தப்

போர்ச்சேவகர்கள் முன்வைத்தார்கள். பயத்தால் நடுங்கிக்கொண்டு, வெளிரிய முகங்களோடு, கிறிஸ்துவின் உயிர்த்தெழுதலிற்கு அவர்கள் சாட்சி பகர்ந்தனர். அந்த வீரர்கள் தாங்கள் கண்டவைகள் எல்லாவற்றையும் அப்படியே கூறினார்கள். உண்மையைத்தவிர வேறு எதையும் சிந்திப்பதற்கோ அல்லது பேசுவதற்கோ அவர்களுக்கு நேரம்கூட இல்லை. வேதனைமிக்க பேச்சுடன் சிலுவையில் அறையப்பட்டவர் தேவகுமாரன்தான் என்று அவர்கள் கூறினார்கள். அவர் பரலோகத்தின் மகத்துவமானவராகவும், மகிமையின் அரசராகவும் இருக்கிறார் என்று ஒரு தூதன் அறிவிப்பதை நாங்கள் கேட்டோம் என்று கூறினார்கள். (7)

ஆசாரியர்களின் முகங்கள் செத்தவர்களின் முகங்களைப் போலாகியிருந்தன. காய்பா பேச முயற்சி செய்தான். அவனுடைய உதடுகள் அசைந்தன. ஆனால் அவைகளிலிருந்து சத்தம் எதுவும் உண்டாகவில்லை. அந்த ஆலோசனை அறையைவிட்டு, அந்தப் வீரர்கள் புறப்பட இருந்தபோது, ஒரு குரல் அவர்களைத் தடுத்து நிறுத்தினது. கடைசியாக காய்பா பேச ஆரம்பித்தான். பொறுங்கள், பொறுங்கள் என்று அவன் கூறினான். நீங்கள் கண்டவைகளை ஒருவருக்கும் கூறவேண்டாம் என்றான். (8)

அதற்குப்பின் ஒரு பொய்யான அறிக்கை அந்தப் போர்வீரர்களுக்குக் கொடுக்கப்பட்டது. “நாங்கள் நித்திரைபண்ணுகையில், அவனுடைய சீஷர்கள் இராத்திரியிலே வந்து, அவனைக் களவாய்க் கொண்டுபோய்விட்டார்கள்” என்று நீங்கள் சொல்லுங்கள் என்று ஆசாரியர்கள் கூறினார்கள். இங்கு ஆசாரியர்கள் தங்களையே ஏமாற்றிக்கொண்டார்கள். சீடர்கள்தான் அந்த உடலைத் திருடிச்சென்றனர் என்று நித்திரைசெய்துகொண்டிருந்த போர்வீரர்களால் எப்படிக் கூறமுடியும்? அவர்கள் நித்திரைசெய்திருந்தார்களானால், நடந்ததை எப்படி அறிந்தார்கள்? கிறிஸ்துவின் உடலைத் திருடிச்சென்ற குற்றம் சீடர்களின்மீது சாட்டப்படுமானால், அவர்களை ஆக்கினைக்குட்படுத்துவதற்கு ஆசாரியர்கள் முதலானவர்களாக இருக்கமாட்டார்களா? அல்லது அந்தக் காவல் படையினர் கல்லறையினிடத்தில் தூங்கிக்கொண்டு இருந்திருப்பார்களானால், பிலாத்துவிடம் அவர்களைக் குற்றப்படுத்துவதற்கு அந்த ஆசாரியர்கள் முன்னணியில் இருந்திருக்கமாட்டார்களா? (9)

தங்களுடைய வேலை இடத்தில் நித்திரைசெய்துகொண்டிருந்ததாக தங்கள்மீது தாங்களே குற்றஞ்சொல்லுவதைக்குறித்து போர்வீரர்கள் பயந்தனர். இது மரணதண்டனை கொடுக்கப்படக்கூடிய ஒரு குற்றமாக இருந்தது. அவர்கள் பொய்ச்சாட்சி கூறினால், மக்களை வஞ்சிப்பவர்களாகவும், அவர்களுடைய சொந்த உயிர்களை ஆபத்திற்குள்ளாக்குபவர்களாகவும் இருக்கமாட்டார்களா? அவர்கள் களைப்பூட்டும் அவர்களுடைய காவல்

வேலையை நித்திரையில்லாத விழிப்புடன் செய்திருக்கவில்லையா? அவர்கள் தங்களுக்குத்தாங்களே பொய்ச்சாட்சி கூறிக்கொண்டால் பணத்திற்காகவுங்கூட அவர்களால் எவ்விதமாக விசாரணையில் நிற்கமுடியும்? (10)

அவர்கள் அஞ்சியிருந்த சாட்சியை மௌனப்படுத்துவதற்காக, இதற்குமேல் அப்படிப்பட்ட அறிக்கையை பரப்புவதை பிலாத்து விரும்ப மாட்டான் என்று கூறி, அந்தக் காவலாளிகளின் பாதுகாப்பிற்கான ஏற்பாடு களைச் செய்வதாக அந்த ஆசாரியர்கள் வாக்குக் கொடுத்தார்கள். அந்த ரோம போர்வீரர்கள் யூதர்களிடமிருந்து கிடைக்கிற பணத்திற்காகத் தங்க ளுடைய நேர்மையை விற்றார்கள். மிக ஆச்சரியமான சத்தியத் தூதுடன் அவர்கள் ஆசாரியர்களுக்குமுன் வந்தனர்; பணம் என்னும் சுமையுடனும், அவர்களுக்காக ஆசாரியர்களால் புனையப்பட்ட ஒரு தவறான அறிக்கை யுடனும் வெளியில் சென்றனர். (11)

அந்த இடைக்காலத்தில் கிறிஸ்துவின் உயிர்த்தெழுதல்பற்றிய அறிக்கை பிலாத்துவினிடத்திற்குக் கொண்டுசெல்லப்பட்டிருந்தது. மரிக்கும் படி கிறிஸ்துவை கொடுத்ததற்குப் பிலாத்து பொறுப்பானவனாக இருந்த போதும், அதைக்குறித்த அக்கறையில்லாதவனாக இருந்தான். விருப்ப மில்லாமலும் இரக்கத்தின் ஒரு உணர்வுடனும் அவன் இரட்சகரைக் கண்டித்திருந்தபோதிலும், இதுவரையிலும் அதைச் செய்ததற்கான தயக்கம் அவனுக்கு இருக்கவில்லை. இப்பொழுது பயத்தினால் அவன் தன்னை வீட்டுக்குள் அடைத்துக்கொண்டு, ஒருவரையும் பார்க்காமலிருக்கத் தீர்மானித்திருந்தான். ஆனால் அந்த ஆசாரியர்கள் அவனுக்குமுன் சென்று, தாங்கள் கண்டுபிடித்திருந்த கதையைக் கூறி, அந்தக் காவல் படையினரிடமிருந்த கடமையின் அலட்சியத்தைக் கவனிக்காமல் விட்டுவிடும்படி அவனை வற்புறுத்தினார்கள். அதற்குச் சம்மதிக்குமுன் அவன் தனிப்பட்டவிதமாகக் காவலாளிகளைக் கேள்விகேட்டான். தங்களுடைய பாதுகாப்பின்மீது அச்சமுள்ளவர்களாக இருந்த அவர்கள் எதையும் மறைப்பதற்குத் துணிவில்லாதவர்களாக இருந்தனர். பிலாத்து அவர்களிடமிருந்து நடந்தவைகள் அனைத்தையும்பற்றிய விபரத்தை முற்றிலும் அறிந்துகொண்டான். அந்தக் காரியம்பற்றி அதற்குமேல் அவன் விசாரைணசெய்யவில்லை. ஆனால் அந்த நேரத்திலிருந்து அவனிடத்தில் சமாதானம் இல்லை. (12)

இயேசு கல்லறையில் வைக்கப்பட்டபோது, சாத்தான் வெற்றியடைந்தான். இரட்சகர் மறுபடியும் அவருடைய ஜீவனை எடுத்துக்கொள்ளுவார் என்று நம்ப அவன் துணியவில்லை. கர்த்தருடைய உடலின்மீது அவன் உரிமைபாராட்டியிருந்து, கிறிஸ்துவை ஒரு கைதியாகப் பிடித்துவைப்பதற்காக

கல்லறையைச் சுற்றிலும் அவனுடைய காவலாளிகளை ஏற்படுத்தியிருந்தான். அந்தப் பரலோகத் தூதுவன் சமீபிப்பதைக்கண்டு, அவனுடைய தூதர்கள் ஓடிவிட்டபோது, அவன் கசப்புமிக்க கோபமுள்ளவனாக இருந்தான். கிறிஸ்து வெற்றியுடன் கல்லறையைவிட்டு வெளியில் வருவதைக் கண்டபோது, அவனுடைய இராஜ்யத்திற்கு முடிவு உண்டாகும் என்பதையும், இறுதியில் அவன் மடிந்தாகவேண்டும் என்பதையும் அவன் அறிந்தான். (13)

கிறிஸ்துவை மரணாக்கினைக்கு உட்படுத்தியதில் ஆசாரியர்கள் தாங்களாகவே அவர்களைச் சாத்தானின் கருவிகளாகச் செய்திருந்தனர். இப்பொழுது அவர்கள் முற்றிலுமாக அவனுடைய வல்லமையில் இருந்தார்கள். தப்பிச்செல்லமுடியாத ஒரு கண்ணியில் அகப்பட்டிருந்து, கிறிஸ்துவிற்கு எதிரான ஒரு போரில் அவர்கள் தொடர்ந்துகொண்டிருந்தார்கள். அவருடைய உயிர்த்தெழுதலைப்பற்றிய அறிக்கைகளை கேட்டபோது, மக்களின் கோபத்தைப்பற்றி அவர்கள் பயந்தார்கள். தங்களுடைய சொந்த உயிர்கள் ஆபத்தில் இருப்பதை உணர்ந்தார்கள். கிறிஸ்து உயிர்த்தெழுந்தார் என்பதை மறுதலிப்பதினால் அவரை ஒரு வேஷக்காரன் என்று மெய்ப்பிப்பதில் மட்டுந்தான் அவர்களுடைய ஒரே நம்பிக்கை இருந்தது, அவர்கள் போர்ச்சேவகர்களுக்கு இலஞ்சம் கொடுத்து, பிலாத்துவை அமைதிப்படுத்திவிட்டார்கள். அவர்களுடைய பொய்யான அறிக்கைகளை தூரத்திலும் சமீபத்திலும் பரப்பினார்கள். ஆனால் அவர்களால் மௌனப்படுத்தமுடியாத சாட்சிகள் இருந்தனர். கிறிஸ்துவின் உயிர்த்தெழுதல்பற்றிய போர்வீரர்களின் சாட்சியை அநேகர் கேட்டிருந்தனர். கிறிஸ்துவுடனேகூட மரித்தோரிலிருந்து எழுந்த குறிப்பிட்ட சிலர் அநேகருக்குத் தரிசனமாகி, அவர் எழுந்திருந்தார் என்று அறிவித்திருந்தனர். அவ்வாறு எழுந்திருந்தவர்களைக் கண்டும், அவர்களுடைய சாட்சியைக் கேட்டுமிருந்தவர்களின் அறிக்கைகள் ஆசாரியர்களிடத்திற்குக் கொண்டுவரப்பட்டிருந்தன. தெருக்களில் நடந்துகொண்டிருக்கும்போதோ அல்லது அவர்களுடைய வீடுகளுக்குள் தனிமையில் இருக்கும்போதோ கிறிஸ்துவை முகமுகமாகக் காணும்படி வந்துவிடக்கூடாதே என்னும் பயத்தில் ஆசாரியர்களும் அதிபதிகளும் தொடர்ச்சியாக இருந்தனர். அவர்களுக்குப் பாதுகாப்பு இல்லை என்பதை அவர்கள் உணர்ந்திருந்தனர். கம்பிகளும் தாழ்ப்பாள்களும் தேவகுமாரனுக்கு எதிரான மோசமான பாதுகாப்பாக இருந்தன. “இவனுடைய இரத்தப்பழி எங்கள்மேலும் எங்கள் பிள்ளைகள்மேலும் இருப்பதாக” (மத்தேயு 27:25) என்று நியாயவிசாரணை மன்றத்தில் சத்தமிட்டிருந்த அந்த பயங்கரமான காட்சி, பகலிலும் இரவிலும் அவர்கள்முன் இருந்தது. அந்தக் காட்சியின் ஞாபகம் அவர்களுடைய மனங்களிலிருந்து ஒருபோதும் மங்காததாக இருந்தது. அதற்குப்பின் இனி ஒருபோதும் சமாதானமிக்க நித்திரை அவர்களுக்கு வராது. (14)

"உம்முடைய பிதா உம்மை அழைக்கிறார்" என்று கூறும் அந்த பலமிக்க தூதனின் குரல் கிறிஸ்துவின் கல்லறையருகில் கேட்டபோது, இரட்சகர் அவருக்குள் இருந்த அவருடைய ஜீவனாலேயே கல்லறையிலிருந்து வெளியில் வந்தார். "நான் என் ஜீவனை மறுபடியும் அடைந்துகொள்ளும்படிக்கு அதைக் கொடுக்கிறபடியினால் … அதைக் கொடுக்கவும் எனக்கு அதிகாரம் உண்டு, அதை மறுபடியும் எடுத்துக்கொள்ளவும் எனக்கு அதிகாரம் உண்டு" என்னும் அவருடைய வார்த்தைகளில் இருந்த சத்தியம் இப்பொழுது மெய்ப்பிக்கப்பட்டிருந்தது. "இந்த ஆலயத்தை இடித்துப் போடுங்கள், மூன்று நாளைக்குள்ளே இதை எழுப்புவேன்" (யோவான் 10:17,18, 2:19) என்று அவர் ஆசாரியர்களிடத்திலும் அதிபதிகளிடத்திலும் கூறியிருந்த தீர்க்கதரிசனம் இப்பொழுது நிறைவேறியிருந்தது. (15)

திறக்கப்பட்ட யோசேப்பின் கல்லறையிலிருந்து "நானே உயிர்த் தெழுதலும் ஜீவனுமாயிருக்கிறேன்" என்று கிறிஸ்து வெற்றியுடன் அறிவித் திருந்தார். தெய்வீகத்தினால்மட்டுமே இந்த வார்த்தைகளைக் கூறமுடியும். படைக்கப்பட்டுள்ளவைகள் அனைத்தும் தேவனுடைய சித்தத்தினாலும் வல்லமையினாலும் உயிர்வாழுகின்றன. அவைகள் தேவனுடைய ஜீவனைச் சார்ந்து வாழுகின்றன. மிகவும் உயர்வான சேராபீனிலிருந்து மிகவும் தாழ்மையான ஜீவன்வரை, அனைத்தும் ஜீவனின் ஆதாரமாயிருப்பவரால் நிரப்பப்படுகின்றன. என்னுடைய ஜீவனைக் கொடுப்பதற்கும், அதை மறுபடியும் எடுத்துக்கொள்ளுவதற்கும் நான் வல்லமை உடையவராக இருக்கிறேன் என்று தேவனுடன் ஒருவராக இருப்பவரால்மட்டுமே கூறமுடியும். கிறிஸ்து அவருடைய தெய்வீகத்தில் மரணத்தின் கட்டுகளை அறுப்பதற்கு வல்லமை உடையவராக இருந்தார். (16)

நித்திரையடைந்திருந்தவர்களின் முதற்பலனாகக் கிறிஸ்து மரித்தோரிலிருந்து எழுந்தார். அவர் அசைவாட்டும் கதிரின் நிஜப்பொருளாக இருந்தார். கர்த்தருக்கு முன்பாக அசைவாட்டும் கதிரைப் படைக்க வேண்டியதாயிருந்த அதேநாளில் அவருடைய உயிர்த்தெழுதல் நடந்தது. அடையாளமாக இருந்த இந்த ஆராதனை ஆயிரம் ஆண்டுகளுக்கும் மேலாகச் செய்யப்பட்டிருந்தது. அறுவடைக்காக இருந்த வயல்களிலிருந்து முற்றின தானியங்களின் கதிர்கள் சேகரிக்கப்பட்டிருந்து, பஸ்கா பண்டிகைக்காக மக்கள் எருசலேம்வரை சென்றிருந்தபோது கர்த்தருக்கு முன்பாகத் தோத்திரக்காணிக்கையாக அசைவாட்டப்பட்டிருந்தன. அது படைக்கப்படாதவரை தானியத்தின்மீது அரிவாள் வைக்கமுடியாமலும் அது கட்டுகளாகச் சேகரிக்கப்படமுடியாமலும் இருந்தது. தேவனுக்குப் பிரதிஷ்டைசெய்யப்பட்டிருந்த கதிர்க்கட்டு, அறுவடையை எடுத்துக்

காட்டியிருந்தது. அப்படியே முதற்பலனான கிறிஸ்துவும் தேவனுடைய இராஜ்யத்தில் சேகரிக்கப்படுவதற்கான பெரும் ஆவிக்குரிய அறுவடையை எடுத்துக்காட்டியிருந்தார். அவருடைய உயிர்த்தெழுதல், மரித்த அனைத்து நீதிமான்களின் உயிர்த்தெழுதலிற்கான மாதிரியாகவும் உறுதிமொழியாகவும் இருக்கிறது. "இயேசுவானவர் மரித்து பின்பு எழுந்திருந்தாரென்று விசுவாசிக்கிறோமே; அப்படியே இயேசுவுக்குள் நித்திரையடைந்தவர்களையும் தேவன் அவரோடேகூடக் கொண்டுவருவார்"–1 தெசலோனிக்கேயர் 4:14. (17)

கிறிஸ்து உயிர்த்தெழுந்தபோது, மரணத்தால் சிறையாக்கப்பட்டிருந்த ஒரு திரளான மக்கள் கூட்டத்தை அவர்களுடைய கல்லறைகளிலிருந்து கொண்டுவந்தார். அவருடைய மரணத்தில் உண்டான பூமியதிர்ச்சி, அவர்களுடைய கல்லறைகளைத் திறந்தது. அவர் எழுந்தபோது, அவர்கள் அவருடன் வெளியில் வந்தனர். அவர்கள் தேவனுக்கு உடன்ஊழியர்களாக இருந்து, அவர்களுடைய ஜீவனின் விலையால் சத்தியத்திற்குச் சாட்சிகொடுத்திருந்தார்கள். இப்பொழுது அவர்கள் தங்களை மரித்தோரிலிருந்து எழுப்பியிருந்தவருக்குச் சாட்சிகளாக இருக்க வேண்டியிருந்தனர். (18)

இயேசு அவருடைய ஊழியத்தின்போது, மரித்தோரை உயிருடன் எழுப்பியிருந்தார். அவர் நாயீன் ஊர் விதவையின் மகனையும், அதிபதியின் மகளையும், லாசருவையும் எழுப்பியிருந்தார். ஆனால் அவர்கள் சாவாமையை அணிந்துகொண்டவர்களாக இருக்கவில்லை. அவர்கள் எழுப்பப்பட்டிருந்த பின்புங்கூட இன்னமும் மரணத்திற்குக் கீழ்ப்பட்டவர்களாகவே இருந்தனர். ஆனால் கிறிஸ்துவின் உயிர்த்தெழுதலில் கல்லறையிலிருந்து வெளியில் வந்தவர்கள், நித்தியஜீவனுக்கென்று எழுப்பப்பட்டிருந்தனர். அவர்கள் மரணத்தின்மீதும் கல்லறையின்மீதும் அவர் அடைந்த வெற்றியின் கோப்பைகளாக இவருடன்கூட உயரே எழுந்தருளிச் சென்றார்கள். இனிமேல் அவர்கள் சாத்தானின் அடிமைகள் அல்ல என்று கிறிஸ்து கூறினார். நான் அவர்களை மீட்டிருக்கிறேன். இனிமேல் ஒருபோதும் மரணத்தைக் காணாமலும், அல்லது துயரத்தை அனுபவிக்காமலும், நான் எங்கே இருக்கிறேனோ அங்கே என்னுடனேகூட இருக்கும்படி என்னுடைய வல்லமையின் முதற்பலனாக நான் அவர்களைக் கல்லறையிலிருந்து கொண்டுவந்திருக்கிறேன் என்று அவர் கூறினார். (19)

அவர்கள் நகரத்திற்குள் சென்று, அநேகருக்குக் காணப்பட்டு, கிறிஸ்து மரித்தோரிலிருந்து உயிர்த்தெழுந்திருக்கிறார், நாங்களும் அவருடன் எழுந்தோம் என்று அறிவித்தனர். இவ்விதமாக உயிர்த்தெழுதலின் பரிசுத்தமான

சத்தியம் சாவாமையை அடைந்தது. எழுப்பப்பட்டிருந்த பரிசுத்தவான்கள் "மரித்த உம்முடையவர்கள் பிரேதமான என்னுடையவர்களோடேகூட எழுந்திருப்பார்கள்" என்னும் வார்த்தைகளிலுள்ள சத்தியத்திற்குச் சாட்சி களாக இருந்தனர். "மண்ணிலே தங்கியிருக்கிறவர்களே, விழித்துக் கெம்பீரியுங்கள்; உம்முடைய பனி பூண்டுகளின்மேல் பெய்யும் பனிபோல் இருக்கும்; மரித்தோரைப் பூமி புறப்படப்பண்ணும்" (ஏசாயா 26:19) என்னும் தீர்க்கதரிசனத்தின் நிறைவேறுதலின் ஒரு சித்திரவிளக்கமாக அவர்களுடைய உயிர்த்தெழுதல் இருந்தது. (20)

விசுவாசக்கிறவனுக்குக் கிறிஸ்து உயிர்த்தெழுதலும் ஜீவனுமாய் இருக்கிறார். பாவத்தின்மூலமாக தொலைந்துபோன ஜீவன், நமது இரட்சகரில் திரும்ப எடுத்துக்கட்டப்பட்டிருக்கிறது. ஏனெனில் அவர் யாரை எழுப்புவதற்குச் சித்தமுடையவராக இருக்கிறாரோ, அவர்களை எழுப்புவதற்கு அவர் ஜீவனுடையவராக இருக்கிறார். சாவாமையைக் கொடுப்பதற்கான உரிமையை உடையவராக அவர் இருக்கிறார். மானுடத்தில் கீழே வைத்த ஜீவனை மறுபடியும் எடுத்துகொண்டு அதை மானுடத்திற்கு அவர் கொடுக்கிறார். "நானோ அவைகளுக்கு ஜீவன் உண்டாயிருக்கவும், அது பரிபூரணப்படவும் வந்தேன்." "நான் கொடுக்கும் தண்ணீரைக் குடிக்கிறவனுக்கோ ஒருக்காலும் தாகமுண்டாகாது; நான் அவனுக்குக்கொடுக்கும் தண்ணீர் அவனுக்குள்ளே நித்திய ஜீவகாலமாய் ஊறுகிற நீரூற்றாயிருக்கும்;" "என் மாம்சத்தைப் புசித்து, என் இரத்தத்தைப் பானம்பண்ணுகிறவனுக்கு நித்தியஜீவன் உண்டு; நான் அவனைக் கடைசிநாளில் எழுப்புவேன்" (யோவான் 10:10, 4:14, 6:54) என்று கூறினார். (21)

விசுவாசிக்கிறவர்களுக்கு மரணம் ஒரு சிறிய காரியம். அதைக்குறித்து கிறிஸ்து: "ஒருவன் என் வார்த்தையைக் கைக்கொண்டால், அவன் என்றென்றைக்கும் மரணத்தைக் காண்பதில்லை" "மரணத்தை ருசிபார்ப்பதில்லை" என்று கூறியிருந்தார். கிறிஸ்தவனுக்கு மரணம் என்பது ஒரு சிறிய நித்திரையாகவும், வினாடிநேர மௌனமாகவும் இருளாகவும் இருக்கின்றது. "நம்முடைய ஜீவனாகிய கிறிஸ்து வெளிப்படும்போது, நீங்களும் அவரோடேகூட மகிமையிலே வெளிப்படுவீர்கள்"–யோவான் 8:51,52; கொலோசெயர் 3:4. (22)

உரத்தசத்தத்தில் சிலுவையிலிந்து வந்த "முடிந்தது" என்னும் குரல், மரித்தோருக்கு மத்தியில் கேட்கப்பட்டிருந்தது, அது கல்லறைகளின் சுவர்களைத் துளைத்து, நித்திரைசெய்துகொண்டிருந்தவர்களை விழித் தெழும்படி அழைத்தது. கிறிஸ்துவின் குரல் பரலோகத்திலிருந்து கேட்கப்படும் போது, அதேவிதமாக இருக்கும். அந்தக் குரல், கல்லறைகளுக்குள்

நுழைந்துசென்று கல்லறைகளைத் திறக்கும்போது, கிறிஸ்துவிற்குள் மரித்தவர்கள் எழுந்திருப்பார்கள். இரட்சகரின் உயிர்த்தெழுதலில் ஒரு சில கல்லறைகள் திறக்கப்பட்டன. ஆனால் இரண்டாம் வருகையின்போது, மரித்த அருமையான மக்கள் அனைவரும் அவருடைய குரலைக் கேட்டு, மகிமைமிக்க, சாவாமைமிக்க ஜீவனுக்கென்று வெளியில் வருவார்கள். மரித்தோரிலிருந்து கிறிஸ்துவை எழுப்பின அதே வல்லமை, அவருடைய சபையை எழுப்பி, எல்லாத் துரைத்தனங்களுக்கும் மேலாக, எல்லா வல்லமைகளுக்கும் மேலாக, தரிக்கப்பட்டுள்ள எல்லா நாமங்களுக்கும் மேலாக, இந்த உலகத்தில் மட்டுமின்றி வரவிருக்கும் உலகத்திலுங்கூட அவருடனேகூட அதை மகிமைப்படுத்தும். (23) ★

# 82

# ஸ்திரீயே, ஏன் அழுகிறாய்?

**மத்தேயு 28:1,5–8; மாற்கு 16:1–8; லூக்கா 24:1–12; யோவான் 20:1–8**

**(The Desire of Ages, pp. 788–794)**

கிறிஸ்துவின் சிலுவைக்கருகில் நின்றிருந்த பெண்கள், ஓய்வுநாளின் நேரம் கடந்துசெல்லுவதற்காக விழிப்புடன் காத்திருந்தனர். வாரத்தின் முதல்நாள் அதிகாலையில், மீட்பரின் உடலை அபிஷேகஞ்செய்வதற்காக விலைமதிப்புமிக்க கந்தவர்க்கங்களை எடுத்துக்கொண்டு, கல்லறையை நோக்கி அவர்கள் சென்றார்கள். அவர் மரித்தோரிலிருந்து உயிர்த்தெழுவதைப்பற்றி அவர்கள் நினைத்திருக்கவில்லை. அவர்களுடைய நம்பிக்கையின் சூரியன் மறைந்து, அவர்களுடைய இருதயங்களில் இருள் படிந்திருந்தது. அவர்கள் நடந்துகொண்டிருந்தபோது, கிறிஸ்துவின் இரக்கத்தின் செயல்களையும் ஆறுதலின் வார்த்தைகளையும் திரும்பவும் விவரித்துக்கொண்டிருந்தனர். ஆனால் "நான் மறுபடியும் உங்களைக் காண்பேன்" (யோவான் 16:22) என்னும் வார்த்தைகளை நினைக்கவில்லை. (1)

இப்பொழுதுங்கூட என்ன நடந்திருந்தது என்பதைப்பற்றிய அறியாமையோடு அவர்கள் தோட்டத்தைச் சமீபித்தபோது, "கல்லறையின் வாசலிலிருக்கிற கல்லை நமக்காக எவன் புரட்டித்தள்ளுவான்" என்று கூறிக்கொண்டனர். அவர்களால் அந்தக் கல்லைப் புரட்டித் தள்ளமுடியாது என்பதை அவர்கள் அறிந்திருந்தபோதிலும் சென்றார்கள். அப்பொழுது இதோ, உதயமாகிக்கொண்டிருந்த சூரியனிடத்திலிருந்து வராத ஒரு ஒளியினால் வானங்கள் திடீரென்று மகிமையுடன் பிரகாசித்தது. பூமி நடுங்கினது. அந்தப் பெரிய கல் புரட்டித்தள்ளப்பட்டிருந்ததை அவர்கள் கண்டார்கள். அந்தக் கல்லறை காலியாக இருந்தது, (2)

அந்தப் பெண்கள் அனைவரும் கல்லறையை நோக்கி ஒரே திசையிலிருந்து வந்திருக்கவில்லை. அந்த இடத்தை அடைவதில் மகதலேனா மரியாள் முதலாவதாக இருந்து, அந்தக் கல் புரட்டித் தள்ளப்பட்டிருப்பதைக்

கண்டு, சீடர்களிடம் கூறுவதற்காக விரைந்தாள். அந்த நேரத்தில் மற்ற பெண்களும் வந்து சேர்ந்தார்கள். அந்தக் கல்லறையினிடத்தில் ஒரு ஒளி பிரகாசித்துக்கொண்டிருந்தது, ஆனால் இயேசுவின் உடல் அங்கு இருக்கவில்லை. அந்த இடத்தில் அவர்கள் தயங்கி நின்றுகொண்டிருந்தபோது, அவர்கள்மட்டும் அங்கு தனியாக இருக்கவில்லை என்பதைத் திடீரென்று கண்டார்கள். ஒளிமிக்க உடைகளை அணிந்த ஒரு இளைஞன், அந்தக் கல்லறைக்கருகில் உட்கார்ந்துகொண்டிருந்தான். அவன் அந்தக் கல்லைப் புரட்டித்தள்ளின தூதனாக இருந்தான். இயேசுவின் இந்த நண்பர்களுக்கு அபாய உணர்வினை உண்டுபண்ணிவிடக்கூடாது என்பதற்காக அவன் மனிதவடிவை எடுத்திருந்தான். அப்படியிருந்தபோதிலும், பரலோக மகிமையின் ஒளி, அவனைச் சுற்றிலும் இன்னும் பிரகாசித்துக்கொண்டிருந்தது அந்த பெண்கள் பயமடைந்திருந்தனர். அவர்கள் ஓடிப்போவதற்காகத் திரும்பினபோது: "நீங்கள் பயப்படாதிருங்கள்; சிலுவையில் அறையப்பட்ட இயேசுவைத் தேடுகிறீர்கள் என்று அறிவேன். அவர் இங்கே இல்லை; தாம் சொன்னபடியே உயிர்த்தெழுந்தார்; கர்த்தரை வைத்த இடத்தை வந்து பாருங்கள்; சீக்கிரமாய்ப் போய், அவர் மரித்தோரிலிருந்து எழுந்தார் என்று அவருடைய சீஷர்களுக்குச் சொல்லுங்கள். அவர் உங்களுக்குமுன்னே கலிலேயாவுக்குப் போகிறார்; அங்கே அவரைக் காண்பீர்கள்; இதோ, உங்களுக்குச் சொன்னேன்" என்னும் அந்த தூதனுடைய வார்த்தைகள் அவர்கள் செல்லுவதைத் தடைசெய்தது. அவர்கள் மறுபடியும் அந்தக் கல்லறைக்குள் பார்க்கின்றனர். மறுபடியும் அவர்கள் அந்த ஆச்சரியமான செய்தியைக் கேட்கின்றனர். மனித வடிவில் வேறொரு தூதன் அங்கே இருந்து: "உயிரோடிருக்கிறவரை நீங்கள் மரித்தோரிடத்தில் தேடுகிறதென்ன? அவர் இங்கே இல்லை, அவர் உயிர்த்தெழுந்தார். மனுஷகுமாரன் பாவிகளான மனுஷர் கைகளில் ஒப்புக்கொடுக்கப்படவும், சிலுவையில் அறையப்படவும், மூன்றாம்நாளில் எழுந்திருக்கவும் வேண்டுமென்பதாக அவர் கலிலேயாவிலிருந்த காலத்தில் உங்களுக்குச் சொன்னதை நினைவுகூருங்கள்" என்கிறான். (3)

அவர் உயிர்த்தெழுந்துவிட்டார்! அவர் உயிர்த்தெழுந்துவிட்டார்! அந்த பெண்கள் அந்த வார்த்தைகளை மறுபடியும் மறுபடியும் கூறுகின்றனர். பூசுவதற்காக கந்தவர்க்கங்கள் இனி அவசியமில்லை. இரட்சகர் மரித்தவர் அல்ல, உயிருள்ளவர். அவருடைய மரணத்தைப்பற்றிப் பேசிக்கொண்டிருந்தபோது, மறுபடியும் உயிர்த்தெழுவார் என்று அவர் கூறினதை இப்பொழுது நினைக்கின்றனர். உலகத்திற்கு எப்படிப்பட்ட ஒரு நாளாக அது இருக்கிறது! அந்தப் பெண்கள் "பயத்தோடும் மகா

சந்தோஷத்தோடும் கல்லறையை விட்டுச் சீக்கிரமாய்ப் புறப்பட்டு, அவருடைய சீஷர்களுக்கு அறிவிக்க ஓடினார்கள்.” (4)

இந்த நற்செய்தியை மரியாள் கேட்டிருக்கவில்லை. “கர்த்தரைக் கல்லறையிலிருந்து எடுத்துக்கொண்டு போய்விட்டார்கள், அவரை வைத்த இடம் எங்களுக்குத் தெரியவில்லை” என்னும் துயரமிக்க செய்தியுடன் அவள் பேதுருவினிடத்திற்கும் யோவானிடத்திற்கும் சென்றாள். சீடர்கள் அந்தக் கல்லறைக்கு ஓடிச்சென்று, அது மரியாள் கூறியபடி இருந்ததைக் கண்டார்கள். அவர்கள் சவச்சீலையையும் துணியையும் கண்டார்கள். ஆனால் அவர்களுடைய கர்த்தரைக் காணவில்லை. ஆயினும் இங்குங்கூட அவர் உயிர்த்தெழுந்திருந்தார் என்பதற்கான சாட்சி இருந்தது. அந்தச் சவச்சீலைகள் கவனமின்றி ஒருபக்கமாக வீசி எறியப்படாமல், கவனமாக மடிக்கப்பட்டு, ஒவ்வொன்றும் அதனதன் இடத்தில் வைக்கப்பட்டிருந்தது, “யோவான் கண்டு விசுவாசித்தான்“” ஆயினும் கிறிஸ்து மரித்தோரிலிருந்து எழுந்தாகவேண்டும் என்னும் வேதவாக்கியத்தை அவன் இன்னும் புரிந்துகொள்ளாதவனாக இருந்தான். ஆனால் இப்பொழுது தமது உயிர்த்தெழுலைப்பற்றி இரட்சகர் முன்னுரைத்திருந்த வார்த்தைகளை நினைவுகூர்ந்தான். (5)

அந்த பிரேதத் துணிகளை அவ்வளவு கவனத்துடன் வைத்திருந்தவர் கிறிஸ்துவே. அந்த பலமிக்க தூதன் பரலோகத்திலிருந்து கீழே அந்தக் கல்லறைறைக்கு வந்தபோது, அவனுடன் கர்த்தருடைய உடலைக் காவல் செய்திருந்த கூட்டத்திலிருந்த வேெறாரு தூதனும் சேர்ந்துகொண்டான். பரலோகத்திலிருந்து இறங்கிவந்த தூதன் அந்தக் கல்லைப் புரட்டித்தள்ளினபோது, மற்றவன் அந்தக் கல்லறைக்குள் பிரவேசித்து, இயேசுவின் உடலின்மீது சுற்றப்பட்டிருந்த துணிகளைக் கழற்றினான். ஆனால் அவை ஒவ்வொன்றையும் மடித்து அவைகளின் இடத்தில் வைத்தது, இரட்சகரின் கரமாக இருந்தது. விண்மீனையும் அணுவையும் ஒரேவிதமாக நடத்தும் அவருடைய பார்வையில் முக்கியமில்லாத எதுவும் இருக்கவில்லை. அவருடைய செயல்கள் அனைத்திலும் ஒழுங்கும் நிறைவும் காணப்படுகின்றது. (6)

மரியாள் கல்லறைக்கு யோவானையும் பேதுருவையும் பின்தொடர்ந்திருந்தாள். அவர்கள் எருசலேமிற்குத் திரும்பினபோது, அவள் தங்கிவிட்டாள். காலியான கல்லறையை அவள் பார்த்தபோது, அவளுடைய இருதயத்தை துக்கம் நிரப்பினது. அவள் உள்ளே பார்த்தபோது, இயேசு வைக்கப்பட்டிருந்த இடத்தில் தலைக்கு அருகிலும் பாதங்களுக்கு அருகிலும் ஒவ்வொருவராக இரண்டு தூதர்கள் இருப்பதைக் கண்டாள். அவர்கள்: “ஸ்திரீயே, ஏன் அழுகிறாய்” என்று கேட்டார்கள். அதற்கு அவள்: “என்

ஆண்டவரை எடுத்துக் கொண்டு போய்விட்டார்கள், அவரை வைத்த இடம் எனக்குத் தெரியவில்லை" என்று பதில் கூறினாள். (7)

பின்னர் இயேசுவின் உடலுக்கு என்ன செய்யப்பட்டிருந்தது என்பதை அவளுக்குக் கூறக்கூடிய யாராவது ஒருவரைக் காணவேண்டும் என்று நினைத்து, அந்தத் தூதர்களிடமிருந்தும் திரும்பினாள். அப்பொழுது: "ஸ்திரீயே, ஏன் அழுகிறாய், யாரைத் தேடுகிறாய்" என்று வேறொரு குரல் அவளிடம் பேசியது. கண்ணீரால் மங்கியிருந்த அவளுடைய கண்களால் அவள் ஒரு மனித உருவத்தைக் கண்டு, அவ்வுருவத்தைத் தோட்டக்காரன் என்று நினைத்து, "ஐயா, நீர் அவரை எடுத்துக்கொண்டுபோனதுண்டானால், அவரை வைத்த இடத்தை எனக்குச் சொல்லும், நான் போய் அவரை எடுத்துக்கொள்ளுவேன்" என்றாள். அந்த செல்வந்தனின் கல்லறை இயேசுவை அடக்கஞ்செய்தவற்கு அதிக மதிப்பான இடம் என்று நினைக்கப்பட்டிருந்தால், அவள்தானே அவருக்கென்று ஒரு இடத்தை ஏற்பாடு செய்வாள். கிறிஸ்துவின் குரலே காலிசெய்திருந்த ஒரு கல்லறை—லாசரு வைக்கப்பட்டிருந்த ஒரு கல்லறை இருந்தது. அவளுடைய கர்த்தரை அடக்கஞ்செய்வதற்கான ஒரு இடமாக அந்த இடத்தை அவளால் காணமுடியாதா? சிலுவையில் அறையப்பட்ட விமைலமதிப்புமிக்க அந்த உடலின்மீது கரிசனைவைப்பது அவளுடைய வருத்தத்தில் அவளுக்குப் பெரிய ஆறுதலாக இருக்கும் என்று அவள் உணர்ந்தாள். (8)

ஆனால் இப்பொழுது இயேசு அவருடைய சொந்தப் பழக்கப்பட்ட குரலில் அவளிடம்: "மரியாளே" என்றார். தன்னிடம் பேசிக்கொண்டிருப்பவர் ஒரு அந்நியர் அல்ல என்பதை இப்பொழுது அவள் அறிந்து, திரும்பி, அவளுக்கு முன்பாக ஜீவனுள்ள கிறிஸ்துவைக் கண்டாள். அவளுடைய மகிழ்ச்சியில் அவர் சிலுவையில் அறையப்பட்டிருந்ததை மறந்தாள். அவருடைய பாதங்களைத் தழுவப்போவதைப்போல "ரபூனி" என்று கூறிக்கொண்டு அவள் பாய்ந்தாள். ஆனால் கிறிஸ்து "என்னைத் தொடாதே, நான் இன்னும் என் பிதாவினிடத்திற்கு ஏறிப்போகவில்லை; நீ என் சகோதரரிடத்திற்குப் போய், நான் என் பிதாவினிடத்திற்கும் உங்கள் பிதாவினிடத்திற்கும், என் தேவனிடத்திற்கும் உங்கள் தேவனிடத்திற்கும் ஏறிப்போகிறேன் என்று அவர்களுக்குச் சொல்லு" என்று கூறிக்கொண்டு, அவருடைய கையை உயர்த்தினார். அப்படியே மரியாள் அந்த மகிழ்ச்சிமிக்க செய்தியுடன் சீடர்களிடத்திற்கு அவளுடைய பாதையில் சென்றாள். (9)

இயேசுவின் தியாகபலி, அவருடைய பிதாவினால் ஏற்றுக்கொள்ளப்பட்டது என்னும் நிச்சயத்தை அடையும்வரை அவருடைய மக்களின் வணக்கத்தைப் பெற்றுக்கொள்ள அவர் மறுத்துவிட்டார். அவர்

பரலோகப் பிராகாரங்களுக்கு எழுந்தருளிச் சென்றார். மனிதர்களின் பாவத்திற்கான அவருடைய பாவநிவாரணம் அபரிதமானது என்பதையும், அவருடைய இரத்தத்தின்மூலமாக அனைவரும் நித்தியஜீவனை அடைந்துகொள்ளலாம் என்கிற நிச்சயத்தையும் அவர் பிதாவிடமிருந்துதாமே கேட்டார். மனம் வருந்திக் கீழ்ப்படிகின்ற மனிதர்களை அவர் ஏற்றுக்கொண்டு, தம்முடைய குமாரனை நேசிப்பதைப்போல நேசிப்பார் என்று கிறிஸ்துவுடன் செய்திருந்த உடன்படிக்கையைப் பிதா அங்கீகரித்தார். "புருஷனைப் பசும்பொன்னிலும், மனுஷனை ஓப்பீரின் தங்கத்திலும் அபூருவமாக்குவேன்" (ஏசாயா 13:12) என்னும் அவருடைய பணியைப் பூர்த்திசெய்யவும் அவருடைய உறுதிமொழியை நிறைவேற்றவும் வேண்டியவராகக் கிறிஸ்து இருந்தார். வானத்திலும் பூமியிலும் உள்ள சகல அதிகாரங்களும் ஜீவாதிபதிக்குக் கொடுக்கப்பட்டிருந்தது. அவர் பாவமிக்க உலகத்திலுள்ள அவருடைய அடியார்களுக்கு அவருடைய வல்லமையையும் மகிமையையும் பகிர்ந்துகொடுப்பதற்காக திரும்பவும் வந்தார். (10)

இரட்சகர் தேவனுடைய சமுகத்திலிருந்து அவருடைய சபைக்காக வரங்களைப் பெற்றுக்கொண்டிருந்தபோது, அவருடைய சீடர்கள் அவருடைய வெறுமையான கல்லறையை நினைத்து, துக்கங்கொண்டாடிக்கொண்டும், அழுதுகொண்டுமிருந்தனர். பரலோகம் முழுவதற்கும் மகிழ்ந்து களிகூருகின்ற ஒரு நாளாக இருந்த அந்த நாள், சீடர்களுக்குத் திகைப்பும் குழப்பமும் நிச்சயமின்மையும் நிறைந்த ஒரு நாளாக இருந்தது. அந்தப் பெண்களின் சாட்சியின்மீதிருந்த அவர்களுடைய அவநம்பிக்கை அவர்களுடைய விசுவாசம் எந்த அளவிற்கு கீழாக மூழ்கியிருந்தது என்பதற்கான சான்றாக இருந்தது. கிறிஸ்துவின் உயிர்த்தெழுதலைப்பற்றிய செய்தி, அவர்களால் நம்பமுடியாதவிதமாக, அவர்கள் எதிர்பார்த்ததிலிருந்து வித்தியாசமானதாக இருந்தது. அது உண்மையில்லை என்று அவர்கள் நினைத்திருந்தனர். உயிர்த்தெழுல் சம்பந்தமாக அவர்களுடைய மனங்களில் உண்டுபண்ணப்பட்டிருந்த உணர்த்துதல்கள் தெளிவற்றவைகளாக இருக்கும்படி அவர்கள் சதுசேயர்களின் கோட்பாடுகளையும் விஞ்ஞான தத்துவவிளக்கங்கள் என்று கூறப்பட்டிருந்தவைகளையும் கேட்டிருந்தனர். மரித்தோரிலிருந்து உயிர்த்தெழுல் என்றால் என்ன என்பதை அவர்கள் அறியாதிருந்தனர். அந்தப் பெரிய விஷயத்தை அறிந்துகொள்ளுவதற்கு அவர்கள் இயலாதவர்களாக இருந்தனர். (11)

தூதர்கள் அந்தப் பெண்களிடம்: "நீங்கள் அவருடைய சீஷரிடத்திற்கும் பேதுருவினிடத்திற்கும் போய்; உங்களுக்கு முன்னே கலிலேயாவுக்குப் போகிறார், அவர் உங்களுக்குச் சொன்னபடியே அங்கே

அவரைக் காண்பீர்கள் என்று, அவர்களுக்குச் சொல்லுங்கள்” என்று கூறினார்கள். பூமியின்மீதிருந்த கிறிஸ்துவின் வாழ்க்கை முழுவதிலும் அந்தத் தூதர்கள் அவருடைய காவல் தூதர்களாக இருந்தனர். அவருடைய விசாரணையையும் அவர் சிலுவையில் அறையப்பட்டதையும் அவர்கள் சாட்சிகளாகக் கண்டிருந்தனர். அவருடைய சீடர்களுக்கு அவர் கூறியிருந்த வார்த்தைகளை அவர்கள் கேட்டிருந்தனர். சீடர்களுக்கான அவர்களுடைய செய்தியில் இது காட்டப்பட்டிருந்தது. அது அந்த உண்மையை அவர்களுக்கு உணர்த்தியிருக்கவேண்டும். அப்படிப்பட்ட வாாத்தைகள் உயிர்த்தெழுந்த அவர்களுடைய கர்த்தரின் தூதர்களிடமிருந்துமட்டுமே வந்திருக்கக்கூடும். (12)

“அவருடைய சீஷரிடத்திற்கும் பேதுருவினிடத்திற்கும் போய் … சொல்லுங்கள்” என்று அந்தத் தூதர்கள் கூறியிருந்தனர். கிறிஸ்துவின் மரணத்தின்போதிருந்து, பேதுரு குற்ற உணர்வினால் கூனியிருந்தான். கர்த்தரை வெட்கப்படுவதற்கேதுவாக மறுதலித்திருந்தும், இரட்சகரின் அன்புமிக்க பார்வையும் வேதனையும், எப்பொழுதும் அவன்முன் இருந்தன. சீடர்கள் அனைவரிலும் அவன் மிகவும் அதிகக் கசப்பானவிதமாகத் துன்பப்பட்டிருந்தான். அவனுடைய மனந்திரும்புதல் ஏற்றுக்கொள்ளப்பட்டிருக்கிறது என்றும், அவனுடைய பாவம் மன்னிக்கப்பட்டிருக்கிறது என்றும் அவனுக்கு வாக்குறுதி கொடுக்கப்பட்டிருக்கிறது. அவன் பெயர் சொல்லி குறிப்பிடப்பட்டான். (13)

“நீங்கள் அவருடைய சீஷரிடத்திற்கும் பேதுருவினிடத்திற்கும் போய்; உங்களுக்கு முன்னே கலிலேயாவுக்குப் போகிறார், … அங்கே அவரைக் காண்பீர்கள்.” சீடர்களனைவரும் இயேசுவைக் கைவிட்டிருந்தனர். அவரை மறுபடியும் சந்திக்கும்படியான அழைப்பு அனைவரையும் உட்படுத்துகிறது. அவர் அவர்களைப் புறக்கணித்துவிடவில்லை. மகதலேனா மரியாள் கர்த்தரைக் கண்டதாகக் கூறினபோது, கலிலேயாவிலுள்ள சந்திப்பிற்கான அழைப்பை அவள் திரும்பவும் கூறியிருந்தாள். அந்தச் செய்தி மூன்றாவது தடவையாக அவர்களுக்கு அனுப்பப்பட்டிருந்தது. அவர் பிதாவினிடத்திற்கு எழுந்தருளிச் சென்றபின், “வாழ்க” என்று கூறிக்கொண்டு மற்ற பெண்களுக்குத் தரிசனமானார். “அவர்கள் கிட்டவந்து, அவர் பாதங்களைத் தழுவி, அவரைப் பணிந்துகொண்டார்கள். அப்பொழுது இயேசு அவர்களை நோக்கி: பயப்படாதிருங்கள்; நீங்கள் போய், என் சகோதரர் கலிலேயாவுக்குப் போகும்படி அவர்களுக்குச் சொல்லுங்கள்; அங்கே அவர்கள் என்னைக் காண்பார்கள்” என்று கூறினார். (14)

கிறிஸ்துவின் உயிர்த்தெழுதலிற்குப்பின் பூமியின்மீது அவர் செய்த முதல் பணி, அவர்கள்மீதான அவருடைய குறைவுபடாத அன்பையும்

மென்மையான அக்கறையையும்பற்றி சீடர்களை உணர்த்துவதாக இருந்தது. அவர் அவர்களுடைய ஜீவனுள்ள இரட்சகர் என்பதற்கும், கல்லறையின் விலங்குகளை அவர் முறித்திருந்தார் என்பதற்கும், மரணம் என்னும் சத்துருவினால் இனிமேல் ஒருபோதும் அவரை சிறைப்படுத்திவைக்கமுடியாது என்பதற்கும் அவர்களுக்கு சான்று கொடுக்கவும், அன்பான ஆசிரியராக அவர்களுடன் இருந்தபோது அவர் கொண்டிருந்த அதே அன்பின் இருதயத்தை கொண்டிருக்கிறார் என்பதை வெளிப்படுத்தவும், அவர் மறுபடியும் மறுபடியும் அவர்களுக்குத் தரிசனமானார். அவர்களைச் சுற்றிலுமுள்ள அவருடைய அன்பின் கட்டுகளை அவர் இன்னும் நெருக்கமாக்குவார். என்னை கலிலேயாவில் சந்திக்கும்படி போய் என் சகோதரருக்குச் சொல்லுங்கள் என்று அவர் கூறினார். (15)

மிகவும் திட்டவட்டமாகக் கொடுக்கப்பட்ட இந்த ஏற்பாட்டை அவர்கள் கேட்டபோது, கிறிஸ்து அவருடைய உயிர்த்தெழுதலைப்பற்றிச் சீடர்களிடம் கூறியிருந்த வார்த்தைகளை அவர்கள் சிந்திக்க ஆரம்பித்தார்கள். ஆனாலும் இப்பொழுதுங்கூட மகிழ்ச்சியடையவில்லை. அவர்களுடைய சந்தேகத்தையும் குழப்பத்தையும் அவர்களால் விட்டுவிடமுடியவில்லை. அந்தப் பெண்கள் நாங்கள் கர்த்தரைக் கண்டோம் என்று அறிவித்தபோதுங்கூட சீடர்கள் நம்பவில்லை. ஒரு மாயத்தோற்றத்திற்கு அடியில் தாங்கள் இருப்பதாக அவர்கள் நினைத்தார்கள். (16)

துன்பத்திற்குமேல் துன்பம் கூடுவதுபோலக் காணப்பட்டது. வாரத்தின் ஆறாம் நாளில் அவர்களுடைய ஆண்டவர் மரித்ததை அவர்கள் கண்டிருந்தார்கள். அடுத்த வாரத்தின் முதல்நாளில் அவருடைய சரீரத்தை இழந்திருக்கிறதை காண்கிறார்கள். மக்களை வஞ்சிப்பதற்காக அவருடைய உடலை திருடிவிட்டார்கள் என்றும் குற்றஞ்சாட்டப்பட்டிருந்தார்கள். அவர்களுக்கு எதிராக முன்னேறிக்கொண்டிருக்கும் தவறான கருத்துக் களைச் சரிசெய்யும் நம்பிக்கையை முற்றிலும் இழந்திருந்தனர். ஆசாரியர்களின் பகையைக் குறித்தும், மக்களின் கோபத்தைப்பற்றியும் அவர்கள் பயந்திருந்தார்கள். ஒவ்வொரு குழப்பத்தின்போதும் அவர்களுக்கு உதவிசெய்திருந்த இயேசுவின் பிரசன்னத்திற்காக அவர்கள் ஏக்கத்தோடு இருந்தார்கள். (17)

“அவரே இஸ்ரவேலை மீட்டிரட்சிப்பவர் என்று நாங்கள் நம்பியிருந்தோம்” என்று திரும்பத்திரும்பச் சொல்லிக்கொண்டிருந்தார்கள். “பச்சைமரத்துக்கு இவைகளைச் செய்தால், பட்டமரத்துக்கு என்ன செய்யமாட்டார்கள்” (லூக்கா 24:21; 23:31) என்னும் அவருடைய வார்த்தை களை தனிமையிலும் இருதயத்தின் வேதனையிலும் இருந்த அவர்கள்

நினைத்துப் பார்த்தார்கள். அவர்களுக்கு அன்பான ஆசிரியரின் முடிவு எந்த நேரத்திலும் அவர்களுடையதாகலாம் என்பதை அறிந்து, அவர்கள் வீட்டின் மேலறையில் ஒன்றுகூடி கதவுகளை அடைத்துத் தாழிட்டிருந்தார்கள். (18)

உயிர்த்தெழுந்த இரட்சகரைப்பற்றிய அறிவினால் எல்லா நேரங்களிலும் அவர்களால் மகிழ்ந்து களிகூர்ந்திருக்க முடியும். இயேசு தோட்டத்தில் மரியாளுக்கருகில் நின்றிருந்தபோது, மரியாள் அழுதுகொண்டு நின்றிருந்தாள். அவரை அறிந்துகொள்ளமுடியாதவிதமாக அவளுடைய கண்கள் கண்ணீரினால் மங்கலாகியிருந்தன. அந்த தூதனின் செய்தியை அல்லது கிறிஸ்து தாமே கூறியிருந்த வார்த்தைகளை நம்பமுடியாதவிதமாக சீடர்களின் இருதயங்கள் வருத்தத்தால் நிறைந்திருந்தன. (19)

அந்த சீடர்கள் செய்திருந்ததையே எத்தனைபேர்கள் இன்றும் செய்துகொண்டிருக்கின்றனர்? “கர்த்தரை … எடுத்துக்கொண்டு போய் விட்டார்கள், அவரை வைத்த இடம் எங்களுக்குத் தெரியவில்லை” என்னும் மரியாளின் அழுகையை எத்தனைபேர் எதிரொலிக்கின்றனர்? “ஏன் அழுகிறாய், யாரைத் தேடுகிறாய்” என்னும் இரட்சகரின் வார்த்தைகள் எத்தனைபேருக்குக் கூறப்பட்டிருக்கவேண்டும்? அவர்களுக்குப் பக்கத்தில் அவர் சமீபமாக இருக்கிறார். ஆனால் கண்ணீரால் குருடாகிவிட்ட கண்களால் அவரை தெளிவாகக் காணமுடிவதில்லை. அவர்களிடம் அவர் பேசுகிறார். ஆனால் அவர்கள் புரிந்துகொள்ளுவதில்லை. (20)

ஆ! அவரைக் காண்பதற்குக் குனிந்த தலை நிமிரவும் கண்கள் திறக்கப்படவும் வேண்டும்! அவருடைய குரலைக் கேட்க செவிகள் திறக்கப்படவேண்டும்! வேகமாகச் சென்று அவர் உயிர்த்தெழுந்தார் என்பதை அறிவிக்கவேண்டும். (21)

“ஆ! சீக்கிரமாய்ப் போய் அவர் மரித்தோரிலிருந்து எழுந்தார் என்று அவருடைய சீஷர்களுக்குச் சொல்லுங்கள்” என்னும் அவருடைய குரலைச் செவிகள் கவனிக்கவேண்டும்! அவரைக் காண்பதற்காகக் குனிந்திருக்கும் தலை நிமிர்த்தப்பட்டு, கண்கள் திறக்கப்படவேண்டுமே! ஒரு பெரிய கல்லினால் மூடப்பட்டு, ரோமர்களால் முத்திரையிடப்பட்டிருக்கும் யோசேப்பின் புதிய கல்லறையைப் பார்ப்பதற்கு அவர்களை அழைக்காதீர்கள். கிறிஸ்து அங்கே இல்லை. வெறுமையாக உள்ள அந்தக் கல்லறையைப் பார்க்காதிருங்கள். நம்பிக்கை இல்லாதவர்களைப்போலவும், உதவியற்றவர்களைப்போலவும் துக்கங்கொண்டாடாமலுமிருங்கள். இயேசு உயிருடன் இருக்கிறார். அவர் உயிருடன் இருப்பதினால் நாமுங்கூட உயிருடன் இருப்போம். கிறிஸ்து உயிர்த்தெழுந்தார் என்னும் மகிழ்ச்சிமிக்க பாடல், நன்றிமிக்க இருதயங்களிலிருந்தும் பரிசுத்த அக்கினியால் தொடப்பட்ட உதடுகளிலிருந்தும்

ஒலிப்பதாக. நமக்காகப் பரிந்துபேசுவதற்காக அவர் உயிருடன் இருக்கிறார். இந்த நம்பிக்கையைப் பற்றிக்கொள்ளும்போது, அது ஆத்துமாவை ஒரு நிச்சயமான பரீட்சிக்கப்பட்ட நங்கூரத்தைப்போலப் பிடித்துக்கொள்ளும். "நீ விசுவாசித்தால் தேவனுடைய மகிமையைக் காண்பாய்." (22) ★

## 83

# எம்மாவூருக்கு நடைப்பயணம்!

### லூக்கா 24:13–33

### (The Desire of Ages, pp. 795–801)

உயிர்த்தெழுந்த அந்த நாளின் பிற்பகலின் பிந்தின நேரத்தில் எருசலேமிலிருந்து எட்டு கல் தொலைவில் இருந்த எம்மா என்னும் ஒரு சிற்றூருக்குச் சீடர்களில் இருவர் நடந்துசென்றிருந்தனர். அந்த சீடர்கள் கிறிஸ்துவின் பணியில், முக்கிய இடத்தில் இருக்கவில்லை. ஆனால் இயேசுவில் அக்கறைமிக்க விசுவாசிகளாக இருந்தனர். பஸ்காவை ஆசரிப்பதற்காக அவர்கள் நகரத்திற்கு வந்திருந்து, சமீபத்தில் அங்கு நடைபெற்ற சம்பவங்களினால் பெரிய அளவில் குழப்பமடைந்திருந்தனர். கல்லறையிலிருந்து கிறிஸ்துவின் உடல் நீக்கப்பட்டிருந்ததைகுறித்தும், தூதர்களைக் கண்டு, இயேசுவைச் சந்தித்திருந்த பெண்களின் அறிக்கை களைக்குறித்தும் அந்த நாளின் காலைச் செய்திகளை அவர்கள் கேட்டிருந்தனர். தியானஞ்செய்வதற்காகவும் ஜெபம்பண்ணுவதற்காகவும் அவர்கள் தங்களுடைய வீடுகளுக்குத் திரும்பிக்கொண்டிருந்தனர். விசாரணை, சிலுவையில் அறையப்படல், ஆகிய காட்சிகளைப்பற்றிப் பேசிக்கொண்டிருந்து, அவர்கள் துயரத்துடன் தங்களுடைய மாலை நேர நடையைத் தொடர்ந்திருந்தனர். இதற்குமுன் ஒருபோதும் இதைப்போல அவர்கள் முற்றிலும் இதயம் சோர்ந்தவர்களாக இருக்கவில்லை. நம்பிக்கையில்லாதவர்களாகவும், விசுவாசமில்லாதவர்களாகவும் அவர்கள் சிலுவையின் நிழலில் நடந்துகொண்டிருந்தனர். (1)

அவர்களுடைய பயணத்தில் அதிக தூரம் சென்றிருக்கமாட்டார்கள். அப்போது அவர்களுடன் ஒரு அந்நியர் சேர்ந்துகொண்டார். ஆனால் துயரத்திலும் ஏமாற்றத்திலும் அதிகமாக மூழ்கியிருந்த அவர்கள் அவரை உன்னிப்பாகக் கவனிக்கவில்லை. அவர்கள் தங்களுடைய இருதயத்தின் நினைவுகளை வெளிப்படுத்திக்கொண்டு, தங்களுடைய உரையாடலில் தொடர்ந்திருந்தனர். அவர்களால் புரிந்துகொள்ளமுடியாததுபோலக் காணப்பட்டிருந்த—கிறிஸ்துவால் கொடுக்கப்பட்டிருந்த பாடங்கள்சம்பந்தமாக

அவர்கள் விவாதஞ்செய்துகொண்டிருந்தனர். நடைபெற்றிருந்த சம்பவங்களைப்பற்றி அவர்கள் பேசியிருந்தபோது, அவர்களுக்கு ஆறுதல் செய்ய இயேசு ஏக்கமுடையவராக இருந்தார். அவர்களுடைய வருத்தத்தை அவர் கண்டிருந்தார். அவமானப்படுத்தப்படுவதற்குத் தம்மைத்தாமே அனுமதித்த இந்த மனிதர் கிறிஸ்துவாக இருக்கமுடியுமா? என்னும் சிந்தனையை அவர்களுடைய மனங்களுக்குக் கொண்டுவந்திருந்த குழப்பமிக்க யோசனைகளை அவர் புரிந்துகொண்டிருந்தார். அவர்களுடைய துயரத்தைக் கட்டுப்படுத்தமுடியாமல் அவர்கள் அழுதார்கள். அவர்களுடைய இருதயங்கள் அன்பினால் அவருடன் கட்டப்பட்டிருந்தன என்பதை இயேசு அறிந்து, அவர்களுடைய கண்ணீரைத் துடைத்து நீக்கவும், அவர்களை மகிழ்ச்சியினாலும் சந்தோஷத்தினாலும் நிரப்பவும் ஏங்கினார். ஆனால் முதலில் ஒருபோதும் மறக்கமுடியாத பாடங்களை அவர்களுக்குக் கொடுக்கவேண்டும். (2)

“நீங்கள் துக்கமுகமுள்ளவர்களாய் வழிநடந்து, ஒருவருக்கொருவர் சொல்லிக்கொள்ளுகிற காரியங்கள் என்னவென்று கேட்டார். அவர்களில் ஒருவனாகிய கிலெயோப்பா என்பவன் பிரதியுத்தரமாக: இந்நாட்களில் எருசலேமிலே நடந்தவைகளை அறியாதபடிக்கு நீர் அந்நியராயிருக்கிறீரோ என்றான்.” அவர்: “எவைகள்” என்றார். அதற்கு அவர்கள்: “நசரேயனாகிய இயேசுவைக் குறித்தவைகளே; அவர் தேவனுக்கு முன்பாகவும் அனைத்து மக்களுக்குமுன்பாகவும் செய்கையிலும் வாக்கிலும் வல்லமையுள்ள தீர்க்கதரிசியாயிருந்தார். நம்முடைய பிரதான ஆசாரியரும் அதிகாரிகளும் அவரை மரண ஆக்கினைக்குட்படுத்தி, சிலுவையில் அறைந்தார்கள்” என்றார்கள். ஏமாற்றத்தினால் புண்ணாகிவிட்ட இருதயங்களுடனும் நடுங்கும் உதடுகளுடனும்: “அவரே இஸ்ரவேலை மீட்டிரட்சிப்பவர் என்று நாங்கள் நம்பியிருந்தோம். இவைகள் சம்பவித்து இன்று மூன்று நாளாகிறது” என்று மேலும் கூறினார்கள். (3)

கிறிஸ்துவின் வார்த்தைகளைச் சீடர்கள் நினைவுகூராமலிருந்ததும் நிகழவேண்டியிருந்த நிகழ்ச்சிகளை அவர் முன்னுரைத்திருந்ததை அவர்கள் உணராமலிருந்ததும் அதிசயமாக இருந்தது. அவர் கூறியிருந்த “மூன்றாவது நாளில் எழுந்திருப்பார்” என்னும் கடைசிப்பகுதி, முதல்பகுதியைப்போல மெய்யாகவே நிறைவேறும் என்பதை அவர்கள் உணராமலிருந்தனர். அவர்கள் நினைவுகூர்ந்திருக்கவேண்டிய பகுதியாக அது இருந்தது. ஆசாரியர்களும் அதிபதிகளும் அதை மறக்கவில்லை. “ஆயத்தநாளுக்குப் பின்னான மறுநாளிலே பிரதான ஆசாரியரும் பரிசேயரும் பிலாத்துவினிடத்தில் கூடிவந்து: ஆண்டவனே, அந்த எத்தன் உயிரோடிருக்கும்போது,

மூன்றுநாளைக்குப்பின் எழுந்திருப்பேன் என்று சொன்னது எங்களுக்கு ஞாபகமிருக்கிறது" என்றார்கள். ஆனால் சீடர்களோ இந்த வார்த்தைகளை ஞாபகத்தில் வைத்திருக்கவில்லை. (4)

"தீர்க்கதரிசிகள் சொன்ன யாவையும் விசுவாசிக்கிறதற்குப் புத்தியில்லாத மந்த இருதயமுள்ளவர்களே, கிறிஸ்து இவ்விதமாகப் பாடுபடவும், தமது மகிமையில் பிரவேசிக்கவும் வேண்டியதில்லையா" என்று கிறிஸ்து கூறினார். அந்த சீடர்கள், தங்களுடைய ஆத்துமாக்களுக்குள் நுழைந்து, இவ்விதமான அக்கறையுடனும் மென்மையுடனும் அனுதாபத்துடனும் நம்பிக்கைமிக்க தன்மையுடனும் பேசிக்கொண்டிருக்கும் இந்த அந்நியர் யாராக இருக்கக்கூடும் என்று ஆச்சரியப்பட்டிருந்தனர். கிறிஸ்து காட்டிக்கொடுக்கப்பட்டதிலிருந்து முதல் தடவையாக அவர்கள் நம்பிக்கையை உணரத்தொடங்கினார்கள். அவர்களுடைய தோழரை அடிக்கடி அக்கறையுடன் பார்த்து, கிறிஸ்து பேசியிருந்தால், அவருடைய வார்த்தைகள் எப்படி இருக்குமோ அதைப்போலவே இருக்கிறது என்று நினைத்தார்கள். ஆச்சரியத்தால் நிறைந்ததுடன், மகிழ்ச்சிமிக்க எதிர்பார்ப்பினால் அவர்களுடைய இருதயங்கள் துடிக்கத்தொடங்கின. (5)

வேதாகம வரலாற்றின் ஆதியாக இருந்த மோசேயில் தொடங்கி, கிறிஸ்து வேதவாக்கியங்களனைத்திலும் அவரைப்பற்றின காரியங்களை அவர்களுக்கு விளக்கினார். ஆரம்பத்திலேயே அவர் தம்மை அவர்களுக்கு காட்டியிருந்தால், அவர்களுடைய இருதயங்கள் திருப்தியடைந்திருக்கும். அவர்களுடைய மகிழ்ச்சியின் நிறைவில் அதற்குமேல் எதற்கும் அதிகமான பசியோடு இருந்திருக்கமாட்டார்கள். ஆனால் பழைய ஏற்பாட்டிலுள்ள மாதிரிப்படிவங்கள் தீர்க்கதரிசனங்கள் ஆகியவைகளால் அவர் தாங்கியிருந்த சாட்சியைப் புரிந்துகொள்ளவேண்டியது அவர்களுக்கு அவசியமாக இருந்தது. இவைகளின்மீது அவர்களுடைய விசுவாசம் ஸ்திரப்படுத்தப்படவேண்டும். அவர்களுக்கு மனநிறைவை உண்டுபண்ணுவதற்காக அற்புதத்தை செய்யாமல், வேதவாக்கியங்களை விளக்குவது கிறிஸ்துவுடைய முதல் வேலையாக இருந்தது. அவர்களுடைய அனைத்து நம்பிக்கைகளின் அழிவாக, அவருடைய மரணத்தை அவர்கள் பார்த்திருந்தனர். அதுதான் அவர்களுடைய விசுவாசத்திற்கான மிக அதிக பலமுள்ள சான்றாக இருக்கிறது என்பதை இப்பொழுது அவர் தீர்க்கதரிசனங்களிலிருந்து காட்டினார். (6)

சீடர்களுக்குப் போதித்தபோது, பழைய ஏற்பாட்டின் முக்கியத்துவத்தை அது அவருடைய ஊழியத்திற்கு ஒரு சாட்சியாக இருப்பதாக காண்பித்தார். இதற்குமேல் பழைய ஏற்பட்டினால் எந்தவிதமான பயனும் இல்லை என்று

கூறி, அநேக பெயர் கிறிஸ்தவர்கள் இப்பொழுது அதை வேண்டாமென்று ஒதுக்குகின்றனர். ஆனால் கிறிஸ்துவின் போதனை அப்படிப்பட்டது அல்ல. அவர் அதை மிகவும் உயர்வாக மதித்தார். ஒரு தடவை அவர்: “அவர்கள் மோசேக்கும் தீர்க்கதரிசிகளுக்கும் செவிகொடாவிட்டால், மரித்தோரிலிருந்து ஒருவன் எழுந்துபோனாலும், நம்பமாட்டார்கள்” (லூக்கா 16:31) என்று கூறினார். (7)

கிறிஸ்துவின் குரல்தான் முற்பிதாக்கள், தீர்க்கதரிசிகள் ஆகியோரின்மூலமாக ஆதாமின் நாட்களிலிருந்து காலத்தின் முடிவுவரை தொடர்ந்து பேசுகின்றது. புதிய ஏற்பாட்டில் வெளிப்படுத்தப்பட்டுள்ள விதமாகவே இரட்சகர் பழைய ஏற்பாட்டிலும் வெளிப்படுத்தப்பட்டிருக்கிறார். கடந்தகாலத் தீர்க்கதரிசனத்திலிருந்துவரும் ஒளிதான், கிறிஸ்துவின் வாழ்க்கையையும் புதிய ஏற்பாட்டின் போதனைகளையும் தெளிவுடனும் அழகுடனும் கொண்டுவருகிறது. கிறிஸ்துவின் அற்புதங்கள், அவருடைய தெய்வீகத்திற்குச் சான்றாக இருக்கிறது. ஆனால் பழைய ஏற்பாட்டுத் தீர்க்கதரிசனங்களுடன் புதிய ஏற்பாட்டு வரலாற்றை ஒப்பிடுவதில் அவர் உலகத்தின் மீட்பராக இருக்கிறார் என்பதற்கான பலமிக்க சாட்சி காணப்படுகிறது. (8)

மானுடத்தில் கிறிஸ்து எப்படிப்பட்டவராக இருக்கவேண்டும் என்பதைக்குறித்த சரியான கருத்தை, தீர்க்கதரிசனத்தை விளக்குவதின் வழியாக கிறிஸ்து சீடர்களுக்குக் கொடுத்தார். மனிதர்களின் வாஞ்சைக்கு ஏற்றவாறு தமது சிங்காசனத்தையும் அரச வல்லமையையும் எடுத்துக் கொள்ளுபவராக அவர்கள் மேசியாவை எதிர்பார்த்திருந்தது அவர்களைத் தவறாக நடத்திக்கொண்டிருந்தது. அது, மிகவும் உன்னதமான நிலையிலிருந்து அடையக்கூடிய மிகவும் கீழான நிலைக்கு அவர் இறங்கியிருந்ததை சரியாகப் புரிந்துகொள்ளுவதுடன் குறுக்கிடுவதாக இருக்கும். அவருடைய சீடர்களின் எண்ணங்களும் யோசனைகளும் ஒவ்வொரு கருத்திலும் தூய்மையானவைகளாகவும் உண்மையான வைகளாகவும் இருக்கவேண்டுமென்று கிறிஸ்து விரும்பினார். அவருக்கு நியமிக்கப்பட்டிருந்த பாடுகளின் பாத்திரத்தைக்குறித்து எவ்வளவு முடியுமோ அவ்வளவாக அவர்கள் புரிந்துகொள்ளவேண்டும். அவர்களால் இன்னமும் புரிந்துகொள்ளமுடியாததாக இருந்த அந்த பயங்கரமான போராட்டம், உலகத்திற்கு அஸ்திபாரம் போடப்படுவதற்குமுன் செய்யப்பட்டிருந்த உடன்படிக்கையின் நிறைவேறுதலாக இருந்தது என்பதை அவர் அவர்களுக்குக் காட்டினார். பாவத்தில் தொடருகின்ற ஒவ்வொரு மீறுதல்காரனும் மரிக்கவேண்டியதைப்போல கிறிஸ்து மரிக்கவேண்டும்.

இவையனைத்தும் தோல்வியில் முடியாமல், மகிமைமிக்க நித்திய வெற்றியாக இருக்கவேண்டியதாக இருந்தது. உலகத்தைப் பாவத்திலிருந்து இரட்சிப்பதற்காக சகலவிதமான முயற்சிகளும் மேற்கொள்ளப்படவேண்டும் என்பதை இயேசு அவர்களிடம் கூறினார். அவருடைய அடியார்கள் அவர் வாழ்ந்ததைப்போல வாழ்ந்து, அவர் செயலாற்றியிருந்தைப்போல கடுமையான விடாப்பிடியான முயற்சியுடன் செயலாற்றவேண்டும். (9)

இவ்விதமாக சீடர்கள் வேதவாக்கியங்களைப் புரிந்துகொள்ளவேண்டும் என்பதற்காக அவர்களுடைய மனங்களைத் திறந்து கிறிஸ்து அவர்களுக்குப் பிரசங்கஞ்செய்தார். சீடர்கள் களைப்படைந்திருந்தனர். ஆனாலும், அந்த உரையாடல் ஊக்கம் குன்றியிருக்கவில்லை. ஜீவனும் நிச்சயமும் உள்ள வார்த்தைகள் இரட்சகரின் உதடுகளிலிருந்து விழுந்தன. ஆனால் இன்னுங்கூட அவர்களுடைய கண்கள் தெளிவில்லாதவைகளாக இருந்தன. எருசலேமின் வீழ்ச்சியைப்பற்றி அவர் அவர்களுக்குச் சொன்னபோது, தண்டனைக்குட்பட்டிருந்த அந்த நகரத்தை அவர்கள் அழுகையுடன் பார்த்தார்கள். ஆனால் அவர்களுடன் பயணஞ்செய்திருந்த அந்தத் தோழன் யார் என்பதைப்பற்றி அவர்கள் சந்தேகப்படவில்லை. அவர்களுடைய உரையாடலின் “பொருளானவரே” அவர்களுக்கருகில் நடந்துகொண்டிருந்தார் என்பதை அவர்கள் நினைக்கவில்லை. ஏனெனில் கிறிஸ்து தம்மை வேறொரு நபரைப்போலக் குறிப்பிட்டிருந்தார். பஸ்கா பண்டிகையில் கலந்துகொள்ளுவதற்காக வந்திருந்து, இப்பொழுது தன்னுடைய வீட்டுக்குத் திரும்பிக்கொண்டிருப்பவர்களில் அவர் ஒருவர் என்று அவர்கள் நினைத்தார்கள். கரடு முரடான கற்களின்மீது, அவர்கள் நடந்திருந்ததைப்போலவே அவரும் மிகுந்த கவனத்துடன் நடந்து, அடிக்கடி இளைப்பாறுவதற்காக அவர்களுடன் நின்றிருந்தார். இவ்விதமாக அவர்கள், விரைவில் தேவனுடைய வலதுபக்கத்தில் தமது ஸ்தானத்தை எடுத்துக்கொண்டு “வானத்திலும் பூமியிலும் சகல அதிகாரமும் எனக்குக் கொடுக்கப்பட்டிருக்கிறது” (மத்தேயு 28:18) என்று கூறக்கூடியவருடன் சேர்ந்து அந்த மலைப்பாதை வழியாகத் தொடர்ந்து சென்றிருந்தனர். (10)

அந்தப் பயணத்தின்நேரம், சூரிய அஸ்தமன வேளையாயிருந்தது. அந்தப் பயணிகள் அவர்களுடைய இளைப்பாறுமிடத்திற்குச் சென்று சேருமுன் வயல்களில் வேலைசெய்திருந்தவர்கள் அவர்களுடைய வேலையை முடித்திருந்தனர். அந்த சீடர்கள், அவர்களுடைய வீட்டிற்குள் நுழைய இருந்தபோது, அந்த அந்நியர் அவருடைய பயணத்தில் தொடர்பவரைப்போலக் காணப்பட்டார். ஆனால் சீடர்கள், தாங்கள் அவரிடமாக இழுக்கப்படுவதை உணர்ந்தனர். அவரிடமிருந்து அதிகமாகக்

கேட்பதற்கு அவர்களுடைய ஆத்துமாக்கள் அதிக பசியுள்ளவைகளாக இருந்தன. “நீர் எங்களுடனே தங்கியிரும்” என்று அவர்கள் கூறினார்கள். ஆனால் அழைப்பை ஏற்றுக்கொள்பவரைப்போல அவர் காணப்படவில்லை. என்றாலும் அவர்கள்: “நீர் எங்களுடனே தங்கியிரும், சாயங்காலமாயிற்று, பொழுதும் போயிற்று” என்று அவரை வருந்திக் கேட்டுக்கொண்டார்கள். கிறிஸ்து அந்த வேண்டுகோளிற்கு இணங்கி, அவர்களுடனே தங்கும்படி உள்ளே போனார். (11)

அந்த சீடர்கள் அவர்களுடைய அழைப்பை வற்புறுத்தத் தவறியிருந்தால், அவர்களுடன் பயணஞ்செய்திருந்த தோழன் உயிர்த் தெழுந்த கர்த்தர் என்பதை அறிந்திருக்கமாட்டார்கள். கிறிஸ்து அவருடைய தோழமையை ஒருவர்மீதும் வற்புறுத்துவதில்லை. அவர்மீது ஆர்வமுள்ளவர்களின்மேல் அவர்தாமே விருப்பமுள்ளவராக இருக்கிறார். மிகவும் எளிமையான வீட்டிற்குள் அவர் மகிழ்ச்சியுடன் நுழைந்து, மிகவும் தாழ்மையான இருதயத்தை அவர் மகிழ்ச்சியாக்குகிறார். ஆனால் பரலோக விருந்தினரைப்பற்றி மனிதர்கள் அதிகமாக சிந்திப்பதற்கும், தங்களுடன் தங்கும்படி அவரைக் கேட்டுக்கொள்ளுவதற்கும் மிகவும் அக்கறை அற்றவர்களாக இருப்பார்களானால் அவர் கடந்துசெல்லுகிறார். இவ்விதமாக அநேகர் இழப்பைச் சந்திக்கின்றனர். பாதையில் தங்களுடன் நடந்துசென்ற கிறிஸ்துவை சீடர்கள் அறியாதிருந்ததைப்போலவே இன்றும் அநேகர் கிறிஸ்துவை அறியாதவர்களாக உள்ளனர். (12)

விரையில் எளிமையான இரவு உணவு ஆயத்தமாக்கப்பட்டது. மேசையில் தலைமையான இடத்தில் உட்கார்ந்திருக்கும் விருந்தினருக்கு முன்பாக அது வைக்கப்பட்டது. இப்பொழுது அந்த உணவை ஆசீர்வதிக்க அவரது கரத்தை அவர் முன்வைக்கிறார். அந்த சீடர்கள் ஆச்சரியத்தால் பின்னிட்டு நிற்கின்றனர். அவர்களுடைய ஆண்டவர் எந்தவிதமாகச் செய்வாரோ, அதேவிதமாக, மிகச்சரியாக அவர்களுடைய தோழர் தமது கரங்களை விரிக்கிறார். அவர்கள் மறுபடியும் பார்த்தபோது, இதோ, அவருடைய இரண்டு கரங்களிலும் ஆணிகள் கடாவப்பட்டதினால் ஏற்பட்ட தழும்புகளைக் கண்டனர். உடனே அவர் கர்த்தராகிய இயேசு! அவர் மரித்தோரிலிருந்து உயிர்த்தெழுந்தார்! என்று அவர்கள் இருவரும் வியந்து கூறுகின்றனர். (13)

அவருடைய பாதங்களில் விழுந்து அவரை வணங்குவதற்காக அவர்கள் எழுந்திருக்கின்றனர். ஆனால் அவர்களுடைய பார்வையிலிருந்து அவர் மறைந்துவிட்டார். எந்த ஒருவருடைய உடல் சமீபத்தில் கல்லறையில் வைக்கப்பட்டிருந்ததோ, அவர் உட்கார்ந்திருந்த இடத்தை அவர்கள் பார்த்து,

ஒருவருக்கொருவர் “வழியிலே அவர் நம்முடனே பேசி, வேதவாக்கியங்களை நமக்கு விளங்கக்காட்டினபொழுது, நம்முடைய இருதயம் நமக்குள்ளே கொழுந்துவிட்டு எரியவில்லையா” என்று கூறிக்கொள்ளுகின்றனர். (14)

ஆனால் அந்த மாபெரும் செய்தியை மற்றவர்களுக்கு தெரியப்படுத்தவேண்டியதிருந்தது, எனவே அவர்களுக்கு உட்காருவதற்கோ பேசுவதற்கோ நேரமில்லை. அவர்களுடைய களைப்பும் பசியும் தூரமாகப் பறந்துவிட்டன. அவர்களுடைய உணவை அவர்கள் ருசிக்காமல், மகிழ்ச்சி நிறைந்தவர்களாக நகரத்திலிருக்கும் சீடர்களுக்கு இந்த நற்செய்தியைக் கூறுவதற்காக வந்தப் பாதையிலேயே திரும்பவும் விரைந்து செல்லுகின்றனர். சில பகுதிகளில் சாலை. பாதுகாப்பற்றதாக இருக்கிறது. ஆனால் உயர்வான இடங்களில் ஏறி, வழுவழுப்பான பாதைகளில் சருக்கிச் செல்லுகின்றனர். அவர்களுடன் அந்தச் சாலையில் பயணஞ்செய்திருந்தவரின் பாதுகாப்பு அவர்களுக்கு இருக்கிறது என்பதை காணாதவர்களாகவும் அறியாதவர்களாகவும் அவர்கள் உள்ளனர். அவர்களுடைய பயணத் தடிகளை கையில் பிடித்தவர்களாக அவர்கள் முனைந்து முயற்சிசெய்து வேகமாகச் செல்லவேண்டும் என்று, எண்ணுவதைவிட இன்னும் வேகமாய் வாஞ்சையுடன் விரைந்து செல்லுகின்றனர். அவர்கள் பாதையை தவறவிட்டு மறுபடியும் கண்டுபிடிக்கின்றனர். பாதை நெடுகிலும் காணக்கூடாத அவர்களுடைய தோழர் அவர்களுக்கு பக்கத்திலிருக்க, அவர்கள் சில சமயங்களில் ஓடியும், சில சமயங்களில் தடுமாறிக்கொண்டும், முன்நோக்கி விரைகின்றனர். (15)

அந்த இரவு இருண்டிருந்தது. ஆனால் நீதியின் சூரியன் அவர்கள்மீது ஒளிவீசிக்கொண்டிருந்தார். மகிழ்ச்சியில் அவர்களுடைய இருதயங்கள் துள்ளின. ஒரு புதிய உலகத்தில் இருப்பதைப்போல் அவர்கள் காணப்படுகின்றனர். கிறிஸ்து ஒரு ஜீவனுள்ள இரட்சகராக இருக்கிறார். அவர் இறந்துவிட்டாரென்று இனிமேல் அவர்கள் துக்கங்கொண்டாடவேண்ய அவசியமில்லை. கிறிஸ்து உயிர்த்தெழுந்தார்! மறுபடியும் மறுபடியும் அவர்கள் அதைத் கூறுகின்றனர். துயரப்பட்டுக்கொண்டிருப்பவர்களுக்காக அவர்கள் சுமந்துசெல்லும் செய்தியாக அது இருக்கிறது. எம்மாவூருக்கு நடந்துசென்ற ஆச்சரியமான அந்தக் கதையை அவர்கள் சீடர்களுக்குக் கூறவேண்டும். பாதையின் வழியில் அவர்களுடன் சேர்ந்துகொண்டது யார் என்று அவர்கள் கூறவேண்டும். உலகத்திற்கு இதுவரை கொடுக்கப்பட்டிருந்த மிகப்பெரிய தூதை, இப்பொழுதும் நித்தியத்திற்கும் மனிதக்குடும்பத்தின் நம்பிக்கைகள் சார்ந்திருக்கிற நற்செய்தியின் தூதை அவர்கள் சுமந்துசெல்லுகின்றனர். (16) ★

# 84

# உங்களுக்குச் சமாதானம் உண்டாவதாக!

**லூக்கா 24:22–48; யோவான் 20:19–29**

**(The Desire of Ages, pp. 802–808)**

அந்த இரு சீடர்களும் எருசலேமை அடைந்து பண்டிகைக் காலங்களின் இரவில் திறந்துவைக்கப்பட்டிருக்கும் கிழக்கு வாசல்வழியாக உள்ளே நுழைகின்றனர். வீடுகள் இருளாகவும் அமைதியாகவும் உள்ளன. ஆனால் மேலெழும்பிக்கொண்டிருக்கும் நிலவின் ஒளியினால் அந்தப் பயணிகள் இடுக்கமான தெருக்களுக்கூடாக அவர்களுடைய பாதையில் செல்லுகின்றனர். இயேசு அவருடைய மரணத்திற்குமுன்பாகக் கடைசி மாலை நேரத்தின் மணி நேரங்களைச் செலவிட்டிருந்த அந்த மேலறைக்கு அவர்கள் செல்லுகின்றனர். தங்களுடைய சகோதரர்களை இங்கு அவர்களால் காணமுடியும் என்பதை அவர்கள் அறிந்திருக்கின்றனர். இருக்கின்றவிதமாக அது பிந்தின நேரமாக இருந்தபோதிலும், தங்களுடைய கர்த்தரின் உடலிற்கு என்ன நேர்ந்தது என்பதை நிச்சயமாக அறியும்வரை சீடர்கள் நித்திரைசெய்யமாட்டார்கள் என்பதை அவர்கள் அறிந்திருந்தார்கள். அந்த மேலறையின் கதவு பாதுகாப்பாக மூடப்பட்டிருப்பதை அவர்கள் காணுகின்றனர். உள்ளே செல்வதற்காக கதவைத் தட்டுகிறார்கள். ஆனால் பதில் எதுவும் வரவில்லை. எங்கும் அமைதி நிலவுகிறது. பின்னர் தங்களது பெயர்களைக் கூறுகிறார்கள். அதற்குப்பின் மிகுந்த கவனத்துடன் கதவு திறக்கப்பட்டு, அவர்கள் உள்ளே பிரவேசிக்கின்றார்கள். அவர்கள் பிரவேசித்தபோது, காணக்கூடாத மற்றொருவர் அவர்களுடன் உள்ளே பிரவேசிக்கிறார். அதற்குப்பின் ஒற்றர்கள் நுழையாதபடி அந்தக் கதவு மறுபடியும் மூடப்படுகிறது. (1)

ஆச்சரியமிக்க பரபரப்பில் அனைவரும் இருப்பதை அந்தப் பயணிகள் காண்கின்றனர். “கர்த்தர் மெய்யாகவே உயிர்த்தெழுந்து சீமோனுக்குத்

தரிசனமானார்" என்று கூறிக்கொண்டு, அந்த அறையில் இருந்தவர்களின் குரல்கள் நன்றியையும் ஸ்தோத்திரத்தையும் தெரிவிப்பதில் எழுகின்றன. அப்போது அந்த இரு பயணிகளும் பயணத்தினால் மூச்சிறைக்க, இயேசு அவர்களுக்கு தரிசனமான ஆச்சரியமான சம்பவத்தைக் கூறுகின்றனர். அவர்கள் முடித்திருந்தபோது, அது உண்மையாயிருக்கமுடியாது எனவே அதை நம்பமுடியாது என்று சிலர் கூறுகின்றனர். அப்போது, இதோ, மற்றொரு நபர் அவர்கள்முன் நிற்கிறார். அந்த அந்நியரின்மீது ஒவ்வொருவருடைய கண்களும் பதிகின்றன. நுழைவதற்கென்று ஒருவரும் கதவைத் தட்டியிருக்கவில்லை. ஒருவருடைய காலடிச் சத்தமும் கேட்கப்படவில்லை. அந்த சீடர்கள் திடுக்கிட்டு, இதன் பொருள் என்ன என்று அதிசயிக்கின்றனர். அப்பொழுது அவர்கள் ஒரு குரலைக் கேட்கின்றனர். அது அவர்களது ஆண்டவருடைய குரலேயன்றி வேறல்ல; "உங்களுக்குச் சமாதானம்" என்னும் தெளிவும் சிறப்புமான வார்த்தைகள் அவருடைய உதடுகளிலிருந்து விழுகின்றன. (2)

ஆனால் "அவர்கள் கலங்கி, பயந்து, ஒரு ஆவியைக் காண்கிறதாக நினைத்தார்கள். அவர் அவர்களை நோக்கி: நீங்கள் ஏன் கலங்குகிறீர்கள்; உங்கள் இருதயங்களில் சந்தேகங்கள் எழும்புகிறதென்ன? நான்தான் என்று அறியும்படி, என் கைகளையும் என் கால்களையும் பாருங்கள், என்னைத் தொட்டுப்பாருங்கள்; நீங்கள் காண்கிறபடி, எனக்கு மாம்சமும் எலும்புகளும் உண்டாயிருக்கிறதுபோல ஒரு ஆவிக்கு இராதே என்று சொல்லி, தம்முடைய கைகளையும் கால்களையும் அவர்களுக்குக் காண்பித்தார்." (3)

கொடூரமான ஆணிகளால் களங்கப்படுத்தப்பட்டிருந்த கைகளையும் கால்களையும் அவர்கள் கண்டார்கள். இதுவரை வேறொருவிதமாகவும் கேள்விப்படாமலிருந்த அவருடைய குரலை அவர்கள் கேட்டார்கள். "சந்தோஷத்தினால் அவர்கள் இன்னும் விசுவாசியாமல் ஆச்சரியப்படுகையில்: புசிக்கிறதற்கு ஏதாகிலும் இங்கே உண்டா என்று அவர்களிடத்தில் கேட்டார். அப்பொழுது பொரித்த மீன்கண்டத்தையும் தேன்கூட்டுத் துணிக்கையையும் அவருக்குக் கொடுத்தார்கள். அவைகளை அவர் வாங்கி அவர்களுக்கு முன்பாகப் புசித்தார்." அப்பொழுது சீடர்கள் கர்த்தரைக் கண்டதற்காகச் சந்தோஷப்பட்டார்கள். அவநம்பிக்கையின் இடத்தை விசுவாசமும் மகிழ்ச்சியும் எடுத்துக்கொண்டபோது, வார்த்தைகளினால் வெளிக்காட்டமுடியாத உணர்ச்சிகளுடன் அவர்கள் உயிர்த்தெழுந்த அவர்களுடைய இரட்சகரை ஏற்றுக்கொண்டார்கள். (4)

இயேசுவின் பிறப்பில் "பூமியிலே சமாதானமும், மனுஷர்மேல் பிரியமும் உண்டாவதாக" என்று தூதன் அறிவித்தான். இப்பொழுது

அவருடைய உயிர்த்தெழுலிற்குப்பின் சீடர்களுக்கான அவருடைய முதல் தரிசனத்தின் போது இரட்சகர்: "உங்களுக்குச் சமாதானம்" என்னும் ஆசீர்வாதமான வார்த்தைகளைக் கூறினார். சந்தேகங்களினாலும் பயங்களினாலும் பாரமடைந்திருக்கும் ஆத்துமாக்களுக்கு சமாதானத்தைப் பேசுவதற்கு இயேசு எப்பொழுதும் ஆயத்தமாயிருக்கிறார். நாம் இருதயத்தின் கதவை திறந்து, எங்களுடன் தங்கும் என்று கூறுவதை கேட்க அவர் காத்துக்கொண்டிருக்கிறார். "இதோ, வாசற்படியிலே நின்று தட்டுகிறேன்; ஒருவன் என் சத்தத்தைக்கேட்டு, கதவைத் திறந்தால், அவனிடத்தில் நான் பிரவேசித்து, அவனோடே போஜனம்பண்ணுவேன், அவனும் என்னோடே போஜனம்பண்ணுவான்" (வெளிப்படுத்தல் 3:20) என்கிறார். (5)

இயேசுவின் உயிர்த்தெழுல், அவருக்குள் நித்தரைசெய்து கொண்டிருக்கும் அனைவரது இறுதி உயிர்த்தெழுதலின் ஒரு மாதிரியாக இருக்கிறது. உயிர்த்தெழுந்த இரட்சகரின் முகம், அவருடைய தன்மை, அவரது பேச்சு ஆகியவைகள் சீடர்களுக்குப் பழக்கமானதாக இருந்தன. மரித்தோரிலிருந்து இயேசு உயிர்த்தெழுந்ததைப்போல அவருக்குள் நித்திரை செய்பவர்களும் மறுபடியும் எழுந்திருக்கவேண்டியவர்களாக இருக்கின்றனர். சீடர்கள் இயேசுவை அறிந்திருந்ததைப்போல, நாமும் நமது நண்பர்களை அறிந்துகொள்வோம். சாவிற்கேதுவான இந்த வாழ்க்கையில் அவர்கள் சீர்குலைந்தவர்களாக, நோயுற்றவர்களாக அல்லது உருக்குலைந்தவர்களாக இருந்திருக்கலாம். ஆனால் பூரணமான நலத்துடனும் சரியான உருவத்துடனும் அவர்கள் எழுகின்றனர். மகிமையடைந்துள்ள அவர்களுடைய உடலில் அவர்களுடைய தனித்தன்மை முற்றிலுமாகப் பாதுகாக்கப்பட்டிருக்கும். "அப்பொழுது நான் அறியப்பட்டிருக்கிறபடியே அறிந்துகொள்ளுவேன்"–1 கொரிந்தியர் 13:12. இயேசுவின் முகத்திலிருந்து வீசும் ஒளியினால் பிரகாசமடைந்துள்ள முகத்தில் நாம் நேசிப்பவர்களின் தனிதோற்றத்தை நாம் அடையாளம் கண்டுகொள்ளுவோம். (6)

இயேசு, அவருடைய சீடர்களைச் சந்தித்தபோது, அவருடைய மரணத்திற்குமுன் அவர்களிடம் கூறியிருந்த வார்த்தைகளை—மோசேயின் நியாயப்பிரமாணத்திலும், தீர்க்கதரிசனங்களிலும், சங்கீதங்களிலும் அவரைப்பற்றி எழுதியுள்ள எல்லாக்காரியங்களும் நிறைவேறியாகவேண்டும் என்று கூறியிருந்தவைகளை அவர்களுக்கு நினைப்பூட்டினார். "அவர்களை நோக்கி: மோசேயின் நியாயப்பிரமாணத்திலும் தீர்க்கதரிசிகளின் ஆகமங்களிலும் சங்கீதங்களிலும் என்னைக்குறித்து எழுதியிருக்கிறவைகளெல்லாம் நிறைவேறவேண்டியதென்று, நான் உங்களோடிருந்தபோது உங்களுக்குச் சொல்லிக்கொண்டுவந்த விசேஷங்கள் இவைகளே என்றார்." (7)

சீடர்கள் அவர்களுடைய பணியின் இயல்பையும் ஊழியத்தின் பரப்பெல்லையையும் உணரத்தொடங்கினார்கள். கிறிஸ்து அவர்களிடம் ஒப்படைத்திருந்த ஆச்சரியமான சத்தியங்களை உலகத்திற்கு அறிவிக்க வேண்டியவர்களாக அவர்கள் இருந்தனர். அவருடைய வாழ்க்கையின் நிகழ்வுகள், அவருடைய மரணம், உயிர்த்தெழுல் ஆகிய இந்த சம்பவங்களைச் சுட்டிக்காட்டியிருந்த தீர்க்கதரிசனங்கள், தேவனுடைய நியாயப்பிரமாணத்தின் பரிசுத்தமான தன்மை, இரட்சிப்பின் திட்டத்திலிருந்த இரகசியங்கள், பாவங்களை மன்னிக்கின்ற இயேசுவின் வல்லமை இவைகளனைத்திற்கும் சாட்சிகளாக இருந்து, இவைகளை உலகத்திற்கு அறிவிக்க வேண்டியவர்களாக அவர்கள் இருந்தனர். மனந்திரும்புதல் இரட்சகரின் வல்லமை ஆகியவைகளின்மூலமாக சமாதானம், இரட்சிப்பு ஆகியவைகளின் விசேஷத்தை அவர்கள் அறிவிக்கவேண்டியவர்களாக இருந்தனர். (8)

இவைகளை அவர் சொன்னபின் அவர்கள்மேல் ஊதி: “பரிசுத்தஆவியைப் பெற்றுக்கொள்ளுங்கள், எவர்களுடைய பாவங்களை மன்னிக்கிறீர்களோ அவைகள் அவர்களுக்கு மன்னிக்கப்படும், எவர் களுடைய பாவங்களை மன்னியாதிருக்கிறீர்களோ அவைகள் அவர் களுக்கு மன்னிக்கப்படாதிருக்கும்” என்றார். பரிசுத்த ஆவி இன்னும் முழுமையாக வெளிப்படாமலிருந்தார். ஏனெனில், கிறிஸ்து இன்னும் மகிமைப்படாமலிருந்தார். கிறிஸ்து எழுந்தருளிச் செல்லும்வரை பரிசுத்த ஆவி ஏராளமாக அருளப்படாதிருந்தார். அதைப் பெற்றுக்கொள்ளாதவரை உலகத்திற்குச் சுவிசேஷத்தைப் பிரசங்கம் செய்யும் ஊழியத்தை சீடர்கள் நிறைவேற்றமுடியாதவர்களாக இருந்தனர். ஆனால் ஒரு சிறப்பான நோக்கத்திற்காக இப்பொழுது ஆவியானவர் கொடுக்கப்பட்டிருந்தார். சபை சம்பந்தமான அவர்களுடைய அதிகாரப்பூர்வமான கடமைகளை சீடர்கள் நிறைவேற்றிமுடிக்குமுன் கிறிஸ்து அவருடைய ஆவியை அவர்கள்மீது ஊதினார். ஒரு பரிசுத்தமான பொறுப்பை அவர் அவர்களிடத்தில் ஒப்படைத்து, பரிசுத்த ஆவியில்லாமல் இந்த பணியை நிறைவேற்றமுடியாது என்பதை அவர்களுக்கு உணர்த்த வாஞ்சையுள்ளவராக இருந்தார். (9)

ஆத்துமாவில் உள்ள ஆவிக்குரிய வாழ்க்கைக்கு பரிசுத்த ஆவியானவர் சுவாசமாக இருக்கிறார். ஆவி அருளப்படுதலென்பது கிறிஸ்துவின் ஜீவனைப் பகிர்ந்தளிப்பதாகும். அது அதைப் பெற்றுக் கொள்ளுபவரைக் கிறிஸ்துவின் சிறப்புக்களால் நிரப்புகிறது. இவ்விதமாக தேவனால் போதிக்கப்பட்டிருப்பவர்கள் மட்டுமே, ஆவியின் செயலை அகத்தில் உடையவர்கள் மட்டுமே, எவர்களுடைய வாழ்க்கையில்

கிறிஸ்துவின் வாழ்க்கை வெளிக்காட்டப்பட்டிருக்கிறதோ அவர்கள் மட்டுமே, சபையின் சார்பாக ஊழியஞ்செய்வதற்கு மனிதப் பிரதிநிதிகளாக நிற்கவேண்டியவர்களாக உள்ளனர். (10)

“எவர்களுடைய பாவங்களை மன்னிக்கிறீர்களோ” என்று கிறிஸ்து கூறினார். இங்கு கிறிஸ்து எந்த மனிதனுக்கும் பிறர்மீது நியாயத்தீர்ப்புக் கொடுக்கும் சுயாதீனத்தைக் கொடுக்கவில்லை. மலைப்பிரசங்கத்தில் அவர் இதைத் தடைசெய்கிறார். அது தேவனின் தனிப்பட்ட உரிமையாக இருக்கிறது. ஆனால் ஒழுங்குபடுத்தப்பட்டுள்ள சபையின்மீது, தனிப்பட்ட அங்கத்தினரைக்குறித்த பொறுப்பை அவர் வைக்கிறார். பாவத்தில் விழுபவர்களை எச்சரிக்கவும், அவர்களுக்கு உபதேசிக்கவும், கூடுமானால் திரும்ப எடுத்துக்கட்டவும்வேண்டிய கடமை சபைக்கு இருக்கிறது. “எல்லா நீடிய சாந்தத்தோடும் உபதேசத்தோடும் கண்டனம்பண்ணி, கடிந்துகொண்டு, புத்திசொல்லு” (2 தீமோத்தேயு 4:2). தவறுகளோடு உண்மையாக இடைபடுங்கள்; ஆபத்திலிருக்கும் ஒவ்வொரு ஆத்துமாவையும் எச்சரியுங்கள்; தங்களைத் தாங்களே வஞ்சித்துக்கொள்ள ஒருவரையும் விடாதிருங்கள்; பாவத்தை அதன் சரியான பெயரால் அழையுங்கள்; பொய் சொல்லுதல், ஓய்வுநாளை மீறுதல், திருடுதல், விக்கிரகத்தை வணங்குதல் மற்றும் ஒவ்வொரு தீமையையும்குறித்து தேவன் என்ன கூறியிருக்கிறார் என்பதை அறிவியுங்கள். “இப்படிப்பட்டவைகளைச் செய்கிறவர்கள் தேவனுடைய ராஜ்யத்தைச் சுதந்தரிப்பதில்லை” (கலாத்தியர் 5:21). அவர்கள் பாவத்தில் தொடருவார்களானால் வேத வாக்கியத்திலிருந்து நீங்கள் அறிவித்திருக்கும் நியாயத்தீர்ப்பு பரலோகத்திலிருந்து அவர்கள்மீது கூறப்படுகிறது. பாவம் செய்வதைத் தெரிந்துகொள்ளுவதில் அவர்கள் கிறிஸ்துவைச் சொந்தமற்றவர்களாக்குகின்றனர். சபை அவர்களுடைய செயல்களை அனுமதிப்பதில்லையென்பதைக் காட்டவேண்டும்! அல்லது சபை தானே தன்னுடைய கர்த்தரை கனவீனப்படுத்துகிறது என்பதுபோலாகும். தேவன் பாவத்தைப்பற்றி என்ன கூறுகின்றாரோ, அதை சபையும் கூறவேண்டும். தேவன் கட்டளையிடுகின்றவிதமாக சபை அதனுடன் இடைபடவேண்டும். சபையின் செயல் பரலோகத்தில் அங்கீகரிக்கப்பட்டிருக்கிறது. சபையின் அதிகாரத்தை அவமதிக்கும் நபர், கிறிஸ்துவின் அதிகாரத்தையே அவமதிக்கிறார். (11)

ஆனால் அந்தச் சித்திரத்திற்கு ஒளிமிக்க ஒரு பக்கம் இருக்கின்றது. “எவர்களுடைய பாவங்களை மன்னிக்கிறீர்களோ அவைகள் அவர்களுக்கு மன்னிக்கப்படும்.” இந்த எண்ணம் எல்லாவற்றையும்விட மிகவும் உயர்ந்ததாக வைக்கப்படட்டும். தவறுபவர்களுக்காகப் பணியாற்றுவதில்

ஒவ்வொரு கண்ணும் கிறிஸ்துவின் பக்கமாகத் திருப்பப்படுவதாக. கர்த்தரின் மேய்ச்சலின் மந்தையின்மீது மேய்ப்பர்கள் மென்மைமிக்க கரிசனையை உடையவர்களாக இருப்பார்களாக. இரட்சகரின் மன்னிக்கும் இரக்கத்தைப்பற்றி அவர்கள் தவறுசெய்பவர்களிடம் பேசுவார்களாக. மனந்திரும்பும்படியும் மன்னிக்கும் ஒருவரின்மீது விசுவாசம் வைக்கும்படியும் அவர்கள் பாவியை தைரியப்படுத்துவார்களாக. “நம்முடைய பாவங்களை நாம் அறிக்கையிட்டால், பாவங்களை நமக்கு மன்னித்து எல்லா அநியாயத்தையும் நீக்கி நம்மைச் சுத்திகரிப்பதற்கு அவர் உண்மையும் நீதியும் உள்ளவராயிருக்கிறார்” (1 யோாவன் 1:9) என்னும் தேவனுடைய வார்த்தையில் உள்ள அதிகாரத்தை அவர்கள் அறிவிப்பார்களாக. மனம் வருந்துகின்ற அனைவரும், “அவர் திரும்ப நம்மேல் இரங்குவார்; நம்முடைய அக்கிரமங்களை அடக்கி, நம்முடைய பாவங்களையெல்லாம் சமுத்திரத்தின் ஆழங்களில் போட்டுவிடுவார்” (மீகா 7:19) என்னும் வாக்குறுதியை உடையவர்களாக இருக்கின்றனர். (12)

பாவியின் மனந்திரும்புதல், சபையால் நன்றிமிக்க இருதயத்துடன் ஏற்றுக்கொள்ளப்படுவதாக. நம்பிக்கையின்மை என்னும் இருளிலிருந்து மனந்திரும்பும் ஒருவர், விசுவாசம் நீதி என்னும் ஒளிக்குள் நடத்தப்படுவாராக. நடுங்கும் அவருடைய கரம், இயேசுவின் அன்பின் கரத்துள் வைக்கப்படுவதாக. அப்படிப்படட ஒரு பாவமன்னிப்பு பரலோகத்தில் உறுதிப்படுத்தப்படுவதாக. (13)

இந்த அர்த்தத்தில் மட்டுந்தான் சபை பாவியை மன்னிக்கின்ற அதிகாரத்தை உடையதாக இருக்கிறது. கிறிஸ்துவின் புண்ணியங்களினால் மட்டுமே, பாவங்களுக்கான மன்னிப்பை அடையமுடியும். குற்றத்திலிருந்து ஆத்துமாவிற்கு விடுதலையை வழங்கக்கூடிய வல்லமை எந்த ஒரு மனிதனுக்கும் எந்த ஒரு அமைப்பிற்கும் கொடுக்கப்பட்டிருக்கவில்லை. கிறிஸ்துவின் நாமத்தினால் உண்டாகக்கூடிய பாவமன்னிப்பைப்பற்றி எல்லா ஜாதிகளுக்கு மத்தியிலும் பிரசங்கஞ்செய்யும்படி அவர் அவருடைய சீடர்களுக்குக் கட்டளையிட்டார். ஆனால் பாவத்தின் ஒரு கறையைக்கூட அவர்களாகவே நீக்கிவிட அவர்களுக்கு வல்லமை கொடுக்கப்பட்டிருக்கவில்லை. “நாம் இரட்சிக்கப்படும்படிக்கு வானத்தின் கீழெங்கும், மனுஷர்களுக்குள்ளே அவருடைய நாமமேயல்லாமல் வேறொரு நாமம் கட்டளையிடப்படவும் இல்லை” (அப்போஸ்தலர் 4:12). (14)

இயேசு முதலில் சீடர்களை மேலறையில் சந்தித்தபோது, தோமா அவர்களுடன் இல்லை. அவன் மற்றவர்களின் அறிக்கைகளைக் கேட்டிருந்ததுடன் இயேசு உயிர்த்தெழுந்துவிட்டார் என்பதற்கான ஏராளமான

சான்றுகளைப் பெற்றிருந்தான். ஆனால் துயரமும் நம்பிக்கையின்மையும் அவனுடைய இருதயத்தை நிரப்பியிருந்தது, உயிர்த்தெழுந்த இரட்சகரின் ஆச்சரியமான வெளிக்காட்டல்களைப்பற்றி சீடர்கள் கூறுவதை அவன் கேட்டபோது, அது அவனை மிகவும் ஆழமான நம்பிக்கையின்மையில் மூழ்கடிக்கமட்டுமே செய்தது. உண்மையாகவே இயேசு ஏற்கெனவே மரித்தோரிலிருந்து எழுந்திருந்தாரானால் பூமிக்குரிய ஒரு இராஜ்யத்தைப்பற்றிய வெளிப்படையான நம்பிக்கை அதற்குமேல் இருக்கமுடியாது. அவனைத்தவிர மற்ற எல்லா சீடர்களுக்கும் அவர் தம்மை வெளிப்படுத்தினார் என்பதை நினைத்தபோது, அது அவனுடைய மாயையை காயப்படுத்தியது. அந்தக் காரியத்தை விசுவாசிக்கக்கூடாதென்று அவன் தீர்மானஞ்செய்துகொண்டான். தனது துர்ப்பாக்கியமான நிலையைக்குறித்து ஒரு வாரம் முழுவதும் ஆழ்ந்து சிந்தித்துக்கொண்டிருந்தான். அது மற்ற சீடர்களுடைய நம்பிக்கை விசுவாசம் ஆகியவைகளுடன் ஒப்பிடப்பட்டபோது, மேலும் அதிகமாக இருண்டிருப்பதைக்போலக் காணப்பட்டது. (15)

இந்த நேரத்தில், “அவருடைய கைகளில் ஆணிகளினாலுண்டான காயத்தை நான் கண்டு, அந்தக் காயத்திலே என்விரலையிட்டு, என் கையை அவருடைய விலாவிலே போட்டாலொழிய விசுவாசிக்கமாட்டேன்” என்று அவன் மீண்டும் மீண்டும் அறிவித்திருந்தான். அவனுடைய சகோதரர்களின் கண்களுக்கூடாகப் பார்க்கமுடியாதவனாக அல்லது அவர்களுடைய சாட்சியைச் சார்ந்த விசுவாசத்தைச் செயல்படுத்த முடியாதவனாக அவன் இருந்தான். அவன் மிகுந்த ஆர்வத்துடன் அவனுடைய கர்த்தரை நேசித்தும், பொறாமையும் நம்பிக்கையின்மையும் அவனுடைய மனதிலும் இருதயத்திலும் இடம்பிடித்துக்கொள்ள அனுமதித்திருந்தான். (16)

சீடர்களில் சிலர் இப்பொழுது பழக்கப்பட்டிருந்த அந்த மேலறையை அவர்களுடைய தற்காலிக வீடாக்கியிருந்து, தோமாவைத்தவிர மற்ற அனைவரும் அங்கு ஒன்றுகூடியிருந்தனர். ஒரு மாலை நேரத்தில் தோமா மற்றவர்களைச் சந்திக்கத் தீர்மானித்தான். அவனுடைய நம்பிக்கையின்மைக்கு நேர் எதிராக, அந்த நற்செய்தி உண்மையாக இருந்திருக்கலாம் என்று ஒரு மங்கலான நம்பிக்கையை கொண்டிருந்தான். சீடர்கள் அவர்களுடைய மாலை உணவை அருந்திக்கொண்டிருந்தபோது, தீர்க்கதரிசனங்களிலிருந்து கிறிஸ்து அவர்களுக்குக் கொடுத்திருந்த சான்றுகளைப்பற்றி பேசிக்கொண்டிருந்தனர். “கதவுகள் பூட்டப்பட்டிருந்தது. அப்பொழுது இயேசு வந்து நடுவே நின்று: உங்களுக்குச் சமாதானம் என்றார்.” (17)

அவர் தோமாவின் பக்கம் திரும்பி: “நீ உன் விரலை இங்கே நீட்டி, என் கைகளைப்பார், உன் கையை நீட்டி, என் விலாவிலேபோடு,

அவிசுவாசியாயிராமல் விசுவாசியாயிரு" என்றார். இந்த வார்த்தைகள் தோமாவின் எண்ணங்களுடனும் வார்த்தைகளுடனும் அவர் அறிமுகமானவராக இருக்கிறார் என்பதைக் காட்டின. சந்தேகப்பட்டுக்கொண்டிருந்த அந்த சீடன், அவனுடைய தோழர்களில் ஒருவனும் ஒருவார காலமாக இயேசுவைக் கண்டிருக்கவில்லையென்று அறிந்திருந்தான். அவனுடைய நம்பிக்கையின்மையைக்குறித்து அவர்கள் யாரும் கர்த்தரிடம் சொல்லியிருக்கமுடியாது. அவனுக்குமுன் இருந்த ஒருவரை, அவனுடைய கர்த்தர் என்று அவன் கண்டுகொண்டான். மேலும் அதிகமான சான்றுகளை அவன் விரும்பவில்லை. மகிழ்ச்சியினால் அவனுடைய இருதயம் துள்ள, அவன், என் ஆண்டவரே! என் தேவனே! என்று சத்தமிட்டுக்கொண்டு, அவருடைய பாதங்களில் விழுந்தான். (18)

இயேசு அவன் ஒப்புக்கொண்டதை ஏற்றுக்கொண்டு, "தோமாவே, நீ என்னைக்கண்டதினாலே விசுவாசித்தாய், காணாதிருந்தும் விசுவாசிக்கிறவர்கள் பாக்கியவான்கள்" என்று அவனுடைய நம்பிக்கையின்மையை மென்மையாகக் கடிந்துகொண்டார். தோமா அவனுடைய சகோதரர்களின் சாட்சியை நம்புவதற்கு விருப்பமுள்ளவனாக இருந்திருந்தால், தோமாவின் விசுவாசம், கிறிஸ்துவிற்கு அதிகமான சந்தோஷத்தைத் தந்திருக்கும். தோமாவின் உதாரணத்தை இப்பொழுது உலகம் பின்பற்றுவதாக இருந்தால், இரட்சிப்புக்கேதுவாக ஒருவரும் விசுவாசிக்கமாட்டார்கள். ஏனெனில் கிறிஸ்துவை ஏற்றுக்கொள்ளும் அனைவரும் மற்றவர்களுடைய சாட்சியின்மூலமாகவே அவரை ஏற்றுக்கொள்ளவேண்டியதிருக்கிறது. (19)

சந்தேகத்திற்கு இடங்கொடுக்கும் அநேகர், தோமாவிற்கு அவனது தோழர்களிடமிருந்து கிடைத்ததைப் போன்ற சான்று தங்களுக்கும் கிடைத்திருந்தால் தாங்களும் விசுவாசிக்கக்கூடுமென்று சாக்குப்போக்குகளைக் கூறுகிறார்கள். சான்றுமட்டுமின்றி மேலும் அதிகமானவைகளையும் பெற்றிருக்கிறார்கள் என்பதை அவர்கள் உணராதிருக்கிறார்கள். சந்தேகத்திற்கான காரணம் நீக்கப்படவேண்டும் என்று தோமாவைப்போலக் காத்திருக்கும் அநேகர் ஒருபோதும் அவர்களுடைய வாஞ்சையை உணர்ந்துகொள்ளமாட்டார்கள். அவர்கள் மெல்ல மெல்ல நம்பிக்கையின்மையில் உறுதியடைவார்கள். இருளான பகுதியைப் பார்ப்பதற்குத் தங்களை பயிற்றுவித்து, முறுமுறுத்து, குற்றங்கூறுபவர்கள், தாங்கள் என்ன செய்கிறோம் என்பதை அறியாதவர்களாக இருக்கின்றனர். அவர்கள் சந்தேகத்தின் விதையை விதைத்து, சந்தேகம் என்னும் ஒரு அறுவடையை அறுப்பார்கள். விசுவாசமும் நம்பிக்கையும் மிகவும் முக்கியமாக இருக்கவேண்டிய நேரத்தில், அநேகர் இவ்விதமாக

நம்புவதற்கும் விசுவாசிப்பதற்கும் தாங்கள் வல்லமையற்றவர்களாக இருப்பதைக் காண்பார்கள். (20)

தோமாவை இயேசு நடத்திய விதத்தில் அவருடைய அடியார்களுக்கு ஒரு பாடத்தைக் கொடுத்தார். விசுவாசத்தில் பலவீனமாயிருந்து தங்களுடைய சந்தேகங்களை வெளிப்படையாகத் தெரியும்படிச் செய்பவர்களை நாம் எவ்விதமாக நடத்தவேண்டுமென்பதை அவருடைய உதாரணம் காட்டுகிறது. இயேசு தோமாவை கடிந்து அவமானப்படுத்தவோ அல்லது அவனுடன் எதிர்வாதத்தில் பிரவேசிக்கவோ இல்லை. சந்தேகப்பட்டுக்கொண்டிருந்த ஒருவனுக்கு அவர் தம்மை வெளிப்படுத்தினார். தோமா அவனுடைய விசுவாசத்திற்கான நிபந்தனைகளைக் கூறியதில் மிகவும் நியாயமற்றிருந்தான். ஆனால் இயேசு தம்முடைய தாராளமான அன்பினாலும் பரிவினாலும் எல்லாத் தடைகளையும் வீழ்த்தினார். நம்பிக்கையின்மை அபூர்வமாகவே எதிர்வாதத்தினால் வெற்றிகொள்ளப்படுகிறது. அது தன்னைக் காத்துக் கொள்ளவே எழும்பி, புதிய ஆதரவையும் சாக்குப்போக்கையும் காணுகின்றது. ஆனால் இயேசு அவருடைய அன்பிலும் இரக்கத்திலும் சிலுவையில் அறையப்பட்ட இரட்சகராக வெளிப்படுத்தப்படுவாராக. அப்பொழுது ஒரு சமயத்தில் விருப்பமற்றிருந்த உதடுகளிலிருந்து என் ஆண்டவரே! என் தேவனே! என்னும் தோமாவின் ஒப்புக்கொள்ளுதல் கேட்கப்படும். (21)

★

# 85

# மீண்டும் ஒருமுறை கடலுக்கருகில்...!

**யோவான் 21:1–22**

**(The Desire of Ages, pp. 809–817)**

இயேசு அவருடைய சீடர்களைக் கலிலேயாவில் சந்திக்கும் ஏற்பாட்டைச் செய்திருந்ததினால் பஸ்கா பண்டிகை வாரத்தின் முடிவிற்குப்பின் விரைவில் அவர்கள் தங்களின் அடிகளை அந்த இடத்திற்கு நேராகத் திருப்பினார்கள். பண்டிகையின்போது அவர்கள் எருசலேமில் இல்லாமலிருந்தால், அது பாசமின்னை, மதப்புரட்டு என்னும் அர்த்தத்தை உண்டுபண்ணியிருந்திருக்கும். எனவே அவர்கள் அதன் முடிவுவரை அங்கேயே தங்கியிருந்தனர். ஆனால் அது முடிந்தபின் அவர்கள் இரட்சகரைச் சந்திப்பதற்காக அவர் கட்டளையிட்டிருந்தபடியே மகிழ்ச்சியுடன் வீட்டின் திசையை நோக்கித் திரும்பினார்கள். (1)

அந்தக் கூட்டத்தில் சீடர்களில் ஏழுபேர் இருந்தனர். அவர்கள் தாழ்மையான மீன்பிடிப்பவர்களின் உடையை அணிந்திருந்தனர். அவர்கள் உலகப்பிரகாரமான பொருட்களில் ஏழைகளாகவும், ஆனால் சத்தியம்பற்றின அறிவிலும் நடத்தையிலும் செல்வந்தர்களாகவும் இருந்திருந்தனர். அவர்கள் தீர்க்கதரிசிகளின் பள்ளிகளில் மாணவர்களாக இருந்திருக்கவில்லை. ஆனால் உலகம் இதுவரை ஒருபோதும் அறிந்திராக மாபெரும் ஆசிரியரால் மூன்று வருடங்கள் போதிக்கப்பட்டிருந்தனர். அவருடைய உபதேசத்தின்கீழ். அவர்கள் உயர்த்தப்பட்டவர்களாகவும் நுண்ணறிவுள்ளவர்களாகவும் தேர்ச்சியடைந்தவர்களுமாகி, மனிதர்கள் அவர்கள்மூலமாகச் சத்தியத்தைப்பற்றின அறிவை அடைந்துகொள்ளுதவற்கான முகவர்களாக இருந்தனர். (2)

கிறிஸ்துவின் ஊழியத்தின் அதிகமான நேரம் கலிலேயா கடலுக்கருகில் கழிந்திருந்தது. தொல்லை ஏற்பட சாத்தியமில்லாத இடத்தில் சீடர்கள் ஒன்றுகூடியபோது, இயேசுவையும் அவருடைய பலத்த செயல்

களையும் நினைவுபடுத்துபவைகளால் அவர்கள் சூழப்பட்டிருந்தனர். இந்தக் கடலின்மீது, அவர்களுடைய இருதயங்கள் பயத்தால் நிரப்பப்பட்டிருந்த நேரத்தில், பயங்கரமான புயல் அவர்களை அழிவிற்கு விரைவுபடுத்திக் கொண்டிருந்தபோது, அவர்களது மீட்பிற்காக இயேசு அலைகளின்மீது நடந்திருந்தார். அவருடைய வார்த்தையினால் அந்தப் புயல் அமைதிப் படுத்தப்பட்டிருந்தது. ஒரு சில அப்பத்துணிக்கைகளினாலும் மீன்களாலும் பதினாயிரத்துக்கும் அதிகமானவர்கள் போஷிக்கப்பட்டிருந்த கடற்கரை பார்வைக்குச் சமீபமாக இருந்தது. அநேக அற்புதங்களினிடமான கப்பர்நகூம், வெகு தொலைவில் இருக்கவில்லை. சீடர்கள் அந்தக் காட்சியின்மீது பார்வையைச் செலுத்தினபோது, அவர்களுடைய மனங்கள் இரட்சகரின் வார்த்தைகளினாலும் செயல்களினாலும் நிறைந்திருந்தன. (3)

அந்த மாலை நேரம், இன்பமானதாக இருந்தது. படகுகளின்மீதும் வலைகளின்மீதும் இன்னமும் தனது பழையப் பிரியத்தை வைத்திருந்த பேதுரு கடலில் சென்று தங்களுடைய வலைகளை வீசலாம் என்று முன்மொழிந்தான். இந்தத் திட்டத்தில் கலந்துகொள்ள அனைவரும் ஆயத்தமாக இருந்தனர். அவர்களுக்கு உணவும் உடையும் அவசியமாக இருந்தது. அதை அந்த இரவின் வெற்றிகரமான மீன்பிடித்தலின் விற்பனை ஈட்டித்தரும். எனவே அவர்கள், தங்களுடைய படகுகளில் சென்றனர். ஆனால் ஒன்றும் பிடிக்கவில்லை. எந்தவிதமான வெற்றியுமின்றி அவர்கள் இரவுமுழுவதும் பாடுபட்டிருந்தனர். அவர்களுடைய களைப்புமிக்க நேரங்களில், தங்களுடன் இல்லாமலிருந்த அவர்களுடைய கர்த்தரைப்பற்றிப் பேசி, கடலருகில் அவர் செய்திருந்த ஊழியத்தில் நிகழ்ந்த அற்புத சம்பவங்களை மீண்டும் நினைவுபடுத்திக்கொண்டனர். அவர்களுடைய எதிர்காலத்தைப்பற்றி கேள்வி கேட்டு, தங்களுக்குமுன் இருந்த வாழ்வாதாரங்களைக்குறித்து அவர்கள் துயரமடைந்தார்கள். (4)

அந்த நேரம் முழுவதிலும், கரையின்மீதிருந்த தனியான கண்காணிப்பாளர் தம் கண்களால் அவர்களைப் பின்தொடர்ந்திருந்தார். அவரோ காணக்கூடாதவராயிருந்தார். கடைசியாக காலை உதயமானது. அந்தப் படகு கரைக்குச் சமீபமாக இருந்தது. கடற்கரையில் ஒருவர் நின்றுகொண்டிருப்பதையும், “பிள்ளைகளே, புசிக்கிறதற்கு ஏதாகிலும் உங்களிடத்தில் உண்டா” என்று பணிவாகக் கேட்பதையும் கண்டார்கள். அவர்கள்: “ஒன்றுமில்லை” என்று கூறினபோது, அவர்: “நீங்கள் படவுக்கு வலதுபுறமாக வலையைப் போடுங்கள், அப்பொழுது உங்களுக்கு அகப்படும்” என்றார். அவர்களும் அப்படியே போட்டு, திரளான மீன்கள் அகப்பட்டதினால் வலையை இழுக்கமாட்டாதிருந்தார்கள். (5)

அந்த அந்நியரை யோவான் இனங்கண்டு, பேதுருவை நோக்கி: "அவர் கர்த்தர்" என்று வியந்து குரலெழுப்பினான். பேதுரு மிகுந்த மனக்கிளர்ச்சியும் மகிழ்ச்சியுமடைந்து அவனுடைய ஆர்வத்தினால் தண்ணீரில் குதித்து, விரைவில் அவனுடைய ஆண்டவருக்கருகில் நின்றுகொண்டான். மற்ற சீடர்கள் மீன்களுள்ள வலையை இழுத்துக்கொண்டு, அவர்களுடைய படகில் வந்துசேர்ந்தனர். "அவர்கள் கரையிலே வந்திறங்கினபோது, கரிநெருப்புப் போட்டிருக்கிறதையும், அதின்மேல் மீன் வைத்திருக்கிறதையும், அப்பத்தையும் கண்டார்கள்." (6)

அவர்கள் மிக அதிகமான ஆச்சரியமடைந்திருந்ததால், அந்த நெருப்பும் உணவும் எங்கேயிருந்து வந்தது என்று கேட்கவில்லை. "நீங்கள் இப்பொழுது பிடித்த மீன்களில் சிலவற்றைக் கொண்டுவாருங்கள்" என்றார். பேதுரு தான் விட்டுவந்திருந்த வலையினிடத்திற்கு விரைந்து, அதைக் கரையில் இழுத்துக்கொண்டுவருவதற்கு அவனுடைய சகோதரர்களுக்கு உதவினான். அந்த வேலை செய்துமுடிக்கப்பட்டபின் ஆயத்தஞ்செய்யப்பட்ட உணவைப் புசிக்கும்படி இயேசு சீடர்களை அழைத்தார். அவர் உணவைப் பிட்டு, அவர்களுக்கிடையில் பங்கிட்டு, அந்த ஏழுபேர்களாலும் அறியப்பட்டு ஏற்றுக்கொள்ளப்பட்டார். மலைச்சாரலில் ஐயாயிரம்பேரைப் போஷித்த அற்புதம் இப்பொழுது அவர்களுடைய நினைவிற்குக் கொண்டுவரப்பட்டது. ஆனால் புரிந்துகொள்ளமுடியாத ஒரு பயபக்தி அவர்கள்மேல் தங்கியிருந்தது. அவர்கள் மௌனமாக உயிர்த்தெழுந்த இரட்சகரைப் பார்த்திருந்தனர். (7)

தம்மைப் பின்பற்றும்படி கடலுக்கருகிலிருந்து இயேசு அவர்களை அழைத்திருந்த காட்சியை அவர்கள் தெளிவாக நினைவிற்குக் கொண்டு வந்தனர். அவருடைய கட்டளையின்படியே அவர்கள் ஆழத்தில் வலையை வீசியதையும், அப்பொழுது பிடிக்கப்பட்ட மீன்கள் வலையைக்கூடக் கிழிக்குமளவிற்கு ஏராளமாக இருந்ததையும் அவர்கள் ஞாபகப்படுத்திக் கொண்டார்கள். அப்பொழுது இயேசு அவர்களை மீன்பிடிக்கும் படகுகளை விட்டுவரும்படி அழைத்ததையும், அவர்களை மனிதரைப் பிடிப்பவர்களாக்குவதாக வாக்குக்கொடுத்ததையும் அவர்கள் நினைத்தார்கள். இந்தக் காட்சியை அவர்களுடைய மனங்களுக்குள் கொண்டுவருவதற்காகவும், அதன் உணர்த்துதலை ஆழப்படுத்தவும், அவர் மறுபடியும் அந்த அற்புதத்தைச் செய்திருந்தார். அவருடைய அந்தச் செயல் சீடர்களின் ஊழியத்தைப் புதுப்பிக்கின்ற ஒரு செயலாக இருந்தது. அவர்கள் செய்யும்படி அவர்களிடம் ஒப்படைக்கப்பட்டிருந்த பணியின் கடமையை அவர்களுடைய ஆண்டவரின் மரணம் குறைக்கவில்லை என்பதை அது அவர்களுக்கு

வெளிப்படுத்தியது. அவருடைய நேரடியான தோழமையையும், முந்தைய வேலையினால் அவர்களுடைய வாழ்க்கைக்கு கிடைத்திருந்ததையும் அவர்கள் இழக்கவேண்டியவர்களாக இருந்தபோதிலும், உயிர்த்தெழுந்துள்ள இரட்கசகர் இன்னும் அவர்கள்மீது கரிசனையுடையவராக இருக்கிறார். அவருடைய வேலையை அவர்கள் செய்துகொண்டிருந்தபோது, அவர்களுடைய தேவைகளுக்கான ஏற்பாடுகளை அவர் செய்திருந்தார். படகின் வலது பக்கத்தில் வலையை வீசும்படிக் கட்டளையிட்டதில் இயேசு ஒரு நோக்கத்தைக் கொண்டிருந்தார். கடற்கரையின் அந்தப் பக்கத்தில் அவர் நின்றிருந்தார். அது விசுவாசத்தின்பக்கமாக இருந்தது. அவருடனுள்ள பிணைப்புடன் அவர்கள் வேலைசெய்திருந்தால் அவர்களுடைய மனித முயற்சியுடன் அவருடைய தெய்வீக வல்லமை ஒன்றுசேரும்போது, அவர்களால் வெற்றியடைவதிலிருந்து தவறமுடியாது. (8)

பேதுருவுடன் சம்பந்தப்பட்ட குறிப்பான மற்றொரு பாடத்தைக் கிறிஸ்து கொடுக்கவேண்டியவராக இருந்தார். பேதுரு வெளிப்படையாக அறிவித்திருந்த அவனது முந்தைய உத்தம விசுவாசத்துடன் ஒப்பிட்டபோது, அவன் கர்த்தரை மறுதலித்திருந்தது வெட்கத்திற்குரிய செயலாக இருந்தது. அவன் கிறிஸ்துவைக் கனவீனப்படுத்தியிருந்து, அவனுடைய சகோதரர்களுக்கு நடுவில் நம்பிக்கையின்மைக்கு ஆளாகியிருந்தான். அவனை அவனுடைய முந்தின அந்தஸ்தில் அனுமதிக்கக்கூடாதென்று அவர்கள் நினைத்தார்கள். பேதுருவும் தனது நம்பிக்கையை இழந்துவிட்டதை தானாகவே உணர்ந்தான். மறுபடியும் அப்போஸ்தலப் பணியைச் செய்வதற்கு அவன் அழைக்கப்படுவதற்குமுன், அவர்களனைவருக்கும்முன்னால் அவனது மனந்திரும்புதலிற்கான சான்றைக் கொடுக்கவேண்டும். அது இல்லாதபோது, அவனுடைய பாவம், அதற்காக அவன் மனம்வருந்தியிருந்தபோதும், கிறிஸ்துவின் ஊழியக்காரன் என்னும் செல்வாக்கை அழித்துவிட்டிருக்கும். தனது சகோதரர்களின் நம்பிக்கையை அவன் மீண்டும் அடைந்துகொள்ளவும், சுவிசேஷத்தின்மீது அவன் கொண்டுவந்திருந்த நிந்தையை முடிந்தவரை நீக்கவும், இரட்சகர் ஒரு வாய்ப்பினை அவனுக்குக் கொடுத்தார். (9)

கிறிஸ்துவின் அடியார்கள் அனைவருக்காகவும் இங்கு ஒரு பாடம் கொடுக்கப்பட்டிருக்கிறது. சுவிசேஷம் தீமையுடன் எந்தவிதமான சமரசமும் செய்வதில்லை. அதனால் பாவத்தை மன்னிக்கமுடியாது. இரகசியமான பாவங்கள் தேவனுக்கு முன்பாக இரகசியமாக அறிக்கை செய்யப்பட வேண்டும். ஆனால் வெளியரங்கமான பாவத்திற்காக வெளியரங்கமான பாவ அறிக்கை செய்யவேண்டியது அவசியமாகிறது. அந்த சீடனுடைய பாவத்தின் நிந்தனை கிறிஸ்துவின்மீது வீசப்பட்டிருக்கிறது. அது சாத்தானை

வெற்றியடையவும், அலைபாயும் ஆத்துமாக்களை தடுமாறவும் வைக்கிறது. மனந்திரும்பினதற்கான சான்றைக் கொடுப்பதினால், அந்த சீடன் அவனுடைய வல்லமைக்குள் இருக்கும் அனைத்தையும் செய்து, இந்த நிந்தையை நீக்கவேண்டும். (10)

கிறிஸ்துவும் சீடர்களும் கடலுக்கருகில் ஒன்றாக உணவருந்திக் கொண்டிருந்தபோது, இரட்சகர் பேதுருவிடம் அவனுடைய சகோதரர்களைக் குறிப்பிட்டு: "யோனாவின் குமாரனாகிய சீமோனே, இவர்களிலும் அதிகமாய் நீ என்னிடத்தில் அன்பாயிருக்கிறாயா" என்று கேட்டார். "உமதுநிமித்தம் எல்லாரும் இடறலடைந்தாலும், நான் ஒருக்காலும் இடறலடையேன்" (மத்தேயு 26:33) என்று பேதுரு ஒருசமயத்தில் அறிவித்திருந்தான். ஆனால் இப்பொழுது அவன், அவன்மீது ஒரு உண்மையான மதிப்பீட்டை வைத்தான். "ஆம் ஆண்டவரே, உம்மை நேசிக்கிறேன் என்பதை நீர் அறிவீர்" என்று கூறினான். அவனுடைய அன்பு, அவனுடைய சகோதரர் களுடைய அன்பைவிடப் பெரியது என்னும் உணர்ச்சித்துடிப்புள்ள வாக்குறுதியாக இருக்கவில்லை. அவனுடைய பக்தியைப்பற்றிய சொந்த அபிப்பிராயத்தை அவன் வெளிக்காட்டவில்லை. இருதயத்தின் உள்ளான நோக்கங்களனைத்தையும் வாசிக்கக்கூடிய ஒருவரிடம் அவனுடைய உண்மையான தன்மையைப்பற்றி நியாயம் தீர்க்கும்படி அவன்: "உம்மை நேசிக்கிறேன் என்பதை நீர் அறிவீர்" என்று முறையீடு செய்தான். இயேசு அவனிடம்: "என் ஆட்டுக்குட்டிகளை மேய்ப்பாயாக" என்று கட்டளையிட்டார். (11)

இயேசு மறுபடியும் அந்தப் பரீட்சையை பேதுருவின்மீது வைத்து, "யோனாவின் குமாரனாகிய சீமோனே, நீ என்னிடத்தில் அன்பாயிருக்கிறாயா" என்று முந்தின வார்த்தைகளையே மீண்டும் கேட்டார். இந்த முறை அவனுடைய சகோதரர்களைவிட அவரை அவன் அதிகமாக நேசிக்கிறானா என்று அவர் கேட்கவில்லை. இரண்டாவது பதில் முதலாவதைப்போலவே அகந்தைமிக்க வாக்குறுதி இல்லாததாக இருந்தது. "ஆம் ஆண்டவரே, உம்மை நேசிக்கிறேன் என்பதை நீர் அறிவீர்" என்றான். இயேசு அவனிடம்: "என் ஆடுகளை மேய்ப்பாயாக" என்றார். மறுபடியும் ஒரு முறை இரட்சகர் அவனைச் சோதிக்கும் கேள்வியைக் கேட்டார். "யோனாவின் குமாரனாகிய சீமோனே, நீ என்னை நேசிக்கிறாயா" என்றார். இயேசு பேதுருவின் அன்பைச் சந்தேகிக்கிறார் என்று அவன் நினைத்து துக்கமடைந்தான். கர்த்தர் அவன்மீது நம்பிக்கையில்லாதவராக இருப்பதற்குக் காரணம் இருக்கிறது என்பதை அவன் அறிந்திருந்து, வேதனைமிக்க ஒரு இருதயத்துடன்: "ஆண்டவரே, நீர் எல்லாவற்றையும் அறிந்திருக்கிறீர், நான் உம்மை நேசிக்கிறேன்

என்பதையும் நீர் அறிவீர்" என்று பதில் கூறினான். இயேசு: "என் ஆடுகளை மேய்ப்பாயாக" என்று அவனிடம் கூறினார். (12)

பேதுரு மூன்றுமுறை கர்த்தரை வெளிப்படையாக மறுதலித்திருந்தான். எனவே, கூர்மையான முள்போன்ற அம்பை அவனுடைய காயப்பட்ட இருதயத்தில் செலுத்தி, அவனுடைய அன்பையும் உத்தம விசுவாசத்தையும்பற்றின நிச்சயத்தை இயேசு அவனிடத்திலிருந்து பெற்றார். பேதுருவினுடைய மனந்திரும்புதலின் ஆழத்தை கூடியிருந்த சீடர்களுக்குமுன்பாக வெளிப்படுத்தி, ஒருசமயத்தில் பெருமைபாராட்டிக்கொண்டிருந்த சீடன் தன்னை எவ்விதமாக முற்றிலும் தாழ்த்தினான் என்பதைக் காட்டினார். (13)

இயல்பாகவே பேதுரு முன்நிற்பவனாகவும் உணர்ச்சித் துடிப்புள்ளவனாகவும் இருந்தான். அவனைக் கவிழ்ப்பதற்கு இந்த குணங்களை சாத்தான் அனுகூலமாக எடுத்துக்கொண்டான். பேதுருவின் விழுகைக்குச் சற்றுமுன்பாக இயேசு அவனிடம்: "சீமோனே, சீமோனே, இதோ, கோதுமையைச் சுளகினால் புடைக்கிறதுபோலச் சாத்தான் உங்களைப் புடைக்கிறதற்கு உத்தரவு கேட்டுக்கொண்டான். நானோ உன் விசுவாசம் ஒழிந்து போகாதபடிக்கு உனக்காக வேண்டிக்கொண்டேன்; நீ குணப்பட்டபின்பு உன் சகோதரரை ஸ்திரப்படுத்து" (லூக்கா 22:31,32) என்று கூறியிருந்தார். அந்த நேரம் இப்பொழுது வந்திருந்தது, பேதுருவில் உண்டான மாற்றம் காணக்கூடியதாக இருந்தது. மிகவும் நெருக்கமாகப் பரீட்சிக்கின்ற கர்த்தரின் கேள்வி, ஒரு துடுக்குத்தனமான—மட்டற்ற தன்னம்பிக்கையை உடைய பதிலை அழைத்திருக்கவில்லை. அவனுடைய தாழ்மை மனந்திரும்புதல் ஆகியவைகளின் காரணமாகப் பேதுரு மந்தைக்கு மேய்ப்பனாக இருப்பதற்கு இதற்குமுன் ஒருபோதும் இல்லாதவிதத்தில் நன்றாக ஆயத்தமானவனாக இருந்தான். (14)

பேதுருவை ஊழியத்திற்கு மறுபடியும் சேர்த்துக்கொண்டபின் கிறிஸ்து அவனிடத்தில் முதலில் ஒப்படைத்த பணி, ஆடுகளை மேய்ப்பதாக இருந்தது. இது பேதுருவிற்கு அனுபவமில்லாத ஒரு வேலையாக இருந்தது. அதற்கு பெரிய கரிசனையும் மென்மையும் அதிகமான பொறுமையும் விடாமுயற்சியும் தேவைப்பட்டது. விசுவாசத்தில் இளையவர்களாக இருப்பவர்களுக்கு ஊழியஞ்செய்யவும், அறியாமை உள்ளவர்களுக்குப் போதனை செய்யவும், கிறிஸ்துவின் சேவையில் பயன்படுவதற்கென்று வேதவாக்கியங்களை அவர்களுக்குத் திறக்கவும் கற்பிக்கவும் அது அவனை அழைத்தது. இதுவரை பேதுரு அதைச் செய்வதற்குத் தகுதியாக்கப்பட்டவனாகவோ அல்லது அதன் முக்கியத்துவத்தைப் புரிந்துகொள்ளக்கூடியவனாகவோ கூட இருக்கவில்லை. ஆனால் செய்யும்படி இப்பொழுது இயேசு அவனை

அழைத்திருந்த பணி அதுவாக இருந்தது. அவனுடைய பாடுகளின் சொந்த அனுபவமும் மனந்திரும்புதலும் இந்த வேலைக்கென்று அவனை ஆயத்தஞ்செய்திருந்தது. (15)

பேதுரு, அவனுடைய விழுகைக்குமுன் உணர்ச்சிகளின் இயக்கதினால் எப்பொழுதும் அவசரப்பட்டு பேசுபவனாக இருந்தான். மற்றவர்களைச் சீர்திருத்துவதற்கு அவன் எப்பொழுதும் ஆயத்தமானவனாகவும், தன்னைப் பற்றித் தெளிவாகப் புரிந்துகொள்ளுவதற்குமுன்பே அல்லது என்ன சொல்லவேண்டும் என்பதைப் புரிந்துகொள்ளுவதற்குமுன்பே, அவனுடைய எண்ணத்தை வெளிக்காட்டுவதற்கு ஆயத்தமாகவும் இருந்திருந்தான். ஆனால் மனமாற்றமடைந்திருந்த பேதுரு மிகவும் வேறுபட்டவனாக இருந்தான். அவனுடைய முந்தைய ஆர்வத்தை அவன் கட்டுப்படுத்தியிருந்தான். கிறிஸ்துவின் கிருபை அவனுடைய ஆர்வத்தை ஒழுங்குபடுத்தியிருந்தது. அதற்குப்பின் கட்டுக்கடங்காத தன்மை, சுயநம்பிக்கை, தன்னை உயர்த்துதல், ஆகிய தன்மைகள் இல்லாதவனாகி, அமைதியும், தன்னடக்கமும், கற்பிக்கப்படக்கூடிய தன்மையும் உள்ளவனானான். அப்பொழுது அவன் ஆட்டுக்குட்டிகளையும் அதைப்போலவே கிறிஸ்துவின் மந்தையையும் மேய்க்கக்கூடியவனானான். (16)

இரட்சகர் பேதுருவுடன் இடைப்பட்டவிதம் அவனுக்கும் அவனுடைய சகோதரர்களுக்கும் ஒரு பாடத்தை வைத்திருந்தது. மீறுதல் செய்பவர்களைப் பொறுமையுடனும், அனுதாபத்துடனும், மன்னிக்கும் அன்புடனும் சந்திக்க வேண்டும் என்று அது அவர்களுக்குப் போதித்தது. பேதுரு அவனுடைய கர்த்தரை மறுதலித்திருந்தபோதிலும், அவன்மீது இயேசு கொண்டிருந்த அன்பில் ஒரு தடுமாற்றமும் உண்டாயிருக்கவில்லை. அதைப்போலவே துணை மேய்ப்பனாக உள்ளவனும், அவனுடைய கவனத்திற்கு ஒப்படைக்கப்பட்டுள்ள ஆடுகளின்மீதும் ஆட்டுக்குட்டிகளின்மீதும் அன்பைக் காட்டுபவனாக இருக்கவேண்டும். அவனுடைய சொந்த பலவீனத்தையும் தவறையும் அவன் நினைவில்கொண்டு, கிறிஸ்து அவனிடத்தில் இடைபட்ட அதேவிதமாகப் பேதுரு மந்தையுடன் இடைபடவேண்டியவனாக இருந்தான். (17)

கிறிஸ்து பேதுருவிடம் கேட்ட கேள்வி, முக்கியத்துவம் வாய்ந்ததாக இருந்தது. சீடத்துவத்திற்கும் ஊழியத்திற்குமான ஒரே ஒரு நிபந்தனையை அவர் வைத்தார். “நீ என்னை நேசிக்கிறாயா?” என்று அவர் கேட்டார். இது மிகவும் முக்கியமான தகுதியாக இருக்கிறது. மற்றெல்லாவற்றையும் உடையவனாகப் பேதுரு இருந்திருந்தபோதிலும், கிறிஸ்துவின் அன்பு இல்லாமல் அவனால் கர்த்தருடைய மந்தைக்கு விசுவாசமுள்ள மேய்ப்பனாக

இருக்கமுடியாது. அந்த நல்ல பணிக்கு, அறிவு, அனுதாபம், பேச்சுத்திறன், நன்றியுடமை, பேரார்வம் ஆகிய அனைத்தும் உதவிகளாக இருக்கின்றன. ஆனால் இருதயத்தில் இயேசுவின் அன்பு இல்லாதபோது, கிறிஸ்தவ ஊழியக்காரனின் பணிகள் யாவும் ஒரு தோல்வியாகவே இருக்கிறது. (18)

பேதுருவிடம்மட்டுமே தொடர்புகொண்டு கூறவேண்டியதான ஏதோ ஒன்ற இருந்ததினால் இயேசு பேதுருவுடன்மட்டும் தனியாக நடந்தார். இயேசு அவருடைய மரணத்திற்குமுன் பேதுருவிடம்: "நான் போகிற இடத்துக்கு இப்பொழுது நீ என் பின்னே வரக்கூடாது, பிற்பாடு என் பின்னே வருவாய்" (யோவான் 13:36) என்று கூறியிருந்தார். பேதுரு அதற்கு மறுமொழியாக: "ஆண்டவரே, நான் இப்பொழுது உமக்குப் பின்னே ஏன் வரக்கூடாது? உமக்காக என் ஜீவனையும் கொடுப்பேன்" (யோவான் 13:37) என்று சொல்லியிருந்தான். அவன் இதைக் கூறினபோது, கிறிஸ்துவின் பாதங்கள் எந்த அளவு உயரத்திற்கும் ஆழத்திற்கும் அவனை நடத்தும் என்பதை அவன் அறியாதிருந்தான். அந்தப் பரீட்சை வந்திருந்தபோது, பேதுரு தோற்றிருந்தான். ஆனால் கிறிஸ்துவின்மீதான அவனுடைய அன்பை மெய்ப்பிப்பதற்கு அவன் வாய்ப்பு கிடைக்கவேண்டும். அவனுடைய விசுவாசத்தின் கடைசிப் பரீட்சைக்காக அவன் பலப்படுத்தப்படுவதற்காக அவனுடைய எதிர்காலத்தை இரட்சகர் அவனுக்குமுன் திறந்தார். பயன்தரும் ஒரு வாழ்க்கை வாழ்ந்தபின், அவன் வயது முதிர்ந்து பலவீனப்பட்ட காலத்திலும் உண்மையாகவே அவனுடைய கர்த்தரைப் பின்பற்றுவான் என்று அவர் அவனிடம் கூறினார். "நீ இளவயதுள்ளவனாயிருந்தபோது உன்னை நீயே அரைகட்டிக்கொண்டு, உனக்கு இஷ்டமான இடங்களிலே நடந்து திரிந்தாய்; நீ முதிர்வயதுள்ளவனாகும்போது உன் கைகளை நீட்டுவாய்; வேறொருவன் உன் அரையைக் கட்டி, உனக்கு இஷ்டமில்லாத இடத்துக்கு உன்னைக் கொண்டுபோவான் என்று மெய்யாகவே மெய்யாகவே உனக்குச் சொல்லுகிறேன் என்றார். இன்னவிதமான மரணத்தினாலே அவன் தேவனை மகிமைப்படுத்தப்போகிறானென்பதைக் குறிக்கும்படியாக இப்படிச் சொன்னார்." (19)

இவ்விதமாக இயேசு, பேதுரு அடையப்போகும் மரணத்தை அவனுக்கு அறிவித்தார். சிலுவையின்மீது அவனுடைய கைகள் நீட்டப்படவிருப்பதையும் அவர் முன்னுரைத்தார். மறுபடியும் அவர் அவருடைய சீடனுக்கு "எனனைப் பின்பற்றிவா" என்று கட்டளையிட்டார். அந்த வெளிப்படுத்தலினால் பேதுருவின் இருதயம் சோர்ந்துவிடவில்லை. அவனுடைய கர்த்தருக்காக எந்தவிதமான மரணத்தையும் அனுபவிக்க அவன் விருப்பமுள்ளவனாக இருந்தான். (20)

இன்று அநேகர் கிறிஸ்துவை அறிந்திருக்கிறபடியே, இதுவரை பேதுரு அவரை மாம்சத்தின்படி அறிந்திருந்தான். ஆனால் இதற்குப்பின் அவன் இவ்விதமாக எல்லைக்குட்பட்டவனாக இருக்கக்கூடாது. அவருடைய மானிடத்தில் அவரை அறிந்திருந்ததைப்போல இனிமேல் அவரை அவன் அறியப்போவதில்லை. அவன் அவரை ஒரு மனிதராக, பரலோகம் அனுப்பியிருந்த ஒரு ஆசிரியராக நேசித்திருந்தான். இப்பொழுது அவரை தேவன் என்று அவன் நேசித்தான். கிறிஸ்து அவனுக்கு எல்லாவற்றிலும் எல்லாமுமாக இருக்கிறார் என்னும் பாடத்தைக் கற்றுக்கொண்டிருந்தான். இப்பொழுது தியாகஞ்செய்யும் அவனுடைய கர்த்தரின் ஊழியத்தில் பங்குபெற அவன் ஆயத்தமாயிருந்தான். கடைசியாக அவன் சிலுவையினிடத்திற்குக் கொண்டுவரப்பட்டபோது, அவனுடைய சொந்த வேண்டுகோளின்படி சிலுவையில் தலைகீழாக அறையப்பட்டான். அவனுடைய ஆண்டவருக்குச் செய்யப்பட்டதுபோல அவனுக்குச் செய்யப்படுவது, அவனது தகுதிக்கு அதிகமான பெரிய கனம் என்று அவன் நினைத்தான். (21)

“என்னைப் பின்பற்றிவா” என்னும் வாத்தைகள் பேதுருவிற்கு உபதேசம் நிரம்பினதாக இருந்தன. அவனுடைய மரணத்திற்காக மட்டுமின்றி, அவனுடைய வாழ்க்கையின் ஒவ்வொரு அடிக்காகவும் அந்தப் பாடம் கொடுக்கப்பட்டிருந்தது. இதுவரை பேதுரு சுதந்தரமாகத் தனிப்பட்டவிதமாகச் செயலாற்றும் விருப்பத்தை உடையவனாக இருந்தான். தேவனுடைய பணியைச் செய்வதற்கு தேவனுடைய திட்டத்தைப் பின்பற்றக் காத்திருப்பதற்குப்பதிலாக, அவன் அந்த வேலைக்காகத் திட்டமிட முயன்றிருந்தான். ஆனால் கர்த்தருக்கு முன்னால் விரைந்துசென்றதினால் அவனால் எதையும் ஆதாயமாக அடைந்துகொள்ள முடியவில்லை. “என்னைப் பின்பற்றிவா” என்று இயேசு அவனுக்குக் கட்டளையிட்டார். எனக்கு முன்னால் ஓடாதே என்றார். அப்பொழுது நீ, சாத்தானின் சேனையைத் தனியாகச் சந்திக்கமாட்டாய். உனக்கு முன்பாக என்னைச் செல்லவிடு. அப்பொழுது நீ சத்துருவினால் மேற்கொள்ளப்படமாட்டாய் என்றார். (22)

இயேசுவிற்குப்பின்னால் பேதுரு நடந்துசென்றபோது, யோவான் பின்தொடர்ந்துகொண்டிருந்ததை கண்டான். யோவானின் எதிர்காலம்பற்றி அறிந்துகொள்ளவேண்டும் என்ற ஒரு வாஞ்சையினால் “ஆண்டவரே, இவன் காரியம் என்ன” என்றான். எவைகளையெல்லாம் அறிவது பேதுருவுக்கு மிகவும் நல்லதாக இருக்குமோ அவைகளை அவனுடைய கர்த்தர் அவனுக்கு வெளிப்படுத்துவார் என்பதைப் பேதுரு ஆலோசித்திருக்கவேண்டும். மற்றவர்களுக்குக் கொடுக்கப்பட்டுள்ள கடமையைப்பற்றி வீணாகக் கவலைப்படாமல், கிறிஸ்துவைப் பின்பற்றுவது ஒவ்வொருவரின் கடமையாக

இருக்கிறது. "நான் வருமளவும் இவனிருக்க எனக்குச் சித்தமானால், உனக்கென்ன, நீ என்னைப் பின்பற்றிவா" என்று யோவானைப்பற்றிக் கூறினதில், கர்த்தருடைய இரண்டாம் வருகைமட்டும் அந்த சீடன் உயிர்வாழவேண்டும் என்ற வாக்குறுதியை இயேசு கொடுக்கவில்லை. அவர் சாதாரணமாக அவருடைய சொந்த மேலான வல்லமையை கணக்கிட்டு இப்படி இருக்கட்டும் என்று சித்தங்கொண்டாலும், அது எந்தவகையிலும் பேதுருவின் பணியைப் பாதிக்காது. யோவான் பேதுரு ஆகிய இருவரின் எதிர்காலமும் அவர்களுடைய கர்த்தரின் கரங்களில் இருந்தது. அவரைப் பின்பற்றுவதில்இருந்த கீழ்ப்படிதல் ஒவ்வொருவரிடத்திலும் இருக்கவேண்டிய கடமையாக இருந்தது. (23)

இன்று பேதுருவைப்போல எத்தனைபேர்கள் இருக்கின்றனர்? அவர்கள் மற்றவர்களுடைய காரியங்களில் ஆர்வமுள்ளவர்களாகவும், அவர்களுடைய கடமையைப்பற்றி அறிவதில் கவலையுள்ளவர்களாகவும் இருந்து, அதே நேரத்தில் தங்களுடைய சொந்தக் கடமையை அலட்சியஞ்செய்பவர்களாக உள்ளனர். கிறிஸ்துவைப் பார்த்து அவரைப் பின்பற்றுவது நமது கடமையாக இருக்கிறது. மற்றவர்களுடைய வாழ்க்கையில் உள்ள தவறுகளையும் அவர்களுடைய குணத்திலுள்ள குறைபாடுகளையும் நம்மால் பார்க்கமுடியும். மானுடம் பலவீனத்தினால் சூழப்பட்டிருக்கிறது. ஆனால் கிறிஸ்துவில் நம்மால் பூரணத்தைக் காணமுடியும். அவரைப் பார்ப்பதினால் நாம் மறுரூபமடையலாம். (24)

யோவான் மிகவும் வயதாகும்வரை வாழவேண்டியவனாக இருந்தான். அவன் எருசலேமின் அழிவையும் உலகத்தின் இறுதி அழிவிற்கு ஒரு அடையாளமாக இருந்த தேவாலயத்தின் அழிவையும் சாட்சியாகக் கண்டான். யோவான் அவனுடைய கடைசி நாட்களில் அவனுடைய கர்த்தரை மிகவும் நெருக்கமாகப் பின்பற்றினான். "பிரியமானவர்களே, ஒருவரிலொருவர் அன்பாயிருக்கக்கடவோம்;" "அன்பில் நிலைத்திருக்கிறவன் தேவனில் நிலைத்திருக்கிறான்" (1 யோவான் 4:7,16) என்பது சபைகளுக்கான அவனுடைய சாட்சியின் பாரமாக இருந்தது. (25)

பேதுரு அவனுடைய அப்போஸ்தல பதவிக்குத் திரும்ப எடுத்துக்கட்டப்பட்டான். ஆனால் கிறிஸ்துவிடமிருந்து அவன் பெற்றுக்கொண்ட கனமும் அதிகாரமும் அவனுடைய சகோதரர்களின்மீதான மேலாதிக்கத்தை அவனுக்குக் கொடுக்கவில்லை. "இவன் காரியம் என்ன" என்னும் பேதுருவின் கேள்விக்கு: "உனக்கென்ன, நீ என்னைப் பின்பற்றிவா" என்று கிறிஸ்து பதில் கூறினதில், இதை வெளிப்படையாக்கியிருந்தார். சபையின் தலைவனாகப் பேதுரு கனப்படுத்தப்படவில்லை. அவனது மருளவிழுகையை மன்னித்ததில்

கிறிஸ்து அவனுக்குக் காட்டியிருந்த ஆதரவுகளும், மந்தையைப் போஷிக்கிற பணியை அவனிடம் ஒப்புவித்ததும், கிறிஸ்துவைப் பின்பற்றுவதிலிருந்த பேதுருவின் சொந்த விசுவாசமும், அவன்மீது அவனுடைய சகோதரர்களின் நம்பிக்கையை வெற்றியாகப் பெற்றுத்தந்தன. சபையில் அவனுக்கு அதிகமான செல்வாக்கு இருந்தது. ஆனால் கலிலேயாக் கடலருகில் கிறிஸ்து அவனுக்குப் போதித்திருந்த பாடத்தை அவன் அவனுடைய வாழ்க்கை முழுவதிலும் சுமந்து சென்றிருந்தான். பரிசுத்த ஆவியினால் ஏவப்பட்டு அவன் சபைகளுக்கு எழுதினபோது: (26)

“உங்களிலுள்ள மூப்பருக்கு உடன் மூப்பனும், கிறிஸ்துவின் பாடுகளுக்குச் சாட்சியும், இனி வெளிப்படும் மகிமைக்குப் பங்காளியுமாயிருக்கிற நான் புத்திசொல்லுகிறதென்னவென்றால்: உங்களிடத்திலுள்ள தேவனுடைய மந்தையை நீங்கள் மேய்த்து, கட்டாயமாய் அல்ல, மனப்பூர்வமாயும், அவலட்சணமான ஆதாயத்திற்காக அல்ல, உற்சாக மனதோடும், சுதந்தரத்தை இறுமாப்பாய் ஆளுகிறவர்களாக அல்ல, மந்தைக்கு மாதிரிகளாகவும், கண்காணிப்புச் செய்யுங்கள். அப்படிச் செய்தால் பிரதான மேய்ப்பர் வெளிப்படும்போது மகிமையுள்ள வாடாத கிரீடத்தைப் பெறுவீர்கள்” (1 பேதுரு 5:1–4) என்று கூறினான். (27) ★

# 86

# சகல ஜனங்களுக்கும் உபதேசம்பண்ணுங்கள்!

**மத்தேயு 28:16–20**

**(The Desire of Ages, pp. 818–828)**

பரலோக சிங்காசனத்திலிருந்து ஒரு படி அருகில் நின்றுகொண்டு, கிறிஸ்து அவருடைய சீடர்களுக்கு: “வானத்திலும் பூமியிலும் சகல அதிகாரமும் எனக்குக் கொடுக்கப்பட்டிருக்கிறது.” “நீங்கள் உலகமெங்கும் போய், சர்வ சிருஷ்டிக்கும் சுவிசேஷத்தைப் பிரசங்கியுங்கள்” (மாற்கு 16:15) என்று கூறினார். சீடர்கள் அதன் முக்கியத்துவத்தைப் பற்றிக்கொள்ள வேண்டும் என்பதற்காக அந்த வார்த்தைகள் மறுபடியும் மறுபடியும் கூறப்பட்டன. பரலோகத்தின் ஒளி தெளிவாகவும் பலமிக்க ஒளிக்கதிர்களுடனும், பூமியின் குடிகள் உயர்வானவர்களானாலும், தாழ்வானவர்களானாலும், செல்வந்தர்களானாலும், ஏழைகளானாலும், அனைவரின்மீதும் பிரகாசிக்கவேண்டியதாக இருந்தது. உலகத்தை இரட்சிக்கும் பணியில் சீடர்கள் மீட்பருடன் சேர்ந்து ஊழியக்காரர்களாக இருந்தனர். (1)

கிறிஸ்து மேலறையில் பன்னிருவரையும் சந்தித்தபோது, அந்தக் கட்டளை அவர்களுக்குக் கொடுக்கப்பட்டிருந்தது. ஆனால் இப்பொழுது அது பெரும் எண்ணிக்கையில் உள்ளவர்களுக்குக் கொடுக்கப்படவேண்டியதாக இருந்தது. கலிலேயாவிலுள்ள ஒரு மலையின்மீது நடந்த கூட்டத்தில் எந்த விசுவாசிகளையெல்லாம் அழைக்கமுடிந்திருந்ததோ அவர்களனைவரும் ஒன்றுகூடியிருந்தனர். அந்தக் கூட்டத்தின் நேரத்தையும் இடத்தையும்பற்றிக் கிறிஸ்துதாமே தம்முடைய மரணத்திற்குமுன் ஏற்பாடு செய்திருந்தார். கல்லறைக்கருகிலிருந்து தூதன், அவர்களைக் கலிலேயாவில் சந்திப்பதாக அவர் கூறியிருந்த வாக்குத்தத்தத்தை அவர்களுக்கு நினைப்பூட்டினான். பஸ்கா பண்டிகையின் வாரத்தின்போது எருசலேமில் கூடியிருந்த விசுவாசிகளுக்கு இந்த வாக்குத்தத்தம் மீண்டும் கூறப்பட்டிருந்ததுடன் அவர்கள்மூலமாக தங்களுடைய ஆண்டவரின் மரணத்தில் தனிமையில்

துக்கங்கொண்டாடியிருந்த அநேகரையும் அது சென்றடைந்தது. அந்த சந்திப்பிற்காக அனைவரும் தீவிரமான ஆர்வத்துடன் எதிர்நோக்கியிருந்தனர். பொறாமைமிக்க யூதர்களின் சந்தேகத்தை எழுப்பிவிடாமலிருப்பதற்காக அந்தக் கூட்டம் நடைபெறவிருந்த இடத்திற்கு எல்லாத் திசைகளிலிருந்தும் வந்துகொண்டிருந்தவர்கள் சுற்றுப்பாதைகளின் வழியாக வந்தார்கள். கிறிஸ்துவைப்பற்றி அவர்களுக்குக் கிடைத்திருந்த செய்திகளை ஒன்றுசேர்த்து, அக்கறையுடன் பேசிக்கொண்டு, ஆச்சரியமிக்க இருதயங்களுடன் அவர்கள் வந்தனர். (2)

குறிப்பிட்டிருந்த நேரத்தில் அந்த மலைப்பகுதியில் ஏறத்தாழ ஐந்நூறு விசுவாசிகள் சிறு சிறு கூட்டங்களாகவும், கிறிஸ்து உயிர்த்தெழுந்ததிலிருந்து அவரைக் கண்டிருந்தவர்களிடமிருந்து எந்த அளவிற்கு அறிந்துகொள்ள முடியுமோ அந்த அளவிற்கு அறிந்துகொள்ளுவதற்கான அக்கறையுடனும் ஒன்றுசேர்ந்திருந்தனர். சீடர்கள் இயேசுவைப்பற்றிக் கண்டிருந்ததும் கேட்டிருந் ததுமான அனைத்தையும் ஒவ்வொரு குழுவிடத்திற்கும் கூறிக்கொண்டும், அவர்களிடம் அவர் செய்திருந்தவிதமாக வேதவாக்கியங்களிலிருந்து விளக்கங்கொடுத்துக்கொண்டும் இருந்தனர். தோமா அவனுடைய நம்பிக்கை யின்மையின் கதையை திரும்பவும் கூறி, அவனுடைய சந்தேகங்கள் எவ்விதம் முற்றிலுமாக நீக்கப்பட்டது என்பதையும் கூறினான். இயேசு திடீரென்று அவர்களுக்கிடையில் நின்றார். அவர் எவ்விடத்திலிருந்து எவ்விதமாக வந்தார் என்று ஒருவராலும் கூறமுடியவில்லை. அங்கிருந்தவர்களில் அநேகர் இதற்குமுன் ஒருபோதும் அவரைக் கண்டிருக்கவில்லை. ஆனால் அவருடைய கரங்களிலும் பாதங்களிலும் சிலுவையில் அறையப்பட்டதின் அடையாளங்களைக் கண்டார்கள். அவருடைய முகம் தேவனுடைய முகத்தைப்போலிருந்தது. அவரை அவர்கள் கண்டபோது, அவரைத் தொழுதுகொண்டார்கள். (3)

ஆனால் சிலர் சந்தேகப்பட்டார்கள். அது எப்பொழுதும் அப்படித்தான் இருக்கும். விசுவாசத்தைச் செயலாற்றுவதைக் கடினமானதாகக் காண்பவர்கள் இருக்கின்றார்கள். அவர்கள் தங்களை சந்தேகம்கொள்ளும் பக்கத்தில் தாங்களாகவே வைக்கின்றார்கள். அவர்கள் தங்களுடைய விசுவாசமின்மையினால் அதிகமாக இழக்கின்றார்கள். (4)

இயேசுவின் உயிர்த்தெழுலுக்குப்பின் அநேக விசுவாசிகளுடன் அவர் நடத்தியிருந்த ஒரே சந்திப்பாக இது இருந்தது. அவர் வந்து "வானத்திலும் பூமியிலும் சகல அதிகாரமும் எனக்குக் கொடுக்கப்பட்டிருக்கிறது" என்று கூறி அவர்களிடம் பேசினார். அவர் பேசினதற்கு முன்னதாக சீடர்கள் அவரைத் தொழுதிருந்தனர். ஆனால் சில நாட்களுக்குமுன் மரணத்தினால் மூடியிருந்த

உதடுகளிலிருந்து இப்பொழுது வெளிவந்த அவருடைய வார்த்தைகள் தனிச்சிறப்புமிக்க வல்லமையுடன் அவர்களைக் கிளர்ச்சியடையச்செய்தது. இப்பொழுது அவர், உயிர்த்தெழுந்த இரட்சகராக இருந்தார். நோயுற்றவர்களைச் சுகப்படுத்துவதிலும் சாத்தானின் ஏதுகரங்களைக் கட்டுப்படுத்துவதிலும் அவருடைய வல்லமையை அவர் செயல்படுத்தியிருந்ததை அவர்களில் அநேகர் கண்டிருந்தனர். எருசலேமில் அவருடைய இராஜ்யத்தை அமைக்கவும், எல்லா எதிர்ப்புகளையும் அடக்கவும், இயற்கையின் மூலக்கூறுகளின்மீதும் அவர் வல்லமைகொண்டிருந்தார் என்று அவர்கள் நம்பினர். மூர்க்கமான அலைகளை அவர் அமைதிப்படுத்தியிருந்தார். வெண்நுரைமிக்க அலைகளின்மீது அவர் நடந்திருந்தார். மரித்தோரை அவர் உயிரோடு எழுப்பியிருந்தார். எல்லா வல்லமையும் அவருக்குக் கொடுக்கப் பட்டிருக்கிறது என்று இப்பொழுது அவர் அறிவித்தார். அவருடைய வார்த்தைகள் அவைகளுக்குச் செவிமடுத்தவர்களுடைய மனங்களை பூமிக்கும் உலகப்பிரகாரமான காரியங்களுக்கும்மேலாக, பரலோகக் காரியங்களுக்கும் நித்தியமான காரியங்களுக்கும் கொண்டுசென்றது. அவருடைய மேன்மை, மகிமை ஆகியவைபற்றிய மிக உயர்வான எண்ணங்களுக்கு அவர்கள் உயர்த்தப்பட்டிருந்தனர். (5)

மலைப்பகுதியில் கிறிஸ்து பேசின வார்த்தைகள், மனிதனின் சார்பிலான அவருடைய தியாகபலி முழுமையானதாகவும் நிறைவானதாகவும் இருந்ததின் அறிவிப்பாக இருந்தன. பாவநிவாரணத்தின் நிபந்தனைகள் நிறைவேற்றப்பட்டிருந்தன. அவர் எந்த வேலையைச் செய்வதற்காக இந்த உலகத்திற்கு வந்திருந்தாரோ, அது நிறைவேற்றப்பட்டிருந்தது. தூதர்களாலும் துரைத்தனங்களாலும் வல்லமைகளாலும் கனப்படுத்தப்படுவதற்காக அவர் தேவ சிங்காசனத்திற்கு நேராகச் சென்றுகொண்டிருந்தார். அவர் தமது மத்தியஸ்தப் பணியில் பிரவேசித்திருந்தார். எல்லையில்லாத அதிகாரம் பொருந்தியவராக “நீங்கள் உலகமெங்கும் போய், சர்வ சிருஷ்டிக்கும் சுவிசேஷத்தைப் பிரசங்கியுங்கள்” என்ற கட்டளையை சீடர்களுக்குக் கொடுத்தார். (6)

யூத மக்கள் பரிசுத்தமான சத்தியத்தின் கருவூலங்களாக இருக்கும்படி வைக்கப்பட்டிருந்தனர். ஆனால் பரிசேயத்துவம் அவர்களை தனிமைப்படுத்தி, மனித இனம் முழுவதிலும் மிக அதிகமான வெறுக்கத்தக்கவர்களாகவும் செய்திருந்தது. ஆசாரியர்கள் அதிபதிகள் ஆகியோரின் உடை, சடங்குகள், பாரம்பரியங்கள் ஆகிய ஒவ்வொன்றும், உலகத்திற்கு ஒளியாக இருப்பதற்கு அவர்களைத் தகுதியற்றவர்களாக்கியிருந்தது. யூதஜாதிமட்டுந்தான் உலகம் என்பதுபோல அவர்கள் தங்களையே பார்த்திருந்தனர். ஆனால் கிறிஸ்து

தமது சீடர்களை, தன்னில் எந்த ஜாதியும் நாடும் இல்லாத—எல்லா ஜனங்களும், எல்லா தேசத்தினரும், சகல வகுப்பினரும், சகல மனிதர்களும் செயல்படுத்துகிற ஒரு விசுவாசத்தையும் ஆராதனை முறையையும் அறிவிக்க ஏற்படுத்தினார். (7)

தமது சீடர்களைவிட்டுப் பிரியுமுன், கிறிஸ்து அவருடைய இராஜ்யத்தின் தன்மையை வெளிப்படையாக அறிவித்தார். அதைப்பற்றி முன்னதாக அவர்களிடம் கூறியிருந்ததை அவர்களுக்கு மீண்டும் நினைப்பூட்டினார். ஆவிக்குரிய ஒரு இராஜ்யத்தையே அன்றி, உலகப் பிரகாரமான ஒன்றை இந்த உலகத்தில் நிறுவுவது அவருடைய நோக்கம் அல்ல என்பதை அவர் அறிவித்தார். தாவீதின் சிங்காசனத்தில் பூமிக்குரிய அரசராக அவர் ஆளுகைசெய்யவேண்டியவரல்ல. மீண்டும் அவர்களுக்கு வேதவாக்கியங்களைத் திறந்து, அவர் எவைகளின்வழியாகக் கடந்துசென்றிருந்தாரோ, அவையெல்லாம் பரலோகத்தில், பிதாவிற்கும் அவருக்கும் இடையிலான ஆலோசனைச் சங்கத்தில் நியமிக்கப்பட்டிருந்தது என்பதைக் காட்டினார். பரிசுத்த ஆவியினால் ஏவப்பட்டிருந்த மனிதர்களினால் அவை அனைத்தும் முன்னுரைக்கப்பட்டிருந்தன. நான் மேசியாவல்ல என்று புறக்கணிக்கப்பட்ட காரியத்தைக்குறித்து, நான் உங்களுக்கு வெளிப்படுத்தின அனைத்தும் நிறைவேறியதை நீங்கள் காண்கிறீர்கள் என்று இயேசு கூறினார். நான் தாங்கிக்கொள்ளவேண்டியதாக இருந்த அவமானம், நான் மரிக்கவேண்டியதாயிருந்த மரணம் ஆகியவைபற்றி நான் கூறியிருந்த அனைத்தும் மெய்ப்பிக்கப்பட்டுள்ளது. மூன்றாம் நாளில் நான் மீண்டும் உயிர்த்தெழுந்தேன். மிகவும் கவனமாக வேதவாக்கியங்களை ஆராய்ந்துபாருங்கள். அப்பொழுது இந்தக் காரியங்கள் அனைத்திலும் என்னைப்பற்றின தீர்க்கதரிசனக்குறிப்புகள் நிறைவேறியிருக்கிறதை நீங்கள் காண்பீர்கள் என்றார். (8)

கிறிஸ்து அவருடைய சீடர்களின் கரங்களில் செய்யும்படி கொடுத்திருந்த பணியை எருசலேமில் ஆரம்பித்துத் தொடங்கிவைத்தார். மனித இனத்திற்காக ஆச்சரியமானவிதமாகத் தம்மை கீழாகத் தாழ்த்தி இறங்கிய அந்தக் காட்சியின் இடமாக எருசலேம் இருந்திருந்தது. அங்கு அவர் பாடுபட்டு, புறக்கணிக்கப்பட்டிருந்து, கண்டனஞ்செய்யப்பட்டிருந்தார். யூதேயா தேசம் அவருடைய பிறப்பிடமாக இருந்தது. அங்கு மானுடத்தை ஆடையாக அணிந்துகொண்டு மனிதர்களுடன் அவர் நடந்திருந்தார். இயேசு அவர்களுக்கு நடுவிலிருந்தபோது, பரலோகம் எவ்விதமாக பூமிக்கு அருகில் வந்தது என்பதைச் சிலர் அறிந்திருந்தனர். சீடர்களின் பணி, எருசலேமில் ஆரம்பிக்கப்படவேண்டும். (9)

அங்கு கிறிஸ்து அனுபவித்திருந்த அனைத்து பாடுகளையும், அவர் அங்கு ஆற்றிய பாராட்டப்படாத உழைப்பையும் கருத்தில்கொண்டவர்களாக, பலன்தரும் ஒரு களத்திற்காக சீடர்கள் மன்றாடியிருந்திருக்கவேண்டும். ஆனால் அவர்கள் அப்படி மன்றாடவில்லை. எந்த ஒரு நிலத்தில் சத்தியத்தின் விதையை அவர் தூவியிருந்தாரோ, அது சீடர்களால் பண்படுத்தப்படவேண்டும். அப்போது அந்த விதை உயர்ந்தெழும்பி ஏராளமான அறுவடையைக் கொடுக்கும். சீடர்கள் அவர்களுடைய பணியில் யூதர்களின் பொறாமை, வெறுப்பு ஆகியவைகளால் உபத்திரவத்தை சந்திக்கவேண்டியவர்களாக இருப்பார்கள். ஆனால் அவர்களுடைய ஆண்டவரால் அது தாங்கிக்கொள்ளப்பட்டிருக்கிறது. எனவே அவர்கள் அதைவிட்டு ஓடிப்போகக் கூடாதவர்களாக இருந்தனர். முதலாவது இரக்கம் இரட்சகரைக் கொலைசெய்தவர்களுக்கு வழங்கப்படவேண்டும். (10)

அப்பொழுது எருசலேமில் இரகசியமாக இயேசுவை நம்பியிருந்த அநேகரும் ஆசாரியர்களாலும் அதிபதிகளாலும் வஞ்சிக்கப்பட்ட அநேகரும் இருந்திருந்தனர். சுவிசேஷம் அவர்களுக்கு முன்பாகவும் வைக்கப்படவேண்டியதாக இருந்தது. மனந்திரும்பும்படி அழைக்கப்பட வேண்டியவர்களாக அவர்கள் இருந்தனர். கிறிஸ்துவின் மூலமாக மட்டுமே பாவமன்னிப்பை அடைந்தகொள்ள முடியும் என்னும் ஆச்சரியமான சத்தியம் எளிதில் தெளிவுபடுத்தப்படவேண்டும். கடந்த சில வாரங்களில் உண்டான கிளர்ச்சியூட்டும் நிகழ்ச்சிகளால் எருசலேம் முழுவதும் கலங்கியிருந்தபோது, சுவிசேஷத்தைப் பிரசங்கிப்பது ஆழமான உணர்த்துதலை உண்டுபண்ணும். (11)

ஆனால் அந்த வேலை அங்கேயே நின்றுவிடக்கூடாததாக இருந்தது. அது பூமியின் கடையாந்தர எல்லைகளுக்கெல்லாம் விரிவடையவேண்டும். உலகத்தின் சார்பாக தற்தியாகம் செய்திருந்த எனது வாழ்க்கைக்கு நீங்கள் சாட்சிகளாக இருக்கிறீர்கள் என்று கிறிஸ்து சீடர்களுக்குக் கூறினார். இஸ்ரவேலருக்கான என்னுடைய உழைப்பை நீங்கள் சாட்சியாகக் கண்டிருக்கிறீர்கள். அவர்கள் ஜீவனை உடையவர்களாகும்படி என்னிடத்திற்கு வராமலிருந்தாலும், ஆசாரியர்களும் அதிபதிகளும் பட்டியலிட்டிருந்தபடி எனக்குச் செய்திருந்தபோதிலும், வேதவாக்கியங்கள் முன்னுரைத்திருக்கின்றபடி அவர்கள் என்னை புறக்கணித்திருந்தபோதிலும், தேவகுமாரனை ஏற்றுக்கொள்ளும்படி அவர்கள் இன்னும் ஒரு வாய்ப்பைப் பெறுவார்கள். தங்களுடைய பாவங்களை அறிக்கையிட்டுக்கொண்டு என்னிடத்திற்கு வருகிறவர்களை நான் தாராளமாக ஏற்றுக்கொள்ளுவதை நீங்கள் கண்டிருக்கிறீர்கள். “என்னிடத்தில் வருகிறவனை நான் புறம்பே

தள்ளுவதில்லை.” விருப்பமுள்ளவர்கள் அனைவரும் தேவனுடன் ஒப்புரவாகி, நித்தியஜீவனைப் பெற்றுக்கொள்ளலாம். இரக்கத்தின் இந்தத் தூதை என்னுடைய சீடர்களாயிருக்கும் உங்களிடம் நான் ஒப்படைக்கிறேன். அது முதலில் இஸ்ரவேலருக்கும், அதற்குப்பின் சகல ஜாதியினருக்கும், பாஷைக்காரருக்கும், ஜனங்களுக்கும் கொடுக்கப்படவேண்டும். அது யூதர்களுக்கும் புறஜாதியினருக்கும் கொடுக்கப்படவேண்டியதாக இருக்கிறது. விசுவாசிக்கும் அனைவரும் ஒரே சபைக்குள் சேர்த்துக்கொள்ளப்பட வேண்டியவர்களாக உள்ளனர். (12)

பரிசுத்த ஆவியின் அனுக்கிரகத்தின்மூலமாக ஒரு ஆச்சரியமான வல்லமையைச் சீடர்கள் பெற்றுக்கொள்ளவேண்டியவர்களாக இருந்தனர். அடையாளங்களினாலும் அற்புதங்களினாலும் அவர்களுடைய சாட்சி உறுதிப்படுத்தப்படவேண்டியதாக இருந்தது. அப்போஸ்தலர்களால் மட்டும் அற்புதங்கள் செய்யப்படாமல், அவர்களுடைய தூதைப் பெற்றுக்கொண்டவர் களாலும் செய்யப்படும். “என் நாமத்தினாலே பிசாசுகளைத் துரத்துவார்கள்; நவமான பாஷைகளைப் பேசுவார்கள்; சர்ப்பங்களை எடுப்பார்கள்; சாவுக்கேதுவான யாதொன்றைக் குடித்தாலும் அது அவர்களைச் சேதப்படுத்தாது; வியாதிஸ்தர்மேல் கைகளை வைப்பார்கள், அப்பொழுது அவர்கள் சொஸ்தமாவார்கள்”—மாற்கு 16:17,18. (13)

அந்தக் காலத்தில் விஷம்கொடுத்தல் அடிக்கடி நடத்தப்பட்டிருந்தது. பழி நாணா மனிதர்கள், அவர்களுடைய பேராவலின் பாதையில் நின்றிருந்தவர்களை இந்த வழிகளினால் நீக்கத் தயங்காமலிருந்தனர். இயேசுவின் சீடர்களின் ஜீவன் இவ்விதமான ஆபத்திற்குள்ளாக்கப்படும் என்பதை அவர் அறிந்திருந்தார். தேவனுடைய சாட்சிகளை மரணத்திற் குட்படுத்துவது அவருக்குச் செய்யும் தொண்டு என்று அநேகர் எண்ணியிருந்தனர். ஆகையால் அவர் இந்த ஆபத்திலிருந்து அவர்களுக்குப் பாதுகாப்பை வாக்குத்தத்தஞ்செய்திருந்தார். (14)

“சகல வியாதிகளையும் சகல நோய்களையும் நீக்கிச் சொஸ்த மாக்கினார்.” சுகப்படுத்த இயேசு எந்த வல்லமையைக் கொண்டிருந்தாரோ, அதேவல்லமையை சீடர்களும் பெற்றிருக்கவேண்டியவர்களாக இருந்தனர். அவருடைய நாமத்தில் உடலிலுள்ள நோய்களைச் சுகப்படுத்துவதினால், ஆத்துமாவைச் சுகப்படுத்துவதற்குள்ள வல்லமைக்கு அவர்கள் சாட்சி கொடுப்பார்கள். ஒரு புதிய ஈவு இப்பொழுது வாக்குபண்ணப்பட்டிருந்தது. மற்ற தேசத்தார்களுக்கிடையிலும் சீடர்கள் போதிக்கவேண்டியவர்களாக இருந்தனர். அதனால் பிறமொழிகளைப் பேசுகின்ற வல்லமையை அவர்கள் பெற்றுக்கொள்வார்கள். அப்போஸ்தலர்களும் அவர்களுடைய

கூட்டாளிகளும் எழுத்தறிவில்லாத மனிதர்களாக இருந்தனர். ஆயினும் பெந்தெகொஸ்தே நாளில் ஆவி ஊற்றப்பட்டதின்மூலமாக, அவர்களுடைய பேச்சு அவர்களுடைய சொந்த மொழியாக இருந்தாலும் அல்லது அந்நிய மொழியாயிருந்தாலும் வார்த்தையிலும் உச்சரிப்பிலும் தூய்மையாகவும் எளிமையாகவும் சரியானவிதமாகவும் அமைந்திருந்தது. (15)

இவ்விதமாக கிறிஸ்து அவருடைய சீடர்களுக்கு அவர்களுடைய ஊழியத்தைப்பற்றின கட்டளையைக் கொடுத்திருந்தார். அந்த வேலையை நடத்துவதற்கான ஏற்பாட்டைச் செய்து, அதன் வெற்றிக்கான பொறுப்பையும் தம்மீது ஏற்றுக்கொண்டிருந்தார். அவருடைய வார்த்தைக்கு அவர்கள் கீழ்ப்படிந்திருக்கும்வரை அவருடன் இணைந்து வேலைசெய்யும்வரை அவர்களால் தோல்வியடையமுடியாது. சகல ஜாதிகளிடத்திற்கும் செல்லுங்கள் என்று அவர் அவர்களுக்குக் கட்டளையிட்டார். மக்கள் குடியிருக்கும் உலகத்தின் மிகவும் தூரமான பகுதிக்கும் செல்லுங்கள் ஆனால் அங்கும் எனது பிரசன்னம் இருக்கும் என்பதை அறிந்துகொள்ளுங்கள். விசுவாசத்துடனும் நம்பிக்கையுடனும் பணியாற்றுங்கள். ஏனெனில் நான் உங்களைக் கைவிடுகின்ற நேரம் ஒருபோதும் வராது என்றார். (16)

சீடர்களுக்குக் கொடுக்கப்பட்ட இரட்சகரின் கட்டளை எல்லா விசுவாசிகளையும் உட்படுத்தியிருந்தது. அது காலத்தின் முடிவுவரை கிறிஸ்துவில் விசுவாசிகளாக உள்ள அனைவரையும் உட்படுத்துகிறது. ஆத்துமாக்களை இரட்சிக்கின்ற பணி, அபிஷேகம்பண்ணப்பட்ட ஊழியக்காரரைமட்டுமே சார்ந்தது என்று நினைப்பது சாவிற்கேதுவான ஒரு தவறாக இருக்கிறது. எவர்களுக்கு பரலோகத்தின் ஏவுதல் வந்திருக்கிறதோ, அவர்களனைவரும் சுவிசேஷத்தின் அறக்கட்டளையில் வைக்கப்பட்டிருக்கின்றனர். கிறிஸ்துவின் ஜீவனைப் பெறும் அனைவரும் தங்களுடைய உடன்மனிதர்களின் இரட்சிப்பிற்காகச் செயலாற்ற அபிஷேகம் பண்ணப்பட்டிருக்கின்றனர். இந்த வேலைக்காக சபை ஏற்படுத்தப்பட்டது. அதன் பரிசுத்தமான ஆணைகளைத் தங்கள்மீது எடுத்துக்கொள்ளும் அனைவரும், அதனால் கிறிஸ்துவின் உடன் ஊழியக்காரர்களாக இருப்பதற்கு உறுதிமொழி கொடுத்துள்ளனர். (17)

“ஆவியும் மணவாட்டியும் வா என்கிறார்கள்; கேட்கிறவனும் வா என்பானாக”—வெளிப்படுத்தல் 22:17. அதைக் கேட்கும் ஒவ்வொருவனும் அந்த அழைப்பை மீண்டும் கூறவேண்டும். வாழ்க்கையில் ஒருவனுக்குள்ள அழைப்பு எப்படிப்பட்டதாக இருந்தாலும் கிறிஸ்துவிற்காக ஆத்துமாக்களை வெல்லுவது அவனுடைய முதல் விருப்பமாக இருக்கவேண்டும். அவன் சபையாரிடத்தில் பேசமுடியாதவனாக இருக்கலாம். ஆனால்

தனிப்பட்டவர்களுக்காக வேலைசெய்யமுடியும். அவன் கர்த்தரிடத்திலிருந்து பெற்றுக்கொண்ட போதனையை அவர்களுக்குக் கொடுக்கலாம். ஊழியம் என்பது பிரசங்கஞ்செய்வதில்மட்டுமே அடங்கினதல்ல. நோயுற்றவர்களுக்கும் பாடுபடுபவர்களுக்கும் நிவாரணமளித்து, தேவையுள்ளவர்களுக்கு உதவிசெய்து, நம்பிக்கையற்றும் விசுவாசக்குறைவிலும் இருப்பவர்களுக்கு ஆறுதலான வார்த்தைகளைப் பேசுபவர்களும் ஊழியர்களாக இருக்கின்றனர். குற்ற உணர்வினால் பாரமடைந்த ஆத்துமாக்கள் அருகிலும் வெகுதொலைவிலும் உள்ளனர். மனித இனத்தைத் தரம்தாழ்த்துவது கடினமாக நிலைமையோ வேலைப்பளுவோ அல்லது வறுமையோ அல்ல, அது குற்றமும் தவறான செய்கையுமாக இருக்கிறது. அது இளைப்பாறுதல் இன்மையையும் அதிபதியையும் கொண்டுவருகிறது. பாவத்தால் நோயுற்றிருக்கும் ஆத்துமாக்களுக்கு ஊழியஞ்செய்யும் அவருடைய பணியாளர்களை உடையவராகக் கிறிஸ்து இருப்பார். (18)

சீடர்கள் எங்கே இருந்தார்களோ அங்கே அவர்களுடைய பணியை ஆரம்பிக்கவேண்டியவர்களாக இருந்தனர். மிகவும் கடினமானதும், பலன் கிடைக்கும் என்ற நம்பிக்கையில்லாத களமும், விட்டுவிடப்படமுடியாததாக இருந்தது. அப்படியே கிறிஸ்துவின் ஊழியக்காரர்களில் ஒவ்வொருவனும் அவன் எங்கே இருக்கின்றானோ அங்கு தனது ஊழியத்தை ஆரம்பிக்கவேண்டியவனாக இருக்கிறான். நமது சொந்தக் குடும்பத்திலும், ஜீவ அப்பமின்றி பட்டினியாயிருக்கிற அனுதாபமில்லாத பசியுள்ள ஆத்துமாக்கள் இருக்கலாம். கிறிஸ்துவிற்கென்று பயிற்றுவிக்கப்படவேண்டிய சிறுபிள்ளைகள் இருக்கலாம. நமது கதவுகளுக்கருகிலேயே அஞ்ஞானிகள் இருக்கின்றனர். மிகவும் அருகிலிருக்கக்கூடிய பணியை நாம் விசுவாசத்துடன் செய்வோமாக. அதற்குப்பின் தேவனுடைய கரம் பாதையில் நடத்துகின்றவரை எவ்வளவு தூரத்திற்கு முடியுமோ, அவ்வளவு தூரத்திற்கு நமது முயற்சிகள் விரிவடையட்டும். அநேகருடைய வேலை சூழ்நிலைகளினால் தடைபட்டிருப்பதுபோலக் காணப்படலாம், ஆனால் அவ்விதமாக எங்கெல்லாம் இருக்கிறதோ அங்கெல்லாம் விசுவாசத்துடனும் விழிப்புடனும் செயலாற்றினால், அது பூமியின் மிகவும் தூரமான பகுதிகள் வரை உணரப்படும். கிறிஸ்து பூமியில் மனித அவதாரத்தில் இருந்தபோது அவருடைய பணி ஒரு குறுகிய களத்திற்குள் மட்டும் சுருக்கமாக இருந்தது என்று காணப்பட்டிருந்தபோதிலும் எல்லா தேசங்களிலுமிருந்த திரளானவர்கள் அவருடைய தூதைக் கேட்டிருந்தனர். மிகப் பெரிய பலன்களை நிறைவேற்றுவதற்குத் தேவன் மிகவும் சாதாரணமான ஊடகங்களைப் பயன்படுத்துகிறார். ஒரு சக்கரத்திற்குள் இன்னொரு சக்கரம் இருந்து, அனைத்தும் இசைவாகச் செயலாற்றுவதைப்போல அவருடைய பணியின்

ஒவ்வொரு பகுதியும் அடுத்த ஒரு பகுதியைச் சார்ந்திருக்கவேண்டும் என்பது அவருடைய திட்டமாக இருக்கிறது. பரிசுத்த ஆவியினால் அசைக்கப்படும் மிகவும் தாழ்மையான ஊழியக்காரன் காணமுடியாத இசைக்கம்பிகளைத் தொடும்போது, அவைகளின் அதிர்வு பூமியின் முடிவுகள்வரை ஒலித்து, நித்தியகாலங்களுக்கூடாக இனிய இசையை உண்டுபண்ணும். (19)

எனவே உலகமெங்கும் புறப்பட்டுச் செல்லுங்கள் என்னும் கட்டளையைப்பற்றின பார்வை இழக்கப்பட்டுவிடக்கூடாததாக இருக்கிறது. “அப்பாலுள்ள பிரதேசங்களுக்கு” நேராக நமது கண்களை உயர்த்தும்படி நாம் அழைக்கப்பட்டிருக்கிறோம். கிறிஸ்து பிரிவினையாகிய நடுச்சுவரையும் பிரிவினையை உண்டுபண்ணும் தேசிய உணர்வுகளையும் கிழித்து, மனிதக்குடும்பம் முழுவதின்மேலுமுள்ள அன்பைப் போதிக்கிறார். அவர் மனிதர்களை அவர்களுடைய சுயநலத்திற்கேற்றவாறு இருக்கும் அந்தக் குறுகிய வட்டங்களிலிருந்து உயர்த்துகிறார். அவர் சகல பிரதேச எல்லைக் கோடுகளையும் சமுதாயத்தின் செயற்கையான வேற்றுமைகளையும் நீக்குகிறார். அவர் அயலகத்தார்களுக்கும் அந்நியர்களுக்கும் நண்பர்களுக்கும் விரோதிகளுக்குமிடையில் எந்த வேறுபாடுகளையும் உருவாக்குகிறதில்லை. தேவையிலிருக்கும் ஆத்துமாவை நமது சகோதரராகவும், உலகத்தை நமது பணிக்களமாகவும் நோக்கிப்பார்க்கும்படி நமக்குப் போதிக்கிறார். (20)

செல்லுங்கள் ... சகல ஜாதிகளுக்கும் உபதேசம்செய்யுங்கள் என்று இரட்சகர் கூறினபோது, “விசுவாசிக்கிறவர்களால் நடக்கும் அடையாளங்களாவன: என் நாமத்தினாலே பிசாசுகளைத் துரத்துவார்கள்; நவமான பாஷைகளைப் பேசுவார்கள்; சர்ப்பங்களை எடுப்பார்கள்; சாவுக் கேதுவான யாதொன்றைக் குடித்தாலும் அது அவர்களைச் சேதப்படுத்தாது; வியாதிஸ்தர்மேல் கைகளை வைப்பார்கள், அப்பொழுது அவர்கள் சொஸ்தமாவார்கள்” என்றுங்கூடக் கூறினார். அந்த வாக்குத்தத்தம் அந்தக் கட்டளையைப்போலவே வெகுதூரம் சென்றடையக்கூடியதாக இருக்கிறது. எல்லா வரங்களும் ஒவ்வொரு விசுவாசிக்கும் கொடுக்கப்படும் என்பதில்லை. “இவைகளையெல்லாம் அந்த ஒரே அவியானவர் நடப்பித்து, தமது சித்தத்தின்படியே அவனவனுக்குப் பகிர்ந்துகொடுக்கிறார்”–1 கொரிந்தியர் 12:11. ஆனால் ஆவியின் வரங்கள் ஒவ்வொரு விசுவாசிக்கும் கர்த்தருடைய ஊழியத்தில் அவனுடைய தேவைக்குத்தக்கவிதமாக வாக்குப்பண்ணப்பட்டிருக்கிறது. அது அப்போஸ்தலர்களுடைய நாட்களில் இருந்ததைப்போல இப்பொழுதும் அதேவிதமான வலிமையையும் நம்பிக்கைக்குரிய மதிப்பையும் உடையதாக உள்ளது. “விசுவாசிக்கிறவர் களால் நடக்கும் அடையாளங்களாவன” இது தேவனுடைய பிள்ளை

களுக்கான சிறப்புரிமையாக இருக்கிறது. விசுவாசத்தின் ஈவாக இவைகளையெல்லாம் உடையவர்களாவது சாத்தியம் என்று விசுவாசத்தைப் பற்றிக்கொள்ளவேண்டும். (21)

“வியாதிஸ்தர்மேல் கைகளை வைப்பார்கள், அப்பொழுது அவர்கள் சொஸ்தமாவார்கள்” இந்த உலகம் நோயாளிகளும் அருவருக்கத்தக்க வியாதிகளும் நிறைந்த ஒருமிகப் பெரிய வீடாக இருக்கிறது. ஆனால் நோயுற்றவர்களை சுகப்படுத்தவும், சாத்தானின் அடிமைகளாக இருப்பவர்களுக்கு விடுதலையைக் கூறவும் கிறிஸ்து வந்தார். அவர்தாமே தமக்குள் நலமும் பலமுமாக இருந்தார். அவர் தமது ஜீவனை நோயுற்றிருந்தவர்களுக்கும் துன்பப்பட்டிருந்தவர்களுக்கும் பிசாசு பிடித்திருந்தவர்களுக்கும் பகிர்ந்தளித்தார். அவருடைய சுகப்படுத்தும் வல்லமையைப் பெற்றுக்கொள்ள வந்த ஒருவரையும் அவர் திருப்பி அனுப்பவில்லை. உதவிக்காக அவரிடம் விண்ணப்பம் செய்திருந்தவர்கள் தங்கள்மீது தாங்களே நோயைக்கொண்டுவந்திருந்தனர் என்பதை அவர் அறிந்திருந்தார். ஆயினும் அவர்களை அவர் மறுக்கவில்லை. இந்த ஏழை ஆத்துமாக்களுக்குள் கிறிஸ்துவின் வல்லமை பிரவேசித்தபோது அவர்கள் பாவத்தைப்பற்றி உணர்த்தப்பட்டனர். அநேகர் அவர்களுடைய சரீரப்பிரகாரமான நோயைப்போலவே ஆவிக்குரிய நோய்களிலிருந்தும் சுகப்படுத்தப்பட்டிருந்தனர். சுவிசேஷம் தொடர்ந்து அதே வல்லமையை உடையதாக இருக்கிறது. இன்று நம்மால் ஏன் அதே வல்லமைக்கான பலன்களைச் சாட்சியாகப் பெற்றுக்கொள்ள முடியவில்லை? (22)

பாடுகளை அனுபவித்துக்கொண்டிருக்கும் ஒவ்வொருவருடைய துன்பத்தையும் துயரத்தையும் கிறிஸ்து உணருகிறார். பொல்லாத ஆவிகள் ஒரு மனிதக்கூட்டை கிழிக்கும்போது, அந்த சாபத்தைக் கிறிஸ்து உணருகிறார். உயிரின் ஓட்டத்தை காய்ச்சல் எரித்துக்கொண்டிருக்கும்போது, அந்த வேதனையை அவர் உணருகிறார். அவர் மனிதனாக பூமியில் அவதரித்து வாழ்ந்தபோது, சுகவீனமாக இருந்தவர்களை எவ்விதமாகச் சுகப்படுத்த விருப்பமுடையவராக இருந்தாரோ, அதேவிதமாக இப்பொழுதும் சுகப்படுத்த விருப்பமுள்ளவராக இருக்கிறார். கிறிஸ்துவின் ஊழியக்காரர்கள் அவர் செயலாற்றுவதற்காக அவருடைய பிரதிநிதிகளாக வாய்க்கால்களாக இருக்கின்றனர். சுகமளிக்கும் அவருடைய வல்லமையை அவர்கள் மூலமாகச் செயலாற்ற அவர் விரும்புகிறார். (23)

இரட்சகரின் சுகப்படுத்தும் தன்மையில் அவருடைய சீடர்களுக்கான பாடங்கள் இருந்தன. ஒரு சந்தர்ப்பத்தில் அவர் ஒரு குருடனுடைய கண்களில் சேற்றைப்பூசி, “நீ போய், ஸீலோவாம் குளத்திலே கழுவு”

என்று அவனுக்குக் கட்டளையிட்டார். "அப்படியே அவன் போய்க் கழுவி, பார்வையடைந்தவனாய்த் திரும்பிவந்தான்"–யோவான் 9:7. அந்த சுகம் பெரும் சுகமளிப்பவரின் வல்லமையினால் மட்டுமே செய்யப்படமுடிந்ததாக இருந்தது. ஆயினும் கிறிஸ்து இயற்கையின் எளிமையான ஊடகங்களைப் பயன்படுத்தினார். மயக்கவெறிசார்ந்த மருந்துப் பொருட்களை (Drug Medication) அவர் ஆதரிக்கவில்லை. எனினும் அவர் சாதாரணமான இயற்கையான மருந்துகளைப் பயன்படுத்துவதை அனுமதித்தார். (24)

சுகத்தைப் பெற்றிருந்த அநேக நோயாளிகளிடம் கிறிஸ்து: "அதிக கேடானதொன்றும் உனக்கு வராதபடி இனிப் பாவஞ்செய்யாதே" (யோவான் 5:14) என்று கூறினார். இவ்விதமாக வேதப்பிரமாணங்களாகிய ஆவிக்குரிய பிரமாணம் இயற்கையின் பிரமாணம் ஆகிய இரண்டையும் மீறுவதின் பலன்தான் நோய்களுக்குக் காரணம் என்று அவர் போதித்தார். சிருஷ்டிகரின் திட்டத்திற்கு இசைவாக மனிதர்கள் வாழ்ந்திருந்தார்களானால், உலகத்தில் இத்தகைய பெரிதான அவலநிலை இருந்திருக்காது. (25)

கிறிஸ்து பண்டைய இஸ்ரவேலர்களின் வழிகாட்டியாகவும் ஆசிரியராகவுமிருந்து உடல்நலம் தேவப்பிரமாணங்களுக்குக் கீழ்ப்படிவதின் ஈவு என்பதைப் போதித்தார். பாலஸ்தீனத்திலிருந்த நோயாளிகளை சுகப்படுத்தியிருந்த பெரும் சுகமளிப்பவர், மேகஸ்தம்பத்திலிருந்து, அவர்கள் என்ன செய்யவேண்டுமென்றும் தேவன் அவர்களுக்கு என்ன செய்வாரென்றும் கூறியிருந்தார். "நீ உன் தேவனாகிய கர்த்தரின் சத்தத்தைக் கவனமாய்க் கேட்டு, அவர் பார்வைக்குச் செம்மையானவைகளைச் செய்து, அவர் கட்டளைகளுக்குச் செவிகொடுத்து, அவருடைய நியமங்கள் யாவையும் கைக்கொண்டால், நான் எகிப்தியருக்கு வரப்பண்ணின வியாதிகளில் ஒன்றையும் உனக்கு வரப்பண்ணேன்; நானே உன் பரிகாரியாகிய கர்த்தர்" (யாத்திராகமம் 15:26) என்றார். இஸ்ரவேலர்களின் வாழ்க்கையில் காணப்படவேண்டிய உடல் நலவியல் பழக்கங்களைப்பற்றி திட்டமான போதனையை கிறிஸ்து அவர்களுக்குக் கொடுத்து, "கர்த்தர் சகல நோய்களையும் உன்னைவிட்டு விலக்குவார்" (உபாகமம் 7:15) என்று வாக்குறுதி கொடுத்தார். அவர்கள் அந்த நிபந்தனைகளை நிறைவேற்றினபோது, அந்த வாக்குத்தத்தம் உண்மையென்பது அவர்களுக்கு உறுதிசெய்யப்பட்டது. "அவர்கள் கோத்திரங்களில் பலவீனப்பட்டவன் ஒருவனும் இருந்ததில்லை"–சங்கீதம் 105:37. (26)

இத்தகைய பாடங்கள் நமக்காக இருக்கின்றன. உடல் நலத்தைப் பாதுகாக்க விரும்பும் அனைவரும் கைக்கொள்ளவேண்டிய நிபந்தனைகள் இருக்கின்றன. அந்த நிபந்தனைகள் என்ன என்பதை அனைவரும்

கற்றுக்கொள்ளவேண்டும். தேவப்பிரமாணங்கள் ஆவிக்குரியவைகளானாலும் இயற்கைக்குரியவைகளானாலும் அவைகளைப்பற்றிய அறிவை மக்கள் கொண்டிராவிட்டால் கர்த்தர் மகிழ்ச்சியுள்ளவராக இருப்பதில்லை. சரீரத்திற்கான உடல்நலத்தைப்போலவே ஆவிக்குரிய நலத்தையும் எடுத்துக்காட்டுவதில் நாம் தேவனுடன் ஊழியக்காரர்களாக இருக்கவேண்டும். (27)

உடல்நலத்தை எவ்விதமாகப் பாதுகாப்பதென்றும், எவ்விதமாகத் திரும்பவும் அடைந்துகொள்ளுவது என்றும் நாம் போதிக்கவேண்டும். நோயுற்றவர்களுக்கு இயற்கையில் தேவன் ஏற்படுத்தியுள்ள மருந்துகளை நாம் பயன்படுத்தி, அவர் ஒருவரால் மட்டுமே சுகத்தைத் தரமுடியும் என்பதையும் அவர்களுக்குச் சுட்டிக்காட்டவேண்டும். நமது விசுவாசக் கரங்களினால் நோயுற்றவர்களையும் துன்பப்பட்டுக்கொண்டிருப்பவர்களையும் கிறிஸ்துவிற்குமுன் வைக்கவேண்டியது நமது வேலையாக உள்ளது. மாபெரும் பரிகாரியாக இருப்பவரை நம்பும்படி நாம் அவர்களுக்குப் போதிக்கவேண்டும். நாம் அவருடைய வாக்குத்தத்தத்தைப் பெற்றுக்கொண்டு, அவருடைய வல்லமையின் வெளிக்காட்டுதலிற்காக ஜெபிக்கவேண்டும். திரும்ப எடுத்துக்கட்டுதல் என்பதுதான் சுவிசேஷத்தின் மிகமுக்கியமான அம்சமாக இருக்கிறது. நோயாளிகளையும் நம்பிக்கையிழந்தவர்களையும் துன்பப்படுகிறவர்களையும் கிறிஸ்துவின் பலத்தைப் பற்றிக்கொள்ளச் செய்பவர்களாக நாம் இருக்கவேண்டும் என்று இரட்சகர் நம்மை அழைக்கிறார். (28)

கிறிஸ்துவின் சுகப்படுத்துதல் அனைத்திலும், கிறிஸ்துவின் அன்பு இருந்தது. அந்த அன்பில் பங்குபெறுவதினால் மட்டுமே, விசுவாசத்தின் மூலமாக நம்மால் அவருடைய பணிக்கான கருவிகளாக இருக்கமுடியும். கிறிஸ்துவுடனுள்ள தெய்வீக உறவில் நம்மை இணைத்துக்கொள்ள நாம் அலட்சியமாயிருப்போமானால், ஜீவனைக் கொடுக்கும் சக்தியின் ஓட்டம் நம்மிடமிருந்து செழுமையான நீரோட்டங்களாக மக்களிடத்திற்கு ஓடாது. அவர்களுடைய அவநம்பிக்கையின் காரணமாக இரட்சகரால் அவருடைய பலத்த செயல்களைச் செய்யமுடியாமலிருந்த அநேக இடங்கள் இருந்தன. அதேவிதமாக இப்பொழுது நம்பிக்கையின்மை சபையை அதனுடைய தெய்வீக உதவியாளரிடமிருந்து பிரிக்கிறது. நித்தியமான உண்மைகளின்மீது சபை கொண்டுள்ள பிடிப்பு பலவீனமாயிருக்கிறது. சபையின் விசுவாசமின்மையினால் தேவன் ஏமாற்றப்பட்டவராகவும் அவருடைய மகிமையை இழந்தவராகவும் இருக்கிறார். (29)

கிறிஸ்துவின் பணியைச் செய்வதில்தான் சபைக்கு அவருடைய பிரசன்னத்தின் வாக்குத்தத்தம் இருக்கிறது. “உலகத்தின் முடிவுபரியந்தம் சகல நாட்களிலும் நான் உங்களுடனேகூட இருக்கிறேன்” என்று அவர் கூறினார். அவருடைய நுகத்தை ஏற்றுக்கொள்ளுவது அவருடைய வல்லமையைப் பெற்றுக்கொள்ளுவதற்கான அநேக நிபந்தனைகளில் முதன்மையானதாக இருக்கிறது. கர்த்தருடைய சுவிசேஷ கட்டளைகளை உத்தமமாக நிறைவேற்றுவதைச் சர்ந்துதான் சபையின் ஜீவன் இருக்கிறது. அந்தப் பணியை அலட்சியஞ்செய்வதென்பது நிச்சயமாகவே ஆவிக்குரிய பலவீனத்தையும் அழிவையும் வரவேற்பதாக இருக்கிறது. பிறருக்கான தீவிரமான ஊழியம் எங்கு இல்லையோ அங்கு அன்பு தேய்கிறது. விசுவாசம் மங்கிவிடுகிறது. (30)

சுவிசேஷ ஊழியஞ்செய்வதில் சபையைப் பயிற்றுவிப்பவர்களாக அவருடைய ஊழியர்கள் இருக்கவேண்டும் என்று கிறிஸ்து விரும்புகிறார். தொலைந்துபோனவர்களைத் தேடிக் காப்பாற்றுவது எப்படியென்று மக்களுக்குப் போதிப்பவர்களாக அவர்கள் இருக்கவேண்டியவர்களாக உள்ளனர். ஆனால் அவர்கள் செய்துகொண்டிருக்கும் வேலை இதுதானா? ஐயோ பாவம்! சாவதற்கு ஆயத்தமாகிக்கொண்டிருக்கும் ஒரு சபையின் ஜீவனாகிய பொறியை எரியச்செய்யும்படி வீசுவதற்கு எத்தனைபேர்கள் உழைத்துக்கொண்டிருக்கின்றனர்? தொலைந்துபோன ஆடுகளைத் தேடுபவர்களாக இருக்கவேண்டியவர்களால் எத்தனை சபைகள் நோயுற்ற ஆட்டுக்குட்டிகளைப்போல மேற்பார்வையிடப்படுகின்றன! இயேசுவின் நாமத்தை அறியாமலேயே ஒவ்வொரு நாளும் இலட்சக்கணக்கான மக்கள் அழிந்துகொண்டிருக்கின்றனர். (31)

மனிதர்களுக்காக உள்ள தெய்வீக அன்பு, காண முடியாத அளவிற்கு ஆழமாகத் தூண்டப்பட்டிருக்கிறது. அப்பபடிப்பட்ட ஒரு பெரிய அன்பை சாதாரணமான ஒரு மேற்பரப்பான நன்றியறிதலுடன் பெறுகின்ற மனிதர்களை தூதர்கள் ஆச்சரியத்துடன் பார்க்கின்றனர். தேவனுடைய அன்பை ஆழமற்ற விதமாகப் பாராட்டும் மனிதர்களைக்குறித்து தூதர்கள் ஆச்சரியமடைகின்றனர். மனிதர்களின் ஆத்துமாக்களின்மீது காட்டப்பட்டுள்ள அலட்சியத்தில் பரலோகம் கோபமடைந்து நிற்கிறது. கிறிஸ்து அதை எவ்விதமாகக் கருதுகிறார் என்று நாம் அறிகிறோமா? ஒரு சிறுபிள்ளையைக் காப்பாற்றியிருந்திருக்கக்கூடியவர்கள், அதைச் சாகும்படிக் குளிரிலும் பனியிலும் விட்டுச்சென்றுவிட்டார்கள் என்பதை அதன் பெற்றோர்கள் அறியநேரிடும்போது, அவர்கள் எத்தகைய வேதனையடைவார்கள்? அவர்கள் திகிலடைந்தவர்களாக துக்கமடையமாட்டார்களா? கொந்தளித்துக்

கோபமடைந்திருக்கமாட்டார்களா? அவர்கள் தங்களுடைய வேதனையின் வெப்பத்தோடு கண்ணீர்உகுத்த கோபத்துடனும், அன்பின் உக்கிரத்துடனும் அந்தக் கொலைகாரர்களின்மீது வெளிப்படையாகக் குற்றஞ்சாட்டியிருந்திருக்க மாட்டார்களா? ஒவ்வொரு மனிதனின் பாடுகளும் தேவனுடைய பிள்ளையின் பாடுகளாக இருப்பதுடன், மடிந்துகொண்டிருக்கும் தங்களுடைய உடன் மனிதர்களுக்காக உதவிக் கரத்தை நீட்டாமலிருப்பவர்கள் அவருடைய நீதிமிகுந்த கோபத்தை எழுப்புகின்றனர். இது ஆட்டுக்குட்டியானவரின் உக்கிர கோபமாக இருக்கிறது. கிறிஸ்துவுடனுள்ள தோழமையின்மீது உரிமைபாராட்டிக்கொண்டிருந்து, தங்களுடைய உடன்மனிதர்களின் அவசியங்களுக்கு அக்கறையற்றவர்களாக இருப்பவர்களிடம் “நீங்கள் எவ்விடத்தாரோ, உங்களை அறியேன், அக்கிரமக்காரராகிய நீங்களெல்லாரும் என்னைவிட்டு அகன்றுபோங்கள்” (லூக்கா 13:27) என்று அவர் கூறுவார். (32)

கிறிஸ்து சீடர்களுக்குக் கொடுத்த பொறுப்பான கட்டளையில் அவர்களுடைய வேலையைப்பற்றிமட்டும் விவரித்துக் கூறாமல், தூதையும் கொடுத்தார். “நான் உங்களுக்குக் கட்டளையிட்ட யாவையும் அவர்கள் கைக்கொள்ளும்படி அவர்களுக்கு உபதேசம்பண்ணுங்கள்” என்றார். கிறிஸ்து எவைகளைப் போதித்திருந்தாரோ அவைகளைப் போதிக்கவேண்டியவர்களாகச் சீடர்கள் இருந்தனர். அவர் நேரடியாகப் பேசியிருந்தவைகளைமட்டுமின்றி பழைய ஏற்பாட்டுத் தீர்க்கதரிசிகள் ஆசிரியர்கள்மூலமாக கூறப்பட்டிருந்தவைகளும் இங்கு சேர்க்கப்பட்டுள்ளன. மனித போதனை வெளியே தள்ளி அடைக்கப்பட்டுள்ளது. பாரம்பரியங்களுக்கும் மனிதக் கோட்பாட்டு விளக்கங்களுக்கும் தீர்மானங்களுக்கும் சபைச் சட்டங்களுக்கும் இடமில்லை. கிறிஸ்து சபைக்குக் கொடுத்த பொறுப்பான கட்டளையில் சபை அதிகாரங்களினால் ஏற்படுத்தப்பட்ட எந்தச் சட்டமும் உட்படுத்தப்படவில்லை. கிறிஸ்துவின் ஊழியக்காரர்கள் இவைகளில் எதையும் போதிக்கவேண்டியவர்களாக இருக்கவில்லை. நியாயப்பிரமாணமும் தீர்க்கதரிசிகளின் ஆவணங்களாகிய அவருடைய சொந்த வார்த்தைகளும் செயல்களுமாகிய கருவூலங்கள் சீடர்களிடம் ஒப்படைக்கப்பட்டுள்ளன. உலகத்திற்குக் கொடுக்கும்படி அவை சீடர்களிடம் கொடுக்கப்பட்டன. கிறிஸ்துவின் நாமம் அவர்களுடைய இலட்சிய வார்த்தையாக, அவர்களுடைய சிறப்பின் சின்னமாக, அவர்களுடைய ஒற்றுமையின் கட்டாக, அவர்களுடைய நடத்தையின் அதிகாரமாக, அவர்களுடைய வெற்றியின் ஆதாரமாக இருக்கிறது. அவருடைய பெயர் (Subscription) பொறிக்கப்படாத எதுவும் அவருடைய இராஜ்யத்தில் அங்கீகரிக்கப்படமாட்டாது. (33)

சுவிசேஷம் ஜீவனில்லாத ஒரு கோட்பாட்டின் விளக்கமாக முன்வைக்கப்படாமல் வாழ்க்கையை மாற்றுகின்ற ஒரு ஜீவனுள்ள சக்தியாக வைக்கப்படவேண்டும். தேவன் அவருடைய கிருபையைப் பெறுபவர்கள் அவருடைய வல்லமைக்குச் சாட்சிகளாக இருப்பார்கள் என்று வாஞ்சையோடிருக்கிறார். எவர்களுடைய நடத்தை அவருக்கு மிகஅதிக எதிர்ப்பானதாக இருந்ததோ, அவர்கள் மனம்திரும்பும் பொழுது, அவர் தாராளமாக ஏற்றுக்கொள்ளுகிறார். அவருடைய தெய்வீக ஆவியை அவர் அவர்களுக்குப் பகிர்ந்தளித்து, மிக உயர்வான நம்பிக்கைக்குரிய இடங்களில் அவர்களை வைத்து எல்லையில்லாத அவருடைய இரக்கத்தை அறிவிக்கும்படி உத்தம விசுவாசம் இல்லாதவர்களின் பாளையத்திற்கு அனுப்பிவைக்கிறார். அவருடைய கிருபையின்மூலமாக மனிதர்கள் கிறிஸ்துவின் குணத்தைப்போன்ற குணத்தை உடையவர்களாகின்றனர். மேலும் அவருடைய மாபெரும் அன்பின் வாக்குறுதியில் களிகூரலாம் என்னும் உண்மைக்கு சாட்சியை உடைய ஊழியக்காரர்களை உடையவராக அவர் இருப்பார். மனித இனத்தை மேம்படுத்தி, அவர்களுடைய பரிசுத்தமான சிறப்புரிமைகளில் பங்குபெறத்தக்கதாக அவருடைய குமாரர்களாகவும் குமாரத்திகளாகவும் அவர்களை அமர்த்தும்வரை அவரால் திருப்திப்படமுடியாது என்னும் உண்மைக்குச் சாட்சிகளாக நாம் இருக்கவேண்டுமென்று அவர் விரும்புகிறார். (34)

மேய்ப்பனின் மேன்மை, பெற்றோரின் பாசம், உருக்கமுள்ள இரட்சகரின் நிகரற்ற கிருபை ஆகியவை கிறிஸ்துவில் இருக்கின்றன. மிக அதிகமாகக் கவரும் விதங்களில் அவர் அவருடைய ஆசீர்வாதங்களை முன்வைக்கிறார். இந்த ஆசீர்வாதங்களை சாதாரணமாக அறிவிப்பதில்மட்டும் அவர் திருப்தியடைவதில்லை. அதை உடையவர்களாகவேண்டும் என்னும் ஒரு மனக்கிளர்ச்சிமிக்க விருப்பத்தை தூண்டிவிடக்கூடிய விதத்தில் அவர் அவைகளை முன்வைக்கிறார். அப்படியே அவருடைய ஊழியக்காரர்களும் சொல்லிமுடியாத அந்த ஈவினுடைய மகிமையின் ஐசுவரியத்தை முன்வைக்க வேண்டியவர்களாக இருக்கின்றனர். கோட்பாடுகளைச் சாதாரணமாகத் திரும்பத்திரும்பக் கூறுவது, ஒன்றையும் நிறைவேற்றாது. ஆனால் கிறிஸ்துவின் ஆச்சரியமான அன்பு இருதயங்களை உருக்கவும் தாழ்த்தவும் செய்யும். என் ஜனத்தை ஆற்றுங்கள், தேற்றுங்கள்;" "சீயோன் என்னும் சுவிசேஷகியே, நீ உயர்ந்த பர்வதத்தில் ஏறு; எருசலேம் என்னும் சுவிசேஷகியே, நீ உரத்த சத்தமிட்டுக் கூப்பிடு, பயப்படாமல் சத்தமிட்டு, யூதா பட்டணங்களை நோக்கி: இதோ, உங்கள் தேவன் என்று கூறு. இதோ, கர்த்தராகிய ஆண்டவர் பராக்கிரமசாலியாக வருவார்; அவர் தமது புயத்தினால் அரசாளுவார்; இதோ, அவர் அளிக்கும் பலன் அவரோடேகூட

வருகிறது; அவர் கொடுக்கும் பிரதிபலன் அவருடைய முகத்துக்கு முன்பாகச் செல்லுகிறது. மேய்ப்பனைப்போலத் தமது மந்தையை மேய்ப்பார்; ஆட்டுக்குட்டிகளைத் தமது புயத்தினால் சேர்த்து, தமது மடியிலே சுமந்து, கறவலாடுகளை மெதுவாய் நடத்துவார். தண்ணீர்களைத் தமது கைப்பிடியால் அளந்து, வானங்களை ஜாணளவாய்ப் பிரமாணித்து, பூமியின் மண்ணை மரக்காலில் அடக்கி, பர்வதங்களைத் துலாக்கோலாலும், மலைகளைத் தராசாலும் நிறுத்தவர் யார்?"—ஏசாயா 40:1, 9–11. "பதினாயிரம்பேர்களில் சிறந்தவர்." "முற்றிலும் அழகுள்ளவர்" (உன்னதப்பாட்டு 5:10,16) என்று அவரைப்பற்றி மக்களிடம் கூறுங்கள். வார்த்தைகளால்மட்டும் அதைக் கூறமுடியாது. குணத்தினால் அது பிரதிபலிக்கப்பட்டு, வாழ்க்கையில் வெளிக்காட்டப்படுவதாக. அவருடைய எல்லா சீடர்களிலும் அவரது உருவம் வரையப்படவேண்டும் என்பதற்காகக் கிறிஸ்து அமர்ந்திருக்கிறார். "தமது குமாரனுடைய சாயலுக்கு ஒப்பாயிருப்பதற்கு"—ரோமர் 8:29. ஒவ்வொருவரிலும் கிறிஸ்துவின் நீடிய பொறுமைமிக்க அன்பு, பரிசுத்தம், சாந்தம், இரக்கம், சத்தியம் ஆகியவை உலகத்திற்கு வெளிக்காட்டப்படவேண்டியதாக இருக்கிறது. (35)

வசனங்களைப் பிரசங்கஞ்செய்துகொண்டு முதல் சீடர்கள் புறப்பட்டுச் சென்றிருந்தனர். அவர்கள் கிறிஸ்துவை அவர்களுடைய வாழ்க்கையில் காட்டினார்கள். "அடையாளங்களினாலே வசனத்தை உறுதிப்படுத்தினார்"— மாற்கு 16:20. சீடர்கள் அவர்களுடைய வேலைக்காக தாங்களாகவே ஆயத்தஞ்செய்தனர். பெந்தெகொஸ்தே நாளுக்குமுன் அவர்கள் ஒன்றுகூடி எல்லா வேற்றுமைகளையும் நீக்கினார்கள். அவர்கள் ஒருமனப்பட்டவர்களானார்கள். ஆசீர்வாதம் கொடுக்கப்படும் என்னும் கிறிஸ்துவின் வாக்குத்தத்தத்தை அவர்கள் நம்பினார்கள். விசுவாசத்துடன் ஜெபித்தார்கள். அவர்கள் சாதாரணமான தங்களுக்காகமட்டும் ஆசீர்வாதத்தைக் கேட்கவில்லை. ஆத்துமாக்களின் இரட்சிப்பிற்கான பாரத்தினிமித்தம் பொறுப்புடையவர்களாக இருந்தார்கள். உலகத்தின் கடைசிப்பகுதிவரைக்கும் சுவிசேஷம் எடுத்துச்செல்லப்படவேண்டியதாக இருந்தது. அவர்கள் கிறிஸ்து வாக்குத்தத்தஞ்செய்திருந்த வல்லமையின் ஈவுகளைக் கேட்டனர். அப்பொழுது பரிசுத்த ஆவி அவர்கள்மீது ஊற்றப்படவேண்டும். ஒரேநாளில் ஆயிரக்கணக்கானவர்கள் மனமாற்றமடைந்தனர். (36)

அப்படியே இன்றுங்கூட இருக்கலாம். மனிதனுடைய யூகங்களுக்குப் பதிலாக தேவனுடைய வார்த்தை போதிக்கப்படுவதாக. கிறிஸ்தவர்கள் அவர்களுடைய பிரிவினைகளைத் தூரமாக வைத்துவிட்டு தொலைந்து கொண்டிருப்பவர்களின் இரட்சிப்பிற்காகத் தங்களை தேவனுக்கு

ஒப்புக்கொடுப்பார்களாக. விசுவாசத்துடன் அவர்கள் ஆசீர்வாதத்தைக் கேட்பார்களாக. அது கிடைக்கும். அப்போஸ்தலர்களின் நாட்களில் ஊற்றப்பட்ட ஆவி முன்மாரியாக இருந்து, அதன் பலன் மகிமைமிக்கதாக இருந்தது. ஆனால் பின்மாரி அதைவிட அதிக ஏராளமானதாக இருக்கும் (யோவேல் 2:23). (37)

ஆவி, ஆத்துமா, சரீரமனைத்தையும் தேவனுக்கென்று அர்ப்பணம் செய்பவர்கள் தொடர்ச்சியாக சரீர மன வல்லமையாகிய ஒரு புதிய அருட்கொடையைப் பெறுவார்கள். பரலோகத்தின் வற்றாத வளங்கள் அவர்களுடைய அதிகாரத்தின்கீழ் உள்ளன. கிறிஸ்து அவர்களுக்கு அவருடைய சொந்த ஆவியின் சுவாசத்தையும் அவருடைய சொந்த வாழ்க்கையின் ஜீவனையும் கொடுக்கிறார். இருதயத்திலும் மனதிலும் செயலாற்றும்படி பரிசுத்த ஆவி அதன் உயர்வான சக்திகளைக் கொடுக்கிறது. தேவகிருபை அவர்களுடைய மனத்திறன்களை விரிவடையவும் பெருகவுஞ்செய்கிறது. மேலும் ஆத்துமாக்களை இரட்சிக்கும் பணியில் அவர்களுக்கு உதவி செய்வதற்கு தெய்வீக இயல்பின் ஒவ்வொரு பூரணமும் வருகிறது. கிறிஸ்துவுடனுள்ள கூட்டுறவின்மூலமாக அவர்கள் அவரில் நிறைவானவர்களாக இருந்து, அவர்களுடைய மானுட பலவீனத்தில் சர்வ வல்லவருடைய செயல்களைச் செய்யும்படி தகுதிப்படுத்தப்படுகின்றனர். (38)

உலகம் முழுவதின்மீதும் அவருடைய கிருபையை வெளிக்காட்டவும், அவருடைய குணத்தை முத்திரையிடவும் இரட்சகர் ஏங்குகிறார். அது அவருடைய விலைக்கு வாங்கப்பட்ட ஆஸ்தியாக இருக்கிறது. அவர் மனிதர்களை விடுதலையானவர்களாகவும் தூய்மையானவர்களாகவும் பரிசுத்தமானவர்களாகவும் செய்வதற்கு வாஞ்சிக்கிறார். அந்த நோக்கத்திற்கு இடையூறு செய்திட சாத்தான் செயலாற்றினபோதிலும், உலகத்திற்காகச் சிந்தப்பட்ட இயேசுவின் இரத்தத்தின்மூலம் தேவனுக்கும் ஆட்டுக்குட்டியானவருக்கும் மகிமையைக் கொண்டுவருவதற்காக அடைந்துகொள்ளவேண்டிய வெற்றிகள் உள்ளன. வெற்றி நிறைவடையும்வரை கிறிஸ்து திருப்தியடையமாட்டார். “அவர் தமது ஆத்தும வருத்தத்தின் பலனைக் கண்டு திருப்தியாவார்”—ஏசாயா 53:11. அவரது கிருபையின் சுவிசேஷத்தை பூமியின் ஜாதிகள் யாவும் கேட்கும். அவருடைய கிருபையை எல்லாரும் பெற்றுக்கொள்ளமாட்டார்கள். ஆனால் “ஒரு சந்ததி அவரைச் சேவிக்கும்; தலைமுறை தலைமுறையாக அது ஆண்டவருடைய சந்ததி என்னப்படும்”—சங்கீதம் 22:30. “வானத்தின் கீழெங்குமுள்ள ராஜ்யங்களின் ராஜரிகமும் ஆளுகையும் மகத்தவமும் உன்னதமானவருடைய

பரிசுத்தவான்களாகிய ஜனங்களுக்குக் கொடுக்கப்படும்;" "சமுத்திரம் ஜலத்தினால் நிறைந்திருக்கிறதுபோல், பூமி கர்த்தரை அறிகிற அறிவினால் நிறைந்திருக்கும்." "அப்பொழுது சூரியன் அஸ்தமிக்குந்திசைதொடங்கி கர்த்தரின் நாமத்துக்கும், சூரியன் உதிக்குந்திசை தொடங்கி அவருடைய மகிமைக்கும் பயப்படுவார்கள்"–தானியேல் 7:27; ஏசாயா 11:9, 59:19. (39)

"சமாதானத்தைக் கூறி, நற்காரியங்களைச் சுவிசேஷமாய் அறிவித்து, இரட்சிப்பைப் பிரசித்தப்படுத்தி: உன் தேவன் ராஜரிகம் பண்ணுகிறாரென்று சீயோனுக்குச் சொல்லுகிற சுவிசேஷகனுடைய பாதங்கள் மலைகளின்மேல் எவ்வளவு அழகாயிருக்கின்றன. உன் ஜாமக்காரருடைய சத்தம் கேட்கப்படும்; அவர்கள் சத்தமிட்டு ஏகமாய்க் கெம்பீரிப்பார்கள்; ஏனென்றால், கர்த்தர் சீயோனைத் திரும்பிவரப்பண்ணும்போது, அதைக் கண்ணாரக் காண்பார்கள். எருசலேமின் பாழான ஸ்தலங்களே, முழங்கி ஏகமாய்க் கெம்பீரித்துப் பாடுங்கள்; கர்த்தர் தம்முடைய ஜனங்களுக்கு ஆறுதல்செய்து எருசலேமை மீட்டுக்கொண்டார். எல்லா ஜாதிகளின் கண்களுக்கு முன்பாகவும் கர்த்தர் தம்முடைய பரிசுத்த புயத்தை வெளிப்படுத்துவார்; பூமியின் எல்லைகளில் உள்ளவர்களெல்லாரும் நமது தேவனுடைய இரட்சிப்பைக் காண்பார்கள்"– ஏசாயா 52:7–10. (40) ★

# 87

# என் பிதாவினிடத்திற்கும் உங்கள் பிதாவினிடத்திற்கும்...!

**லூக்கா 24:50–53; அப்போஸ்தலர் 1:9–12**

**(The Desire of Ages, pp. 829–835)**

கிறிஸ்து அவருடைய பிதாவின் சிங்காசனத்திற்கு எழுந்தருளுகின்ற நேரம் வந்திருந்தது. ஒரு தெய்வீக வெற்றி வீரராக வெற்றியின் விருதுகளுடன் பரலோகப் பிராகாரத்திற்கு அவர் திரும்பவேண்டியவராக இருந்தார். அவருடைய மரணத்திற்குமுன் அவருடைய பிதாவினிடத்தில் "பூமியிலே நான் உம்மை மகிமைப்படுத்தினேன்; நான் செய்யும்படி நீர் எனக்கு நியமித்த கிரியையைச் செய்துமுடித்தேன்" (யோவான் 17:4) என்று அறிவித்தார். அவரது உயிர்த்தெழுந்த, மகிமைப்படுத்தப்பட்ட சரீரத்துடன் அவருடைய சீடர்கள் பழகினவர்களாக இருக்கவேண்டும் என்பதற்காக அவருடைய உயிர்த்தெழுலுக்குப்பின் சிறிது காலம் பூமியின்மேல் அவர் தரித்திருந்தார். அவர்களைவிட்டுச் செல்ல இப்பொழுது அவர் ஆயத்தமாக இருந்தார். அவர் ஜீவனுள்ள இரட்சகர் என்னும் உண்மையை உறுதிப்படுத்தியிருந்தார். இனிமேல் அவருடைய சீடர்கள், அவரைக் கல்லறையுடன் இணைக்கவேண்டிய அவசியம் இருக்காது. பரலோகப் பிரபஞ்சத்திற்குமுன் அவர்கள் அவரை மகிமைப்படுத்தப்பட்டவராக நினைக்கமுடியும். (1)

இயேசு மனிதர்களுக்கிடையில் வாழ்ந்திருந்தபோது, அவருடைய பிரசன்னத்தினால் அடிக்கடி பரிசுத்தப்படுத்தியிருந்த இடத்தை அவர் பரத்திற்கு எழுந்தருளிச் செல்லும் இடமாகத் தெரிந்துகொண்டார். இவ்விதமாக கனப்படுத்தப்படவேண்டியதாக இருந்த இடம் தாவீதின் நகரமான சீயோன் மலையாகவோ, தேவாலயத்தின் இடமான மோரியா மலையாகவோ இருக்கவில்லை. அங்கு கிறிஸ்து பரிகசிக்கப்பட்டும் அசட்டைசெய்யப்பட்டுமிருந்தார். அங்கு பாறையைப்போலக் கடினமான இருதயங்களால் அன்பின் பலமிக்க அலையாக இன்னும் திரும்பிவந்து கொண்டிருந்த இரக்கத்தின் அலைகள் பின்நோக்கி அடித்தனுப்பப்பட்டிருந்தது.

அப்பொழுது களைப்படைந்தவராகவும் இருதய பாரமுடையவராகவும் இருந்த இயேசு ஒலிவமலையில் இளைப்பாறுதலைக் காண்பதற்காகச் சென்றிருந்தார். தெரிந்துகொள்ளப்பட்ட நகரத்தைக் கைவிட வெறுப்படைந்ததைப்போல முதலாவது தேவாலயத்திலிருந்து புறப்பட்டுச் சென்றிருந்த பரிசுத்த ஷெகீனா, கிழக்குத் திசையில் இருந்த மலையின்மீது நின்றிருந்தது. அவ்வாறாகவே, எண்ணி ஏங்குகின்ற இருதயத்துடன் எருசலேமைப் பார்த்துக்கொண்டு கிறிஸ்து ஒலிவமலையின்மேல் நின்றார். அவருடைய ஜெபங்களினாலும் கண்ணீரினாலும் அந்த மலையின் தோப்புகளும் ஒடுக்கமான பள்ளத்தாக்குகளும் புனிதமாக்கப்பட்டிருந்தன. அவரை அரசர் என்று அறிவித்திருந்தவர்களின் வெற்றிகரமான முழக்கங்களை அந்த மலையின் செங்குத்தான பகுதிகள் எதிரொலித்திருந்தன. அதன் சரிவான தாழ்வுப்பகுதியில் பெத்தானியாவில் அவர் லாசருவுடன் ஒரு வீட்டைக் கண்டிருந்தார். அதன் அடிவாரத்தில் இருந்த கெத்செமனே தோட்டத்தில் அவர் தியாக ஜெபஞ்செய்து கடுந்துயரடைந்திருந்தார். இந்த மலையிலிருந்து அவர் பரலோகத்திற்கு எழுந்தருளிச் செல்லவேண்டியவராக இருந்தார். அவர் மறுபடியும் வரும்போது, இந்த மலைஉச்சியின்மீது அவருடைய பாதங்கள் தங்கும். எபிரெயர்களின் அல்லேலூயாக்கள் புறஜாதியினரின் ஓசன்னாக்களுடன் ஒன்றுகலக்கும்போது, எல்லாருக்கும் ஆண்டவராக அவரை முடிசூட்டுங்கள் என்னும் ஒரு மகிழ்ச்சியின் ஆரவாரம் மீட்கப்பட்ட ஒரு பலத்த சேனையின் குரலாக உயர்ந்தெழும்போது, துயரம் நிறைந்த ஒரு மனிதனாக இல்லாமல், மகிமைமிகுந்த வெற்றிமிகுந்த அரசராக அவர் ஒலிவமலையின்மீது நிற்பார். (2)

இப்பொழுது பதினொரு சீடர்களுடன் சேர்ந்து இயேசு அந்த மலைக்கு நேராக அவருடைய பாதையில் சென்றார். அவர்கள் எருசலேமின் வாசல்களுக்கூடாகக் கடந்துசென்றபோது, எந்த ஒருவரைச் சில வாரங்களுக்குமுன் அதிபதிகள் ஆக்கினைக்குட்படுத்திச் சிலுவையில் அறைந்திருந்தார்களோ, அந்த ஒருவரால் நடத்தப்பட்ட சிறிய கூட்டத்தை அநேகர் ஆச்சரியமிக்க கண்களுடன் பார்த்தனர். இது தங்களுடைய ஆண்டவருடனுள்ள இறுதிச் சந்திப்பாக இருக்கும் என்பதைச் சீடர்கள் அறியாதிருந்தனர். இயேசு அவருடைய முந்தைய உபதேசங்களைத் திரும்பவும் கூறிக்கொண்டு, அவர்களுடன் உரையாடுவதில் நேரத்தைச் செலவுசெய்தார். அவர்கள் கெத்செமனேயைச் சமீபித்தபோது, அவருடைய பெரும் வேதனையின் இரவில் அவர்களுக்குக் கொடுத்திருந்த பாடத்தைத் திரும்பவும் அவர்கள் நினைவுகூரும்படியாக, சற்று தயங்கி நின்றார். எந்த ஒரு ஐக்கியம் அவருடைய சபையையும் அவருடன் அவருடைய பிதாவையும் அப்பொழுது எடுத்துக்காட்டியிருந்ததோ, அந்தத் திராட்சைக்கொடியை

அவர் மறுபடியும் நோக்கிப் பார்த்தார். அப்பொழுது அவர் விவரித்திருந்த சத்தியங்களை திரும்பவும் கூறினார். கைமாறு செய்யமுடியாத அவருடைய அன்பை நினைவுபடுத்துபவைகள் அவரைச்சுற்றி எங்குமிருந்தன. அவருடைய இருதயத்திற்கு மிகவும் அருமையாகவிருந்த சீடர்களுங்கூட அவருடைய அவமானத்தின்போது, அவரை நிந்தித்துக் கைவிட்டிருந்தனர். (3)

கிறிஸ்து இந்த உலகத்தில் முப்பத்து மூன்று ஆண்டுகள் அலைந்து திரிந்திருந்தார். ஏளனம், அவமானம், பரிகாசம் ஆகியவைகளை அவர் தாங்கியிருந்தார். புறக்கணிக்கப்பட்டுச் சிலுவையில் அறையப்பட்டிருந்தார். அவருடைய மகிமையின் சிங்காசனத்திற்கு எழுந்தருளவிருக்கின்ற இந்த நேரத்தில்—தாம் இரட்சிப்பதற்காக வந்திருந்த ஜனங்களின் நன்றிகெட்டதன்மையை திருப்பிப்பார்க்கும்போது—அவருடைய அனுதாபத் தையும் அன்பையும் அவர்களிடத்திலிருந்து பின்னிழுத்துக்கொள்ள மாட்டாரா? பாராட்டப்பட்டு, அவருடைய கட்டளையைச் செயலாற்று வதற்காக காத்திருக்கும் பாவமில்லாத தூதர்களை அவருடைய ஆட்சியின் எல்லை—பாசம் மையமாகக்கொண்டிருக்காதோ? இல்லை; பூமியின்மேல் அவர் விட்டுச்செல்லும் அவருடைய பிரியமானவர்களுக்கான அவருடைய வாக்குத்தத்தம்: “இதோ, உலகத்தின் முடிவுபரியந்தம் சகல நாட்களிலும் நான் உங்களுடனேகூட இருக்கிறேன்” (மத்தேயு 28:20) என்பதே. (4)

ஒலிவமலையைச் சென்றடைந்தபின் இயேசு பெத்தானியாவின் அருகாமையில் அந்த மலையின் சிகரத்திற்குப் போகும் பாதையில் அவர்களை நடத்திச் சென்றார். இங்கு அவர் தயங்கி நின்றபோது, சீடர்கள் அவரைச் சூழ்ந்து ஒன்றுசேர்ந்தனர். அவர்களை அவர் அன்புடன் பார்த்தபோது, அவருடைய முகத்திலிருந்து ஒளிக்கதிர்கள் பரவுவதுபோலக் காணப்பட்டது. அவர்களுடைய தவறுகளுக்காகவும் தோல்விகளுக்காகவும் அவர்களை அவர் கடிந்துகொள்ளவில்லை. அவர்களுடைய கர்த்தரின் உதடுகளிலிருந்து அவர்களுடைய செவிகளில் விழுந்த அவருடைய கடைசி வார்த்தைகள் மிகவும் ஆழ்ந்த மென்மைமிக்கதானவைகளாக இருந்தன. அவருடைய பாதுகாக்கும் கரிசனையின் நிச்சயத்தைக் காண்பிப்பதைப்போல கரங்களை விரித்து ஆசீர்வதித்து, பூமியின் எந்த ஈர்ப்புச்சக்தியையும்விட அதிக பலமிக்க ஒரு வல்லமையினால் அவர்களுக்கு மத்தியிலிருந்து அவர் மெதுவாக பரலோகத்தை நோக்கி எடுத்துக்கொள்ளப்பட்டார். அவர் மேல்நோக்கிக் கடந்து சென்றபோது, பிரமிப்படைந்த சீடர்கள், மேலெழும்பும் அவர்களுடைய ஆண்டவரை கடைசியாக கண்ணீர்மல்கப் பார்த்தனர். ஒரு மகிமையின்மேகம் அவர்களுடைய பார்வையிலிருந்து அவரை மறைத்தது. தூதர்களின் மேக இரதத்தால் அவர் அழைத்துக்கொள்ளப்பட்டபோது, “இதோ,

உலகத்தின் முடிவுபரியந்தம் சகல நாட்களிலும் நான் உங்களுடனேகூட இருக்கிறேன்" என்னும் வார்த்தைகள் அவர்களிடத்திற்குத் திரும்பிவந்தது. அதே நேரத்தில், தூதர்களின் பாடல்குழுவினரிடத்திலிருந்து மிகவும் இனிமையானதும் மகிழ்ச்சிமிக்கதுமான இசை அவர்களை நோக்கிக் கீழாக மிதந்து வந்தது. (5)

சீடர்கள் இன்னும் மேல்நோக்கிப் பார்த்துக்கொண்டிருந்தபோது, இனிய இசைபோன்ற குரல்கள் அவர்களை நோக்கி ஒலித்தன. அவர்கள் திரும்பி, மனித உருவிலிருந்த இரு தூதர்கள்: "கலிலேயராகிய மனுஷரே, நீங்கள் ஏன் வானத்தை அண்ணாந்து பார்த்து நிற்கிறீர்கள்? உங்களிடத்தினின்று வானத்துக்கு எடுத்துக்கொள்ளப்பட்ட இந்த இயேசுவானவர் எப்படி உங்கள் கண்களுக்கு முன்பாக வானத்துக்கு எழுந்தருளிப்போனாரோ, அப்படியே மறுபடியும் வருவார்" (அப்போஸ்தலர் 1:11) என்று தங்களிடம் பேசியதைக் கண்டார்கள். இயேசுவை அவருடைய பரலோக வீட்டிற்கு அழைத்துச் செல்லுவதற்காக பிரகாசிக்கும் மேகத்தில் காத்துக் கொண்டிருந்த தூதர்களின் கூட்டத்தைச் சேர்ந்த மெய்க்காப்பாளர்களாக அவர்கள் இருந்தனர். தூதர்களின் கூட்டத்தில் மிகவும் மேன்மையான இடத்தில் இருந்த இந்தத் தூதர்கள், கிறிஸ்துவின் உயிர்த்தெழுதலின்போது, அவருடைய கல்லறைக்கு வந்திருந்து, பூமியின்மேலிருந்த அவருடைய வாழ்க்கை முழுவதிலும் அவருடன் இருந்திருந்தனர். பாவத்தின் சாபத்தினால் களங்கமடைந்திருந்த ஒரு உலகத்தில் அவர் தரித்திருந்ததின் முடிவிற்காக பரலோகம் முழுவதும் அக்கறைமிக்க வாஞ்சையுடன் காத்திருந்தது. பரலோகப் பிரபஞ்சம் அதன் அரசரைப் பெற்றுக்கொள்ளுகின்ற நேரம் இப்பொழுது வந்திருந்தது. இயேசுவை வரவேற்றிருந்த அந்தக் கூட்டத்துடன் சேர்ந்துகொள்ள அந்த இரு தூதர்களும் ஏக்கமுடையவர்களாக இருக்கவில்லையா? ஆனால் எவர்களை அவர் விட்டுச்சென்றிருந்தாரோ, அவர்களுக்கு ஆறுதலைக் கொடுப்பதற்காக அனுதாபத்துடனும் அன்புடனும் அவர்கள் காத்திருந்தனர். "இரட்சிப்பைச் சுதந்தரிக்கப்போகிறவர்களினிமித்த மாக ஊழியஞ்செய்யும்படிக்கு அவர்களெல்லாரும் அனுப்பப்படும் பணிவிடை ஆவிகளாயிருக்கிறார்களல்லவா?"—எபிரெயர் 1:14. (6)

கிறிஸ்து பரலோகத்திற்கு மனித உருவில் எழுந்தருளியிருந்தார். அந்த மேகம் அவரைப் பெற்றுக்கொள்ளுவதை அந்தச் சீடர்கள் கண்டிருந்தனர். எந்த ஒரு இயேசு அவர்களுடன் நடந்தும் பேசியும் ஜெபித்தும் இருந்தாரோ, எவர் அவர்களுடன் அப்பம்பிட்டிருந்தாரோ, எவர் ஏரியின்மீது படகில் அவர்களுடன் இருந்திருந்தாரோ, அவர்—அந்த இயேசு—அவருடைய பிதாவின் சிங்காசனத்தில் பங்குபெறுவதற்காக இப்பொழுது

சென்றிருக்கிறார். எந்த ஒருவர் பரலோகத்தை நோக்கி, விண்ணில் செல்வதை அவர்கள் பார்த்திருந்தார்களோ, அதே இயேசுவானவர் எவ்விதமாக எழுந்தருளிச் சென்றாரோ, அதே விதமாக மறுபடியும் திரும்பிவருவார் என்று அந்தத் தூதர்கள் அவர்களுக்கு வாக்குக்கொடுத்தனர். “கர்த்தர் தாமே ஆரவாரத்தோடும், பிரதான தூதனுடைய சத்தத்தோடும், தேவ எக்காளத்தோடும் வானத்திலிருந்து இறங்கிவருவார்”–1 தெசலோனிக்கேயர் 4:16. “மேகங்களுடனே வருகிறார்; கண்கள் யாவும் அவரைக் காணும்” “மனுஷ குமாரன் தமது மகிமைபொருந்தினவராய்ச் சகல பரிசுத்த தூதரோடுங்கூட வரும்போது, தமது மகிமையுள்ள சிங்காசனத்தின்மேல் வீற்றிருப்பார்”– வெளிப்படுததல் 1:7; மத்தேயு 25:31. இவ்விதமாக கர்த்தருடைய சொந்த வாக்குத்தத்தம் நிறைவேறும். “நான் போய் உங்களுக்காக ஸ்தலத்தை ஆயத்தம்பண்ணினபின்பு, நான் இருக்கிற இடத்திலே நீங்களும் இருக்கும்படி, நான் மறுபடியும் வந்து உங்களை என்னிடத்தில் சேர்த்துக்கொள்ளுவேன்” – யோவான் 14:3. சீடர்கள் அவர்களுடைய கர்த்தர் மீண்டும் வருவதைப்பற்றிய நம்பிக்கையில் நன்கு மகிழ்ந்து களிகூர முடியும். (7)

சீடர்கள் எருசலேமிற்குத் திரும்பிச்சென்றபோது, மக்கள் அவர்களை ஆச்சரியத்துடன் பார்த்தனர். கிறிஸ்துவை விசாரித்தபின்பும், அவர் சிலுவையில் அறையப்பட்டதற்குப்பின்பும் அவர்கள் மனவாட்டமுள்ளவர்களாகவும், வெட்கமடைந்தவர்களாகவும் காணப்படுவார்கள் என்று எண்ணப்பட்டிருந்தது. துயரம், தோல்வி ஆகியவைகளின் வெளிக்காட்டலை அவர் முகங்களில் காணலாம் என்று அவர்களுடைய எதிரிகள் எதிர்பார்த்திருந்தனர். அதற்குப் பதிலாக, மகிழ்ச்சியும் வெற்றியும் மட்டுமே இருந்தது. பூமியினால் பிறக்காத ஒரு மகிழ்ச்சியினால் அவர்களுடைய முகங்கள் பிரகாசித்துக் கொண்டிருந்தன. நம்பிக்கைகளில் உண்டான ஏமாற்றத்தினால் அவர்கள் துக்கங்கொண்டாடாமல், தேவனைத் துதிப்பதிலும் அவருக்கு நன்றி செலுத்துவதிலும் நிறைந்தவர்களாக இருந்திருந்தனர். கிறிஸ்துவின் உயிர்த்தெழுதல், அவர் பரலோகத்திற்கு எழுந்தருளிச் சென்றது ஆகிய ஆச்சரியமான கதையை அவர்கள் மகிழ்ச்சியுடன் கூறினபோது, அவர்களுடைய சாட்சி அநேகரால் ஏற்றுக்கொள்ளப்பட்டது. (8)

அதற்குப்பின்னர் சீடர்கள் எதிர்காலம்பற்றின நம்பிக்கை இல்லாத வர்களாக இல்லை. இயேசு பரலோகத்தில் இருக்கிறார் என்பதையும், அவருடைய அனுதாபங்கள் இன்னும் அவர்கள்மீது இருக்கிறது என்பதையும் அவர்கள் அறிந்திருந்தனர். தேவ சிங்காசனத்தில் ஒரு நண்பரைக் கொண்டிருக்கின்றனர் என்பதை அறிந்து இயேசுவின் நாமத்தினால் அவர்களுடைய வேண்டுகோள்களைப் பிதாவின் சமுகத்தில்

வைப்பதற்கு அவர்கள் அக்கறையுள்ளவர்களாக இருந்தனர். “அந்த நாளிலே நீங்கள் என்னிடத்தில் ஒன்றுங் கேட்கமாட்டீர்கள். மெய்யாகவே மெய்யாகவே நான் உங்களுக்குச் சொல்லுகிறேன், நீங்கள் என் நாமத்தினாலே பிதாவினிடத்தில் கேட்டுக்கொள்வதெதுவோ அதை அவர் உங்களுக்குத் தருவார். இதுவரைக்கும் நீங்கள் என் நாமத்தினாலே ஒன்றும் கேட்கவில்லை; கேளுங்கள், அப்பொழுது உங்கள் சந்தோஷம் நிறைவாயிருக்கும்படி பெற்றுக்கொள்வீர்கள்” (யோவான் 16:23,24) என்னும் வாக்குறுதியைத் திரும்பவும் கூறினவர்களாக, பக்திவிநயமான பயபக்தியுடன் ஜெபஞ்செய்வதில் குனிந்தார்கள். “ஆக்கினைக்குள்ளாகத் தீர்க்கிறவன் யார்? கிறிஸ்துவே மரித்தவர்; அவரே எழுந்துமிருக்கிறவர்; அவரே தேவனுடைய வலதுபாரிசத்திலும் இருக்கிறவர்; நமக்காக வேண்டுதல்செய்கிறவரும் அவரே” (ரோமர் 8:34) என்னும் பலத்த ஆதாரத்துடன் அவர்கள் அவர்களுடைய விசுவாசத்தின் கரங்களை உயர உயர நீட்டினார்கள். கிறிஸ்து வாக்குத்தத்தம் பண்ணியிருந்ததைப்போல பெந்தெகொஸ்தே நாள் பரிசுத்த ஆவியின் பிரசன்னத்தில் மகிழ்ச்சியின் நிறைவை அவர்களுக்குக் கொண்டுவந்தது. (9)

விண்ணுலகப் பிராகாரங்களுக்குள் இரட்சகரை வரவேற்பதற்காகப் பரலோகம் முழுவதும் காத்திருந்தது. அவர் உயரே எழுந்தருளிப் பாதையில் சென்றபோது, அவருடைய உயிர்த்தெழுதலின்போது மரணச்சிறையினின்று விடுதலைபெற்ற திரளான அடிமைகள் அவரைப் பின்தொடர்ந்தனர். மகிழ்ச்சிமிக்க அந்தக் கூட்டத்தினருடன் பரலோக சேனைகளின் வரவேற்கும் துதியுடனும் விண்ணுலகின் பாடலின் ஒலியுடனும் அவர்களும் சேர்ந்துகொண்டனர். (10)

தேவனுடைய நகரத்தை அவர்கள் சமீபித்தபோது, துணையாகச் சென்றிருந்த தூதர்களால்: (11)

“வாசல்களே, உங்கள் தலைகளை உயர்த்துங்கள்; அநாதி கதவுகளே, உயருங்கள்; மகிமையின் ராஜா உட்பிரவேசிப்பார்” என்னும் கோரிக்கை முன்வைக்கப்பட்டது. (12)

காத்துக்கொண்டிருக்கும் காவல் தூதர்களின் குழுவினர் மகிழ்ச்சியுடன்: (13)

“யார் இந்த மகிமையின் ராஜா?” என்று வினாவிடுத்தனர். (14)

அவர் யார் என்பதை அறியாததினால் அவர்கள் இதைக் கேட்காமல், மேலான துதியை அவர்கள் கேட்கவேண்டும் என்பதற்காகக் கேட்கின்றனர். (15)

“அவர் வல்லமையும் பராக்கிரமமுமுள்ள கர்த்தர்; அவர் யுத்தத்தில் பராக்கிரமமுள்ள கர்த்தராமே” என்றார்கள். (16)

“யார் இந்த மகிமையின் ராஜா?” என்ற கோரிக்கை மீண்டும் பாடல்மூலமாக வைக்கப்படுகிறது. ஏனெனில் உயர்த்தப்பட்ட அவரது நாமத்தைக் கேட்பதில் அந்த தூதர்கள் ஒருபோதும் சோர்வடைந்ததில்லை. எனவே இயேசுவுடன் துணையாகச் சென்றிருந்த தூதர்கள்: (17)

“அவர் சேனைகளின் கர்த்தரானவர்; அவரே மகிமையின் ராஜா” (சங்கீதம் 24:7–10) என்று பதில் கொடுத்தனர். (18)

அப்பொழுது தேவனுடைய நகரத்தின் வாசல்கள் விசாலமாகத் திறக்கப்படவே, அந்த வாசல்களுக்கூடாக தூதர்களின் கூட்டம் பேரானந்தமிக்க இசைகள் ஒலிக்கக் கடந்துசெல்லுகின்றது. (19)

அங்கே சிங்காசனமும் அதைச் சுற்றிலும் வாக்குத்தத்தத்தின் வானவில்லும் இருக்கிறது. அங்கு கேருபீன்களும் சேராபீன்களும் உள்ளனர். தூதர்களின் சேனைகளின் தளபதிகளும் பாவத்தில் விழுந்துபோகாத மற்ற உலகத்தின் பிரதிநிதிகளான தேவ குமாரர்களும் அங்கு கூடியிருக்கின்றனர். தேவனையும் அவரது குமாரனையும் எந்தப் பரலோக ஆலோசனை மன்றத்திற்குமுன் லூசிபர் குற்றஞ்சாட்டியிருந்தானோ, அதுவும் எந்த பாவமற்ற உலகங்களின்மீது தனது ஆளுகையை நிலைநாட்ட எண்ணியிருந்தானோ அந்த உலகின் பிரதிநிதிகளும் இரட்சகரை வரவேற்பதற்காகக் கூடி இருந்தனர். அவருடைய வெற்றியைக் கொண்டாடவும், தங்களுடைய அரசரை மகிமைப்படுத்தவும் அவர்கள் ஆவல்மிக்கவர்களாக உள்ளனர். (20)

இன்னமும் அந்த நிகழ்ச்சிகள் முற்றுப்பெறவில்லை என்று அவர் அவர்களிடம் கரம் அசைத்துக் காட்டுகின்றார். மகிமையின் கிரீடத்தையும் இராஜரீக உடையையும் இப்பொழுது அவரால் பெறமுடியாது.அவர் அவருடைய பிதாவின் பிரசன்னத்திற்குள் பிரவேசிக்கிறார். காயமடைந்த அவருடைய சிரசையும் துளைக்கப்பட்ட விலாபக்கத்தையும் பாதங்களையும் அவர் சுட்டிக்காட்டுகிறார். ஆணிகளின் தழும்புகளை உடைய அவருடைய கரங்களை உயர்த்துகிறார். அவருடைய வெற்றியின் அடையாளங்களை சுட்டிக்காட்டுகிறார். அவருடைய இரண்டாம் வருகையின்போது கல்லறைகளிலிருந்து வெளியில் வரவிருக்கும் பெரும் திரளானவர்களின் பிரதிநிதிகளாக இருக்கும்படி அவருடனேகூட எழுப்பப்பட்டவர்களை கதிர்க்கட்டாக தேவனுக்கு முன்பாக அவர் அசைவாட்டுகிறார். மனந்திரும்புகின்ற ஒரு பாவியின் நிமித்தமாக மிகுந்த

சந்தோஷமடையும் பிதாவை பாடலுடன் மகிழ்ந்து களிகூரும் ஒருவரை அவர் சமீபிக்கிறார். மனிதன் சாத்தானால் வெற்றிகொள்ளப்படுவானானால் அவனை மீட்பதற்காக உலகத்திற்கு அஸ்திபாரமிடுவதற்கு முன்னமேயே பிதாவும் குமாரனும் ஒரு உடன்படிக்கையில் ஒன்றுபட்டிருந்தனர். மனித இனத்திற்குக் கிறிஸ்து பிணையாளியாக ஆகவேண்டும் என்னும் ஒரு பக்திவிநயமான வாக்குறுதியில்—உறுதிமொழியில் அவர்கள் தங்களுடைய கரங்களைப் பிணைத்திருந்தனர். இந்த வாக்குறுதியைக் கிறிஸ்து நிறைவேற்றிவிட்டார். சிலுவையின்மீதிருந்து "எல்லாம் முடிந்தது" என்று அவர் பிதாவிடம் கூறினார். அந்த உடன்படிக்கை முழுவதுமாக நிறைவேற்றப்பட்டிருந்தது. "பிதாவே முடிந்தது" உம்முடைய சித்தத்தின்படியே நான் செய்திருக்கிறேன். ஆ! என்னுடைய தேவனே! மீட்பின் பணியை நான் நிறைவேற்றியிருக்கிறேன். உம்முடைய நீதி திருப்தியடைந்திருக்குமானால், "நான் எங்கே இருக்கிறேனோ அங்கே அவர்களும் என்னுடனேகூட இருக்க விரும்புகிறேன்" (யோவான் 19:30, 17:24) என்று இப்பொழுது அவர் அறிவிக்கிறார். (21)

நீதி திருப்தியடைந்திருக்கிறது என்று அறிவிக்கும் தேவனுடைய குரல் கேட்கப்படுகிறது. சாத்தான் தோற்கடிக்கப்பட்டிருக்கிறான். "பிரியமானவருக்குள்" (எபேசியர் 1:6) பூமியின்மீது உழைத்துக்கொண்டும் போராடிக்கொண்டுமிருப்பவர்கள் ஏற்றுக்கொள்ளப்பட்டிருக்கின்றனர். பரலோக தூதர்களுக்கும் விழுந்துபோகாத உலகங்களின் பிரதிநிதிகளுக்கும் முன்பாக அவர்கள் அங்கீகரிக்கப்பட்டிருக்கின்றனர் என்று அறிவிக்கப்பட்டிருக்கிறது. அவர் எங்கே இருக்கிறாரோ அங்கே அவருடைய சபையும் இருக்கும். "கிருபையும் சத்தியமும் ஒன்றையொன்று சந்திக்கும், நீதியும் சமாதானமும் ஒன்றையொன்று முத்தஞ்செய்யும்" சங்கீதம் 85:10. பிதாவின் கரங்கள் குமாரனை வளைந்துகொள்ளுகின்றன. "தேவதூதர்கள் யாவரும் அவரைத் தொழுதுகொள்ளக்கடவர்கள்" (எபிரெயர் 1:6) என்னும் வார்த்தை கொடுக்கப்படுகிறது. (22)

ஜீவாதிபதியின் மேலாதிக்கத்தை சொல்லிமுடியாத சந்தோஷத்துடன் ஆளுநர்களும் அதிபதிகளும் துரைத்தனங்களும் அதிகாரங்களும் ஒப்புக்கொள்ளுகின்றன. "அடிக்கப்பட்ட ஆட்டுக்குட்டியானவர் வல்லமை யையும் ஐசுவரியத்தையும் ஞானத்தையும் பெலத்தையும் கனத்தையும் மகிமையையும் ஸ்தோத்திரத்தையும் பெற்றுக்கொள்ளப் பாத்திரராயிருக்கிறார்" (வெளிப்படுத்தல் 5:12) என்று சந்தோஷத்தின் சத்தங்கள் பரலோகப் பிராகாரங்களனைத்தையும் நிறைக்கும்போது, தூதர்களின் சேனை அவருக்கு முன்பாக சாஷ்டாங்கமாக விழுந்து பணிகின்றன. (23)

பரலோகம் முழுவதும் மகிழ்ச்சியினாலும் துதியினாலும் நிரம்பி

வழிவதுபோல காணப்படும்வரை, தூதர்களின் சுரமண்டலங்களில் இருந்த இசையுடன் வெற்றியின் பாடல்கள் ஒன்று கலக்கின்றன. அன்பு வெற்றியடைந்திருக்கிறது! தொலைந்துபோனது கண்டுபிடிக்கப்பட்டிருக்கிறது! "அப்பொழுது, வானத்திலும்பூமியிலும்பூமியின்கீழுமிருக்கிற சிருஷ்டிகள்யாவும், சமுத்திரத்திலுள்ளவைகளும், அவற்றுளடங்கிய வஸ்துக்கள் யாவும்: சிங்காசனத்தின்மேல் வீற்றிருக்கிறவருக்கும் ஆட்டுக்குட்டியானவருக்கும் ஸ்தோத்திரமும் கனமும் மகிமையும் வல்லமையும் சதா காலங்களிலும் உண்டாவதாக" (வெளிப்படுத்தல் 5:13) என்று உயர்ந்த தொனியில் அறிவிக்கும் குரல்களுடன் பரலோகம் ஒலிக்கின்றது. (24)

பரலோக சந்தோஷத்தின் காட்சியிலிருந்து, "நான் என் பிதாவினிடத்திற்கும் உங்கள் பிதாவினிடத்திற்கும், என் தேவனிடத்திற்கும் உங்கள் தேவனிடத்திற்கும் ஏறிப்போகிறேன்" என்னும் கிறிஸ்துவின் சொந்தமான ஆச்சரியமான வார்த்தைகளின் எதிரொலி, பூமியின்மீதுள்ள நமக்குத் திரும்பிவருகிறது. பரலோகக் குடும்பமும், பூமியின் குடும்பமும் ஒன்றாகி இருக்கின்றன. நமக்காகக் கர்த்தர் எழுந்தருளிச் சென்றிருக்கிறார். நமக்காக அவர் வாழ்ந்துகொண்டிருக்கிறார். "தமது மூலமாய்த் தேவனிடத்தில் சேருகிறவர்களுக்காக வேண்டுதல்செய்யும்படிக்கு அவர் எப்பொழுதும் உயிரோடிருக்கிறவராகையால் அவர்களை முற்றுமுடிய இரட்சிக்க வல்லவராயுமிருக்கிறார்"—எபிரெயர் 7:25. (25) ★